அக்காலத்திலே பூமியெங்கும் ஒரே பாஷையும் ஒரே வார்த்தைகளுமிருந்தது.

௨ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், அவர்கள் கிழக்கேயிருந்து பயணம் பண்ணுகையிற், * சிநேயார் தேசத்திலே பள்ளத்தாக்கைக் கண்டு, அங்கே குடியிருந்து,

* ௰, ௰.

௩ ஒருவரோடொருவர், நாஞ் செங்கல் அறுத்து, அவைகளை நற்கோடாயச் சுடுவோம் வாருங்களென்றார்கள். பிறபாடு செங்கல் அவர்களுக்குக் கல்லாகவும் பிசின் அவர்களுக்குச் சாந்தாகவுமிருந்தது.

௪ அவர்கள் நாம் பூமியின்மீதெங்குஞ் சிதறுண்டுபோகாதபடிக்கு நமக்கு நாம் ஒரு பட்டணத்தையும் * வானத்தைமுட்டுகிற சிகரமுள்ள ஒரு கோபுரத்தையுங் கட்டி நமக்குப் பேர் உண்டாக்குவோம் வாருங்களென்று சொல்லிக்கொண்டார்கள்.

* ௫. மோசே. ௧, ௨௮. ௬, ௧.

௫ ஆனால் மனுப்புத்திரர் கட்டுகிற பட்டணத்தையுங் கோபுரத்தையும் பார்க்கிறதற்காகக் * கர்த்தர் இறங்கினார். * ௰௮, ௨௧.

௬ அப்பொழுது கர்த்தர் சொன்னதாவது, இதோ, சனம் ஒரே கூட்டமானது. அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையுமிருக்கின்றது. இதை அவர்கள் செய்யத் தொடங்கினார்கள். இப்பொழுது தாங்கள் செய்ய நினைத்த தொல்லாத் தங்களுக்குத் தடுக்கப்படுவதில்லையென்றிருக்கிறார்கள்.

௭ நாம் இறங்கி, ஒருவர் பாஷையை மற்றொருவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோமாகவென்றார்.

௮ அப்படியே கர்த்தர் அவர்களை அவவிடத்திலிருந்து பூமியின்மீதெங்குஞ் சிதறிப்போகப்பண்ணினார். அப்பொழுது பட்டணத்தைக் கட்டி ஓய்ந்தார்கள்.

௯ ஆனதுகொண்டு பூமி அனைத்தின் பாஷையைக் கர்த்தர் அங்கே தாறுமாறாக்கினபடியினாலும், கர்த்தர் அவர்களை அவவிடத்திலிருந்து பூமியின்மீதெங்குஞ் சிதறிப்போகப்பண்ணினபடியினாலும், அதின்பேர் பாபேலென்னப்பட்டது.

சேம் முதற்கொண்டு ஆபிரகாமட்டும் உண்டான தலைமுறைகளின் அட்டவணை.

௰ * சேமுடைய சந்ததியாவது, சேம் நூறு வயதாயிருந்து, அற்பக்சாதைச் சலப்பிரளயம்போன இரண்டுவருஷத்திற்குப் பிறபாடு பெற்றான். * ௰, ௨௨.

௰௧ சேம் அற்பக்சாதைப் பெற்றபிறபாடு, ஐந்நூறுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௨ அற்பக்சாத் முப்பத்தைந்து வயதாயிருந்து, சாலாவைப் பெற்றான்.

௰௩ சாலாவைப் பெற்றபிறபாடு, அற்பக்சாத் நானூற்றுமூன்றுவருஷம் உயிரோடிருந்து குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௪ சாலாக் முப்பதுவயதாயிருந்து, ஏபேரைப் பெற்றான்.

௰௫ ஏபேரைப் பெற்றபிறபாடு சாலாக் நானூற்றுமூன்றுவருஷம் உயிரோடிருந்து குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௬ ஏபேர் முப்பத்துநாலுவயதாயிருந்து, பேலேகைப் பெற்றான்.

௰௭ பேலேகைப் பெற்றபிறபாடு, ஏபேர் நானூற்றுமுப்பதுவருஷம் உயிரோடிருந்து குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௰௮ பேலேக் முப்பதுவயதாயிருந்து ரேகூவைப் பெற்றான்.

௰௯ ரேகூவைப் பெற்றபிறபாடு பேலேக் இருநூற்றொன்பதுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௨௰ ரேகூ முப்பத்திரண்டு வயதாயிருந்து செரூகைப் பெற்றான்.

௨௧ செரூகைப் பெற்றபிறபாடு, ரேகூ இருநூற்றேழுவருஷம் உயிரோடிருந்து குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௨௨ செரூக் முப்பதுவயதாயிருந்து, நாகோரைப் பெற்றான்.

௨௩ நாகோரைப் பெற்றபிறபாடு செரூக் இருநூறுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௨௪ நாகோர் இருபத்தொன்பதுவயதாயிருந்து தேராகைப் பெற்றான்.

௨௫ தேராகைப் பெற்றபிறபாடு நாகோர் நூற்றுப்பத்தொன்பதுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௨௬ தேராக் எழுபதுவயதாயிருந்து ஆபிராமையும், நாகோரையும், ஆரானையும் பெற்றான்.

௨௭ தேராகுடைய சந்ததியாவது, தேராக் ஆபிராமையும் நாகோரையும், ஆரா

னைப்பெறுன. ஆரானலோததைபபெற றன.

௨௮ ஆரானெனில தன்சென்மப்பூமி யாகிய ஊர் என்கிறகல்தேயர்தேசத்தப்ப டணத்திலேதனதகப்பனுகிய தேராகுக குமுன்னமேசெத்தான.

௨௯ ஆபிராமும நாகோருந்தஙகளுககு பெண்கொணடார்கள. ஆபிராமுடையபெ ணசாதியின்பேர் சாறுய. நாகோருடைய பெணசாதியின்பேர்மிலக்காள. இவள ஆரா னென்பவனுடைய குமாரத்தி. இவனுடையதகப்பனமிலக் காளுககுமிஸ்காளுககுந்தகப்பனுனவன.

௩௦ சாறுயோமலடியுமபுத்திரசந்தானமிலலா மலுமிருந்தாள.

௩௧ தேராகென்பவன தனகுமாரனுகிய ஆபிரா மையும ஆரானென்பவனுடைய குமாரனுனதனபேரனுகிய லோததையும, தனகுமாரனான ஆபிராமுடைய பெண்சாதியாகிய தனமருமகளசாறுளையுங கூட்டிக்கொணடு, அவர்களோ டே கூட ஊர் என்னப்பட்டகல்தேயருடையபட டணத்திலிருந்து காணுனதேசத்திற்குப போகப்புறப்பட்டான. ஆனுல அவர்களகா றன்பட்டணத்துககுவந்தபொழுது அஙகேயிரு நதுவிட்டார்கள. * அப். எ. ௨.

௩௨ தேராகுடைய நாட்கள இருநூற றைந்துவருஷமானபின்பு தேரா காறனிலேசெத்தான.

௰௨. அதிகாரம்.

ஆபிராம் கர்த்தருடைய கட்டளையின்படி காணுன்தேசத்திலே வந்ததும, அதிலே பஞ்சத்தினிமித்தம் எகிப்துதேசத்துக்குப் போனதும,

௧ கர்த்தர் ஆபிராமோடேசொன்னதாவது, * நீ உன்தேசத்தையும உனஇனத்தை யும உன தகப்பனுடையவீட்டையும விட்டு புறப்பட்டு, நான உனககுக் காணபிககும தேசத்துக்குப்போ. * அபபோஸ். ௭. ௩. எபிரே. ௰௧, அ.

௨ நான உன்னைப் பெரிய சாதியா க்கி உன்னை ஆசிர்வதித்து உனபேரைமே னமையாக்குவேன. நீ ஆசிர்வாதமாக இ ருப்பாய.

௩ உன்னை ஆசிர்வதிக்கிறவர்களை ஆசிர் வதிப்பேன, உன்னைச்சபிக்கிறவனைச்சபிப பேன, * உனனிடத்தில பூமியின வமசங்களெல்லா ம் ஆசிர்வதிக்கப்படுமென்றார். * ௰அ. ௰அ. ௨௨, ௰அ. ௨௬. ௪. ௨அ, ௰௪. அப்போஸ்தலர். ௩, ௨௫. கலாத். ௩, ௰௬.

௪ அப்பொழுது ஆபிராம் கர்த்தர் தனக குச்சொன்னபடியே போனுன. லோத்தும அவனோடேகூடப்போனுன. ஆபிராம ஆரா னென்னும்பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டபொழுது எழுப த்தைந்து வயதுள்ளவனாயிருந்தான.

௫ ஆபிராம் தனபெணசாதி சாறுளையும தனசகோதரன குமாரனுகிய லோத்தையும தாஙகள சமபாதித்திருந்தஙகள சமபத தெலலாவற்றையும ஆரானிலேசவதரித்து கொணட ஆத்துமாககளையுங கூட்டிக கொணடுபிறபாடு காணுன தேசத்திற்குப போகப்புறப்பட்டுக்காணுன தேசத்திற்குவ நதார்கள.

௬ ஆபிராஞ்சிகேமென்ற இடமட்டுககு ம, மோரேயென்றசமபூமிமட்டுககுந தேசத்தைக்கடந்துவந்தான. கானுனியன அப்பொழுது தேசத்திலேயிருந்தான.

௭ கர்த்தர் ஆபிராமுககுத்தரிசனையாகி * உனவிததுககு இந்தத்தேசத்தைக்கொ டுப்போமென்றார். அப்பொழுது அவன தனககுத்தரிசனையானகர்த்தருக்கு அஙகே ஒருபலிபீடத்தைக்கட்டினுன. * ௰௩, ௰௫. ௰௫, ௰அ. ௰எ, அ. ௨௬. ௩.

௮ பிறபாடு அவன அவவிடம்விட்டுப பெயர்ந்து, பெதேலுககுக கிழககேயிருக குமமலைககுவந்து, பெதேலதனககுமேற காகவும ஆயிகிழககாகவுமிருக்கக்கூடாரம போட்டு, அஙகேகர்த்தருககொரு பலிபீ டத்தைக்கட்டிக்கர்த்தருடைய நாமத்தைத தொழுதுகொணடான.

௯ அதினபிறகு ஆபிராம புறப்பட்டுத தெற்கே பயணமபணணிககொணடேபோ னுன.

பஞ்சத்தினிமித்தம அவன எகிப்துதேசத திற்குபபோனது.

௰ அந்தத்தேசத்திலே பஞ்சமுணடாயிற் று. ஆகையால ஆபிராம எகிப்துதேசத்தி றகு அஙகேதஙகுமபடிககு இறஙகிப்போ னுன. ஏனெனில தேசத்திலே பஞ்சஙகடின மாயிருந்தது.

௰௧ அப்பொழுது சமபவித்ததேதென்று ல அவன எகிப்திறகுச்சமீபமாகவந்தபொ ழுது தனபெணசாதிசாறுயோடே சொன னதாவது, இதோ, நீபார்வைககு அழகு ளளஸ்திரீயென்றறிவேன.

௰௨ ஆனதுகொணடு சமபவிப்பதேதெ ன்றுல, எகிப்தியர் உன்னைககாணுமபொ ழுது இவள அவனபெணசாதியென்றுசொ லலி, என்னைககொன்று உன்னை உயிரோ டேவைப்பார்கள.

௰௩ ஆகையால உனனிமித்தம எனககு நலமாகுமபடிககும, உன்னைத்தொட்டு எ ன ஆத்துமம் உயிரோடிருககுமபடிககும, * உன்னை என சகோதரியென்று நீ சொல லென என்றுன. * ௨௰, ௨. ௰௨. ௨௬, எ.

௰௪ ஆபிராம எகிப்திலேவந்தபொழுது சமபவித்ததேதென்றுல, எகிப்தியர் அந்த ஸ்திரீயைமகா அழகுளளவளென்றுபார்த தார்கள.

௰௬ பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக் கண்டு, அவளைப் பார்வோனுக்கு முன்பாகப் புகழ்ந்தார்கள். அப்பொழுது அந்த ஸ்திரீ பார்வோனின் வீட்டிலே வைத்துக்கொள்ளப்பட்டாள்.

௰௬ அவன் அவள் நிமித்தமாய் ஆபிராமுக்கு நன்மை செய்தான். அவனுக்கு ஆடுமாடுகளும் கழுதைகளும் வேலைக்காரரும் வேலைக்காரிகளும் கோவேறு கழுதைகளும் ஒட்டகங்களும் உண்டாயிருந்தது.

௰௭ ஆகையால் * ஆபிராமுடைய பெண்சாதியாகிய சாராயினிமித்தம் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார். * சங்கீதம். ௱௫, ௰௪.

௰௮ அப்பொழுது பார்வோன் ஆபிராமை அழைத்துச் சொன்னதாவது, இதை எனக்கேன் செய்தாய்? இவள் உன் பெண்சாதியென்று நீ எனக்கு அறிவிக்காமற் போனதென்ன?

௰௯ இவள் உன் சகோதரியென்று நீ சொல்லுவானேன்? அவளை நான் எனக்குப் பெண்சாதியாகப் படைக்கவேண்டுமென்றிருந்தேனே இப்பொழுதோவெனில் இதோ உன் பெண்சாதியிருக்கிறாள். அவளை அழைத்துக்கொண்டு போவென்று சொல்லி,

௨௰ பார்வோன் அவனுக்காகச் சில மனிதரைக் கட்டளைபண்ணினான். அவர்கள் அவனையும் அவன் பெண்சாதியையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் வழிவிட்டனுப்பினார்கள்.

௰௩. அதிகாரம்.

லோத் ஆபிராமைவிட்டுப் பிரிந்தது.

அப்படியே ஆபிராமும் அவன் பெண்சாதியும் அவனுக்குண்டான யாவும், அவனோடே கூட லோத்தும் எகிப்திலிருந்து தெற்குப்புறத்திலே ஏறிவந்தார்கள்.

௨ ஆபிராமோவெனில் மிருகஜீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்தியிலே மகா ஐசுவரியவானாயிருந்தான்.

௩ அவன் தன் பயணங்களில் தெற்கேயிருந்து பெத்தேல் மட்டாகவும் * பெத்தேலுக்கும் ஆயிக்கும் நடுவாகத் தனக்கு முதற்கூடாரமிருந்த இடந்தானமுத ஒருபீடத்தையுண்டாக்கின தலமட்டாகவும் போனான். * ௨, ௮.

௪ அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.

௫ ஆபிராமோடேகூட வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களுமிருந்தது.

௬ அவர்கள் ஒருமிக்கக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கமாட்டாதே போயிற்று. ஏனெனில் அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தது. ஆகையால் அவர்கள் கூடக் குடியிருக்கக்கூடாதிருந்தது.

௭ ஆபிராமின் மந்தை மேய்ப்பருக்கும் லோத்தின் மந்தை மேய்ப்பருக்கும் வாக்குவாதமுண்டாயிருந்தது. கானானியனும் பெரிசியனும் அப்பொழுது தேசத்திலே குடியிருந்தார்கள்.

௮ ஆகையால் ஆபிராம் லோத்தோடே சொன்னதாவது, எனக்கும் உனக்குமுள்ளவர்களுடைய மேய்ப்பருக்கும் உன்னுடைய மேய்ப்பருக்கும் வாக்குவாதம் இருக்கவேண்டாம். ஏனெனில் நாம் சகோதரராயிருக்கிறோம்.

௯ இந்தச் சீமையெல்லாம் உனக்கு முன்பாகவிருக்கின்றதல்லவோ? என்னைவிட்டுப் பிரிந்துபோ, நீ இடதுபுறத்திலே சாய்ந்துபோனால் நான் வலதுபுறத்திலே சாய்ந்துபோவேன். நீ வலதுபுறத்திலே சாய்ந்துபோனால் நான் இடதுபுறத்திலே சாய்ந்துபோவேனென்றான்.

௰ அப்பொழுது லோத் தன் கண்களையேறெடுத்து, யோர்தான் நதிக்கருகான் சமனான பூமியையெல்லாம் அது எங்கும் நீர்ப்பாய்ச்சலானதென்று பார்த்தான். ஏனெனில் கர்த்தர் சோதோமையும் கொமோராவையும் அழிக்காததற்கு முன்னே அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும், சோவார் மட்டுக்கும் எகிப்து தேசத்தைப்போலவுமிருந்தது.

௰௧ அப்பொழுது லோத் யோர்தானுக்கருகான் சமனான பூமியையெல்லாந் தெரிந்துகொண்டு, கிழக்கே பயணம்போனான். இப்படியே சகோதரர் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தார்கள்.

௰௨ ஆபிராம் கானான் தேசத்திலே குடியிருந்தான். லோத்தோவெனில் அந்தச் சமனான பூமியின் பட்டணங்களிற் குடியிருந்து, சோதோம் மட்டுக்கும் போய்க் கூடாரம்போட்டான்.

௰௩ ஆனால் * சோதோமின் மனிதர் கர்த்தருக்கு முன்பாக மிகவும் பொல்லாதவர்களும் பாவிகளுமாயிருந்தார்கள். * ௰௮, ௨௰. ஏசேக்கியா. ௰௬, ௪௯.

பிராப்பிரமமறுடியும் ஆபிராமுக்குப் பண்ணின வாக்குத்தத்தம்.

௰௪ லோத் ஆபிராமைவிட்டுப் பிரிந்தபிறபாடு கர்த்தர் அவனுடனே சொன்னதாவது, நீ உன் கண்களையேறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயுந் தெற்கேயுங் கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பாரோ?

௰௫ ஏனெனில் நீ பார்க்கிற பூமியையெல்லாம் * நான் உனக்கும் உன் வித்துக்கும் என்றைக்குமென்று கொடுத்து, * ௰௨, ௭. ௰௫, ௭. ௰௬, ௭.

௰௬ உன் வித்தைப் * பூமியின் தூளைப்போலாக்குவோம். ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் வித்தும் எண்ணப்படும். * ௰௫, ௫.

௰௭ நீ எழுந்து தேசத்தின் நீளத்திலும் அகலத்திலும் நடந்து திரி. ஏனெனில் உனக்கதைக் கொடுப்போமென்றார்.

௰௮ அப்பொழுது ஆபிராம் கூடாரத்தைப் பேர்த்துப்போய், எபிரோனிலிருக்கும் மம்ரேயினுடைய சமனான பூமியிலே வந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்குப் பலிபீடத்தைக் கட்டினான். * ௰௪, ௰௩. ௰௮, ௧.

௰௪. அதிகாரம்.

லோத்துச் சத்துருக்களால் சிறைபிடிக்கப்பட்டுப் போனசெய்தி.

௧ சிநேயாரின் இராசாவாகிய அம்ராப்பேலும், எலாசாரின் இராசாவாகிய ஆரியோகும், ஏலாமின் இராசாவாகிய கெதொர்லகோமேரும், சாதிகளின் இராசாவாகிய திதேயாலும் இருந்த நாட்களிற் சம்பவித்ததேதெனில்,

௨ அவர்கள் சோதோமின் இராசாவாகிய பேராவோடும், கொமோராவின் இராசாவாகிய பிர்சாவோடும், அத்மாவின் இராசாவாகிய சிநேயாபோடும், செபோயீமின் இராசாவாகிய செமேபேரோடும், சோவார் என்னப்பட்ட பேலாவின் இராசாவோடும் யுத்தம் பண்ணினார்கள்.

௩ இவர்களெல்லாரும் இப்பொழுது உப்புக்கடலிருக்கிற சித்தீமின் பள்ளத்தாக்கிலே கூடினார்கள்.

௪ பன்னிரண்டு வருஷம் கெதொர்லகோமேருக்குச் சேவித்துப் பதின்மூன்றும் வருஷத்திலே கலகம் பண்ணினார்கள்.

௫ பதினாலாம் வருஷத்திலே கெதொர்லகோமேரும் அவனோடே கூடியிருந்த இராசாக்களும் வந்து, அஸ்தெரோத் கர்னாயீமிலேயிருந்த ரெப்பாவரையும், ஆமிலேயிருந்த சூசியரையும், சாவேகிரியத்தாயீமிலேயிருந்த ஏமியரையும்,

௬ சேயீர் மலைகளிலிருந்த ஓரியரையும் வனாந்திரத்துக்கருகான பாரானின் சமனான பூமிமட்டும் முறிய அடித்து,

௭ திரும்பிக்கொண்டு, காதேஸ் என்னப்பட்ட என்மிஸ்பாத்திற்கு வந்து, அமலேக்கியருடைய நாடனைத்தையும், அத்சாத்சோன்தாமாரிற் குடியிருந்த எமோரியரையும் கூடப்பாழ்க்கடித்தார்கள்.

௮ அப்பொழுது சோதோமின் இராசாவும் கொமோராவின் இராசாவும் அத்மாவின் இராசாவும் செபோயீமின் இராசாவும் சோவாரென்னப்பட்டிருக்கிற பேலாவின் இராசாவும் புறப்பட்டுச் சித்தீமின் பள்ளத்தாக்கிலே

௯ ஏலாமின் இராசாவாகிய கெதொர்லகோமேரோடும், சாதிகளின் இராசாவாகிய திதேயாலோடும், சிநேயாரின் இராசாவாகிய அம்ராப்பேலோடும், எலாசாரின் இராசாவாகிய ஆரியோகோடும் யுத்தம் பண்ணுகிறதற்கு ஆயத்தப்பட்டார்கள். அந்த ஐந்து இராசாக்களோடே இந்த நாலு இராசாக்களும் யுத்தம் பண்ணினார்கள்.

௰ ஆனால் சித்தீமின் பள்ளத்தாக்கிலே அநேக கீல் கேணிகளிருந்தது. சோதோமின் இராசாவும் கொமோராவின் இராசாவும் முறிந்தோடி, அங்கே விழுந்தார்கள். மீந்தவர்கள் பர்வதங்களுக்கோடிப் போனார்கள்.

௰௧ அப்பொழுது சோதோமிலும் கொமோராவிலுமுள்ள எல்லா ஆஸ்தியையும், அவர்களுடைய எல்லா இரஸ்துக்களையும் எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள்.

௰௨ ஆபிராமுடைய சகோதரன் குமாரனாகிய லோத்தையும் அவன் ஆஸ்தியையுங் கொண்டுபோனார்கள். ஏனென்றால் அவன் சோதோமிலே குடியிருந்தான்.

ஆபிராம் லோத்தையும் மற்றுமுண்டானதெல்லாவற்றையுந் திருப்பிக்கொண்டுவந்த செய்தி.

௰௩ அதிலே தப்பிப்போன ஒருவன் வந்து எபிரேயனாகிய ஆபிராமுக்கு அறிவித்தான். ஆபிராமோடே உடம்படிக்கையானவர்களாகிய எஸ்கோலுக்கும் ஆனேருக்குஞ் சகோதரனாகிய * மம்ரே என்ற எமோரியனுடைய சமனான பூமியிலே அவன் அப்பொழுது குடியிருந்தான். * ௰௩, ௰௮.

௰௪ தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேட்டபொழுது, அவன் தன் வீட்டிலே பிறந்த முந்நூற்றுப்பதினெட்டுக் கைபடிந்த ஆட்களுக்கு ஆயுதந்தரிப்பித்துத் தாண் ஊர்மட்டாக அவர்களைத் தொடர்ந்து,

௰௫ இராத்திரியிலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பகுப்புகளாய் அவர்கள் மேல் விழுந்து, அவர்களை முறியடித்துத் தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டுக்கும் அவர்களைத் துரத்தி,

௰௬ எல்லா ஆஸ்தியையுந் திருப்பிக்கொண்டுவந்தான். தன் சகோதரனாகிய லோத்தையும் அவனுடைய ஆஸ்தியையும், இதுவுமல்லாமல் ஸ்திரீகளையும் சனத்தையுங்கூடத் திருப்பிக்கொண்டுவந்தான்.

மெல்கிசேதேக் ஆபிராமை ஆசீர்வதித்தது.

௰௭ அவன் கெதொர்லகோமேரையும் அவனோடே கூட இருந்த இராசாக்களையும் முறியடித்துத் திரும்பிவந்தபிறபாடு சோதோமின் இராசா புறப்பட்டு, இராசாவின் பள்ளத்தாக்கென்னப்படுகிற சாவே பள்ளத்தாக்குமட்டும் அவனுக்கெதிர்கொண்டு வந்தான்.

௰௮ ஆனாற் சாலேமின் இராசாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சப்பழ இரசமும் வெளியே கொண்டுவந்தான்

வன உன்னதமானபராபரனுடைய ஆசாரி யனுயிருந்து, * சங்கீ. ௱௰, ௪. எபிரேயர். எ, க. ௱.

௰௯ அவனை ஆசீர்வதித்து, வானத்திற்கும் பூமிக்கும் எசமானாகிய உன்னதமான பராபரனாலே ஆபிராம் ஆசீர்வதிக்கப்பட்டவனென்றும்,

௨௰ உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான பராபரன் ஸ்தோத்திரிக்கப்பட்டவரென்றுஞ் சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் பத்திலொன்றைக் கொடுத்தான்.

௨௧ சோதோமின் இராசா ஆபிராமுடனே, ஆத்துமாக்களையெனக்குத்தா. ஆஸ்தியை நீ எடுத்துக்கொள்ளென்றான்.

௨௨ அதற்கு ஆபிராம் சோதோமின் இராசாவோடே சொன்னதாவது, நான் ஆபிராமை ஐசுவரியவானாக்கினேனென்று நீ சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும், பாதரட்சையின் வாரையாகிலும் உமக்குண்டானதிலே யெல்லாம் யாதொன்றையெனகிலும் எடுத்துக்கொள்ளேனென்று,

௨௩ வானத்திற்கும் பூமிக்கும் எசமானாகிய உன்னதபராபரனான கர்த்தருக்கு நேராக என் கையையுயர்த்துகிறேன்.

௨௪ வாலிபக்காரர் சாப்பிட்டதும் என்னோடேகூடவந்த ஆநேர், எஸ்கோல், மம்ரேயென்றபுருஷருடைய பங்குமாத்திரம் வரவேண்டும். அவர்கள் தங்கள் பங்கை எடுக்கட்டுமென்றான்.

௰௫. அதிகாரம்.

ஆபிராமுக்கு நவமாய் அருளிச்செய்யப்பட்டவாக்குத்தத்தம்.

௧ இந்தக்காரியங்கள் நடந்தபிறபாடு ஆபிராமுக்குத் தரிசனத்திலே கர்த்தருடைய வார்த்தையுண்டாகி, அவர் சொன்னதாவது, ஆபிராமே! * பயப்படாதே. நானுனக்குக் † கேடகமும் உன்னுடைய மகாப்பெரியபலனுமாயிருக்கிறேனென்றார்.

* ஏசா. ௪௧, ௰. † சங்கீ. ௫, ௪.

௨ அப்பொழுது ஆபிராம், கர்த்தராகிய ஆண்டவரே! அடியேனுக்கென்ன தருவீர்? நான் பிள்ளையில்லாமற்போகிறேனே. தமஸ்குவூராளாகிய இந்த எலியேசர் என் வீட்டுவிசாரிப்புக்காரனாயிருப்பானேயென்றான்.

௩ பின்னையும் ஆபிராம், இதோ, தேவரீர் எனக்கு வித்தைத் தந்ததில்லை. இதோ என் வீட்டிற்பிறந்தபிள்ளை எனக்குச் சுதந்தரவாளியாயிருப்பானென்றான்.

௪ அப்பொழுது இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்குண்டாகி, இவன் உனக்குச் சுதந்தரவாளியாகாமல், உனக்குப் பிறப்பாயிருப்பவனேயுனக்குச் சுதந்தரவாளியாவானென்று சொல்லி,

௫ அவனை வெளியே புறப்படப்பண்ணி, நீ வானத்தை அண்ணாந்து பாரேன்? * நட்சத்திரங்களையெண்ண உனக்குக் கூடுமானால், அவைகளையெண்ணென்று சொல்லிப் பின்பு அவனோடே, உன் வித்து இவ்வண்ணமாயிருக்குமென்றார். * ௰௫, ௰௬.

௬ * அவன் கர்த்தரிடத்திலே விசுவாசித்தான். இதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார். * ரோம. ௪, ௩. கலாத்தி. ௩, ௬. யாக்கோ. ௨, ௨௩.

௭ பின்னையும் அவனுடனே, இந்தத்தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளத்தக்கதாக உனக்குக் கொடுக்க, உன்னை ஊர் என்கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நாமேயென்றார்.

௮ அப்பொழுது அவன், கர்த்தராகிய ஆண்டவரே! நான் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவேனென்கிறதை எதினாலேயறிவேனென்றான்.

௯ அவர் அவனுடனே, மூன்றுவயதுக் கிடாரியையும் மூன்றுவயது வெள்ளாட்டையும் ஒரு மூன்றுவயது ஆட்டுக்கிடாயையும் ஒரு காட்டுப்புறாவையும் ஒரு புறாக்குஞ்சையும் நமக்குக் கொண்டுவாவென்றார்.

௰ அவன் அவருக்கு இவைகளையெல்லாங் கொண்டுவந்து, அவைகளை நடுவாகத் துண்டித்துத் துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான். பட்சிகளையோவென்றால் அவன் துண்டிக்கவில்லை.

௰௧ அந்த உடல்களின்மேல் உருஞ்சுகிறட்சிகள் இறங்கினது. ஆனால் ஆபிராம் அவைகளைத் துரத்தினான்.

௰௨ சூரியன் அஸ்தமிக்கும்பொழுதோவெனில் ஆபிராமின்பேரில் நித்திரையிறங்கிற்று. இதோ, திகிலும் மகா இருளும் அவனைப்பிடித்தது.

௰௩ அப்பொழுது அவர் ஆபிராமோடே சொன்னதாவது, உன் சந்தானங்களுடையதல்லாத தேசத்திலே * நானூறுவருஷம் பரதேசிகளாயிருந்து, அந்தத்தேசத்தாரைச் சேவிப்பார்களென்றும், அவர்களிவர்களை யுபத்திரவப்படுத்துவார்களென்றும் நீயறியவேண்டும். * உ. மோசே. ௰௨, ௪௰. அப்போ. ௭, ௬.

௰௪ ஆனால் இவர்கள் சேவிக்குஞ் சாதியையும் நாம் நியாயந்தீர்ப்போம். பிறபாடு * வெகு ஆஸ்தியுடனே புறப்பட்டு வருவார்கள். * உ. மோசே. ௩. ௨௧. ௨௨. ௰௨, ௩௫. ௩௬.

௰௫ நீயோவென்றால் சமாதானத்தோடே உன் பிதாக்களண்டையிலே சேருவாய். * நல்லநரைவயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். * ௨௫, ௭. ௮.

௰௬ நாலாந்தலைமுறையாரோ இவ்விடத் திரும்பிவருவார்கள்? ஏனெனில் எமோரியருடைய அக்கிரமம் இதுவரைக்கும் நிறைவேறினதில்லையென்றார்.

௰௭ சூரியன் அஸ்தமித்தபின் இருளாயிருக்கையில், இதோ, புகைகிற சூளையும் அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிச்சுவாலையும் உண்டாயிற்று.

௰௮ அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடம்படிக்கைபண்ணிச் சொன்னதாவது, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்தென்கிற பெரிய நதிமட்டுக்குமிருக்கிறதும்,

௰௯ கேனியரும் கெனிசியருங் கத்மோனியரும்,

௨௰ ஏத்தியரும் பெரிசியரும் ரெப்பாயீமரும்,

௨௧ எமோரியருங் கானானியரும், கிர்காசியரும் எபூசியருமென்றவர்களிருக்கிறதுமான இந்தத் தேசத்தை* உன் வித்துக்குக் கொடுத்தேனென்றார். * ௰௨, ௭. ௰௭, ௭. அ.

௰௬. அதிகாரம்.

ஆகாரிடத்திலே ஆபிராமுக்கு இஸ்மவேல் பிறந்தது.

௧ ஆபிராமுடைய பெண்சாதியாகிய சாராய் அவனுக்குப் பிள்ளைபெறாதிருந்தாள். ஆகாரென்றபேர்கொண்ட எகிப்துதேசத்தாளாகிய ஒரு அடிமைப்பெண் அவளுக்கிருந்தாள்.

௨ சாராய் ஆபிராமுடனே, இதோ, நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்த்தர் என் கர்ப்பத்தை அடைத்தார். என் அடிமைப்பெண்ணோடே சேருமேன்? ஒருவேளை அவளால் வீடுகட்டப்படுமென்றாள். ஆபிராம் சாராயின் சொற்கேட்டான்.

௩ ஆபிராம் கானான்தேசத்திற் பத்துவருஷம் குடியிருந்தபின்பு ஆபிராமின் பெண்சாதியாகிய சாராய் எகிப்துதேசத்தாளாயிருந்த தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தாள்.

௪ அவன் ஆகாரோடே சேர்ந்தபொழுது அவள் கர்ப்பந்தரித்தாள். தான் கர்ப்பந்தரித்ததை அவள் கண்டபொழுதோவெனில், அவள் நாச்சியார் அவள் பார்வைக்கு அற்பமாய் எண்ணிக்கையானாள்.

௫ அப்பொழுது சாராய் ஆபிராமுடனே நான் சகிக்கிற அநியாயம் உம்முடைமேலாகவருமதாக; என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன். தான் கர்ப்பந்தரித்ததை அவள் கண்டபொழுதோவெனில் நான் அவள் பார்வைக்கு அற்பமாய் எண்ணிக்கையானேன். கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுவாக நியாயந்தீர்ப்பாராக என்றாள்.

௬ அப்பொழுது ஆபிராம் சாராயுடனே இதோ, உன்னடிமைப்பெண் உன்கையில் அகப்பட்டிருக்கிறாள். உன்பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய்யென்றான். அப்பொழுது சாராய் அவளைத் தண்டிக்கையில் இவள் அவளைவிட்டோடிப்போனாள்.

௭ ஆனாற் கர்த்தருடைய தூதர் அவளை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகேயிருக்கிற நீரூற்றாகிய கிணற்றண்டையிலே கண்டுபிடித்து,

௮ சாராயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே! எங்கேயிருந்து வருகிறாய்? எங்கே போகிறாயென்றார். அவள், நான் என் நாச்சியாராகிய சாராயைவிட்டு ஓடிப்போகிறேனென்றாள்.

௯ அப்பொழுது கர்த்தருடைய தூதர் அவளுடனே, நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய் அவள் கையின்கீழ் அடங்கியிருவென்றார்.

௰ பின்னையுங் கர்த்தருடைய தூதர் அவளோடே, உன் வித்தை மிகவும் பெருகப்பண்ணுவோம். திரட்சியினாலே அது எண்ணத்தொலையாததாயிருக்குமென்றார்.

௰௧ அப்புறங் கர்த்தருடைய தூதர் அவளோடே சொன்னதாவது, இதோ, கர்ப்பவதியாயிருக்கிறாய். நீ ஒரு குமாரனைப் பெறுவாய். கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினாலே அவனுக்கு இஸ்மவேலென்று பேரிடுவாயாக.

௰௨ இவன் துஷ்டமனிதனாயிருப்பான். இவன் கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கை இவனுக்கு விரோதமாகவுமிருக்கும். தன் சகோதரரெல்லாருக்கும் எதிரே குடியிருப்பானென்றார்.

௰௩ அப்பொழுது அவள் தன்னோடே பேசின கர்த்தரைத் தேவரீர் பார்க்கிறபராபரனென்ற நாமமாக அழைத்தாள். ஏனெனில் என்னைப் பார்த்தவரைப் பிறபாடு நானும் இவ்விடத்திலே கண்டிருக்கவில்லையோ? என்றாள்.

௰௪ ஆகையால் அந்தக் கிணறு என்னைப் பார்க்கிற சீவனுள்ளவரின் கிணறென்னப்பட்டது. இதோ, காதேசுக்கும் பேரேதுக்கும் நடுவே அதிருக்கின்றது.

௰௫ ஆகார் ஆபிராமுக்கொரு குமாரனைப் பெற்றாள். அப்பொழுது ஆபிராம் ஆகார்பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேலென்று பேரிட்டான்.

௰௬ ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெறுகிறபொழுது ஆபிராம் எண்பத்தாறு வயதாயிருந்தான்.

௰௭. அதிகாரம்.

பராபரன் ஆபிராமுக்குத் தரிசனையாகித் தேவ உடம்படிக்கையின் முத்திரையாகிய சுன்னத்தைக் கட்டளையிட்டது.

ஆபிராந தொணணூறறொனபது வயதானபொழுது கர்த்தர் ஆபிராமுககுததரிசனையாகி, அவனோடே சொனனதாவது, நானுசர்வததிற்துமவலலபர்ாபரன. * நீ நமமுடைய முகததிறகுமுனபாக நடநதுகொணடு, உததமனாயிரு. * உக, சய.

௨ நாம நமககும உனககும நடுவாக * நமமுடைய உடமபடிககையையேறபடுததி, உனனைமிகுதியும மிகுதியுமாயபெருககபபணணுவோமெனறார். * ௰௫, ௰௮.

௩ அபபொழுது ஆபிராமமுகங்குபபுறவிழுநதான. பர்ாபரன அவனோடேபேசிச்சொனனதாவது.

௪ இதோ, நாமுனனோடேபணணுகிறநமமுடைய உடமபடிககையாவது,* நீதிர்ளசாதிகளுககுத்தகபபனாவாய. * உரோமர். ச, ௰௭.

௫ இனியுனபேர் ஆபிராமெனனபபடாததாக. நாமுனனைத்திர்ள சாதிகளுககுததகபபனாகவைததபடியினாலே உனபேர் ஆபிர்காமெனறிருக்கக்கடவது.

௬ உனனைமிகுதியுமமிகுதியுமாயபபலுகபபணணி, உனனைசசாதிகளாககுவோம. உனசநததியில இர்ாசாககளபிறபபார்கள.

௭ நாமுனககும உனககுபபிறபாடு உனவிததுககும பர்ாபரனாயிருக்கத் தக்கதாக நாமநமககுமஉனககும, உனககுபபிறபாடு தலைமுறைதலைமுறையாகவிருககபபோகிறஉனவிததுககுமநடுவேநமமுடையஉடமபடிககையை நிததிய உடமபடிககையாகததிடபபடுததுவோம.

௮ உனககும உனககுபபிறபாடு உனவிததுககுமநீபாரதேசியாயததஙகிவருகிறகானானதேசததையெலலாம நிததிய உமபிளிககையாகக்கொடுதது, அவர்களுககுபபர்ாபரனாயிருபபோமெனறார்.

௯ பினனையும பர்ாபரன ஆபிர்காமோடே சொனனதாவது. இபபொழுதும நீயுமுனககுபபிறபாடு தலைமுறைதலைமுறையாகவிருககபபோகிற உனவிததாரும நமமுடைய உடமபடிககையைக கைக்கொள்வீர்களாக.

௰ நமககுமுனககும, உனககுபபிறபாடு உனவிததுககும நடுவேயுணடாகிறதுமநீஙகளகைககொளளவேணடியதுமான நமமுடைய உடமபடிககையாவது, உஙகளில ஆணாயபபிறநதெலலாரு சுனனததுபபணணபபடவேணடியது.

௰௧ உஙகள நுனிததோலினமாம்சததைச சுனனததுபபணணககடவீர்கள. அது நமககும உஙகளுககுமிருககிற * உடமபடிககையின அடையாளமாயிருககும.

* ரோமர். ச, ௰௧.

௰௨ உஙகளில் தலைமுறை தலைமுறையாக ஆணாயபபிறககிறதெலலாம எட்டுநாளபிளளையாயசசுனனததுபபணணபபடவேணடியது. வீட்டுபபிளளையும உனனுடையவிததலலாத எநத அநதியனிடத்திலும பணததினாலேகொளளபபட்ட பிளளையும அபபடிததானே.

௰௩ உனவீட்டுபபிளளையுமஉனபணததினாலேகொளளபபட்டவனும அவசியமாயசசுனனததுபபணணபபடவேணடும. இபபடி நமமுடைய உடமபடிககை உஙகளமாமசததிலே நிததியஉடமபடிககையாக விருக்கக்கடவது.

௰௪ நுனிததோலின மாம்சஞ்சுனனதது பபணணபபடாதிருககிற நுனிததோலுளள ஆணபிளளையிருநதால, அநத ஆததுமா நமமுடைய உடமபடிக்கையை முறிததபடியினாலே தனசனததிலிர்ாதபடிககு அறுபபுணடுபோவானெனறார்.

௰௫ பினனையும பர்ாபரன ஆபிர்காமோடேசொனனதாவது, உனபெணசாதி சாறாயியினுடையபேரைசசாறுவென றழையாயாக. சாறுளெனபது அவளுடைய பேராயிருககும.

௰௬ நாம அவளை ஆசிர்வதிதது, அவளாலே உனககொருகுமாரனையுநதநது, அவளசாதிகளாயபபலுகவும, அவளாற சாதிகளின இர்ாசாககளுணடாகவும அவளை ஆசிர்வதிபபோமெனறார்.

௰௭ அபபொழுது ஆபிர்காம முகஙகுபபுறவிழுநது, நகைதது நூறுவயதானவனுககுபபிளளைபிறககுமோ? தொணணூறுவயதானசாறுளபெறுவாளோ? எனறுதனனிருதயததிறசொலலிககொணடு,

௰௮ இஸமவேல உமககு முனபாகபபிழைபபானாகவெனறு ஆபிர்காமபர்ாபரனைவிணணபபமபணணினான.

௰௯ அபபொழுது பர்ாபரன சொனனதாவது, * உனபெணசாதியாகியசாறுளே உனககொரு குமாரனைபபெறுவாள. அவனுககு ஈசாககெனறுபேரிடுவாயாக. அவனோடேநாம நமமுடைய உடமபடிககையையவனுககுபபிறபாடு அவனவிததுககுமெனறெனறைககுமநிறகிற உடமபடிககையாக ஏறபடுததுவோம. *,௰௮, ௰. உக, ௩.

௨௰ இஸமவேலுககாகவும உனவிணணபபததைககேட்டோம. இதோ, நாம அவனை ஆசீர்வதிதது, அவனைமிகுதியும மிகுதியுமாகபபலுகவும பெருகவுமபணணுவோம. * பனனிரணடு பிர்புககளைபபெறுவான. அவனைபபெரியசாதியாககுவோம.

* உரு, ௰௬.

௨௧ ஆனால நமமுடைய உடமபடிககையை நாம் மறுவருஷததில் இககாலததிலே சாறுள உனககுபபெறபபோகிற ஈசாககுடனே ஏறபடுததுவோமெனறார்.

௨௨ பர்ாபரனஅவனோட்டேபேசிமுடிதத பிறபாடு அவர் ஆபிர்காமைவிட்டேறி

௨௩ அப்பொழுது ஆபிரகாம் தன் குமாரனாகிய இஸ்மவேலையும் தன் வீட்டிலே பிறந்தயாவரையும், தான் பணத்தினாலே கொண்டயாவரையும், ஆபிரகாமாகிய தன் வீட்டு மனிதருக்குள்ளே ஆண்பிள்ளைகளெல்லாரையுஞ் சேர்த்துப் பரம்பரன் தன்னோடே சொன்னபடி, அவர்களுடைய நுனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலேதானே சுன்னத்துப்பண்ணினான்.

௨௪ ஆபிரகாமுடைய நுனித்தோலின் மாம்சங்களைத் தறிக்கிறபொழுது அவன் தொண்ணூற்றொன்பது வயதாயிருந்தான்.

௨௫ அவனுடைய குமாரன் இஸ்மவேலோவெனில், அவனுடைய நுனித்தோலின் மாம்சங்களைத் தப்பண்ணப்படுகிறபொழுது பதின்மூன்று வயதாயிருந்தான்.

௨௬ அந்நாளிலேதானே ஆபிரகாமும் அவனுமாரன் இஸ்மவேலுஞ் சுன்னத்தடைந்தார்கள்.

௨௭ வீட்டிலே பிறந்தவர்களும் அன்னியரிடத்திலே பணத்திற்குக் கொள்ளப்பட்டவர்களுமாகிய அவன் வீட்டு மனிதரெல்லாரும் அவனோடேகூடச் சுன்னத்தடைந்தார்கள்.

௰௮. அதிகாரம்.

ஈசாக்கின் பிறப்புமற்றபடியும் முன்னறிவிக்கப்பட்டது.

பின்பு கர்த்தர் அவனுக்கு மம்ரேயின் சமபூமியிலே தரிசனையானார். அவன் பகல் உஷ்ணவேளையிலே கூடார்வாசலிலே உட்கார்ந்திருந்து,

௨ தன் கண்களையேறெடுத்துப் பார்க்கும்போது, இதோ மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள். அவர்களைக் காணவே அவன் கூடார்வாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டோடித் தரைமட்டுங் குனிந்து,

௩ ஆண்டவரே! உமமுடைய கண்களில எனக்குக் கிருபைகிடைத்ததானால், * நீர் உமது அடியானைவிட்டு விலகிப்போகாதிரும். * எபி. ௧௩, ௨.

௪ கொஞ்சந் தண்ணீர் கொண்டுவரட்டுமே? உங்கள் கால்களைக் கழுவி மரத்தின் கீழே சாய்ந்துகொண்டிருங்கள்.

௫ நீங்கள் உங்கள் இருதயத்தைத் திடப்படுத்துகிறதற்குக் கொஞ்சம் அப்பங்கொண்டுவருவேன், பிற்பாடு அப்புறம் நடப்பீர்கள். இதற்காகவே நீங்கள் அடியானண்டைக்கு வந்தீர்களென்றான். அதற்கு அவர்கள் நீ சொன்னபடியே செய்யென்றார்கள்.

௬ அப்பொழுது ஆபிரகாம் தீவிரமாய்க் கூடாரத்திற்குள் சாறாளண்டைக்குப்போய், நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவெடுத்துப் பிசைந்து, அப்பங்களைச் சுடவென்றான்.

௭ மாட்டுமந்தைக்கும் ஆபிரகாம் ஓடி இளசாயிருக்கிற நல்லகன்றுக்குட்டியைப் பிடித்துப் பணிவிடைக்காரனிடத்திலே கொடுத்து அதைச்சமைக்கத் தீவிரித்து,

௮ வெண்ணெயையும் பாலையும் தான் சமைப்பித்த கன்றுக்குட்டியையுமெடுத்து வந்து அவர்கள் முன்பாக வைத்தான். அவர்கள் புசிக்கையில் அவர்களண்டை மரத்தின் கீழ் நின்றுகொண்டிருந்தான். அவர்கள் புசித்து,

௯ அவனுடனே, உன் பெண்சாதி சாறாள் எங்கேயென்றார்கள். அதோ, கூடாரத்திலிருக்கிறாளென்றான்.

௰ அப்பொழுது அவர் ஒருவிசை உயிர்ப்பிக்குங் காலத்திட்டத்திலே உன்னண்டைக்குத் திரும்ப வருவோம். அப்பொழுது இதோ, * உன் பெண்சாதியாகிய சாறாளுக்கு ஒரு குமாரன் இருப்பானென்றார். சாறாள் அவருக்குப் பின்புறமான கூடார்வாசலிலிருந்து அதைக்கேட்டாள். * ௰எ. ௰௯. ௨௧.

௰௧ ஆபிரகாமுஞ் சாறாளுமோவெனில் முதிர்ந்தவர்களும் வயதுசென்றவர்களுமாயிருந்தார்கள். ஸ்திரிகளுக்குள்ள வழிபாடு சாறாளுக்கு நின்றுபோயிற்று.

௰௨ ஆகையால் சாறாள் * தன் உள்ளத்திலே நகைத்து, நான் கிழவியும் † என் எசமானும் முதிர்ந்த வயதுள்ளவருமானபின்பு எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ? என்றாள்.
* ௰எ, ௰எ. † ௧. பேது. ௩, ௬.

௰௩ அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமோடே சொன்னதாவது, சாறாள் நகைத்து நான் கிழவியாயிருந்தும் பிள்ளைபெறுவதும் மெய்யோவென்பானேன்?

௰௪ * கர்த்தரால் ஆகாத அதிசயமுண்டோ? ஒருவிசை உயிர்ப்பிக்குங் காலத்திட்டத்திலே உன்னண்டைக்குத் திரும்ப வருவோம். அப்பொழுது சாறாளுக்கொரு குமாரனிருப்பானென்றார். * மத்தே. ௰௯, ௨௬.

௰௫ சாறாளோவெனில், நான் நகைத்ததில்லையென்று மறுதலித்தாள். ஏனெனில் பயந்தாள். ஆனால் அவர், இல்லை நீ நகைத்தாயென்றார்.

சோதோமின் பாவத்தை விசாரிப்போமென்று கர்த்தர் ஆபிரகாமுக்கு அறிவித்ததும், இவன் அதற்காக ஆறுவிசை விண்ணப்பம்பண்ணினதும்.

௰௬ பிற்பாடு அந்தப்புருஷர் எழுந்திருந்து அவ்விடம்விட்டுச் சோதோமை நோக்கிப் போனார்கள். ஆனால் ஆபிரகாம் அவர்களை வழிவிடனுப்ப அவர்களோடேகூடப் போனான்.

௰௭ அப்பொழுது கர்த்தர் சொன்னதாவது, ஆபிரகாம் பெரிதான பலத்த சாதியாய்ப்போகக்கொள்ளவும், அவனிற * பூமியின் சாதிகளெல்லாம் ஆசீர்வதிக்கப்படுவதாயிருக்கக்கொள்ளவும், * ௰௨, ௩.

௰அ நாமசெயயபபோகிறதை நாம ஆபிர்காமுககுமறைபபோமோ?

௰௯ ஏனெனிற கர்ததர் ஆபிர்காமுககுசசொனனதை யவனமேலவரப்பணணுந்தக்கதாக, அவன தனபிளளைகளுககுநதனககுபபிறபாடு இருககுந தனவீடடாருககும, நீஙகள நீதியும நியாயமுஞ செயயுமபடிககுககர்ததருடைய வழியைககாததுநடவுஙகளெனறுகறபிபபானென்று அவனையறிவோமெனறுசொலலி,

௨௰ கர்ததர் அப்புறஞசொனனதாவது * சோதோமகொமோரா ஊர்களின கூககுரலபெரிதானபடியினாலும அவைகளின பாவம் மகாககனமானபடியினாலும,

* ௰௩, ௰௩.

௨௧ நாம் இபபொழுது இறஙகிபபோய, நம்மணடைககுவநதெடடின அதினுடைய கூபபிடுதலினபடியே அவர்களசெயது நிறைவேறிறறோ இல்லையோவெனறு பார்தது அறிவோமெனறார்.

௨௨ அபபொழுது அநதபுருஷர் அவவிடமவிடடுசசோதோமைநோககிபபோனார்கள. ஆனால ஆபிர்காம இனனஙகர்ததருககுமுனபாக நினறுகொணடிருநதான்.

௨௩ ஆபிர்காம சேர்நதுவநது சொனனதாவது, ஆகாதவனோடே நீதிமானையும அழிபபீரோ?

௨௪ படடணததிறகுளளே ஐமபதுநீதிமானகள இருப்பார்களாககும. அதறகுளளிருககும ஐமபது நீதிமானகளினிமிததம ஸதலததிறகு மனனியாமல அதையழிபபீரோ?

௨௫ இப்படிககொததசெயல உமககுததூரமாயிருபபதாக. நீதிமானும பொலலாதவனுஞசரியாக, பொலலாதவனோடே நீதிமானையுஙகொலலுவது உமககுததூரமாயிருபபதாக. * பூமிககெல்லாம் நியாயாதிபதியானவர் நீதிசெயயா திருப்பாரோ? எனறான. * அப்போ. ௰எ, ௩௧.

௨௬ அதறகுக்கர்ததர், சோதோமபடடணததிறகுள ஐமபது நீதிமானகளைக்கணடோமாகில, அவர்களினிமிததம ஸதலததிறகெலலாம மனனிபபோமெனறார்.

௨௭ அபபொழுது ஆபிர்காம பிரதியுததரமாக இதோ, அடியேனதூளுஞசாமபலுமாயிருநதும, ஆணடவரோடேபேசததுணிநதேன.

௨௮ ஐமபது நீதிமானகளுககு ஒருவேளை ஐநதுபேர்குறைநதால, அநத ஐநதுபேர்நிமிததம படடணததையெலலாம அழிபபீரோ? எனறான. அதறகவர், நாமநாறபததைநதுநீதிமானகளை அஙகேகணடால, அதையழிப்பதிலலையெனறார்.

௨௯ அவனினனம் அவரோடேபேசததொடர்நது, ஒருவேளை நாறபது நீதிமானகள அஙகேகாணப் படுவார்களெனறான. அதறகவர், நாறபது நீதிமானகளினிமிததம அப்படிச்செய்யாதிருபபோமெனறார்.

௩௰ அபபொழுது அவன, நான அபபுறமபேச ஆணடவருககுக கோபமவாராமல வேணடுகிறேன. ஒருவேளை முப்பது நீதிமானகள அஙகேகாணபபடுவார்களெனறான. அதறகவர் நாமமுபபது நீதிமானகளை அஙகேகணடால, அபபடிசசெயயாதிருபபோமெனறார்.

௩௧ அபபொழுது அவன, இதோ, ஆணடவரோடேபேசததுணிநதேன. ஒருவேளை இருபது நீதிமானகள அஙகேகாணபபடுவார்களெனறான. அதறகவர், நாம இருபது நீதிமானகளினிமிததம அதையழிககாதிருபபோமெனறார்.

௩௨ அபபொழுது அவன, நானினனம இநத ஒருவிசைமாததிரமபேச ஆணடவருககுககோபமவாராமலவேணடுகிறேன. ஒருவேளை பததுநீதிமானகள அஙகேகாணபபடுவார்களெனறான். அதறகவர், பததுநீதிமானகளினிமிததம அதையழிககா திருப்போமெனறார்.

௩௩ கர்ததர் ஆபிர்காமோடேபேசிமுடிததபிறபாடுபுறபபடடுப்போனார். ஆபிரகாமதனனிடததிறகுததிருமபினான்.

௰௯. அதிகாரம்.

கர்ததர்லோததைத்தப்பவிட்டதுமபின்பினசோதோமையழிததது.

அநத இரணடுதூதர் சாயஙகாலததிலேசோதோமுககுவநதார்கள. லோதசோதோமினவாசலிலே உடகாநதிருநதான. அபபொழுதுலோத்அவர்களைககணடுஎதிர்கொண்டெழுநதிருநது தரைமடடுமமுகங குனிநது,

௨ என்னுடையவர்களே! * இதோ, உஙகளுழியககாரனின வீடடுமுகமாய நீஙகள திருமபி, இராததஙகி, உஙகளகாலகளைககழுவிக்காலமே யெழுநதிருநது உஙகளவழிப்பயணமபோஙகளெனறான. அதறகவர்கள அலல, வீதியிலே இராததஙகுவோமெனறார்கள. * எபிரே. ௰௩, ௨.

௩ அவனுறுதியாய அவர்களைமிகவுமவருநதிககொணடான. அபபொழுது அவனணடைககுததிருமபி, அவனவிடடுககுவநதார்கள. அவனவர்களுககு விருநதுபணணிப்புளிப்பிலலா அப்பஙகளைசசுடடான. அவர்களபொசிததார்கள.

௪ ஆனால அவர்கள சயனிததுககொளளுகிறதறகுமுன்சோதோமிலேவாலிபகோ ரர்முதல கிழவர்மடடுமுளள ஊர்மனிதராகிய சனஙகளனைவருங கடைகோடிகளிலுமிருநதுவநது, * வீடடைசசூழநது கொணடு, * நியாகா. ௰௯, ௨௨.

லோத்தைக் கூப்பிட்டு, இந்த இராத்திரியிலே உன்னிடத்துக்கு வந்த மனிதரெங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களிடத்துக்கு வெளியே கொண்டுவா என்று அவனோடே சொன்னார்கள்.

௬ லோத்தோவென்றால் அவர்களண்டைக்கு வாசற்படியிலே புறப்பட்டுப் போய்த் தனக்குப் பின்னாலே கதவைப் பூட்டி,

௭ என் சகோதரரே! * பொல்லாப்புச் செய்யாதேயுங்கோள்? *நீதிக்காரர். ௰௯, ௨௧.

௮ இதோ, புருஷனையறியாத இரண்டு குமாரத்திகள் எனக்குண்டே: அவர்களை நானும் உங்களண்டைக்கு வெளியே கொண்டுவருவேன். உங்கள் பார்வைக்குச் சம்மதிப்படி அவர்களுக்குச் செய்யுங்கள். இந்தப் புருஷருக்கு மாத்திரம் ஒன்றுஞ் செய்யாதேயுங்கோள். ஏனென்றால் இதற்காக என் நிழலின் கீழ் வந்தார்களென்றான்.

௯ ஆனால் அவர்கள், அப்பாலே நகர்ந்து போவென்றும், பரதேசியாய் வந்த இவனொருவன் நியாயம் பேசவே பேசுவானென்றும், இப்பொழுது அவர்களைப் பார்க்கிலும் உனக்குப் பொல்லாப்புச் செய்வோமென்றுஞ் சொல்லி, லோத்தென்ற புருஷனை மிகவும் நெருக்கிக் கதவையுடைக்கக் கிட்டினார்கள்.

௰ அப்பொழுது அந்தப் புருஷர் தங்கள் கைகளை நீட்டி, லோத்தைத் தங்களண்டைக்கு வீட்டுக்குள்ளிழுத்துக் கொண்டு கதவைப் பூட்டி,

௰௧ வாசலுக்கு முன்னிருந்த சிறியோர் பெரியோருமாயிருக்கும் மனுஷருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள். அப்பொழுது அவர்கள் வாசலைத் தேடி இளைத்துப் போனார்கள்.

௰௨ அப்பொழுது அந்தப் புருஷர் லோத்தோடே சொன்னதாவது இன்னமிவ்விடத்தில் உனக்கு ஆரிருக்கிறார்கள்? மருமகனாவது உன் குமாரராவது உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்கிருக்கிற எவர்களானாலுஞ்சரி; அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துப்போ.

௰௩ ஏனென்றால் நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம். * அதென்னென்றால் அவர்கள் கூக்குரல் கர்த்தருடைய முகத்துக்கு முன்பாகப் பெரிதாயிருக்கிறது. அதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினாரென்றார்கள். * ௰௮, ௨௰.

௰௪ அப்பொழுது லோத்புறப்பட்டுத் தன் குமாரத்திகளை விவாகம் பண்ணப் போகிற தன் மருமக்களோடே பேசி நீங்களெழுந்து இந்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படுங்கள். ஏனென்றால் கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிப்பாரென்றான். ஆனால் அவனுடைய மருமக்களின் பார்வைக்கு அவன் பரியாசம் பண்ணுகிறதாய்க் கண்டது.

௰௫ கிழக்கு வெளுக்கும்பொழுது அந்தத் தூதர் லோத்தைத் துரிதப்படுத்தி, நீ பட்டணத்தின் அக்கிரமத்திலே அழியாதபடிக்கு எழுந்து, உன் பெண்சாதியையும் இங்கேயிருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துப் போவென்றார்கள்.

௰௬ அவன் தாமதித்துக் கொண்டிருக்கிறபொழுது அந்தப் புருஷர் கர்த்தர் அவன் மேல் வைத்த இரக்கத்தினாலே அவனுடைய கையையும் அவன் பெண்சாதியின் கையையும் அவனிரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப் பட்டணத்துக்கு வெளியே கொண்டுபோய் விட்டார்கள்.

௰௭ அப்பொழுது சம்பவித்ததேதென்றால் இவர்கள் அவர்களை வெளியே கொண்டுவந்த பிற்பாடு அவர் சொன்னதாவது, உன் ஜீவன் தப்ப ஓடிப்போ; பின்னிட்டுப் பாராதே; இந்தச் சமபூமியெங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்குப் பர்வதத்துக்கு ஓடிப்போவென்றார்.

௰௮ ஆனால் லோத் அவர்களோடே சொன்னதாவது, ஆ! அப்படியல்ல, ஆண்டவரே!

௰௯ இதோ, உம்முடைய கண்களில் உம்முடைய அடியானுக்குக் கிருபை கிடைத்ததே. என் பிராணனை உயிரோடே காக்கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரிதாயிருக்கப் பண்ணினீர். ஆனால் நான் பர்வதத்துக்கு ஓடிப்போகமாட்டேன். தீங்கென்னைத் தொடர்ந்து பிடித்தால் மரிப்பேனே.

௨௰ அதோ, அந்த ஊர் நான் அதற்கு ஓடிப்போகக் கிட்டியிருக்கிறதே. அது சின்னதுமாயிருக்கிறது. என் பிராணன் பிழைக்க நான் அங்கேயோடிப்போகட்டுமே? அது சின்னதல்லவோவென்றான்.

௨௧ அப்பொழுது அவர் அவனுடனே சொன்னதாவது, இதோ, நீ சொன்ன ஊரை நான் கவிழ்த்துப்போடாதபடிக்கு இந்தக் காரியத்திலும் உன் முகத்தைப் பார்த்தோம்.

௨௨ தீவிரமாய் அங்கேயோடித் தப்பித்துக்கொள். ஏனென்றால் நீ அங்கே வந்து சேருமட்டும் நானொன்றுஞ் செய்யக்கூடாதென்றார். ஆகையால் அந்த ஊர் சோவாரென்னப்பட்டது.

௨௩ லோத் சோவாருக்குள் வந்தபொழுது பூமியின்மேல் சூரியனுதித்தது.

௨௪ அப்பொழுது கர்த்தர் * சோதோமின் மேலும் கொமோராவின் மேலும் கர்த்தராலே வானத்திலிருந்து கெந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி,

※ ௫. மோசே. ௨௯, ௨௩. ஏசா. ௰௩, ௰௯. எரே. ௫௰, ௪௰. ஓசே. ௰௧, ௮. ஆமோ. ௪, ௰௧. லூக். ௰௭, ௨௯. யூதா. ௭. உ. பேது. ௨, ௬.

௨௫ அந்தப் பட்டணங்களையும் அந்தச் சமபூமியனைத்தையும் அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும் பூமியின் பயிரையுங் கவிழ்த்துப்போட்டார்.

௨௬ ஆனால் * அவன் பெண்சாதி பின்னிட்டுப் பார்த்து, உப்புத்தூணானாள்.

* லூக்கா. ௰௭, ௩௨.

௨௭ ஆபிரகாம் மோவென்கிற காலமேயெழுந்திருந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய்,

௨௮ சோதோம் கொமோரா பட்டணங்களின் திக்கையுஞ் சமபூமியினுடைய எல்லாத் திசைகையும் நோக்கிப் பார்த்தான். அப்பொழுது இதோ, நிலத்துப் புகைச்சூளையின் புகையைப்போலே எழும்பிற்று.

௨௯ அப்படியே பராபரன் அந்தச் சமபூமியின் பட்டணங்களை யழிக்கிறபொழுது பராபரன் ஆபிரகாமை நினைத்து, லோத்துக் குடியிருந்த பட்டணங்களைத் தாங் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்தக் கவிழ்த்தலின் நடுவிலிருந்து தப்பவிட்டனுப்பினார்.

லோத்தின் குமாரத்திகள் தங்களத் தகப்பனுக்கு வித்தைப் பிறப்பிக்கும்படிக்குச் செய்த முறைகேடான காரியம்.

௩௰ பிற்பாடு லோத்துச் சோவாரைவிட்டுப் போய், அவனும் அவனோடேகூட அவனிரண்டு குமாரத்திகளும் பர்வதத்திலே குடியேறினார்கள். ஏனென்றால் சோவாரிலே குடியிருக்கப் பயந்தான். அங்கே அவனும் அவனிரண்டு குமாரத்திகளும் ஒரு கெபியிலே குடியிருந்தார்கள்.

௩௧ அப்பொழுது மூத்தவள் இளையவளோடே சொன்னதாவது, நம்முடைய தகப்பன் முதிர்வயதானார். பூமியெங்கும் நடக்கிற முறைமையின்படியே நம்மோடே சேரப் பூமியில் ஒரு புருஷனுமில்லையே.

௩௨ வா, நம்முடைய தகப்பனாலே வித்தைப் பிறப்பிக்கும்படிக்கு அவருக்கு மதுபானங் குடிக்கக் கொடுத்து, அவரோடே சயனிப்போமென்றாள்.

௩௩ அப்படியே அன்று இராத்திரியிலே தங்கள் தகப்பனுக்கு மதுபானங் குடிக்கக் கொடுத்தார்கள். மூத்தவள் போய்த் தன் தகப்பனோடே சயனித்தாள். ஆனால் அவள் சயனித்துக்கொண்டதையும் எழுந்திருந்ததையும் உணராதிருந்தான்.

௩௪ மறுநாளிலே சம்பவித்ததென்னவெனில், மூத்தவள் இளையவளோடே இதோ, நேற்று என் தகப்பனோடே சயனித்தேன். நம்முடைய தகப்பனாலே வித்தைப் பிறப்பிக்கும்படிக்கு அவருக்கு இன்று இராத்திரிக்கும் மதுபானங் குடிக்கக்கொடுப்போம். அப்பொழுது நீ போய் அவரோடே சயனியென்றாள்.

௩௫ அப்படியே அன்று இராத்திரியிலுந் தங்கள் தகப்பனுக்கு மதுபானங் குடிக்கக் கொடுத்தார்கள். அப்பொழுது இளையவள் எழுந்துபோய் அவனோடே சயனித்தாள். ஆனால் அவள் சயனித்துக்கொண்டதையும் எழுந்திருந்ததையும் உணராதிருந்தான்.

௩௬ இப்படியாய் லோத்தின் குமாரத்திகள் இருவருந் தங்கள் தகப்பனாலே, கர்ப்பந்தரித்தார்கள்.

௩௭ மூத்தவள் ஒரு குமாரனைப் பெற்று அவனுக்கு மோவாப் என்று பேரிட்டாள். அவனே இந்நாள்வரைக்குமிருக்கிற மோவாபியருக்குத் தகப்பன்.

௩௮ இளையவளும் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குப் பென் அம்மி என்று பேரிட்டாள். அவன் இந்நாள்வரைக்குமிருக்கிற அம்மோன் புத்திரருக்குத் தகப்பன்.

௨௰. அதிகாரம்.

கேராரிலே சாராளுக்கு வருமோசத்தைக் கர்த்தர் திருப்பினது.

ஆபிரகாம் அவ்விடத்தைவிட்டுத் தெற்குத் தேசத்திற்குப் பயணம்பண்ணிக் காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறிக் கேராரிலே தங்கி,

௨ * தன் பெண்சாதியாகிய சாராளைத் தன் சகோதரியென்றான். அப்பொழுது கேராரின் இராசாவாகிய அபிமெலேக் ஆளனுப்பிச் சாராளையெடுத்துக்கொண்டான்.

* ௰௨, ௰௩. ௨௬, ௭.

௩ ஆனால் இராத்திரியிற் சொப்பனத்திலே பராபரன் அபிமெலேக்கண்டைக்கு வந்து அவனுடனே, இதோ, நீ எடுத்துக்கொண்ட ஸ்திரியினிமித்தம் நீ சாவுக்குள்ளானவன். ஏனென்றால் அவள் புருஷனுக்குப் பெண்சாதியாயிருக்கிறாளென்றார்.

௪ அபிமெலேக்கோவென்றால் அவளைச் சேராதிருந்தான். ஆகையால் அவன் சொன்னதாவது, ஆண்டவரே! நீதியுள்ள சாதியையுங் கொல்லுவீரோ?

௫ இவள் தன் சகோதரியென்று அவன் என்னோடே சொன்னதில்லையோ? இவன் தன் சகோதரனென்று அவள்தானுஞ் சொன்னாளே; என்னிருதயத்தின் உத்தமத்தோடும் என் கைகளின் குற்றமில்லாமையோடும் இதைச் செய்தேனேயென்றான்.

௬ அப்பொழுது பராபரன் சொப்பனத்திலே அவனோடே சொன்னதாவது, உன்னிருதயத்தின் உத்தமத்தோடே நீ இதைச் செய்தாயென்று நாம் அறிந்துமிருக்கிறோம். நீ நமக்கு விரோதமாகப் பாவஞ்செய்யாதபடிக்கு நாமுன்னைத் தடுத்துமிருந்தோம். ஆகையால் உன்னை யவளைத் தொட ஒட்டாதிருந்தோம்.

௭ இப்பொழுது அவன் ஸ்திரீயைப் புருஷனுக்குத் திரும்பக் கொடுத்துவிடு. ஏனெனில் * அவன் தீர்க்கதரிசி. நீ பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக வேண்டுதல் செய்வான். திரும்பக் கொடாதேபோனால், நீயும் உனக்கிருக்கிற யாவரும் சாவீர்களென்றறியென்றார். * சங்கீதம். ௧0௫, ௧௪. ௧௫.

௮ அபிமெலேக் அதிகாலமே எழுந்திருந்து தன் ஊழியக்காரரெல்லாரையும் அழைப்பித்து, இந்த எல்லா வார்த்தைகளையும் அவர்களோடே சொன்னான். அந்த மனிதர்கள் மிகவும் பயந்தார்கள்.

௯ அப்பொழுது அபிமெலேக் ஆபிரகாமை அழைப்பித்து அவனுடனே, நீ எங்களுக்கு என்ன செய்தாய்? நீ என்மேலும் என் இராச்சியத்தின்மேலும் இந்தப் பெரிய பாவத்தைச் சுமத்துகிறதற்கு உனக்கு என்ன துரோகஞ் செய்தேன்? செய்யத்தகாத காரியங்களை என்னிடத்திலே செய்தாயென்றான்.

௧0 பின்னையும் அபிமெலேக் ஆபிரகாமோடே, நீ இந்தக் காரியத்தைச் செய்வதற்குக் காரணமென்னத்தைக் கண்டாயென்றான்.

௧௧ ஆபிரகாம் சொன்னதாவது, இவ்விடத்திலே தேவபயமேயில்லையென்றும் என் மனைவிநிமித்தம் என்னைக் கொல்லுவார்களென்றும் நினைத்தேன்.

௧௨ அவள் என் சகோதரியென்கிறதும் மெய்தான். அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி; ஆனால் என் தாயாருக்குக் குமாரத்தியல்ல. அவள் எனக்குப் பெண்சாதியானாள்.

௧௩ பராபரன் என்னை என் தகப்பன் வீட்டிலிருந்து புறப்படப்பண்ணினபொழுது சம்பவித்ததினாலே, நாம் எந்த ஸ்தலத்திலே சேர்ந்தாலும் இவன் என் சகோதரனென்று நீ சொல்லுவதே நீ எனக்குச் செய்யவேண்டிய தயவென்று அவளோடே சொல்லியிருக்கிறேனென்றான்.

௧௪ அப்பொழுது அபிமெலேக் ஆடுமாடுகளையும் வேலைக்காரர்களையும் வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவன் பெண்சாதியாகிய சாராளை அவனுக்குத் திரும்பக் கொடுத்து,

௧௫ இதோ, என் தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது. உன் பார்வைக்குச் சம்மதியான இடத்திலே குடியிருவென்று அபிமெலேக் சொல்லி,

௧௬ சாராளுடனே, இதோ, உன் சகோதரனுக்கு ஆயிரம் வெள்ளிக்காசைக் கொடுத்தேன். இதோ, உன்னோடிருக்கிற எல்லார் முன்பாகவும் மற்ற அனைவர் முன்பாகவும் இது உனக்குக் கண்களின் முக்காட்டுக்காவலாகுமென்றான். இப்படிப் புத்திசொல்லப்பட்டாள்.

௧௭ ஆபிரகாம் பராபரனை வேண்டிக்கொண்டான். அப்பொழுது பராபரன் அபிமெலேக்கையும் அவன் பெண்சாதியையும் அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கினார். பிள்ளைகளைப் பெறும்படியாகக் குணமாக்கினார்.

௧௮ ஏனெனில் ஆபிரகாமுடைய பெண்சாதியாகிய சாராளினிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டுக் கர்ப்பங்களையெல்லாம் அடைக்கவே அடைத்திருந்தார்.

௨௧. அதிகாரம்.

சாராள் ஈசாக்கைப் பெற்றது.

கர்த்தரோவென்றால் * தாம் சொல்லியிருந்தபடியே சாராளை நோக்கிப் பார்த்தார். கர்த்தர் தாம் உரைத்தபடியே சாராளுக்குச் செய்தார். * ௧௭, ௧௯. ௧௮, ௧0.

௨ * சாராள் கர்ப்பந்தரித்து, ஆபிரகாமுக்கு அவன் முதிர்வயதிலே, பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த காலத்திட்டத்திலே ஒரு குமாரனைப் பெற்றாள்.

* எபிரேயர். ௧௧, ௧௧. ௧௨.

௩ அப்பொழுது ஆபிரகாம் தனக்குப் பிறந்தவனும் சாராள் தனக்குப் பெற்றவனுமான தன் குமாரனுக்கு * ஈசாக்கென்று பேரிட்டான். * ௧௭, ௧௯.

௪ எட்டுநாள் குழந்தையான தன் குமாரன் ஈசாக்கை ஆபிரகாம், பராபரன் தனக்குக் கற்பித்திருந்தபடியே சுன்னத்துப்பண்ணினான்.

௫ ஆபிரகாமுக்கு அவன் குமாரனாகிய ஈசாக்குப் பிறந்தபொழுது அவன் நூறு வயதாயிருந்தான்.

௬ சாராள் சொன்னதாவது, பராபரன் எனக்கொரு நகைப்பையுண்டாக்கினார்; இதைக் கேட்கிறயாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்.

௭ சாராள் பிள்ளைகளுக்கு முலைகொடுப்பாளென்று ஆபிரகாமுக்கு எவன் சொல்லுவான்? ஏனென்றால் அவர் முதிர்வயதிலே அவருக்கொரு குமாரனைப் பெற்றேனேயென்றாள்.

௮ பிள்ளை வளர்ந்து முலைமறந்தது. ஈசாக் முலைமறந்த நாளிலே ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணினான்.

ஆகாரும் அவள் மகனாகிய இஸ்மவேலும் அனுப்பிவிடப்பட்டது.

௯ பிறபாடு சாராள் எகிப்துதேசத்தாளாகிய ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரன் ஆகடியம்பண்ணுகிறவனென்று கண்டு,

௧0 ஆபிரகாமுடனே, * இந்த அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும். ஏனெனில் இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளனாயிருப்பதில்லையென்றாள்.

* கலா. ௪, ௩0.

௰௧ தன்குமாரனைக்குறித்துச்சொல்லப்பட்ட இந்தவார்த்தை ஆபிரகாமின்பார்வைக்குமிகவும் ஆகாததாயிருந்தது.

௰௨ ஆனால் பராபரன் ஆபிரகாமோடே சொன்னதாவது, அந்தப்பிள்ளையையும் உன் அடிமைப்பெண்ணையுங்குறித்துச்சொல்லப்பட்டது உன்பார்வைக்கு ஆகாததாயிருக்கவேண்டாம். சாராள் உன்னோடே சொன்னதெல்லாவற்றிலும் அவள் சொல்லைக்கேள். ஏனெனில் * ஈசாக்கினிடத்தில் உன்வித்து விளங்கும். * ௰௭, ௨௧. ரோமர். ௯, ௭.

௰௩ அடிமைப்பெண்ணின் குமாரனையும் அவன் உன்வித்தானபடியினாலே, ஒருசாதியாக்குவோமென்றார்.

௰௪ ஆபிரகாம் அதிகாலமேயெழுந்திருந்து, அப்பத்தையும் ஒருதுருத்தித்தண்ணீரையுமெடுத்து, ஆகாருக்குத்தோளின்மேலதாக்கிவிட்டுப்பிள்ளையையுங்கொடுத்து அவளையனுப்பிவிட்டான். அவள்புறப்பட்டுப்போய்ப் பேயெர்சேபாவின் வனாந்திரத்திலேவழிதப்பித்திரிந்தாள்.

௰௫ துருத்தியிலிருந்ததண்ணீர்போனபிறபாடு அவள்பிள்ளையை ஒருசெடியின்கீழேவிட்டுப்போய்,

௰௬ எதிராகவில்லெய்யுந்தூரத்திலே உளுக்காந்தாள். ஏனெனிற்பிள்ளைசாகிறதை நான்பார்க்கமாட்டேனென்றாள். அவளெதிரே உளுக்காந்து தன்சத்தமெடுத்தழுதாள்.

௰௭ ஆனாற்பராபரன் பிள்ளையின்சத்தத்தைக்கேட்டார். பராபரனுடைய தூதன் வானத்திலிருந்து ஆகாரைக்கூப்பிட்டு, அவளுடனே, ஆகாரே! உனக்கென்ன வேணும்? பயப்படாதே. பராபரன்பிள்ளையிருக்கிற இடத்திலே அவனுடைய சத்தத்தைக்கேட்டார்.

௰௮ நீயெழுந்திருந்துபிள்ளையையெடுத்து, அவனை உன்கையிலேற்பிடித்துக்கொண்டுபோ. ஏனெனில் அவனைப்பெரியசாதியாக்குவோமென்றார்

௰௯ பராபரன் அவள்கண்களைத்திறந்தார். அப்பொழுது அவளொருதண்ணீர்த்துரவைக்கண்டுபோய்த் துருத்தியைத்தண்ணீரினாலேநிரப்பிப்பிள்ளைக்குக்குடிக்கக்கொடுத்தாள்.

௨௰ பராபரன்பிள்ளையோடேகூடவிருந்தார். அவனவளர்ந்துவனாந்திரத்திற்குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனாயிருந்தான்.

௨௧ அவன் பாரானென்ற வனாந்திரத்திலேகுடியிருந்தான். அவனுடையதாய் எகிப்துதேசத்தாளாகிய ஒருபெண்ணை அவனுக்குவிவாகம்பண்ணுவித்தாள்.

அபிமெலேக்கும் ஆபிரகாமும் உடம்படிக்கைபண்ணிக்கொண்டது.

௨௨ அக்காலத்திற்சம்பவித்ததேதென்றால், அபிமெலேக்கும் அவன்சேனாபதியாகிய பிகோலும் ஆபிரகாமோடேசொன்னதாவது, நீசெய்கிறதெல்லாவற்றிலும்பராபரன் உன்னோடேகூடவிருக்கிறார்.

௨௩ இப்பொழுதும் நீயென்னையாகிலும் என்குமாரனையாகிலும் என்பேரனையென்கிலுஞ்சவடுசெய்யாமல், நானுனக்குச்செய்த்தயவின்படியே நீயெனக்கும், நீதங்கியிருக்கிற இந்தத்தேசத்திற்குஞ்செய்வதென்று பராபரன்பேரிலே எனக்கிங்கே ஆணையிடுவென்றான்.

௨௪ அப்பொழுது ஆபிரகாம், நான் ஆணையிடுகிறேனென்றான்.

௨௫ ஆனால் அபிமெலேக்குடையவேலைக்காரர்பறித்துக்கொண்ட தண்ணீர்த்துரவினிமித்தம்ஆபிரகாம் அபிமெலேக்கைக்கடிந்துகொண்டான்.

௨௬ அதற்கு அபிமெலேக், ஆரிந்தக்காரியத்தைச்செய்தானென்று அறியேன். நீயெனக்கறிவிச்சதுமில்லை; இன்று நான் அதைக்கேட்டதேயொழிய இதற்குமுன் அதைநான்கேட்டதுமில்லையென்றான்.

௨௭ அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடுகளைக்கொண்டுவந்து அபிமெலேக்குக்குக்கொடுத்தான். அவர்களிருவரும் உடம்படிக்கைபண்ணிக்கொண்டார்கள்.

௨௮ ஆபிரகாம் ஏழுபெண் ஆட்டுக்குட்டிகளைத்தனியேநிறுத்தினான்.

௨௯ அப்பொழுது அபிமெலேக் ஆபிரகாமோடே, நீதனியேநிறுத்தின் இந்த ஏழுபெண் ஆட்டுக்குட்டிகளெதற்கென்றான்.

௩௰ அதற்கவன், நானிந்தத்துரவையெடுத்ததற்கு எனக்குச்சாட்சியாக நீயிந்த ஏழுபெண்குட்டிகளை என்கையில் வாங்கிக்கொள்ளவேணுமென்றான்.

௩௧ அவர்களிருவரும் அவ்விடத்தில் ஆணையிட்டுக்கொண்டபடியினாலே அந்த இடம்பேயெர்சேபாவென்னப்பட்டது.

௩௨ அவர்கள்பேயெர்சேபாவிலே உடம்படிக்கைபண்ணிக்கொண்டபின்பு அபிமெலேக்கும் அவன்சேனாபதியாகியபிகோலும் எழுந்திருந்துபெலிஸ்தருடையதேசத்துக்குத்திரும்பினார்கள்.

௩௩ ஆபிரகாம்பேயெர்சேபாவிலே ஒருதோப்பைநாட்டி என்றுமுள்ளபராபரனாகிய கர்த்தருடையநாமத்தை அவ்விடத்திலே தொழுதுகொண்டான்.

௩௪ ஆபிரகாம் அநேகநாள்பெலிஸ்தருடையதேசத்திலேதங்கினான்.

௨௨. அதிகாரம்.

ஈசாக்கைத்தனக்குப்பலியிடுவென்றுபராபரன் ஆபிரகாமைச்சோதித்தது.

இந்தநடபடிகளுக்குப்பிறபாடு சம்பவித்ததென்னவெனில், பராபரன் ஆபிரகாமைச் சோதித்து, அவனுடனே, ஆபிரகாமே! என்றார். அதற்கவன் இதோ, அடியேனென்றான்.

௨ அப்பொழுது அவர் சொன்னதாவது, * நீ நேசிக்கிறவனும் உனக்கு ஒரேபேறானதுமாகிய உன்னுடைய குமாரன் ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியாதேசத்திற்குப்போய், அங்கே நான் உனக்குச் சொல்லப்போகிற மலைகளிலொன்றின்மேல் தகனபலியாகப் பலியிடுவாயென்றார். * எபிரே. ௰௧, ௰௭.

௩ அப்பொழுது ஆபிரகாம் அதிகாலமே எழுந்திருந்து, தன்கழுதையின்மேல் விசிக்கட்டித் தன்வேலைக்காரரில் இரண்டுபேரையுந் தன்குமாரனீசாக்கையுங் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளைப் பிளந்து, புறப்பட்டுப் பராபரன் தனக்குச் சொன்ன ஸ்தலத்துக்கு நடந்துபோனான்.

௪ மூன்றாம்நாளிலே ஆபிரகாம் தன்கண்களை யேறெடுத்துத் தூரத்திலே அந்தஸ்தலத்தைக் கண்டான்.

௫ அப்பொழுது ஆபிரகாம் தன்வேலைக்காரரோடே, நீங்கள் இங்கே கழுதையை நிறுத்திக்கொண்டிருங்கள். நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய்ப் பணிந்துகொண்டு உங்களண்டைக்குத் திரும்பிவருவோமென்றான்.

௬ ஆபிரகாம் தகனபலிக் கட்டைகளை யெடுத்துத் தன்குமாரனாகிய ஈசாக்கின்மேல் வைத்துத் தன்கையிலே நெருப்பையுங் கத்தியையும் எடுத்துக்கொண்டு, இருவருங் கூடப்போனார்கள்.

௭ அப்பொழுது ஈசாக் தன்தகப்பனாகிய ஆபிரகாமோடே, என்தகப்பனே! என்றான். அதற்கவன், என்மகனே! இதோ, நானென்றான். அப்பொழுது அவன், இதோ, நெருப்புங் கட்டையுமிருக்கின்றது. தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கேயென்றான்.

௮ அப்பொழுது ஆபிரகாம், என்மகனே! பராபரன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்ளுவாரென்றான். அப்புறம் இருவருமேகமாய்ப்போய்,

௯ பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த ஸ்தலத்திற்கு வந்தார்கள். அப்பொழுது ஆபிரகாம் அங்கே பலிபீடத்தைக் கட்டிக் கட்டைகளை அடுக்கிவைத்துத் தன்குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி அவனைப் பலிபீடத்திலே கட்டைகளின் மீதிற்கிடத்தினான்.

௰ பிறபாடு ஆபிரகாம் தன்கையை நீட்டித் தன்குமாரனைக் கொல்லும்படிக்குக் கத்தியையெடுத்துக்கொண்டான்.

௰௧ அப்பொழுது கர்த்தருடைய தூதர் வானத்திலிருந்து அவனைக் கூப்பிட்டு, ஆபிரகாமே! ஆபிரகாமே! என்றார். அவன் இதோ, அடியேனென்றான்.

௰௨ அப்பொழுது அவர், பிள்ளையாண்டான்மேல் உன்கையைப் போடாதே. அவனுக்கொன்றுஞ்செய்யாதே; ஏனெனில் நீ பராபரனுக்குப் பயந்திருந்து, நமக்காக உனக்கொரேபேறான உன்னுடைய குமாரனைப் பாராதேபோனாயென்று இப்பொழுது அறிந்திருக்கிறோமென்றார்.

௰௩ ஆபிரகாம் தன்கண்களை யேறெடுத்துப் பார்க்கிறபொழுது இதோ, பின்னுக்குப் பொதரிலே தன்கொம்புகளாற் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான். அப்பொழுது ஆபிரகாம் போய்க் கடாவைப் பிடித்து, அதைத் தன்குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.

௰௪ ஆபிரகாம் அந்தஸ்தலத்திற்குக் கர்த்தர் பார்த்துக்கொள்ளுவாரென்று பேரிட்டான். அதினாலே இந்நாள்வரைக்கும், கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்படும்.

௰௫ கர்த்தருடைய தூதர் இரண்டாம் விசை வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டுச் சொன்னதாவது,

௰௬ நீ நம்முடைய சொல்லைக் கேட்டு, இந்தக் காரியத்தைச் செய்து, நமக்காக உனக்கொரேபேறான உன்னுடைய குமாரனைப் பாராதேபோனபடியினாலே,

௰௭ நாமுன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, * உன்வித்தை வானத்து நட்சத்திரங்களைப்போலவும் கடற்கரையிலிருக்கிற மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவோமென்றும், உன்வித்தார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்களென்றும்,

* ௰௩, ௰௬. ௰௫, ௫.

௰௮ * உன்வித்தினாலே பூமியினுடைய எல்லாச்சாதிகளும் ஆசீர்வதிக்கப்படுமென்றும், † நம்முடையபேரிலே ஆணையிட்டோமென்று, கர்த்தர் சொல்லுகிறாரென்றார். * ௰௨, ௩. ௰௮, ௰௮. † எபிரே. ௬, ௰௩. ௰௪.

௰௯ ஆபிரகாம் தன்வேலைக்காரரண்டைக்குத் திரும்பிவந்தான். அப்பொழுது எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பேயெர்சேபாவுக்குப்போனார்கள். ஏனென்றால் ஆபிரகாம் பேயெர்சேபாவிலே குடியிருந்தான்.

௨௰ இந்தநடபடிகளுக்குப்பிறபாடு ஆபிரகாமுக்கறிவிக்கப்பட்டதாவது, இதோ, மில்க்காளும் உன்சகோதரனாகிய நாகோருக்குப் பிள்ளைகளைப்பெற்றாள்.

௨௧ ஊஸாயென்றுல, அவனுடைய மூததபேருன ஊத்ஸையும இவனதமபியாகிய பூஸையும ஆராமுககுததகபபனுகிய கேமுவேலையும,

௨௨ கேசேதையும ஆசோவையும பில்தாசையும, இத்லாபபையும பேததுவேலையுமபெறருள. பேததுவேலாவெனில ரெபெககாளைபபெறருனென்று அவனுககறிவிககபபட்டது.

௨௩ அநத எட்டுபபேரை மில்ககாளஆபிர்காமுடைய சகோதரனுகிய நாகோருககுபபெறருள.

௨௪ ரேயுமாளென்று பேர்கொணட அவனுடையவைபபாட்டியுந தேபாசையுங காகாமையுநதாகாசையும மாகாவையும பெறருள.

௨௩. அதிகாரம்.

சாறுள மரிததடககமபணணபபட்டது.

௧ சாறுள உயிரோடிருநதகாலம நூற்றிருபத்தேழுவருஷம. இதுவேசாறுளுடைய வயது.

௨ பிறகு சாறுள காணுன்தேசததிலே யிருககிற எபிரோன ஊராகிய கிரியாத் அர்பாவிலே மரிததாள. அபபொழுது ஆபிர்காம சாறுளுககாகபபுலமபவும அழவும வநதான.

௩ பிறபாடு ஆபிர்காந தனசவததைவிட்டெழுநது, ஏததினபுததிரரோடே பேசி,

௪ நான உஙகளிடத்திற் பர்தேசியும அநநியனுமாயிருககிறேன எனககுமுனபாககிடககிறஎனசவததைநான அடககமபணணுவதறகு, எனக்கு உஙகளிடததிறபிறேதமடககமபணணுமநிலததைசசொநதமாகததாருஙகளென்றுன.

௫ அபபொழுது ஏததினபுததிரர் ஆபிர்காமுககுப பிரததியுததாரமாகசசொனனதாவது,

௬ எஙகள ஆணடவனே! நாஙகளசொலலுகிறதைககேளும. எஙகளநடுவிலேநீர்தேவபிரபுவாயிருககிறீர். எஙகளகலலறைகளில தெரிநதுகொளளபபட்டதிலே உமமுடையசவததையடககமபணண எஙகளிலொருவனுந தனகலலறையை யுமககுததடைசெயவதிலலையென்றுர்கள.

௭ அபபொழுது ஆபிர்காம எழுநதிருநது, ஏததினபுததிரராகிய தேசததாரைவணஙகி,

௮ அவர்களோடே சொனனதாவது, எனககுமுனபாகககிடககிற எனசவததைநான அடக்கமபணண உஙகளுககுசசமமதியாகுல, நீஙகள எனவார்ததையைககேட்டுசசோகாருடையகுமாரனுகிய எபபெரோனிடமே,

௯ அவன தனநிலததின கடைசியிலே தனககிருககிற மக்பேலா என்னபபட்ட கெபியையெனககுததர எனககாகமனுககேளுஙகள. உஙகளிடததிலெனககுபபிறேதமடககமபணணுஞசொநதநிலமிருககுமபடிககு அவர் அதைஅதுபெறுமவிலைககுததருவாராகவென்றுன.

௰ ஆனால எபபெரோன ஏததினபுததிரர் நடுவிலே உடகாநதிருநதான. அபபொழுது ஏததியனுகிய எபபெரோன தனஊர்வாசலுககுட்பிரவேசிககிற ஏததினபுததிரர் அனைவருஙகேட்க ஆபிர்காமுககுபபிரததியுததாரமாக,

௰௧ அலல என்னுணடவனே! எனவார்ததையைககேளும. நிலததையுமககுததருகிறேன. அதிலிருககுங கெபியையும உமககுததருகிறேன. என்சனபபுததிரருடைய கணகளுககுமுனபாக அதையுமககுததருகிறேன. உமமுடையசவததையடககமபணணுமென்றுன.

௰௨ அபபொழுது ஆபிர்காந தேசததாரைவணஙகி,

௰௩ தேசததுசசனஙகேட்க எபபெரோனுடனேசொனனதாவது, கொடுகக நீர் மனதானுல எனவார்ததையைககேளுமேன? நிலததின விலைககிரயததைத தருகிறேன. என்கையிலே அதைவாஙகிககொளளும. அபபொழுது அவவிடததில எனசவததையடககமபணணுவேனென்றுன,

௰௪ அபபொழுது எபபெரோன ஆபிர்காமுககுபபிரததியுததாரமாக,

௰௫ என்னுணடவனே! நானசொலலுகிறதைககேளும. இநதநிலம நானூறுவெளளிககாசுபெறும. எனககும உமககும அது எவவளவுகாரியம? நீர் உமமுடையசவததையடககமபணணுமென்றுன.

௰௬ அபபொழுது ஆபிர்காம எபபெரோனின சொலலைககேட்டு, எபபெரோன ஏததியருடைய புததிரரின காதுகள கேட்கசசொனனதாகிய வர்ததகரிடததிற் செலலுமபடியான நானூறுவெளளிககாசடவனுககு நிறுததுக்கொடுததான.

௰௭ இநதபபிரகாரமாக * மமரேககெதிரேமக்பேலாவிலிருநத எபபெரோனுடைய நிலமாகிய அநதபபூமியும அதிலுளள கெபியுமநிலததினுடைய எலலைகளெலலாஞ் சுறறியிருநத எலலாமரஙகளும, * ௪௯, ௨௯. ௩௰. ௫௰, ௰௩.

௰௮ அவனுடைய ஊர்வாசலுககுட்பிரவேசிககிற ஏததினபுததிரரெலலாருமஅறிய ஆபிர்காமுககுசசொநதமாக ஏறபட்டது.

௰௯ அதறகுபபிறபாடு ஆபிர்காந தனபெணசாதியாகியசாறுளைக காணுனதேசததில எபபெரோன ஊர்பூமியான மமரேக

தெதிரிட்டதெ மக்பேலா என்ற நிலத்தி லிருக்கிற குகையிலே அடக்கம்பண்ணினான்.

௨௰ இப்படியே ஏத்தின் புத்திரர் கையிலிருந்து கொள்ளப்பட்ட அந்த நிலமும் அதிலுள்ள கெபியும் ஆபிரகாமுக்குப் பிரேதங்களை அடக்கம்பண்ணுகிற சொந்த நிலமாக ஏற்பட்டது.

௨௪. அதிகாரம்.

ஈசாக்கு ரெபெக்காளை விவாகம்பண்ணினது.

ஆபிரகாம் வயதுசென்ற கிழவனானான். கர்த்தர் ஆபிரகாமை எல்லாவற்றிலும் ஆசீர்வதித்துக்கொண்டிருந்தார்.

௨ அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலே மூத்தவனும் தனக்குண்டானதை யெல்லாம் ஆளுகிறவனுமாகிய தன் ஊழியக்காரனிடத்தில் சொன்னது,

௩ நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் என்குமாரனுக்குப் பெண் கொள்ளாமல், * ௨௮, ௧.

௪ நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்ணைக் கொள்வதற்கு நான் உன்னை வானத்துக்குப் பராபரனும் பூமிக்குப் பராபரனுமாய் இருக்கிற கர்த்தரின்பேரிலே ஆணையிடும்படிக்கு, * உன்கையை என் இடுப்பின்கீழே போடென்றான். * ௪௭, ௨௯.

௫ அப்பொழுது அந்த ஊழியக்காரன் அவனுடனே, ஒருவேளை அந்தப் பெண் என்பின்னே இந்தத் தேசத்திற்கு வர மனதில்லாதிருப்பாள். அப்பொழுது உம்முடைய குமாரனை நீர்விட்டுவந்த தேசத்திற்குத் திரும்ப அழைத்துப் போவேனோ என்றான்.

௬ அதற்கு ஆபிரகாம் அவனோடே சொன்னது, நீ என்குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துப்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

௭ என்னை என் தகப்பனுடைய வீட்டிலும் நான் பிறந்த தேசத்திலுமிருந்து அழைத்துவந்தவரும், † உன் வித்துக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேனென்று எனக்குச் சொன்னவரும் எனக்கு ஆணையிட்டவருமான வானத்தினுடைய பராபரனான கர்த்தர் நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டுவரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார். * ௰௨, ௧. † ௰௨, ௭. ௰௩. ௰௫, ௰௮.

௮ பெண் உன்னைப் பின்செல்ல மனதில்லாதிருந்தாளேயாகில், அப்பொழுது நீ இந்த என்னுடைய ஆணைக்கு நீங்கலானவன். அங்கேமாத்திரம் என்குமாரனை மறுபடியும் அழைத்துப்போகாயாகவென்றான்.

௯ அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையைத் தன் எசமானாகிய ஆபிரகாமுடைய இடுப்பின்கீழே போட்டு, இந்தக் காரியத்திற்காக அவனுக்கு ஆணையிட்டான்.

௰ பிற்பாடு ஊழியக்காரன் தன் எசமானுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங்களைக் கூட்டிக்கொண்டு போனான். அவன் எசமானுடைய சகலவித உச்சிதங்களும் அவன் கையிலிருந்தது. அவன் எழும்பிப் புறப்பட்டுப்போய் மெசொப்பொத்தாமியாவிலே நாகோருடைய ஊருக்கு வந்து,

௰௧ ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையிலே, தண்ணீர் மொள்ளுகிற ஸ்திரீகள் புறப்படுகிற சாயங்காலவேளையிலே ஒட்டகங்களை மடக்கிச் சொன்னதாவது,

௰௨ என் எசமானாகிய ஆபிரகாமுடைய பராபரனாயிருக்கிற கர்த்தாவே! தேவரீர் இன்றைக்கு எனக்குக் காரியம் நேரிடப்பண்ணி, என் எசமானாகிய ஆபிரகாமுக்குக் கிருபைசெய்யுமேன்?

௰௩ இதோ, நான் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன். ஊராருடைய குமாரத்திகள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டுவருவார்கள்.

௰௪ நான் குடிக்க உன் பானையைச் சாயேன் என்று நான் சொல்லும்பொழுது குடி, உன் ஒட்டகங்களுக்கும் குடிக்கவார்ப்பேன் என்று சொல்லும் பெண்பிள்ளையே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எசமானுக்குக் கிருபைசெய்தீரென்று நான் இதினாலே அறியவுங்கடவேனென்றான்.

௰௫ அவன் இன்னம் பேசி முடியவில்லை. அப்பொழுது சம்பவித்ததேதென்றால், இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் பெண்சாதியில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்த * ரெபெக்காள் தன் பானையைத் தன் தோளின் மேலே வைத்துக்கொண்டு புறப்பட்டுவந்தாள். * ௨௨, ௨௩.

௰௬ அந்தப் பெண்பிள்ளை மகா ரூபவதியும் புருஷனையறியாத கன்னியாஸ்திரீயுமாயிருந்தாள். அவள் துரவுக்கிறங்கிப்போய் தன் பானையை நிரப்பிக்கொண்டேறிவந்தாள்.

௰௭ அப்பொழுது ஊழியக்காரன் அவளுக்கெதிர்கொண்டோடி, உன் பானையிலே நான் கொஞ்சந் தண்ணீர் குடிக்கட்டுமேன்? என்றான்.

௰௮ அதற்கவள், குடியும் என்னுடையவனே! என்று, தீவிரமாய்த் தன் பானையைத் தன் கையிலிறக்கிக்கொண்டு அவனுக்குக் குடிக்கக்கொடுத்தாள்.

௰௯ கொடுத்துத் தீர்ந்தபின்பு, உம்முடைய ஒட்டகங்களுக்கும் அவைகள் குடித்துத் தீருமட்டும் மொண்டுவார்ப்பேனென்று சொல்லி,

௨௰ தீவிரமாய்த் தன் பானைத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றி, இன்னம் மொண்டுவரத் துரவண்டையிலேயோடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்,

௨௧ அந்தப் புருஷன் அவள்மேல் ஆச்சரியப்பட்டுக் கர்த்தர் தன் பயணத்தைவாய்க்கப்பண்ணினாரோ இல்லையோவென்றறியமவுனமாயிருந்தான்.

௨௨ ஒட்டகங்கள் குடித்துத் தீர்ந்தபிறபாடோவென்றால் அந்தப் புருஷன் அரைச் சேக்கலிடைப் பொன்னுன் நெற்றிப் பட்டத்தையும் அவள் கைகளுக்குப் பத்துச் சேக்கலிடைப் பொன்னுன் இரண்டு சரிகைளையு மெடுத்துக் கொடுத்து,

௨௩ நீ ஆருடைய குமாரத்தியென்றெனக்கு அறிவியேன்? உன் தகப்பன் வீட்டிலிராத் தங்க எங்களுக்கிடமுண்டோ? என்றான்.

௨௪ அவள் அவனுடனே, நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகளென்று சொல்லி,

௨௫ அவனுடனே, எங்களிடத்தில் வைக்கோலும் தீனியும் திரம்பவிருக்கிறது. இராத்தங்க இடமுமிருக்கின்றதென்றாள்.

௨௬ அப்பொழுது அந்தப் புருஷன் தலைகுனிந்து கர்த்தரைப் பணிந்துகொண்டு,

௨௭ என் எசமானாகிய ஆபிரகாமின் பராபரனாயிருக்கிற கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். அவர் தம்முடைய கிருபையையுந் தம்முடைய உண்மையையும் என் எசமானைவிட்டு விலகப்பண்ணினதில்லை. நான் வழிப்பயணமவருகையிற கர்த்தர் என்னை என் எசமானுடைய சகோதரர் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்தாரென்றான்.

௨௮ பெண்பிள்ளை ஓடித் தன் தாயின் வீட்டிலே இந்த நடபடியையறிவித்தாள்.

௨௯ ரெபேக்காளுக்கொரு சகோதரனிருந்தான். அவன் பேர் லாபான். இந்த லாபான் வெளியே துரவருகேயிருக்கிற அந்தப் புருஷனண்டைக்கோடினான்.

௩௰ அதேதென்னில் இவன் அந்த நெற்றிப்பட்டத்தையுந் தன் சகோதரியின் கைகளிலிருக்கிற சரிகைளையுங் கண்டபடியினாலும் இன்னின்னபடி அந்தப் புருஷன் என்னோடே சொன்னானென்று தன் சகோதரி ரெபேக்காள் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டபடியினாலும், அந்தப் புருஷனண்டைக்கு வந்தான். இதோ, அவன் துரவருகே ஒட்டகங்களண்டையிலே நின்றிருந்தான்.

௩௧ அப்பொழுது இவன், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே! உள்ளேவா. நீ வெளியே நிற்பானேன்? நான் வீட்டையும் ஒட்டகங்களுக்கு இடத்தையும் ஆயத்தம்பண்ணினேனென்றான்.

௩௨ அப்பொழுது அந்தப் புருஷன் வீட்டுக்கு வந்தான். இவனோவென்றால் ஒட்டகங்களைக் கட்டவிழ்த்து ஒட்டகங்களுக்கு வைக்கோலுந் தீனியும் போட்டு, அவன் கால்களையும் அவனோடேகூட இருந்த மனிதர் கால்களையுங் கழுவுகிறதற்குத் தண்ணீர் கொடுத்தான்.

௩௩ பிறபாடு அவனுக்கு முன்பாகச் சாப்பாடு வைக்கப்பட்டது. ஆனால் அவன், நான் என் வார்த்தைகளைச் சொல்லாததற்குமுன்னே சாப்பிடேனென்றான். அதற்கவன் சொல்லென்றான்.

௩௪ அப்பொழுது அவன் சொன்னதாவது, நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன்.

௩௫ கர்த்தர் என் எசமானை மிகவும் ஆசீர்வதித்தார். இவர் பெரியவரானார். அவரிவருக்கு ஆடுமாடுகளையும் வெள்ளியையும் பொன்னையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் ஒட்டகங்களையுங் கழுதைகளையுங் கட்டளையிட்டார்.

௩௬ என் எசமானன் பெண்சாதியாகிய சாராளும் முதிர்வயதான பிறபாடு என் எசமானுக்கொரு குமாரனைப் பெற்றாள். இவனுக்கவர் தமக்குண்டானதையெல்லாங் கொடுத்து,

௩௭ நான் குடியிருக்கிற கானானேயருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்ளாமல்,

௩௮ நீ என் தகப்பன் வீட்டுக்கும் என்னினத்தண்டைக்கும் போய், என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்வாயாகவென்று என் எசமான் என்னை யாணையிட்டார்.

௩௯ அப்பொழுது நான் என் எசமானோடே, ஒருவேளை அந்தப் பெண் என் பிறகாலே வாராதே போவாளென்றேன்.

௪௰ ஆனால் அவர் எனக்குச் சொன்னதாவது, நான் பயந்து நடக்கிற கர்த்தரானவர் உன்னோடே தம்முடைய தூதனையனுப்பி, நீ என்னினத்திலும் என் தகப்பன் வீட்டிலும் என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்வதற்காக உன் பயணத்தை வாய்க்கப்பண்ணுவார்,

௪௧ நீ என்னினத்தண்டைக்குப் போனால், அப்பொழுது என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய். அவர்களுனக்குக் கொடாதே போனார்களாகில் என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாயென்றார்.

௪௨ அப்படியே இன்று நான் அந்தத் துரவண்டையிலே வந்து சொன்னதாவது, என் எசமானாகிய ஆபிரகாமின் பராபரனாகிய கர்த்தரே! இப்பொழுதும் நான் பயணம்பண்ணுகிற என் வழியைத் தேவரீர் வாய்க்கப்பண்ணினீரானால்,

௪௩ இதோ, நான் தண்ணீர்த் துரவண்டையிலே நிற்கிறேன். தண்ணீர் மொள்ளப் புறப்பட்டுவரப் போகிறவளும், நான் அவளுடனே, உன் பானையிலிருக்கிற தண்ணீரிற் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தாவென்று சொல்ல,

௪௪ அவள் என்னுடனே, நீ குடி; உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லுகிறவளே, கன்னியாஸ்திரீயே கர்த்தர் என் எஜமானுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரீயாவதாக வேண்டுமென்றேன்.

௪௫ நான் இப்படி என் இருதயத்திலே சொல்லி முடிக்கவில்லை. அப்பொழுது ரெபேக்காள் தன் பானையைத் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டவளாய்ப் புறப்பட்டு வந்து, துரவுக்கிறங்கிப்போய் மொண்டாள். அப்பொழுது அவளோடே, எனக்குக் குடிக்கத்தா வென்றேன்.

௪௬ அவள் சீக்கிரமாய்த் தன்மேலிருந்த பானையை இறக்கி, குடி; உன்னுடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேனென்றாள்; அப்படி நான் குடித்தேன். அவள் ஒட்டகங்களுக்கும் வார்த்தாள்.

௪௭ அப்பொழுது நீ ஆருடைய குமாரத்தி யென்று அவளைக் கேட்டேன். அதற்கவள் நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனாகிய பெத்துவேலின் மகளென்றாள். அப்பொழுது நான் அவள் நெற்றியிலே நெற்றிப்பட்டத்தையும் அவள் கைகளில் சரிகளையும் போட்டு,

௪௮ தலைகுனிந்து கர்த்தரைப் பணிந்துகொண்டு, நான் என் எஜமானுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை நன்மையான வழியிலே யழைத்துவந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்.

௪௯ இப்பொழுதும் நீங்கள் என் எஜமானுக்குத் தயவும் உண்மையுஞ் செய்கிறவர்களானால், எனக்கறிவியுங்கள். அல்லவென்றால் நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையாகிலும் நோக்கிப் போகும்படிக்கு அதையுமெனக் கறிவியுங்களென்றான்.

௫௰ அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்தரமாக, இந்தக் காரியம் கர்த்தராலே வந்தது. உனக்கு நாங்கள் தீமையாகிலும் நலமாகிலுஞ் சொல்லக்கூடாது.

௫௧ இதோ, ரெபேக்காள் உன் முன்பாக இருக்கிறாள். கர்த்தர் சொன்னபடியே அவள் உன் எஜமானுடைய குமாரனுக்குப் பெண்சாதியாகும்படிக்கு அவளையழைத்துக்கொண்டு போவென்றார்கள்.

௫௨ அப்பொழுது சம்பவித்ததேதென்றால் ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபொழுது, தரைமட்டுங் குனிந்து கர்த்தரைப் பணிந்துகொண்டான்.

௫௩ பிறபாடு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையுமெடுத்து ரெபேக்காளுக்குக் கொடுத்து, அவள் சகோதரனுக்குந் தாயுக்கும் உச்சிதங்களைக் கொடுத்தான்.

௫௪ பிறபாடு அவனும் அவனோடிருந்த மனிதரும் போசித்துக் குடித்து இராத்தங்கினார்கள். காலமே யெழுந்திருந்த பின்பு அவன் என் எஜமானனிடத்துக்கு என்னை யனுப்புங்களென்றான்.

௫௫ அப்பொழுது அவள் சகோதரனும் அவளுடைய தாயும், பெண் பத்து நாளாகிலும் எங்களோடேயிருந்து, பிறபாடு போகட்டுமென்றார்கள்.

௫௬ அவனோவெனில் அவர்களோடே, கர்த்தர் என் பயணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க நீங்கள் என்னைத் தாமதப்படுத்தாதேயுங்கள். நான் என் எஜமானனிடத்துக்குப் போக என்னை யனுப்புங்களென்றான்.

௫௭ அப்பொழுது அவர்கள், பெண்ணையழைத்து அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போமென்று சொல்லி,

௫௮ ரெபேக்காளையழைத்து, அவளுடனே, நீயிந்தப் புருஷனோடேகூடப் போவாயோ வென்றார்கள் அவள் போவேனென்றாள்.

௫௯ அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபேக்காளையும் அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும் அவன் மனிதரையும் அனுப்புவித்து,

௬௰ ரெபேக்காளை ஆசீர்வதித்து அவளுடனே, எங்கள் சகோதரியே! நீ ஆயிரம்பதினாயிரங்களாகவும், உன் வித்து தன்னைப் பகைக்கிறவர்களுடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளவுங்கடவதென்றார்கள்.

௬௧ அப்பொழுது ரெபேக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மீதிலேறி, அந்த மனிதனைப் பின்சென்றார்கள். ஊழியக்காரன் ரெபேக்காளை யழைத்துக்கொண்டுபோனான்.

௬௨ ஈசாக்கோவெனில் * என்னைப் பார்க்கிற ஜீவனுள்ளவருடைய கிணறென்னப்பட்ட கிணற்றின் வழியாய்ப் புறப்பட்டுவந்தான். ஏனெனில் தெற்குத் தேசத்திற் குடியிருந்தான். * ௰௬. ௰௩. ௰௪.

௬௩ ஈசாக்குச் சாயங்கால வேளையிலே செபத்தியானம்பண்ண வெளியே போயிருந்து, தன் கண்களையேறெடுக்கையில் இதோ, ஒட்டகங்கள் நடந்துவரக்கண்டான்.

௬௪ ரெபேக்காள் தன் கண்களை யேறெடுத்து ஈசாக்கைக் காண்கிறபொழுது ஒட்டகத்தைவிட்டிறங்கி,

௬௫ ஊழியக்காரனோடே, இங்கே வெளியிலே நமக்கெதிரே நடந்துவருகிற அந்தப் புருஷன் ஆர்? என்றாள். அவர் என் எஜமானனென்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் முக்காடிட்டுக்கொண்டாள்.

௬௬ ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்தான்.

௬௭ அப்பொழுது ஈசாக்கு இவளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்திலே அழைத்துக்கொண்டுபோய்ப் பிறபாடு ரெபேக்காளை விவாகம்பண்ணினான். அவள் அவனுக்குப் பெண்சாதியானாள். அவன் அவளைச் சிநேகித்தான். இப்படி ஈசாக்கு தன் தாயக்குப் பிறபாடு ஆறுதலடைந்தான்.

௨௫. அதிகாரம்.

ஆபிரகாமின் கடைசிநடபடிகள்.

ஆபிரகாம் மறுபடியும் ஒரு பெண்சாதியை விவாகம்பண்ணினான். அவள் பேர் கேத்தூராள்.

௨ இவள் அவனுக்குச் சிம்ரானையும், யக்கெஷானையும், மெதானையும், மீதியானையும், இஸ்பாகையும், சூவாகையும் பெற்றாள்.

௩ யக்கெஷான் ஷேபாவையும், தேதானையும் பெற்றான். தேதானுடைய குமாரர் அசூரிம், லெத்தூசிம், லெயூமி என்பவர்கள்.

௪ மீதியானுடைய குமாரர் ஏப்பா, ஏப்பேர், ஆனோக், அபீதா, எல்தா என்பவர்கள். இவர்களெல்லாரும் கேத்தூராளின் பிள்ளைகள்.

௫ ஆபிரகாம் * தனக்குண்டானதெல்லாவற்றையும் ஈசாக்குக்குக் கொடுத்தான்.

* ௨௪, ௩௬.

௬ ஆனால் ஆபிரகாமுக்கிருந்த வைப்பாட்டிகளின் பிள்ளைகளுக்கு ஆபிரகாம் ஈவுகளைக் கொடுத்துத் தானின்னமுயிரோடிருக்கையில் அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டுக் கிழக்கே போகக் கீழ்த்தேசத்திற்கு அனுப்பிவிட்டான்.

௭ ஆபிரகாமுயிரோடிருந்த ஆயிசுநாள் நூற்றெழுபத்தைந்து வருஷம்.

௮ பிறபாடு ஆபிரகாம் நல்லநரைவயதிலும் முதிர்ந்த பூரண ஆயிசிலும் சீவித்து மரித்துத் தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

௯ அப்பொழுது அவனை அவன் குமாரராகிய ஈசாக்கும் இஸ்மவேலும் * மம்ரேக்கு எதிரே ஏத்தியனான சோகாரின் குமாரனாகிய எப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட கெபியிலே அடக்கம்பண்ணினார்கள். * ௨௩, ௨௦.

௧௦ அது ஆபிரகாம் ஏத்தின் புத்திரர் கையிலே கொண்ட நிலந்தான். அங்கே ஆபிரகாமும் அவன் பெண்சாதியாகிய சாராளும் அடக்கம்பண்ணப்பட்டார்கள்.

௧௧ ஆபிரகாம் மரித்தபிறபாடு சம்பவித்த தேவனானவர் அவன் குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தார் என்னைப் பார்க்கிற சீவனுள்ளவருடைய கிணறென்னப்பட்ட கிணற்றண்டையிலே ஈசாக்குக் குடியிருந்தான்.

இஸ்மவேலின் சந்ததி.

௧௨ சாராளுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்துதேசத்தாளான ஆகார் ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரனாகிய இஸ்மவேலின் சந்ததியும் பலபல சந்ததிகளாய்ப்போன இஸ்மவேலடைந்தார் அழைக்கப்பட்ட நாமங்களுமாவது,

௧௩ இஸ்மவேலுடைய முதற்பேறானவன் நெபாயோத், மற்றவர்கள் கேதார், அத்பெயேல், மிப்சாம்,

௧௪ மிஷ்மா, தூமா, மாசா,

௧௫ ஆதாத், தேமா, எத்தூர், நாப்பீஸ், கேத்மா.

௧௬ தங்கள் கிராமங்களிலும் அரண்மனைகளிலுங் குடியிருந்த, தங்கள் சனத்தாருக்கு * பன்னிரண்டு பிரபுக்களான இஸ்மவேலின் குமாரர் இவர்கள்தான். அவர்களுடைய நாமங்களும் இவைகள்தானே.

* ௧௭, ௨௦.

௧௭ இஸ்மவேலின் வயது நூற்றுமுப்பத்தேழு வருஷமாயிருந்தது, பிறபாடு சீவித்து மரித்துத் தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

௧௮ அவர்கள் ஆவிலா துவக்கி எகிப்துக்கெதிராக அசூருக்குப்போகிற வழியிலிருக்கும் சூர்மட்டுங் குடியிருந்தார்கள். இது அவன் சகோதரரெல்லாருக்குமெதிராய் அவன் பங்கில் விழுந்த பூமி.

ஈசாக்குக்கு ஏசாவும் யாக்கோபும் பிறந்தது.

௧௯ ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குடைய சந்ததியாவது ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்.

௨௦ ஈசாக்கு பதானாராம் என்னப்பட்ட சீரியாவின் தேசத்தானாகிய பெத்துவேலுக்குக் குமாரத்தியும் சீரியதேசத்தானாகிய லாபானுக்குச் சகோதரியுமான ரெபேக்காளை விவாகம்பண்ணுகிறபொழுது நாற்பது வயதாயிருந்தான்.

௨௧ ஈசாக்கு மலடியாயிருந்த தன் பெண்சாதிக்காகக் கர்த்தரை வேண்டிக்கொண்டான். கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார். அவன் பெண்சாதி ரெபேக்காள் கர்ப்பந்தரித்தாள்.

௨௨ ஆனால் அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டிருந்தது. அப்பொழுது அவள் இப்படியானால் இந்தக் கர்ப்பத்தோடேதானிருப்பானேன் என்று சொல்லிக் கர்த்தரைக் கேட்கப்போனாள்.

௨௩ அப்பொழுது கர்த்தர் அவளுடனே இரண்டு சாதிகள் உன் கர்ப்பத்திலுண்டாயிருக்கிறது இரண்டு சனக்கூட்டங்கள் உன் குடல்களிலிருந்து பிரியும். * இவைகளில் ஒரு சனசத்தம் மற்ற சனசத்தத்தைப் பார்க்கப் பலத்துப்

போம், பெரியவன் சிறியவனைச் சேவிப்பா னென்றார். * ரோமர். ௯, ௰. ௰௩.

௨௪ பெற்றெடுக்கு நாட்கள் நிறைவேறின பொழுது, இதோ, இரட்டைப்பிள்ளை கள் அவள் கர்ப்பத்திலிருந்தது.

௨௫ முந்தினவன் சிவந்தவனும் முழுதும் ரோமமுள்ள உடுப்பைப் போலுமிருந்து வெளிப்பட்டான். அவனுக்கு ஏசாவென்று பேரிட்டார்கள்.

௨௬ அதற்குப்பிறகு அவன் சகோதரன் ஏசாவினுடைய குதிங்காலைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு வெளிப்பட்டான். அவனுக்கு யாக்கோபென்று பேரிட்டார்கள். அவளிவர்களைப் பெற்றபொழுது ஈசாக்கு அறுபதுவயதாயிருந்தான்.

ஏசா தன்னுடைய முதற்பிறப்புச் சுதந்தரத்தை யாக்கோபுக்கு விற்றது.

௨௭ இந்தப்பிள்ளைகள் பெரியவர்களான பொழுது ஏசா வேட்டையையறிந்தவனும் [illegible] மனிதனுமாக யாக்கோபோவெனில் கூடாரங்களிலே தங்கித்திரிகிற நற்குணமுள்ளவனாயிருந்தான்.

௨௮ ஈசாக்கு ஏசாவின்மேற் பட்சமாயிருந்தான். ஏனெனில் வேட்டையாடினது அவனுக்கு ருசிகரமாயிருந்தது. ஆனால் ரெபேக்காள் யாக்கோபின்மேற் பட்சமாயிருந்தாள்.

௨௯ ஏசா வெளியிலிருந்து களைத்து இளைப்பாய் வருகிறபொழுது யாக்கோபு கூழைச் சமைத்திருந்தான்.

௩௦ அப்பொழுது ஏசா யாக்கோபைப் பார்த்து: களைப்பாயிருக்கிறேனே; அந்தச் சிவப்பானதிலே நான் குடிக்கட்டுமே? ஏனெனில் இளைப்பாயிருக்கிறேனென்றான். இதினிமித்தம் அவன்பேர் ஏதோமென்னப்பட்டது.

௩௧ அப்பொழுது யாக்கோபு, உன்னுடைய முதற்பிறப்புச் சுதந்தரத்தை இன்றெனக்கு விலையென்றான்.

௩௨ அதற்கு ஏசா இதோ, நான் சாகப்போகிறேனே; இந்த முதற்பிறப்புச் சுதந்தரம் எனக்கென்னத்துக்கென்றான்.

௩௩ அப்பொழுது யாக்கோபு இன்றெனக்கு ஆணையிடென்றான். * அவனிவனுக்கு ஆணையிட்டுத் தன் முதற்பிறப்புச் சுதந்தரத்தை யாக்கோபுக்கு விற்றான்.
* எபிரேயர். ௰௨. ௰௬.

௩௪ அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பமும் பயறுக்கூழும் கொடுத்தான். அவன் புசித்துக்குடித்து எழுந்திருந்து போனான். இப்படி ஏசா முதற்பிறப்புச் சுதந்தரத்தை அசட்டைபண்ணினான்.

௨௬. அதிகாரம்.

ஈசாக்கு சிலகாலம் பெலிஸ்தருக்குள்ளே குடியிருந்தது.

௧ ஆபிரகாமின் நாட்களிலுண்டான முந்தின பஞ்சத்தை விட வேறொரு பஞ்சந் தேசத்திலுண்டாயிற்று. அப்பொழுது ஈசாக்கு கேராருக்குப் பெலிஸ்தருடைய ராசாவாகிய அபிமெலேக்கண்டைக்குப் போனான்.

௨ கர்த்தர் அவனுக்குத் தரிசனையாகிச் சொன்னதாவது: நீ எகிப்துக்கிறங்கிப்போகாமல் நானுனக்குச் சொல்லுகிற சீர்மையிலே குடியிரு.

௩ இந்தச் சீர்மையிலே தங்கியிரு. நானுன்னோடே கூடவிருந்து உன்னையாசீர்வதிப்போம். ஏனெனில் நானுனக்கும் உன் வித்துக்கும் இந்தத் தேசங்களையெல்லாங்கொடுத்து, * உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நாமிட்ட ஆணையைத் திட்டப்படுத்துவோம்.
* ௨௨, ௰௬—௰௮.

௪ ஆபிரகாம் நம்முடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, நம்முடைய திட்டத்தையும் நம்முடைய கற்பனைகளையும் நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயப்பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினாலே,

௫ நானுன் வித்தை வானத்து நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் வித்துக்கு இந்தத் தேசங்களையெல்லாங் கொடுப்போம். உன் வித்திலே பூமியிலுள்ள சாதிகளெல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்றார்.

௬ அப்படியே ஈசாக்கு கேராரிலே குடியிருந்தான்.

௭ அவ்விடத்து மனிதர் அவன் பெண்சாதியின் செய்தியை விசாரிக்கும்பொழுது அவன், * இவளென் சகோதரியென்பான். ஏனெனில் ரெபேக்காள் பார்வைக்கழகியானபடியால் அவ்விடத்து மனிதர் அவள் நிமித்தம் தம்மைக் கொல்லுவார்களென்றும் அவளைத் தன் பெண்சாதியென்று சொல்லப் பயந்தான். * ௧௨, ௰௩.

௮ ஆனால் அவனங்கே நெடுநாளிருக்கும்பொழுது சம்பவித்ததேதெனில், பெலிஸ்தரின் ராசாவாகிய அபிமெலேக் பலகணிவழியாய்ப் பார்த்து, இதோ, ஈசாக்கு தன் பெண்சாதியாகிய ரெபேக்காளோடே சரசம்பண்ணுகிறதைக் கண்டான்.

௯ அப்பொழுது அபிமெலேக் ஈசாக்கை அழைத்து இதோ, அவளுன் பெண்சாதியாமே; பின்னையேன் அவளை உன் சகோதரியென்று சொன்னாய்? என்றான். அப்பொழுது ஈசாக்கு அவனுடனே, அவள் நிமித்தம் நான் சாவாதபடிக்கு அப்படிச் சொன்னேனென்றான்.

௰ ஆனால் அபிமெலேக், இப்படியெங்களுக்கேன் செய்தாய்? சனத்திலொருவன்

உனபெணசாதியோடேசயனிக்கவும இப படியே நீயெஙகள்மேற குறறமவரப்பண ணவுமஅதுமோசமாயிருநதிதேயெனறன.

௰௧ பிறபாடு அபிமெலேக் எலலாசசன ததிற்கும, இநதபபுருஷனையாகிலும அவ னபெணசாதியையாகிலும தொடுகிறவ னகொலைபுண்கவேகொலையுணபானெனறு கட்டளையிடடான.

௰௨ ஈசாககு அநதத்தேசததிலேவிதை விதைததது, அததவருஷததிலே நூறத்தனை பலனடைநதான. ஏனெனிறகர்ததர் அவ னையாசீர்வதிததார்.

௰௩ அபபடியே அநதப்புருஷனபெருகி னன. அவனமிகுதியும பலததவனுதமடடு மவர்வர்பபெருகினன.

௰௪ அவனுககு ஆடுமநதைகளுமாட்டு மநதைகளும வெகுபணிவிடைசசனமுமிருந தது. ஆகையாற்பெலிஸதர் அவனமேறபொறாமையாகி,

௰௫ அவனதகபபனுடைய வேலைக்காரர் அவனதகபபனாகிய ஆபிரகாமின்நாட்களி லவெடடின * துரவுகளையெலலாந தூறறு மணணினாலநிரபபிபபோட்டார்கள.

* உக, ௩௰.

௰௬ அபிமெலேக் ஈசாககுடனே, எஙக ளைவிட்டுபபோ. ஏனெனில எஙகளைப்பார்க கமிகவும பலததவனானாயென்றான்.

௰௭ அபபொழுது ஈசாககு அவவிடமவிட டுபபுறபபடடுககேராரினபளளததாககிலே கூடாரமபோட்டு, அஙகே குடியிருநது,

௰௮ தனதகபபனாகிய ஆபிரகாமின நா ட்களில வெட்டினதும ஆபிரகாம மரிதத பிறபாடு பெலிஸதர் தூறறுப்போட்டது மான துரவுகளை மறுபடியுமெடுததுத, தன தகபபன அவைகளுககிடடிருநத பேர்களி னபடியே அவைகளுககுப்பேரிடடான.

௰௯ ஈசாககுடையவேலைககாரர் பளளத தாககிலேவெட்டி அங்கேசுரககிற நீரூற றைக்கணடுபிடிததார்கள.

௨௰ ஆனால் கேராரூர் மேயப்பர், இநத த்தணணீர் தஙகளுடையதெனறு ஈசாககு டையமேயப்பருடனே சணடைபணணினா ர்கள. அவர்கள தனனோடே சணடைபண ணினபடியினாலே அந்தத்துரவுககு ஏசே க்கெனறுபேரிட்டான்.

௨௧ வேறெநதுரவைவெடடினார்கள. அ தினபேரிலுஞ சணடைபணணினார்கள. ஆ கையால அதற்குசசித்னாவெனறு பேரிட் டான.

௨௨ அவவிடததைவிடடுபபோர்நதுபோ ய, வேறெநதுரவைவெட்டினன. அதின பேரில அவர்களசணடைபணணாதிருநதார் கள; அபபொழுது அவன, நாமதேசததிற பலுகுமபடிககு இபபொழுதுகர்ததர் நம ககிடமுணடாககினாரெனறுசொலலி, அத றகுரெகொபோததெனறுபேரிடடான.

௨௩ அஙகேயிருநது பேர்சேபாவுககுப போய ஏறினன.

௨௪ அனறு இராததிரியிலேகர்ததர் அ வனுககுததரிசனையாகி, நாம உனதகப பனாகிய ஆபிரகாமுடையபாபரன. பயபப டாதே; ஏனெனிலநாம உனனோடேகூடவி ருநது, நமமுடைய ஊழியககாரனாகிய ஆ பிரகாமினிமிததம உனனை யாசீர்வதிததது, உன்விததைதபபெருகப பணணுவோ மென றார்.

௨௫ அஙகேயவன ஒருபலிபீடததைக்க டடிக்கர்த்தருடையநாமததைத்தொழுது கொணடு, அஙகேதனகூடாரததைபபோ டடான. அஙகே ஈசாககினவேலைககாரர் ஒ ருதுரவைவெடடினார்கள.

௨௬ ஆனால * அபிமெலேகும அவனசி நேகிதனாகிய அகூசாததும அவனசேனாப திபிகோலுஙகேராரிலிருநது அவனணடை ககுவநதார்கள. * உக, உஉ.

௨௭ அபபொழுது ஈசாககு அவர்களு டனே, என் எனனணடைககு வருகிறீர்கள? நீஙகளெனனைபபகைததது, எஙகளை உஙகளி டததிலிராதபடிககு அனுப்பிவிட்டீர்களே யெனறன்.

௨௮ அதறகவர்கள சொனனதாவது,கர் ததர் உமமோடே கூடவிருககிறாரெனகிற தைககாணவேகணடோம. ஆகையால எங களுககு முமககும ஒரு ஆணையேறபாடு உ ணடாகக்கடவதெனறு சொலலிககொண டோம்.

௨௯ இபபொழுதும நாஙகளுமமைத தொடாமல நனமையையே உமககுசசெ யது, உமமைச சமாதானததோடேயனுப புவிததுபோலே, நீரெஙகளுககுத்தீஙகு செயயாதபடிககுஉமமோடே உடமபடிக கைபணணிககொளளுவோம. நீர் இபபொ ழுது கர்ததரால ஆசீர்வதிககபபட்டவரா மெயெனறார்கள.

௩௰ அவர்களுககு விருநதுபணணினன். அவர்களபொசிததுககுடிததார்கள.

௩௧ அதிகாலமேயெழுநதிருநது ஒருவரு ககொருவர் ஆணையிட்டார்கள. பிறபாடு ஈ சாககு அவர்களையனுபபுவிததான. அவர் கள சமாதானததோடே யவனைவிடடுப போனார்கள.

௩௨ அநநாளிலதானே ஈசாககினவேலை ககாரர்வநது, தாஙகளவெடடின துரவின செய்தியையவனுககறிவிததுத தணணீரை க்கணடுபிடிததோமெனறார்கள.

௩௩ அபபொழுது அதற்குசசேபாவெ னறுபேரிட்டான. ஆகையால அநத ஊரி னபேர் இநநாளவரைககும பேர்சேபாவெ னனபபடும.

ஏசாவினவிவாகம்.

௩௪ ஏசாவு நாறபதுவயததானபொழுது, ஏத்தியனானபேயெரியின குமாரத்தியாகிய

பண்ணினார்கள்.

௩௫ இவர்கள் ஈசாக்குக்கும் ரெபெக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்.

௨௭. அதிகாரம்.

ஈசாக்கு தன் மூத்தகுமாரனாகிய ஏசாவுக்குக் கொடுக்கப்போகிற ஆசீர்வாதத்தை யாக்கோபு தந்திரமாய் எடுத்துக்கொண்டது.

௧ ஈசாக்கு முதிர்வயதானதினாலே அவன் கண்கள் இருண்டதினால் பார்வையற்றுப்போனபொழுது சமபவித்ததேதென்றால், அவன் தன் மூத்தகுமாரனாகிய ஏசாவை அழைத்து, அவனோடே, என்மகனே! என்றான். இவன் அவனுடனே இதோ, இருக்கிறேனென்றான்.

௨ அப்பொழுது அவன் சொன்னதாவது, இதோ, முதிர்வயதானேன்; என்மரண நாளை அறியேன்.

௩ இப்பொழுதும் நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக்கொண்டு வெளியே போய் எனக்காக வேட்டையாடிக்கொண்டுவந்து,

௪ எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள ஒரு பதார்த்தத்தைப் பண்ணி நான் புசிக்கவும் மரிக்கிறதற்கு முன்னே என் ஆத்துமம் உன்னை யாசீர்வதிக்கவும் என்னண்டைக்குக் கொண்டுவாவென்றான்.

௫ ஆனால் ஈசாக்கு தன் குமாரனாகிய ஏசாவோடே பேசுகையில் ரெபெக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள். ஏசா வேட்டையாடிக்கொண்டுவர வெளியே போனான்.

௬ அப்பொழுது ரெபெக்காள் தன் குமாரனாகிய யாக்கோபோடே சொன்னதாவது, இதோ, உன் தகப்பன் உன் சகோதரனாகிய ஏசாவோடே,

௭ நான் புசித்து என் மரணத்திற்கு முன்னே உன்னைக் கர்த்தருக்கு முன்பாக ஆசீர்வதிப்பதற்காக நீ எனக்காக வேட்டையாடிக்கொண்டுவந்து, ருசியுள்ள ஒரு பதார்த்தத்தை எனக்குப் பண்ணென்று சொல்லக் கேட்டேன்.

௮ இப்பொழுதும் என்மகனே! நான் உனக்குக் கற்பிக்கிறபிரகாரமாக என் சொல் கேட்டுச் செய்.

௯ நீ ஆட்டு மந்தைக்குப் போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக்குட்டிகளை எனக்கு அங்கேயிருந்து கொண்டுவாயேன்? நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தமாக்குவேன்.

௰ உன் தகப்பன் தம்முடைய மரணத்திற்கு முன்னே உன்னை யாசீர்வதிக்கும்படிக்கு நீ அதை அவரண்டைக்கு அவர் புசிக்கத்தக்கதாகக் கொண்டுபோவாயாக வென்றாள்,

௰௧ ஆனால் யாக்கோபு தன் தாயாகிய ரெபெக்காளோடே சொன்னதாவது, இதோ, என் சகோதரனாகிய ஏசா* ரோமமுள்ள மனுஷன்; நானோவெனில் ரோமமில்லாதவன்.

* ௨௫, ௨௬.

௰௨ ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அவருக்கு எத்தனாய்க் காணப்பட்டு, என்மேல் ஆசீர்வாதத்தையல்ல சாபத்தை வருவித்துக்கொள்ளுவேனென்றான்.

௰௩ ஆனால் அவன் தாய் அவனுடனே என் மகனே! உனக்கு வருஞ்சாபம் என்மேலிருக்கக்கடவது. என் சொல்லைமாத்திரம் நீ கேட்டுப் போய் எனக்குக் கொண்டுவாவென்றாள்.

௰௪ அவன் போய்ப் பிடித்துத் தன் தாயண்டைக்குக் கொண்டுவந்தான். அப்பொழுது அவனுடைய தாய் அவன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள ஒரு பதார்த்தத்தைப் பண்ணினாள்.

௰௫ பிற்பாடு ரெபெக்காள் வீட்டிலே தன்னிடமாயிருந்த தன் மூத்தகுமாரனாகிய ஏசாவின் நல்ல வஸ்திரங்களையெடுத்துத் தன் இளையகுமாரனாகிய யாக்கோபுக்கு உடுத்தி,

௰௬ வெள்ளாட்டுக் குட்டிகளின் தோல்களை அவன் கைகளின்மேலும் ரோமமில்லாத அவன் கழுத்திலும் தரித்து,

௰௭ தான் பண்ணின ருசியுள்ள பதார்த்தத்தையும் அப்பத்தையும் தன் குமாரனாகிய யாக்கோபின் கையிலே கொடுத்தாள்.

௰௮ அவன் தன் தகப்பனண்டையிலே வந்து, என் தகப்பனே! என்றான். அதற்கவன், இதோ, இருக்கிறேன் என்மகனே! நீ ஆரென்றான்.

௰௯ அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனுடனே, நான் உமக்கு முதற்பிறந்தவனாகிய ஏசா. நீர் என்னோடே சொன்னபடியே செய்தேன். இப்பொழுதும் உம்முடைய ஆத்துமம் என்னை யாசீர்வதிக்கும்படிக்கு நீர் எழுந்து உட்கார்ந்து நான் வேட்டையாடினதிலே புசியுமென்றான்.

௨௰ அப்பொழுது ஈசாக்கு தன் குமாரனுடனே, என்மகனே! இது உனக்கித்தனை சீக்கிரமாய் அகப்பட்டதெப்படி? என்றான். இவன், உம்முடைய பராபரனாகிய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினாரென்றான்.

௨௧ அப்பொழுது ஈசாக்கு யாக்கோபுடனே, என்மகனே! நீ என் குமாரனாகிய ஏசாவுதானோ? அல்லவோ? என்று நான் உன்னைத் தடவிப்பார்க்கக் கிட்டவாவென்றான்.

௨௨ யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கண்டையிலே கிட்டப்போனான். அவன் இவனைத் தடவிச் சத்தம் யாக்கோபின் சத்தம். கைகளோ ஏசாவின் கைகளென்று சொல்லி,

௨௩ இவன் கைகள் இவன் சகோதரனாகிய ஏசாவின் கைகளைப்போல ரோமமானபடி

யினாலே இவனை யறியாதேபோய, இவனை யாசீர்வதிதது,

உச நீ எனகுமாரனாகிய ஏசாவுதானோ? எனறான. இவன நானதானெனறான.

உரு அபபொழுது அவன, எனகுமாரனாகிய நீ வேடடையாடினதிலே நான புசிதது என ஆததுமம உனனை யாசீர்வதிககுமபடிககு எனகிடடக கொணடுவாவெனறான. அவனகிடடக கொணடுவநதான. அபபொழுது அவன புசிததான. பிறகு திராடசபபழ இரசம அவனுககுக கொணடுவநதான; அவனகுடிததான.

உசா அபபொழுது இவன தகபபனாகிய ஈசாககு இவனோடே, எனமகனே! நீ கிடடவநது எனனை முததஞசெயயேனெனறான

உஎ இவன கிடடவநது அவனை முததஞசெயதான அபபொழுது அவன இவனவஸதிரஙகளினவாசனையை மோநது இவனையாசீர்வதிததுச சொனனதாவது, இதோ, எனகுமாரனுடையவாசனை கர்ததர் ஆசீர்வதிததவயலவெளியின வாசனையைபபோலிருககினறது.

உஅ * பராபரன உனககு வானததுப பனியிலும பூமியினபுஷடியிலுங கொடுதது, திரளதானியததையுந திராடசபபழ இரசததையுங கடடளையிடுவாராக.

* எபிரேயர். யக, உய.

உகூ சனசதளஙகள உனனைசசேவிககவுங, சாதிகள உனனை வணஙகவுங கடவது, * உன சகோதரருககு எசமானாயிரு. உன தாயினபிளளைகள உனனை வணஙகக்கடவர்கள. † உனனைச சபிககிறவர்கள சபிககபபடடவர்களும, உனனை யாசீர்வதிககிறவர்கள ஆசீர்வதிககபபட்டவர்களுமா யிருபபார்களாகவெனறான. * உரு, உங. † யஉ, ங.

௧. மோசே. உச, சா.

ஙய ஈசாககு யாககோபை ஆசீர்வதிதது தீர்நதபொழுது சமபவிதததெனனவெனறால, யாககோபு தனதகபபனாகிய ஈசாககினமுகததைவிடடுப புறபபடட வுடனே அவன சகோதரனாகியஏசாவுவேடடையாடிககொணடுவநதான.

ஙக இவனும ருசியுளள பதார்த்தத்தைப பணணித் தன தகபபனணடைககுககொணடுவநது, தனதகபபனுடனே, உமமுடைய ஆததுமம எனனை ஆசீர்வதிககுமபடிககு எனதகபபனெழுநதிருநது, தமமுடைய குமாரன வேடடையாடினதிலேபுசிபபாராகவெனறான.

ஙஉ அபபொழுது அவன தகபபனாகிய ஈசாககு அவனுடனே, நீ யார்? எனறான அதறகவன, நான உமககு முதற்பிறநத குமாரனாகிய ஏசாவெனறான.

ஙங அபபொழுது ஈசாககுமகா அதிசய அதிர்நது, சொனனதாவது, வேடடையாடி எனககுககொணடுவநதானே; அவன யார்? நீ வாராததற்குமுனனே நான அதெலலாவறறிலுமபுசிதது அவனையாசீர்வதிததேனே; அவன ஆசீர்வதிககபபடடவனுமாயிருபபானெனறான.

ஙச ஏசாவு தன தகபபனுடைய வார்ததைகளைககேடடபொழுது, * மகா உரதத சபபான சததமாய அலறிதன தகபபனோடே, எனதகபபனே! எனனையும ஆசீர்வதியுமெனறான. * எபிரேயர். யஉ, யஎ.

ஙரு அதறகவன, உனசகோதரனதநதிரமாயவநது உனனுடைய ஆசீர்வாதத்தை யெடுததுககொணடானெனறான.

ஙசா அபபொழுது இவன, அவனபேர்யாககோபு எனனபபடுகிறது சரியலலவோ? அதேனெனறால இததோடே இரணடுமுறை எனனைக கீழ்பபடுததினான. * எனமுதற்பிறபபுச சுதநதரததை யெடுததுககொணடான. இதோ, என ஆசீர்வாததததையும இபபொழுது எடுததுககொணடானெனறு சொலலி, நீரெனககு ஆசீர்வாதத்தைவைததுவைததிலலையோ? எனறான.

* உரு, ஙங.

ஙஎ ஈசாககு ஏசாவுககுப பிரதியுததாரமாக, இதோ, நான அவனை உனககு எசமானாககவைததேனே. அவனசகோதரரெலலாம அவனுககூழியககாரராகக் கொடுதது, அவனைத தானியததினாலுந திராடசபபழ இரசததினாலும ஆதரிததேனே; இபபொழுதும உனககு நானெனனசெயயலாம எனமகனே! எனறான.

ஙஅ ஏசாவு தனதகபபனோடே, எனதகபபனே! இநத ஒரே ஆசீர்வாதம உமககிருககிறதோ? எனனையும ஆசீர்வதியும எனதகபபனே! எனறு ஏசாவுசொலலித் தனசத்தத்தையுயர்ததியழுதான.

ஙகூ அபபொழுது அவன தகபபனாகிய ஈசாககு அவனுககுப பிரதியுததாரமாகச சொனனதாவது, இதோ, உனகுடியிருபபுபபூமியின புஷடியோடும உயர் வானத்திலிருநதிறஙகுமபனியோடுமிருககும.

சய உன படடையததினாலே நீ பிழைதது, உனசகோதரனைசசேவிபபாய. * நீமேற்கொளளுஙகாலம வருமபொழுதோவெனில, நீ உனகழுததிலிருககிற அவனுடைய நுகததடியையுதறிபபோடுவதுணடெனறான.

உ. இராசா. அ, உய.

சக ஏசாவோவெனில யாககோபைததன் தகபபன அவனையாசீர்வதிதத ஆசீர்வாதத்தினிமிததம பகைததது: என் தகபபனுககாகததுககிககும நாட்கள சமீபிககும. அபபொழுது எனசகோதரனாகியயாககோபைககொனறுபோடுவேனெனறு ஏசாவுதனனிருதயததிலே சொலலிககொணடான.

சஉ ஆனால ரெபேககாளுககு அவளுடையமூததகுமாரனாகிய ஏசாவின வார்ததைகள அறிவிககபபடடது. அபபொழுது அவ

தனனுடைய குமாரனாகிய யாக்கோபைய ழைபபித்து, அவனோடே சொன்னதாவது, இதோ, உன சகோதரனாகிய ஏசாவு உன்னைக் கொன்றுபோட நினைக்கிறதினாலே தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான்.

௪௩ இப்பொழுதும என மகனே! நீ என சொற்கேட்டு, எழுந்து புறப்பட்டு, ஆரானிலிருக்கிற என சகோதரனாகிய லாபானண்டைக்கோடிப்போய,

௪௪ உன சகோதரனுடைய உக்கிரம் ஆறுமட்டுங்கொஞ்சநாள் அவனண்டையிலே,

௪௫ உன சகோதரனுடைய கோபம உன்னைவிட்டுத்திரும்புமட்டாகவும நீ தனக்குச்செய்ததைஅவன மறக்குமட்டாகவு மிரு. பிறகு நான அவ்விடத்திலிருந்து உன்னையழைத்தனுப்புவேன. நான ஒரே நாளிலே உங்களிருவரையும ஏன் இழந்துபோக வேண்டும? என்றாள்.

௪௬ பிறகு ரெபெக்காள ஈசாக்கை நோக்கி, * ஏத்தின குமாரத்திகளினிமித்தம் என ஜீவன எனக்கு அரோசிக்கிறது. இந்த தேசத்துக் குமாரத்திகளாகிய ஏத்தின குமாரத்திகளில யாக்கோபு இவர்களுக்கொத்த பெண்ணைக்கொண்டால, எனக்குச் ஜீவன ஏனத்துக்கென்றாள். * ௨௬, ௩௪—௩௫.

௨௮. அதிகாரம்.

யாக்கோபு மெசொபொத்தாமியாவுக்கு அனுப்பப்பட்டது.

௧ அப்பொழுது ஈசாக்கு யாக்கோபை அழைத்து அவனை ஆசீர்வதித்து, அவனுக்குக் கற்பித்துச்சொன்னதாவது, * நீ கானான குமாரத்திகளில் பெண்ணைக்கொள்ளாமல,
* ௨௪, ௩.

௨ எழுந்து புறப்பட்டுப்பதான் அராமிலிருக்கிற உன் தாயின் தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப்போய, அவ்விடத்தில உன தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளில பெண்ணைக்கொள.

௩ சர்வவல்ல பராபரன உன்னை ஆசீர்வதித்து, நீ சனசதளங்களான கூட்டமாயிருக்கும்படிக்கு உன்னைப் பலுகவும பெருகவும்பண்ணி,

௪ பராபரன ஆபிரகாமுக்குக் கொடுத்த தேசத்தில் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமானதேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள, * ஆபிரகாமுடைய ஆசீர்வாதத்தை உனக்கும உன்னோடேகூட உன வித்துக்குங் கொடுக்கக்கடவரென்று சொல்லி, * ௧௨, ௨.

௫ ஈசாக்கு யாக்கோபை அனுப்புவித்தான். அப்பொழுது இவன பதான் அராமிலிருக்கிற சீரியனாகிய பெத்துவேலுடைய குமாரனும் தனக்கும ஏசாவுக்கும தாயாகிய ரெபெக்காளின சகோதரனுமான லாபானண்டைக்குப்போகப் புறப்பட்டான.

௬ ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து அவனைப்பதான் அராமுக்கு, அங்கே ஒரு பெண்ணைக்கொள்ள அனுப்பினதையும, அவனை ஆசீர்வதிக்கையில, நீ கானான குமாரத்திகளில் பெண்ணைக் கொள்ளாயாகவென்று அவனுக்குக்கற்பித்ததையும,

௭ யாக்கோபு தன தகப்பனுக்கும தன தாய்க்கும கீழ்ப்படிந்து பதான் அராமுக்குப் புறப்பட்டுப்போனதையும ஏசாவுக் கண்டான.

௮ கானானகுமாரத்திகள தனதகப்பனாகிய ஈசாக்கின பார்வைக்குப்பிரியமல்லாதவர்களென்றதை ஏசாவுகண்டபடியினாலே,

௯ ஏசாவு இஸ்மவேலண்டைக்குப் போய்த் தனக்கிருக்கிற பெண்சாதிகளைத் தவிர ஆபிரகாமுடைய குமாரனாகிய இஸ்மவேலின குமாரத்தியும நெபாயோத்தின சகோதரியுமாகிய மகலாத்தைவிவாகம்பண்ணினான.

பயணத்திலே யாக்கோபுகண்ட சொப்பனம.

௰ யாக்கோபு பெயர்செபாவை விட்டுப் புறப்பட்டு, ஆரானுக்குப்போகப் பயணம பண்ணி,

௧௧ ஓரிடத்திலேவந்து, சூரியன அஸ்தமித்தபடியினாலே, அங்கே இராத்தங்கி அவ்விடத்துக்கற்களில ஒன்றையெடுத்துத் தன தலைமாட்டிலே போட்டு, அவ்விடத்திலேபடுத்துக்கொண்டு,

௧௨ கண்டசொப்பனமாவது, இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதினதலைப்புவானத்தையெட்டியிருந்தது. இதோ, அதிலே * பராபரனுடைய தூதர் ஏறுகிறவர்களும இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள. * யோவான. ௧, ௫௧.

௧௩ இதோ, அதின்மீதில் கர்த்தர் நின்றுகொண்டிருந்துசொன்னதாவது, நாம உன தகப்பனாகிய ஆபிரகாமின பராபரனும ஈசாக்கின பராபரனுமாகிய கர்த்தர், நீ படுத்திருக்கிற பூமியை யுனக்கும உனவித்துக்குந் தருவோம.

௧௪ உனவித்துப் * பூமியின் தூளைப்போலிருக்கும. நீ மேற்கேயுங் கிழக்கேயும வடக்கேயுந் தெற்கேயும பரம்பிப்போவாய. † உன்னிலும உனவித்திலும பூமியின வம்சங்களெல்லாம ஆசீர்வதிக்கப்படும.
* ௧௩, ௧௬. † ௧௨, ௩.

௧௫ இதோ, நாமுன்னோடேகூடவிருந்து, நீ போகிற இடத்திலெல்லாம உன்னைக்காத்து, இந்தத்தேசத்திற்குன்னைத்திருமபிவரப்பண்ணுவோம. ஏனெனில நாமுனக்குச்சொன்னதைநாஞ்செய்யுமளவும உன்னைக்கைவிடோமென்றார.

௧௬ யாக்கோபு நித்திரைதெளிந்து விழித்தபொழுது, மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்திலிருக்கிறார். இதைநான அறியாதிருந்தேனென்றான.

௧௭ அவன் பயந்து, இந்தஸ்தலம் எத்தனை பயப்படத்தக்கதாயிருக்கிறது. இது பராபரனுடைய வீடொழிய வேறென்றல்ல, இது வானத்தின் வாசலென்று சொல்லி,

௧௮ யாக்கோபு அதிகாலமே யெழுந்திருந்து, தன் தலைமாட்டிலே போட்டுக்கொண்டிருந்த கல்லை யெடுத்துக்கொண்டு அதைத் தூணாக நிறுத்தி, அதின் மீதில் எண்ணெயை வார்த்து,

௧௯ அந்தஸ்தலத்திற்குப் பெத்தேலென்று பேரிட்டான். அவ்வூரிலே முந்தின பேரோவென்றால் லூஸ் என்பது.

௨௰ யாக்கோபு ஒரு பொருத்தனையைப் பண்ணிச்சொன்னதாவது, பராபரன் என்னோடே கூடவிருந்து, நான் நடக்கிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றிப் பொசிக்க அப்பமும் உடுக்க வஸ்திரமும் எனக்குக் கொடுத்து,

௨௧ என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணி, இப்படியே கர்த்தர் எனக்குப் பராபரனாயிருந்தாரானால்,

௨௨ நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் அப்பராபரனுடைய வீடாகும். தேவரீர் எனக்குக் கொடுப்பதெல்லாவற்றிலும் பத்திலொன்றை யுமக்குச் செலுத்துவேனென்றான்.

௨௯. அதிகாரம்.

யாக்கோபு லாபானண்டையிலே வந்திருந்து பண்ணின விவாகங்கள்.

பிற்பாடு யாக்கோபு கால் எட்டி நடந்து கிழக்கத்தியரின் தேசத்தில் வந்தான்.

௨ அப்பொழுது இதோ, வயல்வெளியிலே ஒரு கிணற்றையும், அங்கே அதினருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்தைகளையுங் கண்டான். ஏனென்னில் அந்தக் கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர் மொண்டு காட்டுவார்கள். கிணற்றினுடைய வாயின் மேலோவென்றால் ஒரு பெரிய கல்லு வைக்கப்பட்டிருந்தது.

௩ அவ்விடத்தில் மந்தைகளெல்லாஞ் சேர்ந்ததற்குப் பிற்பாடு அவர்கள் கிணற்று வாயின் மேலிருக்கும் கல்லைப் புரட்டி ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, மறுபடியுங் கல்லை அதின் தானத்திற் கிணற்று வாயின் மேலே வைப்பார்கள்.

௪ யாக்கோபு அவர்களுடனே, என் சகோதரரே! நீங்கள் எவ்விடத்தாரென்றான். அவர்கள், நாங்கள் ஆரானூர் மனிதர்களென்றார்கள்.

௫ அப்பொழுது அவர்களோடே, நாகோரின் குமாரனாகிய லாபானை யறிவீர்களோ? என்றான். அறிவோமென்றார்கள்.

௬ அப்பொழுது அவர்களை, அவன் சுகமாயிருக்கிறானோ என்று கேட்டான். அவர்கள், சுகமாயிருக்கிறானென்றும் அதோ, அவன் குமாரத்தியாகிய ராகேல் ஆடுகளையோட்டி வருகிறாளென்றுஞ் சொன்னார்கள்.

௭ அப்பொழுது அவன், இதோ, இன்னம் வெகு பொழுதிருக்கின்றது. இது மந்தைசேர்க்கிற வேளையல்லவே; ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டிப் போய் மேயுங்களென்றான்.

௮ அதற்கவர்கள், எல்லா மந்தைகளுஞ் சேருமட்டும் எங்களுக்குக் கூடாது. கிணற்று வாயின் மேலிருக்குங் கல்லைப் புரட்டுவார்கள். அதற்குப் பிறகு மந்தைக்குத் தண்ணீர் காட்டுகிறோமென்றார்கள்.

௯ அவனிவர்களோடே இன்னம் பேசிக்கொண்டிருக்கையில், ராகேல் தன் தகப்பனுடைய ஆடுகளோடே வந்தாள். ஏனென்னில் அவைகளை மேய்க்கிறவளாயிருந்தாள்.

௰ சம்பவித்ததேதென்றால் யாக்கோபு தன் தாயின் சகோதரனாம் லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலையுந் தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளையுங் கண்டபொழுது, யாக்கோபு சேர்ந்துபோய்க் கிணற்று வாயின் மேலிருந்த கல்லைப் புரட்டித் தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். * ௨. மோசே. ௨, ௧௭.

௧௧ பிற்பாடு யாக்கோபு ராகேலை முத்தி செய்து சத்தமிட்டழுது,

௧௨ தான் அவள் தகப்பனுடைய தம்பியென்றும், தான் ரெபேக்காளின் குமாரனென்றும் யாக்கோபு ராகேலுக்கறிவித்தான். அப்பொழுது அவளோடித் தன் தகப்பனுக்கறிவித்தாள்.

௧௩ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், லாபான் தன் சகோதரியின் குமாரனாகிய யாக்கோபுடைய செய்தியைக் கேட்டபொழுது அவனிவனுக்கெதிர்கொண்டோடி, இவனைக் கட்டிக்கொண்டு முத்திசெய்து, தன் வீட்டுக்கழைத்துப்போனான். அப்பொழுது இவன் லாபானுக்கு இந்தக் காரியங்களையெல்லாம் விவரித்தான்.

௧௪ அப்பொழுது லாபான் இவனுடனே, நீ யென்னெலும்பும் என் மாம்சமுமாமே யென்றான். அவனண்டையிலே இவனொருமாதக்காலமிருந்த பிற்பாடு,

௧௫ லாபான் யாக்கோபுடனே, நீ யென் தம்பியானதினாலே, இலவிசமாய் எனக்கு வேலைசெய்யவேண்டுமோ? உனக்குக் கூலியென்னவென்று எனக்குச் சொல்லென்றான்.

௧௬ லாபானுக்கோவென்னில் இரண்டு குமாரத்திகளிருந்தார்கள். மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர் ராகேல்,

௧௭ ஆனால் லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாயிருந்தது. ராகேலோவெனி

ல் அழகுள்ளவளும் அழகான பார்வையுமா யிருந்தாள்.

௧௮ யாக்கோபு ராகேலைப்பேரிற் பிரியப்பட்டு, உம்முடைய இளையகுமார்த்தியாகிய ராகேலுக்காக உமக்கேழுவருஷம் வேலைசெய்வேனென்றான்.

௧௯ அதற்கு லாபான், நான் வேறே அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப் பார்க்க அவளை உனக்குக் கொடுக்கிறது நாவலது; என்னோடேயிருந்திருவென்றான்.

௨௦ அப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழுவருஷம் வேலைசெய்தான். அவைகள் அவன் அவளைப்பேரில் வைத்த பிரியத்தினாலே கொஞ்சநாளாகக் கண்டது.

௨௧ பின்பு யாக்கோபு லாபானோடே என் பெண்சாதியை எனக்குத் தாரும். ஏனெனில் நான் அவளிடத்திற் பிரவேசிக்க என் நாட்கள் நிறைவேறிற்றென்றான்.

௨௨ அப்பொழுது லாபான் அந்தஸ்தலத்து மனுஷரெல்லாரையும் கூட்டி விருந்துபண்ணினான்.

௨௩ அந்த இராத்திரியிலே சம்பவித்ததேதெனில், இவன் தன்குமார்த்தியாகிய லேயாளைப் பெண்ணைக் கைக்கழைத்துப்போய்விட்டான்; இவன் அவளிடத்திலே அவளுட்பிரவேசித்தான்.

௨௪ தன்குமார்த்தியாகிய லேயாளுக்கு லாபான் தன்வேலைக்காரியாகிய சில்பாளை வேலைக்காரியாகக்கொடுத்தான்.

௨௫ சம்பவித்ததேதென்றாற் காலமே யிதோ, அவள் லேயாளேதானே. அப்பொழுது அவன் லாபானோடே, ஏன் இதையெனக்குச் செய்தீர்? ராகேலுக்காக அல்லலோ உம்மிடத்தில் வேலைசெய்தேன்? பின்னையேன் என்னை வஞ்சகம்பண்ணினீர்? என்றான்.

௨௬ லாபான்சொன்னதாவது, இளையவளை மூத்தவளுக்கு முன்னேகொடுக்கிறது எங்கள் தேசத்து நடப்பல்ல.

௨௭ இவளுடையவாரத்தை நிறைவேற்று. அப்பொழுது நீ இன்னம் வேறே ஏழுவருஷம் என்னிடத்திற் செய்யும் வேலைக்காக அவளை உனக்குக்கொடுப்பேனென்றான்.

௨௮ யாக்கோபு இப்படிச்செய்து, இவளுடையவாரத்தை நிறைவேற்றினான். அப்பொழுது தன்குமார்த்தியாகிய ராகேலையும் அவனுக்குப்பெண்சாதியாகக்கொடுத்தான்.

௨௯ தன்குமார்த்தியாகிய ராகேலுக்கு லாபான் தன்வேலைக்காரியாகிய பில்காளை வேலைக்காரியாகக்கொடுத்தான்.

௩௰ அவன் ராகேலிடத்திலும் பிரவேசித்து, லேயாளைப்பார்க்கிலும் ராகேலைச் சிநேகித்து, இன்னம் வேறே ஏழுவருஷம் அவனிடத்தில் வேலைசெய்தான்.

௩௧ லேயாள் பகைக்கப்பட்டவளென்று கர்த்தர் கண்டபொழுது அவளுடைய கர்ப்பத்தைத் திறந்தார். ராகேலோ வெளிலமலடியாயிருந்தாள்.

யாக்கோபுக்குப் பத்தான் அராமிலே பிறந்த முதற்பிள்ளைகள்.

௩௨ லேயாள் கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப்பெற்று, அவனுக்கு ரூபனென்று பேரிட்டாள். ஏனெனிற் கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தார். ஆகையால் இப்பொழுது என் புருஷன் என்னைச்சிநேகிப்பானென்றாள்.

௩௩ அப்புறம் அவள் கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப்பெற்று, நான்பகைக்கப்பட்டவளென்று கர்த்தர்கேட்டருளி, இவனையும் எனக்குக்கொடுத்தாரென்றுசொல்லி, அவனுக்குச்சிமையோனென்றுபேரிட்டாள்.

௩௪ அப்புறம் அவள் கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப்பெற்று, இப்பொழுது இந்தமுறை என்புருஷன் என்னோடே சேர்ந்திருக்கையாவார். ஏனெனில் அவருக்கு மூன்றுகுமாரரைப்பெற்றேனென்றுசொல்லி, அவனுக்குலேவியென்றுபேரிட்டாள்.

௩௫ அப்புறம் அவள் கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப்பெற்று, இப்பொழுது கர்த்தரைத்துதிப்பேனென்றுசொல்லி, அவனுக்கு யூதாவென்றுபேரிட்டாள். பிற்பாடு அவள்பெறுகிறது நின்றது.

௩௰. அதிகாரம்.

அப்பால் யாக்கோபுக்குப் பத்தான்அராமிலே பிறந்தபிள்ளைகள்.

இராகேல் தான்யாக்கோபுக்குப் பிள்ளைகளைப்பெறாததைக் கண்டாள் ஆனதுகொண்டு ராகேல் தன்சகோதரியின் பேரிலேபொறாமையாகி, யாக்கோபுடனே, எனக்குப்பிள்ளைகளைக்கொடும். இல்லாவிட்டால் நான் மரித்தவளாவேனென்றாள்.

௨ அப்பொழுது யாக்கோபு ராகேலின்மேற்கோபமூண்டு, உனக்குக் கர்ப்பக் கனியைக் கட்டளையிடாத பராபரனுக்கு நானதிகாரோ என்றான்.

௩ அப்பொழுது அவள், இதோ, என்வேலைக்காரியாகிய பில்காளிருக்கிறாள். அவளை என்மடிக்குப்பிள்ளைகளைப்பெறவும், * அவளாலேயும் என்வீடு கட்டப்படவும், அவளிடத்திற்பிரவேசியுமென்றுசொல்லி, *௰௬, ௨.

௪ அவனுக்குத் தன்வேலைக்காரியாகிய பில்காளைப் பெண்சாதியாகக்கொடுத்தாள். அப்படியே யாக்கோபு அவளிடத்திற் பிரவேசித்தான்.

௫ பில்காள்கர்ப்பந்தரித்து யாக்கோபுக்கொரு குமாரனைப்பெற்றாள்.

௬ அப்பொழுது ராகேல், பராபரன் என் வழக்கைத்தீர்த்து என்சத்தத்தையுங் கேட்டு, எனக்கொருகுமாரனைக்கொடுத்தாரென்றுசொல்லி, அவனுக்குத் தாணென்றுபேரிட்டாள்.

௭ மறுபடியும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பந்தரித்து யாக்கோபுக்கு இரண்டாங்குமாரனைப்பெற்றாள்.

௮ அப்பொழுது ராகேல், நான்தேவ போராட்டமாய் என்சகோதரியோடே போராடிமேற்கொண்டேனென்று சொல்லி அவனுக்கு நப்தலியென்று பேரிட்டாள்.

௯ லேயாள் தான்பெறுகிறது நின்றதென்றுகண்டு, தன்வேலைக்காரியாகியசில்பாளையழைத்து அவளை யாக்கோபுக்குப்பெண்சாதியாகக்கொடுத்தாள்.

௰ லேயாளின்வேலைக்காரியாகியசில்பாள் யாக்கோபுக்கொருகுமாரனைப்பெற்றாள்.

௰௧ அப்பொழுதுலேயாள் ஏராளமாகிறதென்றுசொல்லி, அவனுக்குகாத்தென்று பேரிட்டாள்.

௰௨ பிற்பாடுலேயாளின்வேலைக்காரியாகிய சில்பாள் யாக்கோபுக்கு இரண்டாங்குமாரனைப்பெற்றாள்.

௰௩ அப்பொழுதுலேயாள், என்பாக்கியத்திற்காயிற்று. ஏனெனிற்குமாரத்திகள் என்னைப்பாக்கியவதியென்பார்களென்றுசொல்லி, அவனுக்கு ஆசேர் என்றுபேரிட்டாள்.

௰௪ கோதுமையறுப்புநாட்களிலே ரூபன்புறப்பட்டு வெளியிலே தூதாயிகளைக்கண்டுபிடித்து, அவைகளைத்தன்தாயாகியலேயாளண்டைக்குக்கொண்டுவந்தான். அப்பொழுது ராகேல்லேயாளுடனே உன்குமாரனுடைய தூதாயிகளில் எனக்குக்கொஞ்சந்தாவென்றாள்.

௰௫ அப்பொழுது அவள் இவளுடனே, நீ என்புருஷனையெடுத்துக்கொண்டதுகொஞ்சகாரியமோ? என்குமாரனுடைய தூதாயிகளையும் எடுத்துக்கொள்ளவாயோ? என்றாள். அப்பொழுது ராகேல், உன்குமாரனுடைய தூதாயிகளுக்கீடாக இன்று இராவைக்கு அவர் உன்னோடே சயனம் பண்ணட்டுமென்றாள்.

௰௬ யாக்கோபு சாயங்காலத்திலேவெளியிலிருந்துவருகையிலலேயாள்புறப்பட்டு அவனுக்கெதிர்க்கொண்டுபோய், என்னிடத்தில்வருவீராக. ஏனெனில் என்குமாரனுடைய தூதாயிகளாலே உம்மைச் சம்பாதித்தேனென்றாள் ஆகையால அன்று இராத்திரியில அவளோடேசயனித்தான்.

௰௭ பராபரன் லேயாளைக்கேட்டருளினார் அவள்கர்ப்பந்தரித்துயாக்கோபுக்கு ஐந்தாங்குமாரனைப்பெற்றாள்.

௰௮ அப்பொழுது லேயாள்; நான் என் வேலைக்காரியை யென்புருஷனுக்குக் கொடுத்தபலனைப் பராபரன் எனக்குத் தந்தாரென்றுசொல்லி, அவனுக்கு இசக்காரென்றுபேரிட்டாள்.

௰௯ அப்புறம் லேயாள் கர்ப்பந்தரித்து யாக்கோபுக்கு ஆறாங்குமாரனைப்பெற்றாள்.

௨௰ அப்பொழுது லேயாள், பராபரன் எனக்கு நல்ல ஈவைத்தந்தார். இந்தமுறை என்புருஷன் என்னுடனே வாசமாவார். ஏனெனில் அவருக்கு ஆறுகுமாரரைப் பெற்றேனென்றுசொல்லி, அவனுக்குச்செபுலோனென்றுபேரிட்டாள்.

௨௧ பிற்பாடு அவள் ஒருகுமாரத்தியைப் பெற்று, அவளுக்குத் தீனாளென்று பேரிட்டாள்.

௨௨ ஆனால பராபரன் ராகேலை நினைத்தார். அவளைப்பராபரன் கேட்டருளி அவள் கர்ப்பத்தைத்திறந்தார்.

௨௩ அவள் கர்ப்பந்தரித்து, ஒருகுமாரனைப்பெற்றுப் * பராபரன் என்நிந்தையை நீக்கிப்போட்டாரென்றும், * லூக். ௧, ௨௫.

௨௪ கர்த்தர் எனக்கு இன்னமொருகுமாரனைக் கொடுப்பாராகவென்றுஞ் சொல்லி, அவனுக்கு யோசேப்பென்று பேரிட்டாள். யாக்கோபுக்குலாபானுடையசேவகத்திலே கிடைத்த ஆஸ்தி.

௨௫ அப்பால் சம்பவித்ததேதெனில ராகேல் யோசேப்பைப் பெற்றபிற்பாடு யாக்கோபுலாபானோடேசொன்னதாவது, நான் என்தானத்திற்கும்என்தேசத்திற்கும்போகஎன்னையனுப்பிவிடும்.

௨௬ நான் உமக்கூழியஞ்செய்து சம்பாதித்த என்பெண்சாதிகளையும் என்பிள்ளைகளையும் எனக்குத் தாரும். நான்போவேன். ஏனெனில நானுமமைச் சேவித்தசேவகத்தை நீர் அறிந்திருக்கிறீரென்றான்.

௨௭ அப்பொழுது லாபான் அவனோடே சொன்னதாவது, உன்கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததேயானால் இரு. உன்னிமித்தங்கர்த்தர் என்னையாசீர்வதித்தாரென்கிறது எனக்குத்தெரியவந்தது.

௨௮ உன்சம்பளமின்னதென்றுஎனக்குக் குறித்துச்சொல்லு; நான்தருவேனென்றான்.

௨௯ அப்பொழுது அவன் இவனோடே சொன்னதாவது, நான் உம்மை யெப்படிச் சேவித்தேனென்றும், உம்முடைய மந்தை என்னிடட எப்படியிருந்ததென்று மறிந்திருக்கிறீர்.

௩௰ ஏனெனில் எனக்குமுன் உமக்கிருந்தது கொஞ்சம். அதுதிரளாயிற்று கர்த்தர் உம்மை என் கால்வருத்தத்தினால ஆசீர்வதித்தார். இப்பொழுதும நான் என்வீட்டுக்குஞ் சம்பாதித்துக்கொள்வது எப்பொழுதென்றான்.

௩௧ அப்பொழுது இவன், நானுனக்கென்னகொடுக்கவேண்டுமென்றான். யாக்கோபுசொன்னதாவது, நீரெனக்கு ஒன்றுங்கொடுக்கவேண்டாம். நான்சொல்லுகிறதை நீரெனக்குச்செய்தால் உம்முடைய மந்தையைத் திரும்பமேய்த்துக்காப்பேன்.

௩௨ நான் இன்றைக்கு உம்முடைய மந்தையையெல்லாங் கடந்துவந்து அதிலேயிருக்கிற ஆடுகளிற் புள்ளியுள்ளதும மறுப்பற்றுள்ளதுமானயாவையுங் கறுப்பானயாவையும, வெள்ளாடுகளில் மறுப்பற்றுள்ளதும புள்ளி

புள்ளியானவைகளையும பிரித்துப்போடுவேன். அப்படிக்கொத்தது இனி என்னுடைய சம்பளமாயிருக்கும்.

௩௩ அப்படியே இனிமேல் என் சம்பளத்தைக் குறித்து உனக்கு முன்பாக நீ தீர்த்துக்கொள்ளுகிறபொழுது, என்னுடைய நீதி எனக்கு [illegible] வெள்ளாடுகளிற் புள்ளியில்லாத்தும மறுபுள்ளியில்லாததும ஆடுகளிற் கறுப்பில்லாததுமானது ஏதாகிலும் என்னிடத்திலே இருந்தால், அது திருடினதாயிருக்குமென்றான்.

௩௪ அப்பொழுது லாபான், இதோ, உன்னுடைய வார்த்தையின்படியாகுக என்று சொல்லி,

௩௫ அந்நாளிலே கலப்புநிறமுள்ளதும மறுப்புள்ளியுள்ளதுமான கடாக்களையும், புள்ளியுள்ளதும மறுவுள்ளதுமான எல்லா வெள்ளாடுகளையும், ஆடுகளில் வெண்மையுள்ளதும கறுப்பான தெல்லாவற்றையும் பிரித்துக்கொண்டு, தன்குமாரர்கையில் ஒப்புவித்து,

௩௬ தனக்கும யாக்கோபுக்கும மூன்றுநாட் பயணதூரம வைத்தான். லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான்.

௩௭ அப்பொழுது யாக்கோபு பச்சையான புன்னைமரம அமலை கொட்டைமரம [illegible] கொட்டை மர முதலானவைகளின் கோப்புகளை வாங்கிக் கொண்டு, கறைகளைப் பட்டை உரித்து வெண்மைகாணப் பட்டையுரித்து,

௩௮ தான் உரித்தகோப்புகளை யாடுகள் குடிக்கவருகிற தொட்டிகளாகிய தண்ணீர்த்தொட்டிகளிலும ஆடுகளுக்கெதிராகப் போட்டுவைத்தான். ஏனென்றால் அவைகள் குடிக்கவருகையிற் பொலியும.

௩௯ ஆடுகள் கோப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியினாலே ஆடுகள் கலப்புநிறமும புள்ளியுள்ளதும மறுப்புள்ளியுள்ளதுமான குட்டிகளைப் போட்டது.

௪௦ அந்த ஆட்டுக்குட்டிகளை யாக்கோபு பிரித்து, ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கிற கலப்புநிறமானவைகளுக்கும கறுப்பானதெல்லாவற்றிற்கும எதிராக நிறுத்தி தனக்குத்தனியே மந்தைகளை வைத்துக்கொண்டு, இவைகளை லாபானின் மந்தையோடே வைக்காதிருந்தான்.

௪௧ சமயமித்ததென்றுக்காலத்திலே பொலிகிற ஆடுகள் பொலியும பொழுதெல்லாம யாக்கோபு அந்தக்கோப்புகளைக் கால்வாய்களில் ஆடுகளின் கண்களுக்கு முன்பாக, அவைகள் கோப்புகளுக்கெதிரே பொலியும்படிக்குப் போட்டுவைப்பான்.

௪௨ ஆடுகள் காலம பிந்திப் பொலியும பொழுதோவென்றால் அவைகளைப் போடாதே போவான். ஆகையால் காலம பிந்திப் பிறந்தவைகள் லாபானையும காலத்திலே பிறந்தவைகளோவென்றால் யாக்கோபையுஞ் சேர்ந்தது.

௪௩ இந்தப்பிரகாரமாக இந்தப்புருஷன் மிகுதியுமபெருகினான். அவனுக்குத் திரளான மந்தைகளும வேலைக்காரிகளும வேலைக்காரரும ஒட்டகங்களும கழுதைகளுமுண்டாயிறறு.

௩௧. அதிகாரம்.

யாக்கோபு தன் சிமைக்குத் திருமபும்படிக்கு லாபானை விட்டோடிப்போனதும லாபான் அவனைத் தொடர்ந்ததும இருவரும சமாதானமாகி உடம்படிக்கை பண்ணினதும்.

பின்பு: உங்கள் தகப்பனுக்கு உண்டானவைகளையெல்லாம யாக்கோபு எடுத்துக்கொண்டானென்றும, எங்கள் தகப்பனுக்கு உண்டானதிலே இந்த ஆஸ்தியையெல்லாஞ் சம்பாதித்தானென்றும லாபானின்குமாரர் சொன்ன வார்த்தைகளை யவன் கேட்டான்.

௨ லாபானின்முகத்தை யாக்கோபு பார்த்தபொழுது, இதோ, அது நேற்றும முந்தநேற்றும இருந்ததுபோலத் தன்கிட்டத்திலில்லையென்று கண்டான்.

௩ கர்த்தரோவென்றால் யாக்கோபுடனே, உன்பிதாக்களின்தேசத்திற்கும உன் இனத்தண்டைக்குந் திருமபிப்போ. * உன்னோடே கூடவிருப்பேனென்றார். * உ௮, ௰௫.

௪ அப்பொழுது யாக்கோபு ராகேலையும லேயாளையும வெளியிலே தன மந்தையண்டைக்கழைத்தனுப்பி,

௫ இவர்களோடே சொன்னதாவது, உங்கள் தகப்பனுடைய முகம நேற்றும முந்தநேற்றும இருந்ததுபோல எனக்கிருக்கவில்லையென்று நான் காண்கிறேன். ஆனால் என் தகப்பனுடைய பராபரன் என்னோடே கூடவிருந்தார்.

௬ உங்கள் தகப்பனுக்கு என்முழுப்பலத்தினாலும ஊழியஞ்செய்தேனென்று நீங்கள் அறிவீர்கள்.

௭ உங்கள் தகப்பனோவென்றால் என்னை வெத்தி என் சம்பளத்தைப் பத்துமுறைமாற்றினான். ஆனால் எனக்குத் தீங்குசெய்யப் பராபரன் அவனுக்கிடங்கொடுத்ததில்லை.

௮ புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்குமென்று அவன் சொன்னபொழுது மந்தையெல்லாம புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது. கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாயிருக்குமென்று அவன் சொன்னபொழுதோவென்றால் மந்தையெல்லாங் கலப்புநிறக் குட்டிகளைப் போட்டது.

௯ இந்தப்பிரகாரமாகப் பராபரன் உங்கள் தகப்பனுடைய மந்தையைப் பறித்து எனக்குக்கொடுத்தார்.

௰ ஆடுகள் பொலியுங்காலத்திலே சமபவித்ததென்றால், நான் சொப்பனத்தில் என

கண்களை யேறெடுக்கும்பொழுது, இதோ, ஆடுகளின்மேலேறுகிற கடாய்கள் கலப்புநிறமானவைகளும் புள்ளியுள்ளவைகளும் பொட்டுள்ளவைகளுமா யிருந்ததென்று கண்டேன்.

௰௧ பராபரனுடைய தூதனவர் சொப்பனத்தில் என்னுடனே, யாக்கோபே! என்றார், இதோ, இருக்கிறேனென்றேன்.

௰௨ அப்பொழுது அவர் சொன்னதாவது, உன் கண்களை யேறெடுத்துப்பாரோன்? ஆடுகளின்மேல் ஏறுகிற கடாய்கள் எல்லாங் கலப்புநிறமானவைகளும் புள்ளியுள்ளவைகளும் பொட்டுள்ளவைகளுமா யிருக்கின்றது. ஏனெனில் லாபான் உனக்குச்செய்கிறதை யெல்லாங்கண்டோம்.

௰௩ * நீ தூணையபிஷேகம்பண்ணி நமக்கொரு பொருத்தனையைப் பண்ணின பேத்தேவிலே உனக்குத்தரிசனையான பராபரன் நாமதானே. இப்பொழுதும் நீயெழுந்து, இந்தத்தேசத்தை விட்டுப்புறப்பட்டு, உன்னினத்தின்தேசத்திற்குத் திரும்பிப்போவென்று சொன்னாரென்றான். *௨௮, ௰௫. மூ.

௰௪ அப்பொழுது ராகேலும் லேயாளும் அவனுக்குப்பிரத்தியுத்தாரமாகச்சொன்னதாவது, எங்கள்தகப்பன்வீட்டிலே எங்களுக்கினி பங்குஞ் சுதந்தரமுமுண்டோ?

௰௫ அவரால் நாங்கன்னியராய் எண்ணப்பட்டில்லையோ? ஏனெனில் அவரெங்களைவிற்று, எங்கள்பணத்தைத் தின்னவேதினார்.

௰௬ ஆகையாற்பராபரன் எங்கள்தகப்பனிடத்திற் பறித்த ஐசுவரியமெல்லாம் எங்களுடையதும் எங்கள்பிள்ளைகளுடையதுந்தானே. இப்பொழுதும் பராபரன் உம்மோடே சொன்னதெல்லாவற்றையுஞ் செய்யுமென்றார்கள்.

௰௭ அப்பொழுது யாக்கோபு எழுந்து தன்பிள்ளைகளையுந் தன்பெண்சாதிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டு,

௰௮ தன்மிருகசீவன்களனைத்தையுந் தான் பதான்அராமிலே தேடிச் சம்பாதித்த தன்னுடைய மந்தையாஸ்தியெல்லாத்தையுங் கூட்டிக்கொண்டு, கானான்தேசத்திலே தன்தகப்பனாகிய ஈசாக்கண்டைக்குப் போகப்புறப்பட்டான்.

௰௯ லாபானோவெனில் தன்னாடுகளை மயிர்கத்திரிக்கப்போயிருந்தான். அந்தச்சமயத்திலே ராகேல் தன்தகப்பனுடைய விக்கிரகங்களைத்திருடிக்கொண்டாள்.

௨௰ அப்படியே யாக்கோபு, தானோடிப்போகிறதைச்சூரியனாகியலாபானுக்கு அறிவியாததினாலே அவன்மனதைக்களவுசெய்து,

௨௧ தனக்குண்டானதையெல்லாங் கூட்டிக்கொண்டு ஓடிப்போனான். அவனெழுந்து ஆற்றைக்கடந்து, கிலெயாத் பர்வதத்திற்கு நேராய்த்தன்முகத்தைத்திருப்பிப்போனான்.

௨௨ ஆனால் யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம்நாளிலே லாபானுக் கறிவிக்கப்பட்டது.

௨௩ அப்பொழுது அவன் தன் சகோதரரைக்கூட்டிக்கொண்டு, ஏழுநாட் பயணம் அவனைப்பின்றொடர்ந்து, கிலெயாத் பர்வதத்திலேயவனைக்கிட்டிச்சேர்ந்தான்.

௨௪ ஆனாற் பராபரன் இராத்திரியிலே சூரியனாகிய லாபானண்டைக்குச்சொப்பனத்திலேவந்து, அவனோடே, நீயாக்கோபோடே நலந்தப்பித் தீங்காய்ப்பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிருவென்றார்.

௨௫ லாபான் யாக்கோபைக்கிட்டிச்சேர்ந்தான். யாக்கோபு பர்வதத்திலே தன்கூடாரத்தைப் போட்டிருந்தான். லாபானுந் தன்சகோதரரோடேகூடக் கிலெயாத்பர்வதத்திலே கூடாரம்போட்டான்.

௨௬ அப்பொழுது லாபான்யாக்கோபோடே சொன்னதாவது, நீ என்மனதைக் களவுசெய்து, என்குமாரத்திகளைப் பட்டயத்தினாற் சிறைபிடித்தவர்களைப்போலே கொண்டுபோனது என்னசெய்கை?

௨௭ நீ ஓடிப்போவதை மறைத்து, எனக்கதையறிவியாமலத் திருட்டனவாய் என்னை விட்டுப்போனதென்ன? நான் உன்னைச் சந்தோஷத்தோடுஞ் சங்கீதங்களோடும் மேளத்தோடுஞ் சுரமண்டலத்தோடும் அனுப்புவேனே.

௨௮ என்பிள்ளைகளையும் என்குமாரத்திகளையும் நான் முத்திசெய்ய நீ இடங்கொடாதேபோனதென்ன? இப்பொழுதும் நீ இப்படிச்செய்ததை மதியில்லாமற்செய்தாய்,

௨௯ உங்களுக்குப்பொல்லாப்புச்செய்ய என்கையிலே வல்லமையிருக்கும். ஆனால், நீ யாக்கோபோடே நலந்தப்பித்தீங்காய்ப்பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிருவென்று உங்கள்தகப்பனுடைய பராபரன் இராத்திரி என்னோடேசொன்னார்.

௩௰ இப்பொழுதும் உன்தகப்பனுடைய வீட்டின்மேலுள்ளவாஞ்சையினாலே நீபுறப்பட்டுப்போகிறபொழுது என்தேவர்களை ஏன்திருடிக்கொண்டா யென்றான்.

௩௧ யாக்கோபு லாபானுக்குப்பிரத்தியுத்தாரமாகச்சொன்னதாவது, உம்முடையகுமாரத்திகளை என்னிடத்திலிருந்து பறித்துக்கொள்வீரோ? என்று நான்பயப்பட்டதினாலேயிப்படிவந்துவிட்டேன்.

௩௨ ஆனால் ஆரிடத்தில் உம்முடையதேவர்களைக் கண்டுபிடிப்பீரோ அவன் உயிரோடிருக்கவேண்டாம். என்வசத்திலே உம்முடையதாயிருக்கிறதேதென்று நீர்நம்முடையசகோதரருக்கு முன்பாகப் பார்த்தறிந்து அதையெடுத்துக்கொள்ளுமென்றான். ஏனெனில் ராகேல் அவைகளைத்திருடினதை யாக்கோபு அறியாதிருந்தான்.

ஙங அப்பொழுது லாபான் யாக்கோபின் கூடாரத்திலும் லேயாளின் கூடாரத்திலும் இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் போய்ப் பார்த்து, ஒன்றும் கண்டுபிடியாமல், லேயாளின் கூடாரத்திலிருந்து புறப்பட்டு ராகேலின் கூடாரத்திலே பிரவேசித்தான்.

ஙச ராகேலோ அந்த விக்கிரகங்களை எடுத்து ஒட்டகச் சேணத்தின் கீழே வைத்து அவைகளின் மேல் உட்கார்ந்திருந்தாள். லாபான் கூடாரமெங்கும் தடவிப்பார்த்தும், அவைகளைக் கண்டுபிடியாதே போனான்.

ஙரு அவள் தன் தகப்பனை நோக்கி, என் ஆண்டவனே, நான் உமக்கு முன்பாக எழுந்திருக்கக்கூடாததினாலே கோபங்கொள்ள வேண்டாம். ஸ்திரீகளுக்குள்ள வழக்கம் எனக்கு உண்டாயிருக்கிறது என்றாள். அப்படியே அவன் தேடியும் அந்த விக்கிரகங்களைக் கண்டுபிடியாதே போனான்.

ஙசு அப்பொழுது யாக்கோபுக்குக் கோபமூண்டு, லாபானோடே வாக்குவாதம் பண்ணி, லாபானுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது, நீர் இப்படி என்னைப் பின்தொடர்ந்து வரும்படி நான் செய்த துரோகம் என்ன? நான் செய்த பாவம் என்ன?

ஙஎ என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப் பார்த்தீர். உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளில் எதைக் கண்டுபிடித்தீர். அதை என் சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும் முன்பாக இங்கே வையும். அவர்கள் நமக்கு இருவருக்கும் நடுவே தீர்க்கக்கடவர்கள்.

ஙஅ இந்த இருபது வருஷம் நான் உம்மிடத்தில் இருந்தேன். உம்முடைய ஆடுகளும் வெள்ளாடுகளும் சினையழிந்ததில்லை. உம்முடைய மந்தையின் கடாக்களை நான் தின்னவில்லை.

ஙகூ பீறுண்டதை நான் உம்மிடத்தில் கொண்டுவராமல் அதின் நஷ்டத்தை நானே உத்தரித்தேன். பகலில் திருட்டுப்போனதையும் இரவில் திருட்டுப்போனதையும் என்னைக் கேட்டீர்.

சய பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னைப் பட்சித்தது. என் கண்ணுக்கு நித்திரையில்லாமல் போயிற்று. இப்படியிருந்தேன்.

சக இந்த இருபது வருஷம் உம்முடைய வீட்டில் இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும் ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன். பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர்.

சஉ என் தகப்பனின் பராபரனாகிய ஆபிரகாமின் பராபரனும் ஈசாக்கினுடைய பயமும் என்னோடிருந்தாலொழிய நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பி விடுவீர். பராபரன் என் சிறுமையையும் என் கைகளின் வருத்தத்தையும் பார்த்து, இராத்திரி உம்மைக் கடிந்துகொண்டார் என்றான்.

சங அப்பொழுது லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது, இந்தக் குமாரத்திகள் என் குமாரத்திகள், இந்தப் பிள்ளைகள் என் பிள்ளைகள், இந்த மந்தை என் மந்தை. நீ காண்கிறதெல்லாம் என்னுடையது. இந்த என்னுடைய குமாரத்திகளுக்கும் அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கும் இன்றைக்கு என்ன செய்வேன்?

சச இப்பொழுதும் வா. நானும் நீயும் ஒரு உடம்படிக்கை பண்ணிக்கொள்ளுவோம். அது எனக்கும் உனக்கும் நடுவே சாட்சியாயிருக்கக்கடவதென்றான்.

சரு அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து அதைத் தூணாக நிறுத்தினான்.

சசு பின்பு யாக்கோபு தன் சகோதரரோடே, கல்லுகளைச் சேருங்களென்றான். அப்பொழுது கல்லுகளை எடுத்துக் குவித்தார்கள். ஒரு குவியலுண்டாக்கி அந்தக் குவியலின்மேல் அவர்கள் போஜனம்பண்ணினார்கள்.

சஎ அதற்கு லாபான் ஜெகர்சகதூதாவென்று பேரிட்டான். யாக்கோபோவெனில் அதற்குக் காலேயெத் என்று பேரிட்டான்.

சஅ இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் நடுவான சாட்சியென்று லாபான் சொன்னபடியினாலே அதின் பேர் காலேயெத் என்னப்பட்டது.

சகூ மிஸ்பாவென்றும் சொல்லப்பட்டது. ஏனெனில் அவன் சொன்னதாவது, நாம் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்திருக்கும்போது [illegible] என் குமாரத்திகளை நீ உபத்திரவப்படுத்தி, என் குமாரத்திகளைத் தவிர வேறுஸ்திரீகளை விவாகம் பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுவாய் காவலிருக்கக்கடவர்.

ருய நம்முடனே ஒருவருமில்லை. பார், பராபரனே எனக்கும் உனக்கும் நடுவான சாட்சியென்றான்.

ருக பின்னையும் லாபான் யாக்கோபோடே சொன்னதாவது, இதோ, இந்தக் குவியல், இதோ, எனக்கும் உனக்கும் நடுவாக நான் போட்ட தூண்.

ருஉ தீங்கு செய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வராமலும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும் கடந்து என்னிடத்துக்கு வராமலும் இருக்கிறதற்கு இந்தக் குவியலும் சாட்சி இந்தத் தூணும் சாட்சி.

ருங ஆபிரகாமின் பராபரனும் நாகோரின் பராபரனும் அவர்களின் தகப்பனின் பராபரனுமானவர் நமக்குள்ளே நடுவாயிருக்கக்கடவரென்றான். அப்பொழுது யாக்கோ

பு தனக்கப்பனாகிய ஈசாக்குடைய பயத்தின்பேரிலே ஆணையிட்டான்.

௫௪ பிறபாடு யாக்கோபு பர்வதத்தின்மேல் பலியிட்டுத் தன் சகோதரரை அப்பம் போசிக்க அழைத்தான். அப்படியே அப்பம் போசித்துப் பர்வதத்திலே இராத்தங்கினார்கள்.

௫௫ லாபான் அதிகாலமே எழுந்திருந்து தன் பிள்ளைகளையுந் தன் குமாரத்திகளையும் முத்திசெய்து அவர்களை ஆசீர்வதித்தான். பிறபாடு லாபான் புறப்பட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பிப்போனான்.

௩௨. அதிகாரம்.

யாக்கோபு ஏசாவுக்குப் பயந்திருந்தது.

யாக்கோபு தன் வழியே போகப் புறப்பட்டான். அப்பொழுது* பராபரனுடைய தூதர் அவனைச் சந்தித்தார்கள். * சங்கீதம். ௩௪, ௮.

௨ யாக்கோபு அவர்களைக் கண்கிறபொழுது, * இது பராபரனுடைய இராணுவமென்று சொல்லி, அந்தத் தலத்திற்கு மக்னாயீமென்று பேரிட்டான். * ௨. இராசா. ௬, ௰௬. ௰௭.

௩ பிறபாடு யாக்கோபு தனக்குமுன்னாக ஏதோமுசீமையாகிய சேயீர்தேசத்திலிருக்கிற தன் சகோதரனாகிய ஏசாவண்டைக்குத் தூதரையனுப்பி,

௪ அவர்களுக்குக் கற்பித்ததாவது, நீங்கள் என்னுடையவனாகிய ஏசாவோடே சொல்லவேண்டியதேதெனில், நான் லாபானிடத்திலே இற்றைவரைக்குந் தங்கித்தரித்திருந்தேன்.

௫ எனக்கு எருதுகளுங் கழுதைகளும் ஆடுகளும் வேலைக்காரரும் வேலைக்காரிகளுமுண்டு. உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைக்கத்தக்கதாக என்னுடையவனுக்கு இதையறிவிக்க மனிதரையனுப்பினேனென்று உம்முடைய ஊழியக்காரனாகிய யாக்கோபு சொல்லச் சொல்லுகிறனென்பதுதானென்றான்.

௬ அந்தத் தூதர்கள் யாக்கோபண்டைக்குத் திரும்பவந்து, நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவண்டைக்குப்போய் வந்தோம். அவனும் நானூறு பேரோடே உமக்கெதிராக வருகிறனென்றார்கள்.

௭ அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, மன இடுக்கமடைந்து தன்னண்டையிலிருந்த சனத்தையும் ஆடுமாடுகளையும் ஒட்டகங்களையும் இரண்டு பாளயமாகப் பிரித்து,

௮ ஏசாவு ஒரு பாளயத்தின் மேல் வந்து அதை முறிய அடித்தால், மறுபாளயந் தப்ப இடமுண்டென்றான்.

௯ பிறபாடு யாக்கோபு சொன்னதாவது. * என் தகப்பனாகிய ஆபிரகாமின் பராபரனும் என் தகப்பனாகிய ஈசாக்கின் பராபரனுமானவரே! உன் தேசத்திற்கும் உன் இனத்தாரண்டைக்குந் திரும்பிப்போ. உனக்கு நன்மைசெய்வோம்; என்றென்னோடே சொல்லியிருக்கிற கர்த்தாவே! * ௩௧, ௩.

௰ * தேவரீர் உமதடியானுக்குச் செய்துவந்த எல்லாக்கிருபைகளுக்கும் எல்லா உண்மைகளுக்கும் நான் எம்மாத்திரம்? ஏனெனில் நான் என் கோலுங்கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன். இப்பொழுதோவெனில் இரண்டு பாளயங்களுக்குடையவனானேன். * ௨. சாமு. ௭, ௰௮.

௰௧ என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியுமேன்? அதேதெனில் அவன் வந்து என்னைத் தாயும் பிள்ளைகளுமாய் மடங்கடிப்பானோவென்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன்.

௰௨ நீரோவெனில், * நானுனக்கு நன்மைசெய்யவேசெய்து, உன் வித்தை ஏராளத்தினாலே எண்ணத்தொலையாத கடற்கரை மணலைப்போலாக்குவோமென்று சொன்னீரேயென்றான். * ௨௮, ௰௩—௰௫.

௰௩ அவன் அன்று இராத்திரி அங்கே தங்கித் தன்கைக்கு வந்ததிலே தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமானமாக,

௰௪ இருநூறு வெள்ளாடுகளையும் இருபது வெள்ளாட்டுக்கடாக்களையும், இருநூறு ஆடுகளையும் இருபது ஆட்டுக்கடாக்களையும்,

௰௫ பால்கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும் அவைகளின் குட்டிகளையும், நாற்பது கிடாரிகளையும் பத்துக்காளை எருதுகளையும், இருபது கோளிகைக்கழுதைகளையும் பத்துக்கழுதைக்குட்டிகளையும் பிரித்தெடுத்து,

௰௬ தன் வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தைகளைத் தனித்தனியாக ஒப்பித்துத் தன் வேலைக்காரரோடே நீங்கள் எனக்கு முன்னாயத் தாண்டிப்போய், மந்தைக்கும் மந்தைக்கும் இடம்விடுங்களென்று சொல்லி,

௰௭ முந்தினவனுக்குக் கற்பித்ததாவது, என் சகோதரனாகிய ஏசாவுனக்கெதிர்ப்பட்டு, நீ ஆருடைய மனிதன்? நீ எங்கேபோகிறாய்? உனக்குமுன்னாகப்போகிற இவைகள் ஆருடையதென்றுன்னைக் கேட்டால்,

௰௮ அப்பொழுது நீ இது உம்முடைய ஊழியக்காரனாகிய யாக்கோபுடையது. இது என்னுடையவனாகிய ஏசாவுக்கனுப்பப்பட்ட வெகுமானம். இதோ, அவனும் எங்கள்பிறகாலே வருகிறனென்றுசொல்லென்றான்.

௰௯ இரண்டாம் மூன்றாம் வேலைக்காரனுக்கும் மந்தைகளின் பிறகாலேபோகிற அ

னேகூதும் அனைசதபித்தாலது, நீங்கள் ஏசாவைக்காணும்பொழுது இந்தப்பிரகாரமாக அவனோடேசொல்லி,

௨௰ இதோ, உன்னடியானாகிய யாக்கோபு எங்களுக்குப்பின்னாலே வருகிறானென்றுஞ் சொல்லுங்களென்று கற்பித்தான். ஏனென்றால், எனக்குமுன்னாகப்போகிற வெகுமானத்தினாலே அவன்முகத்தைக்குளிர்ப்பண்ணுவேன். பிறகு அவன்முகத்தை பார்ப்பேன். அப்பொழுது என்பேரில் தயவாயிருப்பானென்றான்.

யாக்கோபு பராபரனோடே போராடினது.

௨௧ அப்படியே வெகுமானம் அவனுக்கு முன்னாகப்போயிற்று. அவனோவென்றால் அந்த இராத்திரி பாளயத்திலே தங்கி,

௨௨ இராத்திரியிலே யெழுந்திருந்து, தன்னிரண்டு பெண்சாதிகளையுந் தன்னிரண்டு வேலைக்காரிகளையுந் தன்னுடைய பதினொரு குமாரரையும் அழைத்துக்கொண்டு யாப்போக்கென்ற ஆற்றின் துறையைக்கடந்தான்.

௨௩ அவர்களை அழைத்துக்கொண்டு ஆற்றைக்கடக்கப்பண்ணித்தனக்குண்டான ஏதும் அக்கரைப்படுத்தினான்.

௨௪ ஆனால் யாக்கோபு நின்று தனித்திருந்தான். அப்பொழுது ஒருபுருஷன் பொழுதுவிடியுமட்டும் அவனோடேபோராடி,

௨௫ அவனைமேற்கொள்ளக்கூடாதென்று கண்டு, அவனுடைய இடுப்புச்சந்தைத் தொட்டார். அதினால் யாக்கோபின் தொடை அவரோடேபோராடுகையிற் சுளுக்கிற்று.

௨௬ அவர், நாம்போகட்டும். ஏனெனில் பொழுதுவிடிகிறதென்றார். ஆனால் இவன், * நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப்போகவிடேனென்றான்.

* ஓசே. ௰௨, ௪.

௨௭ அப்பொழுது அவர், உன்பேரென்னவென்றார். யாக்கோபுவென்றான்.

௨௮ அப்பொழுது அவர் * உன்பேர் இனியாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேலெனப்படும். ஏனெனிற் பராபரனோடும் மனுஷரோடும் போராடி மேற்கொண்டாயென்றார் * ௩௫, ௰.

௨௯ அப்பொழுது யாக்கோபு, உம்முடைய நாமத்தை எனக்கறிவியுமென்று கேட்டான். அதற்கவர், நீ நம்முடைய நாமத்தைக்கேட்கிறதென்னவென்றுசொல்லி, அங்கே அவனையாசீர்வதித்தார்.

௩௰ அப்பொழுது யாக்கோபு, பராபரனை முகமுகமாய்க்கண்டேன். என்னுயிர் தப்புவிக்கப்பட்டதென்றுசொல்லி, அந்தஸ்தலத்திற்குப்பெனியேலென்றுபேரிட்டான்.

௩௧ அவன் பெனியேலைக் கடந்துபோனபிற்பாடு சூரியன் அவனுக்குஉதயமாயிற்று. அவனோவென்றால் இடுப்புச் சுளுக்கினாலே நொண்டிநடந்தான்.

௩௨ அவர் யாக்கோபுடைய தொடைக்கீழின நரம்பைத்தொட்டபடியினாலே இஸ்ரவேல்புத்திரர் இந்நாள்வரைக்குந் தொடைக்கீழிருக்கிற நரம்பைப்புசியாதே போகிறார்கள்.

௩௩. அதிகாரம்.

ஏசாவு யாக்கோபோடே ஒப்புரவானது.

பிறபாடு யாக்கோபு தன்கண்களையேறெடுத்து, இதோ, * ஏசாவையும் அவனோடேகூட நானூறு மனிதரையும் வரக்கண்டு, பிள்ளைகளை லேயாளண்டையிலும் ராகேலண்டையிலும் இரண்டு வேலைக்காரிகளண்டையிலும் வெவ்வேறேபிரித்துவைத்து,

* ௩௨, ௬.

௨ வேலைக்காரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் முன்னாகவும், லேயாளையும் அவள் பிள்ளைகளையும் பிறகாலேயும், ராகேலையும் யோசேப்பையும் பின்னாகவுமநிறுத்தி,

௩ தான் அவர்களுக்கு முன்னாக நடந்துபோய்த்தன்சகோதரனிட்டச்சேருமளவும் ஏழுவிசை தரைமட்டுங்குனிந்து வணங்கினான்.

௪ அப்பொழுது ஏசாவு அவனுக்கெதிர்கொண்டோடி அவனைக்கட்டிக்கொண்டு, அவன்கழுத்தைக்கட்டிக்கொண்டு அவனை முத்தஞ்செய்தான். இருவரும் அழுதார்கள்.

௫ அவன் தன்கண்களையேறெடுத்துப்பெண்சாதிகளையும் பிள்ளைகளையுங்கண்டு, உன்னோடிருக்கிற இவர்களார்? என்றான். அதற்கவன் பராபரன் உம்முடைய ஊழியக்காரனுக்கருளின பிள்ளைகளென்றான்.

௬ அப்பொழுது வேலைக்காரிகளும் அவர்கள் பிள்ளைகளுஞ்சேர்ந்து வணங்கினார்கள்.

௭ லேயாளும் அவள்பிள்ளைகளுஞ்சேர்ந்து வணங்கினார்கள். பிறபாடு யோசேப்பும் ராகேலுஞ்சேர்ந்துவந்துவணங்கினார்கள்.

௮ அப்பொழுது அவன், நான் சந்தித்த அந்த உன்னுடைய கூட்டமெல்லாம் என்னத்துக்கென்றான். அதற்கிவன் என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகிடைக்கிறதற்கென்றான்.

௯ ஆனால் ஏசாவு எனக்கு நிரம்பவிருக்கிறது. என் சகோதரனே! உன்னுடையது உனக்கிருக்கட்டுமென்றான்.

௰ யாக்கோபோவென்றால் அப்படியல்ல, உம்முடைய கண்களிலே எனக்குத் தயவு கிடைத்ததேயானால் என் காணிக்கையை என்கையிலே வாங்கிக்கொள்ளும். ஏனென்றால் நீர் என்னைப் பிரியமாய்ப் பார்க்கையிலே நான் உம்முடைய முகத்தைப்பார்க்

டருடைய முகத்தைக் காண்கிறதுபோலே கண்டேன்.

௰௧ உமக்குக் கொண்டுபோகப்பட்ட * என்னுடைய ஆசீர்வாதத்தை வாங்கிக்கொள்ளுமேன்? ஏனெனில் பராபரன் எனக்குத் தந்தருளினார். வேண்டியதெல்லாம் எனக்கிருக்கிறதென்று சொல்லி அவனை வருந்திக்கேட்டான். அப்பொழுது அவன் அதை வாங்கிக்கொண்டு, * க. சாமு. உரு. உஎ. ௩0, உ௬.

௰௨ நாம் பயணம்புறப்பட்டுப் போவோமாக, உனக்குமுன்னே நடப்பேனென்றான்.

௰௩ அப்பொழுது இவன் அவனோடே சொன்னதாவது: பிள்ளைகள் இளம்பிள்ளைகளென்றும், பால்கொடுக்கிற ஆடுமாடுகள் என்னிடத்திலிருக்கிறதென்றும் என்னாண்டவன் அறிவீர். அவைகளை ஒருநாளில் துரத்தினால் மந்தையெல்லாஞ் செத்துப்போம்.

௰௪ என்னாண்டவன் தம்முடைய அடியானுக்கு முன்னே போவாராக. நான் சேயீரிலே என்னாண்டவனண்டைக்கு வருமட்டும் எனக்குமுன்னே நடக்கிற மந்தைகளின் காலுக்கும் பிள்ளைகளின் காலுக்கும் தக்கதாக மெல்ல அவைகளை நடத்திக்கொண்டு வருவேனென்றான்.

௰௫ அப்பொழுது ஏசா என்னோடிருக்கிற சனத்திலே சிலரை உம்மிடத்திலே விட்டுப்போகிறேனென்றான். அதற்கிவன் அதென்னத்துக்கு. என்னாண்டவனுடைய கண்களிலே எனக்குத் தயவு கிடைக்கட்டுமென்றான்.

௰௬ அப்படியே ஏசா அந்நாளிலே திரும்பித் தன்வழியே சேயீருக்குப் போனான்.

௰௭ யாக்கோபோவென்றால் சுக்கோத்துக்குப் பயணம்பண்ணித் தனக்கு வீடுகட்டித் தன்மிருகஜீவன்களுக்குக் கொட்டாரங்களைப் போட்டான். அதினாலே அந்த ஸ்தலத்துக்குச் சுக்கோத்தென்னும் பேர் தரித்தான்.

௰௮ யாக்கோபு தான் அராமிலிருந்து வந்தபின்பு கானானுதேசத்திலிருக்கிற சீகேமின் ஊருக்குச் சேமமாய் வந்து, ஊருக்கெதிரே பாளயமிறங்கி,

௰௯ தான் கூடாரத்தைப்போட்ட வயல்வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்பனாகிய ஏமோர் புத்திரர் கையிலே நூறுவெள்ளிக்காசுக்குக் கொண்டு,

௨0 அங்கே ஒருபலிபீடத்தைக் கட்டிப் பராபரன் இஸ்ரவேலின் பராபரனென்று அதற்குப் பேரிட்டான்.

௩௪. அதிகாரம்.

௧ சீகேம் தீனாளைக் கற்பழித்ததினிமித்தம் இவளுடைய சகோதரராகிய சிமியோனும் லேவியும் அவனையும் அவன் ஊராரையும் சங்கரித்தது.

லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற அவளுடைய குமாரத்தியாகிய தீனாள் தேசத்துக் குமாரத்திகளைப் பார்க்கப் புறப்பட்டாள்.

௨ அவளை ஏவியனான ஏமோரின் குமாரனும் அத்தேசத்து அதிபதியுமாகிய சீகேமென்பவன் கண்டு, அவளைப் பிடித்துக்கொண்டுபோய் அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான்.

௩ அவன் ஆத்துமம் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாள் மேலே பற்றியிருந்தது. அவன் அந்தப் பெண்ணைச் சிநேகித்து அந்தப் பெண்ணின் மனதுக்கு நட்பாய்ப் பேசினான்.

௪ சீகேம் தன் தகப்பனாகிய ஏமோரோடே இந்தப் பெண்ணை எனக்குக் கொள்ளுமென்று சொன்னான்.

௫ தன் குமாரத்தியாகிய தீனாளை அவன் தீட்டுப்படுத்தினதை யாக்கோபு கேட்டபொழுது அவன் குமாரர் அவனுடைய மந்தையண்டையில் வெளியிலேயிருந்தார்கள். அவர்கள் வருமட்டும் யாக்கோபு மவுனமாயிருந்தான்.

௬ அப்பொழுது சீகேமின் தகப்பனாகிய ஏமோர் யாக்கோபோடே பேச அவனண்டைக்குப் புறப்பட்டுவந்தான்.

௭ யாக்கோபின் குமாரர் செய்தியைக் கேட்டபொழுது வெளியிலிருந்து வந்தார்கள். அவன் யாக்கோபின் குமாரத்தியோடே சயனித்ததினாலே செய்யப்படாத மதிகெட்ட காரியத்தை இஸ்ரவேலிலே செய்ததினாலே அந்த மனுஷர் மனமடிந்து அவர்களுக்கு மிகவுங் கோபமூண்டது.

௮ ஏமோர் அவர்களோடே பேசிச்சொன்னதாவது: என் குமாரனாகிய சீகேமின் ஆத்துமம் உங்கள் குமாரத்தியின் பேரில் வாஞ்சையாயிருக்கிறது. அவளை அவனுக்குப் பெண்சாதியாகக் கொடுங்களேன்?

௯ நீங்கள் எங்களோடே சம்மந்தங்கலந்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொடுத்து எங்கள் குமாரத்திகளை உங்களுக்குக் கொண்டு,

௰ எங்களோடே குடியிருங்கள். தேசம் உங்கள் முன்பாகக் கிடக்கிறது. அதிலே குடியிருந்து வியாபாரம்பண்ணி, ஆஸ்திசம்பாதித்து அதைக் கையாண்டுகொண்டிருங்களென்றான்.

௰௧ சீகேம் அவள் தகப்பனோடும் அவள் சகோதரரோடுஞ் சொன்னதாவது: உங்கள் கண்களிலே எனக்குத் தயவு கிடைக்கட்டும். நீங்கள் எனக்குச் சொல்வதைத் தருவேன்.

௰௨ என்மேல் பரியத்தையும் காணிக்கையையும் எவ்வளவு திரளாய்ச் சுமத்தினாலும், நீங்கள் எனக்குச் சொல்லுகிறபடி தருவேன். அந்தப் பெண்ணைமாத்திரம் எனக்குப் பெண்சாதியாகக் கொடுங்களென்றான்.

௰௩ அப்பொழுது யாக்கோபின் குமாரர் தங்கள் சகோதரியாகிய தீனாளைத் தீட்டுப்படுத்தினபடியால், சீகேமுக்கும் அவனுடைய தகப்பனாகிய ஏமோருக்கும் கபடமாய் மறுமொழிந்து, அவர்களோடே சொன்னது.

௰௪ எங்கள் சகோதரியைச் சுன்னத்தில்லாத ஒருத்தனுக்குக் கொடுக்குங்காரியத்தை நாங்கள் செய்யக்கூடாது. ஏனென்றால் அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும்.

௰௫ நீங்கள் உங்களிலிருக்கும் ஆண் அனைத்துக்குஞ் சுன்னத்துப்பண்ணுகிறதினாலே எங்களைப்போலானீர்களேயாகில் நாங்கள் உங்களுக்குச் சம்மதிப்போம்,

௰௬ உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக் கொடுத்து உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொண்டு, உங்களோடே குடியிருந்து ஒரே ஜனமாவோம்.

௰௭ சுன்னத்துப்பண்ணிக்கொள்ள எங்களுக்குச் செவிகொடாதேபோனீர்களேயானால், நாங்கள் எங்கள் குமாரத்தியை யழைத்துக் கொண்டுபோவோமென்றார்கள்.

௰௮ அவர்கள் வார்த்தைகள் ஏமோருக்கும் ஏமோரின் குமாரனாகிய சீகேமுக்கும் நலமாய்ப்பட்டது.

௰௯ அப்படிச்செய்ய அந்த வாலிபக்காரன் தாமதம்பண்ணினதில்லை. ஏனென்றால் யாக்கோபுடைய குமாரத்தியின்மேற் பிரியம் வைத்தான். அவன் தன் தகப்பன்வீட்டார் எல்லாருக்குள்ளும் எண்ணப்பட்டவனாயிருந்தான்.

௨௰ ஏமோரும் அவன் குமாரன் சீகேமுந் தங்கள் பட்டணத்தின் ஒலிமுகவாசலில் வந்து, தங்கள் பட்டண மனிதரோடே பேசிச் சொன்னதாவது,

௨௧ இந்த மனிதர் நம்மோடே சமாதானமாயிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் தேசத்திலே குடியிருந்து அதிலே வியாபாரம் பண்ணட்டும். இதோ, அவர்களுக்கு முன்பாகத் தேசம் இருபுறமும் விஸ்தாரமாய்க் கிடக்கிறது. அவர்கள் குமாரத்திகளை நாம் நமக்குப் பெண்சாதிகளாகக் கொண்டு நம்முடைய குமாரத்திகளை அவர்களுக்குக் கொடுப்போமே?

௨௨ இந்த மனிதர் சுன்னத்துப்பண்ணப்பட்டவர்களாயிருக்கிறதுபோல நாம் நம்மிலுள்ள ஆண் அனைத்தையுஞ் சுன்னத்துப்பண்ணுவோமாகில் அவர்கள் நம்மோடே ஏகஜனமாகக் குடியிருப்பதற்குச் சம்மதிப்பார்கள்.

௨௩ அவர்கள் மந்தைகளும் அவர்கள் ஆஸ்தியும் அவர்களிருக்கிற ஜீவன்களுமெல்லாம் நம்மைச்சேர்வதில்லையோ? அவர்களுக்குச் சம்மதியாய் யாதொன்று செய்தோமானால் நம்மோடே குடியிருப்பார்களென்றார்கள்.

௨௪ அப்பொழுது ஏமோரின் பட்டணத்து வாசலால் புறப்படுகிறவர்களாகிய அனைவரும் அவன் சொல்லையும் அவன் குமாரனாகிய சீகேமின் சொல்லையுங் கேட்டு அவன் பட்டணத்து வாசலால் புறப்படுகிறவர்களாகிய ஆண்சாதியார் எல்லாருஞ் சுன்னத்தடைந்தார்கள்.

௨௫ மூன்றாம் நாளில் அவர்களுக்கு நோவெடுத்துக்கொண்டபொழுது சம்பவித்ததென்னவென்றால் யாக்கோபின் குமாரருந் தீனாளின் சகோதரருமாகிய* சிமியோனும் லேவியுமென்ற இரண்டுபேர் அவனவன் தன் பட்டயத்தையெடுத்துக்கொண்டு, பயமில்லாமற் பட்டணத்தின் மேல் வந்து ஆண் அனைத்தையுங் கொன்று, *௪௯, ௫. ௬.

௨௬ ஏமோரையும் அவன் குமாரனான சீகேமையும் பட்டயக்கருக்காலே கொன்றுபோட்டு, தீனாளைச் சீகேமின் வீட்டிலிருந்தழைத்துப் புறப்பட்டுப்போனார்கள்.

௨௭ யாக்கோபின் குமாரர் வெட்டுண்டவர்கள்மேல் வந்து, அவர்கள் தங்கள் சகோதரியைத் தீட்டுப்படுத்தினதற்காகப் பட்டணத்தைக் கொள்ளையிட்டு,

௨௮ அவர்களுடைய ஆடு மாடுகளையுங் கழுதைகளையும், ஊரிலும் ஊர்வெளியிலுமிருந்ததெல்லாவற்றையுமெடுத்து,

௨௯ அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்களுடைய எல்லாக் குழந்தைகளையும் பெண்சாதிகளையும் வீட்டிலிருந்ததெல்லாவற்றையும் பிடித்துக்கொண்டு கொள்ளையாடினார்கள்,

௩௰ அப்பொழுது யாக்கோபு சிமியோனோடும் லேவியோடுஞ் சொன்னதாவது நீங்கள் தேசத்திற் குடியிருக்கிற கானானியரிடத்திலும் பெரிசியரிடத்திலும் என்வாசனையைக் கெடுத்ததினாலே என்னைக் கலங்கப்பண்ணினீர்கள். நான் கொஞ்சசனமாயிருக்கிறேன். அவர்கள் எனக்கு விரோதமாகக் கூட்டங்கூடி, நானும் என்வீடும் அழிய என்னை வெட்டுவார்களேயென்றான்.

௩௧ அதற்கவர்கள், எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப்போலே நடத்தலாமோ? என்றார்கள்.

௩௫. அதிகாரம்.

யாக்கோபு தெய்வகட்டளையினாலே பெத்தேலுக்கு வந்தது.

பராபரனே வென்றால் யாக்கோபுடனே, நீயெழுந்து பெத்தேலுக்குப் போய் ஏறி, அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபொழுது *உனக்குத் தரிசனையான பராபரனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தையுண்டாக்கென்றார். *௨௮, ௰௨—௰௯.

௨ அப்பொழுது யாக்கோபு தன்வீட்டாரோடுந் தன்னோடே கூடவிருந்த அனைவரோடுஞ் சொன்னதாவது, உங்கள் நடுவிலிருக்கிற அந்நியதேவர்களை விலக்கிப் போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்.

௩ நாமெழுந்து பெத்தேலுக்குப்போய் ஏறுவோம். என் அவதிநாளிலே எனக்குத் தர்வு அருளிச்செய்து, நான் நடந்தவழியிலே என்னோடேகூட இருந்த பராபரனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை யுண்டாக்குவேனென்றான்.

௪ அப்பொழுது அவர்கள் தங்கள் கையிலிருந்த எல்லா அந்நியதேவர்களையுந் தங்கள் காதுகளிலிருந்த கடுக்கன்களையும் யாக்கோபுக்குக் கொடுத்தார்கள். யாக்கோபு அவைகளைச் சிகேம் ஊருகேயிருந்த ஒரு கர்வாலியுமர்த்தின்கீழே புதைத்தான்.

௫ பிற்பாடு பயணம் புறப்பட்டார்கள். அவர்களைச் சுற்றிலுமிருந்த பட்டணங்களின்மேலே பராபரனாலே பயங்கரம் உண்டாகையால் யாக்கோபின் குமாரரைப் பின்றொடராதிருந்தார்கள்.

௬ யாக்கோபும் அவனோடே கூடவிருந்த எல்லாச்சனமுங் கானானதேசத்திலிருக்கும் லூசுக்குவந்தார்கள். அதுவேபெத்தேல்.

௭ அங்கேயவன் ஒரு பலிபீடத்தைக் கட்டித் தான் தன்சகோதரனுடைய முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபொழுது அங்கே பராபரன் தனக்கு வெளியப்பட்டபடியினாலே அந்தஸ்தலத்திற்கு ஏல்பெத்தேலென்றுபேரிட்டான்.

௮ ரெபேக்காளின்தாதியாகியதெபோராள் மரித்துப்பெத்தேலின் பள்ளத்தாக்கில் வெளியிலே ஒருகர்வாலியுமர்த்தின்கீழே யடக்கம்பண்ணப்பட்டாள். அதுபுலம்பலின் கர்வாலியுமரமென்றழைக்கப்பட்டது.

௯ யாக்கோபுதான்அராமிலிருந்துவந்த பிற்பாடு பராபரன் அவனுக்குப்பின்னையுந் தரிசனையாகி, அவனையாசீர்வதித்து,

௰ அவனுடனே உன்பேர் யாக்கோபென்பது. இனி யுன்பேர்யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேலென்றபேர் உனக்கிருக்குமென்றுசொல்லி அவனுக்கு இஸ்ரவேலென்றுபேரிட்டார்.

௰௧ பின்னையும் பராபரன் அவனோடே சொன்னதாவது, நான் சர்வத்திற்குமவல்ல பராபரனாயிருக்கிறேன். நீ பலுகிப்பெருகு. சாதியுஞ் சாதிகளின் கூட்டமும் உன்னாலுண்டாகும். இராசாக்களும் உன் இடுப்பின் பிறப்பாயிருப்பார்கள்.

௰௨ நாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்குங் கொடுத்த தேசத்தையுனக்குத் தருவோம். உனக்குப்பிற்பாடு உன்வித்துக்கும் இந்தத்தேசத்தைத்தருவோமென்றுசொல்லி,

௰௩ பராபரன் அவனோடேபேசினஸ்தலத்திலிருந்து அவனைவிட்டேறிப்போனார்.

௰௪ அப்பொழுது யாக்கோபு அவர்தன்னோடேபேசின ஸ்தலத்திலே கற்றூணாகிய ஒருதூணைநிறுத்தி, அதின்மேல் ஊற்றுயத லியூற்றி, அதின்மேல் எண்ணெயையைவார்த்தான்.

௰௫ பராபரன் தன்னோடேபேசின அந்தஸ்தலத்திற்கு யாக்கோபு பெத்தேலென்று பேரைத்தரித்தான்.

ராகேல்பென்யமீனைப்பெற்றுமரித்தது.

௰௬ பெத்தேலிலிருந்து பயணம்புறப்பட்டார்கள். எப்பிராத்தாவுக்குவர இன்னங் கொஞ்சத்தூரமிருக்கிறபொழுது ராகேல் பிள்ளைபெற்றாள். பெறுகையில் அவளுக்குக் கடுமவருத்தமாயிற்று.

௰௭ அப்பொழுது சம்பவித்ததாவது, பெறுகிறதிலே யவளுக்குக்கடுமவருத்தமாயிருக்கையில் மருத்துவிச்சி அவளுடனே, பயப்படாதே. ஏனென்றால் இந்தப்புத்திரனும் உனக்கிருப்பானென்றாள்.

௰௮ அச்சம்பவித்ததென்றால் மரணமடைய அவளாத்தும புறப்படுகையில் அவள் அவனுக்குப்பெனொனியென்றுபேரிட்டாள். அவன்தகப்பனோவெனில் அவனைப் பென்யமீனென்றழைத்தான்.

௰௯ ராகேல்மரித்துப் பெத்லகேமென்னப்படுகிற எப்பிராத்தா ஊர்வழியிலேயடக்கம்பண்ணப்பட்டாள்.

௨௰ அவள்கல்லறையின்மேல் யாக்கோபு ஒருதூணைநிறுத்தினான். அதுவே இந்நாள்வரைக்குமிருக்கிற ராகேலுடைய கல்லறையின்தூண்.

ரூபேன்செய்தமுறைகேடானகாரியம்.

௨௰௧ இஸ்ரவேல் பயணம்பண்ணி, ஏதேரென்றகோபுரத்திற்கப்புறத்தே தன்கூடாரத்தைப்போட்டான்.

௨௰௨ இஸ்ரவேல் அந்தச்சீமையிற் குடியிருக்கிறபொழுது சம்பவித்ததென்னவென்றால், * ரூபேன்போய்த் தன்தகப்பனுடைய வைப்பாட்டியாகிய பில்காளோடேசயனித்தான். அது இஸ்ரவேலுக்குக் கேள்வியாயிற்று. யாக்கோபின் குமாரரோவென்றால் பன்னிரண்டுபேராயிருந்தார்கள். * ௪௯, ௪.

௨௰௩ யாக்கோபுக்கு மூத்த புத்திரனான ரூபேனுஞ் சிமெயோனும் லேவியும் யூதாவும் ஈசக்காருஞ் செபுலோனும் லேயாளின் குமாரரானவர்கள்.

௨௰௪ ராகேலின்குமாரர் யோசேப்பும்பென்யமீனுமென்றவர்களே.

௨௰௫ ராகேலுடைய வேலைக்காரியாகிய பில்காளின்குமாரர்தாணும்நப்தலியுமென்றவர்களே.

௨௬ லேயாளின்வேலைக்காரியாகிய சில்பாளின்குமாரர்காத்தும் ஆசேருமென்றவர்கள். இவர்கள்யாக்கோபுக்குப்பதான் அராமிலேபிறந்தகுமாரர்.

௨௭ யாக்கோபு அர்பாவின் ஊராகியமம்ரேக்குத்தன்தகப்பனாகிய ஈசாக்கண்டையிலேவந்தான். அது ஆபிரகாமும ஈசாக்குந்தங்கியிருந்த எபிரோனென்கிற ஊர்தானே.

௨௮ ஈசாக்கின நாட்கள நூற்றெண்பது வருஷமாயிருந்தது.

௨௯ பிற்பாடு ஈசாக்குமுதிர்நத பூரண ஆயிசுள்ளவனாய்ஜீவித்துமரித்துத் தனசனத்தாரோடேசேர்க்கப்பட்டான. அவனை அவன குமாரராகிய ஏசாவும யாக்கோபும அடக்கம்பண்ணினார்கள.

௩௬. அதிகாரம்.

ஏசாவின்சந்ததியாரும ஓரியனாகிய சேயீரின்சந்ததியாருமின்னதென்றவிவரம.

௧ இதுவேதோமென்பவரின தகப்பனாகிய ஏசாவின சந்ததி.

௨ ஏசாவு கானானின்குமாரத்திகளில ஏத்தியனான ஏலோனின குமாரத்தியாகிய ஆதாளையும, ஏவியனான சிபெயோனின பேத்தியும ஆனாகின்குமாரத்தியுமாகிய அகோலிபாமாளையும,

௩ இஸ்மவேலின்குமாரத்தியுமநெபாயோத்தின சகோதரியுமாகிய பஸ்மாத்தையும விவாகம்பண்ணினான.

௪ ஆதாள ஏசாவுக்கு எலிப்பாசைப்பெற்றாள. பஸ்மாத்துரெகுவேலைப்பெற்றாள.

௫ அகோலிபாமாள எயூஷையும யாலாமையும கோராகையும்பெற்றாள. இவர்கள ஏசாவுக்குக்கானானதேசத்திலே பிறந்தகுமாரர்.

௬ ஏசாவு தனபெண்சாதிகளையுந தனகுமாரரையுந தனகுமாரத்திகளையுந தனவீட்டிலுள்ள எல்லா ஆத்துமாக்களையுந, தன மிருகங்களையுந தனனுடைய எல்லாமிருகஜீவன்களையுந தானகானானதேசத்திலேசம்பாதித்ததனனுடைய எல்லா ஆஸ்தியையும கூட்டிச்சேர்த்துக்கொண்டு, தனசகோதரனாகிய யாக்கோபைவிட்டு வேறே தேசத்திற்குப்போனான.

௭ ஏனெனில அவர்களொருமிக்கக் குடியிருக்கக்கூடாதபடிக்கு அவர்களுடையசம்பத்துமிகச்சமாயிருந்தது. அவர்கள தங்கியிருந்தபூமி அவர்களுடைய மந்தைகளின முகாந்திரத்தினாலே அவர்களைத தாங்கமாட்டாதேபோயிற்று.

௮ ஆகையால ஏசாவு சேயீர்பர்வதத்திலேகுடியேறினான. ஏசாவே ஏதோமென்பவன.

௯ சேயீர் பர்வதத்திலிருக்கிற ஏதோமியருடைய தகப்பனாகிய ஏசாவின சந்ததிகளும,

௧௦ ஏசாவினகுமாரருடைய நாமங்களாவன. ஏசாவினபெண்சாதியாகிய ஆதாளுடைய குமாரனபேர் எலிப்பாஸ, ஏசாவினபெண்சாதியாகிய பஸ்மாத்துடையகுமாரன பேர் ரெகுவேல.

௧௧ எலிப்பாசுடைய குமாரர் தேமான, ஓமார், செப்போ, காத்தாம, கெனாஸ.

௧௨ திம்னாள ஏசாவினகுமாரனாகிய எலிப்பாசுக்கு வைப்பாட்டியாயிருந்து, எலிப்பாசுக்கு அமலேக்கைப்பெற்றாள. இவர்களே ஏசாவின பெண்சாதியாகிய ஆதாளுடையகுமாரர்.

௧௩ ரெகுவேலுடையகுமாரர் நாகாத், சேராக், சம்மா, மீசா இவர்களே ஏசாவின பெண்சாதியாகிய பஸ்மாத்துடைய குமாரர்.

௧௪ சிபெயோனின பேத்தியும ஆனாகினகுமாரத்தியுமான அகோலிபாமாளென்ற ஏசாவுடைய பெண்சாதியின குமாரர் ஆனவர்கள, அவள ஏசாவுக்கு எயூஷையும யாலாமையும கோராகையும்பெற்றாள.

௧௫ ஏசாவின குமாரரிலிருந்த பிரபுக்களாவது, ஏசாவுக்கு முதற்குமாரனாகிய எலிப்பாசுடைய குமாரரில தேமான பிரபுவும ஓமார்பிரபுவுஞசெப்போ பிரபுவுங கெனாஸ பிரபுவும,

௧௬ கோராக்பிரபுவுங காத்தானபிரபுவும அமலேக்பிரபுவுமிருந்தார்கள இவர்கள ஏதோ நதேசத்தில எலிப்பாசினசந்ததியும ஆதாளினகுமாரருமாயிருந்தபிரபுக்கள.

௧௭ ஏசாவினகுமாரனாகிய ரெகுவேலின குமாரரானவர்கள் நாகாத்பிரபு,சேராக்பிரபு, சம்மாபிரபு, மீசாபிரபு. இவர்களஏதோநதேசத்தில் ரெகுவேலினசந்ததியும ஏசாவினபெண்சாதியாகிய பஸ்மாத்தினகுமாரருமாயிருந்தபிரபுக்கள.

௧௮ ஏசாவினபெண்சாதியாகிய அகோலிபாமாளினகுமாரரானவர்கள, எயூஷ்பிரபு, யாலாமபிரபு,கோராக்பிரபு, இவர்கள ஆனாகினகுமாரத்தியும ஏசாவுடையபெண்சாதியுமாகிய அகோலிபாமாளின சந்ததியாயிருந்தபிரபுக்கள.

௧௯ இவர்களே ஏதோமென்ற ஏசாவினகுமாரர். இவர்களே அவர்களிலிருந்தபிரபுக்கள.

௨௦ அந்தத்தேசத்திற்குடிகளாகியஓரியனான சேயீரினகுமாரர் லோத்தான,சோபால், சிபெயோன, ஆனாக்.

௨௧ திஷோன, எத்சேர், திஷான், இவர்கள ஏதோநதேசத்திற் சேயீரின புத்திரராகிய ஓரியருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள.

௨௨ லோத்தானுடைய குமாரர் ஓரி, ஏமாம, லோத்தானின் சகோதரி திம்னாள்.

௨௩ சோபாலுடைய குமாரர் அல்வான், மனாகாத், ஏபால், செபொ, ஓனாமென்பவர்கள்.

௨௪ சிபெயோனுடைய குமாரர் ஆயா, ஆனா, என்பவர்கள்; வனாந்திரத்திலே தன்தகப்பனாகிய சிபெயோனின் கழுதைகளை மேய்க்கையில், கோவேறுகழுதைகளை பிறக்கும் விதத்தைக்கண்டுபிடித்த ஆனா இவன்தான்.

௨௫ ஆனாவின் பிள்ளைகள் திஷோனும், அகோலிபாமாளுமென்பவர்கள். இவள் ஆனாவின்குமாரத்தி.

௨௬ திஷோனுடையகுமாரர் எம்தான், எஸ்பான், இத்திரான், கேரானென்பவர்கள்.

௨௭ எத்சேருடைய குமாரர் பில்கான், சாவான், அக்கானென்பவர்கள்.

௨௮ திஷானுடையகுமாரர் ஊத்ஸ், ஆரானென்பவர்கள்.

௨௯ ஓரியரின் சந்ததிப்பிரபுக்களிலே லோத்தான்பிரபு, சோபால்பிரபு, சிபெயோன்பிரபு, ஆனாபிரபு,

௩௦ திஷோன்பிரபு, எத்சேர்பிரபு, திஷான்பிரபு, இவர்கள் சேயீர்தேசத்திலே தங்கள் சங்கங்களிலிருந்த ஓரியர்சந்ததியானபிரபுக்கள்.

௩௧ இஸ்ரவேலபுத்திரரை ஒரு இராசா ஆளத்தொடங்குமுன்னே ஏதோம்தேசத்திலே ஆண்ட இராசாக்களாவது,

௩௨ ஏதோமிலே பேயோருடைய குமாரனாகிய பேலா இராசாவாயிருந்தான். அவனுடைய பட்டணத்தின்பேர் தின்காபா.

௩௩ பேலாமரித்தபொழுது போத்ஸ்றா பட்டணத்தானாகிய சேராகுடைய குமாரனான யோவாப் அவனபட்டத்திற்குவந்தான்.

௩௪ யோவாப் மரித்தபொழுது, தேமானியதேசத்தானாகிய ஊஷாம அவனபட்டத்திற்குவந்தான்.

௩௫ ஊஷாம மரித்தபொழுது, அவன பட்டத்திற்கு மோவாபினநாட்டிலே மிதியானியரை முறியடித்தபெதாதின்குமாரனாகிய ஆதாத்வந்தான். அவனுடைய பட்டணத்தின்பேர் அவீத்.

௩௬ ஆதாத் மரித்தபொழுது, மஸ்ரேக்கா ஊராகிய சமலா அவனபட்டத்திற்குவந்தான்.

௩௭ சமலா மரித்தபொழுது நதிக்கருகான றெகொபோத்தானாகிய சவுல் அவனபட்டத்திற்குவந்தான்.

௩௮ சவுல் மரித்தபொழுது, அக்போருடைய குமாரனாகிய பாகால் ஆனான் அவனபட்டத்திற்குவந்தான்.

௩௯ அக்போருடைய குமாரனாகிய பாகால் ஆனான்மரித்தபொழுது, அவனபட்டத்திற்கு ஆதார்வந்தான். அவனுடைய பட்டணத்தின்பேர் பாகு. அவன்பெண்சாதியின்பேர் மெகேதாபெயேல், அவள் மத்ரேத்துடைய குமாரத்தியும மேசகாபின் பேத்தியுமாயிருந்தாள்.

௪௦ பலபல வம்சத்தாருந் தலங்களாரும நாமத்தாருமாகிய ஏசாவுக்குப் பிறந்த பிரபுக்களுடைய நாமங்களாவது, திம்னாபிரபு, அல்வாபிரபு, ஏத்தேத்பிரபு,

௪௧ அகோலிபாமாபிரபு, ஏலாபிரபு, பினோன்பிரபு,

௪௨ கேனாஸ்பிரபு, தேமான்பிரபு, மிப்சார்பிரபு,

௪௩ மக்தியேல்பிரபு, ஈராம்பிரபு, இவர்களே. தங்கள்கைவசமானதேசத்திலே பலபல இடங்களிலே குடியிருந்த ஏதோமருடைய சந்ததிப்பிரபுக்கள். இந்த ஏதோமியருடைய தகப்பன் ஏசாவுதானே.

௩௭. அதிகாரம்.

யோசேப்பு தனசகோதரரால எகிப்திற்கு பபோய்அடிமையாய் விற்கப்பட்டது.

யாக்கோபு தனதகப்பனதங்கின கானான்தேசமான சீமையிலே குடியிருந்தான்.

௨ யாக்கோபுடைய சந்ததியின்படியாவது, யோசேப்பு பதினேழுவயதிலே தனசகோதரரோடே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான். அந்த இளைஞன் பில்காளென்பவளும் தனதகப்பனுடைய பெண்சாதிகளின் குமாரரோடேயிருந்து, இவர்கள் துற்கிரிகையை யவர்கள் தகப்பனண்டைக்குவந்துசொல்லுவான்.

௩ யோசேப்பு தனக்கு முதிர்வயதிலே பிறந்தபடியினாலே இஸ்ரவேல் தனனுடைய எல்லாக்குமாரரையும்பார்க்கிலும் அவனை சிநேகித்து பலவர்ணமான அங்கியை யவனுக்குச்செய்வித்தான்.

௪ அவனுடைய எல்லாச்சகோதரரைப் பார்க்கிலும் சிநேகித்ததை யவனசகோதரர் கண்டபொழுதிலே, அவர்கள் அவனோடே பட்சமாய்ப்பேசமாட்டாதபடியாய அவனைப் பகைத்தார்கள்.

௫ இதுவுமல்லாமல் யோசேப்பு ஒரு சொப்பனத்தைக்கண்டு தனசகோதரருக்கு அறிவித்தான். அதினிமித்தம் அவனை இன்னமதிகமாய்ப்பகைத்தார்கள்.

௬ அவன இவர்களோடே சொன்னதே தென்னவெனில், நான்கண்ட சொப்பனத்தைக்கேளுங்களென்;

௭ இதோ, நாம நடுவயலவெளியிலே அறுத்த அரிக்கட்டுகளைக் கொண்டிருந்தோம். அப்பொழுதோ, என்னுடைய அரிக்கட்டுஎழுந்து நிமிர்ந்துநின்றது. அதுவல்லவோ, உங்களரிக்கட்டுகள் சுற்றிலுமநின்று, என்னுடைய அரிக்கட்டைவணங்கிக் கொண்டதென்றான்.

௮ அப்பொழுது அவன் சகோதரர் அவனோடே, நீ எங்கள்மேல் ராஜாத்தனம் பண்ணுவாயோ? நீ எங்களையாள்வாயோ? என்று சொல்லி, அவனை அவனுடைய சொப்பனங்களினிமித்தமும் அவன் வார்த்தைகளினிமித்தமும் இன்னும் அதிகமாய்ப் பகைத்தார்கள்.

௯ அவன் வேறொரு சொப்பனத்தைக் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு விவரித்துச் சொன்னது, இதோ, இன்னம் ஒரு சொப்பனத்தைக் கண்டேன். இதோ, சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னைப் பணிந்துகொண்டதென்றான்.

௰ இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் விவரித்தபொழுது, அவன் தகப்பன் அவனை அதட்டி, அவனோடே, நீ கண்ட இந்தச் சொப்பனமேது? தரைமட்டுங் குனிந்து உன்னை வணங்க நானும் உன் தாயும் உன் சகோதரரும் வருவோமோ என்றான்.

௰௧ அவன் சகோதரர் அவன்மேற் பொறாமைகொண்டார்கள். அவன் தகப்பனோவெனில் இந்த வார்த்தையைத் தன் மனதிலே வைத்துக்கொண்டான்.

௰௨ அவன் சகோதரர் சீகேமிலே தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கப் போனார்கள்.

௰௩ இஸ்ரவேல் யோசேப்போடே, உன் சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்களல்லவோ? அங்கே போ, உன்னை அவர்களிடத்துக்கு அனுப்புவேனென்றான். இவன் இதோ, நான் போகிறேனென்றான்.

௰௪ அப்பொழுது அவன் நீ போய் உன் சகோதரர் சுகமாயிருக்கிறார்களென்றும் ஆடுகள் எப்படியிருக்கிறதென்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவாவென்று அவனுக்குச் சொல்லி, எபிரோன் பள்ளத்தாக்கிலிருந்து அவனை அனுப்பினான். அப்படியே சீகேமுக்குப் போனான்.

௰௫ அப்பொழுது இதோ, ஒரு மனிதன் அவனை வெளியிலே வழிதப்பி நடக்கக்கண்டு என்ன தேடுகிறாயென்று அவனைக் கேட்டான்.

௰௬ அதற்கவன், என் சகோதரரைத் தேடுகிறேன். அவர்கள் எங்கே ஆடுமேய்க்கிறார்களென்று எனக்கு அறிவியுமென்றான்.

௰௭ அந்த மனிதன், அவர்கள் இங்கேயிருந்து புறப்பட்டுப்போனார்கள். ஏனென்றால் தோத்தானுக்குப் போவோமென்று அவர்கள் சொல்லக்கேட்டேனென்றான். அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைப் பின்தொடர்ந்துபோய், அவர்களைத் தோத்தானிலே கண்டுபிடித்தான்.

௰௮ அவர்கள் அவனைத் தூரத்திலே கண்டபொழுது, அவன் தங்களிடத்தில் சேருமுன்னே அவனுக்கு விரோதமாய் அவனைக் கொல்லச் சதியோசனைபண்ணி,

௰௯ ஒருவரோடொருவர் இதோ, சொப்பனக்காரன் அங்கே வருகிறான்.

௨௰ இப்பொழுது நாம் அவனைக் கொன்று, குழிகளில் ஒன்றிலே அவனைப் போட்டு ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்துப்போட்டதென்று சொல்லி, அவன் சொப்பனங்கள் என்னமாமென்று பார்ப்போம் வாருங்களென்றார்கள்.

௨௰௧ ஆனால் ரூபன் இதைக்கேட்டு, அவனுயிரைக் கொல்லாதிருப்போமாகவென்று சொல்லி, அவனை அவர்கள் கைக்குத் தப்புவிக்க,

௨௰௨ நீங்கள் இரத்தஞ்சிந்தவேண்டாம். நீங்கள் அவன்மேல் கைபோடாமல் அவனை வனாந்தரத்திலிருக்கிற அந்தக் குழியிலே போடுங்களென்று ரூபன் அவனை அவர்கள் கைக்குத் தப்புவிக்கும்படிக்கும் அவனை அவன் தகப்பனிடத்துக்குத் திரும்பக் கொண்டுபோகும்படிக்கும் அவர்களோடே சொன்னான்.

௨௰௩ சம்பவித்ததேதென்றால், யோசேப்பு தன் சகோதரரிடத்தில் வந்தபொழுது அவர்கள் யோசேப்பு உடுத்துக்கொண்டிருந்த பலவர்ண அங்கியாகிய அவன் அங்கியைக் கழற்றி,

௨௰௪ அவனை எடுத்து அந்தக் குழியிலே போட்டார்கள். அது தண்ணீரில்லாத வெறுங்குழியாயிருந்தது.

௨௰௫ பிறபாடு அவர்கள் அப்பஞ்சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும்பொழுதோவெனில், இதோ, கிலேயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தை வரக்கண்டார்கள். அவர்களுடைய ஒட்டகங்கள் சம்பாரங்களையும் பிசின்தைலத்தையும் வெள்ளைப்போளத்தையும் எகிப்திற்குக் கொண்டுபோகச் சுமந்து நடந்தது.

௨௰௬ அப்பொழுது யூதா தன் சகோதரரோடே சொன்னதாவது, நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று அவன் இரத்தத்தை மறைப்பதினாலே ஆதாயமென்ன?

௨௰௭ அவனை இஸ்மவேலருக்கு விற்றுப்போடுவோம் வாருங்கள். நமது கை அவன்மேல் படாதிருப்பதாக. ஏனெனில் அவன் நம்முடைய சகோதரனும் நம்முடைய மாம்சமுமாயிருக்கிறானென்றான். அவன் சகோதரர் அவன் சொல்லைக் கேட்டார்கள்.

௨௰௮ ஆனால் வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிறபொழுது அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கியெடுத்து, யோசேப்பை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றார்கள். இவர்கள் யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோனார்கள்.

௨௰௯ ரூபன் திரும்ப அந்தக் குழியண்டைக்கு வந்து இதோ, யோசேப்பு குழியிலில்லையென்று கண்டு தன் வஸ்திரங்களைக் கிழித்து,

௩ய தனசகோதாரண்டைக்குத் திரும்பி வந்து இளைஞன் இல்லையே; நானெங்கே போகப்போகிறேனென்றான்.

௩௧ அவர்கள் யோசேப்பின் அங்கியை யெடுத்துக்கொண்டு, ஒருவெள்ளாட்டுக்கடாவையடித்து, அந்த அங்கியை ரத்தத்திலே கறைப்படுத்தி,

௩௨ பலவர்ணமான அந்த அங்கியை தகப்பனண்டைக்குக் கொண்டுபோகச்சொல்லி, இதை நாங்கள் கண்டுபிடித்தோம். இது உம்முடைய குமாரனின் அங்கியோ அல்லவோவென்று பாரும்மென்றுசொல்லி அனுப்பினார்கள்.

௩௩ அவன் அதையறிந்து, இது என்குமாரனுடைய அங்கி. ஒருதுஷ்டமிருகம் அவனைப்பட்சித்தது. யோசேப்பு பீறுண்ணவே பீறுண்டானென்றான்.

௩௪ யாக்கோபு தனவஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தன் அரையில் இரட்டுக்கட்டிக்கொண்டு, அநேகம் நாள் தன்குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

௩௫ அவனுடைய எல்லாக்குமாரரும் அவனுடைய எல்லாக்குமாரத்திகளும் அவனுக்காறுதல்சொல்லவந்திருந்தார்கள். ஆனாலவன் ஆறுதலுக்கிடங்கொடாமல் நானதுக்கத்தோடே என்குமாரனண்டைக்குக் குழியிலிறங்குவேனென்றுசொல்லி, அவனுடையதகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்.

௩௬ மீதியானியரோவென்றால் அவனை எகிப்திலே பார்வோனின் பிரதானியாகிய போத்திபாரென்ற தலையாரிகளின் அதிபதிக்கு விற்றார்கள்.

௩௮. அதிகாரம்.

யூதாவுக்குச் சமுசாரமார்க்கத்திலே பிறந்த பிள்ளைகளின் நடபடி.

அக்காலத்திலே சம்பவித்ததேதென்றால், யூதா தன் சகோதரரைவிட்டு இறங்கிப்போய், அதொல்லாம் ஊராளாகிய ஒருமனிதனைச்சேர்ந்தான். அவன்பேர் ஈரா.

௨ அங்கே யூதா சூவாவென்றுபேருள்ள ஒருகானானியனின் குமாரத்தியைக்கண்டு அவளைவிவாகம்பண்ணி அவளிடத்திற் பிரவேசித்தான்.

௩ அவள் கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப்பெற்றாள். அவனுக்கு ஏரென்றுபேரிட்டான்.

௪ அவள் மறுபடியுங் கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப்பெற்று, அவனுக்கு ஓனானென்றுபேரிட்டாள்.

௫ அவள் திரும்பக்கர்ப்பந்தரித்து ஒருகுமாரனைப்பெற்று, அவனுக்குச்சேலாவென்றுபேரிட்டாள். அவள் இவனைப்பெறுகிறபொழுது அவன் கேசிபிலேயிருந்தான்.

௬ யூதா தனக்கு முதற்பிறந்தவனுக்கு தாமாரென்றுபேருள்ள ஒருபெண்ணைக்கொண்டான்.

௭ அந்த யூதாவுக்கு முதற்பிறந்த ஏரென்றவன் கர்த்தரின் கண்களுக்குமுன்பாகப் பொல்லாதவனானதினாலே கர்த்தர் அவனைக்கொன்றுபோட்டார்.

௮ அப்பொழுது யூதா ஓனானுடனே நீ உன்தமையன் பெண்சாதியினிடத்திற் பிரவேசித்து, அவளைமச்சினச்சந்ததியாய்ப் பண்ணி உன்தமையனுக்குவித்தையுண்டாக்கென்றான்.

௯ ஆனால் அந்தவித்து தன்னுடையதாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே அவன் தன்தமையன்பெண்சாதியினிடத்திற் பிரவேசிக்கும்பொழுது, தன்தமையனுக்கு வித்தைக்கொடாதபடிக்கு அதைத்தரையிலே விழவிட்டுக்கெடுத்தான்.

௰ அவன்செய்தது கர்த்தரின்கண்களுக்கு முன்பாகப்பொல்லாததானதினாலே அவனையும் அவர் கொன்றுபோட்டார்.

௰௧ அப்பொழுது யூதா தன்மருமகளாகிய தாமாருடனே என்குமாரனாகிய சேலா பெரியவனாகுமட்டும் உன்தகப்பன்வீட்டிலே கைம்பெண்சாதியாய்த் தங்கியிருவென்றான். ஏனெனில் இவனுந் தன்சகோதரரைப்போலச் சாவானோவென்று அஞ்சிக்கையாயிருந்தான். அப்படியே தாமார் போய்த்தன்தகப்பன் வீட்டிலேதங்கியிருந்தாள்.

யூதாவினாலே முறைகேடாய்க்கர்ப்பணியான தாமார் அவனுக்குப் பிள்ளைகளைப் பெறுகிறது.

௰௨ அநேகம் நாட்சென்றபின்பு சூவாவின்குமாரத்தியாகிய யூதாவின்பெண்சாதி மரித்தாள். யூதா துக்கம் ஆறினபின்பு திம்னாவுக்குத் தன் ஆடுகளை மயிர்கத்திரிக்கிறவர்களண்டைபோயிருந்தான். அவனும் அதொல்லாம் ஊராளுக்கு ஈராவென்ற அவன்சிநேகிதனுங்கூடப்போனான்.

௰௩ அப்பொழுது தாமாருக்கு இதோ, உன்மாமனார் தம்முடைய ஆடுகளை மயிர்கத்திரிக்கத் திம்னாவுக்குப்போகிறாரென்றறிவிக்கப்பட்டது.

௰௪ அப்பொழுது அவள் சேலா பெரியவனாயிருந்துந் தான் அவனுக்குப்பெண்சாதியாகக்கொடுக்கப்படவில்லையென்று கண்டபடியினாலே தன் கைம்பெண்ணுடுப்பின் வஸ்திரங்களைத் தன்னைவிட்டுவிலக்கி, முக்காடுபோட்டு மூடிக்கொண்டு, திம்னாவுக்குப் போகிறவழியிலிருக்கிற நீரூற்றுகளுக்கு முன்பாக உட்கார்ந்தாள்.

௰௫ யூதா அவளைக்கண்டு, அவளொரு வேசியென்று நினைத்தான். ஏனெனில் தன் முகத்தை மூடியிருந்தாள்.

௧௬ அவ்வழியிலே அவளிடமாய்த் திரும்பி, அவள் தன் மருமகளென்றறியாமல் நானுன்னிடத்திற் பிரவேசிக்கட்டுமென்றான். அப்பொழுது அவள் நீ என்னிடத்திற் பிரவேசிக்கும்படிக்கு எனக்கென்ன தருவீரென்றாள்.

௧௭ அதற்கவன் நான் மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக் குட்டியை அனுப்புவேனென்றான். அதற்கவள் நீர் அதை அனுப்புமட்டும் ஒரு அடமானங்கொடுத்தால் ஆமென்றாள்.

௧௮ அப்பொழுது அவன் நானுனக்குக் கொடுக்கவேண்டிய அடமானமென்னவென்று கேட்டான். அப்பொழுது அவள் உம்முடைய மோதிரமும் உம்முடைய கைச்சரடும் உம்முடைய கையிலிருக்கிற உம்முடைய கோலுமென்றாள். அவன் இவைகளை அவளுக்குக் கொடுத்து அவளிடத்திற் பிரவேசித்தான். அவள் அவனாற்கர்ப்பந்தரித்தாள்.

௧௯ பிறபாடு எழுந்திருந்துபோய்த் தன் முக்காட்டைத் தன்னைவிட்டுவிலக்கித் தன் கைம்பெண்டிருப்பின வஸ்திரங்களையுடுத்துக்கொண்டாள்.

௨௰ அந்த அடமானத்தை ஸ்திரியின் கையிலிருந்து வாங்கும்படி யூதா அதோல்லாம் ஊராகிய தன் சிநேகிதன் கையிலே வெள்ளாட்டுக்குட்டியை அனுப்பினான். இவன் அவளைக்காணாமல்,

௨௧ அவ்விடத்து மனிதரை வழியண்டையிலே ஏனாயீமிலிருந்த சோரஸ்திரீயெங்கேயென்று கேட்டான். அதற்கவர்கள் இங்கே சோரஸ்திரீ இருந்ததில்லையென்றார்கள்.

௨௨ அப்பொழுதவன் யூதாவண்டைக்குத் திரும்பி வந்து அவளைக்காணேன். அங்கே சோரஸ்திரீ இருந்ததில்லையென்று அவ்விடத்து மனிதருஞ் சொல்லுகிறார்களென்றான்.

௨௩ அப்பொழுது யூதா நாங்கள் அவகீர்த்திப்படாதபடிக்கு அவளதைக்கொண்டு போகட்டும்; இதோ நான் இந்த ஆட்டுக்குட்டியை அனுப்பினேன்; நீயோவென்றால் அவளைக் காணாமற்போனாயென்றான்.

௨௪ ஏறக்குறைய மூன்றுமாதஞ் சென்றபின்பு சம்பவித்ததேதெனில், உன்மருமகளாகிய தாமார் வேசித்தனம்பண்ணினாள். இதோ, வேசித்தனத்தில் கர்ப்பணியுமானாளென்று யூதாவுக்கறிவிக்கப்பட்டது. அப்பொழுது யூதா அவள் சுட்டெரிக்கப்பட அவளை வெளியே கொண்டுவாருங்களென்றான்.

௨௫ அவள் வெளியே கொண்டுவரப்பட்டபொழுது அவள் தன் மாமனாண்டைக்காளனுப்பி இவைகள் எவருடையதோ அவனாலே நான் கர்ப்பணியாயிருக்கிறேன்; இந்த மோதிரமும் இந்தக் கைச்சரடும் இந்தக் கோலும் ஆருடையதென்று பாருமென்று சொல்லியனுப்பினாள்.

௨௬ அப்பொழுது யூதா அவைகளையறிந்து என்னிலும் நீதியுள்ளவளாயிருக்கிறாள். ஏனென்றால் அவளை என்குமாரனாகிய சேலாவுக்குக் கொடாதே போனேனென்றான். அப்புறம் அவன் அவளையறிந்ததில்லை.

௨௭ அவளுக்குப் பேறுகாலம் வந்தபொழுது இதோ, இரட்டைப்பிள்ளைகள் அவள் கர்ப்பத்திலிருந்தது.

௨௮ அவள் பெறுகிறபொழுது ஒன்று கையை நீட்டிற்று. அப்பொழுது மருத்துவிச்சி அதின் கையைப்பிடித்து ஒரு சிவப்பு நூலைக் கட்டி, இது முந்தவெளிப்படுகிறதென்றாள்.

௨௯ ஆனால் அது தன் கையைத் திரும்ப வாங்கிக்கொண்டபொழுது இதோ, அதின் சகோதரன் வெளிப்பட்டான். அப்பொழுது அவள் நீ பீறிப் புறப்பட்டதென்ன? உன்பேரில் இந்தப் பீறுதல் வருகிறதென்றாள். அதினாலே அவனுக்குப் * பேரேஸ் என்று பேரிடப்பட்டது. * மத்தே. ௧, ௩.

௩௰ பிற்பாடு கையிற் சிவப்புநூல் கட்டியிருந்த அவன் தம்பி வெளிப்பட்டான். அவனுக்குச் சேராவென்று பேரிடப்பட்டது.

௩௯. அதிகாரம்.

போத்திபார் தன் அடிமையான யோசேப்பினிமேல் வைத்த தயவும், இவனுக்கு எசமானின் பெண்சாதியால் வந்த சோதனையும், குற்றமில்லாத காவலிருப்பும்.

யோசேப்பு * எகிப்திலே கொண்டுபோகப்பட்டான். பார்வோனின் பிரதானியுந் தலையாரிகளின் அதிபதியுமாகிய போத்திபார் என்ற எகிப்திய மனிதன் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரின் கையிலே கொண்டான். * ௩௭, ௩௬.

௨ ஆனாற் கர்த்தர் யோசேப்போடேகூட இருந்தார். அவன் காரிய சமர்த்தனுமாயிருந்து எகிப்தியனாகிய தன் எசமானுடைய வீட்டிலேயிருந்தான்.

௩ கர்த்தர் அவனோடேயிருக்கிறாரென்றும், அவன் செய்கிறதையெல்லாங் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறாரென்றும் அவன் எசமான் கண்டான்.

௪ ஆதலால் யோசேப்புக்கு அவன் கண்களில் தயவு கிடைத்தது. அவனுக்கு இவன் ஊழியக்காரனானான். அவன் இவனைத் தன் வீட்டுக்கு விசாரிப்புக்காரனாக்கித் தனக்குண்டான தெல்லாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.

௫ சம்பவித்ததேதெனில் அவன் இவனைத் தன் வீட்டுக்கும் தனக்குண்டானதெல்லாவற்றுக்கும் விசாரிப்புக்காரனாக்கின முதற்கொண்டு கர்த்தர் யோசேப்பினிமித்தம் எகிப்தியன் வீட்டையாசீர்வதித்தார். வீட்டிலும் வெளியிலும் அவனுக்குண்டானதி

லெல்லாங் கர்த்தருடைய ஆசீர்வாதமிருந்தது.

௬ ஆகையால் அவன் தனக்குண்டானதையெல்லாம் யோசேப்பின் கையிலே யொப்புவித்துவிட்டுத் தான் போசிக்கிற போசனந்தவிர இவனிடத்திலிருந்த மற்றொன்றுக்குங் கவலைப்படாதிருந்தான். யோசேப்போவெனில் அழகான ரூபமும் பார்வைக்குச் சவுந்தரியமுமாயிருந்தான்.

௭ இந்தவர்த்தமானங்களுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில் அவனுடைய எசமானின் பெண்சாதி யோசேப்பின் மேல் கண்ணோட்டமாகி என்னோடே சயனியென்றாள்.

௮ ஆனால் அவன் அவள் சொல்லைக் கேளாமல் தன் எசமானின் பெண்சாதியோடே சொன்னதாவது இதோ, வீட்டிலே என்னோடிருக்கிற ஒன்றுக்காகிலும் என்னுடைய ஆண்டவன் கவலைப்படாமல், தமக்குண்டானதையெல்லாம் என்கையிலே யொப்புவித்தார்.

௯ இந்த வீட்டிலே என்னிலும் பெரியவனில்லை. உன்னைத் தவிர வேறொன்றையும் அவரெனக்கு விலக்கிவைத்ததில்லை. ஏனெனில் நீ அவருடைய பெண்சாதி. இப்பொழுதும் நானித்தனை பெரிய இந்தப் பொல்லாப்பைப் பண்ணிப் பராபரனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்வதெப்படியென்றான்.

௰ அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே அப்படிக்கொத்த பேச்சைச் சொல்லுவாள். ஆனால் அவன் அவளுக்குச் சமீபமாய்ப் படுத்துக்கொள்ளவும் அவளோடிருக்கவும் அவளுக்குச் செவிகொடாதேபோகிற பொழுது,

௰௧ ஒருநாள் சம்பவித்ததேதெனில் அவன் தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டிற்குள் வந்தான். வீட்டு மனிதரில் ஒருவரும் அப்பொழுது அங்கே வீட்டிலேயில்லை,

௰௨ அப்பொழுது அவள் அவனையவன் வஸ்திரத்தைப் பற்றிப் பிடித்து, என்னோடே சயனியென்றாள் அவனோவென்றால் தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டோடி வெளியே புறப்பட்டுப் போனான்.

௰௩ அவன் தன் வஸ்திரத்தைத் தன் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனதை அவள் கண்டபொழுது,

௰௪ அவள் தன் வீட்டு மனிதரைக் கூப்பிட்டு அவர்களுக்குச் சொன்னதாவது பாருங்கள். எபிரேய மனிதனை நம்மைச் சரசம்பண்ணும்படிக்கு நமக்குக் கொண்டுவந்தார். அவன் என்னோடே சயனிக்கிறதற்காக என்னண்டை வந்தான். ஆனால் மகா சத்தமாய்க் கூப்பிட்டேன்.

௰௫ நான் என் சத்தத்தையுயர்த்திக் கூப்பிட்டதை அவன் கேட்டபொழுது அவன் தன் வஸ்திரத்தை என்னண்டை விட்டோடி வெளியே புறப்பட்டுப் போனானென்று சொல்லி,

௰௬ அவனுடைய எசமான் வீட்டிற்கு வருமட்டும் அவன் வஸ்திரத்தைத் தன்கிட்ட வைத்து,

௰௭ அவரோடே அந்த வார்த்தைகளுக்குச் சரியாகப் பேசி நீர் நமக்குக் கொண்டுவந்த அந்த எபிரேய வேலைக்காரன் என்னைச் சரசம்பண்ண என்னண்டை வந்தான்.

௰௮ அப்பொழுது சம்பவித்ததேதெனில் நான் என் சத்தத்தையுயர்த்திக் கூப்பிட்டபொழுது அவன் தன் வஸ்திரத்தை என்னண்டை விட்டு வெளியே ஓடிப்போனானென்றாள்.

௰௯ உம்முடைய வேலைக்காரன் எனக்கிப்படிச் செய்தானென்று தன் பெண்சாதி தன்னோடே சொன்ன வார்த்தைகளை அவனுடைய எசமான் கேட்டபொழுது கோபமுள்ளவனாகி அவனுக்குக் கோபமூண்டது.

௨௰ அப்பொழுது யோசேப்பின் எசமான் அவனைப் பிடித்து, இராசாவின் கட்டளையாற் கட்டுண்டவர்கள் அடைக்கப்பட்ட காவல் வீட்டிலே அவனை யொப்புவித்தான். அப்படி அந்தக் காவல் வீட்டில் அவனிருந்தான்.

௨௰௧ ஆனாற் கர்த்தர் யோசேப்போடே கூடவிருந்து அவன்மேல் கிருபை வைத்து அவனுக்குக் காவல் வீட்டுத் தலைவனுடைய கண்களிலே தயவு கிடைக்கப்பண்ணினார்.

௨௨ காவல் வீட்டுத் தலைவன் காவல் வீட்டிலே கட்டுண்டிருக்கிற யாவரையும் யோசேப்பின் கையிலே யொப்புவித்தான். அங்கே செய்ய வேண்டியவைகளையெல்லாம் அவனே செய்தான்.

௨௰௩ அவன் கையிலிருந்த ஒன்றையுங் காவல் வீட்டுத் தலைவன் விசாரிக்கவில்லை. ஏனெனில் கர்த்தர் அவனோடே கூடவிருந்தார். அவனெதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார்.

௪௰. அதிகாரம்.

காவல்வீட்டில் வைக்கப்பட்ட இரண்டு பேருடைய சொப்பனங்களுக்கு அர்த்தஞ் சொல்லுகிறதை யோசேப்பு காண்பிக்கிறது.

இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில் எகிப்து இராசாவின் பானங் கொடுக்கிறவனும் அப்பஞ்சுடுகிறவனும் எகிப்தின் இராசாவாகிய தங்களாண்டவனுக்குக் குற்றஞ்செய்தார்கள்.

௨ அப்பொழுது பார்வோன் தன்னுடைய இரண்டு பிரதானிகளாகிய பானங்கொடுக்கிறவர்களின் தலைவன் பேரிலும் அப்பஞ்சுடுகிறவர்களின் தலைவன் பேரிலும் மகா கோபமாகி,

௩ அவர்களை யோசேப்பு கட்டுண்டிருந்த காவல்வீடாகிய தலையாரிகளின் தலைவன் வீட்டிலே காவற்பண்ணுவித்தான்.

௪ அப்பொழுது தலையாரிகளின் தலைவன் அவர்களை விசாரிக்கும் வேலைக்கு யோசேப்பை வைத்தான். இவன் அவர்களுக்கு ஊழியஞ் செய்தான். அவர்கள் அநேகம் நாட் காவலிலிருந்தார்கள்.

௫ எகிப்தின் இராசாவுக்குப் பானங் கொடுக்கிறவனும் அப்பஞ் சுட்டவனுமாகிய சிறைச்சாலையிலே கட்டுண்டிருந்த அவ்விருவரும் ஒரே இராத்திரியில் அவனவன் தன்தனக்கு வெவ்வேறே அர்த்தமுள்ள சொப்பனங்களைக் கண்டார்கள்.

௬ காலமே யோசேப்பு அவர்களண்டைக்கு வந்து அவர்களைப் பார்க்கும்பொழுது இதோ, கலங்கியிருந்தார்கள்.

௭ அப்பொழுது தன் எசமானின் வீட்டிலே தன்னோடே காவற்பண்ணப்பட்டிருந்த பார்வோனின் பிரதானிகளை அவன் உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறதேதென்று கேட்டான்.

௮ அவர்கள் அவனுடனே, சொப்பனங் கண்டோம், அதை வியாக்கியானம் பண்ணுகிறவனில்லையென்றார்கள். அப்பொழுது யோசேப்பு அவர்களுடனே வியாக்கியானம் பண்ணுதல் தேவனுடையதல்லவோ? எனக்கதை விவரியுங்களென்றான்.

௯ அப்பொழுது பானங்கொடுக்கிறவர்களின் தலைவன் யோசேப்புக்குத் தன் சொப்பனத்தை விவரித்து அவனுக்குச் சொன்னதாவது, என் சொப்பனத்தில் இதோ, ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாகவிருந்தது.

௰ அந்தத் திராட்சச்செடியிலே மூன்று கிளைகளிருந்தது. அது துளிர்க்கிறதாயிருந்தது. அதின் பூக்கள் புறப்பட்டது. அதின் குலைகள் பழங்களாகப் பழுத்தது.

௰௧ பார்வோனின் பாத்திரம் என் கையிலிருந்தது. நான் அந்தப் பழங்களை வாங்கி, அவைகளைப் பார்வோனின் பாத்திரத்திலே பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனின் கையிலே கொடுத்தேனென்றான்.

௰௨ அப்பொழுது யோசேப்பு அவனுக்குச் சொன்னதாவது, அதின் அர்த்தமென்னவெனில், அந்த மூன்று கொடிகள் மூன்று நாளாயிருக்கின்றது.

௰௩ இன்னம் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உம்முடைய தலையையுயர்த்தி, உம்மைத் திரும்ப உமது நிலையிலே நிறுத்துவார். அப்பொழுது நீர் அவருக்குப் பானங் கொடுத்த முந்தின வாடிக்கையின்படியே பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பீர்.

௰௪ ஆனாலுமக்கு வாழ்வாயிருக்கிறபொழுது என்னை நினைத்து என்மேலே தயவுவைத்துப் பார்வோனுக்கு என் செய்தியை நினைப்பூட்டி, என்னை இந்த வீட்டிலிருந்து வெளிப்படப் பண்ணும்.

௰௫ ஏனெனில் எபிரேயதேசத்திலிருந்து திருட்டளவாய் விலைப்பட்டுவந்தேன். என்னை இந்தக் கிடங்கிலே வைக்கிறதற்கு இவ்விடத்திலே நானொன்றுஞ் செய்ததுமில்லை யென்றான்.

௰௬ நன்றாய் அர்த்தஞ்சொன்னதென்று அப்பஞ் சுடுகிறவர்களின் தலைவன் கண்டு, யோசேப்போடே சொன்னதாவது, நானும் என் சொப்பனத்திற் கண்டதேதென்றால் இதோ, வெண்மையான மூன்று கூடை என் தலையின் மேலிருந்தது.

௰௭ மேற்கூடையிலே அப்பஞ் சுடுகிறவனின் வேலையான பார்வோனுடைய சகலவிதப் போசனத்திலுஞ் சிலவிருந்தது. அவைகளைப் பறவைகள் வந்து என் தலையின் மேலிருந்த கூடையிலெடுத்துப் பட்சித்ததென்றான்.

௰௮ அப்பொழுது யோசேப்புப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது, அதின் அர்த்தமேதெனில் அந்த மூன்று கூடைகள் மூன்று நாளாயிருக்கின்றது.

௰௯ இன்னம் மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உம்முடைய மேலிருக்கிற உம்முடைய தலையையுயர்த்தி, உம்மை மரத்திலே தூக்கிப்போடுவிப்பார். அப்பொழுது பறவைகள் உம்முடைய மாம்சத்தைத் தின்னுமென்றான்.

௨௰ பார்வோனின் ஜென்மநாளாகிய மூன்றும் நாளிற் சம்பவித்ததேதெனில், அவன் தன் ஊழியக்காரருக்கெல்லாம் ஒருவிருந்து பண்ணிப் பானங்கொடுக்கிறவர்களுடைய தலைவனின் தலையையும் அப்பஞ் சுடுகிறவர்களுடைய தலைவனின் தலையையுந் தம்முடைய ஊழியக்காரரின் நடுவே யுயர்த்தி,

௨௧ பானங்கொடுக்கிறவர்களின் தலைவனைப் பானங்கொடுக்கிற தன் உத்தியோகத்துக்குத் திரும்ப வரப்பண்ணினான். அப்படியே அவன் பார்வோனின் கையிலே பாத்திரத்தைக் கொடுத்தான்.

௨௨ அப்பஞ் சுடுகிறவர்களின் தலைவனை யோவென்றால் தூக்கிப் போடுவித்தான். யோசேப்பு அவர்களுக்கு அர்த்தஞ்சொன்னதற்குச் சரியாகத்தானே.

௨௩ ஆனாற் பானங்கொடுக்கிறவர்களின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்தான்.

௪௧. அதிகாரம்.

யோசேப்பு பார்வோனின் சொப்பனத்தை வியார்த்திபண்ணி, எகிப்துதேசத்தின் மேல் அதிகாரியாக வைக்கப்பட்டது.

இரண்டுவருஷஞ் சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றால், பார்வோன் ஒரு சொப்பனத்தைக் கண்டான். அதேதெனில் இதோ, நதியண்டையிலே நின்றான்.

௨ அப்பொழுது இதோ, நேர்த்தியான ரூபமும் மாம்சக்கொழுப்புமான ஏழு பசுக்கள் நதியிலிருந்தேறிப் புல்லிலே மேய்ந்தது.

௩ ஆனால் இதோ, அவைகளின் பிறகே அவலட்சணரூபமும் மாம்சச்சிவனுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்தேறி, நதியோரத்திலே அந்தப் பசுக்களண்டையிலே நின்றது.

௪ அவலட்சணரூபமும் மாம்சச்சிவனுமான இந்தப் பசுக்கள் நேர்த்தியான ரூபமும் கொழுப்புமான அந்த ஏழு பசுக்களைப் பட்சித்தது. அப்பொழுது பார்வோனுக்கு நித்திரை தெளிந்தது.

௫ பிறகு அவன் நித்திரைபோய் இரண்டாம் விசை கண்ட சொப்பனமாவது: இதோ, கனத்தியான ஏழு நல்ல கதிர்கள் ஒரே முதலிலிருந்து ஓங்கிவளர்ந்தது.

௬ ஆனால் இதோ, அவைகளுக்குப் பிற்பாடு சாவியான துவண்ட கீழ்காற்றினால் தீய்ந்துபோன ஏழு கதிர்கள் முளைத்தது.

௭ சாவியான இந்தக் கதிர்கள் கனத்திடமும் நிறைபலனுமான அந்த ஏழு கதிர்களை விழுங்கினது. அப்பொழுது பார்வோன் விழித்துக்கொண்டான். இதோ, அது சொப்பனமாயிருந்தது.

௮ சம்பவித்ததேதெனில் காலமே அவனுடைய ஆவி கலங்கியிருந்தது. அப்பொழுது அவன் எகிப்தினுடைய சகல சாஸ்திரிகளையும் சகல ஞானிகளையும் அழைத்தனுப்பி அவர்களுக்குத் தன் சொப்பனங்களைப் பார்வோன் விவரித்தான். ஆனாலும் பார்வோனுக்கு அவைகளின் அர்த்தத்தைச் சொல்லத்தக்கவன் ஒருவனுமில்லை.

௯ அப்பொழுது பானங்கொடுக்கிறவர்களின் தலைவன் பார்வோனுடனே பேசிச் சொன்னதாவது: இன்று நான் என் பாவங்களை நினைக்கிறேன்.

௰ பார்வோன் தமமுடைய ஊழியக்காரர்மேல் கடுங்கோபங்கொண்டு, என்னையும் அப்பஞ்சுடுகிறவர்களின் தலைவனையும் தலையாரிகளின் தலைவன் வீட்டிலே காவலிலே வைத்தாரே.

௰௧ அப்பொழுது நானும் அவனும் ஒரே இராத்திரியிலே எங்களுக்கு வெவ்வேறே அர்த்தமாகிய சொப்பனங்களைக் கண்டோம்.

௰௨ அப்பொழுது தலையாரிகளின் தலைவனுக்கு வேலைக்காரனாகிய எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே எங்களோடேயிருந்தான். அவனுக்கு அவைகளை விவரித்தோம். அப்பொழுது எங்கள் சொப்பனங்களுக்கிருந்த வெவ்வேறே அர்த்தங்களின்படியே எங்களுக்கு அவன் எங்கள் சொப்பனங்களின் வியாக்கியானத்தைச் சொன்னான்.

௰௩ அவன் எங்களுக்குச் சொன்னபடி வியாக்கியானம் சொன்னானே அப்படியே நடந்தது சம்பவித்தது. என்னைத் திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத் தூக்கிப்போடுவித்தாரென்றான்.

௰௪ அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைத்தனுப்பினான். அவனைத் தீவிரமாய்க் கிடங்கிலிருந்து புறப்படப்பண்ணினார்கள். அவன் சவரம்பண்ணிக்கொண்டு தன் வஸ்திரங்களை மாற்றிப் பார்வோனண்டைக்கு வந்தான்.

௰௫ அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: ஒரு சொப்பனத்தைக் கண்டேன். அதின் அர்த்தத்தைச் சொல்லுகிற ஒருவருமில்லை. நீயோவென்றால் ஒரு சொப்பனத்தைக் கேட்டால் அதின் அர்த்தத்தைச் சொல்லலாமென்று நான் உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேனென்றான்.

௰௬ அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தரமாக* நானல்ல, தேவனேதானே பார்வோனுக்குச் சமாதானமுள்ள உத்தரவு அருளிச்செய்வாரென்றான். * ௪௰, ௮. தானி ௨, ௩௰.

௰௭ பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: என் சொப்பனத்திலே இதோ, நான் நதியோரத்திலே நின்றேன்.

௰௮ அப்பொழுது இதோ, மாம்சக்கொழுப்பும் நேர்த்தியான ரூபமுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்தேறிப் புல்லிலே மேய்ந்தது.

௰௯ ஆனால் இதோ, அவைகளின் பிறகாலே நரப்பலும் மகா அவலட்சணரூபமும் மாம்சச்சிவனுமான வேறே ஏழு பசுக்கள் ஏறி வந்தது. இவைகளைப்போல அவலட்சணமான பசுக்களை எகிப்துதேசமெங்குமான் கண்டதில்லை.

௨௰ சிவனும் அவலட்சணமுமான இந்தப் பசுக்கள் கொழுப்பான அந்த முந்தின ஏழு பசுக்களைப் பட்சித்துப்போட்டது.

௨௰௧ அவைகள் இவைகளின் வயிற்றிலே புகுந்துபோகியும் இவைகள் வயிற்றில் புகுந்துபோயிற்றென்று தெரியப்படவில்லை. முன்னிருந்ததுபோலே இவைகளின் ரூபம் அவலட்சணமாயிருந்தது. அப்பொழுது எனக்கு நித்திரை தெளிந்தது.

௨௰௨ பின்னையும் என் சொப்பனத்திலே நான் கண்டதாவது: இதோ, நிறைந்திருக்கிற ஏழு நல்ல கதிர்கள் ஒரே முதலிலிருந்தோங்கிவளர்ந்தது.

௨௰௩ ஆனால் அவைகளுக்குப் பிற்பாடு இதோ, சாவியான துவண்ட கீழ்க்காற்றினால் தீய்ந்துபோனதுமான ஏழு கதிர்கள் முளைத்தது.

௨௰௪ சாவியான இந்தக் கதிர்கள் நல்லதான அந்த ஏழு கதிர்களை விழுங்கிப்போட்டதே. இதைச் சாஸ்திரிகளுக்குச் சொன்னேன். ஆனால் இதின் அர்த்தத்தை எனக்கு விவரிக்கிறவனில்லையென்றான்.

௨௫ அப்பொழுது யோசேப்பு பார்வோனிடத்தில் சொன்னதாவது, பார்வோனின் சொப்பனம் ஒன்றுதான். தான் செய்யப்போகிறதைப் பரப்பரன் பார்வோனுக்கறிவித்தார்.

௨௬ அந்த ஏழு நல்ல பசுக்களும் ஏழு வருஷங்கள். அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷந்தான். அந்தச் சொப்பனம் ஒன்றுதான்.

௨௭ அவைகளுக்குப் பிறகே ஏறிவந்த சிவந்த கெட்ட உருவமான ஏழு பசுக்களும் ஏழு வருஷங்களாயிருக்கும். கொண்டற்காற்றினால் தீய்ந்துபோன ஏழு கதிர்களும் அப்படியே பஞ்சமுள்ள ஏழு வருஷங்களாயிருக்கும்.

௨௮ பரப்பரன் செய்யப்போகிறதைப் பார்வோனுக்குக் காண்பித்தாரென்று பார்வோனுக்குச் சொன்னேனே. அது இந்த வர்த்தமானந்தான்.

௨௯ இதோ, எகிப்துதேசமெங்கும் மகா பரிபூரணமுண்டாயிருக்கிற ஏழு வருஷங்கள் வருகுது.

௩௰ பின்பு அவைகளுக்குப் பிற்பாடு பஞ்சமுள்ள ஏழு வருஷங்களெழும்பும். அப்பொழுது எகிப்துதேசத்தில் அந்தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டிருக்கும். அந்தப் பஞ்சம் தேசத்தைமாளப்பண்ணும்.

௩௧ தேசத்திலிருந்த பரிபூரணம் பிற்பாடு வருகிற அந்தப் பஞ்சத்தினாலே தெரியப்படாதிருக்கும். ஏனெனில் மகா கனமானதாயிருக்கும்.

௩௨ பார்வோனுக்கு இந்தச் சொப்பனம் இரட்டித்து வந்ததற்கு அர்த்தமென்னவென்றால், இந்தக் காரியம் பரப்பரனால் நிச்சயமாய்த் தீர்மானிக்கப்பட்டது. அதைச் செய்யப் பரப்பரன் தீவிரிக்கிறாரென்பதுதானே.

௩௩ இப்பொழுதும் பார்வோன் உணர்வும் ஞானமுமுள்ள ஒரு மனிதனைப் பார்த்து, அவனை எகிப்துதேசத்தின்மேல் அதிகாரியாக்கக்கடவர்.

௩௪ இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் மணியக்காரரை வைத்துப் பரிபூரணமான ஏழு வருஷங்களில் எகிப்துதேசத்தின் விளைவில் ஐந்தில் ஒரு பங்கை வாங்குவாராக.

௩௫ அவர்கள் வருகிற இந்த நல்ல வருஷங்களின் ஆகாரத்தையெல்லாஞ் சேர்த்துப் பட்டணங்களில் ஆகாரமுண்டாயிருக்கும்படி பார்வோனுடைய கையின் கீழ்த் தானியம் பாராக்கே வைத்து வைப்பார்களாக.

௩௬ தேசம் பஞ்சத்தினால் சங்காரமாகாதபடிக்கு அந்த ஆகாரம் எகிப்துதேசத்திலுண்டாயிருக்கும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்காகத் தேசத்துக்கு இருப்பாயிருக்கக்கடவதென்றான்.

௩௭ இந்த வார்த்தை பார்வோனின் கண்களுக்கும் அவனுடைய எல்லா ஊழியக்காரரின் கண்களுக்கும் நன்றாயிருந்தது.

௩௮ அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரோடே, பரப்பரனுடைய ஆவியுள்ள இந்த மனிதனைப்போல ஒருவன் அகப்படுவானோ என்றான்.

௩௯ பிற்பாடு பார்வோன் யோசேப்பை நோக்கிச் சொன்னதாவது, பரப்பரன் இவைகளையெல்லாம் உனக்கறிவித்திருக்கக்கொள்ள, உன்னைப்போல உணர்வும் ஞானமுமுள்ளவனில்லை.

௪௰ நீ என் வீட்டுக்கு அதிகாரியாயிருப்பாய். உன் வாக்கின்படியே என் சனமெல்லாம் வணங்கிச் செய்யக்கடவது. இராசாசனத்தில் மாத்திரம் நான் உன்னிலும் பெரியவனாயிருப்பேனென்றான்.

௪௧ பின்னையும் பார்வோன் யோசேப்பை நோக்கி, பார், உன்னை எகிப்துதேசத்தின் மேலெல்லாம் அதிகாரியாக்கினேனென்று சொல்லி,

௪௨ பார்வோன் தன் கையிற்போட்டிருந்த தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பினுடைய கையிலேபோட்டு, மெல்லிய புடவையான வஸ்திரங்களை அவனுக்குத் தரிப்பித்துப் பொற்சரப்பளியை அவன் கழுத்திலேபோட்டு,

௪௩ தனக்கிருந்த இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏறப்பண்ணி, முழங்காற்படியிடுங்களென்று அவனுக்கு முன்பாகக் கூறுவித்து, அவனை எகிப்துதேசத்தின்மேலெல்லாம் அதிகாரியாக்கினான்.

௪௪ பார்வோன் யோசேப்பை நோக்கி, நான் பார்வோன். ஆனால் உன்னையல்லாமல் எகிப்துதேசமெங்கும் ஒருவரும் தன் கையையும் தன் காலையும் எடுப்பதில்லையென்றான்.

௪௫ பார்வோன் யோசேப்புக்கு இரகசியங்களை வெளிப்படுத்துகிறவனென்று பேரைத் தரித்து, அவனுக்கு ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திப்பிராவின் குமாரத்தியாகிய அஸ்நாத்தைப் பெண்சாதியாகக் கொடுத்தான். யோசேப்பு எகிப்துதேசத்தைச் சுற்றிவரப் புறப்பட்டான்.

௪௬ யோசேப்பு எகிப்தின் இராசாவாகிய பார்வோனுக்கு முன்பாக நிற்கிறபொழுது முப்பது வயதாயிருந்தான். யோசேப்பு பார்வோனைவிட்டுப் புறப்பட்டு எகிப்துதேசத்தையெல்லாங் கடந்தான்.

௪௭ பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் தேசம் மிகுதியாய்ப் பலனைத் தந்தது.

௪௮ எகிப்துதேசத்தில் வந்த அந்த ஏழு வருஷங்களின் ஆகாரத்தையெல்லாம் அவன் சேர்த்து, அந்த ஆகாரத்தைப் பட்டணங்களிற் கட்டிவைத்தான். ஒவ்வொரு பட்டணத்திற்குள்ளே அதின் சுற்றுப்புறத்து ஆகாரத்தையே கட்டிவைத்தான்.

௪௯ அப்படியே யோசேப்பு தானியத்தைக் கடற்கரை மணலைப்போல மிகவும் திரட்சியாகச் சேர்த்து வைத்தான், ஏனெனில் எண்ணிக்கைக்கடங்காததாயிருந்தது.

௫௰ பஞ்சமுள்ள வருஷங்கள் வருகிறதற்கு முன்னே யோசேப்புக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள் அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திப்பிராவின் குமாரத்தியாகிய அஸ்நாத் அவனுக்குப் பெற்றாள்.

௫௧ யோசேப்பு முந்திப்பிறந்தவனுக்கு மனாசேயென்று பேரிட்டான். ஏனெனில் என்னுடைய எல்லா வருத்தத்தையும் என் தகப்பனுடைய வீட்டனைத்தையும் பராபரன் என்னை மறக்கப்பண்ணினாரென்றான்.

௫௨ இரண்டாங் குமாரனுக்கு எப்பிராயீமென்று பேரிட்டான். ஏனெனில் நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்திலே பராபரன் என்னைப் பலுகப்பண்ணினாரென்றான்.

௫௩ எகிப்து தேசத்திலே வந்த பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களும் நிறைந்தபொழுது,

௫௪ பஞ்சமுள்ள ஏழு வருஷங்கள் யோசேப்பு சொன்னபடியே வரத்துவக்கிறது. அப்பொழுது எல்லாத் தேசங்களிலும் பஞ்சமுண்டாயிற்று. ஆனால் எகிப்து தேசமெங்கும் ஆகாரமிருந்தது.

௫௫ எகிப்து தேசமெங்கும் பஞ்சமுண்டாகக் கொள்ளச் சனம் அப்பத்திற்காகப் பார்வோனை நோக்கிக் கூப்பிட்டது. அப்பொழுது பார்வோன் எல்லா எகிப்தியருக்கும் நீங்கள் யோசேப்பண்டைக்குப் போய், அவனுங்களுக்குச் சொல்லும்படியே செய்யுங்களென்றான்.

௫௬ பஞ்சந் தேசமெங்கு முண்டாகக் கொள்ள யோசேப்பு களஞ்சியங்களையெல்லாந் திறந்து எகிப்தியருக்கு விற்றான். ஏனெனில் பஞ்சம் எகிப்து தேசத்திற் கனமானதாயிற்று.

௫௭ சகல தேசங்களின் மனிதரும் யோசேப்பினிடத்திலே கொள்ள எகிப்திற்கு வந்தார்கள். ஏனெனிற் பூமியெங்கும் பஞ்சமிகுதியாயிருந்தது.

௪௨. அதிகாரம்.

யோசேப்பின் சகோதரர் எகிப்திற்குப் போன முதற்பயணம்.

எகிப்திலே தானியமுண்டென்று யாக்கோபு அறிந்தபொழுது யாக்கோபு தன் குமாரருக்கு நீங்கள் ஒருவரையொருவர் பார்க்கிறதென்ன?

௨ இதோ, எகிப்திலே தானியமுண்டென்று கேட்டேன். நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படிக்கு அங்கே இறங்கிப்போய் நமக்காகத் தானியங் கொள்ளுங்களென்றான்.

௩ அப்பொழுது யோசேப்பின் சகோதரரில் பத்துப்பேர் எகிப்திலே தானியங் கொள்ள இறங்கிப்போனார்கள்.

௪ ஆனால் யோசேப்பின் தம்பியாகிய பென்யமீனை யாக்கோபு அவன் சகோதரரோடே கூட அனுப்பாதேயிருந்தான். ஏனென்றால் அவனுக்கொரு மோசம் வருமோவென்று சொன்னான்.

௫ அப்படியே கொள்ளுகிறதற்கு வருகிறவர்களோடே கூட இஸ்ரவேலின் குமாரரும் வந்தார்கள். ஏனெனிற் கானான் தேசத்திலே பஞ்சமுண்டாயிருந்தது.

௬ யோசேப்போவென்றால் தேசத்தின் மேல் அதிகாரியாயிருந்து, அவனே தேசத்தின் சனத்துக்கெல்லாம் விற்றான். யோசேப்பின் சகோதரர் வந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள்.

௭ யோசேப்பு தன் சகோதரரைப் பார்க்கிறபொழுது அவர்களையறிந்தான். ஆனால் அறியாதவனைப்போல அவர்களுக்குக் காணப்பட்டு அவர்களோடே கடினமாய்ப் பேசி அவர்களுடனே எங்கேயிருந்து வந்தீர்களென்றான். அப்பொழுது அவர்கள் ஆகாரங் கொள்ளக் கானான் தேசத்திலிருந்து வந்தோமென்றார்கள்.

௮ யோசேப்பு தன் சகோதரரை யறிந்தான். அவர்களோவெனில் அவனையறியாதிருந்தார்கள்.

௯ யோசேப்பு அவர்களைக் குறித்துத் தான் கண்டிருந்த * சொப்பனங்களை நினைத்து, அவர்களோடே நீங்கள் வேவுகாரர், தேசம் எங்கே திறந்து கிடக்கிறதென்று பார்க்க வந்தீர்களென்றான். * ௩௭, ௫—௰.

௰ அவர்களோவென்றால் அவனோடே சொன்னதாவது அல்ல, எங்களாண்டவனே! ஆகாரங் கொள்ள உமதடியார் வந்தார்கள்.

௰௧ நாங்களெல்லாரும் ஒருவருடைய பிள்ளைகள். நாங்கள் உண்மையுள்ளவர்கள் உமதடியார் வேவுகாரரல்லவென்றார்கள்.

௰௨ அவனோவெனில் அவர்களோடே இப்படியல்ல, தேசம் எங்கே திறந்து கிடக்கிறதென்று பார்க்க வந்தீர்களென்றான்.

௰௩ அப்பொழுது அவர்கள் சொன்னதாவது உமதடியார் கானான் தேசத்திலிருக்கிற ஒருவனுக்குக் குமாரராகிய பன்னிரண்டு சகோதரர். ஆனால் இதோ, இளையவன் இந்நாளில் எங்கள் தகப்பனண்டையிலிருக்கிறான். ஒருவனோவென்றால் காணாமற் போனானென்றார்கள்.

௰௪ யோசேப்பு அவர்களோடே சொன்னதாவது நீங்கள் வேவுகாரரென்று நான் உங்களோடே சொன்னபடியேயிருக்கும்.

௰௫ உங்கள் இளைய சகோதரன் இங்கே வந்தாலொழிய நீங்கள் இங்கேயிருந்து புறப்படுவதில்லையென்று பார்வோனின் சீவனைக்

சொல்லுகிறேன். இதினாற் சோதிக்கப்படுவீர்கள்.

௧௬ உங்கள் சகோதரனை அழைத்துவர உங்களில் ஒருவனை அனுப்புங்கள். நீங்கள் காவற்பண்ணப்பட்டிருப்பீர்கள். உங்கள் சத்தியமுண்டோவென்று உங்கள் வார்த்தைகள் சோதிக்கப்படும். இல்லாவிட்டால் நீங்கள் வேவுகாரரென்று பார்வோனின் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேனென்றுசொல்லி,

௧௭ அவர்களை மூன்று நாட்காவலிலே வைத்தான்.

௧௮ மூன்றாம்நாளிலேயோசேப்பு அவர்களோடே சொன்னதாவது, நீங்களுயிரோடேயிருக்க ஒன்றைச் செய்யுங்கள். நான் தேவனுக்குப் பயப்படுகிறவன்.

௧௯ நீங்கள் நிஜமானவர்களானால், உங்கள் சகோதரரில் ஒருவன் நீங்கள் காவற்பண்ணப்பட்டிருந்த வீட்டிலே கட்டுண்டிருக்கட்டும், நீங்கள் போய் உங்கள் வீட்டாரின் பசிக்காகத் தானியங் கொண்டு போங்கள்,

௨௦ உங்கள் இளைய சகோதரனை என்னண்டைக்குக் கொண்டுவாருங்கள். அப்பொழுது நீங்கள் சாகாதபடிக்கு உங்கள் வார்த்தைகள் மெய்ப்படுமென்றான். அவர்கள் அப்படியே செய்தார்கள்,

௨௧ அவர்கள் ஒருவரோடொருவர் சொன்னதாவது, நம்முடைய சகோதரனுக்குச் செய்ததினாலே மெய்யாய் நாம் குற்றமுள்ளவர்களாயிருக்கிறோம். அவன் நம்மைக் கெஞ்சிக்கேட்கும்போது அவனுடைய ஆத்தும இக்கட்டைக் கண்டும் நாம் அவனுக்குச் செவிகொடாதே போனோம். ஆகையால் இந்த இக்கட்டு நமக்கு வந்ததென்றார்கள்.

௨௨ அப்பொழுது ரூபன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, * இளைஞனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதேயுங்களென்று நானுங்களோடே சொன்னதில்லையோ? நீங்கள் கேளாதே போனீர்கள். இப்பொழுது, இதோ, அவன் இரத்தப்பழி கேட்கப்படுகிறதென்றான். * ௩௭, ௨௧. ௨௨.

௨௩ யோசேப்பு இதைக்கேட்டானென்று அவர்களறியாதே போனார்கள். அவர்களுக்குத் துப்பாசித்தனம் பண்ணுகிறவன் அவர்களுக்குள்ளிருந்தான்.

௨௪ அவன் அவர்களை விட்டப்பாலே போய் அழுது, திரும்ப அவர்களண்டையிலே வந்து அவர்களோடே பேசி, அவர்களுக்குள்ளே சிமியோனைப் பிடித்து, அவனை அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கட்டுவித்தான்.

௨௫ பிறகு அவர்களுடைய சாக்குகளைத் தானியத்தால் நிரப்பவும், அவர்களுடைய பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும், அவர்களுக்கு வழிக்கு ஆகாரங் கொடுக்கவும் யோசேப்பு கற்பித்தான். அப்படியே அவர்களுக்குச் செய்யப்பட்டது.

௨௬ அவர்கள் தங்கள் தானியத்தைத் தங்கள் கழுதைகள் மேலேற்றிக்கொண்டு, அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போனார்கள்.

௨௭ தங்குமிடத்திலே அவர்களிலொருவன் தன் கழுதைக்குத் தீவனங் கொடுக்கத் தன் சாக்கைத் திறக்கிறபொழுது, இதோ, தன் சாக்கின் வாயிலே தன் பணமிருக்கிறதையவன் கண்டு,

௨௮ தன் சகோதரரோடே, என் பணம் எனக்குத் திரும்ப வந்தது. இதோ, என் சாக்கிலேயிருக்கிறதென்றான். அப்பொழுது அவர்கள் இடிந்துபோய் ஒருவரையொருவர் கலக்கமாய்ப் பார்த்துப் பராபரன் நமக்கிதைச் செய்ததேதென்றார்கள்.

௨௯ அவர்கள் கானான் தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபண்டையிலே வந்து சேர்ந்தபொழுது, தங்களுக்குச் சம்பவித்தவைகளையெல்லாம் அவனுக்கறிவித்துச் சொன்னதாவது,

௩௦ தேசத்தின் அதிகாரியாயிருக்கிறவன் எங்களோடே கடினமாய்ப் பேசி, எங்களைத் தேசத்தை வேவுபார்க்கிறவர்களாக எண்ணினான்.

௩௧ நாங்களோவென்றால் அவனோடே சொன்னதாவது, நாங்கள் வேவுகாரராயிராமல் நிஜமானவர்களாயிருக்கிறோம்.

௩௨ எங்கள் தகப்பனுக்குப் பிறந்த நாங்கள் பன்னிரண்டு சகோதரர். ஒருவன் காணாமற்போனான். இளையவனோவென்றால் இந்நாளிற் கானான் தேசத்திலே எங்கள் தகப்பனண்டையிலேயிருக்கிறானென்றோம்.

௩௩ அப்பொழுது தேசத்தின் அதிகாரியாயிருக்கிறவன் எங்களோடே சொன்னதாவது, நீங்கள் நிஜமானவர்களாயிருக்கிறதை யென்னாலே அறியவேண்டுமென்றால் உங்கள் சகோதரராகிய ஒருவனை நீங்கள் என்னிடத்திலே வைத்து, உங்கள் வீட்டாரின் பசிக்காகத் தானியம் வாங்கிக்கொண்டு போய்,

௩௪ உங்கள் இளைய சகோதரனை யென்னண்டைக்கழைத்து வாருங்கள். அதினாலே நான் நீங்கள் வேவுகாரராயிராமல் நிஜமுள்ளவர்களென்றறிந்துகொண்டு, உங்கள் சகோதரனை உங்களுக்குக் கொடுத்துவிடுவேன். நீங்கள் தேசத்திலே தொழிலும் பண்ணலாமென்று சொன்னானென்றார்கள்.

௩௫ சம்பவித்ததென்னவென்றால், அவர்கள் தங்கள் சாக்குகளிலிருக்கிறதைக் கொட்டுகையில், இதோ, அவனவன் சாக்கிலே அவனவன் பணமுடிப்பிருந்தது. தங்கள் பணமுடிப்புகளை அவர்களும் அவர்கள் தகப்பனுங் கண்டு பயந்தார்கள்.

௩௬ அவர்கள் தகப்பனாகிய யாக்கோபு அவர்களோடே, என்னைப் பிள்ளைகளற்றவனாக்குகிறீர்கள். யோசேப்பு இல்லாதே போனான். சிமியோனுமில்லாதே போனான். பென்யமீனையும் அழைத்துக்கொண்டுபோ

கிறீர்கள். என்மேலே யிவையெல்லாம் வருகிறதென்றான்.

௩௭ அப்பொழுது ரூபேன் தன் தகப்பனோடே, அவனை நான் உம்மண்டைக்கழைத்து வராதேபோனால், என் இரண்டு குமாரரைக் கொன்றுபோடுவீராக. என் கையிலே அவனையொப்புவியும், நான் அவனை உம்மண்டைக்குத் திரும்ப அழைத்து வருவேனென்றான்.

௩௮ அவனோவென்றால், என் மகன் உங்களோடேகூட இறங்கிப்போவதில்லை. ஏனெனில் அவன் தமையன் மரணமடைந்தான். இவனொருவன் மீதியானவன். நீங்கள் போகும் வழியிலே இவனுக்கொரு சேதம் வந்தால் நீங்கள் என் நரைமயிரைச் சஞ்சலத்தோடே குழியிலிறங்கப்பண்ணுவீர்களென்றான்.

௪௩. அதிகாரம்.

யோசேப்பின் சகோதரர் எகிப்திற்குப் போன இரண்டாம் பயணம்.

பஞ்சமோவென்றால் தேசத்திலே மிகுதியாயிருந்தது.

௨ ஆகையால் அவர்கள் எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியத்தைச் சாப்பிட்டுத் தீர்ந்தபொழுது அவர்கள் தகப்பன் அவர்களுடனே நீங்கள் திரும்பப்போய்க் கொஞ்சம் ஆகாரம் நமக்குக் கொள்ளுங்களென்றான்.

௩ அப்பொழுது யூதா அவனோடே சொன்னதாவது, உங்கள் சகோதரன் உங்களோடேகூட வராவிட்டால் நீங்கள் என் முகத்தைப் பார்ப்பதில்லையென்கிறதை அந்த மனிதன் எங்களுக்குத் திடச்சாட்சியாய்ச் சொல்லிக்கற்பித்தான்.

௪ நீர் எங்கள் சகோதரனை எங்களோடேகூட அனுப்புகிறதுண்டானால் நாங்கள் இறங்கிப்போய், உமக்கு ஆகாரங்கொள்ளுவோம்.

௫ அனுப்பாமற் போனீரேயானால் நாங்கள் இறங்கிப்போவதில்லை. ஏனெனில் உங்கள் சகோதரன் உங்களோடேகூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைப் பார்ப்பதில்லையென்று அந்த மனிதன் எங்களோடே சொன்னானேயென்றான்.

௬ அப்பொழுது இஸ்ரவேல், உங்களுக்கின்னமொரு சகோதரனிருக்கிறதை நீங்கள் அந்த மனிதனுக்கறிவித்ததினாலே எனக்கேன் பொல்லாப்புண்டுபண்ணினீர்களென்றான்.

௭ அதற்கவர்கள் சொன்னதாவது, உங்கள் தகப்பன் இன்னம் உயிரோடிருக்கிறானோவென்றும், உங்களுக்கின்னமொரு சகோதரன் உண்டோவென்றும் அந்த மனிதன் எங்கள் செய்தியையும் எங்கள் வம்சத்தின் செய்தியையுங் கேட்கவே கேட்டான். அந்தக் கேள்விகளுக்குத் தக்கதாக அவனுக்கு அறிவித்தோம். உங்கள் சகோதரனை உங்களோடேகூட இங்கே அழைத்து வாருங்களென்றவன் சொல்லுவானென்கிறதை யறிந்தோமோவென்றார்கள்.

௮ பின்னையும் யூதா தன் தகப்பனாகிய இஸ்ரவேலோடே சொன்னதாவது, நாங்களும் நீரும் எங்கள் குழந்தைகளுஞ் சாவாமல் உயிரோடிருக்கும்படிக்கு, நாங்கள் எழுந்திருந்து போகத்தக்கதாகப் பிள்ளையாண்டானை என்னோடேகூட அனுப்பும்.

௯ அவனுக்காக நான் பிணைப்பட்டிருப்பேன், என் கையிலே அவனைக் கேட்பீராக. நான் அவனை உம்மண்டைக்குக் கொண்டுவந்து அவனை உமக்கு முன்பாக நிறுத்தாமற்போனால், சகல நாளும் உமக்கு தோஸதருப்பேன்.

௰ ஏனெனில் நாங்கள் தாமதிக்காதிருந்தோமானால் இப்பொழுது இரண்டுவிசை திரும்பிவந்திருப்போமேயென்றான்.

௰௧ அப்பொழுது அவர்கள் தகப்பனாகிய இஸ்ரவேல் அவர்களோடே சொன்னதாவது, இப்படிவேண்டியதேயானால் ஒன்று செய்யுங்கள். இந்தத் தேசத்தின் உச்சிதங்களாகிய கொஞ்சம் பிசின் தயிலத்தையுங் கொஞ்சந் தேனையும், சம்பாரங்களையும் வெள்ளைப்போளத்தையுந் தெரேபிந்துக்கொட்டைகளையும், வாதுமைக் கொட்டைகளையும் உங்கள் சாக்குகளிற் போட்டு அந்த மனிதனுக்குக் காணிக்கையாகக் கொண்டுபோங்கள்.

௰௨ இரட்டிப்பாய்ப் பணத்தையுங் கைகளிலும் வைத்து, உங்கள் சாக்குகளின் வாயிலே திரும்பிவந்த பணத்தை மறுபடியும் உங்கள் கைகளிலே கொண்டுபோங்கள். அது பிசகாயிருந்தாலும்.

௰௩ உங்கள் சகோதரனையுங் கூட்டிக்கொண்டு, எழுந்து அந்த மனிதனண்டைக்குத் திரும்பிப்போங்கள்.

௰௪ ஆனால் அந்த மனிதன் உங்களுடைய மற்றச் சகோதரனையும் பென்யமீனையும் உங்களோடேகூட அனுப்பிவிடும்படிக்குச் சர்வதத்துவமுள்ள பராபரன் அவன் முன்பாக உங்களுக்கு இரக்கங் கிடைக்கப்பண்ணுவாராக. நானோவெனில் பிள்ளை பறிபோனவனைப்போலிருப்பேனென்றான்.

௰௫ அப்பொழுது அவர்கள் அந்தக் காணிக்கையையுந் தங்கள் கைகளில் இரட்டிப்பான பணத்தையும் எடுத்து, பென்யமீனைக் கூட்டிக்கொண்டு, பயணப்பட்டு எகிப்திற்கிறங்கிப்போய், யோசேப்புக்கு முன்பாக வந்துநின்றார்கள்.

௰௬ அப்பொழுது பென்யமீன் அவர்களோடேகூட இருக்கிறதை யோசேப்பு கண்டு, தன் வீட்டு விசாரிப்புக்காரனோடே, நீ இந்த மனிதரை வீட்டிற்கழைத்துப்போய்ச், சாப்பாட்டுக்கு வேண்டியவைகளையடி

தந்து ஆயத்தம்பண்ணு. ஏனெனில் மத்தியானத்திலே இந்த மனிதர் என்னோடே சாப்பிடுவார்களென்றான்.

௰௭ அந்த மனிதன் யோசேப்பு தனக்குச்சொன்னபடி செய்து, அந்த மனிதரை யோசேப்பின் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோனான்.

௰௮ அப்பொழுது அவர்கள், தாங்கள் யோசேப்பின் வீட்டிற்கழைத்துப் போகப்படுகிறதைக் கண்டு பயந்து, முன்முறை நம்முடைய சாக்குகளில் திரும்ப வந்த பணத்தினிமித்தம் நம்முடைய பேரிற் குற்றஞ்சாட்டி நம்மேலே விழுந்து நம்மைச் சிறைப்படுத்தி நம்முடைய கழுதைகளையெடுத்துக்கொள்ளுகிறதற்காகத்தான் கொண்டுபோகப்படுகிறோமென்று சொல்லி,

௰௯ யோசேப்பின் வீட்டுவிசாரிப்புக்காரனண்டையிலே சேர்ந்து, வீட்டுவாசற்படியிலே அவனோடே பேசிச்சொன்னதாவது,

௨௰ என் ஆண்டவனே! ஆகாரங்கொள்ள முந்தி நாங்கள் வந்திருந்தோமே.

௨௧ அப்பொழுது சம்பவித்ததேதெனில், நாங்கள் தங்குமிடத்திலே வந்து எங்கள் சாக்குகளைத் திறக்கிறபொழுது இதோ, நாங்கள் ஒவ்வொருவன் பணத்தை நிறுத்துக்கொடுத்த நிறைப்படி அவனவனுடைய அவனவன் சாக்கின் வாயிலிருந்தது. அதை எங்கள் கையில் திரும்பக்கொண்டுவந்தோம்.

௨௨ ஆகாரங்கொள்ள வேறே பணத்தையும் எங்கள் கையிலேயெடுத்துக்கொண்டுவந்தோம். எங்கள் பணத்தை யாரெங்கள் சாக்குகளில் வைத்தானென்கிறதை யறியோமென்றார்கள்.

௨௩ அவன் சொன்னது, உங்களுக்குச் சமாதானம். நீங்கள் பயப்படவேண்டாம். உங்கள் தேவனும் உங்கள் தகப்பனுடைய தேவனுமானவர் உங்கள் சாக்குகளில் உங்களுக்குப் பொக்கிஷங்கட்டளையிட்டார். உங்கள் பணம் எனக்கு வந்துசேர்ந்ததென்று சொல்லிச் சிமியோனை வெளியே அவர்களண்டையில் அழைத்துவந்துவிட்டு,

௨௪ அவர்களை யோசேப்பின் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோய்த் தங்கள் கால்களைக் கழுவ அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்து, அவர்கள் கழுதைகளுக்குக் கவளம் போட்டான்.

௨௫ மத்தியானத்திலே யோசேப்பு வருமளவும் அவர்கள் காணிக்கைகளை ஆயத்தமாக்கினார்கள். ஏனெனில் தாங்கள் அங்கே சாப்பிடப்போகிறதைக் கேட்டிருந்தார்கள்.

௨௬ யோசேப்பு வீட்டிற்கு வந்தபொழுது அவர்கள் தங்கள் கையிலிருந்த காணிக்கைகளை அவனுக்கு வீட்டிற்குட் கொண்டுபோய்த் தரையமட்டுங் குனிந்து அவனை வணங்கினார்கள். * ௩௭, ௭.

௨௭ அப்பொழுது அவன், சுகமாயிருக்கிறீர்களோவென்று கேட்டு, நீங்கள் சொன்ன வயதுசென்ற உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறானோ, அவனின்னம் உயிரோடிருக்கிறானோவென்று விசாரித்தான்.

௨௮ அவர்கள் எங்கள் தகப்பனாகிய உம்முடைய ஊழியக்காரன் சுகமாயிருக்கிறார். இன்னம் உயிரோடிருக்கிறாரென்று சொல்லிக் குனிந்து வணங்கினார்கள்.

௨௯ அவன் தன் கண்களையேறெடுத்துத் தன் தாயின் குமாரனாகிய தன்னோடே கூடப்பிறந்த பென்யமீனைக் கண்டு, இவன் நீங்கள் என்னோடே சொன்ன உங்கள் இளைய சகோதரனோவென்றுகேட்டு, என் மகனே! பராபரன் உன்மேலே கிருபைவைக்கக்கடவரென்றான்.

௩௰ ஆனால் தன் சகோதரனுக்காக யோசேப்பின் உள்ளம் பொங்கினபடியினாலே அவன் அழுகிறதற்கு இடந்தேடித் தீவிரித்து, அறையிலேபோய் அங்கேயழுதான்.

௩௧ பிறகு அவன் தன் முகத்தைக் கழுவிப் புறப்பட்டுத் தன்னையடக்கிக்கொண்டு போசனம் வையுங்களென்றான்.

௩௨ அப்பொழுது அவனுக்குத் தனிப்படவும் அவர்களுக்குத் தனிப்படவும் அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் தனிப்படவும் வைத்தார்கள். ஏனெனில் எகிப்தியர் எபிரேயரோடே அப்பஞ் சாப்பிடமாட்டார்கள். அதேனென்றால் அது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்.

௩௩ அவர்கள் அவனுக்கு முன்பாக மூத்தவன் தன் மூத்த வயதின்படியேயும் இளையவன் தன் இளைய வயதின்படியேயும் உட்கார்த்திவைக்கப்பட்டார்கள். அதற்காக அவர்கள் ஒன்றுகொண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

௩௪ அவன் தன் முன்னேயிருக்கிறதில் அவர்களுக்குப் பங்கிட்டனுப்பினான். ஆனால் அவர்களெல்லாருடைய பங்குகளைப் பார்க்கிலும் பென்யமீனுடைய பங்கு ஐந்தத்தனையதிகமாயிருந்தது. அவர்கள் குடித்து அவனோடே சந்தோஷமாயிருந்தார்கள்.

௪௪. அதிகாரம்.

பென்யமீன் சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்ட வெள்ளிப்பாத்திரத்தினிமித்தம் யோசேப்பின் சகோதரருக்கு வந்த மனத்திக்கம்.

பிற்பாடு அவன் தன் வீட்டுவிசாரிப்புக்காரனுக்குக் கற்பித்ததாவது, நீ இந்த மனிதருடைய சாக்குகளை அவர்கள் ஏற்றிக்கொண்டுபோகத்தக்க பரிமாண ஆகாரத்தினாலே நிரப்பி, அவனவன் பணத்தை அவனவனுடைய சாக்கின் வாயிலே போட்டு,

௨ இளையவனுடைய சாக்கின் வாயிலே வெள்ளிப்பாத்திரமாகிய என்னுடைய பாத்

திர்த்தையும் அவனுடைய தானியத்தின் பணத்தையும் போட்டுவைத்தான். அவன் யோசேப்பு சொன்ன வார்த்தையின்படியே செய்தான்.

௩ காலமே வெளிச்சமான பொழுது அந்த மனிதர் தங்கள் கழுதைகளோடுங்கூட அனுப்பிவிடப்பட்டார்கள்.

௪ அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுத் தூரமாய்ப் போகாததற்கு முன்னே யோசேப்பு தன் விசாரிப்புக்காரனோடே சொன்னதாவது, நீ எழுந்து அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்களைக் கிட்டிப் பிடிக்கும்பொழுது அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டினதென்ன?

௫ அது என் எசமான் குடிக்கிற பாத்திரமல்லவோ? அதுபோனவகை அவருக்கு ஞானதிஷ்டியால் தெரியாதோ? நீங்கள் செய்தது பொல்லாத காரியமாயிருக்கிறதென்று சொல்லென்றான்.

௬ அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து, இந்த வார்த்தைகளை அவர்களோடே சொன்னான்.

௭ அப்பொழுது அவர்கள் அவனோடே சொன்னதாவது, எங்கள் ஆண்டவன் இப்படிக்கொத்த வார்த்தைகளைச் சொல்லுவானேன்? இப்படிக்கொத்த காரியத்தை உமதடியார் ஒருக்காலுஞ் செய்வதில்லை.

௮ இதோ, எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்டபணத்தைக் கானான் தேசத்திலிருந்து திரும்ப உம்மண்டைக்குக் கொண்டுவந்தோமே; நாங்கள் உம்முடைய எசமானின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்கொண்டுபோவதெப்படி?

௯ உமதடியாரில் எவனிடத்திலே அது கண்டுபிடிக்கப்படுமோ, அவன் சாவக்கடவன், நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோமென்றார்கள்.

௰ அதற்கவன், இப்பொழுதும் நீங்கள் சொன்ன வார்த்தைகளின்படியே ஆவதாக. எவனிடத்தில் அது கண்டுபிடிக்கப்படுமோ அவன் எனக்கு அடிமையாவான். நீங்களோவென்றால் குற்றமற்றிருப்பீர்களென்றான்.

௰௧ அவர்கள் தீவிரித்து, அவனவன் தன் சாக்கைத் தரையிலே இறக்கிப்போட்டு, ஒவ்வொருவராய்த் தங்கள் சாக்குகளைத் திறந்து வைத்தார்கள்.

௰௨ அவன் மூத்தவனைத் தொடங்கி இளையவனமட்டுஞ் சோதிக்கிறபொழுது பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது.

௰௩ அப்பொழுது அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனவன் தன் கழுதையின்மேலே சுமையையேற்றிப் பட்டணத்துக்குத் திரும்பினார்கள்.

௰௪ யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டிலே வந்தார்கள். ஏனெனில் அவன் இன்னம் அங்கேயிருந்தான். அவனுக்கு முன்பாகத் தரையிலே விழுந்தார்கள்.

௰௫ யோசேப்பு அவர்களோடே, நீங்கள் செய்த இந்தக் காரியமேது? என்னைப்போலொத்த மனிதனுக்குக் காரியம் ஞானதிஷ்டியினால் தெரியுமென்று அறியாதேபோனீர்களோவென்றான்.

௰௬ அப்பொழுது யூதா, என்னாண்டவனுக்கு நாங்கள் என்ன சொல்லப்போகிறோம். என்னத்தைப் பேசுவோம். எதினால் எங்களை நீதிமான்களாக்குவோம். பராபரன் உமதடியாரின் அக்கிரமத்தைக் கண்டுபிடித்தார். இதோ, நாங்களென்னாண்டவனுக்கடிமைகள். நாங்களும் பாத்திரங் கண்டுபிடிக்கப்பட்ட அவனுந்தானேயென்றான்.

௰௭ அவனோவென்றால் இப்படிக்கொத்த செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக. எவன்வசத்திற்பாத்திரங் கண்டுபிடிக்கப்பட்டதோ அவனே எனக்கடிமையாயிருப்பான். நீங்களோவென்றால் சமாதானத்தோடே உங்கள் தகப்பனண்டைக்குப் போய்வு[illegible]ங்களென்றான்.

௰௮ அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து சொன்னதாவது, ஐ, என்னாண்டவனே! உமதடியான் என்னாண்டவனுடைய செவிகளுக்கு முன்பாக ஒரு வார்த்தையைப் பேசட்டுமே? உமதடியான்மேல் உம்முடைய கோபம் எரியாதிருப்பதாக. ஏனெனில் நீர் பார்வோனைப்போலிருக்கிறீர்.

௰௯ * உங்களுக்குத் தகப்பனுஞ் சகோதரனும் உண்டோவென்று என்னாண்டவன் உமதடியாரைக் கேட்டார்.

* ௪௨, ௭.

௨௰ அப்பொழுது என்னாண்டவனுடனே, எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனும், அவருக்கு முதிர்வயதிலே பிறந்த இளைய சகோதரனுமுண்டு. இவனுடைய தமையன் செத்துப்போனான். இவனொருவன் தன் தாயாருக்கு மீதியானவன். இவனுடைய தகப்பன் இவன்மேலே பட்சமாயிருக்கிறானென்றோம்.

௨௰௧ அப்பொழுது நீர் உமதடியாரோடே அவனையென்னண்டைக்கழைத்து வாருங்கள். என் கண்ணை அவன்மேல் வைப்பேனென்றீர்.

௨௰௨ நாங்களோவென்றால் என்னாண்டவனோடே, அந்த இளைஞன் தன் தகப்பனைவிடக்கூடாது. தன் தகப்பனைவிட்டால் அவர் செத்துப்போவாரென்றோம்.

௨௰௩ நீரோவென்றால் உமதடியாருடனே, உங்கள் இளைய சகோதரன் உங்களோடேகூட இறங்கிவராதேபோனால் நீங்கள் என் முகத்தை இனிப் பார்ப்பதில்லையென்று சொன்னீர்.

௨௪ நாஙகளுமதடியாராகிய எனதகப பனகிட்டத்துக்குப்போனபொழுதுசமபவி த்ததினாலே என்னுடைய ஆண்டவனுடையவா ர்த்தைகளை அவருக்கறிவித்தோம.

௨௫ நீங்கள் திரும்பப்போய்க்கொஞ்சம ஆகாரத்தைக்கொள்ளுங்களென்று எங் கள்தகப்பன்சொல்லுவார்.

௨௬ அதற்குநாஙகள சொன்னதேதெ னறால் நாங்கள் திரும்பப்போகக் கூடாது. எங்கள் இளையசகோதரன் எஙகளோடிருந தால் நாங்கள் திரும்பிப்போவோம. ஏனெ னறால் இளையசகோதரன் எஙகளோ டேயிருந்தாலொழிய நாஙகள அந்தப் புருஷ னுடைய முகத்தைப் பார்க்கக்கூடாதென றோம.

௨௭ அப்பொழுது உமதடியாராகிய என தகப்பன் எங்களோடே சொன்னதாவது, என் பெண்சாதி எனக்கிரண்டு பிள்ளைகளைப பெற்றிருக்கிறதையும்,

௨௮ அவர்களில் ஒருவன் என்னிடத்திலி ருந்து புறப்பட்டுப்போனான். அவன பீறுண் டுபோனானென்றுசொல்லி இதுவ ரைக்கும் அவனைக்காணாதிருக்கிறேனென்ப தையும் நீங்கள் அறிவீர்கள.

௨௯ நீர் இவனையுமஎனமுனபாக இரா திருக்க அழைத்துப் போகக் கொள்ள நேரிட்டு அவனுக்குமோசம்வந்தால் என நரை யைத் துக்கத்தோடே குழியிலிறஙகப்ப ணணுவீர்களென்றார்.

௩௰ இப்பொழுதும இளைஞன் எங்களோ டேயில்லாமல் நான் என்தகப்பனாகிய உமதடி யானிடத்திலே வந்தால் அப்பொழுது அவருடைய உயிரும் இவனுடைய உயிரோ டே கட்டிக்கொண்டிருக்கிற படியினாலே சம்பவிப்பதேதெனில்,

௩௧ அவர், இளைஞன் இல்லையென்று காணு மபொழுது செத்துப்போவார். அப்படியே உமதடியாராகிய நாங்கள் உமதடியானாகிய எங்கள் தகப்பனுடைய நரையைச்சஞ்சல த்தோடே குழியிலிறங்கப்பண்ணுவோமே.

௩௨ ஏனெனில் * நானிவனை உமமண்டைக்குத் திரும்பக்கொண்டு வராதேபோனால நான சக லநாளும் என்தகப்பனுக்குக் குற்றஸ்தனாயிரு ப்பேனென்று உமதடியானாகிய நான என த கப்பனிடத்தில் இந்த இளைஞனுக்காகப் பிணைப்பட்டேன். * ௪௩, ௯.

௩௩ இப்பொழுதும் இளைஞன் தன சகோ தரரோடே கூடப்போய் ஏறும்படிக்கு உ மதடியானாகிய நான் இளைஞனுக்குப்பதி லாக இங்கே என்னுடைய ஆண்டவனுக்கடிமையா யிருக்கட்டுமே?

௩௪ ஏனெனில் இளைஞன் என்னோடில்லா மல் எப்படி என்தகப்பனண்டைக்கு ஏறிப்போவேன்? என்தகப்பனைப்பிடிக கும் தீங்கை அப்பொழுது காணபேனேயெ ன்றான்.

௪௫. அதிகாரம்.

யோசேப்பு தன சகோதரருக்குத் தன்னை அறியப்படுத்தினது.

௧ அப்பொழுது யோசேப்பு தன்னண்டை நிற்கிற எல்லாருக்கும் முன்பாக அடக்கிக் கொண்டிருக்கக்கூடாமல் எல்லாரும் என் னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்களென் று கூப்பிட்டான். யோசேப்பு தன சகோ தரருக்குத்தன்னை அறியப்பண்ணுகையில ஒருவரும் அவனண்டையிலே நின்றதில்லை.

௨ அவன சத்தமிட்டழுதான். அதை எ கிப்தியர் கேட்டார்கள். பார்வோனின் வீட் டாருங்கேட்டார்கள்.

௩ யோசேப்பு தன சகோதரரோடே நான யோசேப்பு. என் தகப்பன் இன்னமும் உயிரோ டிருக்கிறாரோவென்றான். ஆனால் அவன் ச கோதரர் அவனுக்கு முன்பாகக் கலங்கின தினாலே அவனுக்குப்பிரதியுத்தரஞ்சொ ல்ல அவர்களுக்குக் கூடாதேபோயிற்று.

௪ அப்பொழுது யோசேப்பு தன சகோத ரரோடே என்னண்டையிலே கிட்டிவாருங் களேனென்றான். அவர்கள் கிட்டப்போனார் கள். அப்பொழுது அவன் சொன்னதாவது, நீங்கள் எகிப்திற்குப்போகிறவர்களுக்கு வி ற்ற உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நானே.

௫ இப்பொழுதும நீங்கள் என்னை இவ்வி டத்திற்கு விற்றுப்போட்டதினாலே நீங்கள் சஞ்சலப்படவும் அது உங்கள் பார்வைக்கு ப்பொல்லாப்பாயிருக்கவும் வேண்டாம ஏ னெனில உங்கள் ஜீவனுக்காகப் பராபரன் எ ன்னை உங்களுக்குமுன்னாக அனுப்பினார்.

௬ ஏனென்றால் இந்த இரண்டுவருஷந்தே சத்திற்குள்ளே பஞ்சமுண்டாயிருந்தது. உ ழவும் அறுப்புமில்லாத ஐந்துவருஷங்களும இன்னம வரும.

௭ ஆனால் உங்களைத் தேசத்தில் மீதியா க வைப்பதற்கும் உங்களைப் பெரிய இரட்சி ப்பினாலே உயிரோடே காப்பதற்குமாகப் பராபரன் என்னை உங்களுக்குமுன்னாக அ னுப்பினார்.

௮ இப்பொழுதும நீங்களல்ல பராபர ன என்னை இங்கே அனுப்பி என்னைப்பார் வோனுக்குத் தகப்பனாகவும் அவன்வீட்டுக் கெல்லாந்துரையாகவும் எகிப்துதேசத்தை யெல்லாம ஆளுகிறவனாகவும் வைத்தார்.

௯ நீங்கள் தீவிரத்தோடே என தகப்பன ண்டைக்குப்போய் ஏறி அவரோடே சொ ல்லவேண்டியதேதெனில், உமது குமா ரனாகிய யோசேப்பு சொல்லியனுப்புகி றதாவது, பராபரன் என்னை எகிப்திற்கெ ல்லாந்துரையாக வைத்தார். என்னண்டை க்கு இறங்கிவாரும் தாமதியாதேயும.

௰ நீர் கோசேன்தேசத்திலே வாசம்பண் ணி எனக்குச்சமீபத்திலேயிருப்பீர். நீரும

உம்முடைய பிள்ளைகளும் உம்முடைய பிள்ளைகளின் பிள்ளைகளும், உம்முடைய ஆடுகளும், உம்முடைய மாடுகளும் உமக்குண்டானவையாவுங் கூடத்தாமே.

௰௧ நீரும் உம்முடைய வீட்டாரும் உமக்கிருக்கிறயாவுந் தாழ்ச்சிப்படாதபடிக்கு அங்கே உம்மைப் பராமரிப்பேன். ஏனெனிற் பஞ்சம் இன்னம் ஐந்து வருஷமட்டுமிருக்குமென்றுஞ் சொல்லுங்கள்.

௰௨ இதோ, என்னுடைய வாய் உங்களோடே பேசுகிறதென்பதை உங்கள் கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின் கண்களுங் காண்கிறது.

௰௩ எகிப்திலே எனக்கிருக்கிற என்னுடைய எல்லா மகிமையையும், நீங்கள் கண்டதெல்லாவற்றையும் என் தகப்பனுக்கு அறிவித்து, சீக்கிரமாய் என் தகப்பனை இவ்விடத்திற்கழைத்துவரப் பண்ணுங்களென்று சொல்லி,

௰௪ தன் தம்பியாகிய பென்யமீனுடைய கழுத்திலே கட்டிக்கொண்டழுதான். பென்யமீனும் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டழுதான்.

௰௫ தன்னுடைய எல்லாச் சகோதரரையும் முத்தஞ்செய்து அவர்கள்மேல் விழுந்தழுதான். அதற்குப்பிறகு அவன் சகோதரர் அவனோடே பேசினார்கள்.

௰௬ யோசேப்பின் சகோதரர் வந்தார்களென்று பார்வோன் வீட்டிலே செய்தி கேட்கப்பட்டபொழுது அது பார்வோனின் பார்வைக்கும் அவனூழியக்காரரின் பார்வைக்கும் நன்றாயிருந்தது.

௰௭ அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னது, நீ உன் சகோதரரோடே சொல்லவேண்டியதாவது நீங்கள் செய்யவேண்டியதேதெனில், உங்கள் மிருகஜீவன்களின்மேல் பொதியேற்றிப் புறப்பட்டுக் கானான்தேசத்திற்குப் போய்,

௰௮ உங்கள் தகப்பனையும் உங்கள் வீட்டாரையுங் கூட்டிக்கொண்டு என்னண்டைக்கு வாருங்கள். நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நன்மையைக் கொடுப்பேன். தேசத்தின் கொழுப்பைச் சாப்பிடுவீர்கள்.

௰௯ நீங்கள் செய்யவேண்டியதேதெனில், நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள் பெண்சாதிகளுக்காகவும் வண்டில்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுபோய் உங்கள் தகப்பனை ஏற்றிவாருங்கள்.

௨௰ உங்கள் கண் உங்களுடைய தட்டுமுட்டுகளைப் பார்க்கவேண்டாம். ஏனெனில் எகிப்துதேசமெங்கும் நன்மையாயிருக்கிறது. உங்களுடையதாயிருக்குமென்று அவர்களோடே சொல்லக் கட்டளை பெற்றாயென்றான்.

௨௧ இப்படியே இஸ்ரவேலின் குமாரர் செய்தார்கள். யோசேப்பு அவர்களுக்குப் பார்வோனுடைய கட்டளையின்படியே வண்டில்களைக் கொடுத்து வழிக்கு ஆகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தான்.

௨௨ அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவன் மாற்றுவஸ்திரங்களையுங் கொடுத்து, பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்றுவஸ்திரங்களையுங் கொடுத்தான்.

௨௩ அப்படியே தன் தகப்பனுக்கு எகிப்தின் உச்சிதங்களைச் சுமந்துபோகிற பத்துக் கழுதைகளையும், தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும் தின்பண்டங்களையுஞ் சுமந்துபோகிற பத்துக் கோளிகைக்கழுதைகளையும் அனுப்பினான்.

௨௪ அப்படியே அவன் தன் சகோதரரையனுப்பிவிட்டு இவர்கள் போகிறபொழுது, வழியிலே சண்டைக்காரர்களாகவேண்டாமென்று அவர்களோடே சொன்னான்.

௨௫ அவர்கள் எகிப்திலிருந்து போயேறிக் கானான்தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபண்டைக்கு வந்து,

௨௬ யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறானென்றும் அவன் எகிப்துதேசத்தையெல்லாம் ஆளுகிறவனென்றும் அவனுக்கு அறிவித்தார்கள். ஆனால் அவன் இருதயந் தளம்பிற்று. ஏனெனில் அவர்களை நம்பாதிருந்தான்.

௨௭ அவர்களோவென்றால் யோசேப்பு தங்களுடனே பேசின எல்லா வார்த்தைகளையும் அவனுக்குச் சொல்லும்பொழுதும் யோசேப்பு தன்னையேற்றிக்கொண்டுபோக அனுப்பின வண்டில்களையவன் காண்கிறபொழுதும் அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபின் ஆவிக்கு உயிர்வந்தது.

௨௮ அப்பொழுது இஸ்ரவேல் என்குமாரனாகிய யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறபொழுதும், நான் மரணமடையாததற்கு முன்னேபோய் அவனைப்பார்ப்பேனென்றான்.

௪௬. அதிகாரம்.

யாக்கோபும் அவன் வீட்டாரும் எகிப்திலே வந்தது.

இஸ்ரவேல் தனக்குண்டானதையெல்லாங் கூட்டிக்கொண்டு பயணம்புறப்பட்டு பெயெர்செபாவுக்கு வந்து தன் தகப்பனாகிய ஈசாக்குடைய பராபரனுக்குப் பலியிட்டான்.

௨ இராத்தரிசனைகளில் பராபரன் இஸ்ரவேலோடே பேசி யாக்கோபே! யாக்கோபே! என்றார். அவன் இதோ, அடியேனென்றான்.

௩ அப்பொழுது அவர் சொன்னதாவது, நானுன் தகப்பனுடைய தேவனாகிய பராபரன் எகிப்திற்கிறங்கப்போகப் பயப்படா

யாக. [illegible] அங்கே உன்னைப்பெரிய சாதியாக்குவோம்.

௪ நாமுன்னோடேகூட எகிப்திற்கிறங்கிப்போவோம். நாமுன்னைத்திரும்ப வரப்பண்ணுவோமென்றும் யோசேப்பு தன்கையால் உன்கண்களை மூடுவானென்றுஞ் சொன்னார்.

௫ அப்பொழுது யாக்கோபு பேர்செபாவிலிருந்து புறப்பட்டுப்போனான். இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையுந் தங்கள் குழந்தைகளையும் பெண்சாதிகளையும் பார்வோன் அனுப்பின வண்டிலகளிலே ஏற்றிக்கொண்டுபோனார்கள்.

௬ அவர்கள் தங்கள் ஆடுமாடுகளையுங் கானான் தேசத்திலே சம்பாதித்த சம்பத்தையுங் கூடக்கொண்டுபோய் எகிப்திற்கு வந்தார்கள். யாக்கோபும் அவன் பிள்ளைகள் அனைவரும் அவனோடேகூடத் தானே.

௭ அவன் தன் குமாரரையுந் தன் குமாரரின் குமாரரையுந் தன் குமாரத்திகளையுந் தன் குமாரருடைய குமாரத்திகளையுந் தன் வித்தார் அனைவரையுந் தன்னோடேகூட எகிப்திற்கு அழைத்துக்கொண்டுவந்தான்.

௮ எகிப்திலே வந்த இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களாவது யாக்கோபும் அவன் குமாரரும். யாக்கோபுடைய மூத்தபேறானவன் ரூபன்.

௯ ரூபனுடைய குமாரர் ஆனோக், பலூ, எஸ்றோன், கர்மீயென்றவர்கள்.

௰ சிமியோனுடைய குமாரர் எமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார், கானானிய ஸ்திரியின் குமாரனாகிய சவுலென்றவர்கள்.

௰௧ லேவியின் குமாரர் கெர்சோன், கேகாத், மெராரியென்றவர்கள்.

௰௨ யூதாவின் குமாரர் ஏர், ஓனான், சேலா, பாரேஸ், சேரா என்றவர்கள். ஏரும் ஓனானுங் கானான் தேசத்திலே செத்துப்போனார்கள். பாரேசுடைய குமாரர் எஸ்றோன், ஆமூலென்றவர்கள்.

௰௩ இசக்காருடைய குமாரர் தோலா, பூவா, யோபு, சிம்ரோனென்றவர்கள்.

௰௪ செபுலோனுடைய குமாரர் சேரேத், ஏலோன், யாலேயேலென்றவர்கள்.

௰௫ இவர்கள் லேயாளின் குமாரர். இவர்களை யாக்கோபுடைய குமாரத்தியாகிய தீனாளோடே அவள் அவனுக்குப் பதானராமிலே பெற்றாள். அவன் குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய எல்லா ஆத்துமாக்கள் முப்பத்துமூன்று.

௰௬ காத்துடைய குமாரர் சிப்பியோன், அகி, சூனி, எஸ்போன், ஏரி, அரோதி, அரேலியென்றவர்கள்.

௰௭ ஆசேருடைய குமாரர் இம்னா, இஸ்வா, இஸ்வி, பெரீயாவென்றவர்கள். இவர்களுடைய சகோதரி சேராக்கென்றவள். பெரீயாவின் குமாரர் ஏபேர் மல்கீயேலென்றவர்கள்.

௰௮ இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளுடைய பிள்ளைகள். அவள் யாக்கோபுக்கு இந்தப் பதினாறு ஆத்துமாக்களைப் பெற்றாள்.

௰௯ யாக்கோபின் பெண்சாதியாகிய ராகேலுடைய குமாரர் யோசேப்பும் பென்யமீனுந்தானே.

௨௰ யோசேப்புக்கு எகிப்துதேசத்திலே மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தார்கள். அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனாகிய போத்திப்பேராவின் குமாரத்தியாகிய அஸ்னாத் அவனுக்குப் பெற்றாள்.

௨௧ பென்யமீனுடைய குமாரர் பேலா, பேகேர், அஸ்பேல், கேரா, நாமான், ஏகி, ரோஸ், மூப்பீம், உப்பீம், ஆர்து என்றவர்கள்.

௨௨ ராகேல் யாக்கோபுக்குப் பெற்ற குமாரராகிய இவர்களெல்லாரும் பதினாலு ஆத்துமாக்கள்.

௨௩ தாணுடைய குமாரன் ஊசிமென்றவன்.

௨௪ நப்தலியின் குமாரர் யாத்சேயேல், கூனி, எத்சேர், சில்லேமென்றவர்கள்.

௨௫ இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய ராகேலுக்குக் கொடுத்த பில்காள் யாக்கோபுக்குப் பெற்றவர்கள். இவர்களெல்லாரும் ஏழு ஆத்துமாக்கள்.

௨௬ யாக்கோபுடைய குமாரரின் பெண்சாதிகளைத் தவிர அவனுடைய கர்ப்பப்பிறப்பாயிருந்து அவனோடேகூட எகிப்திலே வந்த ஆத்துமாக்களெல்லாரும் அறுபத்தாறு ஆத்துமாக்கள்.

௨௭ யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரரும் இரண்டு ஆத்துமாக்கள். எகிப்திலே வந்த யாக்கோபின் வீட்டாராகிய ஆத்துமாக்களெல்லாம் எழுபது.

௨௮ கோசேனுக்குப்போகிற வழியைத் தனக்குக் காட்டுவிக்க அவன் தனக்கு முன்னே யோசேப்பண்டைக்கு யூதாவை அனுப்பினான். அப்படியே கோசேன் தேசத்திலே வந்தார்கள்.

௨௯ யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தம்பண்ணி ஏறிக் கோசேனுக்குத் தன் தகப்பனாகிய இஸ்ரவேலுக்கு எதிர்கொண்டுபோய், அவனுக்குத் தன்னைக் காண்பித்து, அவனுடைய கழுத்திலே கட்டிக்கொண்டு அநேகநேரமாய் அவன் கழுத்தைவிடாமல் அழுதான்.

௩௰ அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி: நீ இன்னும் உயிரோடிருக்கிறாயென்று நான் உன் முகத்தைக் கண்டபடியினாலே இனி மரணம் எனக்கு வந்தாலும் வரட்டுமென்றான்.

ஙக பின்பு யோசேப்பு தன் சகோதரரோடுந் தன் தகப்பனுடைய வீட்டாரோடுஞ் சொன்னதாவது, நான் போய் ஏறிக் கானான்தேசத்திலிருந்த என்னுடைய சகோதரரும் என் தகப்பன் வீட்டாரும் என்னண்டைக்கு வந்தார்களென்று பார்வோனுக்கு அறிவித்து,

ஙஉ இந்த மனிதர் ஆடுகளை மேய்க்கிறவர்கள். ஏனெனில் மிருகஜீவனங்களையுடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் ஆடுகளையுந் தங்கள் மாடுகளையுந் தங்களுக்குண்டானதெல்லாவற்றையுங் கொண்டுவந்தார்களென்று அவனோடே சொல்லுவேன்.

ஙங ஆகையால் பார்வோன் உங்களை அழைத்து, உங்கள் தொழிலென்னவென்று கேட்கும்போது,

ஙச அப்பொழுது நீங்கள், கோசேனென்கிற தேசத்திலே குடியிருக்கும்படிக்குச் சொல்லவேண்டியது: எங்கள் பிதாக்களைப்போலே உமதடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயது முதல் இதுவரைக்கும் மிருகஜீவனங்களையுடையவர்களாயிருக்கிறோமென்று சொல்லுங்கள். ஏனெனில் * மந்தைமேய்க்கிறவர்களெல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கிறார்களென்றான். * சஙு, ஙஉ.

சஎ. அதிகாரம்.

யோசேப்பு தன் தகப்பனையுந் தன் சகோதரரையும் எல்லா எகிப்தியரையும் பராமரித்த விவரம்.

யோசேப்பு வந்து பார்வோனுக்கு அறிவித்து: என் தகப்பனும் என் சகோதரருந் தங்கள் ஆடுகளோடுந் தங்கள் மாடுகளோடுந் தங்களுக்குண்டானதெல்லாவற்றோடுங் கானான் தேசத்திலிருந்து வந்தார்கள். இதோ, கோசேன் தேசத்திலேயிருக்கிறார்களென்று சொல்லி,

உ தன் சகோதரரில் ஐந்துபேரை அழைத்துக்கொண்டு, அவர்களைப் பார்வோனுக்கு முன்பாக நிறுத்தினான்.

ங அப்பொழுது பார்வோன் அவன் சகோதரரோடே உங்கள் தொழிலென்னவென்றான். அவர்கள் பார்வோனோடே உமதடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தைமேய்க்கிறவர்களென்று சொல்லி,

ச பின்னையும் பார்வோனோடே தேசத்திலே தங்கவந்தோம். ஏனெனில் உமதடியாருக்கிருக்கிற மந்தைகளுக்கு மேய்ச்சலில்லை. அதேனென்றால் பஞ்சங் கானான் தேசத்திலே கடினமாயிருக்கிறது. இப்பொழுதும் உமதடியார் கோசேன் தேசத்திலே குடியிருக்கட்டுமென்றார்கள்.

ரு அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னண்டைக்கு வந்தார்கள்.

சா எகிப்துதேசம் உனக்கு முன்பாக இருக்கிறது. தேசத்தில் நலமான இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையுங் குடியேற்று. அவர்கள் கோசேன் தேசத்திலே குடியிருக்கட்டும். அவர்களுக்குள்ளே திறமையான மனிதருண்டென்று அறிந்திருந்தாயானால், அவர்களை எனக்கிருக்கிற ஆடுமாடுகளை விசாரிக்கிற தலைவராக வைவென்றான்.

எ யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபையும் அழைத்துக்கொண்டுவந்து, அவனைப் பார்வோனுக்கு முன்பாக நிறுத்தினான். யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்.

அ பார்வோன் யாக்கோபோடே உன்னுடைய ஆயுசின் நாட்களெத்தனையென்றான்.

கூ யாக்கோபு பார்வோனோடே நான் பரதேசமாய் அலைந்த நாட்கள் நூற்றுமுப்பது வருஷங்கள். என்னுடைய ஆயுசின் நாட்களோ என் பிதாக்களுடைய ஆயுசின் நாட்களுக்கு வராமற் கொஞ்சமும் பொல்லாப்புமாயிருந்ததென்றான்.

ய பின்பு யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்துப் பார்வோனிடத்திலிருந்து புறப்பட்டான்.

யக யோசேப்பு தன் தகப்பனையுந் தன் சகோதரரையுங் குடியேற்றிப் பார்வோன் கட்டளையிட்டபடி அவர்களுக்கு எகிப்துதேசத்தின் நாட்டிலே நல்லநாடாகிய ராமசேஸ் சீமையிலே காணிகொடுத்தான்.

யஉ யோசேப்பு தன் தகப்பனையுந் தன் சகோதரரையுந் தன் தகப்பனுடைய வீட்டாரனைவரையும், பிள்ளைகளின் இலக்கத்திற்குத் தக்கதாய் ஆகாரங்கொடுத்துப் பராமரித்து வந்தான்.

யங தேசமெங்கும் அப்பமில்லாதேபோயிற்று. ஏனெனில் பஞ்சம் மிகவுங் கடினமாயிருந்தது. பஞ்சத்தினாலே எகிப்துதேசமுங் கானான்தேசமும் இளைத்துப்போயிற்று.

யச அப்பொழுது அவர்கள் கொள்ளுந் தானியத்திற்காக யோசேப்பு எகிப்துதேசத்திலுங் கானான்தேசத்திலுமுண்டான திரவியத்தையெல்லாஞ் சேர்த்தான். அந்தத் திரவியத்தை யோசேப்பு பார்வோன் வீட்டிலே கொண்டுவந்து வைத்தான்.

யரு எகிப்துதேசத்திலுங் கானான்தேசத்திலுந் திரவியஞ் செலவழிந்துபோனபோது எகிப்தியரெல்லாரும் யோசேப்பண்டைக்கு வந்து எங்களுக்கு அப்பந்தாரும். திரவியமில்லாதேபோனதினாலே நாங்கள் உமக்கு முன்பாகச் சாவானேனென்றார்கள்.

யசா அப்பொழுது யோசேப்பு திரவியமில்லாதேபோயிற்றானால் உங்கள் மிருகஜீவனங்களைக் கொடுங்கள் உங்கள் மிருகஜீவனங்களுக்கீடாக உங்களுக்குத் தருவேனென்றான்.

௧௭ அப்பொழுது தஙகள மிருகசீவனக ளை யோசேப்பினிடத்திற கொணடுவநதா ர்கள. யோசேப்பு குதிரைகளையும ஆடுகளை யும மாடுகளையும கழுதைகளையும வாஙகிக கொணடு அவர்களுககு அப்பஙகொடுதது அவவருஷத்திலே அவர்களுடைய எலலா மிருகசீவனகளுககும பதிலாக அவர்களைப் பிழை க்கப்பணணிக்கொணடுவநதான.

௧௮ அநதவருஷம முடிநதபொழுது அவ ர்கள மறுவருஷத்திலே அவனணடைககு வ நதவனைநோககி:-சொனனதாவது திரவியமு ம செலவழிநதுபோயிறறு, மிருகசீவனகளி ன மநதைகளும ஆணடவனைசசேர்நத தாயிறறு, எஙகள தேகமும எஙகள நிலமுமேயொ ழிய ஆணடவனுககு முனபாக ஒன றும மீதியிலலையெனகிறதை எஙகள ஆணடவனுககு மறைககமாடடோம.

௧௯ நாஙகளும எஙகள நிலமும உமமு டைய கணகளுககு முனபாக மடிவானேன? நீர் எஙகளையும எஙகள நிலததையுங கொண டு அப்பநதாரும, நாஙகள எஙகள நிலததோ டே பார்வோனுககு அடிமைபபடடி ருப்போம, நாஙகள சாவாமல உயிரோடிரு ககிறதறகும நிலம பாழாயபபோகாதப டிககும விதையைத்தாருமெனறார்கள.

௨0 அப்படியே யோசேப்பு எகிப்தின நி லததையெலலாம பார்வோனுககுககொண டான, ஏனெனில எகிப்தியர் அவரவர் பஞச ததாலே மேறபலததுககொணடபடியினா லே தஙகள வயலகளை விறறார்கள, ஆனது கொணடு நிலம பார்வோனைசசேர்நதது.

௨௧ இந்தச்சனததை அவன எகிப்தினு டைய எலலையின இநதமுனை துவககி அநத முனைமடடும இருநதபடடணஙகளிற குடி யேறிப்போகப்பணணினான.

௨௨ ஆசாரியரின நிலததைமாததிரம வ அவன கொளளாமற்போனான, ஏனெனில அதுபா ர்வோனாலே ஆசாரியருககுப படிததிட டமாயக் கடடளையிடடப்படடது, பார்வோ னாலே அவர்களுககுக் கடடளையிடடபடியினே தஙகள படியைச்சாப்பிடடார்கள, ஆகையால அவ ர்கள தஙகள நிலததைவிறறதிலலை.

௨௩ யோசேப்பு சனததோடே சொன னதாவது, இதோ இனறு உஙகளையும உங கள நிலததையும பார்வோனுககுக்கொண டேன, இதோ உஙகளுககுத தரப்படுகிற விதைத்தானியம், நிலததைவிதையுஙகள.

௨௪ பலனவருமபொழுது நடபபதேதென றால பார்வோனுககு ஐநதிலொருபஙகைக கொடுஙகள, நாலுபஙகோவெனறாலவய லகளின விதைககும உஙகளுககும உஙகள வீட டாருககும உஙகள குழநதைகளுககும ஆகா ரமாக உஙகளுடையதாயிருககுமெ னறான.

௨௫ அப்பொழுது அவர்கள எஙகளையு யிரோடேவைத்தீர், எஙகள ஆணடவனுடை ய கணகளில எஙகளுககுத தயவுகிடைகக டடும, நாஙகள பார்வோனுககு அடிமை யாயிருபபோமெனறார்கள.

௨௬ அப்படியே ஐநதிலொனறு பார் வோனுககுச்சேருமெனறு யோசேப்பு எகிப்து நிலததினபேரிலே இநநா ளமடடும செலலுஙகடடளையாக்கினான, ஆசாரியரின நிலமாததிரம பார்வோனைச சேராமல நீஙகலாயிறறு.

காஙனதேசததில தனனையடககமபணண யாககோபு யோசேப்பை ஆணைகொண டது.

௨௭ இஸரவேல எகிப்துதேசததிலிருக குங்கோசேன சீமையிலே குடியிருநதான, அதிறகாணியாட்சிககாரராகி மிகவுமபலு கிப்பெருகினார்கள.

௨௮ யாககோபு எகிப்துதேசததிலேப திமேழுவருஷமஉயிரோடிருநதான, ஆகை யால யாககோபுடைய ஆயுசின நாட்கள நூறறுநாறபததேழுவருஷஙகளானது.

௨௯ மரணமடையஇஸரவேலினகாலஞ சமீபிததபொழுது அவன தனகுமாரனாகிய யோசேப்பை வரவழைதது அவனுககுச சொனனதாவது, உனகணகளில எனககுத தயவுகிடைத்ததானால எனனை எகிப்திலே யடககமபணணுபாகவெனற தயவையுமஉ ணமையையும நீயெனககுச்செயயவதறகாக உனகையையெனனிடுபபினகீழே போடேன.

௩0 நான என பிதாககளோடே படுததுக கொளளுவேன, ஆகையால நீ யெனனை எகிப்திலிருநதெடுததுககொணடுபோய அ வர்கள அடககமபணணபபடட நிலததிலே எனனை அடககமபணணுவாயாக வெனறு ன, அதறகவன உமமுடைய சொறபடிதா னசெயவேனெனறான.

௩௧ அப்பொழுது அவன எனககாணையி டுவெனறான, அவனுககாணையிடடான, அப பொழுது இஸரவேல கடடிலின தலைமாட டிலே சாயநதுபணிநதுகொணடான.

௪௮. அதிகாரம்.

சாவகிடககிறயாககோபு யோசேப்புடை ய இரணடுகுமாரரைத தனகுமாரருககு சசரியாககி அவர்களை ஆசிர்வதிததுயோ சேப்புககு அவனசகோதரரைப்பார்கக க்காஙனதேசததிலுளள ஒரு நிலததை முனபஙகாகக்கொடுததது.

௧ இதறகுப்பிறபாடு சமபவிதததேதெ னறால, இதோ உமமுடைய தகப்பனார் வியா தியா யிருககிறாரெனறு யோசேப்புககுச சொலலப்படடது, அப்பொழுது அவனத ன இரணடுகுமாரராகிய மனாசேயுமஎப்பி ராயீமையுந தனனோடேகூட அழைததுக கொணடுபோனான.

௩௧ பிற்பாடு யோசேப்பு தன சகோதரரோடுந் தன தகப்பனுடைய வீட்டாரோடுஞ் சொன்னதாவது, நானபோய பாரவோனுக்கு அறிவித்து கானான்தேசத்திலிருந்த என்னுடைய சகோதரரும என தகப்பன வீட்டாரும என்னண்டைக்கு வந்தார்களென்று பார்வோனுக்கு அறிவிப்பேன்,

௩௨ இந்த மனிதர் ஆடுகளை மேயக்கிறவர்கள. ஏனெனில் மிருகஜீவனங்களஉடையவர்களாயிருக்கிறார்கள. அவர்கள தங்கள ஆடுகளையுந் தங்களமாடுகளையுந் தங்களுக்குண்டான [illegible] கொண்டுவந்தார்களென்று [illegible] சொலலுவேன்,

௩௩ ஆகையால் பார்வோன [illegible] உங்கள தொழிலென்ன [illegible]

௩௪ அப்பொழுது நீங்கள [illegible] சத்தில் குடியிருக்கும [illegible] வேண்டியது. எங்கள பி[illegible] உடநடியார்ாகிய நாங்[illegible] யது ஆடுகள் இடையர் [illegible] ளுடையவர்களாயிரு[illegible] ளுங்கள. ஏனெனில் [illegible] ர்களெல்லாரும [illegible] பாயிருக்கிறார்

[illegible] க்குப்பிறகு நீ பெறுகிறசந [illegible] ல்லெல்ல உன்னுடையதாயிருக்கு [illegible] தங்கள சகோதரருடையகூதந [illegible] அவர்களுக்கொத்தபேராய அழை [illegible] யோசே[illegible]வார்கள.

[illegible] நான பதானிலிருந்து வருகையில ரா[illegible] கானான்தேசத்தினவழியில் எப்பிரு[illegible] வருகுவர இன்னங்கொஞ்சத்தூரமிரு[illegible] ப்பொழுது எனக்குமுன்பாக மரணம[illegible] டைந்தாள, அவளையங்கே பெத்லகேமென்னப்படுகிற எப்பிரத்தா ஊரின வழியிலேயடக்கம்பண்ணினேனென்றான.

அ பிறபாடு இஸ்ரவேல யோசேப்பினகுமாரரைக்கண்டு இவர்கள ஆரென்றான.

௯ யோசேப்பு தன தகப்பனைநோக்கி இவர்களே பராபரன இவ்விடத்தில எனக்குக் கொடுத்த என்னுடைய குமாரரென்றான, அப்பொழுது இவன நான அவர்களை ஆசிர்வதிக்கும்படிக்கு அவர்களை யென்னண்டைக்கொண்டுவாயென்றான.

ய இஸ்ரவேலின கண்களோவென்றால பெரியவயதினால இருண்டுபோயிறறு, பார்க்கக்கூடாதிருந்தான, அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான, அப்பொழுது அவன அவர்களை முத்தஞ்செய்து அணைத்துக்கொண்டான.

யக பிறகு இஸ்ரவேல யோசேப்போடே உன்முகத்தைப்பார்ப்பேனென்று நினையாதேபோனேன, ஆனால இதோ பராபரன என்னை உன்வித்தையுங் காணப்பண்ணினாரென்றான.

யஉ அப்பொழுது யோசேப்பு அவன முழங்கால்களுக்குள்ளிருக்கிற அவர்களைப்பின

௧௧ எகி[illegible] டக்கிற [illegible] உனக்கு [illegible] டி[illegible] கு[illegible]

[illegible] உன்னிடத்தில் அவன [illegible] பிறந்தவன [illegible] யோசே [illegible] வந்து எப்பிர [illegible] இஸ்ரவே [illegible] றுக்கு [illegible] வேவின [illegible]

உ தந்தனைக்கதே [illegible]

யரு யோசேப்பை [illegible] னனதாவது, பராபரன [illegible] பிதாக்களாகிய ஆபிரகாமுமீசா[illegible] நடந்துகொண்டார்களே, நானஉண்டான[illegible] ளதுவக்கி இந்நாளவரைக்கும என்னையாதரித்துவந்த அந்தப்பராபரனும,

யசு என்னை எல்லாத்தீமைக்கும்நீங்கலாக்கி மீட்டதூதனுமானவர் இந்த இளைஞரை ஆசிர்வதிக்கக்கடவர், என்பேரும ஆபிரகாம ஈசாக்கென்ற என்பிதாக்களின பேரும அவர்களுக்குத்தரிக்கப்படக் கடவது, தேசத்தினநடுவிலே ஏராளமான திரட்சியாயப்பலுகக்கடவர்களென்றான.

யஎ தன்தகப்பன தனவலதுகையை எப்பிராயீமுடைய தலையினமேல வைத்ததை யோசேப்பு கண்டபொழுதோவென்றால, அவனுக்கது ஆகாததாயக்கண்டது, ஆகையால எப்பிராயீமுடைய தலையினமேலிருந்த தன தகப்பனுடையகையை மனாசேயுடைய தலையினமேலவைக்கத் தூக்கிப்பிடித்து,

யஅ தன்தகப்பனோடே அப்படியல்ல, என்தகப்பனே! இவனல்லோ மூத்தவன, இவனதலையின்மேல உமமுடையவலதுகையைவையுமென்றான.

யகூ அவனதகப்பன் மறுத்தல பண்ணி அறிவேன் என மகனே! அறிவேன், இவனுமொருசனசதனமாவான, இவனும பெருத்துப்போவான, ஆகிலும இவனுடைய தமபியிவனைப்பார்க்கிலும்பெருகிப்போவான, அவனுடையசந்ததிகள நிறைந்த திரட்சியாமென்றான.

உ௦ அப்படியே அவன அந்நாளிலே அவர்களை ஆசிர்வதித்துப் பராபரன உன்னை எப்பிராயீமைப்போலும மனாசேயைப்போலுமிருக்கப்பண்ணுவாராகவென்று இஸ்ரவேலர் உன்னைக்கொண்டு வாழ்த்துவார்களென்றுசொல்லி எப்பிராயீமை மனாசேக்கு முன்னேவைத்தான.

உக பிறபாடு இஸ்ரவேல யோசேப்போடே சொன்னதாவது, இதோ நானமரணமடைகிறேன, ஆனாலபராபரன உங்களோடு

...தாக. ...வாரு
...ட்சிக உனக்கு ...
...தங்களைச்சேர்ப்பேன்.

உ ...குமாரரே! கூடிவந்து கேளுங்கள், உங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலுக்குச் செவிகொடுங்கள்.

௩ ரூபனே! நீ என் முதற்பேறும் என் பெலனும் என் சத்துவத்தின் முதற்பலனுமானவன்; நீ மேன்மையின் பிரதானமும் வல்லமையின் பிரதானமுமானவன்.

௪ தண்ணீரைப்போல பாய்ந்தவனே! நீ மேன்மையடைவதில்லை. ஏனெனில் ※ உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேல் ஏறினாய்; அப்பொழுது நீ ...படுத்தினாய், என் படுக்கையின்மேல் அவன் ஏறினான்.

※ ௩௫. ௨௨.

௫ சிமியோனும் லேவியும் ஏகசகோதரர்; அவர்களுடைய பட்டயங்கள் ... ஆயுதங்களானது.

௬ என் ஆத்துமமே அவர்கள் இரகசியத்துக்கு ... வராதிருப்பதாக, என் மகிமையே அவர்கள் கூட்டத்தோடே ஒன்றிப்போகாதிருப்பதாக; ஏனெனில் அவர்கள் தங்கள் ... ஒரு புருஷனைக் கொன்று, தங்கள் ... அலங்கத்தை ...

※ ௩௪. ௨௫.

௭ ... அவர்களுடைய கோபமும் ... அவர்களுடைய மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது, அவர்களை யாக்கோபிலே பிரிப்பேன், இஸ்ரவேலிலே சிதறவும் பண்ணுவேன். ※ யோசுவா. ௧௯. ௧.

௮ யூதாவே! நீயே பிரதானமானவன், உன் சகோதரர் புகழுவார்கள், உன் கை உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும், உன் தகப்பனுடைய புத்திரர் வணங்குவார்கள்.

௯ யூதா சிங்கக்குட்டியானவன், என் மகனே! நீ இரையெடுத்து ஏறினாய்; சிங்கத்தைப்போலவும் கிழச்சிங்கத்தைப்போலவும் மடங்கிப்படுத்துக்கொள்ளுகிறான்; அவனை எழுப்பப்போகிறவன் யார்?

௧௦ சமாதானகர்த்தர் வருமட்டும் செங்கோல் யூதாவிலிருந்தும் நியாயகர்த்...

௧௧ ...
கேருடியிருப்பான்...
...ரூபமிருந்த ...
...யைநீக்கியிருப்பான், ... ணடான,
...ருக்கொடிராக்ஷியிருக்கும். ※ ... பிள்ளை
௧. ௧௪. ... மயிருந்த

௧௩ செபுலோன் சமுத்திரக்கரையிலே தங்கியிருப்பான், ... கப்பல்களுக்குத் துறைமுகமாயிருப்பான் ...

௧௪ இசக்கார் இரண்டு பொதிகளுக்கு நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை. ... ருசிமையையும் கண்டு, ... சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதிகட்டுகிறவனானான்.

௧௬ தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றைப்போலத் தன் சனங்களை நியாயம் விசாரிப்பான்.

௧௭ தாண் குதிரையின் குதிகால்களைக் கடிக்கிறதினால் அதின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாக்க விழும்படிக்கு வழியருகே இருக்கும் சர்ப்பமும் பாதையருகே இருக்கும் விரியனுமாயிருப்பான்.

௧௮ கர்த்தாவே! உம்முடைய இரட்சிப்புக்குக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

※ சங். ௱௰௯, ௱௬௬.

௧௯ காத் என்பவன்மேல் இராணுவக்கூட்டம் பாய்ந்து விழும், அவனோவென்றால் கடைசியிலே அதின்மேல் பாய்ந்து விழுவான்.

௨௦ ஆசேருடைய அப்பம் புஷ்டியாயிருக்கும், இராசாக்களுக்கானருசிவர்க்கங்களை அவன் கொடுப்பான்.

௨௧ நப்தலி விடுதலையாய் விடப்பட்ட பெண்மான், வடிவமான வசனங்களைத் தருகிறான்.

௨௨ யோசேப்பு கனிதருகிற செடி, அவன் நீரூற்றண்டையில் கனிதருகிற செடி, அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்.

௨௩ அம்பெய்கிறவர்கள் அவனைமனமடிவாக்கி எய்து அவனை விரோதித்தார்கள்.

௨௪ ஆனாலும் அவனுடைய வில் உறுதியாய் நின்றது, அவனுடைய புயங்களையாக்கோபுடைய வல்லவரின் கரங்களாலே பெலத்தது, இதைத்தொட்டு மேய்ப்பனும் இஸ்ரவேலின் கல்லுமானான்.

௨௫ உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவருன்னைக்குத் துணையாயி...

திர்ந்தையும் அவனுடைய தானியத்தின் பணத்தையும் போட்டுவைத்தான். அவன் யோசேப்பு சொன்ன வார்த்தையின்படியே செய்தான்.

௩ காலமே வெளிச்சமாகிறபொழுது அந்த மனிதர் தங்கள் கழுதைகளோடுங்கூட அனுப்பிவிடப்பட்டார்கள்.

௪ அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு தூரமாய்ப் போகாததற்கு முன்னே யோசேப்பு தன் வீட்டு விசாரிப்புக்காரனோடே சொன்னதாவது, நீ எழுந்து அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்களைக் கிட்டிப் பிடிக்கும்பொழுது அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டினதென்ன?

௫ அது என் எசமான் குடிக்கிற பாத்திரமல்லவோ? அதினாலே அவர் குறி சொல்லுகிறார் என்பதும் தெரியாதோ? நீங்கள் செய்தது பொல்லாத காரியமாயிருக்கிறதென்று சொல்லென்றான்.

௬ அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து, இந்த வார்த்தைகளை அவர்களோடே சொன்னான்.

௭ அப்பொழுது அவர்கள் அவனோடே சொன்னதாவது, எங்கள் ஆண்டவன் இப்படிக்கொத்த வார்த்தைகளைச் சொல்லுவானேன்? இப்படிக்கொத்த காரியத்தை உமதடியார் ஒருக்காலும் செய்வதில்லை.

௮ இதோ, அங்களசாக்குகளின் வாயிலே நாங்கள் கண்டபணத்தைக் கானான் தேசத்திலிருந்து திரும்ப உம்மண்டைக்குக் கொண்டுவந்தோமே; நாங்கள் உம்முடைய எசமானின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்கொண்டுபோவதெப்படி?

௯ உமதடியாரில் எவனிடத்திலே அது கண்டுபிடிக்கப்படுமோ, அவன் சாவக்கடவன், நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோமென்றார்கள்.

௰ அதற்கவன், இப்பொழுதும் நீங்கள் சொன்ன வார்த்தைகளின்படியே ஆவதாக. எவனிடத்தில் அது கண்டுபிடிக்கப்படுமோ அவன் எனக்கு அடிமையாவான். நீங்களோ வென்றால் குற்றமற்றிருப்பீர்களென்றான்.

௰௧ அவர்கள் தீவிரித்து, அவனவன் தன் சாக்கைத் தரையிலே யிறக்கிப் போட்டு, ஒவ்வொருவராயத் தங்கள் சாக்குகளைத் திறந்துவைத்தார்கள்.

௰௨ அவன் மூத்தவனைத் துவக்கி இளையவனமட்டும் சோதிக்கிறபொழுது பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது.

௰௩ அப்பொழுது அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனவன் தன் கழுதையின்மேலே சுமையையேற்றிப் பட்டணத்துக்குத் திரும்பினார்கள்.

௰௪ யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டிலே வந்தார்கள். ஏனெனில் அவன் இன்னம் அங்கேயிருந்தான். அவனுக்கு முன்பாகத் தரையிலே விழுந்தார்கள்.

௰௫ யோசேப்பு அவர்களோடே, நீங்கள் செய்த இந்தக் காரியமேது? என்னைப்போலொத்த மனிதனுக்குக் காரியம் குறி சொல்லித் தெரியுமென்று அறியாதே போனீர்களோவென்றான்.

௰௬ அப்பொழுது யூதா, என் ஆண்டவனுக்கு நாங்கள் என்ன சொல்லப்போகிறோம். என்னத்தைப் பேசுவோம். எதினால் எங்களை நீதிமான்களாக்குவோம். பராபரன் உமதடியாரின் அக்கிரமத்தைக் கண்டுபிடித்தார். இதோ, நாங்கள் என் ஆண்டவனுக்கு அடிமைகள். நாங்களும் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்ட அவனுந்தானே யென்றான்.

௰௭ அவன் அதற்கு, இப்படிக்கொத்த செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக. எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ அவனே எனக்கடிமையாயிருப்பான். நீங்களோவெனிற் சமாதானத்தோடே உங்கள் தகப்பனண்டைக்குப் போயேறுங்களென்றான்.

௰௮ அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து சொன்னதாவது, ஆ, என் ஆண்டவனே! உமதடியான் என் ஆண்டவனுடைய செவிகளுக்கு முன்பாக ஒரு வார்த்தையைப் பேசட்டுமே? உமதடியான்மேல் உம்முடைய கோபம் எரியாதிருப்பதாக. ஏனெனில் நீர் பார்வோனைப்போலிருக்கிறீர்.

௰௯ * உங்களுக்குத் தகப்பனாவது சகோதரனாவது உண்டோவென்று என் ஆண்டவன் உமதடியாரைக் கேட்டார்.

* ௪௩, ௭.

௨௰ அப்பொழுது என் ஆண்டவனோடே, எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனும் அவருக்கு முதிர்வயதிலே பிறந்த இளைய சகோதரனுமுண்டு. இவனுடைய தமையன் செத்துப்போனான். இவனொருவனே தன் தாயாருக்கு மீதியானவன். இவனுடைய தகப்பன் இவன்மேலே பட்சமாயிருக்கிறாரென்றோம்.

௨௰௧ அப்பொழுது நீர் உமதடியாரோடே அவனை யென்னண்டைக்கழைத்து வாருங்கள். என் கண்ணை அவன்மேல் வைப்பேனென்றீர்.

௨௰௨ நாங்களோவென்றால் என் ஆண்டவனோடே, அந்த இளைஞன் தன் தகப்பனைவிட்டுக்கூடாது. தன் தகப்பனைவிட்டால் அவர் செத்துப்போவாரென்றோம்.

௨௰௩ நீரோவெனில் உமதடியாருடனே, உங்கள் இளைய சகோதரன் உங்களோடேகூட இறங்கிவராதேபோனால் நீங்கள் என் முகத்தை இனிப் பார்ப்பதில்லை யென்று சொன்னீர்.

உச நாங்களுமதடியாராகிய எனதகப்பன்கிட்டத்துக்குவந்தபொழுது சம்பவித்ததேதென்றால் என்னுடைய ஆண்டவனுடைய வார்த்தைகளை அவருக்கறிவித்தோம்.

உரு நீங்கள் திரும்பப்போய்க்கொஞ்சம் ஆகாரங்கொண்டுவாருங்களென்று எங்கள் தகப்பன் சொல்லுவார்.

உசு அதற்குநாங்கள் சொன்னதேதென்றால் நாங்கள் திரும்பப்போகக் கூடாது. எங்கள் இளயசகோதரன் எங்களோடிருந்தாலொழிய இறங்கிப்போவோம். ஏனென்றால் இளயசகோதரன் எங்களோடேயிராவிட்டால் நாங்கள் அந்தப் புருஷனுடைய முகத்தைப் பார்க்கக்கூடாமேயென்றோம்.

உஎ அப்பொழுது உமதடியாராகிய என தகப்பன் எங்களோடே சொன்னதாவது, என் பெண்சாதி எனக்கிரண்டு பிள்ளைகளைப் பெற்றாளென்றதையும்,

உஅ அவர்களில் ஒருவன் என்னிடத்திலிருந்து புறப்பட்டுப்போனான். அவன் நிச்சயமாய்ப் பீறுண்டானென்றுசொல்லி இதுவரைக்கும் அவனைக்காணாதிருக்கிறேனென்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

உகூ நீங்கள் இவனையுமென்முன்பாக இராதபடிக்கு அழைத்துப் போகக் கொள்ள ஒருசேதம் அவனுக்குவந்தால் என் நரைமயிரைத் துக்கத்தோடே குழியிலிறங்கப்பண்ணுவீர்களென்றார்.

ஙய இப்பொழுதும் இளைஞன் எங்களோடிராமல் நான் எனதகப்பனாகிய உமதடியானிடத்திலே வந்தால் அப்பொழுது அவருடைய ஜீவனும் இவனுடைய ஜீவனோடே ஒட்டிக்கொண்டிருக்கிறபடியினாலே சம்பவிப்பதேதெனில்,

ஙயக அவர், இளைஞனில்லையென்று காணும்பொழுது செத்துப்போவார். அப்படியே உமதடியாருமுடைய ஊழியக்காரராகிய எங்கள் தகப்பனுடைய நரையைச் சஞ்சலத்தோடே குழியிலிறங்கப்பண்ணுவோமே.

ஙயஉ ஏனெனில் * நானிவனை உமமண்டைக்குத் திருப்பிக் கொண்டுவராதேபோனால் நான் சகலநாளும் எனதகப்பனுக்குக் குற்றவாளியாயிருப்பேனென்று உமதடியாராகிய நான் எனதகப்பனிடத்திலே இந்த இளைஞனுக்காகப் பிணைப்பட்டேன். * சங, கூ.

ஙயங இப்பொழுதும் இளைஞன் தன சகோதரரோடே கூடப்போய் ஏறும்படிக்கு உமதடியாராகிய நான் இளைஞனுக்குப் பதிலாக இங்கே என்னுடைய ஆண்டவனுக்கடிமையாயிருக்கட்டுமே?

ஙயச ஏனெனில் இளைஞன் என்னோடில்லாமல் விட்டால் எப்படி எனதகப்பனண்டைக்குப் போய் ஏறுவேன்? எனதகப்பனைப் பிடிக்குந் தீங்கை அப்பொழுது காண்பேனேயென்றான்,

சரு. அதிகாரம்.

யோசேப்பு தன சகோதரருக்குத் தன்னை அறியப்படுத்தினது.

க அப்பொழுது யோசேப்பு தன்னண்டை நிற்கிறவர்களெல்லாருக்கு முன்பாக அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல் எல்லாரையும் என்னைவிட்டு வெளியே போகப்பண்ணுங்களென்று கூப்பிட்டான். யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை அறியப்பண்ணுகையில் ஒருவரும் அவனண்டையில் நிற்கவில்லை.

உ அவன் சத்தமிட்டு அழுதான். எகிப்தியர் கேட்டார்கள். பார்வோனின் வீட்டாருங்கேட்டார்கள்.

ங யோசேப்பு தன சகோதரரை நோக்கி நான் யோசேப்பு. என தகப்பன் இன்னமுமுயிரோடிருக்கிறாரோவென்றான். ஆனால் அவன் சகோதரர் அவனுக்கு முன்பாகக் கலங்கினதினாலே அவனுக்குப் பிரதியுத்தரஞ்சொல்ல அவர்களுக்குக் கூடாதேபோயிற்று.

ச அப்பொழுது யோசேப்பு தன சகோதரரோடே என்னண்டையிலே கிட்டிவாருங்களென்றான். அவர்கள் கிட்டிப்போனார்கள். அப்பொழுது அவன் சொன்னதாவது, நீங்கள் எகிப்துக்குப்போகிறவர்களுக்கு விற்ற உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நானே.

ரு இப்பொழுதும் நீங்கள் என்னை இவ்விடத்திற்கு விற்றுப்போட்டதினாலே நீங்கள் சஞ்சலப்படவும் அது உங்களுக்கு [illegible] பொல்லாப்பாயிருக்கவும் வேண்டாம் ஏனெனில் உங்கள் ஜீவனுக்காகப் பராபரன் என்னை உங்களுக்கு முன்னாக அனுப்பினார்.

சு ஏனென்றால் இந்த இரண்டு வருஷமாய்த் தேசத்திற்குள்ளே பஞ்சமுண்டாயிருந்தது. உழவும் அறுப்புமில்லாத ஐந்துவருஷங்களும் இன்னம்வரும்.

எ ஆனால் உங்களைத் தேசத்தில் மிகுதியாகவைப்பதற்கும் உங்களைப் பெரிய இரட்சிப்பினாலே உயிரோடேகாப்பதற்குமாகப் பராபரன் என்னை உங்களுக்குமுன்னாக அனுப்பினார்.

அ இப்பொழுதும் நீங்களல்ல பராபரன் என்னை இங்கே அனுப்பி என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும் அவர் வீட்டிற்கெல்லாந் துரையாகவும் எகிப்துதேசத்தையெல்லாம் ஆளுகிறவனாகவும் வைத்தார்.

கூ நீங்கள் துரிதத்தோடே எனதகப்பனண்டைக்குப்போய் ஏறி அவரோடே சொல்லவேண்டியதேதெனில், உமது குமாரனாகிய யோசேப்பு சொல்லியனுப்பினதாவது, பராபரன் என்னை எகிப்துக்கெல்லாந் துரையாகவைத்தார். என்னண்டைக்கு இறங்கிவாரும் தாமதியாதேயும்.

ய நீர் கோசேனென்கிற தேசத்திலே வாசம்பண்ணி எனக்குச்சமீபத்திலேயிருப்பீர். நீரும

௨ இதோ, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு உம்மண்டைக்கு வருகிறானென்று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது, அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத் திடனாக்கிக் கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.

௩ யாக்கோபு யோசேப்போடே சொன்னதாவது, சர்வத்துக்கும் வல்ல பராபரன் கானான்தேசத்திலிருக்கிற லூசிலே எனக்குத் தரிசனையாகி என்னை ஆசீர்வதித்து,

௪ * இதோ நான் உன்னைப் பலுகவும் உன்னைப் பெருகவும் பண்ணி, உன்னைச் சனசதளங்களான கூட்டமாக்கி, உனக்குப் பிறபாடு இருக்கும் உன் வித்துக்கு இந்தத் தேசத்தை நித்திய காணியாட்சியாகக் கொடுப்பேனென்று என்னோடே சொன்னார். * ௩௫, ௰௧. ௰௨.

௫ இப்பொழுதும் நான் உன்னண்டைக்கு எஜிப்திலே வாராததற்கு முன்னே உனக்கு எஜிப்துதேசத்திலே பிறந்த உன் இரண்டு குமாரர் என்னுடையவர்கள், ரூபேன் சிமியோனென்றவர்களைப்போலே எப்பிராயீமும் மனாசேயும் என்னுடையவர்களாயிருப்பார்கள்.

௬ இவர்களுக்குப் பிறகு நீ பெறுகிற சந்தானமோவெனில் உன்னுடையதாயிருக்கும், இவர்கள் தங்கள் சகோதரருடைய சுதந்தரத்திலே அவர்களுக்கொத்த பேராய் அழைக்கப்படுவார்கள்.

௭ நான் பதானிலிருந்து வருகையிலே ராகேல் கானான்தேசத்தின் வழியிலே எப்பிராத்தாவுக்கு வர இன்னங் கொஞ்சத் தூரமிருக்கிறபொழுது எனக்கு முன்பாக மரணமடைந்தாள், அவளை அங்கே பெத்லெகேமென்னப்படுகிற எப்பிராத்தா ஊரின் வழியிலேயடக்கம்பண்ணினேனென்றான்.

௮ பிறபாடு இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைக் கண்டு இவர்கள் ஆரென்றான்.

௯ யோசேப்பு தன் தகப்பனோடே இவர்களே பராபரன் இவ்விடத்திலே எனக்குக் கொடுத்த என்னுடைய குமாரரென்றான், அப்பொழுது அவன் நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படிக்கு அவர்களை என் கிட்டக் கொண்டுவாயென்றான்.

௰ இஸ்ரவேலின் கண்களோவென்றால் பெரிய வயதினாலே இருண்டுபோயிற்று, பார்க்கக்கூடாதிருந்தான், அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான், அப்பொழுது அவன் அவர்களை முத்தஞ்செய்து அணைத்துக்கொண்டான்.

௰௧ பிறகு இஸ்ரவேல் யோசேப்போடே உன் முகத்தைப் பார்ப்பேனென்று நினையாதேபோனேன், ஆனால் இதோ பராபரன் என்னை உன் வித்தையுங் காணப்பண்ணினாரென்றான்.

௰௨ அப்பொழுது யோசேப்பு அவனுடைய முழங்கால்களுக்குள்ளிருக்கிற அவர்களைப் பின்னிட்டுப்பண்ணி அவன் முகத்திற்கு முன்பாகத் தரைமட்டுங் குனிந்து வணங்கினான்.

௰௩ பிறபாடு யோசேப்பு இருவரையுங் கொண்டுவந்து எப்பிராயீமைத் தன் வலது கையினாலே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராகவும் மனாசேயைத் தன் இடது கையினாலே இஸ்ரவேலின் வலதுகைக்கு நேராகவும் அவனண்டையிலே சேரப்பண்ணினான்.

௰௪ அல்லாமல் இஸ்ரவேல் தன் வலதுகையை நீட்டி இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும் மனாசே மூத்தவனாயிருந்தாலும் தன் இடதுகையை மனாசேயுடைய தலையின்மேலும் வைத்தான், அவன் அறிந்து அப்படித் தன் கைகளை வைத்தது,

௰௫ யோசேப்பை ஆசீர்வதித்துச் சொன்னதாவது, பராபரனுக்கு முன்பாக என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் நடந்துகொண்டார்களே, நான் உண்டானது முதல் இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த அந்தப் பராபரனும்,

௰௬ என்னை எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி மீட்ட தூதனுமானவர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிக்கக்கடவர், என் பேரும் ஆபிரகாம் ஈசாக்கென்ற என் பிதாக்களின் பேரும் அவர்களுக்குத் தரிக்கப்படக்கடவது, தேசத்தின் நடுவிலே ஏராளமான திரட்சியாய்ப் பலுகக்கடவர்களென்றான்.

௰௭ தன் தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு காண்கிறபொழுதோவெனில், அவனுக்கு ஆகாததாயக் கண்டது, ஆகையால் எப்பிராயீமுடைய தலையின்மேலிருந்த தன் தகப்பனுடைய கையை யோசேப்பு மனாசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து,

௰௮ தன் தகப்பனோடே அப்படியல்ல, என் தகப்பனே! ஏனெனில் இவன் மூத்தவன், இவன் தலையின்மேல் உம்முடைய வலதுகையை வையுமென்றான்.

௰௯ அவன் தகப்பனோவெனில் தட்டுதல்பண்ணி அறிவேன் என் மகனே! அறிவேன், இவனும் ஒரு சனசதளமாவான், இவனும் பெருகிப்போவான், ஆகிலும் இவனுடைய தம்பி இவனைப் பார்க்கிலும் பெருகிப்போவான், அவனுடைய வித்து சனசதளங்கள் நிறைந்த திரட்சியாமென்றான்.

௨௰ அப்படியே அவன் அந்நாளிலே அவர்களை ஆசீர்வதித்துப் பராபரன் உன்னை எப்பிராயீமைப்போலும் மனாசேயைப்போலும் ஆயிருக்கப்பண்ணுவாராகவென்று இஸ்ரவேலர் உன்னைக்கொண்டு வாழ்த்துவார்களென்று சொல்லி எப்பிராயீமை மனாசேக்கு முன்னே வைத்தான்.

௨௰௧ பிறபாடு இஸ்ரவேல் யோசேப்போடே சொன்னதாவது, இதோ நான் மரணமடைகிறேன், ஆனாலும் பராபரன் உங்களோடு

ருக்கு உங்கள் பிதாக்களின் தேசத்துக்குத் திரும்பப்பண்ணுவாரென்றும்,

௨௨ நான் என் பட்டயத்தாலும் என் வில்லினாலும் எமோரியர் கையிலிருந்து வாங்கின * ஒரு பங்கை உன் சகோதரரைப் பார்க்க உனக்கு அதிகமாய்க் கொடுத்தேனென்றும் சொன்னான். * யோவான். ௪, ௫.

௪௯. அதிகாரம்.

யாக்கோபு தன் குமாரருக்குத் தீர்க்கதரிசனஞ் சொல்லியது.

பின்பு யாக்கோபு தன் குமாரரை அழைப்பித்துச் சொன்னதாவது: கூடிவாருங்கள், கடைசிநாட்களில் உங்களுக்கு நடந்து சம்பவிப்பதை உங்களுக்கு அறிவிப்பேன்.

௨ யாக்கோபின் குமாரரே! கூடிவந்து கேளுங்கள், உங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலுக்குச் செவிகொடுங்கள்.

௩ ரூபனே! நீ என்னுடைய தலைச்சனும் என் சத்துவமும் என் முதற்பெலமுமானவன், நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் பிரதானமுமானவன்.

௪ தண்ணீரைப்போல பாய்ந்தவனே! நீ மேன்மையாயிருப்பதில்லை. ஏனெனில் * உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேலேறினாய், அப்பொழுது நீ தீட்டுப்படுத்தினாய், என் படுக்கையின்மேல் அவனேறினான்.

* ௩௫, ௨௨.

௫ சிமியோனும் லேவியும் ஏகசகோதரர், அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் ஆயுதங்களானது.

௬ என்னுடைய ஆத்துமமே அவர்கள் இரகசியத்துக்கு உட்படாதிருப்பதாக, என் மகிமையே அவர்கள் கூட்டத்தோடே ஒன்றிப்போகாதிருப்பதாக. ஏனெனில் அவர்கள் தங்கள் கோபத்தில் * ஒருபுருஷனைக் கொன்றார்கள், தங்கள் அகங்காரத்திலே ஒரு மதிலைத் தகர்த்துப்போட்டார்கள். * ௩௪, ௨௫.

௭ உக்கிரமான அவர்களுடைய கோபமும் கொடுமையான அவர்களுடைய மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது, அவர்களை யாக்கோபிலே பிரிக்கவும் இஸ்ரவேலிலே சிதறவும் பண்ணுவேன். * யோசுவா. ௰௯, ௧.

௮ யூதாவே! நீயே பிரதானமானவன், உன் சகோதரர் புகழுவார்கள், உன் கை உன் சத்துருக்களுடைய பிடரியிலிருக்கும், உனக்கு முன்பாக உன் தகப்பனுடைய புத்திரர் வணங்குவார்கள்.

௯ யூதா சிங்கக்குட்டியானவன், என் மகனே! நீ இரையெடுத்துயர்ந்தாய், சிங்கத்தைப்போலவும் கிழச்சிங்கத்தைப்போலவும் மடங்கிப்படுத்துக்கொள்ளுகிறான், அவனை எழுப்பப்போகிறவனார்?

௰ * சமாதானகர்த்தர் வருமட்டும் செங்கோல் யூதாவிலிருந்தும் நியாயகற்பிக்கிறவன் அவன் பாதங்களிலிருந்தும் அற்றுப்போவதில்லை, அவரைச் சனசதளங்கள் சேரும். * சங்கீ. எ௨, எ. ஏசா. ௬௰, ௯. ௭. எபேசி. ௨, ௰௭.

௰௧ தம்முடைய கழுதை மறியைத் திராட்சச்செடியோடும் தம்முடைய கோளிகைக்கழுதையின் குட்டியை நற்குலத் திராட்சச்செடியோடும் கட்டிப்போடுவார், தம் துப்பட்டியைத் திராட்சப்பழ இரசத்திலும் தம் சால்வையைத் திராட்சப்பழங்களின் இரத்தத்திலும் வெளுப்பார்.

௰௨ அவருடைய கண்கள் திராட்சப்பழ இரசத்திலும் சிவப்பும், அவருடைய பல்லுகள் பாலிலும் வெண்மையுமாயிருக்கும்.

௰௩ செபுலோன் * கடற்கரைத் துறையருகே குடியிருப்பான், அவன் கப்பல்களின் துறையருகேயிருப்பான், அவன் எல்லை சீதோனுக்கெதிராகவிருக்கும். * யோசுவா. ௰௯, ௰. ௰௧.

௰௪ இசக்கார் பொதியின் நடுவேபடுத்துக் கிடக்கிற பலத்த எலும்புள்ள கழுதை.

௰௫ அவன் இளைப்பாறுதல் நல்லதென்றும் நிலம் வசதியானதென்றும் கண்டு சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்துப் பகுதிகட்டுகிறவனானான்.

௰௬ தான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றைப்போலத் தன் சனத்தை நியாயம் விசாரிப்பான்.

௰௭ தான் குதிரையின் குதிகால்களைக் கடிக்கிறதினால் அதின்மேலேறியிருக்கிறவன் மல்லாக்கவிழத்தக்கதாக வழியருகான சர்ப்பமும் பாதையருகான விரியனுமாயிருப்பான்.

௰௮ கர்த்தாவே! உம்முடைய இரட்சிப்புக்குக் காத்துக்கொண்டிருக்கிறேன். * சங்கீ. ௱௰௯, ௱௬௬.

௰௯ காத்தென்றவன்மேல் இராணுவக்கூட்டம் பாய்ந்துவிழும், அவனோவென்றால் கடைசியிலே அதின்மேற் பாய்ந்துவிழுவான்.

௨௰ ஆசேருடைய அப்பம் புஷ்டியாயிருக்கும், இராசாக்களுக்கானருசிவர்க்கங்களையிடுவான்.

௨௧ நப்தலி நீங்கலாய்விடப்பட்ட பெண்மான், வடிப்பமான வசனங்களைத் தருகிறான்.

௨௨ யோசேப்பு கனிதருகிற செடி, அவன் நீரூற்றண்டையிலே கனிதருகிற செடி, அதின் கொடிகள் சுவரின்மேற் படரும்.

௨௩ அம்பையெய்கிறவர்கள் அவனை மனமடிவாக்கி எய்து அவனை விரோதித்தார்கள்.

௨௪ ஆனால் அவனுடைய வில்லுக் கெட்டியாய் நின்றது, அவன் கைகளின் புயங்கள் யாக்கோபுடைய வல்லவரின் கரங்களாலே பலத்தது, இதைத்தொட்டு மேய்ப்பனும் இஸ்ரவேலின் கல்லுமானான்.

௨௫ உன் தகப்பனுடைய பராபரனாலே அப்படியாயிற்று, அவருனக்குத் துணையாயி

1. சர்வத்திறனும்வல்லவராலே அப்படியாயிற்று, அவருயர வானத்திலிருந்துண்டாகிய ஆசீர்வாதங்களாலுங்கீழேகிடக்கிற பாதாளத்தின் ஆசீர்வாதங்களாலும் முலைகளுக்குங்கர்ப்பங்களுக்குமுண்டாகிற ஆசீர்வாதங்களாலும் உன்னையாசீர்வதிப்பார்.

௨௬ உன்தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என்பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேல்வட்டமாயிருந்து நித்திய மேடுகளின் கடையாந்தரமட்டும்போகிறது, அவைகள் யோசேப்புடைய சிரசின்மேலுந் தன்சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும்வருவதாக.

௨௭ பென்யமீன் பீறிப்போடுகிற ஓநாய், காலமே எடுத்ததைப்பட்சிப்பான், சாயங்காலத்திலே கொள்ளையிட்டதைப் பங்கிடுவான்.

௰௩ அப்படியே மோசே தன் கோலை எகிப்துதேசத்தின்மேல் நீட்டினான். அப்பொழுது கர்த்தர் அன்று பகல்முழுதும் அன்று இராமுழுவதும் கீழ்க்காற்றைத் தேசத்தின்மேல் வரப்பண்ணினார். விடியற்காலமான பொழுது கீழ்க்காற்று வெட்டுக்கிளிகளைக் கொண்டுவந்தது.

௰௪ வெட்டுக்கிளிகள் எகிப்துதேசமெங்கும் மேவி எகிப்தின் எல்லையிலெல்லாம் மகா ஏராளமாயிறங்கிற்று. அதற்குமுன் அப்படிக்கொத்த வெட்டுக்கிளிகள் இருந்ததுமில்லை அதற்குப்பிறகு இருப்பதுமில்லை.

௰௫ அவைகள் பூமியின் முகத்தையெல்லாம் மூடிற்று. தேசம் அவைகளால் அந்தகாரப்பட்டது. அவைகள் கல்மழை பின்வைத்த நிலத்தின் எல்லாப்பயிர் வகைகளையும் மரங்களின் எல்லாப்பலனையுந் தின்றுபோட்டது. எகிப்துதேசமெங்கும் மரங்களிலாகிலும் நிலத்தின் பயிர் வகைகளிலேனாகிலும் ஒரு பச்சிலையும் மீதியானதில்லை.

௰௬ * அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பிக்கத் தீவிரித்து உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவஞ்செய்தேன். * ௮, ௮—௨௫. ௯, ௨௭.

௰௭ இப்பொழுதும் இந்தமுறைமாத்திரம் நீ என் பாவத்தை மன்னி. உங்கள் பராபரனாகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டகற்ற அவரை விண்ணப்பம் பண்ணுங்களென்றான்.

௰௮ அவன் பார்வோனைவிட்டுப் புறப்பட்டுக் கர்த்தரை விண்ணப்பம் பண்ணினான்.

௰௯ அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேற்காற்றைத் திரும்ப வரவிட்டார். அது வெட்டுக்கிளிகளையெடுத்து நாணற்சமுத்திரத்திலே போட்டது. எகிப்தின் எல்லையிலெல்லாம் அவைகளில் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருந்ததில்லை.

௨௰ கர்த்தரோவென்றாற் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார். அவன் இஸ்ரவேல் புத்திரரை விட்டதில்லை.

௨௰௧ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்துதேசத்தின்மேல் உண்டாகும்படிக்கு உன் கையை வானத்திற்கு நேராக நீட்டென்றார்.

௨௰௨ மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டினான். அப்பொழுது எகிப்துதேசமெங்கும் மூன்றுநாள்மட்டுங் காரிருள் உண்டாயிற்று.

௨௰௩ மூன்றுநாள்மட்டும் ஒருவரையொருவர் கண்டதுமில்லை ஒருவரும் தன்னிடத்தைவிட்டு எழுந்ததுமில்லை. எல்லா இஸ்ர

வேலயத்திலேயே வெளிச்சமிருந்தது. அவர்கள் வாசஸ்தலங்களில் வெளிச்சமிருந்தது.

௨௪ அப்பொழுது பார்வோன் மோசேயை அழைப்பித்து நீங்கள் போய்க் கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள். உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும் மாத்திரம் நிறுத்தப்படவேண்டும். உங்கள் குழந்தைகளும் உங்களோடேகூடப் போகலாமென்றான்.

௨௫ மோசே சொன்னதாவது. நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் படைக்கும்படிக்குப் பலிகளையும் தகனபலிகளையும் நீர் எங்கள் கையிலே கொடுக்கவேண்டும்.

௨௬ எங்கள் மந்தைகளும் எங்களோடேகூடப் போகவேண்டும். ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை. ஏனெனில் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அதில் எடுப்போம். அங்கே கர்த்தருக்கு ஆராதனை செய்வோமென்கிறதை நாங்கள் அவ்விடத்திலே சேருமட்டும் அறியோமென்றான்.

௨௭ ஆனால் கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார். அவர்களை அனுப்பிவிட அவன் மனதில்லாதே போனான்.

௨௮ பார்வோன் அவனுக்கு என்னைவிட்டு அப்பாலே போ. நீ இனி என்முகத்தைக் காணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. நீ என்முகத்தைக் காணும் நாளில் சாவாயென்றான்.

௨௯ அப்பொழுது மோசே நீர் சொன்னபடி நான் இனி உம்முடைய முகத்தை காண்பதில்லையென்றான்.

௰௧. அதிகாரம்.

எகிப்தின் தலைச்சன்களுக்கடுத்த வாதையாகிய பத்தாம் வாதை முன்னறிவிக்கப்பட்டது.

அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது. இன்னம் ஒரு வாதையை பார்வோன் மேலும் எகிப்தின் மேலும் வரப்பண்ணுவோம். அதற்குப் பிறகு உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான். சமூலமாய்ப் போகவிடுவதுமல்லாமல் உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தவே துரத்துவான்.

௨ இப்பொழுதும் ஒவ்வொருவன் தன் அயலானிடத்திலும் ஒவ்வொருத்தி தன் அயலாளிடத்திலும் வெள்ளியுடைமைகளையும் பொன் உடைமைகளையும் கேட்கவேண்டுமென்று சனத்தின் செவிகளுக்கு முன்பாகச் சொல்லென்றார். ✱ ௩, ௨௧. ௨௨.

௩ அதற்காகக் கர்த்தர் சனத்திற்கு எகிப்தியருடைய கண்களுக்கு முன்பாகத் தயவு கிடைக்கப்பண்ணினார். மோசே என்ற புருஷனும் எகிப்துதேசத்திலே பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் சனத்தின் பார்வைக்கும் மகாபெரியவனாயிருந்தான்.

௪ அப்படியே மோசே சொன்னதாவது கர்த்தர் உரைக்கிறதென்னவென்றால் பாதி ராத்திரியிலே நாம் எகிப்தின் நடுவாகப் புறப்பட்டுப் போவோம்.

௫ அப்பொழுது பார்வோனுடைய சிங்காசனத்தின் மேல் உட்காருமவனுடைய தலைச்சன் குமாரன் தொடங்கி எந்திரக் கல்லின் பிறகாலே இருக்கிற அடிமைப்பெண்ணுடைய தலைச்சன் பிள்ளை மட்டும் எகிப்துதேசத்திலிருக்கிற முதற்பேறான சகல மிருகசீவன்களுக்குள்ளே தலையீற்றானதெல்லாம் சாவும்.

௬ அதினால் எகிப்துதேசமெங்கும் முன்னொருக்காலும் உண்டாகாததும் இனி உண்டாகப்போகாததுமான பெரிய கூக்குரலிருக்கும்.

௭ ஆனால் கர்த்தர் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறியும்படிக்கு இஸ்ரவேல் புத்திரரிலிருக்குள்ளும் மனிதர் தொடங்கி மிருகசீவன்கள் மட்டும் ஒரு நாயாகிலும் தன் நாக்கை அசைப்பதில்லை.

௮ அப்பொழுது இந்த உம்முடைய ஊழியக்காரரெல்லாரும் என்னண்டைக்கிறங்கிவந்து நீயும் உன்கீழிருக்கிற எல்லாச் சனமுமாய்ப் புறப்படுங்களென்று என்னை வணங்குவார்கள். அதின்பிறகு புறப்படுவேனென்று சொல்லி உக்கிரமான கோபத்தோடே பார்வோனைவிட்டுப் புறப்பட்டான்.

௯ கர்த்தர் மோசேயுடனே எகிப்துதேசத்தில் நம்முடைய அற்புதங்கள் அதிகமாகும்படிக்குப் பார்வோன் உங்களுக்குச் செவிகொடாதே போவானென்று சொல்லியிருந்தபடியே,

௰ மோசேயும் ஆரோனும் இந்த அற்புதங்களையெல்லாம் பார்வோனுக்கு முன்பாகச்செய்தார்கள். கர்த்தர் பார்வோனின் இருதயத்தை உறுதிகொள்ளப்பண்ணினார். அவன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிட்டதில்லை.

௰௨. அதிகாரம்.

பஸ்காக் கட்டளையிடப்பட்டது.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் எகிப்துதேசத்திற் சொன்னதாவது.

௨ இந்த மாதம் உங்களுக்குத் தலையான மாதம். இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாவது.

௩ நீங்கள் இஸ்ரவேல் சபையாரெல்லாம் பேசிச்சொல்லவேண்டிய தென்னவென்றால் இந்த மாதம் பத்தாந்தேதியிலே பிதாக்களாகிய வீட்டுக்காரர் அவரவர் ஒரு ஆட்டுக்குட்டியை ஒவ்வொரு வீட்டிற்கு ஒரு ஆட்டுக்குட்டியிருக்கும்படிக்குப் பிடிக்கக்கடவர்கள்.

ச வீட்டிலேயிருக்கிறவர்கள் ஆட்டுக்குட்டியைப் போசிக்கப்போதாத கொஞ்சப்பேர்களாயிருந்தார்களேயாகில் அப்பொழுது ஆத்துமாக்களின் இலக்கத்திற்குத்தக்கதாக அவனும் சமீபமான அவனுடைய அயல்வீட்டுக்காரனுமாய் ஒன்றைப் பிடிக்கக்கடவன். அவனவன் போசிப்பதற்குத்தக்கதாய் ஆட்டுக்குட்டியின்மேலே இலக்கம் பார்க்கக்கடவீர்கள்.

ரு பழுதற்றதும் ஆணும் ஒருவயதுள்ளதுமாகிய ஆட்டுக்குட்டி உங்களுக்கிருக்கவேண்டும். ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் அதையெடுப்பீர்களாக.

சா அதை இந்தமாதம் பதினாலாந்தேதிமட்டும் வைத்துக்கொண்டிருந்து இஸ்ரவேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் அந்திநேரமான வேளையிலே அதின் குரல்வளையையறுத்து,

எ அதின் இரத்தத்திற் கொஞ்சமெடுத்துத் தாங்கள் அதைப்போசிக்கும் வீடுகளின் வாசல் இரண்டு நிலைகளிலும் வாசற்கூட்டின் மேற்சட்டத்திலும் பூசி,

அ நெருப்பினாலே பொரிக்கப்பட்டதாக அந்த மாம்சத்தையும் புளிப்பில்லாத அப்பங்களையும் அன்று இராத்திரியிலே போசிக்கக்கடவர்கள். கசப்பான கீரைகளோடே யதைப் போசிக்கக்கடவர்கள்.

கூ பச்சையானதாய் அல்லது தண்ணீரிலே வேவித்ததாய் அல்ல. நெருப்பினாலே அதின் தலையும் அதின் தொடைகளும் அதின் குடல்களுமிருக்கிறபடியே ஏகமாய்ப் பொரிக்கப்பட்டதாய் அதைப் போசிப்பீர்களாக.

ய அதிலே விடியற்காலமட்டும் ஒன்றும் மீதியாக வைக்காமல் விடியற்காலமட்டும் அதிலே மீதியாயிருக்கிறதை அக்கினியாலே சுட்டெரிப்பீர்களாக.

யக நீங்கள் உங்கள் அரைகள் கட்டப்பட்டவர்களாகவும் உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலும் உங்கள் தடிகள் உங்கள் கைகளிலுமிருக்கிறதாகவும் அதைப் போசித்துத் தீவிரத்தோடே அதைப் போசிக்கக்கடவீர்கள். அது கர்த்தருடைய பஸ்கா.

யஉ அந்த இராத்திரியிலே நாம் எகிப்துதேசத்திலே கடந்துபோய் எகிப்துதேசத்தில் மனிதனைத் துவக்கி மிருகஜீவன்கள்மட்டும் முதற்பேறாயிருக்கிறதையெல்லாம் அடித்து எகிப்தின் தேவர்களில் நியாயத்தீர்ப்புகளைச் செய்வோம். நாம் கர்த்தர்.

யங நீங்களிருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்கான அடையாளமாயிருக்கும். அந்த இரத்தத்தைக் கண்டு உங்களை விலக்கிக் கடந்துபோவோம். அப்படியே நாம் எகிப்துதேசத்தை யடிக்கும்பொழுது, அழிக்கிற வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.

யச அந்தநாள் உங்களுக்கு நினைவுகூருதலுக்காக இருக்கக்கடவது. அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக. அதை யுங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாய் ஆசரிப்பீர்களாக.

யரு ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் போசிக்கக்கடவீர்கள். ஆனால் முதலநாளிலேதானே புளித்தமாவை யுங்கள் வீடுகளில் அகற்றிப்போடப் பண்ணக்கடவீர்கள். ஏனெனில் முதலநாள் துவக்கி ஏழாம்நாள்மட்டும் எவனாகிலும் புளித்த அப்பம் போசித்தால் அந்த ஆத்துமா இஸ்ரவேலிலிராமல் அறுப்புண்டுபோவான்.

யசா முதலாம்நாளிலே பரிசுத்தமான சபைகூடுதலும் ஏழாம்நாளிலே பரிசுத்தமான சபைகூடுதலும் உங்களுக்கிருக்கக்கடவது. அவைகளில் ஒருவேலையுஞ் செய்யப்படவேண்டாம். ஒவ்வொரு ஆத்துமாவுக்குச் சாப்பிடுகிறதற்குத் தேவையானது மாத்திரமே உங்களுக்காகச் செய்யப்படலாம்.

யஎ புளிப்பில்லாத அப்பங்களின் போசிக்குதலைக்கைக்கொள்ளுவீர்களாக. ஏனெனில் அந்தநாளிலேதானே உங்கள் சேனைகளை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணினோம். ஆகையால் அந்தநாளை யுங்கள் தலைமுறைகளில் நித்திய கட்டளையாக ஆசரிப்பீர்களாக.

யஅ முதலாம் மாதம் பதினாலாந்தேதி சாயங்காலந்துவக்கி மாதத்தின் இருபத்தோராந்தேதி சாயங்காலமட்டும் புளிப்பில்லாத அப்பங்களைப் போசிக்கக் கடவீர்கள்.

யகூ ஏழுநாளமட்டும் உங்கள் வீடுகளிலே புளித்தமா காணப்படாதிருப்பதாக. ஏனெனில் எவனாகிலும் புளித்த அப்பத்தைப் போசித்தால் அந்த ஆத்துமா பரதேசியானாலுஞ்சரி. தேசத்திலே பிறந்தவனானாலுஞ்சரி. இஸ்ரவேல் சபையிலிராமல் அறுப்புண்டுபோவான்.

உய நீங்கள் புளித்த அப்பமானயாதொன்றையும் போசிக்கவேண்டாம். உங்களுடைய எல்லா வாசஸ்தலங்களிலும் புளிப்பில்லாத அப்பங்களைப் போசிக்கக்கடவீர்களென்று சொல்லென்றார்.

உக அப்பொழுது மோசே இஸ்ரவேலின் மூப்பரையெல்லாம் அழைப்பித்து அவர்களோடே சொன்னதாவது. நீங்கள் உங்களுக்கு உங்கள் வம்சத்திற்குத் தக்கதாக ஆட்டுக்குட்டிகளைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, *பஸ்காவை அடித்து, *எபிரே. யக, உஅ.

உஉ ஈசோப்புக்கிளைகளின் கட்டைவாங்கிக் கிண்ணியிலேயிருக்கும் இரத்தத்திலே தோய்த்துக் கிண்ணியிலேயிருக்கும் அந்த இரத்தத்தினால் வாசற்கூட்டின் மேற்சட்டத்திலும் வாசலின் இரண்டு நிலைகளிலும் பூசுங்

உஉ. உங்களிலொருவனும்விடியற்காலமட்டுந்தன்வீட்டுவாசலிலிருந்துபுறப்படவேண்டாம.

உங ஏனெனிற் கர்த்தர் எகிப்தியரைவாதிக்கக்கடந்துவருவார். அவர் வாசற் கட்டைகளின் சட்டத்திலும வாசலின் இரண்டு நிலைகளிலும அந்த இரத்தத்தைக்காணும்பொழுது கர்த்தர் அழிக்கிறவனையுங் கள் வீடுகளில் வாதிக்கிறதற்கு வரவொட்டாமல் வாசற்படியை விலக்கிக் கடந்துபோவார்.

உச இந்தக் காரியத்தை என்றைக்கும உங்களுக்கும உங்கள் பிள்ளைகளுக்குங் கட்டளையாகக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

உரு கர்த்தர் உங்களுக்குத் தாருஞ் சொன்னபடியே நீங்கள் போகிற தேசத்திலே நீங்கள் பிரவேசிக்கும்பொழுது இந்த ஆராதனையைக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

உசா அப்பொழுது உங்கள் பிள்ளைகள் உங்களை நோக்கி இந்த ஆராதனை என்னவென்று உங்களைக் கேட்கும்பொழுது,

* யங. ய௪.

உஎ நீங்கள் சொல்வதாவது. எகிப்தியரை வாதிக்கையில எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளை விலக்கிக்கடந்து நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணின கர்த்தருக்கு பஸ்கா என்னப்பட்ட பலியெனறீர்கள் என்றான். அப்பொழுது சனங்குனிந்து பணிந்துகொண்டது.

உஅ இஸ்ரவேல்புத்திரர் போய் அப்படிச் செய்தார்கள். கர்த்தர் மோசேக்கும ஆரோனுக்குங் கற்பித்தபடியே செய்தார்கள்.

முதற்பேறனைத்தெல்லாருஞ்செத்ததினால எகிப்து வாதிக்கப்பட்டபத்தாமவாதை.

உகூ அப்பொழுது சமபவித்ததென்னவெனில் நடுராத்திரியிலே கர்த்தர் பார்வோனுடைய சிங்காசனத்தின்மேலிருக்கிறவனுடைய தலைச்சன் குமாரனைத் துவக்கிச் சிறைச்சாலையிலிருந்த சிறையின தலைச்சன் பிள்ளைமட்டும் எகிப்து தேசத்திலிருந்த முதற்பேறானதையும மிருகஜீவனகளின தலைச்சன்களையும அடித்தார்.

ஙo அப்பொழுது பார்வோனும அவனுடைய எலலா ஊழியக்காரரும எலலா எகிப்தியரும இராத்திரியிலே எழுந்திருந்தார் கள். மகாக்கூக்குரல எகிப்திலே யுண்டாயிற்று. ஏனெனிற் செத்தவனிலலாத ஒருவீடுமிருந்ததில்லை.

ஙக அவன்மோசேயையும ஆரோனையும இராத்திரியிலே அழைப்பித்துச் சொன்னதாவது. நீங்களும இஸ்ரவேல புத்திரருமாகிய எழுந்து என்சனத்தினடுவிலிருந்து புறப்பட்டுப்போய நீங்கள்சொன்னபடிகர்த்தருக்காராதனைசெய்யுங்கள.

ஙஉ உங்கள் ஆடுமாடுகளையும நீங்கள் சொன்னபடிக்கு ஓட்டிக்கொண்டுபோய என்னையும ஆசீர்வதியுங்களென்றான.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்துபுறப்பட்டது.

ஙங எகிப்தியர் தீவிரமாயச் சனத்தைத் தேசத்திலிருந்து அனுப்பிவிட அவர்களை வெருட்டுகிறவர்களானார்கள். ஏனெனில நாங்கள் எலலாருஞ்சாகுமே என்றார்கள்.

ஙச ஆகையாற் சனம இன்னம உப்பாததங்களுடைய பிசைந்தமாவிலிருந்த தங்களதொட்டிகளைத் தங்கள் சீலைகளிற்கட்டித் தங்கள் தோட்களின்மேல எடுத்துப்போனார்கள்.

ஙரு இஸ்ரவேல புத்திரர் மோசேயினுடைய வார்த்தையினபடிசெய்து * எகிப்தியரை வெள்ளியுடைமைகளையும பொன்னுடைமைகளையும வஸ்திரங்களையுங்கேட்டிருந்தார்கள். * ரு, உக. யக, உ.

ஙசா அதற்காகக் கர்த்தர் சனத்திற்கு எகிப்தியரின கண்களிலே தயவுகிடைக்கப்பண்ணியிருந்தார். கேட்டதை அவர்களுக்குக்கொடுத்தார்கள். அப்படியே எகிப்தியரைக்கொள்ளையிட்டார்கள்.

ஙஎ இஸ்ரவேல புத்திரர் குழந்தைகளதவிர அறுநூறாயிரம புருஷர் காலநடையாய் ராமேசேசைவிட்டுப் பயணம்பண்ணிச் சுக்கோத்திற்குவந்தார்கள்.

ஙஅ அவர்களோடுங் கூடப் பல்சாதியான திரள்சனமும ஆடுமாடுகளமுதலான ஏராளமாகிய மிருகஜீவனகளும ஏறிவந்தது.

ஙகூ அவர்கள் எகிப்திலிருந்துகொண்டுவந்த பிசைந்தமாவைப்புளிப்பிலலாத அப்பங்களாகச் சுட்டார்கள். ஏனெனில அவர்கள் தரித்துநிற்கக்கூடாமல எகிப்திலிருந்து துரத்தப்பட்டபடியினாலே அது உப்பாதிருந்தது. அவர்கள் தங்களுக்கு வழிக்கு ஒன்றுஞ்சேகரம்பண்ணினதுமிலலை.

சo இஸ்ரவேலபுத்திரர் எகிப்திலே குடியிருந்தகுடியிருப்பு ✻ நானூற்றுமுப்பதுவருஷமானது. ✻ கலாத்தியர். ௩, யஎ.

சக நானூற்றுமுப்பதுவருஷங்களின முடிவிலே சமபவித்ததென்னவெனில அந்நாளிலேதானே கர்த்தருடைய சேனைகளெலலாம எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டது.

சஉ கர்த்தர் அவர்களை எகிப்துதேசத்திலிருந்துப்புறப்படப்பண்ணினதினாலே இது அவருக்குக் கவனமாய ஆசரிக்கப்படவேண்டிய இராத்திரி. இதுதானே இஸ்ரவேல புத்திரரெலலாருந் தங்கள் தலைமுறைகளிலே கர்த்தருக்குக் கவனமாய ஆசரிக்கவேண்டிய இராத்திரி.

இன்னும் பஸ்காவின் கட்டளைச்சேர்ந்த சில நியாயங்கள்.

௪௩ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடுஞ் சொன்னதாவது. பஸ்காவின் கட்டளையேதெனில் அந்நிய புத்திரனொருவனும் அதிலே புசிக்கவேண்டாம்.

௪௪ ஆனாற் பணத்திலே கொள்ளப்பட்ட அடிமையெல்லாம் நீயவனைச் சுன்னத்துப்பண்ணின பிறபாடு அதிலே புசிப்பானாக.

௪௫ அந்நியனுங் கூலியாளும் அதிலே புசிக்கவேண்டாம்.

௪௬ ஒவ்வொரு வீட்டிலே ஒவ்வொன்று புசிக்கப்படக்கடவது. நீ அந்த மாம்சத்திலொன்றும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகவேண்டாம். * அதிலே நீங்கள் ஒரு எலும்பை முறிக்கவும் வேண்டாம்.

* ௪. மோசே. ௯, ௰௨. யோவ. ௰௯, ௩௬.

௪௭ இஸ்ரவேல் சபையெல்லாம் அதை யாசரிக்கக்கடவது.

௪௮ அந்நியனொருவன் உன்னிடத்திலே தங்கிக் கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கவேண்டுமென்றிருந்தானேயாகில் அவனிடத்திலிருக்கிற ஆணெல்லாஞ் சுன்னத்தடைய வேண்டும். பிறபாடு அவன் அதை யாசரிக்கிறதற்குச் சேர்ந்து தேசத்திலே பிறந்தவனைப் போலிருப்பானாக. ஆனாற் சுன்னத்தில்லாதொருவனும் அதிலே புசிக்கவேண்டாம்.

௪௯ * தேசத்திலே பிறந்தவனுக்கும் உங்கள் நடுவிலே தங்குகிறபரதேசிக்கும் ஒரே நியாயப்பிரமாணமிருக்கக்கடவதென்றார். * ௩. மோசே. ௨௪, ௨௨.

௫௰ இஸ்ரவேல் புத்திரரெல்லாரும் இப்படிச் செய்தார்கள். கர்த்தர் மோசேக்கும் ஆரோனுக்குங் கற்பித்தபடியே செய்தார்கள்.

௫௧ இந்தப் பிரகாரமாக அந்நாளிலே தானே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சேனைகளின்படியே எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௰௩. அதிகாரம்.

இஸ்ரவேலின் முதற்பேறுகள் கர்த்தருடையவைகளென்பது.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨ * இஸ்ரவேல் புத்திரரில் எங்கும் மனிதரிலும் மிருகஜீவன்களிலுங் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேறையெல்லாம் நமக்குப் பரிசுத்தமாக்கு. அது நம்முடையதென்றார்.

* ௨௨, ௨௯. ௩௰. ௩௪, ௰௯.

௩ அப்பொழுது மோசே சனத்தோடே சொன்னதாவது. நீங்கள் அடிமைத்தனவீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்ட இந்த நாளை நினை. ஏனெனிற் கர்த்தர் பலத்த கையினாலே உங்களை யவ்விடத்திலிருந்து புறப்படப்பண்ணினார். ஆனதுகொண்டு புளித்த அப்பம் புசிக்கப்படவேண்டாம்.

௪ * ஆபீப் மாதத்திலுடைய இந்த நாளிலே நீங்கள் புறப்பட்டீர்கள். * ௨௩, ௧௫.

௫ ஆகையாற் கர்த்தருனக்குக் கொடுப்பேனென்று உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதும் பாலுந் தேனும் ஓடுகிறதுமான தேசமாகிய கானானியர் ஏத்தியர் எமோரியர் ஏவியர் எபூசியரென்றவர்களுடைய தேசத்திலே உன்னை வரப்பண்ணின பொழுது, நீ இந்த மாதத்திலே இந்த ஆராதனையைச் செய்வாயாக.

௬ ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிக்கக்கடவாய். ஏழாம் நாளிலோவெனிற் கர்த்தருக்குப் பண்டிகை ஆசரிக்கப்படுவதாக.

௭ அந்த ஏழுநாளும் புளிப்பில்லாத அப்பங்கள் புசிக்கப்படக்கடவது. உன்னிடத்திலே புளித்த அப்பமுங் காணப்படவேண்டாம். உன் எல்லைகளிலெல்லாம் உன்னிடத்திலே புளித்தமாவுங் காணப்படவேண்டாம்.

௮ அந்நாளிலே உன் குமாரனுக்கு நானெகிப்திலிருந்து புறப்படுகையிற் கர்த்தர் எனக்குச் செய்ததற்காக இப்படிச் செய்கிறேனென்றறிவிப்பாயாக.

௯ கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு * இது உனக்கு உன் கையிலே அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவது. ஏனெனிற் பலத்த கையினாலே கர்த்தருன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

* ௫. மோசே. ௬, ௮.

௰ ஆகையால் வருஷத்துக்கு வருஷம் இந்தக் கட்டளையைக் குறித்த காலத்திலே கைக்கொண்டுவருவாயாக.

௰௧ பின்னுஞ் செய்யப்படவேண்டியதேதெனிற் கர்த்தர் உனக்கும் உன் பிதாக்களுக்கும் ஆணையிட்டபடியே உன்னைக் கானானியரின் தேசத்திலே வரப்பண்ணி அதையுனக்குக் கொடுத்த பொழுது,

௰௨ கர்ப்பந்திறந்து பிறக்கிறதனைத்தையும் உனக்கிருக்கும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையுங் கர்த்தருக்கொப்புக்கொடுப்பாயாக. அவைகளிலிருக்கிற ஆண்கள் கர்த்தருடையவைகள்.

௰௩ ஆனாற் கழுதையின் தலையீற்றையெல்லாம் ஒரு ஆட்டுக்குட்டியினாலே மீட்டுக்கொள்வாயாக. மீட்காயேயாகில் அதின் தலையை வெட்டிப்போடு. உன் பிள்ளைகளில் முதற்பேறான சகல நரஜீவனையோவென்றால் மீட்டுக்கொள்வாயாக.

௧௪ இனிமேலே நாளை உன் குமாரன் இதென்னவென்று உன்னைக் கேட்டாலே நீ அவனோடே சொல்லவேண்டியதாவது. கர்த்தர் பெலத்த கையினாலே அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார்.

௧௫ எப்படியென்றால் எங்களைவிடாதபடிக்கு பார்வோன் கடினமனதாயிருக்கிறபொழுது கர்த்தர் எகிப்துதேசத்திலே மனிதரின் தலைச்சன்களையும் மிருகஜீவன்களின் தலைச்சன்களையும் உண்டாயிருந்தமுதற்பேறுகளெல்லாம் கொன்றுபோட்டார். ஆகையினாலே கர்ப்பந்திறந்துபிறந்த ஆண்பிள்ளையெல்லாம் நான் கர்த்தருக்குப் பலியிடுகிறேன். என் பிள்ளைகளில் முதற்பேறானவைகளெல்லாம் மீட்டுக்கொள்ளுகிறேன்.

௧௬ ஆகையால் கர்த்தர் தங்களைப் பலத்த கையினாலே எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதற்கு இது உன் கையிலே அடையாளமாகவும் உன் கண்களின் நடுவே நினைப்பூட்டுதலாகவும் இருக்கக்கடவதென்று சொல்லக்கடவாயென்றான்.

எகிப்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் அப்புறம் பண்ணின பயணம்.

௧௭ பார்வோன் சனத்தைவிட்டபிறபாடு பெலிஸ்தருடைய தேசத்தின் சமீபமான பெலிஸ்தர் வழியாய் பரமபரன் அவர்களை நடத்திக்கொண்டு போகவில்லை. ஏனென்றால் சனம் யுத்தத்தைக் காணும்பொழுது மனஸ்தாபப்பட்டு எகிப்திற்குத் திரும்புவார்.

௧௮ ஆகையால் பரமபரன் நாணற் சமுத்திரத்தின் வனாந்தரவழியாய் சனத்தைச் சுற்றிப்போகப்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரரோவென்றால் எகிப்துதேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டார்கள்.

௧௯ மோசே தன்னோடுகூட யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டு வந்தான். ஏனென்றால் பரமபரன் உங்களை விசாரிப்பார். அப்பொழுது உங்களோடுகூட என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோக வேணுமென்று அவன் இஸ்ரவேல் புத்திரரைக் கெட்டியாய் ஆணையிடுவித்துக்கொண்டிருந்தான்.

௧. மோசே. ௫௦, ௨௫. யோசு. ௨௪, ௩௨.

௨௦ அவர்கள் சுக்கோத்திலிருந்து பயணம் புறப்பட்டு வனாந்தரத்தின் எல்லையான ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள்.

௨௧ கர்த்தரோவென்றால் அவர்களை வழிநடத்துகிறதற்குப் பகலிலே மேகத்தூணிலும் அவர்களுக்கு வெளிச்சங்காட்டும்படிக்கு அவர்கள் இரவும் பகலும் போகக்கூடும்படிக்கு இராத்திரியிலே அக்கினித்தூணிலும் அவர்களுக்கு முன்பாக நடந்தார்.

௨௨ பகலிலே மேகத்தூணும் இரவிலே அக்கினித்தூணும் சனத்திற்கு முன்பாகவிருந்து விலகிப்போனதில்லை.

௰௪. அதிகாரம்.

எகிப்தியர் செங்கடல் சமுத்திரத்திலே அமிழ்ந்து போனது.

கர்த்தர் மோசேயுடனே பேசிச்சொன்னதாவது.

௨ திரும்பிக்கொண்டு மிக்தோலுக்கும் சமுத்திரத்திற்கும் நடுவேயாகவும் பாகால்சேப்போனுக்கு முன்பாகவுமிருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளயமிறங்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லு. அதற்கெதிராகச் சமுத்திரக்கரையிலே பாளயமிறங்குவீர்களாக.

௩ அப்பொழுது அவர்கள் தேசத்திலே திகைத்துத்திரிகிறார்கள். வனாந்தரம் அவர்களையடைத்துப் போட்டதென்று பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைக் குறித்துச் சொல்லுவான்.

௪ ஆகையால் பார்வோன் அவர்களைப் பின்தொடரும்படிக்கு நாம் அவனிருதயத்தைக் கடினங்கொள்ளப்பண்ணி நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிக்கிறதாகப் பார்வோனாலும் அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவோமென்றார். அவர்களப்படிச்செய்தார்கள்.

௫ சனம் ஓடிப்போயிற்றென்று எகிப்தின் இராசாவுக்கு அறிவிக்கப்பட்ட பொழுது சனத்திற்கு விரோதமாகப் பார்வோனும் அவனூழியக்காரரும் வேறுமனதாகி நாம் இஸ்ரவேலை நமக்கு வேலைசெய்யாதபடிக்கு இப்படிவிட்டது என்ன செய்கையாயிருக்கிறதென்றார்கள்.

௬ அவன் தன் இரதங்களைப் பூட்டி தன் சனத்தைக் கூட்டிக்கொண்டு,

௭ தெரிந்துகொள்ளப்பட்ட அறுநூறு இரதங்களையும் எகிப்தினுடைய எல்லா இரதங்களையும், அவைகள் எல்லாவற்றின் மேலும் அதிகாரிகளான அதிக்கக்காரரோடுங் கூட்டிக்கொண்டுபோனான்.

௮ அக் கர்த்தர் எகிப்தின் இராசாவாகிய பார்வோனின் இருதயத்தை கடினமாக்கினபடியினாலே அவன் இஸ்ரவேல் புத்திரரைப் பின்தொடர்ந்தான். இஸ்ரவேல் புத்திரரோவென்றால் உயர்ந்த கையினாலே புறப்பட்டிருந்தார்கள்.

௯ எகிப்தியர் அவர்களைப் பின்தொடர்ந்து பார்வோனின் எல்லாக் குதிரைகளும் இரதங்களும் அவனுடைய குதிரைக்காரரும் அவனுடைய இராணுவமுமாய்ச் சமுத்திரத்தண்டையிலே பாகால் சேப்போனுக்கு முன்பாகவிருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கி

னமுன்னடியிலே பாளயமிறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டினார்கள்.

௰ பார்வோன் சமீபித்துவருகிறபொழுது இஸ்ரவேல்புத்திரர் தங்கள் கண்களையேறெடுத்தார்கள். இதோ, எகிப்தியர் தங்களுக்குப்பிறகாலேவருகிறதையவர்கள்கண்டு மிகவும்பயந்தார்கள். அப்பொழுது இஸ்ரவேல்புத்திரர் கர்த்தரைநோக்கிக்கூப்பிட்டு,

௰௧ மோசேயுடனே, எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லாததினாலேயோ எங்களை வனாந்தரத்திலே சாகும்படிக்கு அழைத்துவந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்துபுறப்படப்பண்ணினதினாலே எங்களுக்கிப்படிச் செய்ததென்னவென்றும்,

௰௨ நாங்கள் எகிப்திலே இருக்கக்கொள்ள எங்களை எகிப்தியருக்கு வேலைசெய்ய விட்டுவிடும். ஏனென்னில் நாங்கள்வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்க எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்குத் தாவிளையென்று உம்மோடேசொன்னவார்த்தை இது தானல்லவோ வென்றுஞ்சொன்னார்கள்.

௰௩ ஆனால்மோசே ஜனத்தோடேசொன்னதாவது. பயப்படாதேயுங்கள். நீங்கள் நின்றுகொண்டு கர்த்தர் இன்றுங்களுக்குச்செய்யும் அவருடைய இரட்சிப்பைப் பாருங்கள். ஏனென்னில் நீங்கள் இன்றுகாணுகிற எகிப்தியரை இனி என்றென்றைக்குந் திரும்பக்காணப்பதில்லை.

௰௪ கர்த்தருங்களுக்காக யுத்தம்பண்ணுவார் நீங்கள்சும்மாயிருப்பீர்களென்றான்.

௰௫ அப்பொழுது கர்த்தர்மோசேயோடேசொன்னதாவது. நீ நம்மைநோக்கிக் கூப்பிடுகிறதென்ன? பயணம்புறப்படவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லு.

௰௬ நீயோவென்றால் உன்கோலையோங்கி, உன்கையைச்சமுத்திரத்தின்மேல்நீட்டி அதைப்பிளந்துபோடு. அப்பொழுது இஸ்ரவேல்புத்திரர் சமுத்திரத்தின் நடுவாகவெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.

௰௭ நாமோவென்னில் இதோ, எகிப்தியர் உங்கள்பிறகாலே வரும்படிக்கு அவர்களிருதயத்தையுரமாக்கி பார்வோனாலும் அவனுடைய எல்லாஇராணுவத்தாலும் அவனிரதங்களாலும் அவன்குதிரைக்காரராலும் மகிமைப்படுவோம்.

௰௮ இப்படிநாம் பார்வோனாலும் அவனிரதங்களாலும் அவன்குதிரைக்காரராலும் மகிமைப்படுகிறபொழுது நாங்கர்த்தரென்பதைஎகிப்தியர்அறிவார்களென்றார்.

௰௯ அப்பொழுது இஸ்ரவேலின்சேனைக்குமுன்னாக நடக்கிற பராபருடையதூதனானவர் தாண்டிவந்து அவர்கள்பிறகாலேநடந்தார். அவர்களுக்குமுன்பாக இருந்தமேகத்தூண் தாண்டிவந்து அவர்கள் பிறகாலேநின்று,

௨௰ எகிப்தியரின்சேனைக்கும் இஸ்ரவேலின்சேனைக்கும் நடுவாகவந்து இராமுழுவதும் அது இவைகள்சேராதபடியாய் அதற்கு மேகமும் அந்தகாரமுமாயிருந்தது இதற்கோவென்றால் இராவை வெளிச்சமாக்கினது.

௨௰௧ மோசேதன்கையைச்சமுத்திரத்தின்மேலே நீட்டினான். அப்பொழுதுகர்த்தர்சமுத்திரத்தை இராமுழுவதும் பலத்தகீழ்க்காற்றினாலேவிலக்கி அதைவறண்டுபோகப்பண்ணினார். அப்படியே தண்ணீர்கள் பிளந்துபிரிந்துபோயிற்று.

௨௰௨ இஸ்ரவேல்புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே பிரவேசித்துப்போனார்கள். அவர்களுடைய வலதுபுறமாகவும் அவர்களுடைய இடதுபுறமாகவுந் தண்ணீர்கள் அவர்களுக்கு மதிலாகவிருந்தது.

௨௰௩ அப்பொழுது எகிப்தியர்பின்றொடர்ந்து பார்வோனுடைய எல்லாக்குதிரைகளும் அவனுடைய இரதங்களும் அவனுடைய குதிரைக்காரரும் அவர்கள்பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள்.

௨௰௪ கிழக்கு வெளுத்துவருஞ் சாமத்திலே சம்பவித்ததேதென்றால், கர்த்தர் அக்கினியும்மேகமுமான தூணிலிருந்து எகிப்தியரின்சேனையை நோக்கிப்பார்த்து அவர்கள்சேனையைக்கலங்கடித்து,

௨௰௫ உருளைகளை அவர்கள் இரதங்களிலிருந்து கழலவும் அவர்கள் வருத்தமாய் நடக்கவும்பண்ணினார். அப்பொழுது எகிப்தியர். இஸ்ரவேலைவிட்டு ஓடிப்போவோமாக. ஏனென்னிற்கர்த்தர் அவர்களுக்காக எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறாரென்றார்கள்.

௨௰௬ கர்த்தரோவென்னில்மோசேயுடனே தண்ணீர்கள் எகிப்தியர்மேலும் அவர்களுடைய இரதங்களின்மேலும் அவர்களுடைய குதிரைக்காரர்மேலுந்திரும்பும்படிக்கு உன்கையைச் சமுத்திரத்தின்மேலே நீட்டென்றார்.

௨௰௭ அப்படியேமோசேதன்கையைச்சமுத்திரத்தின்மேலே நீட்டினான். அப்பொழுது விடியற்காலத்திற்குமுன்னே சமுத்திரந்தன்பலத்தோடேதிரும்பிவந்தது எகிப்தியர் அதற்கெதிராகஓடக்கொள்ளக்கர்த்தரவர்களைக்கடலின்நடுவிலேவிழத்தள்ளினார்.

௨௰௮ தண்ணீர்கள்திரும்பிவந்து இரதங்களையுங் குதிரைக்காரரையும் அவர்கள்பிறகாலே சமுத்திரத்திற்குட் பிரவேசித்திருந்த பார்வோனின் இராணுவமனைத்தையும் மூடிப்போட்டது. அவர்களில் ஒருவனாகிலும் மீதியானதில்லை.

௨௰௯ இஸ்ரவேல புத்திரரோவென்றாற் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள். தண்ணீர்கள் அவர்

ளூடே அவர்களுக்கு வலதுபுறத்திலும் அவர்க ளிடதுபுறத்திலும் மதிலாகவிருந்தது.

௩௰ இப்படிக் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலை எஜிப்தியரின் கைக்குத் தப்புவித்தார், இஸ்ரவேலர் எஜிப்தியரைக் கடற்கரையிலே செத்துக்கிடக்கக் கண்டார்கள்.

௩௰௧ கர்த்தர் எஜிப்தியரிற் செய்த அவருடைய பெருங்கிரியையை இஸ்ரவேலர் கண்டு, அந்த ஜனம் கர்த்தருக்குப் பயந்து கர்த்தரிடத்திலும் அவருடைய ஊழியனாகிய மோசேயினிடத்திலும் விசுவாசித்தார்கள்.

௰௫. அதிகாரம்.

எஜிப்தியருக்குத் தப்புவித்த இரட்சகரை இஸ்ரவேலர் துதித்துப் பாடினபாட்டு.

௧ அப்பொழுது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் பாடினபாட்டாவது, கர்த்தரைப் பாடுவேன், ஏனென்றால் உயர வெற்றிகொண்டார், குதிரையையும் அதிலேறினவனையும் கடலிலே தள்ளினார்.

௨ என்பலமும் என்கீதமும் கர்த்தர், அவரே எனக்கு இரட்சிப்பானவர், அவரே என் தேவன், ஆகையால் அவருக்கு வாசஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுவேன், அவரே என் தகப்பனுடைய பராபரன் ஆகையால் அவரை உயர்த்துவேன். * சங்கீ. ௱௰௮,௰௪.

௩ கர்த்தர் யுத்தம்பண்ணவல்லவர், கர்த்தரென்பது அவருடைய நாமம்.

௪ பார்வோனின் இரதங்களையும் அவன் சேனையையும் சமுத்திரத்திலே தள்ளிவிட்டார், தெரிந்துகொள்ளப்பட்ட அவன் அதிகாரர் நாணற்சமுத்திரத்தில் அமிழ்ந்துபோனார்கள்.

௫ ஆழங்கள் அவர்களை மூடிற்று, கல்லைப்போல் பள்ளங்களில் இறங்கினார்கள்.

௬ கர்த்தாவே! உம்முடைய வலதுகரம் பலத்திலே மகிமையாயிருக்கின்றது, கர்த்தாவே! உம்முடைய வலதுகரம் பகைஞனை நொறுக்கிப்போட்டது.

௭ உமக்கு விரோதமாய் எழும்பினவர்களை உம்முடைய மகத்துவத்தின் மகத்துவத்திலே நிர்மூலமாக்கினீர், உம்முடைய உக்கிரத்தை அனுப்பினீர், அது அவர்களைத் தாளடியைப்போலப் பட்சித்தது.

௮ உம்முடைய நாசியின் சுவாசத்தினாலே தண்ணீர் குவிந்தது, நீரோட்டங்கள் குவியலாக நின்றது, ஆழங்கள் நடுக்கடலிலே கெட்டியாயிற்று.

௯ பின்தொடருவேன், பிடிப்பேன், கொள்ளையிடப் பங்கிடுவேன், என்னுடைய மாம்சம் அவர்களால் திருப்திப்படும், என்பட்டயத்தை உருவுவேன், என்கையவர்களைச் சங்கறுக்குமென்று பகைஞன் சொன்னான்.

௰ உம்முடைய காற்றினாலே ஊதினீர், கடல் அவர்களை மூடிற்று, ஈயத்தைப்போல வலுத்த தண்ணீர்களில் அமிழ்ந்துபோனார்கள்.

௰௧ கர்த்தாவே! தேவர்களில் உமக்கொப்பானவன் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும் துதிகளில் பயப்படத்தக்கவரும் அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கொப்பானவன் யார்?

௰௨ உம்முடைய வலதுகையை நீர் நீட்டினீர், பூமி அவர்களை விழுங்கிப்போட்டது.

௰௩ நீர் மீட்டுக்கொண்ட இந்தச் சனத்தை உம்முடைய கிருபையினாலே அழைத்துவந்தீர், உம்முடைய பரிசுத்தவாசஸ்தலத்துக்குநேராக அதையும் உம்முடைய பலத்தினாலே வழிநடத்தினீர்.

௰௪ சனங்கள் அதைக் கேட்டுத் தத்தளிக்கும், பெலிஸ்தேயாவின் குடிகளை வேதனை பிடிக்கும்.

௰௫ அப்பொழுது ஏதோமின் பிரபுக்கள் கலங்குவார்கள், மோவாபிலுள்ள வல்லமையுள்ளவர்களை நடுக்கம் பிடிக்கும், கானானின் குடிகளெல்லாம் கரைந்துபோவார்கள்.

௰௬ பயங்கரமும் திகிலும் அவர்கள்மேல் விழும், கர்த்தாவே! உமதுசனங்கடக்குமட்டும் நீர்மீட்ட இந்தச்சனமே கடந்து போகுமட்டும் அவர்கள் உம்முடைய புயத்தின் மகத்துவத்தினாலே கல்லைப்போல மவுனமாயிருப்பார்கள்.

௰௭ நீர் அவர்களை உட்பிரவேசிக்கப்பண்ணி அவர்களைக் கர்த்தராகிய தேவரீர் வாசம்பண்ணுகிறதற்குப் படைத்ததானமாகிய உம்முடைய சுதந்தரத்தின் பர்வதத்திலும் ஆண்டவராகிய தேவரீருடைய கரம் ஸ்தாபித்த பரிசுத்தஸ்தலத்திலும் நாட்டுவீர்.

௰௮ * கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் இராசரிக்கம்பண்ணுவார்.

* சங்கீ. ௯௩, ௧.

௰௯ ஏனென்றால் பார்வோனின் குதிரை அவன் இரதங்களோடும் அவன் குதிரைக்காரரோடும் சமுத்திரத்திற்குட் பிரவேசித்தது, அப்பொழுது கர்த்தர் சமுத்திரத்தின் தண்ணீர்களை அவர்கள்மேலே திரும்பப்பண்ணினார், இஸ்ரவேல் புத்திரரோவென்றால் சமுத்திரத்தின் நடுவே வெட்டாந்தரையிலே நடந்துவந்தார்களென்று பாடினார்கள்.

௨௰ ஆரோனின் சகோதரியாகிய மீரியாமென்ற தீர்க்கதரிசியுந் தன்கையிலே உடுக்கையெடுத்துக்கொண்டாள், சகல ஸ்திரீகளும் உடுக்கைகளையும் கீத வாத்தியங்க

ளுமெடுத்து அவள் பிறகாலே புறப்பட்டார்கள்.

௨௧ மீரியாம் அவர்களுக்கு மறுமொழியாகக் கர்த்தரைப் பாடுங்கள், ஏனென்றால் உயரவே உயர்ந்தார். குதிரையையும் அதின் மேலேறினவனையுங் கடலிலே தள்ளினாரென்று முதலாங் கவிகளைப் பாடினாள்.

கசப்பான தண்ணீர் தித்திப்பாக்கப்பட்டது.

௨௨ பிறபாடு மோசே இஸ்ரவேலரைச் சமுத்திரத்தைவிட்டுப் பயணம் புறப்படப்பண்ணினான், அவர்கள் சூர் வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போய் மூன்று நாள் வனாந்தரத்திலே தண்ணீரில்லையாமல் நடந்தது,

௨௩ மாராவிலே வந்தார்கள், ஆனால் மாராவின் தண்ணீரைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது, ஏனென்றால் அது கசப்பாயிருந்தது, அதினாலே அவ்விடத்திற்கு மாராவென்று பேரிடப்பட்டது.

௨௪ அப்பொழுது சனம் மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்து என்னத்தைக் குடிப்போமென்றார்கள்.

௨௫ மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான், அப்பொழுது கர்த்தர் மோசேக்கு ஒரு மரத்தைக் காண்பித்தார், அதையவன் தண்ணீரிலே போட்டபொழுது தண்ணீர் தித்திப்பாயிற்று, அவரங்கே அவர்களுக்குப் பிரமாணமும் நியாயமுங் கட்டளையிட்டு அங்கேயவர்களைச் சோதித்துச் சொன்னதாவது,

௨௬ நீ உன் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்கவே கேட்டு அவர் கண்களுக்குச் செம்மையானதைச் செய்து அவர் கற்பனைகளுக்குச் செவிகொடுத்து அவருடைய எல்லாக் கட்டளைகளையுங் கைக்கொண்டால் நாம் எஜிப்டரின் மேலிறங்கப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உன்மேலே யிறங்கப்பண்ணோம், ஏனென்றால் நாம் உன் பரிகாரியாகிய கர்த்தரென்றார்.

௨௭ பிறபாடு ஏலிமுக்கு வந்தார்கள், அங்கே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்ச மரங்களுமிருந்தது, அங்கே தண்ணீர்களண்டையிலே பாளயமிறங்கினார்கள்.

௰௬. அதிகாரம்.

முறுமுறுக்கிற சனத்திற்குக் கர்த்தர் காடைகளையும் மன்னாவையும் போஷிக்கக் கொடுத்தது.

இஸ்ரவேல் புத்திரர் ஏலிமைவிட்டுப் பயணம் புறப்பட்டார்கள், அவர்கள் எஜிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் மாதம் பதினைந்தாந் தேதியிலே அவர்களுடைய சபையெல்லாம் ஏலிமுக்குஞ் சீனாயிக்கும் நடுவேயிருக்கிற சீன் வனாந்தரத்திலே வந்தது.

௨ அங்கே வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுத்து,

௩ அவர்களோடே சொன்னதாவது, நாங்கள் இறைச்சிப் பானைகளண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எஜிப்து தேசத்திலே கர்த்தரின் கையினாலே செத்துப்போனோமானால் நலமே; ஏனென்றால் இந்தக் கூட்டத்தையெல்லாம் பட்டினியினாலே கொன்றுபோட எங்களைப் புறப்படப்பண்ணி இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களென்றார்கள்.

* ௪. மோசே. ௰௧, ௪.

௪ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது, இதோ நாம் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவோம், சனம் நம்முடைய நியாயப்பிரமாணத்திலே நடக்குமோ இல்லையோவென்று நாஞ்சோதிக்கும்படிக்கு அது புறப்பட்டு அன்றன்றுள்ள படியை ஒவ்வொரு நாளிலே சேர்க்கக்கடவது.

௫ ஆறாம் நாளிலோவென்றால் அவர்கள் கொண்டுவருகிறதைச் சேகரம்பண்ணக்கடவர்கள், அவர்கள் தினந்தினஞ் சேர்க்கிறதைப் பார்க்க அப்பொழுது இரண்டத்தனையுண்டாயிருக்குமென்றார்.

௬ அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரெல்லாரோடுஞ் சொன்னதாவது, கர்த்தர் உங்களை எஜிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரென்பதைச் சாயங்காலத்திலே யறிவீர்கள்.

௭ விடியற்காலத்திலே கர்த்தருடைய மகிமையையுங் காண்பீர்கள், ஏனென்றால் கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை யவர் கேட்டார், நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்களெம்மாத்திரமென்றார்கள்.

௮ பின்னையும் மோசே சொன்னதாவது, கர்த்தர் உங்களுக்குச் சாயங்காலத்திலே நீங்கள் போஷிக்கிறதற்கு இறைச்சியையும் விடியற்காலத்திலே நீங்கள் திர்ப்தியடையும்படிக்கு அப்பத்தையுங் கொடுக்கையில் அதைக் காண்பீர்கள், ஏனென்றால் கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை யவர் கேட்டார், நாங்களெம்மாத்திரம், உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கல்ல, கர்த்தருக்கு விரோதமாயிருக்கிறதென்றான்.

௯ பிறபாடு மோசே ஆரோனுடனே கர்த்தருக்கு முன்பாகச் சேருங்கள், ஏனென்றால் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டாரென்று இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கெல்லாஞ் சொல்லென்றான்.

௰ ஆரோன் இஸ்ரவேல்புத்திரரின் சபைக ளெல்லாத்தோடே சொல்லுகிறபொழுது, அவர்கள் வனாந்தரத்திசையாகத் திரும்பிப் பார்த்தார்கள். அப்பொழுது இதோ கர்த் தருடைய மகிமை மேகத்திலே காணப் பட்டது.

௧௧ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது,

௧௨ இஸ்ரவேல்புத்திரரின் முறுமுறுப்பு களைக்கேட்டேன், நீ அவர்களுடனே பே சிச்சாயங்காலத்திலே இறைச்சியைப் புசிப்பீர்கள் விடியற்காலத்திலே அப்பத்தா லே திருப்தியாவீர்கள் நாம உங்கள்பராபரனாகிய கர்த்தரென்று அறிவீர்களென்று சொல லென்றார்.

௧௩ சாயங்காலத்திலே சமபவித்ததெ ன்னவென்றால் காடைகளவந்தேறிப்பாளய த்தை மூடிற்று. விடியற்காலத்திலேவெ ளிப்பாளயத்தைச்சுற்றிலும் பனிவிழுந்திரு ந்தது. * ௪. மோசே. ௰௧, ௩௧.

௧௪ விழுந்திருந்தபனிவிட்டபிறபாடு இதோ வனாந்தரத்தின்மேலே சிறுசும உருட் சியாயிருக்கிறவைகள இருந்தது, அவைகள தரையிலே உறைந்த பனியத் தனைசிறியதாய்க்கிடந்தது.

௧௫ இஸ்ரவேல்புத்திரர் அதைக்கண்டு ஒருவரோடொருவர் இதுமன்னாவென்றார்க ள். ஏனெனில அதேதென்றறியாதிருந் தார்கள். அப்பொழுது மோசே அவர்க ளோடேசொன்னதாவது, இதுகர்த்தர் உ ங்களுக்குப்புசிக்கக்கொடுத்த அப்பம.

௧௬ கர்த்தர் கற்பித்தகாரியம ஏதெ னனில், அவனவன் புசிக்கத்தக்கமட்டும அ திலே சேர்க்கக்கடவீர்கள, உங்கள ஆத்துமாக்களுடைய இலக்கத்தின்படியே அவனவன் கூடாரத்திலிருக்கிறவர்களு க்காக ஒவ்வொருத்தனுக்கு ஒருதாழி ஓமரக் காச் சேர்த்துக்கொள்ளக்கடவீர்களாகவென றார்.

௧௭ இஸ்ரவேல்புத்திரர் அப்படிச்செய து, சிலர் அதிகமும் சிலர்கொஞ்சமுமாய்ச சேர்த்தார்கள்.

௧௮ ஓமரால அளந்தார்கள, * அதிகமாய்ச்சேர்த்தவனுக்கு அதிகமான துமில்லை, கொஞ்சமாய்ச்சேர்த்தவனுக்கு குறைவானதுமிலலை, அவரவர் தாங்கள புசிக்கத்தக்கமட்டும எடுத்துக்கொண் டார்கள். * ௨. கொரி. ௮, ௰௫.

௧௯ மோசே அவர்களுடனே ஒருவனும விடியற்காலமட்டும ஒன்றும வைக்க வேண்டாமென்றான்.

௨௰ ஆனாலும் மோசேயின சொறகேளாமற் சிலர் அதைவிடியற்காலமட்டுங் கொஞ்சம் மீதியாக வைத்தார்கள, அது பூசசிப்பிடித்து நாறிப்போயிற்று. அவர்கள்மேலே மோ சே கோபமடைந்தான்.

௨௧ அதைக்காலமாறு அவனவன்போ சிக்கத்தக்கமட்டுஞ் சேர்த்தார்கள், ஏனெ னில வெயயில ஏறுகிறபொழுது உருகிப போம.

௨௨ ஆறாமநாளிலே சமபவித்ததெ னறால, அவர்கள் இரணடத்தின அபபம ஒவ்வொருவனுக்கு இரணடுபடியாகச சேர்த்தார்கள, அபபொழுது சபையின த லைவரெலலாருமவநது அதைமோசேக்கறி வித்தார்கள.

௨௩ அவன இவர்களோடேசொனனதா வது, கர்த்தர்சொனனது இதுதானே, நா ளைக்கர்த்தருடைய பரிசுத்த ஓயவுநாளாகி ய ஓயவுநாளிருக்குதல, நீஙகள சுடப்போகிற தைச்சுட்டுச்சமைக்கப்போகிறதைச்சமை த்துமீதியாயிருக்கிறதையெலலாம நாளைம டடும உஙகளுக்காக வைததுவையுஙகளெ னறான.

௨௪ மோசேகற்பித்தபடியே அதைம றுநாளமட்டுமவைத்தார்கள, அபபொழு து அதுநாறினதுமிலலை அதிலே பூசசிப்பி டித்திருநததுமிலலை.

௨௫ அபபொழுதுமோசேசொனனதா வது, அதை இனறைக்குப்புசியுஙகள, ஏனெனில இனறுகர்த்தரின ஓயவுநாள, இ னறு நீஙகள அதைவெளியிலேகணடுபிடிப பதிலலை.

௨௬ ஆறுநாளும அதைசசேர்பபீர்களா க, ஏழாமநாள ஓயவுநாளாயிருக்கிறது, அதிலே அது உணடாயிராதென்றான.

௨௭ ஏழாமநாளிலே சமபவித்ததாவெ னில, சனத்திலேசிலர் அதைசசேர்க்கப்புற ப்பட்டார்கள ஆனாலகணடுபிடியாமற்போ னார்கள.

௨௮ அபபொழுதுகர்த்தர்மோசேயோ டேசொனனதாவது, நமது கற்பனைகளையு ம நமது நியாயப்பிரமாணஙகளையுங்கைக் கொளள எததமட்டும மனதிலலாமற்போ கிறீர்கள.

௨௯ பாருஙகள, கர்த்தர் உஙகளுக்கு ஓயவுநாளைக் கொடுத்தபடியினாலே அவர் உஙகளுக்கு ஆறாமநாளிலே இரணடுநாளு டைய அபபத்தைக்கொடுக்கிறார், ஏழாம நாளில ஒருவனுந்தன தானத்திலிருந்து பு றபபடாமல நீஙகள அவனவனதன தானத திலிருஙகளென்றார்.

௩௰ அபபடியே சனம ஏழாமநாளிலே ஓயநதிருநதிருநதது.

௩௧ இஸ்ரவேலவீட்டார் அதறகுமனனா வெனறுபேரிட்டார்கள, * அது கொத்தம லலி அமமாத்திரமும வெணமையுமாயிரு நதது, அதினருசிதேனிட்டசசாயத்தப் பொபபாயிருநதது. * ௪. மோசே. ௰௧. ௭.

௩௨ மோசேசொனனதாவது, கர்த்தர் கற்பித்தகாரியமேதெனில நாஙகளை எகி பத்துதேசத்திலிருநது புறப்பட....னனின

பொழுதுஉங்களுக்குவனாந்தரத்திலேபோஷிக்கக்கொடுத்த அப்பத்தையுங்கள்தலைமுறைகள்பார்க்கும்படிக்கு அவர்களுக்காகக் காத்துவைப்பதற்கு அதிலே ஒருநாழிநிரம்பஎடுத்துவையென்பதுதானென்றான்.

௩௩ பின்னையும்மோசே ஆரோனுடனே * நீ ஒருபாத்திரத்தைவாங்கி அதிலே ஒருநாழிமன்னாவைப்போட்டு அதையுங்கள் தலைமுறைகளுக்காகக்காப்பாற்றக் கர்த்தருக்குமுன்பாகவையென்றான். * எபிரே. ௯, ௪.

௩௪ கர்த்தர் மோசேக்குக்கற்பித்தபடியே அதுகாக்கப்படும்படிக்கு ஆரோன் அதைச்சாட்சிக்குமுன்பாகவைத்தான்.

௩௫ * இஸ்ரவேல்புத்திரர்குடியிருப்பான தேசத்திற்குவருமட்டும் நாற்பதுவருஷம் மன்னாவைப்பொசித்தார்கள், அவர்கள்கானான்தேசத்தின் எல்லையிலே வருமட்டாகத் தானேமன்னாவைப்பொசித்தார்கள்.

* யோசுவா. ௫, ௰௨.

௩௬ ஒருநாழியோவென்றால், மரக்காலிலே பத்திலொருபங்காயிருக்கின்றது.

௰௭. அதிகாரம்.

கர்த்தர் சனத்திற்குக் கல்மலையிலிருந்து தண்ணீர்வரப்பண்ணினது.

பிறபாடு இஸ்ரவேல்புத்திரரின் சபையெல்லாஞ்சீன்வனாந்தரத்திலிருந்து பயணம்புறப்பட்டுக் கர்த்தருடையகட்டளையின்படியேபண்ணுந்தங்கள்பயணங்களில் இரவீதிமிலேவந்துபாளயமிறங்கினார்கள், அங்கே சனங்குடிக்கத்தண்ணீரில்லாதிருந்தது.

௨ அப்பொழுது சனம்மோசேயோடே வாதுபண்ணி நாங்கள்குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தாருங்களென்றார்கள், மோசேயோவென்றால் அவர்களுடனேயென்னோடே ஏன்வாதுபண்ணுகிறீர்கள்? கர்த்தரையேன் பரிட்சை பார்க்கிறீர்களென்றான்.

௩ ஆனாற்சனம் அவ்விடத்திலே தண்ணீர்த்தவனமாயிருந்தபடியினாலே சனம் மோசேக்கு விரோதமாக்முறுமுறுத்து நீர் எங்களையும் எங்கள்பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையுந் தண்ணீர்த்தவனத்தினாலேகொன்றுபோட எங்களை எகிப்திலிருந்துவந்தேறப்பண்ணினதேதென்றார்கள்.

௪ மோசேகர்த்தரைநோக்கிக் கூப்பிட்டு இந்தச் சனத்திற்கு நானென்ன செய்வேன்? * அவர்கள் என்னைக்கல்லெறியச்சற்றுத்தப்புமென்றான். * ௪. மோசே. ௰௪, ௰.

௫ அப்பொழுது கர்த்தர் மோசேயோடேசொன்னதாவது நீ சனத்திற்குமுன்பாக நடந்து இஸ்ரவேலின் மூப்பரிற்சிலரையுன்னோடேகூட்டி நீ ஆற்றையடித்த உன்கோலையுங்கையிலேபிடித்துக்கொண்டுபோ.

௬ இதோ நாம் அங்கே ஓரேபிலே உனக்குமுன்பாகக்கல்மலையின்மேல் நிற்போம், அங்கேகல்மலையையடிப்பாயாக அப்பொழுது சனங்குடிக்க அதிலிருந்து தண்ணீர்புறப்படுமென்றார், இப்படியேமோசேஇஸ்ரவேலருடையமூப்பரின்கண்களுக்குமுன்பாகச்செய்தான்.

௭ இஸ்ரவேல்புத்திரருடையவாதினிமித்தமும் கர்த்தர் எங்கள்நடுவிலிருக்கிறாரோ இல்லையோ என்று அவர்கள்கர்த்தரைப்பரிட்சைபார்த்ததினிமித்தமும் அவன் அந்தஸ்தலத்திற்கு * மாசா என்றும் மெரிபாவென்றும்பேரிட்டான். * சங்கீதம். ௯௫, ௮. ௯.

இஸ்ரவேல் அமலேக்கைச்செயங்கொண்டது.

௮ அமலேக்கியர்வந்து இரவீதிமிலே இஸ்ரவேலரோடேயுத்தம்பண்ணினார்கள்.

௯ அப்பொழுது மோசேயோசுவாவுடனே, நீ நமக்கு மனிதரைத்தெரிந்துகொண்டு புறப்பட்டு அமலேக்குக்குவிரோதமாகயுத்தம்பண்ணு, நாளைக்குநான் மேட்டினுடையசிகரத்தின்மேலேபராபரனுடைய கோலை என்கையிலேபிடித்துக்கொண்டு நிற்பேனென்றான்.

௰ மோசே தனக்குச்சொன்னபடியே யோசுவா அமலேக்குக்குவிரோதமாகயுத்தம்பண்ணும்படிக்குச்செய்தான், ஆனால் மோசேயும் ஆரோனும் ஊரும்மேட்டினுடையசிகரத்தின்மேலேறினார்கள்.

௰௧ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், மோசேதன்கையை ஏறெடுத்திருக்கையிலே இஸ்ரவேல்மேற்கொண்டது, ஆனால் அவன் தன்கையைத்தாழவிடுகையிலே அமலேக்மேற்கொண்டது.

௰௨ மோசேயின் கைகளோவென்றால் பாரமாயிருந்து, ஆகையால்ஒருகல்லைக்கொண்டுவந்து அவனுக்குக்கீழ்வைத்தார்கள், அதின்மேலே உட்கார்ந்தான், ஆரோனும்ஊருமோவெனில் ஒருவன் இந்தண்டையும் ஒருவன் அந்தண்டையுமாயிருந்து அவனைக் கைத்தாங்கினார்கள், இந்தடவாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்குமட்டும் ஒருநேராயிருந்தது.

௰௩ அப்படியே யோசுவா அமலேக்கையும் அவன்சனத்தையும்பட்டயத்தின்கருக்கினாலேமுறியஅடித்தான்.

௰௪ * பிறபாடுகர்த்தர்மோசேயுடனே, நீ இதைநினைவுகூருதலுக்காகஒருபுத்தகத்திலெழுதி யோசுவாவின் செவிகளுக்குக்கொப்புவி, ஏனெனில் அமலேக்கை வானத்தின்கீழிராதபடிக்கு நாசம்பண்ணவேபண்ணுவேனென்றார். * ௫. மோசே. ௨௫, ௰௭. ௰௯. ௧. சாமுவேல். ௰௫, ௨௩.

௰ரு மோசே ஒரு பீடத்தைக் கட்டி அதற்குக் கர்த்தர் என்னுடைய கொடியென்று பேரிட்டு,

௰௬ அமலேக்கியரைக் கர்த்தருடைய ஆசனத்துக்கு விரோதமானபடியினாலே கர்த்தருக்குத் தலைமுறை தலைமுறையாக அவனுக்கு விரோதமாயிருக்குமென்றான்.

௰அ. அதிகாரம்.

மோசேயின் மாமனாகிய எத்திரோ மோசேயைக் காணும்படிக்கு வந்ததும், ஜனத்தின் விசாரிக்கையைக் குறித்து அவனுக்கு ஆலோசனை சொன்னதும்.

௧ பராபரன் மோசேக்கும் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்ததெல்லாவற்றையும் கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும் * மீதியானின் ஆசாரியனும் மோசேயின் மாமனுமாகிய எத்திரோ கேட்டபொழுது, * ௩, ௧.

௨ அவன் * மோசே திருப்பியனுப்பியிருந்த அவன் பெண்சாதியாகிய சிப்போராளையும், * ௪, ௨௰.

௩ அவளுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு வந்தான், * ஒருவனுக்குக் கெர்சோன், ஏனென்றால் அந்நிய தேசத்திலே பரதேசியானேனென்றான். * ௨, ௨௨.

௪ மற்றவன் பேர் எலியேசர், ஏனென்று என் பிதாவின் பராபரன் எனக்குத் துணையாயிருந்து பார்வோனின் பட்டயத்திற்கு என்னைத் தப்புவித்தாரென்றான்.

௫ மோசேயின் மாமனாகிய எத்திரோ அவன் குமாரரோடும் அவன் பெண்சாதியோடுங்கூட மோசே பாளயமிறங்கியிருந்த பராபரனுடைய பர்வதமிருக்கும் வனாந்தரத்திலே அவனண்டைக்கு வந்து,

௬ எத்திரோவென்கிற உன் மாமனாகிய நான் உன் பெண்சாதியும் அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உன்னண்டைக்கு வந்திருக்கிறோமென்று மோசேக்குச் சொல்லியனுப்பினான்.

௭ அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டுபோய் அவனை வணங்கி முத்தஞ்செய்தான், இருவரும் ஒருவரையொருவர் சுகசெய்தி கேட்டுக் கூடாரத்திலே பிரவேசித்தார்கள்.

௮ அப்பொழுது மோசே தன் மாமனுக்குக் கர்த்தர் இஸ்ரவேலுக்காகப் பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் செய்ததெல்லாவற்றையும் வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும் கர்த்தர் தங்களை நீங்கலாக்கி ரட்சித்ததையும் விவரித்தான்.

௯ கர்த்தர் இஸ்ரவேலை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து அநுக்கிரகஞ்செய்த எல்லா நன்மையினிமித்தமும் எத்திரோ சந்தோஷப்பட்டுச் சொன்னதாவது,

௰ உங்களை எகிப்தியரின் கைக்கும் பார்வோனின் கைக்கும் தப்புவித்து எகிப்தியருடைய கையின் கீழிருந்த ஜனத்தை விடுவித்த கர்த்தர் தோத்திரிக்கப்பட்டவர்.

௰௧ கர்த்தர் எல்லாத் தேவர்களிலும் பார்க்கப் பெரியவரென்பதை இப்பொழுது அறிவேன், ஏனெனில் அவர்கள் இடும்புசெய்த காரியத்திலே அவர்களை மேற்கொண்டாரென்று சொல்லி,

௰௨ மோசேயின் மாமனாகிய எத்திரோ சர்வாங்க தகனத்தையும் பலிகளையும் பராபரனுக்குக் கொண்டுபோய்ச் செலுத்தினான், பிற்பாடு ஆரோனும் இஸ்ரவேலின் மூப்பர் அனைவரும் மோசேயின் மாமனோடேகூடப் பராபரனுக்கு முன்பாக அப்பம் போசிக்க வந்தார்கள்.

௰௩ மறுநாளிலே சம்பவித்ததேதெனில் மோசே ஜனத்தை நியாயம் விசாரிக்க உட்கார்ந்தான், ஜனங்கள் காலமே துவக்கிச் சாயங்காலமட்டும் மோசேக்கு முன்பாக நின்றது.

௰௪ அவன் ஜனத்திற்காகச் செய்ததையெல்லாம் மோசேயின் மாமன் கண்டு நீ ஜனத்திற்காகச் செய்கிற இந்தக் காரியமென்ன நீ ஒருவனாய் உட்கார்ந்திருக்கச் ஜனமெல்லாம் காலமே துவக்கிச் சாயங்காலமட்டும் உனக்கு முன்பாக நிற்பானேனென்றான்.

௰௫ அப்பொழுது மோசே தன் மாமனுக்குச் சொன்னது, பராபரனைக் கேட்கச் ஜனம் என்னண்டைக்கு வரும்.

௰௬ ஏனெனில் அவர்களுக்கு ஒரு காரியமிருந்தால் என்னண்டைக்கு வருகிறார்கள், அப்பொழுது நான் அவனவனுக்கும் அவனவனுக்கடுத்தவனுக்கும் நியாயந்தீர்த்துப் பராபரனுடைய கட்டளைகளையும் அவருடைய நியாயப்பிரமாணங்களையும் அறிவிக்கிறேனென்றான்.

௰௭ அப்பொழுது மோசேயின் மாமன் அவனோடே சொன்னதாவது, நீ செய்கிற காரியம் நல்லதல்ல.

௰௮ நீயும் நீ தொய்யவே தொய்ந்துபோகிறாய், உன்னோடிருக்கிற இந்தச் ஜனமும் அப்படித்தான், ஏனென்றால் அது உனக்கு மிஞ்சின பாரமான காரியம், நீ ஒருவனாய் அதைச் செய்யக்கூடாது.

௰௯ இப்பொழுது என் சொல்லைக் கேள், உனக்கொரு ஆலோசனை சொல்லுவேன், அப்பொழுது பராபரன் உன்னோடேகூட விருப்பார், ஜனத்திற்காக நீ பராபரனுக்கு முன்பாகவிரு, நீ விசேஷங்களைப் பராபரனண்டைக்குக் கொண்டுபோய்,

௨௰ கட்டளைகளையும் நியாயப்பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்கள் நடக்கவேண்டிய வழியையும் அவர்கள் செய்யவேண்டிய கிரியையையும் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவாயாக.

௨௧ அன்றியும் நீ எல்லாச் சனத்திலும் பராபரனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையைப் பகைக்கிறவர்களுமான திறமையுள்ள மனிதரைப் பார்த்து அவர்களை அவர்கள் மேல் ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும் நூறுபேருக்கு அதிபதிகளாகவும் ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும் பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் வை.

௨௨ அவர்கள் சகலகாலத்திலும் சனத்தை நியாயம் விசாரித்துச் சகல பெரிய காரியத்தையும் உன்னிடத்துக்குக் கொண்டுவந்து சகல சின்னகாரியத்தையும் தாங்களே தீர்க்கக்கடவர்கள், இப்படி உன்மேலிருக்கிற பாரத்தை லகுவாக்கு, அவர்கள் உன்னோடேகூடச் சுமப்பார்களாக.

௨௩ இந்தப்பிரகாரமாக நீ செய்வதும் இப்படிப் பராபரன் உனக்குக் கட்டளையிடுவதுமுண்டானால் நீ நிலைநிற்கக்கூடும். இந்த எல்லாச் சனமும் சுகமாய்த் தங்களிடத்துக்குப் போய்ச் சேரலாமென்றான்.

௨௪ மோசே தன் மாமன் சொற்கேட்டு அவன் சொன்னபடியெல்லாஞ் செய்தான்.

௨௫ மோசே இஸ்ரவேலிலெல்லாந் திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும் நூறுபேருக்கு அதிபதிகளாகவும் ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும் பத்துப்பேருக்கு அதிபதிகளாகவுஞ் சனத்தின்மேல் தலைவராக்கினான்.

௨௬ அவர்கள் சகலகாலத்திலுஞ் சனத்தை நியாயம் விசாரிப்பார்கள், பெலத்த காரியத்தை மோசேயினிடத்துக்குக் கொண்டுவந்து சின்னகாரியத்தையெல்லாந் தாங்களே தீர்ப்பார்கள்.

௨௭ பிறபாடு மோசே தன் மாமனையனுப்பிவிட்டான், இவன் திரும்பித் தன் தேசத்துக்குப் போய்விட்டான்.

௰௯. அதிகாரம்.

சீனாய்ப்பர்வதத்திலே நியாயப்பிரமாணங் கொடுக்கப்படுகிறதற்கு முன்னான ஆயத்தம்.

இஸ்ரவேல்புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட மூன்றாம் மாதம் அதே நாளிலே சீனாய் வனாந்தரத்தில் வந்தார்கள்.

௨ அவர்கள் ரெவிதீமிலிருந்து பயணம் புறப்பட்டுச் சீனாய் வனாந்தரத்தில் வந்து வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள், அங்கே பர்வதத்துக்கெதிராக இஸ்ரவேல் பாளயமிறங்கினபொழுது,

௩ மோசே பராபரனிடத்துக்கு ஏறினான், கர்த்தர் பர்வதத்திலிருந்து அவனைக் கூப்பிட்டுச் சொன்னதாவது, நீ யாக்கோபு வீட்டாருக்குச் சொல்லவும் இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியதேதெனில்,

௪ நாம் எகிப்தியருக்குச் செய்ததையும் நாம் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேல் சுமந்து உங்களை நம்மண்டைச் சேர்த்ததையும் நீங்கள் கண்டீர்கள்.
* ரு. மோசே. ௩௨, ௰௧.

௫ இப்பொழுதும் நீங்கள் நமது சத்தத்தைக் கேட்டு நமது உடம்படிக்கையைக் கைக்கொண்டால் சகல சனங்களிலும் * நீங்கள் நமக்குச் சொந்தசம்பத்தாயிருப்பீர்கள், ஏனென்றால் பூமியெல்லாம் நம்முடையது. * ரு. மோசே. எ, ௬.

௬ நீங்கள் நமக்கு * ஆசாரிய இராச்சியமும் பரிசுத்த சாதியுமாயிருப்பீர்களென்பது, நீ இஸ்ரவேல்புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகளென்றார்.
* ௧. பேதுரு. ௨, ௯.

௭ மோசே வந்து சனத்தின் மூப்பரை அழைப்பித்துக் கர்த்தர் தனக்குக் கற்பித்த இந்த வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான்.

௮ அப்பொழுது சனமெல்லாம் ஏகமாய்ப் பிரதியுத்தாரங் கொடுத்துக் * கர்த்தர் சொன்னதையெல்லாஞ் செய்வோமென்றார்கள், மோசே சனத்தின் வார்த்தைகளைக் கர்த்தரண்டைக்குத் திரும்பக் கொண்டுபோனான். * ௨௪, ௩.

௯ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே இதோ நாமுன்னோடே சொல்லும் வார்த்தைகளைச் சனங் கேட்டு அது உன்னையும் என்றைக்கும் விசுவாசிக்கும்படிக்கு நாம் மேகத்தின் இருட்டிலே உன்னிடத்துக்கு வருவோமென்றார், ஏனென்றால் சனத்தின் வார்த்தைகளை மோசே கர்த்தருக்கு அறிவித்திருந்தான்.

௰ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது, நீ சனத்தண்டைக்குப் போய் இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தமாக்கு, அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வெளுத்து,

௰௧ மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள், ஏனென்றால் மூன்றாம் நாளிலே கர்த்தர் எல்லாச் சனத்தின் கண்களுக்கு முன்பாகச் சீனாய்ப்பர்வதத்தின் மேலிறங்குவார்.

௰௨ நீ சனத்திற்குச் சுற்றிலும் எல்லை குறித்துப் * பர்வதத்திலேறாதபடிக்கும் அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்களென்று சொல்லுவாயாக, ஏனென்றால் பர்வதத்தைத் தொடுகிறவனெவனாகிலுங் கொலையுண்ணக்கடவன் கொலையுண்டான். * எபிரே. ௰௨, ௨௦.

௰௩ ஒருவனாகிலும் அதைத் தொடவேண்டாம், மிருகமாகிலும் மனிதனாகிலும் அதைத் தொட்டால் கட்டாயம் கல்லெறிபட்டே அல்லது எய்யப்பட்டே சாகவேண்டும்; எக்காளம் நீடித்துத் தொனிக்கும்போது அவர்கள் பர்வதத்தில் ஏறக்கடவர்கள் என்றார்.

௰௪ அப்படியே மோசே பர்வதத்திலிருந்து சனத்தண்டைக்கு இறங்கிச் சனத்தைப் பரிசுத்தமாக்கினான், அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் துவைத்தார்கள்.

௰௫ அவன் சனத்தை நோக்கி மூன்றாம் நாளுக்கு ஆயத்தப்பட்டிருங்கள், பெண்சாதிகளிடத்தில் சேராதிருங்கள் என்றான்.

௰௬ மூன்றாம் நாளிலே விடியற்காலமாகிறபொழுது சமுத்திரத்தின்மேல் இடிமுழக்கங்களும் மின்னல்களும் பர்வதத்தின்மேல் கார்மேகமும் மகா பலத்த எக்காளச் சத்தமும் உண்டாயிற்று, பாளயத்திலிருந்த சனமெல்லாம் நடுங்கிற்று.

௰௭ அப்பொழுது மோசே சனத்தைப் பராபரனுக்கு எதிர்கொண்டுபோகப் பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான், * அவர்கள் பர்வதத்தின் அடியிலே தாழ்ந்து நின்றார்கள். * ந. மோசே. ச, ௰௧.

௰௮ சீனாய்ப் பர்வதத்தின்மேலே அக்கினியிலே கர்த்தர் இறங்கினபடியினாலே அவையெல்லாம் புகைக்காடாயிருந்தது, அதின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று, பர்வதமெல்லாம் மிகவும் அதிர்ந்தது.

௰௯ எக்காளச் சத்தம் வரவர மிகவும் பலத்தபோது, மோசே பேசினான், பராபரன் அவனுக்குச் சத்தமாய் மறுமொழி கொடுத்தார்.

௨௰ கர்த்தர் சீனாய்ப் பர்வதத்தின் உச்சியிலிருக்கிற கொடுமுடியிலே இறங்கினபொழுது கர்த்தர் மோசேயைப் பர்வதத்தின் கொடுமுடிக்கு அழைத்தார், மோசே ஏறினான்.

௨௧ அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போய், சனங்கள் கர்த்தரண்டை கிட்டப் பார்க்கிறதற்கு எல்லையைக் கடவாதபடிக்கும் அவர்களில் அநேகர் விழுந்து போகாதபடிக்கும் நீ இறங்கி அவர்களைத் திடச்சாட்சியாக எச்சரி.

௨௨ கர்த்தரண்டையிலே சேருகிற ஆசாரியர்களும் கர்த்தர் தங்களுக்குள்ளே அழிவுசெய்யாதபடிக்குத் தங்களைப் பரிசுத்தமாக்கிக்கடவர்கள் என்றார்.

௨௩ அப்பொழுது மோசே கர்த்தருடனே சனங்கள் சீனாய்ப் பர்வதத்தில் ஏறமாட்டார்கள், ஏனென்றால் பர்வதத்தை எல்லைபிரித்து அதைப் பரிசுத்தமாக்கு என்று தேவரீர் எங்களுக்குத் திடச்சாட்சியாய் எச்சரித்தீரே என்றான்.

௨௪ ஆகையால் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இறங்கிப்போ, நீயும் உன்னோடேகூட ஆரோனும் ஏறிவாருங்கள், ஆசாரியர்களும் சனங்களும் கர்த்தரிடத்தில் ஏறிவரும்படிக்கு அவர் அவர்களை அதம்பண்ணாதபடிக்கு எல்லையைக் கடந்துவாராதிருக்கவேண்டும் என்றார்.

௨௫ அப்படியே மோசே சனத்தண்டைக்கு இறங்கிப்போய் அதை அவர்களுக்குச் சொன்னான்.

௨௰. அதிகாரம்.

திருப்பர்வதத்திலே பராபரன் தந்த கற்பனைகளைக் கூறினது.

௧ அப்பொழுது பராபரன் பேசிச்சொன்ன எல்லா வார்த்தைகளுமாவது,

௨ * உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் பராபரனாகிய கர்த்தர் நாமே.

* ந. மோசே. ரு, சா. ௩௨ சங்கீதம். அ௧, ௰௧.

௩ நமக்கு முன்பாக உனக்கு வேறு தேவர்களுண்டாயிருக்கவேண்டாம்.

௪ மேலே வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டானவைகளுக்கொத்திருக்கிற * ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்.

* க. மோசே. உச, க. சங்கீ. ௯௭, எ.

௫ நீ அவைகளை நமஸ்கரிக்கவும் அவைகளைச் சேவிக்கவும் வேண்டாம், ஏனென்றால் உன் பராபரனாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனாயிருந்து நம்மைப் பகைக்கிறவர்களுக்கென்று பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நாலாந் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம்.

௬ அல்லாமல் நம்மைச் சிநேகித்து நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு ஆயிரந் தலைமுறைமட்டும் தயவு செய்கிறவராயிருக்கிறோம்.

௭ உன் பராபரனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காயாக, ஏனென்றால் கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

௮ ஓய்வுநாளைப் பரிசுத்தமாகக் கொள்ளுவாயாக.

௯ ஆறுநாள் நீ வேலைசெய்து உன் கிரியைகளெல்லாம் நடப்பிப்பாயாக.

௰ ஏழாம் நாள் உன் பராபரனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள், அதிலே நீயாகிலும் உன் குமாரனாகிலும் உன் குமாரத்தியாகிலும் உன் வேலைக்காரனாகிலும் உன் வேலைக்காரியாகிலும் உன் மிருகஜீவனாகிலும் உன் வாசலுக்குள்ளிருக்கிற உன்

பரதேசியானாலும் யாதொரு வேலையைச் செய்யவேண்டாம்.

௰௧ ஏனென்றால் கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையுஞ் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி * ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார், ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்.

* ௧. மோசே. ௨, ௨௩.

௰௨ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருக்கிறதற்கு உன் தகப்பனையும் உன் தாயையுங் கனம்பண்ணுவாயாக.

௰௩ கொலை செய்யாயாக.

௰௪ விபசாரம்பண்ணாயாக.

௰௫ களவு செய்யாயாக.

௰௬ உனக்கடுத்தவனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாயாக.

௰௭ உனக்கடுத்தவன் வீட்டை இச்சியாயாக, உனக்கடுத்தவனுடைய பெண்சாதியையும் அவனுடைய வேலைக்காரனையும் அவனுடைய வேலைக்காரியையும் அவனுடைய எருதையும் அவனுடைய கழுதையையும் பின்னை யுனக்கடுத்தவனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாயாகவென்றார்.

௰௮ சனமெல்லாம் இடிமுழக்கங்களையும் மின்னல்களையும் எக்காளசத்தத்தையும் பர்வதம் புகைகிறதையுங் கண்டது, அதைக் கண்கையில் சனம் பின்வாங்கித் தூரத்தில் நின்று,

௰௯ மோசேயுடனே நீர் எங்களோடே பேசும் நாங்கள் கேட்போம், நாங்கள் சாவாதபடிக்குப் பராபரன் எங்களோடே பேசாதிருப்பாராகவென்றார்கள்.

௨௰ மோசே சனத்துடனே பயப்படாதேயுங்கள், ஏனென்றால் உங்களைச் சோதிப்பதற்காகவும் நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு அவர் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும் பராபரன் வந்தாரென்றான்.

௨௰௧ சனந் தூரத்திலே நின்றது, மோசேயோவென்றால் பராபரன் இருந்த இருளுக்குள்ளே சேர்ந்துபோனான்.

௨௰௨ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியதேதென்னில் நாம் வானத்திலிருந்து உங்களோடே பேசினதை நீங்கள் கண்டீர்கள்.

௨௰௩ நீங்கள் நமக்கு முன்பாக வெள்ளித் தேவர்களையாகிலும் பொன் தேவர்களையாகிலும் உங்களுக்கு உண்டாக்கவே உண்டாக்கவேண்டாம்.

௨௰௪ நீ மண்ணினால் பலிபீடத்தை நமக்குண்டாக்கி அதின் மேல் உன் தகனபலிகளையும் உன் சமாதானபலிகளையும் உன் ஆடுகளையும் உன் மாடுகளையும் பலியிடுவாயாக, நாம் எவ்விடத்திலாகிலும் நம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபம்பண்ணினால் அவ்விடத்தில் உன்னண்டைக்கு வந்து உன்னை ஆசீர்வதிப்போம்.

௨௰௫ கல்லான பலிபீடத்தை நமக்குண்டாக்கப்போனாயேயாகில் அதை வெட்டின கல்லுகளாலே கட்டாயாக, ஏனென்றால் நீ உன் உளியை அதின் மேல் நடமாடப்பண்ணுகிறதினால் அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குவாய்.

௨௰௬ நமது பலிபீடத்திற்கு முன்பாக உன் நிருவாணங் காணப்படாதபடிக்கு நீ அதற்குப் படிகளாலே ஏறவும் வேண்டாம்.

௨௰௧. அதிகாரம்.

அடிமைகளுக்காகக் கட்டளையிட்ட கற்பனைகள்.

பின்னையும் நீ அவர்களுக்கு அறிவிக்கவேண்டிய நியாயங்களாவது,

௨ எபிரேயசாதியான அடிமையைக் கொண்டாயானால் அவன் ஆறுவருஷஞ் சேவித்து ஏழாம் வருஷத்திலே இலவசமாகத் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்பட்டுப்போவானாக.

௩ ஒண்டிக்காரனாய் வந்திருந்தானானால் ஒண்டிக்காரனாய்ப் புறப்படுவானாக, பெண்சாதிக்குப் புருஷனாயிருந்தானானால் அவன் பெண்சாதி அவனோடே கூடப் புறப்படுவாளாக.

௪ அவன் எசமான் அவனுக்குப் பெண்சாதியைக் கொடுத்ததும் இவள் அவனுக்கு ஆண்பிள்ளைகளையாகிலும் பெண்பிள்ளைகளையாகிலும் பெற்றதுமுண்டானால் பெண்சாதியும் அவள் பிள்ளைகளும் அவள் எசமானைச் சேர்வார்களாக, அவன் ஒருவனாய்ப் புறப்படுவானாக.

௫ அந்த வேலைக்காரனோவென்றால் என் எசமானையும் என் பெண்சாதியையும் என் பிள்ளைகளையும் சிநேகிக்கிறேன், நான் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்படுவதில்லையென்று சொல்லவே சொன்னால்,

௬ அவன் எசமான் அவனைத் தேவர்சன்னிதானத்துக்கு அழைத்துப்போய் அவனைக் கதவினிடத்தில் அல்லது கதவின் நிலையினிடத்தில் சேர்ப்பண்ணக்கடவன், அங்கே அவன் எசமான் அவன் காதைக் கம்பியினாலே குத்துவானாக, அதற்குப்பின் என்றைக்கும் அவனுக்கு வேலை செய்யக்கடவன்.

௭ ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப்போட்டானானால் அவள் வேலைக்காரர் புறப்படுகிறப்பிரகாரமாய்ப் புறப்படவேண்டாம்.

[illegible marginal notes]

௨௰ ஒருவன் தன்னடிமையை அல்லது தன்னடிமைப்பெண்ணைக் கோலினாலே அடிக்கிறதினாலே இவன் அவன் கையின்கீழ்ச் செத்துப்போனால் பழிக்குப் பழிவாங்கப்படவேண்டும்.

௨௧ ஒருநாள் அல்லது இரண்டுநாள் இருந்தானேயாகில் பழிவாங்கப்படவேண்டாம். ஏனெனில் இவன் அவனுடைய உடைமையாயிருந்தவன்.

௨௨ மனிதர் சண்டைபண்ணிக் கர்ப்பவதியான ஒருஸ்திரியையடிக்கிறதினாலே அவளுக்கு வேறே சேதமில்லாமற் கர்ப்பம்விழுந்துபோனால், அப்பொழுது அடித்தவன் ஸ்திரியின் புருஷன் தன்மேலே சுமத்துகிறதற்குத் தக்கதாய்த் தருமகர்த்தாக்களுடைய தீர்ப்பின்படியே தண்டங்கொடுக்கவே கொடுக்கவேண்டும்.

௨௩ வேறே சேதமுண்டாயிருந்தேயானால் சீவனுக்குச் சீவன்,

௨௪ கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்,

௨௫ சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், தழும்புக்குத் தழும்பு பழிகொடுக்கக்கடவாய்.

௨௬ ஒருவன் தன்னடிமையின் கண்ணிலே அல்லது தன்னடிமைப்பெண்ணின் கண்ணிலே அடிக்கிறதினாலே அதைக் கெடுத்தால், அவன் இவன் கண்ணுக்குப் பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

௨௭ அவன் தன்னடிமையின் பல்லை அல்லது தன்னடிமைப்பெண்ணின் பல்லை விழப்பண்ணினால், அவன் இவன் பல்லுக்குப் பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

௨௮ ஒருமாடு ஒரு ஆண்சாதியை அல்லது ஒருபெண்சாதியை முட்டிப்போட்டதினாலே சாவுண்டானால், அந்தமாடு கல்லெறியப்படவும் அதின் மாம்சம் புசிக்கப்படாதே போகவுங்கடவது. அப்பொழுது மாட்டின் எசமான் ஆக்கினைக்கு நீங்கலானவன்.

௨௯ ஆனால் மாடு முதலே முட்டுகிறதாயிருந்து, அது அதின் எசமானுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதைப் பத்திரம்பண்ணாததினாலே அது ஒரு ஆண்சாதியை அல்லது ஒரு பெண்சாதியைக் கொன்றுபோட்டால், மாடு கல்லெறியப்படவேண்டும், அதின் எசமானுங் கொலைசெய்யப்படவேண்டும்.

௩௰ மீட்புக்கு அபராதம் அவன்மேலே சுமத்தப்பட்டதேயானால், அவன் தன் சீவனை மீட்கும்பொருளாகத் தன்மேல் சுமத்தப்பட்டபடி எல்லாஞ்செலுத்தக்கடவன்.

௩௧ அது ஒருவன் மகனை முட்டிப்போட்டாலுஞ்சரி ஒருவன் மகளை முட்டிப்போட்

டாலுஞ்சரி. இந்த நியாயத்தின்படியே அவனுக்குச் செய்யப்படக்கடவது.

௩௨ மாடு ஒரு அடிமையை அல்லது அடிமைப்பெண்ணை முட்டிப்போட்டிருந்தால், அவன் இவனுடைய எசமானுக்கு முப்பது சேக்கல் வெள்ளியைக் கொடுக்கவும் மாடு கல்லெறியப்படவும் வேண்டும்.

௩௩ ஒருவன் ஒரு குழியைத் திறந்துவைத்தாகிலும் அல்லது ஒரு குழியை வெட்டி அதை மூடாமற்போனதினாலே அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந்தால்,

௩௪ குழிக்குடையவன் அதின் விலையைக் கொடுத்துப் பணமாய் அதின் எசமானுக்குச் செலுத்தவுங்கடவன். செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

௩௫ ஒருவனுடைய மாடு மற்றவனுக்கடுத்தவனுடைய மாட்டை முட்டிப்போட்டதினாலே அது செத்தால் அவர்கள் உயிரோடிருக்கிற மாட்டைவிற்று அதின் கிரயத்தைப் பங்கிட்டுச் செத்ததையும் பங்கிட்டுக்கொள்ளக்கடவர்கள்.

௩௬ அல்லவென்று அந்த மாடு முதலே முட்டுகிற மாடென்று அறியப்பட்டிருந்தும் அதின் எசமான் அதைப் பத்திரப்படுத்தாமலிருந்தானானால் அவன் மாட்டுக்கு மாட்டைக் கொடுக்கவேண்டும். செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

௨௨. அதிகாரம்.

களவு, அநியாயம், புணர்ச்சி, குனியமுதலான பாவங்களின் விசாரிப்பையுந் தண்டனையையுங்குறித்துக் கொடுத்த கற்பனைகள்.

௧ யாதொருவன் ஒரு மாட்டை அல்லது ஒரு ஆட்டைத் திருடி அதையடித்தால், அல்லது அதை விற்றுப்போட்டால், அவன் மாட்டுக்கைந்து மாடுகளையும் ஆட்டுக்கு நாலு ஆடுகளையுந் திரும்பக்கொடுக்கக்கடவன்.

௨ திருடன் கன்னமிடுகையிலே கண்டுபிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டுச் செத்தால் அவனுக்காக இரத்தப்பழிசுமராது.

௩ சூரியன் அவன்மேல் உதித்திருந்ததேயானால் அவனுக்காக இரத்தப்பழிசுமரும். திருடினவனால் திரும்பச்செலுத்தவே செலுத்தக்கடவன். அவனுக்கில்லாதிருந்தால் தன் களவுக்காக விற்கப்படக்கடவன்.

௪ அவன் திருடின மாட்டிலும் கழுதையாகிலும் ஆடாகிலும் உயிருடனே அவன் கையிலே கண்டுபிடிக்கப்பட்டால், இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தக்கடவன்.

௫ வயலையாகிலுந் திராட்சத்தோட்டத்தையாகிலும் பட்டிமேய ஒருவன் தன் மிருகங்களை மேய்விட்டு மற்றொருவன் நிலத்திலே விட்டால், அவன் தன் வயலிலே நலமானதிலுந் தன் திராட்சத்தோட்டத்திலே நலமானதிலும் எடுத்து உத்தரவாதம் பண்ணக்கடவன்.

௬ அக்கினி எழும்பி முள்ளுகளிலே பற்றிக்கொண்டு, கதிர்ப்போராயாகிலும் முதிர்ப்பயிராயாகிலும் நிலத்திலுள்ளதையாகிலும் சுட்டுப்போட்டால், அக்கினியைக் கொளுத்தினவன் அக்கினிச்சேதத்திற்கு உத்தரவாதம் பண்ணவேண்டும்.

௭ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்திலே திரவியத்தையாகிலும் உடைமைகளையாகிலும் அடைக்கலமாக வைத்திருக்கையில் அது அவன் வீட்டிலிருந்து திருட்டுப்போனால் அப்பொழுது திருடன் அகப்பட்டானேயாகில் அவன் இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தவேண்டும்.

௮ திருடன் அகப்படாதேபோனால் அப்பொழுது அந்த வீட்டுக்காரன் தனக்கடுத்தவனுடைய பொருளின்மேலே தன் கையைப்போட்டதில்லையோவென்பதற்காகத் * தேவர்களண்டைக்குக் கொண்டுபோகப்படக்கடவன். * ௨௧, ௬.

௯ ஒரு மாட்டுக்காகிலுங் கழுதைக்காகிலும் ஆட்டுக்காகிலும் வஸ்திரத்துக்காகிலும் ஒருவன் தன்னுடையதென்று சொல்லுங் காணாமற்போனயாதொரு பொருளுக்காகிலும் எவ்வித அநியாயத்தினுடையதாகிலும் வழக்கிருந்தால் இருதிறத்தாருடைய நியாயந் தேவர்களண்டைக்கு வரக்கடவது. தேவர்கள் எவனைக் குற்றவாளியென்று தீர்க்கிறார்களோ அவன் தனக்கடுத்தவனுக்கு இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தக்கடவன்.

௰ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்திலே ஒரு கழுதையையாகிலும் மாட்டையாகிலும் ஆட்டையாகிலும் மற்றெந்த மிருகஜீவனையாகிலும் அடைக்கலமாக விட்டிருக்கக்கொள்ள அது செத்தால் அல்லது சேதப்பட்டால், அல்லது ஒருவருங் காணாமல் ஓட்டிக்கொண்டு போகப்பட்டால்,

௰௧ அப்பொழுது அவன் தன் கையைத் தனக்கடுத்தவனுடைய பொருளின்மேலே போட்டதில்லையோவென்பதற்காகக் கர்த்தருடைய ஆணை இருவருக்குள்ளும் நடுவாக இருக்கக்கடவது. அதின் எசமான் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். மற்றவன் கொடுக்கத்தேவையில்லை.

௰௨ அது அவன் வசத்திலிருந்து திருடப்பட்டுப்போயிற்றேயானால் அவன் அதின் எசமானுக்கு அதற்காக உத்தரவாதம் பண்ணக்கடவன்.

௰௩ அது பீறப்பட்டதேயானால் அதற்குச் சாட்சியையொப்புவிப்பானாக. பீறுண்டதற்காக அவன் உத்தரவாதம்பண்ணத் தேவையில்லை.

௰௪ ஒருவன் தனக்கடுத்தவனிடத்தில் இரவலாகவாங்கினது அதின் எசமானண்டையில் இராதிருக்கக்கொள்ளச் சேதப்பட்டால்

அவைத் சேதப்பட்டாலும் அவன் உத்தரவாதம் பண்ணக்கடவன்.

௰௫ அதின் எசமான் அதுடையிலிருந்திருந்தால் அவன் உத்தரவாதம்பண்ணுகிறதில்லை. அது கூலிக்குவாங்கப்பட்டிருந்தால் அது அவன் கூலிக்குவந்தது.

௰௬ நியமிக்கப்படாத ஒருகன்னிகையை ஒருவன் மோசம்போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காக பரிசங்கொடுத்து அவளை விவாகம்பண்ணக்கடவன்.

௰௭ அவளுடைய தகப்பன் அவளை அவனுக்குக் கொடுக்கமாட்டேனென்று மறுத்தால் அவன் கன்னிகைகளுக்காகக் கொடுக்கப்படும் பரிசத்தின்படியே திரவியம் நிறுத்துக்கொடுக்கக்கடவன்.

௰௮ சூனியக்காரியை உயிரோடே வைக்கவேண்டாம்.

௰௯ மிருகத்தோடே புணர்ச்சிபண்ணுகிறவன் எவனும் நிச்சயமாகக் கொலைசெய்யப்படவேண்டும். ௩. மோசே. உ0 ௰ரு.

௨0 கர்த்தர் ஒருவருக்கே அல்லாமல் வேறே தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக்கடவன்.

௨௧ அந்நியனை ஒடுக்காமலும் நெருக்காமலும் இருப்பாயாக. ஏனெனில் நீங்களும் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள். ௩. மோசே. ௧௯, ௩௩.

௨௨ ஒருவிதவையையாகிலும் திக்கற்றபிள்ளையையாகிலும் ஒடுக்காதிருப்பீர்களாக.

௨௩ அவர்களை நீ ஒடுக்கவே ஒடுக்கக்கூடாது. அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிட்டால், அவர்கள் கூப்பிடுதலை நான் கேட்கவே கேட்டு,

௨௪ என் கோபம் மூண்டவராகி உங்களைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவோம்; உங்கள் மனைவிகள் விதவைகளும் உங்கள் பிள்ளைகள் திக்கற்றவர்களுமாவார்கள் [illegible] உங்களைப் பட்டயத்தால் கொன்றுபோடுவோம்.

௨௫ என் ஜனத்திலே சிறுமைப்பட்டிருக்கிற உன்னுடைய ஜனத்திலொருவனுக்குப் பணங் கடனாகக் கொடுத்தால், அவனுக்கு கடன்காரனைப்போலிராயாக. வட்டியைச் சுமர்த்தாயாக. ௩. மோசே. உ௫, ௩௫. ௩௬.

௨௬ உன் அயலானுடைய வஸ்திரத்தை அடகாக வாங்கினால் பொழுதுபோகுமுன் அதை அவனுக்குத் திருப்பக்கொடுப்பாயாக. * ரு. மோ. உ௪, ௰௨, ௰௩.

௨௭ ஏனெனில் அவன் மூடிக்கொள்ளுகிறது அதுமாத்திரந்தானே. அதுவே அவன் தேகத்தை மூடிக்கொள்ளுகிற அவனுடைய வஸ்திரம். வேறே எதிலே மூடிக்கொண்டு படுத்துக்கொள்ளுவான். ஆகையாற் சமயப்பட்டதேதெனில் அவன் நம்மைநோக்கிக் கூப்பிடும்பொழுது நாம் கேட்போம். ஏனெனில் நாம் இரக்கமுள்ளவர்.

௨௮ தேவர்களைத் தூஷணியாமலும் உன் ஜனத்தில் அதிபதியானவனைச் சபிக்காமலும் இருப்பாயாக.

௨௯ உன் தானியத்தின் காணிக்கையையும் உன் ஆலையின் காணிக்கையையும் செலுத்தத் தாமதிக்கவேண்டாம். உன் குமாரரில் முதற்பேறானவனை நமக்குக் கொடுப்பாயாக.

௩0 உன் மாடுகளிலும் உன் ஆடுகளிலும் அப்படியே செய்வாயாக. ஏழுநாள் அது தாயோடேயிருக்கட்டும். எட்டாம் நாளில் அதை நமக்குச் செலுத்துவாயாக.

௩௧ நீங்கள் நமக்குப் பரிசுத்தமனுஷராயிருக்கக்கடவீர்கள். ஆகையால் வெளியிலே பீறுண்டுபோன மாமிசத்தைப் புசியாமல் அதை நாய்களுக்குப் போடுவீர்களாக.

உ௩. அதிகாரம்.

நீதிசெய்கிறதற்காகக் கொடுத்த கட்டளைகள்.

அபாண்டமான விசேஷத்தை ஏற்றுக்கொள்ளாயாக. கொடுமையுள்ள சாட்சியாயிருக்க ஆகாதவனோடே கைகலவாயாக.

௨ பொல்லாப்புச்செய்யப்போகிற திரட்கூட்டத்தைப் பின்செல்லாமலும் நியாயத்தைப் புரட்டப்போகிற திரட்கூட்டத்தாரின் பிறகாலே சாய்கிறதற்கான உத்தரவை வழக்கிலே சொல்லாமலும் இருப்பாயாக.

௩ தரித்திரனுடைய முகத்தையும் அவன் வியாச்சியத்திலே பாராயாக.

௪ திரிந்துபோனதாகிய * உன் சத்துருவின் மாட்டையாகிலும் அவனுடைய கழுதையையாகிலும் நீ சந்தித்தாயானால், அதைத் அவனண்டையிலே திருப்பித் திருப்பிக் கொண்டுபோவாயாக. * ஆக. ௬, உ௭.

௫ உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை தன் சுமையின் கீழ்க் கிடக்கக்கண்டாயானால் அதற்கு உதவாதிருப்பாயோ? அவனோடேகூட அதற்குத் தவறாமல் உதவுவாயாக.

௬ உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்திலே அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.

௭ கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக. குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைபண்ணாயாக. ஏனெனில் ஆகாதவனை நீதிமானாக்கதிரோம்.

௮ * பரிதானம் வாங்காயாக. ஏனெனில் பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குருடாக்கி நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்குகின்றது. * ரு. மோசே. ௰௬, ௰௯.

௯ * பரதேசியை யொடுக்காயாக. ஏனென்றால் எகிப்து தேசத்திலே பரதேசிகளாயிருந்த நீங்கள் பரதேசியின் இருதயத்தை யறிவீர்கள். * ௨௨, ௨௧.

ஓய்வுவருஷத்திற்காகவும் ஓய்வுநாளுக்காகவுங் கொடுத்த கட்டளைகள்.

௰ நீ ஆறுவருஷம் உன்தேசத்தை விதைத்துப் பயிரிட்டு, அதின் பலனைச் சேர்த்து,

௰௧ ஏழாம் வருஷத்திலேயோவென்றால் அதை உன் சனத்திலே எளியவர்கள் பொசிக்கும்படிக்கும் மீதியானதைக் காட்டின் மிருகங்கள் தின்னும்படிக்குஞ் சும்மாய் வைத்துவிடுவாயாக. உன் திராட்சத் தோட்டத்திற்கும் உன் ஒலிவத்தோப்புக்கும் அப்படியே செய்வாயாக.

௰௨ நீ ஆறுநாள் உன்வேலையைச் செய்து ஏழாம்நாளிலேயோவென்றால் உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் பரதேசியும் மூச்சுப்பாறவும் ஓய்ந்திருப்பாயாக.

௰௩ நாம் உங்களுக்குச் சொன்னதிலெல்லாஞ் சாவதானமாயிருங்கள். வேறே தேவர்களின் பேரை நினையாதீர்களாக. அது உன் வாயினாலே கேட்கப்படாதிருப்பதாக.

மூன்று பண்டிகைகளின் கட்டளை.

௰௪ வருஷத்தில் மூன்றுதரம் நமக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக.

௰௫ நீ புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையைக் கைக்கொண்டு, நாமுனக்குக் கற்பித்தபடி ஆபிப்மாசத்தினுடைய திட்டமான காலத்திலே ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் பொசிப்பாயாக. ஏனென்றால் அதிலே எகிப்திலிருந்து புறப்பட்டாய். ஆனாலும் வெறுங்கையாய் நமக்கு முன்பாகக் காணப்படாதீர்களாக.

௰௬ நீ வயலில் விதைத்த உன் பயிர்வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புநாளின் பண்டிகையையும் வருஷமுடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபொழுது சேர்ப்பின் பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

௰௭ * வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்சாதியெல்லாங் கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதிக்கு முன்பாகக் காணப்படக்கடவது. * ௩௪, ௨௩.

௰௮ புளித்தமாவிருக்கக்கொள்ள நமது பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக. நம்முடைய பண்டிகையின் கொழுப்பு விடியற்காலமட்டும் இராத்தங்கவும் வேண்டாம்.

௰௯ உன் நிலத்தின் முதல் விளைச்சல்களில் முந்தின கனியை யுன் பராபரனாகிய கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவருவாயாக. * வெள்ளாட்டுக்குட்டியை அதினுடைய தாயின் பாலிலே கூடச் சமைக்காயாக.

* ௫. மோசே. ௨௨, ௨௮.

பராபரன் கொடுத்த சில வாக்குத்தத்தங்கள்.

௨௰ இதோ, உன்னை வழியிலே காக்கிறதற்கும் நாம் ஆயத்தம் பண்ணின தானத்திற்கு உன்னைக் கொண்டுபோகிறதற்கும் நாம் ஒரு தூதனை யுனக்கு முன்பாக அனுப்புகிறோம்.

௨௰௧ நீ அவர் முகத்திற்கு முன்பாகச் சாவதானமாயிருந்து அவர் சத்தத்தைக் கேள். அவரைக் கோபப்படுத்தாதே. ஏனென்றால் உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை. ஏனென்றால் நமது நாமம் அவருள்ளத்திலிருக்கின்றது.

௨௰௨ நீ அவர் சத்தத்தைக் கேட்கவே கேட்டு நாஞ் சொல்லுவதையெல்லாஞ் செய்தாயேயானால் நாமுன்னைப் பகைக்கிறவர்களைப் பகைத்து உன்னை இறுகப்பிடிக்கிறவர்களை இறுகப்பிடிப்போம்.

௨௰௩ ஏனென்றால் நம்முடைய தூதர் உனக்கு முன்பாக நடந்து உன்னை எமோரியரும் ஏத்தியரும், பெரிசியருங் கானானியரும், எவியரும் எபூசியரும் இருக்கிற இடத்திலே கொண்டுபோவார். அவர்களை நாம் அதம்பண்ணுவோம்.

௨௰௪ நீ அவர்கள் தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும் அவர்களைச் சேவியாமலும் அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலமட்டமாக்கி அவர்கள் சிலைகளை யுடைக்கவே யுடைத்துப் போடுவாயாக.

௨௰௫ உங்கள் பராபரனாகிய கர்த்தரையே சேவிப்பீர்களாக. அப்பொழுது அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். அப்பொழுது வியாதியை உன் நடுவிலிருந்து விலக்குவோம்.

௨௰௬ கர்ப்பம் விழுகிறவளும் மலடியும் உன் தேசத்திலே உண்டாயிருப்பதில்லை. உன் நாட்களின் இலக்கத்தை நிறைவேற்றுவோம்.

௨௰௭ நாம் நம்முடைய பயங்கரத்தை யுனக்கு முன்பாக அனுப்பி, நீ வந்துசேரும் எல்லாச் சனத்தையுங் கலங்கடித்து, உன் சத்துருக்களையெல்லாம் உனக்கு முதுகைக் காட்டப்பண்ணி,

௨௰௮ உன் முகத்திற்கு முன்பாக எவியனையுங் கானானியனையும் ஏத்தியனையுந் துரத்திவிடக் குளவிகளை யுனக்கு முன்பாக அனுப்புவோம்.

௨௰௯ தேசம் பாழாகாமலுங் காட்டின் மிருகங்கள் உனக்கு விரோதமாய் வர்த்திக்காமலும் இருக்கும்படிக்கு நாம் அவர்களை ஒரு வருஷத்திற்குள்ளே உனக்கு முன்பாகத் துரத்திவிடாமல்,

௩௰ நீ பலுகி தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுமட்டும் அவர்களைக் கொஞ்சங்

தேசமாய் உனக்கு முன்பாகத் துரத்திவிடுவேன்.

௩௧ உன் எல்லையை நாணற் சமுத்திரந் தொடங்கிப் பெலிஸ்தரின் சமுத்திரமட்டாகவும் வனாந்தரந் தொடங்கி நதிமட்டாகவும் வைப்பேன். ஏனெனில் நான் அத்தேசத்தின் குடிகளை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; நீ அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுவாய்.

௩௨ அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் உடன்படிக்கை பண்ணாதே.

௩௩ அவர்கள் உன்னைத் தமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யப் பண்ணாதபடிக்கு உன் தேசத்திலே குடியிருக்க வேண்டாம். ஏனெனில் நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால் அது உனக்குக் கண்ணியாயிருக்குமென்றார்.

௨௪. அதிகாரம்.

உடன்படிக்கை நடப்பிக்கப்பட்டதும் மோசே பர்வதத்திலே ஏறினது.

பின்பு அவர் மோசேயோடே சொன்னது: நீயும், ஆரோனும், நாதாபும், அபியூவும், இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது பேரும் கர்த்தரண்டைக்கு ஏறிவந்து தூரத்திலிருந்து பணியுங்கள்.

௨ மோசே மாத்திரம் கர்த்தரண்டைக்குச் சேரலாம்; [illegible] சேரக்கடவதில்லை; ஜனங்களும் அவனோடேகூட ஏறிவரவேண்டாமென்றார்.

௩ மோசே வந்து கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் எல்லா நியாயங்களையும் ஜனத்துக்கு விவரித்தான். அப்பொழுது ஜனமெல்லாம் ஒரே சத்தமாய்க் கர்த்தர் சொல்லின எல்லா வார்த்தைகளின்படியேயும் செய்வோமென்று பிரதியுத்தாரஞ் சொன்னார்கள்.

௪ அப்பொழுது மோசே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்திருந்து பர்வதத்தின் அடியிலே ஒரு பலிபீடத்தையும் இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய [illegible]படியே பன்னிரண்டு தூண்களையும் கட்டி,

௫ இஸ்ரவேல் புத்திரரில் வாலிபர்களை அனுப்பினான். அவர்கள் கர்த்தருக்குச் [illegible] தகனபலிகளைச் செலுத்தி, [illegible] பலிகளாகக் காளைகளைப் பலியிட்டார்கள்.

௬ அப்பொழுது மோசே [illegible] இரத்தத்தை எடுத்துக் கிண்ணங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே தெளித்து,

௭ உடன்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு ஜனங்கள் கேட்க வாசித்தான். அப்பொழுது அவர்கள் கர்த்தர் சொன்னவையெல்லாவற்றையுஞ் செய்து கீழ்ப்படிவோமென்றார்கள்.

௮ அப்பொழுது மோசே இரத்தத்தை எடுத்து ஜனங்களின்மேல் தெளித்து: இதோ, இந்த எல்லா வார்த்தைகளினிமித்தம் கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே என்றான்.

* எபிரெயர் ௯. ௨௦.

௯ பின்பு மோசேயும் ஆரோனும் நாதாபும் அபியூவும் இஸ்ரவேலின் மூப்பரில் எழுபது பேரும் ஏறிப்போய்,

௧௦ * இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தார்கள்; அவருடைய பாதத்தின்கீழ் நீலக்கல்லின் வேலைக்கு ஒப்பானதும் [illegible] ஆகாயத்தைப்போலத் தெளிவுள்ளதுமான [illegible] இருந்தது. * எசேக். ௧, ௨௬.

௧௧ அவர் இஸ்ரவேல் புத்திரரில் முதன்மையானவர்கள்மேல் [illegible] அவர்கள் தேவனைத் தரிசித்துப் புசித்துக் குடித்தார்கள்.

௧௨ பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ மலையின்மேல் என்னிடத்தில் ஏறிவந்து, அங்கே இரு; நான் உனக்குக் கற்பலகைகளையும், அவைகளைப் போதிக்கும்படிக்கு நான் எழுதின நியாயப்பிரமாணத்தையும் கற்பனைகளையும் கொடுப்பேன் என்றார்.

௧௩ அப்பொழுது மோசே தன் ஊழியக்காரனாகிய யோசுவாவோடுங்கூட எழுந்து போனான். மோசே தேவனுடைய பர்வதத்தில் ஏறினான்.

௧௪ அவன் மூப்பரோடே சொன்னது: நாங்கள் உங்களண்டைக்குத் திரும்பி வருமட்டும் இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள். இதோ, ஆரோனும் ஊரும் உங்களிடத்திலிருக்கிறார்கள். எவனுக்காகிலும் வழக்கு இருந்தால் அவர்களண்டையிலே சேரக்கடவனென்றான்.

௧௫ மோசே பர்வதத்தில் ஏறினபொழுது ஒரு மேகம் பர்வதத்தை மூடிற்று.

௧௬ கர்த்தருடைய மகிமை சீனாய் பர்வதத்தின்மேல் தங்கியிருந்தது. மேகம் அதை ஆறுநாளாய் மூடியிருந்தது; ஏழாம் நாளிலே மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார்.

௧௭ பர்வதத்தின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் தோற்றம் இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போலிருந்தது.

௧௮ மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்துப் பர்வதத்தில் ஏறி இரவும் பகலும் நாற்பது நாள் பர்வதத்திலிருந்தான்.

உரு. அதிகாரம்.

பரிசுத்தவாசஸ்தலத்தை யுண்டாக்குகிறதற்கு நீகான் தன் பாடங்களைச் சனங்களையிலேவாங்கப்பார்ப்பான் இட்டகட்டளை.

௧ கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது,

உ நமக்குக் காணிக்கையை யெடுத்துச் செலுத்தும்படிக்கு இஸ்ரவேல் புத்திரரோடே பேசு. நமக்குச் செலுத்துங் காணிக்கையை * மனப்பூர்வமான எவ்வொருவர் கையிலும் வாங்குவீர்களாக. * ௩௫, ௫. உ. கொரிந்தர். ௯, ௭.

௩ நீங்கள் அவர்கள் கையில் வாங்கவேண்டிய காணிக்கையாவது. பொன்னும் வெள்ளியும் வெண்கலமும்,

௪ இளநீல் நூலும் இரத்தாம்பர நூலும் சிவப்பு நூலும் மெல்லிய பஞ்சு நூலும் வெள்ளாட்டுமயிரும்,

௫ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாய்த்தோல்களுந் தக்கசுகளின் தோல்களுஞ் சீத்திம் மரங்களும்,

௬ விளக்குக்கு எண்ணெயும், அபிஷேக எண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களும், தூபங்காட்டுதலுக்குச் சுகந்தவர்க்கங்களும்,

௭ ஆசாரியச் சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் கோமேதகக் கல்லுகளும் பதித்துவைக்கும் இரத்தினங்களுந்தானே.

௮ நாம் அவர்கள் நடுவிலே வாசம்பண்ண நமக்கொரு பரிசுத்தஸ்தலத்தை யுண்டாக்குவார்களாக.

௯ வாசஸ்தலத்தின் மாதிரியையும் அதினுடைய எல்லாப் பண்டம்பாடிகளின் மாதிரியையும் நாமுனக்குக் காண்பிக்கும்படியெல்லாம் அதைச்செய்வீர்களாக.

உடம்படிக்கையின் பெட்டியையும் அதின் மேல்வைக்குங் கிருபாசனமான மூடியையும் சமுகத்தப்பங்களின் மேசையையுங் குத்துவிளக்கையும் பண்ணுகிறதற்கான கட்டளை.

௰ சீத்திம் மரங்களால் ஒரு பெட்டியைப் பண்ணக்கடவர்கள். அதின் நீளம் இரண்டரை முழமும் அதின் அகலம் ஒன்றரை முழமும் அதின் உயரம் ஒன்றரை முழமுமாயிருப்பதாக.

௰௧ அதைச் சுத்தமான பொற்றகட்டால் மூடுவாயாக. நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதினால் மூடி அதின்மேற் சுற்றிலும் பொன்னுன் திரணையையுண்டாக்கி,

௰உ அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து அவைகளையதின் நான்கு கோடிகளிலே இந்தண்டை இரண்டு வளையங்களும் அந்தண்டை இரண்டு வளையங்களுமிருக்கும்படிக்குத் தைத்து,

௰௩ சீத்திம் மரங்களால் தண்டுகளைச் செய்ப்பண்ணி அவைகளைப் பொற்றகட்டால் மூடி,

௰௪ அந்தத் தண்டுகளால் பெட்டியைச் சுமக்கும்படிக்கு அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய்.

௰௫ அந்தத் தண்டுகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல் அதின் வளையங்களிலேயிருக்கக்கடவது.

௰௬ நீ அந்தப் பெட்டியிலே நாமுனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைத்து,

௰௭ சுத்தமான பொன்னினாலே கிருபாசனமான மூடியைப்பண்ணுவாயாக. அது இரண்டரைமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமாயிருக்கக்கடவது.

௰௮ பொன்னுன இரண்டு கேருபீன்களையும் அடிக்கப்பட்ட பொன்னினாலே உண்டாக்கிக் கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களிலிருக்கப் பண்ணக்கடவாய்.

௰௯ ஒரு கேருபீன் இந்தண்டை ஓரத்திலும் மற்றக் கேருபீன் அந்தண்டை ஓரத்திலுமிருக்கத்தானே. அந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களிலே அதனோடே ஏகமாயிருக்கும்படிக்கு அவைகளைப் பண்ணக்கடவீர்கள்.

உ௰ அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்துத் தங்கள் செட்டைகளாலே கிருபாசனமான மூடியை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்களுமாயிருக்கக்கடவது. கேருபீன்களின் முகங்கள் கிருபாசனமான மூடியை நோக்குகிறவைகளாயிருப்பதாக.

உ௰௧ நீ கிருபாசனமான மூடியைப் பெட்டியின்மீதில் வைத்துப் பெட்டியிலேவன்றல நாமுனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைப்பாயாக.

உ௰உ * அங்கே உன்னைச் சந்திப்போம். கிருபாசனமான மூடியின்மீதிலுஞ் சாட்சியினுடைய பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலிருந்து நாம் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப்போகிறவையெல்லாம் உனக்குச் சொல்லுவோம். * ௪. மோசே. ௭, ௮௯.

உ௰௩ சீத்திம் மரங்களால் ஒரு மேசையையும் பண்ணுவாயாக. அது இரண்டுமுழ நீளமும் ஒருமுழ அகலமும் ஒன்றரைமுழ உயரமுமாயிருக்கக்கடவது.

உ௰௪ அதைச் சுத்தமான பொற்றகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொன்னுன் திரணையையுண்டாக்கி,

உ௰௫ சுற்றிலும் அதற்கு நான்கு விரற்கடையான சட்டத்தையும், அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன்னுன் திரணையையுமுண்டாக்கி,

௨௬ அதற்கு நான்கு பொன்வளையங்களைப் பண்ணி அவைகளை அதின் நான்குகால்களுக்கடுத்த நாலுமூலைகளிலே தைக்கக்கடவாய்.

௨௭ அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கிற தண்டுகளுக்கிடங்களாயிருக்கும்படிக்குச் சட்டத்திற்கு எதிரேயிருக்கவேண்டும்.

௨௮ அந்தத்தண்டுகளைச் சீத்திம் மரங்களாலே பண்ணி, அவைகளைப் பொற்றகட்டால் மூடக்கடவாய்; அவைகளாலே மேசை சுமக்கப்படும்.

௨௯ அதின் தாலங்களையும் தூபக்கிண்ணிகளையும் அதற்கடுத்ததாகிய ... களையும் பண்ணக்கடவாய். சுத்தப்பொன்னினாலே உண்டாக்கக்கடவாய்.

௩௦ மேசையின்மேலே எப்பொழுதும் என்சமுகத்தப்பங்களை வைக்கக்கடவாய்.

௩௧ சுத்தமான பொன்னினாலே ஒரு குத்துவிளக்கும் உண்டாக்குவாயாக. அது அடிக்கப்பட்ட பொன்னினாலே பண்ணப்படவேண்டும். அதின் தண்டும் அதின் கிளைகளும் ... களும் அதின் மொட்டுகளும் அதின் பூக்களும் அதனோடே ஒன்றாயிருப்பதாக.

௩௨ அதின் பக்கங்களிலிருந்து ... குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் ஒருபக்கத்திலும் குத்துவிளக்கின் மூன்று கிளைகள் அதின் மறுபக்கத்திலும் புறப்படுவது.

௩௩ ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்கொட்டைக்கொப்பான மூன்று மொக்குகளும் ஒரு மொட்டும் ஒரு பூவும் இருப்பதாக. ... கிளையிலிருந்து புறப்படுகிற ... அப்படியிருக்கவேண்டும்.

௩௪ விளக்குத்தண்டிலோவென்றால் வாதுமைக்கொட்டைக்கொப்பான நான்கு மொக்குகளும் அதின் மொட்டுகளும் பூக்களும் இருப்பதாக.

௩௫ அதிலிருந்து புறப்படுகிற இரண்டு கிளைகளின் கீழ் ஒரு மொட்டும், வேறு இரண்டு கிளைகளின்கீழ் ஒரு மொட்டும், ... கிளைகளின்கீழ் ஒரு மொட்டும் இருப்பதாக. விளக்குத்தண்டிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளுக்கும் அப்படியிருக்கவேண்டும்.

௩௬ அவைகளின் மொட்டுகளும் அவைகளின் கிளைகளும் அதிலிருந்துண்டானவைகளாயிருப்பதாக. இவையெல்லாம் அடிக்கப்பட்ட சுத்தமான பொன்னாகிய ஒரே துண்டாயிருக்கவேண்டும்.

௩௭ அதின்மேல் ஏழு விளக்குகளையும் உண்டாக்குவாயாக. அதற்கு நேரெதிராய் ... ஏற்றப்படக்கடவது.

௩௮ அதினுடைய திரிகத்தரிகளும் விளக்குகளின் கத்தரிப்புகள் எடுக்கிற கலங்களும் சுத்தப்பொன்னாலே இருப்பதாக.

௩௯ அதையும் இந்த எல்லா பணிமுட்டுகளையும் ஒரு தாலந்து சுத்தமான பொன்னினாலே பண்ணுவார்களாக.

௪0 * பர்வதத்திலே உனக்குக் காண்பிக்கப்பட்ட அவைகளுடைய மாதிரியின்படியே அவைகளைப் பண்ணப்பார். * உசு. ௩0. எபிரே. ௮, ரு.

உசு. அதிகாரம்.

வாசஸ்தலத்தைச் செய்யப்பணிக்கிறது.

வாசஸ்தலத்தையோவென்றால் திரித்த மெல்லிய பஞ்சுநூலும் இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலுமான பத்துச் சமுக்காளங்களால் உண்டுபண்ணுவாயாக. அவைகளில் விசித்திரவேலையான கேருபீன்கள் இருக்கும்படியாக அவைகளைப் பண்ணக்கடவாய். * ௩௬, ௮. ௱.

௨ ஒவ்வொரு சமுக்காளம் இருபத்தெட்டுமுழ நீளமும் நான்குமுழ அகலமுமாயிருப்பதாக. சமுக்காளங்களுக்கெல்லாம் ஒரே அளவிருக்கக்கடவது.

௩ ஐந்து சமுக்காளங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவும், மற்ற ஐந்து சமுக்காளங்களும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கவும்வேண்டும்.

௪ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடையோரத்திலே இளநீல நூற்காதுகளையுண்டுபண்ணி இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் கடையோரத்திலும் அப்படியேயுண்டுபண்ணுவாயாக.

௫ ஒரு சமுக்காளத்திலே ஐம்பது காதுகளையும் இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்திலே ஐம்பது காதுகளையும், காதுகள் ஒன்றுக்கொன்று எதிராய்ச் சேர்ந்திருக்கும்படிக்கு உண்டுபண்ணுவாயாக.

௬ ஏகவாசஸ்தலமாய்ப் போகும்படிக்கு ஐம்பது பொற்கொக்கிகளையும் பண்ணிச் சமுக்காளங்களை ஒன்றுக்கொன்று கொக்கிகளாலே இணைத்துப்போடுவாயாக.

௭ வாசஸ்தலத்தின்மேற் கூடாரமாகப் போடும் ஆட்டுமயிர் சமுக்காளங்களாகிய பதினொரு சமுக்காளங்களையும் பண்ணக்கடவாய்.

௮ ஒவ்வொரு சமுக்காளம் முப்பதுமுழ நீளமும் நான்குமுழ அகலமுமாயிருப்பதாக. பதினொரு சமுக்காளங்களுக்கும் ஒரே அளவிருக்கக்கடவது.

௯ ஐந்து சமுக்காளங்களை ஒன்றாகவும் ஆறு சமுக்காளங்களை ஒன்றாகவும் இணைத்து ஆறாஞ்சமுக்காளத்தைக் கூடாரத்தின் முகப்பிற்கு முன்னாலே இரட்டையாய்ப் போடுவாயாக.

ய இணைக்கப்பட்ட ஒரு மூக்காளத்தின் கடையோரத்திலே ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்ற மூக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் உண்டுபண்ணி,

யக ஐம்பது வெண்கலக் கொக்கிகளைப் பண்ணி, அந்தக் கொக்கிகளைக் காதுகளிற் பூட்டிக் கூடாரமானது ஒன்றாகும்படிக்கு இணைத்துவிடுவாயாக.

யஉ கூடாரத்தின் மூக்காளங்களில் மிச்சமான அரை மூக்காளத்தின் மீதியானது வாசஸ்தலத்தின் பிற்புறத்திலே தொங்குவதாக.

யங கூடாரத்துடைய மூக்காளங்களின் நீளத்திலும் மீதியானதிலே இந்தண்டையொருமுழமும் அந்தண்டையொருமுழமும் வாசஸ்தலத்தை மூடும்படிக்கு அதின் பக்கங்களிலே மிகுதியாய்த் தொங்குவதாக.

யச சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாய்களின் தோல்களாலே கூடாரத்திற்கு ஒரு மூடியையும், அதின்மேல் தகசுகளின் தோல்களால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுவாயாக.

யரு நிமிர்ந்து நிற்கிற பலகைகளையும் வாசஸ்தலத்திற்குச் சீத்திம மரங்களாற் செப்பனிடுவாயாக.

யசா ஒவ்வொரு பலகையும் பத்து முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமாயிருக்கக்கடவது.

யஎ ஒன்றுக்கொன்று நேரொத்திசைவான ஒழுங்காயிருக்கிற இரண்டு முளைகள் ஒவ்வொரு பலகைக்கிருக்கவேண்டும். இப்படியே வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாஞ் செய்வாயாக.

யஅ நீ வாசஸ்தலத்திற்காகச் செப்பனிடுகிற பலகைகளில் இருபது பலகை தெற்கே தென்றிசைக்கெதிராக நிற்கக்கடவது.

யகூ அந்த இருபது பலகைகளின் கீழ் நாற்பது வெள்ளிக்கால்களை ஒவ்வொரு பலகையின் கீழ் அதின் இரண்டு முளைகளுக்கான இரண்டு கால்களாகத் தாங்கப்பண்ணக்கடவாய்.

உய வாசஸ்தலத்தின் வடக்கான மறுபக்கத்திலும் இருபது பலகையும்,

உக அவைகளின் கீழ் நாற்பது வெள்ளிக்கால்களும், ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டு கால்களாக நிற்கக்கடவது.

உஉ வாசஸ்தலத்தின் மேற்புறத்திற்கு ஆறு பலகைகளையும்,

உங வாசஸ்தலத்தின் இரண்டு பக்கக் கோடிகளுக்கு இரண்டு பலகைகளையுஞ் செப்பனிடுவாயாக.

உச இவைகள் தாழத்துவக்கி இரண்டு பக்கங்களை ஏகமாய்ப் பிடித்து உயரத்தையொரு வளையத்திலே இசைந்திருக்கவேண்டும். இரண்டு கோடிகளுக்கப்படியிருக்க இரண்டும் அப்படிச் செய்யப்படுவதாக.

உரு அப்படியே எட்டுப் பலகைகளிருப்பது. அவைகளுடைய வெள்ளிக்கால்கள் ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டு கால்களாகப் பதினாறு கால்களாகவிருக்கவேண்டும்.

உசா சீத்திம மரங்களால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாட்களையும்,

உஎ வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாட்களையும் வாசஸ்தலத்தின் மேற்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாட்களையும் பண்ணுவாயாக.

உஅ நடுத்தாழ்ப்பாள் ஒரு முனை துவக்கி மறுமுனைமட்டும் பலகைகளின் மையத்தை உருவிப் பாய்ச்சப்படுவதாக.

உகூ பலகைகளைப் பொற்றகட்டால் மூடித் தாழ்ப்பாட்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினாலே பண்ணித் தாழ்ப்பாட்களைப் பொற்றகட்டால் மூடக்கடவாய்.

ஙய அப்படியே வாசஸ்தலத்தைப் பர்வதத்திலே உனக்குக் காண்பிக்கப்பட்ட அதினுடைய நியாயத்தின்படியே எடுப்பிப்பாயாக.

ஙக இளநீலநூலும் இரத்தாம்பர நூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமான ஒரு திரையையும் உண்டுபண்ணக்கடவாய். அதிலே விசித்திர வேலையான கேருபீன்கள் இருக்கும்படியாக அது பண்ணப்படுவதாக. * ம கூ, ஙரு.

ஙஉ பொற்றகட்டால் மூடிய பொன்னுளைவாணிகளுள்ளதும் நான்கு வெள்ளிக்கால்களின்மேல் நிற்கிறதுமான நான்கு சீத்திம மரத் தூண்களிலே அதைத் தொங்கவைப்பாயாக.

ஙங கொக்கிகளின் கீழ் அந்தத் திரையைத் தொங்கவைத்துச் சாட்சியின் பெட்டியை அங்கே திரைக்குள்ளாக வைப்பாயாக. அந்தத் திரை உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலத்திற்கும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்திற்கும் நடுவேயிருப்பதாக.

ஙச பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்திலே சாட்சியினுடைய பெட்டியின் மீதிற் கிருபாசனமான மூடியை வைத்து,

ஙரு திரைக்குப் புறம்பாக மேசையையும் மேசைக்கெதிரே வாசஸ்தலத்தின் தென்புறமாகக் குத்துவிளக்கையும் வைத்து மேசையை வடபுறமாக வைப்பாயாக.

ஙசா இளநீலநூலும் இரத்தாம்பர நூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமான சித்திரத்தையல் வேலையுமான ஒரு மறைவையும் கூடாரத்தின் வாசலுக்குண்டாக்கி,

ஙஎ அந்த மறைவுக்குச் சீத்திம மரமான ஐந்து தூண்களைச் செப்பனிட்டு அவைகளைப் பொற்றகட்டால் மூடி அவைகளுக்குப் பொன்வளைவாணிகளையுண்டாக்கி அவைகளுக்கு ஐந்து வெண்கலக்கால்களை வார்ப்பிக்கக்கடவாய்.

உஎ. அதிகாரம்.

பலிபீடத்தைச் செப்பனிடக்கட்டளை.

௧ ஐந்து முழநீளமும ஐந்துமுழ அகலமு மான பலிபீடத்தைச் சீத்திம மரங்களால உண்டாக்கடவாய். அது நாற்சதுர மும மூன்றுமுழ உயர்த்தியுமாயிருப்பதாக.

௨ அதின் நான்கு கோடிகளின்மேல் அத லேயிருக்கும் அதின் கொம்பு களுண்டாக்கி அதை வெண்கலத் தகட் டால மூடு.

௩ அதின் சாம்பலை எடுக்கும் அதின் சட்டிகளையும் அதின் கரண்டிகளையும அதின் கலயங்களையும அதின் முட்கோல்களையும் அதின் கலசங்களையும் உண்டாக்கி அதின் பணிமுட்டுகளெல்லாம வெண்கலத்தா லாக்கு.

௪ அதற்கு வலைப்பின்னலான வெண்கலச்சல் லடையை உண்டாக்கி அந்தவலையி லதின் நான்கு மூலைகளிலும நான்கு வெண்கல வளையங்களை உண்டாக்கி,

௫ அதைப் பலிபீடத்தின் பாதிமட்டும வர பலிபீடத்தின் கீழ்ச் சுற்றுக்குக் கீழாக வைக்கக்கடவாய்.

௬ பலிபீடத்துக்குச் சீத்திம மரத்தாலே தண்டுகளை உண்டாக்கி அவைகளை வெண்கலத்தக டால மூடு.

௭ பலிபீடத்தைத் தூக்கும்போது பலிபீடத்தின் அதின் இரண்டுபக்கங்களிலு மிருக்கும்படிக்கு அவைகளை வளையங்க ளில் மாட்டப்படுவதாக.

௮ அதைப் பலகைகளால் உள்ளே குழாயாயிருக்கும்படிக்கு அ தைப் பண்ணுவாயாக. உனக்கு மலையிலே காண்பிக்கப்பட்டபடி அதைப் பண்ணக்கடவர்கள்.

பிராகாரத்தை உண்டுபண்ணக்கட்டளை.

௯ வாசஸ்தலத்தின் பிராகாரத்தையும உண்டுபண்ணுவாயாக. தெற்கே தென்றி சையின பக்கத்திற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலால நூறுமுழ நீளமுமான வெளியாடைகளும, * ௩௮, ௯.

௰ அவைகளின இருபது தூணகளும இரு பது அவைகளின இருபது காலகள வெ ண்கலமும தூணகளின வளைவாணிகளும அ வைகளின பூண்களும வெள்ளியுமாயிருப் பதாக.

௧௧ அப்படியே வடபக்கத்தின நீளத்தி லும நூறுமுழ நீளமான வெளியாடைகளும அவைகளின இருபது தூணகளுமிருப்பதா க. தூணகளின இருபது காலகள வெண்க லமும தூணகளின வளைவாணிகளும வெளி யுமாயிருப்பதாக.

௧௨ பிராகாரத்தினுடைய மேற்பக்கமா ன அகலத்திற்கு ஐம்பதுமுழ நீளமானவெ ளியாடைகளும அவைகளுக்குப்பத்துத் தூ ணகளும இவைகளுக்குப்பத்துக்காலக ளுமிருப்பதாக.

௧௩ சூரியனுதிக்கிற திசையாகிய பிரா காரத்தின கீழ்ப்பக்கமான அகலமும ஐம்ப துமுழமாயிருப்பதாக.

௧௪ அதிலே ஒருபக்கத்திலிருக்கிற பதினை ந்துமுழநீளமான வெளியாடைகளும அவைக ளுக்கு மூன்று தூணகளும இவைகளுக்கு மூன்றுகாலகளுமிருப்பதாக.

௧௫ மறுபுறத்திலிருக்கிற பதினைந்துமுழநீள மான வெளியாடைகளும அவைகளுக்கு மூ ன்று தூணகளும இவைகளுக்கு மூன்றுகா லகளுமிருப்பதாக.

௧௬ பிராகாரத்தின வாசலுக்கோவென்றா ல இளநீலநூலும இரத்தாம்பரநூலும சி வப்புநூலும திரித்த மெல்லிய பஞ்சுநூலு மினால சித்திரத்தையலவேலையும இருபதுமுழ நீளமுமான ஒருமறைவும அதற்கு நான்கு தூணகளும இவைகளுக்கு நான்குகாலகளு மிருப்பதாக.

௧௭ சுற்றிலுமிருக்கும பிராகாரத்தின தூ ணகளெல்லாம வெள்ளிவளையங்களபோட ப்பட்டிருப்பதாக. அவைகளின வளைவாணி கள வெள்ளியும அவைகளின காலகள வெண் கலமுமாயிருப்பதாக.

௧௮ பிராகாரத்தின நீளம நூறுமுழமும இருபுறத்தகலம ஐம்பதுமுழமும உயரம ஐந்துமுழமுமாயிருப்பதாக. அது திரித்த மெல்லிய பஞ்சுநூலும அவைகளின காலக ள வெண்கலமுமாயிருப்பதாக.

௧௯ வாசஸ்தலத்தின சகலவேலையிலும அதற்குத்தேவையான எல்லாப்பணிமுட் டுகளும அதினுடைய எல்லாமுளைக்கூச்சு களும பிராகாரத்தினுடைய எல்லாமுளைக் கூச்சுகளும வெண்கலமாயிருப்பதாக.

குத்துவிளக்கின எண்ணெய்க்காகக்கொடு த்தகட்டளை.

௨௰ குத்துவிளக்கை எப்பொழுதும எ ரியப்பண்ணும்படிக்கு இஸ்ரவேலபுத்திரர் இடித்துவடிக்கப்பட்ட தெளிவான ஒலிவ எண்ணெயையுன்னண்டைக்குக் கொண் டுவர நீ அவர்களுக்குக் கற்பிப்பாயாக.

௨௧ ஆசரிப்பின கூடாரத்திற் சாட்சிக்கு முன்னிருக்குந்திரைக்கு வெளிப்புறமாக ஆ ரோனும அவன குமாரரும அதைச்சாயங் காலந்துவக்கி விடியற்காலமட்டுங் கர்த்த ருக்குமுன்பாக எரியவைக்கக்கடவர்கள். இது அவர்களுக்குத் தலைமுறைதலைமுறை யாக இஸ்ரவேல புத்திரராலே நடக்கும நி த்தியகட்டளையாயிருக்கக்கடவது.

௨௮. அதிகாரம்.

ஆசாரிய வஸ்திரங்களின் கட்டளைகள்.

நீ உன் சகோதரனாகிய ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்கு இஸ்ரவேல் புத்திரரின் நடுவிலிருந்து பிரித்து உன்னண்டை சேர்த்துக்கொள். ஆரோனையும், நாதாப், அபிகூ, எலெயாசார், இத்தமார் என்ற ஆரோனின் குமாரரையுந்தானே.

௨ உன் சகோதரனாகிய ஆரோனுக்கு மகிமைக்கும் அலங்காரத்திற்குமான பரிசுத்த வஸ்திரங்களை யுண்டுபண்ணுவாயாக.

௩ ஆரோனைப் பரிசுத்தம்பண்ணுகிறதற்கும் அவன் நமக்கு ஆசாரிய ஊழியஞ்செய்கிறதற்கும் அவனுடைய வஸ்திரங்களையுண்டாக்கும்படிக்கு நாம் ஞானத்தின் ஆவியால் நிரப்பின ஞானமுள்ள இருதயமுள்ளயாவரோடும் நீ பேசுவாயாக.

௪ அவர்கள் உண்டாக்கவேண்டிய வஸ்திரங்களாவன: மார்ப்பதக்கமும் ஆசாரிய சால்வையும் அங்கியும் சித்திரவேலையான உட்சட்டையும் பாகையும் இடைக்கச்சையுந்தானே. அந்தப்படியே உன் சகோதரனாகிய ஆரோன் நமக்கு ஆசாரிய ஊழியஞ் செய்யும்படிக்கு அவனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களையுண்டுபண்ணக்கடவார்கள்.

௫ அவர்கள் பொன்னும் இளநீல நூலும் இரத்தாம்பர நூலுஞ் சிவப்புநூலும் மெல்லிய பஞ்சுநூலுமெடுத்து,

௬ ஆசாரிய சால்வையை பொன்னினாலும் இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலுஞ் சிவப்புநூலாலுந் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் விசித்திரவேலையாய்ப் பண்ணக்கடவார்கள்.

௭ இரண்டு தோளின்மேலும் அதின் இரண்டு முனைகள் சேர்க்கப்பட்டு அப்படியது இணைக்கப்படவேண்டும்.

௮ அந்த ஆசாரிய சால்வையின் மேலிருக்கவேண்டிய விசேஷமான கச்சை அந்த வேலையாயத்தானே பொன்னினாலும் இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலுஞ் சிவப்புநூலாலுந் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணப்பட்டு அதனோடே ஏகத்துண்டாயிருப்பதாக.

௯ பின்னையும் நீ இரண்டு கோமேதகக் கல்லை வாங்கி அவைகளில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டுவாயாக. அவர்கள் பிறந்த வரிசையின்படியே,

௧0 அவர்கள் நாமங்களில் ஆறு நாமங்கள் ஒரு கல்லிலும் மற்ற ஆறு நாமங்கள் மற்றக் கல்லிலும் இருக்கத்தானே.

௧௧ இரத்தினங்களில் முத்திரைவெட்டுகிறவர்கள் செய்கிறதுபோலே அந்த இரண்டு கல்லுகளில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டி அவைகளைச் சுற்றிலுந் தங்கம் பதித்து,

௧௨ ஆரோன் கர்த்தருக்கு முன்பாகத் தனிரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை நினைப்புக்காகச் சுமந்துவர அந்த இரண்டு கல்லுகளையும் ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேலே அவர்கள் நினைப்புக்கான கல்லுகளாக வைக்கக்கடவாய்.

௧௩ அதையாற் பொன்வளையங்களையும் பண்ணி,

௧௪ சரியான அளவுகளும் முடிச்சுக்குத் தக்கவேலைப்பாடுமான இரண்டு சங்கிலிகளையும் சுத்தப்பொன்னினாலேயுண்டாக்கி, முடிச்சுக்குத் தக்கதான சரப்பளிகளை அந்த வளையங்களிற் சேர்க்கக்கடவாய்.

௧௫ விசித்திரவேலையாய் நியாயத்தின் மார்ப்பதக்கத்தையும் பண்ணுவாயாக. அதை ஆசாரிய சால்வையின் வேலைக்கொத்ததாய்ப் பண்ணக்கடவாய். பொன்னினாலும் இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலுஞ் சிவப்புநூலாலுந் திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் அதைச் செய்வாயாக.

௧௬ அது நாற்சதுரமும் இரட்டையுமாய் ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அகலமுமாயிருக்கக்கடவது.

௧௭ அதிலே நான்கு பத்தி இரத்தினக்கல்லுகளை நிறையப்பதிப்பாயாக. முதலாம் பத்திக்கும் பதுமமும் புஷ்பராகமும் மரகதமும்,

௧௮ இரண்டாம் பத்தி சிவப்புக்கல்லும் நீலக்கல்லும் வச்சிரமும்,

௧௯ மூன்றாம்பத்தி பதுமராகமும் வைடூரியமும் அமெதீஸ்தும்,

௨0 நான்காம்பத்தி தர்ஷீஸ் இரத்தினமும் கோமேதகமும் யஸ்பியுமாயிருப்பதாக. அவைகள் தங்கள் இடங்களிற் பொன்னிலே பதித்திருக்கக்கடவது.

௨௧ இந்தக்கல்லுகள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும் அவர்களுடைய நாமங்களுள்ளவைகளுமாயிருக்கவேண்டும். பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே முத்திரைவெட்டாய் வெட்டியிருக்கக்கடவது.

௨௨ அந்த மார்ப்பதக்கத்திற்கென்று நீ சரியளவுகளும் முடிச்சுக்குத் தக்கவேலைப்பாடுமான சுத்தப்பொன் சரப்பளிகளையும் பண்ணி,

௨௩ இரண்டு பொன் மோதிரங்களையும் மார்ப்பதக்கத்திற்குப் பண்ணி இந்த இரண்டு மோதிரங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு முனைகளிலே வைத்து,

௨௪ பொன்னான அந்த இரண்டு முடிச்சுக்குத்திகளை மார்ப்பதக்கத்தின் முனைகளிலிருக்கிற இரண்டு மோதிரங்களிலமாட்டி

௨௫ இரண்டு முடிச்சுகளுக்குள்ளின் இரண்டு பின்னல்களை ஆசாரியசால்வையினுடைய தோள்பட்டைகளிலே அதின் முன்புறத்தில் இருக்கிற பொன்வளையங்களில் மாட்டிப் போடுவாயாக.

௨௬ நீ இன்னும் இரண்டு பொன்மோதிரங்களை உண்டாக்கி அவைகளை ஆசாரியசால்வைக்கு உட்புறத்திலே இருக்கிற மார்ப்பதக்கத்துடைய மற்ற இரண்டு முனைகளிலேயும் தைத்தாக வைத்து,

௨௭ வேறே இரண்டு பொன்மோதிரங்களை உண்டாக்கி அவைகளை ஆசாரியசால்வையினுடைய முன்புறத்தின் இரண்டு பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும் ஆசாரியசால்வையின் விசித்திரமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,

௨௮ மார்ப்பதக்கம் ஆசாரியசால்வையின்மேலுள்ள கச்சைக்கு மேலாகவிருக்கத்தக்கதும் அது ஆசாரியசால்வையிலிருந்து விலகாததற்கும், அவர்கள் மார்ப்பதக்கத்தின் மோதிரங்களை ஆசாரியசால்வையின் மோதிரங்களோடே இளநீலமான கயிற்றினாலே கட்டுவார்களாக.

௨௯ அப்படியே ஆரோன் பரிசுத்தஸ்தலத்துக்குட் பிரவேசிக்கையில் தன் இருதயத்தின்மேல் நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை எப்பொழுதும் கர்த்தருக்கு முன்பாக நினைப்பூட்டுதற்குச் சுமந்துகொள்ளக்கடவன்.

௩௦ நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே வெளிச்சங்களையும் உத்தமங்களையும், ஆரோன் கர்த்தரின் சந்நிதிக்குட் பிரவேசிக்கையில் அவைகள் அவன் இருதயத்தின் மேலிருக்கும்படிக்கு வைப்பாயாக. அப்படியே ஆரோன் தன் இருதயத்தின்மேலே இஸ்ரவேல் புத்திரருடைய நியாயத்தை எப்பொழுதும் கர்த்தருக்கு முன்பாகச் சுமந்துகொள்ளக்கடவன்.

௩௧ ஆசாரியசால்வையின் கீழிருக்கும் அங்கியை முழுவதும் இளநீலநூலால் உண்டாக்கக்கடவாய்.

௩௨ தலைநுழைகிற அதின்வாய் அதின் நடுவிலேயிருக்கவும் அதின்வாய்க்கு நெய்தவேலையான நாடா சுற்றிலுமிருக்கவும் வேண்டும். அது கிழியாதபடிக்கு மார்க்கவசத்தின் வாய்போலே தைத்து அதற்கிருப்பதாக.

௩௩ அதின் ஓரங்களிலேயொன்றுக்கொன்று இடையிடையே இரத்தாம்பர நூல் சிவப்பு நூல் இவைகளால் மாதளம்பழங்களையும் அவைகளின் நடுவிலே சுற்றிலும் பொன்மணிகளையும் அதின் ஓரங்களிலே சுற்றிலும் தொங்கப் பண்ணுவாயாக.

௩௪ அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் பொன்மணியும் மாதளம்பழமும் பொன்மணியும் மாதளம்பழமுமாய் இருப்பதாக.

௩௫ ஆரோன் ஆராதனைசெய்யக் கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்தஸ்தலத்துக்குட் பிரவேசிக்கும் பொழுதும், வெளியே வரும் பொழுதும், அவன் சாகாதபடிக்கு அது அவனில் அவன் சத்தங் கேட்கப்படத்தக்கபடியிருக்கவேண்டும்.

௩௬ நீ சுத்தப்பொன் பட்டத்தையும் பண்ணி அதிலே கர்த்தருக்குப் பரிசுத்தமென்பதை முத்திரைவெட்டாக வெட்டி,

௩௭ அது பாகையிலிருக்கும்படியாக அதை இளநீலமான கயிற்றிலே பாகையின் முகப்பிலே கோத்துக் கட்டிவைப்பாயாக.

௩௮ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணிக்கைகளிலெல்லாம் பரிசுத்தம் பண்ணிச் செலுத்தும் பரிசுத்தவஸ்துக்களுடைய அக்கிரமத்தை ஆரோன் சுமந்து தீரும்படிக்கு அது ஆரோனுடைய நெற்றியின்மேலிருப்பதாக. கர்த்தருக்கு முன்பாக அவர்கள்மேற் பிரியமுண்டாகும்படிக்கு அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேலிருப்பதாக.

௩௯ மெல்லிய பஞ்சுநூலால் மூன்று வர்ணமான உட்சட்டையையும் மெல்லிய பஞ்சுநூலாற் பாகையையும் உண்டாக்கக்கடவாய். கச்சையோவென்றால் சித்திரத்தையல் வேலையாய்ப் பண்ணுவாயாக.

௪௦ நீ ஆரோனுடைய குமாரருக்கு அங்கிகளையும் நடுக்கட்டுகளையும் மகிமைக்கும் அலங்காரத்துக்குமான குல்லாக்களையும் உண்டுபண்ணுவாயாக.

௪௧ உன் சகோதரனாகிய ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் நமக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்கு நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்குத் தரித்து அவர்களை அபிஷேகம்பண்ணி அவர்கள் கைகளை நிரப்பி அவர்களைப் பரிசுத்தம்பண்ணுவாயாக.

௪௨ அவர்களுக்கு இடுப்புத் தொடங்கி முழங்கால்கள்மட்டும் வருகிற சணல்நூற் சல்லடங்களையும் நிர்வாணத்தின் சதையை மூடும்படிக்கு உண்டுபண்ணக்கடவாய்.

௪௩ ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்தஸ்தலத்திலே ஆராதனைசெய்ய ஆசரிப்பின் கூடாரத்துக்குட் பிரவேசிக்கும் பொழுது அல்லது பலிபீடத்தண்டைக்குச் சேரும் பொழுதும் அவர்கள் அக்கிரமஞ்சுமந்து சாகாதபடிக்கு அவைகள் அவர்களில் தரித்திருக்கவேண்டும். அவனுக்கும் அவனுக்குப் பிற்பாடு அவன் வித்தாருக்கும் அது நித்தியகட்டளை.

௨௯. அதிகாரம்.

ஆசாரியர்களையும் பலிபீடத்தையும் பிரதிஷ்டைபண்ணுங் கட்டளை.

நமக்கு ஆசாரிய ஊழியஞ்செய்ய அவர்களைப் பரிசுத்தம்பண்ணும்படிக்கு நீ அவ

க்களுக்குச் செய்யவேண்டியதாவது. நீ ஒரு காளை எருதையும் பழுதற்ற இரண்டு ஆட்டுக்கிடாய்களையும்.

௨ கோதுமையின் மெல்லிய மாவினாலே சுட்ட புளிப்பில்லாத அப்பங்களையும் எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் வாங்கு.

௩ நீ இவைகளை ஒரே கூடையிலே வைத்து அந்தக் கூடையோடே இவைகளையுங் காளையெருதையும் இரண்டு ஆட்டுக்கிடாய்களையுங் கொண்டுவந்து,

௪ ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்கு முன்பாகச் சேர்ப்பண்ணி அவர்களைத் தண்ணீரிலே கழுவி,

௫ வஸ்திரங்களையெடுத்துக்கொண்டு ஆரோனுக்குச் சட்டையையும் ஆசாரியசால்வையின் அங்கியையும் ஆசாரியசால்வையையும் மார்ப்பதக்கத்தையும் உடுத்தி அவனுக்கு ஆசாரியசால்வையின் விசித்திரமான கச்சையைக் கட்டி,

௬ அவன் தலையிலே பாகையைப்போட்டு பரிசுத்த கிரீடத்தைப் பாகையிலே தரித்து,

௭ அபிஷேகத்தெண்ணெயையை வாங்கி அவன் தலையின்மேலே வார்த்து அவனை அபிஷேகம்பண்ணி,

௮ பிறபாடு அவன் குமாரரைச் சேர்ப்பண்ணி ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு நித்தியகட்டளையாக இருக்கும்படிக்கு அவர்களுக்குச் சட்டைகளையுடுத்தி,

௯ ஆரோனையும் அவன் குமாரரையும் நடுக்கட்டுகளால் அரைக்கட்டி இவர்களுக்குக் குல்லாக்களைப்போட்டுக்கட்டி ஆரோனுடைய கையையும் அவன் குமாரரின் கையையும் நிரப்பி,

௰ காளையெருதை ஆசரிப்பின் கூடாரத்திற்கு முன்பாகக் கொண்டு வருவாயாக. அப்பொழுது ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளைக் காளையெருதினுடைய தலையின்மேலே வைக்கக்கடவர்கள்.

௰௧ பிற்பாடு நீ அந்தக் காளையெருதை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலண்டையிலே கர்த்தருக்கு முன்பாகக் கொலையறுத்து,

௰௨ அதின் இரத்தத்திலே கொஞ்சம் வாங்கி உன் விரலினாற் பலிபீடத்தின் கொம்புகளின்மேலிட்டு மற்ற இரத்தத்தையெல்லாம் பலிபீடத்தடியிலே ஊற்றி,

௰௩ குடல்களை மூடிய எல்லாக் கொழுப்பையும் ஈரலின்மேலிருக்கிற சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையுமெடுத்துப் பலிபீடத்தின்மேலே கொளுத்திப்போட்டு,

௰௪ காளையெருதின் மாம்சத்தையும் அதின் தோலையும் அதின் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாற் சுட்டெரிக்கக்கடவாய். அது பாவம்போக்கும் பலி.

௰௫ அதற்குப்பிறகு அந்த ஆட்டுக்கிடாய்களில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக. அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

௰௬ பிறபாடு நீ அதைக் கொலையறுத்து அதின் இரத்தத்தைப் பிடித்துப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந் தெளித்து,

௰௭ ஆட்டுக்கிடாயை அதின் சந்துசந்தாய்த் துண்டித்து அதின் குடல்களையும் அதின் தொடைகளையுங் கழுவி அவைகளை அதின் துண்டங்களின்மேலும் அதின் தலையின்மேலும் வைத்து,

௰௮ ஆட்டுக்கிடாயை முழுவதும் பலிபீடத்தின்மேற் கொளுத்திப் போடுவாயாக. அது கர்த்தருக்கான சர்வாங்கதகனபலி. அது ஆறுதலான வாசனையுள்ள கர்த்தருக்கான தகனமாயிருக்கும்.

௰௯ அதற்குப்பிறகு நீ மற்ற ஆட்டுக்கிடாயைக் கொண்டுவந்து நிறுத்துவாயாக. அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

௨௰ பிறபாடு நீ அதைக் கொலையறுத்து அதின் இரத்தத்திற் கொஞ்சம் வாங்கி ஆரோனின் வலதுகாதுமடலிலும் அவன் குமாரரின் வலதுகாதுமடலிலும் அவர்கள் வலதுகையினுடைய பெருவிரலின்மேலும் அவர்கள் வலதுகாலுடைய பெருவிரலின்மேலுமிட்டு மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின்மேற் சுற்றிலுந் தெளித்து,

௨௰௧ பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேக எண்ணெயிலுங் கொஞ்சமெடுத்து ஆரோனும் அவன் வஸ்திரங்களும் அவனோடேகூட அவன் குமாரரும் அவர்கள் வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படிக்கு அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவன் குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள்மேலுந் தெளித்து,

௨௰௨ அந்த ஆட்டுக்கிடாய் நிரப்புதலின் ஆட்டுக்கிடாயானபடியினாலே அதிலிருக்குங் கொழுப்பையும் வாலையுங் குடல்களை மூடிய கொழுப்பையும் ஈரலின்மேலிருக்கிற சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையும் வலது முன்னந்தொடையையும்,

௨௰௩ கர்த்தருக்கு முன்பாக வைத்திருக்கிற புளிப்பில்லாத அப்பங்களின் கூடையில் ஒரு அப்பத்தையும் எண்ணெயப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையுமெடுத்து,

௨௰௪ அவைகளையெல்லாம் ஆரோனின் உள்ளங்கைகள்மேலும் அவன் குமாரரின் உள்ளங்கைகள்மேலும் வைத்து அவைகளை

கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டு,

௨௫ பின்பு அவைகளை அவர்கள் கைகளிலிருந்து வாங்கிப் பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனபலியின்மேல் வைத்துக் கர்த்தருக்கு முன்பாகச் சுகந்த வாசனையாகத் தகனிப்பாயாக. அது கர்த்தருக்குத் தகனம்.

௨௬ ஆரோனின் பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவின் மார்க்கண்டத்தை எடுத்து அதைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாக அசைவாட்டுவாய். அது உன் பங்காயிருக்கும்.

௨௭ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் உரிய பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவிலே அசைவாட்டப்படுகிற மார்க்கண்டத்தையும் ஏறெடுத்துப் படைக்கப்படுகிற முன்னந்தொடையையும் பரிசுத்தமாக்குவாய்.

௨௮ இஸ்ரவேல் புத்திரர் பலியிடுகிற சமாதானபலிகளில் அது நித்திய கட்டளையாக ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் உரியதாக. ஏனெனில் அது ஏறெடுத்துப் படைக்கப்படுவது; இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளிலே ஏறெடுக்கப்படும் அவர்களுடைய படைப்பு கர்த்தருடையது.

௨௯ ஆரோனுக்கிருக்கிற பரிசுத்த வஸ்திரங்கள் அவனுக்குப் பிறகு அவனுடைய குமாரருக்கு உரியவைகளாய், அவைகளில் அவர்கள் அபிஷேகம்பண்ணப்படவும் பட்டங்களைத் தரிப்பிக்கப்படவும் அவை அவர்களைச் சேர்வதாக.

௩௦ அவன் பட்டத்திலே ஆராதனைசெய்ய ஆசரிப்பின் கூடாரத்திற்குட் பிரவேசிக்கத்தக்கதாக அவன் குமாரரில் அவன் ஸ்தானத்திற்கு வருகிற ஆசாரியன் அவைகளை ஏழுநாளளவும் உடுத்திக்கொள்ளக்கடவன்.

௩௧ பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாவை நீ எடுத்து அதின் மாம்சத்தைப் பரிசுத்த ஸ்தலத்திலே வேவிப்பாயாக.

௩௨ அந்த ஆட்டுக்கடாவின் மாம்சத்தையும் கூடையிலிருக்கிற அப்பத்தையும் ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக் கூடாரவாசலிலே புசிக்கக்கடவர்கள்.

௩௩ ஏனெனில் அவர்களுடைய கைகளை நிரப்பவும் அவர்களைப் பரிசுத்தம்பண்ணவும் அவைகளாலே பாவநிவிர்த்தி செய்யப்பட்டது. அந்நியனோவெனில் அவைகளிலே புசிக்கவேண்டாம். ஏனெனில் அவைகள் பரிசுத்தம்.

௩௪ பிரதிஷ்டையின் மாம்சத்திலும் அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலமட்டும் மீதியாயிருந்ததேயானால் அதை அக்கினியிலே சுட்டெரிப்பாயாக. அது புசிக்கப்படவேண்டாம். ஏனெனில் அது பரிசுத்தம்.

௩௫ இப்பிரகாரமாக நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் நான் உனக்குக் கற்பித்தபடியெல்லாஞ் செய்வாயாக. ஏழுநாளளவும் அவர்கள் கைகளை நிரப்பு,

௩௬ பாவநிவிர்த்திக்காக ஒவ்வொருநாளிலும் ஒரு காளையைப் பாவமன்னிப்பாகப் பலியிட்டு, பலிபீடத்தையும் பாவநிவிர்த்தியை அதற்காகச் செய்கிறதிலே பாவம் நீங்கச் சுத்திகரித்து அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கு அதை அபிஷேகம்பண்ணுவாயாக.

௩௭ ஏழுநாள்மட்டும் பலிபீடத்திற்காகப் பாவநிவிர்த்தி செய்யப்பண்ணி, அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய். பலிபீடம் பரிசுத்தத்திற் பரிசுத்தமாயிருக்கும்; பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

௩௮ பலிபீடத்தின்மேல் நீ பலியிடவேண்டியதென்னவெனில் எப்பொழுதும் ஒவ்வொருநாளிலே ஒருவயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைத்தானே.

௩௯ ஒரு ஆட்டுக்குட்டியைக் காலமேயும் மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமான வேளையிலும் பலியிடுவாயாக.

௪௦ ஒருமரக்காலிலே பத்திலொரு பங்கானதும் இடித்துப் பிழிந்தெடுக்கப்பட்ட காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும், திராட்சரசத்திலே காற்படியாகிய ஒரு ஊற்றுதலையும் ஒரு ஆட்டுக்குட்டிக்காகப் படைத்து,

௪௧ மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமாகிற வேளையிலே பலியிடுகிறபொழுது, காலமே படைத்த காணிக்கைக்கும் அதின் ஊற்றுதலுக்கும் ஒத்தபிரகாரமாக அதை யாறுகிற வாசனைக்காகச் செய்யக்கடவாய். அது கர்த்தருக்குத் தகனம்.

௪௨ நாம் உன்னுடனே பேச உங்களைச் சந்திக்கப்போகிறதானமாகிய ஆசரிப்புக் கூடாரத்தினுடைய வாசலின் முன்னே கர்த்தரின் சந்நிதியிலே இவைகள் உங்கள் தலைமுறை தலைமுறையாக எப்பொழுதும் செலுத்தப்படவேண்டிய சர்வாங்கத் தகனபலிகள்.

௪௩ * அங்கே இஸ்ரவேல் புத்திரரோடே சந்திப்போம். அந்த ஸ்தலம் நம்முடைய மகிமையினாலே பரிசுத்தமாக்கப்படும்.

* ௨௰, ௨௪.

௪௪ நாம் ஆசரிப்பின் கூடாரத்தையும் பலிபீடத்தையும் பரிசுத்தமாக்கி ஆரோனையும் அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்குப் பரிசுத்தமாக்கு,

௪௫ இஸ்ரவேல் புத்திரரின் நடுவே வாசம்பண்ணி, அவர்களுக்குத் தேவனாயிருப்போம்.

௪௬ அவர்கள் நடுவிலே நான் வாசம்பண்ணும்படிக்கு அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாம் அவர்களுடைய பராபரனாகிய கர்த்தரென்று அறிவார்களாக. நாம் அவர்களுடைய பராபரனாகிய கர்த்தர்.

௩௰. அதிகாரம்.

தூபபீடத்தைப் பண்ணுகிறதற்கான கட்டளை.

தூபங்காட்டுகிறதற்கு * ஒரு தூபபீடத்தையுஞ் சித்தீம் மரங்களினாலே உண்டாக்குவாயாக. * ௩௭, ௨௫.

௨ அது ஒருமுழ நீளமும் ஒருமுழ அகலமுமான சதுரமும் இரண்டுமுழ உயரமுமாய், அதின் கொம்புகள் அதோடே ஏகமாயிருப்பதாக.

௩ அதையெல்லாம், அதின் மேல்பலகையையுஞ் சுற்றிலுமிருக்கும் அதின் பக்கங்களையும் அதின் கொம்புகளையுஞ் சுத்தப் பொற்றகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொன் திரணையையுண்டுபண்ணி,

௪ அந்தத் திரணையின் கீழ் அதின் இரண்டு பக்கங்களிலும் அதைச் சுமக்குந் தண்டுகளின் இடங்களாகிற இரண்டு பொன்வளையங்களை, அதற்குப் பக்கத்தின் இரண்டு கோடிகளிலும் உண்டாக்கி,

௫ அந்தத் தண்டுகளையுஞ் சித்தீம் மரங்களாலே பண்ணிப் பொற்றகட்டால் மூடக்கடவாய்.

௬ சாட்சியினுடைய பெட்டியின் முன்னேயுஞ் சாட்சியின்மேலிருக்கிறதும் நானுன்னைச் சந்திப்பதுமான கிருபாசன மூடியின் முன்னேயுமிருக்குந் திரைக்கு முன்பாக அதை வைக்கக்கடவாய்.

௭ ஆரோன் காலமாலும் விளக்குகளைச் சீர்ப்படுத்துகிற பொழுதும் அந்தி நேரமாகிற வேளையிலே விளக்குகளேற்றுகிறபொழுதும் அதின்மேல் சுகந்தவர்க்கங்களினாலே தூபங்காட்டக்கடவன்.

௮ அது எப்பொழுதும் உங்கள் தலைமுறைதலைமுறையாய்க் கர்த்தருக்கு முன்பாகக் காட்டப்படுந் தூபம்.

௯ அதின் மீதில் அந்நிய தூபவர்க்கத்தையாகிலும் ஒரு தகனபலியையாகிலும் ஏதாகிலுங் காணிக்கையையெனிலும் ஏறப்பண்ணீர்களாக. அதின்மேல் ஒரு ஊற்றுப்பலியும் ஊற்றீர்களாக.

௰ வருஷத்திலொருமுறை ஆரோன் அதின் கொம்புகளின்மேல் பாவங்களை நிவர்த்திபண்ணும் பலியின் இரத்தத்தாலே பாவநிவர்த்திபண்ணுவானாக. அப்படியவன் உங்கள் தலைமுறை தலைமுறையாக வருஷத்தில் ஒருமுறை பாவநிவர்த்திபண்ணுவானாக. அது கர்த்தருக்குப் பரிசுத்தத்திற் பரிசுத்தமாயிருக்குமென்றார்.

ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்குச் செலுத்தப்பட வேண்டிய வரியின் கட்டளை.

௰௧ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது,

௰௨ நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படியே கணக்குப் பார்க்கிற பொழுது, அவர்களை எண்ணுகையில் அவர்களுக்குள்ளே ஒரு வாதையுண்டாகாதபடிக்கு அவர்களில் ஒவ்வொருவர் தன்தன் ஆத்துமத்திற்காகக் கர்த்தருக்கு மீட்கும் பொருளைக்கொடுக்கக்கடவர்கள்.

௰௩ எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிறவனெல்லாரும் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலின் கணக்கின்படி அரைச்சேக்கலைக் கொடுக்கவேண்டும். சேக்கலானது இருபது கேரா. அரைச்சேக்கல் கர்த்தருக்குச் செலுத்தப்படுவது.

௰௪ எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிற இருபது வயதுமுதற்கொண்டு மேற்பட்டவனெல்லாரும் அதைக் கர்த்தருக்குச் செலுத்தவேண்டும்.

௰௫ உங்கள் ஆத்துமங்களுக்காகப் பாவநிவர்த்திபண்ணுங் கட்டளையை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்துகையில் அரைச்சேக்கலுக்கு ஐசுவரியவான் ஏறக்கொடுக்கவும் வேண்டாம். தரித்திரன் குறையக்கொடுக்கவும் வேண்டாம்.

௰௬ பாவநிவர்த்தியின் அந்தத் திரவியத்தை நீ இஸ்ரவேல் புத்திரர் கையிலே வாங்கி அதை ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்குக் கொடுப்பாயாக. அப்படியே உங்கள் ஆத்துமங்களுக்காகப் பாவநிவர்த்தியாக அது கர்த்தருக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரின் நினைப்புக்காக இருக்குமென்றார்.

வெண்கலத்தொட்டியின் கட்டளை.

௰௭ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௰௮ * கழுவுகிறதற்கு நீ வெண்கலத்தால் ஒரு தொட்டியையும் வெண்கலத்தால் அதின் பிரமணையையும் உண்டாக்கி அதை ஆசரிப்பின் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. * ௩௮, அ. ௪௰, ௩௰.

௰௯ அதினிடத்தில் ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளையுந் தங்கள் கால்களையுங் கழுவக்கடவர்கள்.

௨௰ அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குட் பிரவேசிக்கும் பொழுதும் அல்லாமல் கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தப் பலிபீடத்தண்டைக்கு ஆராதனைசெய்யச் சேரும்பொழுதும், அவர்கள் சாகாதபடிக்குத் தண்ணீரினாலே தங்களைக் கழுவக்கடவர்கள்.

௨௧ அவர்கள் சாவாததற்கு தங்கள் கைகால்களைக் கழுவக்கடவர்கள். அது அவனுக்கும் அவனுடைய சந்ததிக்கும் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும் என்றார்.

பரிசுத்த அபிஷேகத்தைலத்தின் கட்டளை.

௨௨ பின்னும் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨௩ நீ மேன்மையான சுகந்த வர்க்கங்களாகிய சுத்த வெள்ளைப்போளம் ஐந்நூறு சேக்கலின் நிறையையும், சுகந்த கறுவாப்பட்டை அதிலே பாதியாகிய இருநூற்றைம்பது சேக்கல் நிறையையும், சுகந்த வசம்பு இருநூற்றைம்பது சேக்கல் நிறையையும்,

௨௪ இலவங்கப்பட்டை ஐந்நூறு சேக்கல் நிறையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு படியையும் எடுத்து,

௨௫ சுகந்த தைலக்காரன் வேலையால் கூட்டப்பட்ட பரிமள தைலமான* பரிசுத்த அபிஷேக எண்ணெயை உண்டுபண்ணுவாயாக. அது பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கக்கடவது. * ௩௭, ௨௯.

௨௬ அதினாலே நீ ஆசரிப்புக் கூடாரத்தையும் சாட்சிப்பெட்டியையும்,

௨௭ மேசையையும் அதின் பணிமுட்டுகள் யாவையும், குத்துவிளக்கையும் அதின் பணிமுட்டுகளையும், தூபபீடத்தையும்,

௨௮ தகனபலிபீடத்தையும் அதின் பணிமுட்டுகள் யாவையும், தொட்டியையும் அதின் பாதத்தையும் அபிஷேகம்பண்ணி,

௨௯ அவைகள் பரிசுத்தத்திலும் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு அவைகளைப் பரிசுத்தப்படுத்துவாயாக. அவைகளைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருப்பது.

௩௰ நீ ஆரோனையும் அவன் குமாரரையும் எனக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்கு அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தப்படுத்துவாயாக.

௩௧ இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதாவது: இது உங்கள் தலைமுறைதோறும் எனக்குப் பரிசுத்த அபிஷேக எண்ணெயாயிருப்பது.

௩௨ அது மனிதனுடைய மாம்சத்தின்மேல் வார்க்கப்படலாகாது; அவர்கள் அதின் செய்முறையின்படி அதைப்போலொத்த வேறொன்றைச் செய்யவும் வேண்டாம்; அது பரிசுத்தமானது, அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.

௩௩ அதைப்போலொத்த தைலத்தைக் கூட்டுகிறவனும், அதிலே எடுத்து அந்நியன்மேல் வார்க்கிறவனும் தன் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டுபோகக்கடவன் என்று சொல் என்றார்.

பரிசுத்த தூபவர்க்கத்தின் கட்டளை.

௩௪ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ சுகந்தவர்க்கங்களாகிய வெள்ளைப்போளமும் குங்கிலியமும் அல்பான பிசினுமென்ற சுகந்தவர்க்கங்களோடு சுத்தமான குந்திரிக்கத்தையும் ஒன்றுக்கொன்று சரி எடையாக வாங்கிக்கொண்டு,

௩௫ அதைத் தைலக்காரன் வேலையாய்ப் பரிமளமேற்றி துப்பாரவும் பரிசுத்தமுமான* தூபவர்க்கமாக்கி, * ௩௭, ௨௯.

௩௬ அதிலே கொஞ்சம் இடித்துத் தூளாக்கி, நான் உன்னைச் சந்திக்கப்போகிற ஆசரிப்புக் கூடாரத்திலிருக்கும் சாட்சிக்கு முன்பாக வைப்பாயாக. உங்களுக்கு அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

௩௭ இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்கிற திட்டத்தின்படியே அதேவிதமாக நீங்கள் உங்களுக்குச் செய்யவேண்டாம்; அது கர்த்தருக்கென்று பரிசுத்தமாயிருப்பதாக.

௩௮ அதைப்போலொத்ததை முகருகிறதற்காகச் செய்கிறவன் தன் சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டுபோகக்கடவன் என்றார்.

௩௧. அதிகாரம்.

பரிசுத்த ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைகளைச் செய்யும் ஆட்களைக் குறித்தும், ஓய்வுநாளைப் பரிசுத்தமாகக் காக்கவேண்டியதைக் குறித்தும், கற்பலகைகளை மோசேக்குக் கொடுத்ததும்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது,

௨ இதோ, நாம் யூதாவின் கோத்திரத்திலே ஊரின் குமாரனான ஊரியின் குமாரன் பெத்சாலெயேலைப் பேர்சொல்லி அழைத்து,

௩ அவன் விசித்திரமான வேலைகளை யோசித்துப் பண்ணுகிறதற்கும் பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்,

௪ இரத்தினங்களை முத்திரைவெட்டாய் வெட்டிப் பதிக்கிறதற்கும் மரத்திலே சித்திர வேலைசெய்கிறதற்கும் சகல விதமான வேலையைப்பண்ணுகிறதற்கும்,

௫ ஞானமும் உணர்வும் அறிவுண்டாகவும் சித்திர வேலைக்கான விதத்தையும் அவனுக்கு உண்டாகும்படிக்கு அவனைப் பராபரனுடைய ஆவியினாலே நிரப்பினேம்.

௬ இதோ, நாம் தாண் கோத்திரத்திலே அகிசாமாகின் குமாரனாகிய அகோலியா

டவை வகிறதுக்குக் கூடடி, ஞானமான இரு தயமுள்ளவர்களுடைய இருதயத்திலுமெல்லா ஞானத்தைக் கொடுத்தேன் நான் உனக்குக் கற்பித்ததையெல்லாம் அவர்கள் செய்யுவார்கள்.

௭ ஆசரிப்புக் கூடாரத்தையும் சாட்சியின்பெட்டியையும் அதின்மேலிருக்கிற கிருபாசன மூடியையும் கூடாரத்துடைய எல்லா முட்டுகளையும்,

௮ மேசையையும் அதின் முட்டுகளையும் சுத்தமான குத்துவிளக்கையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தூபப்பீடத்தையும்,

௯ தகனபலிபீடத்தையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தொட்டியையும் அதின் பீடத்தையும்,

௰ ஆராதனையின் வஸ்திரங்களையும் ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்கு ஆசாரியனாகிய ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும்,

௧௧ அபிஷேகத் தைலத்தையும் பரிசுத்த ஸ்தலத்துக்கான சுகந்த வர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும் அவர்கள் நாம் உனக்குக் கற்பித்தபடியெல்லாஞ் செய்வார்களென்றார்.

௧௨ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது.

௧௩ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில் நம்முடைய ஓய்வுநாட்களைக் கைக்கொள்ளக் கடவீர்கள். ஏனெனில் நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று நீங்கள் அறிவதற்கு அது உங்கள் தலைமுறைதலைமுறையாக நமக்கும் உங்களுக்கும் நடுவான அடையாளம்.

௧௪ ஆகையால் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவீர்களாக. ஏனெனில் அது உங்களுக்குப் பரிசுத்தமானது. அதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். அதிலே வேலைசெய்கிற எந்த ஆத்துமாவும் தன் ஜனத்தின் நடுவிலிருந்து அறுப்புண்டதாக.

௧௫ ஆறுநாள் வேலைசெய்யப்படுவதாக. ஏழாம் நாளோவெனில் வேலையொழிந்திருக்கும் ஓய்வுநாள். அது கர்த்தருக்குப் பரிசுத்தம். ஓய்வுநாளிலே வேலைசெய்கிறவனெவனும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௧௬ ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைகளில் ஓய்வுநாளை நித்திய உடம்படிக்கையாய் ஆசரிக்கும்படிக்கு அதைக் கைக்கொள்ளக்கடவர்கள்.

௧௭ அது என்றைக்கும் நமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவான அடையாளம். ஏனெனில் ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தாரென்றார்.

௧௮ அவர் சீனாய்ப் பர்வதத்திலே மோசேயோடே பேசித் தீர்ந்தபிறகு அவனுக்குப் பராபரனுடைய விரலினாலே எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளைக் கொடுத்தார்.

௩௨. அதிகாரம்.

இஸ்ரவேல்ஜனம் வார்ப்பிக்கப்பட்ட கன்றுக்குட்டிக்கு ஆராதனைசெய்தது.

மோசே பர்வதத்திலிருந்திறங்கி வரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டபோழுது வெகுஜனமாய் ஆரோனண்டையிலே கூட்டமாய்க்கூடி, அவனை நோக்கி: நீ எழுந்து, எங்களுக்கு முன்னே நடக்கிற தேவர்களை எங்களுக்கு உண்டுபண்ணும். ஏனென்றால் எங்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவந்தவனாகிய அந்த மோசே என்கிறவனுக்கு என்ன சம்பவித்ததென்று அறியோமென்றார்கள். * ரு. மோசே. ௯, ௭. ழ

௨ அப்பொழுது ஆரோன் அவர்களை நோக்கி: உங்கள் பெண்சாதிகளும் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளிலிருக்கிற பொற்கடுக்கன்களைக் கழற்றி என்னண்டைக்குக் கொண்டுவாருங்களென்றான்.

௩ அப்பொழுது ஜனமெல்லாருந் தங்கள் காதுகளிலிருந்த பொற்கடுக்கன்களைக் கழற்றி ஆரோனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௪ அவன் அவர்கள் கையிலே அதை வாங்கி ஒரு எழுத்தாணியினாலே குறிப்பிட்டு, வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைச் செய்து உண்டுபண்ணினான். அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலே! இவைகளே உன்னை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவந்த உன்னுடைய தேவர்களென்றார்கள்.

௫ ஆரோன் அதைக் கண்டு அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை யென்று கூறினான்.

௬ மறுநாள் அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, சர்வாங்கதகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள். பிறகு ஜனம் போசனம்பண்ணக் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாடும்படிக்கு எழுந்திருந்தார்கள்.

௭ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ இறங்கிப்போ. ஏனெனில் நீ எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவந்த உன்னுடைய ஜனங்கள் கெடுத்துப்போட்டார்கள்.

௮ நான் அவர்களுக்குக் கற்பித்த வழியைச் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள். அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்கு உண்டாக்கி, அதைப் பணிந்துகொண்டு அதற்குப் பலியிட்டு, இஸ்ரவேலே! இவைகளே உன்னை எகிப்து தேசத்திலிரு

தேசிப்பண்ணின உன்னுடைய தேவர்க ளென்றுசொல்லி,

௯ பின்னுங் கர்த்தர் மோசேயோடே சொன்னது: இந்தச்சனத்தைப் பார்த்தேன், இது வணங்காக்கழுத்துள்ள சனம்.

௰ இப்பொழுது நாம் அவர்களையழிக் கும்படிக்கு நமது கோபம் அவர்களுக்கு விரோதமாக எரியத்தக்கதாக என்னை விட்டுவிடு. அப்பொழுது * உன்னைப் பெரிய சாதியாக்கு வேனென்றார். * ௪. மோசே. ௰௪, ௰௨.

௰௧ * ஆனால் மோசே தன் பராபரனுடைய முகத்தை நோக்கிக் கெஞ்சி சொன்னது: கர்த்தாவே! தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையான கையினாலும் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப் பண்ணின உம்முடைய சனத்துக்கு விரோ தமாய் உம்முடைய கோபம் எரிவானேன்?
* ௪. மோசே ௰௪, ௰௩. ௫.

௰௨ எகிப்தியர்கள்: அவர்களைப் பர்வதங்களிலே கொன்றுபோடவும் அவர்களைப் பூமியின்மேலிராதபடி க்கு நிர்மூலமாக்கவும் அவர்களைத் தீமைக்கென்று புறப்படப்பண்ணினா ரென்று சொல்லுவானேன்? உம்மு டைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி உம்முடைய சனத்துக்குத் தீங்குசெய்யாதபடிக்குப் பச்சாத்தாபமாயிரும்.

௰௩ உம்முடைய ஊழியக்காரராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும். உங்களுடைய சந்ததியை வானத்து நட்சத்திரங்கள் அத்தனையாயப் பெருகப்பண்ணுவேன்; நான் சொன்ன இந்தத்தேசமெல்லாம் உங்களுடைய சந்ததிக்கு அதை என்றைக்கும் சுதந்தரிக்கும்படிக்குக் கொடுப்பேனென்று உம்மைக்கொண்டு ஆணையிட்டு அவர்களோடே சொன்னீரேயென்றான்.

௰௪ அப்பொழுது கர்த்தர் தமது சனத்துக்குச் செய்வோமென்று சொன்ன தீங்கைச் செய்யாதபடிக்குப் பச்சாத்தாபப்பட்டார்.

௰௫ அப்பொழுது மோசே திரும்பிப் பர்வதத்திலிருந்திறங்கிப் போனான். சாட்சியின் இரண்டு பலகைகள் அவன் கையிலிருந்தது. அவைகள் இருபுறங்களிலும் எழுதப்பட்டிருந்தது; இந்தண்டையும் அந்தண்டையும் எழுதப்பட்டவைகளாயிருந்தது.

௰௬ * அந்தப் பலகைகள் பராபரனுடைய செய்கையும், அவைகளிலே பதிந்த எழுத்து பராபரனுடைய எழுத்துமாயிருந்தது. * ௨. ௩௧, ௰௮.

௰௭ சனத்தின் கெம்பீரிப்பிலே கூப்பிடு கிற சத்தத்தை * யோசுவா கேட்டு மோசேயோடே: பாளயத்திலே யுத்தத்தின் இரைச்சல் பாளயத்தி லுண்டாயிருக்கிறதென்றான். * உ௪. ௰௩.

௰௮ அவனோவென்றால் அது செயித்துக் கூப்பிடுகிறவர்களின் சத்தமுமல்ல முறிந்து கூப்பிடுகிறவர்களின் சத்தமுமல்ல பாடுகிறவர்களின் சத்தத்தை நான் கேட்கிறேனென்றான்.

௰௯ அவன் பாளயத்துக்குச் சமீபித்துக் கன்றுக்குட்டியையும் கூத்துகளையுங் கண்டபொழுது சம்பவித்ததென்னவென்றால் மோசே கோபமூண்டவனாகித் தன் கைகளிலிருந்த பலகைகளைப் பர்வதத்தடியிலே எறிந்துடைத்துப்போட்டு,

௨௰ அவர்கள் பண்ணின கன்றுக்குட்டியை யெடுத்து அக்கினியிலே எரித்துப்போட்டு அதைப் பொடியாகுமட்டும் அரைத்துத் * தண்ணீரின்மேல் தூவி இஸ்ரவேல் புத்திரருக்குக் குடிக்கக்கொடுத்தான்.
* ௫. மோசே. ௯, ௨௧.

௨௧ மோசே ஆரோனோடே: நீ இந்தச் சனத்தின்மேல் பெரும் பாவத்தைச் சுமரப்பண்ண அது உனக்கென்ன செய்ததென்றான்.

௨௨ அப்பொழுது ஆரோன் சொன்னதாவது: என் ஆண்டவனுக்குக் கோபமூளாதிருப்பதாக. இந்தச் சனத்தை நீர் அது பொல்லாததென்றறிவீர்.

௨௩ அவர்கள் என்னோடே: எங்களுக்கு முன் நடந்துபோகிற தேவர்களை எங்களுக்கு உண்டுபண்ணும். ஏனெனில் எங்களை எகிப்து தேசத்திலிருந்து தேற்றிவரப்பண்ணின அந்த மோசேயென்கிறவனுக்கென்ன சம்பவித்ததென்றறியோமென்றார்கள்.

௨௪ அப்பொழுது நான் அவர்களோடே யெவர்களுக்குப் பொன்னுண்டோ அவர்கள் அதைக் கழற்றி எனக்குத் தரக்கடவர்களென்றேன். அதை யக்கினியிலே போட்டேன். அதனால் இந்தக் கன்றுக்குட்டி உண்டாயிற்றென்றான்.

௨௫ சனம் நிருவாணமானதென்றும் அதற்கு விரோதமாய் எழும்புகிறவர்களுக்கு முன்பாக அதற்கு இலச்சையுண்டாக ஆரோன் அதை நிருவாணப்படுத்தினானென்றும் மோசே பார்த்து,

௨௬ அவன் பாளயத்தின் வாசலிலே நின்றுகொண்டு எவர்கள் கர்த்தருடையவர்களோ அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்களென்றான். அப்பொழுது லேவியின் புத்திரரெல்லாரும் அவனண்டையிலே வந்து கூடினார்கள்.

௨௭ அவர்களோடே அவன் சொன்னதாவது: நீங்கள் அவனவன் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு பாளயத்தில் வாசலுக்கு வாசல் கடந்து திரிந்து அவனவன் தன் சகோதரனையும் அவனவன் தன் சிநேகிதனையும் தன் அயலானையுங் கொன்றுபோடுங்களென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

உஅ லேவியின்புத்திரர் மோசே சொன்னபடிச் செய்தார்கள். அந்நாளிலே ஜனத்திலே ஏறக்குறைய மூவாயிரம் பேர் விழுந்தார்கள்.

உக ஏனென்றால் கர்த்தர் இன்றுங்கள் மேல் ஆசீர்வாதத்தைக் கட்டளையிடும்படி கரங்களை இந்நாளிலே அவனவன் [illegible] குமாரனுக்கும் [illegible] மாறாகக் கர்த்தருக்கு உங்கள் [illegible] நிரப்புங்களென்று மோசே சொல்லியிருந்தான்.

ஙய மறுநாளிலே சம்பவித்ததென்னவென்றால் மோசே ஜனத்தை நோக்கி [illegible] பாவஞ் செய்தீர்கள். [illegible] பொழுது நான் கர்த்தருக்குச் சமீபமாய் [illegible] உங்கள் பாவத்தை நிவிர்த்தி செய்யக்கூடுமோவென்று [illegible] போய் ஏறுவேனென்றான்.

ஙக அப்படியே மோசே கர்த்தரிடத்திலே [illegible] கூறினான். [illegible] பாதகமான பாவஞ் செய்து [illegible] பொன்னினாலே தேவர்களை [illegible] ர்கள்.

ஙஉ [illegible] பாவத்தை [illegible] மன்னித்தருளும் [illegible] விட்டால் [illegible] புஸ்தகத்திலே [illegible] கிறுக்கிப் போடும் என்றான்.

ஙங [illegible] கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது. [illegible] பாவஞ் செய்தவன் எவனோ அவனை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன்.

ஙச [illegible] போ நான் உனக்குச் சொன்ன [illegible] ஜனத்தை நடத்திக்கொண்டுபோ. இதோ, என் தூதன் உனக்கு முன்பாக நடப்பான். ஆனாலும் நான் விசாரிக்கும் நாளிலே அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்திலே விசாரிப்பேன் என்றார்.

ஙரு அப்படியே ஆரோன் பண்ணின கன்றுக்குட்டியைச் செய்தபடியினால் கர்த்தர் ஜனங்களை வாதித்தார்.

ஙங. அதிகாரம்.

இஸ்ரவேல் ஜனத்தின் [illegible] மோசேக்கு [illegible] அவர்களுக்கு உத்தரவைக் கொடுத்தருளினது.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது. நீயும் நீ எகிப்துதேசத்திலிருந்து நடத்திக் கொண்டுவந்த ஜனமுமாய் இவ்விடத்தை விட்டு உன் சந்ததிக்குக் கொடுப்பேனென்று நான் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்துக்குப் போய் ஏறுங்கள்.

உ நான் ஒரு தூதனை உனக்கு முன்பாக அனுப்பி கானானியரையும் எமோரியரையும் ஏத்தியரையும் பெரிசியரையும் ஏவியரையும் எபூசியரையும் துரத்திவிடுவேன்.

ங பாலும் தேனும் ஓடுகிற தேசத்துக்குப் போங்கள். [illegible] நான் உங்கள் நடுவே [illegible] வழியிலே உங்களை [illegible] சனமென்றார்.

ச [illegible] கெட்ட [illegible] சனங் கேட்டபொழுது [illegible] ஒருவனும் [illegible] ஆபரணங்களைப் போட்டுக் [illegible] கொண்டிருந்தார்கள்.

ரு [illegible] இஸ்ரவேல் புத்திரரை நோக்கி [illegible] பிடரியுள்ள ஜனம் [illegible] க்ஷணப்பொழுது உன் நடுவே [illegible] உன்னை நிர்மூலமாக்குவேன் [illegible] ஆபரணங்களைக் கழற்றிப் போடு [illegible] செய்ய வேண்டியதை [illegible] மோசேயோடே சொல்லியிருந்தார்.

சா அப்படியே இஸ்ரவேல் புத்திரர் ஒரேப் [illegible] முன் [illegible] ஆபரணங்களைக் கழற்றிப் போட்டார்கள்

எ [illegible] மோசே கூடாரத்தைப் பேர்த்து அதைப் பாளயத்துக்குப் புறம்பே பாளயத்துக்குத் தூரமாய்ப் போட்டு அதை ஆசரிப்புக் கூடாரமென்றான். ஆனதுகொண்டு கர்த்தரைக் கேட்கவேண்டியவர்களெல்லாரும் பாளயத்துக்குப் புறம்பான ஆசரிப்புக் கூடாரத்துக்குப் புறப்பட்டுப் போவார்கள்.

அ [illegible] மோசே கூடாரத்துக்குப் புறப்பட்டு [illegible] ஜனங்களெல்லாரும் எழுந்து [illegible] அவனவன் தன் கூடாரவாசலிலே நின்று மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்குமளவும் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

கூ மோசே கூடாரத்துக்குள் பிரவேசிக்கையிலே மேகஸ்தம்பம் இறங்கிக் கூடாரத்தின் வாசற்படியிலே நின்றது. அவர் மோசேயோடே பேசினார்.

ய ஜனமெல்லாரும் மேகஸ்தம்பம் கூடாரத்தின் வாசற்படியிலே நிற்கக்கண்டார்கள். அப்பொழுது ஜனங்கள் எழுந்திருந்து அவனவன் தன் கூடாரத்தின் வாசற்படியிலே பணிந்துகொள்ளுவார்கள்.

யக * கர்த்தர் மோசேயோடே முகமுகமாய் ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுகிறது போலப் பேசுவார். பின்பு அவன் பாளயத்துக்குத் திரும்பிவருவான். அவனுடைய ஊழியக்காரனாகிய நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் வாலிபனோ கூடாரத்தை விட்டுப் பிரியாதிருப்பான்.

* உ. மோசே. யஉ, அ.

யஉ மோசே கர்த்தரை நோக்கி சொன்னதாவது இதோ, தேவரீர் என்னோடே, நீ

[illegible]

[illegible] அதிகாரம்.

[illegible]

௮ மோசே தீவிரமாகத் தரைமட்டுங் குனிந்து பணிந்துகொண்டு,

௯ ஆண்டவரே! உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததேயானால் ஆண்டவர் எங்கள் நடுவிலே நடந்துபோவாராக. ஏனெனில் இது கடினக்கழுத்துள்ள சனம். நீரோவெனில் எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து எங்களைச் சுதந்தரித்துக்கொள்வீராக வென்றான்.

௰ அப்பொழுது அவர் சொன்னதாவது. இதோ, நாம் உடம்படிக்கை பண்ணுகிறோம் பூமியெங்கும் எந்தச்சாதிகளிடத்திலுஞ் சிருஷ்டிக்கப்படாதிருக்கிற அதிசயங்களை யுன்னுடைய எல்லாச் சனத்திற்கு முன்பாகச் செய்வோம். நீ தங்கியிருக்கிற சனமெல்லாங் கர்த்தருடைய செய்கையைப் பார்க்கப்போம். ஏனெனில் நாமுன்னோடேயிருந்து செய்யப்போகிறது பயங்கரமாயிருக்கும்.

௰௧ இன்று நாம் உனக்குக் கற்பிக்கிறதைக் கைக்கொள் இதோ, எமோரியனையுங் கானானியனையும் ஏத்தியனையும் பெரிசியனையும் ஏவியனையும் எபூசியனையும் உன் கண்முன்பாகத் துரத்திவிடுகிறோம்.

௰௨ நீ போய்ச்சேருகிற தேசத்தின் குடி உன் நடுவே கண்ணியாகாதபடிக்கு நீயவர்களோடே உடம்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

௰௩ அவர்களுடைய பலிபீடங்களையிடித்து அவர்கள் சிலைகளைத் தகர்த்து அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடக்கடவீர்கள்.

௰௪ ஏனெனில் அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளலாகாது. ஏதெனென்றால் கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவனென்பது. அவரெரிச்சலுள்ளபராபரன்.

௰௫ அந்தத் தேசத்தின் குடிகளோடே உடம்படிக்கை பண்ணாயாக. மற்றப்படி அவர்களுடைய தேவர்களின்பிறகாலே சோரம்போய் அவர்கள் தேவர்களுக்குப் பலியிடுவார்கள். அவர்களுன்னை யழைக்கையில் நீ போய் அவர்கள் பலியிட்டதிலே புசித்து,

௰௬ அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய். அப்படியே அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களின்பிறகாலே சோரம்போகையில் உன் குமாரரையுந் தங்கள் தேவர்களின் பிறகாலே சோரம்போகப்பண்ணுவார்கள்.

௰௭ வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உனக்குண்டாக்காயாக.

௰௮ நீ புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையைக் கைக்கொண்டு நாமுனக்குக் கற்பித்தபடி ஆபீப்மாதத்தின் திட்டமான காலத்திலே ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பாயாக. ஏனெனில் ஆபீப்மாதத்திலே எகிப்திலிருந்து புறப்பட்டாய்.

௰௯ கர்ப்பந் திறந்துபிறக்கிற யாவும் உன் ஆடுமாடுகளின் மந்தையிலே தலையீறான ஆணியாவும் நம்முடையது.

௨௰ ஆணுக்கழுதையின் தலையீற்றை ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்வாயாக. மீட்காதேயானால் அதின் தலையை வெட்டிப்போடக்கடவாய். உன் பிள்ளைகளில் முதற்பேறானதையெல்லாம் மீட்டுக்கொள்வாயாக. வெறுங்கையாய் நமக்குமுன்பாகக் காணப்படாராக.

௨௧ ஆறுநாள் வேலைசெய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பாயாக. உழுகிறகாலமானாலும் அறுக்கிறகாலமானாலும் ஓய்ந்திருப்பாயாக.

௨௨ கோதுமையறுப்பின் முதற்பலனைச் செலுத்தும் ஏழுவாரங்களின் பண்டிகையையும் வருஷமுடிவிலே சேர்ப்பின் பண்டிகையையும், ஆசரிப்பாயாக.

௨௩ வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண்சாதியெல்லாம் இஸ்ரவேலின் பராபரனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சன்னிதிக்குமுன்பாகக் காணப்படக்கடவது.

௨௪ ஏனெனில் நாம் புறச்சாதிகளை உன் முன்பாகத் துரத்திவிட்டு உன் எல்லைகளை விஸ்தாரமாக்குவோம். நீ வருஷத்தில் மூன்றுதரம் உன் பராபரனாகிய கர்த்தரின் சன்னிதிக்குமுன்பாகக் காணப்படப்போகையில் ஒருவரும் உன் தேசத்தை இச்சிப்பதில்லை.

௨௫ புளித்தமாவிருக்கக்கொள்ள நமது பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக. பஷ்காப்பண்டிகையின் பலி விடியற்காலமட்டும் மீதியாய்த் தங்கவும் வேண்டாம்.

௨௬ உன் நிலமையின் முதல் விளைச்சலில் முந்தின கனியை உன் பராபரனாகிய கர்த்தரின் வீட்டிற்குக் கொண்டுவருவாயாக. வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலோடே கூட்டிச் சமைக்காயாக வென்றார்.

௨௭ பின்னையுங் கர்த்தர் மோசேயுடனே இந்த வார்த்தைகளை யெழுதிக்கொள். ஏனெனில் இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடம்படிக்கை பண்ணினோமென்றார்.

௨௮ அவனங்கே கர்த்தரோடே இரவும் பகலும் நாற்பது நாள் அப்பம்பொசியாமலுந் தண்ணீர்குடியாமலுமிருந்தான். அவர் பத்துவசனங்களாகிய உடம்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளிலெழுதினார்.

௨௯ மோசே சாட்சியின் இரண்டு பலகைகளைத் தன் கையிலே பிடித்துச் சீனாய்ப் பர்வதத்திலிருந்திறங்குகிறபொழுது அவர் தன்னோடே பேசினதினாலே தன் முகத்தின் தோல் பிரகாசிக்கிறதை அவனறியாதிருந்தான்.

௩௰ ஆரோனும் இஸ்ரவேலின் எல்லாப் புத்திரரும் மோசேயைப் பார்க்கும்போது, அவனுடைய முகத்தின்தோல் பிரகாசித்தது. ஆகையால் அவனண்டைக்குச் சேரப் பயந்தார்கள்.

௩௰௧ ஆனால் மோசே அவர்களைக் கூப்பிட்டான். அப்பொழுது ஆரோனும் சபையிலுள்ள பிரபுக்களும் அவனண்டைக்குத் திரும்பினார்கள். மோசே அவர்களோடே பேசினான்.

௩௰௨ பிற்பாடு இஸ்ரவேல் புத்திரரெல்லாரும் அவனண்டைக்குச் சேர்ந்தார்கள். அப்பொழுது அவன் சீனாய்ப் பருவதத்திலே கர்த்தர் தன்னோடே பேசினதையெல்லாம் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

௩௰௩ மோசே அவர்களோடே பேசி * முடித்தபின்பு தன் முகத்தின்மேல் முக்காடு போட்டிருந்தான். * ௨. கொரி. ௩. ௭.

௩௰௪ ஆனால் மோசே கர்த்தரின் சந்நிதியிலே அவரோடே பேசும்படிக்குப் பிரவேசிக்கும்போது, புறப்படுமட்டும் முக்காட்டை வாங்கிப் போட்டிருந்தான். அவன் புறப்பட்டுத் தனக்குக் கற்பிக்கப்பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லும்போதெல்லாம்,

௩௰௫ இஸ்ரவேல் புத்திரர் அவனுடைய முகத்தோல் பிரகாசிக்கிறதைப் பார்த்தார்கள். ஆகையால் மோசே அவரோடே பேசும்படிக்கு உட்பிரவேசிக்குமட்டுந் திரும்பத் தன் முகத்தின்மேல் போட்டுக்கொண்டான்.

௩௫. அதிகாரம்.

ஆசரிப்புக்கூடாரத்தை உண்டாக்குகிறதற்குப் பண்ணின ஆயத்தம்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபை யெல்லாவற்றையுங் கூட்டி அவர்களோடே சொன்னது, கர்த்தர் செய்யக் கற்பித்தது இதுவே,

௨ ஆறு நாட்களிலே உன் வேலையைச் செய்யலாம். ஏழாம் நாளோ உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக. அது கர்த்தருக்கு அடுத்திருக்கும் ஓய்வுநாள். அதிலே வேலை செய்கிறவனெவனும் கொல்லப்படக்கடவன்.

௩ ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்களில் எங்கும் நெருப்பு மூட்டாதிருப்பீர்களாக என்று கற்பித்தாரென்றான்.

௪ பின்னும் மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபையாரெல்லாரோடுஞ் சொன்னதாவது, கர்த்தர் கற்பித்த வசனமாவது,

௫ உங்களுக்குள்ளே கர்த்தருக்குக் காணிக்கையை எடுத்துச் செலுத்துங்கள். மனப்பூர்வமுள்ளவனெல்லாரும் கர்த்தருக்குக் காணிக்கையாகச் செலுத்துங் காணிக்கையென்னவெனில் பொன்னும் வெள்ளியும் வெண்கலமும்,

* ௨௫, ௨.

௬ இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் மெல்லிய பஞ்சுநூலும் வெள்ளாட்டுமயிரும்,

௭ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாய்த்தோல்களுந் தகசுகளின் தோல்களுஞ் சீத்திம் மரங்களும்,

௮ விளக்குக்கெண்ணெயும் அபிஷேகத்தெண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களுந் தூபங்காட்டுதலுக்குச் சுகந்தவர்க்கங்களும்,

௯ ஆசாரியசால்வைக்கும் மார்ப்பதக்கத்துக்குங் கோமேதகக்கல்லுகளும் பதித்தலுக்கும் இரத்தினங்களுந்தாமே.

௰ உங்களில் ஞானமான இருதயமுள்ளவனெவனும் வந்து கர்த்தர் கற்பித்ததையெல்லாஞ் செய்வார்களாக.

௰௧ வாசஸ்தலத்தையும் அதின் கூடாரத்தையும் அதின் மூடியையும் அதின் கொறிக்கைகளையும் அதின் பலகைகளையும் அதின் தாழ்ப்பாள்களையும் அதின் தூண்களையும் அதின் காலகளையும்,

௰௨ பெட்டியையும் அதின் வாரைகளையுங் கிருபாசனமான மூடியையும் மறைவின் திரையையும்,

௰௩ மேசையையும் அதின் வாரைகளையும் அதினுடைய எல்லாமுட்டுகளையுஞ் சமுகத்தப்பங்களையும்,

௰௪ வெளிச்சங்காட்டுங் குத்துவிளக்கையும் அதின் முட்டுகளையும் அதின் விளக்குகளையும் வெளிச்சத்திற் கெண்ணெயையும்,

௰௫ தூபபீடத்தையும் அதின் வாரைகளையும் அபிஷேகத்தெண்ணெயையுஞ் சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும் வாசஸ்தலத்தின் வாசலுக்குத் திரையையும்,

௰௬ தகனபலிபீடத்தையும் அதின் வெண்கலச்சல்லடையையும் அதின் வாரைகளையும் அதினுடைய எல்லாமுட்டுகளையுந் தொட்டியையும் அதின் பிரமணையையும்,

௰௭ பிராகாரத்தின் வெளியுடைகளையும் அதின் தூண்களையும் அதின் காலகளையும் பிராகாரத்து வாசலின் மறைவையும்,

௰௮ வாசஸ்தலத்தின் முளைக்கூச்சுகளையும் பிராகாரத்தின் முளைக்கூச்சுகளையும் அவைகளின் கயிறுகளையும்,

௰௯ பரிசுத்த ஸ்தலத்திலே செய்கிற ஆராதனையின் சீலைகளையும் ஆசாரிய ஊழியஞ்செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் அவர்கள் செய்வார்களாக வென்றுசொன்னான்.

௨௰ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் மோசேயை விட்டுப் புறப்பட்டது.

௨௧ எவர்களை யவர்களிருதயமெழுப்பி யவர்கள் ஆவிபூர்வமாகச் சம்மதித்த அவர்களெல்லாரும் வந்து ஆசரிப்புக்கூடாரத்தினுடைய வேலைக்கும் அதினுடைய ஊழியத்திற்கும் பரிசுத்த வஸ்திரங்களுக்குங் கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

௨௨ கர்த்தருக்குப் பொன்னை யசைவாட்டுங் காணிக்கையாகச் செலுத்தினபுருஷரும்பெண்சாதிகளும் மனப்பூர்வமுள்ளவர்களெல்லாரும்வந்தார்கள். கடுக்கன் மோதிரங்கள் கடகங்கள் முதலான சகலவித பொற்பணிதிகளைக் கொண்டுவந்தார்கள்.

௨௩ ஜநங்களிடத்தில் இளநீலநூலையும் இரத்தாம்பரநூலையுஞ் சிவப்புநூலையும் மெல்லிய சணநூலையும் வெள்ளாட்டுமயிரையுஞ் சிவப்புத்தோய்த்த ஆட்டுக்கடாத்தோல்களையுந் தகசுத்தோல்களையுங் கண்டுபிடித்தயாவருங் கொண்டுவந்தார்கள்.

௨௪ வெள்ளியையும் வெண்கலத்தையுங் கொடுக்கத்தக்கயாவரும் அதைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள். வேலையிலே சகலவிதக் கிரியைக்குந் தமணசிந்தமரங்களைத் தங்களிடத்திற் கண்டுபிடித்தயாவருங் கொண்டுவந்தார்கள்.

௨௫ ஞானமான இருதயமுள்ள ஸ்திரிகளெல்லாருந் தங்கள் கைகளினாலே நூற்றுத் தாங்கள் நூற்ற இளநீலநூலையும் இரத்தாம்பரநூலையுஞ் சிவப்புநூலையும் மெல்லிய சணநூலையுங் கொண்டுவந்தார்கள்.

௨௬ எந்த ஸ்திரிகளை அவர்களிருதயம் ஞானமாய்ச்செய்ய எழுப்பினதோ அவர்கள் வெள்ளாட்டுமயிரை நூற்றார்கள்.

௨௭ பிரபுக்கள் ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் கோமேதகக்கல்லுக்களையும் பதிக்குங் கற்களையும் இரத்தினங்களையும்,

௨௮ பரிமளவர்க்கங்களையும் விளக்குக்கெண்ணெயையும் அபிஷேகத்தைலத்துக்குஞ் சுகந்தவர்க்கங்களின் தூபங்காட்டுதலுக்குந் தேவையானவைகளையுங் கொண்டுவந்தார்கள்.

௨௯ செய்யத்தக்கதாகக் கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த எல்லா வேலைக்குங் கொண்டுவர இஸ்ரவேல் புத்திரரில் தங்களிருதயத்தால் மனப்பூர்வமாக்கப்பட்ட எல்லாப் புருஷரும் ஸ்திரிகளுங் கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

௩௦ மோசே இஸ்ரவேல் புத்திரரை நோக்கிச் சொன்னதாவது. பாருங்கள் கர்த்தர் * யூதா கோத்திரத்தில் ஊருடைய மகனான ஊரியின் குமாரனான பெசலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, * ௩௧, ௨

௩௧ அவன் விவேகமான வேலைகளை யோசித்துச் செய்யவும் பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும்,

௩௨ இரத்தினங்களை முத்திரைவெட்டாய்வெட்டிப்பதிக்கவும் மரத்திலே சித்திரவேலை செய்யவுஞ் சகலவித விநோதமானவேலையைப் பண்ணவும்.

௩௩ அவனுக்கு ஞானமும் உணர்வும் அறிவுஞ் சகலவித வேலையை விநோதமாய் உண்டாக்க அவனைப் பாத்திரமுடைய ஆவியினாலே நிரப்பினார்.

௩௪ அவனிருதயத்திலுந் தாண்கோத்திரத்தானான அகிசாமாக்கின் குமாரனான அகோலியாவின் இருதயத்திலும் போதிக்குந் திறமைக்கான வரத்தையுங் கொடுத்தார்.

௩௫ சகலவிதத்தொழிலின் சித்திரவேலையையும் இளநீலநூலினாலும் இரத்தாம்பரநூலினாலுஞ் சிவப்புநூலினாலும் மெல்லிய சணநூலினாலும் ஊசியால் தையல்வேலையையும் நெசவு எல்லா வேலையையுஞ்செய்ய அவர்களை யிருதயத்தில் ஞானத்தினாலே நிரப்பினார். அவர்கள் சகலவித வேலையைச் செய்து விநோதமான வேலைகளை யோசித்துப் பண்ணுவார்களென்றான்.

௩௬. அதிகாரம்.

வாசஸ்தலம் உண்டாக்கப்பட்டது.

அப்பொழுது பெசலெயேலும் அகோலியாவும் பரிசுத்தவேலையின் எல்லாக் கிரியையையுங் கர்த்தர் கற்பித்தபடி எல்லாஞ்செய்ய அறியும்படிக்குக் கர்த்தர் ஞானமும் உணர்வுங் கர்த்தர் ஞானமான இருதயமுள்ள அனைவரும் வேலைசெய்தார்கள்.

௨ ஏனென்றால் மோசே பெசலெயேலையும் அகோலியாவையுங் கர்த்தர் ஞானங் கொடுத்திருந்த அந்த வேலையைச்செய்யச்சேருகிறதற்குத் தங்கள் இருதயத்தாலெழுப்பப்பட்ட ஞானமுள்ள இருதயத்தாராகிய எல்லாரையும் வரவழைத்தான்.

௩ அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தவேலையின் கிரியைக்குக் கொண்டுவந்த காணிக்கையை மோசேயினிடத்திலிருந்து காணிக்கையையெல்லாம் அதைச்செய்யும்படிக்கு எடுத்துக்கொண்டார்கள். இவர்களோவென்றால் இன்னுங் காலைதோறும் மனப்பூர்வமான காணிக்கைகளை அவனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௪ அப்பொழுது பரிசுத்தவேலையையெல்லாஞ்செய்கிற சகலஞானிகளும் அவரவர் தாங்கள்செய்கிற வேலையின் காரியமாய் வந்து,

௫ மோசேயுடனே கர்த்தர் செய்யச்சொன்னதற்குக் கிரியையின் வேலைக்கு வேண்டியதைப்பார்க்கிலும் மிச்சமாய்க் கொண்டுவருகிறார்களென்றார்கள்.

௬ அப்பொழுது மோசே இனிப்புருஷரும் ஸ்திரிகளும் பரிசுத்தகாணிக்கைக்கென

[illegible]

௨௧ ஒவ்வொரு பலகையின் நீளம் பத்து முழமும் அகலம் ஒன்றரை முழமுமாயிருந்தது.

௨௨ ஒன்றுக்கொன்று இசைவான இரண்டு கழுந்துகள் ஒவ்வொரு பலகைக்கும் இருந்தது; அப்படியே வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் செய்தான்.

௨௩ வாசஸ்தலத்துக்காகச் செய்யப்பட்ட பலகைகளில் இருபது தென்புறத்திலே தெற்கு நோக்கியிருந்தது.

௨௪ அந்த இருபது பலகைகளின் கீழ் நாற்பது வெள்ளிப் பாதங்களை ஒவ்வொரு பலகையின் கீழ் அதின் இரண்டு கழுந்துகளுக்கு இரண்டு பாதங்களாக உண்டுபண்ணினான்.

௨௫ வாசஸ்தலத்தின் வடபக்கமாகிய மறுபக்கத்திலும் இருபது பலகைகளைச் செய்தான்.

௨௬ அவைகளின் நாற்பது வெள்ளிப் பாதங்களை ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டு பாதங்களாகப் பண்ணினான்.

௨௭ வாசஸ்தலத்தின் மேற்புறமாகிய பின்புறத்துக்கு ஆறு பலகைகளைச் செய்தான்.

௨௮ வாசஸ்தலத்தின் இரண்டு பக்கக் கோடிகளுக்கும் இரண்டு பலகைகளைச் செய்தான்.

௨௯ அவைகள் தாழ இசைவாக இணைக்கப்பட்டு மேலே ஒரே வளையத்தில் இணைக்கப்பட்டிருந்தது. இரண்டு கோடிகளிலுமிருந்த இரண்டையும் அப்படியே செய்தான்.

௩௦ அப்படியே பலகைகள் எட்டும் அவைகளுடைய வெள்ளிப்பாதங்கள் ஒவ்வொரு பலகையின் கீழ் இரண்டு பாதங்களாகப் பதினாறுமாயிருந்தது.

௩௧ சீத்திம் மரங்களால் வாசஸ்தலத்தின் ஒருபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,

௩௨ வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் வாசஸ்தலத்தின் மேற்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் பண்ணி,

௩௩ நடுத்தாழ்ப்பாளை பலகைகளின் மையத்திலே ஒருமுனைதொடங்கி மறுமுனைமட்டும் போய்ச்செல்லப்பண்ணினான்.

௩௪ பலகைகளைப் பொன்தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னினால் பண்ணித் தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால் மூடினான்.

௩௫ இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலுமாய் விசித்திர வேலையான கேருபீன்களுள்ள திரைச்சீலையையும் பண்ணி,

௩௬ அதற்குச் சீத்திம் மரத்தால் நாலு தூண்களைச் செய்து அவைகளைப் பொன்தகட்டால் மூடி அவைகளின் வளையங்களை

ப்பொன்னினாலே பண்ணி அவைகளுக்கு நான்கு வெள்ளிக்கால்களை வார்ப்பித்தான்.

௩௭ கூடாரத்தின் வாசலுக்கு இளநீல நூலும் இரத்தாம்பர நூலும் சிவப்பு நூலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலுமாகிய சித்திரத்தையல்வேலைப்பாடான ஒரு மறைவையும்,

௩௮ அதின் ஐந்து தூண்களையும் அவைகளின் வளைவாணிகளையும் உண்டாக்கி, அவைகளின் குமிழ்களையும் அதின் வளையங்களையும் பொற்றகட்டால் மூடினான். அவைகளுக்கு வார்ப்பித்த ஐந்து கால்களோ வெண்கலம்.

௩௭. அதிகாரம்.

வாசஸ்தலத்திற்குள்ளேயுண்டாயிருக்கவேண்டியவைகள் பண்ணப்பட்டது.

பெசலெயேல் சீத்திம் மரங்களால் * பெட்டியையுண்டுபண்ணினான். அதின் நீளம் இரண்டரை முழமும் அதின் அகலம் ஒன்றரை முழமும் அதின் உயரம் ஒன்றரை முழமுமானது. * ௨௫. ௰. மு.

௨ அதை உள்ளும் புறம்புமாகச் சுத்தப் பொற்றகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொற்றிரணையையுண்டாக்கி,

௩ அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கோடிகளிலே ஒருபக்கத்திலே இரண்டு வளையங்களும் மறுபக்கத்திலே இரண்டு வளையங்களுமிருக்கும்படிக்குத் தைத்து,

௪ சீத்திம் மரங்களான வாரைகளைச் செப்பனிட்டு அவைகளைப் பொற்றகட்டால் மூடி,

௫ அந்த வாரைகளாற் பெட்டியைச் சுமக்கும்படிக்கு அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலுள்ள வளையங்களிற் பாய்ச்சினான்.

௬ சுத்தப் பொன்னினாலே * கிருபாசனமான மூடியையும் பண்ணினான். அது இரண்டரை முழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமானது. * ௨௫, ௰௭. மு.

௭ பொன்னான இரண்டு கேருபீன்களையும் அடிக்கப்பட்ட பொன்னினாலே யுண்டாக்கிக் கிருபாசனமான மூடியின் இரண்டோரங்களிலும்,

௮ ஒரு கேருபீனை இந்தண்டையோரத்திலும் மற்றக் கேருபீனை அந்தண்டையோரத்திலுமிருக்கும்படியாய்ப் பண்ணினான். அந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூடியின் இரண்டோரங்களில் அதிலிருந்துண்டானவைகளாகவிருக்கப் பண்ணினான்.

௯ அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளையுயர விரித்துத் தங்கள் செட்டைகளாலே கிருபாசனமான மூடியை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்களுமாயிருந்தது. கேருபீன்களின் முகங்கள் கிருபாசனமான மூடியை நோக்கிக்கொண்டிருந்தது.

௰ சீத்திம் மரங்களால் * மேசையையும் பண்ணினான். அது இரண்டு முழ நீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமானது. * ௨௫, ௨௩. மு.

௧௧ அதைச் சுத்தப் பொற்றகட்டால் மூடிச் சுற்றிலும் அதற்குப் பொற்றிரணையையுண்டாக்கி,

௧௨ சுற்றிலும் அதற்கு நாலுவிரற்கடையான சட்டத்தையும் சுற்றிலும் அதின் சட்டத்திற்கும் பொற்றிரணையை யுண்டுபண்ணி,

௧௩ அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து அவைகளை அதின் நான்கு கால்களுக்கிருக்கும் நான்கு கோடிகளிலே தைத்தான்.

௧௪ அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கும் வாரைகளின் இடங்களாயிருக்கும்படிக்குச் சட்டத்திற்கெதிரா யிருக்கப்பண்ணினான்.

௧௫ மேசையைச் சுமக்கும் அந்த வாரைகளைச் சீத்திம் மரங்களாலே பண்ணி அவைகளைப் பொற்றகட்டாலே மூடி,

௧௬ மேசையின் மேலிருக்கும் முட்டுகளாகிய அதின் கலங்களையும் அதின் தட்டுகளையும் அதின் கரகங்களையும் மூடுகிறதற்கான அதின் கிண்ணிகளையும் சுத்தப் பொன்னினாலே யுண்டாக்கினான்.

௧௭ * அடிக்கப்பட்ட சுத்தப் பொன்னினாலே குத்துவிளக்கையும் உண்டாக்கினான். அதின் தண்டும் அதின் கிளைகளும் அதின் மொக்குகளும் அதின் மாதளம்பூக்களும் அதின் பூக்களும் அதிலிருந்து புறப்படுகிறவைகளாயிருந்தது. * ௨௫. ௩௧. மு.

௧௮ குத்துவிளக்கின் பக்கங்களிலிருந்து ஆறு கிளைகள் மூன்று அதின் ஒரு பக்கத்திலும் மூன்று அதின் மறுபக்கத்திலுமிருந்து புறப்பட்டது.

௧௯ ஒவ்வொரு கிளையிலே வாதுமைக்கொட்டைகளின் சாயலான மூன்று மொக்குகளும் ஒரு மாதளம்பூவும் ஒரு பூவுமிருந்தது. குத்துவிளக்கிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளிலும் அப்படியிருந்தது.

௨௰ விளக்குத்தண்டிலோவென்றால் வாதுமைக்கொட்டைகளின் சாயலான நான்கு மொக்குகளும் அதின் மாதளம்பூக்களும் அதின் பூக்களுமிருந்தது.

௨௧ அதிலிருந்து புறப்படுகிற இரண்டிரண்டு கிளைகளின் கீழ் ஒரு மாதளம்பூவும் வேறிரண்டு கிளைகளின் கீழ் ஒரு மாதளம்பூவும் மற்றை இரண்டு கிளைகளின் கீழ் ஒரு மாதளம்பூவுமிருந்தது. விளக்குத்தண்டிலிருந்து புறப்படுகிற ஆறு கிளைகளுக்கும் அப்படியிருந்தது.

௨௨ அவைகளின் மாதளம்பூக்களும் அவைகளின் கிளைகளும் அதிலிருந்துண்டானதாகவிருந்தது. எல்லாம் அடிக்கப்பட்

டித்தபொன்னுமாய ஒருதனாயிருந்தது.

௨௩ அதின ஏழுவிளக்குகளையும அதின கத்தரிகளையும விளக்குகளைக்கற எத்தனைகளையும சுத்தப்பொன்னினாலேயுண்டாக்கினான.

௨௪ அதைத் தட்டுமுட்டுகளுடைய எல்லாமுஸ்தித்துகளோடே ஒருதாலந்துச்சுத்தப்பொன்னினாலே யுண்டுபண்ணினான்.

௨௫ சீத்திம மரங்களினாலே * தூபபீடத்தையும உண்டாக்கினான். அது ஒருமுழ நீளமும ஒருமுழ அகலமுமாகிய சதுரமுமாய் இரண்டுமுழ உயரமும அதின கொம்புகள அதனோடே ஒன்றுமாயிருந்தது.
* ௩௰, ௧. ஞு

௨௬ அதைத்தட்டியெல்லாம அதின மேற்பலகையையும அதின சுற்றுப்பக்கங்களையும அதின கொம்புகளையும சுத்தப் பொற்றகட்டினாலும அதற்குப்பொற்றிரண்டுகட்டைப்பண்ணி,

௨௭ அதின திரணையின்கீழ் அதின இரண்டு பக்கங்களிலிருக்கிற இரண்டுகோடிகளில தண்டுகளை வளையங்களை யதைச்சுமக்கத்தக்கதாய்த் தண்டுகள் உண்டாகத்தைத்து.

௨௮ சீத்திம மரங்களால அந்தவாரைகளைப்பண்ணி அவைகளைப் பொற்றகட்டால் மூடினான்.

௨௯ பரிசுத்த அபிஷேகதைலத்தையும சுத்தசுகந்தங்களின தூபவர்க்கத்தை தைலக்காரன வேலையாயுண்டுபண்ணினான்.

௩௮. அதிகாரம்.

௧ சர்வாங்கதகனத்துக்குப் புறம்பேயிருக்கவேண்டியதுகள உண்டாக்கப்பட்டது.

சீத்திம மரங்களால் * தகனபலிபீடத்தையுண்டாக்கினான். அது ஐந்துமுழ நீளமும ஐந்துமுழ அகலமுமான சதுரமும மூன்றுமுழ உயரமுமானது.
* ௨௭, ௧. ஞு

௨ அதின நான்குகோடிகளமேல் அதனோடேயிருக்கிற அதின நான்கு கொம்புகளையும உண்டாக்கி அதைவெண்கலத்தகட்டால்மூடி,

௩ பலிபீடத்தின சகலமுட்டுகளாகிய சட்டிகளையும சாம்பலெடுக்கும் கரண்டிகளையும கலங்களையும முட்டிகளையும நெருப்புச்சட்டிகளையும உண்டாக்கினான். அவைகளெல்லாம வெண்கலத்தினால் பண்ணினான்.

௪ பலிபீடத்திலிருக்கிற ஒருவெண்கலச்சல்லடையும பலிபீடத்திற்குண்டாக்கி அதைச்சுற்றுங்கீழ்ப்புறத்தில் பாதிமட்டும வரைவைத்து,

௫ வாரைகளின இடங்களாகிய நான்கு வளையங்களைவார்ப்பித்து வெண்கலச்சல்லடையின நான்குமூலைகளில்வைத்து,

௬ சீத்திம மரங்களால்வாரைகளைப்பண்ணி அவைகளைவெண்கலத்தகட்டால்மூடி,

௭ அவைகளைப்பலிபீடத்தின பக்கங்களிலிருக்கிற வளையங்களில அதையெடுக்கவகைகளாகும்படி கோத்துப்பாய்ச்சினான். அதைப் பலகைகளினாலே குழாயாக்கினான்.

௮ அவன ஆசரிப்புக்கூடாரத்தினவாசலிற் கூடிவருகிற ஸ்திரீகளின கண்ணாடிகளாலே வெண்கலத்தொட்டியையும அதின வெண்கலப்பீடத்தையும உண்டாக்கினான். * ௩௰, ௰௮.

௯ * பிரகாரத்தையும உண்டுபண்ணினான். தெற்கேதென்பக்கத்துக்கெதிராயிருக்கிற திரித்தமெல்லியபஞ்சுநூல் நெசவான பிரகாரத்தின வெளியாடைகள நூறுமுழம்.
* ௨௭, ௯. ஞு

௰ அவைகளின தூண்கள இருபது. இவைகளின இருபது கால்கள வெண்கலமும தூண்களின வளைவாணிகளும அவைகளின வளையங்களும வெள்ளியுமானது.

௰௧ வடபக்கத்திற்கெதிரானதுகளும நூறுமுழம அவைகளின தூண்கள இருபது இவைகளின இருபது கால்கள வெண்கலமும தூண்களின வளைவாணிகளும வளையங்களும வெள்ளியுமானது.

௰௨ மேற்பக்கத்திற்கெதிரானவெளியாடைகள ஐம்பதுமுழமானது. அவைகளின தூண்கள பத்து. இவைகளின கால்களும பத்து, தூண்களின வளைவாணிகளும வளையங்களும வெள்ளி.

௰௩ சூரியனுதிக்கிற கீழ்ப்பக்கத்திற்கெதிரானதுகளும ஐம்பதுமுழம.

௰௪ அங்கே ஒருபுறத்து வெளியாடைகள பதினைந்துமுழமானது. அவைகளின தூண்கள மூன்றும இவைகளின கால்கள மூன்றுந்தானே.

௰௫ பிரகாரவாசலின இந்தண்டைக்கு சரியாக அந்தண்டையிலும மறுபுறத்து வெளியாடைகள பதினைந்துமுழமானது. அவைகளின தூண்கள மூன்றும இவைகளின கால்கள மூன்றுந்தானே.

௰௬ சுற்றிலும பிரகாரத்தின வெளியாடைகளெல்லாம மெல்லியபஞ்சுநூல்நெசவானது.

௰௭ தூண்களின கால்கள வெண்கலமும தூண்களின வளைவாணிகளும வளையங்களும வெள்ளியுமானது. அவைகளின குமிழ்கள வெள்ளித்தகட்டால மூடப்பட்டதும பிரகாரத்தின தூண்களெல்லாம வெள்ளிவளையங்களைப்போட்டப்பட்டதுமாயிருந்தது.

௰௮ * பிரகாரவாசலின மறைவோவென்றால இளநீலநூலும இரத்தாம்பர நூலும சிவப்புநூலுந்திரித்தமெல்லியபஞ்சுநூ

வாயிலின் தொங்குதிரைசீலை சித்திரத்தையல் வேலையாயிருந்தது. அதின் நீளம் இருபது முழமும் அகலமாகிய அதின் உயரம் பிராகாரத்தின் தொங்குதிரைசீலைகளுக்குச் சரிசமானமாய் ஐந்து முழுமுமாயிருந்தது. * உஎ, ௰௬.

௰௯ அவைகளின் தூண்கள் நான்கு. அவைகளின் பாதங்கள் வெண்கலமும் அவைகளின் கொக்கிகள் வெள்ளியும் அவைகளின் குமிழ்கள் மூடப்பட்டதும் அவைகளின் வளையங்களும் வெள்ளியுமாயிருந்தது.

௨௰ வாசஸ்தலத்திற்கும் பிராகாரத்திற்குச் சுற்றிலுமிருந்த எல்லா முளைகூச்சுகளும் வெண்கலம்.

செலவான பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் எடைமாத்திரப்பட்டது.

௨௧ சாட்சியின் வாசஸ்தலத்திற்குச் செலவானவைகளின் கணக்கேதென்றால் அவைகள் மோசேயின் சொற்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான இத்தாமாரின் கையினாலே லேவியரின் ஊழியத்திற்கென்று எண்ணப்பட்டது.

௨௨ யூதா கோத்திரத்து ஊரியின் மகனாகிய ஊரின் குமாரனான பெசலெயேல் கர்த்தர் மோசேக்குக் கற்பித்ததையெல்லாம் பண்ணினான்.

௨௩ அவனோடே கூடத் தாண் கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப் கொத்துவேலை செய்கிற தொழிலாளியும் இளநீல நூலிலும் இரத்தாம்பர நூலிலும் சிவப்பு நூலிலும் மெல்லிய பஞ்சுநூலிலும் சித்திரத்தையல் வேலை செய்கிறவனுமாயிருந்தான்.

௨௪ பரிசுத்த ஸ்தலத்தின் வேலைக்கெல்லாம் அசைவாட்டுங் காணிக்கையாய்க் கொடுக்கப்பட்டுச் செலவான பொனெல்லாம் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலாலே இருபத்தொன்பது தாலந்தும் எழுநூற்று முப்பது சேக்கல் நிறையுமாயிருந்தது.

௨௫ சபையில் எண்ணப்பட்டவர்களின் வெள்ளி பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலால் நூறு தாலந்தும் ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்து சேக்கலுமாயிருந்தது.

௨௬ எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வந்த இருபது வயசுமுதல் கொண்டு மேலான ஆறுலட்சத்து மூவாயிரத்தைந்நூற்றைம்பது பேர்களில் ஒவ்வொருத்தருக்காகப் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலாலே அரைச் சேக்கல் விழுக்காடு சேர்ந்தது.

௨௭ வெள்ளியிலே நூறு தாலந்து பரிசுத்த ஸ்தலத்தின் பாதங்களையும் தொங்குதிரையின் காலகளையும் வார்ப்பிக்கிறதற்குச் செலவாயிற்று. காலுக்கு ஒரு தாலந்து விழுக்காடு நூறு கால்களுக்கு நூறு தாலந்தாமே.

௨௮ ஆனால் அந்த ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்து சேக்கலாலே தூண்களுக்குக் கொக்கிகளைப் பண்ணி அவைகளின் குமிழ்களைத் தகடுகளால் மூடி அவைகளுக்கு வளையங்களையுண்டாக்கினான்.

௨௯ அசைவாட்டுங் காணிக்கையாய்க் கொடுக்கப்பட்ட வெண்கலமோவெனில் எழுபது தாலந்தும் இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறையுமாயிருந்தது.

௩௰ அதினாலே ஆசரிப்புக் கூடாரவாசல் மறைவின் கால்களையும் வெண்கலப் பலிபீடத்தையும் அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்தின் சகல முட்டுகளையும்,

௩௧ சுற்றிலுமிருக்கிற பிராகாரத்தின் கால்களையும் பிராகாரவாசல் மறைவின் கால்களையும் வாசஸ்தலத்தின் சகல முளைக்கூச்சுகளையும் சுற்றிலுமிருக்கிற பிராகாரத்தின் சகல முளைக்கூச்சுகளையும் உண்டுபண்ணினான்.

௩௯. அதிகாரம்.

ஆசாரிய வஸ்திரங்கள் பண்ணப்பட்டது.

இளநீல நூலிலும் இரத்தாம்பர நூலிலும் சிவப்பு நூலிலும் அவர்கள் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்கிறதற்கு வேண்டிய வஸ்திரங்களையும் * ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களையுங் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள். * உஅ, ௪. ௫.

௨ ஆசாரிய ஏபோத்தைப் பொன்னிலும் இளநீல நூலிலும் இரத்தாம்பர நூலிலும் சிவப்பு நூலிலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலிலும் பண்ணினான்.

௩ பொன்னை இளநீல நூலுக்கும் இரத்தாம்பர நூலுக்கும் சிவப்பு நூலுக்கும் மெல்லிய பஞ்சுநூலுக்கும் நடுவே விசித்திரமாய் நெய்யும்படிக்கு அதின் தகடுகளை வார்த்தினார்கள். அவைகளை நூல்களாக அறுத்தான்.

௪ இரண்டு தோளின்மேலும் அதைய இணைக்க இரண்டு முனைகளாலே சேர்த்தார்கள், அங்கே இணைக்கப்பட்டிருந்தது.

௫ அதின்மேல் அதற்கொட்டேயாக இருக்கிற விசித்திரமான கச்சை அந்த வேலைப்படியே பொன்னிலும் இளநீல நூலிலும் இரத்தாம்பர நூலிலும் சிவப்பு நூலிலும் திரித்த மெல்லிய பஞ்சுநூலிலும் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி பண்ணப்பட்டது.

௬ முத்திரைகள் வெட்டப்படுகிற வேலையாய் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை கோமேதகக் கற்களில் வெட்டிச் சுற்றிலுமிருக்கிற பொன்னில் இவைகளைப் பதித்து வைக்கிறார்கள்.

௭ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவைகளை இஸ்ரவேல் புத்திரருக்காக

...[illegible] ஆசாரியசால்வையின் தோள்த்துண்டுகளின்மேலே வைத்தான்.

[illegible] ஆசாரியசால்வையின் வேலைக்கு [illegible] மார்ப்பதக்கத்தை [illegible] நூலாலும் [illegible] பண்ணினான்.

[illegible]

[illegible] முதலாம் வரிசை [illegible]

[illegible]

[illegible] பதிக்கப்பட்டிருந்தது.

[illegible]

[illegible] ஆசாரியசால்வையின் [illegible]

[illegible] ஆசாரியசால்வைக்கு மேலாகவிரு

க்கும்படிக்கும் ஆசாரியசால்வையிலிருந்து விலகிப் போகாதபடிக்கும் அதைச் [illegible] மோதிரங்களால் ஆசாரிய சால்வையின் மோதிரங்களோடே இளநீலம் [illegible] ஒலையாய்ப்பண்ணி மோசேக்குக் கற்பித்தபடியே கட்டினார்கள்.

௨௨ ஆசாரியசால்வையின் கீழ்நக்கும் அங்கியையோவென்றால் முழுவதும் இளநீலநூலில் நெசவாக உண்டாக்கினான்.

௨௩ அங்கியின் நடுவில் மார்க்கவசத்தின் வாய்க்கொப்பான அதின் வாயும் அது கிழியாதபடிக்குச் சுற்றிலும் அதற்கோர் நாடாவுமிருந்தது,

௨௪ அங்கியின் கீழோரங்களிலே தொங்கத்தக்க இளநீலநூலும் இரத்தாம்பர நூலும் சிவப்புநூலுமான வேலையாய் மாதளம்பழங்களைப் பண்ணி,

௨௫ சுத்தப்பொன்னினாலே மணிகளையும் பண்ணி, அந்த மணிகளை அங்கியின் ஓரங்களிற் சுற்றிலும் மாதளம்பழங்களின் நடுவே தொங்கவைத்தார்கள்,

௨௬ ஆராதனைசெய்ய அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் ஒருமணியும் ஒருமாதளம்பழமுமாயக் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே தொங்கியிருக்கத்தானே.

௨௭ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய பஞ்சுநூல் நெசவாய உட்சட்டைகளையும்,

௨௮ பாகையையும் அலங்காரமான குல்லாக்களையும் திரித்த மெல்லிய நூல் நெசவாயச்சணல் நாற்சல்லடங்களையும்,

௨௯ திரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் சித்திரத்தையல்வேலையாய நடுக்கட்டையும் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள்.

௩௦ * சுத்தப்பொன்னினாலே பரிசுத்த கிரீடமென்னப்பட்ட தகட்டையும் பண்ணி அதிலே கர்த்தருக்குப் பரிசுத்தமென்பதை முத்திரைவெட்டாய்வெட்டி, * ௨௮, ௩௬—௩௮.

௩௧ அதைத் தலைப்பாகையில் உயரக்கட்டும்படிக்கு இளநீலமான கயிற்றை அதிலே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கோர்த்தார்கள்.

பண்ணித்தீர்ந்ததெல்லாம் மோசேக்கு ஒப்புவிக்கப்பட்டது.

௩௨ இப்படியே ஆசரிப்புக்கூடாரமென்கிற வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது. கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல்புத்திரர் செய்திருந்தார்கள்.

௩௩ பிறபாடு வாசஸ்தலத்தை மோசேயினிடத்துக்குக் கொண்டுவந்தார்கள். கூடாரத்தையும் அதினுடைய எல்லாமுட்டுகளையும் அதின் தொறடுகளையும் அதின் பலகை

களையும் அதின் தாப்பாள்களையும் அதின் தூண்களையும் அதின் காலகளையும்,

௩௪ சிவப்புத் தீர்ந்த ஆட்டுக் கடாயத் தோல்களின் மூடியையும் தகசுத்தோல்களின் மூடியையும் மறைவின் திரையையும்,

௩௫ சாட்சியின் பெட்டியையும் அதின் வாய்க்கால்களையும் கிருபாசனமான மூடியையும்,

௩௬ மேசையையும் அதின் எல்லா முட்டுகளையும் சமுகத்தப்பங்களையும்,

௩௭ சுத்தமான குத்துவிளக்கையும் வரிசையாய் ஆயத்தப்பட்ட அதின் விளக்கையும் அதின் எல்லா முட்டுகளையும் வெளிச்சத்திற்கெண்ணெயையும்,

௩௮ பொற்பீடத்தையும் அபிஷேகத்தெண்ணெயையுஞ் சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும் வாசஸ்தலத்தின் வாசல் மறைவையும்,

௩௯ வெண்கலப்பலிபீடத்தையும் அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும் அதின் வாய்க்கால்களையும் அதின் எல்லா முட்டுகளையுந் தொட்டியையும் அதின் பீடத்தையும்,

௪௰ பிரகாரத்தின் வெளிப்புடைவைகளையும் அதின் தூண்களையும் அதின் கால்களையும் பிரகாரத்து வாசல் மறைவையும் அதின் கயிறுகளையும் அதின் முளைகளையும் ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வேலைக்கடுத்த எல்லா முட்டுகளையும்,

௪௧ பரிசுத்த ஸ்தலத்திலே செய்யும் ஆராதனைக்கடுத்த சீலைகளையும் ஆசாரிய ஊழியஞ்செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையுங் கொண்டுவந்தார்கள்.

௪௨ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலையையுஞ் செய்திருந்தார்கள்,

௪௩ மோசே அந்த வேலையையெல்லாம் பார்த்தான். இதோ, கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள். ஆகையால் மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.

௪௰. அதிகாரம்.

வாசஸ்தலம் எடுப்பிக்கப்பட்டதும் மேகம் அதின்மேல் வந்து தங்கினதும்.

கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ நீ முதலாம் மாதம் முதல் தேதியிலே ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை எடுப்பித்து,

௩ அதிலே சாட்சியின் பெட்டியை வைத்து அப்பெட்டியைத் திரையினால் மறைத்து,

௪ மேசையைக் கொண்டுவந்து அதின் முன்னிலையை ஒழுங்கில் வைத்துக் குத்துவிளக்கைக் கொண்டுவந்து அதின் விளக்குகளையேற்றி,

௫ பொற்றூப பீடத்தைச் சாட்சியின் பெட்டிக்கு முன்பாக வைத்து வாசஸ்தலத்தின் வாசல் மறைவைத் தூக்கி வைக்கக்கடவாய்.

௬ பின்பு நீ தகனபலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து,

௭ தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து அதிலே தண்ணீர் வார்த்து,

௮ சுற்றிலும் பிரகாரத்தை நிறுத்திப் பிரகாரவாசல் மறைவைத் தூக்கி வைத்து,

௯ அபிஷேகத்தெண்ணெயை எடுத்து வாசஸ்தலத்தையும் அதிலுள்ளயாவையும் அபிஷேகம்பண்ணி அதையும் அதின் முட்டுகளையெல்லாம் பரிசுத்தமாக்கக்கடவாய். அப்பொழுது பரிசுத்தமாயிருக்கும்.

௰ தகனபலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் அபிஷேகம்பண்ணி அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய். அப்பொழுது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கும்.

௰௧ தொட்டியையும் அதின் பீடத்தையும் அபிஷேகம்பண்ணிப் பரிசுத்தமாக்கக்கடவாய்.

௰௨ பின்பு நீ ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்குச் சேரப்பண்ணி அவர்களைத் தண்ணீரினால் கழுவி,

௰௩ ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களையுடுத்தி நமக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்கு அவனை அபிஷேகம்பண்ணிப் பரிசுத்தமாக்கி,

௰௪ அவன் குமாரரையுஞ் சேரப்பண்ணி அவர்களுக்குச் சட்டைகளையுடுத்தி,

௰௫ அவர்கள் நமக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களை அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடி அபிஷேகம்பண்ணக்கடவாய். அவர்களுடைய அபிஷேகம் அவர்களுக்கு அவர்களுடைய தலைமுறைகளுக்கு நித்திய ஆசாரியப்பட்டத்திற்கென்றுண்டாயிருப்பதாகவென்றார்.

௰௬ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே செய்தான்.

௰௭ சம்பவித்ததேதென்றால் இரண்டாம் வருஷம் முதலாம் மாசம் முதல் தேதியிலே வாசஸ்தலம் எடுப்பிக்கப்பட்டது.

௰௮ அதெப்படியென்றால் மோசே கூடாரத்தையெடுப்பித்தான். அவன் அதின் கால்களை வைத்து அதின் பலகைகளை நிறுத்தி அதின் தாப்பாள்களைப் பாயச்சி அதின் தூண்களை நிறுத்தி,

௰௯ கூடாரத்தை வாசஸ்தலத்தின்மேல் விரித்துக் கூடாரத்தின் மூடியையும் அதின்மேல் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி போட்டான்.

௨௰ அவன் சாட்சியையெடுத்து அதைப் பெட்டியிலேவைத்து வாகைக்கட்டைகளைப் பெட்டியிலே பாய்ச்சிக் கிருபாசனமாகிய மூடியைப் பெட்டியின்மேலேவைத்து,

௨௧ பெட்டியைவாசஸ்தலத்திலே கொண்டுவந்து மறைவின் திரையைத் தொங்கப்போட்டுச் சாட்சிப் பெட்டியைக் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே மறைத்தான்.

௨௨ பின்பு அவன் மேசையை ஆசரிப்பின் கூடாரத்திலே வாசஸ்தலத்தின் வடபுறத்திலே திரைக்குப் புறம்பாக வைத்து,

௨௩ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அதின்மேல் கர்த்தருக்கு முன்பாக அப்பத்தை அடுக்கிவைத்தான்.

௨௪ பின்பு அவன் குத்துவிளக்கை ஆசரிப்பின் கூடாரத்திலே மேசைக்கு எதிராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே வைத்து,

௨௫ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே விளக்குகளைக் கர்த்தருக்கு முன்பாக ஏற்றினான்.

௨௬ பின்பு அவன் பொற்பீடத்தை ஆசரிப்பின் கூடாரத்தில் திரைக்கு முன்பாக வைத்து,

௨௭ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அதின்மேல் சுகந்தவர்க்கத்தின் தூபங் காட்டினான்.

௨௮ பின்பு அவன் வாசஸ்தலத்தின் வாசல் மறைவைத் தொங்கவைத்து,

௨௯ தகனபலிபீடத்தை ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து அதின்மேலே சர்வாங்கத் தகனபலியையும் போஜனகாணிக்கையையும் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே செலுத்தினான்.

௩௰ அவன் தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே வைத்துக் கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்த்தான்.

௩௰௧ அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளையுங் கால்களையுங் கழுவினார்கள்.

௩௰௨ அவர்கள் ஆசரிப்பின் கூடாரத்திற் பிரவேசிக்கிறபோதும் பலிபீடத்தண்டைச் சேருகிறபோதும் அவர்கள் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கழுவிக்கொள்ளவேண்டியது.

௩௰௩ பின்பு அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையுஞ் சுற்றிலும் பிராகாரத்தை நிறுத்திப் பிராகாரத்தின் வாசல் மறைவைத் தொங்கவைத்தான். இப்படியே மோசே கிரியையை முடித்தான்.

௩௰௪ அப்பொழுது * ஒரு மேகம் ஆசரிப்பின் கூடாரத்தை மூடிக் கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. * ௪. மோசே. ௯, ௰௫. ௧. இராசா. ௮, ௰.

௩௰௫ ஆசரிப்பின் கூடாரத்திற் பிரவேசிக்க மோசேக்குக் கூடாதிருந்தது. ஏனெனில் மேகம் அதின்மேலே தங்கக் கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

௩௰௬ மேகம் வாசஸ்தலத்திலிருந்தெழும்புகிறபொழுது தானே இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பயணங்களுக்கெல்லாம் புறப்படுவார்கள்.

௩௰௭ மேகம் எழும்பாதிருந்ததேயாகில் அவர்கள் அது எழும்பும் நாள்மட்டும் பயணம் பண்ணாதிருப்பார்கள்.

௩௰௮ அந்தந்த நாளில் இஸ்ரவேல் வீட்டாருடைய எல்லாப் பயணங்களிலும் அவர்கள் எல்லாருடைய கண்களுக்கு முன்பாகப் பகலெமாறு வாசஸ்தலத்தின்மேலே கர்த்தருடைய மேகமிருந்தது. இராத்திரியிலேவென்றால் அக்கினியிருந்தது.

மோசேயெழுதின இரண்டாம் ஆகமம் முடிந்தது முற்றும்.

மோசேயெழுதின

மூன்றும் ஆகமம்.

௧. அதிகாரம்.

பலவிதமாய்ச் செலுத்தப்படுஞ் சர்வாங்கத்தகனபலிகளின் கட்டளை.

௧ கர்த்தர் ஆசரிப்பின் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு அவனோடே பேசிச் சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதென்றால் உங்களிலொருமனிதன் கர்த்தருக்குப் பலியைச் செலுத்தப்போனால் மாட்டுமந்தையிலும் ஆட்டுமந்தையிலுமுள்ள மிருகங்களிலெடுத்து உங்கள் காணிக்கைகளைச் செலுத்துவீர்களாக.

௩ அவன் செலுத்துவது மாட்டுமந்தையிலெடுக்கிற சர்வாங்கதகனபலியானால் அவன் பழுதற்ற காளையைச் செலுத்துவானாக. கர்த்தரின் சந்நிதியிலே தன்மேலே பிரியமுண்டாக அவன் அதை * ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவந்து,

* ௫. மோசே. ௰௨, ௰௩. ௰௪.

௪ அத்தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும்படிக்குத் தன் கையை அதினுடைய தலையின்மேலே வைத்து,

௫ கர்த்தருக்குமுன்பாகக் காளையின் குட்டியை யறுக்கக்கடவன். அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைக் கொண்டுவந்து அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலிருக்கிற பலிபீடத்தின்மேலே சுற்றிலுந்தெளிக்கக்கடவர்கள்.

௬ பிற்பாடு அவன் தகனபலியைத் தோலுரித்து அதைத் துண்டந்துண்டாகத் துண்டித்துப்போடுவானாக.

௭ அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின்மேலே அக்கினியைப்போட்டு அக்கினியின்மேலே கட்டைகளையடுக்கி,

௮ பிற்பாடு ஆரோனின் குமாரராகிய அந்த ஆசாரியர்கள் துண்டங்களையுந் தலையையுங் கொழுப்பையும் பலிபீடத்தின்மேலே அக்கினியின்பேரிலிருக்கிற கட்டைகளின்மீதில் அடுக்கிவைக்கக்கடவர்கள்.

௯ அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் அவன் தண்ணீரிலே கழுவுவானாக. அதையெல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியாகக் கொளுத்திப்போடக்கடவன். அது கர்த்தருக்குக் காறலுகிற வாசனையான தகனம்.

௰ அவன் ஆட்டுமந்தையிலுள்ள செம்மறியாடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் எடுத்த சர்வாங்கதகனபலியைச் செலுத்தப்போனானாகில் அவன் பழுதற்ற கடாவைக் கொண்டுவந்து,

௰௧ கர்த்தருக்குமுன்பாகப் பலிபீடத்தின் வடபுறத்திலே அதை அவன் அறுக்கக்கடவன். அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந்தெளிக்கக்கடவர்கள்.

௰௨ பிற்பாடு அவன் அதைத் துண்டந்துண்டாகத் துண்டித்து அதின் தலையையும் அதின் கொழுப்பையுங் கூடவைப்பானாக. அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே அக்கினியின்பேரிலிருக்கிற கட்டைகளின்மீதில் அடுக்கிவைக்கக்கடவன்.

௰௩ குடல்களையுந் தொடைகளையும் அவன் தண்ணீரிலே கழுவுவானாக. அதையெல்லாம் ஆசாரியன் கொண்டுவந்து பலிபீடத்தின்மேலே கொளுத்திப்போடக்கடவன். அது சர்வாங்கதகனபலி. அது கர்த்தருக்குக் காறலுகிற வாசனையான தகனம்.

௰௪ அவன் பறவைகளில் எடுத்த கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியைச் செலுத்தப்போனானாகில் காட்டுப்புறாக்களிலாகிலும் புறாக்குஞ்சுகளிலாகிலும் எடுத்துச் செலுத்தக்கடவன்.

௰௫ அதை ஆசாரியன் பலிபீடத்தண்டை கொண்டுவந்து அதின் தலையைக் கிள்ளிப் பலிபீடத்தின்மேலே கொளுத்திப்போட்டு அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் சுவரிலே வடியவிட்டு,

௰௬ அதின் இரைப்பையை அதின் இறகுகளோடுங்கூட வாங்கி அதைப் பலிபீடத்தண்டையில் கிழக்கே சாம்பலிருக்கிற இடத்திலே போட்டு,

௰௭ பிற்பாடு அதை அதின் செட்டைகளுக்குள்ளே இரண்டாக்காமல் பிளப்பானாக. பிற்பாடு ஆசாரியன் அதைப் பலிபீடத்தின்மேலே அக்கினியின்மேலிருக்கிற கட்டைகளின்மீதில் கொளுத்திப்போடக்கடவன். அது சர்வாங்கதகனபலி. அது கர்த்தருக்குக் காறலுகிற வாசனையான தகனம்.

௨. அதிகாரம்.

சுயமனப்பூர்வமாயச் செலுத்துங் காணிக்கைகளின் கட்டளை.

௧ ஒருவன் ஆத்துமமாகக் கர்த்தருக்குக் காணிக்கையான படைப்பைச் செலுத்தவேண்டுமானால் அவன் படைப்பு மெல்லிய மாவாயிருப்பதாக. அவன் அதின்மேல் எண்ணெயை வார்த்து அதின் மீதில் குந்துருக்கம் போட்டு,

௨ அதை ஆரோனின் குமாரரான ஆசாரியர்களண்டைக்குக் கொண்டுவருவானாக. அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடிநிறைய எல்லாக் குந்துருக்கத்தோடுங்கூட எடுத்து நினைப்புக்கென்று அதைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன். அது கர்த்தருக்குக் காறலுகிற வாசனையான தகனம்.

௩ காணிக்கையில் மீதியானதோவென்றால் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் சேரக்கடவது. கர்த்தருடைய தகனங்களில் அது பரிசுத்தத்திற் பரிசுத்தம்.

௪ அடுப்பிலே சுட்ட காணிக்கையான படைப்பைச் செலுத்தப்போனாயாகில் அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவினால் புளிப்பில்லாத அதிரசங்களும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளுமாயிருப்பதாக.

௫ நீ படைப்பது தட்டின்மேற் சுட்ட காணிக்கையானால் அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினுடையதாயிருப்பதாக.

௬ அதைத்துண்டுகளாகப்பிட்டு அதின மேலெண்ணெய்வார்ப்பாயாக. அது போசனக் காணிக்கை.

௭ நீ சட்டியிலே செய்யப்பட்ட போசனக்காணிக்கையைப் படைத்தால் அது எண்ணெயிலே மெல்லிய மாவினாலே செய்யப்படவேண்டும்.

௮ இப்படிச் செய்யப்பட்ட காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்தவேண்டும். அது ஆசாரியனிடத்தில் சேர்ந்தபொழுது அவன் அதைப் பலிபீடத்திற்குக் கொண்டுபோவான்.

௯ நீ படைத்த போசனக் காணிக்கையில் ஞாபகக்குறிப்பாக ஒரு பங்கை எடுத்துப் பலிபீடத்தின மேலே கொளுத்தக்கடவன். அது கர்த்தருக்கு சுகந்த வாசனையாயிருக்கும்.

௰ போசனப்பலியில் மீந்தது ஆரோனுக்கும் அவன் குமாரருக்குஞ் சேரக்கடவது. கர்த்தருடைய தகனங்களில் அது மகா பரிசுத்தமாயிருக்கும்.

௧௧ நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தும் ஒரு காணிக்கையும் புளிப்பாகச் செய்யப் படாததாக. புளித்த மாவையும் தேனையும் கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தவேண்டாம்.

௧௨ முதற்கனிகளின் காணிக்கையாக அவைகளைக் கர்த்தருக்குச் செலுத்தலாம். பலிபீடத்தின் மேல் அவைகள் சுகந்த வாசனைக்காகக் கொளுத்தப்பட வேண்டாம்.

௧௩ நீ செலுத்துகிற எந்தப் போசனக் காணிக்கையும் உப்பினால் சாரமாக்கப்படுவதாக. உன் தேவனுடைய உடன்படிக்கையின் உப்பைக் குறைய விடாதே; உன் காணிக்கையெல்லாவற்றோடும் உப்பைச் செலுத்தக்கடவாய். * மாற்கு. ௯, ௪௯. கொலொ. ௪, ௬.

௧௪ நீ முதற்பலன்களின் காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறதுண்டானால் பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி நிமிண்டின முதற்பலன்களின் காணிக்கையைக் கொண்டுவந்து,

௧௫ அதின்மேல் எண்ணெய்வார்த்து அதின்மேல் தூபவர்க்கம் போடுவாயாக. அது போசனக்காணிக்கை.

௧௬ பிற்பாடு ஆசாரியன் உதிர்க்கப்பட்ட தானியத்திலும் எண்ணெயிலும் ஞாபகக்குறிப்பான பங்கை அதினுடைய எல்லாத் தூபவர்க்கத்தோடுங்கூட எடுத்துக் கொளுத்தக்கடவன். அது கர்த்தருக்குத் தகனம்.

௩. அதிகாரம்.

பலவகைப்பட்ட சமாதானபலிகளின் கட்டளை.

ஒருவன் செலுத்துகிற சமாதானபலியானது அப்பொழுது அதை மாட்டுமந்தையிலேயிருந்து கர்த்தருக்குச் செலுத்தப்போகிறானாகில அவன் அதை ஆணானாலும் பெண்ணானாலும் பழுதற்றதாய்க் கர்த்தருடைய சமுகத்துக்கு முன்பாகக் கொண்டுவந்து,

௨ அதினுடைய தலையின்மேலே தன்கையை வைத்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு முன்பாக அதினைக் கொல்லக்கடவன். அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் அதின இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௩ பிற்பாடு சமாதானபலியிலே குடல்களை மூடிய கொழுப்பையும் குடல்களின்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௪ இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலே சிறுகுடலண்டையில் இருக்கிற கொழுப்பையும் குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிரித்துக் கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௫ அவைகளை ஆரோனின் குமாரர் பலிபீடத்திலே அக்கினியின்மேலுள்ள கட்டைகளின் மேலிருக்கும் சர்வாங்க தகனபலியின்மேல் போட்டுக் கொளுத்தக்கடவர்கள். அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனம்.

௬ அவன் ஆட்டுமந்தையிலேயிருந்து கர்த்தருக்குச் சமாதானபலியைச் செலுத்தப்போகிறானாகில அப்பொழுது அது ஆணானாலும் பெண்ணானாலும் பழுதற்றதாயிருக்கும்படிக்கு அதைச் செலுத்துவானாக.

௭ ஆட்டைச் செலுத்தவேண்டுமென்றால் அவன் அதைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து,

௮ அதினுடைய தலையின்மேலே தன்கையை வைத்து ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாக அதினைக் கொல்லக்கடவன். அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

௯ பிற்பாடு அவன் சமாதானபலியிலே அதின் கொழுப்பையும் நடுவெலும்பிலே பிடுங்கின முழுவாலையும் குடல்களை மூடிய கொழுப்பையும் அவைகளின்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௰ இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலே சிறுகுடலண்டையிலிருக்கிற கொழுப்பையும் குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கிக் கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௧௧ அதை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன். அது கர்த்தருக்குத் தகனமான ஆகாரம்.

௧௨ அவன் செலுத்துவது வெள்ளாடாயிருந்தேயானால் அவன் அதைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து,

௧௩ அதினுடைய தலையின்மேல் தன் கையை வைத்து ஆசரிப்பின் கூடாரத்துக்கு முன்பாக அதின் தலையை அறுப்பானாக. அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந் தெளிக்கக்கடவர்கள்.

௧௪ அதிலே அவன் குடல்களை மூடிய கொழுப்பையும் அவைகளின்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௧௫ இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலே சிறு குடல்களிடத்திலிருக்கிற கொழுப்பையுங் குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கிக் கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

௧௬ அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன். அது ஆறுதலின் வாசனையாகுந் தகன ஆகாரம். எல்லாக் கொழுப்புங் கர்த்தருடையது.

௧௭ * கொழுப்பும் இரத்தமுமென்னப்பட்டதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாமென்பது உங்கள் வாசஸ்தலங்களெங்குமுள்ள உங்கள் தலைமுறைகளுக்கு நித்திய கட்டளையாயிருப்பதென்று சொல்லென்றார். * ௭, ௨௩—௨௭. ௧௭, ௰. ௧௪.

௪. அதிகாரம்.

பாவம்போக்கும் பலிகளின் கட்டளை.

பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதென்னவெனில். ஒரு ஆத்துமா கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றைத் தப்பிதத்தினாலே மீறிச்செய்யத்தகாததைச் செய்து பாவம்பண்ணினால் அறியவேண்டியதாவது.

௩ அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் சனத்தைக் குற்றத்திற்குள்ளாக்கப் பாவஞ்செய்தால் அவன் செய்த பாவத்தினிமித்தங் கர்த்தருக்குப் பாவம்போக்கும் பலியாக மாடுகளிலே பழுதற்ற ஒரு காளையெருத்தைச் செலுத்தி,

௪ அதை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலே கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்துக் கர்த்தருக்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக.

௫ அப்பொழுது அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் காளையெருத்தின் இரத்தத்திலே கொஞ்சமெடுத்து அதை ஆசரிப்பின் கூடாரத்திலே கொண்டுவந்து,

௬ தன் விரலை இரத்தத்திலே தோய்த்து ஏழுதரங் கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கெதிரே தெளிக்கக்கடவன்.

௭ பிற்பாடு ஆசாரியன் அந்த இரத்தத்திலே கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கர்த்தருக்கு முன்னேயிருக்கிற சுகந்தவர்க்கங்களுடைய தூபபீடத்தின் கொம்புகளின்மேலே பூசிக் காளையெருத்தினுடைய இரத்தத்தையெல்லாம் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு முன்பாகவிருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிப்போட்டு,

௮ பாவம்போக்கும் பலியான காளையெருத்தின் சகல கொழுப்பையுங் குடல்களை மூடிய கொழுப்பையும் அவைகளின்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

௯ இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலே சிறுகுடல்களிடத்திலிருக்கிற கொழுப்பையுங் குண்டிக்காய்களோடே கூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கி,

௰ சமாதான பலியான மாட்டிலிருந்தெடுக்கிறதுபோல அதிலிருந்தெடுத்து அவைகளைத் தகனபலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்.

௧௧ ஆனால் காளையெருத்தின் தோலையும் அதின் எல்லா மாம்சத்தையும் அதோடே கூட அதின் தலையையுங் கால்களையும் அதின் குடல்களையும் அதின் சாணியையும்,

௧௨ காளையெருத்து முழுவதும் அவன் பாளயத்திற்குப் புறம்பே சாம்பலைக் கொட்டுகிற சுத்தமான இடத்திலே கொண்டுபோய்க் கட்டைகளின்மேலே போட்டு அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவன். கொட்டியிருக்கிற சாம்பலின்மேலேதானே அதைச் சுட்டெரிக்கக்கடவன்.

௧௩ ஆனால் இஸ்ரவேலின் சபையெல்லாந் தப்பிநடந்து காரியந் தங்கள் கண்களுக்கு மறைவாயிருந்ததினாலே கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றை மீறிச் செய்யத்தகாததைச் செய்து குற்றவாளிகளாய்ப்போனால்,

௧௪ அப்பொழுது அவர்கள் செய்த பாவம் அறியப்பட்டதாகில் சபை மாடுகளில் ஒரு காளையெருத்தைப் பாவம்போக்கும் பலியாகச் செலுத்தி அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து,

௧௫ சபையின் மூப்பர் கர்த்தருக்கு முன்பாகத் தங்கள் கைகளை அதினுடைய தலையின்மேல் வைப்பார்களாக. பிற்பாடு கர்த்தருக்கு முன்பாகக் காளையெருத்தின் குரல்வளை அறுக்கப்படுவதாக.

௧௬ அப்பொழுது அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கொண்டுவந்து,

௧௭ தன் விரலை இரத்தத்திலே தோய்த்து ஏழுதரம் கர்த்தருக்கு முன்பாகத் திரையாகத் தெளிக்கக்கடவன்.

௧௮ ஆசரிப்புக் கூடாரத்திலே கர்த்தருக்கு முன்பாக இருக்கிற பீடத்தினுடைய கொம்புகளின்மேல் அதிலே கொஞ்சம் பூசி, மற்ற இரத்தத்தையெல்லாம் ஆசரிப்புக் கூடாரத்து வாசலிலிருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிப்போட்டு,

௧௯ அதின் கொழுப்பையெல்லாம் எடுத்துப் பலிபீடத்தின்மேலே கொளுத்த,

௨௦ பாவம்போக்கும் அந்தக் காளையைச் செய்ததுபோலே இதற்கும் செய்து, இப்படி ஆசாரியன் அவர்களுக்காகப் பாவநிவர்த்தி செய்யக்கடவன். அப்பொழுது அவர்களுக்கு மன்னிக்கப்படும்.

௨௧ பின்பு அந்தக் காளையைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோய் முந்தின காளையைச் சுட்டெரித்ததுபோலச் சுட்டெரிக்கக்கடவன். இது சபையின் பாவம் போக்கும் பலி.

௨௨ ஒரு அதிபதியானவன் கர்த்தருடைய கட்டளைகளிலும் யாதொன்றை அறியாமல் தப்பிதத்திலே செய்யத்தகாததைச் செய்து குற்றவாளியானால்,

௨௩ அவன் செய்த பாவம் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால் அவன் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவைத் தன்னுடைய பலியாகக் கொண்டுவந்து,

௨௪ வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின் மேலே கையை வைத்துத் தகனபலியைக் கொல்லுமிடத்திலே கர்த்தருக்கு முன்பாக அதைக் கொல்லவேண்டியது; இது பாவம்போக்கும் பலி.

௨௫ அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்துத் தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, மற்ற இரத்தத்தைத் தகனபலிபீடத்தடியிலே ஊற்றிப்போட்டு,

௨௬ அதின் கொழுப்பையெல்லாம் சமாதானபலியின் கொழுப்பைப்போலப் பலிபீடத்தின்மேல் கொளுத்தக்கடவன். இப்படி ஆசாரியன் அவன் பாவத்தைப் போக்கிப் பாவநிவர்த்தி செய்யக்கடவன். அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௨௭ தேசத்து ஜனத்திலே ஒருவன் அறியாமல் கர்த்தருடைய கட்டளைகளில் யாதொன்றைத் தப்பிதமாய்ச் செய்யத்தகாததைச் செய்து குற்றவாளியானால்,

௨௮ அவன் செய்த பாவம் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால் அவன் தான் செய்த பாவத்துக்காகப் பழுதற்ற பெண் வெள்ளாட்டுக்குட்டியைத் தன்னுடைய பலியாகக் கொண்டுவந்து,

௨௯ பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே கையைவைத்துச் சர்வாங்க தகனஞ் செய்யப்படுகிற ஸ்தலத்திலே அதைக் கொல்லவேண்டியதாகும்.

௩௦ அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சத்தை விரலிலே எடுத்துத் தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி மற்ற இரத்தத்தையெல்லாம் பலிபீடத்தடியிலே ஊற்றிப்போட்டு,

௩௧ கொழுப்பு சமாதானபலியிலிருந்து பிரிக்கப்படுகிறதுபோல அதின் கொழுப்பையெல்லாம் பிரித்துப் பலிபீடத்தின்மேலே கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகக் கொளுத்தக்கடவன். அவன் பாவத்தை நிவர்த்திபோக்கக்கடவன். அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௩௨ பாவம்போக்கும் பலியாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர மனமாயிருந்தானானால் அவன் பழுதற்ற பெண் ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்து,

௩௩ பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே தன் கையை வைத்துச் சர்வாங்க தகனபலி கொல்லப்படுகிற ஸ்தலத்திலே அதைப் பாவம்போக்கும் பலியாகக் கொல்லவேண்டியதாகும்.

௩௪ அப்பொழுது ஆசாரியன் இரத்தத்திலே கொஞ்சத்தை விரலிலே எடுத்துத் தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி இரத்தத்தையெல்லாம் பலிபீடத்தடியிலே ஊற்றிப்போட்டு,

௩௫ சமாதானபலியான ஆட்டுக்குட்டியின் கொழுப்பு பிரிக்கப்படுகிறதுபோல அதின் கொழுப்பையெல்லாம் பிரித்துப் பலிபீடத்தின்மேலே கர்த்தருடைய தகனபலிகளின் மீதிலே போட்டுக்கொளுத்தி இப்படியாய் அவன் செய்த பாவத்தை நிவர்த்திபாக்கக்கடவன். அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௫. அதிகாரம்.

அப்பாலும் பாவக்குற்றங்களைப்போக்கும் பலிகளின் கட்டளைகள்.

ஒரு ஆத்துமாவானவன் அல்லது அவன் சாட்சியாயிருந்து ஆணையிடப்பட்ட சத்தத்தைக் கேட்டு காரியத்தை அறிவிக்காமற்போகிற பாவத்தைச் செய்தால் அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௨ அல்லது தீட்டான காட்டுச் சீவனின் உடலாகிலும் தீட்டான மிருகத்தின் உடலாகிலும் தீட்டான ஊர்வனத்தின் உடலாகிலும் இப்படிக்கொத்த தீட்டானயாதொன்றையாவது ஒரு ஆத்துமா அறியாமையிலே தொட்டாலும் அவன் தீட்டுக் குற்றமுள்ளவன்.

௩ அல்லது எந்தத் தீட்டினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனையவன் அறியாம

லதொட்டு பிறபாடு அறிந்ததால அவனகுற்றமுளளவன.

௪ மனிதர் பாறு ஆணயிடும எந்தக்காரியமாயிருந்தாலுமொருஆத்துமா தீமைசெய நன்மைசெய்கிறதற்காகிலும் [illegible] அதினாலுண்டாகிற [illegible] அறியாமற்செயது பிறபாடு அறிந்தத்தினால அதிலே குற்றமுளளவனாயிருப்பான.

௫ இப்படிச்சொன்ன வைகளிலொன்றிலே ஒருவன குற்றமுளளவனான பொழுது அவன தான செயதபாவத்தை அறிக்கையிட்டு,

௬ தானசெய்த பாவத்துக்குத்தண்டமாக [illegible] ஆட்டுமந்தையிலொரு பெண்ணாட்டுக்குட்டியையாவது வெள்ளாட்டிலொருபெண் குட்டியையாவது பாவநிவாரணபலியாகக் கொண்டுவருவானாக. ஆசாரியன அவனுக்காக அவன பாவநிவிர்த்தி செய்யக்கடவன்.

௭ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவனாலேகூடாதிருந்தால அவனதான செயதபாவத்துக்கு குற்றநிவாரணத்துக்காக இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும ஒன்றைப்பாவமபோக்குமபலியாகவும் மற்றதைச் சர்வாங்கதகனபலியாகவும் கர்த்தருக்குச்செலுத்தி,

௮ அவைகளையாசாரியனண்டையிலே கொண்டுவருவானாக. இவன பாவமபோக்குமபலியானதை முந்திச்செலுத்தி அதின தலையை அதின பிடரியின கிட்டக்கிள்ளி இரண்டாக்காமல் வைத்து,

௯ அதின இரத்தத்திலகொஞ்சமபலி பீடத்தின சுவரிலே தெளித்து மீதியான இரத்தத்தைப் பலிபீடத்தடியிலே விடக்கடவன. அது பாவமபோக்குமபலி.

௰ மற்றதையவன நியாயமுறைமையின படியே சர்வாங்கதகனபலியாக்கி இப்படி ஆசாரியன அவனுக்காக அவனசெயத பாவத்தைநிவர்த்திபண்ணக்கடவன. அப்பொழுது அவனுக்கு மனனிக்கப்படும.

௧௧ இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டுபுறாக்குஞ்சுகளையெனகிலுங்கொண்டுவர அவனாலேகூடாதிருந்தால் பாவஞ்செய்தவன பாவமபோக்குதலுக்காக ஒருமரக்காலிலே பத்திலொருபங்கு மெல்லியமாவைத் தன காணிக்கையாகக் கொண்டுவந்து அது பாவமபோக்குதலானபடியினால அதினமேலெண்ணெயவார்க்காமலும் சாம்பிராணிபோடாமலுமிருந்து,

௧௨ அதையாசாரியனண்டைக் கொண்டுவருவானாக. அப்பொழுது ஆசாரியன அதிலே ஒருகைப்பிடி நிறையப்பிடித்து [illegible] பலிபீடத்தின மேலே கர்த்தருடைய தகனபலிகளின மேல் போட்டுக்கொளுத்தக்கடவன. அது பாவமபோக்குதல.

௧௩ இப்படி ஆசாரியன அந்தப்பாவங்களிலொன்றைச்செய்தவனுக்காகப்பாவநிவர்த்தியையுண்டாக்கக்கடவன. அப்பொழுது அவனுக்கு மனனிக்கப்படும. மீதியானது போஜனபலியைப்போலே ஆசாரியனைச் சேருமென்றார்.

௧௪ பினனையுங்கர்த்தர்மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௧௫ ஒரு ஆத்துமா கர்த்தருடையபரிசுத்தமானவைகளிலேதப்பிதத்தினாலே அநியாயமபண்ணிபாவஞ்செயதால அவனதன குற்றத்தைப்போக்க நீ பரிசுத்தஸ்தலத்துச் சேக்கலின் கணக்காய அவனமேலேசுமத்தும்படி அதற்கான வெள்ளி சேக்கலின்படி மதிக்கப்பட்ட ஒரு ஆட்டுக்கடாவைக் குற்றநிவாரணபலியாகக் கர்த்தருக்குக்கொண்டுவந்து,

௧௬ பரிசுத்தமானதிலே தானபாவஞ்செய்ததைச்செலுத்தி அதிலே ஐந்திலொருபங்கை அதிகமாகக்கூட்டி ஆசாரியனுக்குக்கொடுப்பானாக. அப்பொழுது ஆசாரியன குற்றநிவாரணத்தின் ஆட்டுக்கடாவினாலே அவனபாவத்தைநிவர்த்தியாக்கக்கடவன. அப்பொழுது அவனுக்கு மனனிக்கப்படும.

௧௭ ஒரு ஆத்துமா கர்த்தருடையசகல கற்பனைகளிலும், செய்யத்தகாததாயிருக்கிறதை அறியாமையினாலே [illegible] செயதுபாவமபண்ணினால அவன குற்றமுள்ளவனாயிருந்து தன அக்கிரமத்தைச் சுமப்பான.

௧௮ ஆகையால அவன குற்றமபோக்கும்பலியாக உனமதிப்புக்குச்சரியான பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனண்டைக்குக்கொண்டுவருவானாக. அப்பொழுது ஆசாரியன அவன அறியாமற் செயத தப்பிதத்தை அவனுக்காக நிவர்த்தியாக்கக்கடவன. அப்பொழுது அவனுக்கு மனனிக்கப்படும.

௧௯ அது குற்றமபோக்குமபலி. அவன கர்த்தருக்குமுன்பாகக் குற்றஞ்செய்தானென்றார்.

௨௰ பினனையுங்கர்த்தர்மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨௧ ஒரு ஆத்துமாகர்த்தருக்குவிரோதமாக அநியாயஞ்செய்துதன்னண்டைக்கொடுத்ததிலேகொடுக்கப்பட்டதிலும அல்லதுதன கையிலேவைக்கப்பட்டதிலுந்தனக்கடுத்தவனுக்குத்துரோகமபண்ணி அல்லது [illegible] அல்லது தனக்கடுத்தவனுக்கு இடுக்கணசெயது,

௨௨ அல்லதுகாணாமற்போனதைக்கண்டுபிடித்தும அதைமறுதலித்துப்பொய்யாணையிட்டு மனிதனபாவஞ்செய்கிறதற்கடுத்தவைகளில் இப்படிப்பட்டசகலகாரியங்களிலும ஒன்றிலே பாவஞ்செயதிருந்தால,

௨௪ அல்லதெந்தப் பாதகத்திலே [illegible] பொய்யாணையிட்டானோ [illegible] அவ்வளவும் [illegible] அதின் ஐந்திலொரு பங்கையும் [illegible] குற்றநிவாரணபலியைப் பலியிடும் நாளிலே [illegible] செலுத்தக்கடவன்,

௨௫ [illegible] குற்றநிவாரணபலியாக [illegible] மந்தையிலிருக்கிற பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை [illegible] ஆசாரியனிடத்திலே கொண்டுவரக்கடவன்.

* லேவி. ௧௧, ௰௫.

௨௬ [illegible] ஆசாரியன் கர்த்தருடைய சந்நிதியில் அவனுக்காகப் பாவநிவர்த்தி பண்ணக்கடவன். அப்பொழுது அவன் [illegible] எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும்.

௬. அதிகாரம்.

[illegible] தகனங்களினுடைய நித்திய கட்டளை [illegible]க்கப்பட்டது.

௧ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்குங் கற்பிக்கவேண்டியதாவது. சர்வாங்க தகனபலியின் பிரமாணமேதெனில், அது இராமுழுதும் விடியற்காலமட்டும் பலிபீடத்தின்மேலே வேகவும் பலிபீடத்தின் அக்கினி அதிலே எரியவுங்கடவது.

௩ ஆசாரியன் சணல்நூலான தன் அங்கியையும் சணல்நூலான தன் [illegible] தன் அரையின்மேல் தரித்துக்கொண்டு அக்கினியானது பலிபீடத்தின்மேலே சர்வாங்க தகனபலியைப் பட்சித்துப்போட்ட பிற்பாடு [illegible] எடுத்து அதைப் பலிபீடத்தண்டையிலே கொட்டி,

௪ பிற்பாடு தன் வஸ்திரங்களைக் கழற்றிப் போட்டு வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு சாம்பலைப் பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோகக்கடவன்.

௫ பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினி [illegible] அதிலே அவியாமல் எரிவதாக. ஆசாரியன் காலமேதோறும் அதின்மேலே விறகுகளைப் போட்டு அதின்மேற் [illegible] பலியை வரிசையாக வைத்து அதின்மேற் சமாதானபலிகளின் கொழுப்பைப் போட்டுக்கொளுத்தக்கடவன்.

௬ பலிபீடத்தின்மேலே அக்கினி அவியாமல் எப்பொழுதும் எரிவதாக.

௭ காணிக்கையின் பிரமாணமாவது. ஆரோனின் குமாரரில் ஒருவன் அதைக் கர்த்தருக்கு முன்பாகப் பலிபீடத்தின் முன் கொண்டுவந்து,

௮ காணிக்கையின் மெல்லிய மாவிலும் அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடி நிறையக் காணிக்கையின்மேலுள்ள எல்லாத் தூபவர்க்கத்தோடுங்கூட எடுத்து, அதின் ஞாபகக்குறியாகப் பலிபீடத்தின்மேலே கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகக் கொளுத்தக்கடவன்.

௯ அதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்களாக. அது புளிப்பில்லாததாய்ப் பரிசுத்த ஸ்தலத்திலே புசிக்கப்படக்கடவது. ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரத்திலே அதைப் புசிப்பார்களாக.

௰ அது புளித்தமாவுள்ளதாய்ச் சுடப்பட வேண்டாம். அது நாம் [illegible] தகனங்களில் நாம் அவர்களுக்குக் கொடுத்த அவர்களுடைய பங்கு. பாவப்போக்கும் பலியைப்போலவும் குற்றப்போக்கும் பலியைப்போலும் அது மகா பரிசுத்தம்.

௰௧ ஆரோனின் பிள்ளைகளில் ஆண்சாதியான யாவரும் அதைப் புசிக்கக்கடவர்கள். கர்த்தருடைய தகனங்களில் அது உங்கள் தலைமுறைகளுக்கு நித்திய கட்டளையாயிருக்கவும் அவைகளைத் தொடுகிறவனெல்லாரும் பரிசுத்தமாயிருப்பானென்றும் சொல்லென்றார்.

௰௨ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௰௩ ஆரோன் அபிஷேகம்பண்ணப்படுகிற நாளிலே அவனும் அவன் குமாரரும் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய படைப்பென்னவெனில் ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்திலொரு பங்கைக் காலமே பாதியும் அந்திநேரத்திலே பாதியும் நித்தகாணிக்கையாகச் செலுத்துவார்களாக.

௰௪ சட்டியின்மேலே எண்ணெயிலே அது செய்யப்படக்கடவது. அதை நீ சுடப்பட்டதாகக் கொண்டுவந்து காணிக்கையின் சுட்ட துண்டுகளைக் கர்த்தருக்கு ஆறுகிற வாசனையாகச் செலுத்தக்கடவாய்.

௰௫ அவன் குமாரரில் அவன் ஸ்தலத்திலே அபிஷேகம்பண்ணப்படுகிற ஆசாரியனும் அப்படிச் செய்யக்கடவன். அது நித்திய கட்டளை. கர்த்தருக்கென்று அது முழுவதுங் கொளுத்தப்படக்கடவது.

௰௬ ஆசாரியனுடைய எந்தக் காணிக்கையும் புசிக்கப்படாமல் முழுவதுஞ் சுட்டெரிக்கப்படவேண்டுமென்றார்.

௰௭ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௰௮ நீ ஆரோனோடும் அவன் குமாரரோடுஞ் சொல்லவேண்டியது. பாவம்போக்கும்பலியின் நியாயப்பிரமாணம் என்னவெனில் சர்வாங்கதகனபலி கொல்லப்படுகிற இடத்திலே பாவம்போக்கும் பலியுங் கர்த்தருக்கு முன்பாகக் கொல்லப்படக்கடவது. அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௰௯ பாவம்போக்க அதைப் பலியிடுகிற ஆசாரியன் அதைப் போசிக்கக்கடவன். ஆசரிப்புக் கூடாரத்தின் பிராகாரமென்ற பரிசுத்த ஸ்தலத்திலே அது போசிக்கப்படுவதாக.

௨௰ அதின் மாம்சத்தைத் தொடுகிறவனெல்லாரும் பரிசுத்தமாயிருப்பார்கள். அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தின் மேலே தெறித்ததானால் அதைப் பரிசுத்த ஸ்தலத்திலே வெளுப்பாயாக.

௨௧ அது வேவிக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்படக்கடவது. செம்புப்பாத்திரத்திலே வேவிக்கப்பட்டதேயானால் அது விளக்கப்பட்டுத் தண்ணீரில் அலம்பப்படக்கடவது.

௨௨ ஆசாரியரில் ஆண்சாதியானவனெல்லாரும் அதைப் போசிப்பார்கள். அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௨௩ ஆனாற் பாவம்போக்கும் எந்தப் பலியின் இரத்தத்திலே கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்திலே பாவநிவர்த்தியாக்கும்படிக்கு ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளே கொண்டுவரப்பட்டதோ அது புசிக்கப்படாமல் அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது.

௭. அதிகாரம்.

அபராதக்குற்றப்பலிகளுக்கடுத்த பிரமாணங்கள்.

குற்றம்போக்கும் பலியின் பிரமாணமென்னவெனில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௨ சர்வாங்கதகனபலியைக் கொல்லுகிற இடத்திலே குற்றம்போக்கும் பலியையுங் கொல்லுவார்களாக. அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந் தெளிக்க,

௩ அதினுடைய எல்லாக்கொழுப்பையும் அதின் வாலையுங் குடல்களை மூடிய கொழுப்பையும்,

௪ இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலே சிறுகுடல்களண்டையிலிருக்கிற கொழுப்பையுங் குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கிச் செலுத்துவானாக.

௫ இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தக்கடவன். அது குற்றம்போக்கும் பலி.

௬ ஆசாரியரில் ஆண்சாதியானவனெல்லாரும் அதைப் போசிப்பார்கள். பரிசுத்த ஸ்தலத்திலே அது போசிக்கப்படக்கடவது. அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

௭ பாவம்போக்கும் பலிக்குங் குற்றம்போக்கும் பலிக்குஞ் சரிசமானம். இரண்டுக்கும் ஒரே நியாயப்பிரமாணமிருக்கும். அதினாலே பாவநிவர்த்தியாக்கின ஆசாரியனையது சேர்வதாக.

௮ ஒருவனுடைய சர்வாங்கதகனத்தை ஆசாரியன் செலுத்தினாலே அதின் தோலை அந்தச் செலுத்தின ஆசாரியனுடையதாயிருக்கும்.

௯ அடுப்பிலே சுடப்பட்டதுஞ் சட்டியிலுந் தட்டின்மேலுஞ் செய்யப்பட்டதுமான காணிக்கைகளையாவும் அதைச் செலுத்தின ஆசாரியனுடையதாயிருக்கும்.

௰ எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெயில்லாததுமான சகல காணிக்கைகளும் ஆரோனுடைய எல்லாக் குமாரருடைய அவனவனுக்குச் சரியாயடைக்கும்.

௰௧ கர்த்தருக்குச் செலுத்துஞ் சமாதானபலியின் நியாயப்பிரமாணமென்னவெனில்,

௰௨ அதை ஸ்தோத்திரத்திற்காகச் செலுத்தினாலே அவன் ஸ்தோத்திரப்பலியோடேகூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அப்பங்களையும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மாவினால் அப்பங்களையும்,

௰௩ அவைகளுடனே புளித்த மாவினாலே செய்த அப்பங்களையும் தன்னுடைய சமாதானபலியாகிய ஸ்தோத்திரப்பலியோடேகூடத் தன் பலிப்பொருளாகக் கொண்டுவந்து,

௰௪ அந்த எல்லாப் பலிப்பொருளிலும் ஒவ்வொன்றைக் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கக்கடவன். அது சமாதானபலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாயிருக்கும்.

௰௫ அவனுடைய சமாதானபலியாகிய ஸ்தோத்திரப்பலியின் மாம்சமோ, அதைச் செலுத்தின நாளிலே போசிக்கப்படக்கடவது. அதிலொன்றும் விடியற்காலமட்டும் வைக்கப்படவேண்டாம்.

௰௬ அவன் செலுத்துகிற பலி ஒரு பொருத்தனையும் அல்லது உற்சாகப்பலியுமாயிருந்ததேயானால் அதைச் செலுத்தினநாளிலும் அதின் மறுநாளிலும் போசிக்கப்படுவதாக.

௰௭ ஆனாற் பலியின் மாம்சத்தில் மூன்றாம் நாளில் மீதியாயிருக்கிறது அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது.

௰௮ அவனுடைய சமாதானபலியின் மாம்சத்தில் மூன்றாம் நாளிலே போசிக்கப்பட்டால் அதைச் செலுத்தின

[illegible]

...யும் கர்த்தருக்கு முன்பாக [illegible] அசைவாட்டும் படிக்கு [illegible] வேண்டும்.

௩௰ அப்பொழுது ஆசாரியன் [illegible] கொழுப்பைப் பலிபீடத்தின் மேலே [illegible] மார்க்கண்டமோ [illegible] வன் குமாரருக்குரும்.

௩௨ உங்கள் சமாதானபலிகளிலே வலது முன்னந்தொடையையும் [illegible] ஆசாரியனுக்கு [illegible].

௩௩ ஆரோனுடைய குமாரரில் [illegible] சமாதான பலியின் [illegible] கொழுப்பையும் செலுத்துகிறவனே வலது முன்னந்தொடையைத் தன் பங்காகக் கொள்ளுவான்.

௩௪ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளிலே அசைவாட்டின மார்க்கண்டத்தையும் ஏறெடுத்த முன்னந்தொடையையும் நாம் அவர்களிடத்திலே வாங்கி அவைகளை ஆசாரியனுகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரராலே நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தோமென்றார்.

௩௫ கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ் செய்ய அவர் ஆரோனையும் அவன் குமாரரையும் சேர்த்த நாளிலே இது அபிஷேகம்பண்ணப்பட்ட அவர்களுக்குக் கர்த்தருடைய தகனங்களிலே செலுத்தப்பட்டவையாம்.

௩௬ இப்படி அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரராலே அவர்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாகக் கொடுக்கப்படக் கர்த்தர் அவர்களை அபிஷேகம்பண்ணின நாளிலே கட்டளையிட்டார்.

௩௭ சர்வாங்க தகனத்திற்கும் போஜனபலிக்கும் பாவம்போக்கும் பலிக்கும் குற்றம்போக்கும் பலிக்கும் பிரதிஷ்டைகளுக்கும் சமாதானபலிக்கும் உரிய நியாயப்பிரமாணமிதுதானே.

௩௮ கர்த்தருக்குத் தங்கள் செலுத்துதல்களைச் செலுத்தும்படி அவர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சீனாய் வனாந்தரத்திலே கற்பித்த நாளில் இவைகளை மோசேக்குச் சீனாய் பர்வதத்திலே கட்டளையிட்டார்.

அ. அதிகாரம்.

ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் ஆசாரியப்பட்டந் தரிப்பிக்கப்பட்டது.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨ நீ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரரையும் அழைத்து வஸ்திரங்களையும் அபிஷேகத் தைலத்தையும் பாவம் போக்கும் பலிக்கு ஒரு காளையையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் புளிப்பில்லாத அப்பங்களுள்ள ஒரு கூடையையுங் கொண்டுவந்து,

௩ சபையையெல்லாம் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்கு முன்பாகக் கூட்டினான்.

௪ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே மோசே செய்தான். சபை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்கு முன்பாகக் கூடினபொழுது,

௫ மோசே சபையுடனே இது கர்த்தர் செய்யக் கற்பித்த காரியமென்றான்.

௬ பிற்பாடு மோசே ஆரோனையும் அவன் குமாரரையுஞ் சேர அழைத்துக் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே யவர்களைத் தண்ணீரிலே கழுவி,

௭ * அவனுக்கு உட்சட்டையைப் போட்டு நடுக்கட்டுக் கட்டி அங்கியை யுடுத்தி ஆசாரியசால்வையைப் போர்த்தி அதின்மேல் ஆசாரியசால்வையின் விசித்திரமான கச்சையை யவனுக்குக் கட்டி, * ௨. மோசே. ௨௮, ௪.

௮ அவனுக்கு மார்ப்பதக்கத்தைத் தரித்து மார்ப்பதக்கத்திலே * வெளிச்சங்களையும் உத்தமங்களையும் வைத்து, * ௨. மோ. ௨௮, ௩௰.

௯ அவன் தலையிலே பாகையைப் போட்டுப் பாகையின்மேல் அவன் முகத்திற்கு நேராகப் பரிசுத்த கிரீடமென்ற பொற்பட்டத்தைக் கட்டினான்.

௰ பிற்பாடு மோசே அபிஷேகத் தைலத்தை யெடுத்துக்கொண்டு வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம் பண்ணிப் பரிசுத்தமாக்கி,

௰௧ அதிலெடுத்துப் பலிபீடத்தின்மேல் ஏழுதரந் தெளித்துப் பலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையுந் தொட்டியையும் அதின் பிரமணையையும் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம் பண்ணி,

௰௨ அபிஷேகத் தைலத்திலே சிலதை * ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து அவனைப் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம் பண்ணினான். * சங். ௱௩௩, ௨.

௰௩ பிற்பாடு மோசே ஆரோனின் குமாரரைச் சேர அழைத்துக் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அவர்களுக்குச் சட்டைகளையுடுத்தி நடுக்கட்டுகளைக் கட்டிக் குல்லாக்களைப் போட்டுக் கட்டி,

௰௪ பாவம்போக்குதலின் காளையைக் கொண்டுவந்தான். அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௰௫ அப்பொழுது அது கொல்லப்பட்டது. மோசே அதின் இரத்தத்தைப் பிடித்துத் தன் விரலினாலே பலிபீடத்தின் கொம்புகளின்மேல் சுற்றிலும் பூசிப் பலிபீடத்திற்குப் பாவம் போக்குதலைச் செய்து இரத்தத்தைப் பலிபீடத்தடியிலே ஊற்றிவிட்டு அதின்மேல் பாவநிவர்த்தி யுண்டாகும்படிக்கு அதைப் பரிசுத்தமாக்கினான்.

௰௬ பிற்பாடு மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே குடல்களின்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையுங் கல்லீரலின்மேலிருந்த சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின் கொழுப்பையும் எடுத்துக்கொண்டு பலிபீடத்தின்மேலே கொளுத்தி.

௰௭ காளையையும் அதின் தோலையும் மாம்சத்தையுஞ் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாலே சுட்டெரித்தான்.

௰௮ பிற்பாடு சர்வாங்க தகனமாகும் ஆட்டுக்கிடாயைக் கொண்டுவந்தான். அவனுடைய தலையின்மேலே ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௰௯ அப்பொழுது அது கொல்லப்பட்டது. மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந் தெளித்தான்.

௨௰ ஆட்டுக்கிடாய் சந்துசந்தாகத் துண்டித்துப் போடப்பட்டபின் மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே தலையையுந் துண்டங்களையுங் கொழுப்பையுங் கொளுத்தி,

௨௧ குடல்களையுங் கால்களையுந் தண்ணீரிலே கழுவி ஆட்டுக்கிடாயை முழுவதும் பலிபீடத்தின்மேலே கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான சர்வாங்க தகனமாகக் கொளுத்தினான்.

௨௨ பிற்பாடு கைகளை நிரப்புதலின் இரண்டாம் ஆட்டுக்கிடாயைக் கொண்டுவந்தான். அதினுடைய தலையின்மேல ஆரோனும் அவன் குமாரருந் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௨௩ பிற்பாடு அது கொல்லப்பட்டது. மோசே அதின் இரத்தத்திலே கொஞ்சம் பிடித்து ஆரோனுடைய வலது காதுமடலிலும் வலது கையின் பெருவிரலின்மேலும் வலது காலின் பெருவிரலின்மேலும் பூசினான்.

௨௪ பிற்பாடு ஆரோனுடைய குமாரரையும் அழைத்து அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலது காதுமடலிலும் வலது கையின் பெருவிரலின்மேலும் வலது காலின் பெருவிரலின்மேலும் பூசி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந் தெளித்து,

௨௫ கொழுப்பையும் வாலையுங் குடல்களின்மேலிருந்த எல்லாக் கொழுப்பையுங் கல்லீரலின்மேலிருந்த சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின் கொழுப்பையும் வலது முன்னந்தொடையையும் எடுத்து,

௨௬ கர்த்தருக்கு முன்பாக வைத்திருந்த புளிப்பில்லாத அப்பங்களின் கூடையிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் எண்ணெய் அப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையும் எடுத்து அந்தக் கொழு

பிறகும் முன்னந்தொடையின்மேலும் வைத்து,

௨௭ அவைகளையெல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து அசைவாட்டும் காணிக்கையாகக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டி,

௨௮ பின்பு அவைகளை அவர்கள் உள்ளங்கைகளிலிருந்து எடுத்துப் பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியின்மீதில் கொளுத்தினான்; அவைகள் சுகந்த வாசனையான காணிக்கையான பிரதிஷ்டைப்பலி, இது கர்த்தருக்குத் தகனமுமாயிற்று.

௨௯ பின்பு மோசே மார்க்கண்டத்தை எடுத்து அதைக் கர்த்தருக்கு முன்பாகக் காணிக்கையாக அசைவாட்டினான். கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவ்வகை பிரதிஷ்டையின் ஆட்டுக்கடாயிலே மோசேக்கு அது பங்காயிற்று.

௩௦ பின்பு மோசே அபிஷேகத்தைலத்திலேயும் பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலேயும் கொஞ்சம் எடுத்து ஆரோனின் மேலும் அவன் வஸ்திரங்களின் மேலும் அவன் குமாரரின் மேலும் அவன் குமாரரின் வஸ்திரங்களின் மேலும் தெளித்து, ஆரோனையும் அவன் வஸ்திரங்களையும் அவன் குமாரரையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும் பரிசுத்தமாக்கினான்.

௩௧ பின்பு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் நோக்கிச் சொன்னதாவது: நீங்கள் மாம்சத்தை ஆசரிப்புக்கூடார வாசலிலே சமைத்து, ஆரோனும் அவன் குமாரரும் புசிக்கக்கடவர்களென்று நான் கட்டளையிட்டபடியே அங்கே அதையும் பிரதிஷ்டையின் கூடையிலிருக்கிற அப்பத்தையும் புசித்து,

௩௨ மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியாலே சுட்டெரித்து,

௩௩ உங்கள் பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறுமட்டும் ஏழுநாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருப்பீர்களாக. ஏழுநாளளவும் உங்கள் கைகளை நிரப்புவார்.

௩௪ இந்நாளிலே செய்யப்பட்டதுபோல உங்களுக்குப் பாவநிவிர்த்திக்காக இனியும் செய்யப்படவேண்டுமென்று கர்த்தர் கற்பித்தார்.

௩௫ நீங்கள் சாகாதபடிக்கு ஏழுநாள் இரவும் பகலும் ஆசரிப்புக்கூடார வாசலிலிருந்து கர்த்தருடைய காவலைக் காக்கக்கடவீர்கள்; இப்படி நான் கற்பிக்கப்பட்டேன் என்றான்.

௩௬ கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள்.

௯. அதிகாரம்.

ஆரோன் செய்த முதலாம் ஊழியம்.

சம்பவித்ததேதென்றால் எட்டாம்நாளிலே மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து,

௨ ஆரோனோடே சொன்னதாவது: நீ பாவம்போக்கும் பலியாக மாசில்லாத பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும் சர்வாங்கதகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் பிடித்துக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவா.

௩ அன்றியும் இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதாவது: கர்த்தருக்கு முன்பாகப் பலியிடும்படிக்கு நீங்கள் பாவம்போக்கும் பலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவையும், சர்வாங்கதகனபலியாக ஒருவயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும் ஒரு ஆட்டுக்குட்டியையும்,

௪ சமாதானபலியாக ஒரு எருதையும் ஒரு ஆட்டுக்கடாவையும் எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும் கொண்டுவாருங்கள். ஏனென்றால் இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குத் தரிசனையாவாரென்று சொல்லென்றான்.

௫ மோசே கற்பித்தவைகளை ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். சபையெல்லாரும் சேர்ந்து கர்த்தருக்கு முன்பாக நின்றது.

௬ அப்பொழுது மோசே: கர்த்தர் கற்பித்த இந்தக் காரியத்தைச் செய்யுங்கள். அப்பொழுது கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படுமென்றான்.

௭ பிற்பாடு மோசே ஆரோனுடனே: நீ பலிபீடத்தண்டைக்குச் சேர்ந்து கர்த்தர் கற்பித்தபடியே பாவம்போக்கும் உன் பலியையும் சர்வாங்கதகனமான உன் பலியையும் செலுத்தி உனக்காகவும் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தியுண்டாக்கிச் சனத்தின் பலியையும் செலுத்தி அவர்களுக்காகப் பாவநிவிர்த்தியுண்டாக்குமென்றான்.

௮ அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டைக்குச் சேர்ந்து தன் பாவம்போக்குதலின் கன்றுக்குட்டியைக் கொலைசெய்தான்.

௯ ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள். அவன் தன் விரலை இரத்தத்திலே தோய்த்து அப்பலிபீடத்தின் கொம்புகளின்மேலே பூசி இரத்தத்தைப் பலிபீடத்தடியிலே ஊற்றி,

௰ பாவம்போக்கும் பலியின் கொழுப்பையும் குண்டிக்காய்களையும் கல்லீரலின்மேலே இருக்கிற சவ்வையும் பலிபீடத்தின்மேலே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கொளுத்தப்படவைத்தான்.

௰௧ அந்த மாம்சத்தையுந் தோலையும் பாளயத்துக்குப் புறம்பே அக்கினியாலே சுட்டெரித்தான்.

௰௨ பிற்பாடு சர்வாங்கத் தகனபலியின் கொல்லவேண்டியதைக் கொன்றான். ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவனிடத்திற் கொண்டுவந்தார்கள். அதைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந் தெளித்தான்.

௰௩ துண்டங்களாக்கப்பட்ட சர்வாங்கத் தகனபலியையுந் தலையையும் அவனிடத்திற் கொண்டுவந்தார்கள். அவன் அவைகளைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்பட வைத்தான்.

௰௪ குடல்களையுந் தொடைகளையுங் கழுவிப் பலிபீடத்தின்மேலே சர்வாங்கத் தகனத்தின்மேற் கொளுத்தப்பட வைத்தான்.

௰௫ பிற்பாடு அவன் சனத்தின் பலியைக் கிட்டக்கொண்டுவந்து சனத்திற்காகிய பாவம்போக்குங் கடாவாகிய வெள்ளாட்டுக்கடாவைப் பிடித்து அதைக் கொல்லவேண்டிய முதலாவதைப் போலே அதையும் பாவம்போக்கும் பலியாக்கி,

௰௬ சர்வாங்கத் தகனபலியைக் கிட்டக்கொண்டுவந்து நியாயமுறைமையின்படியே செலுத்தி,

௰௭ காணிக்கையையுங் கிட்டக்கொண்டுவந்து அதில் உள்ளங்கையை நிரப்பத்தக்கதை எடுத்து, காலமே செலுத்தின சர்வாங்கத் தகனமுமல்லாமல் பலிபீடத்தின்மேற் கொளுத்தப்பட வைத்தான்.

௰௮ பிற்பாடு சனத்தின் சமாதானபலியாகிய எருதையும் ஆட்டுக்கடாவையுங் கொல்லவுமானான். அதின் இரத்தத்தை ஆரோனின் குமாரர் அவனிடத்திற் கொண்டுவந்தார்கள். அதைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலுந் தெளித்தான்.

௰௯ எருதிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த கொழுப்புகளையும் வாலையுங் குடல்களை மூடியதையுங் குண்டிக்காய்களையுங் கலலீரல் மேலிருந்த சவ்வையுங் கொண்டுவந்து,

௨௰ கொழுப்புகளை மார்க்கண்டங்களின் மேலே வைத்தார்கள். அந்தக் கொழுப்புகளைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்பட வைத்தான்.

௨௧ அந்த மார்க்கண்டங்களையும் வலது முன்னந்தொடையையும் ஆரோன் மோசே கற்பித்தபடியே கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டுங் காணிக்கையாக அசைவாட்டினான்.

௨௨ பிற்பாடு ஆரோன் தன் கைகளைச் சனத்திற்கு நேராக ஏறெடுத்து அவர்களை ஆசீர்வதித்துப் பாவம்போக்கும் பலியையுஞ் சர்வாங்கத் தகனபலியையுஞ் சமாதானபலியையுஞ் செலுத்தின இடத்திலிருந்து இறங்கினான்.

௨௩ மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்திற்குட் பிரவேசித்து வெளியே வந்து சனத்தை ஆசீர்வதித்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய மகிமை யெல்லாச் சனத்திற்குங் காணப்பட்டது.

௨௪ ※ அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டுப் பலிபீடத்தின் மேலிருந்த சர்வாங்கத் தகனபலியையுங் கொழுப்புகளையும் எரித்துப்போட்டது. சனமெல்லாருமதைக் கண்டபொழுது கெம்பீரித்து முகங்குப்புற விழுந்தார்கள். ※

※ ௨. நாளா. ௭,௧.

௰. அதிகாரம்.

ஆரோனின் குமாரர் அந்நிய அக்கினியைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்ததினாற் புத்தியீனத்தினாலே அக்கினிக்குள் பட்டு மடிந்தது.

௧ பிற்பாடு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் அவரவர் தன்தன் தூபகலசத்தை யெடுத்து அவைகளிலே நெருப்பையும் அதின்மேலே தூபவர்க்கத்தையும் போட்டுக் கர்த்தர் தங்களுக்குக் கற்பியாதிருந்த அந்நிய அக்கினியை அவருக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

௨ அப்பொழுது அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது. அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் செத்தார்கள்.

௩ அப்பொழுது மோசே ஆரோனிடத்தில் நான் எனக்குச் சமீபமானவர்களிடத்தில் பரிசுத்தமுள்ளவரென்றும் சனமெல்லாருக்கு முன்பாக மகிமைப்படுவேனென்று கர்த்தர் சொன்னது இதுதானென்றான். ஆரோன் பேசாதிருந்தான்.

௪ பிற்பாடு மோசே ஆரோனின் சிறிய தகப்பனாகிய ஊசியேலின் குமாரராகிய மீசவேலையும் எல்சாப்பானையும் அழைத்து, நீங்கள் சேர்ந்து உங்கள் சகோதரரைப் பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாகவிருந்து எடுத்துப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோங்களென்றான்.

௫ இவர்கள் மோசே சொன்னபடி சேர்ந்து அவர்களை அவர்களுடைய சட்டைகளோடே எடுத்துப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோனார்கள்.

௬ மோசே ஆரோனிடமும் எலெயாசார் இத்தாமார் என்னும் அவன் குமாரரிடமுஞ் சொன்னதாவது: நீங்கள் சாகாதபடிக்குஞ் சனமெல்லாவற்றின்மேலுங் கடுங்கோபம் வராதபடிக்கும் நீங்கள் உங்கள் தலைகளைத் திறவாமலும் உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக. உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் வீட்டாரெல்லாரும் கர்த்தர் சுட்ட இந்தச் சுட்டிதற்காக அழுவார்கள்.

[illegible]

௨௰. அதிகாரம்.

இஸ்ரவேலனத்திற்கு கொடுக்கப்பட்டதாயிருக்கிற [illegible] கற்பனைகளுக்கு [illegible] பிரமாணம்.

௧ [illegible] மோசேயோடும் ஆரோனோடும் பேசி அவர்களோடே சொன்னதாவது.

௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது ✻ பூமியிலிருக்கிற [illegible] நீங்கள் பொசிக்கத்தக்க [illegible], ✻ ரு. மோ. ௰௪, ௪. [illegible] ௰௪. ௰௩.

௩ மிருகங்களில் [illegible] குளம்புள்ள [illegible] பிரித்திருக்கிறதும் [illegible] அசைபோடுகிறதுமானவைகளையெல்லாம் நீங்கள் பொசிக்கலாம்.

௪ ஆகிலும் அசைபோடுகிறவைகளிலும் [illegible] விரிகுளம்புள்ளவைகளிலும் நீங்கள் பொசிக்கத்தகாதவைகளாவன [illegible] ஒட்டகம்; அது அசைபோட்டும் [illegible] விரிகுளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௫ குழிமுசலும்; அது அசைபோட்டும் விரிகுளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௬ முசலும்; அது அசைபோட்டும் விரிகுளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௭ பன்றியும்; அது விரிகுளம்பும் [illegible] பிரிந்ததுமாயிருந்தும் அசைபோடாதிருக்கும்; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

௮ இவைகளின் மாம்சத்திலே போசியாமலும் இவைகளின் உடலகளைத் தொடாமலுமிருப்பீர்களாக இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

௯ தண்ணீர்களிலிருக்கிறயாவிலும நீங்கள் போசிக்கத்தக்கதென்னவென்றால் கடல்களும ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிறகுகளும் செதிளுகளுமுள்ளதையெல்லாம நீங்கள் போசிக்கலாம்.

௰ ஆனால் கடல்களும ஆறுகளுமாகிய தண்ணீர்களில நீந்துகிறதுமிருக்கிறதுமான உயிர்ப்பிராணிகளெல்லாவற்றிலும் சிறகுகளும செதிளுமில்லாதயாவும உங்களுக்கருவருப்பாயிருப்பதாக.

௰௧ அவைகள் உங்களுக்கு அருவருப்பாயிருக்கக்கடவது. அவைகளுடைய மாம்சத்திலே போசியாதிருந்து அவைகளின உடலகளை அருவருப்பீர்களாக.

௰௨ தண்ணீர்களிலே சிறகுகளும செதிளுமில்லாதயாவும உங்களுக்கருவருப்பாயிருக்கக்கடவது.

௰௩ பறவைகளில் நீங்கள் போசியாமல் அருவருக்கவேண்டியவைகள் ஏதென்றால் கழுகும கெருடனும கடல் உராஞ்சியும,

௰௪ பருந்தும சாதிசாதியான வல்லூறும்,

௰௫ சகலவிதசாதியான காகங்களும்,

௰௬ தீக்கோழியும் கருவாட்டுவாலியும் செம்புகும் சாதிசாதியான ஆட்காட்டியும்,

௰௭ ஆந்தையும்சக்கோர்ப்பட்சியுங் கோட்டானும்,

௰௮ அன்னவாதும நாரையுங்கோட்டேவாலும்,

௰௯ கொக்குகளுசாதிசாதியான இராசாளியுங் கொண்டலாத்தியுந் துரிஞ்சிலுமென்னுமிவைகள்.

௨௰ பறக்கிறவைகளில் நான்குகாலால் நடமாடுகிற ஊர்வனமயாவும உங்களுக்கருவருப்பாயிருப்பதாக.

௨௧ ஆகிலும பறக்கிறவைகளில் நான்குகாலால் நடமாடுகிறயாவிலுமநீங்களதைப்போசிக்கலாமென்றால் தரையிலே குதிக்கிறதற்குக் காலகளின்மேலே தொடைகளுண்டாயிருக்கிறவைகளிலே,

௨௨ வெட்டுக்கிளிசாதியாயிருக்கிறதையும சோலையாட்டுக்கிளிசாதியாயிருக்கிறதையும [illegible]கிளிசாதியாயிருக்கிறதையும [illegible]கிளிசாதியாயிருக்கிறதையும நீங்கள்போசிக்கலாம,

௨௩ பறக்கிறவைகளில் நான்குகாலுண்டாய நடமாடுகிறமற்றயாவும உங்களுக்கருவருப்பாயிருப்பதாக.

௨௪ அவைகளாலே தீட்டடைவீர்கள. அவைகளின உடலைத்தொடுகிறவனெல்லாரும சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௫ அவைகளின உடலைச்சுமந்தவனெவனாகிலும் தனவஸ்திரங்களைவெளுக்கக்கடவன. அவன சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான.

௨௬ விரிகால் நகங்களுள்ளவைகளாயிருந்தும அவைகளை இரண்டாகப்பிரியப்பண்ணாமலும அசைபோடாமலுமிருக்கிற சகலமிருகங்களும உங்களுக்குத்தீட்டாயிருப்பதாக. அவைகளைத் தொடுகிறவனெல்லாரும தீட்டடைவான்.

௨௭ நான்குகாலால்நடக்கிற சகலவிதமிருகங்களிலும் தங்கள் உள்ளங்காலகளையூன்றி நடக்கிறயாவும உங்களுக்குத்தீட்டாயிருப்பதாக. அவைகளின உடலைத் தொடுகிறவனெல்லாரும சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௮ அவைகளின உடலைச்சுமந்தவனதன வஸ்திரங்களைவெளுக்கக்கடவன். அவன சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான். அவைகள உங்களுக்குத் தீட்டுள்ளவைகள.

௨௯ தரையிலேயூருகிற ஊர்வனங்களில் உங்களுக்குத் தீட்டாயிருப்பவைகள் பெருச்சாளியும எலியும சாதிசாதியான ஆமையும,

௩௰ உடும்பும அழுங்கும ஓணானும பல்லியும பச்சோந்தியுமானவைகள.

௩௧ சகல ஊர்வனங்களிலும இவைகள உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக. செத்த அவைகளைத்தொடுகிறவனெல்லாரும சாயுங்காலமட்டுந்தீட்டுப்பட்டிருப்பான.

௩௨ செத்த அவைகளில யாதொன்று எதின்மேல் விழுந்ததோ அதுவெல்லாந்தீட்டுப்பட்டிருக்கும. அது எந்தமரப்பாண்டமானாலும வஸ்திரமானாலும தோலானாலும பையானாலும வேலைசெய்கிற எந்த ஆயுதமானாலுமாசரி. தண்ணீரிலே போடப்பட்டுச்சாயுங்காலமட்டுந் தீட்டாயிருப்பதாக. அப்பொழுது சுத்தமாம்.

௩௩ அவைகளில்யாதொன்று எந்தமண்பாண்டத்திற்குள்ளும விழுந்தால அதற்குள்ளிருக்கிறதெல்லாந் தீட்டுப்பட்டிருக்கும். அதையோவென்றால உடைப்பீர்களாக.

௩௪ போசிக்கிற சகல போசனத்திலும எதின்மேலே தண்ணீர் வார்க்கப்படுகிறதோ அது தீட்டாகும. குடிக்கத்தக்கபானமும எந்தப்பாத்திரத்திலிருந்தாலும் தீட்டாம்.

௩௫ அவைகளின உடலில யாதொன்று எதின்மேல்விழுகிறதோ அதுவெல்லாந்தீட்டாம. அடுப்பும மண்தொட்டியுமானாலும சிதைக்கப்படுவதாக. அவைகள் தீட்டுப்பட்டிருக்கும. அவைகள் உங்களுக்குத் தீட்டாயிருக்கும.

௩௬ நீரூற்றும் தண்ணீருண்டாகிய கிணறுமோவென்றால் சுத்தமாயிருக்கும.

ஆகிலும் அவைகளின் உடலைத் தொடுகிறவன் தீட்டுப்படுவான்.

௩௭ அவைகளின் உடலிலே யாதொன்று விதைக்கப்படத்தக்க யாதொரு விதையின்மேலே விழுந்தால் அது சுத்தமாயிருக்கும்.

௩௮ தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேலே விழுந்ததேயாகில் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக.

௩௯ உங்களுக்கு ஆகாரத்திற்கான ஒரு மிருகம் செத்தாலும் அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௰ அதின் உடலிலே புசித்தவன் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன். அவன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான். அதின் உடலைச் சுமந்துபோனவனும் தன் வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன். அவனும் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௧ தரையிலே ஊருகிற ஊர்வனமெல்லாம் அருவருப்பாயிருக்கக்கடவது. அது புசிக்கப்படலாகாது.

௪௨ தரையிலே ஊருகிற சகல ஊர்வனத்திலும் வயிற்றாலே நகருகிறயாதொன்றைத்தான் காலால் நடக்கிறயாதொன்றைத்தான் அநேக கால்களுள்ள யாதொன்றைத்தான் புசியீர்களாக. ஏனென்றால் அவைகள் அருவருப்பாயிருக்கின்றது.

௪௩ ஊருகிற எந்த ஊர்வனத்தினாலும் உங்களை அருவருப்பாக்காமலும் அவைகளாலே தீட்டுப்படாமலுமிருப்பீர்களாக. ஏனென்றால் அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்.

௪௪ ஏனென்றால் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர். ஆகையால் உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு பரிசுத்தராயிருப்பீர்களாக. ஏனென்றால் நாம் பரிசுத்தர். ஆனபடியினாலே தரையிலே ஊருகிற அந்த ஊர்வனத்தினாலும் உங்களாத்துமங்களைத் தீட்டுப்படுத்தாதிருப்பீர்களாக.

௪௫ உங்கள் பராபரனாயிருக்கும்படிக்கு உங்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுவந்தவர் கர்த்தர். ஆகையால் பரிசுத்தராயிருப்பீர்களாக. ஏனென்றால் நாம் பரிசுத்தர்.

௪௬ தீட்டானதற்கும் சுத்தமானதற்கும் புசிக்கப்படுகிறவைகளுக்கும் புசிக்கப்படாதவைகளுக்கும் வித்தியாசம்பண்ணுவதற்கு,

௪௭ இது மிருகத்திற்கும் பறவைகளுக்கும் தண்ணீர்களில் நடமாடுகிற சகல ஜீவஜெந்துக்களுக்கும் தரையின்மேலே ஊருகிற சகல ஜீவனுக்குமடுத்த நியாயப்பிரமாணமென்று சொல்லென்றார்.

௰௨. அதிகாரம்.

பிள்ளைபெற்றவளுடைய சுத்திகரிப்பின் நியாயப்பிரமாணம்.

பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில் ஒரு ஸ்திரீ கர்ப்பந்தரித்து ஆண்பிள்ளையைப் பெற்றால் அவள் தூரஸ்திரீயாய் விலக்கமாயிருக்கிற நாட்களுக்குச் சரியாய் ஏழுநாள் தீட்டாயிருப்பாள்.

௩ எட்டாம் நாளிலே அதினுடைய நுனித்தோலின் மாம்சம் சுன்னத்துப்பண்ணப்படக்கடவது.

௪ பிற்பாடு அவள் முப்பத்து மூன்றுநாள் தன் உதிர சுத்திகரிப்பிலிருந்து தன் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறுமட்டும் பரிசுத்தமானயாதொரு வஸ்துவைத் தொடவும் பரிசுத்தஸ்தலத்திற்கு வரவும் வேண்டாம்.

௫ பெண்பிள்ளையைப் பெற்றாளேயாகில் அவள் இரண்டுவாரந் தூரஸ்திரீயாயிருக்கிறதுபோலே தீட்டாயிருந்து பிற்பாடு அறுபத்தாறுநாள் தன் உதிர சுத்திகரிப்பிலிருக்கக்கடவள்.

௬ ஆண்பிள்ளையையல்லது பெண்பிள்ளையைப் பெற்றதற்காக அவள் சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறின பின்பு அவள் ஒருவயதான ஆட்டுக்குட்டியைச் சர்வாங்கத்தகனபலியாகவும் ஒரு புறாக்குஞ்சையாகிலும் காட்டுப்புறாவையாகிலும் பாவம்போக்கும் பலியாகவும் ஆசரிப்புக்கூடாரவாசலுக்கு ஆசாரியனண்டையிலே கொண்டுவரக்கடவள்.

௭ அதையவன் கர்த்தருக்கு முன்பாகச் செலுத்தி அவளுக்காகப் பாவநிவர்த்தியையுண்டாக்குவானாக. அப்பொழுது அவள் தன் உதிர ஊறலின் தீட்டிற்குச் சுத்தமாவாள். இது ஆண்பிள்ளையையல்லது பெண்பிள்ளையைப் பெற்றவளின் நியாயப்பிரமாணம்.

௮ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவளுக்குக் கூடாதிருந்ததேயாகில் அவளிரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும் ஒன்றைச் சர்வாங்கத்தகனபலியாகவும் மற்றதைப் பாவம்போக்கும் பலியாகவுங் கொண்டுவருவாளாக. அதினாலே ஆசாரியன் அவளுக்காகப் பாவநிவர்த்தியையுண்டாக்கக்கடவன். அப்பொழுது சுத்தமாயிருப்பாளென்று சொல்லென்றார்.

௰௩. அதிகாரம்.

குஷ்டத்திற்கடுத்த நியாயப்பிரமாணங்கள்.

பின்னையுங் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச்சொன்னதாவது.

௨ ஒரு மனிதனுடைய மாம்சத்தின் தோலிலே குஷ்டவாதையைப்போலிருக்கிற ஒரு வீக்கமாவது அசறாவது வெள்ளைமறுவெண்கிலும் உண்டானால் அவன் ஆசாரியனாகிய ஆரோனண்டைக்கு அல்லது ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனண்டைக்குக்கொண்டுவரப்படக்கடவன்.

௩ அப்பொழுது ஆசாரியன் மாம்சத்தின் தோலிலிருக்கிற வாதையினிடத்தைப்பார்க்கக்கடவன். அதிலே மயிர் வெண்மையாக மாறினதுமல்லாமல் வாதையினிடம் அவன் மாம்சத்தின் தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிருந்தால் அது குஷ்டத்தின் வாதை. ஆசாரியன் அவனைப்பார்த்தபொழுது அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௪ அவன் மாம்சத்தோலிலே வெள்ளைமறுவிருந்தாலும் அவ்விடம் அவன் மாம்சத்தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிராமலும் அதின் மயிர் வெண்மையாகமாறாமலுமிருந்தால் ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைக்கக்கடவன்.

௫ ஏழாந்நாளிலே அவனைப்பார்க்கக்கடவன். இதோ, வாதையினிடந் தோலிலே அதிகப்படாமல் வாதை அவன் பார்வைக்குத் தரித்திருந்தால் ஆசாரியன் இரண்டாந்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைக்கக்கடவன்.

௬ இரண்டாந்தரம் அவனை ஏழாந்நாளிலே பார்க்கக்கடவன். இதோ, வாதை தோலிலே அதிகப்படாமற் குறுகியிருந்தால் ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அது அசறுதான். அவன் தன்வஸ்திரங்களைத் தோய்த்துச் சுத்தமாயிருப்பானாக.

௭ தன்னைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கிறதற்கு அவன் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பித்தபின்பு அசறு தோலிலே இடங்கொள்ளவே கொண்டேயிருந்தால் அவன் மறுபடியும் ஆசாரியனுக்குத் தன்னைக்காண்பிக்கக்கடவன்.

௮ இதோ, அசறு தோலிலே இடங்கொண்டதென்று ஆசாரியன் கண்டால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அது குஷ்டந்தானே.

௯ குஷ்டவாதை ஒரு மனிதனிலிருந்தால் ஆசாரியனண்டைக்குக்கொண்டுவரப்படக்கடவன்.

௰ இதோ, தோலிலே வெண்மையான வீக்கமிருந்து, அது மயிரை வெண்மையாகமாறப்பண்ணினதுமல்லாமல் வீக்கத்தில் பச்சைச்சதையுள்ளதாயுமிருக்கிறதை ஆசாரியன் கண்டால்,

௰௧ அப்பொழுது அது அவன் மாம்சத்தின் தோலிலே பழைய குஷ்டம். ஆசாரியன் அவனை அடைத்துவைக்காமல் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன். ஏனென்றால் அவன் தீட்டுள்ளவன்தானே.

௰௨ குஷ்டம் தோலிலே தழைத்து வாதையுள்ளவனுடைய தலைமுதல் கால்வரைக்குமுள்ள உடம்பெல்லாம் ஆசாரியனுடைய கண்களுக்குத் தெரிகிற எவ்விடமும் தோலை எல்லாம் மூடிக்கொண்டிருந்ததேயானால்,

௰௩ அப்பொழுது ஆசாரியன் பார்த்து, இதோ, குஷ்டம் அவன் மாம்சத்தையெல்லாம் மூடியிருந்தால் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன். எல்லாம் வெண்மையாயிற்று. அவன் சுத்தமானவன்.

௰௪ ஆனாலும் பச்சைச்சதையவனில் காணப்படுமன்றைக்கு அவன் தீட்டுள்ளவன்.

௰௫ ஆகையால் ஆசாரியன் பச்சைச்சதையைக் காணும்பொழுது அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக. பச்சைச்சதை தீட்டுள்ளது. அது குஷ்டம்.

௰௬ அல்லவென்று பச்சைச்சதை மறுபடியும் வெண்மையாய்ப்போனால் அவன் ஆசாரியனண்டை வருவானாக.

௰௭ ஆசாரியன் அவனைப்பார்க்கக்கடவன். இதோ, வாதையினிடம் வெண்மையாகமாறினால் ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அவன் சுத்தமுள்ளவன்.

௰௮ மாம்சத்தின் தோலிலே எரிபந்தம் உண்டாயிருந்து ஆறிப்போய்,

௰௯ பிறபாடு அவ்விடத்திலே ஒரு வெள்ளை வீக்கம் அல்லது சிவப்புகலந்த வெள்ளைமறுவுண்டானால் ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படவேண்டும்.

௨௰ ஆசாரியன் அதைப்பார்க்கக்கடவன். இதோ, அவ்விடம் மாம்சத்தோலைப்பார்க்கிலும் தாழ்ந்ததும் அதின் மயிர் வெண்மையாய் மாறினதுமாயிருந்தால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக. அது எரிபந்தத்திலே எழும்பின குஷ்டம்.

௨௧ ஆசாரியன் அதைப்பார்க்கும்பொழுது இதோ, அதிலே வெள்ளைமயிரில்லாமலும் அது மாம்சத்தோலைப்பார்க்கிலும் தாழ்ந்திராமற் குறுகினதாயுமிருந்தால் ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்துவைக்கக்கடவன்.

௨௨ அது தோலிலே இடங்கொள்ளவே கொண்டால் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அது வாதைதான்.

௨௩ அந்த வெள்ளைமறு அதிகப்படாமல் தன்னிடத்திலே நின்றதேயானால் அது எரிபந்தத்தினுடைய வடுவாயிருக்கும். ஆகையால் ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௨௪ அல்லது ஒருவனுடைய மாம்சத்தின் தோலிலே நெருப்புப்பட்டதினாலே புண்டாகிக் குணமான இடத்திலே சிவப்பாகிய அல்லது வெண்மையாகிய மறுவுண்டானால்,

௨௫ ஆசாரியன் அதைப்பார்க்கக்கடவன். இதோ, அந்த மறுவிலே மயிர் வெண்மையாய் மாறி, அவ்விடம் மற்றத்தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிருந்தால் அது குஷ்டரோகம் [illegible]. அதினால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டரோகந்தான்.

௨௬ ஆசாரியன் அதைப்பார்க்கிறபோது, இதோ, மறுவிலே வெள்ளை மயிரில்லாமல், அது மற்றத்தோலைப் பார்க்கிலும் தாழ்ந்திராமல் சுருங்கியிருக்கிறதென்று கண்டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்து வைக்கக்கடவன்,

௨௭ ஏழாம்நாளில் அவனைப்பார்க்கக்கடவன். அது [illegible] தோலிலே [illegible] படர்ந்திருந்தால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அது குஷ்டரோகம்.

௨௮ [illegible] படராமல் சுருங்கியிருந்தால், அது [illegible] உண்டான தடிப்பு; ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது வெந்ததினால் உண்டான தழும்பு.

௨௯ புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் தலையிலாவது தாடியிலாவது ஒரு வியாதி உண்டானால்,

௩௰ ஆசாரியன் அதைப்பார்க்கக்கடவன். இதோ, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க்கிலும் பள்ளமாயும், அதிலே மயிர் பொன்னிறமாயும் சிறுத்துமிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அது தலையிலாவது தாடியிலாவது குஷ்டமாயிருக்கும்.

௩௧ ஆசாரியன் அதைப்பார்க்கிறபோது, இதோ, அவ்விடம் மற்றத்தோலைப் [illegible] பள்ளமாயிராவிட்டாலும், அதிலே கருமயிரில்லாமல் இருக்கக்கண்டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அடைத்து வைக்கக்கடவன்,

௩௨ ஏழாம்நாளிலே அதைப்பார்க்கக்கடவன். இதோ, அந்தச் சொறி படராமலும், அதிலே பொன்னிறமயிரில்லாமலும், அவ்விடம் மற்றத்தோலைப்பார்க்கப் பள்ளமில்லாமலும் இருந்தால்,

௩௩ அவன் [illegible] சிரைத்துக்கொள்ளக்கடவன்; [illegible] சிரைக்கலாகாது; ஆசாரியன் சொறிகாரனை மறுபடியும் ஏழுநாள் அடைத்து வைக்கக்கடவன்,

௩௪ ஏழாம்நாளிலே அந்த [illegible] அதைப்பார்க்கக்கடவன். இதோ, சொறி தோலிலே படராமலும், அவ்விடம் மற்றத்தோலைப்பார்க்கப் பள்ளமில்லாமலும் இருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அவன் தன் வஸ்திரங்களை வெளுத்துச் சுத்தமாயிருப்பான்.

௩௫ அவன் சுத்தமுள்ளவனென்று தீர்க்கப்பட்டபின்பு அந்தச் சொறி தோலிலே படர்ந்துகொள்ளவே கொண்டேயானால்,

௩௬ ஆசாரியன் அவனைப்பார்க்கக்கடவன். இதோ, சொறி தோலிலே படர்ந்துகொண்டிருந்தால், அப்பொழுது மயிர் பொன்னிறமோவென்று ஆசாரியன் விசாரிக்கவேண்டியதில்லை. அவன் தீட்டுள்ளவன்தானே.

௩௭ தன் பார்வைக்கு அந்தச் சொறி நின்று, அதிலே கறுப்புமயிர் முளைத்திருந்தால், சொறி குணமாயிற்று. அவன் சுத்தமாயிருக்கிறான். ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௩௮ ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரீக்காகிலும் அவர்களுடைய தேகத்தின் தோலிலே வெள்ளையான [illegible] உண்டானால்,

௩௯ ஆசாரியன் பார்க்கக்கடவன். இதோ, அவர்கள் மாம்சத்தோலிலே கருகின தேமல் வெளுப்பாகயிருந்தால், அது தோலிலே எழும்புகிற வெள்ளைத்தேமல்; அவன் சுத்தமுள்ளவன்.

௪௰ ஒருவனுடைய தலைமயிர் உதிர்ந்து அவன் மொட்டையனானால் அவன் சுத்தமாயிருக்கிறான்.

௪௧ அவனுடைய முன்னந்தலைமயிர் உதிர்ந்தால் அவன் அரைமொட்டையன். அவன் சுத்தமாயிருக்கிறான்.

௪௨ மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது சிவப்புக்கலந்த வெண்மையான புண்டாயிருந்தால், அது அதிலே எழும்புகிற குஷ்டம்.

௪௩ ஆசாரியன் அவனைப்பார்க்கக்கடவன். இதோ, அவனுடைய மொட்டைத்தலையிலாவது அரைமொட்டைத்தலையிலாவது மாம்சத்தினுடைய தோலின் குஷ்டத்தைப்போலே காணப்படுகிற சிவப்புக்கலந்த வெண்மையான வீக்கமிருந்தால்,

௪௪ அவன் குஷ்டரோகி; அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன். அவன் வாதை அவன் தலையிலேயிருக்கிறது.

௪௫ வாதையுண்டாயிருக்கிற குஷ்டரோகியின் வஸ்திரங்கள் கிழிந்தவைகளுமாயும் அவன் தலை [illegible]யுமாயிருக்கவும், அவன் தன் தாடியை மூடிக்கொண்டிருந்து, தீட்டுள்ளவன், தீட்டுள்ளவனென்று கூப்பிடவும் வேண்டியது.

௪௬ அந்த வாதை அவனிலிருக்கும் நாளெல்லாம் தீட்டாக எண்ணப்படுவானாக. அவன் தீட்டானவன். தனியே குடியிருப்பானாக. அவன் குடியிருப்பு பாளயத்துக்குப் புறம்பேயிருக்கக்கடவது.

௪௭ ஆட்டுமயிர் உல்லது பஞ்சுநூலிலே நெசவான ஒருவஸ்திரத்திலாகிலும்,

௪௮ பஞ்சுநூலும் அல்லது ஆட்டுமயிருமான பாவிலாகிலும் ஊடைநூலிலாகிலும் ஒருதோலிலாகிலுந் தோலான எந்தவித வேலையிலேனாகிலுங் குஷ்டத்தினுருப்புண்டாகி,

௪௯ வஸ்திரத்திலாகிலுந் தோலிலாகிலும் பாவிலாகிலும் ஊடைநூலிலாகிலுந் தோலான எந்தவித வேலையிலேனாகிலும் அது கொஞ்சம் பச்சை அல்லது சிவப்பாயிருந்தால் குஷ்டமாயிருக்கும். அது ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படக்கடவது.

௫௦ ஆசாரியன் அதைப்பார்த்து ஏழுநாள் அடைத்துவைத்து,

௫௧ ஏழாம் நாளிலே அதைப்பார்க்கக்கடவன். வஸ்திரத்திலேயாவது பாவிலேயாவது ஊடைநூலிலேயாவது தோலிலேயாவது தோலால் எந்தவிதமுமான செய்யப்பட்ட வேலையிலேயாவது அது அதிகப்பட்டிருந்தால் அது அரிக்கிற குஷ்டமாயிருக்குந் தீட்டாயிருக்கின்றது.

௫௨ அந்த உருப்பிருக்கிற ஆட்டுமயிரும் அல்லது பஞ்சுநூலுமான வஸ்திரத்தையும் அல்லது பாவையும் அல்லது ஊடைநூலையும் அல்லது தோலான எந்தவிதமுமான பணிமுட்டையுஞ் சுட்டெரிக்கக்கடவன். ஏனெனில் அது அரிக்கிற குஷ்டம். அக்கினியாலே சுட்டெரிக்கப்படுவதாக.

௫௩ அல்லால் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் ஊடைநூலிலாகிலுந் தோலான எந்தவிதமுமான பணிமுட்டிலேனாகிலும் இதோ, அந்த உருப்பு அதிலே அதிகப்படவில்லையென்று ஆசாரியன் கண்டால்,

௫௪ அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச்சொல்லி இரண்டாம்முறை யேழுநாள் அடைத்துவைத்து,

௫௫ அது கழுவப்பட்டபின்பு அதைப்பார்க்கக்கடவன். இதோ, அந்த உருப்பு அதிகப்படாதிருந்தாலும் மாறாதாயிருந்தால் தீட்டாயிருக்கும். அக்கினியாலே அதைச் சுட்டெரிக்கவேண்டும். அது அதின் உட்புறத்திலாகிலும் வெளிப்புறத்திலாகிலும் உருவ அரிக்கிறதாயிருக்கின்றது.

௫௬ கழுவப்பட்டபின்பு இதோ, அது குறைந்ததென்று ஆசாரியன் கண்டானேயானால் அதை வஸ்திரத்திலே அல்லது தோலிலே அல்லது பாவிலே அல்லது ஊடைநூலிலே யிராதபடிக்குக் கிழித்துப்போடவேண்டும்.

௫௭ அது இன்னம் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் ஊடைநூலிலாகிலுந் தோலையான எந்தவிதமுமான பணிமுட்டிலேனாகிலுங் காணப்பட்டதேயானால் அது துளிர்க்கிறதாயிருக்கும். ஆகையால் அதை அக்கினியாலே சுட்டெரிக்கவேண்டும்.

௫௮ வஸ்திரமும் அல்லது பாவும் அல்லது ஊடைநூலும் அல்லது எந்தவிதத் தோற்பணிமுட்டேனுங் கழுவப்பட்டபின்பு அதிலிருந்து அது விட்டுப்போயிருந்தால் அது இரண்டாம்முறை கழுவப்பட்டு அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

௫௯ ஆட்டுமயிர் அல்லது பஞ்சுநூலுள்ள வஸ்திரத்தையாகிலும் பாவையாகிலும் ஊடைநூலையாகிலும் எந்தவிதத் தோற்பணிமுட்டையேனாகிலுஞ் சுத்தமாக்குகிறதற்கும் அல்லது தீட்டாகத் தீர்க்கிறதற்கும் அதினுடைய குஷ்டவாதைக்கடுத்த நியாயப்பிரமாணம் இதுவே.

௰௪. அதிகாரம்.

[illegible] குஷ்டத்துக்கும் அதின் சுத்திகரிப்புக்கும் அடுத்த நியாயப்பிரமாணம்.

பின்னும் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் நாளிலே அவனுக்கடுத்த நியாயப்பிரமாணமென்னவெனில், * அவன் ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரப்பட ஆசாரியன் பாளயத்துக்குப் புறம்பே போகவேண்டும்.

* மத். ௮. ௪.

௩ இதோ, குஷ்டரோகியின் குஷ்டவாதை குணமாயிற்றென்று ஆசாரியன் கண்டால்,

௪ அவன் சுத்திகரிக்கப்படப் போகிறவனுக்காகச் சுத்தமாயிருக்கிற உயிருள்ள இரண்டு குருவிகளையும் ஒரு கேதுருக்கட்டையையுஞ் சிவப்புநூலையும் ஈசோப்பையும் வாங்கக் கற்பிப்பானாக.

௫ பின்பு ஆசாரியன் அந்தக்குருவிகளிலொன்றை யொரு மண்பாண்டத்துக்குள்ள சுர்ப்புத்தண்ணீர்மேற் கழுத்தையறுக்கச்சொல்லி,

௬ உயிருள்ள குருவியையுங் கேதுருக்கட்டையையுஞ் சிவப்புநூலையும் ஈசோப்பையும் எடுத்துக்கொண்டு இவைகளையும் உயிருள்ள குருவியையுஞ் சுர்ப்புத்தண்ணீரின்மேற் கழுத்தறுக்கப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து,

௭ குஷ்டமறச் சுத்திகரிக்கப்படப்போகிறவன்மேல் ஏழுதரந் தெளித்து அவனைச் சுத்தமென்று உயிருள்ள குருவியை வெளிவிசாலத்திலே விட்டுவிடக்கடவன்.

௮ சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தன் மயிரையெல்லாஞ் சிரைத்து ஸ்நானஞ்செய்து சுத்தமாகும். பிறகு பாளயத்துக்குட்பிரவேசித்துத் தன் கூடாரத்துக்குப் புறம்பே ஏழுநாள் தங்கி,

௯ ஏழாம் நாளிலே தன் தலையையுந் தாடியையும் புருவங்களையுந் தன்னுடைய எல்லா மயிரையுஞ் சிரைத்துத் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரிலே முழுகிச் சுத்தமாயிருப்பானாக.

௰ எட்டாம் நாளிலே அவன் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் ஒருவயதான பழுதற்ற ஒரு பெண்ணாட்டுக்குட்டியையும் ஒருமரக்காலிலே பத்தில் மூன்று பங்கான எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும் ஒரு ஆழாக்கு எண்ணெயையுங் கொண்டுவரக்கடவன்.

௧௧ சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிறவனையும் அவைகளையுங் கர்த்தருக்குமுன்பாக ஆசரிப்புக்கூடாரவாசலில் நிறுத்தக்கடவன்.

௧௨ பின்பு ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து அதையும் அந்த ஆழாக்கு எண்ணெயையுங் குற்றம்போக்கும் பலியாகச் செலுத்தி அவைகளைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டுங் காணிக்கையாக அசைவாட்டி,

௧௩ பாவம்போக்கும் பலியும் சர்வாங்க தகனபலியும் இடப்படுகிற பரிசுத்த ஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டியை அடிக்கக்கடவன்; பாவம்போக்கும் பலியைப்போலக் குற்றம்போக்கும் பலியும் ஆசாரியனுடையது. அது மகா பரிசுத்தம்.

௧௪ குற்றம்போக்கும் அந்தப் பலியின் இரத்தத்திலே ஆசாரியன் கொஞ்சம் எடுத்துச் சுத்திகரிக்கப்படுகிறவனுடைய வலதுகாதின் மடலிலும் அவனுடைய வலதுகையின் பெருவிரலின்மேலும் வலதுகாலின் பெருவிரலின்மேலும் பூசக்கடவன்.

௧௫ பின்பு ஆசாரியன் அந்த ஆழாக்கு எண்ணெயிலே கொஞ்சந் தன்னிடதுகையிலே வார்த்து,

௧௬ அதிலே தன் வலதுவிரலைத் தோய்த்துத் தன் விரலால் ஏழுதரம் அந்த எண்ணெயிலே கொஞ்சங் கர்த்தருக்குமுன்பாகத் தெளிக்கக்கடவன்.

௧௭ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை எண்ணெயிலே கொஞ்சஞ் சுத்திகரிக்கப்படுகிறவனுடைய வலதுகாதின் மடலிலும் அவனுடைய வலதுகையின் பெருவிரலின்மேலும் வலதுகாலின் பெருவிரலின்மேலும் பூசியிருக்கிற குற்றம்போக்கும் பலியினுடைய இரத்தத்தின்மேல் பூசி,

௧௮ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன் தலையின்மேல் விட்டுக் கர்த்தருக்குமுன்பாக அவனுக்காகப் பாவநிவர்த்தியையுண்டாக்கி,

௧௯ பாவம்போக்கும் பலியையுஞ் செலுத்திச் சுத்திகரிக்கப்படுகிறவனுக்காக அவனுடைய அசுத்தத்தினிமித்தம் பாவநிவர்த்தியையுண்டாக்கிப் பின்பு சர்வாங்கதகனபலியைக் கொல்லவேண்டும்.

௨௦ அதையும் போஜனகாணிக்கையையும் பலிபீடத்தின்மேல் செலுத்தி, அவனுக்காகப் பாவநிவர்த்தியையுண்டாக்கக்கடவன். அப்பொழுது சுத்தமாயிருப்பான்.

௨௧ அவன் தரித்திரனும் அம்மாத்திரம் அவகாசம் அற்றவனுமானால் அவன் தன் பாவநிவர்த்திக்கென்று குற்றம்போக்கும் பலியாகவும் அசைவாட்டுங் காணிக்கையாகவும் ஒரு ஆட்டுக்குட்டியையும் ஒருமரக்காலிலே பத்தில் ஒரு பங்கான எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும் ஒரு ஆழாக்கு எண்ணெயையும்,

௨௨ தன் அவகாசத்துக்குத் தக்கதாக இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும் ஒன்று பாவம்போக்கும் பலியும் மற்றது சர்வாங்கத்தகனபலியுமாகும்படி கொண்டுவந்து,

௨௩ தன் சுத்திகரிப்பின் எட்டாம் நாளிலே ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்கு முன்பாக ஆசாரியனண்டைக்குக் கொண்டுவருவானாக.

௨௪ அப்பொழுது ஆசாரியன் குற்றம்போக்கும் ஆட்டுக்குட்டியையும் அந்த ஆழாக்கு எண்ணெயையும் வாங்கிக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டுங் காணிக்கையாக அசைவாட்டி,

௨௫ குற்றம்போக்கும் ஆட்டுக்குட்டியின் தலையை அறுத்து அந்த இரத்தத்திலே கொஞ்சம் எடுத்துச் சுத்திகரிக்கப்படுகிறவனுடைய வலதுகாதின் மடலிலும் அவனுடைய வலதுகையின் பெருவிரலின்மேலும் வலதுகாலின் பெருவிரலின்மேலும் பூசி,

௨௬ அந்த எண்ணெயிலே கொஞ்சந் தன்னிடதுகையிலே வார்த்து,

௨௭ இடதுகையிலிருக்கிற எண்ணெயிலே தன் வலதுவிரலாலே கொஞ்சங் கர்த்தருக்கு முன்பாக ஏழுதரந் தெளித்து,

௨௮ தன் உள்ளங்கையிலிருக்கிற எண்ணெயிலே கொஞ்சஞ் சுத்திகரிக்கப்படுகிறவனுடைய வலதுகாதின் மடலிலும் அவனுடைய வலதுகையின் பெருவிரலின்மேலும் வலதுகாலின் பெருவிரலின்மேலுங் குற்றம்போக்கும் பலியின் இரத்தம் பூசியிருக்கிற இடத்திலே பூசி,

௨௯ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவனுடைய தலையின்மேல் அவனுக்காகக் கர்த்தருக்கு முன்பாகப் பாவநிவர்த்தியையுண்டாக்கும்படிக்குத் தடவி,

௩௦ பிற்பாடு அவன் தன் அவகாசத்துக்குத் தக்கதாகக் கொண்டுவந்தவைகளான காட்டுப்புறாக்களானாலுஞ் சரி புறாக்குஞ்சுகளானாலுஞ் சரி.

௩௧ அவைகளிலொன்றைப் பாவம்போக்கும் பலியும் மற்றதைச் சர்வாங்கத்தகனபலியுமாக்கக் காணிக்கையோடேகூடச் செலுத்தி இப்படியே ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிறவனிமித்தங் கர்த்தருக்குமுன்பாகப் பாவநிவர்த்தியையுண்டாக்கக்கடவன்.

௩௨ இதுதான் சுத்திகரிப்புக்கு வேண்டியதைப் பெறக் கூடாதிருக்கிற குஷ்டவியாதியுள்ளவனின் நியாயப்பிரமாணமென்றார்.

௩௩ பின்னும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது.

௩௪ நான் உங்களுக்குக் காணியாட்சியாகக் கொடுக்கிற கானானென்னுந் தேசத்திலே நீங்கள் வந்த பின்பு நான் உங்கள் காணியாட்சியான தேசத்திலொரு வீட்டின்மேல் குஷ்டவியாதியை வரப்பண்ணினால்,

௩௫ அப்பொழுது அந்த வீட்டிற்குடையவன் வந்து வீட்டிலே வியாதியைப்போலிருக்கிறதாக எனக்குக் காணப்படுகிறதென்று ஆசாரியனுக்கு அறிவிக்கக்கடவன்.

௩௬ அப்பொழுது வீட்டிலிருக்கிற யாவுந் தீட்டாகாதபடிக்கு ஆசாரியன் அந்த வியாதியைப் பார்க்க வருமுன்னே வீட்டையொழித்துவைக்கச் சொல்லிப் பிற்பாடு வீட்டைப் பார்க்க வந்து,

௩௭ அந்த வியாதியிருக்கிற இடத்தைப் பார்க்கக்கடவன். இதோ, வீட்டின் சுவர்களிலே கொஞ்சம் பச்சையும் சிவப்புமான குழிகளிருந்து, அவைகளின் ரூபஞ் சுவரைப் பார்க்கப் பள்ளமாயிருந்தால்,

௩௮ ஆசாரியன் வீட்டிலிருந்து வாசற்படியிலே புறப்பட்டு வீட்டை ஏழுநாள் அடைத்துவைத்து,

௩௯ ஏழாம் நாளிலே திரும்ப வந்து இதோ வாதை வீட்டின் சுவர்களிலே பரம்பியிருக்கக் கண்டால்,

௪௦ அவன் அவ்வியாதியிருக்கிற கற்களைப் பேர்க்கவும் பட்டணத்துக்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே எறிந்துபோடவும் கற்பித்து,

௪௧ வீட்டை உள்ளே சுற்றிலுஞ் சுரண்டவும் சுரண்டிப்போட்ட மண்ணைப் பட்டணத்துக்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே கொட்டவும்,

௪௨ வேறே கற்களையெடுத்து அந்தக் கற்களுக்குப் பதிலாகக் கட்டி வேறே மண்ணையெடுத்து வீட்டைப் பூசவுஞ் சொல்லுவானாக.

௪௩ கற்களைப் பேர்த்து வீட்டைச் சீவி நவமாய்ப் பூசின பிற்பாடு அந்த வாதை திரும்ப வீட்டிலே எழும்பினால்,

௪௪ ஆசாரியன் வந்து பார்க்கக்கடவன். இதோ, வாதை வீட்டிலே பரம்பியிருந்தால் அது வீட்டிலே அரிக்கிற குஷ்டமானது. தீட்டாயிருக்கின்றது.

௪௫ ஆகையால் வீட்டையெல்லாம் அதின் கற்களையும் மரங்களையும் அதின் மண்ணையும் இடித்துப் பட்டணத்துக்குப் புறம்பே தீட்டான ஸ்தலத்திலே கொண்டுபோக வேணும்.

௪௬ வீடு அடைக்கப்பட்ட நாளெல்லாம் அதற்குட் பிரவேசிக்கிறவன் சாயங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான்.

௪௭ வீட்டிலே படுத்துக்கொண்டவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன். வீட்டிலே சாப்பிட்டவனுந் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்.

௪௮ ஆசாரியன் திரும்ப வந்து இதோ வீடு பூசப்பட்டபின்பு வீட்டிலே வாதை பரம்பிக்கொண்டதில்லையென்று கண்டானேயானால் அவன் அந்த வீட்டைச் சுத்தமென்று தீர்க்கக்கடவன். ஏனெனில் வாதை நிவர்த்தியாயிற்று,

௪௯ அப்பொழுது வீட்டின் பாவத்தைப் போக்க இரண்டு குருவிகளையுங் கேதுருக்கட்டையையும் இரத்தவர்ண நூலையும் ஈசோப்பையும் எடுத்து,

௫௦ ஒரு குருவியை ஓடுகிற தண்ணீர்மேல் ஒரு மண்பாண்டத்துக்குள்ளே கொன்று,

௫௧ கேதுருக்கட்டையையும் ஈசோப்பையும் இரத்தவர்ண நூலையும் உயிருள்ள குருவியையும் எடுத்து கொல்லப்பட்ட குருவியின் இரத்தத்திலும் ஓடுகிற தண்ணீரிலும் நனைத்து வீட்டின்மேல் ஏழுதரந் தெளித்து,

௫௨ குருவியினுடைய இரத்தத்தினாலும் உயிருள்ள குருவியினாலும் ஓடுகிற தண்ணீரினாலும் கேதுருக்கட்டையினாலும் ஈசோப்பினாலும் இரத்தவர்ண நூலினாலும் வீட்டின் பாவத்தைப் போக்கி,

௫௩ உயிருள்ள குருவியைப் பட்டணத்துக்கு வெளியே வெளியிலே விட்டு இப்படியே வீட்டைச் சுத்தம்பண்ணக்கடவன். அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

௫௪ இது சகலவித குஷ்டவாதைக்கும் சொறிக்கும்,

௫௫ வஸ்திரத்தின் குஷ்டத்துக்கும் வீட்டின் குஷ்டத்துக்கும்,

௫௬ வீக்கத்துக்கும் சொறிக்கும் வெள்ளைப்படருக்கும் உரிய நியாயப்பிரமாணம்.

௫௭ எப்பொழுது தீட்டென்றும் எப்பொழுது சுத்தமென்றும் அறிவிக்கும்படிக்கு குஷ்டத்துக்கடுத்த நியாயப்பிரமாணமென்றார்.

௰௫. அதிகாரம்.

பிரமியத்தினாலும் [illegible] தீட்டுகளைக்குறித்த நியாயப்பிரமாணங்கள்.

பின்னும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் [illegible]

௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது [illegible]

ஊறலாயிருந்திலே பிரமியமுண்டானால் அவன் தன் பிரமியத்தினாலே தீட்டானவன்.

௩ அவனுடைய மாமிசத்திலே பிரமியம் ஊறினாலும் அவன் மாமிசம் பிரமியம் அடைபட்டிருந்தாலும் அது அவனிலே தீட்டாயிருக்கும்.

௪ பிரமியக்காரன் படுக்கிற படுக்கையெல்லாந் தீட்டாம். அவன் எதின்மேல உட்காருகிறானோ அதுவெல்லாந் தீட்டாம்.

௫ அவன் படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரில் முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௬ பிரமியக்காரன் உட்கார்ந்ததின்மேல் உட்காருகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரில் முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௭ அவன் மாமிசத்தைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரிலே முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௮ அவன் சுத்தமாயிருக்கிற ஒருவன் மேல் துப்பினால் இவன் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரிலே முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௯ அவன் எதின்மேலேறிப்போகிறானோ அதுவெல்லாந் தீட்டாம்.

௰ அவன் கீழிருந்த ஏதையாகிலுந் தொடுகிறவனெவனுஞ் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான். அதையெடுத்துச் சுமக்கிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரிலே முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௰௧ அவன் தன் கைகளைத் தண்ணீரிலே கழுவிக்கொள்ளாமல் எவனையாகிலுந் தொட்டால் அவன் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரில் முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௰௨ அவன் தொட்டிருக்கிற மண்பாண்டம் உடைக்கப்படவும் மரப்பாண்டமெல்லாந் தண்ணீரில் அலசப்படவுங்கடவது.

௰௩ அவன் தன் பிரமியம் நீங்கிச் சுத்தமானால் அவன் தன் சுத்திகரிப்புக்கென்று ஏழு நாளெண்ணிக்கொண்டு தன் வஸ்திரங்களை வெளுத்துத் தன் மாமிசத்தைச் சுர்ப்புத்த தண்ணீரிலே கழுவக்கடவன். அப்பொழுது அவன் சுத்தமாயிருக்கிறான்.

௰௪ எட்டாம் நாளிலோவெனில் அவன் இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவன்.

௰௫ ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவநிவாரணப்பலியும் மற்றதைச் சர்வாங்க தகனபலியுமாகச் செலுத்தி அவனுக்காகக் கர்த்தருடைய சந்நிதியிலே அவன் பிரமியத்தினிமித்தம் பாவ நிவர்த்தியை யுண்டாக்கக்கடவன்.

௰௬ இந்திரியம் ஒருவனிலிருந்து கழிந்ததுண்டானால் அவன் தன் மாம்சத்தை யெல்லாந் தண்ணீரிலே கழுவிச் சாயுங்காலமட்டுந் தீட்டாயிருப்பானாக.

௰௭ கழிந்த இந்திரியம்பட்ட சகல வஸ்திரமுஞ் சகல தோலுந் தண்ணீரிலே கழுவப்பட்டுச் சாயுங்காலமட்டுந் தீட்டாயிருப்பதாக.

௰௮ இந்திரியங் கழிந்தவனோடே பெண் சாதி படுத்துக்கொண்டிருந்தால் இருவருந் தண்ணீரிலே முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டாயிருப்பார்களாக.

௰௯ தன் மாம்சத்திலே உதிரம் ஓடுகிற ஸ்திரீ ஏழுநாள் தன் விலக்கத்திலிருக்கக்கடவள். அவளைத் தொடுகிறவனெல்லாருஞ் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௰ அவள் விலக்கயிருக்கையில எதின்மேற் படுத்துக்கொள்ளுகிறாளோ எதின்மேல உட்காருகிறாளோ அதுவெல்லாந் தீட்டாம்.

௨௧ அவள் படுக்கையைத் தொடுகிறவனெல்லாருந் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரிலமுழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௨ அவள் உட்கார்ந்த யாதொரு மணையைத் தொடுகிறவனெல்லாருந் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரில் முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௩ அவள் படுக்கையின்மேலும் அல்லது அவள் உட்கார்ந்த மணையின்மேலுமிருந்த ஏதையாகிலுந் தொட்டவன் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௪ ஒருவன் அவளோடேபடுக்கவேபடுத்துக்கொண்டதும் அவள் தீட்டும் அவன் மேலேபட்டதுமுண்டானால் அவன் ஏழுநாள் தீட்டாயிருப்பான். அவன் படுக்கிற படுக்கையுமெல்லாந் தீட்டுப்படும்.

௨௫ ஒரு ஸ்திரீ விலக்கயிருக்குங் காலமல்லாமல் அவளுடைய உதிரம் அநேகம் நாள் ஓடிவே ஓடி அல்லது அந்தக்காலத்துக்கு மிஞ்சி ஓடினால் அவள் அது ஓடுகிற நாளெல்லாந் தன் விலக்கத்தின் நாட்களைப்போலே தீட்டாயிருப்பாள்.

௨௬ அந்தச் சகல நாளும் அவள் படுக்கிற படுக்கையெல்லாம் அவளுக்கு அவள் விலக்கத்தின் படுக்கைக்குச் சரியாயிருப்பதாக. அவள் எதின்மேலுட்காருகிறாளோ அது அவளுடைய விலக்கத்தின் தீட்டைப்போலே தீட்டாயிருக்கும்.

௨௭ அப்படிக்கொத்தவைகளைத் தொடுகிறவனெல்லாருந் தன் வஸ்திரங்களை வெளுத்துத் தண்ணீரில் முழுகிச் சாயுங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பானாக.

௨௮ அவள் தன் உதிரமறாகந்தமாறினால் அவள் ஏழுநாளெண்ணிக் கொள்வாளாக. பிற்பாடு சுத்தமாயிருப்பாள்.

௨௯ எட்டாம் நாளிலே அவள் இரண்டு காட்டுப்புறாக்களையாகிலும் இரண்டு புறாக்குஞ்சுகளையாகிலும் ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரக்கடவள்.

௩௰ ஆசாரியன் அவைகளிலே ஒன்றைப் பாவம்போக்கும் பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாகச் செலுத்தி அவளுக்காகக் கர்த்தரின் சந்நிதியிலே அவளுடைய உதிரப்பெருக்கினிமித்தம் பாவநிவர்த்தியையுண்டாக்கக்கடவன்.

௩௧ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நடுவேயிருக்கிற என்னுடைய வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தித் தங்கள் தீட்டுகளால் சாகாதபடிக்கு இப்படி நீங்கள் அவர்களைத் தீட்டுக்கு விலக்கிவைக்கவேண்டும்.

௩௨ இது பிரமியக்காரனுக்கும் இந்திரியஸ்கலிதமானதினாலே தீட்டானவனுக்கும்,

௩௩ தன் விலக்கத்திலே பலவீனப்பட்டவளுக்கும் மாம்சம் உருகியிருக்கிற ஆண்சாதிக்கும் பெண்சாதிக்கும் தீட்டாயிருக்கிறவளோடே படுத்துக் கொண்டவனுக்கும் செல்லும் நியாயப்பிரமாணமென்று சொல்லுங்களென்றார்.

௰௬. அதிகாரம்.

வருஷத்திலொருமுறை ஜனங்களுக்காகவும் பாவநிவர்த்தியையுண்டாக்கும் பரிசுத்தநாளின் கட்டளை.

ஆரோனின் இரண்டு குமாரர் * கர்த்தரின் சந்நிதியிலே சேருகையிற் செத்துப்போனபிற்பாடு கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது. * ௰, ௧. ௨.

௨ உன் சகோதரனாகிய ஆரோன் சாகாதபடிக்கு பரிசுத்த ஸ்தலத்திலே திரைக்கு உட்புறத்திலிருக்கிற பெட்டியின்மேலுள்ள கிருபாசனமான மூடிக்கு முன்பாக எக்காலத்திலேயும் வரவேண்டாமென்று அவனுக்குச் சொல்லு; ஏனெனில் கிருபாசனமான மூடியின்மேல் மேகத்திலே காணப்படுவோம்.

௩ ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குட் பிரவேசிக்கப்போறால் ஒரு காளையெருதைப் பாவம்போக்கும் பலியாகவும் ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்க தகனபலியாகவுங் கொண்டு பிரவேசிக்கவேண்டும்.

௪ அவன் பரிசுத்தமான பஞ்சுநூல் சட்டையைத் தரித்துத் தன் மாம்சத்தின்மேலே பஞ்சுநூல் கால்சட்டையைப் போட்டுப் பஞ்சுநூல் இடைக்கட்டைக் கட்டிப் பஞ்சுநூல் பாகையைப் போட்டுக்கொண்டிருக்கவேண்டும். இவைகள் பரிசுத்தமான வஸ்திரங்கள். அவன் தன் மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி அவைகளை உடுத்திக்கொண்டு,

௫ இஸ்ரவேல் புத்திரருடைய சபையின் கையிலே பாவம்போக்கும் பலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுஞ் சர்வாங்க தகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கி.

௬ பிற்பாடு தனக்காகவுந் தன் வீட்டாருக்காகவும் பாவநிவர்த்தியை யுண்டாக்கும்படிக்குத் தன்னுடைய பாவம்போக்குதலின் காளையெருதைச் சேர்ப்பானாகி,

௭ அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையுங் கொண்டுவந்து ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்கு முன்பாக நிறுத்தி,

௮ அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாய்களின்பேரிலே ஒருசீட்டைக் கர்த்தருக்கென்றும் பின்னொரு சீட்டைப் போகவிடப்படும் வெள்ளாட்டுக்கடாய்க்கென்றும் போட்டு,

௯ கர்த்தருக்கென்று சீட்டுவிழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவம்போக்கும் பலியாகக் குறித்துச் சேர்ப்பானாகி,

௰ போகவிடப்படச் சீட்டுவிழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் போக்கினாலே அதினால் பாவநிவர்த்தியையுண்டாக்க அதை வனாந்தரத்திலே போகவிடுகிறதுக்குக் கர்த்தருக்கு முன்பாக உயிரோடே நிறுத்தி,

௰௧ பிற்பாடு தனக்காகவுந் தன் வீட்டாருக்காகவும் பாவநிவர்த்தியையுண்டாக்குகிறதுக்குத் தன்னுடைய பாவம்போக்குதலின் காளையெருதைச் சேர்ப்பானாகி அதைக் கொல்வானாயாகி,

௰௨ கர்த்தருக்கு முன்பாகப் பலிபீடத்தின்மேலிருக்கிற தணலினாற் கலசத்தை நிரப்பிப் பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே கைப்பிடி நிறைய எடுத்துத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து,

௰௩ அப்பொழுது தான் சாகாதபடிக்குச் சாட்சியின்மேலிருக்கிற கிருபாசனமான மூடியைத் தூபவர்க்கப் புகை மூடத்தக்கதாகத் தூபவர்க்கத்தைக் கர்த்தருக்கு முன்பாக அக்கினியின்மேலே போட்டு,

௰௪ பிற்பாடு காளையெருதின் இரத்தத்திலே கொஞ்சமெடுத்துக் கிழக்குப்புறமாகத் தன் விரலினாலே கிருபாசனமான மூடியின்மேலே தெளித்து ஏழுதரந் தன் விரலினாலே அந்த இரத்தத்திலே கொஞ்சங் கிருபாசனமான மூடிக்கு முன்பாகவுந் தெளிப்பானாக.

௰௫ பிற்பாடு ஜனத்தினுடைய பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவைக் கொல்வானாகி அதின் இரத்தத்தைத் திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து தான் காளையெருதின் இரத்தத்தாலே செய்ததுபோல அதின் இரத்தத்தாலுஞ் செய்து அதைக் கிருபாசனமான மூடியின்மேலும் அதற்கு முன்பாகவுந் தெளித்து,

௰௬ இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகளி நிமித்தமும் அவர்களுடைய எல்லாப் பாவ

[illegible]

௨௫ பாவமபோக்கும பலியின கொழுப்பைப் பலிபீடத்தினமேல ... தகனிக்கக்கடவன.

௨௬ போகவிடப்படும வெள்ளாட்டுக்கடாவைக்கொண்டுபோய்விட்டவன தன வஸ்திரங்களைத்தோயத்து, தண்ணீரிலே ஸ்நானம்பண்ணி ... பாளயத்துக்குள் வரக்கடவன.

௨௭ ... பரிசுத்த ஸ்தலத்திலே ... கொண்டுபோகப்பட்ட பாவமபோக்கும காளையையும பாவமபோக்கும வெள்ளாட்டுக்கடாவையும பாளயத்துக்குப் புறமபே கொண்டுபோய் அவைகளின தோலகளையும மாமசத்தையும சாணியையும அக்கினியிலே சுட்டெரிக்கக்கடவர்கள.

௨௮ அவைகளைச் சுட்டெரித்தவன தன வஸ்திரங்களைத் தோயத்து, தண்ணீரிலே ஸ்நானமபண்ணி, பிற்பாடு பாளயத்துக்குள் வருவானாக.

௨௯ ... உங்களுக்கு ... நித்திய கட்டளையாயிருக்கக்கடவது.

௩௰ ... உங்களை சுத்திகரிக்கும்படிக்கு அந்நாளிலே உங்களுக்காக பாவநிவாரணஞ் செய்யப்படும். ... உங்களுடைய எல்லாப் பாவங்களுக்கும் நீங்கி சுத்திகரிக்கப்படுவீர்கள.

௩௧ உங்களுக்கு ... ஓய்வுநாள. ... நித்திய கட்டளை.

௩௨ அபிஷேகம்பண்ணப்பட்டவனும் ... ஆசாரிய ஊழியஞ்செய்யப் பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாகிய ஆசாரியன ... பாவநிவாரணஞ்செய்யக்கடவன. அவன ... பரிசுத்த வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு,

௩௩ பரிசுத்த ஸ்தலத்துக்கும ... ஆசரிப்புக்கூடாரத்துக்கும ... பலிபீடத்துக்கும பாவநிவாரணஞ் செய்து ஆசாரியருக்காகவும சபையின எல்லா ஜனத்துக்காகவும பாவநிவாரணஞ் செய்யக்கடவன.

௩௪ இப்படி வருஷத்திலே ஒருமுறை இஸ்ரவேல புத்திரருக்காக அவர்களுடைய எல்லாப்பாவங்களுக்கும நிவாரணஞ்செய்யப்படுவது உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது என்றார். கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவன செய்தான.

௰௭. அதிகாரம்.

ஆசரிப்புக்கூடாரந்தவிர வேறேயிடங்களி லேபலியிடவேண்டாமென்பது.

பின்னையுங்கர்த்தர்மோசேயோடேபே சிச்சொன்னதாவது.

௨ நீ ஆரோனோடும் அவன்குமாரரோடு ம இஸ்ரவேலபுத்திரர் அனைவரோடும்பேசி அவர்களுக்குச்சொல்லவேண்டியது. கர்த் தர்கற்பித்தவார்த்தையென்னவெனில,

௩ இஸ்ரவேலவீட்டாரிலெவனாகிலுமமா ட்டையாகிலும ஆட்டையாகிலும வெள் ளாட்டையெனகிலும ஆசரிப்புக்கூடாரவா சலென்ற கர்த்தரின்வாசஸ்தலத்திற்குமுன பாகக் கர்த்தருக்குச்செலுத்துமபடிக்குக கொண்டுவாராமல,

௪ அதைப்பாளயத்திலாகிலும பாளயத் திற்குப்புறமபேயாகிலுங கொலலவெயறுத் தால அது அந்தமனிதனுக்குப்பழியாக எ ண்ணப்படும. அவன இரத்தஞ்சிந்திப்போ ட்டான. அந்தமனிதன தன்சனத்திற்குள்ளி ராமல அறுப்புண்பான.

௫ ஆகையால இஸ்ரவேலபுத்திரர்வெளி யினவிசாலத்திலேபலியிடுகிற தங்கள்பலிக ளை ஆசரிப்புக்கூடாரவாசலில ஆசாரியன ண்டையிலே கர்த்தருக்குக்கொண்டுவந்து அங்கே அவருக்குச்சமாதானபலிகளாகச செலுத்தக்கடவர்கள.

௬ அங்கே ஆசாரியன இரத்தத்தையா சரிப்புக் கூடாரவாசலிலிருக்கிற கர்த்தரு டையபலிபீடத்தின்மேலே தெளித்துக்கொ ழுப்பைக்கர்த்தருக்கு ஏறுகிறவாசனையாக க்கொளுத்தக்கடவன.

௭ தாங்கள்சோரமார்க்கமாயப்பின்பற் றுகிறபேய்களுக்குத்தங்கள்பலிகளை இனிச செலுத்தார்களாக. இது அவர்கள்தலைமு றைகளில அவர்களுக்கு நித்தியகட்டளையா யிருக்கவும,

௮ ஆகையால, நீ அவர்களோடேசொ லலவேண்டியதேதெனில இஸ்ரவேல வீட் டாரிலும உங்கள்நடுவேதங்குகிறபரதேசி களிலும எவனாகிலுஞ்சர்வாங்கதகனமு தலானபலியைப்பலியிட்டு,

௯ அதையாசரிப்புக் கூடார வாசலிலே கர்த்தருக்குச்செலுத்துமபடிக்குக்கொண் டுவாராவிட்டால அவன தன்சனத்தாருக்கு ளிராமல அறுப்புண்பான.

இரத்தமபொசிக்கவுஞ் செத்த உடலையும பீறுண்டதையுமபொசிக்கவும வேண்டா மென்பது.

௰ இஸ்ரவேலவீட்டாரிலும உங்கள்நடு வேதங்குகிறபரதேசிகளிலும எவனாகிலும* இரத்தமென்னப்பட்டதைப்பொசித்தால இரத்தத்தைப்பொசித்த அந்த ஆத்துமா வுக்குவிரோதமாக நாம நமதுமுகத்தைத் திருப்பி அவனையவன்சனத்திற்குள்ளிராதப டிக்கு அறுப்போம. * ௩, ௰௭.

௰௧ ஏனெனில * மாம்சத்தின உயிர் இர த்தத்திலுள்ளது. நாம அதையுங்களுக்குப பலிபீடத்தின்மேல உங்களாத்துமங்களுக் காகப்பாவநிவர்த்தியையுண்டாக்குமபடி க்குக்கட்டளையிட்டோம. ஏனெனில அது ஆத்துமத்திற்காகப் பாவநிவர்த்தியையுண் டாக்குகிற இரத்தம * க. மோசே. ௯, ௪.

௰௨ அதினிமித்தம உங்களிலொருவனு ம இரத்தமபொசிக்கவேண்டாம. உங்கள் நடுவேதங்குகிறபரதேசியும இரத்தமபொ சிக்கவேண்டாமென்று இஸ்ரவேலபுத்திர ருக்குச்சொன்னோம.

௰௩ இஸ்ரவேலபுத்திரரிலும உங்கள்நடு வேதங்குகிறபரதேசிகளிலும எவனாகிலும பொசிக்கத்தக்க ஒருமிருகத்தைச் சுலலது ஒருபட்சியை வேட்டையாடிப்பிடித்தால அவன அதின இரத்தத்தைச்சிந்தப்பண் ணிமண்ணினாலமூடக்கடவன.

௰௪ ஏனெனிற்சகலமாம்சத்திற்குமஅத் தின்உயிராயிருக்கிறது அதின இரத்தம அதின் உயிருக்குச்சரி ஆகையால இஸ்ரவேலபுத்தி ரருக்கு எந்தமாமசத்தின இரத்தத்தையும பொசியீர்களாக. ஏனெனிற்சகலமாம்சத்தி ன உயிர் அதின இரத்தந்தானே. அதைப பொசிக்கிற எவனும அறுப்புண்பானெ னறோம.

௰௫ தேசத்திலே பிறந்தவர்களிலும பர தேசிகளிலுஞ்செத்த உடலையாவது பீறுண டதைப் பொசித்திருக்கிறவனெவனானாலும அவன் வஸ்திரங்களைவெளுத்துத்தண்ணீரிலமுழு கிச்சாயுங்காலமட்டுந்தீட்டாயிருப்பான். பி ற்பாடுசுத்தமாயிருப்பான.

௰௬ அவன தன்வஸ்திரங்களைவெளுக்கா மலுந்தனமாமசத்தைக்கழுவாமலும்போ னால தன அக்கிரமத்தைச் சுமப்பானென்று சொலலென்றார்.

௰௮. அதிகாரம்.

ஆறுங் கற்பனைக்கு விரோதமான பலவித பாவங்களைக்கண்டித்தது.

பின்னையுங்கர்த்தர்மோசேயோடே பே சிச்சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேலபுத்திரரோடேபேசி அ வர்களுக்குச்சொல்லவேண்டியதேதெனில நாமுங்கள்பராபரனாகியகர்த்தர்.

௩ நீங்களகுடியிருந்த எகிப்துதேசத் துடையசெய்கையின்படிச்செய்யாமலு ம நாம உங்களையழைத்துப்போகிற கானான் தேசத்திலுடைய செய்கையின்படிச்செய் யாமலும அவர்களுடைய முறைமைகளில நடவாமலும,

௪ நமது நியாயங்களின்படியேசெய்து நமதுகட்டளைகளையே அவைகளிலநடக்கு

டிகளுக்கைக்கொளளக்கடவீர்கள. நாமு ங்களுடையகர்த்தர்.

௫ ஆகையாலநமதகட்டளைகளையுமநம துநியாயங்களையுங்கைக்கொளளக்கடவீர்க ள. அவைகளின்படிச்செய்கிறமனிதன * அ வைகளாலேபிழைப்பான. நாமகர்த்தர்.

* எசேக. ௨௰, ௰௧.

௬ ஒருவனுந்தனக்குக்கிட்டினசரையா கிய ஒருத்தியுடைய நிருவாண தைததிறக்கிறதற்குச சேர்வேணடாம. நாமகர்த்தர்.

௭ உனதகப்பனுடைய நிருவாணததை யும உனதாயின நிருவாணததையுநதிறவா யாக. அவள உனதாயானவள. அவள நிருவா ணததைததிறவாயாக.

௮ உனதகப்பனுடைய பெணசாதியின நிருவாணததைததிறவாயாக. அது உனத கப்பனுடையநிருவாணம.

௯ உனதகப்பனுக்கு அலலது உனதா யுக்குமகளாகிய உனசகோதரியீ டுவீட்டிலிருந்தாலுமபுறததியிலே பிற நதிருந்தாலுஞ்சரி. அவளுடைய நிருவாண ததைததிறவாயாக.

௰ உனகுமாரனுடையமகளின நிருவாண ததையாகிலும உனகுமாரத்தியினுடைய மகள நிருவாணததையெனகிலுநதிறவா யாக. ஏனெனில அது உனனுடையநிருவா ணம.

௰௧ உனதகப்பனுக்கு அவனபெணசாதி யினிடத்திலேபிறநதகுமாரததியின நிருவா ணததைததிறவாயாக. அவளுனக்குசசகோ தரி.

௰௨ உனதகப்பனுடைய சகோதரியின நிருவாணததைததிறவாயாக. அவள உனத கப்பனுடையசதையானவள.

௰௩ உனதாயினுடையசகோதரியின நிரு வாணததைததிறவாயாக. ஏனெனில அவள உனதாயினசதையானவள.

௰௪ உனதகப்பனுடைய சகோதரனின நிருவாணததைததிறவாயாக. அவனபெண சாதியோடேசேராயாக. அவள உனக்குச சிறியதாய.

௰௫ உனமருமகளின நிருவாணததைததி றவாயாக. அவளஉனகுமாரனுக்குபபெண சாதி. அவளுடையநிருவாணததைததிறவா யாக.

௰௬ உனசகோதரனுடைய பெணசாதி யினநிருவாணததைததிறவாயாக அது உன சகோதரனுடையநிருவாணம.

௰௭ ஒருபெணசாதியோடேகூட அவள மகளினநிருவாணததையுநதிறவாயாக. அவ ளுடையகுமாரனினமகளையும அலலது அவ ளகுமாரத்தியினமகளையும இவளுடையநிரு வாணததைததிறக்கும்படிக்கு விவாகமப ணணாயாக. இப்படிக்கொததவர்கள அவ ளுடையசதையானவர்கள. அதுதோஷம.

௰௮ பெணசாதியுணடையிலே உயிரோ டேயிருக்கக்கொளளா அவளுக்கு உபததிர வமாக அவளசகோதரியினநிருவாணததை யுநதிறக்கிறதற்கு அவளைககூடவிவாகமப ணணாயாக.

௰௯ பெணசாதி தனவிலக்கததில் இருக்க க்கொளள அவளுடையநிருவாணததைத்தி றக்கும்படிக்கு அவளண்டைசேராயாக.

௨௰ நீ உனக்கடுத்தவனுடையபெணசா திக்கு உன அனுபோகததைககொடுக்கவு ம அவளால உனனைததீட்டாக்கவுமவேண டாம.

௨௧ நீ உனவிததிலஏதையாகிலுநதீயை க்கடக்கிறதற்குமோளேகுக்குக கொடுக்கி றதினால உனபாராபரனுடைய நாமததைப பரிசுததக்கொலைசசலாக்காயாக. நாமகர் த்தர்.

௨௨ ஸ்திரியின அனுபோகமாய ஆணோ டேசயனிக்காயாக. அது அருவருப்பானது.

௨௩ யாதொருமிருகததினிடததில நீ உ ன அனுபோகததைககொடுக்கவும அதனா ல உனனைததீட்டாக்கவுமவேணடாம. ஸ்தி ரீமிருகததினமுனநினறு அதைத தனமே லேறபபணணவுமவேணடாம. அது அருவ ருப்பானதாயுமாறு.

௨௪ இவைகளில ஒனறினாலும உங்களைத தீட்டாக்காதிருப்பீர்களாக. ஏனனறால நா ம உங்களுக்குமுனபாகததுரததுகிற சாதி கள இவைகளாலெல்லாந்தங்களைததீட்டா க்கினதினாலேதேசநதீட்டாயிறறு.

௨௫ ஆனதுகொணடுதேசநதனகுடிகளை கக்கிப்போடததக்கதாயாக அதினுடைய அக்கிரமததைவிசாரிக்கிறேம.

௨௬ ஏனெனில இநத அருவருப்புகளை யெல்லாம உங்களுக்குமுனனிருநத அநத த்தேசததினமனிதர்செயததினால தேசந தீட்டாயிறறு.

௨௭ இப்பொழுதும உங்களுக்குமுனனி ருநதசாதிகளைததேசங கக்கிப்போட்டது போலே அது உங்களையும நீங்கள அதைத தீட்டாக்குமபொழுது கக்கிப்போடாதப டிக்கு,

௨௮ நீங்கள நமமுடையகட்டளைகளையு ம நமமுடைய நியாயங்களையுங் கைக்கொ ணடுசுதேசததிலேபிறநதவனாகிலுஞசரி உங களநடுவேதங்குகிற பரதேசியானாலுஞ சரி இநத அருவருப்புகளிலொனறையுஞ செய யாதிருப்பீர்களாக.

௨௯ ஏனென்றால எவர்களாகிலும இந த எல்லா அருவருப்புகளிலுமயாதொனறை சசெயதாற்செயத அநத ஆதமாக்கள தங்களசனததிலிராதபடிக்கு அறுப்புணபா ர்கள.

௩௰ ஆகையால உங்களுக்குமுனநடநத அருவருப்பானமுறைமைகளிலயாதொனறி னபடியேநீங்களசெயது அவைகளாலதீட்

டாகாதபடிக்கு நம்முடைய கட்டளையைக் கைக்கொள்வீர்களாக. நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

௰௯. அதிகாரம்.

பரிசுத்தத்திற்குத் தகுமாகிறதும் அநேக பலவிதத்துக் கட்டளைகள்.

பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல் புத்திரரின் சபையாரோடு சொல்லவேண்டியதேதெனில் * பரிசுத்தவான்களாயிருக்கக்கடவீர்கள். ஏனெனில் உங்கள் பராபரனாகிய கர்த்தராகிய நாம் பரிசுத்தர். * ௩. மோ. ௰௧, ௪௪.

௩ நீங்கள் அவனவன் தன் தாயுக்குந் தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும் நம்முடைய ஓய்வுநாட்களைக் கைக்கொள்ளவுங்கடவீர்கள். நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௪ விக்கிரகங்களை நோக்காமலும் வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உங்களுக்கு உண்டாக்காமலுமிருப்பீர்களாக. நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௫ நீங்கள் சமாதானபலியைக் கர்த்தருக்குச் செலுத்துகிறபோது அதை உங்கள் மனப்பூர்வத்தினாலே செலுத்துவீர்களாக.

௬ நீங்கள் அதைச் செலுத்துகிற அந்த நாளிலும் மறுநாளிலும் அது புசிக்கப்படவும் மூன்றாம் நாள்மட்டும் மீதியானது அக்கினியிலே சுட்டெரிக்கப்படவுங்கடவது.

௭ மூன்றாம் நாளிலே அதில் ஏதையாகிலும் புசிக்கப்பட்டால் அது அருவருப்பாயிருக்கும் பிரியமாயிராது.

௮ அப்படிப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான். ஏனெனில் கர்த்தருக்குப் பரிசுத்தமானதைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினான். அந்த ஆத்துமா தன் ஜனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

௯ உங்கள் தேசத்தின் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கிறபோது உன் வயலின் ஓரத்தை முழுதும் அறுக்காமலும் உன் அறுப்பில் சிந்திக்கிடக்கிறதைப் பொறுக்காமலும்,

௰ உன் திராட்சத்தோட்டத்திலே பின்னறுப்பை அறுக்காமலும் அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும் அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக. நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௰௧ களவு செய்யாமலும் பொய் சொல்லாமலும் ஒருவரை ஒருவர் வஞ்சியாமலும்,

௰௨ நம்முடைய நாமத்தைக்கொண்டு பொய்யாணையிடாமலும் உங்கள் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலுமிருப்பீர்களாக. நாம் கர்த்தர்.

௰௩ உனக்கடுத்தவனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலுமிருப்பாயாக. கூலிக்காரனுடைய கூலி உன்னிடத்திலே விடியற்காலமட்டும் இராத்தங்கவேண்டாம்.

௰௪ செவிடனைச் சபியாமலும் குருடன் முன்பாகத் தடுக்கலை வைக்காமலும் உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக. நாம் கர்த்தர்.

௰௫ நியாயத்திலே அநியாயஞ் செய்யாதிருப்பீர்களாக. சிறியவனுடைய முகத்தைப் பாராமலும் பெரியவனுடைய முகத்தையெண்ணாமலும் உனக்கடுத்தவனுக்கு நீதியாக நியாயந்தீர்ப்பாயாக.

௰௬ உன் ஜனத்தாருக்குள்ளே பின்புறணிக்காரனாய்த் திரியாயாக. உனக்கடுத்தவனுடைய இரத்தத்திற்கு விரோதமாய் நிற்காயாக. நாம் கர்த்தர்.

௰௭ உன் சகோதரனை உன் இருதயத்திலே பகையாயாக. உனக்கடுத்தவன்மேலே பாவதையிருக்கவொட்டாமல் அவனைக் கடிந்துகொள்ளவே கொள்வாயாக.

௰௮ பழிக்குப் பழிக்கட்டாமலும் உன் ஜனப் புத்திரர்மேலே கோபம் வைக்காமலும் உனக்கடுத்தவனை உன்னைப்போலே சிநேகிப்பாயாக. நாம் கர்த்தர்.

௰௯ நம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்வீர்களாக. உன் மிருகஜீவன்களை வேற்றுச்சாதியோடே கூடவிடாயாக. உன் வயலில் வெவ்வேறுவகை விதையை விதையாயாக. இருவகை நூலுள்ள வஸ்திரம் உன்மேலேறாதிருப்பதாக.

௨௰ ஒருத்தி அடிமையாயிருந்து அவனுக்கு நிச்சயமாக்கப்பட்டும் மீட்கப்படாமலும் சுயாதீனமாய் விடப்படாமலும் போனபெண்ணோடே ஒருவன் அநுபோகமாய்ச் சயனித்தால் அவர்கள் சாவாமல் அடிக்கப்படவேண்டும். ஏனெனில் அவள் தன்னிச்சையானவளல்ல.

௨௧ அவன் தன் குற்றத்தைப் போக்கும் பலியாகக் கர்த்தருக்கு ஒரு ஆட்டுக்கடாவை ஆசரிப்புக் கூடாரவாசலிலே கொண்டுவரக்கடவன்.

௨௨ அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தினிமித்தம் அவனுக்காகக் கர்த்தருக்கு முன்பாகப் பாவநிவர்த்தியுண்டாக்கக்கடவன். அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும்.

௨௩ நீங்கள் தேசத்திலே வந்து பொசிக்குங் கனிகளைத் தருகிற பலவித மரங்களை நட்டால் அவைகளின் கனியைச் சுன்னத்துப் பண்ணிப்போடக்கடவீர்கள். மூன்று வருஷம் அது புசிக்கப்படாமல் உங்களுக்குச் சுன்னத்தில்லாததாய் எண்ணப்படுவதாக.

௨௪ பிறகு நாலாம் வருஷத்திலே அவைகளின் கனியெல்லாம் கர்த்தருக்குத் துதி செலுத்த பரிசுத்தமாயிருப்பதாக.

௨௫ ஐந்தாம் வருஷத்திலேயென்றால் அவைகளின் கனியைப் புசிக்க அவைகள் உ-

[illegible] பலனைக் கொடுத்தவர்க் [illegible]. நாம உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௨௬ இரத்தத்தோடே மருக்கிறதைப் போ [illegible]. நிமித்தம் பாராமலும் நாட்க [illegible] பாராமலுமிருப்பீர்களாக.

௨௭ [illegible] சுற்றிலுமுள்ள [illegible] முடியின் ஓரங்களைக் கெடுக்கா [illegible].

௨௮ செத்தவனுக்காக உங்கள் மாம்ச [illegible] கீறாமலும் அடையாள [illegible] உங்களில் குத்திக்கொள்ளாமலுமிரு [illegible]. நாம கர்த்தர்.

௨௯ [illegible] வேசித்தனம் பண்ணத் தேசம் [illegible] நிறைந்துபோகாதபடிக்கு உன் [illegible] வேசித்தனம் பண்ண விட்டுவிடுகி [illegible] தீட்டுப்படுத்தாதிருப்பாயாக.

௩௦ [illegible] ஓய்வுநாட்களைக் கைக் [illegible] என்னுடைய பரிசுத்த ஸ்தலத்திற் [illegible] பயப்படுவீர்களாக. நாம கர்த்தர்.

௩௧ அஞ்சனம் பார்க்கிறவர்களையுங் குறி [illegible] தேடாதிருப்பீர்களாக. அவ [illegible] அவர்களாலே தீட்டுப்படுவீர்க [illegible]. நாம உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௨ நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து [illegible] கிழவனுடைய முகத்தைக் கனம்பண்ண [illegible] உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக. [illegible].

௩௩ பரதேசி உங்கள் தேசத்திலே உன்னோடே [illegible] அவனைச் சிறுமைப்படுத்தீர் [illegible].

௩௪ உங்களிடத்திலே தங்குகிற பரதேசி [illegible] உங்களுக்குள் தேசத்திலே பிறந்தவனைப் [illegible]. அவனை உன்னைப்போல [illegible]. ஏனெனில் எகிப்து தேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள். நா [illegible] பராபரனாகிய கர்த்தர்.

௩௫ [illegible] அளவிலும் நிறுக்கிற நிறையிலும் [illegible] அநியாயங்கேடு செய்யீர்களாக.

௩௬ சுமுத்திரையான திராசும் சுமுத்திரையான [illegible] படிக்கட்டும் சுமுத்திரையான மரக்காலும் சுமுத்திரையான படியும் உங்க [illegible]. நாம உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உ [illegible] பராபரனாகிய கர்த்தர்.

௩௭ ஆகையால் நம்முடைய எல்லாக் கட்டளைகளையும் நம்முடைய எல்லா நியாயங்களையுங் கைக்கொண்டு அவைகளின்படிச் செய்யக்கடவீர்கள். நாம கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௰. அதிகாரம்.

பாவங்களுக்குக் குறிக்கப்பட்ட தண்டனைகள்.

௧ கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னது.

௨ பின்னையும் நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்னவென்றால், இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலிலே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலுந் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுத்தால் கொலையுண்கவே கொலையுண்கக் கடவன். தேசத்தின் சனம் அவனைக் கல்லெறிவார்களாக.

௩ நாம அப்படிக்கொத்தவனுக்கு விரோதமாக நமது முகத்தைத் திருப்பி அவனை நமது பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி நம்முடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கும்படிக்குத் தன் வித்தை மோளேகுக்குக் கொடுத்தபடியினாலே அவனைத் தன் சனத்தாரிலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

௪ அப்படிக்கொத்தவன் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுக்கக் கொள்ளத் தேசத்தின் சனம் அவனைக் கொலை செய்யாதபடிக்குத் தங்கள் கண்களை அவனை விட்டு மறைக்க மறைத்தால்,

௫ நாம அந்த மனிதனுக்கும் அவன் வம்சத்துக்கும் விரோதமாக நம்முடைய முகத்தைத் திருப்பி அவனையும் அவன் பிறகாலே மோளேகைப் பின்தொடர்ந்து சோரம் போனயாவரையுந் தங்கள் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

௬ அஞ்சனம் பார்க்கிறவர்களையுங் குறிகாரரையும் பின்தொடர்ந்து சோரம்போக எந்த ஆத்துமா அவர்களை நோக்கியிருக்கிறதோ அந்த ஆத்துமாவுக்கு விரோதமாகவும் நமது முகத்தைத் திருப்பி அவனைத் தன் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம். ※ ௰௯, ௩௧.

௭ ஆனபடியினாலே உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு பரிசுத்தவான்களாயிருங்கள். ஏனெனில் நாம உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௮ நமது கட்டளைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்யுங்கள். நாம உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

௯ எவனாகிலுந் தன் தகப்பனையுந் தன் தாயையும் சபித்தால் கொலையுண்கவே கொலையுண்கக்கடவன். தன் தகப்பனையுந் தன் தாயையுஞ் சபித்தால் அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக.

௰ ஒருவனுடைய பெண்சாதியோடேயாதொருவன் விபசாரம்பண்ணினால் அப்பொழுது தன் அயலகத்தவன் பெண்சாதியோடே விபசாரம் பண்ணின அந்த விபசாரனும் அந்த விபசாரியுங் கொலையுண்கவே கொலையுண்கக்கடவர்கள்.

௰௧ தன் தகப்பன் பெண்சாதியோடே சயனிக்கிறவன் தன் தகப்பன் நிருவாணத்தைத் திறந்ததால், இருவரும் கொலையுண்கவே

கொலையுண்கக்கடவர்கள். அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலிருப்பதாக.

௰௨ ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால் இருவருங் கொலையுண்கவே கொலையுண்கக்கடவர்கள் தாறுமாறுபண்ணினார்கள். அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலிருப்பதாக.

௰௩ ஒருவன் ஸ்திரியின் அநுபோகமாய் ஆணோடே சயனித்தால் அருவருப்பான காரியஞ்செய்தார் இருவருங் கொலையுண்கவே கொலையுண்கக்கடவர்கள். அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலிருப்பதாக.

௰௪ ஒருவன் ஒரு பெண்சாதியையும் அவள் தாயையும் படைத்தால் அது மகா தோஷம். உங்கள் நடுவே தோஷமிராதபடிக்கு அவனையும் இவர்களையும் அக்கினியாலே சுட்டெரிப்பார்களாக.

௰௫ ஒருவன் மிருகத்தினிடத்திலே தன் அநுபோகத்தை விட்டால் கொலையுண்கவே கொலையுண்கக்கடவன். அந்த மிருகத்தையுங் கொல்லக்கடவீர்கள்.

௰௬ ஒரு ஸ்திரியானவள் ஒரு மிருகத்தோடே அதைத் தன்மேலேறப்பண்ணிச் சேர்ந்தால் அந்த ஸ்திரியையும் அந்த மிருகத்தையுங் கொல்லக்கடவாய். இருவருங் கொலையுண்கவே கொலையுண்கக்கடவது. அவைகளின் இரத்தப்பழி அவைகளின் மேலிருப்பதாக.

௰௭ ஒருவன் தன் தகப்பனுக்கு அல்லது தன் தாய்க்குக் குமாரத்தியாகிய தன் சகோதரியைச் சேர்ந்துகொண்டு அவன் இவள் நிருவாணத்தையும் இவள் அவன் நிருவாணத்தையும் பார்த்தால் அது பாதகம். அவர்கள் தங்கள் சனப்புத்திரர்களுக்கு முன்பாக அறுப்புண்கக்கடவர்கள். தன் சகோதரியின் நிருவாணத்தைத் திறந்த அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

௰௮ ஒருவன் தூர்ஸ்திரியோடே சயனித்து அவளுடைய நிருவாணத்தையும் ஊற்றையுந் திறந்து அவளுந் தன் உதிரத்தின் ஊற்றைத் திறந்துவைத்தால் இருவருந் தங்கள் சனத்தாரின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்கக்கடவர்கள்.

௰௯ உன் தாயினுடைய சகோதரியின் நிருவாணத்தையும் உன் தகப்பனுடைய சகோதரியின் நிருவாணத்தையுந் திறவாயாக. அப்படிச் செய்தவன் தன் சதையை அவமானமாக்கினான். தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.

௨௰ ஒருவன் தன் சிறப்பன் பெண்சாதியோடே சயனித்தால் அவன் தன் சிறப்பன் நிருவாணத்தைத் திறந்தான். தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள். சந்தானமில்லாமற் சாவார்களாக.

௨௰௧ ஒருவன் தன் சகோதரன் பெண்சாதியைப் படைத்தால் அது அசுத்தம். தன் சகோதரன் நிருவாணத்தைத் திறந்தான். சந்தானமற்றிருப்பார்கள்.

௨௰௨ ஆகையால் நீங்கள் குடியிருப்பதற்காக நாம் உங்களைக் கொண்டுபோகிற தேசம் உங்களைக் கக்கிப்போடாதபடிக்கு நீங்கள் நம்முடைய சகல கட்டளைகளையுஞ் சகல நியாயங்களையுங் கைக்கொண்டு அவைகளின்படிச் செய்யுங்கள்.

௨௰௩ நாமுங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுகிற சாதியினுடைய வழிபாடுகளில் நடவாதேயுங்கள். ஏனெனில் அப்படிக்கொத்த காரியங்களையெல்லாஞ் செய்தார்கள். ஆகையால் நாம் அவர்களை அரோசித்து,

௨௰௪ நீங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பீர்களென்றுங்களோடே சொன்னோம். பாலுந் தேனும் ஓடிய அந்தத் தேசத்தை உங்களுக்குச் சுதந்தரமாகக் கொடுப்போம். நாமுங்களைச் சனசதளங்களைவிட்டுப் பிரித்தெடுத்த உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௨௰௫ ஆகையாற் சுத்தமான மிருகங்களுக்குந் தீட்டான மிருகங்களுக்குந் தீட்டான பறவைகளுக்குஞ் சுத்தமான பறவைகளுக்கும் நீங்கள் வித்தியாசம்பண்ணி நாமுங்களுக்குத் தீட்டாக எண்ணச்சொல்லிவிலக்கின மிருகங்களினாலும் பறவைகளினாலுந் தரையோடே ஊர்கிறயாதொன்றினாலும் உங்கள் ஆத்துமங்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக.

௨௰௬ நமக்குப் பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக. ஏனெனிற் கர்த்தராகிய நாம் பரிசுத்தராயிருந்து நீங்கள் நம்முடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களைச் சனசதளங்களைவிட்டுப் பிரித்தெடுத்தோம்.

௨௰௭ அஞ்சனம்பார்க்கிற ஆவியுள்ள அல்லது குறிசொல்லுகிற மனிதனுகிலும் ஸ்திரியாகிலுங் கொலையுண்கவே கொலையுண்கக்கடவர்கள். அவர்களைக் கல்லெறிவார்களாக. அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேலிருக்கக்கடவதென்று சொல்லென்றார்.

* ௨. மோ. ௨௨, ௰௮.

௨௰௧. அதிகாரம்.

ஆசாரியன் சந்ததிக்கடுத்த நியாயப் பிரமாணங்கள்.

பிறபாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது. ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களி லொருவனுந் தன் சனத்தாரிற் செத்துப்போன ஒருவராலே தன்னைத் தீட்டுப்படுத்தவேண்டாமென்று அவர்களோடே சொல்லு.

௨ தன்னுடைய கிட்டின சந்ததியாகிய தன் தாயினாலும் தன் தகப்பனாலும் தன் குமாரனாலும் தன் குமாரத்தியாலும் தன் சகோதரனாலும்,

௩ புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் தன்னிடத்திலிருக்கிற கன்னியாஸ்திரீயான தன் சகோதரியாலுமே ஒழிய,

௪ பேருடையவனாகிய தன் சனத்தாரிலே செத்தவனாலே அவன் தன்னைப் பரிசுத்தக் குலைச்சலாக்கித் தீட்டுப்படுத்த வேண்டாம்.

௫ அவர்கள் தங்கள் தலையை மொட்டையடிக்காமலும் தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப் போடாமலும் தங்கள் மாம்சத்தைக் கீறிக்கொள்ளாமலுமிருப்பார்களாக.

௬ தங்கள் பிதாவினுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமல் அவருக்குப் பரிசுத்தமாயிருப்பார்களாக. ஏனென்றால் கர்த்தருக்குத் தகனங்களை ... அப்பத்தை அவர்கள் செலுத்தியிருக்கிறார்கள்.

௭ வேசியையும் பரிசுத்தங்குலைந்த ... பெண்ணை விவாகம்பண்ணார்களாக. தன் புருஷனாலே தள்ளப்பட்ட பெண்சாதியையும் விவாகம்பண்ணார்களாக. ஏனென்றால் அவன் தன் பிதாவுக்குப் பரிசுத்தமானவன்.

௮ ஆகையால் பரிசுத்தனென்றெண்ணுவாயாக. ஏனென்றால் உன் பிதாவினுடைய அப்பத்தைச் செலுத்துகிறான். உனக்குப் பரிசுத்தமாயிருப்பானாக. ஏனென்றால் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நாம் பரிசுத்தர்.

௯ ஆசாரியனுடைய குமாரத்தி வேசித்தனம்பண்ணுகிறதினால் அவள் தன் தகப்பனைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறாள். அக்கினியிலே சுட்டெரிக்கப்படக்கடவள்.

௰ தலையில் அபிஷேகத்தெண்ணெய் வார்க்கப்பட்டதும் வஸ்திரங்களைத் தரிக்கப் பிரதிஷ்டைபண்ணப்பட்டவனுமாகிய தன் சகோதரருக்குள்ளே பிரதான ஆசாரியனானவன் தன் தலையைத் திறவாமலும் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளாமலும்,

௧௧ செத்த எந்தச் சவத்தண்டையிலும் பிரவேசியாமலும் தன் தகப்பனாலும் தன் தாயாலும் தன்னைத் தீட்டுப்படுத்தாமலும்,

௧௨ பரிசுத்த ஸ்தலத்தை விட்டுப் புறப்படாமலும் தன் பிதாவினுடைய பரிசுத்த ஸ்தலத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலுமிருப்பானாக. ஏனென்றால் அவனுடைய பிதாவின் அபிஷேகத்தெண்ணெயென்கிற கிரீடம் அவன்மேலிருக்கிறது. நாம் கர்த்தர்.

௧௩ கன்னிகாஸ்திரீயாகிய பெண்ணை அவன் விவாகம்பண்ணுவானாக.

௧௪ விதவையையும் தள்ளப்பட்டவளையும் பரிசுத்தங்கெட்டவளையும் வேசியையும் வி-வாகம்பண்ணாமல் தன் சனத்தாரிலுள்ள ஒரு கன்னியாஸ்திரியை விவாகம்பண்ணி,

௧௫ தன்னுடைய விதையைத் தன் சனத்தாருக்குள்ளே பரிசுத்தக் குலைச்சலாக்காதிருப்பானாக. ஏனென்றால் நாம் அவனைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

௧௬ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னது.

௧௭ நீ ஆரோனோடே பேசவேண்டியதே தென்னவென்றால் உன் தலைமுறைகளில் அங்கவீனமுள்ளவன் தன் பிதாவினுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரவொண்ணாது.

௧௮ அங்கவீனமுள்ள ஒருவனும் சேரவேண்டாம். குருடனும் சப்பாணியானவனும் மூக்குதறைந்த அல்லது நீண்ட அவயவமுள்ளவனும்,

௧௯ கால் முடைந்தவனும் கை முடைந்தவனும்,

௨௰ கூனனும் குள்ளனும் பூப்பட்ட கண்ணனும் சொறியனும் படர்தாமரையுள்ளவனும் விதைநசுங்கினவனுமாகிய,

௨௧ ஆசாரியனாகிய ஆரோனின் சந்ததியில் அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகனங்களைச் செலுத்தச் சேரவேண்டாம். அங்கவீனம் அவனிலிருக்கையால் அவன் தன் பிதாவினுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரவொண்ணாது.

௨௨ தன் பிதாவினுடைய அப்பமாகிய பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவைகளிலும் பரிசுத்தமானவைகளிலும் அவன் போசிக்கலாம்.

௨௩ ஆனால் திரையண்டை வாராமலும் பீடத்தண்டைச் சேராமலுமிருப்பானாக. ஏனென்றால் அங்கவீனம் அவனிலிருக்கிறது. நம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை அவன் பரிசுத்தக் குலைச்சலாக்கவேண்டாம். ஏனென்றால் நாம் அவர்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௪ மோசே இவைகளை ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடுஞ் சொன்னான்.

௨௨. அதிகாரம்.

பரிசுத்தமானதிலே போசிக்கத்தக்கவர்கள் போசிக்கத்தகாதவர்களாமென்பது.

பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ இஸ்ரவேல் புத்திரர் நமக்கு நியமித்துச் செலுத்துகிற பரிசுத்த வஸ்துக்களால் ஆரோனும் அவன் குமாரரும் நம்முடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காதபடிக்கு எச்சரிக்கையோடேயிருக்க வேண்டுமென்று அவர்களோடே சொல்லு. நாம் கர்த்தர்.

௩ நீ அவர்களோடேசொல்லவேண்டிய தேதென்னவெனில உங்கள தலைமுறைகளிலுள்ள உங்களெல்லாவித்தாரிலும எவனாகிலுந் தன மேலதீட்டிருக்கக்கொள்ள இஸ்ரவேலபுத்திரர் கர்த்தருக்கு நியமித்துச்செலுத்தும் பரிசுத்தவஸ்துக்களண்டை சேர்ந்தால அந்த ஆத்துமா நமக்குமுன்பாக இராதபடிக்கு அறுப்புண்பான. நாமகர்த்தர்.

௪ ஆரோனினவித்தாரிலெவன குஷ்டரோகியோ எவனபிரமியக்காரனோ அவனசுத்தமாகுமட்டும பரிசுத்தவஸ்துக்களிலே போசிக்கவேண்டாம. செத்த உடலாலேதீட்டானதைத்தையாகிலுந்தொட்டவனும அல்லது இந்திரியங்கழிந்தவனும,

௫ அல்லது தீட்டுப்படுத்துகிறயாதொரு ஊர்வனத்தையாகிலும ஏதததீட்டுமுள்ளமனிதனையாகிலுந்தொட்டவனும அப்படித்தானே.

௬ அப்படித்தொட்டவன சாயுங்காலமட்டுந்தீட்டுப்பட்டிருப்பான. அவனபரிசுத்தவஸ்துக்களிலேபோசியாமல தனமாம்சத்தைத்தண்ணீரினாற்சமுவக்கடவன.

௭ சூரியன அஸ்தமித்தபிறபாடு சுத்தமாயிருப்பான. பிறகு அவனபரிசுத்தவஸ்துக்களிலேபொசிக்கலாம. ஏனெனில அது அவனுடைய அப்பம.

௮ தானாய்ச்செத்ததையும பீறுண்டதையும அவனபொசிக்கிறதனாலே தீட்டுப்படவேண்டாம. நாமகர்த்தர்.

௯ ஆகையாற் பரிசுத்தமானதையவர்களபரிசுத்தக்குலைச்சலாக்குகிறதினாலேதங்களமேலேபாவஞ் சுமந்துசாவாதபடிக்கு நமமுடைடகாவலைக்காக்கக்கடவர்கள. நாம அவர்களைப் பரிசுத்தமாக்குகிறகர்த்தர்.

௰ அந்நியமனிதனொருவனும பரிசுத்தவஸ்துக்களிலே பொசிக்கவேண்டாம. ஆசாரியனவீட்டில விருந்தியாயிருக்கிறவனுங் கூலிவேலைசெய்கிறவனும பரிசுத்தவஸ்துவிலேபொசிக்கவேண்டாம.

௰௧ ஆசாரியன தனபணத்தினாலேகொண்டவனும அவனவீட்டிலே பிறந்தவனுமோவெனில அவனுடைய அப்பமாகிய அதிலேபொசிப்பார்களாக.

௰௨ ஆசாரியனுடைய குமாரத்திபிறத்தியானுக்கு வாழ்க்கைப்பட்டாற் பரிசுத்தவஸ்துக்களின படைப்பிலே பொசிக்கவேண்டாம.

௰௩ கைமபெண்சாதியாய்ப்போன அல்லது தள்ளப்பட்டவளான் ஆசாரியனுடையகுமாரத்திவித்தில்லாதிருந்துதனதகப்பனவீட்டிலேதனனுடையஇளவயதிலிருந்ததுபோலேதிரும்பிவந்திருந்தாளேயாகில தனதகப்பன அப்பத்திலேபொசிப்பாளாக. ஆனால அந்நியனாகிய ஒருவனும அதிலே பொசிக்கவேண்டாம.

௰௪ ஒருவன அறியாமற்பரிசுத்தவஸ்துவிலே பொசித்ததுண்டானால அவன அதிலே ஐந்திலே ஒருபங்கையதிகமாகக்கூட்டிப்பரிசுத்தவஸ்துவோடேகூட ஆசாரியனுக்குக்கொடுக்கக்கடவன.

௰௫ அவர்கள கர்த்தருக்கேற்றெடுக்கிற இஸ்ரவேலபுத்திரரின பரிசுத்தவஸ்துக்களைப்பரிசுத்தக்குலைச்சலாக்காமலும,

௰௬ அவைகளைப்பொசிக்கிறதினாலே அவர்களமேலேகுற்றமான அக்கிரமத்தைச்சுமரப்பண்ணாமலுமிருப்பார்களாக. ஏனெனில நாம அவர்களைப்பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்றுசொல்லென்றார்.

பலியிடுமமிருகங்கள எப்படிக்கொத்தவைகளாயிருக்கவேண்டுமென்பது.

௰௭ பின்னையுங்கர்த்தர்மோசேயோடேபேசிச்சொன்னதாவது.

௰௮ நீ ஆரோனோடும அவனகுமாரரோடும இஸ்ரவேலபுத்திரர் அனைவரோடுமபேசிச்சொல்லவேண்டியதேதென்னில இஸ்ரவேலவீட்டாரிலும இஸ்ரவேலிலேதங்குகிறபரதேசிகளிலும எவர்களதங்களுடையசகல பொருத்தனைகளின்படியாகிலும உச்சாயத்தின்படியாகிலுஞ் சர்வாங்கதகனமாகக்கர்த்தருக்குத் தங்கள காணிக்கைகளைச் செலுத்தப்போகிறார்களோ,

௰௯ அவர்கள தங்கள மனதின்படியே மாடுகளிலாகிலும ஆடுகளிலாகிலும வெள்ளாடுகளிலாகிலும பழுதற்ற ஒரு ஆணைப்பிடித்துவந்துசெலுத்துவார்களாக.

௨௰ பழுதுள்ள ஒன்றையுஞ்செலுத்தீர்களாக. ஏனெனில அது உங்களுக்காகக்கர்த்தருக்குப பிரியமாயிருப்பதில்லை.

௨௰௧ ஒருவனவிசேஷித்தபொருத்தனைக்காக அல்லது உச்சாயமனதாகக்கர்த்தருக்குமாடுகளிலாகிலும ஆடுகளிலாகிலுஞ்சமாதானபலியைச்செலுத்தப்போனால அது பிரியமாயிருக்கும்படிக் கொஞ்சமும்பழுதில்லாத உத்தமமாயிருக்கவேண்டும.

௨௰௨ குருடு நெரிசல ஊனங்கழிச்சல சொறிபுண்ணுள்ளதுமுதலானவைகளை நீங்கள கர்த்தருக்குச்செலுத்தாமலும அவைகளிலே கர்த்தருக்குப்பலிபீடத்தின்மேலேதகனபலியையேறறுமலுமிருப்பீர்களாக.

௨௰௩ நீண்ட அல்லது குறைந்த அவயவமுள்ளமாட்டையும ஆட்டையும நீ உச்சாயபலியாக்கலாம. ஆனாற்பொருத்தனைக்காக அதுபிரியமாயிருப்பதில்லை.

௨௰௪ நசுங்கினதையும நொறுங்கினதையுங் காயமபட்டதையும விதையறுக்கப்பட்டதையும நீங்களகர்த்தருக்குச்செலுத்தாமலும உங்களதேசத்திலேபலியிடாமலுமிருப்பீர்களாக.

௨௰௫ அந்நியபுத்திரர்கையிலும இப்படிக்கொத்ததைவாங்கி உங்களபரமபரனுடை

ப அப்பமாகச்செலுத்தீர்களாக. ஏனெனில் அவைகளின்கேடும் பழுதும் அவைகளிலிருக்கிறது. அவைகள் உங்களுக்காகப்பிரியமாயிருப்பதில்லையென்று சொல்லென்றார்.

௨௬ பின்னையுங்கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨௭ ஒருகன்றாவது ஆட்டுக்குட்டியாவது வெள்ளாட்டுக்குட்டியாவது பிறந்தால் அது ஏழுநாள் தன்தாயின் கீழிருக்கக்கடவது. எட்டாம்நாள் முதற்கொண்டு அது கர்த்தருக்குத் தகனபலியாகச் செலுத்தப்படப் பிரியமாயிருக்கும்.

௨௮ மாட்டையும் அதின்கன்றையும் அல்லது ஆட்டையும் அதின்குட்டியையும் ஒரேநாளிலே கொல்லாதிருப்பீர்களாக.

௨௯ ஸ்தோத்திரப்பலியைக்கர்த்தருக்குச் செலுத்தினால் உங்களமனப்பூர்வமாய்ச்செலுத்துவீர்களாக.

௩௦ அந்நாளிலேதானே அதுபோசிக்கப்படக்கடவது. விடியற்காலமட்டும் நீங்கள் அதில் ஒன்றையும் மீதியாகவைக்கவேண்டாம். நான் கர்த்தர்.

௩௧ நீங்கள் என் கற்பனைகளைக்கைக்கொண்டு அவைகளின்படிச்செய்யக்கடவீர்கள். நான் கர்த்தர்.

௩௨ நான் இஸ்ரவேல்புத்திரர் நடுவே பரிசுத்தம்பண்ணப்படும்படி என் பரிசுத்த நாமத்தைப்பரிசுத்தக்குலைச்சலாக்காதிருப்பீர்களாக. நானுங்களைப்பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

௩௩ நானுங்களுக்குப்பராபரனாயிருக்கும்படிக்கு உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். நான்கர்த்தரென்று சொல்லென்றார்.

௨௩. அதிகாரம்.

பரிசுத்தபண்டிகைகளின்கட்டளை.

௧ பின்னையுங்கர்த்தர்மோசேயோடேபேசிச்சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல்புத்திரரோடே பேசிச்சொல்லவேண்டியதென்னவென்றால், சபைகூடிவருகிற பரிசுத்தநாட்களாக ஆசரிக்கும்படிக்கு நீங்கள்கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைநாட்களாவது.

௩ ஆறுநாள் வேலைசெய்யப்படுவதாக. ஏழாம்நாளோவெனில் சபைகூடும்பரிசுத்த ஓய்வுநாள், அதிலொருவேலையுஞ்செய்யாதிருப்பீர்களாக. அது உங்கள்வாசஸ்தலங்களிலெல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.

௪ சபைகூடிவருகிற பரிசுத்தமாய் ஆசரிக்கும்படிக்கு நீங்கள் திட்டமான காலத்திலே கூறவேண்டிய கர்த்தரின்பண்டிகைகளாவனவெனில்,

௫ * முதலாமாதம் பதினாலாந்தேதி அந்திநேரமாகிறவேளையிலே கர்த்தருக்குப் பஸ்காவும், * ௨. மோசே. ௰௨, ௰௮.

௬ அந்தமாதம் பதினைந்தாந்தேதியிலே கர்த்தருக்குப்புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையுமாயிருக்கும். ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப்போசிப்பீர்களாக.

௭ முதலாம்நாள் உங்களுக்குச்சபைகூடும் பரிசுத்தநாள். அதிலே யாதொருபணிவிடைவேலையைச்செய்யீர்களாக.

௮ ஏழுநாளுங்கர்த்தருக்குத் தகனஞ்செலுத்தக்கடவீர்கள். ஏழாம்நாள் சபைகூடும் பரிசுத்தநாள். அதில் யாதொரு பணிவிடைவேலையைச் செய்யீர்களாக வென்று சொல்லென்றார்.

௯ பின்னையுங்கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௰ நீ இஸ்ரவேல்புத்திரரோடே பேசிச்சொல்லவேண்டியதென்னவெனில் நானுங்களுக்குக்கொடுக்கும் தேசத்தில் நீங்கள்வந்து அதின் வெள்ளாமையை யறுக்கும்போது உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒருகதிர்க்கட்டை ஆசாரியனண்டைக் கொண்டுவரக்கடவீர்கள்.

௰௧ உங்கள்மேலே பிரியமுண்டாக ஆசாரியன் அந்தக்கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்குப்பின்னுள்ள மறுநாளிலே கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டுவானாக.

௰௨ நீங்கள் அதையசைவாட்டுகிற அந்நாளிலே கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக ஒருவயதானபழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும்,

௰௩ கர்த்தருக்கு நறுங்கிற வாசனையான தகனமாக ஒருமரக்காலிலே பத்திலிரண்டுபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லியமாவாகிய அதின்காணிக்கையையும் நீ விதாட்சிப்பழ இரசத்திலே காற்படியாகிய அதின் பானபலியுஞ்செலுத்தக்கடவீர்கள்.

௰௪ உங்கள்பராபரனுடைய காணிக்கையை நீங்கள்கொண்டுவரும் அந்நாள்மட்டும் அப்பமுஞ் சுட்டகதிரும் பசுங்கதிரும் போசியீர்களாக. இது உங்கள்வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச்செல்லும் நித்தியகட்டளை.

௰௫ நீங்கள் அசைவாட்டுங் கதிர்க்கட்டைக்கொண்டுவந்த ஓய்வுநாளுக்குப்பின்னுள்ள அந்தமறுநாள்முதற்கொண்டு எண்ணத்துவக்கி ஏழுவாரங்களைச் சரியாய்ப்போகவிட்டு,

௰௬ ஏழாம் ஓய்வுநாளுக்குப் பின்னுள்ள மறுநாளாகிய ஐம்பதாம்நாள்மட்டும் எண்ணிக்கர்த்தருக்குப் புதுக்காணிக்கையைச் செலுத்தக்கடவீர்கள்.

௰௭ நீங்கள் ஒருமரக்காலிலே பத்திலிரண்டுபங்காகியமெல்லியமாவிலேபுளிப்பாய

சுட்ட அசைவாட்டுங் காணிக்கையாயிருக்கிற இரண்டு அப்பங்களையுங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கு முதற்பலனாகக் கொண்டுவந்து,

௰௮ அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக ஒருவயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும் ஒரு காளையெருதையும் இரண்டு ஆட்டுக்கிடாய்களையுங் கர்த்தருக்கு ஏறுகிற வாசனையான தகனமாக அவைகளுக்கடுத்த காணிக்கையையும் ஊற்றுதல்களையுஞ் செலுத்தி,

௰௯ வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பாவம்போக்கும்பலியும் ஒருவயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதானபலியுமாக்ச் சக்கடவீர்கள்.

௨௰ அவைகளை ஆசாரியன் முதற்பலனின் அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக்குட்டிகளோடுங்கூடக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டக்கடவன். கர்த்தருக்குப் பரிசுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடையதாம்.

௨௧ அந்த நாள்தானே உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாளென்று கூறக்கடவீர்கள். யாதொரு பணிவிடைவேலையையும் அதிலே செய்யீர்களாக. இது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௨௨ * உங்கள் தேசத்தின் வெள்ளாமையை நீங்கள் அறுக்கையில் உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும் உதிர்ந்து கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும் எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடுவாயாக. நான் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார். * ௰௯, ௯.

௨௩ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨௪ நீ இஸ்ரவேல்புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில் உங்களுக்கு ஏழாமாதம் முதலாந்தேதிக் கெம்பீர பிரஸ்தாபத்தின் பண்டிகையென்ற சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாளாயிருப்பதாக.

௨௫ அதிலே யாதொரு பணிவிடைவேலையைச் செய்யாமற் கர்த்தருக்குத் தகனஞ் செலுத்துவீர்களாகவென்று சொல்லென்றார்.

௨௬ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨௭ அந்த ஏழாமாதம் பத்தாந்தேதியோவென்றால் உங்களுக்குப் பாவநிவர்த்தியாகுதலின் நாளுஞ் சபைகூடும் பரிசுத்தநாளுமாயிருக்கும். அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமங்களைத் தாழ்மைப்படுத்திக் கர்த்தருக்குத் தகனஞ் செலுத்தக்கடவீர்கள்.

௨௮ ஆகையால் அந்நாளிலே யாதொரு வேலையுஞ் செய்யீர்களாக. ஏனெனில் அதுவுங்கள் பராபரனுக்கு [illegible] சந்நிதியில் உங்களுக்காகப் [illegible] செய்யப்படும் நாளாயிருக்கின்றது.

௨௯ அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத்தாத எந்த ஆத்துமாவுந்தன் சனத்தாரிலிருந்து அறுப்புண்பான்.

௩௰ அந்நாளிலே யாதொரு ஆத்துமா யாதொரு வேலையைச் செய்தால் அந்த ஆத்துமாவை அவன் சனத்தின் நடுவிலே வைக்காமல் அழிப்போம்.

௩௧ நீங்கள் எந்தவேலையுஞ் செய்யாதிருப்பது உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

௩௨ அது உங்களுக்கு ஓய்வுக்கோய்வுநாள். அதிலே உங்கள் ஆத்துமங்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள். அந்தமாதத்தின் ஒன்பதாந்தேதி சாயுங்காலந்துவக்கி மறுசாயுங்காலமட்டும் உங்கள் ஓய்வை யாசரிக்கக்கடவீர்களென்றார்.

௩௩ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௩௪ நீ இஸ்ரவேல்புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில் அந்த ஏழாமாதம் பதினைந்தாந்தேதி கர்த்தருக்கு ஏழுநாளாய ஆசரிக்குங் கூடாரப்பண்டிகை.

௩௫ முதலாம்நாள் சபைகூடும் பரிசுத்தநாள். யாதொரு பணிவிடைவேலையைச் செய்யீர்களாக.

௩௬ ஏழுநாளுங் கர்த்தருக்குத் தகனஞ் செலுத்தக்கடவீர்கள். எட்டாம்நாளும் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள். அதிலே கர்த்தருக்குத் தகனஞ் செலுத்தக்கடவீர்கள். அது ஆசரிக்கப்படும்நாள். அதிலே யாதொரு பணிவிடைவேலையைச் செய்யாதிருப்பீர்களாக.

௩௭ நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாட்களிலே செலுத்துவதல்லாமலும் நீங்கள் கர்த்தருக்குப் படைக்கும் உங்களெல்லாக் காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்சாகப்பலிகளுமல்லாமலும்,

௩௮ நீங்கள் அந்தந்தநாளுக்குத்தக்கபடி கர்த்தருக்குச் சர்வாங்கதகனத்தையுங் காணிக்கை பலி ஊற்றுதல்களும் முதலான தகனங்களைச் செலுத்தும்படிக்குச் சபைகூடிவந்து பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகள்தானே.

௩௯ நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்திருக்கும் ஏழாமாதம் பதினைந்தாந்தேதியிலே கர்த்தருடைய பண்டிகையை ஏழுநாளாக ஆசரிக்கக்கடவீர்கள். முதலாம்நாளும் ஓய்வு. எட்டாம்நாளும் ஓய்வு.

௪௰ [illegible] முதலாம்நாளிலே [illegible] மடலையும் [illegible] விருட்சங்களின் [illegible] கிளைகளையுங் கொண்டுவந்து [illegible] கர்த்தருக்கு முன்பாக [illegible] ஏழுநாள் மகிழ்ச்சியாயிருந்து,

௪௧ வருஷந்தோறும் ஏழுநாள் கர்த்தருக்குத் திருநாளாக அதை ஆசரிக்கக்கடவீர்கள். இது உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்திய கட்டளை. ஏழாம் மாதத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள்.

௪௨ நான் இஸ்ரவேல்புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின போது அவர்களைக் கூடாரங்களிலே குடியிருக்கப்பண்ணினதை உங்கள் தலைமுறைதலைமுறையார் அறியும்படிக்கு,

௪௩ ஏழுநாள் கூடாரங்களிலே குடியிருக்கக்கடவீர்கள். இஸ்ரவேலிலே பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களிலே குடியிருப்பார்களாக. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல் என்றார்.

௪௪ அப்படியே மோசே கர்த்தருடைய பண்டிகைகளின் வர்த்தமானத்தை இஸ்ரவேல்புத்திரருக்குச் சொன்னான்.

௨௪. அதிகாரம்.

போஜனத்துக்குரிய விளக்கையும் தேவசமுகத்து அப்பங்களையுங் குறித்து இட்ட கட்டளை.

பின்னும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨ நித்தியவிளக்கெரிய எப்பொழுதும் வெளிச்சமுண்டாயிருக்கும்படிக்கு இஸ்ரவேல்புத்திரர் இடித்துப் பிழியப்பட்ட தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னிடத்தில் கொண்டுவரக் கட்டளையிடு. *௨. மோ. ௨௭, ௨௰.

௩ ஆசரிப்புக்கூடாரத்திலே சாட்சியின் திரைக்கு வெளிப்புறமாக ஆரோன் அதைச் சாயங்காலந்தொடங்கி விடியற்காலமட்டும் கர்த்தருக்கு முன்பாக எரிய வைக்கக்கடவன். இது உங்கள் தலைமுறைகளுக்கு நித்திய கட்டளை.

௪ அவன் எப்பொழுதும் கர்த்தருக்கு முன்பாகச் சுத்தமான குத்துவிளக்கின் மேலிருக்கும் விளக்குகளை ஒழுங்குபடுத்தி வைக்கக்கடவன்.

௫ மெல்லிய மாவை வாங்கி அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக. ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்திலிரண்டு பங்கு மாவினால் செய்யப்படுவதாக.

௬ அவைகளை நீ கர்த்தருக்கு முன்பாகச் சுத்தமான மேசையின்மேல் இரண்டு அடுக்காக ஒவ்வொரு அடுக்கில் ஆறு ஆறாக வைத்து,

௭ ஒவ்வொரு அடுக்கின் மேலும் சுத்தமான தூபவர்க்கம் வைக்கக்கடவாய். அது அப்பத்தின்மேல் நினைப்பூட்டுதலாகக் கர்த்தருக்குத் தகனபலியாயிருக்கும்.

௮ அதை நித்திய உடன்படிக்கையாய் இஸ்ரவேல்புத்திரர் கையிலே வாங்கி ஓய்வுநாள்தோறும் கர்த்தருக்கு முன்பாக அடுக்கிவைக்கக்கடவன்.

௯ அது ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் உரியது. அதைப் பரிசுத்த இடத்திலே புசிக்கக்கடவர்கள். ஏனெனில் அது பரிசுத்தத்திலும் பரிசுத்தம். கர்த்தருடைய தகனங்களில் அது அவனுக்கு நித்திய கட்டளையென்றார்.

தேவநாமத்தைத் தூஷணித்தவனைக் கல்லெறிந்தது.

௰ இஸ்ரவேல் சாதியான ஸ்திரீக்கும் எகிப்திய புருஷனுக்கும் மகனாகிய ஒருவன் இஸ்ரவேல்புத்திரரோடே கூடப் புறப்பட்டு வந்திருந்தான். இவனும் இஸ்ரவேலனாகிய ஒரு மனிதனும் பாளயத்திலே சண்டைபண்ணினார்கள்.

௰௧ அப்பொழுது இஸ்ரவேல்சாதியான அந்த ஸ்திரீயின் மகன் நாமத்தைச் சொல்லித் தூஷணித்தான். ஆகையால் அவனை மோசேயினிடத்துக்குக் கொண்டுவந்தார்கள். அவன் தாயின் பேர் செலோமீத், அவள் தாண் கோத்திரத்தானாகிய திப்ரியின் குமாரத்தி,

௰௨ கர்த்தரின் வாக்கினால் தங்களுக்குத் தீர்வுவருமட்டும் அவனைக் காவற்படுத்தினார்கள்.

௰௩ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௰௪ தூஷணித்தவனைப் பாளயத்துக்குப் புறம்பே கொண்டுபோ. கேட்டவர்கள் எல்லாருந் தங்கள் கைகளை அவன் தலையின்மேல் வைப்பார்களாக. பிற்பாடு சபையெல்லாம் அவனைக் கல்லெறியக்கடவது.

௰௫ ஆதலால் இஸ்ரவேல் புத்திரரோடே நீ சொல்லவேண்டியதென்னவென்றால்: எவனாகிலும் தன் பாப்பாரைத் தூஷணித்தால் அவன் தன் பாவத்தைச் சுமப்பான்.

௰௬ கர்த்தரின் நாமத்தை நிந்தையாகச் சொல்லுகிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். சபையெல்லாம் அவனைக் கல்லெறியவே எறியக்கடவது. பரதேசியாகிலுஞ் சுதேசத்திலே பிறந்தவனாகிலுஞ் சரி. நாமத்தைத் தூஷணித்தானானால் கொலையுண்ணக்கடவன்.

௰௭ யாதொரு மனிதன் சீவனையொருவனைக் கொன்றால் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

௰௮ மிருகசீவனைக் கொன்றவன் சீவனுக்குச் சீவனைச் செலுத்தக்கடவன்.

௰௯ ஒருவன் தன் அயலானில் ஊனமுண்டாக்கினால் அவன் செய்தபடி அவனுக்குச் செய்யப்படக்கடவது.

௨௰ நொறுக்குதலுக்கு நொறுக்குதலும் கண்ணுக்குக் கண்ணும் பல்லுக்குப் பல்லும் தண்டனை. அவன் மனிதனில் ஊனமுண்டாக்கினபடியே அவனிலும் ஊனமுண்டாக்கப்படக்கடவது.

உக மிருகத்தைக் கொன்றவன் வகிற் கொடுக்கக்கடவன். மனிதனைக் கொன்றவனோ கொலையுண்ணக்கடவன்.

உஉ உங்களிலே பரதேசிக்கும் தேசத்திலே பிறந்தவனுக்கும் ஏகமான நியாயமிருக்கக்கடவது. ஏனெனில் நாமுங்களுடைய பராபரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

உ௩ அப்படியே தூஷணித்தவனைப் பாளையத்துக்குப் புறம்பே கொண்டுபோய் அவனைச் [illegible] வதற்காக மோசே இஸ்ரவேலபுத்திரரோடே சொன்னான். கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே இவர்கள் செய்தார்கள்.

உரு. அதிகாரம்.

தேசத்தின் நிலங்களுக்கு ஓய்விருக்கவேண்டிய ஏழாம் வருஷத்தின் கட்டளை.

க கர்த்தர் சீனாய்ப் பர்வதத்தில் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

உ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில் நாம் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் வந்திருக்கும்பொழுது தேசம் கர்த்தருக்கென்று ஓய்வுகாலங் கொண்டாடவேண்டும்.

௩ * ஆறுவருஷம் உன் வயலிலே விதைத்து உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைநறுக்கி அதின் பலனைச் சேர்ப்பாயாக.

* உ. மோசே. உ௩, ௰. ௰க.

௪ ஏழாம் வருஷத்திலோவென்றால் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கிருக்கவேண்டும். உன் வயலில் விதைக்காமலும் உன் திராட்சத்தோட்டத்தைக் கிளைநறுக்காமலும்,

௫ சுயமாய் உனக்கு விளைந்து பயிரானதை யறுத்துக்கொள்ளாமலும் நீ கிளைநறுக்காதேவிட்ட திராட்சியின் பழங்களைச் சேர்க்காமலுமிருப்பாயாக. தேசத்திற்கது ஓய்ந்திருக்கும் வருஷமாயிருக்கக்கடவது.

௬ தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக. உனக்கும் உன் வேலைக்காரனுக்கும் உன் வேலைக்காரிக்கும் உன் கூலியாளுக்கும் உன்னிடத்திலே தங்குகிற உன்னுடைய பரதேசிக்கும்,

௭ உன் மிருகஜீவனுக்கும் உன் தேசத்திலிருக்கிற காட்டுஜீவனுக்கும் அதின் பலனெல்லாம் ஆகாரமாயிருப்பதாக.

சீர்திருந்தும் ஐம்பதாம் வருஷத்தின் கட்டளை.

௮ பின்னையும் ஏழு ஓய்வுவருஷங்களுள்ள ஏழேழு வருஷங்களையெண்ணுவாயாக. அந்த ஏழு ஓய்வுவருஷங்களுள்ள நாட்கள் உனக்கு நாற்பத்தொன்பது வருஷமாகும்.

௯ அப்பொழுது ஏழாமாதம் பத்தாந் தேதியிலே தொனிக்கிற எக்காளத்தைச் சுற்றித்திரியப் பண்ணுவாயாக. பாவ நிவர்த்தியாகுதலின் நாளிலே அதையுங்கள் தேசமெங்குந் திரியப்பண்ணி,

௰ ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக்கித் தேசத்தின் அதின் குடிகளுக்கெல்லாம் விடுதலையைக் கூறக்கடவீர்கள். அது உங்களுக்குச் சீர்திருந்தும் வருஷம். அதிலே நீங்கள் அவரவர் தங்கள் காணியாட்சிக்கும் அவரவர் தங்கள் வம்சத்திற்குந் திரும்புவீர்கள்.

௰க அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக்குச் சீர்திருந்தும் வருஷமாயிருப்பதாக. அதிலே விதைக்காமலும் சுயமாய் விளைந்த பயிரானதை யறுத்துக்கொள்ளாமலும் கிளைநறுக்காதேவிடப்பட்ட திராட்சியின் பழங்களைச் சேர்க்காமலுமிருப்பீர்களாக.

௰உ ஏனெனில் அது சீர்திருந்தும் வருஷம். அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக்கவேண்டும். அதின் பலனை வயலிலேயெடுத்துப் போசித்துக்கொண்டிருப்பீர்களாக.

௰௩ சீர்திருந்தும் அந்த வருஷத்தில் நீங்கள் அவரவர் தங்கள் காணியாட்சிக்குத் திரும்புவீர்கள்.

௰௪ ஆகையால் ஏதாகிலும் உங்களுக்கடுத்தவனுக்கு விற்றால் அல்லது அவன் கையிலே கொண்டீர்களானால் ஒருவரையொருவர் இடுக்கண் செய்யாதீர்கள்.

௰௫ சீர்திருந்தும் வருஷத்துக்குப்பிறகு சென்ற வருஷங்களின் இலக்கத்தின்படியே அதை உனக்கடுத்தவன் கையிலே கொள்ளுவாயாக. பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தின்படியே அவன் உனக்கு விற்பானாக.

௰௬ வருஷங்கள் அநேகமானால் அதின் விலையையுயர்த்திக்கொஞ்சமானால் அதைத் தாழ்த்துவாயாக. ஏனெனிற் பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப்பார்த்து அவன் உனக்கு விற்கிறான்.

௰௭ உங்களிலொருவனும் தனக்கடுத்தவனை யிடுக்கண் செய்யவேண்டாம். உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக. ஏனெனில் நாமுங்களுடைய பராபரனாகிய கர்த்தர்.

௰௮ நம்முடைய கட்டளைகளின்படி செய்து நம்முடைய நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்யக்கடவீர்கள் அப்பொழுது தேசத்திலே சுகமாய்க் குடியிருந்து,

௰௯ பூமி தன் கனியைத் தருகிறதினாலே திர்ப்தியாய்ச் சாப்பிட்டு அதிலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

உ௰ ஏழாம் வருஷத்திலென்னத்தைப் போசிப்போம். இதோ, நாங்கள் விதைக்காமலும் எங்கள் பலனைச் சேர்க்காமலுமிருக்கவேண்டுமேயென்று நீங்கள் சொன்னால்,

உக ஆறாம் வருஷமே மூன்று வருஷங்களின் பலனைத் தர நமது ஆசீர்வாதத்தையுங்களுக்காகக் கட்டளையிடுவோம்.

௨௨ ஆனபின்பு நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்துப் பழைய பலனிலே ஒன்பதாம் வருஷமட்டுஞ் சாப்பிடுவீர்கள். அதின் பலன் வருமட்டுக்கும் பழைய பலனைச் சாப்பிடுவீர்கள்.

௨௩ நீங்கள் நிலங்களைப் பூரணமாய் விற்கவேண்டாம். அதேனென்றால் தேசம் நம்முடையது. நீங்கள் நமக்குமுன்பாகப் பரதேசிகளுந் தங்கியிருக்கிறவர்களுமாயிருக்கிறீர்களே.

௨௪ ஆகையால் உங்கள் காணியாட்சியான தேசமெங்கும் நிலங்களின் மீட்புக்கு இடங்கொடுக்கக்கடவீர்கள்.

௨௫ உன் சகோதரன் தரித்திரப்பட்டுத் தன் காணியாட்சியிலே சிலதை விற்றால் அவனைச் சேர்ந்தவன் வந்து தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்.

௨௬ மீட்பில்லாதவனுக்கோவென்றால் தானே மீட்கத்தக்கதான அவகாசம் அகப்பட்டால்,

௨௭ அவன் தன்னுடைய காணியாட்சிக்குத் திரும்பிவரும்படிக்கு அதை விற்றபிறகு சென்ற வருஷங்களின் கணக்கைத் தள்ளி, மீதியானதை அதைக்கொண்டவனுக்குத் திரும்பக்கொடுப்பானாக.

௨௮ அவனுக்குத் திருப்பிக்கொடுப்பதற்கான அவகாசம் அவனுக்கு அகப்படாமற்போனால் அவன் விற்றது கொண்டவன் கையிலே சீர்திருத்தம வருஷமட்டுமிருந்து, சீர்திருத்தம வருஷத்திலேயோவென்றால் அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பி வரும்படிக்கு அது நீங்கலாகக்கடவது.

௨௯ ஒருவன் மதிலுள்ள பட்டணத்தில் வாசஸ்தலமான வீட்டை விற்றால் அதை விற்றிருந்த வருஷமட்டும் அதின் மீட்புச் செல்லும். அந்த மீட்புக்கொரு முழுவருஷத் தவணையாயிருப்பதாக.

௩௰ ஒரு முழுவருஷகாலம் நிறைவேறுமட்டும் மீட்கப்படாதிருந்ததேயானால் அப்பொழுது மதிலுள்ள பட்டணத்திலிருக்கிற அந்த வீட்டைக் கொண்டவனுக்கு அது தலைமுறைதலைமுறையாக நிலைத்திருக்கக்கடவது. சீர்திருத்தம வருஷத்தில் அது நீங்கலாகாதிருக்கும்.

௩௧ சுற்றிலும் மதிலில்லாத கிராமங்களின் வீடுகளோவென்றால் தேசத்தின் வயல்வெளிகளைப்போல எண்ணப்படுவதாக. அவை மீட்கப்பட்டிருக்கும். சீர்திருத்தம வருஷத்தில் நீங்கலுமாகும்.

௩௨ லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களின் வீடுகளுக்கோவென்றால் லேவியருக்கு எப்பொழுதும் மீட்புக்கிடமுண்டு.

௩௩ லேவியனுடைய காணியாட்சிப்பட்டணங்களின் வீடு லேவியரிற் பின்னொருவனால் மீட்கப்படாதிருந்தாலுஞ் சீர்திருத்தம வருஷத்தில் நீங்கலாகவேண்டும். ஏனென்றால் லேவியருடைய பட்டணங்களின் வீடுகள் இஸ்ரவேல் புத்திரரின் நடுவிலே அவர்களுக்கிருக்கிற காணியாட்சி.

௩௪ ஆனால் அவர்கள் பட்டணங்களுடைய பேட்டைகளின் வயல்வெளி விற்கப்படாதிருப்பதாக. ஏனென்றால் அது அவர்களுக்கு நித்திய காணியாட்சியாயிருக்கின்றது.

௩௫ உன் சகோதரன் உன்னிடத்திலே தரித்திரப்பட்டுக் கைபிலத்தவனானால் அவனைத் திடப்படுத்துவாயாக. பரதேசியைத் தங்கவைத்தவனைப்போல அவனும் உன்னோடே பிழைப்பானாக.

௩௬ நீ அவனைப் பிலவட்டியையுஞ் சொச்சத்தையும் வாங்காமல் உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படிக்கு உன் பராபரனுக்குப் பயப்படக்கடவாய்.

௩௭ அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும் உன் போசனத்தைச் சொச்சத்திற்குங் கொடாயாக.

௩௮ நாமுங்களுக்குக் கானான் தேசத்தைக் கொடுத்து, உங்களுக்குப் பராபரனாயிருக்கும்படிக்கு உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

௩௯ உன் சகோதரன் உன்னிடத்திலே தரித்திரனாகி உனக்கு விலைப்பட்டுப்போனால் அவனை அடிமைவேலை கொள்ளாயாக.

௪௰ அவன் கூலிக்காரனைப்போலுந் தங்க வந்தவனைப்போலும் உன்னோடே இருந்து சீர்திருத்தம வருஷமட்டும் உன்னிடத்தில் சேவிப்பான்,

௪௧ அப்பொழுது தன் பிள்ளைகளோடுங்கூட உன்னைவிட்டு நீங்கலாகித் தன் வம்சத்தினிடத்துக்குந் தன் பிதாக்களின் காணியாட்சிக்குந் திரும்பிவருவானாக.

௪௨ ஏனென்றால் அவர்கள் நாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்முடைய வேலைக்காரர். அடிமை விற்கப்படும்போலே அவர்கள் விற்கப்படவேண்டாம்.

௪௩ * நீ அவனைக் கொடூரமாய் ஆளாமல் உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக.

* எபேசி. ௬, ௯.

௪௪ உனக்கிருக்கும் அடிமையும் அடிமைப்பெண்ணும் உங்களைச் சுற்றிலுமிருக்கிற புறசாதிகளின் மனிதராயிருக்கவேண்டும். அவைகளில் நீ அடிமையையும் அடிமைப்பெண்ணையுங் கொள்ளலாம்.

௪௫ உங்களிடத்திற் பரதேசிகளாய்த் தங்குகிற அந்நியரின் புத்திரரிலும் உங்கள் தேசத்தில் உங்களிடத்தில் பிறந்திருக்கிற அவர்களுடைய வம்சத்தாரிலுங்கூட நீங்கள் உங்களுக்கு அடிமைகளைக் கொண்டு,

௪௬ அவர்களையுங்களுக்குப் பிறகு உங்கள் பிள்ளைகளுக்குச் சொந்த சுதந்தரமாக்கி என்றைக்கும் ஆண்டுகொண்டிருக்கலாம். ஆனால் இஸ்ரவேல் புத்திர

ராகிய உங்கள் சகோதரரில் ஒருவரையொருவர் கொடூரமாய் ஆளவேண்டாம்.

௪௭ உன்னிடத்திலிருக்கிற பரதேசியும் வந்தியனும் அவகாசம் பெற்றிருக்கக்கொள்ள அவனிடத்திலிருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு அவனுக்கும் அல்லது அவன் வம்சசந்ததிக்கும் விலைப்பட்டுப் போனால்,

௪௮ விலைப்பட்டுப் போனபிற்பாடு அவனுக்கு மீட்புண்டாவதாக. அவன் சகோதரரிலொருவன் அவனை மீட்கக்கடவன்.

௪௯ அவனுடைய பெரியசிறியதகப்பனாவது பெரியசிறியதகப்பன் குமாரனாவது அவன் வம்சத்தில் அவனைச் சேர்ந்த சனத்தாரில் ஒருவனாவது அவனை மீட்பான். அல்லது அவனுக்கு அவகாசங் கிடைத்தால் தன்னைத் தானே மீட்கலாம்.

௫௰ அவன் தன்னைக் கொண்டவன் கையிலே விலைப்பட்டுப்போன வருஷத்திற்குச் சீர்திருத்தும் வருஷத்திற்கும் இருக்குங்காலத்தை அவனோடே கணக்குப் பார்ப்பானாக. அவனோடே ஒரு கூலிக்காரன் பகுதி இருந்தாற்போலே அவனுடைய விலைக்கிரயம் வருஷங்களின் இலக்கத்திற்கொத்துப் பார்க்கப்படக்கடவது.

௫௧ இன்னம் அநேகம் வருஷங்களிருந்தால் அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத் தக்கதைத் தன்னை மீட்கும் பொருளாகத் திரும்பக் கொடுக்கக்கடவன்.

௫௨ சீர்திருத்தும் வருஷமட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால் அவனோடே கணக்குப்பார்த்துத் தன் வருஷங்களுக்குத் தக்கதைத் தன்னை மீட்கும்பொருளாகத் திரும்பக் கொடுக்கக்கடவன்.

௫௩ ஒரு கூலிக்காரனைப்போல அவனோடே வருஷத்திற்கு வருஷம் இருப்பானாக. அவனிவனை உன் பார்வைக்குக் கொடூரமாய் ஆளவேண்டாம்.

௫௪ இவ்விதங்களாய் அவன் மீட்டுக்கொள்ளப்படாமற் போனால் அவனும் அவன் பிள்ளைகளுங்கூடச் சீர்திருத்தும் வருஷத்திலே நீங்கலாவார்கள்.

௫௫ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் நமக்கு வேலைக்காரர் அவர்கள் நாம் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்முடைய வேலைக்காரராயிருக்கிறார்கள். நாமுங்கள் பராபரனாகிய கர்த்தர்

௨௬. அதிகாரம்.

தேவகற்பனைகளைக் கைக்கொள்ளவினாலே இஸ்ரவேலுக்கு வரும் ஆசீர்வாதமும் அவைகளை மீறினபடியினாலே அதற்கு வரும் சாப ஆக்கினைகளும்.

நீங்கள் உங்களுக்கு * விக்கிரகங்களைச் சுரூபங்களையும் உண்டாக்காமலும் உங்களுக்குச் சிலையை நாட்டாமலும் சித்திரந்த கல்லை யதற்கு முன்பாகப் பணிய உங்கள் தேசத்தில் வைக்காமலுமிருப்பீர்களாக. ஏனெனில் நாமுங்கள் பராபரனாகிய கர்த்தர். * ௨. மோசே. ௨௰. ௪.

௨ நம்முடைய ஓய்வுநாட்களைக் கைக்கொண்டு நம்முடைய பரிசுத்தஸ்தலத்திற்கு அஞ்சியிருப்பீர்களாக. நாம் கர்த்தர்.

௩ * நீங்கள் நமது கட்டளைகளில் நடந்து நமது கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்தால், *. ௫. மோ. ௨௮, ௧. ழ

௪ நாம் ஏற்றகாலத்தில் உங்களுக்கு மழைகளைத் தருவோம். பூமி தன் பலனையும் நிலத்தின் மரங்கள் தங்கள் கனியையுங் கொடுக்கும்.

௫ போரடிப்பு உங்களுக்குத் திராட்சப்பழ அறுப்புமட்டும் வரும். திராட்சப்பழ அறுப்பு விதைப்புக்காலமட்டும் வரும். நீங்கள் உங்கள் அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்டு உங்கள் தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

௬ தேசத்திலே சமாதானங் கட்டளையிடுவோம். திகிலிக்கப் பண்ணுவாரில்லாமற் படுத்துக்கொண்டிருப்பீர்கள். துஷ்டமிருகங்களைத் தேசத்திலிராதபடிக்கு ஒழியப்பண்ணுவோம். பட்டையம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.
௪௩ ஏனென்றால் ஆமலேக்கியருங்கானானியரும் அங்கே உங்களுக்குமுன்னேயிருக்கிறார்கள். பட்டயத்தினால் விழுவீர்கள் ஏனெனில் நீங்கள்கர்த்தரைவிட்டுப்பின்வாங்கினபடியினாலே கர்த்தர் உங்களோடிருப்பதில்லையென்றான்.

௪௪ அவர்களோவென்றாற் பர்வதத்தின் கொடுமுடியிலேறத்துணிவாயேறினார்கள். ஆனாற் கர்த்தருடைய உடம்படிக்கைப்பெட்டியும் மோசேயும் பாளயத்தைவிட்டசைந்ததில்லை.

௪௫ அப்பொழுது அந்த மலைத்தேசத்திலே குடியிருக்கிற ஆமலேக்கியருங்கானானியரும் இறங்கிவந்து அவர்களைமுறியடித்து அவர்களையொற்மாமட்டுந்துரத்தி நடக்கினார்கள்.

௰௫. அதிகாரம்.

சிலபலிகளுக்கும் படைப்புகளுக்கும் அடுத்தகட்டளைகள்.

கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில். நாம் உங்களுக்குக்கொடுக்கும் உங்கள் குடியிருப்பாகிறதேசத்திலே நீங்கள்வந்து,

௩ விசேஷித்த பொருத்தனைக்காகிலும் உச்சாயமனதினாலாகிலும் உங்கள்பண்டிகைகளிலே செலுத்துவதற்காகிலுங் கர்த்தருக்கு மாடுகளிலாவது ஆடுகளிலாவது சர்வாங்கதகனபலியையாவது வேறேருபலியைக்கர்த்தருக்காற்றிய வாசனையாகுந் தகனமாகப்பலியிடும்பொழுது,

௪ தன்காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறவன் சர்வதகனமும் அல்லதுவேறேபலியுமாகிய ஒரு ஆட்டுக்குட்டிக்காக மரக்காலிலே பத்திலொருபங்கான அங்காற்படி எண்ணெயிற்பிசைந்ததமான மெல்லியமாவின்காணிக்கையைச் செலுத்தக்கடவன்.

௫ ஊற்றுதலாகக்காற்படித்திராட்சப்பழ இரசத்தையும்படைப்பாயாக.

௬ ஆட்டுக்கிடாயாயிருந்ததேயாகில் நீ பத்திலிரண்டு பங்கானதும்படியில் மூன்றத்தொரு பங்காகிய எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லியமாவின் காணிக்கையையும்,

௭ ஹின் ஆறத்தில் ஒரு பங்காகப் படியிலே மூன்றத்தொரு பங்காகப் பிழிந்தெடுத்த திராட்சப்பழ இரசத்தையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகச் செலுத்துவாயாக.

௮ நீ விசேஷித்த பொருத்தனையைக் காத்துச் செலுத்தும்படிக்கு, அல்லது சமாதான பலிக்காகிலும் ஒரு காளையைக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனமாகவாவது வேறே பலியாகவாவது செலுத்தினாயேயாகில்,

௯ அதனோடே ஒரு எப்பாவிலே பத்திலே மூன்று பங்காக ஹின் படிப் படியிலே பாதி எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவின் காணிக்கையைப் படைப்பாயாக,

௰ ஹின் அரைப்படி திராட்சப்பழ இரசத்தையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாகப் படைக்கக்கடவாய்.

௧௧ இப்படியே ஒவ்வொரு மாட்டுக்காகவும் அல்லது ஆட்டுக்கடாவுக்காகவும் அல்லது ஆட்டுக்குட்டி வெள்ளாட்டுக்குட்டிக்காகவும் படைப்பாயாக.

௧௨ இப்படி நீங்கள் பலியிடுகிறவைகளின் கணக்கத்திற்குத் தக்கதாய் ஒவ்வொன்றுக்கும் செய்யக்கடவீர்கள்.

௧௩ தேசத்திலே பிறந்தவனெல்லாம் கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகும் தகனத்தைச் செலுத்துகையில் இப்படிச் செய்யவேண்டும்.

௧௪ ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி, அல்லது உங்களுக்குள்ளே உங்கள் தலைமுறைதோறும் குடியிருந்து கர்த்தருக்குச் சுகந்த வாசனையாகும் தகனத்தைச் செலுத்தப்போனால் நீங்கள் செய்கிறபடியே அவனும் செய்யவேண்டும்.

௧௫ சபையாகிய உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கவேண்டுமென்பது உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கக்கடவது. கர்த்தருக்கு முன்பாகப் பரதேசியும் உங்களைப்போலிருக்கவேண்டும். * ௨. மோசே. ௧௨. ௪௯.

௧௬ உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற பரதேசிக்கும் ஒரே பிரமாணமும் ஒரே நியாயமுமிருக்கக்கடவதென்று சொல் என்றார்.

௧௭ பின்னும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௧௮ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதென்றால், நான் உங்களை அழைத்துப் போகிற தேசத்திலே நீங்கள் சேர்ந்து,

௧௯ அத்தேசத்தின் அப்பத்திலே புசிக்கையில் கர்த்தருக்கு ஏறெடுக்கும் காணிக்கையைப் படைக்கக்கடவீர்கள்.

௨௰ உங்கள் பிசைந்த மாவிலே முதற்பலனாகிய ஒரு அதிரசத்தை ஏறெடுத்துப் படைப்பீர்களாக. போரடிக்கிற களத்திலே படைப்பையேறெடுக்கிறதுபோலே அதையேறெடுப்பீர்களாக.

௨௧ இப்படி உங்கள் தலைமுறைகளிலே கர்த்தருக்கு உங்கள் பிசைந்த மாவின் முதற்பலனிலே படைப்பையேறெடுத்துக் கொடுக்கக்கடவீர்கள்.

௨௨ கர்த்தர் மோசேயோடே சொன்ன இந்த எல்லாக் கற்பனைகளின்படியேயும்,

௨௩ கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த நாள்முதற்கொண்டு அவர் உங்களுக்கும் உங்கள் தலைமுறைகளுக்கும் கற்பித்த எல்லாவற்றின்படியேயும் நீங்கள் செய்யாமல் தப்பிதம்பண்ணினீர்களானால்,

௨௪ அப்பொழுது சபையின் கண்களுக்கு மறைவாக யாதொன்று தப்பிதமாகச் செய்யப்பட்டதுண்டானால் சபையெல்லாம் கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கென்று சர்வாங்கதகனமாக மாடுகளிலொரு காளையையும் முறைமை நியாயத்தின்படியிருக்கிற அதின் காணிக்கையையும் அதின் பானபலியையும் பாவம்போக்கும் பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்துவதாக.

௨௫ அதினால் ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரின் சபையனைத்திற்காகவும் பாவநிவர்த்தியையுண்டாக்கக்கடவன். அப்பொழுது அவர்களுக்கு மன்னிக்கப்படும். ஏனென்றால் அது தப்பிதமாயிருந்தது. அவர்கள் அதினிமித்தம் கர்த்தருக்குத் தகனமான தங்கள் படைப்பையும் பாவம்போக்கும் தங்கள் பலியையும் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்தார்களே.

௨௬ ஆகையால் அது இஸ்ரவேலின் புத்திரின் சபையனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற பரதேசிக்கும் மன்னிக்கப்படும். ஏனென்றால் சனத்திற்கெல்லாம் அது தப்பிதத்தினாலே வந்தது.

௨௭ ஒரே ஆத்துமா தப்பிதத்தினாலே பாவஞ்செய்ததேயாகில் ஒருவயதான வெள்ளாட்டைப் பாவம்போக்கும் பலியாகச் செலுத்துவானாக.

௨௮ அப்பொழுது கர்த்தருக்கு முன்பாக அவன் பாவத்தை நீக்கும்படிக்கு ஆசாரியன் தப்பிதத்தினாலே பாவஞ்செய்த அந்த ஆத்துமாவுக்காகப் பாவநிவர்த்தியையுண்டாக்கக்கடவன். அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

௨௯ தப்பிதஞ்செய்தவனுக்காக இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்குகிற பரதேசிக்கும் ஏக நியாயப்பிரமாணமிருப்பதாக.

௩௦ ஆனால் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் பரதேசிகளிலாகிலுஞ்சரி. எந்த ஆத்துமம் துணிகரமாக யாதொன்று

செய்தாரே? அவன் கர்த்தரைத் தூஷணித்தான். அந்த ஆத்துமா தன் சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டுபோகவேண்டும்.

௩௧ ஏனெனில் கர்த்தரின் வார்த்தையை அசட்டைபண்ணி அவர் கற்பனையை முறித்துப்போட்டான். அப்படிக்கொத்த ஆத்துமா அறுப்புண்கவே அறுப்புண்டுபோக வேண்டும். அவன் அக்கிரமம் அவன்மேலிருக்குமென்று சொல்லென்றார்.

ஓய்வுநாளைப் பரிசுத்தக்கொலைச் சலாக்கின ஒருவனைக் கல்லெறிந்தது.

௩௨ இஸ்ரேவேலின் புத்திரர் வனாந்தரத்திலிருக்கையில் ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்குகிற ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார்கள்.

௩௩ அவனை விறகுகளைப் பொறுக்குகிறவனாகக் கண்டுபிடித்தவர்கள் அவனை மோசே ஆரோன் என்றவர்களண்டைக்கும் சபையனைத்தண்டைக்கும் கொண்டுவந்தார்கள்.

௩௪ * அவனுக்குச் செய்ய வேண்டியதென்னவென்று திட்டமான உத்தரவில்லாதபடியினாலே அவனைக் காவலிலே வைத்தார்கள். * ௩. மோசே. ௨௪, ௰௨.

௩௫ கர்த்தர் மோசேயுடனே அந்த மனிதன் கொலையுண்கவே கொலையுண்கக்கடவன். சபையெல்லாம் அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கல்லெறிவதாகவென்றார்.

௩௬ அப்பொழுது சபையெல்லாங் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய்க் கல்லெறிந்தார்கள். அவன் செத்தான்.

தேவகற்பனைகளை நினைக்கும் எத்தனத்தைப் பர்ப்பரன் கட்டளையிட்டது.

௩௭ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது.

௩௮ நீ இஸ்ரேவேல் புத்திரரோடே பேசி அவர்கள் தங்கள் தலைமுறைகளிலே தங்களுக்கு * தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கலுண்டாக்கி ஓரத்தின் தொங்கலிலே நீலமான கயிற்றைப்போட வேண்டுமென்று அவர்களோடே சொல்லு.
* ௫. மோசே. ௬௨, ௰௨. மத்தேயு. ௨௩, ௫.

௩௯ நீங்கள் பின்பற்றிச் சோரம்போகிற உங்கள் இருதயமும் உங்கள் கண்களும்போகும் போக்கைப் பார்க்கப் போகாமல் அந்தக் கயிற்றைப்பார்த்துக் கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்யும்படிக்கு அது அந்தத் தொங்கலில் உங்களுக்கிருக்கவேண்டும்.

௪௰ நீங்கள் நம்முடைய கற்பனைகளையெல்லாம் நினைத்து அவைகளின்படியே செய்து உங்கள் பர்ப்பரனுக்குப் பரிசுத்தராயிருக்கும்படிக்கேயாம்.

௪௧ நாம் உங்களுக்குப் பர்ப்பரனாயிருக்கும்படிக்கு உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பர்ப்பரனாகிய கர்த்தர். நாம் உங்கள் பர்ப்பரனாகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

௰௬. அதிகாரம்.

கோருக்தாத்தான் அபீராமென்றவர்களின் கூட்டம் மண்ணினால் விழுங்கப்பட்டதும் அக்கினியும்.

லேவிக்குப் பிறந்த கேகாத்திற்குப் பிறந்த இத்செயாரின் மகன் * கோரேகாவென்றால் எலியாவின் குமாரராகிய தாத்தானையும் அபீராமையும் ரூபெனின் புத்திரரிற் பேலேத்தின் குமாரனாகிய ஓனையும் கூட்டிக்கொண்டு, * ௨௬, ௯ யூதா. ௰௧.

௨ இஸ்ரேவேல்புத்திரரிற் சபைக்குத் தலைவருஞ் சபையிலே அழைக்கப்பட்டவர்களும் பேர்பெற்ற மனிதருமாகிய இருநூற்றைம்பதுபேரோடுங் கூடமோசேக்கு முன்பாக எழும்பி,

௩ மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய்க் கூட்டங்கூடி அவர்களுடனே, நீங்கள் மிஞ்சிச்செய்கிறீர்கள். ஏனென்றால் சபையாரெல்லாரும் பரிசுத்தமானவர்கள். கர்த்தர் அவர்கள் நடுவிலிருக்கிறாரே; பின்னையேன் உங்களைக் கர்த்தருடைய சபைக்குமேலே உயர்த்துகிறீர்களென்றார்கள்?

௪ மோசே இதைக் கேட்டபொழுது * முகங்குப்புற விழுந்தான். * ௰௪, ௫.

௫ பிற்பாடு அவன் கோருக்கோடும் அவனுடைய எல்லாக் கூட்டத்தோடும் பேசிச் சொன்னதாவது. நாளைக்குக் கர்த்தர் தம்முடையவர் இன்னாரென்றும் தம்மண்டையிலே சேர்த்தாம் கட்டளையிட்ட பரிசுத்தவானின்னானென்றும் அறியப்பண்ணுவார். அப்பொழுது எவனைத் தெரிந்துகொள்ளுவாரோ அவனைத் தம்மண்டை சேர்க்கக்கட்டளையிடுவார்.

௬ ஒன்று செய்யுங்கள். கோருகே! அவனுடைய எல்லாக் கூட்டமுமானவர்களே! நீங்கள் தூபக்கலசங்களை எடுத்துக்கொண்டு,

௭ நாளைக்கு அவைகளில் அக்கினிபோட்டு அவைகளிற் கர்த்தருக்கு முன்பாகத் தூபவர்க்கம்போடுங்கள். அப்பொழுது கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்ளுவாரோ அவன் பரிசுத்தவானாயிருப்பான். லேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்களென்றான்.

௮ பின்னையும் மோசே கோருகோடே சொன்னதாவது. லேவியின் புத்திரரே! கேளுங்களேன்?

௯ கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைவேலையைச்செய்யவுஞ் சபையாரின் முன்னே அவர்களுக்காகச்சேவிக்கவும் உங்களைத்தம்மண்டையிலே சேர்ப்பதற்கும் இஸ்ரவேலின் பராபரன் இஸ்ரவேல் சபையினின்று உங்களைப்பிரித்தெடுத்ததும்,

௰ அவர் உன்னையும் உன்னோடேகூட லேவியின் புத்திரராகிய உன்னுடைய சகோதரரெல்லாரையுஞ் சேர்ப்பித்ததும் உங்களுக்குக் கொஞ்சக்காரியமாய்த் தோன்றி நீங்கள் ஆசாரியப்பட்டத்தையுந் தேடுகிறீர்களோ?

௰௧ ஆகையால் நீயும் உன்கூட்டத்தார் அனைவருங் கர்த்தருக்கு விரோதமாகக் கூடினீர்கள். * ஆரோனுக்கு விரோதமாய் நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் யார்? * உ. மோசே. ௰௬, எ.

௰௨ பின்பு மோசே எலியாபின் குமாரராகிய தாத்தானையும் அபிராமையும் அழைப்பித்தான். ஆனால் அவர்கள் சொன்னதாவது: நாங்கள் வருகிறதில்லை.

௰௩ நீ எங்களைப் பாலுந் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து வனாந்தரத்திலே கொல்லும்படிக்குக் கொண்டுவந்தது கொஞ்சக்காரியமென்று சொல்லி எங்கள்மேல் அதிகாரமும் பண்ணவேண்டுமோ?

௰௪ நீ இப்படி எங்களைப் பாலுந்தேனும் ஓடுகிற தேசத்திலே கொண்டுவந்து எங்களுக்கு நிலங்களையுந் திராட்சத்தோட்டங்களையுஞ் சுதந்தரமாகக் கொடுத்தாயோ? இந்தமனிதருடைய கண்களைப் பிடுங்குவாயோ? நாங்கள் வருகிறதில்லையென்றார்கள்.

௰௫ அப்பொழுது மோசே மிகுந்த கோபமுடையவனாய்க் கர்த்தருடனே, அவர்களுடைய காணிக்கையைப் பாராதிருப்பீராக. நான் அவர்களுடையதிலொருகழுதையை எடுத்துக்கொண்டதுமில்லை அவர்களில் ஒருவனுக்குப்பொல்லாப்புச்செய்ததுமில்லையென்றான்.

௰௬ பின்பு மோசே கோருகோடே சொன்னதாவது: நீயும் உன்னுடைய எல்லாக்கூட்டத்தாருமாய் நாளைக்குக் கர்த்தருக்கு முன்பாக வந்திருங்கள். நீயும் அவர்களும் ஆரோனுமாய்த்தானே.

௰௭ நீங்கள் அவரவர் தங்கள் தூபகலசத்தை எடுத்து அவைகளின்மேல் தூபவர்க்கத்தைப்போட்டு அவரவர் தங்கள் தூபகலசங்களாகிய இருநூற்றைம்பது தூபகலசங்களைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவாருங்கள். நீயும் ஆரோனும் ஒவ்வொருவன் தன்தன் தூபகலசத்தைக் கொண்டுவாருங்களென்றான்.

௰௮ அப்படியே அவரவர் தங்கள் தூபகலசங்களை எடுத்து அவைகளில் அக்கினியையுந் தூபவர்க்கத்தையும் போட்டு ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு முன்பாக வந்து நின்றார்கள். மோசேயும் ஆரோனும் அங்கே நின்றார்கள்.

௰௯ கோருகோடேவெனில் இவர்களுக்கு விரோதமாகச் சபையையெல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாகக் கூடிவரப்பண்ணினான். அப்பொழுது * கர்த்தருடைய மகிமை சபையெல்லாருக்குங் காணப்பட்டது.

* ௰௪, ௰.

௨௰ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி,

௨௧ இந்தச்சபையினின்று பிரிந்துபோங்கள். க்ஷணப்பொழுதில் அவர்களை நிர்மூலமாக்குவேனென்றார்.

௨௨ அப்பொழுது அவர்கள் முகங்குப்புற விழுந்து சகலமாம்சத்துக்குமுள்ள ஆவிகளுக்குத் தேவனாகிய பராபரனே! ஒருமனிதன் பாவஞ்செய்யக்கொள்ள சபையெல்லாங்கள் கோபங்கொள்வீரோ? என்றார்கள்.

௨௩ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே,

௨௪ கோருக் தாத்தான் அபிராம் குடியிருக்கிறஸ்தலத்தைச் சுற்றிலுமிருந்து விலகிப்போங்களென்று சபைக்குச் சொல்லென்றார்.

௨௫ அப்பொழுது மோசே எழுந்திருந்து தாத்தான் அபிராமென்பவர்களிடத்திலே போனான். இஸ்ரவேல் மூப்பர் அவர்களுக்குப்பின்சென்றார்கள்.

௨௬ அவன் சபையுடனே, இந்த அக்கிரம மனிதருடைய எல்லாப் பாவங்களிலும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு அவர்களுடைய கூடாரங்களை விட்டு விலகி அவர்களுக்குண்டானதொன்றையுந் தொடாதேயும் போங்களென்றான்.

௨௭ அப்படியே அவர்கள் கோருக் தாத்தான் அபிராம் குடியிருக்கிறஸ்தலத்தைச் சுற்றிலுமிருந்து விலகிப்போனார்கள். தாத்தானும் அபிராமும் வெளியே வந்து தங்கள் பெண்சாதிபிள்ளைகள் குழந்தைகளோடுந் தங்கள் கூடாரங்களின் வாசற்படியிலே நின்றுகொண்டார்கள்.

௨௮ அப்பொழுது மோசே சொன்னதாவது: இந்தக்கிரியைகளையெல்லாஞ் செய்யக்கர்த்தரென்னை அனுப்பினாரென்றும் அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்லையென்றும் நீங்கள் இதினால் அறிவீர்களென்றால்,

௨௯ இவர்கள் சகலமனிதருஞ் சாகிறபடி செத்துச் சகலமனிதரும் விசாரிக்கப்படுகிறபடி விசாரிக்கப்பட்டால் கர்த்தர் என்னை அனுப்பினதில்லை.

௩௰ கர்த்தர் புதுக்காரியத்தைச் சிருஷ்டிப்பதினாலே பூமி தன்வாயைத் திறந்து அவர்

கள் உயிரோடே பாதாளத்திலிறங்க அவர்களையும் அவர்களுக்குண்டான யாவையும் விழுங்கிப்போட்டதேயானால் இந்த மனிதர் கர்த்தரைத் தூஷணித்தார்களென்கிறதை யறிவீர்களென்றான்.

௩௧ அவன் இந்த வார்த்தைகளையெல்லாஞ் சொல்லித்தீர்ந்தபொழுது சம்பவித்ததேதெனில் * அவர்கள் கீழிருந்த பூமி பிளந்து, * ௫. மோசே. ௰௧, ௬.

௩௨ பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும் அவர்கள் வீடுகளையுங் கோருக்குக்கிருந்த எல்லா மனிதரையும் எல்லா ஆஸ்தியையும் விழுங்கிப்போட்டது.

௩௩ அவர்கள் தங்களுக்குண்டான தெல்லாவற்றோடுங்கூட உயிரோடே பாதாளத்திலிறங்கினார்கள். பூமி அவர்கள் மேலே மூடிக்கொண்டது. இப்படிச் சபையின் நடுவிலிருந்தழிந்தார்கள்.

௩௪ அவர்களைச் சுற்றிலுமிருந்த இஸ்ரவேலரெல்லாரும் அவர்கள் கூக்குரலைக் கேட்டுப் பூமி நம்மையும் விழுங்குமோவென்று ஓடிப்போனார்கள்.

௩௫ அக்கினியுங் கர்த்தரிடத்திலிருந்து புறப்பட்டுத் தூபங்காட்டின இருநூற்றைம்பது பேரையும் பட்சித்தது.

௩௬ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௩௭ அக்கினிக்குள்ளகப்பட்ட தூபக்கலசங்களையெடுத்து அவைகளிலிருக்கிற அக்கினியை யப்பாலே கொட்டிப்போட ஆசாரியனான ஆரோனின் குமாரனாகிய எலெயாசாருக்குச் சொல்லு. ஏனெனில் அவைகள் பரிசுத்தமாயிறது.

௩௮ தங்கள் ஆத்துமங்களுக்கு விரோதம் பண்ணின அந்தப் பாவிகளின் தூபக்கலசங்களைப் பலிபீடத்தை மூடத்தக்க தகட்டையான தகடுகளாக அடிக்கக்கடவர்கள். ஏனெனில் அவர்கள் கர்த்தருக்கு முன்பாக அவைகளைக் கொண்டுவந்ததினாலே அவைகள் பரிசுத்தமாயிற்று. அவைகள் இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாவதாக வென்றார்.

௩௯ அப்படியே ஆசாரியனாகிய எலெயாசார் வெந்து போனவர்கள் கொண்டுவந்திருந்த வெண்கலத் தூபக்கலசங்களையெடுத்து,

௪௰ * ஆரோனின் வித்தல்லாத யாதொரு அந்நியன் கர்த்தருக்கு முன்பாகத் தூபங்காட்டுகிறதற்குச் சேராதபடிக்குங் கோருகைப்போலும் அவன் கூட்டத்தாரைப் போலுமிராதபடிக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கு நினைப்புண்டாக அவைகளைக் கர்த்தர் மோசேயைக் கொண்டு தனக்குச் சொன்னபடியே பலிபீடத்தை மூடுந் தகடுகளாக அடிப்பித்தான். * ௩, ௰.

முறுமுறுக்கிறசனத்தின் மேல் வந்த கர்த்தருடைய கோபம் நிறுத்தப்பட்டதுமான வாதை.

௪௧ மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்துக் கர்த்தரின் சனத்தைக் கொன்றுபோட்டீர்களென்றார்கள்.

௪௨ சபை மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடுகையிற் சம்பவித்ததேதென்றால் அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கு நேராக முகத்தைத் திருப்புகிறபொழுது இதோ, மேகம் அதை மூடிக் கர்த்தரின் மகிமை காணப்பட்டது.

௪௩ மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பாக வந்தார்கள்.

௪௪ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே பேசி,

௪௫ * இந்தச் சபையின் நடுவிலிருந்து விலகுங்கள். அக்ஷணத்திலே அவர்களை யழிப்பேனென்றார். அப்பொழுது முகங்குப்புற விழுந்தார்கள். * ௨௧, ௨. ௰௪, ௫.

௪௬ மோசே ஆரோனுடனே நீ தூபகலசத்தை யெடுத்துப் பலிபீடத்திலிருக்கிற அக்கினியை யதிலவைத்து அதின்மேலே தூபவர்க்கம் போட்டுச் சீக்கிரமாய்ச் சபையண்டையிலே போய் அவர்களுக்காகப் பாவநிவர்த்தியையுண்டாக்கு. ஏனெனிற் கர்த்தரின் சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது. வாதை துவக்கிற்றென்றான்.

௪௭ மோசே சொன்னபடி ஆரோன் அதை யெடுத்துக்கொண்டு சபையின் நடுவிலே ஓடினான். இதோ, சனத்திலே வாதை துவக்கியிருந்தது. அவன் தூபவர்க்கம்போட்டுச் சனத்திற்காகப் பாவநிவர்த்தியையுண்டாக்கி,

௪௮ செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான். அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.

௪௯ கோருகுடையவர்த்தமானத்தினிமித்தஞ் செத்தவர்களைத் தவிர அந்த வாதையிலே செத்தவர்கள் பதினாலாயிரத்தெழுநூறுபேர்.

௫௰ ஆரோன் ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு மோசேயண்டை திரும்பி வந்தான். ஏனெனில் வாதை நிறுத்தப்பட்டுப்போயிற்று.

௰௭. அதிகாரம்.

ஆரோனின் கோல் துளிர்த்ததினாலே கர்த்தர் அவன் ஆசாரியப்பட்டத்தைத் திடப்படுத்தினது.

கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களில் அவர்கள் பிதாக்களின் வீடுகளாகிய ஒவ்வொருவீட்டிலுடைய பிரபுவினகை

பிரபுக்களிலொருகோலைப பனனிரணடு கோலகளைவாஙகி அவனவனகோலினமேலே அவனவனபேரையெழுதி,

௩ லேவியுடையகோலினமேலேயாரோ னுடைய ஆரோனினபேரையெழுதக்கடவாய். ஏனெனில அவர்களுடையபிதாக்களின ஒவ வொருகோத்திர தலைவனுக்காக ஒவவொரு கோலிருக்கவேணடும.

௪ அவைகளை ஆசரிப்புக் கூடாரத்திலே நான உங்களைச்சந்திக்குந்தலமாகிய சாட் சிக்குமுனபாகவைக்கக்கடவாய.

௫ அப்பொழுது நாம தெரிந்தெடுத்தவனில நாம தெரிந்துகொளபவனுடைய கோல துளிர்க்கும. அப்படியே இஸ்ரவேலபுத்திர ருக்குவிரோதமாக முறுமுறுக்கிற அவர்களுடைய முறுமுறுப்புகளை நம்மைவிட்டோ யப்பணணுவோமென்றார்.

௬ அந்தப்படிமோசே இஸ்ரவேலபுத்திரரோ டேசொனனான. அப்பொழுது அவர்களுடைய பிரபுக்களெல்லாரும அவர்கள பிதாக்களின ஒவவொருவீட்டிற்கு ஒவவொருபிரபுவுக்கு ஒவவொருகோலாப பனனிரணடு கோலாகக்கொடுத்தார்கள. ஆரோனினகோலும அவர்கள கோலகளுக்குளளேயிருந்தது.

௭ அந்தக்கோலகளை மோசே சாட்சியின கூடாரத்திலே கர்த்தருக்கு முனபாக வைத்தான,

௮ அனறியுமமறு நாளிலே மோசேசாட்சியின கூடாரத்திற் குட்பிரவேசித்தபொழுது இதோ, லேவியின வீட டுக்காகவிருக்கிற ஆரோனினகோல துளிர் த்திருந்தது. அது துளிர்விட்டுப பூபூத்து வாதுமைப்பழஙகளைக்கொடுத்தது.

௯ அப்பொழுதுமோசேகர்த்தருக்குமுனபாகவிருந்தஎலலாக்கோலகளையும வெளியே இஸ்ரவேலபுத்திரரணடைக்குக் கொண்டுவந்தான. அவர்களகணடு அவரவர் தஙகள கோலவாஙகிக கொணடார்கள.

௰ அப்பொழுதுகர்த்தர் மோசேயுடனே ஆரோனினகோல கலகக்காரரான புத்திரருக்கடையாளமாகக்காக்கப்படத் அதை திரும்பச்சாட்சிக்குமுனபாகக் கொணடு போய்வைத்து இப்படியே அவர்களசாவாதபடிக்கு அவர்களமுறுமுறுப்புகளை நம மைவிட்டொழியப்பணணெனறார். * எபிரே ௯, ௪.

௧௧ கர்த்தர் தனக்குக்கறபித்த அந்தப படியேமோசேசெய்தான.

௧௨ அப்பொழுது இஸ்ரவேல புத்திரர் மோசேயுடனே இதோ, மாணடு அழிந்து போகிறோம. நாஙகளெலலாரும அழிந்து போகிறோம.

௧௩ கர்த்தரின வாசஸதலத்திற்குச்சேர்வேறெவனெலலாருஞசாகிறான. நாஙகள மாணடுபோகிறதினாலே சரியாக வேணடுமோவெனறார்கள.

௰அ. அதிகாரம்.

ஆசாரியருக்கும லேவியருக்குந திட்டமபணணபபட்டவேலைகளும அவர்களபிழைப்புக்குக்கொடுத்தக்கட்டளைகளும.

பிறபாடுகர்த்தர் ஆரோனோடேசொனனதாவது: நீயும உனனோடேகூட உன குமாரரும உனதகப்பன வீட்டாரும பரிசுத்தஸதலத்தில நடக்கும அக்கிரமத்தைச்சுமப்பீர்கள. நீயும உனனோடேகூட உனகுமாரரும உஙகள ஆசாரிய ஊழியத்தில நடக்கும அக்கிரமத்தைச்சுமப்பீர்கள.

௨ உனதகப்பனுடைய லேவியின கோத்திரத்தாரான உனசகோதரரையும உனனோடேகூடியிருக்கவும உனனிடத்திலே சேவிக்கவும உனனுடனேசேர்த்துக்கொள. ஆனால நீயும உனகுமாரருங கூடச்சாட்சியின கூடாரத்திற்கு முனபாக விருக்கக்கடவீர்கள.

௩ அவர்கள உனகாவலையுங கூடாரமனைத்தினகாவலையுங காப்பார்களாக. ஆனால அவர்களும நீஙகளுங்கூடச்சாவாதபடிக்கு அவர்கள பரிசுத்தஸதலத்தின தட்டுமுட்டுகளணடைக்கும பீடத்தணடைக்குஞசேராமல,

௪ உனனோடேகூடிக்கொணடு கூடாரத்திற்கடுத்த எலலாபபணிவிடையையுஞ் செய்ய ஆசரிப்புக்கூடாரத்தினகாவலைக்காக்கக்கடவர்கள. அந்நியன உஙகளணடைச்சேரவேணடாம.

௫ இனி இஸ்ரவேலபுத்திரர்மேல கோபமவாராதபடிக்கு நீஙகளபரிசுத்தஸதலத்தினகாவலையும பலிபீடத்தினகாவலையுங காக்கக்கடவீர்கள.

௬ ஏனெனில இதோ, ஆசரிப்புக்கூடாரத்தினபணிவிடைவேலையைச்செய்யச்* கர்த்தருக்குக்கொடுக்கப்பட்ட உஙகளசகோதரராகிய லேவியரை நாம இஸ்ரவேலபுத்திரரினநடுவிலெடுத்து உஙகளுக்குக்காணிக்கையாகக்கொடுத்தோம. * ௩, ௯,

௭ ஆனால நீயும உனனோடேகூட உனகுமாரருங்கூடப்பலிபீடத்திற்குந திரைக்குட்புறத்திற்கும அடுத்த தெலலாவற்றையுஞசெய்ய உஙகள ஆசாரிய வேலையைக்காத்துச்சேவிக்கக்கடவீர்கள உஙகள ஆசாரியவேலையை உஙகளுக்குக் காணிக்கையாகக்கொடுத்தோம. சேருகிற அந்நியன கொலையுணகக்கடவனெனறார்.

௮ பினனையுங கர்த்தர் ஆரோனோடே சொனனதாவது: இதோ, இஸரவேலபுத்திரர் பரிசுத்தமபணணுகிறவைகளெலலாம ஏறெடுக்கப்படுகிற நமதுபடைப்புகளைக்காவற்காகத்தீர்களே; அவைகளையுனக்குக

கொடுத்தோம். அபிஷேகத்தினிமித்தம் அவைகளையுனக்கும் உன்குமாரருக்கும் நித்தியகட்டளையாகக் கொடுத்தோம்.

௯ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானதிலே அக்கினிக்குச் சுட்டப்படாமல் உன்னுடையதாயிருப்பதேதெனில் அவர்கள் தங்களுடைய எல்லாக் காணிக்கைகளிலும் பாவம்போக்குந் தங்களுடைய எல்லாப் பலியிலுங் குற்றம்போக்க நமக்குச் செலுத்துகிற தங்களுடைய எல்லாப் பலியிலும் படைக்கிறதெல்லாந்தானே. இது உனக்கும் உன்குமாரருக்கும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருப்பது.

௰ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்திலே யதைப் போசிப்பாயாக. ஆண்சாதியானவனெல்லாம் அதைப் போசிப்பானாக. அதுவுனக்குப் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

௰௧ இஸ்ரவேல்புத்திரர் அசைவாட்டுகிற அவர்களுடைய எல்லாக் காணிக்கைகளின் படைப்பும் உன்னுடையதாயிருக்கும். அவைகளையுனக்கும் உன்குமாரருக்கும் உன்குமாரத்திகளுக்குங்கூட நித்தியகட்டளையாகக் கொடுத்தோம். உன்வீட்டிலே சுத்தமானவர்களெல்லாரும் அதைப் போசிப்பார்களாக.

௰௨ அவர்கள் கர்த்தருக்குக் கொடுக்கும் அவர்களுடைய முதற்பலன்களாகிய மேலத்தரமான எல்லா எண்ணெயையும் மேலத்தரமான திராட்சப்பழ இரசத்தையுந் தானியத்தையும் உனக்குக் கொடுத்தோம்.

௰௩ தங்கள் தேசத்திலிருக்கிற யாவிலும் அவர்கள் கர்த்தருக்குக் கொண்டுவரும் முதற்பலன்கள் உன்னுடையதாயிருக்கும். உன்வீட்டிலே சுத்தமானவர்களெல்லாரும் அதைப் போசிப்பார்களாக.

௰௪ இஸ்ரவேலிலே * சாபத்திடானதெல்லாம் உன்னுடையதாயிருக்கும்.

* ௩. மோசே. ௨௭, ௨௮.

௰௫ மனிதரும் மிருகஜீவன்களுமான சகலமாம்சத்திலுங் கர்ப்பந்திறந்து கர்த்தருக்குச் செலுத்தப்படுகிற யாவுமுன்னுடையதாயிருக்கும். ஆனால் மனிதனிற்பிறந்த முதற்பேறை நீ மீட்கவேமீட்கச் சொல்லவேண்டும். தீட்டான மிருகஜீவனின் முதலீற்றையும் மீட்கச் சொல்லக்கடவாய்.

௰௬ மீட்கப்படுபவைகள் ஒருமாதத்திற்கதிகமாயிருந்தால் உன்மதிப்பான ஐந்து சேக்கலாலே அவைகளை மீட்கச் சொல்லுவாயாக. பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலின்கணக்காகத்தானே. அது இருபதுகேரா.

௰௭ ஆனால் மாட்டின் தலையீற்றும் ஆட்டின் தலையீற்றும் வெள்ளாட்டின் தலையீற்றும் மீட்கப்படவேண்டாம். அவைகள் பரிசுத்தம். நீ அவைகளின் இரத்தத்தைப் பீடத்தின்மேலே தெளித்து அவைகளின் கொழுப்பைக் கர்த்தருக்கு உகந்த வாசனையான தகனமாகக் கொளுத்தக்கடவாய்.

௰௮ அவைகளின் மாம்சம் அசைவாட்டும் மார்க்கண்டத்தைப்போலும் வலத்தொடையைப்போலும் உன்னுடையதாயிருக்கும்.

௰௯ இஸ்ரவேல்புத்திரர் கர்த்தருக்கேற்றுப் படைக்கிற பரிசுத்தப் படைப்புகளையெல்லாம் உனக்கும் உன்குமாரருக்கும் உன்குமாரத்திகளுக்குங்கூட நித்தியகட்டளையாகக் கொடுத்தோம். கர்த்தருக்குமுன்பாக இது உனக்கும் உன்வித்திற்குங்கூட என்றைக்குஞ்செல்லுமமாறுத உடன்படிக்கையென்றார்.

௨௰ பின்னையுங் கர்த்தர் ஆரோனோடே சொன்னதாவது. * அவர்களுடைய தேசத்தில் நீயொன்றையுஞ் சுதந்தரித்துக்கொள்ளவேண்டாம். அவர்கள் நடுவே உனக்குப் பங்குண்டாயிருக்கவும் வேண்டாம். இஸ்ரவேல்புத்திரரின் நடுவே நாமே உன்பங்கும் உன்சுதந்தரமுமானவர். * ௫. மோசே ௰௮, ௧. ௨. யோசு. ௰௩, ௩௩.

௨௰௧ பின்னையும் இதோ, லேவியின்புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைவேலையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக நாம் அவர்களுக்கு இஸ்ரவேலிலே பத்திலொருபங்கானதையெல்லாஞ் சுதந்தரமாகக் கொடுத்தோம்.

௨௰௨ இஸ்ரவேல்புத்திரர் குற்றஞ்சுமந்து சாவாதபடிக்கு இனி ஆசரிப்புக்கூடாரத்திற்குச் சேராதிருக்கக்கடவர்கள்.

௨௰௩ லேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடைவேலையைச் செய்து தங்கள் அக்கிரமத்தைச் சுமக்கக்கடவர்கள். அது அவர்களுடைய தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாயிருக்கும். அவர்கள் இஸ்ரவேல்புத்திரர் நடுவே சுதந்தரத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டாம்.

௨௰௪ ஏனெனில் இஸ்ரவேல்புத்திரர் கர்த்தருக்குப் படைப்பாகப் பத்திலேற்றுக்கும் ஒன்றை லேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தோம். ஆகையால் இஸ்ரவேல்புத்திரரின் நடுவே சுதந்தரஞ் சுதந்தரிக்கவேண்டாமென்று அவர்களுக்குச் சொன்னேனென்றார்.

௨௰௫ பின்னையுங் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨௰௬ நீ லேவியரோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில் இஸ்ரவேல்புத்திரர் கையில் வாங்குகிறதற்கு நாமுங்களுக்குங்கள் சுதந்தரமாகக் கொடுத்த பத்திலொன்றை நீங்கள் அவர்கள் கையிலே வாங்கினபொழுது அப்பத்திலொன்றின் பத்தாம் பங்கையெடுத்துக் கர்த்தருக்குப் படைப்பாகச் செலுத்துவீர்களாக.

௨௰௭ அது நீங்கள் களத்திலே தானியத்தையும் ஆலையிலே இரசத்தையும் படைப்

சுதேசத்தின் பலனைப்போல உங்களுக்கென்னப்படும்.

௨௮ இப்படியே நீங்கள் இஸ்ரவேல்புத்திரர் வசத்திலிருந்து வாங்குகிற எல்லாத் தசமபாகங்களிலுமிருந்தும் கர்த்தருக்கு ஏறெடுத்துப் படைக்கும் படைப்பை ஏறெடுத்து, அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

௨௯ உங்களுக்குக் கொடுக்கப்படுகிற எல்லாக் காணிக்கைகளிலும் கர்த்தருக்கு ஏறெடுக்கும் படைப்பை ஏறெடுத்து அவைகளில் மேலானதிலெல்லாம் அதின் பரிசுத்த பங்கைச் செலுத்துவீர்களென்று சொல்லு.

௩௦ பின்னும் நீ அவர்களோடே சொல்லவேண்டியதென்னவென்றால்: நீங்கள் அதிலே மேலானதை ஏறெடுத்துச் செலுத்தும்போது அது லேவியர்க்குக் களத்தின் பலனைப்போலும் ஆலையின் பலனைப்போலும் எண்ணப்படும்.

௩௧ அதை நீங்களும் உங்கள் வீட்டாரும் எவ்விடத்திலும் புசிக்கலாம்; ஏனெனில் அது நீங்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் செய்யும் பணிவிடைக்கான உங்கள் சம்பளம்.

௩௨ இப்படி அதிலே மேலானதை ஏறெடுத்துச் செலுத்தினீர்களானால் நீங்கள் அதினிமித்தம் பாவஞ்சுமக்காமலும், இஸ்ரவேல்புத்திரரின் பரிசுத்தமானவைகளைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் சாவாமலிருப்பீர்களென்று சொல்லென்றார்.

௰௯. அதிகாரம்.

சிவப்பான கிடாரியைச் சாம்பலாக்கி, தீட்டுக் கழிக்கும் தண்ணீர் செய்ய வேண்டியது ...

௧ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது:

௨ கர்த்தர் கற்பித்த நியாயப்பிரமாணமாவது: இஸ்ரவேல்புத்திரர் பழுதற்றதும் ஊனமில்லாததும் நுகத்தடி ஏறாததுமான சிவப்பான கிடாரியை உன்னிடத்தில் கொண்டுவர அவர்களோடே சொல்லு.

௩ அதை எலெயாசார் என்னும் ஆசாரியனிடத்தில் கொடுப்பீர்களாக. அவன் அதைப் பாளயத்திற்கு வெளியே கொண்டுபோகக்கடவன். அங்கே அது அவனுக்கு முன்பாகக் கொல்லப்படுவதாக.

௪ அப்பொழுது ஆசாரியனாகிய எலெயாசார் தன் விரலினாலே அதின் இரத்தத்தில் தொட்டெடுத்து ஆசரிப்புக் கூடாரத்தின் முன்பக்கமாக * ஏழுமுறை தெளிக்கக்கடவன்.

* ௩. மோசே. ௪, ௬. ௰எ.

௫ பின்பு கிடாரியை ஒருவன் அவனுக்கு முன்பாகச் சுட்டெரிப்பானாக.

* அதின் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் சாணியுங் கூடச் சுட்டெரிக்கப்படக்கடவது.

* ௨. மோசே. ௨௯, ௰௪.

௬ அப்பொழுது ஆசாரியன் கேதுருக்கட்டையையும் ஈசோப்பையும் இரத்தச்சிவப்பு நூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடக்கடவன்.

* ௩. மோசே. ௰௪, ௬.

௭ பிறகு ஆசாரியன் தன் வஸ்திரங்களைத் தண்ணீரிலே வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி, அதின்பிறகு பாளயத்திலே வருவானாக. ஆசாரியன் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௮ அதைச் சுட்டெரித்தவனும் தன் வஸ்திரங்களைத் தண்ணீரிலே வெளுத்துத் தன் மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவிச் சாயங்காலமட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

௯ ஆனாற் சுத்தமான ஒருவன் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு பாளயத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு ஸ்தலத்திலே கொட்டிவைக்கக்கடவன். * அது தீட்டைநீக்குந் தண்ணீருக்கென்று இஸ்ரவேல்புத்திரரின் சபைக்காகக் காக்கப்படக்கடவது. அது பாவம்போக்குகின்றது.

* எபிரே. ௯, ௰௩.

௰ கிடாரியின் சாம்பலை வாரினவன் தன் வஸ்திரங்களை வெளுத்துச் சாயங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான். இது இஸ்ரவேல்புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே தங்குகிற பரதேசிக்கும் நித்திய கட்டளையாயிருப்பதாக.

௰௧ செத்துப்போன யாதொரு மனிதனுடைய பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்.

௰௨ அவன் மூன்றாம்நாளிலும் ஏழாம்நாளிலும் அதினாலே பாவம்போக்கக்கடவன். அப்பொழுது சுத்தமாயிருப்பான். மூன்றாம்நாளிலும் ஏழாம்நாளிலும் பாவம்போக்காமல் போனானாகில் சுத்தமாகான்.

௰௩ செத்த மனிதனுடைய பிரேதத்தைத் தொட்டும் பாவம்போக்காதவனெவனோ அவன் கர்த்தரின் வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்துகிறான். அந்த ஆத்துமா இஸ்ரவேலிலிராமல் அறுப்புண்டான். ஏனெனில் தீட்டை நீக்குந் தண்ணீர் அவன்மேலே தெளிக்கப்படவில்லை. அவன் தீட்டுப்பட்டிருப்பான். அவன் தீட்டு இன்னம் அவன்மேலிருக்கும்.

௰௪ கூடாரத்திலொரு மனிதன் செத்தால் அதற்கான நியாயப்பிரமாணமாவது: கூடாரத்திற்குட் பிரவேசிக்கிறவனுக்கும் கூடாரத்திலிருக்கிறவனுக்கும் எல்லாம் ஏழுநாள் தீட்டுண்டாயிருக்கும்.

௰௫ மூடிகட்டப்படாதிராமல் திறந்திருக்கிற பண்டமுமெல்லாந் தீட்டுப்பட்டிருக்கும்.

௰௬ வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது செத்தவனையாவது மனிதனெலும்பையாவது பிரேதக்குழியையாவது தொட்டவனெல்லாம் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்.

௰௭ ஆகையால் தீட்டுப்பட்டவனுக்காகப் பாவம்போக்குந் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சமெடுத்து ஒரு பாத்திரத்திலே போட்டு அதின்மேலே சுர்ப்புத்தண்ணீர் வார்க்கவேண்டும்.

௰௮ பிற்பாடு சுத்தமான ஒருவன் ஒரு ஈசோப்பை யெடுத்துக்கொண்டு அந்தத் தண்ணீரிலே தோய்த்துக் கூடாரத்தின்மேலும் அங்குள்ள சகல பண்டம்பாடிகள்மேலும் அங்கேயிருக்கிற ஆத்துமாக்கள்மேலும் அல்லாமல் வெட்டுண்டவனையாகிலும் எலும்பையாகிலும் செத்தவனையாகிலும் பிரேதக்குழியையாகிலுந் தொட்டவன்மேலுந் தெளிக்கக்கடவன்.

௰௯ சுத்தமாயிருக்கிற ஒருவன் தீட்டுப்பட்டவன்மேல் மூன்றாம்நாளிலும் ஏழாம் நாளிலுந் தெளித்து இப்படி ஏழாம்நாளிலே அவனுடைய பாவத்தைப் போக்கக்கடவன். இவன் தன் வஸ்திரங்களைத் தோய்த்துத் தண்ணீரிலே முழுகிச் சாயங்காலத்திலே சுத்தமாயிருப்பான்.

௨௰ தீட்டுப்பட்டிருந்தும் பாவம்போக்காதவனோ அந்த ஆத்துமாவோவெனிற் சபையிலிராதபடிக்கு அறுப்புண்பான். ஏனெனிற் கர்த்தரின் பரிசுத்தஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான். தீட்டை நீக்குந் தண்ணீர் அவன்மேலே தெளிக்கப்பட்டதில்லை. அவன் தீட்டுப்பட்டிருக்கிறான்.

௨௧ இது அவர்களுக்கு நித்தியகட்டளையாயிருக்கக்கடவது. தீட்டை நீக்குந் தண்ணீரைத் தெளித்தவனுந் தன்வஸ்திரங்களைத் தோய்க்கக்கடவன். தீட்டைநீக்குந் தண்ணீரைத் தொட்டவன் சாயங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பான்.

௨௨ தீட்டுப்பட்டிருக்கிறவன் தொடுகிறதெல்லாந் தீட்டுப்படும். அதைத்தொடுகிற ஆத்துமாவுஞ் சாயங்காலமட்டுந் தீட்டுப்பட்டிருப்பாமென்றார்.

௨௰. அதிகாரம்.

மிரியாம் மரித்ததும் கல்மலை சனத்திற்குத் தண்ணீர் கொடுத்ததும்.

இஸ்ரவேல் புத்திரரான சபையெல்லாம் முதலாம் மாதத்திலே சீன் வனாந்தரத்திலே வந்தது. அங்கே சனங் காதேசிலே தங்கித் தரித்தது. அங்கே மிரியாம் மரணமடைந்து அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்.

௨ சனத்திற்குத் தண்ணீரில்லாதிருந்தது. அப்பொழுது * மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய்க் கூட்டங் கூடினார்கள்.

* ௨. மோசே. ௰௭, ௨.

௩ சனம் மோசேயோடே வாக்குவாதம்பண்ணிச் சொன்னதாவது. எங்கள் சகோதரர் கர்த்தருக்கு முன்பாக மாண்டபொழுது நாங்கள் மாண்டுபோமலேதாவில்லை.

௪ நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகத்தக்கதாக நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்ததென்ன?

௫ விதைப்பும் அத்திமரமுந் திராட்சச்செடியும் மாதளஞ்செடியுங் குடிக்கத் தண்ணீருமில்லாத இந்த ஆகாத இடத்திற்கு எங்களைக் கொண்டுவரும்படிக்கு நீங்கள் எங்களை எகிப்திலிருந்து ஏன் வரப்பண்ணினதென்னவென்றார்கள்.

௬ அப்பொழுது மோசேயும் ஆரோனுஞ் சபைக்கு முன்பாக இருந்து ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்குப்போய் முகங்குப்புற விழுந்தார்கள். * அப்பொழுது கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது.

* ௰௪, ௰.

௭ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௮ நீ கோலை யெடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனுஞ் சபையைக் கூட்டி அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கல்மலையோடே பேசுங்கள். அப்பொழுது அது தன் தண்ணீரைக் கொடுக்கும். இப்படி நீ அவர்களுக்குக் கல்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணிச் சபைக்கும் அவர்கள் மிருகங்களுக்குங் குடிக்கக்கொடுப்பாயா வென்றார்.

௯ அப்பொழுது மோசே கர்த்தருடைய சமுகத்திலிருக்கிற கோலை அவர் தனக்குக் கற்பித்தபடியே யெடுத்துக்கொண்டான்.

௰ மோசேயும் ஆரோனுஞ் சபையைக் கல்மலைக்கு முன்பாகக் கூட்டினார்கள். அப்பொழுது மோசே அவர்களுடனே, கலகக்காரரே! கேளுங்களேன்? உங்களுக்கு இந்தக் கல்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோவென்று சொல்லி,

௰௧ தன் கையையோங்கிக் கல்மலையைத் தன் கோலினால் இரண்டுமுறை யடித்தான். அப்பொழுது பரிபூரணமான தண்ணீர் புறப்பட்டதினாலே சபையும் அவர்கள் மிருகங்களுங் குடித்தது.

௰௨ கர்த்தரோவெனில் மோசேயோடும் ஆரோனோடுஞ் சொன்னதாவது. * நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம்பண்ணும்படிக்கு நீங்கள் என்மேல் விசுவாசமாயிராதேபோனபடியினாலே நீங்கள் இந்தச் சபையை நான் அவர்களுக்குக் கொடுக்கிற தேசத்திற்குக் கொண்டுபோவதில்லையென்றார். * ௫. மோ. ௧, ௩௭.

௰௩ இவைகள் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடே வாக்குவாதம்பண்ணினதும் அ...

நீர்களுக்குப் பிரசித்தம் விளங்கினதுமான பேர்ப்டாவின் தண்ணீர்கள்.

தங்கள் தேசத்து வழியாய்க் கடந்துபோக ஏதோமியர் இஸ்ரவேலருக்குத் தாங்கொடாமற்போனது.

௧௪ பிறபாடு மோசே காதேசிலிருந்து ஏதோமின் இராசாவண்டைக்குத் தூதரை அனுப்பிச் சொல்லச் சொன்னதாவது,

௧௫ எங்கள் பிதாக்கள் எசிப்திலேபோயினார்கள். நாங்கள் எசிப்திலே நீடியநாளாயிருந்தோம். எசிப்தியர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதினாலே எங்களுக்கு வந்த பிரயாசத்தையெல்லாம் நீ அறிந்திருக்கிறாய்.

௧௬ கர்த்தரை நோக்கி நாங்கள் கூப்பிட்டபோது அவர் எங்கள் சத்தத்தைக் கேட்டு ஒரு தூதனையனுப்பி எங்களை எசிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். இப்பொழுதோ நாங்கள் உன் கடைசியெல்லைக்கடுத்த காதேஸ் பட்டணத்திலிருக்கிறோம்.

௧௭ நாங்கள் உன் தேசத்து வழியாய்க் கடந்துபோகலாமோ? நாங்கள் வயல்வெளிகள் வழியாய் அலைந்து திரியாமல் தோட்டங்கள் வழியாய்ப் போகாமலும் துரவுத் தண்ணீரைக் குடியாமலும் இராசபாதையாய்ப்போய் உன் எல்லையைக் கடந்திருக்குமட்டும் வலது இடதுபுறமாகச் சாயாதிருப்போமென்று உன் சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லியனுப்புகிறானென்று சொல்லச்சொன்னான்.

௧௮ ஏதோமோவெனில் நீ என்வழியாய்க் கடந்துபோகவேண்டாம் மாறாடிப் பட்டயத்தோடே யுனக்கெதிராகப் புறப்படுவேனென்று அவனுக்குச் சொல்லச் சொன்னான்.

௧௯ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சனங்கள் நடப்பான வழியிலே யேறிப்போவோம். நாங்களும் எங்களுமிருக்கிறவைகளும் உன் தண்ணீரிலே குடித்தால் அதின் விலைக்கிரயத்தைக் கொடுப்போம். கால்நடையாய்த்தானே கடந்துபோவோம், வேறொன்றும் வேண்டாமென்றார்கள்.

௨௦ ஏதோமோவென்றால், நீ கடந்துபோகவேண்டாமென்று சொல்லி வெகுசனத்தோடும் பலத்தகையோடும் அவர்களுக்கெதிராகப் புறப்பட்டு,

௨௧ தன் எல்லைவழியாய்க் கடந்துபோக இஸ்ரவேலுக்குத் தாங்கொடாமற்போனான். ஆகையால் இஸ்ரவேல் அவனை விட்டு விலகிற்று.

௨௨ இஸ்ரவேல் புத்திரரான சபையெல்லாம் காதேசை விட்டுப் பயணம்பண்ணி, ஓர் என்ற பர்வதத்திற்கு வந்தது.

ஆரோன் மரித்தது.

௨௩ ஏதோம் தேசத்தின் எல்லைக்கருகான ஓர் என்ற பர்வதத்திலே கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது,

௨௪ ஆரோன் தன் சனத்தாரோடே சேர்த்துக்கொள்ளப்படுவான். ஏனெனில் மேரிபாவின் தண்ணீர்கள் காரியத்திலே நீங்கள் நமது வாக்குக்குக் கீழ்ப்படியாமற் போனபடியினாலே அவன் நாம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்திலே வருவதில்லை.

௨௫ நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையுங் கூட்டிக்கொண்டு அவர்களை ஓர் என்ற பர்வதத்திலேறப்பண்ணி,

௨௬ ஆரோன் உடுத்திருக்கிற அவன் வஸ்திரங்களைக் கழற்றி அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவாயாக. ஏனெனில் ஆரோன் சேர்த்துக்கொள்ளப்பட்டு அங்கே மரிப்பானென்றார்.

௨௭ கர்த்தர் கற்பித்தபடியே மோசே செய்தான். சபையெல்லாம் பார்க்க அவர்கள் ஓர் என்ற பர்வதத்திலேறினார்கள்.

௨௮ அங்கே மோசே ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களைக் கழற்றி அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்குடுத்தினான். அப்பொழுது ஆரோன் அங்கே பர்வதத்தின் கொடுமுடியிலே மரித்தான். பிறபாடு மோசேயும் எலெயாசாரும் பர்வதத்திலிருந்திறங்கிவந்தார்கள்.

௨௯ ஆரோன் செத்துப்போனானென்று சபையெல்லாங் கண்டபொழுது இஸ்ரவேல் வீட்டாரெல்லாரும் ஆரோனுக்காக முப்பது நாள் அழுதுகொண்டிருந்தார்கள்.

உ௧. அதிகாரம்.

காநானியரை மேற்கொண்ட முதற்செயம்.

வேவுகாரர் காண்பித்த வழியாய் இஸ்ரவேலர் வருகிறதைத் தெற்கேவாசம்பண்ணுகிற ஆராதின் இராசாவாகிய காநானியன் கேட்டபொழுது அவன் இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி அவர்களிற் சிலரைச் சிறைபிடித்துக் கொண்டுபோனான்.

௨ அப்பொழுது இஸ்ரவேல் தேவரீர் அந்தச் சனத்தை யென்கையிலொப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால் அவர்களுடைய பட்டணங்களைச் சங்காரம்பண்ணுவேனென்று இஸ்ரவேல் கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணினான்.

௩ கர்த்தர் இஸ்ரவேலின் சத்தத்தைக் கேட்டுக் காநானியனை யொப்புக்கொடுத்தார். அப்பொழுது அவர்களையும் அவர்கள் பட்டணங்களையுஞ் சங்காரம்பண்ணி அவ்விடத்திற்கு ஓர்மாவென்று பேரிட்டார்கள்.

கொள்ளிவாய்ச் சர்ப்பங்களாற் கடிக்கப்பட்டவர்களுக்காக வெண்கலச் சர்ப்பம் ஒரு கம்பத்தில் உயர்த்தப்பட்டது.

௪ அவர்கள் ஏதோம்தேசத்தைச் சுற்றிப்போகும்படிக்கு ஓரென்ற பர்வதத்தை விட்டு நாணற்சமுத்திரத்தின் வழியாய்ப் பயணம் பண்ணினார்கள். அந்த வழியிலே ஜனத்தின் ஆத்துமம் விசனமடைந்தது.

௫ ஜனம் பராபரனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படிக்கு நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்தே நீர் வரப்பண்ணினதென்ன? ஏனென்றால் இங்கே அப்பமுமில்லை, தண்ணீருமில்லை. * அற்பமான இந்த அப்பம் எங்கள் ஆத்துமத்திற்கு வெறுப்பாயிருக்கின்றதென்றார்கள். * ௰௧, ௬.

௬ அப்பொழுது கர்த்தர் * கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனத்திற்குள் அனுப்பினார். அவைகள் ஜனத்தைக் கடித்ததினாலே இஸ்ரவேலில் வெகு ஜனஞ் செத்தது.

* ௧. கொரி. ௰, ௯.

௭ அப்பொழுது ஜனம் மோசேயண்டைக்கு வந்து: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினாலே பாவஞ்செய்தோம். சர்ப்பங்களை யெங்களைவிட்டகற்றக் கர்த்தரை விண்ணப்பம் பண்ணுமென்றார்கள். மோசே ஜனத்திற்காக விண்ணப்பம் பண்ணினான்.

௮ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே: * நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் ரூபத்தையுனக்குண்டாக்கி அதையொரு கம்பத்தின்மேலே தூக்கிவை. அப்பொழுது சம்பவிப்பதேனிற் கடிக்கப்பட்டு அதை நோக்கிப் பார்க்கிறவனெல்லாம் பிழைப்பானென்றார். * யோவா. ௩, ௰௪.

௯ அப்பொழுது மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தையுண்டாக்கி அதையொரு கம்பத்தின்மேலே தூக்கிவைத்தான். சம்பவித்ததெனிலொருவனை யொருசர்ப்பங் கடித்தபொழுது அவனந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்.

இஸ்ரவேல் பண்ணின சில பயணங்கள்.

௰ இஸ்ரவேல் புத்திரர் பயணப்பட்டுப் போய் ஓபோத்திற் பாளயமிறங்கினார்கள்.

௰௧ அவர்கள் ஓபோத்திலிருந்து பயணப்பட்டுப்போய்ச் சூரியோதயபக்கத்திற்கு நேராய் மோவாபுக்கெதிரான வனாந்தரத்திலிருக்கிற அபாரீமின் மேடுகளிலே பாளயமிறங்கினார்கள்.

௰௨ அங்கேயிருந்து பயணப்பட்டுப்போய்ச் சாரேத்பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள்.

௰௩ அங்கேயிருந்து பயணப்பட்டுப்போய் எமோரியரின் எல்லையிலிருந்து வருகிறதும வனாந்தரத்திலோடுகிறதுமான அர்னோன் ஆற்றுக்கு இப்புறம் பாளயமிறங்கினார்கள். ஏனெனில் அர்னோன் மோவாபுக்கும் எமோரியருக்கும் நடுவேயிருக்கிற மோவாபின் எல்லை.

௰௪ ஆகையாற் சூப்பாவிலிருக்கிறவாகேபும் அர்னோனின் ஆற்றுக்கால்களும்,

௰௫ ஆரென்ற வாசஸ்தலத்திற்குத் திரும்பியோடுகிற ஆற்றுக்கால்களின் ஓட்டமும் மோவாபின் எல்லையோடேயிருக்கிறதென்று கர்த்தருடைய யுத்தங்களின் புஸ்தகத்திலெழுதியிருக்கின்றது.

௰௬ அங்கேயிருந்து பேயேருக்கு வந்தார்கள். ஜனத்தைக் கூட்டு அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்போமென்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்றிருக்கிற ஸ்தலம் அதுதான்.

௰௭ அப்பொழுது இஸ்ரவேல் பாடின பாட்டாவது: ஊற்றுத் தண்ணீரே! பொங்கிவா. அதினிமித்தம் பாடுவோம் வாருங்கள்.

௰௮ நியாயங் கற்பிக்கிறவனோடே கூடப் பிரபுக்கள் தங்கள் ஊன்றுகோல்களைப் பிடித்துக்கொண்டிருந்து இந்தத் துரவை வெட்டுவித்தார்கள். ஜனத்திலே மேன்மையானவர்கள் அதைத் தோண்டினார்களென்று பாடினார்கள். அந்த வனாந்தரத்திலிருந்து மாத்தானாவுக்கும்,

௰௯ மாத்தானாவிலிருந்து நகாலியேலுக்கும், நகாலியேலிலிருந்து பாமோத்திற்கும்,

௨௰ பாமோத்திலிருந்து மோவாபின் வெளியிலிருக்கிறதும் வனாந்தரத்திற்கெதிராயிருக்கிற பிஸ்காவின் கொடிமுடிக்கடுத்ததுமான பள்ளத்தாக்குக்கும் வந்தார்கள்.

எமோரியர் தேசத்தையும் பாசான் தேசத்தையும் இஸ்ரவேல் கட்டிக்கொண்டது.

௨௧ அப்பொழுது இஸ்ரவேல் எமோரியரின் இராசாவாகிய சீகோனண்டைக்குத் தாதுபதிகளையனுப்பி,

௨௨ உன் தேசத்து வழியாய் நான் கடந்துபோகட்டும். நாங்கள் வயல்களிலுந் திராட்சத் தோட்டங்களிலுஞ் சாயாமலும் துரவுகளின் தண்ணீரைக் குடியாமலும் உன் எல்லையைக் கடந்து தீருமட்டும் இராசபாதையாய் நடந்துபோவோமென்று சொல்லச்சொன்னார்கள்.

௨௩ சீகோனோவென்றால் தன் எல்லை வழியாய்க் கடந்துபோக இஸ்ரவேலுக்கு உத்தரங்கொடாமல் தன் ஜனத்தையெல்லாங் கூட்டி இஸ்ரவேலுக்கெதிராய் வனாந்தரத்திலே புறப்பட்டு யாகசாவுக்கு வந்து இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினான்.

௨௪ * ஆனால் இஸ்ரவேல் அவனைப் பட்டயக் கருக்கினாலே வெட்டி அர்னோன்த

[...]போகுமட்டுமே மோவாபுக்குள்ளிருந்த தேசமெல்லாம் அவனைத் தோற்கடித்துக் கொண்டார்கள். ஏனெனில் அம்மோன் புத்திரரின் எல்லை பலத்ததாயிருந்தது. * [illegible]

௨௫ இஸ்ரவேல் அந்தப் பட்டணங்களை யெல்லாம்பிடித்து எமோரியருடைய எல்லாப்பட்டணங்களாகிய எஸ்போனிலும் அதினுடைய எல்லா ஊர்களிலும் இருந்தார்கள்.

௨௬ ஏனெனில் எஸ்போன் எமோரியரின் ராஜாவாகிய சீகோனின் பட்டணமாயிருந்தது. அவன் முன்னே மோவாபின் முந்தின ராசாவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி அர்னோன்மட்டுமிருந்த அவன் தேசத்தையெல்லாம் அவன் கையிலிருந்து பிடித்துக்கொண்டிருந்தான்.

௨௭ ஆகையால் பழமொழிக்காரர் சொன்னது: எஸ்போனுக்கு வாருங்கள். சீகோனின் பட்டணம் கெட்டியாய்க் கட்டப்படுவதாக.

௨௮ ஏனெனில் எஸ்போனிலிருந்து அக்கினி சீகோனின் பட்டணத்திலிருந்து சுவாலையும் புறப்பட்டு மோவாபியரின் ஆரான பட்டணத்தையும் அர்னோனுடைய மேடுகளின் [...]களையும் பட்சித்தது.

௨௯ மோவாபே! உனக்கையோ. காமோஸ் தேவனின் சனமே! நீ கெட்டாய். தப்பியோடின தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் எமோரியரின் ராசாவாகிய சீகோனுக்குச் சிறைகளாக ஒப்புக்கொடுத்தது.

௩௰ அவர்களை எய்துபோட்டோம். எஸ்போன் பட்டணம் தீபோனூர்மட்டுங் கெட்டுப்போயிற்று. மேதேபாமட்டும் ஆண்டிருந்த நோப்பாப் பட்டணம் பரியந்தம் அவர்களைப் பாழாக்கடித்தோமென்பார்கள்.

௩௧ அப்படியே இஸ்ரவேல் எமோரியரின் தேசத்திலே குடியிருந்தது.

௩௨ பிறபாடு மோசே யாசேசேர் பட்டணத்தை வேவுபார்க்கிறவர்களை யனுப்பினான். அதின் ஊர்களைக் கட்டிக்கொண்டு அங்கேயிருந்த எமோரியரைத் துரத்திவிட்டார்கள்.

௩௩ பிறகு பாசானுக்குப்போகிற வழியாய்த் திரும்பிக்கொண்டு ஏறிப்போனார்கள். அப்பொழுது பாசான் ராசாவாகிய ஓகு அவனுடைய எல்லாச்சனமுங்கூட அவர்களுக்கெதிராக யுத்தம்பண்ணும்படிக்கு எத்ரேயிக்குப் புறப்பட்டுவந்தார்கள்.

௩௪ கர்த்தர் மோசேயுடனே, அவனுக்குப் பயப்படாயாக. ஏனெனில் அவனையும் அவனுடைய எல்லாச்சனத்தையும் அவன் தேசத்தையும் உன்கையில் ஒப்புக்கொடுத்தோம். எஸ்போனிலே குடியிருந்த எமோரியரின் ராசாவாகிய சீகோனுக்கு நீ செய்தபடியே அவனுக்குஞ் செய்வாயென்றார்.

௩௫ அப்படியே அவனையும் அவன் குமாரரையும் அவனுடைய எல்லாச்சனத்தையும் ஒருவனும் அவனுக்கு மீதியாகாதபடிக்கு வெட்டிப்போட்டு அவன் தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள்.

௨௨. அதிகாரம்.

இஸ்ரவேலைச் சபிக்கிறதற்குப் பாலாக் பிலேயாமை யழைத்தனுப்பினது.

௧ பிற்பாடு இஸ்ரவேல் புத்திரர் பயணமாய்ப் போய் எரிகோவுக்கு எதிரே யோர்தானுக்கப்பாலே மோவாபின் சமபூமியின் வெளிகளிலே பாளயமிறங்கினார்கள்.

௨ அன்றியும் இஸ்ரவேல் எமோரியருக்குச் செய்ததையெல்லாம் சிப்போரின் குமாரனாகிய பாலாக் கண்டான்.

௩ அப்பொழுது மோவாபியர் அந்தச் சனம் ஏராளமென்று மிகவும் பயப்பட்டு துயரமடைந்து இஸ்ரவேல் புத்திரனிமித்தம் மேலும் மனமடிவாகி,

௪ மீதியானியரின் மூப்பரோடே: மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோலே இப்பொழுது இந்தக்கூட்டம் நம்மைச் சுற்றிலும் இருக்கிறதையெல்லாம் மேயுமென்றார்கள். சிப்போரின் குமாரனாகிய பாலாக் அக்காலத்திலே மோவாபின் ராசாவாயிருந்தான்.

௫ அவன் பெயோரின் குமாரனாகிய பிலேயாமை அழைப்பிக்க அவனுடைய சனப்புத்திரரின் தேசத்தில் நதியண்டையிலிருக்கிற பெத்தோருக்குத் தூதுவர்களை யனுப்பி: இதோ, ஒரு சனசதளம் எகிப்திலிருந்து புறப்பட்டுவந்தது. இதோ, பூமியின் விசாலத்தைய மூடி எனக்கெதிராயிறங்கியிருக்கின்றது.

௬ இப்பொழுதும் நீ வந்து எனக்காக அந்தச் சனத்தைச் சபியேன்; ஏனெனில் அது என்னிலும் பலத்தது. அப்பொழுது ஒருவேளை நான் அதை முறியடித்து அதைத் தேசத்திலிருந்து துரத்தலாம். ஏனென்றால் நீ ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன் நீ சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன். என்றறிவேனென்று சொல்லியனுப்பினான்.

௭ அப்படியே மோவாபின் மூப்பரும் மீதியானின் மூப்பரும் * குறிசொல்லுதலின் கூலியைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டுபோய்ப் பிலேயாமண்டைக்கு வந்து பாலாகின் வார்த்தைகளை யவனுக்குச் சொன்னார்கள். * ௨. பேது. ௨, ௰௫.

௮ அவன் அவர்களோடே, இராவைக்கிங்கே தங்கியிருங்கள். கர்த்தர் என்னோடே சொல்லும்படியே உங்களுக்கு மறுமொழி கொண்டுவருவேனென்றான். அப்படியே

வாபின பிரபுககள பீலேயாமிடததிலே தங்கியிருநதார்கள.

௯ பராபரன பீலேயாமண்டைககு வநது, உனனிடததிலிருககிற இநத மனிதரார் என்றார்.

௰ பீலேயாம பராபரனோடே சொனனதாவது. சிப்போரின குமாரனாகிய பாலாக்கென்ற மோவாபின இராசா அவர்களை யெனனண்டைககனுப்பி,

௰௧ இதோ, எகிப்திலிருநது வநதிருககிற ஒருசனசததளம பூமியின விசாலததைமூடுகிறது. இபபொழுது நீவநது எனககாக அதைச்சபி. அப்பொழுது ஒருவேளை நான அததோடே யுததமபணணி அதைத்துரத்திவிடலாமென்று சொலலச்சொனனானென்றான.

௰௨ அப்பொழுது பராபரன பீலேயாமோடே, நீ அவர்களோடே போகவேண்டாம. அந்தச்சனததைச் சபிககவுமவேண்டாம. ஏனெனில அது ஆசீர்வதிககப்பட்டதென்றார்.

௰௩ ஆகையாற் பீலேயாம காலமே யெழுநதிருநது பாலாகின பிரபுககளுடனே உங்கள்தேசததிற்குப போயவிடுங்கள. ஏனெனில உங்களோடேகூடடப்போகிறதற்குக்கர்த்தர் எனககுத்தரவுகொடுககமாட்டோமென்றொனறுசொனனான.

௰௪ அப்படியே மோவாபியருடைய பிரபுககள எழுநதுபோயப் பாலாக்கண்டைககுவநது, பீலேயாம எங்களோடேவரமாட்டோமென்றனனென்றுசொனனார்கள.

௰௫ மறுபடியும பாலாக அவர்களிலுங்கன்முள்ள அதிகமான பிரபுககளையனுப்பினான.

௰௬ அவர்கள பீலேயாமண்டைககுவநது அவனோடேசொனனதாவது. நீ யென்னண்டைககு வாமாட்டேனென்று சொல்லாயாகவேண்டாம,

௰௭ உனனை மிகவுங்கனமபணணவேபணணுவேன. நீயெனனோடே சொலவதையெல்லாஞ்செயவேன. நீவநது எனககாக அநதச்சனத்தைச் சபியேனென்றுஞ் சிப்போரின குமாரனாகிய பாலாக சொல்லச்சொனனானென்றார்கள.

௰௮ பீலேயாம பாலாககின ஊழியககாரருககுப பிரத்தியுததாரமாகச்சொனனதாவது. பாலாக எனககுததனவீடுநிறைய வெள்ளியும பொனனுங்கொடுததாலும நான சினனககாரியமானாலும பெரியககாரியமானாலுஞ் செயகிறதிலே என பராபரனாகிய கர்த்தரின கட்டளையை மீறககூடாது.

௰௯ இபபொழுதும கர்த்தர் அப்புறம எனனோடே என்ன சொலலுவாரென்கிறதை நானறியும்படிககு நீங்களும்இநத இராததிரியிலேயிங்கேயிருங்களேனென்றான.

௨௰ இரவிலே பராபரன பீலேயாமண்டைககு வநது அவனுடனே, அநதமனிதர் உனனையழைககவநதார்களானால நீயெழுநது அவர்களோடேகூடப்போ. ஆனால நானுனனோடே சொலலும வார்த்தையினபடிமாததிரம நீசெயயககடவாயென்றார்.

௨௧ பீலேயாமகாலமே யெழுநதிருநது தன கழுதையினமேலே சேணமபோட்டு மோவாபின பிரபுககளோடே கூடப்போனான.

௨௨ ஆனால அவனபோகிறதினாலேபராபரனுககுககோபமூணடது. கர்த்தரின தூதனானவர் வழியிலே அவனுககெதிராளியாக நின்றுகொணடார். அவனோவெனில தன கழுதையினமேலேயேறிப்போனான. அவனவேலைககாரர் இரணடுபேரும அவனோடிருநதார்கள.

௨௩ உருவினதமது பட்டயததைத்தமதுடையகையிலேபிடிதது வழியிலேநிறகிற கர்த்தருடைய தூதனைக்கழுதைகணடு வழியைவிட்டு வயலிலே விலகிப்போயிறறு. அதைவழிககுததிருப்பப்பீலேயாம அதையடிததான.

௨௪ அனறிக் கர்த்தருடைய தூதன இருபுறததிலுஞ்சுவரிருநத திராட்சததோட்டங்களினபாதையிலே போயநின்றார்.

௨௫ கழுதை கர்த்தருடைய தூதனைககணடு மதிலோடேயொதுங்கிப் பீலேயாமின காலைமதிலோடே நெருககிறறு. அப்பொழுது திருமபவதையடிததான.

௨௬ கர்த்தருடைய தூதன அப்புறமபோய வலதுபுறததிற்கும இடதுபுறததிற்கும விலகவழியிலலாத இடுககமானவிடததிலே நின்றுகொணடார்.

௨௭ அப்பொழுதுகழுதை கர்த்தருடைய தூதனைககணடு பீலேயாவின கீழப்படுததுககொணடது. பீலேயாமோவெனிற்கோபமூணடவனாகிக கழுதையைததடியினால அடிததான.

௨௮ அப்பொழுது கர்த்தர் * கழுதையினவாயைததிறநதார். அது பீலேயாமுடனே, நீர் எனனையிததோடே மூனறுதரம அடித்ததற்கு நானுமககென்னசெயதேனென்றது. * ௨. பேது. ௨, ௰௬. யூதா. ௰௧.

௨௯ அப்பொழுது பீலேயாம கழுதையைப்பார்தது, நீ யெனனைப பரியாசமபணணிவருகிறாய. என கையில ஒருபட்டயமிருநதாலதாவினை. இபபொழுது தானே உனனைககொன்றுபோடுவேனென்றான.

௩௰ கழுதையோவென்றால் பீலேயாமுடனே, நீ யெனனைச்சையாணடகாலமெலலாம இநநாளவரைககும நர் ஏறின கழுதை நானலலவோ? உமககு அப்படிச்செயய எப்போவாகிலும எனககுப்பழககமாயிருநததோவென்றது. அதற்கவன இலலையென்றான.

௩௧ அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார். வழியிலே நின்று உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனைக் கண்டு குனிந்து முகங்குப்புறப் பணிந்தான்.

௩௨ கர்த்தருடைய தூதனானவர் அவனோடே சொன்னதாவது: நீ உன் கழுதையை இந்த மூன்றுதரம் அடித்ததென்ன? இதோ நான் விரோதியாய்ப் புறப்பட்டுவந்தேன். ஏனெனில் இந்தவழி நமக்கு முன்பாக மாறுபாடாயிருக்கின்றது.

௩௩ கழுதையோவெனில் நம்மைக் கண்டு இந்த மூன்றுதரம் நம் முகத்தைவிட்டு விலகிற்று. நம் முகத்தைவிட்டு விலகாதிருந்ததானால் இப்பொழுது நாம் உன்னைக் கொன்றுபோட்டுக் கழுதையை உயிரோடே வைப்போமேயென்றார்.

௩௪ அப்பொழுது பிலேயாம் கர்த்தருடைய தூதனுடனே நான் பாவஞ்செய்தேன். ஏனெனில் தேவரீர் வழியிலே எனக்கெதிரே நிற்கிறதை அறியாதிருந்தேன். இப்பொழுதும் உமது பார்வைக்கு இது பொல்லாப்பாயிருந்தால் திரும்பிக்கொள்ளுவேனென்றான்.

௩௫ கர்த்தருடைய தூதன் பிலேயாமுடனே, அந்த மனிதரோடேகூடப்போ. ஆனாலும் நான் உனக்குச் சொல்லும் வசனத்தை மாத்திரமே நீ சொல்லக்கடவாயென்றார். அப்படியே பிலேயாம் பாலாகின் பிரபுக்களோடே கூடப்போனான்.

௩௬ பிலேயாம் வருகிறதைப் பாலாக் கேட்டபொழுது கடைசி எல்லையான அர்னோன் நதியின் ஓரத்திலிருக்கிற மோவாபின் பட்டணமட்டும் அவனுக்கெதிர்கொண்டு போய்,

௩௭ பிலேயாமுடனே, உன்னையழைப்பிக்கிறதற்கு உன்னண்டைக்கு ஆள் அனுப்பவேயில்லையோ? என்னண்டைக்கேன் வாராதேபோனாய்? உன்னையேற்றபிரகாரமாய்க் கனம்பண்ணமாட்டேனோ என்றான்.

௩௮ அப்பொழுது பிலேயாம் பாலாகுடனே இதோ, உம்மண்டைக்கு வந்தேன். இப்பொழுது ஏதாகிலுஞ்சொல்ல என்னாலே கூடுமோ? பராபரன் என் வாயிலே கொடுக்கும் வசனத்தையே சொல்லுவேனென்று சொல்லி,

௩௯ பாலாகுடனே கூடப்போனான். அவர்கள் கீரியாத் ஊச்சோத்திற்கு வந்தார்கள்.

௪௰ அங்கே பாலாக் ஆடுமாடுகளையடித்துப் பிலேயாமுக்கும் அவனோடிருந்த பிரபுக்களுக்கும் அனுப்பினான்.

௪௧ மறுநாட்காலமேயோவென்றால் பாலாக் பிலேயாமைக் கூட்டிக்கொண்டு அவனைப் பாகாலுடைய மேடுகளிலே ஏறப்பண்ணினான். அவ்விடத்திலிருந்து சனத்தின் கடைசிப்பாளயத்தைப் பார்த்தான்.

௨௩. அதிகாரம்.

பிலேயாம் இஸ்ரவேலைச் சபிக்க ஆசையாயிருந்தும் இரண்டுதரம் அதை ஆசீர்வதித்தது.

பிலேயாம் பாலாகுடனே நீர் எனக்கு இங்கே ஏழு பலிபீடங்களைக் கட்டி ஏழு காளையெருதையும் ஏழு ஆட்டுக்கடாவையும் இங்கே எனக்காயத்தமாக நிறுத்துமென்றான்.

௨ பிலேயாம் சொன்னபடியே பாலாக் செய்தான். பாலாகும் பிலேயாமும் ஒவ்வொரு பீடத்திலொரு காளையெருதையும் ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டார்கள்.

௩ அப்பொழுது பிலேயாம் பாலாகுடனே, உம்முடைய சர்வாங்கதகனத்தண்டையிலே நின்றிரும். நான் போகிறேன். ஒருவேளை கர்த்தர் வந்தென்னைச் சந்திப்பார். அவர் எனக்குக் காண்பிக்கிறதை யுமக்கறிவிப்பேனென்று சொல்லி ஒரு மேட்டின் மேலே போனான்.

௪ பராபரன் பிலேயாமைச் சந்தித்தார். அப்பொழுது அவருடனே, நான் ஏழு பலிபீடங்களை ஆயத்தம்பண்ணி ஒவ்வொரு பலிபீடத்திலொரு காளையெருதையும் ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டேனென்றான்.

௫ அப்பொழுது கர்த்தர் பிலேயாமின் வாயிலே வசனத்தைக் கொடுத்து, நீ பாலாக்கண்டைக்குத் திரும்பிப்போய் இன்னபடி சொல்லக்கடவாயென்றார்.

௬ அவனண்டைக்குத் திரும்பிப்போனான். இதோ, பாலாக் மோவாபுடைய சகல பிரபுக்களோடுங்கூடத் தன் சர்வாங்கதகனத்தண்டை நின்றிருந்தான்.

௭ அப்பொழுது அவன் தன் வாக்கியத்தையெடுத்துச் சொன்னதாவது. நீ வந்து எனக்காக யாக்கோபைச் சபி. நீ வந்து இஸ்ரவேலை வெறுத்துப்போடென்று மோவாபின் இராசாவாகிய பாலாக் என்னைக் கிழக்குப் பர்வதங்களிலிருக்கிற சூரியாவிலிருந்து அழைத்துவரப்பண்ணினான்.

௮ பராபரன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?

௯ ஏனெனில் நான் கல்மலைகளின் கொடுமுடியிலிருந்தவனைக் கண்டு மேடுகளிலிருந்தவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இதோ, அந்தச் சனம் சாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருக்கும்.

௰ யாக்கோபின் * தூளையும் இஸ்ரவேலுடைய காற்பங்கின் இலக்கத்தையும் எண்ணுபவனார்? என்னாத்துமம் நீதிமான்களின

மரணமாய்மரித்து என்முடிவு அவர்களுடைய முடிவைப்போலிருக்கக்கடவதென்றான்.

※ ௧. மோசே. ௨௮, ௰௪.

௰௧ அப்பொழுது பாலாக் பிலேயாமுடனே, நீ யெனக்கென்னசெய்து வருகிறாய்? என் சத்துருக்களை சபிக்க உன்னை யழைப்பித்தேன். ஆனால் இதோ, அவர்களையாசீர்வதிக்கவே ஆசீர்வதித்தா யென்றான்.

௰௨ அவன் பிரதியுத்தாரமாகக் கர்த்தர் என் வாயிலே கொடுத்ததையே சொல்ல நான் கவனமாயிருக்கவேண்டாமோ? என்றான்.

௰௩ அப்பொழுது பாலாக் அவனுடனே நீயவர்களைக் காணத்தக்கவேறொரு இடத்திற்கென்னோடே கூட நடந்து வாவேன்? அங்கேயவர்களையெல்லாங்காணாமல் அவர்களக்கடைசிப்பாளயத்தை மாத்திரங் காண்பாய். அங்கேயிருந்து எனக்காக அவர்களைச் சபியென்றுசொல்லி,

௰௪ அவனைப் பிஸ்காவின் கொடுமுடியிலிருக்கிற சோப்பீம்வெளியிலே யழைத்துக் கொண்டுபோய் ஏழு பலிபீடங்களைக் கட்டி ஒவ்வொரு பீடத்தின்மேலொரு காளையெருதையும் ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

௰௫ அவன் பாலாக்குடனே, இங்கே உம்முடைய சர்வாங்கத்தகனத்தண்டையிலே நின்றிரும். நான் அங்கே அவரைச் சந்தித்துக்கொள்ளப்போவேனென்றான்.

௰௬ கர்த்தர் பிலேயாமைச் சந்தித்து வசனத்தையவன்வாயிலேகொடுத்து, நீ பாலாக்கண்டையிலே திரும்பிப்போய் இன்னபடிச்சொல்லக்கடவாயென்றார்.

௰௭ அவனண்டையவன் வருகிறபொழுது இதோ, அவன் மோவாபின்பிரபுக்களோடே கூடத் தன்னுடைய சர்வாங்கத்தகனத்தண்டை நின்றிருந்தான். பாலாக் அவனுடனே கர்த்தர் சொன்னதென்னவென்றான்.

௰௮ அப்பொழுது அவன் தன் வாக்கியத்தையெடுத்துச் சொன்னதாவது. பாலாக்கே! எழுந்து கேளும். சிப்போரின்குமாரனே! எனக்குச்செவிகொடும்.

௰௯ ※ பராபரன் பொய்சொல்ல ஒரு மனிதனல்ல. சொன்னதும் மனஸ்தாபமாயிருக்க அவரொரு மனுஷபுத்திரனல்ல. அவர் சொல்லியுஞ் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் அதை நிறைவேற்றாதிருப்பாரோ? ※ ௧. சாமுவேல். ௰௫, ௨௯.

௨௰ இதோ, ஆசீர்வதிக்கக்கட்டளை பெற்றேன். அவர் ஆசீர்வதிக்கிறார். அதை நான் திருப்பக்கூடாது.

௨௧ யாக்கோபிலே வருத்தந்தெரிகிறதுமில்லை. இஸ்ரவேலிலே பிரயாசங்காணப்படுகிறதுமில்லை. அவர்களுடைய பராபரனாகிய கர்த்தர் அவர்களோடிருக்கிறார். இராசாவின் கெம்பீரம் அவர்களிடத்திலிருக்கின்றது.

௨௨ பராபரன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். காண்டாமிருகத்திற்கொத்தசத்துவம் அவர்களுக்கிருக்கின்றது.

௨௩ ஏனெனில் யாக்கோபுக்கு விரோதமாகத்தக்க நிமித்தம் பார்க்குதலுமில்லை. இஸ்ரவேலுக்கு விரோதமாகச் சூனியஞ்சொல்லுதலுமில்லை. பராபரன் செய்தததென்னவென்று சொல்லுங்காலத்திலே யாக்கோபையும் இஸ்ரவேலையுங் குறித்துச்சொல்லப்படும்.

௨௪ இதோ, ஜனம் கிழட்டுச்சிங்கத்தைப் போலெழும்பிச் சிங்கத்தைப்போலெழும்பும். அது எடுத்த இரையைப்பட்சித்து வெட்டுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாதிருக்குமட்டும் படுத்துக்கொள்ளாதென்றான்.

௨௫ அப்பொழுது பாலாக் பிலேயாமுடனே, நீ அதைச் சபிக்கவே சபிக்கவும் வேண்டாம். ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கவும் வேண்டாமென்றான்.

௨௬ பிலேயாம் பாலாக்குக்குப் பிரதியுத்தாரமாகக் கர்த்தர் சொல்லும்படியெல்லாஞ்செய்வேனென்று உம்மோடே நான் சொல்லவில்லையோ? என்றான்.

௨௭ அப்பொழுது பாலாக் பிலேயாமுடனே வாவேன்; வேறொரு இடத்திற்குனை யழைத்துக்கொண்டுபோவேன். நீ அங்கேயிருந்து எனக்காக அதைச்சபிக்க ஒருவேளை பராபரனுடைய பார்வைக்குச் செவ்வையாயிருக்குமென்றுசொல்லி,

௨௮ அவனை வனாந்தரத்திற்கெதிராயிருக்கிற பேயோரின் கொடுமுடிக்கழைத்துக் கொண்டுபோனான்.

௨௯ அப்பொழுது பிலேயாம் பாலாக்குடனே இங்கே எனக்கேழு பலிபீடங்களைக் கட்டி இங்கே எனக்கேழு காளையெருதுகளையும் ஏழு ஆட்டுக்கிடாவையும் ஆயத்தமாய்த் திருத்துமென்றான்.

௩௰ பிலேயாம் சொன்னபடி பாலாக் செய்தான். அப்பொழுது ஒவ்வொரு பீடத்தின்மேலொரு காளையெருதையும் ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

௨௪. அதிகாரம்.

பிலேயாம் மூன்றாந்தரம் இஸ்ரவேலை ஆசீர்வதித்தது.

இஸ்ரவேலை யாசீர்வதிக்கிறது கர்த்தரின்பார்வைக்கேற்றிருக்குமென்றதைப் பிலேயாங்கண்டபொழுதோவெனில் அவன் முந்திச்செய்துவந்ததுபோலே நிமித்தங்களைச் சந்தித்துக் கொள்ளப்போகாமல் தன் முகத்தை வனாந்தரத்திற்கு நேராக்கி[…]

௨ தன் கண்களை யேறெடுத்து இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே தங்கி[…]

னைப் பார்த்தான். அப்பொழுது பராபரனுடைய ஆவி அவன்மேல் வந்ததினால்,

௩ அவன் தன் வாக்கியத்தையெடுத்துச் சொன்னது. பேயோரின் குமாரன் பிலேயாம் சொல்லுகிறதென்ன? கண் தெளிவிக்கப்பட்ட புருஷன் சொல்லுகிறதென்ன?

௪ பராபரனுடைய வார்த்தைகளைக் கேட்டிருக்கிறவன் சர்வ வல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழவிழும்பொழுது கண்கள் திறக்கப்பட்டிருக்கிறவன் சொல்லுகிறதென்னவென்றால்,

௫ யாக்கோபே! உன் கூடாரங்களும் இஸ்ரவேலே! உன் வாசஸ்தலங்களும் எத்தனை அழகாயிருக்கின்றது.

௬ பள்ளத்தாக்குகளைப்போலும் நதியோரத்திலுள்ள தோட்டங்களைப்போலும் கர்த்தர் நாட்டின சந்தன மரங்களைப்போலும் தண்ணீரண்டையிலுள்ள கேதுருக்களைப் போலும் இருக்கின்றன.

௭ அவனுடைய தொட்டிகளிலிருந்து தண்ணீர் பாயும். அவர்களின் வித்துத் திரளான தண்ணீர்களிலிருக்கும். அவனுடைய ராசா ஆகாகைப் பார்க்கிலும் உயருவான். அவனுடைய ராச்சியம் மேன்மையடையும்.

௮ அவனை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவர் காண்டாமிருகத்தின் பெலத்தைப்போன்றவர். அவன் தன் சத்துருக்களான சாதிகளைப் பட்சித்து அவர்களுடைய எலும்புகளை நொறுக்கி அவர்களைத் தன் அம்புகளால் எய்துவிடுவான்.

௯ சிங்கத்தைப்போலவும் பெண்சிங்கத்தைப்போலவும் படுத்துக்கொண்டான். அவனை எழுப்புவார் யார்? உன்னை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், உன்னைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவனென்றான்.

௰ அப்பொழுது பாலாக் பிலேயாமின்மேல் கோபமூண்டு கையோடே கை தட்டிப் பிலேயாமோடே சொன்னதாவது. என் சத்துருக்களைச் சபிக்க உன்னை அழைத்தேன். நீ இப்போ மூன்றுதரம் அவர்களை ஆசீர்வதித்தாய்.

௰௧ இப்பொழுதும் உன்னிடத்திற்கு ஓடிப்போ. உன்னைக் கனம்பண்ணுவேனென்றேன். ஆனால் இதோ, கர்த்தர் உன்னைக் கனம்பண்ணாதபடிக்குத் தடுத்தார்.

௰௨ [illegible] பிலேயாம் பாலாக்கை நோக்கிச் சொன்னதாவது. பாலாக் தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் எனக்குக் கொடுத்தாலும் நான் என் மனதாய் நன்மையாகிலும் தீமையாகிலும் செய்யக் கர்த்தருடைய வாக்குக்கு மீறக்கூடாது. கர்த்தர் சொல்லுவதையே சொல்லுவேனென்று,

௰௩ நீர் என்னண்டைக்கனுப்பின உம்முடைய தூதுபதிகளோடும் நான் சொல்லவில்லையோ?

௰௪ இப்பொழுதும் இதோ, நான் என் சனத்தண்டைக்குப் போகிறேன். பிற்காலத்திலிந்தச் சனம் உம்முடைய சனத்துக்குச் செய்வதென்னவென்று உமக்குத் தெரியச் சொல்லுவேனென்று சொன்னான்.

அவன் அப்புறஞ் சொன்ன தீர்க்கதரிசனம்,

௰௫ அவன் தன் வாக்கியத்தையெடுத்துச் சொன்னது. பேயோரின் குமாரன் பிலேயாம் சொல்லுகிறதென்ன? கண் தெளிவிக்கப்பட்ட புருஷன் சொல்லுகிறதென்ன?

௰௬ பராபரனுடைய வார்த்தைகளைக் கேட்டு உன்னதமானவர் அளிக்கும் அறிவையறிந்து சர்வ வல்லவரின் தரிசனத்தைக் கண்டு தாழவிழுகையில் கண் திறக்கப்பட்டவன் சொல்லுகிறதென்னவென்றால்,

௰௭ அவரைக் காண்பேன். ஆனால் இப்பொழுதல்ல. அவரைப் பார்ப்பேன். ஆனால் சமீபத்திலல்ல. ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்தெழும்பி மோவாபியரின் எல்லைகளை நொறுக்கிச் சேத்புத்திரரெல்லாம் நிர்மூலமாகும்.

௰௮ ஏதோம் அவனுக்குச் சுதந்தரமாகும். சேயீர் தன் சத்துருக்களுக்குச் சுதந்தரமாய்ப் போம். இஸ்ரவேல் பெலன் செய்யும்.

௰௯ * ஆளுகிறவர் யாக்கோபிலிருந்து வந்து பட்டணங்களில் மீதியானதை அழிப்பாரென்றான். * மீகா. ௫, ௧.

௨௰ அவன் அமலேக்கைப் பார்த்துத் தன் வாக்கியத்தையெடுத்து அமலேக் சாதிகளில் முந்தியெழும்பினவன். ஆனால் அவன் பிற்சந்ததி முழுவதும் அழியுமென்றான்.

௨௧ அவன் கேனியனைப் பார்த்துத் தன் வாக்கியத்தையெடுத்து உன் வாசஸ்தலம் அரணிப்பானது. கன்மலையில் உன் கூட்டைக் கட்டிப்போட்டாய்.

௨௨ ஆகிலுங் கேனியன் அழிந்துபோவான். அசூர் உன்னைச் சிறைபிடித்துக்கொண்டுபோகுந்தனை நாட்செல்லுமென்றான்.

௨௩ பின்னும் அவன் தன் வாக்கியத்தையெடுத்து ஐயோ, இதைப் பராபரன் செய்யும்பொழுது உயிரோடிருப்பவனார்?

௨௪ கித்தீமின் கரையிலிருந்துக் கப்பல்கள் வந்து அசூரைச் சிறுமைப்படுத்தி ஏபேரையுஞ் சிறுமைப்படுத்தும், ஆனால் அவனும் அழிந்துபோவானென்றான்

௨௫ பிறகு பிலேயாம் எழுந்து புறப்பட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பினான். பாலாக்குந் தன் வழியே போனான்.

௨௫. அதிகாரம்.

மீதியானியர் இஸ்ரவேலரை வேசித்தனத்திற்கும் விக்கிரக ஆராதனைக்கும் உள்ளாக்கிக்கொண்ட சற்பனையினாலுண்டான சேதம்.

இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருந்தது. ௧ அங்கே சனம் மோவாப் குமாரத்திகளோடே வேசித்தனம்பண்ணத் துவக்கிற்று.

௨ அவர்கள் சனத்தைத் தங்கள் தேவர்களுடைய பலிகளின் விருந்துகளுக்கு அழைத்தார்கள். சனம் போய்ப் போசித்து அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டது.

* ௩௧. ௰௬.

௩ இஸ்ரவேல் பேயோர்ப்பாகாலுக்கு உடந்தையாயிற்று. ஆகையால் இஸ்ரவேலின்மேல் கர்த்தருடைய கோபமூண்டது.

௪ கர்த்தர் மோசேயுடனே, நீ சனத்தின் தலைவரையெல்லாம் கூட்டிக்கொண்டு கர்த்தருடைய கோபத்தின் உக்கிரம் திரும்ப இஸ்ரவேலைவிட்டு நீங்கும்படிக்கு அப்படிக்கொத்தவர்களைக் கர்த்தருக்காகச் சூரியனுக்கெதிரே தூக்கிப்போடென்றார்.

௫ அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாயாதிபதிகளோடே நீங்கள் அவரவர் பேயோர்ப்பாகாலுக்கு உடந்தையான உங்கள் மனிதரைக் கொன்றுபோடுங்களென்றான்.

௬ அப்பொழுது இதோ, மோசேயின் கண்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய எல்லாச் சபையின் கண்களுக்கு முன்பாகவும் இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்கு முன்பாக அழக்கொள்ளவும் இஸ்ரவேல் புத்திரரிலொருவன் ஒரு மீதியானிச் சியைத் தன் சகோதரரிடத்திலே அழைத்துக்கொண்டு வந்தான்.

௭ ஆதையாசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினேகாஸ் கண்டபொழுது அவன் நடுச்சபையிலிருந்தெழுந்து ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து,

௮ இஸ்ரவேல் மனிதன் வேசித்தனம்பண்ணும் அறையிலே அவன் பின்னாலே போய் இஸ்ரவேல் மனிதனையும் அந்த ஸ்திரீயையும் இருவரையும் ஈட்டி அவளவயிற்றில் உருவிப்போக அதினாலே குத்திப்போட்டான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரிலுண்டான வாதை நின்றுபோயிற்று.

௯ அந்த வாதையாற் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம் பேராயிருந்தார்கள்.

௰ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

௰௧ நாம் நம்முடைய எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினேகாஸ் அவர்கள் நடுவில் நமக்காகப் பத்திவைராக்கியங் காண்பித்ததினாலே இஸ்ரவேல் புத்திரர்மேலுண்டான நம்முடைய உக்கிரத்தைத் திருப்பினான்.

௰௨ ஆகையால் இதோ, நாம் அவனுக்கு நம்முடைய சமாதானத்தின் உடம்படிக்கையைக் கட்டளையிடுகிறோம்.

௰௩ அவன் தன் பராபரனுக்காகப் பத்திவைராக்கியங் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவர்த்தியுண்டாக்கினபடியினாலே அவனுக்கும் அவனுக்குப் பிற்பாடு அவன் வித்துக்கும் நித்திய ஆசாரியப்பட்டத்தின் உடம்படிக்கையுண்டாயிருக்குமென்று சொல்லென்றார்.

௰௪ மீதியானிச்சியோடே கூடக் குத்துண்டு செத்த இஸ்ரவேல் மனிதனுடைய பேர் சல்லூ குமாரன் சிம்றி, அவன் சிமெயோனியரின் தகப்பன் வீட்டிலொரு பிரபுவாயிருந்தவன்.

௰௫ குத்துண்ட மீதியான் சாதியான ஸ்திரீயின் பேர் சூரின் குமாரத்தி கஸ்பி. இவன் மீதியானியரின் தகப்பன் வீட்டாரின் சனசந்தானங்களின் தலைவனாயிருந்தான்.

௰௬ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௰௭ மீதியானியரை நெருக்கிப்பிடித்து அவர்களை வெட்டிப்போடுங்கள்.

௰௮ ஏனென்றால் பேயோரின் சம்மதியிலும் பேயோர் காரியத்தினிமித்தம் உண்டான வாதையின் நாளிலே குத்துண்ட அவர்கள் சகோதரியாகிய கஸ்பியென்ற மீதியான் பிரபுவினுடைய குமாரத்தியின் சம்மதியிலும் அவர்கள் உங்களுக்குச் செய்த தங்கள் சற்பனைகளினாலே உங்களை மோசம்போக்கி நெருக்கிப்பிடித்தார்களென்றார்.

௨௬. அதிகாரம்.

சனம் இலக்கம்பார்க்கப்பட்டது.

அந்த வாதைக்குப் பிற்பாடு சம்பவித்ததேதென்றால் கர்த்தர் மோசேயோடும் ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரோடும் சொன்னதாவது.

௨ இஸ்ரவேல் புத்திரரின் சகல சபையாரை அவர்கள் பிதாக்களுடைய வீட்டிலே இருபது வயது முதற்கொண்டிருந்த இஸ்ரவேலில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களையெல்லாந் தொகையேற்றுங்களென்றார்.

௩ அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோவுக்கெதிரே யோர்தானுக்கப்பாலே மோவாபின் சமபூமி வெளிகளிலே அவர்களோடே பேசி,

௪ கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருபது வயது முதற்கொண்டிருக்கிறவர்களை எண்ணுங்களென்றார்கள்.

௫ ரூபன் இஸ்ரவேலின் முதற்பேறானவன். அவனுடைய குமாரர் ஆனோக்கியரின் வம்சத்தப்பன் ஆனோக்கும், பல்லூவியரின் வம்சத்தப்பன் பல்லூவும்,

௬ எஸ்ரோனியரின் வம்சத்தப்பன் எஸ்ரோனும், கர்மீயரின் வம்சத்தப்பன் கர்மீயுந்தானே.

௭ இவைகளே ரூபனியரின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் நாற்பத்து மூவாயிரத்தெழுநூற்றுமுப்பதுபேர்.

௮ பல்லூவின் பிள்ளைகளிலொருவன் எலியாபென்பவன்.

௯ எலியாபின் குமாரர் நேமுவேல், தாத்தான், அபிராமென்றவர்கள். கர்த்தருக்கு விரோதமாய்ப் பிசாசனைப்பண்ணுகிற கோராகுக்கூட்டத்தாரில் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகச் சண்டைபண்ணின தாத்தானும் அபிராமுமென்ற சபையில் அழைக்கப்பட்டவர்கள் இவர்கள்தானே.

௰ பூமி தன்வாயைத்திறந்து அவர்களையும் கோராகையும் விழுங்கினதினாலும் அக்கினிதூணைய இருநூற்றைம்பதுபேரைப் பட்சித்ததினாலும் அந்தக்கூட்டத்தார் செத்து ஒரு அடையாளமாயிற்று.

௧௧ கோராகின் குமாரரோ சாவாதிருந்தார்கள்.

௧௨ சிமியோனுடைய குமாரரின் வம்சங்களாவது. நேமுவேலின் சந்ததியான நேமுவேலியரின் வம்சமும், யாமீனின் சந்ததியான யாமீனியரின் வம்சமும், யாகீனின் சந்ததியான யாகீனியரின் வம்சமும்,

௧௩ சேராகின் சந்ததியான சேராகியரின் வம்சமும், சவுலின் சந்ததியான சவுலியரின் வம்சமுந்தானே.

௧௪ இவைகளே சிமியோனியரின் வம்சங்கள். அவர்கள் இருபத்திரண்டாயிரத்திருநூறுபேர்.

௧௫ காத்துடைய குமாரரின் வம்சங்களாவது. செப்போனின் சந்ததியான செப்போனியரின் வம்சமும், ஆகியின் சந்ததியான ஆகியரின் வம்சமும், சூனியின் சந்ததியான சூனியரின் வம்சமும்,

௧௬ ஒஸ்னியின் சந்ததியான ஒஸ்னியரின் வம்சமும், ஏரியின் சந்ததியான ஏரியரின் வம்சமும்,

௧௭ ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் வம்சமும், அரேலியின் சந்ததியான அரேலியரின் வம்சமுந்தானே.

௧௮ இவைகளே காத்புத்திரரின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் நாற்பதினாயிரத்தைந்நூறுபேர்.

௧௯ யூதாவின் குமாரரான ஏருமோனானும் கானான் தேசத்திலே செத்தார்கள்.

௨௰ யூதாவுடைய மற்றக்குமாரரின் வம்சங்களாவது. சேலாவின் சந்ததியான சேலாவியரின் வம்சமும், பேரேசின் சந்ததியான பேரேசியரின் வம்சமும், சேராகின் சந்ததியான சேராகியரின் வம்சமுந்தானே.

௨௧ பேரேசுடைய குமாரரின் வம்சங்களாவன: எஸ்ரோனின் சந்ததியான எஸ்ரோனியரின் வம்சமும், ஆமூலின் சந்ததியான ஆமூலியரின் வம்சமுந்தானே.

௨௨ இவைகளே யூதாவின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் எழுபத்தாறாயிரத்தைந்நூறுபேர்.

௨௩ இசக்காருடைய குமாரரின் வம்சங்களாவது, தோலாவின் சந்ததியான தோலாவியரின் வம்சமும், பூவாவின் சந்ததியான பூவாவியரின் வம்சமும்,

௨௪ யாசூபின் சந்ததியான யாசூபியரின் வம்சமும், சிம்ரோனின் சந்ததியான சிம்ரோனியரின் வம்சமுந்தானே.

௨௫ இவைகளே இசக்காரின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் அறுபத்துநாலாயிரத்து முந்நூறுபேர்.

௨௬ செபுலோனுடைய குமாரரின் வம்சங்களாவது. சேரேதின் சந்ததியான சேரேதியரின் வம்சமும், ஏலோனின் சந்ததியான ஏலோனியரின் வம்சமும், யாலேயேலின் சந்ததியான யாலேயேலியரின் வம்சமுந்தானே.

௨௭ இவைகளே செபுலோனியரின் வம்சங்கள் அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் அறுபதினாயிரத்தைந்நூறுபேர்.

௨௮ யோசேப்புடைய குமாரரான மனாசே எப்பிராயீம் என்றவர்களின் வம்சங்களாவது.

௨௯ மனாசேயினுடைய குமாரரின் வம்சங்களெனில், மாகீரின் சந்ததியான மாகீரியரின் வம்சமும், மாகீர் பெற்ற கிலேயாதின் சந்ததியான கிலேயாதியரின் வம்சமும்.

௩௰ கிலேயாத்பெற்ற ஈயேசேரின் சந்ததியான ஈயேசேரியரின் வம்சமும், ஏலேக்கின் சந்ததியான ஏலேக்கியரின் வம்சமும்,

௩௧ அஸ்ரியேலின் சந்ததியான அஸ்ரியேலரின் வம்சமும் சேகேமின் சந்ததியான சேகேமியரின் வம்சமும்.

௩௨ செமிதாவின் சந்ததியான செமிதாவியரின் வம்சமும் எப்பேரின் சந்ததியான எப்பேரியரின் வம்சமுந்தானே.

௩௩ எப்பேரின் குமாரனான செலொப்பெயாத்திற்கோவெனிற் குமாரரில்லாமற் குமாரத்திகள்மாத்திரமிருந்தார்கள். இவர்கள் நாமங்கள். மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்க்காள், திர்சாளென்பது.

௩௪ இவைகளே மனாசேயின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் ஐம்பத்திரண்டாயிரத்தெழுநூறுபேர்.

௩௫ எப்பிராயீமுடைய குமாரரின் வம்சங்களாவது. சூத்தெலாகின் சந்ததியான

சுத்தெலாகியரின் வம்சமும் பெகேரின் சந்ததியான பெகேரியரின் வம்சமுந் தாகானின் சந்ததியான தாகானியரின் வம்சமும்,

௩௬ சுத்தெலாக்குப் பெற்ற ஏரானின் சந்ததியான ஏரானியரின் வம்சமுந்தானே.

௩௭ இவைகளே எப்பிராயீம் புத்திரரின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் முப்பத்தீராயிரத்தைந்நூறு பேர். இவைகளே யோசேப் புத்திரரின் வம்சங்கள்.

௩௮ பென்யமீனுடைய குமாரரின் வம்சங்களாவது. பேலாவின் சந்ததியான பேலியரின் வம்சமும், அஸ்பேலின் சந்ததியான அஸ்பேலியரின் வம்சமும் அகிராமின் சந்ததியான அகிராமியரின் வம்சமும்.

௩௯ சுப்பாமின் சந்ததியான சுப்பாமியரின் வம்சமும் ஊப்பாமின் சந்ததியான ஊப்பாமியரின் வம்சமும்,

௪௰ பேலா பெற்ற ஆரோதின் சந்ததியான ஆரோதியரின் வம்சமும் நாமானின் சந்ததியான நாமானியரின் வம்சமுந்தானே.

௪௧ இவைகளே பென்யமீன் புத்திரரின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்தறுநூறு பேர்.

௪௨ தாணுடைய குமாரரின் வம்சங்கள். சூகாமின் சந்ததியான சூகாமியரின் வம்சந்தானே. இவைகள் தாணின் வம்சங்கள்.

௪௩ சூகாமியரின் வம்சங்களில் இலக்கம் பார்க்கப்பட்டவர்களெல்லாரும் அறுபத்து நாலாயிரத்து நானூறு பேர்.

௪௪ ஆசேருடைய குமாரரின் வம்சங்களாவது. இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் வம்சமும். இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் வம்சமும். பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் வம்சமும்.

௪௫ பெரீயா பெற்ற ஏபேரின் சந்ததியான ஏபேரியரின் வம்சமும். மல்கியேலின் சந்ததியான மல்கியேலியரின் வம்சமுந்தானே.

௪௬ ஆசேருடைய குமாரத்தியின் பேர் சாராள்.

௪௭ இவைகளே ஆசேர் புத்திரரின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் ஐம்பத்து மூவாயிரத்து நானூறு பேர்.

௪௮ நவ்தலியினுடைய குமாரரின் வம்சங்களாவது. யாத்சேயேலின் சந்ததியான யாத்சேயேலியரின் வம்சமுங் கூனியின் சந்ததியான கூனியரின் வம்சமும்,

௪௯ எத்சேரின் சந்ததியான எத்சேரியரின் வம்சமும், சல்லேமின் சந்ததியான சில்லேமியரின் வம்சமுந்தானே

௫௰ இவைகளே நவ்தலியின் வம்சங்கள். அவைகளில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் நாற்பத்தையாயிரத்து நானூறு பேர்.

௫௧ இஸ்ரவேல் புத்திரரில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் அறுநூறாயிரத்தோராயிரத்தெழுநூற்று முப்பது பேராயிருந்தார்கள்.

௫௨ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௫௩ இவர்களுக்குத் தேசம் பேர்களின் இலக்கத்திற்குத் தக்கதாய்ச் சுதந்தரமாகப் பங்கிடப்பட்டக்கடவது.

௫௪ அதிகருக்கதிகமுங் கொஞ்சமானவர்களுக்குக் கொஞ்சமுமாய்ச் சுதந்தரங் கொடுப்பாயாக. அவர்களில் எண்ணப்பட்டவர்களின் இலக்கத்திற்குத் தக்கதாக அவரவர்களுக்கு அவர்கள் சுதந்தரங் கொடுக்கப்பட்டக்கடவது.

௫௫ ஆகிலுஞ் சீட்டுகளைப்போட்டுத் தேசம் பங்கிடப்பட்டக்கடவது. தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்குத் தக்கதாய் நாமங்களின்படியே சுதந்தரிக்கக்கடவார்கள்.

௫௬ அதிகமானவர்களுக்குங் கொஞ்சமானவர்களுக்கும் அவர்களுடைய சுதந்தரங்கள் சீட்டுகள் விழுகிறபடியே பங்கிடப்படுவதாகவென்றார்.

௫௭ இலக்கம் பார்க்கப்பட்ட லேவியரின் வம்சங்களாவது. கெர்சோனின் சந்ததியான கெர்சோனியரின் வம்சமுங் கேகாத்தின் சந்ததியான கேகாத்தியரின் வம்சமும் மெராரியின் சந்ததியான மெராரியரின் வம்சமும்,

௫௮ லேவியின் மற்ற வம்சங்களாகிய லிப்னியரின் வம்சமும் எப்ரோனியரின் வம்சமும் மகேலியரின் வம்சமும் மூசியரின் வம்சமுங் கொராகியரின் வம்சமுந்தானே. கேகாத் அம்ராமைப் பெற்றான்.

௫௯ அம்ராமுடைய பெண்சாதியின் பேர் யோகெபேத். அவள் லேவிக்கு எகிப்திலே பிறந்த குமாரத்தி. அவள் அம்ராமுக்கு ஆரோனையும் மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள்.

௬௰ ஆரோனுக்கு நாதாபும் அபியூவும் எலெயாசாரும் இத்தாமாரும் பிறந்தார்கள்.

௬௧ அல்லாமல் நாதாபும் அபியூவும் அந்நிய அக்கினியைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவருகிறபொழுது செத்துப்போனார்கள்.

௬௨ அவர்களிலொருமாதமுதற்கொண்டிருந்து இலக்கம் பார்க்கப்பட்ட ஆண்சாதியானவர்களெல்லாரும் இருபத்துமூவாயிரம் பேர். ஏனென்றால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரங் கொடுக்கப்படாதபடியினாலே அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்குட்படவில்லை.

௬௩ மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் எரிகோகிட்ட இருக்கும் யோர்தானுக்கப்பாலே மோவாபின் சமனவெளிகளில் இஸ்ரவேல் புத்திரரை இலக்கம் பார்க்கிறபொழுது இருந்தவர்களிவர்கள்தான்.

௬௪ முதலாம் மோசேயும் ஆசாரியனாகிய ஆரோனும் சீனாய் வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரைத் தொகைபார்க்கும்போது இருந்தவர்களில் இவர்களில் ஒருவனும் இல்லை.

௬௫ ஏனென்றால் வனாந்தரத்திலே சாவவே சாவார்களென்று கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருந்தார். எப்புனேயின் குமாரனாகிய காலேபும் நூனின் குமாரனாகிய யோசுவாவும் ஒழிய வேறொருவரும் அவர்களில் மீதியாயிருந்ததில்லை.

௨௭. அதிகாரம்.

புத்திரரில்லாமல் மரித்தவனின் பெண்கள் சுதந்தரம் அடையத்தக்க வேண்டுமென்பது.

௧ யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் வம்சத்தில் மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த கீலேயாத்தின் குமாரனாகிய எப்பேருடைய குமாரனாயிருந்த * செலொப்பியாத்தின் குமாரத்திகளாகிய மக்லாள் நோவாள் ஒக்லாள் மில்க்காள் திர்சாள் என்பவர்கள் சேர்ந்து வந்து,

* ௨௬, ௩௩.

௨ ஆசரிப்புக் கூடாரவாசலிலே மோசேக்கும் ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் பிரபுக்களுக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நின்று சொன்னதாவது.

௩ எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணமடைந்தார். ஆனால் அவர் கர்த்தருக்கு விரோதமாகக் கூடின கோராகின் கூட்டத்திலே சேர்ந்தவராயிராமல் தம்முடைய பாவத்திலே மரித்தார். அவருக்குக் குமாரர் இல்லை.

௪ எங்கள் தகப்பனுக்குக் குமாரனில்லாததினால் அவர் பேர் அவருடைய வம்சத்திலிருந்து அற்றுப்போவானேன்? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்குக் காணியாட்சியைத் தாருமென்றார்கள்.

௫ மோசே அவர்கள் நியாயத்தைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுபோனான்.

௬ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது.

௭ செலொப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது நிதானம். அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரமான காணியாட்சியைக் கொடுக்கவே கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் தகப்பனின் சுதந்தரத்தை அவர்களுக்கு வரப்பண்ணுவாயாக.

௮ இஸ்ரவேல் புத்திரருக்கும் நீ சொல்லவேண்டியது: ஒருவன் குமாரனில்லாமல் மரித்தால் அவனுடைய சுதந்தரத்தை அவன் குமாரத்திக்கு வரப்பண்ணக்கடவீர்கள்.

௯ அவனுக்குக் குமாரத்தியில்லாதிருந்தால் அவனுடைய சுதந்தரத்தை அவன் சகோதரருக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

௰ அவனுக்குச் சகோதரரில்லாதிருந்தால் அவனுடைய சுதந்தரத்தை அவன் தகப்பனுடைய சகோதரருக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

௰௧ அவன் தகப்பனுக்குச் சகோதரரில்லாதிருந்தால் அவனுடைய சுதந்தரத்தை அவன் வம்சத்திலே அவனுக்குக் கிட்டின உறவின்முறையானுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கக்கடவீர்கள். இது கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயப்பிரமாணமாயிருக்கக்கடவதென்று சொல்லென்றார்.

யோசுவா மோசேயின் ஸ்தலத்திலே பட்டந் தரிக்கப்பட்டது.

௰௨ பின்பு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது. * நீ இந்த அபாரீம் பர்வதத்திலேறி நாம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார்.

* ௫. மோசே. ௩௨, ௪௮. ௪௯.

௰௩ நீ அதைப் பார்த்தபிறகு நீயும் உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல உன் சனத்தாரிடத்திலே சேர்க்கப்படுவாய்.

௰௪ ஏனெனில் சபை வாக்குவாதம் பண்ணின சீன் வனாந்தரத்தில் நம்மைத் தண்ணீரின் சமீபத்திலே அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்தம் பண்ணவேண்டிய நீங்கள் * நம்முடைய கட்டளைக்கு இரண்டகம் பண்ணினீர்களென்றார். அது சீன் வனாந்தரத்திலே காதேசு ஊர்கிட்ட உண்டான மெரிபாவின் தண்ணீர்தானே.

* ௨௰. ௰௨.

௰௫ அப்பொழுது மோசே கர்த்தரோடே சொன்னதாவது.

௰௬ கர்த்தருடைய சபை மேய்ப்பனில்லாத மந்தையைப்போலிராதபடிக்கு.

௰௭ அவர்களுக்கு முன்பாகப் போக்கும் வர்த்தமாயிருக்கிறதற்கும் அவர்களைப் போகவும் வரவும் பண்ணுகிறதற்குமான ஒரு புருஷனைச் சகல மாம்சத்தினுடைய ஆவிகளின் பராபரனாகிய கர்த்தர் அவர்கள் மேல் அதிகாரியாக வைப்பாராகவென்றான்.

௰௮ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது. ஆவி வாசமாயிருக்கிற புருஷனாகிய யோசுவாவென்கிற நூனின் குமாரனை நீ சேர்த்துக்கொண்டு அவன்மேல் உன் கையை வைத்து,

௰௯ அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி அவர்கள் கண்களுக்கு முன்பாக அவனுக்குக் கட்டளை கொடுத்து,

௨௰ இஸ்ரவேல் புத்திரின் சபையெல்லாம் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு உன் மகிமையிற் சிலவற்றை அவன்மேல் வை.

௨௧ அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கு முன்பாக நிற்பானாக. இவன் அவனுக்காகக் கர்த்தருக்கு முன்பாகச் சொல்லும் ஊரீமென்கிற நியாயத்தினாலே ஆலோசனைகேட்கக்கடவன். அவனுடைய கட்டளையின்படியே அவனும் அவனோடேகூட இஸ்ரவேலின் எல்லாப் புத்திரருஞ் சபையனைத்தும் போகவும் அவனுடைய கட்டளையின்படி வரவும் வேண்டியதென்றார்.

௨௨ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே மோசே செய்து யோசுவாவைச் சேர்த்துக்கொண்டு அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபையனைத்திற்கும் முன்பாக நிறுத்தி.

௨௩ அவன்மேலே தன் கைகளை வைத்துக் கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்குக் கற்பனை கொடுத்தான்.

௨௮. அதிகாரம்.

அந்தந்த நித்தியம் ஓய்வுநாளிலும் பண்டிகை நாட்களிலுஞ் செலுத்தும் பலிகளின் கட்டளையை மறுபடியுந் தெரியக்காண்பித்தது.

கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ நமக்குச் சுகந்த வாசனைக்கான நமது தகனபலிகளுக்கேற்ற நம்முடைய காணிக்கையையும் நம்முடைய அப்பத்தையும் அவைகளின் குறித்த காலத்திலே நமக்குச் செலுத்தும்படிக்குக் கவனமாயிருக்கக்கடவீர்களென்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பித்து,

௩ அவர்களுக்குச் சொல்லவேண்டியதாவது. நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தகனபலி என்னவென்றால் நாடோறும் நித்திய சர்வாங்கதகனபலியாக ஒருவயதுள்ள பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளேதானே.

௪ விடியற்காலத்தில் ஒரு ஆட்டுக்குட்டியையும் அந்திநேரமான வேளையில் மற்ற ஆட்டுக்குட்டியையுஞ் செலுத்தி,

௫ காணிக்கையாக ஒருமரக்காலிலே பத்திலொருபங்கானதும் இடித்துவடிக்கட்டப்பட்ட கற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லியமாவையுஞ் செலுத்தக்கடவாய்.

௬ இது சீனாய்ப்பர்வதத்திலே கட்டளையிடப்பட்ட நித்திய சர்வாங்கதகனபலி. இது கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான தகனம்.

௭ திராட்சப்பழ இரசத்திலே காற்படியானது ஒரு ஆட்டுக்குட்டிக்கடுத்த ஊற்றுதல். பரிசுத்தஸ்தலத்திலே கர்த்தருக்கு அந்த இரசம் ஊற்றுதலாக ஊற்றப்படக்கடவது.

௮ விடியற்காலத்துக் காணிக்கைக்கும் அதின் ஊற்றுதலுக்குஞ் சரியாக அந்திநேரமான வேளையிலே இரண்டாம் ஆட்டுக்குட்டியையுங் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனமாகச் செலுத்துவாயாக.

௯ ஓய்வுநாளிலேவென்றால் ஒருவயதுள்ள பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும் பத்திலிரண்டுபங்கானதும் எண்ணெயிற் பிசைந்ததுமான மெல்லியமாவென்னுங் காணிக்கையையும் அதின் ஊற்றுதலையுஞ் செலுத்தக்கடவாய்.

௧௦ அன்றன்றுள்ள சர்வாங்கதகனத்தையும் அதின் ஊற்றுதலையுந்தவிர இது ஒவ்வொரு ஓய்வுநாளிலே செலுத்தப்படவேண்டிய சர்வாங்கதகனம்.

௧௧ உங்கள் மாதப்பிறப்புகளிலே நீங்கள் கர்த்தருக்குச் சர்வாங்கதகனமாக மாடுகளில் இரண்டு காளையெருதுகளையும் ஒரு ஆட்டுக்கிடாயையும் ஒருவயதுள்ள பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும்,

௧௨ ஒவ்வொரு காளையெருதிற்காகப் பத்திலே மூன்றுபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லியமாவின் காணிக்கையையும் அந்த ஒரு ஆட்டுக்கிடாயக்காகப் பத்திலிரண்டுபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவின் காணிக்கையையும்,

௧௩ ஒவ்வொரு ஆட்டுக்குட்டிக்காகப் பத்திலொருபங்கானதும் எண்ணெயிலே பிசைந்ததுமான மாவின் காணிக்கையையுஞ் செலுத்துவீர்களாக. அது கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்கதகனம்.

௧௪ அவைகளின் ஊற்றுதல்கள் காளையெருதிற்கு அரைப்படியும் ஆட்டுக்கிடாய்க்குப் படியில் மூன்றிலொருபங்கும் ஆட்டுக்குட்டிக்குக் காற்படியுமான திராட்சப்பழ இரசமாயிருப்பதாக. அது வருஷத்திலே ஒவ்வொருமாதமுஞ் செலுத்தப்படவேண்டிய சர்வாங்கதகனம்.

௧௫ அன்றன்றுள்ள சர்வாங்கதகனபலியையும் அதின் ஊற்றுதலையுந்தவிரப் பாவம்போக்கும் பலியாகக் கர்த்தருக்கு ஒரு வெள்ளாட்டுக்கடாயுஞ் செலுத்தப்படக்கடவது.

௧௬ முதலாம் மாதம் பதினாலாந் தேதியிலே கர்த்தருக்குப் பஸ்காவாயிருக்கின்றது.

௧௭ அந்த மாதம் பதினைந்தாந்தேதி பண்டிகைநாள். ஏழுநாளட்டும் புளிப்பில்லாத அப்பங்கள் போசிக்கப்படவேண்டும்.

௧௮ முதலாம் நாளிலே பரிசுத்த சபைகூடுதலாம். தாருபணிவிடைவேலையைச் செய்யீர்களாக.

௧௯ அப்பொழுது நீங்கள் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக மாடுகளில் இரண்டு காளையெருதுகளையும் ஒரு ஆட்டுக்கிடா

யமம உங்களுக்கிருக்கவேண்டிய ஒருவய
துள்ளபழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும,
௨௰ அவைகளின் காணிக்கையாக எண
ணெயிலே பிசைந்தமெல்லியமாவிலே கா
ளையொருத்திற்காகப்பத்திலே மூன்றுபங்கை
யும் ஆட்டுக்கடாவுக்காகப் பத்திலிரண்டு
பங்கையும,
௨௧ ஏழு ஆட்டுக்குட்டிகளிலும் ஒவ்வொ
ன்றிற்காகப் பத்திலொருபங்கையும,
௨௨ உங்களைப்பாவநிவர்த்திக்கென்று பாவ
பலிக்குமடியாக ஒரு வெள்ளாட்டுக்
கடாவையுஞ்செலுத்தி,
௨௩ விடியற்காலத்திலே செலுத்தும
அன்றன்றுள்ள சர்வாங்கத்தகன பலியை
த்தவிர இவைகளைச்செலுத்தக்கடவீர்கள.
௨௪ இப்பிரகாரமாக ஏழுநாளிலும
நாடோறுங் கர்த்தருக்கு உகந்த வாச
னையாகத்தக்க ஆகாரத்தைச் செலுத்தக்
கடவீர்கள. அன்றன்றுள்ள சர்வாங்கத்தக
னபலியும் அதின பானபலியுந்தவிர
இது செலுத்தப்படக்கடவது.
௨௫ ஏழாநாளிலும் பரிசுத்தசபைகூடு
தல் உங்களுக்கிருக்கக்கடவது. யாதொரு
பணிவிடைவேலையைச்செய்யீர்களாக.
௨௬ நீங்கள் கர்த்தருக்கு புதுக்காணிக
கையாகிய முதற்கனிகளைச்செலுத்தும உ
ங்கள் வாரங்களின் பண்டிகைநாளிலும் பரிசு
த்தசபைகூடுதல உங்களுக்கிருக்கக் கடவ
து. யாதொருபணிவிடைவேலையைச்செய
்யீர்களாக,
௨௭ அப்பொழுது நீங்கள்கர்த்தருக்கு உக
ந்தவாசனைக்கான சர்வாங்கத்தகனபலி
யாக மாடுகளில் இரண்டு காளைகளையும
ஒரு ஆட்டுக்கடாவையும் ஒருவயதுள்ள
ஏழு ஆட்டுக்குட்டிகளையும,
௨௮ அவைகளின காணிக்கையாக எண
ணெயிலே பிசைந்தமெல்லியமாவிலொரு
காளையொருத்திற்காகப் பத்திலே மூன்றுபங்
கையும் அந்த ஒரு ஆட்டுக்கிடாயக்காகப
பத்திலிரண்டுபங்கையும,
௨௯ ஏழு ஆட்டுக்குட்டிகளிலும் ஒவ
வொன்றிற்காகப்பத்திலொருபங்கையும.
௩௰ உங்களுக்காகப்பாவநிவர்த்தியையு
ண்டாக்கும்படிக்கொரு வெள்ளாட்டுக்கி
டாயையுஞ்செலுத்தி,
௩௧ அன்றன்றுள்ள சர்வாங்கத்தகனபலி
யையும் அதின்காணிக்கையையும் அதின
பானபலிகளையுந்தவிர இவைகளைச்செலு
த்தக்கடவீர்கள. உங்களுக்கவைகள் பழுத
ற்றவைகளாயிருக்கவேண்டும.

உகூ. அதிகாரம்.

ஏழாமாதத்தின பண்டிகைநாட்களிலே செ
லுத்தப்படவேண்டியபலிகளின கட்டளை.

ஏழாமாதமுதலதேதி உங்களுக்குப்பரி
சுத்தசபைகூடுதல் நாளாயிருக்கக்கடவ
து. யாதொருபணிவிடைவேலையைச்செய
யாதிருப்பீர்களாக. அதுவுங்களுக்குத்தக்கெ-ம
பிரநாளாயிருக்கவேணடும.

௨ அப்பொழுது கர்த்தருக்குகந்த வா
சனைக்கான சர்வாங்கத்தகனபலியாக மாடு
களிலே ஒரு காளையையும் ஒரு ஆட்டுக
்கிடாயையும் ஒருவயதுள்ள பழுதற்ற ஏழு
ஆட்டுக்குட்டிகளையும,

௩ அவைகளுக்கேற்ற காணிக்கையாக
எண்ணெயிலே பிசைந்தமெல்லிய மாவி
லே காளையொருத்திற்காகப் பத்திலே மூன்றுப
ங்கையும் ஆட்டுக்கிடாயக்காக இரண்டுப
ங்கையும,

௪ ஏழு ஆட்டுக்குட்டிகளிலே ஒவ்வொன
்றிற்காக ஒருபங்கையும,

௫ உங்கள் பாவநிவர்த்திக்கானபலியாக
ஒரு வெள்ளாட்டுக்கிடாயையுஞ்செலுத்தி,

௬ மாதப்பிறப்பின சர்வாங்கத்தகனத்
தையும் அதின காணிக்கையையும அன்றன
்றுள்ள சர்வாங்கத்தகனபலியையும அதின
காணிக்கையையும அவைகளின முறைமைக
்கேற்ற பானபலிகளையுந்தவிர இவைகளை
க்கர்த்தருக்கு உகந்த வாசனையான தகன
மாகச்செலுத்தக்கடவீர்கள,

௭ இந்த ஏழாமாதம பத்தாந்தேதி உங
களுக்குப் பரிசுத்தசபை கூடுதல நாளா
யிருக்கக்கடவது, அதிலே நீங்கள யாதொ
ரு பணிவிடை வேலையுஞ் செய்யாமல
உங்கள ஆத்துமங்களை ஒடுங்கப்பண்ணி,

௮ கர்த்தருக்குகந்த வாசனையான சர்
வாங்கத்தகனபலியாக மாடுகளிலொரு கா
ளையையும் ஒரு ஆட்டுக்கிடாயையும
உங்களுக்கிருக்கவேண்டிய ஒருவயதுள்ள
பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும,

௯ அவைகளின்காணிக்கையாக எண்ணெ
யிலே பிசைந்த மெல்லியமாவிலே காளை
யொருத்திற்காகப்பத்திலே மூன்றுபங்கையும
அந்த ஒரு ஆட்டுக்கிடாயக்காக இரண்டுப
ங்கையும.

௰ ஏழு ஆட்டுக்குட்டிகளிலே ஒவ்வொன்றி
ற்காக ஒருபங்கையும,

௰௧ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள
ளாட்டுக்கிடாயையுஞ்செலுத்தி பாவங்க
ளின நிவர்த்தியையுண்டாக்கும பலியையும
அன்றன்றுள்ள சர்வாங்கத் தகன பலியை
யும அதின்காணிக்கையையும அவைகளின
பானபலிகளையுந்தவிர இவைகளைச் செலு
த்தக்கடவீர்கள.

௰௨ ஏழாமாதம் பதினைந்தாந்தேதி உங
களுக்குப் பரிசுத்தசபை கூடுதல நா
ளாயிருக்கக்கடவது. யாதொரு பணிவிடை
வேலையையுஞ்செய்யீர்களாக. ஏழுநாள
கர்த்தருக்குப் பண்டிகை யாசரிக்கக்கட
வீர்கள.

௰௩ நீங்கள கர்த்தருக்கு நறிய வாசனை யின தகனமான சர்வாங்கத் தகனபலியாக மாடுகளிலே பதின்மூன்று காளையெருதுகளை யும இரண்டு ஆட்டுக்கிடாயகளையும ஒருவ யதுள்ள பழுதற்றிருக்கிற பதினாலு ஆட்டு க்குட்டிகளையும,

௰௪ அவைகளின காணிக்கையாக எண ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே அந்தப் பதின்மூன்று காளையெருதுகளிலே ஒவ்வொன்றிற்காகப் பத்திலே மூன்று பங்கை யும அந்த இரண்டு ஆட்டுக்கிடாயகளி லும ஒவ்வொன்றிற்காக இரண்டு பங்கையும,

௰௫ பதினாலு ஆட்டுக்குட்டிகளிலே ஒவ் வொன்றிற்காக ஒரு பங்கையும,

௰௬ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகன பலியையும அதின காணிக்கையையும அதி ன ஊற்றுதலையுந் தவிரப் பாவம்போககும பலியாக ஒரு வெள்ளாட்டுக்கிடாயையும,

௰௭ இரண்டாம நாளிலே மாடுகளிலே பன னிரண்டு காளையெருதுகளையும இரண்டு ஆட் டுக்கிடாயகளையும ஒருவயதுள்ள பழுதற்ற பதினாலு ஆட்டுக்குட்டிகளையும,

௰௮ காளையெருதுகளும ஆட்டுக்கிடா யகளும ஆட்டுக்குட்டிகளுமிருக்கிற இலக்க த்திற்குத் தக்க நியாயமாய அவைகளின காணிக்கையையும அவைகளின ஊற்றுத லகளையும,

௰௯ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகனப லியையும அதின காணிக்கையையும அவை களின ஊற்றுதலகளையுந் தவிரப் பாவம போககும பலியாக ஒரு வெள்ளாட்டுக்கி டாயையும,

௨௰ மூன்றாம நாளிலே பதினொரு காளை யெருதுகளையும இரண்டு ஆட்டுக்கிடாயக ளையும ஒருவயதுள்ள பழுதற்ற பதினாலு ஆட்டுக்குட்டிகளையும,

௨௧ காளையெருதுகளும ஆட்டுக்கிடாய களும ஆட்டுக்குட்டிகளுமிருக்கிற இலக்க த்திற்குத் தக்க நியாயமாய அவைகளின கா ணிக்கையையும அவைகளின ஊற்றுதல களையும,

௨௨ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகன பலியையும அதின காணிக்கையையும அதி ன ஊற்றுதலையுந் தவிரப் பாவம்போககும பலியாக ஒரு வெள்ளாட்டுக்கிடாயையும,

௨௩ நான்காம நாளிலே பத்துக் காளை யெருதுகளையும இரண்டு ஆட்டுக்கிடாயக ளையும ஒருவயதுள்ள பழுதற்ற பதினாலு ஆட்டுக்குட்டிகளையும,

௨௪ காளையெருதுகளும ஆட்டுக்கிடாய களும ஆட்டுக்குட்டிகளுமிருக்கிற இலக்க த்திற்குத் தக்க நியாயமாய அவைகளின கா ணிக்கையையும அவைகளின ஊற்றுதலக ளையும,

௨௫ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகன பலியையும அதின காணிக்கையையும அதி ன ஊற்றுதலையுந் தவிரப் பாவம்போககும பலியாக ஒரு வெள்ளாட்டுக்கிடாயையும,

௨௬ ஐந்தாம நாளிலே ஒன்பது காளையெ ருதுகளையும இரண்டு ஆட்டுக்கிடாயகளை யும ஒருவயதுள்ள பழுதற்ற பதினாலு ஆட் டுக்குட்டிகளையும,

௨௭ காளையெருதுகளும ஆட்டுக்கிடாய களும ஆட்டுக்குட்டிகளுமிருக்கிற இலக்க த்திற்குத் தக்க நியாயமாய அவைகளின கா ணிக்கையையும அவைகளின ஊற்றுதலக ளையும,

௨௮ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகனப லியையும அதின காணிக்கையையும அதி ன ஊற்றுதலையுந் தவிரப் பாவம்போககும பலியாக ஒரு வெள்ளாட்டுக்கிடாயையும,

௨௯ ஆறாம நாளிலே எட்டுக்காளையெரு துகளையும இரண்டு ஆட்டுக்கிடாயகளையும ஒருவயதுள்ள பழுதற்ற பதினாலு ஆட்டுக் குட்டிகளையும,

௩௰ காளையெருதுகளும ஆட்டுக்கிடாய களும ஆட்டுக்குட்டிகளுமிருக்கிற இலக்கத் திற்குத் தக்க நியாயமாய அவைகளின கா ணிக்கையையும அவைகளின ஊற்றுதலக ளையும,

௩௧ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகனப லியையும அதின காணிக்கையையும அதின ஊற்றுதலகளையுந் தவிரப் பாவம்போககும பலியாக ஒரு வெள்ளாட்டுக்கிடாயையும.

௩௨ ஏழாம நாளிலே ஏழு காளையெருதுகளை யும இரண்டு ஆட்டுக்கிடாயகளையும ஒருவய துள்ள பழுதற்ற பதினாலு ஆட்டுக்குட்டி களையும,

௩௩ காளையெருதுகளும ஆட்டுக்கிடாய களும ஆட்டுக்குட்டிகளுமிருக்கிற இலக்க த்திற்குத் தக்க நியாயமாய அவைகளின கா ணிக்கையையும அவைகளின ஊற்றுதலக ளையும,

௩௪ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகனபலி யையும அதின காணிக்கையையும அதின ஊற்றுதலையுந் தவிரப் பாவம்போககும ப லியாக ஒரு வெள்ளாட்டுக்கிடாயையுஞ் செலு த்தக்கடவீர்கள.

௩௫ எட்டாம நாள உங்களுக்குச் சிறப்பு நாளாயிருக்கக்கடவது. யாதொரு அடி மைவேலையைச் செய்யீர்களாக.

௩௬ அப்பொழுது நீங்கள கர்த்தருக்கு நறிய வாசனைத் தகனமான சர்வாங்கத் தக னபலியாக ஒரு காளையெருதையும ஒரு ஆட் டுக்கிடாயையும ஒருவயதுள்ள பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும,

௩௭ காளையெருதும ஆட்டுக்கிடாயும ஆட் டுக்குட்டிகளுமிருக்கிற இலக்கத்திற்குத் தக்க நியாயமாய அவைகளின காணிக்கை யையும அவைகளின ஊற்றுதலகளையும,

௩௮ அன்றன்றுள்ள சர்வாங்கத் தகனப லியையும அதின காணிக்கையையும அதின

னாதங்களைத் தவிர பானபோசனங்களாகிய இவைகளைக் கண்டபடி செலுத்தக்கடவீர்கள்.

௩௯ உங்கள் பொருத்தனைகளையும் உங்கள் உச்சாகபலிகளையும் உங்கள் சர்வாங்க தகனபலிகளையும் உங்கள் காணிக்கைகளையும் உங்கள் பானாதனங்களையும் உங்கள் சமாதானபலிகளையுந் தவிர்த்து நீங்கள் உங்கள் பண்டிகைகளிலே கர்த்தருக்குச் செலுத்த வேண்டியவைகள் இவைகள்தானென்று சொல்லென்றார்.

௪௰ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்.

௩௰. அதிகாரம்.

பொருத்தனைகளுக்கடுத்த கட்டளைகள்.

௧ மோசே இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் தலைவரோடே பேசிச் சொன்னதாவது. கர்த்தர் கற்பித்த காரியமென்னவென்றால்,

௨ ஒருவன் கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணி அல்லது ஆணையிட்டுத் தன்னைத் தன் ஆத்துமத்தின்மேலே கட்டின சுமத்திக்கொண்டிருந்தால் அவன் தன் வார்த்தையைப் பரிசுத்தக்குலைக்காமல் தன் வாயிலிருந்து புறப்பட்டதின்படியெல்லாஞ் செய்யக்கடவன்.

௩ தகப்பன் வீட்டிலிருக்கிற ஒரு பெண் தன் இளவயதிலே கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணிக் கட்டினசுமத்திக்கொண்டால்,

௪ அந்தப்பொழுது அவள் தகப்பன் அவளுடைய பொருத்தனையையும் அவள் தன் ஆத்துமத்தின்மேலே கட்டின சுமத்திக் கொண்டதையுங் கேட்டும் அவளுக்கு ஒன்றுஞ்சொல்லாதிருந்தால் அவளுடைய பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமத்தின்மேலே சுமத்திக்கொண்ட எல்லாக் கட்டுகளும் நிற்கும்.

௫ அவளுடைய தகப்பன் அவளுடைய பொருத்தனைகளையும் அவள் தன் ஆத்துமத்தின்மேலே கட்டின சுமத்திக்கொண்டவைகளையுங் கேட்கிற நாளிலே அவளுக்குத் தடைபண்ணினானானால் அது நிற்காது. அவள் தகப்பன் அவளுக்குத் தடைபண்ணினபடியினாலே கர்த்தர் அவைகளை அவளுக்கு மன்னிப்பார்.

௬ அவள் பொருத்தனைபண்ணியும் பொருத்தனைபண்ணி அல்லது தன் ஆத்துமத்தின்மேலே கட்டினசுமத்திக்கொண்டும் இருக்கையில் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவளுக்குப் புருஷனான பொழுதும் அவளுக்குப் புருஷன்

௭ அப்பொழுது அவள் புருஷன் அதைக் கேட்டநாளிலே அவளுக்கு ஒன்றுஞ்சொல்லாதிருந்தால் அவளுடைய பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமத்தின்மேலே சுமத்திக்கொண்ட அவளுடைய கட்டுகளும் நிற்கும்.

௮ அவள் புருஷன் அதைக் கேட்கிற நாளிலே அவளுக்குத் தடைபண்ணி என்று சொல்லி அவள்மேலிருக்கிற அவள் பொருத்தனையையும் அவள் தன் ஆத்துமத்தின்மேலே சுமத்திக்கொண்ட கட்டினையுஞ் செல்லாதே பண்ணினானேயாகில் அப்பொழுது கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார்.

௯ ஒருத்தி கைம்பெண்ணாகிலுந் தள்ளப்பட்டவளாகிலும் அவள் தன் ஆத்துமத்தின்மேலே சுமத்திக்கொண்டதெல்லாம் அவள்மேல் நிற்கும்.

௰ அவள் தன் புருஷனுடைய வீட்டிலே பொருத்தனைபண்ணி அல்லது ஆணையிட்டுத் தன் ஆத்துமத்தின்மேலே கட்டினசுமத்தினாளேயானால்,

௰௧ அப்பொழுது அவள் புருஷன் அதைக் கேட்டும் அவளுக்குத் தடைபண்ணி என்று சொல்லாமல் மவுனமாயிருந்தால் அவளுடைய எல்லாப் பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமத்தின்மேலே சுமத்திக்கொண்ட எல்லாக் கட்டுகளும் நிற்கும்.

௰௨ அவள் புருஷன் அவைகளைக் கேட்கிற நாளிலே செல்லாதே பண்ணினானேயாகில் அப்பொழுது அவளுடைய பொருத்தனைகளானாலும் அவளுடைய ஆத்துமத்தின் கட்டுகளானாலும் அவள் உதடுகளிலிருந்து புறப்பட்டதொன்றும் நிற்காது. அவள் புருஷன் அவைகளைச் செல்லாதே பண்ணினபடியினாலே கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார்.

௰௩ ஆத்துமத்தைத் தாழ்மைப்படுத்துகிறதற்குப் பண்ணப்பட்ட எல்லாப் பொருத்தனையையும் எல்லா ஆணையையும் அவள் புருஷன் நிற்கப்பண்ணவுங்கூடும் செல்லாதே போகப்பண்ணவுங்கூடும்.

௰௪ அவள் புருஷன் நாளுக்குநாள் அவளுக்கு ஒன்றுஞ் சொல்லாதிருந்தால் அவன் அவளுடைய எல்லாப் பொருத்தனைகளையும் அல்லது அவள்மேலிருக்கிற அவளுடைய எல்லாக் கட்டுகளையும் நிற்கப்பண்ணினான். அவன் அதைக் கேட்ட நாளிலே அவளுக்கு ஒன்றுஞ்சொல்லாதிருந்தபடியினாலே அவைகளை நிற்கப்பண்ணினான்.

௰௫ அவன் அதைக் கேட்டபிற்பாடு அவைகளைச் செல்லாதே போகப்பண்ணினானேயாகில் அவளுடைய அக்கிரமத்தை அவன் சுமப்பானென்றான்.

௰௬ புருஷனுக்கும் பெண்சாதிக்கும் நடுவிலும் தகப்பனுக்கும் தகப்பன் வீட்டிலே இளவயதிலே இருக்கிற அவன் குமாரத்திக்கும் அடுத்ததாய்க் கர்த்தர் மோசேக்குக் கற்பித்த நியமக் கட்டளைகள் இவைகள்தானே.

௩௧. அதிகாரம்.

இஸ்ரவேலர் மீதியானியரைச் செயித்த செய்தி.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨ இஸ்ரவேல் புத்திரருக்காக * மீதியானியருக்குப் பழியைச் சரிக்கட்டு. பிற்பாடு உன் சனத்தாரோடே சேர்த்துக்கொள்ளப்படுவாயென்றார். * ௨௫, ௰௭. ௰௮.

௩ அப்பொழுது மோசே சனத்தாரோடே பேசிச் சொன்னதாவது. கர்த்தருக்காக மீதியானியருக்குப் பழியைச் சரிக்கட்டும்படிக்கு உங்களில் அவர்கள்மேல் யுத்தத்துக்குப் போகத்தக்க மனிதரைப் பிரித்தெடுங்கள்.

௪ இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலும் ஒவ்வொரு கோத்திரத்தில் ஆயிரம் பேரை யுத்தத்துக்கு அனுப்பக் கடவீர்களென்றான்.

௫ அப்படியே ஒவ்வொரு கோத்திரத்திலே ஆயிரம் பேராக இஸ்ரவேலாயிரங்களிலே பன்னீராயிரம் பேர் யுத்தத்துக்கு ஆயத்தமாக நிறுத்தப்பட்டார்கள்.

௬ அவர்களையும் ஆசாரியனான எலெயாசாருடைய குமாரனாகிய * பினெகாசையும் மோசே யுத்தத்துக்கு அனுப்பி அவனுடைய கையிலே பரிசுத்த முட்டுகளையும் † கெம்பீரிக்கிற பூரிகைகளையுங் கொடுத்துவிட்டான். * ௨௫, ௭. † ௰, ௯.

௭ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவர்கள் மீதியானியர்மேல் யுத்தம்பண்ணி ஆண்சாதிகளையெல்லாங் கொன்றுபோட்டார்கள்.

௮ அவர்களை வெட்டிப்போட்டதுமல்லாமல் மீதியானியரின் ஐந்து இராசாக்களாகிய ஏவியையும் ரேக்கேமையும் சூரையும் ஊரையும் ரேபாவையுங் கொன்றுபோட்டார்கள். பேயோரின் குமாரனாகிய * பிலெயாமையும் பட்டயக்கருக்கிலே கொன்றுபோட்டார்கள். * ௨௨, ௫.

௯ இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரின் ஸ்திரீகளையும் குழந்தைகளையுஞ் சிறைபிடித்து அவர்களுடைய எல்லா மிருகஜீவன்களையும் எல்லா மந்தைகளையும் எல்லா ஆஸ்தியையுங் கொள்ளையிட்டு,

௰ அவர்கள் குடியிருந்த எல்லா ஊர்களையும் எல்லாக் கோட்டைகளையும் அக்கினியாலே சுட்டெரித்து,

௰௧ தாங்கள் கொள்ளையிட்ட எல்லாவற்றையும் தாங்கள் பிடித்த மனுஷரையும் மிருகஜீவன்களையும் [illegible],

௰௨ சிறைகொண்டவர்களையும் கொள்ளையிட்டவைகளையும் எரிகோவுக்கு [illegible] மோவாபின் [illegible] பாளயத்துக்கு மோசேயண்டைக்கும் ஆசாரியனாகிய எலெயாசாரண்டைக்கும் இஸ்ரவேல் புத்திரரின் சபையாரண்டைக்குங் கொண்டுவந்தார்கள்.

௰௩ அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாருஞ் சபையின் எல்லாப் பிரபுக்களும் பாளயத்துக்கு வெளியே அவர்களைச் சந்திக்கப் புறப்பட்டார்கள்.

௰௪ மோசேயோவென்றால் யுத்தத்தில் நின்று வந்த ஆயிரத்துச் சேர்வைக்காரரும் நூற்றுச் சேர்வைக்காரருமாகிய இராணுவத்தலைவர் மேற் கோபமடைந்து,

௰௫ அவர்களோடே சொன்னதாவது. எல்லாப் பெண்சாதிகளையும் உயிரோடே வைத்திருக்கிறீர்களா?

௰௬ இதோ, பேயோர் விஷயத்திலே கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ண இவர்கள்தானே பிலெயாமின் ஆலோசனையினாலே இஸ்ரவேல் புத்திரருக்குக் காரணமாயிருந்தார்கள். அதினாலே கர்த்தரின் சபையிலே உபாதையும் வந்ததே.

௰௭ இப்பொழுது குழந்தைகளில் எல்லா ஆண்பிள்ளைகளையுங் கொன்றுபோடுங்கள். புருஷசம்போகத்தையறிந்த எல்லாப் பெண்சாதிகளையுங் கொன்றுபோடுங்கள்.

௰௮ ஸ்திரீகளிலே புருஷனையறியாத எல்லாப் பெண்பிள்ளைகளையும் உங்களுக்காக உயிரோடே வையுங்கள்.

௰௯ நீங்களோவென்றால் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே தங்குங்கள். சீவனைக் கொன்றவர்களும் வெட்டுண்டவர்களைத் தொட்டவர்களுமாகிய நீங்களனைவரும் மூன்றாம் நாளிலும் ஏழாம் நாளிலும் உங்களையும் உங்கள் சிறைகளையும் பாவம்போக்கிச் சுத்திகரித்து. * ௰௯, ௰௧. ௰௨.

௨௰ அந்தப்படியே எல்லா வஸ்திரத்தையுந் தோலாலுண்டானவைகளையும் வெள்ளாட்டுமயிர் நெசவையும் மரத்தட்டுமுட்டுகளையும் பாவம்போக்கிச் சுத்திகரிக்கக்கடவீர்களென்றான்.

௨௧ யுத்தத்துக்குப் போய்வந்த இராணுவமனிதரோடே ஆசாரியனாகிய எலெயாசார் சொன்னதாவது. கர்த்தர் மோசேக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்தின் கட்டளையிதுதானே.

௨௨ பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் வெள்ளீயமும் [illegible] அக்கினிக்குத் தாங்கத்தக்க [illegible] சுத்தமாகும்படிக்கு,

௨௩ அதை அக்கினியிலே எடுக்கப்பண்ணக்கடவீர்கள். [illegible] அது பாவம்போக்கப்படவேண்டும். [illegible] அக்கினிக்குத் தாங்காத [illegible] வைக்கக்கடவீர்கள்.

௨௪ ஏழாம்நாளிலே உங்கள் வஸ்திரங்களை வெளுக்கக்கடவீர்கள். அப்பொழுது [illegible]

[illegible] பிதாக்களான [illegible] தலைவரோடுஞ் [illegible].

௨௫ கர்த்தர் மோசேயோடே சொன்னது:

௨௬ பிடிக்கப்பட்ட மனிதரையும் மிருகங்களையும் நீயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் சபையிலுள்ள பிதாக்களின் தலைவரும் தொகைபார்த்து,

௨௭ பிடிக்கப்பட்டதை யுத்தத்திற்குப் புறப்பட்டுப்போன யுத்த மனிதருக்குள்ளும் சபையனைத்திற்குள்ளும் பாதிபாதியாகப் பங்கிடக்கடவாய்.

௨௮ சேவகத்திற்குப்போன யுத்தமனிதரிடத்திலே கர்த்தருக்குப் பகுதியாக மனிதரிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலும் ஐந்நூறிலொன்றை வாங்கிக்கொள்ளக்கடவாய்.

௨௯ அதை அவர்களுடைய பாதியிலே எடுத்துக் கர்த்தருக்கேறெடுக்கும் படைப்பாக ஆசாரியனாகிய எலெயாசாருக்குக் கொடுக்கக்கடவாய்.

௩௦ இஸ்ரவேல் புத்திரரின் பாதியிலே மனிதரிலும் மாடுகளிலும் கழுதைகளிலும் ஆடுகளிலுமாகிய சகலவித மிருகங்களிலும் ஐம்பதிலொன்றைப் பிடித்தெடுத்து அவைகளைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலைக் காக்கிற லேவியருக்குக் கொடுக்கக்கடவாய் என்றார்.

௩௧ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் செய்தார்கள்.

௩௨ யுத்தசனங்கள் கொள்ளையிட்டவைகளில் மீதியாயிருந்தது அறுநூற்றெழுபத்தையாயிரம் ஆடுகளும்,

௩௩ எழுபத்திரண்டாயிரம் மாடுகளும்,

௩௪ அறுபத்தோராயிரங் கழுதைகளும்,

௩௫ ஸ்திரீகளிலே புருஷனையறியாத மனிதர் முப்பத்திரண்டாயிரஞ் சீவனு[illegible].

௩௬ யுத்தத்திற்குப் புறப்பட்டவர்களின் பங்காகிய பாதியின் இலக்கமானது: ஆடு முந்நூற்று முப்பத்தேழாயிரத்தைந்நூறு.

௩௭ இந்த ஆடுகளிலே கர்த்தருக்குப் பகுதியானது அறுநூற்றெழுபத்தைந்து.

௩௮ மாடுகள் முப்பத்தாறாயிரம். அவைகளில் கர்த்தருக்குப் பகுதியானது எழுபத்திரண்டு.

௩௯ கழுதைகள் முப்பதினாயிரத்தைந்நூறு. அவைகளிலே கர்த்தருக்குண்டான பகுதி அறுபத்தொன்று.

௪௦ மனிதர்கள் பதினாறாயிரம். அவைகளில் கர்த்தருக்குண்டான பகுதி முப்பத்திரண்டு.

௪௧ கர்த்தருக்கேறெடுத்த அந்தப் பகுதியைக் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே ஆசாரியனாகிய எலெயாசாருக்குக் கொடுத்தான்.

௪௨ யுத்தம்பண்ணின மனிதருக்குள்ளும் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளும் மோசே பாதியாகப் பங்கிட்டதின்படியே சபையின் பாதியானது என்னவென்றால்,

௪௩ ஆடுகளில் முந்நூற்று முப்பத்தேழாயிரத்தைந்நூறு,

௪௪ மாடுகளில் முப்பத்தாறாயிரம்,

௪௫ கழுதைகளில் முப்பதினாயிரத்தைந்நூறு,

௪௬ மனிதரிலே பதினாறாயிரம்.

௪௭ இஸ்ரவேல் புத்திரரின் பாதிப்பங்காகிய அந்த மனிதரிலும் மிருகங்களிலும் மோசே ஐம்பதிலொன்றைப் பிடித்தெடுத்து அவைகளைக் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே கர்த்தருடைய வாசஸ்தலத்தின் காவலைக் காக்கிற லேவியருக்குக் கொடுத்தான்.

௪௮ பின்பு ஆயிரம் பேர்களான சேனைகளின் தலைவராகிய ஆயிரத்துச் சேர்வைகாரரும் நூற்றுக்குச் சேர்வைகாரரும் மோசேயண்டைக்குச் சேர்ந்து வந்து,

௪௯ அவனோடே சொன்னதாவது: உம்முடைய ஊழியக்காரராகிய நாங்கள் எங்களிடத்திலிருக்கிற யுத்தமனிதரைத் தொகைபார்த்தோம். எங்களில் ஒருவனுங் குறையவில்லை.

௫௦ ஆகையால் கர்த்தரின் சந்நிதியில் எங்களாத்துமாக்களுக்காகப் பாவநிவர்த்தியுண்டாகும்படிக்கு நாங்கள் அவரவர் கண்டுபிடித்தபடியே பொற்பணிகளாகிய சங்கிலிகளையுஞ் சரிகைகளையும் மோதிரங்களையுங் கடுக்கன்களையுங் காப்புகளையுங் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தோமென்றார்கள்.

௫௧ அப்பொழுது மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாருஞ் சகலவிதவேலையுள்ள பணிகளான அந்தப் பொன்னை அவர்கள் கையிலே வாங்கினார்கள்.

௫௨ இப்படி ஆயிரத்துச் சேர்வைகாரராலும் நூற்றுக்குச் சேர்வைகாரராலுங் கர்த்தருக்கேறெடுக்குங் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட பொனனெல்லாம் பதினாறாயிரத்தெழுநூற்றைம்பது சேக்கல் நிறையாயிருந்தது.

௫௩ சேவகத்திற்குப்போன மனிதர் அவரவர் தங்களுக்காகக் கொள்ளையிட்டிருந்தார்கள்.

௫௪ அந்தப் பொன்னை மோசேயும் ஆசாரியனாகிய எலெயாசாரும் ஆயிரத்துச் சேர்வைகாரர் கையிலும் நூற்றுக்குச் சேர்வைகாரர் கையிலும் வாங்கி, இஸ்ரவேல் புத்திரரின் நினைப்புக்காக ஆசரிப்புக்கூடாரத்திலே கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து வைத்தார்கள்.

௩௨. அதிகாரம்.

ரூபன்கோத்திரத்திற்கும் காத்கோத்திரத்திற்கும் மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்கும் யோர்தானுக்கப்பாலே சுதந்தரங்கொடுக்கப்பட்டது.

ரூபன்புத்திரருக்கும் காத்புத்திரருக்கும் ஆடுமாடுகள் மகாதிரட்சியாயிருந்தது. அவர்கள் யாசேர்தேசத்தையுங் கிலெயாத்தேசத்தையும் பார்க்கிறபொழுது அது ஆடுமாடுகளுக்கான இடமென்று கண்டார்கள்.

௨ ஆகையால் அவர்கள்வந்து மோசேயோடும் ஆசாரியனாகிய எலெயாசாரோடுஞ் சபையின்பிரபுக்களோடுஞ் சொன்னதாவது.

௩ கர்த்தர் இஸ்ரவேல்சபைக்கு முன்பாக முறியடித்த அத்ரோத்துந் திபோனும் யாசேரும் நிம்ராவும் எஸ்போனும் எலெயாலெயுஞ் செபாமும் நெபோவும் பெயோனும் என்கிற பட்டணங்களிலிருக்கிற தேசம் ஆடுமாடுகளுக்கான தேசம்,

௪ உம்முடைய ஊழியக்காரருக்கோவென்றால் ஆடுமாடுகளிருக்கின்றது.

௫ உம்முடைய கண்களுக்கு முன்பாக எங்களுக்குத் தயவு கிடைத்ததானால் இந்தத்தேசம் உம்முடைய ஊழியக்காரருக்குக் காணியாட்சியாகக் கொடுக்கப்படட்டும். எங்களை யோர்தானதிக்கப்பாலே கடந்துபோகப்பண்ணலீராகவென்றார்கள்.

௬ அப்பொழுது மோசே அவர்களுக்குச் சொன்னதாவது. உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகக்கொள்ள நீங்களிங்கேயிருப்பீர்களோ?

௭ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்திற்கவர்கள் ஏறிப்போகாதபடிக்கு நீங்கள் அவர்களிருதயத்தைத் திடனற்றுப்போகப் பண்ணுகிறதென்ன?

௮ இப்படித்தான் உங்கள் பிதாக்கள் நான் அவர்களைத் தேசத்தைப்பார்க்கிறதற்குக் காதேஸ்பர்னெயாவிலிருந்தனுப்பினபொழுது பண்ணினார்கள்.

௯ அவர்கள் எஸ்கோல்பள்ளத்தாக்குமட்டும்போய்த் தேசத்தைப் பார்த்துவந்து இஸ்ரவேல்புத்திரருக்குக் கர்த்தர்கொடுத்ததேசத்திற்கவர்கள் போகாதபடிக்கு * அவர்களிருதயத்தைத் திடனற்றுப்போகப்பண்ணினார்கள். * ௰௩, ௩௨. மு

௰ ஆகையாற் கர்த்தர் அந்நாளிலே கோபமூண்டவராகி,

௰௧ * நம்மை உத்தமமாய்ப் பின்பற்றின கேனேசியனான எப்புன்னேயின்குமாரன் காலேபையும் நூனின்குமாரனாகிய யோசுவாவையுந்தவிர, * ௰௪, ௨௧—௨௪.

௰௨ எகிப்திலிருந்து வந்தேறின இருபதுவயதுமுதலான மனிதர் நாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டதேசத்தைக் காண்பதில்லை. ஏனெனில் நம்மைப் பூத்தமாய்ப் பின்பற்றாதேபோனார்களென்று ஆணையிட்டார்.

௰௩ அப்படியே கர்த்தர் இஸ்ரவேலின்மேற் கோபமூண்டவராகக் கர்த்தரின்பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்த அந்தச்சந்ததியெல்லாம் நிர்மூலமாகுமட்டும் அவர்களை வனாந்தரத்தில் நாற்பது வருஷம் அலையப்பண்ணினார்.

௰௪ இப்பொழுதும் இதோ, இஸ்ரவேலின்மேலிருக்கிற கர்த்தருடைய கோபத்தின் உக்கிரத்தை இன்னம் அதிகரிக்கப்பண்ண நீங்கள் உங்கள் பிதாக்களின் ஸ்தலத்திலே பாவமனிதரான பருங்கூட்டமாயெழும்பினீர்கள்.

௰௫ நீங்கள் அவரைவிட்டுப் பின்வாங்கினால் அவரின்னம் அதை வனாந்தரத்திலிருக்கப்பண்ணுவார். இப்படி நீங்கள் இந்தச்சனத்தையெல்லாம் அழியப்பண்ணுவீர்களென்றான்.

௰௬ அப்பொழுது அவர்கள் அவனண்டைசேர்ந்து சொன்னதாவது. எங்கள் ஆடுமாடுகளுக்காகத் தொழுவங்களையும் எங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையுமிங்கே கட்டுவோம்.

௰௭ நாங்களோவென்றால் இஸ்ரவேல்புத்திரரையவர்கள் ஸ்தானத்திலே கொண்டுபோய்ச் சேர்க்குமளவும் யுத்தத்திற்காயத்தப்பட்ட தீவிரத்தோடே அவர்களுக்கு முன்னே நடப்போம். இதற்குள்ளெங்கள் பிள்ளைகள் தேசத்திற் குடிகளினிமித்தம் அரணான பட்டணங்களிலே குடியிருக்கும்.

௰௮ இஸ்ரவேல்புத்திரர் அவரவர் தங்கள் சுதந்தரத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுமட்டும் நாங்களெங்கள் வீடுகளுக்குத் திரும்புவதில்லை.

௰௯ ஏனென்றால் யோர்தானுக்கிப்பாலே கிழக்கேயெங்கள் சுதந்தரம் எங்களுக்குண்டான படியினாலே நாங்கள் அவர்களோடேகூட யோர்தானுக்கக்கரையிலும் அதற்கப்பாலேயுஞ் சுதந்தரம் வாங்குவதில்லையென்றார்கள்.

௨௰ அப்பொழுது மோசே அவர்களோடே சொன்னதாவது. நீங்களிந்தவார்த்தையின்படியே செய்து கர்த்தருக்கு முன்பாக யுத்தத்திற்காயத்தப்பட்டு,

௨௰௧ கர்த்தர் நமது சத்துருக்களைத் தம்முடைய முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுந்திருமட்டும் நீங்கள் அவரவர் அவருக்கு முன்பாக ஆயுதபாடானவர்களாய் யோர்தானைக் கடந்துபோயிருந்தீர்களானால்,

௨௨ அப்பொழுது தேசம் கர்த்தருக்கு முன்பாகக் கீழ்ப்பட்டபிறபாடு நீங்கள் கர்த்தருக்கும் இஸ்ரவேலுக்கும் முன்பாகக் குற்றமில்லாதவர்களாய்த் திரும்பலாம். அப்பொழுது இந்தத் தேசம் கர்த்தருக்கு முன்பாக உங்களுக்குக் காணியாட்சியாயிருக்கும்.

௨௩ நீங்கள் அப்படிச் செய்யாதே போனீர்களேயானால் அப்பொழுது நீங்கள் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தீர்களென்பதை அறிந்து, உங்கள் பாவம் உங்களைக் கண்டுபிடிக்குமென்று உணருவீர்கள்.

௨௪ உங்கள் பிள்ளைகளுக்காகப் பட்டணங்களையும் உங்கள் மந்தைகளுக்காகத் தொழுவங்களையும் உங்களுக்குக் கட்டி உங்கள் வாயிலிருந்து புறப்பட்டதின்படியே செய்யுங்களென்றான்.

௨௫ அப்பொழுது காத்புத்திரரும் ரூபேன் புத்திரரும் மோசேயோடே சொன்னதாவது: எங்கள் ஆண்டவன் கற்பித்தபடியே உமதுடைய ஊழியக்காரர் செய்வார்கள்.

௨௬ எங்கள் பிள்ளைகளும் எங்கள் பெண்சாதிகளும் எங்கள் ஆடுமாடுகளும் எங்களுடைய மிருகஜீவன்களும் இங்கே கீலேயாத்தின் பட்டணங்களிலிருக்கும்.

௨௭ உமதுடைய ஊழியக்காரரோவெனில் எங்கள் ஆண்டவன் சொன்னபடியே ஒவ்வொருவரும் சேவகத்திற்காயத்தப்பட்டவர்களாய்க் கர்த்தருக்கு முன்பாக யுத்தத்திற்குப் போவார்களென்றார்கள்.

௨௮ அப்பொழுது மோசே அவர்களுக்காக ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் நூனின் குமாரனாகிய யோசுவாவுக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் பிதாக்களில் தலைவரானவர்களுக்குங் கற்பித்து,

௨௯ அவர்களோடே சொன்னதாவது. காத்புத்திரரும் ரூபேன்புத்திரரும் அவரவர் கர்த்தருக்கு முன்பாக யுத்தத்திற்காயத்தப்பட்டவர்களாய் உங்களோடே கூட யோர்தானைக் கடந்துபோனால் அப்பொழுது தேசம் உங்களுக்கு முன்பாகக் கீழ்ப்பட்ட பிற்பாடு அவர்களுக்குக் கீலேயாத்தேசத்தைக் காணியாட்சியாகக் கொடுக்கக் கடவீர்கள்.

௩௰ உங்களோடே கூட யுத்தத்திற்காயத்தப்பட்டவர்களாய்க் கடந்துபோகாதிருந்தார்களேயாகில் அவர்கள் உங்கள் நடுவே கானான்தேசத்திலே காணியாட்சியடையக் கடவர்களென்றான்.

௩௧ காத்புத்திரரும் ரூபேன் புத்திரரும் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது. கர்த்தர் உமதுடைய ஊழியக்காரருக்குச் சொன்னதின்படியே செய்வோம்.

௩௨ நாங்கள் கர்த்தருக்கு முன்பாக யுத்தத்திற்காயத்தப்பட்டவர்களாய்க் கானான் தேசத்திற் சேர்ந்துபோவோம். அப்படியே யோர்தானுக்கிப்பாலே எங்கள் சுதந்தரத்தின் காணியாட்சி எங்களுக்கிருக்குமென்றார்கள்.

௩௩ அப்பொழுது மோசே காத்புத்திரருக்கும் ரூபேன் புத்திரருக்கும் யோசேப்பின் குமாரனாகிய மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்கும் அமோரியரின் இராசாவாகிய சீகோனின் இராச்சியமும் பாசானின் இராசாவாகிய ஓகின் இராச்சியமுமான தேசத்தையும் அதின் எல்லைகளிலே சுற்றிலுமிருக்கிற அதின் பட்டணங்களையுங் கொடுத்தான்.

௩௪ காத்புத்திரர் திபோனையும் அதரோத்தையும் அரோவேரையும்,

௩௫ அத்ரோத்சோப்பானையும் யாசேரும் யொபேகாவும,

௩௬ பெத்நிம்ராவும் பெத்தாரானுமென்னும் அரணிப்பட்டணங்களையும் ஆட்டுத்தொழுவங்களையுங் கட்டினார்கள்.

௩௭ ரூபேன்புத்திரர் எஸ்போனையும் எலெயாலேயையுங் கீரியத்தாயிமையும்,

௩௮ நாமங்களை மாற்றப்பட்ட நேபோவையும் பாகால்மெயோனையும் சிப்மாவையுங் கட்டி, தாங்கள் கட்டின பட்டணங்களுக்கு வேறே நாமங்களைத் தரித்தார்கள்.

௩௯ மனாசேயின் குமாரனாகிய மாகீரின் புத்திரர் கீலேயாத்திற்குப் போய் அதைக் கட்டிக்கொண்டு அதிலிருந்த அமோரியரைத் துரத்திவிட்டார்கள்.

௪௰ அப்பொழுது மோசே கீலேயாத்தை மனாசேயின் குமாரனாகிய மாகீரின் புத்திரருக்குக் கொடுத்தான். அவர்கள் அதிலே குடியேறினார்கள்.

௪௧ மனாசேயின் குமாரனாகிய யாவீர் போய் அவர்களுடைய கிராமங்களைக் கட்டிக்கொண்டு அவைகளுக்கு யாவீரின் கிராமங்களென்று பேரிட்டான்.

௪௨ நோபாக் போய்க் கேனாத்தையும் அதின் கிராமங்களையுங் கட்டிக்கொண்டு அதற்குத் தன் நாமத்தின்படி நோபாவென்று பெயரைத் தரித்தான்.

௩௩. அதிகாரம்.

இஸ்ரவேலருடைய பயணப்பாடு.

௧ மோசே ஆரோன் என்றவர்களுடைய கையின்கீழ்த் தங்கள் சேனைகளின்படியே எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல்புத்திரருடைய பயணங்களாவது.

௨ ஏனெனில் அவர்கள் தங்கள் பயணங்களிலே புறப்பட்டுவிட்ட இடங்களை மோசே கர்த்தருடைய கட்டளையின்படியே எழுதினான். அவர்கள் ஒவ்வொரு இடங்களிலிருந்து புறப்பட்டுப் பண்ணின பயணங்களாவது.

௩ அவர்கள் முதலாமாதத்தின் பதினைந்தாந்தேதியிலே ராமேசேசிலிருந்து பயண

மபோனார்கள். பஸ்காவின் இரண்டாம் நா ளில் இஸ்ரவேல்புத்திரர் எல்லா எகிப்தியருமபார்க்க உயர்ந்தகையினாலே புறப்பட்டார்கள்.

௪ அப்பொழுது எகிப்தியர் கர்த்தர் தங்களுக்குள்ளே சங்கரித்த தலைச்சன்பிள்ளைகளையெல்லாம் அடக்கம் பண்ணினார்கள். அவர்கள் தேவர்களிலுங் கர்த்தர் நியாயத் தீர்ப்புகளைச்செய்திருந்தார்.

௫ இஸ்ரவேல்புத்திரர் ரமேசேசிலிருந்து பயணம்போய்ச் சுக்கோத்திலே பாளயமிறங்கினார்கள்.

௬ சுக்கோத்திலிருந்து பயணம்போய் வனாந்தரத்தின் கடைசியான ஏத்தாமிலே பாளயமிறங்கினார்கள்.

௭ ஏத்தாமிலிருந்து பயணம்போய்ப் பாகால் சேபோனுக்கெதிராகவிருக்கிற ஈரோத்பள்ளத்தாக்கின் முன்னடிக்குத் திரும்பி மிக்தோலுக்கு முன்பாகப் பாளயமிறங்கினார்கள்.

௮ ஈரோத்தைவிட்டுப் பயணம்பண்ணிச் சமுத்திரத்தை நடுவாகக்கடந்து வனாந்தரத்திற்குப்போய் ஏத்தாம்வனாந்தரத்திலே மூன்றுநாள் நடந்து மாராவிலே பாளயமிறங்கினார்கள்.

௯ மாராவிலிருந்து பயணம்போய் ஏலீமுக்கு வந்தார்கள். ஏலீமிலே பன்னிரண்டு நீரூற்றுகளும் எழுபது பேரீச்சமரங்களுமிருந்தது. அங்கே பாளயமிறங்கினார்கள்.

௰ ஏலீமிலிருந்து பயணம்போய் நாணற்சமுத்திரத்தண்டையிலே பாளயமிறங்கினார்கள்.

௰௧ நாணற்சமுத்திரத்தைவிட்டுப் பயணம்போய்ச் சீனவனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.

௰௨ சீன வனாந்தரத்திலிருந்து பயணம் போய்த் தொப்பாக்காவிலே பாளயமிறங்கினார்கள்.

௰௩ தொப்பாக்காவிலிருந்து பயணம் போய் ஆலூசிலே பாளயமிறங்கினார்கள்.

௰௪ ஆலூசிலிருந்து பயணம்போய் ரப்பீதீமிலே பாளயமிறங்கினார்கள். அங்கே சனத்திற்குக் குடிக்கத் தண்ணீரில்லாதிருந்தது.

௰௫ ரப்பீதீமிலிருந்து பயணம்போய்ச் சீனாய்வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.

௰௬ சீனாயின் வனாந்தரத்திலிருந்து பயணம்போய் இச்சையின் பிரேதக்குழிகளுக்கு வந்து பாளயமிறங்கினார்கள்.

௰௭ இச்சையின் பிரேதக்குழிகளைவிட்டுப் பயணம்போய் ஆச்செரோத்திலே பாளயமிறங்கினார்கள்.

௰௮ ஆச்செரோத்திலிருந்து பயணம் போய் ரித்மாவிலே பாளயமிறங்கினார்கள்.

௰௯ ரித்மாவிலிருந்து பயணம்போய் ரிம்மோன பேரேத்திலே பாளயமிறங்கினார்கள்.

௨௰ ரிம்மோனபேரேத்திலிருந்து பயணம்போய் லிப்னாவிலே பாளயமிறங்கினார்கள்.

௨௧ லிப்னாவிலிருந்து பயணம்போய் ரிசாவிலே பாளயமிறங்கினார்கள்.

௨௨ ரிசாவிலிருந்து பயணம்போய்க் கேலத்தாவிலே பாளயமிறங்கினார்கள்.

௨௩ கேலத்தாவிலிருந்து பயணம்போய்ச் சாப்பேர்மலையிலே பாளயமிறங்கினார்கள்.

௨௪ சாப்பேர் மலையிலிருந்து பயணம் போய் ஆரதாவிலே பாளயமிறங்கினார்கள்.

௨௫ ஆரதாவிலிருந்து பயணம்போய் மக்கெலோத்திலே பாளயமிறங்கினார்கள்.

௨௬ மக்கெலோத்திலிருந்து பயணம் போய்த் தாகாத்திலே பாளயமிறங்கினார்கள்.

௨௭ தாகாத்திலிருந்து பயணம்போய்த் தாருவிலே பாளயமிறங்கினார்கள்.

௨௮ தாருவிலிருந்து பயணம்போய் மித்காவிலே பாளயமிறங்கினார்கள்.

௨௯ மித்காவிலிருந்து பயணம்போய் அஸ்மோனாவிலே பாளயமிறங்கினார்கள்.

௩௰ அஸ்மோனாவிலிருந்து பயணம்போய் மொசெரோத்திலே பாளயமிறங்கினார்கள்.

௩௧ மொசெரோத்திலிருந்து பயணம் போய்ப் பெனெயாக்கானிலே பாளயமிறங்கினார்கள்.

௩௨ பெனெயாக்கானிலிருந்து பயணம் போய்க் கித்காத்மலையிலே பாளயமிறங்கினார்கள்.

௩௩ கித்காத் மலையிலிருந்து பயணம் போய் யோத்பாத்தாவிலே பாளயமிறங்கினார்கள்.

௩௪ யோத்பாத்தாவிலிருந்து பயணம் போய் ஆப்ரோனாவிலே பாளயமிறங்கினார்கள்.

௩௫ ஆப்ரோனாவிலிருந்து பயணம் போய் எத்சேயோன்கேபேரிலே பாளயமிறங்கினார்கள்.

௩௬ எத்சேயோன் கேபேரிலிருந்து பயணம்போய்க் காதேசாகிய சின்வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்.

௩௭ காதேசிலிருந்து பயணம்போய் ஏதோம்தேசத்தின் எல்லையிலிருக்கிற ஓர் பர்வதத்தண்டையிலே பாளயமிறங்கினார்கள்.

௩௮ அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோன் கர்த்தருடைய கட்டளையின்படியே ஓர் பர்வதத்தின் மேலேறி அங்கே இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டநாற்பதாம்வருஷம் ஐந்தாமாதம் முதலாந்தேதியிலே மரணமடைந்தான்.

௩௧ [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௨ [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௩ [illegible] விட்டு பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௪ [illegible] விருந்து பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௫ [illegible] விருந்து பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௬ [illegible] விருந்து பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௭ [illegible] விட்டு பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௮ [illegible] விருந்து பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௩௯ [illegible] விருந்து பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௪௦ [illegible] விருந்து பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௪௧ [illegible] விருந்து பயணம் போய் [illegible] பாளயமிறங்கினார்கள்.

௪௨ [illegible] பாளயமிறங்கியிருந்தார்கள்.

௫௦ [illegible] கானானதேசத்தில் வரும்பொழுது [illegible] மோசேயோடே பேசிச்சொன்னது.

௫௧ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி [illegible] நீங்கள் [illegible] கானானதேசத்திலே வரும்பொழுது,

௫௨ [illegible] குடிகளை யெல்லாம் [illegible] எல்லாச் சிலைகளையும் [illegible] எல்லாச் [illegible] உடைத்து [illegible],

௫௩ [illegible] கொள்ளும்படிக்கு [illegible].

௫௪ [illegible] கொள்ளக்கடவீர்கள்.

௫௫ நீங்கள் [illegible] குடிகளை [illegible] உங்கள் விலாக்களில் [illegible] உங்களை நீங்கள் [illegible] தேசத்தில் நெருக்கப்படுத்துவார்கள்.

௫௬ அப்படியே சம்பவிக்கும் [illegible] நாம் அவர்களுக்குச் செய்யநினைத்ததை [illegible] உங்களுக்குச் செய்வோமென்று சொல்லென்றார்.

௩௪. அதிகாரம்.

கானானதேசத்தின் எல்லைகளையும் [illegible] பங்கிட்டுக்கொள்ளும் [illegible].

கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௨ நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பித்துச் சொல்லவேண்டியதென்னவென்றால், நீங்கள் கானானதேசத்திலே வரும்பொழுது உங்களுக்குச் சுதந்தரமாகக் [illegible] தேசம் தன் எல்லைகளோடிருக்கிற கானான தேசந்தானே.

௩ உங்களுக்குத் தென்புறமான [illegible] எல்லை [illegible].

௪ [illegible] தெற்கிலே [illegible].

௫ [illegible] எல்லை [illegible] சமுத்திரம் [illegible] முடிவதாக.

௬ மேற்கே பெரிய சமுத்திரமே உங்களுக்கு எல்லை. அதுவே உங்களுக்கு மேற்புறமான எல்லையாயிருப்பது.

௭ உங்களுக்கு வடக்கு எல்லையாவது [illegible] பெரிய சமுத்திரந்துவக்கி [illegible] பர்வதத்தை நீங்கள் உங்களுக்குக் [illegible].

௮ ஓர்பர்வதந்துவக்கி ஆமாத்திற்குப்போகிறவழியைக் குறிப்பாக வைப்பீர்களாக. அங்கேயிருந்து எல்லை சேதாத்திற்குப்போய்,

௯ அங்கேயிருந்து அதுசிப்ரோனுக்குப்போய் ஆத்சார் ஏனானிலே முடிந்துபோவதாக. அதுவே யுங்களுக்கு வடபுறமான எல்லையாயிருக்கும்.

௰ உங்களுக்குக் கிழக்கு எல்லையாக ஆத்சார் ஏனானிலிருந்து சேப்பாமைக் குறிப்பாக வைப்பீர்களாக.

௰௧ சேப்பாமிலிருந்து எல்லையானது ஆயினுக்குக் கிழக்கான ரிப்லாவுக்கிறங்கி அங்கேயிருந்து அதின்னேரேத்கடலுக்கிறங்கி அதின்கரைகளையோட்டிப்போய்,

௰௨ அங்கேயிருந்து அது யோர்தானுக்கிறங்கி உப்புக்கடலில் முடிந்துபோவதாக. இவைகளே யுங்களுக்குச் சுற்றெல்லைகளின்படியே யுண்டாயிருக்குந் தேசமென்று சொல்லென்றார்.

௰௩ அப்பொழுது மோசே இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பித்துச் சொன்னதாவது. நீங்கள் சீட்டுகளைப்போட்டுச் சுதந்தரித்துக் கொள்ளவும் ஒன்பதரைக்கோத்திரங்களுக்குக் கொடுக்கக்கர்த்தர் கற்பித்ததுமான தேசம் அதுதானே.

௰௪ ஏனெனில் ரூபேன் புத்திருடைய பிதாக்களின் வீட்டிற் கோத்திரத்தாருங் காத்புத்திருடைய பிதாக்களின் வீட்டிற் கோத்திரத்தாரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருந் தங்கள் சுதந்தரத்தை யடைந்தார்கள்.

௰௫ இந்த இரண்டரைக்கோத்திரங்களும் சூரியவுதயத் திசையாகிய கிழக்கே எரிகோவிட்ட இருக்கிற யோர்தானுக்கப்பாலே தங்கள் சுதந்தரத்தை வாங்கித் தீர்ந்ததென்றான்.

௰௬ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௰௭ உங்களுக்குத் தேசத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் மனிதரின் நாமங்களாவது. ஆசாரியனாகிய எலெயாசாரும் நூனின் குமாரனாகிய யோசுவாவுந்தானே.

௰௮ ஒவ்வொரு கோத்திரத்திலொருத்தலைவனையுந் தேசத்தைப் பங்கிடும்படிக்குக் கூட்டவைக்கக்கடவீர்கள்.

௰௯ இந்த மனிதரின் நாமங்களாவது. யூதா கோத்திரத்திற்கு எப்புன்னேயின் குமாரனாகிய காலேப்பும்,

௨௰ சிமெயோன் புத்திரரின் கோத்திரத்திற்கு அம்மியூதின் குமாரனாகிய சாமுவேலும்,

௨௧ பென்யமீன் கோத்திரத்திற்குக் கிஸ்லோனின் குமாரனாகிய எலிதாதும்,

௨௨ தாண் புத்திரரின் கோத்திரத்திற்கு யொக்லியின் குமாரனாகிய புக்கியென்ற பிரபும்,

௨௩ யோசேப்பின் குமாரராகிய மனாசேயினுடைய புத்திரரின் கோத்திரத்திற்கு எப்போதின் குமாரனாகிய அன்னியேலென்ற பிரபும்,

௨௪ எப்பிராயீம் புத்திரரின் கோத்திரத்திற்குச் சிப்தானின் குமாரனாகிய கேமுவேலென்ற பிரபும்,

௨௫ செபுலோன் புத்திரரின் கோத்திரத்திற்குப் பர்னாகின் குமாரனாகிய எலிசாப்பானென்ற பிரபும்,

௨௬ இசக்கார் புத்திரரின் கோத்திரத்திற்கு அசானின் குமாரனாகிய பலத்தியேலென்ற பிரபும்,

௨௭ ஆசேர் புத்திரரின் கோத்திரத்திற்குச் செலோமியின் குமாரனாகிய அகியூதென்ற பிரபும்,

௨௮ நப்தலி புத்திரரின் கோத்திரத்திற்கு அம்மியூதின் குமாரனாகிய பெதாகெலென்ற பிரபுந்தானேயென்றார்.

௨௯ கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரங்களைப் பங்கிட்டுக் கொடுக்கிறதற்குக் கர்த்தர் கற்பித்தவர்கள் இவர்கள்தான்.

௩௰௫. அதிகாரம்.

லேவியரின் பட்டணங்களையும் அடைக்கலப் பட்டணங்களையுங் குறித்துக் கட்டளையிடப்பட்டது.

௧ எரிகோவிட்ட யோர்தானண்டையிலிருக்கிற மோவாபின் சமனான வெளிகளிலே கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது.

௨ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணியாட்சியாகிய சுதந்தரத்திலே லேவியருக்குக் குடியிருக்கிறதற்கென்று பட்டணங்களைக் கொடுக்கவேண்டுமென்று அவர்களுக்குக் கற்பி. அந்தப் பட்டணங்களைச் சுற்றிலுமிருக்கிற அவைகளின் பேட்டைகளையும் லேவியருக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

௩ அந்தப் பட்டணங்கள் அவர்கள் குடியிருப்புக்கும் அவைகளின் பேட்டைகள் அவர்கள் ஆடுமாடுகளுக்கும் அவர்கள் சொத்திற்கும் அவர்களுடைய எல்லாச் சீவன்களுக்குங் குறிக்கப்படக்கடவது.

௪ நீங்கள் லேவியருக்குக் கொடுக்கும் பட்டணங்களின் பேட்டைகள் பட்டணமதிலுக்கு வெளியிலே சுற்றிலும் ஆயிரமுழத்தூரமாயிருப்பதாக.

௫ அல்லாமல் நீங்கள் பட்டணத்தின் வெளிப்புறத்தைத் துவக்கிக் கிழக்கே இரண்டாயிரமுழமுந் தெற்கே இரண்டாயிரமுழமும் மேற்கே இரண்டாயிரமுழமும் வடக்கே இரண்டாயிரமுழமும் பட்டணம் நடுமையத்திலிருக்கும்படியாக அளக்கக்கடவீர்கள்.

நகரங்களுக்குரிய பட்டணங்களின் வெளி நிலங்களாயிருப்பது.

௬ நீங்கள் லேவியருக்குக் கொடுக்கும் பட்டணங்களில் அடைக்கலமான ஆறு பட்டணங்களிருக்கவேண்டும். கொலைசெய்தவன் அங்கே ஓடிப்போகிறதற்கு அவைகளைக் குறிக்கக்கடவீர்கள். அவைகளையல்லாமல் நாற்பத்திரண்டு பட்டணங்களை யவர்களுக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

௭ நீங்கள் லேவியருக்குக் கொடுக்கவேண்டிய பட்டணங்களெல்லாம் நாற்பத்தெட்டு பட்டணங்களும் அவைகளின் பேட்டைகளுமே.

௮ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் காணியாட்சியிலே தந்த பட்டணங்களை யெடுத்துக்கொள்ளுகையில் அதிகமுள்ளவர்களிடத்தில் அதிகமாகவும் குறைவுள்ளவர்களிடத்தில் குறைவாகவும் எடுக்கக்கடவீர்கள். அவரவர் தாங்கள் கொண்ட சுதந்தரத்தின்படியே தங்கள் பட்டணங்களிலே லேவியருக்குக் கொடுப்பார்களாக என்றார்.

௯ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச்சொன்னதாவது.

௰ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் யோர்தானைக் கடந்து கானான் தேசத்திற் சேர்ந்தபொழுது,

௰௧ கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றுபோட்டவன் ஓடிப்போயிருக்கத் தக்க அடைக்கலப்பட்டணங்களை யுங்களுக்குக் குறிக்கக்கடவீர்கள்.

௰௨ கொலைசெய்தவன் நியாயசபைக்கு முன்பாக நிற்குமுன்னே சாவாமற் பழிவாங்குகிறவனைக்குத் தப்புவிக்கத்தக்கதாக அவைகள் உங்களுக்கடைக்கலப்பட்டணங்களாயிருக்கக்கடவது.

௰௩ நீங்கள் உங்களுக்காகக் கொடுக்கவேண்டிய இந்த அடைக்கலப்பட்டணங்கள் ஆறு.

௰௪ அடைக்கலப் பட்டணங்களாகப் [illegible] மூன்று பட்டணங்களை யோர்தானுக்கப்பாலும் மூன்று பட்டணங்களைக் கானான் தேசத்திலுங் கொடுக்கக்கடவீர்கள்.

௰௫ கைப்பிசகாய் ஒருவனைக் கொன்றவனெல்லாம் அங்கே ஓடிப்போகும்படிக்கு இஸ்ரவேல் புத்திரருக்கும் உங்கள் நடுவே பரதேசிக்கும் அந்நியனுக்குமாக இந்த ஆறுபட்டணங்கள் அடைக்கலப் பட்டணங்களாயிருப்பதாக.

௰௬ ஒருவன் இருப்பு ஆயுதத்தினாலொருவனையடித்ததினாலே இவன் செத்தானேயாகில் அவன் கொலைபாதகனாயிருக்கிறான். கொலைபாதகன் கொலையுண்கவே கொலையுண்கக்கடவன்.

௰௭ அல்லது ஒருவனைக் கொன்றுபோடத்தக்க கல்லை யொருவன் கையிலெடுத்து ஒருவன் மேலெறிகிறதினாலே இவன் செத்தால் அவன் கொலைபாதகனாயிருக்கிறான். கொலைபாதகன் கொலையுண்கவே கொலையுண்கக்கடவன்.

௰௮ அல்லவென்று ஒருவனைக் கொன்றுபோடத்தக்க மர ஆயுதத்தை யொருவன் பிடித்து ஒருவனையடிக்கிறதினாலே இவன் செத்தால் அவன் கொலைபாதகனாயிருக்கிறான். கொலைபாதகன் கொலையுண்கவே கொலையுண்கக்கடவன்.

௰௯ இரத்தப்பழிவாங்குகிறவன்தானே கொலைபாதகனைக் கொன்றுபோடலாம். அவனைச் சந்திக்கிறபொழுது அவனைக் கொன்றுபோடலாம்.

௨௰ ஒருவன் குரோதத்தினாலே யாதொருவனை விழத்தள்ளினதினாலே அல்லது சதியாய் அவன்மேலேதாகிலும் எய்தினாலே,

௨௰௧ அல்லவென்று பகையினாலே அவனைத் தன் கையினால் அடித்ததினாலே அவன் செத்தால் அடித்தவன் கொலையுண்கவே கொலையுண்கக்கடவன். அவன் கொலைபாதகன். இரத்தப்பழிவாங்குகிறவன் கொலைபாதகனைச் சந்திக்கிறபொழுது கொன்றுபோடலாம்.

௨௰௨ ஆனால் ஒருவன் பகையில்லாமற் சடுதியிலே ஒருவனை விழப்பண்ணினதினாலே அல்லது சதியில்லாமல் யாதொரு ஆயுதத்தை யவன்மேலே படப்பண்ணினதினாலே,

௨௰௩ அல்லவென்று அவனுக்குப் பகைஞனாயிராமலும் அவனுக்குப் பொல்லாப்பைத் தேடாமலுமிருக்கக் கொள்ள ஒருவனைக் கொன்றுபோடத்தக்க யாதொரு கல்லை யவனைக் காணாமல் எறிந்ததினாலும் அது அவன்மேலே பட்டதினாலும் அவன் செத்தால்,

௨௰௪ அப்பொழுது சபையார் கொலைசெய்தவனுக்கும் இரத்தப்பழிவாங்குகிறவனுக்கும் இந்த நியாயங்களின்படியே நியாயந்தீர்த்து,

௨௰௫ கொலைசெய்தவனை இரத்தப்பழிவாங்குகிறவன் கைக்குத் தப்புவித்து அவன் ஓடிப்போயிருந்த அடைக்கலப்பட்டணத்திற்கவனைத் திரும்பப் போகப்பண்ணக்கடவர்கள். பரிசுத்த எண்ணெயினாலே அபிஷேகம்பண்ணப்பட்ட பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டும் அங்கே அவன் அதிலேயிருக்கக்கடவன்.

௨௰௬ ஆனால் தான் ஓடிப்போயிருக்கிறதன் அடைக்கலப்பட்டணத்தின் எல்லையைக் கொலைசெய்தவன் விட்டுப்புறப்பட்டுப்போப்படுகிறதும்,

௨௰௭ இரத்தப்பழிவாங்குகிறவன் கொலைசெய்த அவனையவனுடைய அடைக்கலப்பட்டணத்திற்கு வெளியே கண்டுபிடித்துக் கொன்றுபோடுகிறதும் உண்டானால் இவன்மேலே பழியில்லை.

௨௮ ஏனெனிற் பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டுங் கொலைசெய்தவன் தன்னடைக்கலப்பட்டணத்திலிருந்து பிரதான ஆசாரியன் மரணமடைந்தபிற்பாடு தானோ தன்காணியாட்சியான சீமைக்குத் திரும்பப்போகவேண்டியதாயிருந்தது.

௨௯ இவைகள் உங்கள் எல்லா வாசஸ்தலங்களிலுமிருக்கும் உங்கள் தலைமுறைகளிலே உங்களுக்கு நியாயக்கட்டளையாயிருக்கக்கடவது.

௩௰ எவனாகிலும் ஒருமனிதனைக் கொன்றுபோட்டால் அப்பொழுது சாட்சிகளுடைய வாக்கின்படியே அந்தக் கொலைபாதகனைக் கொன்றுபோடக்கடவர்கள். ஆனாலும் ஒருமனிதன்பேரிற் சாவுக்கேதுவாய் ஒரே ஒரு சாட்சியுத்தரவுசொல்லவேண்டாம்.

௩௰௧ சாகிறதற்குக் குற்றஞ்சுமந்த கொலைபாதகனுடைய சீவனுக்காக நீங்கள் மீட்கும்பொருளை வாங்கவேண்டாம். அவன் கொலையுண்கிறதே கொலையுண்கவேண்டும்.

௩௰௨ தன்னடைக்கலப் பட்டணத்திற்கோடிப்போனவனை ஆசாரியன் மரணமடையாததற்குமுன்னே தன்சீமைக்குத் திரும்பி வாசஞ்செய்ய அவனுக்காக மீட்கும்பொருளை வாங்கவும் வேண்டாம்.

௩௰௩ நீங்களிருக்குந்தேசத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்கீர்களாக. ஏனென்றால் அப்படிக்கொத்த இரத்தந்தேசத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும். தேசத்திலே சிந்துண்ட இரத்தத்திற்காக இரத்தஞ்சிந்தப்போட்டவனுடைய இரத்தத்தினாலேயொழியவேறொன்றினாலுந் தேசத்தின்பாவம் நிவர்த்தியாகாது.

௩௰௪ நாம் வாசம்பண்ணும் உங்கள் குடியிருப்பான தேசத்தைத் தீட்டுப்படுத்தீர்களாக. ஏனென்றாற் கர்த்தராகிய நாம் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே வாசம் பண்ணுகிறோமென்று சொல்லென்றார்.

௩௰௬. அதிகாரம்.

ஒவ்வொரு கோத்திரத்தின் சுதந்தரங்கள் அவ்வொரு கோத்திரத்தோடே யிருக்கவேண்டுமென்பது.

யோசேப்புடைய குமாரரின் வம்சத்தாரில் மனாசேயின் குமாரனாகிய மாகீருக்குப் பிறந்த கிலெயாத்தின் வம்சப்பிதாக்களான தலைவர் சேர்ந்துவந்து மோசேக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களில் தலைவரான பிரபுக்களுக்கும் முன்பாகப் பேசி

௨ சொன்னதாவது. சீட்டுப்போட்டுத் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுக்கக் கர்த்தர் எங்களாண்டவனுக்குக் கற்பித்தாரே: எங்கள் சகோதரனாகிய செலொப்பியாத்தின் சுதந்தரத்தையவன் குமாரத்திகளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் எங்களாண்டவனுக்குக் கர்த்தராலே கற்பிக்கப்பட்டதே.

௩ அப்பொழுது இவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய வேறேகோத்திரங்களின் புத்திரருக்குப் பெண்சாதிகளானால் இவர்கள் சுதந்தரம் எங்கள் பிதாக்களுடைய சுதந்தரத்திலே குறைந்துபோய் இவர்கள் உட்படுகிற கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்து எங்கள் சுதந்தரத்துச் சீட்டுலவிழுந்த பங்கிலுங் குறையும்போம்.

௪ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரருக்கு யூபிலிவருஷம் வந்தாலும் அவர்களுடைய சுதந்தரம் அவர்கள் உட்படும்போன கோத்திரத்தின் சுதந்தரத்தோடே சேர்ந்திருந்து எங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே குறைந்துபோமென்றார்கள்.

௫ அப்பொழுது மோசே கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பித்துச் சொன்னதாவது. யோசேப் புத்திரரின் கோத்திரத்தார் சொல்லுகிறது நியாயம்.

௬ கர்த்தர் செலொப்பியாத்தின் குமாரத்திகளுக்காகக் கற்பிக்கிறவார்த்தையாவது. அவர்கள் தங்கள் பார்வைக்குச் சம்மதியானவர்களுக்குப் பெண்சாதிகளாகலாம் ஆனால் தங்கள் பிதாவின் கோத்திர வம்சத்தாருக்கு மாத்திரம் அவர்கள் பெண்சாதிகளாகவேண்டும்.

௭ அப்படியே இஸ்ரவேல் புத்திரரின் சுதந்தரம் ஒருகோத்திரத்தைவிட்டு மறுகோத்திரத்துக்குத் தாண்டாதிருக்கும். ஏனெனில் இஸ்ரவேல் புத்திரரில் அவரவர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்கவேண்டும்.

௮ இஸ்ரவேல் புத்திரரில் அவரவர் தங்கள் பிதாக்களின் சுதந்தரத்தை யனுபவிக்கும்படிக்கு இஸ்ரவேல் புத்திரருடைய யாதொருகோத்திரத்திலே சுதந்தரமடைந்திருக்கிற எந்தக்குமாரத்தியுந் தன் பிதாவின் கோத்திர வம்சத்தாரில் ஒருவனுக்குப் பெண்சாதியாகவேண்டும்.

௯ அப்படியே சுதந்தரம் ஒருகோத்திரத்தைவிட்டு வேறேகோத்திரத்துக்குத் தாண்டாது. ஏனெனில் இஸ்ரவேல் புத்திரரின் ஒவ்வொருகோத்திரத்தார் தங்கள் சுதந்தரத்திலே நிலைகொண்டிருக்க வேண்டுமென்று கற்பித்தானென்றான்.

௰ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே செலொப்பியாத்தின் குமாரத்திகள் செய்தார்கள்,

௰௧ மக்லாள் திர்சாள் ஒக்லாள் மில்காள் நோவாள் என்ற செலொப்பியாத்தின்

ர்த்திரன் நக்கேனத் தாப்பத்தப்பிள்ளைகட்கு
பெண்டுகளானார்கள். யோசேப்பின்
குமாரனாகிய மனாசே புத்திரரின் வம்
சத்தாராகிய மணவாளரானார்கள்.

௧௨ இப்படியே அவர்களுடைய சுதந்
தரம் தங்கள் பிதாவின் வம்சமான கோத்திரத்
திலேயிருந்து விட்டது.

௧௩ எரிகோவுக்கடுத்த யோர்தானுக்கு இப்பா
லேயிருக்கிற மோவாபின் சமனான வெளிக
ளிலே கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்
ரவேல் புத்திரருக்குக் கற்பித்த கற்பனைக
ளும் நியாயங்களும் இவைகளே.

மோசேயெழுதின நாலாமாகமம்
முடிந்தது.

மோசேயெழுதின

ஐந்தாம் ஆகமம்.

௧. அதிகாரம்,

ஓரேபை விட்டுக் கானான் தேசம் பற்றின யாவுக்கு
வருமட்டுமுண்டான காரியங்களையும் அங்கே
இஸ்ரவேலர் காண்பித்த முருட்டாட்ட
த்தையும் மோசே அவர்களுக்கு நினைப்பூ
ட்டினது.

சேயீர் மலை வழியாய்ப் போகிற ஓரே
புக்குப் பதினொரு நாள் பயணத் தூரமான
காதேஸ் பர்னேயாவிலிருந்து,

௨ சூப்புக்கு எதிராகவும் பாரானுக்கும்
தோப்பேலுக்கும் லாபானுக்கும் ஆத்ச
ரோத்துக்கும் திசாகாபுக்கும் நடுவாகவும்
யோர்தானுக்கு இப்பால் சமனான வனாந்
தரத்திலே வந்தபொழுது மோசே இஸ்ரவேலரெல்லாருக்கும் சொ
ன்ன வசனங்கள்,

௩ நாற்பதாம் வருஷம் பதினோராமாதம்
முதலாந்தேதியிலே மோசே இஸ்ரவே
ல் புத்திரரோடே கர்த்தர் அவர்களுக்குச்
சொல்லக் கற்பித்தபடியெல்லாம்
பேசினான்.

௪ எஸ்போனிலே குடியிருந்த எமோரியரி
ன் இராசாவாகிய சீகோனையும் அஸ்தரோ
த்திலே குடியிருந்த பாசானின் இராசாவா
கிய ஓகையும் எத்ரேயிலே அவன்
முறியடித்ததற்குப் பிற்பாடு,

௫ யோர்தானுக்கு இப்பாலிருக்கிற மோவா
பின் தேசத்திலே மோசே இந்த நியாயப்
பிரமாணத்தை விவரித்துக் காண்பிக்கத் து
வக்கினதாவது.

௬ ஓரேபிலே நம்முடைய பராபரனாகிய
கர்த்தர் நம்மோடே சொன்னதேதெனில்
நீங்கள் இந்தப் பர்வதத்தண்டையிலே தரித்திருந்த
து போதும்,

௭ நீங்கள் திரும்பிக்கொண்டு பயணம்பண்
ணி எமோரியரின் மலைகளுக்கும் அவை
களுடைய எல்லா அயல்புறங்களுமாகிய சம
மனான வெளிகளிலும் மலைகளிலும் பள்ளத்
தாக்குகளிலும் தெற்கிலும் கடலோரத்திலு
மிருக்கிற கானானியரின் தேசத்துக்கும் லீப
னோனுக்கும் ஐபிராத்தென்னும் பெரிய நதி
மட்டுக்கும் வாருங்கள்.

௮ இதோ, அந்தத் தேசத்தை உங்களு
க்கு முன்பாக வைத்தேன். நீங்கள் போய்க் க
ர்த்தர் உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமு
க்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அவர்க
ளுக்குப் பிற்பாடிருக்கும் அவர்கள் வித்து
க்கும் கொடுப்பேனென்று ஆணையிட்ட அந்
தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்
கள் என்றார்.

௯ அக்காலத்திலே நான் உங்களோடே
சொன்னது. நான் ஒருவனாக உங்களைச் சும
க்கக்கூடாது.

௧௦ உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களை
ப் பெருகப்பண்ணினார். இதோ, இந்நாளில்
நீங்கள் வானத்தின் நட்சத்திரங்களைப்போ
ல ஏராளமாயிருக்கிறீர்கள்.

௧௧ உங்கள் பிதாக்களின் பராபரனாகிய
கர்த்தர் உங்களை இப்பொழுதிருக்கிறதைப்
பார்க்கிலும் இன்னம் ஆயிரம் மடங்காக்கித்
தாம் உங்களுக்குச் சொன்னபடியே உங்க
ளை ஆசீர்வதிப்பாராக.

௧௨ நான் ஒருவனாக உங்களால் உண்டா
ம் வருத்தத்தையும் பிரயாசத்தையும் உங்க
ள் வழக்குகளையும் சுமப்பதெப்படி?

௧௩ நான் உங்கள் மேல் தலைவர்களாக வைக்கு
ம்படிக்கு உங்கள் கோத்திரங்களிலே ஞான
மும் உணர்வும் அறிவுமுள்ள மனிதரைச் சம்
பாதியுங்களென்றேன்.

௧௪ அப்பொழுது நீங்கள் எனக்குப் பி
ரதியுத்தரமாக நீர் செய்யச்சொன்ன கா
ரியம் நல்லதென்றீர்கள்.

௧௫ ஆகையால் நான் ஞானமும் அறி
வுமுள்ள மனிதராகிய உங்கள் கோத்திரங்

ளின் தலைவரைச் சேர்த்துக்கொண்டு அவர்களை உங்கள்மேல் தலைவராயிருக்க ஆயிரம் பேருக்கு அதிபதிகளாகவும் நூறு ஐம்பது பத்துப் பேருக்கு அதிபதிகளாகவும் உங்கள் கோத்திரங்களில் மணியகாரராகவும் வைத்தேன்.

௰௬ உங்களுடைய நியாயாதிபதிகளுக்கு அக்காலத்திலே நான் கற்பித்ததாவது. நீங்கள் உங்கள் சகோதரருக்குள்ளே வியாச்சியங்களைக் கேட்டு மனிதனுக்கும் அவன் சகோதரனுக்கும் அவர்களோடிருக்கிற பரதேசிக்கும் நீதியாய் நியாயங்களைத் தீருங்கள்.

௰௭ நியாயத்திலே முகம் பாராமற் சிறியவனைப் பெரியவனுக்குச் சரியாய்க் கேட்கக்கடவீர்கள். ஒருவர் முகத்திற்கும் பயப்படீர்களாக. ஏனெனில் நியாயத்தீர்ப்பு பராபரனுடையது. அறுல உங்களுக்கு மிஞ்சின அரிதாகிய காரியத்தை என்னண்டைக்கொண்டு வாருங்கள். நான் அதைக் கேட்பேனென்று சொல்லி,

௰௮ நீங்கள் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் அக்காலத்திலே உங்களுக்குக் கற்பித்தேன்.

௰௯ பிற்பாடு நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நமக்குக் கற்பித்தபடியே நாம் ஓரேபைவிட்டுப் பயணம்பண்ணி நீங்கள் கண்ட அந்தப் பயங்கரமான பெரிய வனாந்தர வழியாய் எல்லாம் எமோரியரின் மலைகளுக்கு நேராக நடந்து வந்து காதேஸ்பர்னேயாவிலே சேர்ந்தோம்.

௨௰ அப்பொழுது நான் உங்களோடே சொன்னதாவது. நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கிற எமோரியரின் மலைகள் மட்டும் வந்தீர்கள்.

௨௧ இதோ, உன் பராபரனாகிய கர்த்தர் உனக்கு முன்பாக அந்தத் தேசத்தை வைத்தார். உன் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே நீ போய் அதைச் சுதந்தரித்துக்கொள். பயப்படாமலுங் கலங்காமலுமிருவென்றேன்.

௨௨ அப்பொழுது நீங்களெல்லாரும் என்னண்டை சேர்ந்துவந்து நமக்காக அந்தத் தேசத்தைச் சோதித்துப் பார்க்கிறதற்கும் நாம் எந்த வழியாய் அதிலே போய் ஏறலாம் எந்தப் பட்டணங்களுக்குப் போகலாமென்று நமக்குச் செய்தி கொண்டுவருகிறதற்கும் நமக்கு முன்னே மனிதரை அனுப்புவோமாக என்றீர்கள்.

௨௩ அதெனக்கு நன்றாய்க் கண்டது. அப்படியே ஒவ்வொரு கோத்திரத்திலொருவனாக உங்களிலே பன்னிரண்டு மனிதரை அனுப்பினேன்.

௨௪ அவர்கள் போய் மலைகளிலேறி எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டுஞ் சேர்ந்து அதை வேவுபார்த்து,

௨௫ அந்தத் தேசத்துக் கனிகளிலே சிலதைத் தங்கள் கைகளிலெடுத்துக்கொண்டு நம்மண்டைக்கு இறங்கிவந்து நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கிற அந்தத் தேசம் நன்றாயிருக்கிறதென்று நமக்குச் செய்தி கொண்டுவந்தார்கள்.

௨௬ ஆனாலும் நீங்கள் போய் ஏறமாட்டோமென்று உங்கள் பராபரனாகிய கர்த்தருடைய வாக்குக்குக் கீழ்ப்படியாதே போய்,

௨௭ உங்கள் கூடாரங்களில் முறுமுறுத்துக் கர்த்தர் நம்மைப் பகைத்து நம்மை யழிக்கிறதற்கென்று நம்மை எமோரியரின் கையிலொப்புக்கொடுக்கும்படிக்கு நம்மை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௨௮ எங்கே நாம் போயேறலாம்? ஜனம் பெரியதும் நம்மைப் பார்க்கிலும் உயர்ந்ததும் பட்டணங்கள் பெரியவைகளும் ஆகாயமட்டும் அரணிப்பாக்கப்பட்டவைகளுமாயிருக்கிறதென்றும் ஏனாக்கு புத்திரரையும் அங்கே கண்டோமென்றும் நம்முடைய சகோதரர் சொல்லி நம்முடைய இருதயத்தைக் கரையப்பண்ணினார்களென்றீர்கள்.

௨௯ அப்பொழுது நான் உங்களோடே சொன்னது. நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலுமிருப்பீர்களாக.

௩௰ உங்களுக்கு முன்னே நடக்கிற உங்கள் பராபரனாகிய கர்த்தர்தாமே எகிப்திலே உங்களோடிருந்து உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றுக்கும் வனாந்தரத்திலே செய்துவந்ததற்கும் ஒத்தபடி உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்.

௩௧ ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமக்கிறதுபோலே நீங்கள் இவ்விடத்திலே சேருமட்டும் நடந்துவந்த எல்லா வழியிலும் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைச் சுமந்துவந்தாரென்று கண்டாயேயென்றேன்.

௩௨ இப்படிச் சொன்னாலும் நீங்கள் உங்களுக்குப் பாளயமிறங்கத்தக்க இடங்களை விசாரிக்கவும் நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும்,

௩௩ இராவிலே அக்கினியிலும் பகலிலே மேகத்திலும் உங்களுக்கு முன்னே வழியிலே நடந்த உங்கள் பராபரனாகிய கர்த்தரை விசுவாசியாதே போனீர்கள்.

௩௪ ஆகையால் கர்த்தர் உங்கள் வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டுக் கடுங்கோபமடைந்து,

௩௫ கொடுப்போமென்று நாம் உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தை இந்தப் பொல்லாத சந்ததியான இந்த மனிதரிலொருவனுங் காண்பதில்லையென்றும்,

௩௬ எப்புனேயின் குமாரனாகிய காலேப் மாத்திரம் அதைக் காண்பான். அவன் கர்த்தரை உத்தமமாய்ப் பின்பற்றினபடியினாலே

ரது அவனைத்திடப்படுத்த தேசத்தை யவ னுக்குமவன பிள்ளைகளுக்கும் கொடுப் பேனென்றும் ஆணையிட்டார்.

௩௭ கர்த்தர் உங்கள் நிமித்தமாக என் னோடும் கோபமாய்ச் சொன்னதாவது நீயும் அதற்குட் பிரவேசிப்பதில்லை.

௩௮ உனக்குமுன்பாக நிற்கிற நூனின குமாரனாகிய யோசுவா அதற்குட் பிரவேசி ப்பான். அவனைத்திடப்படுத்து. ஏனென்றா ல் அவனே அதை இஸ்ரவேலுக்குச் சுதந்த ரப்படுத்துவான்.

௩௯ கொள்ளையாமென்று நீங்கள் சொன் ன உங்கள் குழந்தைகளும் இந்நாளில் நன் மை தீமையறியாத உங்கள் பிள்ளைகளும் அதற்குட் பிரவேசிப்பார்கள். அவர்களுக்கு அதைக் கொடுப்போம். அவர்கள் அதைச்சுத ந்தரிப்பார்கள்.

௪௦ நீங்களோவென்றால் திரும்பிக்கொ ண்டு செங்கடலுக்குப் போகிறவழியே வனாந்தரத்துக்குப் பயணம் பண்ணுங் களென்றார்.

௪௧ அப்பொழுது நீங்கள் என்னைக்கண்டு பிர தியுத்தரமாகக் கர்த்தருக்கு விரோதமா ய்ப் பாவஞ்செய்தோம். நாங்கள் போய் நம்முடைய பராபரனாகிய கர்த்தர் எங்களு க்குக் கற்பித்தபடியெல்லாம் யுத்தம்பண் ணுவோமென்று சொல்லி அவரவர் உங்கள் யுத்த ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு மலை யின்மேலேற ஆயத்தமாயிருந்தீர்கள்.

௪௨ அப்பொழுது கர்த்தர் என்னுடனே நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிந்துபோகாதபடிக்கேறவும் யுத்த ம்பண்ணவுமிருப்பீர்களாக ஏனெனில் நா ன் உங்கள் நடுவிலிரேனென்று அவர்களு க்குச் சொல்லென்றார்.

௪௩ அப்படி உங்களோடே சொன்னேன். நீங்களோவெனில் செவிகொடுக்கவில்லை. நீங்கள் கர்த்தருடைய வாக்குக்குக் கீழ்ப்படி யாமல் இடும்புசெய்து மலையின்மே லேறினீர்கள்.

௪௪ அப்பொழுது அந்த மலையிலே கு டியிருக்கிற எமோரியர் உங்களுக்கெதிரா கப்புறப்பட்டு வந்து தேனீக்கள் செய்கி றாப்போலே உங்களைத் துரத்தி உங்களைச் சே யீரிலே ஒர்மாமட்டுக்கும் முறியடித்தார் கள்.

௪௫ அப்பொழுது திரும்பிவந்து கர்த்த ருக்கு முன்பாக அழுதீர்கள். ஆனாலுங் கர்த்தர் உங்கள் சத்தத்தைக் கேட்கவில்லை, உங்களு க்குச் செவிகொடுக்கவுமில்லை

௪௬ இப்படியே காதேசிலே அநேகநாள் தங்கியிருந்தீர்கள்.

௨. அதிகாரம்.

இஸ்ரவேல எதோமியரோடும மோவாபிய ரோடும அம்மோனபுத்திரரோடும் யுத்தங் கலவாமல் எஸ்போனின இராசாவாகிய சீகோனோடே யுத்தங்கலந்து அவனை ச் செயித்த செய்திகளின விவரம்.

௧ கர்த்தர் என்னோடே சொன்னபடியே நானதிரும்பிக்கொண்டு நாமெல்லாருஞ் செங் கடலுக்குப் போகிறவழியே வனாந்தரத்துக்குப் பயணம் பண்ணி அநேகநாளாய்ச் சேயீர்மலையைச் சுற்றினோம்.

௨ பிற்பாடு கர்த்தர் என்னோடே சொன் னதாவது.

௩ நீங்கள் இந்த மலையைச் சுற்றினது போதும். வடக்கே திரும்புங்கள்.

௪ சனத்துக்கு நீ கட்டளையிடவேண்டிய தென்னவென்றால் சேயீரிலே குடியிருக்கிற ஏசா வின் புத்திரரான உங்கள் சகோதரருடைய எல்லையைக் கடந்துபோகிறீர்கள். அவர்கள் உங்களுக்குப் பயப்படுவார்கள். நீங்களோவென்றால் வெகு எச்சரிக்கையாயிருங்கள்.

௫ அவர்களோடே போர்கலவாதிருங்கள். ஏனென்றால் அவர்கள் தேசத்திலே ஒரு அடியமாத்திரமும் உங்களுக்குக் கொடேம். ஏனெனில் சேயீர்மலையை ஏசாவுபுத்திர ருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தோம்.

௬ போசனத்தை நீயவர்களகையிலே பண த்துக்கு வாங்கிப் போசித்துத் தண்ணீரையு ம அவர்களகையிலே பணத்துக்கு வாங்கிக் குடிப்பீர்களாக.

௭ ஏனெனில் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னுடைய கைகளின் கிரியைகளிலெல்லாம ஆசீர்வதித்துவருகிறார். இந்தப் பெரிய வ னாந்தர வழியாய் நீ நடக்கிறதை யறிவார். இந்த நாற்பது வருஷமும் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னோடேயிருந்தார். உனக்கொ ன்றுங் குறைபட்டதில்லையென்று சொல லென்றார்.

௮ அப்படியே நாங்கள் சேயீரிலே குடியிரு க்கிற ஏசாவுபுத்திரரான நம்முடைய சகோ தரரைவிட்டுக் கடந்து அந்த வெளிவழியா ய் ஏலாத்தின்மேலும் எசியோன் கேபேர் மேலும் போய்த் திரும்பிக்கொண்டு மோவா ப் வனாந்தர வழியாய்க் கடந்து நடந்தோம்.

௯ அப்பொழுது கர்த்தர் என்னோடே சொன்னதாவது. நீ மோவாபை நெருக்கா மலும் அவர்களோடே யுத்தங்கல வாமலுமிருப்பாயாக. ஏனெனில் அவர்கள் தேசத்திலே உனக்கொன்றுஞ் சுதந்தரமா கக்கொடேம். அதேதென்றால் ஆர் என்ற பட்டணத்தின் சீமையை லோத்புத்திரருக் குச் சுதந்தரமாகக் கொடுத்தோம்.

௰ இராட்சியானதும் ஏனாக்கியரைப் போ லே உயர்ந்ததும் பெரிய சனசதளமாகிய ஏமியர் முதல அதிலே குடியிருந்தார்கள்.

௰௧ இவர்களும் ஏனாக்கியரைப்போலே இராட்சதரென்றெண்ணப்பட்டார்கள். மோவாபியர் அவர்களை ஏமிமென்றார்கள்.

ளின் தலைவரைச் சேர்த்துக்கொண்டு அவர்களை உங்கள்மேல் தலைவராயிருக்க ஆயிரம் பேருக்கதிபதிகளாகவும் நூறு ஐம்பது பத்துப் பேருக்கதிபதிகளாகவும் உங்கள் கோத்திரங்களில் மணியகாரராகவும் வைத்தேன்.

௰௬ உங்களுடைய நியாயாதிபதிகளுக்கு அக்காலத்திலே நான் கற்பித்ததாவது. நீங்கள் உங்கள் சகோதரருக்குள்ளே வியாச்சியங்களைக் கேட்டு மனிதனுக்கும் அவன் சகோதரனுக்கும் அவர்களோடிருக்கிற பரதேசிக்கும் நீதியாய் நியாயங்களைத் தீருங்கள்.

௰௭ நியாயத்திலே முகம் பாராமற் சிறியவனைப் பெரியவனுக்குச் சரியாய்க் கேட்கக்கடவீர்கள். ஒருவர் முகத்துக்கும் பயப்படீர்களாக. ஏனெனில் நியாயத்தீர்ப்பு பராபரனுடையது. ஆனால் உங்களுக்கு மிஞ்சின அரிதாகிய காரியத்தை என்னண்டை கொண்டுவாருங்கள். நான் அதைக் கேட்டேனென்று சொல்லி,

௰௮ நீங்கள் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் அக்காலத்திலே உங்களுக்குக் கற்பித்தேன்.

௰௯ பிற்பாடு நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நமக்குக் கற்பித்தபடியே நாம் ஒரேபை விட்டுப் பயணம்பண்ணி நீங்கள் கண்ட அந்தப் பயங்கரமான பெரிய வனாந்தர வழியாய் எல்லாம் எமோரியரின் மலைகளுக்கு நேராக நடந்து வந்து காதேஸ்பர்னேயாவிலே சேர்ந்தோம்.

௨௰ அப்பொழுது நான் உங்களோடே சொன்னதாவது. நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கிற எமோரியரின் மலைகள் மட்டும் வந்தீர்கள்.

௨௧ இதோ, உன் பராபரனாகிய கர்த்தர் உனக்கு முன்பாக அந்தத் தேசத்தை வைத்தார். உன் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியே நீ போயேறி அதைச் சுதந்தரித்துக்கொள். பயப்படாமலும் கலங்காமலுமிருவென்றேன்.

௨௨ அப்பொழுது நீங்களெல்லாரும் என்னண்டை சேர்ந்து வந்து நமக்காக அந்தத் தேசத்தைச் சோதித்துப் பார்க்கிறதற்கும் நாம் எந்த வழியாய் அதிலே போயேறலாம் எந்தப் பட்டணங்களுக்குப் போகலாமென்று நமக்கு அறிவித்துக்கொண்டு வருகிறதற்கும் நமக்கு முன்னாக மனிதரை அனுப்புவோமாக என்றீர்கள்.

௨௩ அதெனக்கு நன்றாய்க் கண்டது. அப்படியே ஒவ்வொரு கோத்திரத்திலொருவனாக உங்களிலே பன்னிரண்டு மனிதரைத் தெரிந்தனுப்பினேன்.

௨௪ அவர்கள் போய் மலைகளிலேறி எஸ்கோல் பள்ளத்தாக்கு மட்டும் சேர்ந்து அதைவேவுபார்த்து,

௨௫ அந்தத் தேசத்துக் கனிகளிலே சிலவைத் தங்கள் கைகளிலே எடுத்துக்கொண்டு நம்மண்டைக்கு இறங்கிவந்து நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நமக்குக் கொடுக்கிற அந்தத் தேசம் நன்றாயிருக்கிறதென்று நமக்கு அறிவித்துக்கொண்டு வந்தார்கள்.

௨௬ ஆனால் நீங்கள் போயேறமாட்டோமென்று உங்கள் பராபரனாகிய கர்த்தருடைய வாக்குக்குக் கீழ்ப்படியாதே போய்,

௨௭ உங்கள் கூடாரங்களில் முறுமுறுத்துக் கர்த்தர் நம்மைப் பகைத்து நம்மை அழிக்கிறதற்கென்று நம்மை எமோரியரின் கையிலே ஒப்புக்கொடுக்கும்படிக்கு நம்மை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௨௮ எங்கே நாம் போயேறலாம்? எம்மைப் பெரியதும் நம்மைப்பார்க்கிலும் உயர்ந்ததுமான பட்டணங்களைப் பெரியவைகளுமாய்க் காயம் மட்டும் அரணிப்பாக்கப்பட்ட வைகளுமாயிருக்கிறதென்றும் ஏனாக்கு புத்திரரையும் அங்கே கண்டோமென்றும் நம்முடைய சகோதரர் சொல்லி நம்முடைய இருதயத்தை கரையப்பண்ணினார்களென்றீர்கள்.

௨௯ அப்பொழுது நான் உங்களோடே சொன்னது. நீங்கள் கலங்காமலும் அவர்களுக்குப் பயப்படாமலுமிருப்பீர்களாக.

௩௰ உங்களுக்கு முன்னாக நடக்கிற உங்கள் பராபரனாகிய கர்த்தர் தாமே எகிப்திலே உங்களோடிருந்து உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்ததெல்லாவற்றிற்கும் வனாந்தரத்திலே செய்து வந்ததற்கும் ஒத்தபடி உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்.

௩௧ ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமக்கிறபோலே நீங்கள் இவ்விடத்திலே சேருமட்டும் நடந்து வந்த எல்லா வழியிலும் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைச் சுமந்து வந்தாரென்று கண்டாயேயென்றேன்.

௩௨ இப்படிச் சொன்னாலும் நீங்கள் உங்களுக்குப் பாளயமிறங்கத்தக்க இடங்களை விசாரிக்கவும் நீங்கள் போகவேண்டிய வழியை உங்களுக்குக் காட்டவும்,

௩௩ இராவிலே அக்கினியிலும் பகலிலே மேகத்திலும் உங்களுக்கு முன்னாக வழியிலே நடந்த உங்கள் பராபரனாகிய கர்த்தரை விசுவாசியாதே போனீர்கள்.

௩௪ ஆகையாற் கர்த்தர் உங்கள் வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டுக் கடுங்கோபமடைந்து,

௩௫ கொடுப்போமென்று நாம் உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட அந்த நல்ல தேசத்தையிந்தப் பொல்லாத சந்ததியான இந்த மனிதரிலொருவனுங் காண்பதில்லையென்றும்,

௩௬ எப்புனேயின் குமாரனாகிய காலேப் மாத்திரம் அதைக் காண்பான். அவன் கர்த்தரைத் உத்தமமாய்ப் பின்பற்றின படியினாலே

தை அவன் மிதித்து வந்த தேசத்தை யவ
னுக்கும் அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்
பேனென்றும் ஆணையிட்டார்.

௩௭ கர்த்தர் உங்கள் நிமித்தமாக என
னோடுங் கோபமாய்ச் சொன்னதாவது
நீயும் அதற்குட்பிரவேசிப்பதில்லை.

௩௮ உனக்குமுன்பாக நிற்கிற நூனின
குமாரனாகிய யோசுவா அதற்குட்பிரவேசி
ப்பான், அவனைத் திடப்படுத்து. ஏனென்றா
ல் அவனே அதை இஸ்ரவேலுக்குச் சுதந்த
ரமாக்கடவான்.

௩௯ கொள்ளையாமென்று நீங்கள் சொன்
ன உங்கள் குழந்தைகளும் இந்நாளில் நன்
மை தீமை அறியாத உங்கள் பிள்ளைகளும்
அதற்குட்பிரவேசிப்பார்கள். அவர்களுக்
கதைக் கொடுப்போம். அவர்கள் அதைச் சுத
ந்தரிப்பார்கள்.

௪௰ நீங்களோவென்றால் திரும்பிக்கொ
ண்டு சிவப்புச் சமுத்திரத்திற்குப் போகிறவழி
யே வனாந்தரத்திற்குப் பயணம் பண்ணுங்
களென்றார்.

௪௧ அப்பொழுது நீங்களெனக்குப் பிர
தியுத்தரமாகக் கர்த்தருக்கு விரோதமா
கப் பாவஞ்செய்தோம். நாங்கள்போயெ
நம்முடைய பராபரனாகிய கர்த்தர் எங்களு
க்குக் கற்பித்தபடியெல்லாம் யுத்தம்பண்
ணுவோமென்று சொல்லி அவரவர் உங்கள்
யுத்த ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு மலை
க்கேறுகிறதற்கு ஆயத்தமாயிருந்தீர்கள்.

௪௨ அப்பொழுதுகர்த்தர் என்னுடனே
நீ அவர்களை உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக
முறிந்துபோகாதபடிக்கேறுமலும் யுத்த
ம்பண்ணுமலுமிருப்பீர்களாக ஏனெனில் நா
ம் உங்களிடத்திலேயிராமென்று அவர்களு
க்குச்சொல்லென்றார்.

௪௩ அப்படியுங்களோடே சொன்னேன்.
நீங்களோவெனிற் செவிகொடுக்கவில்லை.
நீங்கள் கர்த்தருடையவாக்குக்கீழ்ப்படி
யாமல் இடும்புசெய்து மலைகளின்மே
லேறினீர்கள்.

௪௪ அப்பொழுது அந்த மலைகளிலேகு
டியிருக்கிற எமோரியர் உங்களுக்கெதிரா
கப் புறப்பட்டுவந்து தேன்பூச்சிகள் செய்கி
றதுபோலே உங்களைத் துரத்தியுங்களைச்சே
யீரிலேத் தொர்மாமட்டுக்கும் முறியடித்தார்
கள்.

௪௫ அப்பொழுது திரும்பிவந்து கர்த்த
ருக்குமுன்பாக அழுதீர்கள். ஆனாற்கர்த்தர்
உங்கள் சத்தத்தைக் கேட்கவில்லை, உங்களு
க்குச் செவிகொடுக்கவுமில்லை

௪௬ இப்படியேகாதேசிலே அநேகநாள்
தங்கியிருந்தீர்கள்.

உ. அதிகாரம்.

வனாந்தரவழியே போனதும் மோவாபிய
ரோடும் அம்மோன்புத்திரரோடும் யுத்த
ங்கலவாமல் எஸ்போனின் இராசாவாகி
ய சீகோனோடேயுத்தங்கலந்து அவனைச்
செயித்தசெய்திகளின்விவரம்.

௧ கர்த்தர் என்னோடேசொன்னபடியே
நாங்கள் திரும்பிக்கொண்டு நாமுற்கடலுக்குப்
போகிறவழியே வனாந்தரத்திற்குப் பயணம்
பண்ணி அநேகநாளாய்ச் சேயீர் மலையைச்
சுற்றினோம்.

உ பிற்பாடு கர்த்தர் என்னோடே சொன்
னதாவது.

௩ நீங்கள் இந்த மலையைச் சுற்றினது
போதும். வடக்கே திரும்புங்கள்.

௪ சனத்திற்கு நீ கற்பிக்கவேண்டியதே
தென்றால் சேயீரிலே குடியிருக்கிற ஏசாவு
புத்திரரான உங்கள்சகோதரரின் எல்லையை
க் கடக்கப் போகிறீர்கள். அவர்கள் உங்களு
க்குப் பயப்படுவார்கள். நீங்களோவென்றா
ல் வெகு எச்சரிக்கையாயிருங்கள்.

௫ அவர்களோடே போர்கலவாதேயுங்க
ள். ஏனென்றால் அவர்கள் தேசத்திலே ஒரு
அடியம்மாத்திரம் உங்களுக்குக் கொடேனா
ம் ஏனெனில் சேயீர் மலையை ஏசாவுபுத்திர
ருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேனாம்.

௬ போசனத்தையவர்கள்கையிலே பண
த்திற்கு வாங்கிப் புசித்துத் தண்ணீரையு
ம் அவர்கள்கையிலே பணத்திற்கு வாங்கிக்
குடிப்பீர்களாக.

௭ ஏனெனில் உன் பராபரனாகிய கர்த்தர்
உன்னுடைய கைகளின் கிரியைகளிலெல்லாம்
ஆசீர்வதித்துவருகிறார். இந்தப் பெரிய வனா
ந்தர வழியாய் நீ நடக்கிறதை யறிவார்.
இந்த நாற்பது வருஷம் உன் பராபரனாகிய
கர்த்தர் உன்னோடேயிருந்தார். உனக்கொ
ன்றுங் குறைபட்டதில்லையென்று சொல்
லென்றார்.

௮ அப்படியே நாங்கள் சேயீரிலே குடியிரு
க்கிற ஏசாவுபுத்திரரான நம்முடைய சகோ
தரரைவிட்டுக்கடந்து அந்த வெளிவழியா
ய் ஏலாத்திலும் எசியோன் கேபேர்
மேலும் போய்த் திரும்பிக்கொண்டு மோவா
ப் வனாந்தர வழியாய்க் கடந்து வந்தோம்.

௯ அப்பொழுது கர்த்தர் என்னோடே
சொன்னதாவது. நீ மோவாபை நெருக்கப்
படுத்தாமலும் அவர்களோடேயுத்தங்கல
வாமலுமிருப்பாயாக. ஏனெனில் அவர்கள்
தேசத்தில் உனக்கொன்றுஞ் சுதந்தரமா
கக் கொடேனாம். அதேனென்றால் ஆர் என்ற
பட்டணத்தின் சீமையை லோத்புத்திரரு
க்குச் சுதந்தரமாகக் கொடுத்தேனாம்.

௰ இராட்சியான ஏமம் ஏனாகியரைப்போ
லே உயர்ந்ததுமான பெரிய சனசதளமாகிய
ஏமியர் முதல் அதிலே குடியிருந்தார்கள்.

௰௧ இவர்களும் ஏனாகியரைப்போலே இரா
ட்சதரென்றெண்ணப்பட்டார்கள்
மோவாபியர் அவர்களை ஏமியரென்றார்கள்.

௰௨ அபபடியே சேயீரிலும முதல ஓரியர் குடியிருந்தார்கள். ஏசாவுபுத்திரர் அவர்களைத் துரத்தி அவர்களைத் தங்களுக்கு முனபாக அழித்து அவர்கள ஸ்தலத்திலே குடியேறினார்கள். இஸ்ரவேலருக்குச் சுதந்தரமாகக் கர்த்தர் கொடுத்த தேசத்திலே செயததுபோலேதானே.

௰௩ இபபொழுதும எழுந்து சேரேத் ஆற்றைக் கடந்துபோங்களென்றார். அபபடியே சேரேத் ஆற்றைக் கடந்தோம.

௰௪ நாங்காதேஸ் பர்னேயாவை விட்டுப புறப்பட்டது முதற்கொண்டு சேரேத் ஆற்றைக் கடக்குமட்டுக்கும யுத்தமனிதரான சந்ததி எல்லாம கர்த்தர் தங்களுக்கு ஆணையிட்டபடியே பாளயத்தின நடுவிலிருந்து மாண்டு தீருமட்டுக்குச் சென்ற நாட்கள முபபத்தெட்டுவருஷங்களாயிருக்கின்றது.

௰௫ அவர்கள பாளயத்தின நடுவிலிருந்து மாண்டு தீருமட்டுங் கர்த்தருடைய கையும அவர்களை நிர்மூலமாக்கும்படிக்கவர்களுக்கு விரோதமாயிருந்தது

௰௬ யுத்த மனிதரெல்லாரும சனத்தின நடுவிலிருந்து செத்துத் தீர்ந்தபபிறபாடேயென்றல,

௰௭ கர்த்தர் எனனோடேசொனனதாவது.

௰௮ நீ ஆர் பட்டணமிருக்கிற மோவாபின எல்லையை யின்றைக்குக் கடந்து,

௰௯ அமமோன புத்திரருக்கெதிராகச சேர்ந்துபோகிறாய. அவர்களை நீ நெருக்கப படுத்தவும அவர்களோடே போர்கலக்கவும வேண்டாம. ஏனெனில அமமோனபுத்திரரின தேசத்திலொன்றும உனக்குச்சுதந்தரமாகக் கொடேன. அதேனெனறல அதைலோத் புத்திரருக்குச சுதந்தரமாகக் கொடுத்தேன.

௨௰ அதுவும இராட்சதரின தேசமாக எண்ணபபட்டது. இராட்சதர்முதல அதிலே குடியிருந்தார்கள். அமமோனியர் அவர்களைச சம்சூமீயரென்றார்கள.

௨௰௧ அவர்கள திரட்சியானதும ஏனாக்கியரைபபோலே உயர்ந்ததுமான பெரியசனமாயிருந்தார்கள. கர்த்தரோவென்றல அவர்களையிவர்களுக்கு முனபாக அழியப பண்ணினார். இவர்கள அவர்களைத் துரத்திவிட்டு அவர்கள ஸ்தலத்திலே குடியேறினார்கள.

௨௰௨ அவர் சேயீரிலேகுடியிருக்கிற ஏசாவுபுத்திரருக்காகச்செய்து ஓரியரையவர்களுக்கு முனபாக அழியபபண்ணினதுபோலேயும அவர்கள இவர்களைத் துரத்திவிட்டு இவர்கள ஸ்தலத்தில இந்நாள வரைக்குங் குடியிருந்ததுபோலேயுந்தானே.

௨௰௩ கப்தோரிலிருந்து புறபபட்ட கப்தோரியர் அசேரீமதுவங்கிக் காசாமட்டும் குடியிருந்த ஆவியரையழித்து அவர்கள ஸ்தலத்திலே குடியேறினதுபோலேயுந்தானே.

௨௰௪ நீங்கள எழுமபிப பயணமபண்ணி அர்னோன ஆற்றைக்கடவுங்கள. இதோ, எஸ்போனின இராசாவாகிய சீகோனென்ற எமோரியனையும அவனதேசத்தையும உனகைக்கொபபுக்கொடுத்தோம. அதைச சுதந்தரித்துக்கொள்ளத்துவக்கி அவனோடே யுத்தஞ்செய்யக்கடவ.

௨௰௫ உனனாலுண்டாகுந் திகிலையும உன பயத்தையும வானத்தின கீழ் எங்குமிருக்கிற சனங்களின்மேலே வரபபண்ண இந்நாளிலே துவக்குவோம. உன கீர்த்தியைக்கேட்பவர்கள உனக்குமுனபாகத் தத்தளித்து மனங்கலங்குவார்களென்றார்.

௨௰௬ அபபொழுது நானகேதேமோத் வனாந்தரத்திலிருந்து எஸ்போனின இராசாவாகிய சீகோனண்டைக்குச சமாதானமான வார்த்தைகளைசசொலலுந் தூதுவர்களையனுபபி,

௨௰௭ நான உம்முடையதேசத்தைக்கடந்துபோகட்டும. வலது இடதுபக்கமாயச சாயாமல வழியிலேதானே நடபபேன.

௨௰௮ சேயீரிலே குடியிருக்கிற ஏசாவின புத்திரரும ஆர்பட்டணத்திலே குடியிருக்கிற மோவாபியரும எனக்குச செய்ததுபோலே நீர் எனக்குநான யோர்தானைக் கடந்து எங்கள பிதாவாகிய கர்த்தர் எங்களுக்குக் கொடுக்கிற தேசத்திலேவருமட்டும.

௨௰௯ நானபொசிக்கும போசனத்தை விலைக்கிரயமாகவிற்று நானகுடிக்குந்தண்ணீரை விலைக்கிரயமாகத் தருவீராக. நான எனகால்நடையாய்க்கடக்கமாத்திரம இடங்கொடுமெனறுசொலலியனுபபினேன.

௩௰ ஆனாலதனதேசத்தைக்கடக்க எஸ்போனின இராசாவாகிய சீகோன நமக்கிடங்கொடுக்க மனதாயிருந்ததிலலை. ஏனெனறல உனபிதாவாகிய கர்த்தர் அவனை இந்நாளிலிருக்கிறதுபோல உனகையிலொப்புக்கொடுக்கும்படிக்கு அவன ஆவியைக் கடினபபடுத்தி அவன இருதயத்தையுங் கொள்ளப்பண்ணியிருந்தார்.

௩௰௧ அபபொழுதுகர்த்தர் எனனோடே இதோ, சீகோனையும அவனதேசத்தையும உனக்குமுனபாக ஒபபுக்கொடுக்கத் துவக்கினோம. அவன தேசத்தைக் கட்டிக் கொண்டுசுதந்தரிக்கத் துவக்கென்றார்.

௩௰௨ சீகோனும அவனுடைய எல்லாச சனமும நமக்கெதிராக யுத்தமபண்ணப புறபபட்டுயாகசாவிலே வந்தான.

௩௰௩ அவனை நமமுடைய பிதாவாகிய கர்த்தர் நமக்குமுனபாக ஒபபுக்கொடுத்தார். நாம அவனையும அவனகுமாரரையும

அவனுடைய எல்லாச்சனத்தையும் முறிய டித்தோம்,

௩௪ அவனுடைய பட்டணங்களையெல்லாம் அக்காலத்திலே பிடித்து எல்லாப் பட்டணங்களிலுமிருந்த மனிதரையும் பெண்சாதிகளையும் பிள்ளைகளையும் ஒருவரையும் மீதியாக வைக்காமற் சங்காரம்பண்ணினோம்.

௩௫ மிருகஜீவன்களையும் நாம் பிடித்த பட்டணங்களின் ஆஸ்தியையும் தத்தம் நமக்கென்று கொள்ளையிட்டோம்.

௩௬ அர்னோன் ஆற்றங்கரையிலிருக்கிற அரோவேரையும் ஆற்றண்டையிலிருக்கிற பட்டணத்தையுந் தொடங்கிக் கீலேயாத்மட்டும் நமக்குத் தப்பியிருந்த அரணிப்பான பட்டணமொன்றுமில்லை. எல்லாவற்றையும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்கு ஒப்புக்கொடுத்தார்.

௩௭ அம்மோன் புத்திரரின் தேசத்தையும் யாப்போக் ஆற்றங்கரையான யாவையும் மலைகளின் பட்டணங்களையும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் விலக்கின நமக்குக் கற்பித்ததையுஞ் சேராதே விட்டாய்.

௩. அதிகாரம்.

பாசானின் இராசாவாகிய ஓகைச் செயித்ததும் அதற்குப் பிறகு நடந்த காரியங்களையும் மோசே இஸ்ரவேலருக்கு நினைப்பூட்டினது.

பின்பு நாம் திரும்பிக்கொண்டு பாசானுக்குப் போகிற வழியாய் ஏறிப்போனோம். அப்பொழுது பாசானின் இராசாவாகிய ஓகும் அவனுடைய எல்லாச் சனமும் நம்மை எதிர்க்கயுத்தம்பண்ணப் புறப்பட்டு எதிரே வந்தான்.

௨ அப்பொழுது கர்த்தர் என்னுடனே சொல்லப்பட்டதாவது: ஏனெனில் அவனையும் அவனுடைய எல்லாச் சனத்தையும் தேசத்தையும் உன் கையிலே ஒப்புக்கொடுத்தேன். எஸ்போனிலே குடியிருந்த எமோரியரின் இராசாவாகிய சீகோனுக்கு நீ செய்ததுபோலே அவனுக்குச் செய்யக்கடவாயென்றார்.

௩ அப்படியே நம்முடைய பராபரனாகிய கர்த்தர் பாசானின் இராசாவாகிய ஓகையும் அவனுடைய எல்லாச் சனத்தையும் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார். அவனுக்கு ஒருவரும் மீதியாயிராதே போமட்டும் அவனை முறியடித்தோம்.

௪ அக்காலத்திலே அவன் பட்டணங்களையெல்லாம் பிடித்தோம். நாம் அவர்களிடத்திலே பிடிக்காத பட்டணமில்லை. பாசானிலிருந்த ஓகின் இராச்சியமான அறுபது பட்டணங்களுள்ள அர்கோப்சீமையையெல்லாம் பிடித்தோம்.

௫ மதிலில்லாத மகாதிரளான ஊர்களையுந் தவிர அந்தப் பட்டணங்களெல்லாம் உயர்ந்த மதில்களாலும் வாசல்களாலுந் தாப்பாள்களாலும் அரணாக்கப்பட்டிருந்தது.

௬ அவைகளைச் சங்காரம்பண்ணினோம். நாம் எஸ்போனிலிருந்த சீகோனுக்குச் செய்ததுபோலே அந்த எல்லாப் பட்டணங்களின் மனிதரையும் பெண்சாதிகளையும் பிள்ளைகளையுஞ் சங்காரம்பண்ணி,

௭ எல்லா மிருகஜீவன்களையும் பட்டணங்களின் ஆஸ்தியையும் நமக்கென்று கொள்ளையிட்டோம்.

௮ அப்படியே யோர்தானுக்கப்பாலே அர்னோன் ஆறுதொடங்கி எர்மோன் பர்வதமட்டுமிருக்கிற தேசத்தை நாம் அக்காலத்திலே எமோரியருடைய இரண்டு இராசாக்களின் கையிலும் பிடித்தோம்.

௯ சீதோனியர் எர்மோனைச் சீரியோனென்கிறார்கள். எமோரியரோவெனில் அதைச் சேனீரென்கிறார்கள்.

௰ சமபூமியின் எல்லாப் பட்டணங்களையுங் கீலேயாத்தின் தேசமுழுவதையும் சல்காயிம் எத்ரேயிவரைக்கும் பாசானிலிருந்த ஓகுடைய இராச்சியத்தின் பட்டணங்கள்மட்டுமிருக்கிற பாசான் அனைத்தையும் பிடித்தோம்.

௰௧ ஏனென்றால் பாசானின் இராசாவாகிய ஓகென்றவன் மாத்திரம் இராட்சதரில் மீதியானவர்களில் ஒருவனாயிருந்தான். இதோ, மனிதனுடைய முழத்தின்படியே ஒன்பது முழ நீளமும் நான்குமுழ அகலமுமான இரும்புக்கட்டிலாகிய அவன் கட்டில் அம்மோன் புத்திரருடைய ரப்பாப்பட்டணத்திலிருக்கவில்லையோ?

௰௨ அந்தத் தேசத்தை அக்காலத்திலே சுதந்தரித்துக்கொண்டோம். அர்னோன் ஆற்றண்டையிலிருக்கிற அரோவேர் தொடங்கிக் கீலேயாத் மலைகளின் பாதியையும் அதிலிருக்கிற பட்டணங்களையும் ரூபனியருக்குங் காதியருக்குங் கொடுத்தேன்.

௰௩ மறுகீலேயாத்தையும் ஓகின் இராச்சியமாயிருந்த பாசான் அனைத்தையும் மனாசேயின் பாதிக்கோத்திரத்திற்குக் கொடுத்தேன். இராட்சதரின் தேசமென்னப்பட்டிருந்த முழுப்பாசானுமாகிய அர்கோப்சீமையையெல்லாந் தானே.

௰௪ மனாசேயின் குமாரனாகிய யாவீர் அர்கோப்சீமையையெல்லாங் கெசூரியர் மாகாத்தியரென்றவர்களின் எல்லைமட்டும் பிடித்துக்கொண்டு அதற்குத் தன் நாமத்தின்படியே யாவீரின் ஊர்களான பாசானென்று இந்நாள்வரைக்குஞ் சொல்லப்படுகிறபெயரைத் தரித்தான்.

௰௫ மாகீருக்குக் கீலேயாத்தைக் கொடுத்தேன்.

௰௬ ஆறுக்கு இலேயாத்தைத் துவக்கி அர்னோன் ஆறு ஓடுகிற நடுமையமும் கடையாந்தரமுமட்டுக்கும் அம்மோன் புத்திரரின் எல்லையான யாப்போக்கு ஆறுமட்டுக்குமிருக்கிறதையும்.

௰௭ கின்னரேத்தைத் துவக்கி அஸ்தோத்பிஸ்காவுக்குத் தாழ்வாய்க் கிழக்கேயிருக்கிற உப்புக்கடலான சமனான வெளியின் கடல்மட்டுமே யோர்தானின் எல்லைக்குள்ளாயிருக்கிற சமனான வெளியையும் நான் ரூபேனியருக்குங் காதியருக்குங் கொடுத்தேன்.

௰௮ இப்படியல்லாமல் உங்களுக்கு நான் அந்நாளிலே கற்பித்ததாவது. உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்கு இந்தத் தேசத்தைச் சுதந்தரமாகக் கொடுத்தார். சேவகமனிதராகிய நீங்களனைவரும் இஸ்ரவேல் புத்திரரான உங்கள் சகோதரருக்கு முன்னே ஆயுதப்பாடானவர்களாக நடந்து போங்கள்.

௰௯ உங்கள் பெண்சாதிகளும் உங்கள் பிள்ளைகளும் உங்கள் ஆடுமாடுகளுமாத்திரம் நாம் உங்களுக்குக் கொடுத்த உங்கள் பட்டணங்களிலிருக்கட்டும். ஏனெனில் ஆடுமாடுகள் உங்களுக்குத் திரட்சியாயிருக்கிறதென்றறிவேன்.

௨௰ கர்த்தர் உங்களைப்போல உங்கள் சகோதரரையும் இளைப்பாறப்பண்ணி இவர்களும் யோர்தானுக்கப்பாலே உங்கள் பராபரனாகிய கர்த்தர் தங்களுக்குக் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுமட்டும் நீங்களிருந்துபிறபாடு அவரவர் நான் உங்களுக்குக் கொடுத்த உங்கள் சுதந்தரத்திற்குத் திரும்புவீர்களாகவென்றேன்.

௨௰௧ அக்காலத்திலே நான் யோசுவாவுக்குக் கற்பித்ததாவது. உங்கள் பராபரனாகிய கர்த்தர் அந்த இரண்டு இராசாக்களுக்குச் செய்ததையெல்லாம் உன் கண்கள் கண்டது. இப்படியே கர்த்தர் நீ போய்ச்சேரும் எல்லா இராச்சியங்களுக்குஞ் செய்வார்.

௨௰௨ அவர்களுக்குப் பயப்படீர்களாக. ஏனெனில் உங்கள் பராபரனாகிய கர்த்தர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுவாரென்றேன்.

௨௰௩ அக்காலத்திலே நான் கர்த்தரை விண்ணப்பம்பண்ணிச் சொன்னதாவது.

௨௰௪ கர்த்தராகிய ஆண்டவரே! தேவரீர் உமதடியானுக்கு உம்முடைய மகத்துவத்தையும் உம்முடைய பலமுள்ள கையையுங் காண்பிக்கத் துவக்கினீர். ஏனெனில் வானத்திலும் பூமியிலும் உம்முடைய கிரியைகளுக்கும் உம்முடைய வல்லமைகளுக்கும் ஒத்ததாகச் செய்யத்தக்க தேவனார்?

௨௰௫ நான் கடந்துபோய் யோர்தானுக்கப்பாலிருக்கிற அந்த நல்ல தேசத்தையும் அந்த நல்ல பர்வதத்தையும் லீபனோனையும் பார்க்கட்டுமென்றேன்.

௨௰௬ ஆனாற் கர்த்தர் உங்கள் நிமித்தமாக என்மேல் கோபமாயிருந்து, என்னைக் கேளாமற்போய் என்னோடே சொன்னதாவது. உனக்குப் போதும். இந்தக் காரியத்தைக்குறித்து இனி நம்மோடே சொல்லக்கொள்ளாயாக.

௨௰௭ நீ பிஸ்காவின் கொடுமுடியிலேறி உன் கண்களை மேற்கேயும் வடக்கேயுந் தெற்கேயுங் கிழக்கேயும் ஏறெடுத்து உன் கண்களினாலே பார்த்துக்கொண்டிரு. ஏனெனில் இந்த யோர்தானை நீ கடப்பதில்லை.

௨௰௮ ஆகையால் நீ யோசுவாவுக்குக் கட்டளைகொடுத்து அவனைத் திடப்படுத்திப் பலப்படுத்து. ஏனென்றால் அவன் இந்தச் சனத்திற்கு முன்பாகக் கடந்துபோய் அவன் நீ காணுந் தேசத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக்கொடுப்பானென்றார்.

௨௰௯ இப்படியே பெத்பெயோருக்கெதிரான இந்தப் பள்ளத்தாக்கிலிருந்துவிட்டோம்.

௪. அதிகாரம்.

தேவபத்தியும் விக்கிரகாராதனைக்கெச்சரிக்கையுமாயிருக்கிறதற்கான புத்திவார்த்தைகள்.

இப்பொழுதும் இஸ்ரவேலே! நீங்கள் பிழைக்கும்படிக்கும் நீங்கள் பிரவேசித்து உங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும் நீங்கள் செய்யவேண்டியதென்று நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியாயங்களையுங் கேளுங்கள்.

௨ நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் பராபரனாகிய கர்த்தரின் கற்பனைகளை நீங்கள் கைக்கொள்ளும்படிக்கு நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றுங் கூட்டவும் அதிலொன்றுங் குறைக்கவும் வேண்டாம்.

௩ பாகால்பேயோரின் நிமித்தங் கர்த்தர் செய்ததையுங்கள் கண்கள் கண்டது. ஏனெனிற் பாகால்பேயோரைப் பின்பற்றின மனிதரையெல்லாம் உன் பராபரனாகிய கர்த்தர் உன் நடுவிலிராதபடிக்கழித்தார்.

௪ ஆனால் உங்கள் பராபரனாகிய கர்த்தரைப் பற்றிக்கொண்ட நீங்களனைவரும் இந்நாளில் உயிரோடிருக்கிறீர்கள்.

௫ இதோ, நீங்கள் சுதந்தரிக்கப்போகிறதற்குட் பிரவேசிக்குந் தேசத்திலே என் பராபரனாகிய கர்த்தர் எனக்குக் கற்பித்தபடியே செய்யும்படிக்கு நான் உங்களுக்குக் கட்டளைகளையும் நியாயங்களையும் போதித்தேன்.

௬ ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு அவைகளின்படிச் செய்யுங்கள். ஏனெனில் சனசனங்களின் கண்களுக்கு முன்பாக

[illegible]

உ௬ நீங்கள் சுதந்தரித்துக்கொள்ள யோர்தானைக் கடந்துபோகிற தேசத்திலிராமற் சீக்கிரம் அழியவே அழிவீர்களென்று இந்நாளில் வானத்தையும் பூமியையும் உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாய் அழைக்கிறேன். நீங்கள் அதிலே நீடித்த நாளாயிராமல் அழிக்கவே அழிக்கப்படுவீர்கள்.

உ௭ கர்த்தர் உங்களைச் சனசாதிகளுக்குள்ளே சிதறடிப்பார். கர்த்தர் உங்களைக் கொண்டுபோய்விடப்போகிற சாதிகளிடத்திலே கொஞ்சசனங்களாயிருப்பீர்கள்.

உ௮ அங்கே காணாமலுங் கேளாமலும் சாப்பிடாமலும் முகராமலுமிருக்கிற மரமுங் கல்லுமான மனிதர்கைகளின் வேலையாகிய தேவர்களைச் சேவிப்பீர்கள்.

இஸ்ரயேல் புத்திரர் கடைசி நாட்களிலே குணப்படுவாரென்றதைச் சொல்லுகிற தீர்க்கதரிசனம்.

உ௯ அப்பொழுது அங்கேயிருந்து உன் பராபரனாகிய கர்த்தரைத் தேடுவாய். அவரை உன் முழு இருதயத்தினாலும் உன் முழு ஆத்துமத்தினாலுந் தேடிக்கொண்டிருந்தால் கண்டுபிடிப்பாய்.

௩௰ உனக்கு மன இடுக்கண் உண்டாகி இந்தக் காரியங்களெல்லாம் உன்னைப் பிடிக்குங் கடைசி நாட்களில் நீ உன் பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திரும்பி அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவாய்.

௩௧ ஏனெனில் உன் பராபரனாகிய கர்த்தர் மனவுருக்கமுள்ள தேவனானவர். அவர் உன்னைக் கைவிடாமலும் உன்னை அழிக்காமலும் தாம் ஆணையிட்டு உன் பிதாக்களோடே பண்ணின உடம்படிக்கையை மறவாமலுமிருப்பார்.

௩௨ ஏனெனில் பராபரன் மனிதனைப் பூமியிலே சிருஷ்டித்த நாள்முதற்கொண்டு உனக்கு முன்னிருந்த பூர்வநாட்களில் வானத்தின் ஒரு முனை துவக்கி அதின் மறுமுனைமட்டுமிருக்கிற எவ்விடத்திலாகிலும் இப்படிக்கொத்த பெரிய காரியம் நடந்ததோ? அல்லவென்றால் இப்படிக்கொத்தது கேட்கப்பட்டதோவென்று நீ விசாரியேன்?

௩௩ நீ கேட்டதுபோலே யாதொரு சனம் அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற பராபரனுடைய சத்தத்தைக் கேட்டும் உயிரோடேயிருந்ததுண்டோ?

௩௪ அல்லது உங்கள் பராபரனாகிய கர்த்தர் எகிப்திலே உன் கண்களுக்கு முன்பாக உங்களுக்குச் செய்தபடியெல்லாம் பராபரன் சோதனைகளினாலும் அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் யுத்தத்தினாலும் பலத்த கையினாலும் நீட்டின புயத்தினாலும் மகா பயங்கரமான செய்கைகளினாலும் யாதொரு சாதியைப் பொருளாதின் நடுவிலிருந்து தமக்குச் சேர்த்துக்கொள்ளும்படிக்கு அப்படிப் பண்ணினதுண்டோ?

௩௫ கர்த்தரே பராபரன். அவரையல்லாமல் வேறொருவரில்லையென்பதை நீ அறியும்படிக்கு உனக்கு அப்படித் தெரியக்காட்டப்பட்டது.

௩௬ உன்னை உபதேசிக்கும்படிக்கு அவர் வானத்திலிருந்து தம்முடைய சத்தத்தை உனக்குக் கேட்கப்பண்ணிப் பூமியிலே தம்முடைய பெரிய அக்கினியை உனக்குக் காண்பித்தார். அக்கினியின் நடுவிலிருந்துண்டான அவருடைய வார்த்தைகளைக் கேட்டாய்.

௩௭ அவர் உன் பிதாக்களைச் சிநேகித்து அவர்களுக்குப் பின்னான அவர்களுடைய வித்தைத் தெரிந்துகொண்டபடியினாலே,

௩௮ அவர் உன்னிலும் வலுத்த பெரிய சாதிகளை உனக்கு முன்பாகத் துரத்தவும் உன்னை அழைத்துக்கொண்டுபோய் அவர்கள் தேசத்தை இந்நாளில் இருக்கிறதுபோலே உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கவும் உன்னைத் தம்முடைய முகத்தினாலும் தம்முடைய மகா வல்லமையினாலும் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௩௯ ஆனதுகொண்டு உயர வானத்திலும் கீழே பூமியிலும் கர்த்தரே பராபரன். அவரைத்தவிர ஒருவருமில்லையென்பதை நீ இந்நாளிலே அறிந்து உன் மனதிலே தரித்து,

௪௰ உனக்கும் உனக்குப் பின்பு உன் பிள்ளைகளுக்கும் நன்றாயிருக்கிறதற்கும் உன் பராபரனாகிய கர்த்தர் உனக்கென்றைக்குமென்று கொடுக்கிற சீமையிலே நீ நீடித்த நாளாயிருக்கிறதற்கும் நான் இன்றைக்குக் கற்பிக்கிற அவருடைய கட்டளைகளையும் அவருடைய கற்பனைகளையுங் கைக்கொள்ளக்கடவாயென்றான்.

௪௧ அப்பொழுது மோசே யோர்தானுக்கு அப்பாலே சூரியோதய முனையாயிருக்கிற மூன்று பட்டணங்களாகிய,

௪௨ ரூபேனியரைச் சேர்ந்த சமபூமியாகிய வனாந்தரத்திலுள்ள பேத்சேரையும் காதியரைச் சேர்ந்த கீலேயாத்தின் இராமோத்தையும் மனாசேயரைச் சேர்ந்த பாசானிலுள்ள கோலானையும்,

௪௩ அறியாமலும் பகையை முந்நாளில் வைத்திராமலுந் தனக்கு அயலவனைக் கொன்றுபோட்டவன் அந்தப் பட்டணங்களில் ஒன்றிலே ஓடிப்போய் உயிரோடிருக்கும்படிக்குப் பிரித்து வைத்தான்.

௪௪ இதுவே மோசே இஸ்ரயேல் புத்திரரின் முன்னிறுத்தின நியாயப்பிரமாணம்.

௪௫ இவைகள் இஸ்ரயேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின்பு மோசே யோர்தானுக்கு அப்பாலே எஸ்போனிலே குடியிருந்த எமோரியரின் இராசாவாகிய சீகோனின் தேசத்திலிருக்கிற பெத்பேயோருக்கு எதிரான பள்ளத்தாக்கிலே அவர்களுக்குச் சொன்ன சாட்சிகளும் கட்டளைகளும் நியாயங்களுமாயிருக்கின்றது.

௨௫ அவனே மோசேயும் இஸ்ரவேல்புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட பிறபா [illegible],

௨௬ போர்சாலுக்கெப்பாலே குரியோத [illegible] ஆசாரமான ஆரோ [illegible] சீயோன [illegible],

௨௭ போர் [illegible] பாலே குரியோத [illegible] கொருக்குதாம் [illegible] வெளியின கடலமட்டுமிருக [illegible],

௨௮ [illegible] இஸ்ரா [illegible] யுடைய தேச [illegible] திரிசாவாகிய [illegible] கொண்டிருந்தா [illegible].

௨௰. அதிகாரம்.

பத்துக்கற்பனைகள் [illegible] இஸ்ரவேலருக்குத்தம [illegible].

௧ பின்பு தேவன் இந்த வார்த்தைகளையெல்லாம் அழை [illegible] சொன்னதாவது.

௨ [illegible] நான் [illegible] உங்கள் [illegible] கட்டளைகளையும் [illegible] நீங்கள் அவைகளின் [illegible] நடக்கத் [illegible].

௩ உன்னுடைய பிதாபிதாக்களாகிய கர்த்தர் [illegible] நம்மோடே உடன்படிக்கையை [illegible].

௪ இந்த உடன்படிக்கையைக் கர்த்தர் [illegible] இன்றைக்கு நம்மோடெல்லாம் [illegible].

௫ முகமுகமாய்க் கர்த்தர் பர்வதத்திலே [illegible] நடுவிலிருந்து உங்களோடே பேசினார்.

௬ கர்த்தருடைய வார்த்தையை உங்களுக்கு [illegible] அக்காலத்திலே நான் கர்த்தருக்கும் உங்களுக்கும் நடுவாக நின் [illegible]. அக்கினிப் பர்வதத்திலேறுமல் அக [illegible] பயந்தீர்கள். அவர் சொன்னதாவது.

௭ உன்னை அடிமைத்தனவீடாகிய எகிப் [illegible] தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் பிதாபிதாக்களாகிய கர்த்தர் நாமே.

௮ [illegible] முன்பாக உனக்கு வேறுதேவ [illegible] உண்டாயிருக்கவேண்டாம்.

௯ மேலே வானத்திலும் கீழே பூமியிலும் [illegible] தண்ணீரிலும் உண்டானவை [illegible] நிருக்கிற ஒருக்கு [illegible] தையாகி [illegible] விக்கிரகத்தை யெங்கிலும் [illegible] உண்டாக்கவேண்டாம்.

௰ [illegible] அவைகளை நமஸ்கரிக்கவும் அவைக [illegible] சேவிக்கவும் வேண்டாம். ஏனென்றால உன் பிதாபிதாக்களாகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனாயிருந்து நம்மைப் பகைக்கிறவர்களுக்கோ வென்றால் பிதாக்களுடைய அவநியாயத்தைப் பிள்ளைகளிடத்திலே மூன்றும் நாலாந்தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம்.

௰௧ அல்ல நம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கும் நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கும் ஆயிரந் தலைமுறைமட்டுந் தயவுசெய்கிறவராயிருக்கிறோம்.

௰௨ உன் பிதாபிதாக்களாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காயாக. ஏனென்றால் கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்கினவனைத் தண்டியாமல் விடார்.

௰௩ ஓய்வுநாளையுன் பிதாபிதாக்களாகிய கர்த்தர் உனக்குக்கற்பித்தபடியே பரிசுத்தமாகக் கைக்கொள்.

௰௪ ஆறுநாள் நீ வேலைசெய்து உன் கிரியையெல்லாம் நடப்பிப்பாயாக.

௰௫ ஏழாம்நாள் உன் பிதாபிதாக்களாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அதிலே நீயாகிலும் உன் குமாரனாகிலும் உன் குமாரத்தியாகிலும் உன் வேலைக்காரனாகிலும் உன் வேலைக்காரியாகிலும் உன் எருதாகிலும் உன் கழுதையாகிலும் உனக்கிருக்கிற யாதொரு மிருகஜீவனாகிலும் உன் வாசல்களிலிருக்கிற உன் பரதேசியாகிலும் யாதொரு வேலையைச் செய்யவேண்டாம். உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் உன்னைப்போல இளைப்பாறும்படிக்குத்தானே.

௰௬ எகிப்துதேசத்தில் அடிமையாயிருந்தாயென்றும் உன் பிதாபிதாக்களாகிய கர்த்தர் உன்னை யங்கேயிருந்து பலத்த கையினாலும் நீட்டப்பட்ட புயத்தினாலும் புறப்படப்பண்ணினாரென்றும் நினைப்பாயாக. ஆனபடியினாலே ஓய்வுநாளை யாசரிக்க உன் பிதாபிதாக்களாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்தார்.

௰௭ உன் நாட்கள் நீடித்திருக்கிறதற்கும் உன் பிதாபிதாக்களாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற சீமையிலே நீ நன்றாயிருக்கிறதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் உன் பிதாபிதாக்களாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்தபடி கனம் பண்ணு.

௰௮ கொலைசெய்யாயாக.

௰௯ விபசாரம்பண்ணாயாக.

௨௰ களவுசெய்யாயாக.

௨௧ உனக்கடுத்தவனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாயாக.

௨௨ உனக்கடுத்தவனுடைய பெண்சாதியை இச்சிக்காயாக. உனக்கடுத்தவனுடைய வீட்டையும் அவன் நிலத்தையும் அவன் வேலைக்காரனையும் அவன் வேலைக்காரியையும் அவன் எருதையும் அவன் கழுதையும் மற்ற உனக்கடுத்தவனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காயாகவென்றார்.

௨௨ இந்த வார்த்தைகளைக் கர்த்தர் பர்வதத்திலே அக்கினியிலும் மேகத்திலும் அந்தகாரத்திலுமிருந்து உங்களெல்லாருடைய சபைக்கும் மகா சத்தத்தோடே சொல்லி அவைகளோடே ஒன்றுங் கூட்டாதிருந்து அவைகளை யிரண்டு கற்பலகைகளிலே யெழுதி யென்னிடத்தில் கொடுத்தார்.

௨௩ பர்வதம் அக்கினியாய் எரிகையில் அந்தகாரத்தின் நடுவிலிருந்துண்டான சத்தத்தை நீங்கள் கேட்டபொழுது உங்கள் கோத்திரங்களின் தலைவரும் மூப்பருமாகிய நீங்களெல்லாரும் என்னண்டைக்குச் சேர்ந்து சொன்னதாவது:

௨௪ இதோ, எங்கள் பராபரனாகிய கர்த்தர் எங்களுக்குத் தம்முடைய மகிமையையுந் தம்முடைய மகத்துவத்தையுங் காண்பித்தார். அக்கினியின் நடுவிலிருந்துண்டான அவருடைய சத்தத்தைக் கேட்டோம். பராபரன் மனிதரோடே பேசியும் அவன் உயிரோடிருக்கிறதை யின்று கண்டோம்.

௨௫ இப்பொழுது நாங்கள் சாவானேன்? இந்தப் பெரிய அக்கினி எங்களைப் பட்சிக்குமே; நாங்கள் இன்னும் எங்கள் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேட்டால் செத்துப்போவோம்.

௨௬ ஏனெனில் நாங்கள் கேட்டதுபோல அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற ஜீவனுள்ள பராபரனுடைய சத்தத்தைக் கேட்டும் உயிரோடிருக்கிறதற்கு மாம்சமெல்லாம் எம்மாத்திரம்?

௨௭ நீர் கிட்டப்போய் எங்கள் பராபரனாகிய கர்த்தர் சொல்லுவதையெல்லாங் கேட்டு, பின்பு எங்கள் பராபரனாகிய கர்த்தர் சொல்லுவதையெல்லாம் எங்களோடே சொல்லும்; நாங்கள் கேட்டு அதின்படியே செய்வோமென்றீர்கள்.

௨௮ இப்படி நீங்கள் என்னோடே சொல்லுகையில் உங்கள் வார்த்தைகளின் சத்தத்தைக் கர்த்தர் கேட்டு என்னோடே சொன்னதாவது: இந்த ஜனம் உன்னோடே சொன்ன வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டோம். அவர்கள் சொன்னதெல்லாம் நல்லது.

௨௯ அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படிக்கு அவர்கள் எக்காலத்திலும் எனக்குப் பயப்படுகிறதற்கும் என் கற்பனைகளையெல்லாங் கைக்கொள்ளுகிறதற்கும் இப்படிக்கொத்த இருதயம் அவர்களுக்கிருந்தால் நலமாயிருக்குமே.

௩௰ நீ போய் உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பிப் போங்களென்று அவர்களுக்குச் சொல்லு.

௩௧ நீயோ என்னோடேகூட இங்கே நின்றிரு; நான் அவர்களுக்குக் கொடுக்கிற தேசத்திலே அவர்கள் செய்யும்படிக்கு நீ அவர்களுக்குப் போதிக்க வேண்டிய சகல கற்பனைகளையுங் கட்டளைகளையும் நியாயங்களையும் உனக்குச் சொல்லுவேனென்றார்.

௩௨ ஆகையால் உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்யக் கவனமாயிருங்கள், வலதிடதுபுறமாக விலகீர்களாக.

௩௩ நீங்கள் சுதந்தரிக்குந் தேசத்திலே பிழைத்து நன்றாயிருந்து நீடித்திருக்கும்படிக்கு உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த எல்லா வழியிலும் நடக்கக்கடவீர்கள்.

௬. அதிகாரம்.

தேவ கற்பனைகளின் மேல் செய்யத் பராபரனை முழு மனதோடே நேசிக்கிறதும் பிள்ளைகளுக்குத் தேவ கற்பனைகளைக் கருத்தாய்ப் படிப்பிக்கிறதுக்குமான போதகம்.

நீயும் பராபரனாகிய கர்த்தருக்குப் பயந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் நீயும் உன் குமாரரும் உன் குமாரத்திகளும் நான் உனக்குக் கற்பிக்கிற அவருடைய எல்லாக் கட்டளைகளையுங் கற்பனைகளையுங் கைக்கொள்ளுகிறதினாலே நீடித்திருக்கும்படிக்கு,

௨ நீங்கள் சுதந்தரிக்கத்தக்கதாகக் கடந்துபோயிருக்கிற தேசத்திலே நீங்கள் செய்யவேண்டுமென்று உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குப் போதிக்கச் சொன்ன கற்பனைகளுங் கட்டளைகளும் நியாயங்களும் இவைகளேதானே.

௩ ஆகையால் இஸ்ரவேலே! நீ நன்றாயிருக்கிறதற்கும் உன் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி பாலுந் தேனும் ஓடுகிற தேசத்திலே நீ மிகவும் பெருகுகிறதற்கும் நீ கேட்டு அவைகளின்படி செய்யக் கவனமாயிரு.

௪ இஸ்ரவேலே! கேள், நம்முடைய பராபரனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.

௫ நீயும் உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும் உன் முழுப் பலத்தோடும் நேசிப்பாயாக.

௬ இந்நாளிலே நான் உனக்குக் கற்பிக்கிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்திலிருக்கக் கடவது.

௭ நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து நீ உன் வீட்டிலே உட்கார்ந்திருக்கும்பொழுதும் வழியிலே நடக்கும்பொழுதும் படுத்துக்கொள்ளும்பொழுதும் எழுந்திருக்கும்பொழுதும் அவைகளைக் குறித்துப் பேசி,

௮ அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டுவாயாக. அவைகள் உன் கண்களின் நடுவே நெற்றிப்பட்டமாகவிருக்கக் கடவது.

௯ அவைகளை உன் வீட்டு வாசல் நிலைகளி(லு)ம் உன் வாசல்களிலேயும் எழுதுவா(யா)க.

௰ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் [illegible] அபிரகாம் ஈசாக் [illegible] என்ற உன் பிதாக்களுக்குக் காணை பண்ணின தேசத்திலே உன்னைப் பிரவேசிக்கப்பண்ணு [illegible] நீ கட்டாதிருக்கிற பெரிசதியா [illegible] பட்டணங்களையும்,

௰௧ நீ நிரப்பாதிருக்கிற சகல நல்ல வஸ்துக்களால் நிரம்பியவீடுகளையும் நீ வெட்டா [illegible] வெட்டப்பட்டிருக்கிற துரவுகளையும் நீ [illegible] நிவிதாட்சத்தோட்டங்களையும் [illegible] வுகளையும் அவர் உனக்குக் [illegible] நீ சாப்பிட்டு திருப்தியா [illegible]

௰௨ [illegible] உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து [illegible] புறப்படப்பண்ணின கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையா [illegible]

௰௩ நீ உன் பராபரனாகிய கர்த்தருக்குப் பயந்து அவருக்கு ஊழியஞ்செய்து அவர் நா [illegible] பிரமாணிக்கம் பண்ணுவாயாக.

௰௪ உன் பராபரனாகிய கர்த்தருடைய [illegible] உனக்கு விரோதமாய்ப் பற்றி உன்னை [illegible] அழித்துப் போடா [illegible] உனக்குச் சுற்றிலுமிருக்கிற ஜன [illegible] தேவர்களாகிய அந்நிய [illegible] தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக.

௰௫ [illegible] உன் பராபரனாகிய கர்த்தருடைய [illegible] எரிச்சலுள்ளவராயிருக்கிறார்.

௰௬ [illegible] மாசாவிலே செய்ததுபோ [illegible] பராபரனாகிய கர்த்தரைப் பரிட் [illegible] சியாதிருப்பீர்களாக.

௰௭ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் [illegible] அவருடைய கற்பனைகளை [illegible] சாட்சிகளையும் அவருடை [illegible] களையும் கைக்கொள்வீர்களாக.

௰௮ நீ [illegible] படிக்கு கர்த்தர் உன் [illegible] காணிப்பட்டதேசத்தை நீ சுதந்தரிக்கும்படிக்கு,

௰௯ கர்த்தர் உனக்குச் சொல்லி [illegible] உன் முகத்திலிருந்து முன் [illegible] நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமா [illegible] செய்வாயாக.

௨௰ நம்முடைய பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த இந்தச் சாட்சிகளும் [illegible] நியாயங்களும் என்னவென்று [illegible] அதின் [illegible] கேட்டால்,

௨௧ நீ உன் குமாரனுக்குச் சொல்லவேண்டியது: நாங்கள் எகிப்திலே பார்வோனுக்கு அடிமைகளாயிருந்தோம். கர்த்தரோவெனில் [illegible] எங்களை எகிப்திலிருந்து [illegible] புறப்படப்பண்ணினார்.

௨௨ [illegible] தேவெனில் கர்த்தர் எங்களைக் [illegible] களுக்குமுன்பாக எகிப்திலே பார்வோனின் மேலும் அவனுடைய வீட்டார் யாவின் மேலும் [illegible] யானவைகளையும் கொடிதான பெரிய அற்புதங்களையும் காட்டியிட்டு,

௨௩ நாம் நம்முடைய பிதாக்களுக்குக் காணை யிட்ட தேசத்திலே நம்மைக் கூட்டிக்கொ [illegible] வந்து அதை நமக்குக் கொடுக்கும்படிக்கு நம்மை அவ்விடத்திலிருந்து புறப்படப் பண்ணினார்.

௨௪ இப்பொழுதும் நாம் நம்முடைய பராபரனாகிய கர்த்தருக்குப் பயப்படுகிறதற்கு சகல நாளும் நாம் நன்றாயிருக்கிறதற்கும் இந்த [illegible] போல நம்மை அவர் உயிரோடேகாக்கிறதற்குமாக இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யக் கர்த்தர் நமக்குக் கற்பித்தார்.

௨௫ நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நமக்குக் கற்பித்தபடியே நாம் அவருக்கு முன்பாக இந்த எல்லாக் கற்பனைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால் நமக்கு நீதியாயிருக்குமென்பாயாக.

௭. அதிகாரம்.

கானான் தேசத்திலிருக்கிற அஞ்ஞானசாதிகளோடே [illegible] பண்ணவேண்டாமென்பது.

உன் பராபரனாகிய கர்த்தர் நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்திலே உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி உனக்கு முன்பாக [illegible] பெருத்த சாதிகளாகிய ஏத்தியர் [illegible] காசியர் எமோரியர் கானானியர் பெரிசியர் ஏவியர் எபூசியரென்னும் [illegible] சாதிகளை உனக்கு முன்பாகத் துரத்தி,

௨ நீ அவர்களை முறியடிக்கும்படிக்கு உன் பராபரனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கும் பொழுது அவர்களைச் சங்கரிக்கவேண்டியது. நீ அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம்.

௩ அவர்களோடே சம்பந்தங் கலவாயாக. உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடாமலும் அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக.

௪ ஏனெனில் [illegible] என்னைப் பின்பற்றாமல் அந்நிய தேவர்களைச் சேவிக்கும்படிக்கு அவர்கள் உன் குமாரனை விலக்கிப் போடுவார்கள். அப்பொழுது கர்த்தருடைய கோபம் உங்களுக்கு விரோதமாய் மூண்டு உங்களைச் சீக்கிரத்திலே அழிக்கும்.

௫ நீங்கள் அவர்களுக்குச் செய்யவேண்டிய [illegible] [illegible] அவர்களுடைய பலிபீடங்களை இடித்து அவர்கள் [illegible] அவர்கள் தோப்புகளை வெட்டி [illegible]

பங்களையக்கினியாலெரித்துப்போடவேண்டும்.

௬ ஏனெனில் நீயுன்பராபரனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தசனமானவன். பூச்சக்கரத்திலிருக்கிற எல்லாச்சனத்தளங்களிலும் நீ தமக்குச் சொந்தச்சனமாயிருக்கிறதற்காக உன்பராபரனாகிய கர்த்தர் உன்னைத் தெரிந்துகொண்டார்.

௭ சகலமானசனத்தளங்களிலும் நீங்கள் திரட்சியானசனமென்பதினாலே கர்த்தர் உங்களைப் பிரியமாய்ப் பார்த்துத் தெரிந்துகொண்டதில்லை. ஏனெனில் நீங்கள் சகலசனத்தளங்களிலுங் கொஞ்சமானசனம்.

௮ ஆனால் கர்த்தர் உங்களைச் சிநேகித்ததினாலும் உங்கள் பிதாக்களுக்கிட்ட ஆணையைக் கைக்கொள்ளுகிறதினாலுங் கர்த்தர் உங்களைப் பலத்த கையினாலே புறப்படப்பண்ணி உன்னை அடிமைத்தனவீடாகிய எகிப்துவினுடைய இராசாவான பார்வோனின் கைக்கு நீங்கலாக்கிவிட்டார்.

௯ இப்பொழுது தம்மைச் சிநேகித்துத் தம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு உன்பராபரனாகிய கர்த்தர் ஆயிரந் தலைமுறைமட்டும் உடம்படிக்கையையுந் தயவையுங் காக்கிற உண்மையுள்ள தேவனும் பராபரனுமாயிருக்கிறவரென்றும்,

௰ அவர் தம்மைப் பகைக்கிறவர்களுக்கு வெளியரங்கமாகச் சரிக்குச்சரிக்கட்டி அவர்களை அழிப்பாரென்றும் அவர் தாமதியாமல் தம்மைப் பகைக்கிறவனுக்கு வெளியரங்கமாகச் சரிக்குச்சரிக்கட்டுவாரென்றும் நீ அறியக்கடவாய்.

௰௧ ஆகையால் நீ செய்யும்படிக்கு நான் இன்றுனக்குக் கற்பிக்கிற கற்பனைகளையுங் கட்டளைகளையும் நியாயங்களையுங் கைக்கொள்வாயாக.

தேவகற்பனைகளைக் கைக்கொள்வதினாலே ஆசீர்வாதம் வருமென்பது.

௰௨ இந்த நியாயங்களை நீங்கள் கேட்டுக் கைக்கொண்டு அவைகளின்படிச் செய்தீர்களானால் அப்பொழுது உன்பராபரனாகிய கர்த்தர் உன்பிதாக்களுக்கு ஆணையிட்ட உடம்படிக்கையையுங் கிருபையையும் உனக்காகக் காத்து,

௰௩ உன்னைச் சிநேகித்து உன்னை ஆசீர்வதித்து உனக்குக் கொடுப்பேனென்று உன்பிதாக்களுக்கு ஆணையிட்ட சீமையிலே உன்னைப் பெருகப்பண்ணி உன் கர்ப்பக்கனியையும் உன் நிலத்தின் கனியாகிய உன் தானியத்தையும் உன் திராட்சப்பழரசத்தையும் உன் எண்ணெயையும் உன் மாடுகளின் பலனையும் உன் ஆடுகளின் மந்தைகளையும் ஆசீர்வதிப்பார்.

௰௪ சகலசனத்தளங்களைப்பார்க்க ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். உன்னிடத்திலே மலட்டனும் மலடியுமிருப்பதில்லை. உன்மிருகஜீவன்களில் மலடானதுமிருப்பதில்லை.

௰௫ கர்த்தர் சகல நோக்காடுகளையும் உன்னைவிட்டு விலக்குவார். நீ யறிந்திருக்கிற எகிப்தியரின் பொல்லாத ரோகங்களில் ஒன்றையும் உன்மேல் வரப்பண்ணாமல் உன்னைப் பகைக்கிறயாவர்மேலும் அவைகளை வரப்பண்ணுவார்.

௰௬ உன்பராபரனாகிய கர்த்தர் உனக்கு ஒப்புக்கொடுக்குஞ் சகலசனத்தளங்களையும் அழிப்பாயாக. உன்கண் அவர்களுக்கு இரங்காதிருப்பதாக. அவர்களுடைய தேவர்களை நீ சேவிக்காமலுமிருப்பாயாக. ஏனெனில் அது உனக்குக் கண்ணியாயிருக்கும்.

௰௭ அந்தச்சாதிகள் என்னிலுஞ் சனம்பெருத்தவைகள். அவைகளை நான் துரத்திவிடக்கூடியதெப்படியென்று உன்னிருதயத்திலே சொல்லிக்கொண்டாயானால்,

௰௮ அவைகளுக்குப் பயப்படாதேபோ. உன்பராபரனாகிய கர்த்தர் பார்வோனுக்கும் எல்லா எகிப்திருக்குஞ் செய்ததையும்,

௰௯ உன்கண்கள்கண்ட பெரிய சோதனைகளையும் அடையாளங்களையும் அற்புதங்களையும் உன்பராபரனாகிய கர்த்தர் உன்னைப் புறப்படப்பண்ணின காணிக்கப் பலத்த கையையும் நீட்டின புயத்தையும் நீ நினைப்பாயாக. அப்படியே உன்பராபரனாகிய கர்த்தர் நீ பார்த்துப் பயப்படுகிற எல்லாச்சனத்தளங்களுக்குஞ் செய்வார்.

௨௰ மீதியாயிருந்து உனக்கு முன்பாக ஒளித்துக்கொள்ளுகிறவர்கள் அழியுமட்டும் உன்பராபரனாகிய கர்த்தர் வண்டுகளையும் அவர்களுக்குள் அனுப்புவார்.

௨௰௧ அவர்களைப் பார்த்துத் திகிலடையாயாக. ஏனெனில் பயங்கரமாயிருக்கிற மகா தேவனான உன்பராபரனாகிய கர்த்தர் உன் நடுவேயிருக்கிறார்.

௨௰௨ அந்தச்சாதிகளையுன் பராபரனாகிய கர்த்தர் கொஞ்சங் கொஞ்சமாய் உன்னைவிட்டுத் துரத்துவார். காட்டுச்சீவன்கள் உனக்கு விரோதமாய்ப் பெருகாதபடிக்கு நீ யவைகளைச் சீக்கிரத்திலே நிர்மூலமாக்கக்கூடாது.

௨௰௩ அவர்கள் அழியுமட்டும் உன்பராபரனாகிய கர்த்தர் அவர்களையுனக்கு முன்பாக ஒப்புக்கொடுத்து அவர்களை மிகவுங் கலங்கடிப்பார்.

௨௰௪ அவர்களுடைய இராசாக்களையுன் கையிலொப்புக்கொடுப்பார். அவர்கள் பேர் வானத்தின் கீழிராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய். நீ யவர்களையழித்துத் தீருமட்டும் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்கக்கூடாதிருக்கும்.

௨௫ அவர்களுடைய தேவர்களின் சுரூபங்களை நெருப்பிலே சுட்டெரிக்கக் கடவாய். நீ அவைகளாற் சிக்கிக்கொள்ளாதபடிக்கு அவைகளின்மேலிருக்கிற வெள்ளியையும் பொன்னையும் இச்சிக்காமலும் அதை எடுத்துக் கொள்ளாமலு மிருப்பாயாக. ஏனென்றால் அதை உன் பராபரனாகிய கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கின்றது.

௨௬ நீயும் அவைகளைப்போல சாபத்தீடாகாதபடிக்கு அருவருப்பானதை யுன் வீட்டிலே கொண்டுபோகாயாக. அதைச் சீயென்றெண்ணி அதை யருவருக்கவேயுங் கடவாய். ஏனென்றால் அது சாபத்தீடானது.

௮. அதிகாரம்.

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவும் பராபரனை மறவாதிருக்கவும் புத்தி சொன்னது.

நீங்கள் பிழைத்துப் பெருகி கர்த்தர் உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் பிரவேசித்து அதைச் சுதந்தரிக்கும்படிக்கு நான் இன்றைக்கு உங்களுக்குக் கற்பிக்கிற எல்லாக் கற்பனைகளின்படிக்கும் செய்யச் சாவதானமாயிருப்பீர்களாக.

௨ உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைச் சிறுமைப்படுத்தும்படிக்கு நீ அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவாயோ கைக்கொள்ள மாட்டாயோ என்று அவர் உன்னைச் சோதித்து உன் இருதயத்திலிருக்கிறதை நீயறியும்படிக்கும் உன்னை இந்த நாற்பது வருஷமாக வனாந்தரத்திலே நடத்தின எல்லா வழியையும் நினைப்பாயாக.

௩ அவர் உன்னைத் தாழ்மைப்படுத்தி யுன்னைப் பசியாயிருக்கப்பண்ணி மனிதன் அப்பத்தினாலே மாத்திரம் பிழைக்காமற் கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற எல்லாவற்றினாலும் பிழைக்கிறானென்பதை யுனக்கறியப்படுத்தும்படிக்கு நீயும் உன் பிதாக்களும் அறியாதிருந்த மன்னாவினாலே யுன்னைப் போஷித்தார்.

௪ இந்த நாற்பது வருஷமும் உன்மேலிருந்த வஸ்திரம் பழசாய்ப்போனதுமில்லை உன் கால் வீங்கிப்போனதுமில்லை.

௫ ஆகையால் ஒருவன் தன் குமாரனைத் தண்டிக்கிறபிரகாரமாக உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைத் தண்டிக்கிறாரென்று நீ உன் இருதயத்திலேயறிந்து,

௬ உன் பராபரனாகிய கர்த்தருடைய வழிகளில் நடந்து அவருக்குப் பயப்படும்படிக்கு அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளக் கடவாய்.

௭ ஏனென்றால் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை நல்ல தேசத்திலே பிரவேசிக்கப் பண்ணுகிறார். அது பள்ளத்தாக்குகளிலும் மலைகளிலுமிருந்து புறப்படுகிற ஆறுகளும் ஊற்றுகளும் மடுகளுமுள்ள தேசம்.

௮ கோதுமையும் வாற்கோதுமையும் திராட்சச் செடிகளும் அத்திமரங்களும் மாதளஞ்செடிகளுமுள்ள தேசமும் ஒலிவமரங்களும் எண்ணெயுந் தேனுமுள்ள தேசமும்,

௯ நீ தாழ்ச்சியில்லாமல் அப்பம் புசிக்கத்தக்கதும் ஒன்றும் உனக்குக் குறைவுபடாததுமான தேசமும் கல்லுகள் இரும்பாயிருக்கிறதும் நீ மலைகளில் வெண்கலம் வெட்டியெடுக்கத்தக்கதுமான தேசமுமாயிருக்கின்றது.

௰ ஆகையால் நீ சாப்பிட்டுத் திர்ப்தியடைந்த பொழுது உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த நல்ல தேசத்திற்காகத் தோத்திரிக்கக்கடவாய்.

௧௧ உன் பராபரனாகிய கர்த்தரை மறவாதபடிக்கும் நான் இன்றைக்கு உனக்குக் கற்பிக்கிற அவருடைய கற்பனைகளையும் நியாயங்களையும் கட்டளைகளையுங் கைக்கொள்ளாமற் போகாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

௧௨ நீ சாப்பிட்டுத் திர்ப்தியாகி நல்ல வீடுகளைக் கட்டி அவைகளிற் குடியிருக்கும் பொழுதும்,

௧௩ உன் ஆடுமாடுகள் திரட்சியாகி உனக்கு வெள்ளியும் பொன்னும் பெருகி உனக்குண்டான தெல்லாம் வர்த்திக்கும் பொழுதும்,

௧௪ உன் இருதயம் மேட்டிமையடையாமலும் உன்னையடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினவரும்,

௧௫ உன்னைச் சிறுமைப்படுத்தி யுன்னைச் சோதித்து உன்னுடைய பின்னாட்களில் உனக்கு நன்மைசெய்வதற்காகக் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களுந் தேட்களுந் தண்ணீரில்லா வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தரவழியாய் உன்னையழைத்து வந்தவரும் உனக்காகத் தண்ணீரைக் கற்பாறையான கன்மலையிலிருந்து புறப்படப்பண்ணினவரும்,

௧௬ உன்னை வனாந்தரத்தில் உன் பிதாக்கள் அறியாத மன்னாவினாலே போஷித்து வந்தவருமான உன் பராபரனாகிய கர்த்தரை மறக்காமலும்,

௧௭ என் சாமர்த்தியமும் என் கைகளின் பலமும் இந்த ஆஸ்தியையெனக்குச் சம்பாதித்ததென்று நீ யுன்னிருதயத்திலே சொல்லிக்கொள்ளாமலுமிருக்க எச்சரிக்கையாயிருந்து,

௧௮ உன் பராபரனாகிய கர்த்தரை நினைப்பாயாக. ஏனென்றால் தாம் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தம்முடைய உடம்படிக்கையை யுறுதிப்படுத்த அவரே யிந்நாளிலே ஆகிறதுபோல உனக்கு ஆஸ்தியைச் சம்பாதிக்கிறதற்கான பலனைக் கொடுக்கிறவர்.

௰௯ நீ உன் பராபரனாகிய கர்த்தரை மறந்து வேறே தேவர்களைப் பின்பற்றிப் போய் அவைகளைச் சேவித்து அவைகளைப் பணிந்து கொண்டாலேயாகில் அழிந்தே போவீர்களென்று இன்றைக்கு உங்களுக்குத் திடச் சாட்சியாய் அறிவிக்கிறேன்.

௨௰ நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற் போனதினிமித்தம் நீங்கள் அப்பொழுது கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த சாதிகளைப் போலே அழிவீர்கள்.

௯. அதிகாரம்.

கர்த்தர் இஸ்ரவேலருக்குக் கானான் தேசத்தைக் கொடுக்கிறது அவர்களுடைய புண்ணியமல்லவென்பது.

இஸ்ரவேலே! கேள். நீ இந்நாளிலே யோர்தானைக் கடந்து உன்னைப் பார்க்கிலும் ஜனம் பெருத்ததும் பலத்ததுமான சாதிகளைத் துரத்தி ஆகாயமட்டும் அரணிப்பான பெரிய பட்டணங்களைப் பிடித்து,

௨ ஏனாக்கின் புத்திரராகிய பெரியதும் உயர்ந்ததுமான ஜனத்தைத் துரத்தப் போகப் போகிறாய். இவர்கள் செய்தியை நீ அறிந்து ஏனாக்கின் புத்திரருக்கு முன்பாக நிற்பவனாரென்று நீ கேட்டாயே.

௩ ஆகையால் பட்சிக்கிற அக்கினியாகிய உன் பராபரனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாகக் கடந்து போகிறவரென்பதை யின்று அறியக்கடவாய். இவர் அவர்களை அழிப்பார். இவர் அவர்களை உனக்கு முன்பாக விழப்பண்ணுவார். அப்படியே கர்த்தர் உனக்குச் சொன்னபடியே நீ அவர்களைச் சீக்கிரமாய்த் துரத்தி அவர்களை அழிப்பாய்.

௪ உன் பராபரனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்துகையில் நீ உன் இருதயத்திலே கர்த்தர் என்னை என் நீதியினிமித்தமாக இந்தத் தேசத்தைச் சுதந்தரிக்கும்படிக்குக் கொண்டுவந்தாரென்று சொல்லாயாக. அந்தச் சாதிகளுடைய அக்கிரமத்தினிமித்தமாகக் கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார்.

௫ உன் நீதியினிமித்தமும் உன் இருதயத்தினுடைய செம்மையினிமித்தமும் நீ அவர்களுடைய தேசத்தைச் சுதந்தரிக்கப் பிரவேசிக்கிறதில்லை. அந்தச் சாதிகளுடைய அக்கிரமத்தினிமித்தமாகவும் கர்த்தர் ஆபிரகாம் ஈசாக் யாக்கோபென்கிற உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுச் சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படிக்காகவும் உன் பராபரனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார்.

௬ உன் நீதியினிமித்தமே உன் பராபரனாகிய கர்த்தர் உனக்கு இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கக் கொடுக்கிறாரல்லவென்பதை அறி

யக்கடவாய். ஏனெனில் நீ முரட்டுக் கழுத்துள்ள ஜனம்.

௭ நீ வனாந்தரத்திலே உன் பராபரனாகிய கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கினதை நினை. அதை மறவாயாக. நீங்கள் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்ட நாள் முதற்கொண்டு இவ்விடத்துக்கு வந்து சேருமட்டும் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணினீர்கள்.

௮ ஓரேபிலே நீங்கள் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினதினாலே கர்த்தர் உங்கள் மேல் உங்களை அழிக்கத்தக்கதாய்க் கோபமடைந்தார்.

௯ கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் பலகைகளாகிய கற்பலகைகளை வாங்கும்படிக்கு நான் பர்வதத்தில் ஏறி இரவும் பகலும் நாற்பதுநாள் பர்வதத்திலே அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தபொழுது தானே.

௰ அப்பொழுது பராபரனுடைய விரலினாலே எழுதியிருந்த இரண்டு கற்பலகைகளைக் கர்த்தர் எனக்குக் கொடுத்தார். சபைகூடியிருந்த நாளிலே கர்த்தர் பர்வதத்திலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின வார்த்தைகளின்படி எல்லாம் அவைகளிலே எழுதியிருந்தது.

௰௧ இரவும் பகலும் நாற்பதுநாளும் முடிந்து கர்த்தர் எனக்கு உடன்படிக்கையின் இரண்டு கற்பலகைகளைக் கொடுக்கிறபொழுது நேரமெனில்,

௰௨ கர்த்தர் என்னோடே நீ எழுந்து சீக்கிரம் இங்கேயிருந்து இறங்கிப்போ. ஏனெனில் நீ எகிப்திலிருந்து அழைத்துவந்த உன்னுடைய ஜனந்தன்னைக் கெடுத்தது. நாம் அவர்களுக்குக் கற்பித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டுவிலகி வார்க்கப்பட்ட சுரூபத்தைத் தங்களுக்கு உண்டாக்கினார்களென்றார்.

௰௩ பின்னையுங் கர்த்தர் என்னோடே சொன்னது வருமாறு: இந்த ஜனத்தைப் பார்த்தோம். அது முரட்டுக் கழுத்துள்ள ஜனம்.

௰௪ நாம் அவர்களை அழித்து அவர்கள் பேரை வானத்தின் கீழ் அற்றுப்போகப்பண்ண நம்மை விடு. உன்னை அவர்களைப் பார்க்கிலும் பலத்ததும் ஜனம் பெருத்ததுமான சாதியாக்குவோமென்றார்.

௰௫ அப்பொழுது நான் திரும்பிக்கொண்டு பர்வதத்திலிருந்து இறங்கினேன். பர்வதம் அக்கினியாய் எரிந்துகொண்டிருந்தது. உடன்படிக்கையின் இரண்டு பலகைகளும் என் இரண்டு கைகளிலிருந்தது.

௰௬ இதோ, நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து வார்க்கப்பட்ட கன்றுக்குட்டியை உங்களுக்கு உண்டாக்கக் கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த வழியைச் சீக்கிரமாக விட்டுவிலகினதைக் கண்டேன்.

௰௭ அப்பொழுது நான் அந்த இரண்டு பலகைகளையும் பிடித்து அவைகளை என் இரண்டு கைகளிலிருந்தெறிந்து அவைகளை உங்கள் கண்களுக்கு முன்பாக உடைத்துப் போட்டேன்.

௰௮ நீங்கள் கர்த்தரை மனமடிவாக்கும்படிக்கு அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ததினாலே உங்களுடைய எல்லாப் பாவங்களினிமித்தமும் நான் கர்த்தருக்கு முன்பாக முன்போலே இரவும் பகலும் நாற்பது நாள் விழுந்து கிடந்தேன். நான் அப்பம் புசிக்கவுமில்லை தண்ணீர் குடிக்கவுமில்லை.

௰௯ ஏனெனிற் கர்த்தர் உங்களை யழிப்பேனென்று உங்கள்மேற் கொண்டிருந்த கோபத்திற்கும் உக்கிரத்திற்கும் பயப்பட்டிருந்தேன். கர்த்தர் அந்த முறையும் என் மன்றாட்டைக் கேட்டார்.

௨௰ ஆரோன்மேலுங் கர்த்தர் மிகவுங் கோபங்கொண்டு அவனை யழிப்பேனென்றார். நான் ஆரோனுக்காகவும் அக்காலத்திலே விண்ணப்பம்பண்ணினேன்.

௨௧ உங்கள் பாவமாகிய கன்றுக்குட்டியை நானெடுத்து அதை அக்கினியிலே சுட்டு அது தூளாகுமட்டும் நன்றாய் அரைத்துப்போட்டு அத்தூளைப் பர்வதத்திலிருந்தோடுகிற ஆற்றிலே போட்டுவிட்டேன்.

௨௨ தபேராவிலும் மாசாவிலும் இச்சையின் பிரேதக்குழிகளான இடத்திலுங் கர்த்தருக்குக் கோபமுண்டாக்குகிறவர்களாயிருந்தீர்கள்.

௨௩ நீங்கள் போயேறி நான் உங்களுக்குக் கொடுத்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்களென்று கர்த்தர் உங்களைக் காதேஸ்பர்னேயாவிலிருந்து அனுப்புகையிலும் நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தரை விசுவாசியாமலும் அவர் சத்தத்திற்குக் கேள்வி கொடாமலும் அவர் வாக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினீர்கள்.

௨௪ நான் உங்களை யறிந்திருக்கிற நாள்முதற்கொண்டு கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவர்களாயிருந்தீர்கள்.

௨௫ உங்களை யழிப்போமென்று கர்த்தர் சொன்னபடியினாலே நான் கர்த்தருக்கு முன்பாக இரவும் பகலும் நாற்பதுநாள் விழுந்து கிடந்தேன். அப்பொழுது நான் கர்த்தரை நோக்கிப் பண்ணின விண்ணப்பமாவது:

௨௬ கர்த்தராகிய ஆண்டவரே! தேவரீர் உம்முடைய மகத்துவத்தினாலே மீட்டுக்கொண்டு பலத்த கையினாலே எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய ஜனத்தையும் உம்முடைய சுதந்தரத்தையும் அழிக்காதிருப்பீராக.

௨௭ கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருந்த தேசத்திலே அவர்களைப் பிரவேசிக்கப்பண்ணக்கூடாதே போனபடியினாலும் அவர்களைப் பகைத்தபடியினாலும் அவர்களை வனாந்தரத்திலே கொன்றுபோடும்படிக்குப் புறப்படப்பண்ணினாரென்று எங்களைப் புறப்படப்பண்ணின தேசத்தின் மனிதர் சொல்லாதபடிக்கு,

௨௮ தேவரீர் இந்த ஜனத்தின் முரட்டாட்டத்தையும் அதின் அக்கிரமத்தையும் அதின் பாவத்தையும் நோக்காமல் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபென்ற உம்முடைய ஊழியக்காரரை நினையும்.

௨௯ நீர் உம்முடைய பெரிய பலத்தினாலும் நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும் புறப்படப்பண்ணின உம்முடைய ஜனமும் உம்முடைய சுதந்தரமும் அவர்கள்தானென்றேன்.

௰. அதிகாரம்.

தேவபத்திக்கெழும்புகிறதற்குச் சொன்ன புத்தி.

அக்காலத்திலே கர்த்தர் என்னோடே சொன்னதாவது: நீ முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை யுனக்கு வெட்டி நம்மண்டைக்குப் பர்வதத்திலேறிவா. ஒரு மரப்பெட்டியையும் உனக்குச் செப்பனிடுவாயாக.

௨ நீ யுடைத்துப்போட்ட முந்தின பலகைகளிலிருந்த வார்த்தைகளை நாம் அந்தப் பலகைகளி லெழுதுவோம். பிற்பாடு அவைகளைப் பெட்டியிலே வைப்பாயாகவென்றார்.

௩ அப்படியே நான் சீத்திம் மரத்தினாலே பெட்டியையுண்டாக்கி முந்தினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை வெட்டி அவைகளை யென் கையிலே பிடித்துப் பர்வதத்திலேறினேன்.

௪ சபை கூட்டப்பட்டிருந்த நாளிலே கர்த்தர் பர்வதத்திலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே சொல்லியிருந்த பத்து வார்த்தைகளை அப்பொழுது அவர் முந்தின எழுத்திற்குச் சரியாக அந்தப் பலகைகளிலெழுதி அவைகளை யெனக்குக் கொடுத்தார்.

௫ அப்பொழுது நான் திரும்பிக்கொண்டு பர்வதத்திலிருந்திறங்கி அந்தப் பலகைகளை நான் பண்ணியிருந்த பெட்டியிலே வைத்தேன். கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி யதிலே வைத்திருக்கின்றது.

௬ பிற்பாடு இஸ்ரவேல் புத்திரர் பெனெயாக்கானுக்கடுத்த பேரோத்திலேயிருந்து மோசெராவுக்குப் பயணம்பண்ணினார்கள். அங்கே ஆரோன் மரித்தடக்கம்பண்ணப்பட்டான். அவன் ஸ்தலத்திலே அவன் குமாரனாகிய எலெயாசார் ஆசாரியனானான்.

௭ அங்கேயிருந்து குத்கோதாவுக்கும் குத்கோதாவிலிருந்து ஆறுகளுள்ள தேசமாகிய யோத்பாத்திற்கும் பயணம்பண்ணினார்கள்.

௮ அக்காலத்திலே கர்த்தர் லேவி கோத்திரத்தைக் கர்த்தருடைய உடம்படிக்கையி

ணப்பெட்டியைச் சுமக்கிறதற்குங் கர்த்தருக்கு முன்பாக நின்று ஊழியஞ்செய்கிறதற்கும் இந்நாள்மட்டும் நடக்கிறதுபோல அவருக்காராதனை செய்கிறதற்கும் அவர் நாமத்திலே யாசீர்வதிக்கிறதற்கும் பிரித்தெடுத்தார்.

௯ ஆகையால் லேவிக்கு அவன் சகோதரரோடே பங்குஞ் சுதந்தரமுமில்லை. உன்பராபரனாகிய கர்த்தர் சொன்னபடி கர்த்தர் அவனுக்குச் சுதந்தரமானவர்.

௰ நான் முந்தின நாட்களுக்குச் சரியாய் இரவும் பகலும் நாற்பது நாளாய்ப் பர்வதத்திலே நின்றேன். அந்த முறையுங் கர்த்தர் என்னைக் கேட்டருளினார். உன்னையழிக்கக் கர்த்தருக்குச் சித்தமில்லாமற்போயிற்று.

௰௧ ஆகையாற் கர்த்தர் என்னுடனே: அவர்கள் போய் அவர்களுக்குக் கொடுப்பேனென்று நான் அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நீ எழுந்து சனத்திற்கு முன்பாகப் பயணப்பட்டுப்போவென்றார்.

௰௨ இப்பொழுதும் இஸ்ரவேலே! நீயுன்பராபரனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரைச் சிநேகித்து, உன்பராபரனாகிய கர்த்தருக்கு உன் முழு இருதயத்தாலும் உன் முழு ஆத்துமத்தாலும் ஊழியஞ்செய்து,

௰௩ நான் இந்நாளுனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் நீ உனக்கு நன்மையாகக் கைக்கொள்ளவேண்டுமென்பதையேயல்லாமல் வேறென்னத்தை உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைக் கேட்கிறார்.

௰௪ இதோ, வானங்களும் வானங்களின் வானங்களும் பூமியும் அதிலுள்ளயாவும் உன் பராபரனாகிய கர்த்தருடையது.

௰௫ ஆனாலும் உன் பிதாக்களின்மேல் மாத்திரங் கர்த்தர் அவர்களைச் சிநேகிக்கிறதற்குப் பிரியம் வைத்துச் சகல சனங்களிலும் அவர்களுக்குப் பின் அவர்களுடைய வித்தாகிய உங்களை இந்நாளிலிருக்கிறதுபோலத் தெரிந்துகொண்டார்.

௰௬ ஆகையால் நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல் உங்களிருதயத்தின் நுனித்தோலைச் சுன்னத்துப் பண்ணுங்கள்.

௰௭ ஏனெனில் உங்கள்பராபரனாகிய கர்த்தர் தேவாதிதேவனுங் கர்த்தாதிகர்த்தருமாய் மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான பராபரனுமானவர். அவர் முகதாட்சணியம் பார்க்கிறவருமல்ல பரிதானம் வாங்குகிறவருமல்லவே,

௰௮ அவர் திக்கற்றவனுக்குங் கைம்பெண்ணாட்டிக்கும் நியாயஞ்செய்கிறவரும் பரதேசிக்கு அப்பமும் வஸ்திரமுங்கொடுக்கிறதற்கு அவனைச் சிநேகிக்கிறவருமாயிருக்கிறார்.

௰௯ ஆகையாற் பரதேசியைச் சிநேகியுங்கள். ஏனெனில் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள்.

௨௰ உன்பராபரனாகிய கர்த்தருக்குப் பயந்து அவருக்கூழியஞ்செய்து அவரைப் பற்றிக்கொண்டிருந்து அவர் நாமத்தைக் கொண்டாணையிடுவாயாக.

௨௧ அவரே உன்புகழ்ச்சி. அவரே யுன் கண்கள் கண்ட அந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை யுன்னிடத்திலே செய்த உன்னுடைய பராபரன்.

௨௨ உன் பிதாக்கள் எழுபது ஆத்துமாக்களாய் எகிப்துக்குப்போனார்கள். இப்பொழுதோ உன்பராபரனாகிய கர்த்தர் உன்னைத் திரளிலே வானத்தின் நட்சத்திரங்களைப்போலாக்கினார்.

௰௧. அதிகாரம்.

பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்று முகாந்தரங்கள்.

௧ ஆகையால் நீ உன்பராபரனாகிய கர்த்தரைச் சிநேகித்து எக்காலமும் அவருடைய பிரமாணத்தையும் அவருடைய கட்டளைகளையும் அவருடைய நியாயங்களையும் அவருடைய கற்பனைகளையுங் கைக்கொள்வாயாக.

௨ உங்கள்பராபரனாகிய கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலையும் அவருடைய மகத்துவத்தையும் அவருடைய பலத்த கையையும் நீட்டப்பட்ட அவருடைய புயத்தையும்,

௩ அவர் எகிப்தின் நடுவிலே எகிப்தின் இராசாவாகிய பார்வோனுக்கும் அவன் தேசமனைத்திற்குஞ் செய்த அவருடைய அடையாளங்களையும் அவருடைய கிரியைகளையும்,

௪ எகிப்தியரின் இராணுவமும் அவர்கள் குதிரைகளும் இரதங்களும் உங்களைப் பின்தொடருகையிற் கர்த்தர் செங்கடலின் தண்ணீர்களையவர்கள்மேலே புரளப்பண்ணி இந்நாள்வரைக்குமிருக்கிறதுபோல அவர்களையழித்த அவருடைய செய்கையையும்,

௫ நீங்கள் இவ்விடத்திற்கு வருமட்டும் அவர் உங்களுக்கு வனாந்தரத்திலே செய்ததையும்,

௬ பூமிதன் வாயைத்திறந்து எலியாபென்பவனுடைய குமாரனின் மக்களான தாத்தானையும் அபிராமையும் அவர்கள் வீடுகளையும் அவர்கள் கூடாரங்களையும் எல்லா இஸ்ரவேலருக்குள்ளும் அவர்களுக்கிருந்த அவர்களுடைய எல்லா ஜீவஜந்துக்களையும் விழுங்கினதென்றுஞ் செய்தவற்றை அறியாமலுங் காணாமலுமிருக்கிறவர்களாகிய உங்கள் பிள்ளைகளோடே நான் பேசுகிறதில்லையென்கிறதையின்றறியக் கடவீர்கள்.

௭ [illegible] செய்த அந்தப் பெரி[illegible] எல்லாம் உங்களுடைய கண் [illegible]!

௮ ஆகையால் [illegible] [illegible] [illegible] சுதந்தரிக்கும்படி [illegible]

௯ [illegible] கர்த்தர் [illegible] என்று அவர் [illegible] பாலும் தேனும் ஓடுகிற தேசத்தில் [illegible] நீங்கள் [illegible] நீடித்திருக்கும்படிக்கும் [illegible]

௰ [illegible] விட்டு வந்த [illegible] [illegible] நீ [illegible] போல [illegible]

௰௧ [illegible] மலைகளும் [illegible] மழை [illegible]

௰௨ [illegible] உன் தேவனாகிய கர்த்தர் [illegible] கண்கள் [illegible]

௰௩ [illegible] உங்கள் பிதாக்களுக்குக் [illegible] உங்கள் [illegible] உங்கள் முழு [illegible] கீழ்ப்படிந்[illegible],

௰௪ [illegible] உன் தானி[illegible] [illegible] [illegible] பின்மாரி [illegible],

௰௫ [illegible] மிருகஜீவன்களு[illegible] நீ சாப்பிட்டுத் [illegible].

௰௬ [illegible] உங்கள் [illegible] [illegible] அந்நிய தேவர்களைச் சேவி[illegible]

௰௭ [illegible] உங்கள்மேல் [illegible] போகவும் [illegible] போகவும் [illegible] கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற நல்ல தேசத்தில் [illegible] சீக்கிரமாய் [illegible] எச்சரிக்கையாயிருங்கள்.

௰௮ [illegible] கர்த்தர் உங்கள் பிதாக்களுக்குக் [illegible] கொடுப்பேன் என்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்கள் நாட்களும் உங்கள் பிள்ளைகளின் நாட்களும் [illegible] மேலிருக்கிற [illegible] நாட்களைப்போல அதிகமாயிருக்கும்படிக்கு,

௰௯ [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கட்டளை [illegible] [illegible] நீங்கள் [illegible],

௨௰ உம் [illegible] உங்கள் பிள்ளைகளுக்குப் போதித்து, நீ வீட்டில் உட்கார்ந்திருக்கும்பொழுதும் வழியில் நடக்கும்பொழுதும் படுத்துக்கொள்ளும்பொழுதும் எழுந்திருக்கும்பொழுதும் அவைகளைக் குறித்துப் பேசுங்கள்.

௨௧ உன் [illegible] வீட்டு வாசல் நிலைகளின் மேலும் உன் வாசல்களிலேயும் எழுதியும் [illegible].

௨௨ [illegible] நீங்கள் உங்கள் பாபர் [illegible] கர்த்தரைச் சிநேகித்து அவருடைய வழிகளிலெல்லாம் நடந்து அவரையொட்டிக்கொண்டிருக்கும்படிக்கு நான் உங்களுக்குக் கட்டளையிடுகிற இந்தக் கற்பனைகளையெல்லாம் [illegible] கைக்கொண்டால்,

௨௩ கர்த்தர் [illegible] ஜாதிகளையெல்லாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிடுவார். உங்களைப் பார்க்கிலும் [illegible] ஜாதிகளை [illegible]

௨௪ உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும். [illegible] நதிமுதல் [illegible] சமுத்திரமட்டுமிருக்கிறது உங்கள் எல்லையாயிருக்கும்.

௨௫ உங்களுக்கு முன் ஒருவரும் நிற்பதில்லை. உங்கள் பாபராகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி உங்களைப் பற்றிய [illegible] பயத்தையும் நீங்கள் மிதிக்கும் பூமியின் மேலெல்லாம் [illegible] [illegible]வார்.

ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் காண்பித்தது.

௨௬ இதோ, இன்று நான் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உங்களுக்கு முன்பாக வைக்கிறேன்.

௨௭ இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் பாபராகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதத்தையும்,

௨௮ நீங்கள் உங்கள் பாபராகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல் இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற வழியை விட்டு விலகி நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றினால் சாபத்தையும் தானே.

௨௯ உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்திலே பிரவேசிக்கப்பண்ணின பொழுது கெரிசீம் மலையின்மேல் ஆசீர்வாதத்தையும் ஏபால் மலையின்மேல் சாபத்தையுங் கூறக்கடவாய்.

௩௰ அவைகள் யோர்தானுக்கப்பாலே சூரியன் அஸ்தமிக்கிற மேற்கு வழியாய்க் கானானியர் குடியிருக்கிற நாட்டு வெளியிலே கில்காலுக்கெதிரான மோரே என்ற சமபூமிக்கிட்டவல்லோ விருக்கின்றது.

௩௧ ஏனெனில் உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தைச் சுதந்தரிக்கிறதற்கு நீங்கள் யோர்தானைக் கடந்துபோய் அதைச் சுதந்தரித்துக்கொண்டு அதிலே குடியிருப்பீர்கள்.

௩௨ ஆகையால் உங்களுக்கு முன்பாக இன்று நான் நிறுத்துகிற சகல கட்டளைகளையும் நியாயங்களையும் அவைகளின்படி செய்யும்படிக்குக் கைக்கொள்ளக்கடவீர்கள்.

௰௨. அதிகாரம்.

பலியிடுந்தானத்தைக் குறித்துக் கொடுத்த கட்டளை.

உன் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கிற தேசத்திலே நீங்கள் உயிரோடிருக்கும் நாளெல்லாஞ் செய்யும்படிக்குக் கைக்கொள்ளவேண்டிய கட்டளைகளும் நியாயங்களுமாவது.

௨ நீங்கள் துரத்துஞ் சாதிகள் உயர்ந்த பர்வதங்களின்மேலும் மேடுகளின்மேலும் பச்சையான சகல மரங்களின் கீழுந் தங்கள் தேவர்களைச் சேவித்த இடங்களையெல்லாம் அழிக்கக்கடவீர்கள்,

௩ அவர்கள் பலிபீடங்களை நிர்மூலமாக்கி அவர்கள் சிலைகளைத் தகர்த்து அவர்கள் தோப்புகளை அக்கினியாலே சுட்டெரித்து அவர்கள் தேவர்களின் சுரூபங்களை வெட்டிப்போட்டு அவைகளின் பேரை அவ்விடத்திலே அழியப்பண்ணக்கடவீர்கள்.

௪ நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாமல்,

௫ உங்கள் பராபரனாகிய கர்த்தர் தமது டைய நாமத்தைத் தாபிக்கிறதற்கு உங்கள் சகல கோத்திரங்களிலுந் தெரிந்துகொள்ளுந்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தைத் தேடி அங்கே வந்து,

௬ அங்கேயுங்களுடைய சர்வாங்கதகனங்களையும் உங்கள் பலிகளையும் நீங்கள் பத்திலொன்றாகச் செலுத்துகிறவைகளையும் உங்கள் கை செலுத்தும் படைப்புகளையும் உங்கள் பொருத்தனைகளையும் உங்கள் உற்சாகப்பலிகளையும் உங்கள் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையுங் கொண்டுவந்து,

௭ அங்கேயுங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகப் புசித்து நீங்களும் கையிட்டுச் செய்தகும உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் வீட்டாருஞ் சந்தோஷப்படுவீர்களாக.

௮ அன்றியிங்கே நாம் இந்நாளிலே அவரவர் தங்கள் பார்வைக்குச் சரிபோன்றபடியெல்லாஞ் செய்கிறதுபோலச் செய்யாதிருப்பீர்களாக.

௯ ஏனெனில் உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற இளைப்பாறுதலுக்கும் சுதந்தரத்துக்கும் நீங்கள் இதுவரைக்கும் இன்னம் உட்பிரவேசிக்கவில்லை.

௰ நீங்கள் யோர்தானைக் கடந்து உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கிற தேசத்திலே குடியேறின பொழுது சுற்றிலுமிருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி உங்களை இளைப்பாறப்பண்ணுகிறதினாலே நீங்கள் சுகமாய்க் குடியிருக்கிற பொழுது மேலேயன்றி,

௰௧ உங்கள் பராபரனாகிய கர்த்தர் தமது நாமத்தை வாசமாயிருக்கப்பண்ணத் தெரிந்துகொள்ளும் ஓரிடமுண்டாயிருக்கும். அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் உங்கள் சர்வாங்கதகனங்களையும் உங்கள் பலிகளையும் நீங்கள் பத்திலொன்றாகச் செலுத்துகிறவைகளையும் உங்கள் கை செலுத்தும் படைப்புகளையும் நீங்கள் கர்த்தருக்குச் சுயமனதாய் நேர்ந்துகொள்ளும் உங்களுடைய எல்லாப் பொருத்தனைகளையுங் கொண்டுவந்து,

௰௨ உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக நீங்களும் உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் உங்கள் வேலைக்காரரும் உங்கள் வேலைக்காரிகளும் உங்கள் வாசல்களிலிருக்கிற லேவியனுஞ் சந்தோஷப்படுவீர்களாக. ஏனெனில் அவனுக்கு உங்களோடே பங்குஞ் சுதந்தரமுமில்லை.

௰௩ நீ கண்ட இடமெல்லாம் உன் சர்வாங்கதகனங்களைப் பலியிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

௰௪ கர்த்தர் உன் கோத்திரங்களிலொன்றிலே தெரிந்துகொள்ளும் இடத்திலே தானே நீயுன் சர்வாங்கதகனங்களைப் பலியிட்டு அங்கே தான் நானுனக்குக் கற்பிக்கிறதையெல்லாஞ் செய்வாயாக.

௰௫ ஆனாலும் உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடும் ஆசீர்வாதத்தின்படி நீயுன்னுடைய எல்லா வாசல்களிலும் உன் மனவிருப்பத்தின்படியெல்லாம் மிருகஜீவன்களையடித்துப் புசிக்கலாம். தீட்டுப்பட்டவனுஞ் சுத்தமானவனும் அவைகளை வெளிமானையுங் கலைமானையும் புசிக்கிறதுபோலப் புசிக்கலாம்.

௰௬ இரத்தத்தை மாத்திரஞ் சாப்பிடாமல் அதைத் தண்ணீரைப்போலத் தரையில ஊற்றிவிடுவாயாக.

௰௭ உன் தானியத்திலும் உன் திராட்சரசத்திலும் உன் எண்ணெயிலும் தசம பாகத்தையும் உன் மாடுகளின் ஆடுகளின் தலையீற்றுகளையும் நீ நேர்ந்துகொள்ளும் உன்னுடைய சகல பொருத்தனைகளையும் உன் உற்சாகக் காணிக்கைகளையும் உன் கைப்படைப்புகளையும் நீ உன் வாசல்களிலே பொசிக்கக் கூடாது.

௰௮ உன் பராபரனாகிய கர்த்தர் தெரிந்துகொள்ளுமிடத்திலே நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும் உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் உன் வாசல்களிலிருக்கிற லேவியனும் உன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகப் பொசித்து நீ கையிட்டுச் செய்ததெல்லாவற்றிலும் உன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகச் சந்தோஷிப்பாயாக.

௰௯ நீ உன் தேசத்திலிருக்கும் நாளெல்லாம் லேவியனைக் கைவிடாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

௨௰ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன் எல்லையை விஸ்தாரமாக்கும்போது உன் ஆத்துமா இறைச்சி பொசிக்க ஆசைப்படுகிறதினாலே நான் இறைச்சி பொசிப்பேனென்று நீ சொன்னால் உன் ஆத்தும விருப்பத்தின்படி இறைச்சி பொசிக்கலாம்.

௨௧ உன் பராபரனாகிய கர்த்தர் தம்முடைய நாமத்தை ஸ்தாபிக்கத் தெரிந்துகொள்ளும் ஸ்தானம் உனக்குத் தூரமாயிருந்தால் கர்த்தர் உனக்குக் கட்டளையிட்ட உன் ஆடுமாடுகளிலே நான் உனக்குக் கற்பித்தபடி நீ அடித்து உன் வாசல்களிலே உன் ஆத்தும விருப்பத்தின்படியெல்லாம் பொசிக்கலாம்.

௨௨ வெளிமானையுங் கலைமானையும் பொசிக்கிறதுபோலே நீ அதைப் பொசிப்பாய். தீட்டுப்பட்டவனுஞ் சுத்தமானவனும் ஏகமாய் அதைப் பொசிக்கலாம்.

௨௩ இரத்தத்தை மாத்திரஞ் சாப்பிடாதிருக்கத் திடனாயிரு. ஏனெனில் இரத்தமே உயிர்தானே. மாமிசத்தோடே கூட உயிரைச் சாப்பிடாயாக.

௨௪ அதை நீ சாப்பிடாமல் தண்ணீரைப்போலத் தரையிலே ஊற்றிப்போடக்கடவாய்.

௨௫ நீ கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறதினாலே நீயும் உனக்குப் பிற்பாடு உன் பிள்ளைகளும் நன்றாயிருக்கும்படிக்கு அதை நீ சாப்பிடாதிருப்பாயாக.

௨௬ உனக்கிருக்கும் உன்னுடைய பரிசுத்தங்களையும் உன் பொருத்தனைகளையும் எடுத்துக்கொண்டு கர்த்தர் தெரிந்துகொள்ளும் ஸ்தானத்துக்கு நீ கொண்டுவந்து,

௨௭ உன் பராபரனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின்மேலே உன்னுடைய சர்வாங்க தகனங்களைப் பலியிடக்கடவாய். மாம்சத்தையும் இரத்தத்தையுங் கூடத்தானே. உன்னுடைய மற்றப் பலிகளின் இரத்தமும் உன் பராபரனாகிய கர்த்தருடைய பலிபீடத்தின் மேலே ஊற்றப்படக்கடவது. மாம்சத்தையோ நீ பொசிப்பாயாக.

௨௮ நீ உன் பராபரனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையுஞ் செம்மையுமானதைச் செய்கிறதினாலே நீயும் உனக்குப் பிற்பாடு உன் பிள்ளைகளும் என்றைக்கும் நன்றாயிருக்கும்படிக்கு நான் உனக்குக் கற்பிக்கிற இந்த எல்லா வார்த்தைகளையும் நீ கவனித்துக் கேள்.

௨௯ நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தின் சாதிகளை உன் பராபரனாகிய கர்த்தர் உனக்கு முன்பாகச் சங்கரிக்கும்பொழுதும் நீ அவைகளின் தேசத்தைச் சுதந்தரித்து அதிலே குடியிருக்கும்பொழுதும்,

௩௰ அவைகள் உனக்கு முன்பாக அழிக்கப்பட்டபிற்பாடு நீ அவைகளைப் பின்பற்றிச் சிக்கிக்கொள்ளப்படாதபடிக்கும் அந்தச் சாதிகள் தங்கள் தேவர்களைச் சேவித்தபடி நானுஞ் செய்வேனென்று அவைகளுடைய தேவர்களுக்காகக் கேட்டு விசாரிக்காதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

௩௧ உன் பராபரனாகிய கர்த்தருக்கு அப்படிச் செய்யாயாக. ஏனெனில் கர்த்தர் பகைத்து அருவருக்கிறதையெல்லாம் அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்து தங்கள் குமாரரைத் தங்கள் குமாரத்திகளையுந்தானே தங்கள் தேவர்களுக்கு அக்கினியாலே சுட்டெரித்தார்கள்.

௩௨ நான் உங்களுக்குக் கற்பிக்கிறதையெல்லாஞ் செய்யும்படிக்குக் கைக்கொள்வீர்களாக. நீயதிலே ஒன்றுங் கூட்டவும் அதிலே ஒன்றுங் குறைக்கவும் வேண்டாம்.

௰௩. அதிகாரம்.

விக்கிரக ஆராதனை செய்யப் போதிக்கிறவர்களுக்கும் அவர்கள் போதனைக்கிணங்கினவர்களுக்குங் குறிக்கப்பட்ட ஆக்கினைகள்.

௧ உன் நடுவே ஒரு தீர்க்கதரிசி அல்லது சொப்பனங் காணப்படுகிறவனெழும்பி,

௨ நீ அறியாதிருக்கிற வேறே தேவர்களை நாம் பின்பற்றிப்போய் அவைகளைச் சேவிப்போமாக வாருங்களென்று சொல்லி உனக்கொரு அடையாளத்தையும் அற்புதத்தையுங் காண்பித்தாலும் அவன் உன்னோடே சொன்ன அடையாளமும் அற்புதமும் வந்தாலும்,

௩ அந்தத் தீர்க்கதரிசி அல்லது அந்தச் சொப்பனக்காரன் சொல்லுகிறவைகளைக் கேளாயாக. ஏனெனில் உங்கள் பராபரனாகி

ய கர்த்தரை நீங்கள் உங்கள் முழு இருதயத்தாலும் உங்கள் முழு ஆத்துமத்தாலும் சிநேகிக்கிறவர்களோ வென்றறிய உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்.

௪ நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தரையே பின்பற்றி அவருக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் சத்தத்தைக் கேட்டு அவரைச் சேவித்து அவரையொட்டிக்கொள்வீர்களாக.

௫ அந்தத் தீர்க்கதரிசி அல்லது அந்தச் சொப்பனக்காரனோவென்றால் கொலையுண்ணக்கடவன். ஏனென்றால் நீ நடக்கும்படிக்கு உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த வழியை விட்டு உன்னை விலக்குகிறதற்காக அவன் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரும் உன்னை அடிமைத்தனவீட்டிலிருந்து நீங்கலாக மீட்டுக்கொண்டவருமாகிய உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு விரோதமான துரோகம்பேசினான். இப்படிப் பொல்லாப்பை உன் நடுவிலிருந்து விலக்குவாயாக.

௬ உங்களைச் சுற்றிலும் உனக்குச் சமீபத்திலாகிலும் உனக்குத் தூரத்திலாகிலும் தேசத்தின் ஒருமுனை துவக்கி மறுமுனைமட்டுமுள்ள எவ்விடத்திலாகிலுமிருக்கிற சனசனங்களுடைய தேவர்களிலே நீயும் உன் பிதாக்களும் அறியாத யாதொரு அந்நிய தேவர்களைப் போய்ச் சேவிப்போம் வாருங்களென்று

௭ உன் தாயகத்துப் பிறந்த உன் சகோதரனாகிலும் உன் குமாரனாகிலும் உன் குமாரத்தியாகிலும் உன் மடியிலிருக்கிற உன் பெண்சாதியாகிலும் உன் பிராணனைப் போலிருக்கிற உன் சிநேகிதனாகிலும் இரகசியமாய்ச் சொல்லி உன்னைக் கெடுவிட்டால்,

௮ நீ அவனுக்குச் சம்மதிக்காமலும் அவனுக்குச் செவிகொடாமலும் அவனைத் தப்பவிடவும் அல்லது அவனையொளிக்கவும் உன் கண் அவனைப் பாராமலும்,

௯ அவனைக் கொல்லவே கொல்லக்கடவாய். அவனைக் கொல்லச் செய்கிறதற்கு முந்தி உன் கையும் பிற்பாடு எல்லாச் சனத்தின் கையும் அவன்மேலிருக்கக்கடவது.

௰ அடிமைத்தனவீடாகிய எகிப்துதேசத்திலிருந்து உன்னைப் புறப்படப்பண்ணின உன் பராபரனாகிய கர்த்தரைவிட்டு விலகுகிறதற்கு அவன் உன்னை ஏவப்பார்த்தபடியினாலே அவனைச் சாகுமட்டுக்கு அவனைக் கல்லெறியக்கடவாய்.

௰௧ இஸ்ரவேலரெல்லாருங் கேட்டுப் பயந்து இனி உன் நடுவே ஒருவரும் இப்படிக்கொத்த பொல்லாத காரியத்தைச் செய்யாதிருக்கிறதற்காகத்தானே.

௰௨ நீங்கள் அறியாதிருக்கிற வேறே தேவர்களைச் சேவிக்கப்போவோம் வாருங்களென்று பேலியாளின் பிள்ளைகளாகிய மனிதர் உன் நடுவிலிருந்து புறப்பட்டுத் தங்கள் பட்டணத்தின் குடிகளை ஏவினார்கள் என்கிற சேதியை,

௰௩ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் குடியிருக்கிறதற்குக் கொடுத்த பட்டணங்களில் ஒன்றைக்குறித்துக் கேள்விப்பட்டால்,

௰௪ நீ நன்றாய் விசாரித்து ஆராய்ந்து கேட்டு இப்படிக்கொத்த அருவருப்பான காரியம் உன் நடுவே நடந்தது மெய்யும் நிச்சயமுமென்று கண்டாயானால்,

௰௫ அந்தப் பட்டணத்தின் குடிகளைப் பட்டயக்கருக்கினாலே வெட்டவெட்டி அதையும் அதிலுள்ள சகலத்தையும் அதின் மிருகஜீவன்களையும் பட்டயக்கருக்கினாலே சங்காரம்பண்ணி,

௰௬ அதின் கொள்ளையையெல்லாம் அதின் நடுவீதியிலே கூட்டிப் பட்டணத்தையும் அதிலுள்ளடைய எல்லாக் கொள்ளையையும் முழுவதும் உன் பராபரனாகிய கர்த்தருக்கென்று அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவாய். அது இனிக் கட்டப்படாமல் நித்தியமண்மேடாயிருக்கக்கடவது.

௰௭ கர்த்தர் தமது கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உன்மேல் மனதுருக்கமுற்று உன்னிரங்குகிறதற்காகவும்,

௰௮ நான் இன்று உனக்குக் கற்பிக்கிற உன் பராபரனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாம் நீ கைக்கொண்டு உன் பராபரனாகிய கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்ய அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதினாலே அவர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடி உன்னைப் பெருகப்பண்ணுகிறதற்காகவும்,

௰௯ சங்காரத்திற்கு நியமிக்கப்பட்ட அதிலே ஏதாகிலும் உன் கையில் ஒட்டிக்கொள்ளாதிருப்பதாக.

௰௪. அதிகாரம்.

சரீரத்தில் உண்டாக்கிற அடையாளங்களாலுந் தீட்டான போசனங்களாலுந் தீட்டுப்படாதபடிக்கு எச்சரித்தது.

நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தரின் பிள்ளைகள். செத்தவனுக்காகக் கீறிக்கொள்ளாமலும் உங்கள் கண்களின் நடுவே மொட்டையிடாமலுமிருப்பீர்களாக.

௨ ஏனெனில் நீ உன் பராபரனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான சனம். பூமியின் மேலெங்குமுள்ள எல்லாச் சனசனங்களிலும் உன்னையே கர்த்தர் தமக்குச் சொந்தச் சனமாயிருக்கத் தெரிந்துகொண்டார்.

௩ அருவருப்பான யாதொன்றைப் புசியாயாக.

௪ நீங்கள் புசிக்கத்தக்க மிருகங்களாவன: மாடு, ஆடு, வெள்ளாடு,

௫ மானும், வெளிமானும், கலைமானும், மலைப்புள்ளிமானும், வரைமானும், காட்டாடு,

௬ மிருகங்களில் விரிகுளம்புள்ளதாயிருந்து, குளம்பிரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமான சகல மிருகத்தையும் நீங்கள் புசிக்கலாம்.

௭ ஆகிலும் அசைபோடுகிறவைகளிலும், விரிகுளம்புள்ளவைகளிலும், நீங்கள் புசிக்கத்தகாதவைகள் எவைகளென்றால்: ஒட்டகமும், முசலும், குழிமுசலும்; இவைகள் அசைபோட்டும் விரிகுளம்பில்லாதிருக்கிறது; அவைகள் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக.

௮ பன்றியும் அப்படியே; ஏனெனில் அது விரிகுளம்புள்ளதாயிருந்தும் அசைபோடாதிருக்கிறது; அது உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக. இவைகளின் மாமிசத்தைப் புசியாமலும், இவைகளின் உடலைத் தொடாமலுமிருப்பீர்களாக.

௯ ஜலத்திலிருக்கிற எல்லாவற்றிலும் செட்டையும் செதிளுமுள்ளதையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

௰ செட்டையும் செதிளுமில்லாததைப் புசியாதிருப்பீர்களாக; அது உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக.

௰௧ சுத்தமான எந்தக் குருவியையும் நீங்கள் புசிக்கலாம்.

௰௨ நீங்கள் புசிக்கத்தகாதவைகள்: கழுகும், கருடனும், ஆனைமீனும்,

௰௩ கூளியும், வல்லூறும், சாதிசாதியான பருந்தும்,

௰௪ சகலவித சாதியான காகங்களும்,

௰௫ தீக்குருவியும், கருவாட்டு வாலியும், செம்போத்தும், சாதிசாதியான ஆட்காட்டியும்,

௰௬ ஆந்தையும், கோட்டானும், வெளவாலும்,

௰௭ நாரையும், கோட்டுவாலும், சகோட்டியும்,

௰௮ கொக்கும், சாதிசாதியான இராசாளியும், கொண்டலாத்தியும், திருச்சலும்,

௰௯ பறக்கிற ஊர்வனயாவும் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; அவைகள் புசிக்கப்படத்தகாதவைகள்.

௨௦ சுத்தமான எந்தக் குருவியையும் நீங்கள் புசிக்கலாம்.

௨௧ தானாய்ச் செத்த எந்த உடலையும் புசியீர்களாக; உன் வாசல்களிலிருக்கிற பரதேசி அதைப் புசிக்கக் கொடுக்கலாம்; அல்லது அந்நியனுக்கு அதை விற்றுப்போடலாம்; ஏனெனில் நீ உன் பிதாக்களுடைய கர்த்தருக்குப் பரிசுத்த சனமாயிருக்கிறாய். வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலிலே சமைக்கலாகாது.

பத்திலொன்று செலுத்துகிறதைப்பற்றி.

௨௨ நீ சகல நாளும் உன் பிதாக்களுடைய கர்த்தருக்குப் பயப்படப் பழகும்படிக்கு வருஷந்தோறும் நீ விதைக்கிற விதையினால் உன் வயலிலே விளையும் பலனிலும் நீ பத்திலொருபங்கைப் பிரித்து,

௨௩ உன் பிதாக்களுடைய கர்த்தர் தமது நாமத்தை வாசமாயிருக்கப்பண்ணத் தெரிந்துகொள்ளுந்தானத்திலே அவருக்கு முன்பாக உன் தானியத்திலும், உன் திராட்சரசத்திலும், உன் எண்ணெயிலும் பத்திலொருபங்கையும், உன் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் புசிப்பாயாக.

௨௪ உன் பிதாக்களுடைய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்திருக்கும்போது, உன் பிதாக்களுடைய கர்த்தர் தமது நாமத்தைத் தங்கப்பண்ணத் தெரிந்துகொண்ட தானம் உனக்குத் தூரமாயிருக்கிறதினாலே, நீ அதைச் சுமந்து கொண்டுபோகக்கூடாதிருந்தால்,

௨௫ அதைப் பணமாக்கிப் பணமுடிப்பை உன் கையிலே பிடித்து, உன் பிதாக்களுடைய கர்த்தர் தெரிந்துகொண்ட தலத்திற்குப் போய்,

௨௬ ஆடுமாடு திராட்சரசம் மதுபானம் முதலான உன் மனது ஆசைப்பட்டுக் கேட்கிற சகலத்தையும் பணங்கொடுத்து வாங்கி, அங்கே உன் பிதாக்களுடைய கர்த்தருக்கு முன்பாக நீயும் உன் வீட்டாரும் உன் வாசல்களிலிருக்கிற லேவியனும் புசித்துச் சந்தோஷப்படுவீர்களாக.

௨௭ லேவியனைக் கைவிடாயாக; ஏனெனில் உன்னோடே அவனுக்குப் பங்கும் சுதந்தரமுமில்லை.

௨௮ மூன்று வருஷங்களின் முடிவிலே நீ அவ்வருஷத்திலே உனக்கு வந்த பலனிலெல்லாம் பத்திலொருபங்கைப் பிரித்து உன் வாசல்களில் வைக்கக்கடவாய்.

௨௯ அப்பொழுது லேவியனுக்கு உன்னோடே பங்கும் சுதந்தரமுமில்லாதபடியால் அவனும், உன் வாசல்களிலிருக்கிற பரதேசியும் திக்கற்ற பிள்ளைகளும் கைம்பெண்சாதியும் வந்து புசித்துத் திருப்தியடைவார்களாக; நீ செய்யும் உன் கைகளின் வேலையிலெல்லாம் உன் பிதாக்களுடைய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கு.

௰௫. அதிகாரம்.

விடுதலை பண்ணும் வருஷத்தைப்பற்றிக் கட்டளை.

ஏழு வருஷங்களின் முடிவிலே விடுதலை பண்ணுவாயாக.

௨ விடுதலைபண்ணவேண்டியமுறைமையாவது. தன் சகோதரனுக்குக் கடன்கொடுத்தவனெல்லாம் கர்த்தருடைய விடுதலை கூறப்பட்டபடியினாலே அதைத் தன் அயலானாகிய சகோதரன் கையிலே வாங்காமல் விட்டு விடக்கடவன்.

௩ அந்நியசாதியான் கையிலே நீ கடனை நிர்ப்பந்தமாய் வாங்கலாம். ஆனால் உன் சகோதரனிடத்திலே உனக்கு வரவேண்டியதை யுன் கை விட்டுவிடக்கடவது.

௪ எளியவன் உனக்குள்ளில்லாதிருக்கும்படியாகத்தானே. ஏனெனில் நான் இன்றைக்கு உனக்குக் கற்பிக்கிற இந்த எல்லாக் கற்பனைகளின்படியும் நீ செய்யக் கருத்தாயிருக்கும்படிக்கு உன் பராபரனாகிய கர்த்தருடைய சத்தத்தைமாத்திரம் கேட்கவேண்டியதாயினால்,

௫ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரித்துக்கொள்ளக்கொடுக்கும் தேசத்திலே கர்த்தர் உன்னை யாசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார்.

௬ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடி உன்னை யாசீர்வதிப்பதினாலே அநேகஞ்சாதிகளுக்குக் கடன் கொடுப்பாய். நீயோவெனில் கடன் வாங்குவதில்லை, அநேகஞ்சாதிகளை யாளுவாய். உன்னையோவெனில் அவைகள் ஆளுவதில்லை.

௭ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன் தேசத்து வாசல்களிலொன்றில் உன் சகோதரரில் எளியவனொருவன் யாதொருவன் உனக்குள்ளிருந்தால், நீ உன் எளிய சகோதரனுக்குமுன்பாக உன் இருதயத்தை அழுத்தமாக்காமலும் உன் கையை மூடாமலும்,

௮ உன் கையை அவனுக்குத் திறக்கவே திறந்து, அவன் அவசரத்தினிமித்தம் அவனுக்குத் தேவையானமட்டுங் கடன்கொடுக்கவே கொடுப்பாயாக.

௯ விடுதலையின் வருஷமாகிய ஏழாம் வருஷங்கிட்டியிருக்கிறதென்று சொல்லி உன்னிருதயத்திலே பேலியாளின் நினைவுண்டாய் உன் ஏழைச்சகோதரனுக்குக் கொடாதே போக அவன்பேரில் உன் கண் வித்தியாசமாகாதபடிக்கும் அவன் உன்பேரிலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு. மற்றப்படி அது உன்மேலே பாவமாயிருக்கும்.

௧0 அவனுக்குக் கொடுக்கவே கொடுப்பாயாக. அவனுக்குக் கொடுக்கையில் உன் இருதயம் விசனப்படாதிருப்பதாக. ஏனெனில் அதினிமித்தமாக உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை உன்னுடைய எல்லாக் கிரியையிலும் நீ கையிடுஞ்செய்கையெல்லாவற்றிலும் ஆசீர்வதிப்பார்.

௧௧ ஏனெனில் தேசத்திற்குள்ளே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை. ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனுமெளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் திறக்கவே திறப்பாயாகவென்று நான் உனக்குக் கற்பிக்கிறேன்.

௧௨ உன் சகோதரனாகிய எபிரேயனாவது எபிரேய ஸ்திரீயாகிலும் உனக்குத் தன்னை விற்றால், ஆறுவருஷம் உன்னைச் சேவிப்பான். ஏழாம்வருஷத்திலே அவனைத் தன்னிஷ்டத்துக்குப் போகும்படி உன்னைவிட்டு அனுப்பக்கடவாய்.

௧௩ அவனைத் தன்னிஷ்டத்துக்குப் போகும்படி விடும்பொழுது அவனை வெறுமையாய் அனுப்பாமல்,

௧௪ உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை யாசீர்வதித்த உன் ஆட்டுமந்தையிலும் உன் களத்திலும் உன் ஆலையிலும் எடுத்து அவனுக்கு ஈவுகளைக் கொடுக்கவே கொடுக்கக்கடவாய்.

௧௫ நீ எகிப்து தேசத்திலே அடிமையாயிருந்ததையும் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை மீட்டுவிட்டதையும் நினைக்கக்கடவாய் ஆகையால் நான் இன்றைக்கு இதை யுனக்குக் கற்பிக்கிறேன்.

௧௬ நான் உன்னைவிட்டுப் புறப்பட்டுப் போகிறதில்லை. ஏனெனில் உன்னையும் உன் வீட்டையும் நேசிக்கிறேனென்றும், உன்னிடத்திலே நான் நன்றாயிருக்கிறேனென்றும் அவன் உன்னுடனே சொன்னானானால்,

௧௭ நீ ஒரு கம்பியை எடுத்து அவன் காதைக் கதவிலே படக்குத்துவாயாக. பிற்பாடு அவன் என்றைக்கும் உனக்கடிமையாயிருக்கக்கடவான். உன் அடிமைப்பெண்ணுக்கும் அப்படியே செய்யக்கடவாய்.

௧௮ அவனைத் தன்னிஷ்டத்துக்குப் போக உன்னைவிட்டு அனுப்புவது உனக்குத் தன்மையாய்க் காணவேண்டாம். ஏனெனில் இரட்டிப்பான கூலிக்கு ஈடாக ஆறுவருஷம் உன்னைச் சேவித்தான். அப்படியே உன் பராபரனாகிய கர்த்தர் நீ செய்கிறயாவிலும் உன்னை யாசீர்வதிப்பார்.

ஆடுமாடுகளுடைய தலையீற்றுகளுக்கு அடுத்தக்கட்டளை.

௧௯ உன் ஆடுமாடுகளிலே தலையீற்றாகிய ஆணையெல்லாம் உன் பராபரனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தம் பண்ணுவாயாக, உன் மாட்டின் தலையீற்றாலே வேலைசெய்யாமலும் உன் ஆட்டின் தலையீற்றை மயிர்கத்தரிக்காமலும் இருப்பாயாக.

௨0 கர்த்தர் தெரிந்துகொள்ளுந் தலத்திலே நீயும் உன்வீட்டாருமாய் வருஷாந்தரம் அப்படிக்கொத்ததுகளை உன் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாகப் போசிக்கக்கடவீர்கள்.

௨௧ சப்பாணி அல்லது குருடாயிருக்கிறதுமுதலான யாதொரு ஆகாத ஊனம்

த்திலிருக்கிறதுபோல நீ உன் பராபரனுடைய கர்த்தருக்கதைப் பலியிடவேண்டாம்.

௨௨ அப்படிக்கொத்ததை நீ உன் வாசல்களில் மானைப்போலும் வெளிமானைப்போலும் புசிக்கலாம், தீட்டுப்பட்டவனும் சுத்தமானவனும் கூடத்தானே.

௨௩ அதின் இரத்தத்தைமாத்திரஞ் சாப்பிடாமல், அதைத் தரையிலே தண்ணீரைப்போல ஊற்றிவிடக்கடவாய்.

௰௬. அதிகாரம்.

மூன்று பண்டிகைகளின் கட்டளை.

ஆபீப் மாதத்தைக் கவனித்துக்கொண்டு, அதிலே உன் பராபரனுடைய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கக்கடவாய். ஏனென்றால் ஆபீப் மாதத்திலே உன் பராபரனுடைய கர்த்தர் இராத்திரிக்காலத்திலே உன்னை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்.

௨ கர்த்தர் தமது நாமத்தை வாசமாயிருக்கப்பண்ணத் தெரிந்துகொண்டிருக்கும் ஸ்தானத்திலே உன் பராபரனுடைய கர்த்தருக்கு ஆடுகளையும் மாடுகளையும் பலியிடக்கடவாய்.

௩ நீ எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நாளைப் பின்னிட்டிருக்கும் நாளெல்லாம் நினைத்துக்கொள்ளும்படிக்கு, அதினோடே புளித்த அப்பத்தைப் புசியாமல் உபத்திரவத்தின் அப்பமாகிய புளிப்பில்லாத அப்பங்களை அதினோடே ஏழுநாளும் புசிக்கக்கடவாய். ஏனென்றால் நீ தீவிரத்தோடே எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்டாய்.

௪ ஏழுநாள்வரைக்கும் உன் எல்லைகளிலெல்லாம் புளிப்பானது உன்னிடத்திலே காணப்படவும் வேண்டாம். நீ முதல்நாட் சாயுங்காலத்திலே அடித்ததின் மாம்சத்திலே ஏதாகிலும் விடியற்காலமட்டும் இருக்கவும் வேண்டாம்.

௫ உன் பராபரனுடைய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன்னுடைய வாசல்களில் யாதொன்றிலே நீ பஸ்காவை அடிக்கப்படாது.

௬ உன் பராபரனுடைய கர்த்தர் தமது நாமத்தை வாசமாயிருக்கப்பண்ணத் தெரிந்துகொள்ளுந் ஸ்தானத்திலே நீ எகிப்திலிருந்து புறப்பட்டுப்போகிற நேரமாகிய சாயுங்காலத்திலே சூரியன் அஸ்தமிக்கிற பொழுது பஸ்காவை அடித்து,

௭ உன் பராபரனுடைய கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திலே அதைப் பொரித்துப் புசித்து, விடியற்காலத்திலே திரும்பி உன் கூடாரங்களுக்குப் போவாயாக.

௮ ஆறுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசித்தபிறகு ஏழாம்நாள் உன் பராபரனுடைய கர்த்தருக்குச் சபைகூடும் நாளாயிருக்கும். அதிலே யாதொரு வேலையைச் செய்யாயாக.

௯ ஏழு வாரங்களை எண்ணுவாயாக. வெள்ளாமையை அறுக்கத் துவக்குகிறது முதற்கொண்டு நீ அந்த ஏழு வாரங்களையெண்ணத் துவக்கி,

௰ அவைகள் சென்றபொழுது வாரங்களின் பண்டிகையை உன் பராபரனுடைய கர்த்தருக்கு ஆசரித்து, உன் பராபரனுடைய கர்த்தர் உன்னையாசீர்வதித்ததற்குத் தக்கதாக உன் கையின் மனப்பூர்வமான பகுதியைக் கொடுத்து,

௰௧ உன் பராபரனுடைய கர்த்தர் தமது நாமத்தை வாசமாயிருக்கப்பண்ணத் தெரிந்துகொள்ளுந் ஸ்தானத்திலே நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும் உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் உன் வாசல்களிலிருக்கிற லேவியனும் உன்னிடத்திலிருக்கிற பரதேசியும் திக்கற்றவனும் கைம்பெண்சாதியும் உன் பராபரனுடைய கர்த்தருக்கு முன்பாகச் சந்தோஷப்படும்,

௰௨ நீ எகிப்திலே அடிமையாயிருந்ததை நினைத்து இந்தக் கட்டளைகளைக் கைக்கொண்டு அவைகளின்படிச் செய்யக்கடவாய்.

௰௩ நீ உன் களத்தின் பலனையும் உன் ஆலையின் பலனையும் சேர்த்தபிறபாடு கூடாரப் பண்டிகையை ஏழுநாளாய் ஆசரித்து,

௰௪ அந்தப் பண்டிகையிலே நீயும் உன் குமாரனும் உன் குமாரத்தியும் உன் வேலைக்காரனும் உன் வேலைக்காரியும் உன் வாசல்களிலிருக்கிற லேவியனும் பரதேசியுந் திக்கற்றவனுங் கைம்பெண்சாதியுஞ் சந்தோஷப்படும்,

௰௫ கர்த்தர் தெரிந்துகொள்ளுந் ஸ்தலத்திலே உன் பராபரனுடைய கர்த்தருக்கு ஏழுநாளாய்ப் பண்டிகையை ஆசரித்து உன்னுடைய எல்லாவற்றிலும் உன் கைகளுடைய எல்லாக் கிரியையிலும் உன் பராபரனுடைய கர்த்தர் உன்னை ஆசீர்வதித்தபடியால் நீ சந்தோஷித்திருப்பாயாக.

௰௬ வருஷத்திலே மூன்றுமுறை, ஆகிய புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையிலும் வாரங்களின் பண்டிகையிலும் கூடாரப் பண்டிகையிலும் உன் ஆண்சாதிகளெல்லாம் உன் பராபரனுடைய கர்த்தர் தெரிந்துகொள்ளுந் ஸ்தானத்திலே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள்.

௰௭ ஒருவரும் கர்த்தருக்கு முன்பாக வெறுங்கையோடே அல்ல, உன் பராபரனுடைய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்ட அவனவனுடைய ஆசீர்வாதத்திற்குத் தக்கதாக அவனவன் தன் தன் காணிக்கையோடே காணப்படுவார்களாக.

நியாயாதிபதிகளை வைக்கிறதற்கான கட்டளை.

௰௮ உன்பிதாபிதாக்களின் கர்த்தர் உனக்குக் கொடுக்கும் உன்னுடைய எல்லா வாசல்களிலும் உன் கோத்திரங்களுக்கு நியாயாதிபதிகளையுந் தலைவரையும் வைத்துக்கொள்வாயாக. அவர்கள் சனத்திற்கு நீதியாய நியாயந் தீர்க்கக்கடவர்கள்.

௰௯ நியாயத்தைப் புரட்டாயாக. முகம் பாராமலும் பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக. ஏனெனில் பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்குகின்றது.

௨௰ நீ பிழைத்து உன்பிதாபிதாக்களின் கர்த்தர் உனக்குக் கொடுக்குந் தேசத்தைச் சுதந்தரித்திருக்கும்படிக்கு நீதியையே பின்தொடருவாயாக.

விக்கிரகாராதனை பின்சாயலான தோப்புகளும் சிலைகளும் வேண்டாமென்பது.

௨௰௧ நீ யுனக்காகக் கட்டும் உன்பிதாபிதாக்களின் கர்த்தருடைய பலிபீடத்தண்டையில் எந்தத் தோப்பையும் உனக்குண்டாக்காமலும்,

௨௰௨ உன்பிதாபிதாக்களின் கர்த்தர் பகைக்கிறயாதொரு சிலையையுனக்கு நிறுத்தாமலும் இருப்பாயாக.

௰௭. அதிகாரம்.

பழுதுள்ளவைகளைப் பலியிடாதிருக்கவும் வேறே தேவர்களைச் சேவிக்கப்போனவர்களையாக்கினை செய்யவுங் கற்பித்தது.

௧ பழுதும் அல்லது யாதொரு அவலட்சணமுமுள்ள மாட்டையாகிலும் ஆட்டையாகிலும் உன்பிதாபிதாக்களின் கர்த்தருக்குப் பலியிடாயாக. ஏனெனில் அவை உன்பிதாபிதாக்களின் கர்த்தருக்கருவருப்பாயிருக்கும்.

௨ உன்பிதாபிதாக்களின் கர்த்தரின் கண்களுக்குமுன்பாகப் பொல்லாப்புச் செய்து அவருடைய உடம்படிக்கையை மீறிப் போய்,

௩ நான் கற்பிக்காதிருக்கிற வேறே தேவர்களையல்லவென்று சந்திர சூரியனமுதலான வானத்தின் சகல நட்சத்திரங்களையுஞ் சேவித்து அவைகளைப் பணிந்துகொள்ளுகிற ஆண்சாதியாவது பெண்சாதியாவது உன்நடுவில் உன்பிதாபிதாக்களின் கர்த்தர் உனக்குக் கொடுக்கிற வாசல்களிலொன்றிலே காணப்பட்டு,

௪ அவை உன்செவிகேட்க உனக்கறிவிக்கப்பட்டால் நீ நன்றாய் விசாரிக்கக்கடவாய். அவை மெய்யென்றும் அப்படிக்கொத்த அருவருப்பு இஸ்ரவேலிலே நடந்ததுக்காரியமென்றுங் கண்டாயானால்,

௫ அப்பொழுது அந்தப் பொல்லாத காரியத்தைச் செய்த அந்த ஆண்சாதியை அல்லது அந்தப் பெண்சாதியை யுன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய் அப்படிக்கொத்தவர்கள் சாகும்படிக்குக் கல்லெறியக்கடவாய்.

௬ சாவுக்கேதுவானவன் இரண்டு அல்லது மூன்று சாட்சிகளுடைய வாக்கின்படியே கொல்லுண்கக்கடவன். ஒரே சாட்சியினுடைய வாக்கின்படியே அவன் கொலை செய்யப்படலாகாது.

௭ அவனைக் கொன்றுபோடுகிறதற்கு முந்திச் சாட்சிகளின் கைகளும் பிற்பாடு எல்லாச் சனத்தின் கைகளும் அவன் மேல் இருப்பதாக. இப்படிப் பொல்லாப்பை யுன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

தலைமையான நியாயாதிபதிகளைக் குறித்துச் சொன்னது.

௮ உன் வாசல்களில் இரத்தப்பழிக்கும் அல்லது வியாச்சியங்களுக்கும் அல்லது காயம்பட்டதற்கும் அடுத்த வழக்குக் காரியங்களிலே யாதொரு காரியத்தை நியாயந் தீர்க்கிறதற்கு உனக்கரிதாயிருந்தால், நீ எழுந்து உன்பிதாபிதாக்களின் கர்த்தர் தெரிந்துகொண்ட தானத்திற்குப் போயே,

௯ லேவியரான ஆசாரியரண்டைக்கும் அந்நாட்களிலிருக்கும் நியாயாதிபதியண்டைக்கும் வந்து கேட்பாயாக. அவர்கள் நியாயத்தீர்ப்பின் தீர்வை உனக்கறிவிப்பார்கள்.

௰ அவர்கள் கர்த்தர் தெரிந்துகொண்ட அந்த இடத்திலிருந்து உனக்கறிவிக்கும் அந்த வார்த்தையின்படியே நீ செய்து அவர்கள் உனக்கு உபதேசிக்கும்படியெல்லாஞ் செய்யக்கவனமாயிருப்பாயாக.

௰௧ அவர்கள் உனக்கறிவிக்கும் வார்த்தையை நீ விட்டு வலது இடதுபுறமாக விலகாமல் அவர்கள் உனக்கு உபதேசிக்கும் பிரமாணத்தின்படியேயும் உனக்குச் சொல்லும் நியாயத்தின்படியேயுஞ் செய்யக்கடவாய்.

௰௨ அங்கே யுன்பிதாபிதாக்களின் கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு நிற்கிற ஆசாரியனைச் சொல்லையும் அல்லது நியாயாதிபதியனைச் சொல்லையுங் கேளாதபடிக்கு யாதொருவன் துணிவு செய்தால் அவன் சாவக்கடவன். இப்படியே சனமெல்லாம் அதைக் கேட்டுப் பயந்து இனித் துணிவு செய்யாதிருக்கும்படிக்குப் பொல்லாப்பை இஸ்ரவேலிலிருந்து விலக்கக்கடவாய்.

இராசாக்களைக் குறித்துக் கற்பித்தது.

௰௪ உன்பிதாபிதாக்களின் கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே நீ வந்து அதைச் சுதந்தரித்துக்கொண்டு அதற்குடியேறின பிற்பாடு நான் என்னைச் சுற்றியிருக்கிற சகல

சாதிகளைப்போலே நானும் ஒரு இராசாவை என்மேல் வைப்பேனென்றாயானால்,

௧௫ உன் பராபரனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் இராசாவையே உனக்கு மேலாக வைக்கக்கடவாய் உன் சகோதரரின் நடுவிலிருக்கிற ஒருவனை உன்மேலே இராசாவாக வைக்கக்கடவாய். உன் சகோதரனல்லாத அந்நியனை உன்மேல் வைக்கக்கூடாது.

௧௬ அவன் அநேகங் குதிரைகளைச் சம்பாதிக்கவும் அநேகங் குதிரைகளைச் சம்பாதிக்கச் சனத்தைத் திரும்ப எஜிப்துக்குப் போகப்பண்ணவும் வேண்டாம். ஏனெனில் இனி அந்த வழியாய்த் திரும்பிப் போகவேண்டாமென்று கர்த்தர் உங்களுக்குச் சொன்னார்.

௧௭ அவன் இருதயம் பின்வாங்கிப்போகாதபடிக்கு அவன் அநேகம் பெண்சாதிகளை வைக்கவேண்டாம். அவன் வெள்ளியும் பொன்னும் மிகுதியாய்ப் பெருகப்பண்ணவும் வேண்டாம்.

௧௮ அவன் தன் இராச்சியத்தினுடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கும்பொழுது அவனுடைய இருதயம் அவன் சகோதரருக்கு மேலாக உயராமலும், கற்பனையை விட்டு வலது இடதுபுறமாய் விலகாமலும்,

௧௯ இந்த நியாயப்பிரமாணத்தினுடைய வசனங்களெல்லாவற்றையும் இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு அவைகளின்படி செய்யும்படிக்குத் தன் பராபரனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்கும் இப்படியே அவனும் அவன் பிள்ளைகளும் இஸ்ரவேலின் நடுவே தங்கள் இராச்சியத்திலே தங்கள் நாட்களை நீடிக்கப்பண்ணும்படிக்கும்,

௨௰ லேவியராகிய ஆசாரியருக்கு முன்பாயிருக்கும் இந்த நியாயப்பிரமாணத்தின் பிரதியைப் பார்த்து ஒரு பிரதியைத் தனக்கென்று புஸ்தகத்திலெழுதித் தன்னிடத்திலே வைத்திருந்து தன் சீவனுள்ள நாளெல்லாம் அதை வாசிக்கக்கடவன்.

௰௮. அதிகாரம்.

ஆசாரியருக்காகவும் லேவியருக்காகவும் பண்ணின கட்டளை.

லேவியராகிய ஆசாரியருக்கும் லேவி கோத்திரத்தாருக்கும் இஸ்ரவேலபுத்திரரோடே பங்குமில்லாதிருப்பதால் கர்த்தருடைய தகனபலிகளையும் அவருடைய சுதந்தரத்தையும் புசிப்பார்கள்.

௨ இதினிமித்தம் அவர்கள் சகோதரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரமில்லை. கர்த்தர் அவர்களுக்குச் சொன்னபடியே அவர்களுடைய சுதந்தரமானவர்.

௩ சனத்தினிடத்திலே ஆசாரியரினவர்த்தாவது பலியிடுகிறவர்களின் பலிமாடானாலும் ஆடானாலுஞ்சரி ஆசாரியனுக்கு முன்னந்தொடையையுந் தாடைகளையும் இரைப்பையையுங் கொடுக்கவேண்டும்.

௪ உன்னுடைய தானியத்தில் இராட்சிப்பழ இரசம் எண்ணெய் என்பவைகளின் முதற்பலனையும் உன் ஆடுகளை நீ மயிர்கத்திரிக்கிறதின் முதற்பலனையும் அவனுக்குக் கொடுக்கக்கடவாய்.

௫ ஏனென்றால் சகல நாளும் அவனும் அவன் குமாரரும் கர்த்தரின் நாமத்திலே ஊழியஞ்செய்ய நிற்கும்படிக்கு உன் பராபரனாகிய கர்த்தர் உன்னுடைய எல்லாக் கோத்திரங்களிலும் அவனையே தெரிந்துகொண்டார்.

௬ இஸ்ரவேலில் எவ்விடத்திலாகிலுமிருக்கிற உன் வாசல்களில் யாதொருவன் நிலைகொண்டு பார்த்தேசியாய் இருந்தவன் தன் சுயவிருப்பத்தின்படியே கர்த்தர் தெரிந்துகொண்ட ஸ்தானத்திற்குத் தன் முழு மனதோடே வந்து,

௭ அங்கே கர்த்தருக்கு முன்பாக நிற்கிற லேவியராகிய தன்னுடைய எல்லாச் சகோதரரைப்போலுந் தன் பராபரனாகிய கர்த்தரின் நாமத்தில் ஊழியஞ்செய்தால்,

௮ அப்படிக்கொத்தவர்கள் தங்கள் பிதாக்களுடைய ஆஸ்தியினால் விற்கிறதைத் தவிர சரிசமானமான பங்கைச் சாப்பிடுவார்களாக.

அஞ்ஞானிகளின் வழக்கங்களுக்கு விரோதமான கட்டளை.

௯ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே நீ வந்தபோது அந்தச் சாதிகளுடைய அருவருப்புகளின்படி செய்யக் கற்றுக்கொள்ளாயாக.

௰ தன் மகனையாவது தன் மகளையாவது தீயின் வழியாய்ப் பிரவேசிக்கப்பண்ணுகிறவனும் யோசியனும் நாட்பார்க்கிறவனும் அஞ்சனம் பார்க்கிறவனும் சூனியக்காரனும்,

௧௧ மந்திரவாதியும் சன்னதக்காரனும் குறிசொல்லுகிறவனும் செத்தவர்களைக் கேட்கிறவனும் உன்னிடத்திலே காணப்படாதிருப்பதாக.

௧௨ ஏனெனில் இப்படிக்கொத்தவைகளைச் செய்கிறவனெல்லாங் கர்த்தருக்கு அருவருப்பானவன். இப்படிக்கொத்த அருவருப்புகளினிமித்தம் உன் பராபரனாகிய கர்த்தர் அவர்களை உனக்கு முன்பாகத் துரத்திவிடுகிறார்.

௧௩ உன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக உத்தமமாயிருக்கக்கடவாய்.

௧௪ ஏனெனில் நீ துரத்திவிடப்போகிற அந்தச் சாதிகள் நாட்பார்க்கிறவர்களையுங் குறிசொல்லுகிறவர்களையுங் கேட்கிறார்கள்.

உனக்கோவென்றால் உன்பராபரனாகிய கர்த்தர் அப்படிச்செய்ய உத்தாரங்கொடார்,

பெரியதீர்க்கதரிசியாகிய கிறிஸ்துவைக் குறித்துச்சொன்னது.

௰௫ என்னைப்போலொரு தீர்க்கதரிசியை யுன் பராபரனாகிய கர்த்தர் உனக்கு உன் நடுவே உன் சகோதரரிலிருந்தெழும்பப்பண்ணுவார். அவரைக்கேட்பீர்களாக.

௰௬ நான் சாவாதபடிக்கு இனி என்பராபரனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கேளாமலும் இனி இந்தப் பெரிய அக்கினியைக் காணாமலுமிருப்பேனாகவென்று நீ ஓரேபிலே சபைகூட்டப்பட்டநாளில் உன்பராபரனாகிய கர்த்தரை வேண்டிக்கொண்டதின்படியெல்லாம் அந்தப்படிக்கு நடக்கும்.

௰௭ அப்பொழுது கர்த்தர் என்னுடனே சொன்னதாவது. அவர்கள் சொன்னது நல்லது.

௰௮ நாம் உன்னைப்போலொரு தீர்க்கதரிசியை அவர்களுக்கு அவர்கள் சகோதரரின் நடுவிலேயிருந்தெழும்பப்பண்ணி நம்முடைய வார்த்தைகளை அவர் வாயிலே கொடுப்போம். நாம் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர் அவர்களோடே சொல்லுவார்.

௰௯ அப்பொழுது சம்பவிப்பதேதென்றால் அவர் நமது நாமத்திலே சொல்லும் நமது வார்த்தைகளைக் கேளாதவனை நாம் விசாரிப்போம்.

௨௰ ஆனால் எந்தத்தீர்க்கதரிசி நான் சொல்லத் தனக்குக் கற்பிக்காதிருக்கிற வார்த்தையை நமது நாமத்திலே சொல்லத் துணிந்து வேறே தேவர்களின் நாமத்திலே பேசுவானோ அந்தத்தீர்க்கதரிசி சாவக்கடவன்.

௨௰௧ ஆனால் நீயுன் இருதயத்தில் கர்த்தர் சொல்லாதிருக்கிற வார்த்தையை எப்படி யறிவேனென்றாயேயாகில்,

௨௰௨ தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்திலே சொன்ன காரியம் உண்டாகாமலும் வராமலும் போனால் அது கர்த்தர் சொல்லாதிருக்கிற வார்த்தை. தீர்க்கதரிசி அதைத் துணிகரத்திலே சொன்னான். அவனுக்குப் பயப்படாயாக.

௰௯. அதிகாரம்.

அடைக்கலப்பட்டணங்களின் கட்டளை.

உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்தின் சாதிகளை யுன்பராபரனாகிய கர்த்தர் வேரறுப்போகப்பண்ணுகையால் நீயவர்கள் தேசத்தைச் சுதந்தரித்து அவர்கள் பட்டணங்களிலும் அவர்கள் வீடுகளிலும் குடியேறின பொழுது,

௨ நீயுன்பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கக்கொடுக்கிற உன் தேசத்தின் நடுவிலே மூன்று பட்டணங்களை யுனக்குப் பிரித்துவைக்கக்கடவாய்.

௩ கொலைசெய்தவனெல்லாரும் அங்கே போடிப்போகத்தக்கதாக நீ யுனக்கு வழியை யாயத்தப்படுத்தி உன்பராபரனாகிய கர்த்தர் உன்னைச் சுதந்தரிக்கப்பண்ணப்போகிற உன் தேசத்தின் எல்லையை மூன்று பங்காகப் பங்கிடக்கடவாய்.

௪ கொலைசெய்து அங்கே யோடிப்போய் உயிரோடிருக்கத் தக்கவனேதென்றால், தான் முந்நாட்களில் பகைத்திராத் தனக்கடுத்தவனை மனதறியாமற் கொன்றவனாகில்.

௫ விறகுவெட்ட ஒருவன் தனக்கடுத்தவனோடே காட்டிலே போய் விறகுவெட்டத் தன் கையைக் கோடாலியோடே ஓங்கும்பொழுது இரும்பு காம்பை விட்டுத் தெறித்து அவனுக்கடுத்தவனுக்கு அவன் சாவுமடிக்குப் பட்டால்,

௬ அப்படிக்கொத்த கொலைசெய்தவனை இரத்தப்பழிக்காரன் தன் மனத்தெரிகையினால் தொடர்ந்து வழிதூரமாயிருக்கிறதினாலேயவனைக் கிட்டி அவனைச் சாகப்பண்ணாதபடிக்கு அவன் அந்தப்பட்டணங்களில் ஒன்றில் ஓடிப்போய் உயிரோடிருப்பானாக. ஏனென்றால் இவன் அவனை முந்நாட்களிற் பகைக்காதபடியினாலே இவன்மேலே சாவுக்கானக் குற்றஞ்சுமத்தவில்லை.

௭ இதினிமித்தம் மூன்று பட்டணங்களை யுனக்குப் பிரித்துவைக்கக்கடவாயென்று நான் உனக்குக் கற்பிக்கிறேன்.

௮ நீயுன்பராபரனாகிய கர்த்தரைச் சிநேகித்துச் சகல நாளும் அவர் வழிகளில் நடப்பதற்காக நான் இன்றுனக்குக் கற்பிக்கிற இந்த எல்லாக்கற்பனையையும் அதின்படிச்செய்யும்படிக்குக் கைக்கொண்டு,

௯ இப்படியே யுன்பராபரனாகிய கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே உன் எல்லையை விஸ்தாரமாக்கி உன் பிதாக்களுக்குக் கொடுப்போமென்று சொன்ன தேசத்தையெல்லாம் உனக்குக் கொடுத்தால்,

௰ அப்பொழுது குற்றமில்லாத இரத்தம் உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற உன் தேசத்தின் நடுவிலே சிந்தப்படுகிறதினால் உன்மேலே இரத்தப்பழிசுமராதபடிக்கு இந்த மூன்று பட்டணங்களோடே யுனக்கின்னம் மூன்று கூட்டக்கடவாய்.

௰௧ ஒருவன் தனக்கடுத்தவனைப் பகைத்து அவனுக்குப் பதிவிருந்து அவனுக்கு விரோதமாயெழும்பி அவன் சாவும்படிக்கு அவனை வெட்டிச் சாகப்பண்ணி இந்தப்பட்டணங்களிலே ஒன்றிலே ஓடிப்போனானேயாகில்,

௰௨ அவன் பட்டணத்தின் மூப்பர் ஆள் அனுப்பியவனை அங்கேயிருந்து கொண்டுவரச் சொல்லி அவன் சாவும்படிக்கு அவனை

பழிக்காரனைக் கையில் ஒப்புக்கொடுக்கக்கடவர்கள்.

௧௩ உன் கண் அவனுக்கு இரங்கவேண்டாம்; உனக்கு நன்மையுண்டாகும்படிக்குக் குற்றமில்லாத இரத்தப்பழியை இஸ்ரவேலை விட்டு விலக்கக்கடவாய்.

எல்லைக்கல்லைப் பெயர்க்காதிருக்கச்சொன்னதும், பொய்ச்சாட்சிகளுக்குத் தண்டிக்க ஆக்கினை வைத்ததும்.

௧௪ உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற தேசத்திலே முன்னோர்கள் குறித்திருக்கிற உனக்குக் கிடைத்த சுதந்தரவெல்லைப் போதற்பபோகாயாக.

௧௫ ஒருவன் எந்த அக்கிரமத்தைப் பற்றியாவது எந்தப் பாவத்தைச் செய்தானென்று சொல்லப்பட்டாலும் ஒரே சாட்சி அவனைக் குற்றவாளியென்று தீர்க்கவேண்டாம். இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் காரியம் நிலைப்படுவதாக.

௧௬ ஒருவன்மேல் ஒருவன் துரோகத்தினைக் குற்றஞ்சாட்ட ஒரு கொடுமையான சாட்சி எழும்பினால்,

௧௭ வழக்காடுகிற இருவரும் கர்த்தருக்கு முன்பாகவும் அந்நாளிலிருக்கும் ஆசாரியர்களுக்கும் நியாயாதிபதிகளுக்கு முன்பாக நிற்பார்களாக.

௧௮ அப்பொழுது நியாயாதிபதிகள் நன்றாய் விசாரிக்கக்கடவர்கள். சாட்சி பொய்ச்சாட்சியென்றும் தன் சகோதரன் மேல் பொய்யாய்க் குற்றஞ் சாட்டினானென்றும் கண்டால்,

௧௯ அப்பொழுது அவன் தன் சகோதரனுக்குச் செய்ய நினைத்தபடியே அவனுக்குச் செய்யக்கடவீர்கள்.

௨௰ இதைக் கேட்டு மற்றவர்களும் கேட்டுப் பயந்து இனிமேல் உன் நடுவிலே அப்படிப்பட்ட தீங்கைச் செய்யாதிருப்பார்கள்; இப்படிப் பொல்லாப்பையுன் நடுவிலிருந்து விலக்குவாயாக.

௨௧ உன் கண் இரங்கவேண்டாம். ஜீவனுக்கு ஜீவன், கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்.

௨௰. அதிகாரம்.

யுத்தத்துக்கடுத்த கட்டளைகள்.

௧ நீ உன் சத்துருக்களுக்கெதிராக யுத்தத்துக்குப் புறப்பட்டு, குதிரைகளையும் இரதங்களையும் உன்னைப் பார்க்கத் திரட்சியான ஜனங்களையும் கண்டால் அவர்களுக்குப் பயப்படாதே. ஏனெனில் உன்னை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடேயிருக்கிறார்.

௨ நீங்கள் யுத்தத்திற்குக் கிட்டுகிறபொழுது ஆசாரியன் சேர்ந்துவந்து ஜனத்தோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதாவது. இஸ்ரவேலே! கேள்.

௩ இன்று உங்கள் சத்துருக்களோடே யுத்தஞ்செய்யப்போகிறீர்கள். உங்கள் இருதயம் துவளவேண்டாம். நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் கலங்கவும் திகைக்கவும் வேண்டாம்.

௪ ஏனெனில் உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடே கூடப்போகிறார் என்பாராக.

௫ பின்பு சேர்வைக்காரர் ஜனத்தோடே சொல்லவேண்டியதாவது. எவன் புது வீட்டைக் கட்டி அதைப் பிரதிஷ்டைபண்ணாதிருக்கிறானோ, அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அதைப் பிரதிஷ்டைபண்ணாதபடிக்குத் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவன்.

௬ எவன் திராட்சத்தோட்டத்தை நாட்டி அதை அநுபவியாதிருக்கிறானோ, அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அதை அநுபவியாதபடிக்குத் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவன்.

௭ எவன் ஒரு பெண்ணைத் தனக்கு நியமித்துக்கொண்டு அவளை விவாகம்பண்ணாதிருக்கிறானோ, அவன் யுத்தத்திலே செத்தால் வேறொருவன் அவளை விவாகம்பண்ணாதபடிக்குத் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக்கடவன் என்பார்களாக.

௮ பின்னும் சேர்வைக்காரர் ஜனத்துடனே பேசி எவன் பயங்காளியும் திடனற்றவனுமாயிருக்கிறானோ, அவன் தன் சகோதரரின் இருதயத்தைத் தன்னிருதயத்தைப்போலக் கரையப்பண்ணாதபடிக்குத் தன் வீட்டுக்குத் திரும்பிப்போகக் கடவனென்பார்களாக.

௯ சேர்வைக்காரர் ஜனத்தோடே பேசி முடிந்தபிறபாடு சேனைகளின் தலைவர் ஜனத்தை இலக்கம்பார்க்கக்கடவர்கள்.

௰ நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணக் கிட்டும்பொழுது சமாதானத்திற்கான விசேஷத்தைப் பற்றிக் கூறக்கடவாய்.

௧௧ அது சமாதானமான உத்தரவு உனக்குக் கொடுத்து உனக்குத் திறந்தால் அதிலே அகப்பட்டிருக்கிற ஜனமெல்லாம் உனக்குப் பகுதிகட்டுகிறவர்களாய் உன்னைச் சேவிக்கக்கடவர்கள்.

௧௨ அது உன்னோடே சமாதானமாகாமல் உன்னோடே யுத்தம்பண்ணினால் நீ அதை முற்றிக்கைபோட்டு,

௧௩ உன் பராபரனாகிய கர்த்தர் அதை உன் கையில் ஒப்புக்கொடுத்தால் அதிலுள்ள

ஆண்சாதியையெல்லாம் பட்டயக்கருக்கினாலே வெட்டி,

௰௪ ஸ்திரீகளையுங் குழந்தைகளையும் மிருகஜீவன்களையும் மாத்திரம் உயிரோடே வைத்து, பட்டணத்திலுள்ள எல்லாவற்றையும் அதிலுடைய எல்லா உடைமைகளையுங் கொள்ளையிட்டுக்கொண்டு உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் சத்துருக்களின் கொள்ளையைச் சாப்பிடுவாயாக.

௰௫ இந்த ஜாதிகளின் பட்டணங்களாயிராமல் உனக்கு வெகுதூரமாயிருக்கிற சகல பட்டணங்களுக்கும் இப்படிச் செய்வாயாக.

௰௬ உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற இந்த ஏத்தியர் எமோரியர் கானானியர் பெரிசியர் ஏவியர் எபூசியர் என்கிற ஜனங்களின் பட்டணங்களிலேமாத்திரஞ் சுவாசமுள்ள தொன்றையும் உயிரோடே வைக்காமல்,

௰௭ அவர்களையுன்பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்தபடியே சங்கரிக்கவே சங்கரிக்கக்கடவாய்.

௰௮ அவர்கள் தங்கள் தேவர்களுக்குச் செய்கிற தங்களுடைய சகல அருவருப்புகளின்படியே செய்ய உங்களுக்குக் கற்பிக்காமலும் நீங்கள் உங்கள்பராபரனாகிய கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாமலுமிருக்கத்தானே.

௰௯ நீ ஒரு பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணி, அதைப் பிடிக்க அநேகநாள் அதை முற்றிக்கைபோட்டுக்கொண்டிருந்தால் நீ கோடாலியையோங்கி அதின் மரங்களைச் சேதம்பண்ணாயாக. ஏனெனில் அவைகளின் கனியை நீ புசிக்கலாம். ஆகையால் உனக்குக் கொத்தளத்திற்காமென்று அவைகளை வெட்டாயாக. ஏனென்றால் வெளியின் விருட்சங்கள் மனிதனுக்கானவைகள்.

௨௰ புசிக்கக்கனிதராதென்று நீ அறிந்திருக்கிற மரங்களைமாத்திரம் நீயழித்து வெட்டிப்போட்டு உன்னோடே யுத்தம்பண்ணுகிற பட்டணம் பிடிபடுமட்டும் அதற்கெதிராகக் கொத்தளம்போட்டுக்கொண்டிரு.

௨௧. அதிகாரம்

கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிறவொருவன் வெளியிலே காணப்பட்டாற் செய்யவேண்டியதேதென்பது.

௧ உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரிக்கக்கொடுக்கிற சீமையிற் கொலைசெய்யப்பட்டுக்கிடக்கிற ஒருவன் வெளியிலே காணப்பட்டு அவனைக் கொன்றவனென்று தெரியாதேபோனால்,

௨ உன்மூப்பரும் உன் நியாயாதிபதிகளும் வெளியிலேபோய்க் கொலைசெய்யப்பட்டவனைச் சுற்றிலுமிருக்கும் பட்டணங்கள்மட்டும் அளப்பார்களாக.

௩ அப்பொழுது அவனுக்குச் சமீபமென்றுகாணப்பட்ட பட்டணத்தின் மூப்பர் வேலையிற் பண்படாததும் நுகத்தடிபிணைக்கப்படாததுமான ஒருகிடாரியைப் பிடித்து,

௪ உழாததும் விதையாததுமாகிய தரிசான பள்ளத்தாக்கிலேயதைக் கொண்டுபோய் அந்தப்பள்ளத்தாக்கிலே அந்தக் கலையை வெட்டிப்போடக்கடவர்கள்.

௫ அப்பொழுது லேவியின் குமாரராகிய ஆசாரியர்கள் சேரக்கடவர்கள். ஏனெனில் அவர்களையுன்பராபரனாகிய கர்த்தர் தமக்கு ஆராதனைசெய்யவுங் கர்த்தருடைய நாமத்தில் ஆசீர்வதிக்கவுந் தெரிந்துகொண்டார். அவர்கள் வாக்கின்படியே சகல வழக்குஞ் சகல காயச்சேதமுந் தீருவது.

௬ கொலைசெய்யப்பட்டவனுக்குச் சமீபமான பட்டணத்தின் மூப்பரெல்லாம் பள்ளத்தாக்கிலே தலைவெட்டப்பட்ட கிடாரியின்மேலே தங்கள் கைகளைக் கழுவி,

௭ எங்கள் கைகள் அந்த இரத்தத்தைச் சிந்தினதுமில்லை எங்கள் கண்கள் அதைக்கண்டதுமில்லையென்று உத்தரவுகொடுத்து,

௮ கர்த்தாவே! தேவரீர் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின்மேற் குற்றமில்லாத இரத்தத்தின் பழியைச் சுமத்தாமல் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின்மேற் கிருபையுள்ளவராயிருமென்பார்களாக. அப்பொழுது இரத்தப்பழி அவர்களுக்கு நிவர்த்தியாம்.

௯ இப்படிக் குற்றமில்லாத இரத்தத்தின் பழியையுன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய். ஏனெனிற் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதை நீ செய்யவேண்டும்.

யுத்தத்திலே சிறைபிடித்த ஸ்திரீயைவிவாகம்பண்ணுதலுக்கடுத்த நியாயங்கள்.

௰ நீயுன் சத்துருக்களுக்கெதிராக யுத்தத்திற்புறப்பட்டு உன்பராபரனாகிய கர்த்தர் அவர்களையுன் கையிலே ஒப்புக்கொடுக்கிறதினாலே யவர்களைச் சிறைபிடித்துவந்து,

௰௧ சிறைகளில் அழகுள்ள ஒரு ஸ்திரீயைக் கண்டு அவளை விவாகம்பண்ணத்தக்கவனாய் அவள்மேல் ஆசைவைத்து,

௰௨ அவளையுன் வீட்டிற்குள் அழைத்துப்போனால் அவள் தன் தலையைச் சிரைத்துக்கொண்டு தன் நகங்களையறுத்து,

௰௩ தன் சிறையிருப்பின் வஸ்திரத்தை நீக்கிப்போட்டு உன்வீட்டில் ஒருமாதமட்டுந் தன் தகப்பனையுந் தன் தாயையும் நினைத்து அழட்டும். அதற்குப்பிறகு அவள் உன் பெண்சாதியாயிருக்கும்படிக்கு நீயவளிடத்திற் பிரவேசித்து அவளைப் படைக்கலாம்.

௰௪ அவள் உனக்குச் சம்மதிப்படாதேபோனாளேயாகில் நீயவளைப் பணத்திற்கு விற்காமல் அவளைத் தன்னிச்சையாய்ப் போக

ப்போபாக. நீ பகைக்கப்படுகிறவளின் பிள்ளை யிருக்கிறவனிலே ஆசாரநதேடாதி ருப்பாயாக.

மூத்தபிள்ளைகளுடைய சுதந் தரவுரிமைத் திட்டம்.

கரு ஒருவனுக்கு இரண்டு பெண்சாதிக ளுண்டாயிருந்து, ஒருத்தி நேசிக்கப்பட்டவளும் மற்றவள் பகைக்கப்பட்டவளுமாயிருந்து, இருவரும் அவ னுக்குப் பிள்ளைகளைப் பெற்று, முதற்பேறான பிள்ளை பகைக்கப்பட்டவளின் பிள்ளையாயிருந்தால்,

கசு அவன் தனக்குண்டானதைத் தன் பிள்ளைகளுக்குச் சுதந்தரமாகப் பங்கிடும் நாளிலே, பகைக்கப்பட்டவளின் பிள்ளையாகிய முதற்பேறு ளவனுக்கு முன்பாக நேசிக்கப்பட்டவ ளின் பிள்ளைக்கு முதற்பேறான சுதந்தரத் தைக் கொடுக்கப்படாது.

கஎ பகைக்கப்பட்டவளின் பிறந்தவனைய முதற்பேறானவனென்று அறிந்து தனக்கு உண்டான எல்லாவற்றிலும் இரண்டு பங்கை அவனுக்குக் கொடுக்கவேண்டும்; ஏனெனில் இவன் அவனுடைய பெலத்தின் முதற்பலன். இவனுக்கு முதற்பேறான சுதந்தரம் சேரும்.

துஷ்டமான மகனுக்குக் கொடுக்கப்பட்ட ஆக்கினை.

கஅ ஒருவனுக்குத் தன் தாயின் சொல்லையும் தன் தகப்பனின் சொல்லையும் கேளாமலும், அவர்களாலே தண்டிக்கப்பட்டும் அவர்களுக்குக் கீழ்ப்படியாமலும் போகிற அடங்காத முரண்டுள்ள ஒரு மகனிருந்தால்,

கக அவனைப் பெற்ற தகப்பனும் தாயும் அவனைப் பிடித்து, அவனைத் தங்கள் பட்டணத்தின் மூப்பரிடத்திற்கும் அவ்விடத்து வாசலுக்கும் கொண்டுபோய்,

உய இந்த எங்கள் மகன் அடங்காத முரண்டன், எங்கள் சொல்லைக் கேளாமல் பெருந்தீனிக்காரனும் குடியனுமாயிருக்கிறான் என்று அவன் பட்டணத்தின் மூப்பரிடத்தில் சொல்லுவார்களாக.

உக அப்பொழுது அவன் பட்டணத்து மனுஷரெல்லாரும் அவனைச் சாகும்படி அவனைக் கல்லெறியக்கடவர்கள். இப்படியே இஸ்ரவேலரெல்லாரும் கேட்டுப் பயப்படும்படி நீ பொல்லாப்பை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

தூக்கிப்போடப்பட்டவனுக்காக இட்ட கட்டளை.

உஉ சாவுக்கேதுவான பாவஞ்செய்த ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருந்து, அவனைக் கொலைசெய்து மரத்திலே தூக்கிப் போட்டாயானால்,

உங அவன் பிரேதம் மரத்திலே இராத்திரியில் இருக்கவேண்டாம். அதை அந்த நாளிலேதானே அடக்கம்பண்ணவே பண்ணுவாயாக. ஏனெனில் தூக்கிப்போடப்பட்டவன் பராபரனாலே சபிக்கப்பட்டவன். ஆகையால் உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற உன்னுடைய தேசத்தைத் தீட்டுப் படுத்தாயாக.

உஉ. அதிகாரம்.

தயவுக்கும் வேறே சில நியாயங்களுக்கும் அடுத்த கட்டளைகள்.

க உன் சகோதரனுடைய மாட்டாகிலும் ஆட்டாகிலும் வழிதப்பிப்போகிறதைக் கண்டாயானால், அவைகளைக் காணாதவனைப்போலிராமல் அவைகளை உன் சகோதரனிடத்துக்குத் திருப்பவே திருப்பக்கடவாய்.

உ உன் சகோதரன் உனக்குச் சமீபமாயிராமலும் உனக்கு அறிமுகமாயிராமலும் இருந்தானேயாகில், நீ அதை உன் வீட்டுக்குள்ளே சேர்த்துக்கொண்டு, அதை உன் சகோதரன் தேடிவருமட்டும் உன்னிடத்திலே வைத்து அவனுக்குத் திருமபக் கொடுக்கக்கடவாய்.

௩ அப்படியே அவன் கழுதைக்கும் செய்யக்கடவாய். அப்படியே அவன் வஸ்திரத்துக்கும் செய்யக்கடவாய். அப்படியே உன் சகோதரனுக்குக் காணாமற்போன எதற்கும் அதைக் கண்டுபிடித்தாயானால் செய்யக்கடவாய். அதை நீ காணாதவன்போல விட்டுப்போகப்படாது.

௪ உன் சகோதரனுடைய கழுதையாகிலும் அவன் மாட்டாகிலும் வழியிலே விழுந்திருக்கிறதைக் கண்டாயானால், அவைகளைக் காணாதவன்போல விட்டுப்போகாமல் அவனோடே கூட அவைகளைத் தூக்கியெடுத்து விடுவாயாக.

௫ ஆண்பிள்ளையின் உடைமானதைப் பெண்பிள்ளை தரிக்கலாகாது. பெண்பிள்ளையின் வஸ்திரத்தை ஆண்பிள்ளை உடுத்திக்கொள்ளவும் வேண்டாம். ஏனெனில் அப்படிச் செய்கிறவர்களெல்லாரும் உன் பராபரனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.

௬ யாதொரு மரத்திலே அல்லது தரையிலே குஞ்சுகளும் அல்லது முட்டைகளுமிருக்கிற ஒரு குருவிக்கூடு உனக்கு வழியிலே தென்பட்டு, தாய் குஞ்சுகளின்மேல் அல்லது முட்டைகளின்மேல் அடைகாத்துக்கொண்டிருந்தால் நீ குஞ்சுகளோடே தாயையும் பிடிக்காமல்,

௭ நீ நன்றாயிருக்கவும் உன் நாட்கள் நீடித்திருக்கவும் தாயைப் போகவே போகவிட்டு குஞ்சுகளை எடுத்துக்கொள்வாயாக.

௮ நீ புது வீட்டைக் கட்டினால் அப்பொழுது ஒருவன் உன் மெத்தை வீட்டிலிருந்து விழுகிறதினாலே நீ இரத்தப்பழியை உன் வீட்டின்மேற் சுமப்பண்ணாதபடிக்கு அதற்குக் கிராதியையுண்டுபண்ணக்கடவாய்.

கூ உன் திராட்சத்தோட்டத்திலே வெவ்வேறாகிய விதைகளை விதையாயாக. மற்றபடி நீ விதைத்த விதைகளின் பயிரையுந் திராட்சத்தோட்டத்தின் பலனையுந் தீட்டுப் படுத்துவாய்.

ய மாட்டையுங் கழுதையையுங் கூட்டிப் பிணைத்துழாயாக.

யக ஆட்டுமயிரும் பஞ்சுநூலுங் கலந்த வஸ்திரத்தை யுடுத்துக்கொள்ளாயாக.

யஉ நீ போட்டுக்கொள்ளுகிற உன் மேற்சட்டையின் நாலோரங்களில் உனக்குத் தொங்கல்களையுண்டுபண்ணுவாயாக.

விபசாரபாவத்திற்கடுத்த சில நியாயங்கள்.

யங ஒரு ஸ்திரீயை விவாகம் பண்ணின ஒருவன் அவளிடத்திற் பிரவேசித்தபிற்பாடு அவளைப் பகைத்து,

யச இந்தப் பெண்சாதியை விவாகம்பண்ணினேன். நான் அவளண்டைச் சேர்ந்தபொழுதோவெனில் அவளிடத்தில் கன்னிகத்துவமெய்யைக் கண்டுபிடித்ததில்லையென்று அவள்மேல் அவமானமான விசேஷங்களைச் சாட்டி அவளுக்குத் துர்க்கீர்த்தியைப் பிறப்பித்தானானால்,

யரு பெண்பிள்ளையின் தகப்பனும் அவள் தாயும் அவளைச் சேர்த்து அவளுடைய கன்னிகத்தின் ருசுவைப் பட்டணத்தின் மூப்பரண்டையிலே பட்டணத்து வாசலிற் கொண்டுவரக்கடவர்கள்.

யசா அங்கே பெண்பிள்ளையின் தகப்பன் என் மகளை யிந்த மனிதனுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தேன். இதோ அவன் அவளைப் பகைத்து,

யஎ நான் உன் மகளிடத்திற் கன்னிமைத்தனத்தைக் கண்டுபிடிக்கவில்லையென்று சொல்லி, அவமானமான விசேஷங்களையவள் மேற் சாட்டுகிறான். இதோ என் மகளுடைய கன்னிமைத்தனத்தின் ருசு இங்கேயிருக்கிறதென்று சொன்னபிற்பாடு பட்டணத்து மூப்பருக்கு முன்பாக வஸ்திரத்தை விரித்துப் போடுவார்களாக.

யஅ அப்பொழுது அந்தப் பட்டணத்தின் மூப்பர் அந்த மனிதனைப் பிடித்து அவனைத் தண்டித்து,

யகூ அவன் இஸ்ரவேலில் ஒரு கன்னியாஸ்திரியை அவமானப்படுத்தினபடியினாலே அவனை நூறு வெள்ளிக்காசை அபராதமாக வாங்கிப் பெண்பிள்ளையின் தகப்பனுக்குக் கொடுக்கக்கடவர்கள். அவளோவெனில் அவனுக்குப் பெண்சாதியாயிருப்பாள். அவன் தன் நாட்களிலெல்லாம் அவளைத் தள்ளிவிடக்கூடாதிருக்கும்.

உய பெண்பிள்ளையினிடத்திற் கன்னிமைத்தனங் கண்டுபிடிக்கப்படவில்லையென்று விசேஷம் மெய்ப்பட்டதேயானால்,

உக பெண்பிள்ளையை யவள் தகப்பனுடைய வீட்டின் வாசலுக்கு முன்பாகக் கொண்டுபோய் அவள் இஸ்ரவேலில் மதிகெட்ட காரியத்தைச் செய்து தன் தகப்பன் வீட்டிலே வேசித்தனம் பண்ணினபடியினாலே யவளுடைய பட்டணத்தின் மனிதர் அவளைச் சாகும்படிக்குக் கல்லெறிவார்களாக. இப்படிப் பொல்லாப்பையுன் நடுவிலிராதபடிக்கு விலக்கக்கடவாய்.

உஉ புருஷனுக்கான பெண்சாதியோடே சயனிக்கிற ஒருவன் கண்டுபிடிக்கப்பட்டால், பெண்சாதியோடே சயனித்த மனிதனும் பெண்சாதியுமிருவருஞ் சாவக்கடவர்கள். இப்படிப் பொல்லாப்பை இஸ்ரவேலைவிட்டு விலக்கக்கடவாய்.

உங கன்னியஸ்திரியான ஒருபெண் ஒருவனுக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் ஒருவன் அவளை ஊரிலே கண்டுபிடித்து அவளோடே சயனித்தால்,

உச அப்பொழுது அந்தப் பெண் ஊரிலிருந்துங் கூப்பிடாதே போனபடியினாலும், அந்த மனிதன் தனக்கடுத்தவன் பெண்சாதியைக் கற்பழித்தபடியினாலும் இருவரையும் அந்தப் பட்டணத்தின் வாசலுக்குக் கொண்டுபோய் அவர்கள் சாகும்படிக்கு அவர்களைக் கல்லெறியக்கடவீர்கள். இப்படிப் பொல்லாப்பையுன் நடுவிலிராதபடிக்கு விலக்கக்கடவாய்.

உரு நியமிக்கப்பட்ட பெண்ணை யொருவன் வெளியிலே கண்டு அவளைப் பலவந்தமாய்ப் பிடித்து அவளோடே சயனித்தானேயானால் அவளோடே சயனித்த மனிதன் மாத்திரஞ் சாவக்கடவன்.

உசா அந்தப் பெண்ணுக்கோ ஒன்றுஞ் செய்யாயாக. பெண்ணின்மேற் சாவுக்கான குற்றமில்லை ஏனெனில் அது ஒருவன் தனக்கடுத்தவன்மேலெழும்பி அவன் சீவனை வாங்கினது போலேயிருக்கின்றது.

உஎ ஏனெனில் வெளியிலே அவளைக் கண்டுபிடித்தான். நியமிக்கப்பட்ட பெண் அப்பொழுது கூப்பிட்டும் அவளைக் காப்பாற்றுவாரில்லை.

உஅ நியமிக்கப்படாத கன்னியாஸ்திரியாகிய ஒருபெண்ணை யொருவன் கண்டு கைப்பிடித்து அவளோடே சயனித்து அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால்,

உகூ அவளோடே சயனித்த மனிதன் பெண்ணின் தகப்பனுக்கு ஐம்பது வெள்ளிக்காசைக் கொடுக்கக்கடவன். அவன் அவளைக் கற்பழித்தபடியினாலே யவள் அவனுக்குப் பெண்சாதியுமாயிருப்பாளாக. அவன் தன் நாட்களிலெல்லாம் அவளைத் தள்ளிவிடக்கூடாதிருக்கும்.

ஙய ஒருவருந் தன் தகப்பன் பெண்சாதியை விவாகம்பண்ணித் தன் தகப்பனுடைய மானத்தைத் திறக்கவேண்டாம்.

௨௩. அதிகாரம்.

கர்த்தருடைய சபையின் சுத்தத்தைப் [illegible] காரியமது.

விதையடிக்கப்பட்டவன் அல்லது குறியறுப்புண்டவன் கர்த்தருடைய சபைக்குட்படவேண்டாம்.

௨ வேசிப்பிள்ளை கர்த்தருடைய சபைக்குட்படவேண்டாம். அவனுக்குப் பத்தாந்தலைமுறையானவனும் கர்த்தருடைய சபைக்குட்படவேண்டாம்.

௩ அம்மோனியனும் மோவாபியனும் கர்த்தருடைய சபைக்குட்படவேண்டாம். பத்தாந்தலைமுறையானவர்களும் அவர்கள் கர்த்தருடைய சபைக்குட்படவேண்டாம்.

௪ நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டு வருகையில் அவர்கள் உங்களுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுக்க நேரிடாமற்போனதினிமித்தமும் உன்னைச் சபிக்க அவர்கள் மெசொப்பொத்தாமியாவின் ஊராகிய பேத்தோரிலிருந்த பேயோரின் குமாரன் பிலேயாமையுனக்கு விரோதமாகக் கூலிபேசி அழைப்பித்ததினிமித்தமுந்தானே.

௫ உன் பராபரனாகிய கர்த்தரோவென்றும் பிலேயாமுக்குச் செவிகொடுக்கச் சித்தமாயிராமல உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைச் சிநேகித்தபடியினாலே உன் பராபரனாகிய கர்த்தர் சாபத்தையுனக்கு ஆசீர்வாதமாக மாற்றினனென்றும்.

௬ நீ உன் நாட்களிலெல்லாம் என்றைக்கும் அவர்களுக்குச் சமாதானத்தையும் நன்மையையும் பாராமலிருப்பாயாக.

௭ ஏதோமியனை யருவருக்காயாக. ஏனெனில் அவன் உன் சகோதரன். எகிப்தியனை யருவருக்காயாக. ஏனெனில் அவன் தேசத்திலே பரதேசியாயிருந்தாய்.

௮ மூன்றாந்தலைமுறையில் அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகள் கர்த்தருடைய சபைக்குட்படலாம்.

மரியாதைக்கான கற்பனைகள்.

௯ உன் சத்துருக்களுக்கு விரோதமாகத் தண்டெடுத்துப் புறப்படுகிற பொழுது சகல பொல்லாத காரியத்திற்கும் எச்சரிக்கையாயிருப்பாயாக.

௰ இராக்காலத்திலே சம்பவித்த தீட்டினாலே சுத்தமற்றிருக்கிற ஒருவன் உன்னிலிருந்தால் அவன் பாளயத்திற்கு வெளியேபோய்ப் பாளயத்திற்குள் வாராதிருக்கக்கடவன்.

௰௧ அந்திநேரத்திலே தண்ணீரிலே குளித்துப்பொழுதுபோகப் பாளயத்திற்குள் வரக்கடவன்.

௰௨ நீ வெளிக்குப்போயிருக்கத்தக்க இடம் பாளயத்திற்குப் புறம்பே யுனக்கிருக்கப்

௰௩ உன் ஆயுதமல்லாமல் ஒரு கூச்சம் உன்னிடத்திலிருக்கக்கடவது. நீ மலசலாதிக்குப்போகிறபொழுது அதினாலே தோண்டி மலசலாதிக்குத் திருப்பி உன்னிலிருந்து போனதை மூடிப்போடக்கடவாய்.

௰௪ ஏனெனில் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைத் தப்புவிக்கவும் உன் சத்துருக்களை யுனக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கவும் உன் பாளயத்தின் நடுவிலே உலாவிக்கொண்டிருக்கிறார். ஆகையால் அவர் உன்னில் [illegible] காரியத்தைக் கண்டு உன்னைவிட்டுப் போகாதபடிக்கு உன் பாளயம் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

௰௫ தன் எசமானைவிட்டுத் தப்பித்துக்கொள்ளும்படிக்கு உன்னண்டை வந்த வேலைக்காரனையவன் எசமானின் கையில் ஒப்புக்கொடாயாக.

௰௬ அவன் உன் நடுவேயிருக்கிற உன் வாசல்களிலொன்றிலே தான் தெரிந்துகொண்டு தனக்குச் சம்மதியான இடத்தில் உன்னுடனேயிருப்பானாக. அவனையொடுக்காயாக.

௰௭ இஸ்ரவேலின் குமாரத்திகளில் வேசியிருக்கவேண்டாம். இஸ்ரவேலின் குமாரரில் வேசிக்கள்ளனுமிருக்கவேண்டாம்.

௰௮ வேசிப்பணத்தையும் நாயின் விலைக்கிரயத்தையும் எந்தப் பொருத்தனையினாலாகிலும் உன் பராபரனாகிய கர்த்தரின் வீட்டிலே கொண்டுவாராயாக. ஏனெனில் அவைகளிரண்டும் உன் பராபரனாகிய கர்த்தருக்கருவருப்பானது.

௰௯ கடனுக்குக்கொடுக்கிற பணத்திற்கும் ஆகாரத்திற்கும் கடனுக்குக் கொடுக்கிற வேறெந்தப் பொருளுக்கும் உன் சகோதரன் கையில் வட்டிவாங்காயாக.

௨௰ அந்நியன் கையில் நீ வட்டிவாங்கலாம். ஆனால் நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை நீ கையிட்ட வேலையிலெல்லாம் ஆசீர்வதிக்கும்படிக்கு உன் சகோதரன் கையிலே வட்டிவாங்காதிருப்பாயாக.

௨௧ நீ யுன் பராபரனாகிய கர்த்தருக்குப் பொருத்தனையைப் பண்ணியிருந்தால் அதைச் செலுத்தத் தாமதியாயாக. ஏனெனில் உன் பராபரனாகிய கர்த்தர் அதை யுன் கையிலே தேடுவார். அது வுன்மேலே பாவமாயிருக்கும்.

௨௨ நீ பொருத்தனையைப் பண்ணாதிருந்தால் உன்மேலே பாவமில்லை.

௨௩ உன் உதடுகளிலிருந்து புறப்பட்டதை நீ கைக்கொண்டு உன் வாயினால் நீ யுன் பராபரனாகிய கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணிச் சொன்ன மனப்பூர்வமான பலியைச் செலுத்தித் தீர்ப்பாயாக.

௨௪ நீ யுனக்கடுத்தவனின் திராட்சத் தோட்டத்திற்குட் பிரவேசித்தால் உனக்கா

சையாயிருக்கிறபடியே திராட்சப்பழங்களைத் திர்ப்தியாகப் புசிக்கலாம். ஆனாலும் நீ ஒன்றும் உன் கூடைக்குள்ளே வைத்து எடுத்துக்கொண்டுபோகவேண்டாம்.

உரு நீ உன் அயலானின் விளைச்சலுக்குட் பிரவேசித்தால் உன் கையினாலே கதிர்களைக் கொள்ளலாம். ஆனால் அரிவாளை யவன் விளைச்சலில் இடாயாக.

உச. அதிகாரம்.

சமுசாரமார்க்கத்துக்கடுத்த நியாயங்கள்.

ஒருவன் ஒரு பெண்ணைக்கொண்டு அவளை விவாகம்பண்ணின பின்பு அவளில் இலச்சையான காரியத்தைக் கண்டதினால் அவளுக்கவன் கண்களில் தயவு கிடையாமற்போனால் அவன் அவளுக்குத் தள்ளுதல் சீட்டையெழுதி அவள் கையிலே கொடுத்து அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விட்டால்,

௨ அவள் அவன் வீட்டிலிருந்து புறப்பட்டுப்போய் வேறொருவனுக்குப் பெண்சாதியானால்,

௩ அந்த இரண்டாம் புருஷனும் அவளைப் பகைத்து அவளுக்குத் தள்ளுதல் சீட்டையெழுதி அவள் கையிலே கொடுத்து அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்டால் அல்லவென்றால் அவளை விவாகம்பண்ணின அந்த இரண்டாம் புருஷன் செத்துப் போனால்,

௪ அப்பொழுது அவளைத் தள்ளிவிட்ட அவளுடைய முந்தின புருஷன் அவள் தீட்டானபடியினாலே அவளைத் திரும்ப விவாகம்பண்ணக் கூடாது. ஏனென்றால் அது கர்த்தருக்கு முன்பாக அருவருப்பானது. உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற தேசத்தின்மேல் அதைப் பாவமாய்ப் பண்ணாயாக.

௫ ஒருவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணிக்கொண்டு புதியவனாயிருந்தால் அவன் யுத்தத்துக்குப் புறப்படவேண்டாம். அவன்மேல் ஒன்றும் சுமத்தப்படவும் வேண்டாம். அவன் ஒரு வருஷமட்டுந் தன் வீட்டிலே தனியனாயிருந்து தான் விவாகம்பண்ணின பெண்சாதியைச் சந்தோஷிப்பிப்பானாக.

தருமத்துக்கும் முதலானவைகளுக்கடுத்த நியாயங்கள்.

௬ ஏந்திரத்தையாகிலும் அதின் மேற்கல்லையாகிலும் ஒருவரும் அடைக்காக வாங்கவேண்டாம். ஏனென்றால் சீவனையவன் அடைக்கு வாங்குவானே.

௭ ஒருவன் தன் சகோதரராகிய இஸ்ரவேல் புத்திரரிலுள்ள ஒருத்தனைத் திருடி அதனாலே ஆதாயந்தேடி அவனை விற்றுப்போட்டால் அந்தத் திருடன் சாவ வேண்டும். இப்படிப் பொல்லாப்பை உன் நடுவிலிருந்து விலக்கக்கடவாய்.

௮ குஷ்டவாதைக்காகச் சாக்கிரதையாயிருக்கவும் லேவியரான ஆசாரியர் உங்களுக்குப் போதிக்கும்படியெல்லாஞ் செய்யவுங் கவனமாயிருப்பாயாக. நான் அவர்களுக்குக் கற்பித்தபடியே செய்யக் கவனமாயிருப்பீர்களாக.

௯ நீங்கள் எஜிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியிலே உன் பராபரனாகிய கர்த்தர் மிரியாமுக்குச் செய்ததை நினைத்துக்கொள்.

௰ நீ உன் அயலானுக்கு ஏதாகிலும் கடனாகக் கொடுத்தால் நீ அவனிடத்தில் அடைக்கு வாங்க நீ அவன் வீட்டிற்குட் பிரவேசியாமல்,

௧௧ வெளியே நிற்பாயாக. நீ கடன் கொடுத்தவன் அடைக்கு வெளியே உன்னண்டை கொண்டுவருவானாக.

௧௨ அவன் தரித்திரனானால் நீயவன் அடைக்கு வைத்துக்கொண்டு படுத்துக்கொள்ளப் போகாமல்,

௧௩ அவன் தன் வஸ்திரத்தைப் போட்டுப் படுத்துக்கொண்டு உன்னை ஆசீர்வதிக்கும்படிக்குப் பொழுதுபோக அடைக்கு அவனுக்குத் திரும்பக் கொடுக்கவே கொடுப்பாயாக. அது உன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக உனக்கு நீதியாயிருக்கும்.

௧௪ உன் சகோதரரிலும் அல்லது உன் தேசத்திலுள்ள வாசல்களிலிருக்கிற பரதேசிகளிலும் ஏழையும் எளியவனுமான கூலிக்காரனை ஒடுக்காயாக.

௧௫ அவன் வேலைசெய்த நாளிலே அவன் கூலியைக் கொடுப்பாயாக. சூரியன் அதின்மேல் அஸ்தமிக்க வேண்டாம். ஏனெனில் அவன் ஏழையும் அதின்மேல் மனவாஞ்சையாயிருக்கிறான். மற்றப்படி அவன் உன்மேல் கர்த்தரை நோக்கக் கூப்பிடுவான். அப்பொழுது உனக்குப் பாவமாயிருக்கும்.

௧௬ பிள்ளைகளுக்காகப் பிதாக்களும் பிதாக்களுக்காகப் பிள்ளைகளுங் கொலைசெய்யப்படவேண்டாம். அவனவன் தன்தன் பாவத்தினிமித்தங் கொலைசெய்யப்படவேண்டும்.

௧௭ நீ பரதேசிக்குந் திக்கற்றவனுக்குமிருக்கிற நியாயத்தைப் புரட்டாமலுங் கைம்பெண்சாதியின் வஸ்திரத்தை அடைக்கு வாங்காமலுமிருந்து,

௧௮ நீ எஜிப்திலே அடிமையாயிருந்ததையும் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை அங்கேயிருந்து மீட்டுக்கொண்டுவந்ததையும் நினைப்பாயாக. ஆகையால் நான் உனக்கிப்படிச் செய்யக் கற்பிக்கிறேன்.

௧௯ நீ உன் வெள்ளாமையை அறுத்து உன் வயலிலே ஒரு கட்டை மறந்ததைத் திரும்ப வந்தாயானால் அதையெடுக்கத் திரும்பிப் போகாயாக. உன் பராபரனாகிய கர்த்

உனைக்கொய்யும்போது உன்னையார் நீ திரும்ப அதை அபரிக்கவேண்டாம்; அது பரதேசிக்கும் திக்கற்றவனுக்கும் விதவைக்கும் இருக்கட்டும்.

௨௰ நீ உன் ஒலிவமரத்தைக் குலுக்கும்போது கிளைகளிலிருக்கிறதை மறுபடியும் திருப்பிப்போடாதே; அது பரதேசிக்கும் திக்கற்றவனுக்கும் விதவைக்கும் இருக்கட்டும்.

௨௧ நீ உன் திராட்சத்தோட்டத்தின் பழங்களை அறுத்த பின் திரும்ப அதைப் பறிக்கவேண்டாம்; அது பரதேசிக்கும் திக்கற்றவனுக்கும் விதவைக்கும் இருக்கட்டும்.

௨௨ நீ எகிப்து தேசத்திலே அடிமையாயிருந்ததை நினைப்பாயாக; ஆகையால் இப்படிச் செய்யும்படி உனக்குக் கற்பிக்கிறேன்.

௨௫. அதிகாரம்.

குற்றஞ்சாட்டப்பட்டவனைத் தண்டிக்கும் கட்டளை.

மனுஷருக்குள்ளே வழக்குண்டாயிருந்து அவர்கள் நியாயஸ்தலத்தில் வந்தால் நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்து நீதிமானை நீதிமானென்றும் துஷ்டனைக் குற்றவாளியென்றும் தீர்க்கக்கடவர்கள்.

௨ குற்றவாளி அடிகளுக்குப் பாத்திரவானால் நியாயாதிபதி அவனைக் கீழே படுக்கச்செய்து அவன் குற்றத்திற்குத் தக்கதாய் அவனைத் தன் முன்பாக அடிப்பிப்பானாக.

௩ அவனை நாற்பது அடி அடிப்பிக்கலாம்; அதற்கு மிஞ்சக்கூடாது; மிஞ்சி அவனை அதிகமான அடிகளால் அடித்தால், உன் சகோதரன் உன் கண்களுக்கு முன்பாக இலேசாகாதபடிக்கு அவனை அதிகமாய் அடிக்காமலிருப்பாயாக.

௪ போரடிக்கிறபோது மாட்டின் வாயைக் கட்டாயாக.

சந்தானமில்லாமல் மரித்த சகோதரனுடைய மனைவியை விவாகம்பண்ணுங் கட்டளை.

௫ சகோதரர் கூடிக் குடியிருக்கும்போது அவர்களில் ஒருவன் புத்திரசந்தானமில்லாமல் மரித்தால், மரித்தவனின் பெண்சாதி புறத்திலே அந்நியனுக்கு வாழ்க்கைப்படலாகாது; அவளுடைய புருஷனின் சகோதரன் அவளிடத்தில் சேர்ந்து அவளைத் தனக்குப் பெண்சாதியாக்கி, சகோதரனுக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்வானாக.

௬ மரித்தவனுடைய சகோதரனின் பேர் இஸ்ரவேலில் அற்றுப்போகாதபடிக்கு, அவள் பெறும் தலைச்சன் குமாரன் மரித்தவனுடைய பேருக்குச் சுதந்தரவாளியாவானாக.

௭ தன் சகோதரனுடைய பெண்சாதியை விவாகம்பண்ண அவனுக்குச் சம்மதமில்லாதிருந்தால், அவள் பட்டணத்து வாசலில் மூப்பரிடத்தில் போய்: என் புருஷனின் சகோதரன் தன் சகோதரனுடைய பேரை இஸ்ரவேலிலே நிலைக்கப்பண்ண மாட்டேனென்கிறான்; என்னை விவாகம்பண்ண அவனுக்குச் சம்மதமில்லையென்பாளாக.

௮ அப்பொழுது அவன் பட்டணத்து மூப்பர் அவனை அழைப்பித்து அவனோடே பேசியும், அவன் அவளை விவாகம்பண்ண எனக்குச் சம்மதமில்லையென்று நிலையாய் நின்று சொன்னால்,

௯ அவனுடைய சகோதரனின் பெண்சாதி மூப்பரின் கண்களுக்கு முன்பாக அவனண்டையிலே சேர்ந்து, அவன் காலிலிருக்கிற அவனுடைய பாதரட்சையைக் கழற்றிப்போட்டு, அவன் முகத்திலே துப்பி, தன் சகோதரனின் வீட்டைக் கட்டாதவனுக்கு இப்படிச் செய்யவேண்டுமென்று பிரதியுத்தரமாகச் சொல்லுவாளாக.

௰ இஸ்ரவேலில் அப்படிக்கொத்தவனின் பேர் பாதரட்சை கழற்றிப்போடப்பட்டவன் வீடென்னப்படுவதாக.

நாணங்கெட்ட செய்கைக்குக் குறித்த ஆக்கினை.

௰௧ புருஷர் ஒருவரோடொருவர் சண்டைபண்ணிக்கொண்டிருக்கையில் ஒருவனுடைய பெண்சாதி தன் புருஷனை அடிக்கிறவனுடைய கைக்குத் தப்புவிக்க கிட்டச் சேர்ந்துவந்து தன் கையை நீட்டி அவனுடைய மானஸ்தலத்தைப் பிடித்தாளானால்,

௰௨ அவள் கையைத் தறிக்கக்கடவாய்; உன் கண் அவளுக்கு இரங்காதிருப்பதாக.

சுமுத்திரையான நிறைகளும் அளவுகளுமாகச் சொன்னபுத்தி.

௰௩ உன் பையிலே பெரிதும் சிறிதுமான வெவ்வேறு நிறைகல்லுகள் இராதிருப்பதாக.

௰௪ உன் வீட்டில் பெரிதும் சிறிதுமான வெவ்வேறு மரக்கால்களும் இராதிருப்பதாக.

௰௫ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்தில் உன் நாட்கள் நீடித்திருக்கும்படிக்குக் குறையற்ற சுமுத்திரையான நிறைகல்லுங் குறையற்ற சுமுத்திரையான மரக்காலும் உனக்கு இருக்கக்கடவது.

௰௬ ஏனெனில் இப்படிக்கொத்த அநீதமான அநியாயத்தைச் செய்கிறவனெவனும் உன் பராபரனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவன்.

அமலேக்கின் பெயரை அழியப்பண்ணக் கற்பித்தது.

௰எ நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டுவருகிற வழியிலே அமலேக் உன்பராபரனுக்குப் பயப்படாமல் உனக்கெதிராக வந்து,

௰அ நீ இளைத்து விடாய்த்திருக்கையில் உன் பின்தண்டில உனக்குப்பிறகாலே வருகிற பலவீனரையெல்லாம் வெட்டினானென்று அவன் உனக்குச்செய்த செய்கையை நினை.

௰௯ உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரித்துக்கொள்ளக் கொடுக்கிற தேசத்திலுண்டாயிருக்கிற சத்துருக்களையெல்லாம் உன்பராபரனாகிய கர்த்தர் விலக்கி உனக்கு இளைப்பாறப்பண்ணினபொழுது நீ அமலேக்கினுடைய பெயரை வானத்தின் கீழிராதபடிக்கு அழியப்பண்ணக்கடவாய். இதை மறவாயாக.

உசு. அதிகாரம்.

முதற்பலனுக்கும் பத்திலொன்றைச் செலுத்துதலுக்கும் அடுத்த கட்டளைகள்.

௧ உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற தேசத்திலே நீ வந்து அதைச் சுதந்தரித்துக்கொண்டு அதிலே குடியிருக்கிறபொழுது,

௨ உன்பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் தேசத்திலே நீ பயிரிட்ட நிலத்தின் கனிகளிலெல்லாம் நீ முதற்பலனையெடுத்து ஒரு கூடையிலே வைத்து உன் பராபரனாகிய கர்த்தர் தமது நாமத்தைத் தங்கப்பண்ணத் தெரிந்துகொண்டிருக்கும் ஸ்தானத்திற்குப் போய்,

௩ அந்நாட்களிலிருக்கும் ஆசாரியனிடத்திற்குப் போய் அவனுடனே, எங்களுக்குக் கொடுக்கக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திலே வந்தேனென்பதை இன்று உம்முடைய பராபரனாகிய கர்த்தருக்கு அறிக்கையிடுகிறேனென்பாயாக.

௪ அப்பொழுது ஆசாரியன் அந்தக் கூடையை உன் கையில் வாங்கி அதை உன் பராபரனாகிய கர்த்தரின் பலிபீடத்திற்கு முன்பாக வைக்கக்கடவன்.

௫ அப்பொழுது நீ உன்பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக வசனித்துச் சொல்வதாவது: என் தகப்பன் அழிவுக்கு நேரான சூரிய மனிதனாயிருந்தான். அவன் எகிப்திற்குப் போய் அங்கே கொஞ்சம் ஜனங்களோடே பரதேசியாயிருந்து அங்கே ஜனம் பெருத்த பலத்த திரட்சியான ஜாதியானான்.

௬ ஆனால் எகிப்தியர் எங்களை உபத்திரவம் பண்ணி எங்களைச் சிறுமைப்படுத்தி எங்கள்மேல் கடினவேலையைச் சுமத்தினபொழுது,

௭ எங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டோம். அப்பொழுது கர்த்தர் எங்கள் சத்தத்தைக் கேட்டு எங்கள் சிறுமையையும் எங்கள் வருத்தத்தையும் எங்களொடுக்குதலையும் பார்த்து,

௮ எங்களைப் பலத்த கையினாலும் நீட்டின புயத்தினாலும் மகா பயங்கரத்தினாலும் அடையாளங்கள் அற்புதங்களினாலும் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி,

௯ எங்களை இவ்விடத்திற்கழைத்துக்கொண்டுவந்து பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிற இந்தத் தேசத்தை எங்களுக்குக் கொடுத்தார்.

௰ இப்பொழுதும் இதோ, கர்த்தாவே தேவரீர் எனக்குக் கொடுத்த நிலத்தினுடைய கனிகளின் முதற்பலனைக் கொண்டுவந்தேனென்று சொல்லி அதை உன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக வைத்து உன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகப் பணிந்து,

௰௧ நீயும் லேவியனும் உன் நடுவிலிருக்கிற பரதேசியுமாய் உன் பராபரனாகிய கர்த்தர் உனக்கும் உன் வீட்டிற்குங் கட்டளையிட்ட எல்லா நன்மையினாலுஞ் சந்தோஷமாயிருப்பீர்களாக.

௰௨ பத்திலொன்றைச் செலுத்தும் வருஷமாகிய மூன்றாம் வருஷத்திலே நீ உன் வருத்தத்திலெல்லாம் பத்திலொன்றையெடுத்து லேவியனும் பரதேசியும் திக்கற்றவனும் கைம்பெண்சாதியும் உன் வாசல்களிலே போசித்துத் திர்ப்தியாகும்படிக்கு நீ அவர்களுக்குக் கொடுத்துத் தீர்ந்தபிறபாடு,

௰௩ நீ உன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகச் சொல்வதாவது: தேவரீர் எனக்குக் கொடுத்த எல்லாக் கற்பனைகளின்படியே நான் பரிசுத்தமானதை என் வீட்டிலிருந்து தெரிந்து லேவியனுக்கும் பரதேசிக்கும் திக்கற்றவனுக்கும் கைம்பெண்சாதிக்குங் கொடுத்தேன். உம்முடைய கற்பனைகளில் யாதொன்றை நான் மீறினதுமில்லை மறந்ததுமில்லை.

௰௪ நான் துக்கப்பட்டு அதிலே போசித்ததுமில்லை. தீட்டான காரியத்திற்கு அதிலொன்றும் எடுத்ததுமில்லை இழவுகாரியத்திற்கு அதிலொன்றுங் கொடுத்ததுமில்லை. நான் என் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து தேவரீர் எனக்குக் கற்பித்தபடியெல்லாஞ் செய்தேன்.

௰௫ நீர் உம்முடைய பரிசுத்த வாசஸ்தலமாகிய பரமண்டலங்களிலிருந்து நோக்கிப்பார்த்து உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலையும் நீர் எங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்டபடியே எங்களுக்குக் கொடுத்த பாலுந் தேனும் ஓடுகிற தேசத்தையும் ஆசீர்வதியுமென்பாயாக.

பராபரனுக்கும் பராபரனுடைய ஜனத்திற்கும் பண்ணின உடம்படிக்கை.

௧௬ இந்தக் கட்டளைகளின்படியேயும் நீயாயங்களின்படியேயுஞ் செய்ய இன்றுஉன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கற்பிக்கிறார்; ஆதலால் அவைகளின்படியே உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும் அநுசரிக்கக் கவனமாயிருப்பாயாக.

௧௭ கர்த்தரே உனக்குப் பராபரனாயிருப்பாரென்றும் அவர் வழிகளில் நடந்து அவருடைய கட்டளைகளையும் கற்பனைகளையும் நீயாயங்களையுங் கைக்கொண்டு அவர் சத்தத்துக்குச் செவிகொடுப்பேனென்று நீயின்று அவருக்கு வாக்குக்கொடுத்தாய்.

௧௮ கர்த்தர் உனக்குச் சொல்லியிருக்கிறபடி நீ அவருக்குச் சொந்தச் சனமாயிருப்பாயென்றும் நீ அவருடைய கற்பனைகளையெல்லாங் கைக்கொள்வாயென்றும்,

௧௯ தாமுண்டுபண்ணின எல்லாச் சாதிகளிலேயும் உன்னை உன்னதமாகவும் புகழ்ச்சியாகவும் மகிமையாகவும் வைப்பேனென்றும் தாஞ்சொன்னபடி நீயுன் பராபரனுக்குப் பரிசுத்த சனமாயிருப்பாயென்றும் அவர் இன்றைக்கு வாக்குத்தத்தம்பண்ணினாரென்றான்.

உஎ. அதிகாரம்.

பெரிய கல்லுகளை நாட்டி அவைகளில் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை யெழுதக் கற்பித்தது.

பின்பு மோசே இஸ்ரவேலின் மூப்பர் கூடவிருக்கச் சனத்திற்குக் கற்பித்ததாவது: நான் இன்றைக்கு உங்களுக்குக் கற்பிக்கிற கற்பனைகளையெல்லாங் கைக்கொள்ளுங்கள்.

௨ உன் கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்துக்குப் போகும்படி நீங்கள் யோர்தானைக் கடந்த நாளிலே நீ பெரிய கல்லுகளை நாட்டி அவைகளைச் சாந்துபூசி,

௩ உன் பிதாக்களின் பராபரனாகியோர் கர்த்தர் சொன்னபடி உனக்குக் கொடுக்கப் பாலுந் தேனும் ஓடுகிற தேசத்திற்குள் பிரவேசிக்க நீ கடந்துபோனபின் அந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளையெல்லாம் அவைகளிலெழுதக்கடவாய்.

௪ நான் இன்றைக்கு உங்களுக்குக் கற்பித்தபடி நீங்கள் இந்தக் கல்லுகளை யோர்தானைக் கடந்தபொழுது ஏபால் பர்வதத்திலே நாட்டி அவைகளைச் சாந்துபூசி,

௫ இரும்புபடாத கல்லுகளாலே அங்கே உன் பராபரனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டக்கடவாய்.

௬ நீ உன் பராபரனாகிய கர்த்தரின் பலிபீடத்தை முழுக்கல்லுகளாலே கட்டி அதின்மேல் உன் பராபரனாகிய கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலிகளைப் பலியிட்டு,

௭ சமாதான பலிகளையும் பலியிட்டு அங்கே யுன் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகப் புசித்துச் சந்தோஷமாயிருந்து,

௮ அந்தக் கல்லுகளிலே இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளையெல்லாந் திட்டமாயெழுதக்கடவாயென்றான்.

௯ பின்னையும் மோசே லேவியராகிய ஆசாரியர்கள் கூடவிருக்க இஸ்ரவேலரெல்லாரோடும் பேசி, இஸ்ரவேலே! கவனித்துக் கேள். இந்நாளிலே யுன் பராபரனாகிய கர்த்தருக்குச் சனமானாய்.

௰ ஆகையால் நீயுன் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்திற்குச் செவிகொடுத்து நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய கற்பனைகளின்படியும் அவருடைய கட்டளைகளின்படியுஞ் செய்வாயாகவென்றான்.

கீழ்ப்படியாதவர்களுக்குக் கூறப்படுஞ் சாபம்.

௧௧ அந்நாளிலே மோசே சனத்திற்குக் கற்பித்ததாவது.

௧௨ நீங்கள் யோர்தானைக் கடந்தபொழுது சனத்தை யாசீர்வதிக்கக் கெரிசீம் பர்வதத்திலே நிற்பவர்கள் சிமெயோன் லேவி யூதா இசக்கார் யோசேப்பு பென்யமீன் என்கிற கோத்திரங்கள்.

௧௩ சாபத்தைக் கூற ஏபால் பர்வதத்திலே நிற்பவர்கள் ரூபன் காத் ஆசேர் செபுலோன் தாண் நப்தலி என்கிற கோத்திரங்கள்.

௧௪ அப்பொழுது லேவியர் இஸ்ரவேல் மனிதரையெல்லாம் பார்த்து உரத்தசத்தமிட்டுச் சொல்லுவதாவது.

௧௫ தொழிலாளிகளுடைய கையின் செய்கையால் வெட்டப்பட்டதாகிலும் வார்ப்பிக்கப்பட்டதாகிலும் கர்த்தருக்கு அருவருப்பான யாதொரு சுரூபத்தையுண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் பிரதியுத்தாரமாக ஆமென்னபதாக.

௧௬ தன் தகப்பனையாகிலுந் தன் தாயையாகிலும் தூஷணிக்கிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்னபதாக.

௧௭ தனக்கடுத்தவனின் எல்லையைப் போக்கடிக்கிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்னபதாக.

௧௮ குருடனை வழிதப்பவிடுகிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்னபதாக.

௧௯ பரதேசி திக்கற்றவன் கைம்பெண்சாதி என்பவர்களின் நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்னபதாக.

உ௰ தன் தகப்பனின் பெண்சாதியோடே சயனிக்கிறவன் தன் தகப்பனுடைய மறைவிடத்தைத் திறந்தபடியினாலே சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்பதாக.

உ௧ யாதொரு மிருகத்தோடே புணர்ச்சியுள்ளவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்பதாக.

உஉ தன் தகப்பனுக்குமாவது தன் தாய்க்குமாவது குமாரத்தியாகிய தன் சகோதரியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்பதாக.

உ௩ தன் மாமியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்பதாக.

உ௪ ஒளிப்பிடத்திலே தனக்கடுத்தவனைக் கொலைசெய்கிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்பதாக.

உ௫ குற்றமில்லாத ஆத்துமாவைக் கொலைபண்ணும்படிக்குப் பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்பதாக.

உ௬ இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை அவைகளின்படி செய்யும்படிக்குக் கைக்கொள்ளாதவன் சபிக்கப்பட்டவனென்பார்களாக. சனமெல்லாம் ஆமென்பதாக.

உஅ. அதிகாரம்.

கீழ்ப்படிகிறவர்கள் மேல் வரும் ஆசீர்வாதங்களும் கீழ்ப்படியாதவர்கள் மேல் வருஞ் சாபமும்.

௧ நான் இன்றைக்குக் கற்பிக்கிற உன் பராபரனாகிய கர்த்தருடைய கற்பனைகளின்படியெல்லாஞ் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுக்கவேண்டுமென்றால் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைப் பூமியின் சாதிகள் மேலெல்லாம் உன்னதமாக்கி வைப்பார்.

௨ நீ உன் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும்பொழுது இப்பொழுது சொல்லப்படும் ஆசீர்வாதங்களெல்லாம் உன்மேல் வந்து உன்னைப் பிடிக்கும்.

௩ நீ பட்டணத்திலேயும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். நீ வெளியிலேயும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

௪ உன் கர்ப்பத்தின் கனியும் உன் நிலத்தின் கனியும் உன் மிருகஜீவன்களின் பலனும் உன் மாடுகளின் பெருக்கமும் உன் ஆடுகளின் மந்தைகளும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

௫ உன் கூடையும் மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும்.

௬ நீ உள்ளே வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய். நீ புறப்பட்டுப்போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

௭ உனக்கு விரோதமாய் எழும்பும் உன் சத்துருக்களைக் கர்த்தர் உனக்கு முன்பாக முறியடிக்கப்படுகிறதற்குக் கொடுப்பார். ஒரு வழியிலே உனக்கெதிராகப் புறப்பட்டு வருவார்கள். ஏழு வழிகளில் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்.

௮ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்குந் தேசத்திலே உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கு அவர் உன் களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லாவேலையிலும் ஆசீர்வாதத்தை உன்னோடிருக்கும்படி கட்டளையிடுவார்.

௯ நீ உன் பராபரனாகிய கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் வழிகளில் நடக்கும்பொழுது கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே உன்னைத் தமக்குப் பரிசுத்த சனமாக நிறுத்துவார்.

௰ அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டதென்று பூமியின் சனங்களெல்லாங் கண்டு உனக்குப் பயப்படும்.

௰௧ உனக்குக் கொடுப்பேனென்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திலே கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும் உன் மிருகஜீவன்களின் பலனிலும் உன் நிலத்தின் கனியிலும் உனக்கு நன்மையாகப் பரிபூரணங் கட்டளையிடுவார்.

௰௨ ஏற்றகாலத்தில் உன் தேசத்துக்கு மழையைக் கொடுக்கவும் உன் கையின் வேலையையெல்லாம் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷமாகிய வானத்தைத் திறப்பார். அநேக சாதிகளுக்குக் கடன் கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய்.

௰௩ நான் இன்று உனக்குக் கற்பிக்கிற வார்த்தைகளையெல்லாம் நீ விட்டு அந்நிய தேவர்களைச் சேவிக்கப் பின்பற்றும்படிக்கு வலது இடதுபுறமாகத் திரும்புகிறதினாலே விட்டு விலகாமல்,

௰௪ நான் இன்று உனக்குக் கற்பிக்கிற உன் பராபரனாகிய கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொண்டும் அவைகளின்படி செய்யவும் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்தால் கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார். நீ கீழாகாமல் மேற்கொண்டிருப்பாய்.

௰௫ நான் இன்று உனக்குக் கற்பிக்கிற உன் பராபரனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியேயும் கட்டளைகளின்படியேயும் செய்யக் கவனமாயிருக்கிறதற்கு அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாதேபோனாயானால் இப்பொழுது சொல்லப்படுஞ் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து உன்னைப் பிடிக்கும்.

௰௬ நீ பட்டணத்திலே சபிக்கப்பட்டிருப்பாய். நீ வெளியிலேயுஞ் சபிக்கப்பட்டிருப்பாய்.

[illegible] உனக்குடைய [illegible] உன [illegible] பட்டிருக்கும்.

[illegible]

[illegible] யாதிருப்பாய்.

[illegible]

[illegible]

௪௩ உன் நடுவிலிருக்கிற பரதேசி உன் மேலே மிகவும் பெருகுவான். நீ தாழ்ந்து மிகவும் கீழாவாய்.

௪௪ நீ அவனுக்குக் கடன் கொடாமல் அவன் உனக்குக் கடன் கொடுப்பான். அவன் தலையாயிருப்பான். நீ வாலாயிருப்பாய்.

௪௫ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கு நீ அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாதபடியினாலே இந்தச் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து நீ அழியுமட்டும் உன்னைத் தொடர்ந்து உன்னைப் பிடிக்கும்,

௪௬ உன்னிலும் உன் வித்திலும் என்றைக்கும் அடையாளமாகவும் அற்புதமாகவும் இருக்கும்.

௪௭ பரிபூரணமெல்லாம் உண்டாயிருக்கையில் உன் பராபரனாகிய கர்த்தரை நீ மகிழ்ச்சியோடும் நன்மனதோடும் சேவிக்காமற்போனதினிமித்தமாக,

௪௮ கர்த்தர் உனக்கு விரோதமாய் வரப்பண்ணும் உன் சத்துருக்களைப் பட்டினியாயும் தாகத்தோடும் அம்மணத்தோடும் சகல குறைவோடும் சேவிப்பாய். அவன் உன்னை அழித்துத் தீருமட்டும் இருப்புநுகத்தடியை உன் கழுத்தின்மேல் போடுவான்.

இஸ்ரவேல்புத்திரர்களுக்குள்ளே சிறைபிடிக்கப்படுவது.

௫௰ கிழவனுடைய முகம் பாராமலும் வாலிபனுக்கு இரங்காமலுமிருக்கும் கொடிய முகமும்,

௪௯ நீயறியாத பாஷையுமுள்ள சாதியைக் கர்த்தர் உன்மேல் பூமியின் கடையாந்தத்திலிருந்து கழுகு பறக்கும் வேகமாய் வரப்பண்ணுவார்.

௫௧ நீ அழியுமட்டும் அது உன் மிருகஜீவன்களின் கனியையும் உன் நிலத்தின் கனியையும் தின்னும். அது உன்னை அழித்துத் தீருமட்டும் உன்னுடைய தானியத்திலாகிலும் திராட்சரசத்திலாகிலும் எண்ணெயிலாகிலும் உன் மாடுகளின் ஈற்றிலாகிலும் உன் ஆடுகளின் மந்தைகளிலாகிலும் உனக்கொன்றும் மீதியாக வைக்காது.

௫௨ உன் தேசமெங்கும் நீ நம்பியிருக்கும் உயர்ந்ததும் அரணிப்புமான உன் அலங்கங்கள் விழுமட்டும் அது உன் வாசல்களிலெல்லாம் உன்னை இறுகப்பிடிக்கும். உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன்னுடைய தேசமெங்கு முள்ள உன்னுடைய எல்லா வாசல்களிலும் அது உன்னை இறுகவே பிடிக்கும்.

௫௩ உன் சத்துரு உன்னை நெருக்கப்படுத்தும் முற்றிக்கையிலும் இடுக்கணிலும் நீ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குக் கொடுத்த உன் கர்ப்பக்கனியான உன் ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளின் மாம்சத்தைத் தின்னுவாய்.

௫௪ உன் சத்துரு உன் வாசல்களிலெல்லாம் உன்னை இறுகப்பிடிக்கும் முற்றிக்கையிலும் இடுக்கணிலும் உங்களில் செருக்கும் மகா சுகசெல்வமுமாயிருக்கிறவனும் மீந்திருக்கிற தன் பிள்ளைகளின் மாம்சத்திலே,

௫௫ தன் சகோதரனுக்காகிலும் தன் மடியிலிருக்கிற பெண்சாதிக்காகிலும் தன்னிடத்தில் மீந்திருக்கிற தன்னுடைய குமாரர்களில் ஒருவனுக்காகிலும் கொஞ்சம் கொடாதிருக்கும்படிக்கு அவர்கள்மேலே வன்கண்ணாயிருப்பான்.

௫௬ உன்னிடத்தில் சுகசெல்வத்தினாலும் செருக்கினாலும் தன் உள்ளங்காலைத் தரையின்மேல் வைக்கத் துணியாத செருக்கும் சுகசெல்வமுமுள்ள பெண் தன் கால்களின் நடுவிலிருந்து புறப்படும் தன் நச்சுக்கொடியினிமித்தமும் தான் பெறும் பிள்ளைகளினிமித்தமும் தன் மடியிலிருக்கிற புருஷன்மேலும் தன் குமாரன்மேலும் தன் குமாரத்தியின்மேலும் வன்கண்ணாயிருப்பாள்.

௫௭ ஏனென்றால் உன் சத்துரு உன்னை உன் வாசல்களில் இறுகப்பிடிக்கும் முற்றிக்கையிலும் இடுக்கணிலும் சகலமுங் குறைவுபட்டிருக்கிறபடியினாலே அவைகளை இரகசியமாய்த் தின்னுவாள்.

௫௮ உன் பராபரனாகிய கர்த்தரென்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்துக்குப் பயப்படும்படிக்கு நீ இப்புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாஞ் செய்யக் கவனமாயிராவிட்டால்,

௫௯ கர்த்தர் நிச்சயமான பெரிய வாதைகளையும் நிச்சயமான பொல்லாத நோய்களையும் உன்னையும் உன் வித்தையும் அதிசயமாய் வாதிப்பார்,

௬௰ நீ கண்டு பயந்த எகிப்தியரின் வியாதிகளெல்லாம் உன்னைப் பிடித்துக்கொள்ளும்படிக்கு அவைகளை உன்மேல் திரும்பப்பண்ணுவார்.

௬௧ இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிராத எல்லாப் பிணியையும் வாதையையும் நீ அழியுமட்டும் கர்த்தர் உன்மேல் வரப்பண்ணுவார்.

௬௨ நீங்கள் திரட்சியிலே வானத்தின் நட்சத்திரங்களைப்போலிருந்ததற்குப் பதிலாக நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தரின் சத்தத்துக்குச் செவிகொடாமற்போனபடியினாலே கொஞ்சம் பேராய் விடப்படுவீர்கள்.

௬௩ கர்த்தர் உங்களுக்கு நன்மைசெய்யவும் உங்களைப் பெருகப்பண்ணவும் எப்படி உங்கள்மேல் இஷ்டமாயிருந்தாரோ, அ

[illegible] உங்களோடேகூடக் [illegible] உன் [illegible] இராப்பகலும் பயப்பட்டு [illegible] போகாதே [illegible] இருப்பீர்கள்.

௬௬ [illegible] உன்னுடைய [illegible] இருந்து [illegible] பயப்பட்டு [illegible] அந்நியதேவர்களை [illegible].

௬௭ [illegible] உனக்கு [illegible] உன் இருதயத்தின் [illegible] இல்லை. அங்கே [illegible] இருதயத்தை [illegible] ஆத்துமத்தை [illegible].

௬௮ [illegible] உன் [illegible] நாள் [illegible] இரவும் பகலும் [illegible].

௬௯ [illegible] உன் இருதயத்தின் [illegible] பார்க்கும் காரியங்களினிமித்தம் [illegible] சாயங்காலம் [illegible] விடியற்காலம் வந்தால் [illegible] என்று சொல்லுவாய்.

௭௦ [illegible] நான் உனக்குச் சொல்லியபடி கர்த்தர் உன்னைக் கப்பல்களில் எகிப்துக்குத் திரும்பக் கொண்டுபோவார். அங்கே உங்கள் சத்துருக்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் விற்கப்படுவீர்கள். கொள்ளுவாரில்லாதிருப்பார்களென்றான்.

உகூ. அதிகாரம்.

[illegible] பண்ணின உடன்படிக்கை [illegible] உடன்படிக்கை [illegible] தெரியக்காட்டுகிறது.

ஓரேபிலே இஸ்ரவேல் புத்திரரோடே பண்ணின உடன்படிக்கையை [illegible] கர்த்தர் [illegible] உடன்படிக்கையின் வார்த்தைகள் இவைகளே.

௨ [illegible] இஸ்ரவேலெல்லாம் வரவழைத்து [illegible] சொன்னதாவது: [illegible] உங்கள் கண்களுக்கு [illegible] அவன் [illegible] அவனு [illegible] தேசத்துக்கும் [illegible].

௩ [illegible] சோதனைகளையும் அந்தப் [illegible] அற்புதங்களையும் [illegible] கண்டீர்களே.

௪ ஆகிலும் இந்நாள்வரைக்கும் கர்த்தர் உங்களுக்கு உணர்கிற இருதயத்தையும் காண்கிற கண்களையும் கேட்கிற காதுகளையும் கொடுக்கவில்லை.

௫ நாம் நாற்பது வருஷம் உங்களை வனாந்தரத்தில் நடக்கப்பண்ணினோம். நாம் உங்களைப் பராபரனாகிய கர்த்தரென்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கு உங்களில் உங்கள் வஸ்திரங்கள் பழசாய்ப்போகவில்லை. உன் காலில் உள்ள பாதரட்சை பழசாய்ப்போகவில்லை.

௬ நீங்கள் அப்பம் சாப்பிட்டதுமில்லை. திராட்சரசமும் மதுபானமும் குடித்ததுமில்லையென்கிறார்.

௭ நீங்கள் இவ்விடத்திற்கு வந்தபொழுது எஸ்போனின் இராசாவாகிய சீகோனும் பாசானின் இராசாவாகிய ஓகும் நம்மோடே யுத்தத்திற்குப் புறப்பட்டார்கள். நாம் அவர்களை முறியடித்து,

௮ அவர்கள் தேசத்தைப் பிடித்து அதை ரூபனியருக்கும் காத்தியருக்கும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கும் சுதந்தரமாகக் கொடுத்தோம்.

௯ இப்பொழுதும் நீங்கள் செய்வதெல்லாம் உங்களுக்கு வாய்க்கும்படிக்கு இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்வீர்களாக.

௰ உன் பராபரனாகிய கர்த்தர் உனக்குச் சொன்னபடியேயும் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டபடியேயும் இன்றுன்னைத் தமக்கு ஜனமாக நிறுத்திக்கொள்ளவும் தாம் உனக்குப் பராபரனாயிருக்கவும்,

௰௧ நீ உன் பராபரனாகிய கர்த்தருடைய உடன்படிக்கைக்கும் இன்று அவர் உன்னோடே பண்ணுகிற அவருடைய ஆணைக்கும் உட்படும்படிக்கு,

௰௨ இன்று உங்கள் கோத்திரங்களின் தலைவரும் உங்கள் மூப்பரும் உங்கள் அதிகாரிகளும் இஸ்ரவேலின் சகல மனிதரும்,

௰௩ உங்கள் பிள்ளைகளும் உங்கள் பெண்சாதிகளும், உன் பாளயத்திற்குள்ளிருக்கிற உன் விறகுகாரரும் உன் தண்ணீர்க்காரருமான உன் பரதேசியுமாகிய நீங்களெல்லாரும் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிறீர்கள்.

௰௪ ஆனால் நான் உங்களோடே மாத்திரமல்ல,

௰௫ இன்று இங்கே நம்மோடேகூட நம்முடைய பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிறவர்களோடேயும் இன்று இங்கே நம்மோடே இராதவர்களோடேயுங்கூட இந்த உடன்படிக்கையையும் இந்த ஆணையையும் பண்ணுகிறேன்.

௰௬ எகிப்திலே நாம் எப்படிக் குடியிருந்தோமென்றும், நீங்கள் கடந்துவந்த இடங்களிலிருந்த சாதிகளின் ந

வழியாய் எப்படி கடந்து வந்தோமென்றும் நீங்கள் அறிவீர்கள்.

௰௭ அவர்களுடைய அருவருப்புகளையும் அவர்களிடத்திலிருக்கிற மரமுங் கல்லும் வெள்ளியும் பொன்னுமான அவர்களுடைய நரகலான விக்கிரகங்களையுங் கண்டீர்கள்.

௰௮ ஆகையால் அந்த ஜாதிகளின் தேவர்களைச் சேவிக்கப் போக இன்றைய தினம் நம்முடைய பராபரனாகிய கர்த்தரைவிட்டு விலகுகிற இருதயமுள்ள யாதொரு புருஷனாகிலும் பெண்ணாகிலும் வம்சமாகிலுங் கோத்திரமாகிலும் உங்களில் இராதபடிக்கும் நஞ்சையும் எட்டியையும் முளைப்பிக்கிற யாதொரு வேர் உங்களில் இராதபடிக்கும் பாருங்கள்.

௰௯ அப்படிக்கொத்தவன் இந்த ஆணையின் வார்த்தைகளைக் கேட்டும் என் மனதின் இஷ்டப்படி நான் நடந்தாலும் எனக்குச் சமாதானமிருக்குமென்று வெறிக்குக் குடித்திருக்கிறவர்களைத் தாகமாயிருக்கிறவர்களுக்குச் சரிசமமான மாகக் கூட்டும்படிக்குத் தன் இருதயத்திலே தன்னை ஆசீர்வதித்தால்,

௨௰ கர்த்தர் அவனுக்கு மன்னிக்கச் சித்தமாயிருப்பதில்லை. கர்த்தரின் கோபமும் எரிச்சலும் அப்பொழுது அந்த மனிதன்மேல் புகையும். இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபமெல்லாம் அவன்மேல் இறங்கும். கர்த்தர் அவனுடைய பேரை வானத்தின் கீழிராதபடிக்குக் குலைப்பார்.

௨௰௧ இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகத்திலெழுதியிருக்கிற உடன்படிக்கையினுடைய சாபங்களின்படியெல்லாங் கர்த்தர் அவனைத் தீமைக்கென்று இஸ்ரவேல் கோத்திரங்களுக்கெல்லாம் புறம்பாகப் பிரிப்பார்.

௨௰௨ அப்பொழுது உங்களுக்குப் பிறகு எழும்பும் வேறே தலைமுறையான உங்கள் பிள்ளைகளும் தூரதேசத்திலிருந்து வரும் அந்நியருஞ் சொல்லு இந்தத் தேசத்தின் வாதைகளையும் கர்த்தர் அதிலே உண்டுபண்ணின அதின் நோய்களையும்,

௨௰௩ கர்த்தர் தமது கோபத்திலும் தமது உக்கிரத்திலுங் கவிழ்த்துப்போட்ட சோதோம் கொமோறா அத்மா செபோயீம் கவிழ்ந்ததுபோல அதில் விதைப்பும் விளைவும் ஏதொரு புல்லும் முளைப்பதில்லையென்று கந்தகத்தாலும் உப்பாலும் எரிக்கப்பட்டதையுங் காணும்பொழுது,

௨௰௪ அந்த ஜாதிகளெல்லாம் கர்த்தர் இந்தத் தேசத்துக்கு ஏன் இப்படிச் செய்தார். இந்த மகா கோபம் எரிந்தது என்னவென்று கேட்பார்கள்.

௨௰௫ அப்பொழுது சொல்லப்படுவது, அவர்களுடைய பிதாக்களின் பராபரனாகிய கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபொழுது அவர்களோடே பண்ணின உடன்படிக்கையை அவர்கள் விட்டுப்போய்,

௨௰௬ தாங்கள் அறியாமலுந் தங்களுக்குக் கொடாமலுமிருக்கிற அந்நிய தேவர்களைச் சேவித்து அவைகளைப் பணிந்துகொண்டபடியினால்,

௨௰௭ கர்த்தர் இந்தப் புஸ்தகத்திலெழுதியிருக்கிற சாபத்தையெல்லாம் இந்தத் தேசத்தின்மேல் வரப்பண்ண அதின்மேல் கோபமுள்ளவரானார்,

௨௰௮ அவர்களைக் கோபத்திலும் உக்கிரத்திலும் மகா கடுமையிலும் அவர்களுடைய தேசத்திலிருந்து பிடுங்கி இந்நாளிலிருக்கிறதுபோல அவர்களை வேறே தேசத்திலே தள்ளிவிட்டாரென்றுஞ் சொல்லப்படும்.

௨௰௯ மறைவானவைகள் நம்முடைய பராபரனாகிய கர்த்தருக்கடுத்தன. வெளிப்பட்டவைகளோவெனில் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் இந்த நியாயப்பிரமாணத்தினுடைய வார்த்தைகளின்படியெல்லாஞ் செய்யும்படிக்கு என்றென்றைக்கும் அடுத்திருக்கும்.

௩௰. அதிகாரம்.

இஸ்ரவேலர் மனஸ்தாபத்தோடே சகல ஜாதிகளுக்குள்ளுஞ் சிதறடிக்கப்பட்டபோதுந் திரும்பக் குணப்படும்பொழுது அடையுஞ் ஸ்ரேயங்களுடைய வாக்குத்தத்தம்.

௧ நான் உனக்கு முன்பாக வைத்த ஆசீர்வாதமுஞ் சாபமுமான இந்தக் காரியங்களெல்லாம் உன்மேல் வந்தபொழுது நீ சிதறடிக்கப்பட்டிருந்தால் உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிடத்திலும் நீயிருக்கும்பொழுது உன் இருதயத்திலே அவைகளை நினைத்து,

௨ உன் பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திரும்பி நீயும் உன் பிள்ளைகளும் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமத்தோடும் நான் இன்றுனக்குக் கற்பிக்கிறதின்படியெல்லாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்தால்,

௩ உன் பராபரனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி உனக்கு இரங்கி உன் பராபரனாகிய கர்த்தர் உன்னைச் சிதறடித்த எல்லா ஜனங்களிடத்திலுமிருந்து உன்னைத் திரும்பச் சேர்த்துக்கொள்ளுவார்.

௪ உன்னுடையவர்கள் வானத்தின் கடையாந்தரமட்டுந் துரத்துண்டிருந்தாலும் உன் பராபரனாகிய கர்த்தர் அங்கேயிருக்கிற உன்னைக் கூட்டி அங்கேயிருக்கிற உன்னைச் சேர்த்துக்கொண்டு,

௫ உன் சிறைகளைத் தீர்த்துத் திருந்தச்செய்து, உன் பராபரனாகிய கர்த்தர் அதிலுன்னைச் சேரப்பண்ணி, நன்மைசெய்து, உன் பிதாக்களைப் பார்க்கிலும் உன்னைப் பெருகப்பண்ணுவார்.

௬ நீ உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும் சிநேகிக்கும்படிக்கு உன் பராபரனாகிய கர்த்தர் உன்னிருதயத்தையும் உன் சந்ததியின் இருதயத்தையும் விருத்தசேதனம்பண்ணி,

௭ இந்தச் சாபங்களையெல்லாம் உன் சத்துருக்களின்மேலும் உன்னைப் பகைத்துத் துன்பப்படுத்துகிறவர்களின்மேலும் வரப்பண்ணுவார்.

௮ நீயோ மனந்திரும்பிக் கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற அவருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் செய்வாய்.

௯ அப்பொழுது உன் பராபரனாகிய கர்த்தர் உன் கைகளின் எல்லா வேலையிலும் உன் கர்ப்பத்தின் கனியிலும் உன் மிருகசீவனின் பலனிலும் உன் நிலத்தின் கனியிலும் உனக்கு நன்மையுண்டாகக் கடாட்சியிப்பார்.

௰ ஏனெனில் இந்த நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உன் பராபரனாகிய கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி அவருடைய சத்தத்துக்குச் செவிகொடுத்து, உன் பராபரனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும் திரும்பும்போது, கர்த்தர் உன் பிதாக்களின்மேல் சந்தோஷப்பட்டதுபோல உன்மேலும் நன்மையுண்டாகச் சந்தோஷமாயிருப்பார்.

ஜீவனையும் மரணத்தையும் அவர்களுக்கு முன்வைத்தது.

௰௧ ஏனெனில் நான் இன்றுனக்குக் கற்பிக்கிற இந்தக் கற்பனை உனக்கு மறைக்கப்பட்டதுமல்ல, அதுனக்குத் தூரமுமல்ல.

௰௨ நாங்கள் அதைக் கேட்டு அதின்படி செய்யும்படிக்கு எங்களுக்காகப் பரமண்டலத்துக்கு ஏறி அதை எங்களுக்குக் கொண்டுவருவான் யாரென்று நீ சொல்லத்தக்கதாக அது பரமண்டலத்திலுள்ளதல்ல.

௰௩ நாங்கள் அதைக் கேட்டு அதின்படி செய்யும்படிக்கு எங்களுக்காகச் சமுத்திரத்தைக் கடந்து அதைக் கொண்டுவருவான் யாரென்று நீ சொல்லத்தக்கதாக அது சமுத்திரத்துக்கு அப்புறத்திலுள்ளதுமல்ல.

௰௪ நீ அவ்வசனத்தின்படியே செய்யும்படிக்கு அது மெத்தவும் சமீபமாய் உன் வாயிலும் உன்னிருதயத்திலுமிருக்கின்றது.

௰௫ இதோ, ஜீவனையும் நன்மையையும் மரணத்தையும் தீமையையும் இன்று உன் முன்னே வைக்கிறேன்.

௰௬ எப்படியெனில் நீ பிழைத்துப் பெருகும்படிக்கும் நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்திலே உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும் நீ உன் பராபரனாகிய கர்த்தரைச் சிநேகிக்கவும் அவருடைய வழிகளிலே நடக்கவும் அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும் நான் இன்றுனக்குக் கற்பிக்கிறேன்.

௰௭ நீ செவிகொடாதபடிக்கு உன் மனம் பேதலித்து இழுப்புண்டு அந்நியதேவர்களைப் பணிந்துகொண்டு அவைகளைச் சேவித்தாயேயானால்,

௰௮ நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு யோர்தானைக் கடந்துபோகிற தேசத்திலே நீடித்த நாளிராமல் அழிந்தே போவீர்களென்று இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்.

௰௯ நான் ஜீவனையும் மரணத்தையும் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உன் முன்னே வைத்தேனென்று உங்களுக்கு விரோதமாய் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன். ஆகையால் நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு ஜீவனைத் தெரிந்துகொண்டு,

௨௰ உன் கர்த்தர் உன் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்பேனென்று அவர்களுக்கு ஆணையிட்ட தேசத்திலே குடியிருக்கும்படிக்கு உன் பராபரனாகிய கர்த்தரைச் சிநேகித்து, அவர் சத்தத்துக்குச் செவிகொடுத்து, அவரைப் பற்றிக்கொண்டிருப்பாயாக. ஏனெனில் அவரே உன் ஜீவனும் உன் ஆயுசின் நீடிப்புமானவரென்றான்.

௩௰௧. அதிகாரம்.

மரணமடையப்போகிற மோசேயானவன் கட்டளைகள்.

பின்னையும் மோசே போய் இஸ்ரவேலரோடே சொன்னவார்த்தைகளாவது.

௨ நான் இன்று நூற்றிருபது வயதுள்ளவன். இனி நான் போக்கும் வரத்துமாயிருக்கமாட்டேன். நீ இந்த யோர்தானைக் கடப்பதில்லையென்று கர்த்தர் என்னோடே சொல்லியிருக்கிறார்.

௩ உன் பராபரனாகிய கர்த்தர்தாமே உனக்கு முன்பாகக் கடந்துபோவார். அவர் இந்தச் சாதிகளின் தேசத்தைக் கட்டிக்கொள்ள அவர் அவைகளை உனக்கு முன்பாக அழிப்பார். கர்த்தர் சொன்னபடியே யோசுவா உனக்கு முன்பாகக் கடந்துபோவான்.

௪ கர்த்தர் அழித்த எமோரியரின் இராசாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் அவர்கள் தேசத்துக்குஞ் செய்ததுபோல அவைகளுக்குஞ் செய்வார்.

௫ கர்த்தர் அவர்களை யுங்களுக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கும்பொழுது நீங்கள் அவர்களுக்கு நான் உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியெல்லாஞ் செய்யக்கடவீர்கள்.

௬ நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படாமலுந் திகைக்காமலும் பலத்துக்கொண்டு திடமனதாயிருங்கள். ஏனெனில் உன் பராபரனாகிய கர்த்தர்தாமே உன்னோடேகூட நடந்துவருகிறார். உன்னைத் தள்ளிவிடாமலும் உன்னைக் கைவிடாமலுமிருப்பாரென்று அவர்களோடே சொன்னான்.

௭ பிறபாடு மோசே யோசுவாவையழைத்து, இஸ்ரவேலெல்லாம் பார்க்க அவனோடே சொன்னதாவது. பலத்துக்கொண்டு திடமனதாயிரு. ஏனெனில் நீ இந்தச் சனத்தைக் கர்த்தர் அவர்களுக்குக் கொடுப்பேனென்று அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திற்குள் அழைத்துப்போய், நீ யதையவர்களுக்குப் பங்கிடுவாய்.

௮ கர்த்தர் உனக்குமுன்பாக நடக்கிறவர் அவருன்னோடேயிருப்பார். அவருன்னைத் தள்ளிவிடுவதுமில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை. நீ பயப்படாமலுங் கலங்காமலுமிருப்பாயாகவென்றான்.

௯ மோசே இந்த நியாயப்பிரமாணத்தை யெழுதி அதைக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற லேவி புத்திரரான ஆசாரியருக்கும் இஸ்ரவேலுடைய எல்லாமூப்பருக்கும் ஒப்புவித்து,

௰ அவர்களுக்குக் கற்பித்ததாவது. விடுதலைவருஷமாகிய ஒவ்வொரு ஏழாம் வருஷத்தின் முடிவிலே கூடாரங்களின் பண்டிகையிலே,

௰௧ இஸ்ரவேலெல்லாம் உன் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாக அவர் தெரிந்துகொண்டிருக்கும் ஸ்தானத்திலே காணப்படவந்திருக்கும்பொழுது, இந்த நியாயப்பிரமாணத்தை எல்லா இஸ்ரவேலருக்கும் முன்பாகவும் அவர்கள் காதுகள் கேட்க வாசிக்கக்கடவாய்.

௰௨ புருஷரும் பெண்சாதிகளும் பிள்ளைகளும் உன் வாசல்களிலிருக்கும் உன்னுடைய பரதேசிகளுங் கேட்கக் கற்றுக்கொண்டு உங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பயந்து இந்த நியாயப்பிரமாணவார்த்தைகளின்படியெல்லாஞ் செய்யக்கவனமாயிருக்கும்படிக்கும்,

௰௩ அறியாத அவர்கள் பிள்ளைகளுங் கேட்டு நீங்கள் சுதந்தரிக்க யோர்தானைக் கடந்துபோகிற சீமையிலே உயிரோடிருக்கும் நாளெல்லாம் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பயப்படக் கற்றுக்கொள்ளும்படிக்குச் சனத்தைக் கூட்டி அதை வாசிக்கவேணுமென்றான்.

௫௧ ஆசாரியனாகிய எலெயாசாரும நூனின்குமாரனாகிய யோசுவாவும பிதாக்களுடைய வம்சத்தலைவருஞ் சீலோவிலே ஆசரிப்புக்கூடாரத்தினவாசலிலே கர்த்தருக்குமுன்பாக இஸ்ரவேலபுத்திரரின்கோத்திரங்களுக்குச் சீட்டுப்போட்டுக் கொடுத்த சுதந்தரங்கள இவைகளேதான. இப்படியேயவர்கள தேசத்தைப்பங்கிட்டுத் தீர்ந்தது.

உ௰. அதிகாரம்.

அடைக்கலப்பட்டணங்கள குறிக்கப் பட்டது.

கர்த்தர் யோசுவாவோடே சொன்னதாவது,

௨ நீ இஸ்ரவேலபுத்திரரோடே சொல்லவேண்டியதேதெனில, அறியாமற் கைபிசகாய ஒரு ஆத்துமாவைக் கொன்றுபோட்டவனோடிப்போயிருக்கத்தக்கதாக நாமமோசேயைக்கொண்டு உங்களுக்குச் சொன்ன அடைக்கலப் பட்டணங்களை யுங்களுக்குக்குறித்துவையுங்கள.

௩ அவைகளுங்களுக்கு இரத்தப்பழிவாங்குகிறவனுடைய கைக்குத்தப்பிப்போயிருக்கும் அடைக்கலஸ்தலங்களாயிருப்பதாக.

௪ அந்தப் பட்டணங்களிலொன்றிற் கோடிவருகிறவன் பட்டணத்தின் ஒலிமுகவாசலில் நின்றுகொண்டு, அந்தப்பட்டணத்திலுடைய மூப்பரின் செவிகள் கேட்கத் தன் நியாயங்களைச் சொல்வானாக. அப்போது அவர்கள் அவனைத் தங்களிடத்திற் பட்டணத்திற்குள்ளே சேர்த்துக்கொண்டு தங்களோடே குடியிருக்க அவனுக்கிடங்கொடுத்து,

௫ இரத்தப்பழிவாங்குகிறவன் அவனைத் துரத்திவந்தால், அவனையிவன் கையில் ஒப்புக்கொடாதிருக்கக்கடவர்கள். ஏனெனில் அவன் தனக்கடுத்தவனுக்கு அதற்கு முந்தின நாட்களிலே பகைஞனாயிருக்கவில்லை. அவனையறியாமற் கொன்றான்.

௬ நியாயம் விசாரிக்கும் சபைக்கு முன்பாக அவன் நிற்குமட்டாகவும் அந்நாட்களிலிருக்கிற பிரதான ஆசாரியன் மரணமடையுமட்டாகவும், அவன் அந்தப்பட்டணத்திலே குடியிருக்கக்கடவன். பிறகு கொலைசெய்தவன் தான்விட்டோடிப்போன தன் பட்டணத்திற்கும் தன் வீட்டுக்குந் திரும்பிவரலாமென்று சொல்லென்றார்.

௭ அப்படியே அவர்கள் நவ்தலியின் மலைத்தேசமான கலிலேயாவிலுள்ள கேதேசையும், எப்பிராயீமின் மலைத்தேசத்திலுள்ள சீகேமையும், யூதாவின் மலைத்தேசத்திலுள்ள எபிரோனாகிய கீரியாத் அர்பாவையும் பரிசுத்தம்பண்ணி,

௮ எரிகோவிலிருக்கும் யோர்தானுக்கக்கரையான சூரியோதயபுறத்திலே ரூபென்கோத்திரத்தாருக்குச் சமனான வனாந்தரத்திலுள்ள பேத்சேரையும், காத்கோத்திரத்தாருக்குக் கீலேயாத்திலுள்ள ராமோத்தையும், மனாசே கோத்திரத்தாருக்குப் பாசானிலுள்ள கோலானையும் குறித்துவைத்தார்கள்.

௯ கைப்பிசகாய் ஒரு ஆத்துமாவைக் கொன்றவனெவனும் சபைக்கு முன்பாக நிற்குமட்டும் இரத்தப்பழிவாங்குகிறவன் கையிலே சாகாதபடிக்கு ஓடிப்போய் ஒதுங்கத்தக்கதாக, இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்கும் அவர்கள் நடுவே தங்குகிற பரதேசிக்குங் குறிக்கப்பட்ட பட்டணங்கள் இவைகள்தான்.

௨௧. அதிகாரம்.

லேவியருக்குப் பட்டணங்கள் கொடுக்கப்பட்டது.

அப்போது லேவியரின் வம்சப்பிதாக்களின் தலைவர் கானான் தேசத்திலிருக்கிற சீலோவிலே ஆசாரியனாகிய எலெயாசாரண்டைக்கும் நூனின் குமாரனாகிய யோசுவாவண்டைக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரங்களின் பிதாக்களிலுள்ள தலைவரண்டைக்குஞ் சேர்ந்துவந்து,

௨ அவர்களோடே பேசி, நாங்கள் குடியிருக்கும் பட்டணங்களையும் எங்கள் மிருகஜீவனுக்காக அவைகளின் பேட்டைகளையும் எங்களுக்குக் கொடுக்கக் கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்தாரே என்றார்கள்.

௩ அப்படியே இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சுதந்தரத்திலே லேவியருக்குக் கர்த்தருடைய வாக்கின்படியே பட்டணங்களையும் அவைகளின் பேட்டைகளையுங் கொடுத்த விபரமாவது,

௪ கேகாத்தியரின் வம்சங்களுக்குச் சீட்டுவிழுந்தது. அப்போது லேவியரில் ஆசாரியனாகிய ஆரோனின் குமாரருக்கு யூதா கோத்திரத்திலுஞ் சிமியோன் கோத்திரத்திலும் பென்யமீன் கோத்திரத்திலும் பதின்மூன்று பட்டணங்கள் சீட்டினால் உண்டாயிற்று.

௫ கேகாத்தின் மற்றப் புத்திரருக்கு எப்பிராயீம் கோத்திரத்தின் வம்சங்களுக்குள்ளுந் தாண் கோத்திரத்திலும் மனாசேயின் பாதிக்கோத்திரத்திலுஞ் சீட்டினால் உண்டான பட்டணங்கள் பத்து.

௬ கெர்சோன் புத்திரருக்கு இசக்கார் கோத்திரத்தின் வம்சங்களுக்குள்ளும் ஆசேர் கோத்திரத்திலும் நவ்தலி கோத்திரத்திலும் பாசானிலிருக்கிற மனாசேயின் பாதிக்கோத்திரத்திலுஞ் சீட்டினால் உண்டான பட்டணங்கள் பதின்மூன்று,

௭ மெராரி புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே ரூபென் கோத்திரத்திலுங் காத் கோத்திரத்திலுஞ் செபுலோன் கோத்திரத்திலும் உண்டான பட்டணங்கள் பன்னிரண்டு.

௮ இந்தப் பட்டணங்களையும் அவைகளின் பேட்டைகளையும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்தபடியே, லேவியருக்குச் சீட்டுப்போட்டுக் கொடுத்தார்கள்.

௯ லேவியின் குமாரரில் முதலாஞ்சீட்டு கிடைப்பட்ட கோகாத்தியரின் வம்சங்களிலே இருக்கிற ஆரோனின் குமாரருக்கு,

௰ யூதா புத்திரரின் கோத்திரத்திலும் சிமியோன் புத்திரரின் கோத்திரத்திலும் அவர்கள் கொடுத்ததும் பேர்பேராய்ச் சொல்லப்பட்டதுமான பட்டணங்களாவது,

௰௧ யூதாவின் மலைத்தேசத்தில் அனாக்கின் தகப்பனாகிய அர்பாவின் பட்டணமாகிய எபிரோனையும் அதின் சுற்றுப்பேட்டைகளையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள்.

௰௨ ஆனாலும் அப்பட்டணத்தின் வெளிநிலத்தையும் கிராமங்களையும் எப்புன்னேயின் குமாரனாகிய காலேபுக்குக் காணியாட்சியாகக் கொடுத்தார்கள்.

௰௩ இப்படியே ஆசாரியனாகிய ஆரோனின் குமாரருக்குக் கொலைசெய்தவனுக்கு அடைக்கலப்பட்டணமான எபிரோனையும் அதின் பேட்டைகளையும் லிப்னாவையும் அதின் பேட்டைகளையும்,

௰௪ யாத்தீரையும் அதின் பேட்டைகளையும், எஸ்தெமோவாவையும் அதின் பேட்டைகளையும்,

௰௫ கோலோனையும் அதின் பேட்டைகளையும், தேபீரையும் அதின் பேட்டைகளையும்,

௰௬ ஆயினையும் அதின் பேட்டைகளையும், யுத்தாவையும் அதின் பேட்டைகளையும், பெத்ஷேமேசையும் அதின் பேட்டைகளையும் கொடுத்தார்கள். அந்த இரண்டு கோத்திரங்களிலிருக்கிற இந்தப் பட்டணங்கள் ஒன்பது.

௰௭ பென்யமீன் கோத்திரத்திலேயானாலே அவர்களுக்குக் கிபெயோனையும் அதின் பேட்டைகளையும், கேபாவையும் அதின் பேட்டைகளையும்,

௰௮ ஆனதோத்தையும் அதின் பேட்டைகளையும் அல்மோனையும் அதின் பேட்டைகளையும் கொடுத்தார்கள். இந்தப் பட்டணங்கள் நாலு.

௰௯ ஆசாரியரான ஆரோனுடைய குமாரரின் பட்டணங்களெல்லாம் அவைகளின் பேட்டைகள் தவிரப் பதின்மூன்று.

௨௰ லேவியரான கோகாத்தின் புத்திரரில் மீதியான அவர்களுடைய மற்ற வம்சங்களுக்கோவென்றால் அவர்களுக்கு வீதமாக எப்பிராயீம் கோத்திரத்திலே அவர்கள் கொடுத்த பட்டணங்களாவது,

௨௰௧ கொலைசெய்தவனுக்கு அடைக்கலப்பட்டணமாய் எப்பிராயீமின் மலைத்தேசத்தில் இருக்கிற சீகேமையும் அதின் பேட்டைகளையும், கேசேரையும் அதின் பேட்டைகளையும்,

௨௰௨ கிப்சாயிமையும் அதின் பேட்டைகளையும், பெத்தோரோனையும் அதின் பேட்டைகளையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். இந்தப் பட்டணங்கள் நாலு.

௨௰௩ தாண் கோத்திரத்திலே எல்தெக்கேயையும் அதின் பேட்டைகளையும், கிபத்தோனையும் அதின் பேட்டைகளையும்,

௨௰௪ ஆயலோனையும் அதின் பேட்டைகளையும், காத்ரிம்மோனையும் அதின் பேட்டைகளையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். இந்தப் பட்டணங்கள் நாலு.

௨௰௫ மனாசேயின் பாதிக்கோத்திரத்திலே தானாகையும் அதின் பேட்டைகளையும், காத்ரிம்மோனையும் அதின் பேட்டைகளையும் அவர்களுக்குக் கொடுத்தார்கள். இந்தப் பட்டணங்கள் இரண்டு.

௨௰௬ கோகாத் புத்திரரின் மீதியான வம்சங்களுக்குண்டான பட்டணங்களெல்லாம் அவைகளின் பேட்டைகள் தவிரப் பத்து.

௨௰௭ லேவியரின் வம்சங்களிலே கெர்சோன் புத்திரருக்கு அவர்கள் மனாசேயின் பாதிக்கோத்திரத்திலே இரண்டு பட்டணங்களாகிய கொலைசெய்தவனுக்கு அடைக்கலப்பட்டணமான பாசானிலுள்ள கோலானையும் அதின் பேட்டைகளையும், பெயெஸ்திராவையும் அதின் பேட்டைகளையும்,

௨௰௮ இசக்காரின் கோத்திரத்திலே நாலு பட்டணங்களாகிய கிசியோனையும் அதின் பேட்டைகளையும் தாபராத்தையும் அதின் பேட்டைகளையும்,

௨௰௯ யர்மூத்தையும் அதின் பேட்டைகளையும், என்கன்னீமையும் அதின் பேட்டைகளையும்,

௩௰ ஆசேரின் கோத்திரத்திலே நாலு பட்டணங்களாகிய மிசாலையும் அதின் பேட்டைகளையும், அப்தோனையும் அதின் பேட்டைகளையும்,

௩௰௧ எல்காத்தையும் அதின் பேட்டைகளையும், ரேகோபையும் அதின் பேட்டைகளையும்,

௩௰௨ நப்தலியின் கோத்திரத்திலே மூன்று பட்டணங்களாகிய கொலைசெய்தவனுக்கு அடைக்கலப்பட்டணமான கலிலேயாவிலுள்ள கேதேசையும் அதின் பேட்டைகளையும், அம்மோத்தோரையும் அதின் பேட்டைகளையும், கர்த்தானையும் அதின் பேட்டைகளையும் கொடுத்தார்கள்.

௩௰௩ கெர்சோனியருக்கு அவர்கள் வம்சங்களின்படி உண்டான பட்டணங்களெல்லா

லாம் அவைகளின்பேட்டைகள்தவிர்ப்பதின்மூன்று.

௩௪ மற்றலேவியராகிய மெறாரிபுத்திரரின் வம்சங்களுக்கோவென்றால் அவர்கள் செபுலோன்கோத்திரத்திலே நாலுபட்டணங்களாகிய யொக்கினெயாமையும் அதின்பேட்டைகளையும், கற்தாவையும் அதின்பேட்டைகளையும்,

௩௫ திம்னாவையும் அதின்பேட்டைகளையும், நகலாலையும் அதின்பேட்டைகளையும்,

௩௬ ரூபெனின்கோத்திரத்திலே நாலுபட்டணங்களாகிய பேசெரையும் அதின்பேட்டைகளையும், யாத்சாவையும் அதின்பேட்டைகளையும்,

௩௭ கெதேமோத்தையும் அதின்பேட்டைகளையும், மெப்பாத்தையும் அதின்பேட்டைகளையும்,

௩௮ காத்கோத்திரத்திலே நாலுபட்டணங்களாகிய, கொலைசெய்தவனுக்கடைக்கலப்பட்டணமான கிலேயாத்திலுள்ள இராமோத்தையும் அதின்பேட்டைகளையும், மகனாயீமையும் அதின்பேட்டைகளையும்,

௩௯ எஸ்போனையும் அதின்பேட்டைகளையும், யாசேரையும், அதின்பேட்டைகளையுங்கொடுத்தார்கள்.

௪௰ இவைகளெல்லாம் லேவியரின்மற்றவம்சங்களாகிய மெறாரிபுத்திரருக்கவர்கள்வம்சங்களின்படியுண்டான பட்டணங்கள். அவர்களுடையவீதம் பன்னிரண்டுபட்டணங்கள்.

௪௧ இஸ்ரவேல்புத்திரருடைய காணியாட்சியினடுவிலிருக்கிற லேவியரின் பட்டணங்களெல்லாம் அவைகளின்பேட்டைகள்தவிர் நாற்பத்தெட்டு.

௪௨ இந்தப்பட்டணங்களிலேவ்வொன்றிற்கு அதினதின்சுற்றுப்பேட்டைகளிருந்தது. இந்த எல்லாப்பட்டணங்களுக்கும் அப்படியிருந்தது.

௪௩ இந்தப்பிரகாரமாகக்கர்த்தர் இஸ்ரவேலுக்குக்கொடுப்போமென்று அவர்களுடையபிதாக்களுக்காணையிட்ட தேசத்தை யெல்லாங்கொடுத்தார். அவர்கள் அதைச்சுதந்தரித்துக்கொண்டு அதிலே குடியிருந்தார்கள்.

௪௪ கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்காணையிட்டபடியெல்லாம், அவர்களைச்சுற்றிலுமடத்தமில்லாதபடிக்குஇளைப்பாறப்பண்ணினார். அவர்களுடைய எல்லாச்சத்துருக்களிலும் ஒருவரும் அவர்களுக்குமுன்பாக நின்றதில்லை. அவர்களைச்சத்துருக்களையெல்லாங்கர்த்தர் அவர்கள் கையிலொப்புக்கொடுத்தார்

௪௫ கர்த்தர் இஸ்ரவேல்வீட்டாருக்குச்சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒருவார்த்தையும்விழுந்துபோனதில்லை. எல்லாம்வந்துசம்பவித்தது.

௨௨. அதிகாரம்.

ரூபென்புத்திரருங் காத்புத்திரரும்மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருங்கட்டின ஒருபீடத்தைத்தொட்டு உண்டான கலக்கந்தெளிந்தது.

அப்போதுயோசுவா ரூபெனியரையுங்காதியரையும்மனாசேயின் பாதிக்கோத்திரத்தையுமழைத்து,

௨ அவர்களோடே சொன்னதாவது, கர்த்தருடைய ஊழியக்காரனாகியமோசே உங்களுக்குக்கற்பித்ததையெல்லாம் நீங்கள்கைக்கொண்டு, நான் உங்களுக்குக்கற்பித்தயாவிலும் என்சொல்லுக்குக்கீழ்ப்படிந்தீர்கள்.

௩ நீங்கள் இந்நாள்மட்டும் இந்தஅநேகநாளாயிலே உங்கள்சகோதரரைக் கைவிடாமல், உங்கள்பராபரனாகியகர்த்தருடையகற்பனையைக் காத்துக்கொண்டு நடந்தீர்கள்.

௪ இப்போதும் உங்கள்பராபரனாகிய கர்த்தர், உங்கள்சகோதரராயவர்களுக்குச்சொல்லியிருந்தபடியே, இளைப்பாறப்பண்ணினார். ஆகையால்கர்த்தரின்ஊழியக்காரனாகியமோசே யோர்தானுக்கப்பாலேயுங்களுக்குக்கொடுத்த உங்கள்காணியாட்சியானதேசத்திலிருக்கிற உங்கள்கூடாரங்களுக்குத் திரும்பிப்போயிருங்கள்.

௫ ஆனால்நீங்களுங்கள் பராபரனாகிய கர்த்தரைச்சிநேகித்து, அவருடையவழிகளிலெல்லாம்நடந்து, அவர்கற்பனைகளைக்கைக்கொண்டு, அவரோடேபற்றிக்கொண்டிருந்து, அவரையுங்கள்முழு இருதயத்தாலும் உங்கள்முழு ஆத்துமத்தாலுஞ்சேவிக்கிறதற்காகக் கர்த்தரின்ஊழியக்காரனாகியமோசே உங்களுக்குக்கற்பித்தகற்பனையின்படியேயும் நியாயப்பிரமாணத்தின்படியேயுஞ் செய்யும்படிக்குமாத்திரம் வெகுசாவதானமாயிருக்கவேண்டுமென்றுயோசுவாசொல்லி,

௬ அவர்களையாசீர்வதித்து, அவர்கள் தங்கள்கூடாரங்களுக்குப்போகும்படிக்கனுப்பிவிட்டான்.

௭ ஏனென்றால் மனாசேயின் பாதிக்கோத்திரத்துக்கு மோசே பாசானிலே சுதந்தரங் கொடுத்தான். அதின் மறுபாதிக் கோத்திரத்துக்கு யோசுவா யோர்தானுக்கு இப்பாலே மேற்கே அவர்கள் சகோதரரோடே கூடச் சுதந்தரங்கொடுத்தான். யோசுவா அவர்களை அவர்களுடைய கூடாரங்களுக்கு அனுப்பிவிடுகிறபோது அவர்களை ஆசீர்வதித்து,

௮ அவர்களுடனே, நீங்கள் வெகு ஐசுவரியத்தோடேயும் மகா ஏராளமான ஆடுமாடுகளோடேயும், பொன், வெண்கலம், இரும்பு, மகா திரட்சியான வஸ்திரங்களோடேயும் உங்கள் கூடாரங்களுக்குத் திரும்பி, உங்கள் சத்துருக்களிடத்திலே கொள்ளையிட்டவைகளை சகோதரரோடே பங்கிட்டுக்கொள்ளுங்களென்றான்.

௯ அப்போது ரூபன் புத்திரருங் காத்புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருங் கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்டபடித் தாங்கள் கைவசமாய்ப் பண்ணிக்கொண்ட தங்கள் காணியாட்சித் தேசமான கீலேயாத் தேசத்துக்குப் போகும்படிக்குக் கானான் தேசத்திலுள்ள சீலோவிலிருந்து இஸ்ரவேல் புத்திரரைவிட்டுத் திரும்பிப்போனார்கள்.

௰ கானான் தேசத்திலிருக்கிற யோர்தானின் எல்லைகளுக்கு வந்தபோது, ரூபன் புத்திரருங் காத்புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் அங்கே யோர்தானின் ஓரத்திலே பார்வைக்குப் பெரிதான ஒரு பீடத்தைக் கட்டினார்கள்.

௰௧ இதோ, ரூபன் புத்திரருங் காத்புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருங் கானான் தேசத்திற்கெதிரே இஸ்ரவேல் புத்திரருக்கடுத்த யோர்தானின் எல்லைகளில் ஒரு பீடத்தைக் கட்டினார்களென்று இஸ்ரவேல் புத்திரர் கேட்டார்கள்.

௰௨ அவர்கள் அதைக் கேட்டபோது இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாந் தங்கள் அவர்கள்மேலே போகும்படிக்குச் சீலோவிலே கூடி,

௰௩ கீலேயாத் தேசத்திலிருக்கிற ரூபன் புத்திரரண்டைக்குங் காத்புத்திரரண்டைக்கும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரண்டைக்கும் ஆசாரியனாகிய எலெயாசாருடைய குமாரனாகிய பினேகாசை

௰௪ அவனோடேகூட இஸ்ரவேலுடைய பலகோத்திரங்களிலும் ஒவ்வொரு பிதாவீட்டிற்கொரு பிரபுவாகப் பத்துப் பிரபுக்களையும் அனுப்பினார்கள். இஸ்ரவேலின் சேனைகளிலே அவர்களில் ஒவ்வொருவன் தன் தன் பிதாவீட்டாருக்குத் தலைவனாயிருந்தான்.

௰௫ அவர்கள் கீலேயாத் தேசத்திலே ரூபன் புத்திரர் காத்புத்திரர் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரண்டைக்கு வந்து, அவர்களோடே பேசிச் சொன்னதாவது,

௰௬ நீங்கள் இந்நாளிலே கர்த்தரைப் பின்பற்றாதபடிக்குப் புரண்டு, இந்நாளிலே கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணும்படியாக உங்களுக்கொரு பீடத்தைக் கட்டி, இஸ்ரவேலின் பராபரனுக்கு விரோதமாகப் பண்ணின இந்தத் துரோகமென்ன?

௰௭ இந்நாள்வரைக்கும் நம்மைச் சுத்தமாக்காமற்போன துங்கர்த்தருடைய சபையிலே வாதையை வருத்தின பேயோரின் அக்கிரமம் நமக்குக் கொஞ்சக்காரியமோ?

௰௮ நீங்களின்று கர்த்தரைப் பின்பற்றாதபடிக்குப் புரண்டு, இன்று கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறதினாலே அவர் நாளை இஸ்ரவேல் சபையின்மேலெல்லாங் கடுங்கோபமடைவாரே.

௰௯ உங்கள் காணியாட்சியான தேசந் தீட்டாயிருந்ததானால், நீங்கள் நம்முடைய பராபரனாகிய கர்த்தரின் பீடத்தைத்தவிர உங்களுக்கொரு பீடத்தைக் கட்டுகிறதினாலே கர்த்தருக்கும் எங்களுக்கும் விரோதமான இரண்டகம்பண்ணாமல், கர்த்தருடைய வாசஸ்தலந் தங்குகிற கர்த்தருடைய காணியாட்சியான அக்கரைத் தேசத்திற்கு வந்து, எங்கள் நடுவே காணியாட்சிபிடியுங்கள்.

௨௰ சாபத்தீடானதிலே சேராகின் குமாரனாகிய ஆகான் துரோகம்பண்ணினதினாலே அவன் ஒருவனமாத்திரந் தன் அக்கிரமத்தினாலே மடிந்துபோகாமல் இஸ்ரவேல் சபையின்மேலெல்லாங் கடுங்கோபமுண்டாயிருந்ததில்லையோவென்று கர்த்தருடைய சபையெல்லாஞ் சொல்லச் சொல்லுகிறதென்றார்கள்.

௨௧ அப்போது ரூபன் புத்திரருங் காத்புத்திரரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரும் இஸ்ரவேல் சேனைகளின் தலைவருக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னது,

௨௨ தேவனும் பராபரனுங் கர்த்தருமானவர் காரியத்தையறிவார். தேவனும் பராபரனுங் கர்த்தருமானவரே அதையறிவார். இஸ்ரவேலதாரும் அறியட்டோ

கின்றது. அது இரண்டகத்தினாலே அல்லவென்று கர்த்தராகிய தேவரீருக்கு விரோதமான துரோகத்தினாலே செய்யப்பட்டதானால், எங்களைத் தேவரீர் இந்நாளிலே காப்பாற்றவேண்டாம்.

௨௩ ஒரு ஐயத்தினிமித்தம் நாங்கள் எங்களுக்கு அந்தப் பீடத்தைக் கட்டினதேயல்லாமல், கர்த்தரைவிட்டுப் பின்பற்றாதபடிக்குப் புரளுகிறதற்காகிலும் அதின்மேலே சர்வாங்கத் தகனத்தையுங் காணிக்கையையும் ஏற்றுகிறதற்காகிலும் அல்லவென்று அதின்மேலே சமாதானப் பலிகளைச் செலுத்துகிறதற்காகிலும், அதைச் செய்ததுண்டானால், கர்த்தர் அதை விசாரிப்பாராக.

௨௪ நாளையுங்கள் பிள்ளைகள் எங்கள் பிள்ளைகளோடே, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரோடே உங்களுக்கென்னவென்றும்,

௨௫ ரூபன் புத்திரரே! காத் புத்திரரே! கர்த்தர் யோர்தானை எங்களுக்கும் உங்களுக்கும் நடுப்புற எல்லையாக வைத்தார். கர்த்தரிடத்தில் உங்களுக்குப் பங்கில்லையென்று சொல்லி, எங்கள் பிள்ளைகளைக் கர்த்தருக்குப் பயப்படாதிருக்கப் பண்ணுவார்களென்கிற ஐயத்தினாலே நாங்கள் சொல்லிக்கொண்டதென்னவெனில்,

௨௬ சர்வாங்கத் தகனத்திற்கல்ல, பலிக்குமல்ல, எங்கள் சர்வாங்கத் தகனங்களாலும் பலிகளாலும் சமாதானப் பலிகளாலும் நாங்கள் கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஆராதனையைச் செய்யத்தக்கவர்களென்று எங்களுக்கும் உங்களுக்கும் நமக்குப் பிற்பாடிருக்கும் நம்முடைய சந்ததியாருக்கும் நடுவான சாட்சியுண்டாயிருக்கிறதற்கும்,

௨௭ கர்த்தரிடத்தில் உங்களுக்குப் பங்கில்லையென்று, உங்கள் பிள்ளைகள் நாளை யெங்கள் பிள்ளைகளோடே சொல்லாதபடிக்குமே, ஒரு பீடத்தை நமக்குக் கட்டியுண்டுபண்ணுவோமென்றோம்.

௨௮ நாளை எங்களோடும், அல்லது எங்கள் சந்ததியாரோடும் அப்படிச் சொல்லவதுண்டானால், அப்போது சர்வாங்கத் தகனத்திற்கல்ல, பலிக்குமல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவான சாட்சிக்காக எங்கள் பிதாக்கள் உண்டுபண்ணின கர்த்தருடைய பலிபீடத்தின் சாயலான பீடத்தைப் பாருங்களென்று சொல்லுவோமென்றோம்,

௨௯ நம்முடைய பராபரனாகிய கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கு முன்பாகவிருக்கிற அவருடைய பலிபீடத்தைத் தவிர நாங்கள் சர்வாங்கத் தகனங்களுக்குங் காணிக்கைகளுக்கும் பலிகளுக்கும் வேறொரு பீடத்தைக் கட்டுகிறதினாலே கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுவதும் இன்று கர்த்தரைப் பின்பற்றாதபடிக்குப் புரளுவதும் எங்களுக்குத் தூரமாவதாகவென்றார்கள்.

௩௰ ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மனாசேயின் புத்திரரும் சொல்லுகிற வார்த்தைகளை ஆசாரியனாகிய பினெகாசும், அவனோடேயிருந்த சபையின் பிரபுக்களும் இஸ்ரவேலுடைய சேனைகளின் தலைவருங் கேட்டபோது, அவர்கள் பார்வைக்கு நன்றாயிருந்தது.

௩௧ அப்போது ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரனான பினெகாஸ் ரூபன் புத்திரரோடுங் காத் புத்திரரோடும் மனாசேயின் புத்திரரோடுஞ் சொன்னதாவது, நீங்கள் கர்த்தருக்கு விரோதமாய் அப்படிக்கொத்த துரோகத்தைப் பண்ணாதிருக்கிறதினாலே கர்த்தர் நம்முடைய நடுவேயிருக்கிறாரென்கிறதையின்று அறிந்திருக்கிறோம். இப்போது இஸ்ரவேல் புத்திரரைக் கர்த்தரின் கைக்குத் தப்புவித்தீர்களென்று சொல்லி.

௩௨ ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரனான பினெகாசும் பிரபுக்களும் கிலேயாத் தேசத்திலிருக்கிற ரூபன் புத்திரரையுங் காத் புத்திரரையும் விட்டுக் கானான் தேசத்திலே இஸ்ரவேல் புத்திரரண்டைக்குத் திரும்பி வந்து, அவர்களுக்கு மறுசேதி சொன்னார்கள்.

௩௩ அந்தச் சேதி இஸ்ரவேல் புத்திரரின் பார்வைக்கு நன்றாயிருந்தது. ஆகையால் அவர்கள் ரூபன் புத்திரரும் காத் புத்திரருங் குடியிருக்கிற தேசத்தைக் கெடுத்துப்போட அவர்கள் மேல் யுத்தத்திற்குப் புறப்படுவோமென்ற பேச்சைவிட்டு, இஸ்ரவேல் புத்திரர் பராபரனை இஸ்தோத்திரித்தார்கள்.

௩௪ கர்த்தரே பராபரன் என்பதற்கு அந்தப் பீடம் நமக்குள்ளே சாட்சியென்றதாக ரூபன் புத்திரருங் காத் புத்திரரும் அதற்குப் பேரிட்டார்கள்.

௨௩. அதிகாரம்.

யோசுவா இஸ்ரவேலுக்குப் பண்ணின பிரசங்கம்.

இஸ்ரவேலைக் கர்த்தர் சுற்றிலுமிருந்த அவர்களுடைய எல்லாச் சத்துருக்களாலே யுத்தமில்லாதபடிக்கு இளைப்பாறப்

பின்னும் அநேக நாட்சென்றுயோசுவா முதிர்ந்தவனும்வயதுசென்றவனுமானபி ன்பாடு,

௨ யோசுவா இஸ்ரவேலரெல்லாரை யும் அவர்களுடைய மூப்பரையும் தலைவரையும் நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும் அழைப்பித்து, அவர்களோடே சொன்னதாவது நான் முதிர்ந்தவயது சென்றவனாய்ப் போனேன்.

௩ நீங்களோவென்றால் உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்கு முன்பாக இந்த சகல சாதிகளுக்குஞ்செய்த யாவையு ங்கண்டீர்கள் ஏனெனில் உங்கள் பராபரனாகிய கர்த்தர் தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணினார்.

௪ பாருங்கள். யோர்தானுமுதற்கொண்டு நான் நிர்மூலமாக்கின எல்லாச் சாதிகளுடனே சூரியன் அஸ்தமிக்குந்திசையாகிய பெரிய சமுத்திரமட்டும் இன்னமும் மீந்திருக்கிற இவர்களுமான சகலசாதிகளின்தேசத்தை சீட்டுப்போட்டு, உங்களுக்குங்கள் கோத்திரங்களுக்குத்தக்கதாய்ச் சுதந்தரமாகப்பங்கிட்டேன்.

௫ உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குச்சொன்னபடியே, நீங்கள் அவர்களுடைய தேசத்தைக்கட்டிக்கொள்ளும் படிக்கு உங்கள் பராபரனாகிய கர்த்தர்தாமே அவர்களை உங்களுக்கு முன்பாகத்துரத்தி, உங்களுக்குமுன்பாக இராதேபோகப்பண்ணுவார்.

௬ இப்போதும்மோசேயின் நியாயப்பிரமாணபுஸ்தகத்திலெழுதியிருக்கிறதை வலதுபுறமாகிலும் இடதுபுறமாகிலும் விலகிப்போகாமல் அதின்படியெல்லாஞ்செய்யச் சாவதானமாயிருக்கும்படிக்கு நீங்கள் மிகவும் பலத்துக்கொண்டு,

௭ உங்களோடே மீதியாயிருக்கிற இந்த சாதிகளுக்குள்ளே பிரவேசியாமலும் அவர்களுடைய தேவர்களின்பேரை நினையாமலும், அதைக்கொண்டு ஆணையிட்டுக்கொள்ளாமலும் அவைகளைச்சேவிக்காமலும் பணிந்துகொள்ளாமலுமிருக்கும்படிக்கு எச்சரிக்கையாயிருந்து,

௮ இந்நாள்மட்டும் செய்ததுபோல உங்கள் பராபரனாகிய கர்த்தரோடே ஒட்டிக்கொண்டிருங்கள்.

௯ ஏனெனிற்கர்த்தருங்களுக்குமுன்பாகப்பெரியதும் பலத்ததுமான சாதிகளைத் துரத்தியிருக்கிறார். இந்நாள்மட்டுமொருவரும் உங்களுக்கு முன்பாக நின்றதில்லை.

௰ உங்களிலொருவன் ஆயிரம்பேரைத் துரத்துவான், ஏனெனில் உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார்.

௰௧ ஆகையால் உங்கள் பராபரனாகிய கர்த்தரைச்சிநேகிக்கிறதற்காக உங்கள் ஆத்துமாக்களை மிகவுங்காத்துக்கொண்டிருங்கள்.

௰௨ ஏனெனில் நீங்கள் புறம்பேபோனால் உங்களோடேமீதியாயிருக்கிற இந்தச் சாதிகளோடே ஒட்டிக்கொண்டு, அவர்களோடே சம்பந்தங்கலந்து, நீங்கள் அவர்களுக்கும் அவர்கள் உங்களுக்கும் உள்ளானால்,

௰௩ உங்கள் பராபரனாகிய கர்த்தர் இனி இந்தச்சாதிகளையுங்களுக்குமுன்பாகத்துரத்திவிடாதேபோவார் என்பதையும், நீங்கள் உங்கள் பராபரனாகியகர்த்தர் உங்களுக்குக்கொடுத்த இந்த நல்லசீமையிலிருந்து அழிந்து போகுமட்டுக்கும் அவர்கள் உங்களுக்குக் கண்ணியாகவும் வலையாகவும் உங்கள் விலாவுகளுக்குச் சவுக்காகவும் உங்கள்கண்களில் முள்ளுகளாகவுமிருப்பார்களென்பதையும் அறிவே அறியுங்கள்.

௰௪ இதோ, இன்றுநான்பூலோகத்தாரெல்லாம் போகிறவழியாய்ப் போகிறேன். உங்கள்பராபரனாகிய கர்த்தர் உங்களுக்காகச்சொன்ன நல்ல வார்த்தைகளிலெல்லாம் ஒருவார்த்தையும் விழுந்து போனதில்லையென்கிறதை உங்கள் முழு இருதயத்தாலும் உங்கள்முழு ஆத்துமத்தாலும் அறிவீர்கள். அவைகளெல்லாம் உங்களுக்குவந்தது. அவைகளிலொருவார்த்தையும்விழுந்துபோனதில்லை.

௰௫ இப்போதும் உங்கள்பாராபரனாகிய கர்த்தர் உங்களோடேசொன்ன நல்ல காரியமெல்லாம் உங்கள்மேலே எப்படி வந்ததோ அப்படியே உங்கள்பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குக்கற்பித்த அவருடைய உடம்படிக்கையை நீங்கள்மீறிப்போய் வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப்பணிந்துகொண்டால்,

௰௬ உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்குக்கொடுத்த இந்தநல்லசீமையில் உங்களைவைக்காமல் அழிக்குமட்டுங் கர்த்தர் உங்கள்மேலேசகல பொல்லாத காரியத்தையும் வரப்பண்ணுவார். அப்போது கர்த்தருடைய கோபம் உங்கள் மேலேபற்றியெரிவதினாலே நீங்கள் சீக்கிரமாய் அவர் உங்களுக்குக்கொடுத்த நல்லதேசத்திலிருந்து அழிந்து போவீர்களென்றான்.

௨௪. அதிகாரம்.

யோசுவா மரணமடையாத்தற்கு முன் இஸ்ரவேலுக்குத் திடச்சாட்சியாய்ச் சொன்னபுத்தி.

பிற்பாடு யோசுவா இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாஞ் சீகேமிலே கூடிவரப்பண்ணி, இஸ்ரவேலின் மூப்பரையுந் தலைவரையும் நியாயாதிபதிகளையும் ஆக்கக்காரரையும் வரவழைத்தான். அவர்கள் பராபரனுடைய சந்நிதிக்குமுன்பாக வந்துநின்றார்கள்.

௨ அப்பொழுது யோசுவா எல்லாச்சனத்தோடுஞ் சொன்னதாவது, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறதேதெனிற் பூர்வத்திலே யுங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் நாகோருக்குந் தகப்பனான தேராக்கென்பவன் நதிக்கப்புறத்திலே குடியிருக்கிறபோது, அவர்கள் வேறேதேவர்களைச் சேவித்தார்கள்.

௩ நாமோவெனில் நதிக்கப்புறத்திலிருந்த உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமைச் சேர்த்துக்கொண்டுவந்து, அவனைக் கானான்தேசமெங்கும் நடமாடப்பண்ணி, அவன் வித்தைத் திரட்சியாக்கினோம். அவனுக்கு ஈசாக்கையும்,

௪ ஈசாக்குக்கு யாக்கோபையும் ஏசாவையுங் கட்டளையிட்டு ஏசாவுக்குச் சேயீர் மலைத்தேசத்தைச் சுதந்தரிக்கும்படிக்குக் கொடுத்தோம் யாக்கோபும் அவன் பிள்ளைகளுமோ வென்றால் எகிப்திலிறங்கிப்போனார்கள்.

௫ ஆனால் நாம் மோசேயையும் ஆரோனையும் அனுப்பி எகிப்தியரை வாதித்தோம். அப்படியவர்கள் நடுவிலே நாஞ்செய்தபிற்பாடு உங்களைப் புறப்படப்பண்ணினோம்.

௬ நாம் உங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினபோது சமுத்திரக்கரைக்கு வந்தீர்கள். ஆனால் எகிப்தியர் இரதங்களோடுங் குதிரைக்காரரோடும் உங்கள் பிதாக்களை நாணற்சமுத்திரமட்டும் பின்றொடர்ந்தார்கள்.

௭ அப்போது கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். அப்போது அவருங்களுக்கும் எகிப்தியருக்கும் நடுவே அந்தகாரத்தைக் கட்டளையிட்டுச் சமுத்திரத்தை யவர்கள்மேலே புரளப்பண்ணி அவர்களை மூடினார். நாம் எகிப்திலே செய்ததையுங்கள் கண்கள் கண்டது. பிற்பாடு வனாந்தரத்திலே அநேகநாட் குடியிருந்தீர்கள்.

௮ அதற்குப்பிறகு உங்களை யோர்தானுக்கப்புறத்திலே குடியிருந்த எமோரியரின் தேசத்திற்குக் கொண்டுவந்தோம். அவர்கள் உங்களோடு யுத்தம்பண்ணுகிறபோது அவர்களையுங்கள் கையிலொப்புக்கொடுத்தோம். அவர்கள் தேசத்தைக் கட்டிக்கொண்டீர்கள். ஏனெனில் அவர்களையுங்கள் முகத்திற்குமுன்னே அழித்துப்போட்டோம்.

௯ அப்போது சிப்போரின் குமாரனாம் பாலாக்கென்ற மோவாபியரின் இராசா எழும்பி இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணி உங்களைச் சபிக்கும்படிக்குப் பெயோரின் குமாரனாகிய பிலேயாமை யழைத்தனுப்பினான்.

௰ நாமோவெனிற் பிலேயாமைக் கேட்கச் சித்தமில்லாததினாலே அவனுங்களை யாசீர்வதிக்கவே ஆசீர்வதித்தானப்படியவன் கைக்கு உங்களைத் தப்புவித்தோம்.

௰௧ பிற்பாடு யோர்தானைக் கடந்து எரிகோவுக்கு வந்தீர்கள். எரிகோவின் குடிகளும் எமோரியரும் பெரிசியருங் கானானியரும் எத்தியருங் கிர்காசியரும் எவியரும் எபூசியருமுங்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்கள். ஆனால் நாமவர்களையுங்கள் கையிலொப்புக்கொடுத்தோம்.

௰௨ உங்களுக்குமுன்பாகக் குளவிகளையனுப்பினோம். அவைகள் அவர்களையுங்களுக்குமுன்பாகத் துரத்திவிட்டது எமோரியரின் இரண்டு இராசாக்களைப் பிடித்தன. நீயுன் பட்டயத்தாலும் உன் வில்லாலும் அவர்களை வென்றதில்லை.

௰௩ அப்படியே நீங்கள் பிரயாசப்படாதிருக்கிற தேசத்தையும் நீங்கள் கட்டாதிருக்கிற பட்டணங்களையும் உங்களுக்குக் கொடுத்தோம். அவைகளிற் குடியிருக்கிறீர்கள். நீங்கள் பயிரிடாதிருக்கிற திராட்சத்தோட்டங்களின் பலனையும் ஒலிவத்தோப்புகளின் பலனையும் பொசிக்கிறீர்களென்கிறார்.

௰௪ இப்போதும் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை யுத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கப்பாலேயும் எகிப்திலுஞ் சேவித்த தேவர்களை விலக்கிப்போட்டுக் கர்த்தரைச் சேவியுங்கள்.

௰௫ கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்காகாததாயிருந்ததேயாகிலாரைச் சேவிப்பீர்கள்? நதிக்கப்பாலிருந்தவுங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களையோ அல்லவென்று நீங்கள் குடியிருக்கிற தேசத்தின் மனுஷராகிய எமோரியரின் தேவர்களையோவென்று, இன்று தெரிந்துகொள்ளுங்கள். நானும் என்வீட்டாருமோவென்றால் கர்த்தரைச் சேவிப்போமென்றான்.

௧௬ அப்போது சனம் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது, வேறு தேவர்களைச் சேவிக்கிறதற்காகக் கர்த்தரைவிட்டு விலகுகிறது எங்களுக்குத் தூரமாயிருப்பதாக.

௧௭ ஏனெனில் நம்மையும் நம்முடைய பிதாக்களையும் அடிமைத்தனத்தின் வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து நம்மை ஏறிவரப்பண்ணி நம்முடைய கண்களுக்கு முன்பாக அந்தப் பெரிய அடையாளங்களைச் செய்து நாம் நடந்த எல்லா வழியிலும் நாம் நடுவாகக் கடந்துவந்த எல்லாச் சனங்களுக்குள்ளும் நம்மைக் காப்பாற்றினவர் நம்முடைய பராபரனாகிய கர்த்தர்தாமே.

௧௮ சகல சனங்களையும் இத்தேசத்திலே குடியிருந்த எமோரியரையும் கர்த்தர் நமக்கு முன்பாகத் துரத்தினாரே; நாங்களும் கர்த்தரைச் சேவிப்போம். ஏனெனில் அவரே நம்முடைய பராபரனென்றார்கள்.

௧௯ யோசுவா சனத்தோடே சொன்னதாவது, நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள். ஏனெனில் அவர் பரிசுத்தமுள்ள பராபரன். அவர் எரிச்சலுள்ள தேவனுமாம். உங்கள் மீறுதல்களையும் உங்கள் பாவங்களையும் மன்னியாதிருப்பார்.

௨௰ நீங்கள் கர்த்தரைவிட்டு, அந்நிய தேவர்களைச் சேவிக்கும்போது அவர் உங்களுக்கு நன்மைசெய்ததற்குப் பிறபாடு திரும்பிக்கொண்டு, உங்களுக்குத் தீமை செய்து, உங்களை நிர்மூலமாக்குவாரென்றான்.

௨௧ அதற்குச் சனம் யோசுவாவோடே, நாங்கள் அப்படிச் செய்யாமல் கர்த்தரைச் சேவிப்போமென்றார்கள்.

௨௨ அப்போது யோசுவா சனத்தோடே, கர்த்தரைச் சேவிக்கிறதற்காக அவரை நீங்கள் தெரிந்துகொண்டதற்கு நீங்களே சாட்சிகளென்றான். அதற்கவர்கள், நாங்கள் சாட்சிகள்தானென்றார்கள்.

௨௩ அப்போது அவன், இப்போதும் உங்கள் நடுவேயிருக்கிற அந்நிய தேவர்களை விலக்கிப்போட்டு உங்களிருதயத்தை இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்கு நேராகத் திருப்புங்களென்றான்.

௨௪ அப்போது சனம் யோசுவாவுடனே, நம்முடைய பராபரனாகிய கர்த்தரையே சேவித்து அவர் சத்தத்திற்குக் கீழ்ப்படிவோமென்றார்கள்.

௨௫ அப்படியே யோசுவா அந்நாளிலே சீகேமிலே சனத்தோடே உடம்படிக்கைபண்ணி அவர்களுக்குச் சட்டத்தைப் பிரமாணமும் நியாயக்கட்டளையுமாக வைத்தான்.

௨௬ இந்த வார்த்தைகளை யோசுவா பராபரனுடைய நியாயப்பிரமாணப் புஸ்தகத்திலே எழுதி, ஒரு பெரிய கல்லை எடுத்து அதை அங்கே கர்த்தருடைய பரிசுத்த ஸ்தலத்தருகேயிருந்த கர்வாலிமரத்தின் கீழ் நாட்டி,

௨௭ எல்லாச் சனத்தோடும் சொன்னதாவது, இதோ, இந்தக் கல்லு நமக்குச் சாட்சியாயிருக்கக்கடவது. ஏனெனில் கர்த்தர் நம்மோடே சொன்ன எல்லா வசனங்களையும் அது கேட்டது. நீங்கள் உங்கள் பராபரனுக்கு விரோதமாகப் பொய் சொல்லாதபடிக்கு அது உங்களுக்கெதிரான சாட்சியாயிருக்கக்கடவதென்று சொல்லி,

௨௮ யோசுவா சனத்தை அவரவர்களுடைய சுதந்தரத்திற்கு அனுப்பிவிட்டான்.

௨௯ இந்தவர்த்தமானங்களுக்குப் பிற்பாடு நூனின் குமாரனாகிய யோசுவாவென்கிற கர்த்தருடைய ஊழியக்காரன் நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான்.

௩௰ அவனை எப்பிராயீமின் மலைத்தேசத்திலே காயாஸ் பர்வதத்திற்கு வடக்கேயிருக்கிற திம்னாத்சேரா என்கிற அவனுடைய சுதந்தரத்தின் எல்லையிலே அடக்கம்பண்ணினார்கள்.

௩௧ யோசுவாவினுடைய எல்லா நாட்களிலும் யோசுவாவுக்குப் பிற்பாடு வெகுநாள் உயிரோடிருந்து கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய எல்லாக் கிரியையையும் அறிந்திருந்த மூப்பருடைய எல்லா நாட்களிலும் இஸ்ரவேல் கர்த்தரைச் சேவித்தது.

௩௨ இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலேயிருந்து கொண்டுவந்த யோசேப்பின் எலும்புகளை அவர்கள் சீகேமிலே யாக்கோபு சீகேமின் தகப்பனாகிய ஏமோருடைய புத்திரரின் கையில் நூறு வெள்ளிக்காசுக்குக் கொண்டதும் யோசேப்பின் புத்திரருக்குச் சுதந்தரமாய்ப்போனதுமான நிலத்தின் பங்கிலே அடக்கம்பண்ணினார்கள்.

௩௩ ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரும் மரணமடைந்தான். அவனை அவன் குமாரனாகிய பினேகாசுக்கு எப்பிராயீமின் மலைத்தேசத்திலே கொடுக்கப்பட்ட மேட்டிலே அடக்கம்பண்ணினார்கள்.

யோசுவாவின் புஸ்தகம் முடிந்தது.

நியாயாதிபதிகளின் புஸ்தகம்.

க. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரருக்குக் கர்த்தர் அப்புறங்கட்டளையிட்ட சேனங்களுக்குச் சில கோத்திரங்கள் அஞ்ஞானக்குடிகளைத் துரத்திவிடாதே போனதும்.

யோசுவா மரித்தபின் சம்பவித்ததேதெனில், எங்களிற் கானானியரண்டைக்கு முதல் ஏறிப்போய், அவர்களோடே யுத்தம்பண்ணவேண்டியவனாரென்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைக் கேட்டார்கள்.

உ அதற்குக் கர்த்தர், யூதா ஏறிப்போகக்கடவன். இதோ, அந்தத் தேசத்தையவன் கையிலொப்புக்கொடுத்தோமென்றார்.

௩ அப்போது யூதா தன் சகோதரனாகிய சிமெயோனோடே, நாம் கானானியரோடே யுத்தம்பண்ண என் சுதந்தரவீதத்திலே என்னோடேகூட ஏறிவா. நான் உன் சுதந்தரவீதத்திலுன்னோடுங் கூடவருவேனென்றான். அப்படியே சிமெயோன் அவனோடேகூடப்போனான்.

௪ யூதா ஏறிப்போகிறபோது, கர்த்தர் கானானியரையும் பெரிசியரையும் அவர்கள் கையிலொப்புக்கொடுத்தார். அவர்கள் பேசேக்கிலே அவர்களிற் பதினாயிரம் பேரை வெட்டினார்கள்.

௫ பேசேக்கிலே அதோனிபேசேக் இருக்கிறானென்றவர்கள் கண்டு அவனோடு யுத்தம்பண்ணிக் கானானியரையும் பெரிசியரையும் வெட்டி,

௬ அதோனிபேசேக் ஓடிப்போகையில், அவனைப் பின்தொடர்ந்து, பிடித்து, அவன் கைகால்களுடைய பெருவிரல்களைத் தறித்துப்போட்டார்கள்.

௭ அப்போது அதோனிபேசேக், கைகள் கால்களுடைய பெருவிரல்கள் தறிக்கப்பட்ட எழுபது இராசாக்கள் என் மேசையின் கீழ் விழுந்ததைப் பொறுக்கினார்கள். நான் எப்படிச் செய்தேனோ, அப்படிப் பராபரன் எனக்குச் சரிக்கட்டினாரென்றான். அவனை யெருசலேமுக்குக் கொண்டுபோனார்கள். அங்கே செத்துப்போனான்.

௮ யூதாவின் புத்திரர் எருசலேமின்மேல் யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து, அதிலுள்ளவர்களைப் பட்டயக்கருக்கால் வெட்டிப் பட்டணத்தை யக்கினிக்கிரையாக்கிப்போட்டார்கள்.

௯ பிற்பாடு யூதாவின் புத்திரர் மலைத்தேசத்திலேயுந் தெற்கேயும் பள்ளத்தாக்குகளிலேயுங் குடியிருக்கிற கானானியரோடே யுத்தம்பண்ண இறங்கிப்போனார்கள்.

௰ அப்படியே முன்னாளிலே கீரியாத் அர்பாவென்றுபேர்கொண்ட எப்ரோனிலே குடியிருக்கிற கானானியரண்டைக்கு யூதாக்கோத்திரத்தார் போய்ச் சேசாயியையும் அகிமானையுந் தல்மாயியையும் வெட்டிப்போட்டு,

௰௧ அங்கேயிருந்து தெபீரின் குடிகளின்மேலே போனார்கள். தெபீரிக்கோவெனில் முன்னாளிலே கீரியாத்சேப்பேரென்றுபேரிருந்தது.

௰௨ அப்போது காலேப், கீரியாத்சேப்பேரை மடங்கடித்துப் பிடிக்கிறவனுக்கு என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேனென்றான்.

௰௩ அப்போது காலேபுடைய தம்பியாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல் அதைப் பிடித்தான். ஆகையால் அவன் தன் குமாரத்தியாகிய அக்சாளையவனுக்கு விவாகம்பண்ணிக்கொடுத்தான்.

௰௪ அவள் பிரவேசம்பண்ணுகையில் என் தகப்பனையொருவயல்வெளியைக்கேட்பேனென்று அவனைச் சம்மதம்பண்ணிக்கொண்டு, கழுதையைவிட்டிறங்கினாள். காலேப் அவளோடே உனக்கு என்னவேண்டுமென்றான்.

௰௫ அப்போது அவள் அவனோடே, ஒரு ஆசீர்வாதத்தை எனக்குக்கட்டளைபண்ணும். ஏனென்றால் வறட்சியான நிலத்தையெனக்குத்தந்தீர். நீரூற்றுகளையும் எனக்குத்தாருமென்றாள். அப்போது காலேப் மேற்புறத்திலுங் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீரூற்றுகளுள்ள நிலங்களைக் கொடுத்தான்.

௰௬ மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடே

டப்பேரிச்சங்களின்பட்டணத்திலிருந்து அராத்திற்குத்தெற்கேயிருக்கிற யூதாவின்வனாந்தரத்திலேவந்து, ஜனத்தோடே கூடக்குடியேறியிருந்தார்கள்.

௧௭ யூதா தன்சகோதரனாகிய சிமெயோனோடே கூடப்போனான். அவர்கள் சேப்பாத்திலேகுடியிருக்கிற கானானியரை முறியடித்து, அதைச் சங்காரம்பண்ணி, அந்தப்பட்டணத்திற்கு ஒர்மாவென்று பேரிட்டார்கள்.

௧௮ யூதாகோத்திரம் காத்சாவையும் அதின் எல்லையையும் அஸ்கலோனையும் அதின் எல்லையையும் எக்ரோனையும் அதின் எல்லையையும் பிடித்தது.

௧௯ கர்த்தர் யூதாவோடே கூடவிருந்ததினாலே பர்வதத்தாரைத் துரத்திவிட்டார்கள். தாழ்ப்பள்ளத்தாக்கின்குடிகளுக்கு இருப்புரதங்களிருந்தபடியினாலே அவர்களைத் துரத்தாதேபோனார்கள்.

௨௰ மோசேசொன்னபடியே எபிரோனைக் காலேபுக்குக் கொடுத்தார்கள். அவன் அதிலிருந்த ஏனாக்கின் மூன்றுகுமாரரையுந் துரத்திவிட்டான்.

௨௧ பென்யமீன்புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரைத் துரத்திவிடாதேபோனார்கள். ஆகையால் எபூசியர் இந்நாள்மட்டும் பென்யமீன்புத்திரரோடே கூட எருசலேமிலே குடியிருக்கிறார்கள்.

௨௨ யோசேப்பின் வீட்டாரும் பெத்தேலுக்கேறிப்போனார்கள். கர்த்தர் அவர்களோடே கூடவிருந்தார்.

௨௩ யோசேப்புபுத்திரர் பெத்தேலை வேவுபார்க்கிறவர்களை வைத்தார்கள். அந்தப்பட்டணத்திற்கு முன் லூஸ் என்றுபேரிருந்தது.

௨௪ அந்தவேவுகாரர் பட்டணத்திலிருந்து புறப்பட்ட ஒருமனுஷனைக் கண்டு, அவனிடத்தில், பட்டணத்திற்குட்பிரவேசிக்கும்வழியை எங்களுக்குக் காண்பியேன். உன்னைத் தயவாய் நடப்பிப்போமென்றார்கள்.

௨௫ அப்படியே பட்டணத்திற்குட்பிரவேசிக்கும்வழியை அவர்களுக்குக் காண்பித்தான். அப்போது அவர்கள் பட்டணத்திலிருந்தவர்களைப் பட்டயக் கருக்கால வெட்டி, அந்தமனுஷனையும் அவனுடைய சகல வம்சத்தையும் போகவிட்டார்கள்.

௨௬ அப்போது அந்தமனுஷன் ஏத்தியருடைய தேசத்திற்குப்போய், ஒருபட்டணத்தைக்கட்டி, அதற்கு லூஸ் என்றுபேரிட்டான். இந்நாள்மட்டும் அதுதானே அதின்பேர்.

௨௭ மனாசே கோத்திரத்தார் பெத்செயான்பட்டணத்தாரையும் அதற்கடுத்த ஊர்களின் மனுஷரையும், தானாக்பட்டணத்தாரையும் அதற்கடுத்த ஊர்களின் மனுஷரையும், தோரின்குடிகளையும் அதற்கடுத்த ஊர்களின் மனுஷரையும், இப்லெயாம் பட்டணத்தாரையும் அதற்கடுத்த ஊர்களின் மனுஷரையும், மெகிதோவின்குடிகளையும் அதற்கடுத்த ஊர்களின் மனுஷரையுந் துரத்திவிடாதேபோனார்கள். கானானியர் அந்தத்தேசத்திலே தானே குடியிருக்க வேண்டுமென்றிருந்தார்கள்.

௨௮ இஸ்ரவேல் பலத்துக்கொண்டபோது, அவர்களைத் துரத்தவேதுரத்தாமற் பகுதிகட்டப்பண்ணினார்கள்.

௨௯ எப்பிராயீம் கோத்திரத்தார் கேசெரிலே குடியிருந்த கானானியரைத் துரத்திவிடாமற்போனார்கள். ஆகையால் கானானியர் கேசெரில் அவர்கள் நடுவே குடியிருந்தார்கள்.

௩௰ செபுலோன் கோத்திரத்தார் கித்ரோனின்குடிகளையும் நகலோலின்குடிகளையுந் துரத்திவிடாமற்போனார்கள். ஆகையாற் கானானியர் அவர்கள் நடுவே குடியிருந்து, பகுதிகட்டுகிறவர்களானார்கள்.

௩௧ ஆசேர் கோத்திரத்தார் அக்கோவின் குடிகளையும் சீதோனின் குடிகளையும், அக்லாப், அக்சீப், எல்பா, அபீக்கு, ரேகொப் பட்டணங்களின் குடிகளையுந் துரத்திவிடாமற்போனார்கள்.

௩௨ ஆசேரியர் தேசத்தின்குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள். ஏனென்றால் அவர்களைத் துரத்தாதேபோனார்கள்.

௩௩ நப்தலிகோத்திரத்தார் பெத்சேமேசின்குடிகளையும், பெத்தானாத்தின்குடிகளையுந், துரத்திவிடாதே போய்த் தேசத்தின்குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள். பெத்சேமேஸ், பெத்தானாத் பட்டணங்களின்குடிகள் அவர்களுக்குப் பகுதிகட்டுகிறவர்களானார்கள்.

௩௪ எமோரியர் தாண்புத்திரரை மலைத்தேசத்திலிருக்கத்தக்கதாய் நெருக்கினார்கள். ஏனென்றால் அவர்களைப் பள்ளத்தாக்கில் இறங்கவொட்டாதிருந்தார்கள்.

௩௫ எமோரியர் ஏரேஸ் மலைகளிலும், ஆய்லோனிலும், சால்பீமிலுங் குடியிருக்கவேண்டுமென்றிருந்தார்கள். ஆனாலும் யோசேப்புவீட்டாரின் கைபலத்தபடியினாலே பகுதிகட்டுகிறவர்களாய்ப்போனார்கள்.

௩௬ எமோரியரின் எல்லை அக்கிராபீமுக்குப்போகிறமேடுங்கல்மலையும் முதற்கொண்டு அப்புறம் உயரப்போயிற்று.

௨. அதிகாரம்.

இஸ்ரவேல் தேவகிருபையை நன்றியறியாமற்புரண்டுபோனது.

கர்த்தருடைய தூதனானவர் கில்காலிலிருந்து போகீமுக்கேறிவந்து, சொன்னதாவது, நாம் உங்களை எகிப்திலிருந்தேறப்பண்ணி, நாம் உங்கள்பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் உங்களைக் கொண்டுவந்துவிட்டு, உங்களோடேபண்ணின நம்முடைய உடம்படிக்கையை யொருக்காலும் நாம் முறித்துப்போடுவதில்லையென்றோம்,

௨ நீங்கள் இந்தத்தேசத்தின் குடிகளோடே உடம்படிக்கைபண்ணாமல், அவர்கள்பலிபீடங்களை யிடித்துப்போடக்கடவீர்களென்றுஞ்சொன்னோம். ஆனால் நமதுசொற்கேளாதேபோனீர்கள். இப்படிநீங்கள்செய்ததென்ன?

௩ ஆகையால் நாம் அவர்களையுங்கள் முகத்திற்குமுன்பாகத் துரத்துவதில்லையென்றோம். அவர்களுங்களை நெருக்குவார்கள். அவர்களுடையதேவர்கள் உங்களுக்குக் கண்ணியாமென்றார்.

௪ கர்த்தருடைய தூதனானவர் இந்தவார்த்தைகளை இஸ்ரவேல்புத்திரரெல்லாரோடுஞ் சொல்லுகையிற் சனங்கள் சத்தத்தையுயர்த்தியழுது,

௫ அவ்விடத்திற்குப் போகீமென்றுபேரிட்டு, அங்கேகர்த்தருக்குப்பலியிட்டார்கள்.

௬ ஏனெனில்யோசுவா சனத்தையனுப்பிவிட்டு, இஸ்ரவேல்புத்திரர் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அவரவர் தங்கள் சுதந்தரவீதத்திற்குப்போனபிற்பாடு,

௭ யோசுவாவின் சகல நாளிலுங் கர்த்தர் இஸ்ரவேலுக்காகச்செய்த அவருடைய பெரியகிரியையையெல்லாங்கண்டவர்களும் யோசுவாவுக்குப்பிற்பாடு நாள்நீடித்திருந்தவர்களுமான மூப்பரின் சகல நாளிலுஞ் சனங் கர்த்தரைச்சேவித்தது.

௮ ஆனால் நூனின்குமாரனாகிய யோசுவாவென்ற கர்த்தரின் ஊழியக்காரன் நூற்றுப்பத்துவயதுள்ளவனாய் மரணமடைந்தான்.

௯ அவனை எப்பிராயீமின்மலைத்தேசத்திலே காயாஸ்மலைக்கு வடக்கேயிருக்கிற அவனுடையசுதந்தரத்தின் எல்லையாகிய திம்னாத்தேரேசிலே யடக்கம்பண்ணினார்கள்.

௰ அக்காலத்துச் சந்ததியாரெல்லாருந் தங்கள்பிதாக்களண்டையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டதற்குப்பிற்பாடு கர்த்தரையும் அவர் இஸ்ரவேலுக்காகச்செய்த கிரியையையு மறியாதவேறொரு சந்ததியவர்களுக்குப்பிறகு எழும்பிற்று.

௰௧ அப்போது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து பாகால்களைச்சேவித்து,

௰௨ தங்கள்பிதாக்களை எகிப்துதேசத்திலேயிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய பிதாக்களின் கர்த்தரைவிட்டுத் தங்களைச் சுற்றிலுமிருக்கிற சனங்களுடைய அந்நிய தேவர்களிற் சிலதேவர்களைப் பின்பற்றிப்போய் அவைகளைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக்கோபமுண்டாக்கினார்கள்.

௰௩ அவர்கள் கர்த்தரைவிட்டுப் பாகாலையும் அஸ்தரோத்தையுஞ் சேவித்தார்கள்.

௰௪ அப்போது கர்த்தர் இஸ்ரவேலின் மேற் கோபமுண்டவராகி, அவர்களைக் கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களையொப்புக்கொடுத்து அவர்கள் அப்புறந் தங்கள் சத்துருக்களுக்குமுன்பாக நிற்கக்கூடாதபடியாய் அவர்களைச் சுற்றிலுமிருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார்.

௰௫ கர்த்தர்சொல்லிக் கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியே கர்த்தருடைய கை அவர்கள்புறப்பட்டுப்போகிற இடமெல்லாந் தீமைக்கென்று அவர்களுக்கு விரோதமாயிருந்தது. மிகவும் நெருக்கப்பட்டார்கள்.

௰௬ அவர்களைக்கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கிவிடுகிற நியாயாதிபதிகளைக் கர்த்தர் எழும்பப்பண்ணினாலும்,

௰௭ அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின்சொல்லுங் கேளாமல் அந்நிய தேவர்கள்புறகாலே சோரம்போய் அவைகளைப் பணிந்துகொண்டார்கள். தங்கள்பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை யவர்கள் சீக்கிரமாய் விட்டுவிலகி, அவர்கள்செய்தபடிச் செய்யாதேபோனார்கள்.

௰௮ கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை யெழும்பப்பண்ணுகிறபோது, கர்த்தர் நியாயாதிபதியோடேகூடவிருந்து அந்த நியாயாதிபதியின் நாளெல்லாம் அவர்

ளெல்லாம் சத்துருக்களின்கைக்கு நீங்கலாக்கி இரட்சித்துவருவார். ஏனென்றால அவர்கள் தங்களை நெருக்கிப்பிடித்தொடுக்கினவர்களினிமித்தந் தவிக்கிறதினாலே கர்த்தர் மனஸ்தாபப்படுவார்.

௰௯ அந்த நியாயாதிபதி மரணமடையும்போதோவெனில அவர்கள திருமபி, அந்நியதேவர்களை பின்பற்றவுஞ் சேவிக்கவும் பணிந்துகொள்ளவுந் தங்களபிதாக்களைப்பார்க்கிலுங் கேடாய்நடந்து தங்கள் கிரியைகளையுந் தங்கள கெட்டியான வழியையும் விடாதிருப்பார்கள.

௨௰ ஆகையாற்கர்த்தர் இஸ்ரவேலின மேற்கோபமூண்டவராகிச சொன்னதாவது, இந்தச்சாதி நாம் தங்கள பிதாக்களுக்குக்கற்பித்த நம்முடைய உடமபடிக்கையைமீறி நம்முடையசொற்கேளாதே போனபடியினாலே,

௨௧ நாமும யோசுவா மரித்தப்பின விட்டுப்போனசாதிகளிலொருவனையும இனியவர்களுக்கு முனபாகத துரத்திவிடாதிருப்போம.

௨௨ அவர்களபிதாக்கள கர்த்தரின வழியைக்கவனித்ததுபோல அவர்கள அதிலேநடக்கும்படிக்கு அதைக்கவனிப்பார்களோ இல்லையோவென்று இஸ்ரவேலையவர்களைக்கொண்டு சோதிப்பதற்காகத்தானேயென்றார்.

௨௩ அதற்காகக்கர்த்தர் அந்தச்சாதிகளை யோசுவாவினகையி லொப்புக்கொடாமல, அவைகளைசசீக்கிரமாயத துரத்திவிடாதபடிக்குவிட்டுவைத்தார்.

௩. அதிகாரம்.

கர்த்தர் இஸ்ரவேலை ஒத்னியேல, ஏகூத், சம்காரென்றவர்களின கையினாலேசத்துருக்களின்கைக்கு நீங்கலாக்கிரட்சித்தது.

௧ கானானின சகலயுத்தங்களையும அறியாதிருந்த இஸ்ரவேலராகிய அனைவரையுஞ்சோதிப்பதற்காகவும,

௨ இஸ்ரவேலின்புத்திரரின தலைமுறைகளிலுமுன்பாருமமுதல அவைகளையறியாதிருந்தவர்களுமே அவைகளையறிவதற்காகவும, அவர்களையுத்தமபண்ணப பழக்கிவிடுதற்காகவுங் கர்த்தர் விட்டுவைத்த சாதிகளாரென்றால,

௩ பெலிஸ்தரின ஐந்து அதிபதிகளுங் கானானியருஞ், சீதோனியருமம், பால் எர்மோனதுவக்கி ஆமாத்திற்குட்பிரவேசிக்குமட்டுமலீபனோனின மலைகளிலேகுடியிருக்கிற ஏவியருந்தானே.

௪ கர்த்தர்மோசேயைக்கொண்டு தங்களபிதாக்களுக்குக்கற்பித்த கற்பனைகளுக்கு இஸ்ரவேல் கீழ்ப்படிவார்களோவெனறறிந்து, இஸ்ரவேலரையவர்களாலே சோதிப்பதற்காக அவர்களிருந்துவிட்டார்கள.

௫ இப்படி இஸ்ரவேல புத்திரர்கானானியர் ஏத்தியர் எமோரியர்பெரிசியர் ஏவியர் எபூசியருடையநடுவே குடியிருக்கிறதினாலே,

௬ அவர்களுடைய குமாரத்திகளை விவாகமபண்ணித்தங்களுடைய குமாரத்திகளையவர்கள குமாரருக்குக் கொடுத்து அவர்களதேவர்களைசசேவித்தார்கள.

௭ இப்படி இஸ்ரவேலபுத்திரர்கர்த்தரினபார்வைக்குப பொல்லாப்பானதைச செய்து, தங்களபராபரனாகியகர்த்தரை மறந்து,பாகால்களையுந்தோப்புகளையுஞ சேவிக்கிறபோது,

௮ கர்த்தர் இஸ்ரவேலின்மேற்கோபமூண்டவராகி, அவர்களைமெசொப்பொத்தாமியாவின இராசாவாகியகூசானரிசத்தாயீமினகையிலே விற்றுப்போட்டார். அப்படியே இஸ்ரவேலபுத்திரர் கூசானரிசத்தாயீமை எட்டுவருஷஞ்சேவித்தார்கள.

௯ இஸ்ரவேலபுத்திரர் கர்த்தரைநோக்கிக்கூப்பிடுகிறபோதோவெனறு கர்த்தர் இஸ்ரவேலபுத்திரரையிரட்சிக்கிற ஒருயிரட்சகனாகிய காலேபினதமபியான கேனாசுடையகுமாரனாயிருக்கிற ஒத்னியேலையவர்களுக்கெழுப்பினார்.

௰ அவனமேற்கர்த்தருடைய ஆவிவந்திருக்கையால அவன இஸ்ரவேலைநியாயமவிசாரித்து யுத்தமபண்ணப புறப்பட்டான. அவனகையிலேகர்த்தர்மெசொபபொத்தாமியாவின இராசாவாகியகூசானரிசத்தாயீமை யொப்புக்கொடுத்தார். ஆகையால அவனுடையகை இவனமேலேபலத்துக்கொண்டது.

௰௧ தேசமநாறபதுவருஷம அமர்ந்திருந்தது. கேனாசினகுமாரனாகிய ஒத்னியேலமாணமடைந்தபோதோவெனில,

௰௨ இஸ்ரவேலபுத்திரர் அப்புறங்கர்த்தரின பார்வைக்குப பொல்லாப்பானதைச்செய்தார்கள. அவர்களகர்த்தரின பார்வைக்குப பொல்லாப்பானதைச்செய்கிறபடியினாலேகர்த்தர் எக்லோனென்றமோவாபின இராசாவை இஸ்ரவேலுக்குவிரோதமாகப்பலக்கப்பண்ணினார்.

௰௩ அவன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கியரையுங் கூட்டிக்கொண்டுவந்து, இஸ்ரவேலை முறியடித்தான். பேரீச்சுகளின் பட்டணத்தையும் பிடித்தார்கள்.

௰௪ அப்படியே இஸ்ரவேல் புத்திரர் எக்லோனென்கிற மோவாபின் இராசாவைப் பதினெட்டு வருஷஞ் சேவித்தார்கள்.

௰௫ ஆனால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறபோது கர்த்தர் அவர்களுக்கு எமினியின் குமாரனாகிய கேராவின் மகன் ஏகூத்தென்கிற இரட்சகனை யெழுப்பினார். அவன் இடதுகைவழக்கமானவனாயிருந்தான். அவன் கையிலே இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் இராசாவாகிய எக்லோனுக்குக் காணிக்கையை யனுப்பினார்கள்.

௰௬ ஏகூத்தோவென்றால் இருபுறமுங் கருக்குமாய் ஒருமுழ நீளமுமான ஒரு பட்டயத்தைத் தனக்குண்டாக்கி அதைத் தன் வஸ்திரங்களுக்குட்புறமாகத் தன் வலதுபுறத்திடுப்பிலே கட்டிக்கொண்டு,

௰௭ காணிக்கையை மோவாபின் இராசாவாகிய எக்லோனுக்குச் செலுத்தினான். எக்லோனோவென்றால் மெத்தவுந் தாவித்த மனுஷனாயிருந்தான்.

௰௮ அவன் காணிக்கையைச் செலுத்தித் தீர்ந்தபிற்பாடோவென்றால் காணிக்கையைச் சுமந்துவந்த சனத்தை யனுப்பிவிட்டான்.

௰௯ அவனோவென்றால் கில்காலிலுள்ள சுரூபங்களிருக்குமிடத்திலிருந்து திரும்பிப்போய், இராசாவே! உம்மோடே சொல்லவேண்டிய இரகசியமான வார்த்தையெனக்கிருக்கிறதென்றான். அதற்கவன், பொறுவென்றான். அப்போது அவனண்டை நின்ற யாவரும் அவனைவிட்டு வெளியே போய்விட்டார்கள்.

௨௰ ஏகூத் அவனண்டைக்குட் பிரவேசித்தான். அவனோவென்றால் தனக்குத் தனிப்புறவிருந்த குளிர்த்தியான அறைவீட்டில் உட்கார்ந்திருந்தான். அப்போது ஏகூத் உம்மோடே சொல்லவேண்டிய பராபரனுடைய வார்த்தை யெனக்கிருக்கிறதென்றதற்கவன் ஆசனத்திலிருந்தெழுந்திருந்தான்.

௨௰௧ ஏகூத்தோவென்றால் தன் இடதுகையை நீட்டித் தன் வலதுபுறத்திடுப்பிலே கட்டியிருந்த பட்டயத்தையுருவிக்கொண்டு அதையவன் வயிற்றிற்குட் பாய்ச்சினான்.

௨௰௨ பிடிசுக்கூட அதனோடே கூட உட்புகுந்தது. அவனுடைய வயிற்றிற்குட் போன பட்டயத்தை இவன் வாங்கிப்போடாததினாலே நிணம் அதைச் சுற்றிக்கொண்டடைத்தது. அது அந்தண்டையிலே புறப்பட்டது.

௨௰௩ ஏகூத் கொலுக்கூடத்திலே புறப்பட்டு, அறைவீட்டின் கதவைத் தனக்குப் பின்னாகச் சாத்திப் பூட்டிப்போட்டுப் புறப்பட்டுப்போனான்.

௨௰௪ பிற்பாடு அவனூழியக்காரர் வந்து பார்த்தார்கள். இதோ, அறைவீட்டின் கதவு பூட்டியிருந்தது. ஆகையால் அவர் நிச்சயமாய் அந்தக் குளிர்த்தியான அறையிலே மலசலாதிக்கிருக்கிறாரென்றார்கள்.

௨௰௫ அவர்கள் வெட்கமடையுமட்டுங் காத்திருந்தார்கள். ஆனால் இதோ, அவன் அறைவீட்டின் கதவைத் திறந்ததில்லை; ஆகையால் திறவுகோலை யெடுத்துத் திறந்தார்கள். அப்போது இதோ, அவர்களாண்டவன் தரையிலே செத்துக்கிடந்தான்.

௨௰௬ ஆனால் அவர்கள் தாமசம்பண்ணியிருந்த தருவாயிலே ஏகூத் தப்பிப்போனான். அவன் சுரூபங்களைக் கடந்துபோய்ச் சேயிராத்தைச் சேர்ந்து தப்பினான்.

௨௰௭ அங்கே வந்தபோதோவென்றால் எப்பிராயீம் மலைகளில் எக்காளமூதினான். அப்போது இஸ்ரவேல் புத்திரர் அவனோடேகூட மலைகளிலிருந்திறங்கினார்கள்; அவனிவர்களுக்கு முன்பாக நடந்து,

௨௰௮ அவர்களுடனே, என்னைப் பின்றொடர்ந்துவாருங்கள்; கர்த்தர் மோவாபியரான உங்கள் சத்துருக்களை யுங்கள் கைகளிலொப்புக்கொடுத்தாரென்றான். அவர்கள் அவனைப் பின்றொடர்ந்துவந்து, மோவாபியருக்கு யோர்தானைக் கடக்கத்தக்க துறைகளைப் பிடித்து, ஒருவனையுங் கடக்கவொட்டாமல்,

௨௰௯ அக்காலத்திலே மோவாபியரில் ஏறக்குறையப் பதினாயிரம்பேரை வெட்டினார்கள். அவர்களெல்லாரும் புஷ்டியுள்ளவர்களும் எல்லாரும் பராக்கிரமமனுஷருமாயிருந்தார்கள். அவர்களிலொருவனுந் தப்பினதில்லை.

௩௰ அப்படி அந்நாளிலே மோவாப் இஸ்ரவேலுடைய கையின் கீழ்த்தாழ்த்தப்பட்டது. அதனாலே தேசம் எண்பது வருஷம் அமர்ந்திருந்தது.

௩௰௧ அவனுக்குப் பிற்பாடு ஆனாத்தின் குமாரன் சம்கார் இருந்தான். அவன் பெலிஸ்தரில் அறுநூறுபேரை ஒரு தாற்றுக்கோலாலே முறியடித்து, அவனும் இஸ்ரவேலை யிரட்சித்தான்.

௪. அதிகாரம்.

பிரபல தெபொராளையும் பாறாக்கையுங்கொண்டு இஸ்ரவேலைக் காநானியரினகைக்கு நீங்கலாக்கினது.

௧ ஏகூத் மரணமடைந்த பிறகு இஸ்ரவேல்புத்திரர் திருமபக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்.

௨ ஆகையாற் கர்த்தர் அவர்களை ஆத்சோரிலே அரசாளுகிற யாபீனென்ற கானானுடைய ராசாவின் கையிலே விற்றுப்போட்டார். அவனுடைய சேனாபதி சிசெராவென்பவன். இவன் புறசாதிகளுடைய பட்டணமாகிய அரோசேத்திலே குடியிருந்தான்.

௩ அப்போது இஸ்ரவேல்புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். ஏனெனில் அவனுக்குத் தொளாயிரம் இருப்பு ரதங்களிருந்தது. அவன் இஸ்ரவேல்புத்திரரை இருபது வருஷமட்டும் வலுத்தமாய் ஒடுக்கினான்.

௪ அக்காலத்திலே லபிதோத்தினுடைய மனைவியாகிய தெபொராளென்ற தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்.

௫ அவள் எப்பிராயீமின் மலைத்தேசமாகிய ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவேயிருக்கிற தெபொராளின் பேரீச்சுமரத்தின் கீழே குடியிருந்தாள். அங்கே இஸ்ரவேல்புத்திரர் அவளிடத்துக்கு நியாயத்துக்கென்று போய் வருவார்கள்.

௬ அவள் நப்தலிக் கேதேசிலிருக்கிற அபினோகாமின் குமாரனான பாறாக்கை அழைத்து, அவனோடே சொன்னதாவது: நப்தலிபுத்திரரிலும் செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு தாபோர்மலைக்குப் போகக்கடவாயென்றும்,

௭ யாபீனின் சேனாபதியாகிய சிசெராவையும் அவன் இரதங்களையும் அவன் சேனையையும் கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்துக்கு வரவிழுத்து, அவனை உன் கையிலே ஒப்புக்கொடுப்பேமென்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் கட்டளையிட்டதில்லையோவென்றாள்.

௮ அப்பொழுது பாறாக் அவளை நோக்கி: நீ என்னோடே கூட வந்தால் போவேன்; என்னோடே கூட வராதேயானால், நான் போவதில்லையென்றான்.

௯ அதற்கவள்: உன்னோடே கூட வருவேன். ஆனாலும் நீ போகும் வழியில் உனக்கு மேன்மையுண்டாகாது; ஏனெனில் ஒரு பெண்சாதியின் கையிலே கர்த்தர் சிசெராவை ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி, தெபொராள் எழும்பிப் பாறாக்கோடே கூடக் கேதேசுக்குப் போனாள்.

௰ அப்போது பாறாக் செபுலோனையும் நப்தலியையும் கேதேசுக்கு வரவழைப்பித்துப் பதினாயிரம் பேரோடே போயேறினான். தெபொராளும் அவனோடே கூடப் போயேறினாள்.

௰௧ கேனியனான எபேரோவென்றால், மோசேயின் மாமனாகிய ஓபாபின் புத்திரராயிருக்கிற கேனியரைவிட்டுப் பிரிந்துகொண்டு, தன் கூடாரத்தைக் கேதேசுக்கடுத்திருக்கிற சானாயீமென்னும் கர்வாலிமரங்கள் மட்டும் போட்டிருந்தான்.

௰௨ அபினோகாமின் குமாரனான பாறாக் தாபோர்மலையின்மேல் ஏறினானென்று சிசெராவுக்கு அறிவிக்கப்பட்டபோது,

௰௩ சிசெரா தொளாயிரம் இருப்பு ரதங்களாகிய தன்னுடைய எல்லா இரதங்களையும் தன்னோடிருக்கும் எல்லாச் சனத்தையும் புறசாதிகளின் பட்டணமாகிய அரோசேத்திலிருந்து கீசோன் பள்ளத்தாக்கிலே வரவழைப்பித்தான்.

௰௪ அப்போது தெபொராள் பாறாக்கோடே: எழும்பிப் போ. ஏனெனிற் கர்த்தர் சிசெராவை உன் கையிலே ஒப்புக்கொடுக்கும் நாள் இதுதானே. கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்படவில்லையோவென்றாள். அப்போது பாறாக்கும் அவன் பிறகே பதினாயிரம் பேரும் தாபோர்மலையிலிருந்து இறங்கினார்கள்.

௰௫ கர்த்தர் சிசெராவையும் அந்த எல்லா இரதங்களையும் சேனையனைத்தையும் பாறாக்குக்கு முன்பாகப் பட்டயக்கருக்கினாலே கலங்கடித்தார். சிசெரா இரதத்தை விட்டிறங்கிக் கால்நடையாய் ஓடிப்போனான்.

௰௬ பாறாக் கோவெனில் இரதங்களையுஞ் சேனையையும் புறசாதிகளுடைய அரோசேத்மட்டும் துரத்தினான். சிசெராவின் சேனையெல்லாம் பட்டயக்கருக்கினாலே விழுந்தது. ஒருவனாகிலும் மீதியானதில்லை.

௰௭ சிசெரா கால்நடையாய்க் கேனியனான எபேரின் பெண்சாதியாகிய யாகேலுடைய கூடாரத்துக்கு ஓடிவந்தான். ஏனெனில் யாபீனென்ற ஆத்சோரின் ராசாவுக்கும் கேனியனான எபேரின் வீட்டுக்கும் சமாதானமுண்டாயிருந்தது.

௧௮ அப்பொழுது யாகேல் வெளியே சிசெராவுக்கெதிர்கொண்டுபோய், திரும்பிவாரும், என் ஆண்டவனே! என்னண்டை திரும்பிவாரும், பயப்படீராகவென்று அவனோடே சொன்னாள். அப்படியே கூடாரத்திலிருக்கிற அவளண்டையிலே திரும்பிவந்தான். அவனை ஒரு சமுக்காளத்தினாலே மூடினாள்.

௧௯ சிசெரா அவளுடனே, எனக்குக் கொஞ்சந் தண்ணீர் குடிக்கத்தா. ஏனெனில் நான் தாகமாயிருக்கிறேனென்றான். அவள் பால் துருத்தியைத் திறந்து, அவனுக்குக் குடிக்கக்கொடுத்துத் திரும்ப அவனை மூடினாள்.

௨௦ அப்பொழுது அவன் அவளுடனே, நீ கூடாரவாசற்படியிலே நின்று, யாதொருவன் வந்து இங்கே யாராகிலுமிருக்கிறார்களோ என்று உன்னைக் கேட்டால், இல்லையென்று சொல்லென்றான்.

௨௧ பின்பு ஏபேரின் பெண்சாதியாகிய யாகேல் கூடாரத்து ஆணியையெடுத்துக் கையிலே சுத்தியலைப் பிடித்துக்கொண்டு, மெள்ள அவனண்டையில் வந்து, அவன் நெற்றியிலே அந்த ஆணியையடித்துவிட்டாள். அது உருவிப்போய்த் தரையிலே பதிந்தது. அப்பொழுது ஆயாசமாய்த் தூங்கின அவன் செத்துப்போனான்.

௨௨ பின்பு பாராக் இதோ, சிசெராவைத் துரத்திக்கொண்டு வந்தான். அப்பொழுது யாகேல் வெளியே அவனுக்கெதிர்கொண்டுபோய், வாரும். நீர் தேடுகிற மனுஷனை உமக்குக் காண்பிப்பேனென்று அவனுக்குச் சொன்னாள். அவன் அவளண்டைக்கு வந்தபோது, இதோ, சிசெரா செத்துக் கிடந்தான். ஆணி அவன் நெற்றியிலும் அடித்திருந்தது.

௨௩ இப்படிப் பராபரன் அந்நாளிலே கானானின் ராசாவாகிய யாபீனை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தினார்.

௨௪ இஸ்ரவேல் புத்திரரின் கை கானானின் ராசாவாகிய யாபீனை நிர்மூலமாக்குமட்டும் அவன்மேற் பலத்துக்கொண்டேயிருந்தது.

௫. அதிகாரம்.

தெபொராளும் பாராக்கும் பாடின செயப்பாட்டு.

௧ அந்நாளிலே தெபொராளும் அபினோகாமின் குமாரனாகிய பாராக்கும் பாடினதாவது.

௨ கர்த்தர் இஸ்ரவேலுக்காக நீதியைச் சரிக்கட்டினதற்கும், சனம் மனப்பூர்வமாய்ச் சேர்ந்துகொண்டதற்கும் அவரை இஸ்தோத்திரியுங்கள்.

௩ இராசாக்களே! கேளுங்கள். அதிபதிகளே! செவிகொடுங்கள். நான் நானே கர்த்தரைப்பாடி, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

௪ கர்த்தாவே! தேவரீர் சேயீரிலிருந்து புறப்பட்டு, ஏதோமின் வெளியிலிருந்து நடந்து வருகையில் * பூமி அதிர்ந்தது. வானமுஞ்சொரிந்தது. மேகங்களுந் தண்ணீராய்ச் சொரிந்தது. * சங். ௬௮, ௭. ௮.

௫ கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்கள் கரைந்தது. இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக அந்தச் சீனாய்மலை கரைந்தது.

௬ ஆனாத்தின் குமாரனாகிய சம்காரின் நாட்களிலும் யாகேலின் நாட்களிலும் வழிநடப்புகளொழிந்தது. பாதைகளில் நடப்பவர் கோணலான வழிகளில் நடந்தார்கள்.

௭ தெபொராளாகிய நான் எழும்பி, இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமட்டும், இஸ்ரவேலிலே கிராமங்கள் பாழாகவே பாழாய்ப்போயிற்று.

௮ புதுத்தேவர்களைத் தெரிந்துகொள்ளப்பட்டபோது யுத்தம் வாசல்களுக்குமுன்பாக வந்தது. இஸ்ரவேலிலே நாற்பதினாயிரம் பேருக்குள்ளே கேடகமும் ஈட்டியுங் காணப்பட்டதோ?

௯ சனத்திலே மனப்பூர்வமாயிருந்த இஸ்ரவேலின் நியாயக்காரருக்கு என் இருதயம், கர்த்தரை இஸ்தோத்திரியுங்களென்றது.

௰ வெண்கழுதைகளின்மேலேறுபவர்களே! நியாயஸ்தலத்தில் உட்கார்ந்திருப்பவர்களே! வழியிலும் நடக்கிறவர்களே! இதைத் தியானியுங்கள்.

௧௧ தண்ணீர்த் தொட்டிகளண்டையிலே ஆடுகளைப்பிரிக்கிறவர்களின் சத்தத்தருக்கு அடக்கப்படுகையால் அங்கே கர்த்தரின் நீதிகளைக் குறித்துப் பேசிக்கொள்ளுவார்களாக. அவர் தமது இஸ்ரவேலின் கிராமங்களுக்காகச்செய்த நீதிகளைச் சொல்லுவார்களாக. அதுமுதற் கர்த்தரின் சனம் ஒலிமுகவாசல்களிலே போயிறங்கும்.

௧௨ விழி, விழி, தெபொராளே! விழி, விழி, பாட்டுப்பாடு. பாராக்கே! எழும்பு. அபினோகாமின் குமாரனே! நீ சிறைபிடித்தவர்களைக் கொண்டுபோ.

௧௩ மீதியானவர்கள் இனிச் சனத்திற் பிரஸ்தாபமாயிருந்தவர்களின்மேலே ஆளுவார்கள். எனக்காகக் கர்த்தர் பராக்கிரமசாலிகளின்மேல் ஆளுவார்.

௰௪ அம்லேக்குக்கு விரோதமாக இவர்களுடைய வேர் எப்பிராயீமிலிருந்து துவக்கினது; உன் சனங்களுக்குள்ளே பென்யமீன் உனக்குப்பின் செல்லுகிறான். மக்கீரிலிருந்து நியாயப்பிரமாணிக்கர்களும், செபுலோனிலிருந்து சனத்தைத் திருப்பக்கோல்வசமைப்பிக்கிறவர்களும் இறங்கினார்கள்.

௰௫ இசக்காரிலும் பிரதானமானவர்கள் தெபொராளோடேயிருந்தார்கள். பாருக்கைப்போல, அவன்புறகாலேபோன இசக்கார் மனுஷரும் பள்ளத்தாக்கிலே அனுப்பப்படுகிறபோதான் ரூபெனின் பிரத்தியேகதேசப்பகுதிகளிலோ வென்றால் மனதின் அருத்தத்தினுடைய பெரியவைகளாயிருந்தது.

௰௬ மந்தைகளின் கூக்குரல்களைக் கேட்க நீ தொழுவங்களின் நடுவே யிருந்துவிட்டதென்ன? ரூபெனின் பிரத்தியேகமான தேசப்பகுதிகளிலே அப்படியே நடந்ததுடனார் இருதயவாராய்ச்சிகள் பெரியதாயிருந்தது.

௰௭ கிலெயாத்மனுஷர் யோர்தானுக்கு அக்கரையிலே இருந்துவிட்டார்கள். தாண் மனுஷர் கப்பல்களிலே தங்கித்திரிந்ததென்ன? ஆசேர்மனுஷர் கடற்கூடாவுகளிலே தரித்து உடைப்புண்டுத்தங்களிலே தங்கியிருந்துவிட்டார்கள்.

௰௮ செபுலோனும் நப்தலியும் வெளியின் உயர்ந்தஸ்தலங்களிலே தங்கள் சீவனை மரணமோசத்திற்குள்ளாக்கின சனம்.

௰௯ இராசாக்கள் வந்து யுத்தம்பண்ணினார்கள்; அப்போது கானானின் இராசாக்கள் மெகிதோவின் தண்ணீர்களண்டை தானாக்கிலே யுத்தம்பண்ணினார்கள். வெள்ளித்திரவியம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

௨௰ நட்சத்திரங்கள் வானத்திலிருந்து யுத்தம்பண்ணினது. அவைகள் தங்கள் ஓடங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம்பண்ணினது.

௨௧ கீசோன் ஆறு, பூர்வத்து ஆறாகிய கீசோன் ஆறுதானே அவர்களை அடித்துக்கொண்டுபோயிற்று. என் ஆத்துமமே பலமாய் மிதி.

௨௨ அப்போது தாளையைத் தட்டித்தட்டிப்போகிற குதிரைகளின் குளம்புகள் அங்கே வல்லமையானவர்களைத் தாக்கிப்போட்டது.

௨௩ மேரோசைச் சபியுங்கள். அதின் குடிகளைச் சபிக்கவே சபியுங்களென்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார்; ஏனென்றால் அவர்கள் கர்த்தருக்குச் சகாயமாக வரவில்லை; கர்த்தருக்குச் சகாயமாகப் பராக்கிரமசாலிகளோடே வராதே போனார்கள்.

௨௪ பெண்சாதிகளைப்பார்க்கிலும் கேனியனான ஏபேரின் பெண்சாதியாகிய யாகேல் ஆசீர்வதிக்கப்படுவாளாக. கூடாரத்தில் வாசமான பெண்சாதிகளைப்பார்க்கிலும் ஆசீர்வதிக்கப்படுவாளாக.

௨௫ தண்ணீரைக் கேட்டான், பாலைக் கொடுத்தாள். துரைகளின் கிண்ணியிலே வெண்ணெயைக் கொண்டுவந்தாள்.

௨௬ தன் கையால் ஆணியையும், தன் வலதுகையால் வேலையாட்களின் சுத்தியையும் பிடித்துக்கொண்டு, சிசெராவின் தலையிலே அறையடித்து நசுக்கி, அவனை, அவன் நெற்றியை உருவக்குத்திப்போட்டாள்.

௨௭ அவன் அவள் கால்களின்நடுவே மடங்கிவிழுந்துகிடந்தான். அவள் கால்களின்நடுவே எங்கே முடங்கினானோ அங்கே மடிந்துகிடந்தான்.

௨௮ சிசெராவின்தாய் பலகணியாலே கிராதிகள்வழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்து, அவனுடைய இரதம் வரத் தாமதிக்கிறதென்ன? அவனுடைய இரதங்களின் நடைகள் பிந்தியிருக்கிறதென்னவென்று புலம்பினாள்.

௨௯ அதற்கு அவளுடைய நாயகிகளில் ஞானமுள்ளவர்களும் அவளுடைய வார்த்தைகளுக்கு அவள்தானும் சொன்ன மறுமொழியாவது,

௩௰ அவர்கள் கொள்ளையைக் கண்டுபிடித்துப் பங்கிட்டு, ஆளுக்கு இரண்டொரு சிறுக்கிகளையும், சிசெராவுக்குப் பலவர்ணமான ஆடைகளின் கொள்ளையையும், பலவர்ணமான சித்திரத்தையலாடைகளின் கொள்ளையையும் கொள்ளையிட்ட அவர்களின் கழுத்துகளுக்கு இருபுறமும் சித்திரத்தையலுள்ள பலவர்ணமான ஒவ்வொரு ஆடையையும் கொடுக்கவேண்டாமோ வென்றார்கள்.

௩௧ கர்த்தாவே! உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியழியக்கடவார்கள். அவரைச் சிநேகிக்கிறவர்களோவென்றால் தன் வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போலிருக்கக்கடவதென்பதுதானே. பின்பு தேசம் நாற்பதுவருஷம் அமரிக்கையாயிருந்தது.

௬. அதிகாரம்.

இஸ்ரேலை மீதியானியர் கைக்கு நீங்கலாக்கிவிடுக்கக் கர்த்தர் கிதேயோனை யெழுப்பினது.

௧ பின்பு இஸ்ரவேல்புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களை ஏழுவருஷமாக மீதியானியரின் கையிலே ஒப்புக்கொடுத்தார்.

௨ மீதியானியரின் கை இஸ்ரவேலின் மேலே பலத்துக்கொண்டபடியால் இஸ்ரவேல்புத்திரர் அவர்கள் நிமித்தம் தங்களுக்குப் பர்வதங்களிலுள்ள கெபிகளையுங் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கினார்கள்.

௩ ஏனென்றால் இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும்போது மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப்புத்திரரும் அவர்கள்மேல் எழும்பிவந்து,

௪ அவர்களுக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கிக் காத்சாவின் எல்லைமட்டும் நிலத்தின் பலனைக் கெடுத்துப்போட்டு, இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடு கழுதைகளையாகிலும் வைக்காமற் போவார்கள்.

௫ ஏனெனில் அவர்கள் தங்கள் மிருகஜீவன்களோடுந் தங்கள் கூடாரங்களோடும் வெட்டுக்கிளிகளைப்போலத் திரளாய் வருவார்கள். அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாத திரட்சியாயிருக்கும். இந்தப்பிரகாரமாகத் தேசத்தைக் கெடுத்துப்போட அதிலே வருவார்கள்.

௬ மீதியானியராலே இஸ்ரவேல் மிகவுஞ் சிறுத்துப்போயிற்று. அப்பொழுது இஸ்ரவேல்புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.

௭ இஸ்ரவேல்புத்திரர் மீதியானியர் நிமித்தங் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டுக்கொண்டிருக்கும்போது சொப்பனத்தில்,

௮ கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை யவர்களிடத்துக்கு அனுப்பினார். அவன் அவர்களுக்குச் சொன்னதாவது, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறதென்னவென்றால், நாம் உங்களை எகிப்திலிருந்து வரப்பண்ணி அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படவும் பண்ணி,

௯ எகிப்தியர் கைக்கும் உங்களை யொடுக்கின யாவர் கைக்கும் உங்களை நீங்கலாக்கி விட்டு, இவர்களை யுங்களுக்கு முன்பாகத் துரத்தி, இவர்கள் தேசத்தை யுங்களுக்குக் கொடுத்து,

௰ நாமே உங்கள் பராபரனாகிய கர்த்தரென்றும் நீங்கள் குடியிருக்கும் அவர்களுடைய தேசத்திலுள்ள எமோரியருடைய தேவர்களுக்குப் பயப்படாதேயுங்களென்றும் உங்களுக்குச் சொன்னோம். நீங்களோ நம்முடைய சத்தத்தைக் கேளாமற்போனீர்களென்று சொன்னான்.

௰௧ அதற்குப்பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலியுமரத்தின்கீழ் உட்கார்ந்தார். அப்பொழுது அவனுடைய குமாரனாகிய கிதேயோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலையினிடத்திலே தட்டிப்போட்டான்.

௰௨ கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனையாகி, அவனுடனே கர்த்தர் உன்னோடிருக்கிறார், பலத்த பராக்கிரமனேயென்றார்.

௰௩ அப்பொழுது கிதேயோன் அவருடனே, ஆ, என்னுடையவனே! கர்த்தர் எங்களோடிருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிட்டதென்ன? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து வரப்பண்ணினதில்லையோவென்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு மீதியானியர் கைக்கு எங்களை யொப்புக்கொடுத்தாரேயென்றான்.

௰௪ அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப்பார்த்து, இந்த உன்னுடைய பலத்தோடே போ. நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய். நாமுன்னை யனுப்பினதில்லையாவென்றார்.

௰௫ அவனோவென்றால் அவருடனே, ஆ, என்னுடையவரே! எதினாலே நான் இஸ்ரவேலை யிரட்சிப்பேன்? இதோ, மனாசேயில் என் சந்ததி நொய்மையானது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலுஞ் சிறியவனென்றான்.

௰௬ அதற்குக் கர்த்தர் அவனுடனே, நான் உன்னோடே கூடவிருக்கப்போகிறபடியினாலே நீ மீதியானியரை யொரே மனுஷனைப்போலே முறியடிப்பாயென்றார்.

௰௭ அப்பொழுது அவன் சொன்னதாவது, இப்பொழுதும் உம்முடைய கண்களிலே எனக்குத் தயவு கிடைத்ததானால் என்னோடே பேசுகிறவர் தேவரீர் தானென்பதற்கு எனக்கொரு அடையாளத்தைக் காட்டியருளும்.

௧௮ நான் உம்மண்டைக்கென் காணிக்கையைவெளியேகொண்டுவந்து, உமக்கு முன்பாகவைக்குமளவும் இவ்விடம்விட்டகன்றுபோகாதிருமென்றான். அதற்கவர் நீதிரும்பிவருமட்டும் நானிருப்பேனென்றார்.

௧௯ அப்போது கிதெயோன் உள்ளே போய் ஒருவெள்ளாட்டுக்குட்டியையும் ஒருமரக்கால்மாவிலேபுளிப்பில்லா அப்பங்களையுஞ்சேர்மானமாக்கி இறைச்சியை ஒரு கூடையிலேவைத்து, ஆணத்தை ஒருசட்டியிலேவார்த்து, அதைவெளியே கர்வாலிமரத்தின் கீழிருக்கிற அவரண்டைக்குக்கொண்டுவந்துவைத்தான்.

௨௰ அப்போது பராபரனுடைய தூதனவர் அவனுடனே, நீ இறைச்சியையும் புளிப்பில்லா அப்பங்களையு மெடுத்து இந்தக்கல்லின்மேலேவைத்து, ஆணத்தையூற்றென்றார். அவனப்படியே செய்தான்.

௨௧ அப்போது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்தகோலின்நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லா அப்பங்களையுந் தொட்டார். அப்போது அக்கினி கல்லிலிருந்தெழும்பி இறைச்சியையும் புளிப்பில்லா அப்பங்களையும் பட்சித்தது. கர்த்தரின் தூதனோவென்றால் அவன் கண்களுக்கு மறைந்துபோனார்.

௨௨ அப்போது கிதெயோன், அவர் கர்த்தருடைய தூதனென்றுகண்டு, ஆ, கர்த்தராகிய ஆண்டவரே! நான்கர்த்தருடைய தூதனை முகமுகமாய்க்கண்டேனேயென்று சொன்னான்.

௨௩ கர்த்தரோவென்றால் உனக்குச்சமாதானம், பயப்படாதே. நீசாவதில்லையென்று அவனுக்குச்சொன்னார்.

௨௪ அங்கே கிதெயோன் கர்த்தருக்கு ஒருபீடத்தைக்கட்டி கர்த்தர்சமாதானமளிப்பவரென்று அதற்குப்பேரிட்டான். அதின்னும் இந்நாள்வரைக்கும் அபியேஸ்ரியின் ஊராகிய ஒப்பிராவிலிருக்கின்றது.

௨௫ அன்று இராத்திரியிலே கர்த்தர் அவனுக்குச்சொன்னதாவது, நீயுன்தகப்பனுக்கிருக்கிற எருதுகளில் ஏழுவயதான இரண்டாம் எருதைக்கொண்டுபோய் உன்தகப்பனுக்கிருக்கிற பாகாலின்பலிபீடத்தைத்தகர்த்து, அதின்றுகேயிருக்குந் தோப்பைவெட்டிப்போட்டு,

௨௬ இந்த அரணின்கொடுமுடியிலே பாகானை ஒருவிடத்தில் உன்பராபரனாகிய கர்த்தருக்கு ஒருபலிபீடத்தைக்கட்டி அந்த இரண்டாம் எருதைக்கொண்டுவந்து, அதை நீவெட்டிப்போட்டதோப்பினுடையகட்டைவிறகுகளின்மேல் சர்வாங்கதகனமாகப் பலியிடக் கடவாயென்றார்.

௨௭ அப்போது கிதெயோன் தன்வேலையாட்களிற்பத்துப்பேரைச்சேர்த்துக் கர்த்தர் தனக்குச்சொன்னபடியே செய்தான். ஆனால் அதைப்பகலிலேசெய்ய அவன்தன்தகப்பன்வீட்டாருக்கும் அந்த ஊர்மனுஷருக்கும் பயப்பட்டபடியினாலே, அதைஇராவிலே செய்தான்.

௨௮ அந்த ஊர்மனுஷர் காலமே எழுந்திருக்கிறபோது இதோ பாகாலின் பலிபீடந்தகர்க்கப்பட்டதும் அதின்றுகேயிருந்ததோப்பு வெட்டிப்போடப்பட்டதும் கட்டப்பட்டிருந்த பலிபீடத்தின்மேல் அந்த இரண்டாம் எருது பலியிடப்பட்டதுமாயிருக்கிறதையவர்கள்கண்டு,

௨௯ ஒருவரோடொருவர், இந்தக்காரியத்தைச்செய்தவனார் என்றார்கள். கேட்டு விசாரிக்கிறபோது, யோவாசின்மகன் கிதெயோன் இதைச்செய்தானென்றார்கள்.

௩௰ அப்போது ஊரார் யோவாசோடே, உன்மகன் சாகும்படிக்கவனை வெளியேகொண்டுவா. ஏனெனில் அவன் பாகாலின்பலிபீடத்தைத்தகர்த்து, அதின்றுகேயிருந்த தோப்பை வெட்டிப்போட்டானென்றார்கள்.

௩௧ ஆனால் யோவாஸ் தனக்குவிரோதமாக நிற்கிற அனைவருக்கும், நீங்கள் பாகாலுக்காகவழக்காடுவீர்களோ? நீங்கள் அதை இரட்சிப்பீர்களோ? அதற்காகவழக்காடுகிறவன் இந்த அதிகாலமே நாசத்திலேதானே சாகக்கடவான். அது தெய்வமானால் அதுதானேயவன் தன் பலிபீடத்தைத்தகர்த்தநிமித்தம் அதுதானே தனக்காகவழக்காடட்டுமென்றான்.

௩௨ தன் பலிபீடத்தைத் தகர்த்தானென்று பாகால் அவனோடே வழக்காடட்டுமென்றுசொல்லி, அந்நாளிலே அவனுக்கு எருபாகாலென்றுபேரிட்டான்.

௩௩ மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திபுத்திரரும்மெல்லாம் ஏகமாய்க் கூடி, ஆற்றைக்கடந்துவந்து, இஸ்ரவேலென்னத்தாக்கலேபானைய மிறங்கனபோர்தாவெனில,

௩௪ கர்த்தருடைய ஆவி கிதெயோனுக்குப்பலன்கொடுத்தார். அவன் எக்காளமூதி, அபியேஸ்ரியரைத்தப்பிடுத்துக்கொண்டு பின்செல்லும்படிபண்ணி,

௩௫ மனாசேசீமையெங்குந் தாதுபதிகளையனுப்பி, அவர்களையுங் கூப்பிட்டுத் தன்னைப் பின்செல்லப்பண்ணி, ஆசேர் செபுலோனென்கிறவர்கள்சீமைகளிலுந் தாதுபதிகளையனுப்பினான். அவர்களும் அவனுக்கெதிர்கொண்டேறிவந்தார்கள்.

௩௬ அப்போது கிதெயோன்பராபரனோடேசொன்னதாவது, தேவரீர்சொன்னபடியென்கையினாலே இஸ்ரவேலை இரட்சிக்கப்போனால்,

௩௭ இதோ, நானம்பிருள்ள ஒருதோலைப்போர்க்களத்திலேபோடுவேன். பனி தோலின்மேல்மாத்திரம் பெய்து, பூமியெல்லாங்காய்ந்திருந்தால் அப்போது தேவரீர்சொன்னபடி இஸ்ரவேலையென்கையினாலே இரட்சிப்பீரென்பதையறிவேனென்றான்.

௩௮ அப்படியேயாயிற்று அவன்மறுநாட்காலமேயெழுந்திருந்துதோலைக்கசக்கி, அதிலிருந்த பனித்தண்ணீரையொருகிண்ணிநிறையப்பிழிந்தான்.

௩௯ அப்போது கிதெயோன்பராபரனுடனே, நானின்னமொருவிசைமாத்திரம் பேசுவதினால் உமதுகோபம் என்மேற்பற்றியெரியவேண்டாம். தோலினாலே நானின்னம் ஒருவிசை சோதனைபண்ணட்டுமே. தோல்மாத்திரங் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனிபெய்திருக்கவுங்கட்டளையிடுமென்றான்.

௪௦ அப்படியே பராபரன் அன்றிராத்திரிசெய்தார் தோல்மாத்திரங்காய்ந்து பூமியெங்கும் பனிபெய்திருந்தது.

௭. அதிகாரம்.

கிதெயோன்மீதியானியரைச்செயங்கொண்டது.

அப்போது கிதெயோனாகிய எருபாகாலும் அவனோடிருந்த சனமனைத்துங் காலமேயெழுந்துபுறப்பட்டு, ஆரோதென்னுந்நீரூற்றண்டை பாளயமிறங்கினார்கள் மீதியானியரின்பாளயம் அவனுக்குவடக்கேமோரேமேட்டிற்குப்பின்னான பள்ளத்தாக்கிலேயிருந்தது.

௨ அப்போதுகர்த்தர் கிதெயோனோடேசொன்னதாவது, நாம்மீதியானியரைச்சனத்தின்கையிலொப்புக்கொடுக்கிறதற்கு உன்னோடிருக்கிறசனம்மிச்சமாயிருக்கின்றது. என்கையென்னையிரட்சித்ததென்று இஸ்ரவேல் நமக்குவிரோதமாக வீம்புபேசுகிறதற்கிடமாகும்.

௩ ஆகையால் ஆருக்குப்பயமுந்நடுக்கமுண்டோ, அவன்திரும்பிக் கீலேயாத்மலைகளிலிருந்துபறந்துபோகக்கடவனென்று நீ சனத்தின்செவிகளிலேபடக் கூறிவிடென்றார். அப்போது சனத்தில் இருபத்திரண்டாயிரம்பேர் திரும்பிப் பதினாயிரம்பேர் மீதியாயிருந்தார்கள்.

௪ கர்த்தர் கிதெயோனோடே, சனம் இன்னம் மிச்சமாயிருக்கின்றது. அவர்களைத் தண்ணீரண்டைக்கிறங்கிப்போகப்பண்ணு. அங்கே அவர்களையுனக்குப்பரிட்சைகாட்டுவோம். உன்னோடேகூடவரட்டுமென்று நாம் குறித்து உன்னோடே சொல்லுவோமே அவன் உன்னோடேகூடவருவானாக. ஆனால்உன்னோடேகூடவரவேண்டாமென்று நாமுன்னோடே சொல்லப்போகிற அனைவரும் உன்னோடேகூடவராதிருப்பார்களாகவென்றார்.

௫ அப்படியே சனத்தைத் தண்ணீரண்டைக்கிறங்கப்போகப்பண்ணினான். அப்போதுகர்த்தர் கிதெயோனுடனே, தண்ணீரை நாயைப்போல நக்கிக் குடிக்கிறவனையும், முழங்கால்படியிட்டுக்குடிக்கிறவனையும் நீ தனித்தனியே பிரித்துவைக்கக்கடவாயென்றார்.

௬ அப்போது தங்கள்கைகளாலே தண்ணீரை அள்ளி வாயிலேவைத்து நக்கினவர்கள் முந்நூறுபேராயிருந்தார்கள். மற்றச்சனமெல்லாந் தண்ணீர்குடிக்கிறதற்கு முழங்கால்களை ஊன்றிக்குனிந்தது.

௭ அப்போதுகர்த்தர் கிதெயோனுடனே, நக்கிக்குடித்த அந்தமுந்நூறுபேராலே நாமுங்களையிரட்சித்து, மீதியானியரையுன்கையிலொப்புக்கொடுப்போம். மற்றச்சனமெல்லாந்தங்கள்தங்கள் இடந்திற்குப்போகக்கடவதென்றார்.

௮ அப்போது சனந் தவசத்தையும் எக்காளங்களையுந்தங்கள் கையிலேந்திக்கொண்டார்கள். மற்ற இஸ்ரவேலரெல்லாந்தங்கள்தங்கள்கூடாரங்களுக்கனுப்பி, அந்தமுந்நூறுபேரை வைத்துக்கொண்டான். மீதியானியரின்பாளயமோவெனில் அவனுக்குத்தாழ்விடமானபள்ளத்தாக்கிலிருந்தது.

௯ அன்று இராத்திரி சம்பவித்ததேதெனில்கர்த்தர் அவனோடேசொன்னதாவது, நீயெழுந்துபாளயத்திற்கிறங்கிப்போ. ஏனெனில் அதையுன்கையிலொப்புக்கொடுத்தோம்.

௰ இறங்கிப்போகப் பயமாயிருந்தால் நீயும் உன்வேலைக்காரனாகிய பூராவுமாய்ப் பாளயத்துக்கு இறங்கிப் போய்,

௧௧ அவர்களென்னபேசுகிறார்களென்று கேள். பிற்பாடு பாளயத்துக்கு இறங்கிப் போக உன்கைகள் திடப்படுமென்றார். அப்படியே அவனும் அவன்வேலைக்காரனாகிய பூராவும் பாளயத்தின்முகனையிலே சாமக்காரரிருக்கிற இடமட்டும் இறங்கிப்போனார்கள்.

௧௨ மீதியானியரும் அமலேக்கியரும் சகல கிழக்கத்திப்புத்திரரும் வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய்ப் பள்ளத்தாக்கிலே படுத்திருந்தார்கள். அவர்களுடைய ஒட்டகங்களுக்கும் இலக்கமில்லை. கடற்கரைமணலத்தனை திரட்சியாயிருந்தது.

௧௩ கிதேயோன் வந்தபோது இதோ, ஒருவன் ஒருவனுக்குச் சொப்பனத்தை விரித்துச்சொன்னவனாகிய இதோ, ஒரு சொப்பனங்கண்டேன். இதோ, சுட்டிருந்த ஒரு வாற்கோதுமை யப்பம் மீதியானின் பாளயத்திலே உருண்டுவந்து, கூடாரமட்டும் வந்தபோது, அதை விழுத்தடிக்கத்தக்கதாய் மேலாகப்போட்டது. அப்படியேகூடாரம் விழுந்து கிடந்ததென்றான்.

௧௪ அப்போது மற்றவன் பிரதியுத்தரமாக, இது யோவாசின் குமாரனாகிய கிதேயோனென்ற இஸ்ரவேலனுடைய பட்டயமேயல்லாமல் மற்றப்படியல்ல. பராபரன் மீதியானியரையும் இந்தப் பாளயம் அனைத்தையும் அவன்கையிலே ஒப்புக்கொடுத்தாரென்றான்.

௧௫ கிதேயோன் அந்தச்சொப்பனத்தையும் அதின் வியார்த்தியானத்தையும் கேட்டபோது, அவன் பணிந்துகொண்டு, இஸ்ரவேலின் பாளயத்திற்குத் திரும்பிவந்து எழுந்திருங்கள். ஏனென்றால் கர்த்தர் மீதியானின் பாளயத்தை உங்கள் கையிலே ஒப்புக்கொடுத்தாரென்று சொல்லி,

௧௬ அந்த முந்நூறுபேரையும் மூன்றுபடையாக வகுத்து, அவர்களெல்லார் கையிலும் எக்காளங்களையும் வெறும்பானைகளையும் அந்தப் பானைகளுக்குள்ளே தீவட்டிகளையும் கொடுத்து,

௧௭ அவர்களை நோக்கி, நான் செய்வதைப் பார்த்து அப்படியே செய்வீர்களாக. இதோ, நான் பாளயத்தின் முகனையிலே வந்திருக்கும்போது எப்படிச் செய்வேனோ அப்படிச் செய்வீர்களாக.

௧௮ நானும் என்னோடிருக்கிற சகல மானபேரும் எக்காளமூதும்போது நீங்களும் பாளயத்தைச் சுற்றிலுமிருந்து எக்காளங்களை ஊதிக் கர்த்தருடையதும் கிதேயோனுடையதுமென்பீர்களாகவென்று சொன்னான்.

௧௯ நடுச்சாமத்துவக்கத்தில் சாமக்காரர் நிறுத்தப்பட்டவுடனே கிதேயோனும் அவனோடிருந்த நூறுபேரும் அந்தச் சாமத்தின் துவக்கத்திலே பாளயத்தின் முகனையிலே வந்து, எக்காளங்களை ஊதித் தங்கள் கைகளிலிருந்த பானைகளை உடைத்தார்கள்.

௨௰ மூன்றுபடைகளின் மனுஷரும் எக்காளங்களை ஊதிப் பானைகளை உடைத்து, தீவட்டிகளைத் தங்கள் இடது கைகளிலும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கர்த்தருடையதும் கிதேயோனுடையதுமான பட்டயமென்று கூப்பிட்டு,

௨௧ பாளயத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நின்றார்கள். அப்போது பாளயத்திலிருந்தவர்களெல்லாரும் ஓடித்திரிந்து, கூக்குரலிட்டு, ஓடிப்போனார்கள்.

௨௨ முந்நூறுபேரும் எக்காளங்களை ஊதுகையில் கர்த்தர் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாகப் போகப்பண்ணினார். பாளயத்தின் சேனையானது பெத்சித்தாசேரொத்தாமட்டுக்கும், தாபாத்துக்கிட்டவிருக்கிற ஆபேல்மேகொலாவின் எல்லைமட்டுக்கும் ஓடிப்போயிற்று.

௨௩ அப்பொழுது நப்தலிமனுஷரும் ஆசேர்மனுஷரும் மனாசேயின் சகல மனுஷருமாகிய இஸ்ரவேலர் அழைப்பிக்கப்பட்டுவந்து, மீதியானியரைப் பின்தொடர்ந்துபோனார்கள்.

௨௪ கிதேயோன் எப்பிராயீம் மலைகளெங்கும் தூதரை அனுப்பி, நீங்கள் மீதியானியருக்கு எதிராக இறங்கி, பெத்தாபாராமட்டுக்கும் யோர்தான்மட்டும் வந்து தண்ணீராகிய துறைகளைப் பிடித்துக்கொள்ளுங்களென்று சொல்லச்சொன்னான். அப்படியே எப்பிராயீமின் மனுஷரெல்லாரும் அழைப்பிக்கப்பட்டுப் பெத்தாபாராமட்டுக்கும் யோர்தான்மட்டும் வந்து, தண்ணீராக்கட்டிக்கொண்டு,

௨௫ மீதியானியரின இரண்டு அதிபதிகளாகிய ஒரேபையுஞ சேபையுமபிடித்து, ஒரேபை ஒரேப் என்னப்பட்டகன்மலையிலுஞசேபைச்சேப்என்னபபட்ட ஆலையிலுங்கொன்றுபோட்டுமீதியானியரைத துரத்தி, ஒரேப்சேப்பென்றவர்களின தலைகளை யோர்தானுக்கக்கரையிலிருந்து கிதெயோனண்டைககுககொணடுவநதார்கள.

௮. அதிகாரம்.

அப்பாலும் மீதியானியரைச செயித்தகிதெயோனின நடபடிகள.

அபபோது எபபிராயீம்மனுஷர் அவனுடனே, நீமீதியானியர்மேல யுத்தமபண்ணபபோகிறபோது எஙகளையழைபபிக்காதேபோன இநதக்காரியததை நீ யெஙகளுககுச செயதததென்னவென்று, அவனோடேமகாவாககுவாதம பணணினார்கள.

௨ அவனேவென்றால அவர்களோடே சொன்னதாவது, நீஙகளசெயததற்கொத்த எநதக்காரியத்தைநான் இபபோது செயதேன? அபியேஸரியரின திராட்சிபபழ அறுபபைபபார்க்கிலுமஎபபிராயீமியரின பின்னறுபபுத் தாவிலையல்லவோ?

௩ உஙகளகையிலே பர்ாபர்னமீதியானியரின அதிபதிகளாகிய ஒரேபையுஞ சேபையும ஒபபுககொடுத்தாரே; நீஙகளசெயததற்கொத்த எநதக்காரியததைச செயய எனககுககூடிற றென்றான. இநதவார்த்தையையவன சொனனபோது அவனமேலிருநதஅவர்களுடையகோபம ஆறிறறு.

௪ கிதெயோன யோர்தானுககு வநதபோது அவனும அவனோடிருநதமுநநூறுபேருமதைக்கடந்துபோய, விடாயததிருந்துஞசததுருவைப பினதொடர்நது கொணடிருநதார்கள.

௫ அவனசுக்கோததின மனுஷருககு, எனகீழிருககிறசனததிறகுசசில அபபஙகளைககொடுஙகளேன? அதேனெனிலவிடாயததிருககிறார்கள. நானமீதியானியரின இராசாக்களாகிய சேபாகையுஞசல்மூனாவையுமபினதொடருகிறவனென்றான.

௬ சுககோததின பிரபுக்களோவென்றால, உன் இராணுவததிற்குநாஙகள அபபஙகொடுககறதறகுச்சேபாக்சல்மூனாவென்றவர்களின உள்ளஙகைகள் அபபோதே உனகைவசமாகததிர்நததோவென்றார்கள.

௭ அபபோதுகிதெயோன அவர்களுடனே கர்த்தர்சேபாகையுஞசல்மூனாவையும எனகையிலொபபுககொடுத்தபோது உஙகளமாம்சததைவனாநதிரததின முளளுக்களாலுமநெரிஞசிலகளாலுமகிழிததுபபோடுவேனென்றுசொலலி,

௮ அவவிடமவிட்டுப பெனூவேலுக்குபபோயேறி அவவூராரோடே அநதபபடிசசொன்னான. ஆனாலசுககோததினமனுஷர்பிரதியுத்தரமாகச சொனனபடியேபெனூவேலினமனுஷரும அவனுக்குச்சொனனார்கள.

௯ அபபோது அவனபெனூவேலினமனுஷரோடும, நான்சமாதானததோடே திருமபிவருமபோது இநதக் கோபுரததைபிடிததுபபோடுவேனென்றான.

௰ சேபாகுஞசல்மூனாவும அவர்களோடுஙகூட ஏறககுறைய பதினையாயிரம்பேராகிய அவர்களுடைய சேனைகளுமோ கர்க்கோரிலிருநதார்கள. கிழக்கத்தியாரினசகல இராணுவததினுமமீதியானவர்களெலலாம அவர்களதான ஏனெனிற்படடையம உருவததக்கநூற்றிருபதினாயிரமபேர்விழுநதார்கள.

௰௧ கிதெயோன கூடாரஙகளிலேகுடியிருககிறவர்களவழியாய நோபாகுக்கும யொகிபெயாவுககுங கிழககேபோயேறி அநத இராணுவததை முறியடித்தான. ஏனெனில அநத இராணுவம நிர்விசாரமாயிருநதது.

௰௨ சேபாகுஞ சல்மூனாவும ஓடிப்போனார்கள. அவனோவென்றால அவர்களைத துரததிச்சேபாக்சல்மூனாவென்றமீதியானியரின இரண்டு இராசாககளைபபிடிததது, இராணுவததையெலலாஙகலஙகடித்தான.

௰௩ யோவாசின குமாரனாகிய கிதெயோனயுத்தமபணணிச சூரியனுதிக்காததறகுமுனனேதிருமபிவநதபோது,

௰௪ சுக்கோததினமனுஷரில ஒருவ வாலிபனைபபிடிதது அவனைககேட்டான. இவனசுக்கோததினபிரபுக்களும அதின மூப்பருமாகிய எழுபததேழுபேரை யவனுககெழுதிககொடுத்தான.

௰௫ அவன சுககோததின ஊரார்ணடைககுவநது இதோ, விடாயததிருககிற உனமனுஷருககுநாஙகள அபபஙகொடுககறதறகுச்சேபாக்சல்மூனாவென்றவர்களின உள்ளஙகைகள அபபோதே உனகையிலிருககிறதோவென்று நீஙகள என்னைநிநதிததுச்சொன்னசேபாகுஞ சல்மூனாவுமஇஙகேயிருககிறார்களென்றுசொலலி,

௰௬ பட்டணத்தின் மூப்பரைப்பிடித்து, வனாந்திரத்தின் முள்ளுகளையும் நெரிஞ்சில்களையும் எடுத்துக்கொண்டு அவைகளாற்சுக்கோத்தின் மனுஷருக்குச்சொரணைப்பண்ணி,

௰௭ பெனுவேலின் கோபுரத்தையும் இடித்து, அவ்வூர்மனுஷரைக் கொன்று போட்டான்.

௰௮ பிறபாடு அவன்சேபாகோடுஞ்சல்முனாவோடே, நீங்கள்தாபோரிலேகொன்றுபோட்ட அந்தமனுஷர் எத்தன்மையாயிருந்தார்களென்றான். அதற்கவர்கள் அவர்கள் உம்மைப்போலும் அவரவர்பார்க்கவராஜகுமாரரைப் போலுமிருந்தார்களென்றார்கள்.

௰௯ அப்போது அவன், அவர்களென் தாயாரின்பிள்ளைகளாகிய என்னுடைய சகோதரர்களாயிருந்தார்கள். அவர்களை உயிரோடேவைத்திருந்தீர்களானால் உங்களைக் கொல்லாதிருப்பேனென்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டுசொல்லுகிறேனென்று சொல்லி,

௨௰ தன் மூத்தகுமாரனாகிய எத்தேருக்கு, நீயெழுந்து அவர்களைக் கொன்றுபோடென்றான். ஆனால் அந்தப்பிள்ளையாண்டானப்படுகிறதினாலே தன்பட்டயத்தைஉருவாதேபோனான். ஏனெனில் இளைஞனாயிருந்தான்.

௨௰௧ அப்போது சேபாவுஞ்சல்முனாவும், நீர்தானெழுந்து எங்கள்மேலவிழும். மனுஷனெப்படியோ அப்படி அவன்பெலனுமிருக்குமென்றார்கள். அப்படியேகிதெயோன் எழுந்துசேபாவைஉஞ்சல்முனாவையுங் கொன்று போட்டு, அவர்கள் ஒட்டகங்களின்கழுத்துகளிலிருந்தசந்திரக்கலைகளை யெடுத்துக் கொண்டான்.

௨௰௨ அப்போது இஸ்ரவேலமனுஷர் கிதெயோனுடனே, நீரெங்களைமீதியானியர்கைக்குநீங்கலாக்கிவிட்டபடியினாலே நீரும் உம்முடையகுமாரனும் உம்முடைய குமாரனின்குமாரனும் எங்களையாளக்கடவீர்களென்றார்கள்.

௨௰௩ கிதெயோனோவென்றால் அவர்களுடனே, நான் உங்களையாளுவதுமில்லை என்குமாரன் உங்களை யாளுவதுமில்லை. கர்த்தர் உங்களையாளுவாராகவென்றான்.

௨௰௪ பிறபாடுகிதெயோன் அவர்களுடனே, உங்களை ஒருகாரியத்தைக் கேட்கிறேன். நீங்கள் அவரவர்கொள்ளையிட்டகடுக்கன்களை எனக்குத் தாருங்களென்றான். ஏனெனில் அவர்கள் இஸ்மாவேலராயிருந்தபடியினாலே அவர்களுக்குப்பொன்கடுக்கன்களிருந்தது.

௨௰௫ கொடுக்கவே கொடுப்போமென்று அவர்கள்சொல்லி, ஒரு வஸ்திரத்தை விரித்து, அங்கே அவரவர்கொள்ளையிட்டகடுக்கன்களைப்போட்டார்கள்.

௨௰௬ பிறைசந்திரசாரங்களையும் ஆரங்களையும்மீதியானியரின் இராசாக்கள்போர்த்துக்கொண்டிருந்த இரத்தாம்பரவஸ்திரங்களையும் அவர்களுடைய ஒட்டகங்களின்கழுத்துகளிலிருந்த சரப்பளிகளையுந்தவிர அவன்கேட்டுவாங்கினபொன் கடுக்கன்களின்நிறை ஆயிரத்தெழுநூறுபொன்சேக்கலின்நிறையாயிருந்தது.

௨௰௭ அதினாலேகிதெயோன் ஒரு ஆசாரியசால்வையையுண்டாக்கி, அதைத்தன்னூராகிய ஒப்பிராவிலேவைத்தான். ஆனால் இஸ்ரவேலரெல்லாம் அங்கே அதின்பிறகாலே சோரம்போனார்கள். அது கிதெயோனுக்கும் அவன்வீட்டாருக்குங்கண்ணியாயப்போயிற்று.

௨௰௮ இந்தப்பிரகாரமாகமீதியானியர் தங்கள்தலையைத்திரும்ப எடுக்கக்கூடாதபடிக்கு இஸ்ரவேலபுத்திரருக்குமுன்பாகத்தாழ்த்தப்பட்டார்கள். தேசமானது கிதெயோனின்நாட்களில் நாற்பதுவருஷம் அமர்ந்திருந்தது.

௨௰௯ யோவாசின்குமாரனாகிய எருப்பாகாலபோயத்தன்வீட்டிலேகுடியிருந்தான்.

௩௰ கிதெயோனுக்கு அவனுடையகெர்ப்பப்பிறப்பான எழுபது குமாரரிருந்தார்கள். ஏனெனில் அவனுக்கு அநேகம் பெண்சாதிகளிருந்தார்கள்.

௩௰௧ சீகேமிலிருந்த அவனுடையவைப்பாட்டியும் அவனுக்கு ஒருகுமாரனைப்பெற்றாள். அவனுக்கு அபிமெலேகென்றுபேரிட்டான்.

௩௰௨ பிறபாடு யோவாசின்குமாரனாகிய கிதெயோன் நல்லவிருத்தாப்பியத்திலே மரித்து, ஒப்பிராவிலே தன் தகப்பனாகிய யோவாசென்ற அபியேஸ்றியனுடையகல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான்.

௩௰௩ கிதெயோன்மரித்தபின் சம்பவித்ததேதென்றால், இஸ்ரவேல புத்திரர் திரும்பிக்கொண்டு பாகால்களின் புறகாலே சோரம்போய்ப்பாகால் பேரீத்தைத்தங்களுக்குத்தேவனாகவைத்தார்கள்.

௩௰௪ சுற்றிலுமிருந்த தங்கள் எல்லாச்சத்துருக்களின்கைக்குத்தங்களைத்தப்புவித்தவராகிய கர்த்தரை நினையாமலும்,

௩௫ கிதெயோனென்ற எருபபாகால இஸ்ரவேலுககுச செயத சகல நனமைக குத்தககதயவை அவன வீட்டாருககு நடபபியாமலுமபோனர்கள.

௯. அதிகாரம்.

அபிமெலேக் தனசகோதரரைககொனறு போட்டு அடைநத ஆக்கினை.

எருபபாகாலின குமாரன அபிமெலேக் சீகேமிலிருககிற தனதாயின் சகோதரர்ணடைககுபபோய அவர்களோடுந் தன தாயினுடைய தகபபனின வீட்டுவம்சமான அனைவரோடுமபேசி,

௨ எழுபதுபேராகிய எருபபாகாலின குமார்ரெலலாம உஙகளையாளுவது உஙகளுககு நலலதோ? ஒருவன உஙகளையாளுவது உஙகளுககு நலலதோவெனறு நீஙகள சீகேமிலிருககிற எலலாப பெரியமனுஷரின காதுகளுககுமுனபாகபபேசிநான உஙகள எலுமபும உஙகள மாம்சமுமானவன எனகிறதை நினையுஙகளெனறான.

௩ அபபடியே யவனுடைய தாயின சகோதரர் சீகேமிலிருககிற எலலாபபெரியமனுஷரின காதுகளுககுமுனபாக இநதவார்த்தைகளை யெலலாம அவனுககாகபபேசினார்கள. அபபோது அவன நமமுடையசகோதரனெனறு அவர்கள சொனனதினாலே, அவர்களிருதயம அபிமெலேககுககுபபினனாககச சாயநதுபோயிறறு.

௪ அவர்கள பாகால்பேரீததினவீட்டில எழுபதுவெளளிககாசையெடுதது அவனுககுக கொடுததார்கள. அவைகளால அபிமெலேக் வீணருஞ சண்டாளருமான மனுஷரை வேலைகொணடான. அவர்கள அவனுககுபபினசெனறார்கள.

௫ அவன ஒபபிராத்திலிருககிற தனதகபபன வீட்டிற்கு வநது, எருபபாகாலின குமார்ராகிய தனசகோதரர் எழுபதுபேரையுமஒரேகலலின்மேலேகொனறான. ஆனால எருபபாகாலின இளையகுமாரனாகிய யோதததான ஒளித்திருநதபடியினாலே மீதியானான.

௬ பிறபாடு சீகேமிலிருககிற எலலாப பெரிய மனுஷருமமிலலோவின வீட்டார் அனைவருஙகூடிககொணடுபோயசசீகேமிலிருககிற உயர்நத கர்வாலியு மரத்தண்டையிலே அபிமெலேகை இராசாவாககினார்கள.

௭ இதுயோதததாமுககறிவிககபபட்டபோது அவனபோய்க்கெரிசீம மலையின கொடுமுடியிலேநினறு தன்சத்தத்தை யுயர்த்திக் கூபபிட்டு, அவர்களுககுச சொனனதாவது, சீகேமின பெரியமனுஷரே! பராபரன உஙகளையுங கேட்பதற்காகவெனனைக்கேளுஙகள.

௮ விருட்சஙகளதஙகளமேல் ஒரு இராசாவைவைதது, அபிஷேகமபணணபபோய், ஒலிவமரத்தோட்டே, எஙகளமேல இராசாவாயிருவெனறது.

௯ ஆனால ஒலிவமரம அவைகளோட்டே தேவர்களும மனுஷருமபுகழுகிற எனனிலுளள எனனுடையபுஷ்டியை நான்விட்டு, மரஙகளினமேல அசையபபோவேனோவெனறது.

௰ அபபோதுமரஙகளானது அததிமரத்தோட்டே, நீவநது எஙகளமேல இராசாவாயிருவெனறது.

௰௧ ஆனால் அததிமரம அவைகளோட்டே, எனனுடையமதுரததையும எனனுடையநற்கனியையும நான்விட்டு, மரஙகளினமேல அசையபபோவேனோ வெனறது.

௰௨ அபபோது மரஙகள்திராட்சச்செடியோட்டே, நீவநது எஙகளமேல் இராசாவாயிருவெனறது.

௰௩ ஆனால திராட்சச்செடி அவைகளோட்டே, தேவர்களையும மனுஷரையும மகிழ்ச்சியாககுகிற எனனுடைய இரசத்தைநானவிட்டு மரஙகளினமேல அசையபபோவேனோவெனறது.

௰௪ அபபோது சகலமரஙகளுமமுட்செடியோட்டே, நீவநது எஙகளமேல இராசாவாயிருவெனறது.

௰௫ முட்செடியானதுமரஙகளுடனே, நீஙகளெனனை உஙகளமேல இராசாவாக அபிஷேகமபணணுகிறது மெயயானால், எனநிழலிலே வநதடையுஙகள. இலலாவிட்டால் முட்செடியிலிருநது அககினிபுறபபட்டு லீபனோனின கேதுருமரஙகளைப பட்சிக்கக்கடவதெனறது.

௰௬ எனதகபபன உஙகளுககாகயுத்தமபணணித் தன்சீவனை யெணணாமற்போய் உஙகளை மீதியானியரின கைக்கு நீஙகலாககிவிட்டார்.

௰௭ நீஙகளோவெனறால இனறு எனதகபபனுடைய வீட்டுககு விரோதமாயெழும்பி, அவர்குமார்ரான எழுபதுபேரையுமஒரே கலலினமேலே கொனறுபோட்டு, அவனவேலைககாரியின மகனான அபிமெலேக் உஙகள சகோதரனானபடியினாலேயே அவனைச்சீகேமபட்டணத்தார்மேலே இராசாவாககினீர்கள.

௰௮ இப்போதும் நீங்கள் அவனை இராசாவாக்கினசெய்கை உண்மையோடும் உத்தமத்தோடுங் கூடிய செய்கையாயிருக்கிறதும்,

௰௯ நீங்கள் எருப்பாகாலையும் அவர் வீட்டாரையும் நலமாக நடத்தி, அவர் கைகள் செய்த உதவிக்குத் தக்கதை அவருக்குச் செய்து, இப்படியே இந்நாளிலே அவரையும் அவர் வீட்டாரையும் நடத்தின துண்மையும் உத்தமுமாயிருக்கிறதுமுண்டானால், அபிமெலேக்கினாலே நீங்கள் சந்தோஷமாயிருங்கள். உங்களாலே அவனும் சந்தோஷமாயிருப்பானாக.

௨௰ இல்லாவிட்டால் அபிமெலேக்கிலிருந்து அக்கினி புறப்பட்டுச் சீகேமின் பட்டணத்தாரையும் மில்லோவின் வீட்டாரையும் பட்சிக்கக்கடவது; சீகேமின் பட்டணத்தாரிலும் மில்லோவின் வீட்டாரிலுமிருந்து அக்கினி புறப்பட்டு அபிமெலேக்கைப் பட்சிக்கக்கடவதென்று யோதாம் சொல்லி,

௨௧ ஓடித் தப்புவித்துக் கொண்டு, பேயேருக்குப் போய், அங்கே தன் சகோதரனாகிய அபிமெலேக்குக்கு விலகிக் குடியிருந்தான்.

௨௨ அபிமெலேக் இஸ்ராவேலை மூன்று வருஷங் கொண்டபோதெனில்,

௨௩ அபிமெலேக்குக்கும் சீகேமின் பட்டணத்தாருக்கும் ஆகாதே போகும் ஆவியைப் பரபரன் அவர்களுக்குள்ளே வரப்பண்ணினார்.

௨௪ எருப்பாகாலின் எழுபது குமாரருக்குச் செய்யப்பட்ட கொடுமை தந்து வந்து, அவர்களுடைய இரத்தப்பழி அவர்களைக் கொன்ற அவர்களுடைய சகோதரனாகிய அபிமெலேக்கின் மேலும், தன் சகோதரரைக் கொல்லக் கைகளை அவனுக்குத் திடப்படுத்தின சீகேம் மனுஷர் மேலும் வரும்படியாகச் சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்குக்கு இரண்டகம் பண்ணினார்கள்.

௨௫ மலைகளுடைய சிகரங்களின் மேல் அவனுக்குப் பதிவிருக்கிறவர்களை வைத்தார்கள். இவர்கள் தங்களருகே வழியிலே கடந்துபோகிற யாவரையுங் கொள்ளையிட்டார்கள், அது அபிமெலேக்குக்கு அறிவிக்கப்பட்டது.

௨௬ ஏபேதின் குமாரனாகிய காகாலும் அவன் சகோதரரும் வந்து சீகேமுக்குப் போனார்கள். சீகேமின் பெரிய மனுஷர் அவனை நம்பி,

௨௭ வெளியே புறப்பட்டுத் தங்கள் திராட்சத்தோட்டங்களின் பழங்களை அறுத்து, ஆலையாடிப் புகழ்ச்சியான பாட்டுக்களைப் பாடித் தங்கள் தேவனின் வீட்டிற்குட் போய்ப் போசித்துக் குடித்து, அபிமெலேக்கைச் சபித்தார்கள்.

௨௮ ஏபேதின் குமாரனாகிய காகால் சொன்னதாவது, அபிமெலேக்கை நாங்கள் சேவிக்க அவனார்? அவனைச் சேவிக்கச் சீகேமெனப்பவனார்? அவன் எருப்பாகாலின் மகனும் சேபூலென்பவன் அவன் காரியக்காரனுமல்லவோ? சீகேமின் தகப்பனான ஏமோரின் மனுஷரையே சேவியுங்கள். அவனை நாங்கள் சேவிப்பதென்ன?

௨௯ அபிமெலேக்கை நான் விலக்கிப் போட இந்தச் சனம் என் கையின் கீழிருந்தாலதாவினையென்றான். ஆனால் அபிமெலேக்குக்கு. உன் சேனாசேனையைப் பெருகப் பண்ணிப் புறப்படுவாயென்று சொல்லப்பட்டது.

௩௰ அந்தப் பட்டணத்தின் அதிகாரியாகிய சேபூல் ஏபேதின் குமாரனாகிய காகாலின் வார்த்தைகளைக் கேட்டபோது கோபமூண்டவனாகி,

௩௧ இரகசியமாய் அபிமெலேக்கண்டைக்குத் தூதுபதிகளையனுப்பி, இதோ, ஏபேதின் குமாரனாகிய காகாலும் அவன் சகோதரரும் சீகேமுக்கு வந்திருக்கிறார்கள். இதோ, பட்டணத்தை யுமக்கு விரோதமாக்குகிறார்கள்

௩௨ இப்போதும் நீர் உம்மோடிருக்கிற சனத்தோடே கூட இராவிலெழுந்து வந்து வெளியிலே பதிவிருந்து,

௩௩ காலமே சூரியனுதிக்கையிலெழும்பிப் பட்டணத்தின்மேல் விழுந்து, இதோ, அவனும் அவனோடிருக்கிற சனமும் உமக்கெதிரே புறப்படும்போது, உம்முடைய கைக்கு நேரிடுகிறபடி அவனுக்குச் செய்யுமென்று சொல்லியனுப்பினான்.

௩௪ அப்படியே அபிமெலேக்கும் அவனோடிருந்த எல்லாச் சனமும் இராவிலெழுந்து வந்து, சீகேமுக்கு விரோதமாக நாலு படையாய்ப் பதிவிருந்தார்கள்.

௩௫ ஏபேதின் குமாரன் காகால் புறப்பட்டுப் பட்டணத்தின் ஒலிமுகவாசலில் நின்றுகொண்டான். பதிவிருந்த அபிமெலேக்கோவென்றால் தன்னோடிருக்கிற சனத்தோடே கூட எழும்பி வந்தான்.

௩௬ காகால் அந்தச் சனத்தைக் கண்டு, இதோ, மலைகளின் சிகரங்களிலிருந்து சனம் இறங்கிவருகிறதென்று சேபூலோடே சொன்னான். அதற்குச் சேபூல் அவனோடே, நீ மலைகளின் நிழல்களை மனுஷரென்று நினைக்கிறாயென்றான்.

௩௭ காகாலோவென்றால திருமபப்பேசி, இதோ, சனநதேசததின நடுவிலிருந திறஙகிவநது ஒருபவுஞசுமெயோனேனிமின கர்வாவியுமர்வழியாய வருகினறதென்றான்.

௩௮ அபபோது சேபூல அவனோடே, அபிமெலேகை நாஞசேவிககிறதற்கு அவன யாரென்று நீசொன்ன உனவாய் இபபோது எஙகே? அது நீ அசடடைபணணினசனமலலவோ? இபபோது நீ புறபபடடு அதனோடே யுததமபண்ணென்றான.

௩௯ காகால சீகேமினமனுஷருககுமுனபாகபபுறபபடடு அபிமெலேகோடே யுததமபணணினான.

௪௰ ஆனால அபிமெலேக் அவனைத துரததினான. அவனுக்குமுனபாக அவன ஓடினான. படடண வாசலமடடும அநேகர் வெடடுணடுவிழுநதார்கள.

௪௧ ஆனால அபிமெலேக் அறுமாவிலிருநதுவிடடான. சேபூலோவெனிற்காகாலையும அவனசகோதரரையும சீகேமிலே யிராதபடிககுத துரததிவிடடான.

௪௨ மறுநாளிலேயோவென்றாற் சனமவெளியிலேபுறபபடடது. அது அபிமெலேகுக்கு அறிவிககபபடடபோது,

௪௩ அவன சனததைக கூடடிககொணடு, அதை மூனறுபவுஞசாக வகுதது வெளியிலேபதிவிருநது, சனமபடடணததிலிருநதுபுறபபடடு வருகிறதைககணடபோது, அவர்களமேலெழுமபி அவர்களைவெடடினான.

௪௪ அபிமெலேகும அவனோடிருநதபவுஞசுமனுஷரும பாயநதுவநது, படடணததின ஒலிமுகவாசலில நினறுகொணடார்கள. மறற இரணடுபவுஞசுகளோவெனில வெளியிலிருககிறயாவர்மேலுமவிழுநது அவர்களைவெடடினார்கள.

௪௫ அபிமெலேக் அநநாளமுழுதுமபடடணததினமேல யுததமபணணிப் படடணததைபபிடிதது, அதிலிருநதசனததைககொனறு, படடணததை யிடிததுபபோடடு, அதில உபபுவிதைத்தான.

௪௬ அதைச சீகேநதுருககததுமனுஷரெலலாருங கேடடபோது அவர்கள பேரீத்தேவனுடையவீடடின அரணுககுட்பிரவேசிததார்கள.

௪௭ சீகேநதுருககததுமனுஷரெலலாம அஙகே கூடினது அபிமெலேகுககு அறிவிககபபடடபோது,

௪௮ அபிமெலேக்தனனோடிருநத எலலாச்சனததோடுங கூடசசலமோனமலையிலேறிததன்கையிலே கோடாலியைபபிடிதது, ஒருமரததினகொமபைவெடடி, அதையெடுததுத தனதோளினமேற்போடடுககொணடு, தனனோடிருநத சனததோடே, நான் எனனசெயகிறேனெனறுகாண்கிறீர்களோ, அதைத் தீவிரமாய எனனைபபோலச செயயுஙகளெனறான.

௪௯ அபபோது சகலசனமும அவரவர் ஒவவொரு கொமபைவெடடி, அபிமெலேககுபபினசெனறு, அவைகளை அநத அரண அருகேபோடடுப புருஷரும பெண்சாதிகளும ஏறககுறைய ஆயிரமபேராகிய சீகேந துருககததுமனுஷரெலலாருஞ சாகததககதாய, அவர்களிருநத அநத அரணையககினியாலே சுடடுபபோடடார்கள.

௫௰ பிற்பாடு அபிமெலேக் தேபேசுககுபபோய அதற்கு விரோதமாயப்பாளயமிறஙகி, அதைபபிடிததான.

௫௧ ஆனாற் படடணததினநடுவே பலதத துருககமிருநதது. அஙகேசகலபுருஷருமபெணசாதிகளும படடணததுமனுஷர் அனைவரும ஓடியடைநது, தஙகள புறகாலே கதவைப்பூடடிபபோடடுத துருககததினமேலே யேறினார்கள.

௫௨ அபிமெலேகோவெனறால அநதத்துருககமடடும வநது, அதினமேலயுததமபணணித் துருககததின கதவைசசுடடுபபோடுமபடிககு அதினணடைச சேர்ந்தான.

௫௩ ஆனால ஒருபெணசாதி ஒரு ஏநதிரககலலின துணடை அபிமெலேகுடைய தலையினமேலேபோடடாள. அது அவன கபாலததை நொறுககிறறு.

௫௪ அபபோது அவனசீககிரமாயததன ஆயுதஙகளைசசுமககிற வேலைக்காரனைககூபபிடடு, எனனை ஒருபெணசாதிகொனறாளென்று எனபேரிலேசொலலாதபடிககு, நீ உனபடடயததை யுருவி எனனைககொலலென்று அவனோடேசொனனான. அபபடியே அவனவேலைககாரன அவனைககுததிபபோடடான. அவன செததான.

௫௫ அபிமெலேக்செததுபபோனதை இஸ்ரவேலமனுஷர் கணடபோது அவரவர் தஙகள இடஙகளுககுப போயவிடடார்கள.

௫௬ இபபடி அபிமெலேக் தனனுடைய எழுபது சகோதரரைககொலலுகிறதினாலே தனதகபபனுககுசசெயத பொலலாபபைப பரபரன அவனமேலே திருபபி,

௫௭ சீகேமமனுஷருஞ்செய்த எல்லாப்பொல்லாப்பையும் பராபரன் அவர்கள் தலையின்மேலே திருப்பிப்போட்டார். எருப்பாகாலின் குமாரன் யோதாமின் சாபம் அவர்கள்மேல் வந்தது.

௰. அதிகாரம்.

இஸ்ரவேல் பெலிஸ்தராலும் அம்மோன் புத்திரராலும் நெருக்கப்பட்டது.

௧ அபிமெலேக்குக்குப் பிற்பாடு, தோதோவின் மகனான பூவாவின் குமாரன் தோலா என்ற இசக்காரின் கோத்திரத்தான் இஸ்ரவேலை இரட்சிக்க எழும்பினான். அவன் எப்பிராயீம் மலைத்தேசத்து ஊரான சாமீரிலே குடியிருந்தது.

௨ இஸ்ரவேலை இருபத்துமூன்று வருஷம் நியாயம் விசாரித்துப் பிற்பாடு மரித்துச் சாமீரிலே அடக்கம் பண்ணப்பட்டான்.

௩ அவனுக்குப் பிற்பாடு கீலேயாத்தியனான யாவீர் எழும்பி இஸ்ரவேலை இருபத்திரண்டு வருஷம் நியாயம் விசாரித்தான்.

௪ முப்பது கழுதைக்குட்டிகளின்மேலே ஏறும் முப்பது குமாரர் அவனுக்கிருந்தார்கள். இவர்களுக்கு முப்பது ஊர்களுமிருந்தது. கீலேயாத் தேசத்திலிருக்கிற அவைகளுக்கு இந்நாள்வரைக்கும் யாவீரின் கிராமங்களென்று பேரிருக்கின்றது.

௫ யாவீர் மரித்துக் காமோனிலே அடக்கம் பண்ணப்பட்டான்.

௬ இஸ்ரவேல் புத்திரரோவென்னில் அப்புறங் கர்த்தருக்கு முன்பாகப் பொல்லாப்புச் செய்து கர்த்தரைவிட்டு அவரைச் சேவியாமற்போய்ப் பாகால்களையும் அஸ்தரோத்தையும் சீரியாவின் தேவர்களை சீதோனின் தேவர்களையும் மோவாபின் தேவர்களையும் அம்மோன் புத்திரரின் தேவர்களையும் பெலிஸ்தரின் தேவர்களையுஞ் சேவித்தார்கள்.

௭ அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேற் கோபமூண்டவராகி, அவர்களைப் பெலிஸ்தர் கையிலும் அம்மோன் புத்திரர் கையிலும் விற்றுப்போட்டார்.

௮ அவர்கள் அந்த வருஷமுதற்கொண்டு பதினெட்டுவருஷமாய் யோர்தானுக்கப்பாலே கீலேயாத்திலுள்ள எமோரியரின் தேசத்திலிருக்கிற இஸ்ரவேல் புத்திரரெல்லாரையும் நொறுக்கி முறித்தார்கள்.

௯ அம்மோன் புத்திரர் யூதாவின்மேலும் பென்யமீன்மேலும் எப்பிராயீம் வீட்டார்மேலும் யுத்தம்பண்ண யோர்தானையுங் கடந்துவந்தார்கள். இஸ்ரவேலுக்கு மிகுதியும் நெருக்கமாயிற்று.

௰ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம். ஏனென்னில் எங்கள் பராபரனைவிட்டுப் பாகால்களைச் சேவித்தோமென்றார்கள்.

௰௧ ஆனாற் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னதாவது, எகிப்தியரும் எமோரியரும் அம்மோன் புத்திரரும், பெலிஸ்தரும்,

௰௨ சீதோனியரும் அமலேக்கியரும் மாகோனியரும் உங்களை ஒடுக்கப்பிடிக்கும் சமயங்களில் நீங்கள் நம்மை நோக்கிக் கூப்பிட்டபோது நாம் உங்களை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்ததில்லையோ?

௰௩ நீங்களோவென்றால் நம்மைவிட்டு, அந்நிய தேவர்களைச் சேவித்துவந்தீர்கள் ஆகையால் இனி உங்களை இரட்சியோம்.

௰௪ நீங்கள்போய், உங்களுக்கு நீங்கள் தெரிந்துகொண்டிருக்கிற தேவர்களை நோக்கிக் கூப்பிடுங்கள். அவைகள் உங்கள் நெருக்கத்தின் காலத்திலே உங்களை இரட்சிக்கட்டுமென்றார்.

௰௫ ஆனால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடனே, பாவஞ்செய்தோம். தேவரீர் உம்முடைய பார்வைக்கு நன்றாயிருக்கிறபடியெல்லாம் எங்களுக்குச் செய்யும். ஆனால் இந்நாளில் எங்களைத் தப்புவியுமென்று சொல்லி,

௰௬ அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிப்போட்டுக் கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள். அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்.

௰௭ அம்மோன் புத்திரர் கூடிவரவழைப்பிக்கப்பட்டுக் கீலேயாத்திலே பாளயமிறங்கினார்கள். இஸ்ரவேல் புத்திரரோவென்றால் கூடிக்கொண்டு மிஸ்பாவிலே பாளயமிறங்கினார்கள்.

௰௮ அப்பொழுது சனமுங் கீலேயாத்தின் பிரபுக்களும் ஒருவரோடொருவர், அம்மோன் புத்திரர்மேல் யுத்தம் பண்ணத் துவக்கப்போகிற மனுஷன் ஆர்? அவன் கீலேயாத்தின் குடிகளுக்கெல்லாந் தலைவனாயிருப்பானென்றார்கள்.

௰௧. அதிகாரம்.

ஈப்தா அம்மோன்புத்திரரோடேசெய்தயுத்தமும் இஸ்ரவேலையிரட்சித்தது.

கிலேயாத்தியனான ஈப்தாபலத்த பராக்கிரமனாயிருந்தான். ஆனால் அவன் ஒருவேசிஸ்திரீயின்குமாரன்; கிலேயாத் அவனைப்பெற்றவன்.

௨ ஆனால்கிலேயாத்தின்பெண்சாதியும் அவனுக்குக்குமாரர்களைப்பெற்று இந்த அவன்பெண்சாதியின்குமாரர் பெரியவர்களானபிறபாடு, அவர்கள் ஈப்தாவைத்துரத்தி, நீயெங்களதகப்பன்வீட்டிலேசுதந்தரவாளியாயிருப்பதில்லை. ஏனெனில் நீவேறேஸ்திரீயின்மகனென்று அவனுக்குச்சொன்னார்கள்.

௩ அப்போது ஈப்தாதன்சகோதரரைவிட்டோடிப்போய்த்தோப்தேசத்திலேகுடியிருந்தான். நிலையற்ற மனுஷர் ஈப்தாவோடே கூடிக்கொண்டு அவனோடேகூடயுத்தத்திற்குப்போவார்கள்.

௪ சிலநாளுக்குப் பிறபாடோவெனில் அம்மோன்புத்திரர் இஸ்ரவேலின்மேல்யுத்தம்பண்ணினார்கள்.

௫ அவர்கள் இஸ்ரவேலின்மேல்யுத்தம்பண்ணும்போதே, அன்றேகிலேயாத்தின் மூப்பர் ஈப்தாவைத்தோப் தேசத்திலிருந்தழைத்துவரப்போய்,

௬ ஈப்தாவுடனே, நீ வந்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ண எங்கள்சேனாபதியாயிருப்பாயாகவென்றார்கள்.

௭ அப்போது ஈப்தா கிலேயாத்தின் மூப்பருடனே, நீங்களல்லோ என்னைப்பகைத்து என் தகப்பன்வீட்டிலிருந்தென்னைத்துரத்தினவர்கள் நீங்களல்லோ? இப்போது உங்களுக்குநெருக்கமுண்டானதினாலே என்னண்டைக்கு ஏன்வருகிறீர்களென்றான்.

௮ ஆனால் கிலேயாத்தின்மூப்பர் ஈப்தாவுடனே, நீயெங்களுடனேகூடவந்து அம்மோன்புத்திரரோடுயுத்தம்பண்ணிக் கிலேயாத்தின்குடிகளாகிய எங்களனைவர்மேலும் நீதலைவனாயிருப்பதற்காகத்தானே. இப்போது உன்னண்டைக்குத்திரும்பிவந்தோமென்றார்கள்.

௯ அப்போது ஈப்தா, அம்மோன் புத்திரரோடேயுத்தம்பண்ண நீங்களென்னைத்திரும்ப அழைத்துப்போனபிறபாடு கர்த்தர் அவர்களையெனக்குமுன்பாக ஒப்புக்கொடுத்தால்நான் உங்களுக்குத்தலைவனாயிருப்பேனோவென்று கிலேயாத்தின் மூப்பரைக்கேட்டான்.

௰ கிலேயாத்தின்மூப்பர் ஈப்தாவுடனே, நாங்கள் இந்த உன்வார்த்தையின்படியேசெய்யாவிட்டால், கர்த்தர்நமக்குநடுவாகநியாயங்கேட்பாராகவென்றார்கள்.

௰௧ அப்படியே ஈப்தாகிலேயாத்தின்மூப்பரோடே கூடப்போனான். சனம் அவனைத்தங்கள்மேலே தலைவனுஞ்சேனாபதியுமாகவைத்தது, ஈப்தா தன் வார்த்தைகளையெல்லாம்மிஸ்பாவிலே கர்த்தருக்குமுன்பாகப் பேசிக்கொண்டான்.

௰௨ பிறபாடு ஈப்தா அம்மோன் புத்திரரின்இராசாவண்டைக்குத் தானாபதிகளையனுப்பி, நீ என்தேசத்திற்குவிரோதமாகயுத்தம்பண்ண என்னண்டைவருகிறதற்கு எனக்கும் உனக்குமென்னவழக்கிருக்கிறதென்றுசொல்லச்சொன்னான்.

௰௩ அம்மோன்புத்திரரின்இராசா ஈப்தாவின் தானாபதிகளோடே சொன்னதாவது, இஸ்ரவேலர் எகிப்திலிருந்தேறிவருகிறபோது, அர்னோன்துவக்கியாபோக்மட்டுக்கும்யோர்தான்மட்டுக்குமிருக்கிற என்னுடைய தேசத்தைக் கட்டிக்கொண்டார்களே; இப்போதும் அதையெனக்குச் சமாதானமாய்த் திரும்பக்கொடுவென்றுசொல்லுங்களென்றான்.

௰௪ ஆனால் ஈப்தா மறுபடியும் அம்மோன்புத்திரரின் இராசாவண்டைக்குத் தானாபதிகளையனுப்பி, அவனுக்குச்சொல்லச்சொன்னதாவது,

௰௫ ஈப்தா சொல்லுகிறதேதெனில் இஸ்ரவேல் மோவாபியரின்தேசத்தையாகிலும் அம்மோன்புத்திரரின் தேசத்தையாகிலுங் கட்டிக்கொண்டதில்லையே;

௰௬ ஏனெனில் இஸ்ரவேல் எகிப்திலிருந்தேறிவருகிறபோது, இஸ்ரவேல் வனாந்திரத்திலே நாணற்சமுத்திரமட்டுநடந்துபிறகுகாதேசுக்குவந்தது.

௰௭ அப்போது இஸ்ரவேல் ஏதோமின் இராசாவண்டைக்குத் தானாபதிகளையனுப்பி, நான் உன்தேசத்துவழியாய்க்கடந்துபோகட்டுமென் என்றுசொல்லச்சொன்னார்கள். ஆனால் ஏதோமின் இராசா கேள்விகொடுக்கவில்லை. மோவாபின் இராசாவண்டைக்கும் அனுப்பினார்கள். அவனும்வேண்டாமென்றான் அப்படியே இஸ்ரவேல் காதேசிலே தரித்திருந்து,

௰௮ பிறபாடு வனாந்திரத்திலேநடந்து ஏதோம்தேசத்தையும் மோவாப்தேசத்தையுஞ்சுற்றிப்போய், மோவாபின்தேச

ந்திருக்கிழக்கேவந்து, மோவாபின் எல்லைக்குட்பிரவேசியாமல், மோவாபின் எல்லையான அர்னோனுக்கப்பாலேபாளயமிறங்கினார்கள்.

௰௯ அப்போது இஸ்ரவேல் எஸ்போனில் அரசாளுகிற சீகோனென்ற எமோரியரின் இராசாவண்டைக்குத் தூதரை அனுப்பி, நான் உன்தேசத்து வழியாய் என்னுடைய ஸ்தானத்துக்குக் கடந்துபோகட்டுமேன் என்றுசொல்லச்சொன்னார்கள்.

௨௰ அதுலதன் எல்லையைக்கடக்கிறதற்குச்சீகோன் இஸ்ரவேலைநம்பாமல், சனங்களையெல்லாங் கூட்டியாத்சாவிலே பாளயமிறங்கி, இஸ்ரவேலோடே யுத்தம்பண்ணினான்.

௨௧ அப்போது இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சீகோனையும் அவனுடைய எல்லாச் சனத்தையும் இஸ்ரவேலின் கையிலே அவர்களை முறியடிக்க ஒப்புக்கொடுத்தார். அப்படியே இஸ்ரவேல் அந்தத் தேசத்திலே குடியிருந்த எமோரியரின் சீமையையெல்லாம்பிடித்து அர்னோன்துவக்கி,

௨௨ யாபோக் மட்டாகவும்வனாந்திரந்துவக்கி யோர்தானமட்டாகவுமிருக்கிற எமோரியரின் எல்லையையெல்லாஞ் சுதந்தரம்பண்ணிக்கொண்டார்கள்.

௨௩ இப்போதும் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் எமோரியரைத்தம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்திவிருக்கக்கொள்ள நீ அந்தத்தேசத்தைக்கட்டிக்கொள்ளுவாயோ?

௨௪ உன் தேவனாகிய காமோஸ் உனக்குமுன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தை நீகட்டிக்கொள்ளுவாயல்லவோ? அப்படியே எங்கள் பராபரனாகிய கர்த்தர் எங்களுக்கு முன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தையெல்லாம் நாங்களுங்கட்டிக்கொள்ளுகிறோம்.

௨௫ இப்போதுஞ் சிப்போரின்குமாரனாகிய பாலாகென்ற மோவாபின் இராசாவைப் பார்க்கிலும் உனக்கு அதிகநியாயமுண்டோ? அவன் இஸ்ரவேலோடே எப்போவாகிலும் வழக்காடினானோ? எப்போவாகிலும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினானோ?

௨௬ இஸ்ரவேல் எஸ்போனிலும் அதின் கிராமங்களிலும் ஆரோவேரிலும் அதின் கிராமங்களிலும் அர்னோன் நதியருகான எல்லாப் பட்டணங்களிலும் முந்நூறு வருஷங் குடியிருக்கக்கொள்ள, இத்தனைகாலத்திலே நீங்கள் அதைத்திரும்ப விடுவிக்காதேபோனதென்ன?

௨௭ நான் உனக்கு விரோதமாகப்பாவஞ்செய்யாதிருந்தும் நீயென்மேல் யுத்தம்பண்ணும்பொல்லாப்பையென்னைச் செய்கிறாய். நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுவாக நியாயந்தீர்க்கக் கடவாரென்று சொல்லியனுப்பினான்.

௨௮ ஆனால் அம்மோன்புத்திரரின் இராசா யெப்தா தனக்குச் சொல்லியனுப்பின வார்த்தைகளுக்குச் செவிகொடாதே போனான்.

௨௯ அப்போது கர்த்தருடைய ஆவி யெப்தாவின்மேலே வந்தருளுகையால் அவன் கிலெயாத்தையும் மனாசேயின் சீமையையுங் கடந்துபோய்க் கிலெயாத்திலிருக்கிற மிஸ்பேக்குவந்து, அங்கேயிருந்து அம்மோன் புத்திரருக்கெதிராகப்போனான்.

௩௰ யெப்தா கர்த்தருக்கு ஒருபொருத்தனையைப்பண்ணிச்சொன்னதாவது தேவரீர் அம்மோன்புத்திரரையென்கையிலொப்புக்கொடுக்கவே ஒப்புக்கொடுத்தால்,

௩௧ அவர்களிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பவருகிற எனக்கு என் வீட்டு வாசற்படியிலிருந்து எதிர்கொண்டுவருகிறது கர்த்தருடையதாயிருக்கும். அதைச் சர்வாங்கத் தகனபலியாகச் செலுத்துவேனென்றான்.

௩௨ இப்படியே யெப்தா அம்மோன் புத்திரின்மேல் யுத்தம்பண்ண அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டுப்போனான். கர்த்தர் அவர்களை அவன்கையிலொப்புக்கொடுத்தார்.

௩௩ அவன் அவர்களை ஆரோவேர்துவக்கி மின்னித்துக்குப் போகுமட்டுக்கும் அபேல்கேராமீம் மட்டுக்கும் மகாப்பெரிய முறியடிப்பாக முறியடித்து இருபது பட்டணங்களைப் பிடித்தான் இப்படி அம்மோன் புத்திரர் இஸ்ரவேல்புத்திரருக்குமுன்பாகத்தாழ்த்தப்பட்டார்கள்.

௩௪ யெப்தா மிஸ்பாவிலிருக்கிறதன் வீட்டுக்குவருகிறபோதேதோவென்றால், இதோ, அவன்குமாரத்தி ஒங்கைகளோடும் நடனங்களோடும் அவனுக்கு எதிர்கொண்டு புறப்பட்டாள். அவள் அவனுக்கு ஒரேபிள்ளையானவள். அவளைத்தவிர அவனுக்குக் குமாரனுமில்லை. குமாரத்தியுமில்லை.

௩௫ அவன அவளைக காணகிறபோது தன வஸதிரங்களைக கிழிததுககொணடு, ஐயோ, என குமாரததியே! என்னைமெத தவும மனமடியவுங கலஙகவுமபணணுகி றாய. ஏனெனிற் கர்ததரை நோககி என வாயைததிறநதுபேசினேன. அதைநான திருபபககூடாதென்றான.

௩௬ அபபோது அவள அவனோடே, என்தகபபனே! நீர் கர்த்தரை நோககி உமமுடையவாயைததிறநது பேசினீரல லவோ! அமமோனபுததிரராகிய உமமு டையசததுருககளுககு நீதியைச சரிகக டடுசெயததைககர்ததர் உமககுககட டளையிடடபடியினாலே உமமுடையவாயி லிருநது புறபபடடபடி எனககுச செய யுமென்றாள.

௩௭ பின்னையும அவள தன தகபப னுடனே, நானமலைகளினமேலே போயதது ரிநது நானும என தோழிகளுமாய என னுடைய கன்னிமையிருபபுககாகத துகக ஙகொணடாட எனக்கிரணடுமாதந தவ ணைகொடும. இநதககாரியம எனககுச செயயபபடுவதாகவென்றாள.

௩௮ அபபோது அவன போயவிடடு வாவென்று அவளை இரணடுமாதத்திற்க னுபபிவிடடான. அவள தன்தோழிகளோ டெகூடபபோயத்தனகன்னிமை யிருபபு ககாக மலைகளினமேலே துககங கொண டாடி,

௩௯ இரணடுமாதம முடிநதபோதுத னதகபபனணடைககுத திருமபிவநதாள. அப்போதவன பணணியிருநததனபொரு த்தனையினபடிஅவளுககுச்செயதான. ஆ கையாலவளபுருஷனையறியாதிருநதாள.

௪௰ இதினிமித்தமவருஷநதோறுமநா லுநாள இஸ்ரவேலினகுமாரத்திகள போ யக் கிலெயாதியனான ஈப்தாவின குமார ததியோடேபேசிககொளள இஸ்ரவேலி லே பழககமாயிறறு.

௰௨. அதிகாரம்.

ஈப்தாவெபபிராயீமரை ஆககினையிடடது.

௧ எபபிராயீம மனுஷர் கூடிவரவழைக கபபடடு வடககே புறபபடடுவநது, ஈப் தாவுடனே * நீ எஙகளை உனனோடேகூட வரவழைப்பிககாமல் அம்மோனபுத்திரர் மேல்யுத்தம்பணணபபோனதென்ன உன வீடடை உனனோடுங் கூட அககினியாற் சுடடுபபோடுவோமென்றார்கள. * அ, க.

௨ அபபோது ஈப்தா அவர்களோ டேசொன்னதாவது, எனககும என்சன ததிர்கும அமமோனபுததிரரோடேபெரி யவழககிருககிறபோது உஙகளைககூபபிட டேன. அனால நீஙகளென்னை யவர்களகை ககு நீஙகலாககி யிரட்சிததிலலை.

௩ நீஙகளென்னை யிரட்சிககிறதிலலை யென்று நானகணடபோது நான என ஜீ வனை எனகையிலேபிடிததுககொணடு அ மமோனபுததிரருக கெதிராகப போனே ன. கர்ததர் அவர்களையெனகையி லொப புககொடுததார். இபபோதும எனமேல யுததமபணண நீஙகள இன்று என்ன்ண டைக கேறிவநத தென்னவென்று சொ லவி,

௪ ஈப்தா கிலெயாத மனுஷரையெல லாங் கூடடி, எபபிராயீமோடு யுததமப ணணினான. எபபிராயீமுககும மனாசேயக கும நடுவே குடியிருககிற கிலெயாததிய ரான நீஙகள எபபிராயீமை விடடோடிப போனவர்களென்று எபபிராயீமர்சொன னபடியினாலே கிலெயாதமனுஷர் அவர்க ளைமுறியடிததார்கள.

௫ எபபடியென்றாற் கிலெயாததியர் எபபிராயீமருககுமுநதிககொணடு யோர் தானின துறைகளைபபிடிததார்கள. அப போதுசமபவித்ததேதென்றால எபபிராயீ மரிலதபபினவர்களில ஒருவனவநது, நா ன அக்கரைககுபபோகடடுமென்றுசொ லலுமபோது, கிலெயாதமனுஷர், நீ எப பிராயீமனோ? என்று அவனைக கேட்பார் கள். அவனலலவென்றால,

௬ அவனுடனே, ஷிபோலேததென் றுசொலலென்பார்கள. அபபோது அவ ன அபபடிச்சொலலக் கூடாமற், சிபோ லேததென்பான. அபபோது அவனைப பிடிதது, யோர்தானதுறையிலேவெடடி பபோடுவார்கள அககாலததிலே எபபிரா யீமில நாற்பததிராயிரமபேர் விழுநதா ர்கள.

௭ ஈப்தா இஸ்ரவேலை ஆறுவருஷம நியாயமவிசாரிததான. பிற்பாடு கிலெயா ததியனான ஈப்தா மரிததுக் கிலெயாத்ப டடணஙகளில அடககமபணணப பட டான்.

௮ அவனுககுபபிறகு பேதலகேமூரா னாகிய இப்சான இஸ்ரவேலை நியாயமவிசா ரிததான.

௯ அவனுககு முபபது குமாரரிருநதா ர்கள. முபபது குமாரததிகளைபபிறததிய லே விவாகமபணணிககொடுத்துத் தனகு மாரருககு முபபதுபெண்களைப பிறததி யிலேகொணடான. அவன இஸ்ரவேலை ஏ ழுவருஷம நியாயமவிசாரிததான.

௭ பின்பு கீலேயாத்தியனான யெப்தா மரித்துப் பெத்லகேமிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

௰௧ அவனுக்குப்பிறகு செபுலோனிய னான ஏலோன் இஸ்ரவேலை நியாயம்விசாரித்தான். பத்து வருஷம் இஸ்ரவேலை நியாயம்விசாரித்தான்.

௰௨ பின்பு செபுலோனியனான ஏலோன் மரித்துச் செபுலோன் தேசமான அய்யலோனிலே அடக்கம் பண்ணப்பட்டான்.

௰௩ அவனுக்குப்பிறகு இல்லேலின் குமாரனாகிய பிரத்தோனியனான அப்தோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

௰௪ அவனுக்கு எழுபது கழுதைக்குட்டிகளின்மேலேறுகிற நாற்பது குமாரரும் முப்பது பேரப்பிள்ளைகளுமிருந்தார்கள். அவன் இஸ்ரவேலை எட்டுவருஷம் நியாயம்விசாரித்தான்.

௰௫ பின்பு இல்லேலின் குமாரனாகிய அப்தோன் என்கிற பிரத்தோனியன் மரித்து எப்பிராயீம் தேசத்தில் அமலேக்கியரின் மலையிலிருக்கிற பிரத்தோனிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

௰௩. அதிகாரம்.

சிம்சோன் பிறந்தது.

இஸ்ரவேல் புத்திரர் அப்புறங் கர்த்தருடைய சமுகத்துக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியினாலே கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமட்டும் பெலிஸ்தர் கையிலே ஒப்புக்கொடுத்தார்.

௨ அப்பொழுது தானின் வம்சத்தாராகிய சோராவூரானான ஒரு மனுஷனிருந்தான். அவன் பேர் மனோவா. அவன் பெண்சாதி பிள்ளைபெறாத மலடியாயிருந்தாள்.

௩ கர்த்தருடைய தூதர் அந்த ஸ்திரிக்குத் தரிசனமாகி, அவளோடே சொன்னது: இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கெர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்.

௪ இப்போதும் நீ திராட்சிப்பழ இரசமும் லாகிரியுள்ள பானமுங் குடியாதபடிக்கும், தீட்டானதொன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிருப்பாயாக.

௫ ஏனெனில் இதோ, நீ கெர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய். * அவன் தலையின்மேல் சவரகன் கத்திபடுவதில்லை. அந்தப் பிள்ளை பிறந்தது முதற்கொண்டு அந்தப் பிள்ளை பராபரனுடைய நசரேயனாயிருப்பான். அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தருடைய கையிலிருந்து இரட்சிக்கத் தலைப்படுவான். * ௪. மோசே. ௬, ௫.

௬ அப்பொழுது அந்தப்பெண்சாதி வந்து தன் புருஷனுக்குச் சொன்னதாவது, பராபரனுடைய மனுஷன் என்னண்டைக்கு வந்தார். அவருடைய ரூபம் பராபரனுடைய தூதருடைய ரூபத்தைப்போலே மகா பயங்கரமாயிருந்தது. அவர் எவ்விடத்தாரென்று நான் அவரைக் கேட்டதில்லை. அவர் தம்முடைய நாமத்தை யெனக்கு அறிவித்ததுமில்லை.

௭ அவர் எனக்குச் சொன்னது: இதோ, நீ கெர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய். இப்போதும் நீ திராட்சிப்பழ இரசமும் லாகிரியுள்ள பானமுங் குடியாமலும் தீட்டானதொன்றும் புசியாமலுமிருப்பாயாக. ஏனெனில் அந்தப் பிள்ளை பிறந்தது முதற்கொண்டு தன் மரணநாள்மட்டும் பராபரனுடைய நசரேயனாயிருப்பானென்று சொன்னாரென்றாள்.

௮ அப்பொழுது மனோவா கர்த்தரை விண்ணப்பம்பண்ணி, ஆ, என் ஆண்டவரே! பராபரனாகிய தேவரீர் அனுப்பின பராபரனுடைய மனுஷன் இன்னமொருவிசை எங்களண்டைக்கு வந்து, பிறக்கும் அந்தப் பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குப் போதிப்பாராகவென்று வேண்டிக்கொண்டான்.

௯ பராபரன் மனோவாவின் சத்தத்தைக் கேட்டார். அந்த ஸ்திரி வெளியிலே உட்கார்ந்திருக்கிறபோது பராபரனுடைய தூதர் திரும்ப அவளண்டைக்கு வந்தார். அப்போது அவள் புருஷனாகிய மனோவா அவளண்டையிலிருந்ததில்லை.

௰ ஆகையால் அவள் சீக்கிரமாய் ஓடித் தன் புருஷனுக்கறிவித்து, அவனுடனே, இதோ, அன்று என்னண்டை வந்தவர் எனக்குத் தரிசனையானாரென்றாள்.

௰௧ அப்போது மனோவா எழுந்திருந்து தன் பெண்சாதியின் புறகாலே போய், அவரண்டைக்கு வந்து, நீர் இந்த ஸ்திரியோடே பேசினவரோ? என்று அவரைக் கேட்டான். அவர் நான்தானென்றார்.

௰௨ அப்போது மனோவா, நீர் சொன்ன காரியம் வரும்போது அந்தப் பிள்ளையினவண்மையும் அதின் செய்கையும் என்னவென்றுகேட்டான்.

௰௩ கர்த்தருடைய தூதர் மனோவாவோடே சொன்னதாவது, நான் ஸ்திரியோடே சொன்ன யாவுக்கும் அவள் எச்சரிக்கையாயிருந்து,

௰௪ திராட்சச்செடியிலே பிறக்கிறதொன்றுஞ் சாப்பிடாமலும், திராட்சிப்பழ இரசமும் லாகிரியுள்ள பானமுங்

டியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும், நான் அவளுக்குக் கற்பித்ததையெல்லாங் கைக்கொள்ளக்கடவளென்றார்.

௰௫ அப்போது மனோவா கர்த்தருடைய தூதரோடே, நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்குச் சமைத்துக்கொண்டுவருமட்டுந் தரித்திருமென்றான்.

௰௬ கர்த்தருடைய தூதர் மனோவாவுடனே, நீ என்னை யிருக்கச்சொன்னாலும் நான் உன்போசனத்திலே புசியேன். நீ சர்வாங்கத்தகன பலியிடவேண்டியானால், அதை நீ கர்த்தருக்குப் பலியாகச்செலுத்தவாயாகவென்றார். ஏனென்றால் அவர் கர்த்தருடைய தூதனென்கிறதை மனோவா அறியாதிருந்தான்.

௰௭ அப்போது மனோவா நீர் சொன்னகாரியம்வரும்போது நாங்கள் உம்மைக் கனம்பண்ண உம்முடைய நாமமென்னவென்று கர்த்தருடைய தூதனைக் கேட்டான்.

௰௮ கர்த்தருடைய தூதன் அவனுடனே, என்னுடைய நாமமென்னவென்று நீ இப்படிக் கேட்பானேன்? அது அதிசயமானவொன்றென்றுசொன்னார்.

௰௯ மனோவா போய், வெள்ளாட்டுக்குட்டியையுங் காணிக்கையையுங் கொண்டுவந்து, அதைக் கன்மலையின்மேலே கர்த்தருக்குச் செலுத்தினான். அப்போது மனோவாவும் அவன் பெண்சாதியும் பார்க்கக்கொள்ள, அதிசயமான நடத்தையைக் காண்பித்தார்.

௨௰ சம்பவித்ததேதென்றால், அக்கினிச்சுவாலை பலிபீடத்திலிருந்து வானத்திற்குநேராக எழும்புகையிற் கர்த்தருடைய தூதர் பலிபீடத்தின் சுவாலையிலே யேறிப்போனார். அதை மனோவாவும் அவன் பெண்சாதியுங் கண்டு, முகங்குப்புறத் தரையிலேவிழுந்தார்கள்.

௨௰௧ அப்புறங் கர்த்தருடைய தூதர் மனோவாவுக்கும் அவன் பெண்சாதிக்குங் காணப்படவில்லை. அப்போது அவர் கர்த்தருடைய தூதனென்பதை மனோவா அறிந்துகொண்டு,

௨௰௨ தன் பெண்சாதியோடே, நாம் பராபரனைக் கண்டதினாலே சாகவே சாவோமென்றான்.

௨௰௩ ஆனால் அவன் பெண்சாதி அவனுடனே, கர்த்தர் நம்மைக் கொன்றுபோடச் சித்தமாயிருந்தாரானால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்கத் தகனபலியையுங் காணிக்கையையும் வாங்குவதுமில்லை இவைகளையெல்லாம் நமக்குக் காண்பிப்பதுமில்லை. இப்போது அவர் செய்தபடி இவைகளை நமக்குக் கேட்கப்பண்ணுவதுமில்லையென்றாள்.

௨௰௪ பிறபாடு அந்தப்பெண்சாதி ஒரு குமாரனைப்பெற்று அவனுக்குச் சிம்சோனென்றுபேரிட்டாள். அந்தப்பிள்ளைவளர்ந்தது. கர்த்தர் அவனையாசீர்வதித்துக்கொண்டிருந்தார்.

௨௰௫ சோருவுக்கும் எஸ்தவோலுக்கும் நடுவேயிருந்த தாணின்பாளயத்திலிருக்கிற அவனைக் கர்த்தருடைய ஆவியானவர் ஏவத்துவக்கினார்.

௰௪. அதிகாரம்.

சிம்சோன் பெலிஸ்தரின் சாதியாள் பெண்ணை விவாகம்பண்ணினது.

சிம்சோன் திம்னாத்திற் கிறங்கிப்போய்த் திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளிலொரு பெண்ணைக்கண்டு,

௨ திரும்ப வந்தேறித் தன் தகப்பனுக்குந் தன் தாயக்கும் அறிவித்துத் திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளிலொரு பெண்ணைக்கண்டேன். இப்போதும் அவளையெனக்குக் கொள்ளுங்களென்றான்.

௩ அப்போது அவன் தகப்பனும் அவன் தாயும் அவனுடனே நீ போய்ச் சுன்னத்தில்லாத பெலிஸ்தரில் ஒரு பெண்ணைக்கொள்ளுகிறதற்கு, உன் சகோதரரின் குமாரத்திகளிலும் எங்கள் சனமனைத்திலும் பெண்ணில்லையோவென்றார்கள். ஆனாற்சிம்சோன் தன் தகப்பனோடே, அவளையெனக்குக்கொள்ளும். ஏனெனில் அவள் என் கண்களுக்கேற்றவளென்றான்.

௪ இது கர்த்தரின் செயலென்கிறதை அவன் தகப்பனும் அவன் தாயும் அறியாதிருந்தார்கள். ஏனெனில் அவன் பெலிஸ்தரைக் குற்றம்பிடிக்கும்படிக் காரணத்தைத் தேடினான். அதேதென்றால் அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலையாண்டார்கள்.

௫ அப்படியே சிம்சோனும் அவன் தகப்பனுந் தாயுந் திம்னாத்திற் கிறங்கிப்போனார்கள். அவர்கள் திம்னாத்தாரின் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற வாலசிங்கம் அவனுக்கெதிராகவந்தது.

௬ அப்போது கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினாலே அவன் தன் கையிலே ஒன்றுமில்லாதிருக்கக்கொள்ள, அதையொரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுவதுபோல கிழித்துப்போட்டான். ஆனால் தான்செய்ததையவன் தன் தகப்பன் தாயக்கறிவிக்காதிருந்து,

௭ இறங்கிப்போய்ப் பெண்ணோடே பேசினான்; அவள் சிம்சோனின் கண்களுக்குப் பிரியமாயிருந்தாள்.

௮ சிலநாளைக்குப்பிறபாடு அவன் அவளை விவாகம்பண்ணத் திரும்பிவந்து, சிங்கத்தின் உடலைப் பார்க்கிறதற்கு வழிவிலகிப் போனான். இதோ, சிங்கத்தினுடலுக்குள்ளே தேன் பூச்சியின் ஏராளமுந் தேனுமிருந்தது.

௯ அவன் இதைத் தன் கைகளிலே எடுத்துக்கொண்டு, நடந்துவந்து சாப்பிட்டுத் தன் தகப்பன் தாயண்டைக்குப் போய் அவர்களுக்குங் கொடுத்தான்; அவர்களுஞ் சாப்பிட்டார்கள். ஆனாற் சிங்கத்தினுடலிலே அந்தத்தேனைத் தானெடுத்ததை யவர்களுக் கறிவிக்காதிருந்தான்.

௰ அவன் தகப்பன் அந்தப் பெண்ணிருக்கிற இடத்திலிறங்கி வந்தபோது சிம்சோன் அங்கே விருந்து கொடுத்தான். ஏனென்றால் வாலிபர் அந்தப் பிரகாரமாய்ச் செய்வார்கள்.

௰௧ சம்பவித்ததேதென்றால் அவர்களவனைக் கண்டபோது, அவனோடேகூடவிருக்க முப்பது தோழரை யவனுக்குக் கொடுத்தார்கள்.

௰௨ அவர்களோடே சிம்சோன் சொன்னது, ஒரு விடுகதையை யுங்களுக்குச் சொல்லுவேன் அதை நீங்கள் விருந்துண்கிற ஏழுநாளிலே கண்டுபிடித்து எனக்கு விடுவித்தால் நானுங்களுக்கு முப்பது மெல்லிய புடவைகளையும் முப்பது மாற்றுவஸ்திரங்களையுங் கொடுப்பேன்.

௰௩ அதை யெனக்கு விடுவிக்கமாட்டாதே போனீர்களானால், நீங்களெனக்கு முப்பது மெல்லிய புடவைகளையும் முப்பது மாற்றுவஸ்திரங்களையுங் கொடுக்கவேண்டுமென்றான். அவர்கள் அவனுடனே, உன் விடுகதையை நீ சொல்லு நாங்கள் அதைக் கேட்கட்டுமென்றார்கள்.

௰௪ அப்போது அவன் இவர்களோடே பட்சிக்கிறதிலிருந்து போசனமும் பலத்திருக்கிறதிலிருந்து தித்திப்பும் வந்ததென்றான். அந்த விடுகதையை யவர்கள் மூன்றுநாளமட்டும் விடுவிக்கக்கூடாதே போயிற்று.

௰௫ ஏழாநாளிலோவென்றால் அவர்கள் சிம்சோனின் பெண்சாதியோடே நாங்கள் உன்னையும் உன் தகப்பன் வீட்டையும் அக்கினியாற் சுட்டெரிக்காதபடிக்கு, நீ புருஷனை யந்த விடுகதையை யெங்களுக்குச் சொல்லுவிக்கும்படிக்கு நயம்பண்ணு. எங்களுடையதைத் தக்கிக்கொள்ளவல்லோ வழைத்தீர்களென்றார்கள்.

௰௬ அப்போது சிம்சோனின் பெண்சாதி அவனுக்கு முன்பாக அழுது, நீ என்னைச் சிநேகிக்காமல் என்னைப் பகைக்கிறாயே; என் சனப்புத்திரருக்கு ஒரு விடுகதையைச் சொல்லி, அதை யெனக்குத்தானே விடுவிக்காதே போனாயென்றாள். அதற்கவன் அவளுடனே, இதோ, என் தகப்பன் தாய்க்குமதை நான் விடுவிக்கவில்லை. உனக்கதை விடுவிப்பேனோவென்றான்.

௰௭ அவர்கள் விருந்துண்கிற ஏழுநாளும் அவள் அவனுக்கு முன்பாக அழுதுகொண்டிருந்தாள். ஏழாநாளிலோவென்றால் அவள் அவனை யலட்டிக்கொண்டிருக்கிறதினாலே அவளுக்கு விடுவித்தான். அப்போது அவள் தன் சனப்புத்திரருக்கு அந்த விடுகதையை விடுவித்தாள்.

௰௮ ஆகையால் ஏழாநாளிலே பொழுது புகுதற்கு முன்னே அந்தவூரின் மனுஷர் அவனுடனே, தேனைப் பார்க்கத் தித்திப்பானதென்ன? சிங்கத்தைப் பார்க்கப் பலமுள்ளதென்னவென்றார்கள். அவன் அவர்களோடே, நீங்கள் என் கடாரியால் உழாதிருந்தீர்களானால், என்னுடைய விடுகதையைக் கண்டுபிடிப்பதில்லையென்றான்.

௰௯ கர்த்தருடைய ஆவி அவன்மேலிறங்கினதினாலே அவன் அஸ்கலோனுக்கிறங்கிப்போய், அவ்வூரில் முப்பதுபேரைக்கொன்று உரிந்துகொண்டுவந்து விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்த மாற்றுவஸ்திரங்களைக் கொடுத்துக் கோபமூண்டவனாய்ப் புறப்பட்டுத் தன் தகப்பன் வீட்டுக்குப் போயேறினான்.

௨௰ சிம்சோனின் பெண்சாதியோவென்றால் அவனோடேகூடவிருந்த அவன் தோழனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

௰௫. அதிகாரம்.

சிம்சோன் பெலிஸ்தருக் குண்டாக்கின சேதம்.

சில நாட்சென்றபிறபாடு சம்பவித்ததேதென்றால், சிம்சோன் கோதுமையறுக்கிற நாட்களிலே தன் பெண்சாதியைக் கண்டுசந்திக்க ஒரு வெள்ளாட்டுக்குட்டியைக் கொண்டுவந்து, நான் என்பெண்சாதியண்டைக்கு அறைவீட்டிற் குட்பிரவேசிக்கட்டுமென்றான். அவள் தகப்பனோவென்றால் அவனை யுட்பிரவேசிக்கவொட்டாமல்,

௨ நீயவளைப் பகைக்கவே பகைத்துவிட்டாயென்றும் நான் அவளை உன் தோழனுக்குக்கொடுத்தேன். அவள் தங்கை அவளைப்பார்க்க அழகானவளல்லவோ? இவள் அவளுக்குப் பதிலாக உனக்கிருக்கட்டுமென்றுஞ் சொன்னான்.

௩ அப்பொழுது சிம்சோன், நான் பெலிஸ்தருக்குப் பொல்லாப்புச் செய்தால் இனிமேலே குற்றமில்லையென்று அவர்களுக்குச் சொல்லி,

௪ புறப்பட்டுப்போய், முந்நூறு நரிகளைப் பிடித்துப் பந்தங்களை யெடுத்து, வாலோடே வால் சேர்த்துப்பிடித்து இரண்டு வால்களுக்கு நடுவே ஒவ்வொரு பந்தத்தை வைத்துக்கட்டி,

௫ பந்தங்களை அக்கினியாற் கொளுத்தி பெலிஸ்தரின் வெள்ளாமையிலே அவைகளை ஓட்டிவிட்டுப் போர்களையும் வெள்ளாமையையுந் திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையுங் கூடச்சுட்டெரித்துப்போட்டான்.

௬ இதைச் செய்தவனாரென்று பெலிஸ்தர் கேட்டபோது திம்னாத்தானுடைய மருமகனாகிய சிம்சோன்தானே. ஏனெனில் அவன் இவன் பெண்சாதியை யெடுத்து அவளை யிவனுடைய தோழனுக்குக் கொடுத்தானென்றார்கள். ஆகையாற் பெலிஸ்தர் போய், அவளையும் அவள் தகப்பனையும் அக்கினியாலே சுட்டுப்போட்டார்கள்.

௭ அப்பொழுது சிம்சோன் அவர்களுக்கு, நீங்களிப்படிச் செய்யலமோ? நான் உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேனென்று சொல்லி,

௮ அவர்களை மகா முறியடிக்குதலாகத் தொடைகளையும் இடுப்புகளையும் முறித்து மடங்கடித்துப் பின்பு போய், ஏத்தாம் ஊரென்மலைச்சந்திலே குடியிருந்தான்.

௯ அப்பொழுது பெலிஸ்தர் வந்து யூதாவிலே பாளயம்போட்டு, லேகியென்ற வெளியிலே பரம்பினார்கள்.

௰ நீங்கள் எங்கள்மேலே வந்தேறினதென்னவென்று யூதாமனுஷர் கேட்டதற்கு அவர்கள் சிம்சோன் எங்களுக்குச்செய்ததுபோலே நாங்கள் அவனுக்குச் செய்யும்படிக்கவனைக்கட்டுகிறதற்காக வந்தேறினோமென்றார்கள்.

௰௧ அப்பொழுது யூதாவிலே மூவாயிரம்பேர் ஏத்தாமூர் கன்மலைச் சந்திற்குப் போய்ப் பெலிஸ்தர் நம்மையாளுகிறார்களென்றறியாயோ? பின்னை யேன் எங்களுக்கிப்படிப் பண்ணினாயென்று சிம்சோனுக்குச்சொன்னார்கள். அதற்கவன், அவர்களெனக்குச் செய்தபடியே அவர்களுக்குச் சரிக்கட்டினேனென்றான்.

௰௨ அப்பொழுதவர்களுன்னைக்கட்டிப் பெலிஸ்தர் கையிலொப்புக்கொடுக்க வந்திருக்கிறோமென்றவனுக்குச் சொன்னார்கள். அப்பொழுது சிம்சோன் அவர்களுடனே என்மேலே நீங்கள்தானே விழுகிறதில்லையென்று எனக்காணையிடுங்களென்றான்.

௰௩ அவர்கள் அவனுடனே, நாங்களுன்னைக் கட்டவே கட்டி அவர்கள் கையிலொப்புக்கொடுப்போமேயல்லாமலுன்னைக் கொன்றுபோடுவதில்லையென்று சொல்லி, இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக்கட்டிக் கன்மலையிலிருந்து கொண்டுபோனார்கள்.

௰௪ அவன் லேகிமட்டும் வந்து சேருகையிற் பெலிஸ்தர் அவனுக்கெதிராக ஆர்ப்பரித்தார்கள். ஆனால் கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினாலே அவன் புயங்களிற் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்களைப்போலாகி அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு உருவிப்போயிற்று.

௰௫ அவன் ஒரு கழுதையின் பச்சையான தாடையெலும்பைக் கண்டு, தன்கையை நீட்டியதைப் பிடித்து அதினாலே ஆயிரம்பேரைக் கொன்றுபோட்டான்.

௰௬ அப்பொழுது சிம்சோன், கழுதையின் தாடையெலும்பினாலே குவியல் குவியலாகப்பட்டுக் கிடக்கிறார்கள். கழுதையின் தாடையெலும்பினாலே ஆயிரம்பேரை மடங்கடித்தேனென்றான்.

௰௭ அப்படிச்சொல்லித் தீர்ந்தபோது தன்கையிலிருந்த தாடையெலும்பையெறிந்துவிட்டு, அவ்விடத்திற்கு ராமாத்லேகியென்று பேரிட்டான்.

௰௮ அவன் மெத்தவுந் தாகத்தவனாகிக் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு தேவரீர் உமதடியானுடைய கையினாலே இந்தப்பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டருச்சக் கொள்ள இப்போது நான் தாகத்தாலே செத்துச் சுன்னத்தில்லாதவர்கள் கையிலே விழுவேனோவென்றான்.

௨௰௨ அன்னள கூடபபோகவில்லை ஏனென்றுறபிளளைமுலைமறந்தபிறபாடு அவனகர்த்தரினசனனிதியிலே காணபபடடவும, அஙகே என்றைககுமிருக்கவும, நான அவனைககொணடுபோயவிடுவேனெனறு தனபுருஷனுககுசசொனனுள.

௨௰௩ அபபோது அவள புருஷனுகிய எல்க்காளு அவளுடனே, நீ உனககுசசமமதியானபடிசெயது, அவனைமுலைமறக்கபபணணுமடடுமிரு. கர்த்தர் தமமுடையவார்த்தையை மாததிரம நிறைவேறறுவாராகவெனருன. அபபடியே அந்தபபெணசாதிதனபிளளையைபபால்மறக்கபபணணுமடடும அதறகு முலைகொடுத்தாள.

௨௪ அவள் அவனைப் பால்மறக்கப்பண்ணினபிற்பாடு மூன்று காளையெருதுகளையும் ஒரு மரக்காலமாவையும் ஒரு துருத்தி திராட்சப்பழ இரசத்தையும், அவனையுங்கூட்டிக்கொண்டுபோய்ச் சீலோவிலிருக்கிற கர்த்தருடைய வீட்டுக்கு வந்தாள். பிள்ளையின்னங் குழந்தையாயிருந்தது.

௨௫ அவர்கள் ஒரு காளையெருதைப் பலியிட்டுப் பிள்ளையை ஏலியண்டைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள்.

௨௬ அவள் சொன்னதாவது, என்னுடையவனே! கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ண இங்கே உம்மண்டையிலே நின்றபெண்சாதி நான்தானேயென்று என்னுடையவனே உம்முடைய ஆத்துமத்தின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.

௨௭ இந்த ஆண்பிள்ளையைக் கட்டளையிட விண்ணப்பம்பண்ணினேன். நான் கர்த்தரைக் கேட்ட என் விண்ணப்பத்தை அவர் எனக்குக் கட்டளையிட்டார்.

௨௮ ஆகையால் அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினாலே அவனை அவனுயிரோடிருக்குஞ்சகலநாளும் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேனென்றாள். அவர்களங்கே கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள்.

௨. அதிகாரம்.

அன்னாள் கர்த்தருக்குச் செலுத்தின இஸ்தோத்திரம்.

அப்போது அன்னாள் செபம்பண்ணிச் சொன்னதாவது, என் இருதயம் கர்த்தருக்குள் களிகூர்ந்தது, என்னுடைய கொம்பு கர்த்தருக்குள் உயர்ந்திருக்கின்றது. என் பகைஞரின்பேரிலே வாய்விரிவாயிற்று ஏனெனில் உம்முடைய இரட்சிப்பினாலே சந்தோஷப்படுகிறேன்.

௨ கர்த்தரைப்போலே பரிசுத்தவானில்லை. ஏனெனில் உம்மையல்லாமல் வேறொருவரில்லை. எங்கள் பராபரனைப்போலொத்த கன்மலையில்லை.

௩ பெருமையும் மேட்டிமையுமான அகந்தப்பேச்சைப் பேசாதேயுங்கள் கடினமான பேச்சு உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். ஏனென்றால் கர்த்தர் மகா அறிவுள்ள பராபரன். அவர் செய்கைகள் நிதானமல்லவோ?

௪ பலவான்களின் வில்லுடைந்தது தள்ளாடினவர்களோவென்றால் பலத்தினாலே இடைகட்டப்பட்டார்கள்.

௫ அப்பத்தால் திருப்தியாயிருந்தவர்கள் கூலிக்கு வேலைசெய்கிறார்கள் பசியாயிருந்தவர்களோ இனி அப்படிக்கொத்தவர்களல்ல. மலடியானவள்தானே ஏழு பெற்றாள். அநேகம்பிள்ளைகளைப்பெற்றவளோ பலட்சயப்பட்டாள்.

௬ கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவரும் பாதாளத்தில் இறங்கவும் அதிலிருந்தேறவும் பண்ணுகிறவருமாயிருக்கிறார்.

௭ கர்த்தர் ஏழையாக்குகிறவரும் ஐசுவரியமடையப்பண்ணுகிறவரும், தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமாயிருக்கிறார்.

௮ பிரபுக்களோடே உட்காரப்பண்ணவுங் கனமுள்ள ஆசனத்தைச் சுதந்தரிக்கப்பண்ணவும் அவர் எளிமையானவனைத் தூளிலிருந்தெடுத்து, தரித்திரனைக் குப்பையிலிருந்துயர்த்துகிறார். ஏனென்றால் பூமியின் அஸ்திவாரங்கள் கர்த்தருடையவைகள் அவைகள்மேலே பூச்சக்கரத்தை வைத்தார்.

௯ தம்முடைய சன்மார்க்கரின் கால்களைக் காப்பார். ஆகாதவர்களோ இருளிலே அமைந்திருக்கப்பண்ணப்படுவார்கள். ஏனென்றால் பலத்தினாலே ஒருவனும் மேற்கொள்ளக்கூடாது.

௰ கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள் வானத்திலிருந்து அவர்கள்மேலே முழங்குவார். கர்த்தர் பூமியின்கடையாந்தரங்களை நியாயந்தீர்த்து தமது ராஜாவுக்குப் பலனைக் கொடுத்துத் தாம் அபிஷேகம்பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவாரென்றாள்.

௰௧ பிற்பாடு எல்க்கானா இராமாவிலிருக்கிற தன் வீட்டுக்குத் திரும்பினான். அந்தப் பிள்ளையோவென்றால் ஆசாரியனாகிய ஏலிக்குமுன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடைசெய்துகொண்டிருந்தது,

ஏலித்தன்குமாரருக்குக்கொடுத்த இளக்காரம்.

௰௨ ஆனாலும் ஏலியின்குமாரர் பேலியாளின்பிள்ளைகளாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரையறிந்ததில்லை.

௰௩ அந்த ஆசாரியர்கள் சனத்தை நடப்பித்த வயணம் என்னவென்றால், எவனாகிலும் யாதொரு பலியைச் செலுத்துகிறபோது, இறைச்சிவேகக்கொள்ளவே ஆசாரியனுடைய வேலைக்காரன் மூன்று கூருள்ள ஒரு ஆயுதத்தைத் தன்கையிலே பிடித்து வந்து,

௧௪ அதிலே கொப்பரையிலே அல்லது பானையிலே அல்லது சருவத்திலே அல்லது சட்டியிலே குத்துவான். அந்த ஆயுதத்திலே வருகிறதையெல்லாம் ஆசாரியன் வாங்கிக்கொள்வான். அப்படி அங்கே சீலோவிலே வருகிற இஸ்ரவேலருக்கெல்லாஞ் செய்தார்கள்.

௧௫ கொழுப்பைக் கொளுத்தாததற்கு முன்னும் ஆசாரியனுடைய வேலைக்காரன் வந்து, பலியிடுகிற மனுஷனோடே, ஆசாரியனுக்குப் பொரிக்கத்தக்கதாக இறைச்சி கொடு. ஏனென்றால் பச்சை இறைச்சியேயல்லாமல் அவிந்ததை உன்கையிலே வாங்குகிறதில்லையென்பான்.

௧௬ அந்த மனுஷன் இவனோடே, இன்றைய செய்யவேண்டியபடி முதற்கே கொழுப்பைக் கொளுத்திப்போடட்டும். பிற்பாடு உன்மனவிருப்பத்தின்படி எடுத்துக்கொள் என்று சொன்னாலும், இல்லை, அப்படியல்ல இப்போதே கொடு. இல்லாவிட்டால் பலாத்தமாய் எடுத்துக்கொள்வேனென்பான்.

௧௭ ஆனதுகொண்டு அந்த வாலிபரின் பாவம் கர்த்தரின் சந்நிதிக்கு முன்பாக மிகுந்த பெரிதாயிருந்தது. ஏனெனில் மனுஷர் கர்த்தரின் காணிக்கையை அசட்டைபண்ணினார்கள்.

௧௮ சாமுவேலோவென்றால் சணல்நூல் ஏபோத்தைத் தரித்த பிள்ளையாண்டானாய்க் கர்த்தருக்கு முன்பாகச் சேவித்திருந்தான்.

௧௯ அவனுடைய தாய் வருஷந்தோறும் செலுத்தும் பலியைச் செலுத்துகிறதற்குத் தன் புருஷனோடுங்கூட வந்தேறுகிறபோதெல்லாம் அவனுக்கு ஒரு சின்னச் சட்டையைத் தைத்துக்கொண்டு வருவாள்.

௨௰ ஏலி எல்க்கானாவையும் அவன் பெண்சாதியையும் ஆசீர்வதித்து, இந்த ஸ்திரீ கர்த்தரைக் கேட்டுவிண்ணப்பத்தினாலே கர்த்தர் உனக்கு அவள் வேசந்ததியைக் கட்டளையிடுவாராகவென்றான். அவர்கள் திரும்பத் தங்கள் தானத்துக்குப் போய்விட்டார்கள்.

௨௧ அப்படியே கர்த்தர் அன்னாளை விசாரித்தார். அவள் கெர்ப்பந்தரித்து மூன்று குமாரரையும் இரண்டு குமாரத்திகளையும் பெற்றாள். ஆனால் சாமுவேலென்கிற பிள்ளையாண்டான் கர்த்தருக்கு முன்பாக வளர்ந்தான்.

௨௨ ஏலியோவென்றால் மெத்தக்கிழவனாயிருந்தான். அவன் தன்னுடைய குமாரர் இஸ்ரவேலுக்கெல்லாஞ் செய்கிறதெல்லாவற்றையும் அவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலிருந்து திரட்சியாய் வருகிற ஸ்திரிகளோடே சயனிக்கிறதையுங் கேட்டு.

௨௩ அவர்களோடே சொன்னதாவது, நீங்கள் இப்படிக்கொத்த காரியங்களைச் செய்கிறதென்ன? ஏனென்றால் நான் இந்த எல்லாச் சனத்தினவாயிலும் உங்கள் பொல்லாத அக்கிரமங்களைக் கேட்கிறேன்.

௨௪ என்குமாரரே! வேண்டாம். ஏனென்றால் நான் கேட்கிற இந்தக் கீர்த்தி நல்லதல்ல கர்த்தருடைய சனம் மீறிநடக்கிறதற்குக் காரணமாயிருக்கிறீர்கள்.

௨௫ மனுஷனுக்கு விரோதமாக மனுஷன் பாவஞ்செய்தால், நியாயாதிபதிகள் அதைத் தீர்ப்பார்கள். ஒருவன் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தானேயானால், அவனுக்காக விண்ணப்பஞ்செய்யத்தக்கவனார் என்றான். ஆனாலும் அவர்கள் தங்கள் தகப்பன் சொற்கேளாமற்போனார்கள். அதேதென்றால் அவர்களைக் கொன்றுபோடக் கர்த்தர் சித்தமாயிருந்தார்.

௨௬ சாமுவேலென்கிற பிள்ளையாண்டானோவெனில், வளர்ந்து கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்தான்.

ஒரு தீர்க்கதரிசியினாலே ஏலிக்கடிந்துகொள்ளப்பட்டது.

௨௭ பராபரனுடைய மனுஷன் ஒருவன் ஏலியண்டைக்கு வந்து, அவனோடே சொன்னதாவது, கர்த்தர் உரைக்கிறதென்னவென்றால், உன்பிதாவின் வீட்டார் எகிப்திலே பார்வோனின் வீட்டிலிருக்கக்கொள்ள நாம் நம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி,

௨௮ நம்முடைய பலிபீடத்தின்மேலே பலியிடுகிறதற்கும் தூபங்காட்டுகிறதற்கும், நமக்கு முன்பாக ஆசாரியசால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிறதற்கும், இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் அவனை நமக்கு ஆசாரியனாகத் தெரிந்துகொண்டு உன்பிதாவின் வீட்டாருக்கும், இஸ்ரவேல் புத்திரருடைய தகனபலிகளையெல்லாங் கொடுத்ததில்லையோ?

௨௯ வாசஸ்தலத்திலே செலுத்த நாம் கற்பித்த நம்முடைய பலியையும் நம்முடைய காணிக்கையையும் நீங்கள் உதைப்பானேன்? நம்முடைய சனமாகிய இஸ்ரவேலின் காணிக்கைகளிலெல்லாம் பிரதானமானதினு

ல் உங்களைக் கொழுக்கப்பண்ணும்படிக்கு நீ நம்மைப்பார்க்கிலும் உன்குமாரரை யெண்ணுவானேனென்கிறார்.

௩௰ ஆகையால் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது, உன் வீட்டாரும் உன்பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் நம்முடைய சன்னிதியிலே நடந்துகொள்வார்களென்று நாம் சொல்லவே சொல்லியிருந்தாலும், இப்போதும் அது நமக்குத் தூரமாயிருப்பதாக. ஏனென்றால் நம்மைக் கனம்பண்ணுகிறவர்களை கனம்பண்ணுவோம். ஆனால் நம்மை யசட்டைபண்ணுகிறவர்கள் கனவீனமாவார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௩௧ இதோ, உன்வீட்டில் ஒருகிழவனுமிராதபடிக்கு உன்புயத்தையும் உன்பிதாவுடையவீட்டாரின்புயத்தையும் நாம் தறித்துப்போடும் நாட்கள்வரும்.

௩௨ இஸ்ரவேலுக்குச் செய்யப்படுஞ் சகலநன்மைக்குப் பதிலாக வாசஸ்தலத்திலே நெருக்கத்தைக் காண்பாய். என்றைக்கும் உன்வீட்டில் ஒருகிழவனுமிருப்பதில்லை.

௩௩ நம்முடைய பலிபீடத்தைச் சேவிக்கத்தாம். உன்சந்ததியில் நிர்மூலமாகாதவர்களோவென்றால் உன்கண்களைப் பூத்துப்போகப்பண்ணவும் உன் ஆத்துமத்தை வேதனைப்படுத்தவும் வைக்கப்படுவார்கள். உன்வீட்டாரின்திரளெல்லாம் புருஷரானபோது சாவார்கள்.

௩௪ ஒப்னி பினெகாசென்ற உன்னுடைய இரண்டுகுமாரரின் மேல்வருகின்றது. அதுவுனக்கு அடையாளமாயிருக்கும். அவர்கள் இருவரும் ஒரேநாளிலே சாவார்கள்.

௩௫ ஆனால் நம்முடைய இருதயத்திற்கும் நம்முடைய ஆத்துமத்திற்கும் ஏற்றபடி செய்யப்போகிற உண்மையான ஒரு ஆசாரியனை நமக்கெழும்பப்பண்ணி, அவனுக்கு நிசமானவீட்டைக் கட்டுவோம். அவன் நம்மால் அபிஷேகம்பண்ணப்பட்டவனுக்குமுன்பாகச் சகலநாளும் நடந்துகொள்வான்.

௩௬ சம்பவிப்பதேதென்றால் உன்வீட்டாரில் மீதியாயிருப்பவனெல்லாம் அவனை ஒருவெள்ளிப்பணத்தையும் ஒரு அப்பத்துணிக்கையையுங் கேட்கிறதற்கு வணங்கி, நான்கொஞ்சம் அப்பஞ்சாப்பிட என்னையாதொரு ஆசாரிய ஊழியத்திற்குச்சேர்த்துக்கொள்ளுமென்பார்களென்று சொன்னாரென்றான்.

௩. அதிகாரம்.

சாமுவேலுக்குக் கர்த்தராலுண்டான தரிசனம்.

சாமுவேலென்றபிள்ளையாண்டான் ஏலிக்குமுன்பாகவிருந்து கர்த்தரைச்சேவித்துக்கொண்டிருந்தான். அந்நாட்களிலே கர்த்தருடையவசனம் அபூருபமாயிருந்தது. வெளியரங்கமான தரிசனமிருந்ததில்லை.

௨ ஒருநாளிலேசம்பவித்ததேதென்றால் ஏலித்தனனுடையதானத்திலேபடுத்துக்கொண்டிருந்தான். அவன் பார்க்கக்கூடாதபடிக்கு அவனுடைய கண்கள் அப்போது இருளடையத்தவங்கிற்று.

௩ பராபரனுடையபெட்டியிருக்கிற கர்த்தருடையதேவாலயத்திலே பராபரனுடையவிளக்கு அவிக்கப்படுகிறதற்குமுன்னே சாமுவேலும்படுத்துக்கொண்டிருந்தான்.

௪ அப்போது கர்த்தர்சாமுவேலைக்கூப்பிட்டார். அதற்கு அவன், இதோ, இங்கேயிருக்கிறேனென்றுசொல்லி,

௫ ஏலியண்டைக்கு ஓடி, இதோ, இங்கேயிருக்கிறேன். ஏனென்றால் என்னைக்கூப்பிட்டீரேயென்றான். அவனோவென்றால், நான் கூப்பிட்டதில்லை. திரும்பிப்போய்ப்படுத்துக்கொள்ளென்றான். அவன்போய்ப்படுத்துக்கொண்டான்.

௬ மறுபடியுங்கர்த்தர்சாமுவேலே! என்று கூப்பிட்டார். அப்போது சாமுவேல் எழுந்திருந்து ஏலியண்டைக்குப்போய் இதோ, இருக்கிறேன். ஏனெனில் என்னைக்கூப்பிட்டீரேயென்றான். ஆனால் அவன் என்மகனே! நான் உன்னைக் கூப்பிட்டதில்லை. திரும்பிப்போய்ப் படுத்துக்கொள்ளென்றான்.

௭ சாமுவேலோவெனில் கர்த்தரையின்னம் அறிந்ததில்லை. ஏனெனில் கர்த்தருடையவார்த்தை அவனுக்கின்னம் வெளிப்பட்டதில்லை.

௮ கர்த்தர்மறுபடியும் மூன்றாமவிசை, சாமுவேலே! என்று கூப்பிட்டார். அவன் எழுந்திருந்து ஏலியண்டைக்குப்போய், இதோ இருக்கிறேன். ஏனென்றால் என்னைக்கூப்பிட்டீரேயென்றான். அப்போது கர்த்தர் பிள்ளையாண்டானைக் கூப்பிடுகிறாரென்று ஏலியறிந்து,

௯ சாமுவேலுடனே. நீ போய்ப்படுத்துக்கொள். உன்னைக் கூப்பிடுகிறதுண்டானால், அப்போது நீகர்த்தாவே! சொ

பேசும். அடியான் கேட்கிறேனென்று சொல்லுவாயாகவென்றான். சாமுவேல் போய்த் தன்னுடைய ஸ்தானத்திலே படுத்துக்கொண்டான்.

௰ அப்போது கர்த்தர் வந்து நின்று, முன்போலே சாமுவேலே! சாமுவேலே! என்று கூப்பிட்டார். அப்போது சாமுவேல், சொல்லும், அடியான் கேட்கிறேனென்றான்.

௰௧ கர்த்தர் சாமுவேலோடே சொன்னது: இதோ, நாம் இஸ்ரவேலில் ஒரு காரியஞ்செய்வோம்; அதைக் கேட்பவனெல்லாம் அவனுடைய இரண்டு காதுகளும் [illegible].

௰௨ அந்நாளிலே ஏலியின் வீட்டுக்கு விரோதமாய்ச் சொன்னவைகளையும் ஏலியின் மேல் சம்பவிக்கப்பண்ணத் துவக்கவும் முடிக்கவும் போகிறோம்.

௰௩ என்னென்றால் அவனுடைய குமாரர் தங்களைச் சபிக்கப்பட்டதாக்கிக்கொள்ளுகிற அக்கிரமத்தை அவன் அறிந்தும் அவர்களை அடக்காமற்போன அக்கிரமத்தினிமித்தம், நாம் அவன் வீட்டுக்கு என்றென்றைக்கும் நியாயஞ்செய்வோமென்பதை அவனுக்கு அறிவித்தோம்.

௰௪ இச் சத்தியத்தை ஏலிவீட்டாரின் அக்கிரமம் ஒருக்காலும் பலியினாலும் காணிக்கையினாலும் நிவிர்த்தியாவதில்லையென ஏலியின் வீட்டைக்குறித்துச் சத்தியம்பண்ணினோமென்றார்.

௰௫ சாமுவேல் விடியற்காலமட்டும் படுத்திருந்து, கர்த்தருடைய வீட்டின் கதவுகளைத் திறந்தான். ஆனால் சாமுவேல் ஏலிக்கு அந்தத் தரிசனத்தை அறிவிக்கப் பயந்தான்.

௰௬ ஏலியோவென்றால், என் மகனே சாமுவேலே! என்று சாமுவேலைக் கூப்பிட்டான்; அவன் இதோ, இங்கேயிருக்கிறேனென்றான்.

௰௭ அப்போது அவன், உன்னோடே சொன்ன வார்த்தையென்ன? எனக்கு அதை மறைக்காயாக. அவர் உன்னோடே சொன்ன சகல வார்த்தையிலும் யாதொன்றை எனக்கு மறைத்தாயானால், பராபரன் உனக்கு இப்படியும் அப்படியும் செய்வாராகவென்றான்.

௰௮ அப்போது சாமுவேல் அவனுக்கு ஒன்றையும் மறைக்காமல் அந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்கு அறிவித்தான். அதற்கவன்: அவர் கர்த்தர்தானே, அவர் தமக்கு நலமானதைச் செய்வாராகவென்றான்.

௰௯ சாமுவேல் வளர்ந்துவந்தான். கர்த்தர் அவனுடனே கூடவிருந்தார். அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழவிட்டதில்லை.

௨௰ ஆம் சாமுவேல் நிச்சயமாய்க் கர்த்தருடைய தீர்க்கதரிசியானவனென்று, தாண் ஊர் துவக்கிப் பெயர்செபா மட்டும் இருந்த இஸ்ரவேல்சனமெல்லாம் அறிந்தது.

௨௧ கர்த்தர் அப்புறஞ் சீலோவிலே வெளிப்படத் தரிசனங்கொடுத்தார்; என்னென்றால் கர்த்தர் சீலோவிலே தம்முடைய வார்த்தையினாலே சாமுவேலுக்கு வெளிப்பட்டார்.

௪. அதிகாரம்.

ஏலிக்கும் அவன் சந்ததிக்கும் வந்த அழிவு.

௧ சாமுவேலின் வார்த்தை இஸ்ரவேலுக்கெல்லாம் வந்தது, சம்பவித்தது. இஸ்ரவேல் பெலிஸ்தருக்கெதிராக யுத்தத்துக்குப் புறப்பட்டு, எபெனேசேர் கிட்டப் பாளயமிறங்கினார்கள். பெலிஸ்தரோவென்றால் ஆபேக்கிலே பாளயமிறங்கியிருந்தார்கள்.

௨ பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கெதிராகப் படையெடுத்துவந்தபோது, யுத்தம் விஸ்தாரமாகி, இஸ்ரவேல்சனம் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தது. இவர்கள் போர்க்களமாகிய வெளியிலே ஏறக்குறைய நாலாயிரம் பேரை வெட்டிப்போட்டார்கள்.

௩ சனங்கள் பாளயத்திலே வந்தபோது, இஸ்ரவேலின் மூப்பரானவர்கள், இன்று கர்த்தர் பெலிஸ்தருக்கு முன்பாக நம்மை முறியடித்ததென்ன? சீலோவிலிருக்கிற கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியை வாங்கிக்கொண்டு வருவோம். அது நம்மை நம்முடைய பகைஞரின் கைக்கு விலக்கி இரட்சிக்க நம்முடைய நடுவிலே வரக்கடவதென்றார்கள்.

௪ அப்படியே கேருபீன்களின் பேரிலே வாசமாயிருக்கிற சேனைகளுடைய கர்த்தரின் உடன்படிக்கைப்பெட்டியையெடுத்து வர, சனங்கள் சீலோவுக்குச் செய்தியனுப்பினது. அங்கே ஏலியின் இரண்டு குமாரராகிய ஒப்னியும் பினேகாசும் பராபரனுடைய உடன்படிக்கையின் பெட்டியண்டையிலிருந்தார்கள்.

௫ கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டிப் பாளயத்திலே வருகிறபோதோவென்றால், இஸ்ரவேல்சனமெல்லாம் மகா ஆர்ப்பரிப்பாய்ப் பூமி அதிரத்தக்கதாய்ச் சத்தமிட்டது.

௬ அவர்கள ஆர்ப்பரிக்கிறசத்தத்தைப்பெலிஸ்தர்கேட்டபோது, எபிரேயருடையபாளயத்தில இந்த மகா ஆர்ப்பரிப்பின சத்தமேதென்றுசொல்லிக்கர்த்தரின்பெட்டிப்பாளயத்தில்வந்ததென்றறிந்துகொண்டார்கள.

௭ பர்ப்பர்ன பாளயத்திலவந்தாரென்றுசொல்லப்பட்டபடியினுலே பெலிஸ்தர்பயந்து, நமக்கு ஐயோ, ஏனென்றால முன்னுலே யிப்படியிருந்ததில்லை.

௮ நமக்கு ஐயோ அந்த மகத்துவமான தேவர்களின்கைக்குநம்மைத்தப்புவிப்பவர் ? எசுப்தியரைச சகலவிதவாதையாலும வனாந்திரமட்டாக அடித்ததேவர்கள அவர்களதானே.

௯ பெலிஸ்தரே! உங்களைத திடப்படுத்திக்கொண்டு புருஷராயிருங்கள. எபிரேயர் உஙகளுக்கு கூழியஞ்செய்ததுபோலே நீங்கள அவர்களுக்குகூழியஞ்செய்யாதபடிக்குப புருஷராயிருந்துயுத்தமபண்ணுங்களென்று சொல்லிக் கொண்டார்கள.

௰ அப்போது பெலிஸ்தர் யுத்தமபண்ணினார்கள. இஸ்ரவேலோவென்றாலமுறிந்து, அவரவர் தங்கள கூடாரங்களுக்கோடிப்போனார்கள. மகாப்பெரிய சங்காரமாகி, இஸ்ரவேலிலே முப்பதினாயிரங்காலாட்களவிழுந்தார்கள.

௰௧ பர்ரபர்னுடையபெட்டிபிடிக்கப்பட்டது. ஏலியின இரணடுகுமாரராகிய ஓப்னியும பினெகாசும் செத்தார்கள.

௰௨ பென்யமீன் கோத்திர மனுஷன ஒருவனபடையிலிருந்தோடிப்போய்த்தன வஸ்திரங்களைக்கிழித்துத தனதலையின மேல புழுதியைவாரிப்போட்டுக்கொணடவனாய அந்த நாளிலேதானே சீலோவுக்குவந்தான.

௰௩ அவனவருகையில, இதோ, ஏலி ஒரு ஆசனத்தினமேல வழிப்புறத்தைநோக்கி உளுக்கார்ந்துகொணடிருந்தான. ஏனென்றால பர்ரபர்னுடையபெட்டிக்காக அவன இருதயந தத்தளிப்பாயிருந்தது. ஊரிலே செய்தியையறிவிக்க அந்தமனுஷனவந்தபோது பட்டணமெங்கும அலறுகையுணடாயிற்று.

௰௪ அலறுகிற அந்தச்சத்தத்தை ஏலிகேட்டபோது, அந்த அமளியின இரைச்சல என்னவென்றான. அப்போது அந்தமனுஷன தீவிரித்துவந்து ஏலிக்கறிவித்தான.

௰௫ ஏலியோவென்றால, தொண்ணூற்றெட்டு வயதுள்ளவனாயிருந்தான. அவன பார்க்கக் கூடாதபடிக்கு அவன கண்கள கமமலாயிருந்தது

௰௬ அந்த மனுஷன ஏலியுடனே, படையிலிருந்துவந்தவன நானதானே. இன்று நானபடையிலிருந்து ஓடிவந்தேனென்றான. அப்போது அவன என்மகனே! நடந்த வர்த்தமான மென்னவென்றுகேட்டான.

௰௭ செய்திகொணடுவந்தவன பிரதியுத்தாரமாக இஸ்ரவேலசனம பெலிஸ்தருக்கு முனபாக முறிந்தோடிச் சனத்திலே பெரிய சங்காரமுமாயிற்று உமமுடைய இரணடுகுமாரராகிய ஓப்னியும பினெகாசும மரித்தார்கள பர்ரபர்னுடையபெட்டியோவென்றால் பிடிக்கப்பட்டுப போயிற்றென்றான.

௰௮ அவன பர்ரபர்னுடையபெட்டியின பேச்சையெடுக்கிறபோதே ஏலி ஆசனத்திலிருந்து சதவினபக்கமாய மல்லாக்கவிழுந்து, அவனபிடரிமுறிந்துபோனதினுலேசெத்துப்போனான ஏனென்றால அவனகிழவனும தால்த்தவனுமாயிருந்தான. அவன நாற்பது வருஷமாய இஸ்ரவேலை நியாயமவிசாரித்திருந்தான.

௰௯ அவன மருமகளாகிய பினெகாசினபெண்சாதியோவென்றால, நிறைசூலிப்பணியாயிருந்தாள. அவள பர்ரபர்னுடைய பெட்டிபிடிக்கப்பட்டசெய்தியையும, தனமாமனுந தனபுருஷனுஞ செத்துப்போனதையுங கேட்டபோது குனிந்துகொணடுபெற்றாள. ஏனெனில அவளபெறுகிறவருத்தம அவளுக்குவந்தது.

௨௰ அவள் சாகப்போகிற நேரத்திலே அவளண்டையிலேநிற்கிற ஸ்திரிகள, நீபயப்படாதே. ஏனென்றால, ஆண்பிள்ளையைப பெற்றாயென்று அவளோடே சொன்னார்கள. ஆனால அவள அதற்குப பிரதியுத்தாரஞசொல்லவுமில்லை அதன்மேலே மனதுவைக்கவுமில்லை,

௨௰௧ அந்த ஆண்பிள்ளைக்கு இகபோதென்றுபேரிட்டுப் பர்ரபர்னுடைய பெட்டிப்பிடிக்கப்பட்டுத தனமாமனுந் தனபுருஷனுஞசெத்துப்போனபடியினுலே மகிமை இஸ்ரவேலைவிட்டு விலகிப்போயிற்றென்றும,

௨௰௨ பர்ரபர்னுடையபெட்டி பிடிக்கப்பட்டுப்போனபடியினுலே மகிமை இஸ்ரவேலைவிட்டு விலகிப்போயிற்றென்றுஞ் சொன்னாள.

ரு. அதிகாரம்.

உடம்படிக்கையின் பெட்டியைப் பெலிஸ்தர் தங்கள் தேசத்திலே கொண்டு போனது.

பெலிஸ்தரோவென்றாற் பராபரனின் பெட்டியைப் பிடித்து, அதை எபேனேசேரிலிருந்து அஸ்தோத்திற்குக் கொண்டு போனார்கள்.

௨ பெலிஸ்தர் பராபரனுடைய பெட்டியைப் பிடித்துத் தாகோனின் வீட்டிலே கொண்டுவந்து தாகோனண்டையிலே வைத்தார்கள்.

௩ அஸ்தோத்தூரார் மறுநாட்காலமே யெழுந்திருந்து வந்தபோதோவென்றால், இதோ, தாகோனென்கிற விக்கிரகம் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக முகங்குப்புறத் தரையிலே விழுந்துகிடந்தது. அப்போது அவர்கள் தாகோனை யெடுத்து அதனிடத்திலே திரும்ப நிறுத்தினார்கள்.

௪ அவர்கள் மறுநாட்காலமே யெழுந்திருந்து வந்தபோதோவென்றால், இதோ, தாகோன் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக முகங்குப்புறத் தரையிலே விழுந்து கிடந்ததுமல்லாமல் தாகோனின் தலையும் அதின் இரண்டு கைகளும் வாசற்படியின்மேலே வெட்டப்பட்டுக் கிடந்தது. உடல் மாத்திரந் தாகோனிலே மீதியாயிருந்தது.

௫ ஆனதுகொண்டு இந்நாள்வரைக்குந் தாகோனின் பூசாரிகளுந் தாகோனின் வீட்டுக்குட் பிரவேசிக்கிற ஒருவரும் அஸ்தோத்திலிருக்கிற தாகோனுடைய வாசற்படியை மிதிக்காதிருக்கிறார்கள்.

௬ ஆனாற் பராபரனுடைய கை அஸ்தோத்தாரின்மேல் அவர்களைப் பாழாக்கும்படிக்குப் பாரமாயிருந்தது. அவர் அஸ்தோத்தின் மனுஷராகிய அவர்களையும் அதின் எல்லைகளுக்குள்ளிருக்கிறவர்களையும் மூலவியாதியினால் வாதித்தார்.

௭ இப்படியாயிருக்கிறதை அஸ்தோத்தின் மனுஷர் கண்டபோது, இஸ்ரவேலுடைய பராபரனின் பெட்டி நம்மிடத்திலிருக்கப்போகாது. ஏனெனில் அவருடைய கை நம்முடையமேலும் நம்முடைய தேவனாகிய தாகோனின்மேலுங் கடினமாயிருக்கிறதென்று சொல்லி,

௮ பெலிஸ்தரின் அதிபதிகளையெல்லாம் அழைத்தனுப்பித் தங்களண்டையிலே கூட்டிக்கொண்டு, இஸ்ரவேலுடைய பராபரனின் பெட்டிக்கு நாஞ்செய்யவேண்டியதென்னவென்றார்கள். அவர்கள் அதைக் காத்பட்டணமட்டுஞ் சுற்றியெடுத்துக்கொண்டு போகவேண்டுமென்றார்கள். அப்படியே இஸ்ரவேலுடைய பராபரனின் பெட்டியைச் சுற்றியெடுத்துக் கொண்டுபோனார்கள்.

௯ அதைச் சுற்றியெடுத்துக்கொண்டு போனபிற்பாடோவென்றாற் கர்த்தருடைய கை அந்தப் பட்டணத்தின்மேல் மகா பெரிய மும்முரமாயிருந்தது, சிறியவர்களைத் துவக்கிப் பெரியவர்கள்மட்டுமிருக்கிற அந்தப் பட்டணத்தின் மனுஷருக்குள் மூலவாதைகளையுண்டாக்கி அவர்களையடித்தார்.

௰ ஆகையாற் பராபரனுடைய பெட்டியை எக்ரோனுக்கனுப்பினார்கள். அது எக்ரோனுக்கு வருகிறபோதோவென்றால் எக்ரோனூரார் கூப்பிட்டுக்கொண்டு, என்னையும் என்னுடைய சனத்தையுங் கொன்றுபோட இஸ்ரவேலுடைய பராபரனின் பெட்டியைச் சுற்றியெடுத்து என்னண்டைக்குக் கொண்டுவந்தார்களென்று சொல்லி,

௰௧ பெலிஸ்தரின் அதிபதிகளையெல்லாம் அழைத்தனுப்பிக் கூட்டி இஸ்ரவேலுடைய பராபரன் என்னையும் என்னுடைய சனத்தையுங் கொன்றுபோடாதபடிக்கு அவருடைய பெட்டியை யதின் ஸ்தானத்திற்குத் திரும்ப அனுப்புங்களென்றார்கள். ஏனென்றால் அந்தப் பட்டணமெங்குஞ் சாவுமும்முரமாகப் பராபரனுடைய கையங்கே மகா பாரமாயிருந்தது.

௰௨ செத்துப்போகாதிருந்த மனுஷர் மூலவாதைகளால் வாதிக்கப்பட்டார்கள்; அந்தப் பட்டணத்தின் கூக்குரல் வானபரியந்தமேறிற்று.

சு. அதிகாரம்.

உடம்படிக்கையின் பெட்டியைப் பெலிஸ்தர் திரும்ப இஸ்ரவேல்தேசத்திற்கனுப்பினது.

கர்த்தருடைய பெட்டி பெலிஸ்தரின் சீமையில் ஏழுமாதமிருந்தபோதோவென்றால்,

௨ பெலிஸ்தர் பூசாரிகளையுஞ் சாஸ்திரஞ்சொல்லுகிறவர்களையும் அழைப்பித்துக் கர்த்தருடைய பெட்டிக்கு நாஞ்செய்யவேண்டியதென்ன? அதை நாங்கள் என்னமாய் அதின் ஸ்தானத்திற்கனுப்பவேண்டுமென்று எங்களுக்கு அறிவியுங்களென்றார்கள்.

௩ இவர்கள் சொன்னது, இஸ்ரவேலுடைய பராபரனின் பெட்டியை நீங்கள் அனுப்பினால் அதை வெறுமையாய் அனுப்பாமல் குற்றம்போக்குங் காணிக்கையை அதற்குச் செலுத்தவே செலுத்தக்கடவீர்களாக. அப்பொழுது நீங்கள் சுகமாகிறதுமல்லாமல் அவருடைய கை உங்களை விடாதிருந்த முகாந்திரமென்னவென்று உங்களுக்குத் தெரியவருமென்றார்கள்.

௪ அப்பொழுது அவர்கள் குற்றம்போக்க நாங்கள் அதற்குச் செலுத்தவேண்டியதென்னவென்று கேட்டதற்கு இவர்கள் சொன்னதாவது, பெலிஸ்தருடைய அதிபதிகளின் இலக்கத்திற்குச் சரியாக மூலவியாதியின் சாயலான ஐந்து பொற்சுரூபங்களும் பொன்னான ஐந்து எலிகளுந்தானே; ஏனெனில் உங்களெல்லாருக்கும் உங்கள் அதிபதிகளுக்கும் ஏகமான வாதையாயிருக்கின்றது.

௫ ஆகையால் உங்கள் மூலவியாதியின் சாயலான சுரூபங்களையும், தேசத்தைக் கெடுத்துப்போட்ட உங்கள் எலிகளின் சாயலான சுரூபங்களையும் நீங்கள் பண்ணி இஸ்ரவேலின் பராபரனுக்கு மகிமையைச் செலுத்துங்கள். அப்பொழுது ஒருவேளை உங்கள் மேலும் உங்கள் தேவர்கள் மேலும் உங்கள் தேசத்தின் மேலுமிருக்கிற அவருடைய கை உங்களை விட்டு லெகுவாம.

௬ எகிப்தியரும் பார்வோனும் தங்கள் இருதயத்தைக் கடினமாக்கினதுபோல நீங்கள் உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்துவானேன்? இவர்களை அவர் நிந்தையாய் நடப்பித்தபிற்பாடு, அவர்களை இவர்கள் அனுப்பிவிட்டதும் அவர்கள் போனதுமில்லையோ?

௭ இப்பொழுதும் நீங்கள் ஒரு புது வண்டிலைச் செய்து, நுகத்தடி பிணைக்காதிருக்கிற இரண்டு கறவைப் பசுக்களைப் பிடித்து அவைகளை வண்டிலிலே கட்டி, அவைகளின் கன்றுக்குட்டிகளை அவைகளுக்குப் பின்னாகப் போகாதபடிக்கு வீட்டிலே கொண்டுவந்து வைத்து,

௮ பிற்பாடு கர்த்தருடைய பெட்டியை எடுத்து அதை வண்டிலின் மேலே வைத்து, நீங்கள் குற்றம்போக்க அவருக்குச் செலுத்தும் பொன்னுருப்படிகளை அதின் பக்கத்தில் ஒரு சின்னப் பெட்டியிலே போட்டு, அதைப் போகவிடுங்கள்.

௯ அப்பொழுது பாருங்கள். அது தன் எல்லைக்குப் போகும் வழியாய் பெத்சேமேசுக்கு ஏறிப்போனால், இந்தப் பெரிய தீங்கை நமக்குச் செய்தவர் அவர்தாமே. போகாதிருந்தால், அவருடைய கை நம்மைத் தொடாமல் அது தற்செயலாய் நமக்கு வந்ததென்றறிந்துகொள்ளுவோமென்றார்கள்,

௰ அந்த மனுஷர் அப்படிச் செய்து இரண்டு கறவைப் பசுக்களைப் பிடித்து, அவைகளை வண்டிலிலே கட்டி அவைகளின் கன்றுக்குட்டிகளை வீட்டிலே யடைத்து,

௧௧ கர்த்தருடைய பெட்டியையும் பொன்னான எலிகளும் தங்கள் மூலவியாதியின் சாயலான சுரூபங்களுமிருக்கிற சின்னப் பெட்டியையும் அந்த வண்டியின் மேலே வைத்தார்கள்.

௧௨ அப்பொழுது அந்தப் பசுக்கள் பெத்சேமேசுக்குப் போகிற வழியிலே செவ்வையாய்ப் போய், வலது இடதுபக்கமாய் விலகாமல் நடப்பான வழியிலே கூப்பிட்டுக்கொண்டு நடந்தது. பெலிஸ்தரின் அதிபதிகள் பெத்சேமேசின் எல்லைமட்டும் அவைகளின் பிறகாலே போனார்கள்.

௧௩ பெத்சேமேசின் மனுஷர் பள்ளத்தாக்கிலே கோதுமையை அறுப்பறுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் கண்களை யேறெடுக்கும்போது பெட்டியைக் கண்டு அதைப் பார்க்கையிலே சந்தோஷப்பட்டார்கள்.

௧௪ அந்த வண்டில் பெத்சேமேசூரானாகிய யோசுவாவினுடைய வயலிலே வந்தபோது அங்கே நின்றது; அங்கே ஒரு பெரிய கல்லிருந்தது. அப்பொழுது வண்டிலின் மரங்களைப் பிளந்து, பசுக்களைக் கர்த்தருக்குச் சர்வாங்கத் தகனபலியாக்கினார்கள்.

௧௫ லேவியர் கர்த்தருடைய பெட்டியையும் அதோடிருந்த பொன்னுருப்படிகளுள்ள சின்னப் பெட்டியையுமிறக்கி அந்தப் பெரிய கல்லின் மேலே வைத்துக்கொண்டிருந்தார்கள். பெத்சேமேசின் மனுஷரோவென்றால் அந்நாளிலே கர்த்தருக்குச் சர்வாங்கத் தகனங்களையும் பலிகளையுஞ் செலுத்தினார்கள்.

௧௬ பெலிஸ்தருடைய ஐந்து அதிபதிகள் இவைகளைக் கண்டபிற்பாடு அந்நாளிலே எக்ரோனுக்குத் திரும்பிப்போனார்கள்.

௧௭ பெலிஸ்தர் குற்றம்போக்கிறதற்காகக் கர்த்தருக்குச் செலுத்தின மூலவியாதியின் சாயலான பொற்சுரூபங்களாவது, அஸ்தோத்திற்காக ஒன்று, காசாவுக்காக ஒன்று, அஸ்கலோனுக்காக ஒன்று, காத்துக்காக ஒன்று, எக்ரோனுக்காக ஒன்று.

௧௮ அப்பொன்னெலிகளோவென்றால் அரணிப்பட்டணங்களைத் துவக்கி நாட்டுப்புறத்தின் கிராமங்கள் மட்டுக்குங் கர்த்தருடைய பெட்டியை வைத்துவிட்ட பெரிய கல்லிருக்கிற ஆபேல் மட்டுக்கும் ஐந்து அதிபதிகளின் கீழிருக்கிற பெலிஸ்தருடைய சகல ஊர்களின் இலக்கத்திற்குச் சரியாயிருந்தது. அந்தக்கல் இந்நாள் வரைக்கும் பெத்ஷேமேசனாகிய யோசுவாவின் வயலவெளியிலிருக்கின்றது.

௧௯ ஆனால் பெத்ஷேமேசின் மனுஷர் கர்த்தருடைய பெட்டியைப் பார்த்தபடியினாலே கர்த்தர் அவர்களிற் சிலரை அடித்தார்; ஜனத்திலே ஐம்பதினாயிரத்தெழுபது பேரை அடித்தார்; அப்பொழுது கர்த்தர் ஜனத்தைப் பெரிய சங்காரமாக அடித்ததினிமித்தம் ஜனங்கள் துக்கித்துக் கொண்டிருந்தார்கள்.

௨௰ இந்தப் பரிசுத்தமான பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கத்தக்கவன் யார்? பெட்டி நம்மிடத்திலிருந்து யாரிடத்துக்குப் போகவேண்டுமென்று பெத்ஷேமேசின் மனுஷர் சொல்லி,

௨௧ கீரியாத்யாரீமின் குடிகளுக்குத் தூதுவர்களை அனுப்பிப் பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியைத் திரும்ப அனுப்பினார்கள்; நீங்கள் இறங்கிவந்து அதை உங்களிடத்துக்கு எடுத்துக்கொண்டு போங்களென்று சொல்லியனுப்பினார்கள்.

௭. அதிகாரம்.

சாமுவேல் நியாயாதிபதியின் உத்தியோகத்தை நடப்பித்த வர்த்தமானம்.

அப்படியே கீரியாத்யாரீமின் மனுஷர் வந்து, கர்த்தருடைய பெட்டியை எடுத்து, மேட்டின்மேலிருக்கிற அபினதாபின் வீட்டிலே கொண்டுவந்து வைத்துக் கர்த்தருடைய பெட்டியைக் காக்கும்படிக்கு அவன் குமாரனாகிய எலெயாசாரைப் பரிசுத்தம் பண்ணினார்கள்.

௨ பெட்டியானது கீரியாத்யாரீமிலே வைக்கப்பட்ட நாள் முதற்கொண்டு வெகுநாட்கள் சென்றுபோயிற்று; இருபது வருஷம் அங்கேதானே இருந்தது. ஆனால் இஸ்ரவேல் வீட்டாரெல்லாரும் கர்த்தரைத் தேடிப் புலம்பிக்கொண்டிருந்தார்கள்.

௩ அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேல் வீட்டாரோடே சொல்லிச் சொன்னதாவது: நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடுங் கர்த்தரண்டைக்குத் திரும்புகிறவர்களானால், அந்நிய தேவர்களையும் அஸ்தரோத்தையும் உங்கள் நடுவிலிருந்து விலக்கி, உங்கள் இருதயத்தைக் கர்த்தருக்கு நேராக்கி, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்யுங்கள்; அப்பொழுது உங்களைப் பெலிஸ்தருடைய கைக்கு நீங்கலாக்கிவிடுவாரென்றான்.

௪ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் பாகால்களையும் அஸ்தரோத்தையும் விலக்கிப்போட்டுக் கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்தார்கள்.

௫ பிற்பாடு சாமுவேல்: நான் உங்களுக்காகக் கர்த்தரை மன்றாடும்படிக்கு, இஸ்ரவேலையெல்லாம் மிஸ்பாவிலே கூட்டுங்களென்றான்.

௬ அப்பொழுது அவர்கள் மிஸ்பாவிலே கூடிக்கொண்டு தண்ணீர் மொண்டு கர்த்தருக்கு முன்பாக ஊற்றிப் போட்டு அந்நாளிலே உபவாசம் பண்ணிக் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தோமென்று அங்கே சொன்னார்கள். அப்படியே மிஸ்பாவிலே சாமுவேல் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்துக்கொண்டிருந்தான்.

௭ இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவந்ததைப் பெலிஸ்தர் கேட்டபோதோவென்றால், பெலிஸ்தரின் அதிபதிகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக எழும்பிவந்தார்கள். அதை இஸ்ரவேல் புத்திரர் கேட்டுப் பெலிஸ்தருக்கு முன்பாகப் பயப்பட்டு,

௮ சாமுவேலுடனே, நம்முடைய பராபரனாகிய கர்த்தர் எங்களைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும்படிக்கு எங்களுக்காக அவரை நோக்கிக் கூப்பிடுகிறதில் ஓயாதிருமென்றார்கள்.

௯ அப்பொழுது சாமுவேல் பால் குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனமாகப் பலியிட்டு இஸ்ரவேலுக்காகக் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். கர்த்தர் அவனுக்கு மறுமொழி அருளிச்செய்தார்.

௰ அதேதென்றால் சாமுவேல் சர்வாங்கதகனபலியைச் செலுத்துகையில், பெலிஸ்தர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் பண்ணச் சேர்ந்தார்கள். அப்பொழுது கர்த்தர் மகா பெரிய இடிமுழக்கங்களைப் பெலிஸ்தர்மேல் அந்நாளிலே முழங்கப்பண்ணி அவர்களைக் கலங்கடிக்கிறதினாலே அவர்கள் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பட்டுவிழுந்தார்கள்.

௰௧ அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் மிஸ்பாவிலிருந்து பெலிஸ்தரைப் பின்தொடர்ந்துபோய்ப் பெத்காரின் பள்ளத்தாக்குமட்டும் அவர்களை முறிய அடித்தார்கள்.

௰௨ அன்றியும் சாமுவேல் ஒரு கல்லையெடுத்து, மிஸ்பாவுக்கும் சேனுக்கும் நடுவாக நிறுத்தி, இவ்விடமட்டுங் கர்த்தர் எங்களுக்கு ஒத்தாசை பண்ணினாரென்று சொல்லி, அதற்கு ஏபேன் ஏசேரென்று பேரிட்டான்.

௰௩ இந்தப் பிரகாரமாகப் பெலிஸ்தர் அப்புறம் இஸ்ரவேலின் எல்லையிலே வராதபடிக்குத் தாழ்த்தப்பட்டார்கள். ஏனெனில் சாமுவேலிருந்த நாளெல்லாங் கர்த்தருடைய கை பெலிஸ்தருக்கெதிராயிருந்தது.

௰௪ பெலிஸ்தர் இஸ்ரவேல் கையிலே பிடித்திருந்த, எக்கிரோன் துவக்கிக் காத்மட்டுமுள்ள பட்டணங்களும் இஸ்ரவேலுக்குத் திரும்ப வந்தது. அவைகளையும் அவைகளின் எல்லைகளையும் இஸ்ரவேலர் பெலிஸ்தர் கையிலே இராதபடிக்கு விடுவித்துக்கொண்டார்கள். இஸ்ரவேலுக்கும் எமோரியருக்குஞ் சமாதானமுண்டாயிருந்தது.

௰௫ சாமுவேலோவென்றால் உயிரோடிருந்த நாளெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

௰௬ அவன் வருஷந்திற்கு வருஷம் புறப்பட்டுப் பெத்தேலையுங் கில்காலையும் மிஸ்பாவையுஞ் சுற்றிப் போய், அவ்விடங்களிலெல்லாம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தபிற்பாடு,

௰௭ அவன் இராமாவுக்குத் திரும்பி வருவான். ஏனெனில் அங்கே அவனுடைய வீடிருந்தது. அங்கே இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, அங்கே கர்த்தருக்கொரு பீடத்தைக் கட்டினான்.

௮. அதிகாரம்.

இஸ்ரவேல் சனங்கள் தங்களுக்கொரு இராசா வேண்டுமென்று கேட்டது.

சாமுவேல் முதிர்ந்த வயதான போதோவெனில், தன் குமாரரை இஸ்ரவேலின்பேரிலே நியாயாதிபதிகளாக வைத்தான்.

௨ அவனுடைய மூத்த குமாரனுக்கு யோவேலென்று பேரும் இளையவனுக்கு அபியாவென்று பேருமிருந்தது. அவர்கள் பெயர்செபாவிலே நியாயாதிபதிகளாயிருந்தார்கள்.

௩ ஆனால் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமற் பொருளாசைக்குச் சாய்ந்து பரிதானம் வாங்கி நியாயத்தைக் கோணலாக்கினார்கள்.

௪ அப்போது இஸ்ரவேலின் மூப்பரெல்லாருங் கூடிக்கொண்டு, இராமாவிலே சாமுவேலண்டைக்கு வந்து,

௫ அவனுடனே, இதோ, நீர் முதிர்ந்த வயதுள்ளவரானீர். உம்முடைய குமாரரோவென்றால் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை இப்போதுஞ் சகல சாதிகளுக்குமிருக்கிறபடியே, எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கொரு இராசாவை எங்களுக்கு வையுமென்றார்கள்.

௬ ஆனால் எங்களை நியாயம் விசாரிக்கிறதற்கு எங்களுக்கொரு இராசாவைக் கொடுமென்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலுக்கு ஆகாத்தாய்க் கண்டது. ஆகையாற் சாமுவேல் கர்த்தரை நோக்கி, விண்ணப்பம் பண்ணினான்.

௭ அப்போது கர்த்தர் சாமுவேலோடே சொன்னதாவது, சனம் உன்னோடே சொன்னபடியெல்லாம் அவர்கள் சொல்லைக் கேள். ஏனெனில் அவர்கள் உன்னைத் தள்ளாமல், நான் அவர்களை அரசாளாதபடிக்கு நம்மைத்தான் தள்ளினார்கள்.

௮ நாம் அவர்களை எகிப்திலிருந்தேறப் பண்ணின நாள் துவக்கி இந்நாள்மட்டும், அவர்கள் நம்மைவிட்டு, வேற்றுத்தேவர்களைச் சேவித்துவந்த தங்கள் எல்லாக் கிரியைகளின்படியுஞ் செய்ததுபோலே, அவர்கள் உனக்குஞ் செய்கிறார்கள்.

௯ இப்போதும் அவர்கள் சொல்லைக் கேள். ஆனால் அவர்களை அரசாளும் இராசாவின் நியாயத்தையவர்களுக்குத் திடச்சாட்சியாய்த் தெரிவியென்றார்.

௰ அப்போது சாமுவேல் தன்னை ஒரு இராசாவைக் கேட்ட சனத்தோடே கர்த்தருடைய வார்த்தைகளையெல்லாஞ் சொல்லி,

௰௧ உரைத்ததாவது, உங்களை அரசாளும் இராசாவின் நியாயமென்னவென்றால், தன் இரதத்திற்கு முன்னோடவும் உங்கள் குமாரரையெடுத்துத் தன் இரதத்திற்கு முன்னோட அவர்களைத் தன் இரதக்காரராகவுந் தன் குதிரைக்காரராகவும் வைத்துக்கொள்வான்.

௰௨ ஆயிரம்பேருக்கும் ஐம்பதுபேருக்குந் தலைவராகவுந் தன் உழவிடையை உழுகிறவர்களாகவுந் தன்னுடைய அறுப்பறுக்கிறவர்களாகவுந் தன்னுடைய யுத்த ஆயுதங்களையுந் தன்னுடைய இரதங்களின் பணிமுட்டுகளையுஞ் செய்பண்ணுகிறவர்களாகவும் அவர்களை வைத்துக்கொள்வான்.

௧௩ உங்கள் குமாரத்திகளைத் தயில அவிழ்க்கு செய்கிறவர்களாகவுஞ் சமைப்பண்ணுகிறவர்களாகவும் அப்பஞ்சுடுகிறவர்களாகவும் வைத்துக்கொள்வான்.

௧௪ நல்லதாகிய உங்கள் வயல்களையும் உங்கள் திராட்சத் தோட்டங்களையும் உங்கள் ஒலிவத்தோப்புகளையும் எடுத்துத் தன் ஊழியக்காரருக்குக் கொடுப்பான்.

௧௫ உங்கள் பயிர்களிலும் உங்கள் திராட்சப் பலனிலும் பத்திலொன்றை வாங்கித் தன் பிரதானிகளுக்குந் தன் வேலைக்காரருக்குங் கொடுப்பான்.

௧௬ உங்கள் வேலைக்காரரையும் உங்கள் வேலைக்காரிகளையும் உங்கள் வாலிபரையும் உங்களுக்குள்ள கழுதைகளையும் பிடித்துத் தன்னுடைய வேலைக்கு வைப்பான்.

௧௭ உங்கள் ஆடுகளில் பத்திலொன்றை வாங்குவான். நீங்களோவென்றால் அவனுக்குப் பணிவிடைசெய்கிறவர்களாயிருப்பீர்கள்.

௧௮ நீங்கள் உங்களுக்குத் தெரிந்துகொண்ட உங்கள் இராசாவினிமித்தம் அந்நாளிலே கூப்பிடுவீர்கள். ஆனாற் கர்த்தர் உங்களை அந்நாளிலே கேட்பதில்லையென்றான்.

௧௯ சனமோவென்றாற் சாமுவேலின் சொல்லைக் கேட்கமனதில்லாமற் சொன்னதாவது, அப்படியல்ல. ஒரு இராசா எங்கள்மேலிருக்கவேண்டும்.

௨௦ சகலசாதிகளைப்போலே நாங்களுமிருப்போம். எங்கள் இராசா எங்களை நியாயம்விசாரித்து, எங்களுக்கு முன்பாகப் புறப்பட்டு, எங்கள் யுத்தங்களை நடத்தவேண்டுமென்றார்கள்.

௨௧ சாமுவேல் சனத்தின் வார்த்தைகளையெல்லாங் கேட்டு, அவைகளைக் கர்த்தருடைய செவிகளுக்கு முன்பாகச் சொன்னான்.

௨௨ கர்த்தரோவென்றாற் சாமுவேலுடனே, நீ அவர்கள் சொல்லைக் கேட்டு, அவர்களுக்கு ஒரு இராசாவை ஏற்படுத்தென்றார். அப்போது சாமுவேல் இஸ்ரவேல் மனுஷருடனே, நீங்கள் உங்கள் ஊர்களுக்குப் போய்விடுங்களென்றான்.

௯. அதிகாரம்.

சவுல் இஸ்ரவேலுக்கு இராசாவாகக் குறிக்கப்பட்டது.

கீசென்றுபேருள்ள பென்யமீன் கோத்திரத்தானாகிய பலத்த ஒரு மனுஷனிருந்தான். அவன் எமினிமனுஷனாயிருந்த ஒருவனுடைய குமாரனாகிய அப்பீயாவின் மகனுன் பெகோராத்தின் குமாரனான சேரோரின் மகனாகிய அபீயேலின் குமாரனானவன்.

௨ அவனுக்குச் சவுலென்று பேருள்ள சவுந்தரியமான வாலிபனாகிய ஒரு குமாரனிருந்தான். இஸ்ரவேல் புத்திரரில் அவனைப்பார்க்கிலுஞ் சவுந்தரியமானவனில்லை. எல்லாச் சனத்திலுந் தன் தோள் உசந்தவனாயிருந்தான்.

௩ சவுலின் தகப்பனாகிய கீசுடைய பெட்டைக்கழுதைகள் காணாமற்போயிற்று. ஆகையாற் கீசு தன் குமாரனாகிய சவுலோடே, நீ வேலைக்காரரில் ஒருவனைக் கூட்டிக்கொண்டு, கழுதைகளைத் தேடப் புறப்பட்டுப்போவென்றான்.

௪ அப்படியே அவன் எப்பிராயீம் மலைகளையுஞ் சலிசாத் தேசத்தையுங் கடந்துபோனான். அங்கே அவைகளைக் கண்டுபிடியாமற் சாலீம் தேசத்தைக் கடந்தார்கள். அங்கேயுமில்லாமற் போயிற்று. எமினிதேசத்தையுங் கடந்துங் கண்டுபிடித்ததில்லை.

௫ அவர்கள் சூப்பென்ற தேசத்திற்கு வந்தபோது, சவுல் தன்னோடிருந்த வேலைக்காரனுடனே, என் தகப்பன் கழுதைகளின்பேரிலிருக்கிற நினைப்பைவிட்டு நமக்காகக் கவலைப்படாதபடிக்குத் திரும்பிப் போவோம் வாவென்றான்.

௬ இவனோவென்றால் அவனுடனே, இதோ, இந்தப் பட்டணத்திலே பராபரனுடைய மனுஷன் ஒருவனிருக்கிறான். அவன் பெரிய மனுஷன். அவன் சொல்லுகிறதெல்லாந் தப்பாமல் வரும். இப்போதும் அங்கே போவோம். ஒருவேளை அவன் நாம் போகவேண்டிய நம்முடைய வழியை நமக்கறிவிப்பானென்றான்.

௭ அப்போது சவுல் தன் வேலைக்காரனோடே, இதோ, நாம் போனாலும், அந்த மனுஷனுக்கு என்னத்தைக் கொண்டுபோவோம். ஏனென்றால் நம்முடைய அசுப்பிகளிலிருந்த தின்பண்டங்கள் போயிற்று. பராபரனுடைய மனுஷனாகிய அவனுக்குக் கொண்டுபோகத்தக்க காணிக்கை நம்மிடத்திலில்லையேயென்றான்.

௮ அந்த வேலைக்காரன் அப்புறஞ் சவுலுக்குப் பிரத்தியுத்தாரமாக இதோ, என் கையிலே இன்னுங் கால்சேக்கல் வெள்ளியிருக்கிறது. பராபரனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியையறிவிக்கும்படிக்கு அதை அவனுக்குக் கொடுப்பேனென்றான்,

௯ முற்காலத்திலே இஸ்ரவேலில் யாதொருவர் பராபரனை ஆலோசனைக் கேட்கப்போனால், ஞானதிஷ்டிக்காரனண்டைக்குப் போவோம் வாருங்களென்பார்கள். ஏனென்றால் இந்நாளிலே தீர்க்கதரிசியென்னப்படுகிறவன் முற்காலத்திலே ஞானதிஷ்டிக்காரனென்னப்படுவான்.

௰ அப்போது சவுல் தன் வேலைக்காரனோடே உன் வார்த்தை நல்லதுதான். போவோம் வாவென்றான். அப்படியே பராபரனுடைய மனுஷனிருந்த அந்தப் பட்டணத்திற்குப் போனார்கள்.

௰௧ அவர்கள் பட்டணத்தின் படியிலே ஏறிப்போகிறபோது தண்ணீர் மொள்ளப் புறப்பட்ட பெண்பிள்ளைகளைக் கண்டு ஞானதிஷ்டிக்காரன் இங்கேயிருக்கிறாரோவென்று அவர்களைக் கேட்டார்கள்.

௰௨ இவர்கள் அவர்களுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னது, இருக்கிறார். இதோ, உங்களுக்கெதிராய் வருவார். ஆகையால் தீவிரித்துக்கொள்ளுங்கள். ஏனென்றால் இன்றைக்கு மேட்டின்மேலே பலிசெலுத்துதல் சனத்திற்குண்டாயிருக்கிறபடியினாலே இன்றுபட்டணத்திற்கு வந்தார்.

௰௩ நீங்கள் பட்டணத்திற்குட்பிரவேசித்தவுடனே அவர் சாப்பிடத்தக்கதாக மேட்டின்மேலேறுகிறதற்கு முன்னே காண்பீர்கள். ஏனென்றால் அவர் வருமட்டுஞ் சனங்கள் சாப்பிடுகிறதில்லை. ஏனெனிற் பலியிட்டதையவர் ஆசீர்வதிக்கிறார். பிறபாடு அழைக்கப்பட்டவர்கள் சாப்பிடுகிறார்கள். இப்போதும் ஏறிப்போங்கள். ஏனென்றால் இன்னேரப்பகலிலே அவரைக் காண்பீர்களென்றார்கள்.

௰௪ அவர்கள் பட்டணத்திற்கு ஏறிப்போய்ப் பட்டணத்தின் நடுவே வந்தபோது, இதோ, சாமுவேல் மேட்டின்மேலே ஏறிப்போகிறதற்காக அவர்களுக்கெதிராகப் புறப்பட்டு வந்தான்.

௰௫ ஆனாற்சவுல்வர ஒரு நாளுக்கு முன்னே கர்த்தர் சாமுவேலின் காதுகளுக்கு வெளிப்படுத்திச்சொன்னதாவது,

௰௬ நாளையின்னேரத்திற்குப் பென்யமீன் தேசத்தாரில் ஒரு மனுஷனை உன்னண்டைக்கனுப்புவோம். அவனை நம்முடைய சனமாகிய இஸ்ரவேலின் பேரிலே அதிபதியாக அபிஷேகம் பண்ணக்கடவாய். அவன் நம்முடைய சனத்தைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பான். ஏனெனில் நம்முடைய சனத்தின் கூப்பிடுதல் நமக்கெட்டின படியினாலே அதை நோக்கிப்பார்த்தோமென்று சொல்லியிருந்தார்.

௰௭ சாமுவேல் சவுலைக் காண்கையிற் கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தாரமாக, இதோ, நாம் உன்னோடே சொன்ன மனுஷன் இவன்தான். இவன் நம்முடைய சனத்தையாண்டுகொள்வானென்றார்.

௰௮ சவுல் நடுவாசலில் சாமுவேலண்டை சேர்ந்து, இங்கே ஞானதிஷ்டியுள்ளவன் வீடு எங்கேயென்றெனக்கறிவியுமென்றான்.

௰௯ சாமுவேல் சவுலுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது, ஞானதிஷ்டியுள்ளவன் நான்தானே. நீயெனக்குமுன்னாக மேட்டின்மேலேறிப்போ. ஏனெனில் நீங்கள் இன்றைக்கு என்னோடே சாப்பிடவேண்டும். நாளைக்காலமே நானுன்னையனுப்பி, உன்னிருதயத்திலிருக்கிறதெல்லாவற்றையுமுனக்கறிவிப்பேன்.

௨௰ இன்றைக்கு மூன்றும் நாளில் உனக்குக் காணாமற்போன பெட்டைக்கழுதைகளின் செய்தியை உன்மனதிலே வைக்காயாக. ஏனெனில் அவைகள் அகப்பட்டது. இல்லாமல் இஸ்ரவேலில் இச்சிக்கப்படத்தக்கதெல்லாம் ஆருக்கிருக்கும்? உனக்கும் உன் தகப்பன் வீட்டாத்திற்குமல்லவோவென்றான்.

௨௧ அப்போது சவுல் பிரதியுத்தாரமாக நான் இஸ்ரவேல் கோத்திரங்களில் சிறிதான பென்யமீன் கோத்திரத்தானல்லவோ? பென்யமீன் கோத்திரத்து வம்சங்களிலெல்லாம் என்னுடைய வம்சங்கொஞ்சமானதல்லவோ? நீர் இப்படிக்கொத்த வார்த்தையையென்னோடே சொல்லுவானேனென்றான்.

௨௨ ஆனாற் சாமுவேல் சவுலையும் அவன் வேலைக்காரனையுஞ் சாலைக்குள் அழைத்துக்கொண்டுபோய், அழைக்கப்பட்டவர்களுக்குள்ளே அவர்களைத் தலையான ஸ்தலத்திலே வைத்தான். இவர்களேறக்குறைய முப்பது பேராயிருந்தார்கள்.

௨௩ பிறபாடு சாமுவேல் சமையலாளுடனே, நானுன் கையிலே கொடுத்துவைக்கச்சொன்ன பங்கைக் கொண்டுவந்து வையென்றான்.

௨௪ அப்போது சமையற்பண்ணுகிறவன் ஒரு முன்னந்தொடையையும் அதனோடேகூடவிருந்ததையுமெடுத்துவந்தான். அதையவன் சவுல் முன்னே வைத்து இதோ மீதியானது. இதையுனக்கு முன்பாக வைத்துக்கொண்டு சாப்பிடு. ஏனென்றால் நான் சனத்தை விருந்துக்கழைத்தபடியினு

லேயிருந்து இறக்கவேண்டியது உனக்காக வைக்கப்பட்டதென்றான். அப்படியே சவுல் அந்நாளிலே சாமுவேலோடே சாப்பிட்டான்.

௨௫ அவர்கள் மேட்டிலிருந்து பட்டணத்திற்கிறங்கிவந்த பிற்பாடு அவன் மேல்வீட்டில் சவுலோடே பேசிக்கொண்டிருந்தான்.

௨௬ அவர்கள் அதிகாலமே கிழக்குவெளுக்கிறநேரத்திலெழுந்திருந்த போதோவென்றால், சாமுவேல் சவுலை மேல்வீட்டின்மேலே அழைத்து, நான் உன்னையனுப்பும்படிக்கு எழுந்திருவென்றான். சவுல் ஆயத்தப்பட்டபோது அவனும் சாமுவேலும் இருவருமாக வெளியே புறப்பட்டார்கள்.

௨௭ அவர்கள் பட்டணத்தின் முடிவுமட்டும் இறங்கிவந்த போதோவென்றால் சாமுவேல் சவுலுடனே, நான் பராபரனுடைய வார்த்தையை உனக்கு அறிவிப்பண்ணும்படிக்கு நீ இப்போது தரித்துநின்று வேலைக்காரனை நமக்கு முன்னே நடந்துபோகச் சொல்லென்றான். அப்படியே அவன் நடந்துபோனான்.

௰. அதிகாரம்.

சவுல் இராசாவாக்கப்பட்டது.

அப்போது சாமுவேல் எண்ணெயப் பாத்திரத்தையெடுத்து, அவன் தலையின் பேரிலே வார்த்து, அவனை முத்தஞ்செய்து சொன்னதாவது, கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின்பேரிலே தலைவனுக்கு அபிஷேகம்பண்ணினாரல்லவோ?

௨ நீயின்றைக்கென்னைவிட்டுப்போகிறபோது, பென்யமீன் எல்லையாகிய செல்சாகிலே ராகேலின் கல்லறையண்டையிலே இரண்டு மனுஷரைக் காண்பாய் அவர்கள் உன்னுடனே, நீ தேடப்போன கழுதைகள் அகப்பட்டது. இதோ, உன் தகப்பன் கழுதைகளின்மேலிருந்த விசாரத்தைவிட்டு உங்களுக்காகக் கவலைப்பட்டு, என் மகனுக்காக என்னசெய்வேனென்கிறானென்று சொல்லுவார்கள்.

௩ நீயவ்விடத்தைவிட்டு அப்பாற்கடந்து, ஏலோன் தாபோர்மட்டும் வருகிறபோது பெத்தேலிலே பராபரனைப் பணியும்படிக்குப் போகிற மூன்று மனுஷர் அங்கே உன்னைக்கண்டு சந்திப்பார்கள். ஒருவன் மூன்று ஆட்டுக்குட்டிகளையும், மற்றொருவன் மூன்று அப்பங்களையும், மற்றொருவன் திராட்சப்பழ இரசமிருக்கிற ஒரு துருத்தியையுஞ் சுமந்துவந்து,

௪ உன்னுடைய சுகசெய்தியை விசாரித்து, உனக்கு இரண்டப்பங்களைக் கொடுப்பார்கள். அவைகளை நீ அவர்கள் கையிலே வாங்கவேண்டும்.

௫ பிற்பாடு பெலிஸ்தரின் தாணையமிருந்த பராபரனுடைய மேட்டுக்கு வருவாய். அங்கே நீ பட்டணத்திற்குட்பிரவேசிக்கையிலே மேட்டிலிருந்திறங்கிவருகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்திற்கெதிர்ப்படுவாய். அவர்களுக்கு முன்பாகத் தம்புரும் மேளமும் நாகசுரமும் மண்டலமும் போகும் அவர்களோவென்றால், தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்.

௬ அப்போது கர்த்தருடைய ஆவியுன்மேலிறங்குகிறதினாலே நீயவர்களோடே கூடத் தீர்க்கதரிசனஞ்சொல்லி, வேறே மனுஷனாய்ப்போவாய்.

௭ இந்த அடையாளங்கள் உனக்கு வந்தபோது உனக்கு நேர்கிறதைச் செய். ஏனெனில் பராபரன் உன்னோடேயிருக்கிறார்.

௮ ஆனால் நீயெனக்குமுன்னே கில்காலுக்கிறங்கிப்போவாயாக. ஏனென்றால் இதோ, சர்வாங்கத்தகனங்களையுஞ் சமாதான பலிகளையுஞ் செலுத்தும்படிக்கு நான் உன்னண்டைக்கிறங்கிவருவேன். நான் உன்னண்டைக்கு வந்து, நீ செய்யவேண்டியதை உனக்கறிவிக்குமட்டும் ஏழுநாட்காத்திருப்பாயாகவென்றான்.

௯ அவன் சாமுவேலை விட்டுப்புறப்படத் திரும்பினபோது சம்பவித்ததேதெனில், பராபரன் அவனுக்கு வேறே இருதயத்தை மாற்றிக்கொடுத்தார். அந்த எல்லா அடையாளங்களும் அந்நாளிலேதானே அவனுக்கு வந்தது.

௰ அவர்கள் அந்த மேட்டுக்கு வந்தபோதும் இதோ, தீர்க்கதரிசிகளின் கூட்டம் அவனுக்கெதிராக வந்தது. அப்போது பராபரனுடைய ஆவி அவன்மேலிறங்கினதினாலே அவர்களுக்குள்ளிருந்து தீர்க்கதரிசனஞ்சொன்னான்.

௰௧ அதற்குமுன்னே அவனையறிந்தவர்களெல்லாரும் அவன் தீர்க்கதரிசிகளோடிருந்து தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறதைக் கண்டபோது, அந்தச் சனம் ஒருவரோடொருவர் கீசின்குமாரனுக்கு வந்ததென்ன? சவுலுந் தீர்க்கதரிசிகளுக்குள்ளிருக்கிறானோவென்றார்கள்.

௰௨ அதற்கு அங்கேயிருக்கிறவர்களில் ஒருவன் பிரதியுத்தாரமாக, ஆனால் இவர்களுடைய தகப்பனாரென்றான். ஆனதுகொண்டு, சவுலுந் தீர்க்கதரிசிகளுக்கு

ளிருக்கிறானோவென்கிற பழமொழியுண்டாயிற்று.

௰௩ அவன் தீர்க்கதரிசனஞ்சொல்லி முடித்தபிற்பாடு மேட்டின்மேலே வந்தான்.

௰௪ அப்பொழுது சவுலுடைய சிறிய தகப்பன் நீங்களெங்கே போனீர்களென்று அவனையும் அவன் வேலைக்காரனையுங் கேட்டான். அதற்கவன் நாங்கள் கழுதைகளைத் தேடப்போய் அவைகளைக் காணாதே போனபடியினாலே சாமுவேலண்டைக்கு வந்தோமென்றான்.

௰௫ அப்பொழுது சவுலின் சிறிய தகப்பன், சாமுவேல் உங்களுக்குச் சொன்னதென்னவென்றெனக்கறிவியென்றான்.

௰௬ சவுல் தன் சிறிய தகப்பனுடனே, கழுதைகள் அகப்பட்டதென்றெங்களுக்குத் தெளிவாக அறிவித்தானென்று சொன்னான் ஆனால் சாமுவேல் சொன்ன இராச்சிய பாரத்தின் வர்த்தமானத்தை யவனுக்கறிவிக்காமற்போனான்.

௰௭ சாமுவேலோவென்றால் சனத்தை மிஸ்பாவிலே கர்த்தரண்டைக்கு வரவழைத்து,

௰௮ இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னதாவது, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறதேதெனில், நாம் இஸ்ரவேலை எகிப்திலிருந்து ஏறிவரப்பண்ணி, உங்களை எகிப்தியர்கைக்கும் உங்களை யிறுகப்பிடித்த எல்லா இராச்சியத்தாரின் கைக்கும் நீங்கலாக்கிவிட்டோம்.

௰௯ நீங்களோவென்றால் உங்களுடைய எல்லாத் தீங்குகளுக்கும் நெருக்கங்களுக்கும் உங்களை நீங்கலாக்கி இரட்சித்த உங்கள் பராபரனை இந்நாளிலே புறக்கணித்து, அவருடனே, ஒரு இராசாவை யெங்கண்மேலே வையுமென்றீர்கள் இப்போது கர்த்தருக்கு முன்பாக உங்கள் வம்சங்களின்படியேயும் ஆயிரங்களான உங்கள் சேர்வைகளின்படியேயும் உங்களை நிறுத்துங்களென்றான்.

௨௰ இஸ்ரவேலின் கோத்திரங்களையெல்லாஞ் சாமுவேல் சேர்ப்பண்ணின பிற்பாடு, பென்யமீன் கோத்திரத்தின்மேலே சீட்டு விழுந்தது.

௨௧ அவன் பென்யமீன் கோத்திரத்தை யதினுடைய வம்சங்களின்படியே சேர்ப்பண்ணின பிற்பாடு, மாத்திரி வம்சத்தின்மேலும் அதிலே கீசின் குமாரனாகிய சவுலின்மேலுஞ் சீட்டு விழுந்தது. அவனைத் தேடுகிறபோது அவன் தென்படாதே போனான்.

௨௨ அவனின்னமிங்கே வருவானோவென்று அவர்கள் திரும்பக் கர்த்தரைக் கேட்டபோது, இதோ, அவன் தளவாடங்களிருக்கிற இடத்திலே ஒளித்துக்கொண்டிருக்கிறானென்று கர்த்தர் சொன்னார்.

௨௩ அப்பொழுது அவர்களோடி அங்கேயிருந்து அவனை யழைத்து வந்தார்கள். அவன் சனத்தின் நடுவே வந்து நிற்கிறபோது எல்லாச் சனத்திலும் அவன் தோளுக்கு உயர்ந்தவனாயிருந்தான்.

௨௪ அப்பொழுது சாமுவேல் எல்லாச் சனத்தோடும், கர்த்தர் தெரிந்துகொண்டவனைப் பார்க்கிறீர்களல்லவோ? ஒருவரும் எல்லாச் சனத்திலும் அவனுக்குச் சரியானவனில்லையென்றான். அப்பொழுது சனமெல்லாம் ஆர்ப்பரித்து, இராசாவானவர் வாழ்கவென்றார்கள்.

௨௫ சாமுவேலோவென்றால் இராச்சிய பாரத்தின் நியாயத்தைச் சனத்திற்குச் சொல்லிக்காட்டி, அதை ஒரு புஸ்தகத்திலெழுதிக் கர்த்தருக்கு முன்பாக வைத்துவிட்டுப் பிற்பாடு சனத்தையெல்லாம் அவரவர்கள் வீட்டுக்கனுப்பிவிட்டான்.

௨௬ சவுலுங் கிபெயாவிலிருக்கிற தன் வீட்டுக்குப் போய்விட்டான். இராணுவத்தில் பராக்கிரமர்கள் எவர்கள் மனதைத் தேவன் தொட்டாரோ அவர்களும் அவனோடே கூடப்போனார்கள்.

௨௭ ஆனால் பேலியாளின் பிள்ளைகள் இவனம்மை இரட்சிப்பதேதென்று அவனை யசட்டைபண்ணி, அவனுக்குக் காணிக்கைக் கொண்டுபோகாதிருந்தார்கள். அவனோவென்றால் அதற்குக் காதுகேளாதவனைப்போலிருந்தான்.

௰௧. அதிகாரம்.

சவுல் அம்மோனியரைச் செயித்தது.

ஆனால் நாகாசென்ற அம்மோனியன் ஏறிவந்து, கிலெயாத்திலிருக்கிற யாபேசைச் சூழ்ந்து கொத்தளம் போட்டான். அப்பொழுது யாபேசின் மனுஷரெல்லாரும் நாகாசுடனே, எங்களோடே உடன்படிக்கைபண்ணும். அப்பொழுது உம்மைச் சேவிப்போமென்றார்கள்.

௨ ஆனால் அம்மோனியனாகிய நாகாஸ் அவர்களுடனே, நான் உங்களெல்லாருடைய வலதுகண்ணைப் பிடுங்கி, இதினாலே இஸ்ரவேலெல்லாவற்றின்மேலும் நிந்தை வரப்பண்ணுவேனென்கிறதாய் உங்களோடே உடன்படிக்கைபண்ணுவேனென்றான்.

௩ அப்பொழுது யாபேசின மூப்பரானவர்கள் அவனுடனே, நாங்கள இஸ்ரவேலின எல்லைகளெல்லாம தூதுவர்களை யனுப்பு மளவும் எங்களுக்கு ஏழுநாள தவணைகொடும. எங்களை இரட்சிப்பாரில்லாவிட்டால, அப்போது உம்மண்டைக்குப் புறப்பட்டுவருவோமென்றார்கள.

௪ அந்தத்தூதுவர்கள சவுலின கிபியாவிலே சனங்களண்டைக்குவந்து, சனங்கள காதுகள கேட்க அந்தவார்த்தைகளைச் சொன்னார்கள. அப்போது சனமெல்லாரும சத்தமிட்டழுதார்கள.

௫ இதோ, சவுல மாடுகளின பிறகாலே வயல்வெளியிலிருந்து வந்து, சனம அழுகிறதற்கு என்னவென்று கேட்டான. அவனுக்கு யாபேசுமனுஷரின வார்த்தைகளை விவரித்தார்கள.

௬ சவுல இந்தவார்த்தைகளைக் கேட்கையில், பராபரனுடைய ஆவி அவன்மேல் இறங்கினதினாலே அவன மிகவும் கோபமூண்டவனாகி,

௭ ஓரிணைமாட்டைப்பிடித்து, அதைத் துண்டித்துப்போட்டு, அந்தத்தூதுவர்கள கையிலே இஸ்ரவேலின எல்லைகளெல்லாம அனுப்பிச் சவுலின பிறகாலேயும், சாமுவேலின பிறகாலேயும், புறப்படாதவனுடைய மாடுகளுக்கு இப்படிச் செய்யப்படுமென்று சொல்லி, அனுப்பினான. அப்போது கர்த்தருண்டான பயங்கரம சனத்தின்மேல் இறங்கினதினால ஒருவனைப்போலவே புறப்பட்டார்கள.

௮ அவர்களைப் பெசேக்கிலே இலக்கம பார்த்தான. இஸ்ரவேல்புத்திரரில மூன்று லட்சம்பேரும யூதமனுஷரில முப்பதினாயிரம்பேருமிருந்தார்கள.

௯ அப்போது வந்த தூதுவர்களுக்கு அவர்கள சொன்னதாவது, கிலேயாத்திலிருக்கிற யாபேசின மனுஷருக்கு நீங்கள சொல்லவேண்டியதேதெனில, நாளை வெயில ஏறுகையில, உங்களுக்கு இரட்சிப்புண்டாமென்று சொல்லுங்களென்றார்கள. தூதுவர்கள வந்து, யாபேசின மனுஷருக்கு அதை யறிவிக்கிறபோது, அவர்கள சந்தோஷப்பட்டார்கள.

௰ பிற்பாடு யாபேசின மனுஷர், நாளை உங்களண்டைக்குப் புறப்படுவோம. அப்போது உங்கள பார்வைக்குச் சரியானபடியெல்லாம எங்களுக்குச் செய்யுங்களென்றார்கள.

௰௧ மறுநாளிலேயென்றால சவுல சனத்தை மூன்று வகுப்பாக நிறுத்தினான. பிற்பாடு அதிகாலச்சாமத்திலே பாளயத்திற்குள் வந்து, பகலின வெயிலேறுமட்டும அம்மோனியரை முறியடித்தான. தப்பிமீதியானவர்களிலேயெனில இரண்டுபேராகிலும் ஒருமிக்கக் கூடிப்போகாதபடியாகச் சிதறினார்கள.

௰௨ அப்போது சனங்கள சாமுவேலுடனே, சவுல நம்முடையமேல இராசாவாயிருப்பதேதென்றவர்களார்? அந்தமனுஷரை நாங்கள கொன்றுபோடும்படிக்கு, ஒப்புக்கொடுங்களென்றார்கள.

௰௩ சவுலேவென்றால, இந்தநாளிலே ஒருவருங்கொன்றுபோடப்படவேண்டாம. ஏனெனில இன்று கர்த்தர் இஸ்ரவேலிலே இரட்சிப்பை யுண்டுபண்ணினாரென்றான.

௰௪ அப்போது சாமுவேல சனத்துடனே, நாம கில்காலுக்குப்போய, அங்கே இராசரிய பாரத்தைப் புதிதாக்குவோம வாருங்களென்றான.

௰௫ அப்படியே சனமெல்லாங் கில்காலுக்குப்போய, அவ்விடத்திலே கர்த்தருக்கு முன்பாகச் சவுலை இராசாவாக்கினது, அங்கே கர்த்தருக்கு முன்பாகச் சமாதான பலிகளைச் செலுத்தி, அங்கே சவுலும இஸ்ரவேலமனுஷர் அனைவரும மிகவும மகிழ்ந்துகொண்டிருந்தார்கள.

௰௨. அதிகாரம்.

சாமுவேல தன்னுடைய நியாயாதிபதி உத்தியோகத்தை ஒப்புவித்துவிட்டது

அப்போது சாமுவேல இஸ்ரவேலரைத் தங்களோடே சொன்னதாவது, இதோ, நீங்கள என்னுடனே சொன்னபடியெல்லாம உங்கள சொற்கேட்டு, உங்கள பேரில ஒரு இராசாவை வைத்தேன.

௨ இப்போதும இதோ, இராசாவானவர் உங்களுக்கு முன்பாக நடந்துவருகிறார். நானோவெனில கிழவனும நரைத்தவனுமானேன். என்குமாரரோவென்றால உங்களோடிருப்பார்கள. நான் என்சிறுவயதுதுவக்கி இந்நாளவரைக்கும உங்களுக்கு முன்பாகச் சஞ்சரித்தேன.

௩ இதோ, நானிங்கேயிருக்கிறேன. நான் ஒருவனுடைய எருதை யெடுத்துக்கொண்டேனா? ஆருடைய கழுதையை யெடுத்துக்கொண்டேனா? ஆருக்கு இடுக்கண்செய்தேனா? ஆரை யொடுக்கினேன்? நானகண்சாய்ப்பாயிருக்க ஆர்கையிலே பரிதானம வாங்கினேனென்று கர்த்தருக்கு முன்பாகவும அவர் அபிஷேகம்பண்ணினவருக்குமுன்பாகவும எனக்கெதிராக

மறுவுத்தரவுசொலலுஙகள. அபபோது அதையுஙகளுககுததிருமபக கொடுபபே னெனறுன.

௪ அபபோது அவர்கள நீர் எஙகளுககு இடுக்கண்செயததுமிலலை எஙகளைஒடுககி னதுமிலலை ஒருவர்கையிலுமஒனறுமஎடு ததுககொணடதுமிலலையெனறூர்கள.

௫ அபபோது அவன அவர்களுடனே நீஙகள எனகையிலே ஒனறுஙகணடுபிடி த்ததிலலையெனறதறகுக்கர்த்தர் உஙகளு ககெதிராகச்சாட்சியானவர். அவர் அபி ஷேகமபணணிவித்தவரும இனறு அதற குசசாட்சியெனறுன. அதறகு இவர்கள அவர்சாட்சிதானெனறூர்கள.

௬ அபபுறஞசாமுவேல சனததோடே சொனனதாவது, மோசேயையும ஆரோ னையுஙகட்டளையிட்டவரும, உஙகளபிதா க்களை எகிப்து தேசததிலிருநதேறிவர ப்பணணினவருஙகர்த்தரானவர்தானே.

௭ இபபோதுஙகர்த்தர் உஙகளுககும உஙகள பிதாக்களுககுஞ செயதிருககிற எல்லாநீதி நியாயஙகளுக்காகவும நான கர்த்தருககுமுனபாக உஙகளோடேநியா யமபேசுமபடிககு உஙகளைநிறுததுஙகள

௮ யாககோப் எகிப்திலே வநததற்கு பபிறபாடு உஙகளபிதாக்கள கர்த்தனை நோககிககூபபிட்டார்கள. அபபோது கர்த்தர்மோசேயையுமஆரோனையுமனுப பினூர். இவர்கள உஙகளபிதாக்களை எகிப் திலிருநதழைததுவநது, அவர்களை இநத ஸதலததிலேகுடியிருக்கபபணணினூர்கள

௯ அவர்களதஙகளபர்ாபர்ஞயகர்த தனை மறநதுபோகிற போதோவெனில, இவர் அவர்களைஆத்சோரினசேனபதியா கிய சிசர்ாவினகையிலும பெலிஸதரின கையிலும மோவாபுடைய இர்ாசாவின கையிலுமவிறறுபபோட்டார். இவர்கள அவர்களுககுவிரோதமாகயுத்தமபணணி னூர்கள.

௰ ஆகையால அவர்களகர்த்தனைநோ ககிககூபபிட்டு, நாஙகளகர்த்தனைவிட்டு ப்பாகாலகளையுமஅஸதரோததையுஞசே வித்ததினுலே பாவஞசெயதோம. இப போதும எஙகளசததுருக்களின கைககு எஙகளைநீஙகலாககிவிடும. இனி உமமை சசேவிபபோமெனறூர்கள.

௰௧ அபபோதுகர்த்தர் எருபாகாலையு மபேதானையும ஈப்தாவையுஞசாமுவேலை யுமனுபபி, நீஙகளபயமிலலாமற்குடியிரு ககுமபடிககுசசுறறிலுமிருநத உஙகளச ததுருக்களினகைககும உஙகளை நீஙகலா ககிவிட்டார்.

௰௨ அமமோனபுததிரரின இர்ாசாவா கியநாகாசு உஙகளுககுவிரோதமாயவரு கிறதைநீஙகளகாணகிறபோதோவெனில உஙகளபர்ாபர்ஞயகர்த்தர்தானே உங கள இர்ாசாவாயிருநதாலும, நீஙகள எனனுடனே, அப்படிவேணடாம. ஒரு இர்ாசா எஙகளமேலே அர்சாள்வேணடு மெனறீர்கள.

௰௩ இபபோதும இதோ, நீஙகளவே ணடுமெனறுகேட்டுத தெரிநதுகொணட இர்ாசா இஙகேயிருககிறூர். இதோ, கர்த் தர் உஙகளமேல இர்ாசாவைவைத்தார்.

௰௪ நீஙகள கர்த்தருடைய வாககுககு விரோதமாயக்கலகமபணணுமற், கர்த்த ருககுபபயநது, அவரைசசேவிதது, அவ ருடையசத்தத்திற்குக கீழ்ப்படிநதால, நீஙகளும உஙகளமேல ஆளுகிற இர்ாசா வும உஙகளபர்ாபர்ஞயகர்த்தரைபபின பறறுகிறவர்களாயிருபபீர்கள.

௰௫ நீஙகளகர்த்தருடையசத்தத்திற்கு ககீழ்ப்படியாமல்,கர்த்தரினவாககுக்குவி ரோதமாயக் கலகமபணணினீர்களேயா கில், கர்த்தருடையகை உஙகளபிதாக்க ளுககுவிரோதமாயிருநததுபோலே உங களுககுமவிரோதமாயிருககும.

௰௬ இபபோதுமநீஙகள உஙகளைநிறு ததிக்கர்த்தர் உஙகளகணகளுககுமுனபா கசசெயயும பெரியகாரியததைபபாருங கள.

௰௭ இபபோது கோதுமபையறுபபி னநாள்லலவோ? நீஙகள உஙகளுககு ஒரு இர்ாசாவைககேட்டதினுலே, கர்த்தரின பார்வைககுசசெயத உஙகளுடையபொ லலாபபுப பெரியதெனறுநீஙகள அறிந து, உணர்நதுகாளுமபடிககு, நான்கர்த் தரைநோககிககூபபிடுவேன. அபபோது இடிமுழக்கஙகளையும் மழையையுஙகட்ட ளையிடுவாரெனறுசொலலி,

௰௮ சாமுவேலகர்த்தரைநோககிககூ பபிட்டான. அபபோது அந்நாளிலேதா னேகர்த்தர் இடிமுழக்கஙகளையும மழை யையுஙகட்டளையிட்டார்.அபபோதுசன மெலலாஙகர்த்தருககுஞ சாமுவேலுககு மமிகவுமபயநதிருநது,

௰௯ சாமுவேலுடனேநாஙகள சாகாத படிககு உமமுடையபர்ாபர்ஞயகர்த்த ரையுமஅடியாருக்காகவிணணபபஞசெய யும. ஏனென்றால எஙகளுடைய எலலாப பாவஙகளோடுமநாஙகள எஙகளுககு ஒரு இர்ாசாவைககேட்ட பொலலாபபையுங கூட்டினுேமெனறு சனமெலலாஞசொல லிறறு.

௨௰ அப்பொழுது சாமுவேல் சனத்தோடே சொன்னதாவது, பயப்படாதேயுங்கள். நீங்கள் இந்தப் பொல்லாப்பையெல்லாஞ் செய்தீர்கள். ஆகிலுங் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமற் கர்த்தரையுங்களமுழு இருதயத்தினாலுஞ் சேவியுங்கள்.

௨௧ விலகிப்போகாதேயுங்கள். மற்றப்படிக்குப் பிரயோசனமற்றதும் இரட்சிக்கமாட்டாததுமாயிருக்கிற விருதாக்காரியங்களைப் பின்பற்றுவீர்கள். ஏனென்றால் அவைகள் விருதாத்தானே.

௨௨ அதேனென்றாற் கர்த்தர் உங்களைத் தமக்குச் சனமாக்கிக்கொள்ளப் பிரியமானபடியினாலே, கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தமாகத் தமது சனத்தைக் கைவிடாதிருப்பார்.

௨௩ நானும் உங்களுக்காக விண்ணப்பஞ்செய்யாதே போகிறதாவதினாலே கர்த்தருக்கு விரோதமாகச் செய்வது எனக்குத் தூரமாயிருக்கக்கடவது. நன்மையும் செவ்வையுமான வழியையும் உங்களுக்குப் போதித்துக்கொண்டிருப்பேன்.

௨௪ ஆனாலும் நீங்கள் கர்த்தருக்குப் பயந்து உங்கள் முழு இருதயத்தினாலும் உண்மையாய் அவரைச் சேவிக்கக்கடவீர்கள். ஏனெனில் அவர் உங்களிடத்தில் எத்தனை மகிமையான காரியங்களைச் செய்தாரென்று நினைத்துப்பாருங்கள்.

௨௫ நீங்கள் பொல்லாப்பைச் செய்யவே செய்வீர்களானால், நீங்களும் உங்கள் இராசாவுங் கெட்டுப்போவீர்களென்றான்.

௧௩. அதிகாரம்.

சவுல் பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணப்போகையில் அவநம்பிக்கையினாலே பாவஞ்செய்தது.

௧ சவுல் இராச்சியபாரம் பண்ணி, அப்பொழுது ஒரு வருஷமாயிருந்தது. அவன் இஸ்ரவேலை இரண்டு வருஷம் அரசாண்டபோதோவெனில்,

௨ அவன் இஸ்ரவேலில் மூவாயிரம்பேரைத் தனக்குத் தெரிந்துகொண்டான். அவர்களில் இரண்டாயிரம்பேர் சவுலோடே கூட மிக்மாசிலும் பெத்தேல் மலையிலும், ஆயிரம்பேர் யோனத்தானோடே கூடப் பென்யமீன் தேசத்துக் கிபெயாவிலுமிருந்தார்கள். ஆனால் மற்றச் சனத்தையவரவர் கூடாரங்களுக்கனுப்பிவிட்டான்.

௩ யோனத்தானென்றவன் கிபெயாவிலேதானையமிருந்த பெலிஸ்தரை முறியடித்தான். அதைப் பெலிஸ்தர் கேட்டார்கள். ஆகையினாலே சவுல் தேசமெங்கும் இதை எபிரேயர் கேட்கக்கடவர்களென்று எக்காளம் ஊதுவித்தான்.

௪ தானையமிருந்த பெலிஸ்தரைச் சவுல் முறியடித்தானென்றும் பெலிஸ்தருக்கு இஸ்ரவேல் நாற்றமாய்ப் போயிற்றென்றும் இஸ்ரவேலெல்லாங் கேட்டபோது, சனங்கள் சவுலுக்குப் பின்செல்லக் கில்காலுக்கு வர அழைப்பிக்கப்பட்டு வந்தது.

௫ பெலிஸ்தர் இஸ்ரவேலோடே யுத்தம்பண்ணும்படிக்கு முப்பதினாயிரம் வண்டிக்காரரும் ஆறாயிரங் குதிரைக்காரருங் கடற்கரைமணலத்தனைச் சனமுமாய்க் கூடிக்கொண்டு, வந்தேறிப் பெத்தாவேனுக்குக் கிழக்கான மிக்மாசிலே பாளயமிறங்கினார்கள்.

௬ அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் தங்களுக்கு உண்டான இக்கட்டைக் கண்டிருந்தபடியினாலும் சனங்கள் நெருக்கப்பட்டதினிமித்தமும் கெபிகளிலும் முட்காடுகளிலுங் கன்மலைகளிலுந் துருக்கங்களிலுங் குழிகளிலும் ஒளித்துக்கொண்டார்கள்.

௭ எபிரேயர் யோர்தானையுங் கடந்து காத்தேசத்திற்கும் கிலெயாத்தேசத்திற்கும் போனார்கள். ஆனாற் சவுல் இன்னுங் கில்காலிலிருந்தான். சனமெல்லாம் நடுக்கத்துடனே அவனுக்குப் பின்சென்றார்கள்.

௮ அவன் சாமுவேல் தனக்குக் குறித்த காலத்தின்படி, ஏழுநாள் மட்டுங் காத்திருந்தான். ஆனாற் சாமுவேல் கில்காலுக்கு வராதிருக்கிறபோது சனம் அவனை விட்டுச் சிதறிப்போயிற்று.

௯ அப்பொழுது சவுல் சர்வாங்கத்தகன பலியையுஞ் சமாதானபலிகளையும் என்னண்டைக்குக் கொண்டு வாருங்களென்று சொல்லிச் சர்வாங்கத்தகனத்தைச் செலுத்தினான்.

௰ அவன் சர்வாங்கத்தகனத்தைச் செலுத்திமுடிக்கிறபோதோவெனில், இதோ, சாமுவேல் வந்தான். அப்பொழுது அவனை வினவிக்கொள்ளச் சவுல் அவனுக்கெதிர்கொண்டுபோனான்.

௰௧ நீர் செய்ததென்னவென்று சாமுவேல் கேட்டதற்குச் சவுல் சொன்னதாவது, சனம் என்னைவிட்டுச் சிதறிப்போகிறதையும், குறித்த நாட்களின் திட்டத்திலே நீர் வாராததையும் பெலிஸ்தர் மிக்மாசிலே கூடிக்கொண்டிருக்கிறதையும் நான் கண்டபடியினாலே,

௰௨ இப்பொழுது பெலிஸ்தர் கில்காலிலிருக்கிற என்னண்டைக்கிறங்கி வருவார்களென்றும், நானோவென்றால் இன்னுங் கர்

த்தருடைய சமுகத்தை நோக்கிக் கெஞ்சினதில்லையென்று சொல்லித் துணிந்து, சர்வாங்கத் தகனத்தைச் செலுத்தினேனென்றான்.

௰௩ அதற்குச் சாமுவேல் சவுலோடே சொன்னதாவது, புத்தியீனமாய்ச் செய்தீர். உம்முடைய பராபரனாகிய கர்த்தர் உமக்குக் கற்பித்த கற்பனையைக் கைக்கொள்ளாதே போனீர். மற்றப்படி இப்போது கர்த்தர் இஸ்ரவேலின்மேல் உம்முடைய இராச்சியபாரத்தை என்றைக்கும் திடப்படுத்துவார்.

௰௪ இப்போதோவெனில் உம்முடைய இராச்சியபாரம் நிலைநிற்காது. கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கேற்ற ஒரு புருஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய சனத்தின்மேலே தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார். ஏனெனில் கர்த்தர் உமக்குக் கற்பித்ததை நீர் கைக்கொண்டதில்லையென்று சொல்லி.

௰௫ சாமுவேல் எழுந்திருந்து, கில்காலை விட்டுப் பென்யமீன் தேசத்துக் கிபியாவுக்கு ஏறிப்போனான். பிற்பாடு சவுல் தன்னோடே கூடவிருக்கிற சனத்தைத் தொகை பார்க்கிறபோது, ஏறக்குறைய அறுநூறு பேராயிருந்தார்கள்.

௰௬ சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தானும் அவர்களோடே கூடவிருக்கிற சனமும் பென்யமீன் தேசத்துக் கிபியாவிலிருந்துவிட்டார்கள். பெலிஸ்தரோவென்றால் மிக்மாசிலே பாளயமிறங்கியிருந்தார்கள்.

௰௭ அழிக்கிறவர்கள் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து, மூன்று தண்டாய்ப் புறப்பட்டார்கள். ஒரு தண்டு ஒப்ரா வழியாய்ச் சூவால் தேசத்திற்கு நேராகப் போயிற்று.

௰௮ வேறொரு தண்டு பெத்தொரோன் வழியாகப் போயிற்று. வேறொரு தண்டு வனாந்திரத்திலிருக்கிற செபோயீமின் பள்ளத்தாக்குக்கெதிரான எல்லைவழியாய்ப் போயிற்று.

௰௯ இஸ்ரவேல் தேசத்திலோவென்றால், எங்கும் ஒரு கருமான் அகப்பட்டதில்லை. ஏனென்றால் எபிரேயர் பட்டயங்களையாகிலும் ஈட்டிகளையாகிலும் செய்யப்பண்ணாதபடிக்குப் பார்க்கவேண்டுமென்று பெலிஸ்தர் சொல்லியிருந்தார்கள்.

௨௰ ஆகையால் இஸ்ரவேலனைத்திலும் அவரவர் தங்கள் கொழுக்களையும் தங்கள் மண்வெட்டிகளையும் தங்கள் கோடாலிகளையும் தீட்டி, ஆணிகளைக் கூர்மையாக்குகிறதற்கும் பெலிஸ்தரண்டைக்கு இறங்கிப்போகவேண்டியதாயிருந்தது.

௨௧ அரிவாட்களையும் மண்வெட்டிகளையும் முக்கூருள்ள ஆயுதங்களையும் கோடாலிகளையும் கூர்மையாக்குகிறதற்கு அவர்களுக்கு அரங்களமாத்திரமிருந்தது.

௨௨ யுத்தநாள் வந்தபோது, சவுலோடேயும் யோனத்தானோடேயுமிருக்கிற சகல சனத்தினுடைய கையிலும் பட்டயமும் ஈட்டியுமில்லாதிருந்தது. சவுலுக்கும் அவன் குமாரனாகிய யோனத்தானுக்கும் மாத்திரமிருந்தது.

௨௩ பெலிஸ்தரின் பாளயமோவென்றால், மிக்மாசிலிருந்துபோகிற வழியாய்ப் புறப்பட்டுவருகிறதாயிருந்தது.

௰௪. அதிகாரம்.

இஸ்ரவேல் பெலிஸ்தரைச் செயங்கொண்டது.

ஒருநாளிலே சம்பவித்ததேதெனில், சவுலின் குமாரனாகிய யோனத்தான் தன் ஆயுதங்களைப் பிடிக்கிற பிள்ளையாண்டானுடனே, நமக்கு எதிராக அந்தண்டையிலிருக்கிற பெலிஸ்தரின் தாணையத்திற்குக் கடந்துபோவோம் வாவென்று சொல்லி அதைத் தன் தகப்பனுக்கு அறிவிக்காதிருந்தான்.

௨ சவுலோவென்றால் கிபியாவின் கடைசிமுனையாகிய மிக்ரோனிலே ஒரு மாதளமரத்தின் கீழிருந்தான். அவனோடே கூடவிருந்த சனம் ஏறக்குறைய அறுநூறு பேராயிருந்தார்கள்.

௩ சீலோவிலே கர்த்தருடைய ஆசாரியனாயிருந்த ஏலியின் குமாரனாகிய பினெகாசுக்குப் பிறந்த இக்கபோதின் சகோதரனும் அகிதோபின் குமாரனுமாகிய அகியாவென்கிறவன் ஆசாரியச் சால்வையையணிந்தவனாயிருந்தான். யோனத்தான் போனதைச் சனம் அறியாதிருந்தது.

௪ யோனத்தான் பெலிஸ்தரின் தாணையத்திற்குக் கடந்துபோகப் பார்த்த வழிகளின் நடுவே இந்தண்டை ஒரு கன்மலைக்குன்றும் அந்தண்டை ஒரு கன்மலைக்குன்றுமிருந்தது. ஒன்று போத்சேஸ் என்றும் மற்றொன்று சேனே என்றும் பேர்கொண்டது.

௫ அந்தக் குன்றுகளில் ஒன்று வடக்கே மிக்மாசுக்கெதிராகவும் மற்றொன்று தெற்கே கிபியாவுக்கெதிராகவுமிருந்தது.

௬ யோனத்தான் தன் ஆயுதங்களைப் பிடிக்கிற பிள்ளையாண்டானோடே, சுன்னத்தில்லாதவர்களின் அந்தத் தாணையத்திற்குக்

நடந்துபோவோம்வா. ஒருவேளை கர்த்தர் நமக்காக ஒருகாரியஞ்செய்வார். ஏனென்றால அநேகம்பேராலேகொண்டாகிலும் கொஞ்சம்பேராலேகொண்டாகிலும இரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லையென்றான.

௭ அப்பொழுது அவன ஆயுதங்களைப்பிடிக்கிறவன அவனுடனே, உமமுடைய இருதயத்திலிருக்கிறதையெல்லாஞ்செய்யும. அப்படிப்போம. இதோ, உமமுடைய மனதுக்கேற்றபடி நானுமஉமமோடேகூடவருகிறேனென்றான.

௮ அப்பொழுதுயோனத்தானசொன்னது, இதோ, நாஙகடந்து அந்தமனுஷர்களிடத்துக்குப்போகிறவர்களாய அவர்களுக்குநமமைக்காணபிப்போம.

௯ நாஙகளுஙகளிடத்துக்கு வருமட்டும நில்லுஙகளென்று நமமோடேசொன்னார்களானால நாமவர்களிடத்துக்கேறிப்போகாமலநமமுடைய நிலையிலேநிற்போம.

௰ எஙகளிடத்துக்கு ஏறிவாருஙகளென்றார்களேயாகில் ஏறிப்போவோம ஏனென்றாற்கர்த்தர் அவர்களை நமமுடையகையிலே ஒப்புக்கொடுத்தார். இதுநமக்கு அடையாளமென்றான.

௰௧ அப்படியே அவர்கள இருவரும பெலிஸ்தரினதாணையத்திற்குத் தஙகளைக்காணபித்தார்கள. அப்பொழுதுபெலிஸ்தர் இதோ, எபிரேயர் ஒளிததுககொண்டிருநதகெபிகளை விட்டுப்புறப்படுகுரர்களென்றுசொலலி,

௰௨ தாணையமிருக்கிறமனுஷர் யோனத்தானையும அவன ஆயுதஙகளைபபிடிக்கிறவனையுமபார்த்து, எஙகளிடத்துக்கேறிவாருஙகள.உஙகளுக்கொருபுததிகற்பிபபோமென்றார்கள. அப்பொழுது யோனத்தான தன் ஆயுதஙகளைபபிடிக்கிறவனோடே, என பிறகாலே ஏறிவா. ஏனென்றாற்கர்த்தர் அவர்களை இஸ்ரவேலின கையிலஒப்புககொடுத்தாரென்றுசொலலி,

௰௩ யோனத்தானதன்கைகளாலுந்தன காலகளாலுந்தவழ்ந்தேறினான. அவன ஆயுதஙகளைபபிடிக்கிறவன அவனபிறகாலே ஏறினான. அப்பொழுது அவர்களயோனத்தானுக்குமுனபாகவிழுநதார்கள. அவன ஆயுதஙகளைபபிடிக்கிறவன அவனபிறகாலேவெட்டிககொண்டேபோனான.

௰௪ யோனத்தானும அவன ஆயுதஙகளைபபிடிக்கிறவனும அடித்த அநதமுதலடியிலேஏறககுறைய இருபதுபேர் அரையேர்நிலமான விஸதாரத்திலவிழுநதார்கள.

௰௫ அப்பொழுதுவெளியிலிருநதபாளயத்திலுஞ்சகலசனத்திலும பயஙகரமுணடாயத்தாணையமிருந்தவர்களுஙகொளளையிடப்போனவர்களுஙகூடத்திகிலடைநதார்கள. பூமியதிர்நதது. ஏனெனில அது பாரமான தேவனாலுணடான பயஙகரமாயிருநதது.

௰௬ இதோ, அநத ஏராளமானகூட்டங்கலைநது, ஒருவர்மேல ஒருவர் விழுகிற தைபெனயமீனகேபெயாவிலெசவுலுக்கிருநதசாமக்காரர்கணடார்கள.

௰௭ அப்பொழுதுசவுல தனனோடேகூடவிருக்கிறசனத்துடனே, நமமிடத்திலிருநதுபோனவர்களாரென்று இலக்கம பாருஙகளேனென்றான. அவாகள இலக்கமபார்க்கிறபோது இதோ, யோனத்தானும அவனஆயுதஙகளைபபிடிக்கிறவனுமிலலாதிருநதார்கள.

௰௮ அப்பொழுதுசவுல அகியாவுடனே பரமபரனுடையபெட்டியைசசேர்ககொணடுவாவென்றான. ஏனென்றாற்பரமபரனுடையபெட்டி அந்நாளில இஸர்வேலபுத்திரரிடத்திலிருநதது.

௰௯ இப்படிச்சவுல ஆசாரியனோடே பேசுகையிற், பெலிஸதரினபாளயத்திலுணடானசலசலபெருகவதிகமாயிறறு. அப்பொழுதுசவுல் ஆசாரியனோடே, இருக்கட்டுமென்றான.

௨௰ சவுலும அவனோடிருநத சனமும ஒருவரையொருவர்கூபபிட்டுயுத்தக்களத்திற்குவநதார்கள. இதோ, ஒருவர்படடையம ஒருவருககுவிரோதமாயிருநதுமகாபபெரிய அமளியாயிறறு.

௨௧ முந்நாளிலேபெலிஸதரிடத்திலிருநது, அவர்களோடேகூடப் பாளயத்திலேசிரிநதுவநதேறின எபிரேயருஞ் சவுலோடுமயோனத்தானோடுமிருக்கிற இஸர்வேலரோடேகூடிககொணடார்கள.

௨௨ எப்பிராயீம மலைகளில ஒளிததுககொணடிருநதசகல இஸர்வேலருமபெலிஸதர் முறிநதோடுகிறதைககேட்டபோது,இவர்களுமயுத்தத்திலேஅவர்களைபபின்தொடர்நதார்கள.

௨௩ இப்படிக்கர்த்தர் அனறையத்தினம இஸர்வேலைஇரட்சிகிறதினாலே அநதயுத்தமபெத்தாவேனமட்டுககும நடநதது.

௨௪ ஆனாலஇஸர்வேலர் அனறையத்தினமவெகுவருத்தமடைநதார்கள. ஏனென்றால நான் எனசத்துருக்கள கையிலேபழிவாஙகுமபடிக்கு. எவனசாயஙகாலமட்டுமபொறுக்காமற் போசனஞ்சாபபிடு

றுனே, அவன் சபிக்கப்பட்டவனென்று சவுல் சனத்தை ஆணையிட்டான். ஆகையால் சனமெல்லாம் போசனம் ருசிக்காதிருந்தார்கள்.

௨௫ தேசத்தின் சனமெல்லாம் ஒரு காட்டிலே வந்தார்கள். அங்கே வெளியிலே தேன் கட்டியிருந்தது.

௨௬ சனங் காட்டிலே வந்த போது, இதோ, தேன் ஒழுகிக்கொண்டிருந்தது. ஆனால் ஒருவரும் அதைத் தன் கையினாலே தொட்டுத் தன் வாயைக் கெடுத்துக்கொள்ளவில்லை. ஏனெனில் சனம் அந்த ஆணையினிமித்தம் பயப்பட்டது.

௨௭ யோனத்தானோவென்றால் தன் தகப்பன் சனத்தை ஆணையிட்டதைக் கேள்விப்படாதிருந்தது, தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதின் முனையினாலே தேன் கூண்டிலே தோய்த்து, அதை எடுத்துத் தன் வாயிலே போட்டுக்கொண்டான். அதினால் அவன் கண்கள் தெளிவாயிற்று.

௨௮ அப்போது சனத்தில் ஒருவன், இன்றைக்குப் போசனஞ் சாப்பிடுகிறவன் சபிக்கப்பட்டவனென்று உம்முடைய தகப்பனார் சனத்தை ஆணையிட்டுவிட்டார். ஆகையினாலே சனம் விடாய்த்திருக்கின்றதென்றான்.

௨௯ அப்போது யோனத்தான் சொன்னதாவது, என் தகப்பன் தேசத்தின் சனத்தைக் கலக்கமாக்கினார். நான் இந்தத் தேனிலே கொஞ்சம் ருசித்ததினாலே என் கண்கள் தெளிவாயிற்றென்று பாருங்களேன்.

௩௰ இன்றையத்தினஞ் சனந் தாங்களுக்கு அகப்பட்ட தங்கள் சத்துருக்களின் கொள்ளையிலே ஏதாகிலும் போசிக்கவே போசித்திருந்தால் எத்தனை நலமாயிருக்கும். இப்போதோவென்றால் பெலிஸ்தரை முறியடிக்குதல் அத்தனை பெரியதாயிராதென்றான்.

௩௧ அவர்கள் அன்றையத்தினம் மிக்மாசிலிருந்து ஆயலோன் மட்டும் பெலிஸ்தரை முறியடித்தபோது சனம் மெத்தவும் விடாய்த்திருந்தது.

௩௨ அப்போது சனங் கொள்ளையின் மேற்பறப்பாகி, ஆடுகளையும் மாடுகளையுங் கன்றுக்குட்டிகளையும் பிடித்துத் தரையிலே போட்டடித்து இரத்தத்தோடிருக்கிறதாகப் போசித்தார்கள்.

௩௩ அப்போது இதோ, இரத்தத்தோடிருக்கிறதைப் போசிக்கிறதினாலே சனங்கள் கர்த்தருக்கு விரோதமான பாவஞ் செய்கிறார்களென்று சவுலுக்கு அறிவித்தார்கள். அப்போது அவன், நீங்கள் துரோகம் பண்ணினீர்கள். இன்னேரமே ஒரு பெரிய கல்லை என்னண்டைக்கு உருட்டிக்கொண்டு வாருங்களென்றும்,

௩௪ நீங்கள் சனத்திற்குள்ளே சிதறிப் போய், இரத்தத்தோடே இருக்கிறதைச் சாப்பிடுகிறதினாலே கர்த்தருக்கு விரோதமான பாவஞ் செய்யாதபடிக்கு அவரவர் தங்கள் மாட்டையும் அவரவர் தங்கள் ஆட்டையும் என்னண்டைக்குக் கொண்டுவந்து, இங்கே அடித்துப் பிற்பாடு சாப்பிடவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லுங்களென்றுஞ் சொன்னான். ஆகையால் சனமெல்லாம் அவரவர் தங்கள் மாடுகளை அன்று இராத்திரி தங்கள் கையினாலே கொண்டுவந்து அங்கே அடித்தார்கள்.

௩௫ பிற்பாடு சவுல் கர்த்தருக்கு ஒரு பீடத்தைக் கட்டினான். அது அவன் கர்த்தருக்குக் கட்டின முந்தின பீடமானது.

௩௬ அதற்குப்பிறகு சவுல், நாம் இந்த இராத்திரியிலே பெலிஸ்தரின் பின்னாலே இறங்கிப்போய், விடியற்காலம் வெளிச்சமாகுமட்டும் அவர்களைக் கொள்ளையிட்டு, அவர்களில் ஒருவனையும் மீதியாக வைக்காதிருப்போமாகவென்றதற்கு அவர்கள், உம்முடைய கண்களுக்கு நலமானபடியெல்லாஞ் செய்யுமென்றார்கள். ஆனால் ஆசாரியன், இங்கே பராபரனண்டைக்குச் சேர்க்கடவோமென்றான்.

௩௭ அப்படியே பெலிஸ்தருக்குப் பின்னாக இறங்கிப்போவேனோ, அவர்களை இஸ்ரவேலின் கையில் ஒப்புக்கொடுப்பீரோவென்று சவுல் பராபரனைக் கேட்டான். ஆனால் அவர் அந்நாளிலே அவனுக்கு மறுவுத்தரவருளினதில்லை.

௩௮ அப்போது சவுல் சொன்னதாவது, நீங்களிங்கே சனத்தின் சகல சேனைகளே! சேர்ந்து, எதினாலே இன்று இந்தக் குற்றமிருக்கின்றதென்றறிந்து பாருங்கள்.

௩௯ ஏனெனில் அது என் குமாரனாகிய யோனத்தானிடத்திலிருந்தாலும் அவன் சாகவே சாகவேண்டுமென்று இஸ்ரவேலை இரட்சிக்கிற கர்த்தருடைய சீவனைக் கொண்டு சொல்லுகிறேனென்றான். ஆனாற் சகல சனத்திலும் ஒருவனும் அவனுக்குப் பிரதியுத்தாரஞ் சொல்லவில்லை.

௪௰ அதற்குப்பிறகு அவன் இஸ்ரவேலோடெல்லாம், நீங்கள் அந்தப்புறத்திலேயிருங்கள். நானும் என் குமாரனாகிய யோனத்தானும் இந்தப்புறத்திலிருப்போமென்றான். சனஞ் சவுலுடனே, உம்முடைய கண்களுக்கு நலமானபடி செய்யுமென்றார்கள்.

௪௧ அப்போது சவுல் இஸ்ரவேலின் கர்த்தராகிய கர்த்தரை நோக்கி, நிதானமாய்க் காட்டியருளுமென்றான். அப்போது யோனத்தானும் சவுலும் பிடிபட்டார்கள்; ஜனங்களோ தப்பிப்போனார்கள்.

௪௨ எனக்கும் என் குமாரனாகிய யோனத்தானுக்கும் சீட்டுப்போடுங்கள் என்று சவுல் சொன்னபோது, யோனத்தான் பிடிபட்டான்.

௪௩ அப்போது சவுல் யோனத்தானோடே: நீ செய்ததென்ன என்று எனக்கு அறிவியென்றான். யோனத்தான் அவனுக்கு அறிவித்து: என் கையிலிருக்கிற கோலின் நுனியினாலே கொஞ்சம் தேனை தொட்டு ருசிபார்த்தேன்; இதோ, அதற்காக நான் சாகவேண்டுமென்றான்.

௪௪ அப்போது சவுல்: யோனத்தானே! நீ சாகவேண்டும்; இல்லாவிட்டால் தேவன் எனக்கு இப்படியும் அப்படியும் செய்யக்கடவரென்றான்.

௪௫ ஜனங்களோ சவுலை நோக்கி: இஸ்ரவேலிலே இந்தப் பெரிய இரட்சிப்பைச் செய்த யோனத்தான் கொலைசெய்யப்படலாமோ? அது வேண்டாம்; அவன் தலையிலிருக்கிற ஒரு மயிரும் தரையிலே விழுவதில்லையென்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறோம்; ஏனென்றால் தேவனின் துணையாய் அவன் இன்று காரியம் நடப்பித்தானென்றார்கள். அப்படியே யோனத்தான் சாகாதபடிக்கு ஜனங்கள் அவனை மீட்டுக்கொண்டது.

௪௬ சவுல் பெலிஸ்தரைத் தொடருகிறதைவிட்டு வந்துவிட்டான்; பெலிஸ்தரும் தங்கள் ஸ்தலத்திற்குப் போய்விட்டார்கள்.

௪௭ இப்படிச் சவுல் இஸ்ரவேலை ஆளுகிற ராச்சியபாரத்தைக் கட்டிக்கொண்டதுமுதல், சுற்றிலுமிருக்கிற தன்னுடைய எல்லாச் சத்துருக்களுமாகிய மோவாபியருக்கும் அம்மோன் புத்திரருக்கும் ஏதோமுக்கும் சோபாவின் ராசாக்களுக்கும் பெலிஸ்தருக்கும் விரோதமாக யுத்தம்பண்ணி, எவர்கள் மேலே திரும்பினானோ, அவர்களையெல்லாம் ஆக்கினைப்படுத்தினான்.

௪௮ அவன் பலத்துக்கொண்டு, அமலேக்கியரை முறியடித்து, இஸ்ரவேலைக் கொள்ளையிடுகிறவர்கள் கைக்கும் அதை நீங்கலாக்கிவிடுவித்தான்.

௪௯ சவுலுக்கிருந்த குமாரர் யோனத்தான், இஸ்வி, மல்கியா, சூவா என்றவர்கள்; அவனுடைய இரண்டு குமாரத்திகளின் நாமங்களாவன, மூத்தவளுக்கு மேராப் என்ற நாமமும் இளையவளுக்கு மீகாள் என்ற நாமமுமிருந்தது.

௫௰ சவுலுடைய பெண்சாதியின் பேர் அகினோவாம்; அவள் அகிமாத்சின் குமாரத்தியாயிருந்தாள். அவனுடைய சேனாபதியின் பேர் அப்னேர்; இவன் சவுலுடைய சிறிய தகப்பனாகிய நேரின் குமாரனாயிருந்தான்.

௫௧ கீசு சவுலின் தகப்பனானவன்; அப்னேரின் தகப்பனாகிய நேரோவென்றால் அபியேலின் குமாரனாயிருந்தான்.

௫௨ சவுலிருந்த நாளெல்லாம் பெலிஸ்தரின்மேலே கடினமான யுத்தம் நடந்தது; சவுல் ஒரு பராக்கிரமமனுஷனையும் ஒரு பலசாலியையுங் காண்கிறபோது, அவர்களையெல்லாந் தன்னிடமாகச் சேர்த்துக்கொண்டான்.

யரு. அதிகாரம்.

சவுல் அமலேக்கியரோடே பண்ணின யுத்தத்திலே கர்த்தருக்குக் கீழ்ப்படியாதே போனதினிமித்தம் அவராலே புறக்கணிக்கப்பட்டது.

பிறபாடு சாமுவேல் சவுலோடே சொன்னதாவது, இஸ்ரவேலராகிய தம்முடைய ஜனத்தின்மேல் உம்மை ராசாவாக அபிஷேகம்பண்ணுகிறதற்குக் கர்த்தர் என்னை அனுப்பினாரே; இப்போது கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்.

௨ சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறதேதென்றால், இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தேறுகிறபோது, அமலேக் அதற்கு வழியைமறித்த அந்தச் செய்கையை மனதிலே வைத்தேன்.

௩ இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்குண்டானதெல்லாவற்றையும் சங்கரித்து, அவன்மேல் இரக்கம் வைக்காமல் புருஷரையும், பெண்சாதிகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையுங் கொன்றுபோடக்கடவாயென்கிறாரென்று சொன்னான்.

௪ அப்போது சவுல் இதை ஜனத்திற்கு அறியப்படுத்தி, தெலாயிமிலே அவர்களைத் தொகைபார்த்தான்; அவர்கள் இருநூறாயிரங் காலாட்களும், யூதமனுஷரில் பதினாயிரம் பேருமாயிருந்தார்கள்.

௫ சவுல் அமலேக்குடைய பட்டணம் மட்டும் வந்து, பள்ளத்தாக்கிலே ஒரு பதிவிடையை வைத்தான்.

௬ ஆகையால் சவுல் கேனியருடனே, நான் அமலேக்கியரோடே கூட உங்களையும் வாரிக்கொள்ளாதபடிக்கு, நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிவாருங்கள். ஏனெனில் இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தேறுகிறபோது, நீங்கள் அவர்களெல்லாருக்குந் தயவுசெய்தீர்களென்றான். அப்படியே கேனியர் அமலேக்கியரின் நடுவிலிருந்து விலகிப்போனார்கள்.

௭ அப்பொழுது சவுல் ஆவிலாத்துவக்கி எகிப்திற்கெதிரேயிருக்கிற சூருக்குப்போகும் எல்லைமட்டுமிருந்த அமலேக்கியரை மடங்கடித்து,

௮ அமலேக்கியரின் இராசாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான். ஆனால் சனங்களெல்லாரையும் பட்டயக்கருக்கினாலே சங்காரம்பண்ணினான்.

௯ ஆனாற் சவுலுஞ்சனமும் ஆகாகையும் ஆடுமாடுகளில் முதற்றரமானதையும் இரண்டாந்தரமானதையும் ஆட்டுக்குட்டிகளையும், நல்லதான செல்வாவற்றையுஞ் சங்காரம்பண்ண மனதில்லாமல் தப்பவைத்துப் புறக்கணிக்கப்படத்தக்கதும் ஆகாததுமான சகலவஸ்துவையுமே சங்காரம் பண்ணினார்கள்.

௰ அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை சாமுவேலுக்குண்டாய், அவர் சொன்னதாவது,

௰௧ நான் சவுலை இராசாவாக்கினது நமக்கு மனஸ்தாபமாயிருக்கின்றது. ஏனெனில் அவன் நம்மைவிட்டுத் திரும்பி நம்முடைய வார்த்தைகளை நிறைவேற்றாமற்போனானென்றார். அப்பொழுது சாமுவேல் மனவெரிச்சலாகி இராமுழுதுங் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

௰௨ மறுநாள் அதிகாலமே சாமுவேல் சவுலைச் சந்திக்கப்போனான். அப்பொழுது சவுல் கர்மேலுக்கு வந்து, இதோ, தனக்கு ஒரு வெற்றிவிருதை நாட்டினானென்றும், பிறகு சுற்றிக்கொண்டு கடந்து கில்காலுக்கிறங்கிப்போனானென்றுஞ் சாமுவேலுக்கறிவிக்கப்பட்டது.

௰௩ சாமுவேல் சவுலண்டைக்கு வந்தபோது, சவுல் அவனுடனே, நீர் கர்த்தருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர். கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேனென்றான்.

௰௪ அதற்குச் சாமுவேல், ஆனால் என் காதுகளில் விழுகிற அந்த ஆடுகளின் சத்தமும் நான் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்னவென்றான்.

௰௫ அப்பொழுது சவுல், அமலேக்கியரிடத்திலிருந்து அவைகளைக் கொண்டு வந்தார்கள். ஏனெனிற் சனம் ஆடுமாடுகளில் நலமானதையும் உம்முடைய பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள். ஆனால் மற்றதைச் சங்காரம்பண்ணினோமென்றான்.

௰௬ அப்பொழுது சாமுவேல் அந்தப் பேச்சை விடும், கர்த்தர் இந்த இராத்திரியிலே என்னோடே சொன்னதை யுமக்கறிவிப்பேனென்று சவுலோடே சொன்னான். இவன் அவனுடனே, சொல்லுமென்றான்.

௰௭ அப்பொழுது சாமுவேல் சொன்னதாவது, நீர் உம்முடைய பார்வைக்குச் சின்னவராயிருக்கிறபோதல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்? அப்பொழுது கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் இராசாவாக அபிஷேகம்பண்ணுவித்தார்.

௰௮ இப்பொழுது கர்த்தர் உம்மை யந்த வழியாயனுப்பி, நீ போய், அமலேக்கியராகிய அந்தப் பாவிகளைச் சங்கரித்து, அவர்களை நிர்மூலமாக்குந்தீருமட்டும் அவர்களோடு யுத்தம்பண்ணென்றாரே.

௰௯ இப்படியிருக்கக்கொள்ள, நீர் கர்த்தருடைய சொற்கேளாமற், கொள்ளையின்மேற் பாய்ந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ததென்னவென்றான்.

௨௰ அப்பொழுது சவுல் சாமுவேலோடே சொன்னதாவது, நான் கர்த்தருடைய சொற்கேட்டுக் கர்த்தரென்னை யனுப்பின வழியாய்ப்போய், அமலேக்கின் இராசாவாகிய ஆகாகைக் கொண்டுவந்து, அமலேக்கியரைச் சங்காரம்பண்ணினேனே.

௨௰௧ சனமோவென்றால் உம்முடைய பராபரனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காகக் கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானதைப் பிடித்து ஓட்டி வந்தார்களென்றான்.

௨௰௨ ஆனால் சாமுவேல் சொன்னதாவது, கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலுஞ் சர்வாங்கத் தகனங்களும் பலிகளுங் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? இதோ, பலியைப்பார்க்கிலுங் கீழ்ப்படியுதலும், ஆட்டுக் கடாக்களின் கொழுப்பைப்பார்க்கிலுங் கவனித்திருக்குதலும் உந்தாவினை.

௨௰௩ ஏனென்றால் இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியப்பாவத்திற்கும் முரட்டாட்டம்பண்ணுதல் மாயையானதையு

...பூசிக்கிறதற்குச் சரியாயிருக்கிறது. நீர் கர்த்தருடையவார்த்தையைப்புறக்கணித்தபடியினாலே அவர் உம்மையுமநீர் இராசாவாயிராதபடிக்குப் புறக்கணித்தாரென்றான.

௨௪ அப்போதுசவுலசாமுவேலோடே சொன்னதாவது, நான்கர்த்தருடையவார்த்தையையும உமமுடைய வார்த்தைகளையும மீறினதினாலேபாவஞ்செய்தேன. ஏனென்றால்நானசனத்திற்குப்பயந்து, அவர்கள சொற்கேட்டேன.

௨௫ இப்போதுமநீர் எனபாவத்தைமன்னித்து, நானகர்த்தரைப்பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத்திரும்பிவாருமென்றான.

௨௬ அதற்குசாமுவேலசவுலுடனே நான உம்மோடேகூடத்திரும்புவதில்லை. ஏனென்றால்கர்த்தருடைய வார்த்தையைப்புறக்கணித்தீர். நீர் இஸ்ரவேலின்மேலஇராசாவாயிராதபடிக்குக்கர்த்தர் உம்மையும்புறக்கணித்தாரென்றான.

௨௭ போகிறதற்காகச் சாமுவேல திரும்புகிறபோதோவெனில, இவன அவனசால்வையின்தொங்கலைப்பிடித்துக்கொண்டான. அது கிழிந்துபோயிற்று.

௨௮ அப்போது சாமுவேல அவனோடேசொன்னதாவது, உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின இராச்சியபாரத்தை இனறுகர்த்தர்கிழித்துப்போட்டு, உம்மைப்பார்க்கநல்லவனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கதைக்கொடுத்தார்.

௨௯ இஸ்ரவேலின செய பலனானவர் பொய்சொல்லுகிறதுமில்லை. தானசொன்னதற்கு மனஸ்தாபப் படுகிறதுமில்லை. ஏனென்றால அதற்கு மனஸ்தாபப்பட அவர்மனுஷனல்லவென்றான.

௩௦ அதற்கவன, நான்பாவஞ்செய்தேன. இப்போதும என்சனத்தின்மூப்பருக்கு முன்பாகவும, இஸ்ரவேலுக்குமுன்பாகவும, நீர் என்னைக்கனம்பண்ணி, நான உமமுடையபராபரனாகியகர்த்தரைப் பணிந்துகொள்ளும்படிக்கு, என்னோடேகூடத்திரும்பிக்கொண்டுவாருமென்றான.

௩௧ அப்போது சாமுவேல திரும்பிக்கொண்டுசவுலுக்குப்பின்சென்றான சவுல்கர்த்தரைப்பணிந்துகொண்டான.

௩௨ பிறபாடுசாமுவேல, அமலேக்கின இராசாவாகிய ஆகாகையென்னண்டைக்குக்கொண்டுவாருங்களென்றான. ஆகாக் சந்தோஷமயக்கமாய அவனண்டைக்குப்போய, மரணத்தின கசப்பு அறறுப்போனது நிச்சயமென்றான.

௩௩ சாமுவேலோ வென்றால், உனபட்டயம ஸ்திரீகளைப்பிள்ளைகளற்றவர்களாக்கினதுபோலே, ஸ்திரீகளுக்குள்ளே உன்னுடையதாயாரும்பிள்ளைகளற்றவளாவாளென்றுசொல்லிச் சாமுவேல கில்காவிலேகர்த்தருக்குமுன்பாக ஆகாகைத்துண்டித்துப்போட்டான.

௩௪ பிறபாடுசாமுவேல ராமாவுக்குப்போனான. சவுலோவென்றால்தன ஊராகிய கிபெயாவிலிருக்கிற தன வீட்டுக்குப்போயேறினான.

௩௫ சவுலமரணமடையுமநாளமட்டும் சாமுவேல அப்புறம அவனைக்காணப்போகவில்லை. ஏனென்றால இஸ்ரவேலின்மேல சவுலை இராசாவாக்கினதற்குக் கர்த்தர்மனஸ்தாபப்பட்டநிமித்தஞ்சாமுவேலசவுலுக்காகத் துக்கித்துக் கொண்டிருந்தான.

௰௬. அதிகாரம்.

தாவீது முதல்விசை அபிஷேகம்பண்ணப்பட்டது.

கர்த்தர்சாமுவேலுடனே, இஸ்ரவேலின்மேல இராசாவாயிராதபடிக்கு நாம புறக்கணித்தசவுலுக்காக நீயெந்தமட்டுந்துக்கமாயிருப்பாய நீ உனகொம்பை எண்ணெயயால்நிரப்பிவா. பெத்லெகேமியனாகிய ஈசாயண்டைக்கு உன்னையனுப்புவோம. ஏனெனில அவன குமாரரில ஒருவனைநமக்கு இராசாவாகத் தெரிந்துகொண்டோமென்றார்.

௨ அதற்குச்சாமுவேல, நான் போவதெப்படி? சவுல அதைக்கேட்டு, என்னைக்கொன்றுபோடுவானேயென்றான அப்போதுகர்த்தர்சொன்னதாவது, நீ ஒரு கிடாரிக்கன்றைக்கையோடே கொண்டுபோய்க்கர்த்தருக்குப்பலியிடவந்தேனென்றுசொல்லி,

௩ ஈசாயைப்பலிவிருந்துக் கழைப்பாயாக. அப்போதுநீசெய்யவேண்டியதை நாம் உனக்கறிவிப்போம. நாமுனக்குச்சொல்லப்போகிறவனைநமக்கு அபிஷேகம்பண்ணுவாயாகவென்றார்.

௪ கர்த்தர்சொன்னபடியே சாமுவேல செய்து பெத்லெகேமுக்குவந்தான. அப்போது ஊரின்மூப்பர்த்தத்தளிப்போடே அவனுக்கெதிர்கொண்டுவந்து நீர்வருகிறதுசமாதானமோவென்றார்கள.

௫ அதற்கு அவன, சமாதானந்தான கர்த்தருக்குப்பலியிடவந்தேன. நீங்கள உங்களைப்பரிசுத்தம பண்ணிக்கொண்டு

என்னுடனேகூடப் பலிவிருந்திற்கு வாருங்களென்று சொல்லி, ஈசாயையும் அவன் குமாரரையும் பரிசுத்தம்பண்ணி, அவர்களைப் பலிவிருந்துக்கழைத்தான்.

௬ அவர்கள் உட்பிரவேசிக்கையில், அவன் எலியாபைப் பார்த்துக் கர்த்தருடைய பார்வைக்கு அவரால் அபிஷேகம்பண்ணப்படுபவன் இவன்தானாக்குமென்றான்.

௭ ஆனாற் கர்த்தர் சாமுவேலுடனே, நீ அவனுடைய ரூபத்தையும் அவன் தன் வளர்த்தியிலே நெட்டையனென்பதையும் நோக்காயாக. ஏனெனில் அவனைப் புறக்கணித்தோம். அதேனென்றால் மனுஷன் பார்க்கிறபடி பாரோம். ஏனெனில் மனுஷன் கண்களுக்கு முன்பாக விருக்கிறதைப் பார்ப்பான். கர்த்தரோவென்றால் இருதயத்தைப் பார்க்கிறாரென்றார்.

௮ அப்போது ஈசாய் அபினதாபை யழைத்து அவனைச் சாமுவேலுக்கு எதிராகக் கடந்துபோகப்பண்ணினான். அவனோவென்றால், இவனையுங் கர்த்தர் தெரிந்துகொண்டதில்லையென்றான்.

௯ ஈசாய் சம்மாவையுங் கடந்துபோகப்பண்ணினான். ஆனால் அவன், இவனையுங் கர்த்தர் தெரிந்துகொண்டதில்லையென்றான்.

௰ இப்படி ஈசாய் தன் ஏழு குமாரரைச் சாமுவேலுக்கெதிராகக் கடந்துபோகப்பண்ணினான். ஆனாற் சாமுவேல் ஈசாயுடனே, கர்த்தர் இவர்களில் ஒருவனையுந் தெரிந்துகொண்டதில்லையென்று சொல்லி,

௰௧ இருக்கிற பிள்ளைகள் இத்தோடே சரியோவென்று ஈசாயைக் கேட்டான். அதற்கவன், சின்னவன் ஒருவன் இன்னம் மீதியாயிருக்கிறான். இதோ, அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறானென்றான். அப்போது சாமுவேல் ஈசாயுடனே, அவனையழைத்தனுப்பு ஏனெனில் அவனிங்கே வருமட்டும் நாம் பந்தியிருப்பதில்லையென்றான்.

௰௨ அவனையழைத்தனுப்பி வரப்பண்ணினான். அவன் சிவந்த மேனியும் அழகான கண்களுள்ளவனும் நல்ல ரூபுள்ளவனுமாயிருந்தான். அப்போது கர்த்தர், நீ எழுந்து, அவனை அபிஷேகம்பண்ணு. அவனேயென்றார்.

௰௩ அப்போது சாமுவேல் எண்ணெய் இருக்கிற கொம்பையெடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம்பண்ணினான். அந்நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஆவி தாவீதின்மேலே பலமாயிறங்கியிருந்தார். சாமுவேல் எழுந்திருந்து ராமாவுக்குப் போய்விட்டான்.

தாவீது சவுலுக்குச் செய்த ஊழியம்.

௰௪ கர்த்தருடைய ஆவி சவுலைவிட்டு விலகிக் கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது.

௰௫ அப்போது சவுலின் ஊழியக்காரர் அவனோடே சொன்னதாவது, இதோ, பராபரனால் விடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி உம்மைக் கலங்கப்பண்ணுகின்றதே.

௰௬ சுரமண்டலத்தை வாசிக்க அறிந்த ஒருவனைத் தேடும்படிக்கு, எங்களாண்டவனாகிய நீர் உமக்கு முன்பாக நிற்கிற உம் அடியாருக்குச் சொல்லும். அப்போது பராபரனால் விடப்பட்ட பொல்லாத ஆவி உம்முடைய மேலிறங்குகையில் அவன் தன் கையினால் அதைக் கொட்டுகிறதினாலே உமக்குச் சாவிளையாகுமென்றார்கள்.

௰௭ ஆகையாற் சவுல் தன் ஊழியக்காரருடனே, நன்றாய்க் கொட்டத்தக்க ஒருவனை யெனக்காகப் பார்த்து, என்னண்டைக்குக் கொண்டுவாருங்களேனென்றான்.

௰௮ அப்போது அந்த வேலைக்காரரில் ஒருவன் பிரத்தியுத்தாரமாக, இதோ, கொட்ட அறிந்திருக்கிற பெத்லகேமியனாகிய ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டேன். அவன் பராக்கிரமசாலியும் நல்ல சேவகனுங் காரியங்களிலே புத்திமானும் சவுந்தரியனுமாயிருக்கிறான். கர்த்தர் அவனோடேகூட விருக்கிறாரென்றான்.

௰௯ அப்போது சவுல் ஈசாயண்டைக்கு ஆட்களை யனுப்பி, ஆடுகளண்டையிலிருக்கிற உன் குமாரனாகிய தாவீதை யென்னண்டைக்கனுப்பென்று சொல்லச் சொன்னான்.

௨௰ அப்போது ஈசாய் அப்பத்தையும் ஒரு துருத்தித் திராட்சப்பழ இரசத்தையும் ஒரு வெள்ளாட்டுக்குட்டியையுங் கழுதையின்மேலேற்றி, அதையுந் தன் குமாரனாகிய தாவீதின் கையிலே சவுலுக்கனுப்பினான்.

௨௧ அப்படியே தாவீது சவுலண்டைக்கு வந்து அவனுக்கு முன்பாக நின்றான். அவன் இவனை மிகவுஞ் சிநேகித்தான். அவனுக்கு இவன் ஆயுதம் பிடிக்கிறவனானான்.

௨௨ சவுல் ஈசாயண்டைக்கு ஆளனுப்பித் தாவீது எனக்கு முன்பாக நிற்கட்டு

ளை. ஏனெனில் என் கண்களில் அவனுக்குத் தயவு கிடைத்ததென்று சொல்லச் சொன்னான்.

௨௩ அப்படியே பர்பரனாலே விடப்பட்ட ஆவி சவுலைப் பிடிக்கும்போது தாவீது சுரமண்டலத்தை யெடுத்துக் கொண்டு தன் கையினாலே கொட்டுவான். அதினாலே சவுலுக்கு முசிப்பாறுதலுண்டாகி, அவனுக்குச் சுகமாயப்போய்ப் பொல்லாத ஆவி அவனை விட்டு நீங்கும்.

௰௭. அதிகாரம்.

இராட்சதனாகிய கோலியாத்தென்றவெலிஸ்தனைத் தாவீது செயித்த அதிசயம்.

பெலிஸ்தரோவென்றால் யுத்தம் பண்ணுகிறதற்குத் தங்கள் இராணுவங்களைச் சேர்த்து யூதாவிலிருக்கிற சொக்கோவிலே கூடிச் சொக்கோவுக்கும் அசெக்காவுக்கும் நடுவேயிருக்கிற தம்மிமின் எல்லையிலே பாளயமிறங்கினார்கள்.

௨ ஆனால் சவுலும் இஸ்ரவேல் மனுஷருங் கூடிக்கொண்டு, கர்வாலிப் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கிப் பெலிஸ்தருக்கெதிராக யுத்தத்திற்காயத்தம் பண்ணினார்கள்.

௩ பெலிஸ்தர் அந்தண்டை ஒரு மலையின் மேலும் இஸ்ரவேலர் இந்தண்டை ஒரு மலையின் மேலும் நின்றார்கள். பள்ளத்தாக்கு அவர்களுக்கு நடுவேயிருந்தது.

௪ அப்போது காத்தூராகிய கோலியாத்தென்றுபேருள்ள ஒரு மனுஷன் பெலிஸ்தரின் பாளயங்களிலிருந்து புறப்பட்டு நடுவே வந்தான். அவன் உயரத்தில் ஆறுமுழமும் ஒரு சாணுமானது.

௫ அவன் தன் தலையின் மேலே பஞ்சலோகமான தலைச்சோட்டைப் போட்டுச் செதிள் செதிளான ஒரு சீராவைத் தரித்துக்கொண்டிருந்தான். அந்தச் சீராவின் நிறை ஐயாயிரஞ் சேக்கலான பஞ்சலோகமாயிருந்தது.

௬ அவன் தன் கால்களிலே பஞ்சலோகமான தொப்பார்த்தையும் தன் தோட்களின் மேலே பஞ்சலோகமான கேடயத்தையும் போட்டுக்கொண்டிருந்தான்.

௭ அவனுடைய ஈட்டித்தாங்கு நெய்கிறவர்களின் படைமரத்தினளவுமாயிருந்தது. அவன் ஈட்டியின் அலகு அறுநூறு சேக்கலான இரும்புமாயிருந்தது. பரிசைப் பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடப்பான்.

௮ அவன் நின்றுகொண்டு, இஸ்ரவேலுடைய இராணுவப் பவுஞ்சுகளுக்கெதிராகக் கூப்பிட்டு அவர்களுக்குச் சொன்னதாவது, நீங்கள் யுத்தத்திற்காயத்தமாகப் புறப்பட்டுவந்ததென்ன? நான் பெலிஸ்தனும் நீங்கள் சவுலின் வேலைக்காரருமல்லவா? உங்களுக்காக ஒருவனைத் தெரிந்துகொள்ளுங்கள்.

௯ அவன் என்னோடே யுத்தம்பண்ணச் சமர்த்தனாயிருந்து, என்னை மடங்கடித்தால், நாங்கள் உங்களுக்கு வேலைக்காரராயிருப்போம். நான் அவனை மேற்கொண்டு அவனை மடங்கடித்தால் நீங்கள் எங்களுக்கு வேலைக்காரராயிருந்து எங்களைச் சேவிக்கவேண்டுமென்று சொல்லி,

௰ பின்னையும் நான் இன்றையத்தினம் இஸ்ரவேலுடைய இராணுவப் பவுஞ்சுகளை நிந்தித்தேன். நாம் ஒன்றுக்கொன்று யுத்தம்பண்ண ஒருவனையெனக்குவிடுங்களென்று அந்தப் பெலிஸ்தன் சொல்லுவான்.

௰௧ சவுலும் இஸ்ரவேலனைத்தும் அந்தப் பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்கிறபோது மிகவுங் கலங்கிப்பயப்பட்டார்கள்.

௰௨ தாவீதோவென்றால் யூதாவுக்குட்பட்ட பெத்லகேம் ஊராகிய ஈசாயென்று பேருள்ள எப்பிராத்திய மனுஷனுடைய குமாரனானவன். இவனுக்கு எட்டுக்குமாரரிருந்தார்கள். இந்த மனுஷன் சவுலின் நாட்களிலே மற்றச்சனங்களுக்குள்ளே வயது சென்ற கிழவனாயிருந்தான்.

௰௩ ஈசாயினுடைய மூன்று மூத்தகுமாரர் சவுலின் பிறகாலே யுத்தத்திற்குப் போயிருந்தார்கள். யுத்தத்திற்குப் போயிருந்த அவனுடைய மூன்று குமாரரில் தலைச்சனுக்கு எலியாபென்றும், இரண்டாங்குமாரனுக்கு அபீனதாபென்றும், மூன்றாங்குமாரனுக்குச் சம்மாவென்றும் பேரிருந்தது.

௰௪ தாவீதென்பவன் எல்லாரிலும் இளையவனாயிருந்தான். மூத்தவர்களாகிய அந்த மூன்றுபேருஞ் சவுலின் பிறகாலே போகிறபோது,

௰௫ தாவீது பெத்லகேமிலிருக்கிற தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கும்படிக்குச் சவுலைவிட்டுத் திரும்பிப் போனான்.

௰௬ அந்தப் பெலிஸ்தனோவென்றால் காலமாறும் அந்திமாறும் நாற்பது நாளாகச் சேர்ந்து வந்து நின்றுகொண்டிருப்பான்.

௰௭ ஈசாயோவென்றால் தன் குமாரனாகிய தாவீதோடே சொன்னதாவது, உன் சகோதரருக்காக இந்த ஒரு மரக்காலை

யுத்தப்பட்டணங்களையும் இந்தப்பத்து அப்பங்களையும் எடுத்து, ஓடி, பாளயத்திலிருக்கிற உன் சகோதரருக்குக் கொண்டுபோய்,

௰௮ இந்தப் பத்துக்கேஸ் கட்டிகளை ஆயிரத்துச்சேர்வைக்காரனுக்குக் கொடுத்து, உன்சகோதரர் சுகமாயிருக்கிறார்களோவென்றுவிசாரித்து, அவர்களுடைய அடையாளம் வாங்கிக்கொண்டுவாவென்றான்.

௰௯ அப்போது சவுலும் இவர்களும் இஸ்ரவேலமனுஷரெல்லாரும் ஏலாவென்கிற பள்ளத்தாக்கிலே பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணியிருந்தார்கள்.

௨௰ தாவீது அதிகாலமேயெழுந்திருந்து, ஆடுகளைக்காக்கிறவன் வசமாயவிட்டு ஈசாயத்தனக்குக்கற்பித்தபடியேயெடுத்துக்கொண்டுபோய், இராணுவங்களிருக்கிற இடத்திலேவந்தான். இராணுவமோவெளிப்பட்டுச்சாத்திறகப்புறப்பட்டு யுத்தத்திற்கென்று ஆர்ப்பரித்தார்கள்.

௨௧ இஸ்ரவேலருமபெலிஸ்தருமஒன்றுக்கொன்று எதிராகப்பவுஞ்சுகளைநிறுத்தினார்கள்.

௨௨ அப்போதுதாவீது தான்சுமந்துவந்தவைகளையிறக்கி, இரஸ்துக்களைக்காக்கிறவன்வசமாகவைத்துவிட்டு, இராணுவத்தினிடத்தில ஓடி, அங்கேவந்தபோது, சுகமாயிருக்கிறீர்களோ வென்றுதன சகோதரரைக்கேட்டான.

௨௩ அவன்இவர்களோடேபேசிக்கொண்டிருக்கையில, இதோ, காத்ஊரானாகிய கோலியாத்தென்றுபேருள்ள அந்தப்பெலிஸ்தன்பெலிஸ்தரின் இராணுவங்களிலிருந்தெழும்பிவந்துநடுவேநின்று, அந்தவார்த்தைகளுக்குச்சரியாகப்பேசினான. அதைத்தாவீதுகேட்டான்.

௨௪ இஸ்ரவேலமனுஷரெல்லாரும அந்தமனுஷனைக்காணும்போதோவெனில அவனைவிலகியோடிமிகவும்பயப்பட்டார்கள.

௨௫ அந்நேரத்திலே இஸ்ரவேலமனுஷர்சொன்னதாவது, எழும்பின அந்தமனுஷனைக்கண்டீர்களோ, ஏனென்றால இஸ்ரவேலைநிந்திக்கவெழும்பிநிற்கிறான். எவன் அவனை மடங்கடிக்கிறானோ, அவனை இராசாமிகவும ஐசுவரியமுள்ளவனாக்கி, அவனுக்குத்தமமுடைய குமாரத்தியைக்கொடுத்து, அவனதகப்பன்வீட்டை இஸ்ரவேலிலே இஷ்டமாக்குவாரென்றார்கள.

௨௬ அப்போது தாவீது தன்னண்டையிலேநிற்கிறமனுஷருடனே, இந்தப்பெலிஸ்தனைமடங்கடித்துநிந்தையை இஸ்ரவேலைவிட்டுவிலக்குகிறவனுக்கு என்னசெய்யப்படும? ஏனெனிறசீவனுள்ளபராபரனுடைய இராணுவங்களை நிந்திக்கிற விருத்தசேதனமில்லாத இந்தப்பெலிஸ்தனானவன எம்மாத்திரமென்றான்.

௨௭ அப்போதுசனம, அவனைமடங்கடிக்கிறவனுக்கு இன்னின்னபடிசெய்யப்படுமென்றுஅந்தவார்த்தைகளுக்குச்சரியாக அவனுக்குச்சொன்னார்கள.

௨௮ அந்தமனுஷரோடே அவனபேசிக்கொண்டிருக்கிறதை அவன மூத்தசகோதரனாகிய எலியாப்கேட்கிறபோது, அவன தாவீதின்பேரிலே கோபமூண்டு, நீ இங்கேயிறங்கிவந்ததென்ன? வனாந்தரத்திலிருக்கிற அந்தக்கொஞ்ச ஆடுகளை நீ ஆர்வசமாயவிட்டாய? யுத்தத்தைப்பார்க்க இறங்கிவந்தாயென்று, உனனுடைய துணிகரத்தையும, உன்இருதயத்தின அகங்காரத்தையும, நான்அறிவேனென்றான.

௨௯ அதற்குத்தாவீது, நான் இப்போதுசெய்ததென்ன? நான்வந்ததற்குக்காரணமில்லையோவென்றுசொல்லி,

௩௰ அவனைவிட்டுவேறொருவனுக்குஎதிராகத்திரும்பிக்கொண்டு அந்தப்பிரகாரமாகச்சொன்னான்.அப்போதுசனமுந்தினசொலலுக்குச்சரியாக அவனுக்குமமறுமொழிகொடுத்தார்கள.

௩௧ தாவீதுசொன்னவார்த்தைகளையவர்களகேட்டபிறபாடு அவைகளைச்சவுலுக்குமுன்பாக அறிவித்தார்கள. அப்போது அவனையழைப்பித்தான.

௩௨ தாவீதுசவுலுடனே, அவனிமித்தமாக ஒருவனுடைய இருதயமுந்தளர்ந்துபோக வேண்டாம. உமதடியான போய, இந்தப்பெலிஸ்தனோடேயுத்தம பண்ணுவானென்றான.

௩௩ அப்போதுசவுலதாவீதுடனே, நீ இந்தப்பெலிஸ்தனோடே யுத்தம்பண்ண அவனுக்கெதிராகப்போகக் கூடாது. நீ னென்றால நீ இளைஞன அவனோதனசிறுவயதிலேதுவக்கி நல்ல சேவகனாயிருக்கிறானென்றான.

௩௪ ஆனால் தாவீதுசவுலோடேசொன்னதாவது, உமதடியான எனதகப்பனுடைய ஆடுகளை மேயத்துக்கொண்டிருக்கிறபோது, ஒருவிசை ஒருசிங்கமும ஒருவிசை ஒருகரடியுமவந்து மந்தையிலிருக்கிற ஒருஆட்டை யெடுத்துக்கொண்டது.

௩௫ ஆனால அதினபிறகாலே நான்புறப்பட்டுப்போய, அதையடித்து, இதை

யதிலேயதைத் தபபுவிததேன. அப்போது அது எனமேலேபாயுமபோது நான அதின தாடியைபபிடிததுககொண டதையடிததுககொனறுபோடடேன.

௩௬ அநதசசிஙகததையும அநதக்கரடியையும உமதடியானமடஙகடிததான. சனததலலாத இநதப பெலிஸதனும அவைகளிலொனறைபபோலிருப்பான. ஏனென்றால அவனஜீவனுள்ள பராபரனுடைய இராணுவஙகளை நிநதிததானெனறான.

௩௭ பினனும தாவீது, எனனைச்சிஙகததினகைக்கும கரடியினகைக்கும தபபுவிததகர்த்தரானவர் இநதப் பெலிஸதனுடையகைக்கும என்னைத்தபபுவிப்பாரெனறான. அப்போது சவுலதாவீதுடனே, போ. கர்த்தர் உனனுடனே கூடவிருப்பாரெனறுசொலலி,

௩௮ சவுலதாவீதுக்குத்தனவஸதிரஙகளையுடுததுவித்துப்பலசலோகமான ஒரு தலைச்சோடடை அவன தலையினமேற் போடடு, ஒருசீராவை அவனுக்குத்தரிபபித்தான.

௩௯ தாவீது அவனபடடையததைத் தனவஸதிரஙகள மேற கடடிககொணடு, நடக்கத்தலைப்படடான. ஏனெனில அதை அவனபரிட்சைபாரததிருநததிலலை. அப்போதுதாவீதுசவுலுடனே, நான இநதோடேபோகக்கூடாது. ஏனென்றலநான இப்படி அப்பியாசம பணணினதிலலையெனறுசொலலி, அவைகளைக்களைநது போடடு,

௪௦ தனதடியைத் தன்கையிலேபிடிதது, ஆறறிலிருக்கிற ஐநதுகூழாஙகலலுக்களைத்தெரிநதெடுதது, அவைகளைத்தனக்கிருக்கிறமேய்ப்பரின அடப்பமான்பையிலேபோடடுத்தன் கவணைத்தன்கையிலேபிடித்துககொணடு, அநதப்பெலிஸதனணடைசசேர்ப்போனான.

௪௧ பெலிஸதனுமநடக்கவே நடநது, தாவீதணடைககிட்டிவநதான. அவனபரிசையைபபிடிககிறவன் அவனுக்கு முன்னேநடநதான.

௪௨ பெலிஸதனானவன் தாவீதைநோக்கிப்பார்தது, அவன் இளைஞனுஞ்சிவநதமேனியுமாயிருநதபடியினாலே அவனையசடடைபணணி,

௪௩ தாவீதுடனே, நீதடிகளோடே எனனணடையிலேவர நான் நாயோவெனறுசொலலி, அநதப்பெலிஸதன் தன் தேவர்களைககொணடு தாவீதைச்சபித்தான.

௪௪ பின்னும அநதப்பெலிஸதன்தாவீதுடனே, என்னணடைக்குவா. நான் உன்மாமசத்தை ஆகாயததுப்பறவைகளுக்கும வெளியின்மிருகஙகளுக்கும கொடுப்பேனென்றான்.

௪௫ அதறகுத் தாவீது பெலிஸதனோடே சொன்னதாவது, நீபடடையததோடும ஈடடியோடும கேடகத்தோடும என்னணடைக்குவருகிறாய. நானோவென்றால நீ நிநதித்த இஸரவேலுடைய இராணுவஙகளின பராபரனாகிய சேனைகளுடையகர்த்தரின் நாமத்திலே உன்னணடைக்குவருகிறேன்.

௪௬ இன்றையததினம கர்த்தர் உன்னையென்கையிலொப்புக்கொடுப்பதினாலே நானுன்னைமடஙகடிதது உனதலையையுன்னைவிடடுவாஙகிப் பெலிஸதருடையபாளயததின்பிணஙகளையின்றையததினம ஆகாயததுப்பறவைகளுக்கும பூமியின்காடடுமிருகஙகளுக்குங்கொடுப்பேன். அப்படியே இஸரவேலுக்குப்பராபரனுணடென்றுபூலோகத்தாரெல்லாருமறிநது.

௪௭ கர்த்தர்படடையததினாலும ஈடடியினாலும இரட்சிககிறதிலலையென்று இநதச்சபையெலலாம அறிநதுகொளளும. ஏனென்றால யுத்தமானதுகர்த்தருடையது. அவருஙகளை யெஙகளகைக்கொப்புக்கொடுப்பாரென்றான்.

௪௮ அப்போது சமபவித்ததேதெனறால அநதப்பெலிஸதன் எழுமபிததாவீதுக்கு எதிராகச்சேர்நதுவருகிறபோது, தாவீதுதீவிரமாய அநத இராணுவததிறகும அநதபபெலிஸதனுக்கு யெதிராகவோடி,

௪௯ தன்கையை அடப்பததிலேபோடடு, அதிலஒருகலலையெடுததுக்கவணடிலேவைததுச சுழறறிப பெலிஸதனுடையநெறறியிலேபடபபோட்டான. அநதக்கலது அவனநெறறிககுள உருவிப்போனதினாலே அவன்முகஙகுப்புறததரையிலேவிழுநதான.

௫௦ அப்படியேதாவீது ஒருகவணடியினாலும ஒருகலலினாலும பெலிஸதன்மேலே பலன்கொணடு, பெலிஸதனைமடஙகடிதது அவனைககொன்றுபோட்டான். ஆனாலதாவீதினகையிலொருபடடையமுமிலலை.

௫௧ ஆகையாலதாவீதுபெலிஸதனணடையில ஓடிநின்று அவன்படடையததைப்பிடிதது, அதை அதின உறையைவிடடுருவி அவனைக்கொன்று அதினாலே அவன்தலையை வெடடிப்போட்டான். அப்

போது தங்கள் பராக்கிரமசாலி செத்துப்போனானென்று பெலிஸ்தர் கண்டு ஓடிப்போனார்கள்.

௫௨ அப்பொழுது இஸ்ரவேல் மனுஷரும் யூதா மனுஷரும் எழும்பி ஆர்ப்பரித்துப் பள்ளத்தாக்கின் எல்லைமட்டுக்கும் எக்ரோனின் வாசல்கள்மட்டுக்கும் பெலிஸ்தரைத் துரத்தினார்கள். சாராயீமின் வழியில் காத் பட்டணமட்டுக்கும் எக்ரோன் பட்டணமட்டுக்கும் பெலிஸ்தர் வெட்டுண்டு விழுந்தார்கள்.

௫௩ இஸ்ரவேல் புத்திரர் பெலிஸ்தரை உக்கிரமாய்த் துரத்தின பிற்பாடு அவர்கள் திரும்பிவந்து அவர்களுடைய பாளயங்களைக் கொள்ளையிட்டார்கள்.

௫௪ தாவீது பெலிஸ்தனுடைய தலையை எடுத்து அதை எருசலேமுக்குக் கொண்டுவந்தான். அவன் ஆயுதங்களையோ, தன் கூடாரத்திலே வைத்தான்.

௫௫ தாவீது பெலிஸ்தனுக்கெதிராகப் புறப்பட்டுப்போகிறதைச் சவுல் காண்கிறபோது, அவன் அப்னேர் என்ற சேனாபதியோடே, அப்னேரே! இந்த வாலிபன் ஆருடைய குமாரனென்றான் அதற்கு அப்னேர், இராசாவே! நானறியேனென்று உம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்றான்.

௫௬ அப்பொழுது இராசா, அந்தப் பிள்ளையாண்டான் ஆருடைய குமாரனென்று நீ விசாரியென்றான்.

௫௭ ஆகையால் தாவீது பெலிஸ்தனை மடங்கடித்துத் திரும்பினபோது, அப்னேர் அவனையழைத்துச் சவுலுக்கு முன்பாகக் கொண்டுவந்துவிட்டான். பெலிஸ்தனுடைய தலை அவன் கையிலிருந்தது.

௫௮ அப்பொழுது சவுல், வாலிபனே! நீ ஆருடைய குமாரனென்று அவனைக் கேட்டதற்குத் தாவீது, உமது அடியானாகிய பெத்லெகேமூரானாயிருக்கிற ஈசாயின் குமாரன்தானென்றான்.

௰௮. அதிகாரம்.

தாவீது யோனத்தானுடைய பிராணசிநேகத்திற்குள்ளாகிச் சனத்தினால மிகவும் புகழப்பட்டது.

அவன் சவுலோடே பேசித்தீர்ந்த பிற்பாடோவென்றால், யோனத்தானுடைய ஆத்துமந் தாவீதின் ஆத்துமத்தோடே ஒன்றாயிணைக்கப்பட்டது. யோனத்தான் அவனைத் தன்னுடைய ஆத்துமத்தைப் போலச் சிநேகித்தான்.

௨ சவுல் அவனையவன் தகப்பன் வீட்டுக்குத் திரும்பிப்போக வொட்டாமல் அந்நாளிலே தன்னிடத்தில் வைத்துக் கொண்டான்.

௩ யோனத்தான் தாவீதைத் தன் ஆத்துமத்தைப்போலச் சிநேகிக்கிறதினால் அவனும் இவனும் உடம்படிக்கைபண்ணிக்கொண்டு,

௪ யோனத்தான் போர்த்துக்கொண்டிருந்த சால்வையைக் கழற்றி, அதையுந் தன் வஸ்திரத்தையுந் தன் பட்டயத்தையுந் தன் வில்லையுந் தன் கச்சையுங்கூடத் தாவீதுக்குக் கொடுத்தான்.

௫ சவுல் தாவீதை அனுப்பும் எவ்விடத்திற்காகிலும் அவன் புறப்பட்டுப் புத்தியாய்க் காரியத்தை நடப்பிக்கிறபடியால் சவுல் அவனை யுத்தமனுஷர் பேரில் அதிகாரியாக்கினான். அவன் எல்லாச் சனத்தின் கண்களுக்கும் சவுலுடைய ஊழியக்காரரின் கண்களுக்குங் கூடப் பிரியமாயிருந்தான்.

௬ ஆனால் தாவீது பெலிஸ்தனை மடங்கடித்துத் திரும்பினதாலுஞ் சனங்கள் திரும்ப வந்ததற்கும் பிற்பாடு சம்பவித்ததென்னவெனில், ஸ்திரீகள் இஸ்ரவேலின் சகல பட்டணங்களிலுமிருந்து பாடிக்கொண்டாடிப் புறப்பட்டு மேளங்களோடுங் களிப்போடும் வீணைகளோடும் இராசாவாகிய சவுலுக்கெதிர்க்கொண்டுவந்தார்கள்.

௭ அந்த ஸ்திரீகள் ஒன்றுக்கொன்று பாடி வீணைவாசித்துச் சவுல் ஆயிரம்பேரையுந் தாவீது பதினாயிரம்பேரையும் மடங்கடித்தார்களென்றார்கள்.

௮ அந்த வார்த்தை சவுலின் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டு, அவன் மிகவும் எரிந்துகொண்டு, தாவீதுக்குப் பதினாயிரம்பேரைக் கொடுத்து, எனக்கு ஆயிரம் பேரைக்கொடுத்தார்கள். இன்னம் இராசாங்கந்தானும் அவனுடையதாகுமென்று சொல்லி,

௯ அந்நாள்முதற்கொண்டு சவுல் தாவீதைக் காமகாரமாய்ப் பார்த்தான்.

௰ மறுநாளிலே பராபரனால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுல்மேலிறங்கினதால் அவன் வீட்டின் நடுவே தீர்க்கதரிசனஞ் சொல்லியிருந்தான். அப்பொழுது தாவீது தினஞ்செய்கிறபடி தன் கையினாலே சுரமண்டலத்தைக் கொட்டிக் கொண்டிருந்தான். ஆனால் சவுலின் கையிலே ஈட்டியிருந்தது.

௰௧ அப்பொழுது சவுல் தாவீதைச் சுவரோடே உருவக் குத்திப்போடுவேனென்று ஈட்டியை அவன்மேலெறிந்தான். அதைத் தாவீது இரண்டுதரஞ் சுழன்று அவனுக்கு விலகிப்போனான்.

௰௨ ஆனபடியினாலே கர்த்தர் தாவீதோடே கூடவிருக்கிறதினாலும் தன்னைவிட்டு விலகினதினாலும் சவுல் தாவீதுக்குப் பயந்திருந்தான்.

௰௩ சவுல் தன்னைவிட்டு அவனைப் புறப்படுத்தி, அவனை ஆயிரம்பேருக்குத் தலைவனாக வைத்துக்கொண்டான். அப்படியே அவன் ஜனத்துக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருந்தான்.

௰௪ தாவீது தன் வழிகளிலெல்லாம் புத்தியாய் நடந்தான். ஏனென்றால் கர்த்தர் அவனோடேகூடவிருந்தார்.

௰௫ அவன் மகா புத்திமானாய் நடக்கிறதைச் சவுல் கண்டு, அவனுக்கு ஐயமாயிருந்தான்.

௰௬ இஸ்ரவேல் ஜனமும் யூதா ஜனமும் எல்லாரும் தாவீதைச் சிநேகித்தார்கள். ஏனென்றால் அவர்களுக்கு முன்பாகப் போக்கும் வரத்துமாயிருந்தான்.

தாவீதின் விவாகம்.

௰௭ சவுல் தாவீதோடே இதோ, என் மூத்த குமாரத்தியாகிய மேராபை உனக்கு விவாகம்பண்ணிக்கொடுப்பேன், நீ எனக்குச் சவுரியவானாயிருந்து கர்த்தருடைய யுத்தங்களை நடத்துவென்றான். ஏனென்றால் என் கை அவன்மேலல்ல பெலிஸ்தரின் கையே அவனுக்கு விரோதமாயிருப்பதாகவென்று சவுல் நினைத்துக்கொண்டான்.

௰௮ அப்பொழுது தாவீது சவுலுடனே நான் இராசாவுக்கு மருமகனாகிறதற்கு நான் எம்மாத்திரம்? என் ஜீவனும் இஸ்ரவேலிலே என் தகப்பன் வம்சமும் எம்மாத்திரம் என்றான்.

௰௯ சவுலின் குமாரத்தியாகிய மேராப் தாவீதுக்குக் கொடுக்கப்படுங் காலத்திலே, அவள் மேகோலாத்தியனாகிய ஆதரியேலுக்கு ஸ்திரீயாகக் கொடுக்கப்பட்டாள்.

௨௰ ஆனாற் சவுலின் குமாரத்தியாகிய மீகாள் தாவீதைச் சிநேகித்தாள். அது சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அது அவனுக்கு நலமாய்க் கண்டது.

௨௧ அவள் அவனுக்குக் கண்ணியாயிருக்கவும் பெலிஸ்தரின் கை அவன்மேல் வரத்தக்கதாகவும் அவளை அவனுக்குக் கொடுப்பேனென்று சவுல் நினைத்துத் தாவீதுடனே, நீ என்னுடைய இரண்டாங் குமாரத்தியினாலே இன்றெனக்கு மருமகனாகுவென்றான்.

௨௨ பிற்பாடு சவுல் தன் ஊழியக்காரருக்கு: நீங்கள் தாவீதோடே இரகசியமாய்ப் பேசி, இதோ, இராசா உன்மேலே பிரியமாயிருக்கிறார். அவருடைய எல்லா ஊழியக்காரரும் உம்மைச் சிநேகிக்கிறார்கள், இப்போதும் நீர் இராசாவுக்கு மருமகனாகுமென்று சொல்லுங்களென்று கற்பித்தான்.

௨௩ சவுலின் ஊழியக்காரர் இந்த வார்த்தைகளைத் தாவீதின் செவிகளிலே பேசினார்கள். அப்பொழுது தாவீது நான் இராசாவுக்கு மருமகனாகிறது உங்கள் பார்வைக்கு எளிதான காரியமோ? ஏனென்றால் நான் தரித்திரனும் கொஞ்ச எண்ணிக்கையான மனுஷனுமாயிருக்கிறேனென்றான்.

௨௪ இன்னின்ன வார்த்தைகளைத் தாவீது சொன்னானென்று சவுலின் ஊழியக்காரர் அவனுக்கறிவித்தார்கள்.

௨௫ அப்பொழுது சவுலென்கிறவன் இராசாவானவர் பரிசினமேலல்ல, இராசாவின் சத்துருக்களுக்குச் சரிக்குச்சரிக்கட்டும்படிக்குப் பெலிஸ்தரின் நூறு நுனித்தோல்களின்மேல் விருப்பமாயிருக்கிறார் என்று தாவீதுக்குச் சொல்லுங்களென்றான்; ஏனென்றால் சவுல் தாவீதைப் பெலிஸ்தரின் கையினால் விழப்பண்ண நினைத்தான்.

௨௬ அவன் ஊழியக்காரர் தாவீதுக்கு இந்த வார்த்தைகளை யறிவிக்கிறபோது, இராசாவுக்கு மருமகனாகிறது தாவீதுக்கு நலமாய்க் கண்டது.

௨௭ அதற்குக் குறித்தநாள் நிறைவேறாததற்கு முன்னே, தாவீது எழுந்து தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு போய்ப், பெலிஸ்தரில் இருநூறுபேரை வெட்டி அவர்கள் நுனித்தோல்களைக் கொண்டுவந்து, தான் இராசாவுக்கு மருமகனாகும்படிக்கு அவைகளை இராசாவுக்கு அத்தனை நிறைவாகச் செலுத்தினான். அப்பொழுது சவுல் தன் குமாரத்தியாகிய மீகாளை அவனுக்கு ஸ்திரீயாகக் கொடுத்தான்.

௨௮ கர்த்தர் தாவீதோடிருக்கிறாரென்று சவுல் கண்டறிந்துகொண்டான். சவுலின் குமாரத்தியாகிய மீகாளும் அவனைச் சிநேகித்துக்கொண்டிருந்தாள்.

௨௯ ஆகையாற் சவுல் பின்னையும் அதிகமாய்த் தாவீதுக்குப் பயந்து தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான்.

௩௰ ஆனாற் பெலிஸ்தருடைய பிரபுக்கள் புறப்படுகிறபோதெல்லாந் தாவீது சவுலினுடைய எல்லா ஊழியக்காரரைப்பார்க்கப் புத்தியாய்ச் செய்தான். அவன்பேர் மெத்தவுங் கனங்கொண்டது.

௰௯. அதிகாரம்.

யோனத்தான் தாவீதுக்காகத் தன் தகப்பனை மனுக்கேட்டது.

தாவீதைக் கொன்றுபோடும்படிக்குச் சவுல் தன் குமாரனாகிய யோனத்தானோடுந் தன் எல்லா ஊழியக்காரரோடும் பேசினான். சவுலின் குமாரனாகிய யோனத்தானோவென்னில் தாவீதின்மேல் மிகவும் பிரியமாயிருந்தான்.

௨ ஆகையால் யோனத்தான் தாவீதுக்கதையறிவித்து என் தகப்பனாகிய சவுல் உன்னைக் கொன்றுபோட வகைதேடுகிறார். இப்போதும் நாளைக்காலமே நீயெச்சரிக்கையாயிருந்து மறைவான இடத்திலே ஒளித்துக்கொண்டேயிரு.

௩ நானோவென்றால் புறப்பட்டு வந்து, நீ வெளியிலிருக்கும் இடத்திலே என் தகப்பன் பக்கத்திலே நின்று, உனக்காக என் தகப்பனோடே பேசி நடக்கும் வயனத்தைக் கண்டு உனக்கறிவிப்பேனென்றான்.

௪ அப்படியே யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலோடே, தாவீதுக்காக நன்மையாய்ப்பேசி அவரோடே சொன்னது, இராசா தமதடியானாகிய தாவீதுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாராக. ஏனென்னில் உமக்கு விரோதமாக அவன் பாவஞ்செய்ததில்லை. அவன் செய்கைகள் உமக்கு வெகு பிரயோசனமுமாயிருக்கின்றதே.

௫ அதெப்படியென்றால் அவன் தன் பிராணனைத் தன் கையிலே வைத்து அந்தப் பெலிஸ்தனை மடங்கடித்ததினாலே கர்த்தர் இஸ்ரவேலுக்கெல்லாம் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டதை நீர் கண்டு சந்தோஷப்பட்டீரே? இப்போதும் முகாந்தரமில்லாமல் தாவீதைக் கொல்லுகிறதினாலே குற்றமில்லாத இரத்தத்திற்கு விரோதமாக நீர் பாவஞ்செய்வானேனென்றான்.

௬ அப்போது சவுல் யோனத்தானுடைய சொற்கேட்டு, அவன் கொலைசெய்யப்படுவதில்லையென்று கர்த்தருடைய சீவனைக்கொண்டு ஆணையிட்டான்.

௭ ஆனதுகொண்டு யோனத்தான் தாவீதையழைத்து இந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்கறிவித்து, அவனைச் சவுலண்டையிலே கூட்டிக்கொண்டுவந்துவிட்டான். அப்படியேயவன் முன்போலேயவனுக்கு முன்பாகவிருந்தான்.

சவுல் தாவீதைக் கொல்லப்பார்த்தபடியினாலேயிவன் சாமுவேலண்டைக்கு ஓடிப்போனது.

௮ திரும்ப ஒரு யுத்தமுண்டாயிற்று. அப்போது தாவீது புறப்பட்டுப்போய்ப் பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணி, அவர்களை வெகுவாய் மடங்கடித்ததினாலேயவர்கள் அவனுக்கு முன்பாக முறிந்தோடிப் போனார்கள்.

௯ ஆனாற் கர்த்தரால் விடப்பட்ட பொல்லாத ஆவி சவுலின்மேல் வந்தது. அவன் தன் வீட்டிலுட்கார்ந்து தன் ஈட்டியைத் தன் கையிலே பிடித்துக்கொண்டிருந்தான். தாவீது தன் கையினாலே சுரமண்டலங்கொட்டினான்.

௰ அப்போது சவுல் தாவீதையீட்டியினாலே சுவரோடே உருவக்குத்திப் போடப்பார்த்தான். ஆனால் இவன் சவுலுக்கு விலகினதினாலேயவன் எறிந்த ஈட்டி சுவரிலே பட்டது. தாவீதோவென்றால் ஓடிப்போய் அன்று இராத்திரித் தப்புவித்துக்கொண்டான்.

௰௧ ஆனால் தாவீதைக் காவற்பண்ணி, மறுநாட்காலமே அவனைக் கொன்றுபோடும்படிக்குச் சவுல் அவன் வீட்டிற்குச் சேவகரையனுப்பினான். இதைத் தாவீதுக்கு அவன் பெண்சாதியாகிய மீகாள் அறிவித்து, நீர் இன்று இராத்திரியில் உம்முடைய பிராணனைத் தப்புவித்துக்கொள்ளாவிட்டால், நாளை நீர் கொன்றுபோடப்படுவீரென்றுசொல்லி,

௰௨ மீகாள் தாவீதைப் பலகணிவழியாயிறக்கி விட்டாள். அவன் தப்புவித்துக்கொண்டு ஓடிப்போனான்.

௰௩ மீகாளோவென்னில் ஒரு சிலையையெடுத்துக் கட்டிலின்மேல் வைத்து, அதின் தலைமாட்டிலே ஒரு வெள்ளாட்டுத்தோலைப் போட்டுப் புடவையினாலே மூடிவைத்தாள்.

௰௪ தாவீதைக்கொண்டுவரச் சவுல் சேவகரையனுப்பினபோது அவர் வியாதியாயிருக்கிறாரென்றாள்.

௰௫ அப்போது தாவீதைப் பார்க்கிறதற்குச் சவுல் சேவகரையனுப்பி, அவனைக் கொன்றுபோடும்படிக்குக் கட்டிலோடேகூட அவனையென்னண்டைக்கு எடுத்துவாருங்களென்றான்.

௰௬ சேவகர் வந்தபோதோவென்னில், இதோ, சிலை கட்டிலின்மேலும் வெள்ளா

டித்தோல் அதின தலைமாட்டின்மேலுவ
டந்தது.

௧௭ அப்போது சவுல், நீ இப்படியென்னையேய்த்து என் பகைஞனைத் தப்பவிட்டதென்னவென்று மீகாளைக் கேட்டான். அப்போது மீகாள் சவுலுடனே, நான் உன்னைக் கொல்லாதபடிக்கு என்னைப் போகவிடுவென்று அவன் என்னோடே சொன்னானென்றாள்.

௧௮ தாவீது தப்பியோடிப்போய், ராமாவிலிருக்கிற சாமுவேலண்டைக்கு வந்து சவுல் தனக்குச் செய்ததெல்லாவற்றையும் அவனுக்கறிவித்தான். பிற்பாடு அவனுஞ் சாமுவேலும்போய் நாயோத்திலே யிருந்தார்கள்.

௧௯ ஆனால் இதோ, தாவீது ராமாவுக்கடுத்த நாயோத்திலே யிருக்கிறானென்று சவுலுக்கறிவிக்கப்பட்டது.

௨௰ அப்போது சவுல் தாவீதைக் கொண்டுவரச் சேவகரையனுப்பினான். அவர்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற தீர்க்கதரிசிகளின் கூட்டத்தையுஞ் சாமுவேல் அவர்களின் தலைவனாக நிற்கிறதையுங் கண்டார்கள். அப்போது சவுலினுடைய சேவகரின்மேலே பராபரனுடைய ஆவி யிறங்கினதினால் இவர்களுந் தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள்.

௨௧ இது சவுலுக்கறிவிக்கப்பட்டபோது அவன் வேறே சேவகரையனுப்பினான். அவர்களுந் தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள். மூன்றந்தரமுஞ் சவுல் சேவகரையனுப்பினான். அவர்களுந் தீர்க்கதரிசனஞ்சொன்னார்கள்.

௨௨ அப்போது அவன்தானும் ராமாவுக்குப்போய்ச் சேக்குவிலிருக்கிற பெரிய கிணற்றண்டையிலே வந்து, சாமுவேலுந் தாவீதும் எங்கே யிருக்கிறார்கள்? என்று கேட்டான். அதோ, ராமாவுக்கடுத்த நாயோத்திலே யிருக்கிறார்களென்று சொல்லப்பட்டது.

௨௩ அப்போது ராமாவுக்கடுத்த அந்த நாயோத்துக்குப் போனான். ஆனால் பராபரனுடைய ஆவி அவன்மேலும் இறங்கினதினாலே யவன் ராமாவுக்கடுத்த நாயோத்திலே சேருமட்டுந் தீர்க்கதரிசனஞ்சொல்லிக்கொண்டே நடந்துவந்து,

௨௪ தானுந் தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டுத் தானுஞ் சாமுவேலுக்கு முன்பாகத் தீர்க்கதரிசனஞ்சொல்லி, அன்று பகல்முழுதும் இராமுழுதும் வஸ்திரமில்லாமல் விழுந்துகிடந்தான். ஆகையினாலே சவுலுந் தீர்க்கதரிசிகளிலொருவனோவென்பார்கள்.

௨௰. அதிகாரம்.

யோனத்தான் தாவீதோடே பண்ணின உடம்படிக்கையைப் புதிதாக்கித் தாவீதுக்காக மிகவும் பிரயாசப்பட்டது.

தாவீதோவென்றால் ராமாவுக்கடுத்த நாயோத்திலிருந்து ஓடிப்போய், யோனத்தானுக்கு முன்பாக வந்து, உம்முடைய தகப்பன் என் பிராணனை வாங்கத் தேடுகிறதற்கு நான் செய்ததென்ன? என் அக்கிரமமென்ன? அவருக்கு முன்பாக என்னுடைய பாவமென்னவென்றான்.

௨ அவன் இவனுடனே, அப்படி யொருக்காலுமாகாது நீ சாவதில்லை. இதோ, என் செவிகளுக்கு வெளிப்படுத்தாமல் என் தகப்பன் பெரிய காரியமானாலுஞ் சின்னக்காரியமென்கிலுஞ் செய்கிறதில்லை. இந்தக் காரியத்தை யென் தகப்பன் எனக்கு ஒளிப்பானேன்? அது இல்லையென்றான்.

௩ அப்போது தாவீது உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததென்று உம்முடைய தகப்பன் நன்றாயறிவார். ஆகையால் யோனத்தானுக்கு மனநோவுண்டாகாதபடிக்கு அவன் இதை யறியப்போகாதென்பார். ஆனால் மெய்யாகவே யெனக்கும் மரணத்திற்கும் ஒரு அடி தூரமாத்திரமிருக்கின்றதென்று கர்த்தருடைய ஜீவனையும் உம்முடைய ஜீவனையுங் கொண்டு சொல்லுகிறேனென்று, மறுமொழியாகச் சொல்லி ஆணையிட்டான்.

௪ அப்போது யோனத்தான் தாவீதுடனே, உன் ஆத்துமம் எப்படிக் கேட்கின்றதோ? அப்படியுனக்குச் செய்வேனென்றான்.

௫ தாவீது யோனத்தானோடே சொன்னதாவது, இதோ நாளைக்கு அமாவாசையானபடியினாலே நான் இராசாவோடே சாப்பிடப்பந்தியிருக்கவேண்டியதாயிருக்கும். ஆனால் நான் மூன்றாம் நாட்சாயுங்காலமட்டும் வெளியிலே யொளித்திருக்க என்னைப் போகவிடும்.

௬ நான் எங்கே யென்று உம்முடைய தகப்பன் கேட்டால், தன்னூராகிய பெத்லகேமிலே வருஷந்தோறும் பலியிடுகிற நாள் வம்சத்திற்கெல்லா மிருக்கிறபடியினாலே தாவீது அவ்விடத்திற்கோட என்னையுத்தரவு கேட்கவே கேட்டானென்று நீர் சொல்லும்.

௭ அதற்கவர் நல்லதென்றால் உம்முடைய அடியானுக்குச் சமாதானமிருக்கும் அவர்

கோபமாயெரிந்தாரேயானால் அவராலே பொல்லாப்புத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றதென்று அறிந்துகொள்வீர்.

௮ ஆகையால் உமதடியானுக்குத் தயவுசெய்வீராக. ஏனெனில் கர்த்தருக்குமுன்பாக உமதடியானை யும்மோடே உடம்படிக்கைக்குள்ளாக்கிக்கொண்டீர். ஏனெனில் ஒரு அக்கிரமமிருந்ததேயானால் நீரே யென்னைக் கொன்றும்போடும். நீரென்னை யும்முடைய தகப்பனண்டைக்குக் கொண்டுபோவதென்னவென்றான்.

௯ அப்பொழுது யோனத்தான், அப்படி உனக்கு வராதிருப்பதாக. பொல்லாப்பு உன்மேல் வரப்பண்ண என் தகப்பனாலே தீர்மானிக்கப்பட்டதென்று நானறியவேயிருந்தால், நானதை யுனக்கறிவிக்காதிருப்பேனோவென்றான்.

௰ தாவீது யோனத்தானுடனே, உம்முடைய தகப்பன் உமக்குக் கடினமான பிரத்தியுத்தரஞ் சொன்னாரோ வென்கிறதை யெனக்கறிவிப்பவனார்ரென்றான்.

௰௧ அப்பொழுது யோனத்தான் தாவீதுடனே, ஊருக்கு வெளியே போவோம் வாவென்றான். இருவரும் வெளியே புறப்பட்டுப்போனார்கள்.

௰௨ அப்பொழுது யோனத்தான் தாவீதோடே சொன்னதாவது, நான் நாளைக்காவது நாளையன்றைக்காவது என் தகப்பனையறிந்துகொண்டு, இதோ, தாவீதின்மேலே தயவாயிருக்கிறாரென்று கண்டும், அதை அப்பொழுது உன் செவிகளுக்கு வெளிப்படுத்தும்படிக்கு உனக்குச் சொல்லியனுப்பாதிருந்தால்,

௰௩ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் யோனத்தானுக்கு இப்படியும் அப்படியுஞ் செய்யக்கடவர். ஆனால் உனக்குத் தீங்குசெய்ய என் தகப்பனுக்கு நன்றாய்க்கண்டால் அதையுன் செவிகளுக்கு வெளிப்படுத்தி, நீ சமாதானத்தோடே போகும்படிக்கு உன்னைப்போகவிடுவேன். கர்த்தர் என் தகப்பனோடிருந்ததுபோல உன்னோடேயிருப்பாராக.

௰௪ அப்பொழுது நானின்னமுயிரோடிருந்தால் நான் சாகாதபடிக்கு நீ கர்த்தருடைய நிமித்தமாயெனக்குத் தயவுசெய்யாவிட்டால் கர்த்தர் உனக்கும் அப்படிச்செய்யக்கடவர்.

௰௫ கர்த்தர் தாவீதின் சத்துருக்களாகிய ஒவ்வொருவனையும் பூமியின்மேல் வாராதபடிக்கு வேரறுக்கும்போதும், நீ என்றைக்கும் உன் தயவை யென் வீட்டைவிட்டு அகற்றிப்போடாயாகவென்றான்.

௰௬ இப்படி யோனத்தான் தாவீதின் வீட்டோடே உடம்படிக்கை பண்ணித் தாவீதுடைய சத்துருக்களின் கையிலே கர்த்தர் கணக்குக் கேட்பாராக வென்று சொல்லி,

௰௭ யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினாலே பின்னையும் அவனுக்கு ஆணையிட்டான். ஏனெனில் தன் ஆத்துமத்தைச் சிநேகித்ததுபோல அவனைச் சிநேகித்தான்.

௰௮ பிற்பாடு யோனத்தான் அவனுக்குச் சொன்னதாவது, நாளை யமாவாசை யானபடியினாலே நீ எனக்கு வேண்டியவனாயிருக்கிறாய்; நீ உட்காரவேண்டிய இடத்திலே நீ யில்லையென்று காண்பார்கள்.

௰௯ மூன்றுநாளிலே நீ இறங்கிவந்து, இந்த நடபடியின் நாளாகிய அன்றைக்கு நீ ஒளித்திருந்த ஸ்தலத்தில் சென்று ஏசேலென்கிற கல்லண்டையிலிருக்கக்கடவாய்.

௨௰ அப்பொழுது நான் குறிப்புவைத்தெய்கிறதுபோலே அதற்குப் பக்கமாக மூன்று அம்புகளையெய்து,

௨௰௧ இதோ, நீபோய் அந்த அம்புகளைத் தேடிவாவென்று பிள்ளையாண்டானை யனுப்புவேன். இதோ அம்புகளுனக்கிப்பாலே கிடக்கின்றது அவைகளையெடுத்துவாவென்று பிள்ளையாண்டானோடே நான் சொல்லவேசொன்னால், நீ வா. ஏனென்றால் அப்பொழுது ஒன்றுமில்லாமல் உனக்குச் சமாதானமாயிருக்குமென்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டுசொல்லுகிறேன்.

௨௰௨ இதோ, அம்புகள் உனக்கு அப்பாலே கிடக்கின்றதென்று நான் பிள்ளையாண்டானோடே சொன்னேனேயாகில், நீ போய்விடுவாயாக. ஏனெனில் அப்பொழுது கர்த்தருன்னைப் போகச்சொல்லுகிறார்.

௨௰௩ ஆனால் நானும் நீயும் பேசிக்கொண்ட காரியத்துக்கு இதோ, கர்த்தர் எனக்கும் உனக்கும் என்றைக்கும் சாட்சியாயிருக்கிறவரென்றான்.

௨௰௪ அப்படியே தாவீது வெளியிலே யொளித்துக்கொண்டிருந்தான். அமாவாசையானபோது இராசா அசனம்பண்ண உட்கார்ந்தான்.

௨௰௫ இராசா சுவரண்டையில் விருக்கிற தன்னுடைய ஸ்தலத்தில் எப்போதும்போல உட்கார்ந்தபோது, யோனத்தான் எழுந்திருந்தான். அப்னேரோவென்றால் சவுலுடைய பக்கத்திலுட்கார்ந்தான். தாவீதிருக்குமிடம் வெறுமையாயிருந்தது.

உசா ஆனாலும் அவன் சுத்தமாயிராதபடிக்கு ஏதோ அவனுக்குச் சம்பவித்தது, அவன் தீட்டாயிருக்கிறானென்று அன்றைக்குச் சவுல் ஒன்றுஞ்சொல்லவில்லை.

உஎ அமாவாசைக்கு மறுநாளிலுந் தாவீதிருக்குமிடம் வெறுமையாயிருந்தது. அப்பொழுது சவுல், ஈசாயின் மகன் நேற்றும் இன்றும் போஜனத்துக்கு வராதேபோனதென்னவென்று தன் குமாரனாகிய யோனத்தானைக் கேட்டான்.

உஅ யோனத்தான் சவுலுக்குப் பிரதியுத்தரமாகப் பெத்லகேமட்டும் போகத் தாவீது என்னையுத்தரவு கேட்கவேண்டி,

உகூ அங்கே நான் போகட்டுமே; எங்கள் வம்சத்திற்கு ஊரிலே பலியிடுகிறபடியினால், என்னை வரச்சொல்லி, என் சகோதரன்தானே எனக்குக் கற்பித்தான்; இப்போதும் உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததானால், நான் என் சகோதரரைப் பார்க்கிறதற்குத் தப்பிப்போகட்டுமேயென்றான். ஆகையினாலே அவன் இராசாவின் பந்திக்கு வராதேபோனானென்று சொன்னான்.

௩ய அப்பொழுது சவுல் யோனத்தானின்மேல் கோபமூண்டவனாகி அவனுக்குச் சொன்னதாவது, இரண்டகத்திலே மாறுபாடானவளின் மகனே! நீ உனக்கு வெட்கமாகவும் உன் தாயாரின் அவமானத்திற்கு வெட்கமாகவும் ஈசாயின் மகனைத் தெரிந்துகொண்டிருக்கிறதை நான் அறியேனோ?

௩க அதெப்படியென்றால் ஈசாயின் மகன் பூமியின்மேல் உயிரோடிருக்கும் நாளெல்லாம் நீயும் உன் இராச்சியபாரமும் நிலைப்படுவதில்லை. இப்போதும் அவனை அழைத்தனுப்பி என்னண்டைக்குக் கொண்டுவா. ஏனெனில் அவன் மரணத்திற்குரியவனென்றான்.

௩உ யோனத்தான் தன் தகப்பனாகிய சவுலுக்குப் பிரதியுத்தரங்கொடுத்து, அவனுடனே, அவன் என்னத்திற்காகக் கொலைசெய்யப்படவேண்டும். அவன் என்ன செய்தானென்றான்.

௩௩ அப்பொழுது சவுல் அவனைக் குத்திப்போட ஈட்டியை அவன்மேலெறிந்தான். ஆகையால் தாவீதைக் கொன்றுபோடத் தன் தகப்பனிடத்திலே தீர்மானமாயிருக்கிறதை யோனத்தானறிந்துகொண்டு,

௩ச கோபத்தாபமாய்ப் பந்தியைவிட்டெழுந்திருந்துபோய் அமாவாசையின் மறுநாளாகிய அன்றையத்தினம் அசனமுண்ணாதிருந்தான்; ஏனென்றால் தன் தகப்பன் தாவீதை நிந்தித்துச் சொன்னது அவனுக்குக்கடின நோவாயிருந்தது.

௩ரு மறுநாட்காலமேயானவுடனே யோனத்தான் தாவீதுக்குக் குறித்த நேரத்திலே ஒரு சின்னப்பிள்ளையாண்டானைக் கூட்டிக்கொண்டு வெளியே புறப்பட்டுவந்து.

௩சா நீ ஓடி, நான் எய்கிற அம்புகளைத் தேடென்று பிள்ளையாண்டானுக்குச் சொல்லி, அந்தப்பிள்ளையாண்டான் ஓடுகையில் அவனுக்கப்பாலே போகும் ஒரு அம்பை எய்தான்.

௩எ யோனத்தான் எய்த அம்பிருக்குமிடமட்டும் பிள்ளையாண்டான் வந்தபோது, அம்பு உனக்கு முன்னாலே இல்லையோவென்று யோனத்தான் பிள்ளையாண்டானுக்குப் பிறகாலேயிருந்து கூப்பிட்டான்.

௩அ நீ தரித்து நிற்காமல் சீவிரித்துப் போவென்றும் யோனத்தான் பிள்ளையாண்டானுக்குப் பிறகாலேயிருந்து கூப்பிட்டான். அப்படியே யோனத்தானின் பிள்ளையாண்டான் அம்புகளைப் பொறுக்கித் தன் எசமானண்டைக்குக் கொண்டுவந்தான்.

௩கூ அந்தப்பிள்ளையாண்டான் ஒன்றும் அறியாதிருந்தான். யோனத்தானுந் தாவீதுமே அந்தக் காரியத்தையறிந்திருந்தார்கள்.

சய அப்பொழுது யோனத்தான் தன் ஆயுதங்களைத் தன்னுடைய பிள்ளையாண்டானுக்குக் கொடுத்து அவனுடனே, அவைகளைப் பட்டணத்திற்குள்ளே கொண்டுபோவென்றான்.

சக பிள்ளையாண்டான் போனபிறபாடு தாவீது தென்புறமான இடத்திலிருந்தெழுந்துவந்து, முகங்குப்புறத் தரையிலே விழுந்து, மூன்றுவிசை வணங்கிக்கொண்டான். அவர்களொருவரையொருவர் முத்தஞ்செய்து, ஒருவரையொருவர் பார்த்தழுதார்கள். தாவீது மிகுதியுமழுதான்.

சஉ அப்பொழுது யோனத்தான் தாவீதுடனே, நீ சமாதானத்தோடே போய்க். கர்த்தர் என்றைக்கும் எனக்கும் உனக்கும், என் வித்தாருக்கும், உன் வித்தாருக்கும், நடுவான சாட்சியென்று கர்த்தருடைய நாமத்தைக்கொண்டு நாம் இருவருஞ் சொல்லி ஆணையிட்டுக்கொண்டதை நினைத்துக்கொள்ளென்றான்.

சங பிறபாடு இவன் எழுந்து புறப்பட்டுப்போனான். யோனத்தானோவெனில் பட்டணத்திலே பிரவேசித்தான்.

௨௧. அதிகாரம்.

தாவீது அகிமெலேக்கின்கையிலே தெய்வ சமுகத்தப்பங்களை வாங்கிக்கொண்டுபோனது.

தாவீதோவென்றால் நோபிலிருக்கிற ஆசாரியனாகிய அகிமெலேக்கினிடத்துக்கு வந்தான். அகிமெலேக் நடுக்கத்தோடே தாவீதுக்கெதிர்கொண்டுபோய் ஒருவரும் உம்மோடேகூடவராமல் நீர் ஒண்டியாய் வருகிறதென்னவென்று அவனைக் கேட்டான்.

௨ தாவீது ஆசாரியனாகிய அகிமெலேக்குக்குச் சொன்னது, இராசா எனக்கு ஒருகாரியத்தைக் கற்பித்து, நான் உன்னை அனுப்பின காரியமும் உனக்குக் கற்பித்ததும் இன்னதென்று ஒருவரும் அறியாதிருக்கவேண்டுமென்று என்னோடே சொன்னார். இவ்விடத்துக்குவர நான் வேலைக்காரருக்குக் குறித்திருக்கிறேன்.

௩ இப்போதும் உம்முடைய கையின் கீழிருக்கிறதென்ன? ஐந்து அப்பமாகிலும் எம்மாத்திரம் அகப்படுகிறதோ அம்மாத்திரமாகிலும் என்கையிலே கொடுமென்றான்.

௪ ஆசாரியன் தாவீதுக்குப் பிரதியுத்தாரமாகப் பரிசுத்த அப்பமிருக்கிறதேயொழிய பொது அப்பம் என்கையினிக்கில்லை. வேலைக்காரர் ஸ்திரீகளோடாகிலும் சேராதிருந்தாற் கொடுப்பேனென்றான்.

௫ தாவீது ஆசாரியனுக்குப் பிரத்தியுத்தாரமாக, நான்புறப்படுகிறதற்கு முன் நேற்றும் மூன்றநாளும் ஸ்திரீகள் எங்களுக்குவிலக்கியிருந்தார்கள். வேலைக்காருடைய அசம்பிகளும் சுத்தமாயிருக்கின்றது. இந்தவழி பலவேலைக்கடுத்தவழியாயிருந்தாலும் அந்த அப்பம் அசம்பிகளில் இன்றைக்குப் பரிசுத்தமாயிருக்குமென்றான்.

௬ அப்போது கர்த்தருக்கு முன்பாக இருந்து வாங்கப்பட்ட சமுகத்தப்பங்களைத்தவிர வேறே அப்பம் அங்கேயிராதபடியினாலே, ஆசாரியன் அவனுக்குப் பரிசுத்தமான அப்பத்தைக் கொடுத்தான். ஏனென்றால் அவைகள் வாங்கப்படுகிற நாளிலே அதற்குப் பதிலாகச் சூடான அப்பம் வைக்கப்படும்.

௭ ஆனாற் சவுலுடைய வேலைக்காரரில் ஏதோமியனாகிய தோவேகென்றுபேருள்ள ஒருவன் அன்றையத்தினம் அங்கே கர்த்தருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தான். அவன் சவுலுக்கிருக்கிற மேய்ப்பரில் மகாவல்லவனாயிருந்தான்.

௮ தாவீது அகிமெலேக்குடனே, இங்கே உம்முடைய கையின்கீழ் ஒரு ஈட்டியாகிலும் பட்டயமாகிலும் இல்லையோ? ஏனெனில் இராசாவின் காரியத்தீவிரத்தினாலே நான் என் பட்டயத்தையாகிலும் என் ஆயுதங்களையாகிலும் என்கையிலே பிடித்துவரவில்லையென்றான்.

௯ அதற்கு ஆசாரியன், இதோ, நீர் ஏலாவின் பள்ளத்தாக்கிலே மடங்கடித்த பெலிஸ்தனாகிய கோலியாத்தின் பட்டயம் ஆசாரியச்சால்வைக்குப் பின்னாலே ஒரு புடவையிலே சுருட்டி வைத்திருக்கிறது. அதை நீர் வாங்கப்போனால் வாங்கும். ஏனென்றால் அதுவேயல்லாமல் வேறொன்றும் இங்கேயில்லையென்றான். அப்போது தாவீது அதைப்போல ஒன்றுமில்லை. அதையெனக்குத்தாருமென்றான்.

தாவீது காத்தூரிலிருக்கிற இராசாவாகிய ஆகீஸ்வசமாய் ஓடிவந்தபோது அவனுக்குவந்த இக்கட்டு.

௰ பிறகு தாவீது எழுந்து அன்றையத்தினம் சவுலுக்குத்தப்பியோடிக் காத்தின் இராசாவாகிய ஆகீஸ் அண்டைக்கு வந்தான்.

௰௧ ஆனால் ஆகீசின் ஊழியக்காரர் அவனுடனே, இவன் தேசத்தின் இராசாவாகிய தாவீது அல்லவே? சவுல் ஆயிரம்பேரையும் தாவீது பதினாயிரம்பேரையும் மடங்கடித்தார்களென்று இவனைக்குறித்தல்லவோ களிகூருதலோடே பாடினார்களென்றார்கள்.

௰௨ இந்தவார்த்தைகளைத் தாவீது தன் மனதிலே வைத்துக் காத்தின் இராசாவாகிய ஆகீசுக்குமுன்பாக மிகவும் பயப்பட்டு,

௰௩ அவர்கள் கண்களுக்குமுன்பாகத் தன் முகநாடியை வேறுபடுத்தி, அவர்கள் கையின்கீழிருந்து பித்தம் மேற்கொண்டவனைப்போலக் காண்பித்து, வாசலின் கதவுகளிலே கீறிக்கொண்டிருந்து, தன்வாயின் நுரையைத் தன் தாடியில் விழப்பண்ணினான்.

௰௪ அப்போது ஆகீஸ் தன் ஊழியக்காரருடனே, இதோ, இந்தமனுஷன் பித்தம்பிடித்தவனென்று காண்கிறீர்கள். அவனை நீங்கள் என்னண்டைக்குக் கொண்டுவந்ததென்ன?

ந்து எனக்குமுன்பாகப் பயித்தியவேலை செய்யத்தக்கதாக இவனைக் கொண்டுவந்தது என்ன? பயித்தியக்காரர் எனக்குக் குறைச்சலாயிருக்கிறார்களோ? இவன் என் வீட்டிலே வரலாமோவென்றான்.

உஉ. அதிகாரம்.

தாவீது அப்புறஞ் சவுலுக்குத் தப்பி, ஓடிப்போனது.

தாவீது அவ்விடத்தைவிட்டுத் தப்பி அதுல்லாமென்கிற மலைக்கெபியிலே வந்தான். அதை அவன் சகோதரரும், அவன் தகப்பன் வீட்டாரனைவருங் கேட்டு, அங்கே அவனண்டைக்கிறங்கி வந்தார்கள்.

உ இக்கட்டுப்பட்ட சகலவித மனுஷரும், கடன்பட்ட சகலவித மனுஷரும் மனவிசாரப்பட்டிருக்கிற சகலவித மனுஷரும் அவனோடே கூடிக்கொண்டார்கள். அவர்களுக்குத் தலைவனானான். இந்தப்பிரகாரமாக ஏறக்குறைய நானூறுபேர் அவனோடிருந்தார்கள்.

௩ தாவீது அவ்விடத்தைவிட்டு மோவாபியரைச் சேர்ந்த மிஸ்பேக்குப் போய், மோவாபின் இராசாவுடனே, பராபரன் என்னை எப்படி நடத்துவாரென்று நான் அறியுமட்டும் என் தகப்பனும் என் தாயும் உங்களிடத்திலே தங்கியிருக்கட்டுமென்று சொல்லி,

௪ அவர்களை மோவாபின் இராசாவுக்கு முன்பாக அழைத்துவந்துவிட்டான். தாவீது கோட்டையிலிருந்த நாளெல்லாம் அவர்கள் அங்கே அவனோடிருந்தார்கள்.

௫ ஆனால் காதென்கிற தீர்க்கதரிசி தாவீதுடனே, நீர் கோட்டையில் இராமல் யூதாதேசத்திற்குப் புறப்பட்டுவாருமென்றான். அப்போது தாவீது புறப்பட்டு ஏரேத்தென்கிற காட்டிலே வந்தான்.

சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொலைசெய்தது.

௬ தாவீதும் அவனோடிருக்கிற மனுஷரும் காணப்பட்ட செய்தியைச் சவுல் கேட்டான். சவுல் கிபெயாவைச் சேர்ந்த ராமாவில் ஒரு தோப்பிலே உட்கார்ந்து தன் ஈட்டியைத் தன் கையிலே பிடித்துக்கொண்டிருந்து, அவனுடைய ஊழியக்காரரெல்லாரும் அவனண்டையிலே நின்றிருக்கும்போது,

௭ சவுல் தன்னண்டையிலே நிற்கிற தன் ஊழியக்காரருக்குச் சொன்னது, பென்யமீனியரே! கேளுங்களேன்? ஈசாயின் மகன் உங்களெல்லாருக்கும் வயல்களையுந் திராட்சத்தோட்டங்களையுங் கொடுப்பானோ? உங்களெல்லாரையும் ஆயிரத்துக்குச் சேர்வைக்காரரும் நூற்றுக்குச் சேர்வைக்காரருமாக வைப்பானோ?

௮ என்னென்றால் நீங்களெல்லாரும் எனக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டீர்கள். என்னுடைய குமாரன் ஈசாயின் மகனுடனே உடன்படிக்கை பண்ணுகையில் என்னுடைய செவிக்கதை வெளிப்படுத்துகிறவன் ஒருவனுமில்லை. உங்களில் எனக்காகப் பரிதாபப்பட்டு என் செவிக்கதை வெளிப்படுத்துகிறவன் ஒருவனுமில்லை. ஏனெனில் இந்நாளிருக்கிறபடி என்னைச் சதிபண்ண என் குமாரன் என் வேலைக்காரனை எனக்கு விரோதமாக எடுத்துவிட்டானென்றான்.

௯ அப்போது சவுலின் ஊழியக்காரரோடே நிற்கிற ஏதோமியனாகிய தோவேக் பிரத்தியுத்தாரமாக, ஈசாயின் மகனை நோபிலிருக்கிற அகீத்தூபின் குமாரனாகிய அகிமெலேக்கண்டைக்கு வரக்கண்டேன்.

௰ இவன் அவனுக்காகக் கர்த்தரைக் கேட்டு அவனுக்கு வழிக்குப் போசனத்தைக் கொடுத்துப் பெலிஸ்தனாகிய கோலியாத்தின் பட்டயத்தையும் அவனுக்குக் கொடுத்தானென்றான்.

௰௧ அப்போது இராசா அகீத்தூபின் குமாரனாகிய அகிமெலேக்கென்ற ஆசாரியனையும் நோபிலிருக்கிற அவன் தகப்பன் வீட்டாராகிய எல்லா ஆசாரியரையும் அழைத்தனுப்பினான். அவர்களெல்லாரும் இராசாவண்டைக்கு வந்தார்கள்.

௰௨ அப்போது சவுல், அகீத்தூபின் குமாரனே! கேளென்றதற்கு இவன், இதோ, என் ஆண்டவனே! நானிங்கேயிருக்கிறேனென்றான்.

௰௩ அப்போது சவுல் அவனுடனே, நீயும் ஈசாயின் மகனும் எனக்கு விரோதமாய்க் கட்டுப்பண்ணி இந்நாளிருக்கிறபடி என்னைச் சதிபண்ண அவன் எனக்கு விரோதமாக எழும்படிக்கு நீ அவனுக்கு அப்பமும் பட்டயமுங் கொடுத்துப் பராபரனை அவனுக்காகக் கேட்டதென்னவென்றான்.

௰௪ அகிமெலேக் இராசாவுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது, உம்முடைய எல்லா ஊழியக்காரிலுந் தாவீதைப்போல உண்மையுள்ளவனும் இராசாவுக்கு மருமகனும் உம்முடைய கற்பனைகளின்படி செய்துவருகிறவனும் உம்முடைய வீட்டிலே கனமுள்ளவனுமாயிருக்கிறவனார்;

௰௫ இப்போதுமாத்திரம் அவனுக்காகப் பராபரனைக் கேட்கத்துவக்கினேனோ? அப்படியென்னைக் குறித்து நினைக்கவேண்டாம். இராசா தமதடியானாகிய என்மேலாகிலும் என் தகப்பன் வீட்டாரில் எவன்மேலாகிலும் குற்றஞ் சுமத்தவேண்டாம். ஏனெனில் உமதடியான் இவைகளிலெல்லாமொரு சின்னக் காரியமாகிலும் பெரிய காரியமாகிலும் அறிந்திருந்ததில்லையென்றான்.

௰௬ இராசா: அகிமெலேக்கே! நீயும் உன் தகப்பன் வீட்டாரனைவருஞ் சாகவே சாகவேண்டுமென்று சொல்லி,

௰௭ இராசா தன்னண்டையிலே நிற்கிற சேவகரோடே, நீங்கள் திரும்பிக்கொண்டு கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொலைசெய்யுங்கள். ஏனென்றால் அவர்களும் தாவீதோடேகூட இருக்கிறார்கள். அவனோடிப்போகிறதை யவர்கள் அறிந்திருந்தும் அதை யென் செவிக்கு வெளிப்படுத்தாதே போனார்களென்றான். ஆனால் இராசாவின் வேலைக்காரர் கர்த்தருடைய ஆசாரியர்மேல் விழத் தங்கள் கைகளை நீட்டமாட்டோமென்றார்கள்.

௰௮ அப்போது இராசா தோவேகுக்கு நீ திரும்பிக்கொண்டு ஆசாரியர்கள்மேல் விழுவென்றான். ஏதோமியனாகிய அந்தத் தோவேக் ஆசாரியர்கள் மேல் விழுந்து, ஆசாரியச் சால்வைகளைத் தரித்துக்கொள்ளுகிற எண்பத்தைந்துபேரை யன்றையத்தினங் கொன்றான்.

௰௯ ஆசாரியர்களின் பட்டணமாகிய நோபிலுமுள்ள புருஷரையும் ஸ்திரீகளையும் பிள்ளைகளையுங் குழந்தைகளையும் மாடுகளையுங் கழுதைகளையும் ஆடுகளையும் பட்டயக் கருக்கினாலே வெட்டிப்போட்டுவிட்டான்.

உ௰ ஆனால் அகித்தோபின் குமாரனாகிய அகிமெலேக்குக்கு அபியத்தாரென்று பேருள்ள ஒரு குமாரனவன் தப்பிக்கொண்டு தாவீதிருக்கும் புறமாகவோடிப்போய்,

உ௧ சவுல் கர்த்தருடைய ஆசாரியர்களைக் கொன்றுபோட்ட செய்தியைத் தாவீதுக்கறிவித்தான்,

உ௨ அப்போது தாவீது அபியத்தாருக்குச் சொன்னதாவது, ஏதோமியனாகிய தோவேக் அங்கேயிருந்தபடியினாலே அவன் சவுலுக்கதைத் தப்பாமல் அறிவிப்பானென்று அன்றையத்தினமே யறிந்தேன். உன் தகப்பன் வீட்டாராகிய எல்லா ஆத்துமாக்கள் மேலும் அழிவு வந்திருப்பதற்கு நானே காரணமானேன்;

உ௩ என்னண்டையிலேயிரு. பயப்படாயாக. என் பிராணனை வாங்கத்தேடுகிறவன் உன் பிராணனையும் வாங்கத்தேடுவான். ஏனென்றால் நீயென்னுடனேயிலே யிருப்பாயென்றான்.

உ௩. அதிகாரம்.

தாவீது இரண்டுதரஞ் சவுலின் கைக்குத் தப்பினது.

இதோ, பெலிஸ்தர் கேகிலாவின்மேல் யுத்தமட்டணிக்கைபண்ணிக் களஞ்சியங்களைக் கொள்ளையிடுகிறார்களென்று தாவீதுக்கறிவிக்கப்பட்டது.

உ அப்போது தாவீது, நான்போய் அந்தப் பெலிஸ்தரை முறியடிப்பேனோவென்று கர்த்தரைக் கேட்டதற்குக் கர்த்தர் தாவீதுடனே, நீ போ, பெலிஸ்தரை முறியடித்துக் கேகிலாவை யிரட்சிப்பாயென்றார்.

௩ ஆனால் தாவீதின் மனுஷர் அவனுடனே, இதோ, நாங்கள் இங்கே யூதாவிலிருக்கையிலே பயப்படுகிறோமே, நாங்கள் பெலிஸ்தருடைய இராணுவங்களிருக்கிற கேகிலாவுக்குப்போனால் எத்தனை யதிகமென்றார்கள்.

௪ அப்போது தாவீது திரும்பக் கர்த்தரைக் கேட்கிறபோது கர்த்தர் அவனுக்குப் பிரதியுத்தரமாக நீ எழும்பிக் கேகிலாவுக்கிறங்கிப்போ. ஏனெனில் நாம் பெலிஸ்தரை யுன்கையிலொப்புக்கொடுக்கிறோமென்றார்.

௫ அப்படியே தாவீது தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு கேகிலாவுக்குப்போய்ப் பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணி, அவர்கள் ஆடுமாடுகளை யோட்டிக்கொண்டு, அவர்களில் அநேகம்பேரை வெட்டிக் கேகிலாவின் குடிகளை யிரட்சித்தான்.

௬ அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் கேகிலாவிலிருக்கிற தாவீதண்டைக்கோடி வந்திறங்குகிறபோதே வேளையில் அவன் கையிலே ஆசாரியச்சால்வையுமிருந்தது.

௭ தாவீது கேகிலாவுக்கு வந்தானென்று சவுலுக்கறிவிக்கப்பட்டபோது பராபரன் அவனை யென்கையிலொப்புக்கொடுத்தார். ஏனென்றால் அவன் கதவுகளுந் தாழ்ப்பாள்களுமுள்ள பட்டணத்திற் பிரவேசித்ததினாலே அடைபட்டிருக்கிறானென்று சவுல் சொல்லி,

அ தாவீதையும் அவன் மனுஷரையும் முற்றிக்கைபோடும்படிக்குக் கேகிலாவுக்கு இறங்கிப்போக எல்லா சனத்தையும் யுத்தத்துக்கழைப்பித்தான்.

கூ தனக்குப் பொல்லாப்புச் செய்யச் சவுல் எத்தனம்பண்ணுகிறானென்று தாவீது அறிந்தபோது ஆசாரியனாகிய அபியத்தாருடனே, ஆசாரியச் சால்வையை இங்கே கொண்டுவாவென்று சொல்லி,

ய தாவீது சொன்னதாவது, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தாவே! சவுல் கேகிலாவுக்கு வந்து என்னிமித்தம் பட்டணத்தை அழிக்கவகை தேடுகிறானென்று உமதடியான் கேட்கவே கேட்டேன்;

யக கேகிலாப் பட்டணத்தார் என்னை அவன் கையிலொப்புக்கொடுப்பார்களோ; உமதடியான் கேட்டபடி சவுல் இறங்கிவருவானோ; இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தாவே! இதை உமதடியானுக்கறிவியுமென்றான். அதற்குக் கர்த்தர் இறங்குவானென்றார்.

யஉ கேகிலாப்பட்டணத்தார் என்னையும் என் மனுஷரையும் சவுலின் கையிலொப்புக்கொடுப்பார்களோவென்று தாவீது கேட்டதற்குக் கர்த்தர் ஒப்புக்கொடுப்பார்களென்றார்.

யங ஆகையால் தாவீதும் ஏறக்குறைய அறுநூறுபேராகிய அவன் மனுஷரும் எழும்பிக் கேகிலாவைவிட்டுப் புறப்பட்டுப் போகத்தக்க விடத்திற்குப் போனார்கள். தாவீது கேகிலாவிலிருந்து தப்பிப் போனானென்று சவுலுக்கறிவிக்கப்பட்ட போது தான் புறப்படுகிறதை நிறுத்திவிட்டான்.

யச தாவீதோவென்றால் வனாந்திரத்தின் அரண் ஸ்தலங்களிலே தங்கிச் சீப் வனாந்திரத்திலிருக்கிற ஒரு மலையிலே தரித்திருந்தான். சவுல் சகல நாளும் அவனைத் தேடியும் பராபரன் அவனை அவன் கையிலொப்புக்கொடுக்கவில்லை.

யரு தன் பிராணனை வாங்கத் தேடும்படிக்குச் சவுல் புறப்பட்டானென்று தாவீது கண்டபடியினாலே தாவீது சீப் வனாந்திரத்தில் ஒரு காட்டிலிருந்தான்.

யசா அப்போது சவுலின் குமாரனாகிய யோனத்தான் எழுந்து, காட்டிலிருக்கிற தாவீதினிடத்துக்குப் போய்ப் பராபரனுக்குள் அவன் கையைத் திடப்படுத்தி,

யஎ அவனுடனே, நீ பயப்படாயாக. ஏனென்றால் என் தகப்பனாகிய சவுலின் கை உன்னைக் கண்டுபிடிப்பதில்லை. நீ இஸ்ரவேலின் மேல் இராசாவாயிருப்பாய். அப்போது நானுனக்கு இரண்டாவதாயிருப்பேன். அப்படி நடக்குமென்று என் தகப்பனாகிய சவுலும் அறிந்திருக்கிறார்.

யஅ அவர்களிருவரும் கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கை பண்ணின பிற்பாடு தாவீது காட்டிலிருந்துவிட்டான். யோனத்தானோவெனில் தன் வீட்டிற்குப் புறப்பட்டுப்போனான்.

யகூ ஆனாற் சீப்பூரார் கிபியாவிலிருக்கிற சவுலண்டைக்கேறிவந்து சொன்னதாவது, தாவீது எங்களிடமாக எசிமோனுக்கு வலதுபுறமான அகிலாவென்ற மலைக்கட்டிலுள்ள அரணிப்பான இடங்களிலே ஒளித்துக்கொண்டிருக்கிறானல்லவோ

உய இப்போதும் இராசாவாகிய நீர் உம்முடைய மன ஆசையின்படியெல்லாம் இறங்கிவாரும். அவனை இராசாவின் கையிலொப்புக்கொடுக்க எங்களாலாகுமென்றார்கள்.

உக அப்போது சவுல் சொன்னதாவது, நீங்கள் என்மேல் விசாரமானதினாலே கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்களாக.

உஉ நீங்கள் போய், அவன் கால் நடமாடுகிற அவனுடைய ஸ்தலத்தையும், அங்கே அவனைக் கண்டவன் யாரென்கிறதையும், இன்னம் பத்திரமாய் விசாரித்தறிந்துகொண்டு பாருங்களேன்? ஏனெனில் அவன் மகா தந்திரமானவனென்று எனக்குச் சொல்லப்பட்டது.

உங அவன் ஒளித்துக்கொண்டிருக்கும் எல்லா மறைவிடங்களையும் பார்த்தறிந்துகொண்டு நிச்சயஞ்செய்துவாய் என்னண்டைக்குத் திரும்பிவாருங்கள். அப்போது நான் உங்களோடே கூடவந்து, அவன் தேசத்திற்குள்ளிருந்தால் யூதாவிலிருக்கிற எல்லாச் சேனைகளுக்குள்ளும் அவனைத் தேடிப்போவேனென்றான்.

உச அப்போது சீப்பூரார் எழுந்து, சவுலுக்கு முன்னுக்குப் புறப்பட்டுப்போனார்கள். ஆனால் தாவீதும் அவன் மனுஷரும் எசிமோனுக்கும் வலதுபுறமான அந்தர் வெளியாகிய மாகோன் வனாந்திரத்திலிருந்தார்கள்.

உரு என்னாற் சவுலும் அவன் மனுஷரும் தாவீதைத் தேடவருகிறார்களென்றவனுக்கறிவிக்கப்பட்டபோது அவன் கன்மலை ஓர்மாயிறங்கி, மாகோன் வனாந்திரத்திலே தங்கினான். அதைச் சவுல் கேட்டு, மாகோன் வனாந்திரத்திலே தாவீதுக்குப் பின்றொடர்ந்தான்.

௨௬ சவுல் பர்வதத்தின் இந்தப்பக்கத்திலும் தாவீதும் அவன் மனுஷரும் பர்வதத்தின் அந்தப்பக்கத்திலும் நடந்தார்கள். சவுலுக்குத் தப்பிப்போகத் தாவீது தீவரிக்கிறபோதோவெனில் சவுலும் அவன் மனுஷரும் தாவீதையும் அவன் மனுஷரையும் பிடிக்கத்தக்கதாக அவர்களை வளைந்துகொண்டார்கள்.

௨௭ ஆனால் ஒரு ஆள் சவுலண்டைக்கு வந்து, நீர் சீக்கிரமாய் வாரும். ஏனெனில் பெலிஸ்தர் தேசத்தின்மேல் வந்து விழுந்தார்களென்றான்.

௨௮ ஆகையால் சவுல் தாவீதைப் பின்தொடருகிறதை விட்டுத் திரும்பி பெலிஸ்தருக்கு எதிராகப் போனான். ஆனதுகொண்டு அவ்விடத்துக்குப் பிரிவுக்கன்மலையென்று பேரிட்டார்கள்.

௨௪. அதிகாரம்.

தாவீது தன்னைத் துன்பப்படுத்துகிற சவுலை நடத்தின மரியாதை.

௧ தாவீது அவ்விடத்தை விட்டேறிப்போய் என்கேதியிலுள்ள அரணிப்பான இடங்களிலே தங்கினான்.

௨ சவுல் பெலிஸ்தருக்குப் பின்தொடர்ந்து திரும்பிவந்தபோதோவெனில் இதோ, தாவீது என்கேதியின் வனாந்தரத்திலிருக்கிறானென்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.

௩ அப்பொழுது சவுல் இஸ்ரவேலனைத்திலும் தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம்பேரைக் கூட்டிக்கொண்டு தாவீதையும் அவன் மனுஷரையும் காட்டாடுகளுடைய கன்மலைகளின்மேலே தேடப்போனான்.

௪ வழியோரத்திலிருக்கிற ஆட்டுத்தொழுவங்களுக்கு அவன் வந்தபோது, அங்கே ஒரு கெபியிருந்தது. அதிலே சவுல் மலசலாதிக்கிருக்கப் பிரவேசித்தான். ஆனால் தாவீதும் அவன் மனுஷரும் அந்தக் கெபியின் பக்கங்களில் உளுக்கார்ந்திருந்தார்கள்.

௫ அப்பொழுது தாவீதின் மனுஷர் அவனுடனே, இதோ, நாம் உன் சத்துருவை யுன் கையிலொப்புக்கொடுப்போம். உன் பார்வைக்கு நலமானபடி யவனுக்குச் செய்வாயாகவென்று கர்த்தர் உன்னோடே சொன்னநாள் இதுதானேயென்றார்கள். தாவீது எழுந்திருந்து போய்ச் சவுலுக்கிருந்த சால்வையின் தொங்கலை மெள்ள அறுத்துக்கொண்டான்.

௬ ஆனால் அவன் சவுலுடைய சால்வைத்தொங்கலை யறுத்துக்கொண்டபிற்பாடு தாவீதை அவனமனது அதிரிக்கத் தமாக அடித்துக்கொண்டு,

௭ அவன் தன் மனுஷரோடே, கர்த்தர் அபிஷேகம் பண்ணிவித்த என்னுடைய ஆண்டவன்மேல் என் கையைப் போடும் இப்படிக்கொத்த வேலையை நான் செய்யாதபடிக்குக் கர்த்தர் என்னைக் காப்பாராக. ஏனெனில் அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணுவிக்கப்பட்டவனென்று சொல்லி,

௮ தன் மனுஷரைச் சவுலின்மேல் எழும்பவொட்டாமல், வார்த்தைகளினாலே அவர்களைத் தடைபண்ணினான். சவுல் எழுந்திருந்து கெபியை விட்டு வழியே நடந்துபோனபோதோவெனில்,

௯ தாவீதும் அதற்குப் பிறகு எழுந்து கெபியிலிருந்து புறப்பட்டுச் சவுலுக்குப் பிறகாலிருந்து, என் ராசாவாகிய என் ஆண்டவனே! என்று கூப்பிட்டான். சவுல் திரும்பிப்பார்க்கிறபோது தாவீது தரைமட்டும் முகங்குனிந்து வணங்கி,

௰ சவுலோடே சொன்னதாவது, இதோ, தாவீது உமக்குப் பொல்லாப்புச் செய்யப்பார்க்கிறானென்று சொல்லுகிற மனுஷருடைய வார்த்தைகளை ஏன் கேட்கிறீர்?

௰௧ இதோ, கர்த்தர் இன்று கெபியிலே உம்மை என் கையிலொப்புக்கொடுத்தார் என்பதை யின்றையத்தினம் உம்முடைய கண்கள் கண்டது. உம்மைக் கொன்றுபோட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் என் கை உம்மைத் தப்பவிட்டது. என் கையை என்னுடைய ஆண்டவன்மேலே போடேன் ஏனெனில் அவர் கர்த்தரால் அபிஷேகம்பண்ணுவிக்கப்பட்டவரென்றேன்.

௰௨ என் தகப்பனே! பாரும். என் கையிலிருக்கிற உம்முடைய சால்வையின் தொங்கலையே பாரும். ஏனெனில் உம்மைக் கொன்றுபோடாமல் உம்முடைய சால்வையின் தொங்கலை யறுத்துக்கொண்டேன். என் கையிலே பொல்லாப்பும் துரோகமுமில்லையென்றும் உமக்கு நான் குற்றஞ்செய்ததில்லையென்றும், அறிந்து பாரும். நீரோவென்றால் என் பிராணனை வாங்கத் தேடுகிறீர்.

௰௩ கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுவாக நியாயம் விசாரித்துக் கர்த்தர்தாமே உம்முடைய கையில் என் பழியை வாங்குவாராக. என்னுடைய கை உமக்கு விரோதமாயிருப்பதில்லை.

௰௪ பழமொழியாய்ச் சொல்லுகிறபடியே ஆகாதவர்களிடத்திலே ஆகாமியம் பிறக்கும். என் கையோவெனில் உமக்கு விரோதமாயிருப்பதில்லை.

யச இஸ்ரவேலின் இராசாவாகிய நீர் யாரைத் தேடப் புறப்பட்டீர்? நீர் ஆரைப் பின்தொடருகிறீர்? ஒரு செத்த நாயையும் ஒரு தெள்ளுப்பூச்சியையுமல்லவோ?

யரு கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து என் வழக்கைப் பார்த்து வழக்காடி, நான் உம்முடைய கைக்குத் தப்ப என்னை நியாயஞ் செய்வாராக என்றான்.

யசா தாவீது இந்த வார்த்தைகளைச் சவுலோடே சொல்லித் தீர்ந்தபிறபாடு, சவுல் என் குமாரனாகிய தாவீதே! இது உன்னுடைய சத்தமல்லவோ என்று சொல்லிச் சத்தமிட்டழுது,

யஎ தாவீதோடே சொன்னதாவது, நீ என்னைப் பார்க்கிலும் நீதிமான். ஏனென்றால் நீ எனக்கு நன்மை செய்தாய். நானோவென்றால் உனக்குத் தீமையைச் சரிக்கட்டினேன்.

யஅ நீ எனக்கு நன்மை செய்ததை இன்று விளங்கப்பண்ணினாய். கர்த்தர் என்னை உன் கையிலே ஒப்புக்கொடுத்திருந்தும் நீ என்னைக் கொன்றுபோடாதே போனாய்.

யகூ ஏனென்றால் யாதொருவன் தன் சத்துருவைக் கண்டுபிடித்து அவனை நல்லவழியிலே போகவிடுவானோ? இன்று நீ எனக்குச் செய்ததற்குக் கர்த்தர் உனக்குப் பதில் நன்மையைச் சரிக்கட்டுவாராக.

உய இப்போதும் இதோ, நீ இராசாவாகவே ஆவாயென்றும், இஸ்ரவேலின் இராச்சியபாரம் உன் கையிலே நிலைவரப்படுமென்றும், அறிவேன்.

உயக இப்போதும் நீ எனக்குப் பின்னிருக்கும் என் சந்ததியை வேரறுக்காமலும் என் தகப்பன் வீட்டாரில் என் பேரை அழித்துப்போடாமலுமிருப்பேனென்று கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிடுவென்றான்.

உயஉ அப்போது தாவீது சவுலுக்கு ஆணையிட்டான். பிறபாடு சவுல் தன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனான். ஆனால் தாவீதும் அவன் மனுஷரும் அரணிப்பான இடத்துக்கு ஏறிப்போனார்கள்.

உரு. அதிகாரம்.

சாமுவேலுடைய மரணமும் நாபால் தாவீதை அவமரியாதையாய் நடத்தினதினால் அடைந்த தேவ ஆக்கினையும் தாவீது பண்ணின இரண்டு விவாகமும்.

சாமுவேல் மரணமடைந்தான். இஸ்ரவேலெல்லாரும் கூடிவந்து, அவனுக்காகத் துக்கங்கொண்டாடி, ராமாவிலிருக்கிற அவனுடைய வீட்டிலே அவனை அடக்கம்பண்ணினார்கள். தாவீதோவென்றால் எழுந்து, பாரான் வனாந்தரத்துக்குப் போனான்.

உ ஆனால் மாகோனிலே ஒரு மனுஷனிருந்தான். அவனுடைய தொழில் துறை கர்மேலிலிருந்தது. அந்த மனுஷன் மகா பலத்தவனாயிருந்தான். அவனுக்கு மூவாயிரம் ஆடும் ஆயிரம் வெள்ளாடுமுண்டாயிருந்தது. அவன் அப்போது கர்மேலிலே தன் ஆடுகளை மயிர்க்கத்திரித்தான்.

ங அந்த மனுஷனுக்கு நாபாலென்றும், அவன் பெண்சாதிக்கு அபிகாயிலென்றும் பேரிருந்தது. அந்த ஸ்திரீ மகா புத்தியுள்ளவளும் சவுந்தரிய ரூபமுள்ளவளுமாயிருந்தாள். அந்தப் புருஷனோவென்றால் கடினகுணமுந் துர்க்கிரியைக்காரனுமாயிருந்தான். அவன் காலேபுடைய சந்ததியாயிருந்தான்.

ச நாபால் தன் ஆடுகளை மயிர்க்கத்திரிக்கிற செய்தியை வனாந்தரத்திலிருக்கிற தாவீது கேட்டபோது,

ரு தாவீது பத்து வாலிபரை யனுப்பி, அவர்களோடே சொன்னது, நீங்கள் கர்மேலுக்கு ஏறிப்போய், நாபாலண்டையிலே சேர்ந்தபோது, என் நாமத்திலே அவனுக்கு செய்தியைக் கேட்டு,

சா சொல்லவேண்டியதேதென்றால், நீர் வாழ்வீராக. உமக்குச் சமாதானமும் உம்முடைய வீட்டுக்குச் சமாதானமும் உமக்குண்டான எல்லாவற்றிற்குஞ் சமாதானமுண்டாகக்கடவது.

எ இப்போது ஆடுகளை மயிர்க்கத்திரிக்கிறவர்கள் உம்மிடத்திலிருக்கிறார்களென்று கேட்டிருக்கிறேன். இப்போதும் உமக்கிருக்கிற மேய்ப்பர் எங்களோடே கூடவிருந்தார்கள். அவர்கள் கர்மேலிலிருந்த நாளெல்லாம் நாங்கள் அவர்களை அவமானப்படுத்தினதுமில்லை அவர்களுக்கு ஒன்றுங் காணாமற்போனதுமில்லை.

அ உம்முடைய வேலைக்காரரைக் கேளும். அவர்களும் உமக்குச் சொல்லுவார்கள். இப்போதும் இந்த வாலிபருக்கு உம்முடைய கண்களிலே தயவு கிடைக்கக்கடவது. ஏனென்றால் நல்ல நாளிலே வந்தோம். உம்முடைய கையில் அகப்படுகிறதை உம்முடைய அடியார்களுக்கும் உம்முடைய குமாரனாகிய தாவீதுக்குங் கொடுமென்று சொல்லுங்களென்றான்.

கூ தாவீதின் வாலிபர் வந்து இந்த வார்த்தைகளையெல்லாம் தாவீதின் நாமத்தினாலே நாபாலோடே பேசின பின்பு சும்மாயிருந்தார்கள்.

௰ அதற்கு நாபால் தாவீதின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது, தாவீதென்கிறவன் யார்? ஈசாயின் குமாரன் யார்? தங்கள் தங்கள் எசமான்களைவிட்டுப் பிரிந்து போகிற வேலைக்காரர் இந்நாளில் அநேகருண்டு.

௰௧ நான் என் அப்பத்தையும் என் தண்ணீரையும் என் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களுக்காக நான் அடித்துச் சமையல்பண்ணுவித்ததையும் எடுத்துக்கொண்டு, எவ்விடத்தாரென்று நான் அறியாத மனுஷருக்குக் கொடுப்பேனோவென்றான்.

௰௨ தாவீதின் வாலிபர் தங்கள் வழிக்குத் திரும்பிக்கொண்டு மறுபடியும் தாவீதினிடத்துக்கு வந்து இந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்கு அறிவித்தார்கள்.

௰௩ அப்போது தாவீது தன் மனுஷருக்கு, நீங்கள் அவரவர் உங்கள் பட்டயத்தைக் கட்டிக்கொள்ளுங்களென்றான். அவரவர் தங்கள் பட்டயத்தைக் கட்டிக்கொண்டார்கள். தாவீதும் தன் பட்டயத்தைக் கட்டிக்கொண்டான். ஏறக்குறைய நானூறுபேர் தாவீதுக்குப் பின்சென்று ஏறிப்போனார்கள். இருநூறுபேர் இரஸ்தண்டையிலிருந்துவிட்டார்கள்.

௰௪ ஆனால் வேலைக்காரரிலே ஒருவன் நாபாலுடைய பெண்சாதியாகிய அபிகாயிலுக்கு அறிவித்துச் சொன்னதாவது, இதோ, எங்கள் எசமானை வினவிக்கொள்ள தாவீது வனாந்திரத்திலிருந்து ஆள்களையனுப்பினான். அவர்களையவர் சீறினார்.

௰௫ அந்த மனுஷரோவென்றால் எங்களுக்கு மெத்த நல்லவர்களாயிருந்தார்கள். நாங்கள் வெளியிலிருக்கக்கொள்ள அவர்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை அவமானப்படுத்தினதுமில்லை. எங்களுக்கொன்றுங் காணாமற்போனதுமில்லை.

௰௬ நாங்கள் ஆடுகளைமேய்த்து அவர்களிடத்திலிருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும்பகலும் எங்களைச்சுற்றி மதிலாயிருந்தார்கள்.

௰௭ இப்போதும் நீர் செய்யவேண்டியதைக் கவனித்துப்பாரும். ஏனென்றால் எங்கள் எசமான்மேலும் அவருடைய எல்லா வீட்டாரின்மேலும் நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கின்றது. இவரோவென்றால் ஒருவரும் அவரோடே பேசக்கூடாதபடிக்குப் பேலியாளின் மனுஷனாயிருக்கிறனென்றான்.

௰௮ அப்போது அபிகாயில் தீவிரமாய் இருநூறு அப்பங்களையும் இரண்டு துருத்தி திராட்சரசத்தையும் சமையற்பண்ணப்பட்ட ஐந்து ஆடுகளையும் ஐந்துபடி வறுத்த பயற்றையும் வற்றலாக்கப்பட்ட நூறு திராட்சப்பழக்குலைகளையும் வற்றலான இருநூறு அத்திப்பழ அடைகளையும் எடுத்துக்கொண்டு கழுதைகளின்மேலேற்றி,

௰௯ தன் வேலைக்காரரோடே, நீங்கள் எனக்கு முன்னே போங்கள். இதோ, நான் உங்கள் பின்னாலே வருகிறேனென்று சொல்லித் தன் புருஷனாகிய நாபாலுக்கதை அறிவிக்காமற்போனாள்.

௨௰ அவள் ஒரு கழுதையின்மேலேறிப்போய் மலையின் மறைவிலிறங்கிவருகிறபோது, இதோ, தாவீதும் அவன் மனுஷரும் அவளுக்கெதிராக இறங்கிவந்தார்கள். அவள் அவர்களைச் சந்தித்தாள்.

௨௧ தாவீதோவென்றால் சொல்லியிருந்தது. இவனுக்கு வனாந்திரத்திலிருக்கிறதையெல்லாம் வீணாகவே காப்பாற்றினேன். அவனுக்குண்டானதிலெல்லாமொன்றுங் காணாமற்போனதில்லை. என்றாலும் எனக்கு நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டினான்.

௨௨ அவனுக்குண்டானதெல்லாவற்றிலும் பொழுதுவிடியுமட்டும் நான் சுவரில் நீர்விடுகிற ஒருநாயையும் உயிரோடே வைத்தாற் பராபரன் தாவீதின் சத்துருக்களுக்கு இப்படியும் அப்படியுஞ் செய்யக்கடவரென்று சொல்லியிருந்தான்.

௨௩ அபிகாயில் தாவீதைக் கண்கையில் தீவிரமாய்க் கழுதையைவிட்டிறங்கித் தாவீதுக்கு நேராக முகங்குப்புறத் தரையிலவிழுந்து பணிந்து,

௨௪ அவன் பாதத்திலே விழுந்து சொன்னதாவது, ஆ என் ஆண்டவனே! இந்தப் பாதகம் என்மேலே சுமரட்டும். உமதடியாளுடைய வார்த்தைகளை நீர் கேட்கும் பொருட்டாக உமதடியாள் உமது செவியிலேபட்டப் பேசட்டும்.

௨௫ என் ஆண்டவனாகிய நீர் நாபாலென்கிற இந்தப் பேலியாளின் மனுஷனுக்கு விரோதமாக உம்முடைய இருதயத்தைத் திருப்பீராக. ஏனென்றால் அவன் நாமம் எப்படியோ அப்படியேயவனிருக்கிறான். அவன் நாமம் பயித்தியக்காரனென்பது. பயித்தியமும் அவனோடிருக்கின்றது. உமதடியாளாகிய நானோவென்றால், என் ஆண்டவன் அனுப்பின வாலிபரைக் கண்டதில்லை.

௨௬ இப்போதும் என் ஆண்டவனே! நீர் இரத்தஞ் சிந்தவரவும் உம்முடைய கையே உம்மையிரட்சிக்கவுங் கர்த்தர் உ

மட்டுங்கொடுக்கவில்லையென்றதைக் கர்த்தருடைய சீவனைக்கொண்டும் உம்முடைய சீவனைக்கொண்டுஞ் சொல்லுகிறேன். இப்போதும் உம்முடைய சத்துருக்களும் என்னாண்டவனுக்கு விரோதமாகப் பொல்லாப்புத்தேடுகிறவர்களும் நாபாலைப் போலாகக்கடவர்கள்.

௨௭ இப்போதும் என்னாண்டவனுடைய பாதங்களில் நடந்துவருகிற வாலிபருக்குக் கொடுக்கப்படும்படிக்கு உம்முடைய பணிவிடைக்காரி என் ஆண்டவனுக்குக் கொண்டுவந்த காணிக்கையிதுதானே.

௨௮ உம்முடைய அடியாளின் பாதகத்தை மன்னியும்! ஏனெனில் கர்த்தர் என்னாண்டவனுக்கு நிலைநிற்கிற வீட்டைக் கட்டுவார். ஏனென்றால் என்னாண்டவன் கர்த்தருடைய யுத்தங்களை நடத்துகிறவர். நீர் உயிரோடேயிருக்கிற நாளில் ஒருபொல்லாப்பும் உம்மிலே காணப்படாதிருப்பதாக.

௨௯ அப்படியே உம்மைத் துன்பப்படுத்தவும் உம்முடைய பிராணனை வாங்கவுந் தேடும்படியாய் ஒருமனுஷன் எழும்பினால், என்னாண்டவனுடைய ஆத்துமம் உம்முடைய பராபரனாகிய கர்த்தரின் ஆதரவிலுள்ள சீவனுள்ளோருடைய கட்டிலே கட்டப்பட்டிருக்கும். ஆனாலும் உம்முடைய சத்துருக்களின் ஆத்துமங்கவணிலே வைக்கப்பட்டெறியப்படும்.

௩௦ கர்த்தர் உம்மைக்குறித்துச் சொன்ன நன்மைப்படியெல்லாம் இனியென்னாண்டவனுக்குச் செய்து, இஸ்ரவேலின் தலைவராயிருக்கவும் உமக்குக் கற்பிக்கக்கொள்ள

௩௧ நீர் விருதாவாய் இரத்தஞ்சிந்தாமலும் என்னாண்டவராகிய நீர் உமக்குத் தானே பழிவாங்காமலுமிருந்ததினால், அப்போது என்னாண்டவருக்கு அது இடறலாகத் தடுக்கலுமில்லை மனதிலிடறுதலுமில்லை. கர்த்தர் என்னாண்டவனுக்கு நன்மைசெய்யும்போது உமதடியாளை நினைப்பீரென்றாள்.

௩௨ அப்போது தாவீது அபிகாயிலுக்குச் சொன்னதாவது, உன்னையின்றைய தினம் என்னைச் சந்திக்க அனுப்பின இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

௩௩ உன் புத்தியுள்ளவார்த்தையாசீர்வதிக்கப்பட்டிருக்கக்கடவது. நான் இரத்தஞ்சிந்தவாராதபடிக்கும் என்கையேயெனக்குப் பழிச்செய்யாதபடிக்கும் நீ யின்றைத்தினம் என்னைத் தடைபண்ணினபடியினாலே நீயாசீர்வதிக்கப்பட்டவள்.

௩௪ ஏனெனில் நீ தீவிரமாய் என்னைச் சந்திக்க வராதிருந்தாயானால் பொழுது விடியுமட்டும் நாபாலுக்கு ஒருநாயுமிராதே போகுமென்று உனக்குப் பொல்லாப்புச்செய்யாமல் என்னைத் தடுத்திருக்கிற இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின் சீவனைக்கொண்டு மெய்யாய்ச் சொல்லுகிறேனென்று சொல்லி,

௩௫ அவள் தனக்குக் கொண்டுவந்ததைத் தாவீது அவள் கையிலே வாங்கி அவளுடனே, நீ சமாதானத்தோடே உன் வீட்டுக்குப் போ. இதோ, நான் உன் சொற்கேட்டு உன் முகத்தைப் பார்த்தேனென்றான்.

௩௬ அபிகாயில் நாபாலண்டைக்கு வந்தபோது இதோ, ராசாவின் விருந்துக்கொத்த விருந்து அவன் வீட்டிலே நடந்துகொண்டிருந்தது. அவனிருதயம் சந்தோஷமாயிருந்தது. அவன் மிகவும் வெறித்திருந்தான். ஆகையால் பொழுது விடியுமட்டும் அவனுக்கு சிறிய பெரிய காரியங்களொன்றும் அறிவிக்காதிருந்தாள்.

௩௭ பொழுது விடிந்து நாபாலின் வெறி தெளிந்தபின் அவன் பெண்சாதி இந்த வர்த்தமானங்களை அவனுக்கறிவித்தாள். அப்போது அவன் இருதயம் அவனுக்குள் செத்துப்போய், அவன் கல்லைப்போலானான்.

௩௮ ஏறக்குறைய பத்து நாளுக்குப்பிற்பாடென்று கர்த்தர் நாபாலையடித்ததினாலே அவன் செத்தான்.

௩௯ நாபால் செத்துப்போனதைத் தாவீது கேட்டபோது, அவன் என்னிந்தையின் வழக்கை நாபாலின் கையிலே விசாரித்துத் தம்முடைய அடியானைப் பொல்லாப்புச் செய்யாதபடிக்குத் தடுத்திருக்கிற கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஏனெனில் கர்த்தர்தானே நாபாலின் பொல்லாப்பை அவன் தலையின்மேலே திரும்பப்பண்ணினாரென்று சொல்லி, அபிகாயிலை விவாகம்பண்ணுகிறதற்காக அவளோடே பேசத் தாவீது ஆட்களையனுப்பினான்.

௪௦ தாவீதின் ஊழியக்காரர் கர்மேலிலிருக்கிற அபிகாயிலண்டைக்கு வந்து, தாவீது உன்னை விவாகம்பண்ண மனதாய் எங்களை உன்னண்டைக்கு அனுப்பினாரென்று அவளோடே சொல்லும்போது,

௪௧ அவள் எழுந்திருந்து தரைமட்டும் முகங்குனிந்து, இதோ, நான் என்னாண்டவனுடைய ஊழியக்காரரின் கால்களைக்

மூவதற்குப் பணிவிடைக்காரியாகிய அவருடைய அடியாளென்றாள்.

௪௨ பிற்பாடு அபிகாயில் தீவிரித்துக் கொண்டு எழுந்து, ஒரு கழுதையின்மேலேறித் தன் பிறகாலே நடக்கிற தன் ஐந்து வேலைக்காரிகளைக் கூட்டிக்கொண்டு தாவீதின் தூதுபதிகளைப் பின்சென்று போய், அவனுக்குப் பெண்சாதியானாள்.

௪௩ இஸ்ரேயேல் ஊராளாகிய அகினோகாமையுந் தாவீது விவாகம்பண்ணினான். அவர்களிருவரும் அவனுக்குப் பெண்சாதிகளானார்கள்.

௪௪ ஏனென்றால் சவுல் தாவீதின் பெண்சாதியான மீகாளென்ற தன் குமாரத்தியைக் காலீமூராகிய லாயீசின் குமாரனான பல்த்திக்குக் கொடுத்திருந்தான்.

௨௬. அதிகாரம்.

தாவீது சவுலுக்குத் திரும்பக் காண்பித்த மரியாதை.

சீப்பூரார் கிபெயாவிலிருக்கிற சவுலண்டைக்கு வந்து, தாவீது எசிமோனுக்கெதிரான ஆகிலாமேட்டில் ஒளிந்துகொண்டிருக்கவில்லையோ வென்றார்கள்.

௨ அப்போது சவுல் சீப்வனாந்திரத்திலே தாவீதைத் தேட எழுந்து இஸ்ரேவிலே தெரிந்துகொள்ளப்பட்ட மூவாயிரம் பேரோடுங் கூடச் சீப் வனாந்திரத்திற் கிறங்கிப்போனான்.

௩ சவுல் எசிமோனுக்கெதிரே வழியண்டையிலிருக்கிற ஆகிலாமேட்டிலே பாளயமிறங்கினான். தாவீதோவெனில், சவுல் தன்னைத் தொடர்ந்து வனாந்திரத்திற்கு வந்ததைக் கண்டு வனாந்திரத்தி லிருந்துவிட்டான்.

௪ ஏனென்றால் தாவீது வேவாள்களையனுப்பிச் சவுல் வந்தது நிச்சயமென்றறிந்துகொண்டிருந்தான்.

௫ பிற்பாடு தாவீது எழுந்துபோய்ச் சவுல் பாளயமிறங்கின இடத்திற்கு வந்து, சவுலும் நேரின் குமாரனாகிய அப்னேரென்ற அவன் படைத்தலைவனும் படுத்துக்கொண்டிருக்கிற ஸ்தலத்தைப் பார்த்தான். சவுல் இரதங்களிருக்கிற இடத்திற்குள்ளே படுத்துக்கொண்டிருந்தான். ஜனம் அவனைச் சுற்றிலும் பாளயமிறங்கியிருந்தது.

௬ தாவீது ஏத்தியனாகிய அகிமேலேக்கையுஞ் செருயாவின் குமாரனும் யோவாவின் சகோதரனுமாகிய அபிசாயையும் பார்த்து என்னோடே கூடச் சவுலண்டைக்குப் பாளயத்திலிறங்கி வருபவனார் என்றதற்கு, அபிசாய், நானும் மோடே கூடஇறங்கி வருவேனென்றான்.

௭ அப்படியே தாவீதும் அபிசாயும் இராத்திரியிலே அந்த ஜனத்தண்டையில் வந்தார்கள். இதோ, சவுல் இரதங்களிருக்கிற இடத்திற்குள்ளே படுத்துக்கொண்டு நித்திரைபண்ணினான். அவன் தலைமாட்டிலே அவனுடைய ஈட்டி நிலத்திலே குத்தியிருந்தது. அவனைச் சுற்றிலும் அப்னேரும் ஜனமும் படுத்துக்கொண்டிருந்தார்கள்.

௮ அப்போது அபிசாய் தாவீதுடனே, இன்று பராபரன் உம்முடைய சத்துருவையும் முடையகையில் ஒப்புக்கொடுத்தார். இப்போதும் நான் அவனை ஈட்டியினால் இரண்டுதரந்தாக்க குத்தமல் ஒரே குத்தாய் நிலத்தோடு உருவக் குத்தட்டுமே யென்றான்.

௯ ஆனால் தாவீது அபிசாயுடனே, அவனைக் கெடுக்காதே. ஏனெனில் கர்த்தர் அபிஷேகம்பண்ணிவித்தவன் மேலே தன் கையைப்போட்டுக் குற்றமில்லாமற் போகும்வனார் என்றுசொன்னான்.

௰ பின்னையுந் தாவீது சொன்னதாவது, கர்த்தர் அவனையடித்து, அல்லவென்று அவனுடைய காலம் வந்து அவன் மரித்து, அல்லவென்று அவன் யுத்தத்திற்குப் போய் மாண்டாலொழிய,

௰௧ நான் என் கையைக் கர்த்தர் அபிஷேகம்பண்ணிவித்தவன் மேலே போடாதபடிக்குக் கர்த்தர் என்னைக் காக்கக்கடவரென்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். இப்போதும் அவன் தலைமாட்டிலிருக்கிற ஈட்டியையுந் தண்ணீர்ச் செம்பையும் நீ எடுத்துக்கொள். நாம் போவோமென்றான்.

௰௨ தாவீது சவுலின் தலைமாட்டிலிருந்த ஈட்டியையுந் தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக்கொண்ட பிற்பாடு புறப்பட்டுப்போனார்கள். அதை ஒருவருங் காணவுமில்லை அறிந்ததுமில்லை ஒருவரும் விழித்துக்கொண்டதுமில்லை. ஏனென்றால் கர்த்தராலே கனநித்திரை அவர்கள் மேல் விழுந்திருந்ததினால் அவர்களெல்லாரும் தூங்கினார்கள்.

௰௩ தாவீது கடந்து அந்தப் பக்கத்திற்குப் போன பிற்பாடு, தங்களுக்கும் அவர்களுக்கும் நடுவே போதந் இடமுண்டாகத் தூரத்திலிருக்கிற மலையின் கொடுமுடியிலே நின்றுகொண்டு,

௧௪ சனத்திற்கும் நேரின் குமாரனாகிய அப்னேருக்கும் நேராகக் கூப்பிட்டுச் சொன்னது, அப்னேரே! நீர் மறுமொழி சொல்லுகிறதில்லையோ என்றான். அப்னேர் பிரதியுத்தரமாக இராசாவுக்கு நேராகக் கூக்குரலிடுகிற நீ ஆர் என்றான்.

௧௫ அப்போது தாவீது அப்னேருக்குச் சொன்னதாவது, நீர் புருஷனல்லவோ? இஸ்ரவேலில் உமக்குச் சரியானவன் ஆர்? பின்னையும் நீர் உம்முடைய ஆண்டவனாகிய இராசாவைக் காக்காமற் போனதென்ன? அதேதென்றால் சனத்திலொருவன் உம்முடைய ஆண்டவனாகிய இராசாவைக் கெடுக்கத்தக்கதாக வந்திருந்தானே.

௧௬ நீர் செய்த இந்தக் காரியம் நல்லதல்ல. கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்த உங்கள் ஆண்டவனை நீங்கள் காக்காமற் போனபடியினாலே நீங்கள் மரணத்திற்குப் பாத்திரவான்கள். இப்போதும் இராசாவின் தலைமாட்டிலிருந்த அவருடைய ஈட்டியும் தண்ணீர்ச்செம்பும் எங்கேயென்று பாரும் என்றான்.

௧௭ அப்போது சவுல் தாவீதின் சத்தத்தை அறிந்து, என் குமாரனாகிய தாவீதே! இது உன் சத்தமல்லவோ என்றதற்குத் தாவீது, இராசாவாகிய என்னுடைய ஆண்டவனே! இது என் சத்தந்தான் என்று சொல்லி,

௧௮ பின்னும் சொன்னதாவது, என் ஆண்டவனாகிய நீர் உமது அடியானை இப்படித் துரத்துகிறதென்ன? நான் என்ன செய்தேன்? என் கையில் என்ன பொல்லாப்பிருக்கிறது.

௧௯ இப்போதும் இராசாவாகிய என் ஆண்டவன் தமது அடியானுடைய வார்த்தைகளைக் கேட்பாராக. கர்த்தர் உம்மை எனக்கு விரோதமாக ஏவிவிட்டாரானால், காணிக்கை செலுத்துதல் வாசனையாயிருப்பதாக; மனுபுத்திரர் அதைச் செய்தார்களேயானால், அவர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சபிக்கப்பட்டவர்கள். ஏனென்றால் நீ போய், வேறே தேவர்களைச் சேவியென்று சொல்லி, அவர்கள் இன்று என்னைக் கர்த்தருடைய சுதந்தரத்திற்கடுத்தவனாயிராதபடிக்குத் துரத்திவிட்டார்கள்.

௨௰ இப்போதும் கர்த்தருடைய முகத்திற்கு முன்பாக என் இரத்தம் தரையில் விழாதிருப்பதாக. ஏனெனில் மலைகளில் ஒரு கௌதாரியைத் துரத்துகிறது போலே இஸ்ரவேலின் இராசா ஒரு தெள்ளுப்பூச்சியைத் தேடப் புறப்பட்டாரே என்றான்.

௨௧ அப்போது சவுல், நான் பாவஞ்செய்தேன். என் குமாரனாகிய தாவீதே! திரும்பிவா. ஏனெனில் என் சீவன் இன்றையத்தினம் உன் பார்வைக்கு அருமையாயிருந்தபடியால் இனி உனக்கு ஒரு பொல்லாப்புஞ்செய்யேன். இதோ, நான் மதியீனமாய் நடந்து மகா பெரிய தப்பிதஞ்செய்தேனென்றான்.

௨௨ தாவீது பிரதியுத்தரமாகச் சொன்னதாவது, இதோ, இராசாவின் ஈட்டி இங்கேயிருக்கிறது. வாலிபரிலொருவன் இப்புறம் வந்து அதை வாங்கிக்கொண்டுபோகக்கடவன்.

௨௩ ஆனாற் கர்த்தர் அவனவனுக்கு அவனவனுடைய நீதிக்கும் அவன் உண்மைக்கும் தக்கதாய்ப் பலனளிப்பாராக. ஏனெனில் இன்று கர்த்தர் உம்மை என்னுடைய கையிலொப்புக்கொடுத்திருந்தும், கர்த்தர் அபிஷேகம்பண்ணுவித்தவர்மேல் என் கையை நீட்டமனதில்லாதிருந்தேன்.

௨௪ இதோ, உம்முடைய சீவன் இன்றையத்தினம் என் பார்வைக்கு எப்படிப் பெரியதாயிருந்ததோ, அப்படி என் சீவன் கர்த்தரின் பார்வைக்குப் பெரியதாயிருப்பதினால் அவர் என்னை எல்லா உபத்திரவத்திற்கும் நீங்கலாக்கி விடுவாராகவென்றான்.

௨௫ அப்போது சவுல் தாவீதுடனே, என் குமாரனாகிய தாவீதே! நீ ஆசீர்வதிக்கப்பட்டவன். நீ செய்யவுஞ்செய்வாய், பலக்கவும் பலப்பாயென்றான். அப்படியே தாவீது தன் வழியே போனான். சவுலும் தன் தானத்திற்குத் திரும்பினான்.

௨௭. அதிகாரம்.

தாவீது சிக்லாகிலே போய்க் குடியிருந்து நடந்துகொண்டிருந்தவயனம்.

தாவீதோவென்றால் எந்தநாளிலாகிலும் நான் இனிச் சவுலின் கையில் மடிந்துபோவேன். இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளிலெல்லாம் என்னைத் தேடிப்பிடிக்கும் நம்பிக்கையைவிடும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய்த் தப்புவித்துக்கொள்ளுவதைப் பார்க்கிலும் நன்மையான காரியம் எனக்கில்லையென்று தன்னிருதயத்தில் யோசித்தான்.

௨ ஆகையால் தாவீது தன்னோடிருந்த அறுநூறுபேரோடுங்கூட எழுந்திருந்து, மாயோகின் குமாரனாகிய ஆகீசு என்னும் காத்தின் இராசாவண்டைக்குக் கடந்துபோனான்.

௩ அங்கே தாவீதும் அவன் மனுஷரும் அவரவர் வீட்டாரோடேகூட அவன் இரண்டு பெண்சாதிகளாகிய இஸ்ரேயேல் ஊராளாகிய அகினோவாமும் நாபாலின் பெண்சாதியாயிருந்த கற்மேலூராளாகிய அபிகாயிலுமாய்க் காத்பட்டணத்திலே ஆகீசண்டையிலே தங்கியிருந்தார்கள்.

௪ தாவீது காத்பட்டணத்திற்கோடிப்போனானென்று சவுலுக்கு அறிவிக்கப்பட்டபோது அப்புறம் அவனைத் தேடாதிருந்தான்.

௫ தாவீது ஆகீசுடனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததானால் நான் வாசமாயிருக்க நாட்டுப்புறமாக வெளியிலிருக்கிற பட்டணங்களில் ஒன்றிலே ஒரு ஸ்தலம் எனக்குக் கொடுக்கப்படுவதாக, உமதடியான் உம்மோடேகூட இராசதானிப்பட்டணத்திலே வாசமாயிருப்பானேனென்றான்.

௬ அப்பொழுது ஆகீசு அன்றையத்தினம் சிக்லாகை அவனுக்குக் கொடுத்தான். ஆனதுகொண்டு சிக்லாக் இந்நாள்வரைக்கும் யூதாவின் இராசாக்களைச் சேர்ந்திருக்கின்றது.

௭ தாவீது பெலிஸ்தரின் நாட்டுப்புறத்திலே குடியிருந்தநாள் ஒரு வருஷமும் நாலு மாதமுமாயிருந்தது.

௮ அங்கேயிருந்து தாவீதும் அவன் மனுஷரும் கெசூரியர்மேலும் கேர்சியர்மேலும் அமலேக்கியர்மேலும் போய்விழுவார்கள். ஏனென்றால் சூருக்குப் போகிற எல்லையிலும் எஜிப்துதேசமட்டும் இருக்கிற சீமையிலே பூர்வகாலந்துவங்கக் குடியிருந்தவர்கள் இவர்கள்தானே.

௯ அதிலே தாவீது அந்தச் சீமையைக் கொள்ளையடிக்கிறபோது புருஷர்களையும் ஸ்திரிகளையும் உயிரோடே வைக்காமல், ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஒட்டகங்களையும் வஸ்திரங்களையும் எடுத்துக்கொண்டு, ஆகீசண்டைக்குத் திரும்பிவருவான்.

௰ இன்று எதின்மேல் விழுந்தீர்களென்று ஆகீசு கேட்கும்போது, தாவீது யூதாவுடைய தென்புறத்தின்மேலும், யெராமெயேலருடைய தென்புறத்தின்மேலும் கேனியருடைய தென்புறத்தின்மேலுமென்பான்.

௧௧ இன்னின்னபடி தாவீது செய்தானென்று நங்களுக்கு விரோதமான செய்தியை யறிவிக்கத்தக்க ஒருவனையுந் தாவீது காத்பட்டணத்திற்குக் கொண்டுவராதபடிக்கு ஒரு புருஷனையாகிலும் ஸ்திரியையாகிலும் உயிரோடே வைக்காதிருப்பான். அவன் பெலிஸ்தரின் நாட்டுப்புறத்திலே குடியிருக்கிற நாளெல்லாம் இது அவனுடைய வழக்கமாயிருந்தது.

௧௨ ஆகீசு தாவீதை நம்பி, அவன் இஸ்ரவேலாகிய தன்னுடைய சனத்திற்குத் தன்னை நாற்றமாக்கினபடியினாலே என்னைக்கும் என் ஊழியக்காரனாயிருப்பானென்பான்.

௨௮. அதிகாரம்.

பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவந்தபோது சவுல் அஞ்சனம் பார்க்கிற ஸ்திரியண்டைக்குப் போனது.

அந்நாட்களிலே சம்பவித்ததேதென்றால், பெலிஸ்தர் இஸ்ரவேலின் மேல்யுத்தம்பண்ணத் தங்கள் இராணுவங்களைப் படைக்குக் கூட்டிக்கொண்டார்கள். அப்பொழுது ஆகீசு தாவீதுடனே, நீயும் உன் மனுஷரும் என்னோடேகூடத் தண்டுக்குப் புறப்பட்டுவரவேண்டுமென்பதை நியமே யறியக்கடவாயென்றான்.

௨ தாவீது ஆகீசுடனே அப்படியே உமதடியான் செய்யப்போகிறதை நீர் அறிந்துகொள்ளுவீரென்றான். அப்பொழுது ஆகீசு தாவீதுடனே, இதற்காக உன்னை என்நாளுமென் தலையைக் காப்பாற்றுகிறவனாக்கவைப்பேனென்றான்.

௩ சாமுவேலோவென்றால் முன்னமே மரித்துப்போயிருந்தான். இஸ்ரவேலெல்லாம் அவனுக்கு அழுதுகொண்டாடி, அவனூராகிய ராமாவிலேயவனை யடக்கம்பண்ணியிருந்தார்கள். சவுலோவென்றால் அஞ்சனம்பார்க்கிறவர்களையுங் குறிசொல்லுகிறவர்களையுந் தேசத்திலிராதபடிக்குத் துரத்தியிருந்தான்.

௪ பெலிஸ்தர் கூடிக்கொண்டு வந்து சூனேமிலே பாளயமிறங்கினார்கள். சவுலும் இஸ்ரவேலையெல்லாங் கூட்டினான். இவர்கள் கில்போவாவிலே பாளயமிறங்கினார்கள்.

௫ சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோதோவென்றால் பயந்தான். அவனிருதயம் மிகவுந் தத்தளித்துக்கொண்டிருந்தது.

௬ ஆனாற் சவுல் கர்த்தரைக்கேட்கும்போது கர்த்தர் அவனுக்குச் சொப்பனங்களினாலாகிலும் வெளிச்சங்களினாலாகிலும் தீர்க்கதரிசிகளைக் கொண்டேனாகிலும் மறுவுத்தரவருளினதில்லை.

௭ அப்போது சவுல் தன் ஊழியக்காரரை நோக்கி, அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயை எனக்குத் தேடுங்கள்; நான் அவளிடத்துக்குப் போய் அவளைக் கேட்பேனென்றான். அவனுடைய ஊழியக்காரர் அவனுடனே, இதோ, எந்தோரிலே அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயிருக்கிறாளென்றார்கள்.

௮ அப்போது சவுல் தன்னுடைய மாறுவேற வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, அவனும் அவனோடேகூட இரண்டு பேருமாய்ப் போய் இராத்திரியிலே அந்த ஸ்திரீயினிடத்துக்கு வந்தார்கள். அவன் அவளோடே, நீ அஞ்சனம்பார்க்கிறதினாலே எனக்குக் குறிசொல்லி, நானுன்னோடே சொல்லுகிறவனை எனக்கெழும்பிவரப்பண்ணென்றான்.

௯ அந்த ஸ்திரீயவனுடனே, இதோ, சவுல் அஞ்சனம்பார்க்கிறவர்களையுங் குறிசொல்லுகிறவர்களையுந் தேசத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே. இப்போது என்னைக் கொல்லப்படுத்த நீர் என் பிராணனுக்குக் கண்ணி வைப்பானேனென்றாள்.

௰ அப்போது சவுல் இந்தக்காரியத்திற்காக உனக்குப் பொல்லாப்புவராதென்று கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்று அவளுக்குக் கர்த்தர்பேரில் ஆணையிட்டான்.

௰௧ அப்போது அந்த ஸ்திரீ, உமக்கு நான் யாரை எழும்பிவரப்பண்ணவேண்டுமென்றதற்கு அவன், சாமுவேலை எனக்கெழும்பிவரப்பண்ணென்றான்.

௰௨ அந்த ஸ்திரீ, சாமுவேலைக் கண்டு மகாசத்தமாய்க் கூப்பிட்டுச் சவுலுடனே, ஏன் என்னை மோசம்போக்கினீர்? நீர்தானே சவுலென்றாள்.

௰௩ இராசா அவளோடே, நீ பயப்படாதே. நீ காண்கிறதென்னவென்றதற்கு அந்த ஸ்திரீ சவுலுடனே, தேவர்கள் பூமியிலிருந்தேறுகிறதைக் காண்கிறேனென்றாள்.

௰௪ அவருடைய ரூபமென்னவென்று அவளைக் கேட்டான். அதற்கவள், சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற முதிர்ந்தவயதான மனுஷன் ஏறிவருகிறானென்றாள். அதினாலே சவுல் அவன் சாமுவேலென்றறிந்துகொண்டு, தரைமட்டும் முகங்குனிந்து வணங்கினான்.

௰௫ சாமுவேல் சவுலுடனே, நீ என்னை ஏறிவரப்பண்ணுகிறதினால் என்னைக் கலைத்ததென்னவென்றதற்குச் சவுல் சொன்னதாவது, மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் பெலிஸ்தர் எனக்குவிரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள். பராபரனோவென்றால் என்னைவிட்டுவிலகினார். அவர் தீர்க்கதரிசிகளைக்கொண்டாகிலுஞ் சொப்பனங்களினாலாகிலும் எனக்கப்புறம் மறுவுத்தரவருளுகிறதில்லை. ஆகையால் நான் செய்யவேண்டியதை நீர் எனக்கறிவிக்கும்படிக்கு உம்மை அழைப்பித்தேனென்றான்.

௰௬ சாமுவேல் சொன்னதாவது, கர்த்தர் உன்னைவிட்டு விலகி உனக்குச் சத்துருவாய்ப் போயிருக்கக்கொள்ள நீ என்னைக் கேட்பானேன்?

௰௭ கர்த்தர் என்னைக்கொண்டு சொன்னபடியே செய்துகொண்டு, இராச்சியத்தை உன் கையிலிருந்து பறித்து அதை உன் தோழனாகிய தாவீதுக்குக் கொடுத்தார்.

௰௮ நீ கர்த்தருடைய சொற்கேளாமலும் அமலேக்கின்மேல் அவருக்கிருந்த கோபத்தினுக்கிரத்தைத் தீர்த்துக்கொள்ளாமலும் போனபடியினாலே கர்த்தர் இந்நாளிலே உனக்கிந்தப் பிரகாரமாகச் செய்தார்.

௰௯ கர்த்தர் உன்னுடைய சனமாகிய இஸ்ரவேலையும் பெலிஸ்தர் கையிலொப்புக்கொடுப்பார். நாளை நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள். இஸ்ரவேலின் பாளயத்தையுங் கர்த்தர் பெலிஸ்தரின் கையிலொப்புக்கொடுப்பாரென்றான்.

௨௰ அக்ஷணமே சவுல் நெடுஞ்சாண்கிடையாய்த் தரையிலே விழுந்து சாமுவேலின் வார்த்தைகளினாலே மிகவும் பயப்பட்டான். அவன் இராப்பகல்முழுதும் ஒன்றுஞ் சாப்பிடாதிருந்தபடியினாலே அவனுக்குப் பலனுமில்லாமற்போயிற்று.

௨௰௧ அப்போது அந்த ஸ்திரீ சவுலண்டைக்குவந்து அவன் மிகவுங் கலங்கினவனென்றுகண்டு, அவனோடே சொன்னதாவது, இதோ உமதடியாளாகிய நான் உம்முடைய சொற்கேட்டு, என் பிராணனை என் கையிலே வைத்து, நீர் எனக்குச் சொன்ன உம்முடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தேனே?

௨௰௨ இப்போதும் நீர் உமதடியாளுடைய சொற்கேட்டு, நான் உமக்கு முன்னே வைக்கும் அப்பத்துண்டத்தைப் புசிப்பீராக. அப்போது நீர் வழிநடக்கத்தக்க பலன் உமக்குள்ளிருக்குமென்றாள்.

௨௰௩ அவனோவென்றால் தட்டுதல்பண்ணி, நான் புசிப்பதில்லையென்றான். ஆனாலும் அவனுடைய ஊழியக்காரரும் அந்த ஸ்திரீயும் அவனை மிகவும் வருந்திக்கொ

னாதினால் அவன் அவர்கள் சொற்கேட்டு, தரையைவிட்டெழுந்திருந்து கட்டிலின்மேல் உட்கார்ந்தான்.

௨௪ அந்த ஸ்திரிக்குக் கொழுத்த கன்றுக்குட்டி வீட்டிலிருந்தது. அதைத் தீவிரமாய் அடித்து, மாவெடுத்துப் பிசைந்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களாகச் சுட்டு,

௨௫ சவுலுக்கும் அவன் ஊழியக்காரருக்கும் முன்பாகக் கொண்டுவந்து வைத்தாள். அவர்கள் போசித்து, எழுந்திருந்து, அந்த ராத்திரியிலேதானே புறப்பட்டுப்போனார்கள்.

௨௯. அதிகாரம்.

தாவீது பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து திரும்பத் தன் ஊருக்கு அனுப்பப்பட்டது.

பெலிஸ்தர் தங்கள் இராணுவங்களை யெல்லாம் ஆப்பெக்கிலே கூட்டிக்கொண்டிருக்கக்கொள்ளவும் இஸ்ரவேலர் இஸ்ரெயேலிலிருக்கிற துரவண்டையிலே பாளயமிறங்கியிருக்கக்கொள்ளவும்,

௨ பெலிஸ்தரின் அதிபதிகள் நூறும் ஆயிரமுமான சேர்வைகளோடே நடந்து வந்தார்கள். ஆனால் தாவீதும் அவன் மனுஷரும் ஆகீசோடே பின்தண்டிலே வந்தார்கள்.

௩ அப்பொழுது பெலிஸ்தரின் பிரபுக்கள், இந்த எபிரேயர் என்னத்திற்கென்றார்கள். ஆகீசு அவர்களுடனே, இஸ்ரவேலின் இராசாவாகிய சவுலின் ஊழியக்காரனாயிருந்த இந்தத் தாவீது இத்தனை நாட்களும் இத்தனை வருஷங்களுமாய் என்னோடிருந்தானல்லவோ? இவன் நம்முடைய சமயம் ஓடிவந்த நாள்முதற்கொண்டு, இந்நாள்வரைக்கும் நான் ஒன்றும் அவனிற் கண்டுபிடித்ததில்லையென்றான்.

௪ ஆனாற் பெலிஸ்தரின் பிரபுக்கள் அவன்மேற் கடுங்கோபமாகி, அவனோடே சொன்னதாவது, இந்த மனுஷனை நீர் அவனுக்குக் குறித்த தன் ஸ்தலத்திற்குத் திரும்பப்போகும்படிக்கு அங்கே அவனை மறுபடியும் அனுப்பிவிடும். யுத்தத்தில் இவன் நமக்குச் சத்துருவாயிராதபடிக்கு, இவன் நம்மோடே கூட யுத்தத்திற்கு இறங்கவேண்டாம். ஏனெனில் இவன் எதினாலே தன் ஆண்டவனுக்குத் தன்னைப் பிரியமாக்கிக்கொள்ளுவான்? இந்த மனுஷருடைய தலைகளினாலல்லவே?

௫ சவுல் ஆயிரம்பேரையும் தாவீது பதினாயிரம்பேரையும் மடங்கடித்தானென்று இந்தத் தாவீதைக் குறித்தல்லோ ஆடிப்பாடிச் சொன்னார்களென்றார்கள்.

௬ அப்பொழுது ஆகீசு தாவீதை யழைத்து அவனோடே சொன்னதாவது, நீ உத்தமனென்றும், நீ பாளயத்தில் என்னோடே போக்கும்வரத்துமாயிருக்கிறது என் பார்வைக்கு நல்லதென்று கர்த்தருடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறேன். ஏனென்றால் நீ என்வசமாய் வந்தநாள்முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் நான் உன்னில் ஒரு பொல்லாப்புங் கண்டதில்லை. அந்த அதிபதிகளின் பார்வைக்கோவென்றால் நீ பிரியப்பட்டவனல்ல.

௭ ஆகையால் நீ பெலிஸ்தருடைய அதிபதிகளின் பார்வைக்கு ஏராததைச் செய்யாதபடிக்கு இப்பொழுது சமாதானமாய்த் திரும்பப்போய்விடுவென்றான்.

௮ அதற்குத் தாவீது ஆகீசுடனே, ஏன்? நான் செய்ததென்ன? நான் வந்து இராசாவாகிய என் ஆண்டவனுடைய சத்துருக்களோடே யுத்தம்பண்ணாதபடிக்கு நான் உமக்கு முன்பாக வந்திருக்கிற அன்று முதற்கொண்டு, இன்றையத்தினமட்டும் உமது அடியானிலே கண்டுபிடித்ததென்னவென்றான்.

௯ ஆனால் ஆகீசு தாவீதுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது, அறிவேன். ஏனெனில் நீ கர்த்தருடைய தூதனைப்போல என் பார்வைக்குப் பிரியமானவன். ஆனால் இவன் எங்களோடே கூட யுத்தத்திற்கு வரவேண்டாமென்று பெலிஸ்தரின் பிரபுக்கள் சொன்னார்கள்.

௰ இப்பொழுதும் நீ நாளை யதிகாலமே உன்னோடே வந்த உன் ஆண்டவனுடைய வேலைக்காரரைக் கூட்டிக்கொண்டு உங்களுக்கு வெளிச்சமாகிற பொழுது விடியும் நேரத்திலேதானே போய்விடுங்களென்றான்.

௰௧ அப்படியே தாவீது அதிகாலமே தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டு பொழுது விடிகிற நேரத்திலே பெலிஸ்தரின் தேசத்திற்குத் திரும்பப் போகப் புறப்பட்டான். பெலிஸ்தரோவெனில் இஸ்ரெயேலுக்கேறிப்போனார்கள்.

௩௰. அதிகாரம்.

சிக்லாகைக் கொள்ளையிட்டுப்போன அமலேக்கியரைத் தாவீது செயித்தது.

ஆனால் தாவீதும் அவன் மனுஷரும் மூன்றாம்நாளிலே சிக்லாகுக்கு வந்துசேருகிறதற்குள்ளே அமலேக்கியர் தென்புறச்

சிமையின்மேலும் சிக்லாகினமேலும்விழுந்து, சிக்லாகைக்கொள்ளையடித்து, அதை அக்கினியாற் சுட்டுப்போட்டு,

௨ அதிலிருந்த ஸ்திரீகளாகிய சிறியவர்களையும் பெரியவர்களையுஞ் சிறைபிடித்து ஒருவரையுங் கொன்றுபோடாமல், அவர்களைப் பிடித்துக்கொண்டு தங்கள்வழியே போனார்கள்.

௩ தாவீதும் அவன் மனுஷரும் அந்தப் பட்டணத்துக்கு வந்தபோது, இதோ, அது அக்கினியினாலே சுட்டுப்போடப்பட்டதென்றும் தங்கள் பெண்சாதிகளுந் தங்கள் குமாரருந் தங்கள் குமாரத்திகளுஞ் சிறைபிடித்துக் கொண்டு போகப்பட்டார்களென்றுங் கண்டார்கள்.

௪ அப்பொழுது தாவீதும் அவனோடிருந்த ஜனமும் அழுகிறதற்குத் தங்களில் பெலனில்லாமற்போகுமட்டுஞ் சத்தமிட்டழுதார்கள்.

௫ தாவீதின் இரண்டு பெண்சாதிகளாகிய யெஸ்ரயேல் ஊராளான அகினோவாமும், கர்மேலூராளான நாபாலின் பெண்சாதியாயிருந்த அபிகாயிலுஞ் சிறைபிடித்துக் கொண்டுபோகப் பட்டவர்களாயிருந்தார்கள்.

௬ தாவீது மிகவும் நெருக்கப்பட்டான். ஏனென்றால் சகல ஜனமுந் தங்கள் தங்கள் குமாரர் குமாரத்திகள் நிமித்தம் மனக்கிலேசமானதினாலே அவனைக் கல்லெறிய வேண்டுமென்று சொன்னார்கள். தாவீதோவென்றால் தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டு,

௭ அகிமெலேக்கின் குமாரனாகிய அபியத்தார் என்ற ஆசாரியனிடத்தில், ஆசாரிய சால்வையை என்னண்டைக்குக் கொண்டுவா என்றான். அபியத்தார் ஆசாரிய சால்வையைத் தாவீதண்டைக்குக் கொண்டுவந்தபிறகு,

௮ தாவீது கர்த்தரை, நான் அந்தத் தண்டைப் பின்தொடருவேனோ? அதைப் பிடிப்பேனோ என்று கேட்டான். அதற்கவர், அதைப் பின்தொடர். ஏனென்றால் அதை நீ பிடிக்கவே பிடித்து, இரட்சிப்புண்டுபண்ணுவாய் என்றார்.

௯ அப்படியே தாவீதும் அவனோடிருந்த அறுநூறுபேரும் போனார்கள். அவர்கள் பேசோர் ஆற்றண்டைக்கு வந்தபோது, சிலபேர் நின்றுபோனார்கள்.

௰ தாவீதோவென்றால், நானூறு பேரோடு கூடத் தொடர்ந்துபோனான். ஏனெனில் இருநூறுபேர் பேசோர் ஆற்றைக் கடக்கமாட்டாதபடிக்கு விடாய்த்தபடியினாலே நின்றுபோனார்கள்.

௰௧ ஒரு எகிப்து மனுஷனை வெளியிலே கண்டுபிடித்து, அவனைத் தாவீதண்டைக்குக் கொண்டுவந்து, போசிக்க அவனுக்கு அப்பமுங் குடிக்கத் தண்ணீருங்கொடுத்து,

௰௨ அத்திப்பழ அடையின் ஒரு துண்டையும் வற்றலான இரண்டு திராட்சப்பழக்குலைகளையும் அவனுக்குக் கொடுத்தார்கள். அதை அவன் சாப்பிட்டபிறபாடு அவனுடைய உயிர் திரும்ப அவனுக்கு வந்தது. ஏனென்றால் இராப்பகல் மூன்றுநாளாய் அப்பஞ் சாப்பிடாமலுந் தண்ணீர் குடியாமலுமிருந்தான்.

௰௩ தாவீது அவனை நீ யாருடையவன்? நீ எவ்விடத்தான்? என்று கேட்டதற்கு, நான் ஒரு அமலேக்கியனுடைய வேலைக்காரனாகிய எகிப்து தேசத்துப் பிள்ளையாண்டான். இன்று மூன்றுநாளாய் நான் வியாதியானபோது என் எசமான் என்னைக் கைவிட்டான்.

௰௪ நாங்கள் கிரேத்தியருடைய தென்புறத்தின்மேலும் யூதாவுக்கடுத்ததின்மேலும் காலேபுடைய தென்புறத்தின்மேலும் விழுந்து, சிக்லாகை அக்கினியாலே சுட்டுப் போட்டோமென்றான்.

௰௫ தாவீது அவனை, நீ என்னை அந்தத் தண்டுக்குக் கொண்டுபோவாயோவென்று கேட்டதற்கு அவன், நீர் என்னைக் கொன்றுபோடுவதில்லை என்னை என் எசமான் கையில் ஒப்புக்கொடுப்பதில்லையென்று பராபரன்பேரிலே எனக்கு ஆணையிடுவீரானால், உம்மை அந்தத் தண்டுக்குக் கொண்டுபோவேனென்றான்.

௰௬ அவனை இவன் கொண்டுபோகிறபோது, இதோ, அவர்கள் வெளியெங்கும் பரம்பிப் போசித்துக் குடித்துத் தாங்கள் பெலிஸ்தர் தேசத்திலும் யூதா தேசத்திலுங் கொள்ளையிட்டுவந்த மகா பெரிதான அந்த எல்லாக் கொள்ளைக்காகவுங் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

௰௭ அவர்களைத் தாவீது இருட்டானவேளை துவக்கி மறுநாட் சாயங்காலமட்டும் முறியடித்தான். ஒட்டகங்களின்மேலே ஏறியோடிப்போன நானூறு வாலிபரைத் தவிர அவர்களில் வேறொருவருந் தப்பிப்போனதில்லை.

௰௮ அமலேக்கியர் பிடித்துக்கொண்டுபோன எல்லாவற்றையுந் தன்னுடைய இரண்டு பெண்சாதிகளையுந் தாவீது தப்புவித்தான்.

௰௯ அவர்கள் கொள்ளையாடிக்கொண்டுபோனதெல்லாவற்றிலும் சிறியதிலும் பெரியதிலும் குமாரரிலும் குமாரத்திகளிலும் ஒன்றும் குறைபடாமல் எல்லாவற்றையுந் தாவீது திருப்பிக்கொண்டான்.

௨௰ எல்லா ஆடுமாடுகளையுந் தாவீது பிடித்துக்கொண்டான். அவைகளைத் தங்கள் மிருகஜீவன்களுக்கு முன்னாலேயோட்டி, இது தாவீது கொள்ளையாடினதென்றார்கள்.

௨௧ விடாயப்பட்டதினாலே தாவீதைப் பின்செல்லமாட்டாமல் பேசோர் ஆற்றண்டையிலே தரித்திருந்த இருநூறுபேரண்டைக்குத் தாவீது வருகிறபோது, இவர்கள் தாவீதுக்கும் அவனோடிருந்த சனத்துக்கும் எதிர்கொண்டுவந்தார்கள். தாவீது அந்தச் சனத்தண்டையிலே சேர்ந்து அவர்கள் சுகசெய்தியை விசாரித்தான்.

௨௨ அப்போது தாவீதோடே நடந்துவந்த மனுஷரிற் பொல்லாதவர்களும் பேலியாளின் மனுஷருமான எல்லாரும் பிரதியுத்தாரமாக, அவர்கள் எங்களோடே வராதபடியினாலே நாங்கள் தப்புவித்த கொள்ளையுடைமையில் அவர்களுக்கு ஒன்றுங்கொடுப்பதில்லை. அவர்களில் ஒவ்வொருவன் தன் தன் பெண்சாதியையுந் தன் தன் பிள்ளைகளையுமே யழைத்துப்போகட்டுமென்றார்கள்.

௨௩ ஆனால் தாவீது சொன்னதாவது, என் சகோதரரே! கர்த்தர் நமக்குக்கொடுத்ததை நீங்கள் இப்படிச் செய்யவேண்டாம்? என்னென்றால் கர்த்தர் நம்மைக்காப்பாற்றி நமதுமேல் வந்திருந்த அந்தத் தண்டை நமதுடைய கையிலே ஒப்புக்கொடுத்தார்.

௨௪ இந்தக்காரியத்தில் உங்களுக்குக் கேள்விகொடுக்கத்தக்கவனார்? யுத்தத்திற்கிறங்கிப்போனவர்களின் பங்கு எவ்வளவோ, அவ்வளவுதான் ராஸ்துக்களண்டையிலிருந்தவர்களின் பங்கும் இருக்கவேண்டும். சரிப்பங்காய்ப் பங்கிடுவார்களாகவென்றான்.

௨௫ அப்படியே அந்நாள் முதற்கொண்டு நடக்கிறதாயிற்று. என்னென்றால் அதை இஸ்ரவேலிலே இந்நாள்வரைக்குமிருக்குங் கட்டளையும் பிரமாணமுமாக வைத்தான்.

௨௬ தாவீது சிக்லாகுக்கு வந்தபோது அவன் கொள்ளையாடினவைகளிலே தன் சிநேகிதராகிய யூதாவின் மூப்பருக்குச் சிலவற்றையனுப்பி, இதோ, கர்த்தருடைய சத்துருக்களின் கொள்ளையிலுங்களுக்குண்டாயிருக்கும் ஆசீர்வாதமென்று சொல்லச்சொன்னான்.

௨௭ ஆருக்கனுப்பினானென்றால், பேத்தேலிலிருக்கிறவர்களுக்குந், தெற்கான ராமோத்திலிருக்கிறவர்களுக்கும் யாத்திரிலிருக்கிறவர்களுக்கும்,

௨௮ ஆரோவேரிலிருக்கிறவர்களுக்குஞ் சிப்மோத்திலிருக்கிறவர்களுக்கும் எஸ்தேமோவாவிலிருக்கிறவர்களுக்கும்,

௨௯ ராக்காலிலிருக்கிறவர்களுக்கும் யோர்மெயேலியரின் பட்டணங்களிலிருக்கிறவர்களுக்குங் கேனியரின் பட்டணங்களிலிருக்கிறவர்களுக்கும்,

௩௰ ஒர்மாவிலிருக்கிறவர்களுக்குங், கொராசானிலிருக்கிறவர்களுக்கும், ஆத்தாகிலிருக்கிறவர்களுக்கும்,

௩௧ எப்றோனிலிருக்கிறவர்களுக்குந் தாவீதும் அவன் மனுஷரும் நடமாடின எல்லா இடங்களிலிருக்கிறவர்களுக்கும், அனுப்பினான்.

௩௧. அதிகாரம்.

சவுல் பெலிஸ்தரோடே பண்ணின யுத்தத்திலே மடிந்துபோனது.

பெலிஸ்தரோவென்றால் இஸ்ரவேல் மேல் யுத்தம்பண்ணினார்கள். ஆனால் இஸ்ரவேல் மனுஷர் பெலிஸ்தருக்குமுன்பாக முறிந்தோடிக் கில்போவாப் பர்வதத்திலே வெட்டுண்டுவிழுந்தார்கள்.

௨ பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரரையும் நெருங்கிச் சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும் மல்கிசுவாவையும் வெட்டினார்கள்.

௩ அம்பெய்கிற வில்லாளர் சவுலுக்கு நேராகப் பிடித்ததினால் அவன்மேல் யுத்தம் பலத்தது. அப்போது சவுல் வில்லாளருக்கு மிகவும் பயப்பட்டு,

௪ தன் ஆயுதங்களைப் பிடிக்கிறவனோடே, அந்த விருத்தசேதனமில்லாதவர்கள் வந்து, என்னைக் குத்திப்போட்டு என்னை பரியாசஞ்செய்யாதபடிக்கு நீ உன் பட்டயத்தை யுருவி என்னைக் குத்திப்போடென்றான். ஆனால் அவன் ஆயுதங்களைப் பிடிக்கிறவன் மிகவும் பயப்பட்டதினால் அப்படிச் செய்யமாட்டேனென்றான். அப்போது சவுல் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்.

௫ சவுல் செத்துப்போனதை அவன் ஆயுதங்களைப் பிடிக்கிறவன் கண்டபோது அவனுந் தன் பட்டயத்தின்மேல் விழுந்து அவனோடேகூடச் செத்துப்போனான்.

௬ அப்படியே அன்றையத்தினத்திலே சவுலும் அவனுடைய மூன்று குமாரரும் அவன் ஆயுதங்களைப் பிடிக்கிறவனும் அவனுடைய எல்லா மனுஷரும் ஒருமிக்கச் செத்துப் போனார்கள்.

௭ இஸ்ரவேல் மனுஷர் முறிந்தோடினதென்றும் சவுலும் அவன் குமாரரும் செத்துப்போனார்களென்றும் பள்ளத்தாக்குக்கு இப்பாலும் யோர்தானுக்கு இப்பாலுமிருந்த இஸ்ரவேல் மனுஷர் கண்டபோது, அவர்கள் பட்டணங்களை விட்டோடிப்போனார்கள். அப்போது பெலிஸ்தர் வந்து அவைகளிலே குடியிருந்தார்கள்.

௮ வெட்டுண்டவர்களை யுரிந்துகொள்ளப் பெலிஸ்தர் மறுநாளிலே வந்தபோதோவெனில் அவர்கள் சவுலும் அவனுடைய மூன்று குமாரரும் கில்போவா பர்வதத்தில் வெட்டுண்டு கிடக்கக்கண்டு,

௯ அவன் தலையைவெட்டி அவன் ஆயுதங்களையெடுத்துக்கொண்டு, தங்கள் விக்கிரகங்களின் வீடுகளுக்கும் ஜனத்துக்கும் நற்செய்தியைப் பிரசங்கிக்கத்தக்கதாக அவைகளைப் பெலிஸ்தர் தேசத்திலே சுற்றிலும் அனுப்பி,

௰ அவன் ஆயுதங்களை அஸ்தரோத்தேவனுடைய வீட்டிலே வைத்து அவன் உடலைப் பெத்சானின் அலங்கத்திலே தூக்கிப்போட்டார்கள்.

௰௧ பெலிஸ்தர் சவுலுக்குச் செய்ததைக் கிலெயாத்தேசத்து யாபேஸ் பட்டணத்தார் கேட்டபோதோவெனில்,

௰௨ அவர்களில் பலத்த மனுஷரெல்லாரும் எழுந்து இராமுழுதும் நடந்துபோய்ப் பெத்சானின் அலங்கத்திலிருந்த சவுலின் உடலையும் அவன் குமாரரின் உடல்களையுமெடுத்து, யாபேசுக்குக்கொண்டுவந்து, அவைகளையங்கே சுட்டெரித்துப்போட்டு,

௰௩ அவர்களுடைய எலும்புகளையெடுத்து, யாபேசிலிருக்கிற தோப்பிலே யடக்கம்பண்ணி, ஏழுநாள் உபவாசம்பண்ணினார்கள்.

சாமுவேல முதலாம்புஸ்தகம்
முடிந்தது முற்றும்

சாமுவேலின்

இரண்டாம் புஸ்தகம்.

௧. அதிகாரம்.

தாவீது சவுலுக்காகவும் யோனத்தானுக்காகவும் துக்கங்கொண்டாடிப் புலம்பினது.

௧ சவுல் இறந்தபிற்பாடு, தாவீது அமலேக்கியரை முறியடித்துச் சிக்லாகுக்குத் திரும்பிவந்து இரண்டுநாள் அங்கேயிருந்த பிற்பாடு சம்பவித்ததென்னவெனில்,

௨ இதோ, மூன்றாம் நாளிலே ஒருவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு தன் தலையின்மேலே புழுதியைப் போட்டுக்கொண்டு சவுலின் பாளயத்திலிருந்து வந்தான். அவன் தாவீதண்டைக்கு வருகையில் தரையிலே விழுந்து வணங்கிக்கொண்டான்.

௩ தாவீது அவனை நீ எங்கேயிருந்து வந்தாய்? என்று கேட்டதற்கு, அவன் இஸ்ரவேலின் பாளயத்திலிருந்து தப்பிவந்தேனென்றான்.

௪ தாவீது அவனை நடந்த செய்தியென்ன? நீ யெனக்கறிவியென்று கேட்டதற்கு அவன் ஜனம் யுத்தத்தைவிட்டு முறிந்து ஓடி ஜனத்தில் அநேகம்பேரும் விழுந்து மடிந்தார்கள். சவுலும் அவர் குமாரனாகிய யோனத்தானும் மடிந்தார்களென்றான்.

௫ சவுலும் அவன் குமாரனாகிய யோனத்தானும் மடிந்துபோனதை நீ எதினாலே யறிவாய்? என்று தாவீது தனக்கதை யறிவிக்கிற வாலிபனைக் கேட்டதற்கு,

௬ அந்த வாலிபன் சொன்னதாவது: நான் தற்செயலாய்க் கில்போவா பர்வதத்திலே வந்தேன். அப்போது இதோ, சவுல் தம்முடைய ஈட்டியின்மேலே சாய்ந்துகொண்டிருந்தான். ஆனால் இதோ, இரதங்களும் குதிரைக்காரரும் அவரை நெருங்கியிருந்தார்கள்.

௭ அவர் திரும்பிப்பார்த்து என்னைக் கண்டு என்னையழைத்தார். இதோ, இருக்கிறேனென்றேன்.

௮ அபபோது அவர் நீ யார்? என்று என்னைக்கேட்டதறகு, நான் ஆமலேக்கியனென்று அவரோடேசொன்னேன்.

௯ அபபோது அவர் என்னுடனே, நீ யென்னண்டைசேர்நது நின்று என்னைக் கொன்றுபோடேன. ஏனென்றாறகுததது சீராவிலேபிடிக்கது. என ஜீவனின்னமமுழுதும எனக்குளளேயிருக்கின்றதென்றார்

௰ அபபோது நான் அவர்ண்டைசேர்நது, அவரைக கொன்றுபோட்டேன. ஏனென்றால அவர்விழுநததறகுபபிற்பாடு பிழைக்கமாட்டாரென்று நான் அறிவேன. பிறபாடு அவர் தலையினமேலிருநதமுடியையும அவர் புயததிலிருநத அஸதகடையததையுமெடுததுககொண்டு அவைகளையிங்கே என்னாண்டவனண்டைக்குக கொண்டுவநதேனென்றான.

௰௧ அபபோது தாவீதும அவனோடிருக்கிற எலலாமனுஷருநதங்கள வஸதரங்களைபபிடிததுககிழிததுககொண்டு,

௰௨ சவுலும அவன்குமாரனாகிய யோனததானும கர்ததருடையசனமும இஸரவேல வீட்டாரும படடையததாலேவிழுநதடிபடியினாலே புலமபியழுதுகொண்டு அஸதமான காலமடடும உபவாசமாயிருநதார்கள.

௰௩ தாவீது அதைததனக கறிவிநதவாலிபனை நீ யெவவிடததான? என்றுகேட்டதற்குஅவன்தான் அனனியச்சாதியானவனின மகன. நான ஆமலேக்கியனென்றான.

௰௪ அபபோது தாவீது அவனுடனே கர்ததர் அபிஷேகம பணணிவிததவரை யழிக்கிறதறகு நீ யுனகையை நீட்டபபயபபடாமற் போனதெபபடி? என்று சொலலி,

௰௫ வாலிபரிலொருவனைக கூபபிட்டு, நீசேர்நது அவனமேல விழுநது அவனை வெட்டென்றான. இவன அவனை வெட்டினான. அவனசெததான.

௰௬ தாவீது அவனைபபார்தது, உன இரததபபழி உன தலையினமேலிருபபதாக. ஏனெனிற் கர்ததர் அபிஷேகமபணணிவிததவரை நானகொன்றுபோட்டேனென்று உனவாய்தானே யுனககுவிரோதமானவுததரவுசொலலிததென்றான.

௰௭ தாவீது சவுலினபேரிலும அவன குமாரனாகிய யோனததானினபேரிலும பாடினபுலமபலாவது,

௰௮ இதோ, விலலெய்கிறதை யூதாபுததிரருக்குக்கறறுககொடுக்க அது சன்மார்ககரின புஸதகததில எழுதியிருக்கப படவேணடுமென்று சொலலிப பினனையுஞசெனனதாவது,

௰௯ ஆ! இஸரவேலின அலஙகாரம உன்னுடையமேடுகளினமேல வெட்டுணடது. பலசாலிகளெபபடி விழுநதார்கள?

௨௰ பெலிஸதரின குமாரததிகள சநதோஷபபடாத படிக்கும், விருததசேதனமிலலாதவர்களின குமாரததிகள களிகூராதபடிக்கும அதைக காத்பட்டணததில அறிவியாமலும அஸகலோனின வீதிகளிலேபிரசஙகியாமலுமிருஙகள.

௨௰௧ கில்போவாப் பர்வதஙகளே! உஙகளபேரிலே பனியும மழையும பெயயாமலும காணிக்கைசெலுததததக்க பலனைக கொடுக்கும. வயலகளிலலாமலும போவதாக. ஏனென்றால அஙகேபலசாலிகளுடைய கேடயமும, சவுல எணணெயால அபிஷேகம பணணபபடாதவர்போல அவர்கேடயமும எறிநதுபோடப்பட்டுப்போயிறறு.

௨௰௨ யோனததானின வில்லும சவுலின படடயமும மடிநது விழுநதவர்களின இரததஞ் சிநதபபடாமலும பலவான்களுடையக கொழுபபிலே படாமலும ஒருககாலும பினனிட்டுப போனதுமிலலை. வீணாயததிரும்பினதுமிலலை.

௨௰௩ உயிரோடேயிருக்கககொளளப பிரியமும இனபமுமாயிருக்கப்பட்ட சவுலும யோனததானும தஙகள மரணததிலும பிரிநதுபோனதிலலை. கழுகுகளைப பார்ககிலும வேகமும சிஙகஙகளைபபார்ககிலும பெலனுமுளளவர்களாயிருநதார்கள.

௨௰௪ இஸரவேலின குமாரததிகளே! உஙகளுக்கு இரததாமபரததைச செலவிகளாய் உடுததுவிதது உஙகளுடுபபினமேலே பொனனாபரணஙகளைத தரிக்கபபணணின சவுலுக்காக அழுஙகள.

௨௰௫ யுததததிற்குளளே பலசாலிகளெபபடி விழுநதார்கள? உன மேடுகளின மேலே யோனததானெபபடி வெட்டுணடான?

௨௰௬ யோனததானாகிய என சகோதரனே! உனககாக எனககுவியாகுலமாயிருக்கிறது. நீயெனககுவெகு இனபமாயிருநதவன. ஸதிரிகளின சிநேகததைபபார்ககிலும உன சிநேகம எனக காச்சரியமாயிருநதது.

௨௰௭ பலவானகளெபபடி விழுநதார்கள? யுததஆயுதஙகளெபபடி யழிநதுபோயிறறென்பதுதானே.

௨. அதிகாரம்.

தாவீது யூதாவின்மேல் இராசாவாக வைக்கப்பட்டதும், அப்னேர் அவனுக்கெதிராக இஸ்போசேத்தை இஸ்ரவேலின்மேல் இராசாவாக்கினதும்.

௩௧ அப்போது இராசா எழுந்திருந்து தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தரையிலே விழுந்து கிடந்தான். அவனூழியக்காரரெல்லாரும் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நின்றார்கள்.

௩௨ ஆனால் தாவீதின் அண்ணனாகிய சிமேயாவின் குமாரனாயோனதாப் மறுவுத்தரவு கொடுத்துச் சொன்னதாவது, இராசாவின் குமாரரான வாலிபரையெல்லாங் கொன்றுபோட்டார்களென்று என்னுடையவன் நினைக்கவேண்டாம். அம்னோன் மாத்திரஞ் செத்துப்போனான். ஏனெனில் இவன் அவன் சகோதரியாகிய தாமாரைக் கற்பழித்தநாள் முதற்கொண்டு அது அப்சலோமின் நெஞ்சிலிருந்தது.

௩௩ இப்போதும் இராசாவின் குமாரர்களெல்லாருஞ் செத்தார்களென்ற பேச்சை இராசாவாகிய என்னுடையவன் தம்முடைய மனதிலே வைக்கவேண்டாம். ஏனென்றால் அம்னோனொருவனே செத்தானென்றான்.

௩௪ அப்சலோமோடிப்போனான். சாமக்காரச் சேவகன் தன் கண்களையேறெடுத்துப்பார்க்கிறபோது, இதோ, அநேக ஜனம் அவனை விட்டு வருகிற வழியாகிய மலையின் மறவிலிருந்து வருகிறதைக் கண்டான்.

௩௫ அப்போது யோனதாப் இராசாவுடனே, இதோ, இராசாவின் குமாரர் வருகிறார்கள். உமதடியான் சொன்னபடியேயாயிற்றென்றான்.

௩௬ அவன் பேசிமுடிந்த போதோவென்றால், இதோ, இராசாவின் குமாரர் வந்து சத்தமிட்டழுதார்கள். இராசாவும் அவனுடைய எல்லாவூழியக்காரரும் மகா பெரிய புலம்பலாயழுதார்கள்.

௩௭ அப்சலோமோவெனில் அம்மீயூரின் குமாரனாகிய தல்மாயென்ற கேசூரின் இராசாவண்டைக்கு ஓடிப்போனான். ஆனால் தாவீது அந்தவெல்லா நாளும் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

௩௮ அப்சலோம் கேசூருக்கு ஓடிப்போய் அங்கே மூன்றுவருஷமிருந்தான்.

௩௯ தாவீது இராசா அம்னோன் செத்தபடியினாலே அவனுக்காகத் துக்கித்துத் தேறிக்கொண்டபோதோவெனில் அப்சலோமைப் பின்தொடரும் நினைவை விட்டுவிட்டான்.

௰௪. அதிகாரம்.

அப்சலோம் திரும்ப அழைப்பிக்கப்பட்டது.

இராசாவின் இருதயம் அப்சலோமின்மேல் இன்னந்தாங்கலாயிருக்கிறதைச் செருயாவின் குமாரன் யோவாப் அறிந்தபடியினாலே,

௨ அவன் தெக்கோவாவிலிருக்கிற ஞானமுள்ள ஒரு ஸ்திரியையழைத்தனுப்பி, அவளோடே சொன்னதாவது நீ இழவு கொண்டாடுகிறவளைப்போலத் துக்கவஸ்திரங்களையுடுத்துக்கொண்டு, எண்ணெய் பூசிக்கொள்ளாமற் செத்துப்போனவனுக்காக அநேக நாளாயத் துக்கித்திருக்கிற பெண்சாதியைப்போலக் காண்பித்து,

௩ இராசாவண்டைக்குட் பிரவேசித்து அவரோடே இன்னின்ன பிரகாரமாகப் பேசென்று அவள் சொல்லவேண்டிய வார்த்தைகளை யோவாப் அவள் வாயிலே போட்டான்.

௪ அப்படியே தெக்கோவா ஊராளான அந்த ஸ்திரி இராசாவோடே பேசப்போய்த் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி, இராசாவே இரட்சியுமென்றாள்.

௫ இராசா அவளுடனே, உனக்கென்னவேண்டுமென்றதற்கு அவள் சொன்னதாவது ஆ, நான் விதவையான பெண்சாதி. ஏனென்றால் என் புருஷன் செத்துப்போனான்.

௬ ஆனால் உமதடியாளுக்கு இரண்டு குமாரரிருந்தார்கள். அவர்கள் இருவரும் வெளியிலே சண்டைபண்ணி அவர்களை விலக்க ஒருவருமில்லாதபடியினாலே ஒருவன் மற்றவனையடித்துக் கொன்றுபோட்டான்.

௭ ஆகையால் இதோ, வம்சமெல்லாம் உமதடியாள்மேலெழும்பித் தன் சகோதரனைக் கொன்றுபோட்டவனை அவன் கொன்ற அவன் சகோதரனுடைய பிராணனுக்காக நாங்கள் கொன்றுபோட, அந்தச் சுதந்தரவாளனாகிய அவனையுமழித்துப்போடும்படிக்கு அவனையொப்புவியென்று சொல்லி, என் புருஷனுக்குப் பூமியின்

பூமியிலே பேரும் மீதியும் வைக்கப்படாதபடிக்கு எனக்கு இன்னமிருக்கிற பொறியையும் அவித்துப்போடமனதாயிருக்கிறார்களென்றாள்.

௮ அப்பொழுது இராசா அந்தஸ்திரீயோடே, நீ உன் வீட்டுக்குப் போ. நான் உன் காரியத்துக்குக் கட்டளை பண்ணுவேனென்றான்.

௯ பின்னையும் அந்தத் தெக்கோவாவூர் ஸ்திரீ இராசாவுடனே, இராசாவாகிய என்னுடைய ஆண்டவனே! இராசாவின் மேலும் அவர் ஆசனத்தின் மேலும் குற்றமில்லாதபடிக்கு அந்தப் பழி என் மேலும் என் தகப்பன் வீட்டின் மேலும் சுமரக்கடவதென்றாள்.

௰ அதற்கு இராசா, உனக்கு விரோதமாய்ப் பேசுகிறவனை என்னண்டைக்கு அழைத்துவா. அப்பொழுது அவன் இனி உன்னைத் தொடாதிருப்பானென்றான்.

௰௧ பின்னையும் அவள், இரத்தப்பழி வாங்குகிறவர்கள் அழிம்புசெய்து என் குமாரனை நிர்மூலம் பண்ணிப்போடாதபடிக்கு இராசாவானவர் தம்முடைய பராபரனாகிய கர்த்தரை நினைப்பாராகவென்றாள். அதற்கு இராசா, உன் குமாரனுடைய மயிரில் ஒன்றாகிலும் தரையிலே விழுவதில்லையென்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்றான்.

௰௨ அப்பொழுது அந்தஸ்திரீ, இராசாவாகிய என்னுடைய ஆண்டவனோடே உமதடியாள் ஒரு வார்த்தையைச் சொல்லட்டுமேயென்றாள். அவன் சொல்லென்றதற்கு,

௰௩ அந்த ஸ்திரீ சொன்னதாவது, பின்னை ஏன் பராபரனுடைய சனத்திற்கு விரோதமாய் அப்படிக்கொத்த நினைவை வைத்திருக்கிறீர்? துரத்துண்ட தம்முடையவனை இராசா திரும்ப அழைத்தாலொழிய இராசா இப்பொழுது சொன்ன வார்த்தையினாலே குற்றமுள்ளவரைப்போலிருக்கிறீர்.

௰௪ ஏனென்றால் மரிக்கவே மரிக்கிறோம். திரும்பச் சேர்த்தபடிக்குத் தரையிலே சுவருகிற தண்ணீரைப்போலிருக்கிறோம். பராபரன் ஒருவனுற் ஜீவனை யெடுத்துக்கொள்ளாமல், துரத்துண்டவன் அப்புறந்தள்ளிவிட்டு விலக்கப்படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார்.

௰௫ இப்பொழுதும் நான் என்னுடைய ஆண்டவனாகிய இராசாவோடே இந்த வார்த்தையைப் பேச என்னத்தினாலே வந்தேனென்றால் சனம் எனக்குப் பயமுண்டாக்கினதினாலேதானே. ஆகையால் நான் இராசாவோடே பேசவேணும். ஒருவேளை இராசா தமதடியாளுடைய வார்த்தையின்படி செய்வாரென்று உமதடியாளாகிய நான் சொன்னேன்.

௰௬ ஏனெனில் என்னையும் என் குமாரனையும் ஏகமாய்ப் பராபரனுடைய சுதந்தரத்துக்குப் புறம்பாக்கி அழிக்க நினைக்கிற மனுஷனுடைய கைக்குத் தமதடியாளை நீங்கலாக்கிவிடும்படிக்கு இராசா கேட்பார்.

௰௭ இராசாவாகிய என்னுடைய ஆண்டவனுடைய வார்த்தை யெனக்கு ஆறுதலாயிருக்குமென்று உமதடியாளாகிய நான் எண்ணினேன். ஏனெனில் நன்மையையுந் தீமையையுங் கேட்கத்தக்கதாக இராசாவாகிய என்னுடைய ஆண்டவன் பராபரனுடைய தூதனைப்போலிருக்கிறார். இதற்காக உம்முடைய பராபரனாகிய கர்த்தர் உம்மோடே கூடவிருக்கிறாரென்றாள்.

௰௮ அப்பொழுது இராசா அந்த ஸ்திரீக்குப் பிரதியுத்தாரமாக, நான் உன்னைக் கேட்கும் காரியத்தை யெனக்கு மறைக்காயாகவென்றதற்கு அந்த ஸ்திரீ, இராசாவாகிய என்னுடையவர் சொல்வாராகவென்றாள்.

௰௯ அப்பொழுது இராசா, இதிலெல்லாம் யோவாபின் கை யுன்னோடிருக்கின்றதோவென்று கேட்டான். அதற்கு ஸ்திரீ பிரதியுத்தாரமாகச் சொன்னது, இராசாவாகிய என்னுடையவன் சொன்னபடியெல்லாமிருக்கின்றது. வலதுபக்கத்திலும் இடதுபக்கத்திலும் இதிலே வேறொருவர் இல்லையென்று இராசாவாகிய என்னுடையவனுடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். அதேனென்றால் உமதடியானாகிய யோவாப்தானே இதை யெனக்குக் கற்பித்து, அவனே இந்த எல்லா வார்த்தைகளையும் உமதடியாளின் வாயிலே போட்டான்.

௨௰ நான் இந்தக் காரியத்தின் ரூபை இப்படி மாற்றுகிறதற்கு உமதடியானாகிய யோவாப் அதற்குக் காரணமாயிருந்தான். ஆனாலும் தேசத்திலே நடக்கிறதையெல்லாம் அறிய என்னுடைய ஆண்டவனுடைய ஞானம் பராபரனுடைய தூதனின் ஞானத்தைப்போலேயிருக்கின்றதென்றாள்.

௨௰௧ அப்பொழுது இராசா யோவாபுடனே, இதோ, இந்தக் காரியத்தைச் செய்கிறேன். நீ போய் வாலிபனாகிய அப்சலோமைத் திரும்ப அழைத்து வாவென்றான்.

௨௰௨ அப்பொழுது யோவாப் தரையிலே முகங்குப்புற விழுந்து வணங்கி, இராசாவை

யுபசரிணைபண்ணி, இராசாதமுடியானுடைய வார்த்தையின்படி செய்ததினாலே என்றுடையவராகிய இராசாவின் கண்களிலேனக்குத் தயவு கிடைத்ததென்கிறதை இன்று உமதடியானுக்குத் தெரியவந்ததென்றான்.

௨௩ பிறகு யோவாப் எழுந்திருந்து கெசூருக்குப்போய் அப்சலோமை எருசலேமுக்கு அழைத்துவந்தான்.

௨௪ இராசாவோவென்னில், அவன் தன் வீட்டுக்குத் திரும்பிக் கொள்ளக்கடவன். என்முகத்தையவன் பார்ப்பதில்லையென்றான். அப்படியே அப்சலோம் தன்வீட்டுக்குத் திரும்பிக்கொண்டு இராசாவின்முகத்தைப்பார்க்கவில்லை.

௨௫ அன்றியும் இஸ்ரவேலனைத்திலுமப்சலோமைப்போலே அத்தச் சவுந்தரியமுள்ளவனும் மிகவும் மெச்சிக்கொள்ளப்பட்டவனுமான மனுஷன் இருக்கவில்லை. அவன் உள்ளங்கால் துவக்கி உச்சந்தலைமட்டும் அவனில் ஒரு மறுவுமில்லாதிருந்தது.

௨௬ அவன் தன் தலைமயிரை அது தனக்குப்பாரமாயிருக்கின்றதென்று வருஷாந்திரம் சிரைத்துக்கொள்வான். சிரைக்கும்போது அவன் தலைமயிர் இராசாவுடைய நிறையின்படி இருநூறு சேக்கல் நிறையாயிருக்கும்.

௨௭ அப்சலோமுக்கு மூன்று குமாரருந் தாமாரென்று பேர்கொண்ட ஒருகுமாரத்தியும் பிறந்திருந்தார்கள். இவளரூபவதியான பெண்ணாயிருந்தாள்.

௨௮ அப்சலோம் இராசாவின் முகத்தைக்காணாமல் இரண்டுவருஷமாய் எருசலேமிலே குடியிருந்தான்.

௨௯ ஆகையால் அப்சலோம் யோவாபை இராசாவண்டைக்கு அழைத்தனுப்பினான். அவரோவென்னில் அவனண்டைக்கு வரமாட்டேனென்றான். இரண்டாம்விசையும் அவன் அழைத்தனுப்பினும் வரமாட்டேனென்றான்.

௩௦ அப்போது அவன் தன்வேலைக்காரரோடே, இதோ, என் நிலத்தருகே யோவாபின்நிலம். அதிலே அவனுக்கு வாற்கோதுமை விளைந்திருக்கின்றது. நீங்கள்போய் அதை யக்கினியாற் கொளுத்திப்போடுங்களென்றான். அப்படியே அப்சலோமின் வேலைக்காரர் அந்தநிலத்தை யக்கினியாற் கொளுத்திப் போட்டார்கள்.

௩௧ அப்போது யோவாப் எழுந்திருந்து அப்சலோமண்டைக்கு வீட்டிற்குப்போய், எனக்கிருக்கிற நிலத்தையுமுடையவேலைக்காரர் அக்கினியாலேகொளுத்திப்போட்டதென்னவென்றவனைக்கேட்டான்.

௩௨ அப்சலோம் யோவாபோடேசொன்னதாவது, இதோ, உம்மையிராசாவண்டைக்கனுப்பி நான்கெசூரிலிருந்து என்னத்திற்காகவந்தேன். நானின்னமங்கேயிருந்தாலதாவிலையென்று அவருக்குச்சொல்லும்படிக்கு உம்மை யிங்கேவரும்மென்று அழைத்தனுப்பினேன். இப்போதுமநான் இராசாவின் முகத்தைப் பார்க்கட்டும். அல்லவென்று என்மேல் குற்றமிருந்தால அவர் என்னைக்கொல்லக்கடவரென்றான்.

௩௩ யோவாப் இராசாவண்டைக்குப் பிரவேசித்து அதை யவனுக்கு அறிவித்தபோது அப்சலோமை யழைப்பித்தான். அப்போது அவன் இராசாவண்டைக்குப்பிரவேசித்து, இராசாவுக்குமுன்பாகத் தரையிலேமுகங்குப்புறப்பணிந்தான் அப்போது இராசா அப்சலோமை முத்திசெய்தான்.

௧௫. அதிகாரம்.

கலகம்பண்ணின தன்குமாரனாகிய அப்சலோமுக்குத் தாவீது தப்பித்துக்கொண்டோடிப்போனது.

இதற்குப்பிறபாடு சம்பவித்ததேதென்றால் அப்சலோம் இரதங்களையுங் குதிரைகளையுந் தனக்குமுன் ஓடும் ஐம்பது சேவகரையுந் தனக்குச்சம்பாதித்தான்.

௨ இதல்லாமல் அப்சலோம் காலமேயெழுந்திருந்து, வாசல்வழியோரத்திலே நின்றுகொண்டு, எவனுக்காகிலுந்தனக்கு இருவழக்கினிமித்தம் இராசாவண்டைக்கு நியாயத்திற்காக உட் பிரவேசிக்கப்போனால், அவனை அவன் அழைத்து, நீயெந்த ஊரானென்றுகேட்பான். இவன் உமதடியான் இஸ்ரவேல் கோத்திரங்களிலொன்றுக் கடுத்த இன்ன ஊரானென்றால்,

௩ அப்போது அப்சலோம் அவனுடனே, இதோ, உன்காரியங்கள் நன்மையுஞ்செம்மையுமானவைகள்தான். ஆகில் இராசாவிடத்திலே உனக்குக் கேள்விகொடுப்பாரில்லையென்பான்.

௪ பின்னையும் அப்சலோம், ஆ, வழக்குக்காரியங்களுக்குள்ளவர்களெல்லாரும் என்னண்டைக்குவந்து நான் அவர்களுக்கு நியாயஞ்செய்யும்படிக்கு என்னைத்

தேசத்திலே நியாயாதிபதியாக வைப்பவனோ என்பான்.

௫ ஒருவன் அவனை வணங்கக் கிட்டச்சேரும்போது அவன் தன் கையை நீட்டி அவனைப் பிடித்து முத்தஞ்செய்வான்.

௬ இந்தப்பிரகாரமாக அப்சலோம் ராசாவினிடத்துக்கு நியாயத்திற்காக வருகிற இஸ்ரவேலுக்கெல்லாஞ் செய்து, இஸ்ரவேல் மனுஷருடைய இருதயத்தைத் திருடிக்கொண்டான்.

௭ நாற்பது வருஷமாகிறபோதோவெனில், அப்சலோம் ராசாவோடே சொன்னது, நான் கர்த்தருக்குப் பண்ணின என் பொருத்தனையை எப்ரோனிலே செலுத்தும்படிக்கு நான் போகட்டுமே.

௮ என்னவென்றால் கர்த்தர் என்னை எருசலேமுக்குத் திரும்பப் பண்ணினால் கர்த்தருக்கு ஆராதனை செய்வேனென்று உமதடியானாகிய நான் சீரியதேசத்துக் கேசூரிலே குடியிருக்கிறபோது பொருத்தனை பண்ணினேனென்றான்.

௯ ராசா அவனுடனே, சமாதானத்தோடே போவென்றான். அப்போது அவன் எழுந்து எப்ரோனுக்குப் போனான்.

௰ ஆனால் அப்சலோம் இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் வேவுகாரரை அனுப்பி, நீங்கள் எக்காளத்தொனியைக் கேட்கும்போது அப்சலோம் எப்ரோனிலே ராசாவானானென்று சொல்லுங்களென்று சொல்லச்சொல்லியிருந்தான்.

௰௧ அப்சலோமோடே கூட எருசலேமிலிருந்து இருநூறுபேரும் அழைக்கப்பட்டுப் போனார்கள். ஆனால் அவர்கள் ஒன்றும் அறியாமல் தங்கள் உத்தமகுணத்தோடே போனார்கள்.

௰௨ அப்சலோம் பலிகளைச் செலுத்துகையில் தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேலென்கிற கீலோனியனை அவன் ஊராகிய கீலோவிலிருந்துவர வழைத்தான். அப்படியே ஒப்பந்தம் பலத்து, சனம் அப்சலோமண்டைக்குத் திரளாய் வந்து கூடிற்று.

௰௩ அதை யறிவிக்கிற ஒருவன் தாவீதினிடத்துக்கு வந்து, இஸ்ரவேலர் அனைவருடைய இருதயம் அப்சலோமைப் பின்பற்றிப் போகிறதென்றான்.

௰௪ அப்போது தாவீது எருசலேமிலே தன்னோடே கூட இருக்கிற தன்னுடைய எல்லா ஊழியக்காரரோடும், எழுந்து ஓடிப்போவோமாக. மறுபடி நாம் அப்சலோமுக்குத் தப்ப இடமில்லை. அவன் தீவிரித்து நம்மைச் சேர்ந்து பிடித்து, நம்முடையமேல் பொல்லாப்பை வரப்பண்ணிப் பட்டணத்தைப் பட்டயக் கருக்கினால் அடிக்காதபடிக்குப் போகத் தீவிரம்பண்ணுங்களென்றான்.

௰௫ ராசாவின் ஊழியக்காரர் ராசாவுடனே, இதோ, ராசாவாகிய எங்கள் ஆண்டவன் தெரிந்துகொள்ளுங் காரியத்திலெல்லாம் உமதடியாராகிய நாங்கள் ஆயத்தமாயிருக்கிறோமென்றார்கள்.

௰௬ அப்படியே ராசாவும் அவனுடைய எல்லா வீட்டாரும் கால்நடையாய்ப் புறப்பட்டார்கள். ஆனால் வீட்டைக் காக்க ராசா வைப்பாட்டிகளாகிய பத்து ஸ்திரீகளைப் பின்வைத்தான்.

௰௭ ராசாவும் எல்லாச் சனமும் கால்நடையாய்ப் புறப்பட்டுப் போய்த் தூரமான ஒரு இடத்திலே தரித்திருந்தார்கள்.

௰௮ அவனுடைய எல்லா ஊழியக்காரரும் எல்லாக் கிரேத்தியரும் எல்லாப் பிலேத்தியரும் அவனண்டைக்கு நடந்துபோனார்கள். காத்ஊரிலிருந்து கால்நடையாய் வந்திருந்த அறுநூறுபேராகிய எல்லாக் கித்தியரும் ராசாவுக்கு முன்பாக நடந்தார்கள்.

௰௯ அப்போது ராசா கித்தியனாகிய ஈத்தாயுடனே சொன்னதாவது, நீயும் எங்களோடே கூட வருவானேன்? நீ திரும்பிப்போய் ராசாவுடனே கூடயிரு. ஏனெனில் நீ மறுதேசத்தான். நீ உன் ஸ்தானத்திற்குத் திரும்பப்போவாயே?

௨௰ நீ நேற்றே வந்தாய். நான் உன்னை இன்றைக்கு எங்களோடே கூட நடக்கும்படிக்கு அழைத்துப் போவேனோ? நான் போகக்கூடிய இடத்திற்குப் போகிறேன். நீ திரும்பி உன்னோடே உன் சகோதரரையுந் திரும்ப அழைத்துக்கொண்டுபோ. கிருபையும் உண்மையும் உன்மேலிருப்பதாகவென்றான்.

௨௧ ஆனால் ஈத்தாய் ராசாவுக்குப் பிரதியுத்தாரமாக, ராசாவாகிய என் ஆண்டவன் எங்கேயிருப்பாரோ? அங்கே உமதடியானுஞ் சாவுக்கும் பிழைப்புக்கும் இருப்பானென்று கர்த்தருடைய சீவனையும் ராசாவாகிய என் ஆண்டவனுடைய சீவனையுங் கொண்டு சொல்லுகிறேனென்றான்.

௨௨ அப்போது தாவீது ஈத்தாயுடனே கூட நடந்துபோவென்றான். அப்படியே கித்தியனாகிய ஈத்தாயும் அவனுடைய எல்லா மனுஷரும் அவனோடிருக்கிற எல்லாப் பிள்ளைகளும் நடந்துபோனார்கள்.

௨௩ ஜனமெல்லாம் நடந்துபோகிறபோது தேசத்தாரெல்லாரும் மகா சத்தமாயழுதார்கள். இராசா கீதரோன் ஆற்றைக்கடந்தான் சனமெல்லாம் வனாந்திரத்திற்குப் போகிற வழியே நடந்து போனார்கள்.

௨௪ இதோ, சாதோக்கும் பராபரனுடைய உடம்படிக்கையின் பெட்டியைச் சுமக்கிற அவனோடே கூடவிருக்கிற எல்லாலேவியரும் வந்து பராபரனுடைய பெட்டியை அங்கே வைத்தார்கள். சனமெல்லாம் பட்டணத்திலிருந்து கடந்து தீருமட்டும் அபியத்தார் பலியிட்டான்.

௨௫ அப்பொழுது இராசா சாதோக்குக்குச் சொன்னதாவது, பராபரனுடைய பெட்டியைப் பட்டணத்திற்குத் திரும்பக்கொண்டுபோ. கர்த்தருடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்தால் அவர் என்னைத் திரும்ப வரப்பண்ணி அதையும் அவர் வாசஸ்தலத்தையும் பார்க்கிறதற்கு என்னைத் திரும்ப வரப்பண்ணுவார்.

௨௬ உன்மேல் நமக்குப் பிரியமில்லையென்று சொன்னாரேயாகில், இதோ, இங்கேயிருக்கிறேன். அவர் தம்முடைய பார்வைக்கு நலமானபடி எனக்குச் செய்வாராகவென்றான்.

௨௭ பின்னையும் இராசா ஆசாரியனாகிய சாதோக்கோடே சொன்னது, நீ ஞானதிஷ்டியுள்ளவனல்லவே? நீ சமாதானத்தோடே பட்டணத்திற்குத் திரும்பு. உங்கள் இரண்டு குமாரராகிய உன்மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானும் உங்களோடே கூடத் திரும்பிப் போகட்டும்.

௨௮ இதோ, எனக்கு அறிவிக்கிறதற்கு உங்களிடத்திலிருந்து செய்தி வருமட்டும் நான் வனாந்திரத்தின் வெளிகளிலே தரித்திருப்பேனென்றான்.

௨௯ அப்படியே சாதோக்கும் அபியத்தாரும் பராபரனுடைய பெட்டியை எருசலேமுக்குத் திரும்பக் கொண்டுபோய் அங்கேயிருந்தார்கள்.

௩௰ தாவீது அழுதிறவனுமாய் முக்காடிட்டவனுமாய் வெறுங்காலால் நடக்கிறவனுமாய் ஒலிவமலையின்மேலேறிக்கொண்டுபோனான். அவனோடிருக்கிற எல்லாச் சனமும் அவரவர் முக்காடிட்டழுகிறவர்களாய் ஏறிப்போனார்கள்.

௩௧ அந்தத் தோப்பேலும் அப்சலோமோடே ஒப்பந்தம்பண்ணினவர்களிலொருவனென்று தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது, தாவீது, கர்த்தாவே! அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்கிப் போடுமென்றான்.

௩௨ தாவீது மலையின் உயர்ந்தமட்டும் வந்து அங்கே பராபரனைப் பணிந்துகொண்டபோது சமபவித்ததேதென்றால், இதோ, அற்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டு தன் தலையின்மேலே புழுதியைப்போட்டுக்கொண்டவனாய் அவனுக்கெதிர்ப்பட்டான்.

௩௩ அவனோடே தாவீது சொன்னதாவது, நீ என்னோடே கூட நடந்துவந்தால் எனக்குப் பாரமாயிருப்பாய்,

௩௪ நீ பட்டணத்திற்குத் திரும்பிப்போய் அப்சலோமுக்கு இராசாவே! உம்முடைய ஊழியக்காரனாயிருப்பேன். முதல் நான் உம்முடைய தகப்பனுடைய ஊழியக்காரனாயிருந்தேன். இப்போதோவென்றால் நானும் உம்முடைய ஊழியக்காரனென்றுசொல்லுவாயாகில், எனக்காக அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பயித்தியமாக்குவாய்.

௩௫ உன்னோடே அங்கே சாதோக்கும் அபியத்தாருமென்கிற ஆசாரியரிருக்கிறார்களல்லவா? இராசாவின் வீட்டிலே நீ கேட்கிற எந்தச் செய்தியைக் கேட்கிறாயோ அதைச் சாதோக் அபியத்தாரென்ற ஆசாரியருக்கறிவிப்பாய்.

௩௬ இதோ, அங்கே அவர்களோடே, அவர்கள் இரண்டு குமாரராகிய சாதோக்கின் மகன் அகிமாசும் அபியத்தாரின் மகன் யோனத்தானுமிருக்கிறார்கள். நீங்கள் கேட்கிற செய்தியையெல்லாம் அவர்கள் கையில் எனக்கனுப்புவீர்களாகவென்றான்.

௩௭ அப்படியே தாவீதின் சிநேகிதனாகிய ஊசாய் பட்டணத்திற்கு வந்தான். அப்சலோமும் எருசலேமுக்கு வந்தான்.

௰௬. அதிகாரம்.

சீபா மேவிபோசேத்தையப் பற்றிப் பண்ணினது.

தாவீது மலைச்சிகரத்திலிருந்து சற்றப்புறம் நடந்துபோனபோது, இதோ, மேவிபோசேத்தின் வேலைக்காரனாகிய சீபா பொதிகளைச் சுமக்கிற இரண்டு கழுதைகளையோட்டிக்கொண்டுவந்து அவனைச் சந்தித்தான். அவைகளில் இருநூறு அப்பங்களும் வற்றலான நூறு திராட்சப்பழக்குலைகளும் வசந்தகாலத்துப் பலனான நூறுகுலைகளும் ஒரு துருத்தித் திராட்சப்பழ இரசமுமிருந்தது.

௨ இராசா சீபாவை பார்த்து, இவைகளென்னதெனறுகேடடதறகுச் சீபாவெனறவன, கழுதைகள இராசாவின வீடடார் ஏறுகிறதற்கும, அபபஙகளும பழஙகளும வாலிபர்போசிககிறதற்கும, வனாநதிரததில விடாயதது போனவர்கள குடிககிறதறகுமதானெனறான.

௩ அபபோது இராசா, உனனுடைய எசமானுடைய குமாரன எஙகேயெனறு கேடடதறகுச் சீபா இராசாவுடனே, இதோ, எருசலேமிலிருககிறான. ஏனெனில இனறு இஸரவேல வீடடார் என தகபபனுடைய இராசசியததை யெனவசமாயததிருமபபபணணுவார்களெனறு சொனனான.

௪ அபபோது இராசா சீபாவுககு, இதோ, மேவிபோசேததிற்கு உணடானதெலலாம உனனுடையதாகக் கடவதெனறான. அதற்குச் சீபா, இராசாவாகிய எனனுடையவனே! நான பணிநதுகொளளுகிறேன. உமமுடைய கண்களிலென ககுததயவுகிடைககடடுமெனறான.

சீமேயீதாவீதைத தூஷணிததது.

௫ தாவீது இராசா பகூரீமமடடுமவநதபோது, இதோ, சவுல வீடடுவமசததாருளிருககிற கேராவின குமாரனாகிய சீமேயியெனறு பேருள்ள ஒருமனுஷன அஙகேயிருநது புறபபடடுத் தூஷணிததுககொணடேநடநதுவநது,

௬ எலலாசசனமும எலலாபபலசாலிகளும தாவீதினவலதுபுறமாகவும இடதுபுறமாகவும நடக்கககொளள, தாவீதின மேலும தாவீது இராசாவுடைய எலலா ஊழியககாரர் மேலும கலலுகளை யெறிநதான.

௭ சீமேயி அவனைத தூஷணிககையிற் சொனனவார்ததைகளாவது, இரததபபிரியனே! பேலியாளினமனுஷனே! புறபபடடுபபோ புறபபடடுபபோ.

௮ சவுலின ஸதலததில இராசாவானவனபேரிலே கர்ததர் சவுலவீடடாரின இரததபபழியைததிருமபபபணணினார் கர்ததர் இராசசியபாரததைஉனகுமாரனாகிய அபசலோமின கையிலேயொபபுககொடுததார். இபபவும இதோ, உனதிர்பபாககியததோடிருககிறாய. ஏனெனில நீ இரததபபிரியனானமனுஷனெனறான.

௯ அபபோது சேருயாவினகுமாரனான அபிசாய் இராசாவுடனே, அநதசசெததநாய் இராசாவாகிய எனனுடையவனைத தூஷணிபபானேன? நானபோய அவனதலையை வாஙகடடுமேயெனறான.

௰ இராசாவோவெனறால், சேருயாவின குமாரரே! எனககும உஙகளுககுமெனன? அவன எனனைத தூஷணிககடடும, ஏனெனில தாவீதைத தூஷணியெனறு கர்ததர் அவனுககுச்சொனனார். ஆகையால ஏன இபபடிச செயகிறாயெனறுசொலலததககவனார்? எனறான.

௰௧ பினனையுநதாவீது அபிசாயோடுநதனனுடைய எலலா ஊழியககாரரோடுஞ சொனனது, இதோ, என கெர்பபபிறபபான எனனுடையகுமாரன எனபிராணனைவாஙகததேடுகிறானே, இநத பெனியமீனின குமாரன இபபோது எததனையதிகம? அவன தூஷணிககடடும. ஏனெனிற் கர்ததர் அவனுககு அபபடிசசொனனார்.

௰௨ ஒருவேளை கர்ததர் எனசிறுமையைபபார்தது, இநத நாளிலநடநத அவன நிநதனைககுபபதிலாக எனககு நனமையைசசரிககடடுவாரெனறான.

௰௩ அபபடியே தாவீதும்வனமனுஷரும்வழியிலே நடநதுபோனார்கள. சீமேயியும மலையினபககததிலே அவனுககெதிராக நடநதுதூஷணிதது, அவனுககெதிராகக் கலலுகளை யெறிநதுமணணைத தூறறிககொணடேவநதான.

௰௪ இராசாவும அவனோடிருககிற எலலாசசனமும விடாயததவர்களாகத தஙகுமிடததிலேசேர்நது தேறினார்கள.

அபசலோம் எருசலேமுககு வநது செயதகாரியம்.

௰௫ அபசலோமும இஸரவேலமனுஷராகிய எலலாசசனமும அவனோடே கூடஅகிததோபேலுமஎருசலேமுககுவநதார்கள.

௰௬ அற்கியனாகிய ஊசாய்எனறதாவீதினசிநேகிதனானவனால அபசலோமணடைககுவநதபோது, ஊசாய் அபசலோமுடனே, இராசாவே! வாழ்கஇராசாவே! வாழ்கவெனறான.

௰௭ அபபோது அபசலோம ஊசாயுடனே, உனசிநேகிதனமேல உனககிருககிற தயவு இதுதானோ? உன சிநேகிதனோடே நீ போகாதேபோனதெனனவெனறதறகு,

௰௮ ஊசாய் அப்சலோமோடேசொனனது, அபபடியலல, கர்ததரும இநதசசனமும இஸரவேல மனுஷர் அனைவருந தெரிநதுகொளளுகிறவனாயே நான சேர்நது அவனோடேயிருபபேன.

௧௯ இதுவுமல்லாமல் ஆருக்கு நான் ஊழியக்காரனாயிருப்பேன்? அவருடைய குமாரனுக்கல்லவோ? உம்முடைய தகப்பனுக்கு முன்பாக எப்படி ஊழியஞ்செய்தேனோ அப்படியே உமக்கு முன்பாகச் செய்துகொண்டிருப்பேனென்றான்.

௨௰ அப்சலோம் அகித்தோப்பேலுடனே, நாங்கள் செய்யவேண்டியதென்னவென்று ஆலோசனை கொடுங்களென்றான்.

௨௰௧ அப்பொழுது அகித்தோப்பேல் அப்சலோமுடனே, வீட்டைக் காக்க உம்முடைய தகப்பன் பின்வைத்த அவருடைய வைப்பாட்டிகளிடத்தில் உட்பிரவேசியும். அப்பொழுது உம்முடைய தகப்பனுக்கு நாற்றமானீரென்பதை இஸ்ரவேலெல்லாங் கேட்டு, உம்மோடிருக்கிற எல்லாருடைய கைகளும் பலக்குமென்றான்.

௨௰௨ அப்படியே அப்சலோமுக்கு உப்பரிகையின்மேல் ஒரு கூடாரத்தைப் போட்டார்கள். அங்கே அப்சலோம் எல்லா இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாகத் தன் தகப்பனுடைய வைப்பாட்டிகளிடத்தில் உட்பிரவேசித்தான்.

௨௰௩ அந்நாட்களில் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை பராபரனுடைய வாக்கைக் கேட்டதுபோலிருந்தது. அப்படி அகித்தோப்பேலின் ஆலோசனையெல்லாம் தாவீதுக்குமிருந்தது. அப்சலோமுக்குமிருந்தது.

௰௭. அதிகாரம்.

தாவீதின்மேல் இன்னபடியாய்ப் போகவேண்டுமென்று அகித்தோப்பேல் அப்சலோமுக்குச் சொன்ன யோசனையை ஊசாய் அபத்தமாக்கினது.

பின்னையும் அகித்தோப்பேல் அப்சலோமோடே சொன்னது, நான் பன்னீராயிரம் பேரைத் தெரிந்துகொண்டெழுந்து இன்று இராத்திரிக்குத் தாவீதைப் பின்தொடர்ந்தே போவேன்.

௨ அவன் விடாய்த்தவனுங் கைசளர்ந்தவனுமாயிருக்கக்கொள்ள நான் அவன்மேல் போய் அவனைத் திடுக்கிடப்பண்ணுவேன். அப்பொழுது அவனோடிருக்கிற சனமெல்லாம் ஓடிப்போவதினால் நான் இராசா ஒருவனையே வெட்டி,

௩ சனத்தையெல்லாம் உம்முடைய சமயத்திருப்பப்பண்ணுவேன். இப்படிச் செய்ய நாவகைதேடுகையால் எல்லாருந் திரும்பின்பின் சனமெல்லாஞ் சமாதானத்தோடிருக்குமென்றான்.

௪ இந்த வார்த்தை அப்சலோமின் பார்வைக்கும் இஸ்ரவேலுடைய எல்லா மூப்பரின் பார்வைக்கும் நன்றாயிருந்தது.

௫ ஆகிலும் அப்சலோம், அற்கியனாகிய ஊசாயைக் கூப்பிட்டு அவன் வாய்மொழியையுங் கேட்போமென்றான்.

௬ ஊசாய் அப்சலோமண்டைக்கு வந்தபோது அப்சலோம் அவனுடனே இந்தப் பிரகாரமாக அகித்தோப்பேல் சொன்னான். அவன் வார்த்தையின்படி செய்வோமோ? அல்லவென்றால் நீ சொல்லென்றான்.

௭ அப்பொழுது ஊசாய் அப்சலோமோடே, அகித்தோப்பேல் இந்தவிசை கொடுத்த ஆலோசனை நல்லதல்லவென்றான்.

௮ பின்னையும் ஊசாய் சொன்னது, உம்முடைய தகப்பனும் அவனுடைய மனுஷரும் பலசாலிகளென்றும் வெளியிலே குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல மனமெரிகிறவர்களென்றும் நீர் அவர்களையறிவீர். உம்முடைய தகப்பன் நல்ல சேவகனுமாயிருக்கிறான். அவன் இராக்காலத்திலே சனத்தோடே தங்குவதில்லை.

௯ இதோ, அவன் இப்பொழுது யாதொரு கெபியிலாகிலும் வேறே யாதொரு விடத்திலாகிலும் ஒளித்திருப்பான். துவக்கத்திலே நம்மில் இவர்களில் சிலர் பட்டார்களேயானால் அதைக் கேட்கிற யாவரும் அப்சலோமைப் பின்செல்லுகிற சனத்தில் சங்காரமுண்டாயிற்றென்பார்கள்.

௰ அப்பொழுது சிங்கத்தின் இருதயத்துக்கொத்த இருதயமுள்ள பலவானாயிருக்கிறவனுங்கூட முற்றிலும் மனங்கலங்கிப் போவான். ஏனெனில் உம்முடைய தகப்பன் சவுரியவானென்றும் அவனோடிருக்கிறவர்கள் பலசாலிகளென்றும் இஸ்ரவேலெல்லாம் அறியும்.

௰௧ நான் சொல்லுகிற யோசனையேதென்றால், தாண் துவக்கி பெயெர்செபா மட்டுமிருக்கிற கடற்கரை மணலைப்போலத் திரட்சியான இஸ்ரவேலெல்லாம் உம்மண்டைக்கூட்டங் கூட்டப்பட்டு, நீர்தாமே கூட யுத்தத்துக்குப் போகவேண்டுமென்பதுதானே.

௰௨ அப்பொழுது அவன் கண்டுபிடிக்கப்படுகிற எவ்விடத்திலாகிலும் நாம் அவனிடத்திற்குப் போய்ப் பனி பூமியின்மேல் பெய்கிற அத்தனையாய் அவன்மேல் விழுவோம். அப்படியே அவனோடிருக்கிறவர்களெல்லாருக்குள்ளும் ஒருவனும் அவனுக்கு மீதியாயிருப்பதில்லை.

௰௩ ஒரு பட்டணத்திற்குட் புகுந்தானேயானால், இஸ்ரவேலெல்லாம் அந்தப் பட்டணத்தின்மேலே கயிறுகளைப் போட்டு, அங்கே ஒரு பொடிக்கல்லுங் காணப்படாதேபோகுமட்டும் அதை ஆற்றிலே இழுத்துப் போடுவார்களாகவென்றான்.

௰௪ அப்போது அப்சலோமும் இஸ்ரவேலர் அனைவரும் அகித்தோப்பேலின் ஆலோசனையைப்பார்க்க அர்கியனாகிய ஊசாயின் ஆலோசனை நல்லதென்றார்கள். இப்படிக் கர்த்தர் அப்சலோமின்மேல் பொல்லாப்பை வரப்பண்ணும்படிக்கு அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை அபத்தமாக்குகிறதற்குக் கட்டளையிட்டார்.

௰௫ பின்பு ஊசாய் சாதோக் அபியத்தாரென்னும் ஆசாரியர்களோடே சொன்னது, இன்னபடி அகித்தோப்பேல் அப்சலோமுக்கும் இஸ்ரவேலின் மூப்பருக்கும் ஆலோசனை சொன்னான். நானோ இன்னபடி ஆலோசனை சொன்னேன்.

௰௬ இப்போதும் நீங்கள் சீக்கிரமாய்த் தாவீதுக்கு அறிவிக்கும்படிக்குச் செய்தியனுப்பி, நீர் இராவைக்கு வனாந்திரத்தின் வெளிகளிலே தங்கவேண்டாம், இராசாவும் அவரோடிருக்கிற எல்லாச் சனமும் விழுங்கப்படாதபடிக்கக் கரைக்குத் தாமதியாமலே போமென்று சொல்லச் சொல்லுங்களென்றான்.

௰௭ யோனத்தானும் அகிமாகசும் ரோகேல் என்கிற துரவண்டை நின்றிருந்தார்கள். அவர்கள் போய்த் தாவீது இராசாவுக்கு அதை அறிவிக்கும்படிக்கு ஒரு வேலைக்காரி போய் அதை அவர்களுக்குச் சொன்னாள். ஏனெனில் அவர்கள் தங்களைக் காண்பிக்கப் பட்டணத்திற்குள் வரக்கூடாதிருந்தது.

௰௮ ஆனாலும் ஒரு பிள்ளையாண்டான் அவர்களைக் கண்டு அப்சலோமுக்கு அறிவித்தான். ஆகையால் அவர்களிருவருஞ் சீக்கிரமாய்ப் போய்ப் பகூரிமிலிருக்கிற ஒரு மனுஷன் வீட்டிற்குட் பிரவேசித்து, அவன் முற்றத்தில் ஒரு துரவு இருக்க அதிலே அவர்கள் இறங்கினார்கள்.

௰௯ அப்பொழுது ஸ்திரீ ஒரு மூடியையெடுத்துக் கிணற்றுவாயின்மேலே விரித்துக் காயப்போட்ட தானியத்தை அதின்மேலே பரப்பி வைத்தாள்.

௨௰ அப்சலோமின் சேவகர் அந்த ஸ்திரீயினிடத்தில் அந்த வீட்டுக்கு வந்து, அகிமாகசும் யோனத்தானும் எங்கேயென்று கேட்டார்கள். அவர்களுக்கு அந்த ஸ்திரீ வாய்க்காலுக்கப்பாலே போய்விட்டார்களென்றாள். இவர்கள் தேடிக்காணாதேபோய் எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

௨௧ இவர்கள் போனபின்பு அவர்கள் துரவிலிருந்தேறிப்போய்த் தாவீது இராசாவுக்கு அறிவித்துத் தாவீதுடனே, சீக்கிரமாயெழுந்து ஆற்றைக் கடந்துபோங்கள். ஏனெனில் இன்னபடி அகித்தோப்பேல் உங்களுக்கு விரோதமாய் ஆலோசனை சொன்னானென்றார்கள்.

௨௨ அப்பொழுது தாவீதும் அவனோடிருக்கிற எல்லாச் சனமும் எழும்பி யோர்தானைக் கடந்தார்கள். பொழுது விடியுமட்டும் யோர்தானைக் கடவாதவொருவரும் பின்வைக்கப்பட்டதில்லை.

௨௩ அகித்தோப்பேல் தான் சொன்ன ஆலோசனையின்படி நடந்ததில்லையென்று கண்டபோது தன் கழுதையின்மேலே சேணம் வைத்தேறித் தன் ஊரிலிருக்கிற தன் வீட்டுக்குப் போய்த் தன் வீட்டாருக்குத் திட்டம்பண்ணி, நான்றுகொண்டு செத்துத் தன் தகப்பன் கல்லறையிலடக்கம்பண்ணப்பட்டான்.

௨௪ தாவீது மகனாயீமுக்கு வந்தான். அப்சலோமுந் தன்னுடைய சனமாகிய எல்லா இஸ்ரவேலரோடுங்கூட யோர்தானைக் கடந்தான்.

௨௫ அப்சலோம் அமாசாவை யோவாபுக்குப் பதிலாக இராணுவத் தலைவனாக வைத்திருந்தான். இந்த அமாசா, நாகாசின் குமாரத்தியுஞ் செருயாவின் சகோதரியும் யோவாபின் தாயுமாகிய அபிகாளைப் படைத்த இஸ்ரவேலனாகிய எத்திராவென்னும் பேருள்ள ஒரு மனுஷனுடைய குமாரனாயிருந்தான்.

௨௬ இஸ்ரவேலும் அப்சலோமுங் கிலெயாத்தேசத்திலே பாளயமிறங்கினார்கள்.

௨௭ தாவீது மகனாயீமுக்குச் சேர்ந்தபோதோவெனில் அம்மோன் புத்திரரின் தேசத்து இரப்பா பட்டணத்தானாகிய சோபியென்ற நாகாசின் குமாரனும், லோதேபார் ஊரான் அம்மியேலின் குமாரனான மாகீரும், ரொகிலிம் ஊரானுங் கிலெயாத்தியனுமாகிய பர்சிலாயும்,

௨௮ மெத்தைகளையுங் கலங்களையும் மண்பாண்டங்களையுங் கோதுமையையும் வாற்கோதுமையையும் மாவையும் வறுத்த பயற்றையும் பெரும்பயற்றையுஞ் சிறுபயற்றையும் வறுத்த சிறுபயற்றையும்,

௨௯ தேனையும் வெண்ணெயையும் ஆடுகளையும் பசுவின் கெவுகட்டிகளையுந் தாவீதுக்கும் அவனோடிருக்கிற சனத்து

ற்குச் சாப்பிடும்படிக்குக் கொண்டுவந்தார்கள். ஏனெனில் அந்தச் சனம் வனாந்திரத்திலே பசியும் இளைப்புந் தவனமுமாயிருக்குமென்றார்கள்.

௰௮. அதிகாரம்.

அப்சலோந் தாவீதோடே பண்ணுகிற யுத்தத்திலே குத்துண்டு செத்தது.

தாவீது தன்னோடிருக்கிற சனத்தை யிலக்கம் பார்த்து அவர்கள் மேல ஆயிரத்துச் சேர்வைக்காரரையும் நூற்றுக்குச் சேர்வைக்காரரையும் வைத்து,

௨ பிறபாடு தாவீது சனத்தில் மூன்றத் தொருபங்கை யோவாபுடைய கையின் கீழும், மூன்றத்தொருபங்கைச் செருயாவின் குமாரனும் யோவாபின் சகோதரனுமான அபிசாயின் கையின் கீழும், மூன்றத்தொருபங்கைக் கேத்தியனாகிய ஈத்தாயினுடைய கையின் கீழும் அனுப்பி, நானுமுங்களோடே கூடப் புறப்பட்டு வருவேனென்று இராசா சனத்தோடே சொன்னான்.

௩ சனமோவென்றால் நீர் புறப்படவேண்டாம். ஏனெனில் நாங்கள் முறிந்தோடிப்போனாலும் அவர்கள் எங்கள் காரியத்தை மனதிலே வைப்பதில்லை. நாங்கள் பாதிப்பேர் செத்துப்போனாலும் எங்கள் காரியத்தை மனதிலே வைப்பதில்லை. ஏனெனில் இன்னம் எங்களைப்போலொத்த பதினாயிரம் பேரைத் திரும்பச் சேர்ப்பீர். இப்போதும் நீர் பட்டணத்திலிருந்து எங்களுக்கொத்தாசையாயிருக்கிறது எங்களுக்கு நல்லதாயிருக்குமென்றார்கள்.

௪ அப்போது இராசா அவர்களுடனே உங்களுக்கு நன்றாய்க் காண்கிறதைச் செய்வேனென்று சொல்லி, இராசா ஒலிமுகவாசலோரத்திலே நின்றான். சனமெல்லாம் நூறுகளும் ஆயிரங்களுமாய்ப் புறப்பட்டார்கள்.

௫ இராசா யோவாபுக்கும் அபிசாயிக்கும் ஈத்தாயிக்கும், அப்சலோமென்ற வாலிபனையெனக்காக மெதுவாய் நடப்பியுங்களென்று கற்பித்தான். இப்படி இராசா அப்சலோமுக்காகத் தலைவருக்கெல்லாங் கற்பிக்கிறதைச் சனமெல்லாங் கேட்டார்கள்.

௬ சனம் வெளியே இஸ்ரவேலுக்கெதிராகப் புறப்பட்டபிறபாடு எப்பிராயீமின் காட்டிலே யுத்தமுண்டாயிற்று.

௭ அங்கே இஸ்ரவேல் சனந் தாவீதின் சேவகருக்கு முன்பாக முறியடிக்கப்பட்டார்கள். அங்கே யன்றையத்தினம் இருபதினாயிரம் பேர் விழத்தக்கதாயான பெரிய சங்காரமாயிற்று.

௮ அங்கே யுத்தம் அந்தத் தேசத்தின் மீதெங்கும் பரந்து அன்றையத்தினம் பட்டயம் பட்சித்தவர்களைப் பார்க்கிலுங் காடு சனத்தில் அதிகம் பேரைப் பட்சித்தது.

௯ அப்சலோந் தாவீதின் சேவகருக்கெதிர்ப்பட்டான். ஆனால் அப்சலோங் கோவேறு கழுதையின்மேலேறி வரக்கொள்ள அந்தக் கோவேறு கழுதை சன்னலின்னலான ஒரு பெரிய கர்வாலி மரத்தின் கீழ் வந்ததினால் அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டு, அவன் ஆகாயத்திற்கும் பூமிக்கும் நடுவே தொங்கினான். ஏனென்றால் அவன் கீழிருந்த கோவேறு கழுதை அப்பாலே போயிற்று.

௰ அதையொருவன் கண்டு யோவாபுக்கறிவித்து, இதோ, அப்சலோமை யொருகர்வாலி மரத்திலே தொங்கக் கண்டேனென்றான்.

௰௧ அப்போது யோவாப் தனக்கதை யறிவித்தவனுக்கு, இதோ, அதைக்கண்டாயே? பின்னையேன் அவனை யங்கே வெட்டித் தரையிலே போடாதே போனாய்? நானுனக்குப் பத்து வெள்ளிக் காசையும் ஒருக்கச்சையையுங் கொடுக்கக் கடனாளியாயிருப்பேனேயென்றான்.

௰௨ ஆனால் அந்த மனுஷன் யோவாபுடனே சொன்னதாவது, நானென்கையில் ஆயிரம் வெள்ளிக்காசை நிறுத்துக்கொள்ளக் கொடுப்பட்டாலும் நான் இராசாவுடைய குமாரன்மேல என்கையை நீட்டுவதில்லை. ஏனெனில் அப்சலோமென்ற வாலிபனை நீங்கள் அவரவர் காருங்களென்று இராசா உமக்கும் அபிசாயிக்கும் ஈத்தாயிக்கும் எங்கள் காதுகள் கேட்கக் கற்பித்தாரே.

௰௩ அல்லவென்று நான் என் மனச்சாட்சிக்கு விரோதமாய் அதைச் செய்திருந்தாலும், இராசாவுக்கெந்தக்காரியமும் மறைந்திருப்பதில்லை. நீர்தானும் எனக்கெதிராக நிற்பீரென்றான்.

௰௪ ஆனாலே யோவாப் நான் இப்படியுன்னோடே பேசித் தாமதிக்கமாட்டேனென்று சொல்லி, மூன்றுவல்லயங்களைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு, அப்சலோம் இன்னங் கர்வாலிமரத்தின் நடுவிலே யுயிரோடே தொங்கக் கொள்ள அவைகளை யவன் இருதயத்திற்குட் குத்தினான்.

௰௫ அப்போது யோவாபின் ஆயுதங்களைப் பிடிக்கிற பத்து வேலைக்காரருஞ்

ந்துகொண்டு, அப்சலோமை யடித்துக் கொன்றுபோட்டார்கள்.

௰௬ அப்போது யோவாப் எக்காளமூதினான். அதுகொண்டு இஸ்ரவேலைப் பின்தொடருகிறதைவிட்டுச் சனந் திரும்பிற்று. ஏனென்றால் யோவாப் சனத்தை நிறுத்திப்போட்டான்.

௰௭ அவர்கள் அப்சலோமையெடுத்து அவனைக் காட்டிலிருந்த ஒரு பெரிய குழியிலே போட்டு, அதின்மேல் மகாப்பெரிய கற்குவியலைக் குவித்தார்கள். ஆனால் இஸ்ரவேலெல்லாம் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கோடிப்போனார்கள்.

௰௮ அப்சலோமோவெனில் உயிரோடேயிருக்கையில், என்பேரை நினைக்கப்பண்ண எனக்குக் குமாரனில்லையென்று சொல்லி, இராசாவின் பள்ளத்தாக்கிலிருக்கிற ஒரு தூணைத் தனக்கெடுத்து நிறுத்தி, அந்தத் தூணுக்குத் தன்பேரைத் தரித்திருந்தான். அது இந்நாள்வரைக்கும் அப்சலோமின் அடையாளமென்று சொல்லப்படுகின்றது.

௰௯ சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ் கர்த்தர் இராசாவையவர் சத்துருக்கள்கைக்கு நீங்கலாக்கி நியாயஞ்செய்தாரென்கிற செய்தியை யவருக்குக் கொண்டுபோக நான் ஓடட்டுமேயென்றான்.

௨௰ ஆனால் யோவாப் அவனுடனே, நீ இன்றையத்தினம் நற்செய்தியைக் கொண்டுபோகிறவனல்ல, பின்னொரு நாளிலே நற்செய்தியைக் கொண்டுபோகலாம். இராசாவின் குமாரன் செத்தபடியினாலே இன்றைக்கு நீ செய்தியைக் கொண்டுபோகாயாகவென்றுசொல்லி,

௨௧ யோவாப் கூசியுடனே, நீ போய்க் கண்டதை இராசாவுக்கறிவியென்றான். கூசி யோவாபை வணங்கியோடினான்.

௨௨ ஆனால் சாதோக்கின் குமாரனாகிய அகிமாஸ் இன்னமும் யோவாபுடனே, என்னமானாலும் கூசியின்பிறகாலே நானும் ஓடட்டுமேயென்று திரும்பக் கேட்டதற்கு யோவாபென்றவன் என்மகனே! உனக்கு நற்செய்திகிடையாதிருக்கக்கொள நீயோடவேண்டியதென்னவென்றான்.

௨௩ ஆனால் அவன், என்னமானாலும் ஓடுவேனென்றான். அப்போது யோவாப் அவனுக்கு ஓடென்றான். அப்படியே அகிமாஸ் சம்பூமிவழியாயோடிக் கூசியைக் கடந்துபோனான்.

௨௪ தாவீதோவென்றால் இரண்டு ஒலிமுகக்கெவுனிவாசலுக்கு நடுவாக உட்கார்ந்திருந்தான். சாமங்காக்கிறவன் அலங்கத்திலிருக்கிற வெளியின்மேல் நடந்து தன்கண்களையேறெடுத்தது, இதோ, ஒரு மனுஷன் தனியே ஓடிவருகிறதைக் கண்டு,

௨௫ கூப்பிட்டு, இராசாவுக்கறிவித்தான். அப்போது இராசா அவன் ஒருவனாய் வந்தால் அவன்வாயிலே நற்செய்தியிருக்குமென்றான். அவன் நடந்து கிட்டிவரக்கொள்ள.

௨௬ சாமங்காக்கிறவன் வேறொருவன் ஓடிவருகிறதைக் கண்டு, இதோ, பின்னொருவன் தனியே ஓடிவருகிறானென்று வாசற்காக்கிறவனோடே கூப்பிட்டுச் சொன்னான். அப்போது இராசா அவனும் நற்செய்தியைக் கொண்டுவருகிறவனென்றான்.

௨௭ பின்னையுஞ் சாமங்காக்கிறவன் முந்தினவனுடைய ஓட்டஞ் சாதோக்கின் குமாரனாகிய அகிமாசுடைய ஓட்டம்போலிருக்கின்றதென்று நான் காண்கிறேனென்றான். அப்போது இராசா, அவன் நல்ல மனுஷன். அவன் நற்செய்தியைச் சொல்லவருகிறானென்றான்.

௨௮ அகிமாஸ் வந்து இராசாவுடனே, சமாதானமென்று கூப்பிட்டுக்கொண்டு, முகங்குப்புற விழுந்து இராசாவை வணங்கி, இராசாவாகிய என்னாண்டவன்மேலே தங்கள் கைகளையெடுத்த மனுஷரையொப்புக்கொடுத்திருக்கிற உம்முடைய பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவரென்றான்.

௨௯ அப்போது இராசா, அப்சலோமென்ற வாலிபன் சுகமாயிருக்கிறானோவென்று கேட்டதற்கு, அகிமாசென்றவன் யோவாப் இராசாவின் வேலைக்காரனையும் உம்முடைய அடியானையும் அனுப்புகிறபோது ஒரு பெரிய சந்தடியைக் கண்டேன். ஆனால் அது என்னவென்றறியேனென்றான்.

௩௰ அப்போது இராசா, நீ அப்படிச் சுற்றிவந்து நில்லென்றான். அவன் சுற்றிவந்து நின்றான்.

௩௧ இதோ, கூசி வந்து, இன்று கர்த்தர் உமக்கு விரோதமாயெழும்பின எல்லாரினுடைய கைக்கும் உம்மை நீங்கலாக்கி நியாயஞ்செய்தார். இன்று இராசாவாகிய என்னாண்டவனுக்கு நல்லசெய்திவருகின்றதென்றான்.

௩௨ அப்போது இராசா கூசியை, அப்சலோமென்ற வாலிபன் சுகமாயிருக்கிறானோவென்று கேட்டதற்குக் கூசியென்றவன், அந்த வாலிபனுக்கு நடந்ததுபோல, இராசாவாகிய என்னாண்டவனுடைய சத்

துருக்களுக்கும் பொல்லாப்புச் செய்ய உமக்கு விரோதமாய் எழும்புகிற யாவருக்கும் நடக்கக்கடவதென்றான்.

௩௩ அப்பொழுது இராசா கலங்கிக் கெவுனிவாசலின் மேல்வீட்டிலேறி, அழுது, என் குமாரனாகிய அப்சலோமே! என் குமாரனே! என் குமாரனாகிய அப்சலோமே! நான் உனக்குப் பதிலாகச் செத்தேனலத விலை அப்சலோமாகிய என் குமாரனே! என் குமாரனே! என்று உலாவிச் சொல்லிக்கொண்டிருந்தான்.

௰௯. அதிகாரம்.

தாவீது எருசலேமுக்குத் திரும்பிவந்தது.

இதோ, இராசா அப்சலோமுக்காக அழுது துக்கங்கொண்டாடுகிறானென்று யோவாபுக்கு அறிவிக்கப்பட்டதினாலே,

௨ அன்றையத்தினம் அந்தச் செயம் சனத்திற்கெல்லாந் துக்கமாய் மாறிற்று. ஏனெனில் இராசா தம்முடைய குமாரனுக்காக மனம் நொந்திருக்கிறானென்று அன்றையத்தினஞ் சனங்கேட்டது.

௩ ஆகையாற் சனம் யுத்தத்தில் முறிந்ததினாலே வெட்கப்பட்டுத் திருட்டளவாய் வருகிறதுபோலே சனம் அன்றையத்தினந் திருட்டளவாய்ப் பட்டணத்திற்குள் வந்தது.

௪ இராசாவோவென்றால் முக்காடிட்டு மகா சத்தமாய், என் குமாரனாகிய அப்சலோமே! அப்சலோமாகிய என் குமாரனே! என் குமாரனே! என்று அலறிக்கொண்டிருந்தான்.

௫ அப்பொழுது யோவாப் உள்ளே இராசாவண்டைக்குப் பிரவேசித்துச் சொன்னதாவது, இன்று உம்முடைய சீவனையும் உம்முடைய குமாரர் குமாரத்திகளின் சீவனையும் உம்முடைய பெண்சாதிகளின் சீவனையும் உம்முடைய வைப்பாட்டிகளின் சீவனையுந் தப்புவித்த உம்முடைய எல்லா ஊழியக்காரரின் முகத்தையும் இன்று நீர் உம்மைப் பகைக்கிறவர்களைச் சிநேகிக்கிறதினாலும் உம்மைச் சிநேகிக்கிறவர்களைப் பகைக்கிறதினாலும் வெட்கப்படுத்தினீர்.

௬ ஏனென்றால் தலைவருஞ் சேவகரும் உமக்கு அற்பமானவர்களென்று இன்று அறியப்பண்ணினீர். அதேனென்றால் அப்சலோம் உயிரோடிருந்து நாங்களனைவரும் இன்று செத்திருந்தால் அப்பொழுது உம்முடைய பார்வைக்கு நல்லதாயிருக்குமென்று இன்று அறிந்துகொண்டேன்.

௭ இப்போதும் எழுந்திருந்து வெளியே வந்து உம்முடைய ஊழியக்காரரோடே அன்பாய்ப் பேசும்; ஏனென்றால் நீர் வெளியே வராதிருந்தால் இராவைக்கு ஒருவனும் உம்மோடே தங்கியிருப்பதில்லையென்று கர்த்தர்பேரில் ஆணையிடுகிறேன். அப்பொழுது உம்முடைய சிறுவதிலே துவக்கி, இதுவரைக்கும் உம்முடையமேல் வந்த எல்லாப் பொல்லாப்பையும் பார்க்க, அது உமக்கதிகப் பொல்லாப்பாயிருக்குமென்றான்.

௮ அப்பொழுது இராசா எழுந்திருந்துபோய் ஒலிமுகவாசலிலுட்கார்ந்தான். இதோ, இராசா ஒலிமுகவாசலிலுட்கார்ந்திருக்கிறானென்று எல்லாச்சனத்திற்கும் அறிவிக்கப்பட்டபோது, சனமெல்லாம் இராசாவுக்குமுன்பாக வந்தது. இஸ்ரவேலரோவென்றால் அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

௯ இஸ்ரவேலுடைய எல்லாக்கோத்திரங்களிலுமுள்ள சகலசனமுமோவென்றால் தங்களுக்குள்ளே வழக்காடிச் சொன்னதாவது, இராசா நம்முடைய சத்துருக்களின் கைக்கு நம்மை நீங்கலாக்கிவிட்டு, அவர் தானே பெலிஸ்தரின் கைக்கு நம்மைத் தப்புவித்தார். இப்போதோவென்றால் அப்சலோமுக்குத் தப்பத் தேசத்தைவிட்டோடிப்போனார்.

௰ ஆனால் நாம் நம்முடையமேல் அபிஷேகம்பண்ணிவைத்த அப்சலோம் யுத்தத்திலே செத்தானே. இப்போதும் இராசா திரும்ப அழைத்துவர நீங்கள் அமர்ந்திருப்பானேனென்று சொல்லிக்கொண்டார்கள்.

௰௧ இப்படி இஸ்ரவேலெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறது இராசாவிருக்கிற வீட்டிலேயவனுக்குக் கேள்வியானபடியினாலே தாவீது இராசா சாதோக் அபியத்தாரென்ற ஆசாரியர்களண்டைக்கு ஆளனுப்பி, நீங்கள் யூதாவின் மூப்பரோடே பேசி இராசாவைத் தம்முடைய வீட்டுக்குத் திரும்ப அழைத்துவர நீங்கள் பிந்தியவர்களாய்ப் போவானேன்?

௰௨ நீங்கள் என்னுடைய சகோதரர். நீங்கள் என்னெலும்பும் என் மாம்சமுமானவர்கள். இராசாவைத் திரும்ப அழைத்துவர நீங்கள் பிந்தினவர்களாயிருப்பானேனென்று சொல்லுங்கள்.

௰௩ அமாசாவுக்கும் நீங்கள் சொல்லவேண்டியது. நீ என்னெலும்பும் என் மாம்சமுமல்லவோ? நீ யோவாபுக்குப் பதிலாக எந்நாளும் எனக்குமுன்பாகப்

ளுடைத்தவனுமாயிராவிட்டாற்பார்பார்ன் இப்படியும அப்படியும எனக்குச செய்யக்கடவரென்று சொல்லுங்களென்று சொல்லச்சொன்னான.

௰௪ இப்படியே சகல யூதமனுஷரின இருதயத்தையும ஒரேயொருவன இருதயத்தைப்போலே பிணைக்கப்பண்ணினதி னாலேயவர்கள இராசாவுக்கு, நீர் உமமுடைய எல்லா ஊழியக்காரரோடுந திரும பிவாருமென்று சொல்லியனுப்பினார்கள.

௰௫ இராசா திருமபவருகிறதற்குயோர்தானமட்டும வநதபோது, யூதாகோத்திரத்தார் இராசாவுக்கெதிர்க்கொண்டுபோய, இராசாவை யோர்தானைக் கடக்கப்பண்ணக கில்காலமட்டுமவநதார்கள.

௰௬ பகூரிமூரான யெமினியின குமாரனாகிய கேராவின மகனாகிய சிமேயியுந தீவரித்துக்கொண்டு யூதமனுஷரோடுங்கூடத் தாவீதிராசாவுக்கெதிர்க்கொண்டிறங்கிப்போனான.

௰௭ அவனோடே பென்யமீன மனுஷர் ஆயிரமபேருஞ சவுலினவீட்டுவேலைக்காரனாகிய சீபாவும அவனோடேகூட அவனுடையபதினைநதுகுமாரரும அவனுடைய இருபதுவேலைக்காரருங்கூடவிருநதார்கள. அவர்கள இராசாவுக்குமுன்பாகயோர்தானை வேகமாயக்கடநது வநதார்கள.

௰௮ அவர்கள இராசாவினவீட்டாரைப் பிக்கரைப்படுத்தவும அவன பார்வைக்குப் பொருநதியவேலையைச செய்யவும படகு அக்கரைப்பிலேவநதது. அப்போது கேராவினகுமாரனாகிய சிமேயி யோர்தானைக்கடக்கப்போகிற இராசாவுக்கு முன்பாகத்தாழவிழுநது,

௰௯ இராசாவோடேசொன்னதாவது, என்னுடையவன என அக்கிரமத்தையெண்ணாமலேயும, இராசாவாகிய என ஆண்டவனெருசலேமிலிருநதுபுறப்பட்டுப் போனநாளிலே உமதடியானசெய்ததோஷத்தை இராசா நினைக்காமலுந தமமுடையமனதிலவைக்காமலுமிருப்பாராக.

௨௰ ஏனெனில நான பாவஞ்செய்தேனென்று உமமுடைய அடியானாயிருக்கிற நான அறிநதிருக்கிறேன. இப்போதும இதோ, இராசாவாகிய என்னுடையவனுக்கெதிர்க்கொண்டு இறங்கிவர யோசேப்புவீட்டாரெல்லாருக்கும நான இன்றுமுநதிக்கொண்டேனென்றான.

௨௰௧ அப்போது செருயாவினகுமாரனாகிய அபிசாய பிரதியுத்தாரமாகக்கர்த்தர் அபிஷேகமபண்ணிவித்தவரைச சிமேயி தூஷித்தபடியினாலே அவன அதற்காகக்கொலைசெய்யப்படவேண்டாமோ? என்றான.

௨௰௨ தாவீதோவென்றால செருயாவின குமாரரே! இன்று நீங்களெனக்குச சாததானகளாயிருக்கிறதற்கு எனக்கும உங்களுக்குமென்ன? இன்று இஸ்ரவேலிலொருவன கொலைசெய்யப்படலாமோ? ஏனென்றால இன்று நான இஸ்ரவேலினமேல இராசாவானேனென்றறியேனோ? என்றுசொல்லி,

௨௰௩ இராசா சிமேயியுடனே, நீ சாவதில்லையென்று அவனுக்கு ஆணையிட்டான.

௨௰௪ சவுலின குமாரனாகிய மேவிபோசேத்தும இராசாவுக்கெதிர்க்கொண்டிறங்கிவநதான. இராசா போனநாள முதல சமாதானத்தோடே திருமபிவருகிறநாளமட்டும அவனதன கால்களைச சுததமபண்ணாமலும தன தாடியைச சவரம்பண்ணிக்கொள்ளாமலும தன வஸ்திரங்களை வெளுக்காமலுமிருநதான.

௨௰௫ அவன எருசலேமிலிருநது இராசாவுக்கெதிர்க்கொண்டுவருகிறபோது இராசா அவனை, மேவிபோசேத்தே! நீயென்னோடேகூட வாராமற்போனதென்னவென்றுகேட்டான.

௨௰௬ அவன சொன்னதாவது, இராசாவாகிய என்னுடையவனே! என வேலைக்காரன என்னை மோசமபோக்கினான. ஏதென்றால உமமுடைய அடியானாயிருக்கிற நான சப்பாணியானபடியினாலே ஒரு கழுதையினமேல சேணமவைத்து அதினமேலேறி இராசாவோடேகூடப்போவேனென்று அடியேன சொன்னேன.

௨௰௭ அவன இராசாவாகிய என்னுடையவனோடே உமதடியானமேலே குற்றஞ்சொன்னான. இராசாவாகிய என்னுடையவனோவென்றால தேவனுடைய தூதனைப்போலிருக்கிறார். உமமுடைய பார்வைக்கு நலலதாயக்காணகிறபடியே செய்யும.

௨௰௮ ஏனெனில இராசாவாகிய என்னுடையவனுக்கு முன்பாக என தகப்பனவீட்டாரெல்லாருஞ சாவுக்கேதுவாயிருநதார்களேயொழிய மறறப்படியலல. என்றாலும உமது பநதியிலே சாப்பிடுகிறவர்களுக்குள்ளே உமதடியானைவைத்தீர். இனனும நான இராசாவைப்பார்த்து முறையிட இனியெனக்கு என்ன நீதியிருக்கின்றதென்றான.

௨௰௯ அப்போது இராசா அவனுடனே இனி உன காரியத்தை யதிகமாயப்பேசுவானேன? நீயுஞ சீபாவும நிலத்தைப்பங்

விட்டுக்கொள்ளுங்கள். இதை நான் சொன்னேனென்றான்.

௩௰ அதற்கு மேவிபோசேத் இராசாவுடனே, இராசாவாகிய என்னுடைய ஆண்டவன் சமாதானத்தோடே தம்முடைய வீட்டிற்கு வந்திருக்கக்கொள்ள அவன் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளட்டுமென்றான்.

௩௧ கிலெயாத்தியனாகிய பர்சிலாயும் ரோகிலிமிலிருந்திறங்கிவந்து யோர்தானமட்டும் இராசாவைவழிவிட்டனுப்ப அவனோடேகூட யோர்தானின் துறைமட்டும் கடந்துவந்தான்.

௩௨ பர்சிலாவோவெனில் எண்பது வயதுசென்ற மகாக்கிழவனாயிருந்தான். இராசா மக்னாயீமிலே தங்கியிருக்குமட்டும் அவன் இவனைப்பராமரித்துக்கொண்டிருந்தான். ஏனென்றால் அவன் மகாப்பெரிய மனுஷனாயிருந்தான்.

௩௩ இராசா பர்சிலாவுடனே, நீயென்னோடேகூடக் கடந்துவா. எருசலேமிலே உன்னை என்னண்டையிலே வைத்துப்பராமரிப்பேனென்றான்.

௩௪ ஆனால் பர்சிலாய் இராசாவோடே சொன்னதாவது, நான் இராசாவோடேகூட எருசலேமுக்கேறிவர நான் இன்னம் உயிரோடிருக்கும் ஆயிசின் நாட்களெம்மாத்திரம்?

௩௫ இப்போதும் நான் எண்பது வயதுள்ளவன். இனி நன்மைதிமையினுடைய வித்தியாசத்தையறிவேனோ? போசிக்கிறதும் குடிக்கிறதும் உம்முடைய அடியானுக்கு ருசிகரமாயிருக்குமோ? கீர்த்தனைக்காரர் கீர்த்தனைக்காரிகளுடைய சத்தத்தை யினிக் கேட்பேனோ? இனி உம்முடைய அடியானாயிருக்கிற நான் இராசாவாகிய என்னுடைய ஆண்டவனுக்குப் பாரமாயிருக்க வேண்டியதென்ன?

௩௬ அடியேன் கொஞ்சத்தூரம் யோர்தானமட்டும் இராசாவோடேகூட வருவேன். அப்படிக்கொத்த பதில் உபகாரத்தை யிராசா எனக்குச்செய்வானேன்?

௩௭ நான் என் பட்டணத்தில் என் தாய் தகப்பனின் கல்லறையண்டையிலே மரணமடையும்படிக்கு உம்முடைய அடியான் திரும்பிப்போகட்டும். ஆனால் இதோ, உம்முடைய அடியானாகிய கிமேகாம் இராசாவாகிய என்னுடைய ஆண்டவனோடேகூட நடந்துவருவான். உம்முடைய பார்வைக்கு நலமானபடி அவனுக்குச்செய்யுமென்றான்.

௩௮ அப்போது இராசா கிமேகாம் என்னோடேகூட வரட்டும், உன் பார்வைக்கு நலமானபடியே நான் அவனுக்கு நடப்பித்து நீ என்மேலே சுமத்தத் தெரிந்துகொள்வதெல்லாவற்றையும் உனக்குச்செய்வேனென்றான்.

௩௯ சனமெல்லாம் யோர்தானைக் கடந்துபோது இராசா பர்சிலாயியை முத்தமிட்டு அவனையாசீர்வதித்தபின்பு கடந்துபோனான். அவனும் தன்னிடத்திற்குத் திரும்பினான்.

௪௰ இராசா கடந்து கில்காலமட்டும் போனான். கிமேகாம் அவனோடேகூடக் கடந்துவந்தான். யூதாவின் சனமனைத்தும் இஸ்ரவேலின் பாதிசனமும் இராசாவை யிக்கரைப்படுத்திவந்தபிறபாடு,

௪௧ இதோ, இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் இராசாவண்டைக்கு வந்து இராசாவுடனே, எங்கள் சகோதரராகிய யூதாவின் மனுஷர் திருட்டள்வாய் உம்மையழைத்துவந்து இராசாவையும் அவர் வீட்டாரையும் அவரோடேகூடவிருக்கிற தாவீதின் மனுஷரனைவரையும் யோர்தானைக் கடக்கப்பண்ணினதென்னவென்றார்கள்.

௪௨ அப்போது யூதாவின் மனுஷரெல்லாரும் இஸ்ரவேல் மனுஷருக்குப் பிரதியுத்தரமாக, இராசா எங்களைச் சேர்ந்தவரானபடியினாலே இதைச்செய்தோம். இதற்காக நீங்கள் கோபமாயிருப்பானேன்? நாங்கள் இராசாவினுடையவேலாகி தத்தின்கவேதினேமோ? எங்களுக்கு வெகுமானங்கொடுக்கப்பட்டதோவென்றார்கள்.

௪௩ இஸ்ரவேல் மனுஷரோவெனில் யூதா மனுஷருக்குப் பிரதியுத்தரமாக, இராசாவினிடத்தில் எங்களுக்குப் பத்துப்பங்கிருக்கின்றது. உங்களைப்பார்க்கிலும் எங்களுக்குத் தாவீதினிடத்திலே அதிகமும் உண்டாயிருக்கின்றது. பின்னையேன் எங்களை யற்பமாயெண்ணினீர்கள்? எங்கள் இராசாவைத் திரும்ப அழைத்துவர வேண்டுமென்று முந்திச் சொன்னவர்கள் நாங்களல்லவோ? என்றார்கள். ஆனால் இஸ்ரவேலின் மனுஷரின் பேச்சைப்பார்க்கிலும் யூதா மனுஷரின் பேச்சுப் பலத்தது.

௨௰. அதிகாரம்.

சேபா உண்டாக்கின கலகம் அமர்த்தப்பட்டசெய்தி.

அப்போது எமினி மனுஷனாகிய பிக்கிரியின் குமாரனான சேபாவென்று பேருள்ள பேலியான மனுஷன் ஒருவன் தற்செயலாய் அங்கேயிருந்தான். அவன் எக்காளமூதி, எங்களுக்குத் தாவீதினிடத்திலே

பங்கில்லை, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமுமில்லை, இஸ்ரவேலே, அவரவர் தங்கள் கூடாரங்களுக்குப் போகக்கடவர்களென்றான்.

௨ அப்போது இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் தாவீதைவிட்டுப் பின்வாங்கிப் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்சென்றார்கள். ஆனால் யோர்தானைத் துவக்கி எருசலேமட்டுமுள்ள யூதா மனுஷர் தங்கள் இராசாவைச் சார்ந்திருந்தார்கள்.

௩ தாவீது எருசலேமிலிருக்கிற தன் வீட்டுக்கு வந்தபோது, வீட்டைக் காக்க இராசா வைத்துப்போன பத்து வைப்பாட்டிகளையழைத்து அவர்களை ஒரு காவல் வீட்டிலே வைத்துப் பராமரித்து, அவர்களிடத்திலே சேராதிருந்தான். அப்படியே அவர்கள் சாகிற நாள்மட்டும், அடைக்கப்பட்டு உயிரோடிருக்கும் நாளெல்லாம் விதவைகளைப் போலிருந்தார்கள்.

௪ பிற்பாடு இராசா அமாசாவுடனே, நீ யூதா மனுஷரை மூன்று நாளினெல்லைக்குள் வரவழைப்பித்து, அப்போது நீயும் இங்கே வந்து நிற்கவேண்டுமென்றான்.

௫ அப்போது அமாசா யூதாவையழைப்பிக்கப்போய்த் தனக்குக் குறித்த காலத்திலே வராமல் தாமதித்தான்.

௬ அப்போது தாவீது அபிசாயுடனே, அப்சலோமைப் பார்க்கிலும் பிக்கிரியின் குமாரனாகிய சேபா இப்போது நமக்குப் பொல்லாப்புச் செய்வான். அவன் அரணான பட்டணங்களில் வந்தடைந்து நம்முடைய கண்களுக்குத் தப்பிப்போகாதபடிக்கு நீ உன் எசமானுடைய சேவகரைக் கூட்டிக்கொண்டு அவனைப் பின்தொடர்ந்து போவென்றான்.

௭ அப்படியே யோவாபின் மனுஷரும் கிரேத்தியரும் பிலேத்தியரும் எல்லாப் பலசாலிகளும் அவன் பிறகாலே புறப்பட்டுப் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடர எருசலேமிலிருந்து போனார்கள்.

௮ அவர்கள் கிபெயோனிலிருக்கிற பெரிய கல்லண்டையிலே வந்தபோது அமாசா அவர்களுக்கெதிர்ப்பட்டு வந்தான். யோவாபோவென்றால் தான் உடுத்திக்கொண்டிருக்கிற தன் சட்டையின்பேரில் ஒரு கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான். அதில் உறையோடே ஒரு பட்டயம் அவன் இடுப்பண்டையிலே தொங்கிற்று. அவன் புறப்படுகையில் அது விழுந்தது.

௯ அப்போது யோவாப் அமாசாவுடனே, என் சகோதரனே! சுகமாயிருக்கிறாயோ? என்று சொல்லி, அமாசாவை முத்தஞ்செய்யத் தன் வலதுகையினால் அவன் தாடியைப் பிடித்து,

௰ தன் கையிலிருக்கிற பட்டயத்துக்கு அமாசா எச்சரிக்கையாயிராதபோது யோவாப் அவனை அவன் குடல்கள் தரையிலே சிந்திப்போகத்தக்கதாய் அவனை வயிற்றிலே மறுகுத்துக் குத்தாமல் குத்திப்போட்டான். அவன் செத்துப்போனான். அப்போது யோவாபும் அவன் சகோதரனாகிய அபிசாயும் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைப் பின்தொடர்ந்தார்கள்.

௧௧ யோவாபுடைய வாலிபரில் ஒருவன் செத்தவனண்டையிலே நின்று, எவன் யோவாபின்மேல் பிரியப்பட்டு, எவன் தாவீதுக்கு நிற்கிறானோ அவன் யோவாபைப் பின்செல்வானாகவென்றான்.

௧௨ ஆனால் அமாசா நடுவழியிலே இரத்தத்திலே புரண்டு கிடந்தபடியினாலே சனமெல்லாம் நிற்கிறதை யவன் கண்டு, அமாசாவை வழியிலிருந்து வயலிலே இழுத்துப்போட்டு, அவனண்டையில் வருகிறவனெல்லாம் நிற்கிறானென்று, கண்டபடியினாலே ஒரு வஸ்திரத்தை யவன்மேற்போட்டான்.

௧௩ அவன் வழியிலிருந்து எடுத்துப் போடப்பட்டபின்பு எல்லாரும் கடந்து பிக்கிரியின் குமாரனாகிய சேபாவைத் தொடர யோவாபைப் பின்சென்றார்கள்.

௧௪ அவன் இஸ்ரவேல் கோத்திரங்களையெல்லாம் சுற்றிப் பெத்மாக்காவாகிய ஆபேல்மட்டாகவும் பேரீமின் சகல புறங்கள்மட்டாகவும் வந்திருந்தான். ஆனால் அவ்விடத்தாரும் கூடித் தாங்களும் அவனைப் பின்சென்றார்கள்.

௧௫ அவர்கள் வந்து பெத்மாக்காவாகிய ஆபேலிலே அவனை முற்றிக்கைபோட்டுப் பட்டணத்துக்கெதிராகக் கொத்தளம்போட்டார்கள். யோவாபோடேயிருக்கிற சனமெல்லாம் அலங்கத்தை விழப்பண்ண அழிவுக்கெத்தனம்பண்ணினார்கள்.

௧௬ அப்போது ஞானமுள்ள ஒரு ஸ்திரி பட்டணத்திலிருந்து, கேளுங்கள், கேளுங்கள். நான் யோவாபோடே பேசத்தக்கதாக அவரிங்கே கிட்டிவர அவருக்குச் சொல்லுங்களென்று கூப்பிட்டாள்.

௧௭ அவன் அவளண்டைக்குச் சேர்ந்துவந்தபோது அந்த ஸ்திரி நீர் யோவாபோ? என்று கேட்டாள். அவன் நான்தா

ன்னபோது அவள் அவனுடனே, உம் அடியாளின் வார்த்தைகளைக் கேளுமென்றாள். நான் கேட்கிறேனென்றான்.

௧௮ அப்பொழுது அவள் சொன்னதாவது, பூர்வகாலத்திலே மனுஷர், ஆபேலிலிருக்கிறவர்களையாலோசனை கேட்கவே கேட்கவேண்டுமென்று சொல்லிச் சொல்லி, இப்படியே காரியத்தைத் தீர்த்துப் போடுவார்கள்.

௧௯ இஸ்ரவேலிலே நான் சமாதானமும் உண்மையுமுள்ளதாயிருக்கிறேன்; நீர் இஸ்ரவேலிலே தாயாயிருக்கிற பட்டணத்தை நிர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்குவதென்னவென்றாள்.

௨௰ யோவாப் பிரதியுத்தரமாகச் சொன்னது, நான் விழுங்கவேண்டுமென்கிற ஆசையெனக்கு வெகுதூரமாவதாக.

௨௧ காரியம் அப்படியல்ல. பிக்கிரியின் குமாரனாகிய சேபா என்னும் பேருள்ள எப்பிராயீம் பர்வதத்தானாயிருக்கிற ஒரு மனுஷன் ராஜாவாகிய தாவீதுக்கு விரோதமாய்த் தன் கையையெடுத்தான். அவன் ஒருவனையே ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது பட்டணத்தை விட்டுப் போவேனென்றான். அப்பொழுது அந்த ஸ்திரீ யோவாபுடனே, இதோ, அவன் தலை மதிலின்மேலிருந்து உம்மண்டைக்கு போடப்படுமென்று சொல்லி,

௨௨ அவள் தன் ஞானத்தோடே எல்லா ஜனங்களண்டைக்கும் உட்பிரவேசித்ததினாலே, அவர்கள் பிக்கிரியின் குமாரனாகிய சேபாவின் தலையை வெட்டி யோவாபண்டையிலே போட்டார்கள். அப்பொழுது அவன் எக்காளம் ஊதுவித்ததினாலே அவரவர் பட்டணத்தைவிட்டுக் கலைந்து தங்கள் கூடாரங்களுக்குப் புறப்பட்டுப் போனார்கள். யோவாபும் இராஜாவண்டைக்குப் போக எருசலேமுக்குத் திரும்பினான்.

௨௩ யோவாப் இஸ்ரவேலுடைய எல்லா இராணுவத்தின்மேலும், யோய்தாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்தியர்மேலும் பிலேத்தியர்மேலுந் தலைவராயிருந்தார்கள்.

௨௪ அதோராம் பகுதிகளை வாங்குகிறவனும் அகிலூதின் குமாரனாகிய யோசபாத் மந்திரியும்,

௨௫ சேவா சம்பிரதியும், சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயிருந்தார்கள்.

௨௬ யயீரியனாகிய ஈராவுந் தாவீதுக்கு ஆலோசனைக்காரனாயிருந்தான்.

௨௧. அதிகாரம்.

கிபெயோனியரைச் சவுல் கொன்றுபோட்ட பாவத்தினிமித்தம் வந்த பஞ்சத்தைத் தாவீது அவர்களுக்குப் பழிகொடுத்ததினாலே விலக்கினது.

தாவீதின் நாட்களிலே மூன்று வருஷமாய் ஓயாத பஞ்சமுண்டாயிருந்தது. அப்பொழுது தாவீது கர்த்தருடைய முகத்தைத் தேடினார்; கர்த்தர், கிபெயோனியரைக் கொன்றுபோட்ட சவுலுக்காகவும் இரத்தப்பிரியனான அவன் வீட்டாருக்காகவுந்தானேயென்றார்.

௨ அப்பொழுது இராஜா கிபெயோனியரை அழைப்பித்தான். கிபெயோனியரோவெனில் இஸ்ரவேல் புத்திரராயிராமல் எமோரியரில் மீதியாயிருந்தார்கள். அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டிருந்தாலும், சவுல் இஸ்ரவேல் புத்திரருக்காகவும் யூதாவுக்காகவும் காண்பித்த வைராக்கியத்தினாலே அவர்களை வெட்டவகை பார்த்தான்.

௩ ஆகையால் தாவீது கிபெயோனியரை, நான் உங்களுக்குச் செய்யவேண்டியதென்ன? நீங்கள் கர்த்தருடைய சுதந்தரத்தை ஆசீர்வதிக்கும்படிக்கு எதினாலே சரிபண்ணுவேனென்று கேட்டான்.

௪ அப்பொழுது கிபெயோனியர் அவனுடனே, சவுலோடும் அவன் வீட்டாரோடும் எங்களுக்கிருக்கிற காரியத்திற்காக எங்களுக்கு வெள்ளியும் பொன்னுந் தேவையில்லை. இஸ்ரவேலில் ஒருவனைக் கொன்றுபோடவேண்டுமென்கிறதும் எங்களுக்குத் தேவையில்லையென்றார்கள். அப்பொழுது, அவன், ஆனால் நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்களென்றான்.

௫ அவர்கள் இராஜாவோடே சொன்னதாவது, நாங்கள் இஸ்ரவேலின் எல்லையிலெங்கும் நிலைக்காதபடிக்கு அழித்துப்போட எவன் எங்களை நிர்மூலமாக்கப் பார்த்து எங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய நினைத்தானோ?

௬ அவனுடைய குமாரரில் ஏழுபேர் கர்த்தர் தெரிந்துகொண்ட சவுலின் ஊராகிய கிபெயாவிலே நாங்கள் அவர்களைக் கர்த்தருக்கென்று தூக்கிப்போடஎங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுமென்றார்கள். தா

அவர்களை யொப்புக்கொடுப்பேனென்று ராஜா சொன்னான்.

௭ ஆனால் தாவீதாகிய தனக்கும் சவுலின் குமாரனாகிய யோனத்தானுக்கும் நடுவே கர்த்தரைக்கொண்டிட்ட ஆணையினிமித்தம் ராஜா சவுலின் குமாரனாகிய யோனத்தானின் மகன் மேவிபோசேதைத் தப்பவிட்டு,

௮ ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பா சவுலுக்குப் பெற்ற அவளுடைய இரண்டு குமாரராகிய அர்மோனியையும் மேவிபோசேதையும், சவுலின் குமாரத்தியாகிய மீகாள் மெகோலாத்தியனான பர்சிலாவின் குமாரனாகிய அதிரியேலுக்குப் பெற்ற அவளுடைய ஐந்து குமாரரையும் பிடித்துக்கொண்டு,

௯ அவர்களைக் கிபியோனியர் கையிலே ஒப்புக்கொடுத்தான். இவர்கள் அவர்களைக் கர்த்தருக்கு முன்பாகப் பர்வதத்தின்மேலே தூக்கிப்போட்டார்கள். அப்படியே அவர்கள் எழுபேரும் ஒருமிக்க விழுந்தார்கள். வாற்கோதுமையை யறுப்புத் துவக்குகிற அறுப்புக்காலத்தின் முந்தின நாட்களிலேதானே அவர்கள் கொன்றுபோடப்பட்டார்கள்.

௰ அப்போது ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பா இரட்டுப்புடவையை யெடுத்துக்கொண்டுபோய், அதைக் கன்மலையின்மேல் தனக்காக விரித்து, அறுப்புநாளின் துவக்கமுதற்கொண்டு வானத்திலிருந்து அவர்கள்மேல் மழைபெய்யுமட்டும் பகலில் ஆகாயத்துப் பறவைகளாகிலும் இராவில் காட்டுமிருகங்களாகிலும் அவர்கள்மேல் விழவொட்டாதிருந்தாள்.

௰௧ ஆயாவின் குமாரத்தியாகிய ரிஸ்பா என்னும் சவுலின் வைப்பாட்டி செய்தது தாவீதுக்கு அறிவிக்கப்பட்டபோது,

௰௨ தாவீது போய்ப் பெலிஸ்தர் கில்போவாவிலே சவுலை வெட்டினபோது பெத்சானின் வீதியிலே தூக்கிப்போட்டதுங் கீலேயாத்திலுள்ள யாபேஸ் பட்டணத்தார் களவாய்ப்போய்த் திருடிக்கொண்டுவந்ததுமான சவுலின் எலும்புகளையும் அவன் குமாரனாகிய யோனத்தானின் எலும்புகளையும் அவர்களிடத்திலெடுத்து,

௰௩ அங்கேயிருந்து அவைகளைக் கொண்டுவந்து, தூக்கப் போடப்பட்டவர்களின் எலும்புகளையும் அவைகளோடே சேர்த்துக்கொண்டு,

௰௪ சவுலின் எலும்புகளையும் அவன் குமாரனாகிய யோனத்தானின் எலும்புகளையும் பென்யமீன் தேசத்துச் செலாவிலிருக்கிற அவன் தகப்பனாகிய கீசின் கல்லறையில் அடக்கம்பண்ணுவித்தான். இராஜா கற்பித்த இத்தப்படியெல்லாஞ் செய்தார்கள். அதற்குப் பிற்பாடு பராபரன் தேசத்திற்காகச் செய்யப்பட்ட வேண்டுதலைக் கேட்டருளினார்.

தாவீது பெலிஸ்தரை மேற்கொண்ட செய்கைகள்.

௰௫ பின்னையும் பெலிஸ்தராலே இஸ்ரவேலின்மேல் யுத்தமுண்டாகிறபோது தாவீதும் அவனோடேகூட அவன் சேவகருமிறங்கிப்போய்ப் பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணினார்கள். தாவீது விடாய்த்துப்போனான்.

௰௬ அப்போது முந்நூறு சேக்கல்நிறை வெண்கலமான ஈட்டியைப் பிடிக்கிறவனும் புதுப்பட்டயத்தை யரையிலே கட்டிக்கொண்டவனுமான இஸ்பிபெனோப் என்னும் அர்பா புத்திரரிலொருவன் தாவீதை வெட்டவேண்டுமென்றிருந்தான்.

௰௭ ஆனால் செருயாவின் குமாரனாகிய அபிசாய் அவனுக்கு ஒத்தாசையாக வந்து பெலிஸ்தனை வெட்டிக்கொன்றுபோட்டான். அப்போது தாவீதின் மனுஷர் நீர் இஸ்ரவேலின் விளக்கை அணைந்துபோகப்பண்ணாதபடிக்கு இனி நீர் எங்களோடே யுத்தத்துக்குப் புறப்பட வேண்டாமென்று அவனுக்கு ஆணையிட்டார்கள்.

௰௮ அதற்குப் பிற்பாடு சம்பவித்ததேதென்றால் பெலிஸ்தரோடே திரும்பவுங் கோபிலே யுத்தமுண்டாகிறபோது ஊசாவியனான சிப்பேகாய் இராட்சதச்சந்ததியான சாப்பை வெட்டிப்போட்டான்.

௰௯ பெலிஸ்தரோடின்னம் வேறொரு யுத்தங் கோபிலே உண்டாகிறபோது யாரெயோர்கிமின் குமாரனாகிய எல்க்கானானென்ற பெத்லெகேமியன் காத்தூரானாகிய கோலியாத்தை வெட்டினான். அவன் ஈட்டிமரம் நெய்கிறவர்களின் படமரத்தனையாயிருந்தது.

௨௰ இன்னமொரு யுத்தங் காத்தூரிலே யுண்டாகிறபோது அங்கே யுயர்ந்த ஒரு மனுஷனிருந்தான். அவன் கைகளின் விரல்கள் அவ்வாறும் அவன் கால்களின் விரல்கள் அவ்வாறும், ஆக இருபத்துநாலு விரல்களுமாயிருந்தது. இவனும் இராட்சதனுக்குப் பிறந்திருந்து,

௨௧ இஸ்ரவேலை நிந்தித்தான். ஆனால் தாவீதின் சகோதரனான சிமேயாவின் குமாரனாகிய யோனத்தான் அவனை வெட்டினான்.

௨௨ இந்த நாலுபேரும் காத்தூரிலே ரப்பாவுக்குப் பிறந்திருந்து, தாவீதினுடைய கையினாலும் அவன் சேவகரின் கையினாலும் மடிந்தார்கள்.

௨௨. அதிகாரம்.

தாவீது பாடின வீர்கெம்பீரம்

௧ கர்த்தர் தாவீதை அவனுடைய எல்லாச் சத்துருக்களின் கைக்கும் சவுலின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்தபோது, அவன் கர்த்தருக்கு முன்பாகச் சொன்ன பாட்டின் வார்த்தைகளாவது,

௨ கர்த்தரென்னுடைய கன்மலையும் என் கோட்டையும் என்னை விடுவிக்கிறவருமானவர்.

௩ பராபரன் நான் நம்பியிருக்கிற துருகமும் என் கேடகமும் என் இரட்சிப்பின் கொம்பும் என் உயர்ந்த அடைக்கலமும் என் மறைவிடமுமானவர். என்னைப் பலவந்தத்துக்கு நீங்கலாக்கிவிட்ட என் இரட்சகராயிருக்கிறீர்.

௪ ஸ்தோத்திரிக்கப்பட்ட கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். அப்போது என் சத்துருக்களுக்கு விலக்கி இரட்சிக்கப்பட்டேன்.

௫ ஏனென்றால் மரணத்தின் அலைகள் என்னைச் சூழ்ந்துகொண்டு பேலியாளின் வாய்க்கால்கள் என்னைக் கலங்கப்பண்ணின.

௬ நரகத்தின் கயிறுகள் என்னைச் சுற்றிப் பிடித்து, மரணத்தின் கண்ணிகள் எனக்கு நேரிட்டது.

௭ எனக்குண்டான நெருக்கத்திலே கர்த்தரைத் தொழுதுகொண்டு, என் பராபரனை நோக்கிக் கூப்பிட்டேன். தமது தேவாலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அவர் செவிகளுக்கு எட்டினது.

௮ அப்போது பூமி அசைந்து அதிர்ந்து வானத்தின் அஸ்திபாரங்கள் குலுங்கி அசைந்தது. ஏனெனில் எரிச்சலானார்.

௯ புகை அவர் நாசியாலும் பட்சிக்கிற அக்கினி அவர் வாயாலும் எழும்பி, அவராலே தணலாக எரிந்தது.

௰ பரமண்டலங்களைத் தாழ்த்தி இறங்கினார். அவர் பாதங்களின் கீழே மந்தாரமிருந்தது.

௰௧ கேருபீனின்மேலே ஏறிப் பறந்து காற்றின் செட்டைகளின்மீதிலே தரிசனையானார்.

௰௨ ஆகாயத்து மேகங்களிலே கூடிய தண்ணீர்களின் இருளைத் தம்மைச் சுற்றிலும் இருக்கும் கூடாரமாக்கினார்.

௰௩ அவர் முகத்தாவின் பிரகாசத்தினாலே நெருப்புத்தணலாய் எரிந்தது.

௰௪ கர்த்தர் வானத்திலிருந்து முழங்கி உன்னதமானவர் தமது சத்தத்தைக் காட்டினார்.

௰௫ அவர் அம்புகளை எய்து அவைகளைச் சிதறடித்து, மின்னல்களைப் போகவிட்டு அவைகளைக் கலங்கப்பண்ணினார்.

௰௬ கர்த்தருடைய உதம்புதலாலும் அவருடைய நாசியின் சுவாசக்காற்றாலும் சமுத்திரத்தின் பள்ளங்கள் காணப்பட்டுப் பூதலத்தின் அஸ்திபாரங்கள் திறவுண்டது.

௰௭ உயரத்திலிருந்து கைநீட்டி, என்னைப் பிடித்துத் திரள் தண்ணீர்களிலிருந்து என்னைத் தூக்கிவிட்டார்.

௰௮ என் வலுசத்துருவுக்கும் என் பகைஞருக்கும் என்னை விலக்கிவிடுவித்தார். ஏனெனில் என்னிலும் பலத்திருந்தார்கள்.

௰௯ என் ஆபத்தின் நாளிலே என்மேலே திரண்டுவந்தார்கள். ஆனாற் கர்த்தர் எனக்கு ஆதரவாயிருந்து,

௨௰ என்னை எடுத்து விசாலத்திலே வைத்து தப்புவித்தார். ஏனெனில் என்மேலே பிரியமாயிருந்தார்.

௨௧ கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாக எனக்குப் பதிலளித்தார். என் கைகளின் சுத்தத்திற்குத் தக்கதாக எனக்குவரப்பண்ணினார்.

௨௨ ஏனென்றாற் கர்த்தருடைய வழிகளைக் காத்துக்கொண்டிருந்தேன், நான் என் பராபரனைவிட்டு ஆகாமியஞ்செய்ததில்லை.

௨௩ ஏனெனில் அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன். நான் அவருடைய பிரமாணங்களை விட்டுவிலகாமல்,

௨௪ அவர் முன்பாக மனவுண்மையாயிருந்து என் துற்குணத்திற்கென்னை விலக்கிக்காத்தேன்.

௨௫ ஆகையாற் கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாகவும், தம்முடைய கண்களுக்கு முன் நிற்கிற என்னுடைய சுத்தத்திற்குத் தக்கதாகவும் எனக்குவரப்பண்ணினார்.

௨௬ சன்மார்க்கனுக்கு உம்மைச் சன்மார்க்கமாகவும் மனவுண்மையான புருஷனுக்கு உம்மை மனவுண்மையாகவும்,

௨௭ சுத்தனுக்கும் உம்மைச் சுத்தமாகவும் மாறுபாடானவனுக்கோ உம்மைக் கோணலாகவும் காண்பிக்கிறீர்.

௨௮ சிறுமைப்பட்ட சனத்தை இரட்சிக்கிறீர். ஆனால் மேட்டிமையானவர்களைத்

மேட்டிமையான கண்கள் அவர்களுக்கு விரோதமாகத் திருப்பப்பட்டிருக்கின்றது.

௨௯ ஏனெனில் கர்த்தராகிய தேவரீர் என் விளக்காயிருக்கிறீர். கர்த்தரே என்னிருளை வெளிச்சமாக்குகிறார்.

௩௰ ஏனெனில் உம்மோடே ஒரு இராணுவத்தை முறிக்கப் பாய்வேன். என் பராபரனோடே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

௩௧ பராபரனுடைய வழி உத்தமமானது. கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டதாயிருக்கின்றது. தம்மை அண்டிக்கொள்ளுகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்.

௩௨ ஏனென்றால் கர்த்தரையல்லாமல் தேவன் யார்? நம்முடைய பராபரனைத் தவிர கன்மலையும் யார்?

௩௩ பராபரன் எனக்குப் பலத்த அரணானவர். அவரே என் வழியைத் தடையில்லாத நல்வழியாக்குகிறார்.

௩௪ என் கால்களை மான் கால்களுக்கொப்பாக்கி, என் உயர்ஸ்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

௩௫ வெண்கல்வில்லும் என் புயங்களாலே வளையும்படி என் கைகளை யுத்தத்திற்குப் பழக்குவிக்கிறார்.

௩௬ உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர். நீர் என்னைச் சிறுமைப்படுத்துகிறதினாலே என்னைப் பெரியவனாக்குகிறீர்.

௩௭ என் கணுக்கால்கள் தள்ளாடாதபடிக்கு நான் நடக்கிற வழியை அகலமாக்கினீர்.

௩௮ என் சத்துருக்களைப் பின்தொடர்ந்து அவர்களை அழிப்பேன். அவர்களை நிர்மூலமாக்குமட்டும் திரும்பேன்.

௩௯ அவர்கள் எழுந்திருக்க மாட்டாமல் என் பாதங்களின் கீழ் விழத்தக்கதாய் அவர்களை நிர்மூலமாக்கி வெட்டுவேன்.

௪௰ ஏனெனில் யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் இடைகட்டி என்மேலெழும்பினவர்களை எனக்குக் கீழ்மடங்கப்பண்ணி,

௪௧ நான் என் பகைஞரைப் பாழ்க்கடிக்கும்படியாக என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்.

௪௨ பார்த்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இரட்சிக்கிறவரில்லை. கர்த்தரைப் பார்த்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மறுஉத்தரவு கொடாதிருக்கிறார்.

௪௩ அவர்களைப் பூமியின் தூளாக நொறுக்கி, தெருக்களின் சேற்றைப்போலே அவர்களை மிதித்துச் சிதறப்பண்ணுவேன்.

௪௪ நீர் என் சனத்தின் சண்டைகளுக்கு என்னை விலக்கிவிட்டு என்னைச் சாதிகளுக்குத் தலைவனாக்குகிறீர். நான் அறியாத சனம் என்னைச் சேவிக்கின்றது.

௪௫ அந்நியர் இச்சகம்பேசி என்கட்டளையின் சத்தத்தைக் கேட்டவுடனே எனக்குக் கீழ்ப்படிகிறார்கள்.

௪௬ அந்நியர் முனைவிழுந்துபோய்த் தங்கள் அடைப்புகளிலிருந்து நடுநடுங்கிப் பயப்படுகிறார்கள்.

௪௭ கர்த்தர் ஜீவனுள்ளவரும், என் கன்மலையும் ஸ்தோத்திரிக்கப்பட்டவருமாயிருக்கிறார்.

௪௮ என் இரட்சிப்பின் கன்மலையாகிய பராபரனும், நீதியைச் சரிக்கட்டுஞ்செயங்களை எனக்களித்துச் சனங்களை எனக்குக் கீழ்ப்படுத்தி, என் சத்துருக்களுக்கு என்னை விலக்கிவிடுவிக்கிற பராபரனுமானவர் உயர்ந்தவர்.

௪௯ என்னை எனக்கு விரோதமாய் எழும்புகிறவர்களின்மேல் உயர்த்துகிறீர். வல்லடிபண்ணுகிற மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்.

௫௰ கர்த்தாவே! இதினிமித்தம் சாதிகளுக்குள் உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம்பாடுவேன்.

௫௧ தாம் வைத்த இராசாவின் இரட்சிப்புகளை அவர் பெரியவைகளாக்கித் தாம் அபிஷேகம்பண்ணின தாவீதுக்கும் அவன் வித்திற்கும் என்றென்றைக்குங் கிருபை செய்கிறார்.

௨௩. அதிகாரம்.

தாவீதுடைய கடைசிவார்த்தைகள்.

தாவீதுடைய கடைசிவார்த்தைகளாவது, மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய பராபரனாலே அபிஷேகம் பெற்று, இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின ஈசாயின் குமாரனாகிய தாவீதென்கிற புருஷன் உரைத்துச் சொல்லுகிறதேதெனில்,

௨ கர்த்தருடைய ஆவி என்னைக்கொண்டு பேசினார். அவருடைய வசனம் என்னுடைய நாவின்மேலிருந்தது.

௩ இஸ்ரவேலின் பராபரனும் இஸ்ரவேலின் கன்மலையுமானவர் எனக்குச் சொல்லியுரைத்ததேதெனில், நீதிபராயமனுஷரையாண்டு, தெய்வபயமாய்த் துரைத்தனம்பண்ணுகிறவர் உண்டாயிருப்பார்.

௪ அவர் காலமேகமந்தாரமில்லாமல் உதிக்கிறதும், மழைக்குப்பிறபாடு தனகா

தியினாலேபுல்லைப்பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிறதுமான சூரியனுடையவிடியற்காலத்தின் வெளிச்சத்தைப்போலிருப்பாரென்றார்.

ரு என்னிறப்பர்ரபர்னிடத்தில் என்னுடையவீடுநிலைவரமாயிராதோ? ஏனென்றால் எல்லாவற்றிற்குந்திட்டப்பட்டதுங் கைக்கொள்ளப்படுவதுமான நித்தியவுடன்படிக்கையை யெனக்கு ஸ்தாபித்தார். ஆனதுகொண்டு என்னுடைய எல்லா இரட்சிப்பும் எல்லாவிருப்பமும் முளைத்தெழும்பாதோ?

சு பேலியாளின் மனுஷரனைவருமோ வென்றால் கையினாலே பிடிக்கப்படக்கூடாதபடியினாலே யெறியப்பட்டுப்போகிற முள்ளுகளுக்குச்சமானமானவர்கள்.

எ அவைகளையொருவன்தொட்டபோனால் இரும்பாயுதத்தையும் ஈட்டிக்கழியையுங் கெட்டியாய்ப்பிடிக்க வேண்டும். அவைகளிருக்கிற இடத்திலேதானே அக்கினியினாலே சுட்டெரிக்கப்படவே சுட்டெரிக்கப்படுமென்றான்.

தாவீதுடையவிசேஷித்த பராக்கிரமக்காரரின் டாப்பு.

அ தாவீதுக்கிருந்தபராக்கிரமசாலிகளின் நாமங்களாவது, தக்கெமோனியின் குமாரனாகிய யோசேப்பாசெப்பெத்தென்றசேர்வைக்காரரின்றலைவன். இவன் எண்ணூறுபேர்களின்மேல்விழுந்து அவர்களையொருமிக்க வெட்டிப்போட்ட அதினோ ஏஸ்னிஊராரானவன்.

கூ இவனுக்கு இரண்டாவது அகோயிகுமாரனாகிய தோதோவின்மகன் எலெயாசாரென்றவன். இவன்பெலிஸ்தர்யுத்தத்திற்குக்கூடினஸ்தலத்திலே இஸ்ரவேல் மனுஷர் ஏறிப்போகையில்தாவீதோடேயிருந்து பெலிஸ்தரைநிந்தித்த மூன்று பராக்கிரமக்காரரிலொருவனாயிருந்தான்.

ய இவன் எழும்பித்தன்கைசலித்துத் தன்கை பட்டையத்தோடொட்டிக்கொள்ளுமட்டும்பெலிஸ்தரைவெட்டினான். அன்றையத்தினங்கர்த்தர்பெரிய இரட்சிப்பை நடப்பித்தார். சனங் கொள்ளையாடமாத்திரம் அவனைப்பின்சென்றார்கள்.

யக இவனுக்குமூன்றாவது ஆகேயின்குமாரனாகிய சம்மாவென்ற ஆராரியன். சிறுபயறு நிறைந்தவயலிருந்த இடத்திலே பெலிஸ்தர் ஏராளமாய்க்கூடிச்சனம்பெலிஸ்தரைக்கண்டு ஓடிப்போது,

யஉ இவன் அந்தநிலத்தின்நடுவிலேநின்று அதைக்காப்பாற்றிப் பெலிஸ்தரைமடங்கடித்துப்போட்டான். அதினாலேகர்த்தர்பெரிய இரட்சிப்பைநடப்பித்தார்.

யங முப்பதுதலைவருக்குள்ளேயிருந்த மூன்றுபேரும் இறங்கிப்போய் அறுப்புநாளிலே அதுல்லாங்கெபியிலே தாவீதண்டைக்கு வந்திருந்தார்கள். பெலிஸ்தரின் சேனை ரெப்பாயீம் பள்ளத்தாக்கிலேபாளயமிறங்கினபோதோவெனில்,

யச தாவீது அரணான ஒருவிடத்திலிருந்தான். அப்பொழுதுபெத்லெகேமிலே அப்போது பெலிஸ்தரின்றாணயமிருந்தது.

யரு தாவீது ஆசைப்பட்டுப்பெத்லெகேமின் ஒலிமுக வாசலிலிருக்கிற கிணற்றின் தண்ணீரிலேகொஞ்சம் என்தாகத்திற்குக்கொண்டுவருபவனாரென்றான்.

யசு அப்போதுஇந்தமூன்றுபராக்கிரமக்காரர் பெலிஸ்தரின்பாளயத்திலேவலுமையாய்ப்புகுந்துபோய்ப் பெத்லெகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றிலேதண்ணீர்மொண்டுதாவீதண்டைக்குச்சுமந்துகொண்டுவந்தார்கள். ஆனாலவன் அதைக்குடிக்கமனதில்லாமல் அதைக்கர்த்தருக்கென்றூற்றிப்போட்டு,

யஎ கர்த்தாவே! தங்களுக்குப்பிராணமோசத்தோடேபோய்வந்த அந்தமனுஷரின் இரத்தத்தைக்குடிக்கும்இந்தச்செயல் எனக்குத்தூரமாயிருப்பதாகவேணுமென்றுசொல்லி, அதைக்குடிக்கமனதில்லாதிருந்தான். இப்படியிந்தமூன்றுபராக்கிரமக்காரர்செய்தார்கள்.

யஅ யோவாபின் சகோதரனுஞ்செருயாவின்குமாரனுமான அபிசாய் என்கிறவன் அந்தமூன்றுபேரில் பிரதானமானவன். அவன்தன் ஈட்டியையோங்கிமுந்நூறுபேரைமடங்கடித்ததினாலே இந்தமூன்றுபேரினும்பேர்பெற்றவனானான்.

யகூ இந்தமூன்றுபேர்களில் அவன்சமர்த்தனாயிருந்ததினாலல்லோ அவர்களில் தலைவனானான்? ஆனாலும் அந்தமுந்தினமூன்றுபேருக்கு அவன்சரியானவனல்ல.

உய நல்லசேவகனான யோய்தாவின்குமாரனுங்கப்செயெல் ஊராருமாகியபெனாயாவுஞ்செய்கைகளாற்பெரியவனாயிருந்தான். அவன்மோவாப்தேசத்தினுடைய இரண்டுவலுமையானசிங்கங்களைக்கொன்றதுமல்லாமல், அவனிறங்கிப்போய்உறைந்தமழையினாளில் ஒருசிங்கத்தையொரு கெபிக்குள்ளே கொன்றுபோட்டான்.

உக அவன்பயங்கரரூபான் ஒரு எகிப்தியமனுஷனையுங் கொன்றுபோட்டான். அந்த எகிப்தியன்கையில் ஒருஈட்டியிரு

க்கொண்ட இவன் ஒருதடியைப்பிடித்து அவனண்டைக்கிறங்கிப்போய், அந்த ஈட்டியை எகிப்தியன்கையிலேயிருந்து பறித்து அவனை அவன் ஈட்டியினாலே கொன்றான்.

௨௨ இவைகளை யோய்தாவின் குமாரனாகிய பெனாயா செய்தபடியினாலே மூன் றுபராக்கிரமசாலிகளுக்குள்ளே பேர்பெற் றவனாயிருந்தான்.

௨௩ மற்ற முப்பதுபேரைப்பார்க்கிலும் அவன் பிரபலியமானவன். ஆனாலும் அந்த மூன்றுபேருக்கு அவன் சரியானவ னல்ல. அவனைத்தாவீது தன் அரண்ம னைச்சேர்வைக்காரனாக வைத்துக்கொண் டான்.

௨௪ யோவாபின் தம்பியாகிய ஆசகேல் முப்பதுபேருக்குள் ஒருத்தன். அவர் களாவன: பெத்லெகேம் ஊரானாகிய தோதோவின் குமாரனாகிய எல்கானான்,

௨௫ ஆரோதியனான சம்மா, ஆரோதியனான எலிக்கா,

௨௬ பல்தியனான ஏலேஸ், இக்கேசின் குமாரனாகிய ஈராவென்ற தெக்கோவியன்,

௨௭ ஆனதோத்தியனான அபியேசர், உசாத்தியனான மெபுன்னாயி,

௨௮ அகோகியனான சல்மோன், நெத்தோபாத்தியனான மகாராயி,

௨௯ பானாவின் குமாரனாகிய ஏலேப் என்ற நெத்தோபாத்தியன் பென்யமீ ன்புத்திரரின் கிபியா ஊரானாகிய ரிபாயின் குமாரன் இத்தாயி,

௩௰ பிரத்தோனியனான பெனாயா, காயாஸ் ஆற்றங்கரையிலிருக்கிற கேத்தாயி,

௩௧ அற்பாத்தியனான அபி அல்போன், பருமியனான அஸ்மாவேத்,

௩௨ சால்போனியனான எலியாபா, யாசேனின் குமாரரில் யோனத்தா னென்றவன்,

௩௩ ஆராரியனான சம்மா, சாராரின் குமாரனாகிய அகியாம் என்ற ஆராரியன்.

௩௪ மாகாத்தியனின் குமாரனாகிய அகஸ்பாயின் மகன் எலிப்பெலேத், கிலோனியனாகிய அகித்தோப்பேலின் குமாரனாகிய எலியாமென்றவன்.

௩௫ கர்மேலியனான எஸ்றாயி, அர்பியனான பாராயி,

௩௬ சோபா ஊரானாகிய நாத்தானின் குமாரன் ஈகால், காதியனான பானி,

௩௭ அம்மோனியனான சேலேக், செருயாவின் குமாரனாகிய யோவாபின் ஆயுதங் களைப்பிடிக்கிற பேரோத்தியனான நகராய்,

௩௮ இத்தேரியனான ஈரா, இத்தேரியனான காரேப்,

௩௯ ஏத்தியனான உரியாவுமே. இவர்களெல்லாரும் முப்பத்தேழுபேர்.

௨௪. அதிகாரம்.

சனத்தின் இலக்கத்தைப்பார்க்கச்சொன்ன தாவீதின் பெருமைக்காக வந்த பெருவாரிக்காய்ச்சலின் செய்தி.

கர்த்தருடைய கோபம் திரும்ப இஸ்ரவேலின்மேல் மூண்டு, நீ போய், இஸ்ரவேலையும் யூதாவையும் என்றவர்களின் இலக்கத்தைப் பாரென்று அவர்களுக்கு விரோதமாகச் சொல்லும்படிக்குத் தாவீதை ஏவிவிட்டது.

௨ அப்படியே இராசா தன்னோடிருக்கிற சேனாபதியான யோவாபுடனே, சனத்தின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு நீ தாண் துவக்கிப் பெயர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் சுற்றித் திரிந்து சனத்தையிலக்கம்பாருங்களென்றான்.

௩ அப்போது யோவாப் இராசாவுடனே, இராசாவாகிய என்னுடைய ஆண்டவன் கண்கள் பார்க்கத்தக்கதாக உம்முடைய தேவனாகிய கர்த்தர் சனம் இப்போதிருக்கிறதைப்பார்க்க அதை நூறத்தனையாய் வர்த்திக்கப்பண்ணுவாராக. ஆனாலும் இராசாவாகிய என்னுடைய ஆண்டவன் இந்தக்காரியத்தின்பேரில் விருப்பம் வைப்பதென்னவென்றான்.

௪ ஆனாலும் யோவாபும் இராணுவத்தலைவருஞ் சொன்ன வார்த்தை செல்லாதபடிக்கு இராசாவின் வார்த்தை பலத்தது. அப்படியே இஸ்ரவேலாகிய சனத்தையிலக்கம்பார்க்க யோவாபும் இராணுவத்தலைவரும் இராசாவைவிட்டுப் புறப்பட்டுப் போய்,

௫ யோர்தானைக்கடந்து, காத்திலுள்ள ஆற்றின் நடுவேயிருக்கிற பட்டணத்திற்கு வலதுபுறமான ஆரோவேரிலும் யாசேர் அண்டையிலும் பாளயமிறங்கி,

௬ அங்கேயிருந்து கீலேயாத்திற்கும் தத்திம்ஒத்சி என்ற பள்ளச்சீமைக்கும் வந்து, அங்கேயிருந்து தாண்யானுக்கும் சீதோனின் சுற்றுப்புறங்களுக்கும் வந்து,

௭ பிறகு தீருவென்ற கோட்டைக்கும் ஏவியர் கானானியருடைய சகல பட்டணங்களுக்கும் வந்து அங்கேயிருந்து யூதாவின் தென்புறமான பெயர்செபாவுக்குப் புறப்பட்டு,

௮ இப்படியே தேசத்திலெல்லாஞ் சுற்றித்திரிந்து ஒன்பதுமாதமும் இருபது நாளுமானபிற்பாடு எருசலேமுக்குவந்தார்கள்.

௯ யோவாப்சனத்தையிலக்கம்பார்த்த தொகையையிராசாவுக்குக்கொடுத்தான். இஸ்ரவேலிலே பட்டையமுருவத்தக்க சேவகமனுஷர் எண்ணூறுயிரம்பேரிருந்தார்கள். யூதாமனுஷர் ஐந்நூறுயிரம்பேருமாயிருந்தார்கள்.

௰ ஆனாற்சனத்தையிப்படி எண்ணினபிற்பாடு இராசாவினிருதயம் அவனைக்குத்திற்று. அப்பொழுதுதாவீது கர்த்தரை நோக்கி, நான் இப்படிச்செய்ததினாலே மகாப பெரிய பாவஞ்செய்தேன். இப்பொழுதும் ஆண்டவரே! உமதடியானின் அக்கிரமத்தை நீக்கிப்போடுமேன்? ஏனென்றால்வெகுபயித்தியமாகச்செய்தேனென்றான்.

௰௧ தாவீதுகாலமேயெழுந்திருந்தபோது தாவீதினஞானதிஷ்டி புருஷனாகியகாத்தென்றதீர்க்கதரிசிக்குக்கர்த்தருடைய வார்த்தையுண்டாய்ச்சொன்னதாவது,

௰௨ நீபோய்த்தாவீதுடனே, மூன்று காரியங்களைநாமுனக்கு முன்பாகவைக்கிறோம். அவைகளில்நாமுனக்குச்செய்யப்போகிற ஒருகாரியத்தைத்தெரிந்து கொள்ளென்று கர்த்தருரைக்கிறாரென்று சொல்லென்றார்.

௰௩ அப்படியேகாத் தாவீதண்டைக்குவந்து அவனுக்கறிவித்துச்சொன்னதாவது, உம்முடையதேசத்திலே ஏழுவருஷம்பஞ்சம் உமக்குவரவேண்டுமோ? அல்லவென்று மூன்றுமாதம் உம்முடையசத்துருக்கள் உம்மைத்தொடர்ந்தவர்களுக்குமுன்பாக ஓடிப்போகவேண்டுமோ? அல்லவென்று உம்முடைய தேசத்திலே மூன்றுநாட்பெருவாரிக்காய்ச்சலுண்டாயிருக்கவேண்டுமோ? இப்பொழுதும் என்னையனுப்பினவருக்குநான் என்னமறுசெய்திகொண்டு போகவேண்டும்? என்கிறதைநீர்யோசித்துப்பாருமென்றான்.

௰௪ அப்பொழுது தாவீதுகாத்துடனே, வெகு இடுக்கண் அடைந்திருக்கிறேன். இப்பொழுதுநாம்கர்த்தருடைய கையிலே விழுவோமாக. ஏனெனில் அவருடைய இரக்கங்கள்பெரிதாயிருக்கின்றது. மனுஷர் கையிலேவிழாதிருப்பேனாகவென்றான்.

௰௫ அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலிலே அன்றுகாலமேதுவக்கி மறுநாளின் அந்தவேளைமட்டு மிருக்கும் பெருவாரிக்காய்ச்சலைவரப்பண்ணினார். அதினாலேதாண்முதற்கொண்டுபெர்சேபாமட்டுமுள்ள சனத்தில் எழுபதினாயிரம்பேர் செத்துப்போனார்கள்.

௰௬ தெய்வதூதன் எருசலேமையழிக்கத்தன்கையை யதின்மேலே நீட்டின போதோவெனிற்கர்த்தர் அந்தத்தீங்குக்குமனஸ்தாபப்பட்டுச்சனத்தையழிக்கிறதூதனுடனே, போதும். இப்பொழுதுஉன் கையைநிறுத்தென்றார். அப்பொழுதுகர்த்தருடையதூதன் எபூசியனாகிய அற்விநா வின்போரடிக்கிறகளத்திற்குநேராயிருந்தான்.

௰௭ சனத்தை யுபாதிக்கிற தூதனைத் தாவீதுகாணுகிறபோது அவன் கர்த்தரைநோக்கிவிண்ணப்பம்பண்ணி இதோ, நானதானபாவஞ்செய்தேன்? நான்தான் அக்கிரமம்பண்ணினேன்? இந்த ஆடுகள் செய்ததென்ன? உம்முடையகையெனக்கும் என்தகப்பன் வீட்டுக்கும் விரோதமாயிருக்கட்டுமேயென்றான்.

௰௮ அன்றையத்தினங்காத்தாவீதண்டைக்குவந்து அவனுடனே, நீர் ஏறிப் போய், எபூசியனாகிய அற்விநாவின்களத்திலே கர்த்தருக்கொருபலிபீடத்தைஸ்தாபியுமென்றான்.

௰௯ காத்துடைய வார்த்தையின்படியேதாவீதுகர்த்தர்கற்பித்தபிரகாரமாக ஏறிப்போனான்.

௨௰ அற்விநாகண்ணெடுத்து இராசாவும் அவனுடைய ஊழியக்காரருந்தன்னண்டைக்குவருகிறதைக்கண்டபோது, அற்விநாபுறப்பட்டுத்தரைமட்டுங் குனிந்து இராசாவைவணங்கி,

௨௰௧ இராசாவாகிய என்னாண்டவனுமதடியானண்டைக்கு வருகிறகாரியமென்னவென்றதற்குத்தாவீதென்றவன், வாதை சனத்தைவிட்டுநிறுத்தப்படக்கர்த்தருக்கொருபலிபீடத்தைக் கட்டும்படிக்கு இந்தக்களத்தை யுன்கையிலேகொள்ளவந்தேனென்றான்.

௨௰௨ அற்விநாதாவீதுடனே, இராசாவாகிய என்னாண்டவன் அதைவாங்கிக் கொண்டுதமமுடையபார்வைக்கு நலமானபடிபலியிடுவாராக. இதோ,பலிக்குமாடுகளும்விறகுகளுக்குப்போரடிக்கிற உருளைகளுமமாடுகளினுகத்தடிகளு மிங்கேயிருக்கின்றதென்றுசொல்லி,

௨௰௩ அது எல்லாவற்றையும் இராசாவாயிருந்த அற்விநா இராசாவுக்குக்கொடுத்து, அற்விநா இராசாவுடனே, உம்முடையபராபரனாகியகர்த்தர் உம்முடைய மேலேபிரியமாவதாகவென்றான்.

௨௪ ஆனால் இராசா அர்வினாவுடனே அப்படியல்ல, நான் இலவசமாய் வாங்கி என் பராபரனாகிய கர்த்தருக்குச் சர்வாங்க தகனங்களைப் பலியிடாமல் அதை உன் கையிலே விலைக்கிரயமாய் வாங்குவேனென்று சொல்லி, தாவீது அந்தக் களத்தையும் மாடுகளையும் ஐம்பது சேக்கல் வெள்ளிக்குக் கொண்டான்.

௨௫ அங்கே தாவீது கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனங்களையும் சமாதான பலிகளையும் செலுத்தினான். அப்பொழுது கர்த்தர் தேசத்திற் கொப்புரவாக்கப்பட்டார். இஸ்ரவேலின்மேலிருந்த அந்த வாதை நிறுத்தப்பட்டது.

சாமுவேலின் இரண்டாம் புஸ்தகம் முடிந்தது முற்றும்.

இராசாக்களின்

முதலாம் புஸ்தகம்.

க. அதிகாரம்.

சாலோமோன் தாவீதின் ஸ்தலத்திற்கு இராசாவாக அபிஷேகம்பண்ணப்பட்டது.

க தாவீது இராசா வயதுசென்ற கிழவனானபோது, வஸ்திரங்களினாலே அவனை மூடினாலும் அவனுக்கு அனற்கண்டதில்லை.

௨ அப்பொழுது அவனுடைய ஊழியக்காரர் அவனுடனே, இராசாவுக்கு முன்பாக நின்று, அவருக்குதவியாயிருந்து, இராசாவாகிய எங்கள் ஆண்டவனுக்கு அனல் உண்டாகும்படிக்கு, உம்முடைய மடியிலே படுத்துக்கொள்ளத்தக்க கன்னியாஸ்திரீயாகிய ஒரு பெண்பிள்ளையை இராசாவாகிய எங்களாண்டவனுக்குத் தேடட்டுமென்று சொல்லி,

௩ இஸ்ரவேலின் எல்லையிலெல்லாம் அழகான பெண்பிள்ளையைத் தேடி, சூனேமியாளாகிய அபிஷாகைக் கண்டுபிடித்து அவளை இராசாவண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

௪ அந்தப் பெண்பிள்ளை வெகு அழகாயிருந்தாள். அவள் இராசாவுக்குதவியாக அவனுக்குச் சேவைசெய்தாள். ஆனாலும் இராசா அவளையறிந்ததில்லை.

௫ ஆகீத்திற்குப் பிறந்த அதோனியாவோவெனில், தான் இராசாவாவேனென்று தன்னை உயர்த்தித் தனக்கு இரதங்களையும் குதிரைக்காரரையும் தனக்கு முன் ஓடும் ஐம்பது ஆட்களையும் சம்பாதித்தான்.

௬ அவன் அப்படியிருக்கும் நாட்களில் அவனைத் தகப்பன் நீ இப்படிச் செய்வானேனென்று அவனை நோகப்பேசினதில்லை. அவனும் மகா நல்ல ரூபமாயிருந்தவன். அப்சலோமுக்குப் பிறகு அவனுடைய தாய் அவனைப் பெற்றாள்.

௭ அவன் செருயாவின் குமாரனாகிய யோவாபோடும் ஆசாரியனாகிய அபியத்தாரோடும் யோசித்துக்கொண்டிருப்பான். இவர்கள் சகாயக்காரராக அவனைப் பின்பற்றினார்கள்.

௮ ஆனால் ஆசாரியனாகிய சாதோக்கும் யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் சீமேயியும் ரேயியும் தாவீதோடிருக்கிற பராக்கிரமக்காரரும் அதோனியாவுக்கு உடந்தையாயிருந்ததில்லை.

௯ அதோனியாவோவென்றால் ரோகேல் கிணற்றுக்குச் சமீபமான சோகெலேத் தென்ற கல்லின்கிட்ட ஆடுமாடுகளையும் கொழுத்த செந்துக்களையும் அடித்து, இராசாவின் குமாரராகிய தன் சகோதரரெல்லாரையும் இராசாவின் ஊழியக்காரரான யூதாவின் மனுஷர் யாவரையும் அழைத்தான்.

௰ ஆனால் தீர்க்கதரிசியாகிய நாத்தானையும் பெனாயாவையும் பராக்கிரமக்காரரையும் தன் சகோதரனாகிய சாலோமோனையும் அழைக்காதிருந்தான்.

௰௧ அப்பொழுது நாத்தான் சாலோமோனின் தாயாகிய பத்சேபாளோடே சொன்னதாவது, ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா நம்முடைய ஆண்டவனாகிய தாவீது அறியாமல் இராசாவாகிற செய்தியை நீ கேட்கவில்லையோ?

௰௨ இபபோதும நீ யுனபிராணனையும உனகுமாரனாகிய சாலோமோனின பிராணனையுந தபபுவிககுமபடிககு நீ வா. உனககு நான் ஆலோசனைச் சொலலடடுமெனன.

௰௩ நீ போயத்தாவீது இராசாவணடைககுட் பிரவேசிதது, இராசாவாகிய என்னுடையவனே! எனககுபபிறகு உன் குமாரனாகிய சாலோமோன இராசாவாயிருபபான. அவனேயென இராசாசனத்தினமேல உளுககார்நதிருபபானெனறு, நீர் உமதடியாளுககு ஆணையிடடதிலலையோ? ஆனால அதோனியா இராசாவாயப போனதென்ன? எனறு அவரோடேசொலலிசகேள.

௰௪ இதோ, நீயஙகே இராசாவோடேயினனமபேச்சகொள்ளநானும உன பிறகாலேபிரவேசிதது, உனவார்த்தைதகளை நிறைவேறறுவேனென்றான.

௰௫ அப்படியேபற்சேபாளசயனவீடடிலே இராசா வணடைககுட்பிரவேசித்தாள. ஆனால இராசாமிகவுமவயதுசெனறவனாயிருநதான. சூனேமூராளாகிய அபிஷாக் இராசாவுககு ஊழியஞ்செய்திருநதாள.

௰௬ பற்சேபாளகுனிநது, இராசாவை வணஙகிககொணடாள. அப்போது இராசா உனககென்னவேணடுமெனறுகேட்டதறகு.

௰௭ அவள அவனுககுசசொன்னதாவது, என்னுடையவனே! உனகுமாரனாகிய சாலோமோன எனககுபபிறகு இராசாவாகி, அவனேயென ஆசனத்தினமேலுளுக்கார்நதிருபபானென்று நீர் உமமுடையபராபரனாகியகர்த்தரைககொணடு,உமதடியாளுககு ஆணையிடடீரே;

௰௮ இபபோதும இதோ, அதோனியா இராசாவானான. இராசாவாயிருககிற என்னுடையவனாகியநீர் இபபோது அதையறியாதவருமாயிருககிறீர்.

௰௯ அவனமாடுகளையுஙகொழுத்தசெநதுக்களையும ஆடுகளையுநதிரளாக அடிதது, இராசாவினகுமாரர் அனைவரையும ஆசாரியனாகிய அபபியத் தாரையும யோவாபபெனறபடைத்தலைவனையும அழைத்தான. ஆனால உமதடியானாகியசாலோமோனையழைககாதேபோனான.

௨௰ ஆனால இராசாவாகிய என்னுடையவனே! இராசாவாகிய என்னுண்டவனுககுபபிறகு அவருடைய ஆசனத்தினமேல உளுககாருப்பவனார்? எனறு நீர் தஙகளுககறிவிக்க இஸ்ரவேல அனைத்தின கணகளும உமமைநோககிககொணடிருககின்றது.

௨௧ மறறபபடி இராசாவாகிய என்னுடையவன தமமுடைய பிதாக்களோடேபடுததுககொணடபிறபாடுநானும என் குமாரனாகியசாலோமோனும பாவிகளாயிருபபோமெனறாள.

௨௨ இதோ, அவள இன்னம இராசாவோடேபபசுகையில தீர்ககதரிசியாகிய நாததான்வநதான.

௨௩ இதோ, தீர்ககதரிசியாகிய நாததான் வநதிருக்கிறானெனறு இராசாவுககறிவிககபபடடபிறபாடு அவன இராசாவுககு முனபாகபபிரவேசிதது, முகஙகுபபுறவிழுநது இராசாவை வணஙகினான.

௨௪ நாததான் சொனனதாவது, இராசாவாகிய என்னுடையவனே! அதோனியா எனககுபபிறகு இராசாவாகி, அவனேயென ஆசனத்தினமேல உளுககார்நதிருபபானெனறு நீர்சொனனீரோ?

௨௫ ஏனெனறால அவன இனறு இறஙகிபபோய, மாடுகளையுஙகொழுததசெநதுககளையும ஆடுகளையுந திரளாக அடிதது, இராசாவின குமாரரனைவரையும இராணுவ தலைவரையும ஆசாரியனாகிய அபபியததாரையும அழைததான. இதோ, அவர்கள அவனுககு முனபாகப பொசிததுக குடிதது, இராசாவாகிய அதோனியா வாழக எனகிறார்கள.

௨௬ ஆனால உமதடியானாகிய என்னையும ஆசாரியனாகியசாதோககையும யோய்தாவின குமாரனாகிய பெனாயாவையும உமதடியானாகிய சாலோமோனையும அவனழைதததிலலை.

௨௭ இராசாவாகிய என்னுடையவனுககுபபிறகு தமது ஆசனததிலுளுககாருபவனார்? எனறு நீர் உமதடியாருககறிவிககாதிருக்கக்கொளள, இநதககாரியம இராசாவாகிய என்னுடையவன கடடளையால நடநததோவெனறான.

௨௮ அபபோதுதாவீது இராசா பிரதியுததாரமாகப பற்சேபாளையென்னண்டைககு வரவழையுஙகளெனறான. அவள இராசாவுககு முனபாகபபிரவேசிதது, இராசாவுககுமுனனே நினறாள.

௨௯ அபபோது இராசா உனகுமாரனாகியசாலோமோன எனககுபபிறகு அரசாணடு அவனேயென ஸதலததில என் ஆசனததினமேல உளுக்கார்நதிருபபானென்று நான உனககு இஸரவேலனபராபரனாகியகர்த்தர்பேரிலே ஆணையிட்டப

நீயபினறைகருசசெயது தீர்பபேனே னடைர,

௩௰ எனறுதததமத்தையெல்லா இக்க டடேகும நீஙகலாகககீட்டகர்த்தருடை யவினைககொணடு சொலலுகிறமெனன் ஆணையிட்டான.

௩௧ அபபோதுபத்சேபாள்தரைமட்டு மகுனிநதுஇராசாவைவணஙகி, எனனுண டையாகியதாவீது இராசா எனறைககும வாழகவெனறுள.

௩௨ பிறபாடுதாவீது இராசா ஆசாரி யனுகியசாதோககையுந தீர்க்கதரிசியா கியநாத்தானையுமயோயதாவின குமார் னபெனுயாவையும எனனணடைககுவர் வழைததுகளெனறன.

௩௩ அவர்கள இராசாவுககு முனபாக பிரவேசித்தபோது அவர்களுககு இரா சாசொனனதாவது, நீஙகளஉஙகள ஆண டவனுடையசேவகலாககூட்டிககொண டு, எனகுமாரனுகிய சாலொமோனையெ னனுடையகோவேறுகழுதையினமேலே றறி, அவனைததாழககீகோனுககுககொ ணடுபோஙகள,

௩௪ அஙகே ஆசாரியனுகிய சாதோக கும தீர்ககதரிசியாகியநாத்தானுமஅவ னை இஸ்ரவேலினமேல இராசாவாக அபி ஷேகமபணணககடவர்கள. பிறபாடு எக காள மூதி, இராசாவாகிய சாலொமோ ன வாழகவெனறுசொலலுஙகள.

௩௫ அதினபிறகு அவன பிரவேசமப ணணிவநது எனனுசனததினமேல உளுக கார்நது அவனே என ஸ்தானததிலே அர சான் அவனபிறகாலே ஏறவாருஙகள. அ வனை இஸ்ரவேலினமேலுமயூதாவினமேலு ம தலைவனுயிருக்கஅவனுக்குககறபிததே னெனறன.

௩௬ அபபோது யோயதாவினகுமார னபெனுயா இராசாவுககுப பிரததியுத தரமாகசசொனனதாவது, ஆமென. இப படி இராசாவாகிய என்னுணடவனுடை ய பராபரனுகிய கர்ததருஞ சொல்வா ராக.

௩௭ கர்ததர் இராசாவாகிய என்னுண டவனேடேயெபபடியிருநதாரோ அப படியவர் சாலொமோனேடிருநது தாவீ து இராசாவாகிய என்னுணடவனுடைய ஆசனததைபபார்கக அவருடைய ஆசன ததைபபெரியதாககுவாராகவெனறுன.

௩௮ அபபடியே ஆசாரியனுகிய சா தோககுநதீர்க்கதரிசியாகிய நாத்தானு மயோயதாவினகுமாரன பெனுயாவுங கி ரேததியரும பிலேததியரும இறஙகிப போயச்சாலொமோனைத்தாவீது இரா சாவினுடையகோவேறு கழுதையினமே லேறறி அவனைககீகோனமட்டுமநடததி னுர்கள.

௩௯ ஆசாரியனுகிய சாதோககோவே ளில எணணெயிருக்கறகொமபைககூடா ரத்திலிருநதெடுத்துக கொணடுபோயச சாலொமோனை யபிஷேகமபணணினுன. அபபோது எக்காளமூதசசனமெல்லாம இராசாவாகியசாலொமோன வாழகவெ னறுர்கள.

௪௰ பிறபாடுசனமெலலாம அவனபிற காலே ஏறிபபோனுர்கள. சனயநாகசர் ஙகளையூதிப்பூமி அவர்கள சத்தத்தினுலே அதிர்த்தக்கனையாயமகாப்பூரிபபாயச்ச நதோஷததார்கள.

௪௧ அதோனியாவும அவனேடிருநத எலலாவிருநதாடிகளும அசனமபணணி ததீர்நதபிறபாடு அதைககேட்டார்கள. யோவாப எககாளசத்தத்தைககேட்கிற போது, பட்டணததின அமளியான் அத ததுவாசசலேதெனறன.

௪௨ அவ னினனம பேசககொளள, இதோ, ஆசாரியனுகிய அபபியததாரினகு மாரன யோனததானவநதான. அபபோ து அதோனியா, உளளேவா. நீகெட்டிக காரன நீநறசெயதியைக கொணடுவருகி றவனெனனறன.

௪௩ ஆனுல யோனததான அதோனி யாவுககுப பிரததியுததரமாகச சொன னதாவது, ஏது? தாவீது இராசாவாகிய நமமுடைய ஆணடவன சாலொமோனை இராசாவாககுனுர.

௪௪ இராசா அவனேடே ஆசாரியனு கிய சாதோககையுந தீர்ககதரிசியாகிய நாததானையும யோயதாவின குமாரன பெனுயாவையுங கிரேததியரையும பிலே ததியரையும அனுபபினுர். இவர்கள அவ னை இராசாவுடைய கோவேறு கழுதை யினமேலேறறினுர்கள.

௪௫ ஆசாரியனுகிய சாதோககுந தீர் ககதரிசியாகிய நாததானும அவனைககீ கோனிலே இராசாவாக அபிஷேகமபண ணினுர்கள. பட்டணம விழுஙகததககதா யான பூரிபபோடே அஙகேயிருநதேறிப போனுர்கள நீஙகள கேட்ட இரைசசல அதுதான.

௪௬ சாலொமோன இராசசியபார்த தின ஆசனததினமேலுளுககார்நதான.

௪௭ இராசாவின ஊழியககாரரும தா வீது இராசாவாகிய நமமுடைய ஆணட வனையாசீர்வதிகக உட்பிரவேசிததது, உம

முடைய பராபரன் சாலோமோனின் கீர்த்தியை உம்முடைய கீர்த்தியைப் பார்க்கிலும் பிரபலியப்படுத்தி, அவருடைய ஆசனத்தை உம்முடைய ஆசனத்தைப் பார்க்கிலும் பெரியதாக்குவாராக வென்றார்கள். இராசா தம்முடைய கட்டிலின் மேலிருந்து பணிந்து கொண்டார்.

௪௮ பின்னையும் இராசா என்னுடைய கண்கள் பார்க்க என் ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருக்கிறவனை இன்று கட்டளையிட்ட இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் இஸ்தோத்திரிக்கப்பட்டவரென்கிறதாகச் சொன்னாரென்றான்.

௪௯ அப்போது அதோனியாவின் விருந்தாடிகளெல்லாரும் அதிர்ந்தெழுந்திருந்து அவரவர் தங்கள் வழியே போனார்கள்.

௫௦ ஆனால் அதோனியா சாலோமோனுக்குப் பயப்படுகிறதினால் எழுந்து போய்ப் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்தான்.

௫௧ இதோ, அதோனியா இராசாவாகிய சாலோமோனுக்குப் பயப்படுகிறான் என்றும், இதோ, அவன் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்துக் கொண்டு, இராசாவாகிய சாலோமோன் தம் அடியானைப் பட்டயத்தாலே கொன்று போடுவதில்லையென்று இன்று எனக்கு ஆணையிடுவாராக வென்கிறானென்றும் சாலோமோனுக்கு அறிவிக்கப்பட்டது.

௫௨ அப்போது சாலோமோன், அவன் சற்குணமுள்ளவனாயிருந்தால் அவன் தலைமயிரில் ஒன்றும் தரையிலே விழப்போகிறதில்லை. அவனிடத்தில் பொல்லாப்பு கண்டுபிடிக்கப்பட்டதேயானால் அவன் சாகவேண்டுமென்று சொல்லி,

௫௩ அவனைப் பலிபீடத்திலிருந்து தாழக் கொண்டுவர், இராசாவாகிய சாலோமோன் ஆள்களையனுப்பினான். அவன் வந்து இராசாவாகிய சாலோமோனை வணங்கிக்கொண்டான். அவனுக்குச் சாலோமோன் உன் வீட்டிற்குப் போவென்றான்.

௨. அதிகாரம்.

சாலோமோனுடைய இராசியபாரத்தின் திடப்படுத்தல்.

தாவீது மரணமடையும் நாட்கள் கிட்ட வந்தபோது அவன் தன் குமாரனாகிய சாலோமோனுக்குக் கற்பித்துச் சொன்னதாவது,

௨ நான் சகல பூலோகத்தாருடைய வழியே போகிறேன். திடன்கொண்டு புருஷனாயிரு.

௩ நீ என்ன செய்தாலும் நீ எங்கே திரும்பினாலும் எல்லாவற்றிலும் புத்திமானாயிருக்கிறதற்கும் கர்த்தர் என்னைக் குறித்து உன் குமாரர்கள் தங்கள் முழு இருதயத்தாலும் தங்கள் முழு ஆத்துமத்தாலும் என் முன்பாக உண்மையாய் நடக்கும்படிக்குத் தங்கள் வழியைக் காத்தால், இஸ்ரவேலின் இராசாசனத்தின் மேல் உட்கார்த்தக்க புருஷன் உனக்குக் குறைபடுவதில்லையென்று சொன்ன தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்துகிறதற்கும்,

௪ நீ மோசேயின் நியாயப்பிரமாணத்திலெழுதியிருக்கிறபடி உன் பராபரனாகிய கர்த்தருடைய கட்டளைகளையுங் கற்பனைகளையும் நியாயங்களையுஞ் சாட்சிகளையுங் கைக்கொள்ள அவர் வழிகளில் நடக்கும்படிக்கு அவருடைய காவலைக் காப்பாயாக.

௫ செருயாவின் குமாரனாகிய யோவாப் இஸ்ரவேலின் இரண்டு சேனாபதிகளாகிய நேரின் குமாரன் அப்னேருக்கும் எத்தேரின் குமாரன் அமாசாவுக்கும் பண்ணின காரியத்தினால் எனக்குச் செய்ததையும் நீயும் அறிந்திருக்கிறாய். அவர்களைக் கொன்று சமாதான நாளிலே யுத்த இரத்தத்தைச் சிந்தி, யுத்த இரத்தத்தைத் தன் அரையிலிருந்த கச்சையிலுந் தன் கால்களிலிருந்த தன் பாதரட்சையிலும் இட்டானே.

௬ ஆகையால் உன் ஞானத்தின்படியே நீ செய்து, அவனுடைய நரைமயிர் சமாதானமாய்க் குழியிலிறங்கவொட்டாதிரு.

௭ கீலேயாத்தியனான பர்சிலாயியின் குமாரருக்குத் தயவு செய்வாயாக. அவர்கள் உன் பந்தியிலே சாப்பிடுகிறவர்களோடிருப்பார்களாக. ஏனெனில் உன் சகோதரனாகிய அப்சலோமுக்கு முன்பாக நான் ஓடிப்போகையில் இப்படியே என்னைச் சேர்ந்து ஆதரித்தார்கள்.

௮ பின்னையும் இதோ, பகூரீம் ஊரானாகிய எமினியின் புத்திரனான கேராவின் மகன் சீமேயி உன்னுடனே யிருக்கிறான். நான் மகனாயீமுக்கு நடக்கிறநாளிலே அவன் என்னைக் கொடிய தூஷணமாய்த் தூஷணித்தான். ஆனால் அவன் யோர்தானிலே யெனக்கெதிர்கொண்டிறங்கி வந்தபடியினாலே நான் உன்னைப் பட்டயத்தாலே கொன்று போடுவதில்லையென்று கர்த்தர் பேரிலே யவனுக்கு ஆணையிட்டேன்.

௯ இப்போதும் நீ யவனைக் குற்றமற்றிருக்கவொட்டாதே. ஏனெனில் நீ ஞான

முள்ள புருஷன். அவனுடைய நரையை ரத்தமாய்க் குழியிலிறங்கப்பண்ண நீ அவனுக்குச் செய்யவேண்டியதையறிந்திருப்பாயென்றான்.

௰ பிற்பாடு தாவீது தன் பிதாக்களோடே படுத்துக்கொண்டு, தாவீதின் பட்டணத்திலே அடக்கம்பண்ணப்பட்டான்.

௰௧ தாவீது இஸ்ரவேலையாசாண்ட நாட்கள் நாற்பது வருஷம். அவன் எப்ரோனில் ஏழு வருஷமும் எருசலேமில் முப்பத்துமூன்று வருஷமும் அரசாண்டான்.

௰௨ சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதுடைய சிங்காசனத்தின்மேலுட்கார்ந்தான். அவன் இராச்சியபாரம் வெகு உறுதியுமாயிற்று.

௰௩ ஆகீத்தின் குமாரனாகிய அதோனியா பின்பொருவேளையிற் சாலொமோனின் தாயாகிய பத்சேபாளண்டைக்கு வந்தான். நீ சமாதானமாய் வருகிறாயோ? என்று அவள் கேட்டதற்குச் சமாதானமாய்த்தானென்றான்.

௰௪ பிறகு அவன் உம்மோடே நான் பேசவேண்டிய வார்த்தையிருக்கிறதென்றான். அதற்கவள் சொல்லென்றாள்.

௰௫ அப்பொழுது அவன் சொன்னதாவது, இராச்சியம் என்னுடையதாயிருந்ததென்றும், நான் அரசாளுகிறதற்கு இஸ்ரவேலரெல்லாம் என்மேல் நோக்கமாயிருந்தார்களென்றும், நீர் அறிவீர். ஆனால் இராச்சியபாரம் தாண்டிப்போய் என் சகோதரனுக்குரியதாயிற்று. ஏனெனிற் கர்த்தரால் அது அவனுக்குவந்தது.

௰௬ இப்பொழுதும் நான் உம்மையொரு மன்றாட்டைக் கேட்கிறேன். என் முகத்தை வெட்கப்படுத்தாதேயென்றான். அவள் அவனோடே சொல்லென்றாள்.

௰௭ அப்பொழுது அவன், இராசாவாகிய சாலொமோன் உம்முடைய முகத்தை வெட்கப்படுத்துவதில்லையே. அவர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை யெனக்கு விவாகம்பண்ணிக்கொடுக்க அவரோடே பேசிக்கொள்ளுமேயென்றான்.

௰௮ அதற்குப் பத்சேபாள், நல்லது. நான் உனக்காக இராசாவோடே பேசுவேனென்றாள்

௰௯ பத்சேபாள் அதோனியாவுக்காக இராசாவாகிய சாலொமோனோடே பேச அவனண்டைக்குட்பிரவேசித்தாள். அப்பொழுது இராசா எழுந்திருந்து அவளுக்கெதிர்கொண்டுபோய், அவளை வணங்கித் தன் ஆசனத்தின்மேலுட்கார்ந்து, இராசாவின் தாயார் தன் வலதுபுறமாக உட்காருக்கார் அவளுக்கொரு ஆசனத்தை வைப்பித்தான்.

௨௰ அப்பொழுது அவள் நான் உம்மையொரு சின்னமன்றாட்டைக் கேட்கிறேன். என் முகத்தை வெட்கப்படுத்தாதேயென்றாள். இராசா அவளுடனே, என் தாயாரே! கேளும். நான் உம்முடைய முகத்தை வெட்கப்படுத்துவதில்லையென்றான்.

௨௧ அப்பொழுது அவள், சூனேம் ஊராளாகிய அபிஷாகை உம்முடைய சகோதரனாகிய அதோனியாவுக்கு விவாகம்பண்ணிக்கொடுக்கப்படட்டுமென்றாள்.

௨௨ ஆனால் இராசாவாகிய சாலொமோன் தன் தாயாருக்குப் பிரத்தியுத்தரமாக நீர் சூனேம் ஊராளாகிய அபிஷாகை அதோனியாவுக்குக் கேட்பானேன்? அப்படியானால் இராச்சியபாரத்தையும் அவனுக்குக் கேளும்; ஏனெனில் அவன் எனக்குமூத்த சகோதரன். அவனுக்கும் ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் செருயாவின் குமாரன் யோவாபுக்குமேயதைக் கேளுமென்றான்.

௨௩ பிற்பாடு சாலொமோன் இராசா, அதோனியா இந்த வார்த்தையைத் தன் பிராணனுக்குச் சேதமாகச் சொல்லாதிருந்தால் தேவன் எனக்கு இப்படியும் அப்படியும் செய்யக்கடவரென்று சாலொமோன் இராசா கர்த்தர் பேரில் ஆணையிட்டு,

௨௪ இப்பொழுதும் இன்றைக்கு அதோனியா கொலையுண்பானென்று என்னைத் திடப்படுத்தினவரும் என்னை என் தகப்பனாகிய தாவீதின் ஆசனத்திலுட்காரப்பண்ணித் தான் சொன்னபடியெனக்கு வீட்டைக்கட்டுவித்தவருமாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்றுசொல்லி,

௨௫ இராசாவாகிய சாலொமோன் யோய்தாவின் குமாரன் பெனாயாவுக்குக் கட்டளைகொடுத்து அவனையனுப்பினான். இவன் அவன்மேல்வந்து அவனைக்கொன்றுபோட்டான்.

௨௬ ஆசாரியனாகிய அபியத்தாருக்கும் இராசா சொன்னது, நீ ஆனதோத்திலிருக்கிற உன் நிலத்திற்குப் போ. ஏனெனில் நீ மரணத்திற்குப் பாத்திரவானாயிருந்தும் நீ என் தகப்பனாகிய தாவீதுக்கு முன்பாகக் கர்த்தராகிய ஆண்டவருடைய பெட்டியைச் சுமந்தபடியினாலும், என் தகப்பன் அநுபவித்த உபத்திரவத்தையெல்லாம் நீ கூட அநுபவித்தபடியினாலும், இன்றையத்தினம் நான் உன்னைக் கொலை செய்விப்பதில்லையென்றான்.

௨௭ அப்படியே கர்த்தர் சீலோவிலே ஏலியின் வீட்டாரைக்குறித்துச்சொன்ன வார்த்தையை நிறைவேற்றும்படியாகச் சாலொமோன் அபியத்தாரைக் கர்த்தருக்கு ஆசாரியனாயிராதபடிக்குத் தள்ளிப் போட்டான்.

௨௮ நடந்த இந்தச் செய்தி யோவாபுக்கு வந்தபோதோவெனில், அவன் கர்த்தருடைய கூடாரத்திற்கு ஓடிப்போய்ப் பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்தான். ஏனெனில் யோவாப் அப்சலோமின்பாரிசமாய்ச் சாயாதவனாயிருந்தாலும் அதோனியாவின்பாரிசமாய்ச் சாய்ந்தான்.

௨௯ யோவாப் கர்த்தரின் கூடாரத்திற்கு ஓடிப்போனானென்றும், இதோ, பலிபீடத்தண்டை நிற்கிறானென்றும், இராசாவாகிய சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டபோது, சாலொமோன் யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவை அனுப்பி, நீ போய் அவன்மேல்விழுவென்றான்.

௩௰ பெனாயா கர்த்தரின் கூடாரத்திற்கு வந்து அவனுடனே, வெளியே புறப்படு என்று இராசா சொல்லுகிறானென்றான். அவனோவெனில் அல்ல, இங்கே சாவேனென்றான். ஆகையாற் பெனாயா போய் இராசாவுக்கு மறுசெய்தி சொல்லி, இன்னபடி யோவாப் சொல்லி, இன்னபடி யெனக்கு மறுவுத்தரவு கொடுத்தானென்றான்.

௩௧ அப்போது இராசா அவனுக்குச் சொன்னதாவது, அவன் சொன்னபடியே நீ செய்து, அவனைக் கொன்று அடக்கம்பண்ணி, இப்படியே யோவாப் முகாந்திரமில்லாமற் சிந்திப்போட்ட இரத்தத்தை யென்னையும் என் பிதாவின் வீட்டையும் விட்டு விலக்கிப்போடு.

௩௨ அவன் தன்னைப்பார்க்கிலும் நீதியும் நற்குணமுமுள்ள இரண்டுபேராகிய நேரின்குமாரனான அப்னேரென்ற இஸ்ரவேலின் படைத்தலைவன்மேலும் ஏத்தேரின் குமாரனாகிய அமாசா என்ற யூதாவின் படைத்தலைவன்மேலும் விழுந்து, என் தகப்பனாகிய தாவீதறியாமல் அவர்களைப் பட்டயத்தாற் கொன்ற அவன் இரத்தப்பழியைக் கர்த்தர் அவனுடைய தலையின்மேலே திருப்புவாராக.

௩௩ இப்படியே யவர்களுடைய இரத்தப்பழி யோவாபுடைய தலையின்மேலும் என்றுமுள்ள அவன் வித்தாரின் தலையின்மேலுந் திரும்பவுந், தாவீதுக்கும் அவர் வித்தாருக்கும் அவர் வீட்டாருக்கும் அவர் ஆசனத்திற்கும் என்றென்றைக்குங் கர்த்தராலே சமாதானமுண்டாயிருக்கவுங் கடவதென்றான்.

௩௪ அப்படியே யோய்தாவின்குமாரன் பெனாயா ஏறிப்போய் அவன்மேல்விழுந்து அவனைக்கொன்றுபோட்டான். அவன் வனாந்திரத்திலிருக்கிற தன்னுடைய வீட்டிலே யடக்கம்பண்ணப்பட்டான்.

௩௫ அவனுக்குப் பதிலாக இராசா யோய்தாவின்குமாரனாகிய பெனாயாவை இராணுவத்தின்மேலும் ஆசாரியனாகிய சாதோக்கை அபியத்தாரின் ஸ்தலத்திற்கும் வைத்தான்.

௩௬ பிற்பாடு இராசா சீமேயியை யழைத்தனுப்பி அவனுக்குச் சொன்னது, நீ எருசலேமில் உனக்கொரு வீட்டைக்கட்டி அங்கேயிருந்து இங்குமங்கும் வெளியே போகாமல் அங்கேதானே குடியிரு.

௩௭ ஏனென்றால் நீ வெளியே போய்க் கீதரோனென்வாய்க்காலைக் கடக்குநாளிலே சாவே சாவாய். அப்போது உன் இரத்தப்பழி உன் தலையின்மேலிருக்குமென்பதை நீ யறியவே யறியென்றான்.

௩௮ சீமேயி இராசாவுக்கு, அது நல்ல வார்த்தை. இராசாவாகிய என்னுடைய ஆண்டவன் சொன்னதின்படியே யுமதடியான் செய்வானென்று சொல்லிச் சீமேயி அநேக நாள் எருசலேமிலே குடியிருந்தான்.

௩௯ மூன்று வருஷஞ் சென்றபோதோவெனிற் சீமேயிக்கு இருந்த இரண்டு வேலைக்காரர் மாக்காவின் குமாரனாகிய ஆகீசென்ற காத்தின் இராசாவண்டைக்கு ஓடிப்போனார்கள். இதோ, உன் வேலைக்காரர் காத்திலிருக்கிறார்களென்று சீமேயிக்கு அறிவித்தார்கள்.

௪௰ அப்போது சீமேயி எழுந்து தன் கழுதையின்மேற் சேணம் வைத்துத் தன் வேலைக்காரரைத் தேடக் காத்திலிருக்கிற ஆகீசண்டைக்குப் புறப்பட்டுப்போனான். இப்படிச் சீமேயி போய்த் தன் வேலைக்காரரைக் காத்தூரிலிருந்து கொண்டுவந்தான்.

௪௧ சீமேயி எருசலேமிலிருந்து காத்துக்குப் போய்த் திரும்பி வந்தானென்று சாலொமோனுக்கு அறிவிக்கப்பட்டபோது

௪௨ இராசா சீமேயியை யழைத்தனுப்பி அவனோடே சொன்னதாவது, நீ வெளியே புறப்பட்டு இங்குமங்கும் போகிற நாளிலே சாவே சாவாயென்பதை நீ யறியவே யறியென்று நான் உன்னைக் கர்த்தர் பேரிலே ஆணையிடுக்கொண்டு, உனக்குத் திடச்சாட்சியாகச் சொல்ல, நீ யென்னுடனே, நான் கேட்ட வார்த்தை நல்லதென்று சொன்னதில்லையோ?

௪௩ நீ கர்த்தரின ஆணையையும நான் உனககுக்கற்பித்த கற்பனையையுங் கைக்கொளளாதே போனதெனன? என்று சொலலி,

௪௪ பின்னையும இர்ாசா சீமேயியோடே சொன்னது, நீயென தகபபனுகிய தாவீதுக்குச்செயதத்தும உன மனதுககுத தெரிந்திருக்கிறதுமான எலலாப பொலலாப்பையும அறிந்திருக்கிறுய. ஆகையாற் கர்த்தர் உனனுடைய பொலலாபபை உனதலையினமேலத் திருப்பினுர்.

௪௫ இர்ாசாவாகிய சாலோமோனே ஆசீர்வதிக்கபபட்டிருககிறுன. தாவீதின ஆசனம என்றைககும கர்த்தருககு முனபாக உறுதியுமாயிருக்குமென்று சொலலி,

௪௬ இர்ாசா யோய்தாவினகுமாரனுகிய பெனயாவுககுக்கட்டளைகொடுத்தான். அவன வெளியேபோய அவனமேல்விழுந்து அவனைககொன்றுபோட்டான. இப்படியே இர்ாசசியபாரஞ சாலோமோனின கையிலே திடப்பட்டது.

௩. அதிகாரம்.

சாலோமோன பார்வோனின குமாரத்தியை விவாகமபணணினது.

௧ சாலோமோன எகிப்தின இர்ாசாவாகிய பார்வோனோடே சம்பந்தங்கலந்து, பார்வோனின குமாரத்தியை விவாகமபணணித்தான தனனுடையவீட்டையுங் கர்த்தரினவீட்டையும எருசலேமினசுற்றுமதிலையுங் கட்டித்தீருமட்டும, அவளைத தாவீதினபட்டணத்திலே கொணடுவந்துவைத்தான.

௨ ஆனுல அந்நாட்களமட்டுங் கர்த்தருடைய நாமத்திற்கு ஒருவீடு கட்டபபடாதிருந்ததினுலே சனம மேடுகளிலே தூபங்காட்டிவந்தார்கள.

௩ சாலோமோனதன தகபபனுகிய தாவீதின கட்டளைகளில நடககும்படியாகக் கர்த்தரைச்சிநேகித்தான. ஆனுல அவனமேடுகளிலேபலியிட்டுத் தூபங்காட்டிவான.

அவனகர்த்தரைஞானததின்வர்த்தைக கேட்டது.

௪ அப்படியே இர்ாசா கிபெயோனிலே பலியிட அங்கேபோனான. ஏனெனிற் பெரியமேடு அதுதானே. அந்தப்பலிபீடத்தின் மேலே சாலோமோன ஆயிரஞ் சர்வாங்கதகனபலிகளைச்செலுத்தினான.

௫ கிபெயோனிலே கர்த்தர் சாலோமோனுககு இராத்திரியிற் சொபபனத்திலே தரிசனையாகி, நாம உனககு என்ன கொடுககவேணடுமெனறு கேள்என்று பர்ாபரன சொன்னுர்.

௬ சாலோமோன சொன்னதாவது, என தகபபனுகிய தாவீதென்ற உமதடியான உம்மைப்பற்றி உண்மையும நீதியும மனச்செம்மையுமாய உமககுமுனபாக நடந்தபடியே தேவரீர் அவனுககுப்பெரிய கிருபையைச்செயது, அந்தப்பெரியகிருபையைஅவனுககுககாத்து, இந்நாளிலிருக்கிறபடியே அவன ஆசனத்தின மேல உடகார்ந்திருககிற குமாரனை யவனுககுககொடுத்தீர்.

௭ இப்போதும் என்பர்ாபரனுகிய கர்த்தாவே! தேவரீர் உமமுடைய அடியானை யென தகபபனுகிய தாவீதின ஸ்தலத்திலே இர்ாசாவாக்கினீரே; நானுே சிறுபிள்ளை, போகவும் வரவும் அறியாதசிறிய வாலிபனுயிருககிறேன.

௮ நீர் தெரிந்துகொண்டதும, ஏராளத்தினுலே எணணிக்கைககடங்காதது்ம இலக்கந்தெரிந்துகொள்ளப்படாததுமான திரளசனமாகிய உமமுடையசனத்தின நடுவில அடியேனிருக்கிறேன.

௯ ஆகையால உமமுடைய சனததை நியாயமவிசாரிக்கவும நனமை தீமையை வகையறுககவும, அடியேனுக குணர்வுள்ள இருதயத்தைத்தாரும. ஏனெனிற் பெருத்திருக்கிற இந்த உமமுடையசனத்தை நியாயமவிசாரிகக ஆராலேயாமென்றுன.

௰ சாலோமோன இந்தககாரியத்தைக கேட்டதும ஆணடவருடைய கண்களுக்குப்பொருந்தியவிணணபபமாயிருந்தது.

௰௧ ஆகையினுலே பர்ாபரனவனோடே சொன்னதாவது, நயிந்தக காரியத்தைக கேட்டு, நீயுனக்கு நீடித்தநாட்களைக் கேளாமலும, ஐசுவரியத்தைக கேளாமலும, உனசத்துருககளின பிராணனைக கேளாமலும், நியாயங் கேட்கிறதற்கான வுணர்வையுனக்குக கேட்டபடியினுலே,

௰௨ இதோ, உனவார்த்தைகளின படி செயதோம், இதோ, ஞானமும உணர்வுமுள்ள இருதயத்தை யுனக்குக கொடுத்தோம. அதிலேயுனக்குச் சரியானவன் உனககுமுன்னிருந்ததுமிலலை யுனககுச்சரியானவன உனககுப பின்னெழும்புவதுமிலலை.

௰௩ இதலலாமல உனனுடைய எலலா நாட்களிலுமிருககிற இர்ாசாககளில ஒருவரும உனனைபபோ லிராதிருககத் தககு

னையாய நீ கேளாதிருககிற ஐசுவரியத தையுமமகிமையையும உனககுக்கொடுத தோம.

௰௪ உன்தகபபனாகிய தாவீது நடநத துபோலே நீ நமமுடைய கடடளைகளையு ம நமமுடைய கறபனைகளையுங கைககொ ளளுமபடிககு நமமுடையவழிகளில நடந தால உன்நாட்களை நீடிததிருககவும பண ணுவோமென்றார்.

௰௫ சாலோமோனுககு நிததிரைதெளி நதபோது இதோ, அதுசொபபனமென் றறிநது எருசலேமுககுட் பிரவேசிததுக் கர்ததருடைய உடமபடிககைப பெட்டி ககு முனபாகவநது நினறு, சர்வாஙகத தகனஙகளைப பலியிடடுச்சமாதான பலிக ளைசசெலுததித் தன் ஊழியககாருககெ லலாம விருநதுசெயவிததான்.

.அவன் இரண்டுவேசிகளின் வழககைத தீர் தத ஞானம.

௰௬ அபபோது வேசிகளான் இரண்டு பெணடுகள இராசாவண்டைககு வநது அவனுககுமுனபாக நினறார்கள.

௰௭ அவர்களிலஒருத்திசசொனனதாவது என்னுடையவனே! நானும இநத ஸதிரியு ம ஒரேவீடடிலே குடியிருககிறோம. நான் வளோடே வீடடிலிருக்கக்கொளள பிள ளைபபெறறேன.

௰௮ நான்பிளளைபபெறறமூனறும நாளி லே இநத ஸதிரியும பிளளைபபெறறாள. நாஙகள ஒருமிததிருநதோம. நாஙகளிரு வருநதவிர் வீடடுககுளளே வேறொருவரு ம எஙகளோடேகூட இருநததிலலை.

௰௯ இராததிரியிலே யிநத ஸதிரியின ஆண்பிளளைசெறறுபபோயிறறு. ஏனெனி லநிததிரையிலே யதை நெருககிபபோட டாள.

௨௰ அபபோது அவள் நடுச சாமததி லெழுநதிருநது, உமதடியாள நிததிரை பணணககொளள எனபககததிலே கிடக கிற என் ஆணபிளளையையெடுததுககொ ணடு தனமடியிலேவைததுச் செறற தன் னுடைய ஆணபிளளையை யெனமடியிலே வைததாள.

௨௧ என பிளளைககு முலைகொடுக்கக்கா லமே நான் எழுநதிருநதபோது இதோ, செறறிருநதது. பொழுதவிடிநதபோது நான் அதை யுறறுபபார்ககும போதோ வெனில, அதுநானபெறற என்னுடைய பிளளை யலலவெனறு கணடேனெனறாள.

௨௨ மறற ஸதிரியோவெனறால அப படியலல உயிரோடிருககிறது என்பிளளை செறறதுவுன பிளளையெனறாள. ஆனாலவள செறறதுவுனபிளளை உயிரோடிருககிறது என்பிளளையெனறாள. இபபடி இராசாவு ககு முனபாகபபேசினார்கள.

௨௩ அபபோது இராசா, உயிரோடிரு ககிறது என் பிளளைசெறறது உனபிளளை யெனறு இவளசொலலுகிறாள. அபபடியல ல. செறறது உனபிளளை, உயிரோடிருக கிறது என்பிளளை யெனறு அவளசொலலு கிறாளெனறுசொலலி,

௨௪ ஒருபடடையததையெனககொண்டு வநதாருஙகளெனறு இராசாசொனனான. அவர்களபடடையததை இராசாவுககுமு னபாகக்கொணடுவநதபோது,

௨௫ இராசாவானவன, உயிரோடிருக கிறபிளளையை இரணடாகபபிளநது பாதி யையிவளுககும பாதியையவளுககுங்கொ டுஙகளெனறான.

௨௬ அபபோது உயிரோடிருககிற ஆ ணபிளளை யினதாயதனபிளளைககாக அவ ளகுடலகள எரிநதபடியினாலே இராசாவு டனே, ஆ, என்னுடையவனே! உயிரோடிரு ககிறபிளளையைககொலலவே கொலலாம ல அதையவளுககுக கொடுஙகளெனறாள. இவளோவெனில அது எனககுஙகலவி லலை உனககுஙகலவிலலை. பிளவுஙகளெ னறாள.

௨௭ அபபோது இராசாபிரததியுத்தா ரமாக, உயிரோடிருககிறபிளளையைககொ லலவேகொலலாமல அவளுககுககொடுங கள. அவளேயதினதாயெனறான.

௨௮ இராசாதீர்தத இநதநியாயததை இஸரவேலெலலாங கேள்விபபடடு, இரா சாவுககுபபயநதுபோனார்கள. ஏனெனில நியாயம விசாரிககிறதற்குப பராபரனு டையஞானம அவனுககுளளிருககினறதெ னறுகணடார்கள.

௪. அதிகாரம்.

சாலோமோன தன் இராச்சியததிலும அரணமனையிலும பணணின திடடவ டடம.

அபபடியே இராசாவாகிய சாலோ மோன எலலா இஸரவேலினமேலும இரா சாவாயிருநதான.

௨ அவனுககிருநதபிரபுககளாவது, சா தோககின குமாரனாகிய அசரியா பிரதா னமநதிரியாயிருநதான.

௩ சீசாவின குமார்ராகிய எலிகோரே பபும அகியாவுஞசமபிரதிகளாயிருநதார்

ம் அகிலூதின்குமாரன்யோசபாத் மந்திரியாயிருந்தான்.

௪ யோய்தாவின் குமாரன் பெனாயாப டைத்தலைவனு, சாதோக்கும் அபியத்தாரும் ஆசாரியருமாயிருந்தார்கள்.

௫ நாத்தானின்குமாரனாகிய அசரியா மணியக்காரரின் தலைவனும், நாத்தானின் குமாரன் சாபூத் இராசாவின் சிநேகிதனும் மந்திரியுமாயிருந்தார்கள்.

௬ அகிசார் அரமனையை விசாரிப்புக்காரனும், அப்தாவின்குமாரன் அதோனீராம் பகுதி விசாரிப்புக்காரனுமாயிருந்தார்கள்.

௭ இராசாவையும் அவன் அரமனையையும் பராமரித்து வருகிற பன்னிரண்டு மணியக்காரர் சாலொமோனுக்கு இஸ்ரவேலெங்கும் வைக்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவன் பராமரிப்பு வருஷத்திலொருமாதம்.

௮ அவர்கள நாமங்களாவது, ஊரின்குமாரன் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருந்தான்.

௯ தேக்கேரின்குமாரன் மாக்காத்சிலும் சால்பீமிலும் பெத்சேமேசிலும் ஏலோனிலும் பெத்தானானிலுமிருந்தான்.

௰ ஏசேதின்குமாரன் அறுபோத்திலிருந்தான். சோகோவும் எப்பேர் சீர்மையனைத்தும் இவன் விசாரிப்பாயிருந்தது.

௰௧ அபினதாபின்குமாரன் தோரின் நாட்டுப்புறமனைத்திற்கும் விசாரிப்புக்காரனாயிருந்தான். சாலொமோனின் குமாரத்தியாகிய தாபாத் இவனுக்குப் பெண்சாதியாயிருந்தாள்.

௰௨ அகிலூதின்குமாரனாகிய பானாவின் விசாரிப்புக்குத் தானாகும், மெகிதோவும், சறத்தனுவுக்குப்பக்கமாகவும் எஸ்ரேயேலுக்குக் கீழாகவும் பெத்செயான்துவக்கி ஆபேல்மெகொல்லாமட்டும் யக்மெயாமுக்கு அந்தண்டைமட்டுமிருக்கிற பெத்செயான் அனைத்துமடுத்திருந்தது.

௰௩ கேபேரின் குமாரன் கிலெயாத்தின் ராமோத்திலிருந்தான். கிலெயாத்திலுள்ள மனாசேயின் குமாரனாகிய யாவீரின் கிராமங்களும் மதில்களும் வெண்கலத் தாப்பாள்களுமுள்ள பாசான் தேசத்திலுடைய அறுபது பெரிய பட்டணங்களிருக்கிற அற்கோப்சீர்மையும் அவன் விசாரிப்பாயிருந்தது.

௰௪ இத்தோவின் குமாரன் அகினதாப் மக்னாயீமிலிருந்தான்.

௰௫ அகிமாஸ் நப்தலியிலிருந்தான். இவன் சாலொமோனுக்கிருந்த ஒரு குமாரத்தியாகிய பஸ்மாத்தைக் கலியாணம் பண்ணினான்.

௰௬ ஊசாயின் குமாரன் பானா, ஆசேரிலும் ஆலோத்திலுமிருந்தான்.

௰௭ பருவாவின் குமாரன் யோசபாத் இசக்காரிலிருந்தான்.

௰௮ ஏலாவின் குமாரன் சீமேயி பென்யமீனிலிருந்தான்.

௰௯ ஊரியின் குமாரன் கேபேர் எமோரியரின் இராசாவாகிய சீகோனுக்கும் பாசானின் இராசாவாகிய ஓகுக்குமிருந்த சீர்மையாகிய கிலெயாத்தேசத்திலிருந்தான்.

௨௰ யூதாவும் இஸ்ரவேலுங் கடற்கரை மணலத்தனையேராளமாயிருந்தது. புசித்துக் குடித்து, மகிழ்ந்துகொண்டிருந்தார்கள்.

௨௰௧ நதிக்கவக்கப் பெலிஸ்தர் தேசமுதலாய் எகிப்தின் எல்லைமட்டுமிருக்கிற எல்லா இராச்சியங்களையுஞ் சாலொமோன் ஆண்டுகொண்டிருந்தான். அவர்கள் சாலொமோனுக்குக் காணிக்கைகளைக் கொண்டுவந்து, அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனைச் சேவித்தார்கள்.

௨௰௨ நாளொன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லுஞ் சாப்பாட்டுச் செலவு முப்பதுமரக்கால் மெல்லியமாவும், அறுபது மரக்கால்மாவும்,

௨௰௩ கலைமான்களையும் வெளிமான்களையுங் காட்டாடுகளையும் உசிதமான கொழுத்த செந்துக்களையுந் தவிர் கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும் மேய்கிற இருபது மாடுகளும் நூறு ஆடுகளுமாயிருந்தது.

௨௰௪ ஏனெனில் நதிக்கிப்பாலே திப்சா முதற்கொண்டு காசாமட்டுமுள்ள தெல்லாவற்றையும், நதிக்கு இந்தண்டையிலிருக்கிற எல்லா இராசாக்களையும் ஆண்டுகொண்டான். அவனுடைய சுற்றுப்புறத்தாரெல்லாரும் அமளிபண்ணாதிருக்கிறதினாலே அவனுக்குச் சமாதானமிருந்தது

௨௰௫ சாலொமோனுடைய நாளெல்லாந் தாண் துவக்கிப் பெயர்சேபாமட்டும் யூதாவும் இஸ்ரவேலும் அவரவர் தன்தன் திராட்சச்செடியின் நிழலிலுந் தன்தன் அத்திமரத்தின் நிழலிலுஞ் சுகமாய்க் குடியிருந்தார்கள்.

௨௰௬ சாலொமோனுக்கு நாலாயிரம் இரதக்குதிரைகளின் லாயங்களிருந்தது. அதுந்தவிர் பன்னீராயிரங் குதிரைக்காரருமிருந்தார்கள்.

௨௰௭ அந்த மணியக்காரர் ஒவ்வொருவன் தன்தன் மாதத்திலே சாலொமோன் இரா

சாவுக்கும் இராசாவின்பந்திக்குச்சேரு கிறயாவருக்கும்வேண்டியதை யொருகுறைவுமில்லாமற்பராமரிந்து,

௨௮ குதிரைகளுக்கும் இரதக்குதிரைகளுக்கும்வேண்டியவாற்கோதுமையையும் வைக்கோலையும் அவனவன்தங்களுக்கிருந்தகட்டளையின்படியவனிருக்குந்தலத்திற்குவரப்பண்ணினார்கள்.

சாலோமோனின்பெரியஞானம்.

௨௯ பராபரன் சாலோமோனுக்கு மகாபெரியஞானத்தையுமஉணர்வையுங்கடற்கரைமணலத்தனையான மனவிவேகத்தையுங்கொடுத்தார்.

௩௦ சகலகிழக்கித்திப்புத்திரரின்ஞானத்தையும் எகிப்தியரின் எல்லாஞானத்தையும்பார்க்கச்சாலோமோனின்ஞானம் பெரியதாயிருந்தது.

௩௧ எல்லாமனுஷரையும் எஸ்ராகியனான ஏத்தானையும், ஏமான், கற்கோல், தற்தாவென்றமாகோலின் குமாரரையும்பார்க்கிலும அவன் ஞானியாயிருந்தான். சுற்றுப்புறத்துச் சாதிகளுக்குள்ளெல்லாம் பெயரெடுப்பாயிருந்தான.

௩௨ மூவாயிரம் வாக்கியங்களைச்சொன்னான். அவனுடையபாட்டுக்கள் ஆயிரத்தைந்து.

௩௩ லீபனோனிலிருக்கிறகேதுருமரங்கள் துவக்கிச்சுவரிலமுளைக்கிறஈசோப்பூண்டுமட்டுமுள்ளமரங்கள் செடிகளின் பேரிலுமமிருகங்கள், பறவைகள், ஊர்வனங்கள், மச்சங்கள் பேரிலுமவாக்கியங்களைச்சொன்னான்.

௩௪ எல்லாச்சனசந்தளங்களிடத்திலும் சாலோமோனின் ஞானத்தைக்கேள்விப்பட்டபூமியின்சகல இராசாக்களிடத்திலுமிருந்து அவனுடையஞானத்தைக்கேட்கிறதற்காகமனுஷர்வந்தார்கள்.

௫. அதிகாரம்.

தெய்வாலயத்தைக்கட்டச் சாலோமோன்பண்ணின ஆயத்தம.

சாலோமோனையவனுடைய பிதாவின்ஸ்தலத்தில இராசாவாக அபிஷேகம்பண்ணினார்களென்பதைத்தீருவின் இராசாவாகிய ஈராங்கேட்டபடியினாலே தனனுடையஊழியக்காரரையவனண்டைக்கனுப்பினான். ஏனெனில ஈராந்தாவீதைச் சகலநாளுஞ்சிநேகித்திருந்தான.

௨ அப்போது சாலோமோன் ஈராமண்டைக்கு மனுஷரையனுப்பிச்சொல்லச்சொன்னதாவது,

௩ என்தகப்பனாகிய தாவீதின சத்துருக்களைக்கர்த்தர் அவருடையபாதங்களுக்குக்கீழ்ப்படுத்திப்போடுமளவும அவர்கள்தமமைச்சுற்றிலுமபண்ணுகிற யுத்தத்தினாலே அவர்தமமுடைய பராபரனாகிய கர்த்தருடையநாமத்திற்குவீட்டைக்கட்ட அவருக்குக்கூடாதிருந்ததென்று நீர் அறிந்திருக்கிறீர்.

௪ ஆனால இப்போதுவிரோதக்காரனும் பொல்லாதசம்பவமுமில்லாதபடிக்கு என்பராபரனாகியகர்த்தர்சுற்றிலுமெனக்கு இளைப்பாறுதலைக்கட்டளையிட்டார்.

௫ ஆகையால இதோ, நாம் உன்ஸ்தலத்தில உன் ஆசனத்தின்மேலவைக்கும உனனுடையகுமாரனே நமமுடையநாமத்திற்குவீட்டைக்கட்டுவானென்று கர்த்தர் என்தகப்பனாகிய தாவீதோடேசொன்னபடியே என்பராபரனாகியகர்த்தரின நாமத்திற்குவீட்டைக் கட்டவேண்டுமென்றிருக்கிறேன்.

௬ இப்போதுமலீபனோனிலெனக்குக் கேதுருமரங்களைவெட்டக்கற்பியும். அதற்காக என்வேலைக்காரர் உமமுடையவேலைக்காரரோடிருப்பார்கள நீர்சொல்வதினபடியெல்லாம உமமுடைய வேலைக்காரரின சம்பளத்தைஉமக்குக் கொடுப்பேன். ஏனெனிற்சீதோனியரைப்போலேமரங்களைவெட்ட அறிந்தவர்களெங்களுக்குளளே ஒருவருமில்லையெனகிறதைநீர் அறிவீரென்றுசொல்லச்சொன்னான.

௭ சம்பவித்ததேதெனறால ஈராஞ்சாலோமோனின வார்த்தைகளைக் கேட்டபோதுமிகவுஞ்சந்தோஷப்பட்டு, அந்த ஏராளமான சனத்தின்பேரிலேவைக்கத்தாவீதுக்கொரு ஞானமுள்ளகுமாரனைக் கொடுத்த கர்த்தர் இன்று இஸ்தோத்திரிக்கப்படுவாராகவென்றுசொல்லி,

௮ ஈராஞ் சாலோமோனண்டைக்குமனுஷரையனுப்பி, நீர் எனக்குச்சொல்லியனுப்பினகாரியத்தைக்கேட்டேன். கேதுருமரங்களுக்காகவுமபாய்மரவிருட்சங்களுக்காகவும உமக்கிருக்கிறவிருப்பத்தினபடியெல்லாமநான்செய்வேன.

௯ என்வேலைக்காரர்லீபனோனிலிருந்து அவைகளை யிறக்கிக்கடலிலேகொண்டுபோவார்கள. அங்கேநானவைகளைத்தெப்பங்களாகக்கட்டி நீரெனக்குச்சொல்லியனுப்புந்தலமட்டாகக்கடலின்மேற்கொண்டுவந்து அங்கே நீர் அவைகளையேற்றுக்கொள்ளஅவிழ்த்துப்போட்டுவிடச்சொல்லுவேன். நீரென்வீட்டுக்கு ஆ

சாரியங்கொடுக்கிறதினாலுமென் விருப்பத்தின்படி செய்யவேண்டுமென்று சொல்லச் சொன்னான்.

௰ அப்படியே சாலோமோன் வேண்டுமென்கிற கேதுருமரங்களையும் பாய்மார விருட்சங்களையும் எல்லாம் ஈராம் அவனுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தான்.

௰௧ சாலோமோன் ஈராமின் அரண்மனைக்குப் போசனமாக இருபதினாயிரக்கலக் கோதுமையையும் இடித்துப் பிழிந்த ஒலிவமரங்களின் இருபதினக்கல எண்ணெயையுங் கொடுத்தான். இப்படிச் சாலோமோன் ஈராமுக்கு வருஷாந்திரங் கொடுத்தான்.

௰௨ கர்த்தர் சாலோமோனுக்குச் சொல்லியிருந்தபடியே அவனுக்கு ஞானத்தைக் கட்டளையிட்டார். ஈராமுக்குஞ் சாலோமோனுக்குஞ் சமாதானமுண்டாயிருந்து இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

௰௩ இராசாவாகிய சாலோமோன் இஸ்ரவேலிலெல்லாம் அமஞ்சியாள்களையெடுத்தான். அந்த அமஞ்சியாள்கள் முப்பதினாயிரம்பேர்.

௰௪ அவர்களில் ஒவ்வொருமாதத்திலே பதினாயிரம்பேரை மாறிமாறி லீபனோன் பர்வதத்திற்கனுப்பினான். அவர்கள் ஒரு மாதம் லீபனோனிலும் இரண்டுமாதந் தங்கள் வீடுகளிலுமிருப்பார்கள். அதோனீராம் அந்த அமஞ்சியாட்களின்மேல் விசாரிப்புக்காரனாயிருந்தான்.

௰௫ சாலோமோனுக்குச் சுமக்கிறவர்கள் எழுபதினாயிரம்பேரும் பர்வதத்திலே வெட்டுகிறவர்கள் எண்பதினாயிரம்பேரும்

௰௬ இவர்களைத்தவிர வேலையை விசாரித்து வேலைசெய்கிற சனத்தை யாளுகிற தலைமைவிசாரிப்புக்காரர் மூவாயிரத்து முந்நூறுபேருமிருந்தார்கள்.

௰௭ வெட்டின்கல்லால் வீட்டிற்கு அஸ்திபாரம்போட இராசா பெரிதும் விலையேறப்பெற்றதுமான கல்லுகளைக் கொண்டுவரச்செய்தான்.

௰௮ வீட்டைக்கட்டச் சாலோமோனின் சிற்பாசாரிகளும் ஈராமின் சிற்பாசாரிகளும் கிபிலியரும் அந்த மரங்களையுங் கல்லுக்களையும் வெட்டி முஸ்திப்பாக்கினார்கள்.

௬. அதிகாரம்.

சாலோமோன் கட்டின தேவாலயம்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட நானூற்றெண்பதாம் வருஷத்திலும் சாலோமோன் இஸ்ரவேலின்மேல் இராசாவான நாலாம் வருஷத்தில் சீப்மாதமாகிய இரண்டாம் மாதத்திலும் அவன் கர்த்தருடைய வீட்டைக் கட்டத் துவக்கினான்.

௨ சாலோமோன் இராசா கர்த்தருக்குக் கட்டின வீடானது அறுபதுமுழ நீளமும் இருபதுமுழ அகலமும் முப்பதுமுழ உயரமுமாயிருந்தது.

௩ வீட்டினுடைய பரிசுத்த தேவாலயத்தின் முகப்பிலே அவன் கட்டின மண்டபம் வீட்டின் அகலத்திற்கு முன்னே இருபதுமுழ நீளமும் வீட்டின் முன்னே பத்துமுழ அகலமுமாயிருந்தது.

௪ பார்வைக்குக் குறுகிப்போகிற பலகணிகளை வீட்டிற்குச் செய்வித்தான்.

௫ அவன் தேவாலயத்தின் சுவருக்கும் சந்நிதிஸ்தலச் சுவருமாகிய வீட்டின் சுவர்களுக்கடுத்தாயச் சுற்றுக்கட்டுகளைக் கட்டி, அவைகளில் அறைகளைச் சுற்றிலுமுண்டாக்கினான்.

௬ கீழ்ப்பக்கத்திருக்கிற சுற்றுக்கட்டு ஐந்துமுழ அகலமும் நடுவாந்தரமானது ஆறுமுழ அகலமும் மூன்றாவதுகள் ஏழுமுழ அகலமுமாயிருந்தது. ஏனெனில் அவைகள் வீட்டினுடைய சுவர்களிலே தாங்காதபடிக்கு வீட்டைச் சுற்றிலும் புறம்பே ஒட்டுச்சுவர்களைப் போடுவித்தான்.

௭ வீடு கட்டப்படுகையில் அது கொண்டுவரப்பட்ட பிரகாரமாயிருக்கிற வேலை தீர்ந்த கல்லுகளாலே கட்டப்பட்டது. ஆகையால் அது கட்டப்படுகிறபோது, சுத்திகள் கோடாலிகள் முதலான எந்த இருப்பாயுதங்களின் சத்தமும் அதிலே கேட்கப்படவில்லை.

௮ நடுவாந்திரமான அறைகளுக்குப் போகிற வாசற்படி வீட்டின் வலதுபுறத்திலிருந்தது. சுழற்படிகளால் நடுவாந்திர அறைகளுக்கும் நடுவாந்திர அறைகளிலிருந்து மூன்றாவது அறைகளுக்கும் ஏறுவார்கள்.

௯ அப்படியே அவன் வீட்டைக் கட்டி முடித்து, வீட்டைக் கேதுருமரங்களின் உத்திரங்களாலும் பலகைகளாலும் மச்சுப்பாவினான்.

௰ அவன் ஐந்துமுழ உயரமான சுற்றுக்கட்டையை வீட்டின்மேலெல்லாங் கட்டுவித்தான். அது கேதுருமரங்களால் வீட்டோடே யிணைக்கப்பட்டிருந்தது.

௰௧ அப்போது கர்த்தருடைய வார்த்தை சாலோமோனுக்குண்டாகி, அவர் சொன்னதாவது,

௰௨ நீ நம்முடைய கட்டளைகளில் நடந்து நம்முடைய நீதிநியாயங்களின்படி செய்து நம்முடைய கற்பனைகளிலெல்லாம் நடந்துகொள்ளும்படிக்கு அவைகளைக் கைக்கொண்டால், நாம் உன் தகப்பனுக்கு யதாவீதோடே நீ கட்டுகிற இந்த வீட்டைக்குறித்துச் சொன்ன நம்முடைய வார்த்தையை உன்னிடத்திலே திடப்படுத்தி,

௰௩ இஸ்ரவேல் புத்திரர் நடுவிலே வாசம்பண்ணி நம்முடைய சனமாகிய இஸ்ரவேலைக் கைவிடாதிருப்போமென்றார்.

௰௪ அப்படியே சாலோமோன் வீட்டைக் கட்டிமுடித்து,

௰௫ வீட்டுச் சுவர்களின் உட்புறத்தை வீட்டின் தரையைத் துவக்கிச் சுவர்களின் மேல் மச்சுமட்டுங் கேதுருப்பலகைகளால் மூடி, இப்படி உட்புறத்தை மரவேலையாக்கிப்போட்டு, வீட்டின் தரையைப் பாய்மர விருட்சங்களின் பலகைகளாலே தளவரிசைப்படுத்தினான்.

௰௬ அவன் தளவரிசையைத் துவக்கிச் சுவர்களின் உயரமட்டும் வீட்டின் பக்கங்களைப் பிடித்திருக்கிற இருபதுமுழமறைப்பையுங் கேதுரு பலகைகளாலுண்டாக்கி உட்புறத்தைப் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான சன்னிதிஸ்தலமாகக் கட்டினான்.

௰௭ அதின் முன்கட்டான தெய்வாலயமாகிய வீடோவெனில் நாற்பதுமுழ நீளமாயிருந்தது.

௰௮ வீட்டிற்குள்ளிருக்கிற கேதுருமொக்குகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரவேலையாயிருந்தது. ஒருகல்லாகிலுங் காணப்படாமல் எல்லாங் கேதுருவாயிருந்தது.

௰௯ வீட்டிலே உள்ளாக அவன் சன்னிதிஸ்தலத்தைக் கர்த்தருடைய வுடம்படிக்கையின் பெட்டியையங்கே வைக்கிறதற்காக ஆயத்தப்படுத்தினான்.

௨௰ சன்னிதிஸ்தலம் முன்புறமட்டும் இருபதுமுழ நீளமும் இருபதுமுழ அகலமும் இருபதுமுழ உயரமுமாயிருந்தது அதையபரஞ்சித்தகட்டினால் மூடினான் கேதுருமரப்பீடத்தையும் அப்படி மூடினான்.

௨௧ வீட்டின் உட்புறத்தைச் சாலோமோன் அபரஞ்சித்தகட்டினால் மூடிச் சன்னிதிஸ்தலத்தின் மறைப்புக்குப் பொற்சங்கிலிகளைக் குறுக்கேபோட்டு அதைப் பொற்றகட்டால் மூடினான்.

௨௨ அப்படியே வீட்டை முழுதுங் கட்டித்தீருமட்டும் அவன் வீட்டையெல்லாம் பொற்றகட்டால் மூடிச் சன்னிதிஸ்தலத்திற்கு முன்பாகவிருக்கிற பீடத்தை முழுதும் பொற்றகட்டால் மூடினான்.

௨௩ அவன் சன்னிதிஸ்தலத்திலே ஒலிவமரங்களால் இரண்டு கேருபீன்களையுண்டாக்கி வைத்தான். ஒவ்வொன்று பத்துமுழ உயரமாயிருந்தது.

௨௪ ஒரு கேருபீனுக்கிருக்கிற ஒரு செட்டை ஐந்துமுழமுங் கேருபீனின் மற்றச் செட்டை ஐந்துமுழமுமாய் இப்படியே ஒரு செட்டையின் கடைசி முனைதுவக்கி மற்றச் செட்டையின் கடைசி முனைமட்டும் பத்துமுழமாயிருந்தது.

௨௫ மற்றக் கேருபீனும் பத்துமுழமாயிருந்தது. இரண்டு கேருபீன்களுக்கும் ஓரேயளவும் ஒரே திட்டமுமிருந்தது.

௨௬ ஒரு கேருபீன் பத்துமுழ உயரமாயிருந்தது. மற்றக் கேருபீனும் அப்படித்தான்.

௨௭ அந்தக் கேருபீன்களை உள்வீட்டிற்குள்ளே வைத்தான். கேருபீன்களின் செட்டைகளை விரித்திருந்ததினாலே ஒன்றினுடைய செட்டை இந்தண்டைச் சுவரிலும் மற்றக் கேருபீனின் செட்டை அந்தண்டைச் சுவரிலுஞ் சேர்ந்தது. வீட்டின் நடுமையத்திலோ அவைகளின் செட்டைகள் ஒன்றோடொன்று சேர்ந்திருந்தது.

௨௮ அந்தக் கேருபீன்களைப் பொற்றகட்டால் மூடினான்.

௨௯ வீட்டின் சுவர்களையெல்லாம் அவன் சுற்றிலும் உள்ளும்புறம்புமாகக் கேருபீன்களும் பேரீச்சுகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களுங் கொத்துவேலையாக்கினான்.

௩௰ உள்ளும்புறம்புமாயிருக்கிற வீட்டுத் தளவரிசையையும் பொற்றகட்டால் மூடினான்.

௩௧ அவன் சன்னிதிஸ்தலத்தின் வாசலுக்கு ஒலிவமரங்களால் இரட்டைக்கதவுகளையுண்டாக்கினான். மேற்சட்டமும் நிலைகளும் மறைப்பின் அளவில் ஐந்திலொருபங்கான விரிவாயிருந்தது.

௩௨ ஒலிவமரமான அந்த இரட்டைக் கதவுகளில் அவன் கேருபீன்களும் பேரீச்சுகளும் மலர்ந்த பூக்களுமான சித்திரங்களைச் செய்து அந்தக் கேருபீன்களிலும் பேரீச்சுகளிலும் பொன்பதியப்பட்ட தகடாயப் பொற்றகட்டால் மூடினான்.

௩௩ இப்படித் தெய்வாலயத்தின் வாசலுக்கும் ஒலிவமர நிலைகளையுண்டாக்கினான். அது சுவரளவில் நாலத்தொருபங்கான விரிவாயிருந்தது.

௩௪ அதின் இரண்டு கதவுகள் தேவதாரியாயமரப்பலகைகளாயிருந்தது. ஒரு கதவுக்கு இரண்டு மடிப்புப் பலகைகளும்,

மடக்குகிற இரண்டுமடிப்புப்பலகைகளு மிருந்தது.

௩௫ அவைகளிற்கேருபீன்களும் பேரீச்சுகளும மலர்ந்தபூக்களுமான சித்திரவேலைபண்ணி சித்திரங்களுக்குச் சரியாகத் தகடுபண்ணப்பட்ட பொற்றகட்டால அவை களை மூடினான்.

௩௬ அவன உட்பிரகாரத்தைவெட்டின கல்லுகளின மூன்றுவரிசைகளாலும் கேதுருபலகைகளின ஒருவரிசையினாலும் கட்டினான்.

௩௭ நாலாமவருஷத்து சீப்மாதத்திலே கர்த்தருடைய வீட்டுக்கு அஸ்திபாரம் போடப்பட்டு,

௩௮ பதினோராமவருஷம் எட்டாம்மாதமாகிய பூல்மாதத்திலே அந்த வீடு தனனுடைய எல்லா முஸ்திப்புகளோடுந் தனனுடைய எல்லா நியாயத்தோடுங் கட்டித் தீர்ந்தது. ஏழுவருஷக்காலத்தில் அதைக்கட்டினான.

௭. அதிகாரம்.

சாலோமோன தனக்குக்கட்டின அரண்மனை.

௧ இன்னுஞ் சாலோமோன தனனுடைய வீட்டைப்பதின்மூன்று வருஷக்காலத்திலே கட்டித்தன வீட்டையெல்லாமுடித்தான.

௨ எனனவெனில அவன லீபனோனகாட்டுவீட்டைக் கட்டினான்; அது நூறுமுழ நீளமும ஐம்பது முழ அகலமும முப்பதுமுழ உயரமுமான வீட்டைக்கேதுருமர உத்திரங்களைப்போட்ட கேதுருமரத் தூண்களின நாலுவரிசைகளமேலேகட்டினான.

௩ ஒவ்வொருவரிசைப் பதினைந்து தூணாக நாற்பத்தைந்து தூணகளின மேலே கட்டப்பட்ட அறைகள உயரக்கேதுருபலகையால் மச்சுப்பாவியிருந்தது.

௪ மூன்றுவரிசைப்பலகணிகளமூன்றுவரிசையுமதிராய் ஒனறுக்கொன்றெதிராயிருந்தது.

௫ பலகணிகளினவாசல்களும் சட்டங்களுமெல்லாம நாற்சதிரமும, மூன்றுவரிசைகளிலே ஒனறுக்கொன்றெதிராகவுமிருந்தது.

௬ ஐம்பது முழநீளமும முப்பதுமுழ அகலமுமான தூணகளின மண்டபத்தைக்கட்டினான. அந்தமண்டபமும அதின தூணகளும உத்திரங்களும வீட்டின தூணகளுக்கும உத்திரங்களுக்கும எதிராயிருந்தது.

௭ நியாயந்தீர்க்கிறதற்கு நியாயாசனமிருக்கும ஒருமண்டபத்தையுங் கட்டி அந்தமண்டபத்தை அந்தமண்டபத்தின் தளமுதல் மேல்வரைக்கும் கேதுருபலகைகளால தளவரிசைப்படுத்தினான.

௮ அவனவாசமபண்ணும அவனுடைய வீட்டிலே மண்டபத்திற்குட் புறமாக இந்தவேலையாய்ச் செய்யப்பட்ட வேறொரு முற்றமிருந்தது. சாலோமோன விவாகம்பண்ணின பார்வோனின குமாரத்திக்கும அவன அந்தமண்டபத்தைப்போலிருக்கிற ஒரு வீட்டைக்கட்டுவித்தான.

௯ இவைகளெல்லாம உளளேயும புறம்பேயும அஸ்திபாரங்கள துவக்கி மேல் தளங்கள்மட்டுக்கும வெளியேயிருக்கும பெரியமுற்றமட்டுக்கும அளவுபடிவெட்டி வாளால அறுக்கப்பட்ட விலையேறப்பெற்ற கல்லுகளாயிருந்தது.

௧௦ அஸ்திபாரமோ பெருப் பத்துமுழக்கல்லுகளும எட்டுமுழக்கல்லுகளுமான விலையேறப்பெற்ற பெரியகல்லுகளாயிருந்தது.

௧௧ அதினமேல உயர் அளவுபடிவெட்டின விலையேறப்பெற்றகல்லுகளுங்கேதுருமரங்களுமவைக்கப்பட்டிருந்தது.

௧௨ பெரிய முற்றத்திற்குச் சுற்றிலும வெட்டின கல்லுகளின மூன்றுவரிசைகளுங் கேதுருமரத்துலாங்களின ஒருவரிசையுமுண்டாயிருந்தது. கர்த்தருடைய வீட்டின உட்பிரகாரத்திற்கும வீட்டினமுன்மண்டபத்திற்கும அப்படித்தானிருந்தது.

தேவாலயத்திற்காகச்செய்யப்பட்ட பணிமுட்டுகள்.

௧௩ இராசாவாகிய சாலோமோன ஈராமைத் தீருவிலிருந்து வரவழைப்பித்தான்.

௧௪ இவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒருகைம்பெண்சாதியினமகன. அவனதகப்பன் தீருவிலுள்ளவனாகிய ஒரு கன்னானாயிருந்தான. அவன சகலவிதவெண்கலவேலையுஞ் செய்யத்தக்க ஞானத்தினாலும புத்தியினாலும அறிவினாலும நிறையப்பட்டிருந்தான. அவன இராசாவாகிய சாலோமோனண்டைக்கு வந்து அவனுடைய வேலையையெல்லாஞ் செய்தான.

௧௫ அவன இரண்டுவெண்கலத்தூணகளையுண்டாக்கினான. ஒவ்வொருதூண பதினெட்டு முழ உயரமும, ஒவ்வொரு தூ

ணின் சுற்றளவு பன்னிரண்டுமுழ நூலளவு மாயிருந்தது.

௰௬ அந்தத் தூண்களுடைய தலைப்புக ளிலே வைக்க வெண்கலத்தால் வார்க்கப்பட்ட இரண்டு கும்பங்களையுண்டாக்கினான். ஒவ்வொரு கும்பம் ஐந்துமுழ உயரமாயி ருந்தது.

௰௭ தூண்களுடையமுனையின்மேல் உள்ள கும்பங்களுக்கு வலைகளைப்போலொத்த பின்னல்களும் சங்கிலிகளைப்போலொத்த தொங்கல்களு மிருந்தது. ஒவ்வொரு கும்பத்திற்கு ஏழிருந்தது.

௰௮ அப்புறந் தூண்களைப்பண்ணினவிதமேதெனில், முனையின்மேலுள்ள கும்பங்களை மூடும்படிக்குக் கும்பங்களிலொவ்வொன்றிலே பின்னலின்மேற் சுற்றிலும் இரண்டுவரிசைமாதளம்பழங்களைச் செய்பண்ணிட்டான்.

௰௯ மண்டபத்தின்முன்னிருக்கும் அந் தத் தூண்களுடையமுனையின்மேலுள்ள கும்பங்களல்லிப்புஷ்பங்களின் வேலையுமநாலுமுழ உயரமுமாயிருந்தது.

௨௰ இரண்டு தூண்களின்மேலுமுள்ள கும்பங்களில் உயரப் பின்னலுக்கருகேயிருக்கிற வயிற்றுக்கடுத்ததாய் இருநூறு மாதளம்பழங்களின் வரிசைகள் சுற்றிலுமிருந்தது. மற்றக்கும்பத்திலும் அப்படியிருந்தன.

௨௧ அந்தத் தூண்களைத் தேவாலய மண்டபத்தின் முன்நிறுத்தினான். அவன் வலதுபுறத்தில் நிறுத்தின தூணுக்கு யாகீனென்றும், இடதுபுறத்திலே நிறுத்தின தூணுக்குப் போவாஸ் என்றும் பேர்தரித்தான்.

௨௨ தூண்களுடைய சிகரத்தில் லீலி யபுஷ்பங்களின் வேலையாயிருந்தது. அப்படியே தூண்களின்வேலைமுடிந்தது.

௨௩ வெண்கலக்கடல் தொட்டியையும் வார்ப்பித்தான். சுற்றிலுஞ்சக்கரமான அதினுடைய உதடு இந்தப்புறந்துவக்கி அந்தப்புறமட்டும் பத்துமுழ அகலமும், அதின் உயரம் ஐந்துமுழமுமாக, சுற்றளவு முப்பதுமுழ நூலளவுமாயிருந்தது.

௨௪ அதினுதட்டுக்குக்கீழ்ப்புறமாய் அதைச்சுற்றிலும் மொக்குகள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்தாக அந்தக்கடல்தொட்டியின் சக்கரத்திற்கிருந்தது. தொட்டியோடொன்றாய்வார்க்கப்பட்ட அந்த மொக்குகளின் வரிசைகள் இரண்டிருந்தது.

௨௫ அது பன்னிரண்டு எருதுகளின்மேல் நின்றது. அவைகளில்மூன்று வடக்கேயும் மூன்றுமேற்கேயும் மூன்றுதெற்கேயும்மூன்று கிழக்கேயும் நோக்கியிருந்தது. கடல்தொட்டியவைகளின்மேலாகவும் அவைகளின் பின்புறங்களெல்லாம் உள்ளாகவுமிருந்தது.

௨௬ அதின்கனம் நாலுவிரற்கடையும் அதினுதடு குடிக்கிறபாத்திரத்தி னுதட்டைப்போலும் லீலிபுஷ்பத்தைப்போலுமிருந்தது. அது இரண்டாயிரங்குடந்தண்ணீர்பிடிந்தது.

௨௭ பத்துவெண்கல ஆதாரங்களையும் உண்டாக்கினான். ஒவ்வொரு ஆதாரம் நாலுமுழநீளமும் நாலுமுழ அகலமும் மூன்றுமுழ உயரமுமாயிருந்தது.

௨௮ அந்த ஆதாரங்களின் வேலையென்னவெனில், அவைகளுக்குச்சவுக்கைகள் உண்டாயிருந்தது. சவுக்கைகளோசட்டங்களின் நடுவிலுமிருந்தது.

௨௯ சட்டங்களுக்கு நடுவேயிருக்கிற அந்தச்சவுக்கைகளிற் சிங்கங்களும் எருதுகளுங் கேருபீன்களுஞ் சட்டங்களுக்கு மேலாக ஒருதிரணையுஞ், சிங்கங்களுக்கும் எருதுகளுக்குங் கீழ்ப்புறமாக இறங்கல் வேலையான சலதாரைகள் அந்தேபொட்டிருந்தது.

௩௰ ஒவ்வொரு ஆதாரத்திற்கு நாலு வெண்கல உருளைகளும் வெண்கலத்தட்டுகளும், அதின் நாலுகோடிகளுக்கு அச்சுகளுமிருந்தது. கொப்பரையின்கீழிருக்க அந்தக்கொம்மைகள் ஒவ்வொன்றின் சலதாரைகளுக்கு நேராக வார்க்கப்பட்டிருந்தது.

௩௧ திரணைக்குள்ளான அதின்வாய்மேலாக ஒருமுழமும் உயர்ந்திருந்தது. அதினுடையவாய் ஒன்றரைமுழச் சக்கரமுந்தட்டையுமாய், அதின்வாயின்மேலேசித்திரங்களுமுண்டாயிருந்தது. அவைகளின் சவுக்கைகளோவெனிற் சக்கரமாயிராமல் நாற்சதுரமாயிருந்தது.

௩௨ அந்த நாலு உருளைகள் சவுக்கைகளின்கீழும், உருளைகளின் அச்சுகளாதாரத்திலுமிருந்தது. ஒவ்வொருஉருளையொன்றரைமுழ உயரமாயிருந்தது.

௩௩ உருளைகளின் வேலை இரதச்சுருளைகளின் வேலைக்கொத்திருந்தது. அவைகளின் அச்சுகளுஞ் சக்கரங்களும் வட்டங்களுங் கம்பிகளும் எல்லாம் வார்ப்பாயிருந்தது.

௩௪ ஒவ்வொரு ஆதாரத்தினுடைய நாலுகோடிகளிலும் ஆதாரத்திலிருந்துபுறப்படுகிற நாலுகொம்மைகளிருந்தது.

௩௫ ஒவ்வொரு ஆதாரத்தின் தலைப்பிலே அரைமுழ உயரமான சக்கரங்களும் ஒவ்வொரு ஆதாரத்தினுடைய தலைப்பின் மேல் அதிலிருந்து புறப்படுகிற அதின் கைப்பிடிகளுஞ் சவுக்கைகளுமிருந்தது.

௩௬ அவைகளிலிருக்கிற கைப்பிடிகளுக்குஞ் சவுக்கைகளுக்குமிருக்கிற சந்துசந்திலே கேருபீன்களையும் சிங்கங்களையும் பேரீச்சுகளுடைய சித்திரங்களைத் தீர்த்தான். சுற்றிலும் ஒவ்வொன்றினுஞ் சலாகைகளிலும் இருக்கும் இடங்களுக்குத் தக்கதாயத்தானே.

௩௭ இந்தப் பிரகாரமாக அந்தப் பத்து ஆதாரங்களையுஞ் செய்தான். அவைகளுக்கெல்லாம் ஒரே வார்ப்பும் ஒரே அளவும் ஒரே கோத்தும் இட்டமுமிருந்தது.

௩௮ அப்பத்து வெண்கலக் கொப்பறைகளையும் உண்டாக்கினான். ஒவ்வொரு கொப்பறை நாற்பது குடம் பிடித்தது. நாலுமுழ அகலமான ஒவ்வொரு கொப்பறை அந்தப் பத்து ஆதாரங்களில் ஒவ்வொன்றின்மேல் வைக்கப்பட்டது.

௩௯ ஐந்து ஆதாரங்களை வீட்டின் வலதுபுறத்திலும் ஐந்து ஆதாரங்களை வீட்டின் இடதுபுறத்திலும் வைத்தான். ஆனாற் கடல்தொட்டியை வீட்டுக்குக் கிழக்கான வலதுபுறத்திலே தெற்குச் செதிராக வைத்தான்.

௪௰ பிற்பாடு ஈராம் கொப்பறைகளையுஞ் சாம்பலெடுக்கிற கரண்டிகளையுங் கலங்களையு முண்டாக்கினான். அப்படியே ஈராம் கர்த்தருடைய வீட்டுக்காக் இராசாவாகிய சாலொமோனுக்குச் செய்யவேண்டிய எல்லா வேலையையுஞ் செய்து முடித்தான்.

௪௧ அவைகளெவையெனில் இரண்டு தூண்களும் இரண்டு தூண்களுடைய முனையின்மேலிருக்கிற இரண்டு உருண்டைக் குடங்களும், தூண்களுடைய முனையின்மேலிருக்கிற இரண்டு உருண்டைக்குடங்களை மூடிய இரண்டு வலைப்பின்னல்களும்,

௪௨ தூண்களின் மேலுள்ள இரண்டு உருண்டைக்குடங்களை மூடத்தக்கதாக ஒவ்வொரு வலைப்பின்னலுக்குப் பண்ணின இரண்டு வரிசையான மாதளம்பழங்களும் ஆகிய இரண்டு வலைப்பின்னல்களுக்கும் நானூறு மாதளம்பழங்களும்,

௪௩ பத்து ஆதாரங்களும் ஆதாரங்களின்மேல் வைத்த பத்துக் கொப்பறைகளும்,

௪௪ ஒரு கடல்தொட்டியுங் கடல்தொட்டியின் கீழிருக்கிற பன்னிரண்டு எருதுகளும்,

௪௫ செப்புச்சட்டிகளுஞ் சாம்பலெடுக்கிற கரண்டிகளுங் கலங்களுந்தானே. கர்த்தரின் வீட்டுக்காக இராசாவாகிய சாலொமோனுக்கு ஈராஞ்செய்த இந்த எல்லாப் பணிமுட்டுகளுந் துப்புரவான வெண்கலமாயிருந்தது.

௪௬ யோர்தானுக்கடுத்த சமனான பூமியிலே சுக்கோத்திற்குஞ் சர்தானுக்கும் நடுவே இராசா அவைகளைக் களிமண்தரையிலே வார்ப்பித்தான்.

௪௭ இந்தச் சகல பணிமுட்டுகளின் வெண்கலம் மிகுதியும் ஏராளமாயிருந்தபடியாற் சாலொமோன் அவைகளை நிறுக்காதிருந்தான். அதினுடைய நிறை ஆராய்ந்து பார்க்கப்படவில்லை.

௪௮ பின்னையுங் கர்த்தருடைய வீட்டுக்குத் தேவையான பணிமுட்டுகளையெல்லாஞ் சாலொமோன் உண்டாக்கினான். என்னவென்றால் பொற்பீடத்தையுஞ் சமுகத்தப்பங்களை வைக்கும் பொன்மேசையையும்,

௪௯ சந்நிதி ஸ்தலத்திற்கு முன்பாக வைக்கும் அபரஞ்சியான விளக்குத்தண்டுகளை வலதுபுறமாக ஐந்தையும் இடதுபுறமாக ஐந்தையும் பொன்னான அதின் பூக்களோடும் விளக்குகளோடுங் கத்திரிகளோடுங் கூடத்தானே,

௫௰ அபரஞ்சியான கிண்ணிகளையும் வெட்டுக்கத்திகளையுங் கலங்களையுங் கலயங்களையுந் தூபக்கலசங்களையும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான உள் வீட்டினுடைய கதவுகளின் பொன்னான முளைகளையுந் தெய்வாலய வீட்டுக் கதவுகளின் பொன்னான முளைகளையுந்தானே.

௫௧ அப்படியே இராசாவாகிய சாலொமோன் கர்த்தருடைய வீட்டுக்காகச் செய்த கிரியையெல்லாம் முடிந்தது. அப்போது சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீது பரிசுத்தம்பண்ணின வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையுங் கொண்டுவந்து கர்த்தருடைய வீட்டின் பொக்கிஷங்களிலே வைத்தான்.

௮. அதிகாரம்.

சாலொமோன் கட்டின தெய்வாலயத்தின் பிரதிஷ்டை.

அப்போது கர்த்தருடைய உடம்படிக்கையின் பெட்டியைச் சீயோனென்ற தாவீதின் பட்டணத்திலிருந்தே கொண்டுவரச் சாலொமோன் இஸ்ரவேலின் மூப்பரையும் இஸ்ரவேல் புத்திரரிலிருக்கிற பிதாக்களின்

பிரபுக்களாகிய கோத்திரங்களின் தலைவர் யாவரையும் எருசலேமில் இராசாவாகிய சாலொமோன் தன்னிடத்திலே கூட்டிக்கொண்டான்.

௨ இஸ்ரவேல் மனுஷரெல்லாரும் ஏழாம் மாதமாகிய ஏத்தானீம் மாதத்திலிருக்கிற பண்டிகையிலே இராசாவாகிய சாலொமோனிடத்திலே கூடினார்கள்.

௩ இஸ்ரவேலின் மூப்பரனைவரும் வந்திருக்கக்கொள்ள ஆசாரியர் கர்த்தருடைய பெட்டியையெடுத்து,

௪ பெட்டியையும் ஆசரிப்புக் கூடாரத்தையுங் கூடாரத்திலிருந்த பரிசுத்த பணிமுட்டுக்களனைத்தையுஞ் சுமந்தார்கள். ஆசாரியரும் லேவியரும் அவைகளைச் சுமந்தேறினார்கள்.

௫ இராசாவாகிய சாலொமோனும் அவனோடே கூடின இஸ்ரவேல் சபையனைத்துமாயப் பெட்டிக்கு முன்பாக நடந்து எண்ணிக்கையுங் கணக்குமில்லாத திரளான ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டார்கள்.

௬ அப்படியே ஆசாரியர்கள் கர்த்தருடைய உடம்படிக்கையின் பெட்டியைப் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான சன்னிதி வீடாகிய அதின் தானத்திலே கேருபீன்களுடைய செட்டைகளின் கீழே கொண்டுவந்து வைத்தார்கள்.

௭ ஏனெனில் கேருபீன்கள் பெட்டியிருக்குந் தானத்தின் மேலே தங்கள் இரண்டு செட்டைகளை விரித்து உயர்விருந்து பெட்டியையும் அதின் வாரைகளையும் மூடிக்கொண்டிருந்தது.

௮ வாரைகளின் முனைகள் சன்னிதி ஸ்தலத்திற்கு முன்னான பரிசுத்த ஸ்தலத்திலே காணப்படத்தக்கவையாய் அந்த வாரைகளை முன்னுக்கிழுத்தார்கள். ஆகிலும் வெளியே அவைகள் காணப்படவில்லை. அவைகள் இந்நாள்வரைக்கும் அங்கேயானிருக்கிறது.

௯ இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டபின் கர்த்தர் அவர்களோடே உடம்படிக்கை பண்ணுகிறபோது மோசே ஓரேபிலிருந்து அந்தப் பெட்டியிலே வைத்த இரண்டு கற்பலகைகளேயல்லாமல் அதிலே வேறொன்றுமிருந்ததில்லை.

௰ அப்போது சம்பவித்ததேதென்றால், ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில் மேகமானது கர்த்தருடைய வீட்டை நிரப்பிற்று.

௰௧ மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்கிறதற்கு நிற்கக்கூடாதே போயிற்று. ஏனெனில் கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய வீட்டை நிரப்பியிருந்தது.

௰௨ அப்போது சாலொமோன், இருளிலே வாசம்பண்ணுவோமென்று கர்த்தர் சொன்னாரென்றும்,

௰௩ தேவரீர் என்றைக்கும் வாசம்பண்ணும் ஸ்தானமாகிய வாசஸ்தல வீட்டையுமக்குக் கட்டவே கட்டினேனென்றுஞ் சொல்லி,

௰௪ இராசா தன் முகத்தைத் திருப்பி, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்தான். இஸ்ரவேல் சபையெல்லாம் நின்றது.

௰௫ அவன் சொன்னதாவது, என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினால் சொன்னதைத் தம்முடைய கர்த்தினாலும் நிறைவேற்றின இஸ்ரவேலின் பிதாவாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

௰௬ அவர் சொன்னதேதென்றால், நாம் நம்முடைய சனமாகிய இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள் முதற்கொண்டு நம்முடைய நாமம் இருக்கும் வீட்டைக் கட்டவேண்டுமென்று, நாம் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலும் ஒரு பட்டணத்தையும் தெரிந்துகொள்ளாமல் நம்முடைய சனமாகிய இஸ்ரவேலின் மேல் அதிகாரியாயிருக்கத் தாவீதையே தெரிந்துகொண்டோமென்றதுதானே.

௰௭ இஸ்ரவேலின் பிதாவாகிய கர்த்தரின் நாமத்திற்கு வீட்டைக் கட்டவேண்டுமென்று என் தகப்பனாகிய தாவீதுக்கு மனதிருந்தது.

௰௮ ஆனாலும் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதுடனே, நம்முடைய நாமத்திற்கு வீட்டைக் கட்டவேண்டுமென்று நீ உன் மனதிலே நினைத்தது நல்லதுதான்.

௰௯ ஆகிலும் நீ அந்த வீட்டைக் கட்டாமல், உன் கர்ப்பப்பிறப்பாகிய உன்னுடைய குமாரனே நம்முடைய நாமத்திற்கு அந்த வீட்டைக் கட்டுவானென்றார்.

௨௰ இப்போதுங் கர்த்தர் சொல்லியிருக்கிற தம்முடைய வார்த்தையைத் திடப்படுத்தினார். ஏனெனில் கர்த்தர் சொன்னபடியே நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தலத்திலெழும்பி, இஸ்ரவேலின் இராசாசனத்தின்மேலுட்கார்ந்து, இஸ்ரவேலின் பிதாவாகிய கர்த்தரின் நாமத்திற்கு வீட்டைக் கட்டி.

௨௰௧ கர்த்தர் நம்முடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்பட

ணினபோது அவர்களோடே பண்ணி
ன உடம்படிக்கை யிருக்கிற பெட்டிக்கு
அங்கே ஒரு ஸ்தானத்தை யுண்டாக்கினே
னென்றான்.

௨௨ பிற்பாடு சாலொமோன் கர்த்த
ருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ர
வேல் சபையெல்லாம் எதிராக நின்று
கொண்டு, தன் கைகளை வானத்திற்கு நே
ராய் விரித்துச் சொன்னதாவது,

௨௩ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்
தாவே! தங்கள் முழு இருதயத்தோடும்
உமக்கு முன்பாக நடக்கிற உம்முடைய
ஊழியக்காருக்குடம்படிக்கையையுங் கி
ருபையையுங் காக்கிற தேவரீரைப் போ
லே உயர் பரமண்டலங்களிலுங் கீழே பூமி
யிலும் வேறொரு தேவனுமில்லை.

௨௪ தேவரீர் என் தகப்பனாகிய தாவீ
தென்ற உம்மூழியக்காரனுக்குச் சொன்
னதை அவனுக்கு வர்ப்பண்ணினீர். அதை
உம்முடைய வாக்கினாலே சொன்னீர்.
இந்நாளிருக்கிறபடி உம்முடைய கரத்
தினாலும் நிறைவேற்றினீர்.

௨௫ இப்போதும் இஸ்ரவேலின் பரா
பரனாகிய கர்த்தாவே! நீ தமக்கு முன்பா
க நடந்ததுபோலே உன்னுடைய குமா
ரர் தமக்கு முன்பாக நடக்கும்படிக்குத்
தங்கள் வழியைக் காத்தார்களேயானால்
இஸ்ரவேலின் இராசாசனத்தின்மேல் உ
ட்காரும் புருஷன் தமக்கு முன்பாக உ
னக்கில்லாதிருப்பதில்லையென்று தேவரீர்
என் தகப்பனாகிய தாவீதென்ற உம்மு
டைய ஊழியக்காரனுக்குச் சொன்னதை
அவனுக்கு வர்ப்பண்ணியருளும்.

௨௬ இப்போதும் இஸ்ரவேலின் பரா
பரனே! தேவரீர் என் தகப்பனாகிய தாவீ
தென்ற உம்முடைய ஊழியக்காரனுக்கு
ச் சொன்ன உம்முடைய வார்த்தை மெய்
ப்படுவதாக.

௨௭ ஆனால் மெய்தான். பராபரன் பூ
மியிலே வாசமாயிருப்பாரோ? இதோ,
வானங்களும் வானங்களின் வானங்களும்
உம்மைக் கொள்ளாதே. நான் கட்டின
இந்த வீடு அதற்கு எம்மாத்திரம்?

௨௮ என்றாலும் என் பராபரனாகிய கர்த்
தாவே! உமதடியான் இன்று உமக்கு மு
ன்பாக விண்ணப்பம் பண்ணுகிற கூப்பி
டுதலையும் வேண்டுதலையுங் கேட்க, உமத
டியானுடைய வேண்டுதலையும் மன்றாட
லையும் நோக்கியருளும்.

௨௯ உமதடியான் இவ்விடத்திலே செ
ய்யும் விண்ணப்பத்தைக் கேட்க, உம்மு
டைய கண்கள் நம்முடைய நாமமிருக்கு
மென்று நீர் சொன்ன ஸ்தலமாகிய இந்
த வீட்டின்மேல் இரவும் பகலும் திறந்திரு
ப்பதாக.

௩௰ உமதடியானும் இந்த ஸ்தலத்
திலே விண்ணப்பம் பண்ணப்போகிற உம
து சனமாகிய இஸ்ரவேலும் பண்ணுஞ்
செபத்தைக் கேட்பீராக. ஆம், நீர் பரம
ண்டலங்களாகிய உம்முடைய வாசஸ்தல
த்திலேயிருந்து கேளும், கேட்டு மன்னியும்.

௩௧ ஒருவன் தனக்கடுத்தவனுக்குக் கு
ற்றஞ் செய்திருக்கக் கொள்ள அவனை அவ
னை யாணையிட்டுச் சத்தியம் பண்ணச்சொல்லும்
போது, அந்த ஆணை இந்த வீட்டிலேயும
முடைய பலிபீடத்திற்கு முன் வந்தால்,

௩௨ அப்போது பரமண்டலங்களிலிரு
க்கிற தேவரீர் கேட்டு அக்கிரமக்காரனுடைய
வழியை அவன் தலையின்மேல் சுமரப்ப
ண்ண அவனை தோஷியாக்கித் தீர்க்கவும்,
நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்
கதாய்ச் செய்ய அவனை நீதிமானாக்கப்ப
ண்ணவும் நடப்பித்து உம்முடைய ஊழிய
க்காரரை நியாயந்தீர்ப்பீராக.

௩௩ உம்முடைய சனமாகிய இஸ்ரவேல் உம
க்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினாலே
சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய்,
உம்மண்டைக்குத் திரும்பி உம்முடைய
நாமத்தை மகிமைப்படுத்தி, இந்த வீட்டி
லே உம்மை நோக்கி விண்ணப்பத்தையும்
வேண்டுதலையுஞ் செய்தால்,

௩௪ பரமண்டலங்களிலிருக்கிற தேவரீ
ர் கேட்டு உம்முடைய சனமாகிய இஸ்ர
வேலின் பாவத்தை மன்னித்து, அவர்கள்
பிதாக்களுக்கு நீர் கொடுத்த சீமைக்கு
அவர்களைத் திரும்பவரப்பண்ணுவீராக.

௩௫ அவர்கள் உமக்குப் பாவஞ் செய்
ததினாலே வானம் அடைபட்டு மழை பெ
ய்யாதிருக்கும்போது, அவர்கள் இந்த
ஸ்தலத்திலே விண்ணப்பம் பண்ணி, உ
ம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தித்
தேவரீர் தங்களைக் கஸ்திப்படுத்துகையா
லே தங்கள் பாவங்களை விட்டுத் திரும்பினால்,

௩௬ பரமண்டலங்களிலிருக்கிற தேவ
ரீர் கேட்டு, உமதடியாரும் உம்முடைய சனமா
கிய இஸ்ரவேலும் செய்த பாவத்தை ம
ன்னித்து, அவர்கள் நடக்கவேண்டிய நல்
வழியை யவர்களுக்குப் போதித்துத் தேவ
ரீர் உம்முடைய சனத்துக்குச் சுதந்தர
மாகக் கொடுத்த உமது தேசத்திற்கு ம
ழையைக் கட்டளையிடுவீராக.

௩௭ தேசத்திலே பஞ்சமுண்டாகிறபோ
து, பெருவாரிக்காய்ச்சலுண்டாகிறபோ
து, வறட்சி, சாவி, வெட்டுக்கிளி, பச்சை

கிளியுண்டாகிறபோது, அவர்களசத்துருக்கள் தேசத்திலிருக்கிற அவர்களவாசல்களில அவர்களை முத்திக்கைப்போடுகிறபோது, எந்தவிதமுமானவாதை எந்த விதமுமான வியாதி வந்திருக்கிறபோது,

௩௮ உம்முசனமாகிய இஸ்ரவேலிலெல்லாம எந்த மனுஷனாகிலுந்தன் தன் இருதயத்தின் வாதிையை யுணர்ந்து இந்த வீட்டுக்குநேராகத் தன கைகளை விரித்துச்செய்யுஞ் சகல விண்ணப்பத்தையுஞ் சகல வேண்டுதலையும,

௩௯ உம்முடைய வாசஸ்தலமாகிய பர்மண்டலங்களிலிருக்கிற தேவரீர் கேட்டு மன்னித்து,

௪௰ தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில அவர்கள உயிரோடிருக்குநாளெல்லாம உமக்குப் பயப்படும்படிக்குத் தேவரீரவனவன இருதயத்தையறிந்திருக்கிறபடியே யவனவனுடைய எல்லா வழிகளுக்குந் தக்கதாய அவனவனுக்குச் செய்து கட்டளையிடுவீராக. ஏனென்றால தேவரீர் ஒருவர் எல்லா மனுபுத்திரரின இருதயத்தையும அறிந்தவர்.

௪௧ உம்முடைய சனமாகிய இஸ்ரவேலசாதியல்லாத அந்நியதேசத்தார் உம்முடைய பெரியகீர்த்தியையும உம்முடையபலத்த கரத்தையும நீட்டியிருக்கிற உம்முடைய புயத்தையுங் கேள்விப்படுவார்களே,

௪௨ அப்படிக்கொத்த அந்நியசாதியாரும உம்முடைய நாமத்தினிமித்தந் தூரதேசத்திலிருந்து வந்து இந்த வீட்டுக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணினால,

௪௩ உமது வாசஸ்தலமாகிய பர்மண்டலங்களிலிருக்கிற தேவரீர் அதைக்கேட்டுப் பூமியின சனசதிரங்களெல்லாம உமது சனமாகிய இஸ்ரவேலைப்போல உமக்குப் பயப்படும்படிக்கும, நான கட்டின இந்தவீட்டுக்கு உம்முடைய நாமந்தரிக்கப்பட்டதென்றறியும்படிக்கும, உம்முடைய நாமத்தையறியத்தக்கதாக, அந்த அந்நியசாதியான உம்மை நோக்கிக் கூப்பிடும எல்லாக் காரியத்திற்குந் தக்கதாயத்தேவரீர் செய்வீராக.

௪௪ உம்முடையசனம தங்கள சத்துருக்களையெதிர்க்கும்படி யுத்தம்பண்ணப் புறப்பட்டு, நீர் தெரிந்துகொண்ட இந்தப் பட்டணத்திற்கும உம்முடைய நாமத்திற்கு நான கட்டின இந்த வீட்டுக்கும நேராகக் கர்த்தரை நோக்கி, விண்ணப்பம்பண்ணும்போது,

௪௫ பர்மண்டலங்களிலிருக்கிற தேவரீர் அவர்கள விண்ணப்பத்தையும வேண்டுதலையுங்கேட்டு, அவர்கள நியாயத்தை விசாரிப்பீராக.

௪௬ பாவஞ்செய்யாத மனுஷனில்லாமலிருக்கிறபடியினாலே அவர்கள உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்து தேவரீர் அவர்களமேற்கோபமாகி, அவர்கள சத்துருக்களுக்கு அவர்களைத் தூரத்திலும அல்லது சமீபத்திலுமிருக்கிற தங்கள தேசத்திற்கு அவர்களைச் சிறைபிடித்துக் கொண்டுபோகிறதற்கு ஒப்புக்கொடுக்கையில,

௪௭ அவர்கள சிறைப்பட்டுப் போயிருக்கிற தேசத்திலே தங்கள இருதயங்களில அதையுணர்ந்து மனந்திரும்பி, நாங்கள பாவஞ்செய்து அக்கிரமம்பண்ணித் துன்மார்க்கமாய நடந்தோமென்று தங்களைச் சிறையிருப்பான தேசத்திலேயும உம்மை நோக்கிவேண்டுதல்பண்ணி,

௪௮ தங்களைச் சிறைபிடித்துக்கொண்டதங்கள சத்துருக்களின தேசத்திலே தங்கள முழு இருதயத்தோடுந் தங்கள முழு ஆத்துமத்தோடும உம்மண்டைக்குத் திரும்பித் தேவரீர் தங்கள பிதாக்களுக்குக் கொடுத்த தங்கள தேசத்திற்குந் தேவரீர் தெரிந்துகொண்ட இந்தப்பட்டணத்திற்கும உம்முடைய நாமத்திற்கும நான் கட்டின இந்த வீட்டிற்கும நேராக உம்மை நோக்கி விண்ணப்பம பண்ணும்போது,

௪௯ உமது வாசஸ்தலமாகிய பர்மண்டலங்களிலிருக்கிற தேவரீர் அவர்கள விண்ணப்பத்தையுஞ் செபத்தையுங் கேட்டு, அவர்கள நியாயத்தைவிசாரித்து,

௫௰ உமக்கேகராமற்பாவஞ்செய்த உமது சனத்திற்கு அவர்கள உமக்கெதிராய்ப்பண்ணின அவர்கள துரோகங்களையெல்லாமன்னித்து, அவர்களைச் சிறைபிடித்திருக்கிறவர்கள அவர்களுக்கு இரங்கத்தக்கதாயான இரக்கத்தை யவர்களுக்கு இவர்கள முன்பாகக் கிடைக்கப்பண்ணுவீராக.

௫௧ ஏனெனில அவர்கள தேவரீர் எகிப்துவென்ற இருப்புக் காளவாயின நடுவிலிருந்து புறப்படப்பண்ணின உம்முடையசனமும உம்முடையசுதந்தரமும அவர்களேதாமே.

௫௨ அவர்கள உம்மைநோக்கிக் கூப்பிடுகிறதிலெல்லாந், தேவரீர் அவர்களைக் கேட்க, உம்முடையகண்கள உமதடியாரின வேண்டுதலுக்கும உமது சனமாகிய

இஸ்ரவேலின் வேண்டுதலுக்குந் திறந்திருப்பதாக.

ருங எங்களிற் கர்த்தராகிய ஆண்டவரே! நீர் எங்கள் பிதாக்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணுகையிலே உம்முடைய தாசனாகிய மோசேயைக் கொண்டு சொன்னபடியே நீர் பூமியின் சகல சனங்களிலும் அவர்களை உமக்குச் சுதந்தரமாகப் பிரித்தெடுத்தீரே யென்றான்.

ருச சாலோமோன் கர்த்தரை நோக்கி இந்த ஜெபத்தையும் வேண்டுதலையுமெல்லாம் விண்ணப்பம்பண்ணித் தீர்த்தபிறகு அவன் கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்பாகத் தன் முழங்கால்படியிட்டிருந்ததையுந் தன் கைகளை வானத்திற்கு நேராய் விரித்திருக்கிறதையும் விட்டெழுந்திருந்து,

ருரு நின்றுகொண்டு, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்து உரத்த சத்தத்தோடே சொன்னதாவது,

ருசா தாஞ்சொன்னபடியெல்லாந் தம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்ட கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். அவர் தம்முடைய தாசனாகிய மோசேயைக்கொண்டு சொன்ன அவருடைய நல்வார்த்தைகளிலெல்லாம் ஒருவார்த்தையாகிலும் விழுந்துபோனதில்லை.

ருஎ நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நம்மைக் கைவிடாமலும் நம்மை நெகிழவிடாமலும், அவர் நம்முடைய பிதாக்களோடிருந்ததுபோல நம்மோடுமிருந்து,

ருஅ நாம் அவருடைய வழிகளிலெல்லாம் நடக்கிறதற்கும், அவர் நம்முடைய பிதாக்களுக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் அவருடைய நியாயங்களையுங் கைக்கொள்ளுகிறதற்கும் நம்முடைய இருதயத்தைத் தம்மண்டைச் சாயப்பண்ணுவாராக.

ருகூ அவர் தம்மடியானுடைய நியாயத்தையுந் தம் சனமாகிய இஸ்ரவேலின் நியாயத்தையும், ஒவ்வொன்றையுந் தற்காலத்திலே விசாரிப்பதற்கு நான் கர்த்தருக்கு முன்பாக விண்ணப்பம்பண்ணின இந்த என்னுடைய வார்த்தைகள் இரவும் பகலும் நம்முடைய பராபரனாகிய கர்த்தரிடத்திலே கிட்டியிருப்பதாக.

சா கர்த்தரே பராபரன், வேறொருவரில்லையென்றதைப் பூமியின் சனங்களெல்லாம் அறியும்படியாகத்தானே.

சுக ஆகையால் இந்நாளிலிருக்கிறதுபோல நீங்கள் அவர் கட்டளைகளில் நடந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள, உங்களிருதயம் நம்முடைய பராபரனாகிய கர்த்தரோடு உத்தமமாயிருக்கக்கடவதென்றான்.

சுஉ பிறபாடு இராசாவும் அவனோடேகூட இஸ்ரவேலனைத்துங் கர்த்தருக்கு முன்பாகப் பலிகளைச் செலுத்தினார்கள்.

சுங சாலோமோன் கர்த்தருக்குச் சமாதானபலிகளாக இருபத்தீராயிரம் மாடுகளையும் நூற்றிருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான். இப்படியே இராசாவும் இஸ்ரவேல் புத்திரனைவருங் கர்த்தருடைய வீட்டைப் பிரதிஷ்டை பண்ணினார்கள்.

சுச அன்றையதினம் இராசா கர்த்தருடைய வீட்டிற்கு முன்னிருக்கிற பிரகாரத்தின் நடுமையத்தைப் பரிசுத்தம்பண்ணினான். ஏனென்றாற் கர்த்தருக்கு முன்பாகவிருக்கிற வெண்கலப்பலிபீடஞ் சர்வாங்கதகனங்களையுங் காணிக்கைகளையுஞ் சமாதானபலிகளின் கொழுப்புகளையுங் கொள்ளமாட்டாத சிறிதானபடியினாலே, அங்கே சர்வாங்கதகனங்களையுங் காணிக்கைகளையுஞ் சமாதானபலிகளின் கொழுப்புகளையுஞ் செலுத்தினான்.

சுரு அக்காலத்திலே சாலோமோனும் அவனோடேகூட ஆமாத்தின் எல்லைதொடங்கி எகிப்தின் நதிமட்டுமிருந்து வந்த பெரிய கூட்டமாகிய இஸ்ரவேலனைத்தும் நம்முடைய பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக ஏழுநாளும், அதற்குப்பின்பு வேறே ஏழுநாளும் ஆகப் பதினாலுநாளாகப் பண்டிகையை யாசரித்தார்கள்.

சுசு எட்டாநாளிலே சனத்திற்கு விடைகொடுத்தனுப்பினான். அவர்கள் இராசாவை யாசீர்வதித்துக் கர்த்தர் தம்முடைய தாசனாகிய தாவீதுக்குந் தம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்குஞ் செய்த எல்லா நன்மைகளுக்காகவுஞ் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாய்த் தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்.

கூ. அதிகாரம்

பராபரன் மறுபடியுஞ் சாலோமோனுக்குத் தரிசனையானது.

சாலோமோன் கர்த்தருடைய வீட்டையும் இராச அரண்மனையையுஞ், செய்யத்தான் மனதும் விருப்பமுமாயிருந்த எல்லாவற்றையுங் கட்டித் தீருகையிற் சம்பவித்ததேதெனில்,

௨ கர்த்தர் கிபெயோனிலே சாலோமோனுக்குத் தரிசனையானதுபோல இரண்டாம்விசையவனுக்குத் தரிசனையானார்.

௩ ஆனாற் கர்த்தர் அவனோடே சொன்னதாவது, நீ நமக்கு முன்பாகப் பண்ணின உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையுங் கேட்டோம். நீ கட்டின இந்த வீட்டிலே நம்முடைய நாமத்தை யென்றைக்கும் வைக்கத்தக்கதாக அதைப் பரிசுத்தம் பண்ணினோம். நம்முடைய கண்களும் நம்முடைய இருதயமும் சகல நாளும் அங்கேயிருக்கும்.

௪ நாமுனக்குக் கற்பித்தபடியெல்லாம் நீ செய்து நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையுங் கைக்கொள்ளும்படிக்கு, நமக்கு முன்பாக மன உத்தமமும் செம்மையுமாய் உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோலே நடந்தாயானால்,

௫ அப்போது இஸ்ரவேலின் இராசாசனத்தின்மேலிருக்கிறதற்கு புருஷன் உனக்கில்லாதிருப்பதில்லையென்று உன் தகப்பனாகிய தாவீதோடே நாஞ்சொன்னபடியே இஸ்ரவேலின்மேலுள்ள உன் இராசரிய பாரத்தின் ஆசனத்தை யென்றைக்கும் நிற்கப்பண்ணுவோம்.

௬ நீங்களும் உங்கள் பிள்ளைகளும் நம்மைவிட்டுப் பின்வாங்கி, நாம் உங்களுக்கு முன்பாக வைத்த நம்முடைய கற்பனைகளையும் நம்முடைய கட்டளைகளையுங் கைக்கொள்ளாமற்போய், வேறே தேவர்களைச் சேவித்து அவைகளைப் பணிந்துகொண்டீர்களேயாகில்,

௭ நாம் இஸ்ரவேலுக்குக் கொடுத்த சீமையிலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, நம்முடைய நாமத்திற்கென்று நாம் பரிசுத்தம் பண்ணின இந்த வீட்டை நம்முடைய முகத்தைவிட்டுத் தள்ளுவோம். அப்போது இஸ்ரவேலெல்லா சனசந்ததிகளுக்குள்ளும் பழமொழியாகவும் நிந்தைமொழியாகவுமிருக்கும்.

௮ அப்போது உயர்ந்திருந்த இந்த வீட்டைக் கடந்துபோகிறவனெல்லாம் பிரமித்துப் பக்கியாய் ஊசிக்கர்த்தர் இந்தத் தேசத்திற்கும் இந்த வீட்டிற்கும் இப்படிச்செய்ததென்ன? என்று கேட்கிறதற்கு,

௯ அவர்கள் தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினவராகிய பராபரனாகிய கர்த்தரை விட்டு வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டு அவைகளை நமஸ்கரித்துச் சேவித்தபடியினாலே கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினாரென்று சொல்லுவார்களென்றார்.

சாலோமோனுடைய இராச்சியபாரத்தினபலவீர்நடத்தைகள்.

௰ சாலோமோன் இரண்டு வீடுகளாகிய கர்த்தருடைய வீட்டையும் இராச அரண்மனையையுங் கட்டுகிற இருபது வருஷ காலஞ்சென்றபோது,

௰௧ தன்னுடைய எல்லா விருப்பத்தின்படி தக்கதாய்த் தனக்குக் கேதுருமரங்களையும் பாய்மர விருட்சங்களையும் பொன்னையுங் கொடுத்திருந்த தீருவின் இராசாவாகிய ஈராமுக்கு இராசாவாகிய சாலோமோன் கலிலேயாத் தேசத்திலிருக்கிற இருபது பட்டணங்களைக் கொடுத்தான்.

௰௨ அப்போது ஈராம் சாலோமோன் தனக்குக் கொடுத்த பட்டணங்களைப் பார்க்கிறதற்குத் தீருவிலிருந்து புறப்பட்டான். அவைகள் அவன் பார்வைக்கு இரசிப்படாமல்,

௰௩ என் சகோதரனே! நீ எனக்குக் கொடுத்த இந்தப் பட்டணங்கள் எப்படிக்கொத்தவைகளென்றான்? அவைகள் இந்நாள்மட்டுங் காபூல்தேச மென்னப்படுகிறது.

௰௪ ஈராமோவென்றால் இராசாவுக்கு நூற்றிருபது தாலந்துபொன் அனுப்பியிருந்தான்.

௰௫ இதினிமித்தமாய்த்தானே சாலோமோனாகிய இராசா தான் கர்த்தருடைய வீட்டையுந் தன் வீட்டையும் மில்லோவையும் எருசலேமின் மதிலையும் ஆத்சோரையும் மெகிதோவையுங் கேசேரையுங் கட்டுகிறதற்கு வரிப்போட்டு வாங்கினான்.

௰௬ ஏனெனில் எகிப்தின் இராசாவாகிய பார்வோன் ஏறிவந்து அந்தக் கேசேர்பட்டணத்தைப் பிடித்து அதைத் தீயினாற் சுட்டெரித்து அதிலே குடியிருந்த கானானியரைக் கொன்றுபோட்டு அந்தச் சாலோமோனின் பெண்சாதியாகிய தன் குமாரத்திக்குச் சீதனமாகக் கொடுத்திருந்தான்.

௰௭ சாலோமோன் அந்தக் கேசேர் பட்டணத்தையுந் தாழ்வான பெத்தொரோனையும்,

௰௮ பாலாத்தையும் தேசத்தின் வனாந்திரத்திலுள்ள தாத்மோராவையும்,

௰௯ தனக்கிருக்கிற இரஸ்துக்களைக் கும் எல்லாப் பட்டணங்களையும் இரத

யிருக்கும் பட்டணங்களோடு குதிரைக காரருக்கும பட்டணங்களையும, தான எருசலேமிலும லீபனோனிலும தன இராச்சியமான தேசமெங்குங் கட்டத்தக்க சையானதையெலலாங் கட்டினான.

௨௰ இஸ்ரவேலபுத்திரர் சங்காரமபண்ணக்கூடாதிருந்த இஸ்ரவேலபுத்திரரின சாதியலலாத எமோரியர் ஏத்தியர் பெரிசியர் ஏவியர் எபூசியருமான சகலசனத்திலும மீதியாயிருநத,

௨௧ அவர்களுக்குப பிறகு தேசத்தில வைக்கப்பட்ட அவர்களுடைய பிளளைகளை சாலோமோன அமஞ்சவேலைசெய்ய இந்நாளவரைக்கும அடிமைப்படுத்தினான

௨௨ ஆனால இஸ்ரவேல புத்திரரிலொருவனை சாலோமோன அடிமைப்படுத்தவிலலை. இவர்கள யுத்தமனுஷரும அவனுடைய ஊழியக்காரரும அவனுடைய பிரபுக்களும அவனுடைய சேர்வைக்காரரும அவனுடைய இரதங்களுக்கும அவனுடைய குதிரைக்காரருக்கும அதிபதிகளுமாயிருநதார்கள.

௨௩ ஐந்நூற்றைமபதுபேர் சாலோமோனின வேலையை விசாரித்து வேலைசெய்கிற சனத்தையாளுகிற தலையான விசாரிப்புக்காரராயிருந்தார்கள.

௨௪ பார்வோனின குமாரத்தியோவெனறால தாவீதின பட்டணத்திலிருந்து சாலோமோன தனக்குக்கட்டின தனவீட்டிலே குடியேறிவநதாள. அப்பொழுது மிலலோவைக்கட்டினான்

௨௫ சாலோமோன கர்த்தரினவீட்டை முடித்தபிற்பாடு அவருக்குக்கட்டின பலிபீடத்தினமேல வருஷத்தில மூனறுமுறை சர்வாங்கதகனங்களையுஞ் சமாதானபலிகளையுஞ்செலுத்தி கர்த்தரின சனனிதிக்குமுனனிருக்கிற பீடத்தினமேலே தூபங்காட்டிவித்தான.

௨௬ இராசாவாகிய சாலோமோன ஏதோந்தேசத்தில நாணற்சமுத்திரக்கரையிலே ஏலோத்தூர் கிட்டவிருக்கிற எத்சியோன்கேபேரிலே கப்பலகளையுஞ் செய்வித்தான.

௨௭ அந்தக கப்பலகளின ஈராம சாலோமோனுடைய வேலைக்காரரோடேகூட சமுத்திரயாத்திரையையறிந்த கப்பலமனுஷராகிய தனனுடைய வேலைக்காரரையனுப்பினான.

௨௮ அவர்கள ஓப்பீருக்கு வநது அவவிடத்திலிருநது நாலுநூற்றிருபது தாலந்துபொனனை இராசாவாகிய சாலோமோனனிடத்துக்குக்கொண்டுவநதார்கள.

௰. அதிகாரம்.

சாலோமோனின பிரபலியமான நடபடி.

க கர்த்தருடைய நாமத்திற்காகச் சாலோமோனுக்கிருநத கீர்த்தியைச சேபாவின இராசாத்திகேள்வியானபோது, அவள விடுகதைகளினால அவனைச சோதிக்கிறதற்காக,

௨ மகாப்பெரிய தணடோடும சமபாரங்களையும வெகுதிரள்பொனனையும இரத்தினங்களையுஞ்சுமக்கிற ஒட்டகங்களோடும எருசலேமுக்கு வநதாள். அவள சாலோமோனனிடத்துக்கு வநதபோது தன மனதிலிருநததெலலாவற்றையும் அவனோடேபேசினாள.

௩ அப்பொழுது சாலோமோன அவள சொற்களையெலலாம அவளுக்கு விடுவித்தான. அவளுக்கு விடுவிக்கக் கூடாதபடிக்கு ஒன்றாகிலும இராசாவுக்குமறைபொருளாயிருநததிலலை.

௪ சேபாவின இராசாத்திசாலோமோனுடைய எலலா ஞானத்தையும அவன கட்டினவீட்டையும,

௫ அவன பந்தியின சாப்பாட்டையும அவன ஊழியக்காரரின குடியிருப்பையும அவன வேலைக்காரரின வரிசையையும அவர்கள வஸ்திரங்களையும அவனுக்குப்பான மபரிமாறுகிறவர்களையும அவன கர்த்தருடைய வீட்டிற் கேறிப்போகிற போக்கையுங் காண்கையில அவள ஆச்சரியத தாற்பிரமித்துக்கொணடு,

௬ இராசாவோடே சொனனது, உமமுடையவர்த்தமானங்களையும உமமுடைய ஞானத்தையுங்குறித்து நான் என்தேசத்திலேகேட்டசெயதி மெயயாயிறறு.

௭ நானவநது அதையெனகணகளகாணுமட்டும அநதவார்த்தைகளை நானநமபாதிருநதேன. ஆனால இதோ, இவைகளிற் பாதியாகிலும எனக்கறிவிக்கப்படடதிலலை. நானகேட்ட கீர்த்தியைப்பார்க்கிலும உமமுடைய ஞானமும நனமையும் அதிகமாயிருக்கினறது.

௮ உமமுடைய மனுஷர் பாக்கியவானகள. எப்பொழுதும உமக்குமுனபாக நினறு உமமுடையஞானத்தைக்கேட்கிற இநத உமமுடைய ஊழியக்காரர் பாக்கியவானகள.

௯ உமமை இஸ்ரவேலின இராசாசனத்தினமேலவைக்க உமமுடையமேற்பிரியமான உமமுடைய பராபரனாகிய கர்த்தர் இஸ்தோத்திரிக்கப்படடிருப்பாராக. கர்த்தர் இஸ்ரவேலையெனறைக்குஞ் சிநேகி

கிறபடியினாலே உமமை நியாயமுமநீதி யுஞசெய்கிறதறகு இர்ாசாவாக வைததா ரெனறாள.

௰ அவள இர்ாசாவுககு நூறறிருபது தாலநதுபொனனையும மிகுதியுமான சம பார்ஙகளையும இர்ததினஙகளையுங கொடு ததாள. சேபாவின இர்ாசாததி இர்ாசா வாகிய சாலோமோனுககுக கொடுதத அததனைசமபார்ஙகள பிற்பாடு ஒருக்கா லுமவநததிலலை.

௰௧ ஓபபீரிலிருநதுபொனனைககொண டுவருகிற ஈர்ாமின கபபலகளும ஓபபீரிலி ருநது வெகுதிரளாய வாசனை மர்ஙகளையு ம இர்ததினஙகளையுங கொணடுவநதது.

௰௨ அநதவாசனைமர்ஙகளால இர்ாசா கர்ததருடையவீட்டிற்கும இர்ாச அர்ண் மனைககும ஊனறுகாலகளையும பாடுகிற வர்களுககாகச சுர்மணடலஙகளையுந தம பூறுகளையும உணடாககினான. அபபடிக கொதத வாசனை மர்ஙகள பிற்பாடு இந நாளவரைககுமவநததுமிலலைகாணபபட டதுமிலலை.

௰௩ இர்ாசாவாகிய சாலோமோனதா னே சநதோஷமாயசசேபாவின இர்ாசா ததிககுககொடுததததுமலலாமல அவளவி ருப்பப்படடுசகேடடதெலலாவறறையும அவளுககுககொடுததான. அபபடியேய வளதனனூழியககார்ரோடேகூடத திரும் பிககொணடுதனதேசததிற்குபபோனாள்.

௰௪ சாலோமோனுககு மலவிகைக்கா ர்ர்ாலுஞசமபார்வர்த்தகரினவர்ததகததி னாலும அருபியாவின சகல இர்ாசாகக ளாலுந தேசததின துரைகளாலுமவரும பொனனலலாமல,

௰௫ அவனுககு ஒவவொருவருஷததின வர்ததினையாக அறுநூறறறுபததாறுதா லநதுநிறையானபொன்வநதது.

௰௬ இர்ாசாவாகியசாலோமோன தக டாய் அடிததபொனனினாலே இருநூறு பரிசைகளை யுணடாககினான. ஒவவொரு பரிசைககு அறுநூறுசேககலநிறைபொ னனைசசெலவழிததான.

௰௭ தகடாயடிதத பொனனினாலேமு நநூறுகேடையஙகளையுமுணடாககினான ஒவவொருகேடையததிற்குமூனறு இறாத தலபொனனைசசெலவழிததான. அவைக ளை இர்ாசாலீபனோனகாடடுமர்ஙகளினவீ டடிலேவைததான.

௰௮ இர்ாசா தநதத்தினாலே பெரிய இர்ாசாசனததையும பணணுவிதது, அ தையபார்சுததகடடிலலூடினான.

௰௯ அநத ஆசனததிற்கு ஆறுபடிகள உணடாயிருநதது. ஆசனததினதலை பின னுககவளைவாயிருநதது. உடகாருமிடத திற்கு இருபுறமுஙகைசசாயமானஙகளிரு நதது. இர்ணடுசிஙகஙகளுஙகைச்சாயமா னஙகளருகேநினறது.

௨௰ ஆறுபடிகளினமேலும இநதண டையும அநதணடையுமபனனிர்ணடுசிங கஙகளநினறது. எநத இர்ாசசியஙகளிலு ம அபபடிப்பணணபபடடிருநததிலலை.

௨௧ இர்ாசாவாகியசாலோமோனுககி ருநதகுடிககும பாததிர்ஙகளெலலாம பொனனும லீபனோன காடடுமர்ஙகளு டைய வீட்டின பணிமுடடுகளெலலாம அபார்சுசியுமா யிருநதது. ஒனறுமும வெளளியலல. ஏனெனில இது சாலோ மோனின நாட்களில ஒரு பொருட்டாய எணணபபடடதிலலை.

௨௨ ஏனெனில இர்ாசாவுககுச சமுத திர்ததிலே ஈர்ாமினகப்பலகளோடேகூ டததர்சீசின கபபலகள உணடாயிருந து, தர்சீசினகப்பல்கள்மூனறுவருஷஙகளி ல ஒருதர்மபொனனையும வெளளியையும யானைததநதஙகளையுங குர்ஙகுகளையும மயிலகளையுஙகொணடுவநதது.

௨௩ பூமியின இர்ாசாக்களெலலாரை யுமபார்க்க இர்ாசாவாகியசாலோமோன ஐசுவரியத்திலுமஞானததிலும பெரிய னாயிருநதான.

௨௪ பர்ாபர்னசாலோமோனின இருத யததிலேகொடுத்த அவனுடையஞானத தைககேட்கிறதற்காகசசகலதேசததாரு ம அவனமுகத்தரிசனையைததேடினார்கள.

௨௫ அவர்வர்வருஷததிற்குவருஷநதங களகாணிககையாகிய வெளளித்தட்டுமுட டுகளையும பொன்தட்டுமுட்டுகளையுமவஸ திர்ஙகளையும ஆயுதஙகளையுஞசமபார்ஙக ளையுங குதிரைகளையுங கோவேறுகழுதைக ளையுஙகொணடுவருவார்கள.

௨௬ சாலோமோன இர்தஙகளையுங கு திரைககார்ரையுஞசேர்த்தான. அவனுக கு ஆயிர்தது நானூறு இர்தஙகளுமபன னீர்ாயிர்ங குதிரைககார்ரின இர்ாணுக் களுமிருநதது. அவைகளை இர்ாசா இர்தங களுடையபட்டணஙகளிலும எருசலேமி லேதனனிடததிலுமவைத்தான.

௨௭ இர்ாசாவானவன எருசலேமிலே வெளளியைக்கலலுககளத்தனையுங கேதுரு மர்ஙகளைப பளளததாககுகளிலிருககிற காட்டத்திமர்ஙகளத்தனையுமாககினான.

௨௮ சாலோமோனுககிருககிறகுதிரை களுமபுடவைகளும எகிப்திலிருநது

ண்டுவரப்பட்டது. இராசாவின்வர்த்தகர் புடவைகளையொப்பந்த விலைக்கிரயத்திற் கு வாங்கினார்கள்.

௨௯ எகிப்திலிருந்தேறிவந்த ஒவ்வொ ரதத்திற்கு விலை அறுநூறுவெள்ளிக்கா சும், ஒவ்வொருகுதிரையின்விலை நூற்றைம் பதுவெள்ளிக்காசுமாயிருந்தது. அந்தப் பிரகாரமாக ஏத்தியரின் இராசாக்களெ ல்லாருக்குஞ் சீரியாவின் இராசாக்களுக் கும் அவர்கள்முகாந்திரமாய்க்கொண்டு வரப்பட்டது.

௰௧. அதிகாரம்.

சாலோமோன்செய்தபாவமும் அதற்குவந்த ஆக்கினையும்.

இராசாவாகிய சாலோமோனோவெ ன்றால் பார்வோனின்குமாரத்தியை யல்லாமல் மோவாபியரும் அம்மோனியரும் ஏதோமியரும் சீதோனியரும் ஏத்தியருமாகிய அந்நியசாதியாரான அநேகம் ஸ்திரிகளை சிநேகித்தான்.

௨ நீங்கள் அவர்களண்டைக்கும் அவ ர்கள் உங்களண்டைக்கும் பிரவேசிக்கவே ண்டாம். அவர்கள் நிச்சயமாய் உங்கள் இருதயத்தைத் தங்கள் தேவர்கள் பிறகா லே சாயப்பண்ணுவார்களென்று கர்த்தர் இஸ்ரவேல்புத்திரரைக்குறித்துச் சொன் னபுறச்சாதிகளான அந்தஸ்திரிகளோடே சாலோமோன்சிநேக இணக்கமாயிருந் தான்.

௩ அவனுக்குப் பிரபுக்களகுலமான எழு நூறுபெண்சாதிகளும் முந்நூறுவைப்பா ட்டிகளுமிருந்தார்கள். அந்த அவனுடை ய ஸ்திரிகள் அவனிருதயத்தைச் சாயப்ப ண்ணினார்கள்.

௪ அதேதெனிற்சாலோமோன்பெரிய வயதானபோது அவனுடையபெண்சா திகள் அவனிருதயத்தைவேறேதேவர்கள் பிறகாலேசாயப்பண்ணினார்கள். ஆனது கொண்டு அவனுடைய இருதயம் அவன் தகப்பனாகிய தாவீதின் இருதயத்தைப் போலேதன்பராபரனாகிய கர்த்தரோடே உத்தமமாயிருந்ததில்லை.

௫ ஏனென்றாற்சாலோமோன் சீதோனி யரின் தேவியாகிய அஸ்தரோத்தையும் அம்மோனியரின் அருவருப்பாகிய மில் கோமையும் பின்பற்றினான்.

௬ அப்படியேசாலோமோன் தன்தக ப்பனாகிய தாவீதைப்போலே கர்த்தரை நிறைவாகப் பின்பற்றிக்கொண்டி ராமற்கர்த்தரின்பார்வைக்குப் பொல்லா ப்பானதைச்செய்தான்.

௭ அப்போது சாலோமோன் எருசலே முக்கெதிரானபர்வதத்திலே மோவாபிய ரின் அருவருப்பாகிய காமோசுக்கும் அம் மோன்புத்திரரின் அருவருப்பான மோ லோகுக்கும் மேடையைக்கட்டி,

௮ இந்தப் பிரகாரமாகத்தங்கள்தேவ ர்களுக்குத் தூபங்காட்டிப்பலியிடுகிற அ ந்நியசாதியாரான தன்னுடைய எல்லா ஸ்திரிகளுக்காகவுஞ்செய்தான்.

௯ ஆகையாற் சாலோமோன் தனக்கு இரண்டுவிசை தரிசனையாகி வேறேதேவ ர்களைப்பின்பற்றுகிறபடிக்கு இந்தக்காரிய மாய்த்தனக்குக் கற்பித்திருந்த இஸ்ரவே லின் பராபரனாகிய கர்த்தரைவிட்டுத்தன் னிருதயத்தைத்திருப்பி,

௰ கர்த்தர் கற்பித்ததைக் கைக்கொள் ளாமற்போனதற்காகக்கர்த்தர் அவன்மே லேகோபமானார்.

௰௧ ஆகையாற் கர்த்தர் சாலோமோ னுக்குச் சொன்னதாவது, நாம் உனக்கு க்கற்பித்த நம்முடைய உடம்படிக்கை யையும் நம்முடைய கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற்போன இந்தக்காரிய ம் உன்னிடத்திலிருந்தபடியினாலே நாம் இராச்சியபாரத்தை யுன்னிடத்திலிருந்து பிடுங்கவேபிடுங்கி அதை யுன் ஊழியக்கா ரனுக்குக்கொடுப்போம்.

௰௨ ஆகிலும் உன் தகப்பனாகிய தாவீ தினிமித்தம் நாம் அதை உன் நாட்களி லேசெய்வதில்லை. உன்குமாரனுடையகை யிலேயதைப்பிடுங்குவோம்.

௰௩ ஆனாலிராச்சியபாரத்தையெல்லா ம் நாம்பிடுங்காமல் நம்முடையதாசனாகிய தாவீதினிமித்தமும் நாம்தெரிந்துகொண் ட எருசலேமினிமித்தமும் ஒருகோத்திர த்தை நாம் உன் குமாரனுக்குக் கொடுப் போமென்றார்.

௰௪ கர்த்தர் ஏதோமியனாகிய ஆதா தென்ற ஒருவிரோதக்காரனைச்சாலோ மோனுக்கெழுப்பினார். இவன் ஏதோமிலி ருந்த இராசாவின்வித்தானவன்.

௰௫ ஏனென்றால் தாவீது ஏதோமிலிரு க்கக்கொள்ளவும், படைத்தலைவனாகிய யோவாப் வெட்டுண்டவர்களை யடக்கம்ப ண்ண ஏறிப்போய், ஏதோமிலுள்ள ஆண் சாதிகளையெல்லாஞ்சங்கரித்து,

௰௬ அவர்களையெல்லாஞ் சங்கரிக்கு மளவுந்தானும் இஸ்ரவேலனைத்தும் அங் கே ஆறுமாதமிருக்கக்கொள்ளவும்,

௰௭ ஆதாதும அவனோடேகூட அவன தகபபனுடைய ஊழியககாரரிற் சில ஏதோமியரும எகிப்திற்குபபோகவோடிப போனார்கள. ஆதாத் அபபோது ஒருசிறு பிளளையாயிருநதான.

௰௮ அவர்கள மீதியானிலிருநதெழுநது போயபபாரானுககுவநது, பாரானிலே மனுஷரைக கூடடிககொணடு, எகிப்திலே பார்வோனென்ற எகிப்தவின இராசாவணடைககுவநதார்கள இவன அவனுககு ஒருவீடடைககொடுதது அவனுககு ஆகாரததைத்திடடமபணணி, ஒருசீமையை ககடடளையிடடான.

௰௯ ஆதாதுககுப பார்வோனினகண்களில மிகுநத தயவு கிடைததபடியினாலே இவன அவனுககு இராசாததியாகிய தாபபெனேசென்ற இராசாததியாகிய தனனுடைய பெண்சாதியின சகோதரியைக கொடுததான.

௨௰ தாபபெனேசின சகோதரியாகிய இவள அவனுககுக கேனுபாததெனற ஒருகுமாரனைப பெறறாள. அவனைத தாபபெனேசு பார்வோனின வீடடிலேவளர்ததான அபபடியே கேனுபாத் பார்வோனினவீடடில அவனுடைய குமாரருககுளளேயிருநதான.

௨௧ தாவீது தனபிதாககளோடே நிததிரையடைநதானெனறும, படைததலைவனாகிய யோவாப் செனறுபோனானெனறும, எகிப்திலே ஆதாத் கேடடபோது, ஆதாத் பார்வோனுடனே, நான என சீமைககுபபோகஎனனையனுபபுமெனறான

௨௨ பார்வோன அவனுடனே இதோ, நீயுன சீமைககுப போகபபார்ககிறதறகு எனனிடததிலேயுனககெனனகுறைசசலிருககிறதெனறான. அதறகவன, ஒனறுமிலலை. எனறாலும எனனையனுபபுமெனறான.

௨௩ எலியாதாவின குமாரனாகிய ரேசோனெனற வேறொரு விரோதககாரனையுமபராபரன அவனுக்கெழுபபினார். இவன தனனாணடவனாகிய ஆதாதேசேரெனற சோபாவினிராசாவைவிடடு ஓடிபபோய,

௨௪ தாவீது அவனமனுஷரைககொனறுபோடுகையிலே தனனோடே மனுஷரைசசேர்ததுககொணடு, அநதககூடடததிற்குத்தலைவனானான். அவர்கள தமஸ்குவுககுபபோய அஙகேகுடியிருநது, தமஸ்குவில இராசசியபாரமபணணினார்கள.

௨௫ ஆதாத் செயத பொலலாபபலலாமல ரேசோன சாலோமோனுடைய நாளெலலாம இஸ்ரவேலுககு விரோதக்காரனாயிருநது, இஸ்ரவேலைப்பருவருத்துச் சீரியாவினமேல இராசாவாயிருநதான.

௨௬ சேரேதா ஊரானும எபபிராயீம மனுஷனுமானநேபாத்தின குமாரன எரோபெயாமென்றசாலோமோனினஊழியககாரனும இராசாவுககுவிரோதமாயக கையெடுததான. அவனுடைய தாயசெருகாளெனறுபேருள்ள ஒருகைமபெணசாதியாயிருநதாள.

௨௭ அவன இராசாவுககுவிரோதமாயககையெடுததகாரணமெனனவெனில், சாலோமோன மிலலோவைககடடித் தனதகபபனாகியதாவீதுடைய படடணததின இடிதலகளைப பழுதுபார்ககிறபோது,

௨௮ எரோபெயாமெனறவன பராககிரமசாலியாயிருநதான. அவனவேலையை நடபிககததககவாலிபனெனறு சாலோமோனகணடு, யோசேப்வீடடாரின பாரததையெலலாம அவனவிசாரிபபுககொபபுவிததான.

௨௯ அககாலததிலே சமபவிததேதெனறால எரோபெயாம எருசலேமிலிருநதுபுறபபடுகையில, சீலோனியனாகிய அகியாவென்ற தீர்க்கதரிசி புதுசசாலவையைப போர்ததுககொணடிருநது, வழியிலே அவனைககணடுபிடிததான. இருவருமவெளியிலே தனிததிருக்கையில,

௩௰ அகியா போர்ததுககொணடிருக்கிற அநதப்புதுச்சாலவையைபபிடிதது அதைப்பனனிர்ணடு துணடாகக கிழிததுபபோடடு,

௩௧ எரோபெயாமுககுச சொனனதாவது, பததுத துணடுகளையெடுததுககொள. ஏனெனறால இஸ்ரவேலின பராபரனாகிய கர்த்தர் சொலலுகிறதேதெனில, இதோ, நாம இராசசியபாரததைச்சாலோமோனுடையகையிலேடுததுககிழிததுஉனககுப பததுக்கோததிரஙகளைக கொடுபபோம.

௩௨ ஆனாலநமமுடைய தாசனாகிய தாவீதுககாகவும நாம இஸ்ரவேலகோததிரஙகளிலெலலாநதெரிநதுகொணட எருசலேமபட்டணததிற்காகவும ஒருகோததிரம அவனுககு இருக்கும.

௩௩ அவர்கள நமமைவிடடுச சீதோனியரின தேவியாகிய அஸ்தரோததையும மோவாபின தேவனாகிய காமோசையும, அமமோன புத்திரரின தேவனாகிய மில்கோமையுமபணிநதுகொணடு, அவனதகபபனாகிய தாவீதைபபோலே நமமுடைய பார்வைககுச செமமையாயிருககிறதைச

செய்யவும் நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையும் கைக்கொள்ளவும் அவர்கள் நம்முடைய வழிகளில் நடவாமற் போனபடியினாலே இப்படிச் செய்வோம்.

௩௪ ஆனால் இராச்சியபாரத்தையெல்லாம் நாம் அவன் கையிலே தானே யெடுப்பதில்லை நாம் தெரிந்துகொண்டவனும் நம்முடைய கற்பனைகளையும் நம்முடைய கட்டளைகளைக் கைக்கொண்டவனுமான நம்முடைய தாசனாகிய தாவீதினிமித்தம் அவனை அவன் உயிரோடிருக்கும் நாளெல்லாம் அதிபதியாக வைத்து,

௩௫ அந்த இராச்சியபாரத்தை யவன் குமாரன் கையிலே யெடுத்து பத்துக் கோத்திரங்களாகிய அதை உனக்குக் கொடுத்து,

௩௬ நாம் நம்முடைய நாமத்தை வைக்கும்படிக்குத் தெரிந்துகொண்ட பட்டணமாகிய எருசலேமிலே நம்முடைய முகத்துக்கு முன்பாக நம்முடைய தாசனாகிய தாவீதுக்குச் சகல நாளும் ஒரு விளக்கிருக்கத்தக்கதாக அவன் குமாரனுக்கு ஒரு கோத்திரத்தைக் கொடுப்போம்.

௩௭ நீயோ ஆத்துமம் இச்சிப்பதையெல்லாம் ஆண்டுகொண்டு, இஸ்ரவேலின் மேல் இராசாவாயிருப்பதற்காக உன்னை யெடுப்போம்.

௩௮ நாம் உனக்குக் கற்பித்ததையெல்லாம் நீ கேட்டுக் கைக்கொண்டு நீ நம்முடைய வழிகளில் நடந்து, நம்முடைய தாசனாகிய தாவீது செய்ததுபோலே நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய கற்பனைகளையும் கைக்கொள்ளும்படிக்கு நம்முடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்தாயானால் நாம் உன்னோடிருந்து நாம் தாவீதுக்குக் கட்டினதுபோல உனக்கு நிலைநிற்கிற வீட்டைக் கட்டி இஸ்ரவேலை உனக்குக் கட்டளையிடுவோம்.

௩௯ இப்படி நாம் அந்தக் காரியத்தினிமித்தம் தாவீதின் வித்தாரைச் சிறுமைப்படுத்துவோம். ஆகிலும் எல்லா நாளுமல்லவென்று சொன்னான்.

௪௰ ஆனதுகொண்டு சாலொமோன் எரொபெயாமைக் கொன்றுபோடப் பார்த்தான். ஆனால் எரொபெயாம் எழுந்து எகிப்துக்குச் சீசாக்கென்கிற எகிப்தின் இராசாவண்டையிலே ஓடிப்போய்ச் சாலொமோன் மரணமடையுமட்டும் எகிப்திலிருந்தான்.

௪௧ சாலொமோனின் மற்றவர்த்தமானங்களும் அவன் செய்ததனைத்தும் அவனுடைய ஞானமும் சாலொமோனுடைய நடபடிப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௪௨ சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலெல்லாம் அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம்.

௪௩ சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்து தன் தகப்பனாகிய தாவீதின் பட்டணத்தில் அடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய ரெகொபெயாம் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௰௨. அதிகாரம்.

எரொபெயாம் இஸ்ரவேலிலே பத்துக் கோத்திரங்களின் மேல் இராசாவானதும் விக்கிரக ஆராதனைக்குக் காரணனானதும்.

ரெகொபெயாம் சீகேமுக்குப் போனான். ஏனெனில் அவனை இராசாவாக்கும்படிக்கு இஸ்ரவேலெல்லாரும் சீகேமுக்கு வந்தது.

௨ இராசாவாகிய சாலொமோனைவிட்டோடிப்போய் எகிப்திலே குடியிருக்கிற நேபாத்தின் குமாரன் எரொபெயாமோவென்றால் எகிப்திலிருக்கையில் அதைக் கேட்டபோது,

௩ அவர்கள் அவனை யழைத்தனுப்பினார்கள் அவன் வந்தான். பிற்பாடு எரொபெயாமும் இஸ்ரவேல் சபையனைத்தும் வந்து, ரெகொபெயாமோடே பேசி,

௪ உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தடியைக் கடினமாக்கினார். இப்போதும் நீர் உம்முடைய தகப்பனுடைய கடினமான வேலையையும் அவர் எங்கள்மேல் வைத்த அவருடைய பாரமான நுகத்தடியையும் இலகுவாக்கும். அப்போது உம்மைச் சேவிப்போமென்றார்கள்.

௫ அவன் அவர்களுடனே, நீங்கள் போய் மூன்றுநாட் பொறுத்து, என்னண்டைக்குத் திரும்பி வாருங்களென்றான். அப்படியே சனம் போனார்கள்.

௬ அப்போது இராசாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவனுக்கு முன்பாக நின்ற மூப்பரோடே ஆலோசனைபண்ணி இந்தச் சனத்திற்கு மறுவுத்தரவு கொடுக்க நீங்கள் எப்படிக்கொத்த ஆலோசனை சொல்லுகிறீர்கள்? என்று கேட்டான்.

௭ அவர்கள் அவனுடனே, நீர் இன்று இந்தச் சனத்திற் கூழியக்காரனாகி அவர்களுக்கு இணங்கி அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக நல்வார்த்தைகளைச் சொன்னால்

சகலநாளும அவர்கள உமககூழியககார்ராயிருபபார்களெனறுர்கள.

௮ ஆனால மூபபர் தனககுககொடுதத ஆலோசனையையவனவிடடுத்தனனோடே வளர்நததனககு முனபாகநிறகிறவாலிப ரோடேஆலோசனைபணணி,

௯ அவர்களுடனே, உமமுடையதகப பன எஙகளமேலவைதத நுகத்தடியை லகுவாககுமெனறு எனனோடே சொனன இநதசசனததிறகுமறுவுததரவுகொடுகக நீஙகள எபபடிககொநத ஆலோசனை சொலலுகிறீர்கள? எனறன.

௰ அபபோது அவனோடேவளர்நதவாலிபர் அவனோடேசொனனதாவது, உமமுடையதகபபன எஙகள நுகததடியைப பாரமாககினர். நீர் அதையெஙகளுக்கு லகுவாககுமெனறு உமமோடேசொனன இநதசசனததிறகு நீர்சொலல வேணடியதெதெனில எனசுணடுவிரல எனதகபபனுடைய இடுபபைபபார்ககபபருமமாயிருககும.

௰௧ இபபோதும எனதகபபனபாரமான நுகததடியை யுங்களமேறசுமததினர். நான உங்கள நுகததடியை யதிகபாரமாககுவேன. எனதகபபன உஙகளைசசவுககுகளாலேதணடிததார். நானேவெனிலதேள்களினுலே உஙகளைத்தணடிபபேனென று நீர் அவர்களோடேசொலலவேணடுமெனறுர்கள.

௰௨ மூனறுமநாளிலேஎனனணடைககுததிருமபிவாருஙகளெனறு இராசாசொனனபடியே எரோபெயாமுஞசகலசனமும மூனறுமநாளிலே ரெகொபெயாமணடைககுவநதபோது,

௰௩ இராசாசனததிறகுககடின உததிரவுகொடுதது மூபபர் தனககுசசொனன ஆலோசனையைவிடடு,

௰௪ வாலிபருடைய ஆலோசனையினபடியே அவர்களோடேபேசி, எனதகபபன உஙகளநுகததடியைபபாரமாககினர். நான உஙகளநுகததடியை அதிகபாரமாககுவேன. எனதகபபன உஙகளைசசவுககுகளாலேதணடிததார். நானேவெனிலதேள்களினுலே உஙகளைத்தணடிபபேனென றுசொலலி,

௰௫ இராசா சனததிறகுக கேள்விகொடாதே போனன. ஏனெனறல கர்ததர் சீலோனியனன அகியாவைககொணடு நேபாததின குமாரனுகிய எரோபெயாமுககுசசொனன தமமுடைய வார்ததையைததிடபபடுததுமபடிககுக்கர்ததாலிப படிபபுரணபபடடது.

௰௬ இராசா தஙகளுககுச செவிகொடாததை இஸரவேலெலலாஙகணடபோது, சனம இராசாவுககுமறுவுததரவாக, தாவீதோடே எஙகளுககுப பஙகேது? ஈசாயினகுமாரனோடே எஙகளுககுசசுதநதரமிலலை. இஸரவேலே! உன கூடாரங களுககுபபோயவிடு. இபபோதுந தாவீதே! உனவீடடைபபார்ததுககொவெனறுசொலலி இஸரவேல தஙகள கூடாரங களுககுபபோயவிடடார்கள.

௰௭ ஆனால யூதாவினபடடணஙகளிலே குடியிருநத இஸரவேலபுததிரரினமேலே ரெகொபெயாம இராசாவாயிருநதான.

௰௮ அபபோது இராசாவாகிய ரெகொபெயாம பகுதிவிசாரிபபுககாரனுகிய அதோராமை யனுபபினன. ஆனால இஸரவேலெலலாம அவனைககலலெறிநதுகொனறுர்கள. அபபோது இராசவாகியரெகொபெயாம எருசலேமுககோடிபபோகததீவிரமாய இரதத்தினமேலேறிபபோனன்.

௰௯ அபபடியே இஸரவேல இநநாளவரைககுந தாவீதினவீடடைவிடடுபிரிநது விழுநதிருககிறர்கள.

௨௰ எரோபெயாந திருமபிவநதானெனறு இஸரவேலுககெலலாஙகேள்விபபடடபோது அவனைசசபையினணடைககழைததனுபபி, அவனை இஸரவேலினமேலெலலாம இராசாவாககினர்கள. யூதாகோததிரமாததிரமே யலலாமல வேறொருவருநதாவீதினவீடடைபபினசெனறதிலலை.

௨௰௧ ரெகொபெயாம எருசலேமுககுவநதபோது இஸரவேல வீடடாரோடேயுததமபணணவும இராசசியததைசசாலொமோனின குமாரனுகிய தனனிடமாகததிருபபிககொளளவும யூதாவீடடார்பென யமீன கோததிரததார் அனைவருமாகிய தெரிநதுகொளளபபடட யுததஞசெயயததககக நூறறெணபதினுயிரம பேரைக் கூடடிககொணடான.

௨௰௨ ஆனாற்பராபரனுடைய மனுஷனுகியசெமாயாவுககுப் பராபரனுடையவார்ததையுணடாய அவர்சொனனதாவது,

௨௰௩ நீயூதாவின இராசாவாகிய ரெகொபெயாமெனறசாலோமோனின குமாரனுககுமயூதாவிடடார் அனைவருககுமபென யமீனுககுமமறறுமுணடானசனததிறகும,

௨௰௪ நீஙகளேறிபபோகாமலும, இஸரவேலபுததிரரான உஙகளசகோதரரோடேயுததமபணணுமலும அவரவர்தன்தன் வீடடிறகுததிருமபுஙகள. ஏனெனில நமமாலே இநதககாரியமநடநததெனறு கர்ததர் உரைககிறெனறு சொலவென்

௨௪. அப்போது அவர்கள் கர்த்தருடைய சொற்கேட்டுக் கர்த்தருடைய வார்த்தையின்படியே போய்விடத் திரும்பினார்கள்.

௨௫ எரொபெயாம் எப்பிராயீம் மலைத்தேசத்திலே சிகேமைக் கட்டி அதிலே வாசம்பண்ணி அங்கேயிருந்து புறப்பட்டுப் பெனுவேலைக் கட்டினான்.

௨௬ ஆனால் எரொபெயாம் தன் மனதிலே, இப்போது இராச்சியபாரந் தாவீது வீட்டின் வசமாய்த் திரும்புமென்றும்,

௨௭ இந்த சனம் எருசலேமிலிருக்கிற கர்த்தரின் வீட்டிலே பலிகளைச் செலுத்தப் போனாலிந்தச் சனத்தின் இருதயம் யூதாவின் இராசாவாகிய ரெகாபெயாமென்கிற தங்களாண்டவன் வசமாய்த் திரும்பி என்னைக் கொன்று, யூதாவின் இராசாவாகிய ரெகாபெயாமின் பாரிசமாய்த் திரும்புவார்களென்றும் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

௨௮ ஆகையால் இராசாவானவன் யோசனைபண்ணி பொன்னினாலே இரண்டு கன்றுக்குட்டிகளையுண்டாக்கி, அவர்களுடனே, எருசலேமுக்கேறிப் போகிறது உங்களுக்கு வருத்தம். இஸ்ரவேலே! இதோ, உங்களை எகிப்துதேசத்திலிருந்தேறிவரப்பண்ணின உன்னுடைய தேவர்களென்று சொல்லி,

௨௯ ஒன்றைப் பெத்தேலிலும் ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தான்.

௩௰ இந்தக் காரியம் பாவமாகிச் சனமிந்த ஒருகன்றுக்குட்டிக்காகத் தாண்மட்டும் போயிற்று.

௩௧ அவன் மேடைகளின் வீட்டையுங் கட்டி, லேவியின் புத்திரரல்லாத சனத்தில் சிலரை ஆசாரியர்களாக்கினான்.

௩௨ யூதாவில் ஆசரிக்கும் பண்டிகைக்கொப்பாக எட்டாமாதம் பதினைந்தாந்தேதியிலே எரொபெயாம் ஒரு பண்டிகையைக் கொண்டாடிப் பலிபீடத்தின் மேலே பலியிட்டான். அப்படித் தானுண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்குப் பலியிடப் பட அவன் பெத்தேலிலே செய்தான். தான் உண்டுபண்ணின மேடைகளின் ஆசாரியர்களைப் பெத்தேலிலே ஏற்படுத்தி வைத்து,

௩௩ தன் மனதிலே தானே நியமம்பண்ணின எட்டாமாதம் பதினைந்தாந் தேதியிலே பெத்தேலிலே தானுண்டாக்கின பலிபீடத்தின் மேலே பலியிட்டு, இஸ்ரவேல் புத்திரருக்குப் பண்டிகையைக் குறித்துப் பலிபீடத்தின் மேலே பலியிடுத் தூபங் காட்டினான்.

௰௩. அதிகாரம்.

எரொபெயாமின் விக்கிரகாராதனை ஒரு தீர்க்கதரிசியாலே கண்டிக்கப்பட்டது.

ஆனால் இதோ, பராபரனுடைய மனுஷனொருவன் கர்த்தருடைய வார்த்தையின்படியே யூதாவிலிருந்து பெத்தேலுக்கு வந்தான்; எரொபெயாந் தூபங்காட்டப் பலிபீடத்தண்டையிலே நிற்கச்சொல்ல,

௨ கர்த்தருடைய வார்த்தையாய் அந்தப் பலிபீடத்திற்கெதிராகக் கூப்பிட்டுப் பலிபீடமே! பலிபீடமே! இதோ, தாவீதின் வீட்டிற்கு யோசியாவென்று பேருள்ள ஒரு குமாரன் பிறப்பான். அவனுன் மேலே தூபங்காட்டுகிற மேடைகளின் ஆசாரியர்களை உன் மேலே பலியிடுவான். மனுஷரின் எலும்புகளும் உன்மேலே சுட்டெரிக்கப்படுமென்கிறதைக் கர்த்தருரைக்கிறாரென்று சொல்லி,

௩ அன்றையத்தினம் அவன் ஒரு அடையாளத்தைத் தந்து, இதோ, இந்தப் பலிபீடம் வெடித்து அதின் மேலுள்ள சாம்பல் கொட்டுண்டுபோமென்கிறது கர்த்தர் இதையுரைத்த அடையாளமென்றான்.

௪ சமபவித்ததேதென்றால் பெத்தேலிலிருக்கிற அந்தப் பலிபீடத்திற்கெதிராகப் பராபரனுடைய மனுஷன் கூப்பிட்டுச் சொன்ன வார்த்தையை இராசாவாகிய எரொபெயாங் கேட்டபோதோவெனில், அவனைப் பிடியுங்களென்று தன் கையைப் பலிபீடத்தின் மேலிருந்து நீட்டினான். ஆகில் அவனுக்கு விரோதமாய் அவன் நீட்டின தன்னுடைய கையைத் தன்னண்டைக்கு முடக்கக்கூடாதபடிக்கு அது மரத்துப்போயிற்று.

௫ பராபரனுடைய மனுஷன் கர்த்தருடைய வார்த்தையாற் குறித்திருந்த அடையாளத்தின்படியே பலிபீடம் வெடித்துச் சாம்பற் பலிபீடத்திலிருந்து கொட்டுண்டுபோயிற்று

௬ அப்போது இராசா பராபரனுடைய மனுஷனுக்குப் பிரதியுத்தாரமாக, நீ உன் பராபரனாகிய கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வேண்டிக்கொண்டு, என்னுடைய கை என்னண்டைக்குத் திரும்பும்படிக்கு எனக்காக விண்ணப்பம்பண்ணென்றான். அப்போது பராபரனுடைய மனுஷன் கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தி விண்ணப்பஞ் செய்வதனால் இராசாவின் கை அவனண்டைக்குத் திரும்பி முன்னிருந்த சீருக்கு வந்தது.

௭ அப்போது இராசா பராபரனுடைய மனுஷனோடே, நீ என்னோடே கூட வீ

படிந்து வந்து தேறிக்கொள். உனக்கு வெகுமானங் கொடுப்பேனென்றான்.

௮ அதற்குத் தேவனுடைய மனுஷன் இராசாவோடே சொன்னது, நீர் எனக்கு உம்முடைய பாதி வீட்டைக் கொடுத்தா லும், நான் உம்மோடே வருவதில்லை. இந்த ஸ்தலத்திலே அப்பம் போசிப்பதுமில்லை. தண்ணீர் குடிப்பதுமில்லை.

௯ ஏனென்றால், நீ அப்பம் போசியாம லும் தண்ணீர் குடியாமலும், போனவழி யாய்த் திரும்பாமலுமிருவென்று கர்த்தர் தம்முடைய வார்த்தையால் எனக்குக் கற்பித்தாரென்று சொல்லி,

௰ அவன் பெத்தேலுக்கு வந்தவழியாய்த் திரும்பாமல் வேறேவழியாய்ப் போய்விட்டான்.

௰௧ அன்றியும் கிழவனான ஒரு தீர்க்கதரிசி பெத்தேலிலே குடியிருந்தான். அவன் குமாரர் வந்து தேவனுடைய மனுஷன் அன்றையத்தினம் பெத்தேலிலே செய்த எல்லாச் செய்கைகளையும் அவன் இராசாவோடே சொன்ன வார்த்தைகளையும் தங்கள் தகப்பனுக்கு அறிவித்தார்கள்.

௰௨ அப்போது அவர்கள் தகப்பன் அவன் போனவழி ஏதென்று அவர்களைக் கேட்டா ன். ஏனெனில் யூதாவிலிருந்து வந்த தேவ னுடைய மனுஷன் போனவழியேதென்று அவன் குமாரர் பார்த்திருந்தார்கள்.

௰௩ அவன் தன் குமாரருடனே, கழுதை யின்மேலே சேணம் வைத்துத் தாருங்களெ ன்றான். அவர்கள் கழுதையின் மேலே சே ணம் வைத்துக் கொடுத்தபின் அவன் தின் மேலேறி,

௰௪ தேவனுடைய மனுஷன் பிறகாலே போய், ஒரு கர்வாலிமரத்தின் கீழ் உ ட்கார்ந்திருக்கிற அவனைக் கண்டுபிடித்து நீர் யூதாவிலிருந்து வந்த தேவனுடைய மனுஷனோ? என்று அவனைக் கேட்டத ற்கு, அவன் நான் தானென்றான்.

௰௫ அப்போது அவனுடனே, என்னோ டேவீட்டுக்கு வந்து அப்பம் போசியுமெ ன்றான்.

௰௬ அதற்கு அவன் சொன்னது, நான் தி ரும்பிக்கொண்டு உம்மோடே கூட வரமா ட்டேன். இந்த ஸ்தலத்திலே உம்மோடே அப்பம் போசிப்பதும் தண்ணீர் குடிப்பது மில்லை.

௰௭ ஏனெனில் நீ அப்பம் போசியாமலு ம் அங்கே தண்ணீர் குடியாமலும் நீ போ னவழியாய்த் திரும்பாமலுமிருவென்று கர்த்தருடைய வார்த்தையால் எனக்குச் சொல்லப்பட்டதென்றான்.

௰௮ அதற்கு அவன், நானும் உம் மைப்போலொத்த தீர்க்கதரிசியானவன். அவன் அப்பம் போசித்துத் தண்ணீர் குடி க்க நீ அவனைத் திருப்பி உன் வீட்டுக்கழை த்துக்கொண்டு வாவென்று ஒரு தூதன் கர் த்தருடைய வார்த்தையாய் என்னோடே சொன்னானென்று அவனுக்குப் பொய் சொன்னான்.

௰௯ அப்போது அவன் இவனோடே தி ரும்பிப்போய், இவன் வீட்டிலே அப்பம் போசித்துத் தண்ணீர் குடித்தான்.

௨௰ அவர்கள் பந்தியிலுட்கார்ந்திரு க்கிறபோதே தோவெனிற்சம்பவித்ததே தென்றால் அவனைத் திருப்பிக் கொண்டுவந்த தீர்க்கதரிசிக்குக் கர்த்தருடைய வார்த் தையுண்டானதினால்,

௨௧ அவன் யூதாவிலிருந்து வந்த தேவ னுடைய மனுஷனைப் பார்த்துக் கூப்பி ட்டு, உன் தேவனாகிய கர்த்தர் உனக் குக் கற்பித்த கற்பனையை நீ கைக்கொள்ளா மற் கர்த்தருடைய வாக்குக்கெதிர்த்துப் பண்ணி,

௨௨ நீ அப்பம் போசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாமென்று அவருனக் குக் குறித்துச் சொன்ன ஸ்தலத்திற்குத் தி ரும்பி அப்பம் போசித்துத் தண்ணீர் குடி த்தபடியினாலே, உன்னுடைய பிணம் உன் பிதாக்களின் கல்லறையிலே சேர்ப்போவ திலலையென்று கர்த்தர் சொல்லுகிறாரெ ன்றான்.

௨௩ அவன் அப்பம் போசித்த பிறபா டும் அவன் குடித்த பிறபாடும் அந்தத் தீர் க்கதரிசியைத் திருப்பிக்கொண்டவன் அ வனுக்குக் கழுதையின் மேலே சேணம் வை த்துக்கொடுத்தான்.

௨௪ ஆனால் அவன் போனபிறபாடு வழி யிலே ஒரு சிங்கம் அவனைக் கண்டுபிடித்த க்கொன்றுபோட்டது. பிறகு அவன் பிண ம் வழியிலே கிடந்தது, கழுதை அதினண் டையிலே நின்றது. சிங்கமும் பிணத்தண் டையிலே நின்றது.

௨௫ இதோ, கடந்துவருகிற மனுஷர் வழியிலே கிடக்கிற பிணத்தையும் பிணத்த ண்டையிலே நிற்கிற சிங்கத்தையுங் கண்டு கிழவனான தீர்க்கதரிசி குடியிருந்த பட்ட ணத்திலே வந்து சொன்னார்கள்.

௨௬ அவனை வழியிலிருந்து திருப்பப் பண்ணின தீர்க்கதரிசி அதைக் கேட்டபோ து, அவன் கர்த்தருடைய வாக்குக்கு இ ணங்கம் பண்ணின தேவனுடைய மனு ஷன் தானென்று கர்த்தர் அவனுக்குச் சொன்ன வார்த்தையின்படியே கர்த்தர்

அவனை நொறுக்கத்திற்கொப்பக் கொடுத்தார். அது அவனை முறித்துக்கொன்று போட்டதென்று சொல்லி,

௨௭ தன் குமாரருடனே எனக்குக் கழுதையின்மேலே சேணம்வைத்துக்கொடுங்கள் என்றான். அதை அவர்கள் சேணம் வைத்துக்கொடுத்தார்கள்.

௨௮ அப்போது அவன்போய், வழியிலே கிடக்கிற அவன் பிணத்தையும் பிணத்தண்டையிலே கழுதையும் சிங்கமும் நிற்கிறதையும் கண்டான். அந்தச் சிங்கம் பிணத்தைத் தின்றதுமில்லை. கழுதையைப் பீறிப்போட்டதுமில்லை.

௨௯ அப்போது கிழவனான அந்தத் தீர்க்கதரிசி தேவனுடைய மனுஷனின் பிணத்தையெடுத்து அதைக் கழுதையின்மேல் வைத்து அதற்காகத் துக்கங்கொண்டாடவும் அதையடக்கம்பண்ணவும் அதைத் தன் பட்டணத்திலே கொண்டுவந்து,

௩௰ அவன் பிணத்தைத் தன் சொந்தக் கல்லறையிலே வைத்தான். அவனுக்காக, ஐயோ, என் சகோதரனே என்று துக்கங் கொண்டாடினார்கள்.

௩௧ அவனையடக்கம்பண்ணின பிற்பாடு அவன் தன் குமாரரோடே சொன்னது, நான் செத்துப்போனபோது, நீங்கள் என்னைத் தேவனுடைய மனுஷனை அடக்கம்பண்ணப்பட்ட கல்லறையிலே யடக்கம்பண்ணி, அவன் எலும்புகளண்டையிலே என்னெலும்புகளை வையுங்கள்.

௩௨ ஏனென்றால் அவன் பெத்தேலிலிருக்கிற பலிபீடத்திற்கும், சமாரியாவின் பட்டணங்களிலிருக்கிற மேடைகளுடைய சகல வீடுகளுக்கும், விரோதமாகக் கர்த்தருடைய வார்த்தையின்படியே கூப்பிட்டுச்சொன்னது நடக்கவே நடக்குமென்றான்.

௩௩ இந்த நடப்படிக்குப் பிற்பாடு எரொபெயாம் தன் பொல்லாத வழியை விட்டுத் திரும்பாமல் திரும்பவும் சனத்தில் ஈனமானவர்களை மேடைகளின் ஆசாரியராக்கினான். எவன்மேல் அவனுக்கு மனதிருந்ததோ அவனைக் கையைநிரப்புவான். அப்படிக்கொத்தவர்கள் மேடைகளின் ஆசாரியரானார்கள்.

௩௪ எரொபெயாமின் வீட்டாரைப் பூமியின்மேல் வைக்காமல் அதம்பண்ணி யழிக்கும்படியாக இந்தக் காரியம் அவர்களுக்குப் பாவமாய்ப்போயிற்று.

௰௪. அதிகாரம்.

தீர்க்கதரிசியாகிய அகியாவைக் கொண்டு கர்த்தர் எரொபெயாமுக்கு விரோதமாகச் சொல்லச்சொன்ன தீர்க்கதரிசனம்.

அக்காலத்திலே எரொபெயாமின் குமாரனாகிய அபியா வியாதியாய் விழுந்தான்.

௨ அப்போது எரொபெயாம் தன் பெண்சாதியோடே சொன்னது, நீ எழுந்து, நீ எரொபெயாமின் பெண்சாதியென்று அறியப்படாதபடிக்கு வேஷமாறிச் சீலோவுக்குப் போயேன். இதோ, இந்தச் சனத்தின்மேல் நான் இராசாவாவேனென்று என்னோடே சொன்ன தீர்க்கதரிசியாகிய அகியா அங்கேயிருக்கிறான்.

௩ நீ உன் கையிலே பத்து அப்பங்களையும் கச்சாயங்களையும் ஒரு கலசம் தேனையும் எடுத்து அவனண்டைக்குப் போ. பிள்ளைக்குச் சம்பவிக்கப் போகிறதென்னவென்று அவன் உனக்கு அறிவிப்பானென்றான்.

௪ அப்படியே எரொபெயாமின் பெண்சாதி செய்தாள். அவள் எழுந்து சீலோவுக்குப்போய், அகியாவின் வீட்டிற்குட் பிரவேசித்தாள். அகியாவோ வெளிப்பார்க்கமாட்டாதிருந்தான். ஏனென்றால் அவனுடைய முதிர்வயதினாலே அவன் கண்கள் கலக்கமாய்ப்போயிற்று.

௫ ஆனாற் கர்த்தர் அகியாவுடனே, இதோ, எரொபெயாமின் பெண்சாதி வியாதியாயிருக்கிற தன் குமாரனுக்காக உன்னோடே யொருவிசேஷங் கேட்கவருகிறாள். நீ அவளுக்கு இன்னின்னபிரகாரம் சொல்லவேண்டும். அவள் உட்பிரவேசிக்கிறபோது வேறொரு ஸ்திரீயாகக் காண்பிப்பாளென்றார்.

௬ ஆகையால் வாசற்படிக்குட் பிரவேசிக்கிற அவளுடைய கால்களின் சத்தத்தை அகியா கேட்டவுடனே, அவன் சொன்னதாவது, எரொபெயாமின் பெண்சாதியே! நீ உள்ளேவா. நீ அந்நிய ஸ்திரீயாகக் காண்பிக்கிறதென்ன? கடினமான செய்தியை உனக்கறிவிக்க நான் அனுப்பப்பட்டேன்.

௭ நீ போய், எரொபெயாமுக்குச் சொல்லவேண்டியது. இஸ்ரவேலின் பிதாவாகிய கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், சனத்திற்குள்ளிருந்து உன்னை நாம் உயர்த்தி, உன்னை இஸ்ரவேலென்னும் நம்முடைய சனத்தின்மேல் அதிபதியாக வைத்தோம்.

௮ நாம் இராச்சியபாரத்தைத் தாவீது வீட்டாரின் கையிலே பிடுங்கி, உனக்குக்

கொடுத்தோம். ஆனால் நம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, நம்முடைய பார்வைக்குச் செம்மையானதையே செய்யத் தன் முழு இருதயத்தாலும் நம்மைப் பின்பற்றின நம்முடைய தாசனாகிய தாவீதைப் போலே நீயிராமல்,

௯ உனக்கு முன்னிருந்த எல்லாரையும் பார்க்கப் பொல்லாப்புச் செய்தாய். ஏதென்றால் நமக்குக் கோபமுண்டாக்கி, நீ போய் உனக்கு வேறே தேவர்களையும் வார்க்கப்பட்ட விக்கிரகங்களையு முண்டுபண்ணி, நம்மை யுன் முதுகுக்குப் பின்னாக எறிந்து போட்டாய்.

௰ ஆகையால் இதோ, நாம் எரொபெயாமுடைய வீட்டின்மேலே பொல்லாப்பை வரப்பண்ணி எரொபெயாமுக்குச் சுவர்மேலே நீர்விடும் ஒரு நாய்முதலாயிராதபடிக்கு இஸ்ரவேலிலே அடைக்கப்பட்டவனையும் விடுவிடப்பட்டவனையுஞ் சங்காரம்பண்ணிக் குப்பை கழிச்சுப் போட்டப்படுகிறதுபோலே எரொபெயமின் பின்னடியாரையவர்கள் கட்டோடே யற்றுப் போகுமட்டுங் கழித்துப் போடுவோமென்றார்.

௰௧ எரொபெயாமின் சந்ததியாரிற் பட்டணத்திலே சாகிறவனை நாய்கள் தின்னும். வெளியிலே சாகிறவனை ஆகாயத்தின் பறவைகள் தின்னும். ஏனென்றால் கர்த்தர் உரைத்தார்.

௰௨ இப்போதும் நீ யெழுந்து உன் வீட்டுக்குப் போ. உன் கால்கள் பட்டணத்திற்குட் பிரவேசிக்கையிற் பிள்ளையாண்டான் செத்துப்போவான்.

௰௩ அவனுக்காக இஸ்ரவேலெல்லாந் துக்கங்கொண்டாடி யவனை யடக்கம்பண்ணுவார்கள். ஏனென்றால் எரொபெயாமின் வீட்டாரில் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக அவனிலே நற்குணமான காரியங் கண்டுபிடிக்கப்பட்டபடியினாலே எரொபெயாமின் சந்ததியில் அவனொருவனே கல்லறைக்குட்படுவான்.

௰௪ ஆனால் கர்த்தர் தமக்கு இஸ்ரவேலின்மேல் ஒரு இராசாவை யெழும்பப்பண்ணுவார். அவன் அந்நாளிலே தானே எரொபெயாமின் வீட்டாரைச் சங்கரிப்பான். இப்போதானும் என்ன நடக்குமோ?

௰௫ தண்ணீரிலே நாணல் அசைவாடுகிறதுபோலக் கர்த்தர் இஸ்ரவேலை முறிந்தசையப்பண்ணி, அவர்கள் பிதாக்களுக்குத் தாங்கொடுத்த இந்த நல்ல சீமையிலே இஸ்ரவேலைப் பிடுங்கி, அவர்கள் தங்கள் தோப்புகளை வைத்துக் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினபடியினாலே யவர்களை நதிக்கப்பாலே சிதறடித்து,

௰௬ எரொபெயாம் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவத்தினிமித்தம் இஸ்ரவேலை யொப்புக்கொடுத்து விடுவாரென்றான்.

௰௭ அப்போது எரொபெயாமின் பெண்சாதி யெழுந்து புறப்பட்டுத் திர்சாவுக்கு வந்தாள். அவள் வாசற்படியிலே சேருகையிற் பிள்ளையாண்டான் செத்துப்போனான்.

௰௮ கர்த்தர் தீர்க்கதரிசியாகிய அகியாவென்ற தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே யவர்கள் அவனை யடக்கம்பண்ணி, இஸ்ரவேலெல்லாம் அவனுக்காகத் துக்கங்கொண்டாடினார்கள்.

௰௯ எரொபெயாம் யுத்தம்பண்ணினதும் ஆண்டதுமான அவனுடைய மற்ற வர்த்தமானங்கள் இதோ, இஸ்ரவேலுடைய இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் எழுதியிருக்கின்றது.

௨௰ எரொபெயாம் இராச்சியபாரம்பண்ணின காலம் இருபத்திரண்டு வருஷம். அவன் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவன் குமாரனாகிய நாதாப் அவன் ஸ்தலத்திலே இராசாவானான்.

யூதாவின் இராசாவாகிய ரெகொபெயாமின் நடபடிகள்.

௨௧ சாலோமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் யூதாவிலே இராச்சியபாரம்பண்ணினான். ரெகொபெயாம் இராசாவானபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமத்தை வைக்க இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாந் தெரிந்துகொண்ட பட்டணமாகிய எருசலேமிலே பதினேழு வருஷமாய் இராச்சியபாரம்பண்ணினான். அம்மோன் சாதியான அவனுடைய தாயின் பேர் நாமாள்.

௨௨ யூதா கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து தாங்கள் செய்துவருகிறதங்களுடைய பாவங்களினாலே, தங்கள் பிதாக்கள் செய்ததையெல்லாம் பார்க்க அவருக்கு அதிக எரிச்சலூட்டி,

௨௩ உயர்ந்த சகல மேட்டின்மேலும் பச்சையான சகல மரத்தின் கீழும் அவர்களும் மேடைகளையுஞ் சிலைகளையுந் தோப்புகளையுந் தங்களுக்குண்டாக்கினார்கள்.

௨௪ தேசத்திலே இலச்சையான புணர்ச்சிக்காருமிருந்தார்கள். கர்த்தர் இ

வேலபுத்திரருக்குமுன்பாகத் துரத்திவிட்டசாதிகளுடைய அருவருப்புகளின்படியெல்லாஞ்செய்தார்கள்.

௨௫ ரெகொபெயாம் இராச்சியபாரம்பண்ணும் ஐந்தாம்வருஷத்திலேயென்று எகிப்தின் இராசாவாகிய சீசாக் எருசலேமுக்குவிரோதமாய் ஏறிவந்து,

௨௬ கர்த்தருடைய வீட்டின்பொக்கிஷங்களையும் இராசாவுடைய வீட்டின் பொக்கிஷங்களையுஞ் சகலத்தையும் எடுத்துக்கொண்டு, சாலொமோன்செய்வித்த பொன்பரிசைகளெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுபோனான்.

௨௭ அவைகளுக்குப்பதிலாக இராசாவாகிய ரெகொபெயாம்வெண்கலப்பரிசைகளைச்செய்வித்து, அவைகளை இராசாவின் வாசற்படியைக்காக்கிற சேவகருடைய தலைவரின்கையிலே ஒப்புவித்தான்.

௨௮ ஆகையால் இராசாகர்த்தருடைய வீட்டிற்குட்பிரவேசிக்கும்போது அவ்வின்சேவகர் அவைகளையெடுத்துவந்து, பிற்பாடு திரும்பத்தங்கள் அறையிலே வைப்பார்கள்.

௨௯ ரெகொபெயாமின்மற்றவர்த்தமானங்களும் அவன்செய்ததெல்லாம் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௩௰ ரெகொபெயாமுக்கும் எரொபெயாமுக்கும் அவர்களிருந்தநாட்களிலெல்லாம் யுத்தமாயிருந்தது.

௩௧ ரெகொபெயாம் தன்பிதாக்களோடே நித்திரையடைந்து தாவீதின்பட்டணத்தில் தன்பிதாக்களண்டையிலே யடக்கம்பண்ணப்பட்டான். அம்மோன் சாதியான அவன் தாயக்கு நாமாவென்று பேரிருந்தது. அவன்குமாரனாகிய அபீயாம் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௰௫. அதிகாரம்.

அபீயாம் ஆசாவென்ற யூதாவுடைய இராசாக்களின் நடபடிகள்.

நேபாத்தின்குமாரனாகிய எரொபெயாமென்ற இராசாவின் பதினெட்டாம் வருஷத்திலே அபீயாம்யூதாவின்மேல் இராசாவாகி,

௨ மூன்றுவருஷமாயெருசலேமில் இராச்சியபாரம்பண்ணினான். அப்சலோமின் குமாரத்தியாகிய அவனுடையதாயின் பேர்மாகாள்.

௩ தன்தகப்பன் தனக்கு முன்னேசெய்த எல்லாப்பாவங்களிலும் இவன் நடந்தான். அவனிருதயம் அவன்தகப்பனாகிய தாவீதினிருதயத்தைப்போல அவன் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாக உத்தமமாயிருந்ததில்லை.

௪ ஆனாலும் தாவீதினிமித்தம் அவனுடைய பராபரனாகியகர்த்தர் அவனுக்குப் பிறபாடு அவன்குமாரனையெழுப்பப்பண்ணுகிறதினாலும் எருசலேமைநிலைநிறுத்துகிறதினாலும் அவனுக்கு எருசலேமிலொரு விளக்கைக்கட்டளையிட்டுவந்தார்.

௫ ஏனெனில் தாவீது ஏத்தியனாகிய உரியாவின்வர்த்தமானமேயொழிய கர்த்தர் தனக்குக்கற்பித்ததிலே தானுயிரோடிருந்தநாளெல்லாம் ஒன்றையும் விட்டுவிலகாமல் அவர்பார்வைக்குச் செம்மையானதைச்செய்திருந்தான்.

௬ ரெகொபெயாமுக்கும் எரொபெயாமுக்குமிருந்தபோர் அவனுயிரோடிருக்கிறநாளெல்லாம் நடந்தது.

௭ அபீயாமின் மற்றவர்த்தமானங்களும் அவன்செய்ததெல்லாம் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது. அபீயாமுக்கும் எரொபெயாமுக்கும்போருண்டாயிருந்தது.

௮ அபீயாம் தன்பிதாக்களோடேநித்திரையடைந்தபின் அவனைத் தாவீதின்பட்டணத்தில் அடக்கம்பண்ணினார்கள். அவன்குமாரனாகிய ஆசா அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௯ இஸ்ரவேலின் இராசாவாகியஎரொபெயாமின் இருபதாம்வருஷத்திலே ஆசா யூதாவின்மேல் இராசாவாகி,

௰ நாற்பத்தொருவருஷமாக எருசலேமில் இராச்சியபாரம்பண்ணினான். அப்சலோமின்குமாரத்தியாகிய அவனுடைய தாயின்பேர்மாகாள்.

௰௧ ஆசா தன்தகப்பனாகிய தாவீதைப்போலக்கர்த்தரின் பார்வைக்குச்செம்மையானதைச்செய்தான்.

௰௨ அவன் புணர்ச்சிக்காரரைத்தேசத்திலிருந்தகற்றித் தன்பிதாக்களுண்டுபண்ணின நர்கலானவிக்கிரகங்களையெல்லாம்விலக்கி,

௰௩ தோப்பிலே யருவருப்பானவிக்கிரகத்தையுண்டுபண்ணின தன்தாயாகிய மாகாளையும் இராசாத்தியாயிராதபடிக்கு விலக்கிப்போட்டான். அவளுடையவிக்கிரகத்தையும் ஆசா நிர்மூலமாக்கிக் கீதரோன் ஆற்றண்டையிலே சுட்டெரித்துப்போட்டான்.

௰௪ மேடைகளோவென்றால் தள்ளிப்போடப்படவில்லை. என்றாலும் ஆசா உயிரோடிருந்தநாளெல்லாம் அவனிருதயங் கர்த்தரோடே உத்தமமாயிருந்தது.

௰௫ தன் தகப்பனும் தானும் நியமம்பண்ணின வெள்ளியையும் பொன்னையும் பணிமுட்டுகளையும் அவன் கர்த்தருடைய வீட்டிலே கொண்டுவந்தான்.

௰௬ ஆசாவுக்கும் இஸ்ரவேலின் இராசாவாகிய பாசாவுக்கும் அவர்களுடைய எல்லாநாட்களிலும் போருண்டாயிருந்தது.

௰௭ எவனிலும் ஒருவரும் புறப்பட்டு யூதாவின் இராசாவாகிய ஆசாவினவசமாய்ச் சேராதபடிக்கு இஸ்ரவேலின் இராசாவாகிய பாசா யூதாவுக்கு விரோதமாக ஏறிவந்து, ராமாவைக் கட்டியெடுப்பித்தான்.

௰௮ அப்போது ஆசா கர்த்தருடைய வீட்டின் பொக்கிஷங்களில் மீதியான எல்லா வெள்ளியையும் பொன்னையும் இராசாவுடைய வீட்டின் பொக்கிஷங்களையுமெடுத்து, அவைகளைத் தன் ஊழியக்காரர் கையிலே தமஸ்குவில் வாசமாயிருக்கிற எசியோனின் மகனாகிய தப்பேரிமோனின் குமாரன் பெனாதாதென்ற சூரியாவின் இராசாவுக்குக் கொடுத்தனுப்பி,

௰௯ எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடம்படிக்கையுண்டே? இதோ, உமக்குக் காணிக்கையாய் வெள்ளியையும் பொன்னையும் அனுப்பினேன். இஸ்ரவேலின் இராசாவாகிய பாசா என்னைவிட்டு அப்பாலே போகும்படிக்கு நீர் வந்து அவனோடிருக்கும் உம்முடைய உடம்படிக்கையைத் தள்ளிப்போடுமென்று சொல்லியனுப்பினான்.

௨௰ பெனாதாத் இராசாவாகிய ஆசாவுக்குக் கேள்விகொடுத்து, தன்னகத்துண்டான இராணுவங்களின் தலைவரை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பி, ஈயோனையும் தாணையும் பேத்மாக்காவென்ற ஆபேலையும் கின்னரோத்தனைத்தையும் நப்தலியின் முழுத்தேசத்தோடுங்கூட இடறவடித்தான்.

௨௧ பாசா அதைக்கேட்டபோது ராமாவைக் கட்டுகிறதைவிட்டுத் திர்சாவிலிருந்துவிட்டான்.

௨௨ அப்போது இராசாவாகிய ஆசா ஒருவருந் தப்பாமல் எல்லாரும் போய்ப் பாசா கட்டின ராமாவின் கல்லுகளையும் அதின் மரங்களையுமெடுத்து வரக்கடவர்களென்று யூதாவிலெங்கும் பறைமுறைபிடிவித்து அவைகளாற் பென்யமீனைச் சேர்ந்த கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான்.

௨௩ ஆசாவின் மற்ற எல்லா வர்த்தமானங்களும் அவனுடைய எல்லாவல்லமையும் அவன் செய்ததனைத்தும் அவன் கட்டின பட்டணங்களின் செய்தியும் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது. அவன் முதிர்வயதின் காலத்திலோவென்றால் கால்களிலே நோய்கொண்டிருந்தான்.

௨௪ ஆசா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் தன் தகப்பனாகிய தாவீதின் பட்டணத்திலே தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய யோசபாத் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

நாதாப்பாசாவென்ற இஸ்ரவேலின் இராசாக்களுடைய நடப்பிகள்.

௨௫ யூதாவின் இராசாவாகிய ஆசாவின் இரண்டாம் வருஷத்திலே எரோபெயாமின் குமாரனாகிய நாதாப் இஸ்ரவேலின்மேல் இராசாவாகி, இரண்டுவருஷமாய் இஸ்ரவேலின்மேல் இராசரீகம்பண்ணினான்.

௨௬ அவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து தன் தகப்பன் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்துகொண்டான்.

௨௭ ஆனால் இசக்கார் வீட்டானாகிய அகியாவின் குமாரனான பாசா அவனுக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணி நாதாபும் இஸ்ரவேலனைத்தும் பெலிஸ்தருக்கிருக்கிற கிபேத்தோனை முற்றிக்கைப்போட்டிருக்கையிற் பாசா அவனைக் கிபேத்தோனிலே வெட்டிப்போட்டான்.

௨௮ பாசா யூதாவின் இராசாவாகிய ஆசாவின் மூன்றாம்வருஷத்திலே அவனைக் கொன்றுபோட்டபின் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௨௯ அப்போது எரோபெயாம் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான பாவங்களினிமித்தமும் அவன் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்குண்டாக்கின கோபத்தினிமித்தமும் கர்த்தர் சீலோனியனாகிய அகியாவென்ற தம் ஊழியக்காரனைக் கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே சம்பவித்ததென்றால்,

௨௯ அவன் இராசாவான பின் அவன் எரொபெயாமின் வீட்டாரை எல்லாம் வெட்டிப்போட்டான். எரொபெயாமுக்கிருந்த சுவாசமுள்ளதொன்றையும் அவன் அழிக்காமல் வைத்து வைத்ததில்லை.

௩௰ நாதாபின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்தவைகளும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்தில் அல்லோ எழுதியிருக்கின்றது.

௩௨ ஆசாவுக்கும் இஸ்ரவேல் இராசாவாகிய பாசாவுக்குமோவெனில் அவர்கள் நாட்களில் எல்லாம் போருண்டாயிருந்தது.

௩௩ யூதாவின் இராசாவாகிய ஆசாவின் மூன்றாம் வருஷத்திலே அகியாவின் குமாரனாகிய பாசா இஸ்ரவேல் அனைத்தின் மேலே திர்சாவிலே இராசாவாகி இருபத்துநாலு வருஷமாக ஆண்டு,

௩௪ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, எரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவத்திலும் நடந்துவந்தான்.

௰௬. அதிகாரம்.

பாசாவின் குலை நடபடிகளும் ஏலா, சிம்ரி, உம்ரியென்ற இஸ்ரவேல் இராசாக்களின் நடபடிகளும்.

ஆனாற் பாசாவுக்கு விரோதமாகக், கர்த்தருடைய வார்த்தை ஆனானியின் குமாரனாகிய ஏகூவுக்குண்டாயவர் சொன்னதாவது,

௨ நாம் உன்னைத் தூளிலிருந்து உயர்த்தி, உன்னை நமது சனமாகிய இஸ்ரவேலின் மேலே தலைவனாக வைத்திருக்கக் கொள்ள நீ எரொபெயாமின் வழியிலே நடந்து, நமது சனமாகிய இஸ்ரவேல் தங்கள் பாவங்களால் நமக்குக் கோபமுண்டாக்கும்படிக்கு அவர்களைப் பாவஞ்செய்யப்பண்ணுகிறபடியினாலே,

௩ இதோ, நாம் பாசாவின் பின்னடியாரையும் அவன் வீட்டாரின் பின்னடியாரையும் எடுத்துப்போட்டு, உன்னுடைய வீட்டை நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமின் வீட்டைப்போலாக்குவோம்.

௪ பாசாவின் சந்ததியிலே பட்டணத்திற் சாகிறவனை நாய்கள் தின்னும். வெளியிலே மவனுக்குச் சாகிறவனை ஆகாயத்துப் பறவைகளும் தின்னும்.

௫ பாசாவின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்ததும் அவனுடைய வல்லமையும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்தில் அல்லோ எழுதியிருக்கின்றது.

௬ பாசா தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பின் திர்சாவிலடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய ஏலா, அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௭ பாசா தன் கைகளின் செய்கையாற் கர்த்தருக்குக் கோபமுண்டாக்கி, அவர் பார்வைக்குச் செய்த எல்லாப் பொல்லாப்பினிமித்தமும் அவன் எரொபெயாமின் வீட்டாரை வெட்டிப்போட்டதினிமித்தமும் இவர்களைப்போல ஆவானென்று அவனுக்கும் அவன் வீட்டுக்கும் விரோதமாக ஆனானியின் குமாரனாகிய ஏகூவென்ற தீர்க்கதரிசியினாலே கர்த்தருடைய வார்த்தையின்னையுமுண்டாயிற்று.

௮ ஆசா யூதாவின் இராசாவான இருபத்தாறாம் வருஷத்திலே பாசாவின் குமாரனாகிய ஏலா இஸ்ரவேலின்மேலே திர்சாவிலே இராசாவாகி இரண்டு வருஷம் அரசாண்டான்.

௯ ஆனாற் பாதி இரதங்களின்மேலே தலைவனாகிய சிம்ரியென்ற அவனூழியக்காரன் அவனுக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணி, அவன் திர்சாவிலே அவ்விடத்து அரண்மனை உக்கிராணக்காரனாகிய அர்சாவின் வீட்டிலே குடித்தும், வெறித்தும் இருக்கக்கொள்ள,

௰ சிம்ரியுட் பிரவேசித்து, யூதாவின் இராசாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்தில் அவனை வெட்டிக்கொன்று போட்டு, அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௰௧ அவன் இராசாவாகித் தன் ஆசனத்தின்மேல் உட்கார்ந்தபோது அவன் பாசாவின் வீட்டாரையெல்லாம் வெட்டிப்போட்டான். அவனுக்கிருந்த ஒரு நாயையாகிலும், அவன் இனத்தாரை யாகிலும், அவன் சிநேகிதரை யெனகிலும், அவனுயிரோடே வைத்ததில்லை.

௰௨ அப்படியே பாசாவும் அவன் குமாரனாகிய ஏலாவுந் தங்கள் விக்கிரகங்களினாலே இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கிச் செய்ததும் இஸ்ரவேலைச் செய்யப்பண்ணினதுமான அவர்களுடைய எல்லாப் பாவங்களினிமித்தம்,

௰௩ கர்த்தர் தீர்க்கதரிசியாகிய ஏகூவினாலே பாசாவைக் குறித்துச் சொல்லியிருந்த அவருடைய வார்த்தையின்படியே

சிமிரிபாசாவின் வீட்டாரையெல்லாமழித்துப்போட்டான்.

௰௪ ஏலாவின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்த் தினதயும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௰௫ யூதாவின் இராசாவாகிய ஆசாவின் இருபத்தேழாம் வருஷத்திலே சிமிரி திற்சாவிலே ஏழுநாள் இராசாவாயிருந்தான். சனம் அப்போது பெலிஸ்தருக்கிருக்கிற கிபெத்தோனுக்கெதிராகப் பாளயமிறங்கியிருந்தது.

௰௬ சிமிரி ஒப்பந்தம்பண்ணி, இராசாவைக்கொன்றும்போட்டானென்பதை யங்கே பாளயமிறங்கின சனங் கேட்டபோதோவெனில், இஸ்ரவேலெல்லாம் அந்நாளிலே தானே பாளயத்திலே படைத்தலைவனாகிய உம்ரியை இஸ்ரவேல்மேல் இராசாவாக்கினார்கள்.

௰௭ அப்போது உம்ரியும் அவனோடேகூட இஸ்ரவேல் அனைத்துங் கிபெத்தோனிலிருந்தேறிவந்து, திற்சாவை முற்றிக்கைப்போட்டார்கள்.

௰௮ பட்டணம்பிடிபட்டதைச் சிமிரி கண்டபோதோவென்றால், அவன் இராசாவின்வீடாகிய அரண்மனைக்குட்பிரவேசித்துத் தானிருக்கிற இராசாவின் வீட்டையக்கினியினாற் கொளுத்தி யதிலே செத்தான்.

௰௯ அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, எரொபெயாமின் வழியிலும் அவன் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவன்பாவத்திலும் நடக்கிறதினாலே கட்டிக்கொண்ட அவனுடைய பாவங்களினிமித்தம் அப்படிவந்தது.

௨௰ சிமிரியின் மற்றவர்த்தமானங்களும் அவன்பண்ணின அவனுடைய ஒப்பந்தமும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௧ அப்போது இஸ்ரவேல் சனம் இரண்டு வகுப்பாய்ப் பிரிந்து, பாதிச்சனங் கினேத்தின்குமாரனாகிய திப்னியை இராசாவாக்க அவனைப்பின்பற்றிப் பாதிச்சனம் உம்ரியைப் பின்பற்றிப் போனார்கள்.

௨௨ ஆனாற் கினேத்தின்குமாரனாகிய திப்னியைப்பின்பற்றின சனத்தைப் பார்க்க உம்ரியைப்பின்பற்றின சனம் பலத்துப்போயிற்று. திப்னி செத்துப்போனான். உம்ரியோவென்றால் அரசாண்டான்.

௨௩ யூதாவின் இராசாவாகிய ஆசாவின் முப்பத்தோராம் வருஷத்திலே உம்ரி இஸ்ரவேல்மேல் இராசாவாகிப் பன்னிரண்டுவருஷமாய் இராச்சியபாரம்பண்ணினான். அவன் திற்சாவிலே ஆறுவருஷமாய் அரசாண்டு,

௨௪ பிறபாடு சேமேரின் கையிலே சமாரியாமலையை இரண்டுதாலந்து வெள்ளிக்குக்கொண்டு அந்த மலையின் மேலே பட்டணத்தைக்கட்டிச் சமாரியாமலையினுடைய எசமானாயிருந்த சேமேருடைய நாமத்திற்கொத்தபேரை யதற்குத் தரித்தான்.

௨௫ ஆனால் உம்ரி கர்த்தரின் பார்வைக்குப்பொல்லாப்பானதைச் செய்து, தனக்குமுன்னிருந்த எல்லாரையும் பார்க்கக்கேடாய் நடந்து,

௨௬ நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமின் சகலவழியிலும், இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்குத் தங்கள் விக்கிரகங்களாலே கோபமுண்டாகும்படியாய் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின அவனுடைய பாவங்களிலும் நடந்துகொண்டான்.

௨௭ உம்ரி செய்த அவனுடைய மற்ற வர்த்தமானங்களும் அவன் காண்பித்த வல்லமையும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௮ உம்ரி தன்பிதாக்களோடே நித்திரையடைந்த பின் சமாரியாவிலே யடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய ஆகாப் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

இஸ்ரவேலின் இராசாவாகிய ஆகாபுடைய நடபடிகளின் துவக்கம்.

௨௯ யூதாவின் இராசாவாகிய ஆசாவின் முப்பத்தெட்டாம் வருஷத்திலே உம்ரியின் குமாரனாகிய ஆகாப் இஸ்ரவேலின்மேல் இராசாவாகிச் சமாரியாவிலே இஸ்ரவேலின்மேல் இருபத்திரண்டு வருஷமாக இராச்சியபாரம் பண்ணினான்.

௩௰ உம்ரியின் குமாரனாகிய இந்த ஆகாப் தனக்குமுன்னிருந்த எல்லாரையும் பார்க்கக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

௩௧ நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமின் பாவங்களில் நடந்துகொள்ளுகிறது அவனுக்குக் கொஞ்சக் காரியமாய்க்கண்டு, அவன் சீதோனியரின் இராசாவாகிய எத்பாகாலின் குமாரத்தி யெச

டேல் விவாகம்பண்ணிப் போய்ப் பாகாலைச் சேவித்து அதைப் பணிந்துகொண்டு,

௩௨ தான் சமாரியாவிலே கட்டின பாகாலின் வீட்டிற் பாகாலுக்குப் பலிபீடத்தை எடுப்பித்தான்.

௩௩ ஆகாப் ஒரு தோப்பையும் வைத்து இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாகும்படிக்குத் தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் இராசாக்களெல்லாரையும்பார்க்க அதிகஞ்செய்து வந்தான்.

௩௪ அவன் நாட்களிலே பெத்தேலூரான ஈயேல் எரிகோவைக் கட்டினான். கர்த்தர் நூனின் குமாரனாகிய யோசுவைக்கொண்டு சொல்லியிருந்த வார்த்தையின்படியே, அவன் தன் அஸ்திபாரத்தைப் போடுகிறபோது அபிராமென்கிற தன் மூத்த குமாரனையும், அதின் வாசல்களை வைக்கிறபோது செகூபென்கிற தன் இளைய குமாரனையும் சாகக்கொடுத்தான்.

௰௭. அதிகாரம்.

எலியா தீர்க்கதரிசியினுடைய சொற்படி வந்த பஞ்சத்தில் அவன் அதிசயமாய்ப் போஷிக்கப்பட்டது.

௧ கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியூரானாகிய எலியா ஆகாபுடனே, என் வாக்கின்படியேயொழிய இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்குமென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்றான்.

௨ பிற்பாடு கர்த்தருடைய வார்த்தை அவனுக்குண்டாகி அவர் சொன்னதாவது,

௩ நீ இவ்விடத்தை விட்டுக் கிழக்கே நோக்கிப்போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே ஒளிந்துகொண்டிரு.

௪ அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய். அங்கே உன்னைப் பராமரிக்கக் காக்காய்களுக்குக் கற்பித்தேனென்றார்.

௫ அவன் போய்க் கர்த்தருடைய வார்த்தையின்படியே செய்தான். அவன் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான்.

௬ காக்காய்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும் இறைச்சியும் சாயங்காலத்தில் அப்பமும் இறைச்சியுங் கொண்டுவந்தது. தாகத்துக்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான்.

௭ சில நாளைக்குப் பிற்பாடு சம்பவித்ததேதென்றால் அந்த ஆறு வற்றிப்போயிற்று. ஏனென்றால் தேசத்தில் மழை பெய்ந்ததில்லை.

௮ அப்போது கர்த்தருடைய வார்த்தை அவனுக்குண்டாகி அவர் சொன்னதேதென்னில்,

௯ நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சற்பாத் ஊருக்குப் போய் அங்கே தங்கியிரு. இதோ, உன்னைப் பராமரிக்கும்படிக்கு அங்கேயிருக்கிற ஒரு கைம்பெண்சாதிக்குக் கற்பித்தேனென்றார்.

௰ அப்படியே அவன் எழுந்து, சற்பாத்திற்குப் போனான். அந்தப் பட்டணத்தின் ஒலிமுகவாசலுக்கு அவன் வந்தபோது இதோ, அங்கேயொரு கைம்பெண்சாதி விறகுகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்துக் கூப்பிட்டு, நான் குடிக்கிறதற்குக் கொஞ்சந் தண்ணீர் ஒரு பாத்திரத்திலே எனக்குக் கொண்டுவாவென்றான்.

௰௧ கொண்டுவர அவள் போகிறபோது, அவன், ஒரு அப்பத்தின் துணிக்கையையும் உன் கையிலே எனக்குக் கொண்டுவாவென்று அவளைப் பார்த்துக் கூப்பிட்டான்.

௰௨ அவளோவென்றால், பானையில் ஒரு பிடிமாவும், கலயத்திலே கொஞ்சம் எண்ணெயுமேயல்லாமல் எனக்கு ஒரு அடையுமில்லையென்று உம்முடைய பராபரனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக அதை எனக்கும் அவனுக்குஞ் சேகரம்பண்ணப்போய், இரண்டு விறகுகளைப் பொறுக்குகிறேனென்றாள்.

௰௩ அப்போது எலியா அவளோடே சொன்னதாவது, நீ பயப்படாதே. நீ போய் உன் வார்த்தையின்படி சேகரம்பண்ணு. ஆனால் முதல் அதிலே எனக்கு ஒரு சின்ன அடையைச் செய்து வெளியே எனக்குக் கொண்டுவா. பிற்பாடு உனக்கும் உன் குமாரனுக்குஞ் செய்வாயாக.

௰௪ ஏனெனில் கர்த்தர் சீமையின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்துபோவதுமில்லை. கலயத்திலே எண்ணெய் குறைப்படுவதுமில்லையென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

௧௫ அவள்போய் எலியாவுடைய வார்த்தையின்படி செய்தாள். அவளும் இவனும் அவள்வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள்.

௧௬ கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்னவார்த்தையின்படியே பானையிலேயிருந்த மா செலவழிந்துபோனதுமில்லை. கலயத்திலிருந்த எண்ணெய் குறைந்துபோனதுமில்லை.

சர்பாத்து ஊர் கைம்பெண்சாதி சாகக்கொடுத்தமகனை எலியாவெழுப்பினது.

௧௭ இந்தவர்த்தமானங்களுக்குப்பிறபாடு சம்பவித்ததென்னவென்றால் வீட்டுக்காரியான அந்தப்பெண்சாதியின் குமாரன் வியாதியாய்விழுந்தான். அவனில் சுவாசமில்லாதேபோகுமட்டும் அவனுடைய வியாதி அதிகரித்துக்கொண்டேயிருந்தது.

௧௮ அப்போது அவள் எலியாவுடனே, பராபரனுடைய மனுஷனே! எனக்கும் உமக்குமென்ன? என் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணவும் என்குமாரனைச் சாகப்பண்ணவும் என்னண்டைக்கு வந்தீரோ? என்றாள்.

௧௯ அவன் அவளுடனே, உன் குமாரனையெனக்குத்தாவென்றுசொல்லி, அவனையவள் மடியிலிருந்தெடுத்துத் தான் தங்கியிருக்கிற மேல்வீட்டிலே அவனைக்கொண்டுபோய், தன்கட்டிலின்மேல் வைத்து,

௨௰ என்பராபரனாகியகர்த்தாவே! நான் தங்கியிருக்கிற இந்தக்கைம்பெண்சாதியின் குமாரனை முதலாய்க் கொன்றுபோடுஞ் சேதியையவளுக்கு வருத்திவித்தீரோ? என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு,

௨௧ அந்தப்பிள்ளையின்மேல் மூன்றுதரங்குப்புறவிழுந்து என்பராபரனாகிய கர்த்தாவே! இந்தப்பிள்ளையின் ஆத்துமம் அதனுள்ளே திரும்பிவரப்பண்ணுமே? என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

௨௨ கர்த்தர் எலியாவின்சத்தத்தைக் கேட்டார். பிள்ளை பிழைக்கும்படிக்கு அவனுடைய ஆத்துமம் அவன் உள்ளத்திலே திரும்பிவந்தது.

௨௩ அப்போது எலியா பிள்ளையையெடுத்து, மேல்வீட்டிலிருந்தவனைத் தாயிருக்கும் வீட்டிற்குட்கொண்டுவந்து, அவனையவன் தாய்க்குக்கொடுத்துப்பார்.

உன்பிள்ளை யுயிரோடிருக்கின்றானென்று எலியாசொன்னான்.

௨௪ அப்போது அந்தப்பெண்சாதி எலியாவுடனே, நீர் பராபரனுடைய மனுஷனென்றும் உம்முடைய வாயிலிருக்கிற கர்த்தாவின்வார்த்தையுண்மையென்றும் இதினாலே இப்போது அறிந்திருக்கிறேனென்றாள்.

௧௮. அதிகாரம்.

பாகாலின் பூசாரிகளை எலியா சங்காரம்பண்ணுவித்தது.

அநேகநாட்சென்றபிறபாடு மூன்றாம்வருஷத்திலே சம்பவித்ததென்னவென்றால், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்குண்டாகி, நீ போய், ஆகாபுக்குன்னைக் காண்பி. ஏனென்றால் நாம் பூமியின்மேல் மழையைக்கட்டளையிடுவோமென்றார்.

௨ அப்போது எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்பிக்கப்போனான். பஞ்சமோவெனில் சமாரியாவிலே கடினமாயிருந்தது.

௩ ஆனபடியால் ஆகாப் அரமனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியாவையழைத்தனுப்பினான். ஒபதியாவோவெனில் கர்த்தருக்கு மிகவும் பயந்து நடக்கிறவனாயிருந்தான்.

௪ அதேதெனில் ஏசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரிக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச் சேர்த்துக்கொண்டு, அவர்களைக் கெபிக்கு ஐம்பதுபேராகவொளித்துவைத்து அவர்களுக்கு அப்பமுந் தண்ணீருங் கொடுத்து அவர்களைப்பராமரித்துவந்தான்.

௫ ஆகாப் ஒபதியாவுடனே, நீ தேசத்திலிருக்கிற எல்லா நீரூற்றுகளிடத்திலும் எல்லா ஆறுகளிடத்திலும் போ. நாம் அந்த மிருகஜீவன்களைச் சாகக்கொடாமல், குதிரைகளையுங் கோவேறுகழுதைகளையும் உயிரோடே காப்பாற்றும்படிக்கு நமக்குப்புல்லகப்படுமாக்கு மென்றான்.

௬ அப்படியே தேசத்தைச் சுற்றிப்பார்க்க அதைத் தங்களுக்குள் திட்டம்பண்ணிக்கொண்டார்கள். ஆகாப் ஒருவழியிலே தனித்துப்போனான். ஒபதியா வேறொருவழியிலே தனித்துப்போனான்.

௭ ஒபதியா வழியிலிருக்கக்கொள்ள, இதோ, எலியா அவனுக்கெதிர்ப்பட்டான். அவன் இவனை யின்னானென்றறிந்து, முகங்குப்புறவிழுந்து நீர் என்னுடைய ஆண்டவனாகிய எலியாவோ? என்று கேட்டதற்கு,

௮ இவன் அவனுடனே, நான்தானே. நீ போய், இதோ, எலியா வந்திருக்கிறானென்று உன்னுடையவனுக்குச் சொல்லென்றான்.

௯ அதற்கு அவன் சொன்னதாவது, ஆகாப் என்னைக் கொன்றுபோடும்படிக்கு நீர் உமது அடியானை அவன் கையிலே ஒப்புக்கொடுக்க நான் என்ன பாவஞ்செய்தேன்?

௰ உம்மைத் தேடுவிக்க என்னுடைய ஆண்டவன் மனுஷரை அனுப்பாத சாதியும் இராச்சியமுமில்லையென்று உம்முடைய பராபரனாகிய கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன். அவர்கள் நீர் இல்லையென்று சொன்னபோது அவன் அந்த இராச்சியத்தையும் அந்தச் சாதியையும் உம்மைக் காணவில்லையென்று சத்தியம் கேட்டுக்கொண்டான்.

௰௧ இப்போதும் நீ போய், உன்னுடையவனுக்கு இதோ, எலியா வந்திருக்கிறானென்று சொல்லென்று நீர் சொல்லுகிறீர்.

௰௨ ஆனால் நான் உம்மைவிட்டுப் போனவுடனே கர்த்தருடைய ஆவி உம்மைப் பெயர்த்து நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார். அப்போது நான் ஆகாபுக்கு அறிவிக்க வந்தபிறபாடு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்றுபோடுவானே. உமது அடியானோவென்றால் என் சிறுவயதுதுவக்கிக் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன்.

௰௩ யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோடுகிறபோது நான் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் நூறுபேரை ஒவ்வொரு கெபியிலே ஐம்பதைம்பதுபேராக ஒளித்துவைத்து அவர்களுக்கு அப்பமுந் தண்ணீருங் கொடுத்துப் பராமரித்து வந்த என்னுடைய செய்கை என்னுடைய ஆண்டவனுக்கு அறிவிக்கப்படவில்லையோ?

௰௪ இப்போதும் என்னுடையவன் என்னைக் கொன்றுபோடும்படியாக நீர், இதோ, எலியா வந்திருக்கிறானென்று நீ போய் அவனுக்குச் சொல்லென்று சொல்லுகிறீரேயென்றான்.

௰௫ ஆனால் எலியா, இன்றைக்கே நான் அவனுக்குக் காணப்படுவேனென்று சேனைகளின் கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்றான்.

௰௬ அப்போது ஒபதியா போய் ஆகாபுக்கெதிர்ப்பட்டு அவனுக்கதை அறிவித்ததற்கு ஆகாப் எலியாவுக்கெதிராகப் போனான்.

௰௭ ஆகாப் எலியாவைக் கண்டபோது ஆகாப் அவனுடனே இஸ்ரவேலைக் கலக்கம்பண்ணுகிறவன் நீயோவென்றான்.

௰௮ அதற்கவன் சொன்னதாவது, இஸ்ரவேலைக் கலக்கம்பண்ணினவன் நானல்ல. கர்த்தரின் கற்பனைகளை விட்டதினாலும் நீர் பாகால்களைப் பின்பற்றினதினாலும் அதைக் கலக்கம்பண்ணினவர்கள் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருந்தானே.

௰௯ இப்போது கர்மேல் பர்வதத்திலே இஸ்ரவேல் அனைத்தையும் பாகாலின் நானூற்றைம்பது தீர்க்கதரிசிகளையும் எசபேலின் பந்தியிலே சாப்பிடுகிற தோப்பினுடைய நானூறு தீர்க்கதரிசிகளையும் என்னண்டைக்குக் கூட்டிக்கொண்டுவர் ஆள்களை அனுப்புமென்றான்.

௨௰ அப்படியே ஆகாப் இஸ்ரவேல் புத்திரரெல்லாரிடத்திலும் ஆள்களை அனுப்பிக் கர்மேல் பர்வதத்திலே அந்தத் தீர்க்கதரிசிகளைக் கூட்டுவித்தான்.

௨௰௧ அப்போது எலியா சகல சனத்தண்டைக்கும் சேர்ந்து, நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அதைப் பின்பற்றுங்களென்றான். சனம் பிரதியுத்தாரமாக அவனுக்கொன்றுஞ் சொல்லவில்லை.

௨௰௨ அப்போது எலியா சனத்தோடே சொன்னதாவது, கர்த்தரின் தீர்க்கதரிசியாய் மீர்ந்திருக்கப்பட்டவன் நான் ஒருவன். பாகாலின் தீர்க்கதரிசிகளோவென்றால் நானூற்றைம்பதுபேர்.

௨௰௩ இப்போதும் இரண்டு காளைகளை எங்களுக்குக் கொடுக்கக்கடவர்கள். ஒரு காளையை அவர்கள் தெரிந்துகொண்டு, அதைச் சந்துசந்தாகத் துண்டித்து, நெருப்புப்போடாமல் விறகுகளின்மேல் வைக்கக்கடவர்கள். நான் மற்றக் காளையை அப்படியே செய்து நெருப்புப்போடாமல் விறகுகளின்மேல் வைப்பேன்.

௨௰௪ நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுங்கள். நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன். அப்போது அக்கினியினால் உத்தரவு சொல்லுந் தெய்வமே தெய்வமென்றான். அப்போது சனமெல்லாம் பிரதியுத்தாரமாக, அது நல்ல வார்த்தையென்றார்கள்.

௨௫ அபபோது எலியா பாகாலின தீர்ககதரிசிகளுடனே, நீஙகளொருகாளையைத தெரிநதுகொணடு அதை யாயததமபணணி முநதிககொளளுஙகள. ஏனெனில நீஙகள அநேகர். பிற்பாடு நெருபபுபபோடாமல உஙகளதேவனுடைய நாமததைச சொலலிககூபபிடுஙகளெனறான.

௨௬ அவன தஙகளுககுககொடுததகாளையையவர்கள வாஙகி ஆயததமபணணிப பாகாலே! எஙகளுககுக கேள்விகொடுமெனறு காலமேதுவககி மததியானமடடுமபாகாலின நாமததைசசொலலிக்கூபபிடடார்கள. ஆனால ஒரு சததமும மறுவுததாரஙகொடுககிறவனுமிலலாதிருநதது. அவர்கள பணணின பலிபீடததிற்கெதிரோநடனமாயககுதிததார்கள.

௨௭ மததியானததிலேயெனறால எலியா அவர்களைப பரியாசமபணணி, உரததசததமாயக கூபபிடுஙகள. ஏனெனில அவனதேவன. அவன தியானததிலிருககிறான. அலலவெனறு அலுவலாயிருககிறான. அலலவெனறுவழிபபயணததிலிருககிறான. அலலவெனறு அவனையெழுபபிவிடவேணடியதாயத தூஙகுகிறானாககுமெனறான.

௨௮ அவர்கள உரததசததமாயககூபபிடடுத தஙகள பழககததினபடியே இரததநதஙகளமேலே வடியுமடடுங கததிகளாலும ஊசிகளாலுந தஙகளைக கீறிககொணடார்கள.

௨௯ மததியான நேரம பினனிடடுப போனபிற்பாடு அவர்கள அநதிககாணிககைச்செலுததபபடுமநேரமடடாகச சனனதஞசொலலிககொணடிருநதார்கள. ஆனால ஒருசததம வராமலும மறுவுததரஙகொடுககிறவனுங கவனிககிறவனுமிலலாமலுமிருநதது.

௩௰ அபபோது எலியா எலலாசசனததோடும எனனணடையிலே சேருஙகளெனறான. எலலாசசனமும அவனணடையிலேசேர்நதபோது, அவன தகர்ககபபடடகர்ததருடையபலிபீடததைசசெபபணிடடு,

௩௧ உனககு இஸரவேலெனறபேரிருபபதாகவெனறு கர்ததருடைய வார்ததைவநத யாககோபுடைய குமாரரால உணடானகோததிரஙகளுடைய இலககததினபடியே பனனிரணடுகலலுகளையெடுததுககொணடு,

௩௨ அநதக கலலுகளாலே கர்ததருடைய நாமததிற்கெனறு பலிபீடததைககடடிப பலிபீடததைசசுறறிலுந தானியமளககிற இரணடு மரககால விதைவிதைககததகக இடமான ஒருவாயககாலையுணடாககி,

௩௩ விறகுகளையடுககி, ஒருகாளையைசசநதுசநதாகத துணடிதது விறகுகளின மேலேவைததான.

௩௪ பிறபாடு அவன நீஙகள நாலுகுடஙகளைத தணணீரால நிரபபிவநது சர்வாஙகததகனபலியினமேலும விறகுகளினமேலும ஊறறுஙகளெனறான. பிறபாடு இரணடாமவிசையும அபபடி யூற்றுஙகளெனறான. இரணடாமவிசையும ஊறறினார்கள. அதற்குபபிறகு மூனறுமவிசையும அபபடி யூறறுஙகளெனறான. மூனறுமவிசையும ஊறறினார்கள.

௩௫ அபபோது தணணீர் பலிபீடததைசசுறறிலும ஓடினதுந தவிர வாயககாலுந தணணீரால நிரமபிறறு.

௩௬ அநதிககாணிககைச செலுததபபடுமநேரததிலே தீர்ககதரிசியாகிய எலியாசேர்நதுசொனனதாவது, ஆபிரகாமுககும ஈசாககுககுமயாககோபுககுமபராபரனாகியகர்ததாவே! இஸரவேலிலேதேவரீர் பராபரனெனறும நான் உமமுடைய ஊழியககாரனெனறும நான் இநதககாரியஙகளையெலலாம உமமுடையவார்ததையினபடி செயதேனெனறும இனறைககுததெரியவரபபணணும.

௩௭ கர்ததாவே! தேவரீர் பராபரனாகிய கர்ததரெனறும, தேவரீர் தஙகளிருதயததைப பினனிட மறுபடியுந திருபபினீரெனறும, இநதசசனம அறியுமபடிககு எனனைககேடடருளும எனனைக கேடடருளுமெனறான.

௩௮ அபபோதுகர்ததருடைய அககினியிறஙகி அநதச சர்வாஙகததகனபலியையும விறகுகளையுங கலலுகளையுமமணணையும்பட்சிததுவாய்ககாலிலிருநததணணீரையும நககிபபோடடது.

௩௯ சனமெலலாம இதைககணடபோது, முகஙகளகுபபுறவிழுநது, கர்ததரோ தெயவம, கர்ததரோ தெயவமெனறார்கள.

௪௰ அபபோது எலியா அவர்களுடனே, நீஙகள பாகாலின தீர்ககதரிசிகளை அவர்களிலொருவனுந தபபிப போகாதபடிககுபபிடியுஙகளெனறான. அவர்களைப பிடிததபோது, எலியா அவர்களைததாழக்கீசோன் ஆறறஙகரையிலே கொணடுபோய அஙகேயவர்களை வெடடுவிததான.

௪௧ பிற்பாடு எலியா ஆகாபபுடனே, நீர் ஏறிபபோயப போசிததுககுடியும.

னெனில மிருநத மழையின முழககம உணடாமெனறுன.

௪௨ ஆகாப் பொசிததுக குடிககிறத்ற்கு ஏறிபபோறுன. பிற்பாடு எலியா கற்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தினமேலேறித்தரையிலேவிழுநது தனமுகததைதத்தன் முழஙகால்களின நடுவே குனியபபணணி,

௪௩ தனவேலைககாரனுடனே, நீ யேறிபபோயச சமுத்திரமுகமாயபபாரெனறுன. அவன ஏறிபபோயபபார்தது ஒனறுமிலலையெனறுன. ஏழுவிசைத திருமபப்போயபபாரெனறுன

௪௪ ஏழாமவிசையிலே இவன இதோ, சமுத்திரத்திலிருநது ஒருமனுஷனுடைய உளளஙகையததனைச சினனமேகம எழுமபுகிறதெனறுன. அபபோது அவன நீ போய ஆகாபபுடனே, மழை யுமமைத தடுததிககொளளாதபடிககு இரதத்தைப பூட்டி, ஏறிபபோய இறஙகுமெனறு சொலலெனறுன.

௪௫ அததறுவாயிலே வானம மேகஙகளினுலும காற்றினுலுஙகறுததுப பெருமழையுணடாயிறறு. ஆகாப போயெனில இரதத்திலேறி யெஸரயேலுககுப போனுன.

௪௬ ஆனுற் கர்த்தருடையகை எலியாவினமேலவநததினுல அவன தன அரையைககட்டிககொணடு, யெஸரயேலுககு வருமட்டாக ஆகாபபுககுமுநதிககொணடோடினுன.

௰௯. அதிகாரம்.

எசபேலுககுத தபபி வனாநதிரத்திற்கோடிபபோன எலியாவுககுக்கட்டளையிடபபட்ட தெய்வதரிசனை.

௧ எலியாசெய்ததெலலாவறறையும அவன தீர்ககதரிசிகளையெலலாமபட்டையததாலேகொனறுபோட்ட செய்தியனைததையும ஆகாப் எசபேலுககறிவிததான.

௨ அபபோது எசபேல எலியாவணடைககு ஆளனுபபி, நான் நாளையிநநேரத்தில உனபிராணனுககு அவர்களில ஒவவொருவன பிராணனுககுச செயயபபட்டதுபோலே செயயாதேபோனுல, தேவர்கள எனககு இபபடியும அபபடியுஞ்செயயக்கடவர்களென்று சொல்லச்சொனனுள.

௩ அவன்தைககணடபோது எழுநது தனபிராணனைககாககயூதாவைசசேர்நத பேர்செபாவுககுப புறபபட்டுப போய, அஙகே தனவேலைககாரனைவைததான.

௪ அவனுெவெனிலவனாநதிரத்திலே ஒருநாளவழிபோய, ஒரு சூரைசசெடியினகீழ்வநது, உளககார்நது, தனககுமரணததைககேட்டு, இபபோது போதுங்கர்த்தாவே! எனனுததுமததைவாஙகிககொளளும. ஏனெனில எனபிதாககளைபபார்ககநான நலலவனலலவெனறுசொலலி,

௫ ஒரு சூரைசசெடியினகீழ்ப்படுததுககொணடு நிததிரைபணணினுன. அபபோது இதோ, ஒரு தூதன அவனைததட்டியவனுடனே, எழுநது, போசனமபணணெனறுன.

௬ அவன விழிததுபபார்ககிறபோது, இதோ, தணலிற் சுடபபட்ட அடையும ஒருபாத்திரந்தணணீரும அவன தலைமாட்டிலிருநதது. அபபோது அவனபொசிததுககுடிதது திருமபப் படுததுககொணடான.

௭ கர்த்தருடையதூதன திருமப இரணடாமவிசைவநது, அவனைததட்டி, எழுநதுபோசனமபணணு. ஏனெனறுல வழிபபயணம உனககு வெகுதூரமாயிருககுமெனறுன.

௮ அபபோது அவன எழுநதிருநது, பொசிததுககுடிதது, அநதபபோசனததினடலத்தினுலே இராவுபகல நாற்பதுநாள ஓரேப்பென்ற பராபரனுடையபர்வதமட்டுமநடநதான.

௯ அஙகேயவனொருகெபிககுட்பிரவேசிதது, அஙகேஇராததஙகினுன. இதோ, கர்த்தருடையவார்ததையவனுககுணடாகி அவரவனுடனே, எலியாவே! இஙகேயுனககுககவலையெனனவெனறுர்.

௰ அதறகவன, சேனைகளினபராபரனாகிய கர்த்தருககாக வெகுபததிவயிராககியமாயிருநதேன. ஏனெனறுல இஸரவேல புததிரர் உமதுஉடமபடிககையைவிட்டார்கள. உமமுடையபீடஙகளையிடிதது உமமுடைய தீர்ககதரிசிகளைபபட்டையததாலே கொனறுபோட்டார்கள. நான ஒருவனே மீர்நதிருககிறேன. எனபிராணனையும வாஙகததேடுகிறுர்களெனறுன.

௰௧ அபபோதுஅவர், நீவெளியேவநது கர்த்தருககுமுனபாகப பர்வதத்தில நிலலெனறுர். அபபோது இதோ, கர்த்தர்கடநதுபோனுர். கர்த்தருககுமுனபாகப்பர்வதஙகளைககிழிககிறதுங கன்மலைகளையுடைககிறதுமான பலததபெருஙகாறறடித்தது. ஆனுல அநதககாறறிலேகர்த்தர் இருநததிலலை. காறறிற்குப பிறகு பூமியதிர்ச்சலவநதது. அநதபபூமியதிர்ச்சலிலுஙகர்த்தரிருநததிலலை.

௰௨ பூமியதிர்ச்சிக்குப்பிறகு அக்கினிவந்தது. அக்கினியிலும் கர்த்தரிருந்ததில்லை. அக்கினிக்குப்பிறகு அமர்ந்தமெதுவான இரைச்சல்வந்தது.

௰௩ அதை எலியா கேட்டபோதோவெனில் அவன்தன் சால்வையினாலே தன்முகத்தைமூடி வெளியேவந்து கெபியின்வாசலில்நின்றான். அப்போது இதோ, எலியாவே! இங்கேயுனக்குக்கவையென்னவென்கிற சத்தம் அவனுக்குண்டாயிற்று.

௰௪ அதற்கவன், சேனைகளின் பராபரனாகிய கர்த்தருக்காகவெகுபத்திவயிராக்கியமாயிருந்தேன். ஏனெனில் இஸ்ரவேல்புத்திரர் உம்முடைய உடம்படிக்கையை விட்டார்கள். உம்முடையபீடங்களைவிடித்து உம்முடையதீர்க்கதரிசிகளைப் பட்டயத்தாலேகொன்றுபோட்டார்கள். நானொருவனே மீந்திருக்கிறேன். என்பிராணனையுமவாங்கத்தேடுகிறார்களென்றான்.

௰௫ அப்போது கர்த்தர் அவனோடேசொன்னதாவது, நீபோய் உன்வழிப்பயணத்திலே தமஸ்குவின் வனாந்திரத்திற்குத்திரும்பிக்கொண்டு, உட்பிரவேசித்து ஆசவேலைச் சூரியாவின்மேல் இராசாவாக அபிஷேகம்பண்ணி,

௰௬ பிற்பாடு நிம்சியின் குமாரனாகிய ஏகூவை இஸ்ரவேலின்மேல் இராசாவாக அபிஷேகம்பண்ணி, ஆபேல் மேகொலா ஊரானான் சாப்பாத்தின்குமாரனாகிய எலிசாவையுன் ஸ்தலத்திலே தீர்க்கதரிசியாக அபிஷேகம்பண்ணுவாயாக.

௰௭ சம்பவிப்பதேதெனில் ஆசவேலின்பட்டயத்திற்குத் தப்பினவனை ஏகூ கொன்றுபோடுவான். ஏகூவின்பட்டயத்திற்குத் தப்பினவனை எலிசா கொன்றுபோடுவான்.

௰௮ ஆனாற் பாகாலுக்கு முடங்காதிருக்கிற சகலமுழங்கால்களும் அதைமுத்திசெய்யாதிருக்கிற சகல வாய்களுமாகிய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீந்துவைத்தேனென்றார்.

௰௯ அப்படியே யவன் அவ்விடம்விட்டுப்புறப்பட்டுச் சாப்பாத்தின்குமாரனாகிய எலிசாவைக் கண்டுபிடித்தான். இவன் பன்னிரண்டேரோட்டியுழுதான். தானே அந்தப் பன்னிரண்டேரோடுங்கூடவிருந்தான். அப்போது எலியா அவனிருக்குமிடமட்டும்போய்த் தன்சால்வையையவன்மேலேபோட்டான்.

௨௰ அப்போது அவன்மாடுகளைவிட்டு எலியாவின் பிறகாலேயோடி, நான் என் தகப்பனையும் என் தாயையும்முத்திசெய்யட்டுமென? அதற்குப்பிறகு உம்மைப்பின்செல்லுவேனென்றான். அவன் இவனுடனே, போய்த்திரும்பிவா. ஏனெனில் நான் உனக்குச் செய்ததை நினைத்துக்கொள்ளென்றான்.

௨௰௧ அப்போது இவன் அவனைவிட்டுத் திரும்பிக்கொண்டு ஒருஏர்மாடுகளைப்பிடித்தடித்து, அந்தக்குவைகளுக்கடுத்த மரமுட்டுகளால் அவைகளின் இறைச்சியைச் சமைத்துச் சனத்திற்குக்கொடுத்தான். அவர்கள் சாப்பிட்டபிற்பாடு அவனெழுந்து எலியாவைப்பின்சென்று அவனுக்கூழியஞ்செய்தான்.

௨௰. அதிகாரம்.

ஆகாப் சூரியாவின் இராசாவாகிய பென்னாதாதைச்செயித்த செய்தி.

சூரியாவின் இராசாவாகிய பென்னாதாத் தன் இராணுவத்தையெல்லாங்கூட்டிக்கொண்டு ஏறிப்போய்ச்சமாரியாவை முத்திக்கைப்போட்டு அதின்மேல் யுத்தம்பண்ணினான். அவனோடேகூட முப்பத்திரண்டு இராசாக்களுங் குதிரைகளும் இரதங்களுமிருந்தது.

௨ அவன் இஸ்ரவேலின் இராசாவாகிய ஆகாபண்டைக்குத் தானாபதிகளைப்பட்டணத்திற்குள்ளனுப்பி,

௩ உன்னுடைய வெள்ளியும் உன்னுடையபொன்னும் என்னுடையது. உன்னுடைய ஸ்திரீகளும் உன்குமாரர்களிலே சமர்த்தராயிருக்கிறவர்களுமென்னுடையவர்களென்று பென்னாதாத் சொல்லுகிறானென்பதையவனுக்குச்சொல்லச்சொன்னான்.

௪ இஸ்ரவேலின் இராசாபிரத்தியுத்தரமாக, இராசாவாகிய என்னாண்டவனே! உம்முடையவார்த்தையின்படியே நானும் எனக்குண்டானயாவும் உம்முடையதுதான் என்றுசொல்லியனுப்பினான்.

௫ அந்தத் தானாபதிகள் திரும்பிவந்து சொன்னதாவது, பென்னாதாத் சொல்லுகிறதேதெனில், உன்வெள்ளியையும் உன் பொன்னையும் உன் ஸ்திரீகளையும் உன் குமாரர்களையும் நீயெனக்குக்கொடுக்கவேண்டுமென்று உனக்குச் சொல்லியனுப்பினேனே.

௬ ஆனால் நாளையிந்நேரத்தில் என்னுடைய ஊழியக்காரரை யுன்னண்டைக்கனுப்புவேன். அவர்கள் உன் வீட்டையும் உன் ஊழியக்காரரின்வீடுகளையுஞ்சோதித்து, உன் பார்வைக்குப்பிரியமான தெல்லாவற்றை

டத்தமானவைகளை கைகளில் எடுத்துக்கொண்டு போவார்களென்றென்று சொன்னார்கள்.

௭ அப்பொழுது இஸ்ரவேலின் இராசா தேசத்தின் மூப்பரையெல்லாமழைப்பித்து, இவன் பொல்லாப்புத்தேடுகிறவிதத்தைக் கவனித்துப்பாருங்களேன்? அதெ தெனறால் என் ஸ்திரிகளையும் என் குமாரர்களையும் என் வெள்ளியையும் என் பொன்னையுங்கேட்க அவன் என்னண்டைக்கு ஆளனுப்பினபோது, நான் அவனுக்குக் கொடுப்பதில்லையென்று சொன்னதில்லையென்றான்.

௮ அப்பொழுது எல்லா மூப்பரும் எல்லா சனமும் அவனுடனே, நீர் அவனுக்குச் செவிகொடுக்கவும் அவனுக்குச் சம்மதிக்கவும் வேண்டாமென்றார்கள்.

௯ ஆகையால் அவன் பெனூதாத்தின் தூதர்களுடனே, நீங்கள் இராசாவாகிய என் ஆண்டவனுக்குச் சொல்லவேண்டியதேதெனில், நீர் முதல்விசை உமது அடியானுக்குச் சொல்லியனுப்பினயாவையுஞ் செய்வேன் ஆனால் இந்தக்காரியத்தை நான் செய்யக்கூடாதென்று சொல்லுங்களென்றான். தூதர்கள் போய் இந்த மறுமொழியை அவனுக்குச் சொன்னார்கள்.

௰ அப்பொழுது பெனூதாத் அவனண்டைக்கு ஆளனுப்பி, என் அடிகளைப் பின்செல்லுகிற சனமெல்லாங் கைக்கொரு பிடி வார்ச்சமாரியாவின் தூள் போதுமானால், தேவர்கள் எனக்கு இப்படியும் அப்படியுஞ் செய்யக்கடவர்களென்று சொல்லச் சொன்னான்.

௰௧ அதற்கு இஸ்ரவேலின் இராசா பிரதியுத்தரமாக, பட்டையத்தை யரைகட்டிக்கொள்ளுகிறவன் அதையவிழ்த்துப் போடுகிறவனைப்போலப் பெருமைபாராட்டலாகாதென்று அவனுக்குச் சொல்லுங்களென்றான்.

௰௨ அவன்தானும் மற்ற இராசாக்களுங் கூடாரங்களிலே குடித்துக்கொண்டிருக்கிறபோது இந்த வார்த்தையைக் கேட்டபோதோவெனில், தன் ஊழியக்காரருடனே, சண்டைக்காயத்தமபண்ணுங்களென்றான் அப்படியே பட்டணத்தின் மேலே சண்டைக்காயத்தம்பண்ணினார்கள்.

௰௩ அப்பொழுது, இதோ, ஒரு தீர்க்கதரிசி இஸ்ரவேலின் இராசாவாகிய ஆகாபண்டையிலே சேர்ந்து அந்தப் பெரிய சனத்தையெல்லாங்கண்டாயோ இதோ, நாமே கர்த்தரென்று நீ யறியும்படிக்கு, இன்றைக்கதை யுன்கையிலொப்புக்கொடுப்பேனென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

௰௪ ஆரைக்கொண்டென்று ஆகாப் கேட்டான். அதற்கவன் மாகாணங்களுடைய துரைகளின் சேவகரைக்கொண்டென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான். யுத்தத்தை யார் துவக்கவேண்டும்? என்று அவன் கேட்டதற்கு, அவன், நீர்தானென்றான்.

௰௫ அவன் மாகாணங்களுடைய துரைகளின் சேவகரை இலக்கம்பார்க்கிறபோது அவர்கள் இருநூற்றுமுப்பத்திரண்டு பேர் அவர்களுக்குப்பிறபாடு இஸ்ரவேல் புத்திரராகிய சகலசனத்தின் இலக்கமும் ஏழாயிரம்பேரென்றுகண்டான்.

௰௬ அவர்கள் மத்தியான நேரத்திலே வெளியே புறப்பட்டார்கள். ஆனாற் பெனூதாதும் அவனுக்கொத்தாசைச்செய்கிற முப்பத்திரண்டு இராசாக்களாகிய மற்ற இராசாக்களுங் கூடாரங்களில் வெறியெடுக்கக்குடித்திருந்தார்கள்.

௰௭ மாகாணங்களுடைய துரைகளின் சேவகர் முந்தண்டாகப் புறப்படுகிறபோது, பெனூதாத் அனுப்பின மனுஷர், சமாரியாவிலிருந்து மனுஷர் புறப்படுகிறார்களென்று அவனுக்கறிவித்தார்கள்.

௰௮ அப்பொழுது அவன் அவர்கள் சமாதானத்திற்காகப் புறப்பட்டுவந்தாலு மவர்களையுயிரோடே பிடியுங்கள். அவர்கள் யுத்தத்திற்காகப் புறப்பட்டுவந்தாலு மவர்களையுயிரோடே பிடியுங்களென்றான்.

௰௯ மாகாணங்களுடைய துரைகளின் சேவகரான அவர்களும் அவர்கள் பிறகாலே வருகிற இராணுவமும் பட்டணத்திலிருந்து வெளியே வந்தபோதோவெனில்,

௨௰ அவர்கள் அவரவர் தங்களுக்கெதிர்ப்படுகிறவர்களை வெட்டினார்கள். சூரியர் முறிந்தோடிப்போனார்கள். இஸ்ரவேலர் அவர்களைத் துரத்தினார்கள். சூரியாவின் இராசாவாகிய பெனூதாத்தோவெனிற் குதிரையின்மேலேறிச்சில குதிரைக்காரரோடுங்கூடத்தப்பினான்.

௨௰௧ இஸ்ரவேலின் இராசாபுறப்பட்டு குதிரைகளையும் இரதங்களையுமுறியடித்துச் சூரியரிலமகாமடிவுண்டாகவெட்டினான்.

௨௰௨ பிறபாடு அந்தத்தீர்க்கதரிசி இஸ்ரவேலின் இராசாவண்டைக்குச் சேர்ந்து அவனுடனே சொன்னதாவது, நீர் போய்ப் பலத்துக்கொண்டு, நீர் செய்யத்தக்கதைக் கவனித்துப்பாரும். ஏனெனில் மறுவருஷத்திலே சூரியாவின் இராசாவுமக்கு விரோதமாக ஏறிவருவானென்றான்.

உங சீரியாவின் இராசாவோடே அவனுடைய ஊழியக்காரர் சொன்னதாவது அவர்களுடைய தேவர்கள் மலைகளின் தேவர்களானதினால அவர்கள் நம்மைமேற்கொண்டார்கள. நாம அவர்களோடே ஒத்ததரையிலேயுத்தம்பண்ணினால தாவிலை. அப்போது அவர்களை மேற்கொள்ளோமோ?

உச அதற்காக நீர்செய்யவேண்டியதேதெனில, அந்த இராசாக்களில அவரவரையவர்கள தலத்திலிருந்துமாற்றி அவர்களுக்குப் பதிலாகச சேர்வைக்காரரை வைத்து,

உரு நீர்மடியக்கொடுத்த இராணுவத்தைப்போலொத்த இராணுவத்தாரையும அந்தக்குதிரைகளைப்போலொத்தகுதிரைகளையும இரதங்களைப்போலொத்த இரதங்களையும இலக்கம்பார்த்துக்கொள்ளும பிற்பாடு அவர்களை மேற்கொள்ளோமோவென்று ஒத்த தரையிலே அவர்களோடு யுத்தம்பண்ணுவோமென்றார்கள. அவன இவர்களசொற்கேட்டு அப்படியே செய்தான.

உசா ஆகையால மறுவருஷத்திலே பெனாதாத்சீரியரை இலக்கம்பார்த்து, இஸ்ரவேலோடுயுத்தம்பண்ண ஆப்பேக்குக்கு ஏறிவந்தான.

உஎ இஸ்ரவேல புத்திரரும இலக்கம பார்க்கப்பட்டுத்தேவையானதைப பராமரித்துக்கொண்டு அவர்களுக்கெதிராகப்புறப்பட்டு அவர்களுக்கெதிரே இரண்டுசின்னவெள்ளாட்டுக்கிடைகளைப போலப்பாளயமிறங்கினார்கள. ஆனாற்சீரியரால தேசமநிரம்பியிருந்தது.

உஅ அப்போது பராபரனுடையமனுஷன ஒருவனசேர்ந்துவந்து, இஸ்ரவேலின இராசாவுடனே, கர்த்தர்பள்ளத்தாக்குகளின தேவனல்ல மலைகளின தேவனாயிருக்கிறவர் என்றுசீரியர்சொன்னபடியினாலேநாம இந்தப்பெரிய ஏராளத்தையெல்லாம, நாமேகர்த்தரென்று நீங்கள அறியும்படிக்கு, உன்கையிலொப்புக்கொடுத்தோமென்று கர்த்தர்சொல்லுகிறாரென்றான.

உகூ ஏழுநாள இவர்கள அவர்களுக்கெதிராகப் பாளய மிறங்கியிருந்தபோதோவெனில ஏழாமநாளிலேயுத்தங்கலந்து, இஸ்ரவேலபுத்திரர் ஒரேநாளிலேசீரியரில நூறுயிரங்காலாள்களை மடங்கடித்தார்கள.

ஙய மீதியானவர்கள ஆப்பேக்பட்டணத்திற்குள ஓடிப்போனார்கள. ஆனாலமீதியான இருபத்தேழாயிரமபேரினமேல அலங்கம இடிந்துவிழுந்தது. பெனாதாதும ஓடிப்போய்ப்பட்டணத்திற்குட்பிரவேசித்து அறைவீடு அறைவீடாகப்பதுங்கினான.

ஙக அப்போது அவன ஊழியக்காரர் அவனுடனே, இதோ, இஸ்ரவேலவீட்டு இராசாக்கள தயவுள்ள இராசாக்களென்றுகேட்டிருக்கிறோம. நாங்கள ரோட்டுகளை யெங்கள அரையிலே கட்டிக் கயிறுகளை யெங்கள தலைகளிற்சுற்றிக்கொண்டு இஸ்ரவேலின இராசாவண்டைக்கு வெளியே போவோமே. ஒருவேளையும்மை உயிரோடே வைப்பானென்றுசொல்லி,

ஙஉ ரோட்டுகளைத் தங்களரையிலேகட்டிக்கயிறுகளைத்தங்கள தலைகளிலேசுற்றிக்கொண்டு இஸ்ரவேலின இராசாவண்டைக்குவந்து என்னையுயிரோடே வையுமேயென்று உமதடியானாகிய பெனாதாத்விண்ணப்பம பண்ணுகிறானென்றார்கள. அதற்கவன, அவன இன்னம உயிரோடிருந்தானால, அவன என சகோதரனென்றான.

ஙங அந்தமனுஷர் நன்றாயக்கவனித்து அவனவாயின சொல்லையுடனே பிடித்து, உமமுடைய சகோதரனாகிய பெனாதாத் இருக்கிறானென்றார்கள. அப்போது அவன நீங்கள போய அவனையழைத்துவாருங்களென்றான. பெனாதாத் அவனண்டைக்குவெளியேவந்தபோது அவன இவனை இரதத்திலேறிவரப்பண்ணினான.

ஙச அப்போது இவன அவனுடனே, என தகப்பன உமமுடைய தகப்பனார்கையிலே பிடித்த பட்டணங்களைத திருமபக்கொடுக்கிறேன. என தகப்பன சமாரியாவிலேவைத்ததுபோலேநீதமஸ்குவிலே உமக்குத்தெருவீதிகளைவைத்துக்கொளளுமென்றதற்கு அவன இந்த உடம்படிக்கையாய நானும்மை யனுப்பிவிடுகிறேனென்று சொல்லி, அவனோடுடம்படிக்கைபண்ணி, அவனையனுப்பிவிட்டான.

ஙரு அப்போது தீர்க்கதரிசிகளின்புத்திரரிலொருவனகர்த்தருடைய வார்த்தையாய்த்தனதோழனுடனே, நீயென்னையடியேனென்றான. ஆனால அந்தமனுஷன அவனையடிக்கமனதிலலாதிருந்தான.

ஙசா அப்போது அவன இவனுடனே, நீகர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாதேபோனபடியினாலே, இதோ, நீயென்னைவிட்டுப்புறப்பட்டபின்பு உன்னைச் சிங்கம கொல்லுமென்றான. அப்படியே இவன்வனைவிட்டுப்புறப்பட்டபின் ஒருசிங்கம அவனைக்கண்டுபிடித்து அவனைக்கொன்றுபோட்டது.

௩௭ அதின்பிறகு அவன்வேறொருவனை சந்தித்து, என்னையடியென்றதற்கு அந்தமனுஷன் அவனைக்காயமுண்டாக அடித்தான்.

௩௮ அப்போது அந்தத் தீர்க்கதரிசி போய்த்தன் கண்களின்மேற் சாம்பலைப் போட்டுவேஷமாறினவனாய்வழியிலே இராசாவுக்குக்காத்திருந்தான்.

௩௯ இராசாகடந்துவருகிறபோது இவன் இராசாவைப்பார்த்துக் கூப்பிட்டுச் சொன்னதாவது, உமதடியானயுத்தத்திற் போயிருக்கிறபோது, இதோ ஒருவன் விலகி என்னிடத்தில் ஒருமனுஷனைக் கொண்டுவந்து, இந்தமனுஷனைப்பத்திரம்பண்ணு. இவன் இல்லாதேபோகவே போனால் உன்பிராணன் அவன்பிராணனுக்குப்பதிலாயிருக்கும். அல்லது ஒருதாலந்து வெள்ளியை நீநிறுத்துக்கொடுக்கவேண்டுமென்றான்.

௪௰ ஆனால் உமதடியான இங்குமங்கும் அலுவலாயிருக்கிறபோது அவனில்லாதேபோனானென்றான். இஸ்ரவேலின் இராசா அவனுடனே, நீதானேசொன்ன உன்றீர்ப்பின்படியாகுமென்றான்.

௪௧ அப்போது அவன்சீக்கிரமாயத்தன் கண்களின் மேலிருக்குஞ் சாம்பலைத்துடைத்துப் போட்டதினால் இஸ்ரவேலின் இராசா அவன் தீர்க்கதரிசிகளிலொருவனென்று அவனையறிந்தான்.

௪௨ அப்போது இவன் அவனுடனே, சம்மாரஞ்செய்வதற்கு நியமிக்கப்பட்டு உன்கையிலிருந்தமனுஷனை நீகையிலிருந்துவிட்டபடியினாலே உன் பிராணன் அவன்பிராணனுக்குப் பதிலாகவும் உன் சனம் அவன்சனத்திற்குப்பதிலாகவுமிருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

௪௩ அதினால் இஸ்ரவேலின் இராசாவிசனமுங் கோபமுமடைந்தவனாய்த்தன் வீட்டுக்குப்போகப்புறப்பட்டுச்சமாரியாவுக்கு வந்தான்.

௨௧. அதிகாரம்.

ஆகாபும் ஏசபேலும் நாபோத்தைக்கொன்றுபோடுவித்தகொடூரம்.

இவைகளுக்குப் பிறபாடு சம்பவித்ததேதெனில் இஸ்ரயேலனாகியநாபோத்துக்கு இஸ்ரயேலிலேசமாரியாவின் இராசாவாகிய ஆகாபின் அரண்மனையண்டையிலே ஒருதிராட்சத்தோட்டமிருந்தது.

௨ ஆகாப்நாபோத்துடனேபேசி, உன்னுடையதிராட்சத்தோட்டம் எனக்குக் கீரைக்கொல்லையாகும்படிக்கு அதையெனக்குக்கொடு. ஏனெனில் அது என்வீட்டிற்கடுத்ததாயிருக்கின்றது. அதைப்பார்க்கநல்லதிராட்சத் தோட்டத்தையதற்குப்பதிலாகவுனக்குக்கொடுப்பேன் அல்லது உன்பார்வைக்குச் சம்மதியாயிருந்தால் உனக்கு அதின் விலைக்கிரயமான வெள்ளியைக்கொடுப்பேனென்றான்.

௩ ஆனால்நாபோத் ஆகாபுடனே, உமக்குநான் என்பிதாக்களின் சுதந்தரத்தைக் கொடுக்குங்காரியத்திற்குக்கர்த்தரோனை விலக்கமாயக்காப்பாராகவென்றான்.

௪ அப்போது என்பிதாக்களின்சுதந்தரத்தையுமக்குக்கொடேனென்று இஸ்ரயேலனாகியநாபோத்தன்னோடேசொன்னவார்த்தைக்காக ஆகாப்சலிப்புஞ்சினமுமடைந்தவனாகித் தன்வீட்டிற்குவந்து, தன்கட்டிலின்மேலேபடுத்துத் தன்முகத்தைத்திருப்பிக்கொண்டு அப்பஞ்சாப்பிடாதேபோனான்.

௫ அப்போது அவன்பெண்சாதியாகிய ஏசபேல் அவனண்டைவந்து, நீர் அப்பஞ்சாப்பிடாதபடிக்கு உம்முடைய ஆவிசலிப்படைந்திருக்கிறதென்னவென்று அவனைக்கேட்டதற்கு,

௬ அவன் அவளுடனே, நான் இஸ்ரவேலனாகியநாபோத்தோடேபேசி அவனுடனே, உன்திராட்சத் தோட்டத்தையெனக்குவிலைக்கிரயமாயக்கொடு. அல்லவென்று உனக்கு இராசியானால் அதற்குப்பதிலாகவேறேதிராட்சத்தோட்டத்தையுனக்குக்கொடுப்பேனென்றேன். ஆனால் அவன், என்னுடைய திராட்சத் தோட்டத்தையுமக்குக் கொடேனென்றுனென்றுசொன்னானென்றான்.

௭ அப்போது அவன்பெண்சாதியாகிய ஏசபேல் அவனுடனே, நீர் இப்போது இஸ்ரவேலின்மேல் இராசரியபாரம்பண்ணுகிறவன்போலேசெய்யும். எழுந்திருந்து அப்பம்பொசித்து, மனமகிழ்ச்சியாயிரும். நானுமக்கு இஸ்ரயேலனாகிய நாபோத்தின்திராட்சத்தோட்டத்தைக் கொடுப்பேனென்றுசொல்லி,

௮ ஆகாபின் நாமத்திலே நிருபங்களையெழுதி அவன்முத்திரையை யவைகளுக்குப்போட்டு, அந்தநிருபங்களை நாபோத்திருக்கும்பட்டணத்தில் அவனோடேகுடியிருக்கிறமூப்பர்ண்டைக்கும் மேன்குலத்தார்ண்டைக்கும் அனுப்பினாள்.

௯ அந்த நிருபங்களில் அவள் எழுதினது, நீங்கள் உபவாசமென்றறிவித்து, நாபோத்தைச் சனத்தின் முன் வைத்து,

௰ பராபரனையும் இராசாவையும் தூஷணித்தாயென்று அவன் மேலே சாட்சி சொல்லுகிற பேலியாளின் பிள்ளைகளாகிய இரண்டு மனுஷரை அவனுக்கெதிராக வைத்து, அவனை வெளியே கொண்டுபோய் அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறியுங்களென்றெழுதினாள்.

௰௧ அவன் பட்டணத்திலே குடியிருக்கிற மூப்பரும் மேன்குலத்தாருமாகிய அவன் பட்டணத்து மனுஷர் யேசபேல் தங்களுக்கனுப்பின நிருபங்களிலெழுதிக் கட்டளையிட்டிருந்தபடியே செய்தார்கள்.

௰௨ அவர்கள் உபவாசமென்றறிவித்து நாபோத்தைச் சனத்தின் முன்னே வைத்தார்கள்.

௰௩ அப்போது பேலியாளின் பிள்ளைகளாகிய இரண்டு மனுஷர் வந்து அவனுக்கெதிராக உட்கார்ந்து, நாபோத் பராபரனையும் இராசாவையும் தூஷணித்தானென்று சனத்திற்கு முன்பாக அவன் மேலே சாட்சி சொன்னார்கள். அதற்குப்பிறகு அவனைப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய், அவன் சாகும்படிக்கு அவனைக் கல்லெறிந்து,

௰௪ பிறபாடு யேசபேலுக்கு, நாபோத் கல்லெறியுண்டு செத்தானென்று சொல்லியனுப்பினார்கள்.

௰௫ நாபோத் கல்லெறியுண்டு செத்ததை யேசபேல் கேட்டபோது ஆகாபுடனே நீர் எழுந்திருந்து இஸ்ரயேலனாகிய நாபோத் உமக்கு விலைக்கிரயமாய்க் கொடுக்கமாட்டேனென்ற அவன் திவிதாட்சித் தோட்டத்தைச் சுதந்தரமாக வெடுத்துக்கொள்ளும். ஏனெனில் நாபோத் உயிரோடிராமற் செத்தானென்றாள்.

௰௬ நாபோத் செத்ததை ஆகாப் கேட்டபோது அவன் இஸ்ரயேலனாகிய நாபோத்தின் திவிதாட்சித் தோட்டத்தைச் சொந்தமாயெடுத்துக்கொள்ள அதிலிறங்கிப்போகிறதற்கெழுந்திருந்தான்.

௰௭ அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்குண்டாகி யவர் சொன்னதாவது,

௰௮ நீயெழுந்து, சமாரியாவிலிருக்கிற இஸ்ரவேலின் இராசாவாகிய ஆகாபுக்கெதிர்ப்பட இறங்கிப்போ. இதோ, அவன் நாபோத்தின் திவிதாட்சித் தோட்டத்தில் அதைச் சொந்தமாயெடுத்துக்கொள்ள இறங்கிப்போனான்.

௰௯ நீ அவனுடனே, நீ கொலைசெய்ததுமெடுத்துக்கொண்டதுமில்லையோ? என்று கர்த்தர் சொல்லுகிறார். நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே நாய்கள் உன்னுடைய இரத்தத்தையும் நக்குமென்று கர்த்தர் சொல்லுகிறாரென்பாயாகவென்றார்.

௨௰ அப்போது ஆகாப் எலியாவுடனே, என் பகைஞனே! என்னைக் கண்டுபிடித்தாயோ? என்றான். அதற்கவன் சொன்னதாவது, கண்டுபிடித்தேன். ஏனென்றால் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய உம்மை விற்றுப்போட்டீர்.

௨௧ இதோ, நாம் உன்மேலே பொல்லாப்பு வரப்பண்ணி, உன் சந்ததியையெடுத்துப்போட்டு ஆகாபுக்குச் சுவரிலே நீர்விடும் ஒரு நாயாகிலும் மீராதபடிக்கு இஸ்ரவேலில் அடைக்கப்பட்டவனையும் விடுவிடப்பட்டவனையும் சங்கரித்து,

௨௨ நீ நமக்குக் கோபமுண்டாக்கி இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணினதினிமித்தம் உன்னுடைய வீட்டை நேபாத்தின் குமாரனாகிய எரோபெயாமின் வீட்டிற்கும் அகியாவின் குமாரனாகிய பாஷாவின் வீட்டிற்கும் சமானமாக்குவோமென்றார் என்று சொன்னான்.

௨௩ யேசபேலைக் குறித்தும் கர்த்தர் சொன்னது, நாய்கள் யேசபேலை இஸ்ரயேலின் மதிளருகே தின்னும்.

௨௪ ஆகாபின் சந்ததியிலே பட்டணத்திலே சாகிறவனை நாய்களும் வெளியிலே சாகிறவனை ஆகாயத்துப்பறவைகளுந் தின்னுமென்றார்.

௨௫ ஆனால் ஆகாபைப் அவன் பெண்சாதியாகிய யேசபேலெடுத்துவிட்டபடியே கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்யத் தன்னை விற்றுப்போட்ட அவனைப்போலொருவனுமில்லை.

௨௬ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்திவிட்ட எமோரியர் செய்தபடியெல்லாம் அவன் விக்கிரகங்களைப் பின்பற்றிப்போய் மகா அருவருப்பாய் நடந்துகொண்டான்.

௨௭ ஆகாப் இந்த வார்த்தைகளைக் கேட்டபோதோவெனில் அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துத் தன் சரீரத்தின் மேல் ரட்டைப் போர்த்துக்கொண்டு உபவாசம்பண்ணி, ரட்டிலே படுத்துக்கொண்டு அசந்து நடந்தான்.

௨௮ அப்போது கர்த்தருடைய வார்த்தை திஸ்பியனாகிய எலியாவுக்குண்டாகி யவர் சொன்னதாவது,

உக ஆகாப்தமக்குமுன்பாகத்தாழ்ந்தனனை நீ கண்டாயில்லையோ? அவன் தமக்குமுன்பாகத் தன்னைத் தாழ்த்தின படியினாலேநாம அவனநாட்களில அந்தப் பொல்லாப்பை வரப்பண்ணுமல அவன குமாரனநாட்களில அவன வீட்டின மேல வரப்பண்ணுவேனெமென்றார்.

உஉ. அதிகாரம்.

ஆகாப்சூரியரோடு பண்ணின யுத்தத்திலே செத்தது.

சீரியருக்குமஇஸ்ரவேலுக்குமமூனறு வருஷமாயயுத்தமில்லாதபடிக்கு அமர்ந்திருந்தார்கள.

உ மூனறுமவருஷததிலே சமபவித்தததென்னவெனறால யூதாவின இராசாவாகிய யோசபாத் இஸ்ரவேலின இராசாவண்டைக்கிறஙகிப்போயிருக்கிறபோது.

ங இஸ்ரவேலின இராசாதன ஊழியக்காரருடனே, கிலேயாத்திலிருக்கிற இராமோத்தநம்முடையதென்றறியீர்களோ? நாம அதைச்சீரியவுடைய இராசாவின கையிலேபிடிக்காமல சுமமா யிருப்பானேனெனறுசொலலி,

ச யோசபாததுடனே கிலெயாத்திலிருக்கிற இராமோத்தின்மேலயுத்தமபணண எனனுடனகூடவருகிறீரா? எனறான. யோசபாத் இஸ்ரவேலின இராசாவுடனே, உமமைப்போலே நானுமிருப்பேன. உமமுடையசனங்கள்தபபால எனனுடையசனமும உமமுடையகுதிரைகளைப்போல எனனுடைய குதிரைகளு மிருக்குமெனறான.

ரு பினனையுமயோசபாத் இஸ்ரவேலினஇராசாவுடனே, கர்த்தருடைய வார்த்தையை இனறைக்குககேட்டறியுமெனறான.

சா அப்பொழுது இஸ்ரவேலின இராசா ஏறக்குறைய நானூறுபேராகிய தீர்க்கதரிசிகளைக்கூட்டி, நான கிலெயாத்திலிருக்கிற இராமோத்தினமேல யுத்தமபணணப போகலாமோ? அதை நிறுத்துவேனோ? எனறு அவர்களைக்கேட்டதற்கு, அவாகள ஏறிப்போம. ஆணடவர் அதை இராசாவின கையிலேயொபபுககொடுப்பா ரொனறார்கள.

எ அதறகுயோசபாத் இனிக்கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவனும நாம அவனிடத்திலேகேட்டு விசாரிக்கிறதறகு, இஙகே இல்லையா? எனறுகேட்டான.

அ அப்பொழுது இஸ்ரவேலின இராசா யோசபாத்துடனே, கர்த்தரைக்கேட்கிறதறகு இம்லாவினகுமாரனாகிய மிகாயா வெனறு இனனமொருவனிருக்கிறன. ஆனாலநான அவனைப்பகைக்கிறேன. ஏனெனில அவன எனமேரில நன்மையாகவலல. தீமையாகததானே தீர்க்கதரிசனஞ சொல்லுகிறவன எனறதறகுயோசபாத், இராசாவாகிய நீர் அப்படிச்சொல்லவேண்டாமெனறான.

கூ அப்பொழுது இஸ்ரவேலின இராசா பிரதானிகளிலொருவனையழைத்து, இம்லாவின குமாரனாகிய மிகாயாவைச்சீக்கிரமாயவரவழையெனறான.

ய இஸ்ரவேலின இராசாவுமயூதாவின இராசாவாகியயோசபாததுஞ்சமாரியாவினுடைய ஒலிமுகவாசலுக்கு முனனானவிசாலத்திலே அவரவர்தனதன ஆசனத்திலே தஙகளவஸ்திரஙகளைத்தரித்துக்கொண்டவர்களாய உட்கார்ந்திருந்தார்கள. சகலதீர்க்கதரிசிகளும அவர்களுக்குமுனபாகத் தீர்க்கதரிசனஞசொனனார்கள.

யக கெனானாவினகுமாரனாகிய சிதேக்கியாதனக்கு இருமபுக்கொமபுகளையுணடாக்கி, இவைகளால நீர் சீரியரையவாகளை நிர்மூலமாக்குமட்டுமமுட்டிப்போடுவீரெனகிறதைக் கர்த்தர் சொல்லுகிறாரெனறான.

யஉ சகல தீர்க்கதரிசிகளும அப்படியேசைவாயத தீர்க்கதரிசனஞசொலலிக் கிலெயாத்திலிருக்கிற இராமோத்துக்கேறிப்போம். உமக்குவாயக்கும். கர்த்தர் அதை இராசாவினகையிலேயொப்புககொடுப்பாரொனறார்கள.

யங மிகாயாவையழைக்கப்போன ஆள் அவனுடனேபேசி, இதோ, தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைகள ஏகவாக்காய் இராசாவுக்கு நனமையா யிருக்கினறது. உமமுடையவார்த்தையும அவர்களில ஒவவொருவனவார்த்தையைப்போலிருக்குமபடிக்கு நன்மையாயச்சொலலுமெனறான.

யச மிகாயாவோவெனில், கர்த்தர் எனனோடேசொலவதையேபேசுவேனெனறு கர்த்தருடைய சீவனைக்கொண்டுசொல்லுகிறேனெனறான.

யரு அவன இராசாவணடைக்கு வந்தபோது இராசா அவனுடனே, மிகாயாவே! நாஙகளகிலெயாத்திலிருக்கிறஇராமோத்தினமேல யுத்தமபணணப்போகலாமோ? அதைநிறுத்துவோமோ? எனறான. இவன அவனுடனே, ஏறிப்போம. உமக்குவா

யசரும். கர்த்தர் அதை இராசாவின் கையிலே ஒப்புக்கொடுப்பாரென்றான்.

௧௬ இராசா அவனுடனே, நீர் கர்த்தருடைய நாமத்திலே மெய்யையல்லாமல் வேறொன்றும் என்னோடே சொல்லாதபடிக்கு நான் எத்தனைவிசை உன்னை ஆணையிட்டுக் கொள்ள வேண்டுமென்று சொன்னான்.

௧௭ அப்போது அவன், மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இஸ்ரவேலெல்லாம் பர்வதங்களிலே சிதறப்பட்டதைக் கண்டேன். அப்போது கர்த்தர், இவர்களுக்கு ஆண்டவனில்லை. அவரவர் தன்தன் வீட்டிற்குச் சமாதானத்தோடே திரும்பக்கடவர்களென்றார் என்று சொன்னான்.

௧௮ அப்போது இஸ்ரவேலின் இராசா யோசபாத்தோடே, இவன் என்பேரில் நன்மையாயல்ல, தீமையைத்தானே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனென்று நான் உம்மோடே சொல்லவில்லையோ? என்றான்.

௧௯ அப்போது அவன் சொன்னதாவது, இப்போதும் கர்த்தருடைய வார்த்தையைக் கேளும். கர்த்தர் தம்முடைய ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறதையும் பரமண்டலத்தின் சேனையெல்லாம் அவருடைய வலதுபக்கத்திலும் அவருடைய இடதுபக்கத்திலும் நிற்கிறதையுங் கண்டேன்.

௨௰ அப்போது கர்த்தர் ஆகாப் எறிப்போய்க் கிலெயாத்திலிருக்கிற ராமோத்திலே விழுமடிக்கு அவனைப் பயித்தியப்படுத்துகிறவன் யார்? என்று கேட்டதற்கு, ஒருவன் இப்படியும் ஒருவன் அப்படியும் சொன்னார்கள்.

௨௧ அப்போது ஒரு ஆவி புறப்பட்டு வந்து கர்த்தருக்கு முன்பாக நின்று நான் அவனைப் பயித்தியப்படுத்துவேனென்றது. அதற்குக் கர்த்தர் அதை எதினாலென்று கேட்டார்.

௨௨ அப்போது அது நான் புறப்பட்டு அவனுடைய எல்லாத் தீர்க்கதரிசிகளின் வாயிலும் பொய்யின் ஆவியாயிருப்பேனென்றது. அப்போது அவர் நீ அவனைப் பயித்தியப்படுத்தி அப்படி நடக்கப்பண்ணுவாய். நீ புறப்பட்டுப் போய் அந்தப்பிரகாரமாய்ச் செய்யென்றார்.

௨௩ இப்போதும் இதோ, கர்த்தர் பொய்யின் ஆவியை இந்த உம்முடைய எல்லாத் தீர்க்கதரிசிகளின் வாயிலுங் கட்டளையிட்டார். கர்த்தர் உம்முடையபேரில் தீமையாகச் சொன்னாரென்றான்.

௨௪ அப்போது கேனானாவின் குமாரனாகிய சிதேக்கியா சேர்ந்துவந்து மிகாயாவைக் கன்னத்திலடித்து உன்னோடே பேசக் கர்த்தருடைய ஆவி எந்தவழியாய் என்னைவிட்டுத் தாண்டிப்போயிற்றென்றான்.

௨௫ அதற்கு மிகாயா, இதோ, நீ ஒளித்துக்கொள்ள அறை வீடு அறைவீடாகப் பதுங்கும் அந்த நாளில் அதைப் பார்ப்பாயென்றான்.

௨௬ அப்போது இஸ்ரவேலின் இராசா சொன்னதாவது, நீ மிகாயாவைப் பிடித்து அவனைப் பட்டணத்தின் தலைவனாகிய ஆமோனண்டைக்கும் இராசாவின் குமாரனாகிய யோவாசண்டைக்குந் திரும்பக்கொண்டுபோய்,

௨௭ நீங்கள் இவனைச் சிறைச்சாலையிலே வைத்து நான் சமாதானத்தோடே வருமட்டும் அவனுக்குக் கொடுக்கத்தின் அப்பத்தையும் ஒடுக்கத்தின் தண்ணீரையும் புசிப்பிடக்கொடுங்களென்று இராசா சொன்னாரென்று சொல்லுமென்றான்.

௨௮ அப்போது மிகாயா நீர் சமாதானத்தோடே திரும்பி வருவதுண்டானால் கர்த்தர் என்னைக்கொண்டு பேசினதில்லையென்று சொல்லிச் சனங்களின் குமாரர்களே நீங்களெல்லாரும் இதைக் கேளுங்களென்றான்.

௨௯ அப்படியே இஸ்ரவேலின் இராசாவும் யூதாவின் இராசாவாகிய யோசபாத்தும் கிலெயாத்திலிருக்கிற ராமோத்துக்கு எறிப்போனார்கள்.

௩௰ இஸ்ரவேலின் இராசா யோசபாத்துடனே நான் வேஷமாறி யுத்தத்திற்குட்படுவேன். நீரோவென்றால் உம்முடைய வஸ்திரங்களைத் தரித்திருமென்று சொல்லி இஸ்ரவேலின் இராசா வேஷமாறி யுத்தத்திற்குட்பட்டான்.

௩௧ சீரியாவின் இராசா தன்னிடத்திலிருக்கிற இரதங்களின் முப்பத்திரண்டு தலைவருக்கு, நீங்கள் சிறியவரோடும் பெரியவரோடும் யுத்தம்பண்ணாமல், இஸ்ரவேலின் இராசா ஒருவனோடே யுத்தம்பண்ணுங்களென்று கற்பித்திருந்தான்.

௩௨ ஆனதுகொண்டு இரதங்களின் தலைவர் யோசபாத்தைக் கண்டவுடனே இவனே இஸ்ரவேலின் இராசாவென்று சொல்லி, யுத்தம்பண்ண அவனுக்கு நேராகச் சாய்ந்துவந்தார்கள். அப்பொழுது யோசபாத் கூக்குரலிட்டான்.

௩௩ அப்போது சமஸ்தத்தேரின் தலைவர் இவன் இஸ்ரவேலின் இராசா அல்ல

௨௮ அவனுடைய ஊழியக்காரர் அவனை இரதத்தின்மேல் எருசலேமுக்குக் கொண்டுபோய் அவனைத் தாவீதின்பட்டணத்தில் அவன் பிதாக்களிடத்திலிருக்கிற அவனுடையகல்லறையிலே அடக்கம்பண்ணினார்கள்.

௨௯ இந்த அகசியா ஆகாபுடையகுமாரனாகிய யோராம் இராச்சியபாரம்பண்ணின பதினோராம் வருஷத்தில் யூதாவின்மேல் இராசாவானான்.

௩௰ ஏகூவோவென்றால் எஸ்ரேயேலுக்கு வந்தான். அதை யேசபேல் கேட்டபோது தன் கண்களுக்கு மையிட்டுத் தன் தலையைச் சிங்காரித்துக்கொண்டு பலகணியால் எட்டிப்பார்த்து,

௩௧ ஏகூ ஒலிமுகவாசலில் வந்தபோது அவள், தன் எஜமானைக்கொன்ற சிம்ரீ சுகப்பட்டானோ? என்றாள்.

௩௨ அப்பொழுது அவன் தன் முகத்தை அந்தப்பலகணிக்கு நேரேயேறெடுத்து, என்னோடே கூடயிருக்கிறவன் ஆர்? என்றதற்கு, இரண்டுமூன்று பிரதானிகள் அவனை நோக்கிப்பார்த்தார்கள்.

௩௩ அப்பொழுது அவன் அவளைத் தாழத்தள்ளுங்களென்றான். அப்படியே அவளைத் தாழத்தள்ளினதினாலே அவளுடைய இரத்தஞ்சுவரிலுங் குதிரைகளிலுந் தெறித்தது. அவன் அவளை மிதித்தது,

௩௪ உள்ளேபோய்ப் போசித்துக்குடித்தபின்பாடு அந்தச் சபிக்கப்பட்டவளைப் பார்த்து அவளை யடக்கம்பண்ணுங்களேன்? அதேனென்றால் அவள் ஒரு இராசாவின்குமாரத்தியென்றான்.

௩௫ ஆனால் அவர்கள் அவளையடக்கம்பண்ணப்போகிறபோது அவளிலிருந்தத் தலையோட்டையுங் கால்களையும் உள்ளங்கைகளையுமேயல்லாமற்பின்னொன்றையுங் கண்டுபிடிக்காமல்,

௩௬ திரும்பவந்து அவனுக்கறிவித்தார்கள். அப்பொழுது அவன் இது கர்த்தர் திஸ்பியனாகிய எலியாவென்ற தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டுசொன்னவார்த்தை, எஸ்ரேயேலின் நிலத்திலே நாய்கள் யேசபேலின் மாம்சத்தைத் தின்னுமென்றும்,

௩௭ இன்னது யேசபேலென்று சொல்லக்கூடாதபடிக்கு யேசபேலின் பிரேதம் எஸ்ரேயேலின் நிலத்திலேவயல்வெளியின்மேலே போடும் எருவைப்போலாகுமென்றுஞ்சொன்னதோ? என்றான்.

௰. அதிகாரம்.

அப்புறம் ஏகூ செய்த ஆக்கினைகள்.

ஆகாபுக்கோவென்றால், சமாரியாவிலே எழுபது குமாரரிருந்தபடியினாலே ஏகூ சமாரியாவிலிருக்கிற எஸ்ரேயேலின் பிரபுக்களாகிய மூப்பர்ண்டைக்கும் ஆகாபுடையபிள்ளைகளை வளர்க்கிறவர்கண்டைக்கும் எழுதியனுப்பின நிருபங்களாவது,

௨ உங்களாண்டவனுடைய குமாரர் உங்களோடிருக்கிறார்கள். இரதங்களுங் குதிரைகளும் அரணான பட்டணமும் ஆயுதங்களும் உங்களுக்குண்டே.

௩ இப்போதும் இந்த நிருபம் உங்களண்டைக்கு வருகிறபோது, நீங்கள் உங்களாண்டவனுடைய குமாரரில் உத்தமனுஞ் செம்மையுமாயிருக்கிறவனைப்பார்த்து அவனை அவன் தகப்பனுடைய ஆசனத்தின்மேல்வைத்து, உங்கள் ஆண்டவனுடைய வீட்டுக்காக யுத்தம்பண்ணுங்களென்றெழுதினான்.

௪ அவர்களோவெனில் மிகுதியும் பயந்து, இதோ, இரண்டு இராசாக்கள் அவனுக்குமுன்பாக நிற்கவில்லை. நாங்கள் நிற்பதெப்படி? என்றார்கள்,

௫ ஆகையால் அரண்மனை விசாரிப்புக்காரனும் பட்டணவிசாரிப்புக்காரனும் மூப்பரும் பிள்ளைகளின் விசாரிப்புக்காரரும் ஏகூவுக்கு நாங்கள் உமதடியார் நீர் எங்களுக்குச் சொல்வதையெல்லாஞ் செய்வோம். நாங்கள் ஒருவனையும் இராசாவாக்குவதில்லை. உமது பார்வைக்குச் சமமியானதைச் செய்யுமென்று சொல்லியனுப்பினார்கள்.

௬ அப்பொழுது அவனிவர்களுக்கு இரண்டாம் நிருபத்தையெழுதி நீங்களென் பாரிசமாயிருந்து என்சத்தத்தைக்கேட்கிறதுண்டானால் உங்களாண்டவனுடைய குமாரராகிய மனுஷரின் தலைகளைவாங்கி நாளையிந்நேரத்தில் எஸ்ரேயேலுக்கு என்

ண்டையிலே வாருங்களென்றெழுதினான். இராசாவின் குமாரராகிய எழுபதுபேரும் அவர்களை வளர்க்கிற பட்டணத்தின் பெரிய மனுஷரோடிருந்தார்கள்.

௭ இந்த நிருபம் அவர்களண்டைக்கு வந்தபோது, அவர்கள் இராசாவின் குமாரரைப்பிடித்து எழுபதுபேரையும் வெட்டி அவர்கள் தலைகளைக் கூடைகளிலே வைத்து எஸ்றேயேலிலிருக்கிற அவனண்டைக்கு அனுப்பினார்கள்.

௮ அனுப்பப்பட்ட ஆள் வந்து இராசகுமாரரின் தலைகளைக் கொண்டுவந்தார்களென்று அவனுக்கு அறிவித்தபோது அவன் விடியற்காலமட்டும் அவைகளை யொலிமுவாசலில் இரண்டு குவியலாக்குவித்து வையுங்களென்றான்.

௯ மறுநாட் காலமேயோ வென்றால் அவன் புறப்பட்டு நின்று சகல சனத்தோடுஞ் சொன்னதாவது நீங்கள் நீதிமான்களல்லவோ? இதோ, நான் என் ஆண்டவனுக்கு விரோதமாக ஒப்பந்தம் பண்ணி அவனைக்கொன்றுபோட்டேன். ஆனால் இவர்களையெல்லாம் வெட்டினவனார்?

௰ ஆனதுகொண்டு கர்த்தர் ஆகாபின் வீட்டாருக்கு விரோதமாகச் சொன்ன கர்த்தருடைய வார்த்தைகளில் ஒன்றுந் தரையிலே விழுந்ததில்லையென்பதை யறிந்துகொள்ளுங்கள். ஏனெனில் கர்த்தர் தம் ஊழியக்காரனாகிய எலியாவைக்கொண்டு சொன்னதையே செய்தாரென்றான்.

௰௧ எஸ்றேயேலிலும் ஆகாபின் வீட்டாரில் மீதியானயாவரையும் அவனுக்கிருந்த எல்லாமந்திரிகளையும் அவனைச் சேர்ந்த மனுஷரையும் அவனுடைய ஆசாரியர்களையும் அவனுக்கொருவரையும் மீதியாக வைக்காதபடிக்கு, ஏகூ வெட்டிப்போட்டு,

௰௨ பிற்பாடு எழுந்து சமாரியாவுக்குப் போகப்புறப்பட்டான். வழியிலேயவன் பெத்தேக்கேதென்ற மேய்ப்பரின் ஊருக்கு வந்தபோது,

௰௩ யூதாவின் இராசாவாகிய அகசியாவின் சகோதரரை யவன் கண்டு நீங்கள் யார்? என்று கேட்டான். அவர்கள், நாங்கள் அகசியாவினுடைய சகோதரர். நாங்கள் இராசாவின் பிள்ளைகளையும் இராசாத்தியின் பிள்ளைகளையும் வினவுகிறதற்கு இறங்கிப்போகிறோமென்றார்கள்.

௰௪ அப்போது அவன், இவர்களையுயிரோடே பிடியுங்களென்றதற்கு, அவர்கள் அவர்களையுயிரோடே பிடித்து நாற்பத்திரண்டு பேர்களாகிய அவர்களைப் பெத்தேக்கேதின் துரவண்டையிலே வெட்டிப்போட்டார்கள். அவர்களில் ஒருவனையும் அவன் மீதியாக வைத்ததில்லை.

௰௫ அவன் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டபோது அவன் தனக்கெதிர்ப்பட்ட இரேகாபின் குமாரனாகிய யோனதாபைச் சந்தித்து அவனையுபசரித்து, அவனோடே, உன்னிருதயத்துக்கு என்னிருதயம் இருக்கிறதுபோலே உன்னிருதயஞ் செம்மையாயிருக்கின்றதோ? என்றான். அதற்கு யோனதாப் இருக்கின்றது என்றான். அப்போது, அவன் உன் கையையெனக்குத் தாவென்று சொல்லி, அவன் தன் கையைக்கொடுத்தபோது அவனைத் தன்னண்டை இரதத்தின்மேல் ஏறிவரச்சொல்லி,

௰௬ நீ என்னோடேகூட வந்து, கர்த்தருக்காக எனக்கிருக்கிற பத்திவைராக்கியத்தைப் பாரென்றான். அப்படியே இவனையவன் இரதத்தின்மேலேற்றினான்.

௰௭ அவன் சமாரியாவுக்கு வந்தபோது சமாரியாவில் ஆகாபுக்கு மீதியானயாவரையும் அவர்களைக் கர்த்தர் எலியாவோடே சொன்ன வார்த்தையின்படியே யழித்துத் தீருமளவும், வெட்டிப் போட்டான்.

௰௮ பிற்பாடு ஏகூ சனத்தையெல்லாங் கூட்டியவர்களோடே சொன்னதாவது, ஆகாப் பாகாலைச் சேவித்தது மட்டு. ஏகூ அவனைச் சேவிப்பது மிகுதி.

௰௯ இப்போதும் பாகாலின் சகல தீர்க்கதரிசிகளையும் அவனுடைய சகல பணிவிடைக்காரரையும் அவனுடைய சகல ஆசாரியர்களையும் என்னண்டைக்கு வரவழையுங்கள். ஒருவனுங் குறையவேண்டாம். ஏனென்றால் பாகாலுக்குப் பெரிய பலியிடுதலெனக்கிருக்கின்றது. வராதவனெல்லாம் உயிரோடிருப்பதில்லையென்றான். பாகாலின் பணிவிடைக்காரரையழிக்கும்படிக்கு ஏகூ இதைத் தந்திரத்தினாலே செய்தான்.

௨௰ பாகாலுக்குப் பண்டிகையின் ஆசரிப்பைக் கூறுங்களென்று ஏகூ சொன்னான். அப்படியே கூறினார்கள்.

௨௰௧ ஏகூ இஸ்ரவேல் தேசமெங்கும் ஆளைச்சொல்லியனுப்பினபடியினாலே பாகாலின் பணிவிடைக்காரரெல்லாரும் வந்தார்கள். வராதவனொருவனுமில்லை. அவர்கள் பாகாலின் வீட்டிற்குட் பிரவேசித்ததினாலே பாகாலின்வீடு தாழ்சாரியும் நிரம்பிற்று.

௨௨ அப்பொழுது அவன் வஸ்திரங்களின் வீட்டுவிசாரிப்புக்காரனுடனே, பாகாலின் பணிவிடைக்காரருக்கெல்லாம் வஸ்திரங்களையெடுத்துக்கொண்டுவா வென்றதற்கு, அவர்களுக்கு வஸ்திரங்களையெடுத்துக்கொண்டுவந்தான்.

௨௩ பிற்பாடு ஏகூ ரேகாபின் குமாரனாகிய யோனதாபோடுங் கூடப் பாகாலின் வீட்டிற்குட்பிரவேசித்துப் பாகாலின் பணிவிடைக்காரருடனே, பாகாலின் ஊழியக்காரரேயல்லாமற் கர்த்தரின் ஊழியக்காரரில் ஒருவருமிங்கே யுங்களோடிராதபடிக்கு ஆராய்ந்து பாருங்களென்றான்.

௨௪ அவர்கள் பலிகளையுஞ் சர்வாங்கத்தகனங்களையுஞ் செலுத்த உட்பிரவேசித்த பிற்பாடு ஏகூ வெளியிலே எண்பது பேரைத் தனக்காயத்தமாக வைத்து, நான் உங்கள் கையிலொப்புவிக்கிற மனுஷரில் ஒருவனையெவன் தப்பவிடுகிறானோ அவனுடைய சீவன் இவன் சீவனுக்கீடாயிருக்குமென்றான்.

௨௫ அவர்கள் சர்வாங்கத்தகனபலியைச் செலுத்தித்தீர்ந்தபோது ஏகூ சேவகருக்குஞ் சேர்வைக்காரருக்கும், உள்ளேபோய், அவர்களைவெட்டிப்போடுங்கள்; ஒருவரும் வெளியேபுறப்படவேண்டாமென்றான். அப்படியே பட்டயக்கருக்காற் சேவகருஞ் சேர்வைக்காரரும் அவர்களைவெட்டியெறிந்துபோட்டுப் பாகால் வீட்டுப்பட்டணமட்டுக்கும்போய்,

௨௬ பாகால்வீட்டின் சிலைகளை வெளியேயெடுத்துவந்து, அதைக்கொளுத்திப்போட்டு,

௨௭ பாகாலின்சிலையைத் தகர்த்துப் பாகாலின் வீட்டையிடித்து, அதையிந்நாள்வரைக்கு மிருக்கிறதுபோல மலசலாதி யிடங்களாக்கினார்கள்.

௨௮ இப்படியே ஏகூ பாகாலை இஸ்ரவேலிவிராதபடிக்கு அழித்துப்போட்டான்.

௨௯ ஆனாலும் பேத்தேலிலுந் தாணிலும் வைத்த பொன்னான கன்றுக்குட்டிகளால் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய எரோபெயாமின் பாவங்களை ஏகூ விட்டுப்பின்வாங்கினதில்லை.

௩௰ கர்த்தர் ஏகூவுடனே, நம்முடைய பார்வைக்குச் செம்மையானதை நீ நன்றாய்ச்செய்து, நமது இருதயத்திலிருந்தபடியெல்லாம் ஆகாபின்வீட்டிற்குச் செய்தபடியினாலே உன்குமாரர் இஸ்ரவேலுடைய இராசாசனத்தின்மேல் நாலுதலைமுறையாகவுமுட்கார்ந்திருப்பார்களென்றார்.

௩௧ ஆனால் ஏகூ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின் நியாயப்பிரமாணத்தில் நடக்குதலைத் தன் முழு இருதயத்தாலுங் கைக்கொண்டதில்லை. இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின எரோபெயாமின் பாவங்களையவன் விட்டுவிலகாதே போனான்.

௩௨ அந்நாட்களிலே கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தைக் குறைக்கப்போகப்பண்ணினார். அதேதென்றால் ஆசகேல் அவர்களை இஸ்ரவேலின் எல்லைகளிலெல்லாம் இடறடித்து முறியடித்து,

௩௩ யோர்தானைத் துவக்கிச் சூரியவுதயத்தில் அர்நோனதிக்குச்சமீபமான ஆரோவேர்முதற்கொண்டிருக்கிற கிலெயாத்திலும் பாசானிலுமுள்ள காதியர் ரூபேனியர் மனாசே மனுஷருடைய தேசமாகிய முழுக்கிலெயாத்தையுமுறியடித்தான்.

௩௪ ஏகூவின் மற்றவர்த்தமானங்களும் அவன் செய்ததனைத்தும் அவனுடைய எல்லா வல்லமையும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லவோ எழுதியிருக்கின்றது.

௩௫ ஏகூ தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவனைச் சமாரியாவில் அடக்கம்பண்ணினார்கள். அவன் ஸ்தலத்தில் அவன் குமாரனாகிய யோவாகாஸ் இராசாவானான்.

௩௬ ஏகூ சமாரியாவிலே இஸ்ரவேலின்மேல் இராசரியபாரம்பண்ணின நாட்கள் இருபத்தெட்டுவருஷமானது.

௰௧. அதிகாரம்.

யோவாஸ் யூதாவின்மேல் இராசாவானது.

அகசியாவின் தாயாகிய அத்தாலியாள் தன் குமாரன் செத்துப்போனதைக்கண்டபோது எழும்பி, இராசவம்சமனைத்தாரையெல்லாஞ் சங்காரம்பண்ணினாள்.

௨ ஆனாலும் யோராமென்ற இராசாவின் குமாரத்தியும் அகசியாவின் சகோதரியுமாகிய யோசேபாள் கொன்றுபோடப்படுகிற இராசகுமாரரின் நடுவிலிருந்து அகசியாவின் ஆண்பிள்ளையாகிய யோவாசைக் களவாயெடுத்தாள். அவன் கொல்லப்படாதபடியாய் அவனையும் அவன் தாதியையும் அத்தாலியாளுக்கு மறைவாயிருக்கிற சயனவீட்டிலொளித்தார்கள்.

௩ இவளோடேகூட அவன் ஆறுவருஷ மட்டும் கர்த்தருடைய வீட்டிலே மறைக்கப்பட்டிருந்தான். அத்தாலியாளோ தேசத்தின்மேல் இராசரிகம்பண்ணினாள்.

௪ ஆனால் ஏழாம் வருஷத்திலே யோய்தா நூற்றுச்சேர்வைக்காரரையும் தலைவரையும் சேவகரையும் அழைத்தனுப்பி அவர்களைத் தன்னண்டைக்குக் கர்த்தருடைய வீட்டிலே வரச்சொல்லி, அவர்களோடே உடன்படிக்கைபண்ணி, அவர்களைக் கர்த்தருடைய வீட்டிலே ஆணையிடுவித்துக்கொண்டு, அவர்களுக்கு இராசாவின் குமாரனைக் காண்பித்து,

௫ அவர்களுக்குக் கற்பித்ததாவது, நீங்கள் செய்யவேண்டிய காரியமென்னவென்றால், உங்களில் முறைப்படி ஓய்வுநாளில் வருகிறவர்களாகிய மூன்றத்தொரு பங்கு இராசாவின் வீட்டைக் காவல் காப்பார்கள்.

௬ மூன்றத்தொருபங்கு சூர் என்னும் வாசலிலும் மூன்றத்தொருபங்கு சேவகருடைய காவலின் பிறகாலேயிருக்கிற வாசலிலுமிருந்து, வீட்டின் காவலைப் பத்திரமாய்க் காப்பவர்கள்.

௭ இப்படியே உங்களில் ஓய்வுநாளில் முறைவிட்டுப்போகிற இரண்டு பங்கானவர்களெல்லாரும் இராசாவண்டையிலே கர்த்தருடைய வீட்டின் காவற்காப்பவர்கள்.

௮ நீங்கள் அவரவர் தங்கள் ஆயுதங்களைக் கையிலே பிடித்தவர்களாய் இராசாவைச் சுற்றிலும் வரிசையாய் நின்றுகொண்டிருக்கவேண்டும்; வரிசைகளுக்குட்புகுகிறவன் கொலையுண்கப்படக்கடவன். இராசா புறப்படுகிறபோதும் உட்பிரவேசிக்கிறபோதும் நீங்கள் அவரோடிருங்கள் என்றான்.

௯ ஆசாரியனாகிய யோய்தா கற்பித்தபடியெல்லாம் நூற்றுக்குச் சேர்வைக்காரர் செய்து, அவரவர் அவ்வாரத்தில் முறையிருக்கிறவர்களும் முறையிராதவர்களுமாகிய தங்கள் மனுஷரைக் கூட்டிக்கொண்டு, ஆசாரியனாகிய யோய்தாவண்டைக்கு வந்தார்கள்.

௰ ஆசாரியன் தாவீது இராசாவுக்கிருந்த கர்த்தரின் வீட்டிலுள்ள ஈட்டிகளையும் கேடயங்களையும் நூற்றுக்குச் சேர்வைக்காரருக்குக் கொடுத்தான்.

௰௧ சேவகர் அவரவர் தங்கள் ஆயுதங்களைப் பிடித்தவர்களாய் வீட்டின் வலதுபக்கந்துவக்கி அதின் இடதுபக்கமட்டும் பலிபீடத்திற்கெதிராகவும் வீட்டிற்கெதிராகவும் இராசாவைச் சுற்றிலும் நின்றார்கள்.

௰௨ அப்போது அவன் இராசாவின் குமாரனைப் புறப்படப்பண்ணிக் கிரீடத்தை அவன்மேல் வைத்துச் சாட்சியின் ஆகமத்தை அவனுக்குக் கொடுத்தான். இப்படி அவனை இராசாவாக்கி, அபிஷேகம்பண்ணிக் கைகொட்டி, இராசா வாழ்கவென்றார்கள்.

அத்தாலியாளைக் கொன்றுபோட்டது.

௰௩ ஓடிவருகிற சனத்தின் சத்தத்தை அத்தாலியாள் கேட்டபோதோவென்றால், அவள் கர்த்தருடைய வீட்டிற்குச் சனத்தண்டையில் வந்து,

௰௪ இதோ, இராசா முறைமையின்படியே தூணண்டையிலே நிற்கிறதையும் இராசாவண்டையில் நிற்கிற பிரபுக்களையும் எக்காளமூதுகிறவர்களையும் தேசத்துச் சனமெல்லாரும் சந்தோஷப்பட்டு எக்காளங்களை ஊதுகிறதையுங் காண்கையில், அத்தாலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கலகம் கலகமென்று கூப்பிட்டாள்.

௰௫ ஆனால் ஆசாரியனாகிய யோய்தா இராணுவத்தின் தலைவராகிய நூற்றுக்குச் சேர்வைக்காரருக்குக் கற்பனைதந்து அவர்களுடனே, அவளை வரிசைகளுக்குப்புறம்பே கொண்டுபோங்கள். அவளைப் பின்செல்லுகிறவன் பட்டயத்தாலே சாகக்கடவனென்றான். ஏனென்றால் கர்த்தருடைய வீட்டிலே அவள் கொல்லப்படவொண்ணாதென்று ஆசாரியன் சொல்லியிருந்தான்.

௰௬ அவர்கள் அவளுக்கிடமுண்டாக்கினபோது, அவள் குதிரைகள் இராசாவின் வீட்டிற்குட்பிரவேசிக்கிற வழியிலே வந்தபின் அங்கே கொன்றுபோடப்பட்டாள்.

௰௭ அப்போது கர்த்தருடைய சனமாயிருக்கும்படிக்கு யோய்தா கர்த்தருக்கும் இராசாவுக்குஞ் சனத்திற்கும் மிற்பாடு இராசாவுக்குஞ் சனத்திற்கும் உடன்படிக்கைபண்ணினான்.

௰௮ பிற்பாடு தேசத்தின் சனமெல்லாம் பாகாலின் வீட்டிலே போய் அதையிடித்து அதின் பலிபீடங்களையும் அதின் சுரூபங்களையும் நன்றாயுடைத்துப் பாகாலின் பூசாரியாகிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு முன்பாகக் கொன்றுபோட்டார்கள். ஆசாரியனோவென்றால் கர்த்தருடைய வீட்டை விசாரிக்கும் உத்தியோகங்களைத் திட்டப்படுத்தி,

௰௯ நூற்றுக்குச் சேர்வைக்காரரையும் தலைவரையுஞ் சேவகரையும் தேசத்தின்

சனமனைத்தையுங் கூட்டி, இராசாவைக் கர்த்தருடைய வீட்டிலிருந்திறக்கப்பண்ணி, அவனைச்சேவகரின் வாசல் வழியாய் இராச அரண்மனைக்கழைத்துக்கொண்டுபோனார்கள் அங்கேயவனிராசாக்களுடைய ஆசனத்தின்மேலுட்கார்ந்தான்.

௨௰ தேசத்துச்சனமெல்லாமகிழ்ந்து பட்டணம் அமரிக்கைப்பட்டது. அத்தாலியாளையோவென்றால் இராசாவின் வீட்டண்டையிற் பட்டயத்தாற் கொன்றுபோட்டார்கள்.

௨௧ யோவாசு இராசாவாகிறபோது ஏழுவயதாயிருந்தான்.

௰௨. அதிகாரம்.

யூதாவின் இராசாவாகிய யோவாசின் நடபடிகள்.

ஏகூவின் ஏழாம் வருஷத்தில் யோவாசு இராசாவாகி, எருசலேமிலே நாற்பது வருஷம் இராசரிகம்பண்ணினான். பெர்சேபா ஊராளாகிய அவனுடைய தாயின்பேர் சிபியாள்.

௨ ஆசாரியனாகிய யோய்தா யோவாசைப் போதகம்பண்ணின நாளெல்லாம் அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச்செய்தான்.

௩ மேடைகளைமாத்திரம் அகற்றாதே போனார்கள். சனம் இன்னம் மேடைகள் மேலே பலியிட்டுத் தூபங்காட்டுகிறதாயிருந்தது.

௪ யோவாசு ஆசாரியரோடே சொன்னதாவது, பரிசுத்தம்பண்ணப்பட்ட காரியங்களாலே கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவரப்படுமெல்லாத் திரவியத்தையும் இலக்கத்திற்குட்படுகிறவர்களின் திரவியத்தையும் மதிக்கப்பட்ட ஆத்துமாக்களின் திரவியத்தையுங் கர்த்தருடைய வீட்டிற்குக்கொண்டுவர அவரவர் தன்மனதிலே நியமித்திருக்கும் எல்லாத் திரவியத்தையும்,

௫ ஆசாரியர்கள் அவரவர் தங்களுக்கு அறிமுகமானவர்கள் கையில் வாங்கிக்கொண்டு வீட்டில் எங்கெங்கே பழுது காணுகின்றதோ, அங்கேயெல்லாம் வீட்டைப் பழுதுபார்க்கக்கடவர்களென்றான்.

௬ ஆனால் இராசாவாகிய யோவாசின் இருபத்துமூன்றாம் வருஷமட்டும் ஆசாரியர்கள் வீட்டைப் பழுதுபாராதேபோனபடியினாலே,

௭ இராசாவாகிய யோவாசு ஆசாரியனாகிய யோய்தாவையும் மற்ற ஆசாரியர்களையும் அழைப்பித்து அவர்களுடனே நீங்கள் வீட்டைப் பழுதுபாராதேபோனதென்ன? இப்போதும் நீங்கள் உங்களுக்கறிமுகமானவர் கையிலே திரவியத்தை வாங்கிக்கொள்ளாமல் அதை வீட்டைப் பழுதுபார்க்கிறதற்காகக் கொடுங்களென்றான்.

௮ அப்பொழுது ஆசாரியர்கள் சனத்தின் கையிலே தாங்கள் திரவியத்தை வாங்கிக்கொள்ளாமலும் வீட்டைப் பழுதுபாராமலுமிருக்கிறதற்குச் சம்மதித்தார்கள்.

௯ ஆசாரியனாகிய யோய்தாவோவென்னில், ஒரு பெட்டியை வாங்கி அதின் மூடியிலே ஒரு துவாரமிட்டு அதைப் பலிபீடத்தண்டையிலே கர்த்தருடைய வீட்டிற்குச் சனங்கள் உட்பிரவேசிக்கும் வலதுபக்கத்தில் வைத்தான். அதிலே வாசற்படியைக் காக்கிற ஆசாரியர்கள் கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவரப்பட்ட திரவியத்தையெல்லாம் போட்டார்கள்.

௰ பெட்டியிலே அநேகந்திரவியமுண்டென்று அவர்கள் காணும்போதோவென்னில், இராசாவின் சம்பிரதியும் பிரதான ஆசாரியனும் ஏறிவந்து, கர்த்தருடைய வீட்டிலே கண்டுபிடித்த திரவியத்தை முடிப்புக்கட்டியெண்ணி,

௰௧ எண்ணின திரவியத்தைக் கர்த்தருடைய வீட்டின் விசாரிப்புக்காரராகிய வேலைக்காரர் கையிலே கொடுப்பார்கள். இவர்களோ கர்த்தருடைய வீட்டைப் பழுதுபார்க்கிற தச்சருக்குஞ் சிற்பாசாரிகளுக்கும்,

௰௨ கொல்லத்துக்காரருக்குங் கற்றச்சருக்குங் கர்த்தருடைய வீட்டைப் பழுதுபார்க்கத் தேவையான மரங்களையும் வெட்டின கல்லுகளையுங் கொள்ளுகிறதற்கும் வீட்டைப் பழுதுபார்க்கிறதற்குச் செலவாம் எல்லாச்செலவுகளுக்குங் கொடுப்பார்கள்.

௰௩ ஆனால் கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவரப்பட்ட திரவியத்தினாலே வெள்ளிக்கிண்ணிகளுங் கத்தரிகளுங் கலங்களும் எக்காளங்களும் பொன்னும் வெள்ளியுமான எந்த முட்டுகளும் பண்ணப்படாமல்,

௰௪ கர்த்தருடைய வீட்டைப் பழுது பார்க்கும்படிக்கு வேலைசெய்கிறவர்களுக்குத்தான் அதைக்கொடுத்தார்கள்.

௰௫ வேலைசெய்கிறவர்களுக்குக் கொடுக்கும்படிக்குத் திரவியத்தை வரப்பற்றிக்கொண்ட மனுஷர் கையிலே கணக்குக் கேளாதிருந்தார்கள். ஏனென்னில் இவர்கள் உண்மையாய் அதை நடப்பித்தார்கள்.

௰௬ குற்றம்போக்கும் பலிகளின் திரவியமும் பாவம்போக்கும் பலிகளின் திரவியமுமோவென்றால், கர்த்தருடைய வீட்டிற்குக்கொண்டுவரப்பட்டதில்லை. அது ஆசாரியருடையது.

௰௭ அதற்குப்பிற்பாடு சீரியாவின் இராசாவாகிய அசகேல் எழும்பி, காத்தின்மேல் யுத்தம்பண்ணி, அதைப்பிடித்தான். அதின்பிறகு எருசலேமுக்கு விரோதமாயேறிப்போக ஆசகேல் தன் முகத்தைத்திருப்பினான்.

௰௮ அப்போது யூதாவின் இராசாவாகிய யோவாசு தன் பிதாக்களாகிய யோசாபாத்தும் யோராமும் அகசியாவுமென்னும் யூதாவின் இராசாக்கள் பரிசுத்தமபண்ணி வைத்தவெல்லாவற்றையும் தான் பரிசுத்தம்பண்ணி வைத்ததையும் கர்த்தருடைய வீட்டிலும் இராசாவின் வீட்டிலுமுள்ள பொக்கிஷங்களில் அகப்பட்ட சகல பொன்னையுமெடுத்துச் சீரியாவின் இராசாவாகிய அசகேலுக்கனுப்பினான். அப்போது அவன் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப் போனான்.

௰௯ யோவாசின் மற்றவர்த்தமானங்களும் அவன் செய்ததெல்லாமும் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௰ அவன் ஊழியக்காரர் எழும்பி ஒப்பந்தம்பண்ணிக்கொண்டு, சில்லாவுக்கிறங்கிப்போகிற வழியிலிருக்கிற மில்லோவீட்டிலே யோவாசைக்கொன்றுபோட்டார்கள்.

௨௧ சிமேயாதின் குமாரன் யோசகாரும் சோமேரின் குமாரன் யோசபாத்துமென்ற அவனுடைய ஊழியக்காரர் அவனைக்கொன்றவர்கள். செத்துப்போன அவனைத் தாவீதின்பட்டணத்தில் அவன் பிதாக்களிடத்திலே யடக்கம்பண்ணினார்கள். அவன் குமாரனாகிய அமத்சியா அவன் ஸ்தலத்திலே இராசாவானான்.

௰௩. அதிகாரம்.

யோவாகாசு யோவாசு என்ற இஸ்ரவேலுடைய இராசாக்களின் நடபடிகள்.

அகசியாவென்ற யூதாவுடைய இராசாவின் குமாரனாகிய யோவாசுடைய இருபத்துமூன்றாம் வருஷத்திற்கு யேகூவின் குமாரனாகிய யோவாகாசு இஸ்ரவேலின்மேலே சமாரியாவிலே பதினேழுவருஷமாய் இராச்சியபாரம்பண்ணி,

௨ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச்செய்து, இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமின் பாவங்களைப் பின்பற்றி நடந்தான். அவைகளைவிட்டு அவன் விலகினதில்லை.

௩ ஆகையாற் கர்த்தருக்கு இஸ்ரவேலின்மேலே கோபமூண்டு அவர்களைச் சீரியாவின் இராசாவாகிய அசகேலின் கையிலும் அசகேலின் குமாரனாகிய பெனாதாத்தின் கையிலும் அந்த எல்லா நாட்களிலும் ஒப்புக்கொடுத்தார்.

௪ ஆனால் யோவாகாசு கர்த்தருடைய சமுகத்தை நோக்கி வருந்தினான். ஆகையாற் கர்த்தர் அவனைக்கேட்டார். ஏனெனிற் சீரியாவின் இராசா இஸ்ரவேலை ஒடுக்கினதினாலே அவர்கள் நெருக்கப்படுகிறதைப் பார்த்தார்.

௫ கர்த்தர் இஸ்ரவேலுக்கு ஒரு இரட்சகனைக் கொடுத்ததினாலே அவர்கள் சீரியருடைய கையின்கீழிருந்து நீங்கலானார்கள். ஆனதுகொண்டு இஸ்ரவேல் புத்திரர் முன்போலத் தங்கள் கூடாரங்களிலே குடியிருந்தார்கள்.

௬ ஆகிலும் இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின எரொபெயாமின் வீட்டாரின் பாவங்களை யவர்கள் விட்டுவிலகாமல் அதிலே நடந்தார்கள். சமாரியாவிலிருந்த தோப்பும் நிலையாயிருந்தது போயிற்று.

௭ யோவாகாசுக்குச் சீரியாவின் இராசா ஐம்பது குதிரைக்காரரையும் பத்து இரதங்களையும் பதினாயிரங்காலாட்களையுமே யல்லாமல் வேறொன்றும் மீதியாக வைக்கவில்லை. ஏனெனில் அவன் அவர்களை யழித்துப் போரடிக்குந் தூள்போலாக்கியிருந்தான்.

௮ யோவாகாசின் மற்றவர்த்தமானங்களும் அவன் செய்ததெல்லாமும் அவனுடைய வல்லமையும் இஸ்ரவேலுடைய இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௯ யோவாகாசு தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவனைச் சமாரியாவிலே யடக்கம்பண்ணினார்கள். அவன் குமாரனாகிய யோவாசு அவன் ஸ்தலத்திலே இராசாவானான்.

௰ யூதாவின் இராசாவாகிய யோவாசுடைய முப்பத்தேழாம் வருஷத்திலே யோவாகாசின் குமாரனாகிய யோவாசு இஸ்ரவேலின்மேலே சமாரியாவிலே பதினாறுவருஷமாய் இராச்சியபாரம்பண்ணி

௰௧ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமின் பாவங்களைவிலக்காமல் அவைகளிலெல்லாம் நடந்தான்.

௰௨ யோவாசின் மற்றவர்த்தமானங்களும் அவன் செய்ததினைத்தும், அவன் யூதாவின் இராசாவாகிய அமத்சியாவோடு யுத்தம்பண்ணின அவன் வல்லமையும் இஸ்ரவேலுடைய இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௰௩ யோவாசு தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் எரொபெயாம் அவன் ஆசனத்திலுட்கார்ந்தான். யோவாசோவெனிற் சமாரியாவில் இஸ்ரவேலின் இராசாக்களிடத்திலே யடக்கம்பண்ணப்பட்டான்.

௰௪ அவன் நாட்களில் எலிசா தான் மரணமடையப்போகிற வியாதியோடே கிடந்தான். அப்போது இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாசு அவனண்டைக்கிறங்கிப்போய் அவன்மேல் விழுந்தழுது, என் தகப்பனே! என் தகப்பனே! இஸ்ரவேலுக்கு இரதங்களும் குதிரைக்காருமாயிருந்தவனே! என்றான்.

௰௫ எலிசா அவனுடனே, வில்லையும் அம்புகளையும் பிடியுமென்றான். அப்படியே வில்லையும் அம்பையும்பிடித்துக்கொண்டான்.

௰௬ அப்போது அவன் இஸ்ரவேலின் இராசாவுடனே, உம்முடையகையை வில்லின்மேல் வையுமென்றான். அவன் தன்கையை வைத்தபோது, எலிசா தன்கைகளை இராசாவுடைய கைகளின்மேல்வைத்து,

௰௭ பிற்பாடு, கிழக்கேயிருக்கிற பலகணியைத் திறவுமென்றான். அவன் அதைத் திறந்தபோது எலிசா, எய்யுமென்றான். இவன் எய்தபோது அவன், அது கர்த்தருடைய இரட்சிப்பின் அம்பும் சீரியருக்கு விரோதமான இரட்சிப்பின் அம்புமானது. நீர் ஆப்பெக்கிலே சீரியரைத் தீர முறியடிப்பீரென்று சொல்லி,

௰௮ அம்புகளைப் பிடியுமென்றான். அவைகளைப்பிடித்தான். அப்போது அவன் இஸ்ரவேலின் இராசாவுடனே, தரையிலே யடியுமென்றான். அவன் மூன்றுதரமடித்து நின்றான்.

௰௯ அப்போது பராபரனுடைய மனுஷன் அவன்மேலே கடுங்கோபமாகி, நீர் ஐந்தாறுவிசை யடித்தீரானால், அப்போ சீரியரைத் தீர முறியடிப்பீர். இப்போது சீரியரை மூன்றுவிசை முறியடிப்பீரென்றான்.

௨௰ எலிசா மரணமடைந்தபின் அவனை யடக்கம்பண்ணினார்கள். மறுவருஷத்திலே மோவாபியரின் தண்டுகள் தேசத்திலே வந்தது.

௨௧ அப்போது சம்பவித்ததேதென்றால், அவர்கள் ஒரு மனுஷனை யடக்கம்பண்ணப்போகையில் இதோ, அந்தத் தண்டைக்கண்டு, அந்த மனுஷனை எலிசாவின் கல்லறையிற் போட்டார்கள். அந்த மனுஷன் அதிலே விழுந்து, எலிசாவின் எலும்புகளின் மேலே பட்டபோதோவெனில், அவன் உயிரடைந்து தன்காலகளை யூன்றி யெழுந்திருந்தான்.

௨௨ யோவாகாசின் நாட்களிலெல்லாம் சீரியாவின் இராசாவாகிய ஆசகேல் இஸ்ரவேலை யிறுகப்பிடித்திருந்தான்.

௨௩ ஆனாற் கர்த்தர் அவர்களுக்கிரங்கி, தாம் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபென்றவர்களோடிருந்த உடம்படிக்கையினிமித்தமாக அவர்களை யழிக்கச் சித்தமாயிராமலும் அவர்களைத் தம்முடைய முகத்தைவிட்டுத் தள்ளாமலும், அவர்கள்மேல் மனதுருகி யவர்கள்வசமாயத் திரும்பினார்.

௨௪ சீரியாவின் இராசாவாகிய ஆசகேல் செத்துப்போய், அவன் குமாரனாகிய பெனாதாத் அவன் ஸ்தலத்தில் இராசாவானபிறபாடு,

௨௫ யோவாகாசின் குமாரனாகிய யோவாசு ஆசகேலை யுத்தம்பண்ணித் தன் தகப்பனாகிய யோவாகாசின்கையிலே பிடித்திருந்த பட்டணங்களைத் திரும்ப அவன் குமாரனாகிய பெனாதாதின்கையிலே பிடித்துக்கொண்டான். மூன்றுவிசை யோவாசு அவனை முறியடித்து இஸ்ரவேலின் பட்டணங்களைத் திரும்பக் கட்டிக்கொண்டான்.

௰௪. அதிகாரம்.

யூதாவின் இராசாவாகிய அமத்சியாவின் நடபடிகள்.

இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாகாசின் குமாரன் யோவாசுடைய இரண்டாம் வருஷத்திலே யூதாவின் இராசாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியா இராசாவானான்.

௨ அவன் இராசாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே இருபத்தொன்பது வருஷமாய் இராசச்

பாரிபண்ணினான். எருசலேம் பட்டணத்தாளான அவன் தாயின்பேர் யோவாதாள்.

௩ அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். ஆனால் தன் தகப்பனாகிய தாவீதைப்போலல்ல. தன் தகப்பனாகிய யோவாசு செய்தபடியெல்லாம் செய்தான்.

௪ மேடைகள்மாத்திரம் அகற்றப்படவில்லை. சனம் இன்னம் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டிக்கொண்டிருந்தது.

௫ இராச்சியபாரம் அவன் கையிலே திடப்பட்டபோது, அவனுடைய தகப்பனாகிய இராசாவைக் கொன்றுபோட்ட தன் ஊழியக்காரரைக் கொன்றுபோட்டான்.

௬ ஆனாற் பிதாக்கள், பிள்ளைகளினிமித்தங் கொலையுண்கப்படாமலும், பிள்ளைகள், பிதாக்களினிமித்தங் கொலையுண்கப்படாமலும், அவனவன் தன்தன் பாவத்தினிமித்தங் கொலையுண்பானாக வென்று மோசேயின் நியாயப்பிரமாணப் புஸ்தகத்திலெழுதியிருக்கிறபடி கர்த்தர் கற்பித்தபிரகாரமாகக் கொலைசெய்தவர்களின் பிள்ளைகளை அவன் கொல்லாதிருந்தான்.

௭ அவன் உப்புப்பள்ளத்தாக்கிலே ஏதோமியரிற் பதினாயிரம்பேரை முறியடித்துச் சேலாவை யுத்தத்தாற் பிடித்து, அதற்கு இந்நாள்வரைக்குமிருக்கிற யொக்தெயேலென்ற பேரைத் தரித்தான்.

௮ அப்போது அமத்சியா ஏகூவின் குமாரனாகிய யோவாகாசின் குமாரன் யோவாசென்ற இஸ்ரவேலின் இராசாவண்டைக்குத் தூதுகளையனுப்பி, நம்முடைய சாமார்த்தியத்தைப் பார்ப்போம் வாவென்று சொல்லச்சொன்னான்.

௯ ஆனால் இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாசு யூதாவின் இராசாவாகிய அமத்சியாவுக்குச் சொல்லியனுப்பினதாவது, லீபனோனிலிருக்கிற முட்செடி லீபனோனிலிருக்கிற கேதுருமரத்திற்கு உன் குமாரத்தியை என் குமாரனுக்குப் பெண்சாதியாகக் கொடுவென்று சொல்லச்சொல்லிற்று. ஆனால் லீபனோனிலிருக்கிற காட்டுமிருகங்கள் முட்செடியின்மேலோடி யதை மிதித்தது.

௰ நீ ஏதோமியரை முறியடிக்கவே யடித்ததினால் உன்னிருதயம் உன்னை மேட்டிமையாக்கிறது. நீ பெருமைபாராட்டி உன்வீட்டிலேயிரு. நீயும் உன்னோடே கூட யூதாவும் விழும்படிக்குப் பொல்லாப்பை நீ தேடிக்கொள்ளுவானேனென்று சொல்லியனுப்பினான்.

௰௧ ஆனால் அமத்சியா செவிகொடாதே போனான். ஆகையால் இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாசு எறிவந்தான். யூதாவிலிருக்கிற பெத்சேமேசிலே அவனும் யூதாவின் இராசா அமத்சியாவுந் தங்கள் சாமார்த்தியத்தைப் பார்க்கிறபோதே

௰௨ யூதா இஸ்ரவேலுக்கு முன்பாக முறிந்து, அவரவர் தங்கள் கூடாரங்களுக்கு ஓடிப்போனார்கள்.

௰௩ அகசியாவின் குமாரனாகிய யோவாசின் குமாரன் அமத்சியாவென்ற யூதாவின் இராசாவை இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாசு பெத்சேமேசிலே பிடித்து எருசலேமுக்கு வந்து எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீமவாசலிலேதுவக்கிக் கோடிவாசல்மட்டும் நானூறுமுழநீளம் இடித்துப்போட்டு,

௰௪ கர்த்தருடையவீட்டிலும் இராசாவுடையவீட்டுப்பொக்கிஷங்களிலும் அகப்பட்ட சகலபொன்னையும் வெள்ளியையும் சகலமுட்டுகளையும் கரி இருப்பவர்களையும் பிடித்துக்கொண்டுபோயச் சமாரியாவுக்குத் திரும்பினான்.

௰௫ யோவாசுசெய்த மற்றவர்த்தமானங்களும் அவனுடைய வல்லமையும் அவன் யூதாவின் இராசாவாகிய அமத்சியாவோடே யுத்தம்பண்ணின செய்தியும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௰௬ யோவாசு தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் சமாரியாவில் இஸ்ரவேலின் இராசாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய எரோபெயாம் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௰௭ இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாகாசின் குமாரன் யோவாசு மரணமடைந்தபின் யூதாவின் இராசாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியா பதினைந்துவருஷம் உயிரோடிருந்தான்.

௰௮ அமத்சியாவின் மற்றவர்த்தமானங்கள் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௰௯ எருசலேமிலே அவனுக்கு விரோதமாகச் சதிபண்ணினார்கள். அப்போது லாகீசுக்கோடிப்போனான். ஆனால் அவர்கள் அவனைப் பிறகாலே லாகீசுக்கு மனுஷரையனுப்பி அங்கே அவனைக் கொன்றுபோட்டு,

௨௰ குதிரைகள்மேல் அவனையெடுத்துக்கொண்டுபோனார்கள். அவன் எருசலேமிலிருக்கிற தாவீதின்பட்டணத்திலே தன்பிதாக்களண்டையிலே யடக்கம்பண்ணப்பட்டான்.

௨௧ யூதசனமெல்லாம் பதினாறுவயதுள்ள அசரியாவை யழைத்துவந்து அவனை யவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தலத்தில் இராசாவாக்கினார்கள்.

௨௨ இராசா தன்பிதாக்களோடே நித்திரையடைந்தபிறபாடு இவன் ஏலாத்தை கட்டியதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக்கொண்டான்.

இஸ்ரவேலின் இராசாவாகிய இரண்டாம் எரோபெயாமின் நடபடிகள்.

௨௩ யூதாவின் இராசாவாகிய யோவாசின் குமாரன் அமத்சியாவின் பதினைந்தாம் வருஷத்திலே இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாசின் குமாரன் எரோபெயாம் சமாரியாவில் நாற்பத்தொருவருஷமாய் அரசாண்டு,

௨௪ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச்செய்தான். இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனான எரோபெயாமின் சகலபாவங்களையும் அவன் விட்டுவிலகினதில்லை.

௨௫ காத்தேப்பேர் ஊராகிய அமித்தாயென்ற தீர்க்கதரிசியின் குமாரனான யோனாவென்ற தம்முடைய ஊழியக்காரனைக்கொண்டு இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லியிருந்த வார்த்தையின்படியே அவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமனான பூமியின் கடல்மட்டுமுள்ள இஸ்ரவேலின் எல்லைகளைத் திரும்பச்சேர்த்துக்கொண்டான்.

௨௬ ஏனெனில் இஸ்ரவேலின் சிறுமைத்தனம் மெத்தக்கசடமையென்றும் அடைக்கப்பட்டவனுமில்லை. விடுதலையானவனுமில்லை. இஸ்ரவேலுக்கொத்தாசைசெய்கிறவனுமில்லையென்றுங் கர்த்தர் பார்த்தார்.

௨௭ இஸ்ரவேலின்பேரை வானத்தின் கீழிருந்து கொல்லிப்போடுமென்று கர்த்தர் சொல்லாதிருந்து யோவாசின் குமாரனாகிய எரோபெயாமின்கையால் அவர்களை யிரட்சித்தார்.

௨௮ எரோபெயாமின் மற்றவர்த்தமானங்களும் அவன்செய்ததினைத்தும் அவனுடைய யுத்தம்பண்ணி யூதாவுக்கிருந்த தமஸ்குவையும் ஆமாத்தையும் இஸ்ரவேலுக்காகத் திரும்பச் சேர்த்துக்கொண்ட அவனுடைய வல்லமையும் இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்தி லல்லோ எழுதியிருக்கின்றது.

௨௯ எரோபெயாம் இஸ்ரவேலின் இராசாக்களாகிய தன்பிதாக்களோடேநித்திரையடைந்தபின் அவன் குமாரனாகிய சகரியா அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௰௫. அதிகாரம்.

யூதாவின் இராசாவாகிய அசரியாவின் நடபடிகள்.

இஸ்ரவேலின் இராசாவாகிய எரோபெயாமின் இருபத்தேழாம் வருஷத்திலே யூதாவின் இராசாவாகிய அமத்சியாவின் குமாரன் அசரியா இராசாவானான்.

௨ அவன் இராசாவாகிறபோது பதினாறுவயதாயிருந்து ஐம்பத்திரண்டுவருஷமாய் எருசலேமிலே அரசாண்டான். எருசலேம் பட்டணத்தாளான அவன் தாயின்பேர் எகொலியாள்.

௩ அவன் தன்தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாங் கர்த்தரின்பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

௪ மேடைகள்மாத்திரம் அகற்றப்படவில்லை. சனம் இன்னம் மேடைகளின்மேல் பலியிட்டுத் தூபங்காட்டிவந்தது.

௫ கர்த்தர் இந்த இராசாவைத் தண்டித்ததினாலே அவன் தன் மரணநாள்மட்டுங் குஷ்டரோகியாயிருந்து தனித்த வீட்டிலே வாசம்பண்ணினான். இராசாவின் குமாரனாகிய யோதாமோவெனில் அரமனை விசாரிப்புக்காரனாயிருந்து தேசத்தின் சனத்தை நியாயம்விசாரித்தான்.

௬ அசரியாவின் மற்றவர்த்தமானங்களும் அவன்செய்ததினைத்தும் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௭ அசரியா தன்பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவனைத் தாவீதின் பட்டணத்திலே அவன் பிதாக்களண்டையிலே யடக்கம்பண்ணினார்கள். அவன் குமாரனாகிய யோதாம் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

சகரியா, சல்லூம், மெனாகேம், பெக்காகியா, பெக்காவென்ற இஸ்ரவேல் இராசாக்களின் நடபடிகள்.

௮ யூதாவின் இராசாவாகிய அசரியாவின் முப்பத்தெட்டாம் வருஷத்திலே எரோபெயாமின் குமாரனாகிய சகரியா இ

ஸ்ரவேலின்மேலே சமாரியாவிலே ஆறு மாதமாய இராசரியபாரம்பண்ணி,

௯ தன்பிதாக்கள்செய்ததுபோலே கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பான தைச்செய்தான். இஸ்ரவேலைப் பாவஞ் செய்யப்பண்ணின நேபாத்தின்குமாரனாகிய எரோபெயாமின்பாவங்களை யவன் விட்டுவிலகினதில்லை.

௰ யாபேசின் குமாரனாகிய சல்லூம் அவனுக்கு விரோதமாகப் பந்துகட்டுப்பண்ணி, சனத்தின்முன்பாக அவனை வெட்டிக்கொன்றுபோட்டு அவனஸ்தலத்தில இராசாவானான்.

௰௧ சகரியாவின் மற்றவர்த்தமானங்கள் இதோ, இஸ்ரவேல இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௰௨ உன்குமாரர் நாலாந்தலைமுறைமட்டும் இஸ்ரவேலுடைய ஆசனத்தின்மேல் இருக்கார்ந்திருப்பார்களென்று கர்த்தர் யேகூவோடேசொன்ன வார்த்தையிதுதான். அப்படியேயாயிற்று.

௰௩ யூதாவின் இராசாவாகிய உசியாவின் முப்பத்தொன்பதாம் வருஷத்தில யாபேசின்குமாரனாகிய சல்லூம் இராசாவாகிச் சமாரியாவி லொருமாதம் அரசாண்டான்.

௰௪ அதேதெனிற் காதியின் குமாரனாகிய மெனாகேம் திர்சாவிலிருந்து சமாரியாவுக்கேறிவந்து, யாபேசின்குமாரனாகிய சல்லூமைச் சமாரியாவிலே வெட்டிக்கொன்றுபோட்டு அவன ஸ்தலத்தில இராசாவானான்.

௰௫ சல்லூமின் மற்ற வர்த்தமானங்களும் அவனுடைய ஒப்பந்தமும் இதோ, இஸ்ரவேல இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௰௬ அப்போது மெனாகேம் திப்சா பட்டணத்தையும் அதிலிருக்கிறதனைத்தையும், திர்சாவைத் துவக்கிப்போகிற அதின் எல்லைகளையும் அவர்கள்தனக்குத் திறக்கவில்லையென்று இடறடித்து, அவர்களை வெட்டி, அவர்களுடைய கர்ப்பவதிகளையெல்லாம் பீறினான்.

௰௭ யூதாவின் இராசாவாகிய அசரியாவின் முப்பத்தொன்பதாம் வருஷந்துவக்கிக் காதியின் குமாரனாகிய மெனாகேம் இஸ்ரவேல்மேலே சமாரியாவிலே பத்துவருஷமாய இராசரியபாரம்பண்ணி, அவன்தன் நாட்களிலெல்லாங் கர்த்தரின்பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

௰௮ இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய எரோபெயாமின் பாவங்களை விட்டு விலகாதிருந்தான்.

௰௯ அசூரின் இராசாவாகிய பூல், தேசத்துக்கு விரோதமாய்வந்தான். அப்போது பூலின்கைகள் தனனோடிருக்கிறதற்கும் இராசரியபாரந்தன்கையில் ஸ்திரப்படுகிறதற்கும், மெனாகேம் அவனுக்கு ஆயிரந் தாலந்து வெள்ளியைக் கொடுத்தான்.

௨௰ இந்தத்திரவியத்தை அசூரின் இராசாவுக்குக்கொடுக்க, மெனாகேம் இஸ்ரவேலிற் பலத்திருக்கிற அனைவரையிலும், ஒவ்வொருவனரையில ஐம்பது வெள்ளிச்சேக்கலாகத் தண்டினான். அப்படியே அசூரின் இராசா அங்கேதேசத்திலே நிற்காமல, திரும்பப்போனான்.

௨௧ மெனாகேமின் மற்றவர்த்தமானங்களும் அவன்செய்ததனைத்தும் இஸ்ரவேல இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௨ மெனாகேம் தனபிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவன் குமாரனாகிய பெக்காகியா அவனஸ்தலத்தில இராசாவானான்.

௨௩ யூதாவின் இராசாவாகிய அசரியாவின் ஐம்பதாம்வருஷந்துவக்கி மெனாகேமின் குமாரனாகிய பெக்காகியா இஸ்ரவேலின்மேலே சமாரியாவில இரண்டுவருஷமாய இராசரியபாரம்பண்ணி,

௨௪ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச்செய்தான். அவன் இஸ்ரவேலைப்பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின்குமாரனாகிய எரோபெயாமின் பாவங்களை விட்டுவிலகினதில்லை.

௨௫ ஆனால ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவென்ற அவனுடைய சேர்வைக்காரன அவனுக்குவிரோதமாய்ப் பந்துக்கட்டுப்பண்ணிக் கீலெயாத் புத்திரரில ஐம்பதுபேரைக் கூட்டிக்கொண்டு, அவனையும் அர்கோபையும் ஆரியேயையும் இராசாவின் வீடாகிய அரண்மனையிலே சமாரியாவில வெட்டிக் கொன்றுபோட்டு, அவனஸ்தலத்தில இராசாவானான்.

௨௬ பெக்காகியாவின் மற்றவர்த்தமானங்களும் அவன்செய்த தனைத்தும் இதோ, இஸ்ரவேல இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௭ யூதாவின் இராசாவாகிய அசரியாவின் ஐம்பத்திரண்டாம் வருஷந் துவக்கி

ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா இஸ்ரவேலின்மேல் சமாரியாவில் இருபது வருஷமாய் இராச்சியபாரம்பண்ணி,

௨௮ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமின் பாவங்களை யவன் விட்டுவிலகினதில்லை.

௨௯ இஸ்ரவேலின் இராசாவாகிய பெக்காவின் நாட்களில் அசூரின் இராசாவாகிய திகிலாத்பிலேசேர் வந்து, ஈயோனையும் பெத்மாக்கா என்கிற ஆபேலையும் யனோவாகையுங் கேதேசையும் ஆத்சோரையுங் கிலெயாத்தையுங் கலிலேயாவாகிய நப்தலி தேசமனைத்தையும் பிடித்துக் குடிகளை அசூரியாவுக்குக் கொண்டுபோனான்.

௩௰ ஆனால் ஏலாவின் குமாரனாகிய ஓசேயா ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவுக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணி, அவனை உசீயாவின் குமாரனாகிய யோத்தாமின் இருபதாம் வருஷத்தில் வெட்டிக் கொன்றுபோட்டு, அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௩௧ பெக்காவின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்த யாவும் இதோ, இஸ்ரவேல் இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

யூதாவின் இராசாவாகிய யோத்தாமின் நடபடி.

௩௨ இஸ்ரவேலின் இராசாவாகிய ரெமலியாவின் குமாரன் பெக்காவின் இரண்டாம் வருஷத்தில் யூதாவின் இராசாவாகிய உசீயாவின் குமாரனாகிய யோத்தாம் இராசாவானான்.

௩௩ அவன் இராசாவாகிறபோது, இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே பதினாறுவருஷம் அரசாண்டான். சாதோக்கின் குமாரத்தியாகிய அவன் தாயின் பேர் எருஷாள்.

௩௪ அவன் கர்த்தரின்பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். தன் தகப்பனாகிய உசீயா செய்தபடியெல்லாஞ் செய்தான்.

௩௫ மேடைகள் மாத்திரம் அகற்றப்படவில்லை. சனம் இன்னம் மேடைகளின் மேலே பலியிட்டுத் தூபங்காட்டுகிறதாயிருந்தது. இவன் கர்த்தருடைய வீட்டின் உயர்ந்த வாசலைக் கட்டினான்.

௩௬ யோத்தாமின் மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்த யாவும் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௩௭ அந்நாட்களிலே கர்த்தர் சீரியாவின் இராசாவாகிய ரேத்சீனையும் ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவையும் யூதாவில் அனுப்பத்துவக்கினார்.

௩௮ யோத்தாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவன் தன் தகப்பனாகிய தாவீதின் பட்டணத்திலே தன் பிதாக்களண்டையில் அடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய ஆகாஸ் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௰௯. அதிகாரம்.

யூதாவுடைய இராசாவாகிய ஆகாஸின் நடபடிகள்.

ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவின் பதினேழாம் வருஷத்தில் யூதாவின் இராசாவாகிய யோத்தாமின் குமாரன் ஆகாஸ் இராசாவானான்.

௨ ஆகாஸ் இராசாவாகிறபோது இருபது வயதாயிருந்து, எருசலேமிலே பதினாறுவருஷம் அரசாண்டான். ஆனால் அவன் தன் தகப்பனாகிய தாவீதைப்போலத் தன் பிதாவாகிய கர்த்தரின்பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல்,

௩ இஸ்ரவேல் இராசாக்களின் வழியிலே நடந்து, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின சாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரனை முதலாய் அக்கினியை மிதிக்கப்பண்ணினான்.

௪ மேடைகளிலும் மேடுகளின்மேலும் பச்சையான சகலமரத்தின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டுவான்.

௫ அப்போது சீரியாவின் இராசாவாகிய ரேத்சீனும் இஸ்ரவேலின் இராசாவாகிய ரெமலியாவின் குமாரன் பெக்காவும் எருசலேமின்மேல் யுத்தம்பண்ண வந்து, ஆகாசை முற்றிக்கைபோட்டார்கள். ஆனால் அதைப்பிடிக்க மாட்டாமற்போனார்கள்.

௬ அக்காலத்திலே சீரியாவின் இராசாவாகிய ரேத்சீன் ஏலாத்தைத் திரும்பச் சீரியாவோடே சேர்த்துக்கொண்டு, யூதரை ஏலாத்திலிருந்து துரத்தினான். சீரியர் ஏலாத்துக்கு வந்து, இந்நாள்வரைக்கும் அவ்விடத்திலே குடியாயிருந்தார்கள்.

௭ ஆகாசோவென்றால் அசூரின் இராசாவாகிய திகிலாத்பிலேசேரண்டைக்குத் தூதாளுப்பிகளையனுப்பி, நான் உமதடியானும் உம்முடைய குமாரனுமாயிருக்

கிறேன். நீர் எழும்பிவந்து, எனக்கு விரோதமாய் எழும்பின சீரியாவுடைய இராசாவின் கைக்கும் இஸ்ரவேல் இராசாவின் கைக்கும் என்னை நீங்கலாக்கிவிடுமென்று சொல்லச்சொல்லி,

௮ கர்த்தருடைய வீட்டிலும் இராசாவின் வீட்டுப்பொக்கிஷங்களிலும் அகப்பட்ட வெள்ளியையும் பொன்னையும் எடுத்து, அசூரின் இராசாவுக்குக் காணிக்கையாக அனுப்பினான்.

௯ அசூரின் இராசா அவனுக்குச்செவிகொடுத்துத் தமஸ்குவுக்கு ஏறிப்போய், அதைப்பிடித்து, அதின் குடிகளைக் கீர்ப்பட்டணத்திற்குச் சிறைப்பிடித்துப்போய் ரேத்சீனைக் கொன்றுபோட்டான்.

௰ அப்பொழுது இராசாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலிருக்கிற அசூரின் இராசாவாகிய திகிலாத்பிலேசேருக்கு எதிர்கொண்டுபோய்த் தமஸ்குவிலிருக்கிற பலிபீடத்தைக் கண்டான். அப்பொழுது இராசாவாகிய ஆகாஸ் அந்தப்பலிபீடத்தின் சாயலையும் அதினுடைய சகலவேலைக்கொத்த அதின் மாதிரியையும் ஆசாரியனாகிய உரியாவுக்கனுப்பினான்.

௰௧ அப்பொழுது இராசாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலிருந்து வருகிறதற்குள் ஆசாரியனாகிய உரியா அப்படிக்கொத்த பலிபீடத்தைக்கட்டி, இராசாவாகிய ஆகாஸ் தமஸ்குவிலிருந்து அனுப்பின கட்டளையின்படியெல்லாம் செய்தான்,

௰௨ இராசா தமஸ்குவிலிருந்து வந்தபோது அவன் அந்தப்பலிபீடத்தைப்பார்த்து அந்தப்பலிபீடத்தண்டை சேர்ந்து அதின்மேலே பலியிட்டு,

௰௩ தன்னுடைய சர்வாங்கதகனபலியையுந் தன்காணிக்கையையுங் கொளுத்தித்தன் ஊற்றுதலையூற்றித் தனக்கிருந்த சமாதானபலிகளின் இரத்தத்தையும் அந்தப்பலிபீடத்தின்மேலே தெளித்தான்.

௰௪ கர்த்தரின் சந்நிதிக்கு முன்பாக இருந்த வெண்கலப்பலிபீடத்தையோவென்றால் அவன் தன்னுடைய பலிபீடத்திற்குங் கர்த்தரின் வீட்டுக்கும் நடுவே வீட்டின் முகப்பிலிருந்து எடுத்து அதைத் தன்னுடைய பலிபீடத்திற்கு வடபுறமாய் வைத்தான்.

௰௫ இராசாவாகிய ஆகாஸ் ஆசாரியனாகிய உரியாவுக்குக் கற்பித்ததாவது, இந்தப்பெரிய பலிபீடத்தின்மேல் நீ விடியற்காலத்துச் சர்வாங்கதகனபலியையும் அந்திக்காணிக்கையையும், இராசாவின் சர்வாங்கதகனபலியையும் அவருடைய காணிக்கையையும், தேசத்தினுடைய சகலசனத்தின் சர்வாங்கதகனத்தையும் அவர்கள் காணிக்கையையும் அவர்கள் ஊற்றுதலையுங் கொளுத்திப் பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனங்களின் சகல இரத்தத்தையும் பலிகளின் சகல இரத்தத்தையுந் தெளிப்பாயாக. ஆனாலும் வெண்கலப்பலிபீடமோவென்றால் நான் கேள்விகேட்கிறதற்கு எனக்காகுமென்றான்.

௰௬ இராசாவாகிய ஆகாஸ் கற்பித்தபடியெல்லாம் ஆசாரியனாகிய உரியா செய்தான்.

௰௭ பின்னும் இராசாவாகிய ஆகாஸ் ஆதாரங்களின் சவுக்கைகளை யறுத்துப்போட்டு அவைகளின்மேலிருந்த கொப்பரைகளை எடுத்துக் கடல்தொட்டியைக் கீழேயிருக்கிற வெண்கல எருதுகளின்மேலிருந்து இறக்கி அதைக் கல்லுப்பாவின தளவரிசையின்மேல் வைத்து,

௰௮ வீட்டிலே கட்டியிருந்த ஓய்வுநாளின் தாழ்வாரத்தையும் இராசா உட்பிரவேசிக்கிற புறநடையையும் அசூருடைய இராசாவினிமித்தமாகக் கர்த்தருடையவீட்டை விட்டு அப்புறப்படுத்தினான்.

௰௯ ஆகாஸ் செய்த மற்றக்காரியங்கள் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௰ ஆகாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவன் தாவீதின் பட்டணத்திலே தன் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய எசேக்கியா அவன் ஸ்தலத்திலே இராசாவானான்.

௰௭. அதிகாரம்.

இஸ்ரவேலின் பத்துக்கோத்திரங்கள் அசூரியரின் சிறையிருப்பிலே கொண்டுபோகப்பட்டது.

இயூதாவின் இராசாவாகிய ஆகாஸினுடைய பன்னிரண்டாம் வருஷத்தில் ஏலாவின் குமாரனாகிய ஓசேயா இஸ்ரவேலின் மேல் சமாரியாவிலே ஒன்பது வருஷம் இராசரிகம்பண்ணி,

௨ கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச்செய்தான். ஆனால் தனக்கு முன்னிருந்த இஸ்ரவேலின் இராசாக்களைப்போலல்ல.

௩ அவனுக்கு விரோதமாக அசூரின் இராசாவாகிய சல்மனாசார் எறிவந்தான். அப்பொழுது ஓசேயா அவனைச்சேவிக்கிற

வருகி அவனுககுக காணிககையைச செலுததினன.

௪ ஆனால ஒசேயா எகிப்துவின இராசாவாகிய சோவண்டைககுத தானாபதிகளையனுபபினதுந தனககுவருஷந்தோறுஞசெயததுபோலக காணிககையையனுபபாதேபோனதுமானதுரோகததை அசூரின இராசா ஒசேயாவினிடததிலேககணடுபிடிதது அவனைமுததிககைபோடடுபபிடிததுச சிறைசசாலையிலே கடடிவைததான.

௫ அதேதெனறால அசூரின இராசா தேசததினமேலெலலாம ஏறிச்சமாரியாவுககுமவநது, அதை மூனறு வருஷமாய முததிநகைபோடடான.

௬ ஒசேயாவின ஒனபதாமவருஷததில அசூரின இராசா சமாரியாவைபபிடிதது இஸ்ரவேலை அசூரியாவுககுசசிறைபபிடிததுபபோய, அவர்களைக கோசான நதியோரமான ஆலாகிலும ஆபோரிலுமமேதியரினபடடணஙகளிலுங குடியேறறுவிததான.

௭ அதேதெனறால எகிப்துவின இராசாவாகிய பார்வோனுடையகையின கீழிருநதத தஙகளை எகிப்துதேசததிலிருநதேறபபணணின தஙகளபராபரனாகிய கர்ததருககுவிரோதமாக இஸ்ரவேல புததிரர் பாவஞ்செயது, வேறே தேவர்களுககுபபயநதுநடநது,

௮ கர்ததர் இஸ்ரவேல புததிரருககுமுனபாகத துரததினசாதிகளின வழிபபாடுகளிலும இஸ்ரவேல இராசாககளபணணின வழிபபாடுகளிலும நடநதுகொணடிருநதார்கள.

௯ செமமையலலாத காரியஙகளுககு இஸ்ரவேலபுததிரர் தஙகளபராபரனாகிய கர்ததருககு விரோதமாகப போககுச சொலலிககொணடு, காமஙகாககிற கோபுரஙகளைததுவககி அரணான படடணஙகளமடடுமுளள தஙகளெலலா வூர்களிலுந தஙகளுககு மேடைகளைககடடி,

௰ உயர்நதசகலமேடடினமேலும பசசையானசகலமரததினகீழுந தஙகளுககுச சிலைகளையும விககிரகத தோபபுகளையும நிறுததி,

௰௧ கர்ததர் தஙகளைவிடடுககுடிவிலககின சாதிகளைபபோலே அஙகேசகலமேடைகளிலுந தூபஙகாடடிக் கர்ததருககுககோபமுணடாககப பொலலாத காரியஙகளைசசெயது,

௰௨ இபபடிச்செயயாதேயுஙகளெனறு கர்ததர் தஙகளைவிலககசசொனன நரகலானதேவர்களைசசேவிததுக கொணடிருநதார்கள.

௰௩ நீஙகள உஙகளபொலலாதவழிகளைவிடடுததிருமபி நாமுஙகளபிதாககளுககுக கறபிததததும நமமுடைய வூழியககாரராகிய தீர்ககதரிசிகளைககொணடு உஙகளுககனுபபினதுமான நியாயபபிரமாணததினபடியெலலாம நமமுடையகறபனைகளையும நமமுடையகடடளைகளையுங கைககொளளுஙகளெனறு கர்ததர் எலலாத் தீர்ககதரிசிகளையும எலலாஞானதிஷடிக காரரையுஙகொணடு இஸ்ரவேலுககும யூதாவுககுந திடசசாட்சியாயெசசரிததுககொணடிருநதாலும,

௰௪ அவர்களகேள்விகொடாமல தஙகளபராபரனாகிய கர்ததர்பேரிலே விசுவாசியாதேபோன கடினககழுததான் தஙகள பிதாககளைபபோலே தஙகளககழுததைக ககடினபபடுததி,

௰௫ அவருடைய கடடளைகளையும அவர் தஙகள பிதாககளோடேபணணின அவருடைய உடமபடிககையையும அவர் தஙகளுககுத திடசசாட்சியாயக காணபிதத அவருடையசாட்சிகளையும வெறுததுபபோடடு மாயையைபபினபறறி மாயைககாரராகி அவர்களைசசுறறிலுமிருககிறவர்களைபபோல அவர்கள செயயவேணடாமெனறு கர்ததர் அவர்களுககுக கறபிததிருககிறாரோ. அநதசசாதிகளைததான அவர்களபினபறறி,

௰௬ தஙகள பராபரனாகிய கர்ததரின கறபனைகளையெலலாம விடடுவிடடு இரணடுகனறுககுடடிகளாகிய வார்பபிதத சுருபஙகளைத தஙகளுககுணடாககி விககிரகததோபபுகளை நாடடிவானததின சேனையையெலலாம பணிநதுகொணடு பாகாலைசசேவிததார்கள.

௰௭ அவர்கள தஙகளகுமாரரையுந தஙகளகுமாரததிகளையும அககினி மிதிககபபணணி, நிமிததஙகளைபபார்ததுசசகுனஙகளை நமபிக்கர்ததருககுக கோபமுணடாகக அவர் பார்வைககுப பொலலாபபானதைச செயகிறதற்குத தஙகளைவிறறுபபோடடார்கள.

௰௮ ஆகையாற் கர்ததர் இஸ்ரவேலினமேல மிகவுங்கோபமடைநது அவர்களைததமமுடைய முகததைவிடடகறறினார். யூதாகோததிரமாததிரமே மீதியாயிறறு.

௰௯ யூதாவுந தஙகளபராபரனாகிய கர்ததரின கறபனைகளைக கைககொளளாமல இஸ்ரவேல இடடமபணணின வழிபபாடுகளில நடநதார்கள.

௨௰ ஆகையாற் கர்த்தர் இஸ்ரவேலி லிருந்தாரை யெல்லாம் புறக்கணித்து, அவர்களைத் தமது முகத்தைவிட்டுத் தள்ளுமட்டாகவொடுக்கி, அவர்களைப் பறிகாரர்கையிலே ஒப்புக்கொடுத்தார்.

௨௧ ஏனெனில் இஸ்ரவேல் தாவீதுவீட்டாரைவிட்டுப் பிரிந்து நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமை இராசாவாக்கினார்; அப்போது எரொபெயாம் இஸ்ரவேலைக் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கவும் பெரியபாவத்தைச் செய்யவும் பண்ணினான்.

௨௨ அப்படியே இஸ்ரவேல் புத்திரர் எரொபெயாஞ்செய்த எல்லாப் பாவங்களிலும் நடந்துகொண்டு,

௨௩ கர்த்தர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய எல்லா ஊழியக்காரரைக்கொண்டு சொல்லியிருந்தபடி தமது முகத்தைவிட்டகற்றுமட்டாக அவைகளை விட்டுவிலகாதிருந்தார்கள். இப்படியே இஸ்ரவேலிந்நாளவரைக்குந் தங்கள் சீமையிலேயிருந்து அசூரியாவுக்குக் கொண்டுபோகப்பட்டது.

அந்நியர்கள் இஸ்ரவேல்தேசத்திலே குடியேறினது.

௨௪ அசூரின் இராசா பாபேலிலுங் கூத்தாவிலும் ஆவாவிலும் ஆமாத்திலுஞ் செப்பார்வாயிமிலுமிருந்து மனுஷரை வரப்பண்ணி, அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்குப் பதிலாகச் சமாரியாவின் பட்டணங்களிலே குடியேற்றினான்; அவர்கள் சமாரியாவைச் சொந்தமாய்க் கட்டிக்கொண்டு அதின் பட்டணங்களிலே குடியிருந்தார்கள்.

௨௫ கர்த்தருக்குப் பயப்படாத அவர்கள் அங்கே குடியிருக்கத் துவக்கினபோதோவெனில், கர்த்தர் அவர்களுக்குள்ளே சிங்கங்களை யனுப்பினார்; அவைகள் அவர்களில் சிலரைக் கொன்றுபோட்டது.

௨௬ அப்போது அசூரின் இராசாவுக்கு, நீர் இங்கேயிருந்து அனுப்பிச் சமாரியாவின் பட்டணங்களிலே குடியேறுவித்த சாதிகள் அந்தத் தேசத்தினுடைய தேவனின் நியாயத்தை யறியாதபடியினாலே அவர்களுக்குள்ளே சிங்கங்களை யனுப்பினார்; இதோ, அந்தத் தேசத்தினுடைய தேவனின் நியாயத்தையவர்களறியாதபடியினாலே அவைகள் அவர்களைக் கொன்றுபோடுகின்றதென்று சொன்னார்கள்.

௨௭ அப்போது அசூரின் இராசா, நீங்கள் அங்கேயிருந்து கொண்டுவந்த ஆசாரியர்களிலே ஒருவனை யங்கேயழைத்துக்கொண்டு போங்கள். அவன் போய், அங்கே குடியிருக்கும்படிக்கு, இவன் அவர்களுக்கு அந்தத் தேசத்தினுடைய தேவனின் நியாயத்தைப் போதிக்கக்கடவனென்று கற்பித்தான்.

௨௮ அப்படியே அவர்கள் சமாரியாவிலிருந்து கொண்டுபோயிருந்த ஆசாரியர்களிலொருவன் வந்து, பெத்தேலிலே குடியிருந்து, கர்த்தருக்குப் பயந்து நடக்கிற விதத்தை யவர்களுக்குப் போதித்தான்.

௨௯ ஆனாலும் அந்தந்தச் சாதி அந்தந்தத் தேவர்களைத் தங்களுக்குண்டாக்கி, ஒவ்வொருசாதியாகிய அந்தச்சமாரியர் குடியேறின தங்கள் தங்கள் பட்டணங்களிலுண்டுபண்ணின மேடைகளின் வீடுகளிலே வைத்தார்கள்.

௩௰ பாபேலின் மனுஷர் சுக்கோத்பேனோத்தையுங் கூத்தின் மனுஷர் நேர்காலையும் ஆமாத்தின் மனுஷர் அசிமாவையும்,

௩௧ ஆவியர் நிபேகாசையுந் தர்த்தாக்கையும் உண்டாக்கினார்கள். செப்பர்வியர் செப்பார்வாயிமின் தேவர்களாகிய அதிரம்மெலேக்குக்கும் அனம்மெலேக்குக்குந் தங்கள் பிள்ளைகளை யக்கினியாற் றகனிப்பட்டார்கள்.

௩௨ அவர்கள் கர்த்தருக்கும் பயந்தார்கள். மேடைகளின் வீடுகளிலே தங்களுக்காக ஆராதனை செய்கிறதற்குத் தங்களுக்குள் நீசமானவர்களிலே தங்களுக்கு ஆசாரியர்களை யேற்படுத்தினார்கள்.

௩௩ அப்படியே கர்த்தருக்கும் பயந்து, தாங்கள் விட்டுவந்த சாதிகளுடைய முறைமையின்படியே தங்கள் தேவர்களையுஞ் சேவித்திருந்தார்கள்.

௩௪ இந்நாள்வரைக்கும் அவர்கள் தங்கள் பூர்வ முறைமைகளின்படியே செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறதுமில்லை. தங்கள் சுயதிட்டங்கள் முறைமைகளின்படியாகிலுங் கர்த்தர் இஸ்ரவேலென்று பேரிட்டயாக்கோபின் புத்திரருக்குக் கற்பித்த நியாயப்பிரமாணத்திற்குங் கற்பனைக்கும் ஒத்தபடியெனகிலுஞ் செய்கிறதுமில்லை.

௩௫ அதேதெனிற் கர்த்தர் இவர்களோடே உடன்படிக்கை பண்ணி, இவர்களுக்குக் கற்பித்ததாவது, நீங்கள் வேறே தேவர்களுக்குப் பயப்படாமலும் அவைகளைப்

பணிந்து கொள்ளாமலும் சேவிக்காமலும் அவைகளுக்குப் பலியிடாமலும்,

௩௬ உங்களை மகா வல்லமையினாலும் நீட்டின புயத்தினாலும் எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த கர்த்தருக்கே பயந்து அவரையே பணிந்துகொண்டு அவருக்கே பலியிட்டு,

௩௭ அவர் உங்களுக்கு எழுதிக்கொடுத்த திட்டங்களின்படியும் முறைமைகளின்படியும் நியாயப்பிரமாணத்தின்படியும் கற்பனைகளின்படியுமே நீங்கள் சகல நாளும் செய்கிறதற்குக் கவனமாயிருந்து வேறே தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள்.

௩௮ நாம் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை மறக்காமலும் வேறே தேவர்களுக்குப் பயப்படாமலும்,

௩௯ உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கே பயந்து நடப்பீர்களாக. அப்போது அவர் உங்களை உங்கள் எல்லாச் சத்துருக்களின் கைக்கும் தப்புவிப்பாரென்று அவர்களுக்குக் கற்பித்திருந்தார்.

௪௰ ஆனால் அவர்கள் கேள்வி கொடாமல் தங்கள் முந்தின முறைமைகளின்படியே செய்தார்கள்.

௪௧ அப்படியே அந்தச் சாதிகள் கர்த்தருக்கும் பயந்து தங்கள் விக்கிரகங்களையும் சேவித்திருந்தார்கள். அவர்கள் பிள்ளைகளும் அவர்கள் பிள்ளைகளின் பிள்ளைகளும் தங்கள் பிதாக்கள் செய்தபடியே இந்நாள்வரைக்கும் செய்கிறார்கள்.

௰௮. அதிகாரம்.

யூதாவின் இராசாவாகிய எசேக்கியாவின் நாட்களில் எருசலேம் அசூரியா இராசாவினால் முற்றிக்கைப் போடப்பட்டது.

இஸ்ரவேலின் இராசாவாகிய ஏலாவின் குமாரன் ஓசேயாவின் மூன்றாம் வருஷத்திலேயென்றால், ஆகாசென்ற யூதாவுடைய இராசாவின் குமாரனாகிய எசேக்கியா இராசாவானான்.

௨ அவன் இராசாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, எருசலேமிலே இருபத்தொன்பது வருஷம் அரசாண்டான். சகரியாவின் குமாரத்தியாகிய அவன் தாயின்பேர் ஆபி.

௩ அவன் தன் தகப்பனாகிய தாவீது செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

௪ அவன் மேடைகளை யகற்றிச் சிலைகளைத் தகர்த்து விக்கிரகத்தோப்பை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தையுடைத்துப்போட்டான். ஏனென்றால் அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டினார்கள். அதை வெண்கலத்துண்டென்று சொன்னான்.

௫ அவன் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே அவனுக்குப் பிறபாடு அவனுக்கு முன்னுமிருந்த யூதாவின் இராசாக்களெல்லாருக்குள்ளும் அவனைப்போலொருத்தனிருந்ததில்லை.

௬ அவன் கர்த்தரைவிட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவர் கற்பனைகளைக் கைக்கொண்டான்.

௭ ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். அவன் செய்யப்புறப்படுகிற காரியமெல்லாம் அவனுக்குக் கைகூடிவந்தது. அவன் அசூரின் இராசாவைச் சேவிக்காமல் அவனைவிட்டு மருளவிழுந்தான்.

௮ அவன் பெலிஸ்தரைக் காசாமட்டுக்கும் அதின் எல்லைகள் பரியந்தமும் சாமக்காக்கிற கோபுரங்களைத் தொடங்கி அரணிப்பட்டணங்கள் பரியந்தமும் இடறடித்தான்.

௯ இஸ்ரவேலின் இராசாவாகிய ஏலாவின் குமாரன் ஓசேயாவின் ஏழாம் வருஷமாகிற எசேக்கியா இராசாவின் நாலாம் வருஷத்திலே சம்பவித்ததென்னவென்றால், அசூரின் இராசாவாகிய சல்மனாசார் சமாரியாவுக்கு விரோதமாய் எழும்பிவந்து அதை முற்றிக்கைப்போட்டான்.

௰ மூன்று வருஷம் சென்றபிறபாடு அவர்கள் அதை எசேக்கியாவின் ஆறாம் வருஷத்திலே பிடித்தார்கள். சமாரியா பிடிபட்டது இஸ்ரவேலின் இராசாவாகிய ஓசேயாவின் ஒன்பதாம் வருஷமாயிருந்தது.

௰௧ அசூரின் இராசா இஸ்ரவேலை அசூரியாவுக்குச் சிறைபிடித்துக்கொண்டுபோய்க் கோசான் நதியோரமான ஆலாவிலும் ஆபோரிலும் மேதியரின் பட்டணங்களிலும் இருக்கப்பண்ணினான்.

௰௨ ஏனென்றால் அவர்கள் தங்கள் பராபரனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல் அவருடைய உடன்படிக்கையையும் கர்த்தரின் தாசனாகிய மோசே கற்பித்த யாவையும் மீறி, அதற்குச் செவிகொடாமலும் அதின்படிச் செய்யாமலுமிருந்தார்கள்.

௰௩ யூதாவின் இராசாவாகிய எசேக்கியாவின் பதினாலாம் வருஷத்திலேயென்றால், அசூரின் இராசாவாகிய சனகேரிப்

யூதாவிலிருக்கிற அரணான சகல பட்டணங்களுக்கு விரோதமாயேறிவந்து, அவைகளைப் பிடித்தான்.

௰௪ அப்பொழுது யூதாவின் இராசாவாகிய எசேக்கியா லாகீசிலிருக்கிற அசூரின் இராசாவுக்கு, நான் குற்றஞ்செய்தேன். என்னைவிட்டுத் திரும்பிப்போம். நீர் என்மேற் சுமத்துவதைச் சுமப்பேனென்று சொல்லியனுப்பினான். அப்படியே அசூரின் இராசா யூதாவின் இராசாவாகிய எசேக்கியாவின்மேல் முந்நூறு தாலந்து வெள்ளியையும் முப்பது தாலந்து பொன்னையுஞ் சுமத்தினான்.

௰௫ ஆனதுகொண்டு எசேக்கியா கர்த்தரின் வீட்டிலும் இராசாவுடைய வீட்டுப் பொக்கிஷங்களிலும் அகப்பட்ட எல்லா வெள்ளியையுங் கொடுத்தான்.

௰௬ அக்காலத்திலே யூதாவின் இராசாவாகிய எசேக்கியா கர்த்தருடைய தேவாலயக் கதவுகளிலும் நிலைகளிலுந் தான் அழுத்தியிருந்த பொற்றகடுகளைக் கழற்றி அவைகளை அசூரின் இராசாவுக்குக் கொடுத்தான்.

௰௭ ஆகிலும் அசூரின் இராசா லாகீசிலிருந்து தர்த்தானையும் ரப்சாரிசையும் ரப்சாக்கேயையுங் கனத்த இராணுவத்தோடே எருசலேமுக்கு எசேக்கியா இராசாவண்டைக்கு அனுப்பினான். இவர்கள் எருசலேமுக்கேறிவந்து, வண்ணார் துறையின் வழியிலுள்ள மேற்குளத்துச் சாலகத்தண்டையிலே நின்று,

௰௮ இராசாவை யழைத்தனுப்பினார்கள். அப்பொழுது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீமென்ற அரண்மனை விசாரிப்புக்காரனுஞ் செப்னாவென்ற சம்பிரதியும் ஆசாப்பின் குமாரனாகிய யோவாகென்ற கணக்கனும் அவர்களண்டையிலே புறப்பட்டுப்போனார்கள்.

௰௯ ரப்சாக்கே அவர்களோடே சொன்னதாவது, அசூரின் இராசாவாகிய பெரிய அரசனானவர் உரைக்கிறதும் நீங்கள் எசேக்கியாவுக்குச் சொல்லவேண்டியதுமேதெனில், நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கையேது?

௨௰ யுத்தத்திற்கு யோசனையும் பலமுமுண்டென்று நீ சொல்லுகிறது உதட்டின் வசனிப்புமாத்திரந்தானே. இப்போதும் நீ என்னைவிட்டு மருளவிழுந்ததற்கு யாரை நம்பியிருக்கிறாய்?

௨௧ இப்போதும் இதோ, முறிந்த அந்த நாணற்கோலாகிய எகிப்தை நம்புகிறாய் அதின்மேலொருவன் சாய்ந்தால் அது அவனுள்ளங்கையிற் பட்டுருவிப்போம். அப்படி எகிப்தின் இராசாவாகிய பார்வோன் தன்னை நம்புகிற யாவருக்குமிருக்கிறான்.

௨௨ நீங்கள் என்னுடனே, எங்கள் பராபரனாகிய கர்த்தரை நம்புகிறோமென்பீர்களேயாகில் அவருடைய மேடைகளையும் அவருடைய பலிபீடங்களையும் இல்லாமற்போகச் செய்து எசேக்கியா அகற்றி யூதாவோடும் எருசலேமியரோடும், எருசலேமிலிருக்கிற இந்தப் பலிபீடத்தின்முன் பணியுங்களென்றானே?

௨௩ இப்போதும் உனக்கு இரண்டாயிரங் குதிரைகளைக் கொடுப்பேன். அவைகளின்மேல் ஏறத்தக்கவர்களைச் சம்பாதித்துக்கொள்ள உனக்குக் கூடுமோ? என்று அசூரின் இராசாவாகிய என்னுடையவரோடே நீ சவதங்கூறேன்?

௨௪ பின்னையெப்படி நீயென்னாண்டவனுடைய சிறிய ஊழியக்காரரில் ஒரே ஒருத்தனின் முகத்தைத் திருப்புவாய். இரதங்களுங் குதிரைக்காரரும் உனக்கு வருமென்று எகிப்தியனையோ நம்புகிறாய்?

௨௫ இப்போதும் இந்தஸ்தலத்தையழிக்கக் கர்த்தரையல்லாமல் அதின்மேல் வந்தேனோ? இந்தத்தேசத்தின்மேலேறிப்போய் அதை யழியென்று கர்த்தர் என்னோடே சொன்னாரென்றுமென்று சொன்னான்.

௨௬ அப்போது இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீமுஞ் செப்னாவும் யோவாகும் ரப்சாக்கேயுடனே, உமதடியாரோடே சூரிய பாஷையிலே பேசும். அதையறிந்திருக்கிறோம். அலங்கத்திலிருக்கிற சனத்தின் செவிகளிலே பட எங்களோடே யூதர்பாஷையிலே பேசாதேயுமென்றார்கள்.

௨௭ ரப்சாக்கேயோவென்றால் அவர்களுடனே, உங்களோடுங்கூடத் தங்கள் கஷ்டத்தைத் தின்னவுந் தங்கள் நீரைக்குடிக்கவும் அலங்கத்திலே தங்கியிருக்கிற மனுஷரண்டைக்கேயல்லாமல் உன்னுடையவனண்டைக்கும் உன்னண்டைக்குமே என்னுடையவன் என்னை யிந்த வார்த்தைகளைப்பேச அனுப்பினாரோ? என்று சொல்லி,

௨௮ ரப்சாக்கே நின்றுகொண்டு யூதர்பாஷையிலே மகாசத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது, அசூரின் இராசாவாகிய பெரிய அரசனுடைய வார்த்தையைக் கேளுங்கள்.

௨௯ எசேக்கியா, உங்களை யேத்த வொட்டாதேயுங்கள். ஏனென்றால் அவனு ங்களை யவர் கைக்குத் தப்புவிக்க மாட்டான்.

௩௰ கர்த்தர் நம்மைத் தப்பவே தப்ப ப்பண்ணுவார் இந்தப் பட்டணம் அசூரிய இராசாவின் கையிலே யொப்புக் கொடுக்கப் படுவதில்லையென்று எசேக்கியா உங்களைக் கர்த்தரை நம்பப்பண்ணவும் ஒட்டாதே யுங்களென்று இராசா சொல்லுகிறார்.

௩௧ எசேக்கியாவின் சொல்லைக் கேளா தேயுங்கள். ஏனென்றால் அசூரின் இராசா சொல்லுகிறதாவது, நீங்கள் நன்மையா க நம்மைக் கண்டு நம்மண்டையிலே புறப் படுங்கள்.

௩௨ நாம் வந்து உங்களை யுங்கள் தேச த்தைப் போலிருக்கிற தானியமுந் திராட் சிரசமும் இருக்கிற தேசமும் அப்பமுந் திராட்சத் தோட்டங்களுமுள்ள தேசமும் எண்ணெய் தருகிற ஒலிவமரங் களுந் தேனுமுள்ள தேசமாகிய சீமை க்கு அழைத்துக் கொண்டுபோகுமளவும் அ வரவர் தன் திராட்சியின் கனியையுந் தன் அத்திமரத்தின் கனியையும் புசித்து, அவரவர் தன் கிணற்றின் தண்ணீரைக் குடி யுங்கள். அப்படியே நீங்கள் சாவாமற் பிழைப்பீர்கள். கர்த்தர் நம்மைத் தப்பு வித்தாரென்று உங்களைப் பயிற்றுவிக்கிற எசேக்கியாவுக்குச் செவிகொடாதேயுங் கள்.

௩௩ சாதிகளின் தேவர்கள் அவரவர் தங் கள் தேசத்தை அசூருடைய இராசாவின் கைக்குத் தப்புவிக்கவே தப்புவித்ததுண்டோ?

௩௪ ஆமாத் அர்ப்பாத் பட்டணங்களி ன் தேவர்களெங்கே? செப்பர்வாயிம், ஏ னா, ஈவாப்பட்டணங்களின் தேவர்களெங் கே? சமாரியாவை நம்முடைய கைக்குத் தப்பு வித்தார்களோ?

௩௫ கர்த்தர் எருசலேமை நம்முடைய கை க்குத் தப்புவிக்கத்தக்கதாக, அந்தத் தே சங்களின் எல்லாத் தேவர்களிலே தங்கள் தேசத்தை நம்முடைய கைக்குத் தப்புவி த்தவர் ஆர்? என்கிறானென்று சொன்னான்.

௩௬ ஆனாற் சனம் அவனுக்கொரு வா ர்த்தையையும் பிரதி யுத்தாரமாகச் சொல்லாமல் பவுனமா யிருந்தார்கள். ஏனென்றால் அவனுக்கு மறுவுத்தரவு சொல் லாதேயுங்களென்ற இராசாவின் கட்ட ளையுண்டாயிருந்தது.

௩௭ அப்போது இல்க்கியாவின் குமா ரன் எலியாக்கீமென்ற அரண்மனை விசா ரிப்புக்காரனும் செப்னாவென்ற சம்பிர தியும் ஆசாபின் குமாரன் யோவாவென்ற கணக்கனும் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டவர்களாய் எசேக்கியாவண்டை க்கு வந்து அவனுக்கு ரப்சாக்கேயின் வா ர்த்தைகளை யறிவித்தார்கள்.

௰௯. அதிகாரம்.

எசேக்கியா அசூரிய இராசாவின் கைக்கு அதிசயமாய் நீங்கலாக்கி விடப்பட் டது.

இராசாவாகிய எசேக்கியா அதைக் கேட்டபோதோவென்றால் அவன் தன வஸ்திரங்களைக் கிழித்து, இரட்டுடுத்திக் கொண்டு கர்த்தருடைய வீட்டிற்குட் பிர வேசித்து,

௨ அரண்மனை விசாரிப்புக்காரனாகிய எலியாக்கீமையுஞ் சம்பிரதியாகிய செப் னாவையும் ஆசாரியர்களின் மூப்பரையும் ஆமோத்சின் குமாரனாகிய எசாயாவெ ன்ற தீர்க்கதரிசியண்டைக்கு இரட்டுடுத் துக்கொண்டவர்களாக வனுப்பினான்.

௩ அவர்கள் அவனுடனே இந்த நாளே நெருக்கமுஞ் சிறுமையுந் தூஷணமும் அநு பவிக்கிற நாள். ஏனென்றால் பிள்ளைகள் பெற நோக்கஞ் சமீபித்தது. ஆனாற் பெறப்பல னில்லை.

௪ சீவனுள்ள பராபரனை நிந்திக்கவும் உன் பராபரனாகிய கர்த்தர் கேட்டிருக்கி ற வார்த்தைகளாலே சிறுமைப்பண்ணவு ம் அசூரின் இராசாவாகிய தன்னாண்டவ னாலே அனுப்பப்பட்ட ரப்சாக்கேயின் வார் த்தைகளையெல்லாம் உன் பராபரனாகிய க ர்த்தர் கேட்பாராக்கும். ஆகையால் நீ இன் னமிருந்திருக்கிறவர்களுக்காக விண் ணப்பஞ்செய்வாயாகவென்று எசேக்கியா சொல்லச்சொன்னானென்று,

௫ எசேக்கியா இராசாவின் ஊழியக்கா ரர் எசாயாவண்டைவந்து சொன்னார்கள்.

௬ அப்போது எசாயா அவர்களுட னே, அசூரியாவின் இராசாவின் ஊழியக்கா ரர் நம்மைத் தூஷணித்தது நமக்குக் கேட்ட மான வார்த்தைகளினாலே பயப்படாதே.

௭ இதோ, அவனொரு செய்தியைக் கே ட்டுத் தன் தேசத்திற்குத் திரும்புவதற்கா ன ஆவியை நாம் அவனுக்குக் கொடுத்த, அவனை யவன் தேசத்திலே பட்டயத்தா லே விழப்பண்ணுவோமென்று கர்த்தருரை க்கிறாரென்றதை யுங்கள் ஆண்டவனோடே சொல்லுங்களென்றான்.

௮ ர்ப்சாக்கே திரும்பிப்போகிறபோது அசூரின் இராசா லாகீசைவிட்டுப் புறப்பட்டானென்று கேட்டு, அவன் லிப்னாவின்மேல் யுத்தம்பண்ணக் கண்டான்.

௯ ஆனால் இதோ, எத்தியோப்பியாவின் இராசாவாகிய திர்காக்கா உம்மோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டானென்று செய்தி கேட்டான். அப்போது அவன் திரும்ப எசேக்கியாவண்டைக்குத் தூதாட்களை யனுப்பிச் சொன்னதாவது,

௰ நீங்கள் யூதாவின் இராசாவாகிய எசேக்கியாவுக்குச் சொல்லவேண்டியதேதெனில், எருசலேம் அசூரிய இராசாவின் கையிலே ஒப்புக்கொடுக்கப்படுவதில்லையென்று நீ நம்பியிருக்கிற உன் தேவன் உன்னை யேய்க்கவொட்டாதே.

௰௧ இதோ, அசூரின் இராசாக்கள் எல்லாத் தேசங்களுக்கும் அவைகளைச் சங்கரிக்கும்படிக்குச் செய்ததை நீ கேட்டாயே. நீ தப்புவாயோ?

௰௨ என் பிதாக்கள் அழித்துப்போட்ட கோசானும் ஆரானும் ரேத்சேப்பும் தெலாசாரிலிருந்த ஏதேனின் புத்திரருமென்னுஞ் சாதிகளினவர்களுடைய தேவர்கள் தப்புவித்ததுண்டோ?

௰௩ ஆமாத்தின் இராசாவும் அர்ப்பாத்தின் இராசாவும், செப்பர்வாயிம் ஏனா ஈவா பட்டணங்களின் இராசாவும் எங்கே? என்று சொல்லுங்களென்றான்.

௰௪ எசேக்கியா தாதுபதிகளின் கையிலே நிருபங்களை வாங்கி அவைகளை வாசித்து, பிற்பாடு எசேக்கியா கர்த்தரின் வீட்டிற்குப் போயேறி, அவைகளைக் கர்த்தருக்கு முன்பாக விரித்து,

௰௫ கர்த்தருக்கு முன்பாகப் பண்ணின விண்ணப்பமாவது, கேருபீன்களின்மேல் வாசம்பண்ணுகிற இஸ்ரேலின் பராபரனாகிய கர்த்தாவே! தேவரீர் ஒருவரே பூமியின் இராச்சியங்களுக்கெல்லாந் தேவனானவர். தேவரீர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்.

௰௬ கர்த்தாவே! உமது செவியைச் சாய்த்துக் கேளும். கர்த்தாவே! நீர் உமது கண்களைத் திறந்து பார்த்துச் சன்கேரிப் சீவனுள்ள பராபரனை நிந்திக்கும்படிக்கு அனுப்பின வார்த்தைகளைக் கேளும்.

௰௭ மெய்தான். கர்த்தாவே! அசூரின் இராசாக்கள் அந்தச் சாதிகளையும் அவர்கள் தேசத்தையும் பாழ்க்கடித்து,

௰௮ அவர்களுடைய தேவர்களை நெருப்பிலே போட்டார்கள். ஏனெனில் அவைகள் தேவர்களாயிராமல், மனுஷர் கைக்கிரியையாகிய மரமும் கல்லுமாயிருந்தது. ஆகையால் அவைகளை நிர்த்தூளியாக்கினார்கள்.

௰௯ இப்போதும் எங்கள் பராபரனாகிய கர்த்தாவே! தேவரீர் ஒருவரே பராபரனாகிய கர்த்தரென்று பூமியின் இராச்சியங்களெல்லாம் அறியும்படிக்கு, எங்களை யவனுடைய கைக்கு நீங்கலாக்கி இரட்சியுமென்றான்.

௨௰ அப்போது ஆமோத்ஸின் குமாரனாகிய ஏசாயா எசேக்கியாவுக்குச் சொல்லியனுப்பினதாவது, இஸ்ரேலின் பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறதேதெனில், நீ அசூரின் இராசாவாகிய சன்கேரிபினிமித்தம் நம்மை நோக்கிப்பண்ணின விண்ணப்பத்தைக் கேட்டோம்.

௨௧ அவனைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிற வசனமாவது, சீயோன் குமாரத்தியாகிய கன்னியாஸ்திரீ உன்னை யிகழ்ந்து, உன்னை ஆகடியம்பண்ணுகிறாள். எருசலேங் குமாரத்தி உன் பிறகாலே தலையைத் துலுக்குகிறாள்.

௨௨ யாரை நிந்தித்துத் தூஷணித்தாய்? யாருக்கு விரோதமாயச் சத்தத்தை யுயர்த்தினாய்? நீ இஸ்ரேலின் பரிசுத்தருக்கு விரோதமாயல்லோ உன் கண்களை மேட்டிமையாயெடுத்தாய்?

௨௩ உன் தாதுபதிகளைக்கொண்டு நீ ஆண்டவரையல்லோ நிந்தித்து, என் இரதங்களின் திரட்சியினாலே நான் லீபனோனின் பக்கங்களாகிய மலைகளின் உயரத்திலே றினேன்? அதில் ஓங்கலான அதின் கேதுருக்களையும் தெரிந்துகொள்ளப்பட்ட அதின் தேவதாரு விருட்சங்களையும் நான் வெட்டி, அதின் கடைசித் தாபரமாகிய அதின் செழும்பலான காடுமட்டும் வருவேனென்றும்,

௨௪ நான் வெட்டின அந்நிய தேசங்களின் தண்ணீர்களைக் குடித்தேன். என் காலுகளின் அடியினாலே எகிப்தின் ஆறுகளையெல்லாம் வறளவும் பண்ணுவேனென்று சொன்னாய்.

௨௫ நாம் வெகுகாலத்திற்கு முன் அதையுண்டாக்கிப் பூர்வநாட்கள் முதற்கொண்டு அதைச் செய்ப்பண்ணிட்டிருக்கிறோமென்பதை நீ கேட்டதில்லையோ? இப்போது நீ அரணான பட்டணங்களைப் பாழான மண்மேடுகளாக்கும்படிக்கு அதை நாம் வரப்பண்ணினோம்.

௨௬ ஆதலால் அவைகளின் குடிகள் கைக்குறுகினவர்களாகிக் கலங்கி வெட்கப்பட்டு, வெளியின் பூண்டுக்கும், பசிலைக்

கும், மேற்கூரைகளின் புல்லிற்கும், ஓங்கி வளராததற்கு முன் தீய்ந்துபோன பயிருக்கும் சமானமானார்கள்.

உ௭ ஆனால் உன் குடியிருப்பையும், உன் புறப்படுதலையும், உன் வருகையையும், நீ நமக்கு விரோதமாய்க் கொந்தளிக்கிறதையும் அறிவோம்.

உ௮ ஆனதுகொண்டு, நீ நமக்கு விரோதமாய்க் கொந்தளித்து, உன் பெருமை நமது செவிகளில் ஏறினபடியினாலே, நாம் நம்முடைய துறட்டை உன் மூக்கிலும், நம்முடைய கடிவாளத்தை உன் உதடுகளிலும் போட்டு, நீ வந்த வழியே உன்னைத் திருப்பிக்கொண்டு போவோமென்று அவனைக் குறித்துச் சொல்லுகிறார்.

உ௯ உனக்கோவென்னில் அடையாளமாயிருப்பதாவது, இந்த வருஷத்திலே தப்பிப் பயிராகிறதையும், இரண்டாம் வருஷத்திலே தானாய் விளைகிறதையும் சாப்பிடு. மூன்றாம் வருஷத்திலோ விதைத்து அறுத்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனிகளைப் போசியுங்கள்.

௩௰ யூதாவின் வீட்டாரில் தப்பி மீதியானது அப்புறந்தாழ வேர்பற்றி, உயரக் கனி கொடுக்கும்.

௩௧ ஏனென்னில் மீதியானவர்கள் எருசலேமிலும், தப்பினவர்கள் சீயோன் பர்வதத்திலுமிருந்து புறப்படுவார்கள். சேனைகளுடைய கர்த்தரின் சுறுசுறுப்பு அதை நடப்பிக்கும்.

௩௨ ஆகையால் கர்த்தர் அசூரின் இராசாவைக் குறித்து உரைக்கிறதாவது, அவன் இந்தப் பட்டணத்திற்குட்படுவதுமில்லை. அதற்குள் அம்பை யெய்வதுமில்லை. அதற்கு முன் கேடயத்தோடே வருவதுமில்லை. அதற்கெதிராகக் கொத்தளம் போடுவதுமில்லை.

௩௩ அவன் இந்தப் பட்டணத்திற்குட் பிரவேசியாமல் தான் வந்த வழியே திரும்பிப் போவான்.

௩௪ ஏனென்னில் நம்முடைய நிமித்தமும் நம்முடைய தாசனாகிய தாவீதின் நிமித்தமும் நாம் இந்தப் பட்டணத்தை இரட்சிக்கும்படிக்கு அதை ஆதரிப்போமென்பதைக் கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்லியனுப்பினான்.

௩௫ அன்று இராத்திரியிற் சம்பவித்ததேதெனில், கர்த்தருடைய தூதன் புறப்பட்டு, அசூரியரின் பாளயத்தில் நூற்றெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான். அவர்கள் அதிகாலமே யெழுந்திருக்கும்போது, இதோ, அவர்களெல்லாரும் செத்த சவங்களாகக் கிடந்தார்கள்.

௩௬ அப்போது அசூரின் இராசாவாகிய சனகெரிப் பயணப்பட்டுத் திரும்பிக் கொண்டுபோய் நினிவேயிலிருந்துவிட்டான்.

௩௭ அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் வீட்டிலே பணிந்துகொள்ளுகிறபோதோவெனில், அவன் குமாரராகிய அதிராமேலேகும் சரேசரும் அவனைப் பட்டயத்தாலே வெட்டிப்போட்டு ஆரார்த்தேசத்துக்குத் தப்பியோடினார்கள். அவன் குமாரனாகிய ஏசர்காதோன் அவனிடத்திற்கு வந்து அரசாண்டான்.

உ௰. அதிகாரம்.

ஏசேக்கியாவின் மற்றநடபடிகள்.

௧ அந்நாட்களில் ஏசேக்கியா சாவத்தக்க வியாதிப்பட்டிருந்தான். அப்போது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவென்ற தீர்க்கதரிசி அவனண்டைக்கு வந்து, அவனுடனே, நீ உன் வீட்டுக் காரியத்தைத் திட்டப்படுத்து. ஏனென்றால் நீ பிழைக்காமல் மரிப்பாயென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

௨ அப்போது ஏசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கர்த்தரை நோக்கி விண்ணப்பமாவது,

௩ ஆ, கர்த்தாவே! நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்துகொண்டு, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேனென்கிறதை நினையுமென்று மிகுதியுமாய் அழுதான்.

௪ அப்போது சம்பவித்ததேதென்றால், ஏசாயா பாதி முற்றத்தைவிட்டுப் புறப்படாததற்கு முன்னே, கர்த்தருடைய வார்த்தை யவனுக்குண்டாய் அவர் சொன்னதாவது,

௫ நீ திரும்பிக்கொண்டு, நமது சனத்தின் அதிபதியாகிய ஏசேக்கியாவுடனே சொல்லவேண்டியது. உன் தகப்பனாகிய தாவீதின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறதேதெனில், உன் விண்ணப்பத்தைக் கேட்டோம். உன் கண்ணீரைக் கண்டோம். இதோ, நாம் உன்னைக் குணமாக்குகிறோம். மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய வீட்டிலே போயேறுவாய்.

௬ நாம் உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டி, அசூரிய இராசாவின் கைக்கு உன்னையும் இந்தப் பட்டணத்தையும் தப்புவித்து நம்முடைய நிமித்த

முடைய தாசனாகிய தாவீதினிமித்தமும் இந்தப் பட்டணத்தைத் தற்காப்பேனென்று சொல்லென்றார்.

௭ ஏசாயா அதைச் சொல்லி, அத்திப்பழத்தடையைக் கொண்டுவாருங்களென்றான். அதையவர்கள் கொண்டுவந்து எரிபந்தத்தின்மேல் பற்றுப்போட்டபோது, சுகமாய்ப்பிழைத்தான்.

௮ எசேக்கியா ஏசாயாவுடனே, கர்த்தர் என்னைக் குணமாக்குவதற்கும், மூன்றாம் நாளிலே நான் கர்த்தருடைய வீட்டிலே போவதற்கும், அடையாளமென்ன? என்றான்.

௯ அப்போது ஏசாயா, கர்த்தர் தாஞ் சொன்ன வார்த்தையின்படியே செய்வாரென்பதற்குக் கர்த்தரால் உனக்குண்டாகும் அடையாளமாக நிழல் பத்துவரி முன்னிட்டுப் போகவேண்டுமோ? பத்துவரி பின்னிட்டுத் திரும்பவேண்டுமோ? என்று கேட்டதற்கு,

௰ எசேக்கியா, நிழல் பத்துவரி பிறகே போகிறது லேசான காரியம். அப்படிவேண்டாம் நிழல் பத்துவரி பின்னிட்டுத் திரும்பட்டுமென்றான்.

௰௧ அப்போது ஏசாயா தீர்க்கதரிசி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில், அவர் ஆகாசுடைய சூரியகடியாரத்திலே வரிகளிலே இறங்கின நிழலைப் பத்துவரி பின்னிட்டுத் திரும்பப்பண்ணினார்.

௰௨ அக்காலத்திலே பலாதானின் குமாரனாகிய பெரோதாக்பலாதான் என்ற பாபேலின் இராசா எசேக்கியா வியாதிப்பட்டிருந்ததைக் கேட்டு, அவனண்டைக்கு நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான்.

௰௩ எசேக்கியா அவர்களுக்குச் செவிகொடுத்தபிறபாடு அவர்களுக்குத் தன் பொக்கிஷசாலையனைத்தையும், வெள்ளியையும் பொன்னையும் கந்தவர்க்கங்களையும் பரிமளதயிலத்தையும் தன் ஆயுதசாலையனைத்தையும் தன் பொக்கிஷங்களிலுள்ள எல்லாவற்றையுங் காண்பித்தான். தன் வீட்டிலுந் தன் ஆளுகையனைத்திலும் எசேக்கியா அவர்களுக்குக் காண்பியாத பொருளில்லை.

௰௪ அப்போது ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியா இராசாவண்டைக்கு வந்து, அவனுடனே, அந்த மனுஷர் என்ன சொன்னார்கள்? எங்கேயிருந்து உம்மண்டைக்கு வந்தார்கள்? என்றான். அதற்கு எசேக்கியா பாபேலென்ற தூரதேசத்திலிருந்து வந்தார்கள்.

௰௫ அப்போது அவன் உம்முடைய வீட்டிலே என்னத்தைக் கண்டார்கள்? என்றான். அதற்கு எசேக்கியா என் வீட்டிலுள்ள எல்லாவற்றையுங் கண்டார்கள். என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருளில்லையென்றான்.

௰௬ அப்போது ஏசாயா எசேக்கியாவுடனே சொன்னதாவது, கர்த்தருடைய வார்த்தையைக் கேளும்.

௰௭ இதோ, நாட்கள் வரும். அப்போது உன் வீட்டிலுள்ளதிலும் உன் பிதாக்கள் இந்நாள்வரைக்குஞ் சேர்த்ததிலும் ஒன்றும் வைக்கப்படாமல் எல்லாம் பாபேலுக்குக் கொண்டுபோகப்படும்.

௰௮ நீ பெற்றிருக்கும் உன் சந்தானமாகிய உன் பிள்ளைகளிலுஞ் சிலரைப் பாபேலுடைய இராசாவின் அரமனையிலே பிரதானிகளாயிருக்க எடுப்பார்களென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

௰௯ அப்போது எசேக்கியா ஏசாயாவுடனே நீ சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதென்று சொல்லி, என் நாட்களிலே சமாதானமும் உண்மையுமிருக்குமென்றான்.

௨௰ எசேக்கியாவின் மற்ற வர்த்தமானங்களும் அவனுடைய எல்லா வல்லமையும் அவன் ஒரு குளத்தையுஞ் சாலகத்தையும் உண்டாக்கி ஆற்றிலே தண்ணீரைப் பட்டணத்திற்குள்ளே வரப்பண்ணினதும் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லவோ எழுதியிருக்கின்றது.

௨௰௧ எசேக்கியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

உக. அதிகாரம்.

மனாசே ஆமோனென்ற யூதாவுடைய இராசாக்களின் நடபடிகள்.

மனாசே இராசாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து ஐம்பத்தைந்து வருஷம் எருசலேமிலே அரசாண்டான். அவன் தாயின் பேர் எப்சிபாள்.

௨ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின சாதிகளுடைய அருவருப்புகளின்படியே அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து,

௩ தன் தகப்பனாகிய எசேக்கியா இடித்துப்போட்ட மேடைகளைத் திரும்பக் கட்டிப் பாகாலுக்குப் பீடங்களையெழுப்

பிசுது இஸ்ர்வேலின இர்ாசாவாகிய ஆகாப்செயதது போலவிககிர்கததோபபையுண்டாககி, வானததினசேனையையெலலாமபணிநதுகொண்டு அவைகளைச சேவிததான.

௪ எருசலேமிலே நமமுடைய நாமததைவைபபோமெனறு கர்ததர்சொலலிககுறிதத கர்ததரின வீட்டிலேயவனபலிபீடஙகளைககட்டி,

௫ கர்ததருடையவீட்டின இரண்டுபிர்கார்ஙகளிலும வானததினசேனைககெலலாம பலிபீடஙகளைககட்டி,

௬ தனகுமாரனை யககினியைமிதிககபபணணி, நாட்பார்ககிறவனும நிமிததமபார்ககிறவனுமாயிருநது அஞசனமபார்ககிறவர்களையுங குறிசொலலுகிறவர்களையுமவைததுக கர்ததருககுக கோபமுணடாககஅவர்பார்வைககுபபொலலாபபானதைமிகுதியாயசசெயதான.

௭ இநதவீட்டிலும நாம இஸ்ர்வேலினசகலகோததிரஙகளிலுநதெரிநதுகொணட எருசலேமிலும நமமுடையநாமததை யெனறைககுந தஙகபபணணுவோமெனறு கர்ததர் தாவீதோடும அவனகுமாரனாகியசாலோமோனோடுஞ சொலலிககுறிதத வீட்டிலே அவனபணணினதோபபினவிககிரகததை வைததான.

௮ நாம அவர்களுக்குக கறபிததவெலலாவறறினபடியேயும நமமுடைய தாசனாகிய மோசே அவர்களுககுககறபிதத எலலாநியாயபபிர்மாணததினபடியேயுஞ செயயசசாககிர்தையாயிருநதார்களேயாகில, நாமினி இஸ்ர்வேலின காலையவர்கள பிதாககளுககு நாஙகொடுதத தேசததைவிட்டலையப பணணுவதிலலையெனறுசொலலியிருநதார்.

௯ ஆனால அவர்களகேளாதேபோனார்கள. ஏனெனிற கர்ததர் இஸ்ர்வேலபுததிரருககுமுனபாக அழிதத சாதிகளைபபார்ககிலும பொலலாபபானதைசசெயய மனாசே அவர்களையேயததுப போட்டான.

௰ ஆகையாற கர்த்தர் திர்ககதரிசிகளாகிய தமது ஊழியககாரரைக்கொணடுரைத்ததாவது.

௰௧ யூதாவின இர்ாசாவாகிய மனாசே தனககுமுனனிருநத எமோரியர் செயததெலலாவறறையும பார்க்கக் கேடான பிர்கார்மாக இநதஅருவருபபுகளைசசெயது தனனுடையநரகலான தேவர்களால யூதாவையும பாவஞசெயயபபணணினபடியினாலே,

௰௨ இஸ்ர்வேலின பர்ாபர்னாகிய கர்ததர்சொலலுகிறதேதெனில, இதோ, கேட்கபபோகிறயாவருடைய இரண்டுசெவிகளுங குறுகுறென்னததககதாய பொலலாபபை நாம எருசலேமினமேலும யூதாவினமேலும வர்பபணணி,

௰௩ எருசலேமினமேலே சமாரியாவின மட்டநூலையும ஆகாபவீட்டினதூககுநூலையுமபிடிதது, ஒருவனொருதாலததைவிளககி, விளககினபின அதைககவிழததுவைககிறதுபோல எருசலேமைவிளககிபபோட்டு,

௰௪ நமது சுதநதர்த்தில மீதியானதைககைவிட்டு, அவர்களை யவர்கள பகைஞரினகையிலொபபுககொடுபபோம.

௰௫ அபபடியே அவர்கள தஙகள பிதாககள எகிப்திலிருநதுபுறபபட்டநாள முதறகொணடு இநநாளவரைககுமநமது பார்வைககுபபொலலாபபானதைச செயது நமககுக கோபமுணடாககினவர்களாயிருநதபடியினாலே தஙகள பகைஞருககெலலாம கொளளையுஙகுறையுமாயபபோவார்களெனறார்.

௰௬ கர்த்தரின பார்வைககுபபொலலாபபானதைசசெயயுமபடிய மனாசே யூதாவைபபாவஞ செயயபபணணின அநதத்தனனுடைய பாவமுநதவிர அவன எருசலேமை நவர்ஙகளும இரததபபழிகளால நிர்பபத்தககதாயாயக குறறமலலாத இர்த்தத்தையும மிகுதியாயச்சிநதவைத்தான.

௰௭ மனாசேயின மறறவர்த்தமானஙகளும அவனசெயததனைத்தும அவன பணணின அவனுடைய பாவமும யூதாவுடைய இர்ாசாககளின நாளாகமபுஸ்தகத்திலல்லோ எழுதியிருககினறது.

௰௮ மனாசே தனபிதாககளோடேநித்திரையடைநதபின அவனஊசாவினதோட்டமாகிய தனவீட்டுத் தோட்டத்திலே அடககமபணணபபட்டான. அவனஸ்தலத்திலே அவனகுமாரனாகிய ஆமோன இர்ாசாவானான.

௰௯ ஆமோன இர்ாசாவானபோது இருபத்திரண்டுவயதாயிருநது இரண்டுவருஷம எருசலேமில அர்சாணடான். யொத்பா ஊரானாகிய ஆருத்சின குமார்த்தியான அவனதாயின்பேர் மெசலலேமேத்.

உ௰ அவன தனதகபபனாகிய மனாசே செயததுபபோலே கர்த்தரினபார்வைககுபபொலலாபபானதைசசெயது,

உக தனதகபபன நடநத எலலாவழியிலுமநடநது தனதகபபனசேவித்தநர்

லானதேவர்களைச் சேவித்து அவைகளைப் பணிந்துகொண்டு,

௨௨ கர்த்தரின் வழியிலே நடவாமல் தன் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரை விட்டுவிட்டான்.

௨௩ ஆனால் ஆமோனின் ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய்ப் பந்தங்கட்டிப் பண்ணிக்கொண்டு இராசாவாகிய அவனை வீட்டிலே கொன்றுபோட்டார்கள்.

௨௪ ஆனால் தேசத்தின் சனம் இராசாவாகிய ஆமோனுக்கு விரோதமாய்ப் பந்தம்பண்ணினவர்களையெல்லாம் வெட்டிப்போட்டு அவன் குமாரனாகிய யோசியாவை அவன் ஸ்தலத்திலே இராசாவாக்கினார்கள்.

௨௫ ஆமோன் செய்த மற்ற வர்த்தமானங்கள் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௬ அவன் ஊசாவின் தோட்டத்திலுள்ள தன்னுடைய கல்லறையிலே அடக்கம்பண்ணப்பட்டான். அவன் ஸ்தலத்திலே அவன் குமாரனாகிய யோசியா இராசாவானான்.

௨௨. அதிகாரம்.

யூதாவின் இராசாவாகிய யோசியாவின் காலத்திலே நியாயப்பிரமாணப் புஸ்தகம் கண்டுபிடிக்கப்பட்டது.

யோசியா இராசாவாகிறபோது எட்டு வயதாயிருந்து, முப்பத்தொரு வருஷம் எருசலேமிலே அரசாண்டான். பொஸ்காத் ஊராளாகிய அதாயாவின் குமாரத்தியான அவன் தாயின் பேர் எதிதாள்.

௨ அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறமாய் விலகாமல் நடந்தான்.

௩ இராசாவாகிய யோசியாவின் பதினெட்டாம் வருஷத்திலே சம்பவித்ததேதென்றால், இராசா மெசுல்லாமின் குமாரனாகிய அத்சலியாவின் மகன் சாப்பானென்ற சம்பிரதியைக் கர்த்தரின் வீட்டிற்கு அனுப்பிச் சொன்னதாவது,

௪ நீ பிரதான ஆசாரியனாகிய இல்க்கியாவண்டைக்குப் போய்க் கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவரப்பட்டதும் வாசற்காக்கிறவர்கள் சனத்தின் கையிலே சேர்த்துக்கொண்டதுமான திரவியத்தையவனெண்ணிப்பார்த்து,-

௫ பிற்பாடு அவர்கள் அதைக் கர்த்தருடைய வீட்டின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்து, இவர்கள் அதைக் கர்த்தரின் வீட்டைப் பழுதுபார்க்கிறதற்கு அதிலிருக்கிற வேலையைச் செய்கிற,

௬ தச்சருக்குஞ் சிற்பசாஸ்திரிகளுக்குங் கொல்லத்துக்காரருக்கும், வீட்டைப் பழுதுபார்க்கத் தேவையான மரங்களையும் வெட்டின கல்லுகளையும் வாங்குகிறதற்குங் கொடுக்கவும்,

௭ ஆகிலும் அந்தத் திரவியத்தைத் தங்கள் கையிலே ஒப்புவித்துக்கொள்ளுகிறவர்கள் காரியத்தை யுண்மையாய் நடப்பிக்கிறபடியினாலே அவர்களை யதின் கணக்கைக் கேளாதிருக்கவும் வேண்டுமென்று சொல்லென்றான்.

௮ அப்பொழுது பிரதான ஆசாரியனாகிய இல்க்கியா சம்பிரதியாகிய சாப்பானுடனே, நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கர்த்தரின் வீட்டிலே கண்டுபிடித்தேனென்று சொல்லி, அந்தப் புஸ்தகத்தைச் சாப்பானுக்குக் கொடுத்தான். இவன் அதை வாசித்தான்.

௯ அப்பொழுது சம்பிரதியாகிய சாப்பான் இராசாவண்டைக்கு வந்து, இராசாவுக்கு மறுஉத்தரவு சொல்லி, வீட்டிலே கண்டுபிடிக்கப்பட்ட திரவியத்தை யுமதடியார் சேர்த்துக்கட்டி, அதைக் கர்த்தருடைய வீட்டின் வேலையை விசாரிக்கிறவர்கள் கையிலே கொடுத்தார்களென்று சொல்லி,

௰ சம்பிரதியாகிய சாப்பான் பின்னையும் இராசாவுக்கு, ஆசாரியனாகிய இல்க்கியா எனக்கு ஒரு புஸ்தகத்தைக் கொடுத்தானென்றறிவித்து, அதை இராசாவுக்கு முன்பாக வாசித்துக்கொண்டிருந்தான்.

௧௧ இராசா நியாயப்பிரமாணப் புஸ்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோதோவென்னில், அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

௧௨ ஆசாரியனாகிய இல்க்கியாவுக்குஞ் சாப்பானின் குமாரனாகிய அகிக்காமுக்கும் மிகாயாவின் குமாரனாகிய அக்போருக்குஞ் சம்பிரதியாகிய சாப்பானுக்கும் இராசாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்கும் இராசா கற்பித்துச் சொன்னதாவது,

௧௩ கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தினுடைய வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய், எனக்காகவுஞ் சனத்திற்காகவும் யூதாவினைத்திற்காகவுங் கர்த்தரைக் கேளுங்கள். ஏனென்னில் நமக்காக எழுதியிருக்கிற எல்லாவற்றின் படியேயு

னுசெய்ய நம்மூடையபிதாக்கள் இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவி கொடாதபடியினாலே நம்முடையமேலே பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியதென்றான்.

௰௪ அப்போது ஆசாரியனாகிய இல்கியாவும் அகீக்காமும் அக்போரும் சாப்பானும் அசாயாவும் அற்காசின் குமாரனாகிய திக்வாவின் மகனும் சல்லுமென்ற வஸ்திரங்களுடைய விசாரிப்புக்காரனின் பெண்சாதியாகிய உல்தாள் என்ற தீர்க்கதரிசியானவளண்டைக்குப் போய், அவளோடே பேசினார்கள். அவள் எருசலேமின் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்தாள்.

௰௫ இவள் அவர்களோடே சொன்னதாவது, உங்களையென்னண்டைக்கனுப்பினவருக்கு நீங்கள் சொல்லவேண்டியதேதெனில், இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறதாவது,

௰௬ இதோ, நாம் இந்த ஸ்தலத்தின் மேலும் அதின் குடிகளின்மேலும் யூதாவின் இராசா வாசித்த புஸ்தகத்தின் வார்த்தைகளிலெல்லாம் விளங்கிய பொல்லாப்பை வரப்பண்ணுவோம்.

௰௭ அவர்கள் நம்மைவிட்டுத் தங்கள் கைகளின் கிரியைகளாலெல்லாம் நமக்குக் கோபமுண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினபடியினாலே நம்முடைய உக்கிரம் இந்த ஸ்தலத்தின்மேற் பற்றியெரிந்தது. அது அவிந்து போவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறாரென்று சொல்லுங்கள்.

௰௮ கர்த்தரைக் கேட்கிறதற்கு உங்களையனுப்பின யூதாவின் இராசாவுக்கோ நீங்கள் சொல்லவேண்டியது. நீர் கேட்ட வார்த்தைகளைக் குறித்து இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறதேதெனில்

௰௯ நாம் இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாக, அவர்கள் பாழும் சாபமுமாவார்களென்று சொன்னதை நீ கேட்டபோது, உன்னிருதயம் இளகி நீ கர்த்தருக்கு முன்பாக உன்னைத் தாழ்த்தி, உன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நமக்கு முன்பாக அழுதபடியினாலே உன்னை நாமுங் கேட்டோம்.

௨௰ ஆகையால் இதோ, நாமுன்னை உன் பிதாக்களண்டையிலே சேர்த்துக்கொள்ளுவோம். நீ சமாதானத்தோடே உன் கல்லறையிற் சேர்க்கப்படுவாய். நாம் இந்த ஸ்தலத்தின்மேல் வரப்பண்ணுஞ் சகல பொல்லாப்பையும் உன் கண்கள் காண்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறாரென்று சொல்லுங்களென்றாள். இந்தச் சமுத்தரவையவர்கள் போய் இராசாவுக்குச் சொன்னார்கள்.

௨௩. அதிகாரம்.

சத்தியவேதத்திற்காக யோசியாவானவன் பத்தியும் அவன் அடைந்தமரணமும்.

அப்போது இராசா யூதாவிலும் எருசலேமிலுமிருக்கிற மூப்பரையெல்லாம் அழைத்தனுப்பினான். இவர்கள் அவனண்டையிலே கூடினபோது,

௨ இராசாவும் அவனோடேகூட யூதமனுஷர் எருசலேமின் குடிகள் யாவரும் ஆசாரியர்களுந் தீர்க்கதரிசிகளுஞ் சிறியோர் துவக்கிப் பெரியோர் மட்டுமுள்ள சகல சனமுங் கர்த்தரின் வீட்டிற்குப் போயினார்கள். கர்த்தரின் வீட்டிலே கண்டுபிடிக்கப்பட்ட உடம்படிக்கையினுடைய புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசிக்கப்பட்டது.

௩ அப்போது இராசா தூண் அண்டையிலே நின்றுகொண்டு கர்த்தரைப் பின்பற்றி நடக்கவும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமத்தோடுங் கைக்கொள்ளவும், இப்படியே அந்தப் புஸ்தகத்திலெழுதியிருக்கிற அந்த உடம்படிக்கையின் வார்த்தைகளை நிறைவேற்றவும், கர்த்தருக்கு முன்பாக உடம்படிக்கை பண்ணினான். சனமெல்லாம் உடம்படிக்கைக்குட்பட்டது.

௪ பிற்பாடு இராசா பாகாலுக்கும் விக்கிரகத்தோப்பிற்கும் வானத்தின் எல்லாச் சேனைக்குமென்று பண்ணப்பட்டிருந்த சகல முட்டுகளையுங் கர்த்தருடைய தேவாலயத்திலிருந்து புறம்பாக்கப் பிரதான ஆசாரியனாகிய இல்கியாவுக்கும் இரண்டாந்தரமான ஆசாரியர்களுக்கும் வாசற்காக்கிறவர்களுக்குங் கற்பித்து அவைகளை எருசலேமுக்குப் புறம்பாய்க் கீதரோன் வெளிகளிற் சுட்டெரித்து அவைகளின் சாம்பலைப் பேத்தேலுக்குக் கொண்டுபோகப்பண்ணி

௫ யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமைச் சுற்றிலும் மேடைகளின்மேல் தூபங்காட்ட யூதாவின் இராசாக்களை வைத்த பூசாரிகளையும் பாகாலுக்குஞ் சூரியனுக்குஞ் சந்திரனுக்குங் கிரகங்களுக்கும் வானத்தின் சகல சேனைக்குந் தூபங்காட்டினவர்களையும் அகற்றிப்போகப்பண்ணி,

௮ விக்கிரகத்தோப்பைக் கர்த்தரின் வீட்டிலிருந்து எருசலேமுக்குப் புறம்பே கீதிரோன் ஆற்றுக்குக் கொண்டுபோய் அங்கேயதான ஆற்றோரத்திலே சுட்டெரித்துச் சாம்பலாக்கி அந்தத் தூளைச் சனபுத்திரருடைய பிரேதக் குழிகளின் மேற் போடுவித்து,

௯ ஸ்திரீகள் விக்கிரகத்தோப்பிற்குக் கூடாரங்களைச் செய்த கர்த்தரின் வீட்டிலுள்ள விபசாரமான புணர்ச்சிக்காரரின் அறைகளை இடித்துப் போடுவித்தான்.

௰ அவன் யூதாவின் பட்டணங்களிலிருக்கிற எல்லா ஆசாரியரையும் வரச்சொல்லிக் கேபாவைத் துவக்கிப் பெயெர்செபா மட்டும் ஆசாரியர்கள் தூபங்காட்டியிருந்த மேடைகளைத் தீட்டாக்கி, ஒலிமுக வாசல்களின் மேடைகளையும் பட்டணத்தின் வாசலுட்பிரவேசிக்கிறவனுக்கு இடதுபுறமாயிருக்கிற பட்டணத் தலைவனாகிய யோசுவின் வாசற்படியிலிருந்ததையும் இடிப்பித்தான்.

௰௧ மேடைகளின் ஆசாரியர்களோவென்றால் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேற் பலியிடாமல் தங்கள் சகோதரருக்குள்ளே புளிப்பில்லா அப்பங்களைப் போசிக்கிறதற்கு மாத்திரம் உத்தாரம்பெற்றார்கள்.

௰௨ ஒருவரும் மோளேகுக்கென்று தனது குமாரனையாகிலும் தனது குமாரத்தியை யாகிலும் அக்கினியைமிதிக்கப்பண்ணாதபடிக்கு இன்னோம் புத்திரரின் பள்ளத்தாக்கிலிருக்கிற தோப்பேத்தென்ற தலத்தையும் அவன் தீட்டாக்கி,

௰௩ கர்த்தரின் வீட்டிற்குட்போகிற முனையருகில் பர்வாரிமிலிருக்கிற நாத்தான் மேலேக்கென்ற பிரதானியின் அறைவீட்டண்டை யூதாவின் இராசாக்கள் சூரியனுக்கென்று வைத்திருந்த குதிரைகளை யகற்றிச் சூரியனின் இரதங்களை யக்கினியாற் சுட்டெரித்தான்.

௰௪ யூதாவின் இராசாக்கள் உண்டாக்கின ஆகாசுடைய மேல்வீட்டின் மேலிருக்கிறதுமான பலிபீடங்களையும், மனாசே கர்த்தருடைய வீட்டின் இரண்டு பிராகாரங்களிலும் உண்டாக்கின பலிபீடங்களையும் இராசா இடித்து, அவைகளின் தூளைய ங்கேயிருந்தெடுத்துக் கீதரோன் ஆற்றிற் கொட்டுவித்தான்.

௰௫ எருசலேமுக்கெதிரே மஸ்கீத்மலையின் வலதுபுறத்திலே இஸ்ரவேலின் இராசாவாகிய சாலோமோன் சீதோனியரின் அருவருப்பாகிய அஸ்தரோத்திற்கும் மோவாபியரின் அருவருப்பாகிய காமோசுக்கும் அம்மோனபுத்திரரின் அருவருப்பாகிய மில்கோமுக்குங் கட்டியிருந்த மேடைகளையும் இராசா தீட்டாக்கி,

௰௬ சிலைகளையுடைத்து விக்கிரகத்தோப்புகளை நிர்மூலமாக்கி அவைகளின் ஸ்தலத்தை மனுஷரின் எலும்புகளால் நிரப்புவித்தான்.

௰௭ இஸ்ரவேலைப் பாவஞ்செய்யப்பண்ணின நேபாத்தின் குமாரனாகிய எரோபெயாம் பெத்தேலிலுண்டாக்கியிருந்த பலிபீடத்தையும் மேடையையும் அவ்விடன்டையும் அவன் இடித்து அந்தமேடையைச் சுட்டெரித்துத் தூளாக்கி விக்கிரகத் தோப்பைச் சுட்டுப்போட்டான்.

௰௮ யோசியா திரும்பிப்பார்க்கிறபோது அங்கேயந்த மலையிலிருக்கிற கல்லறைகளைக் கண்டு ஆட்களையனுப்பி அந்தக் கல்லறைகளிலுள்ள எலும்புகளையெடுத்துவரப் பண்ணி, இப்படிவருமென்று கூப்பிட்ட பராபரனுடைய மனுஷன் கூப்பிட்டுச் சொன்ன கர்த்தருடைய வார்த்தையின்படியே அவைகளை யந்தப் பலிபீடத்தின்மேலே சுட்டெரித்து அதைத் தீட்டாக்கினான்.

௰௯ அப்போது அவன், நான் காணுகிற அந்தக் குறிப்பென்ன? என்று கேட்டதற்கு, அந்தப் பட்டணத்தின் மனுஷர் அவனுடனே, அது யூதாவிலிருந்துவந்து, நீர் செய்த இந்தக் கிரியைகளைப் பெத்தேலின் பலிபீடத்திற்கு விரோதமாய்க் கூப்பிட்டறிவித்த பராபரனுடைய மனுஷனின் கல்லறையென்றார்கள்.

௨௰ அப்போது அவன், அவனிருக்கட்டும். ஒருவரும் அவன் எலும்புகளைத் தொடவேண்டாமென்றான்: அப்படியே யவன் எலும்புகளைச் சமாரியாவிலிருந்து வந்த தீர்க்கதரிசியின் எலும்புகளோடுங் கூடத் தப்புவித்தார்கள்.

௨௰௧ கோபமுண்டாக்க இஸ்ரவேலின் இராசாக்கள் சமாரியாவின் பட்டணங்களிலுண்டாயிருந்த மேடைகளின் வீடுகளையுமெல்லாம் யோசியா அகற்றிப் பெத்தேலிலே தான்செய்த செய்கைகளுக்கொத்தபடியெல்லாம் அவைகளுக்குச் செய்து,

௨௰௨ அவ்விடங்களிலிருக்கிற மேடைகளின் ஆசாரியர்களையெல்லாம் பலிபீடங்களின்மேலே கொன்றுபோட்டு, அவைகளின்மேல் மனுஷரின் எலும்புகளைச் சுட்டெரித்து, எருசலேமுக்குத் திரும்பினான்.

௨௰௩ பிற்பாடு இராசா எல்லாச் சனத்திற்கும் இந்த உடம்படிக்கையின் புஸ்தகத்திலே எழுதியிருக்கிறபடியே உங்கள் பரா

பர்ளுகியகர்த்தருக்குப் பஸ்காவையாசரியுங்களென்றுகற்பித்தான்.

௨௨ இஸ்ரவேலை நியாயம்விசாரித்த நியாயாதிபதிகளின் நாட்களைத்துவக்கி இஸ்ரவேலின் இராசாக்களையூதாவின் இராசாக்களுடைய சகலநாட்களிலும் இந்தப்பஸ்காவைப்போலொத்தது ஆசரிக்கப்பட்டதேயில்லை.

௨௩ இராசாவாகிய யோசியாவின் பதினெட்டாம்வருஷத்திலேதானென்றல் இந்தப்பஸ்கா எருசலேமிலே கர்த்தருக்காசரிக்கப்பட்டது.

௨௪ ஆசாரியனாகிய இலக்கியாகர்த்தருடையவீட்டிலேகண்டுபிடித்த புஸ்தகத்திலெழுதியிருக்கிற நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை நிறைவேற்றும்படிக்கு யோசியா அஞ்சனக்காரரையுங்குறிசொல்லுகிறவர்களையுஞ் சுரூபங்களையும் நாகலானதேவர்களையும் யூததேசத்திலும் எருசலேமிலுங்காணப்பட்ட எல்லா அருவருப்புகளையுமுதலற்றுப்போகப் பண்ணினான்.

௨௫ கர்த்தரண்டைக்குத்தன்முழு இருதயத்தாலுந்தன்முழு ஆத்துமத்தாலுந்தன்முழுபலத்திலுந்திரும்பி மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கொத்தபடியெல்லாஞ்செய்தவனாகிய அவனைப்போலொத்த இராசா அவனுக்குமுன்னிருந்ததுமில்லை அவனுக்குப்பின்னெழும்பினதுமில்லை.

௨௬ ஆகிலும் மனாசே கர்த்தருக்குக்கோபமுண்டாக்கின சகலகாரியங்களினிமித்தமும் அவர்யூதாவின்மேலமூண்டதம்முடையமகாகோபத்தினுக்கிரத்தைவிட்டுத்திரும்பாமல்,

௨௭ நாம் இஸ்ரவேலைத்தள்ளிவிட்டதுபோலேயூதாவையும் நமதுமுகத்தைவிட்டுத்தள்ளி, நாந்தெரிந்துகொண்டிருந்த இந்த எருசலேம்பட்டணத்தையும், நம்முடையநாமந்தங்கியிருக்குமென்றுநாஞ்சொன்ன வீட்டையும் வெறுத்துவிடுவோமென்றுகர்த்தர்சொன்னார்.

௨௮ யோசியாவின் மற்றவர்த்தமானங்களும் அவன்செய்தவைகளும் யூதாவுடைய இராசாக்களின்நாளாகமப்புஸ்தகத்திலல்லவோ எழுதியிருக்கின்றது.

௨௯ அவன்நாட்களில் எகிப்தின் இராசாவாகியபார்வோன்நேகோ அசீரின் இராசாவுக்குவிரோதமாய் ஐபிறாத்நதிக்கெதிர்ப்ப போகிறபோது இராசாவாகிய யோசியா அவனுக்கெதிராகப்புறப்பட்டான். அவன் இவனைக்காண்கிறபோதேமெகிதோவிலே, இவனை அவனைமேதிகோலிலே கொன்றுபோட்டான்.

௩௰ அவனுடைய ஊழியக்காரர்மரணமடைந்த அவனை இரதத்தின்மேலேற்றிமெகிதோவிலிருந்து எருசலேமுக்குக்கொண்டுவந்து, அவனை அவன்கல்லறையில அடக்கம்பண்ணினார்கள். அப்போது தேசத்தின்சனம் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசையழைத்து, அவனை அபிஷேகம்பண்ணி, அவனையவன் தகப்பன்ஸ்தலத்தில இராசாவாக்கினார்கள்.

யோவாகாஸ்யோயாக்கீமென்றயூதாவுடைய இராசாக்களின்செய்தி.

௩௧ யோவாகாஸ் இராசாவாகிறபோது இருபத்துமூன்றுவயதாயிருந்து, மூன்றுமாதம் எருசலேமில அரசாண்டான். லீப்னாவூரானாகிய எரேமியாவின்குமாரத்தியான அவன்தாயின்பேர் அமுத்தாள்.

௩௨ அவன்தன்பிதாக்கள் செய்தபடியெல்லாங்கர்த்தரின்பார்வைக்குப்பொல்லாப்பானதைச்செய்தான்.

௩௩ ஆனால் அவன் எருசலேமிலரசாளாதபடிக்குப்பார்வோன்நேகோ அவனை ஆமாத்தேசமானரிப்லாவிலே பிடித்துக்கட்டுவித்துத்தேசத்தின்மேல நூறு தாலந்து வெள்ளியையும் ஒருதாலந்து பொன்னையும் அபராதமாகச்சுமத்தி,

௩௪ யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமையவன்தகப்பனாகிய யோசியாவின்ஸ்தலத்தில இராசாவாக்வைத்து, அவன்பேரை யோயாக்கீமென்று மாற்றி, யோவாகாசைக்கொண்டுபோனான். இவன் எகிப்துவிலேவந்து அங்கே மரணமடைந்தான்.

௩௫ அந்தவெள்ளியையும்பொன்னையும் யோயாக்கீம்பார்வோனுக்குக்கொடுத்தான். ஆனாற்பார்வோனுடைய கற்பனையின்படியந்தவெள்ளியைக்கொடுக்கும்படிக்கு, அவன்தேசத்தைமதித்து அவரவருடையதிட்டப்படியந்த வெள்ளியையும் பொன்னையும்பார்வோன்நேகோவுக்குக்கொடுக்கத்தக்கதாகத்தேசச்சனத்தினகையிலே வாங்கினான்.

௩௬ யோயாக்கீம் இராசாவாகிறபோது இருபத்தைந்துவயதாயிருந்து, பதினொருவருஷம் எருசலேமில அரசாண்டான். ரூமாவூரானாகியபெதாயாவின் குமாரத்தியாகிய அவன்தாயின்பேர்செபுதாள்.

௩௭ அவன் தன்பிதாக்கள் செய்தபடியெல்லாங்கர்த்தரின்பார்வைக்குப்பொல்லாப்பானதைச்செய்தான்.

௨௪. அதிகாரம்.

யூதாவின் இராசாவாகிய யோயாக்கீமின் மற்றநடபடி.

அவனாட்களிலே பாபேலின் இராசாவாகிய நேபுகாத்நேத்சார் எறிவந்தான். இவனியோயாக்கீம் மூன்றுவருஷம் சேவிக்கிறவனாயிருந்து, அதினபிறகுபுரண்டு இவனைவிட்டுமருவிழுந்தான்.

௨ அப்போது கர்த்தர் கல்தேயரின்தண்டுகளையுஞ்சீரியரின் தண்டுகளையும் மோவாபியரின் தண்டுகளையும் அம்மோன் புத்திரின் தண்டுகளையும் அவனமேலவரவிட்டார். தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக்கொண்டு, கர்த்தர் சொன்னவார்த்தையினபடியே அவர் அவைகளை யூதாவின்மேல அதையழிக்கும் படிக்குவரவிட்டார்.

௩ மனாசேயனுடைய எல்லாச்செய்கைகளிலும் பண்ணினபாவங்களினிமித்தம் யூதாவைத்தமது முகத்தைவிட்டுவிலக்க அப்படிகர்த்தருடைய கட்டளையினபடிநடந்தது.

௪ அவனசிநதிபபோடட குற்றமில்லாத இரத்தத்திற்காகவும், எருசலேமைக் குற்றமில்லாத இரத்தத்தால் நிரப்பினதற்காகவுங்கூட கர்த்தர் மன்னிக்கச்சித்தமில்லாதிருந்தார்.

௫ யோயாக்கீமின் மற்றவர்த்தமானங்களும் அவன் செய்ததனைத்தையும் யூதாவுடைய இராசாக்களின் நாளாகமப்புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௬ யோயாக்கீம் தனபிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவன குமாரனாகிய யோயாகீமே அவன ஸ்தலத்தில இராசாவானான்.

௭ ஆனால எகிப்தின இராசா அப்புறந்தன்தேசத்திலிருந்து புறப்பட்டுவந்ததில்லை. ஏனெனில எகிப்தின இராசாவுக்கு எகிப்தின நதியைத்துவக்கி ஐபிராத்து நதிமட்டுமிருந்த யாவையும் பாபேலின இராசா பிடித்திருந்தான்.

யூதாவின் இராசாவாகிய யோயாகீனும் யூதரிற் பிரதானமான மனுஷரும் பாபேலின சிறையிருப்புக்குப் போனது.

௮ யோயாகீன் இராசாவாகிறபோது பதினெட்டு வயதாயிருந்து, எருசலேமிலே மூன்றுமாத மரசாண்டான. எருசலேமூராகிய எல்நாத்தானின்குமாரத்தியான அவன தாயினபேர் நெகுஸ்தாள்.

௯ அவன தன்தகப்பனசெய்தபடியெல்லாங் கர்த்தரின்பார்வைக்குப்பொல்லாப்பானதைச்செய்தான்.

௰ அக்காலத்திலேபாபேலின இராசாவாகியநேபுகாத்நேத்சாரின ஊழியக்காரர் எருசலேமுக்கெதிரவந்தார்கள். பட்டணம முற்றிக்கைபோடப்பட்டது.

௰௧ பாபேலின இராசாவாகிய நேபுகாத்நேத்சாருடைய ஊழியக்காரர் பட்டணத்தைமுற்றிக்கைபோட்டபின் அவனதானுமதற்குவிரோதமாய்வந்தான்.

௰௨ அப்போது யூதாவின இராசாவாகிய யோயாகீனும அவன்தாயும அவனஊழியக்காரரும அவனுடைய பிரபுக்களும பிரதானிகளும பாபேலின இராசாவண்டைக்குப்புறப்பட்டார்கள அவனைப்பாபேலின இராசாதனை இராசரியபார்த்தின எட்டாமவருஷத்திலேபிடித்துக்கொண்டு,

௰௩ அங்கேயிருந்து கர்த்தருடையவீட்டின சகலபொக்கிஷங்களையும இராசாவுடையவீட்டினபொக்கிஷங்களையும எடுத்துக்கொண்டு, இஸ்ரவேலின இராசாவாகியசாலொமோன கர்த்தரின்தேவாலயத்திலுண்டாக்கியிருந்த பொன்னான தட்டுமுட்டுகளையெல்லாங் கர்த்தர் சொல்லியிருந்தபடியேயுடைத்துப்போட்டு,

௰௪ எருசலேமியாரனைவரும எல்லாப்பிரபுக்களும எல்லாப்பலசாலிகளுமாகிய பதினாயிரம்பேரையும எல்லாத்தச்சரையுங் கருமாரையுஞ்சிறைபிடித்துப்போனான். தேசத்தில நீசச்சனமேயல்லாமல வேறொருவரும மீதியானதில்லை.

௰௫ அவன யோயாகீனையும இராசாவினதாயையும இராசாவினஸ்திரிகளையும அவன பிரதானிகளையுந்தேசத்திற்பலத்தவர்களையும எருசலேமிலிருந்துபாபேலுக்குச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்.

௰௬ இப்படியே பாபேலின இராசா பலத்த சகலமனுஷராகிய ஏழாயிரம்பேரையுந் தச்சருங் கருமாருமாகிய ஆயிரம்பேரையும நலலசேவகராகிய சகல பராக்கிரமரையும பாபேலுக்குச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்.

௰௭ அவனுக்குப்பதிலாகப்பாபேலின இராசா அவன சிறியதகப்பனாகிய மத்தனியாவை இராசாவாக வைத்து அவனுக்குச்சிதேக்கியாவென்று மறுபேரிட்டான.

சிதேக்கியா யூதாவினமேல இராசாவானது.

௰௮ சிதேக்கியா இராசாவாகிறபோது இருபத்தொருவயதாயிருந்து பதினொரு

வருஷம் எருசலேமிலே அரசாண்டான். லிப்னா ஊரானாகிய எரேமியாவின் குமாரத்தியான அவன் தாயின்பேர் அமுத்தாள்.

௰௯ யோயாக்கீம் செய்தபடியெல்லாம் அவன் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

௨௰ ஏனென்றால் எருசலேமையும் யூதாவையுங் கர்த்தர் தமமுடைய முகத்தைவிட்டுத் தள்ளித் தீருமளவும் அவைகளின்மேல் உள்ள அவருடைய கோபத்தினால் இப்படி நடந்தது. நசிதேக்கியா பாபேலின் இராசாவைவிட்டு மருளவிழுந்தான்.

௨௫. அதிகாரம்.

சிதேக்கியாவின் நாட்களில் எருசலேம் அழிந்து யூதர் பாபேலோனிய சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்பட்டது.

அவன் இராச்சியபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே வென்றும் பாபேலின் இராசாவாகிய நேபுகாத்நேச்சார் அவனும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து அதற்கெதிரே பாளயமிறங்கிச் சுற்றிலும் அதற்கு எதிரே கொத்தளங்களைக் கட்டினார்கள்.

௨ அப்படியே பட்டணம் சிதேக்கியா இராசாவின் பதினோராம் வருஷமட்டும் முற்றிகைப்போடப்பட்டிருந்தது.

௩ நாலாம் மாதம் ஒன்பதாந்தேதியிலே பஞ்சம் பட்டணத்திலே மிகுந்து தேசத்தின் சனத்திற்கு ஆகாரமில்லாதே போனபோதாவெனில்,

௪ பட்டணம் திறந்துவிடப்பட்டது. அப்போது யுத்தமனுஷரெல்லாரும் கல்தேயர் பட்டணத்தைச் சூழ்ந்திருக்கக்கொள்ள இராத்திரிகாலத்திலே இராசாவுடைய தோட்டத்தின் வழியே இரண்டு மதில்களுக்கு நடுவான வாசலாலோடி அவர்களும் இராசாவுமாய் வயல் வெளிவழியே புறப்பட்டுப்போனார்கள்.

௫ ஆனால் கல்தேயரின் இராணுவத்தார் இராசாவைப் பின்தொடர்ந்து எரிகோவின் வயல்வெளிகளில் அவனைக் கிட்டவந்தார்கள். அப்போது அவன் இராணுவமெல்லாம் அவனைவிட்டுச் சிதறிப்போயிற்று.

௬ அவர்கள் இராசாவைப் பிடித்து அவனை ரிப்லாவிலிருக்கிற பாபேலின் இராசாவண்டைக்குக் கொண்டுபோய் அவனை நியாயந்தீர்த்து,

௭ சிதேக்கியாவின் குமாரரை அவன் கண்களுக்கு முன்பாக வெட்டிச் சிதேக்கியாவின் கண்களைக் குருடாக்கி அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப்போட்டு அவனைப் பாபேலுக்குக் கொண்டுபோனார்கள்.

௮ ஐந்தாம் மாதம் ஏழாந்தேதியிலே நேபுகாத்நேச்சாரென்ற பாபேலுடைய இராசாவின் பத்தொன்பதாம் வருஷத்திலே பாபேலுடைய இராசாவின் ஊழியக்காரனாகிய நேபுசார்தானென்ற தலையாரிகளின் அதிபதி எருசலேமுக்கு வந்து,

௯ கர்த்தரின் வீட்டையும் இராசாவின் வீட்டையும் எருசலேமின் சகல வீடுகளாகிய பெரிய வீடுகளெல்லாவற்றையும் அக்கினியாற் சுட்டெரித்துப்போட்டான்.

௰ தலையாரிகளின் அதிபதியோடிருக்கிற கல்தேயரின் இராணுவமெல்லாம் எருசலேமைச் சுற்றிலுமிருந்த அலங்கங்களை இடித்துப்போட்டார்கள்.

௰௧ பட்டணத்தில் மீதியான மற்றச் சனத்தையும் பாபேலுடைய இராசாவின் வசமாக ஓடிவந்துவிட்டவர்களையும் மற்றச் சனக்கூட்டத்தையுந் தலையாரிகளின் தலைவனாகிய நேபுசார்தான் சிறைகளாகக் கொண்டுபோய்,

௰௨ தேசத்தின் மானதேசத்தாரிற் சிலரைத் திராட்சத்தோட்டக்காரராகவும் பயிர்க்குடிகளாகவும் விட்டுவைத்தான்.

௰௩ கர்த்தருடைய வீட்டிலிருந்த வெண்கலத் தூண்களையும் அதிலிருந்த ஆதாரங்களையுங் கர்த்தருடைய வீட்டிலிருந்த வெண்கலக்கடல் தொட்டியையுங் கல்தேயர் உடைத்துப்போட்டு அவைகளின் வெண்கலத்தைப் பாபேலுக்கெடுத்துக்கொண்டுபோய்,

௰௪ செப்புச்சட்டிகளையுஞ் சாம்பலெடுக்கும் ஆல்கக்கரண்டிகளையும், வெட்டுக்கத்திகளையுந் தூபக்கலசங்களையும் ஆராதனை செய்யப்பட்ட சகல வெண்கலமுட்டுகளையும் எடுத்துக்கொண்டார்கள்.

௰௫ சுத்தபொன்னும் சுத்தவெள்ளியுமான தூபக்கலசங்களையுங் கலசங்களையுந் தலையாரிகளின் அதிபதியெடுத்துக்கொண்டான்.

௰௬ சாலோமோன் கர்த்தருடைய வீட்டிற்காகப் பண்ணுவித்த அந்த இரண்டு தூண்களும் ஒரு கடல்தொட்டியும் ஆதாரங்களுமாகிய அந்தச் சகல முட்டுகளுடைய வெண்கலத்திற்கு மதிப்பில்லை.

௰௭ ஒரு தூண் பதினெட்டு முழ உசத்தியாயிருந்தது. அதின்மேல் அதற்கு மூன்று முழ உசத்தியான வெண்கல முடியுண்டாயிருந்தது. குமிளிலே சுற்றிலும்

ந்த பின்னலும் மாதளம்பழங்களும் எல்லாம் வெண்கலமாயிருந்தது. மற்றத் தூணும் அதின் பின்னலும் அதற்குச் சரியாயிருந்தது.

௧௮ தலையாரிகளின் அதிபதி பிரதான ஆசாரியனாகிய சேராயாவையும் இரண்டாம் ஆசாரியனாகிய செப்பனியாவையும் வாசற்படியின் மூன்று காவற்காரரையும் பிடித்தான்.

௧௯ பட்டணத்திலேயெனில் அவன் யுத்தமனுஷரின் விசாரிப்புக்காரனாகிய பிரதானி ஒருவனையும் இராசாவின் மந்திரிகளிற் பட்டணத்தில் அகப்பட்ட ஐந்து பேரையுந் தேசத்தின் சனத்தைச் சேவகம் எழுதுகிற தலையான இராணுவச்சம்பிரதியையுந் தேசச்சனத்திலே பட்டணத்திற் கப்பட்ட அறுபது பேரையும் பிடித்தான்.

௨௰ அவர்களைத் தலையாரிகளின் அதிபதியாகிய நேபுசார்தான் பிடித்து ரிப்லாவிலிருக்கிற பாபேலின் இராசாவண்டைக்குக் கொண்டுபோனான்.

௨௧ அவர்களைப் பாபேலின் இராசா ஆமாத்தேசத்தின் பட்டணமான ரிப்லாவிலே வெட்டிக் கொன்றுபோட்டான். இப்படியே யூதர் தங்கள் தேசத்திலிருந்து சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

௨௨ ஆனாற் பாபேலின் இராசாவாகிய நேபுகாத்நேத்சார் யூதேயாதேசத்தில் மீதியாக வைத்த சனத்தின்மேல் அவன் சாப்பானின் குமாரனாகிய அகீகாமின் மகன் கெதலியாவை யதிகாரியாக வைத்தான்.

௨௩ பாபேலின் இராசா கெதலியாவை யதிகாரியாக வைத்ததைச் சகல இராணுவச்சேர்வைக்காரரும், அவர்களுடைய மனுஷரும் கேட்டபோதோவெனில், அவர்கள் மிஸ்பாவிலிருக்கிற கெதலியாவண்டையிலே வந்தார்கள். ஆரெனில், நெத்தனியாவின் குமாரன் இஸ்மவேலுங், காரேயாவின் குமாரன் யோகனானும், நெத்தோபாத்தியனாகிய தன்கூமேத்தின் குமாரன் சேராயாவும், மாகாத்தியனான ஒருவனுடைய குமாரன் யாசனியாவும், அவர்களும் அவர்கள் மனுஷருமாயத்தானே.

௨௪ அப்போது கெதலியா அவர்களுக்கும் அவர்கள் மனுஷருக்கும் ஆணையிட்டு, அவர்களுடனே, நீங்கள் கல்தேயரைச் சேவிக்கப் பயப்படவேண்டாம். தேசத்திலிருந்து பாபேலின் இராசாவைச் சேவியுங்கள். அப்போது உங்களுக்கு நன்மையாகுமென்றான்.

௨௫ ஏழாமாதத்திலேயோவென்றால், இராசவித்திலே பிறந்த எலிசாமாவின் குமாரனாகிய நெத்தனியாவின் மகன் இஸ்மவேல் பத்து மனுஷரோடேகூட வந்து, கெதலியாவையும் அவனோடே மிஸ்பாவிலிருந்த யூதரையுங் கல்தேயரையும் வெட்டிக் கொன்றுபோட்டான்.

௨௬ அப்போது சிறியோரும் பெரியோருமாகிய சனம் அனைத்தும் இராணுவச்சேர்வைக்காரரும் எழுந்து புறப்பட்டு, எகிப்திற்கு வந்தார்கள். ஏனெனிற் கல்தேயருக்குப் பயப்பட்டிருந்தார்கள்.

௨௭ யூதாவின் இராசாவாகிய யோயாக்கீனுடைய சிறையிருப்பின் முப்பத்தேழாம் வருஷம் பன்னிரண்டாமாதம் இருபத்தேழாந்தேதியிலே சம்பவித்ததேதென்றால், எவில்மெரோதாகென்கிற பாபேலின் இராசா, தான் இராசாவான வருஷத்திலே யூதாவின் இராசாவாகிய யோயாக்கீனின் தலையையுயர்த்தி அவனைக் காவல்வீட்டிலிருந்து புறப்படப்பண்ணி,

௨௮ அவனோடே அன்பாய்ப் பேசி, அவனுடைய ஆசனத்தைத் தன்னோடே பாபேலிலிருந்த இராசாக்களின் ஆசனங்களுக்கு உயர்மாக வைத்து,

௨௯ அவனுடைய காவல்வீட்டு வஸ்திரங்களை மாற்றினான். அவன் உயிரோடிருந்த சகல நாளும் நித்தம் இவனுக்குமுன்பாக அப்பஞ்சாப்பிட்டான்.

௩௰ அவனுடைய செலவுக்கோவெனில், அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவனுக்கு இராசாவினால் அனுதினக்கட்டளையான திட்டம் எப்போதும் அனுதினமுங் கொடுக்கப்பட்டது.

இராசாக்களுடைய இரண்டாம் புஸ்தகம்

முடிந்தது முற்றும்.

நாளாகமத்தின்

முதலாம்புஸ்தகம்.

க. அதிகாரம்.

ஆதாம் முதற்கொண்டு யாக்கோபுமட்டு மிருந்த கோத்திரப்பிதாக்களின் வம்ச வரிசை.

ஆதாம். சேத், ஏனோஸ்,

உ கேனான், மகலாலெயேல், யாரேத்,

ங ஏனோக், மெத்துசலா, லாமேக்,

ச நோவா, சேம், காம், யாபேத்,

ரு யாபேத்துக்கிருந்தகுமாரர்கோமேர், மாகோக் மாதாய், யாபான், தூபால், மேசேக், தீராஸ் என்பவர்கள்.

சா கோமேரின் குமாரர் அஸ்கேனாஸ், திப்பாத், தோகர்மா என்பவர்கள்.

எ யாபானின்குமாரர் எலீசா, தர்ஸீஸ் கித்தீம், தொதானிமென்பவர்கள்.

அ காமின் குமாரர் கூஸ், மிஸ்ராயிம், பூத், கானானென்பவர்கள்.

கூ கூஷின் குமாரர் சேபா, ஆவிலா, சப்தா, ராமா, சப்தேகாவென்பவர்கள். ராமாவின்குமாரர் சேபா, தேதானென்பவர்கள்.

ய கூஸ் நிம்ரோதைப்பெற்றான். இவன் பூமியிலே பராக்கிரமசாலியாகத் துவக்கினான்.

யக மிஸ்ராயிம், லூதியரையும். ஆனாமியரையும், லெகாபியரையும், நப்தூகியரையும்.

யஉ பத்ரூசியரையும், பெலிஸ்தர்பிறந்த கஸ்லூகியரையுங்கப்தோரியரையும் பெற்றான்.

யங கானான் சீதோனென்ற தன்மூத்த குமாரனையும் ஏத்தையும்,

யச எபூசியரையும், எமோரியரையும், கிர்காசியரையும்,

யரு ஏவியரையும், அர்கியரையும், சீனியரையும்.

யசா அர்வாதியரையுஞ், செமாரியரையும், ஆமாத்தியரையும்பெற்றான்.

யஎ சேமின்புத்திரர் ஏலாம், அசூர் அர்பக்சாத், லூத், ஆராம், ஊஸ், ஊல், கேத்தேர், மேசெக்கென்பவர்கள்.

யஅ அர்பக்சாத் சாலாவைப் பெற்றான். சாலா ஏபேரைப்பெற்றான்.

யகூ ஏபேருக்கு இரண்டுகுமாரர்பிறந்தார்கள். ஒருவன்பேர் பேலேக், ஏனெனில் அவன் நாட்களிலே பூமி பிரிவுபட்டது அவன்சகோதரன்பேர் யோக்தான்.

உய யோக்தான், அல்மோதாதையுஞ், சேலேப்பையும் ஆத்சர்மாவேதையும், யேராகையும்,

உக அதோராமையும், ஊசாலையும், திக்லாவையும்,

உஉ ஏபாலையும், அபிமாவேலையும், சேபாவையும்,

உங ஓப்பீரையும், ஆவிலாவையும், யோபாபையும் பெற்றான். இவர்களெல்லாரும் யோக்தானின்குமாரர்.

உச சேம், அர்பக்சாத், சாலா,

உரு ஏபேர், பெலேக், ரெகூ,

உசா செரூக், நாகோர், தாரா,

உஎ ஆபிரகாமாகிய ஆபிராம்,

உஅ ஆபிரகாமின் குமாரர் ஈசாக்கும் இஸ்மவேலுமென்பவர்கள்.

உகூ இவர்களுடைய சந்ததிகளாவன, இஸ்மவேலின் மூத்தகுமாரனாகிய நெபாயோத், கேதார், அத்பெயேல், மிப்சாம்,

ஙய மிஷ்மா, தூமா, மாசா, ஆதாத், தேமா,

ஙக எத்தூர், நாபபீஸ், கெத்மாவுந்தானே. இவர்கள் இஸ்மவேலின்குமாரர்.

ஙஉ ஆபிரகாமின் வைப்பாட்டியாகிய கேத்தூராள்பெற்ற குமாரர் சிம்ரான், யொக்சான், மேதான் மீதியான், இஸ்பாக். சூவாவென்பவர்கள். யொக்சானின்குமாரர் சேபா, தேதானென்றவர்கள்.

ஙங மீதியானின் குமாரர் ஏப்பா, ஏபேர், ஆனோக், அபீதா, எல்தாகாவென்பவர்கள். இவர்களெல்லாரும் கேத்தூராளின் புத்திரர்.

ஙச ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான். ஈசாக்கின்குமாரர் ஏசாவும் இஸ்ரவேலுந்தானே.

ஏசாவின் சந்ததியும் ஏதோமையாண்டவர்களின் பேர்டாப்பும்.

௩௫ ஏசாவின் குமாரர் எலிப்பாஸ், ரெகுவேல், எகூஸ், யாலாம், கோராகென்பவர்கள்.

௩௬ எலிப்பாசின் குமாரர் தேமான், ஓமார், செப்பி, காத்தாம், கெனாஸ், திம்னா, அமலேக்கென்றவர்கள்.

௩௭ ரெகுவேலின் குமாரர் நாகாத், செராக், சம்மா, மிசாவென்றவர்கள்.

௩௮ சேயீரின் குமாரர் லோத்தான், சோபால், சிபெயோன், ஆனா, திசோன், எத்சேர், திசானென்பவர்கள்.

௩௯ லோத்தானின் குமாரர் ஓரி, ஓமாமென்றவர்கள் லோத்தானின் சகோதரி திம்னாளென்றவள்.

௪௰ சோபாலின் குமாரர் அல்யான், மனாகாத், ஏபால், செப்பி, ஓனாமென்றவர்கள். சிபெயோனின் குமாரர் ஆயா ஆனாளென்றவர்கள்.

௪௧ ஆனாவின் குமாரரில் ஒருவன் திசோனென்றவன். திசோனின் குமாரர் அம்ரான், எஸ்பான், இத்ரான், கேரானென்றவர்கள்.

௪௨ எத்சேரின் குமாரர் பில்லான், சாவான், யாக்கானென்றவர்கள். திசானின் குமாரர் ஊஸ் ஆரானென்றவர்கள்.

௪௩ இஸ்ரவேல் புத்திரரை யாதொரு இராசா ஆளாததற்கு முன்னே ஏதோம் தேசத்தில் அரசாண்ட இராசாக்களாவன், பேயோரின் குமாரன் பேலாவென்றவன். அவன் பட்டணத்தின் பேர் தின்காபா.

௪௪ பேலா மரித்தபின் போஸ்றா ஊரானாகிய சேராகின் குமாரன் யோவாப் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௪௫ யோவாப் மரித்தபின் தேமானியரின் தேசத்தானாகிய ஊசாம் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௪௬ ஊசாம் மரித்தபின் பேதாதின் குமாரன் ஆதாத் அவன் ஸ்தலத்தில் இராசாவானான். இவன் மீதியானியரை மோவாபின் வெளியிலே முறியடித்தவன். இவன் பட்டணத்தின் பேர் ஆவீத்.

௪௭ ஆதாத் மரித்தபின் மஸ்ரேக்கா ஊரானாகிய சம்லா அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௪௮ சம்லா மரித்தபின் நதியோரமான ரெகோபோத்தானாகிய சவுல் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௪௯ சவுல் மரித்தபின் அக்போரின் குமாரன் பால்கானான் அவன் ஸ்தலத்திலே இராசாவானான்.

௫௰ பால்கானான் மரித்தபின் ஆதாத் அவன் ஸ்தலத்தில் இராசாவானான். இவன் பட்டணத்தின் பேர் பாகியென்பது. மேசகாபின் குமாரத்தியாகிய மாத்திரேத்தின் மகளான அவன் பெண்சாதியின் பேர் மெகேதபேல்.

௫௧ ஆதாத் மரித்தபின் ஏதோமில் ஏற்பட்ட அதிபதிகளாவது: திம்னா அதிபதி, அல்யா அதிபதி, எத்தேத் அதிபதி,

௫௨ அகோலிபாமா அதிபதி, ஏலா அதிபதி, பீனோன் அதிபதி,

௫௩ கேனாஸ் அதிபதி, தேமான் அதிபதி, மிப்சார் அதிபதி,

௫௪ மக்தியேல் அதிபதி, ஈராம் அதிபதி, இவர்கள் ஏதோமின் அதிபதிகளானவர்கள்.

உ. அதிகாரம்.

யாக்கோபின் குமாரனாகிய யூதாவின் சந்ததி.

இஸ்ரவேலின் குமாரர், ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன்,

௨ தாண், யோசேப், பென்யமீன், நப்தலி, காத், ஆசேரென்றவர்கள்.

௩ யூதாவின் குமாரர், ஏர், ஓனான், சேலா, என்றவர்கள். இந்த மூன்று குமாரர் சூவாவின் மகளான கானானிய ஸ்திரியினிடத்தில் அவனுக்குப் பிறந்தார்கள். ஏர் என்ற யூதாவின் மூத்த குமாரன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாதவனானபடியால் அவர் அவனைக் கொன்றார்.

௪ அவன் மருமகளாகிய தாமார், அவனுக்குப் பேரேசையும், சேராகையும் பெற்றாள். யூதாவின் குமாரரெல்லாம் ஐந்துபேர்.

௫ பேரேசின் குமாரர், எஸ்ரோன், ஆமூலென்றவர்கள்.

௬ சேராகின் குமாரரெல்லாம், சிம்ரி, ஏத்தான், ஏமான், கல்கோல், தாராவென்ற ஐந்துபேர்.

௭ சங்காரத்திற்கு நியமிக்கப்பட்டதிலே துரோகம்பண்ணி இஸ்ரவேலைக் கலக்கப்பண்ணின ஆகாரென்றவன் கர்மீயின் புத்திரரிலொருவன்.

௮ ஏத்தானின் குமாரர், அசரீயா, முதலானவர்கள்.

௯ எஸ்ரோனுக்குப் பிறந்த குமாரர், எர்மெயேல், ராம், கெலூபா என்றவர்கள்.

௰ ராம் அம்மினதாபைப் பெற்றான். அம்மினதாப் யூதா புத்திரரின் பிரபுவாகிய நகசோனைப் பெற்றான்

௰௧ நக்சோன சல்மாவைப பெறறான. சல்மாபோவாசைபபெறறான.

௰௨ போவாஸ ஓபேதைப பெறறான. ஓபேத் ஈசாயியைபபெறறான.

௰௩ ஈசாய் தனமூத்தகுமாரன எலியாபையும, அபினதாப்பெனற இரண்டாங குமாரனையுஞ, சிமேயாவெனற மூனறாங குமாரனையும,

௰௪ நாத்தானேயேலெனற நாலாங்குமாரனையும, ரதாயியெனற ஐந்தாங்குமாரனையும,

௰௫ ஓத்சேமெனற ஆறாங குமாரனையுந, தாவீதெனற ஏழாங்குமாரனையும்பெறறான.

௰௬ அவர்கள சகோதரிகள செருயாள, அபிகாயிலெனறவர்கள. செருயாளின்குமாரர், அபிசாய், யோபாப் ஆசகேலெனற மூனறுபேர்.

௰௭ அபிகாயில அமாசாவைப்பெறறாள். அமாசாவின தகப்பன இஸமவேலியனாகிய ஏத்தேரெனறவன.

௰௮ எஸரோனின குமாரனகாலேப், எரீயோதெனனப்பட்ட தன பெண்சாதியாகிய அசுபாளாலே பெறறகுமாரர் ஏசேர், சோபாப், அர்தோனெனறவர்கள.

௰௯ அசுபாள செனறுபோனபின காலேப் எப்பிறாத்தைவிவாகமபண்ணினான. இவள அவனுக்கு ஊரைப்பெறறாள.

௨௰ ஊர் ஊரியைபபெறறான. ஊரி பெத்சாலெயேலைபபெறறான

௨௧ பிறபாடு எஸரோன கிலெயாத்தின தகப்பனாகிய மாகீரின்குமாரத்தியினிடத்தில உட்பிரவேசித்தான். தான அறுபதுவயதானபோது அவளை விவாகமபண்ணினான. இவள அவனுக்குச் செகுபைப பெறறாள.

௨௨ செகுப் யாவீரைப்பெறறான. இவனுக்குக் கிலெயாத் தேசத்தில இருபத்துமூனறு ஊர்களிருந்தது.

௨௩ கெசூரும ஆராமும யவீரின்கிராமங்களையுங் கெனாத்தும அதறகடுத்த கிராமங்களுமாகிய அறுபது ஊர்களையும அவர்களகைபிடிக்கிலவாங்கினார்கள. இவர்களெல்லாருங கிலெயாத்தின தகப்பனாகிய மாகீரின்குமாரர்.

௨௪ காலேபின ஊரான எப்பிறாத்தாவில எஸ்ரோன செனறுபோனபின எஸ்ரோனின்பெண்சாதியாகிய அபியாள அவனுக்குத் தெக்கோவாவின தகப்பனாகிய அசூரைப்பெறறாள.

௨௫ எஸ்ரோனுக்கு முதறபிறந்தயோர்மெயேலின குமாரர், ராம் எனறமூத்தவனும, பூனா ஓரேன ஓத்சேம், அகியா எனறவர்களுந்தானே.

௨௬ அத்தாரா ளெனறுபேருளள வேறொருபெண்சாதியும யோர்மெயேலுக்கிருந்தாள. இவள ஓனாமினதாய.

௨௭ யோர்மெயேலுக்கு முதறபிறந்த ராமின குமாரர், மாஸ, யாமின, ஏக்கேரெனறவர்கள.

௨௮ ஓனாமின குமாரர், சம்மாய, யாதாவெனறவர்கள. சம்மாயின குமாரர் நாதாப், அபிசூரெனறவர்கள.

௨௯ அபிசூருடையபெண்சாதியின்பேர்அபிகாயில, இவள அவனுக்கு அக்பானையும மோளிதையும்பெறறாள.

௩௰ நாதாபின்குமாரர், செலேத் அப்பாயிம எனறவர்கள. செலேத் குமாரரில்லாமலமரித்தான.

௩௧ அப்பாயிமின குமாரர், ஈசெயிமுதலானவர்கள. ஈசெயின்குமாரர், சேசானமுதலானவர்கள, சேசானின குமாரத்தி அக்லாய்.

௩௨ சம்மாயின சகோதரனாகிய யாதாவின குமாரர் ஏத்தேர், யோனத்தானெனறவர்கள. ஏத்தேர் குமாரரில்லாமல மரித்தான.

௩௩ யோனத்தானின்குமாரர், பேலேத், சாசா எனறவர்கள. இவர்கள யோர்மெயேலின புத்திரரானவர்கள.

௩௪ சேசானுக்குக்குமாரத்திகளேயல்லாமற், குமாரரில்லாதிருந்தார்கள. ஆகிலுஞ் சேசானுக்கு யர்காவெனறு பேருளள எகிப்திய வேலைக்காரனிருக்கையில,

௩௫ அவன தன குமாரத்தியைத் தன வேலைக்காரனாகிய யர்காவுக்குக கொடுத்தான. அவள அவனுக்கு அத்தாயியைப பெறறாள்.

௩௬ அத்தாயி நாத்தானைப பெறறான். நாத்தானசாபாதைபபெறறான.

௩௭ சாபாத் எப்பெலாலைப்பெறறான. எப்பெலால ஓபேதைபபெறறான்.

௩௮ ஓபேத் ஏகூவைபபெறறான. ஏகூ அசரீயாவைபபெறறான்.

௩௯ அசரீயா எலேத்சைப பெறறான். எலேத்ஸ எலெயாசாவைபபெறறான்,

௪௰ எலெயாசா சிஸ்மாவைப பெறறான். சிஸ்மாய சலூமைபபெறறான்.

௪௧ சலூமஎக்கமியாவைபபெறறான். எக்கமியா எலிசாமாவைபபெறறான.

௪௨ யோர்மெயேலின சகோதரனாகிய காலேபின்குமாரர். சீபின தகப்பனாகிய மேசாவெனற அவனுக்குமுதற் பிறந்த

தும, எபிரோனின தகப்பனுகிய மெரேசாவின குமாரர்தானே.

சங எபிரோனின குமாரர், கோராக், தப்பூவா, ரெகேம, சாமாவெனறவர்கள.

சச சாமா யோர்கேயாமின தகப்பனுகிய ராகாமைப்பெறறன். ரெகேம் சம்மாயைப்பெறறுன.

சரு சம்மாயின குமாரனமாகோன மாகோன பெத்சூரின தகப்பன.

சசு காலேபினவைப்பாட்டியாகிய எப்பாள் ஆர்ரானையும மோத்சாவையுங காசேசையும்பெறறுள. ஆர்ரான் காசேசை பெறறுன்.

சஎ எதாயின குமாரர், ரெகேம, யோதாம, கேசான, பேலேத், எப்பா, சாகாப்பெனறவர்கள.

சஅ காலேபினவைப்பாட்டியாகியமாகாள் ஏசேபெரையுந திற்கானுவையுமபெறறுள்.

சகூ அவளமத்மனனுவின தகப்பனுகிய சாகாபையும, மக்பேனுவுக்கும கிபயாவுக்கும் தகப்பனுகிய சேபாவையுமபெறறுள். காலேபினகுமாரத்தி அக்சாளெனபவள.

ருய எபிருததாளிடத்தில முதறபிறநத ஊருடையகுமாரனுகிய காலேபினகுமாரர் கீரியாத்தியாரீமின மூப்பனுனசோபாலும,

ருக பெத்லெகேமினமூப்பனுகிய சல்மாவும பெத்காதேரின மூப்பனுன ஆரேப்புந்தானே.

ருஉ கீரியாத்தியாரீமின மூப்பனுனசோபாலின குமாரர் ஆரோவே ஆசியமமெனுகோதசெனறவர்கள.

ருங கீரியாத்தியாரீமிலிருநத வமசஙகள ஏத்தியருமபூத்தியருஞ்சுமாத்தியருமமிஸ்ராவியருந்தானே. இவர்களிற் சோராத்தியரும எஸ்தவோலியருமபிறநதார்கள.

ருச சல்மாவின சநததிகள பெத்லெகேமியரும நெதோபாத்தியருமபெத்யோவாப்பெனற ஆத்ரோத் ஊராரும, மானுத்தியரிலும் சோரியரிலும பாதிசசனஙகளுந்தானே.

ருரு யாபேசிற்குடியிருநத கணக்கரின வமசஙகள. திராத்தியருஞ், சிமாத்தியருஞ், சுக்காத்தியருந்தானே. ரேகாப்வீட்டாரின தகப்பனுகிய அம்மாத்தின சநததியாரான கேனியர் இவர்களதானே.

௩. அதிகாரம்.

தாவீதினசநததியார்.

தாவீதுக்கு எபிரோனிலே பிறநதகுமாரராவது, இஸரேயேலூராளான அகினோவாமினிடத்திலே பிறநத அம்னோன் முதறபேறனவன. கர்மேலின ஊராளான அபிகாயேலினிடத்திலே பிறநத தானியேல இரணடாஙகுமாரன.

உ கேசூரின இராசாவாகிய தல்மாயின குமாரத்தி மாகாளபெறற அப்சலோம் மூனறாஙகுமாரன. நாலாஙகுமாரன ஆகீத்பெறற அதோனியாவெனறவன.

ங ஐநதாஙகுமாரன அபித்தாளபெறற செப்பத்தியாவெனறவன. ஆறாஙகுமாரன அவன பெணசாதியாகிய எக்லாளபெறற எத்ரேயாமெனறவன.

ச இநத ஆறுகுமாரர் அவனுக்கு எபிரோனிலே பிறநதார்கள. ஏனெனில அங்கே ஏழுவருஷமும ஆறுமாதமும அரசாணடான. எருசலேமிலோவெனறல, முப்பத்துமூனறுவருஷம அரசாணடான.

ரு எருசலேமில அவனுக்குப்பிறநதவர்களாவது, அம்மியேலின குமாரத்தியாகிய பத்சுவாளிடத்திலே சிமெயா, சோபாப், நாத்தான, சாலொமோனெனறநாலுபேரும,

சு இப்கார், எலிசாமா, எலிபேலெத்,

எ நோகா, நேபேக், யப்பீயா,

அ எலிசாமா, எலியாதா, எலிபேலெத்தெனற ஒனபதுபேருந்தானே.

கூ வைப்பாட்டிகளின்குமாரரையும இவர்களசகோதரியாகிய தாமாரையுந்தவிர, அவர்களெல்லாருந் தாவீதினகுமாரர்.

ய சாலொமோனின குமாரனரெகாபெயாம, இவனுடையகுமாரன அபியா, இவனுடையகுமாரன ஆசா, இவனுடையகுமாரனயோசபாத்,

யக இவனுடையகுமாரன யோராம, இவனுடையகுமாரன அகசியா, இவனுடையகுமாரன யோவாஸ்,

யஉ இவனுடையகுமாரன அமத்சியா, இவனுடையகுமாரன அசரியா, இவனுடையகுமாரனயோத்தாம,

யங இவனுடையகுமாரன ஆகாஸ், இவனுடையகுமாரன எசேக்கியா, இவனுடையகுமாரனமனசே

யச இவனுடையகுமாரன ஆமோன, இவனுடையகுமாரனயோசியா,

யரு யோசியாவின குமாரராவது, முதறபிறநத யோகனனும யோயக்கீமெனற இரணடாஙகுமாரனுஞ் சிதேக்கியா எனற மூனறாஙகுமாரனுஞ் சல்லூமெனற நாலாஙகுமாரனுந்தானே.

யசு யோயாக்கீமின குமாரர், எகோனியா முதலானவர்கள. இவனுக்கு மகனனவன, சிதேக்கியா

௰௭ கட்டுண்ட எகோனியாவின் குமாரர் செயால்தியேல்,

௰௮ மல்கீராம், பெதாயா, செனாத்சார், எக்கமியா, ஒசாமா, நெத்பீயா என்றவர்கள்.

௰௯ பெதாயாவின் குமாரர், செருபாபேல், சீமேயி என்றவர்கள். செருபாபேலின் குமாரர், மெசுல்லாம், அன்னியா, இவர்கள் சகோதரியாகிய செலோமீத் என்றவர்களும்,

௨௰ அசுபா, ஒகேல், பெரோகியா, அசதியா, யூசாப் எசெத் என்ற ஐந்துபேருந்தானே.

௨௧ அன்னியாவின் குமாரர், பெலாதியா, எசாயா என்றவர்கள். இவனுடைய குமாரன் ரெபாயா, இவனுடைய குமாரன் அர்னான், இவனுடைய குமாரன் ஒபதியா, இவனுடைய குமாரன் செக்கானியா,

௨௨ செக்கானியாவின் குமாரன் செமாயா முதலானவர்கள், செமாயாவின் குமாரர், அத்தூஸ், எகேயால், பரீயாக், நெயாரியா, சாப்பாத் என்ற ஆறுபேர்.

௨௩ நெயாரியாவின் குமாரர், எலியோனாய், எசக்கியா, அஸ்ரிக்காம் என்ற மூன்றுபேர்.

௨௪ எலியோனாயின் குமாரர், ஒத்வீயா, எலியாசிப், பெலாயா, அக்கூப், யோக்கனான், தெலாயா, அனானி என்ற ஏழுபேர்.

௪. அதிகாரம்.

யூதாவுடைய மற்றச் சந்ததி.

இயூதாவுக்கிருந்த குமாரர், பேரேஸ், எஸ்ரோன், கர்மி, ஊர், சோபால் என்றவர்கள்.

௨ சோபாலின் குமாரன் ரயாயா யாகாத்தைப் பெற்றான். யாகாத் அகுமாயியையும் லாகாத்தையும் பெற்றான். சோராயா ஊராரின் வம்சங்கள் இவைகள்தானே.

௩ ஏதாம் என்ற மூப்பனின் சந்ததியார், இஸ்ரேயேல், இஸ்மா, இத்பாஸ் என்றவர்கள். இவர்களுடைய சகோதரியின் பேர் அத்செலெல்போனி,

௪ கேதோருக்கு மூப்பனான பெனுவேல், உஷாவுக்கு மூப்பனான ஏசேர் என்றவர்கள். இவர்கள் பெத்லெகேமுக்கு மூப்பனான எப்பிராத்தாவுக்கு முதற்பிறந்த ஊரின் குமாரர்.

௫ தெக்கோவாவுக்கு மூப்பனான அஸ்கூருக்கு ஏலாள் நாராள் என்ற இரண்டு பெண்சாதிகளிருந்தார்கள்.

௬ நாராள் அவனுக்கு அகுசாமையும், ஏபேரையும், தெமனியையும், ஆகாஸ்தாரியையும் பெற்றாள். நாராளின் குமாரர்கள் இவர்கள்தான்.

௭ ஏலாளின் குமாரர், சேரேத், எத்சோகார், எத்னான் என்றவர்கள்.

௮ கோஸ் என்றவன் அனூபையும் சோபேபாவையும் அருமின் குமாரனாகிய அகர்கேலின் வம்சங்களையும் பெற்றான்.

௯ யாபேஸ் தன் சகோதரரைப்பார்க்கக் கனம் பெற்றவனாயிருந்தான். வாதையோடே அவனைப் பெற்றேன் என்று சொல்லி, தாய் அவனுக்கு யாபேஸ் என்று பேரிட்டிருந்தாள்.

௰ யாபேஸ் இஸ்ரவேலின் பராபரனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருக்கச்செய்து, தீங்கு என்னை வாதிக்காதபடிக்குத் தட்டளைபண்ணினால், நான் இன்னபடி செய்வேன் என்று கூப்பிட்டான். அப்போது பராபரன் அவன் கேட்டதை வரப்பண்ணினார்.

௰௧ சூகாவின் சகோதரனாகிய கேலூப் மேகீரைப் பெற்றான். இவன் எஸ்தோனின் தகப்பன்.

௰௨ எஸ்தோன் பெத்ராப்பாவையும் பசேயாவையும் இர்நாகாஷின் தகப்பனாகிய தெகின்னாவையும் பெற்றான். இவர்கள் ரேகா ஊர் மனுஷர்.

௰௩ கேனாசின் குமாரர், ஒத்னியேல், செராயா என்றவர்கள். ஒத்னியேலின் குமாரரிலொருவன் ஆகதாத்.

௰௪ மெயோனத்தாய் ஒபிராவைப் பெற்றான். செராயா பணிக்காரரின் பள்ளத்தாக்குக்கு மூப்பனாகிய யோவாபைப் பெற்றான். அந்தத் தேசத்தில் தொழிலாளிகளானார்கள்.

௰௫ எப்புன்னேயின் குமாரனாகிய காலேபின் குமாரர், ஈரு, ஏலா, நாகாம், ஏலாவின் குமாரரிலொருவன் கேனாஸ்,

௰௬ எகலெலேலின் குமாரர், சீப், சீப்பா, திரியா, அசாரேயேல்,

௰௭ எஸ்றாவின் குமாரர், எதேர், மேரேத், ஏப்பேர், யாலோன், மேரேத்தின் பெண்சாதி மிரியாமையும் சம்மாயியையும் எஸ்தேமோவாவுக்கு மூப்பனாகிய இஸ்பாகையும் பெற்றாள்.

௰௮ அவன் பெண்சாதியாகிய எகுதீயாள் கேதோரின் தகப்பனாகிய எரேதையும், சோக்கோவின் தகப்பனாகிய எபேரையும், சனோவாகின் தகப்பனாகிய எக்கூத்தியேலையும் பெற்றாள். மேரேத் விவாகம்

பணனின பார்வோனின குமாரத்தியாகிய பித்தியாளின்குமாரர் இவர்களேதான.

௰௯ நாகாமின சகோதரியாகிய ஒதியாவினுடையபெண்சாதியின குமாரர், கர்மியனாகிய அபிகேயிலாவும மாகாத்தியனாகிய எஸ்தெமோவுந்தானே.

௨௰ சீமோனின குமாரர், அம்னோன, ரின்னா, பென்கானான, தீலோனென்பவர்கள். இஷியின குமாரர் சோகேதும பென்சோகேதுந்தானே.

௨௧ யூதாவின குமாரனாகிய சேலாவின புத்திரர்: லேக்காவூர் மூப்பனான ஏர், மரேஷாவூர் மூப்பனான லாதாகும, மெல்லியபுடவைநெய்த அஸ்பேயாவீட்டு வம்சங்களும,

௨௨ யோக்கீமும, கோசேபாவின மனுஷரும், மோவாபியரை ஆண்ட யோவாஸ், சாராப் என்பவர்களும, யசுபிலேகேமுந்தானே, ஆனால் அவைகள்பூர்வகாலத்தின செய்திகள்.

௨௩ இவர்கள் குயவராயிருந்து நெத்தாயீமிலும கெதேராவிலும குடியிருந்தார்கள். அங்கே இராசாவோடேகூட அவனுடைய வேலையை விசாரிக்கிறதற்குக் குடியிருந்தார்கள்.

சிமியோனின சந்ததி.

௨௪ சிமியோனின குமாரர் நெமுவேல, யாமின, யாரிப், சேரா, சவுலென்பவர்கள்.

௨௫ இவன்குமாரன சல்லூம, இவன்குமாரன மிப்சாம், இவன்குமாரன மிஸ்மாவென்பவன.

௨௬ மிஸ்மாவின குமாரரில ஒருவன அம்முவேல், இவன் குமாரன சக்கூர், இவன்குமாரன சிமேயி.

௨௭ சிமேயிக்குப பதினாறு குமாரரும ஆறு குமாரத்திகளுமிருந்தார்கள். அவன சகோதரருக்கோவெனில, அநேகங்குமாரரிருந்ததில்லை. அவர்கள வம்சமெல்லாம யூதாவின்புத்திரர்த்தனையாய்ப் பெருகினதில்லை.

௨௮ அவர்கள பெயர்செபாவிலும மொலாதாவிலும ஆத்சார் சூவாலிலும்,

௨௯ பில்காவிலும, ஏத்சேமிலும, தோலாதிலும,

௩௰ பெத்துவேலிலும, ஓர்மாவிலும, சிக்லாகிலும,

௩௧ பெத்மர்காபோத்திலும, ஆத்சார்சூசிமிலும், பெத்பீரியிலும், சாராயிமிலும் குடியிருந்தார்கள். தாவீது இராசாவாகுமட்டும் இவைகள அவர்கள்பட்டணங்களாயிருந்தது.

௩௨ அவர்களுடையபட்டணங்கள ஏத்தாம, ஆயின, ரிம்மோன, தோகேம, ஆசானென்கிற ஐந்து ஊருமே.

௩௩ அந்தப்பட்டணங்களைச் சுற்றிலும பாகால்மட்டுமுள்ள அவர்களுடைய எல்லாப்பட்டணங்களுந்தானே இவைகளே அவர்களுடைய வாசஸ்தலங்களும அவர்களுக்கிருக்கிற அவர்களுடைய வம்ச அட்டவணையுந்தானே.

௩௪ மெசோபாபும, யம்லேக்கும, அமத்சியாவின குமாரன யோஷாவும,

௩௫ யோவேலும, ஆசியேலின மகனாகிய செராயாவுக்குப்பிறந்த யோசிபியாவின குமாரன யெகூவும,

௩௬ எலியோனாயும, யாக்கோபாவும, எஷொகாயாவும, அசாயாவும, அதியேலும, எசிமியேலும, பெனாயாவும,

௩௭ செமாயாபெற்ற சிம்ரியின மகனாகிய எதாயாவுக்குப்பிறந்த அல்லோனின மகனாகிய சிப்பியின குமாரனாகிய சீசாவுமென்று

௩௮ பேர்பேராய் எழுதியிருக்கிற இவர்கள் தங்கள்வம்சங்களில் பிரபுக்களாயிருந்தார்கள். இவர்கள பிதாக்களின்வீட்டார் ஏராளமாய்ப்பரம்பி,

௩௯ தங்கள் ஆடுகளுக்கு மேய்ச்சலைத் தேடும்படிக்குக் கேதோரின் எல்லையாகிய பள்ளத்தாக்கின் கிழக்குப்புறமட்டும்போய்,

௪௰ நல்லபுஷ்டியான மேய்ச்சலையும அமரிக்கையும சுகமுமாகிய விஸ்தாரமான தேசத்தையுங் கண்டுபிடித்தார்கள். ஏனென்றால் பூர்வத்திலே காமின சந்ததியார் அங்கே குடியிருந்தார்கள்.

௪௧ பேர்பேராய் எழுதியிருக்கிற இவர்கள் யூதாவின இராசாவாகிய எசேக்கியாவின நாட்களிலே அங்கே வந்து அங்கே கண்டுபிடித்தவர்களின கூடாரங்களையும வாசஸ்தலங்களையும இடித்து, இந்நாள்வரைக்கும இருக்கிறதுபோல அவர்களைச் சங்காரம்பண்ணி, அங்கே தங்கள் ஆடுகளுக்கான மேய்ச்சலுண்டானபடியினாலே அவர்கள ஸ்தலத்திலே குடியிருக்கிறார்கள்

௪௨ சிமியோனின புத்திரராகிய இவர்களில ஐந்நூறுமனுஷரும அவர்கள தலைவர்களாகிய இஷியின குமாரரான பெலாத்தியாவும், நெகரியாவும், ரெப்பாயாவும், ஊசியேலும், சேயீர்மலைத்தேசத்துக்குப்போய்,

௪௩ அமலேக்கியரில் தப்பிமீதியாயிருந்தவர்களை மடங்கடித்து, இந்நாள் வரைக்குமிருக்கிறபடியங்கே குடியிருக்கிறார்கள்

௫. அதிகாரம்.

ரூபேன், காத், மனாசே யென்றவர்களின் சந்ததியும் இந்தக் கோத்திரங்களெய்த பாவமும், அடைந்த ஆக்கினையும்,

இஸ்ரவேலின் முதற்பேறான ரூபேனின் புத்திரர். ஏனென்றால் அவன் முதற்பிறந்தவனாயிருந்தான். ஆனால் அவன் தன் தகப்பனுடைய மஞ்சத்தைத் தீட்டாக்கினபடியினாலே, கோத்திரத்தட்டவணையிலே யவன் முதற்பிறந்த மூப்பனாக எண்ணப்படாமல் அவனுடைய முதற்பேறான சுதந்தரம் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது.

௨ மெய்தான். யூதா தன் சகோதரரிலே பலத்திருந்து அதிபதியவன் சந்ததியிலுண்டானது. ஆகிலும் முதற்பேறான சுதந்தரம் யோசேப்புடையதாயிற்று.

௩ இஸ்ரவேலின் முதற்பேறான ரூபேனின் குமாரரோவெனில் ஆனோக், பல்லூ, எஸ்ரோன், கர்மீ யென்றவர்கள்.

௪ யோவேலின் குமாரரிலொருவன் செமாயா, இவன் குமாரன் கோக், இவன் குமாரன் சீமேய்,

௫ இவன் குமாரன் மீகா, இவன் குமாரன் ராயா, இவன் குமாரன் பாகால்,

௬ இவன் குமாரன் பேரா, ரூபேனியரின் பிரபுவான இவனை அசூரின் ராசாவாகிய தில்காத்பில்நேசர் சிறைபிடித்துப் போனான்.

௭ தங்கள் சந்ததிகளின்படியே தங்கள் வம்ச அட்டவணைகளிலெழுதப்பட்ட அவன் சகோதரரிலே தலைவரானவரில் ஏயேலும், சகரியாவும்,

௮ யோவேலின் மகனான சேமாவுக்குப் பிறந்த ஆசாசின் குமாரன் பேலாவுந்தானே. இவன் சந்ததியார் ஆரோவேரிலும் நேபோமட்டுக்கும் பாகால்மேயோன்மட்டுக்கும் குடியிருந்தார்கள்.

௯ கிழக்கே ஐபிராத்து நதி துவக்கி வனாந்தரத்தின் எல்லைமட்டுக்கும் அவர்கள் குடியிருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் ஆடுமாடுகள் கிலேயாத் தேசத்தில் மிகுதியாயிற்று.

௧௦ சவுலின் நாட்களில் ஆகாரியரோடும் அவர்கள் யுத்தம்பண்ணித் தங்கள் கையால் இவர்கள் விழுந்தபின் இவர்கள் கூடாரங்களிலே கிலேயாதின் கிழக்குப்புறமெல்லாங் குடியிறங்கினார்கள்.

௧௧ காதின் புத்திரரோவெனில் அவர்களுக்கெதிரே பாசானென்கிற தேசத்திலே சல்காமட்டுங் குடியிருந்தார்கள்.

௧௨ அவர்களில் யோவேல் தலைவனும் சாப்பாம் அவனுக்கு இரண்டாவதுமாயிருந்தான். ஆனால் யானாயும் சாப்பாத்தும் பாசானிலிருந்தார்கள்.

௧௩ அவர்கள் பிதாக்களின் வீட்டாராகிய அவர்கள் சகோதரர் மிக்கேல், மெசுல்லாம், சேபா, யோராயி, யாக்கான், சீயா, ஏபேரென்ற ஏழுபேர்.

௧௪ இவர்கள் ஊரிக்குப் பிறந்த அபியாயிலின் குமாரர். ஊரியென்றவன் எரோவாவுக்கும் எரோவா கிலேயாத்துக்கும் கிலேயாத் மிகாவேலுக்கும் மிகாவேல் எசிசாயிக்கும் எசிசாயி யாதோவுக்கும் யாதோ பூசுக்குங் குமாரனாயிருந்தவன்.

௧௫ கூனியின் குமாரனாகிய அப்தியேலின் மகனான அகீ அவர்கள் பிதாக்களின் வீட்டுத்தலைவனாயிருந்தான்.

௧௬ அவர்கள் கிலேயாதிலிருக்கிற பாசானிலும் அதின் கிராமங்களிலும் சாரோனின் எல்லாப் பேட்டைகளிலும் அவைகளின் கடையாந்தரங்கள்மட்டுங் குடியிருந்தார்கள்.

௧௭ இவர்களெல்லாரும் யூதாவின் இராசாவாகிய யோத்தாமின் நாட்களிலும் இஸ்ரவேலின் இராசாவாகிய எரோபெயாமின் நாட்களிலுந் தங்கள் வம்சத்து அட்டவணைப்படி தொகையேற்றப்பட்டார்கள்.

௧௮ ரூபேன் புத்திரரிலுங் காதியரிலும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாரிலுங் கேடையமும் பட்டையமும் எடுத்து வில்லெய்து யுத்தத்திற்குப் பழகிப் படைக்குப் போகத்தக்க சேவகர் நாற்பத்துநாலாயிரத்து எழுநூற்றறுபது பேராயிருந்தார்கள்.

௧௯ அவர்கள் ஆகாரியரோடும் எத்தூர், நாப்பீஸ், நோதாப்பென்றவர்களோடும் யுத்தம்பண்ணுகிறபோது,

௨௦ அவர்களோடே யெதிர்க்கத் துணைபெற்றபடியினாலே ஆகாரியரும் இவர்களோடிருக்கிற யாவரும் அவர்கள் கையிலே ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள். ஏனெனில் அவர்கள் யுத்தத்திலே பராபரனை நோக்கிக் கூப்பிட்டு அவர்மேல் நம்பிக்கைவைத்தபடியினாலே அவர்களைக் கேட்டருளினார்.

௨௧ அவர்கள் இவர்களுக்கிருந்த இவர்களுடைய மிருகஜீவன்களாகிய ஐம்பதினாயிரம் ஒட்டகங்களையும் இருநூற்றைம்பதினாயிரம் ஆடுகளையும் இரண்டாயிரங் கழுதைகளையும் மனுஷரில் நூறாயிரம் ஜீவாத்துமாக்களையும் பிடித்தார்கள்.

௨௨ ஏனெனில் யுத்தம் பராபரனால் உண்டானபடியினாலே அநேகர் வெட்டுண்டு விழுந்தார்கள். தாங்கள் சிறைப்பட்டுப் போகுமட்டும் இவர்களுடைய ஸ்தலத்திலே குடியிருந்தார்கள்.

௨௩ மனாசேயின் பாதிக்கோத்திரத்து புத்திரரும் அந்தத் தேசத்திலே குடியிருந்து பாசானிலிருந்து பால் எர்மோன் பட்டணமும் சேனீர் மட்டுக்கும் எர்மோன் பர்வதமட்டுக்கும் பெருகியிருந்தார்கள்.

௨௪ அவர்கள் தங்கள் பிதாக்களின் வீட்டுத் தலைவராகிய ஏப்பேர், இசெயி, எலியேல், அசரியேல், எர்மியா, ஒதவியா, யத்தியேலென்றவர்கள் பராக்கிரம சேவகரும் கீர்த்தி பெற்ற மனுஷரும் பேர்போன தலைவருமாயிருந்தார்கள்.

௨௫ ஆனால் அவர்கள் தங்கள் பிதாக்களின் பராபரனுக்கு விரோதத் துரோகம்பண்ணி பராபரன் அவர்களுக்கு முன்பாக அழித்திருந்த தேசத்தின் சனங்களின் தேவர்களின் பிறகாலே சோரம்போனார்கள்.

௨௬ ஆகையால் இஸ்ரவேலின் பராபரன் அசூரின் இராசாவாகிய பூலின் ஆவியையும் அசூரின் இராசாவாகிய தில்காத்பில்நேசரின் ஆவியையும் எழுப்பினார். இவன் ரூபேனியரும் காதியரும் மனாசேயின் பாதிக்கோத்திரத்தாருமாகிய அவர்களைச் சிறைபிடித்து, இந்நாள்வரைக்கும் இருக்கிறது போல அலாகுக்கும் ஆபோருக்கும் ஆராவுக்கும் கோசான் நதிப்புறங்களுக்குங் கொண்டுபோனான்.

௬. அதிகாரம்.

லேவிபுத்திரரின் சந்ததியும் உத்தியோகமும் வாசஸ்தலங்களும்.

லேவியின் குமாரர் கெர்சோன், காகாத், மெராரியென்றவர்கள்.

௨ காகாதின் குமாரர் அம்ராம், இஸ்கார், எப்பிரோன், ஊசியேலென்றவர்கள்.

௩ அம்ராமின் குமாரர் ஆரோனும் மோசேயும், மீரியாமென்றவர்களுந்தானே. ஆரோனின் குமாரர் நாதாப், அபிகூ, எலெயாசார், இத்தாமாரென்றவர்கள்.

௪ எலெயாசார் பினெகாசைப் பெற்றான். பினெகாஸ் அபிசுவாவைப் பெற்றான்.

௫ அபிசுவா புக்கியைப் பெற்றான். புக்கி ஊசியைப் பெற்றான்.

௬ ஊசி செராகியாவைப் பெற்றான். செராகியா மெராயோதைப் பெற்றான்.

௭ மெராயோத் அமரியாவைப் பெற்றான். அமரியா அகித்தூபைப் பெற்றான்.

௮ அகித்தூப் சாதோக்கைப் பெற்றான். சாதோக் அகிமாசைப் பெற்றான்.

௯ அகிமாஸ் அசரியாவைப் பெற்றான். அசரியா யோகனானைப் பெற்றான்.

௰ யோகனான் அசரியாவைப் பெற்றான். சாலொமோன் எருசலேமிலே கட்டின வீட்டிலே ஆசாரிய பணிவிடையைச் செய்தவன் இவன்தான்.

௰௧ அசரியா அமரியாவைப் பெற்றான். அமரியா அகித்தூபைப் பெற்றான்.

௰௨ அகித்தூப் சாதோக்கைப் பெற்றான். சாதோக் சல்லூமைப் பெற்றான்.

௰௩ சல்லூம் இல்க்கியாவைப் பெற்றான். இல்க்கியா அசரியாவைப் பெற்றான்.

௰௪ அசரியா செராயாவைப் பெற்றான். செராயா யோத்சதாக்கைப் பெற்றான்.

௰௫ கர்த்தர் நேபுகாத்நேச்சாரைக்கொண்டு யூதாவையும் எருசலேமியரையுஞ் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பண்ணினபோது யோத்சதாக்கும் போனான்.

௰௬ லேவியின் குமாரர், கெர்சோம், காகாத், மெராரியென்றவர்களாமே.

௰௭ கெர்சோமுடைய குமாரரின் நாமங்கள் லிப்னீ, சிமேயியென்றவைகள்.

௰௮ காகாதின் குமாரர், அம்ராம், இஸ்கார், எப்பிரோன், ஊசியேலென்றவர்கள்.

௰௯ மெராரியின் குமாரர், மகேலி, மூசியென்றவர்கள். லேவியருக்கவர்கள் பிதாக்களைத் தொட்டுண்டான வம்சங்களாவது,

௨௰ கெர்சோமின் குமாரன் லிப்னீ, இவன் குமாரன் யாகாத், இவன் குமாரன் சிம்மா,

௨௧ இவன் குமாரன் யோவாக், இவன் குமாரன் இத்தோ, இவன் குமாரன் சேராக், இவன் குமாரன் யாத்திராயி,

௨௨ காகாதின் குமாரரிலொருவன் அம்மினதாப் இவன் குமாரன் கோராக், இவன் குமாரன் ஆசீர்,

௨௩ இவன் குமாரன் எல்க்கானா, இவன் குமாரன் எபியாசாப், இவன் குமாரன் ஆசீர்,

௨௪ இவன் குமாரன் தாகாத், இவன் குமாரன் ஊரியேல், இவன் குமாரன் ஊசியா, இவன் குமாரன் சவுல்.

௨௫ எல்க்கானாவின் குமாரர், அமாசாயி, அகிமோத்தென்றவர்கள்.

௨௬ எல்க்கானாவின் குமாரரிலொருவன் சோபாயுந்தானே. இவன் குமாரன் நாகாத்,

௨௭ இவன் குமாரன் எலியாப், இவன் குமாரன் எரோகாம், இவன் குமாரன் எல்க்கானா,

௨௮ சாமுவேலின்குமாரர், வஸ்னீயென்றவனுடையமுதற்பேறானவனும அபியாவுமென்பவர்கள்.

௨௯ மெராரியின் குமாரரிலொருவன் மகேலி, இவன்குமாரன் லிப்னீ, இவன்குமாரன் சிமேயி, இவன்குமாரன் ஊசா.

௩௰ இவன்குமாரன் சிமேயா, இவன்குமாரன் அகியா, இவன்குமாரன் அசாயா.

௩௧ கர்த்தருடையபெட்டிக்கு இடம அமர்க்கையானபோது, தாவீது அவருடைய வீட்டிலே பாட்டுப்பாடுகிற உத்தியோகத்திற்கு ஸ்தாபித்தவர்களும.

௩௨ சாலொமோன எருசலேமிலேகர்த்தருடைய வீட்டைக்கட்டித்தீருமட்டும ஆசரிப்புக்கூடாரத்தின வாசஸ்தலத்திற்குமுன்பாகப பாட்டுப்பாடிச்சேவித்துத் தங்கள முறைமையின்படியே பணிவிடை செய்துநிற்கிறவர்களுமாகிய மனுஷரும அவர்கள்குமாரருமாவது,

௩௩ காகாத்தியரின்குமாரரில எமானென்றபாடடகன. இவன்யோவேலின குமாரன, இவன்சமுவேலின்குமாரன.

௩௪ இவன எல்க்கானாவின்குமாரன. இவன எரோகாமின்குமாரன. இவன எலியேலின குமாரன. இவன தோவாகின்குமாரன.

௩௫ இவன சூப்பின்குமாரன இவன எல்க்கானாவின குமாரன, இவனமாகாத்தின்குமாரன, இவன அமாசாயின்குமாரன.

௩௬ இவன எல்க்கானாவின குமாரன, இவன்யோவேலின்குமாரன, இவன அசரியாவின்குமாரன, இவனசெப்பனியாவின குமாரன.

௩௭ இவன தாகாத்தின்குமாரன, இவன அசீரின குமாரன, இவன எபியாசாப்பின குமாரன, இவன்கோராகின குமாரன.

௩௮ இவன இஸ்காரின்குமாரன, இவன காகாத்தின குமாரன, இவன இஸ்ரவேலின குமாரனாகிய லேவியின குமாரனானவன.

௩௯ இவனசகோதரனாகிய ஆசாப் அவன வலதுபக்கத்திலேநிற்பான. ஆசாப் பெர்கியாவின்குமாரன, இவன சிமேயாவின்குமாரன,

௪௰ இவன மிகவேலின்குமாரன, இவன பாசெயாவின குமாரன, இவனமல்கியாவின குமாரன,

௪௧ இவன எத்னீயின்குமாரன, இவன சேராகின குமாரன, இவன அதாயாவின குமாரன,

௪௨ இவன ஏத்தானின்குமாரன, இவன சிம்மாவின்குமாரன, இவன சிமேயின குமாரன,

௪௩ இவன யாகாத்தின்குமாரன, இவன கெர்சோமின்குமாரன, இவன லேவியின குமாரனதானே.

௪௪ மெராரியின்புத்திரராகிய அவர்களுடைய சகோதரர் இடதுபக்கத்திலே நிற்பார்கள. அவர்களில ஏத்தானென்பவன கிசீயின்குமாரனானவன. இவன அப்தியின்குமாரன, இவனமல்லூகின்குமாரன.

௪௫ இவன அஸபியாவின குமாரன, இவன அமத்சியாவின குமாரன, இவன இல்க்கியாவின்குமாரன,

௪௬ இவன அம்சியின்குமாரன, இவன பானியின்குமாரன, இவன சேமேரின்குமாரன,

௪௭ இவன மாகேலியின்குமாரன, இவன மூசியின்குமாரன, இவனமெராரியின்குமாரன, இவனலேவியின்குமாரனதானே.

௪௮ அவர்கள சகோதரராகிய மற்ற லேவியர் பராபரனுடைய வீட்டு வாசஸ்தலத்தின்பணிவிடைகளெல்லாம வைக்கப்பட்டிருந்தார்கள.

௪௯ ஆரோனும அவன குமாரருமோவெனில், சர்வாங்க தகன பலி பீடத்தின்மேலும தூபங் காட்டும பீடத்தின்மேலும கொளுத்திப் பரிசுத்தத்திற்குப்பரிசுத்தமான ஸ்தலத்தின எல்லா வேலைக்கும், பராபரனுடையதாசனாகிய மோசேகற்பித்தபடியெல்லாம இஸ்ரவேலுக்காகப் பாவநிவர்த்தியுண்டாக்குகிறதற்குமவைக்கப்பட்டிருந்தார்கள.

௫௰ ஆரோனின குமாரரில எலெயாசாரென்பவனுடைய குமாரன பினெகாஸ், இவன்குமாரன அபிசுவா,

௫௧ இவன்குமாரன்புக்கி, இவன்குமாரன ஊசி, இவன்குமாரன்செரகியா,

௫௨ இவன குமாரன மெராயோத், இவன குமாரன அமரியா, இவன குமாரன அகித்தூப்,

௫௩ இவன்குமாரன சாதோக், இவன குமாரன அகிமாஸ்,

௫௪ அவர்கள அரண்மனைகளின்படியே அவர்கள எல்லைக்குள்ளான அவர்கள்வாசஸ்தலங்களாவது, காகாத்தியரின வம்சமான ஆரோனின்புத்திரருக்கு விழுந்தசீட்டின்படியே,

௫௫ யூதாதேசத்திலிருக்கிற எபிரோனையும அதின சுற்றுப்பேட்டைகளையும கொடுத்தார்கள.

௫௬ ஆனால அந்தப பட்டணத்தின வெளியையும அதின்கிராமங்களையும எப்புன்னேயின குமாரனாகிய காலேபுக்குக்கொடுத்தார்கள.

௫௭ இப்படியே ஆரோனின் புத்திரருக்கு எபிரோனென்ற அடைக்கலப்பட்டணத்தையும் லிப்னாவையும் அதின் பேட்டைகளையும், யத்தீரையும் எஸ்தெமோவாவையும் அதின் பேட்டைகளையும்,

௫௮ ஈலேனையும் அதின் பேட்டைகளையும், தெபீரையும் அதின் பேட்டைகளையும்,

௫௯ ஆசானையும் அதின் பேட்டைகளையும் பெத்சேமேசையும் அதின் பேட்டைகளையும்,

௬௰ பென்யமீன் கோத்திரத்திலே கேபாவையும் அதின் பேட்டைகளையும் அலெமேத்தையும் அதின் பேட்டைகளையும் ஆனதோத்தையும் அதின் பேட்டைகளையும் கொடுத்தார்கள். இவர்கள் வம்சங்களுக்குக் கொடுத்த இவர்கள் பட்டணங்களெல்லாம் பதின்மூன்று.

௬௧ கோகாத்தின் மற்றப் புத்திரருக்கு ஒரு கோத்திர வம்சத்திலும் பாதிக் கோத்திரமாகிற மனாசேயின் பாதியிலும் விழுந்த சீட்டின்படியே பத்துப் பட்டணங்களிருந்தது.

௬௨ கெர்சோமின் புத்திரருக்கு அவர் வம்சங்களின்படியே இசக்கார் கோத்திரத்திலும் ஆசேர் கோத்திரத்திலும் நப்தலி கோத்திரத்திலும் பாசானிலிருக்கிற மனாசே கோத்திரத்திலும் பதின்மூன்று பட்டணங்களிருந்தது.

௬௩ மெராரியின் புத்திரருக்கு அவர்கள் வம்சங்களின்படியே ரூபன் கோத்திரத்திலும் காத் கோத்திரத்திலும் செபுலோன் கோத்திரத்திலும் விழுந்த சீட்டின்படியே பன்னிரண்டு பட்டணங்களிருந்தது.

௬௪ அப்படியே இஸ்ரவேல் புத்திரர் லேவியருக்குக் கொடுத்த பட்டணங்களும் அவைகளின் பேட்டைகளுமென்னவென்றால்,

௬௫ சீட்டுப்போட்டுச் சிலருக்கு யூதா புத்திரரின் கோத்திரத்திலும் சிமெயோன் புத்திரரின் கோத்திரத்திலும் பென்யமீன் புத்திரரின் கோத்திரத்திலும் பேர்பேர் சொல்லப்பட்ட அந்தப் பட்டணங்களைக் கொடுத்தார்கள்.

௬௬ கோகாத் புத்திரரில் மற்ற வம்சங்களுக்கோவென்றால் அவர்கள் எல்லையான பட்டணங்கள் அவர்களுக்கு எப்பிராயீம் கோத்திரத்திலேயிருந்தது.

௬௭ அதேதெனில் அடைக்கலப்பட்டணங்களில் அவர்களுக்கு எப்பிராயீம் மலைத்தேசத்திலிருக்கிற சீகேமையும் அதின் பேட்டைகளையும், கேசேரையும் அதின் பேட்டைகளையும்,

௬௮ யோக்மேயாமையும் அதின் பேட்டைகளையும் பெத்தொரோனையும் அதின் பேட்டைகளையும்,

௬௯ ஆயலோனையும் அதின் பேட்டைகளையும், காத்ரிம்மோனையும் அதின் பேட்டைகளையும்.

௭௰ மனாசேயின் பாதிக்கோத்திரத்திலே ஆனேரையும் அதின் பேட்டைகளையும் பீலெயாமையும் அதின் பேட்டைகளையும் கொடுத்தார்கள். இவைகள் கோகாத் புத்திரரிலுள்ள மற்ற வம்சங்களுக்கிருந்தது.

௭௧ கெர்சோம் புத்திரருக்கு மனாசேயின் பாதிக் கோத்திர வம்சத்திலே பாசானிலிருக்கிற கோலானும் அதின் பேட்டைகளும் அஸ்தரோத்தும் அதின் பேட்டைகளும்.

௭௨ இசக்கார் கோத்திரத்திலே கேதேசும் அதின் பேட்டைகளும் தெபராத்தும் அதின் பேட்டைகளும்,

௭௩ ராமோத்தும் அதின் பேட்டைகளும் ஆனேமும் அதின் பேட்டைகளும்,

௭௪ ஆசேர் கோத்திரத்திலே மாஷாலும் அதின் பேட்டைகளும் அப்தோனும் அதின் பேட்டைகளும்,

௭௫ உக்கோக்கும் அதின் பேட்டைகளும் ரேகோபும் அதின் பேட்டைகளும்,

௭௬ நப்தலி கோத்திரத்திலே கலிலேயாவிலிருக்கிற கேதேசும் அதின் பேட்டைகளும் அம்மோனும் அதின் பேட்டைகளும் கீரியாத்தாயீமும் அதின் பேட்டைகளுமிருந்தது.

௭௭ மற்றுமுண்டான மெராரியின் புத்திரருக்குச் செபுலோன் கோத்திரத்திலே ரிம்மோனும் அதின் பேட்டைகளும், தாபோரும் அதின் பேட்டைகளும்,

௭௮ எரிகோவுக்கப்புறமாயிருக்கிற யோர்தானுக்கப்பாலே யோர்தானுக்குக் கிழக்காகவிருக்கிற ரூபன் கோத்திரத்திலே வனாந்தரத்திலுள்ள பேத்சேரும் அதின் பேட்டைகளும் யாத்சாவும் அதின் பேட்டைகளும்,

௭௯ கெதேமோத்தும் அதின் பேட்டைகளும் மேப்பாத்தும் அதின் பேட்டைகளும்,

௮௰ காத் கோத்திரத்திலே கீலேயாத்திலுள்ள ராமோத்தும் அதின் பேட்டைகளும் மகனாயீமும் அதின் பேட்டைகளும்,

௮௧ எஸ்போனும் அதின் பேட்டைகளும் யாசேரும் அதின் பேட்டைகளுமிருந்தது.

௭. அதிகாரம்.

இசக்காார் பென்யமீன நவ்தலிமனாசே எப்பிராயீம ஆசேரென்பவர்களின சந்ததியின.

௧ இசக்காருடையகுமாரர் தோலா, பூவா, யசிப், சிம்ரோனென்ற நாலுபேர்.

௨ தோலாவினகுமாரர் ஊசி, ரெப்பாயா, ஏரியேல, யக்மாயி, இப்சாம, சாமுவேலென்பவர்கள. தோலாவுககுப பிறந்த இவர்கள தஙகள பிதாககளவீட்டுததலைவருந தஙகள சந்ததிகளிலே பராககிரமசாலிகளுமாயிருந்தார்கள. தாவீதினநாட்களில அவர்களதொகை இருபததிரணடாயிரத்து அறுநூறுபேராயிருந்தார்கள.

௩ ஊசியினகுமாரரிலொருவன இஸ்றகியா, இஸ்றகியாவின குமாரர் மிகவேல, ஒபதியா, யோவேல, இஷியாவென்பவர்கள. இவர்கள ஐந்துபேருந தலைவராயிருந்தார்கள.

௪ அவர்கள பிதாககள வீட்டாரான அவர்கள சந்ததிகளில யுததமனுஷரான கூட்டஙகள முப்பததாறாயிரம்பேர் அவர்களோடிருந்தார்கள. ஏனெனில அவர்களுககு அநேகமபெணசாதிகளும பிளளைகளுமிருந்தது.

௫ இசக்காருடையமற்ற எல்லாவம்சங்களிலும அவர்களுககுச சகோதரரானபராககிரமசாலிகள தஙகளவம்ச அட்டவணைகளின்படியெல்லாம எண்பத்தேழாயிரம்பேராயிருந்தார்கள.

௬ பென்யமீனகுமாரர் பேலா, பேகேர், எதியாவேல என்றமூன்றுபேர்.

௭ பேலாவினகுமாரர் எஸ்போன, ஊசி, ஊசியேல, எரிமோத, ஈரியென்பவர்கள. இவர்கள தஙகள பிதாககளின வீட்டிற் பராககிரமசாலிகளான ஐந்து தலைவராயிருந்தார்கள. இவர்கள வம்ச அட்டவணைக்குளளான பேர், இருபததீராயிரத்து முப்பத்துநாலு.

௮ பேகேரின குமாரர் செமீரா, யோவாஸ், எலியேசர், எலியோனாய, உம்ரீ, எரிமோத், அபியா, ஆனதோத், அலாமேதென்பவர்கள. இவர்களெல்லாரும பேகேரினகுமாரர்.

௯ தஙகள பிதாககளின வீட்டுததலைவமாராகிய அவர்களசந்ததிகளின அட்டவணைககுளளான பராககிரமசாலிகள் இருபதினாயிரத்திருநூறுபேர்.

௰ எதியாவேலின குமாரரிலொருவன பில்லான, பில்லானின குமாரர் எயூஸ், பென்யமீன, ஏகூத், கெனானா, சேத்தான, தர்சீஸ், அகிஷாகாரென்பவர்கள.

௰௧ எதியாவேலினகுமாரராகிய இவர்களெல்லாருந தஙகளபிதாககளவீட்டாரில தலைவமாராயிருந்தார்கள. இவர்களில யுத்தத்திற்குப போகததகக சேவகரான பராககிரமசாலிகள் பதினேழாயிரத்திருநூறுபேர்.

௰௨ சுப்பீமும, உப்பீமும, ஈரின்குமாரரானவர்கள. ஊசிம, ஆகேரின குமாரரிலொருவன.

௰௩ நவ்தலியின குமாரரான பில்காவின்பேரமார் யாத்சியேல், கூனி, எத்சர், சல்லூமென்பவர்கள.

௰௪ மனாசேயினபுத்திரரிலொருவனசூலஸ்திரியினிடத்திற்பிறந்தஅஸ்றியேல அவனவைபபாட்டியாகிய சீரிய ஸ்திரியோவெனிற் கிலேயாதின தகப்பனாகிய மாகீரைப்பெற்றாள.

௰௫ மாகீர் மாககாவென்ற பேருள்ள உப்பீம சுப்பீமென்பவர்களின சகோதரியை விவாகமபண்ணினான. மனாசேயின இரண்டாங குமாரன செலொப்பேகாத. செலொப்பேகாததிற்கோ குமாரத்திகளிருந்தார்கள.

௰௬ மாகீரின பெணசாதியாகிய மாககாள ஒருகுமாரனைப்பெற்று அவனுககு பேரேசென்று பேரிட்டாள. இவனசகோதரனபேர் சேரேஸ், இவனுடையகுமாரர் ஊலாம், ரேகேமென்பவர்கள.

௰௭ ஊலாமினகுமாரரிலொருவனபேதான. இவர்கள மனாசேயினகுமாரனாகிய மாகீருககுபபிறந்த கிலேயாத்புத்திரர்.

௰௮ இவன சகோதரியாகிய மொலேகேத் இஸ்கோதையும, அபியேசேரையும, மாகெலாவையுமபெற்றாள.

௰௯ செமீதாவினகுமாரர், அகியான, சேகேமலிககேகி, அனியாமென்பவர்கள.

௨௰ எப்பிராயீமின குமாரரிலொருவன சுத்தெலா, இவனுடையகுமாரன பேரேத், இவனுடைய குமாரன தாகாத், இவனுடையகுமாரன எலாதா, இவனுடையகுமாரன தாகாத்.

௨௧ சுத்தெலாவைப்பெற்ற சாபாதும எசேரும எலாதும எப்பிராயீமினகுமாரர். ஆறுலதேசத்திற்பிறந்த காத்ஊரமனுஷர் இவர்களுடைய ஆடுமாடுகளைப்பிடிகக இறஙகி வந்தபோது இவர்களைக் கொன்றுபோட்டார்கள.

௨௨ அவர்கள தகப்பனாகிய எப்பிராயீம அநேகநாள் துககங்கொண்டாடுகை

போல அவன் சகோதரர் அவனுக்கு ஆறுதல் சொல்லவந்தார்கள்.

௨௩ பிற்பாடு அவன் தன் பெண்சாதியிடத்திற் பிரவேசித்ததினாலே இவள் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள். அவனுக்கு அவன் வீட்டிலே நிகழ்ந்த துன்பத்தினாலே இவனுக்குப் பெரீயாவென்று பேரிட்டான்.

௨௪ இவனுடைய குமாரத்தியாகிய சேராள் கீழ்ப்புறமும் மேற்புறமுமான பெத்தொரோனையும் ஊசேன்சேராவைக் கட்டினவள்.

௨௫ அவனுடைய குமாரர் ரெப்பாக், ரேசேப் என்பவர்கள். இவனுடைய குமாரன் தேலாக், இவனுடைய குமாரன் தாகான்.

௨௬ இவனுடைய குமாரன் லாதான், இவனுடைய குமாரன் அம்மியூத், இவனுடைய குமாரன் எலிசாமா,

௨௭ இவனுடைய குமாரன் நூன், இவனுடைய குமாரன் யோசுவா.

௨௮ அவர்களுடைய காணியாட்சியும் வாசஸ்தலங்களும் கிழக்கேயிருக்கிற நாரானும் மேற்கேயிருக்கிற கேசேரும் அதின் கிராமங்களும், பெத்தேலும் அதின் கிராமங்களும் சீகேமும் அதின் கிராமங்களும் ஆசா பட்டணமும் அதின் கிராமங்கள் மட்டுக்குமுள்ள புறமும்,

௨௯ மனாசே புத்திரரின் பக்கத்திலே பெத்செயானும் அதின் கிராமங்களும், தானாகும் அதின் கிராமங்களும், மெகிதோவும் அதின் கிராமங்களும், தோரும் அதின் கிராமங்களுந்தானே. இவ்விடங்களில் இஸ்ரவேலின் குமாரனாகிய யோசேப்பின் புத்திரர் குடியிருந்தார்கள்.

௩௰ ஆசேரின் குமாரர், இம்னா, இஸ்வா, இஸ்வீ, பெரீயா என்பவர்களும் இவர்கள் சகோதரியாகிய சேராளுந்தானே.

௩௧ பெரீயாவின் குமாரர், எபேர், மல்கியேலென்பவர்கள். இவன் பிர்சாவீத்தின் தகப்பன்.

௩௨ எபேர் யப்லேத்தையும், சோமேரையும், ஒத்தாமையும், இவர்கள் சகோதரியாகிய சூவாளையும் பெற்றான்.

௩௩ யப்லேத்தின் குமாரர், பாசாக், பிம்மால், அஸ்வாத், என்பவர்கள். இவர்களே யப்லேத்தின் குமாரர்.

௩௪ சோமேரின் குமாரர் ரோவேனில் ஆகி, ரோகா, எகூபா, ஆராமென்பவர்கள்.

௩௫ அவன் சகோதரனாகிய எலேமின் குமாரர் சோப்பாக், இம்னா, சேலேஸ், ஆமாலென்பவர்கள்.

௩௬ சோப்பாகின் குமாரர், சூவாக், அர்னெப்பர், சூகால், பேரி, இம்ரா,

௩௭ பேசேர், ஓத், சம்மா, சில்சா, இத்ரான், பேராவென்பவர்கள்.

௩௮ எத்தேரின் குமாரர், எப்புனே, பிஸ்பா, ஆராவென்பவர்கள்.

௩௯ உல்லாவின் குமாரர், ஆராக், அன்னியேல், ரித்சியாவென்பவர்கள்.

௪௰ ஆசேரின் புத்திரராகிய இவர்களெல்லாரும் தங்கள் பிதாக்களின் வீட்டுத்தலைவரும் தெரிந்துகொள்ளப்பட்ட பராக்கிரமசாலிகளும் பிரபுக்களின் தலைவருமாயிருந்தார்கள். அவர்கள் அம்மிஷ் அட்டவணைகளில் யுத்தத்திற்குப் போகத்தக்க சேவகரின் இலக்கம் இருபத்தாறாயிரம்பேர்.

௮. அதிகாரம்.

பென்யமீன் கோத்திரத்து வம்சங்களும் சவுலின் சந்ததியும்.

பென்யமீன் பேலாவென்ற தன் மூத்த குமாரனையும், அஸ்பாலென்ற இரண்டாங்குமாரனையும் அகாரென்ற மூன்றாங் குமாரனையும்,

௨ நோகாவென்ற நாலாங் குமாரனையும், ரப்பாவென்ற ஐந்தாங் குமாரனையும் பெற்றான்.

௩ பேலாவுக்கிருந்த குமாரர், அதார், கேரா, அபியூதென்பவர்கள்.

௪ அபிசூவா, நாமான், அகோவாக்.

௫ கேரா, செப்புப்பான், ஊராமென்பவர்கள் ஏகூதின் குமாரர்.

௬ கேபாவின் குடிகளுக்கு மூப்பான தலைவராயிருந்து, இவர்களை மனாகாத்திற் குறைத்துக்கொண்டுபோனவர்கள் நாமான், அகோவாக், கேராமென்பவர்கள்தானே.

௭ இவன் அவர்களையங்கே அழைத்துப்போனபிற்பாடு ஊசாவையும், அகிலூதையும் பெற்றான்.

௮ அவர்களையனுப்பிவிட்டபின், சகாரீம் மோவாபின் தேசத்திலே ஊசிம், பாரா என்ற தன் பெண்சாதிகளாலே பெற்ற பிள்ளைகளைத்தவிர,

௯ தன் பெண்சாதியாகிய ஓதேசாலே யோவாபையும், சீபியாவையும், மேசாவையும், மல்காமையும்,

௰ எகூத்சையும், சொகியாவையும், மிர்மாவையும் பெற்றான். இவர்கள் பிதாக்களின் தலைவரான அவனுடைய குமாரர்.

௰௧ ஊசிமாலே அவன் அபித்தூபையும் எல்பாலையும் பெற்றான்.

௰௨ எல்பாவின்குமாரர், ஏபேர், மிஷாம், சாமேர், இவன் ஓனோவையும், லோத்தையும் அதின் கிராமங்களையும் கட்டினவன்.

௰௩ பெரியாவும், சேமாவும், ஆயலோன் குடிகளுடைய பிதாக்களில் தலைவராயிருந்தார்கள். இவர்கள் காத்தின் குடிகளை ஓட்டிவிட்டார்கள்.

௰௪ அகியோ, சாஷாக், எரேமோத்,

௰௫ செப்தியா, ஆராத், ஏதேர்,

௰௬ மிகாவேல், இஸ்பா, யோகா என்பவர்கள், பெரியாவின்குமாரர்.

௰௭ செப்தியா, மெசுல்லாம், இஸ்கி, ஏபேர்,

௰௮ இஸ்மேராயி, இஸ்லியா, யோபாப் என்பவர்கள் எல்பாலின் குமாரர்.

௰௯ யாக்கீம், சிக்ரி, சப்தி,

௨௰ எலியேனாயி, சில்லெத்தாயி, ஏலியேல்,

௨௧ அதாயா, பெராயா, சிம்ராத் என்பவர்கள் சிமேயின்குமாரர்.

௨௨ இஸ்பான், ஏபேர், ஏலியேல்,

௨௩ அப்தோன், சிக்ரி, ஆனான்,

௨௪ அனனியா, ஏலாம், அந்தோத்தியா,

௨௫ இப்தியா, பெனுவேல் என்பவர்கள் சாஷாக்கின்குமாரர்,

௨௬ சம்சேராயி, செகரியா, அத்தாலியா,

௨௭ யரேஷியா, எலியா, சிக்ரி என்பவர்கள் எரோகாமின்குமாரர்.

௨௮ இவர்கள் தங்கள் சந்ததிகளின் பிதாக்களில் தலைவராயிருந்து எருசலேமிலே குடியிருந்தார்கள்.

௨௯ கிபியோனிலே குடியிருந்தவன் கிபியோனின் மூப்பன், அவன் பெண்சாதியின்பேர் மாக்காள்.

௩௰ அவன் மூத்த குமாரன் அப்தோன் என்பவன். மற்றவர்கள் சூர், கீஸ், பாகால், நாதாப்,

௩௧ கேதோர், அகியோ, சேகேர் என்பவர்கள்.

௩௨ மிக்லோத் சிமேயாவைப் பெற்றான். இவர்களும் தங்கள் சகோதரரோடுங்கூட எருசலேமிலே தங்கள் சகோதரருக்கு எதிர்முகமாய்க் குடியிருந்தார்கள்.

௩௩ நேர், கீசைப் பெற்றான், கீஸ், சவுலைப் பெற்றான், சவுல், யோனத்தானையும் மல்கிசூவாவையும், அபினதாபையும், எஸ்பாலையும் பெற்றான்.

௩௪ யோனத்தானின்குமாரன் மேரிபால், மேரிபால் மீகாவைப் பெற்றான்.

௩௫ மீகாவின்குமாரர், பித்தோன், மேலேக், தரேயா, ஆகாஸ் என்பவர்கள்.

௩௬ ஆகாஸ் யோகதாவைப் பெற்றான், யோகதா அலெமேத்தையும், அஸ்மாவேத்தையும், சிம்ரியையும் பெற்றான். சிம்ரி மோத்சாவைப் பெற்றான்.

௩௭ மோத்சா பினியாவைப் பெற்றான். இவன் குமாரன் ராப்பா, இவன் குமாரன் எலியாசா, இவன் குமாரன் ஆத்சேல்,

௩௮ ஆத்சேலுக்கு ஆறு குமாரரிருந்தார்கள். அவர்களுக்கு அஸ்ரீக்காம், பொக்குரு, இஸ்மவேல், செகரியா, ஒபதியா, ஆனான் என்று நாமங்களிருந்தது. இவர்களெல்லாரும் ஆத்சேலின்குமாரர்,

௩௯ அவன் சகோதரனாகிய எசேக்கின் குமாரர், ஊலாம் என்பவன் அவன் மூத்த குமாரனும் எகூசென்ற இரண்டாங் குமாரனும் எலிப்பேலேத் என்ற மூன்றாங் குமாரனுந்தானே.

௪௰ ஊலாமின் குமாரர், வில்வீரராகிய பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள். இவர்களுக்கு நூற்றைம்பதாகிய அநேகம் குமாரரும் குமாரரின் குமாரருமிருந்தார்கள். இவர்களெல்லாரும் பென்யமீன் புத்திரர்.

௯. அதிகாரம்.

எருசலேம் பட்டணத்துக் குடிகள்.

இஸ்ரவேலெல்லாரும் தங்கள் வம்சங்களின்படியே எண்ணப்பட்டது, இதோ, இவைகள் இஸ்ரவேல் இராசாக்களின் புஸ்தகத்திலெழுதியிருக்கின்றது. யூதாகோத்திரத்தார் தங்கள் துரோகத்தினிமித்தம் பாபேலுக்குச் சிறைப்பிடித்துக்கொண்டுபோகப்பட்டார்கள்.

௨ தங்கள் காணியாட்சியிலும் தங்கள் பட்டணங்களிலும் முன்குடியிருந்தவர்கள் இஸ்ரவேலரும் ஆசாரியரும் லேவியரும் இஸ்ரவேலைச் சேர்ந்தவர்களுந்தானே.

௩ யூதா புத்திரரிலும், பென்யமீன் புத்திரரிலும் எப்பிராயீம் மனாசே என்பவர்களின் புத்திரரிலும் எருசலேமிற் குடியிருந்தவர்களாவென்றால்,

௪ யூதாவின்குமாரனாகிய பேரேசின் சந்ததியிற் பானியின் குமாரனாகிய இம்ரியின் மகனான உம்ரிக்குப் பிறந்த அம்மியூதின் குமாரன் ஊத்தாயி.

௫ சேலாவின் சந்ததியில் மூத்தவனாகிய அசாயாவும் அவன் பிள்ளைகளும்,

௬ சேராவின் சந்ததியில், எகூவேலும் அவன் சகோதரராகிய அறுநூற்றுத் தொண்ணூறு பேரும்.

௭ பென்யமீன் புத்திரரில் அசெனூவாவின் குமாரனாகிய ஒதவியாவுக்குப் பிறந்த மெசுல்லாமின் மகன் சல்லு.

௮ எரோகாமின் குமாரன் இப்னேயா, மிக்கிரியின் குமாரனாகிய உசியின் மகன் ஏலா, இப்னியாவின் குமாரனாகிய ரேகுவேலுக்குப் பிறந்த செப்பத்தியாவின் மகன் மெசுல்லாம் என்பவர்களும்.

௯ தங்கள் சந்ததிகளின்படியிருந்த இவர்கள் சகோதரர் தொளாயிரத்து ஐம்பத்தாறு பேரும், இந்த மனுஷரெல்லாரும் தங்கள் பிதாக்களின் வீட்டிலே பிதாக்களின் தலைவராயிருந்தார்கள்.

௰ ஆசாரியர்களில் எதாயா, யோயாரீப், யாகீன்,

௰௧ அகித்தூபின் குமாரனாகிய மெராயோதின் மகன் சாதோக்குக்குப் பிறந்த மெசுல்லாமின் குமாரனாகிய இல்க்கியாவின் மகன் அசரியா என்பவன் பராபரனுடைய வீட்டின் தலைவன்.

௰௨ மல்கியாவின் குமாரனாகிய பஸ்கூருக்குப் பிறந்த எரோகாமின் மகன் அதாயா, இம்மேரின் குமாரனாகிய மெசில்லேமித்தின் மகன் மெசுல்லாமுக்குப் பிறந்த யாசேராவின் குமாரனாகிய ஆதியேலின் மகன் மாசாய் என்பவர்களும்,

௰௩ தங்கள் பிதாக்களின் வீட்டுத் தலைவரான ஆயிரத்தெழுநூற்றறுபது பேராகிய பராபரனுடைய வீட்டின் வேலையின் கிரியைக்குப் பராக்கிரமசாலிகளான அவர்கள் சகோதரரும்.

௰௪ லேவியரில் மெராரியின் சந்ததியான அசபியாவின் குமாரனாகிய அஸ்ரிக்காமுக்குப் பிறந்த அசூபின் மகன் செமாயா,

௰௫ பக்பக்கார், ஏரேஸ், காலால், ஆசாபின் குமாரனாகிய சிக்ரிக்குப் பிறந்த மிகாவின் மகன் மத்தனியா.

௰௬ எதுத்தூனின் குமாரனாகிய காலாலுக்குப் பிறந்த செமாயாவின் மகன் ஒபதியா, நெத்தோபாத்தியரின் கிராமங்களில் குடியிருந்த எல்க்கானாவின் குமாரனாகிய ஆசாவின் மகன் பெரகியா.

௰௭ வாசல்களின் காவற்காரராகிய சல்லூம், அக்கூப், தல்மோன், அகிமான் என்பவர்களும், இவர்கள் சகோதரரும், இவர்கள் தலைவன் சல்லூம்.

௰௮ லேவி புத்திரரின் சேனைகளில் இவர்கள் கிழக்கேயிருக்கிற இராசாவின் வாசலில் இந்நாள்மட்டுங் காவற்காரத்தவர்கள்.

௰௯ கோராகின் குமாரனாகிய எபியாசாப்புக்குப் பிறந்த கோரேயின் மகன் சல்லூமும், அவன் பிதாவின் வீட்டாராகிய அவனுடைய சகோதரருமான கோராகியர் பணிவிடை வேலையை விசாரித்து, அவர்கள் பிதாக்கள் கர்த்தருடைய பாளயத்திலே கூடாரத்திற்குப் போகிற வழியைக் காவல் காத்ததுபோலே கூடாரத்து வாசற்படிகளைக் காக்கிறவர்களாயிருந்தார்கள்.

௨௰ எலெயாசாரின் குமாரனாகிய பினேகாஸ் முன் கர்த்தர் அவனோடேயிருந்தபடியினாலே முற்காலத்திலே அவர்கள்மேல் தலைவனாயிருந்தான்.

௨௰௧ மெசெலேமியாவின் குமாரனாகிய சகரியா ஆசரிப்புக் கூடாரத்தின் வாசற்படியைக் காவற்காத்தவனாயிருந்தான்.

௨௰௨ வாசற்படிகளைக் காக்கிறதற்குத் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்களெல்லாரும் இருநூற்றுப்பன்னிரண்டு பேராயிருந்து, தங்கள் கிராமங்களின்படியே தங்கள் வம்சத்தட்டவணைகளில் எழுதப்பட்டார்கள். தாவீதும் ஞானதிஷ்டிக்காரனாகிய சாமுவேலும் அவர்களை உண்மையுள்ளவர்களென்று பார்த்து அவர்களை வைத்தார்கள்.

௨௰௩ அப்படியே அவர்களும் அவர்கள் குமாரரும் கூடாரவீடாகிய கர்த்தருடைய வீட்டு வாசல்களைக் காக்கிறவர்களை முறைமுறையாய் விசாரித்தார்கள்.

௨௰௪ வாசல்களைக் காக்கிறவர்கள் நாலு காற்றுத்திசைகளாகிய கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலுமிருந்தார்கள்.

௨௰௫ அவர்கள் சகோதரர் தங்கள் கிராமங்களிலிருந்து ஏழுநாளில் ஒருவிசை மாறிமாறி அவர்களோடிருக்க வருவார்கள்.

௨௰௬ ஏனெனில் உண்மையைப் பார்த்துக் கட்டளையிடப்பட்ட அந்த உத்தியோகத்தில் லேவியரான நாலு பிரதான வாசற்காவற்காரரிருந்தார்கள். இவர்கள் பராபரனுடைய வீட்டின் அறைகள்மேலும் பொக்கிஷங்கள்மேலும் வைக்கப்பட்டிருந்தார்கள்.

௨௰௭ பராபரனுடைய வீட்டைச் சுற்றிலும் இராத்தங்குவார்கள். ஏனெனில் காவல் அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டிருந்தது. காலமேதோறும் திறக்கிற வேலையையும் விசாரித்தார்கள்.

௨௰௮ அவர்களிற் சிலருக்கு ஊழியத்தின் தட்டுமுட்டுகள் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. என்னெனில் அவைகளை எண்ணி உள்ளே கொண்டுபோய், எண்ணி வெளியே கொண்டுவருவார்கள்.

௨௰௯ அவர்களிற் சிலர் மற்றத் தட்டுமுட்டுகள்மேலும், பரிசுத்த பாத்திரங்கள் எல்லாவற்றின்மேலும் மெல்லிய மாவின்மேலும்

ட்சிப்பழ இரசம, எணணெயகுநதரிக
களு, சுகநதவர்ககஙகளினமேலுமவைகக
பபடடிருநதார்கள.

௩௰ ஆனால ஆசாரியரின குமாரரிற் சி
லர் சுகநதவர்ககத்தாற் பரிமள தயிலமிற
ககுவார்கள.

௩௧ லேவியரிற் கோராகியனுனசலலூ
மின மூத்தகுமாரனுகிய மததிதியாவுகது
சசடடிகளிற சுடுகிறவேலையினவிசாரிபபு
ஒபபுவித்திருநதது.

௩௨ அவர்களசகோதரராகிய காகாத்
தியரின புத்திரரிற் சிலருககு ஓயவுநாள
தோறுஞ சமுகநதபபஙகளை ஆயத்தமப
ணணுமவிசாரிபபிருநதது.

௩௩ இவர்களில லேவியருடையபிதாக
களினதலைவராகிய பாடகர் அறைகளில
மறறவேலைககு நீஙசலாயிருநதார்கள. ஏ
னெனில இரவுமபகலுமஅவர்களவேலையி
னவிசாரிபபு அவர்களுககிருநதது.

௩௪ லேவியரிற்பிதாககளினதலைவராகி
ய இவர்களதஙகள சநததிகளுககுத் தலை
மையானவர்கள. இவர்கள எருசலேமிலே
குடியிருநதார்கள.

சவுலினவம்சநதடடவணை திருமபச
சேர்ககபபடடது.

௩௫ கிபெயோனிலே குடியிருநதவர்க
ளாரொனறுற், கிபெயோனின மூபபனுகிய
ஏயெல, இவன பெணசாதியினபேர்மா
ககாள.

௩௬ அவன மூத்தகுமாரனுகிய அப்
தோனுமசூர், கீஸ, பாகால், நேர், நா
தாப்,

௩௭ கேதோர், அகியோ, சகரியா, மி
க்லோதடுதனறவர்களுநதானே.

௩௮ மிக்லோத் சிமேயாமைபபெற
றுன. இவர்களுநதஙகள சகோதரரோடு
ஙகூட எருசலேமிலிருககிறதஙகளசகோ
தரருககெதிரேகுடியிருநதார்கள.

௩௯ நேர் கீசைபபெறறுன, கீஸசவுலை
பபெறறுன, சவுலயோனததாணையுமமல்
கிசூபாவையும, அபினதாபபையும, எஸ
பாலையுமபெறறுன.

௪௰ யோனத்தானினகுமாரன மேரிப
பால், மேரிபபால் மிகாவைபபெறறுன.

௪௧ மிகாவின குமாரர் பிதடுதான,
மேலேக், தரேயாவெனறவர்கள.

௪௨ ஆகாஸயாராகைபபெறறுன, யா
ராக் அலேமேத்தையும அஸமாவேத்தை
யுரு, சிம்ரியையும பெறறுன. சிமரீமோ
த்சாவைபபெறறுன.

௪௩ மோத்சா பினுவைபபெறறுன, இ
வனகுமாரனரெபபாயா, இவன குமாரன
எலாசா, இவனகுமாரன ஆதசேல,

௪௪ ஆதசேலுக்குஆறுகுமாரிருநதா
ர்கள. அவர்கள நாமஙகள, அசரிக்காம,
பொக்ரு, இஸமவேல, செராயா, ஒ தி
யா, ஆறுனெனறது. இவர்கள ஆதசே
லினகுமாரர்.

௰. அதிகாரம்.

சவுலபெலிஸதரோடே டணணினயுத்தத்
திலமடிநதுபோனது.

பெலிஸதர் இஸரவேலோடேயுததமப
ணணிஞர்கள. ஆனால இஸரவேல மநுஷ
ர்பெலிஸதருககுமுனபாக முறிநதோடி
க்கில்போகா பர்வதத்திலேபடடு விழுந
தார்கள.

௨ பெலிஸதரோவெனிறசவுலையும அவன
குமாரரையுமநெருஙகிச சவுலினகுமா
ரராகியயோனததாணையும, அபினதாபை
யுமமல்கிசூபாவையும வெட்டிஞர்கள.

௩ அமபெயகிற விற்காரர் சவுலுககு
நேராகவநததினுல அவனமேல யுததமப
லததது. அபபோதுசவுல விற்காரருககு
மிகவுமபயபபடடு,

௪ தனனுயுதஙகளைப பிடிககிறவனே
டே, அநதசசுனனததிலலாதவர்கள வந
து எனனைபிகழசசிபணணுதபடிககு நீ பு
னபடடையததை யுருவியெனனையதினுற்
குததிபபோடெனறுன. ஆனால அவன
ஆயுதஙகளை பபிடிககிறவன மிகவுமபய
யபபடுகிறதினுல அபபடிச செயயமாட
டேனெனறுன. அபபோதுசவுல படடை
யததைநடடு அதினமேலவிழுநதான.

௫ சவுலசெததுபபோனதைடவன ஆ
யுதஙகளைபபிடிககிறவன கணடபோது,
அவனுமபடடையததிலே விழுநதுசெத
துபபோனுன

௬ அபபடியேசவுலும அவன மூனறு
குமாரரும அவனவீட்டுமனுஷர் அனைவ
ருஙகூடசசெததுபபோனுர்கள

௭ சனம முறிநதோடினதைடியும சவு
லும அவனகுமாரருஞ செததுபபோன
தையுமபளளததாக்கிலுளள இஸரவேலம
னுஷரெலலாருஙகணடபோது தஙகளப
டடணஙகளைவிடடு ஓடிபபோஞர்கள. அ
பபோது பெலிஸதர்வநது அவைகளிற்கு
டியிறஙகிஞர்கள.

௮ வெட்டுணடவர்களை யுரிநதுகொள
ளப்பெலிஸதர்மறுநாளில வநதபோதோ
வெனறுல, அவர்கள சவுலையும அவனகு

மாரையுங் கில்போவா பர்வதத்திலே பட்டுக்கிடக்கக்கண்டு,

௯ அவனையுரிந்து அவன் தலையையும் அவன் ஆயுதங்களையுமெடுத்துக் கொண்டு, தங்கள் விக்கிரகங்களுக்குஞ் சனத்திற்கும் அதைப் பிரசங்கிக்க, பெலிஸ்தருடைய தேசத்திலே சுற்றிலுஞ் செய்தியையனுப்பி,

௰ அவன் ஆயுதங்களைத் தங்கள் தேவர்களின் வீட்டிலே வைத்து, அவன் தலையோட்டைத் தாகோன் வீட்டிலே அடித்துவைத்தார்கள்.

௰௧ பெலிஸ்தர் சவுலுக்குச் செய்ததையெல்லாங் கிலெயாத் தேசத்து யாபேஸ் பட்டணத்தாரெல்லாருங் கேட்டபோது,

௰௨ பராக்கிரமமுள்ளவரெல்லாருமெழுந்துபோய்ச் சவுலினுடலையும் அவன் குமாரரின் உடல்களையுமெடுத்து யாபேசுக்குக் கொண்டுவந்து, அவர்கள் எலும்புகளை யாபேசிலிருக்கிற ஒரு கர்வாலி மரத்தின்கீழ் அடக்கம்பண்ணி ஏழுநாள் உபவாசம்பண்ணினார்கள்.

௰௩ அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமற் கர்த்தருக்குச் செய்த துரோகத்தினிமித்தமும் அவன் கர்த்தரைத் தேடாமல், அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமுஞ் செத்துப்போனான்.

௰௪ அதற்காக அவர் அவனைக் கொன்று இராச்சியபாரத்தை ஈசாயின் குமாரனாகிய தாவீதுவசமாகத் திருப்பினார்.

௰௧. அதிகாரம்.

தாவீது இராசாவாக அபிஷேகம்பண்ணப்பட்டு எருசலேம் பட்டணத்தைப் பிடித்தது.

இஸ்ரவேலெல்லாம் எபிரோனிலிருக்கிற தாவீதண்டையிலே கூடிவந்து இதோ, நாங்கள் உம்முடைய எலும்பும் உம்முடைய மாம்சமுமானவர்கள்.

௨ சவுல் இன்னம் இராசாவாயிருக்கிறபோதுதானும் நீர் இஸ்ரவேலையழைத்துப்போயழைத்துவருவீர். நம்முடைய சனமாகிய இஸ்ரவேலை நீ மேய்த்து, நீ நம்முடைய சனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருப்பாயென்று உம்முடைய பராபரனாகிய கர்த்தர் உமக்குச் சொல்லியுமிருக்கிறாரென்றார்கள்.

௩ அப்படியே இஸ்ரவேலின் மூப்பரெல்லாரும் எபிரோனிலே இராசாவண்டைக்கு வந்தார்கள். தாவீது எபிரோனிலே கர்த்தருக்கு முன்பாக அவர்களோடுடம்படிக்கைபண்ணிக்கொண்டபிற்பாடு அவர்கள் கர்த்தர் சாமுவேலைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே தாவீதை இஸ்ரவேலின்மேல் இராசாவாக அபிஷேகம்பண்ணினார்கள்.

௪ பிற்பாடு தாவீது இஸ்ரவேலனைத்தோடுங்கூட எபூசாகிய எருசலேமுக்குப் போனான். ஏனெனில் எபூசியர் அந்தத் தேசத்தின் குடிகளாயிருந்தார்கள்.

௫ அப்போது எபூசின் குடிகள் தாவீதுக்கு நீ இதற்குட் பிரவேசிப்பதில்லையென்றார்கள். ஆனால் தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்தான். அது தாவீதின் பட்டணம்.

௬ ஏனெனில் எவன் எபூசியரை முறியடிக்கிறதில் முந்தினவனாயிருக்கிறானோ அவன் தலைவனுஞ் சேனாபதியுமாயிருப்பானென்று தாவீது சொன்னபோது செருயாவின் குமாரனாகிய யோவாப் ஏறுகிறதில் முந்தினவனாயிருந்து, தலைவனானான்.

௭ பிறகு தாவீது அந்தக் கோட்டையிலே வாசம்பண்ணினபடியினாலே அது தாவீதின் பட்டணமென்னப்பட்டது.

௮ பிற்பாடு அவன் பட்டணத்தை மில்லோவைத் துவக்கிச் சுற்றிலுங் கட்டினான். யோவாபோவெனிற் பட்டணத்தின் மற்ற இடங்களைப் பழுதுபார்த்தான்.

௯ தாவீது நாளுக்கு நாள் பெருகிப்போனான். ஏனெனிற் சேனைகளுடைய கர்த்தர் அவனோடேகூடவிருந்தார்.

தாவீதுடைய பராக்கிரமசாலிகளின் டாப்பு.

௰ கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் சொன்ன வார்த்தையின்படியே தாவீதை இராசாவாக்கும்படிக்கு அவன் வசமாயிருந்து இராச்சியபாரம்பண்ணுகிற அவனிடத்திலும் எல்லா இஸ்ரவேலினிடத்திலும் வீரத்துவத்தைப் பாராட்டினவர்களான பராக்கிரமசாலிகளும்,

௰௧ தாவீதுக்கிருந்த அந்தப் பராக்கிரமசாலிகளின் இலக்கமுமாவது அக்மோனியின் குமாரனாகிய யாஷோபாம் என்ற சேர்வைக்காரரின் தலைவன் இவன் முந்நூறுபேர்களின்மேல் ஈட்டியையோங்கி அவர்களையொருமிக்கக்கொன்றுபோட்டான்.

௧௨ இவனுக்கு இரண்டாவதானவன் அகோகியனான தோதோவின் குமாரனான எலெயாசார். இவன் மூன்று பராக்கிரமசாலிகளிலொருவன்.

௧௩ பெலிஸ்தர்பாஸ்தம்மிமிலிருக்கிற வாற்கோதுமை நிறைந்தவயலான நிலத்தில யுத்தத்திற்குக் கூடிக்கொள்ளுகிற போது ஜனம் பெலிஸ்தரைக்கண்டு ஓடிப்போகும், இவன் தாவீதோடே அங்கேயிருந்தான்.

௧௪ அப்போது இவர்கள் அந்த நிலத்தின் நடுவிலே நின்றுகொண்டு அதைக் காப்பாற்றிப் பெலிஸ்தரைமடங்கடித்தார்கள். அதினாலே கர்த்தர்பெரிய இரட்சிப்பை நடப்பித்தார்.

௧௫ முப்பது தலைவரில் மூன்றுபேரும் அதுல்லாமென்னுங் கன்மலைக்கெபியிலிருக்கிற தாவீதண்டைக்கிறங்கிவந்திருந்தார்கள். பெலிஸ்தரின்பாளயம் ரெப்பாயீம் பள்ளத்தாக்கில் விறங்குகிற போதோவெனில்,

௧௬ தாவீது அரணான ஒரு இடத்திலிருந்தான். ஆனாற்பெத்லகேமில அப்போது பெலிஸ்தரின் தாணயமிருந்தது.

௧௭ தாவீது ஆசைப்பட்டுப் பெத்லகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றின் தண்ணீரிலே கொஞ்சம் என் தாகத்திற்குக்கொண்டுவருவாருண்டோவென்றான்.

௧௮ அப்போது அந்த மூன்றுபேர்பெலிஸ்தரின்பாளயத்திற்குட்புகுந்துபோய்ப் பெத்லகேமின் ஒலிமுகவாசலிலிருக்கிற கிணற்றிலே தண்ணீர்மொண்டு தாவீதண்டைக்குச்சுமந்து கொண்டுவந்தார்கள். ஆனால் அவன் அதைக்குடிக்கமனதில்லாமல் அதைக் கர்த்தருக்கென்றூற்றிப்போட்டு,

௧௯ நான் இதைச்செய்யாதபடிக்கு என்பராபரன் என்னைக்காத்துக்கொள்ளக்கடவர். தங்களுக்குப்பிராணமோசமாய் அதைக்கொண்டுவந்த இந்தமனுஷரின் இரத்தத்தைக்குடிப்பேனோ? என்று சொல்லி, அதைக்குடிக்கமாட்டேனென்றான். இப்படியிந்த மூன்று பராக்கிரமகாரர்செய்தார்கள்.

௨௰ யோவாவின்சகோதரனாகிய அபீசாயி மூன்றுபேரிற் பிரதானமானவன். அவன் தன் ஈட்டியையோங்கி மூந்நூறுபேரைமடங்கடித்ததினாலே இந்த மூன்றுபேர்களில்பேர்பெற்றவனானான்.

௨௧ இந்த மூன்றுபேர்களில அவன்மற்ற இரண்டுபேரைப்பார்க்கக்கனப்பட்டவனானதினால் அவர்களுக்குத் தலைவனானான். ஆனாலும் அந்தமுந்தின மூன்றுபேருக்கு அவன்சரியானவனல்ல.

௨௨ நல்ல சேவகனான யோய்தாவின் குமாரனும் கப்செயேலூரானுமாயிருந்த பெனாயாவும் செய்கைகளாற்பெரியவனாயிருந்தான். அவன்மோவாப் தேசத்தின் இரண்டுவலுமையான சிங்கங்களைக் கொன்றதுமல்லாமல் அவன் இறங்கிப்போய், உறைந்த மழையின்நாளிலொருசிங்கத்தையொரு கெபிக்குள்ளேகொன்றுபோட்டு,

௨௩ ஐந்துமுழ உயர்மான ஒரு எகிப்தியமனுஷனையும் மடங்கடித்தான். அந்த எகிப்தியனகையில நெய்கிறவர்களின் படைமரக்கனதியான ஒருஈட்டியிருக்க, இவனொருதடியைப்பிடித்துக்கொண்டு அவனண்டைக்கிறங்கிப்போய் அந்தஈட்டியை எகிப்தியனகையிலேபறித்து அவனையவன் ஈட்டியினாலேகொன்றான்.

௨௪ இவைகளை யோய்தாவின் குமாரனான பெனாயாசெய்தபடியினாலே இந்த மூன்று பராக்கிரமகாரருக்குள்ளே பேர்பெற்றவனாயிருந்தான்.

௨௫ இந்தா, முப்பதுபேரிலும் அவன் கனம்பெற்றவன். ஆனாலும் அந்தமுந்தின மூன்றுபேருக்கு அவன்சரியானவனல்ல. அவனை தாவீது தன் அரண்மனைசேர்வைக்காரருக்கு வைத்தான்.

௨௬ இராணுவத்திலிருந்தமகாபராக்கிரமகாரராவது, யோவாவின் தம்பி ஆசகேல், பெத்லகேம ஊரானாகிய தோதோவின்குமாரனாகிய எல்க்கானான்.

௨௭ ஆரோதியனான சம்மோத், பெலோனியனான ஏலெஸ்,

௨௮ தெக்கோவியனான இக்கேசின் குமாரன் ஈரா, ஆனதோத்தியனான அபியேசர்,

௨௯ உஷாத்தியனான சிபேக்காயி, அகோகியனான ஈலாயி,

௩௰ நெத்தோபாத்தியனான மகராயி, நெத்தோபாத்தியனான பானாவின்குமாரன் ஏலேத்,

௩௧ பென்யமீன்புத்திரரிலே கிபேயா ஊரானாகிய ரிபாயின் குமாரன் இத்தாயி, பிரத்தோனியனான பெனாயா,

௩௨ காசாஸ்பள்ளத்தாக்கின் மனுஷனாகிய ஊராயி, அற்பாத்தியனான அபியேல்,

௩௩ பகருமியனான அஸ்மாவேத், சால்போனியனான எலியாபா,

௩௪ கிசோனியனான ஆசேமின்குமாரர், ஆராரியனான சாகேயின்குமாரன் யோனத்தான்,

௩௫ ஆராரியனான் சாக்காரின் குமாரன் அகியாம், ஊரின் குமாரன் எலிப்பால்,
௩௬ மெகராத்தியனான் எப்பேர், பெலோனியனான் அகியா,
௩௭ கர்மேலியனான் எஸ்ரோ, எஸ்பாயின் குமாரன் நாராயி,
௩௮ நாத்தானின் சகோதரன் யோவேல், அக்ரியின் குமாரன் மிப்கார்.
௩௯ அம்மோனியனான் சேலேக், சேருயாவின் குமாரனாகிய யோவாபின் ஆயுதங்களைப் பிடிக்கிற பேரோத்தியனான் நாராயி.
௪௰ இத்தரியனாகிய ஈரா, இத்தரியனாகிய காரேப்,
௪௧ ஏத்தியனான் உரியா அக்லாயின் குமாரன் சாபாத்.
௪௨ ரூபனியரின் தலைவனாகிய சீசாவின் குமாரனான அதினா என்ற ரூபனியனை அவனண்டையிலே முப்பதுபேரிருந்தார்கள்,
௪௩ மாகாவின் குமாரன் ஆனான் மித்னியனான யோசபாத்.
௪௪ அஸ்தரோத்தியனான் உசியா அரோவேரியனான் ஒத்தாமின் குமாரர் சமாவும் எயேலும்.
௪௫ சிம்ரியின் குமாரன் எதியாயேல் தித்சியனான அவன் சகோதரன் யோகா.
௪௬ மாகாவியனான எலியேல் எல்நாமின் குமாரர் எரிபாயும் யோசவியாவும் மோவாபியனான் இத்மா.
௪௭ மெசோபாயா ஊரானான் எலியேல் ஓபேதும் யாசியேலுந்தானே.

௰௨. அதிகாரம்.

பின்புத்தாவீதுக்கு ஒத்தாசைபண்ணின சேவகரின்விபரம்.

தாவீது கீசின்குமாரனாகிய சவுலினிமித்தம் இன்னம் மறைவாயிருக்கையிற் சிக்லாகிலிருக்கிற அவனண்டைக்கு வந்து,
௨ யுத்தத்திற்கு ஒத்தாசைசெய்தவீரருள் கவண்டெறிகிறதற்கும் வில்லிலே அம்பெய்கிறதற்கும் வலது இடதுகை வாட்டமான பராக்கிரமமான மற்ற மனுஷருமாவது, சவுலின் சகோதரராகிய பென்யமீன்கோத்திரத்தில்,
௩ கிபேயா ஊரானான் சேமாகின் குமாரராகிய அகியேசர் என்ற தலைவனும் யோவாசும் அஸ்மாவேத்தின் குமாரராகிய எசியேலும் பேலேத்தும் பேராக்கா அனதோத்தியனான் ஏகூவென்றவர்களும்,
௪ முப்பதுபேரிற் பராக்கிரமனும் முப்பதுபேருக்குப் பெரியவனுமான இஸ்மாயாவென்ற கிபேயோனியனும் எரேமியா, யகாசியேல் யோகனான் கெதேரூரானான யோசபாத்,
௫ எலூசாயி எரிமோத் பாலியா செமரியா ஆருபியனான் செப்பத்தியா,
௬ எல்க்கானா இஷியா அசாரியேல் யோவேசேர் யசோபெயாமென்ற கோராகியரும்,
௭ யோவேலா செப்தியா என்ற கேதோர் ஊரானான் எரோகாமின் குமாருந்தானே.
௮ காதியரிற் பரிசையும் ஈட்டியும் பிடித்துச் சிங்கங்களின் முகங்களைப்போலொத்த முகப்பார்வையும் மலைகளிலிருக்கிற வெளிமான்களைப்போல வேகமுமாயிருந்து யுத்தத்திற்குச் சேவகரான பராக்கிரமக்காரர் சிலரும் வனாந்திரத்திலுள்ள அரணிடத்திலிருக்கிற தாவீதுவசமாய்ச் சேர்ந்தார்கள்.
௯ அவர்களில், ஏசேரென்ற தலைவன். அவனுக்கு இரண்டாவது ஒபதியா மூன்றாவது எலியாப்,
௰ நாலாவது மிஸ்மன்னா ஐந்தாவது எரேமியா,
௧௧ ஆறாவது அத்தாயி ஏழாவது எலியேல்,
௧௨ எட்டாவது யோகனான் ஒன்பதாவது எல்சாபாத்,
௧௩ பத்தாவது எரேமியா பதினோராவது மக்பன்னாயி,
௧௪ காத்புத்திரரான இவர்கள் இராணுவத்தலைவராயிருந்தார்கள். அவர்களிற் சின்னவன் நூறுபேருக்கும் பெரியவன் ஆயிரம்பேருக்கும் சேர்வைக்காரராயிருந்தார்கள்.
௧௫ யோர்தான் தன் கரைகளின்மேலெல்லாம் புரண்டுபோயிருக்கிற முதலாம் மாதத்தில் அதைக் கடந்து கிழக்கேயும் மேற்கேயும் பள்ளத்தாக்குகளிலிருக்கிற யாவரையுந் துரத்திவிட்டவர்களிவர்கள்தானே.
௧௬ பின்னையும் பென்யமீன் புத்திரரிலும் யூதா புத்திரரிலுஞ் சிலர் அரணிடத்திலிருக்கிற தாவீதண்டைக்கு வந்தார்கள்.
௧௭ தாவீது புறப்பட்டு அவர்களுக்கெதிர்கொண்டு அவர்களுக்கு உத்தரவுகொடுத்து நீங்கள் எனக்கு ஒத்தாசைபண்ணச் சமாதானமாய் என்னண்டைக்கு வந்தீர்களானால் என் இருதயம் உங்களோடொன்றியிருக்கும். என் கைகளிற் கொடுமையில்லாதிருக்கக்கொள்ள என்னை என் சத்துருக்களுக்குக் காட்டிக்கொடுக்க வந்தீர்களேயாகில், நம்முடைய பிதாக்களின்ப

ராபரன் அதைப்பார்த்துக் கண்டிப்பாராகவென்றான்.

௰௮ அப்பொழுது முப்பதுபேருக்குத் தலைவனான அமாசாயின்மேல் ஆவி இறங்கினதினால் அவன்: தாவீதே! நாங்கள் உம்முடையவர்கள். ஈசாயின் குமாரனே! உம் வசமாயிருப்போம். உமக்குச் சமாதானஞ் சமாதானம். உமக்கொத்தாசைபண்ணுகிறவர்களுக்குஞ் சமாதானம். ஏனெனில் உம்முடைய பராபரன் உமக்குச் சகாயஞ்செய்கிறாரென்றான். அப்பொழுது தாவீது அவர்களைச் சேர்த்துக்கொண்டு பிற்பாடு அவர்களைத் தண்டுத் தலைவருக்குள்ளே வைத்தான்.

௰௯ சவுலின்மேல் யுத்தம்பண்ணப்போகிற பெலிஸ்தருடனே கூடத் தாவீது வருகிறபோது மனாசேயிலுஞ் சிலர் அவன் வசமாய்ச் சேர்ந்தார்கள். ஆனால் அவர்களுக்குதவியானதில்லை. ஏனெனில் பெலிஸ்தரின் பிரபுக்கள் யோசனைபண்ணி அவன் தம்முடைய தலைகளுக்கு மோசமாய்த் தன்னாண்டவனாகிய சவுலின் வசமாய்ப்போவானென்று அவனை அனுப்பிவிட்டார்கள்.

௨௰ அப்படியே அவன் சிக்லாவுக்குத் திரும்பிப்போகையில் மனாசேயில் அத்ரூ, யோசபாத், எதியாவேல், மிகவேல், யோசபாத், எலிகூ, சில்லத்தாயியென்னும் மனாசே கோத்திரத்தாரின் ஆயிரத்துச் சேர்வைக்காரர் அவன் வசமாய் வந்தார்கள்.

௨௰௧ இவர்கள் தாவீதுக்கு அந்தத் தண்டுக்கு விரோதமாய் ஒத்தாசைபண்ணினார்கள். ஏனெனில் அவர்களெல்லாரும் பராக்கிரமக்காரரும் இராணுவத்திற் சேர்வைக்காரருமாயிருந்தார்கள்.

௨௰௨ அக்காலத்தில் தாவீதின் பாளயம் பராபரனுடைய சேனையைப்போலப் பெருகுமட்டும் அக்காலத்திலே நாளுக்குநாள் அவனுக்கொத்தாசைபண்ண மனுஷர் அவனண்டை வந்தார்கள்.

௨௰௩ கர்த்தருடைய வாக்கின்படியே சவுலின் இராச்சியபாரத்தைத் தாவீதண்டைக்குத் திருப்ப எபிரோனிலிருக்கிற அவனண்டைக்கு வந்த சேவகத்திற்கு ஆயத்தமான தலைவரின் இலக்கங்களாவது.

௨௰௪ யூதாபுத்திரரிற் பரிசையும் ஈட்டியும் பிடித்துச் சேவகத்திற்கு ஆயத்தமானவர்கள் ஆறாயிரத்தெண்ணூறுபேர்.

௨௰௫ சிமியோன்புத்திரரிற் சேவகத்திற்குப் பராக்கிரமமானவர்கள் ஏழாயிரத்தொருநூறுபேர்.

௨௰௬ லேவி புத்திரரில் நாலாயிரத்தறுநூறுபேரும்,

௨௰௭ ஆரோனசந்ததியாரின் முதன்மையானாகிய யோய்தாவும் அவனோடிருந்த மூவாயிரத்தெழுநூறுபேரும்,

௨௰௮ பராக்கிரமசாலியான சாதோக்கென்ற வாலிபனும் அவன் தகப்பன் வீட்டாரான இருபத்திரண்டு பிரபுக்களுந்தானே.

௨௰௯ பென்யமீன்புத்திரரான சவுலின் சகோதரரில் மூவாயிரம்பேர். ஏனென்றால் அந்நாள்மட்டுக்கும் அவர்களில் மிச்சமானவர்கள் சவுலின் வீட்டைக் காப்பாற்றப் பார்த்தார்கள்.

௩௰ எப்பிராயீம்புத்திரரில் தங்கள் பிதாக்களின் வீட்டாருக்குள்ளே பேர்பெற்ற மனுஷரான பராக்கிரமசாலிகள் இருபதினாயிரத்தெண்ணூறுபேர்.

௩௰௧ மனாசேயின் பாதிக்கோத்திரத்தில் தாவீதை இராசாவாக்குகிறதற்கு வரும்படி பேர்பேராகக் குறிக்கப்பட்டவர்கள் பதினெண்ணாயிரம்பேர்.

௩௰௨ இசக்கார்புத்திரரில் இஸ்ரவேல் செய்யவேண்டியதின்னதென்றறிந்து காலங்களுக்குத்தக்க உணர்வுள்ளவர்களான அவர்களின் இருநூறு தலைவமாரும் இருநூறு பேரும் இவர்கள் வாக்குக்குச் செவிகொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருந்தானே.

௩௰௩ செபுலோனிற் சகலவித யுத்த ஆயுதங்களாலும் யுத்தஞ்செய்கிறதற்கும் வஞ்சனையில்லாத வரிசையாய் நிற்கிறதற்கும் படையில் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் ஐம்பதினாயிரம்பேர்.

௩௰௪ நப்தலியில் ஆயிரம் பிரபுக்களும் அவர்களோடே கூடவிருந்த பரிசையும் ஈட்டியும் பிடித்த முப்பத்தேழாயிரம்பேரும்,

௩௰௫ தாணியரில் யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டவர்கள் இருபத்தெண்ணாயிரத்தறுநூறுபேர்.

௩௰௬ ஆசேரில் யுத்தத்திற்கு ஆயத்தப்பட்டவர்களாய்ச் சேவகம்பண்ணப் போகத்தக்கவர்கள் நாற்பதினாயிரம்பேர்.

௩௰௭ யோர்தானுக்கக்கரையான ரூபனியரிலுங் காத்தியரிலும் மனாசேயின் பாதிக்கோத்திரத்திலும் யுத்தம்பண்ணுகிறதற்குச் சகலவித ஆயுதங்களையுந் தரித்தவர்கள் இலட்சத்திருபதினாயிரம்பேர்.

௩௰௮ தாவீதை இஸ்ரவேல்மேல் இராசாவாக்குகிறதற்கு இந்த யுத்தமனுஷரெல்லாரும் அணியணியாய் வைக்கப்பட்டவர்களாய் உத்தம இருதயத்தோடே எபிரோனுக்கு வந்தார்கள். இஸ்ரவேலில் மற்றவர்களுந் தாவீதை இராசாவாக்குகிறதற்கு ஒருமனப்பட்டிருந்தார்கள்.

௩௯ அவர்கள் அங்கே தாவீதோடேகூட மூன்று நாளிருந்து போசித்துக் குடித்தார்கள். ஏனெனில் அவர்கள் சகோதரர் அவர்களுக்காகச் சேகரம்பண்ணினார்கள்.

௪௰ இசக்கார் செபுலோன் நப்தலியின் எல்லைமட்டும் அவர்களுக்குச் சமீபமாயிருந்தவர்களுங் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலுங் கோவேறுகழுதைகளின்மேலும் மாடுகளின்மேலும் ஏற்றின் திண்பண்டங்களாகிய மாவின்வர்க்கங்களையும் அத்திப்பழ அடைகளையும் வற்றலான திராட்சப்பழங்களையுந் திராட்சப்பழ இரசத்தையும் எண்ணெயையும் ஆடுமாடுகளையுந் திரளாய் ஏற்றிக்கொண்டு வந்தார்கள். ஏனெனில் இஸ்ரவேலிலே மகிழ்ச்சியுண்டாயிருந்தது.

௰௩. அதிகாரம்.

கீரியாத் யாரீமிலிருந்த உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டுவந்து ஓபேத்ஏதோமின் வீட்டிலே வைத்தது.

தாவீது ஆயிரத்திற்குச் சேர்வைக்காரரோடும் நூற்றுக்குச் சேர்வைக்காரரோடுஞ் சகல பிரபுக்களோடும் ஆலோசனைபண்ணி,

௨ இஸ்ரவேல் சபைக்கெல்லாஞ் சொன்னதாவது, உங்களுக்குச் சம்மதியும் நம்முடைய பராபரனாகிய கர்த்தருடைய சித்தமுமாயிருந்தால் இஸ்ரவேலின் தேசங்களெல்லாமிருக்கிற நம்முடைய மற்றச் சகோதரரும் அவர்களோடே தங்களுடைய பட்டணங்களிலிருக்கிற ஆசாரியரும் லேவியரும் நம்மோடேகூடும்படிக்கு நாஞ் சீக்கிரமாக அவர்களண்டைக்கு ஆள்களையனுப்பி,

௩ நம்முடைய பராபரனுடைய பெட்டியைத் திரும்ப நம்மண்டைக்குக் கொண்டுவருவோமாக. ஏனென்றால் சவுலின் நாட்களிலே அதைத் தேடாதேபோனோமே என்றான்.

௪ அப்போது சபையெல்லாம் இப்படிச் செய்யவேண்டுமென்றார்கள். ஏனெனில் இந்தக் காரியஞ் சகல சனத்தின் பார்வைக்குஞ் செம்மையாயிருந்தது.

௫ அப்படியே பராபரனுடைய பெட்டியைக் கீரியாத் யாரீமிலிருந்து கொண்டுவரத் தாவீது எகிப்தினுடைய சீகோர்த்தியைத் துவக்கி ஆமாத்தின் எல்லைமட்டுமுள்ள இஸ்ரவேலையெல்லாங் கூட்டி,

௬ கேருபீன்களின் நடுவே வாசம்பண்ணுகிற கர்த்தராகிய பராபரனுடைய நாமந்தொழுதுகொள்ளப்படுகிற அவருடைய பெட்டியை யூதாவிலிருக்கிற கீரியாத் யாரீமுக்குச் சேர்ந்த பாலாவிலிருந்தே கொண்டுவரும்படிக்கு அவனும் இஸ்ரவேலனைத்துமாய் அவ்விடத்துக்குப் போனார்கள்.

௭ அவர்கள் பராபரனுடைய பெட்டியை அபினதாபின் வீட்டிலிருந்து ஒரு புது இரதத்தின்மேலேற்றிக்கொண்டுவந்தார்கள். ஊசாவும் அகியோவும் இரதத்தை நடத்தினார்கள்.

௮ தாவீதுஞ் சகல இஸ்ரவேலரும் எல்லாப் பலத்தோடும் பராபரனுக்கு முன்பாகப் பாட்டுகளைப்பாடிச் சுரமண்டலங்களையுந் தம்புருகளையும் மேளங்களையுங் கைத்தாளங்களையும் பூரிகைகளையும் மகிழ்ச்சியாய்ச் சேவித்துக்கொண்டிருந்தார்கள்.

௯ அவர்கள் கீதோனின் களமட்டும் வந்தபோதோவெனில் மாடுகள் இடறினபடியினாலே ஊசா பெட்டியைப் பிடிக்கத் தன் கையை நீட்டினான்.

௰ அப்போது கர்த்தர் ஊசாவின்மேற் கோபமுண்டானார். அவன் தன் கையைப் பெட்டியண்டைக்கு நீட்டின நிமித்தம் அவனையடித்தார். அங்கேயவன் பராபரனுக்கு முன்பாக மரித்தான்.

௰௧ அப்போது கர்த்தர் ஊசாவையடித்த இடிக்காகத் தாவீது மனஸ்தாபப்பட்டு அந்த ஸ்தலத்திற்கு இந்நாள்மட்டுமிருக்கிற ஊசாவினிடியென்று பேரிட்டு,

௰௨ அன்றையத்தினம் பராபரனுக்குப் பயந்து பராபரனுடைய பெட்டியை நான் என்னண்டைக்குக் கொண்டுவருவது எப்படி? என்று சொல்லி,

௰௩ பெட்டியைத் தன்னண்டைக்குத் தாவீதின் பட்டணத்திலே கொண்டுவராமல் அதைக் கேத்தியனாகிய ஓபேத்ஏதோமின் வீட்டிலே சேர்த்தான்.

௰௪ அன்றிப் பராபரனுடைய பெட்டி ஓபேத்ஏதோமின் வீடாகிய அவனிடத்திலே மூன்று மாதமிருக்கக்கொள்ளக் கர்த்தர் ஓபேத்ஏதோமின் வீட்டையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார்.

௰௪. அதிகாரம்.

தாவீதின் சுகசீரும் அவன் பெலிஸ்தரைச் செயித்த செயங்களும்.

தீருவின் இராசாவாகிய ஈராந் தாவீதண்டைக்குத் தானாபதிகளையும் அவனுக்கு ஒரு வீட்டைக் கட்டுகிறதற்குக் கேதுரு

மரங்களையுங் கற்றச்சரையுந் தச்சரையும் அனுப்பினான்.

௨ கர்த்தர் தன்னை இஸ்ரவேலின்மேல் இராசாவாகத் திடப்படுத்தினாரென்பதைத் தாவீது கண்டறிந்தான். ஏனெனில் இஸ்ரவேலென்கிற அவருடைய சனத்தினிமித்தம் அவனுடைய இராச்சியம் மிகவும் உயர்ந்தது.

௩ எருசலேமிலே தாவீது பின்னையுஞ் சில ஸ்திரிகளை விவாகம் பண்ணி இன்னுங் குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௪ எருசலேமிலே அவனுக்குப் பிறந்த குமாரரின் நாமங்களாவது, சம்மூவா சோபாப் நாத்தான் சாலொமோன்,

௫ இப்கார் எலிசூவா எலிப்பெலேத்,

௬ நோகா நெபெக் யப்பீயா,

௭ எலிஷாமா பெலியாதா எலிப்பெலேத்தென்பவர்கள்.

௮ தாவீது இஸ்ரவேலின்மேலெல்லாம் இராசாவாக அபிஷேகம் பண்ணப்பட்டதைப் பெலிஸ்தர் கேட்டபோது பெலிஸ்தரெல்லாருந் தாவீதைத் தேடியேறிவந்தார்கள். அதைத் தாவீது கேட்கிறபோது அவர்களுக்கெதிராகப் புறப்பட்டான்.

௯ பெலிஸ்தரோவெனில் வந்து ரெப்பாயிம் பள்ளத்தாக்கில் விசாலத்திலிறங்கினார்கள்.

௰ பெலிஸ்தரின்மேலே போவேனோ? அவர்களை என் கையிலொப்புக்கொடுப்பீரோ? என்று தாவீது பராபரனைக் கேட்டபோது கர்த்தர் அவனுக்கு ஏறு. அவர்களை உன் கையிலொப்புக்கொடுப்போமென்றார்.

௰௧ அவர்கள் பால்பிராசிமுக்கேறி வந்தபோது தாவீது அங்கே அவர்களை முறிய டித்துத் தண்ணீர்கள் வடிந்துபோகிறப்போலே பராபரன் என் கையினாலே என் சத்துருக்களை வடிந்துபோகப் பண்ணினாரென்றான். அதைத் தொட்டு அந்த ஸ்தலத்திற்குப் பால்பிராசீமென்று பேரிட்டார்கள்.

௰௨ அங்கே அவர்கள் தங்கள் தேவர்களை விட்டு ஓடினார்கள். அவைகள் தாவீது கற்பித்தபடி அக்கினியாலே சுட்டெரிக்கப்பட்டது.

௰௩ ஆனாற் பெலிஸ்தர் மறுபடியும் அந்தப் பள்ளத்தாக்கின் விசாலத்திலே வந்திறங்கினார்கள்.

௰௪ அப்போது தாவீது திரும்பப் பராபரனைக் கேட்டதற்குப் பராபரன் அவனுக்கு நீ அவர்களுக்குப் பின்னாலே ஏறிப் போகாமல் அவர்களுக்குப் பக்கமாய்ச் சுற்றி முசுக்கட்டைச் செடிகளுக்கெதிரேயிருந்து அவர்கள்மேல் வந்து,

௰௫ முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளில் நடந்துவருகிற இரைச்சலை நீ கேட்கையில் அப்போது யுத்தத்திற்குப் புறப்படு. ஏனெனில் அப்போது பெலிஸ்தரின் பாளயத்தை முறியடிக்கப் பராபரன் உனக்கு முன்னாகப் புறப்பட்டிருப்பாரென்றார்.

௰௬ பராபரன் தனக்குக் கற்பித்தபடியே தாவீது செய்கிறபோது பெலிஸ்தரின் இராணுவத்தை கிபியோன் தொடங்கிக் கெசேர்மட்டும் முறியடித்தார்கள்.

௰௭ அப்படியே தாவீதின் கீர்த்தி சகல தேசங்களிலும் பிரசித்தமாகி அவனுக்குப் பயப்படுகிற பயத்தைக் கர்த்தர் சகல சாதிகளின்பேரிலும் வரப்பண்ணினார்.

௰௫. அதிகாரம்.

உடம்படிக்கையின் பெட்டியை ஓபேதேதோமின் வீட்டிலிருந்து எருசலேமிலே போட்டப்பட்ட கூடாரத்திலே கொண்டுவரப்பட்டது.

அவன் தனக்குத் தாவீதின் பட்டணத்தில் வீடுகளையுண்டாக்கிப் பராபரனுடைய பெட்டிக்கு ஒரு ஸ்தலத்தையாயத்தப்படுத்தி அதின்மேல் ஒரு கூடாரத்தை விரித்தான்.

௨ பிற்பாடு தாவீது லேவியரையேயொழிய வேறொருவரும் பராபரனுடைய பெட்டியையெடுக்கலாகாது. ஏனெனிற் பராபரனுடைய பெட்டியையெடுக்கவும் என்றைக்கும் அவருக்குப் பணிவிடை செய்யவும் அவர்களைக் கர்த்தர் தெரிந்துகொண்டாரென்றான்.

௩ அப்படியே தான் கர்த்தருடைய பெட்டிக்கு ஆயத்தப்படுத்தின அதின் ஸ்தலத்திற்கு அதை ஏறிவரப்பண்ணத் தாவீது இஸ்ரவேலையெல்லாம் எருசலேமிலே கூட்டி,

௪ ஆரோனின் புத்திரரையும்,

௫ லேவியராகிய காகாத் புத்திரரிற் பிரபுவாகிய ஊரியேலையும் அவன் சகோதரராகிய நூற்றிருபது பேரையும்,

௬ மெராரியின் புத்திரரிற் பிரபுவாகிய ஆசாயாவையும், அவன் சகோதரராகிய இருநூற்றிருபது பேரையும்,

௭ கெர்சோம் புத்திரரிற் பிரபுவாகிய யோவேலையும் அவன் சகோதரராகிய நூற்றுமுப்பது பேரையும்,

௮ எலிசாப்பாம் புத்திரரிலே பிரபுவாகிய செமாயாவையும் அவன் சகோதரராகிய இருநூறு பேரையும்,

௫ ஏபிரோன் புத்திரரிலே பிரபுவாகிய எலியேலையும் அவன் சகோதரராகிய எண்பது பேரையும்,

௬ ஊசியேல் புத்திரரிலே பிரபுவாகிய அம்மினதாபையும் அவன் சகோதரராகிய நூற்றுப்பன்னிரண்டு பேரையுந் தாவீது கூடிவரப்பண்ணினான்.

௰௧ பிற்பாடு தாவீது ஆசாரியராகிய சாதோக்கையும் அபியத்தாரையும், லேவியராகிய ஊரியேல், அசாயா, யோவேல், செமாயா, எலியேல், அம்மினதாபு என்பவர்களையும் அழைத்து,

௰௨ அவர்களுடனே லேவியரில் நீங்கள் பிதாக்களுடைய சந்ததிகளின் தலைவர். நீங்கள் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின் பெட்டியை யதற்குத்தான் ஆயத்தம்பண்ணின ஸ்தலத்திற்கேற்றிவரப்பண்ண, உங்களையும் உங்கள் சகோதரரையும் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளுங்கள்.

௰௩ ஏனென்றால் முதல் நீங்கள் அதைச் சுமக்காதபடியினாலும் நாம் தம்முடைய பராபரனாகிய கர்த்தரை நியாயமானபடி தேடாதேபோனபடியினாலும் அவர் நம்மிலே இடிக்குதலுண்டாக்கினாரே என்றான்.

௰௪ அப்படியே ஆசாரியர்களும் லேவியர்களும் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின் பெட்டியை யேற்றிவரப்பண்ணத்தக்கதாகத் தங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டார்கள்.

௰௫ பிற்பாடு லேவிபுத்திரர் கர்த்தருடைய வார்த்தையின்படியே மோசே கற்பித்தபிரகாரமாகப் பராபரனுடைய பெட்டியை யவைகளிலிருக்கிற வாணைகளினாலே தங்கள் தோள்களின்மேலெடுத்தார்கள்.

௰௬ தாவீது லேவியரின் பிரபுக்களுடனே நீங்கள் உங்கள் சகோதரராகிய பாடகர்களைக் கீதவாத்தியங்களாகிய தம்புருக்களோடுஞ் சுரமண்டலங்கள் கைத்தாளங்களோடுந் தங்கள் சத்தத்தையுயர்த்திச் சந்தோஷமுண்டாகக் கேட்கப்பண்ணும்படிக்கு நியமிக்க வேண்டுமென்று சொன்னான்.

௰௭ அப்படியே லேவியர் யோவேலின் குமாரனாகிய ஏமானையும் அவன் சகோதரரில் பெரகியாவின் குமாரனாகிய ஆசாப்பையும் மெராரியின் புத்திரராகிய தங்கள் சகோதரரில் குஷாயாவின் குமாரனாகிய ஏத்தானையும்,

௰௮ இவர்களோடுங் கூட இரண்டாவது வரிசையாகத் தங்கள் சகோதரராகிய சகரியா, பேன், யாசியேல், செமிராமோத், ஏகியேல், உன்னி, எலியாப், பெனாயா, மசெயா, மத்தித்தியா, எலிப்பேலேகு, மிக்னேயா, ஓபேதேதோம், ஏயியேல் என்பவர்களையும் வாசற்காவலாளராக நிறுத்தினார்கள்.

௰௯ பாடகராகிய ஏமானும் ஆசாபும் ஏத்தானும் வெண்கலக்கைத்தாளங்களைத் தொனிக்கப்பண்ணிப் பாடினார்கள்.

௨௰ சகரியா ஆசியேல் செமிராமோத் ஏகியேல் உன்னி எலியாப் மாசெயா பெனாயா என்பவர்கள் கீச்சுக்குரலாயப்பாடித் தம்புருக்களை வாசித்தார்கள்.

௨௰௧ ஆனால் மத்தித்தியா எலிப்பேலேகு மிக்னேயா ஓபேதேதோம் ஏயியேல் அசசியா என்பவர்கள் ராகம்பிடிக்க எண்ணரம்பு சுரமண்டலங்களை வாசித்தார்கள்.

௨௰௨ லேவியரின் பிரபுவாகிய கெனனியா வோவென்கிற பெட்டியைச் சுமக்கிற வேலையை விசாரித்து அதைச் சுமக்கும் வித்தையைப் போதித்தான். ஏனென்றால் அவன் உணர்வுள்ளவனாயிருந்தான்.

௨௰௩ பெரகியாவும் எல்க்கானாவும் பெட்டிக்குமுன்பாகக் காவற்காத்து நடந்தார்கள்.

௨௰௪ ஆனால் செபனியா யோஷபாத் நெதனெயேல் அமாசாயி சகரியா பெனாயா எலியேசர் என்னும் ஆசாரியர் பராபரனுடைய பெட்டிக்குமுன்பாகப் பூரிகைகளை யூதினார்கள். ஓபேதேதோமும் எகியாவுமோவென்கிற பெட்டியின்பிறகாலே காவற்காத்துவந்தார்கள்.

௨௰௫ இப்படித் தாவீதும் இஸ்ரவேலின் மூப்பரும் ஆயிரத்துக்கு மேலான சேர்வைக்காரரும் கர்த்தருடைய உடம்படிக்கையின் பெட்டியை ஓபேதேதோமின் வீட்டிலிருந்து மகிழ்ச்சியோடே ஏற்றிவரப்பண்ணப் போனார்கள்.

௨௰௬ கர்த்தருடைய உடம்படிக்கையின் பெட்டியைச் சுமக்கிற லேவியருக்குப் பராபரன் அநுக்கிரகம்பண்ணுகிறபோது அவர்கள் ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் பலியிட்டார்கள்.

௨௰௭ தாவீதும் பெட்டியைச் சுமக்கிற எல்லா லேவியரும் பாடகர்களும், பாடகரின் வேலையை விசாரிக்கிற பிரபுவாகிய கெனனியாவும் மெல்லியபுடவையான சால்வைகளைத் தரித்திருந்தார்கள். தாவீதுச ணல்நூலான ஆசாரியச் சால்வையையும் போர்த்துக்கொண்டிருந்தான்.

௨௰௮ அப்படியே இஸ்ரவேலனைத்துங் கர்த்தருடைய உடம்படிக்கையின் பெட்டியைக் கெம்பீரத்தோடும் எக்காளங்கள் பூரிகைகள் கைத்தாளங்களுடைய தொனிப்போடுந் தம்புருக்களையுஞ் சுரமண்டலங்

களையும் வாசிக்கிற சத்தத்தோடும் ஏறிவரப் பண்ணினார்கள்.

௨௯ கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டி தாவீதின் பட்டணமட்டும் வந்தபோதெனிற் சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணி வழியாய்ப் பார்த்துத் தாவீது இராசா நடனம்பண்ணுகிறதையுங் கீதவாத்தியம் பாடுகிறதையுங் கண்டு, அவனைத் தன்னிருதயத்திலே அசட்டைபண்ணினாள்.

௰௬. அதிகாரம்.

தாவீது தெய்வ ஆராதனையையும் அதற்கடுத்த கீதவாத்தியத்தையுந் திட்டம்பண்ணினது.

அவர்கள் பராபரனுடைய பெட்டியை உள்ளே கொண்டுவந்தபோது அவர்கள் அதைத் தாவீது அதற்குப் போட்ட கூடாரத்தின் நடுவே வைத்துப் பராபரனுடைய சந்நிதியிற் சர்வாங்கதகனங்களையுஞ் சமாதானப்பலிகளையுஞ் செலுத்தினார்கள்.

௨ தாவீது சர்வாங்கதகனங்களையுஞ் சமாதானப்பலிகளையுஞ் செலுத்தித் தீர்ந்த பிற்பாடு அவன் சனத்தைக் கர்த்தருடைய நாமத்திலே ஆசீர்வதித்து,

௩ புருஷர்முதல் ஸ்திரீகள்மட்டுக்கும் இஸ்ரவேலராகிய அனைவருக்கும் அவரவருக்கு ஒவ்வொரு பணியாரத்தையும் ஒவ்வொரு இறைச்சித்துண்டத்தையும் ஒவ்வொரு படி திராட்சப்பழ இரசத்தையும் பங்கிட்டான்.

௪ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணித் துதித்துப் புகழுகிறதற்குக் கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாகச் சேவிக்கத்தக்க லேவியரிற் சிலரை அவன் வைத்தான்.

௫ அவர்களில் ஆசாப் தலைவனும், சகரியா அவனுக்கு இரண்டாவதுமாயிருந்தான். ஏயேல் செமிரமோத், எகியேல், மத்தித்தியா, எலியாப், பெனாயா, ஓபேதேதோம், ஏயேல் என்றவர்கள் தம்புருகள் சுரமண்டலங்களென்கிற கீதவாத்தியங்களையும் ஆசாப் போவெனிற் கைத்தாளங்களையும் வாசிக்கவும்

௨௯ கீசின் புத்திரரிலேவென்றால் எராமேயேலும்,

௩௰ மூசியின் குமாரரான மகேலி, ஏதேர், எரிமோத் என்றவர்களுமாகிய இவர்கள் தங்கள் பிதாக்களுடைய வீடுகளின்படி லேவியரின் புத்திரரானவர்கள்.

௩௧ இவர்களும் இராசாவாகிய தாவீதுக்குஞ் சாதோக்குக்கும் அகிமெலேக்குக்கும் ஆசாரியரிலும் லேவியரிலும் பிதாக்களாயிருக்கிற தலைவருக்கு முன்பாகத் தங்கள் சகோதரராகிய ஆரோனின் புத்திரர் செய்ததுபோலே, தங்களிலிருக்கிற பிதாக்களான தலைவருக்கும் அவர்களுடைய இளைய சகோதரருக்குஞ் சரிசமானமாய்ச் சீட்டுகளைப் போட்டுக்கொண்டார்கள்.

௨௫. அதிகாரம்.

பரிசுத்தப்பாடகர் இருபத்துநாலு முறைவரிசைகளாக வகுக்கப்பட்டது.

பின்னையுஞ் சுரமண்டலங்களாலுந் தம்புருகளாலுங் கைத்தாளங்களாலுந் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற ஆசாப், ஏமான், எதுத்தூன் என்றவர்களின் குமாரரிற் சிலரைத் தாவீதுஞ் சேனைகளின் பிரபுக்களும் ஊழியத்துக்கென்று பிரித்துவைத்தார்கள். தங்கள் ஊழியத்தின் கிரியைக்குறித்து வைக்கப்பட்ட மனுஷர்களின் இலக்கம்.

௨ அதென்றால் இராசாவுடைய கட்டளைப்பிரமாணமாயத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற ஆசாபின் வசத்திலிருக்கிற ஆசாபின் குமாரரிற் சக்கூர், யோசேப்பு, நெதனியா, அஷரேலா என்றவர்களையும்.

௩ கர்த்தரைப் போற்றித் துதித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற தங்கள் தகப்பனாகிய எதுத்தூனின் வசத்தில் சுரமண்டலங்களை வாசிக்க எதுத்தூனின் குமாரராகிய கெதலியா, சேரீ, எசாயா, அஷபியா, மத்தித்தியா என்ற ஆறுபேரையும்,

௪ கொம்பைத் தொனிக்கப்பண்ணப் பராபரனுடையவார்த்தைகளில் இராசாவுக்கு ஞானதிருஷ்டிப் புருஷனாகிய ஏமானின் குமாரரான புக்கியா, மத்தனியா, ஊசியேல், செபுவேல், எரிமோத், அனனியா, அனானி, எலியாத்தா, கிதல்தி, ரொமந்தியேசர், யோஸ்பெகாஷா, மல்லோத்தி, ஓத்திர், மகாசியோத் என்றவர்களையுந்தாமென.

௫ இவர்களெல்லாரும் ஏமானின் குமாரராயிருந்தார்கள். ஏமானிற் பராபரன் ஏமானுக்குப் பதினாலு குமாரரையும் மூன்று குமாரத்திகளையுங் கொடுத்திருந்தார்.

௬ இவர்களனைவரும் இராசாவுடைய கட்டளைப்பிரமாணமாயக் கர்த்தருடைய வீட்டில் தாங்கள் தம்புருகள் சுரமண்டலங்களுடைய கீதவாத்தியஞ்செய்ய, பராபரனுடைய வீட்டு ஊழியமாக அவரவர் தங்கள் தங்கள் தகப்பனாகிய ஆசாப், எதுத்தூன், ஏமானென்றவர்கள் வசத்திலிருந்தார்கள்.

௭ கர்த்தரைப்பாடும் பாட்டுகளைக் கற்றுக்கொண்டு அனைவரும் அறிவுள்ளவர்களான தங்கள் சகோதரரோடுங்கூட அவர்கள் இலக்கத்தில் இருநூற்றெண்பத்தெட்டுப்பேராயிருந்தார்கள்.

௮ அவர்கள் சின்னவனும் பெரியவனுங் கற்றுக்கொடுக்கிறவனுங் கற்றுக்கொள்ளுகிறவனுஞ் சரிசமானமாய முறைவரிசைக்காகச் சீட்டுகளைப் போட்டுக்கொண்டார்கள்.

௯ முதலாஞ் சீட்டு ஆசாப் வசமான யோசேப்பின் பேர்வழிக்கும், இரண்டாவது கெதலியா, அவன் சகோதரர், அவன் குமாரரென்ற பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰ மூன்றாவது சக்கூர், அவன் குமாரர் அவன் சகோதரரென்ற பன்னிரண்டுபேர்வழிக்கும்.

௰௧ நாலாவது இஸ்ரீ, அவன் குமாரர் அவன் சகோதரரென்ற பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰௨ ஐந்தாவது நெத்தனியா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰௩ ஆறாவது புக்கியா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰௪ ஏழாவது எசரேலா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰௫ எட்டாவது எசாயா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰௬ ஒன்பதாவது மத்தனியா அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்.

௰௭ பத்தாவது சிமேயா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰௮ பதினோராவது அசாரேயேல், அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௰௯ பன்னிரண்டாவது அஷாபியா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௰ பதின்மூன்றாவது சுபவேல், அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௧ பதினாலாவது மத்தித்தியா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௨ பதினைந்தாவது எரேமோத், அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௩ பதினாறாவது அனனியா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௪ பதினேழாவது யோஸ்பேக்காஷா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டு பேர்வழிக்கும்,

௨௫ பதினெட்டாவது அனானி, அவன் குமாரர், அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்.

௨௬ பத்தொன்பதாவது மல்லோத்தி அவன் குமாரர், அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௭ இருபதாவது எலியாத்தா, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௮ இருபத்தோராவது ஒத்தீர், அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௨௯ இருபத்திரண்டாவது கித்தல்தி, அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௩௰ இருபத்துமூன்றாவது மகசியோத், அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டுபேர்வழிக்கும்,

௩௧ இருபத்துநாலாவது ரொமந்தியேசர், அவன் குமாரர் அவன் சகோதரரொன்றப் பன்னிரண்டு பேர்வழிக்கும் விழுந்தது.

௨௬. அதிகாரம்.

வாசற்காப்பாருந்தேவாலய உக்கிராணக்காரருஞ் சிலமணியக்காரரும் நியாயாதிபதிகளும் வைக்கப்பட்டது.

வாசற்காக்கிறவர்களின் வகுப்புகளாவன, கோராகியர் சந்ததியான ஆசாபின் புத்திரரிலே கோரேயின் குமாரன் மெஷெலெமியாவென்பவன்.

௨ மெஷெலெமியாவின் குமாரர், மூத்தவனாகிய சகரியாவும்,

௩ எதியாயேல், செபதியா, யத்னியேல், ஏலாம், யோகனான், எலியோனாயென்று இரண்டாம் மூன்றும் நாலாம் ஐந்தாம் ஆறும் ஏழுங் குமாரரும்,

௪ ஒபேதேதோமின் குமாரர் மூத்தவனாகிய செமாயாவும்,

௫ யோசபாத், யோவாக், சாக்கார், நெத்தனேயேல், அம்மியேல், இசக்கார், பெயுள்தாயியென்ற இரண்டாம் மூன்றும் நாலாம் ஐந்தாம் ஆறும் ஏழும் எட்டும் ஆகுங்குமாரருந்தானே. ஏனென்றால் பரமன் அவனை ஆசீர்வதித்திருந்தார்.

௬ அவன் குமாரனாகிய செமாயாவுக்கும் குமாரர் பிறந்து, தங்கள் தகப்பன் வீட்டை ஆளுகிறவர்கள். ஏனென்றால் பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள்.

௭ செமாயாவுக்கிருந்த குமாரர், ஒத்னியும், பலசாலிகளாகிய ரெப்பாயேல், ஓபேத், எல்சாபாத்தென்ற அவன் சகோதரரும், எலிகூவும், செமகியாவுந்தானே.

௮ ஒபேதேதோமின் புத்திரரும் அவர்கள் குமாரரும் அவர்கள் சகோதரருமாகிய ஊழியத்திற்குப் பலத்த பராக்கிரமசாலிகளான அவர்களெல்லாரும் அறுபத்திரண்டு பேர்.

௯ மெஷெலெமியாவின் குமாரருஞ் சகோதரருமான பராக்கிரமசாலிகள் பதினெட்டுப்பேர்.

௰ மெராரியின் புத்திரரில் ஓசாவென்றவனுடைய குமாரராவது, சிம்ரியென்ற

னவன். இவன் மூத்தவனாயிராவிட்டாலும் அவன் தகப்பன் அவனைத் தலைவனாக வைத்தான்.

௧௧ இல்கியா, தெபலியா, சகரியா என்ற இரண்டாம் மூன்றாம் நாலாங்குமாரர்களவர்கள். ஓசாவின் குமாரருஞ் சகோதரருமெல்லாம் பதின்மூன்றுபேர்.

௧௨ காவற்காரரான தலைவரின் கீழ்த்தங்கள் சகோதரருக்கொத்த முறையாய்க் கர்த்தருடைய வீட்டில் வாசற்காக்கிறவர்களாய்ச் சேவிக்க இவர்களுக்குக் கட்டளையிட்டு,

௧௩ தங்கள் பிதாக்களின் வீட்டாராகிய சிறியவர்களும் பெரியவர்களுமாய இன்ன வாசலுக்கு இன்னாரென்று சீட்டுப்போட்டுக்கொண்டார்கள்.

௧௪ கீழ்ப்புறத்திற்குச் செலேமியாவுக்குச் சீட்டுவிழுந்தது. விவேகமுள்ள யோசனைக்காரனாகிய சகரியாவென்ற அவனுடைய குமாரனுக்குச் சீட்டைப் போட்டபோது போடப்பட்ட அவன் சீட்டு வடபுறத்திற்கு விழுந்தது.

௧௫ ஓபேத்ஏதோமுக்குத் தென்புறத்திலும், அவன் குமாரருக்குத் தருமப்பண்டகசேகரவீட்டிற்கும்,

௧௬ சுப்பீமுக்கும் ஓசாவுக்கும் மண்போட்டு உயர்த்தப்பட்ட வழியுங் காவலுக்கெதிர்க்காவலுமிருக்கிற மேற்புறமான வாசலுக்குச் சீட்டுவிழுந்தது.

௧௭ கிழக்கே லேவியரான ஆறுபேரும் வடக்கே பகலுமாறு நாலுபேரும் தெற்கே பகலுமாறு நாலுபேரும் தருமகசேருகட்டளையில் ரெவ்விரண்டுபேரும்,

௧௮ வெளிப்புறமான வாசலண்டையில் மேற்கேயிருக்கிற உயர்ந்த வழிக்கு நாலுபேரும், வெளிப்புறமான வழியில் இரண்டுபேருமிருப்பார்கள்.

௧௯ கோராகின் புத்திரருக்குள்ளும் மெராரியின் புத்திரருக்குள்ளும் வாசற்காக்கிறவர்களின் வகுப்புகளிவைகளேதாமே.

௨௦ மற்ற லேவியரில் அகியாவென்றவன் தேவனுடைய வீட்டுப் பொக்கிஷங்களையும் பரிசுத்தம்பண்ணப்பட்டபொருள்களின் பொக்கிஷங்களையும் விசாரிக்கிறவனாயிருந்தான்.

௨௧ லாதானின் குமாரர் ஆனோருள், கெர்சோனியனான அவனுடைய குமாரராகிய பிதாக்களின் தலைவராயிருந்தவர்கள் யெகியேலியும்,

௨௨ யெகியேலியின் குமாரராகிய சேதாமும் அவன் சகோதரனாகிய யோவேலும் கர்த்தருடைய வீட்டுப் பொக்கிஷங்களை விசாரிக்கிறவர்களுமாயிருந்தார்கள்.

௨௩ அம்ராமியரிலும் இத்சேகாரியரிலும் எப்ரோனியரிலும் ஊசியேலியரிலுஞ் சிலர் அப்படியே.

௨௪ மோசேயின் குமாரனாகிய கெர்சோமின் சந்ததியான செபுவேல் பொக்கிஷங்களின் மேலே பிரதானியாயிருந்தான்.

௨௫ எலியேசரைத்தொட்டு அவனுக்கிருந்த சகோதரர்களென்றால். இவனுடைய குமாரனாகிய ரெகபியா, இவனுடைய குமாரனாகிய எசாயாவும், இவன் குமாரன் யோராமும், இவன் குமாரன் சிக்கிரியும், இவன் குமாரன் செலோமித்துமாமே.

௨௬ இராசாவாகிய தாவீதும் ஆயிரத்துக்குச் சேர்வைக்காரரும் நூற்றுக்குச் சேர்வைக்காரருமான பிதாக்களின் தலைவரும் சேனாபதிகளும் யுத்தங்களில் பிடித்துக்கொள்ளையிட்டவைகளிலெடுத்து,

௨௭ கர்த்தருடைய வீட்டைப் பலப்படுத்தும்படிக்குப் பரிசுத்தம்பண்ணின பொருள்களின் பொக்கிஷங்களையெல்லாம் அந்தச் செலோமித்தும் அவனுடைய சகோதரரும் விசாரித்தார்கள்.

௨௮ ஞான திருஷ்டிக்காரனாகிய சாமுவேலும் கீசின் குமாரனாகிய சவுலும் நேரின் குமாரனாகிய அப்னேரும் செருயாவின் குமாரனாகிய யோவாபும் அவரவர் பரிசுத்தம்பண்ணினதெல்லாம் செலோமீத்தின் கையின்கீழும் அவன் சகோதரர்களுடையின் கீழுமிருந்தது.

௨௯ இத்சேகாரியரில் கெனனியாவும் அவன் குமாரரும் வெளிப்புறத்து வேலைக்கு வைக்கப்பட்டு இஸ்ரவேலின் மேல் மணியகாரரும் நியாயாதிபதிகளுமாயிருந்தார்கள்.

௩௦ எப்ரோனியரில் அசபியாவும் அவன் சகோதரருமாகிய ஆயிரத்தெழுநூறு பராக்கிரமசாலிகள் யோர்தானுக்கு இப்பாலே மேற்கேயிருக்கிற இஸ்ரவேலின்மேற் கர்த்தருடைய எல்லா வேலைக்கும் இராசாவின் ஊழியத்திற்குமாக வைக்கப்பட்டார்கள்.

௩௧ எப்ரோனியரில் எரியாவுமிருந்தான். அவன் தன் பிதாக்களின் வம்சமான எப்ரோனியரில் தலைவனானவன். தாவீது அரசாண்ட நாற்பதாம் வருஷத்திலே அவர்கள் தேடப்பட்டு, அவர்களுக்குள்ளே கீலேயாத்தேசத்தின் யாசேரிலே பலத்த மனுஷர் கண்டுபிடிக்கப்பட்டார்கள்.

௩௨ பலசாலிகளாகிய அவனுடைய சகோதரர் இரண்டாயிரத்து எழுநூறு பிரதானத்தலைவராயிருந்தார்கள். அவர்களைத்

தாவீது இராசா பராபரனுடைய எல்லாக் காரியத்திற்காகவும் இராசாவின் காரியத்திற்காகவும் ரூபேனியர் மேலும் காதியர் மேலும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தின் மேலும் வைத்தான்.

௨௭. அதிகாரம்.

தாவீதுக்கிருந்த இராணுவத் தலைவரும் மற்ற பிரதானவேலைக்காரரும்.

தங்கள் இலக்கத்தின்படியிருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கு வமிசங்களின் தலைவரும் ஆயிரத்துக்குச் சேர்வைக்காரரும் நூற்றுக்குச் சேர்வைக்காரரும் இவர்களுடைய தலைவரும் வைக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் வருஷத்துக்குண்டான மாதங்களிலெல்லாம் மாதத்திற்கு மாதம் இராசாவைச் சேவிக்கிறதற்கு வகுக்கப்பட்ட வரிசைகளின்படியெல்லாம் மாறிமாறி வருவார்கள். ஒவ்வொரு வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௨ முதலாம் மாதத்தின் முதல் வகுப்பின் மேல் சப்தியேலின் குமாரனான யஷொபெயாமிருந்தான். அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௩ பேரேசின் சந்ததியாரில் இவன் சகல சேனாபதிகளின் தலைவனாயிருந்து முதலாம் மாதத்தை விசாரித்தான்.

௪ இரண்டாம் மாதத்தின் வகுப்பின்மேல் அகோகியனான தோதாயிருந்தான். இவன் வகுப்பிலே மிக்லோத் தளகர்த்தனாயிருந்தான் அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௫ மூன்றாவது மாதத்தின் மூன்றாஞ் சேனாபதி யோய்தாவின் குமாரனாகிய பெனாயாவென்ற தலையான பிரதானி அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௬ இந்த பெனாயா அந்த முப்பது பராக்கிரமசாலிகளிலொருவனும் அந்த முப்பது பேர்களின் தலைவனுமாயிருந்தான். அவனுடைய வகுப்பை அவன் குமாரனாகிய அமிசாபாத் விசாரித்தான்.

௭ நாலாவது மாதத்தின் நாலாஞ் சேனாபதி யோவாபின் சகோதரனாகிய ஆசகேலும், அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரனான செப்தியாவுந்தானே. அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௮ ஐந்தாவது மாதத்தின் ஐந்தாஞ் சேனாபதி இஸ்ராகியனான சம்குத்தென்றவன் அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௯ ஆறாவது மாதத்தின் ஆறாஞ் சேனாபதி இக்கேசின் குமாரன் ஈராவென்ற தெக்கோவியன். அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௰ ஏழாவது மாதத்தின் ஏழாஞ் சேனாபதி எப்பிராயிம் புத்திரரிலொருவனாகிய எலேசென்ற பேலோனியன் அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௰௧ எட்டாவது மாதத்தின் எட்டாஞ் சேனாபதி சாரியரிலொருவனாகிய சிபேக்காயியென்ற ஊஷாத்தியன். அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௰௨ ஒன்பதாவது மாதத்தின் ஒன்பதாஞ் சேனாபதி பென்யமீனரில் அபியேசேரென்ற ஆனதோத்தான். அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௰௩ பத்தாவது மாதத்தின் பத்தாஞ் சேனாபதி சாரியரிலொருவனாகிய மகாராயென்ற நெத்தோபாத்தியன். அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௰௪ பதினோராவது மாதத்தின் பதினோராஞ் சேனாபதி எப்பிராயிம் புத்திரரில் பெனாயாவென்ற பிரத்தோனியன். அவன் வகுப்பில் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௰௫ பன்னிரண்டாவது மாதத்தின் பன்னிரண்டாஞ் சேனாபதி ஒத்னியேலின் சந்ததியான எல்தாய் என்ற நெத்தோபாத்தியன்தானே. அவன் வகுப்பிலும் இருபத்து நாலாயிரம் பேரிருந்தார்கள்.

௰௬ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவராவது ரூபேனியருக்குத் தலைவன் சிக்கிரியின் குமாரனான எலியேசேர், சிமியோனியருக்கு மாக்காவின் குமாரன் செப்பத்தியா.

௰௭ லேவியருக்குக் கேமுவேலின் குமாரன் அஷாபியா, ஆரோன் சந்ததிக்குச் சாதோக்.

௰௮ யூதாவுக்குத் தாவீதின் சகோதரரில் ஒருவனாகிய எலிகூ, இசக்காருக்கு மிகாவேலின் குமாரன் ஒம்ரி,

௰௯ செபுலோனுக்கு ஒபதியாவின் குமாரனான இஸ்மாயா, நப்தலிக்கு அஸ்ரியேலின் குமாரனான எரிமோத்.

௨௰ எப்பிராயிம் புத்திரருக்கு அசசியாவின் குமாரனான ஓசேயா மனாசேயின் பாதிக் கோத்திரத்திற்கு பெதாயாவின் குமாரன் யோவேல்.

௨௰௧ கிலேயாத்திலுள்ள மனாசேயின் பாதிக் கோத்திரத்திற்குச் சகரியாவின் குமாரன் இத்தோ, பென்யமீனுக்கு அப்னேரின் குமாரனான யாசியேல்.

...னாத எசோகாமினகுமாரன
...லிசன இஸரவேலகோததி
...லைவராயிருநதார்கள.
...ல இருபத்துநாலு வருஷத
...னவர்களின இலக்கத்தை
...எழுதபடவிலலை.
...லேவியானததின நட்சததி
...டாயப பெருகப பணணு
...ர்ச்சொலலியிருநதார்.
...வினகுமாரன யோவாப
...ணவும முககப்போனா
...அதினிமித்தம இஸரவேலின
...மேல் கோபம் வநதது. அந்தக்கொ
...லனைத்தாவீது இராசாவி
...ளாகமத்தில எழுதவிலலை.
...வுடைய பொககிஷஙகளி
...லின குமாரன அஸமாவே
...ஙகளிலும கிராமஙகளிலும
...ம கோட்டைகளிலுமுடை
...களினமேலும உசியாவின
...னாதானும,
...ப்பயிரிடவயல வெளியி
...ர்களினமேலே கேலூபின
...யும,
...திராட்சத்தோட்டங்களினமே
...ஸெமேயும, திராட்சத
...ரசத்தின திராட்சிப
...புகளினமேலே சிப்மிய
...ம,
...திரளாகும பள்ளததாக்குகளிலுள்ள ஒலிவமர
...ங்களுக்கடுத்த விருஷங்களி
...கேதேரியனான பாலகானானும
...ங்களின மேலே யோவாசும,
...ரோனில் மேய்கிற மாடுகளின
...னான சித்திராயும, பள்ளத
...ன மாடுகளினமேல அத்லாயி
...குமாரனான சாபாத்தும,
...கங்களினமேல இஸமவேலி
...களுங், கழுதைகளமேலமேரோ
...யெகதியாவும,
...களின்மேல ஆகாரியனான யாசி
...காரராயிருநதார்கள. இவ
...தாவீது இராசாவுககிரு
...தலைவராயிருநதார்கள.
...ஆலோசனைக்காரனும் சம்பிரதியுமாயிருந்த
...தீத்தியுள்ள மனுஷன, ...
...சம்பிரதியுமாயிருந
...ஓனியின் குமாரன ஏகியே
...இராசாவின குமாரரோடி

...தோபேல இராசாவுககா
...யிருநதான. அற்கியனா

னஹுஷாயியோவெனில இராசாவின சி
நேகிதனாயிருநதான.

௩௪ அகிதோபேலுககுப பிறபாடுபெ
னாயாவின குமாரனயோயதாவும அபியா
த்தாருமிருநதார்கள யோவாபோவெனறா
லஇராசாவினபடைததலைவனாயிருநதான.

உஅ. அதிகாரம்.

தேவாலயததைக கட்டுகிறதற்காகத் தாவீது சனததிற்குந தன குமாரனாகிய சாலோமோனுககும பணணின பிரசங்கம.

கோததிரங்களின தலைவரும இராசாவைச சேவிககிற வகுப்புகளின தலைவரும அயிரததுச சேர்வைககாரரும நூற்றுச சேர்வைககாரரும இராசாவுககும இராசகுமாரருககும உணடான எலலா ஆஸதியையும மிருகஜீவனஙகளையும விசாரிககிற தலைவருமாகிய இஸரவேலின சகல பிரபுககளையும, பிரதானிகளையும பலசாலிகளையுஞ சகல பராககிரமக காரரையுந தாவீது எருசலேமிலே கூட்டினான.

உ அபபோது இராசாவாகிய தாவீது எழுநதிருநது காலூனறி நினறு சொனனதாவது, என சகோதரரே! என சனமே! நான சொலவதைக கேளுஙகள. கர்ததருடைய உடமபடிககைப பெட்டியின இளைபபாறுதலுககும நமமுடைய பராபரனுடைய பாதபடிககுமாக ஒருவீட்டைக கட்டநான என மனதிலே நினைததுக கட்டுகிறதற்காயததமும பணணினேன.

௩ ஆனாற்பராபரன என்னுடனே, நீந மமுடைய நாமததிற்கு வீட்டைககட்ட வேணடாம. ஏனெனில நீ யுததமனுஷனாயிருநது இரததஙகளைச சிநதிபபட்டாயெனறார்.

௪ இப்போதும இஸரவேலினமேல என்றைககும இராசாவாயிருகக இஸரவேலின பராபரனாகிய கர்ததர் என தகபபனுடைய வீட்டாரிலெலலாரும எனனைத தெரிநதுகொணடார். ஏனெனில அவர் யூதாவையும யூதவின வீட்டில என தகபபன வீட்டையுந தலைமையாகத தெரிநதுகொணடு எனனையெலலா இஸரவேலினமேல இராசாவாகக என தகபபனுடைய குமாரரில எனமேற பிரியமவைததார்.

௫ இபபோதுங கர்ததர் எனககு அநேகங குமாரரைக கட்டளையிட்டார். ஆனால இஸரவேலையாளுஙகர்ததருடைய இராசசியபாரததின ஆசனததினமேல உட்காருகிறதற்காக என்னுடைய எலலாக குமாரரிலும என குமாரனாகிய சாலோமோனைத தெரிநதுகொணடு,

௬ எனக்குச் சொன்னதாவது, உன் குமாரனாகிய சாலோமோனே நம்முடைய வீட்டையும் நம்முடைய பிராகாரங்களையுங் கட்டக்கடவன். ஏனெனில் அவனை நமக்குக் குமாரனாகத் தெரிந்துகொண்டோம். நாம் அவனுக்குப் பிதாவாயிருப்போம்.

௭ இந்நாளில் நடக்கிறபடியே அவன் நம்முடைய கற்பனைகளின்படியும் நம்முடைய நியாயங்களின்படியுஞ் செய்யப் பலத்துக்கொண்டிருந்தானானால் அவன் இராச்சியபாரத்தை என்றென்றைக்குந் திடப்படுத்துவோமென்றார்.

௮ இப்போதும் நீங்கள் என்றென்றைக்கும் இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரமாய் அநுபவித்து, உங்களுக்குப் பிறகு அதையுங்கள் பிள்ளைகளுக்குச் சுதந்தரமாய்ப் பின்வைக்கும்பொருட்டாக, நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தரின் கற்பனைகளையெல்லாங் கைக்கொண்டு விசாரியுங்களென்று கர்த்தரின் சபையாகிய இஸ்ரவேலனைத்தின் கண்களுக்கு முன்பாகவும் நம்முடைய பராபரனுடைய செவிகளுக்கு முன்பாகவும் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்,

௯ என் குமாரனாகிய சாலோமோனே! நீ உன் பிதாவின் பராபரனையறிந்து அவரை உத்தம இருதயத்தோடும் மனப்பூர்வத்தோடுஞ் சேவி. ஏனென்றாற் கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, சிந்தனைகளின் தோற்றங்களையெல்லாம் உணருகிறார். நீயவரைத் தேடினால் உனக்குத் தென்படுவார். நீயவரைவிட்டு விட்டாயேயாகில் உன்னையென்றைக்குந் தள்ளிப்போடுவார்.

௰ இப்போதும் எச்சரிக்கையாயிரு. ஏனெனிற் பரிசுத்தஸ்தலமாக ஒரு வீட்டைக் கட்டுவதற்குக் கர்த்தருன்னைத் தெரிந்துகொண்டார் நீ திடன்கொண்டு அதை நடப்பியென்றுஞ் சொல்லி,

௰௧ தாவீது தன் குமாரனாகிய சாலோமோனுக்கு மண்டபமும் அதின் அறைகளும் அதின் பொக்கிஷசாலைகளும் அதின் மேல்வீடுகளும் அதின் உள்ளறைகளுங் கிருபாசன அறையும் இருக்கும் மாதிரியையும்,

௰௨ ஆவியிலே தனக்குக் கட்டளையிடப்பட்டபடியெல்லாம் அவன் செய்ய வேண்டிய கர்த்தருடைய வீட்டுப் பிராகாரங்களும், பராபரனுடைய வீட்டுப் பொக்கிஷங்களையும் பரிசுத்தமாக்கப்பட்டவைகளின் பொக்கிஷங்களையும் வைக்குஞ் சகல சுற்றறைகளுமிருக்கும் மாதிரியையும்,

௰௩ ஆசாரியரையும் லேவியரையும் வரிசைகளாக வகுக்கிறதற்குங் கர்த்தருடைய வீட்டுப் பணிவிடை வேலையனைத்திற்குங் கர்த்தருடைய வீட்டு வேலையின் தட்டுமுட்டுகளனைத்திற்குமான கட்டளையையுங் கொடுத்தான்.

௰௪ அவன் பலபல வேலைக்குவேண்டிய சகல பொன் தட்டுமுட்டுகளுக்காக நிறையின்படி பொன்னையும், பலபல வேலைக்கு வேண்டிய சகல வெள்ளித் தட்டுமுட்டுகளுக்காக நிறையின்படி வெள்ளியையும்,

௰௫ பொன்னான விளக்குத்தண்டுகளுக்கும் அவைகளின் பொன்னான விளக்குகளுக்கும், ஒவ்வொரு விளக்குத்தண்டுக்கும் அதின் விளக்குகளுக்கும் நிறையின்படி வேண்டிய பொன்னையும், வெள்ளி விளக்குத்தண்டுகளில் ஒவ்வொரு விளக்குத்தண்டுக்கும் அதின் விளக்குகளுக்கும் நிறையின்படி வேண்டிய வெள்ளியையும்,

௰௬ சமுகத்தப்பங்களை வைக்கும் ஒவ்வொரு மேசைக்கு நிறையின்படி வேண்டிய பொன்னையும், வெள்ளி மேசைகளுக்கு வேண்டிய வெள்ளியையும்,

௰௭ முட்கொறடுகளுக்குங் கலசங்களுக்குந் தட்டுகளுக்கும் வேண்டிய சுத்தப் பொன்னையும் பொற்கிண்ணிகளில் ஒவ்வொரு கிண்ணிக்கு நிறையின்படி வேண்டியதையும், வெள்ளிக்கிண்ணிகளில் ஒவ்வொரு கிண்ணிக்கு நிறையின்படி வேண்டியதையும்,

௰௮ தூபங்காட்டும் பீடத்திற்கு நிறையின்படி வேண்டிய புடமிடப்பட்ட பொன்னையுங் கொடுத்துச் செட்டைகளை விரித்துக் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியை மூடும் பொற்கெருபீன்களான வாகனத்தின் மாதிரியையுங் காட்டி,

௰௯ இந்த மாதிரியின் சகல கிரியைகளும் எனக்குத் தெரியப்பண்ண இவையெல்லாங் கர்த்தருடைய கரத்தினாலே எனக்கெழுதிக் கொடுக்கப்பட்டதென்றான்.

௨௰ தாவீது தன் குமாரனாகிய சாலோமோனுக்குச் சொன்னதாவது, நீ பலத்துத் திடன்கொண்டு இதை நடப்பி. பயப்படாமலுங் கலங்காமலுமிரு. ஏனெனிற் பராபரனாகிய கர்த்தரென்னும் என்னுடைய பராபரன் உன்னோடிருப்பார். கர்த்தருடைய வீட்டு வேலையின் கிரியைகளனைத்தையும் நீ முடித்துத் தீருமட்டும் அவருன்னைக் கைநெகிழுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லை.

௨௰௧ இதோ, பராபரனுடைய வீட்டு வேலைக்கெல்லாம் ஆசாரியர் லேவியருடைய வகுப்புகளிருக்கின்றது. அந்த எல

...ற்கு சகலவித வேலைக்கும
...பூர்வமான சகல மனுஷ
...டியெல்லாங்கேட்கும பி
...ல சனங்களும உன்னண
...ற்கொண்டிருன.

... அதிகாரம்.

...ராகசசனமமன பூர்வமா
...களைகொடுத்த பிறபாடு
...ன்னிசெபமும அவன்டை
...ம.

...வீது இராசா சபைக்கெ
...ராவது, பராபரன என
...லேமோனொருவனையே
...டிருக்கச்சே அவன இன
...ந்தையுமாயிருக்கிறு
...வேனறுப்பெரியது ஏனெ
...துவுக்கலல, பராபர
...குங்கட்டும அரணமனே.
...லுவேயானமட்டும எனப
...ட்டுக்கெனறுபொனவே
...னையும வெள்ளிவேலைக்கு
...வெணகலவேலைக்குவெண
...ருமபுவேலைக்கு இருமபை
...டியாங்கலையுங் கோமேத
...மபதிக்கபபடுங்கலலுகளை
...லவர்ணகலலுகளையுமவி
...சகலவிதவிரத்தினங்களை
...லையும ஏராளமாகசச

...னபராபரனுடைய வீட
...ருக்கிற விருபபததினால
...ட்டுக்காகச சவதரித்தத
...ர் என்னுடைய சொந்த
...னையும வெள்ளியையு
...டைய வீட்டுக்கென்று
...

...ல அறைகளின்சுவர்களை
...பொனவேலைக்குப பொ
...வேலைக்குவெள்ளியும உண
..., சமமாளர்செய்யுமவே
...வும ஓபபீரினபொனனு
...தாலந்து பொனனையும
...வெள்ளி ஏழாயிரந தால
...டேன.

...ம உங்களில இனறைய
...ருக்குதகன கைக்காணிக
...த மனபூர்வமானவர்க

...லம்சங்களின பிரபுக்களு
...ராத்தர்களினபிரபுக்களு

...ம ஆயிரத்திற்குச சேர்வைக்காரரும நூ
ற்றுக்குசசேர்வைக்காரரும இராசாவின
வேலைக்காரராகிய பிரபுக்களுமமன பூர்
வமாகி,

எ பராபரனுடைய வீட்டுவேலைக்கு ஐ
யாயிரந தாலந்து [illegible] னையும பதினா
யிரந்தக்க [illegible], [illegible]றாயிரந்தா
லந்துவெள்ளியையும, பதினெணணாயிரந
தாலந்து வெணகலத்தையும நூறாயிரந
தாலந்து இருமபையுங கொடுத்தார்கள.

அ ஆர்கையிலே இரத்தினங்கள அகப
பட்டதோ, அவர்கள அவைகளையுங கர்
த்தருடைய வீட்டுபபொக்கிஷத்துக்கெ
னறுகேர்சோனியனான எகியேலினகையி
லே கொடுத்தார்கள.

௯ இபபடிமனபபூர்வமாயக கொடுத்
ததற்காகச சனஙகசநதோஷபபட்டது.
ஏனெனில மன உத்தமமும உசசாயமுமா
யக்கர்த்தருக்குககொடுத்தார்கள. தாவீ
து இராசாவும மிகுதியாகவுஞ சநதோ
ஷபபட்டான.

௰ ஆகையாலதாவீதுசபையனைததின
கணகளுக்குமுனபாகவுங கர்த்தருக்குஸ
தோத்திரஞ்செலுத்திசசொனனதாவது
எங்களதகபபனாகிய இஸ்ரவேலினபராபர
னான கர்த்தாவே! தேவரீர் சதாகாலங
களாகிய எனறெனறைக்குமஸதோத்திரி
கக்பபட்டவர்.

௰௧ கர்த்தராகிய உமக்குமகிமையும
வலலமையும முக்கியமுஞசெயமும மகத
துவமுமுணடாவதாக. ஏனெனறலவான
ததிலும பூமியிலுமுளளதெலலாம உமமு
டையது. கர்த்தாவே! இராசசியமுமஉம
முடையது. தேவரீர் எலலாரினமேலுநத
லைவராயுயர்நதிருக்கிறவர்.

௰௨ இநத ஐசுவரியமுமகனமும உம
மாலேயுணடாயிருக்கினறது. தேவரீர் எ
லலாவறறையுமாளுகிறவர். உமமுடைய
கர்த்தரிலே பலமும வலலமையும, உமமு
டையகர்ததிலேதையெலலாம பெருகவும
பலக்கவும பணணுதலுமிருக்கினறது,

௰௩ இபபோதும, எங்களபராபரனே!
நாஙகள உமக்கு ஸதோத்திரஞசெலுத்
தி, உமதுமகிமையுளள நாமததைத்துதி
க்கிறோம.

௰௪ ஏனெனில இபபடிமனபபூர்வமா
யககொடுக்குஞசாமார்ததியம, எங்களு
க்கிருக்கிறதற்கு நானெமமாத்திரம? என
னுடைய சனமுமெமமாத்திரம? ஏனென
றல இதுவெலலாம உமமாலுணடானது
உமதுகர்த்தரிலேயதை வாஙகி உமக்குக
கொடுததோம.

௰௫ ஏனென்றால் உமக்கு முன்பாக நாங்கள் எங்களுடைய எல்லாப் பிதாக்களைப்போலும் அந்நியர்களும் பரதேசிகளுமாயிருக்கிறோம். பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போலிருக்கின்றது. தரித்திருக்கும் நம்பிக்கையில்லை.

௰௬ எங்கள் பராபரனாகிய கர்த்தாவே! உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கொரு வீட்டைக் கட்டுகிறதற்கு நாங்கள் சவதரித்த இந்த எல்லாத் திரட்சியும் உம்முடைய கரத்திலிருந்து வந்தது. அதுவெல்லாம் உம்முடையது.

௰௭ என் பராபரனே! தேவரீர் இருதயத்தைச் சோதித்துச் செம்மையானதுகளின்மேல் பிரியமாயிருக்கிறீரென்றறிந்திருக்கிறேன். இதையெல்லாம் நான் என்னிருதயத்தின் செம்மையான குணத்திலே மனப்பூர்வமாய்க் கொடுத்தேன். இப்போது இங்கேயிருக்கிற உம்முடைய ஜனமும் உமக்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறதைச் சந்தோஷத்தோடே பார்த்தேன்.

௰௮ ஆபிரகாம் ஈசாக் இஸ்ரவேலென்ற எங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தாவே! உம்முடைய ஜனத்தின் இருதயத்திலுண்டான இந்தச் சிந்தையையும் நினைவுகளையும் என்றைக்குங் காத்துக்கொண்டு அவர்கள் இருதயத்தையும் உமக்கு நேராக்கியருளும்.

௰௯ என் குமாரனாகிய சாலொமோன் உம்முடைய கற்பனைகளையும் உம்முடைய சாட்சிகளையும் உம்முடைய கட்டளைகளையும் கைக்கொள்ளும்படிக்கும் இவைகளெல்லாவற்றையுஞ் செய்து, நான் ஆயத்தம்பண்ணின இந்த அரண்மனையைக் கட்டும்படிக்கும் அவனுக்கு உத்தம இருதயத்தைக் கொடுத்தருளுமென்று சொல்லி,

௨௰ அதின்பிறகு தாவீது சவையினைத்திற்கும், இப்போதும் உங்கள் பராபரனாகிய கர்த்தரை ஸ்தோத்திரியுங்களென்றான். அப்போது சவையெல்லாம் தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரை ஸ்தோத்திரித்துக் கர்த்தருக்கும் இராசாவுக்கும் முன்பாகக் குனிந்து பணிந்து,

௨௧ கர்த்தருக்குப் பலிகளைப் பலியிட்டு மறுநாளிலே சர்வாங்கதகனங்களாக ஆயிரம் எருதுகளையும் ஆயிரம் ஆட்டுக்கடாக்களையும் ஆயிரம் ஆட்டுக்குட்டிகளையும் அவைகளின் ஊற்றுப்பலிகளையும் இஸ்ரவேலனைத்திற்காகவுங் கர்த்தருக்குச் செலுத்தினார்கள்.

௨௨ அவர்கள் அந்நாளிலே மிகுந்த சந்தோஷத்தோடே கர்த்தருக்கு முன்பாகப் போசித்துக் குடித்துத் தாவீதின் குமாரனாகிய சாலொமோனை இரண்டாவிசை இராசாவாக்கிக் கர்த்தருக்கு முன்பாக அவனை அதிபதியாகவும், சாதோக்கை ஆசாரியனாகவும் அபிஷேகம்பண்ணினார்கள்.

௨௩ அப்படியே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதினிடத்திலே கர்த்தருடைய ஆசனத்தின்மேல் இராசாவாய் உட்கார்ந்து யோக்கியவானாயிருந்தான். இஸ்ரவேலெல்லாம் அவனுக்குக் கீழ்ப்படிந்தது.

௨௪ சகல பிரபுக்களும் பராக்கிரமசாலிகளும் தாவீது இராசாவினுடைய சகல குமாரருங்கூட இராசாவாகிய சாலொமோனுக்குக் கீழடங்கியிருக்கக் கை கொடுத்தார்கள்.

௨௫ கர்த்தர் சாலொமோனை மேலாய் இஸ்ரவேலரும் பார்க்க மகா பெரியவனாக்கி, அவனுக்கு முன்னே இஸ்ரவேலின்மேல் இராசாவான ஒருவனுக்குமில்லாதிருந்த இராசரீகமான மகிமையை அவனுக்குக் கட்டளையிட்டார்.

௨௬ இப்படியே ஈசாயின் குமாரனாகிய தாவீது இஸ்ரவேலின் மேலெல்லாம் இராசாவாயிருந்தான்.

௨௭ அவன் இஸ்ரவேலை அரசாண்ட நாட்கள் நாற்பது வருஷம். எபிரோனிலே ஏழு வருஷமும், எருசலேமிலே முப்பத்து மூன்று வருஷமும் இராசாவாயிருந்தான்.

௨௮ அவன் நீடிய வயதும் ஐசுவரியமும் மகிமையும் நிறைந்தவனாய் நல்ல முதிர்வயதிலே மரணமடைந்தபின் அவன் குமாரனாகிய சாலொமோன் அவன் ஸ்தானத்திலே அரசாண்டான்.

௨௯ தாவீது இராசாவினுடைய ஆதியோடந்தமான நடபடிகளும், அவனுடைய எல்லா இராச்சியபாரமும் வல்லமையும் அவன்மேலும் இஸ்ரவேலின்மேலும் தேசங்களுடைய எல்லா இராச்சியங்களின்மேலும் சென்றுபோன காலங்களுங்கூட,

௩௰ இதோ, ஞானதிருஷ்டிபுருஷனாகிய சாமுவேலின் பிரபந்தத்திலும் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் பிரபந்தத்திலும் ஞானதிருஷ்டிபுருஷனாகிய காத்தின் பிரபந்தத்திலும் எழுதியிருக்கின்றது.

நாளாகமத்தின் முதலாம் புஸ்தகம்
முடிந்தது முற்றும்.

நாளாகமத்தின்

இரண்டாமபுஸ்தகம.

க. அதிகாரம்.

சாலோமோனபர்ாபரனை ஞானநதரக்கேட்டவிணணபபமும அவனுககுணடான ஐசுவரியமும.

தாவீதின குமாரனாகிய சாலோமோன தன இராசரிகததிலே பலப்படுத்தக்கொணடான. ஏனெனில அவனுடைய பர்ாபரனாகிய கர்த்தர் அவனுடனேயிருநது அவனை மிகுதியும பெரியவனாககினார்.

உ சாலோமோன ஆயிரததுச சேர்வைககாரரும நூற்றுக்குச் சேர்வைககாரரும நியாயாதிபதிகளும இஸ்ரவேலெங்குமிருக்கிற வமிசங்களின தலைவராகிய சகல பிரபுக்களுமான இஸ்ரவேலரோடுமபேசி,

௩ சகலரும அவனோடேகூடச சபையினததமாய்க் கிபேயோனிலிருககிற மேடடிற்குபபோனார்கள.

௪ ஏனெனறால தாவீது பர்ாபரனுடைய பெட்டியைக கீரியாததியாரிமிலிருநது தான அதறகு எருசலேமிலே கூடாரமபோடடு ஆயத்தமபணணின ஸதலத்திற் கேற்றப்பணணியிருநதாலுங கர்த்தரின தாசனாகிய மோசே வனாநதிரத்திலே பணணின பர்ாபரனுடைய ஆசரிப்புக்கூடாரம அஙகேயிருநதது.

ரு ஊரின குமாரனாகிய ஊரியின குமாரனான பெசசாலெயேலுணடுபணணின வெண்கலப் பலிபீடமும அஙகே கர்த்தரின வாசஸதலத்திறகுமுனபாகவிருநதது அதைச் சாலோமோனும சபையுமாயத தேடிப் போனார்கள.

௬ அஙகே சாலோமோன ஆசரிப்புக கூடாரத்திற்குமுனபாகக் கர்த்தரின சனநிதியிலிருககிற வெண்கலப்பலிபீடத்தினமேல ஆயிரம சர்வாஙகததகனபலிகளைச செலுததிப பலியிட்டான.

எ அனறு இராத்திரியிலே பர்ாபரன சாலோமோனுககுத தரிசனையாகி அவனுடனே நாம உனககு என்ன கொடுககவேணடுமோ? எனறுகேளென்றார்.

அ அப்பொழுது சாலோமோன பர்ாபரனுடனே சொன்னதாவது, தேவரீர் என தகப்பனாகிய தாவீதுககுப் பெரிய கிருபையைச்செய்தது எனனையவன ஸ்தலத்திலே இராசாவாககினீர்.

௯ இப்பொழுதும பர்ாபரனாகிய கர்த்தாவே! தேவரீர் என தகப்பனாகிய தாவீதுககுத்திடடமபணணின உமது வாக்குத்தத்தம உறுதிப்படுவதாக. ஏனெனில தேவரீர் பூமியின தூளைப்போலத திரளான சனத்துக்கு மேல எனனை இராசாவாககினீர்.

ய இப்பொழுதும நான இந்தச சனத்திற்குமுனபாகப் போக்கும வரததுமாயிருக்கத்தக்க ஞானத்தையும அறிவையும எனககுத்தாரும. ஏனெனில இநத உமமுடைய பெரிய சனத்தை நியாயம விசாரிககத்தக்கவனார்? எனறான.

யக அப்பொழுது பர்ாபரன சாலோமோனுககுச சொன்னதாவது, இநத நினைவு உன மனதிலேயிருநது நீ ஐசுவரியம ஆஸதிகளையானாலும மகிமையையானாலும உன பகைஞரின பிராணனையானாலும கேளாமலும நீடித்த ஆயுசைக் கேளாமலுமிருந்து, நாம உனனை இராசாவாககின நமமுடைய சனத்தை நியாயமவிசாரிககததக்க ஞானத்தையும அறிவையும உனககுக கேட்டபடியினாலே,

யஉ ஞானமும அறிவும உனககுக கொடுததிருககிறதுமலலாமல, உனககு முன இருநத இராசாககளுககாகிலும உனககுப பின இருபபவர்களுககாகிலும இலலாத ஐசுவரியத்தையும ஆஸதிகளையும மகிமையையும உனககுக கொடுப்போமெனறார்.

ய௩ இப்படிச் சாலோமோன கிபேயோனிலிருககிற மேட்டிற்குப்போய ஆசரிப்புக்கூடாரத்திற்கு முனனிருந்து எருசலேமுககுவநது இஸரவேலையரசாண்டான.

ய௪ சாலோமோன இரதஙகளையுங குதிரைவீரரையுஞ் சேர்த்தான. ஆயிரத்து நானூறு இரதஙகளுங குதிரைககாரர் பனனிராயிரமும அவனுககிருநதது. அவைக

ளை இரதங்களின் பட்டணங்களிலும் இராசாவாகிய தன்னிடத்தில் எருசலேமிலும் வைப்பித்தான்.

௰௫ இராசா எருசலேமிலே வெள்ளியையும் பொன்னையுங் கற்களைப்போலவுங் கேதுரு மரங்களைப் பள்ளத்தாக்கிலிருக்கிற முசுக்கட்டைச் செடிகளைப்போலவும் நிரளாயிருக்கப்பண்ணினான்.

௰௬ சாலொமோனுக்கிருக்கிற குதிரைகளும் புடவைகளும் எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்டது. இராசாவின் வர்த்தகர் புடவைகளை யொப்பந்த விலைக்கிரயத்திற்கு வாங்குவார்கள்.

௰௭ அவர்கள் எகிப்திலிருந்து ஒரு இரதத்தை அறுநூறு வெள்ளிக்காசுக்கும் ஒரு குதிரையை நூற்றைம்பது வெள்ளிக்காசுக்குங் கொண்டுவந்தேறுவார்கள். அந்தப்படியே ஏத்தியரின் சகல இராசாக்களுக்குஞ் சீரியாவின் இராசாக்களுக்கும் அவர்கள் முகாந்திரமாய்க் கொண்டுவரப்பட்டது.

௨. அதிகாரம்.

தேவாலயத்தைக் கட்ட சாலொமோன் பண்ணின ஆயத்தம்.

சாலொமோன் கர்த்தருடைய நாமத்திற்கு ஒருவீட்டையுந் தன் இராசரீகத்திற்கு ஒருவீட்டையுங் கட்ட நிர்ன்னயம் பண்ணி,

௨ சுமைசுமக்கிறதற்கு எழுபதினாயிரம் பேரையும் பர்வதத்தில் மரம் வெட்டுகிறதற்கு எண்பதினாயிரம் பேரையும் இவர்கள்மேலே தலைவராக மூவாயிரத்தறுநூறு பேரையும் எண்ணிவைத்து,

௩ தீருவின் இராசாவாகிய ஈராமுக்குச் சொல்லியனுப்பினதாவது, என் தகப்பனாகிய தாவீது தாம் வாசமாயிருக்கும் வீட்டைத் தமக்குக் கட்டும்படிக்கு நீர் அவருக்குத் தயவுசெய்து அவருக்குக் கேதுரு மரங்களை யனுப்பினதுபோலே யெனக்குஞ் செய்யும்.

௪ இதோ, என் பராபரனாகிய கர்த்தருக்குமுன்பாகச் சுகந்தவர்க்கங்களின் தூபங்காட்டுகிறதற்குஞ் சமுகத்தப்பங்களை யெப்பொழுதும் வைக்கிறதற்கும் அந்திசந்தியும் ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் எங்கள் பராபரனாகிய கர்த்தரின் பண்டிகைகளிலும் இஸ்ரவேல் நித்தியகாலமாகச் செலுத்தவேண்டியபடிச் சர்வாங்கதகனங்களைப் பலியிடுகிறதற்கும் அவருடைய நாமத்திற்கு ஒரு வீட்டை யதை யவருக்குப் பிரதிஷ்டைபண்ணும்படியாக நான் கட்டப்போகிறேன்.

௫ நான் கட்டப்போகிற வீடோவென்றாற் பெரியதாயிருக்கும். ஏனெனில் எங்கள் பராபரன் எல்லாத் தேவர்களைப்பார்க்கிலும் பெரியவர்.

௬ அவருக்கு வீட்டைக் கட்டவுஞ் சாமர்த்தியமுள்ளவனார்? ஏனென்றால் வானங்களும் வானங்களின் வானங்களும் அவரைக் கொள்ளாதே? அவருக்குமுன்பாகத் தூபங்காட்டுகிறதற்கேயொழிய வேறேதுக்காய் அவருக்கு வீட்டைக் கட்டுகிறதற்கு நான் எம்மாத்திரம்?

௭ இப்பொழுதும் என் தகப்பனாகிய தாவீது குறித்தவர்களும் என்னண்டையிலே யூதாவிலும் எருசலேமிலுமிருக்கிறவர்களுமாகிய விவேகிகளும் பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் இரும்பிலும் இரத்தாம்பர நூலிலுஞ் சிவப்பு நூலிலும் இளநீல நூலிலும் வேலைசெய்ய ஞானமுள்ளவனுங் கொத்துவேலைசெய்ய அறிந்தவனுமான ஒரு மனுஷனை யெனக்கனுப்பும்.

௮ லீபனோனிலிருந்து கேதுரு மரங்களையுந் தேவதாரிப்பாயமரவிருட்சங்களையும் வாசனை மரங்களையும் எனக்கனுப்பும். ஏனெனில் லீபனோனின் மரங்களை வெட்ட உம்முடைய வேலைக்காரர் அறிந்தவர்களென்றதை நான் அறிவேன். இதோ, எனக்கு மரங்களைத் திரளாக ஆயத்தப்படுத்த என் வேலைக்காரர் உம்முடைய வேலைக்காரரோடுங்கூடுவார்கள்.

௯ ஏனெனில் நான் கட்டப்போகிற அந்த வீடு பெரியதும் ஆச்சரியப்படத்தக்கதுமாயிருக்கும்.

௰ இதோ, அந்த மரங்களை வெட்டுகிற உம்முடைய வேலைக்காரருக்கு இருபதினாயிரம் மரக்கால் கோதுமையரிசியையும் இருபதினாயிரம் மரக்கால் வாற்கோதுமையையும் இருபதினாயிரங் குடந் திராட்சைப்பழ இரசத்தையும் இருபதினாயிரங் குடம் எண்ணெயையுங் கொடுப்பேனென்று சொல்லியனுப்பினான்.

௰௧ அப்பொழுது தீருவின் இராசாவாகிய ஈராஞ் சாலொமோனுக்குப் பிரதியுத்தரமாக வனுப்பின காகிதத்தின் விபரமாவது, கர்த்தர் தமது சனத்தைச் சிநேகித்ததினால் உம்மை யவர்கள்மேல் இராசாவாக வைத்தாரென்ற பிறபாடு,

௰௨ அப்புறம் ஈராம் எழுதினது, கர்த்தருக்கு ஒரு வீட்டையுந் தமது இராசரீகத்திற்கு ஒருவீட்டையுங் கட்டத்தக்க விவேகமும் உணர்வும் அறிந்த ஞானமுள்

குமாரனைத் தாவீதென்ற இராசாவுக்குக் கட்டளையிட்டவராகிய வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

௰௩ இப்போதும் ஈராம் அபியென்ற உணர்வுள்ள புத்திமானுமுள்ள மனுஷனையனுப்பினேன்.

௰௪ அவன் தாண் குமாரத்திகளிலுள்ள ஒரு ஸ்திரீயின் குமாரன். அவன் தகப்பன் தீருவின் மனுஷனாயிருந்தான். அவன் பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் இரும்பிலும் கல்லுகளிலும் மரங்களிலும் இரத்தாம்பர நூலிலும் இளநீல நூலிலும் மெல்லிய நூலிலும் சிவப்பு நூலிலும் வேலைசெய்யவும் சகலவிதக் கொத்துவேலைசெய்யவும், என்னென்ன அவனுக்குக் காண்பிக்கப்படுமோ? அதற்கவன் உம்முடைய ஞானிகளோடும் உம்முடைய தகப்பனாகிய தாவீதென்ற என்னுடையவனின் ஞானிகளோடேகூட வகையுண்டுபண்ணவும் அறிவான்.

௰௫ இப்போதும் என்னுடையவன் தானே சொன்ன கோதுமையையும் வாற்கோதுமையையும் எண்ணெயையையும் திராட்சரசத்தையும் தம்முடைய வேலைக்காரருக்கனுப்பவும்,

௰௬ அப்போது நாங்களும் உமக்குத் தேவையான மரங்களையெல்லாம் லீபனோனிலே வெட்டி, அவைகளையும் உமக்குக் கடலின் மேல் தெப்பங்களாய் யோப்பேமட்டுக்குங் கொண்டுவருவோம். பிற்பாடு நீர் அவைகளை எருசலேமுக்குக் கொண்டுபோவீர் என்று எழுதியனுப்பினான்.

௰௭ சாலோமோன் தன் தகப்பனாகிய தாவீது இஸ்ரவேல் தேசத்திலுண்டான பரதேசிகளையெல்லாம் எண்ணின தொகைப்படி அவர்களையெண்ணினான். அவர்கள் லட்சத்தைம்பத்து மூவாயிரத்தறுநூறுபேரென்று கண்டது.

௰௮ இவர்களில் அவன் எழுபதினாயிரம் பேரைச் சுமைசுமக்கவும் எண்பதினாயிரம் பேரைப் பர்வதத்தில் மரங்களை வெட்டவும் மூவாயிரத்தறுநூறு பேரை சனத்திற்கு வேலையைக் கற்பிக்குந் தலைவராயிருக்கவும் வைத்தான்.

௩. அதிகாரம்.

தேவாலயத்தைச் சாலோமோன் கட்டினது.

பிற்பாடு சாலோமோன் எருசலேமிலே தன் தகப்பனாகிய தாவீதுக்குக் காண்பிக்கப்பட்ட மோரியாவென்ற பர்வதத்தில் எபூசியனாகிய ஒர்னானின் களமென்று தாவீது குறித்துவைத்த ஸ்தலத்திலே கர்த்தருடைய வீட்டைக் கட்டத்துவக்கினான்.

௨ அவன் இராச்சியபாரம்பண்ணுகிற நாலாம் வருஷம் இரண்டாம் மாதம் இரண்டாந் தேதியிலே கட்டத்துவக்கினான்.

௩ பராபரனுடைய வீட்டைக் கட்டுகிறதற்குச் சாலோமோன் போட்ட அஸ்திபாரமானது முன் அளவான முழங்களின்படியே அறுபது முழ நீளமும் இருபது முழ அகலமுமானது.

௪ முகப்பிலிருக்கிற மண்டபம் வீட்டினுடைய அகலத்தின்படியே இருபது முழ நீளமும் நூற்றிருபது முழ உயரமுமாயிருந்தது. அதின் உட்புறத்தைச் சுத்தப் பொன்னினால் மூடிப்போட்டான்.

௫ பெரிய வீட்டையோவென்றால் பாய்மர விருட்சப்பலகைகளாலும் பிறகு நல்ல பொன்னினாலும் இழைத்து அதின்மேலே பேரீச்சுகளின் வேலையையுஞ் சங்கிலிகளின் வேலையையுஞ் செய்து,

௬ அந்த வீட்டையலங்காரத்திற்காக இரத்தினங்களாற் பதித்தான். பொன்னோவெனிற் பர்வாயீமின் பொன்னாயிருந்தது.

௭ அந்த வீட்டு உத்திரங்களையும் நிலைகளையும் அதின் சுவர்களையும் அதின் கதவுகளையும் பொன்னினால் மூடிச் சுவர்களிலே கேருபீன்களின் கொத்துவேலையைச் செய்வித்தான்.

௮ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான வீட்டையுங் கட்டினான். அது வீட்டினுடைய அகலத்தின்படி இருபதுமுழ நீளமும் இருபதுமுழ அகலமுமாயிருந்தது அதை அறுநூறு தாலந்து நற்பொன்னினாலிழைத்தான்.

௯ ஆணிகளின் நிறை ஐம்பது பொன் சேக்கலானது. மேல்வீடுகளையும் பொன்னினால் இழைத்தான்.

௰ அவன் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான வீட்டிலே இரண்டு கேருபீன்களையும் அசைகிற பாவனையாய் உண்டுபண்ணினான் அவைகளைப் பொன்னினால் மூடினார்கள்.

௰௧ அந்தக் கேருபீன்களுடைய செட்டைகளின் நீளம் இருபதுமுழமானது. ஒன்றினுடைய ஒரு செட்டை ஐந்துமுழமாயிருந்து வீட்டுச் சுவரைத் தொட்டது. மறு செட்டை ஐந்து முழமாயிருந்து மற்றக் கேருபீனின் செட்டையைத் தொட்டது.

௰௨ மற்றக் கேருபீனின் ஒரு செட்டையும் ஐந்துமுழமாயிருந்து வீட்டுச்சுவரைத் தொட்டது. அதின் மறு செட்டையும்

ஐந்து முழமாயிருந்து மற்றக் கேருபீனின் செட்டையைப் பிடித்தது.

௰௩ இப்படியே அந்தக் கேருபீன்களின் செட்டைகள் இருபது முழ விரிவாயிருந்தது. அவைகள் தங்கள் கால்களால் ஊன்றி நின்றது. அவைகளின் முகங்கள் வீட்டையுள்ளாக நோக்கியிருந்தது.

௰௪ அவன் இளநீல நூலாலும் இரத்தாம்பர நூலாலும் பட்டு நூலாலும் மெல்லிய நூலாலுந் திரையையும் அதிலே கேருபீன்களின் ரூபங்களையும் உண்டுபண்ணினான்.

௰௫ அவ்வீட்டிற்கு முன்னாக முப்பத்தைந்து முழ உயரமான இரண்டு தூண்களையும் அவைகளுடைய முனைகளின் மேலிருக்கும் ஐந்து முழ உயரமான குமிழ்களையும் உண்டாக்கி,

௰௬ சன்னிதிக்கு முன்னிருக்கச் சங்கிலிகளையும் அவன் பண்ணுவித்துத் தூண்களின் முனைகளின் மேற்பற்றவைத்து, நூறு மாதளம் பழங்களையும் பண்ணுவித்து அந்தச் சங்கிலிகளிற் கோர்த்தான்.

௰௭ அந்தத் தூண்களை அவன் தேவாலயத்திற்கு முன்பாக ஒன்றை வலத்துப் புறத்திலும் ஒன்றை இடத்துப் புறத்திலும் நாட்டி வலத்துப் புறமானதிற்கு யாகீனென்றும் இடத்துப் புறமானதிற்குப் போவாசென்றும் பேர்தரித்தான்.

௪. அதிகாரம்.

தேவாலயத்தின் தட்டுமுட்டுகள் செய்யப்பட்டது.

அவன் இருபது முழ நீளமும் இருபது முழ அகலமும் பத்து முழ உயரமுமான வெண்கலப் பலிபீடத்தையும் பண்ணுவித்தான்.

௨ கடல்தொட்டியையும் வார்ப்பித்தான். சக்கரமான அதின் உதடு ஒரு புறந்தொடங்கி மறுபுறமட்டும் பத்து முழ அகலமும் ஐந்து முழ உயரமுஞ் சுற்றளவு முப்பது முழ நூலளவுமாயிருந்தது.

௩ அதின் கீழ்ப்புறமாய எருதுகளின் ரூபங்கள் ஒவ்வொரு முழத்திற்குப் பத்து ரூபமாக அந்தக் கடல்தொட்டியின் சுற்றத்திலிருந்தது. தொட்டியோடொன்றாய் வார்க்கப்பட்ட அந்த எருதுகளின் வரிசைகள் இரண்டிருந்தது.

௪ அது பன்னிரண்டு எருதுகள் மேல் நின்றது. அவைகளில் மூன்று வடக்கேயும் மூன்று மேற்கேயும் மூன்று தெற்கேயும் மூன்று கிழக்கேயும் நோக்கியிருந்தது. கடல்தொட்டி அவைகளின் மேல் உயரவிருந்தது. அவைகளின் பின்புறங்களெல்லாம் உள்ளாகவிருந்தது.

௫ அதின் கனம் நாலு விரற்கடையும் அதின் உதடு குடிக்கிற பாத்திரத்தின் உதட்டைப்போலும் லீலிய புஷ்பத்தைப் போலுமிருந்தது. அது மூவாயிரங் குடந்தண்ணீர் பிடிக்கத்தக்கதாயிருந்தது.

௬ கழுவுகிறதற்குப் பத்துக் கொப்பரைகளையும் உண்டாக்கிச் சர்வாங்கதகனமாகிறவைகளை அவைகளில் அலசுகிறதற்கு ஐந்தை வலத்துப் புறத்திலும் ஐந்தை இடத்துப் புறத்திலும் வைத்தான். கடல்தொட்டியோவென்றால் ஆசாரியர்கள் அதிலே தங்களைச் சுத்தம்பண்ணிக் கொள்ளுகிறதற்கிருந்தது.

௭ அவன் பத்துப் பொன் விளக்குத்தண்டுகளையும் அவைகளுடைய பிரமாணத்தின்படி செய்வித்து அவைகளைத் தேவாலயத்தில் ஐந்தை வலத்துப் புறமும் ஐந்தை இடத்துப் புறமுமாக வைத்தான்.

௮ பத்து மேசைகளையுஞ் செய்வித்து, அவைகளைத் தேவாலயத்தில் ஐந்தை வலத்துப் புறமும் ஐந்தை இடத்துப் புறமுமாய் வைத்து, நூறு பொற் கலங்களையும் பண்ணுவித்தான்.

௯ அவன் ஆசாரியரின் பிரகாரத்தையும் பெரிய பிரகாரத்தையும் பிரகாரத்து வாசல்களையும் உண்டாக்கி அவைகளின் கதவுகளை வெண்கலத்தால் மூடினான்.

௰ கடல்தொட்டியை அவன் கிழக்கான வலத்துப் புறத்திலே தெற்குக்கெதிராக வைத்தான்.

௰௧ ஈராம் செப்புச்சட்டிகளையுஞ் சாம்பலெடுக்கிற கரண்டிகளையுங் கலங்களையும் உண்டாக்கினான். அப்படியே ஈராம் கர்த்தருடைய வீட்டிற்காக இராசாவாகிய சாலொமோனுக்குச் செய்ய வேண்டிய வேலையை முடித்துப்போட்டான்.

௰௨ அது என்னவென்றால் அந்த இரண்டு தூண்களும் இரண்டு தூண்களுடைய முனையின் மேலிருக்கிற குண்டுகளும் குமிழ்களுந் தூண்களுடைய முனையின் மேலிருக்கிற குமிழ்களான இரண்டு குண்டுகளை மூடுகிறதற்கு இரண்டு வலைப்பின்னல்களும்,

௰௩ தூண்களின் மேலான குமிழ்களான இரண்டு குண்டுகளை மூடுகிறதற்கு ஒவ்வொரு வலைப்பின்னலின் இரண்டு வரிசை மாதளம்பழங்களாக இரண்டு வலைப்பின்னலுக்குமிருக்கிற நானூறு மாதளம்பழங்களுந்தான்.

௰௪ ஆதாரங்களையும் ஆதாரங்களின் மேலிருக்குங் கொப்பரைகளையும்,

௰௫ ஒரு கடல்தொட்டியையும் அதின் கீழிருக்கும் பன்னிரண்டு எருதுகளையும்,

௰௬ செப்புச்சட்டிகளையுஞ் சாம்பலெ

செப்புச்சட்டிகளையும முட்கரண்டிகளையுமத வானபணிமுட்டுகளையும ஈராம் ஆபி இராசாவாகிய சாலோமோனுக்குக்கர்த்தரின வீட்டிற்காகத் துப்பரவான வெண்கலத்தாற்பண்ணினுன.

௰௭ யோர்தானுக்கடுத்த சமனுன்பூமியிற் சுக்கோத்துக்குஞ் சரேதாத்தாவுக்கு நடுவிலே இராசா அவைகளைக் களிமண்ணிலேவார்ப்பித்தான.

௰௮ இந்தத் தட்டுமுட்டுகளையெல்லாஞ் சாலோமோனவெகு ஏராளமாய உண்டுபண்ணினுன. ஏனெனில வெண்கலத்தின நிறைதொகைக்கடங்காததாயிருந்தது.

௰௯ பராபரனுடைய வீட்டிற்குத் தேவையான சகலதட்டுமுட்டுகளையும பொற்பீடத்தையுஞ் சமுகத்தப்பங்களையும வைக்கும மேசைகளையும,

௨௰ முறைமைப்படியே சந்நிதிக்கு முன்பாக வெளிச்சங்கொடுக்கிறதற்கு அபருசியான விளக்குத் தண்டுகளையும அவைகளின விளக்குகளையும,

௨௧ சுத்தத்தங்கப்பொன்னுன் பூக்களையும விளக்குகளையுங் கத்திரிகளையும,

௨௨ அபருசியான வெட்டுக் கத்திகளையுங் கலங்களையுந் தூபக்கலசங்களையுஞ் சாலோமோன பண்ணுவித்தான. வீட்டினுடைய வாசற்கதவுகளான பரிசுத்தத்திற்குப்பரிசுத்தமான ஸ்தலத்திற்குரிய உள்வாசற்கதவுகளுந்தேவாலய வீட்டின கதவுகளும பொன்னுயிருந்தது.

௫. அதிகாரம்.

உடம்படிக்கையின்பெட்டிப் பரிசுத்தத்திற்குப்பரிசுத்தமான ஸ்தலத்திற்குள் வைக்கப்பட்டபோது கர்த்தருடைய மகிமையினலே தேவாலயம நிறையப்பட்டது

கர்த்தருடைய வீட்டிற்காகச் சாலோமோன செய்தவேலையெல்லாமுடிந்தபோது, சாலோமோன தகப்பனுகிய தாவீது பரிசுத்தமபண்ணின வைகளைக்கொண்டுவந்து, வெள்ளியையும பொன்னையுஞ் சகலதட்டுமுட்டுகளையும பராபரனுடைய வீட்டுப்பொக்கிஷங்களிலேவைத்தான.

௨ பிறபாடுகர்த்தருடைய உடம்படிக்கையின்பெட்டியைச் சீயோனென்கிற தாவீதின்பட்டணத்திலிருந்து கொண்டுவரப்பண்ணச் சாலோமோன இஸ்ரவேலின மூப்பரையும இஸ்ரவேல்புத்திரருடைய வம்சங்களின பிரபுக்களாகிய எல்லாக்கோத்திரத் தலைவரையும எருசலேமிலேகூடிவரப்பண்ணினுன.

௩ அப்படியே இஸ்ரவேலரெல்லாரும ஏழாமமாதத்தின பண்டிகையிலே இராசாவண்டையிலேகூடினுர்கள.

௪ இஸ்ரவேலின மூப்பரெல்லாரும வந்தபிறபாடு லேவியர் பெட்டியையெடுத்து,

௫ பெட்டியையும ஆசரிப்புக்கூடாரத்தையுங் கூடாரத்திலிருக்கிற பரிசுத்தமானஎல்லாத் தட்டுமுட்டுகளையும ஏறிவரப்பண்ணினுர்கள அவைகளையேறிவரப்பண்ணினவர்கள லேவியரான ஆசாரியர்தானே.

௬ அல்லாமல இராசாவாகிய சாலோமோனும அவனிடத்திலேகூடின இஸ்ரவேல் சபையனைத்தும பெட்டிக்குமுன்பாக எண்ணிக்கைக்குந்தொகைக்கும அடங்காத ஏராளமாய ஆடுமாடுகளைப்பலியிட்டுக்கொண்டிருந்தார்கள.

௭ அப்படியே ஆசாரியர்கர்த்தருடைய உடம்படிக்கையின்பெட்டியை வீட்டின சந்நிதியாகிய பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான அதினஸ்தலத்திலே கேருபீன்களுடையசெட்டைகளுக்குக் கீழாகக்கொண்டுவந்துவைத்தார்கள.

௮ ஏனெனிற்கேருபீன்கள்பெட்டியிருக்குந்தானத்தின்மேலே தங்கள இரண்டு செட்டைகளைவிரித்து உயர்விருந்து பெட்டியையும அதின்வாரைகளையும மூடிக்கொண்டிருந்தது.

௯ பெட்டியிலிருக்கிற வாரைகளின முனைகள சந்நிதிஸ்தலத்திற்கு முன்னே காணப்படத்தக்கதாய அந்தவாரைகளையிழுத்தார்கள. ஆனாற்புறம்பே அவைகள காணப்படவில்லை. அது இந்நாள்வரைக்கும அங்கேயிருந்தது.

௰ இஸ்ரவேல்புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்டபின கர்த்தர் ஓரேபிலே அவர்களோடுடம்படிக்கைபண்ணினபோது மோசே அந்தப்பெட்டியிலேவைத்த இரண்டு கற்பலகைகளையல்லாமல அதிலேவேறொன்றுமிருந்ததில்லை.

௰௧ வகுப்புகளின்முறைகளைப் பாராமலிருக்கிற எல்லா ஆசாரியருந் தங்களைப் பரிசுத்தமபண்ணிக்கொண்டிருந்தார்கள.

௰௨ ஆசாப், ஏமான், எதுத்தூனுடைய கூட்டத்தாரும அவர்களுடைய குமாரர் சகோதரருடைய கூட்டத்தாருமாகிய பாடகரான லேவியரனைவரும மெல்லியபுடவைகளைத்தரித்துக்கைத்தாளங்களையுந் தம்புருகளையுஞ் சுரமண்டலங்களையும பிடித்துப்பலிபீடத்திற்குக் கிழக்கேநின்றார்கள. அவர்களோடுங்கூடப்பூரிகைகளை ஊதுகிற ஆசாரியர்கள நூற்றிருபதுபேராகநின்றார்கள.

௰௩ அவர்களொருமிக்கப் பூரிகைகளை ஊதி ஒருசத்தத்தோடே கர்த்தரைத் துதித்து ஸ்தோத்திரித்துப்பாடினார்கள். சம்பவித்ததேதென்றால் ஆசாரியர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையிலும், பாடகர் பூரிகைகள் தாளங்கள் கீதவாத்தியங்களுடைய சத்தத்தைத் தொனிக்கப்பண்ணிக் கர்த்தரை அவர் நல்லவர். அவர் கிருபையென்றுமுள்ளதென்று ஸ்தோத்திரிக்கையிலும், கர்த்தருடைய வீடாகிய தேவாலயம் ஒருமேகத்தினால் நிறையப்பட்டது.

௰௪ அந்த மேகத்தினிமித்தம் ஆசாரியர்கள் ஊழியஞ்செய்து நிற்கமாட்டாதேபோனார்கள். ஏனெனிற் கர்த்தருடைய மகிமை பராபரனுடைய வீட்டை நிரப்பிற்று.

௬. அதிகாரம்.

சாலொமோன்பண்ணின பிரசங்கமும் ஜெபமும்.

அப்போது சாலொமோன் இருளிலே வாசம்பண்ணுவோமென்று கர்த்தர் சொன்னாரென்றும்,

௨ தேவரீர் என்றைக்குமிருக்கும் ஸ்தானமாகிய வாசஸ்தலவீட்டை நானுமக்குக் கட்டினேனென்றுஞ் சொல்லி,

௩ இராசா தன்முகத்தைத் திருப்பி, இஸ்ரவேல் சபையையெல்லாம் ஆசீர்வதித்தான். இஸ்ரவேல்சபையெல்லாம் நின்றுகொண்டிருந்தது.

௪ அவன்சொன்னதாவது, என் தகப்பனாகிய தாவீதுக்குத் தம்முடைய வாக்கினாலே சொன்னதைத் தமது கரங்களினாலே நிறைவேற்றின இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்.

௫ நாம் நமது சனத்தை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதற்கொண்டு நம்முடைய நாமமிருக்கும் ஒருவீட்டைக்கட்டவேண்டுமென்று நாம் இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமுள்ள வேறேயாதொரு பட்டணத்தைத் தெரிந்துகொள்ளாமலும் நமது சனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்க வேறே யாதொருவனைத் தெரிந்துகொள்ளாமலும்,

௬ நம்முடைய நாமமிருக்குந்தானமாக எருசலேமையும் நமது சனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாயிருக்கத் தாவீதையுந் தெரிந்துகொண்டோமென்கிறதைத்தானே.

௭ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின் நாமத்திற்கு வீட்டைக்கட்டவேண்டுமென்று என் தகப்பனாகிய தாவீதின் மனதிலுமிருந்தது.

௮ ஆனாற் கர்த்தர் என் தகப்பனாகிய தாவீதுடனே, நமது நாமத்திற்கு வீட்டைக்கட்ட வேண்டுமென்று நீயுன்மனதிலே நினைத்தது உன்மனதின் நல்லநினைவுதானே.

௯ ஆகிலும் நீயந்தவீட்டைக்கட்டாமல் உன்கொப்பப்பிறப்பாகிற உன்னுடைய குமாரனே நம்முடைய நாமத்திற்கு அந்தவீட்டைக்கட்டுவானென்றார்.

௰ இப்போதுங் கர்த்தர் சொல்லியிருக்கிற தமதுவார்த்தையைத் திடப்படுத்தினார். ஏனெனிற் கர்த்தர் சொன்னபடியே நான் என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தலத்திலெழும்பி, இஸ்ரவேலுடைய இராசாசனத்தின்மேலுக்கார்ந்து இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின் நாமத்திற்கு வீட்டைக்கட்டி,

௰௧ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடனே பண்ணின உடம்படிக்கையிருக்கிறபெட்டியையதிலே வைத்தேனென்று சொல்லி,

௰௨ கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல்சபைக்கெல்லாம் எதிராக நின்றுகொண்டு தன்கைகளை விரித்தான்.

௰௩ ஏனெனிற் சாலொமோன் ஐந்துமுழ நீளமும் ஐந்துமுழ அகலமும் மூன்றுமுழ உயரமுமான வெண்கலமாகிய ஒருபிரசங்கத்தொட்டியையுண்டாக்கி, அதை நடுப்பிரகாரத்திலே வைத்திருந்தான். அதின்மேல் அவன் நின்றுகொண்டு இஸ்ரவேலின் சனங்களெல்லாம் எதிராக இருந்து முழங்காற்படியிட்டுத் தன்கைகளை வானத்திற்குநேராக விரித்து,

௰௪ சொன்னதாவது, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தாவே! தங்கள்முழு இருதயத்தால் உமக்கு முன்பாக நடக்கிற உமதடியாருக்கு உடம்படிக்கையையுங் கிருபையையுங் காக்கிற தேவரீரைப்போல் மேலே பரமண்டலங்களிலும் பூமியிலும் யாதொரு தேவனில்லை.

௰௫ தேவரீர் உமதடியானாகிய தாவீதென்ற என் தகப்பனுக்குச் சொன்னதையவனுக்குக் காத்தீர். உமதுவாக்கினாலும் அதைச்சொன்னீர். உமதுகரத்தினாலும் அதை இந்நாளிலிருக்கிறபடி நிறைவேற்றினீர்.

௰௬ இப்போதும் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தாவே! நீ நமக்கு முன்பாக நடந்ததுபோலே உன்குமாரர் தம்முடைய

நியாயப்பிரமாணத்தில் நடக்கும்படிக்குத் தங்கள்வழியைக் காத்தார்களேயானால், இஸ்ரவேலுடைய இராசாசனத்தின்மேல் உட்காரும்புருஷன் நமக்குமுன்பாக உனக்கில்லாதே போவதில்லையென்று தேவரீர் உம்மடியானாகிய தாவீதென்ற என்தகப்பனுக்குச்சொன்னதை யவனுக்குவர்ப்பண்ணியருளும்.

௰௭ இப்போதும் இஸ்ரவேலின்பராபரனாகிய கர்த்தாவே! தேவரீர் உம்மடியானாகிய தாவீதுக்குச்சொன்ன உம்முடைய வார்த்தை மெய்ப்படுவதாக.

௰௮ ஆனால் மெய்தான். பராபரன் மனுஷரோடே பூமியிலே வாசம்பண்ணுவாரோ? இதோ, வானங்களும் வானங்களின் வானங்களும் உம்மைக்கொள்ளாதே? நான் கட்டின இந்தவீடு அதற்கெம்மாத்திரம்?

௰௯ என்றாலும் என்பராபரனாகிய கர்த்தாவே! உம்மடியான் உமக்குமுன்பாகச் செலுத்துகிற கூப்பிடுதலையும் விண்ணப்பத்தையுங்கேட்க, உம்மடியானுடைய விண்ணப்பத்தையும் மன்றாட்டையும்நோக்கியருளும்.

௨௰ உம்மடியான் இவ்விடத்திலே செய்யும் விண்ணப்பத்தைக்கேட்க, தம்முடையநாமமிருக்குமென்று நீர்சொன்ன ஸ்தலமாகிய இந்தவீட்டின்மேல் உம்முடைய கண்கள் இரவும்பகலுந்திறந்திருப்பதாக.

௨௧ உம்மடியானும் உம்முடைய சனமாகிய இஸ்ரவேலும் இந்தஸ்தலத்திலும் விண்ணப்பம்பண்ணப்போகிற செபங்களைக் கேட்பீராக. ஆம், பரமண்டலங்களாகிய உம்முடைய வாசஸ்தலத்திலே அதைக்கேளும். கேட்டுமன்னியும்,

௨௨ ஒருவன் தனக்கடுத்தவனுக்குக் குற்றஞ்செய்திருக்கக்கொள்ள இவன் அவனையாணைச்சத்தியம்பண்ணச்சொல்லும்போது, அந்த ஆணை இந்த வீட்டிலிருக்கிற உம்முடைய பீடத்திற்கு முன்பாகவந்தால்,

௨௩ அப்போது பரமண்டலங்களிலிருக்கிற தேவரீர்கேட்டு, ஆகாதவனுடைய வழியை அவன்தலையின்மேலே சுமர்ப்பண்ண அவனுக்கு நீதியைச்சரிக்கட்டவும் நீதிமானுக்கு அவனுடைய நீதிக்குத்தக்கதாய்ச்செய்ய அவனை நீதிவிளங்கப்பண்ணவும் நடப்பித்து, உம்மடியாரை நியாயந்தீர்ப்பீராக.

௨௪ உம்முடைய சனமாகிய இஸ்ரவேல் உமக்குவிரோதமாகப் பாவஞ்செய்ததினாலே சத்துருவுக்கு முன்பாக முறிந்துபோய் உம்மண்டைக்குத் திரும்பி உம்முடைய நாமத்தை அறிக்கைபண்ணி, இந்தவீட்டிலே உமக்குமுன்பாக விண்ணப்பத்தையும் வேண்டுதலையுஞ்செய்தால்,

௨௫ பரமண்டலங்களிலிருக்கிற தேவரீர்கேட்டு, உம்முடைய சனமாகிய இஸ்ரவேலின் பாவத்தைமன்னித்து, அவர்களுக்கும் அவர்கள்பிதாக்களுக்கும் நீர்கொடுத்த சீமைக்கு அவர்களைத் திரும்பிவரப் பண்ணுவீராக.

௨௬ அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்ததினால் வானம் அடைபட்டு மழைபெய்யாதிருக்கும்போது அவர்கள் இந்தஸ்தலத்திற்குநேராக விண்ணப்பம் பண்ணி, உம்முடைய நாமத்தை யறிக்கைபண்ணித்தேவரீர் தங்களைச் சிறுமைப்படுத்தினதினாலே தங்கள்பாவங்களை விட்டுத்திரும்பினால்,

௨௭ பரமண்டலங்களிலிருக்கிற தேவரீர்கேட்டு, உம்மடியாரும் உம்முடைய சனமாகிய இஸ்ரவேலுஞ் செய்தபாவத்தைமன்னித்து, அவர்கள்நடக்கவேண்டிய நல்வழியையவர்களுக்குப் போதித்துத் தேவரீர் உம்முடைய சனத்திற்குச் சுதந்தரமாகக் கொடுத்த உம்முடையதேசத்தின்மேல் மழையைக்கட்டளை யிடுவீராக.

௨௮ தேசத்திலே பஞ்சமுண்டாகிறபோது, பெருவாரிக்காய்ச்சலுண்டாகிறபோது, வறட்சிபயிர்ச்சாவி வெட்டுக்கிளி பச்சைக்கிளி உண்டாகிறபோது, அவர்களுடைய சத்துரு அவர்கள் வாசல்களிலிருக்கிற தேசத்திலே அவர்களை முற்றிக்கைபோடுகிறபோது, யாதொருவாதையாகிலும் யாதொருரோகமாகிலும் வந்திருக்கிறபோது,

௨௯ எந்தமனுஷனாலும் இஸ்ரவேலாகிய உம்முடையசனத்தில் எவனாகிலும் தன்தன் வாதையையுங் கஸ்தியையும் உணர்ந்து, இந்த வீட்டிற்குநேராகத் தன் கைகளைவிரித்துச்செய்யுஞ் சகல விண்ணப்பத்தையுஞ் சகல வேண்டுதலையும்,

௩௰ உம்முடைய வாசஸ்தலமாகிய பரமண்டலங்களிலிருக்கிற தேவரீர் கேட்டுமன்னித்து,

௩௧ தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் அவர்கள் உயிரோ

டிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயப்பட்டு, உம்முடைய வழிகளில் நடக்கும்படிக்குத் தேவரீர் அவனவன் இருதயத்தை யறிந்திருக்கிறபடியே அவனவனுடைய எல்லா வழிகளுக்குந் தக்கதாய்க் கட்டளையிடுவீராக. ஏனெனில் தேவரீர் ஒருவரே மனுப்புத்திரரின் இருதயத்தை யறிந்தவர்.

௩௰௨ அந்தப்பிரகாரமாக உமது சனமாகிய இஸ்ரவேல் சாதியல்லாத அன்னிய சாதியான உம்முடைய பெரிய கீர்த்தியினிமித்தமும் உம்முடைய பலத்த கரத்தினிமித்தமும் நீட்டியிருக்கிற உம்முடைய புயத்தினிமித்தமுந் தூரதேசங்களிலிருந்துவந்து, இந்தவீட்டுக்கு நேராக நின்று விண்ணப்பம்பண்ணினால்,

௩௰௩ உமது வாசஸ்தலமாகிய பரமண்டலங்களிலிருக்கிற தேவரீர் அதைக் கேட்டுப் பூமியின் சனசதளங்களெல்லாம் உமது சனமாகிய இஸ்ரவேலைப்போல உமது நாமத்தை யறிந்து உமக்குப் பயப்பட்டு, நான் கட்டின இந்தவீட்டிற்கு உமது நாமந் தரிக்கப்பட்டதென்று அறியும்படிக்கு, அந்த அன்னியசாதியான் உம்மை நோக்கிக் கூப்பிடும் எல்லாக்காரியத்திற்குந் தக்கதாய்ச் செய்வீராக.

௩௰௪ உமது சனம் நீர் தங்களை யனுப்பும் வழியிலே தங்கள் சத்துருக்களோடு யுத்தம் பண்ணப்புறப்பட்டு, நீர் தெரிந்துகொண்ட இந்தப்பட்டணத்திற்கும் உமது நாமத்திற்கும் நான் கட்டின இந்தவீட்டிற்கும் நேராக விண்ணப்பம்பண்ணினால்,

௩௰௫ பரமண்டலங்களிலிருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையுங் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக.

௩௰௬ பாவஞ் செய்யாத மனுஷனில்லையே. ஆனதுகொண்டு அவர்கள் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபோது, தேவரீர் அவர்கள்மேல் கோபமாகி, அவர்களைச் சத்துருவுக்கு ஒப்புக்கொடுக்கிறதினால் அவர்களைச் சிறைப்பிடிக்கிறவர்கள் அவர்களைத் தூரத்திலும் அல்லது சமீபத்திலுமிருக்கிற தங்கள் தேசத்திற்குக் கொண்டுபோயிருக்கும்போது,

௩௰௭ அவர்கள் சிறைப்பட்டுப்போன தேசத்திலே தங்களில் உணர்த்தியடைந்து, மனந்திரும்பி, நாங்கள் பாவஞ்செய்து, அக்கிரமம்பண்ணித் துன்மார்க்கமாய் நடந்தோமென்று தங்கள் சிறையிருப்பான தேசத்தில் உம்மை நோக்கி வேண்டி,

௩௰௮ தாங்கள் சிறைகளாகக் கொண்டுபோகப்பட்ட தங்கள் சிறையிருப்பான தேசத்திலே தங்கள் முழு இருதயத்தோடும் தங்கள் முழு ஆத்துமத்தோடும் உம்மண்டைக்குத் திரும்பி, தேவரீர் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தங்கள் தேசத்திற்கும் தேவரீர் தெரிந்துகொண்ட அந்தப் பட்டணத்திற்கும் உமது நாமத்திற்குக் கட்டின இந்தவீட்டிற்கும் நேராக உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணினால்,

௩௰௯ உமது வாசஸ்தலமாகிய பரமண்டலங்களிலிருக்கிற தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதலையுங் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரித்து, உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த உமது சனத்திற்கு மன்னித்தருளும்.

௪௰ இப்போதும் என் பராபரனே! இந்த ஸ்தலத்திலே செய்யப்படும் ஜெபத்திற்கு உம்முடைய கண்கள் திறந்ததும் உம்முடைய செவிகள் கவனமுமாயிருப்பதாக.

௪௰௧ இப்போதும் பராபரனாகிய கர்த்தாவே! உம்முடைய தாபர இடத்திற்குத் தேவரீரும் உம்முடைய வல்லமையின் பெட்டியுமாய் எழுந்தருளும். பராபரனாகிய கர்த்தாவே! உம்முடைய ஆசாரியர் இரட்சிப்புத் தரிப்பிக்கப்பட்டு உம்முடைய பரிசுத்தவான்கள் நன்மையினாலே மகிழ்வார்களாக.

௪௰௨ பராபரனாகிய கர்த்தாவே! நீர் அபிஷேகம்பண்ணுவித்தவனின் முகத்தைப் புறக்கணியீராக. தேவரீர் உமது அடியானாகிய தாவீதுக்குவாக்குத்தத்தம்பண்ணின கிருபைகளை நினைத்தருளுமென்றான்.

௭. அதிகாரம்.

தேவாலயத்தைப் பிரதிஷ்டைபண்ணின திருஷ்டாந்தவசனம்.

௧ சாலொமோன் ஜெபம்பண்ணி முடிக்கிறபோது, அக்கினி வானத்திலிருந்திறங்கிச் சர்வாங்கதகனபலியையும் மற்றப் பலிகளையும் பட்சித்ததுமல்லாமல் கர்த்தருடைய மகிமை வீட்டை நிரப்பிற்று.

௨ கர்த்தருடைய மகிமை கர்த்தரின் வீட்டை நிரப்பினதினால் ஆசாரியர்கள் கர்த்தருடைய வீட்டிற்குட்பிரவேசிக்கக்கூடாதிருந்தது.

௩ அக்கினி இறங்குகிறதையுங் கர்த்தருடைய மகிமை வீட்டின்மேலிருக்கிறதையும் இஸ்ரவேல் புத்திரரெல்லாருங் காணுகிறபோது தளவரிசையாகிய தரைமட்டும் முகங்குப்புறக் குனிந்து, கர்த்தர் நல்லவர். அவருடைய கிருபை யென்றுமுள்ளதென்று அவரைப் பணிந்துகொண்டு துதித்தார்கள்.

௪ அப்போது இராசாவும் எல்லாச் சனங்களுங் கர்த்தருக்கு முன்பாகப் பலிகளைச் செலுத்தினார்கள்.

௫ இராசாவாகிய சாலோமோன் இருபத்தீராயிரம் மாடுகளையும் லக்ஷத்திருபதினாயிரம் ஆடுகளையும் பலியிட்டான். இப்படி இராசாவுஞ் சனமெல்லாருந் தேவனுடைய வீட்டைப் பிரதிஷ்டைபண்ணினார்கள்.

௬ ஆசாரியர்கள் தங்கள் ஊழியங்களைச் செய்து நின்றார்கள். லேவியரோவென்றால் தாவீது இராசா, கர்த்தருடைய கிருபை யென்றுமுள்ளதென்று அவரைத் துதிக்கத் தானுண்டாக்கின ஊழியத்திலே தாவீது உண்டாக்கின கர்த்தரின் கீதவாத்தியங்களை வாசித்து நின்றார்கள். ஆசாரியர்கள் அவர்களுக்கெதிரே இராசதினையூதி பூரிகைகளை ஊதினார்கள். இஸ்ரவேலரெல்லாரும் நின்றுகொண்டிருந்தார்கள்.

௭ கர்த்தருடைய வீட்டிற்கு முன்னிருக்கிற பிராகாரத்தின் நடுமையத்தைச் சாலோமோன் பரிசுத்தமாக்கி, அங்கே சர்வாங்க தகனங்களையுஞ் சமாதானபலிகளின் கொழுப்புகளையுஞ் செலுத்தினான். சாலோமோன் உண்டாக்கின வெண்கலப் பலிபீடஞ் சர்வாங்க தகனங்களையும் போசனபலிகளையுங் கொழுப்புகளையுங் கொள்ளமாட்டாதிருந்தது.

௮ அக்காலத்திலேதானே சாலோமோனோடுங்கூட ஆமாத்தின் எல்லை துவக்கி எகிப்தின் நதிமட்டுமிருந்து வந்த மகா பெரிய கூட்டமாகிய இஸ்ரவேலரெல்லாம் ஏழுநாளாகப் பண்டிகை ஆசரித்து,

௯ எட்டாம்நாளிலே பண்டிகையை முடித்தார்கள். ஏனென்றால் ஏழுநாளாய்ப் பலிபீடத்தைப் பிரதிஷ்டைபண்ணி, ஏழுநாள் பண்டிகையை ஆசரித்தார்கள்.

௰ ஏழாம் மாதத்தின் இருபத்துமூன்றாந் தேதியிலே சனங்களைத் தங்கள் கூடாரங்களுக்குப் போகவிடைகொடுத்தான். கர்த்தர் தாவீதுக்குஞ் சாலோமோனுக்குந் தமது சனமாகிய இஸ்ரவேலுக்குஞ் செய்த நன்மைக்காகச் சந்தோஷப்பட்டு மனமகிழ்ச்சியாய்ப் போனார்கள்.

௰௧ அப்படியே சாலோமோன் கர்த்தருடைய வீட்டையும் இராச அரமனையையுங் கட்டித் தீர்த்தான். கர்த்தரின் வீட்டிலுந் தன் அரமனையிலுஞ் சாலோமோன் செய்ய மனதாயிருந்ததெல்லாங் கைகூடி வந்தது.

௰௨ கர்த்தர் இராவிலே சாலோமோனுக்குத் தரிசனையாகி அவனுக்குச் சொன்னதாவது, நாம் உன் விண்ணப்பத்தைக் கேட்டு, இந்த ஸ்தலத்தை நமக்குப் பலியிடும் வீடாகத் தெரிந்துகொண்டோம்.

௰௩ இதோ, நாம் மழையில்லாதபடிக்கு வானத்தை அடைத்து, அல்லது தேசத்தைப் பூமிபட்சிக்க வெட்டுக்கிளிகளுக்குக் கற்பித்து, அல்லது நமது சனத்துக்குட் பெருவாரிக்கொள்ளையனுப்பும்போது,

௰௪ நம்முடைய நாமந் தரிக்கப்பட்ட நம்முடைய சனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம்பண்ணி, நம்முடைய முகத்தைத் தேடித் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்போது பரமண்டலங்களிலிருக்கிற நாம் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்தைச் சொஸ்தமாக்குவோம்.

௰௫ இப்போதும் இந்த ஸ்தலத்திலே செய்யப்படப்போகிற ஜெபத்திற்கு நம்முடைய கண்கள் திறந்தவைகளும் நமது செவிகள் கவனிக்கிறவைகளுமாயிருக்கும்.

௰௬ இப்போது நம்முடைய நாமம் இந்த வீட்டிலே யென்றைக்கும் இருக்கும்படிக்கு, நாம் அதைத் தெரிந்துகொண்டு பரிசுத்தம்பண்ணினோம். நம்முடைய கண்களும் நம்முடைய இருதயமுஞ் சகலநாளும் அங்கேயிருக்கும்.

௰௭ உன் தகப்பனாகிய தாவீது நடந்ததுபோல நீ நமக்கு முன்பாக நடந்து, நாம் உனக்குக் கற்பித்தபடியெல்லாஞ் செய்து, நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையுங் கைக்கொண்டாயானால்,

௰௮ அப்போது இஸ்ரவேலையாளும் புருஷன் உனக்கில்லாமற்போவதில்லையென்று நாம் உன் தகப்பனாகிய தாவீதோடே உடம்படிக்கைபண்ணினபடியே உன் இராசரியபாரத்தின் ஆசனத்தைத் திடப்படுத்துவோம்.

௰௯ நீங்களோ வழிவிலகி, நாம் உங்களுக்கு முன்வைத்த நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய சட்டங்களையும் விட்டுப்போய், வேறே தேவர்களைச் சேவித்து, அவைகளைப் பணிந்துகொள்வீர்களேயாகில்,

௨௰ நாம் அவர்களுக்குக் கொடுத்த நம்முடைய தேசத்திலிருந்து அவர்களைப் பிடுங்கி நம்முடைய நாமத்திற்கு நாம் பரிசுத்தம்பண்ணின இந்த வீட்டை நம்முடைய முகத்தைவிட்டுத் தள்ளி, அதை எல்லா ஜனங்களுக்குள்ளும் பழமொழியாகவும் பழிப்பாகவும் வைப்போம்.

௨௧ அப்பொழுது உயர்ந்திருந்த இந்த வீட்டைக் கடந்துபோகிறவனெவனும் பிரமித்துக் கர்த்தர் இந்தத் தேசத்திற்கும் இந்த வீட்டிற்கும் இப்படிச் செய்தது என்ன? என்று கேட்கிறதற்கு,

௨௨ அவர்கள் தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய பிதாக்களின் கர்த்தரை விட்டு வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டு அவைகளை நமஸ்கரித்து அவைகளைச் சேவித்தபடியினாலே கர்த்தர் இந்தத் தீமையை யெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினாரென்று சொல்லுவார்களென்றார்.

௮. அதிகாரம்.

சாலொமோன் பண்ணின இராசகியகாரியம்.

சாலொமோன் கர்த்தருடைய வீட்டையும் தன் வீட்டையும் கட்டி இருபது வருஷங்கள் சென்றபோது,

௨ ஈராம் தனக்குக் கொடுத்துவிட்ட பட்டணங்களைச் சாலொமோன் கட்டி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரைக் குடியேற்றினான்.

௩ பிற்பாடு சாலொமோன் சோபாத் தேசத்து ஆமாத்துக்குப் போய் அதைச் செயங்கொண்டான்.

௪ அவன் வனாந்தரத்திலுள்ள தத்மோரையும் ஆமாத்தின் தேசத்திலே இரஸ்துகளின் பட்டணங்கள் யாவற்றையுங் கட்டினான்.

௫ அவன் மேலான பெத்தொரோனையுங் கீழான பெத்தொரோனையும் அலங்கங்களுங் கதவுகளுந் தாழ்ப்பாள்களுமுள்ள அரணான பட்டணங்களாகக் கட்டி,

௬ பாலாத்தையுந் தனக்கிருக்கிற இரஸ்துகளை வைக்கும் எல்லாப்பட்டணங்களையும் இரதங்களிருக்கும் எல்லாப்பட்டணங்களையுங் குதிரைக்காரரிருக்கும் பட்டணங்களையுந் தான் எருசலேமிலும் லீபனோனிலும் தான் ஆளுந் தேசமெங்கும் கட்டத்தனக்கு இச்சையானதையெல்லாம் சாலொமோன் கட்டினான்.

௭ இஸ்ரவேல் புத்திரர் சங்காரம்பண்ணாதிருந்த இஸ்ரவேலரல்லாத ஏத்தியர் எமோரியர் பெரிசியர் ஏவியர் எபூசியரில் மீதியான எல்லா ஜனத்திலும்,

௮ அவர்களுக்குப் பிற்பாடு தேசத்தில் வைக்கப்பட்ட அவர்கள் பிள்ளைகளைச் சாலொமோன் இந்நாள்வரைக்கும் மட்டுக்கடங்கா வேலைசெய்ய வரிப் பகுதிக்குக் கீழ்க்குடியாக்கினான்.

௯ ஆனால் இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரைச் சாலொமோன் தன் வேலையைச் செய்ய அடிமைப்படுத்தவில்லை. ஏனென்றால் இவர்கள் யுத்தமனுஷரும் அவனுடைய சேர்வைக்காரரின் தலைவரும் அவனுடைய இரதங்களுக்கும் குதிரைக்காரருக்கும் தலைவருமாயிருந்தார்கள்.

௰ இராசாவாகிய சாலொமோனுடைய ஊழியக்காரரின் தலைவராகிய இவர்கள் இருநூற்றைம்பதுபேர், ஜனத்தை ஆண்டார்கள்.

௰௧ பார்வோனின் குமாரத்தியைச் சாலொமோன் தாவீதின் பட்டணத்திலிருந்து தான் அவளுக்குக் கட்டுவித்த வீட்டிற்குக் குடியேறிவரப்பண்ணினான். ஏனென்றால் இஸ்ரவேலின் இராசாவாகிய தாவீதினுடைய வீட்டிலே என் பெண்சாதி வாசம்பண்ணவேண்டாம், ஏனென்றால் கர்த்தருடைய பெட்டி வந்த ஸ்தலங்கள் பரிசுத்தமுள்ளவைகள் என்றான்.

௰௨ அதுமுதற்கொண்டு சாலொமோன் தான் மண்டபத்திற்கு முன்பாகக் கட்டின கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் கர்த்தருக்குத் தகனபலிகளைச் செலுத்தி,

௰௩ ஒவ்வொருநாளின் கட்டளைப்படிக்குத் தாயீமோசேயுடைய கற்பனையின்படியே ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் வருஷத்தில் மூன்றுதரம் ஆசரிக்கப்படும் பண்டிகைகளாகிய புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையிலும் வாரங்களின் பண்டிகையிலுங் கூடாரங்களின் பண்டிகையிலுங் கர்த்தருக்குச் சர்வாங்கத் தகனபலிகளைச் செலுத்தினான்.

௰௪ அவன் தன் தகப்பனாகிய தாவீதுடைய பிரமாணத்தின்படியே ஆசாரியர்கள் தங்கள் தங்கள் ஊழியஞ்செய்யும் பகுதிகளையும் லேவியர் ஒவ்வொருநாளின் கட்டளையின்படியே துதிபாடி ஆசாரியருக்கு முன்பாகத் தங்கள் ஊழியஞ்செய்யும் முறைகளையும் வாசற்காவற்காரர் ஒவ்வொரு வாசலிற் காவற்காக்கும் வகுப்புகளையும் நிற்கப்பண்ணினான். ஏனெனில் தேவனுடைய மனுஷனாகிய தாவீது இப்படிக் கற்பித்திருந்தான்.

௰௫ சகலகாரியத்தையும் பொக்கிஷங்களின் காரியத்தையுங் குறித்து இராசா

ஆசாரியர்களுக்காகவும் லேவியருக்காகவுங் கொடுத்த கற்பனையைவிட்டு விலகாதிருந்தார்கள்.

௧௬ இப்படியே கர்த்தருடைய வீட்டுக்கு அஸ்திபாரம் போடப்பட்ட நாள்முதற்கொண்டு அதை முடிக்குமட்டுக்கும் சாலொமோனின் வேலையெல்லாம் நடந்தேறிக் கர்த்தருடைய வீடு கட்டித் தீர்ந்தது.

௧௭ பிற்பாடு சாலொமோன் ஏதோம் தேசத்திலுள்ள கடலோரத்திலிருக்கும் எசியோன்கேபேருக்கும் ஏலோத்துக்கும் போனான்.

௧௮ அவனுக்கு ஈராம் தன் ஊழியக்காரர் மூலமாய்க் கப்பல்களையும் சமுத்திரத்தை அறிந்த வேலைக்காரரையும் அனுப்பினான். இவர்கள் சாலொமோனின் வேலைக்காரரோடேகூட ஓப்பீருக்குப் போய் அங்கேயிருந்து நானூற்றைம்பது தாலந்து பொன்னை ஏற்றி, இராசாவாகிய சாலொமோனுக்குக் கொண்டுவந்தார்கள்.

௯. அதிகாரம்.

சாலொமோனின் கீர்த்தியும் பிரபலியமும் அவனுடைய மரணமும்.

சேபாவின் இராசாத்தி சாலொமோனின் கீர்த்தியைக் கேட்டபோது, சாலொமோனை விடுகதைகளினாலே சோதிக்கிறதற்கு மகா பெரிய தண்டோடும், சுகந்தங்களையும் வெகுவான பொன்னையும் இரத்தினங்களையுஞ் சுமக்கிற ஒட்டகங்களோடும் எருசலேமுக்கு வந்தாள். அவள் சாலொமோனண்டையிலே வந்தபோது தன் மனதிலிருந்த எல்லாவற்றையும் அவனோடே பேசினாள்.

௨ அப்பொழுது சாலொமோன் அவள் கேள்விகளையெல்லாம் அவளுக்கு விடுவித்தான். நன்றாய் அவளுக்கு விடுவிக்காதபடிக்கு ஒன்றும் சாலொமோனுக்கு மறைபொருளாயிருந்ததில்லை.

௩ சேபாவின் இராசாத்தி சாலொமோனின் ஞானத்தையும் அவன் கட்டின வீட்டையும்,

௪ அவன் பந்தியின் சாப்பாட்டையும் அவனூழியக்காரரின் இருப்பையும் அவன் வேலைக்காரரின் வரிசையையும் அவர்கள் வஸ்திரங்களையும் அவனுடைய பானவிசாரிப்புக்காரரையும் அவர்கள் வஸ்திரங்களையும் கர்த்தருடைய வீட்டிற்கு அவன் ஏறிப்போகிற அவன் நடையையுங் கண்டபோது அவள் பிரமித்துக்கொண்டு,

௫ இராசாவோடே சொன்னதாவது: உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையுங் குறித்து நான் என் தேசத்திலே கேட்ட செய்தி மெய்யாயிருக்கிறது.

௬ நான் வந்து அதைக் கண்ணாரக் காணுமட்டும் அவர்கள் வார்த்தைகளை நம்பாதிருந்தேன். ஆனால் இதோ, உம்முடைய பெரிய ஞானத்தில் பாதியையாகிலும் அவர்கள் எனக்கு அறிவிக்கவில்லை. நான் கேட்ட கீர்த்தியைப்பார்க்கிலும் அதிகமுண்டாயிருக்கின்றது.

௭ உம்முடைய மனுஷர் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று உமது ஞானத்தைக் கேட்கிற இந்த உம்முடைய ஊழியக்காரர் பாக்கியவான்கள்.

௮ உம்முடைய பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக நீர் இராசாவாயிருக்கும்படிக்கு உம்மைத் தம்முடைய இராசாசனத்தின்மேல் இருக்கப்பண்ணின உம்மேல் பிரியம் வைத்த உம்முடைய பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். உம்முடைய பராபரன் இஸ்ரவேலை என்றைக்கும் நிலைநிறுத்தும்படிக்குச் சிநேகிக்கிறதினாலே அவர் உம்மை நியாயமும் நீதியுஞ் செய்கிறதற்கு அவர்கள்மேல் இராசாவாக வைத்தாரென்றாள்.

௯ அவள் இராசாவுக்கு நூற்றிருபது தாலந்து பொன்னையும் மிகுந்த சம்பாரங்களையும் இரத்தினங்களையுங் கொடுத்தாள். சேபாவின் இராசாத்தி இராசாவாகிய சாலொமோனுக்குக் கொடுத்த அப்படிக்கொத்த சம்பாரங்களுக்குச் சரியானவைகள் ஒருக்காலும் வந்ததில்லை.

௧௦ இதல்லாமல் ஓப்பீரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் வேலைக்காரரும் சாலொமோனின் வேலைக்காரரும் வாசனைமரங்களையும் இரத்தினங்களையுங் கொண்டுவந்தார்கள்.

௧௧ அந்த வாசனைமரங்களால் இராசா கர்த்தருடைய வீட்டிற்கும் இராச அரண்மனைக்கும் வழிகளையும் பாடுவானகளுக்குச் சுரமண்டலங்களையுந் தம்புருக்களையும் உண்டாக்கினான். அப்படிக்கொத்தவைகள் அதற்குமுன்னே யூதேயா தேசத்திலே ஒருக்காலுங் காணப்பட்டதில்லை.

௧௨ சேபாவின் இராசாத்தி இராசாவுக்குக் கொண்டுவந்தவைகளைத் தவிர அவள் ஆசைப்பட்டுக் கேட்ட எல்லாவற்றையும் இராசாவாகிய சாலொமோன் அவளுக்குக் கொடுத்தான். பிற்பாடு அவள் தன் ஊழியக்காரரோடுங்கூடத் திரும்பித் தன் தேசத்துக்குப் போனாள்.

௰௩ மனிதர்களும் வர்த்தகருங் கொண்டுவரும் பொன்னைத் தவிர சாலொமோனுக்கு ஒவ்வொரு வருஷத்திலும் வந்த பொன் அறுநூற்றறுபத்தாறு தாலந்து நிறையானதாயிருந்தது.

௰௪ அரபியாவின் சகல இராசாக்களும் அந்தத் தேசத்து அதிபதிகளும் கூடச் சாலொமோனுக்குப் பொன்னையும் வெள்ளியையுங் கொண்டுவருவார்கள்.

௰௫ இராசாவாகிய சாலொமோன் தகட்டாய் அடித்த பொன்னினால் இருநூறு பரிசைகளையுண்டாக்கினான். ஒவ்வொரு பரிசைக்கு அறுநூறு சேக்கல் நிறைபொற்றகட்டைச் செலவழித்தான்.

௰௬ தகடாய் அடித்த பொன்னினாலே முந்நூறு கேடகங்களையும் உண்டாக்கினான். ஒவ்வொரு கேடகத்திற்கு முந்நூறு சேக்கல் நிறைபொன்னைச் செலவழித்தான். அவைகளை இராசா லீபனோன் காட்டு மரங்களின் வீட்டிலே வைத்தான்.

௰௭ இராசா தந்தத்தினாலே பெரிய இராசாசனத்தையும் பண்ணுவித்து, அதைப் பசும்பொன்னினாலே மூடினான்.

௰௮ அந்த ஆசனத்தோடே சேர்க்கப்பட்ட பொன்னின் ஆறுபடிகளும் ஒரு பாதப்படியும் உண்டாயிருந்தது; [illegible] இந்தண்டையும் அந்தண்டையும் கைச்சாய்மானங்களும் அதற்கிருந்தது. இரண்டு சிங்கங்களும் கைச்சாய்மானங்களருகே நின்றது.

௰௯ அந்த ஆறுபடிகளின் மேலும் இந்தண்டையும் அந்தண்டையும் பன்னிரண்டு சிங்கங்கள் நின்றது. எந்த இராச்சியத்திலும் அப்படிப் பண்ணப்படவில்லை.

௨௰ இராசாவாகிய சாலொமோனுக்கிருந்த குடிகலங்களெல்லாம் பொன்னும், லீபனோன் காட்டுமரங்களுடைய வீட்டின் தட்டு முட்டுகளெல்லாம் பசும்பொன்னுமாயிருந்தது. வெள்ளி, சாலொமோனின் நாட்களில் ஒரு பொருட்டாய் எண்ணப்படவில்லை.

௨௧ ஏனெனில் ஈராமின் வேலைக்காரரோடே கூடத் தர்ஷீசுக்குப் போகிற இராசாவின் கப்பல்கள் மூன்று வருஷங்களில் ஒருதரந் திரும்பிச் சேர்ந்து, பொன்னையும் வெள்ளியையும் யானைத்தந்தங்களையுங் குரங்குகளையும் மயில்களையுங் கொண்டுவந்தது.

௨௨ அப்படியே இராசாவாகிய சாலொமோன் பூமியின் இராசாக்களையெல்லாம் பார்க்க ஐசுவரியத்திலும் ஞானத்திலும் பெரியவனாயிருந்தான்.

௨௩ பூமியின் சாலொமோனின் இருதயத்திற் கொடுத்த அவனுடைய ஞானத்தைக் கேட்பதற்குப் பூமியின் இராசாக்களெல்லாரும் அவன் முகதரிசனை தேடினார்கள்.

௨௪ இவர்களில் அவரவர் வருஷந்தோறும் வருஷந்தோறும் தங்கள் காணிக்கையாகிய வெள்ளி ஆபரணங்களையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் ஆயுதங்களையும் சுகந்தவர்க்கங்களையுங் குதிரைகளையுங் கோவேறு கழுதைகளையுங் கொண்டுவருவார்கள்.

௨௫ சாலொமோனுக்கு நாலாயிரங் குதிரை இலாயங்களும் இரதங்களும் இருந்தது. பன்னீராயிரங் குதிரைவீரருமிருந்தார்கள். அவைகளையும் இரதங்களை [illegible] இராசா இரதங்களின் பட்டணங்களிலும் எருசலேமிலே தன்னிடத்திலும் வைத்தான்.

௨௬ நதியைத் துவக்கிப் பெலிஸ்தரின் தேசமட்டுக்கும் எகிப்துவின் எல்லைமட்டுக்குமிருக்கிற சகல இராசாக்களையும் அவன் ஆண்டான்.

௨௭ இராசாவானவன் எருசலேமிலே வெள்ளியைக் கற்களைப் போலவும் கேதுருமரங்களைப் பள்ளத்தாக்கிலுண்டாகிற காட்டத்திமரங்களைப் போலவுமாக்கினான்.

௨௮ எகிப்திலும் சகல தேசங்களிலுமிருந்து சாலொமோனுக்குக் குதிரைகள் கொண்டுவரப்பட்டது.

௨௯ சாலொமோனுடைய முந்தினதும் பிந்தினதுமான மற்றவர்த்தமானங்கள் தீர்க்கதரிசியாகிய நாத்தானின் புஸ்தகத்திலும், சீலோனியனாகிய அகியாவின் தீர்க்கதரிசனத்திலும், நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமைக் குறித்துத் தரிசனங்காண்கிற இத்தோவின் தரிசனங்களிலும் அல்லவோ எழுதியிருக்கிறது.

௩௰ சாலொமோன் எருசலேமிலே இஸ்ரவேலரெல்லாம் நாற்பது வருஷம் அரசாண்டான்.

௩௧ பிற்பாடு சாலொமோன் தன் பிதாக்களோடே நித்திரையாயடைந்தான். தன் தகப்பனாகிய தாவீதின் பட்டணத்திலே அடக்கம்பண்ணினார்கள். அவன் ஸ்தலத்திலே அவன் குமாரனாகிய ரெகொபெயாம் இராசாவானான்.

௰. அதிகாரம்.

பத்துக்கோத்திரங்கள் ரெகொபெயாமை விட்டுப் பிரிந்துபோனது.

ரெகொபெயாம் சீகேமுக்குப் போனான். ஏனெனில் அங்கே இராசாவாக்கு—

கது இஸ்ரவேலெல்லாரு சிகேமுக்கு வந்தது.

௨ இராசாவாகிய சாலொமோனைவிட்டோடிப்போய், எகிப்திலிருக்கிற நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாம் அதைக் கேட்டபோதேயென்றால், அவன் எகிப்திலிருந்து திரும்பிவந்தான்.

௩ ஏனெனில் அவனை யழைத்தனுப்பினார்கள். பிற்பாடு எரொபெயாமும் இஸ்ரவேலனைத்தும் வந்து, ரெகொபெயாமோடே பேசி,

௪ உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தை வெகு கடினமாக்கினார். இப்போது நீர் உம்முடைய தகப்பனின் கடினமான வேலையையும் அவர் எங்கள்மேல் வைத்த தம்முடைய பாரமான நுகத்தடியையும் லகுவாக்கும் அப்போது உம்மைச் சேவிப்போமென்றார்கள்.

௫ அவன் அவர்களுடனே, நீங்கள் மூன்று நாளைக்குப் பிற்பாடு திரும்ப என்னண்டைக்கு வாருங்களென்றான். அப்படியே சனம் போயிற்று.

௬ அப்போது இராசாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோனுயிருக்கையில் அவனுக்குமுன்பாக நின்ற முதியோரோடே ஆலோசனைபண்ணி, இந்தச் சனத்துக்கு என்னமாய் உத்தரவு கொடுக்கும்படி நீங்கள் ஆலோசனைசொல்லுகிறீர்களென்று கேட்டான்.

௭ அவர்கள் அவனுடனே, நீர் இந்தச் சனத்துக்குத் தயவையும் பட்சத்தையுங் காண்பித்து, அவர்களுக்கு நல்வார்த்தைகளைப் பேசினால், சகலநாளும் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்களென்றார்கள்.

௮ அவனோவென்றால் மூப்பர் தனக்குக் கொடுத்த ஆலோசனையைவிட்டுத் தன்னோடே வளர்ந்தவர்களும் தனக்குமுன்பாக நிற்கிறவர்களுமாயிருக்கிற வாலிபரோடே ஆலோசனைபண்ணி,

௯ அவர்களுடனே, உம்முடைய தகப்பன் எங்கள்மேல்வைத்த நுகத்தடியை லகுவாக்குமென்று என்னுடனே சொன்ன இந்தச் சனத்துக்கு என்னமாய் உத்தரவு கொடுக்கும்படி நீங்கள் ஆலோசனைசொல்லுகிறீர்களென்றான்.

௰ அவனோடேவளர்ந்த வாலிபர் அவனோடே சொன்னதாவது, உம்முடைய தகப்பன் எங்கள் நுகத்தடியைப் பாரமாக்கினார், நீர் அதை யெங்களுக்கு லகுவாக்குமென்று உம்முடனே சொன்ன இந்தச் சனத்துக்கு நீர் சொல்லவேண்டியதேதெனில் என் சுண்டுவிரல் என் தகப்பனுடைய இடுப்பைப்பார்க்கப் பருமமாயிருக்கும்.

௰௧ இப்போதும் என் தகப்பன் பாரமான நுகத்தடியை யுங்கள்மேல் சுமத்தினார். நான் உங்கள் நுகத்தடியை யதிகபாரமாக்குவேன். என் தகப்பன் உங்களைச் சவுக்குகளால் தண்டித்தார் நான் தேட்களினால் உங்களைத் தண்டிப்பேன் என்பீராகவென்றார்கள்.

௰௨ மூன்றாம் நாளிலே என்னண்டைக்குத் திரும்பிவாருங்களென்று இராசா சொன்னபடியே எரொபெயாமும் சகல சனமும் மூன்றாம் நாளிலே ரெகொபெயாமண்டைக்கு வந்தபோது,

௰௩ இராசா அவர்களுக்குக் கடின உத்தரவு கொடுத்தான். ஏனெனில் இராசாவாகிய ரெகொபெயாம் மூப்பரின் ஆலோசனையை விட்டு,

௰௪ வாலிபருடைய ஆலோசனையின்படியே அவர்களோடே பேசி, என் தகப்பன் உங்கள் நுகத்தடியைப் பாரமாக்கினார். நான் அதை யதிகபாரமாக்குவேன். என் தகப்பன் உங்களைச் சவுக்குகளால் தண்டித்தார். நானுங்களைத் தேட்களினால் தண்டிப்பேனென்று சொல்லி,

௰௫ இராசா சனத்துக்குச் செவிகொடாமற்போனான். ஏனென்றால் கர்த்தர் சீலோனூரான் அகியாவைக்கொண்டு நேபாத்தின் குமாரனாகிய எரொபெயாமுக்குச் சொன்ன தமது வார்த்தையைத் திடப்படுத்தும்படிக்குப் பராபரனாலே யிப்படிப்புண்டுது.

௰௬ இராசா தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலெல்லாருங் கண்டபோது, சனம் இராசாவுக்கு மறுவுத்தரமாகத் தாவீதோடே யெங்களுக்குப் பங்கேது? ஈசாயின்குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமில்லை. இஸ்ரவேலே! உன் கூடாரங்களுக்குப் போய்விடு. இப்போதுந் தாவீதே! உன் வீட்டைப் பார்த்துக்கொள்ளென்று சொல்லி, இஸ்ரவேலெல்லாருந் தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள்.

௰௭ ஆனால் யூதாவின் பட்டணங்களிலே குடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகொபெயாம் இராசாவாயிருந்தான்.

௰௮ அப்போது இராசாவாகிய ரெகொபெயாம் பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை யனுப்பினான். ஆனால் இஸ்ரவேல் புத்திரர் அவனைச் சாகத்தக்கதாய்க் கல்லெறிந்தார்கள். அப்போது இராசாவாகிய ரெகொபெயாம் ரதத்திலேறிக்கொ

டிப்போகத் தீவிரமாய் இரதத்தின்மேலேறிப்போனான்.

௰௯ அப்படியே இஸ்ரவேல் இந்நாள்வரைக்குந் தாவீதின் வீட்டைவிட்டு மருள் விழுந்திருக்கிறார்கள்.

௰௧. அதிகாரம்.

ரெகொபெயாமின் இராச்சியபாரம்.

ரெகொபெயாம் எருசலேமுக்கு வந்தபோது இஸ்ரவேலோடு யுத்தம்பண்ணவும் இராச்சியத்தை ரெகொபெயாமினிடமாகத் திருப்பிக்கொள்ளவும் அவன் யூதா வீட்டாரும் பென்யமீன் கோத்திரத்தாருமாகிய யுத்தம்பண்ணத்தக்க தெரிந்துகொள்ளப்பட்ட நூற்றெண்பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டான்.

௨ ஆனாற் பராபரனுடைய மனுஷனாகிய செமாயாவுக்குக் கர்த்தருடைய வார்த்தையுண்டாகி அவர் சொன்னதாவது,

௩ நீ யூதாவின் இராசாவாகிய ரெகொபெயாமென்ற சாலொமோனின் குமாரனோடும், யூதாவிலும் பென்யமீனிலுமிருக்கிற எல்லா இஸ்ரவேலோடும்,

௪ நீங்களெழும்பிப்போகாமலும் உங்கள் சகோதரரோடே யுத்தம்பண்ணாமலும் அவரவர் தங்கள் வீடுகளுக்குத் திரும்புங்கள். ஏனெனில் நம்மாலே இந்தக்காரியம் நடந்ததென்று கர்த்தருரைக்கிறாரென்று சொல்லென்றார். அப்பொழுது அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து எரொபெயாமுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதைவிட்டுத் திரும்பினார்கள்.

௫ ஆதலால் ரெகொபெயாம் எருசலேமிலே வாசமாயிருந்து, யூதாவிலே அரணிப்பட்டணங்களைக் கட்டினான்.

௬ அவன் பெத்லெகேமும் ஏத்தாமுந் தெக்கோவாவும்,

௭ பெத்சூருஞ்சோகோவும் அதுல்லாமும்,

௮ காத்தும் மரேஷாவுஞ் சீப்பும்,

௯ அதோராயிமும் லாகீசும் அசேக்காவும்,

௰ சோராவும் ஆயலோனும் எப்ரோனுமென்ற யூதாவிலும் பென்யமீனிலுமிருக்கிற அரணிப்பட்டணங்களைக் கட்டி,

௰௧ அந்த அரணிப்புகளைப் பலப்படுத்தி, அவைகளிலே தலைவரையும் ஆகாரமும் எண்ணெயுந் திராட்சப்பழ இரசமுமுள்ள பண்டகசாலைகளையும்,

௰௨ ஒவ்வொரு பட்டணத்திலே பரிசைகளையும் ஈட்டிகளையும் வைத்து, அவைகளை மிகுதியும் பலப்படுத்தினான். அப்படியே யூதாவும் பென்யமீனும் அவனைச்சேர்ந்திருந்தது.

௰௩ இஸ்ரவேலெங்குமிருக்கிற ஆசாரியரும் லேவியருந் தங்கள் எல்லா எல்லைகளிலுமிருந்து அவனண்டைவந்து சேர்ந்தார்கள்.

௰௪ ஆதலால் லேவியர் தங்கள் பேட்டைகளையுந் தங்கள் காணியாட்சியையும் விட்டு யூதேசத்துக்கும் எருசலேமுக்கும் வந்தார்கள். ஏனென்றால் எரொபெயாமும் அவன் குமாரரும் அவர்களைக் கர்த்தருக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யாதபடிக்குத் தள்ளினார்கள்.

௰௫ அவன் மேடைகளுக்கென்றும் பேய்களுக்கென்றுந் தானுண்டாக்கின கன்றுக்குட்டிகளுக்கென்றுந் தனக்காசாரியர்களை வைத்தான்.

௰௬ அந்த லேவியரின் பிறகாலே இஸ்ரவேலின் கோத்திரங்களிலெல்லாம் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரைத்தேடுறதற்குத் தங்களிருதயத்தைத் தேற்றினவர்கள் தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்கு எருசலேமுக்கு வந்தார்கள்.

௰௭ இப்படி மூன்று வருஷமட்டும் யூதாவின் இராச்சியத்தைப் பலக்கப்பண்ணிச் சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமைத் திடப்படுத்தினார்கள். ஏனெனில் தாவீதுஞ் சாலொமோனும் நடந்த வழியிலே மூன்று வருஷமட்டும் நடந்தார்கள்.

௰௮ ரெகொபெயாம் தாவீதின் குமாரனாகிய எரிமோத்தின் குமாரத்தி மகலாத்தைக்கூட்ட ஈசாயின் குமாரனாகிய எலியாபினுக்குமாரத்தி அபிகாயிலையும் விவாகம்பண்ணினான்.

௰௯ இவள் அவனுக்கு எயூசுஞ் சேமரியாவுஞ்சாகாமுமென்ற குமாரரைப்பெற்றாள்.

௨௰ இவளுக்குப்பிறகு அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளை விவாகம்பண்ணினான். இவள் அவனுக்கு அபியாவையும் அத்தாயையுஞ் சீசாவையுஞ் செலோமித்தையும் பெற்றாள்.

௨௰௧ ரெகொபெயாம் தன்னுடைய எல்லா ஸ்திரிகளையும் வைப்பாட்டிகளையும் பார்க்க அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாளைச் சிநேகித்தான். அவன் பதினெட்டுப் பெண்சாதிகளையும் அறுபது வைப்பாட்டிகளையும் படைத்து இருபத்தெட்டுக் குமாரரையும் அறுபது குமாரத்திகளையும் பெற்றான்.

௨௨ ரெகொபெயாம் மாகாளின் குமாரனான அபியாவைத் தன் சகோதரருக்குள்ளே தலைவனும் பெரியவனுமாக வைத்தான். ஏனெனில் அவனை இராசாவாக்க நினைத்தான்.

௨௩ அவன் புத்தியாய் நடப்பித்துத் தன்னுடைய எல்லாக் குமாரரிலுஞ் சிலரை யூதாவின் பென்யமீனுடைய எல்லாத் தேசங்களிலுமுள்ள அரணான எல்லாப் பட்டணங்களிற் பிரித்து வைத்து, அவர்களுக்குத் திரளான ஆகாரத்தைக் கொடுத்து அவர்களுக்கு அநேகம் பெண்களை விசாரித்தான்.

௰௨. அதிகாரம்.

ரெகொபெயாமின் பாவமார்க்கமும் அவன் அடைந்த ஆக்கினையும்.

௧ சம்பவித்ததேதென்றால் ரெகொபெயாம் இராச்சியத்தைத் திடப்படுத்திப் பலத்துக்கொண்டபிறபாடோவெனில் அவனும் அவனோடே இஸ்ரவேலனைத்துமாய்க் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தை விட்டுவிட்டார்கள்.

௨ ஆகையால் அவர்கள் கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினபடியினாலே, இராசாவாகிய ரெகொபெயாமின் ஐந்தாம் வருஷத்தில் எகிப்தின் இராசாவாகிய சீஷாக் ஆயிரத்திருநூறு இரதங்களோடும் அறுபதினாயிரங் குதிரைக்காரரோடும் எருசலேமுக்கு விரோதமாயெழுந்தான்.

௩ அவனோடே கூட எகிப்திலிருந்து வந்த லூபியர், சூக்கியர் எத்தியோப்பியர்க் சனம் எண்ணிக்கைக்குக் கடங்காத்தாயிருந்தது.

௪ அவன் யூதாவுக்கடுத்த அரணான பட்டணங்களைப் பிடித்து, எருசலேம்மட்டும் வந்தான்.

௫ அப்பொழுது செமாயா தீர்க்கதரிசி ரெகொபெயாமண்டைக்கும் சீஷாக்கினிமித்தம் எருசலேமிலே வந்து கூடியிருக்கிற யூதாவின் பிரபுக்களண்டைக்கும் வந்து அவர்களுடனே, நீங்கள் நம்மைவிட்டீர்கள். ஆகையால் நாமும் உங்களைச் சீஷாக்கின் கையிலே விட்டுவிட்டோமென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

௬ அப்பொழுது இஸ்ரவேலின் பிரபுக்களும் இராசாவுந் தங்களைத் தாழ்த்திக் கர்த்தர் நீதியுள்ளவரென்றார்கள்.

௭ அவர்கள் தங்களைத் தாழ்த்தினதைக் கர்த்தர் கண்டபோது கர்த்தருடைய வார்த்தை செமாயாவுக்குண்டாகி, அவர் சொன்னதாவது, தங்களைத் தாழ்த்தினார்கள். அவர்களை அழிக்காதிருப்போம். நம்முடைய உக்கிரம் சீஷாக்கைக்கொண்டு எருசலேமின்மேல் ஊற்றப்படாதபடிக்கு அவர்களுக்குக் கொஞ்சந் தப்பிப்போகுதலைக் கட்டளையிடுவோம்.

௮ ஆனாலும் நம்மைச் சேவிக்கிறதற்கும் தேசங்களின் இராச்சியங்களைச் சேவிக்கிறதற்கும் இருக்கிற வித்தியாசத்தை அவர்கள் அறியும்படிக்கு அவனைச் சேவிக்கிறவர்களாவார்களென்றார்.

௯ அப்படியே எகிப்தின் இராசாவாகிய சீஷாக் எருசலேமின்மேல் வந்து கர்த்தருடைய வீட்டின் பொக்கிஷங்களையும் இராசாவுடைய வீட்டின் பொக்கிஷங்களையுஞ் சகலத்தையும் எடுத்துக்கொண்டு சாலொமோன் செய்வித்த பொற்கேடயங்களையும் எடுத்துக்கொண்டு போனான்.

௰ அவைகளுக்குப் பதிலாக இராசாவாகிய ரெகொபெயாம் வெண்கலக்கேடயங்களைச் செய்வித்து, அவைகளை இராசாவின் வாசற்படியைக் காக்கிற சேவகருடைய தலைவரின் கையிலே ஒப்புவித்தான்.

௰௧ இராசா கர்த்தருடைய வீட்டிற்குட்பிரவேசிக்கும்போதெல்லாம் அரண்மனைச் சேவகர் வந்து அவைகளை எடுத்துப் பிடித்துப் பிறபாடு திரும்பத் தங்கள் அறையிலே வைப்பார்கள்.

௰௨ அவன் தன்னைத் தாழ்த்தினபடியினாலே கர்த்தர் அவனை முழுதுங் கெடுக்காதபடிக்கு அவருடைய கோபம் அவனை விட்டுத் திரும்பிற்று. ஏனெனில் யூதாவில் இன்னுஞ்சில நற்கருமங்களிருந்தது.

௰௩ அப்படியே இராசாவாகிய ரெகொபெயாம் எருசலேமிலே தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அரசாண்டான். அதேதெனில் ரெகொபெயாம் இராசாவாகிறபோது நாற்பத்தொரு வயதாயிருந்து, கர்த்தர் தம்முடைய நாமத்தை வைக்க இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாந் தெரிந்துகொண்டபட்டணமாகிய எருசலேமிலே பதினேழு வருஷம் இராச்சியபாரம்பண்ணினான். அம்மோனசாதியான அவனுடைய தாயின்பேர் நாமாள்.

௰௪ அவன் பொல்லாப்பானதைச் செய்தான். ஏனெனில் அவன் தன்னிருதயத்தைக் கர்த்தரைத் தேடுகிறதற்கு நேராக்கினதில்லை.

௰௫ ரெகொபெயாமின் முன்பின் நடபடிகளும் ரெகொபெயாமுக்கும் எரொபெயாமுக்கும் சகலநாளுமாயிருந்த போர்களு

ஏசெயாயாவின் புஸ்தகத்திலும் ஞானதி ரிஷிகளாகிய இத்தோவின்மேல் சத்தப்பட்ட கிளைவிரியலலோ எழுதியிருக்கின்றது.

௰௩ யோவாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் தாவீதின் பட்டணத்தில் அடக்கம்பண்ணப்பட்டான். அவன் குமாரனாகிய அமசியா அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௰௫. அதிகாரம்.

அமசியா அரசாண்டு எதோமியரோடு யுத்தம்பண்ணினது.

இராசாவாகிய அமசியா தன் பதினைந்தாம் வயதில் அமசியா யூதாவின் மேல் இராசாவாகி,

உ மூன்று வருஷமாய் எருசலேமின் மேல் இராசரிகம்பண்ணினான். இவன் ஆண்டவரின் ஊரிமையின் குமாரத்தியாகிய ஏலுவைஎயதாயின் பேர் மிகாயாள். அமசியாவுக்கும் எதோமியாருக்கும் யுத்தமுண்டானபடியினாலே,

௩ அமசியா தெரிந்துகொள்ளப்பட்டதா னாமுன்னூறு போர்சேவகரின் இராணுவத்தைக் கூட்டியுத்தத்துக்காயத்தம்பண்ணினான். எதோமியார்போலெனில் தெரிந்துகொள்ளப்பட்ட எண்ணூறுபின் பேர்கிய பலத்தபராக்கிரமசாலிகளையுடைய எதிரிகட்டித்துத் தீர்ப்பித்தான்.

௪ அப்போது அமசியா எட்டிறுபயலே தரிசனக்காரனைச் சேமரியாவின் பர்வதத்தில் பேரெறிச்சுப்பிக்கொண்டுதாவது: எரேமியாவே! எலோ இஸ்ரவேலே! என்று சொன்னான்.

௫ நீ இஸ்ரவேலையெல்லாருக்கும் ஈருமை இராசாவாகிய யார்த்தானைத் தின்னாதே, விக்கிரகத்தைச் சேர்த்தவர்களைக் கர்த்தருக்கு விரோதமாய் உடைமைப்படுத்தக்கூடாதவர்களை யுக்கிட்டதைப் பட்டதை நீங்கள் அறியாதிருக்கிறதில்லையா?

௬ அதின் நிமித்தம் தாவீதின் குமாரனாகிய சாலோமோனின் ஊழியக்காரனும் எரொபெயாமின் தேவாலயத்தின் அம்மானை எழுப்பினாலே எசமானாகிய விரோதமாகக் கலகம்பண்ணினான்.

௭ பேலியாளின் பிள்ளைகளாகிய வீண மனுஷர் அவனோடே கூடிக்கொண்டு சாலோமோனின் குமாரனாகிய ரெகொபெயாமை அவனுக்கு விரோதமாய்க் கிளம்பப்பண்ணினார்கள்; ரெகொபெயாம் பாலியனாகவும் இளகின மனதுள்ளவனாகவும் இருந்ததினால் அவர்களுக்கு விரோதமாகப் பலத்துக் கொண்டுபோனான்.

அ இப்போது தாவீதுடைய குமாரரின் கையிலிருக்கிற கர்த்தருடைய இராச்சியத்திற்கெதிராக நீங்கள் பலங்கொள்ளலாமென்று நினைக்கிறீர்கள். நீங்கள் ஏராளமான ஜனமாயிருக்கிறீர்கள்; எரொபெயாம் உங்களுக்குத் தேவர்களாக உண்டாக்கின பொன்னான கன்றுக்குட்டிகள் உங்களிடத்திலிருக்கின்றது.

௯ நீங்கள் ஆரோனின் குமாரராகிய கர்த்தருடைய ஆசாரியர்களையும் லேவியரையுந் தள்ளிப்போட்டு, தேசத்தின் ஜனங்களைப்போல உங்களுக்கு ஆசாரியர்களை உண்டுபண்ணினதில்லையோ? ஒரு காளையோடும் ஏழு ஆட்டுக்கடாக்களோடும் தன்னைப் பிரதிஷ்டைபண்ண வருகிற எவனும் தெய்வங்களல்லாதவைகளுக்கு ஆசாரியனாகிறானே.

௰ எங்களுக்கோவென்றால் கர்த்தரே தேவனாயிருக்கிறார்; நாங்கள் அவரை விட்டுவிலகவில்லை. கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிற ஆசாரியர்கள் ஆரோனின் குமாரரும், தங்கள் வேலையிலிருக்கிறவர்கள் லேவியருமாமே.

௰௧ அவர்கள் காலையிலும் மாலையிலும் தினந்தோறும் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலிகளையும் சுகந்த தூபவர்க்கங்களையும் கொளுத்தி, சுத்தமான மேசையின்மேல் அப்பங்களை அடுக்கிவைக்கிறதையும், பொன்னான குத்துவிளக்கையும் அதின் விளக்குகளைச் சாயங்காலந்தோறும் ஏற்றுகிறதையும் விசாரிக்கிறார்கள். நாங்கள் எங்கள் தேவனாகிய கர்த்தரின் காவலைக் காக்கிறோம்; நீங்களோ அவரை விட்டுவிலகினீர்கள்.

௰௨ இதோ, தேவன் எங்களோடே கூடத் தலைவராயிருக்கிறார்; உங்களுக்கு விரோதமாய் ஆர்ப்பரிக்கும்படிக்கு தொனிக்கும் பூரிகைகளைப் பிடித்திருக்கிற அவருடைய ஆசாரியர்களும் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரே! உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணாதேயுங்கள்; அதினால் உங்களுக்கு வாய்க்கக்கூடாதென்றான்.

௰௩ ஆனால் எரொபெயாம், அவர்களுக்குப் பின்னாக வந்து தாக்க ஒரு பதிவிடையைச் சுற்றிப்போகப் பண்ணினான்; அப்படியே யூதாவுக்கு முன்னும் பதிவிடையவர்களுக்குப் பின்னுமாயிருந்தது.

௰௪ யூதா திரும்பிப் பார்க்கிறபோது, இதோ, முன்னும்பின்னுந் தங்களுக்கு யுத்தமுண்டென்றுகண்டு, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள். ஆசாரியர்களோ வென்றாற் பூரிகைகளைத் தொனிக்கப்பண்ணினார்கள்.

௰௫ யூதாமனுஷரோவென்றால் ஆர்ப்பரித்தார்கள். யூதாமனுஷர் ஆர்ப்பரிக்கிறபோது சம்பவித்ததேதென்றாற் பராபரனே எரொபெயாமையும் இஸ்ரவேலனைத்தையும் அபியாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறியடித்தார்.

௰௬ இஸ்ரவேல்புத்திரர் யூதாவுக்கு முன்பாக முறிந்தோடினார்கள் பராபரன் அவர்களை யவர்கள்கையி லொப்புக்கொடுத்தார்.

௰௭ அபியாவும் அவனுடையசனமும் அவர்களில் மகா சங்காரமுண்டாக்கினார்கள். தெரிந்துகொள்ளப்பட்ட ஐந்நூறாயிரம்பேர் இஸ்ரவேலிலே வெட்டுண்டுவிழுந்தார்கள்.

௰௮ அப்படியே இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே தாழ்த்தப்பட்டார்கள் யூதாபுத்திரரோவென்றால் தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரைச்சார்ந்து கொண்டிருந்து பலத்துப்போனார்கள்.

௰௯ அபியா எரொபெயாமைப் பின்தொடர்ந்து, அவனுக்குண்டான பட்டணங்களாகிய பெத்தேலையும் அதின் கிராமங்களையும், எஷானாவையும் அதின் கிராமங்களையும், எப்பிரோனையும், அதின் கிராமங்களையும் பிடித்தான்.

௨௰ அப்புறம் அபியாவின் நாட்களில் எரொபெயாம் பலனடையமாட்டாதே போய்க்கர்த்தர் அவனையடித்ததினாலே மரணமடைந்தான்.

௨௰௧ அப்படியே அபியா பலத்துக்கொண்டான். அவன் பதினாலு பெண்சாதிகளை விவாகம்பண்ணி, இருபத்திரண்டு குமாரரையும் பதினாறு குமாரத்திகளையும் பெற்றான்.

௨௰௨ அபியாவின் மற்ற நடபடிகளும், அவன்வழிகளும் அவன் வர்த்தமானங்களுந் தீர்க்கதரிசியாகிய இத்தோவின் சரித்திரத்திலெழுதியிருக்கின்றது.

௰௪. அதிகாரம்.

ஆசாவின் நல்ல இராசரியபாரமுஞ் செயமும்.

அபியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவனைத் தாவீதின் பட்டணத்திலடக்கம்பண்ணினார்கள். அவன் ஸ்தலத்திலே அவன் குமாரனாகிய ஆசா இராசாவானான். இவனுடைய நாட்களிலே தேசம் பத்துவருஷமட்டும் அமரிக்கையாயிருந்தது.

௨ ஆசா தன் பராபரனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்றுஞ்செம்மையுமானதைச் செய்தான்.

௩ அந்நிய தேவர்களின் பீடங்களையும் மேடைகளையும் அகற்றிச் சிலைகளையுடைத்துத் தோப்புகளை வெட்டி,

௪ தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரைத் தேடவும், நியாயப்பிரமாணத்தின்படியுங் கற்பனையின்படியுஞ் செய்யவும் யூதாவுக்குக் கற்பித்து,

௫ மேடைகளையுஞ் சிலைகளையும், யூதாவுடைய எல்லாப் பட்டணங்களிலுமிருந்து அகற்றினான். அவனுக்குமுன்பாக இராசியம் அமரிக்கையாயிருந்தது.

௬ அந்த வருஷங்களில் அவனுக்கு விரோதமான யுத்தமில்லாமல், தேசம் அமரிக்கையானபடியினாலே யூதாவிலே அரணான பட்டணங்களைக் கட்டினான். ஏனெனிற் கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டார்.

௭ அவன் யூதாவுடனே, தேசம் நமக்குமுன்பாக இன்னம் இப்படியிருக்கக்கொள்ள நாமிந்தப் பட்டணங்களைக்கட்டி, அலங்கங்கள், கோபுரங்கள், வாசல்கள், தாப்பாள்களாலும், அவைகளையடைப்போமாக. ஏனெனில் நம்முடைய பராபரனாகிய கர்த்தரைத்தேடினோம். தேடினபோது சுற்றிலும் நமக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிட்டாரென்றான். அப்படியே கட்டினார்கள். அவர்களுக்குக் கைகூடிவந்தது.

௮ யூதாவிலே பரிசையையும் ஈட்டியையும் பிடிக்கிற மூந்நூறாயிரம்பேரும், பென்யமீனிலே கேடயம்பிடித்து வில்லை நாணேற்றுகிற இருநூற்றெண்பதினாயிரம்பேருமான இராணுவங்கள் ஆசாவுக்கிருந்தது. இவர்களெல்லாரும் பராக்கிரம சேவகரானவர்கள்.

௯ அவர்களுக்கு விரோதமாக எத்தியோப்பியனாகிய சேரா ஆயிரந்தரமாயிரம்பேர்களின் இராணுவத்தோடும் மூந்நூறு இரதங்களோடும் புறப்பட்டு, மரேசாமட்டும் வந்தான்.

௰ அப்போது ஆசா, அவனுக்கெதிராகப் புறப்பட்டான். மரேசாவுக்கடுத்த செப்பத்தாவென்ற பள்ளத்தாக்கிலே யுத்தத்திற்காயத்தம்பண்ணினார்கள்.

௰௧ ஆசா தன்பராபரனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டுக் கர்த்தாவே! பலத்தவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் ஒத்தாசைபண்ணுகிறது உமக்கு அற்பகாரியமாயிருக்கின்றது எங்கள் பராபரனாகிய கர்த்தாவே! எங்களுக்கொத்தாசைபண்ணும். ஏனெனில் உம்மைச்சார்ந்திருந்துகொண்டு, உம்முடைய நாமத்தினிமித்தம் இந்த ஏராளத்திற்கெதிராக வந்தோம். கர்த்தாவே! தேவரீர் எங்கள் பராபரன். மனுஷன் உம்மைமேற்கொள்ளாதிருக்கவென்றான்.

௰௨ அப்போது கர்த்தர் அந்த எத்தியோப்பியரை ஆசாவுக்கும் யூதாவுக்கும் முன்பாக முறியடிக்கிறதினால எத்தியோப்பியர் ஓடிப்போனார்கள்.

௰௩ அவர்களை ஆசாவும் அவனோடிருக்கிற சனமுங் கேரார்மட்டுந் துரத்தினார்கள். எத்தியோப்பியரில் ஒருபலனு மிராதபடிக்கு விழுந்தார்கள். ஏனென்றாற்கர்த்தருக்கு முன்பாகவும் அவருடைய இராணுவத்திற்கு முன்பாக நொறுங்கிப்போனார்கள். கொள்ளையை மிகவுந்திரட்சியாயெடுத்து,

௰௪ கேராரின் சுற்றுப்பட்டணங்களையெல்லாம் இடறடித்தார்கள். ஏனெனிற் கர்த்தரால் அவர்கள்மேலே பயங்கரமுண்டாயிற்று. அந்தப்பட்டணங்களையெல்லாங் கொள்ளையிட்டார்கள். ஏனெனில் அவைகளிற்கொள்ளை திரளாயிருந்தது.

௰௫ மிருகசீவன்கள் இருந்த கொட்டாரங்களையும் அவர்கள் இடறடித்துத்திரள் ஆடுகளையும் ஒட்டகங்களையுஞ்சாய்த்துக் கொண்டெருசலேமுக்குத் திரும்பினார்கள்.

௰௫. அதிகாரம்.

சத்தியமார்க்கத்திற் கோத்தை ஆசா அகற்றினது.

அப்போது பராபரனுடைய ஆவி ஓதேதின் குமாரனாகிய அசரியாவின்மேலிறங்கினதினால,

௨ அவன் வெளியே ஆசாவுக்கெதிர்கொண்டுபோய, அவனுக்குச் சொன்னதாவது, ஆசாவே! யூதாபென்யமீன் கோத்திரங்களின் சகலமனுஷரே! என்னைக்கேளுங்கள். நீங்கள் கர்த்தரோடிருக்கையால அவருங்களோடிருக்கிறார். நீங்கள் அவரைத்தேடினால உங்களுக்குத்தென்படுவார். அவரைவிட்டீர்களேயாகில உங்களைவிடுவார்.

௩ இஸ்ரவேலிலே மெய்யானதேவனும் உபதேசிக்கிற ஆசாரியனும் வேதமுமில்லாத அநேகநாளிருக்கும்.

௪ தங்கள் நெருக்கத்திலே இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரண்டைக்குத்திரும்பி அவரைத்தேடினார்களேயானால, அவர் இவர்களுக்குத்தென்படுவார்.

௫ அக்காலங்களிலே புறப்படுகிறவர்களுக்கும் உட்பிரவேசிக்கிறவர்களுக்குஞ் சமாதானமில்லாதிருக்கும். ஏனெனில்தேசங்களின் குடிகளெல்லாரின்மேலும் மகா அமளிகளுண்டாயிருந்தது.

௬ சாதியைச் சாதியும் பட்டணத்தைப் பட்டணமும் நொறுக்கும். ஏனென்றாற் பராபரன் அவர்களைச் சகலவித இடுக்கத்தினாலே கலங்கப்பண்ணுவார்

௭ நீங்களோவென்றால் உங்கள் கைகளைத் தளரவொட்டாமல திடன்கொள்ளுங்கள். ஏனெனில உங்கள் கிரியைகளுக்குப்பலனுண்டென்றான்.

௮ ஆசா இந்த வார்த்தைகளையுந் தீர்க்கதரிசியாகிய ஓதேதின் தீர்க்கதரிசனத்தையுங்கேட்டபோது, அவன் திடன்கொண்டு, அருவருப்புகளை யூதா பென்யமீன் தேசமனைத்திலும் எப்பிராயீமின் மலைத்தேசத்தில தான்பிடித்தபட்டணங்களிலுமிருந்து அகற்றி கர்த்தருடைய மண்டபத்தின்முன்னிருக்கிற கர்த்தருடையபலிபீடத்தைப் புதிதாக்கி,

௯ அவன் யூதாபென்யமீன் அனைத்தையும், அவர்களோடேகூட எப்பிராயீமிலும் மனாசேயிலுஞ் சிமெயோனிலுமிருந்து வந்த பரதேசிகளையுங் கூட்டினான். ஏனெனில இஸ்ரவேலிலே திரள் சனங்கள் அவனுடைய பராபரனாகிய கர்த்தர் அவனோடிருக்கிறதைக்கண்டு, அவன் வசத்திலே சேர்ந்தார்கள்.

௰ ஆசா அரசாண்ட பதினைந்தாம் வருஷம் மூன்றாமாதத்திலே அவர்கள் எருசலேமிலே கூடி,

௰௧ தாங்கள் கொள்ளையிட்டு ஓட்டிவந்ததில அந்நாளிலே எழுநூறு மாடுகளையும் ஏழாயிரம் ஆடுகளையுங் கர்த்தருக்குப் பலியிட்டு,

௰௨ தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரைத் தங்கள் முழு இருதயத்தாலுந் தங்கள் முழு ஆத்துமத்தாலுந் தாங்கள் தேடுவோமென்றும்,

௰௩ சிறியவன் துவக்கிப் பெரியவன்மட்டாகவும் புருஷன் துவக்கி ஸ்திரீமட்டாகவும் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரைத்தேடாதவனெல்லாங் கொலையுண்கப்படவேண்டுமென்றும் ஒரு உடம்படிக்கைக்குள்ளாகி,

௰௪ கர்த்தருக்கு மகாசத்தத்தோடுங் கெம்பீரத்தோடும், பூரிகைகளோடும் எக்காளங்களோடும் ஆணையிட்டார்கள்.

௰௫ இந்த ஆணைக்காக யூதாவனைத்துஞ் சந்தோஷப்பட்டது. ஏனெனில் தங்கள் முழு இருதயத்தாலும் ஆணையிட்டுத் தங்கள் முழுமனதினாலும் அவரைத் தேடினார்கள் ஏனெனிற் கர்த்தர் அவர்களுக்குத் தென்பட்டுச் சுற்றுப்புறத்தாரால் போரில்லாதபடிக்கு அவர்களை இளைப்பாறப்பண்ணினார்.

௰௬ தோப்பிலே அருவருப்பான விக்கிரகத்தை உண்டுபண்ணின இராசாவாகிய ஆசாவின் தாயான மாகாளையும் இராசாத்தியாயிராதபடிக்கு ஆசா விலக்கிப்போட்டு, அவளுடைய அந்த விக்கிரகத்தையும் நிர்ம்மூலமாக்கித் தகர்த்துக் கேதரோன் ஆற்றிலே சுட்டெரித்துப்போட்டான்.

௰௭ மேடைகளோவெனில் இஸ்ரவேலிலிருந்து தள்ளிப்போடப்பட்டதில்லை. என்றாலும், ஆசாவின் இருதயம் அவன் நாட்களெல்லாம் உத்தமமாயிருந்தது.

௰௮ தன் தகப்பனுந் தானும் பரிசுத்தம்பண்ணினதாகிய வெள்ளியையும் பொன்னையுந் தட்டுமுட்டுகளையும் அவன் பராபரனுடைய வீட்டிலே கொண்டுவந்து வைத்தான்.

௰௯ ஆசா அரசாண்ட இராச்சியத்தின் முப்பத்தைந்தாம் வருஷமட்டுக்கும் யுத்தமில்லாதிருந்தது.

௰௬. அதிகாரம்.

ஆசா நல்வழியை விலகினது.

௧ ஆசா அரசாண்ட முப்பத்தாறாம் வருஷத்திலே இஸ்ரவேலின் இராசாவாகிய பாஷா யூதாவுக்கு விரோதமாய் ஏறிவந்து, ஒருவரும் யூதாவின் இராசாவாகிய ஆசாவண்டையிலே போக்குவரத்துமாயிராதபடிக்கு, இராமாவைக் கட்டினான்.

௨ அப்போது ஆசா கர்த்தருடைய வீட்டிலும் இராசாவின் வீட்டிலுமுள்ள பொக்கிஷங்களில் வெள்ளியும் பொன்னும் எடுத்துத் தமஸ்குவில் வாசம்பண்ணுகிற பெனாதாதென்ற சூரியாவின் இராசாவண்டைக்கு அனுப்பி,

௩ எனக்கும் உமக்கும் என் தகப்பனுக்கும் உம்முடைய தகப்பனுக்கும் உடம்படிக்கையுண்டே? இதோ, வெள்ளியும் பொன்னும் உமக்கனுப்பினேன். இஸ்ரவேலின் இராசாவாகிய பாஷா என்னைவிட்டப்பாலே போகும்படிக்கு நீர் வந்து, அவனோடிருக்கும் உம்முடைய உடம்படிக்கையை விட்டுவிடுமென்று சொல்லியனுப்பினான்.

௪ பெனாதாத் இராசாவாகிய ஆசாவுக்குச் செவிகொடுத்துத் தனக்குண்டான இராணுவங்களின் தலைவரை இஸ்ரவேலின் பட்டணங்களுக்கு விரோதமாக அனுப்பினான். இவர்கள் ஈயோனையுந் தாணையும் ஆபேல்மாயிமையும், நவுதலிப் பட்டணங்களின் எல்லாப் பண்டகசாலைகளையும் இடித்தார்கள்.

௫ இதைப் பாஷா கேட்டபோது, இராமாவைக் கட்டுகிறதை நிறுத்தித் தன் வேலையைவிட்டேபோய்விட்டான்.

௬ அப்போது இராசாவாகிய ஆசா யூதாவனைத்தையுங் கூட்டிக்கொண்டான். இவர்கள் போய்ப் பாஷா கட்டின இராமாவின் கல்லுகளையும் அதின் மரங்களையும் எடுத்துவந்தார்கள். அவைகளால் அவன் கேபாவையும் மிஸ்பாவையுங் கட்டினான்.

௭ அக்காலத்திலே ஞானதிஷ்டிப்புருஷனாகிய அனானி யூதாவின் இராசாவாகிய ஆசாவண்டைக்கு வந்து, அவனுடனே சொன்னதாவது, நீர் உம்முடைய பராபரனாகிய கர்த்தரைச் சார்ந்துகொள்ளாமற் சூரியாவின் இராசாவைச் சார்ந்துகொண்டபடியினாலே, சூரியாவுடைய இராசாவின் இராணுவமுந் தொகைக்குத் தப்பிப்போயிற்று.

௮ மிகவும் ஏராளமான இரதங்களுங் குதிரைக்காரருமுள்ள எத்தியோப்பியரும் லூவியரும் பெரிய இராணுவமாயிருந்ததில்லையோ? நீர் கர்த்தரைச் சார்ந்துகொண்டபோதோவெனில், அவர்களையுமதுகையிலொப்புக்கொடுத்தாரே?

௯ ஏனெனில் தம்மை நோக்கி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய பலனை விளங்கப்பண்ணும்படிக்குக் கர்த்தருடைய கண்கள் பூமியெங்குஞ் சுற்றிப்பார்த்துக்கொண்டிருக்கின்றது. இதிலே மதியில்லாதவராயிருந்தீர். ஆகையால் இதுமுதற்கொண்டு உமக்கு யுத்தங்களிருக்குமென்றான்.

௰ ஆனால் ஆசா ஞானதிஷ்டிப்புருஷன் மேல் மனமடிவாகி அதினிமித்தம் அவன் பேரிலே சினமானபடியினாலே, அவனைக் காவலறையிலேபோட்டான். இதல்லாமல் அக்காலத்திற் சனத்திற் சிலரையுங் கொடூரமாய் நடப்பித்தான்.

௰௧ ஆசாவின் முன்பின் நடபடிகளோவென்றால், இதோ, அவைகள் யூதா இஸ

ர்வேல் இராசாக்களின் புஸ்தகத்திலெழுதியிருக்கின்றது.

௰௨ ஆசா அரசாண்ட இராச்சியத்தின் முப்பத்தொன்பதாம் வருஷத்திலே தன் கால்களில் நோய் கொண்டான். ஆனால் அவன் வியாதி வெகு மும்முரமாயிருந்தாலுந் தன்னுடைய வியாதியிலும் அவன் கர்த்தரையல்ல பரியாரிகளைத் தேடினான்.

௰௩ ஆசா தன் பிதாக்களோடே நித்திரையடைந்து தன்னுடைய இராச்சியத்தின் நாற்பத்தோராம் வருஷத்திலே மரித்தான்.

௰௪ தயிலக்காரருடைய வேலையாய்க் கந்தவர்க்கங்களினாலும் பரிமளங்களினாலும் நிரப்பிவைக்கப்பட்ட மெத்தையின்மேல் அவனை வளர்த்தி அவனுக்காக வெகு நாளான கந்தவர்க்கங்களைக் கொளுத்தினபிற்பாடு அவன் தாவீதின் பட்டணத்திலே தனக்கு வெட்டிவைத்திருந்த அவனுடைய கல்லறையிலே அவனை யடக்கம் பண்ணினார்கள்.

௰௭. அதிகாரம்.

யோசபாத்துடைய நல்ல இராச்சியபாரம்.

அவன் ஸ்தலத்திலே அவன் குமாரனாகிய யோசபாத் இராசாவாகி இஸ்ரவேலுக்கெதிரே பலத்துக்கொண்டான்.

௨ அவன் யூதாவின் அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத்தை வைத்து, யூததேசத்திலுந் தன் தகப்பனாகிய ஆசா பிடித்த எப்பிராயீமின் பட்டணங்களிலுந் தாணயங்களை வைத்தான்.

௩ கர்த்தர் யோசபாத்தோடிருந்தார். ஏனெனில் அவன் தகப்பனாகிய தாவீதின் முன்னாட்களில் நடந்த வழிகளில் அவன் நடந்து பாகால்களைத் தேடாமல்,

௪ தன் தகப்பனுடைய பராபரனைத் தேடி இஸ்ரவேலுடைய செய்கையின்படியல்ல, அவருடைய கற்பனைகளிலே நடந்துகொண்டான்.

௫ ஆகையாற் கர்த்தர் அவன் கையில் இராச்சியபாரத்தைத் திடப்படுத்தினார். யூதாவிலிருந்தாரெல்லாரும் யோசபாத்துக்குக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவனுக்கு ஐசுவரியமுங் கனமு மிகுதியு முண்டாயிற்று.

௬ கர்த்தருடைய வழிகளில் அவன் இருதயம் வெகுதிடனானபோது அப்புறம் அவன் மேடைகளையுந் தோப்புகளையும் யூதாவைவிட்டகற்றினான்.

௭ அவன் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே யூதாவின் பட்டணங்களில் உபதேசம் பண்ணும்படிக்கு அவன் தன் பிரபுக்களாகிய பெனாயிலையும் ஒபதியாவையுஞ் சகரியாவையும் நாத்தானேவேலையும் மிகேயாவையும்,

௮ இவர்களோடேகூட செமாயா, நெத்தனியா, செபதியா, ஆசகேல், செமிராமோத், யோனத்தான், அதோனியா, தோபியா, தோபபதோனியா என்ற லேவியரையும் இவர்களோடேகூட ஆசாரியரான எலிஷாமாவையும் யோராமையும் அனுப்பினான்.

௯ இவர்கள் யூதாவிலே உபதேசம் பண்ணிக் கர்த்தருடைய வேதபுஸ்தகத்தை வைத்திருந்து யூதாவின் பட்டணங்களிலெல்லாந் திரிந்து சனத்தை யுபதேசித்தார்கள்.

௰ யூதாவைச் சுற்றியிருக்கிற தேசங்களுடைய இராச்சியங்களின்மேலெல்லாங் கர்த்தரின் பயங்கரமுண்டானதினாலே யோசபாத்தோடு யுத்தம்பண்ணாதிருந்தார்கள்.

௰௧ பெலிஸ்தரிலுஞ் சிலர் யோசபாத்துக்குப் பகுதியின் திரவியத்தோடேகூடக் காணிக்கைகளைக் கொண்டுவந்தார்கள். அரபியரும் அவனுக்கு ஏழாயிரத்தெழுநூறு ஆட்டுக்கிடாய்களையும் ஏழாயிரத்தெழுநூறு வெள்ளாட்டுக்கிடாய்களையுங் கொண்டுவந்தார்கள்.

௰௨ இப்படியே யோசபாத் வர்த்தித்தும் பெரியவனாகி யூதாவிலே கோட்டைகளையும் ரஸ்துக்களையும் வைக்கும் பட்டணங்களையுங் கட்டினான்.

௰௩ யூதாவின் பட்டணங்களில் அவனுக்குப் பெரிய வேலை நடந்தது. எருசலேமிலோவென்றால் பராக்கிரம சாலிகளான சேவகர் அவனுக்கிருந்தார்கள்.

௰௪ தங்கள் பிதாக்களுடைய வம்சங்களின்படி இவர்களுடைய இலக்கமாவது, யூதாவிலே ஆயிரத்துச் சேர்வைக்காரரானவர்களானால், அத்னாவென்ற சேர்வைக்காரன் இவனிடத்திலே பராக்கிரமசாலிகள் முந்நூறாயிரம் பேரிருந்தார்கள்.

௰௫ இவனோடேகூட யோகனானென்ற சேர்வைக்காரன். இவனிடத்தில் இருநூற்றெண்பதினாயிரம் பேரிருந்தார்கள்.

௰௬ இவனோடேகூடக் கர்த்தருக்குச் சுயமனசுள்ளவனான சிக்கிரியின் குமாரனாகிய அமசியாவென்கிறவனுமிருந்தான். இவனிடத்திலே பராக்கிரமசாலிகள் இருநூறாயிரம் பேரிருந்தார்கள்.

௰எ பென்யமீனிலோவென்றால எலியா
தவென்கிற பராக்கிரமசாலி யிருந்தான.
இவனிடத்திலே வில்லுங் கேடயமும் பி
டிக்கிறவர்கள இருநூறாயிரம்பேரிருந்தா
ர்கள.

௰அ இவனோடேகூட யோசபாதுமிரு
ந்தான. இவனிடத்திலே சேவகத்துக்கா
யத்தமானவர்கள நூற்றெண்பதினாயிரம
பேரிருந்தார்கள.

௰௯ இராசா யூதாவெங்குமுள்ள அர
ணிப்பட்டணங்களிலும வைத்தவர்களைத
தவிர இவர்கள இராசாவைச்சேவித்துவர்
களதானே.

௰அ. அதிகாரம்.

யோசபாத் ஆகாபோடேகூடச் சீரியர்
மேல் யுத்தம்பண்ணப்போய நாசமோ
சத்திற்குத்தப்பினது.

யோசபாத்துக்கு ஐசுவரியமுங் கனமும
மிகுதியுண்டாயிருந்தது. ஆனால அவ
ன ஆகாபோடே சம்பந்தங்கலந்து,

௨ சிலவருஷங்கள சென்றபிற்பாடு, ச
மாரியாவிலிருக்கிற ஆகாபண்டைக்கிறங்
கிப்போனான. அப்போது ஆகாப் அவனு
க்கும அவனோடிருக்கிற சனத்திற்குமாக
அநேகம் ஆடுமாடுகளையடிப்பித்துக்கிலே
யாத்திலுள்ள ராமோத்திற்கேறிவர அவனை
ப்பிறவித்தான.

௩ எப்படியெனில இஸ்ரவேலின இரா
சாவாகிய ஆகாப் யூதாவின இராசாவாகி
ய யோசபாத்தைக் கீலேயாத்திலுள்ள ராமோ
த்துக்கு என்னோடே வருவீரோ? என்று
கேட்டதற்கவன உம்மைப்போலே நானு
மிருப்பேன. உம்முடைய சனத்தைப்போ
லென்னுடைய சனமுமிருக்கும. உம்மோ
டேகூட யுத்தத்திற்கு வருவேனென்றான

௪ ஆனாற் பின்னையும் யோசபாத் இஸ
்ரவேலின இராசாவுடனே கர்த்தருடைய
உத்தாரவை இன்றைக்குக்கேட்டுவிசாரியு
மென்றான?

௫ அப்போது இஸ்ரவேலின இராசா
நானூறுபேராகிய தீர்க்கதரிசிகளைக்கூட
டிச்சேர்த்து நாங்கள கீலேயாத்திலுள்ள ராமோத்தி
ன்மேல யுத்தம்பண்ணப் போகலாமோ,
போகாதிருப்பேனோவென்று அவர்களைக
கேட்டான. அதற்கவர்கள, போயேறும.
பராபரன அதை இராசாவின்கையிலொ
ப்புக்கொடுப்பாரென்றார்கள.

௬ ஆனால யோசபாத் இன்னுங்கர்த்த
ருடைய தீர்க்கதரிசி ஆராகிலும நாம்வி
ளிடத்திற கேட்டுவிசாரிக்க, இங்கேயில
லையோ என்றுகேட்டான.

௭ அப்போது இஸ்ரவேலின இராசா
யோசபாத்துடனே, கர்த்தரைக்கேட்கிற
தற்கு இம்லாவின குமாரனாகிய மிகாயா
வென்ற இன்னமொருவனிருக்கிறான. ஆ
னாலநான அவனைப்பகைக்கிறேன. ஏனெ
னில அவனென்பேரில நன்மையாக வல்ல,
தன நாட்களெல்லாந் தீமையாகத்தா
னே தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவனென
றான. அதற்கு யோசபாத், இராசா அப்ப
டிச்சொல்லலாகாதென்றான.

௮ அப்போது இஸ்ரவேலின இராசா
பிரதானிகளிலொருவனைக்கூப்பிட்டு, இம்லாவி
ன குமாரனாகிய மிகாயாவைச் சீக்கிரமா
யழைத்துவாவென்றான.

௯ இஸ்ரவேலின இராசாவும யோச
பாத்தென்ற யூதாவின இராசாவும்மாவென
று சமாரியாவின ஒலிமுக வாசலுக்குமு
னனான விசாலத்திலே அவரவர்தங்களுஸ
திரங்களைத் தரித்துக்கொண்டவர்களாய
தந்தங்கள ஆசனத்தில உளுக்கார்ந்திருந
தார்கள. சகல தீர்க்கதரிசிகளும அவர்க
ளுக்குமுன்பாகத் தீர்க்கதரிசனஞ்சொல
விக்கொண்டிருந்தார்கள.

௰ கெனானாவின குமாரனாகிய சிதேக்கி
யாதத்தனக்கு இருப்புக்கொம்புகளையுண்டா
க்கி இவைகளால நீர் சீரியரை, அவர்களை
நிர்மூலமாக்குமட்டும முட்டிப்போடுவீ
ரென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான.

௰௧ சகல தீர்க்கதரிசிகளும அதற்கிசை
வாய்த்தீர்க்கதரிசனஞ்சொல்லிக்கிலேயா
த்திலுள்ள ராமோத்திற்குப் போயேறும.
உமக்கு வாய்க்கும. கர்த்தர் அதை யிரா
சாவின கையிலொப்புக்கொடுப்பாரென
றார்கள.

௰௨ மிகாயாவையழைக்கப்போன ஆள்
அவனுடனே இதோ, தீர்க்கதரிசிகளின்
வார்த்தைகள ஏகவாக்காய இராசாவின
பேரில நன்மையாகவிருக்கின்றது. உம்மு
டைய வார்த்தையும அவர்களிலொருவர்
வார்த்தையைப்போல இருக்கும்படிக்கு
நன்மையாய்ப்பேசுமென? என்றான.

௰௩ மிகாயாவோவெனில, என்னுடை
யபராபரன சொல்வதையே பேசுவேனென
று கர்த்தருடைய சீவனைக்கொண்டு சொ
ல்லுகிறேனென்றான.

௰௪ அவன இராசாவண்டைக்கு வந்த
போது இராசா அவனுடனே, மிகாயா
வே! நாங்கள கீலேயாத்திலுள்ள ராமோத
தின்மேல்யுத்தம்பண்ணப்போகலாமோ?
போகாதிருப்பேனோ? என்றான. அதற்கு

இவன, போயேறுஙகள. உஙகளுககு வாயககும. உஙகள கையிலொபபுககொடுககபபடுவார்களெனறான.

௰௫ இராசா அவனுடனே நீகர்ததருடைய நாமததிலே நிசததைமாததிரமெனனோடே சொலலதான எததனைதரம உனனை யாணையிடடுககொளளவேணடுமெனறான.

௰௬ அபபோது அவன, இஸாவேலெலலாம மேயபபனிலலாத ஆடுகளைபபோல பபர்வதஙகளிற சிதறபபடடதைககணடேன. அபபோதுகர்ததர் இவர்களுககு ஆணடவனிலலை. அவனவன தனதன வீடடிற்குச்சமாதானததோடே திருமபககடவர்களெனறு உரைததாரெனறான.

௰௭ அபபோது இஸரவேலின இராசா யோசபாததுடனே, இவன எனபேரிலே நிமையாயலலாமல நனமையாயத்தீர்ககதரிசனஞ்சொலலுகிறவனலல எனறு நான உமமோடே சொலலவிலலையோ? எனறான.

௰௮ அபபுறம அவனசொனனதாவது, இபபோதுங கர்ததருடைய வார்ததையைககேளுஙகள. கர்ததர் தமமுடைய ஆசனததினமேலுடகார்நதிருககிறதையும பரமண்டலததினசேனையெலலாம அவர் வலதுபககததிலும அவர் இடதுபககததிலும நிற்கிறதையுஙகணடேன.

௰௯ அபபோதுகர்ததர் இஸரவேலின இராசாவாகிய ஆகாப் போயேறிககிலேயாதிலுளள ராமோததிலே விழுமபடிககு அவனைபபயிறறுவிபபவனார்? எனறுகேடடதற்கு ஒருவர் இபபடியும ஒருவர் அபபடியுமாகச்சொனனார்கள.

௨௰ ஆனால ஒரு ஆவிபுறபபடடுவநது கர்ததருககுமுனபாக நினறு, நான அவனைபபயிறறுவிபபேனெனறது. எதினால? எனறு கர்ததர் அதைககேடடார்.

௨௧ அபபோது அது நான புறபபடடுபபோய அவனுடைய எலலாத தீர்ககதரிசிகளினவாயிலும பொயயின ஆவியாயிருபபேன எனறது. அபபோது அவர் நீ அவனைப பயிறறுவிதது அபபடியாகவும பணணுவாய. போய அபபடிச்செயயெனறார்.

௨௨ இபபோதும இதோ, கர்ததர் பொயயின ஆவியை யிநத உமமுடைய தீர்ககதரிசிகளின வாயிலே கடடளையிடடார். கர்ததர் உமபேரிலே தீமையாகப பேசினாரெனறான.

௨௩ அபபோது கெனானாவின குமாரனாகிய சிதேககியாசேர்நதுவநது, மிகாயாவைக்கனனததிலடிதது, உனனோடே பேசககர்ததருடைய ஆவி யெநத வழியாய என்னை விடடுத தாணடிப போயிறறு? எனறான.

௨௪ அதறகு மிகாயா இதோ, நீயொளிததுககொளள அறைவீடு அறைவீடாய்பபதுஙகும அநநாளிலே அதைப பார்பபாயெனறான.

௨௫ அபபோது இஸரவேலின இராசா சொனனதாவது, நீஙகள மிகாயாவைப பிடிதது அவனைபபடடணத்துத்தலைவனாகிய ஆமோனணடைககும இராசாகுமாரனாகிய யோவாசணடைககுந திருமபக்கொணடுபோய,

௨௬ நீஙகள இவனைச்சிறைச்சாலையிலே வைதது நான சமாதானததோடேதிருமபிவருமடடும அவனுககு ஒடுககததினபபததையும ஒடுககததின தணணீரையுஞ்சாபபிடக்கொடுஙகளெனகிறதை இராசா சொனனானெனறு சொலலுஙகளெனறான.

௨௭ அபபோது மிகாயா நீர் சமாதானததோடே திருமபிவநதிருமபினால் கர்ததர் எனனைககொணடு பேசினதிலலை யெனறுசொலலிச் சனஙகளுமபுகளாகிய நீஙகளெலலாரும இதைககேளுஙகளெனறான.

௨௮ அபபடியே இஸரவேலின இராசாவும யோசபாதெனற யூதாவின இராசாவுங கிலேயாதிலுளள ராமோததுககே போனார்கள.

௨௯ ஆனால இஸரவேலின இராசா யோசபாததுடனே, நான வேஷமாறி, யுததததிலே வருவேன. நீரோவெனறால உமமுடைய வஸதிரஙகளைத தரிததிருமெனறு சொலலி, இஸரவேலின இராசா வேஷமாறினான அபபடியே யுததததிலே வநதான.

௩௰ சீரியாவின இராசாவோவெனில தனககிருககிற இரதஙகளின தலைவருககு, நீஙகள இஸரவேலின இராசா ஒருவனோடேயொழிய சிறியவனோடும பெரியவனோடும யுததமபணணாதேயுஙகளெனறு கறபிததிருநதான.

௩௧ ஆனதுகொணடு இரதஙகளின தலைவர் யோசபாததைககாணகையிலே, இவன இஸரவேலின இராசாவெனறு சொலலி யுததமபணண அவனைச்சூழ்நதார்கள. ஆனால யோசபாத் கூககுரலிடடான. அபபோது கர்ததர் அவனுககு அனுசாரியாயிருநது, தேவன அவர்களை யவனைவிடடுவிலகபபணணினார்.

௩௨ இவன இஸரவேலின இராசாவலலவெனறு இரதஙகளின தலைவர் கணடபோது, அவனைவிடடுத திருமபிப்போனார்கள.

கக ஆனால் ஒருமனுஷன் நினையாமல் வில்லைநாணேற்றி, இஸ்ரவேலின் இராசாவைச்சீராவின் சந்துகளுக்குள்ளேயெய்து போட்டான். அப்போது அவன் இரதசாரதியுடனே, நீ உன் கையைத் திருப்பி, என்னை இராணுவத்திலிருந்து அப்புறப்படுத்து. ஏனென்றால் காயப்பட்டிருக்கிறேனென்றான்.

கச அன்றையத்தினம் யுத்தம் அதிகரிக்கையில் இஸ்ரவேலின் இராசா சூரியருக்கெதிராக இரதத்தின்மேலே சாயங்காலமட்டும் நின்றிருந்து சூரியன் அஸ்தமிக்கும்நேரத்திலேசெத்துப்போனான்.

யகூ. அதிகாரம்.

யோசபாத் கடிந்துகொள்ளப்பட்டு அப்புறந்தேவத்தியாயப்பண்ணின இராச்சியபாரம்.

யூதாவின் இராசாவாகிய யோசபாத்தோவென்றால், எருசலேமிலிருக்கிற தன்னுடைய வீட்டிற்குச் சமாதானத்தோடேதிரும்பிவந்தான்.

உ அப்போது அனானியின் குமாரனாகிய ஏகூவென்கிற ஞானதிஷ்டிபுருஷன்புறப்பட்டு அவனைச்சந்தித்து, இராசாவாகிய யோசபாத்துடனேசொன்னதாவது, ஆகாதவனுக்கொத்தாசைசெய்து, கர்த்தனைப்பகைக்கிறவர்களை நீர் சிநேகிக்கலாமோ? இதினிமித்தங் கர்த்தராலே கடுங்கோபம் உம்முடையமேல் வருகிறதாயிருந்தது.

௩ ஆகிலும் நீர்விக்கிரகத்தோப்புகளை நதேசத்தைவிட்டகற்றிப் பராபரனைத் தேட உம்முடைய இருதயத்தை நேராக்கினசற்குணகாரியங்கள் உம்மிடத்திலே காணப்பட்டதென்றான்.

ச அப்படியே யோசபாத் எருசலேமிலேவாசமாயிருந்து, திரும்பப்பெர்சேபாவைத்துவக்கி எப்பிருயீம் மலைத்தேசமட்டுமுள்ள சனத்திற்குள்ளே பயணமாய்ப்போய், அவர்களைத்தங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திரும்பப்பண்ணினான்.

ரு அவன் யூதாவின் அரணான சகல பட்டணங்களாகிய ஒவ்வொரு பட்டணங்களிலே நியாயாதிபதிகளை வைத்து,

சு நியாயாதிபதிகளோடே சொன்னதாவது, நீங்கள்செய்கிற காரியத்திற்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் நீங்கள் மனுஷனுடைய கட்டளைப்படியல்ல, கர்த்தருடைய கட்டளையின்படி நியாயம் விசாரிக்கிறீர்கள் நியாயம் விசாரிக்கிற காரியத்திலேயவர் உங்களுடனேயிருக்கிறார்.

எ இப்போதுங் கர்த்தருக்குப் பயப்படுதல் உங்கள்மேலிருக்கக்கடவது. சாவதானமாயிருந்து ஆளைச்செய்யுங்கள். ஏனென்றால் உங்கள் பராபரனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணையும் பரிதானம் வாங்குதலுமில்லையென்றான்.

அ எருசலேமிலும் யோசபாத் லேவியரிலும் ஆசாரியரிலும் இஸ்ரவேலுடைய வம்சத்தலைவரிலுஞ் சிலரைக் கர்த்தருடைய நியாயத்திற்கும் வழக்குக்காரியங்களுக்கும் விசாரிப்புக்காரராக்கி, அவர்களை எருசலேமுக்குத் திரும்பிக்கொள்ளப்பண்ணி,

கூ அவர்களுக்குக் கற்பித்ததாவது, நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, உண்மையோடும் உத்தம இருதயத்தோடும் உத்தியோகஞ்செய்து,

ய தங்கள்பட்டணங்களிலே குடியிருக்கிற உங்கள்சகோதரரிடத்திலிருந்து விதவிதமான இரத்தப்பழிகாரியங்களுக்கும் விதவிதமானபிரமாணத்திற்குங் கற்பனைகளுங் கட்டளைகளுக்கும் நியாயங்களுக்கும் டுத்த எந்தவழக்கு உங்களண்டைக்கு வந்தாலும், அவர்கள் கர்த்தருக்கு நேர்ஸ்தாகி உங்கள்மேலும் உங்கள் சகோதரர்மேலுங் கடுங்கோபம் வராதபடிக்கு நீங்கள் அவர்களையெச்சரியுங்கள். நீங்கள் நேர்ஸ்தராகாதபடிக்கு இப்படிச்செய்வீர்களாக.

யக இதோ, ஆசாரியனாகிய அமரியா கர்த்தருக்கடுத்த எல்லா நியாயத்திலும் இஸ்மவேலின் குமாரனாகிய செப்தியாவென்ற யூதாவீட்டின் தலைவன் இராசாவுக்கடுத்த எல்லா நியாயத்திலும் உங்களுக்குப் பெரியவர்கள். லேவியரான அதிக்ககாரரும் உங்களுக்கு முன்பாகவிருக்கிறார்கள். நீங்கள் பலத்துக்கொண்டு உத்தியோகஞ் செய்யுங்கள். நல்லவனுடனேகர்த்தரிருப்பாரென்றான்.

உய. அதிகாரம்.

யோசாபாத் அம்மோனியரையும் மோவாபியரையுஞ்செயித்தது.

இதற்குப்பிறபாடு சம்பவித்ததேதென்றால் மோவாப்புத்திரரும் அம்மோனபு

த்திரும் அவர்களோடே அம்மோனியரு க்கப்புறத்தாரான மனுஷருங்கூடயோ சபாத்தின்மேல் யுத்தம்பண்ணவந்தார்கள்

௨ சிலர்வந்து யோசபாத்துக்கதையறிவித்து, உம்முடையமேல் ஏராளமான சனங்கடலுக்கக்கரையிலிருக்கிற சீரியாப்புறத்திலிருந்துவருகின்றது. இதோ, அவர்கள் எங்கேதியாகிய ஆத்சோம்தாமாரிலிருக்கிறார்களென்றார்கள்.

௩ அப்போது யோசபாத்பயந்துகர்த்தரைத்தேடுகிறதற்குத்தன்முகத்தைத்திருப்பி, யூதாவெங்கும் உபவாசத்தைக்கூறுவித்தான்.

௪ அப்படியேயூதசனங்கள் கர்த்தரிடத்திலேசகாயந்தேடக்கூடினார்கள். யூதாவிலுள்ள எல்லாப்பட்டணங்களிலுமிருந்துமனுஷர் கர்த்தரைத் தேடவந்தார்கள்.

௫ அப்போது யோசபாத் கர்த்தருடையவீட்டிலேபுதுப்பிரகாரத்துமுகனையிலேயூதசனங்களும் எருசலேமியருங்கூடினசபையிலேநின்றுசொன்னதாவது.

௬ எங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தாவே! பரமண்டலங்களிலிருக்கிறதேவரீர் அல்லவோ பராபரன்? தேவரீர் சாதிகளுடைய இராச்சியங்களையெல்லாம் ஆளுகிறவர். உம்முடைய கர்த்தித்துவவல்லமையும்பராக்கிரமமுமுண்டாயிருக்கின்றது. ஒருவரும் உம்மோடெதிர்த்து நிற்கக்கூடாது.

௭ எங்கள்பராபரனாகிய தேவரீர் உம்முடைய சனமாகிய இஸ்ரேலுக்குமுன்பாக இந்ததேசத்துக்குடிகளைத் துரத்திவிட்டு இதையும்முடையபிரியனாகிய ஆபிரகாமுடையவித்திற்கு என்றைக்குமென்றுகொடுத்ததில்லையோ?

௮ ஆனதுகொண்டு இதிலேகுடியிருந்து, இதிலே உம்முடையநாமத்திற்கென்று ஒருபரிசுத்தஸ்தலத்தை யுமக்குக்கட்டினார்கள்.

௯ எங்கள்மேலேபட்டையமாக்கினை பெருவாரிக்காய்ச்சல், பஞ்சமுதலான பொல்லாப்புவந்தால், அப்போது உம்முடையநாமம் இந்தவீட்டிலிருக்கிறபடியினாலேநாங்களிந்தவீட்டிற்கும் உமக்கு முன்பாகவும்வந்துநின்று, எங்கள் இக்கட்டில் உம்மைநோக்கிக்கூப்பிடுகையில். தேவரீர்கேட்டு, இரட்சிப்பீரென்றப்போ சொல்லப்பட்டதே?

௰ இப்போதும் இதோ, இஸ்ரேலர் எகிப்துதேசத்திலிருந்து வருகிறபோது அம்மோன்புத்திரர் மோவாபியர் சேயீர் மலைத்தேசத்தாருடையசீமைகள்வழியாயப்போகநீர் உத்தாரங்கொடுத்ததில்லை. ஆகையால் அவர்களைவிட்டுவிலகி அவர்களுக்குக் கேடுசெய்யாதேபோனார்களே.

௰௧ இப்போதும் இதோ, அவர்கள் எங்களுக்கு நன்மைக்குத்தீமைசரிக்கட்டித் தேவரீர் எங்களைச் சுதந்தரிக்கப்பண்ணின உம்முடையசுதந்தரத்திலிருந்து எங்களைத் துரத்திவிடவருகிறார்கள்.

௰௨ எங்கள் பராபரனே! அவர்களைத் தீர்ப்புச்செய்யீரோ? ஏனெனில் எங்களுக்கு விரோதமாகவந்த இந்த ஏராளமான கூட்டத்திற்குமுன்பாகநிற்க எங்களிலே பெலனில்லை. நாங்கள் என்னசெய்யவேண்டுமென்று அறியோம். ஆகையால் எங்கள் கண்கள் உம்மைநோக்கிக்கொண்டிருக்கின்றதென்றான்.

௰௩ யூதாகோத்திரத்தார் அனைவரும் அவர்கள் பெண்டுகள் குழந்தைகளும் அவர்கள் குமாரருங்கூடக் கர்த்தருக்குமுன்பாகநின்றார்கள்.

௰௪ அப்போது சபையின் நடுவிலிருக்கிற மத்தனியாவின்குமாரனாகிய ஏயேலின் குமாரனான பெனாயாவுக்குப்பிறந்த சகரியாவின் குமாரன் யகாசியேலென்கிற ஆசாபின் புத்திரரிலொருவனான லேவியன்மேலே கர்த்தருடைய ஆவி இறங்கினதினால் அவன் சொன்னதாவது,

௰௫ எல்லாயூதகோத்திரத்தாரே! எருசலேமின் குடிகளே! இராசாவாகிய யோசபாத்தே! கவனியுங்கள். நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்குப்பயப்படாமலும் திகைக்காமலுமிருங்களென்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார். ஏனெனில் அந்த யுத்தம்உங்களுடையதல்ல. பராபரனுடையது.

௰௬ நாளையவர்களுக்கெதிராக இறங்கிப்போங்கள் இதோ, அவர்கள் சீஸின் மேட்டுவழியாய் ஏறிவருகிறார்கள். நீங்கள் அவர்களை எருவேல்வனாந்திரத்திற்கெதிரே பள்ளத்தாக்கின் கடையாந்தரத்திலே கண்டுசந்திப்பீர்கள்.

௰௭ இந்த யுத்தத்தைப் பண்ணுபவர்கள் நீங்களல்ல. யூதாமனுஷரே! எருசலேமரே! நீங்கள் தரித்து நின்றுகொண்டு உங்களோடிருக்கிறகர்த்தாவின் இரட்சிப்பைப்பாருங்கள். பயப்படாமலும் திகைக்காமலுமிருங்கள். நாளைக்கு அவர்களுக்கெதிராகப் புறப்படுங்கள். ஏனென்றால் கர்த்தர் உங்களோடிருக்கிறாரென்றான்.

௰௮ அப்போது யோசபாத்தலைமட்டமுகங்குனிந்தான், எல்லா யூதகோத்திரத்தாரும் எருசலேமின்குடிகளுங்கர்த்தரைப்பணிந்துகொள்ளக்கர்த்தருக்குமுன்பாகத்தாழவிழுந்தார்கள்.

௰௯ கேகாத்தியரின்புத்திரரிலுங்கோரேகியரின் புத்திரரிலுமிருந்தலேவியர் எழுந்திருந்து, இஸ்ரவேலின் பராபரனாகியகர்த்தரைமகாசத்தத்தோடே மிகுந்தியுமாய்த்துதித்தார்கள்.

௨௰ அவர்கள்அதிகாலமேயெழுந்திருந்துதெக்கோவாவின்வனாந்திரத்திற்குப்புறப்பட்டார்கள். புறப்படுகையிலயோசபாத்நின்று, யூதாவே! எருசலேமின்குடிகளே! என்னைக்கேளுங்கள். உங்கள்பராபரனாகியகர்த்தர்பேரிலேவிசுவாசியுங்கள். அப்போது நிச்சயப்படுவீர்கள். அவருடையதீர்க்கதரிசிகளைநம்புங்கள்.அப்போதுஉங்களுக்குவாய்க்குமென்றான்.

௨௧ பிறபாடு அவன்சனத்தோடேஆலோசனைபண்ணிப்பரிசுத்தமுள்ள மகத்துவத்தைத்துதிக்கவும், ஆயுதமணிந்தவர்களுக்குமுன்னுக்கநடந்துபோய்க்கர்த்தரைத்துதியுங்கள், ஏனெனில் அவர்கிருபையென்றுமுள்ளதென்று கர்த்தரைப்பாடவும்பாடகரை நிறுத்தினான்.

௨௨ அவர்கள்கெம்பீரத்தோடேதுதிபோம்பாடத்துவக்குகிறநேரத்திலேயென்றால் கர்த்தர்யூதாவுக்குவிரோதமாய்வந்த அம்மோன்புத்திரரையும்மோவாபியரையுஞ்சேயீர்மலைத்தேசத்தாரையுமொன்றுக்கொன்று விரோதிக்கிற பதிவிடைகளாய்ப்போகப் பண்ணுகிறதினாலே அவர்கள் வெட்டுண்டுவிழுந்தார்கள்.

௨௩ அதேதென்றால் அம்மோன்புத்திரரும்மோவாபியருஞ் சேயீர்மலைத்தேசக்குடிகளைச்சங்கரிக்கவும் அழிக்கவும் அவர்களுக்கு விரோதமா யெழும்பினார்கள். சேயீர்குடிகளையழித்துத் தீர்ந்தபோது தாங்களுந் தங்களையொன்றுக்கொன்று அழிப்பதற்கேதுவாய்க்கலைக் கலந்தார்கள்.

௨௪ யூதாமனுஷர் வனாந்திரத்திலுள்ள சாமக்கூட்டணையிலேவந்து அந்தஏராளமான கூட்டமிருக்குந்திக்கைநோக்குகிறபோது, இதோ, அவர்கள்தரையிலேவிழுந்துகிடக்கிற பிரேதங்களென்றுகண்டார்கள். ஒருவருந்தப்பினதில்லை.

௨௫ அப்போதுயோசபாத்தும அவனுடையசனமும் அவர்களுடைமைகளைக் கொள்ளையிடவந்துஅவர்களிற்பரிபூரணமான ஆஸ்தியையும்பிரேதங்களிலிருக்கிற ஆடையாபரணங்களையுங்கண்டு இனியெடுக்கமாட்டாத சுமையாயெடுத்துக்கொண்டார்கள். மூன்றுநாளாய்க்கொள்ளையிட்டார்கள். ஏனெனில அதுவெகுவாயிருந்தது.

௨௬ நாலாமநாளிலேஸ்தோத்திரப்பள்ளத்தாக்கிலேகூடினார்கள். ஏனெனில அங்கேகர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினார்கள். ஆனதுகொண்டு அவ்விடத்திற்குஇந்நாளவரைக்குமிருக்கிறஸ்தோத்திரப்பள்ளத்தாக்கென்ற பேரைத் தரித்தார்கள்.

௨௭ பிறபாடு எல்லா யூதமனுஷரும எருசலேமூராரும அவர்களுக்கு முன்னேயோசபாத்தும மகிழ்ச்சியோடேஎருசலேமுக்குத்திரும்பிவரப்புறப்பட்டார்கள் ஏனென்றால் கர்த்தர் அவர்களையவர்களசத்துருக்களைத்தொட்டுமகிழ்ச்சியாக்கியிருந்தார்.

௨௮ அவர்கள் தம்புருகளோடுஞ் சுரமண்டலங்களோடும பூரிகைகளோடும எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய வீட்டிற்குவந்தார்கள்.

௨௯ கர்த்தர் இஸ்ரவேலின்சத்துருக்களோடு யுத்தம்பண்ணினாரென்று கேள்விப்பட்ட அந்தத்தேசங்களின் இராசியங்களமேலெல்லாம பராபரனாற் பயங்கரமுண்டாயிற்று.

௩௰ அப்படியேயோசபாத்தின இராசியபாரம அமரிக்கையாயிருந்தது. அவனுடையபராபரன சுற்றுப்புறத்தாரால யுத்தமில்லாத இளைப்பாறுதலை யவனுக்குக்கட்டளையிட்டார்.

௩௧ யோசபாத்யூதாவை அரசாண்டான். அவன இராசாவாகிறபோது முப்பத்தைந்துவயதாயிருந்தது, இருபத்தைந்து வருஷமாய எருசலேமிலே அரசாண்டான். சில்கியின்குமாரத்தியாகிய அவனுடையதாயின்பேர் அசுபாள.

௩௨ அவன்தன்தகப்பனாகிய ஆசாவின்வழியிலேநடந்து, அதைவிட்டுவிலகாதிருந்து, கர்த்தரின்பார்வைக்குச் செம்மையானதைச்செய்தான.

௩௩ ஆகிலும மேடைகளதள்ளப்படட்டதில்லை. ஏனெனிற்சனந்தங்களிருதயத்தைத்தங்களபிதாக்களின பராபரனுக்கின்னமநேராக்காதிருந்தது.

௩௪ யோசபாத்துடைய முன்பின்நடப்டியானமற்ற வர்த்தமானங்களோவென்றால், இதோ, அவைகள இஸ்ரவேல இராசாக்களின புஸ்தகத்தில ஏதினா அநானியின்குமாரனாகிய ஏகூவினவசனங்களிலெழுதியிருக்கின்றது.

௩௫ அதற்குப்பிறபாடு யூதாவின இராசாவாகிய யோசபாத் பொலலாப்பைச செயகிறவனான அகசியாவென்ற இஸ்ரவேலின இராசாவோடேதோழமைபண்ணினான.

௩௬ யாததிரைபோகிறதற்குக கபபலகளைச்செயபபணணிட அவனோடேதோழமை பணணினான. அபபடியே எசேயோன கேபேரிலே கபபலகளைச்செயபபணணினார்கள.

௩௭ ஆனால மரேசாவூரானாகிய தொதாவாவின குமாரனான எலியேசர் யோசபாததுக்கு விரோதமாகத தீர்க்கதரிசனஞ்சொலலி, நீர் அகசியாவோடே தோழமை பணணினபடியினாலே கர்த்தர் உமமுடைய கிரியைகளை முறிததுப்போட்டாரென்றான. அபபடியே கபபலகள யாததிரைபோகககூடாமல உடைநதது.

௨௧. அதிகாரம்.

யோசபாத்துக்குப்பிறபாடு யோராம இராசாவாகிப் பணணின ஆகாததியமும அடைநத ஆககினையும.

௧ யோசபாத் தன பிதாககளோடே நிததிரையடைநதபின தாவீதின பட்டணததிலே தன பிதாககளண்டையிலே யடக்கமபணணபபட்டான. அவன ஸ்தானததிலேயவனகுமாரனான யோராம இராசாவானான.

௨ யோசபாததின குமாரராகிய அசரியா, எகியேல, சகரியா, அசரியா, மிகவேல, செபபதியாவென்ற சகோதரர் அவனுககிருநதார்கள. இவர்களெலலாரும இஸ்ரவேலின இராசாவாகிய யோசபாததின குமாரரானவர்கள.

௩ இவர்களுககு இவர்களுடைய தகபபன வெளளியும பொனனும உசிதங்களுமான அநேககாணிக்கைகளையும யூதாவிலே அரணான பட்டணங்களையுங கொடுததார். ஆனால யோராம தலைசசனனானபடியினாலே அவனுககு இராசசியததைக கொடுததான.

௪ யோராம தனதகபபனுடைய இராசசியபாரததிற்கு வநது பலனகொண்டபிறபாடோவெனில, அவன தனனுடைய எலலாசசகோதரரையும இஸ்ரவேலின பிரபுககளிலேசிலரையுங்கூடப்பட்டயததாற்கொனறுபோட்டான.

௫ யோராம இராசாவானபோது முபபததிரண்டுவயதாயிருநது எட்டுவருஷமாக எருசலேமிலே அரசாண்டான.

௬ அவன இஸ்ரவேல இராசாககளின வழியிலே நடநது, ஆகாபினவீட்டார் செயததுபோலே செயதான. ஏனெனில ஆகாபின குமாரததியவனுககுப்பெணசாதியாயிருநதாள. அவன கர்த்தரின பார்வைககுப்பொலலாப்பானதைச்செயதான.

௭ கர்த்தரோவென்றால தாவீதுககும அவன குமாரருககுஞ் சகலநாளும ஒரு விளககைககட்டளையிடுவோமென்றுசொலலியவனுககுப்பணணின உடமபடிக்கையினிமித்தந் தாவீதினவீட்டைக்கெடுக்கச்சித்தமிலலாதிருநதார்.

௮ அவன நாட்களிலயூதாவுடையகைக்கீழிருநத ஏதோமியர்மருளவிழுநதுதங்களமேலொருஇராசாவைவைததார்கள.

௯ அதற்காக யோராம தனபிரபுககளோடுந்தன எலலா இரதங்களோடேயும புறப்பட்டுப போனான. அவன இராததிரியிலே யெழுநதிருநது தனனைவளைததுக்கொண்ட ஏதோமியரையும இரதங்களின்தலைவரையுமுறியடிததான.

௰ ஆகிலும யூதாவுடையகையின்கீழிருநத ஏதோமியர் இநநாளவரைக்குமிருக்கிறதைபபோலமருளவிழுநதார்கள. அவன தனபிதாககளின பராபரனாகிய கர்த்தரைவிட்டபடியினாலே அககாலததிலே லிப்னாபட்டணமும அவனகையின்கீழிருநது மருளவிழுநதது.

௰௧ அவன யூதாவுடைய மலைகளிலே மேடைகளையுமுணடாககி, எருசலேமின குடிகளைச்சோரமபோகப பணணி யூதாவையுந்தப்பிவிட்டான.

௰௨ அபபோது தீர்க்கதரிசியாகிய எலியா எழுதியிருநத ஒருநிருபம அவனண்டைககுவநதது. அதினவிபரமாவது, உமமுடைய தகபபனான தாவீதின பராபரனாகிய கர்த்தருரைக்கிறதேதெனில, நீயுன தகபபனாகிய யோசபாததின வழிகளிலும, யூதாவின இராசாவாகிய ஆசாவின வழிகளிலும நடவாமல,

௰௩ இஸ்ரவேல இராசாககளின வழியிலே நடநது, ஆகாபுடைய வீட்டின சோரமார்க்கததிற்கொததபடியே யூதாவையும எருசலேமின குடிகளையுஞ்சோரம போகபபணணி, உனனைபபார்ககிலும நலலவர்களாயிருநத உனதகபபனவீட்டாரான உனசகோதரரையுங் கொன்றுபோட்டபடியினாலே,

௰௪ இதோ, கர்த்தர் உனனுடைய சனததையும உன பிளளைகளையும உன பெணசாதிகளையும உனககுணடான தெலலாவறறையும மகாவாதையாகவாதிப்பார்.

௰௫ நீயோவென்றால் ரோகத்தினாலே உன்குடல்கள் நாளுக்குநாள் இற்றுவிழுந்தனிலும் உன்குடல்களின் ரோகமான மகாவியாதிகளினாலே வாதிக்கப்படுவாயென்பதாமே.

௰௬ அப்படியே கர்த்தர் பெலிஸ்தரின் ஆவியையும் கூஷியரின் அயல்தேசத்தாரான அரபியரின் ஆவியையும் யோராமுக்கு விரோதமாக எழுப்பினார்.

௰௭ இவர்கள் யூதாவிலே வந்தேறி அதை நொறுக்கி ராசாவின் வீட்டில் அகப்பட்ட எல்லா ஆஸ்தியையும் அவனுடைய பிள்ளைகளையும் அவன் பெண்சாதிகளையும் பிடித்துக்கொண்டுபோனார்கள். யோவாகாஸ் என்ற அவன் குமாரரில் இளையவனேயல்லாமல் ஒரு குமாரனும் அவனுக்கு மீதியானதில்லை.

௰௮ இவைகளெல்லாவற்றிற்கும் பிறகு கர்த்தர் அவனை அவன் குடல்களிலுண்டான தீராத ரோகத்தினால் வாதித்தார்.

௰௯ அப்படி நாளுக்குநாளிருந்து, இரண்டு வருஷங்கள் முடிகிற காலத்திலே அவனுடைய குடல்கள் அவனுடைய ரோகத்தோடே சரிந்து கடின வியாதிகளினாலே செத்துப்போனான். அவனுடைய பிதாக்களுக்காகக் கந்தவர்க்கங்களைக் கொளுத்தினதுபோலே அவனுடைய சனம் அவனுக்காகக் கொளுத்தினதில்லை.

௨௰ அவன் ராசாவாகிறபோது முப்பத்திரண்டு வயதாயிருந்து, எட்டு வருஷமாய் எருசலேமிலே அரசாண்டு விருப்பப்படாமற்போனான். அவனைத் தாவீதின் பட்டணத்திலே அடக்கம்பண்ணினார்கள். ஆனாலும் ராசாக்களின் கல்லறைகளில் அல்ல.

௨௨. அதிகாரம்.

யோராமுக்குப் பிறகு ராசாவான அகசியா வெட்டுண்டுபோனபின் அத்தலியா பண்ணின கொடூரம்.

எருசலேமின் குடிகள் அவன் இளைய குமாரனாகிய அகசியாவை அவன் ஸ்தலத்திலே ராசாவாக்கினார்கள். ஏனென்றால் அரபியரோடே கூடவந்து பாளயமிறங்கின சேனை மூத்தவர்களையெல்லாம் கொன்றுபோட்டது. அப்படியே யூதாவின் ராசாவாகிய யோராமின் குமாரன் அகசியா அரசாண்டான்.

௨ அகசியா ராசாவாகிறபோது இருபத்திரண்டு வயதாயிருந்து ஒரு வருஷம் எருசலேமிலே அரசாண்டான். ஒம்ரியின் குமாரத்தியாகிய அவன் தாயின் பேர் அத்தலியாள்.

௩ இவனும் ஆகாபின் வீட்டாரின் வழிகளில் நடந்தான். ஏனென்றால் துன்மார்க்கமாய் நடக்க அவனுடைய தாய் அவனுக்கு ஆலோசனைக்காரியாயிருந்தாள்.

௪ அவன் ஆகாபின் வீட்டாரைப்போலக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். ஏனென்றால் அவன் தகப்பன் செத்துப்போனபிறபாடு அவர்கள் அவனுக்குக் கேடாக அவனுடைய ஆலோசனைக்காரராயிருந்தார்கள்.

௫ அவர்களுடைய ஆலோசனைக்குட்பட்டவனுமாய் அவன் இஸ்ரவேலின் ராசாவாகிய யோராமென்ற ஆகாபின் குமாரனோடேகூடக் கீலேயாத்திலுள்ள ராமோத்திற்குச் சீரியாவின் ராசாவாகிய ஆசகேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனான். அங்கே சீரியர் யோராமைக் காயப்படுத்தினார்கள்.

௬ அப்போது தான் சீரியாவின் ராசாவாகிய ஆசகேலோடே யுத்தம்பண்ணுகையில் தன்னை அவர்கள் ராமாவிலே வெட்டின காயங்களை எஸ்றேயேலிலே ஆற்றிக்கொள்ள அவன் திரும்பினான். அப்போது ஆகாபின் குமாரனாகிய யோராமின் குமாரன் அகசியா எஸ்றேயேலிலிருக்கிற அவனைப் பார்க்கிறதற்கு இறங்கிப்போனான்.

௭ ஆனால் அகசியா யோராமண்டைக்கு வந்து அவனுக்குப் பராபரனாலுண்டான அழிவுதலாக விதித்ததுஅதேதென்றால் அவன் வந்தபோது அவன் யோராமுடனேகூடக் கர்த்தர் ஆகாபின் வீட்டாரைச் சங்கரிக்க அபிஷேகம்பண்ணுவித்த நிம்சியின் குமாரனாகிய ஏகூவுக்கெதிர்ப்படவெளியேபோனான்.

௮ ஏகூ ஆகாபின் வீட்டாரை யாக்கினைபடுத்துகிறபோதோவென்றால் அவன் அகசியாவைச் சேவிக்கிற யூதாவின் பிரபுக்களையும் அகசியாவுடைய சகோதரரின் குமாரரையுங் கண்டுபிடித்துக் கொன்றுபோட்டான்.

௯ பிறபாடு அவன் அகசியாவைத் தேடினான். சமாரியாவிலே ஒளித்துக்கொண்ட அவனை அவர்கள் பிடித்து ஏகூவண்டைக்குக் கொண்டுவந்து அவனைக் கொன்றுபோட்டு, இவன் தன் முழு இருதயத்தோடுங் கர்த்தரைத் தேடின யோசபாத்தின் குமாரனென்று சொல்லி, அவனை அடக்கம்பண்ணினார்கள். அப்படியே அரசாளுகிறதற்குப் பலன்கொள்ளத்தக்க ஒருவரும்

அகசியாவின் வீட்டிற்கில்லாதே போயிற்று.

௰ அகசியாவின் தாயாகிய அத்தலியாள் தன் குமாரன் செத்துப்போனதைக் கண்டபோதோவெனில், அவள் எழும்பி, யூதாவின் வீட்டிலுள்ள இராசவம்சமான வித்தாரையெல்லாஞ் சங்காரம்பண்ணினாள்.

௰௧ ஆனால் இராசாவின் குமாரத்தியாகிய யோசேபாத் கொன்றுபோடப்படுகிற இராச குமாரருக்குள்ளிருக்கிற அகசியாவின் ஆண்பிள்ளைகளாகிய யோவாசைக் களவாயெடுத்துக்கொண்டு அவனையும் அவன் தாதியையுஞ் சயன வீட்டிலே வைத்தாள். அப்படியே அத்தலியாள் அவனைக் கொன்றுபோடாதபடிக்கு இராசாவாகிய யோராமின் குமாரத்தியும் ஆசாரியனாகிய யோயதாவின் பெண்சாதியுமாகிய யோசேபாத் அவனை அத்தலியாளுக்கிடைஞ்சலாயொளித்தாள். ஏனெனில் அவள் அகசியாவின் சகோதரியாயிருந்தாள்.

௰௨ இவர்களோடு அவன் ஆறுவருஷமாய்க் கர்த்தருடைய வீட்டிலே மறைக்கப்பட்டிருந்தான். அத்தலியாளோவென்றால் தேசத்தின்மேல் இராச்சியபாரம்பண்ணினாள்.

௨௩. அதிகாரம்.

யோவாஸ் இராசாவாக வைக்கப்பட்டது.

ஏழாம் வருஷத்திலோவென்றால் யோயதா திடன்கொண்டு நூற்றுக்குத் தலைவராகிய எரோகாமின் குமாரன் அசரியாவையும் யோகனானின் குமாரன் இஸ்மவேலையும் ஓபேதின் குமாரன் அசரியாவையும் ஆதாயாவின் குமாரன் மாசெயாவையுஞ் சிக்கிரியின் குமாரன் எலிஷாப்பாத்தையுந் தன் உடம்படிக்கைக்குள்ளாக்கிக்கொண்டான்.

௨ இவர்கள் யூதாவிலே சுற்றித்திரிந்து யூதாவின் பட்டணங்களிலெல்லாம் இருக்கிற லேவியரையும் இஸ்ரவேலுடைய பிதாக்களின் வம்சத்தலைவரையுங் கூட்டிக்கொண்டு எருசலேமுக்கு வந்தார்கள்.

௩ அந்தச் சபையெல்லாம் பராபரனுடைய வீட்டிலே இராசாவோடே உடம்படிக்கைபண்ணிற்று. யோய்தா அவர்களுடனே சொன்னதாவது, இதோ, கர்த்தர் தாவீதின் குமாரரைக்குறித்துச் சொன்னபடியே இராசாவின் குமாரன் இராசாவாகவேண்டும்.

௪ நீங்கள் செய்யவேண்டிய காரியமென்னவெனில், இவ்வாரத்தில் முறையிருக்க வருகிற ஆசாரியரும் லேவியருமான உங்களில் மூன்றத்தொருபங்கு நுவிமுகவாசல்களையும்,

௫ மூன்றத்தொருபங்கு இராசாவின் வீட்டையும், மூன்றத்தொருபங்கு அஸ்திபாரவாசலையுங் காக்கவும், சனமெல்லாங் கர்த்தருடைய வீட்டுப்பிராகாரங்களில் இருக்கவும்வேண்டும்.

௬ ஆனால் ஆசாரியரையும் லேவியரில் ஊழியஞ்செய்கிறவர்களையுந்தவிர ஒருவருங் கர்த்தருடைய வீட்டிற்குட்பிரவேசிக்கவேண்டாம். அவர்களேயுட்பிரவேசிப்பார்களாக, ஏனெனில் அவர்கள் பரிசுத்தவான்கள். ஆனாற் சனமெல்லாங் கர்த்தருடைய காவலைக் காப்பதாக.

௭ லேவியரோவெனில் அவரவர் தங்கள் ஆயுதங்களைத் தங்கள் கையிலே பிடித்துக்கொண்டவர்களாய் இராசாவைச் சுற்றிலும் வளைந்துகொள்வார்களாக. வீட்டிற்குட்படுகிற எவனுங் கொலையுண்கக்கடவன். இராசா உட்பிரவேசிக்கிற போதும் புறப்படுகிறபோதும் நீங்கள் அவரோடிருங்களென்றான்.

௮ ஆசாரியனாகிய யோய்தா கற்பித்தபடியெல்லாம் லேவியரும் யூதாகோத்திரத்தாரனைவருஞ்செய்து, அவரவர் அவ்வாரத்து முறையிருக்க வருகிறவர்களும் முறைதீர்ந்துபோகிறவர்களுமான தன்தன் மனுஷரைக் கூட்டிக்கொண்டார்கள். ஏனென்றால் வகுப்புகளைப்பிரிந்துபோக ஆசாரியனாகிய யோய்தா உத்தாரங்கொடுக்கவில்லை.

௯ தாவீது இராசாவுக்கிருந்த பராபரனுடைய வீட்டிலுள்ள ஈட்டிகளையுங் கேடயங்களையும் பரிசைகளையும் ஆசாரியனாகிய யோய்தா நூற்றுக்குத்தலைவருக்குக்கொடுத்து,

௰ அவரவர் தங்கள் ஆயுதங்களைக் கையிலே பிடித்துக்கொண்டவர்களாய் வீட்டின் வலதுபக்கந்துவக்கி வீட்டின் இடதுபக்கமட்டும் பலிபீடத்திற்கும் வீட்டிற்குமெதிரே இராசாவைச்சுற்றிலும் நிறக்ச்சனத்தையெல்லாம் நிறுத்தினான்.

௰௧ பிற்பாடு இராசாவின் குமாரனைப் புறப்படவிடப்பண்ணி அவன்மேலே கிரீடத்தைவைத்து, அவனுக்குச் சாட்சியின் ஆகமத்தைக்கொடுத்து அவனை இராசாவாக்கினார்கள். யோய்தாவும் அவன் குமாரரும் அவனையபிஷேகம்பண்ணி, இராசா வாழ்கவென்றார்கள்.

௰௨ சனம் ஓடிவந்து இராசாவைப் புகழுகிற சத்தத்தை அத்தலியாள் கேட்ட

போதேவெனில், அவன் கர்த்தருடைய வீட்டிற் சனத்தண்டையிலே வந்து,

௰௩ இதோ, நடையிலுள்ள தன் தூணண்டையிலே இராசா நிற்கிறதையும், இராசாவண்டையிலே நிற்கிற பிரபுக்களையும் பூரிகைகளை ஊதுகிறவர்களையும் தேசச்சனமெல்லாஞ் சந்தோஷப்பட்டுப் பூரிகைகளை ஊதுகிறதையும், பாட்டகர் கீதவாத்தியங்களைப் பிடித்துத் துதிக்க வகைகாண்பிக்கிறதையுங் கண்டாள். அப்போது அத்தலியாள் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, ரொண்டகம் ரொண்டகமென்று கூப்பிட்டாள்.

௰௪ ஆனால் ஆசாரியனாகிய யோய்தா இராணுவத்தை விசாரிக்கிற ஆயிரத்துக்குச் சேர்வைக்காரரைப் புறப்படப் பண்ணி அவர்களுடனே, அவளை வரிசைகளுக்குப் புறம்பே கொண்டுபோங்கள். அவளைப் பின்செல்லுகிறவன் பட்டயத்தாற் சாவக்கடவனென்றான். ஏனென்றாற் கர்த்தரின் வீட்டிலே அவளைக் கொன்றுபோடாதேயுங்களென்று ஆசாரியன் சொல்லியிருந்தான்.

௰௫ அவர்கள் அவளுக்கு இடமுண்டாக்கினபோது, அவள் இராசாவின் வீட்டிற்கிருக்கிற குதிரைகளின் வாசலுக்குட் பிரவேசிக்குமிடமட்டும் போனாள். அங்கே அவளைக் கொன்றுபோட்டார்கள்.

௰௬ பிற்பாடு யோய்தா, நாங்கள் கர்த்தருடைய சனமாயிருக்கும்படிக்குத் தனக்கும் எல்லாச் சனத்திற்கும் இராசாவுக்கும் உடம்படிக்கை பண்ணிக்கொண்டான்.

௰௭ அப்போது சனமெல்லாம் பாகால் வீட்டிலே போய் அதை இடித்து, அதின் பலிபீடங்களையும் அதின் சுருபங்களையுந் தகர்த்துப் பாகாலின் பூசாரியாகிய மாத்தானைப் பலிபீடங்களுக்கு முன்பாகக் கொன்றுபோட்டார்கள்.

௰௮ தாவீது கட்டளையிட்ட பிரகாரமாகச் சந்தோஷத்தோடுங் கீதத்தோடுங் கர்த்தரின் தகனபலிகளை மோசேயின் நியாயப்பிரமாணத்திலெழுதியிருக்கிறபடியே செலுத்தத்தக்கதாக, யோய்தா, கர்த்தருடைய வீட்டை விசாரிக்கும் உத்தியோகங்களைத் தாவீது கர்த்தருடைய வீட்டிற்கென்று பகுத்துவைத்த லேவியரான ஆசாரியர்களின் கையிலே ஒப்புவித்து,

௰௯ யாதொரு காரியத்தினாலே தீட்டுப்பட்டவன் கர்த்தருடைய வீட்டிற்குட் பிரவேசியாதபடிக்கு, அதின் வாசல்களுக்கு வாசற்காப்பாளரை நிறுத்தி,

௨௰ ஆயிரத்துக்குச் சேர்வைக்காரரையும் பெரியவர்களையுஞ் சனத்தை ஆளுகிறவர்களையுந் தேசச்சனமனைத்தையுங் கூட்டிக்கொண்டு, இராசாவைக் கர்த்தருடைய வீட்டிலிருந்திறங்கப்பண்ணி, உயர்ந்த வாசல்வழியாய் இராச அரண்மனைக்குள் அழைத்துவந்து, இராசாவை அரசாளும் ஆசனத்தின்மேல் உட்காரப்பண்ணினார்கள்.

௨௧ தேசச்சனமெல்லாம் மகிழ்ந்து அத்தலியாளைப் பட்டயத்தாற் கொன்றபிற்பாடு பட்டணம் அமரிக்கைப்பட்டது.

௨௪. அதிகாரம்.

யோவாஸ்பண்ணின இராச்சியபாரம்.

யோவாஸ் இராசாவாகிறபோது ஏழு வயதாயிருந்து, நாற்பது வருஷமாய் எருசலேமில் அரசாண்டான். பெயர்செபா பட்டணத்தாளான அவன் தாயின் பேர் சிபியாள்.

௨ ஆசாரியனாகிய யோய்தாவின் நாளெல்லாம் யோவாஸ் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

௩ அவனுக்கு யோய்தா இரண்டு பெண்சாதிகளை ஏற்படுத்தினான். அவர்களால் குமாரரையுங் குமாரத்திகளையும் பெற்றான்.

௪ அதற்குப்பிறகு கர்த்தருடைய வீட்டைப் புதுப்பிக்க யோவாசுக்கு மனதுவந்தது.

௫ அவன் ஆசாரியரையும் லேவியரையுங் கூட்டி அவர்களுடனே, நீங்கள் யூதாப் பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய், உங்கள் பராபரனுடைய வீட்டை வருஷந்திறகு வருஷம் பழுதுபார்க்கிறதற்கு இஸ்ரவேலெங்குந் திரவியஞ் சேருங்கள். இந்தக் காரியத்தை நீங்கள் தீவிரியுங்களென்றான். ஆனாலும் லேவியர் தீவிரித்துக்கொண்டதில்லை.

௬ அப்போது இராசா யோய்தாவென்ற தலைவனை அழைப்பித்து அவனுக்குச் சொன்னதாவது, ஆசரிப்புக்கூடாரத்திற்குக் கொடுக்கக் கர்த்தரின் தாசனாகிய மோசே கற்பித்த வரியை யூதாவினிடத்திலும் எருசலேமியரிடத்திலும் இஸ்ரவேல் சபையாரிடத்திலும் வாங்கி வருகிறதற்கு லேவியரை நீர் விசாரிக்காதே போனதென்ன?

௭ ஏனென்றால் அத்தலியாள் துன்மார்க்கமாயிருந்ததினால் அவளுடைய குமாரர் பராபரனுடைய வீட்டைப் பலவந்தமாய்த் திறந்து கர்த்தருடைய வீட்டிலுள்ள பரிசுத்தம் பண்ணப்பட்ட வைகளையெல்லாம்

பாகாலகளுககாகச செலவுபணணிஞர்க ளெனறன.

௮ அபபோது இராசாவின சொற்ப டி ஒருபெடடியையுணடாககி, அதைக கர்த்தருடையவிடடுவாசலுககுப புறம பேவைததார்,

௯ கர்த்தரின்தாசஞகிய மோசேவனா நதிரத்தில இஸ்ரவேலுககுககறபித்தவரி யைக கர்த்தருககுக கொணடுவாருங க ளெனறு யூதாவிலும எருசலேமிலுமப றைறுறையிடுவித்தார்கள.

௰ அபபோது எலலாபபிர்புககளுஞ்சன மனததோடு சநதோஷபபடடுப பெட்டி நிறையுமடடுககுங கொணடுவநது அதி லேபோடடார்கள.

௰௧ அநேகநதிரவிய முணடெனறுக ணடு லேவியர்களாலே அநதபபெடடி இராசாவின விசாரிபபுககாரர்ணடையி லே கொணடுவரபபடுமபோதெலலாம இராசாவினசமபிரதியும பிரதான ஆசாரி யனுடையவிசாரிபபுககாரனுமவநதுபெ டடியிலிருககிறதைக கொடடியெடுதது கவகாணடு, அதைத திருமப அதினதான ததிலேவைபபார்கள. இபபடி நாளுககு நாளசெயது, மிகுநதிரவியததைச சே ர்ததார்கள.

௰௨ அதை இராசாவுமயோயதாவுங கர்த்தருடைய வீடடின வேலையைவிசாரி ககும ஊழியககாரரிடததிலேகொடுததா ர்கள. அதினாலே அவர்கள கர்த்தருடைய வீடடைப புதுபபிககுமபடிககுக கறறச சரையுந தச்சரையுங கர்த்தருடையவீட டைபபழுதுபார்ககககருமாரரையுஙகனனு ரையுங கூலிபொருநதிககொணடார்கள.

௰௩ அபபடி வேலையைவிசாரிககிறவர் கள தஙகளகையினாலே வேலையை நடத தேறபணணிப பராபரனுடைய வீட டையதினமுநதினநிரதோககவைததுப பலப படுததிஞர்கள.

௰௪ அதைமுடிததுத தீர்நதபிறபாடு மிஞ்சினதிரவியமுழுவதையும இராசாவுககுமயோ யதாவுக்கும முனபாககககொணடுவநதார் கள. அதினாலே கர்த்தருடையவீடடிற்கு பணிமுடடுகளாகிய ஆராதனைககுமபலி யிடுகிறதறகுமான தடடுமுடடுகளையுஙகல சஙகளையும பொறபாத்திரஙகளையும வெள ளிபபாததிரஙகளையும பணணுவிததான. யோயதாவினநாளெலலாமநிததங கர்த தருடைய வீடடிலே தகனபலிகளைச்செ லுததிவநதார்கள.

௰௫ ஆனாலேயோயதாகிழவனும நாளநீ டிததவனுமாயமரிததான. அவன மரணம அடைகிறபோது நூறறுமுபபதுவயதா யிருநதான.

௰௬ அவன இஸ்ரவேலுககுமபராபரனு ககாகவும அவருடைய வீடடிறகாகவும நனமைசெயதபடியினாலே யவனைத தா வீதின பட்டணததிலிராசாககளணடை யிலே யடககமபணணிஞர்கள.

௰௭ யோயதா மரணமடைநதபிறபா டேலெலலாம, யூதாவினபிர்புககளவநது இராசாவைப பணிநதுகொணடார்கள. அபபோது இராசா அவர்களுககுக்கேள் விகொடுததான.

௰௮ அபபடியேயவர்களதஙகள பிதா ககளினபராபரஞகிய கர்த்தரினவீடடை விடடுவிடடுத தோபபுகளையுஞ்சிலைகளையு ஞ்சேவிததார்கள. அபபோது இநத அ வர்களுடையகுறறததினிமிததம யூதாவி னமேலுமஎருசலேமினமேலுங்கடுங்கோ பமுணடாயிறறு.

௰௯ அவர்களைததமமணடைககுததிரு மபப்பணணக கர்த்தர் அவர்களிடத்தி லேதீர்ககதரிசிகளையனுபபிஞர். இவர்க ளஅவர்களைததிடசசாட்சியாககடிநது கொணடார்கள. ஆஞல அவர்களசெவி கொடுககவிலலை.

௨௰ அபபோதுபராபரனுடைய ஆவி ஆசாரியஞகியயோயதாவினகுமாரஞன சகரியாவினமேலிறஙகினதினாலே, அவனச னததிறகெதிரேநினறு அவர்களுடனே,நீ ஙகளகர்த்தருடைய கறபனைகளை மீறிப போடுகிறதெனன? எனறுபராபரனசொ லலுகிருர். ஆகையாலநீஙகளபாககியவா னகளாயிருபபதிலலை. நீஙகள கர்த்தரை விடடுவிடடதினாலே அவர் உஙகளைக்கை விடுவாரெனறன.

௨௰௧ ஆஞல அவர்கள அவனுககுவி ரோதமாக ஒபபநதமபணணிக்கர்த்தரு டையவீடடுபபிரகாரததில இராசாவினு டையகறபனையினபடியவனைக கலலெறி நதுகொனருர்கள.

௨௰௨ அபபடியேயிவனுடைய தகபப ஞகியயோயதாதனககுச்செயத தயவை இராசாவாகிய யோவாஸ நினைககாமல, அவனுடைய குமாரனைக கொனறுபோ டடான. இவனசாவைபிறகர்த்தர் அதைப பபார்ததுக்கணககுககேட்பாரெனறன.

௨௰௩ ஆனதுகொணடு மறுவருஷத்தி லேசூரியாவின இராணுவததார் அவனுக குவிரோதமாகவநதேறியூதாவிலும, எரு சலேமிலுமவநது சனததிலிருககிற சனத தினபிர்புககளையெலலாமழிததுக கொன னைபிடட அவர்கள உடைமைகளையெல

லாத்தமஸ்துவின் இராசாவுக்கடுப்பினார்கள்.

௨௪ ஏனென்றால் சீரியாவின் இராணுவம் கொஞ்சம் மனுஷராய் வந்திருந்தாலும், இவர்கள் தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரைவிட்டுவிட்டபடியினாலே கர்த்தர் மகா பெரிய இராணுவத்தை அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்தார். அவர்கள் யோவாசினிடத்திலும் நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றினார்கள்.

௨௫ அவர்கள் அவனை மகா வேதனைகளுள்ளவனாக விட்டுப்போனார்கள். ஆனதுகொண்டு அவர்கள் புறப்பட்டபின் அவனுடைய ஊழியக்காரர் ஆசாரியனாகிய யோய்தாவுடைய குமாரரின் இரத்தப்பழியினிமித்தம் அவனுக்கு விரோதமாய் ஒப்பந்தம்பண்ணி, அவனை அவன் படுக்கையிலே கொன்றுபோட்டார்கள். செத்துப்போன அவனைத் தாவீதின் பட்டணத்திலே அடக்கம்பண்ணினார்கள். ஆனாலும் இராசாக்களின் கல்லறைகளில் அவனை வைக்கவில்லை.

௨௬ அவனுக்கு விரோதமாக ஒப்பந்தம்பண்ணிக்கொண்டவர்கள் சீமாத் என்னும் அம்மோனியஸ்திரீயின் குமாரனாகிய சாபாத்தும், மோவாபியஸ்திரீயாகிய சிம்ரீத்தின் குமாரனாகிய யோசபாத்துமே.

௨௭ அவன் குமாரரின் செய்தியும் அவன் மேலே சுமத்தப்பட்ட பெரிய சுமைகளின் செய்தியும் பராபரனுடைய வீட்டை அவன் பலப்படுத்தினதும் இதோ, இராசாக்களின் புஸ்தகமான சரித்திரத்திலே எழுதியிருக்கிறது. அவன் குமாரனாகிய அமத்சியா அவன் ஸ்தலத்திலே இராசாவானான்.

௨௫. அதிகாரம்.

அமத்சியாவின் இராசரியபாரம்

அமத்சியா இருபத்தைந்தாம் வயதிலே இராசாவாகி, இருபத்தொன்பது வருஷமாக எருசலேமில் அரசாண்டான். எருசலேமூராளாகிய அவனுடைய தாயின் பேர் யோவாதான்.

௨ அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். ஆனாலும் முழுமனதோடேயல்ல.

௩ இராசரியபாரம் அவனுக்குத் திடப்பட்டபோதோவென்றால், அவன் தன் தகப்பனாகிய இராசாவைக் கொலைசெய்த தன்னுடைய ஊழியக்காரரைக் கொன்றுபோட்டான்.

௪ ஆனால் பிதாக்கள் பிள்ளைகளினிமித்தமும் பிள்ளைகள் பிதாக்களினிமித்தமும் கொலையுண்கப்படாமல், அவனவன் தன் தன் பாவத்தினிமித்தம் கொலையுண்பானாக வென்று மோசேயின் நியாயப்பிரமாணத்தின் புஸ்தகத்திலே எழுதியிருக்கிறபடி கர்த்தர் கற்பித்தபிரகாரமாக அவர்களுடைய பிள்ளைகளைக் கொல்லாதிருந்தான்.

௫ அமத்சியா யூதாமனுஷரைக் கூட்டி, அவர்களின் பிதாக்களுடைய வம்சங்களின்படியே யூதாபென்யமீன் தேசங்களெங்கும் ஆயிரத்தைச் சேர்வைக்காரரையும் நூற்றுக்குச் சேர்வைக்காரரையும் வைத்து இருபது வயதுமுதற்கொண்டு அதற்குமேலான அவர்களை இலக்கம்பார்த்து, யுத்தத்திற்குப் புறப்படவும் ஈட்டியையும் கேடகத்தையும் பிடிக்கவும் தக்க தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முந்நூறாயிரம் பேரென்று கண்டான்.

௬ இஸ்ரவேலிலும் நூறுபிரம்பார்த்த கிரியைக்காரரை நூறு தாலந்து வெள்ளிக்குச் சம்பளத்திற்கு வைத்தான்.

௭ ஆனால் பராபரனுடைய மனுஷனொருவன் அவனண்டைக்கு வந்து சொன்னதாவது, இராசாவே! இஸ்ரவேலின் இராணுவம் உம்முடனே வராதிருப்பதாக. ஏனென்றால் கர்த்தர் இஸ்ரவேலராகிய எப்பிராயீமின் சகல புத்திரரோடுமிருக்கவில்லை.

௮ ஏனென்றால் நீர் போய், யுத்தத்திற்குப் பலத்துக்கொண்டாலும், பராபரன் உம்மைச் சத்துருவுக்கு முன்பாக விழப்பண்ணுவார். அதெப்படியென்றால் ஒத்தாசைசெய்யவும் விழப்பண்ணவும் பராபரனிடத்திலே பெலனுண்டென்றான்.

௯ அப்போது அமத்சியா, ஆனால் நான் இஸ்ரவேலின் தண்டுக்குக் கொடுத்த நூறு தாலந்திற்காகச் செய்வதென்ன? என்று பராபரனுடைய மனுஷனைக் கேட்டான். அதற்குப் பராபரனுடைய மனுஷன், அதைப்பார்க்க அதிகமாய் உமக்குக் கொடுக்கக் கர்த்தருக்கிருக்கிறதென்றான்.

௰ அப்போது அமத்சியா எப்பிராயீமிலிருந்து தன்னண்டைக்கு வந்த தண்டைத் தங்களிடத்திற்குப் போய்விடப் பிரித்தான். அதினாலவர்களுக்கு யூதாவின்மேல் கோபம் மிகுதியாய் மூண்டு உக்கிரமான எரிச்சலோடே தங்களிடத்திற்குத் திரும்பினார்கள்.

௰௧ அமத்சியாவோவென்றால் திடன்கொண்டு தன் சனத்தைக் கூட்டி, உப்புப்பள்ள

த்தாக்குக்குப்போய்ச்சேயீர் புத்திரரிற் பதினாயிரம்பேரை வெட்டினான்.

௰௨ யூதபுத்திரர் பதினாயிரம்பேரை உயிரோடேபிடித்து, ஒருகன்மலைக்குனியின் மேற்கொண்டுபோய் அவர்களெல்லாரும் நசுங்கிப்போகத்தக்கதாய் அந்தக்கன்மலையின் சிகரத்திலிருந்து தாழத்தள்ளினார்கள்.

௰௩ தன்னோடேகூடயுத்தத்திற்கு வராதபடிக்கு அமத்சியா திருப்பிவிட்டதண்டுமனுஷரோவெனில் சமாரியாவைத்துவக்கிப்பெத்தொரோன்மட்டும் யூதப்பட்டணங்களின்மேல் விழுந்து, அவைகளில் மூவாயிரம் பேரை வெட்டித் திரளாயக்கொள்ளையிட்டார்கள்.

௰௪ அமத்சியா ஏதோமியரை முறியடித்துவந்து சேயீர்புத்திரரின் தேவர்களைக்கொண்டுவந்த பிற்பாடோவெனில், அவன் அவைகளைத் தனக்குத்தேவர்களாக வைத்து, அவைகளுக்குமுன்பாகப் பணிந்து, அவைகளுக்குத் தூபங்காட்டினான்.

௰௫ அப்போது கர்த்தர் அமத்சியாவின்பேரிற் கோபமூண்டவராகி, அவனண்டைக்கு ஒருதீர்க்கதரிசியையனுப்பினார். இவன் அவனுடனே, தங்கள்சனத்தை உம்முடைய கைக்குத் தப்புவிக்காதேபோனசனத்தின்தேவர்களை நீர் தேடுவானேன்? என்றான்.

௰௬ தன்னோடே இவன் இப்படிப்பேசினபோதோவெனில், அவன் இவனுடனே, உன்னை இராசாவுக்கு ஆலோசனைக்காரனாக வைத்தார்களோ? அதைப்போட்டுவிடு. உன்னை ஏன் வெட்டிப்போடவேண்டும்? என்றான். அப்போது அந்தத்தீர்க்கதரிசி அதைப்போட்டு விடு. நீர் இப்படிச்செய்து, என் ஆலோசனையைக்கேளாமற்போனபடியினாலே, பராபரன் உம்மையழிக்கயோசனையாயிருக்கிறார் என்கிறதையறிவேனென்றான்.

௰௭ பிற்பாடு யூதாவின் இராசாவாகிய அமத்சியா யோசனைபண்ணி, ஏகூவின்குமாரனாகிய யோவாகாசின்குமாரன் யோவாசென்ற இஸ்ரவேலின் இராசாவுக்குத் தம்முடைய சாமார்த்தியத்தைப் பார்ப்போம்வாவென்று சொல்லியனுப்பினான்.

௰௮ ஆனால் இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாஸ் யூதாவின் இராசாவாகிய அமத்சியாவுக்குச் சொல்லியனுப்பினதாவது, லீபனோனிலிருக்கிற முட்செடி லீபனோனிலிருக்கிற கேதுருமரத்திற்கு, உன் குமாரத்தியை என்குமாரனுக்குப்பெண்சாதியாகக்கொடு என்றுசொல்லியனுப்பிற்று. ஆனால் லீபனோனிலிருக்கிற காட்டு மிருகங்கள் முட்செடியின்மேலோடி அதைமிதித்தது.

௰௯ இதோ, ஏதோமியரையடித்தேனென்று நீ பெருமைபாராட்ட உன் இருதயம் உன்னைமேட்டிமையாக்கிறது. இப்போதும் உன்வீட்டிலிரு. நீயும் உன்னோடே யூதாவுங் கூட விழும்படிக்குப் பொல்லாப்பைத்தேடிக்கொள்வானேன்? என்றுசொல்லியனுப்பினான்.

௨௰ ஆனால் அமத்சியா செவிகொடாதேபோனான். ஏனென்றால் அவர்கள் ஏதோமின்தேவர்களைத்தேடின நிமித்தம் அவர்களையொப்புக்கொடுக்கும்படிக்குப் பராபரனாலேயப்படிவந்தது.

௨௰௧ அப்படியே இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாஸ் எதிர்வந்தான். யூதாவிலிருக்கிற பெத்செமேசிலே அவனும் அமத்சியாவென்ற யூதாவின் இராசாவுந் தங்கள் சாமார்த்தியத்தைப்பார்த்தார்கள்.

௨௰௨ ஆனால் யூதா இஸ்ரவேலுக்குமுன்பாகமுறிந்து அவரவர் தங்கள் கூடாரங்களுக்கோடிப்போனார்கள்.

௨௰௩ இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாஸ் அகசியாவின்குமாரனான யோவாசுக்குப்பிறந்த அமத்சியாவென்ற யூதாவின் இராசாவைப் பெத்செமேசிலேபிடித்து, அவனை எருசலேமுக்குக்கொண்டுவந்து, எருசலேமின் அலங்கத்திலே எப்பிராயீம் வாசலைத் துவக்கிக் கோடிவாசல்மட்டும் நானூறுமுழ நீளம் இடித்துப்போட்டு,

௨௰௪ பராபரனுடைய வீட்டில் ஓபேத்ஏதோமின் வசத்திலே யகப்பட்டசகல பொன்னையும் வெள்ளியையுஞ் சகலதட்டுமுட்டுகளையும், இராசாவின் வீட்டுப்பொக்கிஷங்களையும், சிறையிருப்பவர்களையும் பிடித்துக்கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப்போனான்.

௨௰௫ யோவாகாசின்குமாரனாகிய யோவாசென்ற இஸ்ரவேலின் இராசா மரணமடைந்தபின் யோவாசின்குமாரனாகிய அமத்சியாவென்ற யூதாவின் இராசா பதினைந்துவருஷம் உயிரோடிருந்தான்.

௨௰௬ அமத்சியாவின் முன்பின் நடபடியானமற்றவர்த்தமானங்கள் இதோ யூதா இஸ்ரவேல் இராசாக்களின் புஸ்தகத்திலல்லோ எழுதியிருக்கின்றது.

௨௰௭ அமத்சியா கர்த்தரைவிட்டுப்பின்வாங்கினகாலமுதற்கொண்டு எருசலேமிலிருக்கிறவர்கள் அவனுக்குவிரோதமாக ஒப்பந்தம்பண்ணிக்கொண்டார்கள். அதினிமித்தம் லாகீசுக்கோடிப்போனான்.

ஊருக்கு அவன் பிறகாலே லாகீசுக்கு மனுஷரை யனுப்பினார்கள். அவர்கள் அங்கே யவனைக் கொன்றுபோட்டு,

௨௮ அவனைக் குதிரைகள் மேலெடுத்து யூதாவின் பட்டணத்தில் அவன் பிதாக்களண்டையிலே யடக்கம்பண்ணினார்கள்.

௨௬. அதிகாரம்.

உசியாவின் இராச்சியபாரம்.

அப்போது யூதச்சனமெல்லாம் பதினாறுவயதான உசியாவை யழைத்துவந்து, அவனையவன் தகப்பனாகிய அமத்சியாவின் ஸ்தலத்திலே இராசாவாக்கினார்கள்.

௨ இராசா தன் பிதாக்களோடே நித்திரையடைந்த பிறபாடு இவன் ஏலோத்தைக் கட்டி அதைத் திரும்ப யூதாவின் வசமாக்கிக்கொண்டான்.

௩ உசியா இராசாவாகிறபோது பதினாறுவயதாயிருந்து, ஐம்பத்திரண்டு வருஷமாய் எருசலேமில் அரசாண்டான். எருசலேம் பட்டணத்தாளான அவன் தாயின் பேர் எக்கோலியாள்.

௪ அவன் தன் தகப்பனாகிய அமத்சியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து,

௫ பராபரனுடைய தரிசனங்களில் உணர்வுள்ள சகரியாவின் நாட்களிலே பராபரனைத் தேட மனதிணங்கியிருந்தான். அவன் கர்த்தரைத் தேடின நாட்களிலே பராபரன் அவனைப் பாக்கியவானாக்கினார்,

௬ அவன் புறப்பட்டுப்போய்ப் பெலிஸ்தரோடே யுத்தம்பண்ணிக் காத்தின் அலங்கத்தையும் யப்னேயின் அலங்கத்தையும் அஸ்தோதின் அலங்கத்தையும் இடித்துப்போட்டு, அஸ்தோத் சீமையிலும் பெலிஸ்தருக்குள்ளும் பட்டணங்களைக் கட்டினான்.

௭ பெலிஸ்தரையுங் கூர்பாகாலிலே குடியிருக்கிற அருபியரையும் மெகுனியரையும் வெல்லப் பராபரன் அவனுக்கொத்தாசைபண்ணினார்.

௮ அம்மோனியர் உசியாவுக்குக் காணிக்கைகளைக் கொடுத்தார்கள். அவனுடைய கீர்த்தி எகிப்துவின் எல்லைமட்டும் போயிற்று. ஏனென்றால் மிகவும் பலங்கொண்டான்.

௯ உசியா எருசலேமிலே கோடிவாசலின்மேலும் பள்ளத்தாக்கு வாசல்மேலும் அலங்கச்சந்துகளின்மேலுங் கோபுரங்களைக் கட்டி அவைகளைப் பலமாக்கினான்.

௰ அவனுக்குப் பள்ளத்தரையிலுஞ் சமனான தரையிலும் அநேகம் ஆடுமாடுகளும் மலைகளிலேயும் வயல்வெளியிலேயும் பயிர்க்குடிகளுந் திராட்சத்தோட்டக்காரரும் உண்டானபடியினாலே, அவன் வனாந்திரத்திலே கோபுரங்களைக் கட்டி அநேகந் துரவுகளை வெட்டுவித்தான். ஏனென்றால் வெள்ளாண்மைப் பிரியனாயிருந்தான்.

௰௧ உசியாவுக்குச் சேவகம்பண்ணுகிற இராணுவமுமிருந்தது. அது சம்பிரதியாகிய ஏயெலாலும் ஆக்கினைக்காரனுமாசேயாவினாலும் இலக்கம் பார்க்கப்பட்டபடியே இராசாவின் பிரபுக்களிலொருவனாகிய அனனியாவின் கீழே வகுப்பாய்ச் சேவகம்பண்ணப் புறப்பட்டது.

௰௨ பராக்கிரமசாலிகளான வம்சத்தலைவரின் தொகையெல்லாம் இரண்டாயிரத்தறுநூறு.

௰௩ இவர்கள் கையின் கீழே இராசாவுக்குச் சத்துருக்களுக்கு விரோதமாக ஒத்தாசை செய்யப் பராக்கிரமத்தோடே யுத்தம்பண்ணுகிற முந்நூற்றேழாயிரத்தைந்நூறுபேரான இராணுவப்பலமிருந்தது.

௰௪ இந்த இராணுவத்தாருக்கெல்லாம் உசியா கேடயங்களையும் ஈட்டிகளையுந் தலைச்சோடுகளையுஞ் சீராவுகளையும் வில்லுகளையுங் கல்லெறிகிற கவண்களையுஞ் சவதரித்தான்.

௰௫ அம்புகளையும் பெரிய கல்லுகளையும் எய்யத்தக்கதாக விநோதமாயுண்டுபண்ணினதுஞ் சிகரங்களின்மேலும் அலங்கக் கோடிகளின்மேலுமிருப்பதுமான எந்திரங்களையும் அவன் எருசலேமிலுண்டாக்கினான். அப்படியே அவன் கீர்த்தி தூரத்திற்குப் பரம்பிற்று. ஏனென்றால் அவன் பலத்துப்போகுமட்டும் ஆச்சரியமானபடி ஒத்தாசைசெய்யப்பட்டான்.

௰௬ அவன் பலத்துப்போனபோதோவெனில் தனக்குக் கேடுண்டாக்குமட்டும் அவனுடைய மனம் மேட்டிமையாகித் தன் பராபரனாகிய கர்த்தருக்கேறாத பிழையான வேலையைச் செய்து, தூபங்காட்டும் பீடத்தின்மேலே தூபங்காட்டக் கர்த்தருடைய தேவாலயத்திற்குட் பிரவேசித்தான்.

௰௭ ஆனால் ஆசாரியனாகிய அசரியாவும் அவனோடேகூடக் கர்த்தரின் ஆசாரியரான பராக்கிரமக்காரராகிய எண்பதுபேரும் அவன் பிறகாலே யுட்பிரவேசித்து,

௰௮ இராசாவாகிய உசியாவோடே எதிர்த்துநின்று அவனுடனே, உசியாவே! கர்த்தருக்குத் தூபங்காட்டுகிறது உமக்கு

கடுத்ததல்ல. தூபங்காட்டப் பரிசுத்தமாக்கப்பட்ட ஆரோனின் குமாரராகிய ஆசாரியருக்கே அடுக்கும். பரிசுத்த ஸ்தலத்தை விட்டு வெளியே போம். மீறினீர்; இது தேவனாகிய கர்த்தரால் உமக்கு மேன்மையாயிராது என்றார்கள்.

௧௯ அப்போது உசியா மனமடிவாகி, தூபங்காட்ட ஒரு கலசத்தைக் கையிலே பிடித்திருந்தான். அவன் ஆசாரியரோடே முறுமுறுக்கிறபோது, கர்த்தருடைய வீட்டிலே தூபபீடத்தின் முன் நிற்கிற அவனுடைய நெற்றியில் ஆசாரியருக்கு முன்பாகக் குஷ்டம் எழும்பிற்று.

௨௰ பிரதான ஆசாரியனாகிய அசரியாவும் எல்லா ஆசாரியர்களும் அவனைத் திரும்பிப் பார்க்கும்போது, இதோ, அவன் தன் நெற்றியிலே குஷ்டம் பிடித்தவனென்று கண்டு, அவனைத் தீவிரமாக அவ்விடத்திலிருந்து துரத்திவிட்டார்கள்; அவனும் கர்த்தர் தன்னை அடித்ததினால் புறப்படத் தீவிரப்பட்டான்.

௨௰௧ அப்படியே இராசாவாகிய உசியா தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாயிருந்து, கர்த்தருடைய வீட்டுக்குப் புறம்பாக்கப்பட்டபடியினாலே ஒரு தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம்பண்ணினான். அவன் குமாரனாகிய யோதாம் ராசாவின் வீட்டு விசாரிப்புக்காரனாயிருந்து, தேசத்தின் சனத்தை நியாயம் விசாரித்தான்.

௨௰௨ உசியாவினுடைய மற்ற நடபடிகளை ஆதியோடந்தமாக ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்கிற தீர்க்கதரிசி எழுதினான்.

௨௰௩ உசியா தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனை அவன் பிதாக்களண்டையில், ராசாக்கள் அடக்கம்பண்ணப்படுகிற நிலத்திலே அடக்கம்பண்ணினார்கள்; ஏனென்றால் அவன் குஷ்டரோகியென்றார்கள்; அவன் குமாரனாகிய யோதாம் அவன் ஸ்தலத்தில் ராசாவானான்.

௨௭. அதிகாரம்.

யோதாமின் நன்மார்க்கமான இராசரிய பாரம்.

யோதாம் இராசாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து பதினாறு வருஷமாக எருசலேமில் அரசாண்டான்; சாதோக்கின் குமாரத்தியாகிய அவன் தாயின் பேர் எருசாள்.

௨ அவன் தன் தகப்பனாகிய உசியா செய்தபடியெல்லாம் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்; ஆனாலும் அவனைப்போலக் கர்த்தரின் தேவாலயத்திற்குட்பிரவேசியாதிருந்தான்; சனமோவென்றால் இன்னும் தன்னைக் கெடுத்துக்கொண்டிருந்தது.

௩ அவன் கர்த்தருடைய வீட்டின் உயர்ந்த வாசலைக் கட்டி, ஓபேலின் மதிலின்மேலும் வெகுவாய்க் கட்டினான்.

௪ யூதாவின் மலைகளிலே பட்டணங்களைக் கட்டி, காடுகளிலே கோட்டைகளையும் கோபுரங்களையும் கட்டினான்.

௫ அவன் அம்மோன் புத்திரருடைய இராசாவோடே யுத்தம்பண்ணி, அவர்களுக்கு மேற்கொண்டான்; அந்த வருஷத்திலே அம்மோன் புத்திரர் அவனுக்கு நூறு தாலந்து வெள்ளியையும், பதினாயிரக்கலக் கோதுமையையும், பதினாயிரக்கல வாற்கோதுமையையும் கொடுத்தார்கள்; அப்படி அம்மோன் புத்திரர் இரண்டாம் மூன்றாம் வருஷத்திலும் அவனுக்குச் செலுத்தினார்கள்.

௬ அப்படியே யோதாம் தன் வழிகளைத் தன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நேராக்கினதினாலே பலத்துப்போனான்.

௭ யோதாமின் மற்ற வர்த்தமானங்களும், அவனுடைய எல்லா யுத்தங்களும், அவனுடைய வழிகளும், இதோ, இஸ்ரவேல் யூதா இராசாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கின்றன.

௮ அவன் இராசாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து, பதினாறு வருஷமாய் எருசலேமில் அரசாண்டான்.

௯ யோதாம் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின், அவனைத் தாவீதின் பட்டணத்தில் அடக்கம்பண்ணினார்கள்; அவன் குமாரனாகிய ஆகாஸ் அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௨௮. அதிகாரம்.

ஆகாசுடைய துன்மார்க்கமான இராசரிய பாரம்.

ஆகாஸ் இராசாவாகிறபோது இருபது வயதாயிருந்து, பதினாறு வருஷமாய் எருசலேமிலே அரசாண்டான்; ஆனாலும் அவன் தன் தகப்பனாகிய தாவீதைப்போலக் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்யாமல்,

௨ இஸ்ரவேல் இராசாக்களின் வழிகளில் நடந்து, பாகால்களுக்குச் சிலைகளையும் வார்ப்பித்தான்.

௩ அவன் இன்னோம் குமாரனின் பள்ளத்தாக்கிலே தூபங்காட்டி கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின சாதிகளுடைய அருவருப்புகளின்படியே தன் குமாரரைப் பலியாக அக்கினியிலே போட்டு,

௪ மேடைகளிலும் மேடுகளின்மேலும் பச்சையான சகல மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டினான்.

௫ ஆகையால் அவனுடைய பராபரனாகிய கர்த்தர் அவனைச் சீரியருடைய இராசாவின் கையிலே ஒப்புக்கொடுத்தார்; இவர்கள் அவனை முறியடித்து அவனுக்கிருக்கிறவர்களிலே பெரிய கூட்டத்தைச் சிறைப்பிடித்துத் தமஸ்குவுக்குக் கொண்டுபோனார்கள். அவன் இஸ்ரவேலுடைய இராசாவின் கையிலும் ஒப்புக்கொடுக்கப்பட்டான், இவன் அவனை வெகுவாய் முறியடித்தான்.

௬ எப்படியென்றால் பூக்காமுனுஷர் தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரை விட்டதினாலே, ரெமலியாவின் குமாரனாகிய பேக்கா அவர்களில் ஒரே நாளிலே இலட்சத்திருபதினாயிரம் பேரைக் கொன்றுபோட்டான். அவர்களெல்லாரும் நல்ல சேவகராயிருந்தவர்கள்.

௭ இதல்லாமல் எப்பிராயீமின் பலத்த மனுஷனாகிய சிக்ரி என்பவன் இராசாவின் குமாரனாகிய மாசேயாவையும் அரமனை விசாரிப்புக்காரனாகிய அசரிக்காமையும் இராசாவுக்கு இரண்டாவதான எல்க்கானாவையும் கொன்றுபோட்டான்.

௮ இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரரில் இரண்டு லட்சம்பேராகிய ஸ்திரீகளையும் குமாரரையும் குமாரத்திகளையும் சிறைபிடித்து, அவர்களில் மகா ஏராளமாய்க் கொள்ளையிட்டுக் கொள்ளையைச் சமாரியாவுக்குக் கொண்டுபோனார்கள்.

௯ அங்கே ஓதேத் என்னும்பேருள்ள கர்த்தருடைய தீர்க்கதரிசி யிருந்தான், அவன் சமாரியாவுக்கு வருகிற இராணுவத்துக்கு எதிர்க்கப்புறப்பட்டு, அவர்களை நோக்கி: இதோ, உங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தர் யூதாவின்மேல் உக்கிரமானதினால் அவர்களை உங்கள் கைகளிலே ஒப்புக்கொடுத்தார், நீங்களோவென்றால் வானபரியந்தம் எட்டுகிற உக்கிரத்தோடே அவர்களைச் சங்காரம்பண்ணினீர்கள்.

௰ இப்போதும் யூதாவின் புத்திரரையும் எருசலேமியரையும் நீங்கள் உங்களுக்கு வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் கீழ்ப்படுத்தவேண்டுமென்று நினைக்கிறீர்கள். உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கு விரோதமான குற்றமுள்ளவர்கள் நீங்களல்லவோ?

௰௧ ஆதலால் நீங்கள் என் சொல்லைக் கேட்டு, நீங்கள் உங்கள் சகோதரரிடத்திலே சிறைபிடித்துக் கொண்டுவந்தவர்களைத் திரும்ப அனுப்பிவிடுங்கள். ஏனெனில் கர்த்தருடைய கோபத்தின் உக்கிரம் உங்கள்மேலிருக்கிறதென்றான்.

௰௨ அப்பொழுது எப்பிராயீம் புத்திரருடைய தலைவரில் சிலபேராகிய யோகனானின் குமாரனான அசரியாவும் மெஷிலேமோத்தின் குமாரனான பெரேகியாவும் சல்லுூமின் குமாரனான எசேக்கியாவும் அத்லாயின் குமாரனான அமாசாவும் இராணுவத்திலிருந்தவர்களுக்கு விரோதமாக எழும்பி,

௰௩ அவர்களுடனே, நீங்கள் சிறைபிடித்தவர்களை இங்கே கொண்டுவரவேண்டாம். என்னென்றால் நம்முடைய மேலிருந்த குற்றமும் இஸ்ரவேலின்மேற் கோபதிலும் இருக்கக்கொள்ள நீங்கள் கர்த்தருக்கு முன்பாக நம்முடைய குற்றத்துக்கும் பண்ணத்தக்கதாய் நம்முடைய பாவங்களையும் நம்முடைய குற்றங்களையும் அதிகமாக்கத் தேடுகிறீர்களென்றார்கள்.

௰௪ அப்போது ஆயுதமுள்ளவர்கள் சிறைபிடித்தவர்களையும் கொள்ளையுடைமைகளையும் பிரபுக்களுக்கும் எல்லாச் சபைக்கும் முன்பாக விட்டுவிட்டார்கள்.

௰௫ அப்போது பேர்பேராகச் சொல்லப்பட்ட மனுஷர் எழும்பி சிறைபிடிக்கப்பட்டவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களில் அம்மணமானவர்களெல்லாருக்கும் கொள்ளையுடைமைகளால் வஸ்திரங்களைக் கொடுத்து அவர்களுக்கு உடுப்பையும் பாதரட்சைகளையும் போடுவித்து அவர்களுக்குச் சாப்பாடும் தாகத்திற்குக் கொடுத்து அவர்களுக்கு எண்ணெய்வார்த்து அவர்களில் பலட்சயமானவர்களையெல்லாம் கழுதைகளின்மேலேற்றிப் பேரீச்சங்களின் பட்டணமாகிய எரிகோவிலே அவர்கள் சகோதரரண்டைக்குக் கொண்டுவந்து விட்டுச் சமாரியாவுக்குத் திரும்பினார்கள்.

௰௬ அக்காலத்திலே ஆகாசென்ற இராசா அசூரின் இராசாக்கள் தனக்கொத்தாசைபண்ண அவர்களண்டைக்கு ஆட்களையனுப்பினான்.

௰௭ ஏதோமியருங் கூடவந்து யூதாவை முறியடித்துச் சிலரைச் சிறைப்பிடித்துப் போயிருந்தார்கள்.

௰௮ பெலிஸ்தரும் யூதாவிலே சமனான பூமியிலுந் தென்றிசையுமிருக்கிற பட்டணங்களின்மேல் விழுந்து பெத்சேமேசையும் ஆயலோனையுங் கெதெரோத்தையுஞ் சொக்கோவையும் அதின் கிராமங்களையுந் திம்னாவையும் அதின் கிராமங்களையுங் கிம்சோவையும் அதின் கிராமங்களையும் பிடித்து அங்கே குடியேறினார்கள்.

௰௯ ஏனென்றால் யூதாவின் இராசாவாகிய ஆகாசினிமித்தங் கர்த்தர் யூதாவைத் தாழ்த்தியாக்கினார். அதேதென்றால் அவன் யூதாவைச் சீர்கேடாக்கிக் கர்த்தருக்கு விரோதமாய் மிகவுந் துரோகம் பண்ணினான்.

௨௰ அசூரின் இராசாவாகிய திலகாத்பில்நேசர் அவனண்டைக்கு வந்தான். ஆனால் அவனைத் திடப்படுத்தாமல் அவனை நெருக்கம் பண்ணினான்.

௨௧ ஏனெனில் ஆகாஸ் கர்த்தருடைய வீட்டில் ஒருபங்கும் இராச அரண்மனையிலொருபங்கும் பிரபுக்களின் கையிலொருபங்கும் பிடித்து அசூரின் இராசாவுக்குக் கொடுத்தும் அவனுக்குதவாதே போயிற்று.

௨௨ தான் நெருக்கப்படுகிற காலத்திலுங் கூடக் கர்த்தருக்கு விரோதமாய் அந்த ஆகாசென்ற இராசா துரோகம் பண்ணிக்கொண்டேயிருந்தான்.

௨௩ அதேதெனில் தன்னை முறியடித்த தமஸ்குவின் தேவர்களுக்கவன் பலியிட்டுச் சூரியாவினுடைய இராசாக்களின் தேவர்கள் அவர்களுக்கொத்தாசை பண்ணுகிறபடியினாலே அவர்களெனக்கும் ஒத்தாசை பண்ண அவர்களுக்குப் பலியிடுவேனென்பான். ஆனால் அவைகள் அவனுக்கும் இஸ்ரேவலனைத்திற்கும் விழுகிறதற்கினமாயிற்று.

௨௪ ஆகாஸ் பராபரனுடைய வீட்டின் தட்டுமுட்டுகளைக் கூட்டிப் பராபரனுடைய வீட்டின் தட்டுமுட்டுகளைத் துண்டுதுண்டாக்கிக் கர்த்தருடைய வீட்டின் கதவுகளைப் பூட்டிப்போட்டு எருசலேமிலெச் சகல மூலைகளிலுந் தனக்குப் பலிபீடங்களையுண்டு பண்ணி,

௨௫ அந்நியதேவர்களுக்குத் தூபங்காட்டும்படிக்கு யூதாவின் ஒவ்வொரு பட்டணத்திலே மேடைகளையுண்டுபண்ணித் தன் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தருக்குக் கோபமுண்டாக்கினான்.

௨௬ அவனுடைய மற்றவர்த்தமானங்களும் அவனுடைய முன்பின் வழிகளுமெல்லாம் இதோ, அவைகள் யூதா இஸ்ரேவலின் இராசாக்களின் புஸ்தகத்திலெழுதியிருக்கின்றது.

௨௭ ஆகாஸ் தன் பிதாக்களோடே நித்திரையடைந்தபின் அவனை எருசலேம் பட்டணத்தில் அடக்கம் பண்ணினார்கள். ஆனால் இஸ்ரேவல் இராசாக்களின் கல்லறைகளில் அவனைக் கொண்டுவந்து வைக்கவில்லை. அவன் குமாரனாகிய இஸ்கியா அவன் ஸ்தலத்தில் இராசாவானான்.

௨௯ அதிகாரம்.

இஸ்கியா இராசா தேவ ஆராதனையைத் திரும்பஸ்தாபித்தது.

இஸ்கியா இருபத்தைந்தாம் வயதிலே இராசாவாகி, இருபத்தொன்பது வருஷமாய் எருசலேமில் அரசாண்டான். சகரியாவின் குமாரத்தியாகிய அவனுடைய தாயின் பேர் அபியாள்.

௨ அவன் தன் தகப்பனாகிய தாவீதின்படியெல்லாங் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான்.

௩ அவன் தன் இராசரியபாரத்தின் முதலாம் வருஷம் முதலாமாதத்திலே கர்த்தருடைய வீட்டின் கதவுகளைத் திறந்து அவைகளைப் பழுதுபார்த்து,

௪ ஆசாரியரையும் லேவியரையும் அழைத்துவந்து, அவர்களைக் கிழக்கு வீதியிலே கூட்டிக்கொண்டு,

௫ அவர்களுடனே சொன்னதாவது, லேவியரே! என்னைக் கேளுங்கள். நீங்களிப்போது உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு உங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தருடைய வீட்டைப் பரிசுத்தம் பண்ணி அழுக்கைப் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே கொண்டுபோங்கள்.

௬ ஏனென்றால் நம்முடைய பிதாக்கள் துரோகம் பண்ணி, நம்முடைய பராபரனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, அவரைவிட்டுத் தங்கள் முகங்களைக் கர்த்தருடைய வாசஸ்தலத்தைவிட்டுத் திருப்பி அதற்குப் பிடரியைக் காட்டினார்கள்.

௭ அவர்கள் மண்டபத்தின் கதவுகளையும் பூட்டி விளக்குகளையும் அணைத்துப்போட்டுத் தூபவர்க்கத்தைக் காட்டாமலும் பரிசுத்த ஸ்தலத்தில் இஸ்ரேவலின் பராபரனுக்குச் சர்வாங்கத் தகனபலியைச் செலுத்தாமலும் போனார்கள்.

௮ ஆகையாற் கர்த்தருடைய கடுங்கோபம் யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் வந்தது. அவர் இவர்களை, நீங்கள் உங்கள் கண்களினாற் காண்கிறபடி அலைச்சலுக்கும் பாழாகுதலுக்கும் பயிற்போடுதலுக்கும் ஒப்புக்கொடுத்தார்.

௯ இதோ, இதினிமித்தமாக நம்முடைய பிதாக்கள் பட்டயத்தினால் விழுந்து, நம்முடைய குமாரரும் நம்முடைய குமாரத்திகளும் நம்முடைய பெண்சாதிகளும் சிறையிருப்பில் அகப்பட்டார்கள்.

௰ இப்போதும் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருடைய கோபத்தின் உக்கிரம் நம்மைவிட்டுத் திரும்பும்படிக்கு அவரோடே உடம்படிக்கைபண்ண என் மனதிலே தீர்மானித்துக்கொண்டேன்.

௰௧ என் குமாரரே! இப்போது அசதியாயிராதேயுங்கள். ஏனெனில் நீங்கள் கர்த்தருக்குப் பணிவிடைசெய்கிறதற்கு அவருக்கு முன்பாக நிற்கவும் அவருக்கு ஊழியஞ்செய்கிறவர்களும் தூபங்காட்டுகிறவர்களுமாயிருக்கவும் உங்களை அவர் தெரிந்துகொண்டாரென்றான்.

௰௨ அப்போது கேகாத்புத்திரரில் அமாசாயின் குமாரன் மகாத்தும், அசரியாவின் குமாரன் யோவேலும், மெராரியின் புத்திரரில் அப்தியின் குமாரன் கீசும், எகலேலின் குமாரன் அசரியாவும், கெர்சோனியரில் சிம்மாவின் குமாரன் யோவாகும், யோவாகின் குமாரன் ஏதேனும்,

௰௩ எலிசாப்பானின் புத்திரரிற் சிம்ரியும் ஏயெலும், ஆசாபின் புத்திரரிற் சகரியாவும் மத்தனியாவும்,

௰௪ ஏமானின் புத்திரரில் எகியேலும் சிமேயியும், எதுத்தூனின் புத்திரரிற் செமாயாவும் ஊசியேலுமென்ற லேவியர் எழும்பி,

௰௫ தங்கள் சகோதரரைக் கூட்டிப் பரிசுத்தம்பண்ணிக்கொண்டு, கர்த்தருடைய வசனங்களுக்கொத்த இராசாவினுடைய கற்பனையின்படியே கர்த்தருடைய வீட்டைச் சுத்திகரிக்க வந்தார்கள்.

௰௬ ஆசாரியர்கள் கர்த்தருடைய வீட்டின் உட்புறத்திலே சுத்திகரிக்கும்படிக்குப் பிரவேசித்துக் கர்த்தருடைய தேவாலயத்திற் கண்டுபிடித்த சகல அசுத்தத்தையும் வெளியே கர்த்தருடைய வீட்டுப் பிராகாரத்திற் கொண்டுவந்தார்கள். அப்போது லேவியர் அதை வெளியே கீதரோன் ஆற்றிற்குக் கொண்டுபோக வாங்கிக்கொண்டார்கள்.

௰௭ முதல்மாதம் முதற்தேதியிலே அவர்கள் பரிசுத்தம்பண்ணத் துவக்கி, எட்டாந்தேதியிலே கர்த்தருடைய மண்டபத்திலே பிரவேசித்துக் கர்த்தருடைய வீட்டை எட்டுநாளிற் பரிசுத்தம்பண்ணி, முதலாம் மாதம் பதினாறாந்தேதியிலே அதை முடித்தது,

௰௮ இராசாவாகிய எசேக்கியாவண்டைக்கு உள்ளே பிரவேசித்து, நாங்கள் கர்த்தரின் வீட்டனைத்தையும் சர்வாங்கதகன பலிபீடத்தையும் அதினுடைய எல்லாப் பணிமுட்டுகளையுஞ் சமுகத்தப்பங்களின் மேசையையும் அதின் சகல பணிமுட்டுகளையுஞ் சுத்திகரித்தது,

௰௯ இராசாவாகிய ஆகாஸ் அரசாளுகிறபோது, தம்முடைய பாதகத்தினாலே எறிந்துபோட்ட சகல தட்டுமுட்டுகளையும் ஆயத்தப்படுத்திப் பரிசுத்தம்பண்ணினோம். இதோ, அவைகள் கர்த்தரின் பீடத்திற்கு முன்பாக விருக்கின்றதென்றார்கள்.

௨௰ அப்போது இராசாவாகிய எசேக்கியா காலமேயெழுந்திருந்து பட்டணத்தின் பிரபுக்களைக் கூட்டிக்கொண்டு, கர்த்தரின் வீட்டிற்குப் போயேறினான்.

௨௧ அப்போது இராச்சியபாரத்திற்காகவும் பரிசுத்த ஸ்தலத்திற்காகவும் யூதாவுக்காகவும் ஏழு காளைகளையும் ஏழு ஆட்டுக்கிடாய்களையும் ஏழு ஆட்டுக்குட்டிகளையும் ஏழு வெள்ளாட்டுக்கிடாய்களையும் பாவம்போக்கும் பலியாகக் கொண்டுவந்தார்கள். அவைகளைக் கர்த்தருடைய பலிபீடத்தின்மேற் பலியிடுங்களென்று அவன் ஆசாரியராகிய ஆரோனின் புத்திரருக்குச் சொன்னான்.

௨௨ அப்படியே எருதுகளைக் குர்ல்வளையறுத்தார்கள். அந்த இரத்தத்தை ஆசாரியர் பிடித்துப் பலிபீடத்தின்பேரிலே தெளித்தார்கள். ஆட்டுக்கிடாய்களைக் குர்ல்வளையறுத்து அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே தெளித்தார்கள். ஆட்டுக்குட்டிகளையுங் குர்ல்வளையறுத்து அவைகளின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே தெளித்தார்கள்.

௨௩ பிற்பாடு பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கிடாய்களை இராசாவுக்கும் சபைக்கும் முன்பாகக் கொண்டுவந்தார்கள். அவைகள்மேல் இவர்கள் தங்கள் கைகளை வைத்தார்கள்.

௨௪ பிற்பாடு ஆசாரியர் அவைகளைக் குர்ல்வளையறுத்து, இஸ்ரவேலனைத்திற்கும் பாவநிவர்த்தியுண்டாக அவைகளின் இரத்தத்தாற் பலிபீடத்தின்மேற் பாவம்

போகிறார்கள். ஏனென்றால் இஸ்ரவேல் அனைத்திற்காகவும் சர்வாங்கதகனபலியையும் பாவம்போக்கும் பலியையுஞ் செலுத்துங்களென்று இராசா சொல்லியிருந்தான்.

உரு அவன் தாவீதும் இராசாவினுடைய திஷ்டிப்புருஷனாகிய காத்தும் தீர்க்கதரிசியாகிய நாத்தானும் கற்பித்தபடியே கைத்தாளங்களையுந் தம்புருக்களையுஞ் சுரமண்டலங்களையும் வாசிக்கிற லேவியரையுங் கர்த்தருடைய வீட்டிலே நிறுத்தினான். ஏனென்றாற் கர்த்தரால் தம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு கட்டளையிருந்தது.

உசா அப்படியே லேவியர் தாவீதின் தேவாத்தியங்களையும் ஆசாரியர்கள் பூரிகைகளையும் பிடித்து நின்றார்கள்.

உஎ அப்போது இஸ்கியா சர்வாங்கதகனபலிகளைப் பலிபீடத்தின்மேலே செலுத்தக்கற்பித்தான். அவைகள் செலுத்தத்துவக்கப்படுகிற நேரத்திலே கர்த்தரின் கீதமும் பூரிகைகளுந் தாவீதென்ற இஸ்ரவேலுடைய இராசாவின் தேவாத்தியமுட்டுகளும் முழங்கத்துவக்கிறது.

உஅ கீதத்தைப்பாடிப் பூரிகைகளை ஊதிக்கொண்டிருக்கையிலே சபையெல்லாம் பணிந்துகொண்டிருந்து சர்வாங்கதகனத்தைச் செலுத்தித்தீருமட்டும் இப்படியெல்லாமிருந்தது.

உக பலியிட்டுத்தீர்ந்தபோது இராசாவும் அவனோடிருந்த அனைவரும் குனிந்து பணிந்துகொண்டார்கள்.

௩௰ பிற்பாடு இஸ்கியா இராசாவும் பிரபுக்களும் லேவியருடனே, நீங்கள் கர்த்தரைத் தாவீதுமுனான திஷ்டிப்புருஷனாகிய ஆசாபும் பாடினவார்த்தைகளினாலே துதியுங்களென்றார்கள். அப்போது மகிழ்ச்சியாகுமட்டுந் துதிசெய்து குனிந்துபணிந்துகொண்டார்கள்.

௩௧ அதின்பிறகு இஸ்கியா மறுஉத்தாரமாக இப்போதுங்கள் கர்த்தருக்கென்று உங்கள் கைகளை நிரப்பினீர்களே; ஆகையாற் சேர்ந்து, கர்த்தருடைய வீட்டிற்குப் பலிகளையுந் துதியின்பலிகளையுங்கொண்டுவாருங்களென்றான். அப்போது சபையார் துதிபலிகளையுந் துதியின் பலிகளையும் மனப்பூர்வமானவனெல்லாஞ் சர்வாங்கதகனபலிகளையுங்கொண்டுவந்தார்கள்.

௩௨ சபைகொண்டுவந்த சர்வாங்கதகனபலிகளின் தொகை எழுபதுகாளைகளும் நூறு ஆட்டுக்கிடாய்களும் இருநூறு ஆட்டுக்குட்டிகளுமானது. இவைகளெல்லாங் கர்த்தருக்குச் சர்வாங்கதகனமாயிருந்தது.

௩௩ பரிசுத்தவேலைக்குக் கொடுக்கப்பட்டவைகளோவெனில் அறுநூறுமாடுகளும் மூவாயிரம் ஆடுகளுமானது.

௩௪ ஆனால் அந்தச் சர்வாங்கதகனமாகிய மிருகஜீவன்களையெல்லாந் தோலுரிக்கக் கொஞ்சப்பேரான ஆசாரியர்களால் முடியாதபடியினாலே மற்றவேலை நிறைவேறும்வரைக்கும் மற்ற ஆசாரியர் தங்களைப் பரிசுத்தம் பண்ணுமட்டாகவும், அவர்களின் சகோதரராகிய லேவியர் அவர்களுக்கு உதவி செய்தார்கள். ஏனெனில் தங்களைப் பரிசுத்தம்பண்ண லேவியர் ஆசாரியரைப்பார்க்கிலும் மனஞ்செம்மையாயிருந்தார்கள்.

௩௫ ஏனென்றாற் சர்வாங்கதகனபலிகளும் ஸ்தோத்திரப் பலிகளின்கொழுப்புகளும் சர்வாங்கதகனங்களுக்கடுத்த பானபலிகளோடேகூட அநேகமாயிருந்தது. அப்படியே கர்த்தருடைய வீட்டின் ஆராதனை திட்டம்பண்ணப்பட்டது.

௩௬ பராபரன் சனத்தை ஆயத்தப்படுத்தினதற்காக இஸ்கியாவுஞ் சனமனைத்துஞ் சந்தோஷப்பட்டார்கள். ஏனென்றால் இந்தக்காரியந் தீவிரத்துடனே செய்யப்பட்டது.

௩௰. அதிகாரம்.

இஸ்கியாவின்காலத்திலே பஸ்கா ஆசரிக்கப்பட்டது.

அதின்பிறகு இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை யாசரிக்கும்படிக்கு எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய வீட்டிற்கு வாருங்களென்று இஸ்கியா இஸ்ரவேல் யூதா எங்கும் ஆட்களை அனுப்பி எப்பிராயீமுக்கும் மனாசேக்கும் நிருபங்களையும் எழுதியனுப்பினான்.

௨ ஏனெனில் பஸ்காவை இரண்டாம் மாதத்தில் ஆசரிக்கும்படிக்கு, இராசாவும் அவனுடைய பிரபுக்களும் எருசலேமிலுள்ள சபையனைத்துமாய் யோசனைபண்ணியிருந்தார்கள்.

௩ அதேனென்றால் ஆசாரியர்போதுமான பேர்களாய்த் தங்களைப் பரிசுத்தம்பண்ணியிருக்கவில்லை, சனமும் எருசலேமிலே வந்து கூடவில்லை. ஆகையால் அக்காலத்திலே அதை யாசரிக்கக் கூடாதேபோயிற்று.

௪ இந்தக்காரியம் இராசாவின் பார்வைக்கும் எல்லாச் சபையின் பார்வைக்கும் நியாயமாய்க்கண்டு,

௫ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கிறதற்கு எருசலேமுக்கு வாருங்களென்று பெயர்செபா துவக்கித் தாண்மட்டுமுள்ள இஸ்ரவேல் தேசமெங்கும் பறைமுறையிடுவிக்கத் தீர்மானம்பண்ணினார்கள். ஏனெனில் திரள்கூட்டமாய் அவர்கள் அதை எழுதியிருக்கிறபடி ஆசரிக்கவில்லை.

௬ அப்படியே இராசாவும் அவனுடைய பிரபுக்களும் கொடுத்த நிருபங்களை அஞ்சல்காரர் வாங்கி இராசாவுடைய கற்பனையின்படியே இஸ்ரவேல் யூதாவெங்கும் போய்ச்சொன்னதாவது, இஸ்ரவேல் புத்திரரே! ஆபிரகாம், ஈசாக், இஸ்ரவேலுடைய பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திரும்புங்கள். அப்பொழுது அசூருடைய இராசாக்களின் கைக்குத் தப்பி உங்களுக்கு மீதியானவர்களண்டைக்கு அவர் திரும்புவார்.

௭ நீங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தருக்குத் துரோகம்பண்ணின உங்கள் பிதாக்களைப்போலும் உங்கள் சகோதரரைப்போலும் இராதேயுங்கள். அதற்காக நீங்கள் காண்கிறபடியே அவர்களைப் பாழ்க்கடிப்புக்குக் கொடுத்தாரே.

௮ இப்பொழுதும் உங்கள் பிதாக்களைப்போலே உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாதேயுங்கள். நீங்கள் கர்த்தருக்குக் கையைக் கொடுத்து அவர் என்றுமுள்ள காலமாகப் பரிசுத்தம்பண்ணின அவருடைய பரிசுத்தஸ்தலத்திற்கு வந்து உங்கள் பராபரனாகிய கர்த்தரைச் சேவியுங்கள். அப்பொழுது அவருடைய கோபத்தின் உக்கிரம் உங்களை விட்டுத் திரும்பும்.

௯ ஏனெனில் நீங்கள் கர்த்தரண்டைக்குத் திரும்பினால் உங்கள் சகோதரரும் உங்கள் பிள்ளைகளும் தங்களைச் சிறைபிடித்தவர்களுக்கு முன்பாக இரக்கம் பெறுகிறதற்கும் இந்தத் தேசத்திற்குத் திரும்புகிறதற்கும் அது உதவும். அதேதென்றால் உங்கள் பராபரனாகிய கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். நீங்கள் அவரண்டைக்குத் திரும்பினால் அவர் தமது முகத்தை உங்களை விட்டு விலக்குவதில்லையென்றார்கள்.

௰ அப்படியே அஞ்சல்காரர் எப்பிராயீம் மனாசே தேசங்களிலும் செபுலோன் மட்டும் ஊரூராகத் திரிந்தார்கள். ஆனாலும் அவர்கள் அவர்களை நகைத்துப் பரியாசம்பண்ணினார்கள்.

௰௧ ஆகிலும் ஆசேரிலும் மனாசேயிலும் செபுலோனிலும் சிலர் மனத்தாழ்மையாகி எருசலேமுக்கு வந்தார்கள்.

௰௨ கர்த்தருடைய வார்த்தையின்படியே இராசாவும் பிரபுக்களும் கற்பித்த பிரகாரமாகச் செய்கிறதற்கு யூதாவின்மேலே பராபரனுடைய கரம் அவர்களை ஒருமனப்படுத்தியிருந்தது.

௰௩ அப்படியே இரண்டாம் மாதத்திற் புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையை ஆசரிக்க வெகுஜனம் எருசலேமிலே கூடிற்று. மகா பெரிய கூட்டமாயிற்று.

௰௪ அவர்கள் எழும்பி எருசலேமிலுண்டான பீடங்களையகற்றித் தூபங்காட்டுகிற பீடங்களையெல்லாம் அகற்றிக் கீதரோன் ஆற்றிலே போட்டார்கள்.

௰௫ பிற்பாடு அந்த இரண்டாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்காவின் ஆட்டுக்குட்டியைக் கொலையறுத்தார்கள். ஆசாரியரும் லேவியரும் வெட்கித் தங்களைச் சுத்தம்பண்ணிச் சர்வாங்கதகனபலிகளைக் கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவந்து,

௰௬ பராபரனுடைய மனுஷனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கொத்த தங்கள் முறைமையின்படியே தங்கள் தானத்தில் நின்றார்கள். ஆசாரியர் லேவியரின் கையிலே இரத்தத்தை வாங்கித் தெளித்தார்கள்.

௰௭ ஏனெனிற் சபையிலே அநேகர் தங்களைப் பரிசுத்தம்பண்ணிக்கொள்ளாதிருந்தார்கள். ஆகையாற் சுத்தமில்லாத எல்லாரையும் கர்த்தருக்குப் பரிசுத்தம்பண்ண லேவியர் அவர்களுக்காகப் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளைக் கொலையறுக்கும் வேலையை விசாரித்தார்கள்.

௰௮ அதேதென்றால் எப்பிராயீம் மனாசே இசக்கார் செபுலோன் மனுஷரில் ஏராளமான அநேகஜனங்கள் சுத்தம்பண்ணிக்கொள்ளாதிருந்தும் எழுதியிராத பிரகாரமாகப் பஸ்காவைச் சாப்பிட்டார்கள்.

௰௯ ஏனெனில் இஸ்கியா அவர்களுக்காக விண்ணப்பம்பண்ணித் தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரான பராபரனைத் தேடும்படிக்குத் தங்களிருதயத்தை நேராக்கினவர்கள் பரிசுத்தஸ்தலத்திற் சுத்தாங்கமில்லாதிருந்தாலும் கிருபையுள்ள பராபரன் அவர்களெல்லாருக்கும் மன்னிப்பாராகவென்றான்.

௨0 கர்த்தர் இஸ்கியாவின் விண்ணப்பங்கேட்டுச் சனத்திற் காரோக்கியங்கொடுத்தார்.

௨௧ அப்படியே எருசலேமிலே காணப்பட்ட இஸ்ரவேல்புத்திரர் புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையை ஏழுநாளாக

மகா மகிழ்ச்சியோடே யாசரித்தார்கள். லேவியரும் ஆசாரியரும் தினந்தினங் கர்த்தருக்கென்று ஓசையாய்த் தொனிக்குந் தேவாத்தியங்களாற் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருந்தார்கள்.

௨௨ கர்த்தருக்கடுத்த காரியத்திலே நல்ல உணர்வுள்ள எல்லா லேவியரோடும் எஸக்கியா பட்சமாய்ப் பேசுவான். இப்படியவர்கள் பண்டிகைக்கானதை ஏழுநாட் போசித்துஸ்தோத்திரப் பலிகளைச் செலுத்தித் தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரைத் துதித்துக் கொண்டிருந்த பிறபாடு,

௨௩ வேறே ஏழுநாளையாசரிக்கச் சபையெல்லாம் யோசனை பண்ணி, அந்த ஏழுநாளையும் மகிழ்ச்சியோடே ஆசரித்தார்கள்.

௨௪ ஏனென்னில் யூதாவின் இராசாவாகிய எஸக்கியா சபைக்கு ஆயிரங் காளைகளையும் ஏழாயிரம் ஆடுகளையுங் கொடுத்தான். பிரபுக்களுஞ் சபைக்கு ஆயிரங் காளைகளையும் பதினாயிரம் ஆடுகளையுங் கொடுத்தார்கள். ஆசாரியரின் திரளான சனமுந் தங்களைச் சுத்தம் பண்ணினார்கள்.

௨௫ யூதாவின் சபையனைத்தும் ஆசாரியரும் லேவியரும் இஸ்ரவேலிலிருந்து வந்தவர்களுடைய சபையனைத்துமாகிய இஸ்ரவேல் தேசத்திலிருந்து வந்த அந்நியரும் யூதாவிற் குடியிருக்கிறவர்களும் மகிழ்ச்சியாயிருந்தார்கள்.

௨௬ அப்படியே எருசலேமில் மகா சந்தோஷமுண்டாயிருந்தது. ஏனென்னில் தாவீதின் குமாரனாகிய சாலோமோனென்ற இஸ்ரவேலுடைய இராசாவின் நாட்கள் முதற்கொண்டு இப்படிக்கொத்தது எருசலேமிலே நடந்ததில்லை.

௨௭ லேவியரான ஆசாரியர்கள் எழுந்து சனத்தை யாசீர்வதித்தார்கள். அவர்களுடைய சத்தங் கேட்கப்பட்டு, அவர்கள் விண்ணப்பம் பரமண்டலங்களிலுள்ள அவருடைய பரிசுத்த வாசஸ்தலத்திற் கேறிற்று.

௩௧. அதிகாரம்.

இஸக்கியா விக்கிரக வேலையையெல்லாம் நிர்மூலமாக்கி, ஆசாரியரையும் லேவியரையும் பராமரித்தது.

இதையெல்லாம் முடித்த பிறபாடு வந்திருந்த இஸ்ரவேலரெல்லாம் யூதாவின் பட்டணங்களுக்குப் புறப்பட்டுப்போய் யூதா பெஞ்யமீனெங்கும் எப்பிராயீமிலும் மனாசேயிலுங்கூட உண்டான சிலைகளையுடைத்துத் தோப்புகளை வெட்டி மேடைகளையும் பீடங்களையுமிடித்து அதையெல்லாந் தீர்த்தவின் பிறபாடு இஸ்ரவேல் புத்திரரெல்லாம் அவரவர் தங்கள் பட்டணங்களிலிருக்கிற தங்கள் காணியாட்சிக்குத் திரும்பினார்கள்.

௨ இஸக்கியா ஆசாரியர்கள் லேவியருடைய வகுப்புகளையவர்கள் வரிசைகளின்படியேயும் அவரவரையவர்களுடைய பணிவிடையின்படியேயும் நடப்பித்து, ஆசாரியரையும் லேவியரையுஞ் சர்வாங்கத் தகனங்களையுஞ் ஸ்தோத்திரப் பலிகளையுஞ் செலுத்தவுங் கர்த்தருடைய பாளயத்தின் வாசல்களில் ஊழியஞ் செய்து துதித்து ஸ்தோத்திரிக்கவும் வரிசைப்படுத்தினான்.

௩ இராசா கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடியே சந்தி சந்தி செலுத்தவேண்டிய சர்வாங்கத் தகனபலிகளுக்கும் ஓய்வுநாட்களிலும் மாதப் பிறப்புகளிலும் பண்டிகைகளிலுஞ் செலுத்துஞ் சர்வாங்கத் தகன பலிகளுக்குந் தன்னுடைய ஆஸ்தியிலே தன் பங்கைக் கொடுத்து,

௪ ஆசாரியரும் லேவியருங் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைத் திடனாய்க் கைக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கவர்களுடைய பங்கைக் கொடுக்கச் சனத்திற்கும் எருசலேமின் குடிகளுக்குங் கற்பித்தான்.

௫ இந்த வார்த்தை பிரசித்தமானபோது இஸ்ரவேல் புத்திரர் தானியத்திலும் திராட்சப்பழ இரசத்திலும் எண்ணெயிலுந் தேனிலும் நிலத்தின் எல்லா வர்த்தனையிலும் முதற் பலன்களைத் திரளாகக் கொண்டுவந்து சகலத்திலும் பத்திலொன்றைப் பரிபூரணமாயக் கொண்டுவந்தார்கள்.

௬ யூதாவின் பட்டணங்களிற் குடியிருந்த இஸ்ரவேல் புத்திரருங்கூட யூதா புத்திரரும் மாடுகளிலும் ஆடுகளிலும் பத்திலொன்றையுந் தங்கள் பராபரனுக்கடுத்துப் பரிசுத்தம் பண்ணப்பட்டவைகளிற் பத்திலொன்றையுங் கொண்டுவந்து, அம்பாரங்களாகக் கொட்டினார்கள்.

௭ மூன்றுமாதத்தில் அம்பாரங்களைப் போடத் துவக்கம் பண்ணி, ஏழாம் மாதத்தில் முடித்துப்போட்டார்கள்.

௮ இஸக்கியாவும் பிரபுக்களும் வந்து அந்த அம்பாரங்களைக் கண்டபோது கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தி அவருடைய சனமாகிய இஸ்ரவேலைப் புகழ்ந்தார்கள்.

௯ அந்த அம்பாரங்களைக் குறித்து இஸக்கியா ஆசாரியரையும் லேவியரையும் கேட்டு விசாரித்தபோது,

௰ சாதோக்கின் சந்ததியானாகிய அசரியாவென்கிற பிரதான ஆசாரியன் அவனுடனே சொன்னதாவது, இந்தக்காணிக்கைகளைக்கர்த்தருடைய வீட்டிற்குக்கொண்டுவரத்துவக்கினது முதல் நாங்கள் சாப்பிட்டுத்திருப்தியடைந்தோம். திரம்பமீதியுமாயிருக்கின்றது. ஏனெனில் கர்த்தர் தம்முடைய ஜனத்தையாசீர்வதித்ததினாலே இந்தத்திரட்சியுள்ள அம்பாரம் மீந்திருக்கப்பட்டிருக்கின்றதென்றான்.

௰௧ அப்போது இஸ்கியா கர்த்தருடைய வீட்டில் அறைகளை ஆயத்தப்படுத்தச் சொன்னான்.

௰௨ அவைகளை ஆயத்தப்படுத்தினபின், அவர்கள் அவைகளிலே காணிக்கைகளையும் பத்திலொரு பங்கானதையும் பரிசுத்தமாய் வைக்கப்பட்டவைகளையும் உண்மையாய் எடுத்துவைத்தார்கள். அவைகளின்மேல் லேவியனாகிய கொனனியா தலைவனும் அவன் தம்பியாகிய சிமேயி இரண்டாந்தரமாயிருந்தான்.

௰௩ ஆனால் இராசாவாகிய இஸ்கியாவும் பராபரனுடைய வீட்டின் தலைவனாகிய அசரியாவும் பண்ணின கட்டளையின்படியே எகியேலும் அசசியாவும் நாகாத்தும் ஆசகேலும் எரிமோத்தும் யோசபாத்தும் எலியேலும் இஸ்மகியாவும் மாகாத்தும் பெனாயாவும் கொனனியாவின் கீழும் அவன் தம்பியாகிய சிமேயியின் கீழும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.

௰௪ ஆனால் இம்னாவின் குமாரனாகிய கோரேயென்கிற கிழக்குவாசலைக் காக்கிற லேவியன் கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட காணிக்கைகளையும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவைகளையும் பங்கிடும்படிக்குப் பராபரனுக்குச் சென்ற உச்சாய காணிக்கைகளின்மேல் அதிகாரியானவன்.

௰௫ அவனுடைய கைக்குத் தவியாக ஆசாரியர் பட்டணங்களில் வகுப்புகளின்படி இருக்கிற தங்கள் சகோதரரிலே பெரியவனுக்கும் சிறியவனுக்கும் சரிசமானமாய்க் கொடுக்கும்படிக்கு உண்மையுள்ளவர்களாகவெண்ணப்பட்ட ஏதேனும் மின்யமீனும் எசுவாவும் செமாயாவும் அமரியாவும் செக்கனியாவுமிருந்தார்கள்.

௰௬ வம்சத்தட்டவணைகளில் எழுதப்பட்ட மூன்றுவயதுமுதற்கொண்டு அதற்குமேன்தர்மாயிருந்த ஆண்பிள்ளைகளையல்லாமல் கர்த்தருடைய வீட்டிற்குட்பிரவேசிக்கிற அவரவருக்குத் தங்கள் வகுப்புகளின்படியே தங்கள் முறைமைகளிலே தாங்கள் செய்கிற தங்கள் பணிவிடைக்குத்தக்க அனுதினமான திட்டம் கொடுக்கப்பட்டது.

௰௭ தங்கள் பிதாக்களின் வம்சத்தட்டவணைகளில் எழுதப்பட்ட தங்கள் வகுப்புகளின்படியே தங்கள் முறைமைகளிலிருக்கிற இருபது வயதுமுதற்கொண்டு அதற்குமேன்தர்மான ஆசாரியருக்கும் லேவியருக்கும்,

௰௮ அவர்களுடைய எல்லாக்கூட்டத்தின் அட்டவணையில் எழுதப்பட்டவர்களுடைய எல்லாக் குழந்தைகளுக்கும் பெண்சாதிகளுக்கும் குமாரருக்கும் குமாரத்திகளுக்கும் கூடக்கொடுத்தார்கள். ஏனென்றால் பரிசுத்தமானதைத் தங்கள் உண்மையின்படியே பரிசுத்தமாய் விசாரித்தார்கள்.

௰௯ ஆசாரியரில் எல்லா ஆண்பிள்ளைகளுக்கும் லேவியருக்குள்ளே அட்டவணையில் எழுதப்பட்டவர்களெல்லாருக்கும் படிகளைக் கொடுக்க, ஆசாரியருடைய ஒவ்வொரு பட்டணத்து வெளிநிலங்களிலே ஆரோனின் புத்திரரில் பேர்பேராகக் குறிக்கப்பட்ட மனுஷரிருந்தார்கள்.

௨௰ இந்தப்பிரகாரம் இஸ்கியா யூதாவெங்கும் நடப்பித்துத் தன்னுடைய பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாக நன்றுஞ்செம்மையும் உண்மையுமானதைச் செய்தான்.

௨௧ அவன் பராபரனுடைய வீட்டின் வேலையிலும் தன்னுடைய பராபரனைத் தேடும்படிக்கு நியாயப்பிரமாணத்திலும் கற்பனைகளிலும் அடுத்த காரியத்திலும் என்ன செய்யத்துவக்கினானோ, அதையெல்லாந் தன் முழு இருதயத்தோடுஞ் செய்து பாக்கியமுள்ளவனாயிருந்தான்.

௩௨. அதிகாரம்.

இஸ்கியா அசூரிய இராசாவின் கைக்கு அதிசயமாய் நீங்கி விடுதலையாக்கப்பட்டது.

௧ இந்த நடபடிகளுக்கும் உண்மைக்கும் பிற்பாடு அசூரின் இராசாவாகிய சனகெரீப் வந்து யூதாவுக்குட் பிரவேசித்து, அரணான பட்டணங்களுக்கு எதிராகப் பாளயமிறங்கி அவைகளைத் தனவசமாக்கிக்கொள்ள நினைத்தான்.

௨ சனகெரீப் வந்து எருசலேமின்மேல் யுத்தம்பண்ணத் தன் முகத்தைத் திருப்பினதை இஸ்கியா கண்டபோது,

௩ பட்டணத்திற்குப் புறம்பேயிருக்கிற ஊற்றுகளைத் தூர்க்கப்போட்டுத் தன்னு

டைய பிரபுக்களோடும் தன்னுடைய பராக்கிரமசாலிகளோடும் ஆலோசனை பண்ணினான். அதற்காக அவனுக்கு ஒத்தாசை பண்ணினார்கள்.

௪ அப்பொழுது அநேக ஜனங்கள் கூடி: அசூரின் இராசாக்கள் வந்து அநேகத் தண்ணீரைக் கண்டுபிடிப்பானேன்? என்று, எல்லா ஊற்றுகளையும் நடுத்தேசத்திலே பாயும் ஆற்றையும் அடைத்துப்போட்டார்கள்.

௫ அவன் பலன்கொண்டு இடிந்துபோன மதிலையெல்லாங் கட்டி அதையும் வெளியிலுள்ள மற்ற மதிலையுங் கோபுரங்களமட்டும் உயர்த்தித் தாவீதுடைய பட்டணத்தின் கோட்டையைப் பலப்படுத்தித் திரளான ஆயுதங்களையுங் கேடயங்களையும் பண்ணுவித்து,

௬ ஜனத்தின்மேலே படைத்தலைவரை வைத்து, அவர்களைப் பட்டணவாசலின் வீதியிலே தன்னண்டையிற் கூட்டிக்கொண்டு, அவர்களுடனே பட்சமாயப் பேசிச் சொன்னதாவது,

௭ பலன்கொண்டு தயிரியமாயிருங்கள். அசூரின் இராசாவுக்கும் அவனோடிருக்கிற எல்லாச் சேனைக்கும் பயப்படாமலுங் கலங்காமலுமிருங்கள். ஏனெனில் அவனோடிருக்கிறவர்களைப் பார்க்கத் நம்மோடிருக்கிறவர்கள் அதிகமானவர்கள்.

௮ அவனோடிருக்கிறது மாம்ச புயம். ஆனால் நமக்குச் சகாயம்பண்ணவும் நம்முடைய யுத்தங்களை நடத்தவும் நம்மோடிருக்கிறவர் நம்முடைய பராபரனாகிய கர்த்தர் தானேயென்றான். யூதாவின் இராசாவாகிய இஸ்கியா சொன்ன இந்த வார்த்தைகளின்பேரிலே ஜனம் நம்பிக்கை வைத்தது.

௯ இதின்பிறகு அசூரின் இராசாவாகிய சன்கெரிப் தானுந் தன் சேனையின் பேரிலிருக்கிறவர்களுமாய் லாகீசுக்கெதிராயிருக்கக்கொள்ள, யூதாவின் இராசாவாகிய இஸ்கியாவண்டைக்கும் எருசலேமிலிருக்கிற எல்லா யூதசனத்தினண்டைக்குந் தன் ஊழியக்காரரை யனுப்பிச் சொல்லச் சொன்னதாவது,

௰ அசூரின் இராசாவாகிய சன்கெரிப் சொல்லுகிறதேதெனில், முற்றிக்கைப் போடப்படும் எருசலேமிலே நீங்களிருக்கும்படிக்கு நீங்கள் எதின்பேரிலே நம்பிக்கையாயிருக்கிறீர்கள்?

௰௧ நம்முடைய பராபரனாகிய கர்த்தர் நம்மை அசூருடைய இராசாவின் கைக்குத் தப்பப்பண்ணுவாரென்று இஸ்கியா சொல்லியுங்களைப் பசியினாலுந் தாகத்தினாலும் உங்களைச் சாவப்பண்ணப் பிரேரேபிக்கிறானல்லவோ?

௰௨ அவருடைய மேடைகளையும் அவருடைய பீடங்களையுந் தள்ளிப்போட்டவனும், ஒரே பீடத்திற்கு முன்பாகப் பணிந்து, அதின்மேலே தூபங்காட்டுங்களென்று யூதாவுக்கும் எருசலேமியாருக்குஞ் சொன்னவனும் அந்த இஸ்கியாதானல்லவோ?

௰௩ நானும் நம்முடைய பிதாக்களுந் தேசங்களின் சகலசனசாதங்களுக்குஞ் செய்ததையறியீர்களோ? அந்தத்தேசங்களுடைய சாதிகளின் தேவர்கள் அவர்கள் தேசத்தை நம்முடைய கைக்குத் தப்பப் பண்ண அவர்களுக்குப் பலனிருக்கவேயிருந்ததோ?

௰௪ உங்கள் பராபரன் உங்களை நம்முடைய கைக்குத் தப்புவிக்கக் கூடுமென்பதற்கு நம்முடைய பிதாக்கள் பாழாக்கின அந்தச்சாதிகளுடைய எல்லாத் தேவர்களிலும் எவன் தன்னுடைய சனத்தை நம்முடைய கைக்குத் தப்புவிக்கப் பலனுமிருந்தான்.

௰௫ இப்போதும் இஸ்கியா உங்களை மோசம்போக்கவும் இப்படி உங்களை யிணங்குவிக்கவும்வேண்டாம் நீங்கள் அவனை நம்பாதிருங்கள். ஏனென்றால் எந்தச் சாதிக்கும் எந்த இராச்சியத்திற்கும் இருந்த யாதொரு தேவன் தன்னுடைய சனத்தை நம்முடைய கைக்கும் நம்முடைய பிதாக்களின் கைக்குந் தப்புவிக்கக் கூடாதிருந்ததே? உங்கள் தேவன் உங்களை நம்முடைய கைக்குத் தப்புவிப்பதெப்படி? என்கிறானென்று சொல்லி,

௰௬ அவனுடைய ஊழியக்காரரும் பராபரனாகிய கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய தாசனாகிய இஸ்கியாவுக்கு விரோதமாகவும் பின்னையும் அதிகமாய்ப் பேசினார்கள்.

௰௭ தேசங்களுடைய சாதிகளின் தேவர்கள் தங்கள் சனத்தை என் கைக்குத் தப்புவிக்காதிருந்ததுபோல, இஸ்கியாவின் தேவனுந் தன்னுடைய சனத்தை என் கைக்குத் தப்புவிப்பதில்லையென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரை நிந்திக்கவும் அவருக்கு விரோதமாகப் பேசவும் அவன் நிருபங்களையும் எழுதினான்.

௰௮ அலங்கத்தின்மேலிருக்கிற எருசலேமின் சனத்தைப் பயப்படுத்தக் கலங்கப்பண்ணும்படிக்குத் தாங்கள் பட்டணத்தைப் பிடிக்கும்படிக்கு, அவர்கள் அ

தையும் பார்த்து பூபாலையிலே மகா சத்தத்தோடே கூப்பிட்டு,

௧௯ மனுஷருடைய கைவேலையான பூசக்கர்சனைத் தேவர்களின் தேவர்களைக் குறித்துப் பேசுகிறபிரகாரமாக எருசலேமின் தேவரைக் குறித்துப் பேசினார்கள்.

௨௰ இதினிமித்தம் இராசாவாகிய இஸ்கியாவும் ஆமோத்சின் குமாரனாகிய எசாயா தீர்க்கதரிசியும் செபம்பண்ணிவானத்தை நோக்கிக் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

௨௧ அப்போது கர்த்தர் ஒரு தூதனை அனுப்பினார். இவன் அசூருடைய இராசாவின் பாளயத்தில் உள்ள சகல பராக்கிரமசாலிகளையும் தலைவரையும் சேர்வைக்காரரையும் அதம்பண்ணினான். அப்படியே அவன் வெட்கமுகமாய்த் தன் தேசத்துக்குத் திரும்பினான். இங்கே அவன் தன் தேவனுடைய வீட்டிற்குட் பிரவேசிக்கிறபோது அவனுடைய கர்ப்பத்திலே பிறந்தவர்களில் சிலர் அவனைப் பட்டயத்தால் மடிவித்தார்கள்.

௨௨ இப்படிக் கர்த்தர் இஸ்கியாவையும் எருசலேமின் குடிகளையும் அசூருடைய இராசாவாகிய சனகெரிபின் கைக்கும் எல்லாருடைய கைக்கும் நீங்கலாக்கி இரட்சித்துச் சுற்றுப்புறத்தாருக்கு விலக்கியாதரித்து நடத்தினார்.

௨௩ அநேகம்பேர் கர்த்தருக்கென்று எருசலேமுக்குக் காணிக்கைகளையும் யூதாவின் இராசாவாகிய இஸ்கியாவுக்கு உச்சிதங்களையும் கொண்டு வந்தார்கள். அவன் இதற்குப் பிற்பாடு எல்லாச் சாதிகளின் பார்வைக்கும் மேன்மைப்பட்டவனாயிருந்தான்.

௨௪ அந்நாட்களில் இஸ்கியா சாவுக்கேதுவான வியாதிப்பட்டான். அவன் கர்த்தரை நோக்கிச் செபம்பண்ணும்போது அவர் அவனுக்கு வாக்குத்தத்தம்பண்ணி ஒரு அற்புதத்தையும் அவனுக்குக் கட்டளையிட்டார்.

௨௫ ஆனாலும் இஸ்கியா தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்துக்குத் தக்கதாய்ச் செய்யவில்லை. அதேதெனில் அவன் மேட்டிமையான ஆசையால் அவன்மேலும் யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் கோபமுண்டாயிற்று.

௨௬ ஆனாலும் தன்னுடைய மனமேட்டிமையினிமித்தம் இஸ்கியாவும் எருசலேமின் குடிகளும் தங்களைத் தாழ்த்தினபடியினாலே கர்த்தருடைய கடுங்கோபம் இஸ்கியாவின் நாட்களிலே அவர்கள்மேல் வந்ததில்லை.

௨௭ இஸ்கியாவுக்கு மிகுதியான ஐசுவரியமும் கனமுமுண்டாயிருந்தது. வெள்ளியும் பொன்னும் இரத்தினங்களும் சுகந்தவர்க்கங்களும் கேடகங்களும் இச்சிக்கப்பட்டதக்க சகலவித நட்டுமுட்டுகளுமான பொக்கிஷசாலைகளையும்,

௨௮ தானியத்துக்கும் திராட்சரசத்துக்கும் எண்ணெய்க்கும் உடையவர்த்தங்களை வைக்கும் கிடங்குகளையும் சகலவகையுள்ள மிருகஜீவன்களுக்குக் கொட்டாரங்களையும் மந்தைகளுக்குத் தொழுவங்களையும் பண்ணிக்கொண்டான்.

௨௯ அவன் தனக்குப் பட்டணங்களைக் கட்டுவித்து ஏராளமான ஆடுமாடுகளை வைத்திருந்தான். ஏனென்றால் பராபரன் அவனுக்கு மகா திரளான ஆஸ்தியைக் கொடுத்தார்.

௩௰ இந்த இஸ்கியா கீகோனென்கிற தண்ணீர்க்கு மேல் ஆற்றுக்காலையடைத்து, அதைத் தமேற்கேயிருந்து தாழத் தாவீதின் பட்டணத்துக்கு நேராகத் திருப்பினான். ஏனெனில் இஸ்கியாவுக்கு அவன் செய்கையெல்லாவற்றிலும் கூடிவந்தது.

௩௧ ஆகிலும் பாபேலுடைய பிரபுக்களின் தானாபதிகள் தேசத்திலே நடந்த அற்புதத்தைக் கேட்க அவனண்டைக்கு அனுப்பப்பட்டுவருகையில், அவனிருதயத்திலுண்டானதெல்லாவற்றையும் அறியும்படிக்கு அவனைச் சோதிக்கிறதற்காகப் பராபரன் அவனைக் கைவிட்டார்.

௩௨ இஸ்கியாவின் மற்ற வர்த்தமானங்களும் அவனுடைய உபகாரங்களுமோவென்றால், இதோ, அவைகள் ஆமோத்சின் குமாரனாகிய எசாயா தீர்க்கதரிசியின் தரிசனத்திலும் யூதா இஸ்ரவேல் இராசாக்களின் புஸ்தகத்திலும் எழுதியிருக்கின்றது.

௩௩ இஸ்கியா தன் பிதாக்களோடே நித்திரை அடைந்தபின் அவனைத் தாவீதுடைய குமாரரின் கல்லறைகளுக்கு உயர அடக்கம்பண்ணினார்கள். யூதாவனைத்தும் எருசலேமின் குடிகளும் அவன் மரணத்திலே அவனைக் கனம்பண்ணினார்கள். அவன் குமாரனாகிய மனாசே அவன் ஸ்தலத்திலே இராசாவானான்.

௩௩. அதிகாரம்.

மனாசே ஆமோனென்றவர்களின் இராச்சியபாரம்.

மனாசே இராசாவாகிறபோது பன்னிரண்டு வயதாயிருந்து, ஐம்பத்தைந்து

வருஷம் எருசலேமிலே அரசாண்டான்.

௨ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்தின சாதிகளுடைய அருவருப்பின்படியே அவன் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

௩ அவன் தன் தகப்பனாகிய இஸ்கியா தகர்த்துப் போட்ட மேடைகளைத் திரும்பக் கட்டிப் பாகால்களுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து விக்கிரகத் தோப்புகளை உண்டுபண்ணி, வானத்தின் சேனையையெல்லாம் பணிந்துகொண்டு அவைகளைச் சேவித்து,

௪ எருசலேமிலே தம்முடைய நாமம் என்றென்றைக்குமிருக்குமென்று கர்த்தர் சொன்ன தம்முடைய வீட்டிலே பலிபீடங்களைக் கட்டி,

௫ கர்த்தருடைய வீட்டின் இரண்டு பிராகாரங்களிலும் வானத்தின் சேனைக்கெல்லாம் பலிபீடங்களைக் கட்டினான்.

௬ அவன் இன்னோங் குமாரனின் பள்ளத்தாக்கிலே தன் குமாரரைத் தீமிதிக்கப்பண்ணி, நாள்பார்த்தும் நிமித்தம் பார்த்தும் சூனியம் பண்ணி, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறிகாரரையும் வைத்துக் கர்த்தருக்குக் கோபமுண்டாக அவர் பார்வைக்கு மிகுதியும் பொல்லாப்பானதைச் செய்தான்.

௭ இந்த வீட்டிலும் இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் நான் தெரிந்துகொண்ட எருசலேமிலும் நம்முடைய நாமத்தை என்றென்றைக்குமிருக்கப் பண்ணுவோமென்றும்,

௮ நான் மோசேயைக்கொண்டு இஸ்ரவேலுக்குக் கொடுத்த சகல நியாயப்பிரமாணத்தின்படியும் கட்டளைகளுக்கும் நியாயங்களுக்கும் ஏற்றபடியே அவர்கள் நாம் அவர்களுக்குக் கற்பித்ததை எல்லாம் செய்யச் சாவதானமாயிருந்தார்களேயாகில் நாம் இனி அவர்களைக் கலே அவர்கள் பிதாக்களுக்கு நாம் ஸ்தாபித்து வைத்த தேசத்தை மிவிருந்து விலகப் பண்ணுவதில்லையென்றும் பராபரனாகிய தேவன் தாவீதோடும் அவன் குமாரனாகிய சாலொமோனோடும் சொன்ன பராபரனுடைய வீட்டிலே தானே அவன் தான் உண்டுபண்ணுவித்த சுரூபமான சிலையை வைத்தான்.

௯ அப்படியே கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக அழித்த சாதிகளைப் பார்க்க யூதாவும் எருசலேமின் குடிகளும் பொல்லாப்புச் செய்யத் தக்கதாய் மனாசே அவர்களை வழிதப்பிப் போகப்பண்ணினான்.

௰ கர்த்தர் மனாசேயோடும் அவனுடைய சனத்தோடும் பேசுவித்தாலும் அவர்கள் கவனிக்காதே போனார்கள்.

௰௧ ஆகையால் கர்த்தர் அசீரிய ராசாவுக்கிருக்கிற சேனாதிபதிகளை அவர்கள் மேல் வரப்பண்ணினார். இவர்கள் முட்செடிகளில் மனாசேயைப் பிடித்து இரண்டு வெண்கலச் சங்கிலியால் அவனைக் கட்டிப் பாபேலுக்குக் கொண்டுபோனார்கள்.

௰௨ இப்படி அவன் நெருக்கப்படுகையில் அவன் தன் பராபரனாகிய கர்த்தரை நோக்கிக் கெஞ்சித் தன் பிதாக்களின் பராபரனுக்கு முன்பாக மிகவும் தன்னைத் தாழ்த்தினான்.

௰௩ அவரை நோக்கி அவன் விண்ணப்பம்பண்ணிக்கொண்டிருக்கிறபோது அவர் அவன் கெஞ்சுதலுக்கு இரங்கி, அவன் செய்ததைக் கேட்டு, அவனைத் திரும்ப எருசலேமுக்குத் தன் இராச்சியபாரத்திற்கு வரப்பண்ணினார். கர்த்தரே பராபரனென்று அப்போது மனாசே அறிந்தான்.

௰௪ அதற்குப் பிறபாடு அவன் தாவீதுடைய பட்டணத்தின் வெளியலங்கத்தைக் கீகோனுக்கு மேற்கேயிருக்கிற பள்ளத்தாக்கிலே துவக்கி மீன்வாசலமட்டும் கட்டி, அதை ஓபேலைச் சுற்றிலும் நடத்தி, அதைமிகவும் உயர்த்தி யூதாவிலுள்ள அரணான பட்டணங்களிலெல்லாம் இராணுவத் தலைவரை வைத்து,

௰௫ அந்நிய தேவர்களையும் அந்தச் சுரூபத்தையும் கர்த்தருடைய வீட்டிலிருந்து எடுத்துப்போட்டுக் கர்த்தருடைய வீடுள்ள பர்வதத்திலும் எருசலேமிலும் தான் கட்டியிருந்த எல்லாப் பலிபீடங்களையும் அகற்றிப் பட்டணத்துக்குப் புறம்பாகப் போடுவித்து,

௰௬ கர்த்தருடைய பலிபீடத்தைச் செப்பனிட்டு, அதின்மேல் ஸ்தோத்திரப் பலிகளையும் துதியின் பலிகளையும் செலுத்தி, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரைச் சேவிக்கவேண்டுமென்று யூதாவுக்குக் கற்பித்தான்.

௰௭ ஆகிலும் சனமின்னம் மேடைகளிற் பலியிடுவார்கள். என்றாலுந் தங்கள் பராபரனாகிய கர்த்தருக்கென்றே செய்வார்கள்.

௰௮ மனாசேயின் மற்ற வர்த்தமானங்களும் அவன் தன் பராபரனை நோக்கிப் பண்ணின விண்ணப்பமும் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரின் நாமத்தில் அவனோடே பேசின ஞானதிருஷ்டிபுருஷரின் வார்த்தைகளும், இதோ, அவைகள் இஸ்

ர்வேல இராசாக்களின்பிரபந்தத்திலெழு திபிருக்கிறது.

௰௯ அவனுடைய விண்ணப்பமும அவனகெருசுதனுக்கவர் இரங்கினதும அவனதனனைத தாழ்ததாததற்கு முனனே பணணின அவனுடைய எலலாப பாவமும் துரோகமும, அவன மேடைகளைக கட டித்தோப்புகளையுஞ சுரூபங்களையும ஸதாபித்த இடங்களும, இசோ, ஏசாயின பிரபந்தத்திலெழுதி யிருக்கிறது.

௨௰ மனாசே தனபிதாக்களோடேநித் திரையடைந்தபின அவனை யவனவீட்டி லேயடக்கமபணணினார்கள. அவனகுமா ரனாகிய ஆமோன அவனஸதலத்தில இ ராசாவானான.

௨௧ ஆமோன இராசாவாகிறபோது இருபததிரணடுவயத யிருந்து இரணடு வருஷமாய எருசலேமில அரசாணடான

௨௨ அவன தனதகப்பனாகிய மனாசே செயதிருந்தபடி கர்த்தரின பார்வைக்கு பொலலாப்பானதைச்செயதான. தன தகப்பனாகிய மனாசேபணணுவித்திருந்த சுருபங்களுக்கெலலாம ஆமோனபலியிட்டு அவைகளைச்சேவித்தான.

௨௩ ஆனால தனதகப்பனாகிய மனாசே தனனைத தாழ்த்திக்கொணடதுபோலே இந்த ஆமோனெனறவன கர்த்தருககுமுனபாகத தனனைததாழ்த்தாமல தனகுற றத்தைப்பெருகப்பணணினான.

௨௪ அவன ஊழியக்காரர் அவனுக்கு விரோதமாய் ஒபபந்தமபணணி, அவனை யவனவீட்டிலே கொனறு போட்டார் கள.

௨௫ அப்போது தேசசசனம ஆமோ னெனற இராசாவுககு விரோதமாய ஒப பந்தம பணணின யாவரையும வெட்டிப போட்டு, அவனகுமாரனாகிய யோசியா வை அவன ஸதலத்திலே இராசாவாக்கி னார்கள.

௩௪. அதிகாரம்

யோசியாவெனற தெயவபக்தியுளள இ ராசா தெயவ ஆராதனைக்காகக்காண் பித்தபத்திவைராக்கியம.

யோசியா இராசாவாகிற போது எட்டுவயதாயிருந்து, முபபத்தொருவரு ஷம எருசலேமில அரசாணடான.

௨ அவன கர்த்தருடைய பார்வைக் குச்செம்மையானதைச்செயது, தனதக பபனாகிய தாவீதினவழிகளில வலது இட துபுறமாக விலகாமலநடந்தான.

௩ அவனதன இராசரீயபாரத்தின எ ட்டாமவருஷத்தில, தான இனனம இளவ யதாயிருக்கையில, தனதகப்பனாகி யதாவீதின பாராபரனைத தேடததுவக்கி பபனனிரணடாமவருஷத்தில யூதாவையு ம எருசலேமையும மேடைகள தோப்பு களசுரூபங்களவிக்கிரகங்களும அறசசுத திகரிக்கததுவக்கினான.

௪ அவனுக்குமுனபாகப பாகாலகளி ன பலிபீடங்களை யிடித்தார்கள. உயர் அவைகளமேலிருந்த சிலைகளை வெட்டித தோப்புகளையுஞ சுரூபங்களையுமவிக்கிரக ஙகளையும உடைத்து நொறுக்கி, அவை களுக்குப பலியிட்டவர்களுடைய பிரேத ககுழிகளினமேலதெளித்தான.

௫ பூசாரிகளின எலும்புகளை யவர்களு டைய பீடங்களினமேற்சுட்டெரித்து, இ ப்படியே யூதாவையும எருசலேமையுஞ சுத்திகரித்தான.

௬ அப்படியேதானே மனாசே எபபிரா யீம சிமேயோனிலுமுளள பட்டணங்களி லுமநபதலிமட்டும பாழான அவைகளின சுற்றுபபுறஙகளிலுஞசெயதான.

௭ அவன இஸரவேல தேசமெஙகுமு ளள பலிபீடங்களையுந்தோப்புகளையுந்தக ர்த்துச சுரூபங்களைநொறுக்கித் தூளாக் கி, எலலாச்சிலைகளையும வெட்டிப்போட் டபிற்பாடு எருசலேமுக்குத்திரும்பினான.

௮ அவனதேசத்தையும வீட்டையுஞ சுத்திகரித்தபின்பு, அவன்தன இராசரீ யபாரத்தினபதினெட்டாமவருஷத்திலே அசலியாவின குமாரனாகிய சாப்பானை யும பட்டணத்தலைவனாகியமாசெயாவை யும யோவாகாசினகுமாரனாகிய யோவா கெனறமந்திரியையுந தனபராபரனாகிய கர்த்தரினவீட்டைப்பழுதுபார்க்கும்படி க்கனுப்பினான.

௯ அவர்கள பிரதான ஆசாரியனாகிய இலக்கியாவணடைக்கு வந்து, வாசற்படி யைக்காக்கிற லேவியர் மனாசேயிலும எ பபிராயீமிலும இஸரவேலில மீதியானவர் களெலலாரின கையிலும, யூதாபென்ய மீனெங்குஞ்சேர்த்து, எருசலேமுக்குத்தி ரும்பிப்பாராபரனுடையவீட்டிற்குக்கொ ணடுவந்த திரவியத்தையொப்புவித்துக கொணடு,

௰ வேலையைச்செயவிக்கும படிக்குக் கர்த்தருடைய வீட்டின விசாரிப்புக்கார ரானவர்களின கையில அதைக கொடுத் தார்கள. இவர்கள அதைக்கர்த்தருடைய வீட்டைச்சோதித்துப பழுதுபார்க்கிற

தற்கு வீட்டில் வேலைசெய்கிறவர்கள் கையிலே கொடுத்தார்கள்.

௧௧ அப்படியே வெட்டின கல்லுகளையும் இணைப்புகளுக்கும் யூதாவின் இராசாக்கள் கெடுத்துப்போட்ட அறைகளிற் பலகை பாய்ச்சுகிறதற்குமான மரங்களையுங் கொள்ளத் தச்சருக்குஞ் சிற்பாசாரிகளுக்குங் கொடுத்தார்கள்.

௧௨ இந்த மனுஷர் வேலையையுண்மையாய்ச் செய்தார்கள். வேலையை நடத்த மோராரியின் புத்திரரில் யாகாத் ஒபதியா என்பவர்களும் லேவியருங் கோகாத்தியரின் புத்திரரில் சகரியாவும் மெசுல்லாமும் அவர்களின்மேல் விசாரிப்புக்காரராயிருந்தார்கள். இந்த லேவியரெல்லாருங் கீதவாத்தியங்களை வாசிக்க அறிந்தவர்கள்.

௧௩ அவர்கள் சுமைகாரர் பேரிலுஞ் சகலவித வேலையின் கிரியையைச் செய்கிறவர்களெல்லாருடைய ஆளோட்டிகளின் பேரிலும் விசாரிப்பாயிருந்தார்கள். ஏனென்றால் லேவியருக்குள் இருக்கிறவர்கள் தானே கணக்கரும் ஆதிக்கக்காரரும் வாசற்காப்பாருமானவர்கள்.

௧௪ கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவரப்பட்ட திரவியத்தையவர்கள் எடுக்கிறபோதோவென்றால் ஆசாரியனாகிய இல்கியா மோசேயைக்கொண்டு கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின் புஸ்தகத்தைக் கண்டுபிடித்தான்.

௧௫ அப்போது இல்கியா சம்பிரதியாகிய சாப்பானுக்குப் பிரதியுத்தரமாகக் கர்த்தருடைய வீட்டிலே நியாயப்பிரமாணப் புஸ்தகத்தைக் கண்டுபிடித்தேனென்று சொல்லி அந்தப் புஸ்தகத்தைச் சாப்பான் கையிற் கொடுத்தான்.

௧௬ சாப்பான் அந்தப் புஸ்தகத்தை இராசாவண்டைக்குக் கொண்டுபோய் உம்முடைய ஊழியக்காரருக்குக் கட்டளையிடப்பட்டதையெல்லாம் அவர்கள் செய்கிறார்கள்.

௧௭ கர்த்தருடைய வீட்டிலே கண்டுபிடிக்கப்பட்ட திரவியத்தையவர்கள் கூட்டி, அதை விசாரிப்புக்காரர் கையிலும் வேலைசெய்கிறவர்கள் கையிலுங் கொடுத்தார்களென்று இராசாவுக்கு மறுசெய்தி சொன்னதுமல்லாமல்,

௧௮ ஆசாரியனாகிய இல்கியா என் கையிலொரு புஸ்தகத்தைக் கொடுத்தானென்கிறதைச் சம்பிரதியாகிய சாப்பான் இராசாவுக்கறிவித்து, அதிலே இராசாவுக்கு முன்பாக வாசித்தான்.

௧௯ நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை இராசா கேட்டபோதோவென்றால் அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு

௨௰ இல்கியாவுக்குஞ் சாப்பானின் குமாரனாகிய அகிக்காமுக்கும் மீகாவின் குமாரனாகிய அப்தோனுக்குஞ் சம்பிரதியாகிய சாப்பானுக்கும் இராசாவின் ஊழியக்காரனாகிய அசாயாவுக்குங் கற்பித்துச் சொன்னதாவது,

௨௧ கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் புஸ்தகத்தினுடைய வார்த்தைகளினிமித்தம் நீங்கள் போய் எனக்காகவும் இஸ்ரவேலிலும் யூதாவிலும் மீதியானவர்களுக்காகவுங் கர்த்தரைக் கேளுங்கள். ஏனென்றால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதெல்லாவற்றின்படியேயுஞ் செய்யும்படிக்குக் கர்த்தருடைய வார்த்தையை நம்முடைய பிதாக்கள் கைக்கொள்ளாதேபோனபடியினாலே நம்முடையமேல் ஊற்றப்பட்ட கர்த்தருடைய உக்கிரம் பெரிதேயென்றான்.

௨௨ அப்போது இல்கியாவும் இராசாவனுப்பின மற்றவர்களும் அஸ்றாவின் குமாரனாகிய தோக்காத்தின் மகனான சல்லூமென்னும் வஸ்திரங்களைக் காக்கிறவனுடைய பெண்சாதியாகிய உல்தாளென்கிற தீர்க்கதரிசியானவளண்டைக்குப் போனார்கள். அவள் எருசலேமில் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்தாள். அவளோடே யதற்கொத்த பிரகாரமாகப் பேசினார்கள்.

௨௩ அவள் இவர்களோடே சொன்னதாவது, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் உரைக்கிறபடி என்னண்டைக்கு உங்களையனுப்பினவருக்கு நீங்கள் சொல்லவேண்டியதாவது,

௨௪ கர்த்தருரைக்கிறதேதென்றால், இதோ, யூதாவின் இராசாவுக்கு முன்பாக வாசிக்கப்பட்ட புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சகல சாபங்களுமாகிய பொல்லாப்பை நாம் இந்த ஸ்தலத்தின்மேலும் அதின் குடிகளின்மேலும் வரப்பண்ணுவோம்.

௨௫ அவர்கள் நம்மை விட்டுத் தங்கள் கைகளின் கிரியைகளாலெல்லாம் நமக்குக் கோபமுண்டாக்க அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டின படியினாலே நம்முடைய உக்கிரம் அவித்துப்போடப்படாத பிரகாரமாக இந்த ஸ்தலத்தின்மேல் வாருகுமென்கிறார்.

௨௬ ஆனால் கர்த்தரிடத்திலே கேட்கத்தக்கதாக உங்களையனுப்பின யூதாவின் இராசாவுடனே நீங்கள் சொல்லவேண்டியது. இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்த

ர் நீ கேட்ட வார்த்தைகளின் செய்தியைக் குறித்துச் சொல்லுகிறதென்னவெனில,

௨௭ இந்த ஸ்தலத்திற்கும் அதின் குடிகளுக்கும் விரோதமாகப் பராபரன் சொன்ன அவருடைய வார்த்தைகளை நீ கேட்கையில் உன்னிருதயம் இளகிப்போய் அவருக்கு முன்பாக நீ உன்னைத் தாழ்த்தி, நமக்கு முன்பாகப் பணிந்து, உன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நமக்கு முன்பாக அழுதபடியினாலே நாமும் உன்னைக் கேட்டோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௨௮ இதோ, நாம் இந்த ஸ்தலத்தின் மேலும் அதின் குடிகளின் மேலும் வரப்பண்ணும் எல்லாப் பொல்லாப்பையும் உன் கண்கள் காணாதபடிக்கு நீ சமாதானத்தோடே உன் கல்லறையிற் சேர்க்கப்பட நாம் உன்னை உன் பிதாக்களண்டையிலே சேர்ப்பண்ணுவோமென்று சொன்னாள். அவர்கள் இராசாவுக்கு மறுசெய்தி கொண்டுபோனார்கள்.

௨௯ அப்போது இராசா எருசலேமுடைய மூப்பரையெல்லாம் அழைத்துக் கூட்டிக்கொண்டு,

௩௦ இராசாவும் எல்லா யூதமனுஷரும் எருசலேமின் குடிகளும் ஆசாரியரும் லேவியரும் பெரியோர் துவக்கிச் சிறியோர்மட்டுமுள்ள சகலசனமுமாய்க் கர்த்தருடைய வீட்டுக்குப்போய் கர்த்தருடைய வீட்டிலே கண்டுபிடிக்கப்பட்ட உடம்படிக்கைப் புஸ்தகத்தின் வார்த்தைகளையெல்லாம் அவர்கள் காதுகள் கேட்க வாசித்தார்கள்.

௩௧ இராசா தன் தானத்திலே நின்று அந்தப் புஸ்தகத்திலெழுதியிருக்கிற உடம்படிக்கையினுடைய வார்த்தைகளின்படி செய்வதினாலே கர்த்தரைப் பின்பற்றி நடப்பேனென்றும் தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமத்தோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேனென்றும், கர்த்தருக்கு முன்பாக உடன்படிக்கைபண்ணி,

௩௨ எருசலேமிலும் பென்யமீனிலும் தென்பட்ட யாவரையும் அதற்குட்படப் பண்ணினான். அப்படியே எருசலேமின் குடிகள் தங்கள் பிதாக்களின் தேவனாகிய பராபரனுடைய உடம்படிக்கையின்படியே செய்தார்கள்.

௩௩ யோசியா இஸ்ரவேல் புத்திரரிலே தேசமெங்குமுண்டான அருவருப்புகளையெல்லாம் அகற்றி இஸ்ரவேலிலே தென்பட்டவர்களையெல்லாம் தங்கள் பராபரனாகிய கர்த்தரைச் சேவிக்கிறதற்குக் கீழ்ப்படுத்தினான். அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவர்கள் தங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தரைவிட்டுப் பின்வாங்கினதில்லை.

௩௫. அதிகாரம்.

யோசியா பஸ்காவை ஆசரித்தது

அதற்குப் பிற்பாடு யோசியா எருசலேமிலே கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரித்தான். அவர்கள் முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளைக் குர்ல்வளையறுத்தார்கள்.

௨ அவன் ஆசாரியர்களை அவர்கள் முறைவரிசைகளிலே வைத்து, அவர்களைக் கர்த்தருடைய வீட்டின் ஊழியத்தைச் செய்யத் திடப்படுத்தி,

௩ இஸ்ரவேலையெல்லாம் உபதேசிக்கிறவர்களும் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுமாகிய லேவியருக்குச் சொன்னதாவது, பரிசுத்தப் பெட்டியைத் தாவீதின் குமாரனாகிய சாலொமோனென்ற இஸ்ரவேலின் இராசா கட்டின வீட்டிலே வையுங்கள்; தோளின்மேல் அதைச் சுமக்கும்படியாம் உங்களுக்கில்லை; இப்போது நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்கும் அவருடைய சனமாகிய இஸ்ரவேலுக்கும் ஊழியஞ்செய்து,

௪ இஸ்ரவேலின் இராசாவாகிய தாவீது எழுதின கட்டளைக்கும் அவன் குமாரனாகிய சாலொமோனெழுதின கட்டளைக்கும் ஒத்தபடியே உங்கள் பிதாக்களின் வீட்டாருக்காகப் பட்டணத்தின் வரிசையிலே உங்களை ஆயத்தப்படுத்தி,

௫ சனப்புத்திரராகிய உங்கள் சகோதரருக்காகப் பரிசுத்த ஸ்தலத்திலே பிதாக்களுடைய வீட்டுப் பிரிவுகளின்படியேயும் லேவியருடைய வம்சத்தார் வகுக்கப்பட்டபடியேயும் நின்று,

௬ பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளைக் குர்ல்வளையறுத்து, உங்களைப் பரிசுத்தம்பண்ணி, மோசேயைக்கொண்டு கர்த்தர் சொன்னபடியே உங்கள் சகோதரர் செய்யும்படிக்கு அவர்களுக்கு அவைகளை ஆயத்தப்படுத்துங்களென்றான்.

௭ அங்கிருந்த சனப்புத்திரரெல்லாருக்கும் அவர்கள் இலக்கத்தின்படியே பஸ்காவின் பலிகளுக்காக முப்பதினாயிரம் ஆட்டுக்குட்டிகளையும் வெள்ளாட்டுக்குட்டிகளையும் மூவாயிரம் எருதுகளையும் இராசாவா

கிய யோசியா தன்னுடைய ஆஸ்தியிலே கொடுத்தான்.

௮ அவனுடைய பிரபுக்களும் மனப்பூர்வமான காணிக்கைகளாகச் சனத்திற்கும் ஆசாரியருக்கும் லேவியருக்கும் கொடுத்தார்கள். பாபருடைய வீட்டுத் தலைவராகிய இல்க்கியாவும் சகரியாவும் எகியேலும் ஆசாரியர்களுக்குப் பஸ்காவின் பலிகளுக்கென்று இரண்டாயிரத்து அறுநூறு ஆட்டுக்குட்டிகளையும் முந்நூறு எருதுகளையுங் கொடுத்தார்கள்.

௯ ஆனாற் கொனனியா, செமாயா, நதானெயேலென்ற அவர்கள் சகோதரரும், அசபியா, ஏயேல், யோசபாத்தென்ற லேவியரின் பிரபுக்களும் லேவியருக்குப் பஸ்காவின் பலிகளுக்கென்று ஐயாயிரம் ஆட்டுக்குட்டிகளையும் ஐந்நூறு எருதுகளையுங் கொடுத்தார்கள்.

௧௦ இப்படி ஊழியந் திட்டம்பண்ணப்பட்டபோது, இராசாவினுடைய கற்பனையின்படியே ஆசாரியர் தங்கள் ஸ்தானத்திலும் லேவியர் தங்கள் வகுப்புகளின் வரிசையிலும் நின்று,

௧௧ இவர்கள் பஸ்காவின் ஆட்டுக்குட்டிகளைக் கொல்லப் போனார்கள். ஆசாரியர் அவர்கள் கையிலே இரத்தத்தை வாங்கித் தெளித்தார்கள். லேவியர் தோல்களை யுரித்தார்கள்.

௧௨ மோசேயின் புஸ்தகத்திலெழுதியிருக்கிறபடிச் சனப்புத்திரர் கர்த்தருக்குப் பலி செலுத்தும்படிக்கு அவர்கள் தகனபலியிருக்கிறவைகளை யிவர்களுக்குப் பிதாக்கள் வீட்டுப் பிரிவுகளின்படியே யவைகளைக் கொடுக்கத்தக்கதாகப் பிரித்து வைத்தார்கள். எருதுகளை யப்படியே செய்தார்கள்.

௧௩ அவர்கள் பஸ்காவை நியாயமுறைமையின்படியே அக்கினியாற் பொரித்துப் பரிசுத்தமாக்கப்பட்ட மற்றவைகளைப் பானைகளிலுங் கொப்பரைகளிலுஞ் சட்டிகளிலுஞ் சமைத்துச் சனப்புத்திரருக்கெல்லாந் தீவிரமாய்ப் பங்கிட்டு,

௧௪ பிற்பாடு தங்களுக்காகவும் ஆசாரியருக்காகவுஞ் சேகரம் பண்ணினார்கள். ஏனெனில் ஆரோனின் புத்திரராகிய ஆசாரியர்கள் சர்வாங்கத் தகனபலிகளையுங் கொழுப்புகளையுஞ் செலுத்துகிறதில் இராமட்டும் வேலையாயிருந்தபடியினாலே லேவியர் தங்களுக்காகவும் ஆரோனின் புத்திரராகிய ஆசாரியருக்காகவுஞ் சேகரம் பண்ணினார்கள்.

௧௫ தாவீதும், ஆசாபும், ஏமானும், இராசாவின் ஞானதிஷ்டிப் புருஷனாகிய எதுத்தூனும் கற்பித்தபடியே ஆசாபின் புத்திரராகிய பாடகர் தங்கள் ஸ்தானத்திலும் வாசற் காப்பாளர் வாசல் வாசல்களிலும் நின்றார்கள். அவர்கள் தங்கள் ஊழியத்தைவிட்டு விலகத் தேவையில்லாதிருந்தது. ஏனெனில் லேவியரான அவர்கள் சகோதரர் அவர்களுக்காகச் சேகரம் பண்ணினார்கள்.

௧௬ அப்படியே இராசாவாகிய யோசியாவினுடைய கற்பனையின்படி பஸ்காவை யாசரிக்கிறதற்குஞ் சர்வாங்கத் தகனங்களைக் கர்த்தருடைய பலிபீடத்தின்மேற் பலியிடுகிறதற்கும் அந்தக் கர்த்தருடைய ஊழியமெல்லாம் அன்றையத்தினந் திட்டமாயிற்று.

௧௭ இந்தப்பிரகாரமாக அங்கே வந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்திலே பஸ்காவையும் புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையையும் ஏழுநாளாக ஆசரித்தார்கள்.

௧௮ தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் நாட்கள் துவக்கி இஸ்ரவேலிலே பண்ணப்பட்ட பஸ்கா ஆசரிக்கப்பட்டதில்லை. யோசியாவும், ஆசாரியரும், லேவியரும், யூதாவனைத்தும், இஸ்ரவேலில் வந்திருந்தவர்களும் எருசலேமின் குடிகளும் ஆசரித்த பஸ்காவைப்போலே இஸ்ரவேல் இராசாக்களிலொருவரும் ஆசரித்ததில்லை.

௧௯ யோசியாவுடைய இராசரீகத்தின் பதினெட்டாம் வருஷத்திலே இந்தப் பஸ்கா ஆசரிக்கப்பட்டது.

யோசியாவின் மரணம்.

௨௰ யோசியா தேவாலயத்தின் காரியத்தைத் திட்டப்படுத்தின இந்த எல்லாநடபடிகளுக்கும் பிற்பாடு எகிப்தின் இராசாவாகிய நேகோ ஐப்பிராத்தின் நதியோரமான கர்க்கேமிஸ் பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ண எழும்பிவந்தான். அப்போது யோசியா அவனுக்கெதிராகப் புறப்பட்டான்.

௨௧ அவன் இவனண்டைக்குத் தூதுகளை யனுப்பி, யூதாவின் இராசாவே! எனக்கும் உமக்குமென்ன? நான் இப்போது உம்முடையமேலல்ல, எனக்கு யுத்தம் பண்ணுகிற ஒரு வீட்டாரின்மேலே போகிறேன். நான் தீவிரிக்கவேண்டுமென்று பராபரன் சொன்னார். என்னோடிருக்கிற பராபரன் உம்மைக் கெடுக்காதபடிக்கு அவரை விட்டு ஒழிந்திருமென்று சொல்லச் சொன்னான்.

உஉ ஆனாலும் யோசியா தன் முகத்தைத் திருப்பி விடாமல், அவனோடு யுத்தம்பண்ண வேஷமாறி, தேவனுடைய வாக்கின்படி நேகோ சொன்ன வார்த்தைகளுக்குக் கேள்வி கொடாமல், மெகிதோவின் பள்ளத்தாக்கிலே யுத்தம் பண்ணுகிறதற்கு வந்தான்.

உங ஆனால் வில்வீரர் யோசியா இராசாவின்மேலே எய்தார்கள். அப்போது இராசா தன் ஊழியக்காரருக்கு: என்னைப் புறப்படுத்துங்கள்; என்னாலே மிகுந்த நோவுபட்டேனென்றான்.

உச அப்போது அவனுடைய ஊழியக்காரர் இரதத்தினின்று அவனை எடுத்து, அவனுக்கு இருந்த இரண்டாம் இரதத்தின்மேலே ஏற்றி, அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவன் மரணமடைந்தான்; அவன் பிதாக்களின் கல்லறைகளில் அடக்கம்பண்ணப்பட்டான். யூதா எருசலேமின் மனுஷரெல்லாரும் யோசியாவுக்காகத் துக்கங்கொண்டாடினார்கள்.

உரு எரேமியா யோசியாவின்பேரிலே புலம்பல்பாடினான். சகல பாடகரும் பாடகிகளும் இந்நாள்வரைக்கும் யோசியாவின்பேரிலே தங்கள் புலம்பல்களில் பாடிக்கொண்டிருந்து, அவைகளை இஸ்ரவேலிலே ஒரு பழக்கமாக்கினார்கள். இதோ, அவைகள் புலம்பல்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

உசா யோசியாவின் மற்ற வர்த்தமானங்களும் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறதற்கொத்த அவனுடைய உபகாரங்களும்,

உஎ அவனுடைய முன்பின் நடபடிகளும் மோசேவினிடத்தில், இதோ, அவைகள் இஸ்ரவேல் யூதா இராசாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.

௩௬. அதிகாரம்.

யோவாகாஸ், யோயாக்கீம், யோயாக்கீனென்றவர்களின் இராச்சியபாரம்.

அப்போதே சனம் யோசியாவின் குமாரனாகிய யோவாகாசைச் சேர்த்துக்கொண்டு அவனை எருசலேமிலே அவன் தகப்பன் ஸ்தலத்திலே இராசாவாக்கினார்கள்.

உ யோவாகாஸ் இராசாவாகிறபோது இருபத்துமூன்று வயதாயிருந்து மூன்று மாதம் எருசலேமிலே அரசாண்டான்.

௩ அப்பொழுது எகிப்தின் இராசா அவனை எருசலேமிலே அரசாளாதபடிக்குத் தள்ளிப்போட்டு, தேசத்தின்மேலே நூறுதாலந்து வெள்ளியும் ஒருதாலந்து பொன்னுமான தண்டத்தைச் சுமத்தி,

௪ அவனுடைய அண்ணனாகிய எலியாக்கீமை யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் இராசாவாக்கி, யோயாக்கீமென்று அவனுக்குப் பேர்மாற்றினான். ஆனால் அவனுடைய தமையனாகிய யோவாகாசை எகிப்தின் இராசாவாகிய நேகோ எகிப்துக்குக் கொண்டுபோனான்.

ரு யோயாக்கீம் இராசாவாகிறபோது இருபத்தைந்து வயதாயிருந்து பதினொரு வருஷம் எருசலேமிலே அரசாண்டு, தன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

௬ அவனுக்கு விரோதமாகப் பாபேலின் இராசாவாகிய நேபுகாத்நேச்சார் எழுந்துவந்து அவனைப் பாபேலுக்குக் கொண்டுபோக அவனை இரண்டு வெண்கலச் சங்கிலியால் கட்டினான்.

எ கர்த்தருடைய வீட்டின் தட்டுமுட்டுகளிலும் சிலதை நேபுகாத்நேச்சார் பாபேலுக்குக் கொண்டுபோய் அவைகளைப் பாபேலிலுள்ள தன்னுடைய தேவாலயத்திலே வைத்தான்.

அ யோயாக்கீமுடைய மற்ற வர்த்தமானங்களும் அவன் செய்த அருவருப்புகளும் அவனிடத்திலே கண்டுபிடிக்கப்பட்டதுமான அவனுடைய நடபடிகளும், இதோ, அவைகள் இஸ்ரவேல் யூதா இராசாக்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது. அவன் ஸ்தலத்தில் அவன் குமாரனாகிய யோயாக்கீன் இராசாவானான்.

கூ யோயாக்கீன் இராசாவாகிறபோது எட்டு வயதாயிருந்து மூன்று மாதமும் பத்துநாளும் எருசலேமிலே அரசாண்டு, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான்.

ய ஆனால் மறுவருஷம் பிறப்பிலே நேபுகாத்நேச்சார் என்ற இராசா அவனையும் கர்த்தருடைய வீட்டின் உச்சிதமான தட்டுமுட்டுகளையும் பாபேலுக்குக் கொண்டுவரப்பண்ணி, அவன் சிறிய தகப்பனாகிய சிதேக்கியாவை யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் இராசாவாக்கினான்.

சிதேக்கியாவின் நாட்களில் இஸ்ரவேல் பாபிலோனிய சிறையிருப்பிலே போனது.

௰௧ சிதேக்கியா இராசாவாகிறபோது இருபத்தொரு வயதாயிருந்து, பதினொரு வருஷம் எருசலேமில் அரசாண்டு,

௰௨ தன் பராபரனாகிய கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். அவன் கர்த்தருடைய வாக்காற் பேசின எரேமியாவென்ற தீர்க்கதரிசிக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினதில்லை.

௰௩ பராபரன் பேரிலே தன்னை யாணையிடுவித்துக்கொண்ட நேபுகாத்நேத்சாரென்ற இராசாவையும் விட்டு மருள்விழுந்து, இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திரும்பாதபடிக்குத் தன் பிடரியைக் கடினப்படுத்தித் தன் னிருதயத்தையழுத்தமாக்கினான்.

௰௪ ஆசாரியரின் எல்லாப் பிரபுக்களுஞ் சனமுங் கூடப் புறச்சாதிகளுடைய அருவருப்புகளின்படி எல்லாத் துரோகமும் பண்ணும் பாவங்களைப் பெருகப் பண்ணிக் கர்த்தர் எருசலேமிலே பரிசுத்தம் பண்ணின அவருடைய வீட்டைத் தீட்டுப்படுத்தினார்கள்.

௰௫ அவர்களுடைய பிதாக்களின் பராபரனாகிய கர்த்தர் அவர்களண்டைக்குத் தம்முடைய தாஜுபதிகளை யேர்க்கனவே அனுப்பவே அனுப்பினார். ஏனெனில் அவர் தமது சனத்தையுந் தமது வாசஸ்தலத்தையுங் காப்பதற்கான இரக்கமாயிருந்தார்.

௰௬ ஆனாற் கர்த்தருடைய உக்கிரம் அவருடைய சனத்தைப்பிடித்து ஆரோக்கியத்திற்கிடமில்லாதமட்டும் அவர்கள் பராபரனுடைய தாஜுபதிகளைப் பரியாசம்பண்ணி, அவருடைய வார்த்தைகளை யசட்டைபண்ணி, அவருடைய தீர்க்கதரிசிகளை யேய்த்தார்கள்.

௰௭ அதேதென்றால் அவர் அவர்கள் மேலே கல்தேயரின் இராசாவை யெறிவரப்பண்ணி, அவர்கள் வாலிபரை யவர்களுடைய பரிசுத்த ஸ்தலமான வீட்டிலே பட்டயத்தாலே கொல்லுவித்து வாலிபரையுங் கன்னியாஸ்திரிகளையுங் கிழவரையும் விருத்தாப்பியரையுந் தப்பவிடாமல், எல்லாரையும் அவன் கையிலொப்புக்கொடுத்தார்.

௰௮ அவன் பராபரனுடைய வீட்டின் பெரியசிறிய தட்டுமுட்டுகளனைத்தையுங் கர்த்தருடைய வீட்டுப் பொக்கிஷங்களும் இராசாவுக்கும் அவன் பிரபுக்களுக்குமிருந்த பொக்கிஷங்களுமான தனைத்தையும் பாபேலுக்குக்கொண்டுபோனான்.

௰௯ அவர்கள் பராபரனுடைய வீட்டைக் கொளுத்தி எருசலேமின் அலங்கத்தைப்பிடித்து அதின் மாளிகைகளையெல்லாம் அக்கினியாற் சுட்டுப்போட்டு அதிலுண்டான உசிதமான தட்டுமுட்டுகளையெல்லாங் கெடுத்தார்கள்.

௨௰ பட்டயத்திற்குத் தப்பினமீதியானவர்களை யவன் பாபேலுக்குச் சிறைப்பிடித்துப்போனான். பெர்சியா இராச்சியம் பார்நதுவக்கப்பட்டமட்டும் அங்கேயவர்கள் அவனுக்கும் அவன்குமாருக்கும் அடிமைகளாயிருந்தார்கள்.

௨௧ கர்த்தர் எரேமியாவின் வாயினாலே சொன்னவார்த்தை நிறைவேறும்படிக்குத் தேசந் தன்னுடைய ஓய்வுவருஷங்களை [illegible]மியமாய் அனுபவித்துத் திருப்தியும் அது பாழான நாளெல்லாம் எழுபது வருஷமுகியுமட்டாக ஓய்ந்து கொண்டிருந்தது.

௨௨ ஆனால் எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்னவார்த்தை நிறைவேறும்படிக்குப் பேர்சியாவின் இராசாவாகிய கோரேசின் முதலாம்வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் இராசாவாகிய கோரேசின் ஆவியை யெழுப்பினதினால் அவன் தன்னுடைய இராச்சியமெங்குஞ் சத்தமுங் காட்டி வாசகத்தினாலுங் கூறுவித்ததாவது,

௨௩ பெர்சியாவின் இராசாவாகிய கோரேஸ் சொல்லுகிறதேதெனில், பரமண்டலங்களின் பராபரனாகிய கர்த்தர் பூமியின் இராச்சியங்களையெல்லா மெனக்குக் கொடுத்து யூதாவிலிருக்கிற எருசலேமிலே தமக்கு வீட்டைக்கட்ட எனக்குக் கற்பித்தார். அவருடைய எல்லாச் சனத்திலும் உங்களில் எவனுண்டோ? அவனோடே யவனுடைய பராபரனாகிய கர்த்தர் இருப்பாராக. அவன் எழும்பிப் போகக்கடவனென்று கூறுவித்தான்.

நாளாகமத்தின் இரண்டாம்புஸ்தகம்.

முடிந்தது முற்றும்.

எஸ்றாவின் புஸ்தகம்.

௧. அதிகாரம்.

சிறையிருப்பிலிருந்து திரும்பினது.

எரேமியாவின் வாயினாலே கர்த்தர் சொன்னவார்த்தை நிறைவேறும்படிக்குப் பெர்சியாவின் இராசாவாகிய கோரேசுடைய முதலாம் வருஷத்திலே கர்த்தர் பெர்சியாவின் இராசாவாகிய கோரேசின் ஆவியை எழுப்பினதினாலே அவன் தன் இராச்சிய மெங்குந் தெரியக்காட்டி, வாசகத்தினாலும் அறிவித்தது,

௨ பெர்சியாவின் இராசாவாகிய கோரேசு சொல்லுகிறதென்னவென்றால், பரமண்டலங்களின் பராபரனாகிய கர்த்தர் பூமியின் இராச்சியங்களையெல்லாம் எனக்குக் கொடுத்து, யூதாவிலிருக்கிற எருசலேமிலே தமக்கு வீட்டைக் கட்டுவிக்க அவர் எனக்குக் கற்பித்தார்.

௩ அவருடைய எல்லாச் சனத்திலும் உங்களில் எவனானாலும் அவனோடே அவனுடைய பராபரன் இருப்பாராக. அவன் யூதாவிலிருக்கிற எருசலேமுக்குப் போய், இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தருடைய வீட்டைக் கட்டுவிக்கக்கடவன். அவரே எருசலேமிலே வாசம்பண்ணுகிற பராபரனானவர்.

௪ எவன் சஞ்சாரத்தேசமாய்த் தங்குகிற இடங்களிலாகிலும் மீதியாயிருக்கிறானோ அவனுடைய ஸ்தலத்து மனிதர் எருசலேமிலிருக்கிற பராபரனுடைய வீட்டுக்கென்று உச்சாகமாய்க் கொடுக்கிறதுமல்லாமல் அவனுக்கு வெள்ளியினாலும் பொன்னினாலும் உடைமைகளினாலும் மிருகசீவன்களினால் உதவிபண்ணக்கடவர்களென்றுங் கூறுவித்தான்.

௫ அப்பொழுது யூதா பென்யமீனுடைய பிதாக்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியரும் எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய வீட்டைக் கட்டுகிறதற்குப் போயேறி, எவர்களுடைய ஆவியைப் பராபரன் எழுப்பினாரோ அவர்களெல்லாரும் எழும்பினார்கள்.

௬ அவர்களைச் சுற்றிலுங் குடியிருக்கிற யாவரும் மனஉச்சாகமாய்க் கொடுத்ததெல்லாவற்றையுந் தவிர அவர்களுடைய கைகளை வெள்ளித்தட்டுமுட்டுகளையும் பொன்னையும் உடைமைகளையும் மிருகசீவன்களையும் உச்சிதங்களையுங் கொடுக்கிறதினாலே திடப்படுத்தினார்கள்.

௭ நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து கொண்டுவந்து, தன் தேவனுடைய வீட்டிலே வைத்த கர்த்தருடைய வீட்டுத் தட்டுமுட்டுகளையுங் கோரேசு இராசா எடுத்துக் கொடுத்தான்.

௮ அவைகளைப் பெர்சியாவின் இராசாவாகிய கோரேசு பொக்கிஷக்காரனாகிய மித்திரோதாதின் கையினாலே எடுத்து யூதாவின் பிரபுவாகிய சேஸ்பாச்சாருக்கு எண்ணிக் கொடுப்பித்தான்.

௯ அவைகளின் இலக்கமாவது, முப்பது பொற்றட்டுகளும் ஆயிரம் வெள்ளித்தாலங்களும் இருபத்தொன்பது கத்திகளும்,

௰ முப்பது பொற்கிண்ணிகளும் நானூற்றுப்பத்து வெள்ளிக்கிண்ணிகளும் வேறே தட்டுமுட்டுகள் ஆயிரமும்,

௰௧ பொன் வெள்ளித் தட்டுமுட்டுகளெல்லாம் ஐயாயிரத்து நானூறாயிருந்தது. சிறையிருப்பானவர்கள் பாபேலிலிருந்து எருசலேமுக்கேறிப்போகையில் அவைகளையெல்லாம் சேஸ்பாச்சார் எடுத்துக்கொண்டு போனான்.

௨. அதிகாரம்.

எருசலேமுக்குத் திரும்பின யூதர் ஆனபது.

பாபேலின் இராசாவாகிய நேபுகாத்நேச்சார், பிடித்துப் பாபேலுக்குக் கொண்டுபோனவர்களின் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்கும் யூதாவிலுள்ள தங்கள் தங்கள் பட்டணங்களுக்குந் திரும்பி,

௨ செருபாபேல் எசுவா நெகேமியா செராயா ரெலாயா மர்தேகாய் பில்சான் மிஸ்பார் பிகேபாய் ரெகூம் பானா என்கிறவர்களோடேகூடவந்த இந்தச் சீமையின் புத்திராகிய இஸ்ரவேல் சனமான மனிதரின் இலக்கமாவது,

௩ பாரோஷின் புத்திரர் இரண்டாயிரத்தொருநூற்றெழுபத்திரண்டு.

௪ செபத்தியாவின் புத்திரர் முந்நூற்றெழுபத்திரண்டு.

௫ ஆராகின் புத்திரர் எழுநூற்றெழுபத்தைந்து.

௬ ஏசுவா யோவாபின் புத்திரருக்குள்ளிருந்த பாகாத்மோவாபின் புத்திரர் இரண்டாயிரத்தெண்ணூற்றுப்பன்னிரண்டு.

௭ ஏலாமின் புத்திரர் ஆயிரத்திருநூற்றைம்பத்துநாலு.

௮ சத்தூவினபுத்திரர்தொளளாயிரத்து நாற்பத்தைந்து.

௯ சக்காயிம புத்திரர் எழுநூற்றறுபது.

௰ பானியினபுத்திரர் அறுநூற்றுநாற்பத்திரண்டு.

௰௧ பெபாயினபுத்திரர் அறுநூற்றிருபத்துமூன்று.

௰௨ அஸ்காதினபுத்திரர் ஆயிரத்திருநூற்றிருபத்திரண்டு.

௰௩ அதொனிக்காமினபுத்திரர் அறுநூற்றறுபத்தாறு.

௰௪ பிக்வாயினபுத்திரர் இரணடாயிரத்தைமபத்தாறு.

௰௫ ஆதீனினபுத்திரர் நானூற்றைமபத்துநாலகு.

௰௬ எசகியாவினசநததியான அதேரினபுத்திரர் தொணணூற்றெட்டு.

௰௭ பெத்சாயினபுத்திரர் முநநூற்றிருபத்துமூன்று.

௰௮ யோராகினபுத்திரர் நூற்றுபபனனிரணடு.

௰௯ ஆசுமினபுத்திரர் இருநூற்றிருபத்துமூன்று.

௨௰ கிபாரினபுத்திரர் தொணணூற்றைந்து.

௨௰௧ பெத்லேகேமினபுத்திரர் நூற்றிருபத்துமூன்று.

௨௰௨ நெத்தோபாவின மனிதர் ஐமபத்தாறு.

௨௰௩ ஆனதோத்தினமனிதர் நூற்றிருபத்தெட்டு.

௨௰௪ அஸ்மாவேதத்தினபுத்திரர் நாற்பத்திரணடு.

௨௰௫ கீரியாத்தாரிம, கெபீரு, பேரோதெனறவைகளினபுத்திரர் எழுநூற்றுநாற்பத்துமூன்று.

௨௰௬ ராமா, காபா எனறவைகளினபுத்திரர் அறுநூற்றிருபத்தொன்று.

௨௰௭ மிக்மாசினமனிதர் நூற்றிருபத்திரணடு.

௨௰௮ பெதேல, ஆயிஎனறவைகளினமனிதர் இருநூற்றிருபத்துமூன்று.

௨௰௯ நேபோவின புத்திரர் ஐமபத்திரணடு.

௩௰ மக்பீசின புத்திரர் நூற்றைமபத்தாறு.

௩௰௧ மற்ற ஏலாமினபுத்திரர் ஆயிரத்திருநூற்றைமபத்துநாலகு.

௩௰௨ ஆரீமினபுத்திரர் முநநூற்றிருபது.

௩௰௩ லோத், ஆதித், ஓனோ எனறவைகளினபுத்திரர் எழுநூற்றிருபத்தைநது.

௩௰௪ எரிகோவினபுத்திரர் முநநூற்றுநாற்பத்தைநது.

௩௰௫ சேனாகின புத்திரர் மூவாயிரத்தறுநூற்றுமுபபது.

௩௰௬ ஆசாரியராவது, யெசுவாவின வீட்டாருகிய எதாயாவினபுத்திர்தொள[illegible]யிரத்தெழுபத்துமூனறு.

௩௰௭ இம்மேரினபுத்திரர் ஆயிரத்தை[illegible]பத்திரணடு.

௩௰௮ பஸ்கூரினபுத்திரர் ஆயிரத்திருந[illegible]றுநாற்பத்தேழு.

௩௰௯ ஆரிமின புத்திரர் ஆயிரத்துப[illegible]னேழு.

௪௰ லேவியராவது, ஒதயாவின சந்[illegible]யான ஏசுவா, கத்மியேல எனறவர்க[illegible]புத்திரர் எழுபத்துநாலகு.

௪௰௧ பாடகராவது, ஆசாபின் புத்தி[illegible]நூற்றிருபத்தெட்டு.

௪௰௨ வாசத்காபபாரின புத்திராவ[illegible]சலூமினபுத்திரும, அதேரினபுத்திர[illegible]ந, தல்மோனினபுத்திரும, அக்கூபினபு[illegible]திரரும, அதிதாவின புத்திரும, சோப[illegible]யிம புத்திரருமானவர்களெலலாம நூற[illegible]முபபத்தொனபது.

௪௰௩ இஸரவேலைசசேர்நதவர்களாவ[illegible]சீகாவின புத்திரர், அசுபாவின புத்திர[illegible]தபாகோத்தினபுத்திரர்,

௪௰௪ கேரோசின புத்திரர், சீயாகா[illegible]புத்திரர், பாதோனினபுத்திரர்.

௪௰௫ லெபானாகின புத்திரர், அகாபா[illegible]புத்திரர், அக்கூபினபுத்திரர்,

௪௰௬ ஆகாபினபுத்திரர், சம்லாயினபுத்தி[illegible]ரர், ஆனானினபுத்திரர்,

௪௰௭ கித்தேலினபுத்திரர், காகாரின புத்தி[illegible]ரர், ராயாகினபுத்திரர்,

௪௰௮ ரேத்சீனின புத்திரர், நெகோதா[illegible]னபுத்திரர், காசாமினபுத்திரர்,

௪௰௯ ஊசாவின புத்திரர், பாசெயாகி[illegible]புத்திரர், பேசாயினபுத்திரர்,

௫௰ அஸ்னாவின புத்திரர், மெயூனிம[illegible]புத்திரர், நெபுசெயரினபுத்திரர்,

௫௰௧ பக்பூக்கின புத்திரர், அக்கூபாவின புத்திரர், அர்கூரினபுத்திரர்,

௫௰௨ பஸ்லூத்தின புத்திரர், மெகிதாவின புத்திரர், அர்சாவினபுத்திரர்,

௫௰௩ பர்கோசின புத்திரர், சிஸ்ராவின புத்திரர், தாமாகினபுத்திரர்,

௫௰௪ நெத்சியாகினபுத்திரர், அதிபாவின புத்திரருநதானே.

௫௰௫ சாலோமோனுடைய வேலைய[illegible]ளினபுத்திரராவது, சோதாயின புத்திர[illegible] சொப்பேரேத்தினபுத்திரர், பெருதாவின புத்திரர்,

௫௰௬ யாலாகின புத்திரர், தர்கோனின புத்திரர், கித்தேலினபுத்திரர்,

௫௰௭ செபத்தியாவின புத்திரர், அத்தீலி[illegible]னபுத்திரர், பொகேரேத், அத்செபாயி[illegible]னபுத்திரர், ஆமியினபுத்திரருநதானே.

௫௰௮ இஸரவேலைசசேர்நதவர்களுஞசா[illegible]லோமோனுடையவேலையாட்களின புத்தி[illegible]

ருமெல்லாம் முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டு.

௫௯ தெல்மெலாகிலுந் தெல் அர்சாவிலுங் கேருபிலும் அத்தோனிலும் இம்மேரிலுமிருந்தேறிவந்துந் தாங்கள் இஸ்ரவேலரோவென்று தங்கள் பிதாக்களின் வீட்டையுந் தங்கள் பூர்வோத்திரத்தையுஞ் சொல்லமாட்டாமலிருந்தவர்களாவது,

௬௦ தெலாயாவின் புத்திரருந் தொபியாவின் புத்திரரும் நெகொதாவின் புத்திரருமான அறுநூற்றைம்பத்திரண்டுபேர்.

௬௧ ஆசாரியரின் புத்திரரிலும் அபாயாவின் புத்திரர் கோசின் புத்திரர் கிலெயாத்தியனாகிய பற்சில்லாயின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணி அவர்கள் நாமந்தரிக்கப்பட்ட பற்சில்லாயினுடைய புத்திரரே.

௬௨ இவர்கள் தங்கள் வம்ச அட்டவணையைத் தேடி அதைக் காணாமற்போய் ஆசாரிய ஊழியத்திற்கு அசுத்தமானவர்களானபடியினாலே விலக்கப்பட்டார்கள்.

௬௩ வெளிச்சங்களும் உத்தமங்களுமுள்ள ஆசாரியன் எழும்புமட்டும் பரிசுத்தத்திலும் பரிசுத்தமானதிலே புசிக்கவேண்டாமென்று திர்ஷாதா அவர்களுக்குச் சொன்னான்.

௬௪ இந்தச் சபையெல்லாம் ஏகத்திற்கு நாற்பத்தீராயிரத்து முந்நூற்றறுபதுபேராயிருந்தது.

௬௫ அவர்களைத் தவிர ஏழாயிரத்து முந்நூற்றுமுப்பத்தேழுபேரான அவர்களுடைய வேலைக்காரரும் வேலைக்காரிகளும் இருநூறு பாடகரும் பாடகிகளும் அவர்களுக்கு இருந்தார்கள்.

௬௬ அவர்களுடைய குதிரைகள் எழுநூற்று முப்பத்தாறும் அவர்கள் கோவேறுகழுதைகள் இருநூற்று நாற்பத்தைந்தும்,

௬௭ அவர்களுடைய ஒட்டகங்கள் நானூற்று முப்பத்தைந்தும் கழுதைகள் ஆறாயிரத்து எழுநூற்றிருபதுமாயிருந்தது.

தேவாலயத்தைக் கட்டுகிறதற்குப் பிரபுக்கள் கொடுத்த காணிக்கை.

௬௮ வம்சங்களின் தலைவரிற் சிலர் எருசலேமிலே வாசம்பண்ணின கர்த்தருடைய வீட்டுக்கு வந்தபொழுது பராபரனுடைய வீட்டை அதின் ஸ்தானத்திலே எடுப்பிக்கும்படிக்கு அதற்காக மன உற்சாகமான காணிக்கைகளைக் கொடுத்தார்கள்.

௬௯ அவர்கள் தங்கள் சக்திக்குத்தக்கதாக வேலையின் பொக்கிஷத்திற்கு அறுபத்தோராயிரந் தங்கக்காசையும் ஐயாயிரம் இறாத்தல் வெள்ளியையும் நூறு ஆசாரியவஸ்திரங்களையுங் கொடுத்தார்கள்

௭௰ ஆசாரியரும் லேவியருஞ் சனத்திற் சிலரும் பாடகரும் வாசற்காப்பாரும் இஸ்ரவேலைச் சேர்ந்தவர்களுந் தங்கள் தங்கள் பட்டணங்களிலும் இஸ்ரவேலெல்லாந் தங்கள் பட்டணங்களிலுந் தானே குடியேறினார்கள்.

௩. அதிகாரம்.

தேவாலயத்தைக் கட்டத் துவக்கினது.

ஏழாம் மாதம் வந்து இஸ்ரவேல் புத்திரர் பட்டணங்களிலே குடியிருக்கிறபொழுது சனம் ஒருமனப்பட்டவர்களைப்போலே எருசலேமிலே கூடிக்கொண்டது.

௨ அப்பொழுது யோத்சதாக்கின் குமாரனாகிய ஏசுவாவும் அவன் சகோதரராகிய ஆசாரியருஞ் செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் அவன் சகோதரரும் எழும்பி பராபரனுடைய மனிதனாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே எழுதியிருக்கிறபடி சர்வாங்கதகனங்களைப் பலியிடும்படிக்கு இஸ்ரவேலுடைய பராபரனுடைய பலிபீடத்தைக் கட்டி,

௩ பலிபீடத்தை மூலாதாரங்களின் மேலே எடுப்பித்தார்கள். ஏனென்றால் தேசத்தின் சனங்களுக்குப் பயப்படுகிற பயங்கரம் அவர்கள்மேலிருந்தது. அதின்மேலே அவர்கள் அந்திசந்தி கர்த்தருக்குச் சர்வாங்கதகனப்பலிகளைச் செலுத்தினார்கள்.

௪ எழுதியிருக்கிறபடியே அவர்கள் கூடாரப்பண்டிகையை ஆசரித்து ஒவ்வொரு நாளுக்குத் தக்க நியாயமானபடி ஒவ்வொருநாளின் இலக்கமானதை ஒவ்வொருநாளிலும் பலியிட்டார்கள்.

௫ அதற்குப்பிறபாடு நித்தமும் மாதப்பிறப்புகளிலுங் கர்த்தருடைய பரிசுத்த எல்லாப் பண்டிகைகளிலுஞ் செலுத்துஞ் சர்வாங்கதகனத்தையுங் கர்த்தருக்கு அவரவர் செலுத்தும் உற்சாகப்பலிகளையும் நடத்தினார்கள்.

௬ ஏழாம் மாதம் முதலந்தேதியிலே கர்த்தருக்குச் சர்வாங்கதகனப்பலிகளைச் செலுத்தத் துவக்கினார்கள். ஆனாற் கர்த்தருடைய தேவாலயத்தின் அஸ்திபாரம் இன்னம் போடப்படவில்லை.

௭ அப்பொழுது அவர்கள் கற்றச்சருக்குஞ் சிற்பாசாரிகளுக்குந் திரவியத்தையும் பெர்சியாவின் இராசாவாகிய கோரேஸ் தங்களுக்குக் கொடுத்த உத்தரவின்படியே லீபனோனிலிருந்து கேதுருமரங்களைச் சமுத்திரத்தின்மேல் யாப்போமட்டுங் கொண்டுவரச் சீதோனியருக்குந் தீரியருக்கும் போசனத்தையும் பானத்தையும் எண்ணெயையுங் கொடுத்தார்கள்.

௮ அவர்கள் எருசலேமிலிருந்த பராபரனுடைய வீட்டிற்கு வந்த இரண்டாம் வருஷம் இரண்டாம் மாதத்திலே செயல்தியேலின் குமாரனாகிய செருபா

பேனும யோத்சதாககினகுமாரனுகியஏசுவாவும்மற்றுமுணடான அவர்களசகோதரராகிய ஆசாரியரும லேவியருஞ சிறையிருப்பிலிருந்து எருசலேமுககுவநத அனைவருந துவககமபணணி இருபதுவயதுமம அதற்கும்மேல்தரமுமான லேவியரைக்கர்த்தருடைய வீட்டின வேலையைக் கண்காணிகக வைத்தார்கள.

கூ அப்படியே பராபரனுடையவீட்டின வேலையைச்செய்கிறவர்களைந் துரிதமபணணி ஏசுவாவும அவனுடையகுமாரருஞ சகோதரருங கத்மியேலும அவனகுமாரரும யூதாவினகுமாரருடனெனாதாதும அவனகுமாரருஞ சகோதரர்களுமாகிய லேவியர் ஒருவனைப்போல நின்றார்கள.

ய சிற்பாசாரிகள கர்த்தருடைய தேவாலயத்தின அஸ்திபாரமபோடுகிறபொழுது இஸ்ரவேல இராசாவாகிய தாவீதுடையகட்டளையினபடியே கர்த்தரைத்துதிக்கும்படிககு வஸ்திரஙகளதரிககப்பட்டுப் பூரிகைகளையூதுகிற ஆசாரியரையுந தாளங்களைக்கொட்டுகிற ஆசாபினகுமாரராகிய லேவியரையும நிறுத்தினார்கள.

யக கர்த்தர் நல்லவர். ஏனெனில இஸ்ரவேலினபேரிலே அவருடையகிருபையென்றுமுள்ளதென்று அவரைப்புகழ்ந்து துதிக்கையில மாறிமாறிப்பாடினார்கள. கர்த்தரைத் துதிக்கையிற் சனமெல்லாங் கர்த்தருடையவீட்டின அஸ்திபாரமபோடப்படுகிற நிமித்தம் மகாக்கெம்பீரமாய்க்கெம்பீரித்தது.

யஉ முதிர்ந்தவயதான ஆசாரியரிலும லேவியரிலும பிதாக்களின் வமிசஙகளின தலைவரிலுந முன் அஸ்திபாரத்தினமேலிருந்த முந்தின வீட்டைககணடிருந்து இந்த வீட்டையுந தஙகளகண்களினமேலநோககியிருககிற அநேகரோ மகா சத்தஙகாட்டி அழுதார்கள. வேறே அநேகமபேரோவென்றால கெம்பீரமுஞ சந்தோஷமுமாயச சத்தஙகாட்டினார்கள.

யங ஆனாற் சந்தோஷகெம்பீரத்தினசத்தம இன்னதென்றுஞ சனத்தினுடைய அழுகையினசத்தம இன்னதென்றுஞ சனம அறியாதேபோனார்கள. ஏனெனிற சனம மகா கெம்பீரமாயககெம்பீரிககிறதினாலே அவர்களசத்தந தூரத்திற்குககேட்கப்பட்டது.

௪. அதிகாரம்.

யூதரின சத்துருககளாலே தேவாலயத்தைக்கட்டுமவேலைககுத்தடைவந்தது.

சிறையிருப்பினபுத்திரர் இஸ்ரவேலின பராபரனுகிய கர்த்தருககுத தேவாலயத்தைககட்டுகிறார்களென்பதை யூதாவுககும பென்யமீனுககுமிருந்த சத்துருககளகேட்டபொழுதாவெனில,

உ அவர்கள செருபாபேலனிடத்துந தலைவரான பிதாககளனிடத்துஞ சேர்ந்துவந்து உஙகளோடேகூடககட்டுவோம. ஏனென்றால உஙகளபராபரனைத் தேடுவதுபோலே தேடுவோம. எஙகளை இங்கேவரப்பணணின அசீரிய இராசாவாகிய ஆசார் அதோனின நாட்களமுதற்கொண்டு அவருககு நாஙகளுமபலியிட்டுவருகிறோம் என்று அவர்களோடேசொனனுர்கள.

௩ ஆனால செருபாபேலும ஏசுவாவும இஸ்ரவேலில மற்றுமுணடான தலைவரான பிதாககளும அவர்களுடனே. [illegible] எஙகளபராபரனுடையவீட்டைக் கட்டுகிறதில் [illegible] நீஙகளுங் கட்டவொணணுது. பெர்சியாவின இராசாவாகிய கோரேஸ்இராசா எஙகளுககுககற்பித்தபடி நாஙகளே இஸ்ரவேலின பராபரனுகியகர்த்தருககு அதைக்கட்டுவோமென்றார்கள.

௪ ஆகையினாலே அந்தத்தேசத்தின சனம யூதாசனத்தினகைகளைத் தளரச்செய்து அவர்கள் கட்டாதபடிககு அவர்களைக் கலககப்படுத்தி,

ரு பெர்சியாவின இராசாவாகிய கோரேசினநாளெல்லாந தரியுவென்கிற பெர்சியாவுடைய இராசாவின இராசரிகபரியந்தமும அவர்கள யோசனையை அவத்தமாககும்படிககு அவர்களுககு விரோதமாய்க் கைக்கூலி கொடுத்து ஆலோசனைககாரரை அமர்த்தினார்கள.

சூ ஆகாஸ்வேரு அரசாளுகிறபொழுது அவனுடைய இராசரிகபாரம்பத்திலே யூதாவிலும எருசலேமிலும குடியிருககிறவர்களுககுவிரோதமாக பிராதுபணணி எழுதினார்கள.

எ அர்த்தசஷ்டாவின நாட்களிலும பிஸ்லாமும மித்திரோதாதும தபேயேலும மற்றுமுணடான அவர்களகூட்டாளிகளும பெர்சியாவின இராசாவான அர்த்தசஷ்டாவுககு ஒரு காகிதத்தை எழுதினார்கள. அந்தககாகிதத்தின வசனஞ் சீரிய பாஷையினால எழுதப்பட்டுச் சீரிய பாஷையுமாய் [illegible]

அ ஆலோசனைத்தலைவனுகிய ரேகூமும கணககனுகிய சிம்சாயும எருசலேமுககு விரோதமாக அர்த்தசஷ்டாவென்கிற இராசாவுககெழுதினகாகிதத்திலே போடப்பட்ட நாமஙகளாவது,

கூ ஆலோசனைககுத்தலைவனுகிய ரேகூம மற்றுமுள்ள கணககனுகிய சிம்சாயும மற்றுமுணடான அவர்கள கூட்டத்தாராகிய தீனாவியர், அபற்சாத்தியர், தர்பேலியர், அப்பார்சியர், அர்கேவியர், பாபிலோனியர், சூஷங்கியர், தெகாவியர், ஏலாமியரானவர்களும,

ய பெரியவரும பேர்போனவருமான அஸ்னுப்பார் அவ்விடங்களிலிருந்து கொண்டுவந்து சமாரியாவினபட்டணத்திலே குடியேறப்பணணின மற்றசனசதங்களும [illegible]

நதிக்கப்பாலேயிருக்கிற மற்றச்சனங்களு முதலான நாமங்களைத்தானே.

௰௧ அவர்கள் அர்த்தசஷ்டாவென்ற இராசாவுக்கனுப்பின காகிதத்தின் விவரமாவது, நதிக்கப்பாலேயிருக்கிற உம்முடைய அடியாராகிய மனிதர் மற்றது:

௰௨ உம்மிடத்திலிருந்து எங்களண்டையிலெருசலேமுக்கு வந்தேறியிருக்கிற யூதர் அக்கிரமமும் பொல்லாப்புமான அந்தப் பட்டணத்தைக் கட்டி அதின் மதில்களை யெழுப்பி, அஸ்திபாரங்களைப் போட்டிதைச் சேர்க்கிறார்களென்பது இராசாவுக்கறியலாகக் கடவது.

௰௩ இப்பொழுதும் அந்தப் பட்டணங்கட்டப்பட்டு அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால் அவர்கள் பகுதியையும் இறையையும் தீர்வையையுங் கொடாமற் போவார்கள். அப்படியே இராசாக்களின் வரத்திற் நஷ்டம் வருமென்று இராசாவுக்கறியப்படக்கடவது.

௰௪ இப்போதும் நாங்கள் இராசாவினுடைய அரண்மனைச் சம்பளக்காரராயிருந்துகொண்டு இராசாவுக்குக் கனவீனம் வரப்பார்த்திருக்கிறது எங்களுக்கடாததானபடியால் நாங்களிதையனுப்பி உம்முடைய பிதாக்களின் நாளாகமத்தில் ஆராயப்படும்படிக்கு, இதை இராசாவுக்குத் தெரியப்பண்ணுவித்தோம்.

௰௫ அது கலகமும் இராசாக்களுக்கும் சீமைகளுக்கும் நஷ்டமுண்டாக்குகிறதுமான பட்டணமாயிருந்ததென்றும், அதிலே அவர்கள் பூர்வகாலந்துவக்கிக் கலாதியுண்டாக்கினபடியினாலேதானே அந்தப் பட்டணம் பாழ்க்கடிக்கப்பட்டதென்றும், அந்த நாளாகமத்திலே கண்டறிந்துகொள்ளுவீர்.

௰௬ ஆகையால் அந்தப் பட்டணங் கட்டப்பட்டு அதின் அலங்கங்கள் எடுப்பிக்கப்பட்டுத் தீர்ந்தால், நதிக்கப்பாலே உமக்கு ஒன்றுமிராதே போமென்கிறதை இராசாவுக்கு அறியப்பண்ணுகிறோமென்றெழுதியனுப்பினார்கள்.

௰௭ அப்பொழுது இராசா ஆலோசனைத் தலைவனாகிய ரேகூமுக்குங் கணக்கனாகிய சிம்சாயுக்குஞ் சமாரியாவிற் குடியிருக்கிற மற்ற அவர்களுடைய கூட்டத்தாருக்கும் நதிக்கப்பாலிருக்கிற மற்றவர்களுக்கும் எழுதிய இப்பிரத்தியுத்தாரமாவது உங்களுக்குச் சமாதானமுஷ:

௰௮ நீங்கள் எங்களுக்கனுப்பின காகிதம் எனக்குமுன்பாகத் திர்க்கமாய் வாசிக்கப்பட்டது.

௰௯ என் கட்டளையினால ஆராய்ந்து பார்க்கப்பட்டபொழுது, அந்தப் பட்டணம் பூர்வகாலந்துவக்கி இராசாக்களுக்கு விரோதமாயெழும்பிற்றென்றும், அதிலே கலகமும் பந்துக்கட்டும் பிறந்ததென்றும்,

௨௰ எருசலேமில் வல்லமையுள்ள இராசாக்களிருந்தார்களென்றும், அவர்கள் நதிக்கப்பாலிருக்கிற எல்லா இடங்களின்பேரிலும் ஆண்டுகொண்டார்களென்றும், பகுதியும் இறையுந் தீர்வையும் அவர்களுக்குச் செலுத்தப்பட்டதென்றுங் கண்டுபிடிக்கப்பட்டது.

௨௧ இப்பொழுதும் என்னாலே வேறே கட்டளை கொடுக்கப்படுமட்டும் அந்தப் பட்டணங் கட்டாதபடிக்கு அந்த மனிதர் அதை நிறுத்திப்போடச் சொல்லுங்கள்.

௨௨ இதிலே நீங்கள் தப்புச்செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். இராசாக்களுக்கு நஷ்டமாய்ச் சேதமுண்டாகிறதென்னவென்றெழுதியனுப்பினான்.

௨௩ இராசாவாகிய அர்த்தசஷ்டாவுடைய நிருபத்தின் விவரம் ரேகூமுக்குங் கணக்கனாகிய சிம்சாயிக்கும் அவர்கள் கூட்டத்தாருக்கும் முன்பாக வாசிக்கப்பட்டபொழுது அவர்கள் தீவிரத்துடனே எருசலேமிலிருக்கிற யூதரண்டைக்குப் போய் இக்கைப் பலத்தோடும் பலவந்தத்தோடும் அவர்களை வேலைசெய்யாதபடிக்குத் தவிர்த்துப் போட்டார்கள்.

௨௪ அப்பொழுது எருசலேமிலுள்ள பராபரனுடைய வீட்டு வேலை நிறுத்தப்பட்டுப் பெர்சியாவின் இராசாவாகிய தரியு இராச்சியபாரம்பண்ணின இரண்டாம் வருஷம் மட்டுந் தவிர்ந்திருந்தது.

௫. அதிகாரம்.

தேவாலயத்தைக் கட்டுகிற வேலை திரும்ப நடந்ததையானது.

அன்றியும் தீர்க்கதரிசியாகிய ஆகாயும் இத்தோவின் குமாரனாகிய சகரியாவும் என்ற தீர்க்கதரிசிகள் யூதாவிலும் எருசலேமிலுமுள்ள யூதருக்குத் தீர்க்கதரிசனஞ்சொல்லி, இஸ்ரவேலுடைய பராபரனின் நாமத்திலே அவர்களோடே பேசினார்கள்.

௨ அப்பொழுது சேயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலும் யோத்சதாக்கின் குமாரனாகிய யேசுவாவுமெழும்பி, எருசலேமிலுள்ள பராபரனுடைய வீட்டைக் கட்டத்துவக்கினார்கள். அவர்களுக்குத் திடன் சொல்லுகிற பராபரனுடைய தீர்க்கதரிசிகளும் அவர்களோடிருந்தார்கள்.

௩ அக்காலத்திலே நதிக்கப்பாலிருக்கிற தத்னாயென்கிற துரையுஞ் சேத்தார் பொஸ்னாயும் அவர்கள் கூட்டத்தாரும் அவர்களண்டைக்கு வந்து, இந்த வீட்டைக் கட்டவும் இந்த மதிலை யெடுப்பிக்கவும் உங்களுக்குக் கட்டளையிட்டவனாரென்று அவர்களைக் கேட்டார்கள்.

௪ அப்பொழுது அதையும இந்த மாளிகையைக்கட்டுகிற மனுஷரின நாமங்கள ஏதெனகிறதையும அவர்களுக்குச்சொனனோம.

௫ ஆனால இந்தச்செய்தி தரீயுவணடைக்குப்போய எட்டுமட்டுக்கும இவர்கள யூதருடைய மூப்பரின்வேலையைத் தவிர்க்காதபடிக்கு அவர்களுடைய பராபரனின்கண் அவர்களமேலவைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது இதைக்குறித்து அவர்களசொன்னமறுமொழியைக் காகிதத்திலெழுதியனுப்பினார்கள.

௬ நதிக்கிப்பாலிருக்கிற தத்னாய்என்ற துரையுஞ்சேத்தார்பொஸனாயும நதிக்கிப்பாலிருக்கிற அப்பற்சாகியரான அவன கூட்டத்தாரும இராசாவாகிய தரீயுவுக்கெழுதியனுப்பின காகிதத்தினவிவரமாக,

௭ அதில எழுதியிருந்ததாவது, இராசாவாகிய தரீயுவுக்குச் சகலவிதமானசமாதானமுண்டாகக்கடவது.

௮ நாங்கள யூதர்சீர்மையிலுள்ளமகாப்பராபரனுடைய வீட்டுக்குப்போனோம. அதுபெருங்கலலுகளாற்கட்டப்படுகிறது. மதிலகளினமேல உத்திரங்களபாய்ச்சப்பட்டு அந்தவேலைதுருசாயநடந்து அவர்களுக்கைகூடிவருகிறதெனபது இராசாவுக்கறியப்படக்கடவது.

௯ அப்பொழுது இந்தவீட்டைக்கட்டவும இந்தமதிலையெடுப்பிக்கவும உங்களுக்குக்கட்டளையிட்டவனாரென்று அந்தமூப்பரைக்கேட்டோம.

௰ இதுவுமல்லாமல அவர்களுக்குளளே தலைவரானமனிதரின நாமங்களை உமக்கு எழுதியறியப்பண்ணும்படிக்கு அவைகளையும அவர்களைக்கேட்டோம.

௰௧ அவர்கள எங்களுக்குக்கொடுத்த பிரதியுத்தாரமாவது. நாங்களபரலோகத்துக்கும பூலோகத்துக்குமபராபரனாயிருக்கிறவருக்கு ஊழியக்காரராயிருந்து அநேகவருஷங்களுக்குமுனனே கட்டப்பட்டிருந்த வீட்டைக்கட்டுகிறோம. அதை இஸ்ரவேலுடையபெரிய இராசா ஒருவனகட்டித்தீர்த்தான.

௰௨ ஆனால எங்களபிதாக்கள பரமண்டலத்தின பராபரனுக்குக்கோபமவருத்துவித்தபிற்பாடு அவர் இவர்களைப்பாபேலின இராசாவாகியநேபுகாத்நேச்சார் என்ற கல்தேயனகையில ஒப்புக்கொடுத்தார். அவர் இந்தவீட்டை நிர்மூலமாக்கிச்சனத்தைப்பாபேலுக்குக்கொண்டுபோனார்.

௰௩ ஆனாற் பாபேலின இராசாவாகிய கோரேசின முதலாமவருஷத்திலே கோரேஸ இராசாவானவர் பராபரனுடைய இந்தவீட்டைக்கட்டக்கட்டளையிட்டார்.

௰௪ நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்ததேவாலயத்திலெடுத்துப்பாபேலினதேவாலயத்திற்கொண்டுபோயவைத்தபராபரனுடையவீட்டின பொன் வெள்ளித்தட்டுமுட்டுகளையும இராசாவாகிய கோரேஸ பாபேலின தேவாலயத்திலெடுத்துக்கொடுத்தார். அவர் துரையாகவைத்த செஸ்பாத்சாரென்றநாமமுள்ளவனுக்கு அவை ஒப்புவிக்கப்பட்டது.

௰௫ இவனோடேஅவர், நீயிந்தத்தட்டுமுட்டுகளைவாங்கி எருசலேமிலிருக்குந்தேவாலயத்துக்குக்கொண்டுபோய்ப் பராபரனுடையவீடு தனனுடைய தானத்திலேகட்டப்படுவதைவிசாரியெனறார்.

௰௬ அப்பொழுது அந்தச்செஸ்பாத்சார் வந்து எருசலேமிலுள்ள பராபரனுடையவீட்டின அஸ்திபாரத்தைப் போட்டான. அந்நாளதுவக்கி இதுவரைக்கும அதுகட்டப்படுகிறது. ஆனால அது இன்னமுடியவில்லையெனறார்கள.

௰௭ இப்பொழுதும இராசாவுக்குச்சம்மதியாயிருந்தால எருசலேமிலிருக்கிறபராபரனுடைய அந்தவீட்டைக்கட்ட இராசாவாகிய கோரேஸ கட்டளையிட்டதுண்டோவென்றுபாபேலிலிருக்கிறஇராசாவின பொக்கஷவீட்டிலே ஆராய்ந்துபார்க்கப்பட்டு இதற்காக இராசாவினுடைசித்தமின்னதென்று எங்களுக்கு எழுதியனுப்பப்படக்கடவதெனறெழுதியிருந்தது.

௬. அதிகாரம்.

தேவாலயங்கட்டித்தீர்ந்துபிரதிஷ்டைபண்ணப்பட்டது.

அப்பொழுது இராசாவாகியதரீயுவிட்டகட்டளையினபடியேபாபேலினபொக்கிஷங்களினசாலையிலேதேடினார்கள.

௨ பிற்பாடுமேதியசீர்மையிலிருக்கிறஅக்மெதாப்பட்டின அரண்மனையிலே ஒருசுருள கண்டுபிடிக்கப்பட்டது. அதிலே நினைவுகூருதலுக்காக எழுதியிருந்தாவது,

௩ இராசாவாகிய கோரேசின முதலாம வருஷத்திற் கோரேஸ என்ற இராசா இட்டகட்டளையேதெனறால, எருசலேமிலிருந்தபராபரனுடையவீடுபெலிகளசெலுத்தப்படுந்தானத்திலே கட்டப்படக்கடவது. அதின அஸ்திபாரங்கள பெலப்பாயிருப்பதாக. அது அறுபதுமுழ உயரமும அறுபதுமுழ அகலமுமாயிருக்கவேணும.

௪ பெருங்கலலுகளான மூனறுவரிசைகளும புது உத்திரங்களான ஒருமச்சுவரிசையும அதற்குணடாயிருக்கக்கடவது. செலவுஞ்செலவு இராசாவின அரண்மனையிலிருந்துகொடுக்கப்படுவது.

௫ இதுவுமல்லாமல நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்த தேவாலயத்திலெடுத்துப்பாபேலுக்குக்கொண்டுவந்த பராபர

டையவீட்டுக்கெடுத்தபோன வெள்ளித்தட்டுகளை எருசலேமிலிருக்குந் தேவாலயமாகிய தங்களதானத்துக்குப் போய்ச்சேருமபடிக்குத் திருமபக் கொடுக்கப்படக்கடவது. அவைகளைப் பராபர னுடைய வீட்டிலேகொண்டுபோகக் கடவர்களென்று அதில எழுதியிருந்தது.

௬ அப்பொழுது தரியு இராசா எழுதியனுப்பினாவது, இப்பொழுதும நதிக்கப்பாலிருக்கிறதேசாதிபதியாகிய தத்னாயெசேத்தார்பொஸ்னாயும நதிக்கப்பாலிருக்கிற அப்பர்சக்காயரான உங்கள கூட்டத்தாரும அவ்விடத்தைவிட்டுவிலகியிருங்கள.

௭ பராபர னுடைய அந்தவீட்டின வேலையை அவர்களசெய்யட்டும. யூதருடைய தலைவரும யூதரினமூப்பருமபராபர னுடைய அந்தவீட்டை அதினதானததிலே கட்டக்கடவார்கள.

௮ பராபர னுடைய அந்தவீட்டையூதரின மூப்பர்கட்டுமபடிக்கு நீங்கள அவர்களுக்குச்செய்ய நமமாலுண்டானகட்டளையென்றால அந்தமனிதருக்குத் தடைபண்ணாதபடிக்கு நதிக்கப்பால எங்குமபகுதிபெறற இராசாவின ஆஸ்திகளிலே அவர்களுக்குத்தாமசமிலலாமற்செலவு கொடுக்கப்படுவதாக.

௯ பரமண்டலங்களின பராபர னுக்குச சர்வாங்கதகனங்களைப் பெலியிடததேவையானகாளைபெருதுகள ஆட்டுக்கடாக்கள ஆட்டுக்குட்டிகள கோதுமை உப்பு திராட்சப்பழ இரசம எண்ணெய்முதலானவைதினந்தினம அவர்களசொற்படி தாட்சிணியமலலாமற்கொடுக்கப்படக்கடவது.

௰ எருசலேமிலிருக்கிற ஆசாரியர்களபரமண்டலங்களின பராபர னுக்கு ஆறறுகிற வாசனையானபெலிகளைசசெலுத்தி இராசாவுக்கும அவர்குமாரருக்குமிருக்கிறபிராணஇட்சாசமன்றுடுமபடிக்குத்தானே.

௰௧ பின்னையும நம்மால உண்டானகட்டளையென்னவெனில, எந்தமனிதனாகிலும இந்தக்கட்டளையைப புரட்டினால அவன வீட்டில ஒரு உததிரமபிடுங்கிநாட்டப்பட்டு அவன அதில தூக்கிப்போடப்படவும அவனுடைய வீடு அதின நிமித்தமாகக் குப்பைமேடாக்கப்படவும வேணுமெனபதானே.

௰௨ ஆகையால இதைப்புரட்டவுமஎருசலேமிலிருக்கிற பராபர னுடைய அந்த வீட்டைகெடுக்கவுந தஙகளகையை நீட்டப்போகிற எந்த இராசாவையுஞ சனததையுந்தமமுடைய நாமததை அஙகேவாசமாயிருக்கபபணணின பராபரன நிர்மூலமாக்கக்கடவார். தரியுவாகிய நாம இநதக்கட்டளையைககொடுததோம. அதினபடி சீககிரமாகச செய்யப்படக்கடவதென்று எழுதியனுப்பினான.

௰௩ அப்பொழுது நதிக்கப்பாலிருக்கிற தலைவனாகிய தத்னாயும சேத்தார்பொஸ்னாயும அவர்களகூட்டத்தாருந தரியு இராசாகட்டளையிட்டபிரகாரமாகச சீககிரமாய்ச்செய்தார்கள.

௰௪ அப்படியே யூதரினமூப்பர் தீர்க்கதரிசியாகிய ஆகாயும இத்தோவின குமாரனாகிய சகரியாவுந தீர்க்கதரிசனஞசொலலிக்கொள்ளக்கட்டிககொண்டிருந்தார்கள. அவர்களுக்குக்கைகூடியுமவந்தது. அவர்கள இஸரவேலுடைய பராபரனின கட்டளையின படியேயுஙகோரேஸ, தரியு, பெர்சியாவின இராசாவாகிய அர்த்தசஷ்டா வென்றவர்களுடையகட்டளையின்படியேயும அதைக்கட்டிமுடித்தார்கள.

௰௫ இராசாவாகிய தரியு அரசாளுகிற ஆறமவருஷம ஆதார்என்றமாதம மூன்றுந்தேதியிலே அந்த வீடுகட்டித்தீர்ந்தது.

௰௬ அப்பொழுது இஸரவேலபுத்திரரும ஆசாரியருமலேவியருஞசிறையிருப்பிலிருந்து வந்தமறறவர்களும பராபர னுடைய அந்தவீட்டைச சந்தோஷததோடே பிறதிஷ்டைபணணி,

௰௭ பராபர னுடைய அந்த வீட்டின பிறதிஷ்டைக்காக நூறுகாளைகளையும இருநூறு ஆட்டுக்கடாக்களையும நானூறு ஆட்டுக்குட்டிகளையும இஸரவேலகோததிரஙகளுடைய இலக்கததினபடியே இஸரவேலினததினபாவமபோககுதலுக்காகப் பன்னிரண்டுவெள்ளாட்டுக்கடாக்களையுமபெலியிட்டு,

௰௮ மோசேயின புஸதகததில எழுதியிருக்கிறபடியே அவர்கள எருசலேமிலவாசமாயிருக்கிறபராபர னுடைய ஆராதனைக்கென்று ஆசாரியரை அவர்கள வகுப்புகளிலும லேவியரை அவர்கள முறைவரிசைகளிலும நிறுததினார்கள.

௰௯ பஸ்காவையுஞ சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள முதலாம மாதம பதினாலாந தேதியிலே ஆசரிததார்கள.

௨௰ ஏனெனில ஆசாரியரும லேவியரும ஒருவனைபபோலே தஙகளைசசுததமபணணிககொணடதினாலேயெலலாருஞசுததமாயிருந்து சிறையிருப்பிலிருந்து வந்தவர்களெலலாருக்காகவும ஆசாரியரான தங்கள சகோதரருக்காகவுந தஙகளுக்காகவும பஸ்காவின ஆட்டுககுட்டிகளைககுரலவளைய றுததார்கள.

௨௧ அப்படியே சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த இஸரவேலபுத்திரரும இஸரவேலின பராபரனைத் தேடும்படிக்குப் பூலோகசசாதிகளின அசுத்தத்தைவிட்டு அவர்களண்டையிலேசேர்நத அனைவருமாய் அதைப்புசித்தது,

௨௨ புளிப்பிலலாத அப்பங்களின பண்டிகையை ஏழுநாளாகச்சந்தோஷததுடனே

ஆசரித்தார்கள. ஏனெனறால் கர்த்தர் அவர்களைமகிழ்ச்சியாக்கி அவர்களகைகளை இஸ்ரவேலின பராபரனாகிய பராபரனுடைய வீட்டினவேலையிலே பலப்படுத்தத்தக்கதாய் அசூருடைய இராசாவின இருதயத்தை யவர்களுக்குச்சார்ந்திருக்கப்பணணியிருந்தார்.

எ. அதிகாரம்.

எஸ்று பாபேலோனியச்சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குவந்தது.

இந்த வர்த்தமானங்களுக்குப்பிற்பாடு செராயாவின குமாரனாகிய எஸ்று பெர்சியாவின இராசாவாகிய அர்த்தசஷ்டா அரசாளுகிறகாலத்திலேபாபேலிலிருந்தேறிவந்தான. அந்தச்செராயா அசரீயாவினகுமாரனும, இவன இலகியாவினகுமாரனும,

௨ இவன சலலூமினகுமாரனும, இவன சாதோகினகுமாரனும, இவன அகிதூபினகுமாரனும,

௩ இவன அமரீயாவினகுமாரனும, இவன அசரீயாவினகுமாரனும, இவன மெராயோதினகுமாரனும,

௪ இவன சேராகியாவின குமாரனும, இவன ஊசியினகுமாரனும, இவன புக்கியினகுமாரனும,

௫ இவன அபிசூவாவினகுமாரனும, இவன பினேகாசினகுமாரனும, இவன எலெயாசாரினகுமாரனும இவன பிரதானஆசாரியனான ஆரோனினகுமாரனுமாயிருந்தான.

௬ ஏறிவந்த இந்த எஸ்று இஸ்ரவேலின பராபரனாகிய கர்த்தர் கொடுத்த மோசேயின நியாயப்பிரமாணத்திலே சவரணையானவேதபாரகனாயிருந்தான. அவனமேலிருந்த அவனுடைய பராபரனாகிய கர்த்தருடையகரத்தினபடியே இராசா அவனுக்கு அவனகேட்டதையெல்லாங்கொடுத்தான.

௭ அவனோடேகூட இஸரவேலபுத்திரரிலும ஆசாரியரிலும லேவியரிலும பாட்டகரிலும வாசற்காப்பாரிலும இஸரவேலைச்சேர்ந்தவர்களிலுஞ்சிலர் அர்த்தசஷ்டா இராசாவின ஏழாம்வருஷத்திலே எருசலேமுக்கேறிப்போனார்கள.

௮ ஐந்தாம்மாதத்தில அவன எருசலேமுக்குவந்தான. அது அந்த இராசாவின ஏழாம்வருஷமானது.

௯ அதெதெனில முதலாம்மாதம முதலதேதியிலே அவனபாபேலிலிருந்தேறிப்போகுதல திட்டப்பட்டு ஐந்தாம்மாதம முதலதேதியிலே அவன தனமேலிருந்த தனபராபரனுடைய தயவுள்ளகரத்தினபடி எருசலேமுக்குவந்தான.

௰ ஏனெனறால் கர்த்தருடையவேதத்தை ஆராயவும அதினபடி செய்யவும, இஸரவேலிலே கட்டளைகளையும நீதிநியாயங்களையும உபதேசிக்கவும எஸ்று தன இருதயத்தைபடண்படுத்தியிருந்தான.

அர்த்தசஷ்டா இராசா எஸ்றவினமேலகொடுத்த தயவுள்ள நிருபம.

௰௧ கர்த்தருடைய கற்பனைகளினவார்த்தைகளிலும அவர் இஸரவேலுக்குச்சொன்ன கட்டளைகளிலும படித்தெடுத்தவேதபாரகனாகிய எஸறுவென்ற ஆசாரியனுக்கு இராசாவாகிய அர்த்தசஷ்டாகொடுத்தநிருபத்தினவிவரமாவது,

௰௨ இராசாக்களுக்கு இராசாவாகிய அர்த்தசஷ்டா பரமண்டலங்களின பராபரனுடைய நியாயப்பிரமாணத்திற்கு உத்தமவேதபாரகனாகிய எஸறுவென்ற ஆசாரியனுக்குப்பூரணசமாதானம ஸ்ரீ:

௰௩ நமமுடைய இராசசியத்திலிருக்கிற இஸரவேல சனத்திலும அதின ஆசாரியரிலும லேவியரிலும உனனோடேகூட எருசலேமுக்குப்போகமனப்பூர்வமாயிருக்கிறயாவரும போகலாமெனறு நமமாலேகட்டளை பிறந்தது.

௰௪ ஏனெனறால நீ உனகையிலிருக்கிற உன பராபரனுடையநியாயப்பிரமாணத்தினபடி யூதாவிலும எருசலேமிலும நடக்கிறதோவெனறுவிசாரிக்கவும,

௰௫ இராசாவும அவருடைய ஆலோசனைக்காரரும எருசலேமில வாசமாயிருக்கிற இஸரவேலின பராபரனுக்கும னப்பூர்வமாயக்கொடுத்த வெளளியையும பொனனையும,

௰௬ பாபேலினசீமையெங்கும உனக்குக்கிடைக்கும எலலாவெளளியையும பொனனையும உன சனமும ஆசாரியரும எருசலேமிலுளள தஙகளபராபரனுடைய வீட்டுக்கென்று மன உற்சாகமாயக்கொடுக்குங்காணிக்கைகளையும நீகொண்டுபோகவும நீ இராசாவினாலும அவருடைய ஏழுஆலோசனைக்காரராலும் அனுப்பப்படுகிறாய.

௰௭ ஆகையால அந்தத்திரவியத்தினாலே நீ சீக்கிரமாக எருதுகளையும ஆட்டுக்கடாக்களையும ஆட்டுக்குட்டிகளையும அவைகளுக்கடுத்த காணிக்கைகளையும பானபலிகளையும வாஙகி அவைகளை எருசலேமிலிருக்கிற உஙகளபராபரனுடைய வீட்டுப்பலிபீடத்தினமேற்செலுத்துவாயாக.

௰௮ மீதியான வெளளியினாலும பொனனினாலுஞ் செயய உனக்கும உனசகோதரருக்கும எப்படி எது நனறாயக்காணுமோ அதை உஙகள பராபரனுடைய சித்தத்தினபடியேசெயயுஙகள.

௰௯ உனபராபரனுடையவீட்டினஆராதனைக்காக உனக்குக்கொடுக்கப்பட்டபாத்திரமுட்டுகளையும நீ எருசலேமின பராபரனுக்குமுனபாக ஒப்புவிக்கக்கடவாய.

௨௰ பின்னையும் உன் பராபரனுடைய வீட்டுக்கு நீ கொடுக்க ஏற்றதுந் தேவையுமாயிருப்பதை நீ இராசாவின் பொக்கிஷ வீட்டில் வாங்கிக்கொடுப்பாயாக.

௨௧ நதிக்கப்பாலிருக்கிற எல்லாப் பொக்கிஷக்காரருக்கும் அர்தசஷ்டாவென்ற இராசாவாகிய நாம் இட்டிருக்கிற கட்டளை ஏதென்றால் பரமண்டலங்களுடைய பராபரனின் வேதபாரகனாகிய எஸ்றாவென்ற ஆசாரியன் நூறு தாலந்து வெள்ளி நூறு கலக் கோதுமை நூறு கலத் திராட்சப்பழ இரசம் நூறு கல எண்ணெய் மட்டாக உங்களைக் கேட்பதெல்லாவற்றையும்,

௨௨ கணக்கிலெழுதக் கவலையில்லாத உப்பையுந் தாமதமில்லாமற் கொடுக்கவும்,

௨௩ பரமண்டலங்களுடைய பராபரனுடைய கற்பனையின்படியே எது தேவையாயிருக்குமோ அதுவெல்லாம் பரமண்டலத்துப் பராபரனுடைய வீட்டுக்குக் கருத்தோடே செலுத்தப்படவும் வேணும், ஏனென்றால் இராசாவும் அவர் குமாரரும் ஆளும் இராச்சியத்தின்மேற் கடுங்கோபம் வருவானேன்.

௨௪ பின்னையும் ஆசாரியர்களும் லேவியரும் பாட்டகரும் வாசற்காப்பாரும் இஸ்ரவேலைச்சேர்ந்தவர்களும் அந்தப் பராபரனுடைய வீட்டின் வேலைக்காரருமான ஒருவன்மேலும் பகுதியாகிலும் வரியாகிலுந் தீர்வையென்கிலுஞ் சுமத்தப்படவேண்டாமென்று அவர்களைக்குறித்து உங்களுக்கறியப்பிக்கிறோம்.

௨௫ பின்னையும் நதிக்கப்பாலிருந்த உன் பராபரனுடைய நியாயப்பிரமாணங்களை அறிந்த எல்லாச் சனத்தையும் நியாயம் விசாரிக்கத்தக்க துரைகளையும் நியாயாதிபதிகளையும் எஸ்றாவாகிய நீ உன்னிலுள்ள உன் பராபரனுடைய ஞானத்தின்படியே வைப்பாயாக. அவைகளை அறியாதவர்களுக்கு அவைகளை உபதேசிக்கக்கடவீர்கள்.

௨௬ உன் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தின்படியேயும் இராசாவினுடைய நியாயப்பிரமாணத்தின்படியேயுஞ் செய்யாதவனெல்லாம் உடனே தானே மரணத்துக்காகிலுந் தேசத்துக்குப்புறம்பாகுதலுக்காகிலும் ஆஸ்தியின் அபராதத்துக்காகிலுங் காவலுக்கென்கிலுந் தீர்க்கப்படக்கடவனென்று எழுதியிருந்தது.

௨௭ எருசலேமிலிருக்கிற கர்த்தருடைய வீட்டை அலங்கரிக்க இப்படிக்கொத்ததை இராசாவின் இருதயத்திற் கொடுத்து, இராசாவுக்கும் அவர் ஆலோசனைக்காரருக்கும் இராசாவின் கீழான பலத்த எல்லாப் பிரபுக்களுக்கும் முன்பாக எனக்குக் கிருபையிடப்பண்ணின எங்கள் பிதாக்களின் பராபரனாகிய கர்த்தர் தோத்திரிக்கப்பட்டவர்.

௨௮ அப்படியே என்மேலுள்ள என் பராபரனாகிய கர்த்தருடைய கரத்தினால் நான் பலத்துக்கொண்டு இஸ்ரவேலிற் சில தலைவரை என்னோடேகூட ஏறிப்போகும்படிக்குச் சேர்த்துக்கொண்டேன்.

அ. அதிகாரம்.

எஸ்றாவோடேகூட எருசலேமுக்குப் பயணம்பண்ணினவர்களும் வழியிலே பண்ணின உபவாசமும்.

அர்தசஷ்டா இராசா அரசாளுங்காலத்திற் பாபேலிலிருந்து என்னோடேகூட ஏறிப்போனதங்கள் பிதாக்கள் வமிசங்களின் தலைவரும் அவர்கள் வமிசத்தட்டவணைகளுமாவன்,

௨ பினெகாஸ்புத்திரரிற் கெர்சோம் இத்தாமாரின் புத்திரரில் தானியேல் தாவீதின் புத்திரரில் அத்தூஸ்,

௩ பாறோஷின் புத்திரரில் ஒருவனான செகனியாவின் புத்திரரிற் சகரீயாவும் அவனோடேகூட வமிசத்தட்டவணையில் எழுதியிருக்கிற நூற்றைம்பது ஆண்பிள்ளைகளும்,

௪ பாகாத்மோவாபின் புத்திரரிற் செரகியாவின் குமாரனாகிய எலியோனாயும் அவனோடேகூட இருநூறு ஆண்பிள்ளைகளும்,

௫ செகனியாவின் புத்திரரில் யகசீயேலின் குமாரனும் அவனோடேகூட முந்நூறு ஆண்பிள்ளைகளும்,

௬ ஆதினின் புத்திரரில் யோனத்தானின் குமாரனாகிய ஏபேதும் அவனோடேகூட ஐம்பது ஆண்பிள்ளைகளும்,

௭ ஏலாமின் புத்திரரில் அதலியாவின் குமாரனாகிய எசாயாவும் அவனோடேகூட எழுபது ஆண்பிள்ளைகளும்,

௮ செப்பதியாவின் புத்திரரில் மிகவேலின் குமாரனாகிய செப்பதியாவும் அவனோடேகூட எண்பது ஆண்பிள்ளைகளும்,

௯ யோவாபின் புத்திரரில் எகியேலின் குமாரனாகிய ஒபதியாவும் அவனோடேகூட இருநூற்றுப்பதினெட்டு ஆண்பிள்ளைகளும்,

௰ செலோமீதின் புத்திரரில் யொசிபீயாவின் குமாரனும் அவனோடேகூட நூற்றறுபது ஆண்பிள்ளைகளும்,

௰௧ பெபாயின் புத்திரரிற் பெபாயின் குமாரனாகிய சகரீயாவும் அவனோடேகூட இருபத்தெட்டு ஆண்பிள்ளைகளும்,

௰௨ அஸ்காதின் புத்திரரிற் காத்தானின் குமாரனாகிய யோகனானும் அவனோடேகூட நூற்றுப்பத்து ஆண்பிள்ளைகளும்,

௰௩ அதோனிகாமின் கடைசிப் புத்திரரான எலிபேலேத் ஏயெல் செமாயாவென்ற நாமங்களுள்ளவர்களும் அவர்களோடேகூட அறுபது ஆண்பிள்ளைகளும்,

௰௪ பிகேவாயின் புத்திரரில் ஊத்தாயுஞ் சபூதும், அவர்களோடேகூட எழுபது ஆண்பிள்ளைகளுந்தானே.

௰௫ இவர்களை நான் அகாபாவுக்கு ஓடுகிற நதியண்டையிலே கூட்டிக்கொண்டுபோனேன். அங்கே மூன்றுநாள் இறங்கியிருந்தோம். நான் சனத்தையும் ஆசாரியரையும் ஆராய்ந்துபார்க்கிறபோது லேவியின் புத்திரரில் ஒருவரையும் அங்கே கண்டதில்லை.

௰௬ ஆகையால் நான் எலியேசர், அரியேல், செமாயா, எல்நாத்தான், யாரிப், எல்நாத்தான், நாத்தான், சகரியா, மெசுல்லாமென்ற தலைவரையும், யோயரிப், எல்நாத்தானென்ற விவேகிகளையும் அழைத்தனுப்பி,

௰௭ கசிப்பியாவென்ற ஸ்தலத்திலிருக்கிற தலைவனாகிய இத்தோவண்டைக்குச் செய்தியைக்கொண்டுபோக அவர்களுக்குக் கற்பித்து, நம்முடைய பராபரனுடைய வீட்டுக்குப் பணிவிடைக்காரரையெங்களண்டைக்கழைத்துவரும்படிக்கு அவர்கள் கசிப்பியாவென்ற ஸ்தலத்திலிருக்கிற தங்கள் சகோதரனாகிய இத்தோவுக்கும் இஸ்ரவேலைச்சேர்ந்தவர்களுக்குஞ்சொல்லும் வார்த்தைகளை அவர்கள் வாயிலே போட்டேன்.

௰௮ அவர்கள் எங்கள்மேலிருந்த எங்கள் பராபரனுடைய தயவுள்ள கரத்தின்படியே, இஸ்ரவேலுக்குப் பிறந்த லேவியின் குமாரனாகிய மகிலியின் புத்திரரிற் புத்தியுள்ள மனுஷனாகிய சேரேபியாவும் அவன் குமாரருஞ்சகோதரருமான பதினெட்டுப்பேரையும்,

௰௯ மெராரியரியின் புத்திரரில் அஷபியாவும் அவனோடே எசாயாவும் அவன் சகோதரரும் அவர்கள் குமாரருமான இருபதுபேரையும்,

௨௰ தாவீதும் பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக வைத்த இஸ்ரவேலைச்சேர்ந்தவர்களில் இருநூற்றிருபது பேரையும் எங்களுக்கு அழைத்துக்கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாருடைய பேர் நாமஞ்சொல்லப்பட்டது.

௨௧ அப்போது நாங்கள் எங்கள் பராபரனுக்குமுன்பாக எங்களைத் தாழ்த்துகிறதற்கும், எங்களுக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் எங்கள் எல்லா ஆஸ்திக்கும் அவராலே செவ்வையான வழியைத் தேடுகிறதற்கும், நான் அங்கே அந்த அகாபாவுநதியண்டையிலே உபவாசத்தைக்கூறினேன்.

௨௨ ஏனென்றால் வழியிலே சத்துருவைவிலக்கி யெங்களுக்குத் துணையாயிருக்க நான் இராசாவைச் சேவகரையுங் குதிரைக்காரரையுங் கேட்க வெட்கப்பட்டிருந்தேன். ஏனென்றால் எங்கள் பராபரனுடைய கரம் நலமுண்டாகத் தம்மைத்தேடுகிறவர்களெல்லாரின்மேலும் அவருடைய பெலனும் அவருடைய கோபமும் அவரைவிட்டு விலகுகிறவர்களெல்லாரின்மேலுமிருக்கிறதென்று நாங்கள் இராசாவுக்குச்சொல்லியிருந்தோம்.

௨௩ அப்படியே நாங்கள் உபவாசம்பண்ணி எங்கள் பராபரனிடத்திலே அதைத் தேடினோம். எங்கள் விண்ணப்பத்தைக்கேட்டுத் தந்தார்.

அவர்கள் பயணம் அனுகூலமாய் முடிந்தது.

௨௪ பிற்பாடு நான் ஆசாரியரின் தலைவரில் பன்னிரண்டுபேராகிய செரெபியாவையும் அஷபியாவையும் அவர்கள் சகோதரரிலே பத்துப்பேரையுங் கூடப்பிரித்தெடுத்து,

௨௫ இராசாவும் அவருடைய ஆலோசனைக்காரரும் அவருடைய பிரபுக்களுங் காணப்பட்ட எல்லா இஸ்ரவேலரும் எங்கள் பராபரனுடைய வீட்டுக்கென்று எடுத்துக்கொடுத்த காணிக்கையாகிய வெள்ளியையும் பொன்னையுந் தட்டுமுட்டுகளையும் அவர்களுக்கு நிறுத்துக்கொடுத்தேன்.

௨௬ அவர்கள் கையிலே நான் அறுநூற்றைம்பது தாலந்து வெள்ளியையும் நூறு தாலந்து நிறையான வெள்ளித்தட்டுமுட்டுகளையும் நூறு தாலந்து பொன்னையும்,

௨௭ ஆயிரந் தங்கக்காசின் விலையான இருபது பொற்கிண்ணிகளையும், பொன்னைப்போலெண்ணப்பட்ட பளபளப்பான நல்ல வெண்கலமான இரண்டு பாத்திரங்களையும் நிறுத்துக்கொடுத்து,

௨௮ அவர்களுடனே சொன்னது: நீங்கள் கர்த்தருக்குப் பரிசுத்தவான்கள். இந்தத் தட்டுமுட்டுகளும் உங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தருக்கு மனஉற்சாகமாய்ச் செலுத்தப்பட்ட இந்த வெள்ளியும் இந்தப் பொன்னும் பரிசுத்தம்.

௨௯ நீங்கள் அதை எருசலேமிலிருக்கிற பராபரனுடைய வீட்டின் அறைகளில் ஆசாரியர் லேவியருடைய பிரபுக்களுக்கும் இஸ்ரவேலுடைய பிதா வம்சங்களின் தலைவருக்கும் முன்பாக நிறுத்தொப்புவிக்குமட்டும் விழித்து அதைக் காத்துக்கொண்டிருங்களென்றேன்.

௩௰ அப்படியே அந்த ஆசாரியரும் லேவியரும் அந்த வெள்ளியையும் பொன்னையுந் தட்டுமுட்டுகளையும் எருசலேமிலிருக்கிற எங்கள் பராபரனுடைய வீட்டுக்குக் கொண்டுபோகும்படிக்கு நிறைப்பிரகாரமாய் வாங்கிக்கொண்டார்கள்.

௩௧ அப்படியே நாங்கள் எருசலேமுக்குப் போக முதலாம் மாதம் பன்னிரண்டாந் தேதியிலே அகாபா நதியைவிட்டுப் பயணமாய்ப் புறப்பட்டோம். எங்கள் பராபரனு

டபக்ஷம் எங்களமேலிருந்து வழியிலே சிறுவினைக்கும் பதிவிருக்கிறவர்களு டபகைக்கும் எங்களைத்தப்புவித்தது.

௩௨ நாங்கள் எருசலேமுக்குவந்து அங்கு மூன்றுநாளிருந்தபிற்பாடு,

௩௩ நாலாநாளிலே அந்த வெள்ளியும் பொனனுந்தட்டுமுட்டுகளும் எங்கள்பரா பரனுடையவீட்டில ஆசாரியனுடைய உறி யின்குமாரனமெரேமோதின கையிலும பினேகாசினுடையாரன எலெயாசாரின்கை யுங்கூட எல்லாவறறித்துமிருந்தஇலக்க படியேயும நிறுத்தொப்புவிக்கப்பட் டு. யெசுவாவினகுமாரன யோசபாதும வின்னுயியின்குமாரன நோட்டியாவுமென லேவியரும் அவர்களோடேகூட இருந் தார்கள.

௩௪ அந்தநிறையெலலாம அக்காலத்தி லெழுதப்பட்டது.

௩௫ குடிவிலக்கிச்சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள இஸ்ரவேலின பராபரனுக்கு சர்வாங்கதகனங்களாக இஸ்ரவேலனைத் துக்குமாகப்பன்னிரண்டு எருதுகளையுந் தொண்ணூற்றாறு ஆட்டுக்கடாக்களையும எழுபத்தேழு ஆட்டுக்குட்டிகளையும்பாவம நிவிர்த்திக்கப்பன்னிரண்டுவெள்ளாட்டுக்கடாக் களையுஞ்செலுத்தினு, அதையெல்லாம் கர்த் தருக்குச்சர்வாங்கதகனமாகச்செலுத்தினு ர்கள.

௩௬ பிற்பாடு இராசாவின கட்டளைகளை நதிக்கப்பாலிருக்கிற இராசாவின சுபைய தலைவர்களுக்கும அதிகாரிகளுக்கும ஒப்புவித் தார்கள. அப்போது இவர்கள்சனத்துக்கும பராபரனுடைய வீட்டுக்கும உதவியா யிருந்தார்கள.

௯. அதிகாரம்.

இஸ்ரவேலர் அந்நியமான பெண்சாதிகளை விவாகம்பண்ணினதினிமித்தம எஸ்று வினால்துக்கப்பட்டுப்பண்ணினசெபம்.

௧ இவைகளைசெயதுமுடிந்தபிற்பாடு பிர புக்கள என்னண்டைக்குச்சேர்ந்துசொன் னது, இஸ்ரவேலசனமும, ஆசாரியரு ம லேவியரும, கானானியர், ஏத்தியர், பெரி சியர், எபூசியர், அம்மோனியர், மோவாபி யர், எகிப்தியர், அம்மோரியரென்றதங்க ளருவருப்புகளின்படியிருக்கிற இந்தத் தேசங்களின சனசதளங்களைவிட்டுப்பிரியா திருக்கிறார்கள.

௨ ஏனெனில அவர்களுடையகுமார த்திகளைத் தங்களுக்குந்தங்களகுமாரருக்கு ம பெண்கொண்டார்கள. இப்படியே பரிசுத்தவித்து தேசங்களின சனசதளங்க ளோடே கலந்துபோயிற்று. பிரபுக்களின் கையும அதிகாரிகளின்கையும இந்தப் பாதகத்தில முந்தினதுமாயிருந்ததென்றார் கள.

௩ நான் இந்தவர்த்தமானத்தைக்கேட் டபொழுது நான் என் வஸ்திரத்தையும எனசால்வையையுங்கிழித்து என்தலையிலும என்தாடியிலும மயிரைப்பிடுங்கிக்கொண்டு திகைத்தவனாய உளுக்கார்ந்திருந்தேன.

௪ அப்போது சிறையிருப்பிலிருந்துவந் தவர்களுடைய பாதகத்தினிமித்தம இஸ்ர வேலுடைய பராபரனின வார்த்தைகளால நடுங்குகிறயாவரும என்னோடேகூடிக்கொ ண்டார்கள. நானோவெனில அந்திப்பெலி செலுத்தப்படும் மட்டுந் திகைத்தவனாய உளுக்கார்ந்துகொண்டிருந்தேன.

௫ அந்திப்பெலியினநேரத்திலேவெனி ல நான என்சிறுமையோடெங்கிழித்துக்கொ ண்டிருக்கிற என்வஸ்திரத்தோடும என்சா லவையோடும எழுந்திருந்து என்முழங்கா லகளை முடக்கி, என்கைகளை என்பராபரனு டைய கர்த்தருக்கு நேராகவிரித்து,

௬ என்பராபரனே, நான என்முகத் தையென்பராபரனுடைய தேவரீருக்குமுன பாக ஏறெடுக்க வெட்கிக்கூச்சப்படடிருக் கிறேன. ஏனெனில எங்கள அக்கிரமங்கள எங்கள்தலைக்குமேலாகப்பெருகி எங்களகு ற்றமவான்பரியந்தமவளர்ந்துபோயிற்று.

௭ எங்கள்பிதாக்களின நாட்கள்துவக்கி இந்நாள்மட்டும நாங்கள்பெரியகுற்றத்து க்குள்ளாயிருக்கிறோம. எங்கள அக்கிரமங் களினிமித்தம நாங்களுமஎங்கள இராசாக் களும எங்கள ஆசாரியர்களும, இந்நாளிலி ருக்கிறதுபோல தேசங்களுடைய இராசா க்களின்கையிலேபட்டையத்துக்குஞ்சிறை யிருப்புக்குங் கொள்ளைக்கும முகச்செத்து ப்போகுதலுக்கும ஒப்புக்கொடுக்கப்பட் டோம.

௮ இப்போதும எங்கள பராபரனுடைய கர்த்தர் எங்களிலேதப்பினசிலரைமீதியாக வைக்கவுந் தம்முடைய பரிசுத்தஸ்தலத்தி ல எங்களுக்கொரு குச்சைக்கொடுக்கவும, இப்படியே எங்கள பராபரன எங்கள்கண் களைப்பிரகாசிப்பித்து, எங்கள் அடிமைத் தனத்திலே எங்களுக்குக்கொஞ்சஞ்சீவனங் கட்டளையிடவும அவராலே கொஞ்சநிமி ஷம்போலே கிருபைகிடைத்தது.

௯ ஏனெனில நாங்கள்அடிமைகளாமே- ஆனால எங்கள அடிமைத்தனத்திலே எங்க ள பராபரன எங்களைக்கைவிடாமல நாங்க ள எங்கள பராபரனுடைய வீட்டையெடு ப்பித்துப்பாழாய்ப்போன அதைஸ்தாபிக் கிறதற்காக எங்களுக்குச்சீவனங்கொடுக்கு மட்டுக்கும எங்களுக்கு யூதாவிலும எருச லேமிலும ஒருவேலியைக்கட்டளையிடும்படி க்கும, பெர்சியாவினஇராசாக்களுக்குமுன பாக எங்களமேற் கிருபையைச்சாய்த்தார்.

௰ இப்போதும் எங்கள் பராபரனே, நாங்கள் இதின்பிறகு என்னசொல்லுவோம். ஏனென்றால் தேவரீர் உம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளைக்கொண்டு கற்பித்த உமது கற்பனைகளைவிட்டுவிட்டோமே.

௰௧ நீங்கள் சுதந்தரிக்கிறதற்கு உட்பிரவேசிக்கும் தேசம் தேசங்களுடைய சனசதனங்களின் அழுக்கினாலும் அவர்கள் அதை ஒருமுனைதுவக்கி மறுமுனைமட்டும் நிறையப்பண்ணின அவர்களுடைய அருவருப்புகளினாலும் அவர்களுடைய அசுத்தத்தினாலும் தீட்டுப்பட்டதேசமாயிருக்கிறது.

௰௨ இப்போதும் நீங்கள் பலத்துக்கொண்டு தேசத்தின் நன்மையைப்புசித்து அதை நித்தியகாலமாக உங்கள் பிள்ளைகளுக்கு உம்பிளிக்கையாகப்பின்வைக்கும்படிக்கு, நீங்கள் உங்கள் குமாரத்திகளை அவர்களுடைய குமாரருக்குக்கொள்ளாமலும், அவர்களுடைய குமாரத்திகளை உங்கள்குமாரருக்குக்கொடாமலும், அவர்களுக்குச்சமாதானமும் நன்மையுமாயிருக்கிறதையென்றென்றைக்கும் பாராமரிக்காமலுமிருப்பீர்களாகவென்றீரே.

௰௩ இப்போதும் எங்கள் பராபரனே! எங்கள் பொல்லாதசெய்கைகளினாலும் எங்கள்பெரியகுற்றத்தினாலும் எங்கள்மேலெல்லாம்வந்தபிற்பாடு தேவரீர் எங்கள் அக்கிரமத்துக்குத்தக்க ஆக்கினையையெங்களுக்குக்கொடாமல், எங்களை இப்படித்தப்பவிட்டிருக்கக்கொள்ள,

௰௪ நாங்கள் உமது கற்பனைகளைவீணாக்கவும் இந்த அருவருப்புகளுள்ள சனசதனங்களோடே சம்பந்தங்கலக்கவுந் திரும்புவோமோ, அப்படியானால் எங்களிலொருவரும் மீந்து தப்பாதபடிக்குத்தேவரீர் எங்களை நிர்மூலமாக்குமட்டும் எங்கள்மேலேகோபமாயிருப்பீரல்லவோ.

௰௫ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தாவே, தேவரீர் நீதியுள்ளவர். ஏனெனில் இதினிமித்தம் இந்நாளிலிருக்கிறதுபோலே நாங்கள் தப்பி மீதியானோம். இதோ, நாங்கள் உமக்குமுன்பாக எங்கள்குற்றத்திலிருக்கிறோம். உமக்குமுன்பாகநிற்கத்தக்கவன் ஒருவனுமில்லையென்றுசொன்னேன்.

௰. அதிகாரம்.

இஸ்ரவேலர் அந்நியானப் பெண்சாதிகளைத்தள்ளிவிட்டது.

எஸ்று இப்படிவிண்ணப்பம்பண்ணி அறிக்கையிட்டு அழுது பராபரனுடைய வீட்டுக்குமுன்பாகத்தாழவிழுந்துகிடக்கையில் இஸ்ரவேலிற் புருஷரும் பெண்சாதிகளும் பிள்ளைகளுமான மகாப்பெரிய சபை அவனண்டையிலேகூடிக்கொண்டது. ஏனென்றால் சனம் மிகவும் அழுதுகொண்டிருந்...

௨ அப்போது ஏலாமின்புத்திரரில் ஒருவனாகிய எகியேலின் குமாரன் செக்னியா எஸ்றுவுக்குப்பிரதியுத்தாரமாகச்சொன்னதாவது, நாங்கள் தேசச்சனசதனங்களில் உண்டான அந்நிய ஸ்திரீகளைச்சேர்த்துக்கொண்டதினால் எங்கள் பராபரனுக்குவிரோதமாகப்பாதகம்பண்ணினோம். ஆகிலும் இப்போது இந்தக்காரியத்திலே இன்னம் இஸ்ரவேலுக்காக நம்பிக்கையிருக்கிறது.

௩ இப்போதும் அந்த எல்லா ஸ்திரீகளையும் அவர்களிற் பிறந்தவர்களையும் ஆண்டவருடைய ஆலோசனைக்கும் எங்கள் பராபரனுடையகற்பனைக்கு நடுங்குகிறவர்களுடைய ஆலோசனைக்கும் ஒத்தபிரகாரமாய் அகற்றிப்போடுவோமென்று எங்கள் பராபரனோடே உடம்படிக்கை பண்ணக்கடவோம் நியாயப்பிரமாணத்தின்படியே செய்யப்படக்கடவது.

௪ எழுந்திரும் ஏனென்றால் இந்தக்காரியத்தை நடப்பிக்க உமக்குத்தான் அடுத்திருக்கிறது. நாங்கள் உம்மோடேகூடவிருப்போம். நீர் திடன்கொண்டு இப்படி நடப்பியுமென்றான்.

௫ அப்போது எஸ்று எழுந்திருந்து ஆசாரியர் லேவியருடைய பிரபுக்களும் இஸ்ரவேலனைத்தும் இந்தவார்த்தையின்படியே செய்யும்படிக்கு அவர்களை ஆணையிடுவித்துக்கொண்டான். அவர்கள் ஆணையிட்டார்கள்.

௬ அதின்பிறகு எஸ்று பராபரனுடைய வீட்டுக்குமுன்பாகஇருந்தெழுந்து எல்யாசிபின்குமாரனாகிய யோகனானின் அறைக்குட்பிரவேசித்து அங்கேவந்தபோது அப்பம் பொசிக்காமலுந் தண்ணீர் குடியாமலுமிருந்தான். ஏனென்றால் சிறைப்பிருப்பிலிருந்துவந்தவர்களுடையபாதகத்தினிமித்தம் துக்கித்துக்கொண்டிருந்தான்.

௭ அப்போது சிறைப்பிருப்பிலிருந்துவந்தவர்களெல்லாரும் எருசலேமிலே வந்து கூடவேண்டுமென்றும்,

௮ மூன்றுநாளைக்குள்ளே பிரபுக்களும் மூப்பர்களுடைய ஆலோசனையின்படியே வராதேபோனால் அவனுடைய ஆஸ்தியெல்லாம் சாபத்துக்குள்ளாகி அவன் சிறையிருப்பிலிருந்துவந்தசபைக்குப் புறம்பாக்கப்படுவானென்றும் யூதாவிலும் எரு...
வேமிலுங் கூறப்பண்ணினார்கள்.

௯ அப்படியே யூதா பென்யமீன் கோத்திரத்தாரெல்லாரும் மூன்றுநாளைக்குள்ளே எருசலேமிலே கூடினார்கள். அது ஒன்பதாம் மாதம் இருபதாந்தேதியாயிருந்தது. சனமெல்லாம் பராபரனுடைய வீட்டின் வீதியிலே அந்தக்காரியத்தினிமித்தமும் மழை...

...நிமித்தமாகவும் நடுங்கிக்கொண்டிருந்தார்கள்.

௰ அப்போது ஆசாரியனாகிய எஸ்றா எழுந்திருந்து அவர்களுடனே சொன்னதாவது, நீங்கள் இஸ்ரவேலின்மேல்ருக்கிற குற்றத்தை அதிகரிக்கப்பண்ண மறுசாதியான ஸ்திரீகளைப்படைத்ததினாலே பாதகம் பண்ணினீர்கள்.

௰௧ இப்போதும் நீங்கள் உங்கள் பிதாக்களின் கர்த்தராகியவருக்கு அறிக்கைபண்ணி அவருடைய பிரியத்தின்படியே செய்து தேசத்தின் சனசதனங்களையும் மறுசாதியான ஸ்திரீகளையும் விட்டு விலகுங்களென்றான்.

௰௨ அதற்குச்சபையெல்லாம் மகாசத்தத்தோடே சொன்ன பிரதியுத்தாரமாவது, ஆம் நீர் எங்களோடே சொன்ன உம்முடைய வார்த்தைகளின்படியே செய்யப்படக்கடவது.

௰௩ ஆனாலும் சனந்திரளானது. இதுமாரிகாலமாயிருக்கிறதினாலே இங்கே வெளியிலே நிற்கப்படவல்லவில்லை. அது ஒருநாள்வேலையுமல்ல இரண்டுநாளவேலையுமல்ல ஏனெனில் இந்தக்காரியத்திலே விஸ்தாரமான பாதகம்பண்ணினோம்.

௰௪ ஆகையால் இதற்குச்சபையெங்கும் எங்கள் பிரபுக்கள் விசாரிப்புக்காரராக வைக்கப்படட்டுமேன். அப்படியே இந்தக்காரியத்தினிமித்தம் நமமுடைய பராபரனுக்கிருக்கிற உக்கிரமான கோபத்தைத் தாங்களைவிட்டுத்திருமப்பண்ணும் மட்டும் எங்கள்பட்டணங்களில் மறுசாதியான் ஸ்திரீகளைப்படைத்த அனைவரும் ஒவ்வொருபட்டணத்தின் மூப்பரோடே தங்கள் நியாயாதிபதிகளோடேகூடக் குறித்த காலங்களிலே வரக்கடவர்களென்றார்கள்.

௰௫ ஆனால் ஆசகேலின்குமாரன் யோனத்தானும் திக்வாவின்குமாரன் யகசியாவும் மாத்திரம் அதைவிசாரிக்கவைக்கப்பட்டார்கள். மெசுல்லாமும் சப்பேதாயுமென்ற லேவியரும் அவர்களுக்கு ஒத்தாசைபண்ணினார்கள்.

௰௬ சிறையிருப்பிலிருந்துவந்தவர்கள் இந்தப்பிரகாரமாகச்செய்தார்கள். ஆசாரியனாகிய எஸ்றாவுந் தங்கள் பிதாக்களுடைய வீட்டின்படியே பேர்பேராக அழைக்கப்பட்ட பிதாவம்சங்களின் தலைவரனைவரும் இந்தக்காரியத்தை ஆராய்ந்துபார்க்கும்படி பத்தாம் மாதம் முதல் தேதியிலே உட்கார்ந்து,

௰௭ அந்நிய சாதியான ஸ்திரீகளைப்படைத்தவர்களெல்லாருடைய காரியத்தையும் முதலாம்மாதம் முதல்தேதியிலே முடித்துவிட்டார்கள்.

௰௮ ஆசாரியரின்புத்திரரில மறுசாதியான பெண்சாதிகளைப்படைத்தவர்களாகக்காணப்பட்டவர்கள் ஆரெனறால, யோத்சதாக்கினகுமாரனாகிய ஏசுவாவினகுமாரரிலும அவனசகோதரரிலும மாசெயாவும எலியேசரும யாரீபும கெதலியாவும,

௰௯ இவர்கள தங்கள ஸ்திரீகளைத்தள்ளிவிடுவோமென்று தங்கள்கைகளைக்கொடுத்துத்தாங்கள குற்றவாளிகளானபடியினாலே குற்றம்போக்கும்பலியாக ஒரு ஆட்டுக்கடாவைச்செலுத்தினார்கள.

௨௰ இம்மேரின புத்திரரில அனானியும செபதியாவும,

௨௧ ஆரீமின்புத்திரரில மாசெயா, எலியா, செமாயா, எகியேல, உசியாவென்கிறவர்களும,

௨௨ பாசூரின புத்திரரில எலியோனாய், மாசெயா, இஸ்மவேல, நெதானெயேல, யோசபாத், எலாசாவென்றவர்களும,

௨௩ லேவியரில யோசபாத், சிமேய், கெலித்தாவென்றும்பேருமுள்ள கெலாயா, பெத்லகியா, யூதா, எலியேசர் என்றவர்களும,

௨௪ பாட்டகரில எலியாசிபும, வாசற்காப்பாரில் சல்லூமும், தேலேமும, ஊரியென்றவர்களும,

௨௫ மற்ற இஸ்ரவேலுக்குள்ளே பாரோசின புத்திரரில ரமீயா, எசியா, மல்கியா, மியாமின, எலெயாசார், மல்கியா, பெனாயாவென்றவர்களும,

௨௬ ஏலாமின புத்திரரில மத்தனியா, சகரியா, எகியேல, அப்தி, எரேமோத், எலியாவென்றவர்களும,

௨௭ சத்தூவின புத்திரரில எலியோனாய், எலியாசிப், மத்தனியா, எரேமோத், சாபாத், அசிசாவென்றவர்களும,

௨௮ பெபாயின புத்திரரில யோகனான், அனனியா, சாபாயி, அதலாயி என்றவர்களும,

௨௯ பானியின புத்திரரில மெசுல்லாம, மல்லூக், அதாயா, யாசூப், செயால, எரேமோத்தென்றவர்களும,

௩௰ பாகாத்மோவாபின புத்திரரில அதனா, கேலால, பெனாயா, மாசெயா, மத்தனியா, பெத்சாலெயெல, பின்னூயி, மனாசேயென்றவர்களும,

௩௧ ஆரீமின புத்திரரில எலியேசர், இசியா, மல்கியா, செமாயா, சிமேயோன,

௩௨ பென்யமீன, மல்லூக், செமரியா என்றவர்களும,

௩௩ ஆசூமின புத்திரரில மத்னாயி, மத்தத்தா, சாபாத், எலிபேலேத், எரேமாயி, மனாசே, சிமேயி என்றவர்களும,

௩௪ பானியின புத்திரரில மாதாயி, அம்ராம், ஊவேல,

௩௫ பெனாயா, பெதியா, கெலூகி,

௩௬ வனியா, மெரேமோத், எலியாசிப்,
௩௭ மத்தனியா, மத்னாயி, யாசாய,
௩௮ பானீ, பின்னூயி, சிமேயி,
௩௯ செலேமியா, நாத்தான், அதாயா,
௪௰ மக்நாத்பாயி, சாசாயி, சாராயி,
௪௧ அசரேயேல், செலேமியா, செமரியா,
௪௨ சல்லூம், அமரியா, யோசேப்பென்றவர்களும்,

௪௩ நேபோவின்புத்திரரில் ஏயேல், மத்தித்தியா, சாபாத், செபினா, யத்தாய், யோவேல், பெனாயா என்றவர்களுந்தானே.

௪௪ இவர்களெல்லாரும் மறுசாதியான ஸ்திரீகளைப்படைத்தவர்கள் இவர்களிற்சிலர் தங்களுக்குப்பிள்ளைகளைப்பெற்ற ஸ்திரீகளைப்படைத்தவர்களுமாயிருந்தார்கள்.

முற்றிற்று.

நெகெமியாவின்புஸ்தகம்.

க. அதிகாரம்.

நெகெமியாயூதேயாதேசத்தின் துயரமான செய்தியைக்கேட்டுப்பண்ணின்செபம்.

அகலியாவின்குமாரனாகிய நெகெமியாவினவர்த்தமானங்கள். இருபதாம் வருஷம் கிஸ்லேயுமாதத்தில் நான் சூசானென்ன நகோட்டையிலிருக்கிறபோது சம்பவித்ததென்னில்,

௨ என்சகோதரரில் ஒருவனாகிய ஆனானியும் வேறேசில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள். அவர்களை நான் சிறையிருப்பிலமீர்ந்து தப்பின யூதரின்செய்தியையும் எருசலேமின்செய்தியையுங்கேட்டேன்.

௩ அவர்கள் எனக்குச்சொன்னதாவது, சிறையிருப்பிலமீர்ந்திருக்கிறவர்கள் அந்தச்சீர்மையிலே மகாத்திரவியமும் நிந்தையையும் அநுபவிக்கிறார்கள். எருசலேமின் அலங்கம் இடிபட்டதும் அதின்வாசல்கள் அக்கினியாற் சுட்டுப்போடப்பட்டதுமாய்க்கிடக்கிறதென்றார்கள்.

௪ நான் இந்தவார்த்தைகளைக் கேட்டபோதுசம்பவித்ததென்றால், நான் உட்கார்ந்து அழுது சிலநாளாய்த்துக்கித்துக்கொண்டு பரமண்டலங்களின் பராபரனுக்குமுன்பாக உபவாசிக்கிறவனும் மன்றாடுகிறவனுமாயிருந்து,

௫ சொன்னதாவது ஆ பரமண்டலங்களின் பராபரனாகியகர்த்தாவே, உம்மைச்சிநேகிக்கிறவர்களுக்கும் உம்முடையகற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கும் உடன்படிக்கையையுங் கிருபையையுங்காக்கிற பக்தியுமும் பயங்கரமுமுள்ள பராபரனே,

௬ உமதடியாராகிய இஸ்ரவேலபுத்திரருக்காக இன்று இரவும்பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல்புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச்செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய செபத்தைக்கேட்கிறதற்கு உமதுசெவி கவனித்தும் உமதுகண்கள்திறந்துமிருப்பதாக. நானும் என்தகப்பன்வீட்டாரும் பாவஞ்செய்தோம்.

௭ நாங்கள் உமக்கு முன்பாகக்கெட்டுப்போகவே கெட்டுப்போயத்தேவரீர் உம்முடைய தாசனாகிய மோசேயுக்குக்கற்பித்த கற்பனைகளையுங் கட்டளைகளையும் நியாயங்களையுங்கைக்கொள்ளாதேபோனோம்.

௮ நீங்கள் துரோகம்பண்ணுவீர்கள். அப்போது நாமுங்களைச் சனசத்தங்களுக்குள்ளே சிதறடிப்போமென்றும்,

௯ நீங்கள் நம்மண்டைக்குத்திரும்பி நம்முடைய கற்பனைகளைக்கைக்கொண்டு அதின்படி செய்யும்போதோவென்றால், உங்களிலேதள்ளுண்டவர்கள் வானத்தின்கடையாந்தரத்திலிருந்தாலும் நாம் அங்கேயிருந்தவர்களைச்சேர்த்து, நம்முடைய நாமத்தைவாசமாயிருக்கப்பண்ண நாம்தெரிந்துகொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக்கொண்டுவருவோமென்றுந்தேவரீர்உம்முடைய தாசனாகிய மோசேக்குக்கற்பித்த வார்த்தையை நினையுமேன்.

௰ தேவரீர் உம்முடைய சத்துவத்தினாலும் உம்முடைய பலத்த கரத்தினாலும் மீட்டுக்கொண்ட உமதடியாரும் உமதுசனமும் அவர்கள்தானே.

௧௧ ஆ, ஆண்டவரே, உமதுசெவிகள் உமதடியானின் செபத்தையும் உம்முடைய நாமத்துக்குப்பயப்பட ஆசையுள்ள உமதடியாரின் செபத்தையுங் கவனித்திருக்கட்டுமேன். இன்றைக்கு உமதடியானுக்குக்காரி

பத்தைக் கேட்டு வரப்பண்ணி இந்தப்புருஷனுக்கு முன்பாக எனக்கிரக்கங் கிடைக்கப் பண்ணியருளுமென் என்றேன். அந்நேரத்தில் நான் இராசாவுக்குப் பானம் வார்த்துக் கொடுக்கிறவனாயிருந்தேன்.

௨. அதிகாரம்.

எருசலேமைக் கட்ட நெகெமியா அதிகாரம் பெற்று அங்கே வந்தது.

அர்த்தசஷ்டா இராசாவின் இருபதாம் வருஷம் நீசான் மாதத்திலே சம்பவித்ததென்னவென்றால், அவனுக்கு முன்பாகத் திராட்சப்பழ இரசமுண்டாயிருக்கச்சே நான் அதையெடுத்து இராசாவுக்குக் கொடுத்தேன். ஆனால் நான் முந்தி அவனுக்கு முன்பாகச் சஞ்சலப்பட்டிருந்ததில்லை.

௨ அப்போது இராசா என்னுடனே, நீ துக்கமுகமாயிருக்கிறதென்ன, நீ வியாதிப்பட்டிருக்கவில்லையே, இது மனதின் துக்கமாயிருக்கிறதொழிய மற்றப்படியல்லவென்றான். அப்போது நான் மிகுதியாகவும் பயந்துகொண்டு,

௩ இராசாவுக்குச் சொன்னதாவது. இராசா என்றைக்கும் வாழ்க. என் பிதாக்களின் பிரேதக்குழிகள் இருக்கும் ஸ்தலமாகிய பட்டணம் பாழானதும் அதின் வாசல்கள் அக்கினியால் எரித்துப்போடப்பட்டதுமாயிருக்கச்சே நான் துக்கமுகத்தோடிராதிருப்பதெப்படியென்றேன்.

௪ அப்போது இராசா என்னுடனே, நீ கேட்கிற காரியமென்னவென்றான். அப்போது நான் பரமண்டலங்களின் பராபரனை நோக்கிச் செபம்பண்ணி,

௫ இராசாவுடனே இராசாவுக்குச் சம்மதமாயிருந்து அடியேனுக்கு உமக்கு முன்பாகத் தயவு கிடைத்தால், நீர் என்னை என் பிதாக்களின் பிரேதக்குழிகளிருக்கும் பட்டணத்தைக் கட்ட யூதாவிலிருக்கிற அவ்விடத்துக்கனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேனென்றேன்.

௬ அப்போது இராசாவும் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த இராசாத்தியும் உன் பயணத்தில் எத்தனை நாள் செல்லும். நீ எப்போது திரும்ப வருவாயென்றென்னைக் கேட்டார்கள். இன்ன காலமென்று நான் இராசாவுக்குக் குறித்தபோது என்னையனுப்ப அவருக்குச் சம்மதியாயிற்று.

௭ பின்னையும் நான் இராசாவோடே சொன்னதாவது, இராசாவுக்குச் சம்மதியாயிருந்தால், நான் யூதாவுக்கு வந்து சேருமட்டும் நதிக்கப்பாலிருக்கிற துரைகள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு அவர்களுக்குக் கொடுக்குங் காகிதங்களும்,

௮ நான் தேவாலயத்துக்கிருக்கிற அரணின் கதவுகளைப் பலகையால் செப்பனிட்டிறதற்கும், பட்டண அலங்கத்தின் வேலைக்கும் நான் உட்பிரவேசித்திருக்கும் வீட்டின் வேலைக்குமென்று இராசாவுக்கிருக்கிற வனத்தின் காவற்காரனாகிய ஆசாப் எனக்கு மரங்களைக் கொடுக்கும்படிக்கு அவனுக்குக் கொடுக்கும் ஒரு காகிதமும் எனக்குக் கட்டளையிடப்படுவதாகவென்றேன். அதுகளை இராசா எனக்குத் தந்தான். என்மேலிருக்கிற என் பராபரனுடைய நல்லகரத்தின்படியே கொடுத்தான்.

௯ அப்படியே நான் நதிக்கப்பாலிருக்கிற துரைகளண்டைக்கு வந்து இராசாவின் காகிதங்களை அவர்களுக்குக் கொடுத்தேன். ஆனால் இராசா என்னோடே கூட இராணுவத் தலைவர்களையுங் குதிரைக்காரரையும் அனுப்பியிருந்தான்.

௰ ஓரோனியனாகிய சன்பல்லாத்தும் அம்மோனசாதியானான ஊழியக்காரனாகிய தொபியாவுங் கேட்டபோது இஸ்ரவேல் புத்திரரின் நன்மையை விசாரிக்கிறமனுஷன் வந்தானென்கிறது அவர்களுக்கு மகா விசனமாயிருந்தது.

௰௧ நான் எருசலேமுக்கு வந்து அங்கே மூன்று நாளிருந்த பிற்பாடு,

௰௨ நான் கொஞ்சம் மனுஷரைக்கூட்டிக்கொண்டு இராத்திரியிலெழுந்து புறப்பட்டேன். ஆனால் எருசலேமுக்காகச் செய்ய என் பராபரன் என் மனதிலே கொடுத்ததை ஒருவருக்கும் நான் அறிவிக்காதிருந்தேன். நான் ஏறிக்கொண்டிருந்த மிருகமேயல்லாமல் வேறொரு மிருகமும் என்னோடிருந்ததுமில்லை,

௰௩ நான் அன்று இராத்திரி பள்ளத்தாக்கின் வாசலால் புறப்பட்டு வலுசர்ப்பத்துரவைக் கடந்து குப்பைமேட்டு வாசலுக்கு வந்து எருசலேமின் அலங்கம் இடிந்துபோடப்பட்டும் அதின் வாசல்கள் அக்கினியால் எரித்துப்போடப்பட்டுங் கிடக்கிறவிதத்தை விசாரித்துப்பார்த்தேன்.

௰௪ அவ்விடத்தைவிட்டுக் கிணற்று வாசலண்டைக்கும் இராசாவின் குளத்தண்டைக்கும் போனேன். நான் ஏறியிருந்த மிருகம் அங்கே நடந்துபோகிறதற்கிடமுண்டாயிருக்கவில்லை.

௰௫ பிற்பாடு அன்று இராத்திரியிலே நான் ஆற்றோரமாய்ப்போய் அலங்கத்தைக் கவனித்துப்பார்த்துத் திரும்பிக்கொண்டு பள்ளத்தாக்கின் வாசலாற் பிரவேசித்துத் திரும்பவந்தேன்.

௰௬ நான் எங்கே போனேனென்றும் நான் என்ன செய்தேனென்றும் அதிகாரிகள் அறியாதிருந்தார்கள். ஏனென்றால் அந்தமட்டும் நான் யூதருக்காகிலும் ஆசாரியர்களுக்காகிலும் பெரியவர்களுக்காகிலும் அதிகாரிகளுக்காகிலும் வேலைசெய்கிற மற்றவர்களுக்கென்கிலும் நான் ஒன்றும் அறிவிக்கவில்லை.

௰௭ பிற்பாடு நான் அவர்களுடனே, எருசலேம் பாழுமாய் அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டுப்போடப்பட்டதுவுமாய்க் கிடக்கிறதென்கிற நாங்களிருக்கிற சிறுமையை நீங்கள் பார்க்கிறீர்களே. நாங்களினி நிந்தைக்குள்ளாயிராதபடிக்கு எருசலேமின் அலங்கத்தைக் கட்டுவோம் வாருங்களென்று சொல்லி,

௰௮ என்மேல் நல்லதாயிருந்த என் பராபரனுடைய கரத்தையும் இராசா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கறிவித்தேன். அப்போது அவர்கள் எழும்பிக் கட்டுவோமாகவென்று சொல்லி, தங்கள் கைகளை அந்த நல்ல வேலைக்குத் திடப்படுத்தினார்கள்.

௰௯ ஒரோனியனான சன்பல்லாத்தும் அம்மோன் சாதியான ஊழியக்காரனாகிய தொபியாவும் அறபியனான கேஷேமும் இதைக் கேட்டபோது, எங்களைப் பரியாசம்பண்ணி, எங்களை அசட்டைபண்ணி, நீங்கள் செய்கிற இந்தக் காரியமென்ன. நீங்கள் இராசாவுக்கு விரோதமாகக் கலகம்பண்ணுவீர்களோவென்றார்கள்.

௨௰ ஆனால் நான் அவர்களுக்கு மறுமொழியாக, பரமண்டலங்களின் பராபரனானவர் எங்களுக்குக் கைகூடிவரப்பண்ணுவார். அவருடைய ஊழியக்காரராகிய நாங்கள் எழும்பிக் கட்டுவோம் உங்களுக்கோவென்றால் எருசலேமிலே பங்கும் நீதியும் நினைப்புமில்லையென்றவர்களுடனே சொன்னேன்.

௩. அதிகாரம்.

எருசலேமின் அலங்கத்தையும் வாசல்களையுங் கட்டினவர்களும், அவர்கள் அதைக் கட்டின வரிசையும்.

அப்போது பிரதான ஆசாரியனாகிய எலியாசீபும் அவன் சகோதரராகிய ஆசாரியர்களும் எழும்பி ஆட்டுவாசலைக் கட்டினார்கள். அதைக் கட்டி அவர்கள் பிறதிஷ்டைபண்ணி அதின் கதவுகளை வைத்து, மேயா என்ற கொம்மைமட்டுக்கும் அனனெயேலின் கொம்மைமட்டுக்குங் கட்டிப் பிறதிஷ்டைபண்ணினார்கள்.

௨ அவன் அருகே எரிகோவின் மனுஷர் கட்டினார்கள், அவர்கள் அருகே இம்ரியின் குமாரனாகிய சக்கூர் கட்டினான்.

௩ மீன்வாசலைச் செனாவின் குமாரர் கட்டினார்கள். அதையவர்கள் வளைவாக்கி அதின் கதவுகளையும் அதின் பூட்டுகளையும் அதின் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்.

௪ அவர்கள் அருகே யாக்கோத்சின் குமாரனாகிய உரீயாவின் மகன் மெரேமோத் பழுதுபார்த்துக் கட்டினான். அவர்கள் அருகே மெஷேசாபெயேலின் குமாரனாகிய பெரேகியாவின் மகன் மெசுல்லாம் பழுதுபார்த்துக் கட்டினான். அவர்கள் அருகே பானாவின் குமாரனாகிய சாதோக் பழுதுபார்த்துக் கட்டினான்.

௫ அவர்கள் அருகே தெக்கோவா ஊரார் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்களுடைய வல்லபக்காரரோவென்றால், தங்கள் ஆண்டவருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தை நீட்டினதில்லை.

௬ பழயவாசலைப் பசெயாகின் குமாரனாகிய யோயதாவும் பேசோதீயாவின் குமாரனாகிய மெசுல்லாமும் பழுதுபார்த்துக் கட்டினார்கள் அவர்கள் அதை வளைவாக்கி அதின் கதவுகளையும் அதின் பூட்டுகளையும் அதின் தாழ்ப்பாள்களையும் போட்டார்கள்.

௭ அவர்கள் அருகே கிபெயோனியனாகிய ஊர்களின் மனுஷரான மெலத்தியா என்ற கிபெயோனியனும், யாதோன் என்ற மெரோனோத்தியனும் நதிக்கிப்பாலிருக்கிற துரையின் சமஸ்தானம்மட்டும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௮ அவர்கள் அருகே தட்டாரிலொருவனாகிய அராயாவின் குமாரன் ஊசியேல் பழுதுபார்த்துக் கட்டினான். அவன் அருகே தயிலக்காரரிலொருவனின் குமாரன் அனனியா பழுதுபார்த்துக் கட்டினான். அதுமுதற் கொண்டு அகலமான மதில்மட்டும் எருசலேமையிடிக்காமல் விட்டிருந்தது.

௯ அவர்கள் அருகே எருசலேம் பட்டணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய ஊரின் குமாரன் ரெப்பாயா பழுதுபார்த்துக் கட்டினான்.

௰ அவர்கள் அருகே அருமாப்பின் குமாரன் யெதாயா தன் வீட்டுக்கெதிரானதைப் பழுதுபார்த்துக் கட்டினான். அவன் அருகே அசப்னெயாவின் குமாரன் அத்தூஸ் பழுதுபார்த்துக் கட்டினான்.

௰௧ மற்றப் பங்கையும் சூளைகளின் கொம்மையையும் ஆரீமின் குமாரன் மல்கியாவும் பாகாத்மோவாபின் குமாரன் அசூபும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௰௨ இவன் அருகே எருசலேம் பட்டணத்தின் மறுபாதிக்குப் பிரபுவாகிய அலோகேசின் குமாரன் சல்லூமும் அவன் குமாரத்திகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௰௩ பள்ளத்தாக்கின் வாசலை ஆனூனும் சானோவாகின் குடிகளும் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்கள் அதைக் கட்டி அதின் கதவுகளையும் அதின் பூட்டுகளையும் அதின் தாழ்ப்பாள்களையும் போட்டு அலங்கத்தில் ஆயிரம் முழமுங் குப்பைமேட்டுவாசல்மட்டாகக் கட்டினார்கள்.

௰௪ குப்பைமேட்டுவாசலைப் பெத்கேரேமின் மாகாணத்துக்குப் பிரபுவாகிய ரேகாபின் குமாரன் மல்கியா பழுதுபார்த்து அதைக் கட்டி, அதின் கதவுகளையும் அதின்

பூட்டுகளையும் அதின் தாழ்ப்பாள்களையும் போட்டான்.

௰௫ கிணற்றுவாசலை மிஸ்பாவின் மாகாணத்துப் பிரபுவாகிய கொல்லோசேயின் குமாரனாகிய சல்லூம் பழுதுபார்த்து, அதைக் கட்டி மச்சுப்பாவி, அதின் கதவுகளையும் பூட்டுகளையும் தாழ்ப்பாள்களையும் போட்டு, இராஜாவின் சிங்காரத்தோட்டத்தண்டையிலிருக்கிற சீலோவாவின் குளத்து மதிலையும் தாவீதின் பட்டணத்திலிருந்து இறங்குகிற படிகள்மட்டாக இருக்கிறதையுங் கட்டினான்.

௰௬ அவனுக்குப் பின்னாகப் பெத்சூர் மாகாணத்தின் பாதிக்குப் பிரபுவாகிய அஸ்புக்கின் குமாரன் நெகேமியா தாவீதின் பிரேதக்குழிகளுக்கு எதிரான இடமட்டாகவும் வெட்டப்பட்ட குளமட்டாகவும் பராக்கிரமசாலிகளின் வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

௰௭ அவனுக்குப் பின்னாக லேவியரில் பானியின் குமாரன் ரேகூமும், அவன் அருகே கேகிலா மாகாணத்தில் தன்னுடைய பாதிபங்குக்குப் பிரபுவாகிய அசபியாவும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௰௮ அவனுக்குப் பின்னாக அவனுடைய சகோதரரில் கேகிலா மாகாணத்து மறுபாதிக்குப் பிரபுவாகிய எனாதாதின் குமாரன் பாவாயி பழுதுபார்த்துக் கட்டினான்.

௰௯ அவன் அருகே மிஸ்பாவின் பிரபுவாகிய யெசுவாவின் குமாரன் ஏசர் என்பவன் மூலையிலே ஆயுதசாலையின் படிகளுக்கு எதிரேயிருக்கிற வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

௨௰ அவனுக்குப் பின்னாகச் சபாயின் குமாரன் பாரூக் அந்த மூலையைத் துவக்கிப் பிரதான ஆசாரியனாகிய எலியாசிபின் வாசற்படிமட்டுமிருக்கிற பின்னொரு பங்கை வெகு சாக்கிரதையோடே பழுதுபார்த்துக் கட்டினான்.

௨௧ அவனுக்குப் பின்னாகக் கோஸின் குமாரனாகிய உரியாவின் மகன் மெரேமோத் எலியாசிபின் வீட்டு வாசற்படியைத் துவக்கி அவனுடைய வீட்டின் கடைசிக் கோடிமட்டுமிருக்கிற பின்னொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

௨௨ அவனுக்குப் பின்னாகச் சமபூமியிலே வாசமாயிருக்கிற ஆசாரியர்கள் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௨௩ அவர்களுக்குப் பின்னாகப் பென்யமீனும் அசூபும் தங்கள் வீட்டுக்கெதிரேயிருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்களுக்குப் பின்னாக அனனியாவின் குமாரனாகிய மாசேயாவின் மகன் அசரியா தன் வீட்டின் அருகேயிருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

௨௪ அவனுக்குப் பின்னாக எனாதாதின் குமாரன் பின்னூவி அசரியாவின் வீட்டைத் துவக்கி அலங்கத்தின் திருப்பமும் கோடிமட்டுமிருக்கிற வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

௨௫ ஊசாயின் குமாரன் பாலால் மூலைக்கு எதிரேயும் காவல்வீட்டின் முற்றத்துக்கு அடுத்த இராஜாவின் உயரமான வீட்டுக்கு வெளிப்புறமாயிருக்கிற கொம்மைக்கு எதிரேயுமிருக்கிறதைக் கட்டினான். அவனுக்குப் பின்னாகப் பாரோஷின் குமாரன் பெதாயாவும்,

௨௬ ஓப்பேலிலே குடியிருக்கிற இஸ்ரவேலைச்சேர்ந்த மனிதரும் கிழக்கேயிருக்கிற தண்ணீர்வாசலுக்கும் வெளிப்புறமான கொம்மைக்கு எதிரேயிருக்கிற இடமட்டும் கட்டினார்கள்.

௨௭ அவர்களுக்குப் பின்னாகத் தெக்கோவா ஊரார் வெளிப்புறமான பெரிய கொம்மைக்கு எதிரே ஓப்பேல் மதில்மட்டுமிருக்கிற பின்னொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௨௮ குதிரைகளின் வாசல் முதற்கொண்டு ஆசாரியர்கள் அவரவர் தங்கள் வீடுகளுக்கு எதிரேயிருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௨௯ அவர்களுக்குப் பின்னாக இம்மேரின் குமாரன் சாதோக் தன் வீட்டுக்கெதிரேயிருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான். அவனுக்குப் பின்னாகக் கிழக்குவாசலைக் காக்கிற செகனியாவின் குமாரன் செமாயா பழுதுபார்த்துக் கட்டினான்.

௩௰ அவனுக்குப் பின்னாகச் செலேமியாவின் குமாரன் அனனியாவும் சாலாப்பின் ஆறாங்குமாரனாகிய ஆனூனும் வேறொரு பங்கைப் பழுதுபார்த்துக் கட்டினார்கள். அவர்களுக்குப் பின்னாகப் பெரகியாவின் குமாரன் மெசுல்லாம் தன்னுடைய அறைவீட்டுக்கு எதிரேயிருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

௩௧ அவனுக்குப் பின்னாகத் தட்டானின் குமாரன் மல்கியா தலைக்கம் பார்க்கிற வாசலுக்கெதிரே இஸ்ரவேலைச்சேர்ந்தவர்களும் மளிகைக்காரரும் குடியிருக்கிற ஸ்தலமட்டாகவும் கோடியின் மேல்வீடுமட்டாகவும் இருக்கிறதைப் பழுதுபார்த்துக் கட்டினான்.

௩௨ கோடியின் மேல்வீட்டுக்கும் ஆட்டுவாசலுக்கும் நடுவேயிருக்கிறதைத் தட்டாரும் மளிகைக்காரரும் பழுதுபார்த்துக் கட்டினார்கள்.

௪. அதிகாரம்.

நெகேமியா சத்துருக்களின் பரியாசத்தையும் ஒப்பந்தத்தையும் எண்ணாமல் அலங்கத்தின் வேலையை நடத்தினது.

ஆனால் நாங்கள் அலங்கத்தைக் கட்டுகிறசெய்தியைச் சன்பல்லாத் கேட்டபோ

துசம்பவித்ததேதென்றால், அவன் எரிச்சலும் வெகுராங்கமும் அடைந்து யூதரைச் சக்கந்தம்பண்ணி,

௨ அந்தப் பெலனற்ற யூதர் செய்கிறதென்ன. அவர்களுக்கு இடங்கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒரு நாளைக்குள்ளே முடித்துப் போடுவார்களோ, சுட்டெரித்துப் போடப்பட்ட மண்மேடுகளுமான கல்லுகளை உயிர்ப்பிப்பார்களோ என்று தன் சகோதரருக்கும் சமாரியாவின் ராணுவத்திற்கும் முன்பாகச் சொன்னான்.

௩ அப்பொழுது அம்மோனியனாகிய தொபியா அவனண்டையிலிருந்து, அவர்கள் கட்டினாலும் நரியேறவந்தால் அவர்களுடைய கல்மதிலையிடிக்குமென்றான்.

௪ எங்கள் பராபரனே, நாங்கள் அசட்டைபண்ணப்படுகிறதைக் கேட்டு அவர்கள் நிந்திக்கிற நிந்தையை அவர்கள் தலையின்மேல் திருப்பி, அவர்களைச் சிறையிருப்பின் தேசத்திலே கொள்ளைக்கொப்புக்கொடும்.

௫ அவர்கள் அக்கிரமத்தை மூடிப்போடாதேயும். அவர்கள் பாவம் உமக்கு முன்பாகக் கொலைக்கப்படாதிருப்பதாக. ஏனென்றால் கட்டுகிறவர்களுக்கு மனமடிவுண்டாகப் பேசினார்கள்.

௬ நாங்களோவென்றால் அலங்கத்தைக் கட்டிவந்தோம். அலங்கமெல்லாம் பாதிமட்டும் ஒன்றாய் இணைந்துயர்ந்தது. ஏனென்றால் சனம் வேலைசெய்கிறதற்கு ஆசையாயிருந்தது.

௭ எருசலேமின் அலங்கத்தைக் கட்டுகிற வேலை வளர்ந்தேறுகிறதென்றும் இடிக்கப்பட்ட இடங்கள் அடைபடத்துவக்கிறதென்றும் சனபல்லாத்தும் தொபியாவும் அரபியரும் அம்மோனியரும் அஸ்தோதியரும் கேட்டபோது சம்பவித்ததேதென்றால் அவர்கள் மிகவும் எரிச்சலாகி,

௮ எல்லாரும் ஏகமாய் எருசலேமின் மேல் யுத்தம்பண்ணவரவும் அதில் ஒரு கலக்கமுண்டாக்கவும் பந்துக்கட்டுப் பண்ணினார்கள்.

௯ ஆனால் நாங்கள் எங்கள் பராபரனை நோக்கிச் செபம்பண்ணி அவர்கள் நிமித்தம் இரவும் பகலும் சாமங்காக்கிறவர்களை அவர்களுக்கு நேராக வைத்தோம்.

௰ அப்பொழுது யூதர் சுமைக்காரரின் பெலன் குறையும். மண்மேடு மிச்சமானது. நாங்கள் அலங்கத்தைக் கட்டக்கூடாதென்றார்கள்.

௰௧ எங்கள் சத்துருக்களோவென்றால், நாங்கள் அவர்கள் நடுவிலே வந்து அவர்களைக் கொன்றுபோடுமட்டும் அவர்கள் அதை அறியாமலும் பாராமலுமிருக்கவேணும். அப்படியே அந்த வேலையை ஓய்ப்பண்ணுவோமென்றார்கள்.

௰௨ அதை அவர்களண்டையிலே குடியிருக்கிற யூதருந்தாங்கள் எல்லா இடங்களிலுமிருந்து எங்களண்டைக்குத் திரும்பவந்து பத்துவிசை எங்களுக்குச் சொன்னபோதோவென்றால்,

௰௩ நான் அலங்கத்துக்குப் பின்னாக இருக்கிற பள்ளமான ஸ்தலங்களிலும் மேடுகளிலும் தங்கள் பட்டயங்களையும் தங்கள் ஈட்டிகளையும் தங்கள் வில்லுகளையும் தரித்திருக்கிற சனத்தை வம்சம்வம்சமாக நிறுத்தினேன்.

௰௪ அதை நான் பார்த்துக்கொண்டு எழும்பி, பெரியவர்களோடும் மற்றச் சனத்தோடும், அவர்களுக்குப் பயப்படாதேயுங்கள். நீங்கள் மகத்துவமும் பயங்கரமுமுள்ள ஆண்டவரை நினைத்து, உங்கள் சகோதரருக்காகவும் உங்கள் குமாரர்களுக்காகவும் உங்கள் குமாரத்திகளுக்காகவும் உங்கள் பெண்சாதிகளுக்காகவும் உங்கள் வீடுகளுக்காகவும் யுத்தம்பண்ணுங்களென்றேன்.

௰௫ எங்களுக்குச் செய்தி தெரியவந்ததென்று எங்கள் பகைஞர் கேட்டபோதோவென்றால் பராபரன் அவர்கள் ஆலோசனையை அபத்தமாக்கினார். அப்போது நாங்களெல்லாரும் அவரவர் தங்கள் வேலையைச் செய்ய அலங்கத்துக்குத் திரும்பினோம்.

௰௬ அன்றுமுதற்கொண்டு சம்பவித்ததேதென்றால் என் வேலைக்காரரிற் பாதிப்பேர் வேலையிலே இறங்கப் பாதிப்பேர் ஈட்டிகளையும் பரிசைகளையும் வில்லுகளையும் சீராக்களையுந் தரித்திருந்தார்கள். பிரபுக்கள் யூதா வீட்டாரெல்லாருக்கும் பின்னாக நின்றார்கள்.

௰௭ அலங்கத்திலே கட்டுகிறவர்களுஞ் சுமைப் சுமையைச் சுமக்கிறவர்களுஞ் சுமையைச் சுமத்துகிறவர்களும் அவரவர் ஒருகையினாலே வேலைசெய்து மறுகையினாலே ஆயுதம்பிடித்திருந்தார்கள்.

௰௮ கட்டுகிறவர்கள் அவரவர் தங்கள் பட்டயத்தைத் தங்கள் இடுப்பிலே கட்டிக்கொண்டவர்களாய்க் கட்டினார்கள். [illegible]ல் எக்காளம் ஊதுகிறவன் என்னண்டையிலேயிருந்தான்.

௰௯ நான் பெரியவர்களோடும் மற்றச் சனத்தோடுஞ் சொன்னது. வேலை பெரியதும் விஸ்தாரமுமானது. நாம் அலங்கத்துமேலே சிதறப்பட்டு ஒருவருக்கொருவர் தூரமாயிருக்கிறோம்.

௨௰ நீங்கள் எவ்விடத்திலே எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பீர்களோ அவ்விடத்திலே வந்து எங்களோடே கூடுங்கள். நம்முடைய பராபரன் நமக்காக யுத்தம்பண்ணுவாரென்றேன்.

உக இபபடியே நாஙகள வேலையிலிறங கியிருநதோம. அவர்களிலே பாதிபபேர் கிழககுவெளுககுமநேரநதுவககி நட்சத திரஙகளபுறப்படுமமடடுமஈடடிகளைபபிடி த்திருநதார்கள.

உஉ அக்காலததிலே நான சனததோ டே, இராமாறுநமககுககாவலுககும பக லிலேவேலைககும உதவ அவரவர்தஙகள வேலைககாரரோடேகூட எருசலேமுககுள ளே இராத்தஙகக் கடவர்களென்றுஞ் சொலலி,

உங நானாகிலும எனசகோதரராகிலும எனவேலைக்காரராகிலும எனனைப பின சென்றுகாவறகாககிற மனிதரொனகிலும எஙகளவஸ்திரஙகளைக்களைநதுபோடாதிரு நதோம. அவரவருககு அவர்கள ஆயுத முத்தணணீருமிருநதது.

ரு. அதிகாரம்.

ஏபபவர்கள அனுபவிதத சில அநியாய ஙகளைநெகெமீயா அகறறினது.

சனமும அவர்களபெணசாதிகளுமயூத ரான தஙகளசகோதரர்பேரிலேமுறையி டடபெரியகூககுரலுணடாயிறறு.

உ அதேதெனில, எஙகளோடுஙகூடஎங களகுமாரரும எஙகள குமாரததிகளும அநேகரானபடியினாலே நாஙகளசாபபிட டுப்பிழைககுமபடிககுத்தானியததைக்கட டவாஙகவேணுமெனறுசொலலுகிறசிலரிரு நதார்கள.

ங எஙகளநிலஙகளையும எஙகளதிவிதிரா ட்சத்தோட்டஙகளையும எஙகளவீடுகளையு ம்நாஙகள அடகுவைதது இநதபபஞச ததிலேதானியமவாஙகுகிறோமெனறு சொல லுகிறவர்களுமிருநதார்கள.

ச இராசாவுககு இறைகொடுக்க நாங கள எஙகள நிலஙகளினமேலும எஙகள திவிதிராட்சத்தோட்டஙகளினமேலுநதிர வியததைககடனுககுவாஙகுகிறோமெனறும,

ரு இபபோது எஙகள சகோதரரின மாமிசததுககு எஙகளமாமிசமும அவர்க ளபிளளைகளுககு எஙகளபிளளைகளுஞசரியா யிருநதாலும, இதோ, நாஙகள எஙகள குமாரரையும எஙகள குமாரததிகளையும அடிமைத்தனததிற்கு உட்படடப்பணணுகி றோம. எஙகளகுமாரததிகளிலேசிலர் அப பொழுதே அதற்கு உட்பட்டார்கள. அவ ர்களைமீட்க எஙகளகையிலே சததுவமுமில லை. எஙகள நிலஙகளும எஙகளதிவிதிராட் சத்தோட்டஙகளும வேறேமனிதரைச்சே ர்ந்ததெனறுஞசொலலுகிற வேறேசிலரு மிருநதார்கள.

சா அவர்கள கூககுரலையும இபபடிக கொத்தவார்ததைகளையும நான கேட்ட போது நானமிகவும எரிச்சலாகி,

எ என்மனதிலே ஆலோசனைபணணிக கொணடு, பிரபுககளையும பெரியவர்களையுமகடிந துகொணடு, நீங்கள்வட்டிவாங்கிறவர்களென்றுசொலலி அவர்களுககு விரோதமாகப்பெரிய சபையைக் கூடிவரப்பணணி.

அ அவர்களுடனே, புறசசாதியாருககு விற்கப்பட்ட யூதராகிய எஙகளசகோதர ரை நாஙகள எஙகள சத்திரததுக்குத்தக்கதாய் மீட்டிருக்கச்சொன்ன நீங்கள்திரும்ப உங களசகோதரரைவிற்கிறீர்களோ. இவர்கள நமககுவிலைபபட்டுப் போகலாமோ என்றே ன். அப்போது அவர்களமவுனமாயிருநது மறுஉத்தரவுசொலல இடமிலலாதிருநதா ர்கள.

கூ பினனையும நான சொன்னதாவது, நீஙகளசெயகிறகாரியம நலலதல்ல. நம முடைய பகைஞராகிய புறச்சாதியார் நிந் திக்கிறதினிமித்தம நீஙகள நமமுடைய பராபரனுககுப்பயநது நடக்கவேணடா மோ.

ய நானும என்சகோதரரும என வேலை க்காரரும இப்படியாக அவர்களுககுத்திர வியமுந தானியமுங கடனகொடுததோ மே. இநதவட்டியைவிட்டுவிடுவோமாக.

யக நீஙகள இனறைககு அவர்களநிலங களையும அவர்கள திவிதிராட்சததோட்டங களையும அவர்கள ஒலிவததோட்டஙகளை யும அவர்களவீடுகளையும நீஙகளதிரவியத் திலுந தானியததிலுந திவிதிராட்சப்பழ ரசததிலும எணணெயிலும நூறறுக் கொனறுவிழுக்காடு அவர்களிடத்திலேவாங் கிவருகிறவட்டியையும அவர்களுககுத்திரு மபக்கொடுததுவிடுஙகளென்றேன்.

யஉ அப்போதுஅவர்கள நாஙகள அவைகளை த்திருமபக்கொடுதது, இனிஅப்படி அவர்க ளிடததிற் கேளாதிருப்போம. நீர்சொலலு கிறபடியே செயவோமென்றார்கள. அப் போது நான ஆசாரியர்களையழைபபிதது அவர்கள இநதவார்ததையினபடி செயயும படிககு அவர்களை ஆணையிடுவிததுககொண டேன்.

யங நான் என்மடியையும உதறிபபோ ட்டு இபபடிப்பராபரன இநதவார்ததை யை நிலைநிற்கப்பணணாத எநதமனிதனையு ம அவனவீட்டிலும அவன சமபாதிததத்தி லுமிருநது உதறிபபோடககடவர். இநதப் பிரகாரமாக அவன உதறபபடடு வெறு மையாயப்போவானாக என்றேன. அதறகு அநதச்சபையெல்லாம ஆமென்றுசொ லலிக் கர்த்தரைத்துதிததார்கள. பிறபாடுச னம இநதவார்ததையினபடியேசெயதது.

யச நான யூததேசததிலே துரையாயிருக் கக இராசாவாகிய அர்த்தசஷ்டா எனககு க்கட்டளையிட்டநாளாகிற அவருடையஇருபதா

ம் வருஷந்துவக்கி அவருடைய முப்பத்திரண்டாம் வருஷம் மட்டுமிருந்த பன்னிரண்டு வருஷவரையிலே நானும் என் சகோதரரும் துரையின் அப்பத்தைச் சாப்பிட்டதுமில்லை.

௰௫ எனக்கு முன்னிருந்த முந்தின துரைகளோவென்றால் சனத்தின்மேலே பாரமாயிருந்து அவர்கள் கையில் அப்பமுந் திராட்சப்பழ இரசமும் அதுவுமல்லாமல் நாற்பது சேக்கல் வெள்ளியும் வாங்கினார்கள் அவர்கள் வேலைக்காரரும் சனத்தை ஆண்டுகொண்டார்கள். ஆனால் நான் பராபரனுக்குப் பயந்ததினாலே அப்படிச் செய்ததில்லை.

௰௬ ஒருவயலையும் நாங்கள் கொள்ளாமல் அந்த அலங்கத்தின் வேலையிலே இறங்கிக்கொண்டேயிருந்தேன். என் வேலைக்காரரெல்லாரும் அங்கே அந்த வேலைக்குக் கூடிக்கொண்டார்கள்.

௰௭ யூதரும் மூப்பருமான நூற்றைம்பது பேரும் எங்களைச் சுற்றிலுமிருக்கிற புறச்சாதிகளிடத்திலிருந்து எங்களண்டைக்கு வந்தவர்களும் என் பந்தியிலே சாப்பிட்டார்கள்.

௰௮ ஒருநாளைக்கு ஒரு மாடும் பொறுக்கின ஆறு ஆடுகளும் சமைக்கப்பட்டது. குருவிகளும் எனக்குச் சமைக்கப்பட்டது. பத்துநாள் வரையிலே சகலவித திராட்சப்பழ இரசமும் திரளாய்ச் செலவழிந்தது. ஆகிலுந் துரையின் அப்பத்தை நான் கேட்டதில்லை. ஏனெனில் இந்தச் சனத்தின் மேலிருந்த பாடு கடினமாயிருந்தது.

௰௯ என் பராபரனே, நான் இந்தச் சனத்துக்காகச் செய்ததெல்லாவற்றையும் எனக்கு நன்மையாக நினைத்தருளும்.

௬. அதிகாரம்.

சத்துருக்கள் பண்ணின பலவித சற்பனைகளுளும் அலங்கத்தின் வேலை முடிந்துபோனது.

நான் அலங்கத்தைக் கட்டிப்போட்டதும் இனி அதிலே வெடிப்பு ஒன்றுமில்லையென்கிறதுஞ் சன்பல்லாத்துக்குந் தொபியாவுக்கும் அராபியனான கேஷேமுக்கும் எங்களுக்குண்டான மற்றப்பகைஞருக்குங் கேள்விப்பட்டபோது சம்பவித்ததென்னவென்றால்,

௨ நான் கதவுகளை வாசல்களில் அக்காலமட்டும் இன்னம் போடாதிருக்கச்சே சன்பல்லாத்துங் கேஷேமும் நாம் ஓனோம் பள்ளத்தாக்கிலிருக்கிற கிராமங்களில் ஒருவரையொருவர் கண்டு பேசுவோம் வாருமென்று எனக்குச் சொல்லியனுப்பினார்கள். அவர்களோவென்றால் எனக்குப் பொல்லாப்புச் செய்ய நினைத்தார்கள்.

௩ அப்போது நான் அவர்களண்டைக்கு ஆட்களையனுப்பி பெரிய வேலையை நான் செய்கிறேன் நானிறங்கிவரக்கூடாது. நானந்த வேலையைவிட்டு உங்களண்டைக்கிறங்கிவருகிறதினாலே அது மினக்கெட்டுப்போவானேனென்று சொல்லச்சொன்னேன்.

௪ அவர்கள் இந்தப்பிரகாரமாக நாலுதரம் எனக்குச் சொல்லியனுப்பினார்கள். நானும் இந்தப்பிரகாரமாகவே அவர்களுக்கு மறுமொழியையனுப்பினேன்.

௫ ஐந்தாந்தரஞ் சன்பல்லாத்து அந்தப்பிரகாரமாகத் தன் வேலைக்காரனையும் அவன் கையிலே திறந்திருக்கிற ஒரு காகிதத்தையும் எனக்கனுப்பினான்.

௬ அதிலே யெழுதியிருந்தது, நீரும் யூதருங் கலகம்பண்ண நினைக்கிறீர்களென்றும், அதற்காக நீர் அலங்கத்தைக் கட்டுகிறீர், இந்தப்பிரகாரமாக நீர் அவர்களுக்கு இராசாவாயிருப்பீரென்றும்,

௭ இவர் யூதாவிலே இராசாவென்றும் உம்மைக்குறித்து எருசலேமிலே கூறப்போகிற தீர்க்கதரிசிகளையுஞ் சம்பாதித்தீரென்றும் சாதிகளுக்குள்ளே கேட்கப்படுகிறது. இடகஷேமுவும் அப்படிச் சொல்லுகிறான். இப்போதும் இராசாவுக்கு இந்தப்பிரகாரமாகக் கேட்கப்படுமே. ஆகையால் நாம் ஒன்றுகொன்று ஆலோசனைபண்ணுகிறதற்காக நீர் வாருமென்றெழுதியிருந்தது.

௮ ஆனால் நான் அவனுக்கு, நீர் சொல்லுகிற அந்தக்காரியங்களிலொன்றும் நடந்ததில்லை. நீர் அதுகளை உம்முடைய இருதயத்திலே கட்டினீரென்று சொல்லியனுப்பினேன்.

௯ ஏனென்றால் அந்த வேலை நடந்தேறாதபடிக்கு அவர்களுடைய கை சலித்துப்போமென்றுசொல்லி அவர்களெல்லாரும் எங்களுக்குப் பயமுண்டாக்கப்பார்த்தார்கள். இப்போதும் பராபரனே, என் கைகளைத் திடப்படுத்தும்.

௰ நான் மெகேதாபெயேலின் குமாரனாகிய தெலாயாவின் மகன் செமாயாவின் வீட்டுக்குப் போனேன். ஏனெனில் அவன் அடைக்கப்பட்டிருந்தான் அப்போது அவன் நாம் இருவருமாய்ப் பராபரனுடைய வீடாகிய தேவாலயத்துக்குள்ளே போய்த் தேவாலயத்தின் கதவுகளைப் பூட்டுவோம் வாரும். ஏனென்றால் உம்மைக் கொன்றுபோட வருவார்கள். உம்மைக் கொன்றுபோட இராவிலே வருவார்களென்றான்.

௰௧ அதற்கு நான் என்னைப்போலொத்த மனிதன் ஓடிப்போவானோ என்னைப்போலொத்தவன் உயிரோடிருக்கும்படிக்குத் தேவாலயத்திலே போய்ப் பதுங்குவானோ நான் போவதில்லையென்றேன்.

௰௨ ஏனென்றால் இதோ, பராபரன் அவனையனுப்பினதில்லையென்றும், தொபியாவுந் சன்பல்லாத்தும் அவனுக்குக் கூலிகொடுத்ததினால் அவன் எனக்கு விரோதமாய்

அந்தத்தீர்க்கதரிசனத்தைச் சொன்னானென்றும் அறிந்துகொண்டேன்.

௰௩ நான் பயந்து அப்படிச்செய்து பாவங்கட்டிக்கொள்ளுகிறதற்கும் என்னை நிந்திக்கத்தக்க ஒரு அவகீர்த்தியின் முகாந்திரந் தங்களுக்குண்டாகுகிறதற்குமாக அவனுக்குக் கூலிகொடுத்திருந்தார்கள்.

௰௪ என் பராபரனே, தொபியாவுக்கும் சன்பல்லாத்துக்கும் செய்த இந்தச்செய்கைகளுக்குத்தக்கதாகத் தேவரீர் அவர்களையும் நோவதியாவென்ற தீர்க்கதரிசியானவளையும் எனக்குப் பயமுண்டாக்கப் பார்த்த மற்றத்தீர்க்கதரிசிகளையும் நினையும்.

௰௫ அப்படியே அலங்கமானது ஐம்பத்திரண்டுநாட்களுக்குள்ளே கட்டப்பட்டு ஏலூல் மாதம் இருபத்தைந்தாந்தேதியிலே தீர்ந்தது.

௰௬ எங்கள் பகைஞரெல்லாரும் அதைக் கேட்டபோதேயென்னில், எங்கள் சுற்றுப்புறத்தாராகிய புறசாதியான அனைவரும் பயந்துமெத்த முனைமுறிந்துபோய், இந்தக் கிரியை எங்கள் பராபரனால் கைகூடிவந்ததென்றறிந்தார்கள்.

௰௭ அந்தநாட்களில் யூதாவிலுள்ள பெரியமனிதரிடத்திலிருந்து தொபியாவுக்குப் போகிறதும் தொபியாவினிடத்திலிருந்து அவர்களுக்கு வருகிறதுமான காகிதங்கள் அநேகமாயிருந்தது.

௰௮ ஏனெனில் யூதாவில் அநேகர் அவனுக்கு ஆணையிட்டுக் கொடுத்திருந்தார்கள். அதேனென்றால் அவன் ஆராவின் குமாரனாகிய செக்கனியாவுக்கு மருமகனாயிருந்ததுமல்லாமல் அவன் குமாரனாகிய யோகனான் பெரகியாவின் குமாரனாகிய மெசுல்லாமின் குமாரத்தியை விவாகம் பண்ணியிருந்தான்.

௰௯ அவனுடைய நன்மைகளையும் அவர்கள் எனக்குமுன்பாக விவரித்து, என்னுடைய வார்த்தைகளை அவனுக்குக் கொண்டுபோனார்கள். ஆகையால் தொபியா எனக்குப் பயமுண்டாக்கக் காகிதங்களை அனுப்புவான்.

௭. அதிகாரம்.

எருசலேமின் காவலைத் திட்டம்பண்ணி சிறையிருப்பிலிருந்துவந்த வம்சங்களின் அட்டவணை ஆராய்ந்துபார்க்கப்பட்டது.

அலங்கங்கட்டித்தீர்ந்து, நான் கதவுகளைப்போட்டபிற்பாடோவென்றால், வாசற்காப்போரும் பாடகரும் லேவியரும் வைக்கப்பட்டார்கள்.

௨ அப்போது நான் என்சகோதரனாகிய அனானிக்கும் அரண்மனைத்தலைவனாகிய அனனியாவுக்கும் எருசலேமின் காவலைக் கற்பித்தேன். ஏனென்றால் இவன் அநேகரைப் பார்க்க உண்மையுள்ள மனிதனும் பராபரனுக்குப் பயந்தவனுமாயிருந்தான்.

௩ அவர்களுக்கு நான் சொன்னது, சூரியன் காந்தியாய் எறிக்குமட்டும் எருசலேமின் வாசல்கள் திறக்கப்படவேண்டாம். காவற்காப்போர் இன்னும் நிற்கக்கொள்ளவுங் கதவுகளைப் பூட்டவேணும். அப்போது நீங்கள் அதைக் கவனித்துப்பாருங்கள். எருசலேமின் குடிகளிற் காவற்காப்போர் அவரவர் தங்கள் காவலிலும் அவரவர் தங்கள் வீட்டுக்கு எதிராகவும் நிறுத்தப்படக்கடவர்களென்றேன்.

௪ பட்டணம் விஸ்தாரமும் பெரியதுமாம், அதற்குள்ளே சனங்கொஞ்சமுமாயிருந்தது. வீடுகள் கட்டப்படாமலுமிருந்தது.

௫ அப்போது வம்சத்தட்டவணைகளைப் பார்க்கிறதற்கு நான் பெரியவர்களையும் மூப்பரையும் சனத்தையுங் கூட்டிக்கொள்ள என்னுடைய பராபரன் என்மனதிலே நினைவுகொடுத்தார். முந்தி ஏறிவந்த வம்சங்களின் அட்டவணைப்புஸ்தகம் அப்போது எனக்கு அகப்பட்டது. அதிலே நான் எழுதியிருக்கக்கண்டதாவது,

௬ பாபேலின் இராசாவாகிய நேபுகாத்நேச்சார் சிறைபிடித்துப் போனவர்களுள், சிறையிருப்பிலிருந்து செருபாபேலோடும், ஏசுவா, நெகெமியா, அசரியா, ராமியா, நகமானி, மர்தெகாயி, பில்சான், மிஸ்பெரோத், பிக்வாயி, நெகூம், பானா என்கிறவர்களோடுங்கூட ஏறிவந்து,

௭ எருசலேமுக்கும் யூதாவுக்குந் திரும்பித் தங்கள் தங்கள் பட்டணங்களிலே குடியிறங்கினவர்களுமான இந்தச்சீமையின் புத்திரராகிய இஸ்ரவேல் சனமான மனிதரின் இலக்கமாவது,

௮ பாரோசின் புத்திரர் இரண்டாயிரத்தொருநூற்றெழுபத்திரண்டு.

௯ செப்பத்தியாவின் புத்திரர் முந்நூற்றெழுபத்திரண்டு.

௰ ஆருகின் புத்திரர் அறுநூற்றைம்பத்திரண்டு.

௰௧ ஏசுவா யோவாப் என்றவர்களின் புத்திரருக்குள்ளே பாகாத்மோவாபின் புத்திரர் இரண்டாயிரத்தெண்ணூற்றுப்பதினெட்டு.

௰௨ ஏலாமின் புத்திரர் ஆயிரத்திருநூற்றைம்பத்துநாலு.

௰௩ சத்தூவின் புத்திரர் எண்ணூற்றுநாற்பத்தைந்து.

௰௪ சக்காயின் புத்திரர் எழுநூற்றறுபது.

௰௫ பின்னூவின் புத்திரர் அறுநூற்றுநாற்பத்தெட்டு.

௰௬ பெபாயின் புத்திரர் அறுநூற்றிருபத்தெட்டு.

௰௭ அஸ்காதின்புத்திரர் இரண்டாயிரத்து முந்நூற்றிருபத்திரண்டு.

௰௮ அதோனிக்காமின் புத்திரர் அறுநூற்றறுபத்தேழு.

௰௯ பிக்வாயின்புத்திரர் இரண்டாயிரத்தறுபத்தேழு.

௨௰ ஆதினின்புத்திரர் அறுநூற்றைம்பத்தைந்து.

௨௧ எசேக்கியாவின்குமாரனாகிய ஆதேரின்புத்திரர்தொண்ணூற்றெட்டு.

௨௨ ஆசூமின்புத்திரர் முந்நூற்றிருபத்தெட்டு.

௨௩ பெத்சாயின்புத்திரர் முந்நூற்றிருபத்துநாலு.

௨௪ ஆரிபின்புத்திரர் நூற்றுப்பன்னிரண்டு.

௨௫ கிபெயோனின்புத்திரர் தொண்ணூற்றைந்து.

௨௬ பெத்லெகேம் ஊராரும் நெத்தோப்பா ஊராரும் நூற்றெண்பத்தெட்டு.

௨௭ அனதோத்தூர் மனிதர் நூற்றிருபத்தெட்டு.

௨௮ பெத் அஸ்மாவேத் ஊரார் நாற்பத்திரண்டு.

௨௯ கிரியாத்யெயாரீம், கெபிரா, பேரோத் ஊர்களின்மனிதர் எழுநூற்றுநாற்பத்துமூன்று.

௩௰ ராமா காபா ஊர்களின்மனிதர் அறுநூற்றிருபத்தொன்று.

௩௧ மிக்மாஸ் ஊரார் நூற்றிருபத்திரண்டு.

௩௨ பெத்தேல் ஆயி ஊர்களின்மனிதர் நூற்றிருபத்துமூன்று.

௩௩ வேறொருநேபோ ஊரார் ஐம்பத்திரண்டு.

௩௪ மறு ஏலாமின்புத்திரர் ஆயிரத்திருநூற்றைம்பத்துநாலு.

௩௫ ஆரிமின்புத்திரர் முந்நூற்றிருபது.

௩௬ எரிகோபுத்திரர் முந்நூற்றுநாற்பத்தைந்து.

௩௭ லோத், ஆதீத், ஓனோ ஊர்களின் புத்திரர் எழுநூற்றிருபத்தொன்று.

௩௮ செனாயா புத்திரர் மூவாயிரத்துத் தொள்ளாயிரத்துமுப்பது.

௩௯ ஆசாரியர்களாவது, ஏசுவாவீட்டாராகிய ஏதாயாவின்புத்திரர் தொள்ளாயிரத்தெழுபத்துமூன்று.

௪௰ இம்மேரின்புத்திரர் ஆயிரத்தைம்பத்திரண்டு.

௪௧ பஸ்கூரின்புத்திரர் ஆயிரத்திருநூற்றுநாற்பத்தேழு.

௪௨ ஆரிமின்புத்திரர் ஆயிரத்துப்பதினேழு.

௪௩ லேவியராவது, ஒதியாவின்புத்திரருக்குள்ளே கத்மியேலின் குமாரனாகிய ஏசுவாவின்புத்திரர் எழுபத்துநாலு.

௪௪ பாட்டகராவது, ஆசாபின்புத்திரர் நூற்றுநாற்பத்தெட்டு.

௪௫ வாசற்காப்பாளராவது, சல்லூமின் புத்திரர், அதேரின்புத்திரர், தல்மோனின் புத்திரர், அக்கூபின்புத்திரர், அதிதாவின் புத்திரர், சோபாயின்புத்திரர், நூற்றுமுப்பத்தெட்டு.

௪௬ இஸ்ரவேலைச்சேர்ந்தவர்களாவது, சீகாவின் புத்திரர், அசுபாவின் புத்திரர், தபாகோதின்புத்திரர்,

௪௭ கேரோசின்புத்திரர், சீயாவின்புத்திரர், பாதோனின்புத்திரர்,

௪௮ லெபானாவின்புத்திரர், அகபாவின் புத்திரர், சல்மாயின் புத்திரர்,

௪௯ ஆனானின்புத்திரர், கித்தேலின்புத்திரர், காகாரின்புத்திரர்.

௫௰ ரெயாயாவின்புத்திரர், ரேத்சினின் புத்திரர், நெகோதாவின்புத்திரர்,

௫௧ காசாமின்புத்திரர், ஊசாவின்புத்திரர், பசெயாகின்புத்திரர்,

௫௨ பேசாயின் புத்திரர், மெயூனீமின் புத்திரர், நெபூசீன்புத்திரர்,

௫௩ பக்பூக்கின் புத்திரர், அகுபாவின் புத்திரர், அர்கூரின்புத்திரர்,

௫௪ பஸ்லித்தின் புத்திரர், மெகிதாவின் புத்திரர், அர்ஷாவின்புத்திரர்,

௫௫ பர்கோசின் புத்திரர், சிஸெராவின் புத்திரர், தாமாகின்புத்திரர்,

௫௬ நெத்சியாகின்புத்திரர், அதிபாவின்புத்திரர்,

௫௭ சாலொமோனுடையவேலைக்காரரின்புத்திரராவது, சோதாயின் புத்திரர், சொபெரேதின்புத்திரர், பெரிதாவின்புத்திரர்,

௫௮ யாலாவின் புத்திரர், தர்கோனின் புத்திரர், கித்தேலின்புத்திரர்,

௫௯ செப்தியாவின் புத்திரர், அத்தீலின் புத்திரர், பொகெரேத்செபாயிமின்புத்திரர், ஆமோனின்புத்திரர்,

௬௰ இஸ்ரவேலைச்சேர்ந்தவர்களும் சாலொமோனுடைய வேலைக்காரரின்புத்திரரும் எல்லாருங்கூட முந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டுபேராயிருந்தார்கள்.

௬௧ தேல்மெலா, தேல்அர்சா, கேரூப், அத்தோன், இம்மேர் என்னும் ஊர்களிலிருந்து வந்தவர்களும் தங்கள் பிதாக்களின் வீட்டையும் தங்கள் பூர்வோத்திரத்தையும் அறிவிக்கமாட்டாதிருந்தார்கள்.

௬௨ தெலாயாவின் புத்திரர், தொபியாவின் புத்திரர், நெக்கோதாவின் புத்திரர், அறுநூற்றுநாற்பத்திரண்டுபேர்.

௬௩ ஆசாரியர்களில் ஒபாயாவின் புத்திரர், கோத்சின்புத்திரர், கிலேயாதியனான பர்சிலாயின் குமாரத்திகளில் ஒருத்தியை

விவாகம்பண்ணி, அவர்கள் வமிசநாமத்தழைக்கப்பட்ட பர்சிலாயின்புத்திரர்,

௬௪ இவர்கள் தங்கள்வங்கிஷத் தட்டவணைகளில் எழுதப்பட்டவர்களில் இவர்கள் தங்கள்பேரைத்தேடிக்காணாதேபோய் அசுத்தரென்று ஆசாரிய ஊழியத்துக்குப்புறம்பானார்கள்.

௬௫ வெளிச்சங்களும் உத்தமங்களுமுள்ள ஒரு ஆசாரியன் எழும்புமட்டும் அவர்கள் பரிசுத்தத்துக்குப் பரிசுத்தமானதிலே புசிக்கவேண்டாமென்று திர்ஷாதா அவர்களுக்குச்சொன்னான்.

௬௬ இந்தச்சபையெல்லாம் ஏகத்துக்கு நாற்பத்திராயிரத்து முந்நூற்றறுபது பேராயிருந்தது.

௬௭ அவர்களைத்தவிர ஏழாயிரத்து முந்நூற்று முப்பத்தேழுபேரானவர்களுடைய வேலைக்காரரும் வேலைக்காரிகளும் இருநூற்று நாற்பத்தைந்து பாடகரும் பாடகிகளும் அவர்களுக்கிருந்தார்கள்.

௬௮ அவர்களுடைய குதிரைகள் எழுநூற்று முப்பத்தாறும், அவர்கள் கோவேறு கழுதைகள் இருநூற்று நாற்பத்தைந்தும்,

௬௯ ஒட்டகங்கள் நானூற்று முப்பத்தைந்தும், கழுதைகள் ஆறாயிரத்து எழுநூற்றிருபதுமாயிருந்தது.

௭௦ வமிசங்களின் தலைவரிலே சிலர்வேலைக்கென்று கொடுத்ததாவது, திர்ஷாதா ஆயிரந்தங்கக்காசையும் ஐம்பது கலங்களையும் ஐந்நூற்றுமுப்பது ஆசாரியவஸ்திரங்களையும் பொக்கிஷத்துக்குக்கொடுத்தான்.

௭௧ வமிசங்களின் தலைவரிற் சிலர்வேலையின் பொக்கிஷத்துக்கு இருபதினாயிரந் தங்கக்காசையும் இரண்டாயிரத்திருநூறு இராத்தல்வெள்ளியையுங்கொடுத்தார்கள்.

௭௨ மற்றச்சனங்கொடுத்தது இருபதினாயிரந் தங்கக்காசும் இரண்டாயிரம் இராத்தல்வெள்ளியும், அறுபத்தேழு ஆசாரியவஸ்திரங்களுமானது.

௭௩ ஆசாரியர்களும் லேவியரும் வாசற்காவலாளரும் பாடகரும் சனத்திற்சிலரும் நிதனீமரும் சேர்ந்தவர்களும் இஸ்ரவேலனைத்துந்தங்கள் பட்டணங்களிற் குடியிருந்து, ஏழாம்மாதம் சேருகிறபோது இஸ்ரவேல்புத்திரர் தங்கள்பட்டணங்களிலிருந்தார்கள்.

௮. அதிகாரம்.

நியாயப்பிரமாணஞ் சனத்துக்கு முன்பாக வாசிக்கப்பட்டது.

சனமெல்லாம் அப்போது தண்ணீர்வாசலுக்குமுன்னான வீதியிலே ஒருவனைப்போலே கூடிக்கொண்டு, கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கற்பித்த மோசேயின் நியாயப்பிரமாணப்புஸ்தகத்தைக்கொண்டு வரவேண்டுமென்று வேதபாரகனாகிய எஸ்றாவுக்குச்சொன்னார்கள்.

௨ அப்படியே ஏழாம்மாதம் முதல் தேதியிலே ஆசாரியனாகிய எஸ்றா நியாயப்பிரமாணத்தைப் புருஷரும் ஸ்திரிகளுங் கேட்கிறதற்கு உணர்வுள்ள அனைவருமாகிய சபைக்கு முன்பாகக்கொண்டுவந்து,

௩ தண்ணீர்வாசலுக்கு முன்னான வீதிக்கெதிரேயிருந்து அதிகாலமே துவக்கி மத்தியானமட்டும் புருஷருக்கும் ஸ்திரிகளுக்கும் உணர்வுள்ளவர்களுக்கும் முன்பாக வாசித்தான். சகலசனத்தின் செவிகளும் நியாயப்பிரமாணப் புஸ்தகத்தின்பேரில் கவனித்திருந்தது.

௪ வேதபாரகனாகிய எஸ்றா அதற்காகச்செய்யப்பட்ட ஒருமரமேடையின் மேலே நின்றான். அவனண்டையில் அவனுக்கு வலதுபக்கமாக மத்தித்தியாவும் செமாவும் அனாயாவும் உரியாவும் இல்க்கியாவும் மாசெயாவும் அவனுக்கு இடதுபக்கமாகப் பெதாயாவும் மீஷவேலும் மல்கியாவும் ஆசூமும் அஸ்பதானாவும் சகரியாவும் மெசுல்லாமும் நின்றார்கள்.

௫ எஸ்றா சகலசனத்தின் கண்களுக்கு முன்பாகப் புஸ்தகத்தைத்திறந்தான். ஏனெனில், அவன் சகலசனத்துக்கும் உயரமாய் நின்றான். அவன் அதைத்திறக்கிறபோது சனமெல்லாம் எழுந்து நின்றது.

௬ அப்போது எஸ்றா மகத்துவமுள்ள பராபரனாகிய கர்த்தரைத் தோத்திரித்தான். சனமெல்லாந் தங்கள் கைகளைக்குவித்து அதற்குமறுமொழியாக, ஆமென் ஆமென் என்றுசொல்லிக்குனிந்து முகங்குப்புறவிழுந்து கர்த்தரைப்பணிந்துகொண்டார்கள்.

௭ ஏசுவா, பானி, செரேபியா, யாமின், ஆக்கூப், சபெதாயி, ஒதியா, மாசேயா, கேலிதா, அசரியா, யோசபாத், ஆனான், பெலாயா என்றவர்களும் லேவியரும் நியாயப்பிரமாணத்தைச் சனம் உணரப்பண்ணினார்கள். சனந்தங்கள் நிலையிலே நின்றார்கள்.

௮ அவர்கள் பராபரனுடைய நியாயப்பிரமாணமென்ற புஸ்தகத்திலே திட்டமாக வாசித்து அருத்தஞ்சொல்லி வாசிக்கப்பட்டதை அவர்கள் உணரப்பண்ணினார்கள்.

௯ திர்ஷாதா என்னப்பட்ட நெகெமியாவும் வேதபாரகனாகிய எஸ்றாவென்ற ஆசாரியனுஞ் சனத்தையுணரப்பண்ணுகிற லேவியரும் எல்லாச்சனத்துடனேயும்: இந்த நாள் உங்கள் பராபரனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமானது. நீங்கள் துக்கித்துக்கொண்டு அழாதேயுங்கொள்ளென்றார்கள். ஏனென்றால் சனமெல்லாம் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளைக்கேட்கிறபோது அழுதார்கள்.

௰ அவன் அவர்களுடனே நீங்கள் போய்க் கொழுத்ததுகளைப் பொசித்து, தித்திப்பானதுகளைக் குடித்து, தங்களுக்காகச் சௌதாரம்பண்ணாதவர்களுக்குப் பங்குகளை அனுப்புங்கள். ஏனென்றால் இந்தநாள் நம்முடைய ஆண்டவருக்குப் பரிசுத்தமானது; மனம் நொந்துகொண்டிராதேயுங்கள். ஏனென்றால் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கிறதே உங்களுடைய பெலனென்றான்.

௰௧ லேவியருஞ்சனத்தையெல்லாம் அமர்த்தி, அழாதிருங்கள், ஏனென்றால் இந்தநாள் பரிசுத்தமானது, மனம்நொந்திராதேயுங்களென்றார்கள்.

௰௨ அப்போது சனமெல்லாம் பொசித்துக் குடிக்கவும் பங்குகளை அனுப்பவும் பெரிய சந்தோஷத்தை நடப்பிக்கவும் போனார்கள். ஏனென்றால் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட வார்த்தைகளையுணர்ந்திருந்தார்கள்.

கூடாரப்பண்டிகை ஆசரிக்கப்பட்டது.

௰௩ மறுநாளிலே சகலசன வம்சங்களின் தலைவரும் ஆசாரியர்களும் லேவியரும் நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை உணர்ந்துகொள்ளும்படி வேதபாரகனாகிய எஸ்றாவண்டையிலே கூடிவந்தார்கள்.

௰௪ அப்போது நியாயப்பிரமாணத்திலே, இஸ்ரவேல் புத்திரர் ஏழாம்மாதத்தின் பண்டிகையிலே கூடாரங்களிற் குடியிருக்க வேண்டுமென்று கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்ததெயழுதியிருக்கிறதென்று கண்டுபிடித்தார்கள்.

௰௫ ஆகையால் எழுதியிருக்கிறபடி கூடாரங்களைப் போடும்படிக்கு நீங்கள் மலைகளுக்குப் புறப்பட்டு ஒலிவக்கிளைகளையும் காட்டொலிவ விருட்சங்களின் கிளைகளையும் மிருதுச்செடிகளின் கிளைகளையும் பேரீச்சமட்டைகளையும் அடர்த்தியான மரக்கிளைகளையுங் கொண்டுவாருங்களென்று தங்களுடைய எல்லாப் பட்டணங்களிலும் எருசலேமிலுங் கூறிச்சாற்றுவித்தார்கள்.

௰௬ அப்படியே சனம் வெளியே போய்க் கொண்டுவந்து, அவரவர் தங்கள் வீடுகளின் மேலும் தங்கள் முற்றங்களிலும் தேவாலயத்தினுடைய பிராகாரங்களிலும் தண்ணீர் வாசல் வீதியிலும் எப்பிராயீம் வாசல் வீதியிலும் தங்களுக்குக் கூடாரங்களைப் போட்டார்கள்.

௰௭ இந்தப்பிரகாரமாகச் சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்தவர்களின் சபையெல்லாம் கூடாரங்களைப் போட்டுக் கூடாரங்களிற் குடியிருந்தார்கள். இப்படியே நூனின் குமாரனாகிய யோசுவாவின் நாட்கள் துவக்கி அந்தநாள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் செய்யாதிருந்தபடியினாலே மகாபெரிய சந்தோஷமுண்டாயிருந்தது.

௰௮ முதலாம் நாள் துவக்கிக் கடைசிநாள் மட்டும் தினந்தினம் பராபரனுடைய நியாயப்பிரமாணப்புஸ்தகத்திலே வாசிக்கப்பட்டது. ஏழுநாளாயப் பண்டிகையை ஆசரித்தார்கள். எட்டாம் நாளிலேயென்றால், முறைமையின்படியே சபைகூடி நிறைவேற்றப்பட்டிருந்தது.

௯. அதிகாரம்.

உபவாசநாள் ஆசரிக்கப்பட்டது.

௧ அந்தமாதம் இருபத்துநாலாந் தேதியிலேயென்றால் இஸ்ரவேல் புத்திரர் உபவாசம்பண்ணி, இரட்டுடுத்தித் தங்கள் மேல் புழுதியைப் போட்டுக்கொண்டவர்களாய்க் கூடினார்கள்.

௨ இஸ்ரவேலவித்தார் மறுசாதியாரெல்லாரையும் விட்டுப் பிரிந்துகொண்டு, வந்து நின்று தங்கள் பாவங்களையுந் தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டார்கள்.

௩ அவர்கள் எழுந்திருந்து தங்கள் நிலையிலே நின்றார்கள். அப்போது ஒருசாமம் மட்டும் அவர்களுடைய பராபரனாகிய கர்த்தருடைய நியாயப்பிரமாணப்புஸ்தகத்திலே வாசிக்கப்பட்டது. பின்னொருசாமம் மட்டும் அவர்கள் பாவ அறிக்கைபண்ணித் தங்கள் பராபரனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள்.

௪ ஏசுவா, பானி, கத்மீயேல், செபனியா, புன்னி, செரேபியா, பானி, கெனானி என்பவர்கள் லேவியருடைய படிகளின்மேல் நின்று, தங்கள் பராபரனாகிய கர்த்தரை நோக்கி மகாசத்தமாய்க் கூப்பிட்டார்கள்.

௫ பின்பு லேவியரான ஏசுவா, கத்மீயேல், பானி, ஆசாப்னியா, செரேபியா, ஒதியா, செபனியா, பெத்தகியா என்பவர்கள். நீங்கள் எழுந்திருந்து, அநாதியாய் என்றென்றைக்குமிருக்கிற உங்கள் பராபரனாகிய கர்த்தரைத் தோத்திரியுங்களென்று சொன்னதாவது, எந்தத்தோத்திரப்புகழ்ச்சிக்கும் உயர்மானவும் மகிமையுள்ள நாமத்தோத்திரிக்கப்படக்கடவது.

௬ தேவரீர் ஒருவரே கர்த்தரானவர், தேவரீர் பரமண்டலங்களையும் பரமண்டலங்களின் பரமண்டலங்களையும் அதுகளுடைய எல்லாச் சேனையையும் பூமியையும் அதிலுள்ளதெல்லாவற்றையுஞ் சமுத்திரங்களையும் அதுகளிலுள்ளதெல்லாவற்றையும் உண்டாக்கினீர். அதுகளையெல்லாந் தேவரீர் உயிர்ப்பிக்கிறீர். பரமண்டலங்களின் சேனைகள் உம்மைப்பணிந்துகொள்ளுகின்றது.

௭ தேவரீர் ஆபிராமைத் தெரிந்துகொண்டு அவனை ஊர் என்கிற கல்தேயரின் பட்டணத்திலிருந்து புறப்படப்பண்ணி அவனு

[illegible] ஆபிரகாமென்றுபேரிட்ட பராபரனு [illegible]கர்த்தர்.

௮ அவன் இருதயத்தைத்தேவரீர் உம் முன்பாக உண்மையுள்ளதாகக் கண்டு கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், எபூசியர், கெர்காசியருடைய தேசத்தை அவன் வித்துக்குக்கொடுக்கும்படிக்கு அவனோடே உடம்படிக்கைபண்ணி உம் வார்த்தைகளை நிறைவாக்கும்பண்ணினீர். தேவரீர் நீதியுள்ளவர்.

௯ எகிப்திலே எங்கள் பிதாக்கள் அனுபவித்தசிறுமையைநீர்கண்டு நாணற்கடலண்டையிலே அவர்கள்கூப்பிடுதலைக்கேட்டீர்.

௰ பார்வோனிடத்திலும் அவனுடைய சகல ஊழியக்காரரிடத்திலும், அவன் தேசத்தின் சகல சனத்தினிடத்திலும் அடையாளங்களையும் அற்புதங்களையுஞ் செய்தீர். ஏனெனில் அவர்களை அகந்தையாக நடத்தினார்களென்றதையறிந்திருந்தீர். இப்படி இந்நாளிலிருக்கிறபடி உமக்குக் கீர்த்தியையுண்டாக்கினீர்.

௰௧ தேவரீர் அவர்களுக்கு முன்பாகச் சமுத்திரத்தைப்பிளந்ததினாலே நடுக்கடலைக் காலால்நனையாமற் கடந்தார்கள். ஆனால் ஆழமானதண்ணீர்களிலே கல்லைப்போடுகிறதுபோல அவர்களைத்தொடருகிறவர்களை ஆழங்களிலேபோட்டீர்.

௰௨ அவர்கள்நடக்கவேண்டிய வழியை அவர்களுக்குவெளிச்சமாகப்பகலிலே மேகத்தூணிலும் இரவிலே அக்கினித்தூணிலும் அவர்களைவழிநடத்தினீர்.

௰௩ தேவரீர் சீனாய்ப்பர்வதத்திலிறங்கி வானத்திலிருந்து அவர்களோடேபேசி அவர்களுக்குச்செம்மையான நீதிநியாயங்களையும் நல்லகட்டளைகளும் கற்பனைகளுமாகிய உண்மையான பிரமாணங்களையுங் கொடுத்தீர்.

௰௪ உமதுபரிசுத்த ஓய்வுநாளை அவர்களுக்குத்தெரியப்படுத்தி உமதுடையதாசனாகிய மோசேயைக்கொண்டு அவர்களுக்குக் கற்பனைகளையுங்கட்டளைகளையும் நியாயப்பிரமாணத்தையுங்கற்பித்தீர்.

௰௫ அவர்கள்பசியில் அவர்களுக்குவானத்திலிருந்து அப்பங்கொடுத்து அவர்கள் தாகத்தில் அவர்களுக்குக்கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணித் தேவரீர் அவர்களுக்குக்கொடுக்க உமதுகையையுயர்த்தினதேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அதிற்பிரவேசியுங்களென்று அவர்களுக்குச் சொன்னீர்.

௰௬ ஆனால் எங்கள்பிதாக்களாகிய அவர்களும் அகந்தைபண்ணித்தங்கள்பிடரியைக் கடினப்படுத்தி உமதுகற்பனைகளுக்குச் செவிகொடாதேபோனார்கள்.

௰௭ அவர்கள்செவிகொடுக்கமனதில்லாமல் தேவரீர் அவர்களிடத்திலேசெய்த உமதுடைய அதிசயங்களை நினையாமலும்போய்த் தங்கள் பிடரியைக்கடினப்படுத்தித் தங்கள் அடிமைத்தனத்துக்குத்திரும்பும்படிக்குத் தங்கள்கலகத்திலே ஒருதலைவனைவைத்தார்கள். ஆகிலும் மெகுவாய்மன்னிக்கிறவரும் இரக்கமும் மனவுருக்கமும் நீடியசாந்தமும் மகாகிருபையுமுள்ள பராபரனாகிய தேவரீர் அவர்களைக்கைவிடவில்லை.

௰௮ அவர்கள் தங்களுக்குவார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி இது உன்னை எகிப்திலிருந்துதேறிவரப்பண்ணின உன்னுடையதேவனென்றுசொல்லிக் கோபமூட்டுவிக்கும்பெரிய அக்கிரமங்களைப்பண்ணியிருந்தாலும்,

௰௯ தேவரீர் உமதுடையமிகுந்த மனவுருக்கத்தின்படியே அவர்களைவனாந்தரத்திலேகைவிடவில்லை. அவர்களைவழிநடத்தப் பகலிலேமேகத்தூணும் அவர்களுக்கு வெளிச்சத்தையும் அவர்கள் நடக்கவேண்டியவழியையுங்காட்ட இரவிலே அக்கினித்தூணும் அவர்களைவிட்டுவிலகினதில்லை.

௨௰ அவர்களுக்குப்புத்தியைப்படிப்பிக்க உமது நல்லாவியைக் கட்டளையிட்டீர். உமது மன்னாவை அவர்கள்வாய்க்குவிலக்கிப்போடாமல் அவர்கள்தாகத்தில் அவர்களுக்குத்தண்ணீரைக்கொடுத்துவந்தீர்.

௨௧ இப்படி நாற்பதுவருஷமாகவனாந்தரத்தில் அவர்களுக்கொன்றுங்குறைபடாதபடிக்கு அவர்களைப்பராமரித்தீர். அவர்கள் வஸ்திரங்கள்பழைசாய்ப்போனதுமில்லை அவர்கள்கால்கள்வீங்கிப்போனதுமில்லை.

௨௨ அவர்களுக்கு இராச்சியங்களையுஞ் சனங்களையும் ஒப்புக்கொடுத்து அதுகளை எல்லையெல்லையாக அவர்களுக்குப் பங்கிட்டீர். எஸ்போனின் இராசாவாகிய சீகோனின் தேசத்தையும் பாசானின் இராசாவாகிய ஓகின் தேசத்தையுங் கட்டிக்கொண்டார்கள்.

௨௩ அவர்கள் பிள்ளைகளை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணிச் சுதந்தரித்துக்கொள்ளப்போகத் தேவரீர் அவர்கள் பிதாக்களுக்குச்சொன்ன தேசத்திலே அவர்களை அழைத்துவந்தீர்.

௨௪ அப்படியே பிள்ளைகள் உட்பிரவேசித்துத் தேசத்தைச்சுதந்தரித்துக்கொண்டார்கள். தேவரீர் அவர்களுக்கு முன்பாகத் தேசத்தின்குடிகளாகிய கானானியரைத்தாழ்த்தி அவர்களையும் அவர்கள் இராசாக்களையுந் தேசத்தின் சனங்களையுந் தங்களுக்குச்சரிப்போனபடிப்போலேசெய்ய அவர்கள் கைக்கு ஒப்புக்கொடுத்தீர்.

௨௫ அவர்கள் அரணிப்பட்டணங்களையும் புஷ்டியான பூமியையும் பிடித்துச் சகலவித உடைமைகள் நிறைந்த வீடுகளையும் வெட்டப்பட்ட துரவுகளையும் ஏராளமான திராட்சத் தோட்டங்களையும் ஒலிவத்

தோப்புகளையும் கனிகொடுக்கிற மரங்களையும் சுதந்தரித்துக்கொண்டு பொசித்துத் திருப்தியாகிக் கொழுத்து உம்முடைய பெரிய தயவினாலே செல்விக்கையாய் வாழ்ந்தார்கள்.

௨௬ ஆனால் அவர்கள் கீழ்ப்படியாதவர்களாகி உமக்கு விரோதமாகக் கலகம்பண்ணி உமது நியாயப்பிரமாணத்தைத் தங்கள் முதுகுக்குப் பின்னாக எறிந்து தங்களை உம்மண்டைக்குத் திருப்பும்படிக்கு அவர்களைத் திடச்சாட்சியாய்க் கடிந்துகொண்ட உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோட்டுக் கோபம் வருத்துவிக்கிற பெரிய அக்கிரமங்களைச் செய்தார்கள்.

௨௭ ஆகையால் அவர்களை நெருக்கிடைபண்ணுகிற அவர்கள் சத்துருக்களின் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்துவிட்டீர். அவர்கள் நெருக்கம் அனுபவிக்கிற காலத்தில் அவர்கள் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறபோதோவெனில் தேவரீர் பரமண்டலங்களிலிருந்து கேட்டு உமது மிகுந்த இரக்கத்தினாலே அவர்களை அவர்கள் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கிவிடுகிற இரட்சகர்களை அவர்களுக்குக் கொடுத்தீர்.

௨௮ அவர்களுக்கு இளைப்பாறுதல் உண்டாகும்போதோவென்றால் உமக்கு முன்பாகப் பொல்லாப்புச் செய்யத் திரும்பினார்கள். ஆகையால் அவர்கள் சத்துருக்கள் அவர்களை ஆளும்படிக்கு அவர்களை இவர்கள் கையிலே விட்டீர். அவர்கள் மனந்திரும்பி உம்மை நோக்கிக் கூப்பிடும்போதோவென்றால் தேவரீர் பரமண்டலங்களிலிருந்து கேட்டு அவர்களை உம்முடைய இரக்கங்களின்படியே அநேகம்விசை நீங்கலாக்கிவிட்டீர்.

௨௯ அவர்களை உம்முடைய நியாயப்பிரமாணத்துக்குத் திருப்ப அவர்களைத் திடச்சாட்சியாய்க் கடிந்துகொண்டீர். ஆனால் அவர்கள் அகந்தையாய் உமது கற்பனைகளுக்குச் செவிகொடாமற் கீழ்ப்படிந்து நடக்கிற மனுஷன் செய்து பிழைக்கிற அந்த உமது நீதிநியாயங்களுக்கு விரோதமாகப் பாவஞ்செய்து தங்கள் தோளை முரண்டுத்தனமாய் விலக்கிச் செவிகொடாமல் தங்கள் பிடரியைக் கடினப்படுத்திக்கொண்டார்கள்.

௩௰ தேவரீர் அநேகம் வருஷமாக அவர்கள்மேலே பொறுமையாயிருந்து உம்முடைய ஆவியினாலே பேசின உம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு அவர்களைத் திடச்சாட்சியாய்க் கடிந்துகொண்டாலும் அவர்கள் செவிகொடாதபடியினாலே அவர்களைத் தேசங்களுடைய சனசதளங்களின் கையிலே ஒப்புக்கொடுத்தீர்.

௩௧ ஆகிலும் உமது மிகுந்த இரக்கங்களின்படியே அவர்களை நிர்மூலமாக்காமலும் அவர்களைக் கைவிடாமலும் இருந்தீர். ஏனெனில் தேவரீர் கிருபையும் இரக்கமுமுள்ள பராபரன்.

௩௨ இப்போதும் உடம்படிக்கையையும் கிருபையையும் காக்கிற வல்லமையும் பயங்கரமுமுள்ள மகா தெய்வமாகிய எங்கள் பராபரனே, அசூருடைய இராசாக்களின் நாட்கள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் எங்களையும் எங்கள் இராசாக்களையும் எங்கள் பிரபுக்களையும் எங்கள் ஆசாரியர்களையும் எங்கள் தீர்க்கதரிசிகளையும் எங்கள் பிதாக்களையும் உமது சனமனைத்தையும் பிடித்த சகல வருத்தமும் உமக்கு முன்பாகக் கொஞ்சமாய் எண்ணப்படாதிருப்பதாக.

௩௩ தேவரீரோவென்றால் எங்கள்மேல் வந்ததெல்லாவற்றிலும் நீதியுள்ளவர். ஏனெனில் உண்மையாய் நடப்பித்தீர். நாங்களோவென்றால் ஆகாமியம்பண்ணினோம்.

௩௪ எங்கள் இராசாக்களும் எங்கள் பிரபுக்களும் எங்கள் ஆசாரியர்களும் எங்கள் பிதாக்களும் உம்முடைய நியாயப்பிரமாணத்தின்படி செய்யாமலும் உமது கற்பனைகளையுந் தேவரீர் அவர்களைக் கடிந்துகொண்ட உமது சாட்சிகளையுங் கவனிக்காமலும் போனார்கள்.

௩௫ அவர்கள் தங்கள் இராசரிகத்திலும் தேவரீர் அவர்களுக்குக் கொடுத்த உமது தயவின் ஏராளத்திலுந் தேவரீர் அவர்களுக்கு முன்பாகத் திறந்துவைத்த விசாலமும் புஷ்டியுமான தேசத்திலும் உமக்கூழியஞ் செய்யாமலுந் தங்கள் பொல்லாத கருமங்களை விட்டுத் திரும்பாமலும் போனார்கள்.

௩௬ இதோ, இன்றையத்தினம் நாங்கள் அடிமைகள். இதோ, உண்டாகிய பலனையும் நன்மையையுஞ் சாப்பிடத் தேவரீர் எங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த இந்தத் தேசத்திலேதானே நாங்கள் அடிமைகள்.

௩௭ அதின் வரத்து எங்கள் பாவங்களினிமித்தந் தேவரீர் எங்கள்மேல் வைத்த இராசாக்களுக்குத் திரளாகப்போகிறது. அவர்கள் தங்களுக்குச் சரிப்போனபடியே எங்கள் சரீரங்களையும் எங்கள் மிருகசீவன்களையும் ஆளுகிறார்கள். நாங்கள் மகா இக்கட்டில் அகப்பட்டிருக்கிறோம்.

௩௮ இப்படியெல்லாமிருக்கக்கொள்ள நாங்கள் நிசமான உடம்படிக்கையைப் பண்ணி எழுதுகிறோம். எங்கள் பிரபுக்களும் எங்கள் லேவியரும் எங்கள் ஆசாரியர்களும் அதற்கு முத்திரைபோடுகிறார்களென்றார்கள்.

௰. அதிகாரம்.

பராபரனோடே பண்ணின உறுதியான உடம்படிக்கையின் விவரம்.

முத்திரைபோட்டவர்களாவது, அகலியாவின் குமாரனாகிய திர்ஷாதா என்ற நெகேமியாவுஞ் சிதேக்கியாவும்,

௨ செராயா, அசரியா, எரேமியா,
௩ பஸ்கூர், அமரியா, மல்கியா,
௪ அத்தூஸ், செபனியா, மலலூக்,
௫ ஆரீம, மெரேமோத், ஒபதியா,
௬ தானியேல, கினெதோன, பாருக்,
௭ மெசுலலாம, அபியா, மீயாமின,
௮ மாசியா, பில்காயி, செமாயா எனற ஆசாரியர்களும,

௯ லேவியராகிய அசனியாவின குமாரனாகிய யெசுவா, எனாதாதின குமாரரில ஒருவனாகிய பின்னூயி, கத்மீயேல எனகிறவர்களும்,
௰ அவர்களசகோதரராகியசெபனியா, ஒதியா, கெலீதா, பெலாயா, ஆனான,
௧௧ மீகா, ரேகோப், அசபியா,
௧௨ சக்கூர், செரேபியா, செபனியா,
௧௩ ஒதியா, பானி, பெனினு எனறவர்களும,

௧௪ சனத்தின தலைவராகிய பாரோஸ், பாகாத்மோவாப், ஏலாம, சத்தூ, பானி,
௧௫ புனனி, அஸ்காத், பெபாயி,
௧௬ அதோனியா, பிக்வாயி, ஆதின,
௧௭ ஆதேர், இஸ்கியா, ஆசூர்,
௧௮ ஒதியா, ஆசும, பெத்சாயி,
௧௯ ஆரீப், ஆனதோத், நெபாயி,
௨௰ மக்பியாஸ், மெசுலலாம, ஏசீர்,
௨௧ மெஷேசாபெயேல, சாதோக், யதுவா,
௨௨ பெலதியா, ஆனான, அனாயா,
௨௩ ஓசேயா, அனனியா, அசூப்,
௨௪ அலலோகேஸ், பிலகா, சோபேக்,
௨௫ ரேகூம, அஷபனா, மாசெயா,
௨௬ அகியா, கானான, ஆனான,
௨௭ மலலூக், ஆரீம, பானா எனறவர்களுமேதானே.

௨௮ சனத்திலமறறவர்களாகிய ஆசாரியர்களும லேவியரும வாசற்காப்பாளரும பாடகரும நிதனிமியரும தேசங்களின சனசதளங்களைவிட்டுப பிரிந்துபோய விலகிப்பராபரனுடைய நியாயப்பிரமாணத்துக்குத்திரும்பின அனைவரும அவர்களபெணசாதிகளும அவர்கள குமாரரும அவர்கள குமாரத்திகளுமாகிய அறிவும உணர்வுமுளளவர்களெலலாரும,

௨௯ தஙகளுக்குப்பெரியவர்களாகிய தஙகளசகோதரரோடே உறுதியாயசகூடிக்கொணடு பராபரனுடைய தாசனாகிய மோசேயைககொணடு கொடுக்கப்பட்ட பராபரனுடையநியாயப்பிரமாணத்திலே நடந்துகொளளுகிறதற்கும எஙகளஆணடவராகியகர்த்தரினகற்பனைகளையும அவர்நியாயஙகளையும அவருடையகட்டளைகளையும எலலாவறறைக்கொணடு அதுகளினபடிசெயகிறதற்கும,

௩௰ நாஙகள் எஙகள குமாரத்திகளைத்தேசத்தினசனசதளஙகளுக்குக்கொடாமலும எஙகளகுமாரருக்கு அவர்கள குமாரத்திகளைககொளளாமலுமிருககிறதற்கும,

௩௧ தேசத்தினசனசதளஙகள ஓயவுநாளிலேசரக்குகளையும எந்தவிதத்தானியத்தவசத்தையுமவிறகிறதற்குககொணடுவநதால நாஙகள அதை ஓயவுநாளிலும பரிசுத்தநாளிலும அவர்கள கையிலவாஙகாதிருககிறதற்கும நாஙகள ஏழாமவருஷத்தைவிடுதலைவருஷமாககிச சகல கடனினபாரத்தையும நீஙகலாககிவிடுகிறதற்குமான சாபமிடுகிற சத்திய பிரமாணத்திற்குட்பட்டார்கள.

௩௨ இதலலாமல நாஙகள எஙகளபராபரனுடையவீட்டின ஆராதனையாகிற சமுகத்தப்பஙகளுக்கும நித்தியகாணிக்கைக்கும ஓயவுநாட்களிலும மாதப்பிறப்புகளிலும செலுத்தும நித்தியசர்வாஙகதகனஙகளுக்கும பணடிகைகளுக்கும பரிசுத்தகாரியஙகளுக்கும இஸரவேலுககாகப்பாவநிவர்த்தியுணடாககும பெலிகளுக்கும,

௩௩ எஙகள பராபரனுடையவீட்டின சகலவேலைக்குமவருஷநதோறும நாஙகள சேககலில மூனறததொருபஙகைக்கொடுப்போமெனறு எஙகளமேலகற்பனைகளைச சுமத்திககொணடோம.

௩௪ நியாயப்பிரமாணத்திலெழுதியிருககிறபடியே எஙகளபராபரனாகியகர்த்தருடைய பலிபீடத்தனமேல் எரிகிறதற்காகக்குறிக்கப்பட்டகாலஙகளிலவருஷத்துககுவருஷம எஙகளபிதாககளுடையவீட்டுவமிசஙகளினபடியே எஙகளபராபரனுடையவீட்டுககுக் கொணடுவரவேணடிய விறகுகாணிக்கைக்காகவும நாஙகள ஆசாரியர்களுக்கும லேவியர்களுக்குஞ சனத்துக்குஞ சீட்டுகளைப்போட்டோம.

௩௫ நாஙகள வருஷநதோறும எஙகள பராபரனுடையவீட்டுக்கு எஙகள நிலத்தின முதற்பலனகளையுஞசகலவிதமரககனிகளிலெலலாம முதற்கனிகளையுஙகொணடுவரவும,

௩௬ நியாயப்பிரமாணத்திலெழுதியிருககிறபடியே எஙகளகுமாரில முதற்பேறுகளையும எஙகள மிருகசீவனகளின முதலீறறுக்களையும எஙகள ஆடுமாடுகளின முதலீறறுகளையும எஙகளபராபரனுடைய வீட்டுக்கும எஙகளபராபரனுடையவீட்டிலே ஊழியஞசெயகிற ஆசாரியர்களணடையிலுஙகொணடுவரவும,

௩௭ நாஙகள எஙகள பிசைந்தமாவில முநதினதையும எஙகள படைப்புகளையுஞ சகலமரஙகளின முநதினபலனகளாகிய திராட்சப்பழரசத்தையும எணணெயையும எஙகளபராபரனுடையவீட்டின அறைகளிலவைகக ஆசாரியர்களணடைக்கும எஙகள நிலப்பயிர்களிற் பத்திலொனறுலேவியரணடைக்குஙகொணடுவரவும லேவி

ராகிய இவர்கள் எங்கள் வெள்ளாண்மையின் பட்டணங்களிலெல்லாம் பத்திலொன்றைச் சேர்க்கவும்,

௩௮ லேவியர் பத்திலொன்றைச் சேர்க்கும்போது ஆரோனின் குமாரனாகிய ஒரு ஆசாரியன் லேவியரோடேகூட இருக்கவும், பத்திலொன்றாகிய அந்த லேவியர் பத்திலொன்றிலே பங்கை எங்கள் பராபரனுடைய வீட்டு உள்ளே பொக்கிஷவீட்டறைகளிற்கொண்டுவரவும் திட்டம்பண்ணிக்கொண்டோம்.

௩௯ ஏனென்றால் பரிசுத்த ஸ்தலத்தின் தட்டுமுட்டுகளும் ஊழியஞ்செய்கிற ஆசாரியர்களும் வாசற்காப்பாரும் பாடகரும் இருக்கிற அந்த அறைகளிலே இஸ்ரவேல் புத்திரரும் லேவிபுத்திரரும் தானியம் திராட்சப்பழரசம் எண்ணெய் என்பதுகளின் படைப்புகளைக் கொண்டுவரவேண்டியது. இப்படியே நாங்கள் எங்கள் பராபரனுடைய வீட்டைப் பராமரியாமல் விடுவதில்லையென்று திட்டம்பண்ணிக்கொண்டோம்.

௰௧. அதிகாரம்.

எருசலேமிலும் தேசத்தின் மற்றப்புறங்களிலுங்குடியிறங்கினவர்கள்.

சனத்தின் பிரபுக்கள் எருசலேமிலே குடியிருந்தார்கள். மற்றச்சனமோவென்றால் தங்களுக்குள்ளே பத்துப்பேரிலொருவனை எருசலேமென்ற பரிசுத்தப்பட்டணத்திலும் ஒன்பதுபேரை மற்றப்பட்டணங்களிலுங் குடியிருக்கப்பண்ணிச் சீட்டுகளைப் போட்டுக்கொண்டார்கள்.

௨ ஆனால் எருசலேமிலே குடியிருக்க மனப்பூர்வமானமனுஷரெல்லாருஞ் சனம் ஆசீர்வாதத்தைவாழ்த்திற்று.

௩ யூதாவின் பட்டணங்களின் இஸ்ரவேலும் ஆசாரியர்களும் லேவியரும் இஸ்ரவேலைச்சேர்ந்தவர்களும் சாலொமோனுடைய வேலைக்காரரின் புத்திரரும் அவரவர் தங்கள் காணிபூமியிலுந் தங்கள் பட்டணங்களிலுங்குடியிருந்தார்கள். ஆனால் எருசலேமிலேகுடியிருந்த சீமையின் தலைவராவென்றால்,

௪ எருசலேமிலே யூதாபுத்திரரிற்சிலரும் பென்யமீன் புத்திரரிற்சிலருங் குடியிருந்தார்கள். யூதாபுத்திரரிலே பேரேசின் புத்திரருக்குள்ளே ஒருவனான மகலாலெயேலின் குமாரனாகிய செபத்தியாவின் குமாரனான அமரியாவுக்குப்பிறந்த சகரியாவுக்குக் குமாரனான உசியாவின் மகன் அத்தாயாவும்,

௫ சீலோனின் குமாரன் சகரியாவுக்குக் குமாரனாகிய யோயாரீபுக்குக் குமாரனான அதாயாவுக்குப்பிறந்த அசாயாவின் குமாரன் கொலோசேபெற்ற பாருக்கின் மகன் மாசெயாவுந்தானே.

௬ எருசலேமிலே குடியிருக்கிற பேரேசின் புத்திரரெல்லாம் நானூற்றறுபத்தெட்டுப் பராக்கிரமசாலிகளாயிருந்தார்கள்.

௭ பென்யமீன் புத்திரரில் சல்லு என்றவன். இவன் மெசுல்லாமுக்கும், இவன் யோவேதுக்கும், இவன் பெதாயாவுக்கும், இவன் கொலாயாவுக்கும், இவன் மாசெயாவுக்கும், இவன் இதியேலுக்கும், இவன் எசாயாவுக்குங்குமாரனானவன்.

௮ அவனுக்குப்பிறகு கப்பாயி, சல்லாயி முதலானவர்கள் தொள்ளாயிரத்திருபத்தெட்டுப்பேர்.

௯ அவர்கள் மேல்விசாரிப்புக்காரனான சிக்கிரியின் குமாரன் யோவேலும், பட்டணத்தின்மேல் இரண்டாவதுவிசாரிப்புக்காரனான செனுவாவின் குமாரன் யூதாவுந்தானே.

௰ ஆசாரியர்களில் யோயாரீபின் குமாரன் எதாயா, யாகீன் என்பவர்களும்,

௰௧ அகித்தூவின் குமாரன் மெராயோத்துக்குப்பிறந்த சாதோக்கின் குமாரன் மெசுல்லாம்பெற்ற இல்க்கியாவின் மகன் செராயாவென்ற பராபரனுடைய வீட்டின் தலைவனும்,

௰௨ அவர் வீட்டிலே பணிவிடைபண்ணுகிற அவர்கள் சகோதரராகிய எண்ணூற்றிருபத்திரண்டுபேரும், மல்கியாவின் குமாரன் பஸ்கூருக்குமகனான சகரியாவின் குமாரன் அம்சிக்குப்பிறந்த பெலலியாவின் குமாரன் எரோகாமுக்குப்பிறந்த அதாயாவும்,

௰௩ பிதா வம்சங்களின் தலைவராகிய அவனுடைய சகோதரர் இருநூற்றுநாற்பத்திரண்டுபேரும், இம்மேரின் குமாரன் மெசில்லேமோத்தின் மகனாகிய ஆக்சாய்க்குப்பிறந்த அசரெயேலின் மகன் அமாசாயும்,

௰௪ அவர்களுடைய சகோதரராகிய பராக்கிரமசாலிகள் இருநூற்றிருபத்தெட்டுப்பேருந்தானே. இவர்கள்மேல் அகெதோலிமின் குமாரன் சப்தியேல் விசாரிப்புக்காரனாயிருந்தான்.

௰௫ லேவியரிலே பூனியின் குமாரன் அசபியாவின் மகனாகிய அஸரீக்காமின் குமாரனான அசூபின் மகன் செமாயாவும்,

௰௬ பராபரனுடைய வீட்டின் வெளிவேலையை விசாரிக்கிற லேவியரின் தலைவரில் சபெத்தாயும் யோசபாத்தும்,

௰௭ ஆசாபின் குமாரன் சப்தியின் குமாரனாகிய மீக்காவின் மகன் மத்தனியாவென்பவன் செபத்தில் துதிசெய்யுந்தலை [illegible] தலைவனும் இரண்டாவதான பக்புக்கியாவென்ற அவன் சகோதரரிலொருவனும், எதுத்தூனின் குமாரன் காலாலின் மகனாகிய சமுவாவின் குமாரன் அப்தாவுந்தானே.

௰௮ பரிசுத்தபட்டணத்திலிருந்த லேவியரெல்லாம் இருநூற்றெண்பத்து நாலு பேர்.

௰௯ வாசற்காப்பாளர் அக்கூபும், தல்மோனும், வாசல்களிற் காவற்பண்ணுகிற அவர்களின் சகோதரரும் நூற்றெழுபத்திரண்டு பேராயிருந்தார்கள்.

௨௰ மற்ற இஸ்ரவேலரும் ஆசாரியரும் லேவியரும் யூதாவின் சகல பட்டணங்களிலும் அவரவர் தங்கள் சுதந்தரத்திலிருந்தார்கள்.

௨௧ இஸ்ரவேலைச்சேர்ந்தவர்கள் ஓப்பேலிலேகுடியிருந்தார்கள். அவர்கள்மேல் சீகாவும் கிஸ்பாவும் விசாரிப்புக்காரராயிருந்தார்கள்.

௨௨ எருசலேமிலிருக்கிற லேவியரின் விசாரிப்புக்காரன் மீகாவின் குமாரன் மத்தனியாவின் மகனாகிய அசபியாவுக்குப்பிறந்த பானியின்குமாரன் ஊசி என்கிறவன்; ஆசாபின் குமாரரிலொருவன் தேவாலயத்தின் வேலைக்கெதிராக நிற்கும் பாட்டகராகிய ஆசாபின் குமாரரிலொருவன்.

௨௩ ஏனென்றால் பாட்டகராகிய அவர்களுக்காக அன்றாடகப்படியாகிய ஒருகட்டளை இராசாவினாலே கற்பிக்கப்பட்டிருந்தது.

௨௪ யூதாவின்குமாரனாகிய சேராகின் புத்திரரில் மெசேசாபேயேலின் குமாரன் பெத்தகியா சனத்தின் காரியத்துக்கெல்லாம் இராசாவினால் வைக்கப்பட்டிருந்தான்.

௨௫ தங்கள் நாட்டுப்புறங்களான கிராமங்களிலிருக்கிறவர்களுக்குள்ளே யூதாவின் புத்திரரிலே சிலர் கீரியத் அர்பாவிலும் அதின் கிராமங்களிலும் தீபோனிலும் அதின் கிராமங்களிலும் எகாப்செயேலிலும் அதின் கிராமங்களிலும்,

௨௬ எசுவாவிலும் மோலாதாகிலும் பெத்பேலேதிலும்,

௨௭ ஆத்சார் சூகாவிலும் பெர்சேபாவிலும் அதின் கிராமங்களிலும்,

௨௮ சிக்லாகிலும் மெகோனாகிலும் அதின் கிராமங்களிலும்,

௨௯ என்ரிம்மோனிலும் சாரேயாகிலும் யர்மூத்திலும்,

௩௰ சனோவாகிலும், அதுல்லாமிலும் அதுகளின் கிராமங்களிலும், லாகீசிலும் அதின் நாட்டுப்புறங்களிலும், அசெக்காவிலும் அதின் கிராமங்களிலும், பெர்சேபா துவக்கி இன்னோமின் பள்ளத்தாக்குமட்டுங்குடியிறங்கினார்கள்.

௩௧ கேபாவின் ஊராராயிருந்த பென்யமீன் புத்திரர், மிக்மாஸ், ஆயா பெத்தேல் ஊர்களிலும் அதின் கிராமங்களிலும்,

௩௨ ஆனதோத், நோப், அனனியா,

௩௩ ஆத்சோர், ராமா, கித்தாயீம்,

௩௪ ஆதீத், செபோயீம், நெபலாத்,

௩௫ லோத், ஓனோ என்கிற ஊர்களிலும் சிற்பாசாரிகளின் பள்ளத்தாக்கிலுங்குடியிருந்தார்கள்.

௩௬ லேவியரிலே சிலவகுப்புகள் யூதாவிலும் சில பென்யமீனிலுமிருந்தது.

௰௨. அதிகாரம்.

ஆசாரியர்லேவியருடைய பேர்ப்பட்டி.

செயல்தியேலின்குமாரனாகிய செருபாபேலோடும் எசுவாவோடும் ஏறிவந்த ஆசாரியரும்லேவியரும் ஆனவர்கள், செராயா, எரேமியா, எஸ்றா,

௨ அமரியா, மல்லூக், அத்தூஸ்,

௩ செகனியா, ரேகூம், மெரேமோத்,

௪ இத்தோ, கிநேத்தோயி, அபியா,

௫ மீயாமின், மாதியா, பில்கா,

௬ செமாயா, யோயாரீப், யெதாயா,

௭ சல்லூ, ஆமோக் இல்க்கியா, யெதாயா என்றவர்கள். இவர்கள் எசுவாவின் நாட்களில் ஆசாரியர்களுக்கும் அவர்களின் சகோதரருக்குந் தலைவராயிருந்தார்கள்.

௮ லேவியரானவர்கள், எசுவா, பின்னூயி, கத்மியேல், செரேபியா, யூதா, மத்தனியா என்றவர்கள் இவனும் இவன் சகோதரரும் துதிசெய்யத்தலைவிசாரித்தார்கள்.

௯ பக்புகியாவும் உன்னியும் என்ற அவர்கள் சகோதரர் அவர்களுக்கெதிரே காவற்காத்திருந்தார்கள்.

௰ எசுவா யோயாக்கீமைப்பெற்றான், யோயாக்கீம் எலியாசிபைப்பெற்றான், எலியாசிப் யோய்தாவைப்பெற்றான்.

௰௧ யோய்தா, யோனத்தானைப்பெற்றான் யோனத்தான் யதுவாவைப்பெற்றான்.

௰௨ யோயாக்கீமின் நாட்களிலே பிதாவம்சங்களின் தலையான ஆசாரியர்களானவர்கள், செராயாவின் சந்ததியில் மெராயா, எரேமியாவின் சந்ததியில் அனனியா,

௰௩ எஸ்றாவின் சந்ததியில் மெசுல்லாம், அமரியாவின் சந்ததியில் யோகனான்.

௰௪ மெலிகூவின் சந்ததியில் யோனத்தான், செபனியாவின் சந்ததியில் யோசேப்,

௰௫ ஆரீமின் சந்ததியில் அத்னா. மெராயோதின் சந்ததியில் எல்காயி,

௰௬ இத்தோவின் சந்ததியிலே சகரியா, கிநேத்தோனின் சந்ததியில் மெசுல்லாம்,

௰௭ அபியாவின் சந்ததியிலே சிக்ரி, மின்யாமீன் மொவதியா என்றவர்களின் சந்ததியிலே பில்தாயி,

௰௮ பில்காவின் சந்ததியிலே சமூவா, செமாயாவின் சந்ததியில் யோனத்தான்,

௰௯ யோயாரீபின் சந்ததியிலே மத்தனாயி, யெதாயாவின் சந்ததியில் ஊசி,

௨௰ சல்லாயின் சந்ததியிலே கல்லாயி, ஆமோக்கின் சந்ததியிலே ஏபேர்,

௨௧ இல்கியாவினசநததியிலே அசபீயா எதாயாவின சநததியிலே நததானெயே லென்றவர்கள.

௨௨ எலீயாசிபின நாட்களில யோய்தா, யோச்ஞன, யதுவா என்றலேவியர் பிதா வமிசஙகளின தலைவராக எழுதபபட்டார்கள. பேர்சியனாகிய தரியுவின இராச்சிய பாரமட்டும இருநத ஆசாரியர்களும அபபடியேதானே.

௨௩ லேவிபுததிரராகிய பிதாவமிசஙகளின தலைவர் எலீயாசிபின குமாரனாகிய யோக்னானின நாட்களமட்டும நாளாகமப் புஸதகததிலெழுதபபட்டார்கள.

௨௪ லேவியரின தலைவராகிய அசபீயா வுஞசெரேபியாவுங கத்மீயேலின குமாரன ஏசுவாவும அவர்களுககெதிரேநிற்கிற அவர்கள சகோதரரும பராபரனுடைய மனுஷனாகிய தாவீதினுடைய கற்பனையினபடியே துதிககவுந தோததிரிககவும ஒனறுககொனறு எதிராக முறைமுறையாயிருநதார்கள.

௨௫ மததனியா, பக்புககியா, ஒபதியா, மெசுலலாம, தலமோன, அக்கூபென்றவர்களவாசலகளிலிருககிறபொககஷ அறைகளைககாவற்காககிறவர்களாயிருநதார்கள.

௨௬ யோத்சதாககின குமாரனாகிய ஏசுவாவின குமாரனயோயக்கீமின நாட்களிலும நதுரைாயாகிய நெகேமியாவும வேதபாரகனாகிய எஸராவென்ற ஆசாரியனுமிருககிற நாட்களிலும அவர்களிருநதார்கள.

அலஙகததைப பிறதிஷ்டைபணணினது.

௨௭ எருசலேமின அலஙகததைபபிறதிஷ்டை பணணுகையில தோததிரபபுகழ்சசிகளோடும, கைததாளஙகள தம்புருகள சுரமணடலஙகளின கீதவாததியததோடும பிரதிஷ்டையை மகிழ்சசியோடே செயயும படிககு எலலா இடஙகளிலுமிருககிற லேவியரை எருசலேமுககு வரபபணணததேடினார்கள.

௨௮ அபபடியே பாடடகரின புததிரர் எருசலேமின சுறறுப்புறஙகளான சமபூமியிலும நெததோபாததியரின கிராமஙகளிலும,

௨௯ பேத்கில்காலிலும கேபா அஸமாவேத ஊர்களின நாடடுபபுறஙகளிலுமிருநது வநது கூடினார்கள. அநதெநதப்பாடடகர் எருசலேமைசசுறறிலும தஙகளுககுககிராமஙகளைககடடியிருநதார்கள.

௩௰ ஆசாரியர்களும லேவியருஞசுததம பணணிககொணடு சனததையும படடணவாசலகளையும அலஙகததையுஞ சுததம பணணினார்கள.

௩௧ அபபோது நான யூதாவின பிரபுககளை அலஙகததினமேலேறபபணணி, துதிசெயது நடநதுபோக இரணடுபெரியகூட்டஙகளை நிறுததினேன. அதுகளிலொனறு அலஙகததினமேல வலதுபுறமாககுபபைமேடடுவாசலுககுபபோயிறறு.

௩௨ இவர்கள பிறகாலே ஒசாயாவும யூதாவினபிரபுககளிற்பாதிபபேரும,

௩௩ அசரியா, எஸறா, மெசுலலாம,

௩௪ யூதா, பென்யமீன, செமாயா, எரேமியாவென்றவர்களும,

௩௫ பூரிகைகளைபபிடிககிற ஆசாரியரின புததிரரில ஆசாபபினகுமாரன சக்கூரின மகனாகிய மிகாயாவுககுகுமாரனான மத்தனியாவின மகன செமாயாவுககுபபிறநதயோனததானின குமாரன சகரியாவும,

௩௬ பராபரனுடைய மனுஷனாகிய தாவீதின கீதவாததியஙகளைவாசிககிற அவனசகோதரரானசெமாயா, அசாரேயேல, மிலாலாயி, கிலாலாயி, மாயாயி, நெதனெயேல, யூதா, அனானியென்றவர்களும போனார்கள. வேதபாரகனாகிய எஸறாவவர்களுககுமுனனாக நடநதான.

௩௭ அஙகேயிருநது அவர்கள தஙகளுககெதிரான நீருறறுவாசலுககு வநதபோது அலஙகததிலுயரமான தாவீதுபட்டணததின படிகளாலேறித தாவீதுவீட்டினமேலாகக் கிழககேயிருககிற தணணீர்வாசலமட்டுககுமபோனார்கள.

௩௮ துதிசெயகிற இரணடாஙகூட்டம எதிரேயிருககிற வழியாய நடநதுபோயிறறு. அதினபிறகாலே நானவநதேன. சனததின இநதபபாதிபபேர் அலஙகததினமேற்சூளைகளின கொமமையைககடநது அகலமதிலமட்டுமநெடுகபபோய,

௩௯ எபபிறயீமவாசலையும பழையவாசலையும மீனவாசலையும அனானெயேலின கொமமையையும மேயாவென்றகொமமையையுங கடநது ஆட்டுவாசலமட்டும போய்க் காவல வீட்டுவாசலிலே நினறார்கள.

௪௰ அதறகுபபிறபாடு துதிசெயகிற இரணடுகூட்டஙகளும பராபரனுடைய வீட்டுககுவநதுநினறது. நானும என்னோடேகூடவிருககிற தலைவரிற்பாதிபபேரும,

௪௧ பூரிகைகளைபபிடிககிற எலியாகீமே, மாசேயா, மினயாமீன, மிகாயா, எலியோனாயி, சகரியா, அனானியாவென்ற ஆசாரியர்களும,

௪௨ மாசெயா, செமாயா, எலெயாசார், ஊசி, யோகனான, மல்ககியா, ஏலாம, ஏசேர் என்றவர்களுநதானே. பாடடகரும அவர்களவிசாரிபபுககாரனாகிய இஸ்ரகியாவுஞசததமாயபபாடினார்கள.

௪௩ அநநாளிலே பெரிய பலிகளைசசெலுததி, பராபரன தஙகளுககு மகாசநதோஷததையுணடாககினபடியால மகிழ்சசியாயிருநதார்கள. ஸதிரீகளும பிளளைகளுஙகூடக களிகூர்நதார்கள. எருசலேமின மகிழ்சசிதூரததிலேகேட்கபபட்டது.

௪௪ அன்றைத்தினம் பொக்கிஷங்களுக்கும் படைப்புகளுக்கும் முதற்கனிகளுக்கும் பத்திலொன்றுகளுக்கும் வைக்கும் அறைகளின்மேலே சில மனுஷர் ஆசாரியர்களுக்கும் லேவியர்களுக்கும் நியாயப்பிரமாணத்தின்படியே வரவேண்டியபட்டணங்களுடைய நிலங்களின்பங்குகளை அதுகளிற் சேர்க்கும்படிக்கு விசாரிப்புக்காரராக வைக்கப்பட்டார்கள். ஏனென்றால் ஊழியஞ்செய்து நிற்கிற ஆசாரியர்கள்பேரிலும் லேவியர்பேரிலும் யூதமனிதர் சந்தோஷமாயிருந்தார்கள்.

௪௫ ஏனெனில் அவர்கள் தங்கள் பராபரனுடைய காவலையுஞ் சுத்தம்பண்ணுதலின் காவலையுங் காத்தார்கள். பாட்டகரும் வாசற்காப்பாருந் தாவீதும் அவன்குமாரனாகிய சாலோமோனுங் கற்பித்தபடியே நின்றார்கள்.

௪௬ ஏனென்றால் தாவீதும் ஆசாப்பும் இருந்த பூர்வநாட்களிற் பாட்டகரின் தலைவர் வைக்கப்பட்டுப் பராபரனுக்குத் துதிப்புத்தோத்திரங்களுஞ் செலுத்துகிறதென்ற திட்டம்பண்ணப்பட்டிருந்தது.

௪௭ ஆகையாற் செருபாபெலின் நாட்களிலும் நெகேமியாவின் நாட்களிலும் இஸ்ரவேலெல்லாம் பாட்டகருக்கும் வாசற்காப்பாருக்கும் அன்றாடகத்திட்டமாகிய பங்குகளைக்கொடுத்து லேவியருக்கென்று பரிசுத்தம்பண்ணினார்கள். லேவியரோவெனில் ஆரோனின்புத்திரருக்கென்று அவற்றைப்பரிசுத்தம்பண்ணிக்கொடுத்தார்கள்.

௰௩. அதிகாரம்.

ஆகாத சிலகாரியங்கள் தள்ளப்பட்டது.

௧ அந்நாளிற் சனங்கேட்க மோசேயின் புஸ்தகத்தில் வாசிக்கப்படுகிறபோது அதிலே அம்மோனியரும் மோவாபியரும் இஸ்ரவேல்புத்திரருக்கு அப்பமுந் தண்ணீருங் கொடுக்க எதிர்கொண்டுவராமல் அவர்களைச் சபிக்க அவர்களுக்கு விரோதமாகப் பிலேயாமைக் கூலிக்குப் பொருந்திக்கொண்டபடியினாலே,

௨ அவர்கள் என்றைக்கும் அந்தச்சாபத்தை ஆசீர்வாதமாகத் திருப்பின எங்கள் பராபரனுடைய சபைக்குட்படவேண்டாமென்றெழுதியிருக்கிறது கண்டுபிடிக்கப்பட்டது.

௩ ஆகையால் அவர்கள் அந்த நியாயப்பிரமாணத்தைக்கேட்டபிற்பாடு கலந்துகொண்ட சனத்தையெல்லாம் இஸ்ரவேலிலிருந்து பிரித்துப்போட்டார்கள்.

௪ இதற்குமுன்னே எங்கள் பராபரனுடையவீட்டின் அறைகளை விசாரிக்கவைக்கப்பட்ட ஆசாரியனாகிய எலியாசிப் தொபியாவோடே சம்பந்தங்கலந்தவனாயிருந்து,

௫ முற்காணிக்கைகளுங் குந்தலக்கமுந் தட்டுமுட்டுகளும் லேவியருக்கும் பாட்டகருக்கும் வாசற்காப்பாருக்குங் கட்டளைபண்ணப்பட்ட தானியந் திவிராட்சப்பழரசம் எண்ணெய் என்றதுகளிலே பத்திலொன்றும் ஆசாரியரைச்சேருகிற படைப்பான காணிக்கைகளும் வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஒருபெரிய அறையை அவனுக்கு உண்டுபண்ணியிருந்தான்.

௬ ஆனால் இப்படியெல்லாம் நடக்கக்கொள்ள நான் எருசலேமிலிருந்ததில்லை. ஏனெனிற் பாபேலின் இராசாவாகிய அர்த்தசஷ்டாவின் முப்பத்திரண்டாம்வருஷத்திலே நான் இராசாவண்டைக்குப்போய்ச் சிலநாளுக்குப்பிற்பாடு திரும்ப இராசாவினிடத்தில் உத்தாரம்வாங்கி,

௭ எருசலேமுக்குவந்தேன். அப்போது எலியாசிப் தொபியாவுக்குப் பராபரனுடையவீட்டுப்பிரகாரங்களில் ஒரு அறையை உண்டுபண்ணினதினாலே செய்த பொல்லாப்பை அறிந்துகொண்டேன்.

௮ அதினால் நான் மிகவும் மனமடிவாகித் தொபியாவின் வீட்டுத் தட்டுமுட்டுகளையெல்லாம் அந்த அறையிலிருந்து வெளியே எறிந்துபோட்டேன்.

௯ பிறகு நான் அறைவீடுகளைச் சுத்திகரிக்கச்சொல்லிப் பராபரனுடைய வீட்டுத் தட்டுமுட்டுகளையுங் காணிக்கைகளையுங் குந்திரிக்கத்தையும் அங்கே திரும்பவைப்பித்தேன்.

௰ பின்னையும் லேவியருக்கு அவர்கள் பங்குகள் கொடுக்கப்பட்டதில்லையென்கிறதையும் பணிவிடைசெய்கிற லேவியரும் பாட்டகரும் அவரவர் தங்கள் நாட்டுக்கோடிப்போனார்களென்கிறதையும் நான் அறிந்தேன்.

௰௧ அப்போது நான் தலைமையானபேர்களோடே வழக்காடிப் பராபரனுடையவீடு கைவிடப்பட்டுப் போவானேனென்று சொல்லி, அவர்களைச் சேர்த்து அவர்களுடைய ஸ்தலத்திலே அவர்களை வைத்தேன்.

௰௨ அப்போது யூதரெல்லாருந் தானியந் திவிராட்சப்பழரசம் எண்ணெய் என்றதுகளிற் பத்திலொருபங்கைப் பொக்கிஷ அறைகளிற்கொண்டுவந்தார்கள்.

௰௩ அப்போது நான் ஆசாரியனாகிய செலேமியாவையும் லேவியரில் வேதபாரகனாகிய சாதோக்கையும் பெதாயாவையும் இவர்களுக்குக் கைத்துணையாக மத்தனியாவின்குமாரனான சக்கூரின் மகனாகிய ஆனானையும் பொக்கிஷ அறைகளின்மேல் விசாரிப்புக்காரராக வைத்தேன். ஏனெனில் அவர்கள் உண்மையுள்ளவர்களென்றெண்ணப்பட்டார்கள். ஆகையால் தங்கள் சகோதரருக்

குப்பமிடுகிறதொழில அவர்களுககொப புவிககபபட்டது.

௰௪ எனபராபரனே, இதற்காகததேவரீர் எனனை நினைதது நானஎனபராபரனுடையவீட்டுககும அதினகாவலகளுககுமாகசசெயத எனனுடைய உபகாரங்களைக குலைககாதிரும.

௰௫ அநதநாட்களில நான யூதாவிலே ஓய்வுநாளில ஆலைகளை மிதிககிற சிலரையுங கழுதைகளமேலேறறின தானியபபொதிகளைககொணடுவருகிறசிலரையும ஓய்வுநாளிலே எருசலேமுககுக கொணடுவரபபடுகிற திராட்சபபழரசந திராட்சபபழங்கள அததிபபழங்கள முதலானதுகளின பலபலசுமைகளையுங கணடு அவர்கள தின்பணடங்களை விறகிறநாளிலே திடசசாட்சியாய அவர்களைக கடிநதுகொணடேன.

௰௬ மீனகளையுஞசகலவிதசசரககையுங கொணடுவநது ஓய்வுநாளிலே யூதபுததிரருககும எருசலேமிலும விறகிற சிலதீரியரும உள்ளேகுடியிருநதார்கள.

௰௭ ஆகையால நான யூதாவின பெரியவர்களோடே வழககாடி நீங்கள ஓய்வுநாளைப பரிசுததககுலைசசலாககுகிற இநதப பொலலாத செயகையெனன.

௰௮ உங்கள பிதாககள இபபடிச செய்ததினால எங்கள பராபரன எங்களமேலும இநதப பட்டணததினமேலும இநதததீஙகையெலலாம வரப்பணணினாரிலலையோ. நீங்களோவெனறால ஓய்வுநாளைப பரிசுததககுலைசசலாககுகிறதினால இஸரவேலினமேலிருககிற உககிரததைவர்த்திககபபணணுகிறீர்களென்று அவர்களுககுச சொனனேன.

௰௯ ஆகையால ஓய்வுநாளுககுமுனனே எருசலேமினபட்டணவாசலகளுககு நிழலபடுகிறபோது நான கதவுகளைப பூட்டவும ஓய்வுநாள கழியுமமட்டும அதுகளைத திறவாதிருககவுமவேணுமெனறு சொலலி ஓய்வுநாளிலே ஒரு சுமையும உள்ளே வராதபடிககு வாசலகளணடையிலே என வேலைககாரரிலே சிலரை நிறுததினேன.

௨௰ அபபோது வர்த்தகருஞசகலவிதசரககுவிறகிறவர்களும இரணடொருதரம எருசலேமுககுப புறமபே இராததங்கினார்கள.

௨௧ அபபோது நான அவர்களைத திடசசாட்சியாயக கடிநதுகொணடு நீங்கள அலங்கததணடையிலே இராததங்குகிறதெனன. நீங்களினனமொருதரம அபபடிச செயதால உங்களமேலே கைககளைபபோடுவேனென்று அவர்களோடே சொனனேன. அநதககாலநதுவககி அவர்கள ஓய்வுநாளில வராதிருநதார்கள.

௨௨ ஓய்வுநாளைப பரிசுததமாககுமபடிககு உங்களைச சுததமபணணிககொணடு வாசலகளைககாக்க வாருங்களென்று லேவியருககுச சொனனேன. என பராபரனே, இதையுந தேவரீர் எனககு நன்மையாக நினைதது உமமுடைய மிகுநத கிருபையினிமித்தமாய எனககிரங்கும.

௨௩ அஸதோத், அமமோன, மோவாபசாதிகளான ஸதிரிகளைச சேர்ததுககொணட சிலயூதரையும அநதநாட்களிற்கணடேன.

௨௪ அவர்களபிளளைகள, பாதி அஸதோத்பாஷையைபபேசினார்கள. இவர்கள அந்தந்தசசனசாதியினபாஷையைததவிர யூதபாஷையைபபேச அறியாதிருநதார்கள.

௨௫ அவர்களோடே நான வழககாடி அவர்களைச சபிதது அவர்களில சிலமனுஷரை அடிதது மயிரைபபியதது நீங்கள உங்களகுமாரத்திகளை அவர்களகுமாரருககுககொடாமலும அவர்கள குமாரத்திகளில ஒருவரையும உங்கள குமாரருககாகிலும உங்களுககெனகிலுங கொளளாமலும இருககவேணுமென்று அவர்களைபபாராசிறபேரிலே ஆணையிடபபணணி நானசொனனதாவது,

௨௬ இஸரவேலின இராசாவாகிய சாலோமோன இதினாலே பாவஞசெயதானல்லவோ. அவனைபபோலொதத இராசா அநேகஞசாதிகளுககுளளேயுமபிறநததிலலை. தன பராபரனாலே சிநேகிககபபட்டவனுமிருநதான. பராபரன அவனை இஸரவேலினமேலும இராசாவாக வைததார். அபபடிககொததவனையுமமறுசாதியான ஸதிரிகள பாவஞசெயபபணணினார்களே.

௨௭ நீங்கள மறுசாதியான ஸதிரிகளைச சேர்ததுககொளளுகிறதினால நமமுடைய பராபரனுககுத துரோகிகளாயபபோய இநதபபெரிய பொலலாபபையெலலாஞ செயயுமபடிககு உங்களுககுச செவிகொடுபபோமோவெனறேன.

௨௮ யோய்தாவின புததிரரிலேயிராசான ஆசாரியனாகிய எலியாசிபின குமாரரில ஒருவன ஒரோனியனான சனபலலாததுககுமருமகனுமானான. ஆகையால அவனையென னிடததினின்று துரததினேன.

௨௯ எனபராபரனே, அவர்கள ஆசாரிய ஊழியததையும ஆசாரியவூழியததுககும லேவியருககுமிருககிற உடமபடிக்கையையுந தீட்டுபபடுததினார்களென்று அவர்களை நினையும.

௩௰ இபபடியே நான மறுசாதியாரையெலலாம நீககி அவர்களைச சுததிகரிதது ஆசாரியர்களையும லேவியரையும அவரவர்களவேலையின முறைகளிலே நிறுததினேன.

௩௧ குறிககபபட்ட காலங்களிலே செலுததபபடவேணடிய விறகுகளின காணிக்கையையும முதற்பலனையுந திட்டமபணணினேன. எனபராபரனே, என்னை நன்மையாக நினைதருளுமென்று.

முற்றிற்றுமுற்றும்.

எஸ்தரென்றவளுடைய சரித்திரம்.

க. அதிகாரம்.

அகாஸ்வேரு இராசா தன் பெண்சாதியாகிய வஸ்தியைத் தள்ளிவிட்டது.

இந்துதேசந் துவக்கி எத்தியோப்பியதேசமட்டுமிருக்கிற நூற்றிருபத்தேழு சீமைகளை அரசாண்ட அகாஸ்வேருவின் நாட்களிலே சம்பவித்ததாவது,

உ இராசாவாகிய அகாஸ்வேரு சூசான் கோட்டையிலிருக்கிற தன்னுடைய இராச்சிய பாரத்தின் ஆசனத்தின் மேலுக்கிருந்த அந்நாட்களுக்குப் பிற்பாடு,

௩ அவன் தன் இராச்சிய பாரத்தின் மூன்றாம் வருஷத்திலே தன்னுடைய எல்லாப் பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் விருந்து பண்ணினான். பெர்சியா மேதியா தேசங்களின் பலசாலிகளும் சீமைகளின் துரைகளும் பிரபுக்களும் அப்போது அவனுக்கு முன்பாக இருந்தார்கள்.

௪ அவன் தன் இராச்சிய பாரத்தின் மகிமையின் ஐசுவரியத்தையும் தன்னுடைய மகத்துவத்தின் சிங்காரமான முக்கியத்தையும் காண்பிக்கும்படிக்கு அநேக நாளாகிற நூற்றெண்பது நாளாக விருந்து கொடுத்தான்.

௫ அந்த நாட்கள் முடிந்தபோது இராசா சூசான் கோட்டையிலே அகப்பட்ட பெரியோர் துவக்கிச் சிறியோர் மட்டுமாகிய எல்லாச் சனத்துக்கும் இராசா அரமனையின் பூந்தோட்டத்தின் முற்றத்திலே ஏழு நாள் விருந்து செய்வித்தான்.

௬ அங்கே வெண்கலலான தூண்களின் மேல் இணைப்பான வெள்ளி வளையங்களிலே மெல்லிய நூல் சிவப்பு நூலுமான கயிறுகளால் வெள்ளையும் பச்சையும் இளநீலமுமாகிற திரைச்சீலைகள் கட்டித் தொங்கியிருந்தது. சிவப்பும் வெள்ளையுங் கறுப்புமான கல்லுகள் பதித்திருக்கிற தளவரிசையின் பேரிலே பொற்சரிகையும் வெள்ளிச் சரிகையுமான மெத்தைகள் வைக்கப்பட்டது.

௭ பொற்பாத்திரங்களாகிய வெவ்வேறே விதமான பாத்திரங்களிலே பானங் கொடுக்கப்பட்டது. மேன்தரமான திவ்விய திராட்சப்பழ இரசம் இராசாவுடைய ஆஸ்திக்குத் தக்கதாய்ப் பரிபூரணமாயிருந்தது.

௮ ஒருவனையும் பலவந்தம் பண்ணவேண்டாமென்ற கட்டளையின்படி குடிக்கப்பட்டது. ஏனெனில் அவரவருடைய மனதின்படியே செய்யவேணுமென்றதாக இராசா தன் அரமனையின் பெரிய மனுஷருக்குச் சொல்லாக்கினைப்பித்திருந்தான்.

௯ இராசாத்தியாகிய வஸ்தியும் இராசாவாகிய அகாஸ்வேருவின் அரமனையிலே ஸ்திரிகளுக்கு ஒரு விருந்து செய்வித்தாள்.

௰ ஏழாம் நாளிலே இராசா திவ்விய திராட்சப்பழ இரசத்தினால் மனமகிழ்ச்சியாயிருக்கிறபோது சனசனங்களுக்கும் பிரபுக்களுக்கும் இராசாத்தியாகிய வஸ்தியின் சவுந்தரியத்தைக் காண்பிக்கும்படிக்கு அவளை இராசகிரீடந் தரிக்கப்பட்டவளாக இராசாவுக்கு முன்பாக அழைத்துவரவேணுமென்று,

௰௧ இராசாவாகிய அகாஸ்வேரு தனக்கு முன்பாகச் சேவிக்கிற மெகுமான், பிஸ்தா, அற்போனா, பிக்தா, அபக்தா, சேத்தார், கர்க்காசென்ற ஏழு பிரதானிகளுக்குக் கட்டளையிட்டான். ஏனென்றால் அவள் ரூபவதியாயிருந்தாள்.

௰௨ ஆனால் இராசா பிரதானிகளைக் கொண்டு சொல்லியனுப்பின வார்த்தைக்கு இராசாத்தியாகிய வஸ்தி வரமாட்டேனென்றாள். அப்போது இராசா கடுங்கோபமடைந்து தனக்குள்ளே மூறக்கமுண்டவனாக,

௰௩ இராசாத்தியாகிய வஸ்தி இராசாவாகிய அகாஸ்வேரு பிரதானிகளைக் கொண்டு சொல்லியனுப்பின வார்த்தையின்படியே செய்யாதே போனதினிமித்தம் அவளுக்கு நியாயப்பிரமாணத்தின்படி செய்யவேண்டியதென்னவென்று,

௰௪ காலாகாலங்களையறிந்த ஞானிகளை இராசா கேட்டான். ஏனெனில் இந்தப்பிரகாரமாக இராசாவின் காரியங்கள் நியாயப்பிரமாணத்தையும் நீதியையும் அறிந்த எல்லாருக்கும் முன்பாக வைக்கப்படும்.

௰௫ அப்போது கற்ஷேனா, சேத்தார், அத்மாத்தா, தர்ஷீஸ், மேரேஸ், மர்சேனா, மெமுகான் என்கிற இராசாவின் சமுகத்தைப் பார்க்கிறவர்களும் இராச்சியத்தின் முதல் ஆசனங்களிலே உட்கார்ந்திருக்கிறவர்களுமான பெர்சியர் மேதியருடைய ஏழு பிரபுக்கள் அவனைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள்.

௰௬ அப்போது மெமுகான் இராசாவுக்கும் பிரபுக்களுக்கும் முன்பாகச் சொன்னதாவது, இராசாத்தியாகிய வஸ்தி இராசாவுக்குமாத்திரமல்ல, இராசாவாகிய அகாஸ்வேருவினுடைய சகல சீமைகளிலுமுள்ள எல்லாப் பிரபுக்களுக்கும் எல்லாச் சனசனங்களுக்கும் ஏறாத அநீதியைச் செய்தாள்.

௰௭ ஏனென்றால் இராசாவாகிய அகாஸ்வேரு இராசாத்தியாகிய வஸ்தியைத் தமக்கு முன்பாக அழைத்துவரச் சொன்னபோது அவள் வரமாட்டேனென்றாளென்கிற இராசாத்தியின் செய்தி எல்லா ஸ்திரிகளுக்

ளும பிரசித்தமாவதினால இவர்கள தஙகள புருஷாததஙகள பார்வைககுககொஞச எணணிகையாய எணணுவார்கள.

௰௮ இனறைககுததானே பெர்சியாமேதியாவினுடைய பிரபுககளின ஸதிரிகள இராசாததியினசெயதியைககேட்குமபோது இராசாவினபிரபுககளுககெலலாம அபபடிததானசொலலுவார்கள. மிகுநத அசடடையுஙகட்டையும எழுமபும.

௰௯ இராசாவுககுச சமமதியாயிருநதால ஸதி இனி இராசாவாகிய அகாஸவேருவுககு முனபாக வர வேணடாமெனறும இராசா அவளுடைய இராசமேனமையை அவளைபபார்கக நலலவளான அவளுடைய கூடடாளிககுககொடுபபாராக வெனறும அவரால ஒரு இராசகடடளைபிறநது அது மீறபபடாதபடிககு பெர்சியர் நியாயபபிரமாணததிலும மேதியர் நியாயபபிரமாணததிலும எழுதபபடககடவது.

௨௰ இபபடி இராசா தீர்ததகாரியம விஸதாரமாயிருககிற அவருடைய இராசசியமெஙகுங கேட்கபபடுமபோது பெரியோர்துவககிசசிறியோர்மடடுமுளள எலலா ஸதிரிகளுந தஙகள புருஷாககனமபணணுவார்களெனறான.

௨௧ இநத வார்ததை இராசாவுககும பிரபுககளுககும நனறாயககணடு இராசா மெமுகானுடைய வார்ததையினபடியே செயது,

௨௨ எநத புருஷனுந தன வீடடிலே அதிகாரஞசெயகிறவனுந தன சனசாதி பாஷையைபபேசிககொணடிருககவுந தகுமெனறு, இராசாவின சீமைகளுககெலலாஞ சீமை சீமையினுடைய எழுததிலுஞ சாதிசாதியின பாஷையிலும எழுதியிருககிற நிருபஙகளையனுபபினான.

௨. அதிகாரம்.

ஏஸதர் இராசாததியானது.

இதுகள சமபவிததுததீர்நது, இராசாவாகிய அகாஸவேருவின உககிரநதணிநதபிறபாடு அவன வஸதியையும அவள செயததையும அவளபேரில தீர்மானிககபபடடதையும நினைததான.

௨ அபபோது இராசாவைசசேவிககிற அவனுடைய வேலைககாரர் சொனனதாவது, ரூபவதிகளாயிருககிற கனனிபபெண்கள இராசாவுககாகததேடபபடககடவார்கள.

௩ அதற்காக இராசாதமமுடையஇராசசியததின சீமைகளிலெல்லாம விசாரிபபுககாரரைவைபபாராக. இவர்கள ரூபவதிகளாயிருககிற சகல கனனிபபெண்களையுங கூடடிசசூசான் கோடடையிலிருககிற ஸதிரிகளினமடததுககழைததுவநது ஸதிரிகளைககாவற்பண்ணுகிற இராசாவின பிரதானியாகிய ஏகேயினவசததிலே ஒபபுவிபபார்களாக. இவர்களுககு இவர்கள சோதிபபுகொடுககபபடககடவது.

௪ அபபோது இராசாவின கணகளுககுச சமமதமான குமரி வஸதிககுப பதிலாக இராசாததியாவாளாகவெனறார்கள. இநத வார்ததை இராசாவுககு நனறாயககணடு அபபடிச்தானசெயதான.

௫ அபபோது சூசான கோடடையிலே பெனியமீனியனும கீசின குமாரன சீமேயின குமாரனும யாயீரின குமாரனுமாகிய மொர்தேகாயி எனறபேருளள ஒரு யூதமனுஷ னிருநதான.

௬ இவன பாபேலின இராசாவாகிய நெபுகாதநேத்சார் யூதாவின இராசாவாகிய எகோனியாவைப பிடிததுப போன போது அவனோடேகூட எருசலேமிலிருநது பிடிததுககொணடுபோகபபடடவர்களில ஒருவனாயிருநதான.

௭ இவன தன சிறியதகபபனகுமாரததியாகிய ஏஸதரெனற அத்சாளை வளர்ததுவநதானாயிருநததான. ஏனெனில தாய்தகபபனில லாதவளாயிருநதாள. அவள சவுநதரியமுள்ளவளாயும ரூபவதியுமான பெணபிளளையாயிருநதாள. அவள் தகபபனும அவள தாயும மரணம அடைநதபோது மொர்தேகாயி அவளைத தன குமாரததியாக ஏறறுககொணடான.

௮ சமபவித்ததேதெனில இராசாவின தீர்மானமும கடடளையும அவனுடைய பெணபிளளைகள பிரசிததமாகி அநேகம பெணபிளளைகள கூடடபபடடுசசூசான்கோடடையிலுள்ள ஏகேயினவசததிலொபபுவிககபபடுகையில எஸதரும இராசாவினவீடடுககு அழைததுபபோகபபடடு ஸதிரிகளைககாவற்பண்ணுகிற ஏகேயின வசததிலொபபுவிககபபடடாள.

௯ அநதபபெண்பிளளை அவன பார்வைககு நனறாயிருநததினால அவனுககு அவன கணகளில தயவுகிடைத்தது. ஆகையால அவளுடைய சோதிபபுகளையும அவளுககுக கொடுககவேணடியதுகளையும அவளுககு ராசாவின வீடடிலிருககிற ஏழுபெணகளையும அவளுககுககொடுககவுந தீவிரிததான. அவளையும அவள வேலைககாரிகளையும ஸதிரிகளினமடததில நலலதாகிய வேறே ஸதலததிலே வைததான.

௰ ஏஸதரோவெனறால தனசனததையுந தனபூருவோததிரததையும அறிவிககாதிருநதாள. ஏனெனில அதை அறிவிககவேணடாமெனறு மொர்தேகாயி அவளுககுக கற்பிததிருநதான.

௰௧ ஆனால ஏஸதருடையசுகசெபதியையும அவளுககு எனனநடககுமெனபதையும அறியமொர்தேகாயி நாடோறும

லே ஸ்திரீகளுடைய மடத்து முற்றத்துக்கு முன்பாக உலாத்துவான்.

௰௨ ஒவ்வொரு பெண்பிள்ளை ஆறுமாதம் வெள்ளைப்போளத் தயிலத்தினாலும் ஆறுமாதம் சுகந்தவர்க்கங்களாலும் ஸ்திரீகளின் ஆபரணங்களினாலும் சோடிக்கப்படுகிற நாட்கள் நிறைவேறி இப்படியே பன்னிரண்டுமாதமாக ஸ்திரீகளுடைய திட்டத்தின்படியே செய்யப்பட்டுத் தீர்ந்தபிறபாடு இராசாவாகிய அகாஸ்வேரு அண்டைக்குப் பிரவேசிக்க அவள் அவளுடைய முறை வருகிறபோது,

௰௩ இப்படிச் சோடிக்கப்பட்ட பெண்பிள்ளை இராசாவண்டைக்குப் பிரவேசிப்பாள். ஸ்திரீகளின் மடத்திலிருந்து தன்னோடேகூட இராசாவின் வீட்டுமட்டும் போக அவள் கேட்பதெல்லாம் அவளுக்குக் கொடுக்கப்படும்.

௰௪ சாயங்காலத்திலே அவள் உட்பிரவேசித்துக் காலமே வைப்பாட்டிகளைக் காக்கிற இராசாவின் பிரதானியாகிய சாஸ்காசுடைய விசாரிப்பின்கீழிருக்கிற ஸ்திரீகளின் இரண்டாம் மடத்துக்குத் திரும்பி இராசா தன்னை விரும்பிப் பேர்சொல்லி அழைப்பித்தாலொழிய இனி இராசாவண்டைக்குப் பிரவேசிக்காதிருப்பாள்.

௰௫ மொர்த்தெகாயி தன்குமாரத்தியாய் ஏற்றுக்கொண்ட அவன் சிறியதகப்பனாகிய அபிகாயிலின் குமாரத்தியான எஸ்தரின் முறை இராசாவண்டைக்குப் பிரவேசிக்கிறதற்கு வந்தபோது அவள் ஸ்திரீகளைக் காக்கிற இராசாவின் பிரதானியாகிய ஏகாயி சொன்னகாரியமேயல்லாமல் ஒன்றுங்கேட்டதில்லை. எஸ்தருக்கோவென்றால் தன்னைக் காண்கிற எல்லார் கண்களிலுந் தயவுகிடைத்தது.

௰௬ அப்படியே எஸ்தர் இராசாவாகிய அகாஸ்வேரு அரசாளுகிற ஏழாம்வருஷத்தில் தேபேத்மாதமாகிய பத்தாம்மாதத்திலே அவனண்டைக்கு அவனுடைய இராச அரமனையில் அழைத்துப்போகப்பட்டாள்.

௰௭ இராசா சகல ஸ்திரீகளைப்பார்க்க எஸ்தர்பேரிலே அன்புவைத்தான். சகல கன்னியாஸ்திரீகளைப்பார்க்க அவளுக்கு அவனுக்கு முன்பாகக் கிருபையுந் தயவுங்கிடைத்தது. ஆகையால் அவன் இராசகிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தலத்திலே இராசாத்தியாக்கினான்.

௰௮ அப்பொழுது இராசா தன்னுடைய எல்லாப்பிரபுக்களுக்கும் ஊழியக்காரருக்கும் எஸ்தருக்காகச் செய்கிற ஒரு பெரிய விருந்து செய்வித்துச் சீமைகளுக்குச் சலக்கரணையுண்டாக்கி இராசா ஆஸ்திக்குத்தக்க அதியாக்கைகொடுத்தான்.

இராசாவைக் கொல்ல ஒப்பந்தம்பண்ணினவர்களின் செய்தியை மொர்த்தெகாயி அறிவித்தது.

௰௯ இரண்டாம்விசை கன்னியாஸ்திரீகள் சேர்க்கப்படுகிறபோது மொர்த்தெகாயி இராசாவின் அரமனைவாசலிலுட்கார்ந்திருந்தான்.

௨௰ எஸ்தர் மொர்த்தெகாயி தனக்குக் கற்பித்திருந்தபடி தன் பூருவோத்திரத்தையுந் தன் சனசாதியையும் அறிவிக்காதிருந்தாள். ஏனெனில் எஸ்தர் மொர்த்தெகாயினிடத்திலே வளர்ந்தகாலத்திலே செய்ததுபோலே இன்னம் அவன் சொற்படி செய்தாள்.

௨௧ அந்த நாட்களில் மொர்த்தெகாயி இராசாவின் அரமனைவாசலிலுட்கார்ந்திருக்கிறபோது வாசற்காக்கிற இராசாவின் இரண்டு பிரதானிகளாகிய பிக்தானுந் தேரேசுங் கடுங்கோபமடைந்து இராசாவாகிய அகாஸ்வேருவின்மேலே கைபோடவகைதேடினார்கள்.

௨௨ இந்தக்காரியம் மொர்த்தெகாயிக்கறியப்பட்டபடியினாலே அவன் அதை இராசாத்தியாகிய எஸ்தருக்கறிவித்தான். எஸ்தர் மொர்த்தெகாயின் நாமத்தில் இராசாவுக்குச் சொன்னாள்.

௨௩ இந்தக்காரியம் விசாரிக்கப்படுகிறபோது அது மெய்யென்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆகையால் அவர்கள் இருவரும் மரத்திலே தூக்கிப்போடப்பட்டார்கள். இது இராசாவுக்கு முன்பாக நாளாகமப் புஸ்தகத்திலெழுதப்பட்டது.

௩. அதிகாரம்.

ஆமான் மொர்த்தெகாயின்மேல் வைத்த குரோதத்தினாலே யூதரையெல்லாஞ் சங்கரிப்பிக்க எத்தனம்பண்ணினது.

இந்த நடபடிகளுக்குப்பிற்பாடு இராசாவாகிய அகாஸ்வேரு அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமானென்ற ஆகாகியனைப் பெரியவனாக்கி அவனையுயர்த்தி அவனுடைய ஆசனத்தைத் தன்னிடத்திலிருக்கிற சகல பிரபுக்களுக்கும் உயரவைத்தான்.

௨ ஆகையால் இராசாவின் அரமனைவாசலிலிருக்கிற இராசாவின் ஊழியக்காரரெல்லாம் ஆமானுக்குக் குனிந்துபணிந்துகொண்டார்கள். ஏனெனில் இராசா இப்படிச் செய்ய அவனுக்காகக் கற்பித்தான். ஆனால் மொர்த்தெகாயி குனிந்ததுமில்லை பணிந்ததுமில்லை.

௩ அப்பொழுது இராசாவின் அரமனைவாசலிலிருக்கிற இராசாவின் ஊழியக்காரர் மொர்த்தெகாயுடனே, நீர் இராசாவின் கற்பனையை மீறுவானேனென்றார்கள்.

௪ இப்படி அவர்கள் நாளுக்குநாள் அவனுடனே சொல்லியும் அவன் தங்களுக்குச் செவிகொடாதபோதோவெனில் அவர்கள் மொர்தெகாயின்சொற்கள் நிலைநிற்குமோவென்று பார்க்கிறதற்கு அதை ஆமானுக்கறிவித்தார்கள். ஏனெனில் தான் யூதனென்று அவன் அவர்களுக்கறிவித்திருந்தான்.

௫ மொர்தெகாய் தன்னைக்குனிந்து பணிந்துகொள்ளாததை ஆமான் கண்டபோது ஆமான் உக்கிரத்தால் நிறைந்தவனானான்.

௬ ஆனால் மொர்தெகாயின்மேல்மாத்திரங் கைபோட அவனுக்குக் கொஞ்சக்காரியமாகக் கண்டது ஏனென்றால் மொர்தெகாயின் சனமெதென்று அவனுக்கறிவித்திருந்தார்கள் ஆகையால் அகாஸ்வேருவின் இராச்சியமெங்குமிருக்கிற மொர்தெகாயின் சனமாகிய யூதரையெல்லாஞ் சங்கரிக்க ஆமான் வகைதேடினான்.

௭ இராசாவாகிய அகாஸ்வேருவின் பன்னிரண்டாம் வருஷம் நீசான் மாதமாகிய முதலாம்மாதத்திலே ஆமானுக்குமுன்பாக பூரென்னப்பட்ட சீட்டு நாளுக்குநாளும் மாதத்துக்கு மாதமும் போடப்பட்டு ஆதார்மாதமான பன்னிரண்டாம் மாதத்தின்மேல் விழுந்தது.

௮ அப்போது ஆமான் அகாஸ்வேரு இராசாவுடனே சொன்னதாவது, உம்முடைய இராச்சியத்தின் சகல சீமைகளிலுமுள்ள சனசதளங்களுக்குள்ளே ஒரேயொரு சனசதளஞ்சிதறின துமபரம்பினதுமாயிருக்கிறது. அவர்களுடைய நியாயப்பிரமாணங்கள் சகலசனங்களுடையதைப்பார்க்க வெவ்வேறாயிருக்கிறது. அவர்கள் இராசாவுடைய நியாயப்பிரமாணங்களின்படி செய்கிறதில்லை. அவர்களை அப்படிவிட இராசாவுக்கு நியாயமல்ல.

௯ இராசாவுக்குச் சம்மதியானால் அவர்களை அழிக்கவேணுமென்றெழுதி யனுப்பப்படக்கடவது. அப்போது நான் அந்தவேலையைச்செய்திருப்பவர்களின் கைகளிலே பத்தாயிரந் தாலந்து வெள்ளியை இராசாவின் பொக்கிஷங்களிலே கொண்டுவந்து வைக்கத் திறுத்துக்கொடுப்பேனென்றான்.

௰ அப்போது இராசா தன் கையிலிருக்கிற தன் மோதிரத்தைக் கழற்றி அதை அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமானென்ற யூதரின் சத்துருவாகிய ஆகாகியனுக்குக் கொடுத்து,

௰௧ ஆமானுடனே, அந்த வெள்ளி உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உன்பார்வைக்குச் சம்மதியானபடி அந்தச் சனத்துக்குச் செய்கிறதற்கு அதுவும் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றான்.

௰௨ அப்போது முதலாம்மாதம் பதின்மூன்றாந்தேதியிலே இராசாவின் சம்பிரதிகள் அழைக்கப்பட்டார்கள். ஆமான் கற்பித்தபடியெல்லாம் இராசாவின் சமஸ்தானாதிகளுக்கும் ஒவ்வொருசீமையின்மேல் வைக்கப்பட்டிருந்த துரைகளுக்கும் ஒவ்வொரு சனசதளத்தின் பிரபுக்களுக்கும், சீமை சீமையினுடைய எழுத்திலுஞ் சாதிசாதியினுடைய பாஷையிலும் எழுதப்பட்டது. இராசாவாகிய அகாஸ்வேருவின் நாமத்திலே எழுதப்பட்டு இராசாவின் மோதிரத்தினால் முத்திரைபோடப்பட்டது.

௰௩ ஆதார் மாதமாகிய பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியாகிய ஒரேநாளிலே எல்லாயூதரையுஞ் சிறியோர் முதற்பெரியோர்மட்டுமிருக்கிற எல்லாரையுங் குழந்தைகளையுஞ் ஸ்திரிகளையுஞ் அழித்துக்கொன்று நிர்மூலமாக்கவும் அவர்களைக்கொள்ளையிடவும் நிருபங்கள் அஞ்சல்காரர்கையிலே இராசாவின் சீமைகளுக்கெல்லாம் அனுப்பப்பட்டது.

௰௪ அந்தநாளுக்கு ஆயத்தப்பட்டிருக்கவேணுமென்று சகலசனசதளங்களுக்குங் கூறுவிக்கிறதற்கான பிரமாணம் ஒவ்வொருசீமையிலே அறிவிக்கப்படவேணுமென்பது அதுகளில் எழுதியிருந்தது.

௰௫ அந்த அஞ்சல்காரர் இராசாவின் கற்பனையினாலே துரிதிக்கப்பட்டுப் புறப்பட்டுப்போனார்கள். அந்தப் பிரமாணஞ் சூசான் கோட்டையிலும் அறிவிக்கப்பட்டது. இராசாவும் ஆமானும் குடித்துக்கொண்டிருக்க உட்கார்ந்தார்கள். சூசான் பட்டணமோவென்றால் கலங்கலாயிருந்தது.

௪. அதிகாரம்.

யூதருக்குள் மகா துக்கமுண்டாகையிலே சனத்துக்காக எஸ்தர் இராசாவைவேண்டிக்கொள்ள மொர்தெகாய் அவளைச் சம்மதப்படுத்தினது.

செய்யப்பட்டதையெல்லாம் மொர்தெகாய் அறிந்தபோது மொர்தெகாய் தன் வஸ்திரங்களைக்கிழித்து இரட்டுடுத்திச் சாம்பலைப்போட்டுக்கொண்டு பட்டணத்தின் நடுவே புறப்பட்டுப்போய் துயரமான மகாசத்தத்தோடே அலறி,

௨ இராசாவின் அரண்மனைவாசல் முகப்புமட்டுக்கும் வந்தான். ஏனென்றால் இரட்டுடுத்தவனாய் இராசாவின் அரண்மனைவாசலுக்குட்பிரவேசிக்க ஒருவனுக்கும் உத்தரவில்லை.

௩ இராசாவின் வார்த்தையும் அவனுடைய நியாயப்பிரமாணமும் போய்ச்சேர்ந்த ஒவ்வொரு சீமையிலும் இருக்கும் யூதருக்குள்ளே மகாதுக்கமும் உபவாசமும் அழுகையும் புலம்பலுமுண்டாய் அநேகர் இரட்டிலுஞ் சாம்பலிலுங் கிடந்தார்கள்.

௪ அப்பொழுது எஸ்தரின் குமரிப்பெண்களும் அவளுடைய பிரதானிகளுமாகிய அண்ணகரும் அவளுடைய வந்து அதை அவளுக்கறிவித்தார்கள். அதற்கு

லே இராசாத்தி மிகவும் மனநோவடைந்து மொர்தெகாயி உடுத்திருந்த ரட்டையெடுத்துப்போட்டு அவனை உடுத்துவிக்கிறதற்கு வஸ்திரங்களை அவனுக்கனுப்பினாள். ஆனால் அவன் அதுகளை ஏற்றுக்கொள்ளாதிருந்தான்.

௫ அப்போது எஸ்தர் தன் ஊழியத்துக்கு இராசாவைச் சந்திருந்த அவனுடைய பிரதானிகளில் ஒருவனாகிய ஆத்தாகையழைப்பித்து அதேதென்றும் அதின் நிமித்தமேதென்றும் அறிய மொர்தெகாயினிடத்தில் விசாரிக்க அவனுக்குக் கட்டளையிட்டாள்.

௬ அப்படியே ஆத்தாக இராசாவின் அரண்மனை வாசலுக்கு முன்னான பட்டண வீதியிலிருக்கிற மொர்தெகாயினண்டைக்குப் புறப்பட்டுப் போனான்.

௭ அப்போது மொர்தெகாயி தனக்குச் சம்பவித்ததெல்லாவற்றையும் யூதரை அழிக்கும்படிக்கு ஆமான் அவர்கள் நிமித்தம் இராசாவின் பொக்கிஷங்களுக்குத் திறுத்துக்கொடுப்பேனென்று சொன்ன ரொக்கவெள்ளியின் செய்தியையும் அவனுக்கறிவித்து,

௮ எஸ்தருக்குக் காண்பிக்கும்படிக்கும் அவளுக்கறிவிக்கும்படிக்கும் அவள் தன் சனத்துக்காக இராசாவை வேண்டிக்கொண்டு அவர் சமுகத்திலே விண்ணப்பம்பண்ணவும் அவரண்டைக்குப் போக அவளுக்குக் கற்பிக்கும்படிக்கும் அவன் இவர்களைச் சங்கரிக்கிறதற்குச் சூசானில் அறிவிக்கப்பட்ட கட்டளையினுடைய கடுதாசியின் பிரதியைக் கொடுத்தான்.

௯ ஆத்தாக் வந்து மொர்தெகாயின் வார்த்தைகளை எஸ்தருக்கறிவித்தான்.

௰ அப்போது எஸ்தர் மொர்தெகாயிக்குச் சொல்லச் சொல்லி ஆத்தாக்குக்குக் கற்பித்ததாவது,

௰௧ அழைப்பிக்கப்படாமல் இராசாவண்டைக்கு அவருடைய உள்முற்றத்திலே பிரவேசிக்கிற எந்த ஆணாகிலும் பெண்ணாகிலுஞ்சரி அப்படிக்கொத்தவர்கள் பிழைக்கும்படிக்கு இராசா பொற்செங்கோலை அவர்களண்டைக்கு நீட்டினாலொழியக் கொல்லப்படவேண்டுமென்கிற ஒரே அவனுடைய நியாயப்பிரமாணமாயிருக்கிறதென்கிறதை இராசாவின் சகல ஊழியக்காரரும் இராசாவினுடைய சீமையின் சனமும் அறிந்திருக்கிறார்கள். நானோவெனில் இந்த முப்பது நாளாய் இராசாவண்டைக்கு வரவழைப்பிக்கப்படவில்லையென்று சொல்லக் கற்பித்தான்.

௰௨ எஸ்தரின் வார்த்தைகளை மொர்தெகாயிக்கு அறிவித்தார்கள்.

௰௩ [illegible] மொர்தெகாயி எஸ்தருக்குத் திரும்பச் சொல்லச் சொன்னதாவது, நீ இராசாவின் அரண்மனையிலிருக்கிறதினால் எல்லா யூதரைப்பார்க்கிலும் தப்புவாயென்று உன் மனதிலே நினைவுகொள்ளாதே.

௰௪ ஏனென்றால் நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருக்கவேயிருந்தால் யூதருக்கு ரட்சிப்பாறுதலும் விடுவிப்பும் வேறொரு ஸ்தலத்திலிருந்தெழும்பும். நீயும் உன் தகப்பன் வீட்டாருமாய் அழிவீர்கள். நீ இப்படிக்கொத்த காலத்துக்கு உதவியாக இராச்சியமேன்மைக்கு வந்ததில்லையோவென்கிறது ஆருக்குத் தெரியுமென்று சொல்லச் சொன்னான்.

௰௫ அப்போது எஸ்தர் மொர்தெகாயிக்கு மறுபடியுஞ் சொல்லச் சொன்னதாவது

௰௬ நீர் போய்ச் சூசானிலகப்படுகிற யூதரையெல்லாங் கூட்டிக்கொண்டு எனக்காக உபவாசம்பண்ணி மூன்று நாளளவும் பகலும் புசியாமலுங் குடியாமலுமிருங்கள். நானும் என் குமரிப்பெண்களுங்கூட இப்படி உபவாசம்பண்ணுவோம். இந்தப்பிரகாரமாக நியாயப்பிரமாணத்தைமீறி இராசாவண்டைக்குட் பிரவேசிப்பேன். நான் மடிந்தாலும் மடிகிறேனென்று சொல்லச் சொன்னாள்.

௰௭ அப்போது மொர்தெகாயி அப்புறப்பட்டு எஸ்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாஞ் செய்தான்.

௫. அதிகாரம்.

எஸ்தர், இராசாவுக்கும் ஆமானுக்கும் விருந்து செய்வித்தது.

சம்பவித்ததேதெனில், மூன்றும் நாளிலே எஸ்தர் இராசவஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு இராச அரண்மனையின் உள்முற்றத்தில் இராசாவின் வீட்டுக்கெதிராகப் போய் நின்றாள். இராச அரண்மனையிலே அரண்மனை வாசலுக்கெதிரேயிருக்கிற தன்னுடைய இராசாசனத்தில் இராசா உட்கார்ந்திருந்தான்.

௨ சம்பவித்ததென்றால், இராசா இராசாத்தியாகிய எஸ்தர் முற்றத்தில் நிற்கிறதைக் காண்கையில் அவளுக்கு அவன் கண்களில் தயவு கிடைத்ததினால் இராசா தன் கையிலிருக்கிற பொற்செங்கோலை எஸ்தரண்டைக்கு நீட்டினான். அப்போது எஸ்தர் சேர்ந்து செங்கோலின் நுனியைத் தொட்டாள்.

௩ இராசா அவளுடனே, இராசாத்தியாகிய எஸ்தரே, உனக்கென்னவேணும் நீ கேட்கிற உன் மன்றாட்டென்ன, நீ இராச்சியத்திற் பாதிமட்டுங் கேட்டாலும் உனக்குக் கொடுக்கப்படுமென்றான்.

௪ அப்போது எஸ்தர், இராசாவுக்குச் சம்மதியாயிருந்தால் நான் தமக்குச் செய்வித்த விருந்துக்கு இராசாவும் ஆமானும் இன்றைக்கு வரவேணுமென்றாள்.

௫ அப்போது இராசா எஸ்தர்சொற்படிசெய்ய ஆமானைத்தீவிரியுங்களென்றுசொல்லி எஸ்தர் செய்வித்த விருந்துக்கு இராசாவும் ஆமானும்வந்தார்கள.

௬ திவிதிராட்சப்பழஇரசமநடந்தவிருந்திலே இராசா எஸ்தருடனே, நீவேண்டிக்கொளளுகிறதென்ன உனக்குக்கொடுக்கப்படும. நீ கேட்கிறதென்ன நீ இராச்சியத்தின பாதிமட்டுங்கேட்டாலும நடக்குமென்றான.

௭ எஸ்தர்பிரத்தியுத்தரமாகச்சொன்னதாவது,

௮ இராசாவினகணகளில எனக்குக்கிருபைகிடைத்து எனவேண்டுதலைக்கட்டளையிடவும எனவிணணப்பத்தினபடி செய்யவும இராசாவுக்குச சம்மதியாயிருந்தால இராசாவும ஆமானும நான இன்னந்தங்களுக்குசசெய்விக்கப்போகிற விருந்துக்கு வரவேணுமென்கிறதே எனவேண்டுதலும என விணணப்பமுமாயிருக்கினறது. நாளைக்கு இராசாவுடையசொற்படி செய்வேனென்றாள.

௯ அனறையத்தினம ஆமானசநதோஷமும மனமகிழசசியுமாயப்புறப்பட்டான. ஆனால இராச அரண்மனையினவாசலிலிருக்கிறமொற்தேகாயி எழுந்திராமலுந்தனனிமித்தமஅசையாமலுமிருக்கிறதை ஆமான்காண்கையில அவன மொற்தேகாயின மேல உககிரமநிறைநதவனானான.

௰ ஆகிலும ஆமான் அதை அடக்கிககொண்டு தனவீட்டுக்குவந்து தனசிநேகிதரையுந்தனபெணசாதியாகியசேரேசையும அழைத்தனுப்பி,

௰௧ தனனுடைய ஐசுவரியத்தினமகிமையையுந தனபிளளைகளின திரட்சியையும இராசாதனனைப்பெரியவனாக்கித்தனனைப்பிரபுக்களினமேலும இராசாவின ஊழியக்காரர்மேலும உயர்த்தினதெலலாவற்றையும ஆமான அவர்களுக்குவிவரித்தான.

௰௨ பினனையும ஆமான சொன்னதாவது, இராசாத்தியாகிய எஸ்தருந தானசெய்வித்தவிருந்துக்கு எனனைததவிரவேறொருவரையும இராசாவுடனேகூடவரசசொன்னதிலலை. நாளைக்கும இராசாவுடனேகூட அவளாலவிருநதுக்கு அழைக்கப்பட்டவனநானே.

௰௩ ஆனால எநதமட்டும யூசனாகியமொற்தேகாயி இராச அரண்மனையினவாசலிலுட்கார்ந்திருக்கிறதை நான காணகிறேனோ அநதமட்டும அதுவெலலாம எனககுபபோதாதெனறான.

௰௪ அபபோது அவனபெணசாதியாகியசேரேசும அவனுடைய எலலாசசிநேகிதரும அவனுடனே ஐமபதுமுழ உயர்த்தியான ஒருதூககுமரஞசெயயபபடக்கடவது. அதிலே மொறதேகாயிதூககிபபோடப்பட நாளைககாலமே நீர் இராசாவுககுசசொலலிபபிறபாடு சநதோஷமாய இராசாவுடனேகூட விருநதுககுபபோமெனறார்கள. இநதககாரியம ஆமானுககு நனறுயசககணடதினால தூககுமரத்தைச்செயபபணிவித்தான.

௬. அதிகாரம்.

மொறதேகாயிஉயர்த்தபபட்டது.

அந்த இராத்திரியிலே இராசாவுககுநித்திரைவராதபடியினாலே, நினைப்புககாக எழுதியிருககிறநாட்செயதிகளின புஸ்தகத்தைககொணடுவரசசொனனான. அது இராசாவுககுமுனபாக அதுகள வாசிககபபட்டது.

௨ அபபோது வாசறபடிககாவலாளிகளில இராசாவின இரணடுபிரதானிகளாகிய பிகதானாவுந்தேரேசும இராசாவாகிய அகாஸ்வேருவினமேலே கைபோடப்பார்த்த செயதியைமொறதேகாயி அறிவித்தானென றெழுதியிருககிறது கணடுபிடிககப்பட்டபோது,

௩ இராசாவானவன இதற்காக மொறதேகாயிககுசசெயயபபட்டகனமும மேனமையும எனனவெனறுகேட்டான. ஒனறும அவனுககுசசெயயபபட்டதிலலையெனறு இராசாவைச சேவிககிற அவனுடையவேலைககாரர் சொனனார்கள.

௪ அபபோது இராசா முறறத்திலிருககிறவனாரெனறுகேட்டான. ஆனால ஆமான மொறதேகாயிககுத்தானசெய்பபணணுவித்த மரத்திலே அவனைத்தூககிபபோடும்படிககு இராசாவுககுசசொலலத்தககதாக இராசஅரணமனையினபுறமுறறத்திலே வந்திருந்தான.

௫ ஆகையால இராசாவின சேவககாரர் அவனுடனே, இதோ, ஆமான முறறத்திலே நிறகிறானெனறார்கள. அபபொழுது இராசா அவன வரட்டுமெனறான.

௬ ஆமான உளளேவநதபோது இராசா அவனுடனே, இராசா, கனமபணணச்செய விருபபமாயிருககிற மனுஷனுககுச்செயயபபட்டவேணடியதெனனவெனறான. அபபோது ஆமான எனனைபபார்கக இராசா ஆரைககனமபணணவிருபபமாயிருபபாரெனறுதனனிருதயத்திலே சொலலிககொணடு.

௭ இராசாவுடனே சொனனதாவது, இராசா கனமபணணவிருபபமாயிருககிற மனுஷனுககுச செயயவேணடியதேதெனறால,

௮ இராசா உடுத்திககொளளுகிற இராச வஸ்திரமும இராசா ஏறுகிறகுதிரையும கொணடுவரபபட்டு இராசமுடிஅவனதலையிலேவைககபபட்டு,

௯ அந்த வஸ்திரமும் குதிரையும் இராசாவுடைய பிரதான பிரபுக்களில் ஒருவனுடைய கையிலே கொடுக்கப்படக்கடவது. இராசா கனம்பண்ண விருப்பமாயிருக்கிற மனுஷனுக்கு வஸ்திரந்தரிக்கப்பட்டபின் அவனைக் குதிரையின்மேலேற்றிப் பட்டண வீதியாய்க் கொண்டுபோய் இராசா கனம்பண்ண விருப்பமாயிருக்கிற மனுஷனுக்கு இப்படிச் செய்யப்படுமென்று அவனுக்கு முன்பாகக் கூறக்கடவார்களென்றான்.

௰ அப்போது இராசா ஆமானுடனே, நீ சீக்கிரமாய் வஸ்திரத்தையுங் குதிரையையும் நீ சொன்னபடி வாங்கி இராச அரண்மனையின் வாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய மொர்தெகாயிக்கு அந்தப்பிரகாரமாகச் செய். நீ சொன்னதெல்லாவற்றிலும் ஒன்றுங் குறையவிடாதேயென்றான்.

௰௧ அப்படியே ஆமான் வஸ்திரத்தையுங் குதிரையையும் வாங்கி மொர்தெகாயிக்கு வஸ்திரந்தரித்து அவனைக் குதிரையின் மேலேற்றிப் பட்டண வீதியாய்க் கொண்டுபோய் இராசா கனம்பண்ண விருப்பமாயிருக்கிற மனிதனுக்கு இப்படிச் செய்யப்படுமென்று அவனுக்கு முன்பாகக் கூறினான்.

௰௨ பிற்பாடு மொர்தெகாயி இராச அரண்மனையின் வாசலுக்குத் திரும்பிவந்தான். ஆமானோவென்றால் சஞ்சலப்பட்டவனும் முக்காடிட்டவனுமாய்த் தன் வீட்டுக்குத் தீவிரித்தான்.

௰௩ ஆமான் தனக்குச் சம்பவித்ததெல்லாவற்றையுந் தன் பெண்சாதியாகிய சேரேசுக்குந் தன்னுடைய எல்லாச் சிநேகிதருக்கும் விவரித்தபோது அவனுடைய ஞானிகளும் அவன் பெண்சாதியாகிய சேரேசும் அவனுடனே, மொர்தெகாயிக்கு முன்பாக நீர் விழத்துவக்கினீரே. அவன் யூதரின் வித்தாயிருந்தால் நீர் அவனை மேற்கொள்ளாமல் அவனுக்கு முன்பாக விழவே விழுவீரென்றார்கள்.

௰௪ அவர்கள் இன்னம் அவனோடே பேசிக்கொள்ள இராசாவின் பிரதானிகள் வந்து எஸ்தர் செய்வித்த விருந்துக்கு வர ஆமானைத் துரிதம்பண்ணினார்கள்.

௭. அதிகாரம்.

எஸ்தர் தன் சனத்துக்காக விண்ணப்பம் பண்ணினபின் ஆமானுக்கு வந்த ஆக்கினை.

இராசாத்தியாகிய எஸ்தருடனே விருந்துண்க இராசாவும் ஆமானும் வந்தபோது.

௨ திராட்சப்பழரசம் நடந்த அந்த இரண்டாம் நாள் விருந்திலும் இராசா எஸ்தருடனே, இராசாத்தியாகிய எஸ்தரே, உன் மன்றாட்டென்ன உனக்குக் கொடுக்கப்படும், நீ கேட்கிறகாரியமென்ன நீ இராச்சியத்தின் பாதிமட்டுங் கேட்டாலும் நடக்குமென்றான்.

௩ அப்போது இராசாத்தியாகிய எஸ்தர் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது, இராசாவே, உம்முடைய கண்களிலெனக்குக் கிருபை கிடைத்து இராசாவுக்குச் சம்மதியாயிருந்தால் என் வேண்டுதலுக்கென் சீவனும் என் விண்ணப்பத்துக்கு என் சனமும் எனக்குக் கட்டளையிடப்படுவதாக.

௪ ஏனென்றால் எங்களைச் சங்கரிக்கிறதற்குங் கொன்றுபோடுகிறதற்கும் அழிக்கிறதற்கும் நானும் என் சனமுமாய் விற்கப்பட்டோம். அடிமைகளாகவும் வேலையாட்டிகளாகவும் விற்கப்பட்டோமானால் அப்போது அந்தச் சத்துரு இராசாவின் நஷ்டத்துக்கு உத்தரவாதம்பண்ணக் கூடாதிருந்தாலும் நான் மவுனமாயிருப்பேனென்றாள்.

௫ அப்போது இராசாவாகிய அகாஸ்வேரு உத்தரவு கொடுத்து இராசாத்தியாகிய எஸ்தருடனே, அவனார் இப்படிச் செய்யும் நினைவுக்காலே தன் இருதயத்தை நிரப்பினவன் எங்கேயிருக்கிறானென்றான்.

௬ அதற்கு எஸ்தர், சத்துருவும் பகைஞனுமாகிய மனிதன் இந்தப் பொல்லாத ஆமான்தானென்றாள். அப்போது ஆமான் இராசாவுக்கும் இராசாத்திக்கும் முன்பாகத் திகிலடைந்தான்.

௭ இராசாவோவென்றால் தன் உக்கிரத்தோடே திராட்சப்பழரசம் நடந்த விருந்தை விட்டெழுந்து அரண்மனைத் தோட்டத்துக்குப் போனான். ஆனால் ஆமான் இராசாத்தியாகிய எஸ்தரைத் தன் பிராணனுக்காக விண்ணப்பம்பண்ணநின்றான். ஏனென்றால் இராசாவினால் தனக்குப் பொல்லாப்பு நிர்ணயிக்கப்பட்டதென்று கண்டான்.

௮ இராசா அரண்மனைத் தோட்டத்திலிருந்து திராட்சப்பழரசம் நடந்த விருந்தின் வீட்டுக்குத் திரும்பி வருகையில் எஸ்தர் உட்கார்ந்திருக்கிற மெத்தையின் மேல் ஆமான் விழுந்திருந்தான். அப்போது இராசா இவன் என்னோடே வீட்டிலுமிருந்து இராசாத்தியைப் பலவந்தஞ்செய்யவேணுமென்றிருக்கிறானோவென்றான். இந்த வார்த்தை இராசாவின் வாயிலிருந்து புறப்பட்டவுடனே ஆமானின் முகத்தை மூடினார்கள்.

௯ அப்போது இராசாவுக்கு முன்பாக இருக்கிற பிரதானிகளிலொருவனான அற்போனா என்றவன் இதோ, இராசாவின் நன்மைக்காகப் பேசின மொர்தெகாயிக்கு ஆமான் செய்ப்பண்ணுவித்த ஐம்பது முழ உயரமான தூக்குமரமும் ஆமானின் வீட்டண்டை நாட்டப்பட்டிருக்கிறதென்றான். அப்போது இராசா அதிலே அவனைத் தூக்கிப் போடுங்களென்றான்.

ல அப்படியே ஆமான மொர்தெகாயிக்கு ஆயத்தம்பண்ணின தூக்குமரத்திலே அவனைத்தானதூக்கிப்போட்டார்கள். அப்போது இராசாவின உக்கிரந்தணிந்துபோயிறறு.

அ. அதிகாரம்.

பூதரைச சஙகரிக்கும பிரமாணத்துக்குப் பரிகாரமுணடாக வேறேகட்டளைபிறப்பிக்கப்பட்டது.

அன்றையத்தினம அகாஸவேரு இராசா பூதரின சத்துருவாயிருநத ஆமானின வீட்டை இராசாத்தியாகிய எஸ்தருக்குக் கொடுத்தான. மொர்தெகாயி இராசாவுக்குமுன்பாகவுமவந்தான. ஏனெனில அவன தனககென்னமாயிருக்கிறனென்று எஸ்தர் அறிவித்திருந்தாள.

உ இராசா ஆமானினகையிலிருந்துவாஙகிப்போட்ட தமமுடையமோதிரத்தையெடுத்து அதை மொர்தெகாயிக்குக்கொடுத்தான. எஸ்தரோவெனில மொர்தெகாயை ஆமானின வீட்டுக்கதிகாரியாகவைத்தாள.

ஙு பின்னையும எஸ்தர் இராசாவுக்குமுனபாகப்பேசி அவனபாதஙகளில விழுநதழுது ஆகாகியனான ஆமானின தீவினையையும அவனபூதருக்கு விரோதமாக நினைத்தஅவனுடைய யோசனையையும பரிகரிக்க அவனைவிணணப்பமபணணினாள.

ச அப்போது இராசா பொற்செங்கோலை எஸ்தர் அணடைக்கு நீட்டினான. எஸ்தர் எழுநதிருநது இராசாவுக்கு முனபாக நினறு.

ரு சொன்னதாவது, இராசாவுக்குச்சம்மதியாயிருநதுதமக்கு முனபாகஎனக்குக்கிருபைகிடைத்து இராசாவுக்குமுனபாக நானசொலலுமவார்த்தைசரிப்படடுத்தமமுடையகணகளுக்கு நான பிரியப்பட்டிருந்தால அப்போது இராசாவின சீமைகளிலெல்லாம இருக்கிறபூதரை அழிக்கவேணுமென்று அமமெதாத்தாவின குமாரனாகிய ஆமானென்கிற ஆகாகியன தீவினையாய் எழுதின நிருபஙகளைசசெலலாமலபோகப்பண்ணுமபிரகாரமாக எழுதி அனுப்பப்படக்கடவது,

சு ஏனென்றால எனசனத்தினமேலேவருமபொலலாப்பைப்பார்க்க எனக்கெப்படிக்கூடும. என்வமிசத்தின அழிவையுமபார்க்க எனக்கெப்படிக்கூடுமென்றாள.

எ அப்போதுஅகாஸவேருஇராசாஇராசாத்தியாகிய எஸ்தருக்கும பூதனாகியமொர்தெகாயிக்கும சொன்னதாவது, இதோ, ஆமானினவீட்டை எஸ்தருக்குக் கொடுத்தேன அவனபூதரினமேலே தன்கையைப்போட்டப்போனபடியினாலே அவனையும மரத்திலேதூக்கிப்போட்டார்கள்.

அ இப்போதும உஙகள பார்வைக்குச் சமமதியானபடி நீஙகள இராசாவினநாமத்திலே பூதருக்காக எழுதி இராசாவின மோதிரத்தினாலமுத்திரைபோடுஙகள. ஏனெனில இராசாவின நாமத்தில எழுதப்பட்டு இராசாவின மோதிரத்தால முத்திரைபோடப்பட்டிருக்கிறதைச்செலலாமலபோகப்பணணக்கூடாதென்றான.

கூ சீவானமாதமென்ற மூனறாமமாதம இருபத்துமூனறநதேதியாகிய அக்காலத்திலேதானே இராசாவின சமபிரதிகள அழைக்கப்பட்டார்கள. மொர்தெகாயி கற்பித்தபடியெல்லாம பூதருக்கும இந்துதேசந்துவக்கி எததியோப்பியாமட்டுமுள்ள நூற்றிருபத்தேழுசீமைகளின அதிபதிகளுக்கும அதிகாரிகளுக்கும பிரபுக்களுக்கும சீமைசீமையின எழுத்திலும சாதிசாதியின பாஷையிலும பூதருக்கு அவர்கள எழுத்திலும அவர்கள பாஷையிலும எழுதப்பட்டது.

ய அது அகாஸவேரு இராசாவினநாமத்திலெழுதப்பட்டு இராசாவின மோதிரத்தால முத்திரைபோடப்பட்டபின அதைத் திருபஙகள அஞசற்குதிரைக்காரர் கையிலும வேகமான ஒட்டகஙகளின மேலும கோவேறுகழுதைகளமேலும ஏறிப்போற அஞசற்காரர் கையிலும அனுப்பப்பட்டது.

யக அகாஸவேரு இராசாவுடைய எலலாசசீமைகளிலும ஆதார் மாதமென்னும பனனிரணடாம மாதம பதின்மூனறாந்தேதியாகிய அநத ஒரே நாளில,

யஉ ஒவவொரு பட்டணத்திலுமிருக்கிற பூதர் கூடிக்கொணடு தஙகளபிராணனைக் காப்பாற்றவும தஙகளமேற்சத்துருக்களாயவிழுஞசனத்தாருந்தேசத்தாருமான எலலா இராணுவஙகளையும அவர்கள குழநதைகளையும ஸதிரிகளையுஞ சஙகரிக்கவும கொனறுபோடவும அழிக்கவும அவர்கள உடைமைகளைககொளளையிடவும இராசாபூதருக்குக்கட்டளையிட்டானென்று அதுகளில எழுதியிருநதது.

யங பூதர் தஙகள பகைஞருக்குச்சரிக்குச்சரிக்கட்ட அனறையத்தினத்துக்கு ஆயத்தமாயிருக்க வேணுமென்று ஒவவொரு சீமையிலுமுளளஎலலாசசனத்தஙகளுக்குங் கூறப்படுகிறதற்கான கட்டளை கொணடதென்கிறதும அதுகளில எழுதியிருநதது.

யச அப்படியேவேகமான ஒட்டகஙகளின மேலுங கோவேறுகழுதைகளமேலும ஏறின அஞ்சற்காரர் இராசாவினவார்த்தையினாலே ஏவப்பட்டுத்தீவிரத்தோடேபுறப்பட்டுபோனார்கள். அநதப்பிரமாணஞ சூசானகோட்டையிலுமஅடிக்கப்பட்டது.

யரு அப்போதுமொர்தெகாயி நீலமும வெளளையுமான இராசவஸதிரமும

பெரிய பொன்முடியும் மெல்லிய புடவையும் இரத்தாம்பரமான சால்வையும் அணிந்தவனாய் இராசாவினிடத்திலிருந்து புறப்பட்டான். அதற்காகச் சூசான் பட்டணம் ஆர்ப்பரித்து மகிழ்ந்திருந்தது.

௧௬ அப்படியே யூதருக்கு வெளிச்சமும் மகிழ்ச்சியும் களிகூருதலும் கனமும் உண்டாயிற்று.

௧௭ இராசாவின் வார்த்தையும் அவனுடைய பிரமாணமும் போய்ச்சேர்ந்த ஒவ்வொரு சீமையிலும் ஒவ்வொரு பட்டணத்திலும் யூதருக்குள்ளே மகிழ்ச்சியும் சந்தோஷமும் விருந்துண்டு கொண்டாடுகிற நாளுமாயிருந்தது. தேசச்சனங்களில் அநேகர் யூதமார்க்கம் அடைந்தார்கள். ஏனென்றால் யூதருக்குப் பயப்படுகிற பயம் அவர்களைப் பிடித்தது.

௯. அதிகாரம்.

யூதர் தங்கள் சத்துருக்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டினதும், அந்நினைத்த வருஷாந்தரம் ஆசரிக்கப்படும் பண்டிகை திட்டப்பண்ணப்பட்டதும்.

௧ இராசாவின் வார்த்தையின்படியும் அவனுடைய பிரமாணத்தின்படியும் செய்யப்படநேர்ந்த ஆதார் மாதமென்கிற பன்னிரண்டாம் மாதம் பதின்மூன்றாந்தேதியிலே யூதரின் பகைஞர் அவர்களை மேற்கொள்ளவேண்டுமென்று நம்பினார்களே. அந்நாளிலே தானே யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும்படிக்குக் காரியம் மாறிப்போய்,

௨ யூதர் அகாஸ்வேரு இராசாவின் சகல சீமைகளிலுமுள்ள பட்டணங்களிலே தங்களுக்குப் பொல்லாப்பு வரப்பண்ணப்பார்த்தவர்கள் மேல் கைபோடக்கூடிக்கொண்டார்கள். ஒருவரும் அவர்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதிருந்தது. ஏனெனில் அவர்களாலே சகல சனசதளங்களின் மேலும் பயங்கரம் விழுந்தது.

௩ சீமைகளின் சகல பிரபுக்களும் சேனைத்தலைவர்களும் துரைகளும் இராசாவின் வேலை நடப்பிக்கிறவர்களும் யூதரை உயர்த்தினார்கள். ஏனென்றால் மொர்தெகாயினால் உண்டான பயங்கரம் அவர்கள் மேல் விழுந்தது.

௪ ஏனெனில் மொர்தெகாய் இராசாவின் அரண்மனையிலே பெரியவனாயிருந்தான். அவனுடைய கீர்த்தி எல்லாச் சீமைகளிலும் பிரசித்தமாயிற்று. ஏனென்றால் இந்த மொர்தெகாயென்கிறவன் வரவரப் பெலத்துப்போனான்.

௫ அப்படியே யூதர் தங்கள் பகைஞரெல்லாம் பட்டயத்தாலே வெட்டிக் கொன்று அழித்துப்போட்டுத் தங்கள் விரோதக்காரருக்குத் தங்களுக்குச் சரிப்போனபடியே செய்தார்கள்.

௬ சூசான் கோட்டையிலும் யூதர் ஐந்நூறு பேரைக் கொன்று அழித்தார்கள்.

௭ அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்ற யூதருடைய சத்துருவின் பத்துக்குமாரரான பர்சான்தாத்தாவையும் தல்போனையும் அஸ்பாத்தாவையும்,

௮ பொராத்தாவையும் அதலியாவையும் அரிதாத்தாவையும்,

௯ பர்மஷ்டாவையும் அரிசாயையும் அரிதாயையும் வாய்சாத்தாவையுங் கொன்று போட்டார்கள்.

௰ ஆனாற்கொள்ளையிடத் தங்கள் கைகளை நீட்டினதில்லை.

௰௧ அன்றையத்தினம் சூசான் கோட்டையிற் கொன்றுபோடப்பட்டவர்களின் தொகை இராசாவுக்கு முன்பாக வந்தது.

௰௨ அப்போது இராசா இராசாத்தியாகிய எஸ்தருடனே, சூசான் கோட்டையில் யூதர் ஐந்நூறு பேரையும் ஆமானின் பத்துக்குமாரரையுங் கொன்று அழித்தார்கள். இராசாவின் மற்றச் சீமைகளில் என்ன செய்திருப்பார்களோ, இப்போதும் உன் மனுவென்ன உனக்குக் கட்டளையிடப்படும். நீ அப்புறங் கேட்குங் காரியமென்ன அது செய்யப்படுமென்றான்.

௰௩ அப்போது எஸ்தரென்றவள், இராசாவுக்குச் சம்மதியாயிருந்தால் இன்றையின் பிரமாணத்துக்கொத்தபடி சூசானிலிருக்கிற யூதர் நாளையத்தினஞ் செய்யவும், ஆமானின் பத்துக்குமாரரைத் தூக்குமரத்தில் தூக்கிப்போடவும் உத்தரவு கொடுக்கப்பட்டதாக வேண்டுமென்றாள்.

௰௪ அப்போது அப்படிச் செய்யும்படிக்கு இராசா சொன்னான். அதற்குச் சூசானிலே பிரமாணங் கட்டளையிடப்பட்டது. ஆமானின் பத்துக்குமாரரைத் தூக்கிப்போட்டார்கள்.

௰௫ சூசானிலிருக்கிற யூதர் ஆதார் மாதத்தின் பதினாலாந்தேதியிலுங் கூடிக்கொண்டு சூசானில் முந்நூறு பேரைக் கொன்றுபோட்டார்கள். ஆனாற்கொள்ளையிடத் தங்கள் கைகளை நீட்டினதில்லை.

௰௬ இராசாவின் சீமைகளிலுள்ள மற்ற யூதர் தங்கள் பிராணனைத் தற்காக்கவுந் தங்கள் பகைஞரை விலக்கி இளைப்பாறுதல் அடையவுங் கூடிக்கொண்டு தங்கள் விரோதக்காரரில் எழுபத்தையாயிரம் பேரைக் கொன்றுபோட்டார்கள். ஆனாற் கொள்ளையிடத் தங்கள் கைகளை நீட்டினதில்லை.

௰௭ ஆதார் மாதத்தின் பதின்மூன்றாந்தேதியிலே இப்படிச் செய்து பதினாலாந்தேதியில் இளைப்பாறி அதை விருந்துண்கிற சந்தோஷநாளாக்கினார்கள்.

௰௮ சூசானிலுள்ள யூதரோவென்றால் அந்த மாதத்தின் பதின்மூன்றாந் தேதியிலும் பதினாலாந் தேதியிலுங் கூடிக்கொண்டிருந்து பதினைந்தாந் தேதியிலே இளைப்பாறி அதை விருந்துண்கிற சந்தோஷ நாளாக்கினார்கள்.

௰௯ ஆனதுகொண்டு அலங்கமில்லாத ஊர்களிற் குடியிருக்கிற நாட்டுப்புறத்தாரான யூதர் ஆதார் மாதத்தின் பதினாலாந் தேதியைச் சந்தோஷமும் விருந்துண்கிறதுமான நாளுமென்றுக்கொண்டு அதியாபங்குகளை அனுப்புகிற நாளுமாக்கினார்கள்.

௨௰ இந்த வர்த்தமானங்களை மொர்தேகாய் எழுதி அகாஸ்வேரு இராசாவின் சகல சீமைகளிலுங் கிட்டவுந் தூரமுமாயிருக்கிற எல்லா யூதருக்குந் திருமுகங்களை யனுப்பி,

௨௧ யூதர் தங்கள் பகைஞரை விலக்கி இளைப்பாறின அந்த நாட்களின்படியேயும் அவர்கள் சஞ்சலஞ் சந்தோஷமாகவும் அவர்கள் துக்கம் மகிழ்கிற நாளாகவும் மாறின மாதத்தின்படியேயும் வருஷந்தோறும் ஆதார் மாதத்தின் பதினாலாந் தேதியையும் பதினைந்தாந் தேதியையும் ஆசரிக்கவும்,

௨௨ அதுகளை விருந்துண்கிற சந்தோஷ நாட்களுமாக்கவும் ஒருவருக்கொருவர் காணிக்கைகளையும் எளியவர்களுக்கீவுகளையும் அனுப்புகிற நாட்களுமாக்கவும் அவர்களுக்குத் திட்டம் பண்ணினான்.

௨௩ அப்பொழுது யூதர் தாங்கள் செய்யத்துவக்கினபடியும் மொர்தேகாய் தங்களுக்கெழுதினபடியுஞ் செய்ய ஏற்றுக்கொண்டார்கள்.

௨௪ அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆமானென்ற அகாகியனும் யூதருக்கெல்லாஞ் சத்துருவுமானவன் யூதரைச் சங்கரிக்க நினைத்து அவர்களை அழிக்கவும் நிர்மூலமாக்கவும் பூறென்னப்பட்ட சீட்டைப் போடுவித்தானென்றும்,

௨௫ ஆனால் அது எஸ்தர் இராசாவுக்கு முன்பாக வந்தபின் யூதருக்கு விரோதமான அவன் நினைத்த அவனுடைய பொல்லாத யோசனை அவனுடைய தலையின்மேல் திரும்புகிறதற்காகத் திருப்பங்களினாலே கட்டளை பண்ணினதினாலே அவனையும் அவன் குமாரரையும் மரத்திலே தூக்கிப்போட்டார்களென்றும்,

௨௬ ஆகையினாலே அந்த நாட்கள் பூறென்ற நாமத்தினாற் பூரீமென்னப்பட்டதென்றும் வண்ணத் திருப்பத்தில் எழுதியிருந்த எல்லா வார்த்தைகளினிமித்தமும் தாங்கள் தானே இதைத் தொட்டுக் கண்டதினிமித்தமும் தங்கள் மேல் இப்படி வந்ததினிமித்தமும்,

௨௭ யூதர் அதைத் திட்டப்படுத்தி இந்த இரண்டு நாட்களைக் குறித்தெழுதியிருக்கிறபடியே அதுகளை வருஷந்தோறும் அதுகளின் திட்டமான காலத்திலே ஆசரியாதிருப்பதில்லையென்பதையும்,

௨௮ இந்த நாட்கள் எல்லாத் தலைமுறைகளிலும் வருஷங்களிலுஞ் சீமைகளிலும் ஊர்களிலும் நினைக்கப்பட்டாசரிக்கப்படுகிறதென்பதையும் இந்தப் பூரீமென்னுந் நாட்கள் யூதருக்குள்ளே அற்றுப்போகாமலும் அதுகளை நினைவுகூருதல் தங்கள் வித்தாருக்குள்ளே அழியாமலுமிருக்குமென்பதையுந் தங்கள் மேலுந் தங்கள் வித்தின்மேலுந் தங்கள் மார்க்கத்தைப் பிடித்திருக்கிற யாவர்மேலும் ஏற்றுக்கொண்டார்கள்.

௨௯ பூரீமைக் குறித்தெழுதின இந்த இரண்டாந் திருப்பத்தைத் திடப்படுத்தும்படிக்கு அபிகாயிலின் குமாரத்தியாகிய எஸ்தரென்ற இராசாத்தியும் யூதனாகிய மொர்தேகாயும் பின்னும் மகா அதிகாரத்தோடே எழுதினார்கள்.

௩௰ யூதனாகிய மொர்தேகாயும் இராசாத்தியாகிய எஸ்தரும் யூதருக்கு உத்தரவாய்ப் பண்ணினதும் அவர்கள் தானே உபவாசத்தோடும் அலறுதலோடும் ஆசரிப்போமென்று தங்கள் மேலுந் தங்கள் வித்தின்மேலும் உறுதிப்பாடாக்கிக்கொண்டதுமான பூரீமென்னப்பட்ட இந்த நாட்களை அதுகளின் திட்டமான காலங்களில் ஆசரிக்கப்படுங் காரியத்தை உறுதிப்படுத்த,

௩௧ அவன் அகாஸ்வேருவின் இராச்சியத்திலுள்ள நூற்றிருபத்தேழு சீமைகளிலிருக்கிற எல்லா யூதருக்குஞ் சமாதானமும் உண்மையுமான வார்த்தைகளையுடைய திருமுகங்களை யனுப்பினான்.

௩௨ இப்படியே எஸ்தரின் கட்டளை பூரீம நாட்களின் வர்த்தமானத்தைத் திடப்படுத்தி ஒருபுஸ்தகத்திலெழுதப்பட்டது.

௰. அதிகாரம்.

அகாஸ்வேருவின் மகத்துவமும் மொர்தேகாயினுடைய முக்கியமும்.

இராசாவாகிய அகாஸ்வேரு தேசத்தின்மேலுஞ் சமுத்திரத்தின் தீவுகளின்மேலும் இறைவரி வைத்தான்.

௨ பெலனும் வல்லமையுமான அவனுடைய எல்லாச் செய்கைகளும் இராசா பெரியவனாக்கின மொர்தேகாயினுடைய முக்கியத்தின் விவரமும், மேதியா பெர்சியா இராசாக்களின் நாளாகமப் புஸ்தகத்திலே எழுதியிருக்கிறது.

௩ ஏனென்றால் யூதனாகிய மொர்தேகாய் இராசாவாகிய அகாஸ்வேருவுக்கு இரண்டாவதும் யூதருக்குட் பெரியவனுந் தன்னுடைய திரள் சகோதரருக்குப் பிரியமுள்ளவனுமாயிருந்து தன் சனத்துக்கு நன்மையைப் பாராமரித்துத் தன் வித்தாருக்கெல்லாஞ் சமாதானமுண்டாகப் பேசிக்கொண்டிருந்தான். முற்றிற்றும்.

யோபுடைய சரித்திரம்.

க. அதிகாரம்.

தேவபத்தியுள்ள யோப் உபத்திரவப்பட்டுத் தீர்ந்து முன் அவனுக்கிருந்த பாக்கியம்.

ஊத்ஸ்தேசத்திலே யோபென்றுபேருள்ள ஒரு மனுஷனிருந்தான். அந்த மனுஷன் உத்தமனும் செம்மைமார்க்கத்தானும் பராபரனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்தான்.

உ அவனுக்கு ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் பிறந்தார்கள்.

௩ அவனுக்கு மிருகஜீவன்கள் ஏழாயிரம் ஆடுகளும் மூவாயிரம் ஒட்டகங்களும் ஐந்நூறு ஏர்மாடும் ஐந்நூறு கழுதைகளும் அவனுடைய பணிவிடைச்சனம் மகாதிரளுமாயிருந்ததினால் அந்த மனுஷன் கிழக்கத்திப் புத்திரரெல்லாரிலும் பார்க்கப் பெரியவனாயிருந்தான்.

௪ அவன்குமாரர் அவனவன் தன்தன் நாளிலே தன்தன் வீட்டிலும் விருந்துசெய்யப்போய்த் தங்கள் மூன்று சகோதரிகளைத் தங்களோடேகூடப் போசித்துக் குடிக்கிறதற்கு அழைத்தனுப்புவார்கள்.

௫ விருந்துசெய்கிற அவரவருடைய நாட்களின் வரிசை முடிகிறபோதோவென்றால் யோப் அவர்களை அழைத்தனுப்பிப் பரிசுத்தம்பண்ணி அதிகாலமேயெழுந்திருந்து அவர்களெல்லாருடைய இலக்கத்தின்படியே சர்வாங்கதகனபலிகளைச் செலுத்துவான். ஏனென்றால் யோப் ஒருவேளை என் குமாரர் பாவஞ்செய்து பராபரனைத் தங்களிருதயத்தில் வெறுத்துவிட்டிருப்பார்களென்பான். இந்தப்பிரகாரமாக யோப் அப்படிக்கொத்த நாட்களிலெல்லாஞ் செய்வான்.

அவன் தன் ஆஸ்திகளையும் பிள்ளைகளையும் இழந்ததும், அந்த விக்கினத்தைத் தேவபத்தியாய்ச் சகித்ததும்.

௬ ஒருநாள் பராபரனுடைய குமாரர்கள் கர்த்தருக்குமுன்பாக நிற்கவந்த ஒருநாளிலே சாத்தானும் அவர்கள் நடுவிலே வந்தது.

௭ கர்த்தர் சாத்தானுடனே, நீயெங்கேயிருந்து வந்தாயென்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தாரமாக, தேசத்தைச் சுற்றி அதிலே நடந்து திரிந்து வந்தேனென்றது.

௮ கர்த்தர் சாத்தானுடனே, நம்முடைய ஊழியக்காரனாகிய யோபின்பேரில் கவனம் வைத்தாயோ, ஏனென்றால் உத்தமனும் செம்மைமார்க்கத்தானும் பராபரனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப்போல் அத்தேசத்திலொருவனுமில்லையென்றார்.

௯ அப்பொழுது சாத்தான் கர்த்தருக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது, யோப் விருதாவாய்ப் பராபரனுக்குப் பயந்து நடக்கிறானோ?

௰ தேவரீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்குண்டான தெல்லாவற்றையுஞ் சுற்றிலும் வேலியடைக்கவில்லையோ, அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர். அவனுடைய மிருகஜீவன்கள் தேசத்திலே ஏராளமாயிற்று.

௰௧ ஆனாலும் தேவரீர் உம்முடைய கையை நீட்டி அவனுக்குண்டான தெல்லாந் தொடும். ஏன்? அப்போது அவன் உம்முடைய முகத்துக்கெதிரே உம்மைவெறுக்கானோவென்று பாரும் என்றது.

௰௨ அப்போது கர்த்தர் சாத்தானுடனே, இதோ, அவனுக்குண்டான தெல்லாம் உன்கையிலிருப்பதாக அவன்மேல்மாத்திரம் உன் கையை நீட்டாதேயென்றார். அப்போது சாத்தான் கர்த்தருடைய சமுகத்தை விட்டுப் புறப்பட்டுப் போயிற்று.

௰௩ பிறகு அவன்குமாரரும் அவன்குமாரத்திகளும் தங்கள் மூத்தசகோதரன் வீட்டிலே போசித்துத் திராட்சப்பழ ரசங்குடிக்கிற ஒருநாளிலே சம்பவித்ததேதென்னில்,

௰௪ ஒரு ஆள் யோபண்டைக்கு வந்து, எருதுகள் உழுது கழுதைகள் அதுகளின் பக்கத்திலே மேய்ந்துகொண்டிருக்கையில்,

௰௫ சபேயர் அதுகள்மேல் விழுந்து அதுகளைப் பிடித்துக்கொண்டு வேலையாட்களைப் பட்டயக்கருக்கினால் வெட்டிப்போட்டார்கள். நான் ஒருவன் மாத்திரம் அதை யுமக்கறிவிக்கும்படிக்குத் தப்பிவந்தேனென்றான்.

௰௬ இவனின்னம் பேசுகையில் வேறொருவன் வந்து, பராபரனுடைய அக்கினி வானத்திலிருந்து விழுந்து ஆடுகளையும் வேலையாட்களையுஞ் சுட்டெரித்துப்போட்டது. நான் ஒருவன் மாத்திரம் அதை உமக்கறிவிக்கும்படிக்குத் தப்பிவந்தேனென்றான்.

௰௭ இவனின்னம் பேசுகையில் வேறொருவன் வந்து, கல்தேயர் மூன்று வகுப்பாய்

வந்து ஒட்டகங்களின்மேல்விழுந்து அது களைப்போட்டிக்கொண்டு வேலையாட்களைப் பட்டயக்கருக்கினாலே வெட்டிப்போட்டார்கள். நான் ஒருவன்மாத்திரம் அதை உமக்கு அறிவிக்கும்படிக்குத் தப்பிவந்தேனென்றான்.

௰௮ இவன் இன்னும் பேசுகையிலே வேறொருவன் வந்து உம்முடைய குமாரரும் உம்முடைய குமாரத்திகளும் தங்கள் மூத்தச்சகோதரன்வீட்டிலே போசிசுத்துத் திராட்சரசம் குடிக்கையில்,

௰௯ இதோ, பெருங்காற்று வனாந்தரவழியாய் வந்து அந்த வீட்டினுடைய நாலு கோடியிலேயும் அடித்தது. அப்போது அது பிள்ளைகளின்மேல் விழுந்ததினாலே அவர்கள் மடிந்துபோனார்கள். நான் ஒருவன்மாத்திரம் அதை உமக்கறிவிக்கும்படிக்குத் தப்பிவந்தேனென்றான்.

௨௰ அப்போது யோப் எழுந்திருந்து தன் சால்வையைக் கிழித்துக்கொண்டு தன் தலைமயிரை வாங்கித் தரையிலே விழுந்து பணிந்துகொண்டு,

௨௧ நிருவாணமாய் என் தாயின்கெர்ப்பத்திலிருந்து புறப்பட்டேன் நிருவாணமாய் அவ்விடத்துக்குத் திரும்புவேன் கர்த்தர்கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமம் தோத்திரிக்கப்படக்கடவதென்றான்.

௨௨ இதெல்லாவற்றிலும் யோப் பாவஞ்செய்யாமலும், பராபரனுக்கேராத் தொன்றும் நினைக்காமலுமிருந்தான்.

௨. அதிகாரம்.

பின்னையும் யோபுக்கு வந்த கஸ்தியான உபத்திரவம்.

பராபரனுடைய குமாரர்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்கவந்த பின்னொருநாளிலே சாத்தானும் அவர்கள் நடுவிலே கர்த்தருக்கு முன்பாக நிற்கவந்தது.

௨ கர்த்தர் சாத்தானுடனே, நீ எங்கேயிருந்து வருகிறாயென்றார். சாத்தான் கர்த்தருக்குப் பிரத்தியுத்தாரமாக, தேசத்தைச் சுற்றி அதில் நடந்து திரிந்து வந்தேனென்றது.

௩ அப்போது கர்த்தர் சாத்தானுடனே நீ நம்முடைய ஊழியக்காரனாகிய யோபின்பேரிலே கவனம் வைத்தாயோ. ஏனெனில் உத்தமனும் செம்மைமார்க்கத்தானும் பராபரனுக்குப் பயந்து பொல்லாப்பை விலக்குகிறவனுமான மனுஷனாகிய அவனைப்போலே பூமியிலே ஒருவனுமில்லை. முகாந்திரமில்லாமல் அவனை நிர்மூலம்பண்ண நீ நம்மை ஏவிவிட்டிருந்தாலும் அவன் இன்னுந் தன் உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறானென்றார்.

௪ அதற்குச் சாத்தான் கர்த்தருக்குப் பிரத்தியுத்தாரமாக, தோலுக்குப்பதிலாகத் தோலையுந் தனக்குண்டானதெல்லாவற்றையுந் தன் ஜீவனுக்குப்பதிலாக மனுஷன் கொடுத்துவிடுவான்.

௫ ஆனாலும் தேவரீர் உம்முடைய கையை நீட்டி அவன் எலும்பையும் அவன் மாம்சத்தையுந் தொடுமே. அப்போது அவன் உமது முகத்துக்கெதிரே உம்மை வெறுக்கானோவென்று பாருமென்றது.

௬ அப்போது கர்த்தர் சாத்தானுடனே இதோ, அவன் உன் கையிலிருக்கிறான். ஆகிலும் அவன் பிராணனைக் காவென்றார்.

௭ அப்போது சாத்தான் கர்த்தருடைய சமுகத்தைவிட்டுப் புறப்பட்டு யோபின் உள்ளங்கால்துவக்கி அவன் உச்சந்தலைமட்டும் எழும்புகிற பொல்லாத பருக்களாலே அவனை வாதித்தது.

௮ அப்போது அவன் ஒரு ஓட்டை எடுத்துக்கொண்டு தன்னைச் சுரண்டிச் சாம்பலில் உட்கார்ந்தான்.

௯ அவன் பெண்சாதி அவனைப்பார்த்து இன்னம் உம்முடைய உத்தமத்திலே உறுதியாய் நிற்கிறீரோ. பராபரனைத் தூஷித்துச் செத்துப்போமென்றாள்.

௰ அவன் அவளை நோக்கி பயித்தியக்காரிகளில் ஒருத்தி பேசுகிறது போலப் பேசுகிறாய், பராபரன் கையிலே நன்மையை வாங்கின நாம் தீமையையும் வாங்க வேண்டாமோவென்றான். இதெல்லாவற்றிலேயும் யோப் தன் உதடுகளினாலே பாவஞ்செய்யாதிருந்தான்.

அவன் சிநேகிதரில் மூன்றுபேர் அவனைப் பார்க்கவந்தது.

௰௧ யோபுடைய மூன்று சிநேகிதராகிய தேமானியனான எலிப்பாசும் சூகியனான பில்தாத்தும் நாமாத்தியனான சோப்பாரும் யோபின்மேல் வந்த இந்தப் பொல்லாப்பையெல்லாங் கேட்டபோது அவரவர் தங்கள் ஸ்தலங்களில் இருந்து வந்து அவனுக்குப் பரிதபிக்கவும் அவனுக்கு ஆறுதல் சொல்லவும் ஒன்றாகக்கொண்டு யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

௰௨ அவர்கள் தூரத்திலிருக்கும்போது தங்கள் கண்களை ஏறெடுக்கிறபோது அவனை அறியமாட்டாதேபோய்ச் சத்தமிட்டழுது அவரவர் தங்கள் சால்வையைக் கிழித்து வானத்தைப்பார்த்துத் தங்கள் தலையின்மேல் புழுதியைத் தூற்றிக்கொண்டு,

௰௩ வந்து ஒருவரும் அவனோடொரு வார்த்தையும் பேசாமல் இரவுபகல் ஏழுநாள் அவனோடேகூடத் தரையிலே உட்கார்ந்திருந்தார்கள். ஏனெனில் அந்த நோவு மகா கடினமென்று கண்டார்கள்.

௩ அதிகாரம்.

யோபு பொறுக்கப்படியாத் தன உபத்திரவங்களின் அகோரத்திலே பேசினவார்த்தைகள்.

அதற்குப்பிறபாடு யோப் தனவாயைத் திறந்து தான பிறந்த நாளைச்சபித்துக்கொண்டு,

௨ வசனித்துச்சொன்னதாவது,

௩ நானபிறந்த நாளும ஒரு ஆணபிள்ளை உற்பத்தியாயிற்றென்று சொல்லப்பட்ட இராத்திரியும அழிவதாக.

௪ அந்தநாள அந்தகாரமாவதாக. பராபரன உயர இருந்து அதை விசாரியாமலும பிரகாசம அதினமேலே துலங்காமலும,

௫ இருளும மரணநிழலும அதையழுக்குபடுத்திப்பும அதைமூடி மந்தாரநாளின பயங்கரங்கள அதை அருக்களிப்பாக்குவதாக.

௬ அந்த இராத்திரியை அந்தகாரம பிடிப்பதாக. அது வருஷத்தின நாட்களிற்சந்தோஷபடுகிற நாளாயிராமலும மாதங்களின கணக்கிலேவராமலும போவதாக.

௭ இதோ, அந்த இராத்திரி தனிமையாகவும அதிலே கெம்பீரசத்தமில்லாமலும இருந்ததாலதாவினை.

௮ நாளைச்சபிக்கிறவர்களும முதலைசனியமெழுமப்பணைத் தக்கவர்களும அதைச்சபித்திருந்தாலதாவினை.

௯ அஸ்தமித்தவுடனே உதிக்கிற நட்சத்திரங்கள இருண்டு அதுவெளிச்சம பார்த்தும உண்டாகாமலும விடியங்காலத்தின வெளுப்பை அதுகாணாமலுமிருந்தாலதாவினை.

௰ ஏனெனறால நானகிடந்தசெற்பத்தின வாசலகளை அது அடைக்காமலும என கண்களகாணகிற வருத்தத்தை மறைத்துப்போடாமலுமிருந்ததே.

௰௧ நான கெர்ப்பத்திலதானே சாகாமல அந்த கெர்ப்பத்திலிருந்து புறப்படுகிறபோதே செத்துப்போகாமலும போனதென்ன.

௰௨ முழங்காலகள என்னையேந்திக்கொண்டதென்ன. நானமுலையுணக்கொங்கைகளுண்டாயிருந்ததென்ன.

௰௩ ஏனெனறால இப்போது கிடந்து அமர்ந்திருப்பேனே.

௰௪ பாழ்நிலங்களிலதங்களுக்குமாளிகைகட்டினபூமியிலுள்ள இராசாக்களோடும ஆலோசனைக்காரரோடும,

௰௫ அலலவெனறு பொனனுஸ்திக்காரருந்தங்களவீடுகளைவெள்ளியினால நிரப்பினவர்களுமான பிரபுக்களோடுங்கூட நான இப்போது இளைப்பாறிக்கொண்டு தூங்குவேனே.

௰௬ அலலவெனறு கெர்ப்பம விழுந்துபோன அடக்கமானபிண்டமும வெளிச்சத்தைக்காணாத குழந்தைகளுமிலலாமற்போகிறதுபோலாவேனே.

௰௭ அங்கே ஆகாதவர்களகலங்கடிக்குததைவிட்டோயந்திருக்கிறார்கள. அங்கே பெலனற்று விடாயத்துப்போனவர்கள இளைப்பாறுகிறார்கள.

௰௮ கட்டுண்டிருந்தவர்கள அங்கே ஏகமாக அமைச்சலாயிருந்து ஒடுக்குகிறவனுடையசத்தத்தைக்கேளாதிருக்கிறார்கள.

௰௯ சிறியவனும பெரியவனும அங்கே ஏகம. அங்கே அடிமை தன எசமானைவிட்டுத்தனனீங்கலாயிருக்கிறான.

௨௰ மரணத்துக்காசையாயக்காத்திருந்து புதையலகளைத்தோண்டித்தேடுகிறதைப்பார்க்கிலும அதைத்தேடியும அதையடையாமற்போகிறவர்களுக்கும,

௨௰௧ பிரேதக்குழியைக்கண்டுபிடித்ததினால மிகவுங்களிகூர்ந்து,

௨௰௨ அதற்காகச்சந்தோஷபடுகிற திறப்பந்தக்காரருக்கு வெளிச்சமும மனச்சஞ்சலக்காரருக்குச்சீவனுங் கொடுக்கபடுகிறதென்ன.

௨௰௩ அது தன வழியை அறியாதவனுக்கும பராபரன அதைமறைந்திருக்கிறவனுக்குங்கொடுக்கபடுகிறதென்ன.

௨௰௪ ஏனெனறால என்னுடையசாப்பாட்டுக்குமுனனே எனக்குப்பெருமூச்சுவரும. என அலறுதலகள தண்ணீரைப்போல ஊற்றுண்டிறது.

௨௰௫ ஏனெனில வருமெனறு நான அருக்களித்தது எனக்குநேரிட்டது. நானபயந்தது எனக்குவந்தது.

௨௰௬ சுகிக்காமலும அமராமலும இளைப்பாறுமலும இருக்கிற எனக்குத்தத்தளிப்புவந்தது.

௪. அதிகாரம்.

எலிப்பாஸ்யோபைக்கடிந்துகொண்டு அவனுடையதேவபத்திமாயமாயிருந்ததாக நினைத்துப்பேசினது.

அப்போது தேமானியனாகிய எலிப்பாஸ் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது,

௨ நாங்கள உமமுடனேபேச வகைபார்த்தால ஆயாசப்படுவீரோ. ஆனாலவசனிக்காதபடிக்கு அடக்கிக்கொள்ளத்தக்கவனார்.

௩ இதோ, நீர் அநேகருக்குப்புத்திசொல்லி இளைத்தகைகளைத்திடப்படுத்தினீர்.

௪ விழுகிறவனை உம்முடையவார்த்தைகள திடப்பபண்ணித்தள்ளாடுகிறமுழங்காலகளைப்பலப்படுத்தினீர்.

௫ இப்போதோவென்றால் இது உம்முடையமேல் வந்தபடியினாலே ஆயாசப்படுகிறீர்; இது உம்மைத்தொட்டதினாலே நீர் கலங்குகிறீர்.

௬ உம்முடைய தேவபக்தி உம்முடைய உறுதியும், உம்முடைய வழிகளின் உத்தமம் உம்முடைய நம்பிக்கையுமாயிருக்கவேண்டியதல்லவோ?

௭ குற்றமில்லாமல் அழிந்தவனார். செம்மைமார்க்கத்தார் அதம்பண்ணப்பட்டது எப்போவென்கிறதை நினைத்துக்கொள்ளுமேன்.

௮ நான் கண்டிருக்கிறபடி அநியாயத்தையுழுது வருத்தத்தை விதைத்தவர்கள் அதைத்தானே அறுக்கிறார்கள்.

௯ பராபரனுடைய சுவாசத்தினாலே அவர்கள் அழிந்து அவருடைய நாசியின் காற்றினாலே நிர்மூலமாகிறார்கள்.

௰ சிங்கத்தின் கெர்ச்சிப்பும் துஷ்டசிங்கத்தின் சத்தமும் இளஞ்சிங்கங்களின் பல்லுக்களும் முறிந்துபோம்.

௰௧ கிழச்சிங்கம் இரையில்லாததினாலே அழிந்து சிங்கக்குட்டிகள் சிதறுண்டுபோகிறது.

௰௨ இப்போதும் ஒரு வார்த்தை இரகசியமாய் என்னண்டைக்கு வந்தது. அதினுடைய சின்ன ஓசை என் செவியில் விழுந்தது.

௰௩ மனுஷர்மேல் அயர்ந்த நித்திரை யிறங்குகிறபோது இராத்ரிச்னைகளான பல விந்த்தோற்றங்கள் உண்டாயிருக்கையில்,

௰௪ திகிலும் நடுக்கமும் என்னைப்பிடித்து என் எலும்புகளையெல்லாம் நடுங்கப்பண்ணினது.

௰௫ அப்போது ஒரு ஆவி என் முகத்துக்கு முன்பாகக் கடந்தது. என் உடலின் மயிர்சிலுப்பிக்கொண்டது.

௰௬ அது நின்று ஒரு உருப்போலே என் கண்களுக்கெதிரேயிருந்தது. ஆனால் நான் அதின் ரூபத்தை அறிந்ததில்லை. அமைச்சலுண்டானபின் நான் கேட்ட சத்தமாவது,

௰௭ மனுஷன் பராபரனைப்பார்க்க நீதிமானாயிருப்பானோ. ஒரு புருஷன் தன்னையுண்டாக்கினவரைப்பார்க்கச் சுத்தமாயிருப்பானோவென்றது.

௰௮ இதோ, அவர் தம்முடைய வேலையாட்களை நம்பாமல் தம்முடைய தூதரின்மேலே புத்தியில்லாமையைச் சுமத்துவாரே.

௰௯ களிமண்வீடுகளில் வாசம்பண்ணி, மண்ணில் அஸ்திபாரப்பட்டுப் பொட்டரிக்கப்படுகிறவர்கள்மேல் எத்தனையதிகம்.

௨௰ அவர்கள் காலமே துவக்கிச் சாயுங்காலமாகுமட்டும் நொறுங்குண்டு, ஒருவருங் கவனியாமல் நித்திய அழிவடைகிறார்கள்.

௨௰௧ அவர்களிலிருக்கிற அவர்களுடைய மகிமை போய்விடுமல்லவோ நியாயமில்லாமற்சாகிறார்கள்.

௫. அதிகாரம்.

ஏலிப்பாஸ் பொல்லாதவர்களுடைய வாழ்வின் வழுவுதலைக் காண்பித்து யோபுக்குத் தன்னைப் பராபரனுக்கு முன்பாகத் தாழ்த்துகிறதற்குப் புத்திசொன்னது.

இப்போதும் உமக்காக மறுவுத்தரவுசொல்லுவாருண்டோவென்று கூப்பிடுமேன்? பரிசுத்தவான்களில் எவனிடத்தில் கைநோக்கிப்பார்ப்பீர்?

௨ ஏனென்றால் நிர்மூடனையே மனமடிவு கொல்லும். புத்தியில்லாதவனை எரிச்சல் மடிவிக்கும்.

௩ நிர்மூடன் ஒருவன் வேர்ப்பிடித்திருக்கிறதை நான் கண்டு உடனே அவன் வாசஸ்தலத்தைச் சபித்தேன்.

௪ அவன் பிள்ளைகள் இரட்சிப்புக்குத் தூரமாகித் தப்புவிப்பாரில்லாமல் வாசலில் நொறுங்கப்பட்டார்கள்.

௫ அவனுடைய அறுப்பைப் பசித்தவன் தின்று முட்செடிகளுக்குள்ளுமிருந்து அதைப் பறித்தான். பறிகாரன் அவன் ஆஸ்தியை விழுங்கினான்.

௬ ஏனெனில் அக்கிரமம் மண்ணிலிருந்து புறப்படாமலும் வருத்தம் பூமியிலிருந்து முளைக்காமலும்,

௭ அக்கினியின் பொறிகள் உயரப் பறக்கிறதுபோல மனுஷன் கஸ்திப்படுகிறதற்குப் பிறந்தான்.

௮ ஆனால் நான் பராபரனுடைய நியாயத்தை ஆராய்ந்து என் வசனத்தைப் பராபரனுக்கு நேராகத் திருப்பினாலே தாவீர்.

௯ அவர் ஆராய்ந்துமுடியாத பெரியகாரியங்களையும் எண்ணமுடியாத அதிசயங்களையுஞ்செய்கிறார்.

௰ தாழ்ந்தவர்களை உயர்த்திவைக்கவும் இந்தடவாயத்துக்கிக்கிறவர்கள் இரட்சிக்கப்பட்டு உயரவும்,

௰௧ அவர் பூமியின்மேல் மழையைக் கட்டளையிட்டு: வெளிகளின்மேலே தண்ணீர்களை வரவிடுகிறார்.

௰௨ தந்திரக்காரரின் கைகள் காரியத்தை முடிய நடத்தக்கூடாதபடிக்கு அவர் அவர்கள் நினைவுகளை அவத்தமாக்குகிறார்.

௰௩ அவர் ஞானிகளை அவர்கள் தந்திரத்திலே பிடிக்கிறார். அதினாலே திரியாபுரக்காரரின் ஆலோசனை கவிழ்ந்துபோகிறது.

௰௪ பகற்காலத்தில் அந்தகாரத்துக்கு நேராகி மத்தியானவேளையிலே இராவிலிருக்கிறதுபோலே தடவித்திரிகிறார்கள்.

௰௫ ஆனால் எளியவனை அவர்கள் வாயிலிருக்கிற பட்டயத்துக்கும் பெலவான் கைக்கும் விலக்கி இரட்சிக்கிறார்.

௰௬ அப்படியே தரித்திரனுக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் அக்கிரமமானது தன்வாயைமூடும்.

௰௭ இதோ, பராபரன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான். ஆகையால் சர்வத்துக்கும் வல்லவருடைய கண்டனையை வெறுக்காதேயும்.

௰௮ ஏனெனில் அவர் நோவுண்டாக்கித் திரும்பக் கட்டுகிறார். அவர் காயப்படுத்துகிறார். அவருடைய கை திரும்ப ஆற்றுகிறது.

௰௯ ஆறு இக்கட்டுகளுக்கு உம்மை நீங்கலாக்குவார். ஏழாவதிலும் பொல்லாப்பு உம்மைத் தொடாதிருக்கும்,

௨௰ பஞ்சகாலத்திலே அவர் உம்மை மரணத்துக்கும் யுத்தத்திலே பட்டயத்தின் வெட்டுக்கும் விலக்கிமீட்பார்.

௨௧ நாவின் சவுக்குக்கும் மறைக்கப்படுவீர், பாழ்க்கடிப்பு வரும்போது பயப்படாமலுமிருப்பீர்.

௨௨ பாழ்க்கடிப்பையும் பஞ்சத்தையும் நகைப்பீர், பூமியின் மிருகங்களுக்குப் பயப்படாமலுமிருப்பீர்.

௨௩ ஏனெனில் வெளியின் கல்லுகளோடே உமக்கு உடம்படிக்கையிருக்கும், வெளியின் மிருகஜீவன்களும் உம்மோடே சமாதானமாயிருக்கும்.

௨௪ உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்குமென்பதை நீர் கண்டறிந்து உம்முடைய வாசஸ்தலத்தைப் பழுதுவராமல் விசாரிப்பீர்.

௨௫ உம்முடைய வித்து பெருகி உம்முடைய சந்ததியார் பூமியின் பூண்டுகளைப் போலிருப்பார்களென்கிறதை யறிந்துகொள்வீர்.

௨௬ தானியம் ஏற்றகாலத்திலே அம்பாரமாய்க் கட்டப்படும்போல முதிர்வயதிலே கல்லறையில் வந்து சேருவீர்.

௨௭ இதோ, நாங்கள் ஆராய்ந்தறிந்தது இத்தனை இப்படியிருக்கிறது. இதை நீர் கேட்டு உமக்கு நன்மையாக அறிந்துகொள்ளுமென்றான்.

௬. அதிகாரம்.

யோபு தன் நிர்ப்பந்தத்தைக் காண்பித்துத் தன் சிநேகிதர் தன்னை அநியாயமாய்க் கடிந்துகொள்ளுகிறதற்காக அங்கலாய்த்தது.

யோபோவென்றால் பிரதியுத்தாரமாய்ச் சொன்னதாவது,

௨ என்னுடைய சஞ்சலம் நிறுக்கவே நிறுக்கப்பட்டு என்னுடைய நிர்ப்பந்தமெல்லாம் தராசிலே வைக்கப்பட்டால் தாவிலை.

௩ ஏனெனில் அது இப்போது கடற்கரை மணலைப்பார்க்கப் பாரமாயிருக்கும் ஆகையால் என்னுடைய வார்த்தைகள் உள்ளடங்கிப்போம்.

௪ ஏனென்றால் சர்வத்துக்கும் வல்லவரின் அம்புகள் எனக்குள் இறங்கியிருக்கிறது. அதுகளின் எரிவை என்னுடைய ஆவி குடிக்கிறது. பராபரனுடைய பயங்கரங்கள் எனக்கு முன்பாக அணியணியாய் நிற்கிறது.

௫ புல்லிருக்கிற இடத்திலே காட்டுக்கழுதை கத்துமோ, தன்னுடைய தீனியிருக்கிற இடத்தில் எருது கூப்பிடுமோ.

௬ ருசியில்லாதது உப்பில்லாமற் சாப்பிடக்கூடுமோ, முட்டையின் வெள்ளைக்கருவில் ருசியுண்டோ.

௭ உங்கள் வார்த்தைகளை என்னாத்துமா தொடமாட்டேனென்கிறது. அதுகள் கும்மட்டவெடுக்கிற என்னுடைய போசனத்துக்கொத்ததுகள்.

௮ என்னுடைய மன்றாட்டு எனக்கு வந்து நான் வரப்பார்த்திருக்கிறதைப் பராபரன் எனக்குக் கொடுத்து,

௯ பராபரன் என்னை நொறுக்கச் சித்தமாயிருந்து தம்முடைய கையை என்னைவிட்டெடுத்து என்னைத் தறுண்டித்தால் தாவிலை.

௰ அது இன்னம் எனக்கு ஆறுதலாயிருக்குமே, அப்பொழுது என்னைத் தப்பவிடாத நோவிலே மரத்திருப்பேன். ஏனென்றால் பரிசுத்தமுள்ளவருடைய வார்த்தைகளை நான் மறைத்ததில்லை.

௰௧ நான் காத்துக்கொண்டிருக்க என்னுடைய பெலன் எம்மாத்திரம் என் ஜீவனை நீடித்திருக்கப்பண்ண என் முடிவேது,

௰௨ என்னுடைய பெலன் கல்லுகளின் பெலனோ, என் மாம்சம் வெண்கலமோ,

௰௩ எனக்குத் தவியான உதத்தாவு எனக்குள்ளில்லையோ, மெய்ஞ்ஞானம் என்னைவிட்டு வாங்கிப்போயிற்றே.

௰௪ உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் தயவு காண்பிக்கப்படவேணும். ஆனால் இவன் சர்வத்துக்கும் வல்லவருக்குப் பயப்படாதே போகிறான்.

௰௫ என்னுடைய சகோதரர் ஆற்றைப்போல மோசம்பண்ணுகிறார்கள். ஆறுகளின் வெள்ளத்தைப்போலக் கடந்துபோகிறார்கள்.

௰௬ அதுகள் குளிர்காலப்பனியினாலும் உறைந்த மழை அதுகளிலுருகினதினாலும் அலைவிரிசலாயவந்துகறுத்து,

௰௭ உஷ்ணமாகிற காலத்திலே வற்றி அனல்பட்டபோது தங்கள் ஸ்தலத்திலிருந்து வழிந்துபோகிறது.

௰௮ அதுகளுடைய வழிகளின்போக்குகள் இங்குமங்குமாகிறது. அதுகள் விருதாவிலே ஏறிமரணபின் ஒன்றுமில்லாமற்போம்.

௰௯ தேமாவின் பயணக்காரர் பார்த்துத் தேடிச் சேபாவின் பயணக்கூட்டங்கள் அதுகள்மேல் நம்பிக்கைவைத்து,

௨௰ தாங்கள் பட்டு நம்பினதினாலே வெட்கப்படுகிறார்கள். அவ்விடம் மட்டும் வந்து கலங்கிப்போகிறார்கள்.

௨௧ அதெனனவெனறால இபபோது நீங கள ஒனறுககு முதவாமற் போனீர்கள. என் கலங்குதலைககணடு ஐயப்படுகிறீர்கள.

௨௨ எனககேதாகிலுங கொணடுவாருங களெனறும உஙகள ஆஸதியில எனககுயா தொரு அதியாவைக்கொடுஙகளெனறும,

௨௩ அலலது சததுருவினகைக்கு எனனைத் தப்புவியுஙகள. வலலடிககாரரினகைக கு எனனை நீஙகலாககி மீடடுககொளளுஙக ளெனறும நான்சொனனேனோ,

௨௪ எனனை உபதேசியுஙகள நானமவு னமாயிருபபேன, நான எதிலேபிசகிபபோ னேனெனபதையெனககு அறியபபடுதது ஙகள.

௨௫ செமமையானவார்ததைகளில என னகடினமிருககிறது. உஙகளில ஆராகிலுங கடிநதுகொளளத்தக்ககாரியமெனன.

௨௬ கடிநதுகொளளநீஙகள வார்ததை களையோசிததுத்திடனறறவனுடைய வார் ததைகளைககாறறிலேவிடடுவிடுகிறீர்களோ.

௨௭ இபபடிசசெயது திககறறவன மே லேநீஙகளவிழுநது உஙகள சிநேகிதனுக குபபடுகுழியைவெடடுகிறீர்கள.

௨௮ இபபோதும உஙகளுககுச சித்த முணடானால எனனைநோககுஙகள. அப போது நானபொயசொலலுகிறேனோவெ னறு உஙகளமுகததுககுமுனபாகத தெரிய வரும.

௨௯ நீஙகளிபபடித்திருமபினாலும அக கிரமஙகாணுதிருககும, அபபடித்திருமபினா லும எனனுடைய நீதி அதிலேவிளஙகும.

௩௰ எனனுடைய நாககிலே அககிரமம் உணடோ, எனனுடையவாய என திற்பநத ஙகளைப்பகுத்தறிவிககாதிருககுமோ.

௭. அதிகாரம்.

யோபுதனனுடைய பெரிய உபததிரவததை விவரிததுசொலலுகிறது.

மனுஷனுககுப பூமியினமேலபோரா டடமுணடலலவோ, அவன நாட்கள ஒரு கூலிககாரன நாட்களைபபோலிருககிறதலல வோ.

௨ ஒருவேலையாள நிழலைவாஞ்சிககிறது ஒரு கூலிககாரனதன கூலியைவரபபார்ததிருக கிறதுபோல,

௩ மாயையானமாதஙகள எனனுடைய சுதநதரமாகிபபிரயாசமான இராததிரிகள எனககுககுறிககபபடடது.

௪ நான படுததுககொளளுகிறபோது நான எழுநதிருபபதெபபோது, இராததி ரிகாலஞ் சரியாவதெபபோதெனறு சொல லிககிழககுவெளுககிறநேரமடடும அரண டுபுரளுகிறதினால எனககுபபோதுமெனறு போகிறது.

௫ எனனுடையமாம்சமபூச்சிகளினாலும அடைபபடறறின புழுதியினாலும மூடபப டடிருககிறது. எனனுடையதோலவெடிதது அருவருபபாயிறறு.

௬ எனனுடைய நாட்கள நெயகிறவன எறிகிறநாடாவிலுஞ்சீவிரமாய ஓடி நமபி க்கையில்லாமலமுடிநதுபோகும.

௭ எனனுடையபிராணனகாறறைபபோ லிருககிறதெனறும எனகண இனிநனமை யைக்காணபபோகிற திலலையெனறும நினைத்தருளும!

௮ இபபோது எனனைக்காணகிறவர்களு டைய கண்கள இனி யெனனைப்பார்ப்பதிலலை. உமமுடைய கணகள எனமேலிருககிறது. ஆனால நான இலலாதேபோகிறேன.

௯ ஒருமேகமபறிநதுபோகிறதுபோல பாதாளக்குழியில இறஙகுகிறவன திரும்பி ஏறிவருவதிலலை.

௰ இனிதனவீடடுககுததிருமபான. அவனஸதலம இனி அவனையறியாது.

௰௧ ஆகையினாலே நானும எனவாயை அடக்காமல என ஆவியின இடுக்கததிலே பேசி என ஆததுமததின கசபபிலே அங கலாயபபேன.

௰௨ தேவரீர் எனனைககாவலவைககிற தற்கு நான ஒருசமுததிரமோ நான ஒரு திமிஙகலமோ?

௰௩ எனனுடையகடடில எனக்காறுதல கொடுககுமெனறும எனனுடையபடுககை எனனுடைய தவிபபைககுறைககுமெனறு ம நானசொனனால,

௰௪ நீர்சொப்பனஙகளினால எனனைக்கல ஙகபபணணித்தரிசனைகளால எனககுத்திகி லுணடாககுகிறீர்.

௰௫ ஆதலால என ஆததுமம் நெருககு ண்டுசாகிறதையுமஎனனெலுமபுகளோடே உயிரோடிருககிறதைபபார்க்கமரணததை யுநதெரிநதுகொளளும.

௰௬ இபபடியிருககிறதைவெறுககிறேன இபபடியெனறும உயிரோடிருககமாடடே ன எனனைபபோகவிடும. ஏனெனில என நாட்களமாயைதானே.

௰௭ மனுஷனை நீர் ஒருபொருட்டாய எணணுகிறதற்கும அவனமேல உமமுடை ய இருதயததைவைககிறதற்கும,

௰௮ அவனைககாலமாறவிசாரிதது அடி க்கடி அவனைசசோதிககிறதற்கும அவன எமமாததிரம.

௰௯ நான என உமிழ்நீரைவிழுஙகுமடடு ம எத்தனைகாலம எனனை நீஙகாமலும எனனைவிடாமலுமிருபபீர்.

௨௰ மனுஷரைக்காப்பவரே! பாவஞ்செ ய்தேனானால உமககுநானசெயயவேணடிய தெனன? நான எனககுத்தானே பாரமா யிருககுமபடிககு நீர் எனனை உமககுஇலக் காகவைத்ததென்ன.

உக என் மீறுதலை நீர் மன்னிக்காமலும் என் அக்கிரமத்தை நீக்காமலும் இருப்பானேன், ஏனென்றால் இப்போது மண்ணிலே படுத்துக்கொள்ளுவேன்; விடியற்காலத்திலே என்னைத் தேடினீரானால் இல்லாதிருப்பேனென்றான்.

அ. அதிகாரம்.

பில்தாத் பேசத்தவங்கிப் பராபரனுடைய நீதியைப் பிரதிபாதித்துக்கொண்டு யோபைப் புத்திசொல்லி அறிவிக்கிறது.

அப்போது சூகியனான பில்தாத் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது.

உ நீர் எத்தனைமட்டும் இப்படிக்கொத்தவைகளைப் பேசுவீர். எந்தமட்டும் உம்முடைய வாயின் வார்த்தைகள் வலுவான காற்றைப்போலிருக்கும்.

௩ பராபரன் நியாயத்தைப் புரட்டுவாரோ. சர்வத்துக்கும் வல்லவர் நீதியைப் புரட்டுவாரோ.

ச உம்முடைய பிள்ளைகள் அவருக்கு விரோதமாகப் பாவஞ்செய்திருந்தால் இவர் அவர்களை அவர்கள் பாதகத்தின் ஆக்கினைக்கு ஒப்புக்கொடுத்தார்.

ரு நீர் பராபரனைக் காலமே தேடி சர்வத்துக்கும் வல்லவரை நோக்கி விண்ணப்பஞ்செய்து,

சா சுத்தமும் செம்மையுமாயிருந்தீரானால் அப்போது அவர் உமக்காக விழித்து நீதியுள்ள உம்முடைய வாசஸ்தலத்தைச் சாங்கோபாங்கமாக்குவார்.

எ உம்முடைய துவக்கங் கொஞ்சமாயிருந்தாலும் உமக்கிருக்கிறது பிற்பாடு மிகவும் வர்த்திக்கும்.

அ இதற்காக நீர் முந்தின தலைமுறையிலே விசாரித்து அவர்கள் பிதாக்களின் செய்திகளை ஆராய்வதைப் பாருமேன்.

கூ ஏனெனில் நாம் நேற்றுண்டாகி ஒன்றுமறியாதிருக்கிறோம். ஏனென்றால் பூமியின் மேல் நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது.

ய அவர்கள் உம்மை உபதேசித்து உமக்கு அதைச் சொல்லி, தங்கள் இருதயத்திலிருக்கும் நியாயங்களை வெளிப்படுத்துவார்களல்லவோ.

யக சேறில்லாமல் நாணல் ஓங்கி வளருமோ, தண்ணீரில்லாமற் கோரைப்புல் வளருமோ.

யஉ இல்லாவிட்டால் அது இன்னுந் தன் பசுமையோடிருந்தும் அறுக்கப்படாதிருந்தும் மற்றப் புல்லையெல்லாம் பார்க்க வாடிப்போமல்லவோ.

யங பராபரனை மறக்கிற எல்லாருடைய வழிகளும் அப்படித்தானிருக்கிறது. மாயக்காரன் எதிர்பார்த்துக்கொள்ளுதல் அழியும்.

யச அவனுடைய வீண் நினைவு அறுந்துபோய் அவனுடைய நம்பிக்கை சிலந்திப் பூச்சிக்கூட்டைப்போலிருக்கும்.

யரு அவன் தன் வீட்டின்மேல் ஊன்றி நின்றான், ஆனாலது உறுதியாயிராது. அதைப் பிடித்துக்கொண்டிருக்கிறான், ஆனாலும் அது நிற்காது.

யசா வெயிலில் எதிர்க்காற்றுக்கு முன்னே அவன் பசுமைச்செடி, அதின் கொடிகள் அவனுடைய தோட்டத்தின்மேலே படருகிறது.

யஎ அதின் வேர்கள் கற்குவியலிற் சிக்கிக் கற்பாறைக்கு நேரிடும்.

யஅ அது அதின் இடத்திலிருந்து பிடுங்கப்பட்டு நிர்மூலமானபின் அது இருந்த இடம் உன்னை நான் கண்டதில்லையென்று அதை மறுதலிக்கும்.

யகூ இதோ, அவன் மார்க்கத்தின் மகிழ்ச்சி இப்படிப்போகிறது, ஆனால் வேறே பேர் மண்ணிலிருந்து முளைப்பார்கள்.

உய இதோ, பராபரன் உத்தமனை வெறுக்கிறதுமில்லை பொல்லாதவர்களுக்குக் கைலாகு கொடுக்கிறதுமில்லை.

உக நீர் உத்தமனாயிருக்கும்போது உம்முடைய வாயை நகைப்பினாலும் உமது உதடுகளைக் கெம்பீரத்தினாலும் நிரப்பப்படுமட்டும் இப்படிக்காணீர்.

உஉ உம்மைப் பகைக்கிறவர்கள் வெட்கத்தால் மூடப்படுவார்கள், ஆகாதவர்களுடைய கூடாரம் இல்லாமற்போமென்றான்.

கூ. அதிகாரம்.

நீதியும் ஞானமும் பெலனுமுள்ள பராபரனுடைய இரகசியமான வழிகளை அறியவும் அவரோடே வழக்காடவுங் கூடாதென்று யோப் காணபித்தது.

யோப் மறுவுத்தரவு கொடுத்துச் சொன்னதாவது,

உ ஆம். இது இப்படியிருக்கிறதென்றறிவேன். பராபரனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி.

௩ அவர் இவனோடே வழக்காடச் சித்தமாயிருந்தால் ஆயிரத்திலொன்றுக்காகிலும் அவருக்கு உத்தரவுசொல்லமாட்டான்.

ச அவர் இருதயத்திலே ஞானமுள்ளவரும் பெலத்தில் பராக்கிரமருமாயிருக்கிறார். அவருக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்திச் சுகித்தவனார்.

ரு அவர் பர்வதங்களை அதுகளறியாமற் பேர்த்துத் தம்முடைய கோபத்தில் அதுகளைப் புரட்டிப்போடுகிறார்.

சா அவர் பூமியை அதின் தாண்கள் அதிரத்தக்கதாய் அதின் ஸ்தலத்தைவிட்டு அசைக்கிறார்.

எ அவர் சூரியனுக்குச் சொல்ல அது உதிக்காதிருக்கும். அவர் நட்சத்திரங்களை முத்திரிக்கிறார்.

அ அவர் ஒருவர் வானங்களை விரித்துச் சமுத்திர அலைகளின்மேல் நடக்கிறவர்.

கூ அவர் அயிப்பதையும் மிருகசீரிஷத்தையுஞ் சத்தநட்சத்திரத்தையுந் தெற்கத்திமண்டலங்களையுமுண்டாக்கினவர்.

௰ ஆராய்ந்து முடியாத பெரியகாரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர்செய்கிறார்.

௰க இதோ, நான் காணாமல் அவர் என்னைக் கடந்து நான் அவரையுணராமல் அவர் மாறுபட்டுப்போகிறார்.

௰உ இதோ, அவர் பறித்துக்கொண்டு போகிறபோது அவரை மறிப்பவனார். நீர் என்னசெய்கிறீரென்று அவரைக் கேட்பவனார்.

௰௩ பராபரன் தம்முடைய கோபத்தைத் திருப்பார், பெருமையாய்ச் சகாயம்பண்ணுபவர்கள் அவர்கீழ்ப்பணியவேணும்.

௰ச இப்படியிருக்கக்கொள்ள நான் அவருக்கு மறுமொழி கொடுத்து அவரோடே பேச எனக்கான வார்த்தைகளைத் தெரிந்துகொள்ளுகிறதற்கு நான் எம்மாத்திரம்.

௰ரு நான் நீதிவிளங்கப்பட்டாலும் அவருக்கு மறுமொழி சொல்லக்கூடாமல் என்னை நியாயந்தீர்க்கிறவரை இரக்கத்துக்குக் கெஞ்சுவேன்.

௰௬ எனக்கு மறுஉத்தரவு கொடுப்பாரென்று நான் கூப்பிட்டாலும் அவர் என் சத்தத்துக்குச் செவிகொடுப்பாரென்று நம்பேன்.

௰எ ஏனென்றால் அவர் புசலினாலே என்னை நொறுக்க, முகாந்திரமில்லாமல் அநேக காயங்களை எனக்கு வருத்துவிக்கிறார்.

௰அ நான் சுவாசம்வாங்குகிறதற்கு எனக்கிடங்கொடாமற் கசப்புகளால் என்னைத் திருத்தியாக்குகிறார்.

௰கூ சத்துவத்தைப்பார்த்தால் இதோ, அவரே பெலத்தவர், நியாயத்தைப் பார்த்தால் என்னைவரவழைத்து விசாரிப்பவனார்?

உ௰ நான் என்னை நீதிமானாக்கினாலும் என் வாய் என்னைக் குற்றஞ்சுமத்தும், நான் உத்தமனென்றாலும் என்னை மாறுபாடானவனென்று தீர்ப்பார்.

உக நான் உத்தமனென்றாலும் என்னைத் தானே நானெண்ணேன், என் சீவனை அரோசிக்கிறேன்.

உஉ இந்த ஒருகாரியம் நமக்கு வழக்காயிருக்கிறது. ஆகையினாலே அதைச்சொல்லுகிறேன். அதென்னவெனில் உத்தமனையும் ஆகாதவனையும் அவர் அழிக்கிறார் என்பதுதானே.

உ௩ சவுக்கானது அசப்பிலே வாதித்துக்கொல்லுகிறபோது குற்றமில்லாதவர்களின் சோதனைக்கு நகைக்கிறார்.

உச தேசம் ஆகாதவன் கையிலொப்புக்கொடுக்கப்படும். அதிலிருக்கிற நியாயாதிபதிகளின் முகத்தை மூடிப்போடுகிறார். அவர் இதைச்செய்கிறதில்லையென்றாற் பின்னை யார் இதைச்செய்கிறார்.

உரு என்னுடைய நாட்கள் அஞ்சல்காரனைப்பார்க்கத் தீவிரித்து நன்மைகாணாமற் பறந்துபோம்.

உ௬ அவைகள் நாணற்ப ஓடுகிற கப்பல்களைப்போலவும் இரையின்மேற் பாய்கிற கழுகைப்போலவுங் கடந்துபோம்.

உஎ என்னுடைய அங்கலாய்ப்பை நான் மறந்து என் முகத்தின் துக்கத்தைவிட்டுத் திடங்கொள்ளவேணுமென்று சொன்னாலும்,

உஅ என் நோவுகளெல்லாவற்றையும் பயப்பட்டிருக்கிறேன், என்னைக் குற்றமில்லாதவனாக நடத்தீரென்றறிவேன்.

உகூ நான் பொல்லாதவனாயிருந்தால் நான் இத்தனை விருதாவாய்ப் பிரயாசப்படுவானேன்?

௩௰ நான் என்னை உறைந்த மழைத்தண்ணீராற் முழுகி என்கைகளைச் சவுக்காரத்தாற் சுத்தம்பண்ணினாலும்,

௩க அப்போதும் நீர் என்னை என் வஸ்திரங்கள் எனக்கு அருவருப்பாயிருக்கும்படிக்குச் சேற்றுப்பள்ளத்திலே அமிழ்த்துவீர்.

௩உ ஏனென்றால் நான் அவருக்குப் பிரதியுத்தரஞ்சொல்லுகிறதற்கும் நாங்கள் கூடி நியாயத்திற்கு வருகிறதற்கும் அவர் என்னைப்போல மனுஷனல்ல.

௩௩ எங்களிருவர் பேரிலே தன்கையை வைக்கத்தக்க மத்தியஸ்தன் எங்களுக்குள்ளேயில்லை.

௩ச அவர் தமது மிலாற்றை என்னைவிட்டகற்றுவாராக. அவருடைய பயங்கரம் என்னைக் கலங்கப்பண்ணாதிருப்பதாக.

௩ரு அப்போது நான் பேசி அவருக்குப் பயப்படாதிருப்பேன். ஏனென்றால் நான் நினைக்கிறபடி என்காரியமில்லை.

௰. அதிகாரம்.

யோபு இன்னம் பராபரனை நோக்கிப்பண்ணின அங்கலாய்ப்பான விண்ணப்பம்.

நான் உயிரோடிருக்கிறதை என் ஆத்துமம் அரோசிக்கிறது, நான் என் துயரத்துக்கு எனக்குள்ளே இடங்கொடுத்து, என் மனச்சஞ்சலத்திலே பேசுவேன்.

உ நான் பராபரனுடனே என்னைத் துன்மார்க்கனென்று தீர்க்காதேயும். தேவரீர் எதினிமித்தம் என்னோடே வழக்காடுகிறீரென்று எனக்குத் தெரியப்பண்ணுமென்பேன்.

௩ நீர் என்னை ஒடுக்கி உம்முடைய கைகளின் வேலையை வெறுத்து ஆகாதவர்களின் யோசனையைக் கிருபாகடாட்சமாய்ப் பார்க்கிறது உமக்கு நன்றாயிருக்குமோ.

௪ மாமிசக்கண்கள் உமக்குண்டோ, மனுஷன் பார்க்கிறபிரகாரமாய்ப் பார்க்கிறீரோ.

௫ நீர் என் அக்கிரமத்தை நோண்டித் தேடி என் பாவத்துக்காக ஆராய்ந்து விசாரிக்கிறதற்கு,

௬ உம்முடைய நாட்கள் ஒரு மனுஷனுடைய நாட்களைப்போலும் உம்முடைய வருஷங்கள் ஒரு புருஷனுடைய நாட்களைப்போலுமிருக்கிறதோ.

௭ நான் துன்மார்க்கனல்லவென்பது உம்முடைய அறிவிலிருக்கிறது. ஆனால் உம்முடைய கைக்கு என்னைத் தப்புவிக்கிறவன் இல்லை.

௮ உம்முடைய கரங்கள் என்னையும் என்னைச் சூழ்ந்திருக்கிற எல்லாவற்றையும் உண்டாக்கிப் படைத்திருந்தும் என்னை நிர்மூலமாக்குகிறீர்.

௯ தேவரீர் என்னைக் களிமண்ணைப்போல உண்டாக்கினீரென்பதையும் என்னைத் திரும்ப மண்ணாகப்போகப்பண்ணுவீரென்பதையும் நினைவுகூரும்.

௰ தேவரீர் என்னைப் பாலைப்போல வார்த்துத் தயிரைப்போல என்னை உறையப்பண்ணவில்லையோ.

௰௧ தோலையும் சதையையும் தரித்து என்னை எலும்புகளாலும் நரம்புகளாலும் இசைத்தீர்.

௰௨ எனக்கு உயிரைத் தந்ததுமல்லாமல் உபகாரத்தையும் எனக்குச் செய்துவந்தீர். உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றிற்று.

௰௩ ஆனால் இவைகளை உம்முடைய மனதிலே வைத்திருக்கிறீர், இது உமக்குள்ளிருக்கிறதென்றறிவேன்.

௰௪ நான் பாவஞ்செய்தால் அதை நீர் கவனித்திலே விசாரித்து என் அக்கிரமத்தை நீக்கமாட்டீர்.

௰௫ நான் துன்மார்க்கனாயிருந்தால் எனக்கு ஐயோ, நான் நீதிமானாயிருந்தாலும் என் தலையை நான் எடுக்கக்கூடாது. கனவீனத்தால் திருப்தியானேன். என் சிறுமையைப் பாரும்.

௰௬ ஏனென்றால் அது பெருகுகிறது, சிங்கத்தைப்போல என்னை வேட்டையாடுகிறீர். பின்னும் ஆச்சரியமானபடி என்னை நடத்துகிறீர்.

௰௭ நீர் உம்முடைய சாட்சிகளை எனக்கெதிராக நிற்கவும் என்மேல் உம்முடைய கோபத்தைப் பெருகவும்பண்ணுகிறீர். வினைகளும் சேனையும் என்மேல் போராட்டமாய் எனக்குண்டு.

௰௮ நீர் என்னைக் கர்ப்பத்திலிருந்து புறப்படப்பண்ணினதென்ன, ஒரு கண்ணும் என்னைக் காணாததற்கு நான் அப்போதே செத்துப்போனாலதாவில்லை.

௰௯ அப்போது நான் ஒருக்காலுமில்லாததுபோலிருந்து கர்ப்பத்திலிருந்து பிரேதக்குழிக்குக் கொண்டுபோகப்பட்டிருப்பேன்.

௨௰ என்னுடைய நாட்கள் கொஞ்சமல்லவோ.

௨௰௧ காரிருளும் மரண அந்தகாரமுமான இருண்ட தேசத்துக்கும் அந்தகாரமாயிருக்கிற ஒழுங்கில்லாத மரண நிழலின் தேசத்துக்கும் நான் போய்த்திரும்ப வராதவனாகுமுன்னே,

௨௰௨ நான் சற்று ஆறுதலடையும்படிக்குத் தேவரீர் ஓய்ந்து என்னைவிட்டிருமென்றான்.

௰௧. அதிகாரம்.

யோபு தன்னை நீதிமானாக்குகிறதிலே மிஞ்சிப்போகிறானென்று சோப்பார் அவன்மேல் குற்றஞ்சாட்டினது.

௧ அப்போது நாகமாத்தியனான சோப்பார் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது,

௨ வார்த்தைகளின் ஏராளத்துக்கு எதிர் உத்தரவு சொல்லப்படத் தேவையில்லையோ, வாயாடி நீதிமானாக்கப்படுவானோ.

௩ உம்முடைய வீம்பு வார்த்தைகளுக்கு மனுஷர் மவுனமாயிருப்பார்களோ, நீர் பரியாசம்பண்ணும்போது ஒருவரும் உம்மை வெட்கப்படுத்தத் தேவையில்லையோ.

௪ நான் சொல்லிக்காண்பிக்கிறது சுத்தமென்றும் நான் தேவரீருடைய பார்வைக்குச் சுத்தமானவனென்றும் நீர் சொல்லுகிறீர்.

௫ ஆனால் பராபரன் பேசி, உமக்கெதிராகத் தம்முடைய உதடுகளைத் திறந்து,

௬ உமக்கு ஞானத்தின் இரகசியங்களை அறியப்படுத்தினால் நலமாயிருக்கும். ஏனென்றால் உன் நியாயத்தைப் பார்த்தால் அது இரட்டிப்புள்ளதாயிருக்கிறது. ஆகையால் உம்முடைய அக்கிரமத்தினிமித்தம் பராபரன் உம்மை மறந்தாரென்றறியும்.

௭ பராபரனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் கண்டுசேர்வதற்கும் வல்லவருடைய குறைவற்ற நியாயமட்டும் எட்டி அதைக் கண்டுபிடிப்பீரோ,

௮ அது வானம் அத்தனையாய் உயர்ந்தது. நீர் செய்யத்தக்கதென்ன, அது பாதாளத்திலும் ஆழமானது. நீர் அறியத்தக்கதென்ன,

௯ அதின் அளவு பூமியைப்பார்க்க நீளமும் சமுத்திரத்தைப்பார்க்க அகலமுமாயிருக்கிறது.

௰ அவர் கடந்துபோனாலும் அவர் அடைத்துப்போட்டாலும் அவர் கூட்டங்கூட்டினாலும் அவருக்குத் தடைபண்ணுபவன் யார்.

௰௧ ஏனென்றால் அவர் மாயையான மனுஷரை அறிவார் அவர் அக்கிரமத்தைக் கண்டும் அதை உணர்ந்துகொள்ளாரோ.

௰௨ மனுஷன் புத்தியில்லாமலிருந்தாலும் காட்டுக் கழுதைக்குட்டிக் கொப்பாகப் பிறந்திருக்கிறான் பெருநெஞ்சுள்ளவனாயிருக்கிறான்.

௰௩ நீர் உம்முடைய இருதயத்தை ஆயத்தப்படுத்தி உம்முடைய கைகளை அவருக்கு நேராக விரித்தாலதாவிலை.

௰௪ உம்முடைய கையிலே அக்கிரமம் உண்டாயிருந்தால் அதைத் தூரத்துக்கு அகற்றி அநியாயம் உம்முடைய கூடாரங்களில் வாசமாயிருக்கவொட்டாதிரும்.

௰௫ ஏனென்றால் அப்போது உம்முடைய முகத்தை மாசில்லாமல் ஏறெடுத்துப் பயப்படாமற் பெலப்பட்டிருப்பீர்.

௰௬ அப்போது நீர் வருத்தத்தை மறந்து அதைக் கடந்துபோன தண்ணீரைப் போல நினைப்பீர்.

௰௭ அப்போது உம்முடைய ஆயுசுகாலம் பட்டப்பகலைப்பார்க்க விளங்கிநிற்கும், இருள் அடைந்த நீர் விடியுங்காலத்தைப் போலிருப்பீர்.

௰௮ நம்பிக்கையுண்டாகையால் திடனாயிருப்பீர். தோண்டியெடுத்துச் சுகமாய்ப் படுத்துக்கொள்ளுவீர்.

௰௯ பயப்படுத்துவாரில்லாமற் படுத்துக்கொண்டிருப்பீர். அநேகர் உம்முடைய முகத்தை நோக்கி விண்ணப்பம்பண்ணுவார்கள்.

௨௰ ஆனால் ஆகாதவர்களுடைய கண்கள் பூத்துப்போய் அவர்கள் அடைக்கலம் அவர்களைவிட்டழிந்து அவர்கள் நம்பிக்கை சீவித்துப்போகுதலாயிருக்குமென்றான்.

௰௨. அதிகாரம்.

சனமார்க்கருக்குவெகுதரம் உபத்திரமும் துன்மார்க்கருக்குவாழ்வும் உண்டென்று யோபு காண்பித்துப் பராபரனுடைய உயர்ந்த வல்லமைக்கும் ஞானத்துக்கும் சாட்சிகொடுத்தது.

யோபு பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது.

௨ ஆம், நீங்களே ஞானமுள்ள சனம், உங்களுடனே ஞானஞ் சாகும்.

௩ எனக்கும் உங்களைப்போலப் புத்தியிருக்கிறது. நான் உங்களுக்கு லொங்குக்குறைந்தல்ல. இப்படிக்கொத்ததுகளுடைய அறிவு ஆருக்கில்லாதிருக்கும்.

௪ என் சிநேகிதரால் நான் நகைக்கப்பட்டுப் பராபரனை நோக்கிக் கூப்பிடுகிறேன். அவனெனக்கு மறுஉத்தரவருளுவார். உத்தமனுடைய நீதிமான் நகைப்புக்கிடமானவன்.

௫ ஆபத்துப்படுகிறவனுக்குச் சுகமாயிருக்கிறவனுடைய நினைவிலே உண்டாகிறது அசங்கதம். கால் இடறினவர்களுக்கு அது நேரிட்டிருக்கிறது.

௬ பாழ்க்கடிக்கிறவர்களின் கூடாரங்களுக்குச் சாங்கோபாங்கமும் பராபரனுக்குச் சினமுண்டாக்குகிறவர்களுக்கு அவர் தம்முடைய கையினாற்கொடுத்ததிலேயே சுகமுமுண்டு.

௭ இப்போதும் நீ மிருகங்களைக் கேள், அதுகள் உன்னைப் போதிக்கும். ஆகாசத்துப் பறவைகளைக் கேள், அதுகள் உனக்கு அறிவிக்கும்.

௮ அல்லது பூமியை விசாரித்துக்கேள், அது உன்னை உபதேசிக்கும்; சமுத்திரத்தின் மச்சங்கள் அதை உனக்கு விவரிக்கும்.

௯ கர்த்தருடைய கரம் இதைச்செய்ததென்று இதுகளெல்லாவற்றிலும் அறியாதவன் யார்.

௰ எல்லா உயிர்ப்பிராணிகளின் சீவனும் எல்லா மனுஷ மாமிசத்தின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது.

௰௧ வாய் போசனத்தை ருசிபார்க்கிறதுபோலச் செவி வார்த்தைகளைச் சோதித்துப் பார்க்கிறதில்லையோ.

௰௨ விருத்தாப்பியரிடத்தில் ஞானமும் வயதுசென்றவர்களிடத்தில் உணர்வுமிருக்கிறதே:

௰௩ எத்தனையதிகம், அவரிடத்தில் ஞானமும் வல்லமையுமிருக்கும். அவருக்குத்தான் ஆலோசனையும் உணர்வுமிருக்கிறது.

௰௪ இதோ, அவர் இடித்தாற் கட்டப்படுதலில்லை, அவர் மனுஷனை அடைத்தால் திறக்கப்படுதலில்லை.

௰௫ இதோ, அவர் தண்ணீர்களைத் தடுக்கில் அதுகள் சுவறிப்போம். அவர் அதுகளை விட்டால் பூமியைக் கீழ்மேலாக்கும்.

௰௬ அவரிடத்திலே பெலனும் மெய்ஞானமுமிருக்கிறது, மோசம்போகிறவனும் மோசம்போக்குகிறவனும் அவர் கையின் கீழிருக்கிறார்கள்.

௰௭ அவர் யோசனைக்காரரைக் கொள்ளையிட்டுக்கொண்டுபோய் நியாயாதிபதிகளின் புத்தியைப் பயித்தியமாக்குகிறார்.

௰௮ அவர் இராசாக்களுடைய சருக்கைக் கட்டவிழ்த்து அவர்கள் இடுப்புகளைக் கச்சைகட்டுகிறார்.

௰௯ அவர் மந்திரிகளைக் கொள்ளையிட்டுக் கொண்டுபோய்ப் பெலத்தோரைப் புரட்டிப் போடுகிறார்.

௨௰ அவர் நிசமுள்ளவர்களுடைய உதட்டை விலக்கி முதிர்வயதுள்ளவர்களின் ஆலோசனையை வாங்கிப்போடுகிறார்.

௨௧ அவர் பிரபுக்களின்மேல் அசங்கத்தையூற்றி வல்லமையுள்ளவர்களின் கச்சையைத் தளர்ந்துபோகப்பண்ணுகிறார்.

௨௨ அந்தகாரத்திலிருக்கிற ஆழங்களை அவர் வெளியரங்கமாக்கி மரணநிழலை வெளிச்சத்திலே புறப்படப்பண்ணுகிறார்.

௨௩ அவர் சாதிகளைப் பெருகவும் அழியவும் பண்ணுகிறார், அவர் சாதிகளைப் பரவவும் ஒடுங்கவும்பண்ணுகிறார்.

௨௪ அவர் தேசத்து சனத்தினுடைய தலைவரின் நெஞ்சை வாங்கிப்போட்டு அவர்களை வழியில்லாத அந்தரத்திலே அலையப்பண்ணுகிறார்.

௨௫ அவர்கள் வெளிச்சமற்ற இருளிலே தடவித்திரிகிறார்கள். அவர்களை வெறித்தவர்களைப்போலத் தடுமாறித்திரியப்பண்ணுகிறார்.

௰௩. அதிகாரம்.

யோபு தன்னுடைய சிநேகிதர் அநியாயமாய்த் தன்னைக் குற்றப்படுத்துகிறதினிமித்தம் அவர்களைக் கடிந்துகொண்டு பராபரனை நோக்கிப் பண்ணின விண்ணப்பம்.

இதோ, இதுகளெல்லாவற்றையும் என் கண் கண்டு என்னுடைய காது கேட்டு உணர்ந்துகொண்டிருக்கிறது.

௨ நீங்கள் அறிந்திருக்கிறதை நானும் அறிந்திருக்கிறேன், நான் உங்களுக்குத் தாழ்ந்தவனல்ல.

௩ சர்வத்துக்கும் வல்லவரோடே நான் பேசுவேன், பராபரனோடே என் நியாயத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்புவேன்.

௪ ஏனெனில் நீங்கள் பொய்யைப் பிணைக்கிறவர்களாமே, நீங்களெல்லாரும் காரியமில்லாத வயித்தியர்.

௫ நீங்கள் மவுனமாயிருக்கவேயிருந்தாலதாயின், அது உங்களுக்கு ஞானமாயிருக்கும்.

௬ நீங்கள் என் நியாயத்தைக் கேட்டு என் உதடுகள் சொல்லும் விசேஷங்களைக் கவனியுங்களேன்.

௭ நீங்கள் பராபரனுக்காக அநியாயங் கேட்பப்பேசி அவருக்காகக் கபடமாய் வசனிக்கவேணுமோ.

௮ அவர் முகத்தைப் பார்ப்பீர்களோ, பராபரனுக்காக வழக்காடுவீர்களோ.

௯ அவர் உங்களை ஆராய்ந்தால் அது உங்களுக்கு நன்மையோ, மனுஷனைச் சக்கந்தம்பண்ணுகிறதுபோல அவரைச் சக்கந்தம்பண்ணுவீர்களோ.

௰ நீங்கள் அந்தரங்கமாய் முகதாட்சணைபண்ணினால் அவர் உங்களைக் கண்டிக்கவே கண்டிப்பார்.

௰௧ அவருடைய மகத்துவம் உங்களைத் திடுக்கிடப்பண்ணாதோ, அவருடைய பயங்கரம் உங்கள்மேல் விழாதோ.

௰௨ நீங்கள் உங்கள் பேரை நினைக்கப்பண்ணும் அடையாளங்கள் சாம்பலுக்கு ஒப்பு, உங்கள் மேட்டிமைகள் சேற்றுக்குவியல்களுக்குச் சமானமானது.

௰௩ நான் பேசும்படிக்கு எனக்கு முன்பாக மவுனமாயிருங்கள், என்மேல் வருகிறது வரட்டும்.

௰௪ நான் என் பல்லுகளினால் என் சதையைப் பிடுங்கி என் பிராணனை என் கையிலே யோகக்கியத்துக்குள் வைப்பானேன்.

௰௫ இதோ, அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். ஆனால் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூசுகாரம்பண்ணுவேன்.

௰௬ அவர் என் இரட்சிப்புமாயிருப்பார். ஏனெனில் ஒருமாயக்காரன் அவருக்கு முன்பாக வரமாட்டான்.

௰௭ நீங்கள் என் வசனத்தையும் நான் சொல்லிக் காண்பிக்கிறதையும் உங்கள் செவிகளாற் கேட்கவேண்டுமென்றுங்கள்.

௰௮ இதோ, என்னுடைய நியாயத்தை ஒழுங்காய் வைத்திருக்கிறேன். நான் நீதிவிளங்கப்படுவேனென்று அறிவேன்.

௰௯ என்னோடே வழக்காடவேணுமென்றிருக்கிறவன் யார். இப்போது நான் மவுனமாயிருந்து சீவித்துப்போவேனே.

௨௰ இரண்டு காரியங்களைமாத்திரம் எனக்குச் செய்யாதிருப்பீராக. அப்போது உம்முடைய முகத்துக்கு முன்பாக ஒளித்துக்கொள்ளாதிருப்பேன்.

௨௧ உம்முடைய கையை என்னைவிட்டுத் தூரப்படுத்தும். உம்முடைய பயங்கரம் என்னைக் கலங்கப்பண்ணாதிருப்பதாக.

௨௨ அப்போது நீர் கூப்பிடும், நான் மறுஉத்தரவுகொடுப்பேன். அல்லது நான் பேசுவேன், நீர் எனக்கு மறுமொழியைத் தாரும்.

௨௩ என்மேலிருக்கிற அக்கிரமங்களும் பாவங்களும் எத்தனை; என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு அறிவியும்.

௨௪ தேவரீர் உம்முடைய முகத்தை மறைத்து என்னை உமக்குப் பகைஞனாக எண்ணிக்கொள்ளுவானேன்.

௨௫ காற்றடித்த சருகை நொறுக்குவீரோ, காய்ந்துபோன துரும்பைப் பின்தொடருவீரோ.

௨௬ ஏனெனில் தேவரீர் மகா கசப்பான தீர்ப்புகளை என்பேரில் எழுதி என் சிறுவயதின் அக்கிரமங்களை எனக்குப் பலிக்கப்பண்ணி,

௨௭ என் கால்களைத் தொழுவடித்துப்போட்டு என் வழிகளையெல்லாங் காவற்பண்ணுகிறீர். என் கால் அடிகளில் அடையாளத்தைப் போடுகிறீர்.

௨௮ இப்படிக் கெட்டவன் அழுகிப்போகிற வஸ்துவைப்போலும் பொட்டரித்த

வஸ்திரத்தைப்போலும் அழிந்துபோகக் கொள்ளாந்தானே.

௰௪. அதிகாரம்.

நரசீவனுக்குண்டானவொருநிச்சயத்தைப் போப் விவரித்து மரணத்திற்குமேலவாஞ்சையானது.

ஸ்திரீயினிடத்திற் பிறந்த மனுஷன் நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்.

௨ அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்டு நிலைநிற்காமல் நிழலைப்போல ஓடிப்போகிறான்.

௩ அப்படிப்பட்டவன்மேலே தேவரீர் உம்முடைய கண்களைத் திறந்துவைத்து உம்மோடே நியாயத்துக்கு என்னைக் கொண்டுவருகிறீர்.

௪ அசுத்தமானவர்களிலே சுத்தமான ஒருவனையாகிலுங் கண்டெடுக்கத்தக்கவனுண்டோ.

௫ அவனுடைய நாட்கள் இம்மாத்திரமென்று குறிக்கப்பட்டிருக்கையால் அவனுடைய மாதங்களின் தொகை உம்மிடத்திலிருக்கிறது. அவன் கடந்துபோகக்கூடாத எல்லையை அவனுக்கு ஏற்படுத்தினீர்.

௬ அவன் ஒரு கூலிக்காரனைப்போலே தன்னாளின் வேலையாய் முடிக்குமட்டும் இளைப்பாறியிருக்கும்படிக்கு உம்முடைய பார்வையை அவனை விட்டு விலக்கும்.

௭ ஒரு மரம் வெட்டிப்போடப்பட்டாலும் பின்னும் பயிராகுமென்றும் அதின் தளிர் துளிர்க்காதிருப்பதில்லையென்றும் அதற்கு நம்பிக்கையுண்டு.

௮ அதின் வேர் தரையிலே பழசாகி அதின் அடிக்கட்டை மண்ணிலே செத்தாலும்,

௯ தண்ணீரின் வாசனையினால் அது துளிர்த்து ஒரு நாற்றைப்போலக் கிளைக்கும்.

௰ மனுஷனோவென்றால் செத்தபின் சாரமில்லை, நரசீவன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே.

௰௧ தண்ணீர்கள் ஏரியிலிருந்து வடிந்து ஆறு வற்றிச் சுவறிப்போகிறதுபோல,

௰௨ மனுஷன் படுத்துக்கிடந்து வானங்கள் ஒழிந்துபோகுமட்டும் எழுந்திருக்கிறதுமில்லை, நித்திரைதெளிந்து விழிக்கிறதுமில்லை.

௰௩ தேவரீர் என்னைப் பிரேதக்குழியிலே மறைத்து உமது கோபந்தீருமட்டும் என்னை ஒளித்து என்னைத் திரும்ப நினைக்கும்படிக்கு எனக்கு ஒரு திட்டத்தைக் குறித்தால தாவினை.

௰௪ மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? என்னுடைய போராட்டத்தின் நாளெல்லாம் என்னுடைய ஸ்திரமாறுதல் எப்போ வருமென்று காத்திருக்கிறேன்.

௰௫ என்னைக் கூப்பிடும், அப்போது நான் உமக்கு மறு உத்தரவு சொல்லுவேன். உம்முடைய கைகளின் கிரியையின்மேலே விருப்பமாவீராக.

௰௬ இப்போதோவென்றால் என் நடைகளை எண்ணுகிறீர். என் பாவத்தின்மேலே கவனமாயிருக்கிறீர்.

௰௭ என்னுடைய மீறுதல் ஒரு கட்டாகக் கட்டப்பட்டு முத்திரைபோட்டிருக்கிறது. என் அக்கிரமத்தை ஒருமிக்கச்சேர்க்கிறீர்.

௰௮ ஒரு பர்வதமுதலாய் விழுந்தழியும், ஒரு கன்மலைதன் இடத்தைவிட்டுப் பேர்ந்துபோம்.

௰௯ தண்ணீர்கள் கல்லுகளைத் தேய்க்கும், பூமியின் தூள் அதிலே தானாய் முளைத்தவைகளை அடித்துக்கொண்டுபோம். அப்படியே மனுஷனுடைய நம்பிக்கையை அழிக்கிறீர்.

௨௰ தேவரீர் என்றைக்கும் அவனை மேற்கொள்ளுகிறீர், அவன் போகிறான், அவன் முகரூபத்தை மாறப்பண்ணி அவனை அனுப்பிவிடுகிறீர்.

௨௰௧ அவன் பிள்ளைகள் கனப்பட்டாலும் அவன் அறியான், அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்.

௨௰௨ அவன் மாம்சம் அவனிலிருக்குந்தனையும் நோவாயிருக்குமென்றும், அவன் ஆத்துமம் அவனுக்குள்ளிருக்குமட்டும் துக்கிக்குமென்றான்.

௰௫. அதிகாரம்.

எலிப்பாஸ் யோபைக் குற்றப்படுத்தி நரசீவனுந் தன்னைத்தான் நீதிமானாக்கப் போகாதென்றும் ஆகாதவர்களுக்கு முடிவில்லையென்றுஞ் சொன்னது.

அப்போது தேமானியனாகிய எலிப்பாஸ் பிரதியுத்தாரமாகச் சொன்னது,

௨ ஞானமுள்ளவன் காற்றைப்போலொத்த அறிவாய உத்தரவு சொல்லித் தன் வயிற்றைக் கொண்டற்காற்றினால் நிரப்பி,

௩ ஒருபிரயோசனமுமில்லாத வார்த்தைகளாலும் ஒன்றுக்குமுதவாத வசனங்களாலும் தர்க்கலாமோ?

௪ நீர் பயபக்தியையும் வீணென்றுசொல்லிப் பராபரனுக்கு முன்பாக ஜெபதியானத்தைக் குறையப்பண்ணுகிறீர்.

௫ ஏனெனில் உம்முடைய வாய் உம்முடைய அக்கிரமத்தைச் சொல்லிக்காட்டுகிறது, நீர் தந்திரமுள்ளவர்களின் நாக்கைத் தெரிந்துகொண்டீர்.

௬ நானல்ல உம்முடைய வாயே உம்மை ஆகாதவனென்று தீர்க்கிறது, உம்முடைய உதடுகள் உமக்கு விரோதமாக உத்தரவு சொல்லுகிறது.

௭ நீர் மனுஷரில் முந்திப் பிறந்தவரோ? மலைகளுக்கு முன்னே உருவாக்கப்பட்டீரோ?

௮ நீர் பராபரனுடைய இரகசிய ஆலோசனையைக் கேட்டு ஞானத்தை உம்மண்டைச் சேர்ப்பண்ணினீரோ?

௯ நாங்கள் அறியாத எந்தக் காரியத்தை நீர் அறிந்திருக்கிறீர்? எங்களுக்குள்ளே விளங்காத்த உணர்வு உமக்கிருக்கிறது.

௧௦ எங்களுக்குள்ளே உம்முடைய தகப்பனைப் பார்க்கப் பெரிய வயதுள்ள நரைத்தோரும் விருத்தாப்பியருமிருக்கிறார்கள்.

௧௧ பராபரனுண்டாகத் தக்க ஆறுதல்களும் உம்மோடே சொல்லப்படுகிற மென்மையான வசனமும் உமக்கு அற்பகாரியமாயிருக்கிறதோ?

௧௨ உம்முடைய இருதயம் உம்மை எங்கே கொண்டுபோகிறது? உம்முடைய கண்கள் ஏன் இப்படிச் சிமிட்டுகிறது?

௧௩ அதனால் நீர் பராபரனுக்கு விரோதமாய் உம்முடைய ஆவியைத் திருப்பி, உம்முடைய வாயிலிருந்து வசனங்களைப் புறப்படப்பண்ணுகிறீர்.

௧௪ மனுஷன் சுத்தமாயிருக்கிறதற்கும், ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் நீதிமானாயிருக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?

௧௫ இதோ, தம்முடைய பரிசுத்தவான்களிலும் அவர் நம்பார். பரமண்டலங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமல்ல.

௧௬ அக்கிரமத்தை அதிகமாய் அநியாயத்தைத் தண்ணீரைப்போலக் குடிக்கிற மனுஷன் அருவருப்பும் அசுத்தமுமுள்ளவனாயிருக்கிறான்.

௧௭ உமக்குக் காரியத்தைத் தெரியப்பண்ணுவேன், என்னைக் கேளும்: நான் கண்டதை உமக்கு விவரிப்பேன்.

௧௮ ஞானிகள் தங்கள் பிதாக்களிடத்தில் கேட்டு மறைக்காமல் அறிவித்ததைத் தெரிவிப்பேன்.

௧௯ அப்படிக்கொத்தவர்களுக்கு மாத்திரமே தேசம் கொடுக்கப்பட்டது, அந்நியர் அவர்கள் நடுவே கடந்துபோகாதபடிக்குக் கொடுக்கப்பட்டிருந்ததே;

௨௦ அவர்கள் அறிவித்ததேதெனில், துன்மார்க்கன் உயிரோடிருக்கிற நாளெல்லாம் தனக்கு வாதையுண்டாக்குகிறான், பலவந்தனுக்கு அவன் வருஷங்களின் தொகை இன்னதென்று மறைக்கப்பட்டிருக்கிறது.

௨௧ பயங்கரங்களின் சத்தம் அவன் காதுகளிலிருக்கிறது. சமாதான நாளிலும் பாழாக்குகிறவன் அவன்மேல் வருவான்.

௨௨ இருளிலிருந்து திரும்பிவர அவனுக்கு நம்பிக்கையில்லை, பட்டயத்துக்கு அவன் பயப்படுகிறான்.

௨௩ அப்பம் எங்கே கிடைக்குமென்று அவன் அலைந்து திரிகிறான். அந்தகார நாள் தன்னை அணுகிவருகிறதையும் தனக்கு ஆயத்தப்பட்டிருக்கிறதையும் அறிவான்.

௨௪ இக்கட்டும் நெருக்கமும் அவனைக் கலங்கப்பண்ணி, யுத்தத்துக்கு ஆயத்தமான இராசாவைப்போலே அவன்மேல் பெலக்கும்.

௨௫ ஏனெனில் அவன் பராபரனுக்கு விரோதமாகத் தன்கையை நீட்டி, சர்வவல்லவருக்கு விரோதமாகப் பராக்கிரமம் பாராட்டுகிறான்.

௨௬ கடினக்கழுத்தோடும் பருத்த குமிழ்களுள்ள தன் கேடகங்களோடும் அவருக்கெதிராக ஓடுகிறான்.

௨௭ ஏனென்றால் அவன் தன் முகத்தைத் தன் கொழுப்பினாலே மூடி, தன் இடுப்பின்மேல் கொழுப்பேறப்பண்ணுகிறான்.

௨௮ அறைப் பாழான பட்டணங்களிலும், குடியிருக்கக்கூடாமல் கற்குவியலாய்ப் போகவிருக்கிற வீடுகளிலும் வாசம்பண்ணுவான்.

௨௯ அவன் ஐசுவரியவானாவதுமில்லை, அவன் ஆஸ்தி நிற்பதுமில்லை. அப்படிக்கொத்தவர்களின் வம்சம் தேசத்தில் படருவதுமில்லை.

௩௦ இருளுக்கு அவன் தப்புவதில்லை. அக்கினிச்சுவாலை அவனுடைய கிளைகளைக் காயந்துபோகப்பண்ணும். அவருடைய வாயின் சுவாசத்தால் அற்றுப்போவான்.

௩௧ வழிதப்பினவன் மாயையை நம்பானாக, ஏனென்றால் மாயைதான் அவன் பலனாயிருக்கும்.

௩௨ அது அவன் நாள்வராததற்கு முன்னே அவனுக்கு நிறைவாய்ப் பலிக்கும், அவனுடைய கொப்பு பசுமைகொள்ளுவதில்லை.

௩௩ அவன் திராட்சச்செடியைப்போலத் தன் பிஞ்சுகளை உதிர்த்து, ஒலிவமரத்தைப்போலத் தன் பூக்களை உதிரப்பண்ணுவான்.

௩௪ ஏனென்றால் மாயக்காரரின் கூட்டம் அந்தரமாம். பரிதானம் வாங்குகிறவர்களின் கூடாரங்களை அக்கினி பட்சிக்கும்.

௩௫ அப்படிக்கொத்தவர்கள் வருத்தத்தைக் கர்ப்பந்தரித்து அநியாயத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் கர்ப்பம் கபடத்தைப் பிறப்பிக்குமென்றான்.

௧௬. அதிகாரம்.

யோபு தன் சிநேகிதரின் கடினத்துக்குத் தக்க காக முறையிட்டுத் தான் குற்றமில்லாமல் உபத்திரவம் அநுபவிக்கிறதற்குப் பராபரன் சாட்சியென்றது.

யோபு மறுமொழி கொடுத்துச் சொன்னதாவது,

௨ இப்படிக்கொத்த அநேகங் காரியங்களை நான் கேட்டேன், நீங்களெல்லாரும் அலட்டுண்டாக்குகிற தேற்றரவுக்காரர்.

௩ காற்றான வார்த்தைகளுக்கு முடிவுண்டாகாதோ, அல்லது நீ இப்படி உத்தரவு கொடுக்க உனக்கு உரம் உண்டாகுகிறதென்ன.

௪ உங்கள் ஆத்துமம் என் ஆத்துமத்தின் ஸ்தலத்திலிருந்தால் உங்களைப்போலே நானும் பேசுவேனே, அப்போது நான் உங்களுக்கு விரோதமாக வார்த்தைகளை மிச்சமாக்கி உங்களுக்கெதிராக என் தலையைத் துலுக்குவேனே.

௫ நான் என் வாயினால் உங்களுக்குத் திடன் சொல்லுவேனே, என் உதடுகளின் அசைவு துக்கம் மாற்றுமே.

௬ நான் பேசினாலும் என் நோவு ஆறாது, நான் பேசாவிட்டாலும் எந்த நோவு என்னைவிட்டுப் பிரிந்துபோம்.

௭ இப்போது என்னை நன்றாய் இளைப்பாக்கினார். என் கூட்டத்தையெல்லாம் பாழாக்கினீர்.

௮ தேவரீர் என்னைச் சுருங்கிப்போகப் பண்ணினது அதற்குச் சாட்சி, என்னுடைய இளைச்சல் என்னில் அத்தாட்சியாக நின்று என் முகத்துக்கு முன்பாக உத்தரவு சொல்லும்.

௯ அவனுடைய கோபம் என்னைப் பீறுகின்றது, என்னைப் பகைக்கிறான்: தன் பல்லுகளை என் பேரிலே கடித்துக்கொள்ளுகிறான், என் சத்துரு எனக்கு விரோதமாகத் தன் கண்களைக் கூர்மையாக்குகிறான்.

௰ எனக்கு விரோதமாகத் தங்கள் வாயை விரிவாய்த் திறந்தார்கள், நிந்தையாக என்னை என் கன்னங்களில் அடித்தார்கள்; ஏகமாய் எனக்கு விரோதமாகக் கூட்டங்கூடினார்கள்.

௰௧ பராபரன் என்னை அநியாயக்காரன் வசமாக ஒப்புவித்து, ஆகாதவர்களின் கையில் என்னை அகப்படப்பண்ணினார்.

௰௨ சாங்கோபாங்கத்துடனே இருந்தேன், ஆனால் அவர் என்னை நசுக்கி என் பிடரியைப் பிடித்து என்னை நொறுக்கி, என்னைத் தமக்கு இலக்காக நிறுத்தினார்.

௰௩ அவருடைய வில்காரர் என்னைச் சூழ்ந்துகொண்டார்கள், என் ஈரல்களைத் தப்ப விடாமல் பிளந்தார்: என் பிச்சைத் தரையில் ஊற்றிப்போட்டார்.

௰௪ அவர் எனக்கு நொறுக்குதலின்மேல் நொறுக்குதலை வரப்பண்ணினார். பராக்கிரமசாலியைப்போல என்மேல் விழுந்தார்.

௰௫ நான் ரட்டுச்சீலையைத் தைத்து என் தோளின்மேலே போர்த்துக்கொண்டேன், என் மகிமையைத் தூளிலே போட்டுவிட்டேன்.

௰௬ என் முகம் அழுகிறதினால் அழுக்குப்பட்டது, என் கண்ணிமைகளின்மேல் மரண நிழலுண்டாயிருக்கிறது.

௰௭ என் கைகளிலே கொடுமையில்லாதிருக்கக்கொள்ளவும் என் செபஞ் சுத்தமாயிருக்கக்கொள்ளவுந்தானே.

௰௮ பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே, என் அலறுதலுக்கு இடமுண்டாகாதிருப்பதாக.

௰௯ இப்பவும் இதோ, என் சாட்சி பரமண்டலத்திலும், என்னை அறிந்தவர் உன்னதங்களிலுமிருக்கிறார்.

௨௰ என் சிநேகிதர் என்னைப் பரிகாசம் பண்ணுகிறவர்கள், என் கண் பராபரனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது.

௨௧ ஒரு மனுஷபுத்திரன் தன் சிநேகிதனுக்காக வழக்குத் தீர்த்துக்கொள்ளுகிறது போலப் பராபரனோடே [illegible]க்காக வழக்குத் தீர்த்துக்கொள்வாரொருவருண்டு.

௨௨ ஏனென்றால் குறுகின வருஷங்கள் முடிவுவந்தது, நான் திரும்பிவாராத வழியிலே போவேன்.

௰௭. அதிகாரம்.

யோபு மரணத்தின்மேல் வாஞ்சைப்பட்டுச் சொன்ன வார்த்தைகள்.

என் சுவாசம் அழியும், என் நாட்கள் அவிந்துபோகிறது: பிரேதக்குழி எனக்கு முன்பாகவிருக்கிறது.

௨ பரியாசம்பண்ணுகிறவர்கள் என்னிடத்திலில்லையோ, அவர்கள் உண்டாக்கின நகச்சுப்பினிமித்தம் என் கண் [illegible] நித்திரையிராதோ.

௩ தேவரீர் மேற்போட்டுக்கொண்டு எனக்காகப் பிணைப்படுமேன், வேறே ஆர் எனக்கு அஸ்தங்கொடுக்கத்தக்கவர்.

௪ ஏனென்றால் அவர்கள் இருதயத்துக்கு ஞானத்தை மறைத்தீர், ஆகையால் அவர்களை உயர்த்தாதிருப்பீர்.

௫ எவன் தன் சிநேகிதருக்குக் கேடாகத் துரோகம் பேசுகிறானோ அவன் பிள்ளைகளின் கண்களும் பூத்துப்போகும்.

௬ அவர் என்னைச் சனக்கூட்டங்களில் பழமொழியாக வைத்தார், அவர்கள் முகத்துக்கு அருவருப்பானேன்.

௭ இதினிமித்தமாக என் கண் சஞ்சலத்தினால் இருள் அடைந்தது; என் அவயவங்களெல்லாம் ஒரு நிழலைப்போலிருக்கிறது.

௮ செம்மைமார்க்கத்தார் இதற்குச் சாயப்பிரமிப்பார்கள். குற்றமில்லாதவன் மாயக்காரனுக்கு விரோதமாக எழும்புவான்.

௯ நீதிமான் தன் வழியைக் கெட்டியாய்ப் பிடிப்பான், கைசுத்தமானவன் பலத்தைக் கொண்டிருப்பான்.

௰ இப்போதும் நீங்களெல்லாரும் திரும்பிக்கொண்டு வாருங்கள், உங்களில் ஞானமுள்ள ஒருவனையுங் காணேன்.

௰௧ என் நாட்கள் போயிற்று, என்னிருதயத்தில் எனக்குண்டாயிருந்த சிந்தனைகள் அறுந்துபோயிற்று.

௰௨ அதுகள் இராவைப் பகலாக்குகிறது, இருளுக்கு வெளிச்சம் சமீபித்துவருமென்கின்றது.

௰௩ அப்படி நான் பார்த்துக்கொண்டிருந்தாலும் பாதாளம் என் வீடாயிருக்கும், இருளில் என் படுக்கையைப் போடுவேன்.

௰௪ அழிவைப் பார்த்து: நீ என் தகப்பனென்கிறேன்: புழுக்களைப் பார்த்து, நீங்கள் என் தாயும் என் சகோதரியுமென்கிறேன்.

௰௫ என் பார்த்துக்கொள்ளுதல் இப்போதெங்கே, நான் பார்த்துக்கொண்டதைக் காண்பவனார்.

௰௬ பாதாளத்தின் தாழ்ப்பாள்களுக்குள்ளாக இறங்கும். அப்போது தூளில் எங்களுக்குப் படுக்கையில் இளைப்பாறுதல் இருக்குமென்றான்.

௰அ. அதிகாரம்.

நீதிபோலாதவர்கள்மேலே மாத்திரம் வருமென்று பில்தாத் தன்னுடைய நியாயம்பிடிக்கச் சொன்னது.

௧ அப்போது சூகியனான பில்தாத் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது,

௨ நீங்கள் எந்தமட்டும் பேச்சுக்களை முடிக்கிறதில்லை: புத்திமான்களாயிருங்கள், நாங்களும் பிறகு பேசட்டும்.

௩ நாங்கள் மிருகங்களைப்போலெண்ணப்பட்டு உங்கள் பார்வைக்குத் தீட்டுள்ளவர்களாயிருப்பானேன்.

௪ உமது கோபத்தினால் உம்மைத்தானே பீறுகிறவரே, உம்முடைய நிமித்தம் பூமி பாழாய் விடப்படுமோ, கன்மலை தன்னிடத்தைவிட்டுப் பெயருமோ.

௫ துஷ்டர்களுடைய வெளிச்சமும் அவிந்துபோம், அவர்களுடைய அக்கினியின் பொறிகளும் பிரகாசியாதிருக்கும்.

௬ அவனுடைய கூடாரத்தில் வெளிச்சம் அந்தகாரப்பட்டு அவனுக்கு முன்பாக அணைந்துபோகும்.

௭ அவன் பெலத்தோடே நடந்த நடைகள் குறைந்துபோய், அவன் யோசனை அவனை விழப்பண்ணும்.

௮ எனென்றால் அவன் தன் கால்களாலே வலைக்குள் அகப்பட்டு வலைச்சிக்கலிலே நடக்கிறான்.

௯ கண்ணி அவன் குதிகாலைப் பிடிக்கும், பறிகாரர் அவனை மேற்கொள்ளுவார்கள்.

௰ அவனுக்காகச் சுருக்கு நிலத்திலே ஒளித்து அவனுக்காகக் கண்ணி வழியிலே வைக்கப்பட்டிருக்கிறது.

௰௧ சுற்றிலுமிருந்துண்டாகும் பயங்கரங்கள் அவனைத் திடுக்கிடப்பண்ணி, அவன் கால்களைத் திக்குத்தெரியாமல் அலையப்பண்ணும்.

௰௨ அவனுடைய பெலத்துக்குப் பட்டினியாயிருந்து தலைவந்தது அவன் பாரிசத்தில் கஷ்டம் ஆயத்தப்பட்டிருக்கும்.

௰௩ அது அவன் தோலின் நிறங்களைப் பட்சிக்கும், பயங்கரமான மரணம் அவன் அவயவங்களைப் பட்சிக்கும்.

௰௪ அவனம்பிக்கை அவன் கூடாரத்திலிருந்து பிடுங்கப்படும், அது அவனைப் பயங்கரங்களின் இராசாவண்டைக்குத் துரத்தும்.

௰௫ அவனுக்கு ஒன்றுமில்லாதேபோனதினால் பயங்கரம் அவன் கூடாரத்தில் குடியிருக்கும், கெந்தகம் அவன் வாசஸ்தலத்தின்மேல் தெளிக்கப்படும்.

௰௬ தாழ இருக்கிற அவன் வேர்கள் பட்டுப்போகும், உயர இருக்கிற அவன் கொப்புகள் வெட்டப்பட்டுப்போகும்.

௰௭ அவனை நினைக்கும் நினைப்பு பூமியிலிருந்தழியும், வீதிகளில் அவன் பேரில்லாமற்போகும்.

௰௮ அவன் வெளிச்சத்திலிருந்து இருளிலே தள்ளப்பட்டு பூலோகத்திலிருந்து துரத்துண்டுபோவான்.

௰௯ அவன் ஜனத்துக்குள்ளே அவனுக்குப் புத்திரனில்லாமலும் பேரனில்லாமலும் அவன் குடியிருப்புகளில் மீதியாயிருக்கத்தக்க ஒருவனில்லாமலுமிருக்கும்.

௨௰ பின்னடியார் அவன் நாளுக்காகப் பிரமிப்பார்கள், முன்னடியாராயிருந்தவர்களை அருக்களிப்பு பிடிக்கும்.

௨௧ அக்கிரமக்காரனுடைய இருப்பிடங்கள் இப்படியேதான், தேவனை அறியாதேபோனவன் ஸ்தலம் இதுதானென்றான்.

௰௯. அதிகாரம்.

யோபு தன் நிந்தைக்காக அநியாயத் தன்னுடைய இக்கட்டுகளையும் நிந்தியையும் நம்பிக்கையாய்ச் சொன்னவசனம்.

யோபு மறுமொழிகொடுத்துச் சொன்னதாவது,

௨ நீங்கள் எந்தமட்டும் என் ஆத்துமத்தை வருத்தப்படுத்தி என்னை வார்த்தைகளினாலே நொறுக்குவீர்கள்.

௩ இப்போது பத்துதரம் என்னை நிந்தித்தீர்கள். நீங்கள் எனக்குக் கடினமுகங்காட்டுகிறதினால் உங்களுக்கு வெட்கமில்லை.

௪ நான் தப்பிநடந்தது மெய்யானாலும் என் தப்பிதம் என்னோடே தங்கியிருக்கிறது.

௫ நீங்கள் எனக்கு விரோதமாக உயர்ந்து எனக்கு நிந்தையாக என்னைக் கடிந்துகொள்ளவேண்டுமென்றிருந்தீர்களேயானால்,

௬ பராபரன் என்னைக் கவிழ்த்துத் தம்முடைய வலையை என்மேல் வீசினாரென்றறியுங்கள்.

௭ இதோ, கொடுமையென்று கூப்பிடுகிறேன், ஆனாலும் நான் கேட்கப்படுகிறதில்லை, கூக்குரலிடுகிறேன் ஆனாலும் நியாயஞ்செய்யப்படுகிறதில்லை.

௮ நான் கடந்துபோகக்கூடாதபடிக்கு அவர் என் பாதையை வேலியடைத்து என் வழிகளை இருளாக்கிப்போட்டார்.

௯ என்னிலிருந்த என் மகிமையை அவர் உரிந்துகொண்டு என் சிரசின் கிரீடத்தை எடுத்துப்போட்டார்.

௰ அவர் என்னைச் சுற்றிலும் இடித்துப்போட்டதினால் நான் போகிறேன், என் நம்பிக்கையை ஒரு செடியைப்போலப் பிடுங்கிப்போட்டார்.

௰௧ அவர் தமது கோபத்தை என்மேல் எரியப்பண்ணினார். என்னைத் தம்முடைய சத்துருக்களில் ஒருவனாக எண்ணிக்கொள்ளுகிறார்.

௰௨ அவருடைய தண்டுப்படைகள் ஏகமாய் வந்து எனக்கு விரோதமாகத் தங்கள் வழியை உயர்த்தி என் கூடாரத்தைச் சுற்றிலும் பாளயமிறங்கினார்கள்.

௰௩ என் சகோதரரை என்னைவிட்டுத் தூரப்படுத்துகிறார், என் அறிமுகமானவர்கள் எனக்கு அந்நியராய்ப்போனார்கள்.

௰௪ என் பந்துசனங்கள் விலகிப்போய் என் வங்கணக்காரர் என்னை மறந்தார்கள்.

௰௫ என் வீட்டாட்களும் என் வேலைக்காரிகளும் என்னை அந்நியனாய்ப் பார்க்கிறார்கள். அவர்கள் பார்வைக்கு நான் அசலானைப்போலிருக்கிறேன்.

௰௬ நான் என் வேலைக்காரனைக் கூப்பிடுகிறபோது எனக்கு மறுஉத்தரவு கொடான், என் வாயினால் நான் அவனைக் கெஞ்சிக் கேட்கவேணும்.

௰௭ என் சுவாசம் என் பெண்சாதிக்கு வேறுபட்டிருக்கிறது, என் கர்ப்பத்தின் பிள்ளைகளுக்காகப் பரிதபிக்கிறேன்.

௰௮ சிறுபிள்ளைகளும் என்னை அசட்டைபண்ணுகிறது, நான் எழுந்தால் அதுகள் எனக்கு விரோதமாகப் பேசுகிறது.

௰௯ என் பிராணசிநேகிதரெல்லாரும் என்னை அரோசிக்கிறார்கள், நான் சிநேகித்தவர்கள் எனக்கு விரோதமாய்த் திரும்பினார்கள்.

௨௰ என் எலும்புகள் என் தோலோடும் என் மாமிசத்தோடும் ஒட்டிக்கொண்டிருக்கிறது, என் பல்லுகளோடு கொஞ்சத்தோல் தப்பிறது.

௨௧ என் சிநேகிதராகிய நீங்கள் எனக்கிரங்குங்கள், எனக்கிரங்குங்கள், ஏனென்றால் பராபரனுடைய கை என்னைத் தொட்டது.

௨௨ பராபரனைப்போலே நீங்கள் என்னைத் துன்பப்படுத்துகிறதென்ன, என் மாம்சத்தைப் பட்சித்தும் ஆறுதலையாயிருக்கிறதென்ன.

௨௩ ஆ நான் இப்போது சொல்லும் வார்த்தைகள் எழுதப்பட்டால் நலமாம், அதுகள் ஒரு புஸ்தகத்திலே வரையப்பட்டு,

௨௪ என்றைக்குமிருக்க அதுகள் கல்லுமேலே உளிவெட்டும் ஈயமுமாய் வெட்டப்பட்டுத் திருந்தால் நலமாம்.

௨௫ ஏனென்றால் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் கடைசியானவராய்த் தூளின்மேலே நிற்பாரென்றும் நான் அறிந்திருக்கிறேன்.

௨௬ இந்த என் தோலுடைய தேகத்தின் னது அழுகிப்போனபின்பு நானென் மாம்சத்திலிருந்து பராபரனைப் பார்ப்பேன்.

௨௭ அவரை நான் எனக்கே காண்பேன்: அந்நியனல்ல, என்னுடைய கண்கள் அவரைக் காணும்; இதற்காக ஆசையாய் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள்ளே சோர்ந்துபோகிறது.

௨௮ இந்த வார்த்தையின் வேர் எனக்குள் கண்டுபிடிக்கப்படுகையில் நாம் ஏன் அவனைத் துன்பப்படுத்துகிறோமென்று நீங்கள் சொல்லவேண்டியதாம்.

௨௯ பட்டயத்துக்குப் பயப்படுங்கள், ஏனெனில் உக்கிரமானது பட்டயத்தின் ஆக்கினைக்குள்ளானது நியாயமும் தீர்ப்பும் உண்டென்கிறதை நீங்கள் அறியவேண்டும்.

௨௰. அதிகாரம்.

சோப்பார் துன்மார்க்கரின் சந்தோஷங் குறுகினதும் அவர்கள் தீர்ப்பானது பெருங்கனத்ததும் என்று சொல்லிக்காண்பித்தது.

அப்போது நாகமாத்தியனான சோப்பார் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது.

௨ இதற்காக மறுஉத்தரவு கொடுக்க என் சிந்தனைகள் என்னை ஏவுகையால் நான் தீவிரித்துக்கொள்ளுகிறேன்.

௩ நான் நிந்தித்தேனென்று கடிந்துகொள்ளப்பட்டதைக் கேட்டேன். ஆனால் என்

உணர்விலுடைய ஆவி எனக்காகப் பிரதியுத்தரஞ்சொல்லும்.

௪ ஆகாதவர்களின் கெம்பீரம் குறுகினதாயிருந்து மாயக்காரரின் சந்தோஷம் ஒரு நிமிஷமாத்திரம் நிற்குமென்கிறதையும்,

௫ அவர் மனுஷனைப் பூமியிலே வைத்த ஆதிமுதல் இப்படியிருக்கிறதென்கிறதையும் அறியீரோ.

௬ அவனுடைய மேன்மை வானபரியந்தம் உயர்ந்தாலும் அவன் தலை மேகங்களை முட்டினாலும்,

௭ அவன் தன் மலத்தைப்போல என்றைக்கும் அழிவான், அவனைக் கண்டவர்கள் அவன் எங்கேயென்பார்கள்.

௮ அவன் ஒரு சொப்பனத்தைப்போலப் பறந்து காணப்படாதே போய் இராத்தரிசனத்தைப்போலப் பறக்கடிக்கப்படுவான்.

௯ அவனைப் பார்த்த கண் இனி அவனைப் பார்ப்பதில்லை, அவன் இருந்த ஸ்தலம் இனி அவனைக் காண்பதுமில்லை.

௰ அவன் பிள்ளைகள் எளிமையானவர்களுக்குப் பிராசிப்பண்ணி அவன் பறித்ததை அவன் கைகள் திருப்பக்கொடுக்கவேணும்.

௧௧ அவன் எலும்புகள் அவனுடைய அந்தரங்கபாவங்களினாலே நிறைந்திருந்து அவனோடேகூட மண்ணிலே படுத்துக்கொள்ளும்.

௧௨ பொல்லாப்பு அவன் வாயிலே இனிமையாயிருந்து அவன் அதைத் தன் நாவின் கீழ் அடக்கி,

௧௩ அதை விடாமற் பதனம்பண்ணித் தன் வாயின் நடுவே வைத்துக்கொண்டிருந்தாலும்,

௧௪ அவன் போசனம் அவன் குடல்களில் மாறி, அவனுக்குள்ளே விரியன் பாம்புகளின் பிச்சாய்ப்போகும்.

௧௫ அவன் விழுங்கின ஆஸ்தியைக் கக்குவான், பராபரன் அதை அவன் வயிற்றிலிருந்து வெளியே தள்ளிவிடுவார்.

௧௬ அவன் விரியன் பாம்புகளின் விஷத்தை உறிஞ்சினான், விரியனின் நாக்கு அவனைக் கொல்லும்.

௧௭ தேனும் நெய்யும் ஓடும் வாய்க்கால்களையும் ஆறுகளையும் அவன் காண்பதில்லை.

௧௮ தான் பிரயாசப்பட்டுத் தேடினதை அவன் விழுங்காமல் திருப்பக்கொடுப்பான், அவன் திருப்பக்கொடுக்கிறது அவன் ஆஸ்திக்குச் சரியாயிருக்கும்; களிகூராதிருப்பான்.

௧௯ அவன் ஒடுக்கி ஏழைகளைக் கைவிட்டுத் தான் கட்டாத வீட்டைப் பறித்தபடியினாலும்,

௨௰ தன் வயிற்றிலே அமரிக்கையாயிருந்தபடியினாலும் அவனுக்கு அவன் இச்சித்த காரியங்களிலொன்றும் மீந்திருப்பதில்லை.

௨௧ அவன் போஜனத்திலொன்றும் மீதியாவதில்லை. ஆகையால் அவன் ஆஸ்தி நிலைநிற்பதில்லை.

௨௨ அவன் வேண்டுமென்ற பரிபூரணம் அவனுக்கு வந்தபின் அவனுக்கு நெருக்கம் உண்டாம், சிறுமைப்பட்டிருக்கிற ஒவ்வொருவர் கை அவன்மேல் வரும்.

௨௩ தன் வயிற்றை நிரப்பத்தக்கது இன்னும் அவனுக்கு இருந்தாலும் அவர் அவன்மேல் தமது கோபத்தின் உக்கிரத்தை வரவிட்டு, அவன் அதைப் புசிக்கையில் அதை அவன்மேல் வருஷிக்கப்பண்ணுவார்.

௨௪ இருப்பு ஆயுதங்களுக்கு அவன் தப்பியோடினாலும் வெண்கலவில் அவனை உருவ எய்யும்.

௨௫ உருவின அம்பு அவன் சரீரத்தைக் கடந்து மின்னுகிற அலகு அவன் பிச்சையிலிருந்து புறப்படும், பயங்கரங்கள் அவன்மேல் வரும்.

௨௬ அவன் ஒளிக்கும் இடங்களிற் சகல இருளும் அடைபட்டிருக்கும். ஊதப்படாத அக்கினி அவனைப் பட்சிக்கும், அவன் கூடாரத்திலே மீதியாயிருக்கிறவன் நிர்ப்பந்தமடைவான்.

௨௭ வானங்கள் அவன் அக்கிரமத்தை வெளிப்படுத்திப் பூமி அவனுக்கு விரோதமாக எழும்பும்.

௨௮ அவன் வீட்டின் வாழ்வு போய்விட்டு அவருடைய கோபத்தின் நாளிலே அது கரைந்துபோம்.

௨௯ இது பொல்லாத மனுஷனுக்குத் தேவனால் வருகிற பங்கும் அவனுக்குப் பராபரனாலே வருகிற சுதந்தரமுமாயிருக்கிறதென்றான்.

௨௧. அதிகாரம்.

துன்மார்க்கர் இம்மையிலே சுகபோகிகளாயிருக்கிறது வாடிக்கையென்று யோபு சொல்லிக்காண்பிக்கிறது.

௧ யோபு பிரதியுத்தரமாகச் சொன்னதாவது,

௨ என் வசனத்தைக் கேட்கவே கேளுங்கள்; இது நீங்கள் என்னைத் தேற்றரவு பண்ணுவதற்குச் சமானமாயிருக்கும்.

௩ நான் பேசட்டும் எனக்கு இடங்கொடுங்கள். நான் பேசினபிற்பாடு பரியாசம்பண்ணுங்கள்.

௪ நான் மனுஷனைப் பார்த்தா அங்கலாய்க்கிறேன், அப்படியானால் என் ஆவி விசனப்படாதிருப்பானேன்.

௫ என்னை நோக்கி முகந்திருப்புங்கள், அப்போது நீங்கள் பிரமித்து உங்கள் வாயைக் கையாற் பொத்துவீர்கள்.

௬ இதை நான் நினைக்கையிற் கலங்குகி றேன், என் மாமிசத்துக்கு நடுக்கம்பிடிக் கும்.

௭ துன்மார்க்கர் பிழைத்துக்கிழவராய் ப் போய் வல்லமையிலும் பெலப்பதேனை?

௮ அவர்களோடேகூட அவர்கள் வித் தார் அவர்களுடைய முன்பாகவும் அவர்கள் சந்ததியார் அவர்கள் கண்களுக்கு முன்பா கவும் நிலைப்படுகிறார்கள்.

௯ அவர்கள் வீடுகள் பயமில்லாமற் சுக மாயிருக்கும். பராபரனுடைய மிலாறு அவர்கள்மேல் இறங்காது.

௰ அவர்களுடைய எருது பொலிந்தால் சவலைக்குப் போகாது. அவர்களுடைய பசு கன்றைப் போடாமல் ஈனுகிறது.

௰௧ அவர்கள் தங்கள் குழந்தைகளை ஒரு மந்தையைப்போல வெளியே போகவிடுவார் கள். அவர்கள் பிள்ளைகள் குதித்துக்கொண் டிருக்கிறது.

௰௨ அவர்கள் மேளத்தையும் சுரமண் டலத்தையும் பிடித்துக் கொண்டு நாக ஸ்வரத்தின் சத்தத்துக்குச் சந்தோஷப்படுகிறார் கள்.

௰௩ அவர்கள் செல்வத்தோடே தங்கள் நாட்களைப் போக்கி ஒருக்ஷணப்பொழுதிலே குழியிலிறங்குகிறார்கள்.

௰௪ இப்படிக்கொத்தவர்கள் பராபர னை நோக்கி எங்களைவிட்டு விலகியிரும், உம்மு டைய வழிகளை அறிய விரும்பேனாமென்று சொல்லி,

௰௫ சர்வத்துக்கும் வல்லவரை நாங்கள் சேவிக்க அவர் ஆர்? அவரை நோக்கிச் செபம் பண்ணுவதினால் நமக்குப் பிரயோசனமெ ன்னவென்கிறார்கள்.

௰௬ இதோ, அவர்கள் வாழ்வு அவ ர்கள் கையிலிராது, துன்மார்க்கருடைய ஆலோ சனை என்னைவிட்டுத் தூரமாயிருக்கக்கடவது.

௰௭ எத்தனை விசை துன்மார்க்கருடைய விளக்கு அணைந்து அவர் தமது கோபத்தினால வேதனைகளைப் பங்கிட்டுக் கொடுக்கையில் அவ ர்கள் ஆபத்து அவர்கள்மேல் வரும்.

௰௮ அவர்கள் காற்று முகத்திலிருக்கிற துரும்பைப்போலவும் பெருங்காற்று பறக் கடிக்கிற பதரைப்போலவும் இருக்கிறார்கள்.

௰௯ பராபரன் அவனுடைய அக்கிரமத் தை அவன் பிள்ளைகளுக்கு வைத்து வைக்கி றார், அவன் உணரத்தக்கதாய் அதை அவனுக்குப் பலிக்கப்பண்ணுகிறார்.

௨௰ தன்னுடைய சங்காரத்தை அவனு டைய கண்கள் காணும், சர்வத்துக்கும் வல்ல வருடைய உக்கிரத்தைக் குடிப்பான்.

௨௰௧ ஏனென்றால் அவன் மாதங்களின் தொகை குறைக்கப்படுகையில் அவனுக்குப்பிற் பாடு அவன் வீட்டினால் அவனுக்கு என்ன விருப்பமுண்டு?

௨௰௨ உயர்ந்தவர்களை நியாயந்தீர்க்கிற பராபரனுக்கு அறிவு சொல்லப்படலா மோ.

௨௰௩ ஒருவன் தன் சர்வசம்பூரணத்தோ டேயும் சுகத்தோடும் அமைதலோடும் இருந்து பெலனுள்ளவனாய்ச் சாகிறான்.

௨௰௪ அவனுடைய பாற்பாத்திரங்கள் பா லினால் நிரம்பியிருக்கும், அவன் எலும்புகளின் மூளை புஷ்டியாயிருக்கும்.

௨௰௫ வேறொருவன் சந்தோஷத்தைப் பார்க்காமல் கசப்பான மனதோடே சாகிறான்.

௨௰௬ இருவரும் மண்ணிலே கிடக்கிறார் கள், புழுக்கள் அவர்களை மூடிக்கொள்ளும்.

௨௰௭ இதோ, நான் உங்கள் நினைவுகளையு ம் நீங்கள் எனக்குக் கொடுமையாய்ச் சேர்க்கிற யோசனைகளையும் அறிவேன்.

௨௰௮ ஏனென்றால் நீங்கள் பிரபுவினுடை ய வீடு எங்கேயென்றும், துன்மார்க்கருடைய குடியிருப்பின் கூடாரம் எங்கேயென்றும் சொல்லுகிறீர்கள்.

௨௰௯ வழியிலே கடந்துபோகிறவர்களை நீங்கள் கேட்டு அவர்கள் சொல்லும் அடை யாளங்களை நீங்கள் அறியவில்லையோ?

௩௰ ஏனென்றால் பொல்லாதவன் ஆபத் தின் நாளுக்கென்று வைக்கப்படுகிறான், அப் படிக்கொத்தவர்கள் கோபாக்கினையின் நாளுக்கென்று கொண்டுபோகப்படுகிறார் கள்.

௩௰௧ அப்படிக்கொத்தவனுடைய மார்க் கத்தை அவன் முகத்துக்கு முன்பாகத் துணி ந்து காண்பிப்பவன் யார், அவன் செய்ததற்குத் தக்கதை அவனுக்குச் சரிக்கட்டுபவன் யார்?

௩௰௨ அவன் பிரேதக் கல்லறைக்குக் கொண்டுவரப்படுகிறான், அவன் கோரிக்கை ப் பார்த்துக் காக்கப்படுமாயிருந்தான்.

௩௰௩ பள்ளத்தாக்கின் மண்கட்டிகள் அவனுக்கு இன்பமாயிருந்து தனக்குப் பின் னே மனுஷரெல்லாரும் இழுத்துக்கொ ள்ளுகிறான், அவனுக்கு முன்னே போன வர்களும் எண்ணிக்கைக்கடங்காதவர்கள்.

௩௰௪ இப்போதும் நீங்கள் மாயையான ஆறுதலை எனக்குச் சொல்லுகிறதென்ன. உங்கள் மறுமொழிகளில் உண்மைக்கேடு தானே பிடித்திருக்கிறதென்றான்.

உஉ. அதிகாரம்.

தேமானியனான எலிப்பாஸ் பராபரனோடே யோபுக்கு உபதேசித்துச் சொல்லுகிறது.

௧ அப்போது தேமானியனான எலிப்பாஸ் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது.

௨ ஒரு மனுஷன் விவேகியாயிருக்கிறதினாலே தனக்குத்தானே பிரயோசனமாயிருக்கிறதுபோல் பராபரனுக்குப் பிரயோசனமாயிருப்பானோ.

௩ நீர் உம்மை நீதிமானாக்குகிறது சர்வசத்துவமுள்ளவருக்கு விருப்பமாயிருக்குமோ, நீர் உம்முடைய வழிகளை உத்தமமாக்குகிறது ஆதாயமாயிருக்குமோ.

௪ அவர் உமக்குப் பயப்படுகிறதினாலே உம்மோடே வழக்காடி உம்மோடே நியாயத்துக்கு வருவாரோ.

௫ உம்முடைய பொல்லாப்பு பெரியதும் உம்முடைய அக்கிரமங்கள் முடிவில்லாததுமாயிருக்கிறதல்லவோ.

௬ ஏனென்றால் முகாந்தரமில்லாமல் உம்முடைய சகோதரர் கையில் அடகுவாங்கி, அம்மணமானவர்களின் வஸ்திரங்களைப் பறித்துக்கொண்டீர்.

௭ விடாய்த்தவனுக்குத் தாகத்துக்குத் தண்ணீர் வார்க்காமலும் பசியாயிருக்கிறவனுக்கு அப்பங்கொடாமலும் போனீர்.

௮ பெலத்தவனுக்கே பூமியில் இடமுண்டாயிற்று, முகதாட்சணியமாய்ப் பார்க்கப்பட்டவன் அதிலே குடியிருந்தான்.

௯ விதவைகளை வெறுமையாய் அனுப்பிவிட்டீர், தாய்தகப்பனில்லாதவர்களின் புயங்கள் முறிக்கப்பட்டது.

௰ ஆகையால் உம்மைச் சுற்றிலும் சுருக்குகள் போடப்பட்டு அசுப்பிலே உமக்கு வந்த பயங்கரம் அல்லவென்று நீர் பார்க்கக்கூடாதபடிக்கு இருளும் உம்மைக் கலக்கப்பண்ணி,

௰௧ சலப்பிரளயம் உம்மை மூடுகிறது.

௰௨ பராபரன் பரமண்டலங்களின் உயரத்திலிருக்கிறாரல்லவோ, நட்சத்திரங்கள் எத்தனை உயரமென்று அதுகளின் உயரத்தைப் பாரும்.

௰௩ ஆனால் நீர் பராபரன் அறிகிறதேது, அந்தகாரத்துக்குள்ளிருக்கிறதை நியாயந்தீர்ப்பாரோவென்றும்,

௰௪ அவர் பாராதபடிக்கு மேகங்கள் அவருக்கு மறைவிடமாயிருக்கிறது, பரமண்டலங்களின் சக்கரத்திலே அவர் உலாவுகிறாரென்றும் சொல்லுகிறீர்.

௰௫ அக்கிரமக்காரர் பூர்வத்தில் நடந்த மார்க்கத்தைக் கைக்கொள்ளுவீரோ.

௰௬ காலம் வராததற்கு முன்னே அவர்கள் வாங்கப்போனார்கள், அவர்களுடைய அஸ்திபாரத்தின்மேலே வெள்ளம் புரண்டது.

௰௭ பராபரன் அவர்கள் வீடுகளை நன்மையால் நிரப்பியிருந்தாலும் அவர்கள் அவருக்கு, எங்களைவிட்டு விலகும்: சர்வசத்துவமுள்ளவர் தங்களுக்கென்ன செய்வாரென்றார்கள்.

௰௮ ஆகையால் துன்மார்க்கரின் ஆலோசனை எனக்குத் தூரமாயிருப்பதாக.

௰௯ எங்கள் நிலை நிர்மூலமாகாமல் அவர்களுக்குள் மீதியானதை அக்கினி பட்சித்ததென்பதை நீதிமான்கள் கண்டு சந்தோஷப்படுகிறார்கள்.

௨௰ குற்றமில்லாதவன் அவர்களை நகைக்கிறான்.

௨௧ நீர் அவரோடே பழக்கம்பண்ணிக்கொண்டு சமாதானமாகும், அதினால் நன்மை உமக்கு வரும்.

௨௨ அவருடைய வாக்கின் நியாயப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு, அவர் வார்த்தைகளை உம்முடைய இருதயத்திலே சேர்த்துக்கொள்ளும்.

௨௩ நீர் சர்வசத்துவமுள்ளவரண்டைக்குத் திரும்பினால் திரும்பக்கட்டப்படுவீர், நீர் அக்கிரமத்தை உம்முடைய கூடாரத்துக்குத் தூரமாக்கினால்,

௨௪ அப்போது பொன்னைத் தூளைப்போலும் ஓபீரின் தங்கத்தை ஆற்றுக்கல்லுகளைப்போலும் சேர்த்துவைப்பீர்.

௨௫ அப்போது சர்வசத்துவமுள்ளவர்தாமே உம்முடைய அரணிப்பான பொன்னும் உமக்குச் சொக்க வெள்ளியுமாயிருப்பார்.

௨௬ ஏனென்றால் அப்போது சர்வசத்துவமுள்ளவர் பேரில் மனமகிழ்ச்சியாயிருந்து பராபரனுக்கு நேராக உம்முடைய முகத்தை ஏறெடுப்பீர்.

௨௭ நீர் அவரை நோக்கி விண்ணப்பம்பண்ண அவர் உம்மைக் கேட்பார், அப்போது உம்முடைய பொருத்தனைகளைச் செலுத்துவீர்.

௨௮ அப்போது நீர் ஒரு காரியத்தை நிர்ணயம்பண்ணினால் அது உமக்கு நிலைவரப்படும், அப்போது உம்முடைய வழிகளில் வெளிச்சம் பிரகாசிக்கும்.

௨௯ மனுஷர் ஒருவனை ஒடுக்கக்கொள்ள நீர் அவன் உயர்த்தப்படக்கடவனென்றால் அவர் முனையற்றுப்போனவனை இரட்சிப்பார்.

௩௰ குற்றமற்றிராதவனையுங் கூடத் தப்புவிப்பார், உம்முடைய கைகளுடைய சுத்தத்தினிமித்தம் அவன் தப்பிப்போவானென்றான்.

௨௩. அதிகாரம்.

யோபு தன்னுடைய நீதியைப் பராபரனுக்கு முன்பாக விளங்கப்பண்ண ஆசையாயிருந்தது.

யோபு பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது,

௨ இந்நாள்மட்டும் என்னுடைய அங்கலாய்ப்பு முணுமுணுத்தனமாக எண்ணப்படும், என்னுடைய வாதை என் தவிப்பைப்பார்க்கிலும் கடினமானது.

௩ நான் அவரை எங்கே கண்டுசந்திக்கலாமென்பதை அறிந்தால் தாவினா. அப

போது நான் அவர் ஆசனத்துக்கு முன்பாக வந்து சேர்வேனே,

௪ நியாயத்தை அவருக்கு முன்பாக வரிசையாய் வைத்து என் காரியத்தை நியாயங்களினால் நிரப்புவேன்.

௫ அவருடைய மறுமொழியை நான் அறிந்து, எனக்குச் சொல்லுவாரென்றதை உணர்ந்துகொள்ளுவேன்.

௬ அவர் தம்முடைய மகா வல்லமையினாலே என்னோடே வழக்காடுவாரோ? அவர் அப்படிச் செய்யாமல் என்மேலே தயவு வைப்பார்.

௭ செம்மையானவர்கள் தானே அவரோடே நியாயம் பேசக்கூடும், அப்படியானால் நியாயாதிபதியினிடத்திலிருந்து நான் என்றைக்கும் தப்பிவிடுவேன்.

௮ இதோ, நான் முன்னாகப் போனாலும் அவர் இல்லை; பின்னாகப் போனாலும் அவரைக் காணேன்.

௯ இடதுபுறத்திலும் அவர் செயல்களைக் காணேன்; வலதுபுறத்திலும் நான் அவரைப் பார்க்கக்கூடாதபடி ஒளித்திருக்கிறார்.

௰ ஆனாலும் நான் நடந்திருக்கிற மார்க்கத்தை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் பொன்னைப்போல விளங்குவேன்.

௰௧ என் கால்கள் அவர் அடிச்சுவடுகளைப் பிடித்தது, அவருடைய வழியை நான் விட்டுச் சாயாமல் கைக்கொண்டேன்.

௰௨ அவர் உதடுகளின் கற்பனையை நான் விட்டுப் பின்வாங்கவில்லை, அவருடைய வாயின் வார்த்தைகளை என் அப்பத்தைப்பார்க்கிலும் அதிகமாய்க் காத்துக்கொண்டேன்.

௰௩ அவரோ ஒரே நிலைமையாயிருக்கிறார், அவரைத் திருப்பத்தக்கவர் யார்? அவருடைய சித்தம் எதுவோ அதை அவர் செய்வார்.

௰௪ எனக்குக் குறித்திருக்கிறதை நிறைவேற்றுவார், இப்படிப்போல இன்னும் அநேகம் அவரிடத்தில் இருக்கிறது.

௰௫ ஆகையால் அவர் சமுகத்துக்கு முன்பாகக் கலங்குகிறேன், அதை நான் சிந்திக்கும்போது அவருக்குப் பயப்படுகிறேன்.

௰௬ தேவன் என் இருதயத்தைக் கரைந்துபோகப்பண்ணினார், சர்வவல்லவர் என்னைக் கலங்கப்பண்ணினார்.

௰௭ அந்தகாரம் வருமுன்னே நான் சங்கரிக்கப்படாமலும், இருளை அவர் என்னைவிட்டு மறைக்காமலும்போனதினாலே தானே.

உ௪. அதிகாரம்.

பொல்லாதவர்களுடைய துர்க்கிரியைகளுக்கு இடங்கொடுக்கிற பாவப் புலம்பலும், அவர்களுக்கு உண்டாகும் நியாயத்தீர்ப்புகளைக் குறித்து யோபு சொன்னது.

சர்வவல்லவரை அறிந்திருக்கிறவர்கள் அவர் நாட்களைக் காணாதபடிக்கு அவராலே காலங்கள் மறைக்கப்படவில்லையோ என்ன?

உ எல்லைக்குறிகளை ஒருவர் ஒற்றுமைப்படுத்துகிறார்கள், மந்தைகளைப் பறித்துக்கொண்டு மேய்க்கிறார்கள்.

௩ தாய்தகப்பனில்லாதவர்களின் கழுதையை ஓட்டிக்கொண்டுபோய், விதவையின் மாட்டை அடகாகவாங்கி,

௪ மிதுக்கத்தில் சிறுமையானவர்களை வழியைவிட்டு விலக்குகிறார்கள்; தேசத்தின் ஏழைகள் ஏகமாய் ஒளிந்துகொள்ளுகிறார்கள்.

௫ அப்படியே அவர்கள் காட்டுக் கழுதைகளைப்போல் இரைக்காக அதிகாலமே எழுந்து தங்கள் வேலைக்குப் புறப்படுகிறார்கள்; அந்த வெளியானது அவர்களுக்கும் அவர்கள் பிள்ளைகளுக்கும் ஆகாரம் கொடுக்க வேண்டும்.

௬ வயலிலே அவர்கள் அவனுக்கு அறுப்பறுக்கிறார்கள்; துன்மார்க்கனுடைய திராட்சத்தோட்டத்தின் பழங்களைச் சேர்க்கிறார்கள்.

௭ குளிரிலே மூடிக்கொள்ளுகிறதற்கு இல்லாததினால் உடுப்பற்ற அம்மணமாய் இராத்தங்கி,

௮ மலைகளிலிருந்து வருகிற மழையிலே நனைந்து, ஒதுக்கிடமில்லாததினால் கன்மலையை அணைத்துக்கொள்ளுகிறார்கள்.

௯ அவர்கள் தகப்பனில்லாத பிள்ளையை முலையைவிட்டுப் பறிக்கிறார்கள், சிறுமையானவன் கையிலிருக்கிறதை அடகுவாங்குகிறார்கள்.

௰ அவனை உடுப்பில்லாத அம்மணமாக நடக்கவும் பட்டினியாக அரிக்கட்டுகளைச் சுமக்கவும்,

௰௧ தங்கள் மதில்களுக்குள்ளே செக்காட்டவும், ஆலையாட்டவும் பண்ணுகிறார்கள்.

௰௨ ஊரில் மனுஷர் தவிக்கிறார்கள்; காயப்பட்டவர்களின் ஆத்துமம் கூப்பிடுகிறது, ஆனாலும் தேவன் அதை அபாத்தமாக அவர்கள்மேல் சுமத்துகிறதில்லை.

௰௩ அவர்கள் வெளிச்சத்துக்கு விரோதமாயிருக்கிறவர்களின் கூட்டத்தார், அவர்கள் அவருடைய வழிகளை அறியாமலும் அவருடைய பாதைகளில் தரிக்காமலும் இருக்கிறார்கள்.

௰௪ கொலைபாதகன் பொழுதுவிடிகிறபோது எழுந்து சிறுமையும் எளிமையுமானவனைக் கொன்று, இராக்காலத்திலே திருடனைப்போலிருக்கிறான்.

கரு விபசாரனுடைய கண் மாலைமசங்கலை [illegible]திருந்து ஒருகண்ணும் என்னைப் பார்ப்பதில்லையென்று முகத்தை மூடிக்கொள்ளுகிறான்.

கசு அவர்கள் பகலிலே அடையாளம்போட்டு வைத்த வீடுகளை இருட்டிலே கன்னமிட்டு வெளிச்சத்தை அறியாதிருக்கிறார்கள்.

கஎ விடியற்காலம் அவர்களுக்கு மரணநிழலாயிருக்கிறது, அப்படி [illegible] மரணநிழலின் பயங்கரங்களை அறிந்திருக்கிறார்கள்.

கஅ [illegible] தண்ணீரின்மேல் தீவிரமாய்ப் போகிறான், தேசத்தில் அவன் பங்கு சபிக்கப்பட்டுப்போகிறது; அவன் திராட்சத்தோட்டங்களின் வழியாய்ப் போகிறதில்லை.

கக வறட்சியும் உஷ்ணமும் உறைந்த பனிநீரைப் பட்சிக்கிறதுபோல, பாதாளமானது பாவஞ்செய்தவர்களைப் பட்சிக்கிறது.

உய அவனைப் பெற்ற கர்ப்பம் அவனை மறக்கும்; புழு அவனை ருசிபார்க்கும்; அவன் அப்புறம் நினைக்கப்படுவதில்லை; அக்கிரமமானது பட்ட மரத்தைப்போல முறிந்துவிழும்.

உக பிள்ளைபெறாத மலடியின் ஆஸ்தியைப் பட்சித்து, விதவைக்கு நன்மைசெய்யாதிருக்கிறான்.

உஉ தன் பெலத்தினாலே வல்லவர்களைத் தள்ளுகிறான்; எழும்பியும், பிராணனைக் குறித்து நிச்சயமில்லை.

உங பாவிகளுக்குச் சுகமாய் இருக்கும்படி [illegible] அவர்களைப் பெலப்படுத்துகிறான், ஆனாலும் அவருடைய கண்கள் அப்படிப்பட்டவர்களின் வழிகளுக்கு விரோதமாயிருக்கிறது.

உச அவர்கள் கொஞ்சக்காலம் உயர்ந்திருந்து [illegible] தாழ்த்தப்பட்டு, மற்றெல்லாரைப்போலவும் அடக்கப்படுகிறார்கள், கதிர்களின் நுனியைப்போல அறுக்கப்படுகிறார்கள்.

உரு அப்படியில்லையோ, என்னைப் பொய்யனாக்கி என் வார்த்தைகளை ஒன்றுமில்லாமற்போகப்பண்ணுகிறவன் யார் என்றான்.

உரு. அதிகாரம்.

தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருக்கக்கூடாதென்று பில்தாத் ஒப்புவிக்கிறது.

அப்பொழுது சூகியனான பில்தாத் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது,

உ அதிகாரமும் பயங்கரமும் அவரிடத்திலிருக்கிறது, அவர் தமது உன்னதமான ஸ்தலங்களில் சமாதானமுண்டாக்குகிறார்.

ங அவருடைய சேனைகளுக்குத் தொகையுண்டோ, அவருடைய வெளிச்சம் ஆர்மேல் உதிக்காதிருக்கிறது.

ச இப்படியிருக்க, ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பதெப்படி, சுத்தமாயிருப்பதெப்படி.

ரு சந்திரனை அண்ணாந்துபாரும், அதுவும் பிரகாசிக்கிறதில்லை, நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகளல்ல.

சு புழுவாயிருக்கிற மனுஷனும், பூச்சியாயிருக்கிற மனுபுத்திரனும் எத்தனை அதிகமென்றான்.

உசா. அதிகாரம்.

யோபு பில்தாதின் மேற்குறையாகப் பேசிப் பரமனுடைய மகத்துவத்தை மேன்மைப்படுத்துகிறது.

யோபு பிரதியுத்தரமாகச் சொன்னதாவது,

உ நீ பெலனில்லாதவனுக்கு எப்படி ஒத்தாசைபண்ணினாய், பெலனற்ற கையை எப்படி ஆதரித்தாய்.

ங நீ ஞானமில்லாதவனுக்கு எப்படி உசாவுதலையாயிருந்து மெய்ஞ்ஞானத்தைப் பரிபூரணமாய் அறிவித்தாய்.

ச ஆருக்கு அறிவுசொல்லுகிறாய், உன்னிலிருந்து புறப்பட்டது ஆருடைய ஆவி.

ரு ஜலத்தின் கீழ் மரித்த [illegible] ஜலங்களும் அவைகளில் குடியிருக்கிறவர்களும் [illegible].

சு அவருக்கு முன்பாகப் பாதாளம் வெளியாயிருக்கிறது, நரகம் மூடப்படாததுமாயிருக்கிறது.

எ அவர் வடக்கை வெறுமையின்மேலே விரித்து, பூமியை அந்தரத்திலே தொங்கவைக்கிறார்.

அ அவர் தண்ணீர்களைத் தம்முடைய மேகங்களிலே கட்டிவைக்கிறார், அவைகளின் கீழ் மேகம் கிழிகிறதில்லை.

க அவர் தம்முடைய ஆசனம் நிற்கிற ஆகாசத்தைக் கெட்டியாயிருக்கப்பண்ணி, அதின்மேல் தமது மேகத்தை விரிக்கிறார்.

ய அவர் தண்ணீர்களின்மேலெல்லாம் சக்கரவட்டம் தீர்ந்தார், வெளிச்சமும் இருளும் முடியுமட்டும் அப்படியிருக்கத்தானே.

யக அவருடைய உதயம் புறப்படுவதினால் வானத்தின் தூண்கள் அசைந்து திகைக்கும்.

யஉ தமது வல்லமையினாலே சமுத்திரத்தைப் பிளந்து தமது உணர்வினாலே அதின் மூர்க்கத்தை நொறுக்குகிறார்.

யங தம்முடைய ஆவியினாலே வானத்தை அலங்கரித்தார், அவருடைய கரம் நீளமான சர்ப்பத்தை உருவாக்கிற்று.

௰௪ இதோ, இவைகள் அவருடைய வழிகளின் கடைசிகள், நாங்கள் அவரைக் குறித்துக் கேட்டவார்த்தை எத்தனை கொஞ்சமாயிருக்கிறது, அவருடைய வல்லமையின் இடிமுழக்கம் இன்னதென்று அறிந்தவன் யார் என்றான்.

உ௭. அதிகாரம்.

யோபு மாயமற்ற தன்னுடைய தேவபக்தியை விட்டுவிடாதிருக்கிறது.

யோபு பின்னும் தன் வாக்கியங்களை எடுத்துப் பேசிச் சொன்னதாவது,

உ என்னுடைய சுவாசம் என்னிலும் பராபரனுடைய ஆவி என் மூக்கிலுமிருக்குமட்டும்,

௩ என் உதடுகள் அக்கிரமம் சொல்வதுமில்லை, என் நாக்கு கபடம் உரைப்பதுமில்லையென்று,

௪ என்னுடைய நியாயத்தை விலக்கின பராபரனும் என் ஆத்துமத்தைக் கசப்பாக்கின சர்வவல்லவருமானவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்.

௫ நீங்கள் நீதிமான்களென்று நான் ஒத்துக்கொள்வது எனக்குத் தூரமாயிருப்பதாக, என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலக்கேன்.

௬ என் நீதியைக் கெட்டியாய்ப் பிடிக்கிறேன்: அதை நான் விட்டுவிடேன்; என் நாட்களைக் குறித்து என் இருதயம் என்னை நிந்திக்காது.

௭ என் பகைஞன் ஆகாதவனைப்போலும் எனக்கு விரோதமாய் எழும்புகிறவன் அக்கிரமக்காரனைப்போலும் இருப்பானாக.

௮ எவ்வளவு மாயக்காரன் பொருளைத் தேடிவைத்திருந்தாலும் பராபரன் அவன் ஆத்துமத்தைப் பறிக்கும்போது அவனுடைய நம்பிக்கை என்ன

௯ இக்கட்டு அவன் மேல் வரும்போது பராபரன் அவன் கூப்பிடுதலைக் கேட்பாரோ.

௰ அவன் சர்வத்துக்கும் வல்லவர் மேலே மனமகிழ்ச்சியாயிருப்பானோ, அவன் சகல காலத்திலும் பராபரனைத் தொழுதுகொண்டிருப்பானோ.

௰௧ பராபரனுடைய கரத்தைக் குறித்து உங்களுக்குப் போதிப்பேன்; சர்வத்துக்கும் வல்லவரிடத்திலிருக்கிறதை நான் மறைப்பதில்லை.

௰௨ இதோ, நீங்களெல்லாரும் அதைக் கண்டிருக்கிறீர்கள், பின்னை ஏன் இத்தனை வீணாய் நினைக்கிறீர்கள்.

௰௩ இது துஷ்டனுக்குப் பராபரனிடத்தில் கிடைக்கும் பங்கும் கொடுரக்காரர் சர்வ வல்லவராலே அடைகிற சுதந்தரமுமாமே.

௰௪ அவனுடைய குமாரர் பெருகினால் பட்டயத்துக்கிரையாகத்தானே, அவன் கர்ப்பத்தின் பிறப்புகள் அப்பத்தினால் திருப்தியாவதில்லை.

௰௫ அவனுக்கு மீதியானவர்கள் செத்துப் புதைக்கப்படுவார்கள், அவனுடைய விதவைகள் புலம்புவதுமில்லை.

௰௬ அவன் மண்ணத்தனை வெள்ளியைக் குவித்துக்கொண்டாலும் களிமண்ணத்தனை வஸ்திரங்களைச் சவதரித்தாலும்,

௰௭ அவன் அதைச் சவதரித்தான், ஆனாலும் நீதிமான் அதை உடுத்திக்கொண்டு குற்றமில்லாதவன் வெள்ளியைப் பங்கிடுவான்.

௰௮ அவனுடைய வீடு செல்லுக்கூட்டைப்போலும் காவற்காரன் போட்ட குடிசையைப்போலுமாகும்.

௰௯ அவன் ஐசுவரியவானாய்ப் படுத்துக்கொண்டபோதிலும் நீ ஒன்றும் பறிகொடாமற்போகிறதில்லை; அவன் தன் கண்களைத் திறக்கும்போது ஒன்றுமில்லாதிருக்கும்.

உ௰ திகில்கள் வெள்ளத்தைப்போல அவனைப் பிடிக்கும், இராக்காலத்தில் சுழல்காற்று அவனைவாரிக்கொண்டுபோகும்.

உ௧ கொண்டற்காற்று அவனைத் தூக்கிக்கொண்டுபோகும், அவன் போய்விடுவான், அது அவனை அவன் ஸ்தலத்திலிருந்து தள்ளிக்கொண்டுபோகும்.

உஉ அவர் இவைகளை அவன்மேல் பொழியப்பண்ணி அவனைத் தப்பவிடாதிருப்பார், அவர் கைக்குத் தப்ப ஓடிப்போவான்.

உ௩ அவன்மேல் கைகொட்டி அவனை அவன் ஸ்தலத்தை விட்டு உசுப்புவார்கள்.

உ௮. அதிகாரம்.

யோபு ஆராய்ந்து முடியாத பராபரனுடைய ஞானத்தைக் குறித்துச் சொன்னது.

வெள்ளிக்குப் பிறப்பிடமுண்டு, பொன்னுக்குப் புடமிடுந்தலமுமுண்டு.

உ இரும்பு மண்ணிலிருந்தெடுக்கப்படும், செம்பு கல்லுகளால் உருக்கியெடுக்கப்படும்.

௩ காரிருளிலும் மரணநிழலிலுமிருக்கிற கல்லுகளைக் கடையாந்தரமட்டுங் கண்டெல்லாம் ஆராய்ந்து தேடுகிறதற்கு அதற்கே முடிவுண்டாக்கப்படும்.

௪ பட்டாளியல்லாதவிடத்தில் அவன் தண்டமாட்டாத நிலையாத ஆறு எழும்புகிறது, மனுஷருடைய காலடிக்கும் அப்பாலே விடப்பட்டுப்போகும்.

௫ பூமியோவென்றால் அதினின்று ஆகாரம் விளையும், அதின் கீழிடங்களிலிருக்கிறதுகள் அக்கினியினாலாகுமாப்போலே மாறப்பட்டுப்போகிறது.

௬ அதின் கல்லுகள் நீலக்கல்லுகளின் ஸ்தானமாயிருக்கும், அதிலே பொன்பொடிகளுமுண்டாயிருக்கும்.

௭ ஒரு பட்சியும் அறியாததும் வல்லூறின் கண் காணாததும்,

௮ துஷ்டமிருகக்குட்டிகள் மிதிக்காததும் சிங்கம் கடவாததுமான வழி அதற்கு இருக்கிறது.

௯ ஜநங்கள் கைகளைக் கற்பாறையின்மேலே நீட்டி மலைகளை வேரோடே புரட்டுகிறார்கள்.

௰ கன்மலைகளைப் பிளந்து நீர்க்கால்களைப் புறப்படப்பண்ணுகிறார்கள், அவர்கள் கண் விலையுயர்ந்ததெல்லாவற்றையும் பார்க்கிறது.

௰௧ ஒருதுளியும் புறப்படாதபடிக்கு ஆறுகளை அடைக்கிறார்கள், ஒளிப்பிடத்திலிருக்கிறதை வெளிச்சத்திலே கொண்டுவருகிறார்கள்.

௰௨ ஆனால் ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே, உணர்வு கிடைக்கிற ஸ்தலம் எது.

௰௩ அதின் விலையை மனுஷன் அறியான், அது ஜீவனுள்ளோருடைய பூமியிலே அகப்படுகிறதில்லை.

௰௪ ஆழமானது அது என்னிலில்லையென்கிறது, சமுத்திரமானது அது என்னோடில்லையென்கிறது.

௰௫ அதற்கு ஈடாக அபரஞ்சியைக் கொடுக்கவும் அதற்குக் கிரயமாக வெள்ளியை நிறுக்கவுங்கூடாது.

௰௬ ஓப்பீரின் தங்கமும் விலையேறப்பெற்ற கோமேதகமும் பச்சையும் அதற்கு ஈடல்ல,

௰௭ பொன்னும் பளிங்கும் அதற்கொப்பல்ல, சுத்தப்பொன்னாபரணங்களுக்கு அதை மாற்றக்கூடாது.

௰௮ பவளத்தையும் முத்துக்களையும் நினைக்கப்படாது, ஏனென்றால் முத்துக்களைப்பார்க்கிலும் ஞானத்தின் விலை அதிகமானது.

௰௯ எத்தியோப்பியாவின் புஷ்பராகம் அதற்கொப்பல்ல, அபரஞ்சிப்பொன்னும் அதற்குச் சரிவிலையல்ல,

உ௰ இப்படியிருக்கக்கொள்ள ஞானம் எங்கேயிருந்து வரும், உணர்வு தங்குமிடம் ஏது.

உ௧ ஏனெனில் அது ஜீவனுள்ளோரெல்லாருடைய கண்களுக்கு ஒளித்ததும் ஆகாசத்துப் பறவைகளுக்கு மறைந்ததுமாயிருக்கிறது.

உ௨ அழிவும் மரணமும் நாங்கள் எங்கள் காதுகளினாலேமாத்திரம் அதின் கீர்த்தியைக் கேட்டோமென்கிறது.

உ௩ அதின் வழியைப் பராபரன் அறிவார், அதின் ஸ்தலம் அவருக்கே தெரியும்.

உ௪ ஏனென்றால் அவர் பூமியின் கடையாந்தரங்களைப் பார்த்து எல்லா வானங்களின் கீழுமிருக்கிறதைக் காண்டு,

உ௫ காற்றுக்குத்தக்க நிறையையுண்டாக்கி தண்ணீர்களுக்கு அளவுபிரமாணமிட்டு,

உ௬ மழைக்குத் திட்டத்தையும் இடிமுழக்கங்களோடே கூடிய மின்னலுக்கு வழியையும் உண்டாக்கையில்,

உ௭ அப்போது அவர் அதைப்பார்த்து விவரித்து அதை ஆயத்தப்படுத்தி ஆராய்ந்துபார்த்து,

உ௮ மனுஷனுடனே இதோ, ஆண்டவருக்குப் பயப்படுகிறதே ஞானம், பொல்லாப்பை விட்டுவிலகுகிறதே உணர்வென்று சொன்னான்.

உ௯. அதிகாரம்.

யோபு தனக்கு முன்னிருந்த சுகசீரைக்குறித்துச் சொன்னது.

பின்னையும் யோபு தன் வாக்கியத்தையுரைத்துச் சொன்னதாவது,

உ பராபரனுடைய தீபம் என் சிரசின்மேல் பிரகாசிக்கையிலே நான் அவர் வெளிச்சத்திலே இருளைத் தாண்டிவந்த பூர்வமாதங்களிலும்,

௩ அவர் என்னைக் காப்பாற்றிவந்த நாட்களிலும் எனக்கிருந்த சீரை எனக்குக் கொடுப்பவரார்.

௪ பராபரனுடைய இரகசியச்செயல் என் கூடாரத்தின்மேலுண்டாகி,

௫ சர்வத்துக்கும் வல்லவர் இன்னும் என்னோடிருந்ததும் என் பணிவிடைக்காரர் என்னைச் சூழ்ந்திருந்ததும்,

௬ என் அடிகளை நான் நெய்யிலே கழுவி எனக்கடுத்த கன்மலைகளிலிருந்து எண்ணெய்நதிகள் ஓடிவந்ததும்,

௭ நான் பட்டணவீதியால் வாசலுக்குப் புறப்பட்டுப்போய் வீதியிலே என் ஆசனத்தைப் போடுவித்ததுமான என் செல்வத்தின் நாட்களிலே எனக்கிருந்த சீரை எனக்குக் கொடுப்பவரார்.

௮ அப்போது வாலிபர் என்னைக்கண்டு ஒளித்துக்கொண்டார்கள், விருத்தாப்பியர் எழுந்திருந்து நின்றார்கள்.

௯ பிரபுக்கள் பேசாதிருந்து கையினாலே தங்கள் வாயைப் பொத்திக்கொண்டார்கள்.

௰ பெரியமனுஷரின் சத்தம் அடங்கி, அவர்களநாக்கு அவர்கள மேலவாயிலொட்டிக்கொண்டது.

௰௧ என்னைக்கேட்ட காது என்னைப்பாக்கியவானென்றது, என்னைக்கண்ட கண் எனக்குச்சாட்சியிட்டது.

௰௨ ஏனென்றால் கூப்பிடுகிற சிறுமையாளனையும் திக்கற்றவனையும் உதவியில்லாதவனையும் தப்புவித்தேன்.

௰௩ கெட்டுப்போகிறவனுடைய ஆசீர்வாதம் என்மேல் வந்தது, விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப்பண்ணினேன்.

௰௪ நீதியைத் தரித்துக்கொண்டேன், அது என்னுடைய உடுப்பாயிற்று. என்னுடைய நியாயம் எனக்குச் சால்வையும் பாகையுமாயிற்று.

௰௫ நான் குருடனுக்குக் கண்களுஞ் சப்பாணிக்குக் காலுமாயிருந்தேன்.

௰௬ நான் எளியவர்களுக்குத் தகப்பனாயிருந்து நான் அறியாத வழக்கை ஆராய்ந்தேன்.

௰௭ நான் அநியாயக்காரருடைய கடைவாய்ப்பல்லுகளை உடைத்து அவர்கள் பறித்ததை அவர்கள் பல்லுகளிலிருந்து பிடுங்கினேன்.

௰௮ என் கூட்டோடே நான் சாவேன், என் நாட்களை மணல் அத்தனையாய்ப் பெருகப்பண்ணுவேனென்றேன்.

௰௯ என்னுடைய வேர் தண்ணீர்களின் ஓரமாய்ப் படர்ந்தது, பனி என் கிளையின்மேலே இராத்தங்கியிருந்தது.

௨௰ என் மகிமை எனக்குப் புதிதாகி என் கையிலுள்ள என் வில்லும் நமையப்பலத்துக்கொண்டது.

௨௧ எனக்குச் செவிகொடுத்துக் காத்திருந்தார்கள். என் ஆலோசனையைக் கேட்டு மவுனமாயிருந்தார்கள்.

௨௨ என் பேச்சுக்கு இரட்டிக்காதிருந்தார்கள், என் வசனம் அவர்கள்மேலே துளிதுளியாய் விழுந்தது.

௨௩ ஏனென்றால் மழைக்குக் காத்திருக்கிறதுபோல எனக்குக் காத்திருந்து பின்மாரிக்கு ஆசையுள்ளவர்கள்போலத் தங்கள் வாயை ஆவென்று திறந்திருந்தார்கள்.

௨௪ நான் அவர்களைப்பார்த்து நகைக்கும்போது அவர்கள் நம்பாமலும், என் முகத்தின் பிரகாசத்தை யிறங்கப்பண்ணாமலுமிருந்தார்கள்.

௨௫ அவர்கள் வழிக்குப்போக எனக்கு இஷ்டமாகும்போது நான் தலைவனாயுக்கார்ந்து ராஜா சேனையிலிருக்கிறதுபோலுந் துக்கித்தவர்களைத் தேற்றரவு பண்ணுகிறவனைப்போலுமிருந்தேன்.

௩௰. அதிகாரம்.

யோபு தன் சுகவாழ்வுக்குப் பிறகு [illegible]

௧ இப்பொழுதோவென்றால் என்னிலும் இளவயதானவர்கள் என்னை நகைக்கிறார்கள், இப்படிக்கொத்தவர்களுடைய பிதாக்களை நான் என் மந்தையின் நாய்களோடே வைக்கவும் அசட்டைபண்ணினேன்.

௨ விருத்தாப்பியத்திலே கெட்டுப்போன அவர்கள் கைகளின் பெலத்தால் எனக்கென்ன உதவியாயிருக்கும்.

௩ அவர்கள் குறைவினாலும் பசியினாலும் [illegible] விடப்பட்டு வெறுந்தரையாய்ப் பாழும் வெறுமையுமான அந்தகாரவெளிக்கு ஓடிப்போய்,

௪ செடிகளுக்குள்ளிருக்கிற தழைகளைப் பிடுங்குகிறார்கள், காட்டுப்பூண்டுகளின் கிழங்கு அவர்களுக்கு ஆகாரமாயிருக்கும்.

௫ அவர்கள் மனுஷரின் நடுவிலிருந்து துரத்தப்பட்டவர்கள், கள்ளனைப் பிடிக்கக் கூப்பிடுகிறதுபோலே அவர்களைப்பிறகே கூப்பிடப்படும்.

௬ பள்ளத்தாக்குகளின் வெடிப்புகளிலும் பூமியின் கெபிகளிலும் கன்மலைகளிலுந் தங்கியிருக்கிறார்கள்.

௭ செடிகளுக்குள்ளிருந்து கதறிக்கொண்டு சொறிக்கள்ளிகளின் கீழ்க்கூடுவார்கள்.

௮ அவர்கள் மூடரின் பிள்ளைகளும் கீர்த்தியற்றவர்களுமாய்த் தேசத்திலிருந்து துரத்தப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள்.

௯ இப்பொழுதோ நான் அவர்களுக்குப் பாட்டும் பழமொழியுமானேன்.

௰ என்னை அருவருத்து எனக்குத் தூரமாகி என் முகத்துக்கு முன்பாகத் துப்பக் கூசாதிருக்கிறார்கள்.

௰௧ ஏனென்றால் அவர் என் கயிற்றை அவிழ்த்து என்னைச் சிறுமைப்படுத்தினபடியினாலே இவர்கள் கடிவாளத்தை என் முகத்துக்கு முன்பாக உதறிப்போட்டார்கள்.

௰௨ வலதுபாரிசத்திலே வாலிபர் எழும்பி என் கால்களை வாரிப்போட்டுத் தங்கள் கேட்டானவழிகளை எனக்கு விரோதமாக ஆயத்தப்படுத்துகிறார்கள்.

௰௩ என் பாதையைக் கெடுத்து, எனக்கு விபத்துண்டாக்குகிறார்கள், அவர்களுக்கு ஒத்தாசைபண்ணுகிறவன் தேவையில்லை.

௰௪ பெரிதான திறப்புண்டாக்கிக்கிடக்க, அவர்கள் தகர்ந்தவழியால் உட்புகுந்துவருகிறார்கள்.

௰௫ திகில்கள் என்மேல் திரும்புகிறது. அவைகள் காற்றைப்போல என் ஆத்துமாவைத் தொடருகிறது, என் சுகவாழ்வு ஒரு மேகத்தைப்போல் கடந்துபோயிற்று.

௰௬ ஆகையால் இப்போது என் ஆத்துமா எனக்குள்ளே கரைந்துபோயிற்று. உபத்திரவத்தின் நாட்கள் என்னைப் பிடித்தது.

௰எ இராக்காலத்திலே என் எலும்புகள் துளைக்கப்பட்டு, என் நரம்புகளுக்கு இளைப்பாறுதலில்லாதிருக்கிறது.

௰அ நோயின் மும்முரத்தினால் என் உடுப்பு வேறுபட்டுப்போயிற்று, அது என் அங்கியின் கழுத்துப்பட்டையைப்போல என்னை இறுக்கிக்கொண்டது.

௰௯ சேற்றிலே தள்ளப்பட்டேன். தூளுக்கும் சாம்பலுக்கும் ஒத்துப்போனேன்.

௨௰ உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், நீர் எனக்கு மறுஉத்தரவுகொடாதிருக்கிறீர், நிற்கிறேன், நீரோ என்மேற் பார்த்துக்கொண்டிருக்கிறீர்.

௨௧ என்மேலே கொடூரமானவராக மாறினீர், உம்முடைய கரத்தின் வல்லமையால் என்னை விரோதிக்கிறீர்.

௨௨ நீர் என்னைத் தூக்கி என்னைக் காற்றிலே பறக்கவிட்டு என் இருப்பை உருகிப்போகப்பண்ணுகிறீர்.

௨௩ ஏனென்றால் சகல ஜீவாத்துமாக்களுக்கும் குறிக்கப்பட்ட தாவரமாகிய மரணத்துக்கு என்னை ஒப்புக்கொடுப்பீரென்றறிந்திருக்கிறேன்.

௨௪ ஆனால் நான் யாதொருவனைத் துக்க[illegible]விக்கப்பண்ணினதுண்டோ,

௨௫ துன்மார்க்கவினை செய்கிறவனுக்காக நான் அழாதிருந்ததும், எளியவனுக்காக என் ஆத்துமா வியாகுலப்படாதேபோனதுமுண்டானால், அவர் என் மனுவுக்கிடங்கொடாமல் எனக்கு விரோதமாய்த் தம்முடைமையை நீட்டுவாராக.

௨௬ நான் நன்மைக்குக் காத்திருந்தவேளையிலே தீமை வந்தது, வெளிச்சத்தைப் பார்த்துக்கொண்ட எனக்கு இருள் வந்தது.

௨எ என் குடல்கள் பொங்கி அமராதிருக்கிறது, உபத்திரவநாட்கள் என்மேல் வந்தது.

௨அ வெயிற்படாதிருந்தும் நான் கறுத்துத் திரிகிறேன், நான் சபையிலிருந்து எழுந்திருக்கும்போது அலறுகிறேன்.

௨௯ நான் மலைப்பாம்புகளுக்குச் சகோதரனும் கோட்டான்பட்சிகளுக்குந் தோழனுமானேன்.

௩௰ என்னைச் சூழ்ந்திருக்கிற என் தோல் கறுத்துப்போயிற்று. என்னெலும்புகள் உஷ்ணத்தினாற் காய்கிறது.

௩௧ என் சுரமண்டலம் புலம்பலாகவும் என் கின்னரம் அழுகிறவர்களின் சத்தமாகவும் மாறிற்று.

௩௧. அதிகாரம்.

யோபு குற்றமற்ற தன் நடக்கையை விவரித்துக்காட்டினது.

௧ என் கண்களோடே உடம்படிக்கைபண்ணின நான் ஒரு கன்னியாஸ்திரீயின்மேல் நினைப்பாயிருப்பதெப்படி.

௨ ஏனென்றால் அப்போது உன்னதத்திலிருந்து பராபரன் இரைக்கிற பங்கும் உன்னதத்திலிருந்து சர்வத்துக்கும் மேலானவர் கொடுக்குஞ் சுதந்தரமும் என்னமாயிருக்கும்.

௩ மாறுபாடானவனுக்கு ஆபத்தும் அக்கிரமஞ்செய்கிறவர்களுக்குத் தீமைப் பிறப்பல்லவோ உண்டாயிருக்கும்.

௪ அவர் என் வழிகளைப் பார்த்து என் நடைகளையெல்லாம் எண்ணுகிறாரல்லவோ.

௫ நான் மாயையிலே நடந்தேனோ, என் கால் கபடுநடக்கத் தீவிரித்ததோவென்று,

௬ சுமத்திருக்கிற நிறைகோலினாலே பராபரன் என்னை நிறுப்பாராக, அப்போது என் உத்தமத்தை அறிவார்.

௭ என் நடைகள் வழியைவிட்டு விலகினதும் என் இருதயம் என் கண்களைப் பின்தொடர்ந்ததும் ஏதாகிலும் என் கைகளில் ஒட்டிக்கொண்டதுமுண்டானால்,

௮ அப்போது நான் விதைத்ததை வேறொருவன் புசிப்பானாக, என் பயிர்கள் வேரற்றுப்போகக்கடவது.

௯ என் இருதயம் யாதொரு ஸ்திரீயின்மேலே மயங்கி எனக்கடுத்தவனுடைய வாசலை நான் எட்டிப்பார்த்ததுண்டானால்,

௰ அப்போது என் பெண்சாதி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக: வேறேபேர் அவள்மேல் சாய்வார்களாக.

௰௧ ஏனென்றால் அது தோஷம், அது நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படும் அக்கிரமம்.

௰௨ ஏனென்றால் அது பாதாளபரியந்தம் பட்சிக்கும் அக்கினியாய் என் வரத்தையெல்லாம் வேரறுப்போகப்பண்ணுகிறதாயிருக்கும்.

௰௩ என் வேலைக்காரனாகிலும் என் வேலைக்காரியாகிலும் என்னோடே வழக்காடும்போது அவர்கள் நியாயத்தை நான் அசட்டைபண்ணியிருந்தால்,

௰௪ பராபரன் எழும்பும்போது நான் என்ன செய்வேன். அவர் விசாரிக்கும்போது நான் அவருக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்.

௰௫ தாயின் கெர்ப்பத்தில் என்னை உண்டுபண்ணினவர் அவனையும் உண்டுபண்ணினாரல்லவோ? ஒரேவிதமாய்க் கெர்ப்பத்தில் எங்களைச் செப்பனிட்டதில்லையோ.

௰௬ எளியவர்கள் வாஞ்சித்ததை நான் கொடாதிருந்து விதவையின் கண்களைப் பூத்துப்போகப்பண்ணி,

௰௭ தாய்தகப்பனில்லாத பிள்ளை என் துணுக்கையிலே சாப்பிடாமல் நான் ஒருவனாய்ச் சாப்பிட்டேனோ.

௰௮ என் சிறுவயதிலே துவக்கி அவன் தகப்பனைப்போலே என்னோடே வளர்ந்தானே: நான் என் தாயின் கெர்ப்பத்திலே பிறந்தது முதல் அப்படிப்பட்டவர்களைக் கைலாகுகொடுத்து நடத்தினேனே.

௰௯ யாதொருவன் உடுப்பில்லாததினாலே மடிந்துபோகிறதையாவது ஏழைக்கு மூடுதலில்லாதிருக்கிறதையாவது நான் பார்த்தபோது,

௨௰ அவன் என் ஆடுகளின் மயிரினாலே அடைந்த அனலினாலே அவன் இடை என்னை ஆசீர்வதிக்காதிருந்ததும்,

௨௧ ஒலிமுகவாசலில் எனக்குப் பலம் உண்டென்று நான் கண்டு திக்கற்றவன்மேலே என் கையை நீட்டினதுமுண்டானால்,

௨௨ என் கைப்பட்டை தோளிலிருந்து சரிந்து என் புயத்தெலும்பு முறிந்துபோவதாக.

௨௩ ஏனென்றால் பராபரன் ஆக்கினையிடுவாரென்றும் அவருடைய மகத்துவத்தை உத்தரிக்கமாட்டேனென்றும் எனக்குப் பயங்கரமாயிருந்தது.

௨௪ நான் பொன்னின்மேலே என் நம்பிக்கையை வைத்து அபரஞ்சியைப் பார்த்து நீ என் ஆதரவென்று நான் சொன்னதும்,

௨௫ என் ஆஸ்தி பெரியதென்றும் என் கைக்கு மிகுதியுங் கிடைத்ததென்றும் நான் மகிழ்ந்ததும்,

௨௬ சூரியன் பிரகாசிக்கிறபோதும் அல்லது சந்திரன் மகிமையாய்ப் புறப்படுகிறபோதும் நான் அதை நோக்கி,

௨௭ என்னுடைய வாய் என் கையை முத்தஞ்செய்ய என் இருதயம் இரகசியமாய் மயக்கப்பட்டதுமுண்டானால்,

௨௮ அதுவும் நியாயாதிபதிகளாலே விசாரிக்கப்படத்தக்க அக்கிரமமாயிருக்கும்: ஏனென்றால் அப்போது உயரவிருக்கிற பராபரனை மறுதலிப்பேனே.

௨௯ என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழ்ந்து பொல்லாப்பு அவனைப் பிடித்ததென்று களிகூர்ந்துகொண்டிருந்தேனோ.

௩௰ அவனுடைய ஜீவனுக்குச் சாபத்தைக் கேட்கும் பாவத்தைச் செய்ய என் தொண்டைக்கு நான் இடங்கொடுத்ததில்லை.

௩௧ அவனுடைய மாமிசத்தால் திருப்தியாகாதவனைக் காண்பிப்பவன் ஆரென்று என் கூடாரத்தின் மனுஷர் சொல்லார்களோ?

௩௨ பரதேசி வீதியிலே இராத்தங்கினதில்லை, வழிப்போக்கனுக்கு என் வாசலைத் திறந்தேன்.

௩௩ நான் ஆதாமைப்போலே என் மீறுதலை மறைத்து என் அக்கிரமத்தை என் மடியிலே ஒளித்துவைத்தேனோ?

௩௪ திரள்கூட்டத்துக்கு நான் பயந்திருந்ததினாலும் வம்சங்களின் நிந்தனை என்னைக் கலங்கப்பண்ணினதினாலும் நான் பேசாதிருந்து வாசற்படியைவிட்டுப் புறப்படாதிருந்தேனோ!

௩௫ ஆ, என் வழக்கைக் கேட்கத்தக்கவனை இருந்தால் நலம், இதோ, குறிக்கப்பட்டதாவின். சர்வத்துக்கும் வல்லவர் எனக்கு உத்தரவு கொடுக்கச் செய்யவும் என் வழக்காளி தனக்கு எழுதிக்கொடுக்கவும் எனக்காகவே உண்டு.

௩௬ அதை நான் என் தோளின்மேல் வைத்துக்கொண்டு எனக்குக் கிரீடமாகத் தரித்துக்கொள்ளுவேனே.

௩௭ அவனுக்கு நான் என் நடைகளின் இலக்கத்தை மிலைச்சமாய்ச் சொல்லி அவனைப் பிரபுவைக் காட்டியாகச் சேர்ந்துகொள்ளுவேன்.

௩௮ எனக்கு விரோதமாக என் காணி பூமி கூப்பிடுகிறதும், அதின் படைச்சால்கள் கூட அழுகிறதும்,

௩௯ கூலிகொடாமல் நான் அதின் பலனைப் பொசித்ததும் பயிரிட்டவர்களின் ஆத்துமத்தை உபத்திரவப்படுத்தினதும் உண்டானால்,

௪௰ அதிலே கோதுமைக்குப் பதிலாக முள்ளும் வாற்கோதுமைக்குப் பதிலாகக் களையும் முளைக்கக்கடவதென்றான். யோபின் வார்த்தைகள் முடிந்தது.

௩௨. அதிகாரம்.

எலிகூ என்றவன் யோபின்மேலும் அவன் சிநேகிதர்மேலும் தாங்கலாய்ப் பேசத் துவக்கினது.

அப்போது அந்த மூன்று மனுஷர் யோபு தன் பார்வைக்கு நீதிமானாயிருந்தபடியி

ஞலே அவனுக்குப் பிரத்தியுத்தாரஞ்சொல்லவொழிந்தார்கள்.

௨ அப்பொழுது ராமுடைய வமிசத்தானாகிய பறகெயேலின் குமாரனான எலிகூ என்கிற பூசியனுக்குக் கோபமூண்டது. யோபு பராபரனைப்பார்க்கிலுந் தன்னைத்தானே நீதிமானாக்கினதினிமித்தம் அவனுக்கு அவன்பேரில் உக்கிரகோபமூண்டது.

௩ கொடுக்கத்தக்கமறுமொழி யோபின் மூன்று சிநேகிதருக்கு அகப்படாதிருந்தும் அவர்கள் அவனை ஆகாதவனென்று தீர்த்ததினிமித்தம் அவர்கள்பேரிலும் அவனுக்குக் கோபமூண்டது.

௪ அவர்கள் தன்னைப்பார்க்க வயதுசென்றவர்களானபடியினாலே எலிகூ யோபின் வார்த்தைகள் முடிந்துமட்டுங் காத்திருந்தான்.

௫ அப்பொழுது அந்த மூன்று மனுஷரின் வாயிலே உத்தரவு பிறக்கவில்லையென்று எலிகூ கண்டபோது அவனுக்குக் கோபமூண்டது.

௬ அதுகொண்டு பறகெயேலின் குமாரனான எலிகூ என்ற பூசியன் பிரத்தியுத்தாரங்கொடுத்துச்சொன்னதாவது, நான் சொற்பவயதானவன் நீங்களோ வெண்டலை விருத்தாப்பியர், ஆகையால் நான் அஞ்சி என்னுடைய நினைப்பை உங்களுக்கு முன்பாக வெளிப்படுத்தப் பயந்திருந்தேன்.

௭ நாட்சென்றவர்கள் பேசி வயதுமிகுதியானவர்கள் ஞானத்தை அறிவிக்கட்டுமென்றேன்.

௮ ஆனாலும் மனுஷரில் ஆவியிருந்தாலுஞ் சர்வத்துக்கும் வல்லவருடைய சுவாசமே அவர்களை உணர்வுள்ளவர்களாக்கும்.

௯ ஆனபடி பெரியவர்கள் ஞானமுள்ளவர்களல்ல, முதிர்வயதானவர்கள் நியாயமுணர்ந்தவர்களுமல்ல.

௰ ஆகையால் எனக்குக் கேள்விகொடுங்கள், நானும் என்னுடைய நினைப்பை வெளிப்படுத்துவேனென்கிறேன்.

௰௧ இதோ, உங்கள் வசனங்கள் முடியுமட்டுங் காத்திருந்தேன், நீங்கள் சொல்லத்தக்கதை ஆராய்ந்துதேடுமட்டும் உங்கள் நியாயங்களுக்குச் செவிகொடுத்தேன்.

௰௨ இப்படி உங்கள் சொல்லைக்கவனித்தேன், ஆனால் இதோ உங்களில் யோபுக்கு நியாயத்தைத் தெரியக்காட்டி அவருடைய வசனங்களுக்கேற்ற பிரத்தியுத்தாரத்தைச் சொல்லுகிறவனில்லை.

௰௩ மனுஷனல்ல, பராபரனே அவனைவிழத்தள்ளுவாரென்கிறதினாலே ஞானத்தைப் பிடித்தோமென்று சொல்லாதேயுங்கள்.

௰௪ அவர் என்னைப்பார்த்துப் பேசினதில்லை, நீங்கள் சொன்னவார்த்தைகளின்படி நான் அவருக்குப் பிரத்தியுத்தாரஞ் சொல்லுவதில்லை.

௰௫ அவர்கள் கலங்கி அப்புறம் பிரத்தியுத்தாரஞ்சொல்லாதிருக்கிறார்கள்; அவர்களுக்குப் பேச்சு அற்றுப்போயிற்று.

௰௬ அவர்கள் பேசார்களோவென்று காத்திருந்தேனே, ஆனால் அவர்கள் அப்புறம் மறுமொழிகொடாமலிருக்கிறபடியினாலே,

௰௭ நானும் பிரத்தியுத்தாரமாக எனக்குத் தோன்றியமாத்திரத்தைச் சொல்லுவேன்; நானும் என் நினைப்பை வெளிப்படுத்துவேன்.

௰௮ ஏனென்றால் வார்த்தைகள் எனக்குள் நிறைந்திருக்கிறது, என் உள்ளத்தின் ஆவி என்னை நெருக்குகிறது.

௰௯ இதோ, என்னுடைய உள்ளந்திறந்திராத ரசம் புளிக்கிறதினாலே பீறப்போகிறதுமான புதுத்துருத்தியைப் போலிருக்கிறது.

௨௰ எனக்குச் சுகசுவாசமுண்டாகும்படிப் பேசுவேன், என் உதடுகளைத் திறந்து பிரத்தியுத்தாரஞ்சொல்லுவேன்.

௨௧ நான் ஒருவனுடைய முகத்தைப் பாராமலும் ஒரு மனுஷனுக்கும் இச்சகம்பேசாமலும் இருப்பேனாக.

௨௨ ஏனென்றால் இச்சகம்பேச அறியேன், மற்றப்படி என்னை உண்டாக்கினவர் சீக்கிரத்திலே என்னை எடுத்துக்கொள்ளுவார்.

௩௩. அதிகாரம்.

பராபரன் மனுஷனை நடத்துகிற நீதியைக் குறித்து எலிகூ பேசினது.

இப்போதும் யோபே, என் நியாயங்களைக் கேளும், என் வார்த்தைகளுக்கெல்லாஞ் செவிகொடும்.

௨ இதோ, என் வாயைத் திறந்தேன், என் வாயிலிருக்கிற என்னுடைய நாவானது பேசும்.

௩ என் வார்த்தைகள் என் இருதயத்தின் உண்மைக்கொத்திருக்கும், நான் அறிந்ததை என் உதடுகள் சுத்தமாய் வசனிக்கும்.

௪ பராபரனுடைய ஆவியானவர் என்னையுண்டாக்கினார், சர்வத்துக்கும் வல்லவருடைய சுவாசம் எனக்குயிர்கொடுத்தது.

௫ உமக்குக்கூடுமானால் எனக்கு மறுமொழிகொடும், எனக்கெதிராக நீர் ஆயத்தப்பட்டு நின்றிரும்.

௬ இதோ, நான் உம்மைப்போலே தேவனாலே உண்டானவன், நானும் களிமண்ணினால் உருவாக்கப்பட்டவன்.

௭ இதோ, நீர் எனக்குப் பயப்படவேண்டியதில்லை, என்னுடைய கை உம்மேல் பாரமாயிருப்பதில்லை.

௮ நான் காதாரக் கேட்கச் சொன்னீர், உம்முடைய வார்த்தைகளின் சத்தமும் கேட்டது,

௯ நான் மீறுதலில்லாத சுத்தன். நான் குற்றமில்லாதவன், என்னில் அக்கிரமமில்லை.

௰ இதோ, என்னில் அவர் யாதொரு காரியங்களைக் குறையாய்ப் பிடித்து, என்னைத் தமக்குச் சத்துருவாக எண்ணிக்கொள்ளுகிறார்.

௰௧ அவர் என் கால்களைத் தொழுவிலே மாட்டி, என் நடைகளையெல்லாம் காத்துப் பார்த்துக்கொள்ளுகிறார்.

௰௨ இதோ, இதிலே நீர் நீதியுள்ளவரல்லவென்று உமக்குப் பிரதியுத்தரமாகச் சொல்லுகிறேன், ஏனென்றால் மனுஷனைப் பார்க்கப் பராபரன் பெரியவராயிருக்கிறார்.

௰௩ அவர் தம்முடைய நடக்கைகளெல்லாவற்றையுங் குறித்து உத்தரவுகொடுக்கிறதில்லையென்று நீர் அவரோடே வழக்காடுவானேன்.

௰௪ ஏனென்றால் பராபரன் ஒருவிசை சொல்லியிருக்கக் காரியத்தை இரண்டாம் விசை பார்த்துத் திருத்தமாட்டார்.

௰௫ கண் நித்திரை மனுஷர்மேல் இறங்கி அவர்கள் படுக்கையின்மேல் அசந்துபோகையில்,

௰௬ அப்போது அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷருடைய செவிக்குத் தாமே வெளிப்படுத்தி அதை அவர்களுக்கு வருத்தமான தண்டனையினாலே முத்திரைபோடுகிறார்.

௰௭ மனுஷனுடைய செய்கையை நீக்கவும் பெருமையை மனுஷனுக்கு மறைக்கப்பண்ணவும்,

௰௮ அப்படியே அவன் ஆத்துமத்தை அழிவுக்கும் அவன் சீவனைப் பட்டயத்துக்கும் தப்புவிக்கவும் அப்படிச் செய்கிறார்.

௰௯ அதையால் இவன் தன் படுக்கையிலே வாதையினாலும் தன் எலும்புகளில் அகோரமான நோவினாலும் தண்டிக்கப்படுகிறான்.

௨௰ அவனுடைய சீவன் அப்பத்தையும் அவன் ஆத்துமம் ருசியான போஜனத்தையும் அரோசிக்கும்.

௨௧ அவனுடைய மாமிசங் காணப்படாதபடிக்கு அழிந்து காணப்படாதிருந்த அவன் எலும்புகள் பிதுங்குகிறது.

௨௨ அவனுடைய ஆத்துமம் அழிவுக்கும் அவனுடைய பிராணன் சாவுக்கும் சமீபிக்கிறது.

௨௩ ஆயிரத்தில் ஒருவராகிய சாமர்த்தியமுள்ள தூதர் மனுஷனுக்குத் தம்முடைய நீதியைத் தெரிவிக்கும்படிக்கு அவனுக்கு அனுசாரியாயிருந்தாரேயாகில்,

௨௪ அவர் அவனுக்கு இரங்கி அவன் அழிவின் குழியில் இறங்காதபடிக்கு நீர் அவனை விடுவியும், மீட்கும்பொருளை நான் கண்டுபிடித்தேன் என்பார்.

௨௫ அப்போது அவன் மாமிசம் வாலிபத்தின் மாமிசத்தைப் பார்க்கிலும் புஷ்டியாகும், தன் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்.

௨௬ அவன் பராபரனை நோக்கி விண்ணப்பம் பண்ணுவான், அவன்மேல் அவர் தயவாயிருப்பார், அவன் அவருடைய முகத்தைக் கெம்பீரத்தோடே பார்ப்பான், அவர் அவன் மனுஷனுக்கு அவனுடைய நீதியைத் திரும்பக் கொடுப்பார்.

௨௭ அவன் மனுஷரை நோக்கிப் பார்த்து: நான் பாவஞ்செய்து செம்மையானதைப் புரட்டினேன்; அது எனக்குப் பிரயோஜனமாயிருக்கவில்லை.

௨௮ அவர் என் ஆத்துமம் குழியில் இறங்காதபடிக்கு அதை மீட்டார், என் பிராணன் வெளிச்சத்தைக் காணுமென்பான்.

௨௯ இதோ, பராபரன் மனுஷனுடைய ஆத்துமத்தை அழிவுக்கு விலக்குகிறதற்கும், அவனைச் சீவனுள்ளோரின் வெளிச்சத்தினால் பிரகாசிப்பிக்கிறதற்கும்,

௩௰ அவர் இவைகளெல்லாம் அநேகந்தரம் மனுஷனிடத்திலே நடப்பிக்கிறார்.

௩௧ யோபே, நீர் கவனித்து என்னைக் கேளும், நான் பேசும்படிக்கு நீர் மவுனமாயிரும்.

௩௨ சொல்லத்தக்க நியாயங்கள் உண்டானால் எனக்கு மறுஉத்தரவு சொல்லும், பேசும்: ஏனென்றால் உம்மை நீதிமானென்று தீர்க்க மனதாயிருக்கிறேன்.

௩௩ இல்லாவிட்டால் நீர் என் சொல்லைக் கேளும், மவுனமாயிரும், நான் உமக்கு ஞானத்தை உபதேசிப்பேன் என்றான்.

௩௪. அதிகாரம்.

பராபரன் ஒருவரையும் அநியாயமாய் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லையென்பதை எலிகூ ரூபிக்கிறது.

பின்னையும் எலிகூ மறுஉத்தரவுசொல்லிச் சொன்னதாவது,

௨ ஞானிகளே, என்வார்த்தைகளைக் கேளுங்கள். அறிவாளிகளே, எனக்குச்செவிகொடுங்கள்.

௩ ஏனெனில் வாயானது போஜனத்தை ருசிபார்க்கிறதுபோல செவியானது வார்த்தைகளைச் சோதித்துப்பார்க்கும்.

௪ நமக்காக நியாயமானதைத் தெரிந்துகொள்வோமாக, நம்மை ஏதென்றும் நமக்குள்ளே அறிந்துகொள்வோமாக.

௫ ஏனெனில் நான் நீதிமான், பராபரன் என் நியாயத்தைத் தள்ளிப்போட்டாரென்றும்,

௬ நியாயம் என்னிடத்திலிருந்தும் நான் பொய்யனென்றெண்ணப்படுகிறேன், மீறுதலொழிந்தும் என் அம்புக்காயம் ஆறாதிருக்கிறதென்றும்,

௭ பரியாசம்பண்ணுதலைத் தண்ணீரைப்போலக் குடித்து,

௮ அக்கிரமக்காரரோடே ஐக்கமார்க்கத்தாராயும், துஷ்டமனுஷரோடே நடக்கிறவனாயும் எண்ணப்பட்ட யோபைப்போலிருக்கிற மனுஷனொருவனும் யோபு சொன்னார்.

௯ ஏனெனில் மனுஷன் பராபரனோடே பிரியப்படுகிறது அவனுக்குப்பிரயோசனமல்லவென்றாரே.

௰ ஆகையினாலே புத்தியுள்ளமனுஷரே, என்னைக்கேளுங்கள். ஆகாமியம் பராபரனுக்கும் நீதிகேடு சர்வத்துக்கும் வல்லவருக்குந் தூரமாயிருக்கிறது.

௰௧ அதேதென்றால் மனுஷனுடைய செய்கைக்குத்தக்கதை அவனுக்குச் சரிக்கட்டி அவனவன் மார்க்கத்துக்குத்தக்கதாக அவனவனுக்குக்கிடைக்கப்பண்ணுகிறார்.

௰௨ பராபரன் ஆகாமியஞ்செய்யாமலும் சர்வத்துக்கும்வல்லவர் நீதியைப்புரட்டாமலுமிருக்கிறதுமெய்யாமே.

௰௩ பூமியின்மேல் மனுஷனுக்கு அதிகாரங்கொடுத்தவரார்? பூச்சக்கரத்தையெல்லாந் திட்டப்படுத்தினவரார்?

௰௪ அவர் தமது இருதயத்தை அவனுக்கு விரோதமாகத் திருப்பினாரானால் அவனுடைய ஆவியையும் அவனுடைய சுவாசத்தையும் தம்மண்டைக்கு இழுத்துக்கொள்ளுவார்.

௰௫ அப்படியே மாம்சமெல்லாம் ஏகமாய்ச்செத்துப்போய் மனுஷன் தூளுக்குத் திரும்புவான்.

௰௬ உமக்கு உணர்விருந்தால் இதைக்கேளும், என்வார்த்தைகளின் சத்தத்துக்குச் செவிகொடும்.

௰௭ நீதியைப்பகைக்கிற ஒருவன் ஆளக்கூடுமோ? மகாநீதிபரனை ஆகாதவனென்று தீர்ப்பீரோ?

௰௮ ஒரு ராசாவைப்பார்த்துப் பேலியாளென்னும் அதிபதிகளிலொருவனைப் பார்த்து ஆகாதவனென்றுஞ் சொல்லத்தகுமோ.

௰௯ பிரபுக்களின் முகத்தைப் பாராமலும் ஏழையைப்பார்க்கிலும் ஐசுவரியவானை எண்ணாமலுமிருக்கிறவரை நோக்கி அப்படிச்சொல்லத்தகுமோ? அவர்களெல்லாரும் அவர் கரங்களின் செய்கையாயிருக்கிறார்கள்.

௨௰ இப்படிக்கொத்தவர்கள் க்ஷணப்பொழுதிலே சாகிறார்கள், ஜனங்கள் நடுராத்திரியிலே கலங்கி அப்பாலேபோகிறார்கள், கைதொடாமல் வல்லவர் எடுத்துப்போடப்படுகிறதுமுண்டு.

௨௰௧ ஏனென்றால் அவருடைய கண்கள் அவரவர்வழிகளை நோக்கியிருக்கிறது, அவர்களுடைய நடைகளையெல்லாம் பார்க்கிறார்.

௨௰௨ அக்கிரமக்காரர் ஒளித்துக்கொள்ளத்தக்க இருளுமில்லை மரணநிழலுமில்லை.

௨௰௩ அதேதென்றால் பராபரனுக்குமுன்பாக வழக்குக்கு நிற்க அவர் ஒருவனுக்கும் இன்னம் வெகுவாய் இடங்கொடார்.

௨௰௪ ஆராய்ந்துமுடியாத நியாயமாய் அவர் வல்லமையுள்ளவர்களை முறித்து வேறேமனுஷரை அவர்கள் ஸ்தலத்திலே நிறுத்துகிறார்.

௨௰௫ அவர்கள்வேலைகளை அவர் அறிந்தபடியினாலே அவர்கள் நசுங்கிப்போகத்தக்கதாய் இராத்திரிகாலத்திலே அவர்களைக் கவிழ்த்துப்போடுகிறார்.

௨௰௬ அவர்கள் அவரைவிட்டுப் பின்வாங்கி அவருடைய எல்லாவழிகளையுமுணர்ந்துகொள்ளாமற்போனபடியினாலே,

௨௰௭ அவர் எளியவனுடைய கூக்குரலை அவர்கள்மேற்சுமத்தி எல்லாரும்பார்க்கும் இடத்தில் அவர்களைப் பொல்லாதவர்களென்று அடிக்கிறார்.

௨௰௮ ஏனெனில் அவர் சிறுமையானவர்களின் கூக்குரலைக்கேட்கிறார்.

௨௰௯ அவர் கண்டிக்காமல் அமரிக்கையாயிருந்தாரானால் ஆகாதவர்களைத் தண்டிப்பவரார்? அவர்பாராதபடிக்குத் தம்முடைய முகத்தை மறைத்தால் அப்போது சாதியின்மேலும் ஒவ்வொருமனுஷன்மேலும் நோக்கமாயிருப்பவரார்.

௩௰ அப்போது மாயம்பண்ணுகிற மனுஷன் ஆளாதபடிக்கும் ஜனங்கள் சிக்கிக்கொள்ளப்படாதபடிக்கும் பார்ப்பவரார்.

௩௩ ஆனாலே நாம் மனஸ்தாபப்படுவோம், நாம் அறியவில்லையென்று சொல்லப் பராபரன் ஐசுவரியமாயிருக்கிறார்.

௩௨ நான் காணாததை நீர் எனக்குப் போதியும், நான் அநியாயஞ்செய்திருந்தால் இனி அப்படிச் செய்வதில்லை.

௩௩ நீர் அப்படிச் செய்யமாட்டோமென்றபடியிருந்தால் உம்மோடிருக்கிறவர்களில் ஒருவன் உமக்குப் பதிலாக அதைச் செய்யவேண்டுமோ? ஏனெனில் நானல்ல நீர் தெரிந்துகொள்ளவேண்டும், அல்லவென்றால் நீர் அறிந்திருக்கிறதைச் சொல்லும்.

௩௫ யோபு அறிவோடே பேசினதில்லை அவர் வார்த்தைகள் உணர்வுள்ளதுகளல்லவென்று,

௩௬ புத்தியுள்ள மனுஷர் என் பக்ஷமாய்ப் பேசுவார்கள், ஞானமுள்ளமனுஷன் எனக்குச் செவிகொடுப்பான்.

௩௬ என் பிதாவே, யோபு அக்கிரமமுள்ள மனுஷரைப்போல உத்தரவு சொல்லுகிறதினிமித்தம் அவர் முடிவுபரியந்தம் சோதிக்கப்படுவாராக.

௩௭ ஏனெனில் தம்முடைய பாவத்தோடே மீறுதலைக்கூட்டினார், அவர் எங்களுக்குள்ளே கைகொட்டிப் பராபரனுக்கு விரோதமாய்த் தம்முடைய வார்த்தைகளை மிகுதியாக்குகிறாரென்றான்.

௩௫. அதிகாரம்.

அப்பாலும் எலீகு பராபரனுடைய நீதியைக்குறித்துப் பேசினது.

பின்னையும் எலீகு மறுஉத்தரவுகொடுத்துச் சொன்னதாவது,

௨ என்னுடைய நீதி பராபரனுடையதைப்பார்க்கப் பெரியதென்று நீர் சொன்னது நியாயமென்றெண்ணுகிறீரோ.

௩ அதெனிலே நான் பாவியாயிராததினாலே எனக்கு என்னபிரயோசனமென்னவென்கிறீர்.

௪ உமக்கும் உம்மோடேகூடவிருக்கிற உம்முடைய சிநேகிதருக்குங்கூட நான் பிரதியுத்தரஞ்சொல்லுவேன்.

௫ நீர் வானத்தை அண்ணாந்துபார்த்து உம்மைப்பார்க்க உயர்ந்தியாயிருக்கிற ஆகாசமண்டலங்களைக் கண்ணோக்கும்.

௬ நீர்பாவஞ்செய்தால் அதினாலே அவருக்கு என்னத்தை நடப்பிப்பீர், உம்முடைய மீறுதல்கள் மிகுதியானாலும் அதினாலே அவருக்கு என்னத்தைச் சேதத்தையுண்டாக்குவீர்.

௭ நீர் நீதிமானானால் அதினால் அவருக்கு என்னத்தைக்கொடுப்பீர், அல்லது அவர் உம்முடைய கையிலே என்னத்தை அடைவார்.

௮ உம்முடைய அக்கிரமம் உம்மைப்போலொத்த மனுஷனுக்கும் உம்முடைய நீதி மனுஷகுமாரனுக்கும் யாதொன்றைச் செய்யலாமே.

௯ அநேகருடைய பலவந்தத்தினிமித்தம் பலவந்தத்திற்குள்ளாக்கப்பட்டவர்கள் கூப்பிட்டு வல்லவர்களுடைய புயத்தினிமித்தம் அலறுகிறார்கள்.

௰ ஆனாலே ஒருவரும் என்னை உண்டாக்கினவரும் இராவிலே கீதங்களைக் கட்டளையிடுகிறவரும்,

௰௧ பூமியின் மிருகங்களைப்பார்க்க எங்களை அதிகப்புத்திமான்களாக்குகிறவரும் ஆகாசத்துப் பறவைகளைப்பார்க்க எங்களை ஞானமுள்ளவர்களாக்குகிறவருமான பராபரன் எங்கேயென்று சொல்லுகிறதில்லை.

௰௨ அங்கே அவர்கள் பொல்லாதவர்களுடைய பெருமைநிமித்தங் கூப்பிடுகிறார்கள், ஆனாலே அவர் மறுஉத்தரவுகொடார்.

௰௩ பராபரன் மாயைக்குச்செவிகொடாமே, சர்வத்துக்கும் வல்லவர் அதைப்பாரார்.

௰௪ அவருடைய தரிசனம் உமக்குக் கிடைக்கிறதில்லையென்று நீர் சொல்லுகிறீரே, ஆனாலும் நியாயத்தீர்ப்பு அவருக்கு முன்பாக இருக்கிறது, ஆகையால் அவருக்குக் காத்துக்கொண்டிரும்.

௰௫ இப்பொழுதோவென்றால் அவருடைய கோபம் ஒன்றும் நியாயத்தை ஊன்றிவிசாரியாது, அவர் இன்னமும் ஒன்றையுங்குறித்துக் கூடியாயத்துக்கிறார்.

௰௬ ஆகையால் யோபு வீணாய்த் தம்முடைய வாயைத் திறந்து அறிவில்லாமல் வார்த்தைகளை மிகுதியாக்குகிறான்.

௩௬. அதிகாரம்.

பராபரன் சன்மார்க்கரைக் கிருபையாய்ப் பார்க்கிறதையும் துன்மார்க்கரைத் தண்டிக்கிறதையும் குறித்து எலீகு சொன்னது.

எலீகு அப்புறம் பேசிச்சொன்னதாவது,

௨ நான் பேசுமட்டுங் காத்திரும், ஏனென்றால் இன்னம் பராபரனுக்காகச் சொல்லவேண்டிய நியாயங்களை உமக்குக் காண்பிப்பேன்.

௩ நான் என் அறிவைத் தூரத்திலிருந்து கொண்டுவந்து என்னை உண்டாக்கினவருடைய நீதியைவிளங்கப்பண்ணுவேன்.

௪ அதெதென்றால் மெய்யாகவே என் வார்த்தைகள் பொய்ப்பதிராது, உம்மோடே பேசுகிறவன் அறிவில் உத்தமன்.

௫ இதோ, பராபரன் மகத்துவமுள்ளவராயிருந்தாலும் ஒருவரையும் புறக்கணியார், மன உருக்கத்திலும் அவர் மகத்துவமுள்ளவர்.

௬ அவர் துன்மார்க்கனைப் பிழைக்கவொட்டாதிருக்கிறார், அநேகிருமையானவர்களின் நியாயத்தை விசாரிக்கிறார்.

௭ அவர் நீதிமான்களைவிட்டுத் தமது கண்களை விலக்காமல் அவர்களை ராசாக்களோடேகூட ஆசனத்தில் என்றும் உயர்ந்த ஸ்தலத்தில் என்றைக்கும் உயர்ந்திருக்கப்பண்ணுகிறார்.

௮ சிலர் விலங்குகளாலே கட்டப்பட்டு உபத்திரவத்தின் கயிறுகளாற் கட்டப்பட்டிருந்தால்,

௯ அவர் இவர்களின் கிரியையையும் மீறிப்போன இவர்களுடைய மீறுதல்களையும் அவர்களுக்குத் தெரியப்பண்ணி,

௰ இவர்கள் செவியைக் கடிந்துகொள்ளுதலுக்குத் திறந்து அக்கிரமத்தைவிட்டுத் திரும்பச்சொல்லுவார்.

௰௧ இவர்கள் கேட்டு அவருக்கு ஊழியஞ்செய்தால் தங்கள் நாட்களை நன்மையாகவும் தங்கள் வருஷங்களைச் செல்வமாகவும் போக்குவார்கள்.

௰௨ கேளார்களேயாகில் பட்டயத்துக்கு இரையாகி அறிவு அடையாததினாலே மாண்டுபோவார்கள்.

௰௩ மாயமான இருதயத்தார் மூர்க்கத்தை நெரிக்கிறார்கள். அவர் இவர்களைக் கட்டிவைத்தாலுங் கெஞ்சிக்கூப்பிடார்கள்.

௰௪ இவர்கள் இளவயதிலேமாண்டு புணர்ச்சிக்காரருக்குள்ளே இவர்கள் பிராணன் மடியும்.

௰௫ ஆனாலும் சிறுமைப்பட்டவர்களை அவர் அவர்கள் சிறுமைக்கு நீங்கலாக்கி அவர்கள் ஒடுக்கப்பட்டிருக்கையில் அவர்கள் செவியைத் திறக்கிறார்.

௰௬ அப்படி அவர் உம்மையும் நெருக்கத்தின்வாய்க்கு விலக்கி ஒடுக்கமில்லாத விசாலத்திலே வைப்பார், உம்முடைய பந்தியிற் பரிமாறப்படுவது நிறைந்த கொழுப்புள்ளதாயிருக்கும்.

௰௭ ஆனால் ஆகாதவன்மேல் வரும் நியாயத்தீர்ப்பை நிறைந்தவனாகப்பார்ப்பீர், நியாயமும் நீதியும் உம்மை ஆதரிக்கும்.

௰௮ உக்கிரமுண்டாகிறதினாலே அவர் உம்மை ஒரு அடியிலே எடுத்துப்போடாதபடிக்குப் பாரும், அப்போது மிகுதியான மீட்கும்பொருளானது உம்மை அதற்குத் தப்புவிக்கமாட்டாது.

௰௯ அப்போது பொன் திரவியத்திலே உம்முடைய ஆஸ்திகளிலாகிலும் பலத்துடைய எந்தச்சத்துவங்களிலாகிலும் எண்ணப்படுமோ.

௨௰ சனங்கள் தங்கள் இடத்தைவிட்டு வாரிக்கொள்ளப்படுகிற இராவை வாஞ்சியாதேயும்.

௨௰௧ அக்கிரமத்துக்குத் திரும்பாதபடிக்கு எச்சரிக்கையாயிரும், ஏனெனில் உபத்திரவத்திலே அதைத்தான் தெரிந்துகொண்டீர்.

௨௰௨ இதோ, பராபரன் தம்முடைய வல்லமையில் உயர்ந்திருக்கிறார், அவரைப்போலொத்த சாஸ்திரி ஆர்.

௨௰௩ அவருடைய வழியின் நியாயத்தை விசாரிக்கத்தக்கவனார், அல்லது அநியாயஞ்செய்தீரென்று சொல்லத்தக்கவனார்.

௨௰௪ மனுஷர் நோக்கிப்பார்க்கிற அவருடைய கிரியையை நீர் மகிமைப்படுத்த நினைவுகூரும்.

௨௰௫ எல்லா மனுஷரும் அதைக்காண்கிறார்கள், தூரத்திலிருந்து அது மனுஷருக்குத் தென்படுகிறது.

சிஷ்டியிலே விளங்குந் தேவ மகத்துவத்தைக் காண்பிக்குதல்.

௨௰௬ இதோ, பராபரன் நாம் அறியமுடியாத மகத்துவமுள்ளவர், அவருடைய வருஷங்களின் தொகையும் ஆராய்ந்துமுடியாதது.

௨௰௭ அதெதென்றால் அவர் தண்ணீரின் துளிகளை ஆவியைப்போலேறப்பண்ணுகிறதினால் அவைகள் அவருடைய மூடுபனி மேகத்திலிருந்து மழையாகச் சொரிகிறது.

௨௰௮ அதை மேகங்கள் பெய்யப்பண்ணித் திரளாய் மனுஷர்மேல் தூறுகிறது.

௨௰௯ மேகங்களின் விரிவுகளையும் அவருடைய கூடாரத்தின் குமுறல்களையும் உணரக்கூடுமோ.

௩௰ இதோ, அவைகளின்மேல் தம்முடைய மின்னலின் வெளிச்சத்தை விரித்துச் சமுத்திரத்தின் ஆழங்களை மூடுகிறார்.

௩௰௧ அதெதென்றால் அவைகளாற் சனங்களை நியாயம்விசாரிக்கிறவருமாயிருக்கிறார், ஆகாரத்தைப் பரிபூரணமாய்க் கட்டளையிடுகிறவருமாயிருக்கிறார்.

௩௰௨ அவர் மின்னலின் வெளிச்சத்தைக் கைகளினாலே மூடி நடுவே யாதொன்றும் அதை மறிக்கக் கற்பனைகொடுக்கிறார்.

௩௩ அதினால் அவர்செய்யநினைக்கிறதை யும் மந்தாரம் எழும்பப்போகிறதையும் ஆடுமாடுகள் அறியப்படுத்தும்.

௩௭. அதிகாரம்.

அப்பாலும்எலிகூவென்பவன் பராபரனுடைய வல்லமையைக் காண்பிக்கிறது.

௧ இதினிமித்தம் என் இருதயம் தத்தளித்து த்தன்னிடத்தைவிட்டுத் தெறிக்கிறது.

௨ அவருடைய சத்தத்தினால் உண்டாகிற அதிர்த்தலையும் அவர் வாயிலிருந்து புறப்படுகிற முழக்கத்தையும் கேட்கவேண்டுமுங்கள்.

௩ அவர் வானத்தின்கீழெங்கும் அதையும் பூமியின் கடையாந்தரங்களின்மேல் அதின் மின்னலையும் போகவிடுகிறார்.

௪ இதின்பிறகு அவர் சத்தமாய் முழங்கி தம்முடைய மகத்துவத்தின்சத்தத்தைக் குமுறப்பண்ணுகிறார், அவருடைய சத்தம் கேட்கப்படுகையில் அது தவிழ்க்கப்படாது.

௫ பராபரன் தம்முடைய சத்தத்தை ஆச்சரியமானவிதமாய்க் குமுறப்பண்ணுகிறார், நாம் கிரகிக்கக்கூடாத பெரியகாரியங்களைச்செய்கிறார்.

௬ அவர் உறைந்தமழையையும் கன்மழையையும் தம்முடைய வல்லமையின் பெருமழைகளையும் பார்த்து பூமியின்மேல் உண்டாயிருங்களென்று சொல்லுகிறார்.

௭ தம்முடைய செய்கிரியையாயிருக்கிற சகலமனுஷருந்தம்மை உணர அவர் அதினாலே சகலமனுஷருடைய கையையும் முத்திரித்துப்போடுகிறார்.

௮ அப்போது காட்டுமிருகங்கள் தங்கள் ஒளிப்பிடங்களில் புகுந்து தங்கள் கெபிகளில் தாபரித்துக்கொள்ளும்.

௯ தெற்கேயிருந்து சுழல்காற்றும் வடக்கேயிருந்து குளிரும் வரும்.

௰ தம்முடைய சுவாசத்தினால் பராபரன் குளிரைக்கொடுக்கிறார், அப்போது தண்ணீர்களின் விசாலம் உறைந்துபோம்.

௰௧ அவர் காந்தியினாலே மேகங்களை நெருக்கித் தம்முடைய வெளிச்சத்தினாலே மந்தாரத்தைச் சிதறப்பண்ணுகிறார்.

௰௨ அவர் அதுகளுக்குக் கற்பிக்கிறதெல்லாவற்றையும் அதுகள் பூலோகச்சக்கரத்திலே நடப்பிக்கும்படிக்கு அவர் அதுகளைத் தம்முடைய ஞான ஆலோசனைகளின்படியே சுற்றித்திரியப்பண்ணுகிறார்.

௰௩ ஒன்றில் சிட்சையாகவும் ஒன்றில் தமது பூமிக்கு உபகாரமாகவும் ஒன்றில் கிருபையாகவும் அதுகளை வரப்பண்ணுகிறார்.

மகத்துவமுள்ள பராபரனுக்குக் கீழ்ப்படிந்தானென்று தாழ்த்த யோபுக்குப் புத்திசொன்னது.

௰௪ யோபே, இதுகளுக்குச் செவிகொடுத்து நின்று பராபரனுடைய ஆச்சரியங்களைத் தியானித்துக்கொள்ளும்,

௰௫ பராபரன் அதுகளைத் திட்டம்பண்ணி தம்முடைய மேகத்தின் மின்னலைப் பிரகாசிக்கப்பண்ணும் விதத்தையறிவீரோ.

௰௬ மேகங்களுக்குள்ளைசக்கும் நிறைவையும் குறைவற்ற அறிவுள்ளவரின் அற்புதங்களையும்,

௰௭ தென்றலினாலே அவர் பூமியை அமைச்சலாயிருக்கப்பண்ணுகிறபோது உம்முடைய வஸ்திரங்கள் அனலுண்டாகும் விதத்தையும் அறிவீரோ.

௰௮ வார்க்கப்பட்ட கண்ணாடியைப்போல கெட்டியான ஆகாயமண்டலங்களை நீர் அவரோடேகூட விரித்தீரோ,

௰௯ அவருக்கு நாம் சொல்லத்தக்கதை எங்களுக்குப் போதியும், அந்தகாரத்தினிமித்தம் வரிசைதப்பிப்பேசுகிறோம்.

௨௰ நான்சொல்லப்போனால் அது அவருக்கு முன்பாக விவரிக்கப்படத்தக்கதாக இருக்குமோ, யாதொருவன் சொல்லக்கூடுமோ, அவன் விழுங்கப்படுவானே.

௨௧ இப்போதும் காற்றுவீசி ஆகாயமண்டலங்களைச் சுத்திகரிப்பண்ணியிருக்கிறபோதும் வடக்கேயிருந்து பொன்னிறமான காந்திவருகிறபோதும்,

௨௨ ஆகாயமண்டலத்திலே பிரகாசிக்கிற சூரியனை முதலாய் ஒருவரும் நோக்கிப்பார்க்கக்கூடாதே, பராபரனிடத்திலோ வென்றால் பயங்கரமானமகத்துவமுண்டு.

௨௩ சர்வத்துக்கும்வல்லவரை நாங்கள் கண்டுபிடிக்கக்கூடாது, அவர் வல்லமையாலே பெருத்தவர், அவர் நியாயத்தையும் மகா நீதியையும் அழிக்கமாட்டார்.

௨௪ ஆகையால் மனுஷர் அவருக்குப் பயப்படுவார்கள், தங்கள் எண்ணத்தில் ஞானிகளாகிய எவர்களையும் அவர் பாரார்.

௩௮. அதிகாரம்.

பராபரன் தாமே உத்தரவுகொடுக்கிறதும் தம்முடைய சிருஷ்டியிலே விளங்குகிற தமதுடைய மகிமையைக் காண்பித்தது.

அப்போது கர்த்தர் பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவுகொடுத்துவிளம்பினதாவது,

௨ அறிவில்லாதவார்த்தைகளினாலே ஆலோசனையை அந்தகாரப்படுத்துகிற இவனார்.

௩ இப்போதும் புருஷனைப்போல உன் இடையைக் கட்டிக்கொள், நாம் உன்னைக் கேட்போம் நீ நம்மைப்போதி.

௪ நாம் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய். நீ அறிவாளியானால் அதை அறிவி.

௫ அதின் அளவுகளை வைத்தவர் யார். அல்லது அதின்மேல் நூல்போட்டவர் யார் என்பதை நீ அறிந்தால்சொல்லு.

௬ அதினுடைய நிலைகள் எதின்மேலே பாவப்பட்டது.

௭ அல்லது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி பராபரனுடைய பிள்ளைகளெல்லாங் கெம்பீரிக்கையில் அதின் கோடிக்கல்லை வைத்தவர் யார்.

௮ சமுத்திரங் கெர்ப்பத்திலிருந்து புரண்டு புறப்படுகிறபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்.

௯ நாம் மேகங்களை அதற்கு வஸ்திரமாகவும் இருளை அதற்குப்புடவையாகவும் போட்டோம்,

௰ நாம் அதின்மேல் நம்முடைய திட்டத்தைப்பரவவிட்டதினாலே அதற்குத் தாழ்ப்பாள்களையுங் கதவுகளையும் போட்டு,

௰௧ இம்மட்டும் வருவாய், மிஞ்சிவாராய்; இங்கே உன் அலைகளின்பெருமை அடங்கக்கடவதென்று நாஞ்சொல்லுகிறபோது நீ எங்கேயிருந்தாய்.

௰௨ உன்னுடைய நாட்களவாயிலே நீ விடியற்காலத்துக்குக் கற்பனைதந்து கிழக்கு வெளுக்கிறதுக்கு அதின் இடத்தைக் காண்பித்ததுண்டோ.

௰௩ ஆகாதவர்கள் பூமியிலிருந்து உதறிப்போடப்படும்படிக்கு அதின் கடையாந்தரங்களைப்பிடிக்கவும்,

௰௪ களிமண்ணிலே முத்திரைபோடுகிறநிலவேறேரூபமுண்டாகிறதுபோல அதுகளை வஸ்திரத்தைப்போலே காணப்படப்பண்ணவும்,

௰௫ ஆகாதவர்களின்வெளிச்சம் அவர்களைவிட்டுவிலகி மேட்டிமையான புயமுறிந்துபோகப்பண்ணவுந்தெரியுமோ.

௰௬ நீ சமுத்திரத்தின் அடித்தலங்களமட்டும்புகுந்து ஆழத்தின் அடியில் உலாத்தினதுண்டோ.

௰௭ மரணத்தின் வாசல்கள் உனக்குத் திறந்ததுண்டோ. மரணநிழலின்வாசல்களை நீ பார்த்ததுண்டோ.

௰௮ நீ பூமியின்விசாலங்களை ஆராய்ந்து அறிந்ததுண்டோ. இதையெல்லாம் நீ அறிந்திருந்தால் அறிவி.

௰௯ வெளிச்சம்வாசமாயிருக்கும் இடத்துக்கு வழியெங்கே, இருளினுடைய ஸ்தலமெங்கே.

௨௰ அதின் எல்லை இன்னதென்று அது உனக்குப்பிடிபடுமோ, அதின் வீட்டுக்குப் போகிறபாதைகளை அறிந்திருக்கிறாயோ.

௨௧ நீ அப்போது பிறந்ததினாலும் உன் நாட்களின் இலக்கம் பெரிதானதினாலும் அதை அறிவாயோ.

௨௨ உறைந்த மழையின் பண்டகசாலைகளுக்குட்பிரவேசித்தாயோ.

௨௩ நாம் நெருக்கம் வருந்தவிக்கிறகாலத்துக்குஞ் சலகம் யுத்தபோராட்டங்களின் நாளுக்கும் வைத்துவைத்த உறைந்தமழையிருக்கிற பண்டகசாலைகளிலே பார்த்தாயோ.

௨௪ மின்னல் பசரப்படுகிறதற்குங் கீழ்க்காற்று பூமியின்மேலே சிதறுகிறதற்குமானவழியெங்கே.

௨௫ குடியில்லாத பூமியின்மேலும் மனுஷரில்லாத வனாந்தரத்தின்மேலும் வருஷிக்கப்பண்ணவும்,

௨௬ பாழும் அந்தரவெளியுமானதைத் திருத்தியாக்கவும் பூண்டுகளின் முளைகளை முளைப்பிக்கவும்,

௨௭ பெருமழைக்குக் கால்வாய்களையும் இடிமுழக்கங்களின் மின்னலுக்கு வழிகளையும் பகுத்தவர் யார்.

௨௮ மழைக்கு ஒரு தகப்பனுண்டோ, அல்லது பனியின் துளிகளைச்செனிப்பித்தவனார்.

௨௯ கல்லைப்போலிருக்கிறதின்கீழ்த்தண்ணீர்கள் மறைக்கப்பட்டுக்கெட்டிப்படுகிற ஆழத்தின்மேல,

௩௰ உறைந்ததண்ணீர் ஆர்வயிற்றிலிருந்து புறப்படுகிறது, ஆகாயத்தினுடைய உறைந்தபனியைப்பெற்றவனார்.

௩௧ சத்த நட்சத்திரத்தின் இன்பமான இணைப்பை இணைப்பாயோ, அல்லது யாதொருநட்சத்திரராசியின்கட்டுகளை அவிழ்ப்பாயோ.

௩௨ கிரகங்களை அதினதின்காலத்திலே புறப்படப்பண்ணுவாயோ, கரடியும் அதின்குட்டிகளுமென்னப்பட்ட நட்சத்திரங்களைவழிநடத்துவாயோ.

௩௩ நீ வானத்தின் ஒழுங்குகளை அறிவாயோ, அது பூமியாளும் ஆளுமையை நிதிட்டம்பண்ணுவாயோ.

௩௪ ஏராளமான தண்ணீர் உன்மேலே சொரியும்படிக்குமென்று உன் சத்தத்தை மேகங்கள்மட்டும் உயர்த்துவாயோ.

௩௫ நீ மின்னல்களை அனுப்பி அவைகள் புறப்பட்டுவந்து இதோ, இங்கேயிருக்கிறோமென்று உனக்குச் சொல்லப்பண்ணுவாயோ.

௩௬ உள்ளிந்திரியங்களில் ஞானத்தை வைத்தவர் யார். அல்லது புத்திக்கு உணர்வைக் கொடுத்தவர் யார்.

௩௭ ஞானத்தினாலே மேகங்களை யெண்ணுபவர் ஆர்.

௩௮ தூளானது ஏகபாளமாகவும் மண்கட்டிகள் ஒன்றுக்கொன்று ஒட்டிக்கொள்ளவும் ஆகாயத்தின் தண்ணீர்த் துருத்திகளைப் பொழியப்பண்ணுகிறவர் ஆர்.

௩௯. அதிகாரம்.

அப்பாலுஞ் செடியில் விளங்குகிற ஆராய்ந்துமுடியாத தம்முடைய ஞானத்தைப் பராபரன் காண்பிக்கிறது.

நீ சிங்கத்துக்கு இரையைவேட்டையாடி,

௨ சிங்கக்குட்டிகள் தாங்கள் தாமிடங்களிலே கிடந்து கெபியிலே பதிவிருக்கிறபோது அதுகளின் ஆசையைத் தீர்ப்பாயோ.

௩ காக்கைக்குஞ்சுகள் பராபரனை நோக்கிக் கூப்பிட்டு ஆகாரமில்லாமற் பறந்து அலைகிறபோது அதுகளுக்கு அதுகளின் இரையைச் சவதரிக்கிறவர் ஆர்.

௪ மலையாடுகள் ஈனுங்காலத்தை அறிவாயோ, மான்கள் குட்டிபோடுதலைக் கவனித்தாயோ.

௫ அதுகள் சினைப்பட்டிருந்து வருகிற மாதங்களை நீ எண்ணி, அதுகள் ஈனுங்காலத்தை யறிவாயோ.

௬ அதுகள் குனிந்து நொந்து தங்கள் குட்டிகளைப் போட்டுத் தங்கள் வாதைகளை நீங்கப்பண்ணும்.

௭ அதுகளின் குட்டிகள் பலத்துப் பயிரிலே வளர்ந்து புறப்பட்டுப் போய்த் திரும்ப அதுகளண்டைக்கு வாராதிருக்கும்.

௮ காட்டுக்கழுதையைத் தன் இஷ்டமாய்த் திரியவிட்டவர் ஆர். காட்டுக்கழுதையின் கட்டுகளை அவிழ்த்தவர் ஆர்.

௯ அதுக்கு நான் வனாந்தரத்தை வீடாகவும் உப்புநிலத்தை வாசஸ்தலங்களாகவுங் கொடுத்தேன்.

௰ அது பட்டணத்தின் இரைச்சலை நகைத்து ஓட்டுகிறவன் கூக்குரலைக் கேளாதிருக்கிறது.

௰௧ அது மலைகளிலே தன் மேய்ச்சலைப் பார்த்துச் சகலவித பச்சைப்பூண்டுகளைத் தேடித் திரிகிறது.

௰௨ காட்டெருமை உன்னைச் சேவிக்க விரும்புமோ, அது உன் முன்னணைக்குப் பக்கமாய்த் தங்குமோ.

௰௩ படைச்சால்களில் உழ நீ காட்டெருமையைக் கயிற்றால் கட்டி வைப்பாயோ, அது உனக்குப் பின்பாகப் பள்ளங்களைத் திருவுமோ.

௰௪ அதின் பெலன் பெரியதென்று நீ அதை நம்பி உன் வேலையை அதினிடத்தில் ஒப்புவிப்பாயோ.

௰௫ உன் விதைகளை அது வீட்டுக்குக் கொண்டுவந்து உன் களத்தில் சேர்க்குமென்று நீ அதை நம்புவாயோ.

௰௬ தீக்குருவியின் தோகைகள் அசைவாடுகிறது, கொக்குக்குச் சேர்ந்த பட்டையும் இறகுகளும் அதற்குச் சரியல்லவோ.

௰௭ அது தன் முட்டைகளைத் தரையிலே இட்டு அதுகளைத் தூளிலே அனலுக்கு வைத்துவிட்டுப்போய்,

௰௮ யாதொருவர் கால் அதுகளை மிதித்து உடைக்குமென்றும், காட்டு மிருகங்கள் அதுகளை மிதிக்கும்போதென்றும் மறந்துவிடும்.

௰௯ அது தன் குஞ்சுகள் தன்னுடையதல்லாததுபோல அதுகளைக் கடினமாய் நடத்துகிறது; அது பட்ட பிரயாசம் விருதாவாமென்று அஞ்சாதிருக்கிறது.

௨௰ தேவன் அதுக்குப் புத்தியைக் கொடாமல் விவேகத்தை அதற்குப் பகிர்ந்து கொடாதிருக்கிறார்.

௨௧ அது உயர எழும்பி ஓடும்போது குதிரையையும் அதின்மேல் ஏறியிருக்கிறவனையும் பரிகாசம்பண்ணுகிறது.

௨௨ குதிரைக்கு நீ வீரியத்தைக் கொடுத்தாயோ, அதின் கழுத்துக்குக் கெம்பீரத்தை நீ உடுத்துவிப்பாயோ.

௨௩ ஒரு வெட்டுக்கிளியைப்போலே அதை மிரட்டுவாயோ, அதின் நாசியின் முக்கல் பயங்கரமாயிருக்கிறது.

௨௪ பள்ளத்தாக்கிலே அது தாளமிட்டு தன் பலத்தினால் களிகூர்ந்து ஆயுதங்களுக்கு எதிராகப் புறப்படும்.

௨௩ அது கலங்காமலும் பட்டயத்துக்குப் பின்வாங்காமலும் பயப்படுதலை நகைக்கும்.

௨௪ அப்புறத்தோணியும் மின்னுகிற ஈட்டியும் அம்பும் அதற்கெதிராக இரைகிறபோது,

௨௫ அது உத்தியப்பட்டென்று தரையைக் கடிக்கிறது; எக்காளத்தின் தொனியை எண்ணாதே போகும்.

௨௬ எக்காளத்தொனிக்கு அது நிற்கிறதில்லை, யுத்தத்தையும் சேர்வைக்காரருடைய ஆர்ப்பாட்டத்தையும் அர்ப்பரிப்பையும் தூரத்திலிருந்து மோப்பம்பிடிக்கிறது.

௨௭ உன்னுடைய உணர்விலே ராஜாளி பறந்து தெற்குக்கெதிராகத் தன் செட்டைகளை விரிக்கிறதோ.

௨௮ உன்னுடைய கற்பனையிலே கழுகு மேலேபறந்து உயரத்திலே தன் கூட்டைக் கட்டுமோ.

௨௯ அது கன்மலையிலும் கன்மலையின் கொடுமுடியிலும் அரணான ஸ்தலத்திலும் வாசம்பண்ணித் தங்குகிறது.

௩௰ அங்கேயிருந்து இரையை வேவுபார்க்கிறது, அதின் கண்கள் தூரத்திலிருந்து அதைக் காண்கிறது.

௩௧ அதின் குஞ்சுகள் இரத்தத்தை உறிஞ்சும், பிணங்களெங்கேயோ அங்கே அது சேருமென்றார்.

யோபு தன்னைக் கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்தினது.

௩௨ பின்னையுங் கர்த்தர் யோபுக்கு உத்தரவாகச் சொன்னதாவது.

௩௩ சர்வத்துக்கும் வல்லவரோடே நீ வழக்காடத் துணிந்ததோ, பராபரனைக் குற்றம்பிடிக்கிறவன் இதற்குத் தக்கதாய்ச் சொல்லக்கடவானென்றார்.

௩௪ அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது,

௩௫ இதோ, நான் அற்பனாயிருக்கிறேன், நான் உமக்கென்ன மறுஉத்தரவு சொல்லுவேன், என் கையினாலே என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன்.

௩௬ நானொருதரம் இரண்டுதரம் பேசினேன், இனி நான் பிரதியுத்தரம் கொடுக்கவும் பேசவும் இருப்பதில்லை.

௪௰. அதிகாரம்.

பராபரன் தம்முடைய ஞானத்துக்கும் சத்திக்கும் திருஷ்டாந்தமாகத் தம்முடைய சிருஷ்டிகளைத் தெரியக்காட்டினது.

அப்பொழுது கர்த்தர் பெருங்காற்றிலிருந்து யோபுக்கு உத்தரவு கொடுத்துச் சொன்னதாவது,

௨ இப்பொழுதும் புருஷனைப்போல நீ உன் அரையைக் கட்டிக்கொள், நாம் உன்னைக் கேட்போம், நீ நமக்கு அறிவி.

௩ நீ நம்முடைய நியாயத்தையும் அபாத்தமாக்குவாயோ, நீ உன்னை நீதிமானாக்கிக்கொள்ளும்படிக்கு நம்மை ஆக்கினைக்குள்ளாக்குவாயோ,

௪ பராபரனுடைய புயத்தைப்போல உனக்குப் புயமுண்டோ, அவரைப்போலச் சத்தமாய் இடியை முழங்கப்பண்ணுவாயோ.

௫ இப்பொழுதும் நீ மகத்துவத்தாலும் மகத்துவத்தாலும் உன்னை அலங்கரித்து மகிமையையும் கனத்தையும் தரித்துக்கொள்.

௬ நீ உன் கோபத்தின் உக்கிரங்களை இறைத்து, அகந்தையுள்ளவனையெல்லாம் பார்த்து அவனைத் தாழ்த்து.

௭ பெருமையுள்ளவனையெல்லாம் நோக்கி அவனைப் பணியப்பண்ணி, துன்மார்க்கரை அவர்களிருக்கிற ஸ்தலத்திலே நிர்மூலமாக்கு,

௮ நீ அவர்களை ஏகமாய்ப் புழுதியிலே புதைத்து அவர்கள் முகங்களை அந்தரங்கத்திலே கட்டிப்போடு.

௯ அப்பொழுது உன் வலதுகை உனக்கு இரட்சிப்புண்டுபண்ணுமென்று நாம் உன்னைப் புகழுவோம்.

௰ இப்பொழுது நாம் உண்டாக்கின பிகெமோத்தை நீ நோக்கிப்பார், உன்னைப்போல அதையும் உண்டாக்கினோம், அது மாட்டைப்போலப் புல்லைத்தின்னும்.

௰௧ அதோ அதினுடைய பெலன் அதின் இடுப்பிலும், அதின் வீரியம் அதினுடைய வயிற்றின் நரம்புகளிலுமிருக்கிறது.

௰௨ அது தன் வாலைக் கேதுருமரத்தைப்போல நீட்டுகிறது, அதினுடைய இடுப்பின் நரம்புகள் பின்னிக்கொண்டிருக்கிறது.

௰௩ அதின் எலும்புகள் கெட்டியான வெண்கலத்தைப்போலவும் அதின் அஸ்திகள் இருப்புக்கம்பிகளைப்போலவுமிருக்கிறது.

௰௪ பராபரன் நடத்தின கிரியைகளில் அது பிரதான கிரியை, அதையுண்டாக்கினவர் அதற்கு அதின் பட்டயத்தைக் கூடக்கட்டிவைத்தார்.

௰௫ மேடுகள் அதற்கு மேய்ச்சலைக் கொண்டுவரும், வயல்வெளியின் சகல மிருகங்களும் அங்கே விளையாடிக்கொண்டிருக்கும்.

௰௬ அது நிழலுள்ள செடிகளின் கீழும் நாணலின் மறைவிலும் உளையிலும் படுத்துக்கொள்ளும்.

௰௭ தாமரைகளின் நிழல் அதைச் சுவிந்து நதியின் அலரிகள் அதைச் சூழ்ந்துகொள்ளும்.

௰௮ இதோ, நதி புரண்டாலும் அது திகையாது, யோர்தான் நதிப்பிரவாகம் அதின் வாயளவு வந்தாலும் அது நம்பிக்கையாயிருக்கும்.

௰௯ அதின் கண்கள் பார்த்திருக்க அதைப் பிடிக்கப் பார்க்கலாமோ, மூக்கணாங்கயிற்றை அதின் மூக்கில் குத்தலாமோ.

௨௰ முதலையைத் தூண்டிலினாலே அல்லது அதின் நாக்கை நீ தாழ்விடுகிற கயிற்றினாலே பிடிப்பாயோ.

௨௰௧ அதின் மூக்கை நார்க்கயிறுபோட்டுக் கட்டுவாயோ, குறட்டினால் அதின் தாடையை உருவக் குத்துவாயோ.

௨௰௨ அது உன்னைக் கெஞ்சி அநேக விண்ணப்பங்களைப் பண்ணி உன்னைப் பார்த்து இச்சகவார்த்தைகளைச் சொல்லுமோ.

௨௰௩ அது உன்னோடே உடன்படிக்கை பண்ணுமோ, அதைச் சதாகாலம் அடிமைகொள்ளுவாயோ.

௨௰௪ ஒரு குருவியோடே விளையாடுகிறது போல நீ அதனோடே விளையாடி, அதை நீ உன் பெண்பிள்ளைகளண்டையிலே கட்டிவைப்பாயோ.

௨௰௫ கூட்டாளிகள் அதைப் பிடிக்கப் பிரயத்தனப்பட்டு அதை வியாபாரிகளுக்குப் பங்கிடுவார்களோ.

௨௰௬ நீ அதின் தோலிலே அநேக அம்புகளையும் அதின் தலையிலே அநேகம் மண்டாகங்களையும் எறிவாயோ.

௨௰௭ அதின்மேல் உன் கையைப்போடு, யுத்தத்தை நினை, இனி அப்படிச் செய்யாய்.

௨௰௮ இதோ, அதைப் பிடிக்கலாமென்றிருந்தவன் மோசம்போய் அதைப் பார்த்தவுடனே விழுவானல்லவோ.

௪௧. அதிகாரம்.

அப்பாலும் முதலையின்செய்தி விவரிக்கப்பட்டது.

அதை எழுப்பத்தக்க தயிரியவானில்லாதிருக்கக் கொள்ள நமக்குமுன்பாக நிலை நிற்பவனார்.

௨ நமக்குப் பதிற்கொடுக்கப்பட முந்தி நமக்குக் கொடுத்தவனார், எல்லா வானங்களின் கீழிருக்கிறது நம்முடையது.

௩ அதின் அவயவங்களும் அதின் வீரியமும் அதின் உடல் இசைவின் நேர்த்தியும் இன்னதென்று நான் சொல்லாதிருப்பதில்லை.

௪ அது மூடியிருக்கிற அதின் உடுப்பைச் சீவிப்புலவனார்; அதின் இரண்டு தாடைகளின் நடுவே வாளம்போடத்தக்கவனார்.

௫ அதின் முகத்தின் கதவைத் திறப்பவனார்; சுற்றிலுமிருக்கிற அதின் பற்கள் பயங்கரமானதுகள்.

௬ முத்திரைப்பதிப்பாய் அழுத்தமாய் அடர்த்தியான அதின் பரிசைகளின் அணிப்பு மகா முக்கியமுள்ளது.

௭ அதுகள் நடுவே காற்றும் புகமாட்டாத நெருக்கமாய் அதுகள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கிறது.

௮ அதுகள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டு இணைபிரியாமற் பிடித்துக்கொண்டிருக்கிறது.

௯ அதின் தும்மல்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்கப்பண்ணுகிறது, அதின் கண்கள் விடியற்காலத்தின் புருவங்களைப்போலிருக்கிறது.

௰ அதின் வாயிலிருந்து எரிகிற பந்தங்கள் புறப்பட்டு அக்கினிப்பொறிகள் தெறிக்கப்படும்.

௰௧ கொதிக்கிற சட்டியிலும் கொப்பரையிலும் இருந்து புறப்படுகிறதுபோல அதின் நாசிகளிலிருந்து புகை புறப்படுகிறது.

௰௨ அதின் சுவாசம் கரிகளைக் கொளுத்திவிடும், அதின் வாயிலிருந்து சுவாலை புறப்படும்.

௰௩ அதின் கழுத்திலே பெலன் வாசமாயிருக்கிறது, சஞ்சலப்படுத்துதல் அதற்குக் களிப்பாயிருக்கும்.

௰௪ அதின் உடற்கூறுகள் அசையாத் கெட்டியாய் ஒன்றோடொன்று ஒட்டிக்கொண்டிருக்கிறது.

௰௫ அதின் இருதயம் கல்லைப்போலவும் எந்திரத்தின் அடிக்கல்லைப்போலவும் கெட்டியாயிருக்கிறது.

௰௬ அது எழும்பும்போது பலசாலிகள் பயந்து அது நொறுக்கும்போது மனப்பாவநிவிர்த்தியைத் தேடுகிறார்கள்.

௰௭ யாதொருவன் அதினண்டை சேர்ந்தால் அவனுடைய பட்டயமாகிலும் ஈட்டி வல்லயம் தோரிமெனகிலும் அதற்கு நிற்காது.

௰௮ அது இரும்பை வைக்கோலாகவும் வெண்கலத்தை உளுத்தமரமாகவும் எண்ணுகிறது.

௰௯ அம்பு அதைத் துரத்தாது, கவண்டினகல்லுகள் அதற்குத் துரும்பாகும்.

௨௰ அது பெருங்கல்லுகளைத் துரும்புகளாக எண்ணி, ஈட்டியின் அசைவுக்கு நகைக்கும்.

௨௧ அதின்கீழாகக் கூர்மையான கல்லுக்கள் கிடந்தாலும் அது சேற்றின்மேலோடுகிறதுபோலே கருக்கான்களின்மேலோடும்.

௨௨ அது ஆழத்தைக் காய்கிற பானையைப்போலே பொங்கப்பண்ணிக் கடலைத் தயிலத்தைப்போலே கலக்குகிறது.

௨௩ அது தனக்குப் பின்னாக இருக்கிற வழியை விளங்கப்பண்ணுகிறதினாலே ஆழமானது வெளுப்பான நரையைப்போலக் காணப்படும்.

௨௪ தரையின்மேலே வளருகிறதொன்றும் அதற்கொப்பல்ல, அது பயமற்றிருக்க உண்டுபண்ணப்பட்டது.

௨௫ அது மேட்டிமையானதையெல்லாம் [illegible]மாகப் பார்க்கிறது, அது பெருமையான ஜீவன்களுக்கெல்லாம் இராசாவாயிருக்கிறதென்றார்.

௪௨. அதிகாரம்.

பராபரன் யோபின் உபத்திரவத்தைத் தீர்த்தது.

அப்போது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது,

௨ தேவரீர் சகலத்தையுஞ் செய்ய வல்லவர், தேவரீர் செய்ய நினைத்தது தடைபடக்கூடாதென்கிறதை அறிந்திருக்கிறேன்.

௩ தான் அறியாத ஆலோசனையை மூடிவைக்கத்தக்கவனார், ஆகையால் நான் உணராததையும் என்புத்திக்கு மிஞ்சினதையும் நான் அறியாததையும் அலப்பினேனென்கிறேன்.

௪ இப்போதும் நீர் செவிகொடும், அப்போது நான் பேசுவேன். உம்மைக் கேட்பேன், நீர் என்னைப் போதியும்.

௫ என்செவியினாலே உம்முடைய சொற் கேட்டேன், இப்போது என்கண்ணும் உம்மைப் பார்க்கிறது.

௬ ஆகையால் நான் என்னை அருவருத்துத் தூளிலுஞ் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்படுகிறேனென்றான்.

௭ கர்த்தர் இந்த வார்த்தைகளை யோபோடே பேசின பின் சம்பவித்ததேதெனில், கர்த்தர் தேமானியனான எலிப்பாசைப் பார்த்துச் சொன்னதாவது, உன்மேலும் உன்னுடைய இரண்டு சிநேகிதர்மேலும் நமக்குக் கோபம் மூண்டது, ஏனென்றால் நம்முடைய தாசனாகிய யோபு பேசினதுபோலே நீங்கள் நம்மைக்குறித்து நிதானமாய்ப் பேசினதில்லை.

௮ இப்போதும் நீங்கள் ஏழு எருதுகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையும் பிடித்துக்கொண்டு நம்முடைய தாசனாகிய யோபினண்டைக்குப் போய், உங்களுக்காகச் சர்வாங்க தகனங்களைப் பலியிடுங்கள், நம்முடைய தாசனாகிய யோபும் உங்களுக்காக வேண்டுதல் செய்யக்கடவான், நாம் உங்களை உங்களுடைய அஞ்ஞானத்துக்குத் தக்கதாக நடத்தாதபடிக்கு அவன் முகத்தையே பார்ப்போம், ஏனென்றால் நம்முடைய தாசனாகிய யோபு பேசினதுபோலே நீங்கள் நம்மைக்குறித்து நிதானமாய்ப் பேசினதில்லையென்றார்.

௯ அப்போது தேமானியனான எலிப்பாசும் சூகியனான பில்தாதும் நாகமாத்தியனான சோப்பாரும் போய்க் கர்த்தர் தங்களுக்குச் சொன்னபடி செய்தார்கள், அப்போது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.

௰ யோபு தன் சிநேகிதருக்காக வேண்டிக்கொள்ளுகையில் கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார், யோபுக்கு முன்னிருந்த எல்லாவற்றையும்பார்க்க இரண்டத்தனையாய்க் கர்த்தர் அவனுக்கு வரப்பண்ணினார்.

௰௧ அப்போது அவனுடைய எல்லாச் சகோதரிகளும் முன் அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனண்டைக்கு வந்து, அவனுடனே அவன் வீட்டிலே அப்பம் பொசித்துக் கர்த்தர் அவன்மேல் வரவிட்டிருந்த சகல தீங்கு நிமித்தமும் அவனுக்காக அங்கலாய்த்து அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் அவனுக்கு ஒவ்வொரு தங்கக் காசையும் அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்.

௰௨ யோபின் முன்னிருப்பைப் பார்க்கக் கர்த்தர் அவன் பின்னிருப்பை ஆசீர்வதித்ததினாலே அவனுக்குப் பதினாலாயிரம் ஆடுகளும் ஆறாயிரம் ஒட்டகங்களும் ஆயிரம் ஏர்க்குண்டைகளும் ஆயிரங் கழுதைகளும் உண்டாயிற்று.

௰௩ ஏழு குமாரரும் மூன்று குமாரத்திகளும் அவனுக்குப் பிறந்தார்கள்.

௰௪ மூத்தவளுக்கு எமிமாளென்ற பேரும், இரண்டாவதுக்குக் கெத்சியாளென்ற பேரும், மூன்றாவதுக்குக் கேரேனாப்பூர் என்ற பேருமிட்டான்.

௰௫ தேசத்திலெங்கும் யோபின் குமாரத்திகளைப்போலே சவுந்தரியமான பெண்பிள்ளைகள் காணப்பட்டதில்லை. அவர்களுக்கு அவர்கள் தகப்பன் அவர்கள் சகோதரரின் நடுவிலே சுதந்தரங்கொடுத்தான்.

௰௬ இதற்குப்பிறகு யோபு நூற்றுநாற்பது வருஷம் உயிரோடிருந்து நாலு தலைமுறையாகத் தன்பிள்ளைகளையுந் தன்பிள்ளைகளுடைய பிள்ளைகளையுங் கண்டான்.

௰௭ பிற்பாடு யோபு முதிர்ந்தவனும் பரிபூரண வயதுள்ளவனுமாய் மரித்தான்.

முற்றிற்றுமுற்றும்.

[illegible]

ஞான

சங்கீதங்களுடையபுஸ்தகம்.

க. சங்கீதம்.

(தேவபத்தியுள்ளவர்களின்பாக்கியமும் ஆகாதவர்களின் நிர்ப்பாக்கியமும்.)

ஆகாதவர்களுடைய ஆலோசனையில் நடவாமலும் பாவிகளுடையவழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காருமிடத்திலே உட்காராமலும், உகூ, சங்கீதம். ச. உ. கொரிந்தர். கூ, யச ஞ் எபேசி. ரு, யக. க. கொரி யரு, கக.

உ கர்த்தருடையவேதத்தின்மேற் பிரியமாயிருந்து அவருடையவேதத்தில் இரவும் பகலும் தியானிப்பாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். ளயகூ, சங்கீதம் க ஞ் ரு. யோ. கூ, கூ-கூ. கொலோ. ரு, யகூ.

ங அவன் நீர்வாய்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டுத் தன்காலத்திலே தன்கனியை தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான், அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். கஉ, சங்கீதம். யக ஞ் எரேமியா. யஎ, அ. யோசுவா. க, அ.

ச ஆகாதவர்கள் அப்படியிராமல் காற்றுப்பறக்கடிக்கும்பதரைப்போலிருக்கிறார்கள். மத்தேயு. ங, யஉ.

ரு ஆகையால் ஆகாதவர்கள் நியாயத்தீர்ப்பிலும் பாவிகள் நீதிமான்களின்சபையிலும் நிலைநிற்பதில்லை.

கூ ஏனென்றால் கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார், ஆகாதவர்களின் வழியோ அழியும்.

உ. சங்கீதம்.

(மேசியாவின் இராச்சியத்தையும் அவருடைய சத்துருக்களையுங் காண்பிக்கும் தீர்க்கதரிசனம்.)

க ஜாதிகள்கொந்தளித்து ஜனங்கள் விருதாக்காரியத்தைச்சிந்திப்பானேன். அப்போஸ்தலர். ச, உரு—உஅ.

உ கர்த்தருக்கு விரோதமாகவும் அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாக பூமியின் இராசாக்கள் எழும்பிநின்று அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி,

ங அவர்கள் கட்டுகளை அறுத்து அவர்களுடைய கயிறுகளை நம்மைவிட்டெறிந்துபோடுவோமென்கிறார்கள். எரேமியா. உ, உ0.

ச பரமண்டலங்களில் வாசமாயிருக்கிறவர் நகைப்பார், ஆண்டவர் அவர்களைப் பரியாசம்பண்ணுவார். ருக, சங்கீதம். கூ. வாக்கியம். க, உகூ. உஎ.

ரு அப்பொழுது தம்முடையகோபத்திலே யவர்களோடே பேசித் தம்முடைய உக்கிரத்திலேயவர்களைக்கலங்கப்பண்ணுவார்.

கூ நாம் நம்முடையபரிசுத்த பருவதமாகிய சீயோனமீதில் நம்முடைய இராசாவை அபிஷேகம்பண்ணினோம்.

எ தீர்மானத்தின்விவரஞ்சொல்லுவேன், கர்த்தர் என்னுடனே, நீர் நம்முடையகுமாரன், இன்று நாம் உம்மைச்ஜெனிப்பித்தோமென்றும், அப்போஸ்தலர். யங, ஙங. எபிரேயர். க, ரு ரு, ரு.

அ நம்மைக்கேளும், அப்பொழுது சாதிகளையுமக்குச்சுதந்திரமாகவும் பூமியின் எல்லைகளையுமக்குச் சொந்தமாகவுங் கொடுப்போம். உஉ, சங்கீதம். உஅ. உகூ. எஉ, சங்கீதம். அ யக.

கூ இருப்புச்கோலால் அவர்களை நொறுக்கிக்குயக்கலத்தைப்போல அவர்களைச் சிதறடிப்பீரென்றருஞ்சொன்னார். அறிவிப்பு. உ, உகூ. உஎ. யஉ, ரு. யகூ, யரு.

ய இப்போதும் இராசாக்களே உணர்வடையுங்கள், பூமியின் நியாயாதிபதிகளே புத்திமான்களாய் நடந்துகொள்ளுங்கள்.

யக பயத்துடனே கர்த்தருக்கூழியஞ்செய்யுங்கள், நடுக்கத்துடனேகளிகூருங்கள். பிலிப்பியர். உ, யஉ.

யஉ குமாரன்கோபமடையாமலும் நீங்கள்வழியில் அழியாமலுமிருக்கும்படிக்கவரை முத்திசெய்யுங்கள், ஏனென்றால் கொஞ்சக்காலத்திலே அவருடையகோபம்பற்றியெரியும், அவரையண்டிக்கொள்ளுகிறயாவரும் பாக்கியவான்கள். அறிவி. கூ, யகூ. யஎ. கச, சங்கீதம். கூ.

ங. சங்கீதம்.

(சத்துருக்களாலே உபத்திரவப்படுகையில் பராபரனை நம்புவதே மனத்தேறுதலென்பது.)

[தாவீது தன்குமாரன் அப்சலோமுக்குத் தப்பி ஓடிப்போகையிலேபாடின சங்கீதம்.]

கர்த்தாவே என்சத்துருக்கள் எத்தனையாய்ப்பெருகினார்கள், எனக்குவிரோத

மாயெழும்புகிறவர்கள் அநேகர். ௨௫, சங்கீதம். ௰௯.

௨ அவனுக்குப் பராபரனிடத்திலே இரட்சிப்பில்லையென்று என் ஆத்துமாவைக் குறித்துச் சொல்லுகிறவர்கள் அநேகராயிருக்கிறார்கள். சேலா. ௨. சாமு. ௰௬, ௭. ௮.

௩ ஆனாற் கர்த்தாவே, தேவரீரெனக்கா கேடகமும் என் மகிமையும் என் தலையையுயர்த்துகிறவருமாயிருக்கிறீர். ௭, சங்கீதம். ௰௧. ௧. மோசே. ௰௫, ௧.

௪ என் சத்தத்தினாலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அப்பொழுது அவர் தமது பரிசுத்த பருவதத்திலிருந்து என் விண்ணப்பத்தைக் கேட்டார். சேலா.

௫ நான் படுத்துக்கொண்டு நித்திரைபண்ணி விழித்துக்கொண்டேன், ஏனெனில் கர்த்தர் என்னைத் தாங்குகிறார். ௪, சங்கீதம். ௯. வாக்கியம். ௩, ௨௪.

௬ சுற்றிலும் எனக்கு விரோதமாகப் பாளயமிறங்குகிற பதினாயிரம் பேருக்குப் பயப்படேன். ௨௭, சங்கீ. ௩.

௭ கர்த்தாவே எழுந்திரும், என் பராபரனே என்னையிரட்சியும், ஏனென்றால் நீரென் பகைஞரெல்லாரையுந் தாடையிலே அடித்து ஆகாதவர்களுடைய பல்லுகளை நொறுக்கிப் போடுகிறீர்.

௮ இரட்சிப்பு கர்த்தருடையதே, தேவரீருடைய ஆசீர்வாதம் உம்முடைய சனத்தின்மேலிருப்பதாக. சேலா. எரேமி. ௩, ௨௩. அறி. ௭, ௰. ௰௯, அதி. ௧.

௪. சங்கீதம்.

(தாவீது தன் பகைஞருக்குப் புத்திசொல்லிப் பராபரன் சவிக்கையால் மனந்தேறினது.)

[இணைராகங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

என் நீதியின் பராபரனே நான் கூப்பிடுகையில் என்னைக் கேளும், நெருக்கத்திலிருக்கிற எனக்கு விசாலமுண்டாக்கினீர், என்பேரில் இரங்கி என் விண்ணப்பத்தைக் கேளும். ௫, சங்கீ. ௨. ௨௭, சங்கீ. ௭.

௨ மனுபுத்திரரே, எந்தமட்டும் என் கீர்த்தியை அவமானமாக்கி அவத்தத்தைச் சிநேகித்துப் பொய்யைத் தேடுவீர்கள். சேலா.

௩ கர்த்தர் தம்முடைய சன்மார்க்கனை அதிசயமாய் நடத்துகிறாரென்றறியுங்கள், நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்.

௪ நீங்கள் சினம் அடைந்தாற் பாவஞ் செய்யாதேயுங்கள், உங்கள் படுக்கையில் உங்களிருதயத்திலே பேசி அமர்ந்திருங்கள். சேலா. எபேசியர். ௪, ௨௬.

௫ நீதியின் பலிகளைச் செலுத்திக் கர்த்தரின்மேல் நம்பிக்கையாயிருங்கள். ௫௧, சங்கீதம். ௰௯ ௱.

௬ நமக்கு நன்மை காண்பிப்பவனாரென்று சொல்லுகிறவர்கள் அநேகர், உம்முடைய முகத்தின் வெளிச்சத்தை எங்கள்மேல் ஏறெடும் கர்த்தாவே. ௩௧, சங்கீதம். ௰௭. ௪. மோசே. ௬, ௨௬.

௭ அவர்களுக்குத் தானியமும் திராட்சிப்பழ இரசமும் பெருகியிருக்கிறகாலத்தினுடைய சந்தோஷத்திலும் அதிக சந்தோஷத்தை என் இருதயத்திலே தந்தீர்.

௮ சமாதானத்திலே சயனித்துக்கொண்டும் நித்திரைபண்ணியுமிருப்பேன், ஏனெனில் கர்த்தாவே, தேவரீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர். ௩, ௰௫. ௯.

௫. சங்கீதம்.

(பராபரன் பொல்லாதவர்களை அருவருத்துத் தம்முடைய விசுவாசிகளைக் காப்பாற்றுகிறது.)

[நெகிலோத்தில் வாசிக்கத் தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே என் வார்த்தைகளுக்குச் செவிகொடும், என் தியானத்தையுணர்ந்துகொள்ளும், ௪, சங்கீ. ௨. ௰௭, சங்கீ. ௧.

௨ என் இராசாவே என் பராபரனே என் கூப்பிடுதலின் சத்தத்தைக் கவனியும், ஏனெனில் உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்வேன்.

௩ கர்த்தாவே, காலமே என் சத்தத்தைக் கேட்பீராக, காலமே உமக்கு நேரே ஆயத்தமாகிக் காத்திருப்பேன். ௮௮, சங்கீதம். ௰௪.

௪ ஏனென்றால் தேவரீர் ஆகாமியத்தை விரும்புகிற தேவனல்ல, பொல்லாதவன் உம்மிடத்திலே தரிக்கொள்ளமாட்டான். ௩௪, சங்கீதம். ௰௭.

௫ வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்பதில்லை, எல்லா அக்கிரமக்காரரையும் பகைக்கிறீர். மத். ௭, ௨௩.

௬ பொய்பேசுகிறவர்களை அழிப்பீர், இரத்தப்பிரியனையும் சூதுள்ள மனுஷனையுங் கர்த்தர் அருவருக்கிறார்.

௭ நானோ உம்முடைய மிகுந்த கிருபையினாலே உம்முடைய வீட்டுக்குட் பிரவேசித்து உம்முடைய பரிசுத்த தேவாலயத்துக்கு நேராக உமக்குப் பயந்து பணிந்துகொள்ளுவேன்.

௮ கர்த்தாவே, என் சத்துருக்களினிமித்தம் என்னை உம்முடைய நீதியிலே நடத்தி எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் செம்மைப்படுத்தும். ௨௭, சங். ௰௧.

௯ ஏனெனில் அவர்கள் வாயிலே நிச்சயமில்லை, அவர்கள் உள்ளங் கேடுபாடுகள், அவர்கள்

திறக்கப்பட்ட பிரேதக்குழியாயிருக்கிறது, தங்கள் நாவினால் இச்சகம் பேசுகிறார்கள். ரோமர். ௩, ௰௩.

௰ பராபரனே, அவர்களைத் தங்கள் ஆலோசனைகளைவிட்டு விழும்படிக்கு அவர்களைக் குற்றவாளிகளாக்கும், அவர்கள் துரோகங்களுடைய திரட்சியினிமித்தம் அவர்களைத் தள்ளிவிடும், ஏனென்றால் தேவரீருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினார்கள்.

௰௧ ஆனால் உம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களெல்லாருஞ் சந்தோஷித்து என்றைக்குங் கெம்பீரிப்பார்களாக, ஏனெனில் அவர்களைக் காப்பாற்றுகிறீர், உம்முடைய நாமத்தைச் சிநேகிக்கிறவர்கள் உம்மிலே களிகூருவார்கள். ௧௧, சங்கீதம். ௪.

௰௨ ஏனென்றால் கர்த்தாவே, தேவரீர் நீதிமானை ஆசீர்வதித்து அவனைத் தயவென்னுங் கேடயத்தினாலே சூழ்ந்துகொள்ளுவீர்.

௬. சங்கீதம்.

(தாவீது மகா பெலவீனத்திலுந் துயரத்திலுஞ் செபம்பண்ணிப் பராபரன் தன் விண்ணப்பத்தைக் கேட்டாரென்று நிச்சயமடைந்தது.)

[எண்ணரம்புக்கின்னாரங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

௧ கர்த்தாவே, உம்முடைய கோபத்தில் என்னைக் கடிந்துகொள்ளாதேயும், உம்முடைய உக்கிரத்தில் என்னைத் தண்டியாதேயும். ௩௮, சங்கீ. ௨, எரே. ௰, ௨௪.

௨ என்மேலிரங்குங் கர்த்தாவே, ஏனெனில் நான் பெலனற்றிருக்கிறேன், என்னைக் குணமாக்குங் கர்த்தாவே, ஏனெனில் என் எலும்புகள் கலங்கியிருக்கிறது.

௩ என் ஆத்துமா மிகவுங் கலங்கியிருக்கிறது, கர்த்தாவே நீர் எந்தமட்டும் இரங்காதிருப்பீர். ௭௯, சங்கீதம். ௫.

௪ திரும்புங் கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும், உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும்.

௫ ஏனென்றால் மரணத்தில் உம்மை நினைவுகூருவதில்லை, பாதாளத்தில் உம்மைத் துதிப்பவனார்.

௬ என் பெருமூச்சுகளால் இளைத்தேன், இராமுழுதும் என் மெத்தையை மிகவும் ஈரக்கப்பண்ணி என் கண்ணீரால் என் கட்டிலை நனைக்கிறேன்.

௭ என் கண் குழி சலிப்பினால் விழுந்துபோயிற்று, என் சத்துருக்கள் அனைவர் நிமித்தந் தளர்ந்துபோயிற்று. ௩௧, சங்கீ. ௯.

௮ அக்கிரமக்காரராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டு அகன்றுபோங்கள், ஏனென்றால் கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்.

௯ கர்த்தர் என் விண்ணப்பத்தைக் கேட்டார், கர்த்தர் என் செபத்தையேற்றுக்கொள்ளுகிறார். ௰. சங்கீ. ௰௭.

௰ என் பகைஞரெல்லாரும் வெட்கி மிகவுங் கலங்கிப்போவார்கள், அவர்கள் பின்னிட்டுத் திரும்பி அகப்பிலே வெட்கப்படுவார்கள். ௩௫, சங்கீ. ௪. ௨௬, ௰௪. ௰௫.

௭. சங்கீதம்.

(தாவீது தன் குற்றமில்லாமையைச் சொல்லித் தன்னை அவதிப்படுத்துகிறவர்களின் அழிவை முன்னறிவித்தது.)

[எமினியின் குமாரனாகிய கூஷியினுடைய வார்த்தைகளினிமித்தந் தாவீது கர்த்தரை நோக்கிப் பாடின துயரகீதம்.]

௨. சாமுவே. ௰௬, ௭. ௮. ௰௧.

௧ என் பராபரனாகிய கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன், என்னைப் பின்தொடருகிறவர்களெல்லாருக்குந் தேவரீர் என்னை விலக்கி இரட்சித்து,

௨ சத்துரு சிங்கம்போல் என் ஆத்துமாவைப் பிடித்துப்போய் விடுவிக்கிறவனில்லாமையாற் பீறிப்போடக்கூடாதபடிக்கு என்னைத் தப்பப்பண்ணும். ௰, சங்கீ. ௯.

௩ என் பராபரனாகிய கர்த்தாவே, நான் இதைச் செய்ததும் என் கைகளில் நியாயக்கேடிருக்கிறதும். யோபு ௩௧, ௭ மு.

௪ எனக்கு முகாந்திரமில்லாமல் இடுக்கண்செய்தவனைத் தப்பவேபண்ணின நான் என்னோடே சமாதானமாயிருந்தவனுக்குத் தீமைசெய்ததுமுண்டானால்,

௫ பகைஞன் என் ஆத்துமாவைத் தொடர்ந்துபிடித்து என் பிராணனைத் தரையிலே தள்ளி மிதித்து என் கனத்தைத் தூளிலே விழுந்துபோடக்கடவன். சேலா.

௬ கர்த்தாவே, நீர் உம்முடைய கோபத்திலெழுந்திருந்து எனக்கு இடுக்கண்செய்கிறவர்களுடைய மூர்க்கங்களினிமித்தம் உயர்ந்து எனக்காக விழித்துக்கொள்ளும், ஏனெனில் நியாயத்தீர்ப்பைக் கற்பித்தீரே.

௭ அப்போது சனங்களுடைய கூட்டம் உம்மைச் சூழும், அவர்களுக்காக உயரத்துக்குத் திரும்பும். ௱௪௨, சங்கீ. ௮.

௮ கர்த்தர் சனங்களுக்கு நியாயஞ்செய்வார், கர்த்தாவே என் நீதியின்படியும் என்னிலுள்ள உண்மையின்படியும் எனக்கு நியாயஞ்செய்யும்

௯ ஆகாதவர்களின் பொல்லாங்கை ஒழியப்பண்ணும், நீதிமானை நிலைநிறுத்துவீராக, ஏனெனில் நீதியுள்ள பராபரனாகிய தேவரீர் இருதயங்களையும் உள்ளிந்திரியங்களையுஞ் சோதித்தறிகிறவர். எரேமி. ௰௧, ௨௰. ௰௭, ௰. அதி. ௰. அபி. ௨, ௨.

௰ என்கேடகம் செம்மை இருதயத்தாரை ரட்சிக்கிற பராபரனிடத்திலிருக்கிறது.

௰௧ பராபரன் நீதியுள்ள நியாயாதிபதியும் நாடோறுஞ் சினந்திருக்கிற தேவனுமானவர். ௯, சங். ௫.

௰௨ மனந்திரும்பாதிருந்தால் தம்முடைய பட்டயத்தைக் கருக்காக்குவார், அவர் தம்முடைய வில்லை நாணேற்றி அதை முஸ்திப்பாக்கி,

௰௩ அவனுக்குச் சாவுக்கினமான ஆயுதங்களை ஆயத்தம்பண்ணினார், தம்முடைய அம்புகளை அக்கினி அம்புகளாக்குவார்.

௰௪ இதோ அக்கிரமத்தைப் பெறக் கெர்ப்ப வேதனையாயிருக்கிறான், தீவினையைக் கெர்ப்பந்தரித்தான், ஆனால் அவத்தத்தைப் பெறுவான். யோபு. ௰௫, ௩௫.

௰௫ குழியைவெட்டி அதைப் பள்ளமாக்கினான், தான் பறித்த குழியிலே விழுவான்.
௯, சங். ௰௯. வாக்கி. ௨௯, ௨௭.

௰௯ அவன் தீவினை அவன் சிரசின்மேலே திரும்பி அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேலிறங்கும். வாக்கியம். ௫, ௨௨.

௰௭ நான் கர்த்தரை அவருடைய நீதியின்படி துதித்து உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

௮. சங்கீதம்.

(மனுஷகுமாரனாகிய மேசியா மிகவுந் தாழ்த்தப்பட்டபிறகு எல்லாத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டதைக் குறித்துச் சொன்ன தீர்க்கதரிசனம்.)

[கித்தீத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, தேவரீருடைய நாமம் பூமியெங்கும் எத்தனை பிரபலியமாயிருக்கிறது, உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலவட்டமாக்கினீர்.

௨ பகைஞனையும் பழிகாரனையும் ஓயப்பண்ணத் தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தங் குழந்தைகள் பாலகர் வாயினாலே பெலனுண்டுபண்ணினீர். மத். ௨௧, ௰௯. ௨௯, சங்கீதம். ௧.

௩ நான் உம்முடைய விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும் நீர் ஆயத்தப்படுத்தின சந்திரனையும் நட்சத்திரங்களையும் பார்க்கும்போது, ௱௨, சங். ௨௯.

௪ மனுஷன், நீர் அவனை நினைக்கிறதுக்கும், மனுஷனுடைய குமாரன் நீர் அவனை நோக்கிப் பார்க்கிறதுக்கும் எம்மாத்திரமென்கிறேன். எபிரேயர். ௨, ௯.
௱௪௪, சங்கீதம். ௩. யோபு. ௭, ௰௭.

௫ நீர் அவனைக் கொஞ்சத்தியாலந் தேவதூதரிலுஞ் சிறியவராக்கினீர், அவனை மகிமையினாலுங் கனத்தினாலும் முடிசூட்டினீர். எபிரேயர். ௨, ௭. ௯.

௯ நீர் அவருக்கு உம்முடைய கைகளுடைய கிரியைகளின்மேல் ஆளுகைதந்து சருவத்தையும், ௧. கொரிந்தர். ௰௫, ௨௭.

௭ ஆடுமாடு முதலானவைகளெல்லாத்தையும் அத்தோடேகூட வெளியின் மிருகங்களையும், ௧. மோ. ௧, ௨௮. ௯, ௨.

௮ ஆகாசத்துப் பட்சிகளையுஞ் சமுத்திரத்து மச்சங்களையுங் கடல்களின் பாதைகளில் நடமாடுகிறதையும் அவர் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.

௯ எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, தேவரீருடைய நாமம் பூமியெங்கும் எத்தனை பிரபலியமாயிருக்கிறது.

௯. சங்கீதம்.

(சத்துருக்களை ஆக்கினையிட்ட பராபரனைத் துதித்தது.)

[முத்லாபேனியிலே வாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

என் முழு இருதயத்தாலுங் கர்த்தரைத் துதிப்பேன், உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.

௨ உமக்குள் மகிழ்ந்து களிகூருவேன், உன்னதமானவரே, உம்முடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவேன். ௩, சங்கீதம்.
௮. ௯௨, சங்கீதம். ௨.

௩ ஏனென்றால் என் சத்துருக்கள் பின்னாகத் திரும்பி உம்முடைய முகத்துக்கு முன்பாக இல்லாதபடிக்கு இடறுண்டழிந்தார்கள். ௨௰, சங்கீதம். ௯.

௪ அதேதென்னில் நீரென் நியாயத்தையும் என் வழக்கையுந் தீர்த்து நீதியுள்ள நியாயாதிபதியாய் இராசாசனத்தின்மேல் உட்கார்ந்தீர். ௭, சங்கீதம். ௰௨.

௫ சாதிகளையுந் தம்பி ஆகாதவனையழித்து அவர்கள் நாமத்தை என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்குங் குலைத்துப்போட்டீர்.

௯ சத்துருப்பண்ணின பாழ்க்கடிப்புகள் என்றென்றைக்கும் முடிவடைந்தது. ஏனென்றால் அவர்கள் பட்டணங்களை நிர்மூலம்பண்ணினீர், அவர்கள் பேர் அவர்களோடேகூட அழிந்தது.

௭ கர்த்தரோவெனில் என்றென்றைக்குமிருப்பார், தம்முடைய ஆசனத்தை நியாயத்தீர்ப்புக்காயத்தம்பண்ணினார்.
௯௯, சங்கீதம். ௰௩. ௯௮, ௯.

௮ அவர் பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்த்துச் சனசதளங்களுக்குச் செம்மை

பாவ நிவாரணஞ்செய்வார், ௬௯, சங்கீதம. ௰௯. ௬அ, ௯.

௯ சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் உயர்ந்த அடைக்கலமாயிருப்பார், நெருக்கப்படுகிறகாலங்களில் அவர் உயர்ந்த அடைக்கலந்தானே. ௬எ, சங்கீதம. ௩௯.

௰ ஆகையால் உமது நாமத்தை அறிந்தவர்கள் உம்மை நம்பியிருப்பார்கள், ஏனெனில் கர்த்தாவே, உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை. ௬௪, சங. ௫. ௬.

௰௧ சீயோனில் வாசமான கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணி அவர் செய்கைகளைச் சனசதாபங்களுக்குள்ளே அறிவியுங்கள்.

௰௨ ஏனென்றால் இரத்தப்பழிகளை விசாரிக்கிறவர் கேட்டு அவைகளை நினைக்கிறார், சிறுமைப்பட்டவர்களுடைய கூப்பிடுதலை மறவார். ௫. மோசே. ௯௨, ௪௩.

௰௩ என்னை மரணவாசல்களிலிருந்து உயர்த்துகிற கர்த்தாவே, நான் உம்முடைய துதிகளையெல்லாஞ் சீயோன் குமாரத்தியின் வாசல்களில் விவரித்து உம்முடைய இரட்சிப்பினாலே களிகூரும்படிக்கு,

௰௪ தேவரீரென்மேலிரங்கி என்னைப் பகைக்கிறவர்களால் எனக்கு வருஞ் சிறுமையைப் பாரும்.

௰௫ சாதிகள் தாங்கள் வெட்டின பள்ளத்திலே விழுந்தார்கள், அவர்கள் மறைவாய் வைத்த வலையிலே அவர்கள் கால் அகப்பட்டுக்கொண்டது. எ, சங்கீதம. ௰௬.

௰௬ கர்த்தர் தாஞ்செய்த நியாயத்தினாலே அறியப்பட்டார், ஆகாதவன் தன் கைகளுடைய செய்கையிலே சிக்கப்பட்டான். இது தியானிக்கப்படத்தக்கது. சேலா.

௰௭ ஆகாதவர்களும் பராபரனை மறக்கிற எல்லாச் சாதிகளும் நரகத்துக்குத் திரும்புவார்கள்.

௰௮ ஏனெனில் எளியவன் என்றைக்கும் மறக்கப்படுவதில்லை, சிறுமைப்பட்டவர்களுடைய காத்துக்கொள்ளுதல் நித்தியகாலமாய்க் கெட்டுப்போயிருப்பதுமில்லை.

௰௯ மனுஷன் பெலன்கொள்ளாதபடிக்கு எழுந்திரும், கர்த்தாவே சாதிகள் உம்முடைய முகத்துக்கு முன்பாக நியாயந்தீர்க்கப்படக்கடவார்கள்.

௨௰ சாதிகள் தாங்கள் மனுஷரென்றறியும்படிக்கு அவைகளுக்குப் பயமுண்டாக்கும் கர்த்தாவே,

௰. சங்கீதம.

(பொல்லாதவர்கள் பண்ணுகிற துன்பத்தினிமித்தம் பராபரனுடைய சகாயஞ்செய்ய வேண்டுதல்.)

கர்த்தாவே ஏன் தூரத்திலே நிற்கிறீர், நெருக்கப்படுகிறகாலங்களில் ஏன் உம்மை மறைக்கிறீர்.

௨ ஆகாதவன் தன் பெருமையினாலே சிறுமையானவனைக் கொடூரமாய்த் துன்பப்படுத்துகிறான். அவர்கள் தாங்கள் நினைத்த தீவினைகளிலே பிடிக்கப்படக்கடவார்கள். ௫௭, சங்கீதம். எ.

௩ ஏனெனில் ஆகாதவன் தன் ஆத்துமாவின் ஆசையைத் தொட்டுப் பெருமைபாராட்டுகிறான், பொருளாசைக்காரன் தன்னை ஆசீர்வதித்துக் கர்த்தரை அசட்டைபண்ணுகிறான். ௫. மோசே. ௨௯, ௰௯. ௨௰.

௪ ஆகாதவன் தன் முகநெறிப்பினாலே ஒன்றுக்கும் விசாரப்படாதேபோகிறான், அவன் நினைவுகளெல்லாம் பராபரனில்லையென்பதே. ௰௪, சங்கீதம. ௧.

௫ அவன் வழிகள் எப்போதும் வாதையுண்டாக்குகிறதுகள், உம்முடைய நியாயத்தீர்ப்புகளோ அவன் பார்வைக்கு மகாவுயர்ந்ததூரமாயிருக்கிறது, தன் எதிராளிகளையெல்லாஞ் சீறுகிறான்.

௬ தன்னிருதயத்திலே நான் அசைக்கப்படாமலுந் தலைமுறைதலைமுறையாகத் தீங்கடையாமலுமிருப்பேனென்கிறான். அறிவிப்பு. ௰அ, எ.

எ அவன் வாய் சர்ப்பனையினாலும் கபடங்களினாலுந் தந்திரத்தினாலும் நிறைந்திருக்கிறது, அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் இருக்கிறது. ரோமர். ௩, ௰௪.

அ அக்கிரமங்களிலே பதிவிருந்து ஒளிப்பிடங்களிலே குற்றமில்லாதவனைக் கொல்லுகிறான், அவன் கண்கள் ஏழையைச் சுட்டாய்ப் பார்க்கிறது.

௯ தன் கெபியிலிருக்கிற சிங்கத்தைப்போலே மறைவிலே பதிவிருக்கிறான், சிறுமையானவனைப் பிடிக்கப் பதிவிருந்து சிறுமையானவனைத் தன் வலைக்குள் இழுத்துப் பிடிக்கிறான். ௫எ, சங்கீதம. ௩௨.

௰ ஏழைகளின் கூட்டம் அலைசடிப்பட்டு ஒடுங்குண்டு அவன் வல்லமையில் விழுகிறது.

௰௧ பராபரன் அதை மறந்தாரென்றும் அவர் தம்முடைய முகத்தை மறைத்து அதையென்றைக்கும் பாராதிருப்பாரென்றும் தன்னிருதயத்திலே சொல்லுகிறான். ௬௪, சங்கீதம. ௬. எ.

௰௨ பராபரனாகிய கர்த்தாவே எழுந்திருந்து உம்முடைய கையையுயர்த்தும், சிறுமையானவர்களை மறவாதேயும்.

௰௩ அவர் அதைக் கேட்டு விசாரிப்பதில்லையென்று ஆகாதவன் தன்னிருதயத்திலே சொல்லிப் பராபரனை யசட்டைபண்ணுவானேன்.

௰௪ அதைப் பார்த்திருக்கிறீரோ, ஏனெனில் தேவரீர் அவர்களுக்குப் பதிலசெய்ய அவ

ர்களது தீவினையையும் அலட்டுண்டாக்குதலையும் நோக்கியிருக்கிறீர், அது உம்முடைய கையிலிருக்கிறது, உமக்கு ஏழை தன்னை ஒப்புவிக்கிறான், திக்கற்றவனுக்குத் தேவரீர் சகாயராயிருக்கிறீர். ௬௮, சங்கீ. ௬.

௰௫ நீர் ஆகாதவனுடைய புயத்தை முறித்துப் பொல்லாதவனுடைய ஆகாமியங்காணுதே போகுமட்டும் அதைத் தேடி விசாரியும்.

௰௬ கர்த்தர் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் இராசாவாயிருக்கிறார், புறச்சாதியார் அவருடைய தேசத்திலிருந்து அழிந்துபோவார்கள். ௨௯, சங்கீதம். ௰. ௱௪௬, சங்கீதம். ௰. அதிவிடப்பு. ௰௧, ௰௫. ௯, சங்கீதம். ௰௮.

௰௭ கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர், அவர்கள் இருதயத்தைத் திடப்படுத்துவீர்.

௰௮ மண்ணான மனுஷன் அப்புறம் பெலவந்தஞ் செய்யத் தொடராதபடிக்குத் தேவரீர் திக்கற்றவனுக்கும் ஒடுக்கப்பட்டவனுக்கும் நீதிசெய்ய உம்முடைய செவிகளைச் சாய்த்துக் கவனிப்பீர். ௫, மோ. ௰, ௰௮.

௰௧. சங்கீதம்.

(தாவீது தன் சத்துருக்களின் சங்கதங்களைக் கேட்டுப் பராபரனை ஆதரவாகப் பிடித்தது.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

கர்த்தரை நம்பியிருக்கிறேனே, பின்னை எப்படி நீங்கள் என் ஆத்துமாவுடனே பட்சியைப்போல உங்கள் மலையிலே பறந்தலையுங்கள் என்கிறீர்கள்.

௨ ஏனெனில் இதோ, ஆகாதவர்கள் வில்லை வளைத்துச் செம்மை இருதயத்தாரின்மேல் அந்தகாரத்தில் எய்யத் தங்கள் அம்புகளை நாணின்மேலே தொடுக்கிறார்கள்.

௫௭, சங்கீதம். ௫.

௩ அஸ்திபாரங்கள் தாமும் நிர்மூலமாகிறதே, நீதிமான் என்னசெய்வான்.

௪ கர்த்தர் தம்முடைய பரிசுத்த அரமனையிலிருக்கிறார், கர்த்தருடைய ஆசனம் பரமண்டலங்களிலிருக்கிறது, அவருடைய கண்கள் பார்க்கிறது, அவருடைய இமைகள் மனுப்புத்திரரைச் சோதித்தறிகிறது.

ஏசாயா. ௬௬, ௧.

௫ கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார், ஆனால் ஆகாதவனையுங் கொடுமையைச் சிநேகிக்கிறவனையும் அவருடைய ஆத்துமா பகைக்கிறது. ௫, சங்கீதம். ௫.

௬ ஆகாதவர்கள்மேலே சிதைவுகளையும் அக்கினியையுங் கெந்தகத்தையும் வருஷிக்கப்பண்ணுவார், கடுங்கோடைக் கொந்தளிப்பு அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு. ௧. மோசே. ௰௯, ௨௪. ௭௫, சங். ௯.

௭ ஏனெனிற் கர்த்தர் நீதிபரரும் நீதியைச் சிநேகிக்கிறவருமாயிருக்கிறார், அவருடைய முகஞ் செம்மையானவனை நோக்கியிருக்கிறது.

௰௨. சங்கீதம்.

(பராபரன் மெத்தவும் பெருகின துன்மார்க்கருடைய தீமைக்குத் தம்முடைய சபையை விலக்கிக் காக்கத் தாவீது அவரை வேண்டிக்கொண்டது.)

[எண்ணரம்பு கிண்ணுரங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

இரட்சியுங் கர்த்தாவே ஏனெனிற் சன்மார்க்கர் அற்றுப்போய் உண்மையுள்ளவர்கள் மனுப்புத்திரரிற் குறைந்திருக்கிறார்கள்.

௨ அவரவர் தங்களுக்கடுத்தவரோடே இச்சகக உதடுகளால் அபத்தம் பேசுகிறார்கள், இருமனதாலே பேசுகிறார்கள்.

௩ கர்த்தர் எல்லா இச்சகக உதடுகளையும் பெருமைகளைப் பேசிக்கொண்டிருக்கிற நாவையும் அறுப்பாராக.

௪ அவர்கள் எங்கள் நாவுகளால் மேலவட்டமாயிருப்போம், எங்கள் உதடுகள் எங்களோடிருக்கிறதென்றும் ஆர் எங்களுக்கு ஆண்டவனென்றுஞ் சொல்லுகிறார்கள்.

௫ சிறுமைப்பட்டவர்களுடைய பாழாக்குதலினிமித்தமும் எளியவர்களுடைய பெருமூச்சினிமித்தமும், இப்போ, நாம் எழுந்திருந்து அவனுக்குச் சீறுகிறவனைச் சுகபத்திரமாயிருக்கப்பண்ணுவோமென்று கர்த்தர் சொல்லுகிறார்,

௬ கர்த்தருடைய வார்த்தைகள் மண்குகையிலே ஏழுதரம் உருக்கிப் புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தச்சொற்களாயிருக்கிறது. வாக்கியம். ௩௰, ௫.

௭ கர்த்தாவே, தேவரீர் அவர்களைக் காப்பாற்றி அவனவனை என்றைக்கும் இந்தச் சந்ததிக்கு விலக்கிக் காப்பீராக.

௮ மனுப்புத்திரரிற் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது ஆகாதவர்கள் எங்குஞ் சுற்றித்திரிகிறார்கள், வாக்கியம். ௨௮, ௰௨.

௰௩. சங்கீதம்.

(தேவ ஒத்தாசை தாமதப்படுகையில் தாவீது செய்த விண்ணப்பம்.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே எந்தமட்டும் என்னை மறந்துகொண்டேயிருப்பீர், எந்தமட்டும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்,

௨ எந்தமட்டும் என் ஆத்துமாவிலே யோசனைகளையும் என் இருதயத்திலே சஞ்சலத்தையும் நித்தம் நித்தம் வைப்பேன், எந்தமட்டும் என் சத்துரு என்மேல் உயருவான்.

௩ என் பராபரனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப்பார்த்து என் செபத்தைக் கேட்டருளும்.

௪ அவனை மேற்கொண்டேனென்று என் பகைஞன் சொல்லாமலும், நான் தள்ளம்பாறும்போது என் சத்துருக்கள் களிகூராமலும் இருப்பதற்காகத் தேவரீர் என் கண்களை நான் மரணநித்திரையடையாதபடிக்கு வெளிச்சமாக்கும். ௨௫, சங்கீதம். ௨.

௫ நானோ உம்முடைய கிருபையின் பேரிலே நம்பியிருக்கிறேன், உம்முடைய இரட்சிப்பிலே என் இருதயங் களிகூரும், கர்த்தர் எனக்கு நன்மைசெய்தாரென்று அவரைப் பாடுவேன்.

௰௪. சங்கீதம்.

(மனுஷசாதிக்கெல்லாம் உண்டாயிருக்கிற பாவக்கேடும் இரட்சிப்பின் மேல் விசுவாசிகளுக்கிருக்கிற ஆசையும் இதிலே காண்பிக்கப்படுகிறது.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

௧ பராபரன் இல்லையென்று பயித்தியக்காரன் தன் இருதயத்திலே சொல்லுகிறான், தங்கள் கெட்ட கிரியைகளிலே தங்களை அருவருப்பாக்கினார்கள், நன்றுசெய்கிறவனில்லை. ௫௩, சங். ௨.

௨ பராபரனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோவென்று பார்க்கக் கர்த்தர் பரமண்டலத்திலிருந்து மனுப்புத்திரரைக் கண்ணோக்கினார்.

௩ எல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள், நன்றுசெய்கிறவனில்லை, அப்படிச்செய்கிற ஒருவனாகிலுமில்லை. ரோமர். ௩, ௰—௰௨.

௪ அப்பத்தைப் பட்சிக்கிறதுபோலே என்னுடைய சனத்தைப் பட்சிக்கிற சகல அக்கிரமக்காரருக்கும் அறிவு தானுமில்லையோ, கர்த்தரைத் தொழுதுகொள்ளார்கள். ஓசேய. ௭, ௰௪.

௫ அங்கே மெத்தவும் அருக்களித்தார்கள், ஏனென்றாற் பராபரன் நீதிமானுடைய சந்ததியோடேயிருக்கிறார்.

௬ கர்த்தர் சிறுமையானவனுடைய நம்பிக்கையென்று, நீங்கள் அவனுடைய ஆலோசனையை வெட்கப்படுத்தினீர்கள்.

௭ ஆ, சீயோனிலிருந்து இஸ்ரவேலுடைய இரட்சிப்பு வந்தால் நாவில்லை, கர்த்தர் தம்முடைய சனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியுமுண்டாம். ௫௩, சங்கீதம். ௭.

௰௫. சங்கீதம்.

(கர்த்தருடைய சபையின் மெய் அவயவங்களுடைய நடக்கை.)

[தாவீதின் சங்கீதம்.]

௧ கர்த்தாவே ஆர் உம்முடைய கூடாரத்திலே தங்குவான், ஆர் உம்முடைய பரிசுத்த பருவதத்திலே வாசமாயிருப்பான். ௨௪, சங்கீதம். ௩.

௨ உண்மையாய் நடந்து நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவனே. ஏசாய. ௩௩, ௰௫.

௩ தன் நாவினாலே பின்பொறணி பேசாமலும் தன் அயலானுக்குத் தீங்குசெய்யாமலும் தன்னைச் சேர்ந்தவன்மேல் நிந்தையான பேச்சை எடுக்காமலுமிருக்கிறான்.

௪ ஆகாதவன் அவன் பார்வைக்குத் திட்பானவன், கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணுகிறான், தன் நஷ்டத்துக்கு ஆணையிட்டுந் தவறாதிருக்கிறான்.

௫ தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும் குற்றமில்லாதவனுக்கு விரோதமாகப் பரிதானம் வாங்காமலுமிருக்கிறான், இப்படிச்செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை. ௨. மோசே. ௨௨, ௨௫. வாக்கியம். ௰௭, ௨௩.

௰௬. சங்கீதம்.

(மேசியா மரணபரியந்தந் தாழ்வதும், பிதாவின் வலதுபாரிசத்துக்குயர்வதும்.)

[தாவீதின் பொற்பண்திக்கீதம்.]

௧ பராபரனே என்னைக் காப்பாற்றும், ஏனெனில் உம்மை நம்பியிருக்கிறேன்,

௨ கர்த்தருடனே, தேவரீர் ஆண்டவராயிருக்கிறீரென்றும்.

௩ பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்காகவும் நான் என்னுடைய எல்லாப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்காகவும் என் நன்மை உம்மிடத்திலே எனக்கில்லாதேபோமென்றுஞ் சொன்னேன்.

௪ வேறொருவரண்டைக்குத் தீவரிக்கிறவர்களின் வேதனைகள் பெருகும், அவர்களிட்சிக்கிற இரத்தமான ஊற்றுதல்களை நான் செலுத்தாமலும் அவர்கள் நாமங்களை என் உதடுகளில் ஏற்றுக்கொள்ளாமலுமிருப்பேன். ஏசாயா. ௧, ௰௧. ௰௫.

௫ கர்த்தர் என் பங்குவீதமும் என் பாத்திரத்தின் பங்குமானவர், தேவரீர் எனக்கு வரும் வீதத்தைக் காப்பாற்றுகிறீர்.

௬ நேர்த்தியான இடங்களிலே வீதம் எனக்குக் கிடைத்தது, ஆம் வடிவமான சுதந்தரம் எனக்குண்டானது.

௭ எனக்காலோசனையான கர்த்தரைத் துதிப்பேன், அதற்கு இராக்காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை ஏவும்.

௮ கர்த்தரை எப்போதும் எனக்குமுன்பாக வைத்துக்கொள்ளுகிறேன், அவர் என் வலதுபாரிசத்திலிருக்கிறபடியால் அசைக்கப்படாதிருப்பேன். அப. ௨, ௨௫. ௨௮.

௯ ஆகையினாலே என்னிருதயம பூரிததது என மகிமைகளிகூர்நதிருககிறது, என மாமசமும பததிரமாயத தாபரிததிருககும.

௰ ஏனெனில என ஆததுமாவைப பாதாளததிலேவிடீர், உமமுடைய பரிசுததவானை அழிவைககாணவொட்டீர். அபபோ. ௨, ௨௭. ௩௧. ௰௩, ௩௫ ௩௭.

௰௧ ஜீவனுடைய வழியை எனககுத தெரியபபடுததுவீர், உமமுடைய சமுகததிலே சநதோஷஙகளின பரிபூரணமும உமமுடைய வலதுபாரிசததிலே செலவபாககியஙகளும எனறைககுமிருககும.

௰௭. சஙகீதம.

(தாவீது தான குறறமிலலாதவனெனறு நிசசயிததுப பராபரனதனனைத தனசததுருககளின துனபததுககு விலககிககாககவேணடிககொணடது.)

[தாவீதின விணணபபம.]

கர்ததாவே நீர் நீதியைககேட்டருளி, என கூபபிடுதலைக கவனிததுககபட உதடுகளாலவராத என விணணபபததுககுச செவிகொடும. ௪, சஙகீதம. ௨ ௭, சஙகீதம. ௯.

௨ உமமுடைய சனனிதியிலிருநது என நியாயம வெளிபபடவும உமமுடைய கணகள நிதானஙகளைப பார்ககவுங கடவது.

௩ நீர் என னிருதயததைச சோதிதது அதை இராககாலததில விசாரிதது எனனைப புடமிடடுப பார்தது ஒனறுங கணடுபிடியாதிருககிறீர், என வாய மீறுதபடிககுத தீர்மானமபணணினேன.

௪ மனுஷன செய்காரியஙகளுககோவெனறால நான எனனை உமமுடைய உதடுகளின சொறபடி துஷடனுடைய பாதைகளுககு இடைஞசலாயககாககிறேன.

௫ என காலடிகள பிசகாதபடிக கென நடைகளையுமது வழிகளுககுளளே திடபபடுததும.

௬ பராபரனே, நான உமமை நோககிக கூபபிடுகிறேன, ஏனெனில எனககுக கேள்வி கொடுககிறீர், எனனணடைககும உடைய செவியைச சாயதது என வார்ததையைக கேட்டருளும.

௭ உமமை நமபுகிறவர்களை உமமுடைய வலதுகரததுககு விரோதிததெழுமபுகிறவர்களின கைககுத தபபுவிதது இரட்சிககிறவரே, உமமுடைய கிருபைகளை அதிசயமானதாககும.

௮ எனனைக கணணின கருபபுவிழியைப போலே காககாரும. சகரியா. ௨, ௮.

௯ எனனைப பாழ்ககடிககிற துனமார்ககருககும எனனைச சூழநதுகொளளுகிற பிராணபபகைஞருககும மறைவாக எனனை உமமுடைய செட்டைகளின நிழலிலே காபபாறறும. ௩௬, சஙகீதம. ௮.

௰ நிணநதுனனியிருககிறார்கள, தஙகள வாயினாலே பெருமையாயப பேசுகிறார்கள.

௰௧ எஙகள நடைகளில இபபோதெஙகளை வளைநதுகொணடார்கள, அவர்களுடைய கணகள எஙகளைத தரையிலேவிழபபணணநோககிககொணடிருககிறது.

௰௨ பீறுகிறதறகாசையான சிஙகததுககும மறைவுகளிலே பதிவிருககிற சிஙகககுட்டிககுமொபபாயிருககிறான. ௰, ௯.

௰௩ கர்ததாவே நீர் எழுநதிருநது அவனுககுமுநதிககொணடு அவனை மடஙகபபணணும, கர்ததாவே என னாததுமாவை உமமுடைய பட்டயததினால துஷ்டனுககும உமமுடைய கரததினாலே லோக மனுஷராகிய சனஙகளின கைககுத தபபுவியும.

௰௪ அவர்கள பஙகு இசசீவனிலிருககிறது, அவர்கள வயிறறை உமது பொககிஷததினால நிரபபுகிறீர், அவர்கள பிளளைகள திருபதியாகித தஙகள மீதியைத தஙகள குழநதைகளுககுப பினவைககிறார்கள. ௩௧. ௰௯, ௨௫.

௰௫ நானோவெனில நீதியில உமமுடைய சமுகததைத தரிசிபபேன, நானவிழிககும போது உமது சாயலாலே திருபதியாவேன. மததேயு. ௫. ௮.

௰௮. சஙகீதம.

(கிறிஸதுவின இராசசியததுககடுததவைகளும அர்ததமாயத தாவீது பாடின வீரகெமபீரசஙகீதம.)

[இராககததலைவனுககு கொடுககபபட்ட கர்ததருடைய தாசனாகிய தாவீதின சஙகீதம.]

அவன இநதபபாடடின வார்ததைகளைக கர்ததர் தனனைத தனனுடைய சகல சததுருககளின கைகளுககும சவுலினுடைய கைககும நீஙகலாககி விடுவிதத நாளிலே கர்ததரை நோககிச சொலலி, ௨. சாமு. ௨௨. ௨.

௧ உரைதததாவது, என பெலனாகிய கர்ததாவே உமமையுட்கருததாய் சிநேகிபபேன.

௨ கர்ததர் என கனமலையும என கோட்டையும எனனை விடுவிககிறவரும என பராபரனும நான நமபியிருககிற என னுடைய குனறும என கேடகமும என இரட்சிபபின கொமபும என உயர்நத அடைககலமுமாயிருககிறார். ௯௧, சஙகீதம. ௨. எபிரேயர். ௨, ௰௩.

௩ தோததிரிககபபட்ட கர்ததரை நோககிக கூபபிட்டேன, அபபோது என சததுருககளுககு நீஙகலாகி இரட்சிககபபட்டேன.

௪ மரணததின கட்டுகள எனனைச சூழநது பிடிததது, பேலியாளின வாயககாலகள எனனை அலுககபபணணிறறு. ௫, சங. ௫.

௬ நரகத்தின் கட்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டு மரணத்தின் கண்ணிகள் எனக்கு நேரிட்டது.

௭ எனக்குண்டான நெருக்கத்திலே கர்த்தரைத் தொழுதுகொண்டு என் பராபரனை நோக்கிக் கூப்பிட்டேன், தமது அரண்மனையிலிருந்து என் சத்தத்தைக் கேட்டார், என் கூப்பிடுதல் அவருக்கு முன்பாக அவர் செவிகளிலே பிறந்தது. ஏசா. ௨௯, ௰௯.

௮ அப்போது பூமி பசைந்ததிர்ந்தது பருவதங்களின் அஸ்திவாரங்கள் குலுங்கியசைந்தது, ஏனெனில் எரிச்சலானார்.

௯ புகையவர் நாசியாலும் பட்சிக்கிற அக்கினியவர் வாயாலும் எழும்பி அவரால் நெருப்புநெருப்புத்தழலாயெரிந்தது.
எபிரேயர். ௰௨, ௨௯.

௰ வானங்களைத் தாழ்த்தி இறங்கினார், அவர் பாதங்களின்கீழே இருளிருந்தது.

௰௧ கேருபீனின்மேலேறிப் பறந்து காற்றின் செட்டைகளின்மீதிலே பறந்தார்.

௰௨ இருளைத் தம்முடைய ஒளிப்பிடமாக்கினார், அவரைச் சூழ்ந்த அவருடைய கூடாரந் தண்ணீர்களின் இருட்டும் ஆகாசத்துக் கார்மேகங்களுமானது.

௰௩ அவர் முகத்தாவின் பிரகாசத்திலுல அவருடைய மேகங்கள் பறந்துவிலகிக் கன்மழையும் நெருப்புத்தழல்களும் விழுந்தது.

௰௪ கர்த்தர் வானங்களிலே குமுறி உன்னதமானவர் தமது சத்தத்தைக் காட்டினார், கன்மழையும் நெருப்புத்தழல்களும் விழுந்தது. ௨௧, சங்கீதம். ௯.

௰௫ தம்முடைய அம்புகளையெய்து அவர்களைச் சிதறடித்து மின்னல்களைத் திரளாக்கி அவர்களைக் கலங்கப்பண்ணினார்.

௰௬ அப்போது கர்த்தாவே, உம்முடைய பயமுறுத்தலாலும் உம்முடைய நாசியின் சுவாசக்காற்றினாலுந் தண்ணீர்களின் பள்ளங்கள் காணப்பட்டுப் பூதலத்தின் அஸ்திபாரங்கள் திறவுண்டது.

௰௭ உயரத்திலிருந்து கை நீட்டி யென்னைப் பிடித்துத் திரளான தண்ணீர்களிலிருக்கிற என்னைத் தூக்கிவிட்டார்.

௰௮ என் வலுசத்துருவுக்கும் என்னைப் பகைக்கிறவர்களுக்கும் என்னை விலக்கி விடுத்தார், ஏனெனில் என்னிலும் பெலத்திருந்தார்கள்.

௰௯ என் ஆபத்தின் நாளில் எனக்கெதிரிட்டெதிர்த்தார்கள், ஆனாற் கர்த்தரெனக்கு ஆதாரமாயிருந்தது,

௨௰ என்னையெடுத்து விசாலத்திலே வைத்து என்னைத் தப்புவித்தார், ஏனெனில் என்மேலே பிரியமாயிருந்தார்.

௨௧ கர்த்தரென் நீதிக்குத் தக்கதாக என் பதிலளித்தார், என் கைகளுடைய சுத்தத்துக்குத் தக்கதாக எனக்குச் சரிக்கட்டினார்.

௨௨ அதேதென்றாற் கர்த்தருடைய வழிகளைக் கைக்கொண்டுவந்தேன், நான் என் பராபரனைவிட்டு ஆகாமியஞ்செய்ததில்லை.
அப்போஸ்தலர். ௨௩, ௧.

௨௩ ஏனெனில் அவருடைய நியாயங்களையெல்லாம் எனக்கு முன்பாக நிறுத்தினேன், நான் அவருடைய பிரமாணங்களை யென்னைவிட்டகற்றுமல,

௨௪ அவர் முன்பாக மனவுண்மையாயிருந்து என் துற்குணத்துக்கென்னை விலக்கிக் காத்தேன்.

௨௫ ஆகையாற் கர்த்தர் என் நீதிக்குத் தக்கதாகவுந் தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என் கைகளின் சுத்தத்துக்குத் தக்கதாகவும் எனக்குச் சரிக்கட்டினார்.

௨௬ சன்மார்க்கனுக்கு உம்மைச் சன்மார்க்கமாகவும் மன உண்மையான மனுஷனுக்கு உம்மை மனவுண்மையாகவும்,

௨௭ சுத்தனுக்கு உம்மைச் சுத்தனாகவும், மாறுபாடானவனுக்கு உம்மைக் கோணலாகவுங் காண்பிக்கிறீர்.

௨௮ ஏனெனில் தேவரீர் சிறுமைப்பட்ட சனத்தை இரட்சித்து மேட்டிமையான கண்களைத் தாழ்த்துகிறீர்.

௨௯ அதேதெனில் தேவரீர் என் விளக்கை வெளிச்சமாக்குகிறீர், என் பராபரனாகிய கர்த்தர் என் இருளைப் பிரகாசிப்பிக்கிறார்.
௯௭, சங்கீ. ௰௧. ௱௰௨, சங்கீதம். ௪.

௩௰ உம்மோடே ஒரு பரிவாரத்துக்குட் பாய்ந்துபோவேன், என் பராபரனோடே ஒரு மதிலைத் தாண்டுவேன்.

௩௧ பராபரனுடைய வழி உத்தமமானது, கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டதாயிருக்கிறது, தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடயமாயிருக்கிறார்.

௩௨ ஏனென்றாற் கர்த்தரையல்லாமல் தேவனார், நம்முடைய பராபரனைத் தவிரக் கன்மலையும் ஆர்.

௩௩ என்னைப் பெலத்தால் அரைகட்டி என் வழியை உத்தமமாக்குகிறவர் பராபரன்.

௩௪ என் கால்களை மான்களுடைய கால்களைப்போலாக்கி என்னுடைய உயர்தலங்களில் என்னை நிறுத்துகிறார்.

௩௫ வெண்கலவில்லும் என் புயங்களால் வளைய என் கைகளை யுத்தத்துக்குப் பழக்குவிக்கிறார். ௱௪௪, சங்கீதம். ௧.

௩௬ உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர், உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது, நீர் என்னைச் சிறுமைப்படுத்துகிறது என்னைப் பெரியவனாக்கும். ௭௧, சங்கீதம். ௨௰. ௨௧.

௩௭ என் கால்கள் தள்ளாடாதபடிக்கு நான் நடக்கிறவழியை அகலமாக்கினீர்.

௩௮ என சத்துருககளைப பினறொடர்நது அவர்களைப பிடிபபேன, அவர்களை நிர்மூலமாககுநதனையுந திருமபேன.

௩௯ அவர்கள எழுநதிருககமாட்டாமல என பாதஙகளின கீழ விழுநதுககளையாய அவர்களைவெட்டுவேன. ௨, சஙகீதம். ௯.

௪௰ ஏனெனில யுத்தத்துககு நீர் எனனைப பெலத்தால இடைகட்டி எனமேல எழுமபினவர்களையென கீழமடஙகபபணணி,

௪௧ நான என பகைஞரைச சஙகரிககுமபடியாக என சத்துருககளின பிடரியை யெனககொபபுககொடுத்தீர்.

௪௨ கூபபிடுகிறுர்கள, ஆனுல இரட்சிககிறவரிலலை, கர்த்தரைநோககிக கூபபிடுகிறுர்கள, ஆனுல அவர்களுககு அவர் உத்தரவுகொடுககவிலலை. ௧௯, சஙகீதம ௭.

௪௩ அவர்களைககாறறுமுகத்திலே தூளாககுநதிருககிறதெருககளின சேறறைபபோலே யவர்களையொழித்துபபோடுவேன.

௪௪ நீர் சனத்தின சணடைகளுககெனனைத தபபவிட்டு எனனைச சாதிகளுககுத தலைவனுககுகிறீர்; நான அறியாத சனம எனனைச சேவிககிறது.

௪௫ அவர்கள என சத்தத்தைககேட்டவுடனே எனககுக கீழபபடிகிறுர்கள, அனனியரும எனககிசசகமபேசி அடஙகுகிறுர்கள.

௪௬ அனனியர்முனை விழுநதுபோய்த்தஙகள அடைபபுகளிலிருநதுத்தளிபபாயபபுறபபடுகிறுர்கள.

௪௭ கர்த்தர் சீவனுளளவரும என கன்மலைதோத்திரிககபபட்டவருமாயிருககிறுர்.

௪௮ என இரட்சிபபின பராபரனும பழிககுப பழிவாஙகுஞ செயஙகளையெனககளித்துச சனஙகளையெனககுக்கீழபபடுத்தி என சத்துருககளுககெனனை விலககிவிடுவிககிற பராபரனுமானவர் உயர்நதவர்.

௨௪, சஙகீதம ௫.

௪௯ எனனையெனககுவிரோதமாயெழுமபுகிறவர்களமேலும உயர்த்துகிறீர், கொடுமையான மனுஷனுககெனனைத தபபுவிககிறீர். ௨௭, சஙகீதம. ௯.

௫௰ இதினிமித்தங கர்த்தாவே சாதிகளுககுளளே உமமையறிககைபணணி உமமுடைய நாமத்துககுச சஙகீதமபாடுவேன.

றோமர். ௧௫, ௯.

௫௧ தாமவைத்த இராசாவுடைய இரட்சிபபுகளை அவர் பெரியவைகளாககித்தாம அபிஷேகமபணணின தாவீதுககும அவன வித்துககும எனறெனறைககுங கிருபைசெயகிறுர்.

௧௯. சஙகீதம்.

(பராபரனுடைய மகிமையான சுவிசேஷத்தின பிரசித்தமாகுதலும பெலனும.)

[இராகத்தலைவனுககொபபுவிககபபட்டதாவீதின சஙகீதம.]

வானஙகள பராபரனுடைய மகிமையைச சொலலுகிறது, ஆகாசவிரிவு அவருடைய கரஙகளின கிரியையை அறிவிககிறது.

௬௭, சஙகீதம. ௯.

௨ ஒருபகலமறுபகலுககுவார்த்தையைப பொழிகிறது, ஒரு இராமறு இராவுககு அறிவைத்தெரிவிககிறது.

௩ அவைகளினசத்தங கேள்விபபடாத பாஷையுமிலலை பேசசுமிலலை.

௪ அவைகளின நூல பூமியெஙகும அவைகளினவசனஙகள பூசசககரத்துககடைசிமட்டும புறபபட்டுப போகிறது, சூரியனுககு அவைகளில ஒருகூடாரத்தைப போட்டார். றோமர். ௰, ௧௮.

௫ அது தன மணவறையிலிருநது புறபபடுகிற மணவாளனைபபோலிருநது பராககிரமசாலியைபபோல தன பாதையிலோட மகிழசசியாயிருககிறது.

௬ அது வானஙகளின இம முனையிலிருநது புறபபட்டு அவைகளின அம முனைகளுககுச சுறறியோடுகிறது, அதின காநதிககு மறைவானதொனறுமிலலை

௭ கர்த்தருடைய வேதம உத்தமமும ஆத்துமாவை உயிர்பபிககிறதுமாயிருககிறது, கர்த்தருடைய சாட்சி சத்தியமுமாயிருநது பேதையை ஞானியாககுகிறதுமாயிருககிறது.

௱௰௯, சஙகீதம. ௱௫.

௮ கர்த்தருடைய கட்டளைகள செமமையும இருதயத்தைச சநதோஷிபபிககிறதுமாயிருககிறது, கர்த்தருடைய கற்பனை துபபரவுமாய்க் கணகளை வெளிசசமாககுகிறதுமாயிருககிறது. ௱௰௯, சங்க்தம. ௱௫.

௯ கர்த்தருககுப பயபபடுதல சுத்தமும எனறெனறைககும நிறகிறதுமாயிருககிறது, கர்த்தருடைய நியாயஙகள உணமையும அவைகள அனைத்தும நீதியுமாயிருககிறது.

௰ அவைகள பொனனைப பார்ககிலும அநேகம அபராஞசியைப்பார்ககிலுமதிக தேசிக்கப்படத்தக்கது, தேனிலும தேனகூணடொழுகலிலும மதுரமுமாயிருககிறது. ௱௰௯, சஙகீதம. ௭௨. ௱௨௭. வாக்கியம. ௮, ௰. ௰௧. ௱௰௯, சங்க். ௱௩.

௰௧ உமமுடைய ஊழியக்காரனும அவைகளால எசசரிக்கபபடுகிறுன, அவைகளைக்கைக்கொளளுகிறதிலுலதிப பலன இருககிறது. ௱௯, சங்க்தம. ௧.

௰௨ பிழைகளையுணருகிறவனுர், மறைவானவைகளுககெனனை நீஙகலாககியருளும.

௰௩ அகநதைக்காரர் எனனை ஆணடு கொளளாதபடிககு அடியேனை அவர்களுககுவிலக்கிக்காரும, அபபோது மனவு

மையும் மகா துரோகத்துக்கு நீங்கலுமா யிருப்பேன்.

௰௪ என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, உமக்கு முன்பாக என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் பிரியமாயிருக்கக்கடவது.

உ௰. சங்கீதம்.

(பாடப்போகிற மேசியாவின் உபத்திரவத்திரட்சிப்பாகமுடிய ஆசையாய் வேண்டிக்கொண்டது.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

நெருக்கப்படுகிற நாளிலே கர்த்தர் உமது செபத்தைக் கேட்கக்கடவர், யாக்கோபுடைய பராபரனின் நாமம் உமக்கு உயர்ந்த அடைக்கலமாவதாக. வாக. ௰அ, ௰.

உ அவர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து உமக்கு ஒத்தாசையை அனுப்பிச் சீயோனிலிருந்து உம்மை ஆதரிக்கக்கடவர்.

௩ நீர் செலுத்தின காணிக்கைகளையெல்லாம் அவர் நினைத்து உம்முடைய சர்வாங்கதகனப்பலியைப் பிரியமாக ஏற்றுக்கொள்ளக்கடவர். சேலா.

௪ அவர் உம்முடைய இருதயத்தினுடைய ஆசையின்படி உமக்குக் கொடுத்து உமது ஆலோசனையையெல்லாம் நிறைவேற்றக்கடவர். உக, சங்கீதம். ௩.

௫ நாங்கள் உமது இரட்சிப்பினாலே கெம்பீரித்து எங்கள் பராபரனுடைய நாமத்திலே கொடியேற்றுவோம், உம்முடைய வேண்டுதல்களையெல்லாம் கர்த்தர் நிறைவேற்றக்கடவர். ௰௩, சங்கீதம். ௬.

௬ கர்த்தர் தாம் அபிஷேகம்பண்ணினவரை இரட்சிக்கிறார் என்கிறதை இப்போ தறிந்திருக்கிறேன், தம்முடைய வலது கரத்தினுடைய இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து அவரைத்தமது பரிசுத்த வானங்களிலிருந்து அவருடைய செபத்தைக் கேட்பார்.

௭ அவர்கள் இரதங்களின்மேலும் இவர்கள் குதிரைகளின்மேலும் நம்பிக்கையாயிருக்கிறார்கள், நாங்களோவென்றால் எங்கள் பராபரனாகிய கர்த்தருடைய நாமத்தை நினைத்திருப்போம். ௪௪, சங்கீதம். ௭.

௮ அவர்கள் முறிந்து விழுந்தார்கள், நாங்களோவென்றால் எழுந்து நிற்கிறோம்.

௯ கர்த்தாவே இரட்சியும், நாங்கள் கூப்பிடுகிற நாளிலே இராசா எங்கள் செபத்தைக் கேட்கக்கடவர். ௰உ, சங்கீதம். உ.

உக. சங்கீதம்.

(ஜெயித்து உயர்த்தப்படுவதைப் பாடினது.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே, உம்முடைய வல்லமையிலே இராசா மகிழ்ச்சியாயிருந்து உம்முடைய இரட்சிப்பினாலே எத்தனையாய்க் களிகூருகிறார்.

உ அவருடைய இருதயத்தின் ஆசையின்படி நீர் அவருக்குக் கொடுத்து அவருடைய உதடுகளின் விண்ணப்பத்தைத் தள்ளாதிருக்கிறீர். சேலா. உ௰, சங்கீதம். ௫.

௩ ஏனென்றால் நன்மையின் ஆசீர்வாதங்களால் அவருக்கு நேரிட்டு அவர் சிரசில் அபரஞ்சிக்கிரீடந் தரிப்பிக்கிறீர். ௱௩உ, சங்கீதம். ௰அ.

௪ உம்மைச் சீவனைக் கேட்டார், அவருக்கு என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களான நாள்நீடிப்பை அளித்தீர். ௰௬, சங்கீ. ௰.

௫ உமது இரட்சிப்பினாலே அவருடைய கனம் பெரியதாயிருக்கிறது, மகிமையையும் மகத்துவத்தையும் அவர்மேல் வைக்கிறீர்.

௬ ஏனென்றால் அவரை என்றென்றைக்கும் ஆசீர்வாதங்களாக வைக்கிறீர், அவரை உம்முடைய சமுகத்திலே மகிழ்ச்சியாய்ப் பூரிப்பாக்குகிறீர். க. மோசே. ௰உ, ௩. ௰௬, அதிகாரம். ௰க.

௭ அதேதென்றால் இராசா கர்த்தரின் மேல் நம்பிக்கையாயிருக்கிறார், ஆகையால் உன்னதமானவருடைய தயவினாலே அசைக்கப்படாதிருப்பார்.

௮ உம்முடைய கை உம்முடைய சத்துருக்களையெல்லாங் கண்டுபிடிக்கும், உம்முடைய வலதுகரம் உம்மைப் பகைக்கிறவர்களைக் கண்டுபிடிக்கும்.

௯ உமது கோபத்தின் காலத்திலே அவர்களை அக்கினிச்சூளையாக்கிப்போடுவீர், கர்த்தர் தமது கோபத்திலே அவர்களை விழுங்குவார், அக்கினி அவர்களைப் பட்சிக்கும்.

௰ அவர்கள் கனியைப் பூமியிலில்லாமலும் அவர்கள் வித்தை மனுபுத்திரரிலுமில்லாமலும் போகத்தக்கதாக அழிப்பீர். ௱௯, சங்கீதம். ௰௩.

௰க ஏனென்றால் உமக்கு விரோதமாகப் பொல்லாப்பை நினைத்தார்கள், தீவினையை யெத்தனம்பண்ணினார்கள், ஆனால் மேற்கொள்ளாதேபோனார்கள்.

௰உ அவர்களை இலக்காக வைத்து அவர்கள் முகத்துக்கு நேரே உம்முடைய அம்புகளை நாணேற்றிவிடுவீர்.

௰௩ கர்த்தாவே, உம்முடைய பெலத்திலே உயரும், அப்போது உம்முடைய வல்லமையைப் பாடிக்கீர்த்தனம்பண்ணுவோம்.

உஉ. சங்கீதம்.

(மேசியாவின் வேதனையான பாடுகளையும் அவருடைய இராசரியத்தின் பிரபலியத்தையும் முன்னறிவித்த தீர்க்கதரிசனம்.)

[அதிகாலமே வேட்டையாடப்பட்ட பெண்மானின்பேரிலேபாடி இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

௧ என் பராபரனே என் பராபரனே நீரென்னைக் கைவிட்டதேது, என் இரட்சிப்புக்கும் என் கதறுதலின் வார்த்தைகளுக்கும் ஏன் தூரமாயிருக்கிறீர். மத்தேயு. உ௭, ௪௬. மாற். ௰௫, ௩௪. எபிரே. ௫, ௭.

உ என் பராபரனே, நான் பகலிலே கூப்பிடும் உத்தரவுகொடீர், இரவிலே கூப்பிடும் எனக்கமையுதலில்லை.

௩ இஸ்ரவேலின் துதிகளுக்குள்ளே வாசமாகிய தேவரீரோவென்றும் பரிசுத்தர்.

௪ உம்முடையமேல் எங்கள் பிதாக்கள் நம்பிக்கையாயிருந்தார்கள், நம்பின அவர்களை விடுவித்தீர்.

௫ உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள், உம்மை நம்பி வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள்.

௬ நானோ மனுஷனல்லாத பூச்சியும் மனுஷனுடைய நிந்தனையுஞ் சனத்தால் அசங்கிக்கப்பட்டவனுமாயிருக்கிறேன்.

௭ என்னைப் பார்க்கிறவர்களெல்லாரும் என்னைப் பரியாசம்பண்ணி உதட்டைப் பிதுக்கித் தலையைத் துலுக்கி, மத். உ௭, ௩௯.

௮ கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருந்தானே அவர் அவனை விடுவிக்கட்டும், அவன்மேலே பிரியமாயிருக்கிறாரே, இப்போது அவனை மீட்டுவிடட்டுமென்கிறார்கள். மத்தேயு. உ௭, ௪௩.

௯ தேவரீரோவென்னில் என்னைக் கெர்ப்பத்திலிருந்தெழுத்தவர், என் தாயின் முலைகளிலென்னை உம்முடையபேரில் நம்பிக்கையாயிருக்கப்பண்ணினீர். ௭௧, சங்கீ. ௫, ௬.

௰ கெர்ப்பத்திலிருந்து உம்முடைய சார்வில் விழுந்தேன், நான் என் தாயின் வயிற்றிலே பிறந்தது முதல் தேவரீர் என் பராபரன்.

௰௧ என்னைவிட்டுத் தூரமாகாதேயும், ஏனென்னில் நெருக்கங்கிட்டியிருக்கிறது, சகாயருமில்லை.

௰௨ அநேகங் காளைகள் என்னைச் சூழ்ந்து பாசான் தேசத்து வலுவான எருதுகள் என்னை வளைந்துகொண்டது.

௰௩ பீறிக் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல என்மேலே தங்கள் வாயைத் திறக்கிறார்கள்.

௰௪ தண்ணீரைப்போல ஊற்றுண்டேன், என்னெலும்புகளெல்லாங் கட்டுவிட்டது, என்னிருதயம் மெழுகுபோலாகி என் குடல்களின் நடுவே உருகிறது.

௰௫ என் பெலன் ஓட்டைப்போலக் காய்ந்துபோய் என் நாவு என் மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது, என்னை மரணத் தூளிலே போடுகிறீர்.

௰௬ ஏனென்னில் நாய்கள் என்னைச் சூழ்ந்து பொல்லாதவர்களின் கூட்டம் என்னைச் சுற்றிக்கொண்டது, என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். லூக. உ௩, ௩௩.

௰௭ என்னெலும்புகளெல்லாம் நான் எண்ணலாம், அவர்கள் என்னை நோக்கியிருந்து என்னிலே தங்கள் ஆசையைப் பார்க்கிறார்கள்.

௰௮ என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என்னுடையின்பேரிற் சீட்டுப் போடுகிறார்கள். மத். உ௭, ௩௫. யோவா. ௰௯, உ௩. உ௪.

௰௯ ஆனாற் கர்த்தாவே தேவரீர் தூரமாகாதேயும், என் பெலனே எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும். ௧௧, சங்கீதம். ௰௮.

உ௰ என்னுத்துமாவைப் பட்டயத்துக்கும் என் தனிமையை நாய்களின் துஷ்டத்துக்குந் தப்புவியும்.

உ௧ என்னைச் சிங்கத்தின் வாய்க்குங் காண்டாமிருகங்களின் கொம்புகளுக்கும் விலக்கி இரட்சித்து என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

உ௨ உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கறிவித்து நடுச்சபையில் உம்மைத் துதிப்பேன். எபிரே. உ, ௰௧. ௰௨.

உ௩ கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே அவரைத் துதியுங்கள், யாக்கோபின் வித்தாகிய நீங்களெல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள், இஸ்ரவேலின் வித்தாகிய நீங்களெல்லாரும் அவருக்கச்சிக்கையாயிருங்கள், ௩௨, சங்கீதம். ௰௧.

உ௪ ஏனென்னிற் சிறுமையானவனுடைய சிறுமையை அவர் அசட்டையாமலும் அருவருக்காமலுந் தம்முடைய முகத்தை அவனுக்கு மறைத்திராமலும் அவன் தம்மை நோக்கிக் கூப்பிடுகையில் அவனைக் கேட்டார்.

உ௫ உம்மைக் குறித்துத் திரளான சபையிலே நான் துதிசொல்லுவேன், அவருக்குப் பயப்படுகிறவர்களுக்கு முன்பாக என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

உ௬ சிறுமையானவர்கள் போசித்துத் திருத்தியடைவார்கள், கர்த்தரைத் தேடுகிறவர்கள் அவரைத் துதிப்பார்கள், உங்களிருதயம் என்றென்றைக்கும் வாழும். ஏசாயா. ௬௫, ௰௩. ௰௪.

உ௭ பூமியின் எல்லைகளெல்லாம் இதை நினைத்துக் கர்த்தரண்டைக்குத் திரும்பிச் சாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமக்கு முன்பாகப் பணியக்கடவது. உ, சங்கீதம். ௭உ, ௰௧. ௮௬, ௯.

உ௮ ஏனென்னில் இராச்சியங் கர்த்தருடையது, அவர் சாதிகளையாளுகிறவர்.

உ௯ பூமியிலே தளிர்த்தவர்கள் அனைவரும் போசித்துப் பணிந்துகொள்வார்களாக, ...

லே இறங்குகிற தங்கள் ஜீவனைப் பிழைப்பூட்ட மாட்டாதவர்கள் அனைவரும் அவருக்கு முன்பாகக் குனிவார்களாக.

௩௰ அவருக்கு ஆராதனைசெய்யும் வித்து தலைமுறைதலைமுறையாக ஆண்டவருடையதென்றெண்ணப்படும். ஏசாயா. ௫௩, ௰.

௩௧ இவைகளைச்செய்தாரென்று பிறக்கப்போகிற சனத்துக்கு அவருடைய நீதியை வர்த்திவிப்பார்கள்.

௨௩. சங்கீதம்.

(பிரதானமேய்ப்பராகிய கிறிஸ்துவினுடைய சபையிலே விசுவாசிகள் அனுபவிக்கிற தேவபராமரிப்பின் பாக்கியம்.)

[தாவீதின் சங்கீதம்.]

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார், நான் தாழ்ச்சியடையேன், யோவா. ௰, ௰௧. ஏசாயா. ௪௰, ௰௧. ௩௪, ௰௧.

௨ அவர் என்னைப் புல்லுள்ள சலங்களில் மேய்த்து என்னை அமர்ந்த தண்ணீர்களண்டைக்குக் கொண்டுபோய்விடுகிறார்.

௩ அவர் என் ஆத்துமாவைக் குளிரப்பண்ணி என்னைத் தம்முடைய நாமத்தினிமித்தமாக நீதியின் பாதைகளில் நடத்துகிறார், எரேமியா. ௩௧, ௨௫. மத். ௰௧, ௨௮.

௪ நான் மரணதிழலின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், ஏனெனில் தேவரீர் என்னோடேகூடவிருக்கிறீர், உம்முடைய கோலும் உம்முடைய தடியும் என்னைத் தேற்றுகிறது. ௩, சங்கீ. ௬. ௭. ௱௰௮, சங்கீதம். ௬.

௫ என் சத்துருக்களுக்கெதிரே நீர் எனக்கு முன்பாக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர், என் பாத்திரம் நிரம்பியிருக்கிறது.

௬ என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும், நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய்த் தங்கியிருப்பேன். ௨௭, சங்கீதம். ௪.

௨௪. சங்கீதம்.

(மகிமையின் இராசாவாகிய மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கான புத்தி.)

[தாவீதின் சங்கீதம்.]

பூமியும் அதின் நிறைவும் பூச்சக்கரமும் அதிலுள்ள குடிகளுங் கர்த்தருடையது. ௫௰, சங்கீ. ௰௨. ௧. கொரிந்தர். ௰, ௨௬. ௨௮.

௨ ஏனெனில் அவரே அதைக் கடல்களின்மேல் உயரமாக அஸ்திபாரப்படுத்தி அதை நதிகளின்மேல் உயரமாகத் திடப்படுத்தினார்.

௩ ஆர் கர்த்தருடைய பருவதத்திலேறி ஆர் அவருடைய பரிசுத்தஸ்தலத்திலே நிலைத்திருப்பான். ௰௫, சங்கீ. ௧. ஏசாயா. ௩௩, ௰௪. ௰௫.

௪ கைகளிலே குற்றமில்லாதவனும் இருதயத்திலே சுத்தனுமாயிருந்து தன் ஆத்துமாவை மாயைக்கொப்புக்கொடாமலும் கபடாய் ஆணையிடாமலுமிருக்கிறானே.

௫ அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும் தன் இரட்சிப்பினுடைய பராபரனால் நீதியையும் பெறுவான்.

௬ இதுவே அவருக்காகக் கேட்டுவிசாரித்து அவருடைய சமுகத்தைத் தேடுகிற யாக்கோபென்ற சந்ததி. சேலா.

௭ வாசல்களே, மகிமையின் இராசா உட்பிரவேசிப்பதற்கு உங்கள் தலைகளையுயர்த்துங்கள், அநாதிவாசல்களே உயருங்கள். ௧. கொரி. ௨, ௮.

௮ ஆர் இந்த மகிமையின் இராசா. அவர் வல்லமையும் பராக்கிரமுமான கர்த்தர், அவர் யுத்தத்திலே பராக்கிரமமான கர்த்தர் தானே.

௯ வாசல்களே, மகிமையின் இராசா உட்பிரவேசிப்பதற்கு உங்கள் தலைகளையுயர்த்துங்கள், அநாதிவாசல்களே உயருங்கள்.

௰ ஆர் இந்த மகிமையின் இராசா? அவர் சேனைகளுடைய கர்த்தரானவர், அவரே மகிமையின் இராசா. சேலா.

௨௫. சங்கீதம்.

(தாவீது பராபரனிடத்திலே பாவமன்னிப்பையும் இக்கட்டின் நீக்குதலையும் நம்பிக்கையாய்த் தேடினது.)

[தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே உம்மண்டைக்கு என் ஆத்துமாவையுயர்த்துகிறேன்.

௨ என் பராபரனே உம்மை நம்பியிருக்கிறேன், என் சத்துருக்கள் என் பேரிலே களிகூராதபடிக்கு நான் வெட்கப்பட்டுப்போகாதிருப்பேனாக. ௰௧, சங்கீ. ௨. ௩௪, சங்கீதம். ௬.

௩ உமக்குக் காத்திருக்கிற ஒருவராகிலும் வெட்கப்பட்டுப்போகாமல் முகாந்திரமில்லாமல் துரோகம்பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப்போவார்கள். ஏசா. ௨௮, ௰௬. ௪௯, ௨௩. உரோமர். ௰, ௰௧.

௪ கர்த்தாவே உம்முடைய வழிகளை யெனக்குத் தெரிவியும், உம்முடைய பாதைகளை யெனக்குப் போதிப்பியும். ௨௭, சங்கீ. ௰௧. ௮௬, ௰௧. ௱௪௩, சங்கீ. ௮.

௫ என்னையும் உம்முடைய சத்தியத்திலே வழிநடத்தி என்னைப் போதிப்பியும், ஏனெனில் தேவரீர் என் இரட்சிப்பின் பராபரன், தேவரீருக்கு நித்தங் காத்திருக்கிறேன். ௨௪, சங்கீதம். ௫.

௬ கர்த்தாவே உம்முடைய இரக்கங்களையும் உம்முடைய கிருபைகளையும் நினைத்திரும், ஏனெனில் அவைகள் அநாதிகாலந்துவக்கியிருக்கிறது. ௱௩, சங்கீதம். ௰௭.

௭ என் இளவயதின் பாவங்களையும் என் மீறுதல்களையும் நினையாதேயும், கர்த்தாவே தேவரீர் உம்முடைய தயவினிமித்தம் என்னை உம்முடைய கிருபையின்படியே நினைத்தருளும். யோபு. ௰௩, ௨௬.

௮ கர்த்தர் நல்லவரும் உத்தமருமாயிருக்கிறார், ஆகையால் பாவிகளை வழியிலே போதிக்கிறார். ௫. மோசே. ௩௨, ௪.

௯ சிறுமையானவர்களை நியாயத்திலே நடத்திச் சிறுமையானவர்களுக்குத் தமது வழியைப் போதிப்பிக்கிறார்.

௰ கர்த்தருடைய உடம்படிக்கையையும் அவருடைய சாட்சிகளையுங் கைக்கொள்ளுகிறவர்களுக்கு அவருடைய பாதைகளெல்லாங் கிருபையும் உண்மையுமானவைகள்.

௰௧ கர்த்தாவே, உம்முடைய நாமத்தினிமித்தம் என் அக்கிரமத்தை மன்னியும், ஏனெனில் இது பெரியது. ௨௩, சங். ௩.

௰௨ கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன் யார், அவன் தெரிந்துகொள்ளவேண்டிய வழியை அவனுக்குப் போதிப்பிப்பார்.

௩௨, சங்கீதம். ௮.

௰௩ அவன் ஆத்துமா நன்மையினுலே தங்கும் அவன் வித்துப் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளும்.

௰௪ கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களுக்குள்ளிருக்கிறது, அவர்களுக்குத் தம்முடைய உடம்படிக்கையைத் தெரியப்படுத்துவார். வாக்கியம். ௩, ௩௨.

௰௫ என் கண்கள் எப்போதுங் கர்த்தரின் மேல் வைக்கப்பட்டிருக்கிறது, ஏனெனில் அவர் என் கால்களை வலைக்கு நீங்கலாக்கி விடுவார். ௱௪௧, சங்கீதம். ௧. ௨.

௰௬ என் மேல் நோக்கமாகி எனக்கிரங்கும், ஏனெனில் நான் தனித்தவனுஞ் சிறுமைப்பட்டவனுமாயிருக்கிறேன்.

௰௭ என் இருதயத்தின் வியாகுலங்கள் பெருகியிருக்கிறது, என்னை என் இடுக்கண்களுக்கு நீங்கலாக்கிவிடும்.

௰௮ என் சிறுமையையும் என் வருத்தத்தையும் பார்த்து என் பாவங்களையெல்லாம் நீக்கிப்போடும்.

௰௯ என் சத்துருக்களைப் பாரும் ஏனெனில் அவர்கள் பெருகியிருந்து அக்கிரமப் பகையாய் என்னைப் பகைக்கிறார்கள்.

௩. சங்கீதம். ௨.

௨௰ என் ஆத்துமாவைக் காப்பாற்றி நான் வெட்கப்பட்டுப் போகாதபடிக்கு என்னை விடுவியும், ஏனெனில் உம்மை நம்பியிருக்கிறேன்.

௨௰௧ உத்தமும் நிதானமும் என்னைக் காக்கக்கடவது, ஏனெனில் உமக்குக் காத்திருக்கிறேன்.

௨௰௨ பராபரனே, இஸ்ரவேலை அதின் எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கிவிட்டுவிடும். ௱௩௰, சங்கீதம். ௮.

௨௬. சங்கீதம்.

(குற்றமில்லாமல் உண்மையாயிருக்கிறதினாலே தன் சத்துருக்களுக்கு விலக்கி நியாயம் விசாரிக்கத் தாவீது பராபரனை வேண்டிக்கொண்டது.)

[தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே என்னை நியாயம் விசாரியும், ஏனெனில் நான் என் உண்மையிலே நடக்கிறேன், நான் கர்த்தரை நம்பியிருக்கிறேன், ஆகையால் நான் தள்ளாடுவதில்லை.

௭, சங்கீதம். ௯.

௨ கர்த்தாவே என்னை ஆராய்ந்து என்னைச் சோதியும், என் உள்ளிந்திரியங்களையும், என் இருதயத்தையும் பிடமிட்டுப்பாரும்.

௩ ஏனெனில் உம்முடைய கிருபை என் கண்களுக்கு முன்பாகவிருக்கிறது, உம்முடைய சத்தியத்திலே நடந்துகொள்ளுகிறேன்.

௪ வீண் மனுஷரோடே உட்காரேன், பதிவிருக்கிறவர்களிடத்திலே சேரேன்.

௧, சங்கீதம். ௧. வாக்கியம். ௧, ௰.

௨. கொரிந்தர். ௬, ௰௪. ௰௫.

௫ பொல்லாதவர்களின் கூட்டத்தைப் பகைக்கிறேன், ஆகாதவர்களோடே உட்காரேன்.

௬ நான் என் கைகளைக் குற்றமில்லாமையிலே கழுவி,

௭ இப்படியே கர்த்தாவே நான் துதியின் சத்தத்தைத் தொனிக்கப்பண்ணி உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பதற்காக உம்முடைய பீடத்தைச் சுற்றிவருகிறேன்.

௮ கர்த்தாவே உமது வீட்டின் வாசஸ்தலத்தையும் உமது மகிமையின் கூடாரத்தலத்தையுஞ் சிநேகிக்கிறேன். ௨௭, சங். ௪.

௯ என்னுத்துமாவைப் பாவிகளோடும் என் ஜீவனை இரத்தப்பிரியரோடுங் கூட்டவாரிக்கொள்ளாதேயும். ௨௮, சங்கீ. ௩.

௰ அவர்கள் கைகளிலே தீவினையிருக்கிறது, அவர்கள் வலதுகை பரிதானங்களால் நிறைந்திருக்கிறது.

௰௧ நானோ என் உண்மையிலே நடக்கிறேன், என்னை மீட்டுக்கொண்டு என் மேலிரங்கும்.

௰௨ என் கால் செம்மையான வழியிலே நிலைநிற்கும், சபைகளிலே கர்த்தரைத் துதிப்பேன்.

௨௭. சங்கீதம்.

(பராபரன் தனக்கடைக்கலமும் அவர் தேவாராதனை தனக்கு இன்பமான ஆறுதலுமென்று தாவீது அறிக்கைபண்ணினது.)

[தாவீதின் சங்கீதம்.]

கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், ஆருக்குப் பயப்படுவேன், கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், ஆருக்கு அருக்களிப்பேன், மீகா. ௭, ௮. யோவ. ௮, ௰௨. ௱௰௮, சங். ௬.

௨ எனக்கிருக்கிற என் சத்துருக்களும் என் பகைஞருமாகிய பொல்லாதவர்கள் என் மாம்சத்தைப் பட்சிக்க என்னண்டை சேருகையில் அவர்களே இடறிவிழுவார்கள். எரேமி. ௨௰, ௰௧.

௩ எனக்கு விரோதமாக ஒரு பாளயமிறங்கினாலும் என் இருதயம் பயப்படாது, என்மேல் யுத்தம் எழும்பினாலும் இதிலே நான் நம்பிக்கையாயிருக்கிறேன். ௩, சங். ௬.

௪ ஒன்றை நான் கர்த்தரிடத்திலே கேட்டேன் அதையே தேடுவேன், நான் கர்த்தருடைய இன்பத்தைப் பார்த்து அவருடைய தேவாலயத்தில் ஆராயும்படிக்கு நான் ஜீவனுள்ள நாளெல்லாங் கர்த்தருடைய வீட்டிலே தங்குவதைத்தானே. ௪௨, சங்கீதம். ௩. ௫௨, சங்கீ. ௰.

௫ ஏனென்றால் தீங்கு நாளில் என்னைத் தம்முடைய கூடாரத்தில் ஒளித்து என்னைத் தமது கூடாரமறைவிலே மறைத்து என்னைக் கன்மலையின்மேல் உயர்த்துகிறார். ௩௧, சங்கீ. ௨௧.

௬ இப்போதும் என்னைச் சூழ்ந்திருக்கிற என் சத்துருக்களின்மேல் என் தலை உயர்த்தப்படும், அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் கெம்பீரப் பலிகளையிட்டுக் கர்த்தரைப் பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

௭ கர்த்தாவே, நான் கூப்பிடுகிற என் சத்தத்தை நீர் கேட்டு எனக்கிரங்கி எனக்கு உத்தரவருளிச்செய்யும்.

௮ நமது முகத்தைத் தேடுங்களென்றீரே என்றென்னிருதயம் உமக்குச் சொல்லுகிறது, உம்முடைய முகத்தைத் தேடுகிறேன் கர்த்தாவே,

௯ எனக்கு உமது முகத்தை மறைக்காதேயும், உமதடியானைக் கோபமாய் விலக்காதேயும், நீர் என் சகாயரானவர், என் இரட்சிப்பின் பராபரனே என்னை நெகிழாமலும் என்னைக் கைவிடாமலுமிரும். ௰௯, சங்கீ. ௨. எபிரே. ௰௩, ௫.

௰ ஏனென்றால் என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டார்கள், ஆனாற் கர்த்தர் என்னைச் சேர்க்கிறார்.

௰௧ கர்த்தாவே, என் எதிராளிகளினிமித்தம் நீர் உமது வழியை எனக்குப் போதிப்பித்துச் செம்மையான பாதையிலே என்னை நடத்தும். ௨௫, சங்கீ. ௪.

௰௨ என் சத்துருக்களின் மனதுக்கு என்னை ஒப்புக்கொடாதேயும், ஏனென்றால் பொய்ச்சாட்சிகளும் அக்கிரமித்துச் சீறுகிறவர்களும் எனக்கு விரோதமாக எழும்பினார்கள்.

௰௩ நானோவென்றால் ஜீவனுள்ளோரின் தேசத்திலே கர்த்தருடைய நன்மைகளைப் பார்ப்பேனென்று விசுவாசிக்கிறேன்.

௰௪ கர்த்தருக்குக் காத்திரு, பெலத்துக்கொண்டு திடமனதாயிருந்து கர்த்தருக்குக் காத்திரு. ஆபகூக்கு. ௨. ௩. ௩௧, சங்கீதம். ௨௫.

௨௮. சங்கீதம்.

(தன் ஜெபங் கேட்கப்படவுந் தான் பொல்லாதவர்களோடே கூடக் கெட்டுக்குள்ளாகாதிருக்கவுந் தாவீது வேண்டிக்கொண்டு தேவகிருபையின் நிச்சயம் பெற்றது.)

[தாவீதின் சங்கீதம்.]

என் கன்மலையாகிய கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், நீர் எனக்கு உத்தரவு கொடாதிருந்தால் நான் குழியில் இறங்குகிறவர்களுக்கு ஒப்பாகாதபடிக்கு எனக்கு மவுனமாயிராதேயும். ௱௪௩, சங்கீ. ௭.

௨ நான் உம்மை நோக்கிச் சத்தமிட்டு என் கைகளை உம்முடைய பரிசுத்த சந்நிதிக்கு நேராக எடுக்கையில் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேளும்.

௩ தங்களுக்கடுத்தவர்களோடே சமாதானமென்று சொல்லியும் பொல்லாப்பைத் தங்கள் இருதயங்களில் வைத்திருக்கிற ஆகாதவர்களோடும் அக்கிரமக்காரரோடும் என்னை இழுக்காதேயும். எரேமி. ௯, ௮.

௪ அவர்கள் கிரியைகளுக்கும் அவர்கள் நடத்தைகளின் பொல்லாங்குக்குந் தக்கதாக அவர்களுக்குக் கொடும், அவர்கள் கைகளின் செய்கைக்குத் தக்கதாக அவர்களுக்களியும் அவர்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டும்.

௫ ஏனென்றாற் கர்த்தருடைய கிரியைகளையும் அவர் கரங்களின் செய்கையையுங் கவனியார்கள், அவர்களை நிர்மூலமாக்குவார், அவர்களைக் குடியேற்றார். எசாயா. ௫, ௰௨.

௬ கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், ஏனென்றால் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டார்.

௭ கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார், அவரை என்னிருதயம் நம்பியிருந்தது, அப்போது சகாயம் பெற்றேன், ஆகையால் என்னிருதயங் களிகூருகின்றது, என் பாட்டினாலே அவரைத் துதிப்பேன்.

௮ கர்த்தர் அவர்களுடைய பெலன், அவரே தாம் அபிஷேகம்பண்ணுவித்தவனை இரட்சிக்கிற பெலன்.

௯ தேவரீர் உம்முடைய சனத்தை இரட்சித்து உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதித்து அவர்களை மேய்த்து அவர்களை என்றென்றைக்கும் உயர்த்தும்.

௨௯. சங்கீதம்.

(சிருஷ்டிப்பின் இராசரியத்திலுங் கிருபையின் இராசரியத்திலும் பராபரன் தம்முடைய மகிமையைக் குமுறல்களிலும் மின்னல்கள் சலப்பிரளயங்களாலே காண்பிக்கிறது.)

[தாவீதின் சங்கீதம்.]

௧ பெலவான்களின் புத்திரரே கர்த்தருக்கு மகிமையையும் பெலனையுஞ் செலுத்துங்கள், கர்த்தருக்கே செலுத்துங்கள்.
௬௬, சங்கீ. ௭. ௯,

௨ கர்த்தருக்கு அவர் நாமத்தின் மகிமையைச் செலுத்துங்கள், பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைப் பணிந்துகொள்ளுங்கள். ௯௰, சங்கீ. ௯.

௩ கர்த்தருடைய சத்தந் தண்ணீர்களின் மேலே கேட்கப்படும், மகிமையின் பராபரனாகிய கர்த்தர் திரளான தண்ணீர்களின் மேலே குமுறுகிறார்.

௪ கர்த்தருடைய சத்தம் வல்லமையுங் கர்த்தருடைய சத்தம் மகத்துவமுமாய் முழங்குகிறது.

௫ கர்த்தருடைய சத்தங் கேதுருகளை உடைக்கும், கர்த்தர் லீபனோனின் கேதுருகளையுடைத்து, ஏசாயா. ௨, ௰௩.

௬ அவைகளைக் கன்றுக்குட்டிகளைப்போலவும் லீபனோனையுஞ் சீரியோனையுங் காண்டாமிருகக்குட்டிகளைப்போலவுந் துள்ளிக்கப்பண்ணுகிறார். ௫. மோசே. ௩, ௯.

௭ கர்த்தருடைய சத்தம் அக்கினிச்சுவாலைகளைப்போலே வெட்டுகிறது.

௮ கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரப்பண்ணுகிறது, கர்த்தர் காதேஸ் வனாந்தரத்தை அதிரப்பண்ணுகிறார்.

௯ கர்த்தருடைய சத்தம் பெண்மான்களை ஈனப்பண்ணிக் காடுகளைத் திறப்பாக்கும், ஆனால் அவருடைய தேவாலயத்தில் ஒவ்வொருவன் அவருக்கு மகிமைசெலுத்துகிறான்.

௰ கர்த்தர் சலப்பிரளயம் வரப்பண்ண உலுக்கார்ந்தார், கர்த்தர் என்றென்றைக்கும் இராசாவாய் உலுக்கார்ந்திருக்கிறார்.
௧. திமோ. ௧, ௰௭.

௰௧ கர்த்தர் தம்முடைய சனத்துக்குப் பெலன் கொடுப்பார், கர்த்தர் தம்முடைய சனத்தைச் சமாதானத்தந்து ஆசீர்வதிப்பார்.

௩௰. சங்கீதம்.

(தன்னை மகா இக்கட்டுக்குவிலக்கிவிட்டதற்குப் பராபரனைத் தாவீது தோத்திரிக்கிறது.)

[வீட்டுப் பிரதிஷ்டையின் பாட்டாகிய தாவீதின் சங்கீதம்.]

௧ கர்த்தாவே, நீர் என் சத்துருக்கள் என்பேரிற் சந்தோஷப்படவொட்டாமல் என்னைக் கைதூக்கிவிட்டபடியினாலே உம்மையுயர்த்துவேன்.

௨ என் பராபரனாகிய கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், அப்போது என்னைக் குணமாக்கினீர்.

௩ கர்த்தாவே, நீர் என் ஆத்துமாவைப் பாதாளத்திலிருந்தேறப்பண்ணி நான் குழியிலிறங்காதபடிக்கு என்னை உயிரோடே காத்தீர். ௮௬, சங்கீ. ௰௩. ௱௧௬, சங்கீ. ௩. ௪.

௪ கர்த்தருடைய பரிசுத்தவான்களே அவரைக் கீர்த்தனம்பண்ணி அவருடைய பரிசுத்தத்தின் நினைவுகூருதலைக் கொண்டாடுங்கள். ௯௭, சங்கீ. ௰௨.

௫ ஏனெனில் அவருடைய கோபம் ஒரு நிமிஷமும் அவருடைய தயவு நீடியவாழ்வுமாம், சாயங்காலத்தில் அழுகைதங்கும், காலமே கெம்பீரமுண்டு. ஏசாயா. ௫௪, ௭.

௬ என்றைக்கும் அசைக்கப்படேனென்று நான் என் சுகத்திலே சொன்னேன்.

௭ ஏனெனிற் கர்த்தாவே உம்முடைய தயவினாலே என் பருவதத்தைத் திடமாய் நிற்கப்பண்ணியிருந்தீர், ஆனால் உம்முகத்தை நீர் மறைத்துக்கொண்டபோது கலங்கினவனானேன்.

௮ நான் குழியிலிறங்குகையில் என் இரத்தத்தால் என்ன ஆதாயமுண்டு, தூள் உம்மைத் துதித்து உம்முடைய சத்தியத்தையறிவிக்குமோவென்றும், ௬, சங்கீ. ௬.

௯ கர்த்தாவே நீர் கேட்டு என்மேலிரங்கும், கர்த்தாவே எனக்கு அனுகூலராயிருமென்றுஞ் சொல்லி,

௰ கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தரை நோக்கிக் கெஞ்சினேன்.

௰௧ என் புலம்பலை எனக்கு ஆனந்தக்களிப்பாக மாறப்பண்ணினீர், என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம்பண்ணும்பொருட்டாக என் இரட்டையெடுத்துப்போட்டு என்னை மகிழ்ச்சியால் இடைகட்டினீர். ௱௬, சங்கீ. ௭. ௮. ௰௬, சங்கீ. ௯.

௰௨ என் பராபரனாகிய கர்த்தாவே உம்மை என்றென்றைக்குந் துதிப்பேன்.

௩௧. சங்கீதம்.

(மகா அவதியிலே பண்ணின விண்ணப்பம்.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன், நான் என்றைக்கும் வெட்கப்பட்டுப் போகாதிருக்கட்டும், உமது நீதியினிமித்தம் என்னை விடுவியும். ௭௧, சங். ௧. ௨.

௨ என்னண்டைக்கு உமது செவியைச் சாய்த்துச் சீக்கிரமாய் என்னைத் தப்புவியும், என்னை இரட்சிக்கும்படிக்கு எனக்குப் பலத்த கன்மலையும் அரண்மனையுமாயிரும்.

௩ ஏனெனில் தேவரீர் என் கன்மலையும் என் கோட்டையுந்தானே, உமது நாமத்தினிமித்தம் என்னை வழிநடத்தும்.

௪ அவர்கள் எனக்கு மறைவாய் வைத்த வலைக்கு என்னை நீங்கலாக்கிவிடும், ஏனெனில் தேவரீர் என்னுடைய பெலன்.

௫ உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன், சத்தியபரனாகிய கர்த்தாவே என்னை மீட்டுவிட்டீர். லூக்கா. ௨௩. ௪௬.

௬ வீண் மாயைகளைக் கைக்கொள்ளுகிறவர்களை நான் பகைத்துக் கர்த்தரை நம்பியிருக்கிறேன்.

௭ உமது கிருபையிலே களிகூர்ந்து மகிழுவேன், ஏனென்றால் நீர் என் சிறுமையைப் பார்த்து நெருக்கங்களில் என் ஆத்துமாவை அறிந்துகொண்டு,

௮ என்னைச் சத்துருவின் கையிலே ஒப்புக்கொடுத்துவிடாமல் என் பாதங்களை விசாலத்திலே நிறுத்தினீர். ௱௮, சங். ௫.

௯ எனக்கு இரங்கும் கர்த்தாவே, ஏனெனில் நெருக்கப்படுகிறேன், சலிப்பினால் என் கண்ணும் என் ஆத்துமாவும் என் வயிறுங்கூடக் கருகிப்போயிற்று.

௰ ஏனெனில் என் பிராணன் சஞ்சலத்தாலும் என் வருஷங்கள் தவிப்பினாலுங் கழிந்துபோனது, என் அக்கிரமத்தினாலே என் பெலன் விழுந்து என் எலும்புகள் உலர்ந்துபோயினது.

௰௧ என்னுடைய எல்லாச் சத்துருக்களினிமித்தம் நான் என் அயலகத்தாருக்கு மகா நிந்தையும் எனக்கு அறிமுகமானவர்களுக்குத் திகிலுமானேன், வீதியிலே என்னைக் காண்கிறவர்கள் என்னை விட்டோடிப்போகிறார்கள். ௩௮, சங்கீதம். ௰௧.

௰௨ செத்தவனைப்போல் எல்லாராலும் மனதார மறக்கப்பட்டேன், கெட்டுப்போன பாத்திரத்தைப்போலானேன்.

௰௩ ஏனெனில் அநேகருடைய அவதூறைக் கேட்டேன், அவர்கள் ஏகமாய் எனக்கு விரோதமாக ஆலோசனை பண்ணுகிறதினாலே திகில் என்னைச் சூழ்ந்துகொண்டது, என் பிராணனை வாங்க நினைக்கிறார்கள்.

௰௪ நானோவெனில் கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன், தேவரீர் என் பராபரன் என்கிறேன்.

௰௫ என் காலங்கள் உம்முடைய கரத்திலிருக்கிறது, என் சத்துருக்களின் கைக்கும் என்னைப் பின்தொடருகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.

௰௬ நீர் உம்முடைய முகத்தை உம்முடைய ஊழியக்காரன்மேலே பிரகாசிக்கப்பண்ணி உமது கிருபையினாலே என்னை இரட்சியும். ௬௨, சங்கீதம். ௭.

௰௭ கர்த்தாவே நான் வெட்கப்பட்டுப் போகாதிருக்கட்டும், ஏனெனில் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், ஆகாதவர்கள் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் மவுனமாய்ப் போகட்டும்.

௰௮ நீதிமான்மேல் பெருமையோடும் அசங்கத்தோடுங் கடினமாய்ப் பேசுகிற பொய் உதடுகள் கட்டப்படுவதாக.

௰௯ உமக்குப் பயந்தவர்களுக்கு நீர் வைத்துவைத்ததும் உம்மை நம்புகிறவர்களுக்கு நீர் மனுபுத்திரருக்கு எதிரே உண்டுபண்ணினதுமான உம்முடைய நன்மை எத்தனை திரள். ஏசாயா. ௬௪, ௪.

௨௰ அவர்களை உமது முகத்தின் மறைவிலே மனுஷரின் இடும்புகளுக்கு விலகலாய்க் காப்பாற்றி அவர்களை உமது கூடாரத்திலே நாவுகளின் சண்டைக்கு ஒளிக்கிறீர்.

௨௧ கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், ஏனெனில் என்னை அரணிப்பான பட்டணத்திலே வைக்கிறதற்குச் சரியாக என்மேலே தம்முடைய கிருபையை அதிசயமானதாக்கினார். ௱௭, சங்கீதம். ௭.

௨௨ உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேனென்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன், ஆனாலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில் என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டீர்.

௨௩ கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய நீங்களெல்லாரும் அவரைச் சிநேகியுங்கள், உண்மையானவர்களைக் கர்த்தர் தற்காத்துப் பெருமை செய்கிறவனுக்குப் பரிபூரணமாய்ப் பதிற்செலுத்துகிறார்.

௨௪ கர்த்தருக்குக் காத்திருக்கிற நீங்களெல்லாரும் பெலத்துக்கொண்டு திடமனதாயிருங்கள். ௨௭, சங்கீதம். ௰௪.

௩௨. சங்கீதம்.

(பாவமன்னிப்பின் பாக்கியம்.)

[தாவீதின் போதகசங்கீதம்.]

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டு எவனுடைய பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான். உரோமர். ௪, ௬—௮.

௨ எவன்மேல் கர்த்தர் அக்கிரமத்தைச் சுமத்தாதிருக்கிறாரோ எவனுடைய ஆவியிற் கபடமில்லாதிருக்கிறதோ அந்த மனுஷன் பாக்கியவான்.

௩ நான் அடக்கிவைத்தமட்டும் நித்தம் என் கதறுதலினாலே யென் எலும்புகள் உலர்ந்துபோனது.

௪ ஏனெனில் இரவும்பகலும் என்மேல் உம்முடையகை பாரமாயிருந்ததினாலே யென்சாரம் உஷ்ணகால் வறட்சியைப் போலவறண்டுபோனது. சேலா.

௫ நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என்பாவத்தையும் அறிவித்தேன், என் மீறுதல்களைக் கர்த்தருக் கறிக்கையிடுவேனென்றேன், அப்போதுதேவரீர் என்பாவத்தின் அக்கிரமத்தை மன்னித்தீர். சேலா. வாக்கி. ௨௮, ௰௩. ௧, யோவா. ௧, ௯.

௬ இதற்காகச் சகாயங்கிடைக்குங்காலத்திலே சகலசனமார்க்கனும் உம்மைநோக்கி விண்ணப்பஞ்செய்வான், அப்போது வெகுதண்ணீர்களுடைய வெள்ளம்வந்தும் அவனைச்சேராது. ஏசாயா. ௪௩, ௨.

௭ தேவரீர் என்க்கு மறைவிடமாயிருந்து இக்கட்டுக்கென்னை விலக்கிக்காத்து விடுவித்தலின் கெம்பீரங்களால் என்னைச் சூழ்ந்து கொள்ளுகிறீர். சேலா. ௨௭, சங்கீதம். ௫. ௩௧, சங்கீதம் ௨௧.

௮ உனக்கு நாம் புத்திபடிப்பித்து நீ நடக்கவேண்டிய வழியில் உன்னைப் போதிப்பித்து உன்மேல்வைத்த நம்முடைய கண்ணினால் உனக்காலோசனைகொடுப்போம். ௨௫, சங்கீதம். ௰௨.

௯ உன்கிட்டச்சேராவிட்டால் வாராலும் கடிவாளத்தினாலும் வாய்கட்டப்படவேண்டிய குதிரையைப்போலவும் உணர்வற்ற கோவேறுகழுதையைப்போலவுமிராதேயுங்கள்.

௰ ஆகாதவனுக்கு வேதனைகளுண்டாம், ஆனாற் கர்த்தரை நம்பியிருக்கிறவனைக் கிருபைசூழ்ந்துகொள்ளும். ௰௬, ௪௰. ௪.

௰௧ நீதிமான்களே கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள், செம்மையிருதயத்தாரே நீங்கள் அனைவருங் கெம்பீரியுங்கள். ௩௩, சங்கீதம். ௧.

௩௩. சங்கீதம்.

(கர்த்தருடைய தெய்வ இலட்சணங்களகிரியைகள் பராமரிப்பினிமித்தமும் அவரைத்துதித்து அவர்மேலெல்லா நம்பிக்கையும் வைக்க எழுப்புகிறசங்கீதம்.)

௧ நீதிமான்களே கர்த்தருக்குள் கெம்பீரியுங்கள் துதிக்கிறது செம்மையானவர்களுக்குத் தகும். ௩௨, சங்கீ. ௰௧. ௱௪௭, சங். ௧.

௨ கர்த்தரைச் சுரமண்டலத்தினாலே துதித்து அவரைத் தம்புரினாலும் பத்துநரம்பு வீணையினாலுங் கீர்த்தனம்பண்ணுங்கள்.

௩ அவரைப் புதுப்பாட்டாய்ப் பாடிக் கெம்பீரத்துடனே தேற்றியாய்க் கொட்டுங்கள். ௯௬, சங்கீதம். ௧.

௪ ஏனெனில் கர்த்தருடைய வார்த்தை செம்மையும் அவருடைய செய்கையெல்லாஞ் சத்தியமுமாயிருக்கின்றது. ௰௯, சங்கீதம். ௰.

௫ நீதியையும் நியாயத்தையும் நேசிக்கிறார் பூமி கர்த்தரின் கிருபையால் நிறைந்திருக்கின்றது. ௪௫, சங். ௮. ௱௰௯, ௬௪.

௬ கர்த்தரின்வார்த்தையினாலே வானமண்டலங்களும் அவருடையவாயின் ஆவியினாலே அவைகளின் எல்லாச்சேனையும் உண்டாக்கப்பட்டது.

௭ அவர் சமுத்திரச்சலங்களைக் குவியலாக்கூட்டி ஆழங்களைப் பொக்கிஷசாலைகளாக வைத்தார். யோபு. ௩௮, ௮.

௮ பூமியெல்லாம் கர்த்தருக்குப் பயப்படுவதாக, பூச்சக்கரக்குடிகளெல்லாம் அவருக்கஞ்சியிருப்பதாக.

௯ ஏனெனில் அவர்சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். ௧. மோ. ௧, ௩.

௰ கர்த்தர் சாதிகளின் ஆலோசனையை அவத்தமாக்கி சனங்களுடைய நினைவுகளை அத்தவிர்க்கிறார். யோபு. ௫, ௰௨. வாக்கியம். ௨௧, ௩௰.

௰௧ கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும் அவர் இருதயத்தின் நினைவுகள் தலைமுறைதலைமுறையாகவும் நிற்கும். வாக்கியம். ௰௯, ௨௧.

௰௨ கர்த்தர் தெய்வமாயிருக்கப்பட்ட சாதியும் அவர் தமக்குச் சுதந்திரமாகத் தெரிந்துகொண்டசனமும் பாக்கியமானது. ௬௫, சங்கீ. ௪. ௱௪௪, சங்கீ. ௰௫.

௰௩ வானங்களிலிருந்து கர்த்தர் நோக்கிப்பார்த்து எல்லா மனுஷபுத்திரரையுங் காண்கிறார்.

௰௪ தாம் வாசமாயிருக்கிறதானத்திலிருந்து பூமியின்குடிகளெல்லார்மேலுங் கண்ணோக்கமாயிருக்கிறார்.

௰௫ அவர் இவர்களனைவருடைய இருதயத்தையும் உருவேற்படுத்தி அவர்கள் செய்கைகளையெல்லாங் கவனித்திருக்கிறார்.

௰௬ இராசா இராணுவத்திரளால் இரட்சிக்கப்படான், சவுரியவான் பெலத்தின் மிகுதியாலே தப்பான்.

௰௭ இரட்சிக்கப்படுவதற்குக் குதிரை வீணுதா, அது தன்பெரியவீரியத்தாலே தப்புவியாது. ௱௪௭, சங்கீதம். ௰.

௰௮ இதோ தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்துக்குவிலக்கிவிடுவிக்கவும். ௩௪, சங்கீதம். ௰௫.

௰௯ அவர்களைப் பஞ்சத்தில் உயிரோடே காக்கவுங் கர்த்தருடையகண் அவர்கள்மேலே வைக்கப்பட்டிருக்கின்றது.

௨௰ நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது, அவர் நம்முடைய ஒத்

தாசையும் நம்முடைய கேடயமுமானவர்.

௨௧ ஏனெனில் அவருடைய பரிசுத்த நாமத்தை நாம் நம்பியிருக்கிறபடியால் நம்முடைய இருதயம் அவருக்குட் சந்தோஷமாயிருக்கும்.

௨௨ கர்த்தரே நாங்கள் உம்மை நம்பினபடி உமது கிருபை எங்கள்மேலிருக்கக்கடவது.

௩௪. சங்கீதம்.

(நீதிமான்களையெல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாகவிடுவிக்கிறபராபரனுடைய தயவைப்பிரஸ்தாபம்பண்ணுதல்.)

[தாவீது தன்முகநாடியை அபிமெலேக்குக்குமுன்பாக வேறுபடுத்தினதினாலே, அவனாலே துரத்திவிடப்பட்டுப் போகையிலே பாடின சங்கீதம். ௧ சாமு. ௨௧, ௰.]

கர்த்தரையெல்லாக்காலத்திலும் ஸ்தோத்திப்பேன், அவர் துதியெப்போதும் என் வாயிலிருக்கும். ௱௪, சங்கீதம். ௩௩.

௨ கர்த்தருக்குள்ளென்னாத்துமா மேன்மைபாராட்டும், சிறுமையானவர்கள் அதைக்கேட்டு மகிழுவார்கள். எரேமி. ௯, ௨௪.

௩ என்னோடேகூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள், நாம் ஒருமித்து அவர் நாமத்தையுயர்த்துவோம்.

௪ நான் கர்த்தரைத் தேடினபோது அவர் எனக்கு மறுஉத்தரவுகொடுத்து என்னை என்னுடைய எல்லாத்திகில்களுக்கும் நீங்கலாக்கிவிட்டார். ஏசாயா. ௬௫, ௨௪.

௫ அவரை நோக்கி அவரண்டையோடிவருகிறவர்களின் முகங்கள் வெட்கத்துக்குள்ளாகாது.

௬ இந்தச் சிறுமையானவன் கூப்பிட்டான், அப்போது கர்த்தர் கேட்டு அவனை அவனெருக்கங்களுக்கெல்லாம் நீங்கலாக்கிரட்சித்தார்.

௭ கர்த்தருடைய தூதர் அவருக்குப் பயந்தவர்களைச் சுற்றிலும் பாளயமிட்டு அவர்களைவிடுவிக்கிறார். ௯௧, சங்கீ. ௰௧. ௨, இரா. ௬, ௰௭.

௮ கர்த்தர் நல்லவர் என்றதை ருசித்துப்பாருங்கள் அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். ௨, சங்கீதம். ௰௨. ௪௰, சங்கீதம். ௪.

௯ கர்த்தருடைய பரிசுத்தவான்களே அவருக்குப் பயந்திருங்கள், ஏனெனில் அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. ௩௭, சங்கீதம். ௰௯.

௰ சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோவென்றால் ஒரு நன்மையுங்குறைபடாது.

௰௧ பிள்ளைகளே வந்து என்னைக் கேளுங்கள், கர்த்தருக்குப் பயப்படுதலையுங்களுக்குக் கற்றுக்கொடுப்பேன்.

௰௨ ஜீவனைவிரும்பி நன்மைகாணும்படி நாட்களைச் சிநேகிக்கிற மனுஷன் யார். ௧. பேதுரு. ௩, ௰—௰௨.

௰௩ உன் நாவைப் பொல்லாப்புக்கும் உன் உதடுகளைக் கபடவசனிப்புக்கும் விலக்கலாயக்கார்.

௰௪ பொல்லாப்பைவிட்டுவிலகி நன்மைசெய், சமாதானத்தைத் தேடி அதைப்பின்றொடர். ௩௭, சங்கீதம். ௨௭. ஏசாயா. ௧, ௰௬. ௰௭.

௰௫ கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் வைக்கப்பட்டு அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலைக் கவனிக்கிறது. ௩௩, சங்கீதம். ௰௮. ௰௯.

௰௬ பொல்லாங்குசெய்கிறவர்களின் பேரைப் பூமியிலிராமல் அறுப்புப்போகப்பண்ணக் கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கின்றது.

௰௭ நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் அவர்களைக் கேட்டு அவர்களை அவர்களுடைய எல்லா நெருக்கங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்.

௰௮ இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து ஆவி நொறுங்குண்டவர்களை இரட்சிக்கிறார். ௱௪௫, சங்கீதம். ௰௮. ௰௯.

௰௯ நீதிமானுக்கு வருகிற தீங்குகள் அநேகமாயிருக்கின்றது, ஆனாற்கர்த்தர் அவைகளெல்லாவற்றுக்கும் அவனை நீங்கலாக்கிவிடுகிறார். ௨. தீமோத்தேயு. ௩, ௰௧.

௨௰ அவன் எலும்புகளையெல்லாங்காப்பாற்றுகிறார், இவைகளிலொன்றும் முறிக்கப்படுகிறதில்லை.

௨௧ தீங்கு ஆகாதவனைக்கொல்லும், நீதிமானைப் பகைக்கிறவர்களே நேரஸ்தராவார்கள்.

௨௨ கர்த்தர் தமது ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுவிடுகிறார், அவரையண்டிக்கொள்ளுகிறவர்களெல்லாருங் குற்றஞ்சுமக்காதிருப்பார்கள். ௩௭, சங்கீதம். ௩௩.

௩௫. சங்கீதம்.

(தன்சத்துருக்களோடே பராபரன்றாமே யெதிர்த்துநிற்கப் பாடுபடுகிற கிறிஸ்துவின் முன்னடையாளமாய்த் தாவீது வேண்டிக்கொண்டது.)

[தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே நீரென் வழக்காளிகளோடே வழக்காடி என்னோடு யுத்தம்பண்ணுகிறவர்களோடு யுத்தம்பண்ணும்.

௨ நீர் கேடயத்தையும் பரிசையையும் பிடித்து எனக்கொத்தாசையாக எழும்பி,

௩ என்னைப் பின்தொடருகிறவர்களோடே எதிர்த்து நின்று ஈட்டியையோங்கி அவர்களை மறித்து, என் ஆத்துமாவுடனே நாம் உன் இரட்சிப்பென்று சொல்லும்.

௪ என் பிராணனை வாங்கத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சையடைந்து பின்னிட்டுத் திரும்பவும், எனக்குப் பொல்லாப்பை நினைக்கிறவர்கள் நாணமடையவும். ௪௰, சங்கீ. ௰௪. ௭௰. சங்கீ. ௨.

௫ அவர்கள் காற்றுமுகத்திலே பதரைப் போலாகவும் கர்த்தருடைய தூதன் அவர்களைத் தள்ளுவானாக. ௧, சங்கீதம். ௪. ௮௩, சங்கீதம். ௰௩.

௬ அவர்கள் வழி இருளும் சறுக்கலுமாகக்கடவது, கர்த்தருடைய தூதன் அவர்களைத் தொடருவானாக.

௭ ஏனென்றால் முகாந்திரமில்லாமற் குழிக்குட்படுத்தத் தங்கள் வலையை எனக்கு ஒளித்துவைத்தார்கள், முகாந்தரமில்லாமல் என் ஆத்துமாவுக்குக் குழிவெட்டினார்கள்.

௮ அவன் அறியாமற் பாழ்க்கடிப்பு அவனுக்கு வந்து அவன் மறைவாய் வைத்த அவன் வலை அவனையே பிடிக்க அவனே பாழ்க்கடிப்பாய் அதிலே தான் விழவேணும். ௭, சங்கீதம். ௰௬. ௰௭.

௯ அப்படியே என் ஆத்துமா கர்த்தருக்குட் களிகூர்ந்து அவருடைய இரட்சிப்பிலே மகிழ்ந்திருக்கும்.

௰ சிறுமையானவனை அவனிலும் பெலவானுடைய கைக்கும் சிறுமையானவனையும் எளியவனையும் அவனைக் கொள்ளையாடுகிறவனுடைய கைக்குத் தப்புவிக்கிற உம்மைப் போலேயார் கர்த்தாவே என்றென் எலும்புகளெல்லாஞ் சொல்லும்.

௰௧ கொடுமையான சாட்சிகள் எழும்பி நான் அறியாததை என்னைக் கேட்கிறார்கள்.

௰௨ எனக்கு நன்மைக்குத் தீமை சரிக்கட்டி என் ஆத்துமா முதலற்றுப் போகப் பார்க்கிறார்கள். ௩௮, சங்கீதம். ௨௰.

௰௩ அவர்கள் வியாதியாயிருந்தபோதோவென்னில் இரட்டு என் உடுப்பாயிருந்தது, நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன், என் செபமும் என் மடியிலே இரட்டித்தது.

௰௪ எனக்குச் சிநேகிதனாகவும் எனக்குச் சகோதரனாகவும் பாவித்து நடந்துகொண்டேன், தாய்க்காகத் துக்கிக்கிறவனைப் போலத் துக்கவஸ்திரந்தரித்துத் தலைகவிழ்ந்து நடந்தேன்.

௰௫ ஆனால் நான் ஆபத்துப்படுகையில் சந்தோஷப்பட்டுக் கூட்டங்கூடுகிறார்கள், நொண்டிகளும் நான் அறியாதவர்களும் எனக்கு விரோதமாகக் கூட்டங்கூடி என்னைப் பீறி அமராதிருக்கிறார்கள். யோபு. ௩௰. ௧—௰௧.

௰௬ அப்பத்துக்காக மாயமும் பரியாசமும் பண்ணுகிறவர்களுக்குள்ளிருந்துகொண்டு என்பேரிலே பற்கடிக்கிறார்கள்.

௰௭ ஆண்டவரே எந்தமட்டும் அதைப் பாராதிருப்பீர், என் ஆத்துமாவை அவர்கள் பாழ்க்கடிப்புகளுக்கும் என் தனிமையைச் சிங்கக்குட்டிகளுக்குந் தப்புவித்துத் திருப்பும்.

௰௮ உம்மைப் பெரிய சபையிலே துதிப்பேன், திரளான சனத்துக்குள்ளே உம்மைப் புகழுவேன். ௪௰, சங்கீதம். ௰. ௱௰௧. சங்கீதம். ௧.

௰௯ வீணாய் எனக்குச் சத்துருக்களானவர்கள் என்னிமித்தஞ் சந்தோஷியாமலும் முகாந்திரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் கண்சிமிட்டாமலுமிருப்பார்களாக.

௨௰ ஏனென்றால் அவர்கள் சமாதானமாய்ப் பேசாமல் தேசத்திலே அமர்ந்திருக்கிறவர்களுக்கு விரோதமாய்க் கபடமான காரியங்களைத் தியானித்து,

௨௧ எனக்கு விரோதமாகத் தங்கள் வாயை விரிவாய்த் திறந்து ஆகா ஆகா எங்கள் கண் கண்டதென்கிறார்கள். ௪௰, சங்கீதம். ௰௫. ௭௰, சங்கீதம். ௪.

௨௨ கர்த்தாவே நீர் அதைக் கண்டீர், மௌனமாயிராதேயும், ஆண்டவரே என்னை விட்டுத் தூரமாகாதேயும்.

௨௩ என் பராபரனே என் ஆண்டவரே என் நியாயத்துக்கும் என் வழக்குக்கும் விழித்தெழும்பும். ௪௪, சங்கீ. ௨௪.

௨௪ என் பராபரனாகிய கர்த்தாவே அவர்கள் என்னிமித்தஞ் சந்தோஷியாததற்கு உம்முடைய நீதியின்படி என்னை நியாயம் விசாரியும். ௨௬, சங்கீ. ௧.

௨௫ அவர்கள் தங்கள் இருதயத்திலே எங்கள் ஆத்துமாவே ஆகா என்றும் அவனை விழுங்கினோமென்றுஞ் சொல்லாதிருப்பார்களாக.

௨௬ என் தீங்குக்காகச் சந்தோஷிக்கிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி எனக்கு விரோதமாய்ப் பெருமைப்படுகிறவர்கள் வெட்கத்தாலும் இலச்சையாலும் உடுத்தப்படக்கடவார்கள். ௬, சங்கீதம். ௰௧. ௪௰, சங்கீ. ௰௫. ௰௬.

௨௭ என் நீதியை விரும்புகிறவர்கள் கெம்பீரித்து மகிழ்ந்து தமது ஊழியக்காரனுடைய சமாதானத்தை விரும்புகிற கர்த்தர் மகிமைப்படக்கடவாரென்று எப்போதுஞ் சொல்லுவார்களாக. ௪௰, சங்கீ. ௰௭.

௨௮ என் நாவு உமது நீதியையுஞ் சகல நாளிலும் உமது துதியையுஞ் சொல்லுகிறதாயிருக்கும்.

௩௬. சங்கீதம்.

(தாவீது பொல்லாதவர்களுடைய ஆசாமியத்தைச் சிந்தித்துக் கிருபையுள்ள பராபரனைத் தொழுதுகொண்டது.)

[இராகத்தலைவனுக்குக் கொடுப்பிக்கப்பட்ட கர்த்தருடைய தாசனாகிய தாவீதின் சங்கீதம்.]

௧ ஆகாதவனுடைய துரோகப்பேச்சு என்னிருதயத்தின் உள்ளத்துக்குத் தெரியும், அவன் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயப்படுதலில்லை.

௨ ஏனென்றால் தன் துர்க்குணத்தை நிறைவேற்றவும் வர்மம் வைக்கவும் தனக்குத்தானே தன்பார்வைக்கேற்றபடி இச்சகம் பேசுகிறான்.

௩ அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் கபடமுமாயிருக்கிறது, நன்மைசெய்ய வத்தானபுத்தியைக் காக்காமல் விட்டுவிட்டான். ௫௨, சங்கீ, ௩.

௪ அவன் தன் படுக்கையின்மேல் அக்கிரமத்தைச் சிந்தித்துக்கொண்டு நல்லதல்லாத வழியிலே நிலைத்துப் பொல்லாப்பை வெறுக்காதிருக்கிறான்.

௫ கர்த்தாவே உமது கிருபை வானங்களிலிருக்கிறது, உமது சத்தியம் ஆகாசமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது. ௫௭, சங்கீ. ௰௧.

௬ உமது நீதி வலுப்பருவதங்களைப்போலவும் உமது நியாயங்கள் மகா ஆழமாகவுமிருக்கிறது, கர்த்தாவே மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர். ரோமர். ௰௧, ௩௩. ௱௪௫, சங்கீதம். ௯. ௰௬.

௭ பராபரனே உம்முடைய கிருபை எத்தனை அருமையாயிருக்கிறது, அதினாலே மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே திடன்கொண்டு தங்குகிறார்கள். ௰௭, சங். ௮. ௫௭, சங்கீதம். ௨.

௮ உமது வீட்டினுடைய சம்பூரணத்தாலட்ஸ்தாகிறார்கள், உமது செல்வங்களின் ஆற்றினால் அவர்களைத் தாகந்தீர்க்கிறீர்.

௯ ஏனெனில் உம்மிடத்திலே சீவனுடைய ஊற்றிருக்கின்றது, உம்முடைய வெளிச்சத்தில் வெளிச்சத்தைக் காண்கிறோம். யோவான். ௧, ௪.

௰ உம்மை யறிந்தவர்கள்மேல் உமது கிருபையையுஞ் செம்மை இருதயத்தார்மேல் உமது நீதியையும் நீட்டும்.

௰௧ பெருமைக்காரரின் கால் என்மேல் வராமலும் ஆகாதவர்களுடைய கை யென்னைப் பறக்கடியாமலுமிருப்பதாக.

௰௨ அங்கே அக்கிரமக்காரர் விழுந்து எழுந்திருக்கமாட்டாமலே தள்ளுண்டுபோகிறார்கள்.

௩௭. சங்கீதம்.

(பொல்லாதவர்களின் பாக்கியத்தைக் கண்டு இடறல் அடையாதபடிக்குப் பொல்லார் நல்லாருடைய பிற்காரியம் வெவ்வேறென்று காண்பிக்கப்பட்டது.)

[தாவீதின் சங்கீதம்.]

௧ பொல்லாதவர்கள்மேல் எரிச்சலாகாதே, நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமையாகாதே. ௭௩, சங்கீ. ௩. வாக். ௨௪, ௰௯.

௨ ஏனென்றால் புல்லைப்போலச் சீக்கிரமாய் அறுப்புண்டு பச்சையான முளையைப்போல உலருவார்கள்.

௩ கர்த்தரை நம்பியிருந்து நன்மைசெய், தேசத்திலே குடியிருந்து சத்தியத்தைமேய்த்துக்கொள்.

௪ கர்த்தர்பேரிலே மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்குக் கொடுப்பார். ௨௰, சங்கீ. ௫.

௫ உன் வழியைக் கர்த்தருக்குச் சாட்டிவிடு, அவர்மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை நடப்பித்து, ௫௫, சங்கீ. ௨௨.

௬ உன் நீதியை வெளிச்சத்தைப்போலேயும் உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலேயும் வெளிப்படப்பண்ணுவார்.

௭ கர்த்தரை நோக்கி அமர்ந்து அவருக்குக் காத்துக்கொண்டிரு, தன் வழிவாய்க்கிறவன்மேலும் தீவினைகளைச் செய்கிற மனுஷன்மேலும் எரிச்சலாகாதே.

௮ கோபத்தை நெகிழ்ந்து உக்கிரத்தை விட்டுவிடு, பொல்லாப்புச்செய்யவே இன்மாகிற எரிச்சல் உனக்குவேண்டாம். யாக்கோபு. ௧, ௨௰.

௯ ஏனெனில் பொல்லாதவர்கள் வேர் அறுப்புண்டுபோவார்கள், ஆனால் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

௰ இன்னங் கொஞ்சநேரந்தான், அப்போது ஆகாதவன் இரான், அவன் தானத்தையுற்றுவிசாரித்தாயானால் அவன் இல்லை.

௰௧ மெத்தனவுள்ளவர்களோவென்றால் பூமியைச் சுதந்தரித்துக்கொண்டு மகா சமாதானத்தினாலே மனமகிழ்ச்சியாயிருப்பார்கள். மத்தே. ௫, ௫.

௰௨ ஆகாதவன் நீதிமானுக்குத் தீவினை நினைத்து அவன்பேரிலே பற்கடிக்கிறான்.

௰௩ ஆண்டவர் அவனை நகைக்கிறார், ஏனெனில் அவன் நாள் வருகிறதென்று காண்கிறார். ௨, சங்கீ. ௪.

௰௪ சிறுமையும் எளிமையுமானவனை மடிக்கவுஞ் செம்மைமார்க்கத்தாரை விழப்பண்ணவும் ஆகாதவர்கள் பட்டயத்தை யுருவித் தங்கள் வில்லை நாணேற்றுகிறார்கள்.

௰௫ ஆனால் அவர்களபட்டயம அவர்களுடைய இருதயததுககுட்போய அவர்களவிலலுகளமுறியும. எ, சஙகி. ௰௭.

௰௬ அநேகம ஆகாதவர்களுககுளளதிரட்சியைப பார்ககிலும நீதிமானுககுளள கொஞசமானது நலலது. வாககி.௰௫, ௰௬.

௰௭ ஏனெனில ஆகாதவர்களுடையபுயஙகளமுறியும, ஆனால நீதிமானகளைக்கர்ததர் தாஙகுகிறார்.

௰௮ மனவுணமையானவர்களின நாட்களைக்கர்ததர் அறிநதிருககிறார், அவர்களசுததரம எனறெனறைககுமிருககும.

௰௯ துற்காலததிலே வெட்கபபட்டுப போகாதிருநது பஞசகாலததிலே திருததியடைவார்கள. ௩௩, சஙகி. ௰௮ ௰௯.

௨௰ ஆகாதவர்களோவெனறால அழிவார்கள, கர்ததருடையசததுருககள புலலுளள தலஙகளின வடிபபத்தைபபோலொழிநது போவார்கள, புகையிலொழிநதுபோவார்கள.

௨௧ ஆகாதவன கடனவாஙகிச்செலுததாதேபோகிறான, நீதிமானோவெனில இரஙகிக்கொடுககிறான.

௨௨ ஏனெனில அவரால் ஆசிர்வதிககபபட்டவர்கள பூமியைச்சுதநதரிததுககொளளுவார்கள, அவராற் சபிககபபட்டவர்களோவெனறால வேர் அறுபபுணடுபோவார்கள.

௨௩ நல்மனுஷனுடைய நடைகள கர்ததரால உறுதிபபடும, அவனுடையவழியின மேல அவர்பிரியமாயிருககிறார்.

௨௪ அவனவிழுந்தாலதளளபபடுகிறதிலலை, ஏனெனறாற்கர்ததர் அவனகையைத்தாஙகுகிறார். ௯௪௫, சஙகி. ௰௪.

௨௫ நான இளைஞனாயிருநதேன முதிர் வயதுமானேன், ஆனாலநீதிமான கைவிடபபட்டதையும அல்லது அவனவிததுஅபபநதேடுகிறதையுஙகணடேனிலலை.

௨௬ நிததம இரஙகிக்கடனகொடுககிறான, அவனவிதது ஆசிர்வாதமாயிருககும.

௨௭ பொலலாபபைவிட்டுவிலகி நன்மைசெயது எனறெனறைககும நிலைததிரு. ௩௪, சஙகீ ௰௫.

௨௮ ஏனெனிற் கர்ததர் நியாயததைச்சிநேககிறவர், அவர்தமமுடைய சன்மார்ககரைக்கைவிடுவதிலலை, அவர்களஎனறைககுங காக்கபபடுவார்கள, ஆனாலஆகாதவர்களுடையவிதது வேரறுபபுணடுபோம்.

௨௯ நீதிமானகள பூமியைச்சுதநதரிததுககொணடு எனறைககும அதிலேவாசமாயிருபபார்கள. வாககி. ௨, ௨௧. ௨௨.

௩௰ நீதிமானுடைய வாய் ஞானததை யுரைதது அவனுடையநாவு நியாயததைப பேசும.

௩௧ அவனுடைய பராபரனின வேதம அவனிருதயததிலிருககிறது, அவன நடைகள தளளாடுவதிலலை. ஏசா. ௫௧, ௭.

௩௨ நீதிமானை ஆகாதவனவேவுபார்தது அவனைக் கொலைசெயயவகைதேடுகிறான.

௰, சஙகி. ௯.

௩௩ கர்ததரோவெனறால அவனை இவன கையிலேவிடுவதுமிலலை, அவன நியாயம விசாரிககபபடுகையில அவனை ஆகாதவனுகததீர்பபதுமிலலை.

௩௪ நீ கர்ததருக்குக்காததிருநது அவருடையவழியைக்கைக்கொள், அபபோது நீ பூமியைச்சுதநதரிததுககொள்வதறகு உனனையுயர்ததுவார், ஆகாதவர்கள வேர் அறுபபுணடுபோவதைபபார்பபாய்.

௩௫ பெலவநதனுமாய் முளைதத நிலததில நிற்கிறபசசைமரததைபபோலத்தழைததவனுமாயிருககிற ஒருஆகாதவனைககணடேன.

௩௬ ஆனால் ஒழிநதுபோனான, இதோ அவனிலலை, அவனைததேடினேன், ஆனால அவனகாணபபட்டதிலலை.

௩௭ நீயுததமனைநோககிச் செமமையானவனைபபார்ததிரு, ஏனெனில அமமனுஷனுடைய பிற்காரியஞசமாதானம.

௩௮ துரோகிகளோ ஏகமாய அழிககபபடுவார்கள, ஆகாதவர்களின பிற்காரியம வேர் அறுபபுண்குதல. ௭௩, சஙகி. ௰௯.

௩௯ ஆனால நீதிமானகளுடைய இரட்சிபபும இககட்டுககாலததிலே அவர்களபெலனும கர்ததராலவரும.

௪௰ கர்ததர் அவர்களுககொததாசைபணணி அவர்களைவிடுவிபபார், அவர்களை ஆகாதவர்களுடைய கைக்குத்தபபுவிதது இரட்சிபபார், ஏனெனில அவரைநமபியிருககிறார்கள.

௩௮. சஙகீதம்.

(பாவஙகளினபாரததாலுஞ சததுருககளினதுன்பததாலுமவியாகுலபபட்டிருபபவனினசெபம.)

[நினைபபூட்டுதலாகபபாடினதாவீதின சஙகிதம.]

கர்ததாவே உமமுடைய கடுமையிலே னனைக் கடிநதுகொளளாதேயும, உமமுடையஉககிரததிலெனனைத்தெணடியாதேயும. ௬, சஙகி. ௨. எரேமியா. ௰, ௨௪.

௨ ஏனெனிலஉமமுடையஅமபுகளெனககுட்பட்டது, உமதுகை எனமேலிறஙகிற்று. யோபு. ௬, ௪.

௩ உமது சினததால எனமாமிசததிலே ஆரோககியமிலலை, என பாவததினால என னெலுமபுகளிற்சமாதானமிலலை.

௪ ஏனெனில் என் அக்கிரமங்கள் என் தலையின்மேலேறிப் பாரச்சுமையைப்போல எனக்கு மிஞ்சின பாரமாயிற்று. புலம்ப. ௧, ௰௪.

௫ என் பயித்தியத்தினால் என் புண்கள் நாற்றமெடுத்து அழுகிப்போயிற்று.

௬ மிகுதியாகவும் மடங்கி ஒடுங்கினேன், நாள்தோறுந் துக்கித்துத் திரிகிறேன்.

௭ ஏனெனில் என் குடல்கள் வெட்டையால் நிறைந்திருக்கிறது, என் மாம்சத்திலே ஆரோக்கியமில்லை.

௮ மிகுதியாகவும் பெலனற்றுப்போய் அலைசடிப்பட்டேன், என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன்.

௯ ஆண்டவரே உமக்கு முன்பாக என் எண்ணமெல்லாமிருக்கிறது, என் தவிப்பு உமக்கு மறைக்கப்பட்டதல்ல.

௰ என் இருதயங் குழம்பி அலைகிறது, என் பெலன் என்னைவிட்டு என் கண்களுடைய வெளிச்சந்தானும் என்னில் இல்லாதே போயிற்று.

௰௧ என் சிநேகிதரும் என் தோழமாரும் என் வாதைக்கெதிரே நின்றிருந்து என்னைச் சேர்ந்தவர்கள் தூரமாய் நிற்கிறார்கள். யோபு. ௰௯, ௰௪.

௰௨ என் பிராணனை வாங்கப்பார்க்கிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள், எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் கேடுபாடுகளைப்பேசி நித்தங் கபடங்களைச் சிந்திக்கிறார்கள்.

௰௩ நானோ செவிடனைப்போலே கேளாதவனாகவுந் தன்வாயைத் திறவாத ஊமையனைப்போலவும் இருக்கிறேன்.

௰௪ கேளாமலுந் தன்வாயில் எதிர் உத்தரவுகளில்லாமலுமிருக்கிற மனுஷனைப் போலானேன்.

௰௫ அதேதென்றாற் கர்த்தாவே உமக்குக் காத்திருக்கிறேன், என் பராபரனாகிய ஆண்டவரே தேவரீர் மறுஉத்தரவு கொடுப்பீர்.

௰௬ ஏனெனில் என்னிமித்தம் அவர்கள் சந்தோஷப்படாதிருப்பார்களாகவென்றேன், என் கால் தள்ளாடும்போது என்மேற் பெருமைபடுவார்களே.

௰௭ ஏனெனில் நான் தள்ளம்பாற இனமானவன், என் நோவு எப்போதும் எனக்கு முன்பாகவிருக்கிறது.

௰௮ ஏனென்றால் என் அக்கிரமத்தை அறிக்கையிட்டு என் பாவத்தினிமித்தம் விசாரப்பட்டிருக்கிறேன். ௩௨, சங்கீ. ௫.

௰௯ ஆனால் என் சத்துருக்கள் வாழ்ந்து பெலத்திருக்கிறார்கள், முகாந்திரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் பெருத்திருக்கிறார்கள்.

௨௰ நன்மைக்குத் தீமைசரிக்கட்டுகிறவர்கள் நான் நன்மையைப் பின்பற்றுகிறபடியால் என்னை விரோதிக்கிறார்கள்.

௨௧ கர்த்தாவே என்னைக் கைவிடாதேயும், என் பராபரனே எனக்குத் தூரமாயிராதேயும்.

௨௨ என் இரட்சிப்பாகிய ஆண்டவரே எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்.

௩௯. சங்கீதம்.

(தாவீது இச்சீவனின் மாயையைத் தியானித்துப் பராபரனையண்டிக்கொண்டது.)

[எதித்தூனென்ற இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

௧ நான் என் நாவினாலே பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து ஆகாதவன் எனக்கு முன்பாகவிருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தாற் பத்திரப்படுத்துவேனென்றேன். ௰௭, சங்கீ. ௩. ௱௪௧, சங்கீதம். ௩.

௨ நான் மவுனப்பட்டு ஊமையனாயிருந்து நலமானதைப் பேசாமல் அமர்ந்தேன், ஆனால் என் நோவு அதிகத்துருசாயிற்று.
௩௮, சங்கீதம். ௰௪.

௩ என் இருதயம் எனக்குள் எரிந்ததினால் என் தியானத்தினால் நெருப்பு வேகிறதாயிருந்தது, அப்போது என் நாவினால் விண்ணப்பஞ்செய்தேன்.

௪ கர்த்தாவே நான் எத்தனையாய் நிலையற்றவனென்று நான் உணர என் முடிவையும் என் நாட்களின் அளவு எம்மாத்திரம் என்கிறதையும் எனக்குத் தெரிவியும்.
௯௰, சங்கீதம். ௰௨.

௫ இதோ நால்விரற்கடைகளாய் என் நாட்களையளவிட்டீர், என் ஆயுசு உமக்கு முன்பாக ஒன்றுமில்லாததுபோலிருக்கிறது, ஆம் எந்த மனுஷனும் மாயையேயென்கிறது நிசம், சேலா. ௬௨, சங்கீ. ௯.
௱௪௪, சங்கீதம். ௪.

௬ வேஷமாகவே மனுஷன் திரிகிறான், மாயையாகவே அமளிபண்ணுகிறார்கள், ஆஸ்தியைச் சேர்க்கிறான், ஆனால் ஆர் அவைகளை வாரிக்கொள்ளுவாரென்றறியான்.

௭ இப்போதும் ஆண்டவரே எதுக்கெதிர்பார்ப்பேன், என் நம்பிக்கை உம்முடையமேலிருக்கிறது. ௨௫, சங்கீ. ௨.

௮ என்னை என் மீறுதல்களுக்கெல்லாம் நீங்கலாக்கும், என்னைப் பயித்தியக்காரனுடைய நிந்தனையாக வைக்காதேயும்.
௭௯, சங்கீதம். ௬.

௯ என் வாயைத் திறவாமல் மவுனமாயிருக்கிறேன், ஏனெனில் தேவரீர் அதைச் செய்தீர்.

௰ உம்முடைய வாதையை என்னிலிருந்து எடுத்துப்போடும், உமது கரத்தின் அடிகளால் நான் தொய்ந்துபோனேன்.

௰௧ நீர் அக்கிரமத்தினிமித்தம் மனுஷனைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறபோது அவன் வடிவைப் பொட்டரிப்பாய் அழியப்பண்ணுகிறீர், மெய்யாக எந்த மனுஷனும் மாயை, சேலா.

௰௨ கர்த்தாவே என் ஜெபத்தைக் கேட்டு என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும், என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும், ஏனெனில் உமக்கு முன்பாக நான் என்னுடைய எல்லாப் பிதாக்களைப்போலே அரதேசியும் பரதேசியுமாயிருக்கிறேன். ௱௰௯, சங்கீ. ௰௯. ௧. பேதுரு. ௨, ௰௧. ௩. மோ. ௨௫, ௨௩. ௧. நாளாகமம். ௨௯, ௰௫. எபிரேயர். ௰௧, ௰௩.

௰௩ நான் இனியிராமற்போகுமுன்னே இளைப்பாறுவதற்காக என்னைவிட்டுவிலகும். யோபு. ௰, ௨௰ ௵

௪௰. சங்கீதம்.

(குறையற்ற கீழ்ப்படிதலோடே தம்மைத் தாமே பலியிடும் மத்தியஸ்தனுடைய பாடுகளையுஞ் சுவிசேஷத்தின் பிரசங்கிப்பையுஞ் சத்துருக்களுக்கு வரும் இலச்சையையும் விசுவாசிகளுக்கு வரும் மகிமையையுங் காண்பிக்கிற தீர்க்கதரிசனம்.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

௧ கர்த்தருக்குக் காத்திருந்தேன், அப்போது அவர் என்னண்டைக்குச் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டு,

௨ என்னைப் பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்தேறப்பண்ணி என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி என் அடிகளையுறுதிப்படுத்தி, ௬௯, சங்கீ. ௩.

௩ எங்கள் பராபரனைத் துதிக்கும் புதுப்பாட்டை என் வாயிலே கொடுத்தார், அநேகர் அதைக் கண்டு பயந்து கர்த்தரை நம்புவார்கள். ௬௬, சங்கீதம். ௧.

௪ அகந்தைக்காரரையும் பொய்க்குச் சாய்கிறவர்களையும் நோக்காமல் கர்த்தரைத் தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான். ௬௪, சங்கீதம். ௬.

௫ என் பராபரனாகிய கர்த்தாவே, தேவரீர் எங்கள்மேல் உம்முடைய அதிசயங்களையும் உம்முடைய யோசனைகளையும் பெருகப் பண்ணினீர், தேவரீருக்கொப்பிடுதலில்லை, நான் அவைகளை யறிவித்துச் சொல்லவும் அவைகள் எண்ணிக்கைக்கு மேலானவைகள். ௮௬, சங்கீதம். ௭.

௬ பலியையுங் காணிக்கையையும் நீர் விரும்பாமல் செவிகளை எனக்குத் திறந்தீர், சருவாங்கதகன பலியையும் பாவம்போக்கும் பலியையும் நீர் கேட்கவில்லை. எபிரே. ௰, ௫. ௰. ஏசா. ௫௰, ௫.

௭ இதோ வருகிறேனென்று அப்போது சொன்னேன், புஸ்தகச்சுருளில் என்னைக்குறித்தெழுதியிருக்கிறது. யோவா. ௫, ௩௯. ௪௬.

௮ என் பராபரனே உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன், உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்துக்குள்ளிருக்கிறது. மத். ௨௬, ௩௯. யோவா. ௪, ௩௪.

௯ திரளான சபையிலே நீதியைப் பிரசங்கிக்கிறேன், இதோ கர்த்தாவே என் உதடுகளை மூடேனென்றிறதை நீர் அறிவீர். ௩௫, சங்கீதம். ௰௮.

௰ உம்முடைய நீதியை என்னிருதயத்துக்குள் மறைப்பேன், உமது சத்தியத்தையும் உமது இரட்சிப்பையுஞ் சொல்லுகிறேன், உமது கிருபையையும் உமது உண்மையையும் திரளான சபைக்கு அறிவியாதபடிக்கு ஒளியேன்.

௰௧ கர்த்தாவே தேவரீர் உம்முடைய இரக்கங்களை எனக்கு இல்லாமற்போகப்பண்ணாதேயும், உமது கிருபையும் உமது உண்மையும் எப்போதும் என்னைக் காப்பாற்றக்கடவது.

௰௨ ஏனெனில் எண்ணிக்கைக்கடங்காத பொல்லாப்புகள் என்னைச் சூழ்ந்துகொண்டது, என்னுடைய அக்கிரமங்கள் அவைகடங்காத என்னைத் தொடர்ந்து பிடித்தது, அவைகள் என் தலையின் மயிர்களிலும் அதிகமாயிருக்கிறதினால் என்னிருதயம் என்னைவிட்டுப் போயிற்று. ௬௯, சங்கீதம். ௫.

௰௩ கர்த்தாவே என்னை விடுவித்தருளும், கர்த்தாவே எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும். ௨௨, சங்கீ. ௨௰.

௰௪ என் ஆத்துமாவை யழிக்கத் தேடுகிறவர்கள் ஏகமாய் வெட்கி நாணி, எனக்குப் பொல்லாங்கை விரும்புகிறவர்கள் பின்னிட்டு இலச்சையடையக்கடவார்கள். ௭௰, சங்கீதம். ௩௫.

௰௫ என் பேரிலே ஆகா ஆகாவென்கிறவர்கள் தாங்கள் அடையும் வெட்கமானதினாலே திகைத்துப்போகக்கடவார்கள். ௩௫, சங்கீ. ௨௧ ௵

௰௬ உம்மைத் தேடுகிறவர்களெல்லாரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக, உம்முடைய இரட்சிப்பை நேசிக்கிறவர்கள் எப்போதும் கர்த்தர் மகிமைப்படக்கடவாரென்பார்களாக.

௰௭ நான் சிறுமையும் எளிமையுமானவன், கர்த்தரோவெனில் எனக்காக நினைக்கிறார், தேவரீரே என் துணையும் என்னை விடுவிக்கிறவருமாயிருக்கிறீர், என் பராபரனே தாமதியாதேயும். ௬௯, சங்கீ. ௫. ௱௪௯, சங்கீதம். ௨௨.

௪௧. சங்கீதம்.

(தாவீது தரித்திரனுக்கிரங்குகிறவனின் பாக்கியத்தையும் யூதாவாற் காட்டிக்கொடுக்கப்பட்ட கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களுக்கு முன்னடையாளமான தன் உபத்திரவங்களையுங்குறித்துப்பாடினது.)

[இராகத்தலைவனுக் கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

௧ சிறுமைப்பட்டவன்மேலே கவனிப்பாய்ச் சிந்தையுள்ளவன் பாக்கியவான், கர்த்தர் அவனைத் தீங்கு நாளிலே விடுவிப்பார். வாக்கியம். ௰௪, ௨௧.

௨ கர்த்தர் அவனைத் தற்காத்து அவனை உயிரோடே வைப்பார், பூமியின்மேல் பாக்கியவானாயிருப்பான். அவனை அவன் சத்துருக்களின் மனதுக்கு ஒப்புக்கொடீர்.

௩ கட்டிலின்மேல் பிணியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார், அவனுடைய வியாதியிலே அவன் படுக்கையையெல்லாம் மாற்றிப்பண்ணுவீர்.

௪ கர்த்தாவே என்மேலிரங்கும், என் ஆத்துமாவைக் குணமாக்கும், ஏனென்றால் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தேனென்று நான் சொன்னேன். ௬, சங்கீ. ௨. ௫௧, ௬.

௫ எப்போது சாவான், எப்போது அவன் பேர் அழியுமென்று என் சத்துருக்கள் எனக்குப் பொல்லாப்பாய்ச் சொல்லுகிறார்கள்.

௬ என்னை ஒருவன் பார்க்க வந்தால் அவத்தம் பேசுகிறான், அவன் இருதயம் அக்கிரமத்தைப் பொறுக்கிக்கொண்டு வெளியே போய் அதைச் சொல்லுகிறான்.

௭ என்மேல் ஏகமாய் முறுமுறுக்கிறார்கள், என் பகைஞரெல்லாரும் எனக்கு விரோதமாயிருந்து எனக்குப் பொல்லாப்பை நினைத்து,

௮ பேலியாளின் கர்மம் அவனுக்குக் கொட்டிக்கொண்டிருக்கிறது, கிடக்கிற அவன் இனி எழுந்திருப்பதில்லையென்கிறார்கள்.

௯ என்னோடே சமாதானமாயிருந்தவனும் நான் நம்பினவனும் என் அப்பத்தைப் புசித்தவனுமாகிய மனுஷனும் என்மேல் தன் குதிகாலை மிகுதியும் எடுத்தான். யோவான். ௰௩, ௰௮.

௰ ஆனால் கர்த்தாவே நீரெனக்கிரங்கி நான் அவர்களுக்குச் சரிக்கட்ட என்னை எழுந்திருக்கப்பண்ணும்.

௰௧ என் சத்துரு என்மேற் கெம்பீரிக்காமற்போவதினாலே என்மேலே பிரியமாயிருக்கிறீரென்கிறதை அறிவேன்.

௰௨ நானோ என் உண்மையாயிருக்கிறதினாலே நீரென்னைத் தாங்கி என்னை என்றென்றைக்கும் உம்முடைய முகத்துக்கு முன்பாக நிலைநிறுத்துவீர்.

௰௩ இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் தோத்திரிக்கப்பட்டவர், ஆமென் ஆமென். ௭௨. சங்கீதம். ௰௮. ௰௯. ௮௯, சங்கீதம். ௫௨. ௱௬, சங்கீ. ௪௮.

௪௨. சங்கீதம்.

(தாவீது தேவ ஆராதனைக்குப் பங்கில்லாத பரதேசியானதினிமித்தங் கொருசிப் பராபரனை நம்பின செபத்தியானம்.)

[கோராகின் புத்திரருள்ள இராகத்தலைவனுக் கொப்புவிக்கப்பட்ட போதக சங்கீதம்.]

௧ மான் தண்ணீர் நதிகளின்மேல் வாஞ்சையாய்க் கதறுமாப்போலே என் ஆத்துமா உம்மேல் வாஞ்சையாய்க் கதறுகிறது பராபரனே,

௨ என் ஆத்துமா சீவனுள்ள தேவனாகிய பராபரன்மேல் தாகமாயிருக்கிறது, நான் எப்போது பிரவேசித்துப் பராபரனுடைய சந்நிதியிலே காணப்படலாம். ௬௩, சங்கீ. ௨. ௱௪௩. சங்கீ. ௬.

௩ உன் பராபரனெங்கேயென்று அவர்கள் நாடோறுஞ் சொல்லுகையால் இரவும் பகலும் என் கண்ணீர் எனக்கப்பமாயினது. ௭௯, சங்கீ. ௰.

௪ இவைகளை நான் நினைத்துக்கொண்டு எனக்குள்ளிருக்கும் என் ஆத்துமாவை ஊற்றிப்போடுகிறேன், ஏனெனில் முந்தி நான் சம்புகருள்ளே நடந்துவந்து பண்டிகையாசரிக்கிற கூட்டத்தினுடைய கெம்பீரமுந் துதியுமான சத்தத்துடனே பராபரனுடைய வீடுமட்டும் ஏகமாய் ஏகுமவனே.

௫ என் ஆத்துமாவே ஏன் முறிந்துபோய் என்னிலே கொந்தளிக்கிறாய்? பராபரனுக்குக் காத்துக்கொண்டிரு, ஏனெனில் இன்னம் அவரை அவர் சமுகத்தினுடைய இரட்சிப்புகளினிமித்தந் துதிப்பேன். ௪௩. ௫.

௬ என் பராபரனே, என் ஆத்துமா முறிந்துகொண்டிருக்கிறது, ஆகையால் யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும் சிறுமலையிலுமிருந்து உம்மை நினைக்கிறேன்.

௭ உமது மதகுகளின் இரைச்சலால் ஆழத்தை ஆழங் கூப்பிடுகிறது, உம்முடைய வெள்ளங்களும் உமது அலைகளுமெல்லாம் என்மேலே புரளுகிறது.

௮ ஆனால் பகற்காலத்திலே கர்த்தர் தம் கிருபையைக் கட்டளையிடுகிறார், இராக்காலத்தில் என் சீவனுடைய பராபரனை விண்ணப்பஞ்செய்யும் அவருடைய பாட்டு என்னோடிருக்கும்.

௯ நான் என் கன்மலையாகிய பராபரனோடே ஏன் என்னை மறக்கிறீர்? சத்துரு என்னை

யொடுக்குகிறதினாலே நான் ஏன் கரிசுறந்துத் திரியவேணுமென்கிறேன். ௪௨, சங். ௨.

௰ என் பராபரன் எங்கேயென்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி என்னை நிந்திக்கிறது என்னெலும்புகளையுருவும் வாளையாய் எனக்கிருக்கிறது.

௰௧ என்னாத்துமாவே, ஏன் முறிந்துகொண்டிருக்கிறாய்? ஏன் என்னிற்கொந்தளிக்கிறாய்? பராபரனுக்குக் காத்துக்கொண்டிரு, ஏனெனில் இன்னம் அவரையென் முகத்தின் குறையற்ற இரட்சிப்பென்றும் என் பராபரனென்றும் துதிப்பேன். ௫. வசனம். ௪௩, சங்கீதம். ௫.

௪௩. சங்கீதம்.

[முந்தின சங்கீதத்துக்கொத்த சங்கீதம்.]

பராபரனே, நீரென்னை நியாயம் விசாரித்துச் சன்மார்க்கமில்லாத சாதியென்னை விலக என் வழக்கை வழக்காடிச் சூதும் அநியாயமுமான மனுஷனுக்கென்னைத் தப்புவியும். ௨௫, சங். ௧.

௨ ஏனெனில் தேவரீர் என் பெலனாகிய பராபரன், ஏனென்னைத் தள்ளிவிடுகிறீர்? சத்துரு என்னை யொடுக்குகிறதினாலே நான் ஏன் கரிக்குற்றுத் திரியவேணும்? ௪௨, சங். ௰.

௩ உம்முடைய வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையுமனுப்பும், அவைகள் என்னை நடத்தி என்னையும் பரிசுத்த பருவதத்துக்கும் உமது வாசஸ்தலங்களுக்குங் கொண்டுபோகவும். ௰௫, சங். ௧.

௪ நான் பராபரனுடைய பீடத்தண்டைக்கும் என் களிகூருதலான மகிழ்ச்சியின் பராபரனண்டைக்கும் பிரவேசித்து என் தெய்வமாகிய பராபரனே, உம்மைச் சுரமண்டலத்தாலே துதிக்கவுந்தானே.

௫ என்னாத்துமாவே, ஏன் முறிந்துகொண்டிருக்கிறாய்? ஏன் என்னிற்கொந்தளிக்கிறாய்? பராபரனை நம்பு, ஏனெனில் இன்னம் அவரையென் முகத்தின் குறையற்ற இரட்சிப்பென்றும் என் பராபரனென்றும் துதிப்பேன். ௪௨, சங். ௫. ௰௨.

௪௪. சங்கீதம்.

(சபை, பராபரன் முன் தனக்குச் செய்த அநுகூலங்களை நினைத்துக்கொண்டு இப்போது அநுபவிக்கிற நிர்ப்பந்தத்தினிமித்தங் கெஞ்சுகிறது.)

[கோராகின் புத்திரரில் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட போதகசங்கீதம்.]

பராபரனே பூருவ நாட்களாகிய தங்கள் நாட்களில் நீர் நடப்பித்த கிரியையை எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்தார்கள், அதை யெங்கள் காதுகளாலே கேட்டோம்.

௨ தேவரீர் உம்முடைய கையினாலே சாதிகளைத் துரத்தி இவர்களை நாட்டிச் சனத்திரங்களைத் துன்பப்படுத்தி அவைகளைத் தள்ளிவிட்டீர்.

௩ ஏனெனில் அவர்கள் தங்கள் பட்டயத்தாலே தேசத்தைக் கட்டிக்கொண்டதில்லை, அவர்கள் புயமுமல்ல உம்முடைய வலதுகரமும் உம்முடைய புயமும் உம்முடைய முகத்தின் வெளிச்சமும் அவர்களை இரட்சித்தது, ஏனெனில் அவர்கள் மேலே பிரியமாயிருந்தீர்.

௪ பராபரனே தேவரீரே என் இராசாவானவர், யாக்கோபின் குறையற்ற இரட்சிப்பைக் கட்டளையிடும்.

௫ உம்மாலே எங்கள் சத்துருக்களை முட்டுவோம், எங்கள் மேல் எழுகிறவர்களை உம்முடைய நாமத்தினாலே மிதிப்போம். ௬௰, சங். ௰௪. ௱௮, சங். ௰௪.

௬ ஏனெனில் என் வில்லை நம்பேன், என் பட்டயம் என்னை இரட்சிப்பதுமில்லை.

௭ நீரோவெனில் எங்கள் சத்துருக்களுக்கு எங்களை நீங்கலாக இரட்சித்து எங்களைப் பகைக்கிறவர்களை வெட்கப்படுத்தினீர்.

௮ பராபரனுக்குள் நித்தம் மேன்மை பாராட்டுகிறோம், உம்முடைய நாமத்தை யென்றென்றைக்குந் துதிப்போம், சேலா.

௯ இப்போதோவெனில் நீரெங்களைச் சேனைகளுடனே புறப்படாமல் எங்களைத் தள்ளிவிட்டு நாணப்பண்ணுகிறீர். ௱௮, சங். ௰௨.

௰ எங்களைச் சத்துருவுக்கிடைந்து பின்னிட்டுத் திரும்பப்பண்ணுகிறீர் எங்கள் பகைஞர் தங்களுக்கென்று கொள்ளையாடுகிறார்கள்.

௰௧ நீரெங்களை ஆடுகளைப்போல இரையாக ஒப்புக்கொடுத்துச் சாதிகளுக்குள்ளே எங்களைச் சிதறடிக்கிறீர்.

௰௨ உம்முடைய சனத்தை இலவசமாக விற்கிறீர், அவர்களைக் கிரயப்படுத்துகிறதினாலே வரப்படாதே போகிறீர்.

௰௩ எங்களை யெங்கள் அயலாருக்கு நிந்தையும் எங்கள் சுற்றுப்புறத்தாருக்குப் பரியாசமுஞ் சக்கந்தமுமாக வைக்கிறீர். ௭௯, சங். ௪.

௰௪ எங்களைச் சாதிகளுக்குள்ளே பழமொழியாகவுஞ் சனசதளங்களுக்குள்ளே தலை அசைக்குதலாகவும் வைக்கிறீர்.

௰௫ சத்துருவையுங் குரோதந் தீர்த்துக்கொள்ளுகிறவனையுந் தொட்டு நிந்தித்துத் தூஷணிக்கிறவனுடைய சத்தத்தினாலே,

௰௬ நித்தம் என் இலச்சை எனக்குமுன்பாக இருக்கிறது, என் முகத்தின் வெட்கம் என்னை மூடுகிறது.

௰௭ இதெல்லாம் எங்களுக்கு வந்திருந்தும் உம்மை நாங்கள் மறந்ததுமில்லை உம்முடைய உடம்படிக்கைக்குத் திருகுபண்ணினதுமில்லை.

௰௮ நீர் எங்களை வலுசர்ப்பங்களுள்ள ஸ்தலத்திலே நசுக்கி, மரண நிழலினாலே எங்களை மூடியிருந்தும்,

௰௯ எங்கள் இருதயம் பின்வாங்கினதுமில்லை, எங்கள் காலடி உம்முடைய பாதையைவிட்டு விலகினதுமில்லை.

௨௰ நாங்கள் எங்கள் பராபரனுடைய நாமத்தை மறந்து எங்களுள்ளங்கைகளை அன்னியதேவருக்கு விரித்திருந்தோமானால்,

௨௧ பராபரன் அதை ஆராய்ந்து விசாரியாதிருப்பாரோ? ஏனெனில் அவர் இருதயத்தின் அந்தரங்கங்களை அறிந்திருக்கிறார்.

௨௨ ஆனால் உம்முடைய நிமித்தம் நாங்கள் நாடோறுங் கொலைசெய்யப்பட்டு அடிக்கப்படும் ஆடுகளைப்போலே எண்ணப்பட்டிருக்கிறோம். றோமர். ௮, ௩௬.

௨௩ ஆண்டவரே விழித்துக்கொள்ளும், ஏன் நித்திரைபண்ணுகிறீர், எங்களையென்றைக்குந் தள்ளிவிடாமல் எழும்பும்.
மத்தேயு. ௮, ௨௪. ௨௫.

௨௪ ஏன் உம்முடைய முகத்தை மறைத்து எங்கள் சிறுமையையும் எங்கள் ஒடுக்குதலையும் மறப்பீர்.

௨௫ ஏனெனில் எங்கள் ஆத்துமா புழுதிமட்டாகக் குனியப்பட்டு எங்கள் வயிறு தரையோடொட்டியிருக்கிறது.

௨௬ எங்களுக்கொத்தாசையாக எழுந்திருந்து உம்முடைய கிருபையினிமித்தம் எங்களை மீட்டுவிடும்.

௪௫. சங்கீதம்.

(ஞானமணவாளனாகிய கிறிஸ்துவையும் யூதசாதியாரும் புறச்சாதியாருமாகிய விசுவாசிகளின் சபையென்ற அவருடைய ஞானமணவாட்டியையுங் காண்பிக்கிற தீர்க்கதரிசனம்.)

[ஆறுநரம்பு கின்னரத்திலே வாசிக்கக் கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட சிநேகப்பாட்டாகிய போதகசங்கீதம், உன்னதப்பாட்டு.]

௧ என்னிருதயம் நல்லவிசேஷத்தைப் பூரித்திடும், நான் கவிகட்டுகிறது இராசாவின்பேரிலேதானென்கிறேன், என் நாவு தேறின கணக்கனுடைய எழுத்தாணி. கொலோ.
௩, ௰௬.

௨ எல்லா மனுப்புத்திரரிலும் மகா அழகாயிருக்கிறீர், கிருபை உம்முடைய உதடுகளில் ஊற்றியிருக்கிறது, ஆகையாற் பராபரன் உம்மையென்றென்றைக்கும் ஆசீர்வதிக்கிறார். உன்னதப்பா. ௫, ௰. லூக். ௪, ௨௨.

௩ சவுரியவானே, உமது மகிமையும் உமது மகத்துவமுமாகிய உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக்கொண்டு,

௪ சத்தியத்தினிமித்தமாகவும் நீதியான சாந்தத்தினிமித்தமாகவும் உமது மகத்துவத்திலே செயமாய் ஏறிவாரும், உமது வலதுகரம் பயங்கரமானவைகளை உமக்குப் படிப்பிக்கும். அறிவிப்பு. ௰௯, ௰௧—௰௬.

௫ உம்முடைய அம்புகள் கூர்மையாயிருக்கிறது, சனசதனங்கள் உமக்குக் கீழ்விழுவார்கள், அவைகள் இராசாவுடைய சத்துருக்களின் இருதயத்துக்குட்படும்.
௱௰, சங்கீதம். ௬.

௬ பராபரனே, உம்முடைய இராசாசனம் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாக நிற்கும், உமது இராசரியத்தின் செங்கோல் செம்மையான செங்கோலாயிருக்கிறது. தானி. ௭, ௰௪. எபிரேயர். ௧, ௮. ௯.

௭ நீதியைச் சிநேகித்து அக்கிரமத்தைப் பகைத்திருக்கிறீர், ஆகையினாலே பராபரனே, உம்முடைய பராபரன் உமது தோழரைப்பார்க்கிலும் உம்மை மகிழ்ச்சியின் எண்ணெயினாலே அபிஷேகம்பண்ணினார்.
யோவான். ௩, ௩௪. ௩௫. அப். ௰, ௩௮.

௮ நீர் மகிழ்ச்சிபொருந்தின தந்த அரண்மனைகளிலிருந்து புறப்படுகையில் உமது வஸ்திரங்களெல்லாம் வெள்ளைப்போளஞ் சந்தனங்காசியாவுமான வாசனையாயிருக்கிறது.

௯ உமது நாயகிகளுக்குள்ளே அரசரின் குமாரத்திகளுண்டு, இராசாத்தி உம்முடைய வலதுபாரிசத்திலே ஓப்பீரின் தங்கம் அணிந்தவளாய் நிற்கிறாள். உன். ௬, ௭. ௮.
அறிவிப்பு. ௰௯, ௭—௯; ௨௧, அதி. ௨.

௰ குமாரத்தியே, நீ கேட்டுப்பார்த்து உன் செவியைச் சாய்த்து உன் சனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துபோ.
லூக்கா. ௰௪, ௨௬.

௰௧ அப்போது இராசா உன் அழகுக்கு விருப்பமாவார், ஏனென்றால் அவர் உன் ஆண்டவராயிருக்கிறார், ஆகையால் அவரைப் பணிந்துகொள். உன்னதப்பா. ௪, ௧

௰௨ அப்போது தீருகுமாரத்தியுஞ் சனத்தின் ஐசுவரியவான்களும் வெகுமானங்கொண்டுவந்து உன் முகத்துக்கு முன்பாக வருந்துவார்கள். ௭௨, சங். ௰. அறி. ௨௧, ௨௪.

௰௩ இராசாவின் குமாரத்தி உள்ளாக முற்றிலும் மகிமையானவள், அவள் உடுப்புப் பொற்சரிகை அலங்காரமானது. ௧. பேது.
௩, ௩. ௪.

௰௪ சித்திரத் தையலாடைகளுடனே இராசாவண்டைக்குக் கொண்டுவரப்படுவாள், அவள் தோழிகளாகிய கன்னியாஸ்திரீகள் அவள் பிறகாலே வருவார்கள். அவர்கள் உன்னண்டைக்குக் கூட்டிக்கொள்ளப்படுவார்கள்.

௰௫ மகிழ்ச்சிகளோடும் களிகூருதலோடும் கொண்டுவரப்பட்டு இராசாவின் அரண்மனைக்குட் பிரவேசிப்பார்கள்.

௰௬ உன் பிதாக்களுக்குப் பதிலாக உன் பிள்ளைகளிருப்பார்கள், அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பாய்.

௰௭ உம்முடைய நாமத்தை யெல்லாத் தலைமுறைகளிலும் பிரஸ்தாபப்படுத்துவேன். இவைகள் நிமித்தமாகச் சனசதளங்கள் உம்மையென்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலுந் துதிப்பார்கள்.

௪௬. சங்கீதம்.

(பராபரனுடைய மறைவிலிருக்கிற சபை யெல்லாத் துன்பங்களிலும் நிலைநின்று தேவ இரட்சிப்பை யேற்றவேளையில் காணுமென்பது.)

[அலமோத்தில் வாசிக்கக் கோராகின புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்டபாட்டு.]

பராபரனே நமக்கடைக்கலமும் பெலனுமாய் நெருக்கங்களிற் பரிபூரணமாய்க் கண்டடைக்கப்பட்ட அனுகூலமுமானவர். ௬௨, சங் ௧. ௨. உபாகமம். ௩௩. ௨௭.

௨ ஆகையாற் பூமி நிலைமாறினாலும் மலைகள் நடுச்சமுத்திரங்களிலே சாய்ந்தாலும்,

௩ அவைகளின் சலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அவைகள் பெருக்கத்தினாலே பருவதங்கள் அதிர்ந்தாலும் பயப்படோம். சேலா. ஆக்கா. ௨௪, ௨௫. ௨௬.

௬, சங்கீதம். ௭. ௨௭, சங்கீதம். ௩.

௪ ஆறும் அதின்நீர்க்கால்களும் பராபரனுடைய பட்டணத்தையும் உன்னதமானவருடைய கூடாரங்களின் பரிசுத்த ஸ்தலத்தையுஞ் சந்தோஷிப்பிக்கும் சகரி. ௰௪, ௮.

௫ பராபரன் அதின் நடுவிலிருக்கிறார் அது அசையாது, விடியற்காலமாகுகையிற் பராபரன் அதற்குச் சகாயம்பண்ணுவார்.

௬ சாதிகள் கொந்தளித்து இராச்சியங்கள் அசைந்தது, அவர் தமது முழக்கத்தாற் சத்தமிடுகையிற் பூமியுருகும்.

௭ சேனைகளுடைய கர்த்தர் நம்மோடு கூடவிருக்கிறார், யாக்கோபுடைய பராபரன் நமக்குயர்ந்த அடைக்கலமானவர். சேலா. ரோமர். ௮, ௩௧.

௮ பூமியிலே பாழ்க்கடிக்குதலை நடப்பிக்கிற கர்த்தருடைய செய்கைகளை வந்துபாருங்கள். ௬௬, சங்கீதம். ௫.

௯ அவர் பூமியின் கடைமுனைமட்டும் யுத்தங்களை ஓய்ப்பண்ணுகிறவர், வில்லையொடித்து ஈட்டியை முறிக்கிறார், இரதங்களை நெருப்பினாலே சுட்டெரிக்கிறார். ௭௬, சங். ௩.

௰ நீங்கள் ஓய்ந்திருந்து நாம் பராபரனென்றறியுங்கள், சாதிகளுக்குள்ளுயர்ந்திருப்போம் பூமியிலேயுயர்ந்திருப்போம்.

௰௧ சேனைகளுடைய கர்த்தர் நம்முடனே கூடவிருக்கிறார், யாக்கோபுடைய பராபரன் நமக்குயர்ந்த அடைக்கலமானவர். சேலா.

௪௭. சங்கீதம்.

(பரமண்டலங்களுக்கும் பூமியின்மீதெங்கும் இராசரிக்கப்பண்ணுபவராகிய கிறிஸ்துவுக்கடுத்த தீர்க்கதரிசனம்.)

[கோராகின புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட சங்கீதம்.]

சகலசனசதளங்களே, கைகொட்டிப் பராபரனுக்குக் கெம்பீரசத்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

௨ ஏனெனில் உன்னதமானவராகிய கர்த்தர் பயங்கரமானவரும், பூமியின்மீதெங்கும் பெரிய இராசாவுமாயிருக்கிறார்.

௭௨, சங்கீதம் ௮.

௩ நமக்குச் சனசதளங்களையும் நம்முடைய கால்களுக்குச் சாதிகளையுங் கீழ்ப்படுத்துவார்.

௪ நமக்குத் தாஞ்சிநேகித்த யாக்கோபின் முக்கியமாகிய நம்முடைய சுதந்தரத்தைத் தெரிந்துகொடுப்பார். சேலா.

௫ பராபரன் ஆர்ப்பரிப்போடும், கர்த்தர் எக்காளசத்தத்தோடும் ஏறுகிறார்.

௬ பராபரனைக் கீர்த்தனத்தினமேற் கீர்த்தனம்பண்ணுங்கள். நம்முடைய இராசாவைக் கீர்த்தனத்தினமேற் கீர்த்தனம்பண்ணுங்கள். ஏசாயா. ௰௨, ௫. ௬.

௭ ஏனெனிற் பராபரன் பூமியனைத்துக்கும் இராசா, போதசசங்கீதத்தால் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.

௮ பராபரன் சாதிகள்மேல் இராசரிகம்பண்ணுகிறார், பராபரன் தம்முடைய பரிசுத்த ஆசனத்தின்மீதிலிருக்கிறார்.

௯ சனசதளங்களின் பிரபுக்கள் ஆபிரகாமுடைய பராபரனின் சனமாய்ச்சேர்க்கப்படுகிறார்கள், ஏனெனிற் பூமியின் கேடகங்கள் பராபரனுடையது, அவர் மிகுந்த உயர்ந்தவர். ௮௨, சங்கீதம். ௮.

௪௮. சங்கீதம்.

(கிறிஸ்துவினுடைய சபையென்ற எருசலேம் பட்டணத்தினுடைய மகிமை.)

[கோராகின புத்திரருக்கொப்புவிக்கப்பட்ட சங்கீதப்பாட்டு.]

நம்முடைய பராபரனுடைய பட்டணத்திலுந் தம்முடைய பரிசுத்த பருவதத்திலுங் கர்த்தர் பெரியவரும் மிகுதியாய்த் தோத்திரிக்கப்பட்டவருமாயிருக்கிறார்.

௯௫, சங்கீ. ௩.

௨ சீயோன் பருவதமும் வடபுறங்களிலுள்ள மகா இராசாவின் பட்டணமும் வடிவ

பமான சீயோன் பர்வதம் சருவபூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. மத்தே ௫. ௩௫.

௩ அதின் அரண்மனைகளில் பராபரன் உயர்ந்த அடைக்கலமாக அறியப்பட்டிருக்கிறார்.

௪ ஏனெனில் இதோ இராசாக்கள் கூடிக்கொண்டு ஏகமாய்க் கடந்துவந்தார்கள்.

௫ அவர்கள் அதைப்பார்க்குமளவில் பிரமித்துக்கலங்கித் தீவிரமாய்த் தெறித்துப்போனார்கள்

௬ நடுக்கமுஞ் சொற்பவதியின் வேதனைக்குச் சரியான வேதனையும் அங்கே அவர்களைப்பிடித்தது.

௭ கிழக்காற்றினால் தற்சீசின் கப்பல்களையுடைக்கிறீர். ஏசாயா. ௨, ௰௬—௰௭.

௮ நாம் கேட்டிருக்கிறதற்குச் சரியாய்ச் சேனைகளுடைய கர்த்தரின் பட்டணத்திலே கண்டோம், நம்முடைய பராபரனுடைய பட்டணத்திலேதானே பராபரன் அதை என்றென்றைக்கும் உறுதிப்படுத்துவார். சேலா.

௯ பராபரனே உம்முடைய தேவாலயத்தின் நடுவிலே உமது கிருபையைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்.

௰ பராபரனே உமது நாமம் எப்படியிருக்கிறதோ அப்படி உமது புகழ்ச்சியும் பூமியினுடைய கடையாந்தரங்கள் பரியந்தமிருக்கிறது, உமது வலதுகரம் நீதியால் நிறைந்திருக்கிறது.

௰௧ உம்முடைய நியாயத்தீர்ப்புகளினிமித்தஞ் சீயோன் பருவதம் மகிழ்ந்து யூதாவின் குமாரத்திகள் களிகூருவதாக.

௰௨ சீயோனைச் சுற்றி அதை வளைந்து வாருங்கள், அதின் கொம்மைகளை யெண்ணுங்கள்

௰௩ நீங்கள் பிற்சந்ததிக்கு விவரிப்பதற்காக அதின் அலங்கத்தின்மேல் உங்கள் மனஸ்ஸை வைத்து அதின் அரண்மனைகளை யொவ்வொன்றாய்க் கவனியுங்கள்.

௰௪ ஏனென்றால் இந்தப் பராபரன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய பராபரனாயிருக்கிறார், அவர் நம்மை மரணத்தைக்கடக்க அழைத்துக்கொண்டுபோவார்.

௪௯. சங்கீதம்.

(தலைவர்களை யொடுக்குகிற பிரவஞ்சத்தாருடைய வாழ்வும் மகிமையும் அநித்தியமென்பது.)

[கோராகின் புத்திரரிலுள்ள இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட சங்கீதம்.]

௧ சனத்திரள்களாகிய நீங்களெல்லாரும் இதைக்கேளுங்கள்.

௨ சிறியோரும் பெரியோரும் ஐசுவரியவான்களும் எளியவர்களுமாகிய உலகக்குடிகளெல்லாரும் ஏகமாய்ச் செவிகொடுங்கள்.

௩ என் வாய் ஞானங்களைப் பேசும் என் இருதயத்தின் தியானம் புத்தியுள்ளதாயிருக்கும்.

௪ என் செவியை உவமைமொழிக்குச் சாய்த்து என் புதைபொருளைச் சுரமண்டலத்தால் வெளிப்படுத்துவேன். ௭௮, சங்கீ. ௨.

௫ தங்கள் ஆஸ்தியை நம்பித் தங்கள் திரளான ஐசுவரியத்தினாலே பெருமைபாராட்டி,

௬ என்னை யொடுக்குகிறவர்களுடைய அக்கிரமம் என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற தீங்குநாட்களில் ஏன் பயப்படுவேன்.

௭ இனி என்றைக்கும் அழிவைக்காணாமல் உயிரோடிருக்கும்படிக்கு,

௮ அவர்களில் ஒருவன் தன் சகோதரனை மீட்கவே மீட்கவும் அவனை மீட்கும்பொருளைப் பராபரனுக்குக் கொடுக்கவும் மாட்டான்.

௯ ஏனெனில் அவர்கள் ஆத்தும மீட்பு என்றைக்கும் நடவாதபடிக்கு விலையுயர்ந்ததாயிருக்கிறது. மத். ௰௬, ௨௬.

௰ ஏனென்றால் ஞானிகளும் மரித்து நிர்மூடனும் மிருகத்தனமுள்ளவனும் ஏகமாய் அழிந்து தங்கள் ஆஸ்தியை வேறே மனுஷருக்குப்பின் வைத்துப்போகிறதைக் காண்பான்.

௰௧ தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவுந் தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்கவேணுமென்பது அவர்கள் உள்ளத்தின் ஆசையாயிருக்கிறது. அவர்கள் தங்கள் நாமங்களைப் பூமிகளுக்குத் தரிக்கிறார்கள்.

௰௨ ஆகிலும் அந்த முக்கியத்தோடிருக்கிற மனுஷன் அதிலே தங்கித் தரியாமல் அழிந்துபோகிற மிருகங்களுக்குச் சமானமாயிருக்கிறான்.

௰௩ அவர்களுடைய இந்த வழி அவர்களுடைய பயித்தியமாயிருக்கிறது, அவர்கள் பின்னடியாரும் அவர்கள் வாய்ப்பிறப்புக்குப் பிரியப்படுகிறார்கள். சேலா.

௰௪ ஆடுகளைப்போலே நரகத்திலே கிடத்தப்படுகிறார்கள், மரணம் அவர்களை மேயும். ஆனாற் செம்மையானவர்கள் விடியற்காலத்திலே அவர்களை ஆண்டுகொள்ளுவார்கள், அவர்கள் தங்கள் வாசஸ்தலத்திலிருந்து நிலைத்திருக்கக்கூடாத அவர்களுடைய உருவைப் பாதாளம் அழிக்கும். மாற். ௯, ௪௪. மலகி. ௪, ௧. ௩.

௰௫ ஆனால் என் ஆத்துமாவைப் பராபரன் நரகத்தின் வல்லமைக்குத் தப்புவித்து மீட்பார், ஏனெனில் என்னை அவர் சேர்த்துக்கொள்ளுவார். சேலா. ௭௩, சங்கீ. ௨௪.

௰௬ ஒருவன் ஐசுவரியவானாகி அவன் வீட்டின் மகிமை பெருகும்போது பயப்படாதே.

௰௭ ஏனெனில் அவன் தன் மரணத்தில் ஒன்றும் எடுத்துப்போவதில்லை, அவன் மகிமை அவனைப் பின்சென்று இறங்குவதில்லை.

௰௮ அவன் உயிரோடிருக்கையிலே தன் ஆத்துமாவை ஆசீர்வதித்தாலும், உனக்கு நீ நன்மைசெய்கிறாயென்று மனுஷர் அவனைப் புகழ்ந்தாலும், ஆக்கா. ௰௨, ௰௯.

௰௯ அது என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணாத் தன் பிதாக்களின் சந்ததியைச் சேரும்.

௨௰ மகிமையுற்றும் புத்தியற்றுமிருக்கிற மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்குச் சமானமாயிருக்கிறான்.

௫௰. சங்கீதம்.

(கர்த்தர் இஸ்ரவேல் சனத்திலுள்ள நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் தேவ ஆராதனையைக் குறித்துச் சொல்லுகிற நியாயம்.)

[ஆசாபின் சங்கீதம்.]

வல்லமையுள்ள பராபரனாகிய கர்த்தர் வசனித்துச் சூரியனுதிக்குந் திசை துவக்கி அது அஸ்தமிக்குந் திசைமட்டுமுள்ள பூமியைக் கூப்பிடுகிறார்.

௨ பூரணவடிவுள்ள சீயோனிலிருந்து பராபரன் பிரகாசிக்கிறார்.

௩ நம்முடைய பராபரன் மவுனமாயிராமல் வருவார், அவருக்குமுன்னாலே அக்கினி எரிக்கும், அவரைச் சுற்றிலும் மகா புசல் கொந்தளிப்பாயிருக்கும். ௯௭, சங்கீ. ௩௰.

௪ அவர் தம்முடைய சனத்தை நியாயந்தீர்க்க உயரவிருக்கும் வானங்களையும் பூமியையுங் கூப்பிடுவார்.

௫ பலியின் மேற் பண்ணப்பட்ட நம்முடைய உடம்படிக்கைக்குள்ளாயிருக்கிற நம்முடைய பரிசுத்தவான்களை நமக்குக் கூட்டுங்கள் என்பார்.

௬ அப்போது வானங்கள் அவருடைய நீதியை அறிவிக்கும், ஏனெனில் பராபரனே நியாயாதிபதி. சேலா.

௭ நம்முடைய சனமே கேள், நாம் பேசுவோம் இஸ்ரவேலே நாம் உனக்குள்ளே சாட்சியிலங்கப்பண்ணுவோம், உன் தேவனாகிய பராபரன் நாமே. ௮௧, சங்கீ. ௰. ௰௧.

௮ உன் பலிகளினிமித்தம் உன்னைக் கடிந்துகொள்வோம், ஏனெனில் உன் துசருவாங்கத்தனங்கள் எப்போதும் நமக்குமுன்பாகவிருக்கிறது.

௯ நாம் உன் வீட்டிலிருந்து காளைகளையும் உன் தொழுவங்களிலிருந்து ஆட்டுக்கடாய்களையும் வாங்கிக்கொள்வதில்லை.

௰ ஏனெனிற் சகல காட்டுச் சீவன்களும் பருவதங்களில் ஆயிரங்களாயத் திரிகிற மிருகங்களும் நம்முடையதே.

௰௧ மலைகளிலுள்ள பறவையினங்களையும் அறிவோம், வெளியில் நடமாடுகிறவைகள் நம்முடைய வசமாமே.

௰௨ பசியாயிருந்தோமானால் உனக்குச் சொல்லோம் ஏனெனிற் பூச்சக்கரமும் அதினிறைவும் நம்முடையதே. ௨௪, சங்கீ. ௧.

௰௩ எருதுகளின் மாமிசம் பொசித்து ஆட்டுக்கடாய்களின் இரத்தங் குடிப்போமோ.

௰௪ நீ பராபரனுக்குத் தோத்திரத்தைப் பலியிட்டு உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஓசியா. ௧௪, ௰௬. ௰௯. ௰௭.

௰௫ நெருக்கப்படுகிற நாளிலே நம்மை நோக்கிக் கூப்பிடு அப்போது உன்னை விடுவிப்போம் அதற்காக நீ நம்மை மகிமைப்படுத்தக்கடவாய்.

௰௬ ஆனால் ஆகாதவனுக்குப் பராபரன் சொல்லுகிறதாவது, நீ நமது பிரமாணங்களைச் சொல்லவும், நமதுடம்படிக்கையை உன் வாயிலெடுக்கவும் உனக்கென்ன நியாயமிருக்கிறது.

௰௭ கடிந்துகொள்ளுதலை நீ பகைத்து நம்முடைய வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாயே.

௰௮ நீ திருடனைக் கண்டால் அவனோடொருமித்துப் போகிறாய் விபசாரரோடே உனக்குப் பங்கிருக்கின்றது.

௰௯ உன் வாயைப் பொல்லாப்புக்குத் திறந்துவிடுகிறாய், உன் நாவு சற்பனையைப் பிணைக்கும்.

௨௰ நீ உட்கார்ந்து உன் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி உன்னுடைய தாயின் மகனுக்கு அவதூறுண்டாக்குகிறாய்.

௨௧ இவைகளை நீ செய்யும்போது மவுனமாயிருந்தோம், உன்னைப்போல நிருக்கவேயிருப்போமென்று நினைவுகொண்டாய், ஆனால் நாம் உன்னைக் கண்டித்துக்காட்டி உன் கண்களுக்குமுன்பாக ஒவ்வொன்றாக நிறுத்துவோம்.

௨௨ பராபரனை மறக்கிறவர்களே, விடுவிக்கிறவனில்லாமல் நாம் பீறிப்போடாதபடிக்கு இதையுணர்ந்துகொள்ளுங்கள்.

௨௩ தோத்திரத்தைப் பலியிடுகிறவன் நம்மை மகிமைப்படுத்துகிறான், இப்படி வழியை ஆயத்தப்படுத்துகிறவனுக்குப் பராபரனுடைய இரட்சிப்பைக் காண்பிப்போம்.

௫௧. சங்கீதம்.

(தன் பாவத்தினிமித்தம் மனஸ்தாபப்பட்ட தாவீதின் விண்ணப்பம்.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

பத்சேபாளிடத்திற் பிரவேசித்திருந்த அவனண்டைக்கு நாத்தான் தீர்க்கதரிசி வந்தபோது அவன்பாடினது.

௨. சாமுவேல். ௰௨, ௧. ௰௪.

௨ பராபரனே, உம்முடைய கிருபையின்படி எனக்கிரங்கி உமது மிகுந்த இரக்கங்களின்படியே என்மீறுதல்களை நீக்கி என்னைச் சுத்திகரியும்.

௩ என் அக்கிரமம் நீங்க என்னை மிகவுங் கழுவி என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

௪ ஏனெனில் என்மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்போதும் எனக்குமுன்பாக நிற்கிறது.

௫ தேவரீர் ஒருவருக்குவிரோதமாக நான் பாவஞ்செய்து உம்முடைய கண்களுக்குமுன்பாகப் பொல்லாப்பானதைச் செய்தேனென்கிறதை நீர் உம்முடைய வசனங்களில் நீதிவிளங்கவும் உமது நியாயத்தீர்ப்பிற் சுத்தம் விளங்கவும் அறிக்கையிடுகிறேன். ரோமர். ௩, ௪.

௬ இதோ துற்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்திலே கெர்ப்பந்தரித்தாள். வாக்கியம். ௨௰, ௯. யோவா. ௩, ௪.

௭ இதோ உள்ளத்தில் உண்மையிருக்க நீர் விரும்புகிறீர், இரகசியத்திலே ஞானத்தை யெனக்குத்தெரியப்படுத்துவீராக.

௮ நான் சுத்தமாவதற்கு நீர் ஈசோப்பால் என்னைப் பாவமறப்பண்ணி நான் உறைந்த மழையிலும் வெண்மையாவதற்கு என்னைக்கழுவுவீராக. ௩. மோசே. ௰௪, ௨. ௭.

௯ எனக்குச்சந்தோஷமும் மகிழ்ச்சியுங் கேட்கப்பண்ணும், அப்போது நீர்நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

௰ என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமதுமுகத்தைமறைத்து என்மீறுதல்களையெல்லாம் நீக்கும்.

௰௧ சுத்த இருதயத்தையெனக்குச்சிஷ்டியும், பராபரனே நிலவரமான ஆவியை என் உள்ளத்திலே புதிதாய் உண்டாக்கும்.

௰௨ உம்முடையமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை யென்னிடத்திலிருந்தெடுத்துக்கொள்ளாமலும் இரும்.

௰௩ உம்முடைய இரட்சிப்பின் சந்தோஷத்தை எனக்குத்திரும்பக் கட்டளையிடும், உச்சாயமான ஆவி என்னைத் தாங்கட்டும்,

௰௪ அப்போது பாதகருக்கு உமது வழிகளையுபதேசிப்பேன், பாவிகள் உம்மண்டைக்குத்திரும்புவார்கள்.

௰௫ என் இரட்சிப்பின் தேவனாகிய பராபரனே இரத்தப்பழிகளுக்கென்னை நீங்கலாக்கிவிடும், அப்போது என் நாவு உம்முடைய நீதியைக்கெம்பீரித்துப்பாடும்.

௨. சாமுவேல். ௰௨, ௯.

௰௬ ஆண்டவரே என் உதடுகளைத்திறவும், அப்போது என் வாய் உம்முடைய துதியையறிவிக்கும்.

௰௭ ஏனெனில் பலியைவிரும்பீர் மற்றப்படி அதைச்செலுத்துவேன், சருவாங்கதகனபலி உமக்குப்பிரியமானதல்ல.

௪௰, சங்கீதம். ௭.

௰௮ பராபரனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், பராபரனே நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தைப்புறக்கணியீர். ஏசா. ௫௭, ௰௫.

௰௯ சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும், எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

௨௰ அப்போது சர்வாங்கதகனமும் முழுத்தகனமுமான நீதியின்பலிகளுக்குப்பிரியப்படுவீர், அப்போது உம்முடையபீடத்தின்மேலே காளையெருதுகளைப் பலியிடுவார்கள்.

௫௨. சங்கீதம்.

(அவதூறுக்காரனைக்கண்டிக்குஞ் சங்கீதம்.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின்போதகசங்கீதம். தாவீது அகிமெலேகின் வீட்டுக்கு வந்தானென்றும் எதோமியனாகிய தோவேக்வந்து சவுலுக்கறிவித்தபோதுபாடினது. ௧. சாமுவே. ௨௨, ௯. ழ]

பலவானே பொல்லாப்பைச் செய்து என்பெருமைபாராட்டுகிறாய்? பராபரனுடைய கிருபை நாள்தோறுமுள்ளது.

௧. சாமுவேல். ௨௧, ௭.

௨ கூர்மையாக்கப்பட்ட கபடுசெய்கிற சவரகனகத்தியைப்போலே உன் நாக்குக் கேடுகளையெத்தினம்பண்ணுகிறது.

௫௭. சங்கீ. ௫. வாக்கி. ௰௮, ௮.

௩ நன்மையைப்பார்க்கத் தீமையையும் நிதானம்பேசுகிறதைப்பார்க்கப் பொய்யையும் நேசிக்கிறாய். சேலா.

௪ விழுங்குகிறதற்கான சகலவார்த்தைகளையுங் கபட நாக்கையும் நேசிக்கிறாய்.

௫ பராபரன் உன்னையும் என்றென்றைக்கும் நிர்மூலமாக்குவார், அவர் உன்னைப் பிடித்து உன்னைக் கூடாரத்திலிருந்துபிடுங்கி உன்னைச்சீவனுள்ளோருடையபூமியிலிராதபடிக்குவேரற்றுப்போகப்பண்ணுவார். சேலா.

௬ அதை நீதிமான்கள் கண்டுபயந்து அவனை நகைத்து,

௭ இதோ பராபரனைத் தன் பெலனாக வைக்காமல் தன் ஐசுவரியத்திரட்சியை நம

பிரதான நிலைமையிலே பலத்துக்கொண்ட மனுஷனென்பார்கள். எரேமி. ௰௭, ௫ ௬. ௪௯, சங்கீதம். ௬. ௭.

௮ நானோவென்றால் பராபரனுடைய வீட்டிலே பச்சையான ஒலிவமரத்தைப்போலிருப்பேன், பராபரனுடைய கிருபையை எப்போதும் என்றென்றைக்கும் நம்பியிருக்கிறேன். ௯௨, சங்கீதம். ௰௩. ௰௪.

௯ நீர் அதைச் செய்தீரென்று உம்மை நான் என்றென்றைக்கும் துதித்து உம்முடைய பரிசுத்தவான்களுக்கு முன்பாக உம்முடைய நாமத்துக்குக் காத்திருப்பேன், ஏனென்றால் அது நலமானது. ௩௰, சங்கீதம். ௫. ௬.

௫௩. சங்கீதம்.

(௰௪ சங்கீதத்துக்கொத்தது.)

[மகலத்திலே பாடி இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் போதக சங்கீதம். ௮௮, சங்கீதம். ௧.]

பராபரன் இல்லையென்று பயித்தியக்காரன் தன் இருதயத்திலே சொல்லுகிறான், தங்களைக் கெடுத்து அநியாயஞ்செய்து அருவருப்பாகிறார்கள், நன்மைசெய்கிறவனில்லை.

௨ பராபரனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோவென்று பார்க்கப் பராபரன் பரமண்டலங்களிலிருந்து மனுப்புத்திரரைக் கண்ணோக்குகிறார்.

௩ அவர்களெல்லாரும் வழிவிலகி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள், நன்மைசெய்கிறவன் ஒருவனுமில்லை.

௪ அப்பத்தைப் புசிக்கிறதுபோலே நம்முடைய சனத்தைப் பட்சிக்கிற அக்கிரமக்காரருக்கும் அறிவு ஒன்றுமில்லையோ? பராபரனை நோக்கிக் கூப்பிடார்கள்.

௫ திகிலில்லாத இடத்திலே மெத்தவுந் திகிலடைந்தார்கள், ஏனென்றால் உனக்கு விரோதமாய்ப் பாளயமிறங்கினவனுடைய எலும்புகளைப் பராபரன் சிதற அடித்தார், அவர்களை வெட்கப்படுத்துகிறாய், ஏனென்றால் பராபரன் அவர்களை வெறுத்துப்போட்டார்.

௬ சீயோனிலிருந்து இஸ்ரவேலுடைய இரட்சிப்பு வந்தாலநாவிலே, பராபரன் தம்முடைய சனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது யாக்கோபுக்குக் களிப்பும் இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியுமுண்டாம்.

௫௪. சங்கீதம்.

(சத்துருக்களின் பொல்லாப்பைத் தடுக்கத் தாவீது பராபரனை நம்பிக்கையாய் வேண்டிக்கொண்டது.)

[கின்னரங்களில்வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் போதக சங்கீதம். தாவீது எங்களிடத்தில் ஒளிந்துகொண்டிருக்கிறானே யென்று சீப்பூரார் வந்து சவுலுக்குச் சொன்னபோது பாடினது. ௧. சாமுவே. ௨௩, ௰௯. ௨௬.]

பராபரனே நீர் உம்முடைய நாமத்தினிமித்தமாக என்னை இரட்சித்து உம்முடைய வல்லமையினாலே எனக்கு நியாயஞ்செய்யும்.

௨ பராபரனே என் செபத்தைக் கேளும், என் வாயின் வார்த்தைகளுக்குச் செவிகொடும். ௫, சங்கீதம். ௨. ௩.

௩ ஏனென்றால் அந்நியர் எனக்கு விரோதமாயெழும்பி, பெலவான்கள் என் பிராணனை வாங்கத் தேடுகிறார்கள், பராபரனைத் தங்களுக்குமுன்பாக நிறுத்தி நோக்கார்கள்.

சேலா. ௮௬, சங்கீ. ௰௪.

௪ இதோ பராபரன் எனக்குச் சகாயர், ஆண்டவர் என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்களுக்குள்ளிருக்கிறார்.

௫ அவர் என் சத்துருக்களுக்குத் தீமையைச் சரிக்கட்டுவார், உம்முடைய சத்தியத்தினிமித்தமாக அவர்களைச் சங்கரியும்.

௬ உற்சாகமாய் உமக்குப் பலிசெலுத்துவேன், கர்த்தாவே உமது நாமத்தைத் துதிப்பேன், ஏனென்றால் அது நலமானது.

௭ ஏனென்றால் எல்லா நெருக்கத்துக்கும் நீங்க என்னை விடுவிப்பார், என் கண் என்னுடைய சத்துருக்களில் நீதிசரிக்கட்டுதலைக் காணும்.

௫௫. சங்கீதம்.

(சத்துருவினுடைய துன்பத்தினிமித்தமும் சிநேகனுடைய துரோகத்தினிமித்தமும் தாவீது அங்கலாய்க்கிற விண்ணப்பம்.)

[கின்னரங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் போதக சங்கீதம்.]

பராபரனே நீர் என் விண்ணப்பத்துக்கு மறைந்திராமல் என் செபத்துக்குச் செவிகொடும்,

௨ என்னைக் கவனித்திருந்து எனக்குத் தயவருளிச்செய்யும், நான் சத்துருவினுடைய கூக்குரலினிமித்தமும் ஆகாதவன் செய்யும் இடுக்கணினிமித்தமும் என் செபத்தியானத்திலே புலம்பிக்கதறுகிறேன்.

௩ ஏனென்றால் என்மேல் அக்கிரமத்தைச் சாட்டிக் குரோதத்தினால் என்னைப் பகைக்கிறார்கள்.

௪ என் இருதயம் எனக்குள் வேதனைப்படுகிறது, மரணத்திகில்கள் என்மேல் விழுந்தது.

௫ பயமும் நடுக்கமும் எனக்கு வந்தது, அருக்களிப்பு என்னை மூடிற்று.

௬ ஆ, எனககுபபுறாவைபபோலே செடடைகளிருநதால நாவீனே யெனறேன, அபபோதுபறநதுபோய எஙகேயாகிலுந தரிததிருபபேன.

௭ இதோ, தூரமாய அகனறலைநது திரததிலேதஙகுவேன. சேலா.

௮ பெருஙகாறறுககும புசலுககுநதப பததிவிரிததுககொளளுவேன.

௯ ஆணடவரே அவர்களை விழுஙகும, அவர்களநாவைப பிரிநதுபோகபபணணு ம, ஏனெனிற்கொடுமையுஞ சணடையும டீரிலேகாணகிறேன.

௰ அவைகள இரவுமபகலும அதினமதி லகளில அதைசசுறறுகிறது, அககிரமமு மவாதைபபும அதினநடுவிலிருககிறது.

௰௧ கேடுபாடுகள அதின நடுவிலிருககி றது, தநதிரமுஙகபடமும அதினதிதியை விடடுவிலகாது.

௰௨ ஏனெனில எனனை நிநதைபபடுத துகிறவனசததுருவாயிருநதவனலல, மற றபபடி அதைசசகிபபேன, எனககுவிரோ தமாயப் பெருமையாகிறவன என்னைப் பகைததவனலல, மறறபபடி அவனுககு மறைநதிருபபேன.

௰௩ எனககிராசியானமனுஷனும என வழிகாடடியும எனககறிமுகமானவனுமா கிய நீயேயவன. சக, சஙகீதம். ௰.

௰௪ நாமநெருஙகிதது இனபமும இரக சியமுமாயயோசிததுப பராபரனுடைய வீடடுககு ஏகமாயபபோனோமே.

௰௫ மரணம அவர்கள்மேல தணடற் காரனுபவிழுவதாக, உயிரோடே பாதாள ததுககிறஙகக்கடவார்கள, ஏனெனில அவ ர்களசஞசரிபபிலும அவர்கள உளளததி லும பொலலாபபுகளிருககிறது.

௰௬ நானோ பராபரனைநோககிக்கூப பிடுவேன, கர்ததரெனனையிரட்சிபபார்.

௰௭ அநதிசநதி மததியானததிலுஙகெ ஞசிக்கதறுவேன, எனசத்தத்தைககேட் பார். தானியேல. சு, ௰.

௰௮ எனககுவநதபோராடீஙகி என னதமாவைசசமாதானமாகமீடடுவிடுகிறார் ஏனெனில திரளானகூடடமாய எனனோ டெதிர்ததிருககிறார்கள. ௬, சஙகீ. ௨.

௰௯ பராபரனகேடடு அவர்களைத்தாழ் ததுவார், ஆதிமுதலாய நியாயததுககுவீ றறிருககிறார். சேலா. ஏனெனில அவ ர்களிடததிலேகுணமாறுதலிலலை, பராபர னுககுப்பயப்படார்கள.

௨௰ தனனோடே சமாதானமாயிருநத வர்களமீதில தனகைகளைபபோடடுத் தன னுடமபடிககையைக குலைததுபபோடுகி றான.

௨௰௧ அவனவாயினசொற்கள வெணணெ யைபபோலமெதுவானவைகள, அவனிருத யமோயுததம, அவனவார்ததைகள எண ணெயிலுமிருதுவானவைகள, ஆனாலவைக ளே உருவினபட்டயஙகள. ௫௭, சங். ௫.

௨௰௨ கர்ததர்மேல உன பாரததைப போடு, அவருனனைபபராமரிபபார், நீதிமா னை எனறெனறைககும தளளாடவொட டார். ௬௭, சஙகீதம். ௫.

௨௰௩ பராபரனே, தேவரீர் அவர்களை யழிவினகுழியிலிறஙகபபணணுவீர், இரதத பிரியருஞசூதானமனுஷருநதஙகள ஆயு வினநாட்களுககுவநதுசேருவதிலலை, நா னோவெனறாலஉமமைநமபுவேன. ௫,௪௰.௭.

௫௬. சஙகீதம்.

(தாவீது பராபரனுககுத்தனனுடைய நா சமோசஙகளையும அலையுதலையுங கண ணீரையுமொபபுககொடுககிற நமபிக கையுளளவிணணபபம.)

[பெலிஸ்தர் தாவீதைக்காததூரிலேபிடிக கையில, அவனதூரமாயிருககிறவர்களுக குளளே ஊமையாயிருககிற புறவினபெ ரிலே பாடினதும இராகததலைவனுக கொபபுவிககபபடடதுமான பொற்ப ணதிககீதம். ௧. சாமுவேல. ௨௰, ௰. ௵]

௧ பராபரனே எனககிரஙகும, ஏனெ னில மனுஷன எனனைவிழுஙகபபார்ககிறா ன, நாளதோறும்போர்செயதுஎனனையொ டுககுகிறான.

௨ நாளதோறும எனசததுருககளெ னனைவிழுஙகபபார்ககிறார்கள, ஏனெனிலஉய ரததிலிருநது எனககுவிரோதமாயபபோ ர்செயகிறவர்கள அநேகர்.

௩ நானபயபபடுகிறநாளிலே உமமை நமபுவேன.

௪ பராபரனை அவருடைய வார்ததை யினிமிததந துதிபபேன, பராபரனைநமபி யிருககிறேன, நானபயபபடேன, மாமிச மெனககெனனசெயயும?

௫ நிததமெனவார்ததைகளைப புரடடு கிறார்கள, அவர்களநினைவுகளெலலாம என ககுவிரோதமாய எனககுபபொலலாபபு சசெயவதற்கிருககிறது.

௬ கூடிசசேர்நது பதிவிருககிறார்கள, அவர்கள எனபிராணனைவாஙக ஆசையா யெனனடியைபபிடிததுவருகிறார்கள.

௭ தஙகள அககிரமததிலே தபபுவார்க ளோ? பராபரனே, உமமுடையகோபத திலே சனசதளஙகளைககீழேதளளும.

௮ என அலையுதலைததேவரீர் எணணியி ருககிறீர், எனகணணீரை உமமுடையதுரு ததியிலேவையும, அவைகள உமமுடைய கணககிலல்லோவிருககிறது.

௯ நான உமமைநோககிக் கூபபிடும நாளிலெனசததுருககள பினனிடடுததிரும

புவார்கள, பராபரன எனக்காகவிருக்கிரு
ரென்றறிந்திருக்கிறேன.

௰ பராபரனை அவருடைய வார்த்தையி
னிமித்தந்துதிப்பேன, கர்த்தரை அவரு
டைய வார்த்தையினிமித்தந்துதிப்பேன.

௰௧ பராபரனை நம்பியிருக்கிறேன, நா
ன பயப்படேன, மனுஷன எனக்கென்ன
செயவான. ௱௰அ, சங்கீ. ௬. எபி. ௰௩, ௬.

௰௨ பராபரனே, உமக்குச்சொன்ன
பொருத்தனைகள என்மேலிருக்கிறது,தோ
த்திரங்களைநான உமக்குச்செலுத்துவே
ன. ௬௬, சங்கீதம். ௰௩.

௰௩ ஏனெனிற் பராபரனுக்குமுன்பாக
நானசீவனுள்ளோருடையவெளிச்சத்திலே
நடக்கும்படிக்கு என்னுத்துமாவைமரண
த்துக்கும எனகால்களை இடறலுக்கும்ல
லோதப்புவித்தீர். ௧. மோசே. ௰எ, ௧.
௱௰௬, சங்கீதம். அ.

௫எ. சங்கீதம்.

(கொடூர சத்துருக்களினிமித்தந் தாவீது
பராபரனை ஆதரவாகப்பிடித்தது.)

[தாவீதுசவுலுக்குத்தப்பியோடிக் கெபியி
லொதுங்குகையில தானகெட்டுப்போ
காதபடிக்குப்பாடினதும, இராகத்தலை
வனுக்கொப்புவிக்கப்பட்டதுமானபொ
ற்பணதிகங்கீதம். ௧. சாமு. ௨௨, ௧.
௨. ௨௪, சங்கீதம். ௪.]

எனக்கிரங்கும, பராபரனே எனக்கி
ரங்கும, ஏனெனில உமமை என்னுத்துமா
அண்டிக்கொள்ளுகிறது விக்கினங்களகட
ந்துபோகுமட்டும உமமுடைய செட்டை
களினநிழலிலேவந்தடைவேன. ௰எ,சங்.௬.

௨ எனக்காகயாவையுஞ்செயது முடிக
கப்போகிறதேவனுகியஉன்னதமானபரா
பரனைநோக்கிக்கூப்பிடுவேன.

௩ என்னைவிழுங்கப்பார்க்கிறவன என
னைநிந்திக்கையில அவர்பரமண்டலங்களி
லிருந்தெதாத்தாசைய னுப்பி என்னை இரட்
சிப்பார், சேலா. பராபரனதமதுகிருபை
யையுந் தமதுசத்தியத்தையும அனுப்பு
வார்.

௪ என்னுத்துமாசிங்கங்களினநடுவிலிரு
க்கிறது, தீயையிறைக்கிறமனுப்புத்திரருக
குள்ளேகிடக்கிறேன, அவர்களபலலுக்கள
ஈட்டியும, அம்புகளும, அவர்கள நாக்குக்
கருக்கானபட்டையமுமாயிருக்கிறது.

௫ பராபரனே, வானங்களினமேலுய
ரும, உமமுடையமகிமை பூமியனைத்தின
மேலும உயர்வதாக. ௱அ, சங்கீதம். ௬.

௬ எனகாலடிகளுக்கு வலையைமுஸ்திப
புப்பண்ணினுர்கள, என்னுத்துமாவைமட
ங்கடித்தான, எனக்குமுன்பாகக் குழியை
வெட்டி அதினநடுவிலேவிழுந்தார்கள.
சேலா. ௭, சங்கீதம். ௰௬.

௭ என்னிருதயம ஆயத்தமாயிருக்கிறது
பராபரனேஎன்னிருதயம ஆயத்தமாயிரு
க்கிறது. நான பாடிக்கீர்த்தனம்பண்ணு
வேன.

அ என்மகிமையேவிழி, தம்பூரே சும
ண்டலமேவிழி, அதிகாலமேவிழிப்பேன.
௱அ, சங்கீதம். ௨-௪.

௯ ஆண்டவரே உமமைச்சனசதளங்க
ளுக்குள்ளே துதிப்பேன, சாதிகளுக்குள்
ளே உமமைக்கீர்த்தனம்பண்ணுவேன.

௰ ஏனெனில உமதுகிருபை வானங்கள
பரியந்தமும உமதுசத்தியம ஆகாயமண
டலங்களபரியந்தமும்பெரிதாயிருக்கிறது.
௩௬, சங்கீதம். ௬.

௰௧ பராபரனே வானங்களினமேலுய
ரும, உமமுடையமகிமை பூமியனைத்தின
மேலுயர்வதாக.

௫அ. சங்கீதம்.

(அநியாய மிஞ்சின சத்துருக்களுடைய
கொடூரத்தினிமித்தமாகத்தாவீதுமுறை
யிட்டுச்செய்தவிண்ணப்பம்.)

[தானகெட்டுப்போகாதபடிக்குத்தாவீது
பாடினதும இராகத்தலைவனுக்கொப்பு
விக்கப்பட்டதுமான பொற்பணதிகங்கீத
ம. ௫எ, சங்கீதம. ௧.]

மனுப்புத்திரரே நீங்கள ஊமையாயி
ருக்கக்கொள்ளமெய்யாய நீதியைச்சொல
லுவீர்களோ நிதானமாயநியாயந்தீர்ப்பீர்
களோ?

௨ மனதாரத்தானே நியாயக்கேடுகளை
ச்செயகிறீர்கள,பூமியிலேஉங்களகைகளின
கொடுமையை நிறுத்துக்கொடுக்கிறீர்கள.

௩ ஆகாதவர்கள கெர்ப்பமாயுதிப்பித்த
துமுதற்கொண்டுபேதலிக்கிறுர்கள, பொ
யபேசுகிறவர்கள தாயின்வயிற்றிற்பிறந்த
துமுதற்கொண்டுவழிதப்புகிறுர்கள.

௪ சர்ப்ப விஷத்துக்கொப்பான விஷம
அவர்களிலிருக்கிறது. ௱௪௰, சங்கீ. ௩.

௫ முணுமுணுக்கிறவர்களும் விரதைபு
ளளதமபனக்காரனும இடுகிற சத்தத்தை
க்கேளாதபடிக்குத் தனகாதையடைக்கிற
செவிடான விரியன்பாம்பைப்போலிருக்கி
றுர்கள.

௬ பராபரனே அவர்கள்வாயிலிருக்கி
ற அவர்களபலலுக்களைத் தகர்த்துப்போ
ட்டும, கர்த்தாவே சிங்கக்குட்டிகளினகடை
வாயப்பலலுக்களைநொறுக்கிப்போடும.
௩, சங்கீ. அ.

௭ தாளுயக்கடந்தோடுகிற தண்ணீரை
ப்போலே அவர்கள கழிந்துபோகட்டும,
தங்கள அம்புகளையவர்களநாணேறறுஞ்
அவைகளதறி-புண்டவைகளாகக்கடவது.
அ கரைந்துப்போகிற நத்தையைப்போ
லேபோகக்கடவார்கள,கெர்ப்பமவிழுந்த

போகிற ஸ்திரீயின் முதிராப் பிண்டத்தைப்போலே சூரியனைக் காணாதிருப்பார்களாக.

௯ உணருகிறதற்குமுன் உங்கள் முள்ளுகள் முள்ளுக்காடாய்ப் பெருகு, அதைப் பச்சையோடே தானே உக்கிரமான புசலினாலே அடித்துக்கொண்டுபோவார்.

௰ நீதியைச் சரிக்கட்டுதலை நீதிமான் காணும்போது மகிழுவான், தன் பாதங்களை ஆகாதவனுடைய இரத்தத்திலே கழுவுவான்.

௰௧ அப்போது மனுஷன் மெய்யாய் நீதிமானுக்குப் பலனுண்டென்றும் மெய்யாய் பூமியிலே நியாயஞ்செய்கிற பராபரன் உண்டென்றுஞ் சொல்லுவான்.

௫௯. சங்கீதம்.

(கோரசத்துருக்களின் சதிசற்பனைகளைக் கண்டு பண்ணின செபம்.)

[தாவீதைக் கொல்வதற்காகச் சவுல் அவன் வீட்டைக் காவல்காப்பவர்களை யனுப்புகையில் அவன் தான் கெட்டுப்போகாதபடிக்குப் பாடினதும் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்டதுமான பொற்பணதிக்கீதம். ௧. சாமுவேல். ௰௯, ௰௧. ௫௭, சங்கீ. ௧. ௫௮, சங்கீ. ௧.]

என் பராபரனே என் சத்துருக்களுக்கு என்னைத் தப்புவியும் என்மேலெழும்புகிறவர்களுக்கு என்னை விலக்கி உயர்ந்த அடைக்கலத்திலே வையும்.

௨ அக்கிரமக்காரருக்கு என்னைத் தப்புவித்து இரத்தப் பிரியரான மனுஷருக்கு என்னை விலக்கிவிட்டுக்கியும்.

௩ ஏனெனில் இதோ, என் பிராணனுக்குப் பதிவிருக்கிறார்கள், கர்த்தாவே என்னிடத்திலே மீறுதலும் பாவமுமில்லாதிருந்தும் பலவான்கள் எனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடுகிறார்கள்.

௪ என்னிடத்தில் அக்கிரமம் இல்லாதிருந்தும் ஓடித்திரிந்து ஆயத்தமாகிறார்கள், எனக்கு நேராக விழித்துப்பாரும். ௩௫, சங்கீதம், ௨௩.

௫ சேனைகளின் பராபரனாகிய கர்த்தாவே இஸ்ரவேலின் பராபரனே தேவரீர் சகல சாதிகளையும் விசாரிக்க எழும்பும், அகங்காரமாய்த் துரோகஞ்செய்கிற ஒருக்கும் இரங்காதேயும். சேலா.

௬ அவர்கள் சாயங்காலத்திலே திரும்பி வந்து நாயைப்போலக் குலைத்து ஊரைச் சுற்றியோடுகிறார்கள்.

௭ இதோ தங்கள் வாயினாலே வாதாடுகிறார்கள், அவர்கள் உதடுகளிற் பட்டயங்களுண்டு, ஏனெனில் அதைக் கேட்கிறவன் யார் என்கிறார்கள். ௧௦, சங்கீ. ௬. ௰, சங்கீ. ௰௧, ௯௪, சங்கீதம். ௭,

௮ ஆனாற் கர்த்தாவே தேவரீர் அவர்களை நகைப்பீர், சகல சாதிகளையும் பரியாசம் பண்ணுவீர். ௨, சங்கீதம். ௪.

௯ அவன் வல்லமையைக் கண்டு உமக்குக் காத்திருப்பேன் ஏனெனிற் பராபரன் என க்குயர்ந்த அடைக்கலம்.

௰ கிருபையுள்ள என் பராபரன் எனக்கு நேரிட்டுவருவார், பராபரன் என்னை என் சத்துருக்களில் நீதிசரிக்கட்டுதலைக் காணப்பண்ணுவார்.

௰௧ எங்கள் கேடயமாகிய ஆண்டவரே, என் சனம் அதை மறவாதபடிக்கு அவர்களை நீர் கொன்றுபோடாமல் அவர்களை உமது பெலத்தினாலே அலையப்பண்ணித் தாழ்த்தும்.

௰௨ அவர்கள் உதடுகளின் பேச்செல்லாம் அவர்கள் வாயிற் பாவமாயிருக்கிறது, ஆகையால் தங்கள் பெருமையிலும் தாங்கள் சொல்லுகிற சர்ப்பினையினிமித்தமும் பொய்யினிமித்தமும் அவர்கள் பிடிபடட்டும்.

௰௩ பராபரன் யாக்கோபிலே பூமியின் எல்லைகள் பரியந்தமும் ஆளுகிறவரென்று அவர்கள் அறிவதற்கு அவர்களை உமமுடைய உக்கிரத்திலே நிர்மூலமாக்கும், இனியில்லாதபடிக்கு அவர்களை நிர்மூலமாக்கும். சேலா.

௰௪ அவர்கள் சாயங்காலத்திலே திரும்பி வந்து நாயைப்போலக் குலைத்து ஊரைச் சுற்றியோடக்கடவார்கள்.

௰௫ அவர்கள் திருத்தியாகாதே போனாற் சாப்பிடுகிறதற்கு அலைந்து திரிந்து முறுமுறுக்கக்கடவார்கள்.

௰௬ நானோவெனில் உமமுடைய வல்லமையைப் பாடிக் காலமே உமமுடைய கிருபையைக் கெம்பீரமாய்ப் புகழுவேன், ஏனெனில் எனக்கு நெருக்கமுண்டான நாளிலே எனக்குயர்ந்த அடைக்கலமும் ஒதுக்குமானீர். ௬௨, சங்கீதம். ௪.

௰௭ என் பெலனே உமமைக் கீர்த்தனம் பண்ணுவேன், ஏனெனிற் பராபரன் எனக்குயர்ந்த அடைக்கலமும் என் கிருபையுள்ள பராபரனுமாயிருக்கிறார்.

௬௰. சங்கீதம்.

(சத்துருக்களால் நெருக்கப்பட்டபின் அடைந்த செயங்களினிமித்தம் பராபரனைத் தோத்திரித்தது.)

[தாவீது மெசொப்பொத்தாமியா தேசத்துச் சூரியரோடும் சோபா தேசத்துச் சூரியரோடும் யுத்தம்பண்ணினபோதும் யோவாபு திரும்பி உப்புப் பள்ளத்தாக்கிலே ஏதோமியரிற் பன்னீராயிரம்பேரை வெட்டினபோதும், அவன் சாட்சியைவிளங்குவிக்கும் ஆறு நரம்புகளுள்ள வாத்தியத்திலே போதிப்புக்காகப் பாடினதும் இராகத்

தலைவனுக்கொப்புவிக்கப்பட்டதுமான பொற்பணதிக்கீதம்.]

பராபரனே எங்களை யொழித்துவிட்டு எங்களைத் தகர்த்துப்போட்டுக் கோபமாயிருந்தீர், திரும்ப எங்களைப் புறமாயத் திரும்பும். ௪௪, சங்கீதம். ௨௪.

௨ பூமியையதிரப்பண்ணி அதைவெடிப்பாக்கினீர், அதின் வெடிப்புகளைக் கட்டும், ஏனெனில் அசைகிறது.

௩ உம்முடைய சனத்துக்குக் கடினமான காரியத்தைக் காணப்பண்ணினீர், தத்தளிப்பின் மதுபானத்தை யெங்களுக்குக் குடிக்கக்கொடுத்தீர். ஏசாயா. ௫௧, ௰௭. ௨௨.

௪ ஆனால் உம்முடையபிரியர் விடுவிக்கப்படும்படிக்கு ஏற்றுங்கொடியை உமக்குப் பயந்தவர்களுக்குச் சத்தியத்தினிமித்தமாகத் தந்தீர். சேலா.

௫ உம்முடைய வலதுகரத்தினாலேயிரட்சித்து எங்களைச் செப்பத்தைக் கேளும். ௱௮, சங். ௭.

௬ பராபரன் தமது பரிசுத்தஸ்தலத்திலே விளம்பினதைப் பற்றிக் களிகூருவேன், சீகேமைப் பங்கிட்டுச் சுக்கோத்தின் பள்ளத்தாக்கை யளந்துகொள்ளுவேன்.

௭ கிலெயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது, எப்பிராயீம் என்தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன்.

௮ மோவாப் நான் கழுவுகிற பாத்திரமாயிருக்கும், ஏதோமின்மேலே என்பாதரட்சையை நீட்டுவேன், பெலிஸ்தேயாவே என்னைப்பார்த்துக் கெம்பீரி.

௯ என்னை அரணான பட்டணத்துக்குள் வழிவிடுபவரார்? என்னை ஏதோம் மட்டும் கொண்டுபோகுபவரார்?

௰ பராபரனே எங்கள் சேனைகளோடே புறப்படாமல் எங்களை யொழித்துவிட்டிருந்த பராபரனானவர் தேவரீரல்லவோ?

௰௧ இக்கட்டுக்குத் தப்ப எங்களுக்குச் சகாயங்கட்டளையிடும், ஏனெனில் மனுஷ இரட்சிப்பு அவத்தம்.

௰௨ பராபரனாலே பெலன்செய்வோம், அவரோ யெங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார். ௱௮, சங்கீ. ௰௩. ௪௪, சங். ௫.

௬௧. சங்கீதம்.

(மகா ஆபத்திலே தாவீது பராபரனமறைவில்லவிசுவாசமாய் ஒதுங்கினது.)

[கின்னாரங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

பராபரனே என்கூப்பிடுதலைக் கேட்டு என்விண்ணப்பத்துக்குச் செவிகொடியும்.

௨ என்னிருதயந்தொய்யும்போது பூமியின்கடையாந்திரத்திலிருந்து உம்மைநோக்கிக் கூப்பிடுகிறேன், நான் ஏறக்கூடாத உயரமான கன்மலையில் என்னைக்கொண்டுபோய்விடும்.

௩ ஏனெனிற் சத்துருவுக்கெதிரேயெனக்கு அடைக்கலமும் பெலத்த துருகமுமானீர்.

௪ சதாகாலங்களாக உம்முடையகூடாரத்திலே தங்குவேன் உம்முடையசெட்டைகளின்மறைவிலே வந்தடைவேன், சேலா. ௫௭, சங்கீதம். ௨.

௫ ஏனெனிற் பராபரனே தேவரீர் என்பொருத்தனைகளைக்கேட்டீர், உம்முடைய நாமத்துக்குப் பயந்தவர்களின் சுதந்தரத்தையெனக்குத்தந்தீர்.

௬ இராசாவுடையநாட்களோடேநாட்களைக்கூட்டுவீர், அவன்வருஷங்கள் தலைமுறைதலைமுறையாகவிருக்கும்.

௭ பராபரனுக்குமுன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பான், அவனைத்தற்காக்கக் கிருபையையும் உண்மையையுங் கட்டளையிடும்.

௮ இப்படியே தினமும் என் பொருத்தனைகளை நான் செலுத்தும்படியாய் உமது நாமத்தையென்றைக்குங் கீர்த்தனம் பண்ணுவேன்.

௬௨. சங்கீதம்.

(தாவீது சத்துருக்களின் தீவினைகளைக்கண்டு பராபரனுடைய அடைக்கலத்திலே தங்கி மற்றவிசுவாசிகளையும் அதற்கெழுப்பினது.)

[எதுத்தூனென்ற இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்]

பராபரனையே நோக்கி என்னாத்துமா அமர்ந்திருக்கிறது, அவராலென்னிரட்சிப்புவரும்.

௨ அவரோயென்கன்மலையும் என் இரட்சிப்பும் என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார், நான் மெத்தவும் அசைக்கப்படுவதில்லை. ௰௮, சங்கீதம். ௩.

௩ எந்தமட்டும் ஒரே மனுஷனுக்குப் பொல்லாப்புண்டாக்கப்பார்ப்பீர்கள், நீங்கள் அனைவருங்கொலையுண்ணப்படுவீர்கள் சாய்ந்தமதிலுக்கும் இடிந்தசுவருக்குஞ் சரியாவீர்கள்.

௪ ஆகிலும் அவர்கள் அவனை யவன்மேன்மையிலிருந்து விழத்தள்ள ஆலோசனைபண்ணி அவத்தம் பேச விரும்புகிறார்கள், தங்கள் தங்களவாயினாலே ஆசிர்வதித்துத் தங்கள் உள்ளத்திலே சபிக்கிறார்கள். சேலா. ௫௫, சங்கீதம். ௨௨.

௫ ஆனால் என்னாத்துமாவே பராபரனை நோக்கியமர்ந்திரு, ஏனெனில் நான் நம்புறது அவராலேவரும். ஏசா. ௩௰, ௰௫.

௬ அவரோயென்கன்மலையும் என் இரட்சிப்பும் என்னுயர்ந்த வடைக்கலமுமாயிருக்கிறார், நான் அசைக்கப்படுவதில்லை.

௭ பராபரனிடத்தில் என் இரட்சிப்பும் என் மகிமையுமிருக்கிறது, என் பெலனான கன்மலையும் என் அடைக்கலமும் பராபரனுக்குள்ளிருக்கிறது. ௬௨, சங்கீதம். ௪.

௮ சனமே எந்தக்காலத்திலும் அவரை நம்பி அவருக்குமுன்பாக உங்கள் இருதயத்தை யூற்றிப்போடுங்கள், பராபரன் நமக்கடைக்கலமாயிருக்கிறார். சேலா.

௯ ஆனால் மனுப்புத்திரர் மாயையுந் தாமக்கள் பொய்யுந்தானே, தராசிலே அவர்கள் ஏகமாய் மாயையிலும் லேசாய் ஏறுகிறதற்கானவர்கள். ௩௯, சங். ௬-௰௨.

௰ கொடுமையையுங் கொள்ளையையும் நம்பாமலும் வீணாய் உப்பாமலுமிருங்கள், ஆஸ்திவிருத்தியானால் இருதயத்தை யதின்மேல் வைக்காதேயுங்கள். மாற்கு. ௰, ௨௪. லூக். ௰௨, ௰௫—௨௧. க. தீமோ. ௬, ௰௭—௰௯.

௧௧ பராபரன் ஒன்று சொன்னார், அதை இரண்டொருதரங் கேட்டேன், வல்லமை பராபரனுடையதென்பதைத்தானே.

௧௨ கிருபையும் உம்முடையது, ஆண்டவரே ஏனெனில் தேவரீர் அவனவனுக்கும் அவன் செய்கைக்குத்தக்கதாகச் செலுத்துவீர்.

௬௩. சங்கீதம்.

(தாவீது வனப்பட்டலையிலே திருமபத் தேவ ஆராதனைக்குப் பங்குள்ளவனாக வாஞ்சையாய்த் தன் சத்துருக்களின் அழிவையுந் தனக்குவரும் மகிழ்ச்சியையும் முன்னறிவித்தது.)

[தாவீது யூதாவின் வனாந்தரத்திலிருக்கையிலே பாடின சங்கீதம்.]

பராபரனே தேவரீர் என்னுடைய பராபரன், அதிகாலையிலும்மைத் தேடுகிறேன், வறண்டதும் விடாய்த்ததுந் தண்ணீரற்றதுமான பூமியிலென்னாத்துமா உம்முடையமேலே தாகமாயிருக்கிறது, என் மாமிசம் உம்மைவாஞ்சிக்கிறது. ௪௨, சங்கீ. ௨. ௱௪௩, சங்கீதம். ௬.

௨ உம்முடைய வல்லமையையும் உம்முடைய மகிமையையுங் காணும்படிக்கு நான் பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க இத்தனை யாசையுண்டு. ௨௭, சங்கீதம். ௪.

௩ ஏனென்றால் ஜீவனைப்பார்க்கிலும் உம்முடைய கிருபை நல்லது, என்னுதடுகள் உம்மைத் துதித்துக்கொண்டிருக்கும்.

௪ இப்படியே நான் ஜீவனுள்ள மட்டும் உம்மைத் தோத்திரித்து உமது நாமத்தில் என் கைகளையேறெடுப்பேன். ௱௪, சங். ௩௩.

௫ நிணத்தையுங் கொழுப்பையும் உண்டதுபோல என்னாத்துமா திருத்தியாகும், நான் என் மெத்தையின்மேல் உம்மை நினைக்கிறபோது, என் வாய் கெம்பீரிப்பான உதடுகளால் உம்மைப்போற்றும். ௬௬, சங். ௬. ௬௫, சங்கீதம். ௫.

௬ சாமங்களில் உம்மைத் தியானிக்கிறேன்.

௭ ஏனெனில் நீர் எனக்குத் துணையாயிருந்ததினால் உம்முடைய செட்டைகளின் நிழலிலே கெம்பீரிப்பாயிருக்கிறேன்.

௮ என்னாத்துமா உம்மை யொட்டிக்கொண்டு தொடருகிறது, என்னை உம்முடைய வலதுகரந் தாங்குகிறது. க. கொரி ௬, ௰௭.

௯ ஆனால் என்னாத்துமாவைப் பாழாக்கத் தேடுகிறவர்கள் பூமியின் பாதாளங்களிலே போவார்கள்.

௰ அவர்களைப் பட்டயத்தாற்போக்கி விடுவார்கள், நரிகளின் பங்காவார்கள்.

௧௧ இராசாவோவெனிற் பராபரனுக்குள் மகிழுவான், அவர்பேரிற் சத்தியம் பண்ணுகிறவனெல்லாம் மேன்மை பாராட்டுவான், ஏனெனிற் பொய்பேசுகிறவர்களின் வாய் அடைக்கப்படும்.

௬௪. சங்கீதம்.

(தந்திரமான கொடூர சத்துருக்களுக்குத் தன்னை விலக்கியிரட்சிக்கத் தாவீது பராபரனை வேண்டிக்கொண்டு அவர்கள் விழுகுதலை முன்னறிவித்தது.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

பராபரனே என் கெஞ்சுதலிலே என் சத்தத்தைக் கேளும் சத்துருவாலவருந் திகிலை நீக்கி என் பிராணனைக் காப்பாற்றும்.

௨ என்னைப் பொல்லாதவர்களின் இரகசிய ஆலோசனைக்கும் அக்கிரமக்காரருடைய அமளிக்கும் இடைஞ்சலாக மறையும்.

௩ அவர்கள் தங்கள் நாவைப் பட்டயத்தைப்போலே கூர்மையாக்குகிறார்கள். ௫௯, சங்கீதம். ௭.

௪ மறைவுகளில் உத்தமனை யெய்யக்கசப்பான வார்த்தைகளைத் தங்கள் அம்புகளாக்கி நாணேற்றுகிறார்கள், அவனை அசுப்பிலே யெய்து பயப்படாதிருக்கிறார்கள். ௰௧, சங்கீதம். ௨.

௫ அவர்கள் பொல்லாவிசேஷத்தை உறுதிப்பண்ணிக்கொண்டு கண்ணிகளை மறைவாய் வைப்பதைப்பேசி அவைகளை ஆர் காண்பாரென்கிறார்கள்.

௬ நியாயக்கேடுகளைத் தேடி எத்தனம் பண்ணுகிறார்கள், கெட்டோம் ஆய்ந்துதேடி யெத்தனம்பண்ணுகிறார்கள், அதுவே அவனவனுடைய உள்ளம் அவர்களிருதயம் ஆழமுமாயிருக்கிறது.

௭ ஆனாற்பராபரன் அவர்களையெய்வார், தீவிரமாய் அம்புபட்டதுபோல அவர்கள் வாதைகளிருக்கும்.

௮ அவர்கள் நாவுகள் அவர்களைத்தானே விழப்பண்ணும், அவர்களில் நீதியைச்சரிக்கட்டுதலைப்பார்க்கிற யாவரும் ஓடிப்போவார்கள்.

௯ எல்லா மனுஷரும் பயந்து பராபரனுடைய கிரியையை அறிவித்து அவர் செயலையுணருவார்கள்.

௰ நீதிமான் கர்த்தருக்குள் மகிழ்ந்து அவரை நம்புவான், செம்மை இருதயத்தாரனைவரும் மேன்மைபாராட்டுவார்கள்.

௬௫. சங்கீதம்.

(பரமகிருபையினிமித்தமும் பூமியினுடைய ஆசீர்வாதங்களினிமித்தமும் பராபரனைத் துதித்தது.)

[இராகத் தலைவனுக் கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதமாகிய பாட்டு.]

பராபரனே சீயோனில் உம்மை நோக்கி அமைந்திருந்து துதிக்கிறார்கள், உமக்குப் பொருத்தனை செலுத்தப்படும்.

௬௨, சங்கீதம். ௨.

௨ செபத்தைக் கேட்கிறவரே உம்மண்டைக்குச் சகல மாமிசமும் வருவதாக.

௩ அக்கிரமங்களின் விசேஷங்கள் என் மேலமிருந்து வல்லமை கொண்டன, ஆனால் எங்கள் மீறுதல்களைத் தேவரீர் நிவிர்த்தியாக்குகிறீர்.

௪ உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்க நீர் தெரிந்துகொண்டு சேர்க்கிறவன் பாக்கியவான், உம்முடைய பரிசுத்தத் தேவாலயமாகிய உமது வீட்டின் நன்மையால் திருத்தியாவோம். அச, சங்கீ. ரு.

௫ பூமியின் கடையாந்தரங்களுந் தூரத்திலுள்ள கடற்கரைகளும் எல்லாம் நம்பும் நம்பிக்கையாகிய எங்கள் இரட்சிப்பின் பராபரனே நீர் பயங்கரமான காரியங்களைச் செய்கிறதினாலே எங்களுக்கு நீதியுள்ள மறுவுத்தரவையருளுகிறீர்.

௬ உம்முடைய பெலத்தினாலே பருவதங்களை யுறுதிப்படுத்தி வல்லமையை யிடைகட்டிக்கொண்டிருந்து,

௭ சமுத்திரங்களின் முழக்கத்தையும் அவைகளுடைய அலைகளின் முழக்கத்தையும் சனசதளங்களின் அமளியையும் அமர்த்துகிறவராயிருக்கிறீர்.

௮ கடையாந்தர இடங்களிற் குடியிருக்கிறவர்களும் உம்முடைய அடையாளங்களினிமித்தம் பயப்படுகிறார்கள், விடியற்காலத்திலும் சாயங்காலத்திலும் புறப்படுகிறவைகளைக் கெம்பீரிக்கப்பண்ணுகிறீர்.

௯ தேவரீர் பூமியை விசாரித்துப் பார்த்து அதற்குத் தவணமுண்டாகினபின் அதை மிகவுஞ் சம்பூரணப்படுத்துகிறீர், பராபரனுடைய வாய்க்கால் தண்ணீர் நிரம்பியிருக்கிறது, நீர் இப்படி அதைத் திருத்தினபின் அவர்களுக்குத் தானியத்தை விளைவிக்கிறீர்.

௰ அதின் வரப்புகள் தணியத்தக்கதாய் அதின் படைச்சால்களுக்குத் தண்ணீர் இறைத்து அதை மழைகளாற் கரையப்பண்ணி அதின் பயிரை ஆசீர்வதிக்கிறீர்.

௰௧ வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர், உமது பாதைகள் நெய்யாய்ப் பொழிகிறது.

௰௨ வனாந்தரத் தாவரங்கள் மீதிற் பொழிகிறது, மேடுகள் சுற்றிலும் பூரிப்பாயிருக்கிறது.

௰௩ மேய்ச்சல்வெளிகள் ஆடுகளைப் பூண்டிருக்கிறது, பள்ளத்தாக்குகள் தானியத்தால் மூடியிருக்கிறது, அதினிமித்தம் கெம்பீரித்துப் பாடுகிறார்கள்.

௬௬. சங்கீதம்.

(பராபரனை அவருடைய அதிசயமான கிரியைகளினிமித்தமாகத் துதிக்க அழைப்பும் ஏவுதலும்.)

[இராகத் தலைவனுக் கொப்புவிக்கப்பட்ட சங்கீதமாகிய பாட்டு.]

பூமியின் குடிகளே, எல்லாரும் பராபரனுக்கு முன்பாகக் கெம்பீரியுங்கள். ௯, சங்கீ. க.

௨ அவர் நாமத்தின் மகிமையைக் கீர்த்தனம்பண்ணி அவர் துதியைக் கனமானதாக்குங்கள்,

௩ பராபரனுடனே, உமது கிரியைகள் எத்தனை பயங்கரமாயிருக்கிறதென்று சொல்லுங்கள், உமது வல்லமையினுடைய இரட்சிப்பினிமித்தமாக உம்முடைய சத்துருக்கள் உமக்கு வணக்கமாய்ப் பேசுவார்கள்.

௪ பூமியனைத்தும் உம்மைப் பணிந்துகொண்டு உம்மைக் கீர்த்தனம்பண்ணக்கடவது, அவர்கள் உம்முடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணக்கடவார்கள். சேலா.

௫ வந்து பராபரனுடைய செய்கைகளைப் பாருங்கள், அவர் மனுபுத்திரரிடத்தில் நடப்பிக்கும் கிரியையிற் பயங்கரமானவர்.

௬ கடலை வெட்டாந்தரையாக மாற்றினார், ஆற்றைக் கால்நடையாய்க் கடந்தார்கள், அங்கே அவரால் மகிழ்ச்சியடைந்தோம்.

௨. மோ. ௰௪, ௨௧. யோசு. ௩, ௰௪ ௱.

௭ அவர் தம்முடைய வல்லமையினாலே என்றைக்கும் ஆளுகிறவர், அவருடைய கண்கள் சாதிகள் மேல் நோக்கமாயிருக்கிறது, முரட்டாட்டக்காரர் தங்களை யுயர்த்தாதிருப்பார்களாக. சேலா.

௮ சனசதளங்களே, நம்முடைய பராபரனைத் தோத்திரித்து அவர் துதியின் சத்தத்தைக் கேட்கப்பண்ணுங்கள்.

௯ அவர் நம்முடைய கால்களைத் தவளவொட்டாமல் நம்முடைய ஆத்துமாவை உயிரோடே வைக்கிறார்.

௰ ஏனென்றால் பராபரனே, எங்களைச் சோதித்தீர், வெள்ளியைப் புடமிடுகிறதுபோலே எங்களைப் புடமிட்டீர்.

௰௧ எங்களை வலைக்குட்படுத்தி, எங்கள் இடுப்புகளின்மேல் வருத்தமான பாரத்தைப் போட்டீர்.

௰௨ மனிதரை எங்கள் தலையின்மேலே ஏறிப்போகப் பண்ணினீர், நெருப்பிலும் தண்ணீரிலும் உள்ளானோம், ஆனாலும் சம்பூரணமுள்ள இடமாகிய எங்களைப் பதற்கு நீங்கலாக்கிப் புறப்படப்பண்ணினீர். ஏசாயா. ௪௩, ௨.

௰௩ சர்வாங்கதகனங்களோடே உம்முடைய வீட்டுக்குள் பிரவேசிப்பேன்.

௰௪ என் இக்கட்டில் என் உதடுகள் திறந்து என் வாய் சொன்ன என்னுடைய பொருத்தனைகளை உமக்குச் செலுத்துவேன்.

௰௫ உமக்குக் கொழுப்பான தகனபலிகளையிட்டு ஆட்டுக்கடாய்களின் நிணப்புகையை இடுவேன், மாடுகளையும் கடாய்களையும் படைப்பேன். சேலா.

௰௬ பராபரனுக்குப் பயந்தவர்களே, எல்லாரும் வந்து கேளுங்கள், அவர் என் ஆத்துமத்துக்குச் செய்ததைச் சொல்லுவேன்.

௰௭ அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் உயர்த்தப்பட்டார்.

௰௮ என் இருதயத்தில் அக்கிரமத்தை நோக்கியிருந்தேனானால் ஆண்டவர் என்னைக் கேளார். யோவா. ௯, ௩௧.

௰௯ மெய்யாய்ப் பராபரன் என்னைக் கேட்டு என் செபத்தின் சத்தத்துக்குச் செவிகொடுத்தார்.

௨௰ என் செபத்தைத் தள்ளிவிடாமலும் தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த பராபரன் தோத்திரிக்கப்பட்டவர்.

௬௭. சங்கீதம்.

(பராபரன் தம்முடைய இராச்சியத்தைச் சாதிகளுக்குள் பரம்பப்பண்ணி அதை ஆசீர்வதிக்கச் சபை அவரை வேண்டிக்கொள்ளுகிறது.)

[நெகினோத்துகளில் வாசிக்க இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட பாட்டாகிய சங்கீதம்.]

௧ பூமியில் உம்முடைய வழியும் எல்லாச் சாதிகளிலும் உம்முடைய இரட்சிப்பும் அறியப்படும்படிக்கு,

௨ பராபரன் எங்களுக்கிரங்கி எங்களை ஆசீர்வதித்துத் தம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணக்கடவார். சேலா. ௪. மோசே. ௬, ௨௪. ௨௫.

௩ பராபரனே சனசதளங்கள் உம்மைத் துதிப்பதாக, எல்லாச் சனசதளங்களும் உம்மைத் துதிப்பதாக.

௪ சாதிகள் மகிழ்ந்து கெம்பீரிப்பதாக, ஏனெனில் சனசதளங்களை நிதானமாய் நியாயந்தீர்த்துப் பூமியிலுள்ள சாதிகளை நடத்துவீர். சேலா.

௫ பராபரனே சனசதளங்கள் உம்மைத் துதிப்பதாக, எல்லாச் சனசதளங்களும் உம்மைத் துதிப்பதாக.

௬ பூமி தன் பலனைத் தரக்கடவது, எங்கள் தேவனாகிய பராபரன் எங்களை ஆசீர்வதிக்கக்கடவார்.

௭ பராபரன் எங்களை ஆசீர்வதிக்கக்கடவார், பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருப்பதாக.

௬௮. சங்கீதம்.

(கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும் போதகப் பிரபலியத்தையும், அவர் பரமண்டலங்களுக்கேறுங் கெவிப்பையும் அவர் ஆளும் வல்லமையையுங் காண்பிக்கிற தீர்க்கதரிசனம்.)

[இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட தாவீதின் பாட்டாகிய சங்கீதம்.]

௧ பராபரன் எழுந்திருப்பார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்கள். ௪. மோசே. ௰, ௩௫.

௨ புகை காற்றினாலே தள்ளப்படுமாப்போலே அவர்களைத் தள்ளுவீர், நெருப்பின் முன் மெழுகுருகுமாப்போலே ஆகாதவர்கள் பராபரனுடைய சந்நிதியால் அழிவார்கள்.

௩ ஆனால் நீதிமான்கள் பராபரனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து சந்தோஷமாய்க் களிப்பார்கள்.

௪ பராபரனைப் பாடி அவருடைய நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுங்கள், வனாந்தரங்களில் ஏறிவருகிறவருக்கு வழியைச் செம்மைபண்ணுங்கள் அவருடைய நாமம் கர்த்தர், அவருக்கு முன்பாகக் களிகூருங்கள். ஏசா. ௪௰, ௩.

௫ அவர் திக்கற்றவர்களுக்குப் பிதாவும் விதவைகளுக்கு நியாயம் விசாரிக்கிறவருமாயத் தம்முடைய பரிசுத்த வாசஸ்தலத்திலிருக்கிற பராபரன்.

௬ அவர் தனிமையானவர்களை வீட்டிலே வாசமாயிருக்கப்பண்ணிக் கட்டுண்டவர்களைச் சரியான வேளைகளிலே நீக்கி விடுவிக்கிற பராபரன், முருட்டாட்டக்காரரோவென்றால் வறண்ட நிலத்திலே தங்குவார்கள். ௱௰௩, ௩௩. ௩௪. ஏசாயா. ௫௪, ௧. ௩.

௭ பராபரனே நீர் உம்முடைய சனத்தின் முன்னாலே புறப்பட்டு அவாந்தர வெளியிலே நடந்துவருகையில், சேலா.

௮ பூமி அதிர்ந்தது வானங்களும் பராபரனுக்கு முன்பாகப் பொழிந்தது, இந்தச் சீனாய் மலையும் இஸ்ரவேலின் தேவனாகிய பராபரனு

க்குமுன்பாக இப்படியானது. ௨. யோசே ௰௬, ௰௬. ௰௮.

௬ பராபரனே சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணுவீர், இளைத்ததாகிய உமது சுதந்தரத்தைத் தேவரீர் திடப்படுத்துவீர். ஏசேக்கி. ௩௪, ௨௬.

௰ அதிலே உம்முடைய மந்தைதங்கியிருக்கிறது, பராபரனே சிறுமையானவனுக்குத் தயவினால் பகுத்துக் கொடுப்பீர். [உம்முடைய தயவினால் பகுவமாக்குவீர்.]

௰௧ ஆண்டவர் வசனந்தருவார், சுவிசேஷகரின் திரளான சேனையுண்டாயிருக்கும்.

௰௨ சேனைகளின் இராசாக்கள் சுறுசுறுத்திரிவார்கள், வீட்டிலே வாசமாயிருக்கிறவளோ கொள்ளையைப் பங்கிடுவாள்.

௰௩ நீங்கள் இருப்புறப் பானைக்குள்ளிருக்கையில் வெள்ளியாலே மூடப்பட்டபுறச்செட்டைகளின் சாயலாகவுந்தங்கநிறமாகிய அதின் இறகுகளின் சாயலாகவுங் காணுகிறது.

௰௪ சர்வத்துக்குமவல்லவர் அதின் இராசாக்களை இங்கும் அங்கும் வைத்தாற் காரிருளிலே வெளிச்சமாம்.

௰௫ பராபரனுடைய பருவதம் பாசான் பருவதத்தைப்போலிருக்கிறது, அது பாசான் பருவதத்தைப்போல் மேடுகளுள்ளது.

௰௬ பருவதங்களே, மேடுகளே, ஏன் விம்மியிருக்கிறீர்கள்? இந்தப்பருவதத்திலே வாசமாயிருக்கப் பராபரன் விரும்பினார், ஆம் கர்த்தர் அதிலே என்றென்றைக்கும் வாசமாயிருப்பார்.

௰௮ பராபரனுடைய இரதங்கள் பதினாயிரங்களும் ஆயிரத்தாயிரங்களுமானது, ஆண்டவர் பரிசுத்தஸ்தலமான சீனாயில் இருந்தவண்ணமாய் அவர்களுக்குள்ளிருக்கிறார். ௨. இராசா. ௬, ௰௭. தானி. ௭, ௰.

௰௬ தேவரீர் உன்னதத்துக்கேறிச் சிறையாக்குதலைச் சிறையாக்கிப்போட்டு, வரங்களை மனிதருக்குள்ளும் முருட்டாட்டஞ்செய்தவர்களுக்குள்ளுங் கூட்டப்பங்கிடுவதற்கும், இப்படியே பராபரனாகிய கர்த்தர் அவர்களுக்குள் வாசமாயிருப்பதற்குமாக வாங்கிக்கொண்டீர். எபேசு. ௪, ௮ யோவா. ௩, ௰௩. அப்போஸ். ௨, ௩௩.

௨௰ ஆண்டவர் எந்நாளுந் தோத்திரிக்கப்பட்டவர், நம்முடைய மேற் பாரஞ்சுமத்துகிறார். ஆனால் அவரோ நம்முடைய இரட்சிப்பான பராபரன். சேலா. ௨. கொரி. ௧, ௫.

௨௧ பராபரன் நமக்கு இரட்சிப்புகளையருளுகிற பராபரனாயிருக்கிறார், ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்துக்கு நீங்கும் போக்குகளுண்டு.

௨௨ மெய்யாகவே பராபரன் தம்முடைய சத்துருக்களின் சிரசையுந் தன் தோஷங்களில் நடந்துகொண்டிருக்கிறவனுடைய மயிருள்ள உச்சியையும் உடைப்பார். ௱௰, சங்கீதம். ௫. ௬.

௨௩ சத்துருக்களில் அவனவனுடைய இரத்தத்தில் உம்முடைய கால்பதியும்படியாகவும், உம்முடைய நாய்களின் நாக்கு அதை நக்கும்படியாகவும்,

௨௪ ஆண்டவர் பாசானிலிருந்து நம்முடைய சனத்தைத் திரும்ப அழைத்துக்கொண்டு வருவோமென்றும், அதைச் சமுத்திர ஆழங்களிலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டு வருவோமென்றுஞ் சொன்னார்.

௨௫ பராபரனே, உம்முடைய நடைகளைக் காண்பார்கள், என் பராபரனும் என் இராசாவுமானவர் பரிசுத்தஸ்தலத்திலே நடத்தி வருகிற நடைகளைத்தானே.

௨௬ முன்னாகப் பாடுவாரும் பின்னாகப் பண்களைச் சேவிக்கிறகன்னியாஸ்திரிகளுக்குள்ளே கின்னரங்களை வாசிப்பாருமாய் நடப்பார்கள். ௨. மோசே. ௰௫, ௨௰.

௨௭ ஆண்டவராகிய பராபரனை இஸ்ரவேலினுடைய ஊற்றினிமித்தமாகச் சபைகளில் தோத்திரியுங்கள் என்பார்கள். சகரியா. ௰௩, ௧. யோவா. ௭, ௩௮.

௨௮ அங்கே அவர்களையாளுகிற இளைய பென்யமீனும் யூதாவின் பிரபுக்களும் அவர்கள் கூட்டமும் செபுலோனின் பிரபுக்களும் நப்தலியின் பிரபுக்களுமுண்டு. பிலி. ௩, ௫. ௧. கொரி. ௰௫, ௯. அப். ௭, ௰௩. ௰௪.

௨௯ உம்முடைய பராபரன் உமது பலத்தைக் கட்டளையிட்டார், பராபரனே, நீர் எங்களுக்குண்டுபண்ணினதைத் திடப்படுத்தும். மத்தேயு. ௨௧, ௪௨.

௩௰ எருசலேமிலுள்ள உம்முடைய தேவாலயத்திற்காக இராசாக்கள் உமக்குக் காணிக்கைகளைக் கொண்டுவருவார்கள். ௭௨, சங்கீதம். ௰.

௩௧ நாணலிலே தங்கும் மிருகத்தையும் மித்திரருடைய வெள்ளித்துண்டுகளினிமித்தம் மிதித்துப்போட்டுச் சனசந்ததிகளென்றகளைச் சேர்ந்த காளைக்கூட்டத்தையும் உதையுந் துஷ்டரைக் கடிந்துகொள்ளும், யுத்தங்களை விரும்புகிற சனசந்ததிகளைச் சிதறடிப்பார்.

௩௨ பிரபுக்கள் எகிப்திலிருந்து வருவார்கள், எத்தியோப்பியா தன் கைகளைப் பராபரனண்டைக்கு நீட்டி விரைகும்.

௩௩ பூமியின் இராசியங்களே பராபரனைப்பாடி ஆண்டவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள். சேலா.

௩௪ ஆதி வானங்களுடைய வானங்களின் மேலே ஏறியிருக்கிறவரைப் பாடுங்கள், இதோ தமது சத்தத்தால் வலுமுழக்கத்தைக் கேட்கப்பண்ணுகிறார். ௨௯, சங். ௪.

௩௪ பராபரனுக்கு வல்லமையைச் செலுத்துங்கள், அவருடைய மகிமை இஸ்ரவேலின்மீதிலும் அவருடைய வல்லமை ஆகாய மண்டலங்களிலுமுள்ளது. உ௯, சங். ௧.

௩௫ பராபரனே உமது பரிசுத்த ஸ்தலங்களிலிருந்து பயங்கரமாய் விளங்குகிறீர், சனத்துக்குப் பெலனையுஞ் சத்துவங்களையுங் கொடுக்கிறவர் இஸ்ரவேலின் பராபரன்தானே, பராபரன் தோத்திரிக்கப்பட்டவர்.

௬௯. சங்கீதம்.

(பாடுபடுகிற மேசியாவின் செபம்.)

[அறுநாமபுக் கிண்ணரத்திலே வாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

பராபரனே, என்னை இரட்சியும், ஏனெனில் தண்ணீர்கள் ஆத்துமமட்டும் வந்திருக்கிறது.

௨ நிலையாத ஆழத்தின் உளையில் அமிழ்ந்தி, தண்ணீர்களின் பாதாளங்களுக்குள்ளானேன், நீரோட்டங்கள் என்மேற் புரண்டு போகிறது. சா௰, சங்கீதம். ௩.

௩ நான் கூப்பிடுகிறதினாலே இளைத்தேன், என் தொண்டை கம்மிப்போயிற்று. என் பராபரனுக்கு நான் காத்திருக்கையால் என் கண்கள் பூத்துப்போயிற்று.

உ௨, சங்கீதம். ௨. ௩.

௪ முகாந்தரமில்லாமல் என்னைப் பகைக்கிறவர்கள் என் தலையின் மயிர்களிலும் அதிகமாயிருக்கிறார்கள், எனக்கு வீண் சத்துருக்களாய் என்னைச் சங்கரிக்கிறவர்கள் பெலத்திருக்கிறார்கள், அது நான் கொள்ளையிடாததைத் திரும்பக்கொடுக்குங்காலம். யோவான். ௰௫, உ௫

௫ பராபரனே, நீர் என் பயித்தியத்தை அறிந்திருக்கிறீர், என் குற்றங்கள் உமக்கு ஒளித்திராது. சா௰, சங்கீதம். ௰௫.

உ. கொரிந்தியர். ௫, உ௧.

௬ சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரே, உம்மை நம்புகிறவர்கள் என்னாலே வெட்கப்பட்டுப்போகாமலும் இஸ்ரவேலின் பராபரனே, உம்மைத் தேடுகிறவர்கள் என்னாலே நாணமடையாமலுமிருப்பார்களாக.

௭ ஏனெனில் உம்முடைய நிமித்தம் நிந்தையைச் சகிக்கிறேன், இலச்சை என் முகத்தை மூடுகிறது. ஏசாயா. ௫௰, ௬.

௮ என் சகோதரருக்கு வேற்றுமனுஷனும் என் தாயின் பிள்ளைகளுக்கு அன்னியனுமானேன்.

௯ ஏனென்றால் உம்முடைய வீட்டுக்காக விருக்கிற பத்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது, உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது. யோவா. உ, ௰௭. றோமர். ௰௫, ௩.

௰ என் ஆத்துமாவின் உபவாசத்திலே அழுதேன், ஆனால் அதுவெனக்கு நிந்தையாயிற்று. ஆக்கா. ௰௬, ௪௧. ௱௯, சங்கீ. உ௪. உ௫.

௰௧ இரட்டையென்னுடுப்பாக்கினேன், ஆனால் அவர்களுக்குப் பழமொழியானேன்.

௰௨ வாசலில் உருக்கார்ந்திருக்கிறவர்கள் என்னைக்குறித்துப் பேசுகிறார்கள், மதுபானங்குடிக்கிறவர்களின் பாடலானேன்.

௰௩ நானோவென்றாற் கர்த்தாவே, பிரியமான காலத்திலே உம்மை நோக்கி என் விண்ணப்பத்தைச் செய்கிறேன், பராபரனே, உமது மிகுந்த கிருபையினாலும் உமது இரட்சிப்பின் சத்தியத்தினாலும் என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

௰௪ நான் அமிழ்ந்துபோகாதபடிக்கு என்னைச் சேற்றுக்கு நீங்கலாக்கிவிடும், நான் என்னைப் பகைக்கிறவர்களையுந் தண்ணீர்களின் ஆழங்களையும்விட்டு நீங்கட்டும்.

௰௫ நீரோட்டங்கள் என்மேற் புரளாமலும் ஆழம் என்னை விழுங்காமலுந், துரவு என்மேல் தன் வாயை அடைக்காமலுமிருப்பதாக.

௰௬ கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும், ஏனெனில் உம்முடைய கிருபை நலமாயிருக்கிறது, உம்முடைய மிகுந்த இரக்கங்களின்படியே என்னை நோக்கிப் பாரும்.

௰௭ உமது முகத்தை உம்முடைய ஊழியக்காரனுக்கு மறைக்காதேயும், ஏனெனில் எனக்கு நெருக்கமுண்டு, தீவிரமாய் என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

௰௮ நீர் என் ஆத்துமாவைக் கிட்டி அதை விடுவித்துக்கொள்ளும், என் சத்துருக்களினிமித்தம் என்னை மீட்டுவிடும்.

௰௯ தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர், என் சத்துருக்கள் அனைவரும் உமக்கெதிரேயிருக்கிறார்கள்.

உ௰ நிந்தை என் இருதயத்தை முறிக்கிறது, மிகவும் பெலக்கேடானேன், யாதொருவன் பரிதாபப்படுவானோவென்று காத்திருந்தேன் ஒருவனுமில்லை, தேற்றரவுபண்ணுகிறவர்களுக்குக் காத்திருந்தேன் ஆரையுங்காணேன்.

உ௧ எனக்குப் பிசுண்ணத்தந்து என் தாகத்திலெனக்குக் காடிகுடிக்கக்கொடுக்கிறார்கள். மத்தேயு. உ௭, ௩௪, ௪௮. மாற்கு. ௰௫, உ௩. யோவான். ௰௯, உ௮. உ௯.

உ௨ அவர்களுடைய பந்தி அவர்களுக்கு முன்பாகச் சுருக்கும் சரிக்கட்டுதலான கண்ணியுமாகக்கடவது. றோமர். ௰௧, ௯. ௰.

உ௩ அவர்களுடைய கண்கள் காணாதபடிக்கு அந்தகாரப்படக்கடவது, அவர்கள் இடுப்புகளையெப்போதுந் தள்ளாடப்பண்ணும்.

உச உம்முடைய சினத்தை அவர்கள்மேல் ஊற்றும், உம்முடைய கோபத்தின் உக்கிரம் அவர்களைத் தொடர்ந்து பிடிப்பதாக.

உரு அவர்கள் வீடுவாசல் பாழாகக்கடவது, அவர்களுடைய கூடாரங்களிற் குடியில்லாமற்போவதாக. அப்போ. க, உ௰.

உசு ஏனென்றால் தேவரீர் அடித்தவனையவர்கள் துன்பப்படுத்தித் தேவரீராற் காயப்பட்டவர்களை நோகப்பேசுகிறார்கள்.

உஎ அவர்கள் உமது நீதிக்குள் வராமற்படிக்கு அவர்களுடைய அக்கிரமத்தின்மேல் அக்கிரமஞ்சேரட்டும்.

உஅ அவர்கள் நீதிமான்களோடே எழுதப்படாமற் சீவபுஸ்தகத்திற் கிறுக்கப்படக்கடவார்கள். பிலிப்பியர். ச, ௩.

உகூ நானோவென்றால் சிறுமையும் நோவுமுள்ளவன், பராபரனே உம்முடைய இரட்சிப்பு எனக்குயர்ந்த அடைக்கலமாவதாக. ௱கூ, சங்கீதம். உஉ.

௩௰ பராபரனுடைய நாமத்தைப்பாட்டினாலே துதித்து அவரைத் தோத்திரத்தினாலே மகிமைப்படுத்துவேன்.

௩க கொம்பும் விரிகுளம்புமுள்ள மாட்டையுங் காளையையும் எருதையும் பார்க்க அதுவே கர்த்தருக்குப் பிரியமாயிருக்கும். ௫௰, சங்கீதம். எ.

௩உ சிறுமையானவர்கள் அதைக்கண்டு சந்தோஷப்படுவார்கள், பராபரனைத் தேடுகிறவர்களே உங்களிருதயம் வாழும். உஉ, சங்கீதம். உஎ.

௩௩ ஏனென்றால் கர்த்தர் எளியவர்களைக் கேட்கிறவர், கட்டுண்ட தம்முடையவர்களை அவர் புறக்கணியார்.

௩ச வானங்களும் பூமியுஞ் சமுத்திரங்களும் அவைகளில் அசைவாடுகிறயாவும் அவரைத் துதிக்கக்கடவது. ௱சஅ, சங்கீ. க ௲

௩ரு ஏனென்றாற் பராபரன் சீயோனை யிரட்சித்து யூதாவின் பட்டணங்களைக் கட்டுவார், அப்போது அங்கே குடியிருந்து அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

௩சு அவருடைய ஊழியக்காரரின் வித்தார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள், அவருடைய நாமத்தைச் சிநேகிக்கிறவர்கள் அதிலே வாசமாயிருப்பார்கள். ௱உ, சங்கீதம். உசு.

எ௰. சங்கீதம்.

(தன்னை விடுவித்துச் சத்துருக்களுக்கிச்சையும் விசுவாசிகளுக்கு மகிழ்ச்சியும் வரப்பண்ணத் தாவீது பராபரனை வேண்டிக்கொண்டது.)

[நினைப்பூட்டுதலாகப் பாடி இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட தாவீதின் சங்கீதம்.]

பராபரனே, என்னைத் தப்புவிக்கவும் கர்த்தாவே எனக்குச் சகாயஞ்செய்யவுந் தீவிரியும். எக, சங்கீதம். ௰உ. ௰க.

உ என் பிராணனை வாங்கத் தேடுகிறவர்கள் வெட்கி நாணுவார்கள். எனக்கு விரோதம் பண்ணுகிறவர்கள் பின்னிட்டுத் திரும்பி இலச்சையடைவார்களாக. ௩ரு, சங்கீதம். ச.

ச௰, சங்கீதம். ௰ரு. ௲

௩ ஆகா ஆகா என்கிறவர்கள் தாங்கள் அடையும் வெட்கமான பலனாலே பின்னடைந்துபோகக்கடவார்கள்.

ச உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக, உம்முடைய இரட்சிப்பைச் சிநேகிக்கிறவர்கள் எப்போதும் பராபரன் மகிமைப்படக்கடவார் என்பார்களாக.

ரு நானோவென்றால் சிறுமையும் எளிமையுமாயிருக்கிறேன், பராபரனே எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும், என் துணையும் என்னை விடுவிக்கிறவருந் தேவரீர், கர்த்தாவே தாமதியாதேயும்.

எக. சங்கீதம்.

(முதிர்ந்தவயதாகிற தாவீது தன் பெரிய துன்பங்களிற் பராபரன்மேல் வைத்த நம்பிக்கையைக் காண்பித்தது.)

கர்த்தாவே உம்மைத் தஞ்சமாயிருக்கிறேன், நான் என்றைக்கும் வெட்கப்பட்டுப்போகாதிருக்கட்டும்.

உ உம்முடைய நீதியினிமித்தமாக என்னைத் தப்புவித்து விடுவிப்பீராக, என்னண்டைக்கு உம்முடைய செவியைச் சாய்த்து என்னை யிரட்சியும். தானியேல. கூ, ௰௮.

௩ எனக்கு நான் எப்போதும் வந்தடையுங் கன்மலையாகவிரும், என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே, ஏனென்றால் தேவரீர் என் கன்மலையும் என் கோட்டையுமாயிருக்கிறீரே. ௰அ, சங்கீதம். உ. ௩.

ச என் பராபரனே, என்னை ஆகாதவனுடையகைக்கும் நியாயக்கேடுந் துஷ்டத்தனமுள்ளவனுடைய கைக்கும் நீர் தப்புவியும்.

ரு ஏனென்றாற் கர்த்தராகிய ஆண்டவரே தேவரீர் என்னுடைய நோக்கமும் என் சிறுவயதுதுவக்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர். சசு, சங்கீதம். உ.

சு நான் கெர்ப்பத்திலிருந்தது முதல் உம்முடையமேற் சார்ந்துகொண்டேன், தேவரீர் என்னை என் தாயின் குடலிலிருந்தெடுத்தவர் உம்முடைய பேரில் எப்போதுந் துதிசொல்லுவேன். உஉ, சங்கீ. ௰. ௰க.

எ அநேகருக்கு ஒரு அற்புதம்போலானேன், தேவரீரோவென்றால் எனக்குப் பலத்த அடைக்கலம்.

அ என்வாய் உமது துதியினாலும் நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைவதாக.

கூ முதிர்ந்த வயதிலே என்னைத் தள்ளிவிடாமலும் என்பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலுமிருப்பீராக.

௰ ஏனென்றால் என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி என் ஆத்துமாவிற்குக் காவலிருக்கிறவர்கள் ஏகமாய் ஆலோசனை பண்ணி,

௰க பராபரன் அவனைக் கைவிட்டார் அவனைத் தொடர்ந்து பிடியுங்கள், ஏனென்றால் விடுவிப்பாரில்லையென்கிறார்கள்.

௰உ பராபரனே எனக்குத் தூரமாகாதிரும், என் பராபரனே எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும். எ௰, சங். உ. ௬.

௰௩ என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும் எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படக்கடவார்கள்.

௰௪ நானோ எப்போதும் நம்பி உம்முடைய எல்லாத் துதியின்மேலும் துதியைக் கூட்டுவேன்.

௰௫ என்வாய் உமது நீதியையும் நாள்தோறும் உமது இரட்சிப்பையுஞ் சொல்லும், ஏனென்றால் அவைகளின் தொகையை அறியேன்.

௰௬ கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமைகளில் அட்பிரவேசிப்பேன், உம்முடைய நீதியைமாத்திரமே நினைப்பேன்.

௰௭ பராபரனே என் சிறுவயது துவக்கி என்னைப் போதித்துவந்தீர், இந்நேரமட்டும் உம்முடைய அதிசயங்களையறிவிக்கிறேன்.

௰௮ இப்போதும் பராபரனே, நான் உமக்குப் புயத்தை இச்சந்ததிக்கும் உமது வல்லமையை வரப்போகிற யாவருக்கும் அறிவிக்குமளவும் முதிர்ந்த வயதும் நரையுமட்டாக என்னைக் கைவிடீராக.

௰௯ பெரிதானவைகளைச் செய்த பராபரனே உம்முடைய நீதி உயரமட்டுஞ்சேருகிறது பராபரனே உமமைப்போலே ஆர்?

௨௰ அநேக இடுக்கண்களையுங் கொடிதானவைகளையும் என்னைப் பார்க்கப்பண்ணின நீர் திரும்ப என்னை உயிர்ப்பித்துத் திரும்ப என்னைப் பூமியின் பாதாளங்களிலிருந்தேறப் பண்ணுவீராக. க. சாமுவேல். உ, ௬.

௨௰க என் முக்கியத்தைப் பெருகப்பண்ணி என்னை மறுபடியுந் தேற்றுவீராக.

௨௰உ என் பராபரனே நானுந் தம்பூரினாலே உம்மையும் உம்முடைய சத்தியத்தைத் துதிப்பேன், இஸ்ரவேலினுடைய பரிசுத்தரே உம்மைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம் பண்ணுவேன்.

௨௰௩ என் உதடுகளும் நீர் மீட்டுவிட்ட என் ஆத்துமாவுங் கெம்பீரிக்கும், ஏனென்றால் உம்மைச் கீர்த்தனம்பண்ணுவேன்.

௨௰௪ என் நாவும் நாள்தோறும் உமது நீதியைக் கொண்டாடும், ஏனென்றால் எனக்குப் பொல்லாப்பைத் தேடுகிறவர்கள் வெட்கி இலச்சைப்பட்டுப்போனார்கள்.

எஉ. சங்கீதம்.

(பரமசாலமோனாகிய மேசியாவினுடைய இராச்சியத்தின் பாக்கியப்பெருக்கம்.)

[சாலமோனுடையது.]

க பராபரனே இராசாவுக்கும் உம்முடைய நியாயத்தீர்ப்புகளையும் இராசாவின் குமாரனுக்கும் உம்முடைய நீதியையுங் கட்டளையிடும்.

உ அவர் உம்முடைய சனத்தை நீதியும் உம்முடைய சிறுமையானவர்களை நிதானமுமாய் நியாயம் விசாரிப்பார். ஏசா. ௰க, ௩—௫.

௩ பருவதங்கள் சனத்துக்குச் சமாதானத்தைத் தரும், மேடுகள் நீதியின் விளைவோடிருக்கும்.

௪ அவர் சனத்தின் சிறுமையானவர்களை நியாயம் விசாரித்து எளியவன் பிள்ளைகளையிரட்சித்து இடுக்கண்செய்கிறவனை நசுக்குவார்.

௫ சூரியனுஞ் சந்திரனுமுள்ள மட்டும் உமக்குத் தலைமுறை தலைமுறையாகப் பயந்திருப்பார்கள். அ௬, சங். ௩௭. ௩௮.

௬ புல்லறுப்புண்ட வெளியின்மேல் இறங்குகிற மழையைப்போலவும் பூமியை நனைக்கிற தூறல்களைப்போலவுமிறங்குவார்.

௭ அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான், சந்திரனில்லாமற் போகுமட்டும் மிகுதியான சமாதானமிருக்கும்.

அ ஒரு சமுத்திரந்துவக்கி மற்றச் சமுத்திரமட்டாகவும் ஆறு துவக்கிப் பூமியின் எல்லைகளமட்டாகவும் ஆளுவார். அ௬, சக உ௬. சகரியா. ௬, ௰.

௬ அவருக்கு முன்பாக வனாந்தரத்தார் குனிவார்கள், அவருடைய சத்துருக்கள் மண்ணை நக்குவார்கள்.

௰ தர்சீசின் இராசாக்களுந் தீவுகளின் இராசாக்களுங் காணிக்கைகளைச் செலுத்தவருவார்கள், சேபா சாபா என்ற தேசங்களின் இராசாக்கள் வெகுமானங்களைக் கொண்டுவருவார்கள். ௬அ, சங். ௩௰. ஏசாயா. ௬௰, ௬.

௰க சகல இராசாக்களும் அவரைப் பணிந்துகொள்ளுவார்கள், சகல சாதிகளும் அவரைச் சேவிப்பார்கள். அறிவி. ௰க, ௰௫.

௰உ ஏனென்றாற் கூப்பிடுகிற எளியவனையுஞ் சிறுமையானவனையும் உதவியற்றவனையும் விடுவிப்பார்.

௰௩ தரித்திரரும் எளிமையுமானவனைத் தப்புவித்து எளியவர்களின் ஆத்துமாக்களை யிரட்சிப்பார்.

௰௪ அவர்கள் ஆத்துமாக்களைத் தந்திரத்துக்கும் கொடுமைக்கும் நீங்கலாக்கி விடுவித்துக் கொள்ளுவார், அவர்கள் இரத்தம் அவருடைய பார்வைக்கு அருமையானது

௰௫ அவர் பிழைப்பார், அவருக்குச் சேபாவின் பொன்னிற் கொடுக்கப்படும், எப்போதும் அவரை வேண்டிச் செபம் பண்ணப்படும், எந்நாளும் நம் தோத்திரிக்கப்படுவார். அப். ௧, ௰௮. ஏசா. ௬௰, ௬. மத்தேயு. ௨, ௰௧.

௰௬ பூமியிற் பருவதங்களின் கொடுமுடியிலே விதைக்கப்பட்ட ஒருபிடி தானியம் போலிருக்கும், அதின் விளைச்சல் லீபனோனைப் போல அசையும், நிலத்தினுடைய பூண்டுகளையும் போலே பட்டணத்திலிருந்து பூப்பார்கள்.

௰௭ அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும், சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமம் சந்தான பரம்பரையாயிருக்கும். எல்லாச் சாதிகளும் அவருக்குள் ஆசீர்வதித்துக்கொண்டு அவரைப் பாக்கியமுடையவரென்பார்கள். ௧. மோசே. ௰௨, ௩.

௰௮ ஒருவராய் அதிசயங்களைச் செய்கிற இஸ்ரவேலின் தம்பிரானாயிருக்கிற பராபரனாகிய கர்த்தர் தோத்திரிக்கப்பட்டவரும்,

௰௯ அவருடைய மகிமையான நாமம் என்றென்றைக்கும் தோத்திரிக்கப்பட்டதுமாமே, அவருடைய மகிமையாற் பூமியனைத்தும் நிறைப்பப்படுவதாக, ஆமென் ஆமென். ஏசாயா. ௬, ௩.

௨௰ ஈசாயின் குமாரனாகிய தாவீதின் செபங்கள் முடிந்தது.

௭௩. சங்கீதம்.

(பொல்லாதவருடைய வாழ்வைப் பொறுமையோடே பார்த்து இடறல் அடையாதபடிக்கு அவர்கள் பிற்காரியத்தைத் தியானித்துப் பராபரனையே கெதியாகப் பற்றியிருக்க வேண்டியதென்பது.)

[ஆசாப்பின் சங்கீதம்]

இஸ்ரவேலுக்கு அதாவது, இருதயத்திலே சுத்தமானவர்களுக்குப் பராபரன் நல்லவர்தானே. மத்தே. ௫, ௮.

௨ என்னுடைய கால்களோவென்றால் சாயவும் என் அடிகள் சறுக்கவும் சற்றுத்தப்பிற்று.

௩ ஏனெனில் ஆகாதவர்களின் சாங்கோபாங்கத்தை நான் காணுகையில் வீம்புக்காரர் மேற் பொறுமையானேன். யோபு. ௨௧, ௭- ௨௧. எரேமி. ௰௨, ௧—௩.

௪ அதேனென்றால் தங்கள் மரணமட்டும் அவர்களுக்கிடுக்கண்களில்லாமல் அவர்களுடைய பெலன் புஷ்டியாயிருக்கிறது.

௫ நரசீவவருத்தத்தில் அகப்படுகிறார்கள், வேறே மனுஷரோடே உபாதிப்படுகிறார்கள்.

௬ ஆகையாற் பெருமை அவர்களைப் பொற் சரப்பணியைப்போலே பூணும், அவர்கள் கொடுமை அவர்களை ஆடையானதைப் போலே மூடும்.

௭ அவர்கள் கண்கள் நிணத்திலிருந்து பார்க்கிறது, அவர்கள் மனம் விருப்பங்களைத் தேறுகிறது.

௮ பிறரைத் தொய்யப்பண்ணி அக்கிரமாய இடுக்கண் செய்வதைப் பேசுகிறார்கள், உயரத்திலிருந்து பேசுகிறார்கள்.

௯ தங்கள் வாயை வானத்திலே வைக்கிறார்கள், அவர்கள் நாவின்படியே பூமியிலே நடக்கும்.

௰ ஆனபடியால் அவர்களுடைய சனம் இந்தவழியாகவே திரும்பும், தண்ணீர்கள் அவர்களுக்குப் பரிபூரணமாகச் சுரந்துவரும்

௰௧ அவர்கள் பராபரன் அதை எப்படி அறிவார், உன்னதமானவரில் அதற்கு அறிவுண்டோவென்கிறார்கள். யோபு, ௨௨. ௰௩. சங்கீதம். ௭.

௰௨ இதோ இவர்கள் ஆகாதவர்களாயிருந்தும் இகிலும் என்றுஞ் சுகசீவிகளாயிருந்து ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள்.

௰௩ நான் விருதாவாகவே என்னிருதயத்தைச் சுத்தம்பண்ணி என் கைகளைக் குற்றமில்லாமையிலே கழுவினேன். ௨௬. ௬.

௰௪. ழி

௰௪ நான் நித்தம் வாதிக்கப்படுகிறேனே, என் தண்டனைகள் காலமாதந்தோறும் வருமே.

௰௫ இப்படிப் பேசவேண்டுமென்று நான் நினைத்தால் இதோ உம்முடைய பிள்ளைகளின் சந்ததிக்குத் துரோகியாவேன்.

௰௬ இதையறியும்படிக்கு யோசித்தேன்,

௰௭ அல்லது நான் பராபரனுடைய பரிசுத்தஸ்தலங்களுக்குட் பிரவேசித்து அவர்கள் கடைசிக்காரியத்தைக் கவனித்தமட்டும் அது என் பார்வைக்கு வித்தனையாயிருந்தது.

௰௮ சறுக்கலுகளிலே அவர்களை நிறுத்தி அவர்களைப் பாழ்க்கடிப்புகளில் விழப்பண்ணுகிறீர்.

௰௯ ஒரு நிமிஷத்திலே அவர்கள் பாழாவார்கள், பயங்கரங்களாலே அழிந்து நிர்மூலமாவார்கள். ௩௭. சங். ௩௬.

௨௰ ஆண்டவரே நீர் விழித்தெழுந்திருக்கும்போது சொப்பனம் ஒழியுமாப்போலே அவர்கள் வேஷத்தைப் பட்டணத்தில் அவமானமாகப் போகப்பண்ணுவீர்.

உக என்நெஞ்சுவற்றித்து நான் என் உள்ளிந்திரியங்களிற் குத்துண்டு உருவப்படுகிறவனாயிருக்கக்கொள்ள,

உஉ நான் காரியத்தை அறியாத மோட்டும் உமக்கு முன்பாக மிருக்குணமுமாயிருந்தேன்.

உங ஆகையால் நான் எப்போதும் உம்மண்டையிலே திரிப்பேன், என் வலத்தகையைப் பிடித்துத் தாங்குவீர்,

உச உம்முடைய யோசனையின்படி என்னை நடத்திக் கடைசியிலென்னை மகிமையிலே சேர்த்துக்கொள்வீராக.

உரு பின்னே யார் எனக்குப் பரமண்டலத்திலிருக்கிறார், உம்மோடே நானிருக்கையிற் பூமியில் எனக்கு வேறே விருப்பமில்லை.

உசு என் மாம்சமும் என்னிருதயமும் மாளும்போது பராபரன் என்றென்றைக்கும் என்னிருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்.

உஎ ஏனெனில் இதோ உம்மைவிட்டுத் தூரமாகிறவர்கள் அழிவார்கள், உம்மைவிட்டுச் சோரம்போகிற அனைவரையுஞ் சங்கரிப்பீர்.

உஅ எனக்கோ பராபரனை அண்டிக்கொண்டிருக்கிறதே நல்லது, நானும் உம்முடைய கிரியைகளெல்லாஞ் சொல்லி வரும்படிக்குக் கர்த்தராகிய ஆண்டவர்மேலென் நம்பிக்கையை வைத்திருப்பேன்.

எச. சங்கீதம்.

(பாழாக்கப்பட்ட சபையேயும் விண்ணப்பம்.)

[ஆசாபின் போதகசங்கீதம்.]

பராபரனே ஏன் எங்களை யென்றைக்குந் தள்ளிவிடுகிறீர், ஏன் உமது கோபம் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகள்மேற் கனபுகை... ரத. சச, சங்கீதம். உச. உரு.

உ நீர் பூருவகாலந்துவக்கிச் சம்பாதித்துக்கொண்ட உமது சபையையும் நீர் மீட்டுக்கொண்ட உம்முடைய சுதந்தரமான கோத்திரத்தையும் நீர் வாசமாயிருந்த சீயோன்பருவதத்தையும் நினைவுகூரும்.

ங நித்திய பாழ்க்கடிப்புகளுக்கும் உம்முடைய பாதங்களை யெழுந்தருளப்பண்ணும், சத்துரு பரிசுத்த ஸ்தலத்தில் அனைத்தையுங் கெடுத்துப்போட்டான்.

ச உம்முடைய சத்துருக்கள் உம்முடைய ஆலயங்களின் உட்புறத்திலே கெர்ச்சித்துத் தங்கள் அடையாளங்களை யடையாளங்களாக வைத்தார்கள்.

ரு மரங்களுடைய அடர்த்தியில் வெட்டுக்கோடாலிகளை ஓங்கியெடுக்கிறவனென்ன அவன் பேர்பெற்றான்.

கூ இப்போதும் அதின் சித்திர வேலைகளையெல்லாம் வாச்சியாலுஞ் சுத்தியல்களாலுந் தகர்த்தார்கள்.

எ உம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை அக்கினிக்கிரையாக்கி உம்முடைய நாமத்தின் வாசஸ்தலத்தைத் தரையாக்கிப் பரிசுத்தக்குலைத்துப்போட்டார்கள்.

அ அவர்களை யேகமாய் நிர்மூலியாக்குவோமென்று தங்களிருதயத்திற் சொல்லித் தேசத்திலுள்ள பராபரனுடைய ஆலயங்களையெல்லாஞ் சுட்டெரித்தார்கள்.

கூ எங்கள் அடையாளங்களைக் காணோம், தீர்க்கதரிசி அப்புறமில்லை, எந்தமட்டுமென்றறிகிறவன் எங்களிடத்திலுமில்லை.

ய பராபரனே எந்தமட்டுஞ் சத்துரு நிந்திப்பான், பகைஞன் என்றைக்கும் உம்முடைய நாமத்தைத் தூஷணிப்பானோ.

யக ஏன் உமது கையையும் உமது வலதுகரத்தையும் முடக்கிக்கொள்ளுகிறீர், அதை உமது மடியிலிருந்தெடுத்து நீட்டிக்கொண்டிரும்.

யஉ ஏனெனிற் பூமியின் நடுவிலேயிரட்சிப்புகளைச் செய்கிற பராபரன் ஆதிகாலமுதலாய் என்னுடைய இராசா. கூஅ, சங. உக.

யங தேவரீர் உம்முடைய வல்லமையால் சமுத்திரத்தை யிரண்டாகப் பிளந்து தண்ணீர்களில் வலு சர்ப்பங்களின் தலைகளையுடைத்தீர்.

யச தேவரீர் முதலைகளின் தலைகளை நருக்கிப்போட்டு அதை வனாந்திரத்தாராகிய சனத்துக்குப் போசனமாகக் கொடுத்தீர்.

யரு தேவரீர் ஊற்றையும் ஆற்றையும் பிளந்து பிறக்கப்பண்ணினீர், தேவரீர் வலுநதிகளை வறண்டுபோகவும் பண்ணினீர்.

யசு பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது, தேவரீர் வெளிச்சத்தையுஞ் சூரியனையும் படைத்தீர்.

யஎ தேவரீர் பூமியின் எல்லைகளையெல்லாந் திட்டம்பண்ணினீர், கோடைகாலத்தையும் மாரிகாலத்தையுந் தேவரீர் உண்டாக்கினீர்.

யஅ சத்துரு கர்த்தராகிய தேவரீரை நிந்திக்கிறதையும், பயித்தியங்கொண்ட சனம் உம்முடைய நாமத்தைத் தூஷணிக்கிறதையும் நினைத்திரும். ஏசாயா. கூ, யஎ.

யகூ உம்முடைய காட்டுப்புறாவின் ஆத்துமாவை மிருகத்துக்குக் கொப்புக்கொடாதேயும், உம்முடைய சிறுமையானவர்களின் பிராணனை யென்றைக்கும் மறந்திராதேயும்.

உய உம்முடைய உடம்படிக்கையை நினைத்தருளும், ஏனெனிற் பூமியில் இருளான இடங்கள் கொடுமைக்குடியிருப்புகளால் நிறைந்திருக்கிறது.

உக நொறுங்குண்டவன் நாணத்தோடே திரும்பாமற் சிறுமையானவனும் எளி

மையானவனும உம்முடைய நாமததைத துதிப்பார்களாக.

உஉ பராபரனே நீர் எழும்பி உம்முடைய வழககை வழககாடும, பயித்தியக்காரனாலே நாடோறும உமககுவருமநிநதையை நினையும.

உங உம்முடையசத்துருக்களினகூக்குரலை மறவாதேயும, உமககுவிரோதமாயஎழுமபுகிறவர்களின அமளியெப்போதும அதிகரிககிறது.

எரு. சங்கீதம்.

(பெருமையானவர்கள தாழ்த்தப்படுவதையுந தாழமையானவர்கள உயர்த்தப்படுவதையும மேசியாமுனனறிவித்தது.)

[நாசமாக்காதேயும் என்னும் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்டதுமான ஆசாபினசங்கீதமாகியபாட்டு.]

உம்மைத்துதிக்கிறோம பராபரனே, உம்மைத் துதிக்கிறோம, உம்முடைய நாமஞ் சமீபமாயிருக்கிறது, உம்முடைய அதிசயங்களைச சொலலிவருகிறார்கள.

உ நியமிக்கப்பட்டதை நான அடையும போது நான உத்தம நிதானமாயநியாயந தீர்ப்பேன.

ங பூமியும அதினஎல்லாக்குடிகளும இளகிப்போனதுபோலேயாயிறறு, நான அதின தூணகளை நிலைநிறுத்துவேன. சேலா.

ச வீமபுக்காரருடனே வீமபுசொல்லாதேயுங்களெனறும ஆகாதவர்களுடனே கொமபுகளை ஏறெடுக்காதேயுங்களெனறுஞ சொனனேன.

ரு உங்கள கொமபுகளை உயரமாயெடுக்காதேயுங்கள, பெருமைககழுத்தினாற்கடினமாயப்பேசாதேயுங்கள. ருக, சங்கீ. யசு.

சு ஏனெனில கிழக்கிலாகிலும மேற்கிலாகிலும மலைகளின வனாந்தரத்திசையிலாகிலுமிருந்து உங்களுக்குச செயமவராதென்றேன.

எ ஏனெனறால பராபரனே நியாயாதிபதி; இவனைத்தாழ்த்தி அவனையுயர்த்துகிறார். க. சாமுவேல. உ, எ. அ.

அ ஏனெனில மிகுதியுங்கலங்கிப்பொங்குகிற மதுபானத்தினாலே நிறைந்தபாத்திரங் கர்த்தருடையகையிலிருக்கிறது. அதிலிருந்து வார்க்கிறார், ஆனாற் பூமியிலுள்ள ஆகாதவர்களனைவரும அதினவணடல்களைப் புறிஞ்சிக்குடிப்பார்கள. சுய, சங்கீதம. ரு.

கூ நானோவெனில எனறெனறைக்கும இதையறிவித்து யாககோபுடைய பராபரனைககீர்த்தனமபண்ணி,

ய ஆகாதவர்களின கொமபுகளையெல்லாம வெட்டுவேன, நீதிமானுடைய கொமபுகளோ உயர்த்தப்படும.

எசு. சங்கீதம்.

(சத்துருக்களைவென்ற விசேஷித்தசெயத்தைக்கட்டளையிட்டபராபரனைமகிமைப்படுத்தினது.)

[நெகினோத்துகளிலேவாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட ஆசாபினசங்கீதமாகியபாட்டு.]

யூதாவினபராபரன அறியப்பட்டவர் இஸ்ரவேலில அவருடைய நாமம்பெரியது.

உ சாலேமில அவருடைய கூடாரமும சீயோனில அவருடைய வாசஸ்தலமுமிருக்கிறது.

ங அங்கேயிருந்து வில்லின அம்புகளையுங் கேடகத்தையும பட்டயத்தையும யுத்தத்தையுமுறிக்கிறார். சேலா.

ச மகத்துவமானவரே, கொளளையிடுகிற மலைகளைப்பார்க்கிலுந தேவரீரே பிரகாசமுளளவர்.

ரு வீரியநெஞசுளளவர்கள கொளளையாய்ப்போனார்கள, தங்கள நித்திரையைப்படைந்து அசைந்தார்கள, வல்லமையுளள எல்லாமனிதருடையகைகளும அவர்களுக்கு உதவிக்குவராதேபோயிறறு.

சு யாககோபினபராபரனே, உம்முடைய உத்தமபுத்தலால இரதங்களுங குதிரைகளும உறங்கிவிழுந்தது.

எ நீர், நீரே பயங்கரமானவர், உமது கோபம பறறியெரிகிறதுமுதல ஆர் உமக்குமுனபாக நிறபான.

அ வானங்களிலிருந்து நியாயத்தீர்ப்பைக் கேட்கப்பணணினீர்.

கூ பூமியிலுளள எல்லாச சிறுமையானவர்களையும இரட்சிக்கப்பராபரன நியாயம் விசாரிப்பதற் கெழும்புகையிற் பூமிபயந்தமர்ந்தது. சேலா.

ய ஏனெனில மனிதனுடைய உக்கிரம் உமது மகிமையைவிளங்கப்பணணும, மிஞ்சின அதிக உக்கிரங்களால இடைகட்டிக்கொளளுவீர்.

யக உங்கள பராபரனாகிய கர்த்தருக்குப பொருத்தனைகளைசசொல்லிசசெலுத்துங்கள, அவரைச்சூழ்ந்திருக்கிற அனைவரும பயங்கரமானவருக்குக் காணிக்கைகளைக் கொணடுவரக்கடவார்கள.

யஉ பிரபுக்களின ஆவியைத்தவிர்க்கிறார், பூமியின இராசாக்களுக்கவர் பயங்கரமானவர்.

எஎ. சங்கீதம்.

(பராபரனமுனசெயத அதிசயங்களைநினைவு கூருகிறதினாலே மனிதன தன்மனதை உபத்திரவத்திலே திடப்படுத்தவேணடியதெனபது.)

[எதிதூனென்ற இராகத்தலைவனுக்கொப் புவிக்கப்பட்ட ஆசாப்பின சங்கீதம.]

நான பராபரனுக்கு நேராக என் சத்தத்தையுயர்த்திக் கூப்பிடுகிறேன, என் சத்தத்தைப் பராபரனண்டைக்குயர்த்துகிறேன, அவர் எனக்குச் செவிகொடுக்கிறார்.

௨ என நெருக்கத்தின நாளிலே ஆண்டவரைத் தேடினேன, என் கை இராக்காலத்திலே ஒழிந்திராமல விரிக்கப்பட்டிருந்தது. என்னுத்துமா ஆறுதலடைந்து கொள்ளாதே போயிற்று. ௫௰, சங்கீதம. ௰௫.

௩ நான பராபரனை நினைக்கும்போது, அலறினேன, நான யோசிக்கும்போது, என ஆவி தொய்ந்துபோயிற்று. சேலா.

௪ என கண்களின இமைகளைப் பிடித்திருந்தீர், நான பேசமாட்டாதபடிக்கு மனமுறிச்சலாயிருந்தேன.

௫ பூருவ நாட்களையும ஆதிகாலத்து வருஷங்களையும சிந்தித்தேன. ௱௪௩, சங. ௫.

௬ நான இராக்காலத்திலென கின்னரக்கீதத்தை நினைத்து என னிருதயத்தோடே சம்பாஷித்துக்கொண்டேன, என்னுளவி ஆராய்ந்ததாவது,

௭ ஆண்டவர் என்றைக்கும் புறந்தள்ளிவிடுவாரோ, இனி ஒருபோதும் தயவு செய்யாமல இருப்பாரோ.

௮ அவருடைய கிருபை என்றென்றைக்கும் அற்றுப்போயிற்றோ, வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ.

௯ பராபரன இரங்க மறந்தாரோ, தமமுடைய இரக்கங்களைக் கோபத்தினால அடைத்துப்போட்டாரோ வென்றேன. சேலா.

௰ ஆனால இது என பலவீனப்படும வகை, காலத்தின மாறுதல உன்னதமானவருடைய வலதுகரத்திலிருக்கிறதென்று சொல்லி,

௰௧ கர்த்தருடைய செயல்களை நினைவுகூர்ந்தேன, உமமுடைய பூருவகாலத்து அதிசயங்களைத் தானே நான நினைவுகூர்ந்து.

௰௨ உமமுடைய எல்லாக் கிரியைகளையும தியானித்து உமமுடைய செயல்களை யோசித்தேன.

௰௩ பராபரனே, உமது வழி பரிசுத்தஸ்தலத்திலுள்ளது, பராபரனைப்போலப் பெரிய தேவனார்,

௰௪ அதிசயங்களைச் செய்கிற பராபரன தேவரீரே, சனசதளங்களுக்குள்ளே உமமுடைய வல்லமையைத் தெரியப்பண்ணினீர்.

௰௫ யாக்கோபு யோசேப்பு என்றவர்களின புத்திரராகிய உமமுடைய சனத்தை உமது புயத்தினாலே மீட்டுக்கொண்டீர். சேலா.

௰௬ சலங்கள் உம்மைக்கண்டது, பராபரனே சலங்கள் உம்மைக்கண்டு தத்தளித்தது, ஆழங்களுங் கலங்குகிறது.

௰௭ மேகங்கள சலங்களைப் பொழிந்துவிட்டது, ஆகாயமண்டலங்கள் முழக்கமிட்டது, உமமுடைய அம்புகளும் தெறித்துப் பறந்தது. ௰௮, சங்கீதம. ௰௨—௰௪.

௰௮ உமமுடைய குமுறலின சத்தம வட்டமிட்டு வழங்குகிறது, மின்னல்கள பூச்சக்கரத்தைப் பிரகாசித்தது, பூமி குலுங்கி அதிர்ந்தது.

௰௯ உமமுடைய வழி கடலிலும உமது பாதைகள வலுத்தண்ணீர்களிலுமிருந்தது. உமது காலடிகள தெரியப்படாதே போயிற்று.

௨௰ மோசே ஆரோன என்றவர்களின கையால உமது சனத்தை ஒரு ஆட்டுமந்தையைப்போலே வழிநடத்தினீர்.

௭௮. சங்கீதம்.

(பராபரன தமது சனத்துக்குச் செய்த மிகுந்த உபகாரங்களையும சனத்தின மிகுதியாகவும கண்டநன்றியற்றமையையுங் காணபித்தது.)

[ஆசாப்பின போதக சங்கீதம.]

என சனமே என உபதேசத்திற்குக் கேள்விகொடுத்து என வாயின வசனங்களுக்கு உங்கள செவிகளைச் சாயுங்கள.

௨ என வாயை உவமைகளால திறப்பேன, பூருவகால மருமத்தப் புதைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன. ௪௯, சங். ௫. மத். ௰௩, ௩௫.

௩ நாங்கள கேட்டதும அறிந்ததும எங்கள பிதாக்கள எங்களுக்குச் சொல்லிவந்ததுமான விசேஷங்களை,

௪ நாங்கள அவர்களுடைய பிள்ளைகளுக்கு மறைக்காமற் கர்த்தரின துதிகளையும அவருடைய பெலத்தையும அவர் செய்த அவருடைய அதிசயங்களையும பின்சந்ததிக்கு விவரிப்போம.

௫ ஏனெனில அவர் யாக்கோபிலே சாட்சியை ஏற்படுத்தி இஸ்ரவேலிலே வேதத்தை ஸ்தாபித்து அதைத் தங்கள பிள்ளைகளுக்கு அறிவிக்க நமமுடைய பிதாக்களுக்குக் கற்பித்தார்.

௬ பிறக்கப்போகிற பிள்ளைகளாகிய பின்சந்ததி அதை அறிந்துகொண்டு எழும்பித் தங்கள பிள்ளைகளுக்குச் சொல்லவும,

௭ பராபரனமேலே தங்கள நம்பிக்கையை வைத்துப் பராபரனுடைய செயல்களை மறவாமல அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளவும,

௮ முரட்டாட்டமுங் கலகமுமுள்ள சந்ததியாகிய தங்கள பிதாக்களைப் போலாகாதிருக்கவுந்தானே, அவர்கள தங்கள இருதயத்தைச் செம்மைப்படுத்தாத சந்ததியாயிருந்தார்கள, அவர்களுடைய ஆவி பராபரனுடனே உண்மையாயிருந்ததில்லை.

௫ மோச. ௩௨, ௫. ௬.

௯ ஆயுதமணிந்த வில்காரரான எப்பிராயீமபுத்திரர் யுத்தநாளிலே முதுகைக் காட்டினார்கள்.

௰ பராபரனுடைய உடம்படிக்கையைக் கைக்கொள்ளாமல் அவர் நியாயப்பிரமாணத்திலே நடக்கமாட்டோமென்று,

௰௧ அவர்செயல்களையும் அவர் தங்களுக்குக் காண்பித்த அவருடைய அதிசயங்களையும் மறந்தார்கள்.

௰௨ அவர்களுடைய பிதாக்களின் முன்பாக எகிப்துதேசத்துச் சோவான்பட்டணவெளியிலே அதிசயங்களைச் செய்தார்.

௰௩ கடலைப்பிளந்து அவர்களைக் கடக்கப்பண்ணிச் ஜலங்களைக் குவியலாக நிறுத்தி,

௰௪ அவர்களைப் பகற்காலத்திலே மேகத்தாலும் இராமுழுவதும் அக்கினிவெளிச்சத்தாலும் வழிகாட்டிநடத்தினார்.

௰௫ வனாந்தரத்திற் கன்மலைகளைப்பிளந்து அவர்களுக்கு மகா ஆழங்களுக்குச் சரியான தண்ணீர்களால் தாகந்தீர்த்து,

௰௬ கன்மலையிலிருந்து நதிகளைப் புறப்படப்பண்ணித் தண்ணீர்களை ஆறுகளாய் இறங்கிஓடவிட்டார்.

௰௭ ஆனால் அவர்கள் அப்புறம் அவருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யவும் உன்னதமானவருக்கு வறண்டவெளியிலே கோபமூட்டவுந்தொடர்ந்து,

௰௮ தங்கள் மனதுக்கேற்ற போசனத்தைக் கேட்கிறதினாற் பராபரனைத் தங்களிருதயங்களிற் பரிட்சைபார்த்து, ௨. மோ. ௰௬, ௪. ௯.

௰௯ பராபரன் வனாந்தரத்திலே பந்தியை ஆயத்தப்படுத்தமாட்டுவாரோவென்றும்,

௨௰ இதோ அவர் கன்மலையையடித்ததினால் தண்ணீர்கள்புறப்பட்டு நதிகளாய்ப் புரண்டுவந்தது, அப்பத்தையுங் கொடுக்கமாட்டுவாரோ? தம்முடைய சனத்துக்கு மாமிசத்தையும் ஆயத்தப்படுத்துவாரோவென்றும் பராபரனுக்கு விரோதமாய்ப் பேசினார்கள்.

௨௧ ஆகையாற் கர்த்தர்கேட்டு உக்கிரமானார். யாக்கோபுக்கு விரோதமாய் அக்கினிபற்றியெரிந்தது.

௨௨ அவர்கள் பராபரன்பேரில் விசுவாசியாமலும் அவர் இரட்சிப்பை நம்பாமலும் போனதினாலே இஸ்ரவேலுக்கு விரோதமாகக் கோபமெழும்பிற்று.

௨௩ அவர் உயரவிருக்கும் ஆகாயமேகங்களுக்குக் கற்பித்து வானங்களின் கதவுகளைத் திறந்து,

௨௪ அவர்கள்மேல் மன்னாவை ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி வானதானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார்.

௨௫ வல்லவர்களின் அப்பத்தை அவனவன் சாப்பிட்டான், அவர்களுக்குப் பரிபூரண ஆகாரத்தையனுப்பினார்.

௨௬ ஆகாயத்திலே கீழ்க்காற்றை வரப்பண்ணித் தம்முடைய வல்லமையினாலே தென்றலையுமெடுத்துவந்து,

௨௭ அவர்கள்மீதில் மாமிசத்தைத் தூளத்தனையுஞ் செட்டையுள்ளபட்சிகளைக் கடற்கரைமணலத்தனையுமாய் வருஷிக்கப்பண்ணி,

௨௮ அவைகளை அவர்கள் நடுப்பாளயத்திலே அவர்கள் கூடாரங்களைச் சுற்றிலும் இறங்கப்பண்ணினார்.

௨௯ அவர்கள் போசித்துமிகவுந் திருப்தியானார்கள், அவர்களுடைய இச்சையை அவர்களுக்கு நிறைவேற்றினார்.

௩௰ அவர்கள் தங்களிச்சையைவெறுக்காதிருந்தார்கள், அவர்களுடைய போசனம் இன்னம் அவர்கள் வாயிலிருக்கும்போதே,

௩௰௧ பராபரனுடைய கோபம் அவர்கள்மேல் எழும்பி அவர்களிற் கொழுத்தவர்களைக் கொன்று இஸ்ரவேலில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை மடியப்பண்ணினார். ௪. மோசே. ௰௧, ௩௩.

௩௰௨ இப்படியெல்லாமிருந்தும் அவர்கள் இன்னம் அவருடைய அதிசயங்களை நம்பாமற் பாவஞ்செய்தார்கள்.

௩௰௩ ஆனதுகொண்டு அவர்கள் நாட்களை மாயையிலும் அவர்கள் வருஷங்களைப் பயங்கரத்திலுங் கழியப்பண்ணினார்.

௩௰௪ தங்களை அவர் கொல்லும்போது அவர்கள் அவருக்காக விசாரித்துத் திரும்பிக்கொண்டு பராபரனைக் காலமே தேடி,

௩௰௫ பராபரன் தங்கள் கன்மலையென்றும் உன்னதமான பராபரன் தங்கள் மீட்பரென்றும் நினைவுகூர்ந்து,

௩௰௬ தங்கள் வாயினாலே அவருக்கு இச்சகம் பேசித் தங்கள் நாவுகளினாலே பொய்சொன்னார்கள்.

௩௰௭ ஏனெனில் அவர்கள் இருதயம் அவரோடே நிலவரமாயிருந்ததில்லை, அவருடைய உடம்படிக்கையில் அவர்கள் உண்மையாயிருக்கவில்லை.

௩௰௮ அவரோ இரக்கமாயிருந்து அவர்களை அழிக்காதபடிக்கு அவர்கள் அக்கிரமத்தை மூடித் தம்முடைய எல்லா உக்கிரத்தையும் எழுப்பாமல் அநேகந்தரந்தம்முடைய கோபத்தை விலக்கி,

௩௰௯ இவர்கள் மாமிசமென்றும் திரும்பிவராமல் அகலுகிறகாற்றுமாயிருக்கிறார்களென்று நினைவுகூர்ந்தார்.

௪௰ எத்தனைவிசை அவருக்கு வனாந்தரத்திலே கோபமூட்டி அவாந்திரவெளியிலே அவருக்கு நோகநடந்தார்கள்.

௪௧ அடிக்கடி பராபரனைப் பரீட்சைபார்த்து இஸ்ரவேலின் பரிசுத்தரை மட்டுப்படுத்தினார்கள்.

௪௨ அவருடைய கரத்தையும் அவர் எகிப்திலே தம்முடைய அடையாளங்களையும் சோவான் பட்டணவெளியிலே தம்முடைய அற்புதங்களையும் செய்து,

௪௩ தங்களைச் சத்துருவுக்கு விலக்கி மீட்ட நாளையும் இவர்கள் நினையாதே போனார்கள்.

௪௪ அவர்களுடைய நதிகளையும் அவர்களுடைய ஆறுகளையும் அவர்கள் அவைகளிற் குடிக்கக்கூடாதபடிக்கு இரத்தமாக மாற்றினார்.

௪௫ அவர்களைத் தின்னும் வண்டுச்சாதிகளையும் அவர்களைக் கெடுக்கும் தவளைகளையும் அவர்களுக்குள்ளே அனுப்பி,

௪௬ அவர்கள் பலனைப் பச்சைப்புழுக்களுக்கும் அவர்கள் பிரயாசத்தை வெட்டுக்கிளிகளுக்குங் கொடுத்தார்.

௪௭ அவர்களுடைய கொடிமுந்திரிகைச் செடிகளைக் கல்மழைகளினாலும் அவர்கள் முசுக்கட்டை மரங்களை ஆலங்கட்டியினாலும் அழித்து,

௪௮ அவர்கள் மிருகஜீவன்களைக் கல்மழைக்கும் அவர்கள் ஆடுமாடுகளை இடிகளுக்கும் ஒப்புக்கொடுத்தார்.

௪௯ தமது கோபத்தின் உக்கிரத்தையும் மூர்க்கத்தையுஞ் சினத்தையும் நெருக்கத்தையுந் தீங்குசெய்யவிடப்பட்ட தூதர்களையும் அவர்களுக்குள்ளே அனுப்பினார்.

௫௰ தம்முடைய கோபத்துக்கு வழியைச் சரிப்படுத்தினார், அவர்கள் ஆத்துமாவை அவர் மரணத்திற்கு விலக்கிக் காக்காமல் அவர்களை அவர் பெருவாரிக்காய்ச்சலுக்கு ஒப்புக்கொடுத்து,

௫௧ காமின் கூடாரங்களாகிய எகிப்திலே தலைச்சன்களாயிருந்த முதற்பேறு யாவையும் அழித்து,

௫௨ தம்முடைய சனத்தை ஆடுகளைப்போலே புறப்படப்பண்ணி அவர்களை வனாந்தரத்திலே மந்தையைப்போலே கூட்டிக்கொண்டுவந்து,

௫௩ அவர்களைப் பத்திரமாய்ப் பயப்படாதபடிக்கு நடத்தினார், ஆனால் அவர்கள் சத்துருக்களைக் கடல் மூடிப்போட்டது.

௫௪ அவர்களைத் தம்முடைய பரிசுத்த எல்லைமட்டுக்குந் தம்முடைய வலதுகரஞ் சம்பாதித்த இந்தப் பருவதமட்டுக்கும் அழைத்துவந்து,

௫௫ அவர்கள் முகத்துக்கு முன்பாகச் சாதிகளைத் துரத்திவிட்டு இவர்கள் தேசத்தைச் சீட்டுப்போட்டுப் பங்கிட்டுவித்து இஸ்ரவேல் கோத்திரங்களை இவர்களுடைய கூடாரங்களிற் குடியேற்றினார்.

௫௬ ஆகிலும் அவர்கள் உன்னதமான பராபரனைப் பரீட்சைபார்த்து அவருக்குக் கோபமூட்டி அவருடைய சாட்சிகளைக் கைக்கொள்ளாமற் போய்,

௫௭ தங்கள் பிதாக்களைப்போலே வழிவிலகித் துரோகம்பண்ணி மோசம்போக்கும் வில்லைப்போலத் துவண்டு.

ஓசேயா. ௭, ௰௬.

௫௮ அவருக்குத் தங்கள் மேடைகளாலே கோபத்தையுந் தங்கள் சுரூபங்களால் எரிச்சலையும் உண்டாக்கினார்கள்.

௫௯ பராபரன் அதைக்கேட்டு உக்கிரமாகி இஸ்ரவேலை மிகவும் வெறுத்து,

௬௰ தாம் மனுஷருக்குள்ளே தாபங்களைப் போட்ட கூடாரமாகிய சீலோவிலுள்ள வாசஸ்தலத்தை நெகிழ்ந்து, ௧. சாமு. ௪. ௪—௰௧.

௬௧ அவர்கள் பெலத்தைச் சிறையிருப்பிலும் அவர்கள் மகிமையைச் சத்துருவின் கையிலும் ஒப்புக்கொடுத்து, ௧. சாமுவேல. ௫, ௧. ௨.

௬௨ தம்முடைய சனத்தைப் பட்டயத்திற்கிரையாகவிட்டுத் தமது சுதந்தரத்திற்கு விரோதமாய் உக்கிரமானார்.

௬௩ அவர்கள் இளைஞரை அக்கினி பட்சித்தது, அவர்கள் கன்னியாஸ்திரீகள் வாழ்க்கைப்படாதிருந்தார்கள்.

௬௪ அவர்கள் ஆசாரியர்கள் பட்டயத்தால் விழுந்தார்கள், அவர்கள் விதவைகள் அழுதில்லை.

௬௫ அப்போது ஆண்டவர் நித்திரைதெளிந்தவனைப்போலவும் மதுபானத்தாற் கெம்பீரிக்கிற பராக்கிரமசாலியைப்போலவும் விழித்து,

௬௬ தம்முடைய சத்துருக்களைப் பின்புறமாக அடிப்படுத்தி அவர்களுக்கு நித்திய நிந்தையை வரப்பண்ணினார். ௧. சாமு. ௫. ௬.

௬௭ ஆனால் அவர் யோசேப்பின் கூடாரத்தைப் புறக்கணித்து எப்பிராயீம் கோத்திரத்தைத் தெரிந்துகொள்ளாமல்,

௬௮ தாஞ் சிநேகித்த சீயோன் பருவதமிருக்கிற யூதாகோத்திரத்தைத் தெரிந்துகொண்டு,

௬௯ தம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை உயர்ந்த மேடுகளாகவும் என்றைக்குந் திறக்கத்தாம் அஸ்திவாரப்படுத்தின பூமியைப் போலாகவுங் கட்டி,

௭௰ தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்து அவனை ஆட்டுத்தொழுவங்களிலிருந்தெடுத்துக்கொண்டார். ௧. சாமுவேல.

௰௬, ௰௧—௰௩.

௭௧ கறவலாடுகளின் புறகாலே நடந்த அவனைத் தம்முடைய சனமாகிய யாக்கோபையுந் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரவேலையும் மேய்ப்பதற்காக அழைத்துக்கொண்டுவந்தார்.

௭௨ இவன் அவர்களைத் தன் இருதயத்தினுடைய உண்மையின்படியே மேய்த்து அவர்களைத் தன் கைகளுடைய விவேகத்தினால் நடத்தினன்.

௭௯. சங்கீதம்.

(எருசலேமைப் பாழாக்கின சத்துருக்களின் பொல்லாப்பினிமித்தமாய்ச் சபை கெஞ்சிச்செய்யும் விண்ணப்பம்.)

[ஆசாப்பின் சங்கீதம்.]

பராபரனே, புறச்சாதியார் உம்முடைய சுதந்தரத்தில் வந்து உமது பரிசுத்த தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி எருசலேமை மண்மேடுகளாக்கிப்போட்டார்கள்.

௨ உம்முடைய ஊழியக்காரரின் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும் உமது பரிசுத்தவான்களின் மாமிசத்தைப் பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக் கொடுத்தார்கள்.

௩ எருசலேமைச் சுற்றிலுந் தண்ணீரைப்போல அவர்களுடைய இரத்தத்தைச் சிந்திப்போட்டார்கள், அடக்கம்பண்ணுவாருமில்லை.

௪ எங்கள் அயலாருக்கு நிந்தையும் எங்களைச் சுற்றப்புறத்தாருக்குப் பரியாசமுஞ் சக்கந்தமுமானோம். ௪௪, சங்கீதம். ௰௪. ௮௰, சங். ௭.

௫ எந்தமட்டுங் கர்த்தாவே என்றென்றைக்குங் கோபமாயிருப்பீரோ? எந்தமட்டும் உம்முடைய எரிச்சல் அக்கினியைப்போல் எரியும். ௮௫, ௫. ௮௯, ௪௬.

௬ உம்மையறியாத சாதிகள்மேலும் உமது நாமத்தைத் தொழுதுகொள்ளாத இராச்சியங்கள்மேலும் உம்முடைய உக்கிரத்தை ஊற்றிப்போடும். எரேமி. ௰, ௨௫.

௭ ஏனெனில் யாக்கோபைப் பட்சித்து அவன் குடியிருப்பைப் பாழாக்கினார்கள்.

௮ எங்கள் முந்தின அக்கிரமங்களை நினையாதேயும், தீவிரமாய் உம்முடைய இரக்கங்கள் எங்களுக்கு நேரிடுவதாகக்கடவது, ஏனெனில் மெத்தவுங் குறுகிப்போனோம்.

ஏசாயா. ௬௪, ௯.

௯ எங்கள் இரட்சிப்பின் பராபரனே, நீர் உமது நாமத்தினுடைய மகிமையினிமித்தமாக எங்களுக்கு ஒத்தாசைசெய்து எங்களைத் தப்புவியும், உமது நாமத்தினிமித்தமாக எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்.

௰ அவர்களுடைய பராபரன் எங்கேயென்று புறசாதிகள் சொல்லுவானேன்? உம்முடைய ஊழியக்காரருடைய சிந்துண்ட இரத்தத்தின் பழிவாங்குதல் சாதிகளுக்குள்ளே எங்கள் கண்களுக்கு முன்பாகத் தெரியப்படக்கடவது. ௱௰௫, சங்கீதம். ௨.

யோவேல். ௨, ௰௭.

௰௧ கட்டுண்டவனுடைய பெருமூச்சு உமக்கு முன்பாக வரக்கடவது, கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை நீர் உமது புயபெலத்தினுடைய பெருக்கத்தின்படியே உயிரோடே காரும்.

௰௨ ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை அவர்களுக்கு ஏழத்தனையாக அவர்கள் மடியிலே திருப்பப்பண்ணும்.

௰௩ அப்படியே உம்முடைய சனமும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் உம்மை என்றைக்கும் புகழுவோம், தலைமுறை தலைமுறையாக உமது துதியைச் சொல்லிவருவோம்.

௮௰. சங்கீதம்.

(சபையின் நிர்ப்பந்த நிலைமையைத் தொட்டுக் கெஞ்சிச்செய்த விண்ணப்பம்.)

[சாட்சிகை விளக்குவிக்கும் அறுநரம்பிலே பாடி இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட ஆசாப்பின் சங்கீதம்.]

இஸ்ரவேலின் மேய்ப்பரே செவிகொடும், யோசேப்பை ஆட்டுமந்தையைப்போலே நடத்துகிறவரே, கேருபீன்களின்மேல் வாசம்பண்ணுகிறவரே பிரகாசியும்.

௨. மோசே. ௨௫, ௨௧. ௨௨, ௨௨.

௨ எப்பிராயீமுக்கும் பென்யமீனுக்கும் மனாசேக்கும் முன்பாக நீர் உமது வல்லமையை எழுப்பி எங்களுக்கு இரட்சிப்பாக வாரும். ௪. மோ. ௨, ௰௭—௨௪. ௰, ௨௧—௨௪.

௩ பராபரனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவந்து உம்முடைய முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்போது இரட்சிக்கப்படுவோம். ௬௭, சங்கீதம். ௧.

௪ சேனைகளின் பராபரனாகிய கர்த்தாவே, எந்தமட்டும் உமது சனத்தினுடைய செபத்துக்கு விரோதமாய்ப் புகைவீர்.

௫ கண்ணீரின் அப்பத்தை அவர்களுக்குப் போசிக்கவும், கண்ணீரை மகா பெரிய அளவாக அவர்களுக்குக் குடிக்கவுங் கொடுத்தீர். ௱௨, சங்கீதம். ௯.

௬ எங்களை எங்கள் அயலாருக்கு வழக்காக வைக்கிறீர் எங்கள் சத்துருக்கள் தங்களுக்குள்ளே பரியாசம்பண்ணுகிறார்கள்.

௭ சேனைகளின் பராபரனே, எங்களைத் திருப்பிக்கொண்டுவந்து உம்முடைய முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்போது இரட்சிக்கப்படுவோம்.

௮ ஒரு கொடிமுந்திரிகையை எகிப்திலிருந்து கொண்டுவந்தீர், சாதிகளைத் துரத்திவிட்டு அதை நாட்டினீர்.

௯ அதற்கு முன்பாக இடமாக்கி அதை வேர்தரிக்கப்பண்ணினீர், அது தேசத்தைச் சூழ்ந்துகொண்டது.

௰ அதின் நிழலால் பருவதங்கள் மூடப்பட்டது. அதின் கொம்புகள் பராபரனுடைய கேதுருக்களைப்போலாயிற்று.

௰௧ தன்கொடிகளைச் சமுத்திரமட்டாகவுந் தன்கிளைகளை நதிமட்டாகவும் விட்டது.

௰௨ இப்போதும் வழிநடக்கிற யாவரும் அதைப்பொடிக்க அதின் அடைப்புகளையேன் தகர்த்துப்போட்டீர்?
௮௯, சங்கீதம். ௪௨.

௰௩ காட்டுப்பன்றி அதை உழுதுபோட்டு வெளியின் மிருகங்கள் அதைப் பட்டிமேய்ந்தது.

௰௪ சேனைகளின் பராபரனே, திரும்பிவாரும், நீர் வானங்களிலிருந்து கண்ணோக்கிப்பார்த்து இந்தக் கொடிமுந்திரிகைச்செடியையும்,

௰௫ உம்முடைய வலதுகரம் நாட்டின கிளையையும் உமக்கு நீர் திடப்படுத்தின குமாரனிமித்தமாக விசாரியும். ௨. சாமு. ௭, ௰௨. ௰௩.

௰௬ அக்கினியாற் சுட்டுப்பட்டும் வெட்டுண்டும்போயிற்று, உம்முடைய முகத்தின் உதப்புதலால் அழிந்துபோகிறார்கள்.

௰௭ உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புருஷன்மேலும் உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன்மேலும் இருப்பதாக.

௰௮ அப்போது உம்மைவிட்டு விலகோம். எங்களையுயிர்ப்பியும் அப்போது உமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவோம்.

௰௯ சேனைகளின் பராபரனாகிய கர்த்தாவே எங்களைத் திருப்பிக்கொண்டுவாரும் உம்முடைய முகத்தைப் பிரகாசிக்கப்பண்ணும், அப்போது இரட்சிக்கப்படுவோம்.

௮௧. சங்கீதம்.

(சனத்தினுடைய கீழ்ப்படியாமையின்பேரிற் பராபரன் முறையிட்டது.)

[தேத்தில் வாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்ட ஆசாப்பின் சங்கீதம். ௮, சங்கீதம். ௧]

நம்முடைய பெலனாகிய பராபரனைக் கெம்பீரித்துப்பாடி யாக்கோபின் பராபரனுக்கென்று ஆர்ப்பரியுங்கள்.

௨ கீதமெடுத்து மேளத்தையும் இன்ப ஓசையான சுரமண்டலத்தையுந் தம்புரோடேகூட்டத்தாருங்கள்.

௩ மாதப்பிறப்பிலும் நம்முடைய திட்டமான பண்டிகைநாளிலும் எக்காளமூதுங்கள். ௩. மோசே. ௨௩, ௨௪.

௪ ஏனெனில் அவை இஸ்ரவேலுக்குப் பிரமாணமும் யாக்கோபுடைய பராபரனின் நியாயமுமாயிருக்கிறது.

௫ நாம் அறியாத பாஷையைக்கேட்ட எகிப்துதேசத்துக்கு விரோதமாக அவர் எழும்பிப்புறப்படுகையில் யோசேப்பிலே அதைச் சாட்சியாக ஏற்படுத்தினார்.

௬ அவன் தோளைச் சுமைக்கு விலக்கினோம், அவன் கைகள் கூடைக்கு நீங்கலாய்ப்போயிற்று.

௭ நெருக்கத்திலே கூப்பிட்டாய், அப்போது உன்னைத் தப்புவித்தோம், குமுறலின் மந்தாரத்திலிருந்து உனக்கு மறுவுத்தரவையருளிச்செய்தோம், மெரிபாவின் தண்ணீர்களிடத்தில் உன்னைச் சோதித்தறிந்தோம். சேலா.

௮ நம்முடைய சனமே, கேள், உனக்குச் சாட்சியிடுவோம், இஸ்ரவேலே நீ நம்முடைய சொற்கேட்டாலதாவிலே.

௯ உனக்குள் வேறே தேவன் உண்டாயிருக்கவேண்டாம், நீ அந்நியதேவனை நமஸ்கரிக்கவும் வேண்டாம்.

௰ உன்னை எகிப்துதேசத்திலிருந்தேறப்பண்ணின உன் பராபரனாகிய கர்த்தர் நாமே, உன்வாயை விரிவாய்த்திற, நாம் அதை நிரப்புவோமென்றோம். ௨, மோசே. ௨௦. ௨.

௰௧ ஆனால் நம்முடைய சனம் நம்முடைய சத்தத்தைக் கேட்டதில்லை. இஸ்ரவேல் நம்மைவிரும்பினதில்லை.

௰௨ ஆகையால் அவர்களை அவர்களிருதயத்தின் கடினத்துக்கு விட்டோம், தங்கள் யோசனைகளிலே நடந்தார்கள்.

௰௩ ஆ, நம்முடைய சனம் நம்முடைய சொற்கேட்டு இஸ்ரவேல் நம்முடைய வழிகளில் நடந்தாலதாவிலே.

௰௪ நாம் கொஞ்சக்காலத்திலே அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி நம்முடைய கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவோமே.

௰௫ அப்போது கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அவர்களுக்கிச்சகம்பேசி அடங்குவார்கள், அவர்கள் காலம் என்றென்றைக்குமிருக்கும்.

௰௬ கோதுமையின் புஷ்டியால் அவர்களைப் போஷிப்பார், கன்மலையின் தேனினாலே உன்னைத் திருத்தியாக்குவோம்.
௱௪௭, சங்கீதம். ௰௪.

௮௨. சங்கீதம்.

(நியாயாதிபதிகளின் அநீதத்தைப் பராபரன் விசாரிப்பாரென்பது.)

[ஆசாப்பின் சங்கீதம்.

பராபரன் தேவசபையிலே நின்றிருக்கிறார், தேவர்களின் நடுவிலே அவர் விசாரிக்கிற நியாயமாவது,

௨ எந்தமட்டும் நீதிகேடாய் நியாயந்தீர்த்து ஆகாதவர்களின் முகமாட்டம்பார்ப்பீர்கள். சேலா.

௩ தரித்திரனுக்குந் திக்கற்றவனுக்கும் நியாயம்பண்ணிச் சிறுமையானவனுக்கும் ஏழைக்கும் நீதிசெய்யுங்கள். ஏசாயா. ௧, ௰௭.

௪ சிறியவனையும் எளியவனையும் விடுவித்து அவர்களை ஆகாதவர்களின் கைக்குத் தப்புவியுங்கள்.

௫ அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள். அந்தகாரத்திலே நடக்கிறார்கள், தேசத்தின் அஸ்திவாரங்களெல்லாம் அசைகிறது. ௨, சங்கீதம். ௰.

௬ நீங்கள் தேவர்களென்றும் நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்களென்றும் நான் சொன்னேன். ௨. மோசே. ௨௧, ௬. ௨௨, ௨௮. யோவான். ௰, ௩௪.

௭ ஆகிலும் நீங்கள் மனுஷரைப்போலே செத்து, லோகப் பிரபுக்களிலே ஒருவனைப்போலே விழுந்துபோவீர்களென்றார்.

௮ பராபரனே எழுந்திருந்து பூமியை நியாயந்தீரும், ஏனென்றால் தேவரீர் எல்லா சாதிகளையுஞ் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர். ௨, சங்கீதம். ௮.

௮௩. சங்கீதம்.

(சத்துருக்களியாவருந் தனக்கு விரோதமாகக் கட்டுப்பண்ணின ஒப்பந்தத்தினிமித்தஞ் சபைசெய்கிற விண்ணப்பம்.)

[ஆசாப்பின் சங்கீதமாகிய பாட்டு.]

௧ பராபரனே சும்மாயிராதேயும், பராபரனே மவுனமும் அமரிக்கையுமாயிராதேயும். ௨௮, சங்கீதம். ௧.

௨ ஏனென்றால் இதோ உம்முடைய சத்துருக்கள் கொந்தளித்து உம்முடைய பகைஞர் தலையெடுக்கிறார்கள்.

௩ அவர்கள் உம்முடைய சனத்துக்கு விரோதமாகச் சற்பனையோசனையாயிருந்து உம்முடைய மறைவிலிருக்கிறவர்களுக்கு விரோதமாக ஆலோசனைபண்ணுகிறார்கள்.

௪ நாம் அவர்களையவர்கள் ஒரு சாதியாராயிராமலும் இஸ்ரவேலின் பேர் இனி நினைக்கப்படாமலும் போவதற்காக அதம்பண்ணுவோம் வாருங்களென்கிறார்கள்.

௫ அதேதெனில் ஏதோமின் கூடாரத்தாரும் இஸ்மவேலரும் மோவாபும் ஆகாரியரும்,

௬ கேபாலும் அம்மோனும் அமலேக்கும் தீருவின் குடிகளோடே கூடப் பெலிஸ்தரும்,

௭ ஏகமனதினையாய் ஆலோசனைபண்ணி உமக்கு விரோதமாக ஒப்பந்தம்பண்ணினார்கள்.

௮ அசூரியரும் அவர்களோடே கூடக் கலந்து லோத்தின் புத்திரருக்குப் புயபலமானார்கள். சேலா.

௯ மீதியானியருக்குங் கீசோனென்னும் ஆற்றண்டை எந்தோரிலே அழிக்கப்பட்டு, நியாயாதிபதி. ௭, ௨௨.

௰ பூமிக்கு எருவாய்ப்போன சிசேராவுக்கும் யாபீனுக்குஞ் செய்ததுபோலே அவர்களுக்குஞ் செய்யும். நியாயாதிபதி. ௪, ௰௫

௰௧ அவர்களையும் அவர்கள் அதிபதிகளையும் ஓரேபுக்குஞ் சேபுக்கும் அவர்கள் பிரபுக்களெல்லாரையுஞ் சேபாக்குக்குஞ் சல்முனாக்குஞ் சரியாக்கும். நியாயாதிபதி. ௭, ௨௫. ௮, ௰௨–௨௧.

௰௨ ஏனென்றால் பராபரனுடைய வாசஸ்தலங்களை நாம் எங்களுக்குச் சுதந்தரமாகக் கட்டிக்கொள்ளுவோமென்றார்கள்.

௰௩ என் பராபரனே அவர்களைச் சுழல்காற்றின் புழுதிக்குங் காற்றடித்துக்கொண்டுபோகுந் துரும்புக்குஞ் சரியாக்கும்.

௰௪ காட்டைச் சுட்டெரிக்கிற நெருப்பைப்போலேயும் மலைகளை அக்கினிச்சுவாலை எரித்துப்போடுகிறதுபோலேயும்,

௰௫ நீர் அவர்களையும் உம்முடைய புசலினாலே தொடர்ந்து உம்முடைய பெருங்காற்றினாலே அவர்களைக் கலங்கப்பண்ணும்.

௰௬ கர்த்தாவே அவர்கள் உம்முடைய நாமத்தைத் தேடும்படிக்கு அவர்கள் முகங்களைக் கனவீனத்தாலே மூடும்.

௰௭ தேவரீர் ஒருவர் உம்முடைய நாமத்தின்படியே கர்த்தரும் பூமியனைத்திலேயும் உன்னதமானவரும் என்கிறதை யவர்கள் உணர,

௰௮ அவர்கள் என்றைக்கும் வெட்கங்கலங்கவும் நாணவும் அழியவுங்கடவர்கள்.

௮௪. சங்கீதம்.

(பராபரனுடைய வீட்டில் வாசமாயிருக்கிறவர்களின் பாக்கியத்தை வாஞ்சைபடச் சொன்னது.)

[கித்தீத்தில் வாசிக்கக் கோராகின் புத்திரர்களால் இராசத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்.]

௧ சேனைகளுடைய கர்த்தாவே உம்முடைய வாசஸ்தலங்கள் எத்தனை இன்பமானவைகள்.

௨ என் ஆத்துமா கர்த்தருடைய பிரகாரங்களின்மேல் வாஞ்சையுந் தவனமுமாயிருக்கிறது, என்னிருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள பராபரனை நோக்கிக் கெம்பீரசத்தமிடுகிறது. ௨௬, சங்கீதம். ௮.
௨௭. சங்கீ. ௪. ௪௨, சங்கீ. ௧.

௩ அடைக்கலான்குருவிக்கு முதலாய் வீடுந் தகைவிலான்குருவிக்குத் தன் குஞ்சுகளை வைக்குங் கூடுங் கிடைக்கும், என் இராசாவும் என் பராபரனுமாகிய சேனைகளுடைய கர்த்தாவே உம்முடைய பீடங்களையே குறித்திருக்கிறேன்.

௪ உம்முடைய வீட்டிலே வாசமாயிருந்து எப்போதும் உம்மைத் துதிக்கிறவர்கள் பாக்கியவான்கள். சேலா.

௫ உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷருந் தங்களிருதயங்களில் வழிகளைச் செவ்வையாக்கினவர்களும் பாக்கியவான்கள்.

௬ அழுகையின் பள்ளத்தாக்கை உருவ நடந்து அதை நீரூற்றாக்கிக்கொள்ளுகிறார்கள், மாரியும் ஆசீர்வாதங்களால் மூடப்படுகிறது.

௭ பராபரனுக்கு முன்பாகச் சீயோனிலே வந்து காணப்படுமட்டும் பெலத்திலிருந்து பெலத்துக்குப் போகிறார்கள்.

௮ சேனைகளின் பராபரனாகிய கர்த்தாவே, என் விண்ணப்பத்தைக் கேளும், யாக்கோபின் பராபரனே செவிகொடும். சேலா.

௯ எங்கள் கேடகமாகிய பராபரனே கண்ணோக்கமாயிரும், நீர் அபிஷேகம்பண்ணினவரின் முகத்தைப் பாரும்.

௨ நான உமதுபரிசுததேவாலயததுககுநேராயபபணிநது, உமமுடைய கிருபையினிமிததமும, உமமுடைய உணமையினிமிததமுமஉமதுநாமததைத்துதிபபேன, ஏனெனில உமமுடைய சகலகீர்ததியையும பார்ககிலும, உமமுடைய வார்ததையை மகிமைபபடுததினீர்.

௩ நானகூபபிட்ட நாளிலேஎனககு மறுவுத்தரவருளிசசெயதீர், என னுததுமாவிலே பெலனதநது எனனைத தயிரியபபடுததினீர்.

௪ கர்ததாவே பூமியின இராசாக்களெல்லாம உமது வாககினவார்ததைகளைககேட்குமபோது உமமைததுதிபபார்கள.

௫அ, சங்கீதம. ௱௧. ௭௨, சஙகீ. ௰௪.

௫ கர்த்தாவின வழிகளைப பாடுவார்கள, ஏனெனிற்கர்ததரின மகிமைபெரியது.

௬ ஏனென்றாற்கர்ததர் உயர்நதவராயிருநதுந்தாழமையானவனை நோககிப்பார்ககிறார், மேட்டிமையானவனையோ தூரததிலிருநது அறிகிறார். ௱௰௩, சஙகீத. ௫. ௬

௭ நானநெருக்கத்தின நடுவிலே நடநதால, நீர் எனனையுயிர்பபிககிறீர், உமமுடையகையை எனசததுருக்களின கோபததிற்குவிரோதமாக நீட்டுகிறீர், உமதுவலதுகரம எனனையிரட்சிககிறது.

௮ கர்த்தர் எனக்காக யாவையுஞசெயதுமுடிபபார், கர்த்தாவே உமதுகிருபையெனறெனறைககுமுளளது, உமமுடைய கைகளினகிரியைகளைநெகிழீராக.

௱௩௯. சஙகீதம்.

(எலலாவறறையுமறிநது எங்கும நிறைநதிருககிறபராபரனுடைய ஆசசரியமான விசாரிபபைததாவீது தேவபததியாய்ததியானித்தது.)

[இராகத்தலைவனுககொபபுவிககபபட்ட தாவீதினசஙகீதம]

கர்த்தாவே, எனனை ஆராய்நதறிநதிருககிறீர்.

௨ என உட்கார்தலையும என எழுநதிருககுதலையுந தேவரீர் அறிநதிருககிறீர், என நினைவுகளைத தூரததிலிருநதுணருகிறீர். எரேமியா. ௰௭, ௰.

௩ நான நடநதாலும படுததிருநதாலும, எனனைச சூழநதிருககிறீர் என வழிகளெலலாம உமககுபபழக்கமாயிருககிறது.

௪ ஏனெனில என நாவிற்சொற்பிறவாததற்குமுனனே இதோ கர்த்தாவே, அதையெலலாம அறிநதிருககிறீர்.

௫ பிற்புறததிலும முற்புறததிலும நீர் எனனைநெருககி, என மேலே உமமுடைய கரததைவைககிறீர்.

௬ இவவறிவு எனககுமிஞசின ஆசசரியமும, எனககெட்டாத உயரமுமாயிருககிறது.

௭ உமமுடைய ஆவிககுமறைவாக எஙகேபோவேன? உமமுடைய முகததிற்கு மறைவாக எஙகேயோடுவேன.

௮ நானவானததிற்கேறினும, அஙகே தேவரீரிருககிறீர், நான பாதாளததிலேபடுககைபபோட்டாலும, இதோ தேவரீரிருககிறீர். ஆமோஸ. ௯, ௨—௪.

௯ நான விடியற்காலததின செட்டைகளை யெடுததுக கடலின கடைசியிலே போயத்தஙகினாலும,

௰ அஙகேயும உமமுடையகையெனனை நடத்தி, உமமுடைய வலதுகரம எனனைப பிடிககும.

௰௧ இருளாகிலும எனனை மூடிபபோடுமெனறாலும, இராவும எனனைசசுறறிலும வெளிசசநதானே.

௰௨ உமககுமறைவாக இருளும அநதகாரபபடுத்தாமல இராக்காலம பகலைப போல்வெளிசசமாயிருககும, இருளுமவெளிசசமுஞசரி.

௰௩ ஏனெனில, தேவரீர்என னுள்ளிநதிரியஙகளைக கைக்கொணடிருககிறீர், என தாயின கெர்ப்பததிலெனனைக்காபபாறறினீர்.

௰௪ பிரமிக்கத்தக்க அதிசயமாய உணடானேனென்கிற தினிமித்தம உமமைத துதிககிறேன, உமமுடையகிரியைகள அதிசயமானவைகளெனபது என னுததுமாவுககு நனறுயததெரியும. ௱௰௯, சஙகீ. ௭௧. யோப. ௰, அ. ௰௨. பிரச. ௰௧, ௫.

௰௫ நான ஒளிபபிடததிலே யுணடாக்கபபடடுபபூமியின தாழ்விடஙகளிறசித திரவிசேதமாய ரூபெடுத்தபோது, என னெலுமபுகள உமககுமறைவாயிருநததிலலை.

௰௬ எனகருவை உமமுடைய கணகள கணடது,இவைகளிலொன றுமிலலாதபோதே இவைகளனைத்தும இவைகள உருவேறபபடும நாட்களும உமமுடையபுஸ்தகததிலெழுதியிருநதது.

௰௭ ஆனதுகொணடு பராபரனே, உமது நினைவுகளெனககெததனையருமையானவைகள? அவைகளின தொகைகள எததனை திரட்சி? ௬௨, சஙகீதம. ௬.

௰௮ அவைகளைநான எணணபபோனால மணலைபபார்ககிலுமஅதனமாம,நான்விழிக்கையில இன்னம உமமணடையிலிருககிறேன.

௰௯ பராபரனே, ஆகாதவனைககொனறீரானால நாவிலை, இரத்தப பிரியரான மனுஷரே, நீஙகளென்னைவிடடு அகனறுபோஙகள.

௨௰ அவர்களதுற்குணபபேசசாய உமமைககுறிததுபபேசுகிறார்கள, உமமுடையசததுருககளவீணாக உபபியிருககிறார்கள.

௨௧ கர்ததாவே, உமமைபபகைககிறவர்களைநானபகையாமலும, உமககுவிரோதமாயெழுமபுகிறவர்களையரோசியாமலுமிருப்பேனோ?

௨௨ முழுபபகையாய அவர்களைபபகைககிறேன, எனககுபபகைஞராணார்கள.

௨௩ பராபரனே என்னை ஆராயநது என னிருதயததையறிநதுகொளளும, நீர் என்னைசசோதிதது எனசிநதனைகளையறிநதுகொணடு, ௨௬, சஙகீதம. ௨.

௨௪ என னிலவேதனையுணடாககும வழியுணடோவென றுபார்தது, எனனைநித்திய வழியிலேநடததும.

௱௪௰. சஙகீதம.

(பொலலாதவர்களுககுததனனைத்தபபுவிககத்தாவீதுபராபரனைவேணடிககொணடது.)

[இராகத்தலைவனுக கொபபுவிக்கபபட்ட தாவீதினசஙகீதம.]

கர்ததாவே, பொலலாத மனுஷனுக கெனனைத்தபபுவியுமகொடுமைககாரனுக கெனனைவிலககிககாரும. ௬௪, சஙகீ. ௧.

௨. இருதயததிலே அவர்களபொலலாபபுகளைசசிநதித்து நாள்தோறும யுத்தஙகளுககெனறு கூடடஙகூடுகிறார்கள.

௩ சர்ப்பததைபபோலேதஙகள நாவைககூர்மையாககுகிறார்கள, அவர்கள உதடுகளினகீழே விரியனபாமபுகளினவிஷமிருககிறது. சேலா. ௫௫, சஙகீ. ௨௨. உரோ. ௩,௰௩.

௪ கர்த்தாவே என்னை ஆகாதவனவர்களுககு நீஙகலாகவுஙகொடுமைககாரருககு விலக்கமாகவுஙகாரும, அவர்களென காலடிகளைததளளாடபபணண நினைககிறார்கள.

௫ அகநதைககாரர் எனககுக கணணியையுஙகயிறுகளையும மறைவாய வைக்கிறார்கள, வழியோரததிலே வலையை விரிததெனககுசசுருககுகளைவைககிறார்கள.சேலா.

௬ நான கர்ததருடனே தேவரீர் என பராபரனென்கிறேன, கர்த்தாவே என விணணப்பஙகளின சத்தத்திற்குச செவிகொடும.

௭ ஆணடவராகியகர்த்தாவே,என இரட்சிபபின பலனே பமைநாளில்லெனதலையைமூடிககொணடிருககிறீர்.

௮ கர்த்தாவே ஆகாதவனுடைய ஆசைகளைககட்டளையிடாமலும, அவன தனனையுயர்ததுகிறததிற்கிடமான அவனுடைய வினையததை நடநதேறபபணணாமலுமிருபபீராக. சேலா.

௯ என்னை வளைநதுகொளளுகிறவர்களுடைய நருசென்கிற அவர்களுதடுகளின தீவினையவர்களைமூடுவதாக.

௰ நெருபபுத்தழல அவர்கள மேலவிழுவதாக, அககினியிலுந தாஙகள எழுநதிருக்கமாட்டாதபளளஙகளிலும அவர்களவிழப்பணணுவாராக. ௰௧, சஙகீதம. ௬.

௰௧ பொலலாத நாவுளளவன பூமியிலே நிலைபபடுவதிலலை, கொடுமையானமனுஷனைபபறக்கடிக்கபபொலலாபபு அவனை வேட்டையாடும.

௰௨ சிறுமையானவனின வழக்கையும, எளியவர்களின நியாயததையுங கர்த்தர் விசாரிபபாரெனறறிவேன.

௰௩ ஆம நீதிமானகள உமமுடையநாமததைத்துதிபபார்கள, செமமையானவர்கள உமககுமுனபாகத்தரிததிருபபார்கள.

௱௪௧. சங்கீதம்.

(பொலலாதவர்களின ஆகாத சாவகாசத்திற்கும அவர்களகொடுமைததிற்குததனனை விலக்கமாயக்காக்கத் தாவீது பராபரனைவேணடிககொணடது.)

[தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், என்னிடத்துக்குத் தீவிரியும், நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகையில், என் சத்தத்திற்குச் செவிகொடும்.

௨ என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாகவும், என் கையேற்பு அந்திப் பலிகாணிக்கையாகவும் ஒப்பிடப்படக்கடவது.

௩ கர்த்தாவே என் வாய்க்குக் காவல்வையும், என் உதடுகளின் வாசலைக் காவற்பண்ணும். ௩௯, சங்கீதம். ௨.

௪ அக்கிரமஞ்செய்கிற மனுஷரோடே துராமிகக் கிரியைகளை நடப்பிக்குந் துர்க்கருமத்திற்கு என் இருதயத்தை இணங்கவொட்டாதேயும், இவர்கள் பதார்த்தங்களை ருசிபாராமலிருப்பேனாக.

௫ நீதிமான் என்னைத் தயவாய்க் குட்டி என்னைக் கடிந்துகொள்ளக்கடவான், அது தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும், என் தலை அதைத் தட்டுதல்பண்ணுவதில்லை, ஏனெனில் இன்னம் என் ஜெபம் அவர்களின் கேடுகளுக்கெதிரானதாமே. வாக். ௰௨, ௧.

௬ அவர்களுடைய நியாயாதிபதிகள் கன்மலைச்சாரல்களிலிருந்து தள்ளுண்ணக்கடவர்கள், என் வார்த்தைகளோ இன்பமானவைகளென்று கேட்பார்களாக.

௭ பூமியிலேகளை ஒருவன் வெட்டிப் பிளக்குமாப்போல, எங்கள் எலும்புகள் பாதாளவாய்க்கு நேராகச் சிதறடிக்கப்பட்டது.

௮ ஆனாலும் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்மையென் கண்கள் நோக்குகிறது, உம்மை நம்பியிருக்கிறேன், என் ஆத்துமாவை வெறுமையாகவிடாதேயும்,

௯ எனக்கவர்கள் வைத்த கண்ணியின் சிக்குக்கும் அக்கிரமக்காரரின் சுருக்குகளுக்கும் என்னை விலக்கிக் காரும். ௱௪௰, சங்கீதம். ௫.

௰ நான் கடந்துபோகுந்தனையுந் துஷ்டர்கள் தங்கள் வலைகளில் ஆகாதவர்கள்தானே ஏகமாய் விழுவார்களாக.

௱௪௨. சங்கீதம்.

(மகாவிக்கினத்திலே செய்த வேண்டுதல்.)

[தாவீது கெபியிலிருக்கும்போது பண்ணின விண்ணப்பமாகிய போதகசங்கீதம். ௧. சாமுவேல். ௨௪, ௪.]

கர்த்தரை நோக்கி என் சத்தத்தினாலே கூப்பிடுகிறேன், கர்த்தரை நோக்கி என் சத்தத்தினாலே கெஞ்சுகிறேன்.

௨ அவருக்கு முன்பாக என் சஞ்சலத்தை ஊற்றி அவருக்கு முன்பாக என் நெருக்கத்தை அறிக்கையிடுகிறேன்.

௩ என் ஆவி என்னில் தியங்கும்போது, தேவரீர் என் பாதையை அறிந்திருக்கிறீர், நான் நடக்கிற வழியிலே எனக்குக் கண்ணியை மறைவாய் வைத்தார்கள். ௱௪௰, சங்கீதம். ௪.

௪ நீர் வலதுபுறமாகக் கண்ணோக்கி, என்னை அறிகிறவன் எனக்கில்லையென்று பாரும், ஒதுக்கெனக்கில்லாதேபோயிற்று, என் ஆத்துமாவுக்காக விசாரிக்கிறவனில்லை.

௫ கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், தேவரீர் என் அடைக்கலமும் ஜீவனுள்ளோருடைய பூமியில் என் பங்குமாயிருக்கிறீரென்கிறேன். ௯௧, சங்கீதம். ௧. ௨.

௬ என் கூக்குரலுக்குக் கவனியும், ஏனெனில் மெத்தவுந் தாழ்ந்துபோனேன், என்னைத் தொடருகிறவர்களுக்கு என்னைத் தப்புவியும், ஏனெனில் எனக்கு மிஞ்சின பலமாயிருக்கிறார்கள். ௭, சங்கீதம். ௨.

௭ உம்முடைய நாமத்தை நான் துதிக்கும்படிக்கு என் ஆத்துமாவைக் காவலுக்கு நீங்கலாக்கிவிடும், எனக்குத் தயவுபண்ணினீரானால், நீதிமான்கள் என்னைச் சூழுவார்கள். ௱௪௩, சங்கீதம். ௯.

௱௪௩. சங்கீதம்.

(உபத்திரவப்படுகிற வேளையிலே செய்த விண்ணப்பம்.)

[தாவீதின் சங்கீதம்.]

கர்த்தாவே என் ஜெபத்தைக் கேளும், என் விண்ணப்பங்களுக்குச் செவிகொடும், நீர் உம்முடைய உண்மையின்படியும் உம்முடைய நீதியின்படியும் எனக்கு மறுவுத்தரவருளிச்செய்யும். ௫, சங்கீதம். ௨. ௨௭, சங்கீதம். ௭.

௨ உமது அடியானோடே நியாயத்தீர்ப்புக்குட் பிரவேசியாதேயும், ஏனெனில் சீவனுள்ளவனொருவனும் உமக்கு முன்பாக நீதிமானல்ல.

௩ ஏனென்றால் சத்துரு என் ஆத்துமாவைத் தொடர்ந்து என் பிராணனைத் தரையோடே நசுக்கிப்போட்டு என்னைச் சதாகாலமாய் மரித்துக்கிடக்கிறவர்களிருக்கிறாப்போலே இருளிலிருக்கப்பண்ணுகிறான்.

௪ ஆகையால் என் ஆவி என்னில் தியங்கும், என் இருதயம் எனக்குள்ளே திகைக்கிடும்.

௫ பூர்வநாட்களை நினைக்கிறேன், உமது செய்கைகளையெல்லாந் தியானிக்கிறேன், உமது கரங்களின் கிரியைகளை யோசிக்கிறேன். ௭௭, சங்கீ. ௫. ௰௨, சங்கீ. ௰௧.

௬ என் கைகளை உமக்கு நேராய் விரிக்கிறேன், என் ஆத்துமா வறண்ட நிலத்தைப்போல உம்முடைய மேலே தாகமாயிருக்கிறது. சேலா. ௪௨, சங்கீ. ௩, ௬௩, சங்கீ. ௨.

௭ கர்த்தாவே சீக்கிரமாய் என்செபத்தைக் கேளும், என்னாவி தொய்ந்துபோம், நான் குழியில் இறங்குகிறவர்களுக்கொத்துப் போகாதபடிக்கு உம்முடைய முகத்தை எனக்கு மறைக்காதிரும்.

௮ காலமே உமது கிருபையைப் பயென்னைக் கேட்கப்பண்ணும், ஏனென்றால் உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்கறிவியும், ஏனென்றால் உம்மண்டைக்கென்னாத்துமாவையுயர்த்துகிறேன். ௨௫, சங்கீ. ௧.

௯ கர்த்தாவே என்சத்துருக்களுக்கென்னைத் தப்புவியும், உம்மிடத்திலொதுங்குகிறேன்.

௰ உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் படிப்பியும், ஏனென்றால் தேவரீர் என் பராபரன், உம்முடைய நல்லாவியென்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக.

௰௧ கர்த்தாவே உம்முடைய நாமத்தினிமித்தமாகவென்னையுயிர்ப்பியும், நீர் உம்முடைய நீதியின்படி என்னாத்துமாவை இடுக்கணுக்கு நீங்கலாக்கிவிட்டு,

௰௨ உம்முடைய கிருபையின்படி என்சத்துருக்களைச் சங்கரித்து என்னாத்துமாவை இடுக்கண்படுத்துகிற யாவரையும் அழியும், ஏனென்றால் நானும்மடியான்.

௱௪௪. சங்கீதம்.

(சத்துருக்களின் கைக்குத் தன்னைவிலக்கி ஆதரிப்பவராகிய பராபரனைத் தாவீது துதித்து அண்டிக்கொண்டது.)

[தாவீதின் சங்கீதம்.]

௧ என் கைகளைப் போருக்கும் என்விரல்களை யுத்தத்துக்கும் படிப்பிக்கிற என் கன்மலையாகிய கர்த்தர் தோத்திரிக்கப்பட்டவர். ௰௮, சங்கீ. ௩௫. ௩௬.

௨ அவர் என் தயவும் என் கோட்டையும் என்னுயர்ந்த அடைக்கலமும் என்னை விடுவிக்கிறவரும் என் கேடயமும் நான் நம்பினவரும் என் சனத்தை யெனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாமே. ௰௮, சங்கீ. ௨. ௩.

௩ கர்த்தாவே மனுஷன் நீர் அவனை அறிகிறதற்கும் மனுஷபுத்திரன் நீர் அவனையெண்ணுகிறதற்கும் அவனெம்மாத்திரம்? யோபு. ௭, ௰௭.

௪ மனுஷன் மாயைக்கும் அவனுடைய நாட்கள் கடந்துபோகிற நிழலுக்கும் சாயலாயிருக்கும். யோபு. ௰௪, ௨.

௫ கர்த்தாவே நீர் உமது வானங்களைத் தாழ்த்தி யிறங்கிப் பர்வதங்களை யவைகள் புகையும்படிக்குத் தீண்டும்.

௬ மின்னல்களைவிட்டு அவர்களைச் சிதறடித்து உமது அம்புகளை யெய்து அவர்களைக் கலங்கடியும்.

௭ உமது கரத்தை யுயரத்திலிருந்து நீட்டி என்னைவிடுதலைபண்ணி என்னைத் திரளான தண்ணீர்களுக்கும் அந்நிய புத்திரரின் கைக்குந் தப்புவியும்.

௮ அவர்கள் வாய் மாயையைப் பேசும், அவர்கள் வலது கை கள்ளக்கையாயிருக்கிறது.

௯ பராபரனே, இராசாக்களுக்கு இரட்சிப்பைத் தந்து உமதடியானாகிய தாவீதைப் பொல்லாத பட்டயத்துக்குத் தப்புவிக்கிறவரே.

௰ உம்மை நான் புதுப்பாட்டாய்ப் பாடி உம்மைத் தசம்புராவும் பத்து நரம்புள்ள யாழும் வாசித்துக் கீர்த்தனம்பண்ணுவேன். ௩௩, சங்கீதம். ௨. ௩.

௰௧ என்னை அந்நியபுத்திரரின் கைக்கு விலக்கி என்னைத் தப்புவியும், அவர்கள் வாய் மாயையைப் பேசும், அவர்கள் வலது கை கள்ளக்கையாயிருக்கிறது.

௰௨ எங்கள் குமாரர்கள் இளமையில் பயிராக்கப்பட்ட விருட்சங்களைப் போலேயும் எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரண்மனைக் கோணங்களைப் போலேயுமிருக்கவும்,

௰௩ எங்கள் பண்டகசாலைகள் சகலவகை வஸ்துக்களைத் தரத்தக்கவைகளாய் நிறைந்தவைகளாயிருக்கவும் எங்கள் ஆடுகள் எங்கள் கிராமங்களில் ஆயிரங்களும் பதினாயிரங்களுமாயிருக்கவும்,

௰௪ எங்கள் எருதுகள் பெலத்திருக்கவும் பொல்லாங்கு உட்புகுதலில்லாமலும் வெளிப்போகுதலில்லாமலும் எங்கள் வீதிகளில் கூக்குரலுண்டாகாமலுமிருக்கவும் கட்டளை தெனபார்கள்.

௰௫ இப்படிச் சம்பவிக்குஞ் சனம் பாக்கியமுள்ளது, கர்த்தாவைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற சனம் பாக்கியமுள்ளதாமே. ௩௩, சங்கீதம். ௰௨.

௱௪௫. சங்கீதம்.

(கர்த்தரின் மகத்துவத்தையுஞ் சர்வதயவு இரக்கம் நீதியையுந் தோத்திரிக்குதல்.)

[தாவீது பாடினது.]

௧ இராசாவாகிய என் பராபரனே உம்மையுயர்த்தி உம்முடைய நாமத்தை எப்போதும் என்றென்றைக்குந் தோத்திரிப்பேன்.

௨ சகல நாளிலும் உம்மைத் தோத்திரித்து எப்போதும் என்றென்றைக்கும் உம்முடைய நாமத்தைத் துதிப்பேன்.

௩ கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார், அவர் மகத்துவத்துக்கு ஆராய்தலில்லை.

௪ தலைமுறை தலைமுறையாய் உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சியைச் சொல்லி உம்முடைய வல்லமைகளையறிவிப்பார்கள்.

௫ உமமுடைய சனமான மகிமையின பிரஸ்தாபத்தையும, உமமுடைய அதிசயமான கிரியைகளையுங்குறிதது்ப்பேசுவேன.

௬ உமமுடைய பயங்கரங்களின வலலமையைச்சொலலுவார்கள, உமமுடைய மகததுவத்தை விவரிப்பேன.

௭ உமது திரளான கிருபையை நினைந்து வெளிப்படுத்தி உமது நீதியைக்கெம்பீரிததுச் சொலலுவார்கள.

௮ கர்த்தர் இரக்கமும மனவுருக்கமும நீடியசாந்தமும மிகுந்த கிருபையுமுளளவர். ௱௩, சங்கீதம. ௮.

௯ கர்த்தர் எலலார்மேலுந் தயவுளளவர், அவர் இரக்கங்கள அவருடைய எலலாக் கிரியைகளின்மேலுமுளளது.

௰ கர்த்தாவே, உமமுடைய எலலாக்கிரியைகளும உமமைத்துதிக்கும, உமமுடைய பரிசுத்தவானகள உமமைத்தோத்திரிக்கு,

௰௧ தாஙகள மனுபபுத்திரருக்கு உமமுடைய வலலமையையும உமமுடைய இராச்சியத்தின சனமான மகிமையையும அறிவிக்கும்படிக்கு,

௰௨ உமது இராசசியத்தினமகிமையைச்சொலலி உமதுவலலமையைவிவரிப்பார்கள.

௰௩ உமமுடைய இராசசியம எலலாச் சதாகாலஙகளின இராசசியமாகவும, உமமுடைய அரசாட்சி எலலாத் தலைமுறைதலைமுறையாகவுமிருக்கும. ௱௪௬, சங். ௰.

௰௪ கர்த்தர் விழுகிறயாவரையுந் தாங்கி மடங்கடிக்கப்பட்ட யாவரையுந்தூக்கிவிடுகிறவர். ௱௪௬, சங்கீதம. ௮.

௰௫ எலலாச்சீவனகளின கண்களும உமமைநோக்கிக்கொணடிருக்கிறது, தேவரீர் ஏற்றவேளையிலே அவைகளின போசனத்தை யவைகளுக்குக்கொடுக்கிறீர். ௱௪, சங்.உ௭.

௰௬ உமமுடையகையைத்திறந்துசீவனுளளவெலலாவற்றையும இரமமியமாய்த்திருத்தியடையப்பணணுகிறீர், ௱௩௬, சங். உ௫

௰௭ கர்த்தர் தமதுவழிகளிலெலலாம நீதியுளளவருந் தமதுகிரியைகளிலெலலாங்கிருபையுளளவருமாயிருக்கிறார்.

௰௮ தமமைநோக்கிக்கூப்பிடுகிற யாவருக்கும உணமையாயத்தமமை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்குங் கர்த்தர்சமீபமாயிருக்கிறார்.

௰௯ அவர் தமக்குப் பயந்தவர்களுடைய விருப்பத்தினபடிசெயது அவர்கள கூப்பிடுதலைக்கேட்டு அவர்களையிரட்சிக்கிறார்.

௩௰, சஙகீதம. ௪. வாக்கி. ௰, உ௪.

௨௰ கர்த்தர் தமமைச்சிநேகிக்கிற யாவரையுங்காப்பாற்றி, ஆகாதவர்களஎலலாரையும அழிப்பார்.

௨௰௧ என வாய கர்த்தரின துதியைச் சொலவதாக. எலலாமாமிசமும அவர் பரிசுத்த நாமத்தைப்பபோதும எனறெனறைக்குந்தோத்திரிக்கக்கடவது.

௱௪௬. சங்கீதம.

(மனுஷரையலலசருவத்துக்குமவலலதயாபரனையே நமபடவேண்டும்.)

அலலேலூயா, என ஆத்துமாவே, கர்த்தரைத்துதி. ௱௩, சஙகீ. க. ௱௪, சங்கீ. க.

௨ நானசீவனுளளமட்டுங் கர்த்தரைத் துதிப்பேன, நானிருக்குமளவும என பராபரனைக்கீர்த்தனமபணணுவேன.

௱௪, சஙகீதம. ௩௩

௩ பிரபுக்களையுமஇரட்சிப்பிலலாமனுஷபுத்திரனையுமநமபாதேயுஙகள. ௱௰௮, சஙகீதம. ௮. ௯. எரே. ௰௭, ௫.

௪ அவனுடைய ஆவிபுறப்படும, தன மணணுக்குத்திருமபுகிறான, அந்நாளிலே அவனயோசனைகள அழியும.

௫ யாக்கோபின பராபரனைத் தன துணையாகக்கொணடிருந்துவானத்தையும பூமியையுஞ் சமுத்திரத்தையும அவைகளிலுளளதெலலாவற்றையுமுணடாக்கின தன பராபரனாகிய கர்த்தரின்மேலதன நமபிக்கையை வைக்கிறவன பாக்கியவான.

௪௰, சஙகீ. ௫. அ௪, சஙகீ. ௰௩.

௬ அவர் எனறெனறைக்கும உணமையைக்காக்கிறார்.

௭ ஒடுக்கப்பட்டவர்களுக்கு நியாயஞ்செயகிறார், பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரங்கொடுக்கிறார், கட்டுணடவர்களைக்கர்த்தர்விடுதலையாக்குகிறார்

௮ குருடரின கணகளைக் கர்த்தர்திறக்கிறார். மடங்கடிக்கப்பட்டவர்களைக்கர்த்தர் தூக்கிவிடுகிறார், நீதிமானகளைக்கர்த்தர் சிநேகிக்கிறார். ௱௪௫, சஙகீதம. ௰௪.

௯ கர்த்தர்பரதேசிகளைக்காப்பாற்றித்திக்கறறவனையும விதவையையும ஆதரிக்கிறார், ஆனால ஆகாதவர்களின வழியைக்கவிழக்கிறார்.

௰ கர்த்தர்சதாகாலமாகவுஞ், சீயோனே உனபராபரன தலைமுறைதலைமுறையாகவும இராசரிக்கம பணணுகிறார். அலலேலூயா.

௱௪௭. சஙகீதம.

(பராபரனுடையஉபகாரஙகளினிமித்தம அவரைத்தோத்திரிக்கவேண்டும்.)

துதியே இனபமும ஏறறதுமாயிருக்கிறது. கர்த்தரைத்துதியுஙகள, ஏனெனில நமமுடையபராபரனைக் கீர்த்தனமபணணுகிறதுநலலது. ௯௨, சஙகீ. ௧. ௪.

௨ கர்த்தர் எருசலேமைக்கட்டித் துரத்துண்ட இஸ்ரவேலரைக்கூட்டிச் சேர்க்கிறார்.

௩ இருதயம்நொருங்குண்டவர்களைக் குணமாக்கி அவர்களநோவுள்ள காயங்களைக் கட்டுகிறார். ஏசாயா. ௬௧, ௧—௩

௪ நட்சத்திரங்களின் இலக்கத்தையெண்ணி அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறார். ஏசாயா. ௪௰, ௨௬.

௫ நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகாப்பெலமுள்ளவருமாயிருக்கிறார், அவருடைய உணர்வையெண்ணிமுடியாது.

௱௩௫, சங்கீ. ௫. ௱௪௫, சங்கீ. ௩.

௬ கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களையுயர்த்தி ஆகாதவர்களைத் தரைமட்டுந்தாழ்த்துகிறார். ௱௪௬, சங்கீ. ௮. ௯.

௭ கர்த்தனைத் துதியோடேபாடிக்கொண்டிருந்து நம்முடைய பராபரனைச் சுரமண்டலத்தால் கீர்த்தனம்பண்ணுங்கள்.

௮ அவர் வானத்தை மேகங்களால்மூடி பூமிக்குமழையை ஆயத்தப்படுத்தி மலைகளிற புல்லைமுளைப்பித்து,

௯ மிருகஜீவனுக்கும் கூப்பிடுகிற காகக்குஞ்சுகளுக்கும் அவைகளின் ஆகாரத்தைக்கொடுக்கிறார்.

௰ குதிரைப்பெலத்தின்மேல் விருப்பமாயிரார், புருஷனுடைய தொடைகளின்மேற்பிரியமாயிரார்.

௰௧ தமக்குப்பயந்து தம்முடைய கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின்மேற் கர்த்தர்பிரியமாயிருக்கிறார்,

௰௨ எருசலேமே கர்த்தரைத்தோத்திரி. சீயோனே உன் பராபரனைத்துதி.

௱௪௬, சங்கீ. ௰.

௰௩ ஏனெனில் உன் வாசல்களின் தாப்பாள்களைக்கெட்டியாக்கி, உன்னிலுள்ள உன்பிள்ளைகளை யாசீர்வதிக்கிறார்.

௰௪ அவர் உன்னெல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கிக் கோதுமையின் புஷ்டியால் உன்னைத் திருத்தியாக்குகிறார்.

அ௧, சங்கீதம். ௰௭.

௰௫ தம்முடையவார்த்தையைப் பூமியின்மேல் அனுப்புகிறார், அவருடைய சொல் மகாதீவிரமாய் ஓடும். ௱௩, சங்கீதம். ௯.

௰௬ பஞ்சைப்போல உறைந்தமழையைத் தந்து சாம்பலைப்போல உறைந்த பனியைத் தூவுகிறார்.

௰௭ அவர் தம்முடைய கன்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார், அவருடைய குளிருக்குமுன்பாக நிற்பவனார்.

௰௮ தமது வார்த்தையை யனுப்பி அவைகளையுருக்குகிறார், தமது காற்றை வீசப்பண்ணுகிறார், அப்போது தண்ணீர்களாயோடும்.

௰௯ யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும் இஸ்ரவேலுக்குத் தம்முடைய பிரமாணங்களையுந் தம்முடைய நியாயங்களையும் அறிவிக்கிறார்.

௨௰ இப்படியவர் எந்தச்சாதிக்குஞ்செய்ததில்லை, அவருடைய நியாயங்களைஅறியாதேபோகிறார்கள். அல்லேலூயா. ௫. மோ. ௪, ௭. ௮.

௱௪௮. சங்கீதம்.

(பராபரனைத் துதிக்கச்சருவசிஷ்டிப்பும் ஏவினது.)

அல்லேலூயா பரமண்டலங்களிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள், உயரங்களில அவரைத்துதியுங்கள். ௯௬, சங். ௱௩.

௨ அவருடைய எல்லாத் தூதர்களே அவரைத்துதியுங்கள், அவருடைய எல்லாச் சேனைகளே அவரைத்துதியுங்கள்.

ஆதகா. ௨, ௱௩. ௰௪.

௩ சூரியசந்திரனே அவரைத்துதியுங்கள் வெளிச்சமுள்ள எல்லா நட்சத்திரங்களே அவரைத்துதியுங்கள்,

௪ வானங்களுடைய வானங்களே, ஆகாயமண்டலத்தின்மீதுள்ள தண்ணீர்களே அவரைத்துதியுங்கள்.

௫ அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது, ஏனெனில அவர்கட்டளையிடச் சிஷ்டிக்கப்பட்டது.

௬ அவர் அவைகளையென்றைக்குமுள்ள சதாகாலங்களாய உறுதிப்படுத்தி அவைகள் மாறுதப்பிரமாணத்தை யவைகளுக்குக்கட்டளையிட்டார்.

௭ பூமியிலுள்ளவைகளே கர்த்தரைத்துதியுங்கள், திமிங்கலங்களுஞ் சகலஆழங்களும்,

௮ அக்கினியுங் கல்மாரியும் உறைந்தமழையும், மூடுபனியும், அவர்சொற்படிசெய்யும்பெருங்காற்றும்,

௯ பருவதங்களுஞ், சகல மேடுகளும், கனிமரங்களுஞ், சகலகேதுருகளும்,

௰ காட்டுச்சீவன்களுஞ், சகலமிருகங்களும், ஊர்வனங்களும், இறகுள்ள பறவைகளும்,

௰௧ பூமியின்இராசாக்களும், எல்லாச்சனத்தாங்களும் பிரபுக்களும் பூமியிலுள்ள சகலநியாயாதிபதிகளும்,

௰௨ வாலிபருங் கன்னிகைகளும் முதிர்ந்தவயதுஇளவயதுள்ளவர்களும்,

௰௩ கர்த்தரின் நாமத்தைத் துதிக்கவும், ஏனெனில அவருடைய நாமமாத்திரமே உயர்ந்தது அவருடையமகிமை பூமிக்கும் வானத்துக்குமமேலாயிருக்கிறது.

௰௪ அவர்தம்முடைய எல்லாப்பரிசுத்தவான்களுக்கு நம்மைச்சேர்ந்தசனமாகிய இஸ்ரவேல்புத்திரருக்குமே கொண்டாட்டமாக

த்தமுடையசனத்திற்கொரு கொம்பையுயர்த்தினார். அல்லேலூயா. லூக்கா. ௧, ௬௯. ௨, அதிகாரம். ௱௰. ௧௧.

௱௪௯. சங்கீதம்.

(பராபரன் தம்முடையசபைக்குச்செய்யுந்தயவினிமித்தமுங்கொடுக்கும் மகிமையினிமித்தமும் அவரைத் துதிக்க எழுப்பினது.)

அல்லேலூயா, கர்த்தரைப்புதுப்பாட்டாய்ப்பாடுங்கள், சனமார்க்கரின் சபையில் அவருடையதுதிநடப்பதாக. ௬௬, சங்கீதம். ௧. ௬௮, சங்கீதம். ௧.

௨ இஸ்ரவேல் தன்னையுண்டாக்கினவருக்குள் மகிழ்ந்து, சீயோனின்குமாரர் தங்கள் இராசாவுக்குள்களிகூர்ந்து,

௩ அவருடைய நாமத்தைக் கீதவாத்தியத்தோடேதுதித்து, அவரைமேளத்தாலுஞ்சுரமண்டலத்தாலுங் கீர்த்தனம்பண்ணக்கடவர்கள்.

௪ ஏனெனில்கர்த்தர் தம்முடையசனத்தின்மேற்பிரியமவைக்கிறார், சிறுமையானவர்களையிரட்சிப்பினாலேசிங்காரிப்பார். லூக்கா. ௨, ௰௪.

௫ சனமார்க்கர்மகிமையாய்க் களிகூர்ந்து தங்கள் படுக்கைகளின்மேலேகெம்பீரிப்பார்கள்.

௬ அவர்கள்வாயிற் கர்த்தரை உயர்த்துங்கீர்த்தனங்களும் அவர்கள்கையில் இருப்புறமுங்கருக்குள்ளபட்டயமும் இருக்கும்.

௭ சாதிகளிற் பழிவாங்குதலுஞ் சனசதங்களில் தண்டனைகளுஞ்செய்வதற்கும், அறிவிப்பு. ௨, ௨௬. ௨௭.

௮ அவர்களுடைய இராசாக்களைச் சங்கிலிகளாலும் அவர்களுடையமேன்மக்களை இருப்புவிலங்குகளாலுங்கட்டி,

௯ எழுதியிருக்கிற நியாயத்தையவர்களிற்செய்வதற்குமாகத்தானே, இந்தக்கனம் அவருடைய சனமார்க்கரானவர்களுக்கு முண்டாம். அல்லேலூயா.

௱௫௰. சங்கீதம்.

(மகிமையுள்ளபராபரனைச் சகலவிதகீதவாத்தியத்தாலுந்துதிக்கஏவினது.)

அல்லேலூயா, தம்முடைய பரிசுத்தஸ்தலத்திலிருக்கிற பராபரனைத்துதியுங்கள், அவருடைய பலம்விளங்குகிற ஆகாயவிரிவைப்பார்த்து அவரைத்துதியுங்கள்.

௨ அவருடையவல்லமைகளுக்காக அவரைத்துதியுங்கள், அவருடையதிரளானமகத்துவத்திற்காக அவரைத்துதியுங்கள்.

௩ அவரையெக்காளத்தொனியினாலே துதியுங்கள், அவரைத் தம்புராவினாலுஞ்சுரமண்டலத்தாலுந்துதியுங்கள்.

௪ அவரைமேளத்தாலுங் கீதவாத்தியத்தாலுந்துதியுங்கள், அவரை வீணையாலுங் கின்னரத்தாலுந்துதியுங்கள்.

௫ அவரை ஓசையான கைத்தாளங்களாலுந்துதியுங்கள், அவரைக் கெம்பீரமான கைத்தாளங்களாலுந்துதியுங்கள்.

௬ சுவாசமுள்ளதெல்லாங்கர்த்தரைத்துதிப்பதாக. அல்லேலூயா. அறிவி. ௫, ௰௩.

ஞானசங்கீதங்களமுடிந்தது முற்றும்.

சாலோமோனின்வாக்கியங்கள்.

௧. அதிகாரம்.

[ஞானத்தைக்கற்கவும்பாவிகளின் கூட்டத்தைவிட்டுவிலகவும்புத்திசொன்னது.]

ஞானத்தையுங்கல்வியையும் அறிந்து புத்தியின்வார்த்தைகளையுணர்ந்து,

௨ விவேகம், நீதி, * நியாயம், நிதானம் என்றவைகளின் கல்வியையேற்றுக்கொள்வதற்கும், ௨௫, சங்கீதம். ௨௧.

௩ பேதைகளுக்குவிவேகத்தையும், வாலிபருக்கு அறிவையும், நினைவையும், உண்டாக்குவதற்கும்,

௪ தாவீதின்குமாரனும் இஸ்ரவேலின் இராசாவுமாகிய சாலோமோன் எழுதின வாக்கியங்கள்.

௫ ஞானமுள்ளவன்கேட்டு உபதேசத்தில் திகப்படுவான்.

௬ உணர்வுள்ளவன் வாக்கியத்தையும் அதின் அருத்தத்தையும் ஞானிகளின்சொற்களையும் அவைகளின் புதைபொருள்களையுமுணரத்திறமையையடைவான்.

௭ கர்த்தருக்குப்பயப்படுதல் அறிவின் துவக்கம், நின்மோடர்ஞானத்தையுங்கல்வியையும் அசட்டைபண்ணுகிறார்கள். ௯, ௰. ௱௰௧, சங்கீதம். ௰.

அ * என்மகனே, உன்தகப்பனின் புத்திமதியைக்கேட்டு உன்தாயின் போதகத்தைத் தள்ளாதிரு * கூ, உய.

கூ ஏனெனில் * அவைகள் உன்தலைக்கு நேர்த்தியான முடியும், உன்கழுத்துக்குச்சரப்பணிகளுமாயிருக்கும். * ச, கூ.

ய என்மகனே, * பாவிகள் உனக்கு ஆசைப்பெண்ணிணதால் இச்சியாதே.

* ச, யச. யரு.

யக எங்களோடேகூடவா, நாம் இரத்தத்திற்குப்பதிவிருந்து குற்றமற்றவர்களை முகாந்திரமில்லாமல் தாப்புக்கொண்டி,

யஉ அவர்களைப் பாதாளத்தைப்போல உயிரோடேயுங் குழியிலிறங்குகிறவர்கள் விழுங்கப்படுகிறதுபோல முழுதாயும் விழுங்குவோமாக.

யங விலையேறப்பெற்ற சகலவித ஆஸ்தியையுங்கண்டுபிடிப்போம், நம்முடைய வீடுகளைக் கொள்ளையால் நிரப்புவோம்.

யச எங்களோடே ஏகபங்காளியாயிருப்பாய், நமக்கெல்லாம் ஒரேபையிருக்குமென்று அவர்கள் சொன்னால்,

யரு என்மகனே, நீ அவர்களோடேவழி நடவாமல் உன்காலை அவர்கள்பாதைக்கு விலக்காயக்கா.

யசு ஏனெனில் * அவர்கள்கால்கள் பொல்லாப்புச்சோடி இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது * ஏசாயா. ருக, எ. உரோமர். ங, யரு.

யஎ எந்தச்சாதியுமான பறவையினக்கண்களுக்குமுன்பாக வேவலைவிருதாவாய் விரிக்கப்படும்.

யஅ இவர்களோ தங்களுடைய இரத்தத்திற்குப் பதிவுந்தங்களுடைய ஆத்துமாவுக்கொள்ளிவுமாயிருக்கிறார்கள்.

யகூ பொருளாசைவைக்கிற எவனுடைய வழிகளும் அப்படியிருக்கும், அது தனனெசமானகளின் ஆத்துமாவைச் சிக்கிக்கொள்ளும்.

உன்னதஞானம நயமும்பயமு மாயக்கூறுமவாக்கியங்கள்.

உய * உன்னத ஞானம்வெளியிலேகூப்பிட்டு வீதிகளிலே தன்சத்தத்தைக்காட்டி, * அ, க—ங.

உக சந்தடியுள்ள தெருக்களின் முகனையிலும் ஒலிமுக வாசல்களிலுங் கூப்பிட்டுப் பட்டணத்தில் தன் வசனங்களைச்சொல்லியுரைக்கிறதாவது,

உஉ பேதைகளே நீங்கள் பேதைமையைச்சிநேகிப்பதுஞ்சக்கந்தக்காரர் சக்கந்தத்தைவிரும்புவதும் மதிகேடர் அறிவைப் பகைப்பதும் எந்தமட்டுமிருக்கும்.

உங நம்முடையகடிந்துகொள்ளுதலுக்குத்திரும்புங்கள், இதோ நம்முடைய ஆவியையுங்களுக்கூற்றி நம்முடையவார்த்தைகளையுங்களுக்கறிவிப்போம்.

உச அல்லால் நாம் கூப்பிட்டும் நீங்கள் கேட்கமாட்டோமென்றபடியினாலும் நம் கையை நாம் நீட்டியுங் கவனிக்கிறவனில்லாமற்போயும், ஏசாயா. கூ, யஉ. சரு, எ. எரேமியா. எ, யங.

உரு நீங்கள் நம்முடைய ஆலோசனையையெல்லாந்தள்ளி, நம்முடைய கடிந்துகொள்ளுதலைவிரும்பாமற்போகிறபடியினாலும்,

உசு * நாமும் உங்கள் ஆபத்திலே நகைத்து நீங்கள் பயப்படுங்காரியம் வரும்போது ஆசடியம்பண்ணுவோம். * ஆ. பேர். உஅ, சுங.

உஎ நீங்கள் பயப்படுங்காரியம் சோர்த்தியிலைப்போலேவந்து உங்கள் ஆபத்துச் சுழல்காற்றைப்போல்வந்து, உங்கள்மேல் நெருக்கமும் இடுக்கணும் நேரிடும்போது தானே.

உஅ * அப்போது அவர்கள் நம்மை நோக்கிக்கூப்பிடும் மறவுத்தரவுசொல்லாதிருப்போம், காலமே நம்மைத்தேடியும், நம்மைக்காணாதிருப்பார்கள். * ஏசாயா. ருக, உ.

உகூ அவர்கள் அறிவைப்பகைத்துக் கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற்போனதிற்குப்பதிலாகத்தானே.

ஙய நம்முடைய ஆலோசனையை விரும்பாமல் நம்முடைய கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள்.

ஙக ஆகையால் தங்களுடையமார்க்கத்தின் பலனைத்தின்று, தங்கள் ஆலோசனைகளினாலே திருத்தியாவார்கள்.

ஙஉ ஏனெனிற்பேதைகளின் மாறுபாடு அவர்களைக்கொன்று, மூடரின் நிர்விசாரம் அவர்களையழிக்கும்,

ஙங நம்முடையசொற்கேட்கிறவனோவெனில் மறுத்தாபரித்துத்தீங்குடைய திகிலில்லாமற்சுகமாயிருப்பானென்கிறது.

* ஏசாயா. க, யகூ.

உ. அதிகாரம்.

[கள்ளவழிகளுக்குத் தப்புவிக்கும் ஞானத்தைத்தேடவேண்டும்.]

என்மகனே, நீ உன்செவிகளை ஞானத்துக்குக் கவனிக்கப்பண்ணி, உன்னிருதயத்தைப் புணர்வுக்குச்சாய்க்கும்படியாய்,

உ என்வார்த்தைகளையேற்றுக்கொண்டு, என்கற்பனைகளை யுன்னிடத்திலே பத்திரப்படுத்தி,

ங * புத்தியை வாவென்று கூப்பிட்டு, உணர்வையழைக்க * உன்சத்தத்தையுயர்த்தி, * யாகோபு. க, ரு.

௪ அதை வெள்ளியைப்போலே தேடி, * அதைப் புதையல்களைப்போலே யாராய்ந்தாயானால். * மத்தேயு. ௰௩, ௪௪.

௫ அப்பொழுது கர்த்தருக்குப் பயப்படுதலை யுணர்ந்து, பராபரனையறியும் உணர்வைக் கண்டடைவாய்.

௬ ஏனெனில் கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். அவர் வாக்கிலே அறிவும் உணர்வும் வரும்.

௭ அவர் செம்மையானவர்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்து, உத்தமமாய் நடக்கிறவர்கள் நியாயத்தின் பாதைகளைக் காக்க, அவர்களுக்குக் கேடயமாயிருந்து,

௮ தம்முடைய பரிசுத்தவான்களுடைய வழியைக் காக்கிறார்.

௯ அப்பொழுது நீதியையும், நியாயத்தையும், நேர்த்தானங்களையும், சகல நல்வழியையும் உணர்வாய்.

௰ ஞானம் உன் இருதயத்திலே வந்து, அறிவு உன் ஆத்துமாவுக்கு இன்பமாகும்போது,

௰௧ நல்யோசனை யுன்னைப் பத்திரம்பண்ணி, புத்தி யுன்னைத் தற்காக்கும்.

௰௨ உன்னையாகாத வழிக்கும், மாறுபாடுகளைப்பேசுகிற மனுஷனுக்கும்,

௰௩ இருளான வழிகளில் நடக்கச் செம்மையான பாதைகளைவிட்டு,

௰௪ தீமைசெய்ய மகிழ்ந்து, பொல்லாமாறுபாடுகளின்மேல் களிகூருகிறவர்களுக்கும்,

௰௫ கோணலான வழிகளில் நடந்து, தங்கள் பாதைகளில் நேர்வழியை விலகுகிறவர்களுக்கும் உன்னைத் தப்புவிக்கவும்,

௰௬ தன் வார்த்தைகளால் இச்சகம்பேசுகிறவளும்,

௰௭ தன் இளவயதின் அதிபதியைவிட்டுத் தன் பராபரனுடைய உடம்படிக்கையை மறக்கிறவளுமான * வேற்றுப்பெண்சாதிக்கும், பிறஸ்திரிக்கும் உன்னைத் தப்புவிக்கத்தக்கதே. * ௬, ௨௧. ௨௪.

௰௮ ஏனெனில் அவள் வீடு சாவுக்கும், அவள் பாதைகள் மரித்தவர்களுக்கும் நேராய்ச் சாய்கிறது. * ௫, அதிகாரம். ௫.

௰௯ அவளண்டைக்குப் பிரவேசிக்கிற யாவருந் திரும்பாமலும், சீவனுடைய பாதைகளைச் சேர்ந்திராமலும் போகிறார்கள்.

௨௰ ஆகையாலே நீ நல்லவர்களின் வழியிலே நடந்து, நீதிமான்களின் பாதைகளைப் பிடித்திருப்பாயாக.

௨௧ ஏனென்றால் * செம்மையானவர்கள் பூமியிலே வாசம்பண்ணி, உத்தமர் அதிலே வைக்கப்படுவார்கள். * சங். ௩௭, ௯-௰௧. மத்தேயு. ௫, ௫.

௨௨ ஆகாதவர்களோ பூமியிலிராதபடி வேரறுப்புண்டு துரோகிகள் அதிலிராதபடிக்குப் பிடுங்கப்படுவார்கள்.

௩. அதிகாரம்.

[அப்புறம் மெய்ஞ்ஞானத்தின் உபதேசத்தையும் பிரயோசனத்தையுஞ் சொல்லுகிறது.]

௧ என் மகனே, என் உபதேசத்தை மறவாயாக, என் கற்பனைகளை உன் இருதயங் காக்கக்கடவது.

௨ ஏனெனில் அவைகள் உனக்கு நீடித்த நாட்களையுஞ் சீவனுள்ள வருஷங்களையுஞ் சமாதானத்தையும் பெருகப்பண்ணும்.

௩ கிருபையும் உண்மையும் உன்னைவிடாதிருப்பதாக, நீ அவைகளை உன் கழுத்திலே கட்டி, அவைகளை யுன் இருதயத்தின் பலகையிலே எழுதிக்கொள்.

௪ அப்படியே பராபரன் கண்களிலும் மனுஷர் கண்களிலும் இரக்கத்தையும் நற்புத்தியையுங் கண்டடைவாய்.

௫ உன் புத்தியின்மேல் நீ சாராமல் கர்த்தரையே உன் முழு இருதயத்தாலும் நம்பு.

௬ உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுதவர் உன் பாதைகளைச் செம்மைப்படுத்துவார்.

௭ * உன் பார்வைக்கு நீ ஞானியாயிராதே, கர்த்தருக்குப் பயந்து பொல்லாப்பை விட்டுவிலகு. * ஏசாயா. ௫, ௨௧. ரோமர். ௰௨, ௰௬.

௮ அது உன் தொப்புளுக்கு ஆரோக்கியமும் உன் எலும்புகளுக்கு ஊனுமாயிருக்கும்.

௯ * உன் ஆஸ்தியாலும் உன்னுடைய எல்லாவரத்தின் முதல்விளைவாலுங் கர்த்தரைக் கனம்பண்ணு. * மல்கி. ௩, ௰.

௰ அப்பொழுது உன் களஞ்சியங்கள் பரிபூரணத்தால் நிரப்பப்பட்டு, உன் ஆலைகள் இரசம் புரண்டிருக்கும்.

௰௧ * என் மகனே, நீ கர்த்தருடைய தண்டனையை யற்பமாயெண்ணாதே, அவர் அதட்டுதலை வெறுத்திராதே.
* எபிரெயர். ௰௨, ௫. ௬.

௰௨ ஏனெனில் * தான் சிநேகிக்கிறவனைக் கர்த்தர் கடிந்துகொண்டு, மகன்மேலே தகப்பனைப்போலே பிரியமாயிருக்கிறார்.
* அறிவி. ௩, ௰௯.

௰௩ ஞானத்தைக் கண்டுபிடிக்கிற மனுஷனும் உணர்வைப்பெறுகிற மனுஷனும் பாக்கியவான்.

௰௪ ஏனெனில் * வெள்ளியின் வியாபாரத்தைப்பார்க்க அதின் வியாபாரமும், அபரஞ்சியைப்பார்க்க அதிகவாதது நல்லது.
* ௮, அதிகாரம். ௰. ௰௧.

௰௫ முத்துகளைப்பார்க்க அது விலையேறப்பெற்றது, நீ இச்சிக்கத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல.

௰௬ அதின் வலதுகையில் நீடித்த ஆயுசும், அதின் இடதுகையில் ஐசுவரியமுங் கனமுமுண்டு.

௰௭ அதின்வழிகள் இனிதான்வழிகளும், அதின் பாதைகளெல்லாஞ் சமாதானமுந்தானே.

௰௮ அதைப் பிடிக்கிறவர்களுக்கது ஜீவவிருட்சமாம், அதைப்பற்றியிருக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

௰௯ கர்த்தர்ஞானத்தினாலே பூமியை அஸ்திவாரப்படுத்தித் புத்தியினாலேவானங்களைப்படைத்தார்.

௨௰ அவருடைய அறிவினாலே ஆழங்கள் பிரிந்தது, அதனாலே ஆகாயம் பனியைத்தூறுகிறது.

௨௧ என்மகனே இவைகள் உன் கண்களைவிட்டுப்பிரியவேண்டாம், மெய்ஞ்ஞானத்தையும் நல்நினைவையுங்கா.

௨௨ அப்போது அவைகள் உன்னுத்துமாவுக்குச்சீவனும் உன்கழுத்துக்கு அந்தமுமாம்.

௨௩ அப்போது * உன்கால் இடறாமற் சுகமாய் உன்வழியில் நடப்பாய். * சங்கீ. ௯௧, ௰௧. ௰௨.

௨௪ நீ படுத்துக்கொண்டால் அருக்கினியாமலிருப்பாய், உன் நித்திரை இன்பமாயிருக்கும் * ௩. மோசே. ௨௬, ௬. சங்கீ. ௩, ௬. ௪, ௯.

௨௫ அச்சமான திகிலும் ஆகாதவர்களின் பாழ்க்கடிப்பும் வரும்போது அதற்குப் பயப்படாயாக

௨௬ ஏனென்றால் கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து உன்காலைப் பிடிபடாதபடிக்குக் காப்பார்.

௨௭ நன்மைசெய்ய உன்கையில் அவகாசமிருக்கையில் அதற்குத்தக்கவர்களுக்கு அதை வழங்காதிராதே.

௨௮ உனக்கிருந்தும் உனக்கடுத்தவனுடனே நீபோய்த்திரும்பவா நாளைக்குத்தருகிறேனென்னாதே.

௨௯ உனக்கடுத்தவன்மேற் பொல்லாப்பைப்பிணைக்காதே, உன்னோடே நம்பிக்கையாய்க்குடியிருக்கிறானே.

௩௰ ஒரு மனுஷனுக்குத் தீங்குசெய்யாதிருக்கக்கொள்ள அவனோடே வீணாய் வழக்காடாதே.

௩௧ கொடுமையான மனுஷன்மேற் பொறாமையாயிராதே, அவனுடைய வழிகளில் ஒன்றையுந்தெரிந்துகொள்ளாதே.

௩௨ ஏனெனில் மார்க்கந்தப்பினவன் கர்த்தருக்கருவருப்பானவன், ஆனால் செம்மையானவர்களோடே * அவருடைய இரகசியமிருக்கிறது. * சங்கீ. ௨௫, ௰௪.

௩௩ ஆகாதவனுடையவீட்டிற் கர்த்தருடையசாபமிருக்கும், ஆனால் நீதிமானின் வாசஸ்தலத்தையாசீர்வதிப்பார்.

௩௪ சக்கந்தக்காரரை அவர் சக்கந்தம்பண்ணிச் சிறுமையானவர்களுக்கோ கிருபையளிப்பார்.

௩௫ ஞானமுள்ளவர்கள்கனத்தைச்சுதந்தரிப்பார்கள், மதிகேடரோ கனவீனத்தையடைவார்கள்.

௪. அதிகாரம்.

[ஞானத்தைப்பெற ஆகாதவர்களின் வழியைவிலகித் தன்னைத்தான் காக்கப்புத்தி சொன்னது.]

பிள்ளைகளே நீங்கள் உணர்வையறிய தகப்பனின்புத்தியைக்கேட்டுக் கவனியுங்கள்.

௨ ஏனெனில் நற்போதகத்தையுங்களுக்குக்கொடுக்கிறேன், என்னுபதேசத்தை விடாதேயுங்கள்.

௩ ஏனென்றால் நான் என்தகப்பனுக்கு இளம்பிராயமும் என் தாய்க்கு முன்பாக ஒரே அருமையுமான பிள்ளையாயிருக்கக்கொள்ள,

௪ அவரிப்படி என்னையுபதேசித்தென்க்குச்சொன்னார், என்வார்த்தைகளையுன்னிருதயம் பிடித்திருப்பதாக, என்கற்பனைகளைக்கைக்கொள், அப்போது பிழைப்பாய்.

௫ ஞானத்தையே சம்பாதி, உணர்வையே சம்பாதி. என்வாயின்சொற்களை மறவாமலும் விட்டுவிலகாமலுமிரு.

௬ அதைவிடாயாக, அப்போதது உன்னைத்தற்காக்கும், அதைச்சிநேகிப்பாயாக, அப்போதது உன்னைக்காப்பாற்றும்.

௭ * நீ ஞானத்தைச் சம்பாதிப்பதும் உன்னுடைய எல்லா ஆஸ்தியாலும் உணர்வைச் சம்பாதித்துக்கொள்வதும் ஞானத்தின் துவக்கம். * ௨௩, ௨௩.

௮ அதையுயர்த்திவை, அப்போததுன்னையுயர்த்தும், நீ அதையணைத்துக்கொண்டால் அது உன்னைக் கனமுள்ளவனாக்கும்.

௯ * அது உன்தலைக்கு நேர்த்தியான முடியைக்கொடுக்கும், அது அலங்கார கிரீடத்தையுனக்களிக்கும். * ௧, ௯.

௰ என்மகனே என்வார்த்தைகளைக்கேட்டேற்றுக்கொள், அப்போதுன் ஆயிசின் வருஷங்கள் அதிகமாம்.

௰௧ ஞானத்தின்வழியிலே உனக்குப்போதிக்கிறேன், செம்மைப்பாதைகளிலே உன்னை நடத்துகிறேன்.

௰௨ நீ அவைகளில் நடக்கிறபோதுன் நடைகளுக்கு இடுக்கணுண்டாகுவதில்லை, நீ அவைகளில் ஓடினால் நீ இடறுவதுமில்லை.

௰௩ கல்வியைப் பிடித்திரு, அதை விடாதே. அதைக் கா, ஏனென்றால் அதுவே உன் ஜீவன்.

௰௪ நீ ஆகாதவர்களின் பாதையிற் பிரவேசியாமலும் பொல்லாதவர்களுடைய வழியில் நடவாமலும் இருப்பாயாக.

௰௫ அதை வெறு, அதிலே போகாதே, அதை விட்டு விலகிக் கடந்து போ.

௰௬ ஏனென்றால் அவர்கள் பொல்லாப்புச் செய்யாதொழிய அவர்களுக்கு நித்திரை வராது. அவர்கள் இடறலுண்டாக்காதிருந்தால் அவர்கள் நித்திரை கலைந்து போம்.

௰௭ ஏனென்றால் அக்கிரமத்தின் அப்பத்தைப் போஜிக்கிறார்கள், கொடுமையின் இரசத்தைக் குடிக்கிறார்கள்.

௰௮ நீதிமான்களின் பாதையோவென்றால் பட்டப்பகல் மட்டும் அதிகமதிகமாய் ஒளி வீசிப் பிரகாசமுள்ள வெளிச்சத்தைப் போலிருக்கிறது.

௰௯ ஆகாதவர்களின் வழி இருளைப் போலிருக்கிறது, எதிலே இடறுவார்களென்று அறியார்கள்.

௨௰ என் மகனே என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்.

௨௰௧ அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக, அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்.

௨௰௨ ஏனென்றால் அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும் அவர்கள் சரீரமெல்லாம் அவிழ்தமுமாயிருக்கிறது.

௨௰௩ எல்லாக் காவலைப் பார்க்கிலும் உன் இருதயத்தைக் கா, ஏனென்றால் அதிலிருந்து ஜீவன் பிறவும்.

௨௰௪ வாயின் தாறுமாறுகளை உன்னை விட்டகற்றி உதடுகளின் வழுவுதலை உனக்குத் தூரப்படுத்து.

௨௰௫ உன் கண்கள் நேராய் நோக்கி உன் இமைகள் உனக்கு முன்னே செம்மையாயிருப்பதாக.

௨௰௬ உன் கால்களின் நடையைச் சீர்தூக்கிப் பார், உன் வழிகளெல்லாம் நிலவரமாயிருப்பதாக.

௨௰௭ வலதுபுறமாகிலும் இடதுபுறமாகிலும் சாயாதே, உன் காலைப் பொல்லாப்புக்கு விலக்கு. * ௫. மோசே. ௫, ௩௨.

௫. அதிகாரம்.

[விபசாரிக்கு விலக்கமும் சமுசாரிக்குப் பத்தியுமாயிருக்க எச்சரித்தது.]

என் மகனே நல் நினைவுகளை நீ வைத்திருக்கிறதற்கும் உன் உதடுகள் அறிவைக் காக்கிறதற்குமாக,

௨ என் ஞானத்தைக் கவனித்து என் புத்திக்கு உன் செவியைச் சாய்.

௩ ஏனென்றால் பரஸ்திரீயின் உதடுகள் தேன் கூடொழுகலாகவும் அவள் வாய் எண்ணெயைப் பார்க்கிலும் மிருதுவாகவும் இருக்கிறது.

௪ அவளுடைய கடைசிக் காரியமோ எட்டி மரத்தைப் போலே கசப்பும் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் போலக் கூர்மையுமாயிருக்கிறது.

௫ அவள் காலடிகள் சாவுக்கிறங்கி அவள் காலடிகள் நரகத்தைப் பற்றிப்போம். * ௨. அதி. ௰௮.

௬ நீ ஜீவனின் பாதையைச் சிந்தியாதபடிக்கு அவள் நடைகள் மாறி மாறி உனக்குத் தெரியாதவைகளாயிருக்கிறது.

௭ இப்போதும் பிள்ளைகளே எனக்குச் செவிகொடுத்து என் வாயின் வசனங்களை விட்டுப் பிரியாதிருங்கள்.

௮ நீ உன் முகியத்தை வேற்றுமையானவர்களுக்கும் உன் ஆயுசின் வருஷங்களைக் கொடூரருக்குங் கொடாதபடிக்கும்,

௯ அந்நியர் உன் ஆஸ்தியால் திருத்தியாகி உன் பிரயாசங்கள் பரதேசியானுடைய வீட்டுக்குள் விழாதபடிக்கும்,

௰ நீ உன் பிற்காலத்தில் உன் மாம்சமும் உன் சதையும் உருவழிந்திருக்கும்போது,

௰௧ நான் என் போதகரின் சொற்கேளாமலும் என்னை உபதேசித்தவர்களுக்கென் செவியைச் சாய்க்காமலும்,

௰௨ எத்தனையாய்ப் புத்தியைப் பகைத்தேன், எத்தனையாய் என்னிருதயங் கடிந்துகொள்ளுதலைப் பசட்டைபண்ணிற்றென்றும்,

௰௩ சபைக்குள்ளேயுஞ் சங்கத்துக்குள்ளேயும் நான் கொஞ்சங்குறைய எல்லாப் பொல்லாப்புக்குமுள்ளானேனென்றும் அலறாதபடிக்கும்,

௰௪ உன் வழியை அவளுக்குத் தூரப்படுத்து, அவள் வீட்டின் வாசலைக் கிட்டாதிரு.

௰௫ உன்னுடைய கிணற்றின் தண்ணீரையும் உன்னுடைய துரவிலிருந்து சுரக்கிற சலங்களையுங் குடி.

௰௬ உன்னுடைய ஊற்றுக்கள் வெளியிலும் உன் வாய்க்கால்கள் வீதிகளிலும் பாய்வதாக.

௰௭ அவைகள் உன்னோடே கூட அந்நியருடையதுமாயிராமல், உன்னுடைய தாயமாத்திரமிருப்பதாக.

௰௮ உன்னுடைய ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கக்கடவது, உன்னுடைய இளவயதின் பெண்சாதியால் மகிழ்ந்துகொள்.

௰௯ அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும் அழகான காட்டாடுமானவள், அவளுடைய நேசம் உன்னைச் சகலகாலமும் ஆற்றுவதாக, அவளுடைய சிநேகத்தால் எப்போதும் மயங்கியிருப்பாயாக.

௨௰ என் மகனே, நீ பரஸ்திரியின்மேல் மயங்கித்திரிந்து வேறொருபெண்ணின் மடியைத் தழுவியிருப்பானேன்.

௨௧ ஏனெனில் மனுஷனுடைய வழிகள் கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக இருக்கிறது, அவன் பாதைகளையெல்லாம் அவர் சீர்தூக்கிப் பார்க்கிறார்.

௨௨ * ஆகாதவனையவனுடைய அக்கிரமங்கள் பிடித்துக்கொள்ளும் தன்பாவத்தின் கயிறுகளில் சிக்கிக்கப்படுவான். * ௨, அதி. ௮.

௨௩ அவன் புத்தியைக் கேளாததினாலே மடிந்து தன் திரளான பயித்தியத்தினாலே வழிபிசகிப்போவான்.

௬. அதிகாரம்.

[பிணைப்பட்டவனுக்குஞ் சோம்பேறிக்கும் புத்திசொல்லுதலுந் தீயனுடைய அவலட்சணமும் விபசாரனுடைய கேட்டையுங் காண்பிக்கிறது.]

௧ என் மகனே, * நீ உன் சிநேகிதனுக்காகப் பிணைப்பட்டு அந்நியனுக்கு உன் கையைக் கொடுத்து, * ௰௧, அதி. ௰௫. ௰௭. ௰௮.

௨ உன் வாயின் சொற்களால் சிக்குண்டு, உன் வாயின் சொற்களால் பிடிப்பட்டிருந்தால்

௩ இப்பொழுது என் மகனே, உன்னைத் தப்புவித்துக்கொள், ஏனெனில் உன் சிநேகிதனுடைய கையிலே அகப்பட்டாய், போய் உன் சிநேகிதனை வருந்தித் தாழ்ச்சிபண்ணு.

௪ உன் கண்களுக்கு நித்திரையையும் உன் இமைகளுக்கு உறக்கத்தையுங் கொடாதே.

௫ வெளிமானுங் குருவியும் வேட்டைக்காரர் கைக்குத் தப்புவித்துக்கொள்ளும் போல உன்னைத் தப்புவித்துக்கொள்.

௬ சோம்பேறியே எறும்பண்டைக்குப் போய் அதின் வழிகளைப்பார்த்து ஞானமடை.

௭ அதற்குப் பிரபுந் தலைவனும் அதிகாரியுமில்லாதிருந்தாலும்,

௮ * உஷ்ணகாலத்திலே தன் ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்பிலே தன் போசனத்தைச் சேர்க்கும். * ௩௰, அதிகா. ௨௫.

௯ சோம்பேறியே, எந்தமட்டுஞ் சயனிப்பாய் எப்பொழுது நித்திரைவிட்டெழுந்திருப்பாய்.

௰ * இன்னங் கொஞ்சந் தூக்கங்களும் இன்னங் கொஞ்சம் உறக்கங்களுஞ் சயனிப்பதுக்கு இன்னங் கொஞ்சங் கைகட்டிக்கொள்ளுதலுமுண்டாகும், * ௨௰, அதிகாரம். ௰௩. ௨௪, அதிகா. ௩௩. ௩௪.

௰௧ அப்பொழுது உன் தரித்திரம் வழிப்போக்கனைப்போலவும் உன் குறைச்சல் ஆயுதமணிந்தவனைப்போலவும் வரும்.

௰௨ பேலியாளின் மனுஷனும் அக்கிரமக்காரனுமானவன் வாய்ப்புரட்டுப்பண்ணி நடந்து,

௰௩ தன் கண்களால் சைகைகாட்டித் தன் கால்களால் பேசித் தன் விரல்களால் போதிக்கிறான்.

௰௪ அவனிருதயத்திலே திரியாவரமிருக்கிறது. எந்தக்காலத்திலும் பொல்லாப்பைப் பிணைத்து வழக்குகளை உண்டுபண்ணுகிறான்.

௰௫ ஆகையால் அசுப்பாய் அவன் ஆபத்து வரும் சடிதியிலே குணமாகுதலுக்கிடமில்லாமல் நொறுக்கப்படுவான்.

௰௬ ஆறுகாரியங்களைக் கர்த்தர் பகைக்கிறார், ஏழும் அவருடைய ஆத்துமாவுக்கு அருவருப்பானவைகள், அதாவது,

௰௭ * மேட்டிமையான கண்களும் பொய்யான நாவுங் குற்றமில்லா இரத்தஞ்சிந்துங் கைகளும். * ௨௧, அதி. ௪.

௰௮ அக்கிரமயோசனைகளைப் பிணைக்கும் இருதயமும் பொல்லாப்புச் செய்யத் தீவிரமாய் ஓடுங் கால்களும்,

௰௯ பொய்களையூதுகிற கள்ளச்சாட்சியுஞ் சகோதரருக்குள்ளே வழக்குகளை உண்டுபண்ணுகிறவனுந்தானே.

௨௰ * என் மகனே, நீ உன் தகப்பன் கற்பனையைக் கைக்கொண்டு உன் தாயின் போதகத்தை நெகிழாதிரு. * ௧, அதி. ௮.

௨௧ அவைகளை எப்போதும் உன் இருதயத்தின்மேற்கட்டு, அவைகளை உன் கழுத்திலே பூணு. ௩, அதி. ௩.

௨௨ * நீ நடந்துகொண்டிருக்கையில் அது உன்னை நடத்தும், நீ படுத்துக்கொண்டிருக்கையில் அது உன்னைக் காப்பாற்றும், நீ விழிக்கையில் அது உன்னோடே சம்பாஷிக்கும். ௩, அதி. ௨௩. ௨௪.

௨௩ ஏனெனில் * உன்னைப் பொல்லாத ஸ்திரிக்கும் வேறொருத்தியின் இச்சகங்களுக்கும் விலக்கிக் காப்பதற்கு, * ௨, அதி. ௰௬.

௨௪ கற்பனையே விளக்கும் போதகமே வெளிச்சமும் புத்திசொல்லுதலுங் கடிந்துகொள்ளுதலுமே ஜீவவழியுமாம்.

௨௫ உன்னிருதயத்திலே அவள் அழகை இச்சியாதே, அவள் தன் கண்ணிமைகளால் உன்னைப் பிடிக்கவொட்டாதே.

௨௬ ஏனெனில் வேசி ஸ்திரீயின் பொருட்டு இரந்துண்ணல் ஒரு அப்பத்துண்டுக்காக வருகிறதற்குத் தவரும் விபசாரி விலையேறப்பெற்ற ஆத்துமாவை வேட்டையாடுகிறாள்.

௨௭ யாதொருவன் தன் வஸ்திரங்கள் வேகாமல் தன் மடியிலே நெருப்பை வைத்துக்கொள்ளுவானோ?

௨௮ யாதொருவன் தன் கால்கள் சுடாமலே தழலின்மேல் நடப்பானோ?

௨௯ தனக்கடுத்தவனுடைய பெண்சாதியினிடத்திற் பிரவேசிக்கிறவன் அப்படியிருக்கிறான், அவளைத் தொடுகிற ஒருவனும் ஆக்கினைக்குத் தப்பான்.

௩௰ திருடன் தன்னுத்துமாவை நிரப்பப் பசியினாலே திருடினதினிமித்தம் அவனை இகழ்ச்சிபண்ணார்கள்.

௩௧ அவன் கண்டுபிடிக்கப்பட்டால் ஏழத்தனைசெலுத்துவான், தன் வீட்டின் அவகாசத்தையெல்லாம் கொடுப்பான்.

௩௨ ஒரு ஸ்திரீயோடே விபசாரம்பண்ணுகிறவனோ மதிகெட்டவன், அப்படிச்செய்கிறவன் தன்னுத்துமாவைக் கெடுக்கிறவன்.

௩௩ வாதையும் இலச்சையும் அடைகிறான், அவன் நிந்தைக்குலையாது.

௩௪ ஏனென்றால் புருஷனுடைய மூர்க்கம் உக்கிரமாயிருக்கிறது, அவன் குரோதத்தைத் தீர்க்கும் நாளிலே தப்பவிடான்.

௩௫ எந்த மீட்கும்பொருளையும் பாரான், நீ காணிக்கையைப் பெருகப்பண்ணினாலும் சம்மதியான்.

௭. அதிகாரம்.

[விபசாரியின் தந்திரங்களில் அகப்படுகிற பயித்தியக்காரனின் அழிவைக் காண்பித்தது.]

என் மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து என் கற்பனைகளை உன்னிடத்திலே பத்திரப்படுத்து.

௨ என் கற்பனைகளையும் என் போதகத்தையும் உன் கண்களின் கருப்புவிழியைப்போலக்கா, அப்போது பிழைப்பாய்.

௩ * அவைகளை உன் விரல்களிற்கட்டு, அவைகளை உன் இருதயத்தின் பலகையிலெழுது. * ௩, அதிகாரம். ௩.

௪ * உன்னை இச்சக்கவார்த்தைகளுள்ள அன்னியனாயிருக்கிற பிறஸ்திரீக்கு விலக்காப்பதற்காக, * ௨, அதிகா. ௰௫. ௰௬.

௩, அதிகாரம். ௩.

௫ ஞானத்துடனே நீ என் சகோதரியென்றுசொல்லி உணர்வை இனத்தானென்றழை.

௬ ஏனென்றால் நான் என் வீட்டின் பலகணியில் நின்று என் கிறுதிகளின் வழியாய்,

௭ நான் பேதைகளைப் பார்த்துக்கொண்டு குமாரருக்குள்ளே ஒருவாலிபனைக் கவனித்தேன்.

௮ அவன் மாலைமயங்குகிற அஸ்தமான நேரத்திலே இராவின் அந்தகாரத்திலும் இருட்டிலும்,

௯ அவளிருக்கும் சந்துக்கடுத்த வீதியே போய் அவள் வீட்டுவழியாய் உலாவினான்.

௰ அப்போது இதோ, வேசியின் ஆடையாபரணந்தரித்த மனத்தந்திரமான ஒரு ஸ்திரீ யவனைச் சந்தித்தாள்.

௰௧ அவள் அமளிக்காரியும் அடங்காதவளுமானவள், அவள் கால்கள் அவளுடைய வீட்டிலே தரிக்கிறதில்லை.

௰௨ இப்போது வெளியிலும் சற்றுநேரத்திலே வீதிகளிலுமிருந்து எல்லாச் சந்திலும் பதிவிருக்கிறாள்.

௰௩ அவள் இவனைப் பிடித்து இவனை முத்தமிட்டு, முகக்கட்டாய் இவனோடே சொன்னதாவது,

௰௪ தோத்திரப்பலிகள் என்மேலிருந்தது, இன்று என் பொருத்தனைகளைச் செலுத்தினேன்.

௰௫ ஆனபடியினாலே உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு உன் முகத்தைக் கருத்தாய்த் தேடினேன், உன்னைக் கண்டுபிடித்தேன்.

௰௬ என் கட்டிலைச் சமுக்காளங்களாலும் எகிப்துதேசத்துச் சித்திரத்தீர்ந்த புடவைகளாலுஞ் சிங்காரித்தேன்.

௰௭ என் படுக்கையை வெள்ளப்போளத்தாலுஞ் சந்தனத்தாலும் கருவாப்பட்டையாலும் வாசனைகட்டினேன்.

௰௮ விடியற்காலமட்டுஞ் சம்போகமாயிருப்போம், சிநேகங்களாற் பூரிப்பாவோம் வா,

௰௯ ஏனென்றால் புருஷன் வீட்டிலேயில்லை, தூரப்பயணம்போனான்.

௨௰ பண முடிப்பைத் தன்கையிலே கொண்டுபோனான், திட்டம்பண்ணின நாளிலே வீட்டுக்கு வருவானென்று சொல்லி,

௨௧ தன் திரளான போதனையாலே அவனை இணங்கக்கொண்டு தன் உதடுகளின் இச்சக்கத்தாலே யவனை யேவினாள்.

௨௨ உடனே யவன் ஒருமாடு அடிக்கப்படுந்தலத்திற்கும் ஒரு பயித்தியக்காரன் விலங்கு பூணப்பட்டவனாய்த் தண்டனைக்குப் போகிறதுபோலவும்,

௨௩ ஒரு குருவி தன் சீவனுக்கு வருகிறதென்றறியாமற் கண்ணிக்குத் தீவிரிக்கிறதுபோலவும் அவள் புறகாலே அம்பு அவன் ஈரலைப் பிளக்குமட்டும் போனான்.

௨௪ இப்போதும் பிள்ளைகளே, என்னைக் கேட்டு என் வாயின் வார்த்தைகளைக் கவனியுங்கள்.

௨௫ உன்னிருதயம் அவள் வழிகளுக்குச் சாயவேண்டாம், அவள் பாதைகளில் மோசம்போகாயாக.

௨௬ ஏனென்றால் அநேகரைக் காயப்படுத்தி விழப்பண்ணினாள், அவளாற் கொல்லப்பட்டயாவருந் திரளான கூட்டம்.

௨௭ * அவள் வீடு மரண அறைகளுக்கிறங்குகிற நரகவழிகளாயிருக்கிறது.

* அதிகாரம். ௰௮, ௰௯.

௮. அதிகாரம்.

[உன்னத ஞானம் மனுஷபுத்திரருக்குப் பண்ணும் பிரசங்கம்.]

ஞானம் கூப்பிடாதோ? உணர்வு தன் சத்தத்தைக் காட்டாதோ? * ௧, அதிகாரம். ௨௰. ௨௧.

௨ அது வழிகளருகான மேடைகளின் முகனையிலும் நாற்சந்துகளிலும் நிற்கிறது.

௩ அது ஊர்வாசல்களின் ஓரத்திலும் பட்டணத்து ஒவ்வொரு முகத்திலும் உட்பிரவேசிக்கிற வாசல் நடைகளிலும் சத்தமிட்டுச் சொல்லுகிறதாவது,

௪ மனுஷரே உங்களை நோக்கிக் கூப்பிடுகிறேன், என் சத்தம் மனுஷபுத்திரருக்குத் தொனிக்கும்.

௫ பேதைகளே வினவிலேயுணர்வாகுங்கள், மூடரே மனதிலேயுணர்வாகுங்கள்.

௬ கேளுங்கள் ஏனென்றால் மேன்பாடான காரியங்களைப் பேசுவேன் நிதானங்களைப் பகிர என்னுதடுகளைத் திறப்பேன்.

௭ ஏனென்றால் என் வாய் சத்தியத்தை விளம்பும், ஆகாமியம் என்னுதடுகளுக்கருவருப்பானது.

௮ என் வாக்குவசனங்களெல்லாம் நீதியானவைகள், * அவைகளிற் புரட்டுந் திரியாவரமுமில்லை. * ஏசாயா. ௫௩, அதிகா. ௯.

௯ அவைகளெல்லாம் உணருகிறவனுக்கு நேருங் கண்டடைகிறவனுக்குச் செம்மையுமானவைகள்.

௰ * வெள்ளியையல்ல, நான் சொல்லுகிற புத்தியையுந் தெரிந்துகொள்ளப்பட்ட பொன்னைப்பார்க்க அறிவையும் ஏற்றுக்கொள்ளுங்கள், * ௩, அதிகாரம். ௰௪. ௰௫.

௰௧ ஏனென்றால் முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது, இச்சிக்கப்பட்டவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல.

௰௨ ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம்பண்ணி நற்சிந்தனைகளுள்ள அறிவைக் கண்டடைந்திருக்கிறேன்.

௰௩ பொல்லாப்பைப் பகைக்கிறது கர்த்தருக்குப் பயப்படுதல், பெருமையையும் அகந்தையையும் பொல்லாத வழியையும் புரட்டுக்குள்ள வாயையும் பகைக்கிறேன்.

௰௪ ஆலோசனையும் மெய்ஞ்ஞானமும் என்னிலுண்டு, நானே உணர்வு, வல்லமையென்னுடையது.

௰௫ என்னாலே இராசாக்கள் அரசாண்டு தேவர் நீதியைத் திட்டம்பண்ணுகிறார்கள்.

௰௬ என்னாலே அதிகாரிகளும் பிரபுக்களும் பூமியிலுடைய எல்லா நியாயாதிபதிகளும் அதிகாரம்பண்ணுகிறார்கள்.

௰௭ * என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன், காலமே என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டுபிடிப்பார்கள். * யோவான். ௰௪, ௨௧.

௰௮ ஐசுவரியமும் கனமும் நிலைநிற்கிற ஆஸ்தியும் நீதியும் என்னிடத்திலிருக்கிறது.

௰௯ * பொன்னையும் அபரஞ்சியையும் பார்க்க என் ஊதியம் நல்லது, தெரிந்துகொள்ளப்பட்ட வெள்ளியைப்பார்க்க என் வருமானம் நல்லது. * ௩, அதிகாரம். ௰௪.

௨௰ என்னைச் சிநேகிக்கிறவர்களுக்கு மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கப்பண்ணுவதற்கும் அவர்கள் பொக்கிஷங்களை நிரப்புவதற்கும்,

௨௧ நீதியின் வழியிலும் நியாயப்பாதைகளுக்குள்ளும் நடக்கிறேன்.

௨௨ கர்த்தர் அப்போது தம்முடைய கிரியைகளுக்கு முன் என்னைத் தம்முடைய வழியின் * ஆதியாகக் கொண்டிருந்தார். * அப்ட்பு ௩. ௰௪.

௨௩ பூமிக்கு முன்னும் ஆதிமுதலும் அநாதியுமாய் அபிஷேகம் பண்ணப்பட்டேன்.

௨௪ ஆழங்களுந் தண்ணீர்களையுள்ள ஊற்றுகளும் உண்டாகாததற்குமுன்னே செனிப்பிக்கப்பட்டேன்.

௨௫ பர்வதங்கள் நாட்டப்படாததற்கு முன்னுங் குன்றுகளுக்குமுன்னும்,

௨௬ அவர் பூமியையும், அதின்வெளிகளையும் பூச்சக்கரமண்களின் முதலையும் உண்டாக்காததற்குமுன்னும் செனிப்பிக்கப்பட்டேன்.

௨௭ அவர் வானங்களைப் படைக்கையில் அங்கேதானிருந்தேன், அவர் ஆழத்தின்மேற்புறத்தை வட்டணிக்கையிலும்,

௨௮ அவர் உயரமேகங்களையுறுதிப்படுத்துகையிலும் ஆழத்தின் ஊற்றுக்களைப் பலப்படுத்துகையிலும்.

௨௯ * தண்ணீர்கள் தம்முடைய வாக்கை மீறாதபடிக்கு அவர் சமுத்திரத்திற்கு அதின் எல்லைப் பிரமாணத்தை வைக்கையிலும் பூமியின் அஸ்திபாரங்களைத் திட்டம்பண்ணுகையிலும், * யோபு. ௩௮, ௮. ௰௧. ௱௪, சங்கீதம். ௯.

௩௰ நான் அவரண்டையிலே * சேர்ந்துவளர்ந்தவனாய், நித்தம் அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து எப்போதும் அவருக்கு முன்பாகச் சஞ்சரித்து, * யோவான். ௧, ௰௮.

௩௧ அவருடைய பூச்சக்கரத்திலே * சந்தோஷித்துக்கொண்டிருந்தேன், மனமகிழ்ச்சியும் மனுபுத்திரரோடிருந்தது. * ௫. மோசே. ௩௩, ௩.

௩௨ இப்போதும் பிள்ளைகளே செவிகேளுங்கள், என் வழிகளைக்காத்து நடப்பவர்கள் பாக்கியவான்கள்.

௩௩ புத்தியைத் தள்ளிப்போடாமல் அதைக் கேட்டு ஞானமடையுங்கள்.

௩௪ என் வாசற்படிகளில் நித்தங் காத்து என் கதவுகளின் நிலைகளருகே காவற்பண்ணித் தக்கனையாய் எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான்.

௩௫ ஏனெனில் * என்னைக் கண்டுபிடிக்கிறவன் ஜீவனைக் கண்டுபிடித்துக் கர்த்தரிடத்தில் பிரியம்பெறுவான். * ௧. யோவா ௫, ௰௨.

௩௬ ஆனால் எனக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறவன் தன் ஆத்துமாவைச் சேதப்படுத்துகிறான், என்னைப் பகைக்கிற யாவரும் மரணத்தைச் சிநேகிக்கிறார்களென்கிறது.

௯. அதிகாரம்.

[உன்னத ஞானத்தின் நற்போதகமும் மலைவுகேட்ட பயித்தியத்தின் துற்போதகமுங் காண்பிக்கப்பட்டது.]

௧ உன்னத ஞானந் தன் வீட்டைக் கட்டி தன் ஏழு தூண்களைச் சித்திரங்கொத்தி,

௨ தன் கொழுத்த செந்துக்களையடித்துத் தன் திராட்சப்பழ இரசத்தை வார்த்து தன் பந்தியை ஆயத்தமும் பண்ணி,

௩ தன் பணிவிடைக்காரிகளை யனுப்பி, பேதையோ அவன் இவ்விடத்திற்குத் திரும்புவானாகவென்று சொல்லச்சொல்லி,

௪ பட்டணத்துப் பிரதான மேடைகளின்மேல் நின்று கூப்பிட்டு, மதியில்லாதவர்களுடனே சொல்லுகிறதாவது,

௫ நீங்கள் வந்து என் அப்பத்திலே போசித்து, நான் வார்த்துவைத்த திராட்சப்பழ இரசத்திலே குடியுங்கள்.

௬ நீங்கள் பிழைக்கும்படிக்குப் பேதைமையை விட்டு உணர்வின் வழியிலே நடவுங்கள்.

௭ சரசக்காரனை யதட்டுகிறவன் தனக்கு அவமானத்தைத் தேடிக்கொள்ளுகிறான், ஆகாதவனைக் கடிந்துகொள்ளுகிறவன் தன்னைக் கறைப்படுத்துகிறான்.

௮ சரசக்காரன் உன்னைப் பகையாதபடிக்கு அவனைக் கடிந்துகொள்ளாதிரு, ஞானமுள்ளவனைக் கடிந்துகொள், அவன் உன்னைச் சிநேகிப்பான்.

௯ ஞானமுள்ளவனுக்குப் புத்தியை வழங்கு, அவன் அதிக ஞானமடைவான், நீதிமானுக்கறிவு சொல், உபதேசத்தில் அதிகப்படுவான்.

௰ * கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் துவக்கம், பரிசுத்தரின் அறிவு உணர்வுள்ளது. * ௧, அதி. ௭. ௱௰௧, சங்கீ. ௰.

௰௧ ஏனென்றால் என்னாலே உன் நாட்கள் நீடிக்கும், உனக்கு ஆயிசுவருஷங்கள் வர்த்திக்கும்.

௰௨ நீ ஞானியாயிருந்தால், உனக்காக ஞானியாயிருப்பாய், நீ சரசக்காரனேயானால், நீயே அதைச் சுமப்பாயென்கிறது.

௰௩ பயித்திய ஸ்திரீ * அமளிக்காரியும் ஒன்றுமறியாத நிர்மூடியுமாயிருக்கிறாள். * ௭, அதிகாரம். ௰௧.

௰௫ தங்கள் பாதைகளிற் செம்மையாய் நடக்கிற வழிப்போக்கரை யழைக்க,

௰௪ அவள் பட்டணத்தின் மேடைகளிலுள்ள தன் வீட்டுவாசற்படியில் ஒரு ஆசனத்தின்மேலுட்கார்ந்து,

௰௬ பேதையோ, அவன் இவ்விடத்திற்குத் திரும்புவானாகவென்று சொல்லி மதியில்லாதவனுடனே,

௰௭ * திருட்டுத் தண்ணீர்கள் தித்திப்பும் அந்தரங்கமான அப்பம் இன்பமுமாயிருக்கிறதென்கிறாள். * உ௰, ௰௭.

௰௮ ஆனாலும் * அவ்விடத்திலே மரித்தவர்கள் உண்டென்றும் அவளால் அழைக்கப்பட்டுப் போனவர்கள் நரகபாதாளங்களிற் கிடக்கிறார்களென்றும் அறியான். * ௭, ௨௬. ௨௭.

௰. அதிகாரம்.

[இந்த அதிகாரந்துவக்கி, ௨௯. அதிகாரமட்டும் நல்லோருக்கும் பொல்லாருக்கும் பாவங்களுக்கும் புண்ணியங்களுக்கும் வித்தியாசங்களைக் காண்பிக்கும் வாக்கியங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது.]

சாலொமோனின் வாக்கியங்கள் * ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷிப்பிக்கிறான், † பயித்தியமுள்ள மகனோ தன் தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான் * ௰௫, ௨௰. † ௰௭, ௨௫.

௨ ஆகாமியப் பொக்கிஷங்கள் உதவாது, நீதியோ மரணத்திற்குத் தப்புவிக்கும்.

௩ நீதிமானின் ஆத்துமாவைக் கர்த்தர் பட்டினியாய் வைக்கார், ஆகாதவர்களின் தீவினையையோ அகற்றிப்போடுவார்.

௪ * வஞ்சனைக் கையால் வேலைசெய்கிறவன் ஏழையாகிறான், சுறுசுறுப்புள்ளவர்களின் கையோ ஐசுவரியமாக்குகிறது.

௫ வசந்தகாலத்திலே சேர்க்கிறவன் புத்தியுள்ள மகன், அறுப்பிலே தூங்குகிறவன் இலச்சையுண்டாக்குகிற மகன்.

௬ நீதிமானின் சிரசுக்கு ஆசீர்வாதங்களுண்டாம், ஆனால் ஆகாதவர்களின் வாயைக் கொடுமை மூடும்.

௭ நீதிமானின் பேர் ஆசீர்வாதமாயிருக்கும், ஆனால் ஆகாதவர்களின் பேர் அழிந்துபோம்.

௮ மனதில் ஞானமுள்ளவன் கற்பனைகளை ஏற்றுக்கொள்ளுகிறான், ஆனாற் பயித்திய உதடன் சிக்கிக்கொள்ளுகிறான்.

௯ உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான், தன் வழிகளைக் கோணலாக்குகிறவனோ அறியப்படுவான்.

௰ * கண்சாடைகாட்டுகிறவன் நோவுண்டாக்குகிறான், பயித்திய உதடன் சிக்கிக்கொள்ளுவான். * ௬, அதிகாரம். ௰௩.

௰௧ * நீதிமானின் வாய் ஜீவ ஊற்றாயிருக்கிறது, ஆனால் ஆகாதவர்களின் வாயைக் கொடுமை மூடும். * ௩௭, சங்கீதம். ௩௰.

௰௨ பகை வழக்குகளை யெழுப்பும், *சிநேகமோ சகலமீறுதல்களையும்மூடும்.

* ௧. பேதுரு. ௪, அதிகாரம். ௮.

௰௩ உணர்வுள்ளவனுடைய உதடுகளிற் காணப்படுகிறது ஞானம், மதிகெட்டவனுடையமுதுகுக்கு ஏற்றது மிலாறு.

௰௪ ஞானிகள் அறிவையடக்குகிறார்கள், ஆனாற் பயித்தியக்காரனுடைய வாய்க்குக் கலக்கஞ்சமீபித்திருக்கும்.

௰௫ ஐசுவரியவானின் ஆஸ்தி அரணான பட்டணம் அவனுக்கு, ஏழைகளுடையகலக்கம் அவர்கள்தரித்திரம்.

௰௬ நீதிமானுடையசெய்கை சீவனுக்கும், ஆகாதவனுடைய வரத்து பாவத்திற்குமாம்.

௰௭ கல்வியைக்காத்துநடக்கிறவன் சீவனுக்குப்போம்வழியிலுள்ளவன், அதட்டுதலைவிட்டுவிடுகிறவனோ மோசம்போக்குகிறவன்.

௰௮ பகையைமறைக்கிறவன் பொய் உதடன், அவதூறுண்டாக்குகிறவன்மதிகேடன்

௰௯ வார்த்தைகளின்றிரட்சியில் மீறுதலற்றிராது, தன்னுதடுகளையடக்குகிறவனோ புத்திமான்.

௨௰ நீதிமானின்நாவு தெரிந்துகொள்ளப்பட்ட வெள்ளி, ஆகாதவர்களின் நெஞ்சு அற்பவிலையானது.

௨௧ நீதிமானின் உதடுகள் அநேகரை மேய்க்கும், பயித்தியக்காரரோ மதியில்லாமையினாலமாளுவார்கள்.

௨௨ கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியம் அடையப்பண்ணும், அதோடே வேதனையையுங்கூட்டார்.

௨௩ தீவினைசெய்கிறது பயித்தியக்காரனுக்கொருவிளையாட்டு, உணர்வுள்ள மனிதனுக்கோஞானமுண்டு.

௨௪ ஆகாதவன்பயப்படுகிறதே அவனுக்குவரும், நீதிமான்கள்விரும்புகிறதேஅவர்களுக்குக்கொடுக்கப்படும்.

௨௫ புசற்கடந்துபோகிறதுபோலஆகாதவனில்லாதேபோகிறான், நீதிமானோநித்திய அஸ்திவாரமுள்ளவன்.

௨௬ காடிபல்லுகளுக்கும் புகைகண்களுக்குமெப்படியிருக்கிறதோ அப்படிச்சோம்பேறி தன்னையனுப்புகிறவர்களுக்கிருக்கிறான்.

௨௭ கர்த்தருக்குப்பயப்படுதல் ஆயிசின்நாட்களைப்பெருகப்பண்ணும், ஆகாதவர்களின்வயதுகளோ குறுகப்படும்.

* ௯, அதிகாரம். ௰. ௯, அதி. ௰௧.

௨௮ நீதிமான்களின்நம்பிக்கைமகிழ்ச்சியாகும், ஆகாதவர்களின் பார்த்திருக்குதலோ அழியும்.

௨௯ கர்த்தரின்வழி உத்தமனுக்கு அரண், அக்கிரமக்காரருக்கோகலக்கம்.

௩௰ நீதிமான் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை. ஆகாதவர்களோபூமியில் வாசமாயிருப்பதில்லை.

௩௧ நீதிமானின்வாய் ஞானத்தைவெளிப்படுத்தும், மாறுபாடுகளுள்ளநாவோ அறுப்புண்டுபோம்.

௩௨ நீதிமானின்உதடுகள்பிரியமானதைப்பேச அறியும், ஆகாதவர்களின் வாயோ மாறுபாடுகளுள்ளது.

௰௧. அதிகாரம்.

கள்ளத்திராசுகர்த்தருக்கருவருப்பாயிருக்கிறது. சுமுத்திரையானபடிக்கல்லோஅவருக்குப்பிரியம் *௰௯, அதி. ௰௧. ௨௰, ௰. ௨௩.

௨ அகந்தைவந்தால் இலச்சையும்வரும், அனால் தாழ்மையானவர்களோடே ஞானமிருக்கும்.

௩ செம்மையானவர்களின்உத்தமம்அவர்களைநடத்தும், துரோகிகளின்மாறுபாடோ அவர்களைப்பாழாக்கடிக்கும்.

௪ * கோபாக்கினையின்நாளிலே ஆஸ்தி யுதவாது. நீதியோ மரணத்துக்குத்தப்புவிக்கும். * ௰, அதிகாரம். ௨.

௫ உத்தமனின் நீதி அவன்வழியைச்செம்மையாக்கும், ஆகாதவனோதன்னுடையதுஷ்டத்தாலேவிழுவான்.

௬ செம்மையானவர்களின் நீதி அவர்களைத்தப்புவிக்கும், துரோகிகளோ தங்கள்தீவினையிலேபிடிபடுவார்கள்.

௭ ஆகாதமனிதன் சாகையில் அவன்பார்த்திருக்கொள்ளுதல் அழியும் * அக்கிரமக்காரரின்நம்பிக்கைகெட்டுப்போம்.

* ௰, அதிகாரம். ௨௮.

௮ நீதிமான் இக்கட்டுக்கு நீங்கலாக்கப்படுகிறான், * அவன் தலத்திலே ஆகாதவன் வருகிறான். * ௨௧, அதி. ௰௮.

௯ மாயக்காரன் தனக்கடுத்தவனைவாயினாலேகெடுக்கிறான் நீதிமானோ அறிவினாலேதப்புகிறான்.

௰ நீதிமான்கள் நன்றாயிருந்தாற்பட்டணங்களிக்கூரும், ஆகாதவர்கள் அழிந்தாற்கெம்பீரமுண்டு.

௰௧ செம்மையானவர்களின்ஆசீர்வாதத்தினாற்பட்டணம் உயரும், ஆகாதவர்களின் வாயினால அது இடியும்.

௰௨ மதிகெட்டவன் தனக்கடுத்தவனை இலச்சைப்பண்ணுகிறான், உணர்வுள்ள மனிதனோபேசாதிருக்கிறான்.

௰௩ * அவதூறாய்த்திரிகிறவன் இரகசியத்தை வெளியாக்குகிறான், ஆவியில் உண்மையுள்ளவனோகாரியத்தையடக்குகிறான். * ௨௰, அதி. ௰௯.

௰௪ நல்யோசனைகளில்லாததினாற்சனந்தாழ்ந்துவிழும், அநேகம் ஆலோசனை

சாரிருக்கிறதினாலோ சுகமுண்டு.

* ௰௫, அதிகாரம். ௨௨.

௰௫ அன்னியனுக்காகப் பிணைப்படுகிறவன் தன்றுயரோடே நொறுங்குவான், கைபோட்டுக் கொள்ளுதலைப் பகைக்கிறவனோ சுகமாயிருப்பான்.

௰௬ பலவந்தர் ஐசுவரியத்தைப் பத்திரமாய்க் காப்பதுபோல, இலக்கணமுள்ள பெண் சாதிமானியங்காக்கிறாள்.

௰௭ தயவுள்ளமனிதன் தன்னாத்துமாவுக்கு நன்மைசெய்கிறான், கடூரனோ தன் மாமிசத்தை யலைக்கழிக்கிறான்.

௰௮ ஆகாதவன் விருதாவேலையைச் செய்கிறான், நீதியை விதைக்கிறவனோ உத்தம பலனையடைவான்.

௰௯ நீதி சீவனுக்கேதுவாகிறதுபோலப் பொல்லாப்பைப் பின்தொடருகிறவன் தன் மரணத்திற்கேதுவாகிறான்.

௨௰ திரியாவரமான இருதயத்தார் கர்த்தருக்கருவருப்பானவர்கள், உத்தமமார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள்.

௨௧ பொல்லாதவன் கையோடே கைகோர்த்தாலும் ஆக்கினைக்குத் தப்பான், நீதிமான்களின் வித்தோ விடுவிக்கப்படும்.

௨௨ மதிகெட்டு நடக்கிற ஸ்திரீயின் அழகு பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்.

௨௩ நீதிமான்களின் ஆசை நன்மையே, ஆகாதவர்களின் காத்திருக்குதல் கோபத்தோடிருக்கும்.

௨௪ வாரி யிறைத்தும் அதிகமுண்டாயிருக்கிறவர்களுமுண்டு, நிதானத்தைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியுந் தாழ்ச்சியையே அடைகிறவர்களுமுண்டு.

௨௫ ஆசீர்வதிக்கிற ஆத்துமா கொழுத்துப்போம், எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்.

௨௬ தானியத்தைக் கட்டிவைக்கிறவனை சனங்கள் சபிக்கும், விற்கிறவனுடைய தலைக்கு ஆசீர்வாதமுண்டாம்.

௨௭ நன்மையைக் கருத்தாய்த் தேடுகிறவன் பிரியத்தைத் தேடிக்கொள்ளுகிறான், * தீமையைத் தேடுகிறவனுக்கோ அதுவே வரும்.

* எ, சங்கீதம். ௰௭.

௨௮ தன் ஐசுவரியத்தை நம்புகிறவன் விழுவான், * நீதிமான்களோ துளிரைப் போலச் செழிப்பார்கள். * ௫௨, சங். ௰.

௨௯ தன் வீட்டைக் கலைக்கிறவன் காற்றைச் சுதந்தரிப்பான், பயித்தியக்காரன் ஞானமுள்ளவனுக்கடிமையாயிருப்பான்.

௩௰ நீதிமானின் பலன் சீவவிருட்சம், ஆத்துமாவை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்.

௩௧ இதோ * நீதிமானுக்குப் பூமியிற் சரிக்கட்டப்படுமே, ஆகாதவனுக்கும் பாவிக்கும் எத்தனையதிகம். * க. பேது. ச, ௰௭. ௰௮.

௰௨. அதிகாரம்.

௧ தண்டனையைச் சிநேகிக்கிறவன் அறிவைச் சிநேகிக்கிறவன், கடிந்துகொள்ளுதலைப் பகைக்கிறவனோ மிருகத்தைப்போலிருப்பான். * ௰௫, அதி. ௰௮.

௨ நல்லவன் கர்த்தரிடத்திலே பிரியம் பெறுவான், ஆனால் துர்வினைகளுள்ள மனிதனையவர் ஆக்கினைக்குத் தீர்ப்பார்.

௩ ஆகாமியத்தாலே மனுஷன் நிலைவரப்படான், நீதிமான்களின் வேரோ அசையாதிருக்கும்.

௪ * குணமுள்ள ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள், இலச்சைக்காரியோ அவனுடைய எலும்புருக்கியைப்போலிருக்கிறாள். * ௩௧, ௰.

௫ நீதிமான்களின் நினைவுகள் நியாயம், ஆகாதவர்களின் யோசனைகள் சூது.

௬ ஆகாதவர்களின் வார்த்தைகள் * இரத்தஞ்சிந்தப் பதிவிருப்பதற்கிருக்கும், ஆனாற் செம்மையானவர்களை யவர்கள் வாய் தப்புவிக்கும். * ௧, ௰௧.

௭ ஆகாதவர்கள் கவிழ்ந்து இல்லாதே போவார்கள், ஆனால் நீதிமான்களின் வீடு நிற்கும்.

௮ தன் புத்திக்குத் தக்கதாய் மனுஷன் புகழப்படுவான், ஆனால் அக்கிரம நெஞ்சன் இகழ்ச்சிக்குள்ளாவான்.

௯ தன்னைத்தான் கனம்பண்ணி அப்பத்தாழ்ச்சியாயிருக்கிறவனைப் பார்க்கிலும் பணிவிடைக்காரனுள்ளவனாகிய கனமற்றவன் வாசி.

௰ நீதிமான் தன் மிருகசீவனை விசாரிக்கிறான், ஆனால் ஆகாதவர்களின் இருதயங் கொடூரமானது.

௰௧ * தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் அப்பத்தால் திருத்தியாவான், வீணரைப் பின்பற்றுகிறவனோ மதியற்றவன். * ௨௮, ௰௯.

௰௨ ஆகாதவன் தீமைக்குட்படுத்தும் வலையை நாடுகிறான், ஆனால் நீதிமான்களின் வேர் கனிகொடுக்கும்.

௰௩ உதடுகளின் துரோகத்திற் பொல்லாக் கண்ணியிருக்கும், நீதிமானோ நெருக்கத்துக்கு வெளியாவான்.

௰௪ * தன் தன் வாயின் நற்கனியினால் அவனவன் நன்மையால் திருத்தியாவான், அவனவன் கைகளின் உபகாரமும் அவனவனுக்குத் திரும்பும். * ௰௩, ௨.

௰௫ பயித்தியக்காரனின் வழி அவனுடைய பார்வைக்குச் செம்மை, ஆனால் ஆலோசனையைக் கேட்கிறவன் ஞானமுள்ளவன்.

௰௬ பயித்தியக்காரனுடைய தாங்கல் அந்நாளிலே தானே அறியப்படும், இகழ்ச்சியை மூடுகிறவனோ விவேகி.

௰௭ சத்தியவாசகன் நீதியாய் அறிவிப்பான், பொய்ச்சாட்சிக்காரனோ தந்திரமாய் அறிவிப்பான்.

௰௮ பட்டயக்குத்துகளைப்போலப் பேசுகிறவர்களுமுண்டு, ஞானமுள்ளவர்களின் நாவோ அவிழ்தம்.

௰௯ சத்திய உதடு என்றென்றைக்கும், பொய்நாவோ ஒரு நிமிஷமாத்திரமும் நிற்கும்.

௨௰ தீமையைப் பிணைக்கிறவர்களின் இருதயத்திலிருக்கிறது கபடம், சமாதானத்துக்கு உசாவுகிறவர்களுக்குண்டாகிறதோ மகிழ்ச்சி.

௨௧ நீதிமானுக்கொரு அவகேடும் வராது, ஆகாதவர்களோ பொல்லாப்பால் நிறையப்படுவார்கள். ௯௨, சங்கீதம். ௰.

௨௨ * பொய்யுதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள், உண்மையை நடப்பிக்கிறவர்களோ அவருக்குப் பிரியம். * ௬, ௰௬. ௰௭.

௨௩ விவேகமுள்ள மனுஷன் அறிவை அடக்குகிறான், * மூடரின் நெஞ்சோ பயித்தியத்தைப் பிரசங்கிக்கும். * ௰௩, ௰௬.

௨௪ * சாக்கிரதையுள்ளவர்களின் கை ஆளும், வஞ்சனைக்கையோ அடிமைப்படும். * ௰, ௪.

௨௫ மனுஷனின் இருதயத்திலிருக்கும் கவலை அதைப் பொடுக்கும், நல்வார்த்தையோ அதை மகிழ்ச்சியாக்கும்.

௨௬ நீதிமான் தன் அக்கிதத்தவனிலும் மேன்மையாயிருக்கிறான், ஆனால் ஆகாதவர்களை அவர்களுடைய வழி மோசம்போக்கும்.

௨௭ அசட்டைத்தான் வேட்டையாடினதைப் பொரிப்பதில்லை, சாக்கிரதையுள்ளவனுக்கோ விலையேறப்பெற்ற ஆஸ்தியகப்படும்.

௨௮ நீதியின் பாதையிற் ஜீவனுண்டு, மார்க்கமான வழியிற் சாவில்லை.

௰௩. அதிகாரம்.

ஞானமுள்ள மகன் தகப்பனின் புத்தியைக் கேட்கிறான், சரசக்காரனோ அதட்டுதலைக் கேளான்.

௨ * தன் தன் வாயின் நற்கனியினாலே அவனவன் நன்மையைப் புசிப்பான், துரோகிகளின் ஆத்துமாவோ கொடுமையைப் புசிக்கும். * ௰௮, ௨௰.

௩ தன் வாயைப் பத்திரம்பண்ணுகிறவன் தன்னுயிரைக் காக்கிறான், * தன் உதடுகளை அகலத் திறக்கிறவனுக்கோ கலங்கல் வரும். * ௰௮, ௭.

௪ சோம்பேறியின் ஆத்துமா இச்சித்தாலும் ஒன்றுமடையாது, சாக்கிரதையுள்ளவர்களின் ஆத்துமாவோ புஷ்டியாகும். ௨௰, ௪.

௫ * நீதிமான் பொய்ப்பேச்சைப் பகைக்கிறான், ஆகாதவனோ வெட்கமும் இலச்சையுமுண்டாக்குகிறான். * ௱௰௯, சங்கீதம். ௱௬௩.

௬ நீதி உத்தமமார்க்கத்தானைத் தற்காக்கும், அக்கிரமமோ பாவியைக் கவிழ்த்துப்போடும்.

௭ ஒன்றுமில்லாமல் தங்களை ஐசுவரியவான்களாய்ப் பாராட்டுகிறவர்களுமுண்டு, திரளான ஆஸ்தியிருந்தும் தங்களைத் தரித்திரராய்ப் பாராட்டுகிறவர்களுமுண்டு.

௮ மனுஷனின் ஐசுவரியம் அவன் பிராணனை மீட்கிறதுண்டு, அதினால் தரித்திரன் சீறுமாறைக் கேளாதிருக்கிறான்.

௯ நீதிமான்களின் வெளிச்சம் சந்தோஷிப்பிக்கும், * ஆகாதவர்களின் தீபமோ அணைந்துபோகும். * ௨௪, ௨௰.

௰ அகந்தையாலே மாத்திரம் வாதுபிறக்கும், யோசனை கேட்கிறவர்களிடத்திலோ ஞானமுண்டு.

௰௧ மாயையாலே தேடின ஆஸ்தி குறைந்துபோம், கைப்பாடாய்ச் சேர்க்கிறவனோ அதைப் பெருகப்பண்ணுவான்.

௰௨ நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை நோகச்செய்யும், விரும்பினது வந்தபோதோ ஜீவவிருட்சம்போலிருக்கும்.

௰௩ வசனத்தை அசட்டைபண்ணுகிறவன் தன்னாலே கெட்டுப்போகிறான், கற்பனைக்குப் பயப்படுகிறவனோ பலனடைவான்.

௰௪ ஞானியின் போதகம் * மரணக்கண்ணிகளை விலக்குவதற்கான ஜீவ ஊற்றாயிருக்கிறது. * ௰௪, ௨௭.

௰௫ நற்புத்தி தயவுண்டாக்கும், துரோகிகளின் வழியோ கரடுமுரடானது.

௰௬ விவேகியாயிருக்கிறவனெல்லாம் அறிவோடே செய்கிறான், மூடனோ தன் பயித்தியத்தை விரித்துக்காண்பிக்கிறான்.

௰௭ ஆகாத தூதன் தீங்கிலே விழுவான், உண்மையுள்ள ஸ்தானாபதியோ அவிழ்தம்.

௰௮ புத்தியைத் தள்ளிப்போடுகிறவனுக்குத் தரித்திரமும் கனவீனமும் வரும், கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ கனமடைவான்.

௰௯ வாஞ்சை நிறைவேறுதல் ஆத்துமாவுக்கு இனிதாயிருக்கும், பொல்லாப்பை விட்டு விலகுதல் மூடருக்கு அருவருப்பாயிருக்கும்.

௨௰ ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான், மூடருக்குத் தோழனாயிருக்கிறவனோ நொறுங்குண்பான்.

௨௧ பாவிகளைத் தீமை தொடரும், நீதிமான்களுக்கோ நன்மை பலனாக வரும்.

௨௨ நல்லவன் தன் பிள்ளைகளின் பிள்ளைகளைச் சுதந்தரமடையப் பண்ணுகிறான், பாவியினுஸ்தியோ * நீதிமானுக்குவைக்கப்படும். * யோபு ௨௭, ௰௬. ௰௭.

௨௩ ஏழைகளின் வயல் மிகுந்த ஆகாரத்தை விளைவிக்கும், ஆனால் நியாயமில்லாமையால் அழிகிறவர்களுமுண்டு.

௨௪ தன் பிரம்பைக் கையாடாதவன் தன் மகனைப் பகைக்கிறான், அவனைச் சிநேகிக்கிறவனோ அவனை யேற்கனவே தண்டிப்பான்.

௨௫ நீதிமான் தன் ஆத்துமா திருத்தியாகச் சாப்பிடுவான், ஆகாதவர்களின் வயிறோ தாழ்ச்சியடையும்.

௰௪. அதிகாரம்.

ஞானமுள்ள எந்தப் பெண்சாதியுந் தன் வீட்டைக் கட்டுகிறாள், பயித்தியமுள்ளவளோ அதைத் தன் கைகளால் இடிக்கிறாள்.

௨ தன் நிதானத்திலே நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான், தன் வழிகளில் மாறுபாடுள்ளவனோ அவரை யசட்டைபண்ணுகிறான்.

௩ அகந்தைக்கான மிலாறு மூடனின் வாயிலேதானிருக்கிறது, ஞானமுள்ளவர்களையோ அவர்களுடைய உதடுகள் காப்பாற்றும்.

௪ எருதுகளில்லாமையாற் களஞ்சியம் வெறுமையாயிருக்கும், காளைகளின் பெலத்தினாலோ மிகுந்த வரத்துண்டு.

௫ உண்மையுள்ள சாட்சி பொய்சொல்லான், கள்ளச்சாட்சியோ பொய்களையூதுகிறவன்.

௬ சரசக்காரன் ஞானத்தைத் தேடியுங் கண்டுபிடியான், உணர்வுள்ளவனுக்கோ அறிவு லேசாயிருக்கும்.

௭ பயித்தியக்காரனுடைய முகதாவுக்கிடைந்துபோ, ஏனென்றால் அறிவுள்ள உதடுகளைக் காணாய்.

௮ தன்வழியைச் சிந்தித்துக்கொண்டிருக்கிறது விவேகியினுடைய ஞானம், திரியாவரமோ மூடருடைய பயித்தியம்.

௯ குற்றத்துக்குப் பயித்தியக்காரர் ஆகடியம் பண்ணுகிறார்கள், செம்மையானவர்களுக்குள்ளேயோ தயவிருக்கிறது.

௰ அவனவனுடைய ஆத்துமாவின் சஞ்சலத்தை அவனவனுடைய இருதயமே யறியும், அவனவன் மகிழ்ச்சிக்கும் அந்நியன் உடந்தையல்ல.

௰௧ ஆகாதவர்களின்வீடு அழியும், செம்மையானவர்களின் கூடாரமோ செழிக்கும்.

௰௨ * சில மனுஷருடைய பார்வைக்கு அவர்களுடைய வழி செம்மையாயக் கண்டும் அதின் முடிவு மரணத்துக்குப்போகிற வழிகளாயிருக்கும். * ௰௬, ௨௫.

௰௩ நகைப்பிலும் மனதுக்கு நோவுண்டாகும், அதின் பிறகு சந்தோஷஞ் சஞ்சலமாகும்.

௰௪ பின்வாங்கும் இருதயமுள்ளவன் தன்னுடையவைகளாலும் நல்மனுஷன் தன் மார்க்கத்தாலுந் திருப்தியாவான்.

௰௫ பேதை சகல வார்த்தையையும் நம்புகிறான், விவேகியோ தன் நடையின்மேற் கவனமாயிருக்கிறான்.

௰௬ ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிறான், மூடனோ சினந்துகொண்டு திடாரிக்கமாயிருக்கிறான்.

௰௭ * முற்கோபி மதிகேட்டைச்செய்வான், தீவினைக்குள்ள மனுஷன் பகைக்கப்படுவான். * ௰௨, ௰௬.

௰௮ பேதைகள் பயித்தியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறார்கள், விவேகிகளோ அறிவின் கிரீடத்தைத் தரித்துக்கொள்ளுகிறார்கள்.

௰௯ பொல்லாதவர்கள் நல்லவர்களுக்கு முன்பாகவும் ஆகாதவர்கள் நீதிமானுடைய வாசற்படியிலுங் குனிவதுண்டு.

௨௰ * தரித்திரன் தனக்கடுத்தவனாலும் பகைக்கப்படுகிறான், ஐசுவரியமுள்ளவர்களின் சிநேகிதரோ அநேகர். * ௰௯, ௪. ௭.

௨௧ தனக்கடுத்தவனை யசட்டைபண்ணுகிறவன் பாவஞ்செய்கிறான், * சிறுமையானவர்களுக்கிரங்குகிறவனே பாக்கியமடைவான். * ௪௪, சங். ௨.

௨௨ தீமைக்கெத்தினம்பண்ணுகிறவர்கள் தப்பிதஞ்செய்கிறார்களல்லவோ? நன்மைக் கெத்தினம்பண்ணுகிறவர்களுக்கோ கிருபையும் உண்மையுமுண்டு.

௨௩ சகல * பிரயாசத்திலும் பிரயோசனமுண்டு, உதடுகளின் வசனிப்பாற் குறைச்சல் வருகிறது. * ௰, ௪. ௰௨. ௨௪.

௨௪ ஞானமுள்ளவர்களின் ஐசுவரியம் அவர்களுக்குக் கிரீடம், மூடரின் பயித்தியம் பயித்தியமே.

௨௫ உண்மையுள்ள சாட்சி ஆத்துமாவை விடுவிக்கிறான், கபடச்சாட்சியோ பொய்களையூதிவிடுகிறான்.

௨௬ கர்த்தருக்குப் பயப்படுகிறதிலே * பெலத்த திடனுண்டு, அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலமிருக்கும். * ௰௮, ௰.

௨௭ கர்த்தருக்குப் பயப்படுதல் மரணக் கண்ணிகளைவிட்டுவிலகுவதற்கான ஜீவ ஊற்றாயிருக்கிறது.

௨௮ ஜனத்திரட்சி இராசாவின் மகத்துவம், ஜனக்குறைவு தலைவனின் முறிவு.

௨௯ * நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான், முற்கோபியோ பயித்தியத்தைத் தெரியக்காண்பிக்கிறான். * ௰௬, ௰௧.

௩௰ சொஸ்தமனம் உடலின்ஜீவன், பொறாமையோ எலும்புருக்கி.

௩௰௧ * தரித்திரனை ஒடுக்குகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்தைசெய்கிறான், எளியவனுக்கு இரங்குகிறவனோ அவரைக் கனம்பண்ணுகிறான். * ௰௭, ௫.

௩௰௨ ஆகாதவன் தன் பொல்லாப்பினாலே தள்ளுண்டான், நீதிமானோ தன் மரணத்திலே திடனாயிருக்கிறான்.

௩௰௩ உணர்வுள்ளவனின் இருதயத்தில் ஞானந்தங்கியிருக்கும், மூடரின் நடுவே விளங்கும்.

௩௰௪ நீதி ஜாதியை உயர்த்தும், பாவமோ ஜனங்களின் இகழ்ச்சி.

௩௰௫ விவேகமுள்ள ஊழியக்காரன்மேல் இராஜாவின் பிரியம், இலச்சையுண்டாக்குகிறவன்மேல் அவன் உக்கிரமிருக்கும்.

௰௫. அதிகாரம்.

௧ மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தைத் திருப்பும், நோகப்பண்ணும் வார்த்தையோ கோபத்தைக் கிளப்பும்.

௨ ஞானிகள் நாவு அறிவை நன்றாய்க் காண்பிக்கும், மூடரின் வாயோ * பயித்தியத்தைப் பூறும். * ௰௩, ௰௬.

௩ எவ்விடத்திலும் கர்த்தருடைய கண்கள் இருந்து பொல்லாதவர்களையும் நல்லவர்களையும் நோக்கிப்பார்க்கிறது.

௪ * நாவின் ஆரோக்கியம் ஜீவவிருட்சம், அதிலுள்ள தாறுமாறோ ஆவிக்கு நொறுங்குதல். * ௰௨, ௰௮.

௫ பயித்தியக்காரன் தன் தகப்பனின் புத்தியை அசட்டைபண்ணுகிறான், கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ விவேகியானவன்.

௬ * நீதிமானின் வீட்டிலே வெகுசத்துவமிருக்கும், ஆகாதவர்களின் வரத்திலோ கலக்கமுண்டு. ௩. ௩௩.

௭ ஞானமுள்ளவர்களின் உதடுகள் அறிவை இறைக்கும், மூடரின் இருதயம் அப்படியல்ல.

௮ * ஆகாதவர்களின் பலி கர்த்தருக்கு அருவருப்பு, செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம். * ௨௧, ௨௭.

௯ ஆகாதவனின் வழி கர்த்தருக்கு அருவருப்பு, நீதியைப் பின்தொடருகிறவனையோ அவர் சிநேகிக்கிறார்.

௰ பாதையை விட்டுப்போகிறவனுக்குப் புத்திமதி விசனமாயிருக்கும், கடிந்துகொள்ளுதலைப் பகைக்கிறவன் சாவான்.

௰௧ * பாதாளமும் நரகமும் கர்த்தரின் முன்பாகவிருக்கிறதே, மனுபுத்திரன் இருதயங்கள் எத்தனை அதிகம். * யோபு. ௨௬. ௬.

௰௨ பரிகாசக்காரன் தன்னைக் கடிந்துகொள்ளுகிறவனைச் சிநேகியான், ஞானிகளண்டைக்கு அவன் போகான்.

௰௩ * மகிழ்ச்சியுள்ள இருதயம் முகத்தைச் செழிப்பாக்கும், இருதயத்தின் நோவினாலே ஆவி முறிந்துபோகும். * ௰௭, ௨௨.

௰௪ உணர்வுள்ளவனின் இருதயம் அறிவைத் தேடும், மூடரின் வாயோ பயித்தியத்தை மேயும்.

௰௫ சிறுமைப்பட்டவனின் நாட்களெல்லாம் தீங்குள்ளவைகள், * மனமகிழ்ச்சியோ நித்தவிருந்து. * ௧. தீமோ. ௬, ௬.

௰௬ அமளியோடிருக்கும் பெரும்பொக்கிஷத்தைப் பார்க்கிலும் கர்த்தருக்குப் பயப்படுதலோடிருக்கும் கொஞ்சமானது நலம்.

௰௭ * பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியைப் பார்க்கிலும் சிநேகத்தோடிருக்கும் இலைக்கறிவாசி. * ௰௭, ௧.

௰௮ உக்கிரமுள்ள மனுஷன் சண்டையைக் கொளுவுகிறான், நீடிய சாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான்.

௰௯ * சோம்பேறியின் வழி முள்வேலிபோலிருக்கிறது, செம்மையானவர்களின் பாதையோ நிரவப்பட்டதாயிருக்கிறது. * ௨௪, ௩௰, ௩௧.

௨௰ * ஞானமுள்ள மகன் தகப்பனைப் பூரிப்பாக்குகிறான், பயித்திய மனுஷனோ தன் தாயை அசட்டைபண்ணுகிறான். * ௰, ௧. ௰௭, ௨௫.

௨௧ பயித்தியம் மதியற்றவனுக்குச் சந்தோஷம், உணர்வுள்ள மனுஷனோ தன் நடக்கையைச் செம்மைப்படுத்துகிறான்.

௨௨ யோசனையில்லாமையால் நினைவுகள் இசைகேடாம், ஆனால் அநேகம் ஆலோசனைக்காரரால் உறுதியுண்டாம். * ௰௧, ௰௪.

௨௩ மனுஷனுக்குத் தன் வாய்மொழியினாலே மகிழ்ச்சியுண்டாம், * ஏற்றகாலத்திலே சொன்ன வார்த்தை எத்தனை நலமாயிருக்கும். * ௨௫, ௰௧.

௨௪ தாழவிருக்கும் நரகத்தைவிட்டு விலகும்படிக்கு விவேகிக்கு ஜீவவழி உயரப்போகும்.

௨௫ * அகந்தைக்காரரின் வீட்டைக் கர்த்தர் பிடுங்கி, விதவையின் எல்லையை நிலைப்படுத்துவார். * சங். ௱௪௬, ௯.

௨௬ பொல்லாதவனின் நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கிறது, சுத்தவான்களின் வார்த்தைகளோ இன்பமானவைகள்.

௨௭ பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலக்குகிறான், பரிதானங்களைப் பகைக்கிறவனோ பிழைத்திருக்கிறான்.

௨௮ நீதிமானின் இருதயம் பிரதியுத்தரஞ்சொல்ல யோசிக்கும், ஆகாதவர்களின் வாயோ பொல்லாவிசேஷங்களைப் பொழியும்.

௨௯ ஆகாதவர்களுக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார், நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்.

௩0 கண்களின் வெளிச்சம் இருதயத்தைப் பூரிப்பாக்கும், நல்லசெய்தி எலும்புகளைப் புஷ்டியாக்கும்.

௩௧ ஜீவனுக்கடுத்த கொள்ளுதலைக் கேட்கிற காது ஞானமுள்ளவர்களுக்குள் தாபரிக்கும்.

௩௨ புத்திமதியைத் தள்ளிப்போடுகிறவன் தன் ஆத்துமாவை வெறுக்கிறான், கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான்.

௩௩ கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும் * மகிமைக்கு முன்தாழ்மையுண்டு. ௰௮, ௰௨.

௰௬. அதிகாரம்.

மனதின் யோசனைகள் மனுஷனுடையது, * நாவின் பிரத்தியுத்தாரங் கர்த்தரால் வரும். * எரேமியா. ௰, ௨௩.

௨ மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமாயிருக்கிறது, ஆனாற் கர்த்தர் ஆவிகளை நிறுக்கிறார். ௨, ௨.

௩ உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவித்துவிடு அப்பொழுது உன் யோசனைகள் நிலைவரப்படும்.

௪ கர்த்தர் அதினதின் இலக்குக்குச் சகலத்தையுந் தீங்குநாளுக்குப் பொல்லாதவனையுங்கூட உண்டாக்கினார்.

௫ * மனமேட்டிமையானவனெல்லாம் கர்த்தருக்கு அருவருப்பானவனாயிருக்கிறான், அவனைக்கையோடே கைகோர்த்தாலும் ஆக்கினைக்குத் தப்பான். ஆகமா. ௰௧, ௰௫.

௬ கிருபையினாலும் உண்மையினாலும் அக்கிரமம் நிவிர்த்தியாகும், ஆனாற் கர்த்தருக்குப் பயப்படுகிறதினாற் பொல்லாப்பைவிட்டு விலகவேணும்.

௭ ஒரு மனுஷனுடைய வழிகளின்மேற் கர்த்தர் பிரியமாயிருந்தால் அவர் அவன் சத்துருக்களையும் அவனோடே சமாதானமாக்குவார்.

௮ * நியாயமில்லாத்திரளான வரத்தைப்பார்க்கிலும் நீதியோடிருக்குங் கொஞ்சவரத்துவாசி. * ௩௭, சங்கீதம். ௰௬.

௯ மனுஷனின் இருதயந் தன் வழியை யோசிக்கும், ஆனாற் கர்த்தரோ அவன் நடையை யுறுதியாக்குகிறவர்.

௰ இராசாவுடைய உதடுகளிலே ஞானதிஷ்டியுண்டு, அவன்வாய் நியாயத்திலே நீதிதப்புச்சொல்லாது.

௰௧ * சுமுத்திரையான கயிறுக்கோலுந் திராசுங் கர்த்தருடையது, பையிலுள்ள படிக்கல்லுகளெல்லாம் அவருடைய செய்கை. * ௰௧, ௧.

௰௨ அகாமியஞ்செய்கிறது இராசாக்களுக்கருவருப்பாயிருக்கும், ஏனெனில் நீதியால் இராசாசனம் உறுதிப்படுத்தப்படும்.

௰௩ நீதியுள்ள உதடுகள் இராசாக்களுக்குப் பிரியம், நிதானமாய்ப் பேசுகிறவனை இராசா நேசிப்பான்.

௰௪ இராசாவின் உக்கிரம் மரணத்தூதாகளைப்போலிருக்கும், ஆனால் ஞானமுள்ள மனுஷன் அதை யாற்றுவான்.

௰௫ இராசாவினுடைய முகக்களையுயிர்க்கும், அவன் தயவு பின்மாரிபெய்கிற மேகத்தைப்போலிருக்கும்.

௰௬ * பசும்பொன்னைப்பார்க்கிலும் ஞானத்தைச் சம்பாதிக்கிறது எத்தனை நலமும் வெள்ளியைப்பார்க்கிலும் உணர்வைச் சம்பாதிக்கிறது எத்தனை மேன்மையுமாயிருக்கிறது. ௩, ௰௪. ௮. ௰, ௰௯. ௰௬, சங்கீ. ௰௧.

௰௭ பொல்லாப்பைவிட்டுவிலகுதலே செம்மையானவர்களின் சமனான பாதை, தன்வழியைக் கவனித்திருக்கிறவன் தன்னாத்துமாவைக் காக்கிறான்.

௰௮ நொறுங்குதலுக்கு முன்னானது அகந்தை. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. * ௰௮, ௰௨.

௰௯ அகந்தைக்காரரோடே கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்வதைப் பார்க்கச் சிறுமையானவர்களோடே மனத்தாழ்மையாயிருக்கிறது நலம்.

௨0 வசனத்தின்மேற் சிந்தனையைவைக்கிறவன் நன்மையைக் கண்டடைவான், கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்.

௨௧ இருதயத்தில் ஞானமுள்ளவன் புத்திமானென்னப்படுவான், உதடுகளின் இன்பம் உபதேசத்தைப் பெருகப்பண்ணும்.

௨௨ புத்தி தன்னையுடையவர்களுக்கு ஜீவஊற்றாயிருக்கிறது, பயித்தியக்காரரின் கல்வி பயித்தியம்.

௨௩ ஞானியின் இருதயம் அவன்வாயைப் புத்தியுள்ளதாக்கி அவன் உதடுகளில் உபதேசத்தைப் பெருகப்பண்ணும்.

௨௪ இன்பமான வார்த்தைகள் தேன்கூடும் ஆத்துமாவுக்கு மதுரமும் எலும்புகளுக்கு அவிழ்தமுமாயிருக்கிறது.

௨௫ * மனுஷனின் பார்வைக்குச் செம்மையாய்க்கண்டும் முடிவிலே மரணத்திற்குக் கொண்டுபோகிறதாகிய வழியுண்டு.

* ௰௪, ௰௨.

௨௬ உழைக்கிற ஆத்துமா தனக்குழைக்கிறான், ஏனெனில் அவன்வாய் அவனைத் தூண்டிவிடும்.

௨௭ பேலியாளின் மனுஷன் தீங்கையெத்தனம்பண்ணுகிறான், அவன் உதடுகளிலிருக்கிறது எரிக்கும் அக்கினியைப்போலிருக்கும். ௬, ௰௨, ௰௪.

௨௮ மாறுபாடுகளுள்ள மனுஷன் வழக்கையுண்டுபண்ணுகிறான், கோட்காரன் பிரதானசிநேகிதரையும் பிரியப்பண்ணுவான்.

௨௯ கொடுமையானமனுஷன் தனக்கடுத்தவனுக்கு ஆசைபதங்காட்டி அவனை நலமல்லாதவழியில் நடக்கப்பண்ணுகிறான்.

௩௰ திரியாவரங்களையோசிக்கத்தன்கண்களைமூடுகிறான், தன் உதடுகளை அவன் அசைக்கும்போது பொல்லாப்பைச்செய்யத்தீர்ந்தது.

௩௧ * நரைமயிர் அலங்காரமான கிரீடம், நீதியின்வழியில் அது கிடைக்கும். * ௨௰, ௨௯.

௩௨ பலவானைப்பார்க்க நீடியசாந்தமுள்ளவனும், ஒரு பட்டணத்தைப் பிடிக்கிறவனைப்பார்க்கத்தன்னுவியை ஆண்டுகொள்ளுகிறவனேவாசி.

௩௩ சீவி மடியிற் போடப்படும், அதின் நியாயமெல்லாங்கர்த்தரால்வரும்.

௧௭. அதிகாரம்.

௧ சண்டையோடே கூடிய கொழுத்த ஆகாரங்கள் வீடுநிறையவிருந்தாலும் அவைகளைப்பார்க்க அமரிக்கையோடே சாப்பிடுங்கறியில்லாத்துண்டுநைசாவிலே. ௰௫, ௰௭.

௨ புத்தியுள்ள வேலைக்காரன் இலச்சையுண்டாக்குகிற குமாரனை ஆண்டு சகோதரர் நடுவிற்சுதந்தரப்பங்கடைவான்.

௩ வெள்ளிக்குப்புடமும் பொன்னுக்குக்குகையும் இருதயங்களைச் சோதிக்கிறவரோ கர்த்தர்.

௪ பொல்லாதவன் அக்கிரம உதட்டைக்கவனிக்கிறான், கள்ளன் கேடுபாடுள்ள நாவுக்குச்செவிகொடுக்கிறான்.

௫ * ஏழையைப்பரியாசம்பண்ணுகிறவன் அவனை உண்டாக்கினவரை நிந்தைப்படுத்துகிறான், ஆபத்துக்குக்களிக்கிறவன் ஆக்கினைக்குத்தப்பான். * ௰௪, ௩௧.

௬ பிள்ளைகளின்பிள்ளைகள் முதிர்ந்தவயதுள்ளவர்களின் கிரீடம், பிள்ளைகளின் சிங்காரமோ அவர்களின்பிதாக்கள்.

௭ மேன்மையானவைகளைப்பேசும் உதடு பயித்தியக்காரனுக்கடுத்ததல்ல, பிரபுக்கோ பொய்யுதடு எப்படி அடுக்கும்.

௮ பரிதானம் அதைவாங்குகிறவர்களின் பார்வைக்கு நேத்திரமான இரத்தினமாயிருக்கிறது, * அது நோக்குந்திசையெல்லாங்காரியம்வாய்க்கும். * ௰௮, ௰௬.

௯ மீறுதலைமூடிப்போடுகிறவன் சிநேகத்தைநாடுகிறான், காரியத்தைக்கிளறுகிறவனோ பிரதான சிநேகிதனையும் பிரியப்பண்ணுவான்.

௰ மூடனை நூறடியடிப்பதைப்பார்க்கிலும் உணர்வுள்ளவனுக்கு அதட்டுதலே அதிகமாய் உறைக்கும்.

௰௧ பொல்லாதவன் கலகத்தையேதேடுகிறான், ஆகையால் கொடூரதூதன் அவனுக்கு விரோதமாய் அனுப்பப்படுவான்.

௰௨ தன் பயித்தியத்தோடிருக்கிற மூடனுக்கல்ல, குட்டிகளைப்பறிகொடுத்த கரடிக்கே மனுஷன் எதிர்ப்படட்டும்.

௰௩ நன்மைக்குத்தீமையைச்சரிக்கட்டுகிறவனின்வீட்டைத்தீமை விட்டுப்பிரியாது.

௰௪ சண்டைக்குக் காரணம்பண்ணுகிறவன் தண்ணீர் மதகைத்திறக்கிறவனுக்குச்சரி, ஆகையாலே போர்கலவாத்தற்குமுன் வாதாட்டத்தைநெகிழ்.

௰௫ * ஆகாதவனை நீதிமானாகவும் நீதிமானை ஆகாதவனாகவுந்தீர்க்கிற இருவரும் கர்த்தருக்கருவருப்பானவர்கள். * ஏசா. ௫, ௨௩.

௰௬ மூடன் மதியில்லாதவனாயிருக்கச்சே ஞானத்தைக்கொள்ள அவன்கையிலேயிருக்கும் கிரயம் என்னத்திற்கு?

௰௭ சிநேகிதன் எல்லாக்காலத்திலும் சிநேகிப்பான், இடுக்கணுக்குதவுஞ்சகோதரனே அவன் பிறக்கவேணும்.

௰௮ தனக்கடுத்தவன்முன்பாகப் பிணைபட்டுக்கைகொடுக்கிறவன் புத்தியீனமான மனுஷன். * ௰௧, ௰௫.

௰௯ வாதுபிரியன் பாதகப்பிரியன், தன் வாசலையுயர்த்துகிறவன் அழிவைத்தேடுகிறான்.

௨௰ திரியாவர இருதயத்தான் நன்மையைக்கண்டடைவதில்லை, புரட்டு நாவுள்ளவன் தீமையிலேவிழுவான்.

௨௧ மூடனைப்பெறுகிறவன் தனக்குச்சஞ்சலமாக அவனைப்பெறுகிறான், பயித்தியக்காரனின்தகப்பன் மகிழான்.

௨௨ * மகிழ்ச்சியுள்ள இருதயம் நல்ல ஒளஷதம்போலாகும், முறிந்த ஆவியோ எலும்புகளையுலரப்பண்ணும். * ௰௫, ௰௩. ௰௫.

௨௩ ஆகாதவன் நியாயவழியைப்புரட்ட மடியிலுள்ள பரிதானத்தைவாங்குகிறான்.

௨௪ ஞானம் உணர்வுள்ளவனுடைய முகத்தின்முன்னிருக்கிறது, மூடனுடைய கண்களோ பூமியின் கடையாந்தரங்களில் நிற்கிறது.

௨௫ * மூடனான குமாரன் தன் தகப்பனுக்குச்சலிப்பும் தன்னைப்பெற்றவளுக்குக்கசப்புமானவன். * ௰௫, ௨௰.

௨௬ நீதிமானைக்குட்டத்தெண்டம்பிடிக்கிறதும் பிரபுக்கள் நிதானத்தைச்செய்கிறதினால் அவர்களையடிக்கிறதும் நல்லதல்ல.

௨௭ * அறிவாளி தன்வார்த்தைகளையடக்குகிறான், உணர்வுள்ள மனுஷன் குளிர்ந்த குணமுள்ளவன். * யாக்கோ. ௧, ௰௯.

௨௮ பயித்தியக்காரனும் மவுனமாயிருந்தால் ஞானமுள்ளவனென்றுந் தன் உதடுகளைமூடுகிறவன் புத்திமானென்றும் எண்ணப்படுவான்.

௰௮. அதிகாரம்.

பிரிந்துபோகிறவன் தன்னிச்சையின்படிசெய்யப்பார்க்கிறான், எல்லா மெய்ஞ்ஞானத்தோடுங்கலக்கிறான்.

௨ மூடன் உணர்வையல்ல தன்னிருதயத்திலுள்ளதை வெளிப்படுத்தவே விரும்புகிறான்.

௩ துன்மார்க்கன் வருகையில் அசங்கதமும் வருகிறது, அவமானத்தோடேகூடிய நிந்தையும்வரும்.

௪ மனுஷனுடைய வாயின் வசனங்கள் * ஆழமான தண்ணீர்களாயிருக்கும், ஞானத்தின் ஊற்றேபாய்கிற ஆறும். * ௨௰, ௫.

௫ நீதிமானை நியாயத்திலே தோற்கடிக்க துன்மார்க்கனின் முகம்பார்க்கிறது நல்லதல்ல. * ௫. மோசே. ௧, ௰௭.

௬ மூடனின் உதடுகள் சண்டைக்குட்படும், அவன் வாய் அடிகளை வரவழைக்கும்.

௭ மூடனின்வாய் அவனுக்குக்கேடு, அவன் உதடுகள் அவன் ஆத்துமாவுக்குக்கண்ணி,

௮ * முறுமுறுப்புக்காரரின் வார்த்தைகள் பரியாசவார்த்தைகளைப்போலிருக்கும் அவைகள் வயிற்றுக்குள்ளிறங்கும். * ௨௰, ௨௨.

௯ தன்வேலையில் அசதியானவன், அழிம்பனின்சகோதரன்.

௰ * கர்த்தரின் நாமம் அரணான துருக்கம், அதிலே நீதிமான் ஓடிப் பத்திரமாயிருக்கிறான். * ௰௪, ௨௬. ௬௧, சங்கீ. ௪.

௰௧ * ஐசுவரியவானின் ஆஸ்தி அவனுக்கு அவன் நினைவின்படி அரணான பட்டணமும் உயர்ந்த மதிலுமாயிருக்கும். * ௰, ௰௫.

௰௨ * நொறுங்குதலுக்கு முன் மனுஷனின் இருதயம் மேட்டிமையாகும், மகிமைக்குமுன் தாழ்மை. * ௰௬, ௰௮. மத்தேயு. ௨௩, ௰௨.

௰௩ ஒருவன் கேளாததற்குமுன் பிரத்தியுத்தரஞ்சொன்னால் அவனுக்கது புயித்தியமும் வெட்கமுமாயிருக்கும்.

௰௪ * மனுஷனின் ஆவி அவன் வியாதியைத் தாங்கும், முறிந்த ஆவியையோ ஆர் தாங்குவான்? * ௰௫, ௰௩.

௰௫ உணர்வுள்ளவனின் இருதயம் அறிவைச் சம்பாதிக்கும் ஞானமுள்ளவர்களின் செவி அறிவையேதேடும்.

௰௬ மனுஷனின் காணிக்கை அவனுக்கு வழியுண்டாக்கி அவனைப்பெரியோர்களுக்கு முன்பாக வரப்பண்ணும்.

௰௭ நீதிமான்முதல் தன்னுடைவழக்காடுகிறான், பிறகு அவனுக்கடுத்தவன் வந்தால் அவனையும்விசாரித்தறிவாயிருக்கிறான்.

௰௮ சீட்டுபோடுதல் வழக்குகளை ஒய்யப்பண்ணி பலவான்களின் நடுவே சிக்கறுக்கும்.

௰௯ அரணான பட்டணத்தைப்பார்க்கிலும் அநியாயம் அனுபவித்தசகோதரனை கெட்டியாயிருக்கிறான், அப்படிப்பட்ட வழக்குகள் கோட்டைத்தாழ்ப்பாள்களுக்குச்சரி.

௨௰ தன் தன் வாயின் கனியால் அவனவனின் வயிறு நிரப்பப்படும் தன் தன் உதடுகளின் வரத்தினாலே அவனவன் திருத்தியாவான்.

௨௧ மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும், அதை சிநேகிக்கிறவன் அதின் கனியைப்புசிப்பான். * ௰௩, ௩.

௨௨ * பெண்சாதியைக் கண்டடைகிறவன் நற்காரியத்தைக் கண்டடைந்தான், கர்த்தரால் ஒருதயவைவரப்பெற்றுக்கொண்டான். * ௰௯, ௰௪. ௩௧, ௰.

௨௩ தரித்திரன் கெஞ்சிப்பேசுகிறான். ஐசுவரியவான் கடுமையாய் உத்தரவுகொடுக்கிறான்.

௨௪ சிநேகிதருக்குள்ளமையான மனுஷன் உறவுகட்டப்படத்தக்கவன் * சகோதரனிலும் அதிகத்தொந்தமாய்ச்சிநேகிப்பவருண்டு. * ௨௭, ௰.

௰௯. அதிகாரம்.

மூடனாகிய திரியாவர உதடனைப்பார்க்கத்தன் உத்தமத்தில் நடக்கிற தரித்திரனேவாசி. * ௨௮, ௬.

௨ அறிவில்லாத ஆத்துமா நல்லதல்ல, கால்த்துரிதக்காரனோ தப்பிநடக்கிறான்.

௩ மனுஷனின்புத்தியீனம் அவன்வழியைத்தாறுமாறாக்கும், பிறகு கர்த்தருக்குவிரோதமாய் அவனிருதயம் தாங்கலாயிருக்கும்.

௪ * ஆஸ்தி அநேகரைச்சிநேகிதராய்ச்சேர்க்கும், தரித்திரனோ தன் சிநேகிதனாலே நெகிழ்ப்படுவான். * ௰௪, ௨௰.

௫ கள்ளச்சாட்சி ஆக்கினையில்லாதிருப்பதில்லை, பொய்களையூதுகிறவன் தப்பான். * ௫. மோசே. ௰௯, ௰௮—௨௰.

௬ உதாரனின் முகத்திற்குமுன்பாக அநேகர்வருந்துகிறார்கள், கொடைகொடுக்கிறவனுக்கு எவனும் சிநேகிதன்.

௭ தரித்திரனுடைய சகோதரரெல்லாரும் அவனைப்பகைக்கிறார்களே, எத்தனையதிகமாய் அவன் சிநேகிதர் அவனுக்குத்தூரமானார்கள், அவர்கள் கொடுத்த வார்த்தைகளைத்தொடருகிறான், ஆனால் அவைகள் வெறுமை.

௮ ஞானத்தைத்தேடிக்கொள்ளுகிறவன் ஆத்துமாவைச்சிநேகிக்கிறான், உணர்வைக்காக்கிறவனுக்கு நன்மைகிடைக்கும்.

௯ * கள்ளச்சாட்சி ஆக்கினைக்குத்தப்பான், பொய்களையூதுகிறவன் அழிவான். * ௨௨, ௨௮.

௰ மூடனுக்குச்செல்வம் அடாது, பின்னையடிமைபிரபுக்களை ஆளுவதெப்படியடுக்கும்.

௰௧ * மனுஷனின் புத்தி அவனைச் சாந்தனாக்கும். பிழைகளைப் பாராமற்போகிறது அவனுக்கு மகிமை.

௰௨ * இராசாவின் சினம் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்கும், அவன் தயவு புல்லின்மேற் பெய்யும் பனிக்கும் சமானம். * ௨௰, ௨.

௰௩ மூடனாகிய மகன் தன் தகப்பனுக்குச் சஞ்சலத்துக்கமாயிருக்கிறான், * பெண்சாதியின் சண்டைகள் ஓயாத ஒழுக்கு. * ௨௭, ௰௫.

௰௪ வீடும் ஆஸ்தியும் பிதாக்களால் வரும் சுதந்தரம், * புத்தியுள்ள பெண்சாதியோ கர்த்தரால் கொடுக்கப்படுகிறாள்.
* ௰௮, ௨௨.

௰௫ சோம்பல் தூங்கிவிழப்பண்ணும், * அசதியான ஆத்துமா பட்டினியாயிருக்கும்.
* ௰, ௪.

௰௬ கற்பனையைக் காக்கிறவன் தன் ஆத்துமாவைக் காக்கிறான், அதின் வழிகளுக்கு அசட்டையாயிருக்கிறவனோ சாவான்.

௰௭ * ஏழைக்கிரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான், அவனுடைய உபகாரத்தை யவர் அவனுக்குப் பதில்கொடுப்பார். * மத்தே. ௰, ௪௨. ௨௫, ௪௰.
லூக்க. ௯, ௩௮.

௰௮ நம்பிக்கையிருக்குமட்டும் * உன் மகனைத் தெண்டி, ஆனால் அவனைக் கொல்ல உன் ஆத்துமாவை யெழும்பவொட்டாதே.
* எபேசியர். ௬, ௪.

௰௯ மகா உக்கிரமான ஆக்கினையடைவான், நீ யவனைத் தப்பவிட்டாலோ இனி அப்புறம் அவனைத் தெண்டிக்கலாம்.

௨௰ உன் கடைசிநாட்களில் நீ ஞானமுள்ளவனாயிருப்பதற்கு, ஆலோசனையைக் கேட்டு போதகத்தையேற்றுக்கொள்.

௨௧ வெகு நினைவுகள் மனுஷனின் இருதயத்திலிருக்கும், ஆனாற் * கர்த்தரின் யோசனையே நிற்கும். * ௨௧, ௩௰.

௨௨ தன்மைசெய்ய மனுஷனுக்கிருக்கும் மனதாசையே தயவு. பொய்யுள்ள மனுஷனைப் பார்க்கத் தரித்திரன் வாசி.

௨௩ கர்த்தருக்குப் பயப்படுதல் மனுஷனைச் சீவனுக்குள்ளாக்கும், அவன் திருத்தியடைந்தவனாய் இராத்தங்குவான், பொல்லாப்பு அவனை யணுகாது.

௨௪ * சோம்பேறி தன் கையைக் கலத்திலே போட்டுவிட்டு அதைத் தன் வாயண்டைக்குத் திரும்ப வெடுக்காதிருக்கிறான்.
* ௨௬, ௰௫.

௨௫ * சக்கந்தக்காரனையடி, அப்போது பேதை விழிப்புள்ளவனாவான், உணர்வுள்ளவனைக் கடிந்துகொள், அறிவை உணர்வான். * ௨௧, ௰௧.

௨௬ வெட்கமும் இலச்சையும் உண்டாக்குகிற மகன் தகப்பனைப் பாழ்க்கடிக்கிறவனும் தாயைப் புறக்கடிக்கிறவனுமாயிருக்கிறான்.

௨௭ என் மகனே, புத்திமதியைக் கேளாமல் விட்டுவிட்டாயாகில் அறிவின் வசனங்களை விட்டு வழிதப்பத்தான் அப்படிச் செய்வாய்.

௨௮ பேலியாளின் மனுஷனாகிய சாட்சிக்காரன் நியாயத்தை நிஸ்காரம்பண்ணுகிறான், ஆகாதவர்களின் வாய் அக்கிரமத்தை விழுங்கும்.

௨௯ சக்கந்தக்காரருக்கு நியாயத்தீர்ப்புகளும், மூடரின் முதுகுக்கு அடிகளும் ஆயத்தமாயிருக்கிறது.

௨௰. அதிகாரம்.

மதுபானம் சக்கந்தமுள்ளதும், வெறி அமளியுள்ளதுமாயிருக்கிறது, அதினால் மயங்குகிறவனொருவனும் ஞானியாவதில்லை.

௨ இராசாவின் உக்கிரம் சிங்கத்தின் கெர்ச்சிப்புக்குச் சரி, அவனுக்குக் கோபமுண்டாக்குகிறவன் தன் சீவனுக்குத் துரோகஞ்செய்கிறான்.

௩ வழக்கை விலகியிருக்கிறது மனுஷனுக்குக் கனம், ஆனாற் பிடிவாதக்காரனெவனும் அதிலே கலந்துபோகிறான்.

௪ சோம்பேறி குளிருக்கிறதென்று உழாதிருக்கிறான், அறுப்பிலே வேணுமென்பான், அப்போது ஒன்றுமில்லை.

௫ மனுஷனின் இருதயத்திலிருக்கும் யோசனை ஆழமான தண்ணீர்கள், உணர்வுள்ள மனுஷனோ அதை மொண்டெடுப்பான்.

௬ மனுஷரின் ஏராளத்தில் அவனவன் தன் தயவைக் கூறுகிறான், ஆனால் நம்பிக்கையான மனுஷனைக் கண்டுபிடிப்பவனார்?

௭ நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான், அவனுக்குப்பிறகு அவன் பிள்ளைகள் பாக்கியவான்கள். * ௱௰௨, சங்கீதம். ௨.

௮ நியாயாசனத்திலுட்கார்ந்திருக்கிற இராசா தன் கண்களினாற் சகல பொல்லாப்பையுஞ் சிதறப்பண்ணுகிறான்.

௯ * என்னிருதயத்தை நான் சுத்தமாக்கி வைத்திருக்கிறேன், என் பாவமறத் துப்புரவானேனென்று சொல்லுபவனார். * ௩ இரா. ௮, ௪௬.

௰ வித்தியாசமான படிக்கல்லும் வித்தியாசமான மரக்காலும், இரண்டும் கர்த்தருக்கு அருவருப்பாயிருக்கும். * ௫ மோ. ௨௫, ௰௩.

௰௧ ஒரு பிள்ளையின் செய்கை சுத்தமும் செம்மையுமாயிருக்குமோவென்று அதின் கிரியைகளாலும் அறியப்படும்.

௰௨ கேட்கிற காதும் காண்கிற கண்ணுமான இவ்விரண்டையுங் கர்த்தர் உண்டாக்கினார்.

௰௩ நீ ஏழையாகாதபடிக்குத் * தூக்கத்தை நேசியாதிரு, உன் கண்களைத் திறந்திரு, அப்போது அப்பத்தால் திருத்தியாவாய்.
* ௬, ௯.

௰௪ கொள்ளுகிறவன் ஆகாதாகாதென்கிறான், கொண்டுபோனபின்மெச்சிக்கொள்ளுகிறான்.

௰௫ பொன்னுந் திரளான முத்துகளுமுண்டு, அறிவுள்ள உதடுகளோ விலையேறப்பெற்ற ஆபரணம்.

௰௬ * அன்னியனுக்காகப்பிணைப்பட்டவனின் வஸ்திரத்தைப்பெற்றுக்கொள், பிறத்தியாளுக்காக அவனைக்கையில் அடகுவாங்கு. * ௨௭, ௰௩.

௰௭ வஞ்சனையப்பம் மனுஷனுக்கின்பம், பிற்பாடோவெனில் அவன்வாய்ப் பருக்கைக்கல்லுகளால் நிறையப்படும்.

௰௮ நினைவுகள் யோசனைகளால் திடப்படும்போதும், * நல்விவேகமாய் யுத்தம்பண்ணு. * ௨௪, ௬.

௰௯ * அறிந்துகொண்டுதிரிகிறவன் இரகசியத்தைவெளியாக்குவான், புத்தியில்லாத உதட்டுள்ளோடேகலவாதே. * ௰௧, ௰௩.

௨௰ * தன்தகப்பனையுந் தாயையுந் தூஷிக்கிறவனின் தீபங்காரிருட்டிலே அவிந்துபோகும். * ௨. மோசே. ௨௧, ௰௭.

௨௧ ஆவசரத்திலே தீவிரமாய்ப்பிடித்த சுதந்தரம் பிற்காலத்திலே ஆசீர்வாதமற்றிருக்கும்.

௨௨ * தீமைக்குச்சரிக்கட்டுவேனென்னாதே, கர்த்தருக்குக்காத்திரு, அவருனக்கு இரட்சிப்புண்டாக்குவார். * ௨௪, ௨௯. ரோமர். ௰௨, ௰௭.

௨௩ * விதவிதமானபடிக்கல்லு கர்த்தருக்கருவருப்பாயிருக்கும், கள்ளத்தராசு நல்லதல்ல. * ௰. வசனம்.

௨௪ கர்த்தராலே மனுஷனுடைய நடைகளாயிருக்கும், மனுஷன்தானே தன்வழியையுணர்வதெது?

௨௫ பரிசுத்தமானதை விழுங்கி நியமங்கொண்டபின் சிந்தித்துப்பார்க்கிறது மனுஷனுக்குக் கண்ணியாயிருக்கும்.

௨௬ ஞானமுள்ள இராசா ஆகாதவர்களைச்சிதறவடித்து அவர்கள்மேலுருளையைப் புரளப்பண்ணுவான்.

௨௭ மனுஷனின் ஆத்துமா கர்த்தர்தந்த தீபமாயிருந்து, வயிற்றின் உள்ளுக்குள்ளானவைகளையெல்லாம் ஆராயும்.

௨௮ தயவும் உண்மையும் இராசாவைக் காக்கும், * தயவினாலே தன்னாசனத்தை நிற்பப்பண்ணுவான். * ௰௬, ௰௨.

௨௯ வாலிபரின் அலங்காரம் அவர்கள் வீரியம், முதிர்ந்தவயதானவர்களின் கனம் அவர்கள்நரை. * ௰௬, ௩௧.

௩௰ காயமானதழும்புகளும், உள்வயிறுமட்டும் உறைக்கும் அடிகளும் பொல்லாதயினை முக்கறத்திலடக்கும்.

௨௧. அதிகாரம்.

இராசாவின் இருதயங்கர்த்தரின்கையிலே நீர்க்கால்களைப்போலிருக்கிறது, தமக்குச்சித்தமானதெல்லாவற்றிற்கும்நேராக அதைவளைப்பார்.)

௨ * மனுஷனின் வழியெல்லாம் அவன் பார்வைக்குச்செம்மையானது, ஆனாற்கர்த்தர் இருதயங்களைநிறுக்கிறார். * ௰௬. ௨.

௩ பலியைப்பார்க்கிலும் நீதிநியாயஞ்செய்யுதலேகர்த்தருக்குப்பிரியம்.

௪ கண்களின் மேட்டிமையும் இருதயஉப்புதலுமென்றபொல்லாருடையவிளக்கு பாவமே.

௫ ஜாக்கிரதையுள்ளவனின் நினைவுகள் பிரயோசனத்துக்கே, பதறுகிறவனெல்லாங்குறைச்சலுக்கே.

௬ கள்ளநாவினாலே பொக்கிஷங்களைச்சம்பாதிக்குதல் சாவைத் தேடுகிறவர்களுடைய பறக்கடிக்கப்படுகிறமாயை.

௭ ஆகாதவர்களின் பாழ்க்கடிப்பு அவர்களைத்திடுக்கிடப்பண்ணப்போமேனெனில் நியாயஞ்செய்யமனதில்லாதிருக்கிறார்கள்.

௮ அப்படிக்கொத்த மனுஷனின் வழிமகா மாறுபாடும் வேற்றுமையுமாயிருக்கிறது. சுத்தவானுடைய கிரியையோ செம்மையாயிருக்கிறது.

௯ சண்டைக்காரியாகிய பெண்சாதியோடே ஒருவீட்டிலேகூடிக்கலந்திருப்பதைப்பார்க்க வீட்டின்மீதிலொருமூலையிலே தங்கியிருக்கிறதே தாவிலை.

௰ ஆகாதவனின் ஆத்துமா பொல்லாப்பை விசிக்கும், அவன்கண்களில்அவனுக்கடுத்தவனுக்கிரக்கங்கிடையாது.

௰௧ * சக்கந்தக்காரனைத் தெண்டிக்கும்போது பேதை ஞானமடைவான், ஞானமுள்ளவனைப்போதித்தால் அறிவைக் கற்றடைவான். * ௰௬, ௨௫.

௰௨ ஆகாதவர்களைப் பராபரன் நிர்க்கிழப்பண்ணுகையில் நீதிமான் ஆகாதவனுடையவீட்டைச்சிந்தனையோடேபார்க்கிறான்.

௰௩ தன்செவியை ஏழையின் கூக்குரலுக்குவிலக்க அடைத்துக்கொள்ளுகிறவன் தானுங்கேட்கப்படாமற்கூப்பிடுவான்.

௰௪ அந்தரங்கமானகாணிக்கை கோபத்தையும் மடியிலுள்ளபரிதானம் வலுவுக்கிரத்தையும் அமர்த்தும்.

௰௫ நியாயஞ்செய்வது நீதிமானுக்குச்சந்தோஷமும் அக்கிரமக்காரருக்கோ கலக்கமுமாயிருக்கிறது.

௰௬ புத்தியின் வழியைத்தப்பி நடக்கிற மனுஷன் செத்தவர்களின் கூட்டத்திலே தரிப்பான்.

௰௭ * சந்தோஷத்தைச் சிநேகிக்கிறவன் தாழ்ச்சியையடையப்போகிற மனுஷன், மதுபானத்தையுந் தயிலத்தையுஞ் சிநேகிக்கிறவன் ஐசுவரியவானாவதில்லை. * ௨௩. ௨௰, ௨௧.

௰௮ * நீதிமானுக்கு மீட்பாக ஆகாதவனுஞ் செம்மையானவனுக்குப் பதிலாகத் துரோகியுமிருப்பான். * ௰௧, ௮.

௰௯ * சண்டைக்காரியுங் கோபக்காரியுமான பெண்சாதியோடே குடியிருப்பதைப்பார்க்க வனாந்தரத்திலே குடியிருப்பது நலம். * ௨௫, ௨௪.

௨௰ வேண்டுமென்றபோக்கிஷமுந் தைலமும் ஞானமுள்ளவனுடைய வாசஸ்தலத்திலுண்டு, பயித்தியக்காரனோ அதை விழுங்கிப்போடுகிறான்.

௨௧ நீதியையுந் தயவையும் பின்தொடருகிறவன் ஜீவனையும் நீதியையும் மகிமையையுங் கண்டடைவான்.

௨௨ வீரியவான்களின் பட்டணத்தை ஞானமுள்ளவன் ஏறிப்பிடித்து அது நம்பியிருந்த அரணையிடிக்கிறான்.

௨௩ தன் வாயையுந் தன் நாவையுங் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கமாய்க் காக்கிறான்.

௨௪ அகந்தையான சினத்தோடே எல்லாஞ்செய்கிற இடம்புள்ள அகந்தைக்காரனின் பேர் ஆகாமியன்.

௨௫ சோம்பேறியின் இச்சை அவனைச் சாகப்பண்ணும், ஏனெனில் அவன் கைகள் வேலைசெய்யமாட்டோமென்கிறது.

௨௬ அவன் நாள்தோறும் இச்சித்துக் கொண்டேயிருக்கிறான், நீதிமானோ பிசினித்தனம்பண்ணாமற்கொடுப்பான்.

௨௭ * ஆகாதவர்களின் பலி அருவருப்பானது, அவன் அதைத் தீவினையோடே செலுத்தினாலோ எத்தனையதிகம்? * ஏசாயா. ௧, ௰௧.

௨௮ பொய்ச்சாட்சிக்காரன் கெட்டுப்போவான், செவிகொடுக்கிற மனுஷனோ என்றைக்கும் பேசத்தக்கவன்.

௨௯ ஆகாதமனுஷன் தன் முகத்தையழுத்தமாக்குகிறான், செம்மையானவனோ தன் வழியையுறுதிப்பண்ணுகிறான்.

௩௰ கர்த்தருக்கெதிராக ஞானமுமில்லை உணர்வுமில்லை ஆலோசனையுமில்லை.

௩௧ குதிரை யுத்தநாளுக்காயத்தம்பண்ணப்படும், ஆனால் இரட்சித்தல் கர்த்தருடையது.

௨௨. அதிகாரம்.

திரளான ஐசுவரியத்தைப்பார்க்க * நற்கீர்த்தியே தெரிந்துகொள்ளப்படத்தக்கது, வெள்ளியையும் பொன்னையும்பார்க்கத் தயவே நலம். * பிரசங்கி. ௭, ௧.

௨ * ஐசுவரியவானுந் தரித்திரவானும் ஒன்றுக்கொன்றெதிர்ப்படுகிறார்கள், அவர்களெல்லாரையும் உண்டாக்கினவர் கர்த்தர். * ௨௯, ௰௩.

௩ விவேகமுள்ளவன் தீமையைக்கண்டு மறைகிறான், பேதைகளோ நெருங்கிப்போய்ச் சேதமடைகிறார்கள். * ௨௭, ௰௨.

௪ தாழ்மைக்குங் கர்த்தருக்குப் பயப்படுதலுக்கும் வரும்பலன் ஐசுவரியமும் மகிமையுஞ் ஜீவனுந்தானே.

௫ திரியாவரனுடைய வழியில் முள்ளுங் கண்ணிகளுமிருக்கும், தன் ஆத்துமாவைக் காக்கிறவன் அவைகளுக்குத் தூரமாய் விலகிப்போவான்.

௬ வாலிபன் நடக்கவேண்டிய வழியிலே அவனையுட்படுத்து, அப்போது அவன் விருத்தனாகியும் அதைவிடாதிருப்பான்.

௭ ஐசுவரியவான் தரித்திரனையாளுகிறான், கடன்வாங்கினவன் கடன்கொடுத்த மனுஷனுக்கடிமை.

௮ அநியாயத்தைவிதைக்கிறவன் வருத்தத்தையறுப்பான், அவனுடைய உக்கிரத்தின் மிலாறு ஒழியும்.

௯ நற்கண்ணனே ஆசீர்வதிக்கப்படுவான், ஏனெனில் தன் அப்பத்தில் ஏழைக்குக் கொடுக்கிறான்.

௰ சக்கந்தக்காரனைத் துரத்திவிடு, அப்போ வாதுந் தீர்ந்து வழக்குங் கனவீனமும் நின்றுபோம்.

௰௧ * சுத்த இருதயத்தைச் சிநேகிக்கிறவனின் உதடுகள் இன்பமானவைகள், இராசா அவன் சிநேகிதன். ௰௬, ௰௩.

௰௨ கர்த்தருடைய கண்கள் அறிவைக் காக்கும், துரோகிகளின் வார்த்தைகளையோ அவர் தடுமாற்றமாக்குகிறார்.

௰௩ * வெளியிலே சிங்கமிருக்குமென்றும் நான் வீதிகளிற்கொலையுண்பேனென்றுஞ் சோம்பேறி சொல்லுகிறான். * ௨௬, ௰௩.

௰௪ பரஸ்திரீகளின் வாய் ஆழமான படுகுழி, கர்த்தருடைய சினத்துக்கேதுவானவன் அதிலே விழுகிறான். * ௨௩, ௨௭.

௰௫ பயித்தியம் வாலிபன் நெஞ்சோடே ஒட்டியிருக்கும், அதைத் தெண்டிப்பின் மிலாறு அவனைவிட்டகற்றும்.

௰௬ தனக்கதிகமுண்டாகத் தரித்திரனையொடுக்குகிறவன் குறைச்சலுண்டாகவே ஐசுவரியவானுக்குக் கொடுப்பான்.

௰௭ உன் செவியைச் சாய்த்து ஞானிகளின் வார்த்தைகளைக்கேட்டு உன் இருதயத்தை என் அறிவின்மேல் வை.

௰௮ ஏனெனில் நீ அவைகளை உன்னுள்ளே காத்தால் இன்பமாயிருக்கும், அவைகள் உன் உதடுகளின்மேல் ஏகமாய் நிலைத்திருக்கும்.

௰௯ உன் நம்பிக்கை கர்த்தரின்மேல் இருப்பதற்காக உனக்கு ஆம் உனக்குத்தானே இன்றைத்தினம் அவைகளைத் தெரியப்படுத்துகிறேன்.

௨௰ உனக்குச் சத்தியவார்த்தைகளின் நிதானத்தைத் தெரியக்காட்டவும் நீ உன்னையனுப்பினவர்களுக்குச் சத்தியவார்த்தைகளைக்கொண்டுபோய் மறுமொழிசொல்லவுமாக,

௨௧ உனக்கு நான் ஆலோசனைகளிலும் அறிவிலும் மகா பிரதானமானவைகளை யெழுதினதில்லையோ?

௨௨ ஏழையை அவன் ஏழையாளப்படியினாலே கொள்ளையிடாதே, சிறுமையானவனை வாசலில் நெருக்காதே.

௨௩ * ஏனெனிற் கர்த்தர் அவர்கள்வழக்கை வழக்காடி அவர்களைக் கொள்ளையிடுகிறவர்களின் ஆத்துமாவைக் கொள்ளையிடுவார்.

* ௨. மோசே. ௨௨, ௨௨. ௨௩.

௨௪ கோபக்காரனுக்குத் தோழனாகாதே, உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே.

௨௫ நீ அவன் வழிகளைப் படிக்காமலும் உன் ஆத்துமாவுக்குக் கண்ணியை வருவிக்காமலுமிருக்கத்தானே.

௨௬ * கைபோட்டுக்கடன்களுக்காகப் பிணைப்படுகிறவர்களில் ஒருவனாயிராதே.

* ௰௧, ௰௫. ௰௭. ௰௮.

௨௭ செலுத்தவுனக்கில்லாதிருந்தால் உன் கீழிருக்கும் உன் மெத்தையை யவர்கள் எடுத்துக்கொள்ளவேணும்?

௨௮ * உன் பிதாக்களுண்டுபண்ணின பூர்வ எல்லையையொற்றிக்கட்டாதே.

* ௨௩, ௰. ௫ மோசே. ௨௭, ௰௭.

௨௯ தன்தொழிலிற் சுறுசுறுப்புள்ளவனைக் கண்டாயோ? அவன் நீசருக்குமுன்பாக நில்லாமல் இராசாக்களுக்குமுன்பாக நிற்பான்.

௨௩. அதிகாரம்.

நீ ஒருதுரையோடே அசனம்பண்ண உட்கார்ந்தால் உனக்குமுன்பாக இருக்கிறவன் ஆரென்று நற்சிந்தனையாயிரு.

௨ நீ போசனப்பிரியனாயிருந்தால் உன் தொண்டையிற் கத்தியைவைத்திரு.

௩ அவனுடைய ருசிவர்க்கங்களை இச்சியாதே, ஏனெனில் அது கள்ளப்போசனம்.

௪ * ஐசுவரியவானாகவேணுமென்று உழைக்காதே, அதற்கான உன்னுடைய விருலைவிட்டுவிடு. * ௧. தீமோ. ௬, ௯.

௫ உன்கண்களை அதின்மேற்பறக்கவிடுவாயோ அது இல்லாதேபோகிறதே, ஏனெனில் அது தனக்குக் கழுகைப்போற் செட்டைகளையுண்டுபண்ணவேபண்ணி ஆகாயமாய்ப்பறந்துபோம்.

௬ வன்கண்ணனுடைய அப்பத்தைப் புசியாமலும் அவன் ருசிவர்க்கங்களை இச்சியாமலுமிரு.

௭ ஏனெனில் தன் மனதில் எப்படிக்கொத்தசிந்தையாயிருக்கிறானோ அப்படிக்கொத்தவனாய் அவன் உன்னுடனே போசித்துக் குடியென்பான், அவன் இருதயமோ உன்னோடிராது.

௮ நீ சாப்பிட்ட உன் துணிக்கையை வாந்திபண்ணி உன் இன்பவார்த்தைகளை இழந்துபோவாய்.

௯ மூடனின்செவிகள்கேட்கப்பேசாதே, ஏனெனில் உன் வசனங்களின்புத்தியை அசட்டைபண்ணுவான்.

௰ * பூர்வ எல்லையை ஒற்றிக்கட்டாமலும் திக்கற்றவர்களின் நிலங்களில் உட்படாமலுமிரு. * ௨௨, ௨௮.

௰௧ ஏனெனில் அவர்களைமீட்பவர் வல்லவர், இவர் அவர்கள்வழக்கை உன்னோடே வழக்காடுவார்.

௰௨ உன் இருதயத்தைக் கடிந்துகொள்ளுதலுக்கும் உன்செவிகளை அறிவின் வார்த்தைகளுக்கும் உள்ளாக்கு.

௰௩ வாலிபனைத் * தண்டியாமலேயிராதே, ஏனெனில் நீ பிரம்பினாலே அவனை அடிக்கிறதினாலே சாகான். * ௨௯, ௰௫.

௰௪ நீ பிரம்பினாலே அவனையடிக்கையால் அவன் ஆத்துமாவை நரகத்திற்குத் தப்புவிப்பாய்.

௰௫ * என்மகனே உன்னிருதயம் ஞானமடைந்தால் என்னிலே என்னிருதயமும் மகிழும். * ௨௭, ௰௧.

௰௬ உன்னுதடுகள் நிதானங்களைப் பேசினால் என்னுள்ளிந்திரியங்களுங்களிகூரும்.

௰௭ உன்னிருதயம் பாவிகள்மேற்பொறாமையடையாதிருப்பதாக, அதைவிட்டு நாள்தோறுங் கர்த்தருக்குப் பயப்படுதலிலேயிரு.

௰௮ ஏனெனிற் பிற்காலம்வரும் உன் பார்த்துக்கொள்ளுதல் அவத்தமாவதில்லை.

௰௯ என்மகனே நீ கேட்டு ஞானமடைந்து, உன்னிருதயத்தை வழிக்குள்ளாக்கிவிடு.

௨௰ * மதுபானக்குடியரிலும் மாமிசப் பெருந்தீனிக்காரரிலும் ஒருவனாயிராதே.

* ஆக்கா. ௨௧, ௩௪. ரோமர். ௰௩, ௰௩.

௨௧ ஏனெனிற் குடியனும் பெருந்தீனிக்காரனுமானவன் தரித்திரனாவான், தூங்கல் கந்தைகளைத் தரிப்பிக்கும்.

௨௨ நீ உன்னைப்பெற்ற உன் தகப்பனின் சொற்கேட்டு முதுமையாகிற உன் தாயை அசட்டைபண்ணாதிரு.

௨௩ சத்தியத்தையும் ஞானம் புத்தி உணர்வையுங்கொள்ளு, அதை விற்காதே.

உச நீதிமானுடைய தகபபன மிகவுங களிகூருவான, ஞானியைபபெறறவன அவனாலேமகிழவான.

உரு உனதகபபனும உனதாயும மகிழ ககடவார்கள, உனனைபபெறறவள களிகூருவாளாக.

உகூ எனமகனே உனனிருதயததைஎன ககுததா, உனகணகள எனவழிகளினமேற் பிரியமாவதாக.

உஎ ஏனெனிலவேசி * ஆழமானபடுகுழியும, அனனியஸதிரி இடுககுததுரவுமாயிருககிறாள. * உஉ, யச.

உஅ அவளும கொளளைககாரனைபபோலபபதிவிருநது மனுஷரிற்பாதகரை அதிகமாககுகிறாள.

உகூ ஆருககயயோ ஆருககயயோ, ஆருககுசசணடைகள ஆருககுவிசாரம ஆருககுமுகாநதிரமிலலாதகாயஙகள ஆருககுஇரததஙகலநத கணகளுமுணடாயிருககும.

௩0 மதுபானம இருககுமிடததிலே தஙகிததரிககிறவர்களுககுமலொடடியைததேடபபோகிறவர்களுககுநதானே.

௩௧ நீ மதுபானததை நல் வர்ணமெனறும, பாததிரததிலே தனரூபைககாணபிககுமெனறும மெதுவாய இறஙகுமெனறும பாராதை.

௩உ அதினபிறகுஅதுபாமபைபபோலக் கடிததுக்கடடுவிரியனைபபோலததீணடும.

௩௩ உனகணகள பரஸதிரிகளைநோககி, உனனிருதயம மாறுபாடுகளைபபேசும.

௩ச நீ நடுககடலிலே சயனிததிருககிறவனைபபோலேயும பாயமரத தடடியிலே படுததிருககிறவனைபபோலேயு மிருபபாய.

௩ரு எனனையடிததார்கள,எனககுநோகவிலலை, எனனைககுடடினூர்கள, எனககுசசொரணையிலலை, * நான அதை அபபுறந தொடர்நதுதேட எபபோவிழிபபேனெனபாய. ஏசாயா. ருசு, ௰உ.

உச. அதிகாரம்.

பொலலாதமனுஷர்மேற் பொருமையாகாதை, அவர்களோடிருகக ஆசையுமாயிராதை. உ௩, ௰எ.

உ ஏனெனில அவர்களிருதயம பாழ்ககடிபபையோசிததது, * அவர்கள உதடுகள தீவினையைபபேசும. * சஙகீ. ௰, எ.

௩ வீடுஞானததாற்கடடபபடடு விவேகததால நிலைநிறுததபபடும.

ச அறிவினாலே அறைகளசகலவித அருமையும விருபபமுமான ஆஸதியாலநிரப்பப்படும.

ரு ஞானமுளளமனுஷன பெலனுளளவன, அறிவுளளமனுஷன தன திராணியை உரமாககிககொளளுகிறான.

சு ஏனெனிலநலவிவேகததாலே நீஉனககுவாயககயுததமபணணுவாயாக, அநேககம அலோசனைககாரராற் செயமாகும. * ௰௧, ௰ச. உ0, ௰அ.

எ மூடனுககு ஞானமெலலாமெடடாஉயர்நதிருககிறது, வாசலில தனவாயைததிறவான.

அ தீஙகுசெயய நினைககிறவனைததீமைககாரனெனபார்கள.

கூ பயிததியசசெயலபாவநதான, சககாரனே மனுஷருககருவருபபானவன.

௰ நெருககததின நாளிலநீஇளைததுபபோனாயானால உனதிராணிகொஞசமாயிருககும.

௰௧ * மரணததிற்கிழுபபுணடிருககிறவர்களையுங கொலைககுக கொணடுபோகபபடுகிறவர்களையும அதற்குவிலககஉனனாலேகூடுமானால அவர்களைவிடுவி. * அஉ, சஙகீ, ச.

௰உ இதோ அவனையறியோமெனறாயானால, * இருதயஙகளைநிறுககிறவர் அதை உணராரோ? உனனாததுமாவைக காககிறவர் அதையறியாரோ? அவர்மனுஷனுககு அவனசெயகைககுததககதாயசரிககடடாரோ? எரே. ௰எ, ௰.

௰௩ எனமகனே தேனைச்சாபபிடு,ஏனெனில அதுநலலது. தேனகூணடுமொழுகலுனவாயககு இனபருசியாயிருககும.

௰ச அபபடியே * ஞானததை உனனாததுமாவுக்கானதெனறறிநதுகொள, நீஅதைககணடுபிடிததால அது பிற்காலததிலுமுணடாம, உனபார்ததுககொணடிருததல அவததமாவதுமிலலை. * ௰கூ, சஙகீ. ௰௧.

௰ரு நீ ஆகாதவனாய நீதிமானின வாசஸதலததிற்குப பதிவிராதை, அவனபடுககையைப்பாழ்ககடிககாதை.

௰சு ஏனெனில * நீதிமான ஏழுதரம விழுநதும எழுநதிருபபான,ஆகாதவர்களோ தீஙகிலே இடறுணடுகிடபபார்கள. * யோபு. ரு, ௰௯. சஙகீ. ௩ச, உ௰.

௰எ * உன சததுருவிழுகிறபோத சநதோஷியாதை அவனிடறுணடுபோகிறபோது உனனிருதயஙகளிகூராதிருபபதாக. * யோபு ௩௧, உ௯.

௰அ கர்ததர்கணடு அது அவர்பார்வைககுபபொலலாபபாயிருககையால அவர்தமகோபததை அவனைவிடடுததிருபபிபபோடாதபடிககுததானே.

௰கூ * பொலலாதவர்களமேல எரிசசலாகாதை, ஆகாதவர்களமேற் பொருமையாகாதை. * சஙகீ. ௩எ, ௧.

உ0 ஏனெனிற்பொலலாதவனுககு நற்பலனிலலை, * ஆகாதவர்களின விளககணைநதுபோம. * ௰௩, ௯.

௨௧ என்மகனே, * கர்த்தருக்கும் இராசாவுக்கும்பயந்து நட, பின்பேதகரோடேகலவாதே. * ௧. பேதுரு. ௨, ௰௭.

௨௨ ஏனெனில் அசுப்பிலே இவர்களுடைய பதுபத்தெழும்பும், இவர்களிருவரின்சங்காரத்தை அறிந்தவனார்?

௨௩ பின்னையும் ஞானமுள்ளவர்களுக்குப்புத்திமதிகளென்னவெனில் நியாயத்திலே முகதாட்சிண்ணியம்நல்லதல்ல.

௨௪ ஆகாதவனுக்கு நீதிமானென்றுசொல்லுகிறவனைச்சனங்கள் சபிப்பார்கள் சனத்தனங்கள் அவனைவெறுப்பார்கள்.

௨௫ அவனைக் கடிந்துகொள்ளுகிறவர்களின்மேற் பிரியமுண்டாம், இவர்கள்மேல் நன்மையின் ஆசீர்வாதம்வரும்.

௨௬ செம்மையான மறுவுத்தரவுசொல்லுகிறவன் உதடுகளைமுத்தஞ்செய்கிறவனுக்குச்சரி.

௨௭ நீ வெளியிலுள்ள உன் வேலையைச் சேகரமாக்கி வயலிலுள்ள அதையுனக்குப் பண்க்காயல்வை, பிறகு உன்வீட்டைக்கட்டு.

௨௮ வீணாய் நீ உனக்கடுத்தவனுக்கு விரோதமாகச்சாட்சியாகாதே, உன் உதடுகளால் நீ பயிறவிக்காமலுமிரு.

௨௯ * எனக்கெப்படிச்செய்தானோ அப்படி அவனுக்குஞ்செய்வேன், அவன்வனுக்கவன்கிரியைக்குத்தக்கதாய்ச்சரிக்கட்டுவேனென்காதே. * ௨௰, ௨௨.

௩௦ நான் சோம்பற்காரனின் வயலையும் மதியில்லா மனுஷனின் திராட்சத்தோட்டத்தையுங்கடந்துவந்தேன்.

௩௧ இதோ அவையெல்லாமுட்காடுமாய் அதினிலாகாஞ்சொறிகளால் மூடப்பட்டு அதின் கற்சுவர் இடிந்ததுவுமாய்க்கிடந்தது.

௩௨ நான் அதைக்கண்டு என் சிந்தனையைப்பின்மேல்வைத்து அதைப்பார்த்துப் புத்திபைக்கற்றுக்கொண்டேன்.

௩௩ * இன்னங்கொஞ்சந் தூக்கங்களும் இன்னங்கொஞ்சம் உறக்கங்களுஞ் சயனிப்பதற்கின்னங்கொஞ்சங் கைகட்டிக்கொள்ளுதலுமோ? * ௬, ௰. ௰௧.

௩௪ அப்படியானால் உன் தரித்திரம்வழிப்போக்கனைப்போலவும் உன்குறைச்சல் ஆயுதமணிந்தவனைப்போலவும்வரும்.

௨௫. அதிகாரம்.

இவைகளுஞ்சாலோமோனின்வாக்கியங்கள், இவைகளை யூதாவின் இராசாவாகிய எசேக்கியாவின்மனுஷர் பேர்த்தெழுதிச் சேர்த்தார்கள்.

௨ காரியத்தைப் புதைபொருளாக்குதல் பராபரனுடைய மேன்மைகாரியத்தையாராய்தல் இராசாக்களுடையமேன்மை.

௩ வானத்தின் உயரத்திற்கும் பூமியின் ஆழத்திற்கும் இராசாக்களின் இருதயங்களுக்கும் ஆராய்தலில்லை.

௪ வெள்ளியிலிருக்கிறமண்டிகளை நீக்கிப்போடு அப்போதுதட்டானாலே நல்லஉடைமைபிறக்கும்.

௫ இராசாவுக்குமுன்பாகவிருக்கிற ஆகாதவனை நீக்கிப்போடு, அப்போது அவன் ஆசனம் * நீதியாலேநிலைக்கும். * ௰௬, ௰௨.

௬ இராசாவுக்குமுன்பாகச் சிலாக்கியம்பண்ணாதே, பெரியோர்களின் இடத்திலும் நில்லாதே.

௭ ஏனெனில் * உன்கண்கள் பார்த்துக்கொண்டிருந்தபிரபுக்குமுன்பாக அவர்களுனைத்தாழ்த்துவதைப்பார்க்க இங்கேயேறிவாவென்று உன்னோடே சொல்லுவதேநல்லது. * லூக்கா. ௰௪, ௮—௰௧.

௮ கடைசியில் உனக்கடுத்தவன் உன்னை வெட்கப்படுத்தும்போது நீ என்னசெய்யலாமென்றறியாதபடிக்கு வழக்காடத் தீவிரமாய்ப்புறப்படாதிரு.

௯ நீ உனக்கடுத்தவனோடே உன்வழக்கை வழக்காடியும் மற்றவனுடைய இரகசியத்தைவெளியாக்காதே.

௰ கேட்கிறவன் உன்னை உன் அவதூறு திரும்பாதபடியாய் நிந்திக்காமலிருக்கத்தானே.

௰௧ தன்தன்சமயத்திலே * சொல்லப்பட்டவார்த்தை வெள்ளித்தட்டுகளில் வைக்கப்பட்ட பொன்னிறக்கொள்ளுசிப்பழங்களுக்கொப்பானது. * ௰௫, ௨௩.

௰௨ கேட்கிறசெவிக்கு ஞானமாய்க்கடிந்துகொண்டுசொல்லுகிறவன் பொற்கடுக்கனுக்கும் அபரஞ்சிப்பூஷணத்திற்குஞ் சரி.

௰௩ கோடைநாளிலே உறைந்த மழையின்குளிர்ச்சியெப்படியிருக்கிறதோ அப்படி உண்மையுள்ளதூதன் தன்னையனுப்பினவர்களுக்கிருந்து தன் எசமானர்களின் ஆத்துமாவைக்குளிரப்பண்ணுகிறான்.

௰௪ கள்ள வாக்குத்தத்தங்களைப்பண்ணிப்பெருமைபாராட்டுகிறமனுஷன் மழையில்லாதமேகங்களுக்குங்காற்றுக்குஞ்சரி.

௰௫ நீண்டசாந்தத்தினாலேபிரபுசம்மதமாக்கப்படுவான், * மெத்தனவான நாவு எலும்பைநொறுக்கும். * ௰௫. ௧.

௰௬ தேனைக்கண்டுபிடித்தாயானால் நீயதினாலே திருத்தியாகி அதை வாந்திபண்ணாதபடிக்கு உனக்குப் போதுமட்டாய்ச் சாப்பிடு.

௰௭ உனக்கடுத்தவன் உன்மேல்வெறுப்பாகி உன்னைப்பகையாதபடிக்கு உன்காலை அவன்வீட்டிலே மிச்சமாய்ப்போகவொட்டாதிரு.

௰௮ தனக்கடுத்தவன்மேற் பொய்ச்சாட்சிசொல்லுகிற மனுஷன் சுத்தியலுக்கும்

ட்டைமந்துக்கும் கூர்மையான அம்புக்குஞ் சரி.

௰௯ இடுக்கணின் நாளிலே துரோகியை நம்புதல் உடைந்த பல்லுக்கும் தள்ளாடுகிற காலுக்குஞ் சரி.

௨௰ துக்கமனுபவிக்கிற இருதயத்துக்குப் பாட்டுகளைப் பாடுகிறவன் குளிர் நாளிலே வஸ்திரத்தைக் களைகிறவனைப்போலேயும் வெடியுப்பின்மேல் வார்த்த காடியைப்போலேயுமிருக்கிறான்.

௨௧ உன் பகைஞனுக்குப் பசியிருந்தால் அவனுக்கு அப்பஞ் சாப்பிடக்கொடு, அவனுக்குத் தாகமிருந்தால் அவனுக்குத் தண்ணீர் குடிக்கக்கொடு. மத்தேயு. ௫, ௪௪. ரோமர். ௰௨, ௨௰. ௨௧.

௨௨ ஏனென்றால் அப்படி அவன் தலையின் மீதில் நீ பெரிகிற கரிகளைக் குவிப்பாய், கர்த்தரும் உனக்கீடளிப்பார்.

௨௩ வாடைக்காற்று மழையையும் பின்பொறணி நாவு கோபமுகத்தையும் பிறப்பிக்கும்.

௨௪ * சண்டைக்காரியோடே கூட ஓர் வீட்டிலே குடியிருப்பதைப் பார்க்க வீட்டின் மீதில் ஒரு மூலையிலே தங்குகிறதே நலம். * ௨௧, ௯.

௨௫ தூரதேசத்திலிருந்து வருகிற நற்செய்தி விடாயத்த ஆத்துமாவிற்குக் கிடைக்குங் குளிர்ந்த தண்ணீருக்குச் சரி.

௨௬ ஆகாதவனுக்கு முன்பாகத் தள்ளாடுகிற நீதிமான் கலங்கின ஊற்றுக்குங் கெட்டுப்போன சுனைக்குஞ் சரி.

௨௭ மிச்சமாயத் தேனைச் சாப்பிடுகிறது நல்லதல்ல, ஞானக்காரியங்களின் மகிமையை ஆராய்கிறதோ மகிமை.

௨௮ தன் ஆவியையடக்காத மனுஷன் மதிலில்லாத இடிசற்பட்டணத்துக்குச் சரி.

௨௬. அதிகாரம்.

வசந்தகாலத்திலே யுறைந்த மழையும் அறுப்பிலே மாரியும் ஒவ்வாததுபோல மூடனுக்கு மகிமையும் ஒவ்வாதிருக்கும்.

௨ குருவி அலைந்து காட்டுப்புறா பறந்து போகிறதுபோலே முகாந்திரமில்லாமலிட்ட சாபம் வராதே போகிறது.

௩ குதிரைக்குச் சவுக்கும் கழுதைக்குக் கடிவாளமும், * மூடரின் முதுகுக்குக் கோலுமானது. * ௰, ௰௩.

௪ நீயும் மூடனுக்கொப்பாகாதபடிக்கு அவன் பயித்தியத்தின்படி அவனுக்கு மறுவுத்தரவு சொல்லாதிரு.

௫ மூடன் தன் பார்வைக்கு ஞானியாயிராதபடிக்கு அவன் பயித்தியத்தின்படி அவனுக்கு மறுவுத்தரவு சொல்லாதிரு.

௬ மூடன் கையிலே செய்தியனுப்புகிறவன் தன் கால்களைத் தறித்து நஷ்டத்தைக் குடிக்கிறான்.

௭ நொண்டியின் கால்கள் குந்திக்குந்தி நடக்கும்மட்டும்போலே மூடரின் வாயிலே உவமைச்சொல்லுமிருக்கும்.

௮ மூடனுக்குக் கனங்கொடுக்கிறவன் கவணிலே கல்லை வைக்கிறவனைப்போலிருக்கிறான்.

௯ மூடர் வாயிலுள்ள பழமொழி வெறியன் கையிலே யகப்பட்ட முள்ளு.

௰ பலத்தவன் அனைவரையும் நோகப்பண்ணி மூடனையும் வேலைகொள்ளுகிறான், மீறி நடக்கிறவர்களையும் வேலைகொள்ளுகிறான்.

௰௧ * தன் பயித்தியத்திலே மறுபடியும் உள்ளாகிற மூடன் தான் கக்கினதற்குத் திரும்புகிற நாயைப்போலிருக்கிறான். * ௨. பேதுரு. ௨, ௨௨.

௰௨ * தன் பார்வைக்கு ஞானியாயிருக்கிற மனுஷனைக் கண்டாயானால் அவனைப்பார்க்கிலும் மூடனைப்பற்றி அதிக நம்பிக்கையுண்டு. * ரோமர். ௰௨, ௰௬.

௰௩ வழியிலே துஷ்ட சிங்கமிருக்குமென்றும் நடுவீதிகளிலே சிங்கமிருக்குமென்றும் சோம்பேறி சொல்லுவான். * ௨௨, ௰௩.

௰௪ கதவு தன் முளையிலே ஆடுகிறதுபோலே சோம்பேறி தன் படுக்கையிலிருக்கிறான்.

௰௫ * சோம்பேறி தன் கையைக் கலத்திலே போட்டுவிட்டு அதைத் தன் வாய்க்குத் திரும்ப எடுக்க விடாய்க்கிறான். * ௰௯, ௨௪.

௰௬ புத்தியுள்ள மறுவுத்தரவு சொல்லும் ஏழுபேரைப் பார்க்கிலும் சோம்பேறி தன் பார்வைக்கு ஞானமுள்ளவன்.

௰௭ வழி நடந்து தனக்கடாத வழக்குக்குட்பட்டு உக்கிரமாகிறவன் ஒரு நாயின் காதுகளைப் பிடிக்கிறவனைப்போலிருக்கிறான்.

௰௮ விளையாடுகிறவனைப்போலே காண்பித்து நெருப்புகளையும் அம்புகளையுஞ் சாவுக்கினமானவைகளையும் எறிகிறவனெப்படியிருக்கிறானோ,

௰௯ அப்படியே தனக்கடுத்தவனை ஏய்த்து நான் பரியாசமல்லவோ பண்ணினேனென்று சொல்லுகிற மனுஷனுமிருக்கிறான்.

௨௰ விறகில்லாமல் நெருப்பு அவியும், பின்பொறணிக்காரனில்லாமற் சண்டை அடங்கும்.

௨௧ கரிகள் தழலுக்கும் விறகு நெருப்புக்கும் இனமானதுபோல வழக்குக்காரன் சண்டையை மூட்டுகிறதற்கினமானவன்.

௨௨ * பின்பொறணிக்காரனின் வார்த்தைகள் பரியாசச்சொற்களைப்போலிருக்கும், ஆனால் அவைகள் வயிற்றுக்குள்ளே இறங்கும். * ௰௮, ௮.

௨௩ இருதயம் பொல்லாததாயும் நேசங்கொண்டிருக்கிற உதடுகள் கலப்பிடமான வெள்ளிப்பூச்சுமூடிய ஓட்டுக்குச் சரி.

௨௪ பகைஞன் தன் உதடுகளாலே வேஷங்காண்பித்துத் தன் உள்ளத்திலே கபடம் வைக்கிறான்.

௨௫ அவன் தன் சத்தத்தைத் தயவாக்கினாலும் அவனை நம்பாதே. ஏனெனில் ஏழு அருவருப்புகள் அவனிருதயத்திலிருக்கும்.

௨௬ அவன் பகை கபடமாய் மறைக்கப்பட்டிருக்கிறது, அது சபையிலே அவன் பொல்லாங்கு வெளிப்படும்.

௨௭ * படுகுழிவெட்டுகிறவன் அதிலே விழுவான், கல்லைப்புரட்டுகிறவன் மேலே தானே அது திரும்பும். * சங். ௭, ௰௫. பிர. ௰, ௮.

௨௮ கள்ளநாவு தன்னாலே உபத்திரவப்படுகிறவர்களைப் பகைக்கும் இச்சகவாயும் கெடுதலையுண்டுபண்ணும்.

௨௭. அதிகாரம்.

நாளையத்தினத்தைத்தொட்டுப் பெருமைபாராட்டாதே, ஏனெனில் ஒருநாள் பிறப்பிப்பதை அறியாய். யாக்கோபு. ௪, ௰௩. ௰௪.

௨ உன் வாயல்ல பிறத்தியானும், உன் உதடுகளல்ல அந்நியனுமே உன்னைப் புகழட்டும்.

௩ கல்லுங் கனமும் மணல் பாரமுமாமே, பயித்தியக்காரனின் சினமோ அவ்விரண்டிலும் பாரமாயிருக்கிறது.

௪ உக்கிரங் குரூரமுங் கோபம் பிரளயமுமாயிருக்கிறது, ஆனால் எரிச்சலின்முன் நிற்பவனார்?

௫ மாயமான சிநேகத்தைப்பார்க்க வெளியரங்கமான அதட்டுதல் தாவிலே.

௬ சிநேகிதன் அடிகள் உண்மையுள்ளவைகள், ஆனால் பகைஞனின் முத்தங்களோ வேண்டாமென்னப்பட்டத்தக்கவைகள். * சங்கீதம். ௱௪௧. ௫.

௭ திருத்தியான ஆத்துமா தேன்கூட்டையும் மிதிக்கும், பசியுள்ள ஆத்துமாவுக்கோ கசப்பெல்லாந் தித்திப்பாயிருக்கும்.

௮ தன் கூட்டைவிட்டலையுங் குருவி எப்படியிருக்கிறதோ, அப்படித் தன் தானத்தைவிட்டலைகிற மனுஷனிருக்கிறான்.

௯ பரிமளதைலமுஞ் சுகந்தப்புகையும் இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுபோல ஒருவனுடைய சிநேகிதனின் இன்பம் உட்கருத்தான யோசனையினாலே அவனைச் சந்தோஷிப்பிக்கும்.

௰ உன் சிநேகிதனையும் உன் தகப்பனின் சிநேகிதனையும் விடாதே, * உன் ஆபத்தின் நாளில் உன் சகோதரன் வீட்டிலே போகாமலிரு. தூரமான சகோதரனைப்பார்க்கச் சமீபமான அயலானவாசி. * ௰௭, ௰௭. ௰௮, ௨௪.

௰௧ என் மகனே, என்னை நிந்திக்கிறவனுக்குச் சொல்லத்தக்க மறுவுத்தரவு எனக்குண்டாக நீ ஞானம் அடைந்து * என்னிருதயத்தைச் சந்தோஷப்படுத்து. * ௨௩, ௰௫.

௰௨ * விவேகமுள்ளவன் தீங்கைக்கண்டு மறைகிறான், பேதைகளோ நெடுகப்போய்ச் சேதமடைகிறார்கள். ௨௨, ௩.

௰௩ * அந்நியனுக்காகப் பிணைப்பட்டவனின் வஸ்திரத்தையெடுத்துக்கொள், பரஸ்திரீயானுக்காக அவன்கையில் அடகுவாங்கு. * ௨௰, ௰௬.

௰௪ காலமே எழுந்து மகா சத்தத்தோடே தன் அடுத்தவனையாசீர்வதிக்கிறவனுக்கு அது சபிக்குதலாக எண்ணப்படும்.

௰௫ * அடைமழைநாளில் ஓயாத ஒழுக்குஞ் சண்டைக்காரியான ஸ்திரீயும் ஒன்றுக்கொன்று சரி. * ௰௯, ௰௩.

௰௬ அவளையொளிக்கிறவன் காற்றையடக்கித் தன் வலதுகையில் எண்ணெயைப் பிடிப்பான்.

௰௭ இரும்பை இரும்பு கருக்கிடும், அப்படியே மனுஷன் தன் அடுத்தவனின் முகத்தைக் கருக்கிடுகிறான்.

௰௮ அத்திமரத்தைக் காக்கிறவன் அதின் கனியைப் புசிப்பான், தன் எசமானைக் காக்கிறவன் கனம் அடைவான்.

௰௯ தண்ணீரில் முகங்களுக்கு முகங்கள் ஒத்திருக்கும்போலே மனுஷனுக்கு மனுஷனிருதயம் ஒத்திருக்கும்.

௨௰ பாதாளமும் அழிவுந் திருத்தியாகிறதில்லை, * மனுஷனின் கண்கள் திருத்தியாகிறதில்லை. * பிரசங். ௧, ௮.

௨௧ வெள்ளிக்குப் புடமும் பொன்னுக்குக் குகையும் மனுஷனுக்கு அவனுக்குண்டாம் புகழ்ச்சியுஞ் சோதனை.

௨௨ நீ உலக்கையாலே பயித்தியக்காரனை உரலில் நொய்யாகக் குத்தினாலும் அவன் பயித்தியம் அவனைவிட்டுப் பிரியாது.

௨௩ உன் ஆடுகளின் இருப்பை நன்றாய் அறிந்துகொள், மந்தைகளின்மேல் உன் கவனத்தை வை.

௨௪ ஏனெனில் ஆஸ்தி என்றைக்கும் நிற்காது, கிரீடந் தலைமுறை தலைமுறையாகவிருக்குமோ?

௨௫ புல்லு முளைத்துப் பசுமைகள் காணப்படும்போது மலைகளின் பூண்டுகள் சேர்க்கப்படலாமே.

௨௬ ஆட்டுக்குட்டிகள் உனக்குடுப்பையுங் கடாக்கள் வயலைச் சம்பாதிக்கும் விலையையுங் கொடுக்கும்.

௨௭ வெள்ளாடுகளுடைய பால் உன் ஆகாரத்துக்கும் உன் வீட்டாரின் ஆகாரத்துக்கும் உன் வேலைக்காரிகளின் பிழைப்புக்கும் போதும்.

௨௮. அதிகாரம்.

ஆகாதவர்கள் தொடருவாரொருவருமில்லாமல் ஓடிப்போகிறார்கள், நீதிமான்களோ சிங்கத்தைப்போலே திடனாயிருக்கிறார்கள். ௩. மோசே. ௨௬, ௩௬.

௨ தேசத்தின் மீறுதலினாலே அதின் அதிகாரிகள் அநேகராயிருக்கிறார்கள், உணர்வும் அறிவுமுள்ள மனுஷனாலோ நற்சீர் நீடிக்கும்.

௩ ஏழைகளையொடுக்குகிற தரித்திரன் ஆகாரமில்லையாதபடிக்கு வெள்ளம் அடிக்கப்பண்ணுகிற மழைக்குச் சமானம்.

௪ நியாயப்பிரமாணத்தை விடுகிறவர்கள் ஆகாதவனைப் புகழுகிறார்கள், நியாயப்பிரமாணத்தைக் காக்கிறவர்களோ அவர்களோடே போராடுகிறார்கள்.

௫ பொல்லாத மனுஷர் நியாயத்தையுணரார்கள், கர்த்தரைத் தேடுகிறவர்களோ சகலத்தையுமுணருகிறார்கள்.

௬ * இருவழித்திரியாவரக்காரனாகிய ஐசுவரியவானைப் பார்க்கத் தன் உத்தமத்திலே நடக்கிற தரித்திரனே வாசி. * ௰௯, ௧.

௭ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுகிறவன் உணர்வுள்ள மகன், பெருந்தீனிக்காரருக்குத் தோழனானவனோ தன் தகப்பனை அவமானப்படுத்துகிறான்.

௮ அநியாயவட்டியினாலும் ஆதாயத்தினாலும் தன் ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறவன் தரித்திரருக்கிரங்குகிறவனுக்கு அதைச் சேர்க்கிறான்.

௯ வேதத்தைக் கேளாதபடிக்குத் தன் செவியை விலக்குகிறவனின் ஜெபமும் அருவருப்பு.

௰ செம்மையானவர்களைப் பொல்லாத வழிகளுளாக்கி மோசம்போக்குகிறவன் தன் படுகுழியிலே தானே விழுவான், உத்தமரோ நன்மையைச் சுதந்தரிப்பார்கள்.

௰௧ ஐசுவரியமுள்ள மனுஷன் தன் பார்வைக்கு ஞானமுள்ளவன், உணர்வுள்ள தரித்திரனோ அவனையாராய்ந்துகொள்ளுவான்.

௰௨ * நீதிமான்கள் களிகூரும்போது மகா சிங்காரமாயிருக்கும், ஆகாதவர்களெழும்பும்போதோ மனுஷன் தேடப்படுகிறதரிது. * ௨௯, ௨.

௰௩ * தன் மீறுதல்களை மறைக்கிறவன் சீர்ப்படுகிறதில்லை, அவைகளையறிக்கையிட்டுவிட்டுவிடுகிறவனோ இரக்கம்பெறுவான்.

* ௧. யோவா. ௧, ௮. ௯.

௰௪ எப்போதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான், தன் நெஞ்சைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கிலே விழுவான்.

௰௫ ஏழைச்சனத்தையாளுகிற ஆகாத்துமா கெர்ச்சிக்கிற சிங்கத்துக்குஞ் சஞ்சரிக்கிற கரடிக்குஞ் சமானம்.

௰௬ தலைவன் உணர்வுதாழ்ச்சியோயிருந்தால் இடுக்கண்களைச் செய்வது மிகுதி, பொருளாசையைப் பகைக்கிறவன் நீடித்திருப்பான்.

௰௭ ஒரு ஆத்துமாவின் இரத்தப்பழிக்காக ஒடுக்கப்படுகிற மனுஷன் குழியினிடத்துக்கோடிவந்தால் அவனையாதரிக்கவேண்டாம்.

௰௮ உத்தமமாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான், இருவழித்திரியாவரனோ ஒன்றிலே விழுவான்.

௰௯ * தன் நிலத்தைப் பயிரிடுகிறவன் அப்பத்தாலே திருத்தியாவான், வீணரைப் பின்பற்றுகிறவனோ தரித்திரத்தைத் திருத்தியாயடைவான். * ௰௨, ௰௧.

௨௰ நல் உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களோடே இருப்பான், * ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவனோ ஆக்கினைக்குத் தப்பான். * ௨௰, ௨௧.

௨௧ முகதாட்சணியம் நல்லதல்ல, ஒரு அப்பத்துணுக்கை நிமித்தமும் அப்படிக்கொத்த மனுஷன் அநியாயஞ்செய்வான்.

௨௨ வன்கண்ணன் ஆஸ்தியடையப் பதறி, குறைச்சல் தனக்கு வருமென்றறியாதிருக்கிறான்.

௨௩ நாவினால் இச்சகம்பேசுகிறவனைப் பார்க்க ஒரு மனுஷனைக் கடிந்துகொள்ளுகிறவனுக்கே பிறகு தயவு கிடைக்கும்.

௨௪ தன் தகப்பனையுந் தன் தாயையுங் கொள்ளையிட்டு அது துரோகமல்லவென்பவன் பாழ்க்கடிக்கிற மனுஷனுக்குத் தோழன்.

௨௫ பெருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான், கர்த்தரை நம்புகிறவனோ புஷ்டியடைவான்.

௨௬ தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன், ஞானத்திலே நடக்கிறவனோ தப்புவான்.

௨௭ * தரித்திரனுக்குக் கொடுக்கிறவன் தாழ்ச்சியடையான், தன் கண்களை விலக்குகிறவனுக்கோ வெகு சாபங்கள் வரும்.

* ௫. மோசே. ௰௫, ௰.

௨௮ ஆகாதவர்களெழும்பும்போது மனுஷன் ஒளிக்கிறான், அவர்கள் அழியும்போதோ நீதிமான்கள் பெருகுகிறார்கள்.

௨௯. அதிகாரம்.

வெகுவாய் அதட்டப்பட்டுந் தன் பிடரியைக் கடினப்படுத்துகிற மனுஷன் சடிதியி

று குணமாகுதலில்லாமலும் நொறுங்குவான்.

௨ * நீதிமான்கள் பெருகினால் ஜனம் மகிழும், ஆகாதவன் ஆளும்போதோ ஜனம் தவிக்கும். * ௰௧, ௰.

௩ ஞானத்தைச் சிநேகிக்கிற மனுஷன் தன் தகப்பனை மகிழ்ப்பண்ணுகிறான், வேசிகளோடே தொந்திப்பானவனோ ஆஸ்தியை அழிக்கிறான்.

௰௩ உனதோட்டம மாதளஞசெடிகளு ம அருமையானகனிமரஙகளுங கொபபே ர்செடிகளும நர்தஞசெடிகளும,

௰௪ நர்தஞங்குஙகுமபூம வசமபுங கறு வாமுங ருநதிரிக்கததின சகலவிதமர ஙகளும வெள்ளைபபோளச செடிகளுஞசந தன விருட்சஙகளுங கநதவர்ககச செடிக ளினசகல விதஙகளுமுள்ள சிஙகாரவனமா யிருககிறது.

௰௫ தோட்டஙகளுககு நீரூற்றும, சீவ னுள தணணிரின துரவும லீபனோனிலிருந தோடிவருகற வாய்க்கால்களுமுணடாயிரு ககிறது.

மனைவியினவேணடுதல்.

௰௬ வாடையே நீ யெழுமபித தெனற லேநீவநதுகநதபிசின்கள்வடியஎனதோட் டத்தில்வீசு, எனநேசர்,தமமுடையதோ ட்டத்துககுவநது தமதருமையானகனிகளி ந் * பொசிபபாராக. * அபிவி. ௬, ௨௰.

௫. அதிகாரம்.

[மணவாளன உத்தரவுவிளமபினதுமமனை வி அவரைத்தலனசதியாற்காணுமற்போ யஅஙகலாயதது அவருடைய மேனமை யைமற்றவர்களுககு முனபாக அறிககை பணணினதும.]

என சகோதரியே மனைவியே என் தோட்டத்துககு * வநதேன, எனவெள ளைபபோளத்தையெனகநதவர்ககததோடு ஙகூடஅறுத்தேனஎனதேன்கூணடைஎன் தேனோடுஙகூடடபொசித்தேன, என திவிராட்சட்பழ இரசத்தைஎன பாலோடுங கூடககுடிததேன, சிநேகிதரே பொசியுங கள,பிரியமானவர்களேகுடித்துமஸதாகுங கள. * யோவான. ௰௪, ௨௧.

௨ நான நித்திரைபணணினேன, என் நெஞசோவிழித்திருநது * கதவுதட்டுகிற எனநேசரினசத்தத்தைககேட்டேன, என் சகோதரியே என சிநேகிதியே எனபுறுவே என உததமியே எனககுத்திற, ஏனெனில எனசிரசு பனியினுலும எனமயிர்கள இரா விற்பெயயுநதுளிகளிஞலும நிறைந்திருக கிறதெனறுர். * அபிவி. ௩, ௨௰.

௩ என அஙகியைக்கழறறினேன, எப்ப டி அதைத்திரும்ப உடுபபேன? என்கால்க ளைக்கழுவினேன, எபபடி அவைகளைத திரு மப அழுக்காககுவேனெனறேன?

௪ எனநேசர் தமதுகரத்தைக் கதவுத் துவாரததிலேநீட்டினுர், அபபோது என் குடல்கள அவர் நிமித்தம அசைநதது.

௫ எனநேசருககுத திறபபதற்கு நான எழுநதேன, எனகைகள வெள்ளைபபோள மும பூட்டினகைபபிடிகளமேல எனவிர லகளமேனதரவெள்ளைபபோளமுமாயவடி நதது.

௬ நான எனநேசருககுததிறநதேன, ஆஞல எனநேசர் விலகிப்போயிருநதார், அவர் வசனித்ததினிமித்தம எனஞதது மா எனனைவிட்டுப்போயிற்று, * அவரைத தேடினேன, ஆஞல அவரைக் காணுதிருந தேன, அவரைககூபபிட்டேன, ஆஞல அவ ரெனககுமறுவுத்தரவுகொடுத்ததிலலை. * ௩, ௧. ௨.

௭ பட்டணத்திலதிரிகிற காவலாட்கள் எனனைககணடு எனனையடித்து எனனைககா யப்படுத்திஞர்கள, அலஙகத்தினகாவறகா ரர் எனமேலிருநத என முக்காட்டுச்சீலை யையெடுததுபபோஞர்கள.

௮ எருசலேமின குமாரத்திகளே என நேசரைக்கணடீர்களாஞல * நானசிநேக த்தால வியாதியாயிருககிறேனெனறு அவ ருக்கறிவிக்க உஙகளையாணையிடுகிறேன. * ௨, ௫.

௯ வேறே நேசரைபபார்ககிலும உன நேசர் எபபடிககொத்தவர்? ஸதிரீகளில ரூபவதியே, நீயிபபடி யெஙகளையாணையிடு கிறதறகு வேறேநேசரைபபார்ககிலும உ னநேசர் எபபடிககொத்தவர்?

௰ எனநேசர்வெணமையுஞசிவபபுமான வர்பதிஞயிரமபேர்களிற் கொடியைபபோ லிருககிருர்.

௰௧ அவருடையசிரம அபரஞசியானத ஙகம, அவர்மயிர்கள சுருட்சுருளாகவுஙகா ககததைபபோலக கறுபபாகவுமிருககிறது

௰௨ அவருடைய கண்கள் தண்ணீர் நதிகளின் ஓரத்திலே தங்கும் புறாக்களின் கண்களுக்கொத்தவைகளும் பாலிற் கழுவப்பட்டவைகளும் நேர்த்தியாய்ப் பதிந்தவைகளுமாயிருக்கிறது.

௰௩ அவருடைய கன்னங்கள் சம்பாரப் பாத்திகளைப் போலும் கந்தவர்க்கச் செடிகளின் சிகரங்களைப் போலுமிருக்கிறது. * அவருடைய உதடுகள் லீலியாபுஷ்பங்களைப் போலுமிருந்து மேல்வெள்ளைப்போளம் வடிகிறதுமாயிருக்கிறது. * சங்கீ. ௪௫, ௩.

௰௪ அவருடைய கரங்கள் தர்சீஸ் இரத்தினங்கள் பொருந்தின பொன்வளையல்களைப் போலும் அவருடைய அங்கம் நீலக்கல் அழுத்திழைந்திருக்கிற சுத்தாங்கமான தந்தத்தைப் போலுமிருக்கிறது.

௰௫ அவருடைய தொடைகள் அபராஞ்சி ஆதாரங்களின்மேல் நிற்கிற வெண்கலத் தூண்களைப் போலிருக்கிறது அவர் ரூபம் லீபனோனைப் போலும் கேதுருக்களைப் போலத் தெரிந்துகொள்ளப்பட்டதுமாயிருக்கிறது

௰௬ அவருடைய வாக்கு சுத்த மதுரமும் அவரிலுள்ளதெல்லாம் இச்சிக்கப்பட்டத்தக்கதுமாயிருக்கிறது, இவ்வண்ணமாக என் நேசரிருக்கிறார், எருசலேமின் குமாரத்திகளே இவ்வண்ணமாக என் சிநேகிதரிருக்கிறார்.

௬. அதிகாரம்.

[தேடப்பட்ட பின் கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தித் தமக்கு உரிமைப்பத்தியான மணவாளியினுடைய அழகைச் சொன்னது.]

உன் நேசர் எங்கே போனார்? ஸ்திரிகளில் ரூபவதியே உன் நேசர் எவ்விடத்துக்குத் திரும்பினார்? உன்னோடேகூட நாங்களும் அவரைத் தேடுவோம்.

௨ தோட்டங்களில் மேயவும் லீலியாபுஷ்பங்களை யறுக்கவும் என் நேசர் தமது தோட்டத்துக்கும் சம்பாரப் பாத்திகளுக்கும் இறங்கிப்போனார்.

௩ * நான் என் நேசருடையவள், லீலியாபுஷ்பங்களில் மேய்கிற என் நேசர் என்னுடையவர். * ௨, ௰௬.

௪ என் சிநேகிதியே நீ திர்சாபட்டணத்தைப்போல * அழகும் எருசலேமைப்போல வடிவும் கொடிகள் பறக்கும் படைப்பவிஷுக்களைப்போலக் கெடியுமானவள். * ௧, ௰௫. ௪, ௭. சங்கீதம். ௪௮, ௰௨.

௫ உன் கண்களை என்னைவிட்டுத் திருப்பு, அவைகள் என்னைப் பலத்துப் பிடிக்கும், * உன் அளகபாரங் கீலேயாத் பருவதத்திலே தழைமேயும் வெள்ளாடுகளின் மந்தையைப் போலிருக்கிறது. * ௪, ௧—௩. மத்தேயு. ௨௫, ௧.

௬ உன் பல்லுகள் குளிப்பாட்டப்பட்டுக் கரையேறுகிறவைகளும் ஒன்றாகிலும் மலடாயிராமல் இரட்டைக்குட்டியீன்றவைகளுமான ஆடுகளின் மந்தையைப்போலிருக்கிறது.

௭ உன் கூந்தலின் நடுவே உன் கன்னங்கள் மாதளங்கனிவெடிப்பைப்போலாகும்.

௮ இராசாத்திகள் அறுபதும் வைப்பாட்டிகள் எண்பதுமுண்டு, கன்னிகைகளுக்குத் தொகையுமில்லை. * சங்கீ. ௪௫, ௰௪.

௯ ஒருத்தியோ என் புறாவும் என் உத்தமியுமாயிருக்கிறாள், இவள் தன் தாயக்கொருத்தியானவள், இவள் தன்னைப் பெற்றவளுக்குத் தெரிந்துகொள்ளப்பட்டவள், குமாரத்திகள் அவளைப்பார்த்து அவளைப் பாக்கியவதியென்கிறார்கள், இராசாத்திகளும் பலஸ்திரிகளும் அவளைப்பார்த்துப் புகழ்ந்தார்கள்.

௰ விடியற்காலவெளுப்பைப்போல எட்டிப்பார்த்துச் சந்திரனைப்போல அழகும் சூரியனைப்போலத் தெளிவும் கொடிகள் பறக்கும் படைப்பவிஷுக்களைப்போலக் கெடியுமாகிய இவளார்?

௰௧ பள்ளத்தாக்கிலே முளைத்தவைகளைப் பார்க்கிறதற்கும் திராட்சச்செடி துளிர்விட்டு மாதளஞ்செடிகள் பூப்பூக்கிறதோவென்று பார்க்கிறதற்கும் தொப்பிச்செடித்தோட்டத்துக்கிறங்கிவந்தேன்.

௰௨ நான் நினையாததற்கு முன்னெனக்குத்துமா என்னை * என் மனப்பூர்வமான சனத்தின் இரதங்களுக்கொப்பாக்கிற்று. * சங்கீதம். ௱௰, ௩.

௰௩ திரும்பு திரும்பு சூலமித்தியே உன்னை நாங்கள் பார்க்கும்படிக்குத் திரும்பு திரும்பு, சூலமித்தியில் என்னத்தைப் பார்க்கிறீர்கள்? அவளிருபுறப்பாளயப்பவிஷுக்குச் சமானம்.

௭. அதிகாரம்.

[கிறிஸ்துவுக்கும் அவர் மணவாளிக்குமிருக்கிற அன்னியவன்னிய சிநேகம் அப்பாலும் மாபிரியமானதாயக் காண்பிக்கப்பட்டது.]

பிரபுகுமாரத்தியே பாதரட்சைகளில் உன்னடைகள் எத்தனை நேர்த்தியாயிருக்கிறது, உன்னிடைகளின் தெளிவுகள் சிற்பகாரின் கைவேலையாகிய பூஷணங்களைப் போலிருக்கிறது. * சங்கீதம் ௪௫. ௰௩.

௨ உன் கொப்பூழ் பானகங்குறையாத உருண்டைக் கலயம்போலவும் உன் வயிறு லீலியாபுஷ்பங்களாற் சூழப்பட்ட கோதுமையம்பாரம்போலவுமிருக்கிறது.

௩ * உன்னிரண்டு ஸ்தனங்களும் வெளிமானின் இரண்டு இரட்டைக்குட்டிகளுக்குச் சமானமாயிருக்கிறது. * ௪, ௫.

ச உன கழுதது தநதச்சூரககதறதைப போலவும உன்கணகள எஸபோன ஊரிலே பதராபியவாசலண்டையிலிருககிறகுளஙகளைபபோலும உனமூககு தமஸ்குவின திசையை நோககியிருககும, லீபனோனில கோபுரததைபபோலுமிருககிறது. *ச, ச

ரு உனமீதிலுள்ள உனசிரங கர்மேலைப போலவும,உனசிரததின மெலலியமயிர் இரததாமபரபபடடைபபோலவுமிருககிறது. இராசா நடைகாவனஙகளிற் கடடுணடவரைபபோலததரிதது நின றுபார்ககிறர்.

சு மனமகிழசசிகளை யுணடாககுகிற சிநேகிதியே நீ யெததனை ரூபமும எததனை யுசசிதமுமாயிருககிருய?

எ இநத உன உடையவளர்ததிபனைமரததுககும உனஸதனஙகள திவிதிராட்சககுலைகளுககும ஒததிருககிறது.

அ பனைமரததிலேறி யதின மடடைகளைப பிடிபபேனென்றேன. இபபோதும உன ஸதனஙகள திவிதிராட்சசெடியின குலைகளைபபோலும உனமூசசின வாசனை கொளுஞசிபபழஙகளைபபோலும,

கூ உனதொணடை உனநேசருககுளமெதுவாயிறஙகுகிறதுமஉறஙகுகிறவர்களின உதடுகளைப்பேசபபணணுகிறதுமான நலல திவிதிராட்சபபழரசததைப போலுமிருககடடுமென.

ய * நான எனநேசருடையவள, அவர் விருபபம எனமேலுமிருககிறது. * உ, யசு கூ, கூ.

யக வாருமெனநேசரே வெளியிலேபோயககிராமஙகளில இராததஙகுவோமாக.

யஉ நாஙகாலமே திவிதிராட்சததோடடஙகளுககுபபோயத திவிதிராட்சச்செடி துளிர்ததுஅதினபூமலருமோவென றுமமாதளஞசெடிகள பூபபூககுமோ வென றும பார்பபோமாக, அஙகே எனநேச உசசிதஙகளையுமககுததருவேன.

யங தூதாயீமவாசனைதரும, நமதுவாசலகளணடையிலே சகலவித அருமையானபுதியபழைய கனிகளுமுணடு, என நேசரே உமககவைகளைவைததேன.

அ. அதிகாரம்.

[நேசிலதவுககுமஅவர்மனைவிககுமிருககிற சிநேகததின கருததும மேன்மையுஙகாணபிககபபடடது.]

க நீர் எனககு எனதாயின் முலைகளையுணட சகோதரனைபபோலிருநதால தாவில, அபபோத உமமைநானவெளியிலே சநதித்துமுததிசெயவேன, எனனை நிநதிக்கவுமாடடார்கள.

உ நீர் எனனைபபோதிககுமபடிககுஉமமைநானகூடடிககொணடு, * எனதாயின் வீடடுககழைததுபபோவேன,சமபாரமிடட திவிதிராட்சபபழஇரசததையுமஎனமாதளமபழஙகளின இரசததையுமஉமக்குக் குடிக்கக்கொடுபபேன. * கூ, ச.

ங * அவரிடதுகரம எனதலையினகீழிருபபதாக, அவர்வலதுகரமஎனனையணைபபதாக. * உ, சு.

ச * எருசலேமினகுமாரததிகளே சிநேகிககு மனதாகுமளவும நீஙகள அவளை விழிககபபணணுமலும எழுபபாமலுமிருககவுஙகளை ஆணையிடுகிறேன. * உ, எ. கூ, ரு.

ரு வனாநதரததிலிருநதெழும்பித் தன் நேசனைச்சார்நதுகொணடுவருகிற இவளார்? கொளுஞசிமரததினகீழ உமமையெழுபபினேன, அஙகே உமமுடைய தாய் உமமைபபெற்வாதைபபடடாள, அஙகேபெற்வாதைபபடடு உமமைபபெறருள.

சூ எனனை முததிரையைபபோல உமது இருதயததினமேலும முததிரையைபபோல உமதுபுயததினமேலும வையும, ஏனெனில் சிநேகமமரணததைபபோலவலலமையும நேசவயிராககியம பாதாளததைபபோலக் கொடியுமாயிருககிறது, அதின தழல அககினித்தழலுங கர்ததரின சுவாலையுமாயிருககிறது.

எ *அநேகநததணணீர்கள இநதச்சிநேகததையவிககமாடடாது, நதிகள அதைத் தணிபபதுமிலலை, ஒருவன தன் வீடடின ஆஸதியையெலலாம இநதச சிநேகததிற்குபபதிலாகக்கொடுததாலும அவனை மிகவும அசடடைபணணுவார்கள. * ரோமர். அ, கூரு. மூ

இனனநேருத பலனருககாகவுஞ சவையால அநேகஙகனிகள உணடாவதற்காகவுஞ்சொலலபபடடது.

அ நமககுச சினனசசகோதரியிருககிறுள, அவளுககு ஸதனஙகளிலலை, நமமுடைய சகோதரிககாகப்பேசபபடும நாளிலே அவளுககெனனசெயவோம?

கூ அவள மதிலானுல அவளமேல * வெளளிக கோடடையைககடடுவோம, அவள கதவானுற் கேதுருபபலகைகளையடிக்கணைபபோம. * க. கொரி. கூ, யஉ. யங.

ய நான் மதிலும என ஸதனஙகள கொமமைகளுமாகையால அவர் பார்வைககுச சமாதானம பெறறவளைபபோலானேன.

யக பாகால் ஆமோனிலே சாலோமோனுககுத் திவிதிராட்சத தோடடமுணடாயிருநதது, அநதத்தோடடததைக் காவலாளிகளவசததிலே அவன்வன ஆயிரமவெளளிக்காசை அதின பலனுக்கொணடுவருமபடிக்குக்கொடுததார்.

யஉ எனனுடைய திவிதிராட்சததோடடமெனககு முனபாகவிருககும, சாலோ

மோனே உமக்கு அந்த ஆயிரமும் அதின் கனியைக் காக்கிறவர்களுக்கு இருநூறும் உண்டாகவும்,

௰௩ தோட்டங்களில் வாசமாயிருக்கிறவளே தோழர் உன்சத்தத்தைக்கவனிக்கிறார்கள், அதை நான்கேட்கட்டும்.

௰௪ என் நேசரே * நீர் தீவிரித்துக்கொண்டு கந்தவர்க்கங்களின் மலைகள்மேலே வெளிமானுக்கும் கலைமான்களின் குட்டிக்கும் ஒப்பாகும். * ௨, ௰௭. அதி. ௨௨, ௨௰.

சாலொமோனுடைய உன்னதமான பாட்டுகள்முடிந்ததுமுற்றும்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[சனத்தினுடைய துற்கிரியைகளின் மேலுங் கள்ள ஆராதனையின் மேலுங் கர்த்தர் மிகவும் முறையிட்டுக்கொண்டு அவர்களைப் பயமும் பயமுமாய் எழுப்பினது.]

௧ ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவின் இராசாக்களாகிய உசியா யோத்தாம் ஆகாஸ் எசேக்கியா என்றவர்களின் நாட்களிலே யூதாவின் மேலும் எருசலேமின் மேலுங் கண்ட தரிசனம்.

௨ * வானங்களே கேளுங்கள், பூமியே செவிகொடு, ஏனெனிற் கர்த்தர் பேசுகிறார்: பிள்ளைகளை வளர்த்துயர்த்தினேம், ஆனால் அவர்கள் நம்மைவிட்டு மருள விழுந்தார்கள். * ௫. மோ. ௩௨, ௧. சங். ௫௰, ௧-௪.

௩ மாடு தன் எசமானையுங் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும், ஆனால் இஸ்ரவேல் அறிவில்லாமலும் நம்முடைய சனம் உணர்வில்லாமலுமிருக்கிறதென்கிறார்.

௪ ஐயோ, பாவசாதியும் அக்கிரமத்தாற் பாரமுள்ள சனமும் பொல்லாதவர்களின் வித்தும் கேடுண்டாக்குகிற புத்திரருமாயிருக்கிறார்கள். கர்த்தரைவிட்டு இஸ்ரவேலின் பரிசுத்தருக்குக் கோபமுண்டாக்கிப் பின்வாங்கிப் போனார்கள்.

௫ * இனியேன் அடிக்கப்படுவீர்கள், பின்னையும் அதிகமாய் விலகிப்போகிறீர்கள், தலையெல்லாம் வியாதியும் இருதயமெல்லாம் பலட்சயமுமாயிருக்கிறது.

௬ உள்ளங்கால் துவக்கித் தலைமட்டுக்கும் அவனிற் சுகமில்லை, பிழிக்கப்படாமலுங் கட்டப்படாமலும் எண்ணெயால் ஆற்றப்படாமலுமிருக்கிற காயமும் வீக்கமும் நொதிக்கிற ரணமுமேயல்லாமல் ஒரு ஆரோக்கியமுமில்லை.

௭ * உங்கள் தேசம் பாழாயிருக்கிறது, உங்கள் பட்டணங்கள் அக்கினியாற் சுட்டுப்போடப்பட்டது. உங்கள் சீமையை மறுசாதியார் உங்கள் முகத்துக்கு முன்பாக அழிக்கிறார்கள், அது மறுசாதியாரால் கவிழ்க்கப்பட்டாற்போலே பாழாயிருக்கிறது. * ௫. மோசே. ௨௮, ௫௧, ௫௨.

௮ சீயோன் குமாரத்தி திராட்சத்தோட்டத்திலுள்ள ஒரு குச்சுப்போலேயும் வெள்ளரித்தோட்டத்திலுள்ள ஒரு குடிசையைப்போலேயும் முற்றிகைபோடப்பட்ட பட்டணத்தைப்போலேயும் மீந்திருக்கிறாள்.

௯ * சேனைகளின் கர்த்தர் நமக்குச் கொஞ்சம் மீதியை வைக்காதிருந்தாரானால் நாம் † சோதோமைப்போலாகிக் கொமோராவுக்கொத்திருப்போம். * றோமர். ௯, ௨௯. † ௧. மோசே. ௰௯, ௨௪. ௨௫.

௰ சோதோமின் தலைவர்களே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள், கொமோராவின் சனமே நமது பராபரனின் வேதத்துக்குச் செவிகொடுங்கள்.

௰௧ * உங்கள் பலிகளின் திரள் நமக்கென்னத்துக்கென்று கர்த்தர் சொல்லுகிறார், ஆட்டுக்கடாய்களின் தகனங்களுங் கொழுத்த மிருகங்களின் நெய்யும் நமக்கரோசிகமாயிருக்கிறது. காளைகள் ஆட்டுக்குட்டிகள் கடாய்களுடைய இரத்தத்தின்மேல் நமக்குப் பிரியமில்லை. * ௯௯. ௯. வாக். ௨௧-௨௭. எரே. ௬, ௨௰. ௰௪, ௰௨. ஆமோ. ௫, ௨௧-௨௩.

௰௨ நீங்கள் நமது சன்னிதியிலே காணப்படவரும்போது நம்முடைய பிராகாரங்களை மிதிக்கவேணுமென்று உங்கள் கைகளில் கேட்கிறதார்.

௰௩ வீண் காணிக்கைகளை இனிக் கொண்டுவராதேயுங்கள், தூபங்காட்டுதல் நமக்கருவருப்பாயிருக்கிறது, சபை கூடிவரவழைக்கப்படுகிற மாதப்பிறப்பிலும் ஓய்வு நாளிலும் அக்கிரமத்தோடேகூடிய ஆசரிப்பை இனிச் சகிக்கமாட்டோம்.

௰௪ உங்கள் மாதப்பிறப்புகளையும் உங்கள் பண்டிகைகளையும் நம்முடைய ஆத்துமா பகைக்கிறது, அவை நமக்கு வருத்தமாயிருக்கிறது, அவைகளைச் சுமக்க வேசாறியிருக்கிறோம்.

௰௫ நீங்கள் * உங்கள் கைகளை விரித்தாலும், நமது கண்களை உங்களைவிட்டு மறைக்கிறோம், நீங்கள் மிகுதியாய்ச் செபம்பண்ணினாலுங் கேளோம், ஏனெனில் உங்கள் கைகள் இரத்தத்தாலே நிறைந்திருக்கிறது. * எரேமியா. ௰௧, ௰௧.

௰௬ உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள், * உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை நமது கண்களுக்கு மறைவாக அகற்றிப்போட்டுத் தீங்குசெய்தலைவிட்டோயுங்கள். * சங்கீதம். ௩௪, ௰௫. எசேக்கி. ௰௮, ௩௧.

௰௭ * நன்மைசெய்யப் படியுங்கள், நியாயத்தைத் தேடுங்கள், † ஒடுக்கப்பட்டவனை

சிறுமைப்படுத்தப்பட்டிருக்கிறவனின் நியாயத்தையும் விதவையின் வழக்கையும் விசாரியுங்கள். * எரே. ௭, ௩. † சங்கீ. ௮௨, ௩.

௰௮ அப்போது வழக்காடுவோம் வாருங்கள், * உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல வெண்மையாகும், அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார். * ஏசா. ௪௩, ௨௫. ௪௪, ௨௨. சங்கீ ௫௧, ௭.

௰௯ நீங்கள் மனம்பொருந்திக் கேள்வி கொடுத்தால் தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.

௨௰ மாட்டோமென்றெதிர்த்து நின்றீர்களேயாகிற் பட்டயத்துக்கிரையாவீர்கள், ஏனெனிற் கர்த்தரின் வாய் இதைச்சொல்லிற்று.

௨௧ உண்மையுள்ள பட்டணம் எப்படி வேசியாய்ப் போயினது, நியாயத்தால் நிறைந்திருந்தது, நீதி அதிலே வாசமாயிருந்தது, இப்போதோ வெனில் அதின் குடிகள் * கொலைபாதகர். மத்தேயு. ௨௩, ௩௭.

௨௨ * உன் வெள்ளி களிம்பாயிற்று, உன் திராட்சப்பழரசம் தண்ணீர்கலப்பானது. * எசேக்கியேல். ௨௨, ௰௮.

௨௩ உன் பிரபுக்கள் முரட்டுத்தனமுள்ளவர்களும் திருடரின் தோழருமாயிருக்கிறார்கள், அவர்களில் எவனும் பரிதானத்தை சிநேகித்துக் கைக்கூலிகளை நாடித்தொடருகிறான், * திக்கற்றவனின் நியாயத்தை விசாரியார்கள், விதவையின் வழக்கு அவர்களிடத்திலே ஏறுகிறதுமில்லை. * எரேமியா ௫, ௨௮.

௨௪ ஆகையாற் சேனைகளின் கர்த்தரும் இஸ்ரவேலின் வல்லவருமாகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, ஓகோ நாம் நம்முடைய சத்துருக்களிற் * கோபமாறி நம்முடைய பகைஞருக்கு நீதியைச் சரிக்கட்டுவோம். * ௫. மோசே. ௨௮, ௬௩.

௨௫ நாம் உனக்கு விரோதமாக நம்முடைய கையைத் திருப்பி உன்களிம்பைச் சுத்தமாய்ப் புடமிட்டு, * உன் ஈயத்தையெல்லாம் நீக்கி, * மலேக்கி. ௩, ௨ ௩.

௨௬ இப்படியே உன் நீதிக்காரரை முன்னிருந்ததுபோலேயும் உன் ஆலோசனைக்காரரை ஆதியிலிருந்ததுபோலேயும் திரும்பக்கட்டளையிடுவோம், அதின்பிறகு நீ நீதியின் ஊரும் உண்மையுள்ள பட்டணமுமென்னப்படுவாய்.

௨௭ சீயோன் நியாயத்தாலும் அதிலே திரும்புகிறவர்கள் நீதியாலும் மீட்கப்படவேணும்.

௨௮ ஆனாற் பாதகரும் பாவிகளும் ஏகமாய் நொறுங்குண்டு கர்த்தரைவிட்டவர்கள் நிர்மூலமாவார்கள்.

௨௯ ஏனெனில் நீங்கள் விரும்பின கர்வாலிய மரங்களினிமித்தம் * வெட்கப்படுவீர்கள், நீங்கள் தெரிந்துகொண்ட தோப்புகளினிமித்தம் நாணமடைவீர்கள். * ௫௨, ௰௭.

௩௰ ஏனென்றால் இலையுதிர்ந்த கர்வாலிய மரத்தைப்போலும் தண்ணீரில்லாத தோப்பைப்போலுமிருப்பீர்கள்.

௩௧ பராக்கிரமன் சணற்கூளமும் அவன் கிரியை அக்கினிப்பொறியுமாகி, அவ்விரண்டும் ஏகமாய் அவிப்பாரில்லாமல் வெந்துபோவதுண்டு.

௨. அதிகாரம்.

[புறச்சாதிகள் கர்த்தரண்டைக்கு மனந்திரும்புவதும், பூசாரப்பராபரன் நேசிப்பதும், அவர் விக்கிரக ஆராதனையின் மேலும் எல்லாப் பெருமையின்மேலும் பயங்கரமான ஆக்கினைகளைப் பிறப்பிப்பதும்.]

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவின்மேலும் எருசலேமின்மேலும் கண்டவர்த்தமானம்.

௨ * கடைசிநாள்களிற் சம்பவிப்பதேதெனிற் கர்த்தருடைய வீட்டின் பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியாய் ஸ்திரப்பட்டு மேடுகளிலும் உயரும், எல்லாச் சாதிகளும் அதுக்கோடி. * எரேமியா. ௩, ௰௭. மீகா. ௪, ௧. ௩.

௩ திரளான சனசதளங்கள் நடந்துவந்து, கர்த்தரின் பர்வதத்துக்கும் யாக்கோபுடைய பராபரனின் வீட்டுக்கும் நாம்போவோம், அவர் தம்முடைய வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடக்கவும் நாம் போய் அவர்பாதைகளில் நடக்கவும் ஏறுவோம் வாருங்களென்பார்கள், ஏனெனில் * வேதம் சீயோனிலும் கர்த்தரின் வசனம் எருசலேமிலுமிருந்து புறப்படும். சங்கீ. ௱௧௨, ஆக்கா. ௨௪, ௪௭.

௪ அவர் சாதிகளுக்குள் நியாயந்தீர்த்துத் திரளான சனசதளங்களைக் கடிந்துகொள்ளுவார், அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவுந் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள், ஒரு சாதிக்கு விரோதமாய்ச் சாதி பட்டயம் எடுப்பதுமில்லை, இனி யுத்தத்தைக் கற்பதுமில்லை.

௫ யாக்கோபின் வீட்டாரே, கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள்.

௬ ஆனால் யாக்கோபின் வீட்டாராகிய உம்முடைய சனத்தைக் கைநெகிழ்ந்தீர், ஏனெனிற் கிழக்குத்தியாரின் போதகத்தால் நிறைந்து, பெலிஸ்தரைப்போல நாட்பார்க்கிறவர்களாயிருந்து, அன்னியரின் புத்திரர்மேல் பிரியப்படுகிறார்கள்.

௭ அவர்கள் தேசம் வெள்ளியினாலும் பொன்னினாலும் நிறைந்தது, அவர்கள்

பொக்கிஷங்களுக்கு முடிவிலலை, அவர்கள தேசம் குதிரைகளாலும நிறைநதது, அவர்கள இரதங்களுககுமுடிவுமிலலை.

௮ அவர்கள தேசம விககிரகஙகளாலும நிறைநதிருககிறது, தஙகளகைகளினகிரியையுநதஙகளவிரலகள உணடுபணணினதையும பணிநதுகொளளுகிறார்கள.

௯ சிறியவனுங குனிகிறான, பெரியவனும பணிகிறான, ஆகையால அவர்களுககுமனனியாதிருபபீர்.

௰ கர்த்தரினபயஙகரததினாலும அவர் மகிமைபததினமகததுவததினாலும நீ கனமலையில ஒதுஙகி, மணணிலொளிததுகொள.

௰௧ * நரரின மேட்டிமையானகணகள தாழநது, மனுஷரினவீறாபபுதணியும, ஆனாற்கர்த்தர் ஒருவரே அநநாளிலே உயர்நதிருபபார். * ௫, அதிகாரம. ௰௫.

௰௨ ஏனெனில தாழமைபணணாககசசேனைகளுடையகர்த்தரின நாள் பெருமையும மேட்டிமையுமான தெலலாவறறினமேலும, உயர்நததெலலாவறறினமேலும,

௰௩ லீபனோனிலுளள உயரமும ஓஙகலுமான எலலாககேதுருகளினமேலும பாசானிலுளள எலலாககர்வாலிய மரஙகளின மேலும,

௰௪ உயரமான எலலாபபருவதஙகளின மேலும, மேட்டிமையான எலலாககுனறுகளினமேலும.

௰௫ உயர்நத எலலாககோபுரததினமேலும, அரணான எலலாமதிலினமேலும.

௰௬ தர்சீசின கபபல்களெலலாவற்றின மேலும அருமையான எலலாசசிததிரஙகளினமேலுமவரும.

௰௭ அபபோ நரரினமேட்டிமை தாழநது, மனுஷரினவீறாபபுதணியும, ஆனாற் கர்த்தரொருவரோ அநநாளில உயர்நதிருபபார்.

௰௮ விககிரகஙகளோவெனிற் கட்டோடேழிநதுபோம.

௰௯ பூமியைத்தத்தளிக்கபபணணக் கர்த்தர் எழுமபுமபோது அவர் பயஙகரததினாலும அவர் முககியததினமகததுவததினாலும அவர்கள கனமலைகளின கெபிகளிலும மணணினகுகைகளிலும புகுநதுகொளளுவார்கள.
* லூக்கா. ௨௰௩, ௩௰.

௨௰ பூமியைத்தத்தளிக்கபபணணக் கர்த்தர் எழுமபும அநநாளிலே அவர்பயஙகரததினாலும, அவர் முககியததின மகததுவததினாலுங்கனமலைகளின வெடிபபுகளிலும கனமலைகளினசநதுகளிலும புகுநதுகொளளும்படிககு,

௨௰௧ மனுஷன பணிநதுகொளளததனககுணடாககியிருநத * தனவெளளி விககிரகஙகளையுந்தன பொன விககிரகஙகளையும மூஞ்சுறுகளுககுநதுரிஞ்சிலகளுககும எறிநதுவிடுவான. * ௩௰, ௨௨. ௩௧, ௭.

௨௰௨ மூககிலே சுவாசமுளள மனுஷனை நமபுவதைவிடடோயுஙகள, ஏனென்றால அவன எமமாத்திரமெனறெணணபபடலாம.

௩. அதிகாரம்.

[யூதர்மேல்வரும ஆககினைகளினபாரமும நியாயமும.]

ஏனெனில இதோ, சேனைகளின கர்த்தராகிய ஆணடவர் ஆதரவு கோலையுந தடியையும * அபபமெனற எலலா ஆதரவுகோலையுந்தணணீரெனற எலலா ஆதரவு கோலையும, * எசேககி. ௪, ௰௬. ௰௭.

௨ பராககிரமசாலியையும, யுதத ஆளையும, நியாயாதிபதியையுந, தீர்க்கதரிசியையும, சாஸ்திரியையும, மூப்பனையும.

௩ ஐமபதுககுச சேர்வைக்காரனையுங, கனமுகமானவனையும ஆலோசனைசொலலுகிறவனையுந தொழிலாளிகளில ஞானமுள்ளவனையுஞ சாதுரியக்காரனையும எருசலேமிலும யூதாவிலும் இருநதுவிலககுவார்.

௪ அவர்களுககு இளைஞரைபபிரபுக்களாகத்தருவோமெனகிறார். * பிளளைகள அவர்களையாளுவார்கள. * பிரச. ௰, ௰௬.

௫ சனமொடுக்கபபடும, ஒருவருககொருவரும அடுததவருககடுததவரும விரோதமாயிருபபார்கள, கிழவனுககிளைஞனுங கனமுடையவனுக்குக்கனமீனனும இடும்பு செயவான.

௬ உனககுவஸதிரமிருககிறது, எஙகள தலைவனாயிரு, கேடுககுணமான இநதக்காரியம உனகையினகீழாகாதாகவெனறு அப்போதொருவன தன தகபபன வீட்டானாகிய தனசகோதரனைபபிடிததால்,

௭ இவன அநநாளிலேகையையுயர எடுதது, நானிரணவயிததியனாயிருககமாட்டேன, என வீட்டிலே அபபமுமிலலைவஸதிரமுமிலலை எனனைச சனததின தலைவனாககாதையுஙகளெனபான.

௮ ஏனெனில எருசலேம இடறி யூதா விழுநதுபோம, அதேனெனறால அவர்கள நாவும அவர்களகிரியைகளுஙகர்த்தருடையமகிமையின கண்களுககு எரிசசல உணடாக்கத்தககதாய அவருககு விரோதமாயிருககிறது.

௯ அவர்கள முகங்களின ஓட்டாரம அவர்களுககு விரோதமாயச்சாட்சியிடும, அவர்கள சோதோம ஊராரைபபோலே தஙகளபாவததைமறைககாமற் கூறுகிறார்கள, அவர்கள ஆததுமாவுககு ஐயோ, ஏனெனில * தஙகளுககே தீமையைக் கட்டிககொளளுகிறார்கள. * ஓசே. ௰௩, ௯.

௰ * நனறாயிருபபீர்களெனறு நீதிமானகளுககுசசொலலுஙகள, ஏனெனிலதஙகள

கிரியைகளின் கனியைப்புசிப்பார்கள்.
* சங்கீதம். ௫௭, ௫௭.

௰௧ பொல்லா ஆகாமியக்காரனுக்கு ஐயோ, ஏனெனில் அவன் கைகளின்பலன் அவனுக்குண்டாகும்.

௰௨ பிள்ளைகள் நமது சனத்தின் வாதக்காரராயிருக்கிறார்கள், ஸ்திரிகள் அவரையாளுகிறார்கள், நமதுசனமே உன்னைநடத்துகிறவர்கள் உன்னைமோசம்போக்கி, நீநடக்கவேண்டினவழியைவிழுங்குகிறார்கள்.

௰௩ கர்த்தர் வழக்காட எழுந்திருந்து, * சனசதளங்களை நியாயந்தீர்க்கநிற்கிறார். * சங்கீதம். ௮௨, ௮. ௮௨.

௰௪ கர்த்தர் தமதுசனத்தினமூப்பரோடும் அதின்பிரபுக்களோடும் நியாயத்துக்குட்பிரவேசிப்பார், ஏனெனில் நீங்களே இந்தத்திராட்சத்தோட்டத்தைமேய்ந்துபோட்டீர்கள் சிறுமையானவனின் கொள்ளையுங்களவீடுகளிலிருக்கிறது.

௰௫ நீங்கள் நமதுசனத்தைநொறுக்கிச்சிறுமையானவர்களின்முகத்தை நெரித்துப்போடுகிறதென்னவென்று சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர்உரைக்கிறார்.

௰௬ பின்னையுங்கர்த்தர் சொல்லுகிறதாவது, சீயோனுடைய குமாரத்திகள் அகந்தையாயிருந்து கழுத்தை நெரித்துநடந்து கண்களால்மருட்டிப்பார்த்துத் தத்தித்தத்திநடந்து தங்கள்கால்களிற் பாடகங்களைப்போட்டுத்திரிகிறபடியினாலே,

௰௭ ஆண்டவர் சீயோன் குமாரத்திகளின் உச்சந்தலையை மொட்டையாக்குவார் கர்த்தர் அவர்கள்மானத்தை அம்மணமாக்குவார்.

௰௮ அந்நாளிலே ஆண்டவர் பாடகங்களின் சிங்காரத்தையுஞ்சுட்டிகளையும்பிறைச்சிந்தாக்குகளையும்,

௰௯ ஆரங்களையுஞ் சரிகளையும்மினுக்குவஸ்திரங்களையும்,

௨௰ தலையின் ஆபரணங்களையும் அஸ்தகடையங்களையுஞ் சறடுகளையும் மார்க்கச்சைகளையும் உருவல்களையும்,

௨௧ மோதிரங்களையும் மூக்குத்திகளையும்,

௨௨ மாற்றுடைகளையுஞ் சால்வைகளையும்போர்வைகளையுங் குப்பிகளையும்,

௨௩ கண்ணாடிகளையும் மெல்லியபுடவைகளையுங் குல்லாவுகளையும் முக்காட்டுச்சல்லாக்களையும்விலக்குவார்.

௨௪ சம்பவிப்பதென்னவென்றால் சுகந்தவர்க்கத்துக்குப்பதிலாகத் துர்க்கந்தமுங் கச்சைக்குப்பதிலாகப் பீறலும்மயிர்ச்சுருளுக்குப்பதிலாகமொட்டையுந் தளதளப்பான வஸ்திரங்களுக்குப்பதிலாக ரட்டுடுக்குதலும் அழகுக்கு பதிலாகக்கருகிப்போகுதலுமிருக்கும்.

௨௫ உன்மனுஷர் யுத்தவெட்டினாலும் உன்பெலசாலிகள் படையிலும்விழுவார்கள்.

௨௬ அவளுடையவாசல்கள் சஞ்சலமுந்துக்கமுமாயிருக்கும் அவள் வெறுமையாய்த்தரையிலுட்காருவாளென்கிறார்.

௪. அதிகாரம்.

[அக்கினைக்குத்தப்பினவர்களமேசியாவின் கீழ்ப்பாக்கியமான நற்சீரையடைவது.]

ஏழு ஸ்திரிகள் ஒரேபுருஷனைப்பற்றிப்பிடித்து, நாங்கள் எங்கள் அப்பத்தைப்புசித்து எங்கள் வஸ்திரங்களையேயுடுப்போம், எங்கள் நிந்தையைநீக்க உன்பேர் மாத்திரம் எங்கள்மேல் விளங்கட்டுமென்பார்கள்.

௨ இஸ்ரவேலில்தப்பினவர்களுக்கு அக்காலத்திலே கர்த்தருடைய * முளைசிங்காரமும் மகிமையுமபூமியின்கனிமுக்கியமும் அலங்காரமுமாயிருக்கிறது.
* ௰௧, ௧. எரே. ௨௩, ௫.

௩ அப்போது சம்பவிப்பதேதெனில், ஆண்டவர் நியாயத்தின் ஆவியினாலுஞ் சுத்திகரிப்பின் ஆவியினாலுஞ் சீயோன்குமாரத்திகளின் ஊத்தையைக்கழுவி, எருசலேமின் இரத்தப்பழிகளை அதின்நடுவிலிருந்து நீக்கிப்போட்டபோது,

௪ சீயோனில்மீந்து எருசலேமிற் பின்வைக்கப்பட்டிருக்கிறவன் பரிசுத்தனென்றழைக்கப்படுவான், எருசலேமிற் சீவனுக்கென்றெழுதப்பட்டவனெல்லாந்தானே.

௫ அப்போது கர்த்தர் சீயோன்பர்வதத்தினுடைய எல்லா வாசஸ்தலத்தின்மேலும் அதினுடைய சபைகளின்மேலும் பகலிலிருக்கும் மேகத்தையும் புகையையும், இரவிலேகொழுந்துவிட்டெரியும் அக்கினியின்பிரகாசத்தையுஞ்சிருட்டிப்பார், ஏனெனில் மகிமையானதின்மேலெல்லாம் மறைவுண்டாயிருக்கும்.

௬ * பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருவெள்ளத்துக்கும் மழைக்கும் அடைக்கலமாகவும்மறைவிடமாகவுமந்தக் கூடாரமுண்டாயிருக்கும்.
* ௨௫, ௪.

௫. அதிகாரம்.

[கசப்பான்கனிதந்ததிவிதிராட்சத்தோட்டத்துக்கு யூதரையொப்பிட்டு, அவர்கள் கெட்ட சீரையும் அவர்கள்மேல் வரும் ஆக்கினைகளையுங்காண்பித்தது.]

என்னேசருடைய திவிதிராட்சத்தோட்டத்தின்பேரிலே எனக்குப் பிரியமாயிருக்கிற அவருக்காக அவருடைய பாட்டை

ப்பாடுவேனாக. என்பிரியருக்குமகாசெழிப்பான மேட்டிலே * ஒரு திராட்சத்தோட்டமிருக்கிறது.

* மத்தே. உக, நந—சக.

உ அவர் அதைவேலியடைத்து, அதைக்கல்பொறுக்கி, அதிலேநற்குலதிராட்சச்செடிகளைநட்டு,அதின்நடுவிலொருகோபுரத்தைக்கட்டி, அதிலே ஆலையையுமநாட்டி, அது நல்லதிராட்சப்பழங்களைத்தருமென்றுகாத்திருந்தார்; ஆனால் அது கசப்பானபழங்களைத்தந்தது.

ந இப்போதும எருசலேமின்குடிகளே, யூதாவின்மனுஷரே,நமக்கும நமது திராட்சத்தோட்டத்துக்கும நியாயந்தீருங்கள்.

ச நாம நமது திராட்சத்தோட்டத்துக்காகச்செய்யாத எந்தவேலையை இனிச்செய்யலாம? பின்னை நல்ல திராட்சப்பழங்களைத்தருமென்று * நாங்காத்திருக்கும்போது. அது கசப்பானபழங்களைத்தந்ததென்ன?

ரு இப்போதும நாம்நமது திராட்சத்தோட்டத்துக்குச்செய்வதையுங்களுக்கறிவிப்போமே அதுமேய்ந்துபோடப்படுவதற்காக அதின வேலியைவாங்கிப்போடுவோம, அது மிதியுண்பதற்காக அதின அடைப்பைத்தகர்ப்போம.

சு அதைப்பாழாக்கிப்போடுவோம, அதினகிளை நறுக்கப்படாமலும கிளைகொத்தியெடுக்கப்படாமலும போவதினால முள்ளுஞ்செடியும நெரிஞ்சியுமுளைக்கும,அதின மேல மழையைவருஷிக்கப்பண்ணாதபடிக்கு மேகங்களுக்குங்கற்பிப்போமெனகிறார்.

எ ஆனாற்சேனைகளுடையகர்த்தரின திராட்சத்தோட்டம இஸ்ரவேலின்வீடும அவர் மனமகிழ்ச்சியின நாற்று யூதாவின மனுஷருந்தான். அவர் நியாயத்துக்குக்காத்திருந்தார், ஆனால இதோ சீர்கேடுநீதிக்குக்காத்திருந்தார், ஆனால இதோ அலறுதல.

அ * நீங்களமாத்திரந் தேசத்தின நடுவில வாசமாயிருக்கும்படிக்கு இனியிடமில்லாமற் போகுமட்டும வீட்டோடே வீட்டைச்சேர்த்து வயலோடே வயலைச்சேரப்பண்ணுகிற உங்களுக்கு ஐயோ. * மீகா. உ, உ.

க அது சேனைகளின்கர்த்தராயிருக்கிற நமமுடையசெவிகளுக்குட்பட்டது,மெய்யாகவே அநேகத்திரளானவீடுகள்பாழாகிப் பெரியவைகளும நேர்த்தியானவைகளுங் குடியில்லாமலிருக்கும.

ய பத்தேர் நிலமாகிய திராட்சத்தோட்டம ஒரே குறுணிதரும, ஒரு கலவிரைபொருகுறுணிதரும.

யக * கர்த்தரின்கிரியையைநோக்காமலும அவர்கரங்களின செய்கையைப்பாராமலும லொட்டியை நத்த அதிகாலமேயெழுந்திருட்டிப்போகுமளவுமமதுபானந்தங்களைச்சூடாக்குமபடியாயத் தரித்திருந்து,

* ஆமோ. சு, ரு—எ.

யஉ தங்களவிருந்துகளிற்சுரமண்டலத்தையுந் தமபுராயும மேளத்தையும நாகசுரத்தையும மதுபானத்தையுமவைத்திருக்கிறவர்களுக்கு ஐயோ.

யந ஆனதுகொண்டு நமது சனம அறிவில்லாமையினாலே சிறைப்பட்டுப்போகும, அதிற் கனமுள்ளவர்கள பட்டினியினாலே தொய்வார்கள, அதின திரளான கும்பு தவனத்தால நாவறண்டுபோகும.

யச ஆனதுகொண்டு அவர்களமகிமையும அவர்களதிரளும அவர்கள சந்தடியும அவர்களிற் களிகூருகிறவர்களும பாதாளத்திலிறங்கிப்போக அது தன்னொனைவிரிவாக்கித் தனவாயைஆவென்று மட்டில்லாமலேதிறந்தது.

யரு அப்படியே சிறியவனுங் குனியப்பண்ணப்பட்டுப பெரியவனுந் தாழ்ந்துபோவான, மேட்டிமையானவர்களின்கண்கள தாழும.

யசு ஆனாற்சேனைகளின கர்த்தர் நியாயத்தீர்ப்பினாலுயர்ந்து பரிசுத்த பராபரன நீதியினாலே பரிசுத்தமுள்ளவராய விளங்குவார்.

யஎ அப்போது ஆட்டுக்குட்டிகள தங்களவாடிக்கையாயத்தொழுவத்திலேமேயுங் கொழுப்பானவர்களுக்கிருந்து பாழாயப்போனவைகளைப் பரதேசிகள்புசிப்பார்கள.

யஅ மாயையின கயிறுகளால அக்கிரமத்தையும வண்டில வடங்களாலேபாவத்தையும இழுத்துவந்து,

யக அவர் தீவிரித்துச்சீக்கிரமாய தாம் பார்க்கத்தமதுகிரியையை நடப்பிக்கட்டுமென்றும இஸ்ரவேலுடைய பரிசுத்தரின ஆலோசனை நாமறியும்படிக்குச் சேர்ந்துவரட்டுமென்றுஞ் சொல்லுகிறவர்களுக்கு ஐயோ,

உய தீமையை நனமையென்றும நன்மையைத் தீமையென்றுஞ்சொல்லி இருளை வெளிச்சமும வெளிச்சத்தை இருளுமாக்கிக்கசப்பைத் தித்திப்புந் தித்திப்பைக்கசப்புமாக்குகிறவர்களுக்கு ஐயோ,

உக * தங்களபார்வைக்கு ஞானிகளுந் தங்களெண்ணத்துக்குப் புத்திமானகளுமாயிருக்கிறவர்களுக்கு ஐயோ, * வாக்கி. ந, எ. ரோமர். யஉ, யசு.

உஉ மதுபானத்தைக் குடிக்கப் பராக்கிரமரும லொட்டியைக் கலந்துவைக்கப் பெலசாலிகளுமாயிருந்து,

௨௩ * கூறவாளியைப் பரிதானத்தினிமித்தம் குற்றமற்றவனாக்கி நீதிமான்களின் நியாயத்தை அவர்களைவிட்டு விலக்குகிறவர்களுக்கு ஐயோ. * வாகம. ௰௭. ௰௫.

௨௪ ஆதலால் அக்கினிச்சுவாலை வைக்கோலைப் பட்சிக்குமாப்போலேயும் செத்தை நெருப்புக்கிரையாகித் தணியுமாப்போலேயும் அவர்கள் வேர் வாடி அவர்கள் துளிர் தூசியைப்போலப் பறந்துபோம். ஏனென்றால் சேனைகளுடைய கர்த்தரின் வேதத்தை வெறுத்து இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் வசனத்தை அசட்டைபண்ணினார்கள்.

௨௫ ஆகையால் கர்த்தருடைய கோபம் தமது சனத்துக்கு விரோதமாய் மூண்டது, அவர் தமது கையை அதுக்கு விரோதமாக நீட்டிப் பருவதங்கள் அதிரத்தக்கதாகவும் அவர்கள் பிணங்கள் நடுவீதிகளிற் குப்பைபோலாகத்தக்கதாகவும் அதையடித்துப்போட்டார். * இதிலே எல்லாம் அவருடைய கோபம் ஆறாமல் அவருடைய கையின்னம் நீட்டினதாயிருக்கிறது. * ௯, ௰௨. ௰௭, ௨௧. ௰, ௪.

௨௬ அவர் தூரத்திலுள்ள சாதியாருக்கு ஒரு கொடியையேற்றி அவர்களைப் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து அவர் பயில்காட்டியழைப்பார், அப்போது இதோ தீவிரமும் வேகமுமாய் வருவார்கள்.

௨௭ அவர்களில் விடாய்த்தவனும் இடறுகிறவனுமில்லை, அவர்களிலொருவனுடைய இடுப்பின் கச்சை அவிழ்வதும் பாதரட்சைகளின் வார் அறுந்துபோவதுமில்லை.

௨௮ அவர்கள் அம்புகள் கூர்மையும் அவர்கள் வில்லுகளெல்லாம் நாணேற்றினவைகளும் அவர்கள் குதிரைகளின் குளம்புகள் கற்பாறையாக எண்ணப்பட்டவைகளும் அவர்கள் உருளைகள் புசலுக்கொத்தவைகளுமாயிருக்கும்.

௨௯ அவர்கள் கெர்ச்சிப்பு துஷ்டசிங்கத்தினுடையது, சிங்கக்குட்டிகளைப்போலக் கெர்ச்சித்து உறுமி இரையைப்பிடித்து அதைத் தப்புவிக்கிறவனில்லாமல் எடுத்துப்போய்விடுவார்கள்.

௩௰ அவர்கள் அந்நாளிலே சமுத்திர இரைச்சலுக்குச் சரியாய் அதின்மேல் இரைவார்கள், அப்போ தேசத்தைப் பார்த்தால் இதோ * அந்தகாரமும் வியாகுலமும் உண்டு, அதின் பாழ்க்கடிப்பின்மேல் வெளிச்சம் இருண்டிருக்கும். * ௮. ௨௨.

௬. அதிகாரம்.

[கர்த்தர் ஏசாயாவுக்குத் தரிசனையாகி அவனை மனக்கடினப்பட்ட பூதரண்டைக்கு அனுப்பினது.]

௧ உசியா ராசா மரணமடைந்த வருஷத்திலே * ஆண்டவர் உயரமும் உன்னதமுமான ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன், அவருடைய வஸ்திரத்தொங்கல்கள் தேவாலயத்தை நிரப்பிற்று. * ௨. நாளா. ௨௬, ௨௩. ௨. யோசே. ௨௪, ௰.

௨ சேராபீன்கள் அவருக்குமேலாக நின்றார்கள், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் ஆறு செட்டைகளிருந்தது, அவனவன் இரண்டு செட்டைகளால் தன்தன் முகத்தை மூடி இரண்டு செட்டைகளால் தன்தன் கால்களை மூடி இரண்டு செட்டைகளாற் பறந்து,

௩ சேனைகளுடைய கர்த்தர் * பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர், * * பூமியனைத்தும் அவர் மகிமையால் நிறைந்திருக்கிறதென்று ஒருவரோடொருவர் கூப்பிட்டுச் சொன்னார்கள். * அறிவிப்பு. ௪, ௮. * * சங்கீதம். ௭௨, ௰௯.

௪ வாசல்களின் நிலைகள் கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் அசைந்தது * வீடு புகையினால் நிறைந்தது. * ஏசேக. ௰, ௪.

௫ அப்போது நான் எனக்கு ஐயோ, ஏனென்றால் நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷனும் அசுத்த உதடுகளுள்ள சனத்தின் நடுவில் வாசமாயிருக்கிறவனுமாகையால் அதமாவேனே, ஏனென்றால் சேனைகளுடைய கர்த்தராகிய இராசாவை என் கண்கள் கண்டதென்றேன்.

௬ அப்போ சேராபீன்களிலொருவன் பலிபீடத்தின் குறட்டாலெடுத்த நெருப்புத்தணலைக் கையிலே பிடித்து என்னண்டைக்குப் பறந்துவந்து,

௭ அதினாலே என் வாயைத் தொட்டு இதோ இது உன் உதடுகளைத் தொட்டதினாலே உன் அக்கிரமம் நீங்கி உன் பாவம் தீர்ந்ததென்றான்.

௮ அதின்பிறகு ஆரை அனுப்புவேன்! ஆர் நமக்காகப் போவானென்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன், அதற்கு நான் இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்புமென்றேன்.

௯ அப்போ அவர் சொன்னதாவது, நீ போய் இந்தச் சனத்துக்கு * நீங்கள் காதாரக்கேட்டும் உணராமலும் கண்ணாரக்கண்டும் அறியாமலுமிருங்களென்று சொல்லு. * மத்தே. ௰௩, ௰௪ ௰௫. மாற்கு. ௪, ௰௨. லூக்கா. ௮, ௰. அப்போஸ். ௨௮, ௨௫—௨௭.

௰ இந்தச் சனம் தங்கள் கண்களினாலே காணாமலும் தங்கள் காதுகளினாலே கேளாமலும் தங்கள் இருதயத்தினாலே உணர்ந்து மனந்திரும்பாமலும் நாம் அதைக் குணமாக்காமலுமிருக்கத்தக்கதாக * அதின் இருதயத்தை நிணத்ததாக்கி அதின் காதுகளை மந்தப்படுத்தி அதின் கண்களை மூடிப்போடு

டென்றார். * ௨௧, ௰. ௰௨. ௫. மோசே. ௨௮, ௨௧. யோவா. ௰௨, ௪௰. ரோமர். ௰௧, ௮.

௰௧ அப்பொழுது ஆண்டவரே, எந்தமட்டும் என்றேன். அவர் சொன்னதாவது: பட்டணங்கள் குடியில்லாமலும் வீடுகள் மனுஷசஞ்சாரமில்லாமலும் பாழாகிப் பூமி அவாந்தரவெளியாகுமட்டுந்தானே.

௰௨ ஏனெனில் கர்த்தர் மனுஷரைத் தூரமாகவிலக்குவதினாலே தேசத்தின் நடுமையம் மகாவெறுமையாகக் கைவிடப்படும்.

௰௩ ஆகிலும் அதிலே இன்னம் பத்திலொரு பங்கிருந்தும் அது திரும்ப நிர்மூலமாக்கப்படும். கர்வாலிமரமும் இச்சிலமரமும் இலையற்றுப்போனபிற்பாடு அதின் அடிமரமிருக்கிறதுபோலே அவைகளின் அடிமரமுமிருந்து பரிசுத்தவித்தாயிருக்குமென்றார்.

௭. அதிகாரம்.

[கர்த்தரை நம்பாமல் அசீரியாவின் இராசாவைச் சார்ந்துகொள்ள நினைத்த ஆகாசு இராசாவுக்கு நயமும் பயமுமாகப் பிரசங்கித்தது.]

உசியாவினுடைய குமாரனாகிய யோதாமின் குமாரன் ஆகாசென்ற யூதாவுடைய இராசாவின் நாள்களிலே சம்பவித்ததென்னவென்றால் * ரேத்சீன் என்ற சீரியாவின் இராசாவும் ரெமலியாவின் குமாரனாகிய பெக்காவென்ற இஸ்ரவேலுடைய இராசாவும் எருசலேமின்மேலே யுத்தம்பண்ணவந்தேறி அதைப் பிடிக்கமாட்டாதே போனார்கள். * ௨. இராசா. ௰௫. ௫.

௨ சீரியர் எப்பிராயீமைச் சார்ந்திருக்கிறார்களென்று தாவீதின் வீட்டுக்கு அறிவிக்கப்பட்டபோது அவனிருதயமும் அவன் சனத்தின் இருதயமுங் காட்டிலே மரங்கள் காற்றினாலே தத்தளிக்குமாப்போலே தத்தளித்தது.

௩ அப்போது கர்த்தர் ஏசாயாவுடனே சொன்னதாவது, இப்போ நீயும் உன் மகன் சேயார்யாசூபுமாய் வண்ணான் துறை வழியிலுள்ள மேன்குளத்து மதகின் கடைசிமட்டும் ஆகாசுக்கெதிர்கொண்டுபோய்,

௪ நீ அவனுடனே சொல்லவேண்டியதேதெனில் நாம் யூதாவுக்கு விரோதமாய்ப் போயேறி அதை நெருக்கப்பிடித்து அதை நமக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு தபேயாவின் குமாரனை அதில் இராசாவாக்கி அரசாளப்பண்ணுவோமென்று

௫ சீரியன் எப்பிராயீமோடும் ரெமலியாவின் மகனோடுங்கூட உனக்கு விரோதமாய்ப் பொல்லாத ஆலோசனையைப் பண்ணினதினிமித்தம்,

௬ நீ பயப்படாமல் அமர்ந்திருக்கப்பார். புகைகிற இரண்டு அடிக்கொள்ளிகளாகிய சீரியரோடேவந்த ரேத்சீனும் ரெமலியாவின் மகனும் எரிகிற கோபத்தினிமித்தம் உன்னிருதயந் துவளவேண்டாம்.

௭ அது நிலைநிற்பதுமில்லை அது அப்படியாவதுமில்லையென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௮ ஏனென்றால் சீரியாவின் தலைப்பட்டணந் தமஸ்குவுந் தமஸ்குவின் தலைவன் ரேத்சீனுந்தானே. இன்னம் அறுபத்தைந்து வருஷங்களிலே எப்பிராயீம் சனமாயிராதபடிக்கு நொறுக்கப்படும்.

௯ * இப்போதோ எப்பிராயீமின் தலைப்பட்டணஞ் சமாரியாவுஞ் சமாரியாவின் தலைவன் ரெமலியாவின் மகனுந்தானே. நீங்கள் விசுவாசியாதேபோனால் நிலைப்படமாட்டீர்களென்று சொல்லென்றார்.

௰ அப்புறங் கர்த்தர் ஆகாசைப் பார்த்துப்பேசி,

௰௧ உன் பராபரனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை உனக்குக் கேள், அதைப் பாதாளத்திலேயானாலும் உயர உன்னதத்திலேயானாலுமிருந்துண்டாகக் கேளென்று சொன்னார்.

௰௨ ஆகாசோவென்றால் அதை நான் கேளேன், நான் கர்த்தரைப் பரிட்சைபாராதிருப்பேனென்றான்.

௰௩ அப்போது ஏசாயா சொன்னதாவது இப்போதுந் தாவீதின் வீட்டாரே கேளுங்கள், மனுஷரை விசனப்படுத்துகிறது உங்களுக்குக் கொஞ்சக்காரியமாய்க் காணுகிறதென்று என் பராபரனையும் விசனப்படுத்துகிறீர்களோ?

௰௪ ஆனதுகொண்டு ஆண்டவர்தாமாய் உங்களுக்கொரு அடையாளத்தைக் கொடுப்பார், * இதோ ஒரு கன்னியாஸ்திரி கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இம்மானுவேலென்று பேரிடுவாள்.

மத்தேயு. ௧, ௨௩ லூக். ௧, ௩௧.

௰௫ தீமையை வெறுத்து நன்மையைத் தெரிந்துகொள்ள அறியும் வயதுண்டாக அவர் வெண்ணெயையுந் தேனையுஞ் சாப்பிடுவார்.

௰௬ * இந்த இளைஞனோவென்றால் தீமையை வெறுக்கவும் நன்மையைத் தெரிந்துகொள்ளவும் அறிகிறதற்கு முன்னே நீர் அருவருக்கிற தேசம் அதின் இரண்டு இராசாக்களால் விடப்பட்டதாயிருக்கும்.

௰௭ ஆனால் எப்பிராயீம் யூதாவைவிட்டுப் பிரிந்த நாள் துவக்கி வராதிருக்கிற நாள்களைக் கர்த்தர் உம்முடையமேலும் உம்முடைய சனத்தின்மேலும் உம்முடைய பிதாவுடைய வீட்டின்மேலும் அசீரியாவின் இராசாவினாலே வரப்பண்ணுவார்.

௰௮ பின்னையுஞ் சம்பவிப்பதாவது, கர்த்தர் எகிப்தினுடைய நதிகளின் கடையாந்தரத்திலே ஈக்களையும் அசூரியா தேசத்திலிருக்குந் தேனீக்களையும் பயில்போட்டழைப்பார்.

௰௯ அவைகள் வந்து ஏகமாய் வனாந்தரங்களின் பள்ளத்தாக்குகளிலுங் கன்மலைகளின் வெடிப்புகளிலும் எல்லா முள்ளுக்காடுகளிலும் எல்லாச் சோலைகளிலுந் தங்கும்.

௨௰ அக்காலத்திலே ஆண்டவர் * கூலிக்கு வாங்கின சவரகன் கத்தியாகிய நதிக்கருவாங்கின சவரகன் கத்தியாகிய நதிக்கரையான அசூரியாவின் இராசாவினாலே சிரசையுங் கால்களின் மயிரையுஞ் சிரைப்பித்துத் தாடியையும் வாங்கிப்போடுவிப்பார்.

* ௰, ௫.

௨௰௧ அக்காலத்திலொருவன் ஒரு கிடாரியையும் இரண்டாடுகளையும் வளர்த்தால்,

௨௰௨ அவன் அவைகள் பரிபூரணமாய்ப் பால்கறக்கிறபடியினாலே வெண்ணெயைச் சாப்பிடுவானுண்டு, தேசத்தின் நடுவில் மீதியாயிருப்பவனெல்லாம் வெண்ணெயையுந் தேனையுமே சாப்பிடுவான்.

௨௰௩ பின்னையுஞ் சம்பவிப்பதேதெனில் ஆயிரம் வெள்ளிக்காசு பெறும் ஆயிரந் திராட்சச் செடியிருந்த நிலமெல்லாம் முள்ளுஞ்செடியும் நெரிஞ்சிலுமாம்.

௨௰௪ அம்புகளையும் வில்லையும் பிடித்து அங்கே போகவேண்டியதாயிருக்கும், ஏனெனில் தேசம் அனைத்தும் முள்ளுஞ்செடியும் நெரிஞ்சிலுமாயிருக்கும்.

௨௰௫ குந்தாளியாலே கொத்தப்படுகிற எல்லாமலைகளுமுண்டே, அங்கே முள்ளுச்செடிகளுக்கும் நெரிஞ்சில்களுக்கும் பயப்படுவதினாற் போகக்கூடாதபடியினாலே அங்கு மாடுகளையோட்டிவிடுவதற்கும் ஆடுகள் மிதிப்பதற்குமான இடமாயிருக்குமென்றான்.

௮. அதிகாரம்.

[தமஸ்குவுஞ் சமாரியாவுஞ் சீக்கிரத்துக்குள்ளே அசூரியராற் கொள்ளையாய்ப்போகுமென்பது.]

பின்னையுங் கர்த்தர் என்னுடனே ஒரு பெரிய கடிதாசிச்சுருளை யெடுத்துக்கொண்டு மனுஷன் எழுதுகிற பிரகாரமாய் அதிலே கொள்ளைக்குச் சடுதிச்சூறைக்குத் திவிரிப்பானென்றெழுதென்றார்.

௨ அப்போது நான் உண்மையுள்ள சாட்சிமனுஷராயிருக்கிற ஆசாரியனாகிய ஊரியாவையும் எபெரெகியாவின் குமாரனாகிய சகரியாவையும் அதற்குச் சாட்சியாக வைத்துக்கொண்டேன்.

௩ நான் தீர்க்கதரிசியானவளண்டைக்குச் சேர்ந்தபோது அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெற்றாள் அப்போது கர்த்தரென்னுடனே கொள்ளைக்குச் சடுதிச்சூறைக்குத் திவிரிப்பானென்றபேரை யவனுக்கிடு.

௪ ஏனெனில் இந்தப்பாலகன் என்னப்பா, என்னம்மாவென்று கூப்பிட அறியுமுன்னே தமஸ்குவின் ஆஸ்திகளும் சமாரியாவின் கொள்ளையும் அசூரியாவின் இராசாவுக்கு முன்பாகக் கொண்டுபோகப்படுமென்றார்.

யூதரிலதுன்மார்க்கர் அழிவதுஞ் சன்மார்க்கர் காக்கப்படுவதும்.

௫ கர்த்தர் அப்புறம் என்னோடே பேசத்தொடர்ந்து சொன்னதாவது,

௬ இந்தச்சனம் மெதுவாய் ஓடுகிற சீலோவாவின் தண்ணீர்களைத் தள்ளிவிட்டு ரேத்சீனையும் ரெமலியாவின் குமாரனையுங் குறித்துச் சந்தோஷிக்கிறபடியினாலே,

௭ இதோ, ஆண்டவர் அசூரியாவின் இராசாவும் அவனுடைய சகல ஆடம்பரமுமாகிய ஆற்றினுடைய வலுவும் திரளுமான தண்ணீர்களை அவர்கள்மேலே புரளப்பண்ணுவார், அது அவர்களுடைய நதிகளெல்லாவற்றின் மேலும் புரண்டு அவைகளுடைய எல்லாக்கரைகளின் மேலும் போய்,

௮ யூதாவுக்குள் புகுந்து புரண்டு கடந்து * மிகுந்து கழுத்துமட்டும் வருமென்றார். இம்மானுவேலே, அவன் செட்டைகளின் விரிவு உமது தேசத்தின் அகலத்தை நிரப்பும். * ௭, ௰௪.

௯ சனசதனங்களே, ஏகக்கூட்டமாகச் சேர்ந்தும் முறியுங்கள், சகல தூரதேசத்தாரே, செவிகொடுங்கள், இடைக்கட்டிக்கொண்டு முறியுங்கள், இடைக்கட்டிக்கொண்டு முறியுங்கள். * ௨. இராசா. ௰௯, ௨௰.

௰ யோசனையை யோசியுங்கள் அது வீணாகும், வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது, ஏனெனில் எங்களுடனே தேவனிருக்கிறார்.

௰௧ ஏனெனிற் கர்த்தரென்னுடனே பலத்த கையைத்திடப்படுத்தி நானிந்தச் சனத்தின் வழியிலே நடவாதபடிக்கு எனக்குப் புத்திசொல்லி விளம்பினதாவது,

௰௨ இந்தச்சனம் ஒப்பந்தமென்கிறதையெல்லாம் நீங்கள் ஒப்பந்தமென்று சொல்லாமலும், அது பயப்படுகிற பயத்துக்கு நீங்கள் பயப்படாமலுந் திகிலடையாமலும்,

௰௩ சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தமாய் எண்ணுங்கள், அவரே உங்கள் பயமும் அவரே உங்கள் திகிலுமாயிருப்பாராக.

௰௪ அவருங்களுக்குப் பரிசுத்தஸ்தலமுமாயிருப்பார். ஆனாலும் இஸ்ரவேலின் இரண்டுவீடுகளுக்கும் இடறுதலின் கல்லும் தடுக்கலின் கன்மலையுமாகவும் எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாகவிருப்பார். * உக, ௰௪. ரோ. ௯, ௩௩.

௰௫ அவர்களில் அநேகர் இடறிவிழுந்து நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள்.

௰௬ சாட்சியைக் கட்டிப்போடு, நம்முடைய சீஷருக்குள்ளிருக்கிற வேதத்தை முத்திரியென்றார்.

௰௭ யாக்கோபின் வீட்டுக்குத் தமது முகத்தை மறைக்கக் கர்த்தருக்கு நான் காத்து அவருக்கெதிர்பார்த்திருப்பேன்.

௰௮ * இதோ நானுங் கர்த்தரெனக்குக் கொடுத்த பிள்ளைகளுஞ் சீயோன் பருவதத்தில் வாசமான சேனைகளுடைய கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவுமிருக்கிறோம்.
* எபிரேயர். ௨, ௰௩

௰௯ ஆனால் அவர்கள் உங்களுடனே அஞ்சனம்பார்க்கிறவர்களையும் முணுமுணென் றுசத்தமிடுகிற குறிகாரரையுந் தேடுங்களென்பார்கள், சனந்தன் பராபரனைக் கேட்கவேண்டாமோ? உயிருள்ளவர்களுக்காகச் செத்தவர்களைக் கேட்கலாமோ?

௨௰ வேதத்தையுஞ் சாட்சியையுங் கவனிக்கவேணும், இந்த வார்த்தையின்படியே அவர்கள் சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்கால வெளுப்பில்லை.

௨௧ இடுக்கண் அடைந்தவர்களும் பட்டினியுமாய்த் தேசத்தைத் தாண்டுவார்கள். அவர்கள் பட்டினியாயிருக்கும்போது மூர்க்கவெறியாகித் தங்கள் இராசாவையுந் தங்கள் பராபரனையுந் தூஷிக்கிறவர்களாய் அண்ணுருவார்கள்.

௨௨ தேசத்தை நோக்கிப்பார்ப்பார்கள் ஆனால் இதோ இக்கட்டுமிருட்டுமாம், இடுக்கத்தாலிருளடைந்து அந்தகாரத்திலே தள்ளுண்டலைவார்கள்.

௯. அதிகாரம்.

[கிறிஸ்துவினுடைய பிறப்பின் சுவிசேஷமான தீர்க்கதரிசனம்.

ஆகிலும் அவர் செபுலோன் தேசத்தையும் நப்தலி தேசத்தையும் ஈனப்படுத்தின முந்தின காலத்து இடுக்கமாய் அது இருண்டிருப்பதில்லை, ஏனென்றால் அவர் * கடற்கரைவழியும் யோர்தான் நதியோரமுமான புறசாதியாருடைய கலிலேயாவாகிய அந்தத் தேசத்தைப் பிற்காலத்திலே மகிமைப்படுத்துவார். * மத்தே. ௪, ௰௫—௰௬.

௨ * இருளில் நடக்கிற சனம் பெரிய வெளிச்சத்தைக் காணும், மரண நிழலின் தேசத்திற் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசிக்கும். * லூக். ௧, ௭௯. ௭௬.

௩ அந்தச் சாதியைத் திரளாக்கி அதுக்கு மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணினீர், அறுப்பிலே மகிழுகிறதுபோலவும், * கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்ளுகையிற் களிகூருகிறதுபோலவும் உமக்கு முன்பாக மகிழ்வார்கள். * சங்கீதம். ௱௰௯, ௱௬௨.

௪ ஏனெனில் அவர்கள் சுமையான நுகத்தடியையும் அவர்கள் தோளின் மிலாறையும் அவர்கள் ஆளோட்டியின் கோலையும் * மீதியானியரின் நாளிற் பட்டதுபோலச் சரியாய் முறித்துப்போட்டீர். * நியாயாதிபதி. ௭, ௨௨.

௫ அதேனென்றால் அமளியாய் யுத்தம் பண்ணுகிற எல்லாப்படை முஸ்தீதும் இரத்தங்களிலே புரண்ட உடுப்புஞ் சுட்டெரிக்கப்பட அக்கினிக்கிரையாகும்.

௬ ஏனெனில் * நமக்கொரு பாலகன் பிறந்தார், நமக்கொரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்காரர், வல்லமையுள்ள பராபரன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். * லூக்கா. ௨, ௭—௰௧. யோவா. ௩, ௰௬.

௭ * தாவீதின் ஆசனத்தையும் அவனுடைய இராச்சியத்தையும் அவர் திடப்படுத்தி அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு அதையவர் ஆளுங் கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும் அதின்மேலுள்ள சமாதானத்துக்கும் முடிவில்லை, † சேனைகளுடைய கர்த்தரின் வயிராக்கியம் அதைச்செய்யும். * லூக்கா. ௧, ௩௨. ௩௩. † ௩௭, ௩௨. ௨. இராசா. ௰௯, ௩௧.

இஸ்ரவேல் இராச்சியத்தின்மேலே சங்காரம் வருவது.

௮ ஆண்டவர் யாக்கோபிலே ஒரு வார்த்தையை யனுப்பினார், அது இஸ்ரவேலின்மேலிறங்குகிறதாயிருக்கிறது.

௯ செங்கல்கள் இடிந்துபோனது, வெட்டின கல்லுகளாலே நாம் கட்டுவோம், காட்டத்திமரங்கள் வெட்டிப்போடப்பட்டது, கேதுருமரங்களை அவைகளுக்கு மாற்றிவைப்போமென்று,

௰ அகந்தையும் மனப்பெருமையுமாய்ச் சொல்லுகிற எப்பிராயீமருஞ் சமாரியாவின் குடிகளுமாகிய எல்லாச் சனத்துக்கும் அது தெரியவரும்.

௰௧ என்னவெனில், கர்த்தர் ரேத்சீனுடைய சத்துருக்களையவர்கள்மேல் உயர்த்தி அவர்களுடைய மற்றச் சத்துருக்களையவர்களோடே கூட்டிக்கலப்பார்.

௰௨ சூரியர் முற்புறத்திலும் பெலிஸ்தர் பிற்புறத்திலுமிருந்து வந்து இஸ்ரவேலை முழுவாயாலும் பட்சிப்பார்கள், * இதிலெ

ல்லாம் அவருடைய கோபம் ஆறாமல், அவருடைய கை இன்னம் நீட்டினதாயிருக்கிறது.

* ௫, ௨௫. ௰௨, ௪.

௰௩ ஏனெனில் இந்தச் சனந் தன்னையடிக்கிறவரண்டைக்குத் திரும்பாது, சேனைகளுடைய கர்த்தரைத் தேடாதே போகிறார்கள்.

௰௪ ஆகையாற் கர்த்தர் இஸ்ரவேலிலே தலையையும் வாலையும், கிளையையும் நாணலையும் ஒரே நாளிலே அறுப்பார்.

* ௨. இராசா. ௰௭, ௬, ௨௪.

௰௫ மூப்பனுங் கனமுகமானவனுந் தலை பொய்ப்போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசி வால்,

௰௬ ஏனென்றால் * இந்தச் சனத்தை நடத்துகிறவர்கள் எத்தரும், அவர்களால் நடத்தப்படுகிறவர்கள் விழுங்கப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள். * ௩, ௰௨. ஆக். ௬, ௩௯.

௰௭ ஆனபடியால் ஆண்டவர் அதின் இளைஞர்மேல் பிரியமாயிருப்பதுமில்லை அதிலிருக்கிற தாய்தகப்பனில்லாதவர்கள்மேலும் விதவைகள்மேலும் இரங்குவதுமில்லை, ஏனெனில் அவர்கள் அனைவரும் மாயக்காரரும் பொல்லாதவர்களுமாயிருக்கிறார்கள். எல்லா வாயும் பயித்தியம் பேசும், * இதிலெல்லாம் அவருடைய கோபம் ஆறாமல் அவருடைய கை இன்னம் நீட்டினதாயிருக்கிறது. * ௰௨. ௨௪.

௰௮ ஆகாமியமானது அக்கினியைப்போலெரிகிறபடியினாலே அது முள்ளுச்செடியையும் நெரிஞ்சிலையும் பட்சித்துச் சன்னப்பின்னலான காட்டடைப்புகைதிரண்டெழும்பத்தக்கதாகக் கொளுத்தும்.

௰௯ சேனைகளுடைய கர்த்தரின் சினத்தால் தேசம் மந்தாரப்பட்டுச் சனம் அக்கினிக்கிரையாய்ப்போம், ஒருவனுந் தன் சகோதரனைத் தப்பவிடான்.

௨௰ வலதுபுறத்தில் அறுத்தாலும் பசித்திருப்பார்கள், இடதுபுறத்திலே தின்றாலுந் திருத்தியாவதில்லை, தன் தன் புயத்தின் மாமிசத்தை அவனவன் தின்பான்.

௨௧ எப்பிராயீமை மனாசேயும், மனாசேயை எப்பிராயீமுந் தானே, இவர்கள் ஏகமாய் யூதாவுக்கும் விரோதமாயிருப்பார்கள், * இதலெல்லாம் அவருடைய கோபம் ஆறாமல் அவருடைய கை இன்னம் நீட்டினதாயிருக்கும். * ௰௨, ௰௭. வசனங்கள்.

௰. அதிகாரம்.

[இஸ்ரவேலிலே தலைமையானவர்களுக்கு ஐயோவென்றுகூறினது.]

ஏழைகளை வழக்கிலே தோற்கப்பண்ணவும் நம்முடைய சனத்திற் சிறுமையானவர்களின் நியாயத்தைப் பறிக்கவும் விதவைகளைச் சூறையிடவுந் திக்கற்றவர்களைத் தாங்கள் கொள்ளையிடவுமாக,

௨ அக்கிரமப் பிரமாணங்களைத் தீர்மானிக்கிறவர்களுக்கும் பாரமானவைகளை எழுதுகிற வேதபாரகருக்கும் ஐயோ,

௩ விசாரிப்பின் நாளிலுந் தூரத்திலிருந்து வருகிற பாழக்கடிப்பின் நாளிலும் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஆரண்டையிலே சகாயத்தைத் தேட ஓடுவீர்கள்? உங்கள் மகிமையை எங்கே வைத்துப்போவீர்கள்!

௪ கட்டுண்டவர்களின் கீழ்முடங்கி விழுந்து கொலைசெய்யப்பட்டவர்களுக்குள் விழுவார்கள், இதிலெல்லாம் அவருடைய கோபம் ஆறாமல் அவருடைய கை இன்னம் நீட்டினதாயிருக்கும்.

எருசலேமையும் பிடிக்க நினைவுகொள்ளும் பெருமையான அசூரியனைக் கர்த்தர் தண்டிப்பது.

௫ நம்முடைய கோபத்தின் கோலாயிருக்கிற அசூரியருக்கு ஐயோ, அவர்கையிலிருக்கிறது நம்முடைய சினத்தின் மிலாறு. * ௩௪, அதிகார. ௧. ௨. இராசா. ௰௭. ௬.

௬ நாம் அமார்க்கமான சாதிக்கு விரோதமாய் அவனையனுப்பி, நம்முடைய கோபத்துக்கு ஆளாயிருக்கிற சனத்தின்மேல் அதைக் கொள்ளையிடவுஞ் சூறையாடவும் அதைத் தெருக்களின் சேற்றைப்போல மிதித்துப்போடவும் அவனுக்குக் கட்டளைகொடுப்போம்.

௭ அவனோவெனில் அப்படிக்கொத்த எண்ணமும் அவனிருதயம் அப்படிக்கொத்த நினைவுமாயிராமற் கொஞ்சமாயிராத சாதிகளையழிக்கவுஞ் சங்கரிக்கவுந்தன் மனதிலே நினைவாயிருக்கிறான்.

௮ ஏனெனில் * என் பிரபுக்கள் அனைவரும் இராசாக்களல்லவோ? * ௩௬, அதிகாரம். ௪—௨௰.

௯ கல்னேபட்டணம், கர்கேமீசைப்போலானதில்லையோ? ஆமாத்து அற்பாத்தைப்போலுமானதில்லையோ? சமாரியா தமஸ்குவைப்போலானதில்லையோவென்றும்,

௰ எருசலேமையுஞ் சமாரியாவையும் பார்க்கிலும் விசேஷித்த சொரூபங்களுள்ள விக்கிரக இராச்சியங்களை என் கை கண்டுபிடித்ததுபோலேயும்,

௰௧ நான் சமாரியாவுக்கும் அதின் விக்கிரகங்களுக்குஞ் செய்ததுபோலேயும், எருசலேமுக்கும் அதின் விக்கிரகங்களுக்குஞ் செய்யேனோவென்றுஞ் சொல்லுகிறான்.

௰௨ ஆனாற் சம்பவிப்பதேதெனில் ஆண்டவர் சீயோன்பருவதத்திலும் எருசலேமிலுந் தமது செய்கையெல்லாம் முடித்திருக்கும்போது * அசூரிய இராசாவினுடைய பெருமையான நெஞ்சின் கனியையும் அவ

மேட்டிமையான கண்களின் சிறப்பையும் நான் விசாரிப்பேனென்கிறார். * ௩௭, அதிகாரம். ௩௬. ௨. இராசா. ௰௯, ௩௫.

௰௩ ஏனென்றால் அவன் சொல்லுகிறது: என் கையின் பெலத்தினாலும் என் ஞானத்தினாலும் இதைச்செய்தேன், ஏனெனில் உணர்வுள்ளவனாயிருக்கிறேன், அதினாலே நான் சனசதனங்களின் எல்லைகளை வாங்கிப்போட்டு அவர்கள் உக்கிராணங்களைக் கொள்ளையிட்டு வல்லவனைப்போலக் குடியானவர்களைத் தாழ்த்தினேன்.

௰௪ என் கை சனசதனங்களின் ஆஸ்தியை ஒரு குருவிக்கூட்டைப்போலக் கண்டுபிடித்துத் தனித்துவிடப்பட்ட முட்டைகளை வாரிக்கொள்ளப்படுமாப்போலே பூமியையெல்லாம் நான் வாரிக்கொண்டேன்; செட்டையசைத்தவர்களும் வாயைத்திறந்தவர்களும் கீச்சுக்கீச்சென்று சத்தமிட்டவர்களுமில்லையென்கிறான்.

௰௫ கோடாலி தன்னாலே வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மை பாராட்டலாமோ? அல்லது வாள் தன்னையிழுக்கிறவனுக்கு விரோதமாய்ப் பெருமைபாராட்டலாமோ? தடி தன்னையெடுக்கிறவர்களையசைக்குமாப்போலேயும் மிலாறு நான் மரமல்லவென்று எழும்புமாப்போலேயுந்தானே.

௰௬ ஆகையாற் சேனைகளுடைய ஆண்டவராகிய கர்த்தர் அவனுடைய கொழுத்தவர்களில் இளைப்பையனுப்பி வேகிற அக்கினிக்கொத்த நெருப்பை அவன் மகிமையின் கீழ்க்கொளுத்துவார்.

௰௭ இஸ்ரவேலின் வெளிச்சமானவர் அக்கினியும் அதின் பரிசுத்தர் அக்கினிச்சுவாலையுமாகியெரிந்து ஒரே நாளிலே அவனுடைய முள்ளுச்செடிகளையும் நெரிஞ்சில்களையும் பட்சித்து,

௰௮ அவனுடைய காட்டின் மகிமையையும் அவனுடைய பயிர்நிலத்தின் மகிமையையும் ஆத்துமாத்துவக்கிச் சதைபரியந்தமும் அழியப்பண்ணுவார், கொடிபிடிக்கிறவன் களைத்துவிழுந்தவண்ணமாய் அது இருக்கும்.

௰௯ அவனுடைய காட்டின் மீதியான மரங்கள் கொஞ்சமாயிருக்கும், ஒரு பையல் அவைகளையெண்ணியெழுதலாம்.

௨௰ அக்காலத்திலே சம்பவிப்பதேதென்றால் இஸ்ரவேலில் மீதியானவர்களும் யாக்கோபுடைய வீட்டிலே தப்பினவர்களும் தங்களையடித்தவனைப் பின்னிச்சார்ந்துகொள்ளாமல் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை உண்மையாகச்சார்ந்துகொள்ளுவார்கள்.

௨௧ மீதியாயிருப்பவர்கள், யாக்கோபிலே மீதியாயிருப்பவர்களே, வல்லமையுள்ள பராபரனண்டைக்குத் திரும்புவார்கள்.

௨௨ ஏனெனில் * இஸ்ரவேலே, உன்னுடைய சனங்கள் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும் அதில் மீதியாயிருப்பவர்களே திரும்புவார்கள், அழிக்குதல் அறுதியாய்த் தீர்ந்திருக்கும்போது நீதி புரண்டு வரும். * ரோமர். ௯, ௨௭. ௨௮.

௨௩ ஏனென்றாற் சேனைகளுடைய கர்த்தராகிய ஆண்டவர் தேசத்துக்குள்ளெங்கும் அறுதியான அழிக்குதலைச்செய்வார்.

௨௪ ஆகையாற் சீயோனிலே வாசமாகிய நமது சனமே உன்னைக் கோலாலடித்துத் தன் தடியை எகிப்தியனைப்போல உன்மேல் ஓங்குகிற அசூரியனுக்குப் பயப்படாதே.

௨௫ ஏனெனில் இன்னமமெத்தக்கொஞ்சப்போதிலே சினந்தீர்ந்திருக்கும், அப்போது நம்முடைய கோபம் அவர்களைச் சங்கரிக்கப்போகிறதென்று சேனைகளுடைய கர்த்தராகிய ஆண்டவர் விளம்புகிறார்.

௨௬ * ஒரேப்கன்மலையண்டையிலே மீதியானியர் வெட்டுண்டவண்ணமாய்ச் சேனைகளுடையகர்த்தர் அவன்மேலொரு சவுக்கையெழுப்பித்தமது கோலை எகிப்திலே கடலின்மேல ஓங்கினதுபோலே ஓங்குவார். * நியாயாதி. ௭, ௰௬. ௵

௨௭ அந்நாளிலே அவன் சுமை உன் தோளிலும் அவன் நுகத்தடி உன் கழுத்திலுமிருந்து நீங்குந்தயிலத்தால் நுகத்தடி கெட்டுப்போம்.

௨௮ அவன் ஆயாத்துக்கு வந்து, மிக்ரோனைக்கடந்து மிக்மாசிலே தன்படைமுஸ்திதுகளை வைத்து வைப்பான்.

௨௯ கணவாயைத்தாண்டி கேபாவிலே பாளயமிறங்குகிறார்கள், ராமா அதிருகிறது சவுலின் ஊராகிய கிபேயா ஓடிப்போகிறது.

௩௰ கல்லிம் குமாரத்தியே, உரத்துக்கூப்பிடு. சிறுமையான ஆனத்தோத்தே, லாயீசுக்குப்புறமாக உன் சத்தத்தை நீட்டிக்கூப்பிடு.

௩௧ மத்மேனா வலசைவாங்கும் கேபிமின் குடிகள் கூட்டங்கூடுகிறார்கள்.

௩௨ இன்னமொருநாள் நோபிலே தரித்திருந்து தன் கையைச் சீயோன்குமாரத்தியின் பருவதத்துக்கும் எருசலேமின் மேட்டுக்கும் விரோதமாய் அசைப்பான்.

௩௩ ஆனால் இதோ, சேனைகளின்கர்த்தராகிய ஆண்டவர் * தோப்புகளை வலுமையாயத்தறிப்பார், ஓங்கிவளர்ந்தவைகள் வெட்டுண்டு மேட்டிமையானவைகள் தாழ்த்தப்படும். * ௩௭, ௩௬.

௩௪ அவர்காட்டின் அடர்த்தியைக் கோடாலியினாலே துணிப்பார், மகத்துவமானவராலே அந்த லீபனோன் விழும்.

௰௧. அதிகாரம்.

[மேசியாவினுடைய இராச்சியத்தின் பாக்கியம்.]

வெட்டப்பட்ட ஈசாயின் * அடிமரத்திலிருந்தொரு துளிர் புறப்பட்டு அவன் வேர்களிலிருந்தொரு கிளையெழும்பிக் கனிதரும். * ௪, அதி. ௨. எபி. ௨௧, ௫. லூக்கா. ௨, ௧—௰௪.

௨ இவர்மேலே கர்த்தருடைய ஆவியாகிய ஞானம் உணர்வென்றவைகளின் ஆவியும் ஆலோசனை பெலனென்றவைகளின் ஆவியும் அறிவு கர்த்தருக்குப் பயப்படுதலுமென்றவைகளின் ஆவியுந் தங்கியிருப்பார்.

௩ அவர் மிகந் துணருதல் கர்த்தருக்குப் பயப்படுதலோடேயிருக்கும் * அவர் தமது கண்களுடைய பார்வையின்படி நியாயந் தீர்க்காமலும் தமது காதுகளுடைய கேள்வியின்படி கடிந்துகொள்ளாமலும்,
* யோபு. ௭, ௨௪.

௪ ஏழைகளை நீதியாய் நியாயம் விசாரித்து பூமியிற் சிறுமையானவர்களைச் செம்மையாய்க் கடிந்துகொண்டு பூமியை * தமது வாக்கின் கோலாலடித்துத் தமது உதடுகளின் ஆவியால் ஆகாதவனைக் கொல்லுவார். * ௪௯, ௨. ௨. தெச. ௨, ௮. அறிவி. ௰௯, ௰௫.

௫ நீதியவர் அரையின் கட்டும் சத்தியம் அவர் இடுப்பின் கச்சையுமாயிருக்கும்.

௬ அப்போது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கிச் சிவிங்கு வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும் கன்றுக்குட்டியும் வாலசிங்கமுங் காளையும் ஒரு சின்னப்பயல் அவைகளை ஓட்டத்தக்கதாய் ஒருமித்திருக்கும். * ௬௫, ௨௫. ஓசே. ௨, ௰௮.

௭ பசுமாடுங் கரடியுங் கூடமேய்ந்து அவைகளின் குட்டிகளொருமித்துப் படுத்திருக்கும் சிங்கம் மாட்டைப்போல் வைக்கோலைத் தின்னும்.

௮ முலைகுடிக்கிற குழந்தை விரியன்பாம்பு புவனையின்மேல் விளையாடிப் பாலகன் கட்டுவிரியனின் புற்றிலே தன் கையைப் பாய்ச்சும்.

௯ எனது பரிசுத்த பருவதமெங்கும் தீமைபண்ணுவாருமில்லை கேடு செய்வாருமில்லை, ஏனெனில் தண்ணீர்கள் கடல் ஆழத்தை நிரப்பும்போல் பூமி கர்த்தரையறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.

௰ அக்காலத்திலே சமபவிப்பதேதெனில் * சனசதளங்களுக்குக் கொடியாக நிற்கிற ஈசாயின் வேருக்காகச் சாதிகள் விசாரித்துக் கேட்பார்கள், அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும். * ரோம. ௰௫, ௰௨.

௰௧ அக்காலத்திலே சமபவிப்பதேதெனில் ஆண்டவர் அசீரியாவிலும் எகிப்திலும் பத்ரோசிலும் எத்தியோப்பியாவிலும் பெர்சியாவிலும் சிநேயாரிலும் ஆமாத்திலும் சமுத்திரத்தின் தீவுகளிலுந் தமதுடைய சனத்தில் மீதியானவர்களைச் சேர்த்துக்கொள்ளத் திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி,

௰௨ சாதிகளுக்குக் கொடியேற்றி இஸ்ரவேலிலே துரத்துண்டவர்களைச் சேர்த்து யூதாவிற் சிதறடிக்கப்பட்டவர்களைப் பூமியின் நாலுதிசைகளிலுமிருந்து கூட்டுவார்.

௰௩ எப்பிராயீமின் பொறாமையுந் தீரும் யூதாவின் சத்துருக்களோ வேரற்றுச் சேதிக்கப்படுவார்கள். எப்பிராயீம் யூதாவின்மேற் பொறாமையாயிராமலும் யூதா எப்பிராயீமைப் பகைப்பிடியாமலும்,

௰௪ அவர்கள் மேற்கேயிருக்கிற பெலிஸ்தருடைய தோளின்மேல் பாய்ந்து வரும் ஏகமாய்க் கிழக்குத் திசையானவர்களைக் கொள்ளையிட்டுத் தங்கள் கைகளை ஏதோமின்மேலும் மோவாபின்மேலும் போடுவார்கள், அம்மோன்புத்திரரும் அவர்களுக்குக் கீழ்ப்படுவார்கள்.

௰௫ எகிப்தின் சமுத்திர முனையைக் கர்த்தர் சாபமிட்டு நதியின்மேலே தமது கையைத் தமதுடைய காற்றின் சத்துவத்தோடே அசைத்து அதைப் பாதரட்சைகளோடே நனையாமல் கடக்கப்பண்ணத்தக்கதாய் ஏழு ஆறுகளாக அடிப்பார்.

௰௬ அப்படியே இஸ்ரவேல் எகிப்து தேசத்திலிருந்து வந்த நாளில் அவர்களுக்குச் சம்பவித்ததுபோலே அவருடைய சனத்தின் அசீரியாவிலே மீதியானவர்களுக்கு நடக்கத்தக்க வழியுண்டாயிருக்கும்.

௰௨. அதிகாரம்.

[மேசியாவின் உபகாரங்களைத் துதித்துப் பாடினது.]

அக்காலத்திலே நீ சொல்வதாவது: கர்த்தாவே என்மேல் கோபமாயிருந்தீர், உம்முடைய கோபந் திரும்பிற்று, என்னைத் தேற்றரவுபண்ணுகிறீர் என்கிறதற்குத் தக்கதாக உம்மைத் துதிக்கிறேன்.

௨ இதோ * என் இரட்சிப்பின் பரன், நான் அவரை நம்பிப் பயப்படாதிருப்பேன், ஏனெனில் என் பெலனும் என் கீதமுமானவர் கர்த்தராகிய பராபரன், அவரே எனக்கு இரட்சிப்பானவரென்பாய். * ௨. மோசே. ௰௫, ௨.

௩ நீங்கள் மகிழ்ச்சியோடே இரட்சிப்பின் ஊற்றுகளில் * தண்ணீர்களை மொள்ளுவீர்.
யோவான். ௭, ௩௭. ௩௮.

௪ அக்காலத்திலே சொல்லுவதாவது, கர்த்தரைத் துதியுங்கள், அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள், சனசதளங்களுக்குள்ளே அவர் செய்கைகளைப் பிரசித்தப்படுத்துங்கள், அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம்பண்ணுங்கள்.

௫ * கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள், ஏனெனில் மகத்துவமானதைச் செய்தார், இது பூமியெங்கும் அறியப்படக்கடவதென்பீர்கள். * சங்கீதம். ௯௮, ௭.

௬ சீயோனில் வாசமாயிருக்கிறவளே, நீ சத்தமிட்டுக் கெம்பீரி, ஏனெனில் இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் நடுவிலே பெரியவராயிருக்கிறார்.

௰௩. அதிகாரம்.

[பாபேலுக்குவரும் அழிவு.]

ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா * பாபேலின்மேல் தரிசித்த பாரம்.

* ௰௪, அதி. ௪. மீகா. ௨௧, ௧—௰ எரே. ௫௰, ௧. ௵ ௫௧, ௧. ௵

௨ உயர்ந்திருக்கிற பருவதத்தின்மேல் கொடியேற்றுங்கள், சனங்கள் வர உரத்தச்சத்தமிடுங்கள், அவர்கள் பிரபுக்களின் வாசல்களுக்குட் பிரவேசிப்பதற்குச் சாடைகாட்டுங்கள்.

௩ நாம் பரிசுத்தமாக்கினவர்களுக்கு நாங் கட்டளை கொடுத்தோம், நமது கோபத்தை நிறைவேற்ற நம்முடைய பராக்கிரமசாலிகளை அழைத்துமிருக்கிறோம், அவர்கள் நமது மகத்துவத்திலே களிகூருகிறவர்களென்கிறார்.

௪ வெகுசனத்தின் சத்தத்துக்கொத்த திரளானவர்களின் இரைச்சலுங் கூட்டப்பட்ட சாதிகளுடைய இராச்சியங்களின் அமளியான இரைச்சலும் மலைகளிற் கேட்கப்படுகிறது, சேனைகளின் கர்த்தர் யுத்தராணுவத்தை இலக்கம்பார்க்கிறார்.

௫ தேசத்தையெல்லாம் அழிக்கவானத்தின் அடியிலுள்ள தூரதேசத்திலிருந்து வருகிறார்கள், கர்த்தரும் அவருடைய சினத்தின் பணிமுட்டுகளுந்தானே.

௬ அலறுங்கள், ஏனெனிற் கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது, சர்வவல்லமையுள்ளவராலே அது பாழ்க்கடிப்பாய் வரும்.

௭ ஆனதினால் எல்லாக் கைகளும் நெகிழ்ந்து எல்லா மனுஷரின் இருதயமுங் கரைந்துபோம்.

௮ திகிலாயிருப்பார்கள், வேதனைகளும் வாதைகளும் அவர்களைப் பிடிக்கும், * பெறுகிறவளைப்போல வேதனைப்படுவார்கள், ஒருவரையொருவர் பிரமித்துப்பார்ப்பார்கள், அவர்கள் முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும். * ௨௧, அதிகா. ௩.

௯ இதோ, தேசத்தைப் பாழ்க்கடித்து அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் குரூரமும் மூர்க்கமுங் கோப உக்கிரமுமாய் வருகிறது.

௰ ஏனெனில் வானங்களின் நட்சத்திரங்களும் அவைகளின் ராசிகளும் தங்கள் ஒளியை விளங்கப்பண்ணாதிருக்கும், * சூரியன் தன் உதயத்தில் இருண்டுபோம், சந்திரன் தன் ஒளியைப் பிரகாசிப்பியாதிருக்கும்.

* எசேக். ௩௨, ௭. யோவே. ௨, ௩௰. ௩, ௧௫. மத். ௨௪, ௨௯. மாற். ௰௩, ௨௪. ௨௫. லூக். ௨௧, ௨௫. அப்போ. ௧, ௰௨. ௬௩.

௰௧ நாம் பூச்சக்கரத்திலே அதின் பொல்லாப்பையும் அக்கிரமக்காரரிடத்திலே அவர்கள் அக்கிரமத்தையும் விசாரித்து அகந்தைக்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி பலவந்தரின் இறுமாப்பைத் தாழ்த்தி,

௰௨ புருஷனை அபரஞ்சியிலும் மனுஷனை ஓப்பீரின் தங்கத்திலும் அருமையாக்குவோம்.

௰௩ ஆகையால் சேனைகளுடைய கர்த்தரின் மூர்க்கத்தினால் அவருடைய கோப உக்கிரத்தின் நாளிலே பூமி தன்னிடத்தைவிட்டசையும்படிக்கு வானத்தை அதிரப்பண்ணுவோம்.

௰௪ துரத்தப்பட்ட வெளிமானைப்போலேயும் ஆருஞ்சேர்க்காத ஆட்டைப்போலேயுமிருப்பார்கள், அவரவர் தங்கள் சனத்தண்டைக்குப்போக முகத்தைத் திருப்பி அவரவர் தங்கள் தேசத்துக்கோடிப்போவார்கள்.

௰௫ அகப்பட்டவனெல்லாங் குத்துண்டு சேர்ந்திருந்தவனெல்லாம் பட்டையத்தால் விழுவான்.

௰௬ அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாகச் சிதைக்கப்படும், அவர்கள் வீடுகள் கொள்ளையாய்ப்போம், அவர்கள் பெண்சாதிகள் அவமானப்படுவார்கள்.

௰௭ இதோ, நாம் அவர்கள்மேல் மேதியரை யெழுப்புவோம், அவர்கள் வெள்ளியையெண்ணாமலும் பொன்னின்மேற் பிரியமவைக்காமலும்,

௰௮ வில்லுகளால் இளைஞரைச் சிதைத்துப்போடுவார்கள், அவர்கள் கர்ப்பக்கனியின்மேலிரங்குவதுமில்லை, அவர்கள் கண் பிள்ளைகளைத் தப்பவிடுவதுமில்லை.

௰௯ அப்படியே இராச்சியங்களின் அலங்காரமுங் கல்தேயருடைய பெருமையின் முக்கியமுமாகிய பாபேல் பராபரன் * சோதோமையுங் கொமோராவையுங் கவிழ்த்ததுபோலே கவிழ்ந்துகிடக்கும். எரே.

௫௰, ௰௮. ஆதி, ௧௯. ௨௰.

௨௰ என்றென்றைக்கும் அதிலே தங்கித் தரிப்பாருமில்லை, அங்கே அராபியன் கூடாரம் போடுவதுமில்லை, அங்கே மேய்ப்பர் மந்தையை மறிப்பதுமில்லை.

௨௧ * வனாந்தரசீவன்கள் அங்கே தங்கி அவர்கள் வீடுகளை ஊளையிடுதல்களாலே நிரப்புங் கோட்டான்கள் அங்கே தாபரிக்கும், பேய்கள் அங்கே துள்ளும். * அறி. ௰௮, ௨.

௨௨ அவர்கள் பாழான மாளிகைகளில் ஓரிசனொன்றுக்கொன்று மறுவுத்தரவு கொடுக்கும் வலுசர்ப்பங்கள் அவர்கள் செல்வவிருக்கையான அரண்மனைகளிற் கூடும், அதின் காலஞ்சமீபித்துவரும், அதின் நாட்கள் நீடித்திராதென்கிறார்.

௰௪. அதிகாரம்.

[அப்பாலும் பாபேலுக்கு வரும் அழிவின் பிரஸ்தாபம் முன்னறிவிக்கப்பட்டது.]

ஏனெனில் கர்த்தர் யாக்கோபுக்கிரங்கி இஸ்ரவேலை இன்னந் தெரிந்துகொண்டு அவர்களையவர்கள் தேசத்திலே தாபரிக்கப் பண்ணுவார், மறுதேசத்தாரும் அவர்களுக்குச் சோதிகளையாகி, யாக்கோபின் வீட்டோடே கூடிக்கொள்ளுவார்கள்.

௨ சனசதளங்கள் அவர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களை அவர்கள் தானத்துக்கழைத்துவருவார்கள், இஸ்ரவேல் வீட்டார் அவர்களைக் கர்த்தருடைய தேசத்திலே வேலைக்காரரும் வேலைக்காரிகளுமாகச் சுதந்தரித்துக்கொண்டு தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கித் தங்களையொடுக்கினவர்களையாளுவார்கள்.

௩ கர்த்தர் உன் வாதையையும் உன் தத்தளிப்பையும் நீ அடிமையாக்கப்பட்டிருந்த கடின அடிமைத்தனத்தையும் நீக்கி உன்னை இளைப்பாறப்பண்ணும் அக்காலத்திலே

௪ நீ பாபேலுடைய இராசாவின் பேரிலே எடுத்துச்சொல்லும் வாக்கியமொழியாவது, ஒடுக்கினவன் என்னமாய் ஓய்ந்தான், பொற்கோல் என்னமாய் ஒழிந்துபோனது.

௫ கர்த்தர் ஆகாதவர்களின் மிலாறையும் ஆண்டிருந்தவர்களின் செங்கோலையும் முறித்துப்போட்டார்.

௬ ஓயாத அடியாய்ச் சனசதளங்களை உக்கிரமாயடித்துச் சாதிகளைக் கோபமாய் ஆண்டிருந்தவன் தடுப்பாரில்லாமல் துன்பப்படுத்தப்படுகிறான்.

௭ பூமியனைத்தும் இளைப்பாறி அமர்ந்திருக்கிறது, கெம்பீரமாய் முழங்குகிறார்கள்.

௮ பாய்மரவிருட்சங்கள் தானும் லீபனோனின் கேதுருக்களும் உன்னிமித்தஞ் சந்தோஷமாயிருந்து நீ விழுந்துகிடக்கிறது முதற்கொண்டெங்களை வெட்ட எதிர்வருவாரொருவருமில்லையென்கிறது.

௯ தாழவிருக்கிற நரகம் உன்னிமித்தம் அசைந்து நீ வரக்கொள்ள எதிர்கொண்டு இராட்சதரையும் பூமியிலிருந்த எல்லாக்கடாய்களையும் உன்னிமித்தம் எழுப்பிச் சாதிகளுடைய எல்லா இராசாக்களையுந் தங்கள் ஆசனங்களிலிருந்தெழுந்திருக்கப்பண்ணும்.

௰ இவர்களெல்லாரும் பிரதியுத்தரமாக நீயும் எங்களைப்போலப் பலட்சயமாகி எங்களைப்போலானாயோவென்று உன்னோடே சொல்லுவார்கள்.

௰௧ உன் முசுகியும் உன் தம்புருக்களின் முழக்கமும் நரகத்திலே தள்ளுண்டுபோனது, புழுக்கள் உன் கீழ்ப் போடப்பட்ட படுக்கையும் பூச்சிகள் உன் மூடுதுமாயிருக்கிறது.

௰௨ அதிகாலத்தின் மகனாகிய விடிவெள்ளியே, நீ எப்படி வானத்திலிருந்து விழுந்தாய்? சாதிகளைப் பலஈனப்படுத்தினவனே, எப்படித் தரையிலே விழ வெட்டப்பட்டாய்.

௰௩ * நான் வானத்துக்கேறி என்னுடைய சிங்காசனத்தைப் பராபரனுடைய நட்சத்திரங்களின் மேலாக வுயர்த்தி † வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பருவதத்திலே உட்காருவேனென்றும், * ௨. தெச. ௨, ௪. † சங். ௪௮, ௩.

௰௪ மேகங்களுடைய உயர்ந்த தலங்களின் மேலேறி உன்னதமானவருக்கொப்பாவேனென்றும் நீ உன்னிருதயத்திலே சொன்னாய்.

௰௫ ஆனாற் பாதாளப்புறங்களாகிய பாதாளத்திலே தள்ளுண்டாயே.

௰௬ உன்னைக் காண்கிறவர்கள் உன்னைக் கண்ணோக்கி உன்மேல் நிந்தனைவைத்துப் பூமியைத் தத்தளிக்கவும் இராச்சியங்களை அதிரவும் பண்ணினவனும்,

௰௭ பூச்சக்கரத்தை வனாந்தரமாக்கி அதின் பட்டணங்களையழித்துப்போட்டுத் தான் கட்டிவைத்தவர்களை வீடுக்குப் போகவிட்டுத் தலையாக்காதே போனவனுமாகிய புருஷன் இவனோவென்பார்கள்.

௰௮ சாதிகளுடைய சகல இராசாக்களும் கனத்தோடேயோவென்றால் அனைவரும் கனத்தோடே அவரவர் தங்கள் வீட்டிலே கிடக்கிறார்கள்.

௰௯ நீயோ அருவருப்பான கிளையைப் போலவும் பட்டயக்குத்தாய்க் கொல்லுண்டவர்களின் உடுப்பைப்போலவும் ஒரு குழியின் கல்லுக் குவியலோடே கிடக்க இறைக்கப்பட்டவர்களைப் போலவும் மிதித்துப்போடப்பட்ட பிணத்தைப்போலவும் உன் கல்லறைக்குப் புறம்பா யெறிந்துவிடப்பட்டாய்.

௨௰ நீ அவர்களோடொத்து அடக்கம்பண்ணப்படாய், ஏனெனில் உன் தேசத்தைக் கெடுத்து உன் சனத்தைக் கொன்றுபோட்டாய், பொல்லாதவருடைய வித்து என்றென்றைக்கும் பேர்கொள்ளுவதில்லை.

௨௧ அவன் பிள்ளைகளெழும்பித் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு பூச்சக்கரத்தைப் பட்டணங்களால் நிரப்பாதபடிக்கு அவர்களுக்கவர்கள் பிதாக்களுடைய அக்கிரமத்தினிமித்தம் வதையை ஆயத்தம்பண்ணுங்கள்.

௨௨ ஏனெனிற் சேனைகளுடைய கர்த்தர் விளம்புகிறதாவது, நாம் அவர்கள்மேலெழும்பிப் பாபேலுடைய பேரையும் மீந்ததையும் குமாரனையும் பேரனையுஞ் சங்கரிப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௨௩ நாம் அதை முள்ளம்பன்றிகளுடைய சுதந்திரமுந் தண்ணீர்த்தடாகங்களுமாக்கி அதையழிப்பின் துடைப்பத்தினாலே பெருக்கிப்போடுவோமென்று சேனைகளுடைய கர்த்தர் விளம்புகிறார்.

௨௪ நாம் நினைத்திருக்கிறபடியே நடக்கும், நாம் நிர்ணயித்துக்கொண்டதே நிறைவேறி நிற்குமென்று சேனைகளுடைய கர்த்தர் ஆணைசத்தியம்பண்ணினார்.

௨௫ என்னவெனில் நாம் அசூரியனை நமது தேசத்திலே முறித்து நமது பருவதங்களின்மேல் அவனை மிதித்துப்போடுவோம் அப்போதவனுடைய நுகத்தடி அவர்கள்மேலிருந்து விலகி அவன் சுமையவர்கள் தோளிலிருந்து நீங்கும்.

௨௬ இது தேசமனைத்தின்மேலும் நிர்ணயிக்கப்பட்ட யோசனையும் இது சகல சாதிகள்மேலும் நீட்டப்பட்டிருக்கிற கையுமாயிருக்கிறதென்றார்.

௨௭ ஏனெனிற் சேனைகளுடைய கர்த்தர் இப்படி நிர்ணயித்துக்கொண்டார், அதை அவத்தமாக்குபவனார், அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது அதைத் திருப்புபவனார்.

பெலிஸ்தருக்குவிரோதமான தீர்க்கதரிசனம்.

௨௮ * ஆகாஸ் இராசா மரணமடைந்த வருஷத்திலேயுண்டான பாரமான காட்சியாவது, * ௨. இராசா. ௰௬, ௨௰.

௨௯ முழுப் பெலிஸ்தேயாவே, உன்னையடித்த கோலுடைந்ததென்று களிப்பாயிராதே, ஏனெனிற் பாம்பின் வேரிலிருந்து கட்டுவிரியன் புறப்படும், அதின் கனி பறக்கிற நெருப்புப்பாம்பாயிருக்கும்.

௩௰ ஆனதுகொண்டு தரித்திரரின் தலைச்சன்கள் மேய்ந்து எளியவர்கள் சுகமாய்ப் படுத்திருப்பார்கள், ஏனெனிற் பஞ்சத்தினாலே உன் வேரைச் சாகப்பண்ணுவோம், உன்னில் மீதியானவர்களையோ அவன் கொன்றுபோடுவான்.

௩௧ வாசலே அலறு, பட்டணமே கதறு, பெலிஸ்தேயாவே நீ முழுதுங் கரைந்துபோகிறாய், ஏனெனில் வடக்கேயிருந்து புகைக்காடாய் வருகிறான், அவன் கூட்டங்களில் தனித்தவனில்லை.

௩௨ இப்போதும் அந்தச் சாதியின் தானாபதிகளுக்கென்ன மறுவுத்தரவு சொல்லப்படும், * கர்த்தர் சீயோனை அஸ்திபாரப்படுத்தினார், அவருடைய சனத்திற் சிறுமையானவர்கள் அதிலே திடன்கொண்டு தங்குவார்களென்பதுதானே. * சங்கீ. ௮௭, ௧.

௰௫. அதிகாரம்.

[மோவாபின்மேல் வருகிற தண்டனையின் தீர்க்கதரிசனம்.]

மோவாபின்மேலிறங்கும் பாரம். இராவிலே மோவாபின் ஆர்பட்டணம் பாழாக்கப்பட்டது, அது சங்காரமானது, இராவிலே மோவாபின் கிர்பட்டணம் பாழாக்கப்பட்டது, அது சங்காரமானது. * எரே. ௪௮, ௧. ழு எசேக். ௨௫, ௮—௰௧. செப்ப. ௨, ௮. ௯.

௨ ஆனபடியால் அழும்படிக்குப் பாயித்துக்கும் தீபோனுக்கும் பாமோத்துக்கும் போயேறுகிறார்கள், நேபோவினிமித்தமும் மேதேபாவினிமித்தமும் மோவாப் அலறுகிறது, * அவர்களுடைய எல்லாத் தலைகளும் மொட்டையிட்டிருக்கும், எல்லாத் தாடிகளுங் கத்திரித்திருக்கும். * எரே. ௪௮, ௩௭.

௩ அதின் வீதிகளில் இரட்டைக் கட்டிக்கொண்டு அதின் வீடுகளின்மேலும் அதின் தெருக்களிலும் எல்லாரும் அலறியழுகையில் இறங்க இருக்கிறார்கள்.

௪ எஸ்போன் ஊராரும் எலெயாலே ஊராருங் கூக்குரலிடுகிறார்கள், அவர்கள் சத்தம் ஆகாசமட்டுங் கேட்கப்படுகிறது, ஆனபடியால் மோவாபின் ஆயுதப்பாடானவர்கள் கதறுகிறார்கள், அவனவனுடைய ஆத்துமா அவனவனில் நெருக்கப்படுகிறதாயிருக்கிறது.

௫ * என்னிருதயம் மோவாபினிமித்தங் கூவுகிறது, அதிலிருந்தோடிவருகிறவர்கள் மூன்றுவயதுக் கடாரியைப்போலே அலைகிறார்கள், லூகித்துக்கேறுகிற வழியிலே அழுகையோடே ஏறுகிறார்களே, ஒரோனாயீமின் வழியிலுங் கூக்குரலிடுகிறார்களே. * எரே. ௪௮, ௩௪—௩௬.

௬ ஏனெனில் நிம்ரீமின் நீர்ப்பாய்ச்சல்கள் பாழாய்க்கிடக்கிறது, அதினாற் புல்லுலர்ந்து முளையழிந்து பச்சையில்லாமற் போகிறது.

௭ ஆனபடியால் மீதியாகச் சேர்ந்ததையும் அவர்கள் வைத்துவைத்ததையும் * அலரிகளின் ஆற்றங்கரையிலே எடுத்துப்போவார்கள். * சங். ௱௩௭, ௨.

௮ ஏனென்றால் கூக்குரல் மோவாபின் எல்லையைச் சுற்றும், எக்லாயிம்மட்டும் அதின் அலறுதலும், பெயேர்லீம்மட்டும் அதின் அலறுதலும் எட்டும்.

௯ அல்லாமலும் தீமோனின் தண்ணீர்கள் இரத்தத்தால் நிறைந்திருக்கும். ஏனென்றால் நான் தீமோன்மேல் அதிகக் கேடுகளைக் கட்டளையிட்டு மோவாபிலே தப்பினவர்கள்மேலும் தேசத்தில் மீதியானவர்கள்மேலும் சிங்கத்தை வரப்பண்ணுவேன்.

௰௬. அதிகாரம்.

[நல்ல ஆலோசனையை மோவாப் ஜனத்துக்குக் கேடாக அசட்டைபண்ணுமென்பது.]

௧ தேசாதிபதிக்குச் செலுத்தும் ஆட்டுக்குட்டிகளை நீங்கள் சேலாப்பட்டணந்துவக்கி வனாந்தரமட்டாய்ச் சேர்த்துச் சீயோன் குமாரத்தியின் பர்வதத்துக்கு அனுப்புங்கள்.

௨ இல்லாவிட்டால் மோவாபின் குமாரத்திகள் கூண்டைவிட்டுத் துரத்தப்பட்ட இறகுருவியைப்போலே அர்னோன் நதியின் துறைகளண்டையிலிருப்பார்கள்.

௩ நீ ஆலோசனைபண்ணி நியாயஞ்செய்து மத்தியான உருமத்திலே உன் நிழலை இரவைப்போலாக்கித் துரத்துண்டவர்களை மறைத்து ஓடிவருகிறவர்களைக் காட்டிக்கொடாதிரு.

௪ மோவாபே, துரத்துண்ட நம்முடையவர்கள் உன்னிலே தங்கட்டும், சங்கரிக்கிறவனுக்குத் தப்ப அவர்களுக்கு அடைக்கலமாயிரு, ஏனென்றால் இறுகப்பிடிக்கிறவன் இல்லாதே போவான், சங்கரிப்பு ஒழிந்துபோம், மிதிக்கிறவர்கள் தேசத்திலிராதபடிக்கு அழிந்துபோவார்கள்.

௫ ஏனென்றால் இராசாசனங் கிருபையோடே உறுதிபண்ணப்படும், தாவீதின் கூடாரத்திலே நியாயாதிபதியாயிருந்து நியாயம் விசாரித்து நீதிக்குத் தீவிரிக்கிற * ஒருவர் அதின்மேல் உண்மையோடே உட்காருவார். * ௯, ௬. ௭. லூக்கா. ௧, ௩௩.

௬ மிகவும் ஒய்யாரமான மோவாபின் பெருமையையும் அதின் மேட்டிமையையும் அதின் அகந்தையையும் அதின் உக்கிரத்தையுங் கேட்டோம், அதின் வீம்பு அப்படியல்லவென்கிறது. * எரே. ௪௮, ௨௯. செப்ப. ௨, ௮.

௭ ஆகையால் மோவாபியர் ஒருவரையொருவர் பார்த்து அலறி எல்லாரும் ஏகமாய் அலறுவார்கள், கிராரோசேத்தின் அஸ்திபாரங்கள் தகர்க்கப்பட்டதேயென்று அவைகளுக்காகப் பெருமூச்சு விடுவீர்கள்.

௮ ஏனென்றால் எஸ்போனின் வயல்கள் சத்தியற்றுப்போனது. சிப்மாவூர் திவிதிராட்சப்பயிருக்கோவென்றால் சாதிகளின் அதிபதிகள் அதின் நற்சாதிச்செடிகளைத் தறித்துப்போட்டு யாசேர்மட்டும் சேர்ந்து வனாந்தரத்திற் சுற்றித்திரிகிறார்கள், அதின் நாற்றுகள் சிதறப்பட்டுக் கடலுக்கப்பாலே எறியுண்டுபோம்.

௯ ஆகையால் யாசேருக்காகவுஞ் சிப்மாவூர் திவிதிராட்சப்பயிருக்காகவும் பிரலாபமாய் அழுகிறேன், எஸ்போனே எலெயாலேயே உனக்குக் கண்ணீரைப் பாய்ச்சுவேன், நீயுன் வசந்தகாலத்துக்காகவும் உன் அறுப்புக்காகவுங் கொக்கரிக்கிற சந்தோஷசத்தம் விழுந்துபோனது.

௰ * சந்தோஷமுங் களிப்பும் பயிர்வெளியிலிருந்துவாங்கிப்போனது, திவிதிராட்சத்தோட்டங்களிற் கெம்பீரிப்புமில்லை ஆர்ப்பரிப்புமில்லை. மிதிக்கிறவன் ஆலைகளில் இரசத்தை மிதிப்பதில்லை, கொக்கரிப்பை ஓயப்பண்ணினேன். * எரேமி. ௪௮, ௩௩.

௰௧ * ஆகையால் என் குடல்கள் மோவாபினிமித்தமும் என் உள்ளம் கிராரேசினிமித்தமுஞ் சுரமண்டலத்தைப்போல முழங்குகிறது. * ௱௫, ௫. எரேமி. ௪௮, ௩௬.

௰௨ சம்பவிப்பதேதென்றால் மோவாபியர் மேடைகளின்மேல் இளைப்படைந்தார்களென்று காணப்படும்போது தங்கள் பரிசுத்தஸ்தலத்திலே பணியப்பிரவேசிப்பார்கள், ஆனால் ஒன்றும் அடையமாட்டார்கள்.

௰௩ இதுவே கர்த்தர் அக்காலமுதல் மோவாபின்மேற் சொன்னவார்த்தை.

௰௪ இப்போதும் கர்த்தர் உரைக்கிறதாவது, ஒரு கூலிக்காரனின் வருஷங்களைப்போலொத்த மூன்று வருஷங்களிலே மோவாபின் மகிமையந்தவெல்லாப்பெரிய திரளோடுங்கூடச் சிறுமைப்போம், அதில் மீதியாயிருப்பதோ பெலத்திராமற் கொஞ்சமும் மட்டுமாயிருக்குமென்கிறார்.

௰௭. அதிகாரம்.

[சூரியர்மேலும் இஸ்ரவேலர்மேலும்பாய்க் கடிப்புவருமென்பது.]

௧ தமஸ்குவினுடைய பாரம். இதோ தமஸ்கு பட்டணமாயிராதபடிக்குத் தள்ளப்பட்டு இடிந்த மண்மேடாயிருக்கும். * எரேமி. ௪௯, ௨௩—௨௭. ஆமோ. ௧, ௩—௫.

௨ ஆரோவேரின் பட்டணங்கள் பாழாய் விடப்பட்டு மந்தைகளின் வெளியாயிருக்கும், அவைகள் அங்கே மருட்டுவாரில்லாமலே படுக்கும்.

௩ அரணிப்பிராயமையும் இராசாங்கத் தமஸ்குவையும் விட்டொழியும், சீரியாவில் மீதியாயிருப்பவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய மகிமையின் சாயலாயிருப்பார்களென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௪ அக்காலத்திலே சம்பவிப்பதென்னவென்றால் யாக்கோபின் மகிமை குறுகி அவன் மாம்சத்தின் கொழுப்புக் கரைந்துபோம்.

௫ ஒருவன் ஓங்கின பயிரை அரிந்துகொண்டு தன் புயத்தினால் கதிர்களை அறுத்தெடுப்பாயின் பள்ளத்தாக்கிலே கதிர்களைச் சேர்க்கும்போலிருக்கும்.

௬ ஆனால் ஒலிவமரத்தை உலுப்பின்போது நுனிக்கொம்பிலே இரண்டு மூன்று காய்களும் அலைத்துக்காய்க்கிற அதின் கிளைகளில் நாலைந்து காய்களும் மீதியாயிருக்குமாப்போலே அதிலே பின் அறுப்புக்கொத்துகளும் மீதியாயிருக்குமென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

௭ அக்காலத்திலே மனுஷன் தன்னைக் கண்டவையாகிய பீடங்களை நோக்காமலும் தன் விரல்கள் உண்டுபண்ணினவைகளையும் தோப்புகளையும் சிலைகளையும் நோக்காமலும்,

௮ தன்னையுண்டாக்கினவரை நோக்குவான், அவன் கண்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரை நோக்கிக்கொண்டிருக்கும்.

௯ அக்காலத்திலே அவர்களுடைய பலமுள்ள பட்டணங்கள் இஸ்ரவேல் புத்திரருக்குப்பின் வைக்கப்பட்டுப்போன தழையின் மீதியைப்போலவும் நுனிக்கொம்பின் மீதியைப்போலவுமிருந்து பாழாய்க்கிடக்கும்.

௰ ஏனென்னில் உன் பலத்தின் கன்மலையை நீ நினையாமல் உன் இரட்சிப்பின் பராபரனை மறந்தாய், ஆனபடியால் நீ நேர்த்தியான நாற்றுகளை நட்டும் அன்னியதேசத்துக் கன்றுகளை வைத்தும்,

௰௧ பகற்காலத்திலே உன் நாற்றை வளரப்பண்ணிக் காலமே உன் விதையைப் பூக்கவும்பண்ணியும் பலனைக் கைவசமாக்கிக்கொள்ளும் நாளிலே அறுப்பு ஒருபோரும் நோயான வேதனையுமாயிருக்கும்.

அசூரியர்மேல் ஆக்கினையிறங்குவது.

௰௨ ஐயோ கடல்கள் கொந்தளிக்குமாப்போலே கொந்தளிக்கிற அநேக சனத்தங்களின் இரைச்சலும் பலத்த தண்ணீர்கள் இரையும்போலே இரைகிற சனக்கூட்டங்களின் அமளியுமுண்டு.

௰௩ சனக்கூட்டங்கள் திரளான தண்ணீர்கள் இரையுமாப்போலே இரையும், ஆனால் * அவனை அதட்டுவார், அப்போது பருவதங்களிலே காற்றுக்கொண்டுபோம் பதரைப்போலேயும் பெருங்காற்றில் அகப்பட்ட துரும்பைப்போலேயுந் தூரத்திலே ஓடித் துரத்தப்படுவான். * ௩௭, ௩௬. ௩௭.

௰௪ சாயங்காலத்திலே இதோ கலக்கமுண்டு, ஆனால் விடியற்காலமாகாததுக்கு முன்னே அவனில்லை, இது நம்மைக் கொள்ளையாடுகிறவர்களின் பங்கும் நம்மைச் சூறையாடுகிறவர்களின் வீதமுமாயிருக்கும்.

௰௮. அதிகாரம்.

[எத்தியோப்பியருக்குவரும் பாழ்க்கடிப்பும் அவர்களுடைய குணப்படுதலும் முன்னறிவிக்கப்பட்டது.]

எத்தியோப்பியாவின் ஆறுகளுக்கக்கரையிலே நிழல் இருபுறமாகத் திரும்புகிறது.

௨ கடல்வழியாய் நாணற்படகுகளில் ஏறித் தண்ணீர்களின்மேல் தூதுகளை அனுப்புகிறதுமாகிய தேசத்தின் சனத்துக்கு ஐயோ வேகமான தூதர்களே நீண்ட ஓரமாய்க் குடியிருக்கிறதும் மயிர் சிரைக்கப்பட்டதுமாகிய சாதியண்டைக்கும் உண்டானது முதற்கொண்டு இதுவரைக்குங் கொடியதாயிருந்ததும் அளவிடப்படுவதும் மிதிக்கப்படுவதும் ஆறுகள் புரண்டு தேசத்தைப் பாழ்க்கடிப்பதுமான சாதியாகிய சனத்தண்டைக்கும் போங்கள்

௩ பூச்சக்கரத்தில் வாசமாயிருக்கிறவர்களும் தேசத்துக்குடிகளுமாகிய நீங்களெல்லாரும் பருவதங்களிற் கொடியேற்றப்படும்போது பார்த்து எக்காளம் ஊதப்படும்போது கேட்பீர்கள்.

௪ ஏனென்னில் நாம் அமர்ந்திருந்து வெளிச்சத்தின்மேலே காணுங் காந்தியுள்ள காங்கையைப்போலவும் அறுப்புக்காலத்தின் வெயிலிலே பனிமேகத்தைப்போலவும் நம்முடைய வாசஸ்தலத்திலிருந்து கண்ணோக்குவோமென்கிறதாய்க் கர்த்தர் என்னுடனே சொன்னார்.

௫ ஏனென்னில் அறுப்புக்கு முன்னே பூப் பூத்துத்தீர்ந்து காய்க்கிற திராட்சக்காய்கள் பிஞ்சாயிருக்கும்போதே அவர் அரிவாள்களினாலே கட்டுக்கயிறுகளை அறுத்துக் கொடிகளையரிந்து வாங்கிப்போடுவார்.

௬ அவைகள் ஏகமாய்ப் பருவதங்களின் பட்சிகளுக்கும் பூமியின் மிருகங்களுக்கும் விடப்படும் பட்சிகள் அதின்மேற் கோடைகாலத்துக்கும் பூமியின் மிருகங்களெல்லாம் அதின்மேல் மாரிக்காலத்துக்குந் தங்கும்.

௭ அக்காலத்திலே நீண்ட கரையோரமாய்க் குடியிருக்கிறதும் உண்டானது முதற்கொண்டு கொடியதாயிருந்ததுமான சனமும் அளவிடப்பட்டதும் மிதிக்கப்பட்டதும் ஆறுகள் புரண்டு தேசத்தைப் பாழ்க்கடித்ததுமான சாதியுஞ் சேனைகளுடைய கர்த்தரின் நாமந் தங்குந்தலமாகிய சீயோன் பருவ

துத்தணடையில் * சேனைகளுடையகர்த்தருக்குக் காணிக்கையாகக் கொணடுவரபபடும. * சஙகீதம. ௬௮, ௩௨.

௰௯. அதிகாரம்.

[எகிப்தியருக்குவரும்பாழ்க்கடிப்பும அவர்களுடையகுணப்படுதலுமமுனனறிவிக்கப்பட்டது.]

எகிப்துவினுடைய பாரம * இதோ கர்த்தர் வேகமான மேகத்தினமேல ஏறி எகிப்துக்கு வருவார், அப்போது எகிப்துவின † விககிரகஙகள அவருககு முனபாக அசைநது எகிப்தியரின இருதயமஅவர்களுளளததிலேகரைநதுபோம. * எரேமி. ௪௬, ௨ முதல் ஏசே. ௨௯, ௧ முதல் ௩௰, ௧ முதல்
† ௨. மோசே. ௰௨, ௰௨.

௨ சகோதரனோடே சகோதரனுஞசிநேகிதனோடே சிநேகிதனும பட்டணததோடே பட்டணமும இராசசியத்தோடேஇராசசியமும யுத்தமபணணும்படியாய எகிப்தியரைஎகிப்தியரோடே போர்கலக்கப்பணணுவேன.

௩ அதினால எகிப்தியருடைய ஆவி அவர்களுககுள வெறுமையாகும, அவர்கள ஆலோசனையை முழுங்கிப்போகபபணணுவேன,அப்போதுவிககிரகஙகளையுமமந்திரவாதிகளையுஞ சனனதககாரர்களையுஙகுறிசொலலுகிறவர்களையுநதேடுவார்கள.

௪ ஆனால எகிப்தியரைககடினமான அதிபதிகளினகைககுள அடைபபோம க்ரூர இராசா அவர்களை யாளுவானென்றுசேனைகளினகர்த்தராகிய ஆணடவர்சொலலுகிறார்.

௫ அப்போது கடலின தணணீர்கள குறைநது நதிவறறிவறணடுபோம.

௬ ஆறுகளைவிட்டுவிடுவார்கள, அரணிப்பான அகழ்கள் குறுகிவறறிப்போம,கொறுக்கையும நாணலும வதஙகும.

௭ நதியணடையிலும நதியோரததிலுமிருக்கிறமட்டுமுளளசெடிகளும நதியருகே விதைக்கப்பட்ட யாவும உலர்நதுபோம, அதுபறக்கடிக்கப்பட்டிலலாதேபோம.

௮ மீனபிடிககிறவர்கள பெருமூசசுவிட்டு நதியிலேதூணடிலபோடுகிறயாவருந துக்கிததுத்தணணீர்களினமேல வலைகளைவீசுகிறவர்களசலிததுப்போவார்கள.

௯ மெலலிய சணலவேலைகளைசசெயது சலலாக்களைநெயகிறவர்கள நாணுவார்கள.

௰ மீனவளர்ககிற குளஙகளைககூலிக்குக் கட்டுகிற அனைவருடைய அணைககட்டுகளும நசுஙகுணடுபோம.

௰௧ சோகானபட்டணததின பிரபுககள பயித்தியகாரர்தானே, பார்வோனுடைய ஞானமுளள ஆலோசனைககாரரின ஆலோசனைமதியறறுப்போனது, நான ஞானிகளினபிளளை, நானபூருவ இராசாக்களினபுத்திரனென்றுபார்வோனுடனேஎப்படிச்சொலலுகிறீர்கள.

௰௨ இப்போதும உனனுடைய ஞானிகளஎஙகே, சேனைகளினகர்த்தர் எகிப்தினமேலேபணணினயோசனையை அவர்களுன்க்கறிவிககட்டுமே, அலலது தாஙகளே அறிநதுகொளளட்டும.

௰௩ சோகானஊர்ப்பிரபுக்களபயித்தியகாரராஞர்கள,நோப்பூர்ப்பிரபுக்களமோசமபோய, எகிப்தையும அதினகோத்திரஙகளுடைய தலைவனையும வழிதப்பப்பணணுகிறார்கள.

௰௪ * கர்த்தர் அதின்நடுவிலே மாறுபாடுகளின ஆவியையூறறினார், ஆகையால வெறித்தவன வாநதிபணணுகையிலதடுமாறித்திரிகிறதுபோலே அவர்கள எகிப்தை அதினஎலலாசசெயகையிலுந்தடுமாறித்திரியப்பணணுகிறார்கள. * ௧. இரா சாக்கள. ௨௨, ௨௧.

௰௫ * தலையும வாலும கிளையும நாணலுமெனறவர்கள செயயுமவேலை எகிப்துககு உதவாதவேலையாயிருககும. * ௯,௰௪,௰௫.

௰௬ அககாலததிலே எகிப்தியர் பெணசாதிகளைப்போலிருநது சேனைகளின கர்த்தர் தஙகளமேல அசைககுஙகையசைவுக்கு தத்தளிததருககளிப்பார்கள.

௰௭ யூதாவினதேசமஎகிப்தியருககுத்தத்தளிப்புணடாககுகிறதாயிருககும, தனககுள அதை நினைககிறவனெவலாஞ சேனைகளின கர்த்தர் தஙகளுககுவிரோதமாகத்தீர்மானித்துககொணட ஆலோசனையினிமித்தம நடுநடுஙகுவான.

௰௮ அககாலததிலேகானான பாஷையைப் பேசிசசேனைகளின கர்த்தருக்கு ஆணையிடுகிற ஐநதுபட்டணஙகள எகிப்துதேசத்திலிருககும ஒனறுதிர்மூலமான பட்டணமெனனப்படும.

௰௯ அககாலததிலே எகிப்துதேசத்தின்நடுவிலே கர்த்தருக்கொரு பீடமும அதின எலலையருகே கர்த்தருககொரு தூணும உணடாயிருககும.

௨௰ அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருககு அடையாளமுஞசாட்சியுமாயிருககும, ஏனெனில ஒடுக்குகிறவர்களினிமித்தம அவர்கள கர்த்தரை நோககிக்கூப்பிடுவார்கள, அப்போதவர்களுககொரு ரட்சகனையும ஒரு பெலவானையும அனுப்பி அவர்களைவிடுவிப்பார்.

௨௧ அப்போது கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார், எகிப்தியர் கர்த்தரை அககாலததிலேயறிநது * அவருக்குப பலிகளோடுங்காணிக்கைகளோடும ஆராதனைசெயது கர்த்தருககுப பொருத்தனைகளை

பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள்.
  * மலகி. ௧, ௰௧.

௨௨ கர்த்தர் எகிப்தியரை வாதையினாலேயடித்துக் குணமாக்குவார், அவர்கள் கர்த்தரண்டைக்கு மனந்திரும்புவார்கள். அப்போதவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டவர்களைக் குணமாக்குவார்.

௨௩ அக்காலத்திலே எகிப்திலிருந்து அசூரியாவுக்குப் போகிற பாதை யுண்டாயிருக்கும். அசூரியர் எகிப்திலும் எகிப்தியர் அசூரியாவிலும் வந்து எகிப்தியர் அசூரியரோடேகூடத் தேவாராதனை செய்வார்கள்.

௨௪ அக்காலத்திலே பூமியின் நடுவிலிருக்கும் ஆசீர்வாதத்தினாலே இஸ்ரவேல் எகிப்துவோடும் அசூரியாவோடும் மூன்றாவதாயிருக்கும்,

௨௫ அவர்களைச் சேனைகளுடைய கர்த்தர் ஆசீர்வதித்து எகிப்தியராகிய நம்முடைய சனமும் அசூரியராகிய நம்முடைய கரங்களின் கிரியையும் இஸ்ரவேலராகிய நம்முடைய சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டதென்பார்.

௨௰. அதிகாரம்.

[அசல்தேசங்களின் குடிகள் நம்பியிருந்த எத்தியோப்பியருக்கும் எகிப்தியருக்கும் வரும் ஆக்கினையின் தீர்க்கதரிசனம்.]

தர்த்தான் அசூரியாவின் இராசாவாகிய சர்கோனாலே யனுப்பப்பட்டு அஸ்தோத்துக்கு வந்து அஸ்தோத்தின்மேல் யுத்தம்பண்ணி யதைப்பிடித்த வருஷமாகிற அக்காலத்திலே, * ௨. இராசா. ௰௮, ௰௭.

௨ கர்த்தர் ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயாவைக்கொண்டு பேசி நீ போய் உன் அரையின்மேலிருக்கிற இரட்டையவிழ்த்து உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றென்றார், அப்படியேயவன் செய்து அம்மணமும் வெறுங்காலுமாய் நடந்தான்.

௩ அப்போது கர்த்தர் உரைத்ததாவது எகிப்தின் மேலும் எத்தியோப்பியாவின் மேலும் வரும் மூன்றுவருஷத்துக் காரியங்களுக்கடையாளமும் அற்புதமுமாக நம்முடைய ஊழியக்காரனாகிய ஏசாயா அம்மணமும் வெறுங்காலுமாய் நடக்கிறதுபோலே,

௪ அசூரியாவின் இராசா தான் சிறைப்பிடிக்கப்போகிற எகிப்தியரையுந் தான் குடிவிலக்கப்போகிற எத்தியோப்பியரையும் இளைஞரையுங் கிழவரையும் அம்மணமாகவும் வெறுங்காலாகவும் எகிப்தியரின் வெட்கத்துக்குத் திறந்த இருப்பிடமாகவுங் கொண்டுபோவான்.

௫ அப்போது இந்தக் கரைத்துறைக் குடிகள் தாங்கள் நம்பியிருந்த எத்தியோப்பியாவைத் தொட்டுந் தாங்கள் பெருமை பாராட்டின எகிப்துவைத் தொட்டுங் கலங்கி வெட்கி,

௬ இதோ அசூரிய இராசாவின் முகத்துக்குத் தப்பும்படிக்கு நாங்கள் நம்பிச் சகாயத்துக்கென்று ஓடிவந்து அண்டின வனிப்படியானானே நாங்களெப்படி விடுவிக்கப்படுவோமென்று அக்காலத்திலே சொல்லுவார்களென்றார்.

௨௧. அதிகாரம்.

[பாபேலின் விழுகுதல் முன்னறிவிக்கப்பட்டது.]

கடற்புறமான வனாந்தரத்தினுடைய பாரஞ்சுழல்காற்றுகள் தெற்குத் தேசத்திலெழும்பிக் கடந்துவரும்போலே பயங்கரமான தேசமாகிய வனாந்தரத்திலிருந்து வருகிறது.

௨ கடின தரிசனமெனக்கு அறிவிக்கப்பட்டது, துரோகி துரோகம்பண்ணிப் பாழ்க்கடிக்கிறவன் பாழ்க்கடித்துக்கொண்டேயிருக்கிறான், பெர்சியனே எழும்பு, மேதியனே முற்றிக்கைபோடு அதினாலுண்டான தவிப்பையெல்லாம் ஓயப்பண்ணுகிறோம்.

௩ ஆகையால் என்னிடுப்பு மகாவேதனையால் நிறைந்திருக்கிறது பிள்ளைபெறுகிறவளின் வாதைகளுக்கொத்த வாதைகள் என்னைப்பிடித்தது கேட்கிறதினாலே மடங்கிக் காண்கிறதினாலே கலங்குகிறேன்.

௪ என்னிருதயந் திகைக்கிறது, திகில் என்னைத் திடுக்கிடப்பண்ணுகிறது * அதென்குவிருப்பமான இராவிருளையெனக்கு நடுக்கமுள்ளதாக்கிறது. * தானி. ரு, ௧—௬.

௫ பந்தியை யாயத்தம் பண்ணுதலும் சாமங்காக்குதலும் போசித்துக் குடிக்குதலுமுண்டு, பிரபுக்களேயெழுந்து பரிசைகளைப் பூசுங்கள்.

௬ ஏனெனில் ஆண்டவர் என்னுடனே நீ போய்க் காண்பதையறிவிக்குஞ் சாமக்காரனை வையென்றார்.

௭ அவன் சோடு சோடாகக் குதிரைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஏறிவருகிறவர்களைக் கண்டு மிகுந்த கவனமாய்க் கவனித்துக்கொண்டேயிருந்து,

௮ ஆண்டவரே, நானென் காவலிலே பகல்முழுதும் நின்று நான் இராக்காலங்கள் முழுதும் என் சாமத்திலே தரித்திருக்கிறேனென்று சிங்கசத்தமாய்க் கூப்பிடுகிறான்.

௯ இப்போதும் இதோ ஒருசோடு குதிரைபூண்ட இரதத்தின்மேலேறியிருக்கிற ஒருமனுஷன் வந்து * பாபேல் விழுந்தது விழுந்தது. அதின் விக்கிரகத் தேவர்களையெல்லாந் தரையோடே மோதி யுடைத்தாரெ

று பிரத்தியுத்தாரமாகச்சொலலுகிறன.
* எரே. ௫௧, ௮. அறிவிப். ௰௪, ௮. ௰௮, ௨.

௰ என போரடித்ததானியமே என களத்தினகோதுமையே, இஸரவேலின பராபரனாகிய சேனைகளுடைய கர்த்தராலே நான கேள்வியானதை யுஙகளுககறிவித்தேன.

ஏதோநதேசத்துககும அராபியதேசத்துககும கேடுவருவதெனபது.

௰௧ தூமாவினுடையபாரம். சேயீரிலிருநது எனனைநோககிச சாமஙகாக்கிறவனே இராத்திரியிலே நடநத செயதியெனன, சாமஙகாககிறவனே இரவுபோகிற செயதியெனனவென்று கூபபிடுகிறர்கள.

௰௨ விடியற்காலம வநதிருநதும இராவாயிருககிறது, நீஙகள கேட்கமனதானால திருமபிவநது கேளுஙகளெனறு சாமஙகாககிறவன சொலலுகிறன.

௰௩ அராபியாவினமேற் சுமருமபாரம. தெதானியராகிய பயணக கூட்டஙகளே, அராபியாவில இராத்தஙகுவீர்கள.

௰௪ தேமததேசத்தின குடிகளே, நீஙகள் தாகமாயிருககிறவர்களுககுத் தணணீரை யெதிராகக்கொணடுபோய வலசைவருகிறவர்களுககு அவர்களுடைய அபபத்தைக கொடுககநேரிட்டுபோஙகள.

௰௫ ஏனெனறால் பட்டையஙகளுககும உருவினபட்டையத்துககும நாணேறின விலலுககுஙகன உயுத்தத்துககுநதபபவலசைவருகிறர்கள.

௰௬ ஏனெனில * ஆணடவர் எனனுடனேசொனனதாவது, ஒரு கூலிககாரனின வருஷஙகளைபபோலொத்த ஒரேவருஷத்திலே கேதாருடைய மகிமையெலலாம அறறுபபோம, * ௰௯, ௰௬.

௰௭ கேதார் புத்திரருடையபலத்தவிலலுககாரரின தொகையில மீதியாமவர்கள கொஞசபபேராயிருபபார்களெனறர் இதை இஸரவேலின பராபரனாகிய கர்த்தர் உரைத்தார்.

௨௨. அதிகாரம்.

[எருசலேமுடைய அழிவின தீர்க்கதரிசனம.]

௧ தரிசனபபள்ளத்தாக்கினபாரம. உனனிலுளளவர்களெலலாரும வீடுகளினமேலேறுவதற்கு உனககு இபபோவநததெனன.

௨ களிகூர்நதிருநதபட்டணமே நீ அமளிகளால் நிறைநது கலஙகின ஊராளுய உனனிற்கொலையுணடவர்கள பட்டயத்தாற்கொலையுணடதிலலை உயுத்தத்திற்செத்ததுமிலலை.

௩ உன அதிபதிகளெலலாரும ஏகமாயோடியலைநதுவிலலுக்காரராற் கட்டுணகிறர்கள, உனனில் அகபபட்டயாவரும தூரத்துககோடியும ஏகமாய்க் கட்டுணடிருர்கள.

௪ ஆகையால எனனைவிட்டுக்கணணைத் திருபபுஙகள,* மனஙகசநதழுவேன, எனசனமாகிய குமாரத்தியினுடைய பாழாதவினிமித்தம எனக்காறுதலைசசொலலுஙகாதேயுஙகளெனகிறேன. * எரேம். ௯, ௧.

௫ ஏனென்றால் சேனைகளின கர்த்தராகிய ஆணடவராலே தரிசனப்பள்ளத்தாக்கிலே அமளியும மிதியுணகுதலுங கலக்கமுமான நாளாயிருககிறது, அலஙகத்தைத் தகர்த்தப பருவதத்துககுநேரேயார்பபரிககும நாள் தானே.

௬ பெர்சியன அமபிராத்தூணியைபபிடித்து இரதஙகளோடும மனுஷரோடும குதிரைவீரரோடும வருகிறன, அவஙகள் கேடயஙகள் அறறுபபோம.

௭ மகாவடிவான உனபளளத்தாக்குகள இரதங்களால் நிறையபபடுவதுமனறி, குதிரைக்காரரை வாசலகளமட்டும நிறுத்துவார்கள.

௮ அவன யூதாவினமறைவைவாஙகிப போடுவான, அந்நாளிலே காட்டுமாளிகையின ஆயுதசசாலையைநோககுவாய.

௯ நீஙகள தாவீதுடையபட்டணத்தின இடிதலகளை மிகுதியானவைகளெனறு கண்டு கீழ்க்குளத்தணணீர்களைசசேர்த்து,

௰ எருசலேமின வீடுகளையெணணிக் கொத்தளத்தையரணிப்பாக்குமபடிககு வீடுகளை இடித்து,

௰௧ இரணடுமதிலகளுககுநடுவேபழைய குளத்தணணீர்களுககொரு அகழ்வெட்டுவீர்கள, ஆனால அதைசசெய்தவரை நீஙகள நோககாமலும அதைபபூர்வ காலத்திருநது வரப்பணணினவரைக் கவனிக்காமலும போவீர்கள.

௰௨ சேனைகளுடைய கர்த்தராகிய ஆணடவர் அக்காலத்திலே அழுகையையும புலமபலையுமமொட்டையிடுதலையும இரட்டுக்கட்டுதலையுமவரவழைபபார்.

௰௩ இபபோதோவெனில இதோ சந்தோஷமும களிபபும மாடுகளைக்கொனறதும ஆடுகளையடிககிறதும இறைசசியைச் சாப்பிடுகிறதும மதுபானத்தைக்குடிக்கிறதும பொசித்துக்குடிப்போம நாளைச்சாகிறோமெனறு சொலலுகிறதும் உண்டு. * ௧. கொரிந்தர். ௰௫, ௩௨.

௰௪ அதுசேனைகளின கர்த்தராகிய என்னுடைய செவிகளுககு வெளியரஙகமாககிறது, மெயயாகவே நீஙகள சாகுமட்டும இநத அககிரமம உஙகளுககு நிவிர்த்திபணணப படுவதிலலையெனறு சேனைகளின கர்த்தராகிய ஆணடவர்சொலலுகிறர்.

சேட்ஙுவென்ற பொல்லாத மந்திரியின் விழுகுதல் அவனுக்கு முன்னறிவிக்கப்பட்டது.

௰௫ சேனைகளுடைய கர்த்தராகிய ஆண்டவர் உரைத்ததாவது, நீ வீட்டுவிசாரிப்புள்ள இந்தப் பொக்கிஷக்காரனாகிய சேட்னுவண்டைக்குப் போய்ச் சொல்லவேண்டியதேதெனில்,

௰௬ தன் கல்லறையை உயர்ந்த ஸ்தலத்திலே வெட்டிக் கன்மலையிலே தனக்கு வாசஸ்தலத்தைத் தோண்டுகிறவனைப்போலே நீ உனக்கிங்கே கல்லறையை வெட்டும்படிக்கு உனக்கிங்கேயிருப்பதென்ன? அல்லது உனக்கிங்கேயிருப்பவர்களார்.

௰௭ இதோ பலவான் ஒருவனைத் துரத்துகிறவண்ணமாகக் கர்த்தர் உன்னைத் துரத்திவிட்டு உன்னை மூடவே மூடுவார்.

௰௮ ஒருவன் ஒரு உண்டையை உருட்டுமாப்போலே உன்னை அகலமும் விசாலமுமான தேசத்திலே உருட்டவே உருட்டுவார், அங்கே சாவாய், அங்கே உன் மகிமையின் இரதங்கள் உன் ஆண்டவனின் வீட்டுக்கு இகழ்ச்சியாகவிருக்கும்.

௰௯ உன்னை உன் நிலையைவிட்டுப் பறக்கடிப்போம், உன் தானத்திலிருந்து உன்னைப் பிடுங்கிப்போடுவான்.

௨௰ அந்நாளிலே சம்பவிப்பதாவது, * இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீமென்ற நமது ஊழியக்காரனை நாம் அழைத்து, * ௩௬, ௩.

௨௰௧ உன் வஸ்திரத்தை அவனுக்குடுத்தி உன் கச்சையால் அவனைத் திடப்படுத்தி உன் அதிகாரத்தை அவன் கையிலே கொடுப்போம், அவன் எருசலேமின் குடிகளுக்கும் யூதாவின் வீட்டுக்குந் தகப்பனாயிருப்பான்.

௨௰௨ தாவீதுடைய வீட்டின் திறவுகோலை அவன் தோளின்மேல் வைப்போம் அவன் * திறக்கும்போது ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறந்து ஒருத்தரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுவான்.

* அறிவி. ௩, ௭.

௨௰௩ அவனை உறுதியான இடத்திலே ஆணியாகக் கடாவுவோம், அவன் தன் தகப்பன் வீட்டுக்குக் கனமான ஆசனமாக இருப்பான்.

௨௰௪ அதின்மேல் அவன் தகப்பனின் வீட்டாராகிய பிள்ளைகள் பேரமார்களுடைய மகிமையனைத்தையும் குடிக்கிற பாத்திரங்கள் முதற்கொண்டு சகல தம்புருமட்டுமிருக்கிற சகல சிறு பாத்திரங்களையுந் தூக்கப்போடுவார்கள்.

௨௰௫ உறுதியான இடத்திற் கடாவப்பட்டிருந்த ஆணி அந்நாளிலே பிடுங்கப்பட்டு வெட்டுண்டு விழும், அப்போது அதின்மேலிருந்த சுமை அறுந்துபோகுமென்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார், இதைக் கர்த்தரே உரைக்கிறோமென்று சொல்லென்றார்.

௨௰௩. அதிகாரம்.

[தீரு பட்டணம் பாழாகி எழுபது வருஷத்துக்குப்பிறபாடு திரும்பக் கட்டப்பட்டுச் சுவிசேஷத்தின் ஆசீர்வாதத்துக்குட்படுகுளளதாகுமென்பது.]

தீருவினுடைய பாரம. தர்சீஸ் கப்பல்களின் மனுஷரே அலறுங்கள், அது வீடில்லாமலும் வருவாரில்லாமலும் மடிக்குப் பாழாக்கப்பட்டது, கித்தீம் தேசத்திலிருந்து இந்தச்செய்திவந்து அவர்களுக்கு வெளிப்படுகிறது. * எரே. ௪௭, ௨. யெசு ௪௮, ௨. யெசு ௨௭, ௩. யெசு ௪௧. ௯, ௨—௪.

௨ தீவுக்குடிகளே மவுனமாகுங்கள் சீதோனின் வர்த்தகர் சமுத்திரத்திலே யாத்திரைபண்ணி உன்னை நிரப்பினார்கள்.

௩ சீகோர் நதியின் மிகுந்த நீர்ப்பாய்ச்சலினால் விளையும் பயிர்வகைகளும் ஆறுகளையின் அறுப்பும் உன் வரத்தாயிருந்தது. நீ சாதிகளின் சந்தையாயிருந்தாய்.

௪ சீதோனே வெட்கப்படு, ஏனெனில் நான் இனிக் கர்ப்பவேதனைப்படுகிறதுமில்லை பெறுகிறதுமில்லை, இளைஞரை ஆளாக்குகிறதுமில்லை, கன்னியாஸ்திரிகளை வளர்க்கிறதுமில்லையென்று சமுத்திரக்கோட்டையான கடல்துறை சொல்லுகிறது.

௫ எகிப்தின் செய்திகேட்கப்பட்டதினாலே நோயுண்டானதுபோலே தீருவின் செய்தி கேட்கப்படுவதாலும் உண்டாம்.

௬ கரைத்துறைக்குடிகளே நீங்கள் தர்சீஸ்மட்டும் புறப்பட்டுப்போய் அலறுங்கள்.

௭ பூருவநாள்கள் முதல் துவக்கங்கொண்டு களிகூர்ந்திருந்த உங்கள் பட்டணம் இதுவோ பரதேசம்போக இதின்குடிகளுடைய கால்கள் இவர்களைத் தூரமாய்க்கொண்டுபோம்.

௮ கிரீடந்தரித்துக்கொண்டிருக்கிற தீருவுக்கு விரோதமாக இதையோசித்துத் தீர்த்தவரார், * அதின் வர்த்தகர் பிரபுக்களும் அதின் வியாபாரிகள் தேசத்திற் கனமுள்ளவர்களுமாமே.

௯ எல்லாச் சிறப்பின் அகந்தையைக் குலைத்துத் தேசத்திலே கனமுள்ள யாவரையுங் கனவீனமாக்குவதற்காகச் சேனைகளின் கர்த்தரே இதையோசித்துத் தீர்த்தார்.

௰ தர்சீசின் குமாரத்தியே ஒரு ஆற்றைக் கடக்குமாப்போலே உன் தேசத்தைக் கடந்துபோ, கட்டுங்கச்சை இனியில்லை.

௰௧ தமது கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டி இராச்சியங்களைக் குலுங்கப்பண்ணுகிறார், கானானின் அரண்களையழிக்கக் கர்

ர்த்தர் அதற்கு விரோதமாகக் கட்டளைகொடுத்தது,

௧௨ ஒடுக்கப்பட்ட கன்னியாகிய சீதோன் குமாரத்தியே இனிக் களிகூர்ந்துகொண்டிராய், எழுந்திருந்து கித்தீமுக்குப் புறப்பட்டுப்போ, அங்கேயும் உனக்கு இளைப்பாறுதலில்லையென்றார்.

௧௩ அதோ கல்தேயருடைய தேசம், அந்த ஜனம் முன்னிருந்ததில்லை, அசூர் என்றவன் வனாந்தரத்தாருக்காக அதின் அஸ்திபாரத்தைப் போட்டான், இப்படித் தங்கள் துருக்கங்களையெழுப்பித் தங்கள் அரண்மனைகளைக் கட்டினார்கள், அழிவுசெய்ய அதையே குறித்தார்.

௧௪ தர்சீஸ் கப்பல்களின் மனுஷரே, அலறுங்கள், ஏனெனில் உங்கள் அரண் பாழாக்கப்பட்டது.

௧௫ அக்காலத்திலே சம்பவிப்பதேதென்றால் தீரு ஒரு இராசாவுடைய நாள்களின்படி எழுபது வருஷம் மறக்கப்பட்டிருக்கும், ஆனால் எழுபது வருஷங்களின் முடிவிலே தீருவின் சம்மதி ஒரு வேசியின் பாட்டுக்குச் சமானமாயிருக்கும்.

௧௬ மறக்கப்பட்ட வேசியே, சுரமண்டலத்தையெடுத்து ஊரிலே சுற்றித்திரி, நீ நினைக்கப்படும்படிக்கு அதை நன்றாய் வாசித்து மெத்தவும் பாடு.

௧௭ ஏனென்றால் சம்பவிப்பதேதென்றால் எழுபது வருஷங்களின் முடிவிலே கர்த்தர் தீருவைச் சந்திப்பார், அப்போது தன் பணயத்துக்குத் திரும்பி வந்து பூச்சக்கரத்தின்மேலுள்ள பூமியின் இராச்சியங்களோடெல்லாம் வேசித்தனம் பண்ணும்.

௧௮ அதின் வியாபாரமும் அதின் பணயமும் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும், அது பொக்கிஷமாய்ச் சேர்க்கப்படுவதுமில்லை அடைத்து வைக்கப்படுவதுமில்லை, கர்த்தருக்கு முன்பாக வாசமாயிருக்கிறவர்கள் திருத்தியாகச் சாப்பிடத்தக்கதாகவும் அவர்களுக்கு உரப்பான வஸ்திரத்தரிப்புண்டாகவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும்.

௨௪. அதிகாரம்.

[துரோகிகளான யூதருடைய தேசம் பாழாவதும் யூதசாதியிலும் புறசாதிகளிலுமிருக்கும் விசுவாசிகள் கர்த்தரைத் தோத்திரிப்பதும்.]

இதோ கர்த்தர் தேசத்தை வெறுமையும் பாழுமாக்கி அதின் ரூபை மாறுபாடாக்கிப்போட்டு அதின் குடிகளைச் சிதறடிப்பார்.

௨ அப்போது * சனத்துக்கும் ஆசாரியனுக்கும் வேலைக்காரனுக்கும் அவன் எசமானுக்கும் வேலைக்காரிக்கும் அவள் நாச்சியாருக்கும் † கொண்டவனுக்கும் விற்றவனுக்கும் கடன்கொடுத்தவனுக்கும் கடன்வாங்கினவனுக்கும் வட்டிவாங்கினவனுக்கும் வட்டி கொடுத்தவனுக்கும் சரியாக நடக்கும். * ஓசே. ௪, ௯. † எசேக். ௭, ௧௨. ௧௩.

௩ தேசம் முழுதும் வெறுமையாய் முழுதுங் கொள்ளையாகும், ஏனெனில் கர்த்தர் இந்த வார்த்தையைச் சொன்னார்.

௪ தேசம் புலம்பி வதங்கும், பூமிச்சக்கரம் மறுகி வதங்கிப்போகும், தேசத்து சனத்தில் உயர்ந்தவர்கள் பெலவீனராவார்கள்.

௫ பூமி தன் குடிகளின் கீழ்த் தீட்டுப்பட்டிருக்கிறது, ஏனெனில் நியாயப்பிரமாணங்களை மீறிக் கட்டளையை மாறுபாடாக்கி நித்திய உடம்படிக்கையை முறித்தார்கள்.

௬ இதினிமித்தமே தேசத்தின் குடிகள் பாழ்க்கடிக்கப்படத்தக்கவர்களாய்ச் சாபந் தேசத்தைப் பட்சிக்கும், இதினிமித்தம் கொஞ்சம் பேர் மீதியாகத் தக்கவர்களாய்த் * தேசத்தின் குடிகள் வெந்துபோவார்கள்.
* ௯, ௧௮ ௰, ௧௯.

௭ திராட்சப்பழரசந் துக்கங்கொண்டாடும், திராட்சச்செடி வதங்கும், மனக்களிப்பாயிருந்தவர்களெல்லாரும் பெருமூச்சுவிடுவார்கள்.

௮ * மேளங்களின் சந்தோஷம் ஒழிந்து, களிகூருகிறவர்களின் சத்தமடங்கிச் சுரமண்டலக்களிப்பு நின்றுபோம்.
* எரே. ௭, ௩௪. ௧௬, ௯. ௨௫, ௰.

௯ பாட்டோடே திராட்சப்பழரசங் குடியார்கள், மதுபானந் தன்னைக் குடிக்கிறவர்களுக்குக் கசக்கும்.

௰ வெறுமையாய்ப்போன பட்டணந் தகர்ந்தது உள்ளே பிரவேசிக்கக்கூடாதபடிக்கு எல்லா வீடுகளும் அடைபட்டுக்கிடக்கும்.

௧௧ கொடிமுந்திரிகை இரசத்துக்கென்று வீதிகளிலே கூக்குரலுண்டு, எல்லாச் சந்தோஷமும் இருண்டு தேசத்தின் மகிழ்ச்சி போய்விடும்.

௧௨ பட்டணத்தில் மீதியாயிருப்பது அழிவு, வாசல்கள் பாழாய்க் கிடக்க இடிக்கப்படும்.

௧௩ ஆனால் ஒலிவமரத்தை உலுக்கின் போது கொழுந்திரிகைப்பழங்களை அறுத்துத் தீர்ந்த பின் அப்புக்கொஞ்சமிருக்கும் அப்படிப் போலே தேசத்துக்குள்ளும் இந்தச் சனங்களின் நடுவிலுமிருக்கும்.

௧௪ இவர்கள் தங்கள் சத்தத்தையுயர்த்திக் கெம்பீரிப்பார்கள், சமுத்திரத்திலிருந்து கர்த்தருடைய மகிமையினிமித்தம் ஆர்ப்பரிப்பார்கள்.

௧௫ ஆகையால் கர்த்தரைக் கெம்பீரித்து இஸ்ரவேலுடைய பராபரனாகிய கர்த்தர்

ன் நாமத்தைச்சமுத்திரத்தீவுகளிலும மகிமைபபடுத்துவகள.

௰கசு நீதிபரனுக்கு மகிமையென்றுபூமியின கடையாந்தரத்திலிருநதுபாடுங்கீதங்களைக்கேட்கிறோம, நானோவெனில இளைத்திருக்கிறேனஇளைத்திருக்கிறேன, எனக்கையோ, துரோகிகள துரோகமபணணுகிறார்கள, துரோகிகள மிகுதியாயத்துரோகமபணணுகிறார்களெனகிறேன.

௰எ தேசககுடிகளே, * திகிலுமபடுகுழியுமகணணியும உஙகளுக்குவரும. * எரே. சஅ, சங. சச.

௰அ சமபவிப்பதேதெனறால, திகிலின சத்தத்தைவிலக ஓடுகிறவன * படுகுழியிலே விழுவான, படுகுழியிலிருநதேறுகிறவனகணணியிலேபிடிபடுவான, ஏனெனில உயரவிருக்கும் மதகுகள் திறவுணடு பூமியினஅஸ்திபாரஙகளகுலுஙகும. * ஆமோ. ரு, ௰௯.

௰௯ தேசமநொறுஙகவேநொறுஙகும, தேசங்கிழியவேகிழியும, தேசம அசையவே அசையும.

உ௰ வெறித்தவனைப்போலத்தேசநதளளமபவேதளமபிஒருகுடிசையைப்போலேபெயர்ந்துபோடப்படடுமஅதினபாதகமஅதினமேலே பாரமாயிருக்கையால அது அப்புறமெழுந்திருக்காமலவிழுநதுபோம.

சனையினசத்துருக்கள்மேலிறங்குமஆக்கினைபுருசனைக்குணடாகும மகிமையும.

உக அக்காலத்திற் சமபவிப்பதேதெனில கர்த்தர் உயரவிருக்கிறஉயரமானசேனையையும்பூமியினமேலிருக்கிற பூமியினஇராசாக்களையுமவிசாரிப்பார்.

உஉ அவர்களகெவியிலேகமாயக் கட்டப்படடவர்களாகச்சேர்ந்து காவலிலஅடைக்கப்படடு அநேகநாட்செனறபிற்பாடுவிசாரிக்கப்படுவார்கள.

உங அப்போது சேனைகளின கர்த்தர் சீயோன் பருவதத்திலும எருசலேமிலும அரசாளுகையால * சநதிரன நாணிச் சூரியன நாசமணடையும, அவருடையமூப்பர்களுக்குமுனபாக மகிமையுணடாயிருக்கும.

* ௰௬, ௰. யோவே. ௩, சரு. ஆக்கா. உக, உ௩.

உரு. அதிகாரம.

[கர்த்தர்விசேஷித்ததுஇரட்சித்ததினிமித்தமஅவருக்குச்செலுத்துநதோத்திரம.]

கர்த்தாவே தேவரீரேன பராபரனுமாயிருக்கிறீர், உமமையுயர்த்தி உமது நாமத்தைத்துதிப்பேன, ஏனெனில அதிசயஙகளைச்செய்தீர், உமமுடைய தூரத்துயோசனைகள சத்தியமும உறுதியுமானவைகள.

உ ஏனெனிற *படடணத்தை மணமேடும அரணானபுரியையிடிநதுகிடககிற அழிவும அனனியரின அரணமனையை ஊரல்லாத்தும எனறைககுங கடடப்படாத்துமான தலமுமாக்கிப்போடடீர். * உச,௯. உக, ௰௩. அறிவி. ௰ச, அ. ௰அ, உ.

௩ ஆகையாற் பலத்தசனம உமமை மகிமைப்படுத்தி பலவந்தரான சாதிகளின படடணஙகள உமக்குப்பயப்படும.

ச ஏனெனிற் டலவநதரின சீறல மதிலை மோதியடிக்கிற பெருவெள்ளத்தைப்போலிருக்கையில் நீர் நீசனுக்குப்பலனும நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும * பெருவெள்ளத்துக்குத் தப்பும அடைக்கலமுமவெயிலுக்கொதுங்குமநிழலுமானீர். * ச, ௬.

ரு அனனியரின முமமரம வறட்சியான இடத்தின காஙகையைப்போலிருக்கையில அதைத் தணியப்பணணுகிறீர், மேகத்தின நிழலினால வெயில்தாழுமாபபோலே பலவநதரினகூவுதல தாழ்ததப்படும.

௬ எலலாச்சனசத்தளஙகளுக்குச் சேனைகளையுடையகர்த்தர் இநதப்பருவதத்திலே ஊனகளுடையகொழுப்புகளாகிய * கொழுப்புகளின விருநதையுந தெளிவாக்கப்படட திவிதிராட்சப்பழஇரசஙகளினவிருநதையுமபணணி, * மத். உஉ, ௨. ஆக்கா. ௰ச, ௰௬. ௰எ.

எ எலலாச்சனசத்தளஙகள்மேலுளளமுக்காட்டையுமஎலலாச்சாதிகளையுமமூடியிருக்கிற மூடலையும இநதப்பருவதத்திலே விழுஙகுவார்.

அ * அவர்மரணத்தைச்செயமாகவிழுஙகுவார், கர்த்தராகிய பராபரன † எல்லாமுகஙகளிலுமுளள கணணீரை அறத்துடைத்துத் தமது சனத்தினநிநதையைப்பூமியெஙகுமிராதபடிக்குநீக்கிப்போடுவார், ஏனெனில் கர்த்தர் இதைச்சொனனார்.

* க. கொரி. ௰ரு, ருச. ரு. உ. திமோ. க, ௰. † அறிவி. எ, ௰எ.

௯ இதோ நமமுடையபராபரன இவர்தானே, இவர் நமமையிரட்சிக்கிறார், இவரே நாம்காத்திருநதகர்த்தர், அவருடைய இரட்சிப்பினால்களிகூர்ந்துமகிழுவோமாகவெனறு அக்காலத்திலேசொலலப்படும.

௰ ஏனெனிற் கர்த்தருடையகரம இநதப்பருவதத்திலே தஙகிக்கொணடிருக்கும, மோவாபபோவெனில வைக்கோலனகூளம எரு நிலத்திலே மிதிக்கப்படுமாபபோலே அவர்கீழேமிதிக்கப்படும.

௰௧ நீநதுகிறவன் நீநதுவதற்காகக்கைகளைவிரிக்குமாபபோலே அவர் தமதுகைகளைஅவர்கள்நடுவிலேவிரிதது அவர்களபெருமையையும அவர்களகைகளினசதிசற்பனைகளையுங்கூடத்தாழ்ததிப்போடடு,

௰௨ உன் மதில்களுடைய உயர்ந்த அரணைப் பணிவாக்கித் தாழ்த்தித் தரையிலே தூளாக அழிப்பார்.

உ௬. அதிகாரம்.

[சபை தோத்திரமும் நம்பிக்கையுமாய்ச் செய்கிற விண்ணப்பம்.]

௧ அக்காலத்திலே யூதேசத்திற் பாடப்படும் பாட்டாவது, * பலமுள்ள பட்டணம் நமக்கிருக்கிறது, இரட்சிப்பையே மதில்களும் அரணுமாக்கினார். * சங்கீ. ௪௬, ௫. ௯. ௮௭, ௧. ௱௨௫, ௨. வாக்கி. ௰௮, ௰. மத்தே. ௰௬, ௰௮.

௨ உண்மையைக் கைக்கொண்டிருக்கிற நீதியுள்ள சாதி உள்ளே பிரவேசிப்பதற்காக * வாசல்களைத் திறவுங்கள். * சங்கீ. ௱௰௮, ௰௯. ௨௰.

௩ சமாதானத்தைச் சமாதானத்தையே காப்பீரென்கிற ஊன்றப்பட்ட நினைவாயிருக்கிறது, ஏனெனில் உம்மை நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

௪ என்றென்றைக்குங் கர்த்தரை நம்புங்கள், ஏனெனிற் கர்த்தராகிய பராபரனுக்குள்ளே நித்திய கன்மலையின் உறுதியிருக்கும்.

௫ ஏனென்றால் அவர் * உயரத்திலே வாசமாயிருக்கிறவர்களையும் உயர்ந்த பட்டணத்தையும் பணிவாக்கி அதைத் தாழ்த்துவார், அவர் அதைத் தரைமட்டாகத் தாழ்த்தி, அது மண்ணுக்குமட்டும் இடியப்பண்ணுவார். * உ௫, ௨.

௬ கால்கள் அதை மிதிக்கும், சிறுமையானவர்களின் கால்களும் நீசரின் அடிகளுந்தானே.

௭ நீதிமானுடைய பாதை மகா செம்மையாயிருக்கிறது, நீதிமானுடைய நடையைச் செம்மையாக நிறுத்துகிறீர்.

௮ கர்த்தாவே உம்முடைய நியாயத்தீர்ப்புகளின் பாதையிலே உமக்குக் காத்திருக்கிறோம், உமது நாமமும் உமது நினைப்பும் ஆத்துமாவின் வாஞ்சையாயிருக்கிறது.

௯ என் ஆத்துமா இராவிலே உம்மை வாஞ்சிக்கிறது, எனக்குள்ளிருக்கிற என்னாவியினாலே அதிகாலத்திலும் உம்மைத் தேடுகிறேன், ஏனெனில் உம்முடைய நியாயத்தீர்ப்புகள் தேசத்தில் நடக்கும்போது பூச்சக்கரக் குடிகள் நீதியைப் படிக்கிறார்கள்.

௰ ஆகாதவனுக்குக் கிருபை செய்யப்பட்டாலும் நீதியைப் படியான், நல்ல நிதானமான தேசத்திலும் முதலாய் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதே போகிறான்.

௰௧ கர்த்தாவே உமது கரம் உயர்ந்திருந்தாலும் அதைக் காணாதிருக்கிறார்கள், ஆனாற் சனத்துக்காக உமக்கிருக்கும் பட்சவயிராக்கியத்தைக் கண்டு வெட்குவார்கள், அக்கினி உம்முடைய சத்துருக்களைப் பட்சிக்கும்.

௰௨ கர்த்தாவே எங்களுக்குச் சமாதானத்தைக் கட்டளையிடுவீர், ஏனெனில் எங்கள் எல்லாவேலைகளையும் எங்களுக்காக நடத்திவருகிறீரே.

௰௩ எங்கள் பராபரனாகிய கர்த்தாவே, உம்மையல்லாத ஆண்டவமார் எங்களை ஆண்டார்கள், ஆனால் உம்மைமாத்திரஞ் சேர்ந்து உம்முடைய நாமத்தை நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

௰௪ செத்தவர்கள் உயிர்க்கத் திரும்பார்கள், மாண்ட இராட்சதர் திரும்ப எழுந்திரார்கள், அப்படி நீர் அவர்களை விசாரித்துச் சங்கரித்து அவர்கள் பேரையெல்லாம் அழியப்பண்ணினீர்.

௰௫ இந்தச் சாதியோடே கூட்டினீர், கர்த்தாவே இந்தச் சாதியோடே கூட்டி மகிமைப்பட்டீர். பூமியின் எல்லாக் கடையாந்தரங்கள்மட்டும் வரத் தேடினீரே.

௰௬ கர்த்தாவே, * நெருக்கத்திலே உம்மைத் தேடுகிறார்கள், உம்முடைய தண்டனை யவர்கள்மேலிருக்கையில் அந்தரங்க வேண்டுதலை யூற்றுகிறார்கள். * சங்கீ. ௰௮, ௭. ௭௭, ௪.

௰௭ கர்த்தாவே, பேறுகாலஞ் சமீபித்திருக்கையில் வேதனைப்பட்டுத் தன் வாதைகளிலே கூப்பிடுகிற கர்ப்பவதியைப் போலே உமக்குமுன்பாக விருக்கிறோம். * யோவான். ௰௬, ௨௧.

௰௮ * நாங்கள் கர்ப்பமாயிருந்து வாதைப்பட்டுக் காற்றைப் பெற்றவர்கள் போலிருக்கிறோம், தேசத்துக்கு இரட்சிப்பு செய்யமாட்டாதிருக்கிறோம், பூச்சக்கரக் குடிகள் விழுகிறதுமில்லை. மீக். ௪, ௯, ௰. அறிவி. ௰௨, ௧, ௨.

௰௯ மரித்த உம்முடையவர்கள் என் பிரேதத்தோடுங்கூடப் பிழைத்து எழுந்திருப்பார்கள், மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள், ஏனென்றால் உம்முடைய பனி பூண்டுகளின் பனியைப்போலிருக்கும், ஆனால் இராட்சதரைப் பூமி தள்ளிப்போடும். * அறிவி. ௨௰, ௧௩.

௨௰ என் சனமே நீ போய் உன் அறைகளுக்குள்ளே பிரவேசித்து, * உனக்குப் பின்னாக உன் கதவுகளைப் பூட்டிச் சினங்கடந்துபோகுமட்டுங் கொஞ்ச நிமிஷம் ஒளிந்துக்கொள். * ௧. மோசே. ௭, ௰௬. ௨. மோசே. ௰௨, ௨௨. ௨௩.

௨௧ ஏனெனில் இதோ பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தினிமித்தம் அவர்களை விசாரிக்கும்படிக்கு * கர்த்தர் தம்முடைய தானத்திலிருந்து புறப்படு

அப்போது பூமி தன் இரத்தப்பழிகளைக் கிறந்து காண்பிக்கும், தன்னிலே கொலைசெய்யப்பட்டவர்களை யினிமூடாதிருக்கும்.

* மீகா. ௧, ௩—௫.

உ௭. அதிகாரம்.

[சத்துருக்களின் கைக்கு நீங்கிவிடுதலையான பின் சபையடையும் நற்சீர்.]

அக்காலத்திலே கர்த்தர் * நீண்டபாம்பாகிய துஷ்டமிருகத்தையுங் கோணலான பாம்பாகிய துஷ்டமிருகத்தையுங் கடினமும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் விசாரித்துச் சமுத்திரத்திலிருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்றுபோடுவார்.

* அறிவிப்பு. ௰௨. ௯ ௰௯. ௨௰. ௨௧.

௨ அக்காலத்திலே நல்ல திராட்சப்பழரசத்தைத் தருந் திராட்சத்தோட்டமுண்டாயிருக்கும், அதின்பேரிலே யொன்றுக்கொன்று பாடுங்கள்.

௩ கர்த்தராகிய நாம் அதைக் காத்து அடிக்கடி தண்ணீர்பாய்ச்சி ஆரும் அதைச் சேதப்படுத்தாதபடிக்கு அதை இரவும்பகலுங் காப்பாற்றுவோம்.

௪ உக்கிரம் நமக்கில்லை. ஆராகிலும் முள்ளுச்செடியும் நெரிஞ்சிலுமாய் நம்மோடே யுத்தத்துக்குப்பட்டானேயானால் நாம் அதின்மேல்வந்து அதை யேகமாய்க்கொளுத்திப்போடுவோம்.

௫ அல்லவென்றால் அவன் நம்முடைய பெலனைப்பற்றிக்கொண்டு நம்மோடே ஒப்புரவாகவேண்டும், நம்மோடே ஒப்புரவாகவேண்டும்.

௬ யாக்கோபு வேர்பற்றி இஸ்ரவேல் * பூத்துக்காய்த்துப் பூச்சக்கரத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள்வரும். * சங்கீ. ௭௨, ௰௬.

௭ அவர் அவனையடித்தும் அடியாய் இவனையடிக்கிறாரோ அவர்கள் கொல்லப்படுங் கொலையாய் இவன் கொல்லப்படுகிறானோ.

௮ தேவரீர் ஜனத்தைத் துரத்திவிடுகையில் * மட்டாய் அதனோடே வழக்காடினீர், கொண்டற்காற்றடிக்கிற நாளிலே தம்முடைய பலத்தகாற்றினால் அதை விலக்கிப்போடுகிறார். * எரே. ௰, ௨௪.

௯ ஆகையால் அதனாலே யாக்கோபின் அக்கிரமம் திர்க்கரகம்பண்ணப்படும், தோப்புகளுஞ்சிலைகளும் இனி நிற்காதபடிக்கவர்கள் பலிபீடங்களின் கல்லுகளையெல்லாரு சிதறவடிக்கப்பட்ட சுண்ணாம்புக்கல்லுகளாக்கப்போடும்போது அவர்களுடைய பாவத்தை யவர் அகற்றுவாரென்பதே அதினாலெல்லாமுண்டாகும் பலன்.

௰ அப்படியென்றால் * அரணான பட்டணம் அவாந்தரையாம், அந்த வாசஸ்தலந் தள்ளுண்டு வனாந்தரத்தைப்போல விட்டுவிடப்பட்டதாயிருக்கும், கன்றுக்குட்டிகள் அங்கே மேய்ந்து அங்கே படுத்துக்கொண்டு அதின் தழைகளைப் பட்சிக்கும்.

* எரே. ௫௧. ௬௭.

௰௧ அதின் கொப்புகள் உலர்ந்திருக்கும்போது ஒடிந்துபோம், ஸ்திரீகள் வந்து அவைகளைக் கொளுத்திவிடுவார்கள். ஏனென்றால் அது உணர்வுள்ள ஜனமல்ல, ஆனபடியால் அதை யுண்டாக்கினவர் அதற்கு இரங்காமலும் அதை யுருவாக்கினவர் அதற்குக் கிருபை செய்யாமலுமிருப்பார்.

௰௨ அக்காலத்திலே சம்பவிப்பதேதெனில் கர்த்தர் ஆற்றங்கரையில் விளைவுதுவக்கி எகிப்தின் நதிமட்டும் போரடிப்பார், அப்போது இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் ஒருவரொருவராய்ச் சேர்த்துக்கொள்ளப்படுவீர்கள்.

௰௩ அக்காலத்திலே சம்பவிப்பதேதென்றால் பெரிய எக்காளத்தொனியுண்டாம், அப்போது அசூரியதேசத்திலே சிதறடிக்கப்பட்டவர்களும் எகிப்துதேசத்துக்குத் துரத்திவிடப்பட்டவர்களும் வந்து எருசலேமிலுள்ள பரிசுத்தபருவதத்திலே கர்த்தரைப்பணிந்துகொள்ளுவார்கள்.

உ௮. அதிகாரம்.

[துன்மார்க்கமான இஸ்ரவேலுக்கு ஆக்கினையும் பராபரனுடைய ஜனத்திலே தேவபத்தியாயிருக்கிறவர்களுக்கு நற்சீரும் வருவது.]

எப்பிராயீமுடைய வெறியரின் பெருமையான கிரீடத்துக்கும் மதுபானவெறியாயிருக்கிறவர்களுடைய செழிப்பான பள்ளத்தாக்குடைய கொடுமுடியின்மேலுள்ள அலங்காரச்சோடிப்பான வாடியபூவுக்கும் ஐயோ.

௨ இதோ பெலனும் வல்லமையுமான ஒருவன் ஆண்டவருக்கிருக்கிறான், அவன் கல்மழைவெள்ளமாகவுஞ் சங்காரப்புசலாகவும் புரண்டுவருகிற கனத்த தண்ணீர்களின் வெள்ளமாகவும் வந்து கையினாலே யதைத் தரையிலே தள்ளிப்போடுவான்.

௩ எப்பிராயீமுடைய வெறியரின் புகழிய கிரீடங் கால்களால் மிதித்துப்போடப்படும்.

௪ செழிப்பான பள்ளத்தாக்குடைய கொடுமுடியின்மேலுள்ள அலங்காரச்சோடிப்பில் வாடியபூ பருவகாலத்துக்கு முன் பழுத்ததும் காண்கிறவன் பார்த்து அது இன்னுந்தன் கையிலிருக்கையில் விழுங்குகிறதுமான முதற்கனியைப்போலிருக்கும்.

௫ அக்காலத்திலே சேனைகளின் கர்த்தர் தமது ஜனத்தில் மீதியானவர்களுக்கு மகிமையான கிரீடமாகவும் அலங்கார முடியாகவும்,

௬ நியாயம் விசாரிக்கிறதற்கு உட்காருகிறவனுக்கு நியாயத்தின் ஆவியாகவும் யுத்தத்தை வாசல்மட்டுந் திருப்புகிறவர்களின் பராக்கிரமமாகவுமிருப்பார்.

பூசலிலும் ஆகாமியம் மிஞ்சினதினால அதுக்குவரும் ஆக்கினைகளினக்கூழுக்கும அவர்களுடைய குணப்படுதலை நோக்கியிருக்கிறபடியால் அவைகளுக்குக் குறிக்கப்போகிற மட்டுந்திட்டமும.

௭ ஆனால் இவர்கள் மதுபானத்தால் நிலைகெட்டு வெறியினால் வழிதப்பிப் போகிறார்கள். ஆசாரியனுந் தீர்க்கதரிசியும் வெறியினால் நிலைகெட்டு மதுபானத்தால் அமிழ்ந்து வெறியினால் வழிதப்பித் தீர்க்கதரிசனத்தில் மோசம்போய் நியாயந்தீர்க்கிறதிலே இடறுகிறார்கள்.

௮ ஏனெனில் எல்லாப் பந்திகளுஞ் சுத்த இடமில்லாதபடிக்கு வாந்தியினாலுந் திழ்ப்பழுக்கினாலும் நிறைந்திருக்கிறது.

௯ இனியாருக்கு அறிவை போதிவிப்பார் கேட்டதையாருக்குத் தெளிவிப்பார், * பால்மறந்தவர்களுக்கும் முலைமறக்கப்பண்ணப்பட்டவர்களுக்குமே. * மத். ௰௧, ௨௫.

௰ ஏனெனில் கற்பனையின்மேலே கற்பனையுங் கற்பனையின்மேலே கற்பனையும் பிரமாணத்தின்மேலே பிரமாணமும் பிரமாணத்தின்மேலே பிரமாணமும் இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமென்கிறார்கள்.

௰௧ ஆகையாற் பரியாசவுதடுகளினாலும் * வேற்றுப்பாஷையினாலும் இந்தச் சனத்தோடே பேசுவார். * ௧. கொரி. ௰௪, ௨௧.

௰௨ * இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல், இதுவே சாங்கோபாங்கமடையுதலென்றவர்களோடே அவர் சொன்னாலுங் கேட்கமாட்டோமென்கிறார்கள். * மத். ௰௧, ௨௮. ௨௯.

௰௩ ஆனதுகொண்டு அவர்கள் போய், * பின்னிட்டு விழுந்து நொறுங்கும்படிக்குஞ் சிக்குண்டு பிடிபடும்படிக்குங் கர்த்தருடைய வார்த்தை அவர்களுக்குக் கற்பனையின்மேலே கற்பனையுங் கற்பனையின்மேலே கற்பனையும் பிரமாணத்தின்மேலே பிரமாணமும் இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமென்கிறதாகவிருக்கும். * அ, ௰௫.

௰௪ ஆகையால் எருசலேமிலிருக்கிற இந்தச் சனத்தையாளுகிற சக்கந்தக்காரரே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

௰௫ நாங்கள் மரணத்தோடே உடன்படிக்கையையும் நரகத்தோடே ஒப்பந்தத்தையும் பண்ணினோம், வாதைபெருவெள்ளமாய்ப் புரண்டுவந்தாலும் எங்களையணுகாது, ஏனெனில் நாங்கள் பொய்யை எங்களுக்கடைக்கலமாக்கி மாயையின் மறைவிலே வந்தடைந்தோமென்கிறீர்கள்.

௰௬ ஆகையினாலே கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது, * இதோ உத்தமமும் விளங்கினதுமாய் விலையேறப்பெற்றதுந் திட அஸ்திபாரப்பட்டதுமான சோதிக்கலாகிய கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், விசுவாசிக்கிறவன் பதறான். * ௧. பேது. ௨, ௬—அ.

௰௭ நாம் நியாயத்தை நூலும் நீதியைத் தூக்குமாக்குவோம், அறும்பொய்யென்ற அடைக்கலத்தைக் கல்மழை பறக்கடித்து அந்த மறைவைத் தண்ணீர்வெள்ளமடித்துக்கொண்டுபோகும்.

௰௮ அப்படியே உங்களுக்கு மரணத்தோடிருக்கிற உடன்படிக்கை விருதாவாகி உங்களுக்கு நரகத்தோடிருக்கிற ஒப்பந்தம் நிற்காதே போம், வாதைபெருவெள்ளமாய்ப் புரண்டுவரும்போது அதிலே நீர் அப்படிக்கசகுவீர்கள்.

௰௯ அது புரண்டுவந்தமுதல் உங்களை அடித்துக்கொண்டுபோம், ஏனெனில் அது காலைதோறும் இரவும்பகலும் புரண்டுவரும், கேட்டதின் உணர்வையுண்டாக்கும்படிக்கு அலைச்சலேயுண்டாயிருக்கும்.

௨௰ ஏனெனில் படுக்கை நீட்டிக்கொள்ளக்கூடாத குறுகலும் மூடிசீலை மூடிக்கொள்ளக்கூடாத அகலக்கட்டையுமாயிருக்கும்.

௨௰௧ ஏனெனில் தமது அன்னியமாகிய தமது கிரியையைச் செய்யவுந் தமது வேற்றுவேலையாகிய தமது வேலையை நடப்பிக்கவுங் கர்த்தர் * பெராசிம்மலையிலே செய்ததுபோலெழும்பி + கிபெயோனின் பள்ளத்தாக்கிலிருந்ததுபோலே சினந்திருப்பார். * ௨. சாமு. ௫, ௨௰.

+ யோசு. ௰, ௰. ௰௨.

௨௰௨ இப்போதும் உங்கள் கட்டுகள் பலத்துப்போகாதபடிக்குப் பரியாசம்பண்ணாதிருங்கள். ஏனெனில் தேசமனைத்திலேயும் நிர்ணயம்பண்ணப்பட்டிருக்கிற சங்காரத்தின் செய்தியைச் சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவராலே கேள்விப்பட்டிருக்கிறேன்.

௨௰௩ செவிகொடுத்து என் சத்தத்தைக் கேளுங்கள், நான் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள்.

௨௰௪ உழுகிறவன் நாள்தோறும் உழுது விதைக்கிறதுக்காகத் தன் நிலத்தைக் கொத்திப் பரம்படிக்கிறதுண்டோ.

௨௰௫ அவன் அதை மேலே நிரவினபிற்பாடு அதினதின் எல்லையிலுழுந்தைத் தெளித்துச் சீரகத்தைத் தூவி மேன்மையான கோதுமையையும் நியமிக்கப்பட்ட வாற்கோதுமையையுங் கம்மையும் விதைத்துப்போடுகிறானல்லவோ.

௨௰௬ அப்படியவர்களுடைய பராபரன் அவர்களை நியாயம் மட்டாய்த்தணித்த

அவர்களையுபதேசிப்பார்.

உஎ ஏனென்றால் உழுந்து தாலந்தாலே போரடிக்கப்படுகிறதில்லை, சீரகத்தின்மேல் வண்டியின் உருளை சுற்றவிடப்படுகிறதுமில்லை, உழுந்து கோலினாலும் சீரகம் மிலாறினாலும் அடிக்கப்படும்.

உஅ போசனமாகும்படியாக அது மசிக்கப்படும், ஆகையால் எப்போதும் அவன் அதைப் போரடிக்கிறதுமில்லை, அவன் தன் வண்டியின் உருளையால் அதை நசுக்குகிறதும் அல்லது தன் குதிரைகளால் அதை நொறுக்குகிறதுமில்லை.

உகூ இதுவும் சேனைகளுடைய கர்த்தராலே புறப்பட்ட விசேஷம், அவர் * ஆச்சரியமான ஆலோசனையும் பெருந்தன்மையான தந்திரமும் உள்ளவர். * எரே. கூஉ, யகூ.

உகூ. அதிகாரம்.

[எருசலேமின் அழிவையும் அதின் சத்துருக்களுடைய அருப்பசியையும் யூதர்களின் வெறுங்குருடான ஆக்கினையையும் முன்னறிவித்தது.]

தாவீது பாளயமிறங்கின பட்டணமாகிய வலுசிங்கமே வலுசிங்கமே உனக்கு ஐயோ வருஷத்துக்கு வருஷம் பண்டிகையின் பலிகள் பலியிடப்பட்டாலும்,

உ வலுசிங்கத்துக்கு இடுக்கமுண்டாக்குவோம் அப்போது துக்கிப்புஞ் சலிப்புமுண்டாகி இந்தப் பட்டணம் நமக்குச் சிங்கத்தைப்போலத்தானிருக்கும்.

ங ஏனென்றால் * உன்னைச் சூழப் பாளயமிறங்கி உன்னைத் தெத்துகளால் முற்றிக்கைபோட்டு உனக்கு விரோதமாகக் கொத்தளங்களை எழுப்புவோம். * லூக்கா. யகூ, சங. சச. உக, அதி. உய.

ச அப்போது நீ தாழ்ந்துபோய்த் தரையிலிருந்து பேசுவாய் உன் பேச்சுப் பணிந்ததாய் மண்ணிலிருந்து புறப்பட்டு உன் சத்தம் அஞ்சனம்பார்க்கிறவனின் சத்தத்தைப் போலத் தரையிலிருந்து முணுமுணுத்து உன் பேச்சு மண்ணிலிருந்து கசுகுசென்றதாகவிருக்கும்.

ரு உன்மேல் வருகிற அன்னியரின் திரள் பொடித்தூளத்தனையாகவும் பலவந்தரின் திரள் பறந்துவரும் பதருகளத்தனையாகவுமிருக்கும், அது * அசுப்புந் தீவிரமுமாய்ச் சம்பவிக்கும்.

* மத்தே. உச, உஎ.

சா இடிகளினாலும் பூமியதிர்தலினாலும் மகா இரைச்சலினாலும் பெருங்காற்றினாலும் பிசலினாலும் பட்சிக்கிற அக்கினிச் சுவாலையினாலும் சேனைகளின் கர்த்தராலே விசாரிக்கப்படுவாய்.

எ ஆனாலும் வலுசிங்கத்தின்மேல் யுத்தம்பண்ணுகிற சகல சாதிகளுடைய திரளும் அதின்மேலும் அதின் அரண்மேலும் யுத்தம்பண்ணி அதை இடுக்கண்செய்கிற அனைவரும் இராத்தரிசனையாகிய சொப்பனத்தைக் காண்கிறவர்கள் போலாயிருப்பார்கள்.

அ பசியாயிருக்கிறவன் இதோ புசிக்கிறேனென்று சொப்பனங்காண்கிறதுக்கு ஒத்ததாயிருக்கும் அவன் விழிக்கையில் அவன் ஆத்துமா வெறுமையாயிருக்கும், அல்லது தாகமாயிருக்கிறவன் இதோ குடிக்கிறேனென்று சொப்பனங்காண்கிறதுக்கு ஒத்ததாயிருக்கும், அவன் விழிக்கையில் இதோ அவன் விடாய்த்திருக்கிறான், அவன் ஆத்துமா தவனத்தோடேதானே இருக்கும், அப்படியே சீயோன் பருவதத்துக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிற சகல சாதிகளுடைய திரளுமிருக்கும்.

கூ தரித்துநின்று திகையுங்கள், பிரமித்துக் கூப்பிடுங்கள், வெறித்திருக்கிறார்கள், ஆனால் மதுபானத்தாலல்ல, தள்ளம்பாறுகிறார்கள் ஆனால் லொட்டியினாலல்ல.

ய ஏனென்றால் * கர்த்தர் உங்கள்மேலே கனநித்திரையின் ஆவியையூற்றி உங்கள் கண்களை அடைத்துத் தீர்க்கதரிசிகளையும் உங்கள் தலைவரையும் ஞானதிஷ்டிக்காரரையும் முக்காடுபோட்டார். * ரோமர். யக, அ.

யக ஆனதுகொண்டு தரிசனமெல்லாம் உங்களுக்கு முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தின் வசனங்களைப்போலிருக்கும், அதை வாசிக்க அறிந்திருக்கிற ஒருவனுக்கு அதைக் கொடுத்து நீ இதை வாசி என்றால் அவன் இது என்னால் கூடாது, ஏனென்றால் அது முத்திரித்திருக்கிறதென்பான்.

யஉ அல்லது வாசிக்க அறியாதவனுக்குப் புஸ்தகத்தைக் கொடுத்து, நீ இதை வாசி என்கிறதைப்போலுமிருக்கும், அவன் எனக்கு வாசிக்கத் தெரியாதென்பான்.

பூதச்சனத்தினுடைய கள்ள ஆராதனையின் அமார்க்கமும் மாறுபாடான சிந்தையுங் கண்டிக்கப்பட்டது.

யங * இந்தச் சனங்கள் வாயினால் நம்மண்டைக்குச் சேர்ந்து தங்கள் உதடுகளினாலே நம்மைக் கனம்பண்ணியும் அவர்களிருதயம் நமக்குத் தூரமாய் விலகியிருக்கிறபடியினாலும் அவர்கள் நமக்குப் பயந்திருக்குதல் மனுஷருடைய கற்பனையின் உபதேசிக்குதலாயிருக்கிறபடியினாலும், * மத்தே. யரு, எ—கூ. மாற்கு. எ, சா. எ.

யச இதோ * அவர்கள் ஞானிகளின் ஞானங்கெட்டு அவர்கள் விவேகிகளின் உணர்வு மறைந்துபோகத்தக்க மகா அதிசயமும் ஆச்சரியமுமான பிரகாரமாக நாம் இந்த

சனத்தை நடப்பித்துக்கொண்டேயிருப்போமென்று ஆண்டவர் சொல்லுகிறார்.
* ௧. கொரி. ௧, ௰௯. ௨௰.

௰௫ நீங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைவாக்கும்படிக்கு ஆழமாயொளித்துத் தங்கள் கிரியைகளை அந்தகாரத்திலே நடப்பித்து * எங்களைக் காணுகிறவர் ஆர், எங்களை அறிகிறவர் ஆர் என்கிறவர்களுக்கு ஐயோ.
* சங்கீ. ௯௪, ௭.

௰௬ எத்தனை மாறுபாடாயிருக்கிறீர்கள், குயவன் களிமண்ணுக்குச் சரியாக எண்ணப்படுவானோ. உண்டாக்கப்பட்டது தன்னையுண்டாக்கினவனைக் குறித்து அவர் என்னையுண்டாக்கினதில்லையென்றும், உருவாக்கப்பட்டது தன்னையுருவாக்கினவனைக் குறித்து அவர் உணர்வோனல்லவென்றும் சொல்லத்தகுமோ.

யூதர் தள்ளப்பட்டுப் புறசாதிகள் சேர்ந்து கொள்ளப்படுவதும், யூதருங் கடைசியிலே கூட்டப்படுவதும்.

௰௭ இன்னுங் கொஞ்சப்பொழுதிலே லீபனோன் * வயல்வெளியாக மாறுவதும், வயல்வெளி காடாக எண்ணப்படுவதுமில்லையோ. * ௩௨. ௰௫.

௰௮ அக்காலத்திலே * செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள், குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகப் பார்வையடையும். * மத். ௰௧, ௫.

௰௯ சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மகிழ்ந்துகொண்டேயிருந்து மனுஷரில் ஏழைகள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் ளே களிகூருவார்கள்.

௨௰ ஏனென்றால் பலவந்தன் அற்றுச்சக்கந்தக்காரன் இல்லாதே போவான்.

௨௧ வசனத்திலே மனுஷனைப் பாவியாக்கி * வாசலிலே தங்களைக் கடிந்துகொள்ளுகிறவனுக்குக் கண்ணியை வைத்து நீதிமானை அநியாயத்திலே தள்ளுகிற அக்கிரமஞ்செய்கையின் கூர்மையுள்ள சகலரும் அவனவரும் சங்கரிக்கப்படுவார்கள். * ஆமோ. ௫, ௰.

௨௨ ஆகையால் ஆபிரகாமை மீட்டுக் கொண்ட கர்த்தர் யாக்கோபின் வீட்டாருக்குச் சொல்லுகிறதாவது, இனியாக்கோபு வெட்கப்படுவதில்லை, இனி அவன் முகஞ் செத்துப்போவதுமில்லை.

௨௩ ஏனென்றால் தமது கரங்களின் செய்கையாகிய தன் பிள்ளைகளை அவன் தன்னடுவிலே காணும்போது நம்முடைய நாமத்தைப் பரிசுத்தமாக்குவார்கள், யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தமாக்கி இஸ்ரவேலின் பராபரனுக்குப் பயப்படுவார்கள்.

௨௪ மோசமான ஆவியாயிருந்தவர்கள் உணர்வுள்ள அறிவையடைந்து முறுமுறுப்புக்காரர் உபதேசங் கற்றுக்கொள்ளுவார்கள்.

௩௰. அதிகாரம்.

[எகிப்தியரின் சகாயத்தைத் தேடுகிறவர்களைக் கடிந்துகொண்டது.]

பாவத்தின்மேலே பாவத்தைக் கூட்டும்படிக்கு நம்மையல்லாமல் ஆலோசனைபண்ணி நமது ஆவியையல்லாமலே தங்களை மூடிக்கொள்ளப்பார்க்கிறவர்களும்,

௨ பார்வோனின் பலத்திலே பலக்கவும் எகிப்தினுடைய நிழலில் ஒதுங்கவும் வேணுமென்று நம்முடைய வார்த்தையைக் கேளாமல் எகிப்திலிறங்கிப்போகிறவர்களுமாகிய * முரட்டாட்டமான பிள்ளைகளுக்கு ஐயோ என்று கர்த்தர் சொல்லுகிறார்.
* ௧, ௨.

௩ ஏனெனில் உங்களுக்குப் பார்வோனுடைய பெலன் வெட்கமாகவும் எகிப்தினுடைய நிழலொதுக்கு இலச்சையாகவுமிருக்கும்.

௪ அவர்கள் பிரபுக்கள் சோவானிலே போய் அவர்கள் தானாதிபதிகள் ஆனேசைமட்டும் சேருகிறார்கள்.

௫ அவர்கள் தங்களுக்குச் சகாயத்துக்கும் பிரயோசனத்துக்குமல்ல, வெட்கத்துக்கும் நிந்தைக்குமே உதவுஞ் * சனத்தினால் அனைவரும் வெட்கப்படுவார்கள்.

௬ தெற்கே போகிற மிருகங்களின்மேல் வைத்த சுமருமபாரமாவது, துஷ்டசிங்கமும் கிழச்சிங்கமும் பறக்கிற காலகோடிவிஷமும் இருந்துவருகிறதும், நெருக்கமும் இடுக்கமும் அடைவிக்கிறதுமான தேசத்திலே அவர்கள் கழுதைமறிகளுடைய முதுகின்மேல் தங்கள் ஆஸ்திகளையும், ஒட்டகங்களுடைய முதுகின்மேலே தங்கள் பொக்கிஷங்களையும், தங்களுக்கு உதவாத சனத்தண்டைக்கும் ஏற்றிக்கொண்டுபோகிறார்கள்.

௭ ஏனெனில் எகிப்தியர் சகாயம்பண்ணுவது மாயையும் வீணுமாயிருக்கும், ஆகையால் * இராகாபபுடைய மனுஷர் சும்மா இருப்பார்களென்று அதற்காகக் கூறினோம். * சங்கீ. ௮௭, ௪. ௮௯, ௰௧.

௮ இப்போதும் இது பிற்காலத்துக்கு என்றென்றைக்குமிருக்கும்படிக்கு நீ போய் இதை அவர்களுக்கு முன்பாக ஒரு பலகையிலெழுதி ஒரு புஸ்தகத்திலே வரை.

௯ ஏனெனில் இவர்கள் கலகமுள்ள சனமும் பொய்சொல்லுகிற பிள்ளைகளும் கர்த்தருடைய வேதத்தைக் கேட்க மனதில்லாத புத்திரருமாயிருக்கிறார்கள்.

௰ அவர்கள் பார்க்கிறவர்களுடனே நீங்கள் பார்க்கவேண்டாமென்றும் ஞானதிருஷ்டியுள்ளவர்களுடனே நீங்கள் எங்களுக்கு நிதானமான தரிசனமாய்த் தரிசனஞ்சொ

லாமலஎஙகளுககிதமானசொற்களையுரை
த்து எத்துவாதத்தமாயத்திஷ்டியுஙகளென
ற்றும,

௰௧ நீஙகள வழியைவிட்டுப்பாதையைவி
லகி இஸரவேலினபரிசுத்தரை எஙகளமுன
பாக ஓராமல ஒயப்பணணுஙகளென்று
சொலலுகிறார்கள.

௰௨ ஆனதுகொணடு நீஙகள இநதவார்
த்தையைவெறுத்து ஒடுககுமுந்தாறுமாறு
ஞசெயகறதை நம்பி அதைசசார்ந்துகொ
ளளுகிறபடியினாலே,

௰௩ இநத அககிரமம் உஙகளுககுயர்ந
தசுவரிலவிழப்பிதுஙகுகிறதும அசுப்பாய்
ஒரு நிமிஷத்திலே தூடியப்போகிறதுமான
வெடிப்பைப்போலிருககுமென்று இஸர
வேலினபரிசுத்தர்சொலலுகிறார்.

௰௪ அவர்களைதப்பவிடாமல நொறுக
கப்பட்ட குயவர் பாணடத்தினுடைய உ
டைசலுககுசசரியாயஅவர்களையுடைப்பா
ர், நொறுஙகின துணடுகளில அடுப்பிலே
நெருப்பெடுக்கிறதுக்கும அலலது ஒருபள
ளத்திலே தணணீர் மொளளுகிறதுக்கும்
ஒரு ஓடாகிலும அகப்படாமற்போம்.

௰௫ ஏனெனிலமனந்திரும்பி அமர்ந்திரு
நதீர்களாலே இரட்சிககப்படுவீர்கள, அம
ரிக்கையிலும நமபிக்கையிலும * உஙகள
பெலனிருககுமென்று இஸரவேலின்பரிசுத
தராயிருக்கிற கர்த்தரான பராபரனசொ
ன்னார், ஆனால † நீஙகள அப்படிசசெயய
மனதாயிராமல, * சங்கீ. ௬௨, ௫. ௨.கொ
ரி. ௰௨, ௯. ௰. † மத்தே. ௨௩. ௩௭.

௰௬ அப்படியலல, குதிரைகளின்மேலே
றி ஓடிப்போவோமென்கிறீர்கள, ஆனது
கொணடு ஓடிப்போவீர்கள, வேகமானவா
கனஙகளின்மேல ஏறிப்போவோமென்கிறீ
ர்கள, ஆனதுகொணடு உஙகளைத்துரத்து
கிறவர்கள வேகமாயிருப்பார்கள.

௰௭ * நீஙகள உசசிமலையின்மேல ஒரு
பாய்மரத்தைப்போலவும மேட்டின்மேல
ஒருகொடியைப்போலவும மீந்திருககுமட்
டாக † ஒருவனுடைய உதமபுதலினாலே ஆயி
ரமபேரும ஐநதுபேருடைய உறுமுதலி
னால அனைவரும ஓடிப்போவீர்கள. * சங
கீ. ௰௭, ௯. † ௫. மோசே. ௩௨, ௩௰.

பராபரன் பாககியமான நற்சீரைக்கட்ட
ளையிட்டுசசத்துருககளுககு நீதியைசசரி
க்கட்டுவாரென்றுவிசுவாசிகளுககு ஆறு
தலசொன்னது.

௰௮ ஆனால உஙகளுககிரஙகுவதற்கா
கத்தானே கர்த்தர் காத்திருநது உஙகள
மேல மனதுருகுவதற்காகத்தானே உயரு
வார், ஏனெனில்கர்த்தர் நியாயத்தின்பரா
பரனாயிருககிறார், * அவருக்குக்காத்திருக
கிற அனைவரும பாககியவான்கள. * எரே.
௰௭, ௭.

௰௯ ஏனெனிற்சீயோனிலும எருசலேமி
லும சனமவாசமாயிருப்பதுணடு, அழுது
கொணடேயிராய், உன்கூப்பிடுதலின் சத்
தத்துககு அவருனமேலிரஙகவேயிருநது
அதைககேட்டவுடனே உனககு மறுவுத
தரவுகொடுப்பார்.

௨௰ ஏனெனில ஆணடவர் உஙகளுககு
நெருககத்தின் அப்பத்தையும ஒடுஙகுத
லின தணணீரையுஙகொடுத்திருககிறார், ஆ
னால இனியுன போதகர்கள மறநதுபோவ
திலலை, உன் கண்கள உன போதகர்களைக
காண்கிறவைகளாயிருககும.

௨௧ நீஙகள வலதுபுறமாகஅலலது இட
துபுறத்துககு விலகும்போது வழியிதுவே
இதிலே நடவுஙகளென்று உனககுப்புறகா
லேசொலலுமவார்த்தையை உன காதுகள
கேட்கும.

௨௨ உன்வெள்ளிசசுருபஙகளின்பூசசை
யும உனபொனவார்ப்பான உன் ஆடையா
பரணத்தையுந தீட்டாகவெண்ணி அவை
களைததீட்டமானதைப்போலச்சிதறஎறிந
து அதைச்சீசசீபோவென்பாய்.

௨௩ அப்போது நீ நிலத்திலவிதைககும
உன விதைககு அவர்மழையையுமநிலத்தின்
பலனுகிய ஆகாரத்தையுங கொடுப்பார்,
அது கொழுப்பும புஷ்டியுமாயிருககும,
அககாலத்திலே உன்ஆடுமாடுகள விஸதார
மான மேய்ச்சலுளள தலத்திலேமேய்ந்து,

௨௪ நிலத்தையுழுகிற எருதுகளுங கழு
தைமறிகளும முறத்தாலுந தூற்றுககூடை
யாலும புடைககப்பட்ட ருசியுளள கப்பி
களைததினனும.

௨௫ கோபுரஙகளவிழும பெரியகொலை
யின்நாளிலே உயரமான சகலமலையின்மே
லும உயர்ந்தியான சகலமேட்டின்மேலும
ஆறுகளும வாய்ககால்களுமுணடாய்,

௨௬ கர்த்தர் தமதுசனத்தின் நொரிசலை
கட்டி அதின் அடிக்காயத்தைக்குணமா
ககும்நாளிலே சநதிரனுடையவெளிசசஞ
சூரியனின்வெளிசசத்தைப்போலவுஞசூரிய
னுடையவெளிசசம ஏழத்தனையாய் ஏழுபக
ல்களின்வெளிசசத்தைப்போலவுமிருககும

௨௭ இதோ கர்த்தருடையநாமந தூர
த்திலிருநதுவரும, அவருடையகோபமஎரி
கிறதும பாரஙகனககிறதுமாயிருககும, அ
வருடைய உதடுகள சினத்தால நிறைந்த
வைகள, அவருடையநாவு பட்சிககிற அக
கினியைப்போலிருககும.

௨௮ மாயைக்கான சலலடையிலே சா
திகளையரிககுமபடிககு அவர் ஊதுஞசுவா
சங கழுத்துமட்டுமெட்டுகிற ஆற்றின வெ
ளளத்தைப்போலவுஞசனசதளஙகளுடைய
தாடைகளிலேபோட்டு அவைகளை யலைக
கழிக்கிறகடிவாளத்தைப்போலவுமிருக்கும்.

௨௯ பணடிகையாசரிககப்படுகிற இரா

துதியிலேபாடுகிறதற்குச்சரியானபாட்டும் கர்த்தருடைய பருவதத்துக்கு இஸ்ரவேலின் கன்மலையண்டைக்குப்போக நாகசுரத்தோடே நடந்துவருகிறதற்குச்சரியானமனமகிழ்ச்சியும் உங்களுக்கிருக்கும்.

௩௰ கர்த்தர் * தமது சத்தத்தின் பிரஸ்தாபத்தைக்கேட்கப்பண்ணிக் கோபத்தின் சினத்தினாலும் பட்சிக்கிற அக்கினிச்சுவாலையினாலும் இடி பெருவெள்ளங் கல்மழையினாலுந் தமது புயத்தின் இறங்குதலைத்தெரிவிப்பார். * சங். ௨௯. ௩. எசே, ௬―௰௧.

௩௧ ஏனெனில் மிலாறினால் அடித்த அசூர் கர்த்தருடைய சத்தத்தினாலே நொறுங்குண்டான்.

௩௨ சம்பவிப்பதென்னவென்றால் உறுதிப்பெலனோடுங்கூட விரோதமாய்வந்து உயுத்தங்களால் உயுத்தம்பண்ணப்பட்டிருப்பாருங்கால் அதுக்கடந்துவந்த இடங்களிலெல்லாங் கர்த்தர் அவைகளுக்கு வைப்பார் அதலகொடுத்த படியினாலே மேளங்களாலுஞ் சுரமண்டலங்களாலுங்கொண்டாடப்படும்.

௩௩ ஏனெனில் அக்கினிப்பள்ளம் நேற்றே ஆயத்தமாயிருக்கிறது, இராசாவுக்கு அது ஆயத்தமாயிருக்கிறது, அதையாழமும் அகலமுமாக்கினார், அதின் மேலே விறகும் அக்கினியும் மிகுதியாயிருக்கிறது, கர்த்தரின் சுவாசம் கந்தகத்தீயைப்போல அதைக்கொளுத்தும்.

௩௧. அதிகாரம்.

[எகிப்தியரின்சகாயத்தை நம்பின இஸ்ரவேலரைப்பார்த்து அசட்டை அதரியத்தைத்தேவசெயலாயழிப்பாரென்றும் திருக்குவாக்குத்தத்தம்பண்ணினது.]

சகாயமடைய இஸ்ரவேலுடைய பரிசுத்தரைச்சார்ந்துகொள்ளாமலுங் கர்த்தரைத்தேடாமலும் எகிப்துக்குப்போய்க் குதிரைகளைச்சார்ந்து இரதங்களை அவைகள் திரளானதென்றும் இராவுத்தரை அவர்கள் மகா பலசாலிகளென்றும் நம்பியிருக்கிறவர்களுக்கு ஐயோ.

௨ அவரும் மாவெனறால் ஞானமுள்ளவர், அவர் தம்முடைய வார்த்தைகளைமாற்றாமல் * தீங்கைவரப்பண்ணித் தீமைசெய்கிறவர்களின் வீட்டுக்கும் அக்கிரமக்காரரின் சகாயத்துக்கும் விரோதமாயெழும்புவார்.

௩ ஏனெனில் எகிப்தியர் தேவனல்ல, மனுஷர்தானே அவர்களுடைய குதிரைகள் ஆவியல்ல மாமிசந்தானே கர்த்தர் தமது கரத்தை நீட்டுவார், அப்போது சகாயஞ்செய்கிறவனும் இடறிச் சகாயஞ்செய்யப்பட்டவனும் விழுந்து அனைவரும் ஏகமாய் அழிந்துபோவார்கள்.

௪ ஏனென்றால் கர்த்தர் என்னுடனே சொன்னதாவது, சிங்கமுஞ் சிங்கக்குட்டியுந்தன இரையின்பேரிலேகெர்ச்சித்து தனக்கு விரோதமாய்க்கூப்பிடுகிற திரளான மேய்ப்பரின் சத்தத்தினாலே கலங்காமலும் அவர்கள் அமளியினாலே தாழாமலும் இருக்கிறதுபோல * சேனைகளின்கர்த்தர் சீயோன் பருவதத்துக்காகவும் அதின்மேட்டுக்காகவும் உயுத்தம்பண்ண இறங்குவார். * ௨. இராசாக்கள். ௰௯, ௩௫.

௫ பறந்துகாக்கிறபட்சிகளைப்போலச் சேனைகளின்கர்த்தர் எருசலேமின்மேற்சூழ்ந்து காத்துவருவார், அவரதைக்காப்பாற்றித் தப்பப்பண்ணுவார், அவர் கடந்துவந்து அதை விடுவிப்பார். * ௨. மோசே. ௰௨. ௨௩.

௬ இஸ்ரவேலின் புத்திரர் திரட்டாய் விட்டுவிட்டவரண்டைக்கு நீங்கள் திரும்புங்கள்.

௭ ஏனெனில் பாவமாக உங்கள் கைகள் உங்களுக்குச்செய்திருந்த தங்கள் வெள்ளி விக்கிரகங்களையுந் தங்கள் பொன்விக்கிரகங்களையும் அவரவர் அக்காலத்தில் வெறுப்பார்கள். * ௨, ௨௰. ௩௰. ௨௨.

௮ மனுஷனுடைய பட்டயமல்லாத பட்டயத்தாலே அசூர் விழுவான், மனுஷனுடைய பட்டயமல்லாத பட்டயம் அவனைப்பட்சிக்கும், அவன் பட்டயத்துக்குத் தப்ப ஓடுவான், அவன் வாலிபர் கலைந்துபோவார்கள்.

௯ அவர்களுடைய கன்மலை பயத்தினாலொழிந்துபோம், அவர்களுடைய பிரபுக்கள் கொடியைக்கண்டு கலங்குவார்களென்று சீயோனில் நெருப்பையும் எருசலேமில் அடுப்பையுமுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௩௨. அதிகாரம்.

[மேசியாவினுடைய இராச்சியத்தின் இயல்பும் அதுக்கு முன் நடக்குந்தண்டனை விசாரிப்பும்.]

இதோ * நீதியாக ஒரு இராசா அரசாளுவார், பிரபுக்களும் நியாயமாய்த்தீர்த்தனம்பண்ணுவார்கள். * சங். ௪௫, ௭. ௮. எரேமி. ௨௰, ௫. ௩௩, ௰௫. ௰௬. சகரியா. ௯. ௯.

௨ அவர் * காற்றுக்கொதுக்காகவும் பெருவெள்ளத்துக்கு மறைவிடமாகவும் வறண்ட நிலத்திற்கு வாய்க்கால்களாகவும் விடாய்த்த பூமிக்குப் பெருங்கன்மலையின் நிழலாகவுமிருப்பார். * ௨௫, ௪.

௩ அப்போது காண்கிறவர்களின் கண்கள் திரும்பிப்பார்ப்பதில்லை, கேட்கிறவர்களின் செவிகள் கவனித்தேயிருக்கும்.

௪ பதறுகிறவர்களின் இருதயம் அறிவுண்டாக உணர்ந்து தெற்றுவாயருடைய நாக்கு மகா தெளிவாய்ப்பேசத்தீவிரிக்கும்.

௫ இனி மூடன் சற்குணனென்னப்படுவதில்லை, பிசினித்தனக்காரன் உதாரனென்று சொல்லப்படுவதுமில்லை.

௬ ஏனென்றால் மூடன் மாயம்பண்ணுவதற்கும் கர்த்தருக்கு விரோதமாய்த் தப்பிதம் பேசுவதற்கும் பசியுள்ள ஆத்துமாவை வெறுமையாக்கவைக்கும் தாகமுள்ளவனுக்குத் தாகம் தீர்க்கப்படாதே போகப்பண்ணுவதற்குமாக * பயித்தியத்தைப் பேசுகிறான், அவனிருதயம் அநியாயத்தை நடப்பிக்கும். * வாக்கியம். ௰௫, ௨.

௭ பிசினித்தனக்காரனுடைய எத்தனங்களும் பொல்லாதவைகள் தரித்திரன் நியாயமாய்ப் பேசும்போது அவன் கள்ளவார்த்தைகளாலே சிறுமையானவர்களைக் கெடுப்பதற்காகத் தீவினைகளை யோசிக்கிறான்.

௮ சற்குணனோ சற்குணமானவைகளை யோசிக்கிறான், சற்குணமானவைகளிலே நிலைத்துமிருக்கிறான்.

௯ சுகசீவியாயிருக்கிற ஸ்திரீகளே, எழுந்திருந்து என் சத்தத்தைக் கேளுங்கள், நிர்விசாரமான குமாரத்திகளே என் வசனத்துக்குச் செவிகொடுங்கள்.

௰ நிர்விசாரிகளே, வருஷத்துக்கு மேலான நாட்களாய்த் தத்தளிப்பீர்கள், ஏனென்றால் திராட்சப்பலனற்றுப்போய் அறுப்பு வராதேபோம்.

௰௧ சுகசீவிகளே நடுங்குங்கள், நிர்விசாரிகளே தத்தளியுங்கள், உடையைக் களைந்து உரிந்துபோட்டு அரையில் இரட்டைக் கட்டிக்கொள்ளுங்கள்.

௰௨ விருப்பமான வயல்களினிமித்தமும் கனித்தந்திருந்த திராட்சச்செடிகளினிமித்தமும் மாரடித்துப் புலம்புவார்கள்.

௰௩ என் சனத்தினுடைய பூமியின் மேலும் களிகூர்ந்திருந்த பட்டணத்தினுடைய எல்லாச் சந்தோஷ வீடுகளின்மேலுங்கூட முள்ளுச்செடியும் முள்ளுக்காடும் முளைக்கும்.

௰௪ ஏனெனில் அரமனை பாழாய்விடப்பட்டு ஊரின் சந்தடிவிட்டுப்போய் மேடுகளும் அரணுமான ஸ்தலங்கள் என்றைக்குங் காட்டுக்கழுதைகளின் சந்தோஷமும் மந்தைகளின் மேய்ச்சலுமான குகைகளாயிருக்கும்.

௰௫ * நம்முடையமேல் உன்னதத்திலிருந்து ஆவி ஊற்றப்படுமட்டுந்தானே. அப்போது † வனாந்தரம் பயிர் நிலமாகிப் பயிர் நிலங் காடாக எண்ணப்படும். * எசேக்கியேல். ௩௯, ௨௯. † யோவா. ௩, ௧.

௰௬ வனாந்தரத்திலே நியாயம் வாசமாயிருந்து பயிர் நிலத்திலே நீதி தங்கித்தரிக்கும்.

௰௭ நீதியின் செய்கை சமாதானமும் நீதியின் பலன் நித்தியகாலமாய் அமரிக்கையுஞ் சுகமுமாயிருக்கும்.

௰௮ என் சனம் சமாதானதாபரத்திலும் பத்திரமான வாசஸ்தலங்களிலும் சாங்கோபாங்கமாய் அமர்ந்த இடங்களிலும் குடியிருக்கும்.

௰௯ ஆனாலும் காட்டிடங்களின்மேல் கன்மழை பெய்யும், அந்தப் பட்டணம் மகா தாழ்வாய்த் தாழ்ந்துபோம்.

௨௰ சலங்களுடைய ஓரங்களிலெங்கும் மாடுகளையுங் கழுதைகளையும் போகவிட்டு விதைவிதைக்கிற நீங்கள் பாக்கியவான்கள்.

௩௩. அதிகாரம்.

[அசூரியரின் அழிவும் சீயோன் குடிகளின் இரட்சிப்பும் பாக்கியமும் முன்னறிவிக்கப்பட்டது.]

௧ பாழ்க்கடிக்கப்படாதிருந்தும் பாழ்க்கடிக்கிறவனும் உனக்குத் துரோகம் பண்ணாதிருக்கிறவர்களுக்குத் துரோகம்பண்ணுகிறவனுமாகிய உனக்கு ஐயோ, நீ பாழ்க்கடித்து முடிந்தபின்பு * பாழ்க்கடிக்கப்படுவாய் நீ துரோகம்பண்ணித் தீர்ந்தபின்பு † உனக்குத் துரோகம்பண்ணுவார்கள்.
* ௩௭, ௩௬. † ௩௧. ௩௮.

௨ கர்த்தாவே எங்களுக்கு இரங்கும், உமக்குக் காத்திருக்கிறோம், தேவரீர் காலைதோறும் அவர்கள் புயமும் இக்கட்டுக்காலத்திலெங்கள் இரட்சிப்புமாயிரும்.

௩ அமளியின் சத்தத்தினாலே சனங்கள் அலைந்தோடி * நீர் எழும்புகிறதினாலே சாதிகள் சிதறடிக்கப்படுகிறார்கள். * சங்கீதம். ௬௮. ௨.

௪ பச்சைக்கிளிகள் சேர்க்கும்மாப்போலே உங்கள் கொள்ளை சேர்க்கப்படும், வெட்டுக்கிளிகள் குதித்துத்திரிகிறாப்போலே அதின்மேலே குதித்துத்திரிவார்கள்.

௫ கர்த்தர் உயர்ந்தவர் ஏனெனில் உன்னதத்தில் வாசமாயிருக்கிறார், சீயோனை நியாயத்தினாலும் நீதியினாலும் நிரப்புகிறார்.

௬ பலத்த இரட்சிப்புக்களும் ஞானமும் அறிவும் உன்காலங்களுடைய உறுதியாயிருக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம்.

௭ இதோ * அவர்கள் தானாதிசனர் வெளியிலே அலறுகிறார்கள், சமாதானத்துக்கனுப்பப்பட்டவர்கள் மனங்கசந்து அழுகிறார்கள்.

௮ பாதைகள் பாழானது, வழிகளில் நடப்போயற்றது, உடம்படிக்கையை அவன் தள்ளிப்போடுகிறான். ஊர்களை இகழ்ச்சிபண்ணுகிறான், மனுஷனை எண்ணாதேபோகிறான்.

௯ பூமி துக்கித்து வாடாயத்திருக்கிறது, லீபனோன் வெட்கி வதங்குகிறது, சாரோன் வனாந்தரத்துக்கொப்பாகிறது, பாசானும் கர்மேலும் பாழ்க்கடிக்கப்படுகிறது.

௰ இப்போது எழுந்திருப்போம், இப்போது உயர்வோம், இப்போது உயர எழும்புவோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௧ * செத்தையைக் கர்ப்பந்தரித்துத் தாளடியைப் பெறுவீர்கள், உங்கள் ஆவி அக்கினியைப்போல உங்களைப் பட்சிக்கும்.
* சங்கீதம். ௭, ௰௫.

௰௨ உன் சனத்தாங்கள் சுண்ணாம்பு சுடப்படுகிறதுபோலாகி வெட்டுண்ட முள்ளுச்செடிகளைப்போலே தீயிலெரிக்கப்படுவார்கள்.

௰௩ தூரத்தாரே நான் செய்கிறதைக் கேளுங்கள், சமீபத்தாரே நமது பராக்கிரமத்தை யறியுங்களென்கிறார்.

௰௪ சீயோனிலிருக்கிற பாவிகள் திகைக்கிறார்கள், மாயக்காரரை நடுக்கம் பிடிக்கிறது. நம்மிற் பட்சிக்கும் அக்கினிக்குமுன்பாகத் தரித்திருப்பவனார். நம்மில் நித்திய சுழுலுக்குமுன்பாகத் தாபரிப்பவனாரென்கிறார்.

௰௫ * நீதியாய் நடந்து செம்மையானவைகளைப் பேசி இடுக்கண் செய்யுதலின் ஆதாயத்தை வெறுத்துப் பரிதானங்களைப் பிடிக்காதபடிக்குத் தன் கைகளை யுதறி இரத்தப்போசனைகளைக் கேளாதபடிக்குத் தன் செவியையடைத்துப் பொல்லாப்பைக் காணாதபடிக்குத் தன் கண்களை மூடுகிறவனே.
* சங்கீ. ௰௫, ௨. ழி ௨௪, ௪. ௫. ழி மத்தே. ௫, ௫—௮.

௰௬ அவன் உயரங்களில் வாசம்பண்ணுவான், கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலம், அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும், அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாயிருக்கும்.

௰௭ உன் கண்கள் இராசாவை * அவருடைய சவுந்தரியத்திலே கண்டு தேசத்தைத் தூர எல்லைகளுள்ளதென்றுபார்க்கும்.
* சங்கீதம். ௪௫, ௧, ௪.

௰௮ * வேதபாரகனெங்கே, நிறுத்துப் பார்த்தவனெங்கே, கோபுரங்களையெண்ணினவனெங்கேயென்று உன்னிருதயம் நடுக்கத்துடன் தியானிக்கும். * ௧. கொரி. ௧, ௨௰.

௰௯ கேட்கக்கூடாதபடிக்கு அடக்கமான உதடும் உணரக்கூடாதபடிக்கு ஒருவிதமான நாவுமுள்ள ஓட்டாரமான சனத்தையினிக்காணாய்.

௨௰ * நம்முடைய ஆசரிப்பின் பட்டணமாகிய சீயோனை நோக்கிப்பார், உன் கண்கள் எருசலேமை அமரிக்கையான தாபரமாகவும் பேர்க்கப்படாத கூடாரமாகவும் காணும், இனி அதின் கூர்சுகள் என்றைக்கும் பிடுங்கப்படுவதுமில்லை அதின் கயிறுகளிலொன்றும் அறுந்துபோவதுமில்லை.
* சங். ௱௨௨, ௩—௭. அறிவி. ௨௧, ௩.

௨௧ ஏனென்றால் அங்கே கர்த்தர் நமக்கு மகிமையுள்ளவராயிருப்பார், அது மகா அகலமான நதிகளும் ஆறுகளுமுள்ள ஸ்தலமாயிருக்கும், வலிக்கிறபடவு அங்கே போவதுமில்லை, பெரிய கப்பல் அங்கே கடந்து வருவதுமில்லை.

௨௨ ஏனெனில் * கர்த்தர் நம்முடைய நியாயாதிபதியுங் கர்த்தர் நம்முடைய நியாயநெறியாளனுங் கர்த்தர் நம்முடைய ராசாவுமானவர் அவர் நம்மை இரட்சிப்பார்.
* ரோமர். ௮, ௩௩. ௩௪.

௨௩ உன் கயிறுகள் தளர்ந்துபோம், அவைகள் தங்கள் பாய்மரத்தைக் கெட்டிப்படுத்தவும் பாயைவிரிக்கவுங் கூடாது, அப்போது திரளான கொள்ளையுடைமை பங்கிடப்படும், சப்பாணிகளுங் கொள்ளையாடுவார்கள்.

௨௪ வியாதிப்பட்டிருக்கிறேனென்று குடியானவனொருவனுஞ் சொல்லவில்லை, அதில் வாசமாயிருக்கிற சனத்தின் அக்கிரமம் மன்னிக்கப்பட்டிருக்கும்.

௩௪. அதிகாரம்.

[தமது சபையின் சத்துருக்களுக்குப் பரன் நீதியைச் சரிக்கட்டுதல்.]

சாதிகளே, கேட்கிறதற்குக் கிட்டவாருங்கள், சனத்தாங்களே கவனியுங்கள், பூமியும் அதின் நிறைவும் பூச்சக்கரமும் அதிலுண்டானவைகளெல்லாப் பிறப்புங் கேட்கக்கடவது.

௨ ஏனென்றால் கர்த்தருக்கு எல்லாச்சாதிகளின்மேலுங் * கடுங்கோபமும் அவைகளுடைய † எல்லாச்சேனையின்மேலுஞ் உக்கிரமுமிருக்கிறது, அவைகளைச் சங்காரத்துக்கு நேமித்துக் கொலைக்கொப்புக்கொடுக்கிறார். * அறி. ௯, ௰௭. † அதி. ௰௩, [illegible]

௩ அவர்களிலே கொலைசெய்யப்பட்டவர்கள் எறியுண்டு கிடப்பார்கள், அவர்கள் பிரேதங்களுடைய நாற்றங் கிளம்பும். * அவர்கள் இரத்தத்திலே மலைகள் கரையும். * அறிவி. ௰௪, ௨௰.

௪ * வானத்தின் சேனையெல்லாம் அழிந்து வானங்கள் புஸ்தகச்சுருளைப்போலச் சுருட்டப்பட்டு அவைகளின் சேனையெல்லாம் இலைகள் திராட்சச்செடியிலிருந்து உதிருமாப்போலேயும் அத்திமரத்தினின்று காய்கள் உதிருமாப்போலேயும் உதிர்ந்துவிழும்.
* அறிவி. ௬, ௰௩. ழி

௫ ஏனென்றால் வானங்களில் நம்முடைய பட்டயம் வெறித்தது, இதோ * ஏதோமின்மேலும் நான் சங்காரத்துக்குத் தீர்ப்பிட்ட சனத்தின்மேலும் அது நியாயஞ்செய்ய இறங்கும். ௬௩, ௧. ழி

௬ கர்த்தருடைய பட்டயம் இரத்தத்தால் நிறைந்ததும் ஆட்டுக்குட்டிகளெ[illegible]யகளுடைய இரத்தத்தின் கொழுப்பி[illegible]ம் ஆட்டுக்கிடாய்களுடைய குண்டிக்காய்[illegible]

களின் கொழுப்பினாலும் திணைத்தமாம் ஏனெனில் போஸ்றவிலே கர்த்தருக்குப் பலியிடுதலும் ஏதோமதேசத்திலே பெரிய கொலைசெய்தலுமுண்டு,

௭ அப்போது அவைகளோடே கூடக் காண்டாமிருகங்களும் வலுவான எருதுகளோடேகூடக் காளைகளும் இறங்கி மடியும் அவர்களுடைய தேசம் இரத்தப்பாய்ச்சலாகி அவர்கள் மண் நிணத்தினாலே கொழுக்கும்,

௮ ஏனெனில் சீயோனுடைய வழக்கின் நிமித்தம் அது கர்த்தர் * நீதியைச்சரிக்கட்டுகிற நாளும் வதிலுக்குக்கொடுக்கிற வருஷமுமாயிருக்கும், * ௬௩, ௪. ௬௯. ௫௩, ௭. எரே. ௫௧, ௬.

௯ * அதின் ஆறுகள் பிசினாகவும் அதின் மண் கெந்தகமாகவும் மாறி அதின் நிலம் எரிகிற கீலாயப்போம், * ௰௩. ௰௯.

௰ இரவும் பகலும் அது அவியாது * அதின் புகை என்றென்றைக்குமெழும்பும் தலைமுறைதலைமுறையாக அது பாழாயிருக்கும் சதாகாலஞ்சதாகாலமாக அதை யாருங்கடந்துபோவதில்லை. * அறிவி. ௰௪, ௰௧. ௰௯, ௩.

௰௧ * நாரையும் முள்ளம்பன்றியும் அதைச்சுதந்தரிக்கும் ஆந்தையுங் காக்கையும் அதிலே குடியிருக்கும் அதின் மேல் வெட்டவெளியின் நூலையும் வெறுமையின் தூக்கையும் பிடிப்பார். ௰௩, ௨௧. ௨௨. செப. ௨, ௰௪. ௰௫. அறிவி. ௰௮, ௨.

௰௨ அதின் மேற்குலத்தாரை இராச்சியபாரத்துக்கழைத்தால் அங்கே அவர்களில் ஆருமில்லை அதின் பிரபுக்களனைவரும் ஒன்றுமில்லை.

௰௩ அதின் அரண்மனைகளில் முள்ளுச்செடிகளும் அதின் கோட்டைகளிலே காஞ்சொறிகளும் முள்ளுப்பூண்டுகளும் முளைக்கும் அது வலுசர்ப்பங்களின் தாபரமுங் கோட்டான்களின் கொல்லையுமாயிருக்கும்.

௰௪ அங்கே வனாந்தர ஜீவன்களும் ஓரிகளும் ஒன்றுக்கொன்று சந்தித்துப் பேயைப் பேய் கூப்பிடும் அங்கே இராக்குருவிகளுந்தங்கித் தங்கள் தாபரத்தைக் கண்டடையும்,

௰௫ அங்கே வலசாரை கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சுபொரித்துத் தன் நிழலிலே கூட்டிக்கொள்ளும் அங்கே கூளிகளும் ஜோடுஜோடாகச்சேரும்.

௰௬ கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள் இவைகளிலொன்றுங்குறையாதிருப்பதில்லை இதுவும் அதுவுங் காணாதிருப்பதில்லை ஏனெனில் அவர் தமது வாயினாலே அதைக்கற்பித்தார் அவருடைய ஆவியே யவைகளைச்சேர்க்கும்.

௰௭ அவரே யவைகளுக்குச்சீட்டுப்போடுகிறார் அவருடைய கையே அதை யவைகளுக்கு அளவு நூலாய்ப்பகிர்ந்து கொடுக்கும்

அவைகள் என்றைக்கும் அதைச்சுதந்தரித்துத் தலைமுறை தலைமுறையாக அதிலே சஞ்சரித்திருக்கும்.

௩௫. அதிகாரம்.

[புதுவேற்பாட்டுச்சபை யாசீர்வாதமுள்ள நற்சீராய்ச்செழிப்பது.]

வனாந்தரமும் வறண்டபூமியும் மகிழ்ந்து கடுவெளி களித்துப் புஷ்பத்தைப்போலே செழிக்கும்.

௨ அது செழிக்கச்செழிப்பதுமல்லாமல் பூரிப்புங் கெம்பீரமுமாய்க் களிக்கும் லீபனோனின் மகிமையுங் கர்மேல் சாரோனென்றவைகளின் அலங்காரமும் அதுக்குக்கொடுபடும் அவர்கள் கர்த்தருடைய மகிமையையும் நமதுடைய பராபரனுடைய முக்கியத்தையுங்காண்பார்கள். * ௩௨, ௰௫. யோவா. ௧, ௰௪.

௩ * நெகிழ்ந்த கைகளைத்திடப்படுத்தித் தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். * எபிரே. ௰௨, ௰௨.

௪ மனங் கலங்கினவர்களுடனே நீங்கள் பயப்படாதிருங்கள் திடன்கொள்ளுங்கள் இதோ உங்கள் பராபரன் நீதியைச்சரிக்கட்டவும் பராபரன் வதிலுக்குக்கொடுக்கவும் வருவார் அவர் வந்து உங்களை இரட்சிப்பாரென்றுசொல்லுங்கள்.

௫ அப்போது குருடரின் கண்கள் திறக்கப்பட்டுச்செவிடரின் செவிகள் திறவுண்டுபோகும். * ௨௯, ௭. ௨௧, ௰௮. ௩௨, ௩. ௪௨, ௯. எ. மத்தே. ௰௧, ௫.

௬ அப்போது சப்பாணிமானைப்போலக் குதிப்பான் ஊமையன் நாவுங் கெம்பீரிக்கும் ஏனெனில் வனாந்தரத்திலே * தண்ணீர்களுங் கடுவெளியிலே ஆறுகளும் பிரித்தோடும். * யோவா. ௭, ௩௮. ௩௯.

௭ வெட்டாந்தரை தண்ணீர்த்தடாகமும் வறண்டதலம் நீரூற்றுகளுமாகும் வலுசர்ப்பங்கள் தாபரித்துக்கிடந்த இடங்களிலே புல்லுங் கொறுக்கைகளும் நாணலுமுண்டாயிருக்கும்.

௮ அங்கே * உயர்ந்த பாதையும் வழியுமிருக்கும் அது பரிசுத்தவழியென்னப்படும் தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை ஆர் அந்தவழிகளிலே நடக்கிறார்களோ அவர்கள் புத்தியீனராயிருந்தாலுந் திசைகெட்டுப்போவதில்லை. * யோ. ௰௪, ௬.

௯ அங்கே சிங்கமில்லை துஷ்ட மிருகம் அதிலேறுவதுமில்லை அங்கே தென்படுவதுமில்லை மீட்கப்பட்டவர்களே அங்கே நடப்பார்கள்.

௰ * கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பிக் கெம்பீரத்தோடே சீயோனுக்கு வருவார்கள் நித்தியமகிழ்ச்சி அவர்கள் தலை

பினமேலிருககும †சநதோஷமும மகிழச்சியும அவர்களைத தொடர்நது பிடிககும சஞசலமுநதவிப்பும ஓடிப்போம. * ருக, யக. ௬உ, யஉ. † ௬௬, யச.
அறிவி. உக, ச.

௩௬. அதிகாரம்

[அசூரியாவின இராசாவாகிய சனகேரிபின நாமததிலே இரப்சாககேவநது எருச லேமை ஒபபுககொடுக்கக்கேட்டது.]

ஏசேககியா இராசாவின பதினாலாம வருஷததிலே சமபவித்ததேதெனறால * அசூரியாவின இராசாவாகிய சனகேரிபபூ தாவிலிருககிற அரணானசகல படடணஙக ளுககு விரோதமாயவநதேறி அவைகளைப பிடிததான. * உ. இராசா. ௰அ, ௰௩. ௴

உ அபபோது அசூரியாவின இராசா இலாகிசிலிருநது இரப்சாககேயைக்கன இராணுவததோடே எருசலேமுககு ஏசே ககியா இராசாவணடைககு அனுபபினான அவன வணணாரததுறையின வழியிலுளள மேலகுளததது மதகணடையிலே நினறான.

௩ அபபோது * இலககியாவினகுமாரனாகிய எலியாககீம எனற அரமனைவிசாரிப்புககாரனும சேபனா எனறசமபிரதியும அசாபபின குமாரனாகிய யோவாகெனற கணககனும அவனணடையிலே புறபபட டுப்போனார்கள. * உஉ, உ௰. உக.

ச இரப்சாககே அவர்களோடேசொன னது அசூரியாவின இராசாவாகிய பெரிய அரசனானவர் உரைககிறதும நீஙகள ஏசே ககியாவுககுச சொலலவேணடியதுமேதெ னில நீ நமபியிருககிற இநத நமபிககை ஏது.

ரு இது உதடுகளினவசனிபபுமாததிரந தான எனகிறேன உயுத்தத்துககுயோசனை யுமபெலனுமவேணுமே இபபோதும என னைவிடடுப்புரணடு விழுநதற்கு நீ யாரை நமபியிருககிறாய.

௬ இதோ எகிப்தியனெனகிற அநதமுறிககப்படட நாணற்கோலை நமபுகிறாய அதினமேலொருவன சாயநதால அது அவ ன உளளங கையிலே படடுருவிப்போம அபபடி எகிப்துவின இராசாவாகிய பார் வோன தனனை நமபுகிறயாவருககுமிருக கிறான.

௭ நீ என்னுடனே எஙகள பராபரனாகிய கர்ததரை நமபுகிறோமெனறாயேயாகில அவருடைய மேடைகளையும அவருடைய பலி பீடஙகளையும அலலோ ஏசேககியா தளளிப்போட்டுயூதாவோடேயும எருசலே மியாரோடேயும இநதப்பலி பீடததின முனபணியுஙகளெனறானே.

அ இபபோதும உனககிரணடாயிரங குதிரைகளைககொடுப்பேன நீயவைகளமே லேறததககவர்களை யுனககுச சமபாதிக்க மாட்டுவாயோவெனறு அசூரியாவினிரா சாவாகிய என்னுடையவனோடே [illegible] கூடுமே.

௯ பினனை எபபடி நீஎனனுடைய [illegible] டையவனான ஊழியககாரரில ஒரேஒருத்தன [illegible] முகத்தைத்திருப்புவாய இரதஙகளுக்கு [illegible] ரைககாரருகும வருமெனறு எகிப்[illegible] யோ நமபிககொளளுகிறாய.

௰ இபபோதுவ கர்த்தரையலலாமலிந் தத்தேசததினமேலே அதை அழிககத் தேறினேனோ இநதத்தேசததினமேலே போயேறி அதை அழியெனறு கர்ததர் என னோடேசொனனாரெனறுசொனனான.

௰௧ அபபோது எலியாககீமும சேபனா வுமயோவாககுமஇரப்சாககேயைநோககி முடையவனான ஊழியககாரரோடே சீரியபாஷையிலே பேசுமெனன அதை நாஙகள அறி [illegible] தவர்களலலஙகததிலிருக்கிறசனஙகள் [illegible] விகளிலேபட எஙகளோடே யூதபாஷையி லேபேசாதேயுமெனறார்கள.

௰௨ இரப்சாககேயோவெனறால உங் [illegible] ளோடுஙகூடததஙகள [illegible] வுநதஙகள நீரைககுடிககவும [illegible] லே தஙகியிருககிற புருஷரண்டைக்கே லாமல உனனுடையவனணடைககும உன் னணடைககும என்னுடையவனென் [illegible] தவார்த்தைகளைப்பேச அனுபபினா [illegible] னறுசொலலி,

௰௩ இரப்சாககே நினறுகொணடு [illegible] பாஷையிலே மகாசததமாயக கூப்பிட்டுச் சொனனதாவது, அசூரியாவின இராசா வாகிய பெரிய அரசனுடைய வார்த்தை களைககேளுஙகள.

௰௪ ஏசேககியா உஙகளை யெத்த [illegible] டாதேயுஙகள ஏனெனில உஙகளைத் [illegible] விககமாட்டான.

௰௫ கர்ததர் நமமைத்தபபவே [illegible] பணணுவார் இநதப்படடணம அசூரியா இராசாவின கையில ஒபபுககொடுக்கப் வதிலலையெனறு ஏசேககியா உஙகளைக் கர் ததரை நமபப்பணணவொட்டாதே யுங்க ளெனறு இராசாசொலலுகிறார்.

௰௬ ஏசேககியாவின சொலலைக்கேளா தேயுஙகள ஏனெனில அசூரியாவின இரா சா உரைககிறதாவது நீஙகள நமமோடே இராசியாகி நமமணடையிலே புறப்பட்டு,

௰௭ நாமவநது உஙகளை யுஙகள தேசத் தைப்போலிருககிற தானியமுந் திராட் ட்சரசமுமுளளதேசமும அப்பமும திராட்சததோட்டஙகளுமுளள [illegible] முமாகிய சீர்மையிலே அழைத்துக்கொண டுபோகுமளவும அவரவர் தன்திராட் சசெடியின கனியையுந் தன அத்திமரத்தின கனியையுமபொசிததுஅவரவர் தன்

றதீன தண்ணீராகக்குடியுங்கள.

௰௮ கர்த்தர் நம்மைத்தப்புவிப்பாரென்று எசேக்கியா உங்களை மோசம்போக்க வேண்டாம் * சாதிகளுடையதேவர்களில அவரவர் தங்களதேசத்தை அசூரியாவின்இராசாவின் கைக்குத்தப்புவித்ததுண்டோ.

* ௰, அ ௰௧. ௩௭, ௰௨. ௰௩.

௰௯ ஆமாத் அர்பாத் பட்டணங்களின தேவர்களெங்கே செப்பற்வாயீமின தேவர்களெங்கே சமாரியாவை நமது கைக்குத்தப்புவிப்பாருண்டாயிருந்தார்களோ,

௨௰ கர்த்தர் எருசலேமை நம்முடைய கைக்குத் தப்புவிப்பாரென்னத்தக்கதாக இந்தத்தேசங்களுடைய எல்லாத தேவர்களிலுந் தங்களதேசத்தை நம்முடைய கைக்குத்தப்புவித்தவராரென்கிறானென்றுசொனனார்.

௨௧ ஆனால அவர்கள அவனுக்கொரு வார்த்தையையும பிரத்தியுத்தரமாகச சொல்லாமல மவுனமாயிருந்தார்கள ஏனெனில மறுவுத்தரவுசொல்லாதையுங்களென்பது இராசாவின்கட்டளையாயிருந்தது.

௨௨ அப்போது இலக்கியாவின் குமாரனாகிய எலியாக்கீமென்ற அரண்மனைவிசாரிப்புக்காரனுஞ் செபனாவென்ற சமபிரதியும் ஆசாபின்குமாரனாகிய யோவாகென்ற தணக்குமும வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டவர்களாய எசேக்கியாவண்டைக்கு வந்து அவனுக்கு மறுவுத்தரவு இரப்சாக்கேயின்வார்த்தைகளையறிவித்தார்கள.

௩௭. அதிகாரம்.

[எசேக்கியா அசூரியா இராசாவின கைக்கு அதிசயமான தேவ வல்லமையினாலே நீங்கலாக்கிவிடுவிக்கப்பட்டது.]

இராசாவாகிய எசேக்கியா இதைக் கேட்டபோது சமபவித்ததேதென்றால அவன்தன வஸ்திரங்களைக்கிழித்து இரட்டுடுத்திக்கொண்டு கர்த்தருடைய வீட்டுக்குள்ளேபிரவேசித்து, * ௨. இரா. ௰௯, ௧. ௴

௨ அரண்மனை விசாரிப்புக்காரனாகிய எலியாக்கீமையுஞ் சமபிரதியாகிய செப்னாவையும ஆசாரியர்களுடைய மூப்பர்களையும் ஆமோத்சின்குமாரனாகிய ஏசாயாவென்ற தீர்க்கதரிசியண்டைக்கு இரட்டுடுத்தவர்களாக அனுப்பினான.

௩ அவர்கள அவனுடனே இந்தநாள நெருக்கமுஞ்சீறுமாறுந்தூஷணமுமுள்ள நாளாமே எனெனில பிள்ளைகளப்பிரசவிக்கச்சமீபித்தது ஆனால் பெறப்பெலனில்லை.

௪ சேவனுள்ள பராபரனை நிந்திக்கவும உன பராபரனாகிய கர்த்தர்கேட்டிருக்கிற வார்த்தைகளாலே சீறுமாறு பண்ணவும அசூரியாவின் இராசாவாகிய தன்னாண்டவனால அனுப்பப்பட்ட இரப்சாக்கேசொன்னவார்த்தைகளை உனபராபரனாகியகர்த்தர் கேட்பாராகக்கும, ஆகையால இன்னம மீதியாய வைக்கப்பட்டவர்களுக்காக விண்ணப்பஞ்செய்வாயாகவென்று எசேக்கியா சொல்லச்சொன்னானென்று,

௫ எசேக்கியா இராசாவின் ஊழியக்காரர் ஏசாயாவண்டையிலேவந்து சொனனார்கள.

௬ அப்போது ஏசாயா அவர்களுடனே அசூரியாவுடைய இராசாவின ஊழியக்காரர் நம்மைத்தூஷணித்ததும நீ கேட்டதுமானவார்த்தைகளினாலேபயப்படாதே.

௭ இதோ அவன் ஒருசெய்தியைக்கேட்டுத்தன தேசத்துக்குத்திரும்புவதற்கான ஆவியை நாம அவனுக்குள்ளே கொடுத்து அவனையவனுடையதேசத்திலே பட்டயத்தால விழுந்துபோகப்பண்ணுவோமென்று கர்த்தருரைக்கிறாரென்கிறதை உங்கள ஆண்டவனுக்குச்சொல்லுங்களென்றான.

௮ இரப்சாக்கேதிரும்பிப்போய அசூரியாவின இராசா இலாகீசைவிட்டுப்புறப்பட்டானென்றுகேட்டு அவன லீப்னாவுக்கு விரோதமாகயுத்தம்பண்ணக்கண்டான.

௯ ஆனால எத்தியோப்பியாவின இராசாவாகிய தீராக்கா உம்மோடு யுத்தம பண்ணப்புறப்பட்டானென்று செய்தியைக்கேட்டான அதைக்கேட்டபோது அவன் எசேக்கியாவண்டைக்குத்தானாபதிகளையனுப்பிச்சொன்னதாவது,

௰ நீங்கள யூதாவின் இராசாவாகியஎசேக்கியாவுக்குச சொல்லவேண்டியதேதெனில எருசலேம அசூரியாவுடைய இராசாவின்கையில ஒப்புக்கொடுக்கப்படுவதில்லையென்று நீ நம்பியிருக்கிற உனதேவன் உன்னையேத்தவொட்டாதே.

௰௧ இதோ அசூரியாவின் இராசாக்கள எல்லாத்தேசங்களுக்கும அவைகளைச்சங்கரிக்கும்படிக்குச்செய்ததை நீ கேட்டாயே நீ தப்புவாயோ,

௰௨ என்பிதாக்கள அழித்துப்போட்ட கோசானும ஆரானும ரேத்சேப்பும தேலாசாரிலிருந்த எதேனின்புத்திரருமென்ற சாதிகளையவர்களுடைய தேவர்கள தப்புவித்ததுண்டோ,

௰௩ ஆமாத்தின இராசாவும அர்பாத்தின இராசாவும செப்பற்வாயீம ஏனா ஈவா பட்டணங்களின இராசாவும எங்கேயென்றுசொல்லுங்களென்றான.

௰௪ எசேக்கியா தானாபதிகளின் கையிலே நிருபங்களைவாங்கி அவைகளை வாசித்தான பிற்பாடு எசேக்கியா கர்த்தருடைய வீட்டுக்குப்போயேறி அவைகளைக்கர்த்தருக்குமுன்பாகவிரித்து,

௰௫ கர்த்தரைநோககிபபணணின விணணபபமாவது,

௰௬ சேனைகளின கர்த்தாவே கேருபீன்களின்மேலவாசமபணணுகிற இஸரவேலின் பராபரனே தேவரீரொருவரே பூமியின இராசசியஙகளுககெலலாந தெயவமானவர், தேவரீர் வானததையும பூமியையுமுணடாககினீர்.

௰௭ கர்த்தாவே உமது செவியைசசாயததுககேளும கர்த்தாவேநீர் உமதுகணகளைததிறநதுபார்ததுசசனகேரீப்பு சீவனுளள பராபரனை நிநதிககுமபடிககு அனுபபின எலலா வார்ததைகளையுங கேளும.

௰௮ மெயதான கர்த்தாவே அசூரியாவின இராசாககள எலலாததேசஙகளையும அவைகளின நாடடையும பாழ்ககடிததது,

௰௯ அவைகளின தேவர்களை நெருபபிலேபோடடார்கள ஏனெனில அவைகள தேவர்களாயிராமல மனுஷர்கைகளினவேலையாகிய மரமுங கலலுமாயிருநதது ஆகையால அவைகளை நிர்த்தூளியாககினூர்கள.

௨௰ இபபோதும எஙகளபராபரனாகிய கர்த்தாவே தேவரீரொருவரே கர்த்தரெனறு பூமியின் இராசசியஙகளெலலாம்றியுமபடிககுததேவரீர் எஙகளையவன்கைக்குநீஙகலாககிஇரட்சியுமென்றுஏசேககியாவிண்ணபபமபணணினூன்.

௨௧ அபபோது ஆமோத்சின்குமாரனாகிய ஏசாயா ஏசேககியாவுககுசசொலலியனுபபினதாவது இஸரவேலின் பராபரனாகியகர்த்தர்உரைககிறதேதெனில நீஅசூரியாவின் இராசாவாகிய சனகேரீபின்நிமிததியம நமமைநோககி விணணபபமபணணினூயே.

௨௨ அவனைககுறித்துககர்த்தர் உரைககிறவசனமாவது சீயோன் குமாரததியாகிய கன்னியாஸதிரி உனனையிகழ்நது உன்னைபபாிகாசமபணணுகிறுள எருசலேம் குமாரததி உன்பின்ஞலே தலையைத்துலுககிறுள்.

௨௩ ஆரை நிநதித்துத்தூஷணிததாய் ஆருககுவிரோதமாயசசத்தத்தையுயர்ததினூய நீஇஸரவேலின் பரிசுததருககுவிரோதமாகவலலோ உன் கண்களை மேடடிமையாய்நெரிததாய்.

௨௪ உன ஊழியககாரரைககொணடு நீ ஆணடவரை நிநதித்து என் இரதஙகளின் திரளினூலே நான லீபனோனின்பககஙகளாகிய மலைகளின் உயரததிலேறினேன அதின ஓஙகலாகிய அதினகேதருககளையுநதெரிநதுகொளளபபடடபாய்மரவிருட்சஙகளையும நான்வெடடி அதினகடைசி உயரமாகிய அதின்செழுமையான காடுமடடுமவருவேனென்றும,

௨௫ நான் ஊறறுகளைவெடடித்தணணீர்களைககுடிததேன என் உளளஙகாலகளின் அடியினூலே எகிப்தின ஆறுகளையெலலாமவறறவுமபணணுவேனெனறுஞசொலலுூய்.

௨௬ நாம்வெகுகாலததுககுமுன்னுஞ்செயதுமுறபூர்வநாள்களமுதறகொணடு இவைகளைச்செயயயோசிததிருககிறோமென்று நீகேடடதிலலையோ இபபோது நீ அரணுனபடடணஙகளைபபாழானமண்மேடுகளாககுகிறவனுயிருககஅதைவரபபணணினோம.

௨௭ அதினூலேயவைகளின்குடிகள கைசசிறியவர்களாகிக் கலஙகி வெட்கபபட்டு வெளியின்பூணடுகளும பசசையான புலலும் வீடுகளின்மேல முளைதத புலலுமபோலவும ஓஙகிவளராததுக்குமுன் தீயுகமபோனபயிருககுஞசமானமானூர்கள.

௨௮ ஆலை உனனிருபபையும உன்புறப்பபடுதலையும உன்வருகையையும நீ நமககு விரோதமாயக் கொநதளிககிறதையும அறிவோம.

௨௯ ஆனதுகொணடு நீ நமககுவிரோதமாயக்கொநதளிததது உன இறுமாபபு நம்முடைய செவிகளிலேறினபடியினூலே நாமநம்முடைய தூறடடையுன மூககிலும நமமுடைய கடிவாளததையுன வாயிலும போடடு நீவநதவழியேயுனனைத்திருமபிககொணடுபோவோமெனபதுதானே.

௩௰ உனககோவெனில அடையாளமாயிருபபதாவது இநதவருஷததிலே தபபியிருபபதாகிறதையும இரணடாமவருஷத்திலே அதினூலவிளைகிறதையுஞசாபபிடுவீர்கள மூன்றாம் வருஷததிலோ விதைதது அறுததுத் திவிதிராட்சததோடடஙகளை நாடடி அவைகளின்கனிகளைசசாபபிடுவீர்கள.

௩௧ யூதாவினவீடடாரிலேதபபி மீதியானவர்கள அபபுறநதாழவேர்பபறறி உயரககனிகொடுபபார்கள.

௩௨ ஏனெனில மீதியானவர்கள எருசலேமிலிருநதபபினவர்கள சீயோனபருவதத்திலுமிருநதுபுறபபடுவார்கள, *சேனைகளுடையகர்த்தரின சுறுசுறுபபு அதைசசெயயும. * ௯, எ.

௩௩ ஆகையாலே கர்த்தர் அசூரியாவின் இராசாவைககுறிதது உரைககிறதாவது அவனிநதபபடடணமடடும வருவதுமிலலை அதிலே அமபையெய்வதுமிலலை அதற்குமுன கேடையததோடே வருவதுமிலலை அதுககுவிரோதமாயக்கொததளமபோடுவதுமிலலை.

௩௪ அவனிநதப்படடணததுககுட்பிரவேசியாமலே தானவநதவழியே திருமபிப்போவான.

௩௫ ஏனெனில் நம்முடைய நிமித்தியமாகவும் நம்முடைய தாசனாகிய தாவீதின் நிமித்தியமாகவும் நாமிந்தப் பட்டணத்தை இரட்சிக்கும்படிக்கு அதுக்காதரவாயிருப்போமென்கிறதைக் கர்த்தர் உரைக்கிறாரென்று சொல்லியனுப்பினான்.

௩௬ அப்போது *கர்த்தருடைய தூதன் புறப்பட்டு அசூரியன் பாளையத்திலே நூற்றெண்பத்தையாயிரம் பேரைச் சங்கரித்தான். அவர்கள் அதிகாலமே எழுந்திருக்கும்போது இதோ எல்லாரும் செத்த சவங்களாய்க் கிடந்தார்கள். * ௰௭, ௰௮. ௨. இராசா. ௰௯, ௩௫.

௩௭ அப்போது அசூரியாவின் இராசாவாகிய சனகேரீப் புறப்பட்டுத் திரும்பிக்கொண்டுபோய் நினிவேயிலிருந்துவிட்டான்.

௩௮ பிறகு சமயவிந்தத் தேவனில் அவன் தன் தேவனாகிய நிஸ்ரோகின் வீட்டிலே பணிந்துகொள்ளுகிறபோது அவன் குமாரராகிய அதிர்மெலேக்கும் சரேத்சேரும் அவனைப் பட்டயத்தாலே வெட்டிப்போட்டு அரராத் தேசத்துக்குத் தப்பியோடிப்போனார்கள் அவன் குமாரனாகிய ஏசர்காதோன் அவன் பட்டத்துக்கு வந்தரசாண்டான்.

௩௮. அதிகாரம்.

[சாகக்கிடந்த எசேக்கியாவின் ஆயிசோடே கர்த்தர் பதினைந்து வருஷங்களைக் கூட்டினது.]

௧ அந்நாள்களிலே எசேக்கியா சாகத்தக்கதான வியாதிப்பட்டிருந்தான் அப்போது ஆமோத்சின் குமாரனாகிய எசாயா என்ற தீர்க்கதரிசி அவனண்டைக்கு வந்து அவனுடனே உன் வீட்டுக்குப் பண்ணவேண்டிய திட்டங்களைக் கட்டளைபண்ணு, ஏனெனில் நீ பிழைக்காமல் மரிப்பாயென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான். * ௨. இராசா. ௨௰, ௧.

௨ அப்போது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி,

௩ ஆ கர்த்தாவே நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமுமாய் நடந்துகொண்டு உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேனென்கிறதை நினையுமென்று எசேக்கியா மகா அழுகையாய் மிகுதியும் அழுதான்.

௪ அப்போது எசாயாவுக்குண்டான கர்த்தருடைய வார்த்தையாவது,

௫ நீ போய் எசேக்கியாவுடனே சொல்லவேண்டியது உன் தகப்பனாகிய தாவீதின் பராபரனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிற தேதெனில் உன் விண்ணப்பத்தைக் கேட்டோம் உன் கண்ணீரைக் கண்டோம் இதோ நாம் உன் நாள்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டி,

௬ அசூரியா இராசாவின் கைக்குன்னையும் இந்தப் பட்டணத்தையுந் தப்புவித்து இந்தப் பட்டணத்துக்கு ஆதரவாகவிருப்போம்.

௭ இதோ நாம் ஆகாசுடைய சூரியக் கடியாரத்திலே வரிக்குவரியிறங்கின நிழலைப் பத்துவரி பின்னிட்டுத் திரும்பப்பண்ணுவோமென்றார்.

௮ தானுசொன்ன இந்த வார்த்தையின்படி கர்த்தர் செய்வாரென்கிறதுக்கு இது கர்த்தராலுனக்கடையாளமாயிருக்குமென்று சொல்லென்றார் அப்படியே கடியாரத்திலே இறங்கியிருந்த சூரிய நிழல் பத்துவரி திரும்பிற்று.

௯ யூதாவின் இராசாவாகிய எசேக்கியா வியாதியாகித் தன் வியாதியும் நீங்கிச் சொஸ்தமானபோது எழுதிவைத்ததாவது,

௰ என் குறையாயிசின் வருஷங்களுக்குச் சேராமல் பாதாளவாசல்களுக்குட்படுவேனென்று நானென்னாள்கள் அறுப்புண்கிறபோது சொன்னேன்.

௰௧ கர்த்தரைக் கர்த்தரையே நான் இனி உயிரோடிருக்கிறவர்களின் தேசத்திலே தரிசிப்பதில்லை நான் இனிப் பூலோகக் குடிகளோடிருந்து மனுஷரைக் காண்பதில்லை.

௰௨ என்னாயிசு மேய்ப்பனுடைய கூடாரத்தைப்போலென்னை விட்டுப் பேர்ந்துபோகிறது நெய்கிறவன் பாவையறுக்கிறாப்போல என் சீவனையறுக்கக்கொடுக்கிறேன் என்னை நூற்பாவிலிருந்தறுத்துப்போடுகிறார் இன்றிராவைக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர்.

௰௩ விடியக்காலத்தோடேன் எண்ணானது சரியானது சிங்கத்தைப்போலென்னெலும்புகளையெல்லாம் நொறுக்குவார் இன்றிராவைக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர் என்றுசொல்லி,

௰௪ நமுட்டைப்போலும் நகைவில்லான் குருவியைப்போலுங் கீச்சென்று கூவினேன் * புறாவைப்போலப் புலம்பினேன் என் கண்களுயரப் பார்க்கிறதினாலே பூத்துப்போனது கர்த்தாவே ஒடுங்கிப்போகிறேன் எனக்காக மேற்போட்டுக்கொள்ளுமென்றேன். * ௫௯, ௰௧. ௰௫.

௰௫ நானென்னசொல்லுவேன் அவரெனக்குத் தரவுகொடுத்தார் அந்தப்பிரகாரமுஞ்செய்தார் என்னுத்துமாவின் கசப்பை என்னாயிசு வருஷங்களிலெல்லாம் நினைந்து நடந்துகொள்ளுவேன்.

௰௬ ஆண்டவரே அதினாற்பிழைக்கிறார்கள் அதிலே முழுதுமென்னாவியின் சீவனிருக்கி

றது என்னைச் சொஸ்தப்படவும் பிழைக்கவும் பண்ணினீர்.

௰௭ இதோ சமாதானத்துக்குப்பதிலாக எனக்கு மகாகசப்பு வந்திருந்தது தேவரீரோ என்னுடைய ஆத்துமாவை அழிவின் குழிக்கு விலக்கி அதைக் காத்தீர் ஏனென்றால் என்பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப்பின்னாக எறிந்துவிட்டீர்.

௰அ ஏனென்றால் பாதாளம் உம்மைத் துதிப்பதும் மரணம் உம்மைப் போற்றுவதுமில்லை குழியில் இறங்குகிறவர்கள் உம்முடைய சத்தியத்தைத் தியானிக்கிறதில்லை.

௰௯ உயிரோடே உயிரோடிருக்கிறவனே உம்மை நான் இன்று செய்கிறதுபோலே துதிப்பான் தகப்பன் பிள்ளைகளுக்கு உமது சத்தியத்தையறிவிப்பான்.

௨௰ கர்த்தர் என்னையிரட்சிக்கவந்தார் ஆகையால் எங்கள் சீவனுடைய எல்லாநாள்களிலுங் கர்த்தருடைய வீட்டிலே என் கீதவாத்தியங்களை வாசிப்போமென்றெழுதி வைத்தான்.

௨௧ அத்திப்பழக்கட்டியையெடுத்துவந்து எரிந்தபருவின்மேலே பற்றுப்போடுங்கள் அப்போது பிழைப்பாரென்று எசாயா சொல்லியிருந்தான்.

௨௨ அப்போது எசேக்கியா நான் கர்த்தருடைய வீட்டுக்குப்போயேறுவதற்கு அடையாளமென்னவென்று கேட்டிருந்தான்.

௩௯. அதிகாரம்.

[பாபேலுடைய இராசாவின் தானாபதிகளுக்கு எசேக்கியா தன் பொக்கிஷங்களைக் காண்பித்தபோது எசாயாவின் வாயினாலே கேட்ட தீர்க்கதரிசனம்]

அக்காலத்திலே * பாலாதானுடைய குமாரனாகிய மெரோதாக் பாலாதான் என்ற பாபேலின் இராசா எசேக்கியா வியாதிப்பட்டு ஆரோக்கியமானதைக் கேட்டு அவனண்டைக்குக் காகிதங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான். * ௨. இராசா. ௨௰, ௨௰. முத

௨ அவர்கள் பேரிலே எசேக்கியா சந்தோஷப்பட்டு அவர்களுக்குத் தன் பொக்கிஷசாலையையும் வெள்ளியையும் பொன்னையுங் கந்தவர்க்கங்களையும் நல்லபரிமளதயிலத்தையுந் தன் ஆயுதச்சாலையனைத்தையுந் தன் பொக்கிஷங்களிலுள்ள தெல்லாவற்றையுங் காண்பித்தான் தன் வீட்டிலுந் தன்னுடைய எல்லா இராச்சியத்திலும் எசேக்கியா அவர்களுக்குக் காண்பியாத பொருளில்லை.

௩ அப்போது எசாயாதீர்க்கதரிசி எசேக்கியா இராசாவண்டைக்கு வந்து அவனுடனே அந்த மனுஷர் என்னசொன்னார்கள் எங்கேயிருந்து உம்மண்டைக்கு வந்தார்களென்றான் அதற்கு எசேக்கியா பாபேலென்கிற தூரதேசத்திலிருந்து என்னண்டைக்கு வந்தார்களென்றான்.

௪ அப்போது அவன் உம்முடைய வீட்டிலே என்னத்தைக் கண்டார்களென்றான் அதற்கு எசேக்கியா என் வீட்டிலுள்ள தெல்லாவற்றையுங் கண்டார்கள் என் பொக்கிஷங்களில் நான் அவர்களுக்குக் காண்பியாத பொருளில்லையென்றான்.

௫ அப்போது எசாயா எசேக்கியாவுடனே சொன்னதாவது சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையைக் கேளும்.

௬ இதோ நாள்கள் வரும் அப்போது உன் வீட்டிலுள்ளதிலும் உன் பிதாக்கள் இந்நாள்வரைக்குஞ் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாய் வைக்கப்படாமல் எல்லாம் பாபேலுக்குக் கொண்டுபோகப்படும்.

௭ நீ பெறப்போகிற உன் சந்தானமாகிய உன் குமாரரிலுஞ் சிலரைப் பாபேலுடைய இராசாவின் அரமனையிலே பிரதானிகளாயிருக்க எடுப்பார்களென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான்.

௮ அப்போது எசேக்கியா எசாயாவுடனே நீ சொன்ன கர்த்தருடைய வார்த்தை நல்லதேயென்று சொல்லி என் நாள்களில் ஆகிலுஞ் சமாதானமும் உண்மையுமிருக்குமேயென்றான்.

௪௰. அதிகாரம்

[மேசியாவின் கிருபையுள்ள வருகையைப்பற்றி யோவான் ஸ்நானனாலும் அப்போஸ்தலராலுங் கூறப்படுஞ் சுவிசேஷத்தின் பிரசங்கத்தையும் முன்னறிவித்தது.]

நீங்கள் நமது சனத்தை ஆற்றித் தேற்றுங்கள்.

௨ நீங்கள் எருசலேமுடனே * பட்சமாய்ப் பேசி அதின் போர் முடிந்ததென்றும் அதின் அக்கிரமம் நிவர்த்தியாக்கப்பட்டதென்றும் அது தன்னுடைய எல்லாப் பாவங்களின் நிமித்தியங் கர்த்தரின் கையிலே இரட்டிப்பாயடைந்து தீர்ந்ததென்றும் அதற்குக் கூறுங்களென்றும் உங்கள் பராபரன் சொல்லுகிறார்.

௩ * வனாந்தரத்திலே கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கள் நம்முடைய பராபரனுக்கு அந்தரவெளியிலே பாதையைச் செவ்வைப்பண்ணுங்களென்றும்,

* மத்தேயு. ௩, ௩. மார்க். ௧, ௩. லூக். ௩, ௪—௬. யோவா. ௧, ௨௩.

௪ பள்ளமெல்லாம் உயர்த்தப்படுஞ் சகலமலையுங் குன்றுந் தாழ்த்தப்படுங் கோணலானது செவ்வையாகிக் கரடுமுரடானவைகள் சமனாக்கப்படுமென்றும்,

௫ கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும் அதையெல்லா மாம்சமும் ஏகமாய்க்

ளும் ஏனென்றால் கர்த்தரின் வாக்கு அதையு ரைத்ததென்று கூப்பிடுகிற சத்தமுண்டாம்.

சு கூப்பிடு என்றொரு சத்தமுண்டாம் என்னத்தைக் கூப்பிட்டுச் சொல்லுவேனென்கிறேன் * எல்லா மாம்சமும் புல்லைப்போலும் அதின் மேன்மையெல்லாம் வெளியின் பூவைப்போலுமிருக்கிறது. * யோபு. ௰௪, உ. சங்கீ. கூ௰, ௫. ௱௩, ௰ரு. ௰சு. க. பேது. க, உ௪. உரு.

எ கர்த்தரின் ஆவியதின்மேலூதும்போது புல்லுலர்ந்து பூவுதிருஞ்சனமேபுல்லு.

அ புல்லுலர்ந்து பூவுதிரும் * நமது பராபரனுடைய வசனமோவென்றென்றைக்கு நிற்கும் என்பதையேயென்று உரைக்கும். * ஆக்கா. உக, ௩௩.

கூ சீயோனென்ற சுவிசேஷகியே நீயுயர்ந்த பருவதத்திலேறு எருசலேமென்ற சுவிசேஷகியே உன்சத்தத்தைப் பலத்தோடேயுயர்த்து பயப்படாமல் அதையுயர்த்தி யூதாவின் பட்டணங்களுடனே இதோ உங்கள் பராபரன் என்றுசொல்லு.

௰ இதோ கர்த்தராகிய ஆண்டவர் பலவானுக்கு விரோதமாய் வருகிறார் அவர் கைப்புயம் அவனையாண்டுகொள்ளும் இதோ * அவருடைய பலன் அவரோடுங்கூடவருகிறது அவருடைய பலபாகம் அவர்முகத்துக்கு முன்பாகப்போகிறது. * சுஉ, ௰க.

௰க * மேய்ப்பனைப்போலே தமது மந்தையை மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்திலே சேர்த்துத் தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை † மெதுவாய் நடத்துவார். * சங்கீ. உ௩, க. ஏசே. ௩௪, உ௩. யோவா. ௰, ௰க. † ௪சு, ௰.

விக்கிரக ஆராதனைக்காரராகிய லோகஞானிகளின் பெருமைப் பித்தியத்தையும் தேவக்கிரியைகளால் விளங்கிய பராபரனுடைய மகிமையையுங் காண்பித்தது.

௰உ தண்ணீர்களைத் தன் கைப்பிடியால் அளந்து வானங்களைச் சாணளவாகத் திட்டம் பார்த்துப் பூமியின் மண்ணை மரக்காலால் அளந்து பருவதங்களைக் கயிறாக்கோலாலும் மேடுகளைத் திராசாலும் நிறுத்தவனார்.

௰௩ * கர்த்தருடைய ஆவியைத் திட்டப்படுத்தி அவருக்கு ஆலோசனைக்காரனாய் அவருக்கு அறிவுண்டாக்கினவனார். * ரோமர். ௰க, ௩௪. க. கொரி. உ, ௰சு.

௰௪ தமக்குணர்வுண்டாக்கவுந் தம்மை நியாயவழியிலே யுபதேசிக்கவும் தமக்கறிவைக்கற்றுக்கொடுக்கவுந் தமக்கு விவேகங்களின் வழியையறிவிக்கவும் அவர் ஆரோடே ஆலோசனைபண்ணிக்கொண்டார்.

௰ரு இதோ சாதிகள் ஏற்றச்சாலிலே தொங்குந்துளியாகவுந் திராசிலேபடிந்த தூசியாகவும் எண்ணப்பட்டிருக்கிறது இதோ தீவுகளையொரு அணுவைப்போலே தூக்குகிறார்.

௰சு லீபனோன் நெருப்புக்கும்போதாது அதின் மிருகஜீவன்கள் தகனபலிக்கும்போதாது.

௰எ சகலசாதிகளும் அவருக்கு முன்பாக * ஒன்றுமில்லாததுபோலிருந்து ஏதுமற்றதினுங்குறைவாயும் வெறுமையாகவும் அவரால் எண்ணப்படுகிறது. * ௩௩, ௯.

௰அ இப்படியிருக்கக் கொள்ளப்பட்ட பராபரனை யாருக்குச் சாயலாக்குவீர்கள் அல்லது எந்தச் சாயலையவருக்கொப்பிடுவீர்கள். * ௪சு, ரு.

௰கூ * கன்னான் ஒரு சுரூபத்தைவார்க்கிறான் தட்டான் பொன்தகட்டால் அதைமூடி அதுக்கு வெள்ளிச்சங்கிலிகளைப் பொருத்துவிக்கிறான். * ௪௪, ௰உ. ௰௩.

உ௰ அதுக்குக்கொடுக்க வகையில்லாதவன் உளுத்துப்போகாத மரத்தைத்தெரிந்துகொண்டு அசையாதவொரு சுரூபத்தைச் செய்ப்பண்ணிட விவேகமுள்ள ஒருத்தச்சனைத் தனக்குத்தேடுகிறான்.

உக நீங்களறிந்ததில்லையோ நீங்கள் கேட்டதில்லையோ உங்களுக்காதிமுதலாய் அறிவிக்கப்பட்டதில்லையோ பூமி அஸ்திபாரப்பட்டதை யுணராதிருக்கிறீர்களோ.

உஉ அவர் பூமியினுடைய உண்டையின்மீதில் உளுக்கார்ந்திருக்கிறவர் அதின் குடிகள் வெட்டுக்கிளிகளைப்போலிருக்கிறார்கள் அவர் * வானங்களை மெல்லியபாவாடையைப்போலப் பரப்பிக் குடியிருக்கிறவர்களுக்கு கூடாரத்தைப்போல விரிக்கிறவர். * ௪௰, உ௩. சங்கீ. ௱௪, உ.

உ௩ அவர் தலைவர்களை மாய்கையாக்கிப்போட்டுப் பூமியின் நியாயாதிபதிகளை யவந்தரையாக்குகிறவர்.

உ௪ அவர்கள் திரும்ப நாட்டப்படுவதுமில்லை விதைக்கப்படுவதுமில்லை வெட்டப்பட்ட அவர்களுடைய அடிமரந்திரும்பத் தரையிலே வேர்விடுவதுமில்லை அவர்கள்மேல் அவர் ஊதவேபட்டுப்போவார்கள் பெருங்காற்று அவர்களையொரு துரும்பைப்போலடித்துக்கொண்டுபோம்.

உரு பின்னை நம்மை யாருக்கொப்பான சாயலாக்குவீர்களென்று பரிசுத்தர் சொல்லுகிறார்.

உசு உங்கள் கண்களையுயர எடுத்துப்பாருங்கள் இவைகளைச் சிருஷ்டித்தவரார் அவரவைகளின் சேனையை இலக்கத்திட்டமாகப் புறப்படப்பண்ணி அவைகளையெல்லாம் பேர்பேராக அழைக்கிறவராமே * அவருடைய வல்லசத்துவங்களாலும் அவர் வல்லமையிலே பெலத்தவராயிருக்கிறதினா

னும அவைகளிலொன்றும குறையாதே போம. * சங். ாசஎ, ௪௫.

கர்த்தருக்குக்காத்திருக்கும்படிக்குவிசுவாசிகளுக்குச்சொன்னதிடன்.

௨எ யாக்கோபே இஸ்ரவேலேஎன்வழி கர்த்தருக்கு மறைவானதென்றும என நியாயம என்பராபரனைச சேராமற்போகிறதென்றும நீ சொலலுவானேன.

௨அ *பூமியில கடையாந்தரங்களைச சிருஷ்டித்த கர்த்தராகியநித்தியபராபரன் இளைக்காமலும விடாய்க்காமலுமிருக்கிறாரென்று நீ யறியாயோ நீகேட்டதுமிலலையோ அவருடைய உணர்வுக்கு ஆராயுதலில்லை. * சஉ, ௫. ௪௫, ௰௨.

௨௯ இளைத்தவனுக்கு அவர் பெலன் கொடுத்துச்சத்துவமற்றவனுக்குப பெலனைப்பெருகப்பண்ணுகிறார்.

௩௰ இளைஞர் இளைத்துவிடாய்க்கிறார்கள வாலிபரும்இடறிவிழுவார்கள.

௩௧ கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன்அடைந்து கழுகுகளைப போலச்செட்டைகளையடித்தெழும்புவார்கள அவர்கள ஓடியும விடாய்க்கார்கள நடந்தும இளைக்கார்கள.

௪௧. அதிகாரம்.

[விக்கிரகாராதனைக்காரரைப பராபரன் கண்டித்தது.]

தீவுகளே நமக்குமுன்பாக மவுனமாகுங்கள சனசதளங்கள தங்கள பெலனைப புதிதாக்கிக்கொண்டு சமீபித்துவந்து பிறபாடு பேசக்கடவார்கள ஒருமிக்க நியாயத்திலேசேருவோம.

௨ நீதியாய்த் தமது காலடியிலே வரக் கிழக்கிலிருந்து ஒருவனை எழுப்பி அழைத்தவரார் * அவனுக்குமுன்பாகச்சாதிகளையொப்புக்கொடுத்து அவனை இராசாக்களுக்காண்டவனாக்கி இவர்களையவன் பட்டயத்துக்குத் தூசியும அவன்வில்லுக்குச்சிதறவடிக்கப்பட்டதாளடியுமாக்கி, * எஸ்ரு க, உ.

௩ அவனிவர்களைத்துரத்தவுந் தன்கால்கள வராதிருந்தபாதையிலே சமாதானத் தோடேகடக்கவும பண்ணுகிறவரார்.

௪ அதை நடப்பித்துச்செய்து ஆதிமுதற்கொண்டு தலைமுறைகளை வரவழைத்துக்கொண்டிருக்கிறவரார் * முந்தினவராயிருக்கிற கர்த்தராகிய நாந்தாமேபிந்தினவர்களோடேமிருப்பவராகிய நாந்தாமே. *

* ௪௪, ௬. ௪௮, ௰௨. அறிவி. க, ௰எ. உஉ, ௰௩.

௫ தீவுகள அதைக்கண்டுபயப்படும பூமியின்கடையாந்தரங்கள நடுங்கும அவர்கள சேர்ந்துவந்து,

௬ ஒருவனுக்கொருவன ஒத்தாசைசெய்துசகோதரனோடேசகோதரா பெலப படுவெனென்றுசொல்லுகிறான.

௭ சூஸ்திரக்காரன்தட்டானைத்தைரி யப்படுத்துகிறான, சுத்தியலாலேமெல்லிசாய்த்தட்டுகிறவன அடைகல்லின்மேல அடிக்கிறவனைப்பலப்படுத்தி இசைவுநல்லதென்றுசொல்லி அதை அசையாதபடிக்காணிகளாலேகெட்டியாக்குகிறான.

விசுவாசிகளினசவையைபராபரன்தேற்றுகிறது.

௮ ஆனால் * நம்முடைய தாசனே இஸ்ரவேலே நாந்தெரிந்துகொண்ட யாக்கோபே நம்முடைய † சிநேகிதனாகிய ஆபிரகாமின்வித்தே. * ௪௪. க, ௫௧.

† நாளாக. உ௰, எ. யாக். உ, உ௩.

௯ நாம பூமியின கடையாந்தரங்களிலிருந்து உன்னை எடுத்து அதின்எல்லைகளிலிருந்தழைத்துவந்து நீ நம்முடையதாசன நாம் உன்னை வெறுக்காமல உன்னைத் தெரிந்துகொண்டோமென்று சொன்னோமே.

௰ * நீ பயப்படாதே ஏனெனில் நாம உன்னுடனேயிருக்கிறோம திகைத்துப்போகாதே ஏனெனில நாம உன்பராபரன் நாம் உன்னைப் பலப்படுத்தி உனக்குச்சகாயம்பண்ணுகிறவருமஉன்னை நமது நீதியினவலதுகரத்தினாலே தாங்குகிறவருமாயிருக்கிறோம. * ௪௩. ...

௰௧ இதோ உனமேலெரிச்சலாயிருக்கிறவர்கள யாவருமவெட்கி இலச்சையடைவார்கள உனனோடே வழக்காடுகிற மனுஷர் ... கையாக்கழிவார்கள.

௰௨ உன்னோடே போராடினவர்களைத் தேடி * க்காணாதிருப்பாய உன்னோடே ... தம்பண்ணினமனுஷர் ஒன்றுமில்லாததும மாய்கையுமாவார்கள. * சங். ௩௭, ௩௫.

௰௩ ஏனெனில உன் பராபரனாயிருக்கிற கர்த்தராகிய நாம உன்வலதுகையைப்பிடித்து உன்னுடனேபயப்படாதே நாமஉனக்கொத்தாசைசெய்கிறோமென்கிறோம.

௰௪ யாக்கோபென்னும்சிறுபூச்சியே இஸ்ரவேலின்சிறுகூட்டமே பயப்படாதே நாம் உனக்கொத்தாசைசெய்கிறோமென்று † கர்த்தருமஇஸ்ரவேலின் பரிசுத்தருமானவர் உன்மீட்பருமானவர் உரைக்கிறார். * ஆக. ...

கா. ௰உ, ௩உ, † ௪௩, ௩.

௰௫ இதோபோரடிக்கிறதற்கு நாமுன்னைப்புதிதுங் கூர்மையுமான பலுக்குள்ள தவாடங்களாக்குகிறோம நீபருவதங்களை மிதித்து நொறுக்கிமேடுகளைப்பதருக்கொப்பாகப்போடுவாய.

௰௬ அவைகளை நீதூற்றுவாய அவைகளைக்காற்று கொண்டுபோம, சுழல் காற்று அவைகளைப்பறக்கடிக்கும நீ ...

லிலே கர்த்தருக்குள்ளே களிகூர்ந்து இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் மேன்மைபாராட்டிக்கொண்டிருப்பாய்.

௧௭ சிறுமைப்பட்டவர்களும் ஏழைகளும் தண்ணீரைத் தேடுகிறார்கள் அதுவோ இல்லாதிருக்கும், அவர்கள் நாக்கு தாகத்தால் வறளும் கர்த்தராகிய நாம் அவர்களுக்குக் கேள்விசெய்வோம் இஸ்ரவேலின் பராபரனாகிய நாம் அவர்களைக் கைவிடாதிருப்போம்.

௧௮ * நாம் உயர்ந்த நிலங்களில் ஆறுகளையும் பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுக்களையும் திறந்து வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும் வறண்ட பூமியைத் தண்ணீர்க்கேணிகளுமாக்குவோம். * ௱, ௭. ௩௫, ௬.

௧௯ வனாந்தரத்திலே கேதுருமரங்களையுஞ் சீத்திமரங்களையும் மிறுதுச்செடிகளையும் ஒலிவமரங்களையுங் கட்டளையிட்டு அவாந்தரவெளியிலே தேவதாரிவிருட்சங்களையும் பின்னைமரங்களையும் புன்னைமரங்களையுங்கூட வுண்டுபண்ணுவோம்.

௨௰ * கர்த்தருடைய கரம் அதைச்செய்ததென்றும் இஸ்ரவேலின் பரிசுத்தர் அதைப்படைத்தாரென்றும் யாவருங்கண்டு சிந்தித்தறிந்துணரும்படியாகத்தானே.

வருங்காரியங்களை யறிவிக்கமாட்டாத விக்கிரகங்களின் மாய்கையை யவர்காண்பித்தது.

௨௧ உங்கள் வழக்கைக்கொண்டுவாருங்களென்று கர்த்தர்சொல்லுகிறார் உங்கள் பெலப்படியான நியாயங்களைச் சேரப்பண்ணுங்களென்று யாக்கோபின் இராசா சொல்லுகிறார்.

௨௨ அவர்கள் அவைகளைச் சேரப்பண்ணிச் சம்பவிக்கப்போகிறவைகளை நமக்கறிவித்திடும் அவைகள் முதற்சம்பவிப்பவைகளிதென்றுசொல்லி நாம் நம்முடைய மனதையவைகளின்மேலே வைத்து அவைகளின் முடிவையும் அறியும்படிக்கு நமக்கறிவித்திடும் அல்லது வருங்காரியங்களை நமக்குக்கேட்கப்பண்ணட்டும்.

௨௩ பின்வருங்காரியங்களை நமக்கறிவியுங்கள் அப்போது நீங்கள் தேவர்களென்றறிவோம் அல்லவென்று நன்மை தீமையையாகிலுஞ் செய்யுங்கள் அப்போது நாந்திகைத்து ஏகமாய்க்கூடி அதைப்பார்ப்போம்.

௨௪ இதோ நீங்கள் ஒன்றுமில்லாததிலுங் கேடாயிருக்கிறீர்கள் உங்கள் செயலற்றதுக்குந் தாழ்ச்சியானது உங்களைத் தெரிந்துகொள்ளுகிறவன் அருவருப்பானவன்.

௨௫ ஒருவனை வடக்கேயிருந்தெழும்பப்பண்ணுகிறோம் அவன் சூரியோதயத்திலிருந்துவருவான் அவன் நமது நாமத்தைப்பிரஸ்தாபமாக்குவான் அவன்வந்து அதிகாரிகளைச் சேற்றைப்போலேயுங் குயவன் களிமண்ணை மிதிப்பிக்கிறதுபோலேயும் மிதிப்பான்.

௨௬ ஆதிமுதற்கொண்டு அல்லது முற்காலமுதற்கொண்டு அதை நாம் அறியும்படியாகவும் நாம் அவனை நீதிமானென்றுசொல்லத்தக்கதாகவும் அறிவித்தவனார் அறிவிக்கிறவனொருவனுமில்லையே கேட்கப்பண்ணுகிறவனுமில்லை உங்கள்வார்த்தைகளைக் கேள்விப்படுகிறவனுமில்லையே.

௨௭ நாமே முதலுமுதல் சீயோனை இதோ என்று சீயோனுக்குச்சொல்லி எருசலேமுக்குச் சுவிசேஷகனைக்கொடுக்கிறோம்.

௨௮ நாம்பார்த்தோம் ஆனால் அவர்களில் அறிவிக்கிறவனொருவனுமில்லை அவர்களிலே நாங்கேட்டகாரியத்துக்குப் பிரதியுத்தாரஞ்சொல்லத்தக்கவொரு ஆலோசனைக்காரனுமில்லை.

௨௯ இதோ அவர்களெல்லாரும் மாயை அவர்கள் கிரியைகளொன்றுமில்லை வார்க்கப்பட்ட அவர்களுடைய சுரூபங்கள் * காற்றும் வெறுமையுந்தானே. * எங்க். ௮௦, ௫. எரேமி. ௰, ௩. ௰௪.

௪௨. அதிகாரம்.

[லோகத்தின் இரட்சகராகிய மேசியா செய்யுங்கிருபையை முன்னறிவித்ததும் அவரைப்பாடி மகிமைப்படுத்தச் சாதிகளை யெழுப்பினதும்.]

இதோ நான்தெரிந்துகொண்டவரும் * நம தாத்துமாபிரியமாயிருக்கிறவரும் நாம் ஆதரிக்கிறவருமாகிய † நம்முடைய பணிவிடைக்காரன் ‡ நம்முடைய ஆவியைப் அவர்மேல் வைக்கிறோம் அவர் சாதிகளுக்கு நியாயத்தை வெளிப்படுத்துவார். * மத்தே. ௩, ௰௭. ௰௭. ௫. எபே. ௧, ௬. † மத். ௰௨, ௰௮—௨௧. ‡ ௰௧, ௨.

௨ அவர் கூப்பிடாமலுஞ் சத்தத்தையுயர்த்தாமலுந் தம்முடைய சத்தத்தை வீதியிலே கேட்கப்பண்ணாமலுமிருப்பார்.

௩ அவர் நெரிந்த நாணலை முறிக்காமலும் மங்கியெரிகிறதிரியை யவிக்காமலும் நியாயத்தை யுண்மையாகவெளிப்படுத்துவார்.

௪ அவர் நியாயத்தைப்பூமியிலே நிலைப்படுத்துமட்டும் இளக்கரிப்பதில்லை பதறுவதுமில்லை அவருடைய உபதேசத்துக்குத் தீவுகள் காத்திருக்கும்.

௫ வானங்களைச் சிருஷ்டித்து அவைகளைவிரித்துப் பூமியையும் அதிலே பிறக்கிறவைகளையும் பரப்பினவரும் அதிலிருக்கிற சனத்துக்குச் சுவாசத்தையும் அதிலே நடமாடுகிறவர்களுக்கு ஆவியையுங்கொடுக்கிறவருமான கர்த்தராகிய பராபரன் சொல்லுகிறதாவது,

௬ நீர் குருட்டுக்கண்களைத் திறக்கவுங் கட்டுண்டவர்களைக் காவலிலும் இருளிலிருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலுமிருந்து புறப்படப்பண்ணவும்,

௭ கர்த்தராகிய நாம் உம்மை நீதியாய் அழைத்து உம்முடையகையைப்பிடித்துக் கொண்டு உம்மைத் தற்காத்து உம்மைச் சனத்தின் உடம்படிக்கையாகவும், * சாதிகளின் வெளிச்சமாகவும் வைக்கிறோம்.

* ௪௬, ௬. லூக்கா. ௨, ௩௨. ௩௩.

௮ நாங்கர்த்தர். இது நமது நாமம், * நாம் நமது மகிமையை வேறொருவனுக்கும் நமது துதியை விக்கிரகங்களுக்குங் கொடோம். * ௪௮, ௰௧.

௯ முந்தின காரியங்கள் இதோ வந்ததே புதியவைகளையும் நாமே அறிவிக்கிறவர், அவைகள் தோன்றுமுன்னே அவைகளை யுங்களுக்குக் கேட்கப்பண்ணுகிறோம்.

௰ * கர்த்தரைப் புதுப்பாட்டாய்ப் பாடுங்கள், சமுத்திரத்துக்கிறங்கிப்போகிறவர்களும் அதிலுள்ளதனைத்துந் தீவுகளும் அவைகளின் குடிகளும் பூமியின் கடையாந்தரத்திலிருந்து அவருடைய துதியைப் பாடுவதாக. * சங்கீதம். ௩௩, ௩.

௰௧ வனாந்தரமும் அதின் ஊர்களுங் கேதாரியர் குடியிருக்கிற கிராமங்களுஞ் சத்தத்தையுயர்த்துவதாக, கன்மலைகளிலே குடியிருக்கிறவர்கள் கெம்பீரித்துப் பருவதங்களின் கொடுமுடியிலிருந்து ஆர்ப்பரிப்பார்களாக.

௰௨ கர்த்தருக்கு மகிமையைச் செலுத்தி அவர் துதியைத் தீவுகளில் அறிவிப்பார்களாக.

௰௩ * கர்த்தர் பராக்கிரமசாலியைப்போலப் புறப்பட்டு யுத்தவீரனைப்போல எரிச்சலை எழும்பப்பண்ணித் தொனித்துக் கெர்ச்சித்துத் தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார். * சங்கீ. ௨௪, ௮. ௪௫, ௪.

௰௪ வெகுகாலமாய் மவுனமாயிருந்தோம், சும்மாயிருந்து நமக்குள்ளே அடக்கிக்கொண்டோம் இப்போ நாம் பிள்ளைபெறுகிறவளைப்போலக் கூப்பிட்டு அவர்களைப் பாழாக்கவும் விழுங்கவும் போகிறோம்.

௰௫ நாம் பருவதங்களையும் மேடுகளையும் பாழாக்கி அவைகளின் பயிர்வகையையெல்லாம் வதங்கப்பண்ணி ஆறுகளைத் திட்டுகளாக்கி ஏரிகளை வற்றிப்போகப்பண்ணி,

௰௬ குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி அவர்களுக்குத் தெரியாத பாதைகளிலே அவர்களை யழைத்துக்கொண்டுவந்து அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமுங் கோணலானவைகளைச் செம்மையுமாக்குவோம், இந்தக் காரியங்களை நாம் அவர்களுக்குச் செய்து அவர்களைக் கைவிடாதிருப்போம்.

௰௭ ஆனால் விக்கிரகங்களை நம்பினார்க[illegible] பட்ட சுரூபங்களுடனே நீங்கள் எங்க[illegible] தேவர்களென்று சொல்லுகிறவர்க * பின்னிடைந்து மிகவும் வெட்கப்படுவார்கள்.

* சங்கீதம். ௯௭, ௭.

பூதருடைய குணப்படாமையின் பேதம அவர்கள் குருக்களுடைய குருட்டட த்தினமேலும் முறையிட்டத்.

௰௮ * செவிடரே கேளுங்கள் ** குருடரே நீங்கள் காணும்படிக்கு நோக்கிப்பாருங்கள். * யோவான். ௮, ௪௩. ** யோவான். ௯, ௪௦. ௨. கொரி. ௪, ௪.

௰௯ * நம்முடைய தாசனேயல்லாமல் ஆர் அந்தனைக் குருடனும் நாம் அனுப்பின தூதனையல்லாமல் ஆர் செவிடனுமாயிருக்கிறான், உத்தமனைப்போல் குருடனார் கர்த்தருடைய ஊழியக்காரனைப்போல அந்தகனார். * மத்தே. ௰௫, ௰௪. ௨௩, ௰௬. ௰௭. ௨௪.

௨௰ நீயநேகங்களைக் கண்டும் லக்ஷியாதவனாய், அவனுக்குச் செவிகளைத் திறந்திருந்துங் கேளாதேபோகிறான்.

௨௧ கர்த்தர் தமது நீதியின் நிமித்தம் [illegible] மாக அவன்மேற் பிரியமாயிருந்தார், அவனை வேதத்தினாலே பெரியவனாக்கி[illegible] யப்படுத்தினார்.

௨௨ அவனோவெனில் கொள்ளையிடப்பட்டுக் குறையுமாய்ப்போகுஞ்சனம் அவர்கள் அனைவருங் கெவிகளிலே சிக்குண்டு, காவலறைகளில் அடைக்கப்படுவார்கள் தப்புவிப்பாரில்லாமலே குறையாவார்கள்,

௨௩ * உங்களில் இதுக்குச் செவிகொடுத்துப் பின்வருகிறதைக் கவனித்துக் கேட்கிறவனார். லூக்கா. ௰௬, ௪௨.

௨௪ யாக்கோபைச் சூறையிட்டு இஸ்ரவேலைக் கொள்ளைக்காரருக்கொப்புக்கொடுக்கிறவனார், நாம் பாவஞ்செய்த விரோதத கர்த்தரல்லவோ, ஏனெனில் அவருடைய வழிகளில் நடக்கமனதாயிராமலும் அவருடைய வேதத்துக்குச் செவிகொடாமலும் போனார்கள்.

௨௫ அவர் இவர்கள்மேலே தமது கோபத்தின் உக்கிரத்தையும் யுத்தத்தின் வலிமையையும் ஊற்றி அவர்களைச் சுற்றிலும் அக்கினிச்சுவாலைகளைக் கொளுத்தியிருந்தும் அவர்கள் அறிவில்லாதேபோனார்கள் அவர்கள் [illegible] வேகப்பண்ணியிருந்தாலும் அதை மனதிலே வைக்காதேபோனார்கள்.

௪௩. அதிகாரம்.

[இஸ்ரவேலர் சற்குணமான தமது [illegible] துக்குப் பராபரன் சொன்ன ஆறுதல்.]

இப்போதும் யாக்கோபே உன்னைச் சிருஷ்டித்தவரும் இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது.

* பயப்படாதே ஏனெனில் உன்னை மீட்டுக்கொண்டோம், உன்னைப் பேர்சொல்லி அழைத்தோம் நீ நம்முடையவன்.
* சக, அ. ௩. சச, அ. ௨.

௨ * நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நாம் உன்னோடேயிருக்கிறோம் நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேற் புரளுவதில்லை நீ பற்றியெரிகிற அக்கினியைக் கடக்கும்போது வேகாதிருப்பாய் அக்கினிச்சுவாலை யுன்னைக் கொளுத்துவதில்லை. * சங. கூ, ௰௨.

௩ ஏனெனில் நாம் இஸ்ரவேலின் பரிசுத்தரும் உன் இரட்சகருமாயிருக்கிற உன் பராபரனாகிய கர்த்தர் உன்னை மீட்கும்பொருளாக எகிப்தையும் உனக்குப்பதிலாக எத்தியோப்பியாவையுஞ் சேபாவையும் ஒப்புக்கொடுத்தோம்.

௪ நீ நம்முடைய பார்வைக்கு அருமையானபடியினாலே கனம்பெற்றாய் நாமுன்னைச் சிநேகித்தபடியினாலே உனக்குப்பதிலாக மனுஷர்களையும் உன்னாத்துமாவுக்குப் பதிலாகச் சனசதங்களையும் ஒப்புக்கொடுப்போம்.

௫ பயப்படாதே, ஏனென்றால் நாம் உன்னோடேயிருக்கிறோம் நாம் உன்வித்தைக் கிழக்கிலிருந்து வரப்பண்ணி உன்னை மேற்கிலுமிருந்துக் கூட்டிச்சேர்ப்போம்.

௬ நாம் வடக்குடனே தாவென்றுந் தெற்குடனே வைத்திராதேயென்றுஞ் சொல்லி தூரத்திலிருந்து நம்முடைய குமாரரையும் பூமியின் கடையாந்தரத்திலிருந்து நம்முடைய குமாரத்திகளையும்,

௭ நமது நாமந்தரிக்கப்பட்டு நாம் நம்முடைய மகிமைக்கென்று சிருஷ்டித்து உருவாக்கிப்படைத்தயாவையுங் கொண்டுவருவோம்.

...கடிரகத் தேவர்கள் முன்னறிவிக்கமாட்டாத இரட்சிப்புகளைப் பராபரன் விசுவாசிகளுக்குச் சுத்தத் தயவினாலாகத் தீர்மானம்பண்ணினதுங் குறைப்படாதவர்களுக்கோ சங்காரத்தை முன்னறிவித்ததும்.

௮ கண்களிருந்துங் காணாதிருக்கிற சனத்தையுங் காதுகளிருந்துஞ் செவிடரானவர்களையும் புறப்பட்டுவரப்பண்ணுங்கள்.

௯ சகல சாதிகளும் ஏகமாய்ச் சேர்ந்துகொண்டு சகல சனசதங்களுங் கூடிவரட்டும். * இதையறிவித்து முதற்சம்பவிக்குங் காரியங்களை நமக்குக் கேட்கப்பண்ணத்தக்கவனார், கேட்டு மெய்யென்று சொல்லப்படக்கூடும்படிக்கு அவர்கள் தங்கள் சாட்சிகளைக் கொண்டுவந்து நிதானக்காரராகி விளங்கட்டும். * சக, ௨௯.

௰ நாமேயவரென்று நீங்களறிந்து நம்மை விசுவாசித்து உணர்ந்துகொள்ளும்படிக்கு நீங்களும் * நாந்தெரிந்துகொண்ட நம்முடைய தாசருமாயிருக்கிறீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார் † நமக்குமுன் ஏற்பட்ட தேவனில்லை, நமக்குப்பின்னிருப்பதுமில்லை. * சக, அ. † சச, அ.

௰௧ நாம் நாமே கர்த்தர் நம்மையல்லாமல் இரட்சகரில்லை. * ஓசே. ௰௩. ௪.

௰௨ நாமேயறிவித்து இரட்சித்து அதைக் கேட்கப்பண்ணுகிறோம். உங்களில் அப்படிச்செய்யத்தக்க அன்னிய தேவனில்லை, நாமே பராபரனென்கிறதுக்கு நீங்கள் நம்முடைய சாட்சிகளென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௩ * நாளுண்டாகாததுக்கு முன்னும் நாமேயிருக்கிறோம், நம்முடைய கைக்குத் தப்புவிக்கத்தக்கவனில்லை. † நாம் நடப்பிப்பதைத் திருப்புகிறவனார். * சங்கீ. ௯௰, ௨. † ௰௪, ௨௭.

௰௪ உங்களுக்காக நாந் தாப்பாள் அரண்களையெல்லாம் இடிந்துவிழப்பண்ணவுங் கல்தேயரைப் படவுகளிலுட்பட்டலறப்பண்ணவுந் தக்கவர்களைப் பாபேலுக்கனுப்பினோமென்று உங்கள் மீட்பரும் இஸ்ரவேலின் பரிசுத்தருமாகிய கர்த்தர் சொல்லுகிறார்,

௰௫ நாமேயுங்கள் பரிசுத்தராகிய கர்த்தரும் இஸ்ரவேலின் சிருஷ்டிகரும் உங்களிராசாவுமானவர்.

௰௬ சமுத்திரத்திலே வழியையும் வல்லமையான தண்ணீர்களிலே பாதையையுங் கட்டளையிட்டு, * ௨. மோ. ௰௪, ௨௧. பூ

௰௭ இரதங்களையுங் குதிரைகளையும் இராணுவத்தையும் பெலனையும்வரவிட்டு அவைகள் எழுந்திராதபடிக்கு ஒருமித்து விழுந்துகிடக்கவும் ஒரு திரியவியும்போல அணைந்துபோகவும்பண்ணின கர்த்தர் சொல்லுகிறதாவது,

௰௮ முந்தினவைகளை நினையாதேயுங்கள், பூருவமானவைகளைச் சிந்தியாதேயுங்கள்.

௰௯ இதோ * நாம் புதுக்காரியத்தைச் செய்வோம், இனியதுந் தோன்றும், நீங்களதை யறியப்போவதில்லையோ, நாம் வனாந்தரத்திலே வழியையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையுமுண்டாக்குவோம்.
* எரே. ௩௧, ௨௨.

௨௰ நாந்தெரிந்துகொண்ட நமது சனத்தின் தாகத்துக்கு * வனாந்தரத்திலே தண்ணீர்களையும் அவாந்தர வெளியிலே ஆறுகளையுமுண்டாக்குவதினாலே வெளியின் மிருகங்களும் வல்லமையுள்ள பாம்புகளுங் கோட்டான் குஞ்சுகளும் நம்மைக் கனம்பண்ணும். * சக, ௰௮.

௨௧ இந்தச்சனத்தை நமக்கென்று ஏற்படுத்தினோம், இவர்கள் நமது துதியைச்

சொல்லிவருவார்கள்.

உஉ ஆனாலும் யாக்கோபே நீ நம்மைநோக்கிக் கூப்பிடவில்லை, இஸ்ரவேலே அதை விட்டு நீ நம்மை விசனப்படுத்தினாய்.

உங நீ நமக்கு உன் ஆடுகளின் தகனப்பலிகளைச் செலுத்தினதில்லை, நீ நம்மையுன் பலிகளாலே கனம்பண்ணினதுமில்லை காணிக்கைகளைச் செலுத்த நாமுன்னைப்பிரயாசப்படுத்தாமலும் தூபங்காட்டவுன்னைவருத்தப்படுத்தாமலுமிருந்தோம்.

உச நீ நமக்குப் பணங்களாற் சுகந்தப் பட்டையைக்கொள்ளாமலும் உன் பலிகளின் கொழுப்பினாலே நம்மைத் திருப்தியாக்காமலும் உன் பாவங்களினாலே நம்மைப்பிரயாசப்படுத்தி உன் அக்கிரமங்களினாலே நம்மை வருத்தப்படுத்தினாய்.

உரு * நாம் நாமேயுன்மீறுதல்களை நம்முடைய நிமித்தியமாகக் குலைக்கிறோம், உன் பாவங்களை நினையாமலுமிருப்போம்.

* சங. உஉ. எசேக்கி. ஙசு, உஉ.

உசு நாம் ஒன்றுங்கொன்று வழக்காடும்படியாக நமக்கு நினைப்பூட்டு, நீ நீதிமானாகும்படியாக விவரித்துச்சொல்லு.

உஎ உன் ஆதிர்த்தகப்பன் பாவஞ்செய்தான், உனக்கு முன்னின்று பேசுகிறவர்களும் நமக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள்.

உஅ ஆகையால் நாம் பரிசுத்தஸ்தலத்தலைவர்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி யாக்கோபைச் சங்காரத்துக்கும் இஸ்ரவேலைத் தூஷணங்களுக்கும் ஒப்புக்கொடுப்போம்.

சச. அதிகாரம்.

[புது ஏற்பாட்டினுடைய பாக்கியத்தை முன்னறிவித்தது.]

இப்போதும் * நம்முடைய தாசனாகிய யாக்கோபே நாம் தெரிந்துகொண்ட இஸ்ரவேலே கேள். * சக அதி. அ, ஙச. ய.

உ * உன்னையுண்டாக்கினவரும் உன்னைத் தாயின் கர்ப்பந்துவக்கி உருவாக்கினவரும் உனக்கொத்தாசை செய்கிறவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது, நம்முடைய தாசனாகிய யாக்கோபே நாந்தெரிந்துகொண்ட உத்தமனே † பயப்படாதே.

* ரு. மோசே. ஙஉ, கூ. † சக. அதி. ய யச. சங, அதி. க. ரு.

ங ஏனென்றால் * தாகமுள்ளவன் மேலே தண்ணீரையும் வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவோம், நம்முடைய ஆவியையுன் வித்தின்மேலும் நம்முடைய ஆசீர்வாதத்தையுன் சந்தானத்தின்மேலும் ஊற்றுவோம். * யோவ. ங, க. யோவ. ஙஅ.

ச அதினாலே புல்லின்நடுவே * நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச்செடிகளைப் போலே வளருவார்கள். * சங. ச, ரு.

ரு இவனும் நான் கர்த்தருடையவனென்பான், அவனும் யாக்கோபின் பேரால் அழைக்கப்படுவான், அவனும் தான் கர்த்தருடையவனென்று தன் கையெழுத்துப் போட்டு இஸ்ரவேலின் நாமத்தைத் தரித்துக்கொள்ளுவான்.

சத்தியவாசகராகிய பராபரன் தம்முடைய மகிமையையும் உண்மையையும் விக்கிரகங்களின் வெறுமையான மாய்கையையுங் காண்பித்தது.

சு * நாம் முந்தினவரும் நாம் பிந்தினவருந்தாமே நம்மைத்தவிர தேவனில்லையென்று இஸ்ரவேலின் ராசாவும் அதின் கர்த்தருஞ் சேனைகளின் கர்த்தராகிய அதைமீட்பருஞ்சொல்லுகிறார் * சக. ச. சஅ. யஉ. அறிவி. க. அ. உஉ. யங.

எ நித்தியசனத்தைநாம் ஸ்தாபித்த... கொண்டு நம்மைப்போல ... மவரவழைத்து இன்னின்னது ... விசத்து நமக்குமுன்பாகவிவரிக்கத்தக்கவனார்? * பின்னடிச்செல்லும் வருங்காரியங்களையுந் தங்களுக்... அறிவிக்கட்டும் * சக, அதி. உஉ. உங.

அ நீங்கள் கலங்காமலும் பயப்படாமலுமிருங்கள், நாம் அதுமுதற்கொண்டு ... தையுனக்குக்கேட்கப்பண்ணி... னறிவித்ததுமில்லையோ என்பதற்கு நீங்கள் நம்முடையசாட்சிகள், * நம்மைத்தவிர ஒருதேவனுண்டோ? வேறொரு ... மில்லையே, ஒருவனையும் அறியோம்.

* ரு. மோசே. ச. ஙக.

கூ சுரூபங்களை யுருவாக்குகிற யாவரும் மாய்கைதானே, அவர்களால் இச்சிக்கப்பட்டகாரியங்கள் ஒன்றுக்குமுதவாது ... களுக்குவெட்கமாக அவர்கள்தாமே ... கள்ளொன்றுங்காணாமலும், ஒன்றுமறியாமலுமிருக்குமென்று அவைகளுக்குச் ... களாயிருக்கிறார்கள்.

ய ஒன்றுக்குமுதவாத தேவனை ... இச்சுரூபத்தைவார்க்கிறவனெப்படிப்பட்டவன்?

யக இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாம்வெட்குவார்கள், ஏனெனில் ... தொழிலாளிகள் நரசீவன்கள்தானே, அவர்களெல்லாருங் கூடிக்கொண்டு நிற்கட்டும் அவர்களேகமாய்த்திகைத்து வெட்கப்படுவார்கள்.

யஉ * கொல்லன் இரும்பைக்குறட்டால் விடுகிறித்தழலிலே வேகவைத்துச் சுத்தியல்களால் அதை யுருவேற்படுத்தித் தன் புயத்தின்பலத்தினாலேயதைச்செப்பனிடுகிறான், பின்பு அவன் பசியாயிருக்கும்பொழுது அவன் பெலனற்றுப்போகுமட்டும் படிக்கிறான்,

பிருக்கிறான், இளைத்துப்போகுமட்டுந் தண்ணீர் குடியாமலுமிருக்கிறான் * ௪௦. அதி. ௰௯—௨௰. ௪௧, ௭. எரே. ௰, ௩—௫.

௰௩ தச்சன் நூல்பிடித்து மட்டப்பலகையால் மரத்துக்குக் குறிபோட்டு அதைக் கோணமுகோணமாகப் பிடித்துக் கவராசத்தால் அளவூன்றி அதை வீட்டிலே வாசமாயிருப்பதற்காக அதை ஒருபுருஷனின் சாயலும் ஒருமனுஷனின் ரூபமுமாக்குகிறான்.

௰௪ அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டப்போகிறபோது, ஒருபுங்கமரத்தை அல்லது ஒருகர்வாலிய மரத்தைத் தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பலக்க அதைத் தனக்கு வளர்க்கிறான், அல்லது அசோக மரத்தை, மழையதைப் பயிராக்கும்படிக்கு நாட்டுகிறான்.

௰௫ மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது அவன் அவைகளிலெடுத்துக் குளிர்காய்ந்துகொள்ளுகிறான். நெருப்பை மூட்டி அப்பஞ்சுடுகிறான், என்றாலும் ஒரு தேவனையும் உண்டுபண்ணி, அதைப்பணிந்து ஒருசுரூபத்தையுமதிலே செப்பனிட்டு, அதை வணங்குகிறான்.

௰௬ அதிலொருபங்கை அடுப்பிலெரிக்கிறான் ஒருபங்கினால் இறைச்சியைச் சமைத்துப் பொரிக்கிறான். பொரியலைப் பொரித்துத் திருப்தியாகத் தின்று காய்ந்துகொண்டு ஆகா அனலானேன் நெருப்பைக்கண்டேனென்று சொல்லி,

௰௭ அதின் மீதியான பங்கைத் தேவனாகவுந் தனக்குச் சுரூபமாகவுஞ் செப்பனிட்டு, அதற்கு முன்விழுந்து, அதை வணங்கி என்னை விடுவி, ஏனென்றால் நீ என்தேவனென்று அதை நோக்கி விண்ணப்பஞ்செய்கிறான்.

௰௮ அறியாமலும் உணராமலுமிருக்கிறார்கள். ஏனென்றால் காணாதபடிக்கவர்கள் கண்களும் உணராதபடிக்கவர்கள் இருதயமும் பூசப்பட்டிருக்கிறது.

௰௯ அதிலே பாதியையடுப்பிலெரித்தேன், அதினுடைய தழலின்மேல் அப்பத்தையுஞ் சுட்டு இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன், அதின் மீதியானபங்கை நான் அருவருப்பாக்குவேனோ? ஒரு மரத்தின் துண்டை வணங்குவேனோவென்று சொல்ல அவன் தன்மனதுக்குள்ளே தோன்றவில்லை, அம்மாத்திரம் அறிவுஞ்சொரணையுமில்லை.

௨௰ அவன் சாம்பலிலே மேய்கிறான், அவனுடைய இருதயம் அவனைப் புரட்டிப்போட்டது. அவன் தன் ஆத்துமாவைத் தப்புவிக்காமலும் என் வலதுகையிலே மோசமல்லோ விருக்கிறதென்றுஞ் சொல்லாமலுமிருக்கிறான்.

௨௧ யாக்கோபே இஸ்ரவேலே இவைகளை நினை, ஏனென்றால் * நீ நம்முடைய தாசன், உன்னையுருவாக்கினோம் நீ நம்முடைய தாசன் இஸ்ரவேலே, நீ நம்மால் மறக்கப்படுவதில்லை. * ௨. வசனம்.

௨௨ உன் மீறுதல்களை மந்தாரத்தைப் போலவும் உன் பாவங்களை மேகத்தைப் போலவும், நிர்க்கிரகம்பண்ணினோம். நம்மண்டைக்குத் திரும்பு. ஏனென்றால் உன்னை மீட்டுக்கொண்டோம் * ௧, ௰௮. ௪௩, ௨௫.

பாபிலோனிய சிறையிருப்பின் நீங்குதலை அவர் முன்னறிவித்தது.

௨௩ வானங்களே, கெம்பீரியுங்கள், ஏனென்றால் கர்த்தர் அதைச்செய்தார். பூதலமான தாழ்விடங்களே ஆர்ப்பரியுங்கள், பருவதங்களே, சோலைகளே, காட்டிலுள்ள சகலமரங்களே, கெம்பீரமாய் முழங்குங்கள். ஏனென்றால் கர்த்தர் யாக்கோபை மீட்டு, இஸ்ரவேலில் மகிமைப்படுகிறார். * ௪௯, ௰௩. சங்கீ. ௯௬, ௧. ௨.

௨௪ உன் மீட்பரும் உன்னைத் தாயின் கர்ப்பந்துவக்கி உருவாக்கினவருமான கர்த்தர் சொல்லுகிறதாவது நாமே எல்லாத்தையுஞ் செய்கிற கர்த்தர், நாம் ஒருவராய் வானங்களை விரித்து, நாமாய்ப் பூமியைப் பரப்பினவர்.

௨௫ நாங்கட்டுக்கதைக்காரரின் குறிகளை அவத்தமாக்கிக் குறிசொல்லுகிறவர்களை நின்மூடராக்கி ஞானிகளைப் பின்னிட்டுத் திருப்பி, அவர்கள் அறிவைப் பயித்தியமாகப் பண்ணுகிறவர்.

௨௬ நாம் நம்முடைய ஊழியக்காரரின் வார்த்தையை நிலைப்படுத்தி, நம்முடைய தாதுபதிகளின் ஆலோசனையை நிறைவேற்றிக், குடியேறுவாயென்று எருசலேமுக்குங் கட்டப்படுவீர்களென்று யூதாவின் பட்டணங்களுக்குஞ் சொல்லி அவைகளின் பாழான தலங்களையெடுப்பிப்பவர்.

௨௭ நாம் ஆழத்துடனே வற்றிப்போ, உன் நதிகளை வெட்டாந்தரையாக்குவோமென்று சொல்லுகிறவர்.

௨௮ கோரேசைக்குறித்து அவன் நம்முடைய மேய்ப்பன், அவன் எருசலேமுக்குக் கட்டப்படுவென்றுந் தேவாலயத்துக்கு அஸ்திபாரப்படுவென்றுஞ் சொல்லி நமக்குப் பிரியமானதையெல்லாம் நிறைவேற்றுவானென்று நானே சொல்லுகிறவர்.

௪௫. அதிகாரம்.

[பராபரன் யூதரைப் பாபிலோனிய சிறையிருப்புக்கு நீங்கலாக்கியிரட்சிப்போமென்ற தீர்க்கதரிசனம்.]

கர்த்தராகிய நாம் அபிஷேகம்பண்ணுவித்த * கோரேசுக்கு முன்பாகச் சாதிகளைக் கீழ்ப்படுத்தி இராசாக்களின் இடைகளைக் கட்டவிழ்க்கும்படிக்கும் அவனுக்கு

முனபாக வாசல்கள பூட்டபபடாதிருக்கக் கதவுகளைத திறநதுவைககுமபடிககும அவனுடைய வலதகையைப பிடிததுககொணடு அவனுககுச சொலலுகிறதாவது,

* ௪௪, ௨௮.

௨ நாம உனககுமுனபாக நடநது கோணலானவைகளைச செவவையாககுவோம.

௩ உனனைப பேர்சொலலியழைககிற இஸரவேலின பராபரனாகிய நாமே கர்த்தரென்று நீ யறியுமபடிககு நாம நமமுடைய தாசனாகிய யாககோபின நிமித்தியமும நாம தெரிநதுகொணட இஸரவேலின நிமித்தியமும வெண்கலக்கதவுகளையுடைத்து இருமபுத்தாபபாளகளை முறித்து. அநதகாரத்திலிருககிற பொககிஷஙகளையும ஒளிககப்பட்டிருககிற புதையலகளையும உனக்குக் கொடுபபோம.

௪ அதுக்காக நாமுனனைப பேர்சொலலியழைதது நீ நமமையறியாதிருக்கக்கொளள உனககு நாமநதரிததோம.

௫ நாமே கர்ததர் வேறொருவரிலலை. நமமைததவிர தேவனிலலை. * ௫. மோசே. ௩௨, ௩௯.

௬ நமமைத்தவிர ஒருவருமிலலையென பது சூரியனுதிக்கிறதிசையும அது அஸதமிக்கிறதிசையுந்தொடங்கி யறியப்படுமபடிககு நாமுனனை நீ நமமை யறியாதிருக்கக் கொளள இடைக்கட்டினோம, நாமேகர்த்தர் வேறொருவரிலலை.

௭ வெளிசசததையும உருவேற்படுததி இருளையுஞ் சிருஷ்டிததுச்சுக வாழவையும உணடுபணணித் * துனபததையும படைபபிககிறவர் நாமே கர்ததராகிய நாமே யிவைகளையெலலாஞ்செயகிறவர்.

* ஆமோ. ௩, ௬.

௮ வானஙகளே உயர இருநது சொரியுஙகள, ஆகாயமணடலஙகள * நீதியைப் பொழியக்கடவது, பூமிதிறவுணடு இரட்சிபபினகனியைத்தநது நீதியுங்கூட விளைவதாகக் கர்த்தராகிய நாம இவைகளைச்சிருஷ்டிககிறோம. * ஓசே. ௰, ௰௨.

௯ மண் ஓடுகளோடொத்த ஓடாயிருநது, தனனை யுருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கையோ, * களிமண்தனனை யுருவாக்கினவனுடனே என்ன செயகிறாயென்றும, அவனுடைய உன்கிரியைக்குக் கைகளிலலையென்றுஞ்சொலலுமோ.

* ரோமர். ௯, ௨௰.

௰ தகபபனோடே ஏன ஜெனிபபித்தாயென்றும தாயோடே ஏனபெறறாயென்றுஞ் சொலலுகிறவனுக்கையோ.

௰௧ இஸரவேலின பரிசுததராகிய கர்த்தரும அதை யுருவாக்கினவருமானவர் சொலலுகிறதாவது, வருஙகாரியஙகளைக்குறிதது நமமைக்கேட்ககடவீர்கள நமமுடைய பிளளைகளுககாகவும நமமுடைய கரஙகளின கிரியைககாகவும நமககுக் கட்டளைகொடுபபீர்களோ.

௰௨ * நாம்பூமியையுணடுபணணி யதினமேலிருககிற மனுஷனைச் சிருஷ்டிததோம் நமமுடைய கரஙகளவானஙகளை விரித்தது அவைகளின சேனைகளெலலாமுக்குக் கறபிததோம். * ௪௰, ௨௮.

௰௩ நாம் நீதியாக அவனை யெழுபபினோம. அவனவழிகளையெலலாஞ் செவவையாக்குவோம * அவன நமமுடைய பட்டணத்தைக் கட்டிச் சிறைப்பட்டுபபோனநமமுடையவர்களைக் கிரையமிலலாமலும பரிதானமிலலாமலும் விடுதலையாக்குவானென றுசேனைகளுடைய கர்ததர் சொலலுகிறார்.

* ௧. வசனம். ௨. நாளாக. ௩௬, ௨௨. எஸறா. ௧, ௧.

௰௪ எகிப்துவின பிரயாசமும எத்தியோபபியரின வர்த்தகமும நெடியவர்களாகிய சபேயரின வர்த்தக ஜனமும உனனணடைககுத தாணடிவநது உனனுடையதாகும அவர்கள உனபிறகே சென்று விலஙகுகளில நடநதுவநது உனககுள்ளே தானே பராபரனிருக்கிறார், அவரையலலாமல வேறே தேவனிலலையென்று உனனைப் பணிநதுகொணடு, உனனை நோக்கி விணணபபமபணணுவார்களென்று கர்த்தர்சொல்லுகிறார்.

௰௫ இஸரவேலின பராபரனும இரட்சகருமாகிய தேவரீர்மெயயாகவே * மறைவான பராபரனாயிருக்கிறீர். * சங்கீத.

௬. ரோம. ௰௧, ௩௩. ௩௪.

௰௬ சுரூபஙகளையுணடுபணணுகிற அவவருமநாணி, இலச்சையுமடைந்து எலலாரும் வெட்கபபட்டுபபோவார்கள.

௰௭ இஸரவேலோவெனில கர்த்தராலே நித்திய இரட்சிபபாக இரட்சிக்கப்படும நீஙகளெனறெனறைககுமுளள சதாகாலஙகளிலநாளுமதும வெட்கபபடாமலுமிருபபீர்கள.

௰௮ ஏனெனில்வானஙகளைச்சிருஷ்டித்த பபூமியையும வெறுமையாயிருக்கச்சிருஷ்டியாமல அதைககுடியிருபபாகச்செயபணிடுபபடைதது அதையுருவேற்படுத்தின பராபரனாகிய கர்ததர் சொலலுகிறதாவது, * நாமேகர்ததர்வேறொருவரிலலை.

* ௫. வசனம.

௰௯ நாம அநதரஙகததிலும, பூமியின அநதகாரமானவிடத்திலும பேசினதிலலை. நாமயாககோபின விததுககு விருதாவாக நமமைத்தேடுஙகளென்று சொனனதிலலை நாமநீதியைபபேசி நிதானஙகளையறிவிக்கிறகர்ததர்.

௨௰ சாதிகளிலே தபபினவர்களே, * கூடிககொணடு வாருஙகள ஏகமாய்ச்சேரு

களநீஙகளசுரூபங்களினமாநதைதசசுமநது, இரட்சிககமாடடாததேவனைத் தொழுது கொளளுகிறவர்கள அறிவிலலாதிருககிறார்கள. * சக. அதி. கூ.

உக நீஙகள அறிவிககுமபடிககுசசேர்நது, ஏகமாயோசனையுமபணணுஙகள இதைபபூரவகாலமுதறகொணடு கேடகபபணணி அபபோதுதுவககி அதையறிவித்தவரார்? கர்ததராகிய நாமலலவோ? நீதிபரனுமஇரட்சகருமாகிய நமமையலலாமலவேறேதேவனேயிலலை, நமமைததவிர வேறொருவருமிலலை.

உஉ * பூமியின எலலா எலலைகளேநமமைநோக்கிடடுநோககுஙகள அபபோதிரட்சிககபபடுவீர்கள ஏனெனறால நாமே பராபரன வேறொருவருமிலலை. * க. தீமோ. உ, ரு. சா.

உக *நமககுமுழஙகால்யாவும முடஙகி சகல நாவும நமமைக் குறித்தே சத்தியம்பண்ணுமென்று, நீதிசுமுமபலனுமுணடென்று நாவுயாவுஞ் சத்தியமபணணவேணுமென்று, நமமைககொணடுநாம ஆணையிடடோம இந்த நீதியான வார்ததைநமதுவாயிலிருநது புறபபடடது, அதுமாறுவதிலலையென்கிறார்.

* பிலி. உ, கூ—யக.

உச அபபடிககொதததவர்கள அவராணடைககுவநது சேருவார்கள ஆனாலஅவருககுவிரோதமாயெரிகிறயாவரும வெட்கபபடுவார்கள.

உரு இஸரவேலின வித்தாகிய யாவருங கர்ததருககுள நீதியானகளாகி மேனமைபாராடடுவார்கள.

சசு. அதிகாரம்.

அபபாலுமபராபரன அநத இரட்சிபபின நிச்சயத்தைத் திடபபடுத்தித் தமது சனத்தைவிககிரகஆராதனைககுசசாயாதபடிககு எச்சரித்தது.

பேல்குனிநது நேபோமடஙகிபபோம, அவர்களுடைய விககிரகஙகள சீவனகளுககுமமிருகஙகளுககுஞசுமையாகும, மூடடைகளாகிய உஙகளசுமைகள இளைபபாறுசீவனகளுககுபபாரமாம.

உ ஏகமாயமடஙகிககுனியும, மூடடையாகாதபடிககு அவைகளதபபமாடடாது அவைகள தாஙகள தான சிறைபபடடுபபோம.

ந தாயினவயிறறிலேதுவககி நமமாலே ஏந்தபபடடுத்தாயினகர்பபததிலேதுவககி சுமககபபடடவர்களாகிய யாக்கோபின வீடடாரே இஸரவேலின வீடடிலமீதியாகிய சகலசனஙகளே நமமைககேளுஙகள.

ச * உஙகளமுதிர்நதவயது மடடுககும நாம அவரே, நரைமடடுககும நாஞசுமபபோம, நாம அபபடிசசெயதுவநதோம, இனிமேலும நாமெடுபபோம. நாஞசுமபபோம் தபபவிடுவிபபோம. * சஙகீதம. எக, யஅ.

ரு * ஆருககு நமமைசசாயலுஞ சமானமுமாககி, ஆருககு நாநேராவோமபடிககு நமமையொபபிடுவீர்கள? * சஙகீதம. சமு, ம.

சு * பையிலிருககிற பொனனைசசெலவழிசது, வெளளியைதராசில நிறுததுத் தடடானுடனே கூலிபொருந்திககொளளுகிறார்கள, அவன அதைதேவனாககுகிறான, அதைவணஙகிபபணிநதுகொளளுகிறார்கள. * சக, எ. சச, கூ. உம.

எ அதைததோளினமேலெடுதது அதைசசுமநது அதையதினதானததிலேவைககிறார்கள, அஙகேநிறகும தனனிடததை விட்டசையாது, ஒருவன அதைநோககிக கூபபிடடால, அதுமறுவுத்தரவு கொடுககிறதுமிலலை அவனிககடடைநீககிஅவனை இரட்சிககிறதுமிலலை.

அ இதைநினைததுஉஙகளைததிடபபடுததிககொளளுஙகளபாதகரோ இதைமனதிலே வையுஙகள.

கூ முநதிப்பூரவகாலநதுவககி நடநதவைகளைநினையுஙகள, ஏனெனில * நாமே பராபரன, வேறொருதேவனிலலை, நமககொதததொனறுமிலலை. * சரு, ரு.

ய நாம பிரகாரியத்தை ஆதிமுதறகொணடும இனனுஞ செயயபபடாதவைகளை பூருவகாலமுதறகொணடும அறிவிதது * நமமுடைய ஆலோசனைநிறகுமெனறும நமககுசசித்தமானதையெலலாஞசெயவோமெனறுஞசொலலி, * சஙகீ. கக, யக. வாக்கி. யகு, உக. உக, கம.

யக உராஞசுகிற ஒருபட்சியைககிழககிலும நமமுடைய ஆலோசனையின மனுஷனைததூரதேசததிலுமிருநதுவரவழைககிறவராயிருககிறோம, அதைசசொனனோம, அதைவரவும்பணணுவோம, அதைததிடடமபணணினோம, அதைசசெயதுமிருபபோம.

யஉ முரட்டிருதயததாரோ, நீதிககுததூரமானவர்களே, நமமைககேளுஙகள.

யங நமமுடைய நீதியைச சமீபிககபபணணுகிறோம, அதுதூரமாயிருபபதிலலை, நமது இரட்சிபபுத்தாமதிபபதுமிலலை, நானசீயோனிலே இரட்சிபபையும, இஸரவேலுககு நமது மகிமையையுங கொடுபபோம.

சஎ. அதிகாரம்.

[பாபேலுடைய அழிவினதீர்க்கதரிசனம.]

பாபேலகுமாரததியாகிய கனனியாஸதிரியே நீயிறஙகி * மணணிலேபுரண்டிரு, கல்தேயரினகுமாரததியே, தரையிலேயுட்கா

க்சாரு, இனி இராசாசனமில்லை ஏனெனில் நீயப்புறஞ்சேருகுக்காரியுஞ்சுகசெல்வியு மென்றழைக்கப்படுவதில்லை ※ உசு, ரு.

உ ஏந்திரத்தை வாங்கிமாவரை, உன்கூந்தலைவிரித்துவிட்டு வெறுங்காலும் அம்மணத்தோடையுமாயாறுகளைக்கடந்துபோ.

ங ※ உன்நிர்வாணந்திறக்கப்படும், உன் இலச்சை காணப்படட்டும்போம், ஒருவனை யும் பாராபல நீதியைச்சரிக்கட்டுவோம்.
※ நாகூ. கூ, ரு.

ச எங்கள் மீட்பருடைய நாமம் இஸ்ரவேலின்பரிசுத்தராகியசேனைகளுடைய கர்த்தரென்பது.

ரு கல்தேயரின் குமாரத்தியே, நீ மவுனமாயுட்கார்ந்து இருளுக்குட்பிரவேசி, ஏனெனில் இனி இராச்சியங்களுடைய நாச்சியாரென்றழைக்கப்படாய்,

சு நாம் நம்முச் சனத்தின்மேல் கடுங்கோபமடைந்து நம்முடைய சுதந்தரத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி அவர்களையுன்கையிலொப்புக்கொடுத்தோம், நீயோவெனில் அவர்களுக்காக இரக்கம்வைக்காமல் முதிர்ந்த வயதுள்ளவர்களின்மேல் உன்நுகத்தடியை மகாபாரமாக்கி,

எ ※ என்றென்றைக்கும் நாச்சியாராயிருப்பேனென்றுசொல்லி இந்தக்காரியங்களையிதுவரைக்கும் உன்மனதிலேவைக்காமலும் அதின்முடிவை நினையாமலும்போனாய். ※ அறி. யஅ, எ.

அ இப்போதும் சுகமாயிருந்து நான்தானே என்னைத்தவிர ஆருமில்லை நான்விதவையாயுருக்காமலும்புத்திரசேதத்தையறியாமலுமிருப்பேனென்று உன்னிருதயத்திலேசொல்லுகிறசெல்வியே நான்சொல்லுவதைக்கேள்.

கூ சந்தானசேதமும் விதவையிருப்பும் இவ்விரண்டும் உனக்குக்கணப்பிலே ※ ஒரேநாளையிலேவரும் உன்திரளான சூனியங்களின் நிமித்தியமும் உன்தம்பனங்களின்மகாவெருத்துவத்தின் நிமித்தியமும் அவைகள் நிறைவாகமாய் உன்மேல்வரும். ※ அறி. யஅ, அ.

ய ஏனெனில் உன்பொல்லாப்பிலே நீதிடநம்பிக்கையாயிருந்து என்னைப்பார்க்கிறவனில்லையென்றாய் உன்ஞானமும் உன்னறிவுமே உன்னைப்புரட்டிற்று ஆகையால் உன்னிருதயத்திலே நான்தானே என்னைத்தவிர ஆருமில்லையென்றாய்.

ய ஆ டியால எங்கேயிருந்து உதித்ததென்று நீயறியாத ஒருபொல்லாப்பு உன்மேல்வந்து நீநிவிர்த்தியாக்கமாட்டாத ஒரு விக்கினம் உன்மேல்விழுந்து நீயறியாதபடிக்கு அசுப்பிலேயுண்டாகும் பாழ்க்கடிப்புன்மேல்வரும்.

யஉ இப்போதும் இலாடம அடையமா டடுவாயோவென்றும், உன்னைப்பலப்படுத்துவாயோவென்றும், நீயுன்சிறுவயதுமுதல் பிரயாசப்பட்டு உன் தம்பனங்களிலும் உன்திரளான சூனியங்களிலும் நில்லு.

யங உன்திரளானயோசனைகளினாலே இளைத்துப்போனாயே, இப்போதும் ※ வானசாஸ்திரிகளும் நட்சத்திரங்களைநோக்கிப் பார்க்கிறவர்களும் மாதப்பிறப்புகளைப்பார்த்துக்கணிக்கிறவர்களும் எழும்பி உன்மேல்வருகிறவைகளுக்குனைத்தப்பு இயிரட்சிக்கட்டும். ※ தானியே. உ. உ.

யச இதோ, தாளடிகளைப்போலிருப்பார்கள், நெருப்பு அவர்களைச்சுட்டெரிக்கும், தங்கள் பிராணனையேயவர்கள் அக்கினிக்குத் தப்புவிப்பதில்லை, அது குளிர்காயுந் தழலல்ல, அது எதிரேயிருக்கத்தக்க அடுப்புமல்ல,

யரு அப்படியுன் சிறுவயதுமுதல் நீ பிரயாசப்பட்ட உன்னையாபாரிகளும் இருப்பார்கள். அவரவர்தங்கள் போக்கிலே போய் அலைவார்கள், உன்னை இரட்சிப்பாரில்லை.

சஅ. அதிகாரம்.

[பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து குரு சீர இரட்சிப்புக்கு முந்தப் பாடடினையுடைய ஞானமுட்டப்புக்கு டாதிருமல்லாதடிநடக்கும்படி யூதாவின்மேல மெசியா முறையிடுகிறது.]

இஸ்ரவேலென்றபேராய் அழைக்கப்பட்டு யூதாவின் நீரூற்றிலிருந்து சுரந்து கர்த்தருடைய நாமத்தின்மேலாணையிட்டு, இஸ்ரவேலுடைய பராபரனை நினைத்தும் அதையுண்மையும் நீதியுமாகச்செய்யாதவர்களும்,

உ பரிசுத்த பட்டணத்தாரென்பேர் தரித்துக்கொண்டு சேனைகளின் கர்த்தரென்ற நாமமுள்ள இஸ்ரவேலுடைய பராபரன்மேல ஊன்றிக்கொள்ளுகிறவர்களுமாகிய யாகோபின்வீட்டாரே, கேளுங்கள்.

ங முன்னடந்தவைகளையத் தொடக்கமுதல் விதத்தோம நமது வாயிலிருந்து புறப்பட்டது அவைகளைக்கேட்கவும்பண்ணினோம், அப்படியே அசுப்பிலேசெய்தோம், அது வந்ததே.

ச ※ நீ கடினமுள்ளவனென்றும், உன் பிடரியிருப்பு நரம்பும், உன் நெற்றி வெண்கலமுமென்றும் அறிந்திருக்கிறோம்.
※ ரு, கூ. ஏசே. உ, ச.

ரு ஆகையால் என்விக்கிரகம் அவைகளைச்செய்ததென்றும் என்சுரூபமும் நான் வார்ப்பித்ததும் அவைகளைக்கட்டளையிட்டதென்றும் நீ சொல்லாதபடிக்கு அது நடக்குமுன் அவைகளை உனக்கு முன்னறிவித்து அவைகள் வராததுக்கு முன்னே உனக்குக்கேட்கப்பண்ணினோம்.

௬ அவைகளைக் கேட்டாயே அவைகளையெல்லாம் பார் இப்போது நீங்களும் அல்லோ அவைகளையறிவிக்கத்தக்கும் இதுமுதற் புதிதானவைகளையும் நீயறிந்திராமல் வைத்து வைக்கப்பட்டவைகளையும் உனக்குக் கேட்கப்பண்ணுகிறோம்.

௭ அவைகள் ஆதிமுதற்கொண்டல்ல இப்போது சிருஷ்டிக்கப்பட்டது இதோ அவைகளை அறிவேனென்று நீ சொல்லாதபடிக்கு இந்நாள்களுக்கு முன்னே நீயவைகளைக் கேட்டிருந்ததில்லை.

௮ நீ கேட்டதுமில்லை அறிந்ததுமில்லை அதுமுதல் உன்செவி திறந்துபோனதுமில்லை ஏனெனில் நீ துரோகம்பண்ணுவாயென்றும் நீ தாயின் கர்ப்பந்துவக்கி மீறுகிறவனென்றழைக்கப்பட்டதையும் அறிந்திருந்தோம்.

௯ நமது நாமத்தின் நிமித்தியம் நம்முடைய கோபத்தைத் தாமதிக்கப்பண்ணினோம் உன்னைச் சங்கரிக்காதபடிக்கு நாம் நமது புகழ்ச்சியினிமித்தியம் உனக்காகப் பொறுத்துமிருப்போம்.

௰ இதோ உன்னைப் புடமிடுகிறோம் ஆனால் வெள்ளியைப்போலல்ல சிறுமையின் குகையிலேயுன்னைத் தெரிந்துகொள்ளப்பட்டவனாக்குகிறோம்

௰௧ நம்முடைய நிமித்தியம் நம்முடைய நிமித்தியமே அதைச் செய்வோம் ஏனெனில் எப்படி நமது நாமத்தின் பரிசுத்தங் குலைக்கப்படலாம் * நமது மகிமையை வேறொருத்தனுக்குக் கொடோம். * ௪௨. ௮.

௰௨ யாக்கோபே நாம் அழைத்திருக்கிற இஸ்ரவேலே நமக்குச் செவிகொடு நாமவரே * நாம் முந்தினவரும் நாம் பிந்தினவருந்தானே. * ௪௧, ௪. ௪௪, ௬.

௰௩ நம்முடைய கரமே பூமியை ஸ்திரப்படுத்தி நம்முடைய வலதுகை வானங்களைப் பரவிட்டது நாம் அவைகளைக் கூப்பிட அனைத்தும் நிற்கும்.

௰௪ நீங்களெல்லாருங் கூடிவந்து கேளுங்கள் * கர்த்தர் சிநேகித்திருக்கிறவன் அவருக்குச் சித்தமானதைப் பாபேலிலே செய்வான் அவன் புயங் கல்தேயரின்மேலிருக்கு மென்பவைகளையிவர்களில் அறிவித்தவனார். * ௪௪, ௨௮.

௰௫ நாம் நாமே அதைச் சொன்னோம் நாம் அவனையழைக்கிறவருமாயிருக்கிறோம் அவனை வரப்பண்ணுவோம் அவன் வழி வாய்க்கிறதுமாயிருக்கும்.

௰௬ நம்மண்டை சேர்ந்து நானுசொல்வதைக் கேளுங்கள் நாம் ஆதிமுதற்கொண்டு அந்தரங்கத்திலே பேசினதில்லை அதுண்டாகுங்காலந்துவக்கி அங்கே நாமிருந்தோம் இப்போதோவெனில் கர்த்தராகிய ஆண்டவரும் அவருடைய ஆவியும் நம்மையனுப்புகிறார்.

௰௭ இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற உன்மீட்பரான கர்த்தர் சொல்லுகிறதாவது நாம் பிரயோசனமாயிருக்கிறதையுனக்குப் போதிவித்து * நீ நடக்கவேண்டிய வழியிலுன்னை நடத்துகிற உன் பராபரனாகிய கர்த்தர். சங்கீதம். ௩௨, ௮.

௰௮ ஆ நம்முடைய கற்பனைகளைக் கவனித்தாயானால் நாவிலே அப்போது உன் சமாதானம் நதியைத்தன்னையும் உன் நீதி சமுத்திரத்தின் அலைகளைத்தன்னையுமாயிருக்கும்.
* சங்கீதம். ௮௧, ௰௩. ழ

௰௯ அப்போது உன் வித்து மணலத்தனையும் உன் கர்ப்பப்பிறப்புகள் அதின் பொடிக்கல்லுகளத்தனையுமாயிருக்கும் * அப்போது அதின்பேர் நம்மைவிட்டு அறுப்புண்காமலும் அழிக்கப்படாமலுமிருக்கும்.

௨௰ பாபேலிலிருந்து புறப்படுங்கள், கல்தேயரைவிட்டுக் கெம்பீரசத்தமாய் ஓடிவாருங்கள், இதையறிவித்துக் கேட்கப்பண்ணுங்கள் இதைப் பூமியின் கடையாந்தரமட்டும் வெளிப்படுத்துங்கள் கர்த்தர் தமதடியானாகிய யாக்கோபை மீட்டுக்கொண்டாரென்று சொல்லுங்களென்கிறார் * யெரே. ௫௰, ௮. அறிவி. ௰௮, ௪.

௨௧ அவரிவர்களை வனாந்தரங்களில் நடத்தும்போது இவர்களுக்குத் தாகத்தவனமாயிராது தண்ணீர்களைக் கன்மலையிலிருந்து இவர்களுக்குச் சுரக்கப்பண்ணித் தண்ணீர்கள் ஓடிவரக் கன்மலையைப் பிளப்பார்.
* ௨. மோசே. ௰௭, ௬.

௨௨ ஆகாதவர்களுக்கோ சமாதானமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.
* ௫௭, ௨௧.

௪௯. அதிகாரம்.

[மேசியா உலகத்தின் இரட்சகராக வருவாரென்பதும், திருச்சபைக்குச் சொன்ன ஆறுதலும்.]

தீவுகளே? நமக்குக் கேள்விகொடுங்கள் தூரத்திலிருக்கிற சனசதளங்களே கவனியுங்கள் கர்த்தர் நம்மைத் தாயின் கர்ப்பத்திலே துவக்கியழைத்து நான் என் தாயின் குடல்களிலிருக்கக்கொள்ள என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தினார்.

௨ அவர் என் வாயைக் கூர்மையான பட்டயமாக்கித் தம்முடைய கரத்தின் நிழலில் என்னை மறைத்து என்னைத் துலக்கமான அம்பாக்கி, என்னைத் தம்முடைய அம்பறாத்தூணியிலே மூடிவைத்தார்.
* அறிவி. ௧, ௰௬.

௩ நம்முடனே நீரோ * நம்முடைய ஊழியக்காரன் இஸ்ரவேல் நாம் மகிமைப்படுஞ்சாதியென்றார். * ௪௨, அதி. ௧.

ச நானோவென்றால் சொன்னதாவது விருதாவாய் உழைக்கிறேம் வீணும் அவத்தமுமாய் நம்முடைய பெலனைச் செலவழிக்கிறேம் ஆகிலும் நம்முடைய நியாயம் கர்த்தரிடத்திலும் நம்முடைய பெலன் நம்முடைய பராபரனிடத்திலுமிருக்கிறதென்றேம்.

ரு இப்போதும் நம்மைத் தாயின் கர்ப்பத்திலே துவக்கி நம்மைத் தமக்கு ஊழியக்காரனாக உருவேற்படுத்தின கர்த்தர் யாக்கோபைத் தம்மண்டைக்குத் திருப்பச்சொல்லுகிறார் ஆனாலும் இஸ்ரவேல் சேராதேபோகிறது ஆகிலும் கர்த்தருடைய பார்வையில் கனமடைவோம், நம்முடைய பராபரன் நம்முடைய பெலனுமாயிருப்பார்.

சு யாக்கோபின் கோத்திரங்களை நிமிர்த்தவும் இஸ்ரவேலில் மீந்திருக்கைக்கப்பட்டவர்களைத் திருப்பவும் நீர் நமக்கு ஊழியக்காரனாயிருக்கிறது கொஞ்சக்காரியமாயிருக்கிறது, நீர் பூமியின் கடைசிபரியந்தமும் நம்முடைய இரட்சிப்பாயிருக்கவும் உம்மை * சாதிகளின் வெளிச்சமாகவும் வைத்தோமென்கிறார். * சஉ, சூ. எ. லூக. உ, கூய-கூஉ. அப்போ. யக, சஎ.

எ சத்தியமுள்ள கர்த்தரின் நிமித்தியமும் உம்மைத் தெரிந்துகொண்ட இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தியமும் இராசாக்கள் கண்டெழுந்திருந்து பிரபுக்கள் பணிந்துகொள்ளுவார்களென்று, இஸ்ரவேலின் மீட்பரும் அதின் பரிசுத்தருமாகிய கர்த்தர் சாதியால் அருவருக்கப்பட்டவரும் அதிகாரிகளின் பணிவிடைக்காரனுமான அசட்டைபண்ணப்பட்ட ஆத்துமாவுக்குச் சொல்லுகிறார்.

அ கர்த்தர் சொல்லுகிறதாவது * பிரியமான காலத்திலும் முடைய வேண்டுதலைக் கேட்டு இரட்சிப்பின் நாளிலே உமக்கொத்தாசைபண்ணுகிறேம் நீர் பூமியை நிமிர்த்தப் பாழாய்க்கிடக்கிற சுதந்தரங்களைச் சுதந்தரிக்கப்பண்ணவும், * உ. கொரி. சூ, உ.

கூ கட்டுண்டவர்களுடனே புறப்படுங்களென்றும் இருளிலிருக்கிறவர்களுடனே வெளிப்படுங்களென்றும் சொல்லவும் நாம் உம்மைக் காப்பாற்றி உம்மைச் சனத்தின் உடம்படிக்கையாகக் கட்டளையிடுவோம் அவர்கள் வழிகளோரமாய் மேய்வார்கள் சகல மேடுகளிலும் அவர்களுக்கு மேய்ச்சலுண்டாயிருக்கும்.

ய * அவர்கள் பசியாயிருப்பதுமில்லை தாகமாயிருப்பதுமில்லை உஷ்ணமாகிலும் வெயிலாகிலும் அவர்கள் மேற்படுவதுமில்லை ஏனெனில் அவர்களுக்கிரங்குகிறவர் அவர்களை நடத்தி அவர்களை நீரூற்றுகளண்டைக்குக் கொண்டுபோய்விடுவார்.

* சங்கீ. உங, க. மூ கூசூ, அதி கூ. அறிவி. எ, யசு. யசூ—யஎ.

யக * நம்முடைய பருவதங்களைப் பெலவாய் வழிகளாக்குவோம் நம்முடைய பாதைகள் உயர்த்தப்பட்டவைகளுமாயிருக்கும்.

* சய, ச.

யஉ இதோ இவர்கள் தூரத்திலும் அதோ அவர்கள் வடக்கிலும் மேற்கிலுமிருந்து இவர்கள் சீனீம் தேசத்திலுமிருந்து வருவார்களென்கிறார்.

யங வானங்களே கெம்பீரியுங்கள் பூமியே களிகூரு பருவதங்களே கெம்பீரமாய் முழங்குங்கள் ஏனெனில் கர்த்தர் தம்முடைய சனத்தைத் தேற்றரவுபண்ணுகிறார் சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள் மேல் இரக்கமாயிருப்பார். * சச, அதி. உச.

யச சீயோனோவென்றால் கர்த்தர் என்னைக் கைவிட்டார், ஆண்டவர் * என்னை மறந்தாரென்கிறது. * ருச, அதி. ச—அ.

யரு ஒரு ஸ்திரீ தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காதபடிக்குத் தன் பாலகனை மறப்பாளோ அப்படிக்கொத்தவள் அவனை மறந்தாலும் நானுன்னை மறப்பதில்லை.

யசு இதோ, உள்ளங்கைகளில் உன்னைப் பதித்தோம் * உன் மதில்கள் நித்தமும் நமக்கு முன்பாகவிருக்கிறது.

* சங்கீ. ருக, உய.

யஎ உன் குமாரர் தீவிரித்து வருவார்கள், உன்னை நிர்மூலமாக்கினவர்களும் உன்னைப் பாழாக்கடித்தவர்களும் உன்னைவிட்டுப் புறப்பட்டுப்போவார்கள்.

யஅ * உன் கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார், இவர்களெல்லாரும் கூட்டப்பட்டு உன்னண்டைக்கு வருவார்கள். நீ இவர்களையெல்லாம் ஆபரணமாகத் தரித்து மணவாட்டியைப்போலே இவர்களை உடையாக்கட்டிக்கொள்ளுவாயென்று நம்முடைய சீவனைக் கொண்டு சொல்லுகிறேமென்று கர்த்தருரைக்கிறார். * சூய, ச.

யகூ ஏனெனில் உன்னுடைய வனாந்தரங்களும் பாழான உன்னுடைய தானங்களும் நிர்மூலமான உன்னுடைய தேசமும் இனிக் குடிகளின் திரளினாலே உனக்கு நெருக்கமாயிருக்கும், உன்னை விழுங்கினவர்களோவெனில் தூரமாவார்கள்.

உய இடம் எனக்கு நெருக்கமாயிருக்கிறது, நான் குடியிருக்கும்படிக்கு நகர்ந்துபோவென்று, உனக்கு உண்டாயிருக்கப்போகிற பிள்ளைகளறிந்த உன் காதுகளிலே கேட்கச் சொல்வதுண்டு.

உக நீ உன் இருதயத்திலே இவர்களை எனக்குப் பிறப்பித்தவரார் நான் பிள்ளைகளற்று தனித்து சிறைப்பட்டும் நிர்ப்பந்தமாயிருந்தேனே இவர்களை எனக்கு வளர்த்தவரார் இதோ தான் ஒண்டியாய் விடப்பட்டிருந்தேனே இவர்கள் எங்கேயிருந்தவர்களென்பாய்.

உஉ இதோ சாதிசனுகளுக்கு நேராக நமது கரத்தை யுயர்த்திச சனசதளங்களுக்கு நேராக நமது கொடியையேற்றுவோம அப போது உனகுமாரனைக்கெண்டுங்கைகளிலே நதிக்கொண்டுவருவார்கள உனகுமாரத்தி கள்தோள்களின்மேலெடுத்துவரப்படுவார் களென்று கர்த்தராகிய ஆண்டவர்சொல்லு கிறார்.

உக * இராசாக்களுனனைவளர்க்கிறவர் களும அவர்களநாயகிகள உனதாதிகளு மா யிருப்பார்கள் † தரையிலே முகங்குப்புற விழுந்து உனனைப்பணிந்து உனகாலகளி ன்தூளை நக்குவார்கள் நாஙகர்த்தர் ‡ நம க்குக்காத்திருக்கிறவர்கள வெட்கிப்போவதி ல்லையெனறதை அப்போது அறிந்துகொ ளளுவாய * கய, யகூ. † சஙகீ. உரு, கூ.

உச பராக்கிரமனகையிலே கொள்ளையு டைமைப்பறிக்கப்படக்கூடுமோ அலலது நீதியாய்ச்சிறைப்படுபேர்னவர்கள விடு விக்கப்படக்கூடுமோ.

உரு இப்போதும இதோ * பராக்கிர மனசிறைப்படுத்தினவர்களும பறிக்கப்படு வார்கள பலவந்தன கொள்ளையிட்டதும விடுவிக்கப்படும உனனோடே வழக்காடுகிற வர்களோடே † நாமவழக்காடி உனபி ளளைகளை நாம இரட்சித்துக்கொண்டு, * அககா. யக, உஉ. † சஙகீ. கரு, க.

உக உனனை யொடுக்கினவர்களுடைய மாமிசத்தையவர்களுக்கே தினனக்கொடுப போம மதுபானத்தால வெறியாகுமாப போலேதங்களுடைய இரத்தத்தினாலேவெ றியாவார்கள கர்த்தரும்யாகக்கோபிலேவல வருமாகியநாமுன் இரட்சகரும உனமீ ட்பருமாயிருக்கிறதைமாமிசமெல்லாம் அ றியப்போமெனறு கர்த்தர் சொல்லுகிறார். * அறிவி. யசு, கூ.

ருய. அதிகாரம்.

[அவிசுவாசிகளான யூதர் தளளப்படும் மு காந்திரத்தையும, அவர்களாலேதாம அ னுபவிக்கும நிந்தையையும் மேசியாமு னனறிவித்தது.]

க கர்த்தர்சொல்லுகிறதாவது நாமஉங் கள்தாயையனுப்பிவிட்டோமெனறு அவ ளுக்குக்கொடுத்த தள்ளுதலின சீட்டெங் கே அலலது நாஙகடனபட்டஎவனுக்கும உங்களைவிற்றுப்போட்டோம இதோஉங்க ளக்கிரமஙகளினநிமித்தியமவிற்றுப்போ டப்பட்டீர்கள. உஙகளபாதகங்களின நிமித் தியம உஙகளதாய அனுப்பிவிடப்பட்டா ள். மத்தே. யகூ, எ.

உ நாமவந்தபோது ஒருவனுமிலலா மலும, நாஙகூப்பிட்டபோது மறுவுத்தர வுசொல்கிற ஒருவனுமிலலாமலும போ னதேது மீட்கக்கூடாதபடிக்கு நமமுடை யகைக்குறுகிறதோ விடுவிக்கிறதுக்கு நமகி லேபெலனில்லாமலேபோனதோ. இதோந மது உதமபுசலினாலே நாஙகடலைவறளப பண்ணி நதிகளைவெட்டாந்தரையாக்கிப் போடுகிறோம, அவைகளின்மீனதணணிரில லாமல தாகத்தால செத்துநாறறுப்போகு மபடியாகத்தானே. * ருகூ, க.

ச. மோசெ. யக, உக.

ங நாமவானஙகளுக்குக்காரிருளையுடுத்தி இ ரட்டையவைகளின மூடுசீலையாக்குகிறோம்.

ச இளைப்பானவனோடே நாளுசமயத்தி லேவார்த்தைசொலல அறியுமபடிக்குக்கர் த்தராகிய ஆண்டவர் நமக்குக்கலவிமான களின நாவைத்தந்தார் காலமாறு நமமை யெழுப்புகிறார் கற்றுக்கொளளுகிறவர்களை ப்போலேகேட்குமபடிக்கு நமக்குச்செவி யையெழுப்புகிறார். * மத். யக, உஅ. உகூ.

ரு கர்த்தராகிய ஆண்டவர் நமக்குச்செ வியைத்திறந்தார், நாம் முரண்டுசதனமப ணணுகிற வருமலல நாம பினவாஙகவில லோம.

கூ * நமமுடையமுதுகினமேலடிக்கிற வர்களுக்குமநமமுடையதாடைமயிரைப்பி டுங்குகிறவர்களுக்கும, ஒப்புக்கொடுக்கிறோ ம, நமமுடைய முகத்தையவமானஙகளுக் கும உமிழ்நீருக்கும்மறைப்போம. * மத். உகூ, கூஎ. கூஅ. யோவா. யகூ, க.

எ ஏனெனில் கர்த்தராகிய ஆண்டவர்ந மக்குத்துணைசெய்கிறார், ஆகையால் நாம வெட்கப்படோம.ஆனதுகொணடு நமமு டையமுகத்தைக்கற்பாறையாக வைத்தோ ம, ஏனெனில நாமவெட்கிப்போவதிலலையெ னறறிவோம.

அ நமமை நீதிவிளங்கப பணணுகிறவர் சமீபமாயிருக்கிறார் ஆர்நமமோடே வழக் காடுவான கூடிக்கொணடுநிற்போம, ஆர் நமமுடைய எதிராளி, அவன நமமணடை சேரட்டும

கூ இதோகர்த்தராகிய ஆணடவர்நமக் குத்துணைசெய்கிறார்நமமுடையமேலேகுற றஞ்சுமத்துபவனார், இதோ அவர்களெல லாருமஒருவஸ்திரத்தைப்போலப் பழசா வார்களபொட்டவர்களையரிக்கும.

ய உஙகளிலெவனகர்த்தருக்குப்பயந்து அவருடைய ஊழியக்காரனின சொல்லைக் கேட்டுத்தனக்குவெளிச்சமிலலாததினாலே இருட்டிலேநடக்கிறானோ அவன கர்த்தரு டையநாமத்தைநமபித்தன பராபரனைச் சார்ந்துகொள்ளக்கடவான.

யக இதோ, நெருப்பைக்கொளுத்தி அ க்கினிப்பொறிகளால அரைகட்டிக்கொ ணடிருக்கிற நீஙகளனைவரும உஙகள்நெரு ப்பினதீயிலும் நீஙகளமூட்டின அக்கினிச் சுவாலைகளிலுமநடவுஙகள, நமமுடையக்

தத்தினாலே இது உங்களுக்கு உண்டாகும், வேதனையிலே கிடப்பீர்கள்.

ருக. அதிகாரம்.

[வாஞ்சையாய்ப் பார்த்துக்கொண்டிருக்கப்பட்ட இரட்சிப்பை வாக்குத்தத்தம் பண்ணி விசுவாசிகளைத் தேற்றினது.]

நீதியைத் தொடர்ந்து கர்த்தரைத் தேடுகிற நீங்கள் நம்முடைய சொல்லைக் கேளுங்கள், நீங்கள் வெட்டியெடுக்கப்பட்ட * கன்மலையையும் † நீங்கள் தோண்டியெடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள். * ரோமர். ச, ௰௬—உக. † எபிரே. ௰௧, ௰௧.

உ உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும் உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப் பாருங்கள். ஏனென்றால் அவன் ஒருத்தனாயிருக்கக்கொள்ள * நாம் அவனையழைத்து அவனையாசீர்வதித்து அவனைப் பெருகப்பண்ணினோம். * க. மோசே. ௰உ, க. ௩.

௩ ஆதலால் கர்த்தர் சீயோனைத் தேற்றரவு பண்ணுவார், அவர் அதின் பாழான தலங்களையெல்லாந் தேற்றரவு பண்ணி, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார், சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதிலுண்டாயிருக்கும்.

ச நம்முடைய சனமே நம்மைக் கவனியுங்கள், நம்முடைய சனசதளமே, நமக்குச் செவிகொடுங்கள் ஏனெனில் வேதம் நம்மிலிருந்து வெளிப்படும், நம்முடைய நியாயத்தைச் சனசதளங்களின் வெளிச்சமாக வீசப்பண்ணுவோம்.

ரு நமது நீதி சமீபித்திருக்கிறது நமது இரட்சிப்பு வெளிப்படும், நமது புயங்கள் சனசதளங்களை நியாயந்தீர்க்கும். தீவுகள் நமக்குக் காத்திருந்து நம்முடைய புயத்தின் மேல் நம்பிக்கையாயிருக்கும்.

௬ உங்கள் கண்களை வானத்துக்கு ஏறெடுத்துத் தாழவிருக்கிற பூமியையும் நோக்கிப் பாருங்கள் ஏனெனில் * வானம் புகையைப் போல உருவழிந்து பூமி வஸ்திரத்தைப்போலப் பழசாய்ப்போம் அதின் குடிகளும் அப்படியே சாவார்கள் நம்முடைய இரட்சிப்போவென்றால் என்றென்றைக்குமிருக்கும் நம்முடைய நீதி முறிந்துபோவதில்லை.
* சங்கீ. ௱உ, உ௭. லூக்கா. உக, ௩௩.

௭ நீதியையறிந்தவர்களே, * நமது சொல்லைக் கேளுங்கள் நம்முடைய வேதத்தை யிருதயத்திலே தரித்திருக்கிற சனமே, † மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும் அவர்கள் தூஷணங்களாலே கலங்காமலுமிருங்கள். * சங்கீ. ௩௭, ௩௧. † மத். ௰, ௰௧.

௮ ஏனென்றால் பொட்டு அவர்களை வஸ்திரங்களைப்போலே பரித்துப்புசிப்பதுபோலவும் ஆட்டுமயிரைப்போலே சலைத்துப்போடும் நம்முடைய நீதியோவென்றால் என்றைக்கும் நம்முடைய இரட்சிப்புத் தலைமுறை தலைமுறைகளாகவுமிருக்கும்.

௯ எழும்பு எழும்பு பெலனைத் தரித்துக்கொள் கர்த்தரின் புயமே. முந்தின நாட்களிலும் பூர்வ தலைமுறைகளிலும் எழும்பினது போல எழும்பு. * இராகாபைத் துண்டித்ததும் † முதலையை வதைத்ததும் நீதானல்லவோ.
* உ. மோசே. ௰௪, உ௫. † எசேக்கியேல். உ௯, ௩.

௰ மகா ஆழத்தின் தண்ணீர்களாகிய சமுத்திரத்தை வறண்டுபோகப்பண்ணி மீட்கப்பட்டவர்கள் கடந்துபோகச் சமுத்திரத்தின் பள்ளங்களை வழியாக்கினதும் நீதானல்லவோ.

௰௧ அப்படியே * கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பிச் செம்பீரத்தோடே சீயோனுக்கு வருவார்கள் நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின்மேலிருக்கும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அவர்களைப் பிடிக்கும் சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம். * [illegible]

௰உ நாம் நாமே உங்களைத் தேற்றரவு பண்ணுகிறவர், * சாகப்போகிற மனுஷனுக்கும் புல்லைப்போலாகிற மனுஷபுத்திரனுக்கும் பயப்படுகிறதுக்கும், * சங். ௱௩, ௧௫. மத்தேயு. ௰, உ௮.

௰௩ வானங்களை விரித்துப் பூமியை அஸ்திபாரப்படுத்தி யுன்னையுண்டாக்கின கர்த்தரை மறக்கிறதுக்கும் நீ யார்? இடுக்கண் செய்கிறவன் அழிக்க ஆயத்தமாகிறபோது நீ யவனுடைய உக்கிரத்துக்கு நித்தமும் நாளிலும் அருக்களிப்பானேன், இடுக்கண் செய்பவனுடைய உக்கிரமெங்கே?

௰ச பரதேசியாய்ப்போகிறவன் சீக்கிரமாய் விடுதலையாவான், அவன் குழியிலே சாவதுமில்லை, அவனுடைய அப்பம் அவனுக்குக் குறைபடுவதுமில்லை.

௰ரு ஏனெனில் நாமே சமுத்திரத்தைக் கலக்கியதின் அலைகள் கொந்தளிக்கச் செய்கிற உன் தேவனாகிய கர்த்தர், சேனைகளுடைய கர்த்தரென்கிற நாமம் உள்ள உன் பராபரனுமாகிய கர்த்தர்.

௰௬ நாம் வானத்தை நாட்டிப் பூமியை அஸ்திபாரப்படுத்திச் சீயோனுடனே நீ நம்முடைய சனமென்று சொல்லுவதற்காக நம்முடைய வார்த்தையை யுன் வாயிலே கொடுத்து நம்முடைய கரத்தின் நிழலிலே உன்னை மறைக்கிறோம்.

௰௭ எழும்பிக்கொள் எழும்பிக்கொள், கர்த்தருடைய உக்கிரத்தின் பாத்திரத்தை அவர் கையிலே வாங்கிக் குடித்திருக்கிற எருசலேமே எழும்பு * தத்தளிப்பினுடைய

திரத்தின்வண்டலைக்குடித்து உறிஞ்சினாய். * சங்கீதம். ௬ய, ௩.

யஅ அவள்பெற்ற எல்லாக்குமாரரிலும், அவளை மெதுவாய் நடத்துவாருமில்லை, அவள் வளர்த்த எல்லாக்குமாரரிலும், அவளைக் கைக்கொடுத்து அழைப்பாருமில்லை.

யக இவ்விரண்டும் உனக்குச்சம்பவித்தது, உனக்குப்பரிதபிக்கத்தக்கவன் யார்? பாழ்க்கடிப்பும் நொறுக்குதலும் பஞ்சமும் பட்டயமும் வந்தது, யாரைக்கொண்டு உன்னைத்தேற்றரவுபண்ணுவோம்?

உய உன்குமாரர் மூர்ச்சித்துவிழுந்தார்கள், அவர்கள் வலையிலே சிக்குண்ட கலைமானைப்போலே எல்லாவீதிகளின் முகனையிலும் கர்த்தருடைய உக்கிரத்தினாலும் உன் தேவனுடைய கண்டிதத்தினாலும் நிறைந்தவர்களாய்க்கிடக்கிறார்கள்.

உக ஆனதுகொண்டு சிறுமைப்பட்டவளே, மதுபானமல்லாமல் வெறிகொண்டவளே, நீ கேள்.

உஉ கர்த்தராகிய உன்னுடையவரும் தம்முடைய சனத்துக்காக வழக்காடப்போகிற உன் பராபரனுமானவர் சொல்லுகிறதாவது, இதோ, தத்தளிப்பின் பாத்திரத்தையுன் கையிலேவாங்கிப்போடுகிறோம், இனி நம்முடைய உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டலை நீ குடிப்பதில்லை.

உங *கடந்துபோகிறவர்களுக்கு நீ உன் முதுகைத்தரையும் தெருவுமாக்கும்படியாக உன்னைக் குனியென்றுசொல்லி, நாங்கள் கடந்துபோகும்படிக்குக் குனியென்று சொல்லி உன்னைச்சஞ்சலப்படுத்தினவர்களின் கையிலே அதைக்கொடுப்போமென்கிறார். *சங்கீதம். ௱உக, ௩.

ருஉ. அதிகாரம்.

[சலையின் இரட்சிப்பையுஞ் சுவிசேஷத்தின் இன்பமான பிரசங்கிப்பையும் முன்னறிவித்தது.]

எழும்பு எழும்பு சீயோனே உன் பெலனைத்தரித்துக்கொள், பரிசுத்தபட்டணமாகிய எருசலேமே, உன் அலங்கார வஸ்திரங்களைத்தரித்துக்கொள், ஏனெனில் சுன்னத்தில்லாதவனும் அசுத்தனும் இனியுன்கிட்ட வருவதில்லை.

உ தூசியுதறிப்போட்டெழுந்திரு, எருசலேமே உட்காரு, சிறைப்பட்டுப்போன சீயோன்குமாரத்தியே, உன் கழுத்தின் கட்டுகளைப்பவிழ்த்துவிடு.

௩ ஏனெனில் கர்த்தர்சொல்லுகிறதாவது, இலவசமாய் விற்கப்பட்டீர்கள், பணங்கொடாமலும் மீட்கப்பட்டுப்போவீர்கள்.

ச ஏனென்றால் முந்தி நம்முடையசனம் பரதேசியாய்த் தங்கி எகிப்துக்கிறங்கிப் போயிருந்தது, அசூரியனும் முகாந்தரமில்லாமல் அதை யொடுக்கிப்போட்டானென்று கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறார்.

ரு இப்போதும் நமக்கிங்கே என்ன இருக்கிறதென்று சொல்லுகிறார், ஏனெனில் நம்முடையசனஞ் சும்மாய்க்கொண்டுபோகப்பட்டது, அதையாளுகிறவர்கள் அதை யலறப்பண்ணுகிறார்கள், நித்தமெந்நாளும் * நம்முடைய நாமந் தூஷணிக்கப்படுகிறது. * எசே. ௩௬, உய ரோமர். உ, உச.

௬ இதுநிமித்தியம் இதுநிமித்தியமே, நம்முடைய சனம் அக்காலத்திலே நம்முடைய நாமத்தையறியும், ஏனெனில் இதைச்சொல்லுகிறவர் நாமே, இதோ இங்கேயிருக்கிறோமென்று கர்த்தர்விளம்புகிறார்.

எ சமாதானத்தைச்கூறி நற்காரியத்தைச்சுவிசேஷமாயறிவித்து இரட்சிப்பைக்கூறிச் சீயோனுடனே, உன் பராபரன் இராசரிகம்பண்ணுகிறானென்றுசொல்லுகிற சுவிசேஷகனுடையகால்கள் மலைகளின்மேல் எத்தனையந்தமானவைகள். நாகூம். உ, க. ரோமர். ௰, யரு.

அ உன்சாமக்காரருடையசத்தங்கேட்கப்படும், அவர்கள் சத்தத்தையுயர்த்தி ஏகமாய்க்கெம்பீரிக்கிறார்கள், ஏனென்றால் கர்த்தர் சீயோனைத் திரும்பிவரப்பண்ணும்போது அதைக்கண்ணாரக் காண்பார்கள்.

௯ எருசலேமின் பாழானதலங்களே, முழங்கியேகமாய்க்கெம்பீரியுங்கள் ஏனெனில் கர்த்தர் தம்முடையசனத்தைத்தேற்றரவு பண்ணி எருசலேமைமீட்டார்.

௰ எல்லாச்சாதிகளின் கண்களுக்குமுன்பாகவுங் கர்த்தர்தம்முடையபரிசுத்தப்புயத்தைவெளிப்படுத்துவார், * பூமியின் எல்லைகளெல்லாம நம்முடையபராபரனுடைய இரட்சிப்பைக்காணும். * சங. ௯அ, ௩. ச.

௰க அகன்று அகன்று *அவ்விடம்விட்டுப்புறப்படுங்கள், அசுத்தமானதைத்தொடாதேயுங்கள், கர்த்தருடைய பாண்டங்களைச்சுமக்கிறவர்களே, அதின் நடுவிலிருந்து புறப்பட்டு உங்களைச்சுத்திகரியுங்கள்.

* உ. கொரி, ௬, யஎ. அறி. யஅ, ச.

யஉ ஏனெனில் நீங்கள் தீவிரித்துப்புறப்படுவதில்லை, நீங்கள் ஓடிப்போகிறவர்களாய் நடப்பதுமில்லை, ஏனென்றால் கர்த்தர் உங்கள்முன்னடப்பார், இஸ்ரவேலின்பராபரன் உங்களபிற்புறத்தையுங்காப்பார்.

மேசியாவின் தாழ்ந்த நிலைமையையுமுயர்ந்த நிலைமையையும் முன்னறிவித்தது.

யங இதோ நம்முடைய ஊழியக்காரன் ஞானமாய் நடந்துகொண்டு * உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார். * பிலிப்பி. உ, ௯—யக.

௰௪ மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும் மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும் * இத்தனை அந்தக்கேடு அடைந்தபடியினாலே அநேகர் உம்முடையபேரில் எப்படிப் பிரமிப்பார்களோ. * ௫௩, ௩.

௰௫ அப்படியநேகம் சாதிகளைமேலும் * அவர் தெளிப்பார், அவருக்காக இராசாக்கள் தங்கள் வாயைமூடுவார்கள், ஏனெனில் † எவர்களுக்கு விவரிக்கப்படாதிருந்ததோ அவர்கள் காண்பார்கள், எவர்களுக்குக் கேள்விப்படாதிருந்ததோ அவர்கள் உணர்வார்கள். * எபிரே. ௯. ௰௩. ௰௪. ௰௨, ௨௪. ௧. பேதுரு. ௧, ௧. ௨. † ஏசா. ௬௫, ௧. ரோமர். ௰௫, ௨௧.

௫௩. அதிகாரம்.

[கிறிஸ்து பாவிகளுக்குப்பதிலாக அனுபவித்த பாடுகளையும் அவைகளின் பிரயோசனத்தையுங் காண்பிக்கிற மேன்மையான தீர்க்கதரிசனம்.]

௧ எங்களாலேகேள்விப்பட்டதை விசுவாசித்தவனார்? கர்த்தருடைய புயம் ஆருக்கு வெளிப்பட்டது? யோவா. ௰௨, ௩௮. ரோமர். ௰, ௰௬.

௨ கிளையைப்போலேயும் வறண்ட பூமியிலிருந்து துளிர்க்கிற வேரைப்போலேயும் அவனுக்குமுன்பாக எழும்புகிறார், அவருக்கு ரூபமில்லை மகத்துவமுமில்லை, நாம் அவரைப்பார்த்தபோது நாம் அவரையிச்சிக்கத்தக்க ரூபம் அவருக்கில்லாதிருந்தது.

௩ * அவர் அசட்டைபண்ணப்பட்டவரும் மனுஷரில் ஈனமானவரும் வேதனைகளுள்ளவரும் பலஈனத்தையறிந்தவருமாயிருந்தார், அவரைவிட்டு முகங்களைமறைத்துக்கொள்ளலாயிற்று, அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரையெண்ணாதேபோனோம். * ௪௯, ௭. ௫௨, ௰௪. சங்கீதம். ௨௨, ௭. ௮. யோவா. ௭, ௪௮.

௪ மெய்யாகவே * நம்முடைய பலஈனங்களையவரெடுத்துக்கொண்டு நம்முடைய நோவுகளைச் சுமந்தார், நாமோவெனில் அவர் பராபரனால் அடிபட்டு ஒடுங்குண்டவராய் வாதிக்கப்பட்டாரென்றெண்ணினோம். மத்தே. ௮, ௰௭.

௫ ஆனால் அவர் * நம்முடைய மீறுதல்களின் நிமித்தியங் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தியம் நொறுக்கப்பட்டார், நமக்குச்சமாதானத்தையுண்டுபண்ணும் ஆக்கினையவர்மேலிறங்கிற்று, † அவருடையதழும்புகளாலே குணமாகிறோம். * ரோமர். ௪, ௨௫. † ௧. பேது. ௨, ௨௪.

௬ நாமெல்லாரும் * ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து அவரவர்பாட்டிலே தன்தன் வழியைநோக்கிப்போனோம், கர்த்தரோவென்றால் † நம்மெல்லாருடைய அக்கிரமத்தையவர்மேல விழப்பண்ணினார். * ௧. பேது. ௨, ௨௫. † யோவா. ௧, ௨௯. ௨. கொரிந்தர். ௫, ௨௧.

௭ கடன்கேட்கப்பட்டபோது அவர் ஒடுக்கப்பட்டார், ஆனால் * தம்முடைய வாயையவர் திறந்ததில்லை, † அவர் ஆட்டுக்குட்டியைப்போல அடிக்கப்படக் கொண்டுபோகப்பட்டுத் தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமற்றிருக்கிற ஆட்டைப்போலே தம்முடைய வாயைத்திறவாதிருந்தார். * மத். ௨௬, ௬௩. ௨௭, ௰௨. ௰௪. † அப்போ. ௮, ௩௨ ௩௩.

௮ அவர் இடுக்கத்திலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்தெடுக்கப்பட்டார், அவருடைய ஆயிசையெண்ணுபவனார், ஏனெனிலவர் * ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து வெட்டப்போடப்பட்டார், என் சனத்தினுடைய மீறுதலினாலே அவருக்கத்தவாதையுண்டானது. * மத்தே. ௮,

௯ ஆகாதவர்களோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்கள், ஆனால் ஐசுவரியவானோடே தம்முடைய மரணத்திலிருந்தார், ஏனென்றால் அவர் கொடுமைசெய்திருந்ததில்லை * அவர்வாயில் வஞ்சனையிருந்ததுமில்லை. மத்தேயு. ௨௭, ௫௭—௬௦. ௧. பேதுரு. ௨, ௨௨.

௰ கர்த்தரோவென்றால் அவரை நொறுக்கப் பிரியமாயிருந்து அவரைப் பலட்சயப்படுத்தினார், அவருடைய ஆத்துமாத்தனை குற்றம்போக்கும் பலியாக ஒப்புக்கொடுத்தபின் அவர் * வித்தைக்கண்டு நீடித்த நாளாயிருப்பார், கர்த்தருக்கு விருப்பமானது அவர்கையால் வாய்க்கும். * சங். ௨௨, ௩௧. ௩௨.

௰௧ தம்முடைய ஆத்துமவருத்தத்தின் பலனையவர்கண்டு திருத்தியாவார், தம்முடைய ஊழியக்காரனாகிய நீதிபரர் அநேகரைத் தம்மறிவினாலே நீதிமான்களாக்குவார், ஏனெனில் அவர்களுடைய அக்கிரமங்களையவர் சுமந்துகொள்ளுகிறார்.

௰௨ ஆனபடியினாலே யவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி * பாதகரிலொருவராக எண்ணப்பட்டு அநேகரானவர்களின் பாவத்தைத் தாமே சுமந்து † பாதகருக்காகவேண்டிக்கொண்டதுக்கீடாக அநேகரையவருக்குப் பங்காகக் கொடுப்போம், பலவான்களையவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்ளுவார். * மாற். ௰௫, ௨௮. லூக். ௨௨, ௩௭. † லூக்கா. ௨௩, ௩௪.

௫௪. அதிகாரம்.

[புறவேறுபாட்டுச்சபையின் விஸ்தாரமான பெருகுதல்.]

பிள்ளைப்பெறாத மலடியே கெம்பீரித்துப்பாடு, கர்ப்பவேதனைப்படாதவளே கெம்பீரமாய் முழங்கிச்சந்தோஷத்தாயிரு, * ஏனெனில் வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப்பார்க்கிலும் † அவாந்தரமானவளுடைய பிள்ளைகள் அதிகமென்று கர்த்தர்சொல்லுகிறார். * கலாத். ௪, ௨௭. † போவா. ௧, ௰௧—௰௩.

௨ உன் கூடாரத்தினிடத்தை விசாலமாக்கு உன்வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும், தடைசெய்யாதே, உன் கயிறுகளை நீளமாக்கி, உன் கூச்சுக்களையுறுதிப்படுத்து.

௩ ஏனெனில் வலதிடதுபுறமாகவும் இடங்கொண்டு பெருகுவாய், உன் வித்தானவர்கள் சாதிகளைச்சுதந்தரித்துக்கொண்டு பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள்.

௪ பயப்படாதே ஏனெனில் நீ வெட்கிப்போவதில்லை, நாணாதே, ஏனெனில் நீ யிலச்சையடைவதில்லை, உன் வாலிபத்தின்வெட்கத்தை நீ மறந்து உன் விதவையிருப்பின் நிந்தையை யினி நினையாதிருப்பாய்.

௫ ஏனெனில் உன்னை யுண்டாக்கின சேனைகளுடைய கர்த்தரென்ற நாமமுள்ளவர் * உன்பத்தாவுஞ்சர்வபூமியினுடைய பராபரனென்னப்படப்போகிற இஸ்ரவேலின் பரிசுத்தர் உன்மீட்பருமாயிருக்கிறார்.
* ஓசே. ௨, ௰௯.

௬ அத்தெனில் தள்ளிவிடப்பட்டவளும் மனம் நொந்தவளுமான இஸ்திரியைப்போலிருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார், நீ பிறக்கணிக்கப்பட்டிருந்தும் இளவயதிஸ்திரீயாயிருக்கிறாயென்று உன் பராபரன்சொல்லுகிறார்.

௭ கொஞ்ச நிமிஷம் உன்னைக் கைவிட்டோம், ஆனால் மகா உருக்கவிரக்கங்களால் உன்னைச்சேர்ப்போம். * சங்கீ. ௩௰, ௫.

௮ கொஞ்சப்போதான கோபத்திலே நம்முடைய முகத்தையொரு நிமிஷம் உனக்குமறைத்தோம், ஆனால் நித்திய கிருபையாய் உனக்கிரங்குவோமென்று கர்த்தராகிய உன்மீட்பர்சொல்லுகிறார்.

௯ ஏனெனில் இது நமக்கு நோவாவின் சலங்களைப்போலிருக்கும், நோவாவின் சலங்கள் இனிப்பூமியின்மேலே புரளுவதில்லையென்று நாம் * ஆணையிட்டதுபோலே உன்மேல் நாங்கோபமாவதில்லையென்றும் உன்னை நாம் உதம்புவதில்லையென்றும் ஆணையிட்டோம். * ௧. மோசே. ௯, ௰௧. எபிரோயர். ௬, ௰௭.

௰ ஏனெனில் பருவதங்கள் விலகினாலும் குன்றுகள் சாய்ந்தாலும் * நம்முடைய கிருபை உன்னை விட்டு விலகாமலும் நம்முடைய சமாதானத்தின் உடம்படிக்கை சாயாமலுமிருக்குமென்று உன்மேல் மனதுருக்கமுள்ள கர்த்தர்சொல்லுகிறார். * சங்கீ. ௱௩, ௰௭. ௰௮.

௰௧ சிறுமையானவளே பிசல்களிலடிபட்டவளே தேற்றரவற்றவளே இதோ * நான் உன்கல்லுகளை மினுக்காக வைத்து நீலக்கல்லுகளை உன் அஸ்திபாரமாக்கி,
* அறிவி. ௨௧, ௰௯.

௰௨ உன் பலகணிகளைப் பளிங்கும் உன் வாசல்களை மாணிக்கக்கல்லுகளும் உன்னெல்லைகளையெல்லாம் உச்சிதமான கல்லுகளுமாக்குவோம்.

௰௩ * உன்பிள்ளைகளெல்லாங் கர்த்தராலே போதிக்கப்பட்டிருப்பார்கள், உன்பிள்ளைகளுடைய † சமாதானம் பெருத்திருக்கும் * யோவா. ௬, ௪௫ † ரோமர். ௫, ௧.

௰௪ நீதியினாலே திடப்படுவாய், இடுக்கத்துக்கு நீங்கித்தூரமாகு, ஏனெனில் பயப்படாதிருப்பாய், கலங்கலுக்குத் தூரமாகு, ஏனெனில் அது உன்னையணுகுவதில்லை.

௰௫ இதோ உன்மேலே கூட்டங்கூடினால் அது நம்மாலே கூடுகிற கூட்டமல்ல, எவர்கள் உனக்குவிரோதமாய்க்கூடுகிறார்களோ அவர்கள் உன்னிமித்தியமாக விழுவார்கள்.

௰௬ இதோ கரிநெருப்பையூதித்தன் கிரியைக்கான ஆயுதத்தையுண்டுபண்ணுகிற கொல்லனையும் நாமு சிருஷ்டித்தோம், அழித்துக்கெடுத்து நிர்க்கிரகமாக்குகிறவனையும் நாமு சிருஷ்டித்தோம்.

௰௭ உனக்குவிரோதமா யுருவாக்கப்படும் ஆயுதமெல்லாம் வாய்க்காதேபோம், உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்தநாவையும் நீ குற்றப்படுத்துவாய், இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் நம்மாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௫௫. அதிகாரம்.

[எல்லாச்சாதிகளையும் மேசியாவின் இராச்சியத்துக்கு வரவழைக்குதல்.]

ஓய், * தாகமாயிருக்கிற நீங்களெல்லாருந் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள், பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து கொண்டுசாப்பிடுங்கள், நீங்கள் வந்து பணமன்றிவிலையுமன்றித் திராட்சப்பழ இரசமும் பாலுங்கொள்ளுங்கள் * யோவா. ௭, ௩௭. ௩௮. அறிவி. ௨௨, ௰௭.

௨ நீங்கள் அப்பமில்லாததிலே பணத்தையுந்திருத்தியாகாததிலே உங்கள் பிரயாசத்தையுஞ் செலவழிப்பானேன், நீங்கள

தமக்குச்செவிகொடுக்கவேகொடுத்து நல்லமானதைச்சாப்பிடுங்கள், அப்போது* உங்கள் ஆத்துமாக்கொழுப்பானதினாலேமகிழ்ச்சியாயிருக்கும். * மலகி. ௪, உ.

௩ உங்கள் செவியைச்சாய்த்து நம்மண்டைக்குவாருங்கள், கேளுங்கள், அப்போது உங்கள் ஆத்துமாப்பிழைக்கும், ஏனெனில் * தாவீதின் நிச்சயமான கிருபைகளையுங்களுக்கு நித்திய உடன்படிக்கையாய உடன்படிக்கைபண்ணுவோம். * உ. சாமு. எ, யஉ. சங்கீ. அசு, ௩—ரு அப். யங, ௩௪.

௪ இதோ அவனைச்சனக்கூட்டங்களுக்குச்சாட்சியாகவுஞ் சனசதளங்களுக்குத் தலைவராகவும் அதிகாரியாகவும் கொடுத்தோம்.

ரு இதோ நீ யறியாதிருந்த சாதியைவரவழைப்பாய், உன்னையறியாதிருந்த சாதி உன் பாரபாலுஞய கர்த்தரின் நிமித்தியமும் இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் நிமித்தியமும் உன்னண்டைக்கு ஓடிவரும், ஏனெனில், உன்னைமேன்மைப்படுத்தினார்.

சு கர்த்தர் கண்டுபிடிக்கையில் அவரைத்தேடுங்கள், அவர் சமீபமாயிருக்கையில் அவரைநோக்கிக் கூப்பிடுங்கள்.

எ * ஆகாதவன் தன்வழியையும் அக்கிரமக்காரன் தன்னினைவுகளையும்விட்டுக்கர்த்தரண்டைக்கு மனந்திரும்பக்கடவான், அப்போது அவன்மேல் மனதுருகுவார், நம்முடைய பராபரனண்டைக்கே மனந்திரும்பக்கடவான், ஏனெனில் † அவர்மன்னிக்கிறதற்குத் தயவுபொருந்திருக்கிறார்.

* ஏசாயா. ௱அ, ௩ய. ௩௩. ௩௬, யக.
† சங்கீ. ௱௩ய, ௪.

அ ஏனெனில் நம்முடைய நினைவுகள் உங்கள் நினைவுகளல்ல உங்கள் வழிகள் நம்முடையவழிகளுமல்லவென்று கர்த்தர்சொல்லுகிறார்.

௯ ஏனென்றால் பூமியைப்பார்க்க வானங்கள் எப்படியுயர்ந்திருக்கிறதோ, அப்படியுங்கள்வழிகளைப்பார்க்க நம்முடையவழிகளும் உங்கள்நினைவுகளைப்பார்க்க நம்முடைய நினைவுகளும் உயர்ந்திருக்கும்.

ய அதேதென்றால் மாரியும் உறைந்தமழையும் வானத்திலிருந்திறங்கி, அவ்விடத்துக்குத்திரும்பாமல், பூமியையேநனைத்து. அதைமுளைக்கிளம்பவும் விளையவும் பண்ணி, விதைக்கிறவனுக்கு விதையையுஞ் சாப்பிடுகிறவனுக்கு ஆகாரத்தையுமெப்படிக்கொடுக்கிறதோ,

யக அப்படி நம்முடைய வாயிலிருந்துபுறப்படுமவசனமுமிருக்கும், அதுவெறுமையாய் நம்மண்டைக்குத்திரும்பாமல், அது நாமவிரும்புகிறதைச்செய்து, நாமஅதையனுப்பினகாரியமாகும்படியாகவாய்க்கும்.

யஉ அதேதெனில் நீங்கள் மகிழ்ச்சியாய்ப்புறப்பட்டுச்சமாதானமாய்க்கொண்டுபோகப்படுவீர்கள் பருவதங்களும் மேடுகளும் உங்களுக்கு முன்பாகக்கெம்பீரமாய் முழங்கிவெளியின்மரங்களெல்லாங்கைகொட்டும்.

யங முள்ளுச்செடிக்குப்பதிலாகத்தேவதாரிவிருட்சமுமுளைக்கும்,காஞ்சொறிக்குப்பதிலாக மிறுதுச்செடியெழும்பும், அதுகர்த்தருக்குக் கீர்த்தியாகவும் நிர்மூலமாகாத நித்திய அடையாளமாகவுமிருக்கும்.

ருசுா. அதிகாரம்.

[மெய்யானதேவபத்திக்கேவுகிறபுத்தி.]

கர்த்தர்சொல்லுகிறதாவது, நீங்கள் நியாயத்தைக்கைக்கொண்டு, நீதியைச்செய்யுங்கள், ஏனெனில்நம்முடைய இரட்சிப்புவரவும்நம்முடைய நீதிவெளிப்படவுஞ்சமீபித்திருக்கிறது.

உ இப்படிச்செய்கிறமனுஷனும் இதைப்பற்றிக்கொண்டிருந்து ஓய்வுநாளைப்பரிசுத்தக்குலைச்சலாக்காதபடிக்குக்காத்தொருபொல்லாப்பையுஞ்செய்யாதபடிக்குத்தன்கையைக்காத்துக்கொண்டிருக்கிறமனுஷபுத்திரனும் பாக்கியவான்.

௩ கர்த்தரைச்சேர்ந்த அன்னியபுத்திரனுங்கர்த்தரென்னைத்தமமுடையசனத்தைவிட்டுப்பிரிக்கவேபிரித்துப்போட்டாரென்றுசொல்லாதுக, அண்ணகனுமிதோநான்பட்டமரமென்றுசொல்லாதுக.

௪ ஏனெனில் நம்முடைய ஓய்வுநாட்களைக்காத்து நமக்கிரமியமாயிருக்கிறதைத்தெரிந்துகொண்டு நம்முடைய உடன்படிக்கையைப்பிடித்திருக்கிற அண்ணகர்களைக்குறித்துக் கர்த்தர்சொல்லுகிறதாவது,

ரு நாங் குமாரரைப்பார்க்கிலும் குமாரத்திகளைப்பார்க்கிலும் அவர்களுக்கு நம்முடையவீட்டிலும் நம்முடையமதில்களுக்குள்ளும் நல்ல இடத்தையுங்கீர்த்தியையுங்கட்டளையிடுவோம், அழிந்துபோகாதிருக்கும் நித்தியகீர்த்தியை அப்படிக்கொத்தவனுக்குக்கட்டளையிடுவோம்.

சு கர்த்தரைச்சேவிக்கவுங்கர்த்தருடைய நாமத்தைச் சிநேகிக்கவும் அவருக்குஊழியக்காரராயிருக்கவும் அவரைச்சேர்ந்து ஓய்வுநாளைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதபடிக்குக்காத்து நம்முடைய உடன்படிக்கையைப்பிடித்திருக்கிற அன்னியபுத்திரனைவரையும்,

எ நாம் * நம்முடைய பரிசுத்தபருவதத்துக்குக்கொண்டுவந்து அவர்களை நம்முடைய செபவீட்டிலே மகிழப்பண்ணுவோம், அவர்களுடைய சர்வாங்கதகனங்களும் அவர்களுடையபலிகளும் நம்முடையபலிபீடத்தின்மேல் அங்கிகரிக்கப்பட்

ருந்தும், ஏனெனில் † நம்முடைய வீடு சகல சனங்களுக்குமான செபத்தின் வீடென்னப்படும். * எபி. ௰௨, ௨௨—௨௪.
† க. இரா. ௮, ௪௧—௪௩. மத்தே. ௨௧, ௰௩. மாற்கு. ௰௧, ௰௭. லூக்கா. ௰௯, ௪௬.

௮ இஸ்ரவேல்சனத்தில் தள்ளுண்டவர்களைச் சேர்க்கிற கர்த்தராகிய ஆண்டவர் இதிலே சேர்க்கப்பட்டவர்களையல்லாமல் இன்னும் நாம் அதனோடே சேர்ப்போமென்கிறார்.

பூமிக்கடுத்த சிந்தையான போதகரைக் கண்டித்தது.

௯ காட்டிலேயிருக்கிற சகல மிருகங்களே சகல காட்டுமிருகங்களே, பட்சிப்பதற்கு வாருங்கள்.

௰ அதின் சாமக்காரரெல்லாரும் ஒன்றும் அறியாத குருடர், அவர்களெல்லாருங் குலைக்கமாட்டாத ஊமையான நாய்கள், அவர்கள் தூக்கக்கலக்கமாகிப் பேசிச் சயனித்திருந்து உறக்கத்தைச் சிநேகிக்கிறவர்கள்.

௰௧ அவர்கள் திருத்திப்படைய அறியாத பெருவாசையுள்ள நாய்களும் அவர்கள் உணர்வறியாத மேய்ப்பருந்தானே, அவர்களனைவருந்தங்கள் தங்கள் வழியையும் அவரவர் தன்தன் மூலையிலிருந்து * தன்தன் பொழிவையும் நோக்கிக்கொண்டிருக்கிறார்கள். * எரேமியா. ௬, ௰௩. ௰௪.

௰௨ வாருங்கள் மதுபானத்தைக்கொண்டுவருவேன் லொட்டிக்குடிப்போம் * நாளைத்தினம் இன்றைத்தினம்போலவும் இன்னும் மகா அதிகமாகவுமிருக்குமென்பார்கள். * வாக்கியம். ௨௩, ௩௫.

௫௭. அதிகாரம்.

[கண்டிப்பும் மகா ஆறுதலுமான பிரசங்கம்.]

நீதிமான் மடிந்துபோகிறான், ஆனால் ஒருவரும் அதை மனதிலே வைக்கிறதில்லை, சன்மார்க்கர் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள், ஆபத்தி வருவாத்துக்கு முன்னே நீதிமான் எடுத்துக்கொள்ளப்படுகிறானென்பதைச் சிந்திப்பாரில்லை. * மீகா. ௭, ௨.

௨ நேராய் நடந்தவர்கள் சமாதானத்துக்குட்பிரவேசித்துத் தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்.

௩ ஆனால் நாள்பார்க்கிறவளின் பிள்ளைகளே விபசாரனுக்கும் வேசிக்கும் வித்தானவர்களே, நீங்களிங்கே கிட்டிவாருங்கள்.

௪ ஆர்மேலே சிமானிக்கிறீர்கள், ஆர்மேல் வாயை விஸ்தாரமாய்த்திறந்து நாக்கை அளாவுகிறீர்கள், நீங்கள் துரோகப்பிள்ளைகளுங் கள்ளத்தனவித்தாருமல்லவோ.

௫ நீங்கள் * பச்சையான சகலமரத்தின் கீழும் விக்கிரகத்தேவர்களோடே மோகாக்கினியால் வெந்துபள்ளத்தாக்குகளிலே பிள்ளைகளைக் கன்மலைவெடிப்புகளின் கீழ்க் கொன்றுபோடுகிறவர்கள். * எரே. ௨, ௨௪. ௩, ௰௩.

௬ பள்ளத்தாக்குகளிலுள்ள மெருகான சிலைகளிடத்தில் உன் பங்கிருக்கிறது, அவைகள் அவைகளேயுன்னுடைய வீதம், அவைகளுக்கு நீ பூறாருசலையும் ஊற்றிக்காணிக்கையையுஞ்செலுத்துகிறாய், இவைகளின்மேல் பிரியப்படுவோமோ.

௭ நீ மேட்டிமையும் உயரமுமான பருவதங்களின்மேல் உன் மஞ்சத்தை வைக்கிறாய், அங்கேயும் பலியிட ஏறுகிறாய்.

௮ கதவுகளுக்கும் நிலைகளுக்கும் பின்னாக உன் நினைப்படையாளங்களை வைக்கிறாய், ஏனெனில் நீ நம்மைவிட்டு வேறேபேர்களுக்குத் திறப்பாக்கியேற உன் மஞ்சத்தை யகலமாக்கி அவர்களோடே உடன்படிக்கையாகிறாய், அவர்களுடைய மஞ்சத்தைக் காண்கிற எல்லாவிடத்திலும் அதைச் சிநேகிக்கிறாய்.

௯ நீ இராசாவுக்குக் காணிக்கையாய் எண்ணெயைக்கொண்டுபோகிறாய், உன் பரிமளதயிலங்களைத் திரளாக்கி உன் தானாபதிகளைத் தூரத்துக்கு அனுப்பி உன்னைப் பாதாளமட்டுந் தாழ்த்துகிறாய்.

௰ உன் மார்க்கத்தின் விஸ்தாரத்தினுழன்றுகிறாய், அதுவிருதாவென்று நீ சொல்லுகிறதில்லை, உன் கைக்கான் பிழைப்பைக் கண்டுபிடித்தாய் ஆகையால் நீ வேசாறப்படுகிறதில்லை.

௰௧ நீ யாருக்கு ஐயமும் பயமுமாயிருக்கிறாய், நீ புளுகுகிறாய், நீ நம்மை நினையாமலும் உன் மனதிலே வைக்காமலும் போகிறாய். நாம் வெகுகாலமவரையாய் மவுனமாயிருந்தோமல்லவோ, ஆகையால் நமக்குப் பயப்படாதே போகிறாய்.

௰௨ உனக்குத் தவாதிருக்கும் உன் நீதியையும் உன் கிரியைகளையும் நாமறியப்படுத்துவோம்.

௰௩ நீ கூப்பிடும்பொழுது உன் கூட்டங்கள் உன்னைத் தப்புவிக்கட்டும், ஆனாற் காற்று அவைகளையெல்லாம் பறக்கடித்து மாயை அவைகளைக்கொண்டுபோம். * நம்மை நம்பியிருக்கிறவனோ தேசத்தைச் சுதந்தரித்து நம்முடைய பரிசுத்த பருவதத்திலே காணியாட்சிக்காரனாயிருப்பான்.

௰௪ வழியையுயர்த்தியுயர்த்தி அதைச் செவ்வைப்படுத்தி இடறல்களை நம்முடைய சனத்தின் வழியிலிருந்தெடுத்துப்போடுங்களென்னப்படும். * ௬௨, ௰௧.

௰௫ ஏனெனில் * நித்தியவாசகரும் பரிசுத்தரென்னு நாமமுள்ளவருமாகிய † உய

ரூமம் உன்னதமுமானவர் சொல்லுகிறதாவது, பணிந்தவர்களின் ஆவியையுயிர்ப்பிக்கவும், நருங்குண்டவர்களின் இருதயத்தையுயிர்ப்பிக்கவும் நாமேயுன்னதத்திலும் பரிசுத்தஸ்தலத்திலும், நருங்குண்ட பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறோம். * கூகூ, க. உ. † சஙகூ. ஙலரு,
இ. ழ

யசு ஏனென்றால் * நானுசதாகாலமாய் வழக்காடுவதில்லை, நாமென்றென்றைக்கும் கோபமாயிருப்பதுமில்லை, அதேதெனில் ஆவியும் நாம் உண்டுபண்ணின ஆத்துமாக்களும் நம்முடைய முகத்துக்குமுன்பாகத் தொய்ந்துபோவதாயிருக்கும்.
* சஙகீதம். ஙக, கூ.

யஎ நாம் அவர்கள் பொருளாசையினுடைய அக்கிரமத்தினிமித்தியங்கடுங்கோபமாகி அவர்களையடித்தோம், நாம் மறைந்து கடுங்கோபமாயிருந்தோம், ஆனால் தங்கள் மனம்போகிறபோக்கிலே மாறுபாடாய் நடந்தார்கள். * ருகூ, அதி. உ.

யஅ அவர்கள் வழிகளை நாம்பார்த்து அவர்களைக்குணமாக்குவோம், அவர்களை நடத்தியவர்களுக்குத்திரும்ப ஆறுதல்களையளிப்போம், அவர்களிலே துக்கப்படுகிறவர்களுக்குத்தானே.

யகூ * சமாதானஞ் சமாதானமென்று தூரமாயிருக்கிறவர்களுக்குஞ் சமீபமாயிருக்கிறவர்களுக்குங்கூறும் உதடுகளின்பலனைச்சிருஷ்டிக்கிறோம், அவர்களைக்குணமாக்குவோமென்று கர்த்தர்சொல்லுகிறார்.
ருஉ, எ.

உ0 ஆகாதவர்களோ கொந்தளிப்பான கடலைப்போலிருக்கிறார்கள், ஏனென்றால் அது அமர்ந்திருக்கக்கூடாமல் அதின்சலங்கள் சேற்றையும் அழுக்கையுங் கரையிலெறிகிறது.

உக ஆகாதவர்களுக்குச்சமாதானமில்லையென்று என்பராபரன்சொல்லுகிறார்.
* சஅ, உஉ.

ருஅ. அதிகாரம்.

[பராபரனுக்குப்பிரியமான உபவாசத்துக்கும் ஓய்வுநாளின் ஆசரிப்புக்குமான புத்தி.]

அடக்கிக்கொள்ளாமலே சத்தமாய்க் கூப்பிடு, நீயுன்சத்தத்தை எக்காளத்தைப்போலுயர்த்தி, நம்முடைய சனத்துக்கு அவர்கள்மீறுதலையும் யாக்கோபின்வீட்டாருக்கு அவர்கள்பாவங்களையும் அறிவி.

உ அவர்களோவென்றால் நீதியைச்செய்து வருகிறதுந் தங்கள் பராபரனுடைய நியாயத்தைவிடாத்துமானசாதியைப்போல நம்மைத்தினந்தினந்தேடி நம்முடைய

௰௧ அப்போது கர்த்தர் உன்னை நித்தம் நடத்தி மகாவறட்சியான காலங்களில் உன் ஆத்துமாவைத் திருப்தியாக்கி உன் எலும்புகளைப் புஷ்டியாக்குவார், நீ நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப்போலவும் ஜலங்கள் வற்றாத நீரூற்றைப்போலவும் இருப்பாய்.

௰௨ * நெடுங்காலமாய்ப் பாழாய்க்கிடந்த ஸ்தலங்களை உன்னிலுள்ளவர்கள் கட்டுவார்கள், தலைமுறை தலைமுறையாக இருக்கும் அஸ்திபாரங்களைப் போட்டெழுப்புவாய், திறப்பானதை அடைக்கிறவன் என்றும் குடியிருக்கும்படியாகப் பாதைகளைத் திருத்துகிறவன் என்றும் நீ அழைக்கப்படுவாய். * ௬௧, ௪.

௰௩ நீ என்னுடைய பரிசுத்த நாளிலே உன் இச்சையானதைச் செய்யாதபடிக்கு உன் காலை ஓய்வுநாளுக்கு இடைஞ்சலாய் விலக்கி, ஓய்வுநாளை மனமகிழ்ச்சியென்றும் கர்த்தருடைய பரிசுத்த நாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, உன் வழிகளின்படி செய்யாமலும் உன் இச்சையானதைக் கண்டுபிடிக்காமலும் உன் பேச்சைப் பேசாமலும் அதைக் கனம்பண்ணுவாயானால்,

௰௪ அப்போது கர்த்தரின்பேரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய், நான் பூமியின் உயர்ந்த இடங்களின்மேல் உன்னை ஏறிப்போகப்பண்ணி உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னைப் போஷிப்பேன், ஏனெனில் கர்த்தருடைய வாய் அதைச் சொல்லிற்று.

௫௯. அதிகாரம்.

[தேவனைச் சகலத்துக்கும் காத்துக்கொண்டிருக்கிற சகல ஜனங்கள் பாவங்களையுணர்ந்து அதிக்கையிடுகிறவர்களுக்குப் பராபரனுடைய அனுக்கிரகமுள்ள வாக்குத்தத்தமும்.]

இதோ இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போனதில்லை, கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமானதுமில்லை. * ௰, ௨. ௪. மோசே. ௰௧, ௨௩.

௨ உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் பராபரனுக்கும் நடுவாகப் பிரிவினையுண்டாக்குகிறது, உங்களைக் கேளாதபடிக்கு உங்கள் பாவங்களே * அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. * மிகா. ௩, ௪.

௩ ஏனென்றால் * உங்கள் கைகள் இரத்தத்தாலும், உங்கள் விரல்கள் அக்கிரமத்தாலும் கறைப்பட்டிருக்கிறது, உங்கள் உதடுகள் பொய்யைப் பேசி உங்கள் நாவு தீயாப் பக்கேட்டைவசனிக்கிறது. * ௧, ௰௫.

௪ நீதிக்காகக் கூப்பிடுகிறவனுமில்லை சத்தியத்துக்காக நியாயஞ்சொல்லுகிறவனுமில்லை, மாய்கையை நம்பி அவத்தமானதைப் பேசுகிறார்கள், * தீவினையைக் கர்ப்பந்தரித்து அக்கிரமத்தைப் பெறுகிறார்கள்.
* சங். ௭, ௰௫.

௫ கட்டுவிரியனின் முட்டைகளை அடைகாத்துச் சிலந்தியின் நெசவுகளை நெய்கிறார்கள், அவர்களுடைய முட்டைகளைச் சாப்பிடுகிறவன் சாவான், அவைகள் நெரிக்கப்பட்டதேயானால் விரியன் புறப்படும்.

௬ அவர்கள் நெசவுகள் உடுப்புகளான தல்லதங்கள் கிரியைகளாலே தங்களை மூடமாட்டார்கள், அவர்கள் கிரியைகள் அக்கிரமக்கிரியைகளானவை, கொடுமையின் செய்கை அவர்கள் கைகளிலிருக்கிறது.

௭ * அவர்கள் கால்கள் பொல்லாப்புக்கோடி குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தத் தீவிரிக்கிறது, அவர்கள் நினைவுகள் அக்கிரம நினைவுகளானவை, பாழ்க்கடிப்பும் அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கிறது. * ரோமர். ௩, ௰௫.

௮ சமாதானத்தின் வழியை அறியார்கள், அவர்கள் நடைகளில் நியாயமில்லை, தங்கள் பாதைகளைத் தங்களுக்குக் கோணலாக்கினார்கள், அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்.

௯ ஆனபடியால் நியாயம் எங்களுக்குத் தூரமாயிருக்கிறது, நீதி எங்களைத் தொடர்ந்துபிடிக்காது, வெளிச்சத்துக்குக் காத்திருந்தோம் ஆனால் இதோ இருள். பிரகாசத்துக்குக் காத்திருந்தோம் ஆனால் அந்தகாரத்திலே நடக்கிறோம்.

௰ * நாங்கள் குருடரைப்போலே சுவரைப்பிடித்துக் கண்ணில்லாதவர்களைப்போலே தடவுகிறோம், இராவிருளில் இடறுகிறதுபோலே மத்தியானத்திலே இடறுகிறோம், செத்தவர்களைப்போலே பாழ்த்தலங்களில் இருக்கிறோம். * ௫. மோசே. ௨௮, ௨௯.

௰௧ நாங்களனைவரும் கரடிகளைப்போலே உறுமி, * புறாக்களைப்போலே கூவிக்கொண்டேயிருக்கிறோம், நியாயத்துக்குக் காத்திருந்தோம் அதைக் காணோம், இரட்சிப்புக்குக் காத்திருந்தோம் அது எங்களுக்குத் தூரமானது. * ௩௮, அதி. ௰௪. எசேக். ௭, ௰௬.

௰௨ ஏனெனில் எங்கள் மீறுதல்கள் உமக்கு முன்பாகமித்தியாயிருந்து எங்கள் பாவங்கள் எங்களுக்கு விரோதமாக உத்தரவு சொல்லுகிறது, ஏனெனில் எங்கள் மீறுதல்கள் எங்களுடனே இருக்கிறது, எங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம்.

௰௩ கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணுகிறதும் பொய் சொல்லுகிறதும் எங்கள் பராபரனை விட்டுப் பின்வாங்குகிறதும் இடுக்குதலாகவும் கலகமாகவும் பேசுகிறதும் கள்ள வார்த்தைகளைக் கர்ப்பந்தரித்து இரு

த்தியத்திலிருந்து புறப்பட்டுப்பண்ணுகிறதுமுண்டே.

௰௪ நியாயம் பின்னிட்டு அகன்றது, நீதி தூரமாக நிற்கிறது. ஏனெனில் சத்தியம் வீதியிலே இடறி நிதானம் வந்து சேரமாட்டாதே போகிறது.

௰௫ சத்தியம் தவறுகிறபடியானது, பொல்லாப்பை விட்டு விலகுகிறவன் கொள்ளையாகிறான். இதைக் கர்த்தர் பார்த்து நியாயமில்லையென்று விசனப்பார்வையாகி,

௰௬ ஒருவருமில்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவனில்லையென்று ஆச்சரியப்படுகிறார், ஆனதுகொண்டு * அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி அவருடைய நீதியே அவரைத் தாங்கும்.

* ௬௩, ௫.

௰௭ * அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து இரட்சிப்பின் தலைச்சோட்டைத் தம்முடைய சிரசில் வைத்து நீதிசரிக்கட்டுதலின் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்து, எரிச்சலைச் சால்வையாகப் போர்த்துக்கொள்ளுகிறார்.

௰௮ கிரியைகளுக்குத் தக்கபடி சரிக்கட்டுவார், அப்படியே அவர் தம்முடைய சத்துருக்களுக்கு உக்கிரத்தைச் சரிக்கட்டித் தம்முடைய பகைஞருக்குத் தக்கதைச் சரிக்கட்டித் தீவுகளுக்குத் தக்கதையும் சரிக்கட்டுவார்.

௰௯ அப்போது அஸ்தமிக்குந் திசை துவக்கிக் கர்த்தரின் நாமத்துக்கும் சூரியனுதிக்குந் திசை துவக்கி அவருடைய மகிமைக்கும் பயப்படுவார்கள், வெள்ளப்பிரளயமாய்ச் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவி அவனுக்கு விரோதமாகக் கொடியையேற்றுவார்.

௨௰ சீயோனுக்கும் யாக்கோபிலே துரோகத்தை விட்டுத் திரும்புகிறவர்களுக்கும் மீட்கிறவர் வருவாரென்று கர்த்தர் சொல்லுகிறார். * ரோமர். ௰௧, ௨௬.

௨௧ உம்முடையமேலிருக்கிற நம்முடைய ஆவியும் நாம் உம்துவாயிலே வைத்த நம்முடைய வார்த்தைகளும் இதுமுதலாய் என்றென்றைக்கும் உம்துவாயையும் உம்துவித்தின் வாயையும் உம்துவித்தினுடைய வித்தின் வாயையும் விட்டுப் பிரிவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார் இது நமக்கு அவர்களோடிருக்கும் நம்முடைய உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௬௰. அதிகாரம்.

[யூதர்களிலும் புறச்சாதிகளிலும் விசுவாசிகளாகப்போகிறவர்களின் மகிமையுள்ள சீர்.]

௧ நீ எழும்பி வெளிச்சமாகு, ஏனெனில் உன் வெளிச்சம் வருகிறது, கர்த்தருடைய மகிமை உன்மேலே உதிக்கிறது. * ௫௨, ௧.

௨ ஏனெனில் இதோ இருள் பூமியையும் அந்தகாரம் ஜனசதளங்களையும் மூடும், ஆனால் உன்மேலே கர்த்தர் உதிக்கிறார், உன்மேலே அவருடைய மகிமை காணப்படும்.

௩ உன் வெளிச்சத்தண்டைக்குச் சாதிகளும் உனக்கு உதிக்கிற ஒளியண்டைக்கு இராசாக்களும் நடந்துவருவார்கள்.

* ௪௯, ௬. அறிவி. ௨௧, ௨௪.

௪ சுற்றிலும் உன்கண்களை ஏறெடுத்துப்பார், இவர்களெல்லாரும் கூட்டப்பட்டு வருகிறார்கள், உன்குமாரர் தூரத்திலிருந்து வந்து உன்குமாரத்திகள் உன்பக்கத்திலே வளர்க்கப்படுவார்கள். * ௪௯, ௰௮.

௫ அப்போது நீ அதைக்கண்டு ஓடிவருவாய், உன்னிருதயம் அதிசயப்பட்டுவிரிவாகும், ஏனெனில் கடற்கரையின் திரளான செல்வம் உன் வசமாகத் திரும்பிச் சாதிகளின் பலத்த சேனையுன்னண்டைக்கு வரும்.

௬ ஒட்டகங்களின் ஏராளமும் மீதியானுடைய ஏப்பாத் தேசங்களின் வேகமான ஒட்டகங்களும் உன்னை மூடும், * சேபாவிலிருந்து அவர்கள் வரும் வந்து பொன்னையும் தூபவர்க்கத்தையுங் கொண்டுவந்து கர்த்தரின் துதிகளைச் சேஷமாய்ச் சொல்லுவார்கள்.

* சங். ௭௨, ௰.

௭ * கேதாரின் ஆடுகளெல்லாம் உன்னிடத்தில் சேர்ந்துகொண்டு நெபாயோத்தின் கடாக்கள் உன்னைச் சேவித்துவிருப்பமாக நம்முடைய பலிபீடத்தின்மேலேறும், நம்முடைய மகிமையின் வீட்டை மகிமையாக்குவோம்.

* ௪௨, ௰௧.

௮ மேகங்களைப்போலவுந் தங்கள் பலகணித்துவாரங்களுக்குத் திரிகிற புறாக்களைப்போலவும் பறந்துவருகிற இவர்கள் யார்.

௯ ஏனெனில் தீவுகள் நமக்குக் காத்திருக்கும், அவர் உன்னை மகிமைப்படுத்தினபடியால் உன்பிள்ளைகளையும் அவர்களோடேகூட அவர்கள் பொன்னையும் அவர்கள் வெள்ளியையும் உன் பராபரனுடைய கர்த்தரின் நாமத்துக்கென்றும் இஸ்ரவேலுடைய பரிசுத்தருக்கென்றுந் தூரத்திலிருந்து கொண்டுவர முதலே தர்ஷீசின் கப்பல்களும் நமக்குக் காத்திருக்கும்.

௰ அன்னியரின் புத்திரர் உன் மதில்களைக் கட்டி அவர்களுடைய இராசாக்கள் * உன்னைச் சேவிப்பார்கள், ஏனெனில் † நம்முடைய கடுங்கோபத்தினாலே உன்னையடித்தோம், ஆனால் நம்முடைய கிருபையினாலே உனக்கிரங்குகிறோம். * ௪௯, ௨௩. † ௫௪, ௭. ௮

௰௧ உன்னண்டைக்குச் சாதிகளின் பலத்த சேனையைக் கொண்டுவரும்படிக்கும் அவர்களுடைய இராசாக்கள் அழைத்துவரப்படும்படிக்கும் * உன்வாசல்கள் இராவும் பகலும் பூட்டப்படாமல் திறந்திருக்கும். * அறி. ௨௧, ௨௫.

௰௨ ஏனெனில் உன்னைச் சேவிக்காத சாதியும் இராச்சியமும் அழியும், அப்படிக்கொத்த சாதிகள் பாழாகவே பாழாகும்.

௰௩ நம்முடைய பரிசுத்தஸ்தலத்தின் தானத்தைச் சிங்காரிக்கும்படிக்கு, * லீபனோனின் மகிமையுந் தேவதாரு விருட்சங்களும் பின்னை மரங்களும் புன்னை மரங்களுங்கூட உன்னண்டைக்கு வரும், அப்படி நம்முடைய பாதங்களின் தானத்தை மகிமைப்படுத்துவோம். கடு, உ.

௰௪ உன்னை ஒடுக்கினவர்களின் பிள்ளைகளும் உன்னண்டைக்குக் குனிந்து வந்து உன்னை அசட்டைபண்ணின யாவரும் உன் உள்ளங்கால்களருகே பணிந்து உன்னைக் கர்த்தருடைய பட்டணமென்றும் இஸ்ரவேலுடைய பரிசுத்தரின் சீயோனென்றும் அழைப்பார்கள்.

௰௫ * நீ நெகிழப்பட்டதும் பகைக்கப்பட்டதும், ஒருவருங் கடந்து நடவாததுமாயிருந்ததுக்குப் பதிலாக உன்னை நித்திய மகிமையாகவுந் தலைமுறை தலைமுறையாயிருக்கும் மகிழ்ச்சியாகவும் வைப்போம். * ௪௯, அதி. ௰௪.

௰௬ நீ சாதிகளின் பாலையும் உண்டு * இராசாக்களின் முலைப்பாலையும் உண்டு கர்த்தருமாய் யாக்கோபிலே வல்லவருமாகிய நாமே இரட்சகரும் உன் மீட்பருமாயிருக்கிறதை அறிந்துகொள்ளுவாய். * ௪௯, ௨௩.

௰௭ நாம் வெண்கலத்துக்குப் பதிலாகப் பொன்னை வரப்பண்ணி, இரும்புக்குப் பதிலாக வெள்ளியையும் மரங்களுக்குப் பதிலாக வெண்கலத்தையுங் கல்லுகளுக்குப் பதிலாக இரும்பையும் வரப்பண்ணி உன் கண்காணிகளைச் சமாதானமும் உன் தண்டற்காரரை நீதியுமுள்ளவர்களாக்குவோம்.

௰௮ இனிக் கொடுமை உன் தேசத்திலும் அழிவும் நொறுக்குதலும் உன்னெல்லைகளிலுங் கேட்கப்படாது, * உன் மதில்களை இரட்சிப்பும் உன் வாசல்களைத் துதியுமென்று அழைப்பாய். * ௨௬, அதி. ௧.

௰௯ * இனிச் சூரியன் உனக்குப் பகலிலே வெளிச்சமாயிராமலுஞ் சந்திரன் தன் வெளிச்சத்தால் உனக்குப் பிரகாசியாமலும் * கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமும் உன் பராபரனே உன்னுடைய அலங்காரமுமாயிருப்பார். * அறிவி. ௨௧, ௨௩.

௨௰ உன் சூரியன் இனி அஸ்தமிப்பதுமில்லை உன் சந்திரன் மறைவதுமில்லை, ஏனெனில் கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார், உன் துக்கநாட்கள் முடிந்திருக்கும்.

௨௰௧ உன் சனமெல்லாம் நீதிமான்களும் என்றைக்கும் * பூமியின் சுதந்தரக்குடிகளும் † நாம் நட்ட கிளைகளும் நாம் மகிமைப்படும்படிக்கு நம்முடைய கரங்களின் கிரியையுமாயிருப்பார்கள். * மத்தே. ௫, ௫. † மத்தே. ௰௫, ௰௩.

௨௰௨ சின்னவன் ஆயிரமுஞ் சிறியவன் பலத்த சாதியுமாவான், கர்த்தராகிய நாம் அதை அதின் காலத்திலே தீவிரமாக நடப்பிப்போம்.

௬௰௧. அதிகாரம்.

[மேசியாவினாலே சபைக்குண்டாகும் பாக்கியமான சீரும் மகிழ்ச்சியும்.]

௧ கர்த்தராகிய பராபரனுடைய ஆவி என்மேலிருக்கிறார், * ஏனெனில் † சிறுமையானவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார், இருதயம் நருங்குண்டவர்களைக் காயங்கட்டவுஞ் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையுங் கட்டுண்டவர்களுக்குக் காவல் நீங்குதலையுங் கூறவும், * லூக். ௪, ௰௭—௨௰. † மத்தே. ௫, ௩.

௨ கர்த்தருடைய பிரியத்தின் வருஷத்தையும் நம்முடைய பராபரன் நீதியைச் சரிக்கட்டும் நாளையுங் கூறவுந் துயரப்பட்ட அனைவரையுந் தேற்றரவு பண்ணவுஞ் சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும் அவர் என்னை அனுப்பினார்.

௩ அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையுந் துயரத்துக்குப் பதிலாகச் சந்தோஷத்தின் எண்ணெயையும் ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியினுடையையுங் கொடுப்பதற்கும் அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவதற்குமாகத்தானே.

௪ * அவர்கள் சதாகாலமாய்ப் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டி முந்தி நிர்மூலமானவைகளை எடுப்பித்துத் தலைமுறை தலைமுறையாய் இடிந்துகிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள். * ௫௮, ௰௨.

௫ மறுசாதியார் நின்றுகொண்டு உங்கள் மந்தைகளை மேய்த்து அன்னியபுத்திரர் உங்கள் பண்ணையாள்களும் உங்கள் திராட்சத்தோட்டக்காரருமாயிருப்பார்கள்.

௬ நீங்களோ * கர்த்தரின் ஆசாரியரென்றழைக்கப்படுவீர்கள், உங்களை நம்முடைய பராபரனுடைய ஊழியக்காரரென்பார்கள், நீங்கள் சாதிகளின் ஆஸ்தியைப் போசித்து அவர்கள் மகிமையாலே மேன்மைபாராட்டுவீர்கள். * ௧. பேது. ௨, ௯. அறி. ௧, ௬. ௫, ௰.

௭ உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனையாய் வரும், இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் வீதத்திலே கெம்பீரிப்பார்கள். அதினிமித்தியந் தங்கள் தேசத்தில் இரட்டிப்பாகச் சுதந்தரிப்பார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்களுக்குண்டாம்.

௮ ஏனெனில் கர்த்தராகிய நாம் நியாயத்தைச் சிநேகித்துத் தகனபலியிலே கொள்ளையைப் பகைக்கிறவர், நாம் அவர்கள் கிரியையை உண்மையாக்கி அவர்களோடே நித்திய உடன்படிக்கையைப் பண்ணுவோம்.
* ௫௪, ௰. ௫௫, ௩.

௯ அவர்கள் வித்து சாதிகளிலும் அவர்கள் சந்தானங்கள் சனசதனங்களின் நடுவிலும் அறியப்பட்டிருக்கும், அவர்களைப் பார்க்கிற யாவரும் அவர்களைக் கர்த்தர் ஆசீர்வதித்த வித்தென்றறிந்துகொள்ளுவார்கள்.

௰ கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன், என் பராபரனுக்குள் என்னுத்துமா களிகூர்ந்திருக்கிறது, ஏனெனில் மணவாளன் ஆசாரியனடவாய்ச் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும் மணவாட்டி தன்னாபரணங்களால் அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும் ஒப்பாக அவர் * இரட்சிப்பின் வஸ்திரங்களையெனக்கு உடுத்தி நீதியின் சால்வையையெனக்குத் தரித்தார். * ௪௯. ௪௫, ௰.

௰௧ ஏனெனில் பூமி தன் முளைகளைப் புறப்படப்பண்ணுமாப்போலேயுந் தோட்டந் தன்னில் விதைக்கப்பட்டவைகளை முளைப்பிக்குமாப்போலேயுங் கர்த்தராகிய ஆண்டவர் எல்லாச்சாதிகளுக்கு முன்பாக நீதியையுந் துதியையும் முளைக்கப்பண்ணுவார்.

௬௨. அதிகாரம்.

[கிறிஸ்துவினுடைய சபையின் பாக்கியமும் பிரபலியமும்.]

சீயோனின் நிமித்தியமும் எருசலேமின் நிமித்தியமும் நாம் மவுனப்படாமலும் அதின் நீதி பிரகாசத்தைப்போலும் அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப்போலும் வெளிப்படுமட்டாக அமராமலுமிருப்போம்.

௨ சாதிகள் உன்னீதியையுஞ் சகல இராசாக்கள் உன் மகிமையையுங் காண்பார்கள், கர்த்தரிடும் * புது நாமமாயழைக்கப்படுவாய். * ௬௫, ௰௫.

௩ நீ கர்த்தருடைய கையில் சிங்காரமான கிரீடமும் உன் பராபரனுடைய கரத்தில் இராசமுடியுமாயிருப்பாய்.

௪ * நீயினி நெகிழப்பட்டவளென்னப்படாமலும் உன் தேசம் இனிப் பாழானதென்னப்படாமலும் இனி நாம் பிரியம் வைத்தவளென்றும் உன் தேசம் வாழ்க்கைப்பட்டதென்றும் அழைக்கப்படுவதுண்டு, ஏனெனில் கர்த்தர் உன்மேலே பிரியம் வைக்கிறார், உன் தேசம் வாழ்க்கைப்படும். * ௬௰, ௰௫.

௫ ஏனெனில் வாலிபன் கன்னியாஸ்திரியை விவாகம்பண்ணுகிறதுபோல உன் குமாரர் உன்னை விவாகம்பண்ணுவார்கள், மணவாளன் மணவாட்டியின் பேரில் மகிழ்ச்சியாயிருக்கிறதுபோல * உன் பராபரன் உன்பேரில் மகிழ்ச்சியாயிருப்பார். * சேபா. ௩, ௰௭.

௬ எருசலேமே உன் மதில்களின்மேலே பகல் முழுதும் இராமுழுதும் ஒருக்காலும் * மவுனமாயிராத சாமக்காரரைக் கட்டளையிடுகிறேம், கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணுகிறவர்களே, உங்களில் அமரிக்கையில்லாதிருப்பதாக. * ௫௨, ௮.

௭ அவர் எருசலேமைத் திடப்படுத்திப் பூமியிலே * புகழ்ச்சியாக வைக்குமட்டாக அவரை அமர்ந்திருக்கவொட்டாதிருங்கள். * ௬௧, ௰௧.

௮ இனி நாமுன் சத்துருக்களுக்கு உன் தானியத்தை ஆகாரமாகக் கொடோம், நீ பிரயாசப்பட்ட உன் கொடிமுந்திரிகையின் இரசத்தை அன்னியபுத்திரர் குடிப்பதில்லையென்று கர்த்தர் தமது வலதுகரத்தின் பேரிலுந் தமது வல்லமையினுடைய புயத்தின் பேரிலும் ஆணையிட்டார்.
* ௬௫, ௨௧. ௨௨.

௯ அதைச் சேர்த்தவர்களே தானே அதைப் புசித்துக் கர்த்தரைத் துதிப்பார்கள், அதைக் கூட்டிவைத்தவர்களே தானே அதை என் பரிசுத்தத் தலத்தின் பிராகாரங்களில் குடிப்பார்கள்.

௰ * வாசல்களால் பிரவேசியுங்கள், பிரவேசியுங்கள், சனத்துக்கு வழியைச் செவ்வைப்படுத்துங்கள், பாதையைப் புயமாயுர்த்துங்கள், அதைக் கல்லுப்பொறுக்கிச் சனங்களுக்குக் கொடியேற்றுங்கள்.
* ௫௭, ௰௪. மத்தே. ௨௮, ௰௯.

௰௧ * இதோ உன் இரட்சிப்பு வருகிறது, இதோ அவருடைய பலன் அவரோடே அவருடைய கூலி அவர் முன்பாகவும் வருகிறதென்று நீங்கள் சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்களென்பதை இதோ கர்த்தர் பூமியின் கடையாந்தரமட்டாகக் கூறுகிறார். * ௪௰, ௰. அறிவி. ௨௨, ௰௨.

௰௨ * அவர்களைப் பரிசுத்த சனமென்றுங் கர்த்தரால் மீட்கப்பட்டவர்களென்றும் அழைப்பார்கள், நீயோவெனில் தேடிக் கொள்ளப்பட்டதென்றும் * நெகிழப்படாத பட்டணமென்றும் அழைக்கப்படுவாய்.
* ௧. பேது. ௨, ௯.

௬௩. அதிகாரம்.

[கிறிஸ்து தமது சபையின் சத்துருக்களை ஆக்கினைப்படுத்துகிறது.]

ஏதோமிலும் * அதிலுள்ள போஸ்றா பட்டணத்திலுமிருந்து † சாயந்தீர்ப்பட்ட வஸ்திரங்களுடையவராகவும் மகத்துவமாய் உடுத்தியிருக்கிறவராகவுந் தமது மகா சத்துவத்திலே நடந்தேறுகிறவராகவும் வருகிற இவர் ஆர், நீதியாய்ப்பேசி இரட்

சிக்கவலலவராகிய நாததானே. * அறி. ௰௯, ௰௩ † ௬௪, ௫. ௬.

௨ உமமுடைய உடுபபுசசிவபபாகவும உமமுடையவஸ்திரஙகள ஆலையமிதிககி றவன வஸ்திரஙகளைடவாகவும இருககிற தேது.

௩ நாமொருவராய ஆலையை மிதிததோ ம, சனசதளஙகளில ஒருவரும நமமோடிரு ந்ததிலலை, நாம நமமுடைய கோபததிலே அவர்களைமிதிதது நமமுடைய உககிரததி லே அவர்களை நசுககிபபோடடோம, ஆன துகொணடு அவர்கள இரததம நமதுவஸ் திரஙகளினமேலே தெறித்தது, நமதுஉடுப பையெலலாங கறைபபடுததிககொணடோ ம. அறி. ௰௪, ௰௯. ௨௰.

௪ * ஏனெனில நீதியைசசரிககடடும நா ள நமமுடையமனதிலிருநதது, நமமுடைய வர்களைமீட்குமவருஷமவநதிருநதது.

* ௬௪, ௮.

௫ * நாம பார்ததோம, ஆனால ஒததா சைசெயகிறவனிலலைதாஙகுகிறவனிலலையெ னறுசசரியபபடடோம. ஆனதுகொணடு நமது புயமே நமககிரட்சிபபாகி நமமு டைய உககிரமே நமமைததாஙகிறது.

* ௫௯, ௰௬. ௰௭.

௬ நாம நமதுகோபததிலே சனசதளங களைமிதிததுபபோடடு நமமுடைய உககிர ததில அவர்களை வெறியாககி அவர்களசார தலைத்தரையிலிறஙகபபணணினோம.

தனனுடைய இஸரவேல் சாதியார் பணணப போகிறவிணணபபம.

௭ கர்ததர்எஙகளுககுசசெயதருளினவெ லலாவறறுககுததககதாகவும அவர் தமமு டைய இரககஙகளினபடியேயுந தமமுடை யதிரளானதயவுகளினபடியேயும இஸரவே ல வீடடாருககுசசெயத மகா நனமைக குததககதாகவும கர்ததருடைய கிரியைக ளையும கர்ததருடைய துதிகளையுமபிரஸ்தா பமபணணுவேன.

௮ ஏனெனில அவர்கள நமமுடையசன ஙகளென்றும அவர்கள கபடஞ்செயயா திருககபபோகிற பிளளைகளெனறுஞசொல லி அவர்களுககிரட்சகராஞர்.

௯ அவர்களுடைய எலலா நெருககததி லும அவர்நெருககபபடடார், ஆனதுகொ ணடு அவருடைய முகததின தூதனவர் அவர்களை இரட்சிததார், அவர் * தமது அனபினநிமிததியமுந தமது பரிதாபததி ன நிமிததியமும அவர்களை மீடடுபபூருவநா ட்களிலெலலாம அவர்களைததூககிச சுமந தவநதார். * மோசே. ௭, ௬—௯.

௰ அவர்களோ கலகமபணணியவருடை யபரிசுதத ஆவிககுநோகநடநதார்கள,ஆ கையால அவர்களுககுசசததுருவாய்மாறி அவரேயவர்களுக்குவிரோதமாயுத்தமபண ணினார்.

௰௧ ஆகிலும பூருவநாட்களையுமமோசே யையுந தமமுடைய சனததையும நினைவு கூர்நதாரோ, ஆனால அவர்களையுந தமது மந தையினமேயபபனையுஞசமுததிரததிலிருந தேறபபணணினவரிபபோதெஙகே.

௰௨ அவர்கள நடுவிலேதமமுடைய பரி சுதத ஆவியையிருக்கக்கடடளையிடடு அவ ர்களை மோசேயின வலது பககததிலுளள தமது மகிமையின புயததினாலே நடததித் தமககு நிததிய கீர்ததியுணடாகக அவர்க ளுககுமுனபாகத்தணணீர்களைபபிளநது,

௰௩ ஒருகுதிரைவனாநதரவெளியிலே நட ககுமாபபோல் அவர்களையாழஙகளில் இட றுதபடிககு நடககபபணணினவரெஙகே.

௰௪ கர்ததருடைய ஆவியவர்களைபபளள ததாககிலேபோயிறஙகுகிறமிருகஜீவனகளை பபோல இளைபபாறபபணணினார், அபபடி யேதேவரீர்உமககுமகிமையுளளகீர்ததியை யுணடாகக உமமுடைய சனததைநடத தினீரோ.

௰௫ * தேவரீர் பரமணடலஙகளிலிருந து கணணோககி உமமுடைய பரிசுததமும உமது மகிமையுமான வாசஸ்தலததிலிருந துபாரும,உமமுடையவைராககியமுமஉம முடைய வலலமைகளுமெஙகே, உமமுடை யகுடல்களின இரையுதலும உமமுடைய மனவுருககமும எனககு முனபாகததனனை யடககிககொளளுகிறது. * ௫. மோசே. ௨௬, ௰௫.

௰௬ தேவரீர் எஙகள பிதாவாமே, ஏனெ னில ஆபிரகாம எஙகளையறியான,இஸரவே லுககும நாஙகள அறியபபடடவர்களுமல ல,கர்ததாவே தேவரீரெஙகளபிதாவும எங களமீட்பருநதானே, இது பூருவகாலமுதல உமமுடையநாமம்.

௰௭ கர்ததாவே தேவரீரெஙகளை உமது வழிகளைததபபிபபோகவிடடு எஙகளிருதய ததையுமககுப பயபபடாதபடிககுககடின பபடுததுவானேன, உமமுடைய ஊழியக காரரின நிமிததியமும உமமுடைய சுதந தரமான கோததிரஙகளின நிமிததியமுந திருமபும.

௰௮ உமமுடைய பரிசுதத சனததைக கொஞசஙகுறையச்சுதநதரமாக வசபபடு ததிககொணடிருககிறார்கள,எஙகளசததுரு ககள உமமுடையபரிசுததஸ்தலததை*மி திததுபபோடடார்கள. * ௬௪, ௰. ௰௧ சஙகீ. ௭௯, ௧.

௰௯ ஒருககாலுநதேவரீர் ஆணடுகொள ளாதவர்களைபபோலும உமது நாமம்விள ஙகாதவர்களைபபோலுமானோம.

௬௪. அதிகாரம்.

[அப்பாலும் அவர்களுடைய விண்ணப்பம்.]

௧ உமது நாமத்தைச் சத்துருக்களுக்கு அறியப்பண்ணுவதற்குஞ் சாதிகள் உம்முடைய சந்நிதிக்கு முன் தத்தளிப்பதற்குமாக,

௨ தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி உருக்குகிற அக்கினியெரியும்போலேயும் அக்கினி தண்ணீரைப் பொங்கப்பண்ணும்போலேயும் பருவதங்கள் உமக்கு முன்பாகக் கரைந்தால்தாவிலே.

௩ நாங்கள் எதிர்பார்த்திராத பயங்கரமான காரியங்களைத் தேவரீர் செய்து இறங்குகிறபோது உமக்கு முன்பாகப் பருவதங்கள் கரைந்ததுபோலேதானே.

௪ பராபரனே * உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளைத் தேவரீரையல்லாமல் உலகத்தோற்றமுதற்கொண்டு ஒருவருங் கேட்டதுமில்லை செவியால் உணர்ந்ததுமில்லை அவைகளைக் கண்டதுமில்லை.
* ௧. கொரி. ௨, ௯.

௫ மகிழ்ச்சியாய் நீதியைச் செய்கிறவர்களையும் உம்முடைய வழிகளில் உம்மை நினைக்கிறவர்களையுஞ் சந்திக்கிறீர், நாங்களோவென்றால் இதோ அவைகளுக்கு விரோதமாகச் சதாகாலமும் பாவஞ்செய்தபடியினாலே தேவரீர் கடுங்கோபமடைந்தீர் இன்னுந் தப்பியிருக்கிறோம்.

௬ ஆனால் நாங்கள் அனைவருந் தீட்டானவனைப்போலிருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாந் தீட்டான வஸ்திரத்தைப்போலுமிருக்கிறது, நாங்கள் அனைவரும் * இலைகளைப்போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல எங்களையடித்துக்கொண்டுபோம். * சங்கீ. ௯௰, ௫. ௬.

௭ உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும் * உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனுமில்லை, ஏனெனில் தேவரீர் உம்முடைய முகத்தை யெங்களைவிட்டு மறைத்து எங்களை யெங்கள் அக்கிரமங்களின் நிமித்தியங் கரையப்பண்ணுகிறீர். * சங்கீ. ௱௯, ௨௩.

௮ இப்போதுங் கர்த்தாவே தேவரீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண், தேவரீர் எங்களையுருவாக்குகிறவர், நாங்களனைவரும் உமது கரத்தின் கிரியைதானே.

௯ கர்த்தாவே இத்தனையாய்க் கடுங்கோபம் வைத்துக்கொண்டிராமலும், * என்றைக்கும் அக்கிரமத்தை நினைத்துக்கொள்ளாமலுமிருப்பீராக, இதோ நாங்களனைவரும் உம்முடைய சனமென்றுபாரும்.
* சங்கீ. ௭௯, ௮.

௰ உமது பரிசுத்த பட்டணங்கள் வனாந்தரமானது சீயோன் வனாந்தரமானது எருசலேம் பாழாய்க் கிடக்கிறது.

௰௧ எங்கள் பிதாக்கள் உம்மைத் துதித்த எங்களுடைய பரிசுத்தமும் எங்கள் மகிமையுமான வீடு அக்கினிக்கிரையாகி இச்சிக்கப்பட்டத்தக்க எங்களுடைய தானங்களெல்லாம் பாழாயினது.

௰௨ கர்த்தாவே இவைகளினிமித்தம் அடக்கிக்கொண்டிருப்பீரோ, மவுனமாயிருந்து இத்தனையாய் எங்களைச் சிறுமைப்படுத்துவீரோ.

௬௫. அதிகாரம்.

[குணப்படாதவர்களின் தீர்ப்பாகப் பேசுதலையுங் குணப்பட்டவர்களின் பாகம் பேசுதலையுங் காட்டினது.]

௧ நம்மைக்குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டோம், நம்மைத் தேடாதிருந்தவர்களாலே கண்டுபிடிக்கப்பட்டோம், * நம்முடைய நாமம் விளங்காதிருந்த சாதியுடனே † இதோ நான் இதோ நான் என்கிறோம். * ருகூ, கூ. ரோமர். ௰, ௨௰. † ருஅ, கூ.

௨ * நலமல்லாத வழியிலே நடந்து தங்கள் நினைவுகளைப் பின்பற்றி நடக்கிற முரட்டாட்டமான சனத்தண்டைக்கு நாள் முழுதும் † நம்முடைய கைகளை நீட்டினோம்.
* ரோ. ௭, ௨௪. † ரோமர். ௰, ௨௧.

௩ நம்முடைய சந்நிதியிலே நித்தமும் நமக்குக் கோபமுண்டாக்கித் தோட்டங்களிலே பலியிட்டுச் செங்கல்களின்மேல் தூபங்காட்டி,

௪ பிரேதக்குழிகளண்டையிலிருந்து பாழ்த்தலங்களில் இராத்தங்கிப் * பன்றியிறைச்சியைத் தின்று தங்கள் பாத்திரங்களில் அருவருப்பான சேனங்களின் ஆணத்தை வைத்திருந்து, * ௬௬, ௧௭.

௫ நீயுனமட்டிலிரு என்னண்டை சேராதே, உன்னைப் பார்க்கிலும் நான் பரிசுத்தனாயிருக்கிறேனென்கிற சனத்தண்டைக்குத்தானே, இவர்கள் நம்முடைய கோபத்தின் புகையும் நாளெல்லாம் எரிகிற அக்கினியுமாயிருப்பார்கள்.

௬ இதோ அது நமக்குமுன்பாக எழுதியிருக்கிறது, நாம் மவுனமாயிராமல் சரிக்கட்டுவோம், அவர்கள் மடியிலே சரிக்கட்டுவோம்.

௭ உங்கள் அக்கிரமங்களுக்கும் மலைகளிலே தூபங்காட்டி மேடைகளில் நம்மை நிந்தித்த உங்கள் பிதாக்களுடைய அக்கிரமங்களுக்குங் கூடத்தானே, நாம் அவர்கள் முந்தின செய்கையின்பலனை * அவர்கள் மடியிலே அளப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார். * கலாத். ௬, ௭.

அ கர்த்தர் சொல்லுகிறதாவது, ஒருதி
ராட்சக்குலையில இரசங்காணப்படும
போது அதையழிக்காதே, ஏனெனில அதி
லே ஆசீர்வாதமுண்டென்றுசொல்லப்படுகி
றபடி நாம நமதுஊழியக்காரரின்நிமித்தி
யமாக அனைத்தையும் அழிக்காதபடிக்குச
செய்து,

கூ யாக்கோபிலிருநது ஒரு வித்தையும்
யூதாவிலிருநது நமமுடைய பருவதங்களை
சுதந்தரிப்பவனையும எழும்பப்பண்ணு
வோம, நாங தெரிநதுகொண்டவர்கள
அதைச்சுதந்தரித்துக்கொண்டு நமமுடை
ய ஊழியக்காரர் அஙகேவாசமபண்ணுவா
ர்கள.

ய நமமைததேடுகிற நமது சனததுக
குச்சாரோன ஆட்டுத்தொழுவமாகவும, *
ஆகோரின பள்ளததாககும ஆட்டுக்கிடை
யாகவுமிருக்கும. * யோவா. எ, உசு.

யக ஆனால கர்த்தனைவிட்டு நமது பரிசு
ததபபருவதத்தைமறநது காதெனறதறகு
பபநதியையாயததமபண்ணிமேனியென்ற
தறகுபானததைநிறையவார்க்கிறவர்களே.

யஉ உங்களைநாமபட்டயததுககெண
ணிக்கொடுப்போம, நீஙகள்யாவருஙகொலை
பபடக்குனிவீர்கள, ஏனென்றால் * நாங
கூபபிட்டும நீஙகள மறுவுத்தரவுசொல்லா
மலும நாம பேசியும நீஙகளகேளாமலுமி
ருநது நமமுடைய பார்வைக்குப்பொல்லா
ப்பானதைச்செய்து நமக்குப்பிரியமாயிரா
ததைத்தெரிநதுகொண்டீர்கள. * சுசு, ச.
வாசகியம. க, உச. ஞ

யங ஆனபடியினாலே கர்த்தராகிய ஆண
டவர்சொல்லுகிறதாவது, இதோ * நமமு
டையஊழியக்காரர்போசிப்பார்கள, நீஙக
ளோபசியாயிருப்பீர்கள, இதோநமமுடை
யஊழியக்காரர் குடிப்பார்கள, நீஙகளோ
தாகமாயிருப்பீர்கள, இதோ நமமுடைய
ஊழியக்காரர் சநதோஷப்படுவார்கள,நீங
களோ வெட்கப்படுவீர்கள. * சஙகீ. உஉ,
உஎ. மத்தேயு. ரு, சு.

யச இதோ நமமுடைய ஊழியக்காரர்
மனததிடனாலே கெமபீரிப்பார்கள, நீஙக
ளோ மனநோவினாலே கூப்பிட்டு ஆவியின
முறிவினாலேயலறுவீர்கள.

யரு நாங தெரிநதுகொண்டவர்களுக்கு
நீஙகள உஙகள நாமததைச்சாபப்பிரமா
ணமாகபபினவைததுப்போவீர்கள, ஏனெ
னில் கர்த்தராகியஆண்டவர் உனனைககொ
னறுபோட்டுததமமுடைய ஊழியக்காரரு
க்கு * வேறே நாமததைத்தரிப்பார்.
* கூஉ, உ. அறிவி. உ, யஎ.

யசு ஆனதகொண்டு பூமியிலே தனனை
ஆசீர்வதிக்கிறவன சத்தியபராபரனுக்குள்
ளேதனனையாசீர்வதிப்பான,பூமியிலேஆணை
யிடுகிறவன * சத்தியபராபரனபேரிலேயா
ணையிடுவான, ஏனெனில முநதின இடுக்கண
கள் மறககபபட்டு அவைகள நமதுகணக
ளுககு மறைநதுபோயவிட்டது.
* எரே. ச, உ. யஉ, யசு.

யஎ ஏனெனில இதோ * நாம புதுவா
னததையும புதுபபூமியையுஞ சிருஷ்டிககி
றோம, முநதினவைகள இனி நினைககபபடுவ
துமிலலை மனதிலே எழும்புவதுமிலலை.
* சுசு, உஉ. உ. பேதுரு. ங, யங.
அறிவிபபு. உக, க.

யஅ நானசிருஷ்டிககிறதினாலே நீஙகள
என்றென்றைக்கும மகிழநது களிகூர்நதிரு
ஙகள, ஏனெனில இதோ எருசலேமைககளி
கூருதலுண்டாகவும அதின சனததை மகி
ழ்ச்சியுண்டாகவுஞசிருஷ்டிககிறோம.

யகூ நாம எருசலேமினமேற களிகூர்ந
து நமதுசனததினமேல் மகிழ்ச்சியாயிருப
போம், அழுகையினசத்தமுஙகூககுரலின
சத்தமும்அதில இனிக்கேட்கபபடுவதிலலை.

உய அஙகேயினிக்கொஞசநாள்மட்டிரு
க்குமபாலகனுந தனனாள்களைநிறைவேறறு
ததிழவனுமுண்டாயிராமல சாகிற வாலிப
ன நூறுவயதுளளவனாயிருபபான, நூறுவய
துளளவனாகிய பாவியோசபிககபபடுவான.

உக வீடுகளைககட்டி அவைகளிற குடியி
ருபபார்கள, * திராட்சததோட்டஙக
ளைநாட்டி அவைகளின கனியையும புசி
பபார்கள. * சுஉ, அ. கூ.

உஉ * அவர்கள கட்டுகிறதும வேறொ
ருவர் குடியிருககிறதும அவர்கள நாட்டுகி
றதும வேறொருவர் கனி புசிககிறதுமா
யிருபபதிலலை, ஏனெனில விருட்சததின நா
ள்களைபபோலே நமது சனததின நாள்களி
ருககும. நாநதெரிநதுகொண்டவர்கள தங
கள கைகளினகிரியைகளை அவைகளபழசா
யபபோகுமதனிலும அனுபவிபபார்கள.
* ரு. மோசே. உஅ, ஙய.

உங அவர்கள விருதாவாக உழைபபதி
லலை, அவர்களகலஙகலாகபபிளளைகளைபபெ
றுவதுமிலலை, ஏனெனிலஅவர்களும அவர்க
ளோடே கூட அவர்கள சநதானமுஙகர்த
தராலே தெரிநதுகொளளபபட்ட வித்தா
யிருபபார்கள.

உச சமபவிபபதேதெனில, * அவர்கள
கூபபிடுகிறதுககுமுனனே நாம மறுவுத்த
ரவுகொடுப்போம, அவர்களினனம பேசிக
கொளள நாஙகேட்போம. * ஙய. யசு.
ருஅ, கூ. சஙகீ. ாசரு, யஅ. யகூ.
தானி. கூ, உய—உங. மத. சு, அ.

உரு * ஓநாயும ஆட்டுககுட்டியும ஒரு
மிதது மேயும, சிஙகம மாட்டைபபோலே
வைககோலைததினனும, † தூள் சர்பபததி
னுடையபோசனமாயிருககும, நமமுடைய
பரிசுதத பருவதமெஙகுந தீஙகுசெயவது
மிலலைகேடுண்டாககுவதுமிலலையெனறுகர்

த்தர் சொல்லுகிறார். * ௰௧, ௬—௯.
† ௧. மோசே. ௩, ௰௪.

௬௬. அதிகாரம்.

[யூதருடைய புறம்பான தேவ ஆராதனை தள்ளப்படுவது.]

கர்த்தர் சொல்லுகிறதாவது, * பரமண்டலங்கள் நம்முடைய ஆசனமும் பூமி நம்முடைய பாதப்படியுமாயிருக்கக்கொள்ள நீங்கள் நமக்குக் கட்டும் வீடு எப்படிக்கொத்ததும் நான் தாவரிக்கும் இடம் எப்படிக்கொத்ததுமாயிருக்கும். * ௧. இரா. ௮, ௨௭. ௨. நாளா. ௬, ௰௮. மத்தே. ௫, ௩௪. ௩௫. அப்போஸ். ௭, ௪௮. ௪௯. ௰௭, ௨௪.

௨ நம்முடைய கரம் இவைகளையெல்லாம் படைத்ததினால் இவைகளெல்லாம் உண்டானதேயென்று கர்த்தர் சொல்லுகிறார், ஆனால் * சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு நம்முடைய வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்போம். * ௫௭, ௰௫. சங்கீ. ௩௪, ௰௮. ௫௧, ௰௭.

௩ * மாட்டைக் குரல்வளையறுக்கிறவன் மனுஷனை வெட்டுகிறவனாகவும் ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும் காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும் நினைப்புண்டாகத் தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தைத் தோத்திரிக்கிறவனாகவுமிருக்கிறான், இவர்களுந் தங்களுடைய வழிகளைத் தெரிந்துகொள்ளுகிறார்கள், இவர்களுடைய ஆத்துமாத் தங்கள் அருவருப்புகளின்பேரில் விருப்பமுமாயிருக்கிறது. * எரே. ௬, ௨௰.

௪ நாமும் அவர்கள் பரியாசங்களுக்குத் தக்கதைத் தெரிந்துகொண்டு அவர்களுக்குத் திகில்களை அவர்கள்மேல் வரப்பண்ணுவோம், * நாங்கூப்பிட்டாலும் மறுவுத்தரவு கொடுக்கிறவனில்லாமலும் நான் பேசினாலும் அவர்கள் கேளாமலும் அவர்கள் நம்முடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து நாம் விரும்பாததைத் தெரிந்துகொண்டதின் நிமித்தியமாகத்தானே. * ௬௫, ௰௨. வாக்கி. ௧, ௨௪ முத. எரே. ௭, ௰௩. ௰௪.

௫ கர்த்தருடைய வசனத்துக்கு நடுங்குகிறவர்களே, அவருடைய வார்த்தையைக் கேளுங்கள், * உங்களைப் பகைத்து நம்முடைய நாமத்தின் நிமித்தியம் உங்களைத் தூரப்படுத்துகிற உங்கள் சகோதரர் கர்த்தர் மகிமைப்படுவாராகவென்கிறார்களே, ஆனால் அவர் உங்கள் சந்தோஷத்துக்காகக் காணப்படுவார், அவர்களோ வெட்கப்படுவார்கள்.
* லூக்கா. ௬, ௨௨.

௬ பட்டணத்திலிருந்து அமளியின் சத்தமும் தேவாலயத்திலிருந்து சத்தமுங் கேட்கப்படுகிறது, தம்முடைய சத்துருக்களுக்குச் சரிக்கட்டுகிற கர்த்தருடைய சத்தந்தானே.

மெய்ச்சபை பிரபலியமாவதும், அதைத் தடுத்த சத்துருக்கள் ஆக்கினைசெய்யப்படுவதும்.

௭ அம்பாயப்படாததுக்குமுன் பெற்றாள், அவளுக்கு வேதனைவாராததுக்குமுன் அவள் ஆண்பிள்ளையைப் பெற்றாள்.

௮ இப்படிக்கொத்ததைக் கேட்டவன் யார்? இப்படிக்கொத்ததைக் கண்டவன் யார்? ஒரு தேசம் ஒரே நாளிலே ஒருசேரச் சனிப்பிக்கப்படுமோ? ஒருமிக்க ஒரு சாதி பிறக்குமோ? சீயோனோ வேதனைப்பட்டவுடனே தன் குமாரரைப் பெற்றிருக்கிறது.

௯ பெறப்பண்ணுகிறவராகிய நாம் பெறுவியாதிருப்போமோவென்று கர்த்தர் சொல்லுகிறார், பிறக்கப்பண்ணுகிறவராகிய நாம் அடைப்பட்டிருப்போமோவென்று உன் பராபரன் சொல்லுகிறார்.

௰ எருசலேமைச் சிநேகிக்கிற நீங்களெல்லாரும் அதோடேகூடச் சந்தோஷப்பட்டு அதினாலே களிகூருங்கள், அதினிமித்தியம் துக்கித்திருந்த நீங்களெல்லாரும் அதோடேகூட மிகவும் மகிழுங்கள்.

௰௧ நீங்கள் அதினுடைய ஆறுதல்களின் முலைப்பாலையுண்டு திருப்தியாகவும், நீங்கள் சப்பிக்குடித்து அதினுடைய மகிமையின் மிகுதியினால் மனமகிழ்ச்சியாகவும்.

௰௨ ஏனெனில் கர்த்தர் சொல்லுகிறதாவது, இதோ, நான் சமாதானத்தை ஒரு நதியைப்போலவும், சாதிகளின் மகிமையைப் புரண்டோடுகிற ஆற்றைப்போலவும் அதினிடமாகப் பாய்ச்சுகிறேம், * அப்பொழுது முலையுண்பீர்கள், நீங்கள் பக்கத்திலே சுமக்கப்படுவீர்கள், முழங்கால்களில் வைக்கப்பட்டு மனமகிழ்ச்சியாகப்படுவீர்கள்.
* ௪௯, அதி. ௩. ௪. ௪௯, அதி. ௨௨.
௬௰, அதி. ௪. ௫. ௰௬.

௰௩ ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோலே நாமுங்களைத் தேற்றப்பண்ணுவோம், நீங்கள் எருசலேமைத்தொட்டுத் தேற்றப்படுவீர்கள்.

௰௪ நீங்கள் அதைக் காண்பீர்கள், * உங்கள் இருதயம் மகிழ்ந்து, உங்கள் எலும்புகள் பசுமையைப்போலச் செழிக்கும், அப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரமும் அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும். * ௫௮. ௰.

௰௫ ஏனெனில் இதோ, தம்முடைய கோபத்தை உக்கிரமாகவும் தம்முடைய

புதலை * அக்கினிச்சுவாலைகளாகவும்மாறப் பண்ணக்கர்த்தர் அக்கினியோடேவருவார், அவருடைய இரதங்கள் பெருங்காற்றைப் போலவரும். * ௯, அதி. ௯. சங்கீ. ௫௰, ௩. ௨. தெச. ௧, ௯—௮. அதி. ௰௮, ௮

௰௬ ஏனெனில்கர்த்தர் அக்கினியாலும் * தம்முடைய பட்டயத்தாலும் எல்லா மாம்சத்தோடும் நியாயத்துக்குட்பிரவேசிப்பார், கர்த்தராற்கொலையுண்டவர்கள் அநேகரா யிருப்பார்கள். * அதி. ௰௯, ௨௧.

௰௭ தங்களைத்தானேபரிசுத்தயாக்குகிற வர்களுந் * தோப்புகளின் நடுவிலே தங்களைத்தாமே ஒருவரின் பிறகாலே ஒருவராய்ச் சுத்திகரிக்கிறவர்களும் பன்றியிறைச்சியை யும் அருவருப்பானதையும் எலிகளையுஞ்சா ப்பிடுகிறவர்களும் ஏகமாய்ச்சங்கரிக்கப்படு வார்களென்று கர்த்தர்சொல்லுகிறார்.
* ௬௫, ௩. ௫.

௰௮ நாம் அவர்கள் கிரியைகளையும் அவ ர்கள் நினைவுகளையும் அறிவோம், நானுசக லசாதியாரையும்பாஷைக்காரரையுங் கூட் டிச்சேர்க்குங்காலம்வரும், இவர்கள் வந்து நம்முடையமகிமையைக்காண்பார்கள்.

௰௯ நாம் அவர்களில் ஒரு அடையாளத் தைக்கட்டளையிட்டு அவர்களிலே தப்பின வர்களை நம்முடைய கீர்த்தியைக்கேளாமலு ம் நம்முடைய மகிமையைக்காணாமலுமிரு க்கிறசாதிகளின் தேசங்களாகிய தர்சீசுக்கு ம் வில்லுக்காரரிருக்கிறபூலுக்கும் லூதுக்கு ந் துபாலுக்கும் யாவானுக்குந் தூரத் திலுள்ளதீவுகளுக்கும் அனுப்புவோம், அவ ர்கள் நம்முமகிமையைசசாதிகளுக்குள்ளே பறிவித்து,

௨௰ உங்களுடைய எல்லாச்சகோதரரை யுஞ் சகலசாதிகளிடத்திலுமிருந்து குதிரை களின்மேலும் இரதங்களின்மேலும்குலாரி வண்டில்களின்மேலுங் கோவேறுகழுதைக ளின்மேலும்வேகமான ஒட்டகங்களின்மே லும் எருசலேமிலுள்ள நம்முடையபரிசுத் த பருவதத்துக்குக் * கர்த்தருக்குக்காணிக் கையாகக்கொண்டுவருவார்கள், இஸ்ரவேல் புத்திரர் காணிக்கையைச்சுத்தமானபாத்தி ரங்களிற்கர்த்தருடைய வீட்டுக்குக்கொண் டுவருகிறதற்குச்சமானமாகத்தானே யென் று கர்த்தர்சொல்லுகிறார். * ரோமர். ௰௫. ௰௬.

௨௰௧ அவர்களிலுஞ் சிலரை * ஆசாரியர்க ளாகவும்லேவியராகவும் எடுப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார். * ௬௧, ௬.
க. பேது. ௨, ௫.

௨௰௨ ஏனெனில் நாம் படைக்கப்போகி ற * புதுவானமும் புதுப்பூமியும் நமக்கு முன்பாக எப்படி நிற்கிறவைகளாயிருக்கு மோ அப்படியுங்கள்வித்தும் உங்கள் நாம மும் நிற்குமென்று கர்த்தர்சொல்லுகிறார்.
* ௬௫, ௰௭.

௨௰௩ சமஸ்தப்பேர்களும் மாசந்தோறும் மாசமும் ஓய்வுநாளுக்கோய்வுநாளும் எல் லாமாம்சமும்நமக்குமுன்பாகப்பணிய வரு மென்று கர்த்தர்சொல்லுகிறார்.

௨௰௪ அவர்கள் வெளியேபோய் நமக்கு விரோதமாய்ப்பாதகஞ்செய்த மனுஷரு டைய பிரேதங்களைப்பார்ப்பார்கள், ஏனெ னில் * அவர்களுடைய பூச்சி சாகாமலும் அவர்களுடைய அக்கினி அவியாமலுமிருக் கும், அவர்கள் எல்லாமாம்சத்துக்கும் அரு வரோசிகமாயிருப்பார்கள். மாற்கு. ௯, ௪௪.
௪௪, ௮.

ஏசாயாவின் தீர்க்கதரிசனம்

முடிந்தது முற்றும்.

எரேமியாவின் தீர்க்கதரிசனம்.

க. அதிகாரம்.

[பராபரன் எரேமியாவைத்தீர்க்கதரிசியா க அழைத்துவைத்ததும், அந்த அழைப் பைத்திடப்படுத்தினதும்.]

பென்யமீன்தேசத்து ஆனத்தோத் தூரிலுள்ள ஆசாரியர்களிலொருவனான இல் க்கியாவின்குமாரனாகிய எரேமியாவினுடை ய வசனங்கள்.

௨ ஆமோனுடையகுமாரனாகிய * யோ சியாவென்றபேர்கொண்டஇராசாவின்நாள் களிலும் அவன் அரசாண்ட பதின்மூன்றும் வருஷத்திலும் இவனுக்குக்கர்த்தருடைய வார்த்தையுண்டாயிற்று. * ௨. இராச. ௨௨, ௧. மு ௨. நாளாக. ௩௪, ௧. மு

௩ அப்புறம்யோசியாவின்குமாரனாகிய * யோயாக்கீம் என்றபேர்கொண்ட இராசாவி ன் நாள்களிலும் யோசியாவின் குமாரனாகி ய † சிதேக்கியாவென்ற பேர்கொண்டஇரா சாவின் பதினோராம்வருஷத்து முடிவுமட் டாகவும் ‡ எருசலேம் ஊரார் ஐந்தாம் மாதத்திற்சிறைப்பட்டுப்போகுமட்டாகவு ம் அப்படியவனுக்குண்டானது. * ௨. இரா ௨௩, ௩௪. ௨. நாளா. ௩௬, ௪. † ௨.

இரா. உச, யஎ. உ. நாளாகமம். ௩௬, ய ‡ உ. இரா. உரு. அ

ச கர்த்தருடையவார்த்தையெனக்குண்டாய் அவர்சொன்னதாவது,

ரு * நாமுன்னைத்தாயின்வயிற்றிலுருவாக்காததற்குமுன்னேயுன்னையறிந்தோம், நீ கர்ப்பத்திலிருந்து வெளியாகாததற்குமுன்னே நாமுன்னைப்பரிசுத்தம்பண்ணி உன்னைச்சாதிகளுக்குத்தீர்க்கதரிசியாகக்கட்டளையிட்டோமென்றார். * கலாத். க, யரு.

௬ அப்போது நான் ஆ கர்த்தராகிய ஆண்டவரே, * இதோ பேச அறியேன், ஏனெனில் நான் இளந்தையென்றேன்.

* உ. மோசே. ச, ய. யஉ. கூ, கய.

எ ஆனால் கர்த்தரென்னுடனே சொன்னதாவது, நான் இளந்தையென்று நீ சொல்லாமல் நாம் உன்னையனுப்பப்போகிற எல்லாரிடத்திலும் நீபோய் நாம் உனக்குக்கற்பிப்பதையெல்லாம் நீ பேசுவாயாக.

* எசேக்கி. க, யஎ.

அ * நீயவர்களுக்குப்பயப்படாயாக, ஏனெனில் உன்னைவிடுவிக்கும்படிக்கு நாமுன்னுடனேயிருக்கிறோமென்றுகர்த்தர்சொல்லி, * யரு, உய. எசாயா. சக, ய.

கூ கர்த்தர்தமதுகரத்தைநீட்டி * என் வாயைத்தொட்டு இதோ † நமமுடைய வார்த்தைகளையுன்வாயிலே வைக்கிறோமென்றும். * எசா. கூ, கா. எ. † எசா. ருக, கா. ய. ருகூ, உக.

ய பார், பிடுங்கவும் நிர்மூலமாக்கவும் அழிக்கவும் இடிக்கவுங்கட்டவும் நாட்டவுமாக உன்னைநாம் இன்றைத்தினஞ் சாதிகளின் மேலும்இராச்சியங்களின்மேலும்நிறுத்துகிறோமென்றுங் கர்த்தரென்னுடனே சொன்னார்.

யக பின்னையுங்கர்த்தருடையவார்த்தையெனக்கு உண்டாகி, அவர், எரேமியாவே, நீயென்ன காண்கிறாயென்றார், நிவிர்த்துக் காய்க்கிற மரத்தின் கிளையைக்காண்கிறேனென்றேன்.

யஉ அப்போது கர்த்தரென்னுடனே, நன்றாய்க்கண்டாய், ஏனெனில் நாம் நமமுடையவார்த்தையின்பேரிலேயதைநிறைவேறும்படிக்குத்திவிரித்திருப்போமென்றார்.

ய௩ கர்த்தருடையவார்த்தையிரண்டாம் விசையெனக்கு உண்டாகி, அவர், நீயென்னகாண்கிறாயென்றார், பொங்குகிற பானையை நான் காண்கிறேன், அதின் வாய்வடக்கேயிருந்துநோக்குகிறதென்றேன்.

யச அப்போது கர்த்தரென்னுடனே சொன்னதாவது, * வடக்கேயிருந்துதீங்கு தேசத்திலுடைய குடிகளெல்லாரின்மேலும் பாயும். * ச, கூ.

யரு ஏனெனில் இதோ, நாம் * வடதிசையிராச்சியங்களின்வமிசங்களையெல்லாங்கூப்பிடுவோமென்று கர்த்தர்சொல்லுகிறார், இவர்கள்வந்து அவனவன் தனதுடைய ஆசனத்தை † எருசலேமின் வீதிவாசல்களுக்கும் அதினுடையசுற்றுமதில்களெல்லாவற்றுக்குவிரோதமாகவும் யூதாவினுடைய எல்லாப்பட்டணங்களுக்கும் விரோதமாகவும்வைப்பார்கள். * ௬, ௬. கூ, உஉ. ய, உஉ. † ருஉ, ச. ௬.

ய௬ அவர்கள் நம்மைவிட்டு வேறு தேவர்களுக்குத்தூபங்காட்டித்தங்கள் கைகளின்கிரியையைப்பணிந்துகொண்டவர்களுடைய எல்லாப்பொல்லாப்பினிமித்தியம் நாம் நமமுடைய நியாயத்தீர்ப்புகளையவர்களுக்கு விரோதமாகக்கூறுவோம்.

யஎ ஆகையால் * நீயுன் அரையைக்கட்டிக்கொண்டெழுந்து, நாம் உனக்குக்கற்பிப்பதையெல்லாம் அவர்களுடனேசொல்லு, நாமுன்னையவர்களுக்குமுன்பாகக்கலங்கப்பண்ணாதபடிக்கு நீயவர்கள்முகப்பார்வையாலேகலங்காதிரு. * லூக்கா. யஉ, ௩௫. க. பேது. க, ய௩.

யஅ ஏனெனில் இதோ தேசமனைத்துக்கும் யூதாவின் இராசாக்களுக்கும் அதின் பிரபுக்களுக்கும் அதின் ஆசாரியர்களுக்கும் அந்த தேசத்தின் சனத்துக்கும் எதிராக நாமுன்னை இன்றைத்தினம் * அரணிப்பான பட்டணமும் இருப்புத்தூணும் வெண்கல அலங்கமுமாக்குகிறோம். * ௬, உஎ. யரு, உய. எசேக்கி. ௩, அ. கூ.

யகூ அவர்கள் உனக்குவிரோதமாய்யுத்தம்பண்ணுவார்கள், ஆனால் உன்னையேற்கொள்ளாதிருப்பார்கள், ஏனெனில் உன்னை விடுவிக்கும்படிக்குநாமுன்னுடனேயிருக்கிறோமென்று கர்த்தர்சொல்லுகிறாரென்று.

உ. அதிகாரம்.

[பராபரன் செய்தபெரிய உபகாரங்களை யறியாமற்போன யூதர் சுற்றக்காரப்பட்டு ந்துகொள்ளப்பட்டது.]

க கர்த்தருடைய வார்த்தைபின்னும் உண்டாகி அவர்சொன்னதாவது,

உ நீபோய்எருசலேமின்செவிகள்கேட்கக்கூப்பிட்டுச்சொல்லவேண்டியது, விதைக்கப்படாத் தேசமாகிய வனாந்தரத்திலே நீ நமமுடையபிற்காலேநடந்துவந்தபோது உன்னிளவயதின்பக்தியையும் உன்மணவிவாகத்தின் அன்பையும் நினைத்திருக்கிறோமென்று கர்த்தர்சொல்லுகிறார்.

௩ இஸ்ரவேல் கர்த்தருக்குப்பரிசுத்தமும் அவருடையவரத்தின்முதற்கனியுமாயிருந்தது, அதைப்பட்சித்தயாவருங்குற்றவாளிகளானார்கள், பொல்லாப்பு இவர்கள்மேல்வருமென்று கர்த்தர்சொல்லுகிறார்.

ச யாக்கோபின்வீட்டாரே இஸ்ரவேல்

வீட்டினுடைய எல்லாவம்சங்களே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள்.

௫ கர்த்தர்சொல்லுகிறதாவது, எங்களை எகிப்துத்தேசத்திலிருந்து றப்பண்ணினவரும், அந்தரவெளியும்பள்ளங்களுமான தேசமும் வறட்சியும் மரணநிழலுமானதேசமும் ஒருவனுங்கடவாமலும் ஒருமனுஷனுங்குடியிராமலுமிருக்கிறதேசமுமான வனாந்தரத்திலெங்களை நடத்தினவருமாகிய கர்த்தர் எங்கேயென்று உங்கள்பிதாக்கள்கேளாமல்,

௬ நம்மைவிட்டுத்தூரப்பட்டு மாயைகளின் பிற்காலே நடந்து வீணராய்ப்போனதற்கு * நம்மில் என்ன அநியாயத்தைக் கண்டுபிடித்தார்கள். * மீகா. ௬, ௩.

௭ நாமுங்களைப்பயிர் நிலமாகிய தேசத்துக்கு அதின்கனியையும் நன்மையையுஞ் சாப்பிடும்படிக்கு அழைத்துக்கொண்டுவந்தோம், ஆனால் நீங்கள் அதற்குட்பிரவேசித்து நம்முடைய தேசத்தைத்தீட்டுப்படுத்தி நம்முடைய சுதந்தரத்தையருவருப்பாக்கிப்போட்டீர்கள்.

௮ ஆசாரியர்கள் கர்த்தர் எங்கேயென்று சொல்லாமலும் * வேதத்தைப் படித்தவர்கள் நம்மையறியாமலும்போய் மேய்ப்பர் நமக்கு விரோதமாய்த்துரோகம்பண்ணினார்கள், தீர்க்கதரிசிகள் பாகாலைக்கொண்டு தீர்க்கதரிசனஞ்சொல்லி உதவாதவைகளின்பிற்காலே நடந்தார்கள்.

* ரோமர். ௨, ௨௰. ௨௧.

௯ ஆனதுகொண்டு இன்னம் உங்களோடே வழக்காடுவோம், உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளோடும் வழக்காடுவோமென்று கர்த்தர்சொல்லுகிறார்.

௰ ஏனெனில் நீங்கள் கித்தீமின் தீவுகளைக் கடந்துபோய்ப்பார்த்துக் கேதாருக்கனுப்பி நன்றாய்க்கவனித்துக்கொண்டு இப்படிக்கொத்த காரியமுண்டோவென்றும்,

௰௧ ஒருசாதியானது தேவர்களல்லாத்வைகளுமாகிய தங்கள்தேவர்களை மாற்றினதுண்டோவென்றும்பாருங்கள், நம்முடைய சனமோ தன் மகிமையையுதவாத்தாகமாற்றிப்போட்டது.

௰௨ * வானங்களே இதினாலே பிரமித்துக்கொந்தளித்துமிகவுந் திடுக்கிடுங்களென்று கர்த்தர்சொல்லுகிறார். * ஏசாயா. ௧, ௨.

௰௩ ஏனெனில் நம்முடையசனம் இரண்டு பொல்லாப்புகளைச்செய்தது, * ஜீவனுள்ள தண்ணீரின் ஊற்றாகிய நம்மைவிட்டார்கள், தண்ணீர்க்காவாத வெடிப்புள்ள சலத்தொட்டிகளாகிய பள்ளங்களைத்தங்களுக்கு வெட்டினார்களே. * சங்கீ. ௩௬, ௰.

௰௪ இஸ்ரவேல் அடிமையோ அவன் வீட்டிற்பிள்ளையோ ஏன் கொள்ளையானான்.

௰௫ சிங்கக்குட்டிகள் அவன்மேற்கர்சித்துத்தங்கள்சத்தத்தைக்காட்டி அவன்தேசத்தைப்பாழாக்கிப்போட்டது, அவனுடைய பட்டணங்கள் குடியிராமலே சுட்டெரிக்கப்பட்டது.

௰௬ நோப், தக்பானேஸென்னும்பட்டணங்களின் புத்திரரும் உன் உச்சந்தலையை மேய்ந்துகொண்டார்கள்.

௰௭ உன் பராபரனாகிய கர்த்தருன்னை வழியிலே நடக்கப்பண்ணும் நேரத்திலே நீயவரை விட்டுப்போகிறதினாலேயல்லவோ இதையுனக்குண்டுபண்ணுகிறாய்.

௰௮ இப்போது நீ சீகோரின் தண்ணீரைக் குடிக்க எகிப்துக்குப்பயணம்போகிறது உனக்கென்ன பிரயோசனம், ஐபிராத்து நதியின் தண்ணீரைக்குடிக்க அசூரியாவுக்குப்பயணம்போகிறதும் உனக்கென்ன பிரயோசனம்.

௰௯ * உன்பொல்லாப்பு உன்னைத்தண்டித்து உன்மாறுபாடுகள் உன்னைக்குற்றம்பிடிக்கிறது, நீ யுன்பராபரனாகிய கர்த்தரை விடுகிறதும் நமக்குப்பயப்படுதல் உன்னிடத்திலில்லாமலிருக்கிறதும் எத்தனைபொல்லாப்புங் கசப்புமானதென்கிறதையறிந்துபாரென்று சேனைகளின்கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறார். * ௪, ௰௮. ஏசாயா. ௩, ௯.

௨௰ ஏனெனில் பூருவகாலந்துவக்கி நாமுன் நுகத்தடியையுடைத்து உன்கட்டுகளையறுத்தோமே, நான் அடிமைப்படுவதில்லையென்று நீயுஞ்சொன்னாயே, ஆகிலும் மேட்டிமையான எல்லாமேட்டின்மேலும் பச்சையான எல்லாமரத்தின்கீழும் நீ வேசியாய்த்திரிகிறாய்.

௨௧ நாமுன்னை * நற்குலத்திவிதிராட்சச்செடியாகவும் முழு உண்மையானவிதையாகவும் நாட்டினோமே, நீ நமக்கு வேறுதத்திராட்சச்செடியின் ஆகாதகொடிகளாய்மாறிப்போனதெப்படி! * சங்கீ. ௪௪, ௩. ௮௰, ௯. ஏசா. ௫, ௧. ௨.

௨௨ நீயுன்னை வெள்ளுப்பினாலே கழுவி உனக்காகச்சவுக்காரத்தைநிரம்பக்கூட்டினாலும் உன் அக்கிரமத்தின்கறைகள் நமக்குமுன்பாகவிருக்குமென்று கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறார்.

௨௩ நான் அழுக்கானதில்லை நான்பாகால்களைப்பின்தொடர்ந்ததில்லையென்றெப்படிச்சொல்லுகிறாய், பள்ளத்தாக்கிலே நீ நடக்கிறமார்க்கத்தைப்பார் நீ செய்ததையறிந்துகொள், தன் வழிகளைத்தாறுமாறாக்குகிற வேகமான பெண்ணொட்டகம் நீ.

௨௪ வனாந்தரத்துக்குப்பழகினதும் தன்னிச்சையின் ஆவலிலே காற்றையுள்ளே கொள்ளுகிறதுமான காட்டுக்கழுதை நீ, அதின் ஓட்டத்தைத் திருப்புகிறவனார், அதைத்தேடுகிறவைகளெல்லாந்தேடி விடாய்

த்துப்போவதில்லை, அதின் மாசத்தில் அவைகள் அதைக் கண்டுபிடிக்கும்.

௨௫ உன் காலை வெறுங்காலாகாதபடிக்கும் உன் தொண்டையைத் தவனமடையாதபடிக்கும் அடக்கிக்கொள்ளென்றால் நீ அது விருதா, நான் அப்படிச் செய்கிறதில்லை, ஏனெனில் அன்னியரைச் சிநேகிக்கிறேன், அவர்களைப் பின்தொடருவேனென்கிறாய்.

௨௬ திருடன் கண்டுபிடிக்கப்படுகிறபோது எப்படி வெட்கப்படுகிறானோ அப்படி இஸ்ரவேல் வீட்டார் வெட்கப்படுவார்கள், மரத்துக்கு நீ என் தகப்பனென்றுங் கல்லுக்கு நீ என்னைப் பெற்றவளென்றுஞ் சொல்லுகிற அவர்களும் அவர்கள் இராசாக்களும் அவர்கள் பிரபுக்களும் அவர்கள் ஆசாரியர்களும் அவர்கள் திர்க்கதரிசிகளுந்தானே.

௨௭ ஏனெனில் முகத்தையல்ல * பிடரியையவர்கள் நமக்குக் காட்டினார்கள் தங்கள் துக்காலத்திலோ எழும்பி எங்களையிரட்சியுமென்கிறார்கள். * எசேக்கி. ௨௩, ௩௫.

௨௮ * நீ உனக்கு உண்டுபண்ணின தேவர்களோவென்றால் எங்கே? உன் துக்காலத்தில் உன்னை இரட்சிக்குமோவென்று அவைகள் எழும்பட்டும், ஏனெனில் * † யூதாவே உன் பட்டணங்களின் இலக்கமும் உன் தேவர்களின் இலக்கமுஞ் சரி. * நீதிக. ௰, ௰௪. † ௰௧, ௰௩.

௨௯ நம்மோடே நீங்கள் வழக்காடுவானேன், நீங்கள் அனைவரும் நமக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணினீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௩௰ நாம் உங்கள் பிள்ளைகளை * அடித்தது விருதா, தண்டனையை ஏற்றுக்கொள்ளாதே போனார்கள், அழிக்கிற சிங்கத்தைப்போலே உங்கள் பட்டயம் உங்கள் திர்க்கதரிசிகளைப் பட்சிக்கிறது. * ௫, ௩. ஏசா. ௧, ௰௫.

௩௧ சந்ததியே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையைச் சிந்தித்துப் பாருங்கள், நாம் இஸ்ரவேலுக்கு வனாந்தரமும் காரிருளான பூமியுமாகவிருந்தோமோ, பின்னையேன் நம்முடைய சனம் நாங்கள் ஆளுகிறோமென்றும் இனியும் உம்மண்டைக்கு நாங்கள் வருவதில்லையென்றுஞ் சொல்லுகிறார்கள்.

௩௨ ஒரு கன்னியாஸ்திரி தன் ஆபரணத்தையும் ஒரு மணவாட்டி தன் சரிகைகளையும் மறப்பாளோ? நமது சனமோவென்றால் எண்ணிமுடியாத நாள்களாய் நம்மை மறந்திருக்கிறார்கள்.

௩௩ சிநேகத்தைத் தேடும்படிக்கு * நீ உன் மார்க்கத்தை நயமாக்குகிறதென்னே? இப்படியாய் நீ பொல்லாத ஸ்திரிகளுக்கும் உன் வழிகளைக் கற்றுக்கொடுத்தாய். * ௨. இரா. ௰௭, ௯.

௩௪ உன் வஸ்திரத்தோரங்களிலுங் குற்றமில்லாத ஏழை ஆத்துமாக்களின் இரத்தங் கண்டுபிடிக்கப்பட்டது, அதை நாம் கன்னத்தேடுகிறதினாலல்ல, அது எல்லாவற்றின் மேலும் வெளியாயிருக்கிறதினாலே அதைக் கண்டுபிடித்தோம்.

௩௫ ஆகிலுங் குற்றமில்லாதிருக்கிறேன் ... அவருடைய கோபமென்னைவிட்டுத் திரும்பிற்றென்றுஞ் சொல்லுகிறாய், நீ நான் பாவஞ்செய்ததில்லையென்று சொல்லுகிறதின் நிமித்தியம் நாம் உன்னோடே நியாயத்துக்குட்பிரவேசிப்போம்.

௩௬ நீ உன் வழியை மாற்றிக்கொள்ளும்படிக்கு இத்தனையாய் அலைகிறதென்ன! நீ அசூரியாவினால் வெட்கப்போனதுபோலே * எகிப்துவினாலும் வெட்கப்போவாய்.

* ஏசா. ௩௧, ௧.

௩௭ இதிலும் நின்று நீ உன் கைகளை உன் தலையின்மேல் வைக்கப்பட்டவைகளாய்ப் புறப்படுவாய், ஏனெனில் உன் நம்பிக்கைகளைக் கர்த்தர் வெறுத்திருக்கிறார், அவைகளால் உனக்கு வாய்க்கப்போகிறதில்லை.

௩. அதிகாரம்.

[விக்கிரக ஆராதனையென்ற சோரம்போன பூதசனத்துக்குச் சோம புத்தி.]

௧ அவர் சொல்லுகிறதாவது, இதோ ஒரு புருஷன் தன் பெண்சாதியைத் தள்ளிவிட்டுவிட்டு அவள் அவனிடத்திலிருந்து புறப்பட்டு அன்னிய புருஷனுக்குப் பெண்சாதியானால், அவன் அவளிடத்தலே இனித் திரும்பப் போவானோ? அந்தத் தேசமிகவுந் தீட்டுப்படுமல்லவோ? நீயோவென்றால் அநேகஞ் சிநேகரோடே வேசித்தனம்பண்ணினாய், ஆகிலும் நம்மண்டைக்குத் திரும்பவாவென்று கர்த்தர் சொல்லுகிறார். * ௫. மோசே. ௨௪, ௨—௪.

௨ நீ மேடுகளின்மேல் உன் கண்களை ஏறெடுத்து நீ எவ்விடத்திலே புணர்ச்சிக்காதே போனாயென்று பார், வனாந்தரத்தில் அராபியன் செய்கிறதுபோல நீ வழிகளில் அவர்களுக்காக உட்கார்ந்திருந்து உன் வேசித்தனங்களாலும் உன் பொல்லாப்புகளாலும் தேசத்தைத் தீட்டுப்படுத்தினாய்.

௩ ஆனதுகொண்டு மழைகள் வருஷியாமலும் பின்மாரியில்லாமலும் போனது, உனக்கோவென்றால் சோரஸ்திரியின் நெற்றியிருக்கிறது நாணமாட்டோமென்கிறாய்.

௪ நீ இப்போதுமுதலாய் நம்மை நோக்கி என்பிதாவே, தேவரீர் என் இளவயதின் அதிபதியென்று கூப்பிட்டு,

௫ சதாகாலமாகக் கோபத்தை வைப்பாரோ அதை என்றென்றைக்குங் காப்பாரோ என்கிறாயல்லவோ, இதோ இப்படி நீ சொல்லியும் பொல்லாப்புகளைச் செய்து, மேற்கொண்டு போகிறாயென்கிறார்.

இஸ்ரவேல் தள்ளிவிடப்பட்டதைக் கண்டும் யூதா குணப்படாதே போனாள் என்பது.

௬ யோசியா இராசாவின் நாட்களிலே கர்த்தர் என்னுடனே சொன்னதாவது, மாறுபாடான இஸ்ரவேல் என்பவள் செய்ததைக் கண்டாயோ, அவள் * உயரமான சகல பருவதத்தின் மேலும் பச்சையான சகல மரத்தின் கீழும் போய் அங்கே வேசித்தனம் பண்ணினாள். * உ, உ௰.

௭ அவள் இப்படியெல்லாஞ் செய்த்துக்கு பிற்பாடு நம்மண்டைக்குத் திரும்பென்று நாம் சொன்னோம், ஆனால் திரும்பாதே போனாள். இதை யூதா என்ற அவளுடைய சகோதரியாகிய துரோகி பார்த்தாள்.

௮ ஆனால் * மாறுபாடான இஸ்ரவேலென்பவள் விபசாரம்பண்ணின எல்லாவற்றினிமித்தியமும் நாம் அவளையனுப்பிவிட்டு அவளுடைய தள்ளுதலின் சீட்டை அவளுக்குக் கொடுத்தபோதும் அவளுடைய சகோதரியாகிய யூதா என்ற துரோகி பயப்படாமல் இவளும்போய் வேசித்தனம்பண்ணினதைக் கண்டோம். உ. இராசா. ௰௭, ௰அ. ௰௯.

௯ சம்பவிப்பதேதெனில் அவளுடைய வேசித்தனத்தின் பிரசித்தத்தினாலே தேசம் தீட்டுப்பட்டுப் போனது, ஏனெனில் கல்லோடும் மரத்தோடும் விபசாரம்பண்ணிக்கொண்டிருந்தாள்.

௰ ஆனால் இதையெல்லாங் கண்டும் யூதா என்ற அவளுடைய சகோதரியாகிய துரோகி பொய்யாயல்லாமல் முழு இருதயத்தாலே நம்மண்டைக்குத் திரும்பினதில்லையென்று கர்த்தர் சொன்னார்.

இஸ்ரவேலைத் திரும்பத் தயவாய்க் குணப்படுத்துகிறதைக் குணப்படும் யூதருக்கும் இஸ்ரவேலருக்கும் மகிமையான வாக்குத்தத்தங்களைப் பண்ணினது.

௰௧ பின்னையுங் கர்த்தர் என்னுடனே சொன்னதாவது, யூதா என்ற துரோகியைப்பார்க்கிலும் மாறுபாடான இஸ்ரவேலென்பவள் தன்னை சுத்தமாலை நீதியாக்கினாள்.

௰௨ நீ போய் வடதிசையை நோக்கிக் கூறவேண்டிய வார்த்தைகளாவது, மாறுபாடான இஸ்ரவேலே, * திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார், அப்போது நாம் உங்கள் மேல் நம்முடைய கோபத்தை இறங்கப்பண்ணுவதில்லை, ஏனெனில் † நாம் கிருபையுள்ளோமென்று கர்த்தர் சொல்லுகிறார், என்றைக்குங் கோபம் வையோம். * ஏசே. க, ௰அ. க௰—கஉ. † சங்கீ. ௱௩அ, கூ.

௰௩ நீயோவெனில் உன் பராபரனாகிய கர்த்தருக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணி பச்சையான சகல மரத்தின் கீழும் உன் வழிகளை அன்னியர் பிறகாலே சிதறப்பண்ணினாயென்ற உன்னுடைய அக்கிரமத்தையும் நம்முடைய சத்தத்தைக் கேளாதே போனீர்கள் என்கிறதையும் அறிந்து கொள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௪ மாறுபாடான பிள்ளைகளே, திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், ஏனெனில் நாம் உங்கள் பத்தாவாயிருக்கிறோம், நாம் உங்களை ஊரிலொருவனையும் வமிசத்தில் இரண்டுபேரையும் எடுத்து உங்களைச் சீயோனுக்கழைத்துக்கொண்டு வந்து, * ஓசே. உ, ௰௯. உ௰.

௰௫ உங்களுக்கு நம்முடைய இருதயத்துக்கேற்ற * மேய்ப்பரைக் கொடுப்போம், அவர்கள் உங்களையறிவும் புத்தியுமாய் மேய்ப்பார்கள். * உங, ச. எசே. ௩ச, ௰ங.

௰௬ நீங்கள் தேசத்திலே பெருகிப் பலுகுகிற அந்நாட்களிலே சம்பவிப்பதேதென்றால், அவர்கள் இனிக் கர்த்தருடைய உடன்படிக்கையின் பெட்டியென்று சொல்வதில்லை, அது அவர்கள் மனதில் ஏறுவதுமில்லை, அவர்கள் அதை நினைப்பதுமில்லை சிந்திப்பதுமில்லை அது இனிச் செப்பனிடப்படுவதுமில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௭ அக்காலத்திலே * எருசலேமைக் கர்த்தருடைய இராசாசனமென்பார்கள், சகல சாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தின் நிமித்தியம் அதினிடமாகச் சேர்வார்கள், அவர்கள் இனித் தங்கள் பொல்லாத விசுவாசத்தினக் கடினத்தைப் பின்பற்றி நடப்பதில்லை. * ஏசாயா. உ, உ. ங. மீகா. ௪, க. உ.

௰௮ அந்நாட்களிலே யூதா வீட்டார் இஸ்ரவேல் வீட்டாரிடத்திலே போய் அவர்கள் ஏகமாய் வடதேசத்திலிருந்து புறப்பட்டு நாந் தங்கள் பிதாக்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்த தேசத்துக்கு வருவார்கள்.

௰௯ நாமுன்னைப் பிள்ளைகளுக்குள்ளே வைத்து இச்சிக்கப்பட்டத்தக்க தேசத்தையும் சாதிகளுடைய சேனைகளின் அலங்காரமான சுதந்தரத்தையும் உனக்குக் கொடுப்பதெப்படியென்று சொன்னோம், ஆனால் நீ நம்மையென் பிதாவே யென்றழைப்பாய். நீ நம்மைவிட்டு விலகுவதில்லையென்று திரும்பவுஞ் சொன்னோம்.

உ௰ ஒரு பெண்சாதி தன் புருஷனுக்குத் துரோகியாகிறபோலே, இஸ்ரவேல் வீட்டார்களாகிய நீங்கள் நமக்குத் துரோகிகளானதுமெய்யாமே யென்று கர்த்தர் சொல்லுகிறார்.

உ௰௧ ஆனால் தங்கள் வழியைத் தாங்கள் மாறுபாடாக்கித் தங்கள் பராபரனாகிய கர்த்தரை மறந்ததின் நிமித்தியம் இஸ்ரவேல் புத்திரர் அழுதுகொண்டு விண்ணப்பஞ் செய்யுஞ் சத்தம் உயர் நிலங்களிலே கேட்கப்படும்.

௨௨ மாறுபாடானபிளளைகளே, திருமபுஙகள, உஙகள மாறுபாடுகளைககுணமாககுவோமென றுசொலலுகிறார். இதோ, உமமணடைககுவருகிறோம, ஏனெனில் தேவரீரே எஙகளபராபரனாகியகர்த்தர்.

௨௩ மேடுகளையுந திரளானபருவதஙகளையுமநமபுகிறது விருதாவாயிருககிறதுமெயயாமே, இஸரவேலின இரட்சிபபு எஙகளபராபரனாகியகர்த்தருக்குளளிருக்கிறதுமெயயாமே.

௨௪ ஏனெனில இலசசையானது எஙகளசிறுவயது துவககி யெஙகளபிதாககளுடையபிரயாசததைதயும அவர்கள ஆடுகளையும மாடுகளையும அவர்களகுமாரரையுங குமாரததிகளையுமபட்சிததுபபோடடது.

௨௫ எஙகளஇலசசையிலேகிடககிறோம. எஙகள இகழ்சசியெஙகளைமூடியிருககிறது, ஏனெனில் நாஙகளும எஙகளபிதாககளும எஙகளசிறுவயதுதுவககி இந்நாள்வரைககும எஙகளபராபரனாகிய கர்ததருககுவிரோதமாகபபாவஞசெயதோம, எங்கள பராபரனாகிய கர்ததருடைய சொலலைக்கேளாமலுமபோனோம.

௪. அதிகாரம்.

[இஸரவேலருககு நயமாகவும யூதருககுபபயமாகவுஞசொனனபுததி.]

இஸரவேலே நீ திருமபமனதானால நமமணடைககுததிருமபெனறு கர்ததர்சொலலுகிறார். நீயுன அருவருபபுகளை நமதுமுகததைவிடடகறறினால நீ பினியலைநது திரிவதிலலை.

௨ கர்ததருடைய ஜீவனபேரிலே உணமையும நியாயமும நீதியுமாயசசததியமபணணுவாய, புறசசாதிகளும அவருககுள † தஙகளை யாசீர்வதிததுககொணடு அவருககுளமேனமைபாராடடுவார்கள. * ஏசா. ௪௫, ௨௩. ௨௪. † ௧. மோசே. ௨௨, ௰௮.

௩ ஆனால யூதா மனுஷரோடும எருசலேமியரோடுங கர்ததர்சொலலுகிறதாவது, * நீஙகள முளளுககளுககுளளே விதையாமல பயிர் நிலததையுஙகளுககுபபுதிதாயபபண்படுததுஙகள. * ஓசெ ௰, ௰௨. ௰௩. மததே. ௰௩, ௭. எபிரே. ௬, ௮.

௪ யூதாமனுஷரே, எருசலேமினகுடிகளே, உஙகள கிரியைகளுடைய பொலலாபபினநிமிததியம நமமுடைய உககிரம அககினியைபபோலே புறபபடடு அவிககிறவனிலலாமல எரியாதபடிககு * நீஙகளகர்ததருககு உஙகளைசசுனனததுபபணணி உஙகளிருதயததின் நுனிததோல்களை நீககிபபோடுஙகள. * ௫ மோசே. ௰, ௰௬.

௫ தேசததிலெககாளமூதுஙகளெனறுசொலலி யூதாவில அறிவிதது எருசலேமிலேகேட்கபபணணுங்கள, நாமஅரணுளளபட்டணங்களுககுட்படுமபடிககுச சேருஙகளெனறு சொலலி நீணடசததமாயககூபபிடுஙகள.

௬ சீயோன திசைபாபக்கொடியேறறுஙகள, கூடுஙகள நிற்காதேயுஙகள, ஏனெனில நாம * வடககேயிருநது பொலலாபபையும மகா நொறுககுதலையும வரபபணணுகிறோம. * ௧, ௰௪.

௭ உன தேசததைபபாழாககிபபோடும்படிககுசசிஙகந தனபுதரிலிருநதெழுமபிச் சாதிகளின சஙகாரனதன்தானததிலிருநது பயணபபடடுவருகிறான, உன பட்டணஙகள குடியிராதபடியாயழிககபபடுமென்று.

௮ இதினிமிததியம இரடடுகளைககட்டிககொளளுஙகள, புலமபியலறுஙகள, ஏனெனில கர்ததருடையகோபததின உககிரம நமமைவிடடுததிருமபாது.

௯ அநநாளிலேசமபவிபபதேதெனறால இராசாவின இருதயமுமபிரபுககளின இருதயமும மடிநது ஆசாரியர்கள திகைததுத தீர்க்கதரிசிகள திகைபபார்களெனறு கர்ததர்சொலலுகிறார்.

௰ ஆ கர்ததராகிய ஆணடவரே, உமககுச்சமாதானமிருககுமெனறு சொலலபபடடதினாலமெயயாகவேயிநதச்சனததுககும எருசலேமுககும மிகுதியான மோசததை வரபபணணினீர், படடயம ஆததுமாமடடும எடடுமேயெனறேன.

௰௧ வனாநதரததிலுளள உயர்நிலஙகளிலிருநது ஒரு உஷ்ணக்காறறு நமது சனமாகிய குமாரததிககுநேராகும வழியிலடிககுமெனறு அககாலததிலே இநதச்சனததோடும எருசலேமோடுஞ சொலலபபடும், தூறறவலல சுததிகரிககவுமலல,

௰௨ இவைகளைபபார்ககிலுமபலமானதோர் காறறு நமமுடையகாரியமாய்வரும, இபபோது நாமும அவர்களோடே நியாயஙகளைப பேசுவோம.

௰௩ இதோ மேகஙகளைபபோலெழுமபி வருகிறான, அவனுடைய இரதஙகள சுழல் காறறைபபோலிருககிறது, அவனகுதிரைகள கழுகுகளிலுமவேகமானவைகள, நமக்கு ஐயோ ஏனெனில பாழ்ககடிககபபடுகிறோம.

௰௪ எருசலேமே, நீ இரட்சிககபபடும்படிககு * உனனிருதயததைபபொலலாப்பினின்று கழுவு, எததமடடும அககிரம நினைவுகள உனனுளளததிலேதஙகும, * ஏசா. ௧, ௰௬.

௰௫ ஏனெனில ஒருசததந தாணிலிருநது வநது செயதியையறிவிககிறதும எபபிராயீமின பருவதத்திலிருநதுவநது நிணைககேட்கபபணணுகிறதுமாயிருககிறது.

௰௬ சாதிகளுககதைபபிரஸ்தாபமபணணுஙகள. இதோகாவற்காரர் தூரதேசததிலிருநது யூதாவுடைய பட்டணஙகளுக

ருவிரோதமாய்ப்பட்டணங்களைச்சத்தத்தைக்காட்டு வார்களென்று எருசலேமுக்குக்கூறுங்கள்.

௧௭ அதற்குவிரோதமாய் அவர்கள் வயல் வெளிகளின்காவற்காரரைப்போலே சுற்றி யிருப்பார்கள், ஏனென்றால் அது நமக்கு விரோதமாய்ப்பெழும்பித்தென்றுகர்த்தர்சொல்லுகிறார்.

௧௮ * உன்மார்க்கமும் உன்கிரியைகளும் இவைகளையுனக்குண்டுபண்ணின, இது உன்னக்கசப்பாயிருந்து உன்னிருதயமட்டும் எட்டுகிறது, உன்னுடையபொல்லாப்பு இதுவே. * உ, ௰௯.

௧௯ என்குடல்கள் என்குடல்களே என க்குநோகிறது, என்னிருதயத்தின் ஆணவம் அறுது, என்னிருதயம் என்னில் கதறுகிறது, அமர்ந்திருக்கமாட்டேன் ஏனெனில் என்னாத்துமா எக்காளத்தின்சத்தத்தையும் யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையுங்கேட்டது.

௨௰ நொறுக்குதலின்மேல்நொறுக்குதல் கூறப்படுகிறது, ஏனெனில் தேசமெல்லாம் பாழாகும், அசுப்பிலே என்கூடாரங்களும் ஒருநிமிஷத்தில் என்திரைகளும் பாழ்க்கடிக்கப்படும்.

௨௧ எந்தமட்டும் நான்கொடியைக்கண்டு எக்காளத்தின்சத்தத்தைக்கேட்பேன்.

௨௨ என்சனமோவென்றால் * மதியற்றிருக்கிறது, என்னையவர்கள் அறியார்கள், அவர்கள் புத்தியுள்ளபிள்ளைகள், அவர்கள் உணர்வுள்ளவர்களல்ல, † பொல்லாப்புக்கு அவர்கள்ஞானமுள்ளவர்கள், நன்மைசெய்கிறதுக்கோ அறிவற்றிருக்கிறார்கள். * ௫. மோ. ௩௨, ௨௮. † ரோம. ௰௬, ௰௯.

௨௩ தேசத்தைப்பார்த்தேன் இதோ அது உருவற்றதும் வெறுமையுமானது. வானங்களைப்பார்த்தேன் அவைகளின்வெளிச்சம் அவைகளுக்கில்லை.

௨௪ பருவதங்களைப்பார்த்தேன் இதோ அவைகள் அதிர்ந்து எல்லாமேடுகளும் அசைந்தது.

௨௫ அப்புறம் நான்பார்க்கும்போது இதோ மனுஷனில்லை, * ஆகாசத்துக்குப்பறவைகளும் எல்லாம்பறந்துபோனது. * ௯, அதி. ௰.

௨௬ அப்புறம் நான் பார்க்கும்போது இதோ கர்த்தராலும் அவருடையகோபத்தின் உக்கிரத்தாலும் பயிர்நிலம் வனாந்திரமும் அதின்பட்டணங்களெல்லாம் இடிபட்டதுமாயிருந்தது.

௨௭ ஏனெனில் தேசமெல்லாம் பாழாம், ஆகிலும் * சர்வசங்காரஞ்செய்யோமென்று கர்த்தர்சொல்லுகிறார். ௫, அதி. ௰. ௰௮. ௩௰, ௰௧. ௪௬, ௨௮.

௨௮ இதின்நிமித்தியந்தேசம்புலம்பி உயரவிருக்கிறவானங்கள் கறுத்துப்போம், ஏனென்றால் அதைச்சொன்னேம், அதை நிர்ணயம்பண்ணினேம், நாம்மனஸ்தாபப்படுவதுமில்லை நாம் அதைவிட்டுத்திரும்பிக்கொள்வதுமில்லை.

௨௯ இராவுத்தரும் அம்பெய்கிறவர்களும் போட்டிருக்கத்தக்கினுலே சகல ஊராரும் ஓடி அடர்த்தியான வனங்களுக்குட்பட்டுக் கன்மலைகளின்மேல் ஏறுவார்கள், எல்லாவூர்களும் ஒருமனுஷனும் அவைகளிலே குடியிராததாய்விடப்பட்டிருக்கும்.

௩௰ இப்போதும் பாழான் நீயென்னசெய்வாய், நீ இரத்தாம்பரம் உடுத்தாலும் பொன்னாபரணங்களால் உன்னைச்சிங்காரித்தாலும் உன்கண்களில் மையிட்டுக்கொண்டிருந்தாலும் வீணாய் உன்னையழகாக்குவாய், சோரசுக்காரர் உன்னையசட்டைபண்ணி உன்பிராணனைவாங்கத்தேடுவார்கள்.

௩௧ ஏனெனில் * கர்ப்பவேதனைப்படுகிறவளின்சத்தமாகவும் முதல்விசைபெறுகிறவளின்வியாகுலமாகவுஞ் சீயோன்குமாரத்தியின்சத்தத்தைக்கேட்கிறேன், அவள்பெருமூச்சுவிட்டுத்தன்கைகளைவிரித்து ஆ என்கையோ ஏனெனில் கொன்றுபோடுகிறவர்களினாலே என்னாத்துமாவிடாயத்திருக்கிறதென்கிறாள். * ௬, ௨௪. ௰௩, ௨௧.

௫. அதிகாரம்.

[யூதசனத்தினுடையபாவங்களின்நிமித்தியம் அதின்மேல்வரும் ஆக்கினைகள் அறிவிக்கப்பட்டது.]

நியாயஞ்செய்கிறமனுஷனைக்கண்டுபிடிப்பீர்களோவென்றும் விசுவாசத்தைத்தேடுகிறவனுண்டோவென்றும் எருசலேமின் தெருக்களிலே திரிந்துபார்த்து விசாரித்துக்கொண்டு அதின்வீதிகளிலேத்தேடுங்கள், அப்போது அதுக்குமன்னிப்போம்.

௨ அவர்கள் கர்த்தருடைய சீவனைக்கொண்டுசொல்லுகிறோமென்றாலும் பொய்யாணையிடுகிறார்களே.

௩ கர்த்தாவே உமதுடையகண்கள் விசுவாசத்தையல்லோநோக்குகிறது, அவர்களையடிக்கிறீர். ஆனால் அவர்களுக்குநோகாது, அவர்களைநிர்மூலமாக்குகிறீர், ஆனால்புத்தியை யேற்றுக்கொள்ளமாட்டோமென்கிறார்கள், * தங்கள்முகங்களைக்கன்மலையிலுங்கெட்டியாக்கித் திரும்பமாட்டோமென்கிறார்கள். * எசாயா. ௪௮, ௪. எசாயா. ௨, ௪.

௪ நானோவெனில், இவர்கள் நீசராமே இவர்கள்புத்தியீனர் ஏனெனில்கர்த்தருடையவழியையுந் தங்கள்பராபரனுடையநியாயத்தையும் அறியாதிருக்கிறார்களென்றும்,

௫ நான் பெரியவர்களண்டையிலேபோய்அவர்களோடேபேசுவேன், ஏனெனில அவர்கள் கர்த்தருடையவழியையுந தங்களு

௰௩ ஆனால் இஸ்ரவேல்வீட்டார் வனாந்தரத்திலே நமக்குவிரோதமாய் இரண்டகம்பண்ணினார்கள், நம்முடைய கட்டளைகளின்படியே மனுஷன் செய்தால் அவைகளாற் பிழைப்பானே அவர்களோ அவைகளில் நடவாமல் நம்முடைய நியாயங்களை வெறுத்து, நம்முடைய ஓய்வுநாட்களின் பரிசுத்தத்தை மிகவுங் குலைத்துப்போட்டார்கள் ஆனதுகொண்டு அவர்களை நிர்மூலமாக்கும்படிக்கு வனாந்தரத்திலே நம்முடைய உக்கிரத்தையவர்கள்மேல் ஊற்றுவோமென்றோம்.

௰௪ ஆகிலும் புறச்சாதிகளுடைய கண்களுக்கு முன்பாக நம்முடைய நாமம் பரிசுத்தக்குலைச்சலாகாதபடிக்கு, நாம் அதினிமித்தங் கிருபைசெய்தோம், ஏனென்னில் இவர்களுடைய கண்களுக்கு முன்பாக அவர்களைப் புறப்படப்பண்ணினோம்.

௰௫ நாம் அவர்களுக்குக் கொடுத்தோம் பண்ணினதாகிய பாலுந்தேனும் ஓடுகிறதும் எல்லாத்தேசங்களிலும் சிங்காரமாயிருக்கிறதுமான தேசத்திலேயவர்களைக்கொண்டுவந்துவிடுவதில்லையென்று * வனாந்தரத்திலே நம்முடைய கரத்தையவர்களுக்கு விரோதமாக எடுத்தோம். * ௪. மோசே. ௰௪, ௰௧. ௰௨.

௰௬ ஏனென்றால் தங்கள் இருதயந் தங்களுடைய நரகலான தேவர்களைப் பின்பற்றினபடியினாலேயவர்கள் நம்முடைய நியாயங்களை வெறுத்து நம்முடைய கட்டளைகளில் நடவாதேபோய், நம்முடைய ஓய்வுநாட்களின் பரிசுத்தத்தைக் குலைத்துப்போட்டார்கள்.

௰௭ ஆகிலும் அவர்களை யழிக்காதபடிக்

று நமமுடைய கண் அவர்களைததபபவிட டது, நாமஅவர்களை வனாநதிரததிலே நிர் மமூலமாககாமல,

௰௮ அவர்களுடையபிளளைகளோடே வ னாநதரததிலே சொனனதாவது, நீஙகள உஙகளபிதாககளின முறைமைகளில நட வாமலும, அவர்களுடைய நியாயஙகளைக் கைககொளளாமலும, அவர்களுடையநர கலான தேவர்களால உஙகளைத்தீடடுபபடு ததாமலுமிருஙகள.

௰௯ உஙகள பராபரனாகிய கர்ததர்நா மே, நீஙகள நமமுடைய கடடளைகளிலநட நது, நமமுடைய நியாயஙகளைக்கைக்கொ ணடு. அவைகளினபடியேசெயது,

௨௰ நமமுடைய ஓயவுநாட்களைப்பரிசு ததமாககுஙகள, நாம உஙகளபராபரனா கியகர்ததரெனறுநீஙகள அறியுமபடிககு, அவைகள நமககுமஉஙகளுககுமஅடையா ளமாயிருககுமெனறோம.

௨௧ ஆனாறபிளளைகளுமநமககுவிரோத மாயஎழுமபினார்கள. நமமுடையகடடளை களினபடியேமனுஷனசெயதால, அவைக ளாறபிழைபபானே, அவர்களோ அவைக ளிலநடவாமலுமநமமுடைய நியாயஙகளை யவைகளினபடி செயயுமபடிககுக் கைக் கொளளாமலும, நமமுடைய ஓயவுநாட்க ளின பரிசுததத்தைக குலைததுபபோட டார்கள, ஆகையால வனாநதரததிலே நம துகோபததை யவர்களிலேதீர்ததுககொள ளுமபடிககுநமமுடைய உககிரததையவர் களமேலஊறறுவோமெனறோம.

௨௨ ஆகிலுமநாமநமதுகையையததிருப பிககொணடு, நமதுநாமம புறசசாதிகளி ன கணகளுககுமுனபாக பரிசுததக்குலைச சலாகாதபடிககு அதினிமிததமாகக்கிரு பைசெயதோம, ஏனெனறால இவைகளுடை ய கணகளுககுமுனபாக அவர்களைபபுறப் படடபபணணினோம.

௨௩ நாமஅவர்களைப புறசசாதிகளுககு ளளேசிதறவடிதது அவர்களைததேசஙகளி லேதூறறிபபோடுகிறதறகுநமதுகரததை வனாநதரததிலேயவர்களுககுவிரோதமாக ஏறெடுததோம

௨௪ ஏனெனறால அவர்களநமமுடைய நி யாயஙகளினபடிசெயயாமல, நமமுடைய கடடளைகளைவெறுதது நமமுடைய ஓயவு நாட்களினபரிசுத்தத்தைககுலைததுபபோ டடார்கள, அவர்களுடையகணகள அவர் கள பிதாககளின நரகலானதேவர்களைப பினபறறுகிறவர்களாயிருநதது.

௨௫ ஆகையால் * நலலதலலாதகடட ளைகளையும, அவைகள பிழைககக்கூடாத நி யாயஙகளையுமநாம அவர்களுககுஉணடா கவுமபணணினோம. * உ.தேசலோ. உ, ௰௧.

௨௬ கர்பபததிறநத பிறகதெலலாமே லாம * அவர்கள தீயைககடககபபணணி னதைத்தொடடு, அவர்களைபபலிகளுடைய காணிககைகளாலே தீடடுபபடபபணணி னோம, நாமஅவர்களைப பாழககடிக்குமப டியாகவும, நாஙகர்ததரெனறு அவர்கள் அறி யுமபடியாகவுநதானே. *௰௬, அதி. உ௰.

௨௭ ஆகையாலமனுபுததிரனே, நீ இ ஸரவேல வீடடாரோடேபேசி அவர்களோ டே சொலலவேணடியதாவது, கர்ததரா கிய ஆணடவர் உரைககிறதேதெனில, உங் களபிதாக்கள அபபுறமநமககுவிரோதமா ன துரோகமபணணி நமமைததூஷித்த விதமாவது,

௨௮ அவர்களுககுக்கொடுக்கததககதா க நாம நமதுகரததை யேறெடுததத்தேசத் திலே நாம அவர்களைபபிரவேசிககபபண ணினபிறபாடு, அவர்கள உயர்நத மேடுக ளையும தாழநத மருவிருட்சஙகளையும எஙகெஙகே கணடார்களோ அஙகேயே லலாநதஙகளபலிகளைப்பலியிடடு, அஙகே கோபமுணடாககுதலான தஙகள காணிக் கைகளைபபடைதது, அஙகேயுந்தஙகள சுக நதவாசனையாகததஙகள தூபஙகளைககாட்டி, அ ஙகேதஙகள ஊறறுதலகளையூறறினார்கள.

௨௯ அபபோது நாம அவர்களுடனே, நீஙகளபோகிற அநதமேடு என்னத்தெ னறுசொனனோம, ஆனால இந்நாளவ ரைககும அதினபேர்மேடெனனபபடு கிறது.

௩௰ ஆகையால இஸரவேல வீடடாரோ டே நீசொலலவேணடியதாவது, கர்ததரா கிய ஆணடவர்உரைககிறதேதெனில உங் களபிதாககளுடையமார்ககததினபடியே நீங் களுமதீடடுபபடடவர்கள அல்லோ, நீஙகள அவர்கள் அருவருபபுகளைபபினபறறிச்சோரமபோகிறவர்கள்.

௩௧ நீஙகளஉஙகளபிளளைகளைத் தீயைக் கடககபபணணுகையிலேஉஙகளகாணிக் கைகளைப்படைககிறபோது இந்நாளவரை ககுமஅவர்களுடைய எலலாநரகலானதேவ ர்களாலுமநீஙகள தீடடுபபடுகிறீர்களே, இஸரவேல் வீட்டாரே நாமஉஙகளாலேகேட்கபபடுவோமோ? கர்ததராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது நாம் உஙகளால் கேடகபபடோமெனகிறதை நமதுசீவனைக்கொண்டு சொலலுகிறோமென்று கர்ததராகிய ஆணடவருரைககிறார். * உ. இராசாக். ௧. ௰௭, ௰௭.

௩௨ மரத்திறகுங்கலலிறகும ஆராதனை செயதுபுறசசாதிகளைபபோலவேயுமதேசஙகளின வமசஙகளைபபோலவேயுமிருப்போமென்றுசொலலுகிறீர்களே, இந்தஉஙகளஆவியிற்றோனறுகிற நினைவினபடியே யாகிறதேயிலலை.

௩௩ பலததகையினாலும, நீடடபபட்ட புயததினாலும, ஊறறபபட்ட உககிரத்

றும் உங்களை யாளுவோமென்றிறைத நம்முடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறோமென்று கர்த்தராகிய ஆண்டவருரைக்கிறார்.

௩௰௪ நீங்கள் சனசதளங்களுக்குள்ளிராதபடிக்கு நாம் உங்களைப்புறப்படப்பண்ணி, நீங்கள் சிதறித்திரிகிற தேசங்களிலிராதபடிக்கு நாமுங்களைப் பலத்தகையினாலும், நீட்டப்பட்ட புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலுங்கூட்டி,

௩௰௫ உங்களைச் சனசதளங்களின் வனாந்தரத்திலே கொண்டுபோய், அங்கே யுங்களோடே முகமுகமாக நியாயத்திறகுட்பிரவேசிப்போம்.

௩௰௬ * நாமெகிப்துதேசத்தின் வனாந்தரத்தில் உங்கள் பிதாக்களோடே நியாயத்திறகுட்பிரவேசித்ததுபோலே, உங்களோடே நியாயத்திறகுட்பிரவேசிப்போமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ௪, மோசே. ௰௪, ௨௨. ௨௩.

௩௰௭ நாமுங்களைக் கோலின்கீழ்க்கடந்துபோகப்பண்ணி, உங்களை யுடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்தி,

௩௰௮ கலகக்காரரையுந் துரோகிகளையும் உங்களைவிட்டுப்பிரித்துப்போடுவோம், அவர்களைத் தாங்கள் தங்குந்தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுவோம் ஆனால் அவர்கள் இஸ்ரவேல்சீமைக்குட் பிரவேசிப்பதில்லை, அப்படியே நாங்கர்த்தரென்றறிந்துகொள்ளுவீர்கள்.

௩௰௯ இப்போதும் இஸ்ரவேல் வீட்டாரே நீங்கள் நம்முடைய சொல்லைக்கேட்கமனதில்லாதிருந்தால், நீங்கள் போய் அவனவன் தன் நரகலான தேவர்களை யினிமேலுக்குஞ்சேவியுங்களேன், ஆனால் நம்முடைய பரிசுத்த நாமத்தையுங்கள் காணிக்கைகளாலும் உங்கள் நரகலான தேவர்களாலும் இனிப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருப்பீர்களாகவென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

புத்தசனத்தின் குணப்படுதலைக்குறித்துப் பண்ணின வாக்குத்தத்தம்.

௪௰ ஏனென்றால் இஸ்ரவேலின் * உயரமான பருவதமாகிய நம்முடைய பரிசுத்தப்பருவதத்திலே இஸ்ரவேலுடைய எல்லா வீட்டாருமாகிய தேசத்திலுள்ள அனைவரும் நம்மைச் சேவிப்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அங்கே அவர்களை யேற்றுக்கொள்ளுவோம், அங்கே நீங்கள் பரிசுத்தம்பண்ணுகிற தெல்லாவற்றிலும் உங்கள் செலுத்துதல்களையும் உங்கள் ஈவுகளின் முதற்பலன்களையுங் கேட்போம். * ௰௭, ௨௰. ஏசாயா. ௨, ௨.

௪௰௧ நாம் உங்களைச் சனசதளங்களிலிருந்து புறப்படப்பண்ணி, உங்களை நீங்கள் சிதறுண்டிருக்கிற தேசங்களிலிருந்துகூட்டிக்கொள்ளும்போது, ஆற்றுகிற வாசனையினிமித்தம் நாம் உங்கள்பேரிற் பிரியமாயிருப்போம், அப்போது புறச்சாதிகளின் கண்களுக்குமுன்பாக உங்களாற் பரிசுத்தம்பண்ணப்படுவோம்.

௪௰௨ உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்போமென்று நம்முடைய கரத்தையெடுத்த தேசமாகிய இஸ்ரவேல் சீமையிலே நாம் உங்களைத் திரும்பிவரப்பண்ணின அப்போது, நாங்கர்த்தரென்று நீங்கள் அறிந்துகொண்டு,

௪௰௩ அங்கே யுங்களுடைய எல்லா வழிகளையும், நீங்கள் தீட்டுப்பட்ட உங்களுடைய எல்லாக் கிரியைகளையும் * நினைத்து நீங்கள் செய்திருந்த உங்களுடைய எல்லாப் பொல்லாப்புகளினிமித்தமும் உங்களை நீங்களே யரோசிப்பீர்கள். * ௰௬, ௬௧. ௬௩.

௪௰௪ இஸ்ரவேல் வீட்டாரே, நாம் நம்முடைய நாமத்தினிமித்தம் உங்கள் பொல்லாத வழிகளுக்குத் தக்கதாகவும், உங்கள் கெட்ட கிரியைகளுக்குத் தக்கதாகவும் உங்களுக்குச் செய்யாமற்போன அப்போது, நாங் கர்த்தரென்றறிந்து கொள்ளுவீர்களென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறாரென்று சொல்லென்றார்.

யூதரின்மேலும் எருசலேமின்மேலும் வருமாக்கினையுவமை வார்த்தைகளால் முன்னறிவிக்கப்பட்டது.

௪௰௫ கர்த்தருடைய வார்த்தையெனக்குண்டாகி, அவர் சொன்னதாவது,

௪௰௬ மனுஷபுத்திரனே, நீயுன் முகத்தைத் தென்றிசையாகத் திருப்பித் தெற்குக்கு விரோதமாக உன் வசனத்தைச் சொரிந்து, தென்புறமான வயல்வெளியின் காட்டுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனமுரைத்து,

௪௰௭ தெற்கித்திக்காட்டை நோக்கிச் சொல்லவேண்டியதாவது, கர்த்தருடைய வார்த்தையைக் கேள், கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதேதென்றால், இதோ நாம் உன்னில் அக்கினியைக் கொளுத்துவோம், அது உன்னிற் பச்சையான சகல மரத்தையும் பட்டிருக்கிற மரத்தையும் பட்சிக்கும், சுவாலிக்கிற சுவாலை யவிக்கப்படமாட்டாது, தெற்கு துவக்கி வடக்குமட்டுமுள்ள தேசமுகங்களெல்லாம் அதினால் வெந்துபோம்.

௪௰௮ கர்த்தராகிய நாம் அதைக் கொளுத்தினோமென்பதைச் சகல மாம்சமுங் காணும், அது அவிக்கப்படுவதில்லையென்று சொல்லென்றார்.

௪௰௯ அப்போது நான், ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இவன் உவமைகளையல்லு

வோ சொல்லுகிறவனென்று அவர்கள் என்னைக்குறித்துச் சொல்லுகிறார்களென்றேன்.

௨௧. அதிகாரம்.

[பூதரின் மேலும் எருசலேமின் மேலும் இராசாவின் மேலும் வருமாகினைவெளிப்பொருளாய் அறிவிக்கப்பட்ட தீர்க்க தரிசனம்.]

அப்போது கர்த்தருடைய வார்த்தை யெனக்குண்டாகி, அவர் சொன்னதாவது,

௨ மனுஷபுத்திரனே, * நீயுன்முகத்தை எருசலேமுக்கு நேராகத் திருப்பிப் பரிசுத்த ஸ்தலங்களுக்கு விரோதமாக உன் வசனத்தைச் சொரிந்து இஸ்ரவேல் சீமைக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனமுரைத்து, * ௨௰. அதி. ௪௬.

௩ இஸ்ரவேல் சீமையை நோக்கிச் சொல்லவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவருரைக்கிறதேதெனில், இதோ, நாம் உனக்கு விரோதமாக வந்து நம்முடைய பட்டயத்தை அதின் உறையிலிருந்துருவி, உன்னில் நீதிமானையும் ஆகாதவனையுஞ் சங்காரம்பண்ணுவோம்.

௪ நாம் உன்னில் நீதிமானையும் ஆகாதவனையுஞ் சங்காரம்பண்ணப்போகிறபடியினாலே. நம்முடைய பட்டயம் தெற்குத் துவக்கி, வடக்குமட்டுமுள்ள எல்லா மாம்சத்திற்கும் விரோதமாக அதின் உறையிலிருந்துப் புறப்படும்.

௫ அப்போது கர்த்தராகிய நாம் நம்முடைய பட்டயத்தை அதின் உறையிலிருந்துருவினோமென்பதை யெல்லா மாம்சமும் அறியும், அது இனியதிலே திரும்புவதில்லை,

௬ நீயோவென்றால், மனுஷபுத்திரனே, பெருமூச்சுவிடு, உன் இடுப்புகள் நொறுங்கும்வண்ணமாகவுங் கஸ்தியாகவும் அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பெருமூச்சுவிடு.

௭ நீயெதினிமித்தம் பெருமூச்சுவிடுகிறாயென்று அவர்கள் உன்னைக் கேட்கிறதுண்டானால், நீ சொல்லவேண்டியதாவது, துற செய்தி வருகிறதினிமித்தந்தானே, அதினாலிருதயங்களெல்லாம் உருகி கைகளெல்லாந் தளர்ந்து ஆவிகளெல்லாந் தியங்கி, முழங்கால்களெல்லாந் தண்ணீராயப் போம், இதோ, அது வந்து சம்பவிக்குமென்று கர்த்தராகிய ஆண்டவருரைக்கிறாரென்று சொல்லென்றார்.

௮ கர்த்தருடைய வார்த்தை யெனக்குண்டாகி, அவர் சொன்னதாவது.

௯ மனுஷபுத்திரனே நீ தீர்க்கதரிசனமுரைத்துச் சொல்லவேண்டியதாவது, கர்த்தருரைக்கிறதேதென்றால், பட்டயம், பட்டயமே கூர்மையாக்கப்பட்டிருக்கிறது, துலக்கப்பட்டதுமாயிருக்கிறது.

௰ வெட்டவே வெட்ட அது கூர்மையாக்கப்பட்டிருக்கிறது, மின்னத்தக்கதாய் அது துலக்கப்பட்டிருக்கிறது, சந்தோஷப்படுவோமோ, இது சகல மரங்களை அசட்டைபண்ணுகிறதாகிய நம்முடைய குமாரனுடைய கோல்.

௰௧ அதைக் கையிற் பிடிக்கிறதற்கு அதைத் துலக்கக் கொடுத்தார், கொல்லுகிறவன் கையிலே கொடுக்கும்படிக்கு அந்தப் பட்டயம் கூர்மையாக்கப்பட்டிருக்கிறது, அது துலக்கப்பட்டதுமாயிருக்கிறதென்று சொல்லு.

௰௨ மனுஷபுத்திரனே, நீ கூப்பிட்டலறு, ஏனெனில் அது நம்முடைய சனத்தின் மேல் வரும், அது இஸ்ரவேலுடைய பிரபுக்களெல்லாரின் மேலும் வரும், பட்டயத்தினிமித்தம் நம்முடைய சனத்திற்குத் திகில்கள் உண்டாயிருக்கும், ஆகையால் * உன் இடுப்பிலே யடித்துக்கொள்.

* ௬, அதிகாரம். ௰௧.

௰௩ ஏனெனில் யாவையும் கண்டிக்கிறகோல் வந்தாலொழிய * இனிச் சோதனையிலே தீருகிறதென்னவென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ஏசாயா. ௯, ௰. ௰௪. எரேமி. ௫, அதி. ௩.

௰௪ ஆகையால் மனுஷபுத்திரனே, நீ தீர்க்கதரிசனஞ் சொல்லி கையோடே கை கொட்டு, ஏனென்றால் பட்டயம் மூன்றாஞ் சைவிரட்டித்து வரும், அது கொலையுண்டவர்களின் பட்டயம், அது கொலையுண்டுபோகிற பெரியவர்களின் உள்ளறைகளுக்குத் துளைக்கிற பட்டயம்.

௰௫ அவர்களுடைய இருதயங்கள் நொந்து, அவர்களுடைய இடறுதல்கள் திரளாகும்படிக்குப் பட்டயத்தின் கூர்மையை அவர்களுடைய எல்லா வாசல்களுக்கும் நேர்க்கட்டளையிடுவோம் ஆ, இது மின்னும்படியாகப் பதப்பட்டது, வெட்டும்படியாகத் தீட்டிவைக்கப்பட்டது.

௰௬ ஏகபலனுய் வலதுபுறமாகவும் வெட்டு, திரும்பி இடதுபுறமாகவும் வெட்டு, உன் முகந் திருப்பப்படுந் திசைகளுக்கெல்லாம் வெட்டு.

௰௭ நாமுங் கையோடே கைகொட்டி நம்முடைய உக்கிரத்தைப் பாறப்பண்ணுவோமென்று கர்த்தராகிய நாஞ் சொன்னோமென்றார்.

௰௮ பின்னையுங் கர்த்தருடைய வார்த்தை எனக்குண்டாகி, அவர் சொன்னதாவது,

௰௯ மனுஷபுத்திரனே, பாபேலுடைய இராசாவின் பட்டயம் வரத்தக்க இரண்டு வழிகளைக் குறித்துக்கொள், ஒரே தேசத்திலிருந்து இரண்டு புறப்படவேண்டும், ஒரு இடத்தைத் தெரிந்துகொள், பட்

ளத்தீறருபபோகிற வழியின முகனையிலே அது இருககிறதாகததெரிநதுகொள,

உய படடையம அமமோனபுததிரரின படடணமாகிய ரபாவுககுவிரோதமாகவர ததகக ஒருவழியையும, யூதாவிலிருககிற அரணுள எருசலேமுககு விரோதமாகவர ததகக ஒருவழியையுமகுறிததுககொளவாயாக.

உக ஏனெனறால இரணடுவழிகளினமுக னையாகிய வழிபபிரிவிலேபாபேலின இரா சா நிமிததமபார்ககிறதறகாக நினறுகொ ளவான, அமபுகளைததிடடிசசுருபஙகளை யாலோசனைகேடடு ஈரலைபபார்பபான்.

உஉ தலைவரைக் கட்டளையிடுகிறதறகு ம, கொலைசெயகிறதிலே வாயைததிறககிற தறகும, ஆர்பபரிபபாயச்சததததைபயுயர் ததுகிறதறகும, வாசலகளைமுடடுமஎத்தி ரஙகளைவைககிறதறகும, அணைபோடுகிற தறகும, கொததளஙகளைககடடுகிறதறகு மாக, அவனுடையவலதுபுறததிலே எருச லேமைககுறிககும நிமிததமுணடாயிருக கும.

உங இது அவர்களுககுததபபான நிமி ததமாகத்தோறறுமபோது, ஆணைசததிய ஙகள அவர்களுககுபபணணபபடும, செய் யபபடட அககிரமததையும அவன நினைத துககொணடு, அது பிடிககபபடடலாமென பான.

உச ஆகையாறகர்ததராகிய ஆணடவ ர்சொலலுகிறதாவது உஙகளதுரோகஙகள வெளியரஙகமாகிறதிலுலும உஙகளசெய கைகளிலெலலாம உஙகளபாவஙகளதெரி யவருகிறதிலுலும, நீஙகள உஙகள அககி ரமததைநினைககபபணணுகிறீர்களே, நீஙக ள இபபடிககொததவர்களெனறு நினைக கபபடுகிறீர்களே, ஆனதுகொணடு கைப பிடியாபபபிடிககபபடுவீர்கள.

உரு இபபோதும இஸரவேலையாளுகிற பரிசுததமறற ஆகாத அதிபதியே, அககிர மம நிறைவேறுஙகாலததில வருகிற உன னுடையநாளுககேதுவானவனே,

உசு கர்ததராகிய ஆணடவர்சொலலு கிறதாவது, சிரிகைபபடடததைவாஙகி, கிரீ டததையெடுததுபபோடு, அது இனியப படிககொத்ததலல, * தாழமையானவனை யுயர்ததி, உயர்நதவனைததாழததுவோம.

* லூககா. யச, யக.

உஎ அதைக்கவிழ்ததுக்கவிழததுக்கவி ழததுபபோடுவோம, நியாயததிறகுடைய வர்வருமடடும அது இலலாதிருககும,* இ வருககேயதைககொடுபபோம.

* லூககா. க, கஉ. கக.

அமமோனபுததிரரினமேலவரும ஆககினை யினதீர்க்கதரிசனம.

உஅ பினனையுமமனுஷபுததிரனே, நீதீ ர்ககதரிசனமுரைததுசசொல்லவேணடிய தாவது, அமமோனபுததிரரையும அவர்க ள நிநதிககுதலையுமகுறிததுககர்ததராகிய ஆணடவர் உரைககிறதேதெனில,

உகூ அககிரமம நிறைவேறினகாலததி லவநத தஙகளுடைய நாளுககேதுவாகிக் கொலையுணடு போனவர்களுடைய பிடரி களோடேகூட உனனைததளளமார்ககரின கைபிலுலவிழபபணணுமபடிககு, உனககு, அபததமானது தரிசிககபபடுகிறதுவாயி லும, உனககுபபொயநிமிததமபார்ககபப டுகிறதுவாயிலும, படடையம, படடை யமேயுருவபபடடது, வெடடுமபடிககுஞ சங்கரிககுமபடிககும அது மினனததக்க னையாயததுலககபபடடிருககிறது.

ஙய உனபடடையததை நீதிருமப அதி ன உறையிலேபோடு, நீ சிருடடிககபபட டதானமாகிய உனதொழிலகளினதேசத திலே நாமுனனைநியாயநதீர்ததது,

ஙக நமமுடையசினததை யுனமேலூற றுவோம, நாம நமமுடையமூர்ககததின அககினியையுனமேலூதி, எரிககிறவர்களுங் கேடுசெயபணிடுகிறவர்களுமாகிய மனுஷரி னகையிலுனனையொபபுககொடுபபோம.

ஙஉ அககினிககிரையாவாய, உன இரத தம உனதேசததின நடுவிறசிநதிககிடககு ம, நீ யினிநினைககபபடுவதிலலை, ஏனெனிற கர்ததராகிய நாமிதைசசொனனோமென றார்.

உஉ. அதிகாரம்

[யூதச்சனததினுடையபலவிதமானபாவங களையும, அவைகளநிமிததமவருமஆககி னைகளையுநதெரியககாடடின தேவவச னஙகள.]

காததருடையவார்ததை யெனககுண டாகி, அவர்சொனனதாவது,

உ இபபோதுமமனுஷபுததிரனே, இர ததஞசிநதினபடடணததை நீநியாயமவி சாரிபபாயோ? விசாரிககமனதானால, *நீ யதின அருவருபபுகளையெலலாம அதுககு ததெரியககாடடி, * உய, ச.

ங சொலலவேணடியதாவது, கர்ததரா கிய ஆணடவர்உரைககிறதேதெனில, உன காலமவரததககதாக * உனனடுவிலேஇர ததஞ்சிநதுகிறதும, உனனைததீடடுபபடு த்தத்தக்கதாக உனககேவிரோதமாய நர கலானதேவர்களை யுணடுபணணுகிறதுமா ன படடணமே, * மததே உங, ஙஎ.

ச நீ சிநதின உன இரத்தத்தினாலே நீ குற்றஞ்சுமததவளாகி, நீ யுணடுபணணின உன நரகலானதேவர்களாலே நீதீடடுப படடு, உன நாட்களைச்சமீபிததுவரபபண ணி,உனவருஷஙகளின எலலைககுவநதாய,

ஆகையால் நானுன்னைப்புறச்சாதிகளுக்கு நிந்தையாகவுந்தேசங்களுக்கெல்லாஞ்சக்கந்தமாகவுமலைப்போம.

ரு உனக்குச்சமீபமும உனக்குத்தூரமுமான தேசங்களினமனுஷர்உன்னைத்திழப்பானகீர்த்தியுள்ளதென்றும அமளிபருந்ததென்றுஞ்சக்கந்தமபண்ணுவார்கள.

சு இதோ, இஸ்ரவேலின அதிபதிகள. அவனவன தன்தன புயபலத்திறகுத்தக்கதாக, உன்னில இரத்தத்தைச்சிந்துகிறதறகிருந்தார்கள.

எ உன்னிலே தாயதகப்பனையறபமாயெண்ணினூர்கள, உன்நடுவிலே * பரதேசியையிடுக்கணசெய்தார்கள, உன்னிலேதிக்கற்றவனையும விதவையையும ஒடுக்கிறூர்கள. * சங்கீ. சுஅ, ரு.

அ நமமுடைய பரிசுத்தகட்டளைகளையசட்டைபண்ணி நமமுடைய ஓயவிநாட்களினபரிசுத்தத்தைக்குலைத்தாய.

கூ இரத்தஞ்சிந்தும்படிக்கு அபாண்டமபோடுகிறவர்கள உன்னிலிருந்தார்கள, * பருவதங்களினமேற சாப்பிடுகிறவர்களுமஉன்னிலிருந்தார்கள, உன்நடுவிலேதோஷஞ்செய்தார்கள. * யஅ, அதி. கூ.

ய உன்னிலேதகப்பனுடைய அபிமானத்தைத்திறந்தார்கள, * உன்னிலேதூரஸ்திரியைப்பலவந்தப்படுத்தினூர்கள.
* ங. மோசே. யஅ, யகூ.

யக உன்னிலொருவன தனக்கடுத்தவனுடையபெண்சாதியோடே அருவருப்பானதைச்செய்தான, வேறொருவனதோஷமாயத்தன மருமகளைத்தீட்டுப்படுத்தினுன, வேறொருவன தன்தகப்பனுக்குப்பிறந்ததனசகோதரியைக்கைப்பிடித்தான. * கக, அதி. உகூ. எரேமி. ரு. அதி. அ.

யஉ இரத்தஞ்சிந்தும்படிக்கு உன்னிற்பரிதானமவாங்கிறூர்கள, * நீ வட்டியையுஞ் சொச்சத்தையும வாங்கிப்பொருளாசையாய உனக்கடுத்தவனையிடுக்கண்செய்து, நம்மைமறந்துபோனுயென்று கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறுர்.
* யஅ. அதி. யங.

யங இதோ, உன்னில்நடந்தையான உன்பொருளாசையினிமித்தமும் உன்நடுவிலசிந்தின இரத்தத்தின நிமித்தமும் நமமுடையகையில அடித்துக்கொள்ளுகிறேம.

யச நாம உன்னில்நியாயஞ்செய்யும்நாட்களில்உன்னிருதயந்தாழுமோ? அப்போது உன்கைகள திடப்பட்டிருக்குமோ? * கர்த்தராகிய நாமிதைச்சொன்னேம இதைநிர்வாகமும்பண்ணுவோம.
* யஎ. அதி. உச.

யரு நாம உன்னைப் புறச்சாதிகளுக்குளளேசிதறவடித்து உன்னைத்தேசங்களிலேதூறறி, உன அசுத்தத்தைப்புனிதமாக்கிப்பண்ணுவோம.

யசு அப்படியே நீ புறச்சாதிகளின்கண்களுக்குமுன்பாக உன்னிறபரிசுத்தமுமிச்சலாயிருந்து, நான கர்த்தரென்றறிந்துகொள்ளுவாயென்றுசொல்லென்றுர்.

யஎ கர்த்தருடைய வார்த்தை யெனக்குண்டாகி அவர்சொன்னதாவது.

யஅ மனுப்புத்திரனே, இஸ்ரவேல்வீட்டார்நமக்கு * மஷ்டாயப்போனூர்கள, அவர்களெல்லாருங்குகைக்குட்பித்தளையும்வெள்ளியும்இருமபுகாரீயமுந்தரனே, வெள்ளியினமஷ்டாய்ப்போனூர்கள.
* ஏசாயா. க, உஉ.

யகூ ஆனதுகொண்டுகர்த்தராகியஆண்டவர்சொல்லுகிறதாவது, நீங்களெல்லாரும மஷ்டாயப்போனபடியினுலே இதோ, நாம உங்களை எருசலேமுக்குள்ளேகூட்டிவோம.

உய வெள்ளியையும்பித்தளையையும்இருமபையுங்காரீயத்தையும்வெள்ளீயத்தையும அக்கினியில ஊதி யுருக்குகிறதற்காகக்குகைக்குள்ளேகூட்டுகிறதுபோல, நாம நமமுடையகோபத்தினுலும நமமுடைய உக்கிரத்தினுலும உங்களைக்கூட்டிவைத்துருக்குவோம.

உக நாம உங்களைக்கூட்டி நமமுடைய சினத்தின அக்கினியையுங்கள்மேல ஊதுவோம, அப்போது அதற்குள்ளுருக்கப்படுவீர்கள.

உஉ வெள்ளி குகைக்குள்ளுருக்கப்படுவதுபோலே, நீங்கள அதற்குள்ளுருக்கப்படுக்கர்த்தராகியநாம நமமுடைய உக்கிரத்தை யுங்கள்மேல ஊற்றினபோதேயென்றறிந்துகொள்ளுவீர்களென்றுர்.

உங கர்த்தருடையவார்த்தை யெனக்குண்டாகி, அவர்சொன்னதாவது,

உச மனுப்புத்திரனே, நீ சுத்தமபண்ணப்படாத தேசம என்று அதற்குச்சொல்லு, சினத்தினகாலத்திலே அதற்கு மழைபெய்யாதிருக்கும.

உரு அதிலுடைய தீர்க்கதரிசிகளின ஒப்பந்தம அதினடுவில் இருக்கிறது, கர்ச்சிக்கிற சிங்கம இரை பீறுகிறதுபோல, அவர்கள * ஆத்துமாக்களைப்பட்சிக்கிறூர்கள. பொக்கிஷத்தையும விலையேறபெற்றதையும வாங்கிக்கொள்ளுகிறூர்கள, அதினவிதைவைகளிலைக்கத்தை அதினடுவிறபெருக்கப்பண்ணுகிறூர்கள.
* கச. அதி. அ, ய.

உசு அதின ஆசாரியர்கள * நமமுடையவேதத்திற்கநியாயஞ்செய்து, நமமுடையபரிசுத்த கட்டளைகளைப்பரிசுத்தக்குலைச்சலாக்குகிறூர்கள. பரிசுத்தமானதற்கும சுத்தமல்லாததற்கும வித்தியாசமபண்ணி

...லும், அசுத்தமானதற்குஞ்சுத்தமல்லா...த்தற்கும் உண்டான வேற்றுமையைக்கா...பியாமலுமிருந்து, நம்முடைய ஓய்வு...ர்ட்களை விட்டுத்தங்கள்கண்களை விலக்கு...றார்கள், அப்படியே அவர்கள் நடுவிறகன...னம்பண்ணப்படுகிறேன். *செப்பனி. ௩. அதி ௪.

௨௭ அதின்நடுவிலிருக்கிற* அதினுடைய ...பதிபுக்கள் இரத்தஞ் சிந்துகிறதற்கும், ...நாடு மொழிவினிமித்தம் ஆத்துமாக்களை ...கெடுக்கிறதற்கும், இரையைப்பீறுகிற ஓநா...ய்களைப்போலிருக்கிறார்கள். * மீகா. ௩, ௰௧. செப்பனி. ௩, ௩.

௨௮ * அதின் தீர்க்கதரிசிகள் அவத்தமா...னதைத்தரிசித்துப் பொய்ச்சாஸ்திரத்தை அவர்களுக்குச்சொல்லிக் கர்த்தர் உரைக்...காதிருந்துகர்த்தராகிய ஆண்டவர் உரை...த்தாரென்றுசொல்லி, அவர்களுக்குச் †சா...ந்தமற்றசுண்ணாம்பைப்பூசுகிறார்கள்.

* எரேமி. ௨௩, ௩௧. ௩௨, † ௰௩, ௰.

௨௯ தேசத்தின்சனம் இடுக்கமே இடுக்...கேப்பறிக்கவேப்பறித்தும், சிறுமையும் எளி...மையுமானவனை யிடுக்கண்செய்து, பரதே...சியை நியாயமில்லாமல் ஒடுக்குகிறார்கள்.

௩௰ *சுவரை அடைப்பாகும்படியும், நா...ந்தேசத்தை யழிக்காதபடிக்கு அதற்காக நமதுமுகத்திற்குமுன்பாகத், †திறப்பிலே நிற்பவனுமாகிய ஒருவனைத் தேடினேம், ஒருத்தனுங்காணப்படவில்லை *[illegible] போனோம். * ௰௩. ௫. † சங். ௱௬, ௨௩.

௩௧ ஆகையாலதாம் அவர்கள்பேரிலே *நம்முடைய சினத்தைப்பூற்றி, நம்முடைய ...மூர்க்கத்தின் அக்கினியால் அவர்களைநிர்ம...மூலமாக்கி, அவர்களுடையமார்க்கத்தை † அவர்கள் தலையின்மேற்சுமரப்பண்ணுவோ...மென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்...கிறார். * எ, அ. † ௰௬. அதி. ௪௩.

௨௩. அதிகாரம்.

[இஸ்ரவேலும் யூதாவுஞ்செய்த விக்கிரக ஆராதனைகளும் அவைகளின் ஆக்கினைகளும் இரண்டுவேசிகளின் உவமையினாலே காண்பிக்கப்பட்டது.]

கர்த்தருடையவார்த்தையெனக்குண்டாகி, அவர்சொன்னதாவது,

௨ மனுஷபுத்திரனே, ஒரேதாயின்குமாரத்திகளாகிய இரண்டு ஸ்திரீகளிருந்தார்கள்.

௩ அவர்கள் * எகிப்திலே வேசித்தனம் பண்ணினார்கள். தங்கள் வாலிபத்திலேதானே வேசித்தனம்பண்ணினார்கள், அங்கே அவர்களுடைய தனங்கள் அமுக்கப்பட்டு, அவர்களுடைய கன்னிமையின்கொங்கைக ள் தொடப்பட்டது. * ௨௰. அதி. ௫. அ.

௪ அவர்களில் மூத்தவளுக்கு ஒகோலாள் என்றுபேரும், அவளுடைய தங்கைக்கு ஒகோலிபாளென்றும்பேருமிருந்தது, அவர்கள் நம்முடையவர்களாகிக் குமாரரையுங் குமாரத்திகளையும்பெற்றார்கள். அவர்களுடையபேர்களென்னவென்றால், சமாரியா ஒகோலாளென்பவள், எருசலேம் ஒகோலிபாளென்பவள்.

௫ ஒகோலாள் நம்முடைய கீழிருந்து சோரம்போனாள்.

௬ அவள் நீலமான உடுப்புள்ள தலைவரும் அதிகாரிகளுமாய், இச்சிக்கப்பட்டதக்க வாலிபருமாய்க் குதிரைகளின்மேலேறுகிற ராவுத்தருமாயிருந்தசமீபதேசத்தாராகிய * அசூரியரென்றதன் னுடைய சிநேகிதரையவள்மோகித்து, * ௰௬, ௨௮.

௭ அசூரின்புத்திரரிலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களான அனைவரோடும், தான் மோகித்த அனைவரோடும் தன்வேசித்தனங்களை நடப்பித்து அவர்களுடைய நரகலான எல்லாத்தேவர்களாலுந் தீட்டுப்பட்டுப் போனாள்.

௮ தான் எகிப்திலேபண்ணின வேசித்தனங்களையவள்விட்டதுமில்லை. ஏனெனில் இவர்கள் அவளுடையவாலிபத்திலே அவளோடே சயனித்து, அவளுடைய கன்னிமையின் கொங்கைகளைத்தொட்டு, அவள்பேரிலே தங்கள் வேசித்தனத்தைப் பூற்றியிருந்தார்கள்.

௯ ஆகையால் அவளை அவளுடையசிநேகிதரின்கையிலொப்புக்கொடுத்தேம், அவள்மோகித்திருந்த * அசூர்புத்திரரின்கையிலேதானே, * ௨. இராசா. ௰௫, ௰௬. ௨௯. ௰௭, ௩.

௰ இவர்கள் அவளுடைய அவமானத்தைத்திறந்தார்கள், அவளுடையகுமாரரையும் அவளுடையகுமாரத்திகளையும் பிடித்துக்கொண்டு, அவளைப்பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள். அப்படியே அவளில் ஆக்கினைகளைத்தீர்த்துப்போட்டபடியினாலே ஸ்திரீகளுக்குள் அவகீர்த்திப்பட்டவளானாள்.

௰௧ அவளுடையதங்கையாகிய ஒகோலிபாள் இதைக்கண்டும், * அவளைப்பார்க்கத் தன்மோகவிகாரத்திலுந் தன்சகோதரியைப்பார்க்கத்தன்வேசித்தனங்களிலுங்கெட்டவளானாள். * ௰௬, ௫௧.

௰௨ மகா அலங்கார உடுப்புள்ள தலைவரும் அதிகாரிகளும், குதிரைகளின்மேலேறுகிற ராவுத்தரும், அனைவருமாக இச்சிக்கப்பட்டதக்க வாலிபருமான சமீபதேசத்தாராகிய * அசூர்புத்திரரை மோகித்தாள். ௨. இராசா. ௰௬, ௭. முதலிய

௰௩ அவள் அசுத்தமானாளென்றும், * அவர்களிருவருக்குமொரேமார்க்கமுண்டெ

ளத்தக்கண்டோம்.

௰௪ அவள்தன்வேசித்தனங்களில் அதிகப்பட்டுப்போனாள் அதேனென்றால் சாதிலிங்கத்தால் சுவரில் படமாய்த்தீர்க்கப்பட்ட கல்தேயரின்சுரூபங்களாகிய புருஷரைக் கண்டாள்.

௰௫ அவர்கள்தாங்கள்பிறந்ததேசமாகிய கல்தேயாவிலுள்ள பாபேலுடையபுத்திரரின்சாயலாகத் தங்கள்அரைகளிற்கச்சைகட்டினவர்களும், தங்கள்தலைகளிற்சாயந்தீர்த்தபெரிய பாகைகளைப்போட்டுக்கொண்டவர்களும், பார்வைக்கு எல்லாரும் ஆதிக்கக்காரருமாயிருந்தார்கள்.

௰௬ அவளுடையகண்கள்அவர்களைப்பார்த்தவுடனே, அவள் அவர்களை மோகித்துக் கல்தேயாவுக்கு அவர்களண்டையிலே தாதுபதிகளையனுப்பினாள்.

௰௭ அப்பொழுது பாபேலின்புத்திரர் அவளண்டையிலே சிநேகசம்போகத்திற்கு வந்து, தங்கள் வேசித்தனங்களால் அவளைத் தீட்டுப்படுத்தினார்கள், அவளிவர்களாலே தீட்டுப்பட்டுப்போனபின்பு, * அவள்மனது அவர்களைவிட்டுப்பிரிந்தது.

* ௨. இராசா. ௨௪, ௧, ௨.

௰௮ அவள்தன் வேசித்தனங்களை வெளியாக்கித்தன் அபிமானத்தைத்திறந்துபோட்டபடியினாலே, நம்முடைய ஆத்துமா அவளுடைய சகோதரியைவிட்டுப்பிரிந்ததுபோல அவளையும்விட்டுப்பிரிந்தது.

௰௯ அவள் எகிப்துதேசத்திலே வேசித்தனம்பண்ணின தன்வாலிபத்தின்நாட்களை நினைத்துத்தன்வேசித்தனங்களில் அதிகப்பட்டுப்போனாள்.

௨௰ அதேதெனில அவர்களுடையவைப்பாட்டிகளைப்பார்க்கிலும் அவள் அவர்களை மோகித்தாள், கழுதைகளின்மாம்சமான மாம்சமும் குதிரைகளின்காமியமான காமியமுமுள்ள அவர்களைத்தானே.

௨௧ இப்படியே எகிப்திலே உன்வாலிபத்தின் தனங்கள் நிமித்தம் உன் கொங்கைகள் தொடப்பட்டதாகிய உன்சிறுவயதின் தோஷத்தைத்திரும்பத்தேடினாய்.

௨௨ ஆகையால் ஒகொலிபாளே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, இதோ, உன்மனதுவிட்டுப்பிரிந்த * உன்னுடைய சிநேகிதரை நாம் உனக்குவிரோதமாக எழுப்பி, அவர்களைச்சுற்றிலும் உனக்குவிரோதமாகவரப்பண்ணுவோம்.

* ௰௬, ௩௭.

௨௩ இச்சிக்கப்பட்டதக்க வாலிபரும், எல்லாத்தலைவரும் அதிகாரிகளுங்குதிரைகளையேறுகிற ஆதிக்கக்காரருமாகியபேர்பெற்ற மனுஷருமாயிருக்கிற பாபேலின்புத்திரரையுங்கல்தேயரெல்லாரையும், பேக்கோது, சோவா, கோவாவென்ற சீமைகளின் மனுஷரையும் அவர்களோடேகூட அசூர்புத்திரரெல்லாரையுந்தானே.

௨௪ அவர்கள் உனக்குவிரோதமாக வண்டில்களோடும் இரதங்களோடும் ஜனக்கூட்டங்களோடும் சன்னத்தங்களின் கூட்டத்தோடும் வந்து, கேடயங்களும் பரிசைகளும் தலைச்சீராவுமுள்ளவர்களாய் உன்னைச்சுற்றிலும் பாளையமிறங்குவார்கள், அவர்கள் முன்னே நாம் நியாயத்தைவைப்போம், அவர்கள் தங்கள்நியாயங்களின்படியுன்னை நியாயந்தீர்ப்பார்கள்.

௨௫ உனக்குவிரோதமாக நம்முடைய வயிராக்கியத்தைப்போகவிடுவோம், அவர்கள் உன்னையுக்கிரமாய்நடப்பித்து உன் மூக்கையும் உன்காதுகளையும் வாங்கிப்போடுவார்கள், உன்னில்மீதியாயிருப்பதோ பட்டயத்தால் வெட்டுண்டுபோகும், அவர்கள் உன்குமாரரையும் உன்குமாரத்திகளையும் பிடித்துக்கொள்ளுவார்கள், உன்னில்மீதியாயிருப்பதோ அக்கினிக்கிரையாகும்.

௨௬ * அவர்கள் உன் வஸ்திரங்களையுரிந்து, உன்னுடையசிங்காரமான ஆபரணங்களைவாங்கிக்கொள்ளுவார்கள்.

* ௰௬. அதி ௨௧.

௨௭ அப்படியே உன்சண்டாளத்தனத்தையும் நீ எகிப்துதேசத்திலே துவக்கின உன் வேசித்தனத்தையும் ஒய்யப்பண்ணுவோம், நீயினி அவர்களை நோக்க உன்கண்களையெடுக்காமலும், எகிப்தை நினைக்காமலுமிருப்பாய்.

௨௮ ஏனென்றால் கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறதாவது, இதோ, நீ பகைக்கிறவர்களின்கையிலும் உன்மனதுவிட்டுப்பிரிந்தவர்களின்கையிலும் நாமுன்னையொப்புக்கொடுப்போம்.

௨௯ அவர்கள்பகையாய் உன்னை நடப்பித்து, உன்பிரயாசத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு உன்னைப்பம்மணமும் நிர்வாணமுமாக்கிவிடுவார்கள், அப்படியே உன் வேசித்தனத்தின்அபிமானமும் உன்னுடைய தோஷமும் உன்வேசித்தனங்களும் வெளிப்படும்.

௩௰ நீ புறச்சாதிகளைப் பின்தொடர்ந்து, அவர்களுடைய நரகலான தேவர்களால் உன்னைத்தீட்டுப்படுத்திக்கொண்ட உன்னுடைய வேசித்தனத்தினிமித்தம் இவைகளை யுனக்குச்செய்வார்கள்.

௩௧ உன்சகோதரியின்வழியிலே நடந்தாய், ஆகையால் அவளுடைய பாத்திரத்தை யுன்கையிலேகொடுப்போம்.

௩௨ கர்த்தராகிய ஆண்டவர்சொல்லுகிறதாவது, நீ யுன்சகோதரியினுடைய ஆழமும் விஸ்தாரமுமான பாத்திரத்தைவாங்கிக் குடித்து, அது நிரம்பப்பிடிக்கிறபடியினாலே, நகைப்பும்பரியாசமுமாவாய்.

௩௩ சமாரியாவென்ற உன சகோதரியி னுடைய பாத்திரமாயிருக்கிற பிரமிப்பும பாழ்க்கடிப்புமென்ற பாத்திரத்தாலே * வெறிபிறுஞ்சஞ்சலத்தினுலும நிறையப் படுவாய. * சஙகீ. ௬௰. ௩. எ௫, ௬.ஏசாயா. ௫௧, ௰௭. ௬௪.

௩௪ நீயதிவருக்கிறதைக்குடித்து,உறிஞ்சி அதின ஓடுகளையுடைத்துபபோட்டுஉன் தனங்களைப பிசசுபபோடுவாய ஏனெனில நாம அதைசசொனனோமெனறுகர்த்தரா கிய ஆண்டவர் உரைக்கிருர்.

௩௫ ஆகையால * நீ நமமைமறநது நமமைப புனமுகததிறகுப்பினனுக எறிநத படியினிமித்தம நீயும உன தோஷத்தையும உன வேசித்தனங்களையுஞ சுமநதுகொள ளென்று கர்த்தராகிய ஆண்டவர்சொலலு கிருர். * எரே. ௨, ௩௨. ௩, ௨௧.

௩௬ பினனையுங்கர்த்தர் என்னுடனே சொன்னதாவது,மனுஷபுத்திரனே நீ ஒகோ லாளையும ஒகோலிபாளையும * நியாயம விசாரிக்கமனதாஞல, அவர்களுடைய அரு வருப்புகளையவர்களுக்குத்தெரியக்காட்டு, * ௨௰, ௪. ௨௨, ௨.

௩௭ ஏனெனருல விபசாரமபணணினூர்க ள. அவர்களகைகளில இரத்தமுமிருக்கிற து.அவர்கள்தங்கள நரகலானதேவர்களோ டேவிபசாரமபணணித்தாங்கள நமக்குப பெறற* தங்களுடையபிளளைகளையும அவை களுக்கிரையாகத் தீயைக்கடக்கப பணணி ஞர்கள. * ௰௬, ௨௰. எரே. ௭, ௩௮.

௩௮ அவர்கள இனனம நமக்குச்செய்த தேதெனருல, * நமமுடைய பரிசுத்தஸ்த லத்தை யநநாளிலேதானே தீட்டுபபடுத்தி நமமுடைய ஓயவுநாட்களின பரிசுத்தத் தைக்குலைத்தார்கள. * ௨௨, ௮.

௩௯ அதேதெனில தங்கள பிளளைகளைத் தங்கள நரகலானதேவர்களுக்கென்று பலி யிட்டபிறபாடு, அவர்கள நமமுடைய பரிசு த்தஸ்தலத்தைப பரிசுத்தக்குலைசசலாகக அந்நாளிலேதானே அதறகுட் பிரவேசித் தார்கள இதோ, இபபடியே நமமுடைய வீட்டின நடுவிலேசெய்தார்கள.

௪௰ இதுவுமலலாமலே தூரத்திலிருநது வரபபுருஷரையழைத்தனுபபினூர்கள. இவ ர்கள அனுடைக்குத் தாஞ்பதியனுப்பப் பட்டான, இதோவநதார்கள, இவர்களுக் கென்று நீ குளித்து, உனகண்களிலமையிட் டுக்கொணடு, ஆபரணங்களால் உனனையல ங்கரித்து,

௪௧ முக்கியமான மஞ்சத்தினமேலுக் காநதுகொணடாய, அதினமுனனே ஒரு பீடம ஆயித்தம பணணப்பட்டிருந்தது நமது தூபவர்க்கத்தையும நமமுடைய எணணெயையும அதினமேலே வைத் தாய.

௪௨ அவர்களிடத்திலே அநதசசநதடி யின இரைசசல அடங்கினபிறபாடு, சனத் திரளானபுருஷரையும அழைத்தனுபபினூர் கள, சபேயா வனாந்தரத்திலிருநது வரப பட்டார்கள, இவர்கள அவர்களுடையகை களிறசரிகைகளையும அவர்களுடையதலைக ளில அலங்காரமான கிரீடங்களையுமபோட் டார்கள.

௪௩ விபசாரங்களிற கிழவியானவளைக் குறித்து அவர்களினனம இபபோது தன வேசித்தனங்களை நடப்பித்துக்கொளளுவா ளோ? எனறேம.

௪௪ ஆறற பலஸ்திரியினிடத்திலே பிர வேசிக்குமாபபோலே, அவளிடத்திற பிர வேசித்தார்கள,இநதபிரகாரமாகத்தோ ஷக்காரிகளாகிய ஒகோலாளிடத்திலுமபிர வேசித்தார்கள.

௪௫ ஆகையால * விபசாரிகளை நியாயந் தீர்க்கிறபிரகாரமாகவும இரத்தஞ்சிநதின வர்களை நியாயந்தீர்க்கிற பிரகாரமாகவும நீதிக்காரராகியபுருஷர் அவர்களை நியாயந் தீர்ப்பார்கள, ஏனெனில அவர்கள விபசாரி கள, அவர்களுடையகைகளில இரத்தமிருக் கிறது. * ௰௬, ௩௮.

௪௬ அதேதெனிறகர்த்தராகிய ஆண்ட வர்சொலலுகிறதாவது, நாம அவர்களுக்கு விரோதமாகச் சபையைபபோயேறப்பண ணி, அவர்களையலையுதலுக்குங்கொளளையா குதலுக்கும ஒபபுக்கொடுப்போம.

௪௭ அநதச்சபையார்அவர்களைக்கலலெ றிநது, தங்களபட்டையங்களாலவெட்டிப போடுவார்கள, அவர்களுடையகுமாரரையு மஅவர்களுடையகுமாரத்திகளையுங்கொன று. அவர்களுடைய வீடுகளை யக்கினியாற சுட்டெரிப்பார்கள.

௪௮ அபபடியே, எலலாஸ்திரிகளுமபுத் தியடைநது,உங்களதோஷங்களினபடி செ யயாதிருக்கும்படிக்குத்தோஷத்தைத் தே சத்தைவிட்டோயப்பணணுவோம.

௪௯ உங்கள தோஷத்தை யுங்களமேற சுமத்துவார்கள, அப்போது நீங்கள உங்க ள நரகலானதேவர்களைச்சேவித்தபாவங்க ளைச்சுமநது, நாங்கர்த்தராகிய ஆண்டவ ரென்றறிநதுகொளளுவீர்கள.

௨௪. அதிகாரம்.

[எருசலேமுக்குவருஞ்சங்காரமஇரண்டுஉ பமைகளால அறிவிக்கப்பட்டது.]

ஒன்பதாமவருஷத்துப பத்தாம மாத த்தின பத்தாநதேதியிலேகர்த்தருடையவா ர்த்தையெனக்குணடாகி,அவர்சொனனதா வது,

௨ மனுஷபுத்திரனே, இநதநாளினநாம மாகிய இநதத்தேதியையே நீ யுனக்கெழு

திலை, இத்தேதியிலேதானே பாபேலின் இராசா எருசலேமினிடத்தில் இறங்கினான்.

௩ இப்போதும் நீ கலகவீட்டாருக்கொரு உவமையைக் காண்பித்து, அவர்களோடே சொல்லவேண்டியதாவது: கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதேதென்றால், ஒரு கொப்பரையை அடுப்பிலே வை, அதை அடுப்பிலே வைத்து, அதிலே தண்ணீரை வார்.

௪ சகல நல்ல கண்டங்களாகிய பின்னந்தொடைகளும் முன்னந்தொடைகளுமென்கிற அதின் கண்டங்களை அதிலே சேர், தெரிந்துகொள்ளப்பட்ட எலும்புகளால் அதை நிரப்பு.

௫ ஆட்டுமந்தையிலே தெரிந்துகொள்ளப்பட்டதை எடுத்துக்கொண்டுவந்து, எலும்புகளுக்கான கட்டைகளுடையும் அதின் கீழெரிய வேண்டும், அதற்குள் எலும்புகளும் வேகத்தக்கதாக அதைப் பொங்கப்பொங்கக் காய்ச்சு.

௬ இதற்காகக் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, நுரையோட்டிக்கொண்டிருக்கிறதும் நுரை நீங்காததுமாகிய கொப்பரையென்னப்பட்ட இரத்தஞ்சிந்திய பட்டணத்துக்கையோ! அதிலிருக்கிறதைக் கண்டங்கண்டமாக எடுத்துப்போடு, அதின்பேரிலே சீட்டுப்போடப்படாதிருப்பதாக.

௭ ஏனென்றால் அதின் இரத்தம் அதின் நடுவிலிருக்கிறது, இதைத் தண்ணீராலே மூடத் தரையிலே ஊற்றாமல் வறண்ட கற்பாறையிலே ஊற்றிப்போட்டார்கள்.

௮ நீதியைச்சரிக்கட்டுவதற்காக நாம் அதை உக்கிரத்தையேறப்பண்ணும்படிக்கு, வறண்ட கன்மலையிலே மூடப்படாதிருக்கப் பண்ணினோம்.

௯ *ஆனதுகொண்டு கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, இரத்தஞ்சிந்திய பட்டணத்துக்கையோ! நாமும் பெரிதான கட்டைக்குவியலை யெரியப்பண்ணுவோம்.

* ௨௨. ௩, ௪.

௰ திரளான விறகுகளைக் கூட்டு, அக்கினியைக் கொளுத்து, இறைச்சியை முறுகவேவித்துச் சம்பாரங்களையிட்டு, எலும்புகள் சுட்டுப்படக்கடவது.

௰௧ பிறபாடு கொப்பரை காய்ந்து, அதின் களிம்பு வெந்து, அதற்குள்ளிருக்கிற அதின் அழுக்கு உருகி, அதினுடைய நுரை நீங்கும்படிக்கு, அதை அதினுடைய தழலின்மேலே வெறுமையாக வை.

௰௨ அது வருத்தத்தையுண்டாக்கியும், அதின் திரளான நுரை அதைவிட்டு நீங்கினதில்லை, அதின் நுரை அக்கினிக்குள்ளாக வேண்டியது.

௰௩ உன் அழுக்கிலே தோஷமுண்டாயிருக்கிறது, நாம் உன்னைச் சுத்திகரித்தும், நீ சுத்தமாகாதபடியினாலே, இனி நாம் உன்னிடமுடைய உக்கிரம் உன்னில் ஆறித்தீருமட்டும் உன் அழுக்கு நீங்கலாகச் சுத்திகரிக்கப்படமாட்டாய். * ௫, ௰௩.

௰௪ * கர்த்தராகிய நாமிதைச் சொன்னோம், இது வரும், இதை நாஞ்செய்வோம், நாம் பின்வாங்குவதும் தப்பவிடுவதும் மனஸ்தாபப்படுவதுமில்லை, உன் வழிகளுக்கும் உன் செய்கைகளுக்குந் தக்கதாக உன்னை நியாயந்தீர்ப்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ௨௧, ௭.

௰௫ பின்பு கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர் சொன்னதாவது,

௰௬ மனுபுத்திரனே, இதோ, நான் உன் கண்களின் விருப்பத்தை ஒரு அடியினாலே உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளுவேன், ஆனால் நீ புலம்பாமலும் அழாமலும் கண்ணீர்விடாமலுமிருப்பாயாக.

௰௭ அமர்ந்து பெருமூச்சுவிடு, இழவுகொண்டாடாதே, உன் பாகையை உன் தலையிலே கட்டி, உன் பாதரட்சைகளை உன் கால்களிலே தொடுத்துக்கொண்டு, உன் தாடியை மூடாமலும் ஜனத்தாரின் அப்பத்தைப் புசியாமலுமிருக்கக்கடவாயென்றார்.

௰௮ காலத்தாலே நான் ஜனத்தோடே பேசினேன், அன்று சாயங்காலத்திலே என் மனைவி செத்துப்போனாள். ஆகையால் நான் கற்பிக்கப்பட்டபடி விடியற்காலத்திலே செய்தேன்.

௰௯ அப்போது ஜனம் என்னுடனே, நீர் செய்கிறவைகள் எங்களுக்கென்ன அர்த்தம் என்பதை எங்களுக்குத் தெரிவிக்கமாட்டீரோவென்றார்கள்.

௨௰ நான் அவர்களோடே சொன்னது, கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி அவர் சொன்னதாவது,

௨௧ நீ இஸ்ரவேல் வீட்டாருக்குச் சொல்லவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதேதென்றால், இதோ, உங்கள் பலத்தின் முக்கியமும் உங்கள் கண்களின் விருப்பமும் உங்கள் ஆத்துமாவின் வாஞ்சையுமாகிய நம்முடைய பரிசுத்த ஸ்தலத்தை நாம் பரிசுத்தக் குலைச்சலாக்குவோம், நீங்கள் விட்டுவந்த உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள்.

௨௨ அப்போது நான் செய்ததுபோல் நீங்களும் செய்வீர்கள், தாடியை மூடாமலும் ஜனத்தாரின் அப்பத்தைப் புசியாமலுமிருப்பீர்கள்.

௨௩ உங்கள் பாகைகள் உங்கள் தலைகளிலும் உங்கள் பாதரட்சைகள் உங்கள் கால்களிலுமிருக்கும், நீங்கள் புலம்பாமலும் அழாமலுமிருந்து, உங்கள் அக்கிரமங்களில் வாடிப்போய் ஒருவரையொருவர் பார்த்துத் தவிப்பீர்கள்.

௨௪. அப்படியே எசேக்கியேல் உங்களுக்கு * அற்புத அடையாளமாயிருப்பான்; அவன் செய்தபடியெல்லாம் செய்வீர்கள், இப்படி வரும்போது, நான் கர்த்தராகிய ஆண்டவரென்றறிந்துகொள்ளுவீர்களென்று சொல்லென்றுரைத்தாரென்றேன்.

* ௰௨, ௬. ௰௧.

௨௫. பின்னையும் மனுஷபுத்திரனே, நாம் எந்தநாளிலே அவர்களுடைய பலத்தையும் அவர்களுடைய அலங்காரத்தின் மகிழ்ச்சியையும் அவர்களுடைய கண்களின் விருப்பத்தையும் அவர்களுடைய ஆத்துமாவின் மேன்மையான வாஞ்சையையும், அவர்களுடைய குமாரரையும் அவர்களுடைய குமாரத்திகளையும் அவர்களைவிட்டெடுத்துக்கொள்ளுகிறோமோ,

௨௬. அந்நாளிலேதானே, உன் காதுகளுக்குக் கேட்கப்பண்ணும்படிக்குத் * தப்பின ஒருவன் உன்னண்டைக்கு வருவானல்லவோ, * ௩௩, ௨௧.

௨௭. அந்நாளிலேதானே தப்பிவந்தவனோடேகூட உன்னுடைய வாய் திறக்கப்பட்டிருக்கும், இனி ஊமையாயிராமல் அப்போது பேசுவாய், அப்படியவர்களுக்கு அற்புத அடையாளமாயிருப்பாய், நான் கர்த்தரென்று அப்போது அறிந்துகொள்ளுவார்களென்றார்.

௨௫. அதிகாரம்.

[அம்மோனியருக்கும் மோவாபியருக்கும் ஏதோமியருக்கும் பெலிஸ்தருக்கும் வருந்தேயவ ஆக்கினைகளை முன்னறிவித்தது.]

கர்த்தருடைய வார்த்தை யெனக்குண்டாகி அவர் சொன்னதாவது,

௨. மனுஷபுத்திரனே, நீ * அம்மோன புத்திரருக்கெதிராக உன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, அவர்களுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனமுரைத்து, * எசே. ௨௧, ௧. ௲

௩. அம்மோனபுத்திரருக்குச் சொல்லவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவருடைய வார்த்தையைக் கேளுங்கள், கர்த்தராகிய ஆண்டவருரைக்கிறதென்னவென்றால், நமது பரிசுத்தஸ்தலம் பரிசுத்தக்குலைச்சலாக்கப்படுகிறபோதும் இஸ்ரவேல்தேசம் பாழாக்கடிக்கப்படுகிறபோதும் யூதாவீட்டார் சிறையிருப்பிலே போகிறபோதும், நீயதற்கு * ஆகாவென்றபடியினாலே, * ௨௬, ௨. ௩௬, ௨.

௪. இதோ, நாமுன்னைக் கிழக்கத்தியாருக்குச் சுதந்தரமாக ஒப்புக்கொடுப்போம், இவர்களுன்னிலே தங்கள் பண்மனைகளைக் கட்டியுன்னிலே தங்கள் கூடாரங்களைப் போடுவார்கள், இவர்களுன் கனிகளைப் புசித்து உன் பாலைக் குடிப்பார்கள்.

௫. நாம் ரப்பாவை ஒட்டகங்களின் கொட்டகையும், அம்மோனபுத்திரரின் தேசத்தை ஆடுகிடையுமாக்குவோம், அப்படியே நாம் கர்த்தரென்றறிந்து கொள்ளுவீர்கள்.

௬. ஏனென்றால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, இஸ்ரவேல்தேசத்திற்கு விரோதமாகக் கைகொட்டி உன் காலால் தட்டி, உன்னுடைய எல்லா நிஸ்காரத்திலும், மனதாரச் சந்தோஷப்பட்டபடியினாலே,

௭. இதோ, உனக்கு விரோதமாக நாம் நம்முடைய கையை நீட்டி, உன்னைச் சாதிகளுக்குக் கொள்ளையாக ஒப்புக்கொடுத்து உன்னைச் சனசதளங்களுக்குள் வேறறுப்போகப்பண்ணி, உன்னைத் தேசங்களுக்குள்ளே அழித்து, உன்னை நிர்மூலமாக்குவோம், அப்படியே நாம் கர்த்தரென்று அறிந்துகொள்ளுவாயென்பது தானே.

௮. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது, இதோ, யூதாவீட்டார் எல்லாச் சாதிகளுக்கும் ஒத்தவர்களென்று * மோவாபும் சேயீரும் சொல்லுகிறபடியினாலே,

* ஏசாயா. ௰௫, ௧. ௲ எரேமி. ௪௮, ௧. ௲

௯. இதோ, அம்மோனபுத்திரரின் பேர் சாதிகளுக்குள்ளில்லாதபடிக்கு நாம் அம்மோனபுத்திரரின் தேசத்தைக் கிழக்கத்தியாருக்குத் திறந்துவைத்துச் சுதந்தரமாக ஒப்புக்கொடுக்கிறவண்ணமாக,

௰. நாம் மோவாபுதேசத்தின் பக்கத்திலுள்ள அதினுடைய கடையாந்தர ஊர்களாகிய பட்டணங்களை முதற்கொண்டு உண்டான தேசத்தின் அலங்காரமாகிய பெத்யெசிமோத்தையும், பாகால்மெயோனையும், கீரியாத்தாயீமையும் அவர்களுக்குத் திறந்து வைத்து,

௰௧. மோவாபிலே நியாயங்களைச் செய்வோம், அப்படியே நாம் கர்த்தரென்றறிந்துகொள்ளுவார்களென்கிறோர்,

௰௨. கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது, * ஏதோம் யூதாவீட்டாரிடத்தில் பழிதீர்த்துக்கொள்ளுதலைச் செய்து, பெரிய குற்றத்திற்குட்பட்டு, இவர்களிடத்தில் குரோதத்தைத் தீர்த்துக்கொண்டபடியினாலே,

* எசே. ௩௬, ௭. ௲

௰௩. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, நாம் ஏதோம்தேசத்திற்கு விரோதமாக நம்முடைய கையை நீட்டி அதில் மனுஷரையும் மிருகங்களையும் இல்லாதபடிக்குச் சங்காரம்பண்ணி, அதைத் தேமான் துவக்கத்தில் தொடங்கி தேதான்மட்டும் வனாந்தரமாக்குவோம், பட்டயத்தாலே விழுவார்கள்.

௰௪. நாம் இஸ்ரவேலாகிய நமது சனத்தின் கையினாலே ஏதோமிலே நீதிசரிக்கட்டு

தலைசெயவோம, அவர்கள நமமுடைய கோபததினபடியேயும நமமுடைய உககிரததினபடியேயும ஏதோமுககுசசெயவாரிகள, அபபடியே நமமுடைய நீதிசரிககடடுதலையறிநதுகொளளுவாரகளெனறு கர்ததராகிய ஆணடவர்சொலலுகிருர்.

யரு. கர்ததராகிய ஆணடவர்உரைககிறதாவது, * பெலிஸ்தர் குரோதககாரராயிருநது நிததியபகையாயக்கேடுசெயயவேணடுமெனறு, நிஸ்காரததோடே மனதாரக்குரோதத்தைத் தீர்ததுககொணடபடியினுலே, * எரே. சள, க. முதல.

யசு. கர்ததராகிய ஆணடவர்சொலலுகிறதாவது, இதோ, நாம பெலிஸ்தருககு விரோதமாக நமமுடையகையை நீடடிக் கிரேததியரைசசஙகரிததுச்சமுததிரக்கரையில மீதியானவர்களையழிதது,

யஎ. உககிரமான தணடனைகளினுலே அவர்களிற பெரிய நீதி சரிககடடுதலைசெயவோம, அபபடியே நாம அவர்களில நமமுடைய நீதியைசசரிககடடுகையில, நாம கர்ததரெனறறிநதுகொளளுவார்கள.

உசா. அதிகாரம.

[தீருபடடணததின அழிவுமுனனறிவிககபபடடது.]

பதிஞேராமவருஷதது முதலாநதேதியிலே சமபவிதததெனனவெனில, கர்ததருடைய வார்ததையெனககுணடாகி, அவர் சொனனதாவது,

உ. மனுஷபுததிரனே, தீருஎருசலேமைககுறிதது. ஆகா, சனசதளஙகளின கதவு உடைககபபடடதெனறும, எனனிடமாக எலலாமபுரணடுவரும, நான நிரப்பப்படுவேன, அது பாழககடிககபபடடதெனறுஞசொலலுகிறபடியினுலே,

ங. *கர்ததராகியஆணடவர்சொலலுகிறதாவது, தீருவே, இதோ, நாமுனககுவிரோதமாகவருகிரேம, சமுததிரந்தன் அலைகளையெழுமபபணணுகிறவணணமாய, நாமஅநேககுசாதிகளையுனககுவிரோதமாக எழுமபிவரபபணணுவோம. * ஏசாயா. உங, க. முதல

ச. அவர்களதீருவினமதிலகளையழிதது, அதின கொமமைகளையிடிததுபபோடுவார்கள, நாம அதினமணணும அதிலிராதபடிககுவிளககிபபோடடு அதைவெறுங்கறபாறையாககிவிடுவோம.

ரு. அது சமுததிரத்தின நடுவிலேவலைகளைபபரபபுகிறஸ்தலமாயிருககும, ஏனெனில நாமிதைசசொனனேமெனறு கர்ததராகிய ஆணடவர் உரைககிருர், அது சாதிகளுககுசசூறையாகும.

சு. வெளியிலிருககிற அதினகுமாரததிகளோ, படடையததாறகொனறபோடபடுவார்கள, அபபடியே நாமகர்ததரெனறறிநதுகொளளுவார்கள.

எ. ஏனெனில கர்ததராகிய ஆணடவர் சொலலுகிறதாவது. இதோ நாம தீருவுககு இராசாதிராசாவாகிய நேபுகாதநேச்சாரெனற பாபேலின இராசாவைக் குதிரைகளோடும இரதஙகளோடும இராவுத்தரோடுஙகூடடஙகளோடும திரளான சனததோடும வடக்கேயிருநது தீருவுககுவிரோதமாய் வரபபணணுவோம. * தானி. உ, லஎ.

அ. அவன வெளியிலிருககிற உனகுமாரததிகளைபபடடையததாலேகொனறு உனககு விரோதமாகக்கொததளஙகளைக்கட்டி உனககுவிரோதமாக அணைபோடடு உனககு விரோதமாகக்கேடையஙகளையெடுபபான.

கூ. உனமதிலகளுககுவிரோதமாகததகர்க்கிறஎநதிரஙகளைத்தனக்கெதிரேவைத்துத் தன ஆயுதஙகளால உன கொமமைகளையிடிததுபபோடுவான.

ய. அவனுடையகுதிரைகளினுடைய திரளினுலே அவைகளின தூள் உனனை மூடும், இடிக்கப்பட்ட படடணததுககுள் திறபபாககபபடட வாசலின வழியாய்ப் பிரவேசிககுமவணணமாக அவன உனவாசலகளுககுட்பிரவேசிககையில, இராவுததருடைய சத்தத்தினாலும் இரதஙகளுடைய இரைசசலினாலும் சக்கரஙகளுடைய இரைசசலினுலே உனமதில அதிரும.

யக. தனகுதிரைகளின குளமபுகளினாலே உனவீதிகளையெலலாமமிதிபபான, உன்னுடைய சனததைப்படடையததாலே கொனறுபோடுவான உனனுடைய பலமுள்ள தூணகள தரையிலேவிழுநதுபோம.

யஉ. அவர்கள உன ஆஸ்தியைக்கொளளையிடடு, உனசரககுகளைசசூறையாடி உனனுடைய மதிலகளையிடிதது, உனனுடைய இனபமானவீடுகளைததரையாககி, உனகலலுகளையும உனமரஙகளையும உனமணணையும தணணீரின நடுவிலேபோடடுவிடுவார்கள.

யங. * உனபாடடுகளின சததததை நாம ஓயபபணணுவோம உன சுரமணடலஙகளின சததம இனிககேட்கபபடுவதிலலை, * ஏசா. யசு, உஉ.

யச. உனனைவெறுங்கறபாறையாககிவிடுவோம, வலைகளைபபரபபுகிறஸ்தலமாயிருபபாய, இனிககடடபபடாய, ஏனெனில கர்ததராகிய நாமிதைசசொனனேமெனறு கர்ததராகிய ஆணடவர் உரைககிருர்.

யரு. தீருவுக்குக்கர்ததராகிய ஆணடவர் உரைககிறதாவது உன நடுவிற கொலையுணடு விழுகிறவர்கள பெருமூசசுவிடுகையிலும, உன்னிடத்திலே கொலைசெயயபபடுகையிலும, உன விழுகையின சத்தத்தினுலே தீவுகள அதிராதோ

யசு. கடறகரையிலுள்ள பிரபுக்களெலலாரும் தங்கள ஆசனஙகளைவிடடிறஙகித்

வஸ்திரங்களைக் கழற்றி, தங்கள் சித்திரத் தையலாடைகளைப் போடுவார்கள், நடுக்கங்களை உடுத்திக் கொள்ளுவார்கள், தரையில் உட்கார்ந்து, ஒவ்வொரு க்ஷணப்பொழுதிலே நடுங்கி, உன்னிமித்தம் திகைத்திருப்பார்கள்.

௰௭. அவர்கள் உன் பேரிலே * புலம்பல் எடுத்து, உன்னைக் குறித்துச் சொல்வதாவது, கடற்கரை மனுஷர் குடியிருந்ததும், பேர்போனதுமான பட்டணமே, உன்னில் வாசம்பண்ணினவர்களுக்கெல்லாம் பயமுண்டாக்கின உன்னுடைய குடிகளோடுங்கூடச் சமுத்திரத்திலே பலத்திருந்த நீ, எப்படி அழிந்துபோனாய்? * அபொ. ௰௮, ௯. ௱

௰௮. நீ விழுகிற நாளான இப்போது தீவுகள் தத்தளிக்கிறது, நீ அப்புறப்படுகையால் சமுத்திரத்திலுள்ள தீவுகள் கலங்குகிறதென்பார்கள்.

௰௯. ஏனென்றால் கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, நான் உன்னைக் குடியில்லாத பட்டணங்களைப்போலே பாழான பட்டணமாக்கும்போதும், நான் ஆழமான தண்ணீர்கள் உன்னை மூடத்தக்கதாக நான் உன்மேல் ஆழத்தையேறிவரப்பண்ணும்போதும்,

௨௰. நான் உன்னைப் பூர்வத்து சனத்தண்டைக்குக் * குழியில் இறங்குகிறவர்களோடே இறங்கப்பண்ணுவோம், நீ குடியேறுகிறதுக்கு நான் பூர்வகாலமுதற்கொண்டு பாழாயிருக்கிற பூமியின் பாதாளஸ்தலங்களிலே உன்னைக் குழியில் இறங்குகிறவர்களோடேகூடத் தங்கப்பண்ணுவோம், ஜீவனுள்ளோருடைய தேசத்திலோ சிங்காரத்தைக் கட்டளையிடுவோம். * ௨௮, ௮. † ௩௨, ௰௭. ௩௨, ௰௮

௨௧. உன்னை மகா பயங்கரத்துக்காக வைப்போம், இனி இல்லாதிருப்பாய், * நீ தேடப்பட்டும் இனி என்றைக்கும் நீ தென்படாதிருப்பாயென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * சங். ௩௭, ௩௬.

௨௭. அதிகாரம்.

[தீரு பட்டணத்தின் பிரபலியமான வியாபாரத்திற்கு வரும் அழிவு முன்னறிவிக்கப்பட்டது.]

கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர் சொன்னதாவது,

௨. இப்போதும் மனுஷபுத்திரனாகிய நீ தீருவின்பேரில் புலம்பலெடுத்து,

௩. சமுத்திரக் கரைத்துறையிலே குடியிருக்கிறதும் அநேகந் தீவுகளின் சனசதளங்களோடே வியாபாரம் பண்ணுகிறதுமான தீருவுக்கு நீ சொல்லவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதென்னவென்றால், தீருவே, நீ * பூரணவடிவாயிருக்கிறேனென்கிறாய். * ௨௮, ௰௨.

௪. கடல்களின் நடுமையத்திலே உன் எல்லைகளிருக்கிறது, உன்னைக் கட்டினவர்கள் உன்னைப் பூரணவடிவாய்க் கட்டினார்கள்.

௫. சேனீரிலிருந்து வந்த பாய்மரவிருட்சங்களால் உனக்குக் கப்பற்பலகைகளையெல்லாம் அறுத்துக்கட்டினார்கள், பாய்மரங்களை உனக்குச் செய்யும்படிக்கு லீபனோனிலிருந்து கேதுருமரங்களைக் கொண்டு வந்தார்கள்.

௬. பாசானின் கருவாலிமரங்களினால் உன் தண்டுகோல்களைச் செய்தார்கள், கித்தீமென்ற தீவுகளிலிருந்து வந்த புன்னைமரங்களிற் பதிக்கப்பட்ட தந்தங்களினால் உன் வாரிகளைச் செய்தார்கள்.

௭. எகிப்திலிருந்து வந்த சித்திரத் தையலுள்ள மெல்லிய புடவை உனக்கு விரித்த தேற்றின கொடியாயிருந்தது, எலீசா தீவுகளின் இளநீலமும் இரத்தாம்பரமுடைய பந்தற்பரப்பாயிருந்தது.

௮. உனக்குச் சீதோன் அர்வாது என்ற பட்டணங்களின் குடிகள் தண்டுவலிக்கிறவர்களாயிருந்தார்கள், தீருவே, உன்னிலிருந்த உன்னுடைய ஞானிகள் தானே உன்னுடைய மாலுமிகளாயிருந்தார்கள்.

௯. கேபாரின் மூப்பரும் உன்னிலுள்ள உன்னுடைய ஞானிகளும் உன்னிற் கம்பத்துப் பார்க்கிறவர்களாயிருந்தார்கள், சமுத்திரத்திலுடைய சகல கப்பல்களும் அவைகளின் சனமும் உன்னோடே தொழில்துறைக்குச் சவடம்பண்ணுகிறதற்காக உன்னிலிருந்தது,

௰. பேர்சியரும் லூதியரும் பூத்தியரும் உன் இராணுவத்தில் உன் சேவகராயிருந்து, உனக்குள் கேடயங்களையும் தலைச்சோரிகளையுந் தூக்கிவைத்து, உனக்கலங்காரமுண்டு பண்ணினார்கள்.

௰௧. அர்வாத்புத்திரரும் உன் இராணுவ மனுஷரும் சுற்றிலும் உன்னுடைய மதில்களின் மேலும் கம்மாத்தியர் உன் கொம்மைகளிலுமிருந்தார்கள், இவர்கள் சுற்றிலும் உன் மதில்களின்மேலே தங்கள் பரிசைகளைத் தூக்கிவைத்து, உன் வடிப்பத்தைப் பூரணமாக்கினார்கள்.

௰௨. தர்சீஸ் சகலவித பொருளுடைய திரளினிமித்தம் உன்னோடே வியாபாரம் பண்ணிற்று, வெள்ளியையும் இரும்பையும் வெள்ளீயத்தையும் காரீயத்தையும் உன் சந்தைகளில் விற்கவந்தார்கள்.

௰௩. யாவான், தூபால், மேசேக்கு என்ற சாதிகளின் மனுஷர் உன் வியாபாரிகளாயிருந்து, மனுஷ ஆத்துமாக்களையும் வெண்கல முட்டுகளையும் உன் தொழில்துறைக்குக்

கொண்டுவந்தார்கள்.

௰௪. தோகர்மா வம்சத்தார் குதிரைகளையுங் குதிரைக்காரரையுங் கோவேறுகழுதைகளையும் உன் சந்தைகளுக்குக் கொண்டுவந்தார்கள்.

௰௫. தேதான் புத்திரர் உன் வியாபாரிகளாயிருந்தார்கள், அநேகந் தீவுகளின் வர்த்தகம் உன் வசமாகச் சேர்ந்தது, யானைக்கொம்புகளையுங் கருங்காலி மரங்களையும் உனக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள்.

௰௬. சூரியர் உன் வேலைப்பாடுகளின் திரளைத் தொட்டு உன்னோடே வியாபாரம் பண்ணிச் சிவப்புக் கல்லுகளையும் இரத்தாம்பரங்களையுஞ் சித்திரத்தையலாடைகளையும், உயர்ந்த விலைப்புடவைகளையும், பவளங்களையும், பளிங்கையும், உன் சந்தைகளில் விற்க வந்தார்கள்.

௰௭. யூதாவும் இஸ்ரவேல் தேசத்தாரும் உன்னோடே வியாபாரம் பண்ணி மின்னீதுபவாறு என்ற ஊர்களின் கோதுமையையுந் தேனையும் எண்ணெயையும் பிசின் தயிலத்தையும் உன் தொழில்துறைக்குக் கொண்டுவந்தார்கள்.

௰௮. தமஸ்கு உன் வேலைப்பாடுகளுடைய திரளினிமித்தமும், சகலவித பொருளுடைய திரளினிமித்தமும் உன்னோடே வர்த்தகம் பண்ணிச் செல்தோனின் திராட்சப்பழரசத்தையும், வெண்மையான ஆட்டுமயிரையும் உனக்கு விற்றார்கள்.

௰௯. தாண் சீமையாரும் போக்கும் வரத்துமான யாவானரும் உன் சந்தைகளிற் கொண்டுவந்த துலக்கப்பட்ட இரும்புங் கந்தவர்க்கமும் வசம்பும் உன் தொழில்துறையிலிருந்தது.

௨௰. இரதங்களுக்குப் போடுகிற மேன்மையான கவுசனைகளைத் தேதானின் மனுஷர் கொண்டுவந்து உன்னோடே வியாபாரம் பண்ணினார்கள்.

௨௧. அரபியரும், * கேதாருடைய சகல பிரபுக்களும் உனக்கு வாடிக்கையான வர்த்தகராகி ஆட்டுக்குட்டிகளையும் ஆட்டுக்கடாக்களையும் வெள்ளாட்டுக்கடாக்களையுங் கொண்டுவந்து, உன்னோடே வியாபாரம் பண்ணினார்கள். * ௧. மோசே. ௨௫, ௰௩.

௨௨. சேபா, ராகமா பட்டணங்களின் வியாபாரிகள் உன்னோடே வர்த்தகம் பண்ணி, மேன்தரமான சகலவித சம்பாரங்களையுஞ், சகலவித இரத்தினக்கல்லுகளையும் பொன்னையும் உன் சந்தைகளிற் கொண்டுவந்தார்கள்.

௨௩. காரான், கன்னே, ஏதேன் என்னப்பட்ட பட்டணங்களின் மனுஷருஞ் சேபாவின் வியாபாரிகளும், அசூரியருங், கில்மாத் பட்டணத்தாரும் உன்னோடே வியாபாரம் பண்ணினார்கள்.

௨௪. இவர்கள் சகலவித நற்சரக்குகளையும் இளநீலப்பட்டுகளுஞ் சித்திரத்தையலாடைகளும் போட்டப்பட்ட புடவைகளையும், விலையுயர்ந்த வஸ்திரங்கள் வைக்கப்பட்டுக் கயிறுகளாலே கட்டியிருக்கிற கேதுருமரங்களான பெட்டிகளையுங் கொண்டுவந்து, உன்னோடே வியாபாரம் பண்ணினார்கள்.

௨௫. உன்னோடிருக்குந் தொழில்துறையைத் தொட்டுத் தர்சீஸ் கப்பல்களின் பாஷர் உன்னைப் பாடினார்கள், நீ சமுத்திரங்களின் நடுவிலே உன்னை நிரப்பி, மிகவும் உன்னை மகிமைப்படுத்தினாய்.

௨௬. உன்னிலே தண்டுவலிக்கிறவர்கள் உன்னைப் பலத்த தண்ணீர்களில் ஓட்டிக்கொண்டு போனார்கள் நடுச்சமுத்திரத்திலே கொண்டற்காற்று உன்னையுடைத்துப்போட்டது.

௨௭. நீ விழுகிற நாளிலேயுன் ஆஸ்திபாடும் உன் சந்தைச்சரக்கும் உன் தொழில்துறையோடுங்கூட உன் கப்பலாட்களும் உன் மாலுமிகளும் உன்னிற்கம்பத்துப்பார்த்தவர்களும், உன்னோடே தொழில்தனம் பண்ணினவர்களும், உன்னிலுள்ள சகல யுத்த மனுஷரும் உன் நடுவிலிருக்கிற சகல கூட்டமும் நடுச்சமுத்திரத்திலே விழுவார்கள்.

௨௮. உன் மாலுமிகள் கூப்பிடுஞ் சத்தத்தாலே பேட்டைகள் அதிரும்.

௨௯. தண்டுவலிக்கிற யாவருங் கப்பல்களுங் கடலின் மாலுமிகள் அனைவருந் தங்கள் கப்பல்களைவிட்டிறங்கிக் கரையிலே நின்று,

௩௰. உன்பேரிலே தங்கள் சத்தத்தைக் கேட்கப்பண்ணிக் கஸ்தியாய்க் கூப்பிட்டுத் தங்கள் தலைகளின்மேற் புழுதியைப் போட்டுக்கொண்டு, சாம்பலிற் புரண்டு, * அப் பபு. ௰௮, ௰௯.

௩௧. * உனக்காக மொட்டையிட்டு, இரட்டுகளையுடுத்திக்கொண்டு, உனக்காக மடிவுமாய்க் கஸ்தியான புலம்பலுமாய்ச் சஞ்சலங்கொள்ளுவார்கள். * எரேமி. ௪௮. ௩௭.

௩௨. அவர்கள் உனக்காகத் தங்கள் அங்கலாய்ப்பிலே புலம்பலையெடுத்து, உன்பேரிற் புலம்பிச் சொல்வதாவது, சமுத்திரத்தின் நடுவில மவுனமாய்ப்போன தீருவுக்குச் சமானமாயிருந்த பட்டணமேது?

௩௩. உன் சந்தைச்சரக்குகள் சமுத்திரங்களிலிருந்து புறப்பட்டுவருகையில, அநேக சனங்களைத் திர்ப்தியாக்கினாய் உன் ஆஸ்தியின் திரளினாலும் உன் தொழில்தனத்தினாலும் பூமியின் இராசாக்களை ஐசுவரியவான்களாக்கினாய்.

௩௪. நீ சமுத்திரங்களாலே தண்ணீர்களின் ஆழங்களில் உடைக்கப்பட்ட காலத்திலேயென்றால் உன் தொழில்துறையும் உன் நடுவிலுள்ள கூட்டமனைத்தும் விழுந்த

போயிற்றென்பார்கள்.

௩௫. தீவுகளின்குடிகளெல்லாம உன்னிமித்தந்திகைப்பார்கள, அவர்களுடைய இராசாக்கள மிகவும பிரமித்துக்கலங்கினமுகமாயிருப்பார்கள.

௩௬. சனசதனங்களிலுள்ளவர்த்தகர் உன்பேரிலேசசைபோடுவார்கள * மகாபயங்கரமாயப்போவாய இனிமேலுன்றனறைக்கும இல்லாதிருப்பாய எனகிறாரென்றுசொல்லென்றார். * உஅ. அதி. ௰௯.

உஅ. அதிகாரம்.

[தீருவினுடைய இராசாவுக்குவருமஅழிவினதீர்க்கதரிசனம.]

கர்த்தருடையவார்த்தையெனக்குண்டாகியவர்சொன்னதாவது,

௨. மனுபுத்திரனே, நீ திருபட்டணத்தினேசனுக்குச்சொல்லவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதேதென்றால, நீ தேவனல்லாத மனுஷனாயிருந்தும, உன்னிருதயம மேட்டிமையாயப்போய * நானதேவன, நான சமுத்திரங்களினநடுவே தேவனுடையவாசஸ்தலத்தில உட்கார்ந்திருக்கிறேனென்று நீ சொல்லி, உன்னிருதயத்தைத தேவனின இருதயத்தைப்போலாக்குகிறாய. * தானி. ௯, உ௰. அப்போஸ்தலர். ௰உ, உ௩.

௩. இதோ, தானியேலைப்பார்க்கிலும நீ ஞானி, இரகசியமானதொன்றும உனக்கு மறைபொருளல்ல,

௪. நீயுன்ஞானத்தினாலும உன உணர்வினாலும உனக்குப்பெலனையுண்டாக்கிப்பொன்னையுமவெள்ளியையும உனபொக்கிஷங்களிற்சேர்த்துக்கொண்டாய.

௫. உன்வியாபாரத்தில நீயுன மகாஞானத்தினாலேயுன்பெலனைப்பெருகப்பண்ணினாயென்று உன்னிருதயமஉனபெலனாலே மேட்டிமையாயிற்று.

௬. ஆகையாற கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதேதென்றால, நீ யுன்னிருதயத்தைத்தேவனின இருதயத்தைப்போலாக்குகிறபடியினாலே,

௭. இதோ, சாதிகளிற பலவந்தராகிய மறுதேசத்தாரை யுனமேல வரப்பண்ணுவோம, அவர்கள உன்ஞானத்தினுடைய அழகுக்குவிரோதமாகத்தங்கள பட்டயங்களையுருவி, உன மினுக்கைக்குலைச்சலாக்குவார்கள.

௮. உன்னைக்குழியிலிறங்கப்பண்ணுவார்கள, நீசமுத்திரங்களின நடுவேகொலையுண்கிறவர்களினசாவாகச்சாவாய.

௯. உன்னைக்கொன்றுபோடுகிறவனுக்குமுன்பாக நீ நானதேவனென்றுசொல்லுவாயோ? உன்னைக்குத்திப்போடுகிறவன கையிலே நீ தேவனல்லாத மனுஷனாயிருக்கிறாயே.

௰. மறுதேசத்தாரின்கையிலே நீ சுன்னத்தில்லாதவர்களினசாவாகச்சாவாய, ஏனெனில நாமிதைச்சொன்னோமென்று கர்த்தராகிய ஆண்டவருரைக்கிறாரென்று சொல்லென்றார்.

௰௧. பின்னையுங்கர்த்தருடையவார்த்தையெனக்குண்டாகிஅவர்சொன்னதாவது,

௰உ. மனுபுத்திரனே, நீ திருவினுடைய இராசாவின்பேரிலே * புலம்பலையெடுத்து, அவனுக்குச்சொல்லவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதேதென்றால, நீ தீர்மானிப்பின முத்திரையைப்போடுகிறவன நீ ஞானத்தால நிறைந்தவனும பூரண அழகுள்ளவனுமானவன.

* உஎ, உ.

௰௩. பராபரனுடையதோட்டமாகியஏதேனிலிருக்கிறவன, கெம்பு, புஷ்பராகம, வச்சிரம, தர்சீஸ், இரத்தினம, கோமேதகம, யஸ்பி, நீலக்கல, சிவப்புக்கல, மரகதம, முதலானசகலவித இரத்தினங்களும, பொன்னும உன்னை மூடிக்கொண்டிருக்கிறது, நீ பட்டந்தரிப்பிக்கப்படுகிறநாளில உன மேளவாத்தியங்களும உன நாகசுரங்களும உன்னிடத்தில ஆயத்தப்பட்டிருந்தது.

௰௪. நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகமபண்ணப்பட்டகேருபு, அப்படியாகவுன்னைவைத்தோம, பராபரனுடையபரிசுத்தபருவதத்திலிருந்தாய, அக்கினிமயமானகல்லுகளின நடுவேஉலாத்தினாய.

௰௫. நீ பட்டந்தரிப்பிக்கப்பட்ட நாள்துவக்கி உன்னில அநியாயங்கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும, உனவழிகளிற குறையற்றிருந்தாய.

௰௬. உன வியாபாரத்தினதிரளைத்தொட்டு, உன நடுமையத்தைக்கொடுமையாலேநிரப்பினார்கள, நீபாவஞ்செய்தாய, ஆகையால நாமஉன்னைப்பராபரனுடைய பருவதத்திலிருந்து ஆகாதவனென்றுதள்ளிக்காப்பாறுகிறகேருபாயிருந்த உன்னை யக்கினிமயமானகல்லுகளின நடுவேயிராதபடிக்கு, அழித்துப்போடுவோம.

௰௭. உன அழகைத்தொட்டுஉன்னிருதயம மேட்டிமையாயிற்று, உன மினுக்கைத்தொட்டு உன்ஞானத்தைக்கெடுத்துப்போட்டாய, உன்னைத்தரையிலே தள்ளிப்போடுவோம, இராசாக்கள உன்னைப்பார்க்கும்படிக்கு, உன்னையவர்களுக்குமுன்பாகவேடிக்கையாக்குவோம.

௰௮. உன அக்கிரமங்களினஏராளத்தினாலும உனவியாபாரத்தின அநீதத்தினாலும உன பரிசுத்தஸ்தலங்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினாய, ஆகையால நாமுன்னைப்பட்சிப்பதாகியஒரு அக்கினியையுன்னடுவிலிரு

ந்தப்பண்ணி, உன்னைப் பார்க்கிறவர்களுடைய கண்களுக்கு முன்பாகவும் உன்னைப் பூமியின்மேற் சாம்பலாக்குவோம்.

௧௯. சனங்களில் உன்னையறிந்த அனைவரும் உன்னிமித்தந் திகைப்பார்கள், * மகா பயங்கரமாய்ப் போவாய், இனியென்றைக்குமில்லாதிருப்பாயென்று [illegible] சொல்லென்றார். * ௨௭, அதிகாரம். ௩௬.

சீதோன்பட்டணத்தின் அழிவும் இஸ்ரவேல் வீட்டாரின் பேரிலே பராபரன் திரும்பவைக்கப்போகிற கிருபையும் முன்னறிவிக்கப்பட்டது.

௨௰. பின்னும் கர்த்தருடைய வார்த்தை யெனக்குண்டாகி, அவர் சொன்னதாவது,

௨௧. மனுஷபுத்திரனே, நீயுன் முகத்தைச் * சீதோனுக்கு நேராகத் திருப்பி, அதற்கு விரோதமாகத் தீர்க்கதரிசன முரைத்துச் சொல்லவேண்டியது. * ஏசாயா. ௨௩, ௰௨.

௨௨. கர்த்தராகிய பராபரன் சொல்லுகிறதேதெனில், சீதோனே, இதோ நாமுனக்கு விரோதமாக வந்து உன்னடுவிலே * மகிமைப்படுவோம், நாம் அதிலே நியாயத்தீர்ப்புகளைச் செய்து, அதிலே பரிசுத்தரென்று விளங்கும்போது, நாம் கர்த்தரென்றறிந்து கொள்ளுவார்கள். * ௨ மோசே. ௰௪. ௰௮.

௨௩. நாம் அதிலே பெருவாரிக் காய்ச்சலையும், அதின் வீதிகளில் இரத்தஞ்சிந்துதலையும் அனுப்புவோம், சுற்றிலும் அதற்கு விரோதமாய் வந்த பட்டயத்தினாலே அதின் நடுவிலே கொலையுண்டு விழுவார்கள். அப்போது நாம் கர்த்தரென்றறிந்து கொள்ளுவார்கள்.

௨௪. இஸ்ரவேல் வீட்டாரை நிஸ்காரம் பண்ணுகிற அவர்களுடைய சுற்றுப்புறத்தாராகிய அனைவரிலும் இனிக் குத்துகிற முள்ளும் நோவுண்டாக்கிற நெருஞ்சிலும் அவர்களுக்கிராது, அப்படியே நாம் கர்த்தராகிய ஆண்டவரென்றறிந்து கொள்ளுவார்கள்.

௨௫. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதேதெனில், நாம் இஸ்ரவேல் வீட்டாரை யவர்கள் சிதறடிக்கப்பட்டிருக்கிற சனசதளங்களிடத்திலிருந்து கூட்டிக்கொண்டு வந்து, அவர்களால் சாதிகளின் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்தரென்று விளங்கும்போது அவர்கள் நம்முடைய தாசனாகிய யாகோபுக்கு நாங் கொடுத்த தங்களுடைய தேசத்திலே குடியிருப்பார்கள்.

௨௬. அவர்களுடைய சுற்றுப்புறத்தாரில் அவர்களை நிஸ்காரம் பண்ணின அனைவரிலும் நாம் நியாயத்தீர்ப்புகளைச் செய்யும்போது, அவர்கள் அதிலே சுகமாய்க் குடியிருந்து, வீடுகளைக் கட்டித் திராட்சத்தோட்டங்களை நாட்டிச் சுகமாய் வாசம்பண்ணி, நாந்தங்களைப் பராபரனாகிய கர்த்தரென்றறிந்து கொள்ளுவார்களென்று சொல்லென்றார்.

௨௯. அதிகாரம்.

[பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வருந்தேவ ஆக்கினைகளின் தரிசனம்.]

பத்தாம் வருஷத்துப் பத்தாம் மாதம் பன்னிரண்டாந் தேதியிலே கர்த்தருடைய வார்த்தை யெனக்குண்டாகி, அவர் சொன்னதாவது,

௨. மனுஷபுத்திரனே, நீ எகிப்தின் ராசாவாகிய பார்வோனுக்கு நேராக உன் முகத்தைத் திருப்பி, அவனுக்கும் * எகிப்து முழுதுக்கும் விரோதமாகத் தீர்க்கதரிசன முரைத்து, * ஏசாயா. ௰௯, ௧.

௩. சொல்லி வசனிக்கவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதேதெனில் எகிப்தின் இராசாவாகிய பார்வோனே, உன் ஆறுகளின் நடுவிலே படுத்துக்கொண்டு, என் ஆறு என்னுடையது, நான் அதைச் செய்துவிட்டேனென்று சொல்லுகிற * பெரிய முதலையே இதோ, நாமுனக்கு விரோதமாக வந்து, * ௩௨, அதி. ௨.

௪. உன்றாடைகளிலே தூண்டில்களை மாட்டி உன் ஆறுகளின் மச்சங்களை உன் செதிள்களிலே ஒட்டிக்கொள்ளப்பண்ணி, உன்னையுன் ஆறுகளின் நடுவிலிருந்து தூக்குவோம், உன் ஆறுகளின் மச்சங்களுமெல்லாம் உன் செதிள்களில் ஒட்டிக்கொண்டிருக்கும். * ௩௮, அதி. ௪. ஏசாயா. ௩௭, அதி. ௨௯.

வார்கள், மனுஷருடைய எலும்பை அவர்களில் ஒருவன் காணும்போது, புதைக்கிறவர்கள் அதைக் கோகுடைய சேனையின் பள்ளத்தாக்கிலே புதைக்குமட்டும் அதினண்டையிலே ஒருகுறிப்படையாளத்தை நாட்டுவான.

௰௫. அங்கே ஊரின் பேருமுண்டாய் அதுசேனைப்புரமென்னப்படும் இப்படியே தேசத்தைச் சுத்தம்பண்ணுவார்கள்.

௰௭. இப்போதும் மனுஷபுத்திரனே, கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, * நீ சகலவித இறகுமுள்ள பட்சிகளுக்கும் வெளியிலிருக்கிற சகல மிருகங்களுக்குஞ் சொல்லவேண்டியதேதென்றால், நீங்கள் கூடிக்கொண்டு, இஸ்ரவேலின் பருவதங்களில் நாம் உங்களுக்காக அடிக்கும் பெரிய பெலியடிப்பாகிய நமமுடைய பெலியடிப்புக்குச் சுற்றிலுமிருந்து வந்து சேர்ந்து மாம்சத்தின்று இரத்தங்குடியுங்கள். * அறிவி. ௰௯. அதி. ௰௭. ௰௮.

௰௮. நீங்கள் பராக்கிரமசாலிகளின் மாம்சத்தைத் தின்று, பூமியினுடைய பிரபுகளின் இரத்தத்தைக் குடிப்பீர்கள் அவர்களெல்லாரும் பாசானிலே கொழுத்துப்போன ஆட்டுக்கடாய்களுக்கும் ஆட்டுக்குட்டிகளுக்கும் வெள்ளாட்டுக் கடாய்களுக்கும் காளை யெருதுகளுக்குஞ் சமானமானவர்கள்.

௰௯. நாம் உங்களுக்காக அடிக்கும் நமமுடைய பெலியடிப்பினாலே நீங்கள் திருத்தியாகக் கொழுப்பைத் தின்று, வெறியாக இரத்தங்குடித்து,

௨௰. நமது பந்தியிலே குதிரைகளையும் வாகனங்களையும் பராக்கிரமசாலிகளையுஞ் சகல யுத்த ஆட்களையுந் தின்று திருத்தியாவீர்களென்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறாரென்பதைச் சொல்லு.

௨௧. * இப்படி நமது மகிமையைப் புறச்சாதிகளுக்குள்ளே விளங்கப்பண்ணுவோம், நாஞ்செய்த நமது நியாயத்தையும் அவர்கள்மேல் நாம்போட்ட நமது கையையும் எல்லாச்சாதிகளுங்காணும் * சங். ௯௬. ௯.

௨௨. அன்று முதற்கொண்டு நாளது வரையிலே நாந்தங்கள் பராபரனாகிய கர்த்தரென்று இஸ்ரவேல்வீட்டார் அறிந்துகொள்ளுவார்கள்.

௨௩. இஸ்ரவேல்வீட்டார் தங்கள் அக்கிரமத்தினிமித்தமே சிறையிருப்பிலே கொண்டுபோகப்பட்டார்களென்பதை அப்போது புறச்சாதிகள் அறிந்துகொள்ளும், ஏனெனில் அவர்கள் நமக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினபடியினாலே, நாம் நமது முகத்தை யவர்களுக்கு மறைத்து, அவர்களை யவர்கள் சத்துருக்களின் கையிலொப்புக்கொடுத்தோம். அனைவரும் பட்டயத்தாலும் விழுந்தார்கள்.

௨௪. அவர்களுடைய அசுத்தத்துக்குத் தக்கதாகவும், அவர்கள் மீறுதலுக்குத் தக்கதாகவும் நாம் அவர்களை நடப்பித்து நமது முகத்தை யவர்களுக்கு மறைத்தோம்.

௨௫. ஆனது கொண்டு கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது.

௨௬. அவர்கள் தங்கள் தேசத்திலே சுகமாய்ப் பயப்படுத்துவாரில்லாமலே தங்கள் சீமையிலே குடியிருக்கையில் நமக்கு விரோதமாய்ப் பண்ணின தங்களுடைய எல்லாத்துரோகத்தையுஞ் சுமந்து வந்தபிறபாடு நாம் யாக்கோபின் சிறையிருப்பைத் திருப்பி, * இஸ்ரவேல் வீட்டார் அனைத்தும் இரங்கி, நமது பரிசுத்த நாமத்துக்காகப் பத்தி வைராக்கியமாயிருப்போம்.
* ரோமர் ௰௧. ௨௬.

௨௭. நாம் அவர்களைச் சனங்களிலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களுடைய பகைஞரின் தேசங்களிலிருந்து கூட்டிக்கொண்டுவந்து, திரளான சாதிகளுடைய கண்களுக்கு முன்பாக அவர்களில் மகிமையடைகையில்,

௨௮. அப்போது தங்களைப் புறச்சாதிகளிடத்திற் சிறையாகக் கொண்டுபோகப்பண்ணின நாந்தங்களில் ஒருவனையும் அங்கே அப்புறம் வைக்காமல், தங்களைத் தங்கள் சீமையிலே திரும்பக் கூட்டிக்கொண்டுவந்தோமென்பதினாலே நாந்தங்களைப் பராபரனாகிய கர்த்தரென்றறிந்துகொள்ளுவார்கள்.

௨௯. * நாம் இஸ்ரவேல் வீட்டார்மேல் நமமுடைய ஆவியைப் பொழிந்தபோது நமது முகத்தை இனி யவர்களுக்கு மறைப்பதில்லையென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ௨௯, ௨௫. யோவேல் ௨, ௨௮.

௪௰. அதிகாரம்.

[எசேக்கியேலுக்குத் தரிசனையிலே காண்பிக்கப்பட்ட தேவாலயத்தினுடைய அளவுகளும் அறைகளும் கட்டியிருந்த விவரம்.]

நாங்கள் சிறையிருப்பிலே கொண்டுபோகப்பட்டிருந்த இருபத்தைந்தாம் வருஷத்தின் துவக்கமான முதலாம் மாதம் பத்தாந்தேதியாகிய அன்றே கர்த்தருடைய கை என்மேல் வந்து, அவரென்னை யவ்விடத்திலே கொண்டுபோனார், * பட்டணம் அழிக்கப்பட்டது அப்போது பதினாலு வருஷமாயிற்று. * ௩௩, ௨௧.

௨. தேவதரிசனைகளில் அவரென்னை இஸ்ரவேல்தேசத்திற்குக் கொண்டுபோய், என்னை மகா உயர்ச்சியான ஒரு பருவதத்தின்மேல் நிறுத்தினார், அதின்மேலே தெற்கே ஒரு பட்டணம் கட்டியிருக்கிறது போல

ணபபடடது.

௩. அவரெனனையஙகேகொணடுபோனார்; இதோ, அஙகேயொருபுருஷனிருநதார், அவருடைய ரூபுவெணகல ரூபாக விருநதது, அவர் கையிறசணறகயிறுமயொரு அளவுகோலுமிருநதது, அவர்வாசலிலே நினறார்.

௪. அநதபபுருஷன எனனோடேசொனனதாவது, மனுஷபுததிரனே, * நீ கணணாரப்பார்ததுக்காதாரக்கேடடு, நாமஉனககுககாணபிபபதெலலாவறறின பேரிலும உனமனதைவை, ஏனெனில உனககதைக காணபிககுமபடிககு இஙகேகொணடுவரபபடடாய, நீ காணபதையெலலாம இஸரவேல வீடடாருக்கு அறிவியெனறார்,

சச, ௬.

௫. இதோ, வீடடுககுபபுறம்பேசுறறிலும ஒருமதிலிருநதது, அநதப்புருஷனகையில முழததாலே ஆறுமுழ நீளமான அளவுகோலிருநதது, ஒவவொருமுழமமுழததிலும ஒருசாணவிரறகடை அதிகமானது அவர் அநதககடடிடமிருநத அகலததை யொருகோலாகவும உயர்சசியை யொருகோலாகவும அளநதார்.

௬. பிறபாடுஅவர்கிழததிசைககெதிரான ஒலிமுகவாசலுககுவநது அதின படிகளின மேலேறி, வாசறபடியை ஒருகோலஅகலமாகவுமமறறவாசறபடியையொருகோலஅகலமாகவும அளநதார்.

௭. ஒவவொரு அறை ஒருகோலநீளமும ஒருகோலஅகலமுமாயிருநதது, அறைவீடுகளுககுநடுவே ஐநதுமுழமவிடடிருநதது, வாசலினசாலையருகே உள வாசறபடி ஒருகோலாயிருநதது.

௮. வாசலினசாலையையும உள்ளே ஒருகோலாக அளநதார்.

௯. பிறகுவாசலின சாலையையெடடுமுழமாகவும, அதின தூணுதாரஙகளை இரணடுமுழமாகவும அளநதார், வாசலின உட்சாலையதுதானே.

௰. கிழததிசைககெதிரான வாசலின அறைகளிநதணடைமூனறும அநதணடைமூனறுமாயிருநதது, அவைகள மூனறுககும ஒருஅளவும இநதணடையும அநதணடையுமிருநததூணுதாரஙகளுக கொருஅளவுநதானே.

௰௧. பிறகுவாசலுடைய நடையின அகலததைபபததுமுழமாகவும வாசலின நீளததைபதினமூனறுமுழமாகவுமஅளநதார்.

௰௨. அறைகளுககு முனனே இநதணடையொருமுழஎலலையுமஅநதணடையொருமுழஎலலையுமிருநதது, ஒவவொரு அறையிநதணடைககாறுமுழமும அநதணடைககாறுமுழமுமாயிருநதது.

௰௩. பிறபாடு வாசலிலிருநத அறையினமேறகூரையைததுவககிஅநத அறையினமேறகூரைமடடுககும இருபத்தைநதுமுழமாக அளநதார், கதவுககெதிரே கதவிருநதது.

௰௪. தூணுதாரஙகளையோ அறுபதுமுழமாக அளவிடடார், இநதத்தூணுதாரஙகளருகேசுற்றிலும ஒலிமுகவாசலினமுற்றமிருநதது.

௰௫. உட்பிரவேசிககிற ஒலிமுகவாசலினமுகபபைத்துவககி, உட்புறமான வாசலுடையசாலையினமுகபபுமடடுககும ஐமபதுமுழமிருநதது.

௰௬. வாசலுககுட்புறமாகச சுறறிலும அறைகளுககும அவைகளின தூணுதாரஙகளுககும ஒடுககமான பலகணிகளிருநதது, சாலைகளிலுமஅபபடியேதானே, உட்புறமாயசசுறறிலும அநதபபலகணிகளுநதூணுதாரஙகளிற்பேரீசசுகளுமிருநதது.

௰௭. பிற்பாடெனனை வெளிமுற்றத்துககழைததுபபோனார், இதோ அறைவீடுகளும, முற்றததிலே சுறறிலுமபடுததிருககிற தளவரிசையுமிருநதது, முபபதுஅறைவீடுகள அநதத்தளவரிசையிலிருநதது.

௰௮. வாசலுககுபபககமும வாசல்களின நீளததுககெதிருமான அநதத்தளவரிசைதாழ்வானதளவரிசையாயிருநதது.

௰௯. தாழ்வானவாசலினமுகபபுததுவககிஉள்முறறத்தினுடைய புறமுகபபுமடடுமுளள விசாலததையோவெனறாலகிழககேயுமவடககேயும நூறுநூறுமுழமாகஅளநதார்.

௨௰. வெளிமுற்றத்திறகடுதத வடதிசைககெதிரானவாசலின நீளததையும அகலததையுமஅளநதார்.

௨௰௧. இநதணடை மூனறும அநதணடைமூனறுமாகிய அதின அறைகளும அதின தூணுதாரஙகளும அதினசாலைகளுமமுநதினவாசலினளவுககுசசரியாயிருநதது, அதின நீளமஐமபதுமுழமும அகலம இருபத்தைநதுமுழமுமானது.

௨௰௨. அதினபலகணிகளும அதின்சாலைகளும அதினபேரீசசுகளுஙகிழ்த்திசைககெதிரானவாசலின அளவுககுசசரியாயிருநதது, ஏழுபடிகளால அதறகேறுகிறது, அதினசாலைகள அவைகளுககு முனனாகவிருநதது.

௨௰௩. வடதிசையுஙகிழ்த்திசையுமானஒவவொரு வாசலுககெதிராக உள்முறறத்திறகுமவாசலகளிருநதது, ஒருவாசலைததுவககிமறறவாசலமடடும நூறுமுழமாகஅளநதார்.

௨௰௪. பிறகு எனனைததெனதிசைககழைததுககொணடுபோனார்,இதோதெனதிசைககெதிரானவாசலுமிருநதது, இதின தூணுதாரஙகளையும இதினசாலைகளையும அநதஅளவுககுசசரியாகஅளநதார்.

௨௰௫. அநதபபலகணிககுசசரியாக இத

றும இதினசாலைகளுக்கும பலகணிகளசு றறிலுமிருநதது, நீளம ஐமபதுமுழமும அகலம இருபததைநது முழமுமாயிருநதது.

௨௬. அதில ஏறுகிறதுக்கு ஏழுபடியும அதறகுமுனனுக அதின சாலைகளுமிருநதது, அதின தூணுதாரஙகளில அதறகுபபேரிசசுகளும ஒனறு இநதணடையும ஒனறு அநதணடையுமாயிருநதது.

௨௭. உள்முறறததிறகும ஒருவாசல தெனதிசைககெதிராகவிருநதது, தெனதிசைககு ஒருவாசலதுவககி மறறவாசலமடடாக நூறுமுழமாக அளநதார்.

௨௮. பிறகு அவர் தெறகுவாசலால எனனையுள்முறறததிறகழைததுபபோயத் தெறகுவாசலை அநத அளவுககுசசரியாக அளநதார்.

௨௯. இதின அறைகளும, இதினதூணுதாரஙகளும இதினசாலைகளும அநத அளவுககுசசரியாகவிருநதது, இதறகும இதினசாலைகளுககும பலகணிகளசுறறிலுமிருநதது, நளம ஐமபது முழமும அகலம இருபததைநது முழமுமாயிருநதது.

௩௰. இருபததைநதுமுழ நீளமும ஐநது முழ அகலமுமான சாலைகளசுறறிலுமிருநதது.

௩௧. அதினசாலைகள வெளிமுறறததிலிருநதது, அதினதூணுதாரஙகளிற பேரிசசுகளுமிருநதது, அதில ஏறுகிறபடிகள எடடு.

௩௨. பிறபாடு அவர் கீழததிசை வழியாலே எனனையுள்முறறததுககழைததுபபோய, இநதவாசலை அநத அளவுககுசசரியாக அளநதார்.

௩௩. இதின அறைகளும இதின தூணுதாரஙகளும இதினசாலைகளும அநத அளவுககுசசரியாகவிருநதது இதறகும இதினசாலைகளுககும பலகணிகள சுறறிலுமிருநதது, நீளம ஐமபதுமுழமும அகலம இருபததைநதுமுழமுமாயிருநதது.

௩௪. அதினசாலைகள வெளிமுறறததிலிருநதது, அதின தூணுதாரஙகளில இநதணடையும அநதணடையும பேரிசசுகளுமிருநதது, அதில ஏறுகிறபடிகளஎடடு.

௩௫. பிறபாடவர் எனனை வடககுவாசலுககழைததுபபோய, அநத அளவுககுசசரியாகஅளநதார்.

௩௬. இதின அறைகளும இதினதூணுதாரஙகளும இதினசாலைகளும அபபடிததான இதறகுபபலகணிகளுஞசுறறிலுமிருநதது, நீளம ஐமபதுமுழமும அகலம இருபததைநது முழமுமாயிருநதது.

௩௭. அதின தூணுதாரஙகள வெளிமுறறததிலிருநதது, அதின தூணுதாரஙகளில இநதணடையும அநதணடையும பேரிசசுகளுமிருநதது, அதிலேறுகிறபடிகளஎடடு.

௩௮. அதின அறைகளும, அதினததவுகளும வாசலகளின தூணுதாரஙகளுககருகே யிருநதது, அஙகே தகனபலிகளைக கழுவுவார்கள.

௩௯. வாசலினசாலையிலோவெனறால இநதணடை இரணடுபீடஙகளும அநதணடை இரணடுபீடஙகளும அவைகளின மேலே தகனபலியையும பாவமபோககும பலியையும குறறமபோககும பலியையுமகொலலுகிறதறகாகவிருநதது.

௪௰. வடககுவாசலுககுட்பிரவேசிக்கிறதறகு ஏறிபபோகிறவெளிபபுறததிலே இரணடுபீடஙகளும வாசலின சாலையிருககிற மறுபுறததிலே இரணடுபீடஙகளுமிருநதது.

௪௧. வாசலினபுறமாய இநதணடை நாலுபீடஙகளும அநதணடை நாலுபீடஙகளும ஆக எடடுப்பீடஙகளிருநதது, அவைகளின மேறபலிகளைப படிபபார்கள.

௪௨. தகனபலிககடுதத நாலுபீடஙகள வெடடினகலலாயிருநதது, ஒனறரைமுழ நீளமும, ஒனறரைமுழ அகலமும ஒருமுழ உயரமுமாயிருநதது, அவைகளின மேலே தகனபலிகளையும மறறபபலிகளையும அடிககிற ஆயுதஙகளையுமவைபபார்கள.

௪௩. நாலுவிரற்கடையாகிய ஆணிகளசுறறிலும வரிசையாயடிககபபடடிருநதது, செலுததும பலிகளின மாமசம பீடஙகளினமேலவைககபபடும.

௪௪. உள்முகததிலே உள்வாசலுககு வெளிபபுறமபாகபபாடுவார்களின அறைகளிருநதது, அவைகளிலவடககுவாசலின பககமாகவிருநதவைகள தெனதிசைககெதிராகவும கிழககுவாசறபககமாகவிருநத வேறொருவரிசை வடதிசைககெதிராகவுமிருநதது.

௪௫. அவரெனனோடேசொனனதாவது தெனதிசைககெதிராயிருககிற இநத அறைகளவீடடின காவலைககாககிற ஆசாரியர்களுடையது.

௪௬. வடதிசைககெதிராயிருககிறஅறைகளோவெனறால பலிபீடததின காவலைககாககிற ஆசாரியர்களுடையது இவர்கள லேவியின புததிரரிற கர்ததருடைய சநநிதிககுச் சமீபமாய் வநது அவருககாராதனை செயதறகாகசசேருகிற சாதோககின புததிரர் எனறார்.

௪௭. அவர் முறறததை நூறுமுழ நீளமாகவும நூறுமுழ அகலமாகவுமஅளநதார், அது சதுரமானது, பலிபீடமோவெனறால வீடடுககுமுனனேயிருநதது.

௪௮. பிறபாடவரெனனை வீடடின மணடபததுககழைததுபபோய மணடபததின தூணுதாரததை இநதணடை ஐநதுமுழமும அநதணடை ஐநதுமுழமுமாக அளநதார், வாசலின அகலம இநதணடை மூனறுமுழமும அநதணடை மூனறுமுழமுமாயிருநதது.

௪௯. சாலையின நீளம இருபதுமுழம

கலம பதினொரு முழமுந்தானே, ஏறிப்போகிற படிகள் அதற்கிருந்தது, தூணுகளின் மேலிருந்தணடையொருதூணும் அந்தண்டையொருதூணுமிருந்தது.

சக. அதிகாரம்.

[தேவாலயங்கட்டியிருந்தவிவரம்.]

பிறகு அவரென்னைத் தேவாலயத்திற்சமைத்துப்போய்த் தூணுதாரங்களை இந்தணடைஆறுமுழஅகலமும, அந்தணடைஆறுமுழஅகலமுமாக அளந்தார், அது கூடாரத்தின அகலம.

உ. வாசல நடையின அகலமபத்துமுழமும வாசல நடையின பக்கங்கள இந்தணடை ஐந்துமுழமும அந்தணடை ஐந்துமுழமுமாயிருந்தது, அதின நீளத்தை நாறபதுமுழமும அகலத்தை இருபதுமுழமுமாக அளந்தார்.

ஙு. பிறபாடவர் உளளுககுபபோயவாசல நடையின தூணுதாரங்களை இரணடுமுழமாகவும, வாசலநடையை ஆறுமுழமாகவும வாசலநடையின அகலத்தையேழுமுழமாகவும அளந்தார்.

ச. பிறகு அவர் தேவாலயத்தின தளததிலே அதின நீளததையிருபதுமுழமும அதின அகலத்தையிருபதுமுழமுமாகஅளந்து, என்னுடனே,இது பரிசுத்தத்திறகும பரிசுத்தஸ்தலமென்றார்.

ரு. பிறபாடவர் வீட்டினசுவரை ஆறுமுழமாகவும, வீட்டைச்சுறறிலுமிருந்த பக்கக்கட்டிடனுடைய அகலத்தை நாலுமுழமாகவும அளந்தார்.

சு. இந்தப்பக்கக்கட்டுகளோவென்றால் பக்கக்கட்டினமேற பக்கக்கட்டானவரிசைகளாய் முப்பதுமூனறிருந்தது, அவைகள வீட்டினசுவருக்குளளேன பிராமல, பக்கக்கட்டுகளுக்காகச்சுறறிலும, அவைகளூனறும்படிக்குவீட்டுக்கடுத்திருந்த ஒட்டுச்சுவரிலேபாயந்தது.

எ. உயரவுயரசசுறறிலும பக்கக்கட்டுகளுக்கு அகலமுண்டாயிருந்தது, ஏனென்றால் வீட்டைச்சுறறிலும உயரவுயர வீட்டினுடைய சுறறிருந்தது, ஆனதுகொண்டு உயரததிலே அகலம உளளேயிருந்தது, இப்படி கீழ்நிலையிலிருந்து நடுநிலைவழியாயமேல்நிலைக்கேறுகிறது.

அ. மாளிகைக்கிருந்த உயரத்தையுஞ்சுறறிலும பார்த்தேன, பக்கக்கட்டுகளின அஸ்திவாரங்கள ஆறுபெரியமுழமாகிற ஒரு முழக்கோலின உயர்சசியாயிருந்தது.

கூ. புறமபே பக்கக்கட்டுக்கிருந்த சுவரின அகலம ஐந்துமுழமானது, வீட்டுக்கிருக்கும பக்கக்கட்டுகளின மாளிகையிலே வெறுமையாய விட்டிருந்த இடங்களும்படித்தான.

ய. வீட்டைச்சுறறிலும அறைவீடுகளுக்குநடுவாகவிருந்தவிசாலம இருபதுமுழமாயிருந்தது

யக. பக்கக்கட்டினுடைய வாசலநடைகளவெறுமையாயவிட்டிருந்த இடங்களிலிருந்து,ஒருவாசலநடை வடக்கேயும ஒருவாசலநடை தெறகேயுமிருந்தது, வெறுமையாயவிட்டிருந்த இடங்களின விசாலஞ்சுறறிலும ஐந்துமுழங்களாயிருந்தது.

யஉ. மேறறிசைத்திக்கிலே வகுப்பினமுனனிருந்தமாளிகைமட்டும அகலமஎழுபதுமுழமும, மாளிகையினுடைய சுவரின அகலஞ்சுறறிலுமைந்துமுழமும, அதினுடைய நீளந்தொண்ணூறுமுழமுமாயிருந்தது.

யங. அவர்வீட்டை நூறுமுழ நீளமாகவும வகுப்பையுமமாளிகையையும அதினசுவர்களையும நூறுமுழநீளமாகவும அளந்தார்.

யச. வீட்டினமுற்புறமுங் கிழக்குக்கெதிரானவகுப்புமிருந்த அகலம நூறுமுழமாயிருந்தது.

யரு. வகுப்பினபிற்புறமாக அதறகெதிரேயிருந்தமாளிகையின நீளத்தையும, அதறகு இந்தணடையும அந்தணடையுமிருந்த நடைகாவணங்களையும அளந்தார், உளளான தேவாலயமும முறறத்தினசாலைகளுமுட்பட அது நூறுமுழமாயிருந்தது.

யசு. வாசறபடிகளும், ஒடுக்கமானபலகணிகளும மூனறுபக்கங்களிறசுறறிலும வாசலகளுக்கெதிரான நடைகாவணங்களுஞ்சுறறிலுந்தரைதுவக்கிப பலகணிகள மட்டாகப்பலகையடித்திருந்தது, பலகணிகள மட்டாகமூடப்பட்டிருந்தது.

யஎ. வாசலினமேலேதுவக்கிவீட்டின உட்புறமுமவெளிப்புறமுஞ்சுறறிலுஞ்சுவரின் உட்புறமுமவெளிப்புறமுமெல்லாம அளவிட்டிருந்தது.

யஅ. கேருபீனகளும பேரீசசுகளுந்திரப்பட்டிருந்தது, கேருபீனுக்குங்கேருபீனுக்கும நடுவாக ஒவவொரு பேரீசசும* ஒவவொரு கேருபீனுக்கு இரணடுமுகங்களுமிருந்தது. * ய, யசு.

யகூ. மனுஷமுகம இந்தணடையிருந்த பேரீசசுக்கெதிராகவும, சிங்கமுகம அந்தணடையிருந்தபேரீசசுக் கெதிராகவுமிருந்தது.

உய. * தரைதுவக்கிவாசலினமேறபுறமட்டாகவும, தேவாலயத்தினசுவரிலுங் கேருபீனகளும பேரீசசுகளுந் திரப்பட்டிருந்தது. * க, இராசா. சு, உகூ.

உக. தேவாலயத்தின கதவுநிலைகள சதுரமும பரிசுத்தஸ்தலத்தினுடையமுகப்பினருபு அந்தருபுக்குச்சரியுமாயிருந்தது.

உஉ. மரமான பலிபீடத்தின உயரமமூனறுமுழமும அதினநீளம இரணடுமுழமு

மாயிருந்தது, அதற்குள்ள கோடிகளிருந்தது, அதின் நீளமும் அதின் பக்கங்களும் மரமானது, அவர் என்னுடனே, இது கர்த்தருக்கு முன்பாக இருக்கிற பீடமென்றார்.

௨௩. தேவாலயத்திற்கும் பரிசுத்தஸ்தலத்திற்கும் இரண்டுவாசல்களும்,

௨௪. வாசல்களுக்கு மடக்குக்கதவுகளாகிய இரட்டைக்கதவுகளுமிருந்தது, ஒரு வாசலுக்கு இரண்டும் மற்றவாசலுக்கு இரண்டுகதவுகளுந்தானே.

௨௫. சுவர்களிலே சித்திரப்பட்டிருந்தது போலே தேவாலயத்தினுடைய அந்தக்கதவுகளிலே கேருபீன்களும் பேரீச்சுகளுஞ் சித்திரப்பட்டிருந்தது, புறம்பே சாலையின் முன்பாக உத்திரங்களிருந்தது.

௨௬. சாலையின் பக்கங்களில் இந்தண்டையிலும் அந்தண்டையிலும், வீட்டினுடைய பக்கக்கட்டுகளிலும் ஒடுக்கமான பலகணிகளிலும் பேரீச்சுகளும் உத்திரங்களுமிருந்தது.

௪௨. அதிகாரம்.

[வெளிமுற்றமும் வெளிமதிலுங் கட்டியிருந்தவிவரம்.]

பிற்பாடவர் என்னை வடதிசையான வழியாக வெளிமுற்றத்திலே புறப்படப்பண்ணி, வகுப்புக்கெதிராகவும் மாளிகைக்கெதிராகவும் வடக்கேயிருந்த அறைவீடுகளுக்கென்னையழைத்துப்போனார்.

௨. நூறுமுழ நீளத்திற்கு முன்னாக வடக்குவாசலிருந்தது, அவ்விடத்து அகலம் ஐம்பதுமுழம்.

௩. உள்முற்றத்திலிருந்த இருபதுமுழங்களுக்கெதிராகவும், வெளிமுற்றத்திலிருந்த தளவரிசைக்கெதிராகவும், ஒன்றுக்கொன்றெதிரான மூன்றுநிலைகளுள்ள நடைகாவணங்களிருந்தது.

௪. உட்புறத்திலே அறைவீடுகளின் முன்பாகப் பத்துமுழ அகலமான வழியும், ஒருமுழ அடிப்பாடுமிருந்தது, அவைகளின் வாசல்கள் வடக்காயிருந்தது.

௫. உயரவிருந்த அறைவீடுகள் அகலக்கட்டையாயிருந்தது, ஏனென்றால் நடைகாவணங்கள் கீழேயிருக்கிற அறைவீடுகளுக்கும் நடுவேயிருக்கிறவைகளுக்குமிஞ்சின உயர்ச்சியான மாளிகையாயிருந்தது.

௬. ஏனென்றால் அவைகள் மூன்றுநிலையானவைகள், அவைகளுக்கு முற்றங்களின் தூண்களுக்கொத்த தூண்களுமில்லை, ஆகையாலே தரையிலிருந்தளக்க, அவைகள் கீழேயும் நடுவேயுமிருக்கிறவைகளைப்பார்க்க அகலக்கட்டையாயிருந்தது.

௭. புறம்பே அறைவீடுகளுக்கெதிரே வெளிமுற்றத்துத்திசையில் அறைவீடுகளுக்கு முன்பாகவிருந்த மதிலின் நீளம் ஐம்பதுமுழம்.

௮. ஏனென்றால் வெளிமுற்றத்திலுள்ள அறைவீடுகளின் நீளம் ஐம்பதுமுழமே, அல்லால் இதோ, தேவாலயத்திற்கு முன்னே நூறுமுழமாயிருந்தது.

௯. கிழக்கே வெளிமுற்றத்திலிருந்து பிரவேசிக்கிற அறைவீடுகளுக்குட்பிரவேசிக்கிற அவைகளின் கீழே இருந்தது.

௰. கீழ்த்திசையான முற்றத்துமதிலின் அகலத்தில் வகுப்புக்கு முன்பாகவும் மாளிகைக்குமுன்பாகவும் அறைவீடுகளுமிருந்தது.

௰௧. அவைகளுக்கு முன்னுள்ள வழியிலே அவைகள் தங்கள் நீளத்திலுந் தங்கள் அகலத்திலும், தங்களுடைய வெளிவாசல்களிலும், தங்கள் திட்டங்களிலுந் தங்கள் வாசல்நடைகளிலும் வடதிசையான அறைவீடுகளின் சாயலாயிருந்தது.

௰௨. தென்திசையான அறைவீடுகளின் வாசல் நடைக்கொப்பாக ஒருவாசல் நடைவழியின் முகப்பிலிருந்தது, கீழ்த்திசையில் அவைகளுக்குட்பிரவேசிக்குமிடத்திலே செம்மையான மதிலின் முன்னேயிருந்த வழியின் முகப்பிலேதானே.

௰௩. அவர் என்னோடே சொன்னது, வகுப்புக்கு முன்னிருக்கிற வடபுறமான அறைவீடுகளுந் தென்புறமான அறைவீடுகளும் பரிசுத்த அறைவீடுகளாயிருக்கிறது, அங்கே கர்த்தரண்டைக்குச் சேருகிற ஆசாரியர்கள் மகா பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவைகளைப் புசிப்பார்கள், அங்கே மகா பரிசுத்தமானவைகளையும் போஜனபலி காணிக்கைகளையும் பாவம்போக்கும் பலியையும், குற்றம்போக்கும் பலியையும் வைப்பார்கள், ஏனென்றால் அந்தஸ்தலம் பரிசுத்தமாயிருக்கிறது.

௰௪. ஆசாரியர் உட்பிரவேசித்தபோது அவர்கள் பரிசுத்தஸ்தலத்திலிருந்து வெளிமுற்றத்திற்குப் புறப்படாததற்கு முன்னே அங்கே தாங்கள் ஆராதனைசெய்த, உடுத்தியிருந்த வஸ்திரங்களைக் கழற்றிவைப்பார்கள், ஏனென்றால் அவைகள் பரிசுத்தமானவைகள், வேறே வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு ஜனத்தின் முற்றத்திலே சேருவார்களென்றார்.

௰௫. அவர் உள்வீட்டையளந்து முடித்தபின்பு கீழ்த்திசைக்கெதிரான வாசல்வழியாய் என்னை வெளியேயழைத்துக்கொண்டுபோய், அதைச் சுற்றிலும் அளந்தார்.

௰௬. கிழக்காற்றுப்பக்கத்தை அளவுகோலால் அளந்தார், அது அளவுகோலின்படி சுற்றிலும் ஐந்நூறு கோலாயிருந்தது.

௰௭. வடகாற்றுப்பக்கத்தை அளவுகோலால் சுற்றிலும் ஐந்நூறு கோலாக அளந்தார்.

௰௮. தென்காற்றுப் பக்கத்தை அ

கோலாலே ஐந்நூறுகோல்களாய் அளந்தார்.

௧௯. மேல்காற்றுப் பக்கத்திலே திரும்பிக்கொண்டு அளவுகோலாலே ஐந்நூறு கோல்களாய் அளந்தார்.

௨௰. நாலு காற்றுப் பக்கங்களிலும் அளந்தார், பரிசுத்தமான ஸ்தலத்துக்கும் பரிசுத்தமல்லாத ஸ்தலத்துக்கும் வித்தியாசம் பண்ணும்படிக்கு, அவைக்கு ஐந்நூறுகோல் நீளமும் ஐந்நூறுகோல் அகலமுமான மதில் சுற்றிலுமிருந்தது.

௪௩. அதிகாரம்.

[தேவாலயங் கர்த்தருடைய மகிமையினாலே நிரப்பப்பட்ட தரிசனை.]

அப்போது அவன் என்னைக் கீழ்த்திசைக்கு எதிர்வாசலாகிய வாசலுக்கழைத்துப் போனான்.

௨. இதோ, இஸ்ரவேலருடைய பராபரனின் மகிமை கீழ்த்திசையிலிருந்து வந்தது.* அவருடைய சத்தம் திரளான தண்ணீர்களின் இரைச்சலைப்போலிருந்தது, அவருடைய மகிமையினாலே பூமி வெளிச்சமாயிற்று.

* க. அதி. உ௮. அதிவி. க. அதி. ௰௫.

௩. நான் கண்ட இந்தத் தரிசனை * நான் பட்டண அழிவுக்கு வந்தபோது கண்ட தரிசனையின் சாயலாயிருந்தது, இந்தத் தரிசனைகள் † கேபார் நதியண்டையிலே நான் கண்டிருந்த தரிசனையைப்போலிருந்தது, நான் முகங்குப்புறவிழுந்தேன். * அ. அதி. ௪. † க. அதி. ௪ ௴

௪. கர்த்தருடைய மகிமை கீழ்த்திசைக்கு எதிரான வாசல்வழியாய் வீட்டுக்குட்பிரவேசித்தது.

௫. அப்போது ஆவி என்னையெடுத்தது. என்னையுள்முற்றத்திலே கொண்டுபோயவிட்டது. இதோ, * கர்த்தருடைய மகிமை வீட்டை நிரப்பிற்று. * உ. மோசே. ௪௰. ௩௪. க. இராசா. அ. அ. ௰. ௰௧.

௬. அவர் வீட்டிலிருந்து என்னுடனே பேசுகிறதைக் கேட்டேன், புருஷன் என்னண்டையிலே நின்றிருந்தார்.

௭. அவர் என்னோடே சொன்னதாவது, மனுஷபுத்திரனே, இது நாம் என்றென்றைக்கும் இஸ்ரவேலின் புத்திரரின் நடுவே வாசம்பண்ணப்போகிற நம்முடைய ஆசனத்தின் தானமும் நம்முடைய உள்ளங்கால்களின் தானமுமாயிருக்கிறது, இனி இஸ்ரவேல் வீட்டாரும் அவர்களுடைய இராசாக்களும் நமது பரிசுத்த நாமத்தைத் தங்கள் மேட்டைகளிலே தங்கள் வேசித்தனத்தினாலும் தங்கள் இராசாக்களின் * பிரேதங்களினாலும் தீட்டுப்படுத்துவதில்லை. * எரேமி. ௰௬. ௰௮.

௮. அவர்கள் நமக்கும் தங்களுக்கும் நடுவே ஒரு சுவரேயிருக்கும்படியாகத் தங்கள் வாசற்படியை நம்முடைய வாசற்படியண்டையிலும் தங்கள் வாசல் நிலைகளை நம்முடைய வாசல் நிலைகளண்டையிலுஞ் சேர்த்து நம்முடைய பரிசுத்த நாமத்தைத் தாங்கள் செய்த அருவருப்புகளினாலே தீட்டுப்படுத்தினார்கள், ஆகையால் நம்முடைய கோபத்தினாலே அவர்களை நாசமாக்கினோம்.

௯. இப்போது அவர்கள் தங்கள் வேசித்தனத்தையுந் தங்கள் இராசாக்களின் பிரேதங்களையும் நமக்குத் தூரப்படுத்தக்கடவார்கள் அப்போது என்றென்றைக்கும் அவர்கள் நடுவே வாசமாயிருப்போம்.

௰. மனுஷபுத்திரனே, இஸ்ரவேல் வீட்டார் * தங்கள் அக்கிரமங்களினிமித்தம் நாணும்படிக்கு, நீ அவர்களுக்கு இந்த வீட்டைக் காண்பி. அதின் மாதிரியை அளக்கக்கடவார்கள். * ௰௬. ௬௧. ௬௩. ௩௯. ௩௦.

௰௧. அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் நாணிக்கொண்டிருந்தால், அப்போது இந்த வீட்டினுருவத்தையும் அதின் நிலையையும் அதின் வாசற்படிகளையும் அதின் உள்நடைகளையும் அதினுடைய எல்லா ரூபங்களையும் அதினுடைய எல்லாக் கட்டுகளையும் அதினுடைய எல்லா விதங்களையும் அதினுடைய எல்லா நியாயங்களையும் அவர்களுக்குத் தெரியப்படுத்து, அவர்கள் அதினுடைய எல்லா விதங்களையும் அதினுடைய எல்லாக் கட்டுகளையுங் கைக்கொண்டு அவைகளின்படி செய்யும்படிக்கு அதையவர்கள் கண்களுக்கு முன்பாக எழுதிவை. * ௪௪. அதி. ௫.

௰௨. வீட்டினுடைய நியாயமாவது, பருவதத்தின் சிகரத்திலே அதின் எல்லையெல்லாஞ் சுற்றிலும் மகா பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கும், இதோ, இது வீட்டினுடைய நியாயம்.

தகனபலிபீடத்தினுடைய அளவுகளுங் கட்டளைகளும்.

௰௩. முழங்களின்படி அளக்கும் பலிபீடத்தின் அளவுகளாவது, ஒவ்வொரு முழத்தை முழத்திலும் நாலுவிரற்கடை நீளமாயிருக்கிறதாகப் பார்த்தால், சுற்றாதாரம் ஒருமுழ உயரமும் ஒருமுழ அகலமும் அதினுடைய ஓரத்திற் சுற்றும், அதின் எல்லையொரு சாணுமாயிருக்கும். இது பலிபீடத்தைச் சுமக்கும்.

௰௪. தரையிலிருக்கிற ஆதாரத்தைத் துவக்கிக் கீழ்நிலைமட்டும் இரண்டுமுழமும், அகலம் ஒருமுழமும் சின்ன நிலைதுவக்கிப் பெரிய நிலைமட்டும் நாலுமுழமும், அகலம் ஒருமுழமுமாயிருக்கும்.

௰௫. தேவபீடத்தின் சிகரம் நாலுமுழ உயரமாயிருப்பது, தேவபீடத்தின் சிகரத்திற்கு உயர நாலு கொம்புமிருக்கும்.

௰௬. தேவபீடத்தின் சிகரம் பன்னிரண்டுமுழ நீளமும், பன்னிரண்டுமுழ அகலமுமா

யதத்தினுடைய நாலுபக்கங்களிலும் சமசதுரமாயிருக்கும்.

௧௭. அதின் நாலுபக்கங்களிலுள்ள சட்டமும் பதினாலு முழமும், அகலம் பதினாலு முழம் அதைச் சுற்றிலுமிருக்கிற எல்லை அரை முழமும், அதற்குச் சாதாரமான சுற்றிலும் ஒரு முழமுமாயிருக்கும், அதின் படிகள் கிழக்குக்கு எதிராயிருப்பதென்றார்.

௧௮. அவர் என்னோடே சொன்னதாவது: மனுஷபுத்திரனே, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதேதென்றால், பலிபீடத்தைப் பண்ணின நாளிலே அதின்மேலே தகனபலியிடுகிறதற்கும் அதின்மேல் இரத்தந் தெளிக்கிறதற்குமான அதினுடைய கட்டளைகளாவது.

௧௯. நமக்கு ஆராதனை செய்கிறதற்கு நம்மண்டைக்குச் சேருகிற * சாதோக்கின் வித்தான லேவிகோத்திரத்தாராகிய ஆசாரியர்களுக்கு நீ பாவம்போக்கும் பலியாக ஒரு காளைக்கன்றைக் கொடுப்பாயாகவென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ௪௪. அதி. ௧௫.

௨௦. இதின் இரத்தத்தில் அள்ளி, அதினுடைய நாலு கொம்புகளிலும், சட்டத்தின் நாலு கோடிகளிலும், சுற்றியிருக்கிற எல்லையிலும் பூசி, அதைப் பாவமற்றதாக்கி,

௨௧. பிற்பாடு * பாவம்போக்கும் பலியான காளைக்கன்றையெடுத்து, அதை வீட்டிலே யதற்குக் குறிக்கப்பட்ட பரிசுத்தஸ்தலத்திற்குப் புறம்பான இடத்திலே சுட்டெரிக்கக்கடவாய். * ௩. மோசே. ௧௬, ௨௭.

௨௨. இரண்டாம் நாளிலே ஊனமில்லாத ஒரு வெள்ளாட்டுக் கடாவைப் பாவம்போக்குதலுக்காகப் பலியிடுவாயாக, அதினாலே பலிபீடத்தைக் காளைக்கன்றினாலே செய்ததுபோலே, பாவமற்றதாக்கக்கடவார்கள்.

௨௩. நீ பாவம்போக்குதலை முடித்துத் தீர்ந்த பிற்பாடு, ஊனமில்லாத ஒரு காளைக்கன்றையும் ஊனமில்லாத ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிடுவாயாக.

௨௪. அவைகளைக் கர்த்தருக்கு முன்பாகப் பலியிடுவாயாக, ஆசாரியர்கள் அவைகளுக்கு உப்புப்போட்டு அவைகளைக் கர்த்தருக்குத் தகனபலியிடக்கடவார்கள்.

௨௫. ஏழுநாளாய்த் தினம் பாவம்போக்குதலுக்காக ஒரு வெள்ளாட்டுக் கடாவைப் படைப்பாயாக ஊனமில்லாதவைகளான காளைக் கன்றையும் ஆட்டுக்கடாவையும் படைப்பார்களாக.

௨௬. ஏழுநாட் பலிபீடத்தைப் பாவமற்றதாக்கி, அதைச் சுத்திகரித்து, அதினைக் கைநிரப்பிவரக்கடவார்கள்.

௨௭. அந்நாட்களை முடித்தபிற்பாடு, எட்டாம் நாளாயிருக்கும், அதுமுதற்கொண்டு ஆசாரியர்கள் பலிபீடத்தின்மேல் உங்கள் தகனபலிகளையும் உங்கள் ஸ்தோத்திரபலிகளையும் படைப்பார்களாக, அப்போது உங்களை அங்கீகரிப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௪௪. அதிகாரம்.

[பூட்டப்பட்டிருக்கும் வாசலின் செய்தி]

பிற்பாடவர் என்னைக் கிழக்குக்கு நேராகப் பரிசுத்தஸ்தலத்திற்கிருக்கிற புறவாசல் வழியே திரும்பப்பண்ணினார், அது பூட்டப்பட்டிருந்தது.

௨. அப்பொழுது கர்த்தர் என்னோடே சொன்னதாவது, இந்தவாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும், ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை, ஏனென்றால் இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் அது பூட்டப்பட்டிருக்கும்.

௩. அதிபதி ஒருவனே, கர்த்தருக்கு முன்பாக அப்பம் புசிக்கிறதற்கு அதில் உட்காரலாம், அவன் வாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து அதின் வழியாய்ப் புறப்படுவானாக என்றார்.

பரிசுத்தஸ்தலத்திற்குட் பிரவேசித்து ஆராதனை செய்யத்தகாதவர்களைக் குறித்துச் சொல்லப்பட்டது.

௪. பிற்பாடவர் என்னை வடக்கு வாசல் வழியாய் வீட்டின் முகப்பிலே அழைத்துக்கொண்டுபோனார், இதோ * கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய வீட்டை நிரப்பிற்றென்று நான் கண்டு, முகங்குப்புற விழுந்தேன். * ௨. மோசே. ௪௰, ௩௪.

௫. அப்பொழுது கர்த்தர் என்னோடே சொன்னதாவது மனுஷபுத்திரனே, கர்த்தருடைய வீட்டின் கட்டளைகளெல்லாவற்றையும் அதினுடைய நியாயங்களெல்லாவற்றையுங் குறித்து நாம் உன்னோடே சொல்லுகிறவைகளெல்லாம் * நீ உன் மனதில் கவனித்து, உன் கண்களினாலே நோக்கி, உன் காதுகளினாலே கேட்டு, பரிசுத்தஸ்தலத்தினுடைய எல்லா வாசற்படிகளாலும் வீட்டுக்குட் பிரவேசிக்கிறவிதத்தின்பேரிலே உன் மனதை வைத்து, * ௪௦, ௪.

௬. இஸ்ரவேல் வீட்டாராகிய கலகக்காரரோடே சொல்லவேண்டியதாவது, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதேதென்றால், இஸ்ரவேல் வீட்டாரே உங்கள் அருவருப்புகளெல்லாம் போதும்.

௭. நீங்கள் நம்முடைய போசனமாகிய கொழுப்பையும் இரத்தத்தையுஞ் செலுத்துகையில், நமது வீட்டைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும்படிக்கு விருத்தசேதனமில்லாத இருதயமும் விருத்தசேதனமில்லாத மாம்சமுமுள்ள அந்நியபுத்திரரை நம்முடைய பரிசுத்தஸ்தலத்

பத்திறகள், அதிலிருக்கிறதற்காய அழைத்துவந்தீர்கள் நீங்கள்செய்த எல்லா அருவருப்புகளையுந்தொட்டு அவர்கள் நம்முடைய உடன்படிக்கையைவிரோதிக்கிறார்கள்.

௮. நீங்கள் நமது பரிசுத்தகாரியங்களின் காவலைக்காக்காமல், உங்களுக்குச் சரிப்போனவர்களை நமது பரிசுத்தஸ்தலத்திலே நம்முடைய காவலைக்காக்கிறதற்காக வைத்தீர்கள்.

௯. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, இஸ்ரவேல்புத்திரரின் நடுவிலிருக்கிற சகல அன்னியபுத்திரரிலுஞ் சுன்னத்தில்லாத இருதயமும் சுன்னத்தில்லாத மாம்சமுமுள்ள அன்னியபுத்திரனொருவனும் நம்முடைய பரிசுத்த ஸ்தலத்திற்குட்பிரவேசிப்பதில்லை.

௰. இஸ்ரவேல் வழிதப்பிப்போகையில் நம்மைவிட்டுத் தூரமானவர்களும், நம்மைவிட்டு வழிதப்பித் தங்கள் நரகலான தேவர்களின்பிறகாலே போனவர்களுமாகிய லேவியர் முதலாய்த் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.

௰௧. அவர்கள் நமது பரிசுத்தஸ்தலத்திலே வீட்டின்வாசல்களை விசாரிக்கிற வேலைக்காரராயிருந்து, வீட்டிக்கூழியஞ்செய்வார்கள். அவர்கள் தகனபலிகளையும் மற்றப் பலிகளையுஞ் சனத்திற்காக அடித்து, இவர்களுக்கூழியஞ்செய்கிறதற்காக இவர்களுக்கு முன்பாக நிற்பார்கள்.

௰௨. அவர்கள் இவர்களுடைய நரகலான தேவர்களுக்கு முன்பாக இவர்களுக்கூழியஞ்செய்து, இஸ்ரவேல்வீட்டாருக்கு அக்கிரமத்திற்கான இடறலாக விருந்தபடியினாலே, அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமக்கும்படிக்கு, நம்முடைய கையையவர்களுக்கு விரோதமாக எடுத்தோமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௰௩. அவர்கள் நமக்கு ஆசாரியராய் ஆராதனைசெய்கிறதற்கும், நமது பரிசுத்தகாரியங்களிலொன்றுக்காகிலும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான ஸ்தலத்தைக் கிட்டுகிறதற்கும், நம்மண்டைச் சேராமல், தங்கள் இலச்சையையுந் தாங்கள்செய்த அருவருப்புகளையுஞ் சுமக்கக்கடவார்கள்.

௰௪. ஆகையால் வீட்டினுடைய எல்லா வேலைக்கும், அதிற்செய்யப்படவேண்டியதெல்லாவற்றிற்கும் நாம் அவர்களையதின்மேல் காவற்காக்கிறவர்களாயிருக்கக்கட்டளையிடுவோம்.

பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனை செய்யத்தக்க ஆசாரியரையும், அவர்கள் நடந்துகொள்ளும் விதத்தையும், அவர்களுடைய பிழைப்பையுங் குறித்துச்சொன்னது.

௰௫. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் நம்மைவிட்டு வழிதப்பிப்போகையில், நமது பரிசுத்தஸ்தலத்தின் காவலைக்காத்துக்கொண்ட * சாதோக்கின்புத்திரராகிய லேவியரென்ற ஆசாரியர்களே நமக்கு ஆராதனைசெய்ய நம்மண்டைச் சேர்ந்து, கொழுப்பையும் இரத்தத்தையும் நமக்குச் செலுத்த நமக்கு முன்பாக நிற்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ௪௰, ௪௬. ௪௮. ௰௧.

௰௬. இவர்கள் நமது பரிசுத்தஸ்தலத்திற்குட்பிரவேசிப்பார்கள், இவர்களே நமக்கு ஆராதனைசெய்யப் பீடத்தைக் கிட்டி நமது காவலைக் காப்பார்கள்.

௰௭. உட்புறத்தின் வாசல்களுக்குட்பிரவேசிக்கிறபோது, சணல்நூல் வஸ்திரங்களையுடுத்துக்கொள்வார்களாக, அவர்கள் உட்புறத்தின் வாசல்களிலும் உள்ளேயும் ஆராதனைசெய்கையில், ஆட்டுமயிர் உடுப்பு அவர்கள்மேலிருக்கப்படாதாக.

௰௮. * அவர்களுடைய தலைகளிற் சணல்நூற்குல்லாக்களும், அவர்களுடைய இடைகளிற் சணல்நூற் காற்சட்டைகளுமிருக்கக்கடவது, வேர்வையிலே அரைகட்டார்களாக. * ௨. மோசே ௩௯. ௨௮. ௨௮, அதி. ௪௨.

௰௯. அவர்கள் வெளிப்பிராகாரமாகிய புறமுற்றத்திலே சனத்தண்டைக்குப் புறப்பட்டுப்போகிறபோது, அவர்கள், * தாங்கள் ஆராதனைசெய்து உடுத்திருந்த தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி அவைகளைப் பரிசுத்த அறைவீடுகளில் வைத்து, வேற்று வஸ்திரங்களை உடுத்துக்கொள்ளக்கடவார்கள், தங்கள் வஸ்திரங்களாலே சனத்தைப் பரிசுத்தம் பண்ணார்களாக. * ௪௨. ௪௫. ௰௪.

௨௰. அவர்கள் தலைகளைச் சிரைக்காமலும், தங்கள் மயிரை நீளமாய் வளர்க்காமலும், தங்கள் தலைகளின் மயிரைக் கத்திரிக்கக்கடவார்கள். * ௩. மோசே. ௨௧, அதி. ௫.

௨௧. * ஆசாரியர்களிலொருவனும் உட்புறத்திற்குட்பிரவேசிக்கும்போது, திராட்சரசங்குடியானாக. * ௩. மோசே. ௰, ௯.

௨௨. * விதவையையுந் தள்ளிவிடப்பட்டவளையும் அவர்கள் விவாகம்பண்ணாமல், இஸ்ரவேல்வீட்டாரின் வித்தாகிய கன்னிப்பாஸ்திரீயையாகிலும் ஒரு ஆசாரியனின் பெண்சாதியாயிருந்த விதவையையாகிலும் விவாகம்பண்ணக்கடவார்கள். * ௩. மோசே. ௭, ௰௩. ௰௪.

௨௩. * அவர்கள் பரிசுத்தமானதற்கும் பரிசுத்தமல்லாததற்குந் தீட்டானதற்குஞ் சுத்தமானதற்குமிருக்கும் வித்தியாசத்தை நமது சனத்திற்குப் போதித்து அவர்களுக்குத் தெரியப்பண்ணக்கடவார்கள்.
* ௩. மோசே. ௰, ௰.

௨௪. வழக்கிருந்தால், இவர்கள் நியாயந

தீர்க்க அபத்தமாயிருந்தது, நம்முடைய நியாயங்களின்படியவைகளைத் தீர்த்து, நம்முடைய பண்டிகைகளிலெல்லாம் நம்முடைய நியாயப்பிரமாணத்தையும் நமது கட்டளைகளையும் கைக்கொண்டு, நம்முடைய ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்கக்கடவார்கள்.

உரு. தகப்பன், தாய், குமாரன், குமாரத்தி, சகோதரன், புருஷனுக்கு வாழ்க்கைப்படாத சகோதரி என்றவர்களுடைய சவத்தினால் அவர்கள் தீட்டுப்படவேண்டியதல்லாமல், அவர்களிலொருவனும் செத்த ஒரு மனுஷனண்டையிலே தீட்டுப்படவாராக.

உசு. அவன் சுத்திகரமான பின்பு, அவனுக்கு ஏழுநாள் எண்ணப்படவேண்டும்.

உஎ. அவன் பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனை செய்யும்படிக்குப் பரிசுத்த ஸ்தலமிருக்கிற உள்முற்றத்திற்குட் பிரவேசிக்கிற நாளிலேயென்றால், அவன் தனக்காகப் பாவம்போக்கும் பலியைச் செலுத்தக்கடவானென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

உஅ. அவர்களுக்குச் சுதந்தரமாவதேதென்றால், * நாமே அவர்களுடைய சுதந்தரமாயிருப்போம், ஆகையால் இஸ்ரவேலிலே அவர்களுக்குக் காணியாட்சியைக் கொடீர்களாக, நாமே அவர்களுடைய காணியாட்சி. * ச. மோசே. யஅ, உ0. ரு. மோசே. யஅ, க.

உகூ. காணிக்கையையும் பாவம்போக்கும் பலியையும், குற்றம்போக்கும் பலியையும் அவர்கள் போசிப்பார்கள், இஸ்ரவேலிலே பொருத்தனைபண்ணப்பட்டதும் எல்லாம் அவர்களுடையதாயிருப்பதாக.

கூ0. சகலவித முதற்கனிகளிலெல்லாம் முந்தின இலாபமும், நீங்கள் செலுத்துகிற எந்தவிதமுமான செலுத்துதல்களனைத்தும் ஆசாரியர்களுடையதாயிருப்பதாக உன் வீட்டிலே ஆசீர்வாதத்தைத் தங்கப்பண்ணும்படிக்கு, உங்கள் மாப்பிசைதல்களில் முதல் இலாபத்தையும் ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவார்கள்.

கூக. * பறவைகளிலும் மிருகங்களிலும் தானாய்ச் செத்ததும் பீறுண்டதுமான தொன்றையும் ஆசாரியர்கள் போசியார்களாக.
* ங. மோசே. உஉ, அ.

சரு. அதிகாரம்.

[தேசத்திலே பரிசுத்தஸ்தலத்திற்கும் ஆசாரியருக்கும் லேவியருக்கும், பட்டணத்திற்கும் அதிபதிக்கும் விடப்படவேண்டிய பங்குகளுடைய எல்லைகள்.]

நீங்கள் தேசத்தைச் சீட்டுப்போட்டுப் பங்கிடும்போதோவென்றால், தேசத்தில் இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினாயிரங்கோல் அகலமுமான பரிசுத்தப் பங்கைக்கர்த்தருக்குப் படைக்கக்கடவீர்கள், அது எல்லையிலெல்லாம் சுற்றிலும் பரிசுத்தமாயிருப்பது.

உ. இதிலே பரிசுத்தஸ்தலத்திற்கென்று ஐந்நூறுகோல் நீளமும் ஐந்நூறுகோல் அகலமுமான நாற்சதுரம் அளக்கப்படவது, அதற்கு ஐம்பதுமுழமான வெளி சுற்றிலுமிருக்கவேண்டும்.

ங. இந்த அளவுப்படி இருபத்தையாயிரங்கோல் நீளத்தையும் பதினாயிரங்கோல் அகலத்தையும் அளப்பாயாக அதிலே பரிசுத்தஸ்தலமும் மகா பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானஸ்தலமுமிருப்பது.

ச. தேசத்தில் பரிசுத்தமான பங்காய் இது கர்த்தருக்கு ஆராதனைசெய்யச் சேருகிறவர்களும் பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனை பண்ணுகிறவர்களுமான ஆசாரியருடையது. இது அவர்களுக்கு வீடுகளுக்கான இடமும் பரிசுத்தஸ்தலத்திற்கடுத்த இடமுமாயிருப்பது.

ரு. பின்னையும் இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினாயிரங்கோல் அகலமுமானது வீட்டின் பணிவிடைக்காரராகிய லேவியருடையதாயிருக்கும், அது அவர்களுடைய காணியாட்சி, அதிலிருபது அறைவீடுகளிருப்பதாக.

சு. பரிசுத்தப்பங்காகப் படைக்கப்பட்டதற்கெதிரே பட்டணத்தின் காணியாட்சியாக ஐயாயிரங்கோல் அகலத்தையும் இருபத்தையாயிரங்கோல் நீளத்தையும் கொடுப்பீர்களாக, அது இஸ்ரவேல் வம்சத்தார் அனைவருடையதாயிருக்கும்.

எ. பரிசுத்தப்பங்காகப் படைக்கப்பட்டதற்கும் பட்டணத்தின் காணியாட்சிக்கும் இந்தண்டையும் அந்தண்டையும், பரிசுத்தப் படைப்புக்கு முன்பாகவும் பட்டணத்தின் காணிக்கு முன்பாகவும், அதிபதியினுடைய பங்கு மேற்கிலே மேற்புறமாகவும் கிழக்கிலே கிழக்குப்புறமாகவுமிருப்பதாக, மேல் எல்லை துவக்கிக் கிழ எல்லைமட்டும் சமமான அதுபங்குகளிலொவ்வொன்றுக்கெதிரே யிருப்பது.

அ. இது அவனுக்கு இஸ்ரவேலிலே காணிபூமியாகவிருக்கக்கடவது, நம்முடைய அதிபதிகள் இனி நமது சனத்தை ஒடுக்காமல் தேசத்தை இஸ்ரவேல் வம்சத்தாருக்கு அவர்களுடைய கோத்திரங்களுக்குத் தக்கபடியே விட்டுவிடுவார்களாக.

அதிபதிகள் இனி அநியாயஞ்செய்யவேண்டாமென்பது.

கூ. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, இஸ்ரவேலின் அதிபதிகளே, * நீங்கள் செய்தது போதும், நீங்கள் கொடுமையையும் கொள்ளையிடுதலையும் தவிர்த்து, நியாயத்தையும் நீதியையுஞ்செய்யுங்கள்,

உங்கள் உச்சாடனங்களை நம்முடைய சனத்தைவிட்டகற்றுங்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ௪௪, அதி. ௬.

௰. * சுமுத்திரையான திராசும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான பாத்திரமும் உங்களுக்கிருக்கக்கடவது. * ௩. மோ. ௰௯, ௩௫. ௩௬.

௰௧. மரக்காலும் பாத்திரமும் ஒரே அளவாயிருந்து, மரக்கால் கலத்திலே பத்திலொன்றும், பாத்திரம் கலத்திலே பத்திலொன்றும் பிடிக்கக்கடவது; கலத்தின்படியே அதின் அளவு திர்ணயிக்கப்படுவதாக.

௰௨. * சேக்கலானது இருபது கேரா; இருபது சேக்கலும் இருபத்தைந்து சேக்கலும் பதினைந்து சேக்கலும் உங்களுக்கொரு மாத்தலாயிருப்பது. * ௨. மோசே. ௩௰, ௰௩.

சனமும் அதிபதியுஞ் செலுத்துங் காணிக்கைகளையும் பலிகளையுங் குறித்து இட்ட கட்டளைகள்.

௰௩. நீங்கள் செலுத்தவேண்டிய காணிக்கையாவது, ஒரு கலங் கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறத்தொரு பங்கையும் ஒரு கலம் வாற்கோதுமையிலே ஒரு மரக்காலில் ஆறத்தொரு பங்கையும் படைக்கக்கடவீர்கள்.

௰௪. பானையால் அளக்கிற எண்ணெயின் கட்டளையாவது, பத்துப்பானை பிடிக்கிற கலத்திற்குச் சரியான ஒரு சாடி எண்ணெயிலே பத்திலொரு பங்கைப் படைப்பீர்களாக, ஏனெனில் பத்துப்பானை ஒரு கலமாகிறது.

௰௫. இஸ்ரவேல் தேசத்திலே புஷ்டியான மேய்ச்சலிலே மேய்கிற மந்தையிலே இருநூறு ஆடுகளில் ஒரு ஆடும் அவர்களுடைய பாவநிவர்த்திக்காகக் காணிக்கையாகவுந் தகனபலியாகவும் ஸ்தோத்திரப்பலியாகவுஞ் செலுத்தப்படக்கடவதென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௰௬. இஸ்ரவேலுடைய அதிபதியின் முன்பாகத் தேசத்தின் சனமெல்லாம் இந்தக் காணிக்கையைச் செலுத்தக் கடனாளிகளாயிருக்கிறார்கள்.

௰௭. ஆனால் இஸ்ரவேல் வீட்டார் கூடிவரக் குறிக்கப்பட்ட சகல பண்டிகைகளிலும் மாதப்பிறப்புகளிலும் ஓய்வுநாட்களிலுந், தகனபலிகளையுங் காணிக்கைகளையும் ஊற்றுதலையுஞ் செலுத்துவது அதிபதியின்மேற் கடனாயிருக்கும்; அவன் இஸ்ரவேல் வீட்டாருக்காகப் பாவநிவாரணம் பண்ணும்படிக்கு, பாவம்போக்கும் பலியையுங் காணிக்கையையுந் தகனபலியையும் ஸ்தோத்திரப்பலிகளையும் படைப்பானாக.

௰௮. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, முதலாம் மாதம் முதலாந்தேதியிலே நீ ஊனமில்லாத ஒரு காளைக்கன்றைக் கொண்டுவந்து, பரிசுத்தஸ்தலத்தைப் பாவமற்றதாக்குவாயாக.

௰௯. பாவம்போக்குகிற அந்தப் பலியின் இரத்தத்திலே ஆசாரியன் அள்ளி, வீட்டின் வாசல் நிலைகளிலும், பலிபீடத்தினுடைய சட்டத்தின் நான்கு கோடிகளிலும், உள்முற்றத்தின் வாசல் நிலைகளிலும் பூசக்கடவான்.

௨௰. அந்தப்பிரகாரமாக ஏழாந்தேதியிலும் பிழைசெய்தவனுக்காகவும், பேதைக்காகவுஞ் செய்வாயாக; இப்படி வீட்டைப் பாவமற்றதாக்கக்கடவீர்கள்.

௨௧. * முதலாம் மாதம் பதினாலாந்தேதியிலே புளிப்பில்லாத அப்பங்களைப் பொசிக்கப்படுகிற ஏழுநாட்பண்டிகையாகிய பஸ்கா உங்களுக்குத் துவக்கமாகும்.
* ௩. மோசே. ௨௩, ௫.

௨௨. அந்நாளிலே அதிபதி தன்னிமித்தமும் தேசத்தினுடைய எல்லாச் சனத்தினிமித்தமும் பாவம்போக்குதலுக்காக ஒரு காளையெருதைப் படைப்பானாக.

௨௩. பண்டிகையின் ஏழுநாட்களிலே அவன் அந்த ஏழுநாளுங் கர்த்தருக்குத் தகனபலியாக ஊனமில்லாத ஏழு காளையெருதுகளையும் ஏழு ஆட்டுக்கடாக்களையுந், தினம் பாவம்போக்கும் பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் படைப்பானாக.

௨௪. ஒவ்வொரு காளையெருதோடே ஒரு மரக்காலும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்காலுமான காணிக்கையையும் ஒவ்வொரு மரக்காலோடே ஒரு படியெண்ணெயையும் படைப்பானாக.

௨௫. ஏழாம் மாதம் பதினைந்தாந்தேதியிலே துவக்கமாகிற பண்டிகையிலே அவன் அப்படியே ஏழுநாளும் அதற்குச் சரியான பிரகாரமாகப் பாவம்போக்கும் பலிகளையுந் தகனபலிகளையுங் காணிக்கைகளையும் எண்ணெயையும் படைக்கக்கடவான்.

௪௬. அதிகாரம்.

[அதிபதியுந் தேசத்தின் சனமுஞ் செய்யுந் தேவாராதனைக்கடுத்த பிரமாணங்களும் அனுதினப்பலியின் கட்டளையும்.]

கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, கிழக்குக்கெதிரான உள்முற்றத்தினுடைய வாசல் வேலைசெய்கிற ஆறுநாளிலும் பூட்டப்பட்டிருந்து, ஓய்வுநாளிலே திறக்கப்படவும் மாதப்பிறப்பிலுந் திறக்கப்படவுங்கடவது.

௨. அப்பொழுது அதிபதி வெளியே வாசற்சாலையின் வழியாய்ப் பிரவேசித்து, வாசல்நிலையண்டையிலே நிற்கக்கடவான், ஆசா

ரியர்களோவென்றால் அவனுடைய தகனபலியையும் அவனுடைய ஸ்தோத்திரபலிகளையும் படைக்கக்கடவார்கள், அவன் வாசற்படியிலே பணிந்து பிறபாடு புறப்படுவானாக, அந்த வாசலோவென்றால் சாயங்காலமட்டும் பூட்டப்படாதிருப்பதாக.

ங. தேசத்தின் சனமும் ஓய்வுநாட்களிலும் மாதப்பிறப்புகளிலும் அந்த வாசலின் நடையிலே கர்த்தருக்கு முன்பாகப் பணியக்கடவார்கள்.

ச. அதிபதி ஓய்வுநாளிலே கர்த்தருக்குப் பலியிடுந் தகனபலி, பழுதில்லாத ஆறு ஆட்டுக்குட்டிகளும் பழுதில்லாத ஒரு ஆட்டுக்கடாயுந்தானே.

ரு. ஆட்டுக்கடாவோடேகூடக் காணிக்கையாக ஒரு மரக்காலையும், ஆட்டுக்குட்டிகளோடேகூடக் காணிக்கையாகத் தன்னுடைய கைச்சுயமாய்த் தருகிற ஈவையும், ஒவ்வொரு மரக்காலோடேகூட ஒருபடி யெண்ணெய்யையும் படைக்கக்கடவான்.

சு. மாதப்பிறப்பான நாளிலோவென்றால் அவன் பழுதில்லாத மந்தைகளின் ஒரு காளைக்கன்றையும் பழுதில்லாதிருக்கிற ஆறு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டு,

எ. காணிக்கையாகக் காளைக்கன்றோடேகூட ஒரு மரக்காலையும், ஆட்டுக்கடாவோடேகூட ஒரு மரக்காலையும் ஆட்டுக்குட்டிகளோடேகூடத் தன்னுடைய கைக்குதவுகிறதையும் ஒவ்வொரு மரக்காலோடேகூட ஒருபடி யெண்ணெய்யையும் படைக்கக்கடவான். * சரு. உச.

அ. அதிபதி வருகிறபோது வாசலுடைய சாலை வழியாய்ப் பிரவேசித்து, அது வழியாய்த் திரும்பப் புறப்படக்கடவான்.

சு. தேசத்தின் சனம் குறிக்கப்பட்ட நாட்களிலே கர்த்தருக்கு முன்பாக வரும்போதோவென்றால் பணியும்படிக்கு வடக்குவாசல் வழியாய் உட்பிரவேசித்தவன் தெற்குவாசல் வழியாய்ப் புறப்படவும், தெற்குவாசல் வழியாய் உட்பிரவேசித்தவன் வடக்குவாசல் வழியாய்ப் புறப்படவுங்கடவான், தான் வந்த வாசல் வழியாய்த் திரும்பிப் போகாமலே தனக்கெதிரான வழியாய்ப் புறப்படுவானாக.

ய. அவர்கள் உட்பிரவேசிக்கும்போது, அதிபதி அவர்கள் நடுவிலேகூட உட்பிரவேசித்து, அவர்கள் புறப்படும்போது, அவன் கூடப் புறப்படுவானாக.

யக. பண்டிகைகளிலும் குறிக்கப்பட்ட காலங்களிலும் அவன் படைக்குங் காணிக்கையாவது, காளையொடேகூட ஒரு மரக்காலும், ஆட்டுக்கடாவோடே ஒரு மரக்காலும், ஆட்டுக்குட்டிகளோடே அவன் கைச்சுயமாய்த் தருகிற ஒரு ஈவும், ஒவ்வொரு மரக்காலோடே ஒருபடி யெண்ணெய்யுந்தானே.

யஉ. அதிபதி உற்சாகமான தகனபலியாகிலும் ஸ்தோத்திரப்பலிகளாகிலும் கர்த்தருக்கு உற்சாகமாகச் செலுத்தவேண்டுமென்றால், அவனுக்குக் கிழக்குக்கு நேரான வாசல் திறக்கப்படுவதாக, அப்பொழுது ஓய்வுநாளிற் செய்கிறபடியே தன் தகனபலியையுந் தன் ஸ்தோத்திரப்பலியையும் அவன் படைத்துத், திரும்பப் புறப்படக்கடவான், அவன் புறப்பட்டபின்போவென்றால் வாசல் பூட்டப்படவேண்டும்.

யங. * தினம் ஒருவயதான பழுதில்லாத ஒரு ஆட்டுக்குட்டியைக் கர்த்தருக்குத் தகனப்பலியாகப் படைக்கக்கடவாய் காலைதோறும் அதைப் படைக்கக்கடவாய்.

* உ. மோசே. உஅ, நக.

யச. அதனோடேகூடக் காலைதோறும் காலமே ஆறத்தொருபங்கையும் மெல்லிய மாவைப் பிசையும்படிக்கு ஒருபடி யெண்ணெயிலே மூன்றத்தொருபங்கையுங் காணிக்கையாகப் படைக்கக்கடவாய், இது என்றுமுள்ள கர்த்தருக்குப் படைக்கவேண்டிய நித்திய கட்டளைகளான காணிக்கை.

யரு. இப்படிக் காலைதோறுமுள்ள நித்திய தகனபலியாக ஆட்டுக்குட்டியையும், காணிக்கையையும், எண்ணெயையும் செலுத்துவார்களாக.

அதிபதியான சுதந்தரத்திற்குரிய பிரமாணம்.

யசு. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, அதிபதி தன் குமாரரில் ஒருவனுக்குத் தன் சுதந்தரத்தில் ஒரு ஈவைக்கொடுத்தால், அது அவன் குமாரருடையதாயிருக்கும், அது சுதந்தரமாய் அவர்களுடைய சொந்தமாம்.

யஎ. அவன் தன் ஊழியக்காரரில் ஒருவனுக்குத் தன் சுதந்தரத்தில் ஒரு ஈவைக்கொடுத்தானேயாகில், அது விடுதலையின் வருஷமட்டும் அவனுடையதாயிருந்து, பிற்பாடு திரும்ப அதிபதியின் வசமாய்ச் சேரும், அதின் சுதந்தரம் அவன் குமாரருக்கே உரியது, அது அவர்களுடையதாயிருக்கும்.

யஅ. சனத்தைப் பிடுங்கனசெய்து, அவர்களுடைய சொந்தத்திற்கு அவர்களைப் புறம்பாக்க, அதிபதி அவர்களுடைய சுதந்தரத்திலொன்றும் எடுக்கானாக, என் சனத்தில் ஒருவரும் தங்கள் சொந்தத்திற்குப் புறம்பாக்கச் சிதறடிக்கப்படாதபடிக்கு, அவன் தன்னுடைய சொந்தத்திலே தன் குமாரருக்குச் சுதந்தரங் கொடுக்கக்கடவானென்றார்.

பலிகளைச் சமைக்குந் தலங்களைக் காண்பிக்கப்பட்டது.

௧௯. பிற்பாடவர் வாசலின் பக்கத்திலிருந்த நடைவழியாய் என்னை வடக்குக்கெதிரான ஆசாரியர்களுடைய பரிசுத்த அறைவீடுகளுக்கழைத்துப்போனார், இதோ, அங்கே மேற்கேயிருபுறத்திலேயும் ஒரு இடமிருந்தது.

௨௰. அவரென்னோடே சொன்னதாவது, குற்றம்போக்கும் பலியையும் பாவம்போக்கும் பலியையுங் காணிக்கையையும் ஆசாரியர்கள் வெளியேபுறமுற்றத்திலே, சனத்தைப் பரிசுத்தம்பண்ணிக்கொண்டு போகாதபடிக்கு, அவர்கள் அவைகளைச் சமைக்கிறதும் இதைச்சுடுகிறதுமான தலம் இதுவேயென்றார்.

௨௧. பிறகு அவரென்னைப் புறமுற்றத்தில் அழைத்துக்கொண்டுபோய், என்னை முற்றத்தின் நான்கு மூலைகளையுங் கடக்கப்பண்ணினார், இதோ, முற்றத்தினுடைய ஒவ்வொரு மூலையிலே தனித்த ஒரு முற்றமிருந்தது.

௨௨. முற்றத்தினுடைய நான்கு மூலைகளிலும் புகை எழும்புகிறவைகளான இந்த முற்றங்கள் நாற்பது முழ நீளமும் முப்பது முழ அகலமுமானவைகள், இந்த நான்கு மூலை முற்றங்களுக்கும் ஒரே அளவிருந்தது.

௨௩. இந்த நான்கிறகுஞ்சுற்றிலும் உள்ளாக ஒரு சுற்றுக்கட்டு உண்டாயிருந்தது, இந்தச் சுற்றுக்கட்டுகளின் சுற்றிலும் அடுப்புகள் போடப்பட்டிருந்தது.

௨௪. அவரென்னுடனே, இவைகள் வீட்டின் பணிவிடைக்காரர் சனத்தின் பலிப் பணிவிடைகளைச் சமைக்கிற வீடுகளென்றார்.

௪௭. அதிகாரம்.

[தேவாலயத்திலிருந்துபாயுந்தண்ணீர் நதியின் தரிசனை.]

பிற்பாடவர் என்னை வீட்டின் வாசலுக்குத் திருப்பிவரப்பண்ணினார், இதோ, தண்ணீர்கள் வாசற்படியின் கீழிருந்து புறப்பட்டுக் கிழக்கேயோடுகிறதாயிருந்தது. ஏனெனில் வீட்டின் முகப்பு கிழக்குக்கெதிரானது, அந்தத் தண்ணீர்கள் வீட்டின் வலதுபுறமாய்ப் பலிபீடத்திற்குத் தெற்காகத் தாழவோடுகிறது.

௨. அவர் என்னை வடக்குவாசல் வழியாய்ப் புறப்படப்பண்ணி என்னை வெளியிலே கீழ்த்திசைக்கெதிரான புறவாசல் மட்டுஞ்சுற்றிக்கொண்டுபோனார், இதோ, தண்ணீர்கள் வலதுபுறத்திலிருந்து பாய்கிறதாயிருந்தது.

௩. அந்தப்புருஷன் தமது கையில் நூலைப் பிடித்துக்கொண்டு, கிழக்கே புறப்படக்கொள்ள ஆயிரமுழமும் அளந்து என்னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார், தண்ணீர் கணுக்கால் அளவாயிருந்தது.

௪. பின்னையும் ஆயிரமுழம் அளந்து என்னைத் தண்ணீரைக் கடக்கப்பண்ணினார், அங்கே தண்ணீர் முழங்கால் அளவாயிருந்தது, பின்னையும் ஆயிரமுழம் அளந்து என்னைக் கடக்கப்பண்ணினார், அங்கே தண்ணீர் அரையளவாயிருந்தது.

௫. பின்னையும் ஆயிரமுழம் அளந்தார், அங்கே அது நான் கடக்கக்கூடாதிருந்த நதியாயிருந்தது, ஏனெனில் தண்ணீர்கள் நீச்சுமாழமுங்கடக்கக்கூடாத நதியுமாயிருந்தது.

௬. அவரென்னுடனே மனுஷபுத்திரனே, இதைக்கண்டாயோவென்று சொல்லி, என்னை நதியோரமாய்த் திரும்பிநடந்துவரப்பண்ணினார்.

௭. நான் திரும்பிவருகையில், இதோ, * நதியோரத்தில் இக்கரையிலும் அக்கரையிலும் வெகுதிரளான விருட்சங்கள் உண்டாயிருந்தது. * அறிவி. ௨௨, ௨.

௮. அவரென்னோடே சொன்னதாவது, இந்தத்தண்ணீர்கள் கீழ் எல்லைக்குப் புறப்பட்டுப் போய் வயல்வெளியிலிறங்கிக் கடலில் விழும், இவைகள் கடலிற்பாய்ந்து விழுந்தபிற்பாடு, அதின் தண்ணீர்கள் ஆரோக்கியமாம்.

௯. சம்பவிப்பதென்னவென்றால், இந்த நதிகள் எங்கேவந்துசேருமோ, அங்கேயெல்லாம் அசைவாடுகிற சீவப்பிராணிகளியாவும் பிழைக்கும், வெகு ஏராளமான மச்சங்களும் இந்தத்தண்ணீர் அங்கே வந்ததினாலே உண்டாயிருக்கும், இந்த நதி எங்கேவந்து சேருமோ, அங்கேயாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்.

௰. அப்போது சம்பவிப்பதென்னவெனில், ஏன்கெதிதுவக்கி யேனெகலாயிம்மட்டும் மீன் பிடிக்கிறவர்கள் அதின் கரையிலே நிற்பார்கள், அதெல்லாம் வலைகளைப் பரப்புகிற தலங்களாயிருக்கும், அவைகளின் மச்சங்கள் பெரிய சமுத்திரத்தின் மச்சங்களைப்போலே பலவிதசாதியும் மகா ஏராளமாயிருக்கும்.

௧௧. ஆனால் அதினுடைய உளையான பள்ளங்களும் அதினுடைய மடுவுகளும் ஆரோக்கியமாகாமல், உப்புக்கொட்டப்புக்கொடுக்கப்படும்.

௧௨. * நதியோரமாய் அதின் இக்கரையிலும் அக்கரையிலும் போசிப்புக்கான சகலவித விருட்சங்களும் பயிராகும், அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை, அவைகளின் கனிகள் மாறுவதுமில்லை, தங்கள் தங்கள் மாதங்களில் புதுக்கனிகளைக் கொடுத்துக்கொண்டேயிருக்கும், ஏனெனில் அவைகளுடைய தண்ணீர்கள் பரிசுத்தஸ்தலத்திலிருந்து பாயும், அவைகளின் கனிகள் போசனத்திற்கும், அவைகளின் இலைகள் அவிழ்தத்திற்குமானவைகள். * அறிவி. ௨௨, ௨.

தேசத்தின் எல்லைகள்.

௰௩. கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, நீங்கள் தேசத்தை இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே சுதந்தரித்துக் கொள்ளவேண்டிய எல்லையாவது, * யோசேப்புக்கு இரண்டு பங்குண்டு. * ௧. மோசே. ௪௮, ௫
யோசு. ௰௭, ௭.

௰௪. சகோதரனோடே சகோதரனுக்குச் சரிபங்குண்டாக அதைச் சுதந்தரித்துக் கொள்ளக்கடவீர்கள், * அதை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேனென்று நமது கையையேறெடுத்தேனே, ஆகையால் உங்களுக்கு இந்தத் தேசஞ் சுதந்தரமாகக் கிடைக்கும். * ௧. மோ. ௰௫, ௰௮.

௰௫. தேசத்தின் எல்லையாவது, வடபுறம் பெரிய சமுத்திரத்தைத் துவக்கிச் சேததாதிற்குப்போகிற கெத்லோம் வழியாயிருக்கிற,

௰௬. காமாத்தும், பேரோத்தாவும், தமஸ்குவின் எல்லைக்கும் காமாத்தின் எல்லைக்கும் நடுவான சிப்ராயிமும், ஆப்பிரானின் எல்லையோடே சேர்ந்த ஆத்சேர் அத்திக்கோனுமானது,

௰௭. அப்படியே சமுத்திரத்தில் இருந்து போகிற எல்லை ஆத்சேர் ஏனோனும், தமஸ்குவின் எல்லையும், வடமூலையான வடக்கும் காமாத்தின் எல்லையுமானது இது வடபுறம்.

௰௮. கீழ்ப்புறத்தைக் ஆப்பிரானுக்கும் தமஸ்குவுக்கும் நடுவாகவும் கீலேயாத்திற்கும் யோர்தானின் ஓரமான இஸ்ரவேல் தேசத்திற்கும் நடுவாகவும், கீழ்க்கடல் மட்டுமிருக்கும் எல்லையாய் அளப்பீர்களாக இது கீழ்ப்புறம்.

௰௯. தென்மூலையான தென்புறம் தாமாரைத் துவக்கிக் காதேசில் உள்ள சண்டைமூட்டுதலின் தண்ணீர்கள் மட்டாகவும், ஆறு மட்டாகவும் பெரிய சமுத்திரமட்டாகவுமிருப்பது, இது தென்மூலையான தென்புறம்.

௨௰. மேற்புறம் அந்த எல்லையைத் துவக்கிக் காமாத்துக்கெதிராக வந்து சேருமட்டுமிருக்கிற பெரிய சமுத்திரந்தானே, இது மேற்புறம்.

இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தங்குகிற பரதேசிகளும் தேசத்தில் பங்காளிகளென்பது,

௨௧. இந்தத் தேசத்தை நீங்கள் இஸ்ரவேலுடைய கோத்திரங்களின்படியே உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுவீர்களாக.

௨௨. உங்களுக்கும் * உங்களுக்குள்ளேதங்கி உங்களுக்குள்ளே பிள்ளைகளைப் பெறுகிற பரதேசிகளுக்கும் நீங்கள் அதைச் சீட்டுகளைப்போட்டுச் சுதந்தரமாகக் கொள்ளுவீர்களாக, இவர்கள் உங்களுக்கு இஸ்ரவேல் புத்திரரில் பிறந்தவர்களைப்போலிருந்து, உங்களோடேகூட இஸ்ரவேல் கோத்திரங்களின் நடுவே சுதந்தரத்திற்குட்படுவார்களாக. ௧. * ஏசாயா. ௫௬, ௬ ௬. ௭.

௨௩. பரதேசி எந்தக் கோத்திரத்தோடே தங்கியிருக்கிறானோ, அங்கேயே அவனுடைய சுதந்தரத்தை அவனுக்குக் கொடுப்பீர்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௪௮. அதிகாரம்.

[தேசத்தினுடைய பங்கீடு.]

கோத்திரங்களின் நாமங்களாவன: வடமூலையைத் துவக்கிக் காமாத்துக்குப் போகிற கெத்லோன் வழியின் ஓரத்திலே ஆத்சார் ஏனோனுக்கும், காமாத்தண்டையில் வடக்கேயிருக்கிற தமஸ்குவின் எல்லைக்குமுள்ளாகக் கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் தாணுக்கொரு பங்கும்.

௨. தாணின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் ஆசேருக்கொரு பங்கும்.

௩. ஆசேரின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் நப்தலிக்கொரு பங்கும்.

௪. நப்தலியின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் மனாசேக்கொரு பங்கும்.

௫. மனாசேயின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் எப்பிராயீமுக்கொரு பங்கும்.

௬. எப்பிராயீமின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் ரூபனுக்கொரு பங்கும்.

௭. ரூபனின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் யூதாவுக்கொரு பங்குமுண்டாவதாக.

௮. யூதாவின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் நீங்கள் படைக்கவேண்டிய பங்கிருக்கும், அது * இருபத்தையாயிரங்கோல் அகலமும், கீழ்த்திசை துவக்கி, மேற்றிசைமட்டுமிருக்கிற பங்குகளில் ஒவ்வொன்றுக்குச் சரியான நீளமுமுள்ளது; பரிசுத்தஸ்தலம் அதின் நடுவிலேயிருப்பதாக. * ௪௫, ௧.

௯. நீங்கள் கர்த்தருக்குப் படைக்க வேண்டிய பங்கு இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினாயிரங்கோல் அகலமுமாயிருப்பதாக.

௰. வடக்கே இருபத்தையாயிரங்கோல் நீளமும் மேற்கே பதினாயிரங்கோல் அகலமும் கிழக்கே பதினாயிரங்கோல் அகலமும் தெற்கே இருபத்தையாயிரங்கோல் நீளமுமான இந்தப் பரிசுத்தப் படைப்பு ஆசாரியருடையதாயிருக்கும்; கர்த்தருடைய பரிசுத்தஸ்தலம் அதின் நடுவிலேயிருப்பதாக.

௰௧. இஸ்ரவேல் புத்திரர் வழிதப்பிப்போனபோது லேவியர் வழிதப்பிப்போனதுபோல வழிதப்பிப்போகாமல், நமது காவலைக் காத்துக்கொண்ட * சாதோக்கின் புத்திரராகிய பரிசுத்தமாக்கப்பட்ட ஆசாரியர்களுக்கு அது அமைந்திருப்பதாக.

* ௪௪, ௰௫.

௰௨. அப்படியே தேசத்திற் படைக்கப்படுகிறதிலே பரிசுத்தத்திற் பரிசுத்தமான பங்கு அவர்களுக்கு லேவியருடைய எல்லையண்டையிலேயிருப்பதாக.

௰௩. ஆசாரியர்களின் எல்லைக்கெதிராக லேவியர் அடையும்பங்கு இருபத்தையாயிரங்கோல் நீளமும் பதினாயிரங்கோல் அகலமுமாயிருப்பது; நீளமெல்லாம் இருபத்தையாயிரங்கோலும், அகலம் பதினாயிரங்கோலுமாயிருப்பதாக.

௰௪. அவர்கள் அதில் ஒன்றையும் விற்கவும், தேசத்தின் முதல்விளைவை மாற்றவும் அப்பாலே கொடுக்கவும் ஒண்ணாது; ஏனெனில் அது கர்த்தருக்குப் பரிசுத்தம்.

௰௫. இருபத்தையாயிரங்கோலுக்கெதிராக அகலத்தில் மீதியாயிருக்கும் ஐயாயிரங்கோலோவென்றால், பரிசுத்தமாயிராமல், குடியேறும் பட்டணத்துக்கும் வெளிப்பாளயங்களுக்கும் விடப்படுவது; பட்டணம் அதின் நடுவிலிருப்பதாக.

௰௬. அதின் அளவுகளாவது, வடபுறம் நாலாயிரத்தைந்நூறுகோலும், தென்புறம் நாலாயிரத்தைந்நூறுகோலும், கீழ்ப்புறம் நாலாயிரத்தைந்நூறுகோலும் மேற்புறம் நாலாயிரத்தைந்நூறுகோலுந்தானே.

௰௭. பட்டணத்தின் வெளிப்பாளயங்கள் வடக்கே இருநூற்றைம்பதுகோலும், தெற்கே இருநூற்றைம்பதுகோலும் கிழக்கே இருநூற்றைம்பதுகோலும் மேற்கே இருநூற்றைம்பதுகோலுமாயிருப்பதாக.

௰௮. பரிசுத்தப்படைப்புக்கெதிராக நீளத்தில் மீதியானது கிழக்கே பதினாயிரங்கோலும், மேற்கே பதினாயிரங்கோலுமாம்; அது பரிசுத்தப்படைப்புக்கெதிராயிருக்கும்; அதின் வரத்து பட்டணத்திற் கூலியருசெய்கிறவர்களுக்கு ஆகாரமாயிருப்பதாக.

௰௯. இஸ்ரவேலின் சகல கோத்திரங்களிலும் எவர்கள் பட்டணத்திற் கூலியருசெய்கிறார்களோ அவர்கள் அதைப் பயிரிடுவார்களாக.

௨௰. படைப்பனைத்தும் இருபத்தையாயிரங்கோல் நீளமும், இருபத்தையாயிரங்கோல் அகலமுமாயிருக்கக்கடவது; பட்டணத்தின் காணியுட்பட இந்தப் பரிசுத்தப் படைப்பைச் சதுரமாகப் படைப்பீர்களாக.

௨௧. அந்தப் பரிசுத்தப்படைப்புக்கும் பட்டணத்தின் காணிக்கும் இந்தண்டையும் அந்தண்டையும் படைப்பிலுடைய இருபத்தையாயிரங்கோலின் முன்பாகக் கிழக்கெல்லைமட்டுக்கும், மேற்கிலே இருபத்தையாயிரங்கோலின் முன்பாக மேற்கெல்லைமட்டுக்கும் மீதியாயிருப்பது அதிபதியினுடையது; பங்குகளுக்கெதிரான அது அதிபதியினுடையதாயிருப்பதாக; அதற்கு நடுவாகப் பரிசுத்தப்படைப்பும், வீட்டின் பரிசுத்தஸ்தலமுமிருக்கும்.

௨௨. அதிபதியினுடையதற்கு நடுவேயிருக்கும் லேவியரின் காணியைத் துவக்கியும் பட்டணத்தின் காணியைத் துவக்கியும், யூதாவின் எல்லைக்கும் பென்யமீன் எல்லைக்கும் நடுவேயிருக்கிறது அதிபதியினுடையது.

௨௩. குறைக் கோத்திரங்களுக்குண்டாகும் பங்குகளாவது, கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் பென்யமீனுக்கொருபங்கும்.

௨௪. பென்யமீன் எல்லையண்டையிலே, கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் சிமியோனுக்கொருபங்கும்.

௨௫. சிமியோனின் எல்லையண்டையிலே, கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் இசக்காருக்கொருபங்கும்.

௨௬. இசக்காரின் எல்லையண்டையிலே, கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும் செபுலோனுக்கொருபங்கும்.

௨௭. செபுலோனின் எல்லையண்டையிலே கீழ்த்திசை துவக்கி மேற்றிசைமட்டும், காத்துக்கொருபங்குமுண்டாயிருப்பதாக.

௨௮. காத்தின் எல்லையண்டையிலே தென்மூலையாகிய தென்றிசையிலே எல்லை, தாமாரைத் துவக்கிக் காதேசிலுள்ள சண்டைமூட்டுதலின் தண்ணீர்கள் மட்டாகவும், பெரிய சமுத்திர மட்டாகவும் போகும்.

௨௯. இதுவே நீங்கள் இஸ்ரவேல் கோத்திரங்களுக்குச் சீட்டுப்போட்டுப் பங்கிடுந்தேசமும் இவைகளே அவைகளின் பங்குகளுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

சதுரமான பரிசுத்த பட்டணத்தின் வாசல்களும் நாமமும்.

௩௰. பட்டணத்தின் புறமுகங்களாவது; வடபுறத்திலே நாலாயிரத்தைந்நூறுகோலாகிய அளவுண்டாயிருக்கும்.

௩௧. பட்டணத்தின் வாசல்களோவென்றால் இஸ்ரவேல் கோத்திரங்களுடைய நாமங்களின்படியே அழைக்கப்படக்கடவது, வடக்கே மூன்றுவாசலிருப்பதாக; ரூபனின் வாசலொன்று, யூதாவின் வாசலொன்று, லேவியின் வாசலொன்று,

௩௨. கீழ்ப்புறத்திலும் நாலாயிரத்தைந்நூறுகோலும் மூன்றுவாசலுமிருப்பதாக, என்னவென்றால், யோசேப்பின் வாசலொன்று, பென்யமீனின் வாசலொன்று, தாணின் வாசலொன்று.

௩௩. தென்புறத்திலும் நாலாயிரத்தைந்

நூறுகோலாகிய அளவும், மூன்று வாசலுமிருப்பதாக, சிமியோனின் வாசலொன்று, இசக்காரின் வாசலொன்று செபுலோனின் வாசலொன்று.

௩௪. மேற்புறத்திலே நாலாயிரத்தைந்நூறுகோலும் அந்த மூன்று வாசலுமிருப்பதாக, காத்தின் வாசலொன்று ஆசேரின் வாசலொன்று, நப்தலியின் வாசலொன்று.

௩௫. சுற்றிலும் பதினெண்ணாயிரங்கோலாகுமது. அந்நாள் துவக்கிப் பட்டணத்தின் நாமம் * கர்த்தர் அங்கேயென்பதேயென்றார். * ஏசா. ௬௦. ௧௪. எரே. ௩. ௧௭. ௩௩. ௧௬. யோவே. ௩. ௨௧. அறிவி. ௨௧, ௩. ௨௨, ௩.

எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

தானியேலின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[தானியேலும் அவனுடைய மூன்று தோழரும் பாபேலிலே, இராசாவின் அரண்மனை வேலைக்குச் சமர்த்தராகும்படிக்கு வளர்க்கப்பட்ட விவரமும் பராபரன் அவர்களுக்குக் கொடுத்த ஞானமும்.]

யூதாவின் இராசாவாகிய யோயாக்கீம் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே, * பாபேலின் இராசாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமுக்கு வந்து, அதை முற்றிக்கைபோட்டான். * ௨. இராசா. ௨௪, ௧.

௨. அப்போது ஆண்டவர் யூதாவின் இராசாவாகிய யோயாக்கீமையும் பராபரனுடைய வீட்டின் பண்டம் பாடிகளிற் சிலவற்றையும் அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார், அவைகளையவன் * சினேயார் தேசத்திற்குத் தன்னுடைய தேவர்களின் வீட்டிலே கொண்டுபோய், அந்தப் பண்டம்பாடிகளைத் தன் தேவர்களின் பொக்கிஷ வீட்டுக்குள் வைத்தான். * மோசே. ௰, ௰.

௩. அப்போது இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே * இராசவித்தாயிருக்கிறவர்களிலும் துரைமக்களிலும் ஒருமாசுமில்லாதவர்களும், அழகான ரூபமுள்ளவர்களும், சகல ஞானத்திலும் வித்தைகளும் அறிவுள்ளவர்களும் கல்வி கற்றுணர்வுள்ளவர்களும், இராசாவின் அரண்மனையிலே நிற்கத்திறமையுள்ளவர்களுமாகிய சில இளைஞரைக்கொண்டுவரவும்,
* ௨. இராசா. ௨௰, ௰௮.

௪. அவர்களுக்குக் கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக்கொடுக்கவும், இராசா தன்னுடைய பிரதானிகளின் தலைவனாகிய அஸ்பேனாசுக்குச் சொன்னான்.

௫. அவர்களுக்கு இராசா, இராசாவாகிய தன்னுடைய போசனத்திலேயுந் தான் குடிக்குந் திராட்சப்பழரசத்திலேயும் அனுதினமான திட்டத்தைக் குறித்து, அவர்களை மூன்று வருஷம் வளர்க்கும்படிக்கும், இவைகள் சென்றபிற்பாடு அவர்கள் இராசாவுக்கு முன்பாக நிற்கும்படிக்குங் கட்டளையிட்டான்.

௬. அவர்களுக்குள் யூதா புத்திரரிலே தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்றவர்களிருந்தார்கள்.

௭. அவர்களுக்குப் பிரதானிகளின் தலைவன் நாமங்களைத் தரிப்பித்துத் தானியேலுக்குப் பெல்தேஷாத்சாரென்றும், அனனியாவுக்குச் சாத்திராகென்றும் மீஷாவேலுக்கு மேஷாகென்றும் அசரியாவுக்கு ஆபேத்நேகோவென்றும் அழைத்தான்.

௮. ஆனால் தானியேல் இராசாவின் போசனத்தினாலும் அவர் குடிக்குந் திராட்சப்பழரசத்தினாலுந் தன்னைத் தீட்டாக்கப்படாதென்று, தன்னிருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு, தன்னைத் தீட்டாக்காதபடிக்குப் பிரதானிகளின் தலைவனிடத்திற் கேட்டான்.

௯. பராபரன் தானியேலுக்குப் பிரதானிகளின் தலைவனுக்கு முன்பாகத் * தயவும் இரக்கமுங் கிடைக்கப்பண்ணினார்.
* ௧. மோசே. ௩௯, ௨௧.

யச. ஆனதுகொண்டு கர்த்தர் அந்தத்தீங்குக்காகச் சாக்கிரதையாயிருந்து, அதை எங்கள்மேல் வரப்பண்ணினார், ஏனென்றால் எங்கள் பராபரனாகிய கர்த்தர் தாஞ்செய்துவருகிற தம்முடைய கிரியைகளிலெல்லாம் நீதியுள்ளவர், ஏனெனில் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடாதேபோனோம்.

யரு. இப்போதும் உமது சனத்தை வல்லமையுள்ள கையினாலே எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணி இந்நாள்வரைக்குமிருக்கிறபடி உமக்குக் கீர்த்தியையுண்டாக்கின எங்கள் பராபரனாகிய ஆண்டவரே, நாங்கள் பாவஞ்செய்து துன்மார்க்கருமாய் நடந்தோம்.

யசு. ஆண்டவரே * உம்முடைய எல்லா நீதிகளின்படியே உமது கோபமும் உமது உக்கிரமும் உம்முடைய பரிசுத்த பர்வதமாகிய எருசலேமென்ற உம்முடைய பட்டணத்தை விட்டுத்திரும்பக்கடவது, அதேதென்றால், எங்கள் பாவங்களினாலும் எங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலும் எருசலேமும் உம்முடைய சனமும் எங்களைச் சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு நிந்தையாயிற்று. * க. யோவான் க, கூ.

யஎ. இப்போதும் எங்கள் பராபரனே, தேவரீர் உமதடியேனுடைய விண்ணப்பத்தையும் அவருடைய கெஞ்சுதல்களையுங் கேட்டு, * ஆண்டவரினிமித்தம் உமது முகத்தைப் பாழாக்கப்பட்ட உம்முடைய

ரிசுத்த ஸ்தலத்தின்மேல் பிரகாசிக்கப்பண்ணும். * சங்கீ. ௮௰, ௩௫. ௰௯.

௰௮. என் பராபரனே, உம்முடைய செவியைச் சாய்த்துக் கேட்டருளும், உம்முடைய கண்களைத் திறந்து, எங்கள் பாழ்க்கடிப்புகளையும், உமது நாமம் தரிப்பிக்கப்பட்ட பட்டணத்தையும் பார்த்தருளும், ஏனென்றால் எங்கள் நீதிகளையல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி நாங்கள் எங்கள் விண்ணப்பங்களையும் உமக்கு முன்பாகப் போட்டுவைக்கிறோம்.

௰௯. ஆண்டவரே கேளும், ஆண்டவரே மன்னியும், ஆண்டவரே கவனியும், என் பராபரனே, உம்முடைய நிமித்தமாக அதைத் தாமதியாமற் செய்யும், ஏனென்றால் உம்முடைய பட்டணத்திற்கும் உம்முடைய சனத்திற்கும் நாமம் தரிப்பிக்கப்பட்டதே யென்றேன்.

௨௰. * இப்படி நான் பேசிச் * செபம்பண்ணி, என் பாவத்தையும் என் சனமாகிய இஸ்ரவேலின் பாவத்தையும் அறிக்கையிட்டு, என் பராபரனுடைய பரிசுத்த பர்வதத்திற்காக என் விண்ணப்பத்தை என் பராபரனாகிய கர்த்தருக்கு முன்பாகப் போட்டு வைத்துக்கொண்டிருந்தேன்.

௨௧. அப்போது * என் செபத்திலே நான் இன்னம் பேசிக்கொண்டிருக்கக் கொள்ள, முதல் தரிசனையிலே நான் கண்ட புருஷனாகிய † காபிரியேல், பறந்துவரவிடப்பட்ட வேகமாய், அந்திக்காணிக்கையின் நேரமாகிய வேளையிலே யென்னண்டை வந்து சேர்ந்து, * ஏசாயா. ௬௫, ௨௪. † அ, ௰௬.

௨௨. எனக்குத் தெளிவுண்டாக்கி என்னோடே பேசிச் சொன்னதாவது. தானியேலே, உன்னை யுணர்வுடையவனாக்க இப்போது புறப்பட்டுவந்தேன்.

௨௩. உன் வேண்டுதல்களின் துவக்கத்திலே கட்டளை புறப்பட்டது, நீ மகாபிரியமானவனென்று உனக்கறிவிக்க நான் வந்தேன், இப்போது நான் சொல்லும் வார்த்தையை நீ கவனித்துக் கேட்டுத் தரிசனையை யுணர்ந்துகொள்.

௨௪. மீறுதலைத் தவிர்க்கிறதற்கும், பாவங்களைத் தொலைக்கிறதற்கும் அக்கிரமத்தை நிவர்த்தி பண்ணுகிறதற்கும், * நித்திய நீதியை வருவிக்கிறதற்கும் † தரிசனையையும் தீர்க்கதரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும் ‡ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவரை யபிஷேகம்பண்ணுகிறதற்கும், உன் சனத்தின்மேலும் உன்னுடைய பரிசுத்த பட்டணத்தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லக் குறிக்கப்பட்டிருக்கிறது. * எபி. ௯, ௰௨. † மத். ௰௧, ௰௩. ‡ சங்கீ. ௪௫, ௮. அப். ௪, ௨௭. ௨௮. ௰, ௩௮. ௪௧.

௨௫. இப்போதும் நீ அறிந்துணர்ந்து கொள்ள வேண்டியதேதென்றால், எருசலேமைத் * தலைவராகிய மேசியாவுட டிமிருக்கத் திரும்ப எடுப்பிக்கிறதற்குக் கட்டளை புறப்பட்டது முதல் ஏழுவாரமும் அறுபத்திரண்டுவாரமுமுண்டு, அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் திரும்பக் கட்டப்பட்டிரும். ஆனாலும் இக்கட்டான காலங்களிலேதான். * ஏசாயா. ௫௫, ௪. அப்போ. ௨, ௩௬.

௨௬. இந்த அறுபத்திரண்டுவாரங்களுக்குப் பிறபாடு * மேசியா சங்கரிக்கப்பட்டு, இராதே போவார், ஆனாலவர் [illegible] லல [illegible]ன சனப்பட்டணத்தையும் பரிசுத்தஸ்தலத்தையும் அழித்துப்போடும், அதின் முடிவு பிரளயமாயிருக்கும் † யுத்தத்தின் முடிவுமட்டுக்கும், பாழ்க்கடிப்புகள் தீர்ணயிக்கப்பட்டிருக்கிறது. * ஏசா. ௫௩, ௮. † லூக்கா. ௨௧, ௨௪.

௨௭. ஆனால் அவர் ஒருவாரமட்டும் அநேகருக்கு உடன்படிக்கையைத் திடப்படுத்தி, அந்தவாரம் பாதிசென்றபோது பலியையும் காணிக்கையையும் ஓயப்பண்ணுவார், * அருவருப்பான செட்டைகளோடே பாழ்க்கடிக்கிறவன் வந்து, நிர்ணயிக்கிறதிர்மூலம் தீருமட்டுக்கும் பாழ்க்கடிக்கிற சனத்தின்மேற் சொரியுமென்றான். * மத்தே. ௨௪, ௰௫. மாற். ௰௩, ௰௪.

௰. அதிகாரம்.

[தானியேலுக்குத் தேவகுமாரன் தரிசனையானது.]

பெர்சியாவின் இராசாவாகிய கோரேஸ் அரசாண்ட மூன்றாம் வருஷத்திலே பெல்தெஷாத்சாரென்று பேரிடப்பட்ட தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப்பட்டது. அந்தக் காரியம் சத்தியமும் நீடிய யுத்தத்திற்கடுத்ததுமாயிருக்கிறது, அந்தக் காரியத்தை யவன் கவனித்துத் தரிசனையின் பொருளை விளங்கிக்கொண்டான்.

௨. அந்நாட்களில் தானியேலாகிய நான் மூன்று வாரமாகிய நாட்களாய்த் துக்கித்துக்கொண்டிருந்தேன்.

௩. அந்த மூன்று வாரங்களாகிய நாட்கள் நிறைவேறுமட்டும் ருசியான அப்பத்தை நான் புசிக்கவில்லை, இறைச்சியும் திராட்சரசமும் என் வாயிலே பட்டதுமில்லை, நான் எண்ணெய் பூசிக்கொண்டதுமில்லை.

௪. முதலாம் மாதம் இருபத்து நாலாந் தேதியிலே நான், * இதெக்கேல் என்கிற பெரிய ஆற்றங்கரையிலிருந்து, * ௧. மோ. ௨, ௰௪.

௫. என் கண்களை யேறெடுக்கையில், இதோ * வெண்புடவையுடைகளைத் தரித்துத் தமது அரையிலே ஊப்பாஸின் தங்கமான கச்சையைக் கட்டிக்கொண்டிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன். * அறிவி. ௧, ௰௩-௰௫.

சு. அவருடைய சரீரம் தர்சீஸ் இரத்தினத்தைப்போலேயும், அவருடைய முகம் மின்னலின் ரூபத்தைப்போலேயும், அவருடைய கண்கள் எரிகிற தீப்பந்தங்களைப்போலேயும், அவருடைய புயங்களும் அவருடைய கால்களும் துலக்கப்பட்ட வெண்கல வருணத்தைப்போலேயும், அவருடைய வார்த்தைகளின் சத்தம், முழங்குகிற முழக்கத்தைப்போலேயுமிருந்தது.

எ. தானியேலாகிய நானொருத்தன் அந்தத் தரிசனத்தைக் கண்டேன், என்னோடிருந்த மனுஷரோவென்றால் அந்தத் தரிசனத்தைக் காணாதிருந்தார்கள், ஆகிலும், மகா பயங்கரம் அவர்கள்மேல் இறங்கினது, அவர்கள் ஓடி ஒளித்துக்கொண்டார்கள்.

அ. நான் தனித்துவிடப்பட்டு, அந்தப் பெரிய தரிசனத்தைக் கண்டேன், ஆனாலெனக்குள்ளே திடனுமிருந்ததில்லை, என் ரூபமென்னிலே மாறிவதங்கிப்போயிற்று, திடனற்றுப்போனேன்.

கூ. அவருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேட்டேன், அவருடைய வார்த்தைகளின் சத்தத்தை நான் கேட்டபோதோவென்றால், * நான் முகஞ்சாய்ந்து நித்திரைபோகிறவனாகி, முகங்குப்புறத் தரையிலே விழுந்தேன். * அ, அதி. யஅ.

ஒருதேவதூதன் தானியேலைத் திடனடையப்பண்ணிப் பெர்சிய இராசாக்களையுங் கிரேக்கு இராசாக்களையுங்கொண்டு யூதருடைய பாக்கிய சீராக்கெடுக்கப்பார்க்கும் பசாசுக்களோடேதானும் மிகவேலும் எதிர்த்து நிற்கிறதைத் தானியேலுக்கறிவித்தது.

ய. ஆனால் இதோ, ஒருத்தனுடைய கையென்னைத் தொட்டு, என் முழங்கால்களும் என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னை அசைத்தது.

யக. அவன் என்னுடனே பிரியமுள்ள புருஷனே தானியேலே, நான் உன்னுடனே சொல்லும் வார்த்தைகளின்பேரிலே நீ கவனமாயிருந்து, உன் காலை ஊன்றி நில், ஏனெனில் இப்போது உன்னண்டைக்கு அனுப்பப்பட்டுவந்தேனென்றான், இந்த வார்த்தையை அவன் என்னோடே சொல்லுகையில் நடுக்கத்தோடே எழுந்துநின்றேன்.

யஉ. அப்போதவன் என்னோடே சொன்னதாவது, தானியேலே, பயப்படாதே, ஏனென்றால் நீ உணர்வடைகிறதற்கும் * உன்னையுன்னுடைய பராபரனுக்கு முன்பாகச் சிறுமைப்படுத்துகிறதற்கும் உன்னிருதயத்தைப் பிரயோகம் பண்ணின முதல் நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது, இந்த உன்னுடைய வார்த்தைகளுக்காக நான் வந்தேன். * உ. கூ. வச.

யங. ஏனென்றால் * பெர்சிய இராச்சியத்தின் பிரபு இருபத்தொருநாள்மட்டும் என்னோடே எதிர்த்துநின்றான், ஆனால் இதோ, ‡ பிரதான பிரபுக்களில் ஒருத்தனாகிய † மிகவேல் எனக்கொத்தாசையாக வந்தான், ஆனதுகொண்டு நான் அங்கே பெர்சியாவின் இராசாக்களண்டையிலே தரித்திருந்தேன்.

* எபேசி. சு, யஉ. † கொலோ. க, யசு. † தானி. யஉ, க. யூதா திரு. கூ. வச. அறிவி. யஉ, எ.

யச. இப்போதும் பின்நாட்களில் உன் சனத்திற்குச் சம்பவிப்பதை யுனக்குத் தெரியப்பண்ணும்படிக்கு வந்தேன், ஏனெனில் இந்தத் தரிசனம் நிறைவேற இன்னம் நாட்செல்லுமென்றான்.

யரு. அவன் இந்த வார்த்தைகளை யென்னோடே சொல்லுகையில், நான் தலையிறங்கிக்கொண்டு தரையை நோக்கிப் பேச்சற்றுப்போனேன்.

யசு. ஆனால் இதோ, மனுபுத்திரரின் சாயலாகிய ஒருத்தன் என் உதடுகளைத் தொட்டான், அப்போது நான் என் வாயைத் திறந்து பேசி, எனக்கெதிரே நின்றவனுடனே சொன்னதாவது, என் ஆண்டவனே, தரிசனையால் என் மூட்டுக்கள் புரண்டது, பலனற்றுப்போனேன்.

யஎ. ஆகையால் இந்த என்னுடைய ஆண்டவனோடே, என் ஆண்டவனுடைய இந்தப் பணிவிடைக்காரன் பேசக்கூடுவதெப்படி? இனி என்னில் பெலனிராது, என்னில் மூச்சிராது என்றேன்.

யஅ. அப்போது மனுஷரூபமானவன் திரும்ப என்னைத் தொட்டு என்னைத் திடப்படுத்தி,

யகூ. பிரியமான புருஷனே, * பயப்படாதே, உனக்குச் சமாதானம், திடன்கொள், திடன்கொள்ளென்றான், இப்படி அவன் என்னோடே பேசுகையில், நான் திடன்கொண்டு, என் ஆண்டவன் பேசுவாராக, ஏனெனில் என்னைத் திடனடையப்பண்ணினீரென்றேன். * சங்கீ. உஎ, யச.

உய. அப்போது அவன் சொன்னதாவது, உன்னண்டைக்கு ஏன் வந்தேனென்றறிவாயோ? இப்போது * பெர்சியாவின் பிரபுவோடே யுத்தம்பண்ணத் திரும்பிப்போவேன், நான் புறப்பட்டுப்போனது, இதோ கிரேக்கதேசத்தின் பிரபு வருவான். * யங. வச.

உக. ஆனாலும் சத்திய எழுத்திலே எழுதியிருக்கிறதை உனக்கறிவிப்பேன் * உங்கள் பிரபுவாகிய மிகவேலேதவிர என்னோடேகூட அவர்களுக்கு விரோதமாய்ப் பலன்கொள்ளுகிறவர்கள் ஒருத்தருமில்லை, நானும் மேதியனாகிய தரியு அரசாண்ட முதலாம் வருஷத்திலே அவனைத் திடப்படுத்தவும் பலப்படப்பண்ணவும் துணையாயிருந்தேன்.

* யங. வச.

௰௧. அதிகாரம்.

[பெர்சிய இராசசியத்தின் தேசங்களைத்த னக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ள போகி றகிரேக்கசசாதியாகிய பெரிய அலெக்ச நதரின செயபதியும அவனுக்குப்பிறபாடு அவன இராசசியங்களைக் கட்டிக்கொள ளப்போகிற நாலுபங்குக்காரரில இர ணடுதரத்தாராகிய எகிபத்துவின இரா சாக்களுக்கு சூரிய இராசாக்களும ஒருவ ருககொருவர் பணணியாயசெயயும யுத்தங்களுமநடடுவேயகபபடட யூதேயா தேசத்தார் அதிலேசிக்கபபடடதையு ஞசிலமோசங்களுமமுனனறிவிக்கபபட டது.]

இப்போது * மெய்யான செய்தியை உனக்கறிவிப்பேன * ய, உக.

௨. இதோ, இன்னம மூன்று இராசாக களபெர்சியாவில எழும்புவார்கள, அதின பிறகு நாலகாம இராசாவாயிருப்பவனெல லாரிலுமமகா ஐசுவரியசமபன்னனுவான, அவனதன ஐசுவரியத்தின பலப்பட்டபிற பாடு கிரேக்கஇராசசியத்திறகுவிரோதமா க எல்லாவறறையும எழுப்புவான.

௩. ஆனாற பராக்கிரமமான ஒரு இராசா எழும்பிப்பலத்துள்ள ஆளுகையாயாணடுத னக்குச்சரிப்போனபபோலேசெய்வான.

௪. அவன எழும்பின பிறபாடோவெ னறால, அவனுடைய இராசசியம உடை நதுபோய, * வானத்தின நானகு காறறுத் திசைகளிலும பகிரபபடும, ஆனால அவனுடை யசந்ததியாருக்கலல, அவன் ஆணடிருநத ஆளுகைப்படியுமிராது ஏனெனில அவனு டையஇராசசியம பிடுங்குணடு, அவர்கள லாதவேறேபேர்க ளிடமாயத்தாணடிப போம. * எ, கூ. அ, அ.

௫. அவனுடையபிரபுக்களில ஒருத்தனு டையதெறகத்து இராசாபலத்துக்கொளளு வான, ஆனால அவனைப்பார்ககிலும வேறொ ருததனபலத்துக்கொணடு ஆளுவான், இவ னுடைய ஆளுகைபலத்துள்ள ஆளுகையாயி ருககும.

௬. அவர்கள சிலவருஷங்களுக்குப்பிற பாடு ஒருவருக்கொருவர் உறவுகடடுவார்க ள, சரிமானமாகுமபடிக்குத்தெறகத்து இராசாவின குமாரத்தி வடக்கத்து இரா சாவண்டைக்கு வருவாள, ஆனாற்புயபலன அவளுக்கிராமற்போம, அவனும அவனு டையபுயமுமநிலைநிறபதுமிலலை. அவளும அவளை அழைத்துவந்தவர்களும, அவளைப பெறறவனும அவளை அக்காலங்களிற்பலப படுத்தினவனும ஒப்புக்கொடுக்கப்படுவார் கள.

௭. ஆனால அவளுடையதேவர்களின கிளை யாகிய ஒருத்தன தனதானத்திலெழும்பி இராணுவத்தோடே வந்து வடக்கு இராசாவின அரணிப்புகளுக்குட்பிரவேசி த்துத்தானவேணடியதை அவைகளிலே ய்து பலத்துக்கொணடு,

௮. அவர்களுடைய தேவர்களையும அவர்களுடைய அதிபதிகளையும அவ ர்களுடையவிலையேறபபெறற வெளளிப பொன்னுமான பணடமபாடிகளையும கை பபிடித்து எகிபத்திறகுக்கொணடுபோய சிலவருஷங்களமடடும வடக்கத்து இரா சாவைப்பார்க்கிலும நிலைமையாயிருப பான.

௯. இவனதெறகத்து இராசாவின இரா சசியத்திறகுவிரோதமாகவந்து, தன் னுடைய சுதந்திரமதிடபபோவான.

௰. ஆனால இவனுடையகுமாரர்பகை கலந்து, பெரிய இராணுவங்களின சேனை யைக்கூடடுவார்கள, இவர்களிலொருவன வரவேவந்து, பிரளயமாய்க்கடந்து, தி டடித்துமவந்து, அவனுடைய அரணிப்பு மட்டும யுத்தங்கலந்து சேருவான.

௰௧. அப்போதுதெறகத்து இராசா கிலேசமாயக்கோபமூணடு, வடக்கத்து இரா சாவாகிய இவனோடே யுத்தமபணணுவான, இவன பெரியசேனையைப்படையெடுத்தா லும, இந்தச்சேனை அவனகையில ஒப பபுக்கொடுக்கப்படும.

௰௨. இந்தச்சேனை நீக்கப்படடபிற் பாலே அவனுடைய இருதயம உயர்ந்திருக் கும, ஆனால அவன அநேகமாயிரமானபே ரை மடியவைத்திருந்தாலும, பலஞ் கொளளாமற்போவான.

௰௩. ஏனெனில வடக்கத்து இராசாதி ருமபமுந்தியதிலும பெரியசேனையைச் சேர்த்து சிலவருஷங்களசென்றபோதமகா இராணுவத்தோடும் வெகுசமபத்தோடே வரவேவருவான.

௰௪. அக்காலங்களில அநேகர் தெற கத்து இராசாவுக்குவிரோதமாக எழும்பு வார்கள. அப்போது உன்சனத்திலுள்ள கொள்ளைக்காரரின புத்திரர் தரிசனத் தை நிறைவேறறத்தங்களையுயர்த்திவிழு வார்கள.

௰௫. வடக்கத்து இராசாவந்து, கொ த்தளம போடடு, அரணிப்பான பட்டணங்களைப் பிடிப்பான, தெறகத்து இராசாவின பு யபலன்களும அவனதெரிந்துகொணட சனங் களும் நிலைநிறகாமற்போம, எதிர்த்து நிறக பலமுமிலலை.

௰௬. ஆகையால அவனுக்குவிரோதமாய் வருகிறவன தனக்குச்சரிப்போனபபடி யேசெய்வான, இவனுக்குமுனபாக நி றபவனிலலை இவன * சிங்காரமான தேசத்திலிருப்பான, எல்லாம இவன கைக்குளளகப்படடிருக்கும. * அ, அதிக

௰எ. தன இராச்சியத்தின்வல்லமையோடெல்லாத்தாலும் தன்னோடேகூடச்செம்மையமார்க்கத்தாருமவர், இவன் தன்முகத்தைத்திருப்பி, இப்படியேசெய்து, பெண்ணாகிய ஒருகுமாரத்தியை அவன் அவளையழிக்கும்படிக்கு அவனுக்குக்கொடுப்பான், ஆனால் அவள் இதில்நிற்பதுமில்லை இவனுக்காக அப்படிச்செய்வதுமில்லை.

௰அ. பிற்பாடு இவன் தன்முகத்தைத் தீவுகளுக்குநேராகத்திருப்பி, அநேகங்களைப்பிடித்துக்கொள்ளுவான். ஆனால் ஒருசேனாபதி இவன்செய்கிறநிந்தையையிவனிடத்தில் ஒப்பப்பண்ணுவதுமல்லாமல், இவன்செய்தநிந்தையினிமித்தம் இவனுக்குச்சரிக்கச்சரியுங்கட்டுவான்.

௰௯. ஆகையால் தன்முகத்தைத்தன்தேசத்தின் அரண்களுக்கு நேராகத்திருப்புவான், அங்கேயிடறிவிழுந்து, காணப்படாமற்போவான்.

௨௰. இவன் பட்டத்திற்கோவென்றால், தண்டக்காரனைச்செலுத்துகிற இராச்சியத்தில் திரியப்பண்ணுகிற ஒருத்தன் எழும்புவான், கொஞ்சநாளுக்குள்ளேயவன் கோபமில்லாமலும் யுத்தமில்லாமலும் முறிக்கப்படுவான்.

விசேஷமாகச்சூரிய இராசாவான அந்தியோகு எப்பிபானேசெய்யுங்காரியங்களும், அவன் எருசலேமிலுள்ள பரிசுத்தஸ்தலத்தைப்பரிசுத்தக்குலைச்சலும் பராமுமாக்கிப்பராபரனுடைய சனத்தைச் சிலகாலமட்டும் மிகவுந்துன்பப்படுத்தியதும் முன்னறிவிக்கப்பட்டது.

௨௧. இவன் பட்டத்திலோவென்றால் கொஞ்சம் எண்ணிக்கையாயிருக்கிற ஒருத்தன் எழும்புவான், இவனுக்கு இராச்சியபாரத்தின் மேன்மையைக்கொடாதிருப்பார்கள், ஆனால்சாதுகோபாங்கமாய்வந்து, இச்சகம்பேசி, இராச்சியத்தைக்கட்டிக்கொள்ளுவான்.

௨௨. பிரளயமாய்வருகிற புயபலன்கள் இவனாலே பிரளயமாய்முறிக்கப்படும், உடன்படிக்கைபண்ணப்பட்ட தலைவனுங்கூடத்தானே.

௨௩. ஏனென்றால் அவனோடே வுறவுகட்டிக்கொண்ட நாட்கள்முதல் இவன்கபடம்பண்ணிப்போயேறிக் கொஞ்சச்சனங்களோடேபலத்துப்போவான்.

௨௪. சேமசுகவாழ்வோடுஞ் சம்பூரணத்தோடுமிருக்கையில், இவன் உட்பிரவேசித்துத்தன்பிதாக்களுந் தன்பிதாக்களின்பிதாக்களுஞ் செய்யாததைச் செய்வான். கொள்ளையிட்டுச்சூறையாடித்திரம்ப அவர்களுக்கிறைத்துப்பங்கிட்டு அரண்களுக்கு விரோதமாகத் தனக்குள் நினைவுகளை நினைப்பான், அப்படிச்சிலகாலமட்டுமிருக்கும்.

௨௫. பின்னையுந் தெற்கத்து இராசவுக்குவிரோதமாகப்பெரிய இராணுவத்தோடேபோர்செய்யத் தன்வல்லமையையுந் தன் தைரியத்தையுமெழுப்புவான் அப்போது தெற்கத்து இராசாவும் பலத்தபெரிய இராணுவத்தோடே யுத்தஞ்செய்வான், ஆனால் அவன் நிற்கமாட்டான், ஏனெனில் அவனுக்குவிரோதமாகச் சற்பனைகளை நினைப்பார்கள்.

௨௬. அவனுடைய போசனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அவனைமுறியப்பண்ணுவார்கள், ஆகையால் இவனுடைய இராணுவம் பிரளயமாய்வரும் அநேகர்கொலையுண்டுவிழுவார்கள்.

௨௭. இந்தஇரண்டுஇராசாக்களின் இருதயமும் பொல்லாப்புச்செய்வதற்கிருக்கும், ஒரேபந்தியிலிருந்து பொய்ப் பேசிக்கொள்ளுவார்கள், ஆனால் அதுவாய்ப்பதில்லை, ஏனெனிற் குறித்தகாலத்திற்கு முடிவு இன்னமிறுத்திவைக்கப்பட்டிருக்கும்.

௨௮. இவன் மகாசம்பத்தோடே தன்தேசத்திற்குத்திரும்பித்தன்னிருதயத்தைப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக வைத்து அத்தற்கானதைச்செய்து, தன்தேசத்திற்குத்திரும்பிப்போவான்.

௨௯. குறித்தகாலத்திலே திரும்பித் தெற்கிலேவருவான், ஆனால்இவனுடைய பின்நடபடி இவனுடையமுன்நடபடியைப்போலிருப்பதில்லை.

௩௰. இவனுக்குவிரோதமாகக்கித்தீந்தேசத்தின்கப்பல்களவரும், அதினால் இவன் மனநோவடைந்து, திரும்பிப்போய்ப் பரிசுத்த உடன்படிக்கைக்கு விரோதமாக மனமடிவாகி, அத்தற்கானதைச்செய்து, பரிசுத்த உடன்படிக்கையைவிட்டவர்களைத்திரும்பக்கவனித்துக்கொண்டிருப்பான்.

௩௧. அவனால்வைக்கப்படும்புயபலன்கள் இறங்கியிருந்து, அரணான பரிசுத்த ஸ்தலத்தைப்பரிசுத்தக்குலைச்சலாக்கி, * அன்றாடகப்பலியைத்தள்ளிப் பாழ்க்கடிக்கும் அருவருப்பையங்கேவைப்பார்கள். * அ, ௰௧.

௩௨. உடன்படிக்கைக்குத்துரோகிகளாயிருக்கிறவர்களை இச்சகப் பேச்சுகளினாலே கள்ளமார்க்கத்தாராக்குவான், தங்கள் பராபரனையறிந்திருக்கிற சனமோவென்றால் திடன்கொண்டு அத்தற்கானபடிசெய்வார்கள்.

௩௩. சனத்திற்புத்தியைக்கற்றுக்கொடுக்கிறவர்கள் அநேகரை யுணர்வடையப்பண்ணுவார்கள், அநேகநாளமட்டும்பட்டயத்தாலும் அக்கினியாலுஞ் சிறையிருப்பாலுங் கொள்ளையாலும்விழுவார்கள்.

௩௪. இப்படியவர்கள்விழுகையிற்கொஞ்

ச ஒத்தாசையாற் சகாயம் அடைவார்கள் அப்போது அநேகர் இச்சகவார்த்தைகளோடே அவர்களை யொட்டிக்கொள்ளுவார்கள்.

௩௫. புத்திமான்களைப் * புடமிட்டுச் சுத்திகரிக்கிறதற்கும் வெண்மையாக்குகிறதற்கும், அவர்களிற் சிலர், அந்த முடிவுகாலமட்டும் விழுவார்கள், ஏனென்றால் அது குறித்த காலமவரைக்கு இன்னுஞ் செல்லும். * ௧. பேது. ௧, ௬. ௭.

கிறிஸ்துவுக்கு விரோதியின் கடைசிக்காலத்தைக் குறித்துத் தீர்க்கதரிசனம்.

௩௬. இராசா தனக்கு இஷ்டப்படி செய்து. * தன்னை உயர்த்தி தேவனென்னப்பட்ட எல்லாவற்றிலுந் தன்னைப் பெரியவனாக்கி, † தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான், சினந்தீருமட்டும் அவனுக்குக் கைகூடியும் வரும், ஏனென்றால் நிர்ணிக்கப்பட்டது நடந்தேறும். * ௨. தெசலோ. ௨, ௪. † ௭, ௮, ௨௫. அறிவி. ௰௩, ௫. ௬.

௩௭. அவன் தன் பிதாக்களின் தேவர்களைக் கவனிக்காமலும் ஸ்திரீகளின் சிநேகத்தையாகிலும் எந்தத் தேவனையாகிலுங் கவனிக்காமலும், எல்லாத்திற்குந் தன்னைப் பெரியவனாக்கி,

௩௮. அரணிப்புகளென்ற தேவனைத் தன்னுடைய தானத்திலே கனம்பண்ணித் தன் பிதாக்களறியாத ஒரு தேவனைப் பொன்னினாலும் வெள்ளியினாலும் இரத்தினங்களினாலும் உச்சிதமான வஸ்துக்களினாலுங் கனம்பண்ணுவான்.

௩௯. அவன் அரணிப்பான கோட்டைகளுக்காகவும், அந்நிய தேவனுக்காகவுங் கூடச் செய்வதெதென்னில், அவைகளை யெண்ணிக்கொள்ளுகிறவர்களுக்கு மகா கனமுண்டாக்கி, அவர்களை அநேகரை யாளப்பண்ணி அவர்களுக்குச் சீமையைக் கிரயமாகப் பங்கிடுவான்.

௪௦. முடிவின் காலத்திலேயோவென்றால், தெற்கத்து இராசா அவனோடேகூட முட்டுக்கு நிற்பான், ஆனால் வடக்கத்து இராசா இரதங்களோடுங் குதிரைக்காரரோடும் அநேகங் கப்பல்களோடும் அவன்மேற் கொந்தளிப்பாய் விழுந்து, தேசங்களுக்குட் பிரவேசித்து, அவைகளைப் பிரளயமாய் மூடிக்கடந்து,

௪௧. * சிங்காரமான தேசத்திலும் வருவான், அப்போது அநேகர் விழுவார்கள், ஆனால் ஏதோமும் மோவாபும் அம்மோன் புத்திரரிற் பிரதானமானவர்கள் அவன் கைக்குத் தப்பிப்போவார்கள். ௰௬, ௨௪ ௮, அதி ௬.

௪௨. அவன் தன் கைகளைத் தேசங்களைப் பிடிக்க நீட்டுவான், எகிப்துதேசமுந் தப்புவதில்லை.

௪௩. எகிப்துவினுடைய பொன்னும் வெள்ளியுமான ஐசுவரியங்களையும் உச்சிதமான எல்லா வஸ்துக்களையும் ஆண்டுகொள்ளுவான், லீபியரும் எத்தியோப்பியரும் அவனைப் பின்செல்லுவார்கள்.

௪௪. ஆனால் கிழக்கிலும் வடக்கிலுமிருந்து வருஞ்செய்திகள் அவனைக் கலங்கப்பண்ணும், அப்போது அவன் அநேகரைப் பாழாக்கவுஞ் சங்காரம்பண்ணவும் மகா உக்கிரத்தோடே புறப்பட்டுப்போவான்.

௪௫. தன் அரமனையின் கூடாரங்களைச் சமுத்திரங்களுக்கு நடுவிலே சிங்காரமான பரிசுத்த பருவதத்தண்டையிலே போடுவான் ஆனால் அவன் தன் முடிவுக்கு வந்திடுவான் அவனுக்கொத்தாசை பண்ணுவாருமில்லை.

௰௨. அதிகாரம்.

[அப்பாலுங் கடைசிக்காலத்தைக் குறித்துத் தீர்க்கதரிசனம்.]

உன் சனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய பிரபுவாகிய * மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான், ஏனென்றால் ஒரு சாதி தோன்றினது முதற்கொண்டு அக்காலமட்டும் உண்டாயிராத இக்கட்டுக்காலமாயிருக்கும் அக்காலத்திலே உன் சனம் † விடுவிக்கப்படும், புஸ்தகத்திலெழுதியிருக்கிறவர்களாகக் கண்டுபிடிக்கப்படுகிற அனைவருந்தானே. * ௰, ௰௩. அறிவி. ௰௨, ௭. † எரேமி. ௩௰, ௭.

௨. பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களில் * அநேகர், † சிலர் நித்தியசீவனுக்குஞ் சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும், விழித்தெழுந்திருப்பார்கள். * அறிவி. ௨௰, ௪. † யோவா. ௫, ௨௯.

௩. * புத்தியைக் கற்றுக்கொடுத்தவர்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப் போலேயும், அநேகரை நீதிக்குள்ளாக்கினவர்கள் நட்சத்திரங்களைப் போலேயும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாய்ப் பிரகாசித்திருப்பார்கள். மத்தே. ௰௩, ௪௩.

௪. தானியேலாகிய நீயோவென்றால் முடிவின் காலமட்டும் இந்த வார்த்தைகளை * புதைபொருளாக வைத்துவைத்து இந்தப் புஸ்தகத்தை முத்திரைபோடு, அப்போது அநேகர் ஓடிவந்தாராய்வார்கள், அறிவும் பெருகிப்போமென்றான். * ௮, ௨௬. அறிவி. ௨௨, ௰.

௫. அப்போது இதோ, தானியேலாகிய நான் வேறே இரண்டுபேரை, ஒருத்தனை ஆற்றங் கிக்கரையிலும் ஒருத்தனை ஆற்றங் கக்கரையிலும் நிற்கக்கண்டேன். * ௯, அதி. ௪

௬. இவர், * வெள்ளைப்புடவை யுடுப்புக் கந்தரித்தவரும், † ஆற்றினுடைய தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷனை நோக்கி, இந்தப்புதுமைகளின் முடிவுவர எந்தமட்டுஞ் செல்லுமென்று கேட்டான். * ௰, ௫. ௬. † அ, அ௩. ௰௬.

௭. அப்போது வெள்ளைப்புடவையுடுப்புக் கந்தரித்தவரும் ஆற்றினுடைய தண்ணீர்களின்மேல் நிற்கிறவருமாகிய புருஷனுடைய உத்தரவைக்கேட்டேன், அவர் * தம்முடைய வலதுகரத்தையுந் தம்முடைய இடதுகரத்தையும் வானத்திற்கேறெடுத்து, † ஒருகாலமுங்காலங்களும் அரைக்காலமும் போகுமட்டுஞ் செல்லும், பரிசுத்தசனத்தின் பலனைச் சிதறவடிக்குதல் முடிந்திருக்கும்போதே, இவைகளெல்லாம் நிறைவேறித் தீருமென்று, என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறவர்பேரிலே ஆணையிட்டார். * அறிவிப்பு. ௰, ௫. ௬. எ, ௨௫. † அறிவிப்பு. ௰௧, ௩. ௰௨. ௬, ௰௪.

௮. நான் அதைக்கேட்டேன், உணராமலிருந்தேன், ஆகையால் என்னாண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்குமென்றுகேட்டேன்.

௯. அவன்சொன்னதாவது, தானியேலே போய்விடு, ஏனென்றால் இந்த வார்த்தைகள் முடிவின்காலமட்டும் * புதைபொருளாக் கவைக்கப்பட்டும் முத்திரித்துமிருக்கும். * ௪. ௰௪.

௰. அநேகர் * சுத்தமும் வெண்மையுமாக்கப்பட்டுப் புடமிடப்படுவார்கள். ஆகாதவர்களோவென்றால் துர்மார்க்கமாய் நடப்பார்கள், † ஆகாதவர்களெல்லாரும் அதையுணராதேபோவார்கள், புத்திமான்களோ அதையுணருவார்கள். * ௰௧, ௩௫. அறிவி. ௨௨, ௰௧.

௰௧. * பாழ்க்கடிக்கும் அருவருப்பை வைக்கிறதற்காக அன்றாடகப்பலி தள்ளப்பட்டகால்முதற்கொண்டு ஆயிரத்திருநூற்றுத்தொண்ணூறு நாளுண்டு. * ௰௪, ௧௧. மத்தே. ௨௪, ௰௫.

௰௨. ஆயிரத்துமுந்நூற்றுமுப்பத்தைந்து நாள்மட்டுங்காத்திருந்து சேர்பவன் பாக்கியவான்.

௰௩. நீயோவென்றால் முடிவுவருமட்டும் போயிரு, ஏனெனில் நீயிளைப்பாறிக்கொண்டிருந்து நாட்களின்முடிவிலே உனக்குத் தந்தரவீதத்திற்கு எழுந்திருப்பாயென்றான்.

தானியேலின்தீர்க்கதரிசனம் முடிந்ததுமுற்றும்.

ஓசெயாவின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[விக்கிரக ஆராதனையால் கர்த்தரைவிட்டுச் சோரம்போன இஸ்ரவேலருக் கடையாளமாக ஓசெயா தேவகற்பனையின்படியே ஒருசோரஸ்திரியை விவாகம்பண்ணினதும், பிறந்த பிள்ளைகளுக்குக் கர்த்தர் இஸ்ரவேலத்தாமவெறுத்துத்தள்ளுவோமென்றதற்கடையாளமான பேர்களையிட்டுச் சொன்னதும்.]

உசியா, யோத்தாம், ஆகாஸ், இஸ்கியாவென்ற யூதாவுடைய இராசாக்களின் நாட்களிலும் யோவாசின் குமாரனாகிய * எரொபெயாம் என்ற இஸ்ரவேலுடைய இராசாவின் நாட்களிலும், பேயேரியின் குமாரனாகிய ஓசெயாவுக்குண்டான கர்த்தருடையவசனம். * ௨. இராசா. ௰௪, ௨௩.

௨. கர்த்தர் ஓசெயாவைக்கொண்டு உரைக்கத் துவக்கும்போது, கர்த்தர் ஓசெயாவுடனே, நீபோய், ஒருசோரஸ்திரியையுஞ் சோரமார்க்கத்திற்பிறந்த பிள்ளைகளையும் உனனிடமாகச்சேர்த்துக்கொள், ஏனெனில் தேசங் கர்த்தரைப்பின்பற்றுகிறதைவிட்டுச் சோரம் போகவே போகிறதென்றார்.

௩. அவன்போய்த் திப்லாயிமின் குமாரத்தியாகிய கோமேரைச்சேர்த்துக்கொண்டான், அவள் கர்ப்பந்தரித்து அவனுக்கொரு குமாரனைப்பெற்றாள்.

௪. அப்போது கர்த்தர் அவனோடேசொன்னதாவது, இவனுக்கு எஸ்ரேயேல் என்று பேரிடு, ஏனெனில் இன்னுங்கொஞ்சக் காலத்திலே நாம் ஏகூவின் வீட்டாரிடத்திலே எஸ்ரேயேலின் இரத்தப்பழிகளை விசாரித்து, இஸ்ரவேல்வீட்டாரின் இராச்சியபாரத்தை ஓய்ப்பண்ணுவோம். * ௨. இராசா. ௰௫, ௰—௰௨.

௫. அந்நாளிற்சம்பவிப்பதேதென்றால், எஸ்ரேயேலின்பள்ளத்தாக்கிலே இஸ்ரவேலின் வில்லையுடைப்போமென்றார்.

௬. அவள் திரும்பக்கர்ப்பந்தரித்து ஒரு குமாரத்தியைப் பெற்றாள், அப்போது

அவர் அவனுக்குச் சொன்னதாவது, இவளுக்கு இரக்கம்பெறாதவளென்று பேரிடு, ஏனெனில் நாமினி இஸ்ரவேல்வீட்டாருக்கு இரங்கப்போகிறதில்லை, அவர்களுக்கிருக்கிறதையெல்லாம் எடுக்கவே எடுத்துப்போடுவோம்.

எ. ஆனாலும் யூதாவின் வீட்டாருக்கு நாமிரங்குவோம், ஆனாலும் வில்லு பட்டையம் யுத்தம் குதிரைகள் குதிரைக்காரர் என்பவைகளால் நாம் அவர்களை இரட்சிக்காமல் * அவர்களுடைய பராபரனுடைய கர்த்தனாலே அவர்களை இரட்சிப்போமென்றார்.

* ஏசாயா. ருஎ, கூக. உ. நாளாக. ருசு, உஉ உங.

அ. அவள் இரக்கம் பெறாதவளை முலைமறக்கப்பண்ணின பிறபாடு, அவள் கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெற்றாள்.

கூ. அப்போது அவர் சொன்னதாவது, இவனுக்கு நமதுசனமல்லாதெனென்று பேரிடு, ஏனெனில் நீங்கள் நமதுசனமல்ல, நாமுங்களுக்குப் பராபரனுமிருப்பதுமில்லை.

[கடைசிக்காலத்திலே யூதரும் இஸ்ரவேலரும் மேசியாவை வணங்கித் தேவசனமாவார்களென்பது.]

ய. என்றாலும், இஸ்ரவேல்புத்திரரின் இலக்கம், * அளக்கப்படவும் எண்ணப்படவுங் கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும். ஏனெனிற் சம்பவிப்பதேதென்றால் † நீங்கள் நம்முடைய சனமல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட விடத்திலே அவர்களுக்குச் சீவனுள்ள பராபரனுடைய பிள்ளைகளேயென்று சொல்லப்படும். * க. மோசே. யரு, யசு. உஉ, யஎ. † ரோமர். கூ, உரு. உசு. க. பேதுரு. உ, ய.

யக. யூதாபுத்திரரும் இஸ்ரவேல்புத்திரரும் ஏகமாய்க் கூட்டிக்கொள்ளப்பட்டுத் தங்களுக்கு ஒரேதலைவனை வைத்துத் தேசத்திலிருந்து வந்தேறுவார்கள், ஏனெனில் எஸ்ரேயேலின் நாள்பெரியதாயிருக்கும், நமதுசனமேயென்று உங்கள் சகோதரருக்கும் இரக்கம்பெற்றவளேயென்று உங்கள் சகோதரிகளுக்குஞ் சொல்லுங்கள். * ஏசா. யக, ய—யஉ. * ஏசா. கூஎ, உஉ. மீகா. உ, யஉ. யங.

உ. அதிகாரம்.

[நம்மைவிட்டுச் சோரம்போன இஸ்ரவேல் சனத்தைக் கர்த்தர் மனந்திருப்புதலுக்கெழுப்புகிற சுருக்கான பிரசங்கம்.]

உங்கள் தாயோடே வழக்காடுங்கள், ஏனெனில் அவள் நம்முடைய பெண்சாதியாயிருக்கிறதில்லை நாம் அவளுடைய புருஷனுமாயிருக்கிறதுமில்லை.

உ. அவள் தன்வேசித்தனங்களைத் தன்முகத்திலும், தன்விபசாரங்களைத் தன்ஸ்தனங்களின் நடுவிலுமிருந்து விலக்கிப்போடக்கடவாள்.

ங. மற்றப்படி நாம் அவளைத் திகம்பரியாக்கி உரிந்துபோட்டு, * அவள் பிறந்த நாளிலிருந்தவண்ணமாக அவளை நிறுத்தி, அவளை அந்தரவெளியைப்போலாக்கி, அவளை வறண்டபூமியைப்போலவைத்து, அவளைத் தாகத்தாற்சாகப்பண்ணி, * எசேக். யசு, ச.

ச. அவள் பிள்ளைகளுக்கு இரங்காதிருப்போம், ஏனெனில் அவர்கள் வேசிப்பிள்ளைகள்.

ரு. அதேதென்றால் அவர்களுடைய தாய் சோரம்போனாள், அவர்களைக் கர்ப்பந்தரித்தவள் இலச்சையான காரியங்களைச் செய்தாள், ஏனெனில் என் அப்பத்தையுந் தண்ணீரையும் என் ஆட்டுமயிரையும் என் சணல்நூலையும் என் எண்ணெயையும் என் பானங்களையுந் * கொடுக்கிறவர்களாகிய என் நேசித்தரைப் பின்பற்றிப் போவேனென்றாள். * எரே. சச, யஎ.

கூ. ஆகையால் இதோ, நாம் உன்வழியை முள்ளுகளாலே அடைத்துப்போட்டு, அவள் தன்பாதைகளைக் கண்டுபிடிக்காதபடிக்கு அவளை வேலியடைத்துப்போடுவோம்.

எ. அவள் தன்சிநேகிதரைப் பின்தொடர்ந்தும், அவர்களைக் கிட்டாதிருக்கும், அவர்களைத் தேடியுங் கண்டுபிடிக்காமலும் போம்போது, நான் என் முதற்புருஷனண்டைக்குத் திரும்பிப்போவேன், ஏனெனில் * இப்போதிருக்கிறதைப்பார்க்க அப்போது எனக்கு நன்றாயிருந்ததென்பாள். * லூக். யரு, யஎ. யஅ.

அ. தனக்குத் தானியத்தையும் திராட்சப்பழரசத்தையும் எண்ணெயையுங் கொடுத்தவரொன்றும், தனக்குத் திரளான வெள்ளியையும் பொன்னையும் பெருகப்பண்ணினவரொன்றும் அவள் அறியாதே போனாள், அதைப் பாகாலுடையதாக்கினார்கள்.

கூ. ஆனபடியினாலே நாம் ஏற்றகாலத்திலே நமது தானியத்தையும், ஏற்றகாலத்திலே நமது திராட்சப்பழரசத்தையும் திரும்ப எடுத்து, அவளுடைய நிர்வாணத்தை மூடிக்கொண்டிருந்த நமது ஆட்டுமயிரையும் நமது சணல்நூலையும் திரும்பப் பிடுங்கிக்கொள்ளுவோம்.

ய. இப்போது நாம் அவளுடைய சிநேகிதரின் கண்களுக்கு முன்பாக அவளுடைய இலச்சையான நிலைமையைத் திறந்து வைப்போம், ஒருவரும் அவளை நம்முடைய கைக்கு நீக்கிவிடுவிப்பதில்லை.

யக. நாம் அவளுடைய எல்லாமகிழ்ச்சியையும், அவளுடைய பண்டிகைகளையும் அவளுடைய மாதப்பிறப்புகளையும் அவளுடைய

டைய ஓய்வுநாட்களையுஞ் சவை கூடுகிற அவளுடைய எல்லா ஆசரிப்புகளையும் ஓயப்பண்ணுவோம்.

௰௨. என் சிநேகிதர் எனக்குக்கொடுத்த பணையமாயிருக்கிறதென்று, அவள் சொன்ன அவளுடைய திவிதிராட்சச்செடிகளையும் அவளுடைய அத்திமரங்களையும் நாம் பாழாக்கி, அவைகளைக் காடாய்ப்போகப்பண்ணுவோம், வெளியின் சீவன்கள் அவைகளைத்தின்னும்.

௰௩. அவள் பாகாலக்ளுக்குத் தூபங்காட்டித் தன் நெற்றிப்பட்டங்களாலுந் தன் ஆபரணங்களாலுந் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, தன் சிநேகிதரைப் பின்றொடர்ந்து, நம்மை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் மனந்திரும்பின்போது, அடையப்போகிறமகிமையான பாக்கியத்தின் றின்பமானபிரசங்கம்.

௰௪. ஆனதுகொண்டு, இதோ, நாம் அவளை நயம்பண்ணி, அவளை வனாந்தரத்திலேயழைத்துப்போய், அவளோடே *பட்சமாய்ப்பேசி, *ஏசாயா. ௪௰,௨. செப்பனி. ௩, ௩.

௰௫. அங்கேயிருந்து அவளுக்கு அவளுடைய திவிதிராட்சத்தோட்டங்களையும், நம்பிக்கையின் வாசலாக ஆகோரின் பள்ளத்தாக்கையுங்கொடுப்போம், அப்போது அவள் அங்கே தன் இளவயதின் நாட்களிலும் * தான் எகிப்துதேசத்திலிருந்துவந்தேறின நாளிலுஞ்செய்ததுபோலே பாடுவாள். * உ. மோ. ௰௫, ௧. ௨௧.

௰௬. அக்காலத்திற்சம்பவிப்பதேதென்றால், நீ நம்மையினி என்பாகாலேயென்று சொல்லாமல் என்புருஷனேயென்று சொல்லுவாயென்று கர்த்தர் உரைக்கிறார்.

௰௭. பாகால்களுடைய நாமங்களை யவள் வாயில் அற்றுப்போகப்பண்ணுவோம், இனியவைகளின் பேரைச்சொல்லி யவைகளை நினைக்கிற நினைப்பில்லாதேபோகும்.

௰௮. அக்காலத்திலே நாம் அவர்களுக்காக * வெளியின்மிருகங்களோடும் ஆகாயத்துப்பறவைகளோடும் பூமியின் ஊர்வனங்களோடும், ஒரு உடன்படிக்கையைப்பண்ணி, † வில்லையும்பட்டயத்தையும் யுத்தத்தையுந்தேசத்தி விராதபடிக்கு முறித்து, அவர்களைச்சுகமாய்ப்படுத்துக்கொண்டிருக்கப் பண்ணுவோம். * ஏசா. ௰௧, ௬. ௵ † சங். ௪௬, ௯.

௰௯. *நித்தியவிவாகத்திற்கென்றுன்னை நமக்கு நியமித்துக்கொள்ளுவோம், நீதியும் நியாயமுங்கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை நமக்கு நியமித்துக்கொள்ளுவோம். * சங். ௪௫, ௰. ௵ எபே. ௫, ௨௫. ௨௬.

௨௰. விசுவாசத்தாலே உன்னை நமக்கு நியமித்துக்கொள்ளுவோம், * நீ கர்த்தரை யறிந்துகொள்ளுவாய். * எரேமி. ௩௧, ௩௩. ௩௪.

௨௧. அக்காலத்திற்சம்பவிப்பதேதென்றால், நாம் மறுமொழி கொடுப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார், நாம் வானங்களுக்கு மறுமொழிகொடுப்போம், அப்போது அவைகள் பூமிக்கு மறுமொழிகொடுக்கும்.

௨௨. அப்போது பூமி தானியத்திற்குந் திவிதிராட்சப்பழ இரசத்திற்கும் எண்ணெய்க்கும் மறுமொழி கொடுக்கும், அப்போது இவைகள் எஸ்ரேயேலுக்கும் மறுமொழிகொடுக்கும்.

௨௩. நாம் அவளை நமக்குப் பூமியிலே விதைப்பாடாக்கி, இரக்கம்பெறாதிருந்தவளுக்கிரங்கி, * நம்முடைய சனமல்லாதிருந்ததற்கு, நீ நம்முடைய சனமென்று சொல்லுவோம், அது என்பராபரனேயென்று சொல்லுமென்றார். * ரோமர். ௯, ௨௫.

௩. அதிகாரம்.

[இஸ்ரவேல் புத்திரர் கடைசி நாட்களிற் கிறிஸ்துவண்டைக்கு மனந்திரும்புவது காண்பிக்கப்பட்டது.]

அந்நிய தேவர்களை நோக்கித் திவிதிராட்சப்பழ இரசமுள்ள பாத்திரங்களைச் சிநேகிக்கிறவர்களான இஸ்ரவேல்புத்திரர் பேரிலே கர்த்தர்வைத்திருக்கிற சிநேகத்தின்படியே, நீ யின்னம்போய், வேறொருத்தனாற் சிநேகிக்கப்பட்டவளும் விபசாரியுமாய்ப்போன பெண்சாதியைச் சிநேகித்துக்கொண்டிருவென்று கர்த்தர் என்னோடே சொன்னார்.

௨. அப்போது நான் அவளையெனக்குப் பதினைந்து வெள்ளிக்காசுக்கும் ஒன்றரைக்கலம் வாற்கோதுமைக்குங்கொண்டு,

௩. அவளுடனே நீ வேசித்தனம்பண்ணாமலும், ஒருத்தனைச் சேராமலும் அநேகநாள் எனக்கிருப்பாயாக, உனக்கு நானுமிருப்பேனென்றேன்.

௪. ஏனென்றால் இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் இராசாவில்லாமலும் பிரபுவில்லாமலும் பலியில்லாமலுஞ் சிலையில்லாமலும் ஆசாரியசால்வையுஞ்சுருபங்களில்லாமலுமிருப்பார்கள்.

௫. * பிற்பாடு இஸ்ரவேல்புத்திரர் திரும்பித்தங்கள் பராபரனாகிய கர்த்தரையுந் † தங்களிராசாவாகிய தாவீதையுந் தேடிக் கர்த்தரண்டைக்கும் அவருடைய நன்மையண்டைக்குங் கடைசிநாட்களில் அஞ்சிவருவார்கள். * ரோம. ௰௧, ௨௫—௨௭. † எசேக். ௩௪, ௨௩. ௨௪.

௪. அதிகாரம.

[இஸ்ரவேலபுத்திரரைக்கணடிதத பிரசங்கம.]

இஸ்ரவேலபுததிரரே, கர்த்தருடைய வார்த்தையைக கேளுஙகள, ஏனெனில தேசககுடிகளோடேகர்ததருககுவழககிருககிறது, அதெனனுல தேசததிலே உணமையுமிலலை தயவுமிலலை பராபரனுடைய அறிவுமிலலை.

௨. பொயயாணையிடடுப பொயயசொலலி ககொலைசெயது திருடி விபசாரமபணணி மிஞசிமிஞசிபபோகிருர்கள, இரததபபழியோடே இரததபபழிசேருகிறது.

௩. இதினிமிததந தேசமபுலமபும, அதிற குடியிருககிற அனைவரோடுஙகூட மிருகஜீவனகளும ஆகாயததுப பறவைகளுந தொயநதுபோம, கடலினமசசஙகளுமவாரிககொளளபபடும.

௪. ஆகிலும ஒருததனும நியாயததைககாணபிககவுமஒருததனும அவர்களைக கடிநதுகொளளவுஙகூடாது, ஏனெனில உனசனம ஆசாரியனோடே வழககாடுகிறவர்களைபபோலிருககினறது.

௫. ஆகையாற பகலிலே பிடறிவிழுவாய, இரவிலே உனனோடேகூடத தீர்ககதரிசியும இடறிவிழுவான, உனதாயைநாஙசஙகாரமபணணுவோம.

௬. நமதுசனம அறிவிலலாமையினாலே சஙகாரமாகிறது, ஏனெனில நீயறிவைவெறுததாய, ஆகையால நீநமமுடைய ஆசாரியனுயிராதபடிககு உனனைநாமும வெறுபபோம, நீயுன பராபரனுடைய வேதத்தைமறநதாய, ஆகையால உனபிளளைகளைநாமுமமறபபோம.

௭. எததனைககுபபெருகிஞர்களோ அததனைககு நமககுவிரோதமாயப்பாவஞ்செயகிருர்கள, அவர்களுடையகனததைக கனனமாகமாறபபணணுவோம.

௮. நமதுசனம பாவமபோககபபலியிடுகிறதை யவர்களதினறு, இவர்களுடைய அககிரமததினபேரிற பசிதாகமாயிருககிருர்கள.

௯. ஆனதுகொணடு * சனமும ஆசாரியனுஞசரி, நாம அவர்களை விசாரிதது, அவர்களவழிகளையும அவர்களகிரியைகளையும அவர்களமேல திருமபப்பணணுவோம.

* ஏசாயா. ௨௪, ௨.

௰. * அவர்கள தினறு திருததியாகாதிருபபார்கள, ஏனெனிற கர்ததரை நோககிககொளளுதலைவிடடுவிடடார்கள. * ௩. மோசே. ௨௬, ௨௬.

௰௧. வேசிததனமுந திராட்சபபழரசமும மதுபானமும இருதயததைமயககும.

௰௨. நமதுசனந தனமரததைக்கேட்கிறது, தனகடடைதனககுச செயதியறிவிககுமெனறிருககிறது, ஏனெனில வேசிததன ஆவி அவர்களை வழிதபபித திரியபபணணிறது, அவர்கள தஙகள பராபரனுககுக கீழபபடடிராமலவேசிததனமபணணுகிருர்கள.

௰௩. அவர்கள பருவதஙகளின சிகரஙகளிறபலியிடடு, மேடுகளிலே கர்வாலிமரஙகளினகீழும, புனனைமரஙகளினகீழும, அலரசமரஙகளினகீழும, அவைகளின நிழல நலலதெனறு தூபஙகாடடுகிருர்கள. ஆனதுகொணடு உஙகள குமாரததிகள வேசிததனமும, உஙகளமருமககள விபசாரமுமபணணுகிருர்கள.

௰௪. நாம உஙகள குமாரததிகளை நீஙகளவேசிததனமபணணுகிறதினிமிததமும, உஙகளமருமககளை, அவர்கள விபசாரமபணணுகிறதினிமிததமும விசாரியாதிருபபோமோ, ஏனெனுல வேசிகளோடேகூட அவர்கள விலகிபபோயப பலவேசிகளோடேகூடப்பலியிடுகிருர்கள, உணர்விலலாதசனம அதனுற கெடடுபோமே.

௰௫. இஸ்ரவேலாகிய நீசோரமபோனுல, யூதாவாகிலும அததததோஷததிறகுளளாகாதிருபபதாக, கிலகாலுககு வாராமலும, பெததாவேனிலேபோயேறிக கர்ததருடைய ஜீவனைககொணடுசொலலாமலுமிருபபீர்களாக.

௰௬. ஏனெனில இஸ்ரவேல சனஙகீழபடியாமையான கிடாரியைபபோலேபடலகாரமாகிறது, இபபோதுகர்ததர் அவர்களைவிசாலமான வெளியிலே ஆடடுககுடடியைபபோலே மேயநதலையபபணணுவார்.

௰௭. எபபிராயீமசனம விககிரகஙகளோடிணைநதுபோயிறறு, அதைபபோகவிடு.

௰௮. அவர்களுடையமதுபானமவெறிதது, சோரமபோகவேபோகிருர்கள, அவர்களுடைய சேவகராகியவர்கள தாருஙகளெனறு இலசசையானபொருளைச சிநேகிககிருர்கள.

௰௯. காறறுஅவர்களைபபவர்களுடைய செடடைகளில இறுககபபிடிககும, அபபோதுதஙகள பலிகளால வெட்கபபடுவார்கள.

௫. அதிகாரம.

[இஸ்ரவேலினமேலும யூதாவினமேலும வருகிறபெரியகுறறஙகளைச் கணடிததுடடு, அவர்களமேல தபபாமல வரும ஆககினைகளையும அறிவித்தது.]

ஆசாரியர்களே இதைககேளுஙகள, இஸ்ரவேலவீடடாரே கவனியுஙகள, இராசாவினவீடடாரே செவிகொடுஙகள, ஏனெனில இந்த நியாயவிசாரிபபு உஙகளுககு

செல்லும், அதேதென்றால் மிஸ்பாவுக்குக் கண்ணியும், தாபோரின்மேல் விரிக்கப்பட்ட வலையுமானீர்கள்.

௨. தப்பான பலிகளையிடுகிறதிலே ஆழமாயிறங்கியிருக்கிறார்கள். அவர்களெல்லாரையும் நான் தண்டிக்கிறவராயிருப்போம்.

௩. எப்பிராயீமை நாம் அறிவோம், இஸ்ரவேல் நமக்கு மறைவானதல்ல, எப்பிராயீமே, இப்போது நீ சோரம்போனாய், இஸ்ரவேல் தீட்டுப்பட்டதே.

௪. தங்கள் கிரியைகள் தங்களைப் பராபரனண்டைக்குத் திரும்புவதற்கு நோக்காதிருந்தார்கள். ஏனென்றால் * வேசித்தன ஆவி அவர்கள் உள்ளத்திலிருக்கிறது, கர்த்தரை அறியார்கள். * ௪, ௰௨.

௫. இஸ்ரவேலின் அகந்தை அவர்கள் முகத்துக்கு முன்பாகச் சாட்சியிடுகிறது, ஆகையால் இஸ்ரவேலும் எப்பிராயீமுந் தங்கள் அக்கிரமத்தினால் இடறுண்டு விழுவார்கள், அவர்களோடேகூட யூதாவும் இடறுண்டு விழும்.

௬. அப்போது அவர்கள் கர்த்தரைத் தேடும்படிக்குத் தங்கள் ஆடுகளோடுந் தங்கள் மாடுகளோடும் வந்தாலும் * கண்டுபிடியார்கள், அவர்களைவிட்டு விலகினார். * நீதி. ௧, ௨௮.

௭. கர்த்தருக்கு விரோதமாகத் துரோகம் பண்ணினார்கள், அதேதெனில் அந்நிய பிள்ளைகளைப் பெற்றார்கள், இப்போதும் மாதப்பிறப்பு அவர்களையும் அவர்கள் பங்குபங்குகளையுங் கூடப்பட்சிக்கும்.

௮. கிபியாவிலே எக்காளத்தையும் இராமாவிலே பூரிகையையும் ஊதுங்கள், பெஞ்சமீன் கோத்திரத்தாரே உங்களுக்குப் பின்புறமாகிய பெத்தாவேனிலே கதறுங்கள்.

௯. தண்டிப்பின் நாளிலே எப்பிராயீம் பாழாம், நிச்சயமாய் வரப்போகிறதை இஸ்ரவேல் கோத்திரங்களுக்குள்ளே அறிவிக்கிறோம்.

௰. யூதாவின் பிரபுக்கள் * எல்லைகளை ஒதுக்குகிறவர்களுக்கு ஒப்பானார்கள், அவர்கள்மேல் நம்முடைய சினத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிப்போடுவோம்.
* ௫. மோசே. ௰௯, ௰௪. ௨௭, ௰௭.

௰௧. எப்பிராயீம் நொறுங்குண்டு நியாயமாய் நொறுக்கப்பட்டுப்போகிறான், ஏனெனில் ஆகாத கற்பனையை மனதாரப் பின்பற்றிப்போனான்.

௰௨. நாம் எப்பிராயீமுக்குப் பொட்டரிப்பாகவும், யூதாவின் வீட்டுக்குச் சொத்தைப் பிடிப்பாகவுமிருப்போம்.

௰௩. எப்பிராயீம் தன் வியாதியையும் யூதா தன் காயத்தையுங் கண்டபோது, எப்பிராயீம் அசூரனண்டைக்குப்போய் யாரேப் இராசாவண்டைக்கு ஆளனுப்பினான், அவனோவென்றால் உங்களைக் குணமாக்கவும் உங்களிலிருக்கிற காயத்தை ஆரோக்கியம் பண்ணவுங் கூடாது.

௰௪. ஏனெனில் நாம் எப்பிராயீமுக்குச் சிங்கமாகவும், யூதாவின் வீட்டாருக்கு இளஞ்சிங்கமாகவுமிருப்போம், நாம் நாமே பீறிப்போட்டுப் போய்விடுவோம், தப்புவிப்பாரில்லாமல் எடுத்துக்கொண்டு போவோம்.

௰௫. அவர்கள் தங்கள் குற்றங்களையறிந்து நம்முகத்தைத் தேடுமட்டும் நாம் போய் நம்முடைய தானத்திற்குத் திரும்புவோம் * தங்களுக்கு இக்கட்டான காலத்திலே நம்மைக் கருத்தாய்த் தேடுவார்கள்.
* எசாயா. ௨௬, ௰௬.

௬. அதிகாரம்.

[வருங்காலத்தில் யூதர் கிருபையுள்ள பராபரனண்டைக்குத் திரும்புஞ்செய்தியையும், நிகழ்காலத்திலே யவர்களிடத்திலிருக்கிற குணப்படாமையையுந் துர்மார்க்கத்தையுங் காண்பித்தது.]

கர்த்தரண்டைக்குத் திரும்புவோம் வாருங்கள், ஏனெனில் * அவர் நம்மைப் பீறிப்போட்டார், அவர் நம்மைக் குணமுமாக்குவார், அடித்தார், நம்முடைய காயங்களைக் கட்டுகிறவருமாயிருப்பார். * ௫, அதி. ௰௪.

௨. இரண்டு நாளுக்குப் பிறபாடு * நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளிலே நம்மை எழுப்புவார், அப்போது அவருக்கு முன்பாகப் பிழைப்போம். * ௫ மோசே. ௩௨, ௩௯. எசக்கி. ௩௭, அதி. ௩.

௩. அப்போது நாம் அறிவடைந்து கர்த்தரை அறியத்தொடர்ந்து போவோம், விடியற்கால வெளுப்பைப்போலே அவர் வெளிப்பிரவேசிக்குதல் ஆயத்தப்பட்டிருக்கும், மழையைப்போலே நிலத்தின்மேல் இறங்கும் பின்மாரியைப்போலேதானே நம்மண்டைக்கு வருவார்.

௪. எப்பிராயீமே உனக்கென்ன செய்வோம்? யூதாவே உனக்கென்ன செய்வோம்? உங்கள் சன்மார்க்கம் விடியற்காலத்தின் மேகத்தைப்போலேயுங் காலமே யகன்றுபோய்விடுகிற பனியைப்போலேயுமிருக்கிறது.

௫. ஆகையால் தீர்க்கதரிசிகளைக்கொண்டு வெட்டுகிறோம், நம்து வாயின் வார்த்தைகளைக்கொண்டு அவர்களைக் கொன்றுபோடுகிறோம், அதின்பிறகு உன் நியாயங்கள் வெளிச்சத்தைப்போலாகும்.

௬. ஏனென்றால் * பலியையல்ல இரக்கத்தையும் தகனபலிகளைப் பார்க்கப் பராபரனின் அறிவையும் விரும்புகிறோம். * ௧. சாமு. ௰௫, ௨௨. மத்தே. ௯, ௰௩. ௰௨, ௭.

எ. அவர்களோவென்றால் ஆதாமைப்போல உடன்படிக்கையை மீறி, அங்கே நமக்கு விரோதமாகத் துரோகம்பண்ணினார்கள்.

அ. கிலேயாத் அக்கிரமஞ்செய்பவர்களின் பட்டணம், அது இரத்தக்காலடிகளால் மிதிக்கப்பட்டிருக்கிறது.

கூ. பறிகாரரின் கூட்டங்கள் ஒருத்தனுக்குக் காத்திருப்பதுபோலே, சீகேமுக்குப் போகிறவழியிலே கொலைசெய்கிற ஆசாரியரின் கூட்டமிருக்கிறது தோஷமான காரியங்களையேசெய்கிறார்கள்.

ய. திடுக்கிடப்பட்டத்தக்க காரியத்தை இஸ்ரவேல்வீட்டாரிலேகண்டோம், அங்கே எப்பிறாயீமின்வேசித்தனமுண்டு, இஸ்ரவேல் தீட்டுப்பட்டுப்போச்சுது.

யக. ஆகிலும்நாம் நமதுசனத்தின்சிறையிருப்பைத் திருப்பும்போது, யூதாவுனக்கு அறுப்புக்காலத்திற்குக் காரணமாயிருக்கும்.

எ. அதிகாரம்.

[இஸ்ரவேலின்பாவங்களுக்கு வருந்தண்டனையறிவிக்கப்படும்.]

நாம்இஸ்ரவேலைக் குணமாக்க இருக்கையில், எப்பிறாயீமின் அக்கிரமமுஞ்சமாரியாவின் பொல்லாப்புகளும் வெளிப்படுகிறது, ஏனென்றால் வஞ்சனைசெய்கிறார்கள், உள்ளே திருடன்வருகிறான், வெளியேபறிகாரரின் கூட்டங்கொள்ளையிடுகிறது.

உ. தங்கள்பொல்லாப்பையெல்லாம் நினைத்திருக்கிறோமென்று அவர்கள்தங்களிருதயத்திற் சிந்திக்கிறதில்லை, இப்போதும்அவர்களுடையகிரியைகள் அவர்களைச்சூழ்ந்துகொண்டு நமதுமுகத்திற்கெதிரேயிருக்கிறது.

ங. இராசாவைத்தங்கள்பொல்லாப்பினாலும், பிரபுக்களைத்தங்கள் பொய்களினாலும் சந்தோஷப்படுத்துகிறார்கள்.

ச. அவர்களெல்லாரும்விபசாரக்காரர், அப்பஞ்சுடுகிறவனால் எரியிடப்படுகிற அடுப்பைப்போலிருக்கிறார்கள், மாவைப்பிசைந்ததுமுதற்கொண்டு அது உப்பிப்போகுமட்டும் அனலையெழுப்பாமல் ஓய்ந்திருக்கிறான்.

ரு. நம்முடைய இராசாவின்நாளென்று சொல்லிப்பிரபுக்களவனைத் திராட்சப்பழ இரசத்துருத்திகளால் நோஞ்சலாக்குகிறார்கள், சரசக்காரரோடேகூட அவன்தன்கையை நீட்டுகிறான்.

சா. அவர்கள்பதிவிருக்குந்தறுவாயிலோவென்றால் தங்களிருதயத்தை யடுப்பைப்போலவைக்கிறார்கள், அவர்களில் அடுப்புமூட்டுகிறவன் இராமுழுதுந்தூங்குகிறான், காலமேயோவென்றால் அதுசுவாலைவிட்டெரியும் அக்கினியாயெரிகிறது.

எ. அவர்களெல்லாரும் அடுப்பைப்போல அனலாகித்தங்கள் நியாயாதிபதிகளைப் பட்சிக்கிறார்கள், அவர்களுடைய இராசாக்களெல்லாரும்விழுகிறார்கள், அவர்களில்நம்மை நோக்கிக்கூப்பிடுகிறவனில்லை.

அ. எப்பிறாயீமுஞ்சனசதனங்களோடேகலந்தான், எப்பிறாயீம் திருப்பப்படாதபோன அப்பம்.

கூ. அந்நியர் அவனுடையபலத்தைத்தின்னுகிறார்கள், அவனோ அதையறியான், நரையுமவனிலதெளித்திருக்கிறது, அவன் அதையறியான்.

ய. இஸ்ரவேலின் அகந்தை அவர்கள்முகத்திற்குமுன்பாகச்சாட்சியிட்டாலும், அவர்கள்தங்கள்பராபரனாகியகர்த்தரண்டைக்குத்திரும்பாமலும், இதிலெல்லாம் அவரைத்தேடாமலுமிருக்கிறார்கள்.

யக. எப்பிறாயீம் பேதையான புறாவைப்போலிருக்கிறான், புத்தியில்லை, எகிப்தியனைக் கூப்பிடுகிறார்கள், அசூரியனண்டைக்கும்போகிறார்கள்.

யஉ. அவர்கள்போனால், * நமது வலையைஅவர்கள்மேல்வீசுவோம், அவர்களை ஆகாயத்துப்பறவைகளைப்போலே கீழேவிழப்பண்ணுவோம், அவர்களுடையசபைப்கேட்கப்பட்டதின்படியேயவர்களைத்தண்டிப்போம். * உ.இராசா. யஎ, ச.ஙி.

யங. அவர்கள்நம்மைவிட்டு அலைந்துதிரிகிறபடியினாலே அவர்களுக்கையோ, அவர்களுக்குக்கேடுவரும், ஏனெனில் நமக்குவிரோதமாகத்துரோகம்பண்ணினார்கள், நாம் அவர்களைமீட்டிருந்தும்அவர்கள்நமக்கு விரோதமாகப்பொய்களைப்பேசுகிறார்கள்.

யச. அவர்கள்தங்கள்படுக்கைகளிலலறுகிறபோது, தங்களிருதயத்திலே நம்மை நோக்கிக்கூப்பிடுகிறதில்லை, அவர்கள்தானியத்திற்காகவுந்திராட்சப்பழரசத்திற்காகவுங்கூடி நம்மைவெறுத்துவிலகிப்போகிறார்கள்.

யரு. நாந்தண்டித்தோம், அவர்களுடையபுயங்களைத் திடப்படுத்தியுமிருக்கிறோம், ஆகிலும் நமக்கு விரோதமாகப் பொல்லாப்புநினைக்கிறார்கள்.

யசா. திரும்புகிறார்கள், ஆனால் உன்னதமானவரண்டைக்கல்ல, * கள்ளவில்லுக்கொப்பாயிருக்கிறார்கள். அவர்களுடையபிரபுக்கள் தங்கள்நாவினுடையசினத்தினிமித்தம்பட்டயத்தால் விழுவார்கள், இது எகிப்துத்தேசத்தைத்தொட்டு அவர்களுக்குவருமநிந்தை. * சங். எஅ, ஙஎ.

அ. அதிகாரம்.

[பாவஞ்செய்துகொண்டிருக்கிற இஸ்ரவேலின்மேற்சனத்துக்கினிவருவது.]

உன் வாயிலே எக்காளத்தை வைத்துக்கொள், பூ ாவிட்டார் நம்முடைய உடன்படிக்கையைமீறி நம்முடைய நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாகத் துரோகம்பண்ணினபடியினாலே, அவர்கள்மேற் கழுகைப்போலே பாய்ந்துவருகிறான். * ஏசாயா. ௫௮, ௧.

௨. எங்கள் பராபரனே, உம்மையறிந்திருக்கிறோமென்று இஸ்ரவேலர் கூப்பிடுவார்கள்.

௩. ஆனால் இஸ்ரவேலர் நன்மையையொழித்துவிட்டார்கள், சத்துரு அவர்களைத் தொடருவான்.

௪. அவர்கள் இராசாக்களை வைத்துக்கொண்டார்கள் ஆனால் நம்மாலேயல்ல, பிரபுக்களை வைத்துக்கொண்டார்கள் ஆனால் நாமறியோம், அவர்கள் வேரறுப்புண்டுபோகும்படிக்குத் தங்கள் வெள்ளியினாலும் தங்கள் பொன்னினாலும் தங்களுக்கு விக்கிரகங்களைச் செய்வித்தார்கள்.

௫. சமாரியாவே, உன் கன்றுக்குட்டி உன்னைப்பொழித்துவிடுகிறது நம்முடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது. எத்தனை நாள் சுத்தாங்கமடையமாட்டாதிருப்பார்கள்?

௬. ஏனெனில் அதுதானும் இஸ்ரவேலருடைய செய்கை, தட்டான் அதைச் செய்தான், அது தேவனல்லவே, ஏனென்றால் சமாரியாவின் கன்றுக்குட்டி துண்டுக்கைகளாகப்போம்.

௭. ஏனென்றால் காற்றை விதைத்துப் பெருங்காற்றையறுக்கிறார்கள், விளைச்சல் அவர்களுக்கில்லை, முளையானது மாவைக்கொடுக்கிறதற்கு வராது, அல்லவென்று வந்தாலும் அந்நியர் அதைமுழுங்குவார்கள்.

௮. இஸ்ரவேல் முழுங்கப்படுகிறது, இனிப்புறச்சாதிகளுள்ளே * விரும்பப்படாத பாத்திரத்தைப்போலிருப்பார்கள்.

* சங்கீத. ௩௧, ௰௩.

௯. ஏனெனில் அவர்கள் தனித்துத்திரிகிற காட்டுக்கழுதையைப்போல * அசூரியனண்டைக்குப் போயேறினார்கள், எப்பிராயீமர் சிநேகிதரைக் கூலிபொருந்திக்கொண்டார்கள். ௫, அதி. ௰௩.

௰. ஆனால் அவர்கள் புறச்சாதியாரைக் கூலிபொருந்திக்கொண்டாலும் இப்போது நாம் இவர்களைக் கூட்டுவோம், பிரபுக்களின் இராசாகுமத்தரு சுமையினாலே அவர்கள் குறுகிப்போகத்துவக்குவார்கள்.

௰௧. ஏனெனில் எப்பிராயீமர் பாவஞ்செய்வதற்கான பலிபீடங்களைப் பெருக்கப்பண்ணினார்கள், பலிபீடங்கள் அவர்களுக்குப் பாவஞ்செய்வதற்காயிற்று.

௰௨. நம்முடைய வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கெழுதிக்கொடுத்தோம், அவைகள் அந்நியகாரியமாக எண்ணப்பட்டது.

௰௩. நமக்குச் செலுத்தும் பலிகளின் மாமிசத்தையவர்கள் பலியிட்டுப்பொசிக்கிறார்கள், கர்த்தர் அவர்கள்பேரிற்பிரியமாயிரார், இவர் அவர்களுடைய அக்கிரமத்தை நினைத்து அவர்கள் பாவத்தை விசாரிக்கும்போதோவெனில், அவர்கள் எகிப்துக்குத் திரும்பிக்கொள்ளுகிறார்கள்.

௰௪. ஏனெனில் இஸ்ரவேல் தன்னையுண்டாக்கினவரை மறந்து அரண்மனைகளைக் கட்டுகின்றது. யூதா அரணான பட்டணங்களைப் பெருக்கப்பண்ணுகின்றது, ஆனால் அதின் பட்டணங்களில் * அக்கினியையனுப்புவோம், அது அவைகளின் அரண்மனைகளைப் பட்சிக்கும். * எரே. ௰௭, ௨௭. ஆமோஸ். ௨, ௫.

௯. அதிகாரம்.

[அப்பாலும் இஸ்ரவேலின்மேல் வருங்கன ஆக்கினைகளின் அறிவிப்பு.]

இஸ்ரவேலே மகிழ்ச்சியாயிராதே, சனங்களைப்போலக் களிகூராதே, ஏனென்றால் * உன்பராபரனைவிட்டுச் சோரம்போனாய், தானியம்போரடிக்கிற சகல களங்களிலும் பணையத்தைச் சிநேகிக்கிறாய்.

* சங்கீ. ௭௩, ௨௭.

௨. போர்க்களமும் ஆலையும் அவர்களைப் பிழைப்பூட்டுவதில்லை, திவ்யதிராட்சப்பழ இரசம் அவர்களுக்குப் பிசகிப்போம்.

௩. அவர்கள் கர்த்தருடைய தேசத்திற்குடியிருப்பதில்லை, எப்பிராயீமர் திரும்ப எகிப்திற்குப்போவார்கள், அசூரியாவிலும் தீட்டுள்ளதைப்பொசிப்பார்கள்.

௪. அவர்கள் கர்த்தருக்குத் திவ்விதிராட்சப்பழ இரசத்தை ஊற்றுவதுமில்லை, அவருக்கு அங்கிகரிப்பாயிருப்பதுமில்லை, அவர்களுடைய பலிகள் அவர்களுக்குப் புலம்புகிறவர்களின் அப்பத்தைப்போலிருக்கும், அதிற்பொசிக்கிறயாவருந்தீட்டுப்படுவார்கள், ஏனெனில் அவர்களுடைய அப்பம் அவர்கள் ஆத்துமத்திற்காகக் கர்த்தருடைய வீட்டில்வருவதில்லை.

௫. ஆசரிப்பின் நாளிலும் கர்த்தருடைய பண்டிகையின் நாளிலும் என்னசெய்வீர்கள்.

௬. ஏனெனில் இதோ பாழ்க்கடிப்பிற் போய்விடுவார்கள், எகிப்து அவர்களைச் சேர்த்துக்கொள்ளும், மோப் பட்டணம் அவர்களையடக்கம்பண்ணும், அவர்களுடைய வெள்ளியிழுந்த இச்சிக்கப்பட்டதக்க வீடுகளைக் காஞ்சொறிகள் சுதந்தரித்துக்கொள்ளும், அவர்களுடைய தாவரங்களில் முட்செடிகள் முளைக்கும்.

௭. விசாரிப்பின் நாட்கள் வரும், நீதிசரி

க்கடவ நாட்கள் வந்தது என்பதை இஸ்ரவேலர் அறிந்துகொள்ளுவார்கள், உன்னுடைய மிகுதியான அக்கிரமத்தினாலேயும் மிகுதியான பகையினாலேயும் தீர்க்கதரிசி பைத்தியக்காரனும், ஆவியின் மனுஷர் பிரமைகொண்டவர்களுமாயிருக்கிறார்கள்.

௮. எப்பிராயீமின் காவற்காரர் என் பராபரனோடே இருந்திருக்கிறார்கள், தீர்க்கதரிசி தன் வழிகளெல்லாவற்றிலும் குருவிபிடிக்கிறவனின் கண்ணியாகவும் தன் பராபரனின் வீட்டிலே பகையாளியாகவும் இருக்கிறான்.

௯. * கிபேயாவின் நாட்களிலே நடந்ததுபோலே கேட்டிலே அமிழ்ந்துபோனார்கள், அவர்களுடைய அக்கிரமத்தை நினைப்பார், அவர்களுடைய பாவங்களை விசாரிப்பார். * நியா. ௧௯, ௨௦. ஞ. உம், அதி. ௧. ஞ.

௰. வனாந்தரத்திலே திராட்சக்குலைகளைப்போல இஸ்ரவேலைக் கண்டுபிடித்தோம், அத்திமரத்திலே முந்தின விளைச்சலின் முதற்கனியைப்போல உங்கள் பிதாக்களைக் கண்டோம், ஆனால் அவர்கள் * பேயோர் மலைபாகாலண்டைக்குப்போய் இலச்சைக்கென்று பிரிந்து தாங்கள் சிநேகித்தவைகளுக்கொத்த அருவருப்புகளானார்கள்.
* ௪. மோசே. ௨௫, ௩. ௫.

௰௧. பிறப்பும் உண்டாயிருப்பும் கெர்ப்பந்தரிப்புமில்லாமல் எப்பிராயீமருடைய மகிமை பறவையைப்போலப் பறந்துபோயிற்று.

௰௨. அவர்கள் தங்கள் பிள்ளைகளை வளர்த்தாலும், அவர்களுக்கு மனுஷர் இராதபடிக்கு அவர்களைப் பிள்ளைகளற்றவர்களாக்குவோம், ஆனால் நாம் அவர்களை விட்டுப்போகையில் அவர்களுக்கும் ஐயோ.

௰௩. நாம் எப்பிராயீமைத் தீருவின் திசைமட்டும் இருக்கிறபடியே பார்க்கிறபோது அது நல்ல தாவரமான தலத்திலே நாட்டப்பட்டிருக்கிறது, ஆனால் எப்பிராயீமர் தங்கள் குமாரரை வெளியே கொலைசெய்கிறவனண்டைக்குக்கொண்டுபோய்விடுவார்கள்.

௰௪. கர்த்தாவே, நீர் அவர்களுக்குக் கொடுப்பதைக் கொடும், அவர்களுக்கு விழுந்துபோகிற கெர்ப்பத்தையும் பாலற்ற முலைகளையுங்கொடும்.

௰௫. கில்காலிலே அவர்களுடைய பொல்லாப்பெல்லாம் நடக்கும், அங்கே தான் நடக்கிற அவர்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் அவர்களைப் பகைத்திருக்கிறோம், அவர்களை நமது முகத்தைவிட்டுத் துரத்துவோம், இனி அவர்களைச் சிநேகியோம், அவர்களுடைய பிரபுக்களெல்லாரும் ஆக்காரிகள்.

௰௬. எப்பிராயீம் வெட்டுண்டது, அதின் வேர் உலர்ந்துபோயிற்று, கனிகொடாதே போவார்கள், அவர்கள் பிள்ளைகளைப் பெற்றாலும் அவர்களுடைய கெர்ப்பத்தின் விரும்பமான கனிகளைக் கொன்றுபோடுவோம்.

௰௭. என் பராபரன் அவர்களை வெறுத்துப்போடுவார், ஏனென்றால் அவருக்குச் செவிகொடாதே போனார்கள், சாதிகளுக்குள்ளே அலைந்து திரிகிறவர்களாயிருப்பார்கள்.

௰. அதிகாரம்.

[விக்கிரக ஆராதனையைக் கண்டிக்கிறது, குணப்பட எழும்புகிறதுமாயிருக்கிறது.]

இஸ்ரவேல் பிரயோசனமில்லாத திராட்சச்செடியானது, கனி அதற்கேற்றிருக்கிறது, தன் கனியின் திரளுக்குத்தக்கப் பலிபீடங்களைத் திரளாக்கிறது, தங்கள் தேசத்தின் செழிப்புக்குத்தக்கச் சிலைகளை நேர்த்தியாக்கினார்கள்.

௨. அவர்கள் இருதயம் அவர்களுக்குள் சகக்கமாகிறது, இப்போது குற்றஞ்சுமத்தப்படுவார்கள், இவர் அவர்கள் பலிபீடங்களை இடிப்பார், அவர்கள் சிலைகளைப் பாழ்க்கடிப்பார்.

௩. ஏனென்றால் நாங்கள் கர்த்தருக்குப் பயப்படாதே போனபடியினாலே நமக்கு ராசாவில்லை, இராசாவிருந்தாலும் நமக்காக என்ன செய்வானென்று இனிச் சொல்லுவார்கள்.

௪. பொய்யாணையிட்டு வார்த்தைகளைச் சொல்லி, உடன்படிக்கைபண்ணிக்கொண்டார்கள், ஆகையால் வயலவெளியின் படைச்சால்களிலே நஞ்சுக்கொத்த நியாயத்தீர்ப்பு முளைக்கும்.

௫. சமாரியாவின் குடிகள் பெத்தாவேனின் கன்றுக்குட்டியினிமித்தந் திகைப்படைவார்கள், ஏனென்றால் அதற்காகச் சேர்ந்த அதின் சனமும் அதின் பூசாரிகளும் அதினுடைய மகிமை பறந்துவிட்டு நீங்கிப்போயிற்றென்று அதற்காகத் துக்கங்கொண்டாடுவார்கள்.

௬. அதுவும் அசீரியாவிலே பாரேப்ராசாவுக்குக் காணிக்கையாகக்கொண்டுபோகப்படும், இலச்சையை எப்பிராயீம் அடைந்தும், இஸ்ரவேல் தன் ஆலோசனையினாலே வெட்கப்படும்.

௭. தண்ணீரின் மேலிருக்கிற நுரையைப்போலச் சமாரியாவின் இராசா அதமாக்கப்படுவான்.

௮. இஸ்ரவேலுடைய பாவமாகிய பெத்தாவேனின் மேடைகள் அழிக்கப்படும், முட்செடிகளும் முட்பூண்டுகளும் அவர்கள் பலிபீடங்களின்மேல் முளைக்கும், * பருவதங்களைப் பார்த்து எங்களை மூடுங்களென்றும், குன்றுகளைப் பார்த்து, எங்கள்மேல் விழுங்களென்றும் சொல்லுவார்கள். * லூக். ௨௩, ௩௰. அபி. ௬, ௧௬.

௯. இஸ்ரவேலே * கிபேயாவின் நாட்களிலே துவக்கிப் பாவஞ்செய்து வந்தாய், கிபேயாவிலே அக்கிரமக்காரர்மேல் வந்த யுத்தங்களைக் கிட்டுவதில்லையென்று அந்த நிலையிலே நிற்கிறார்கள். * நீதிக்காரர். ௨௰, ௰௨. ௰௪.

௰. சனங்கள் அவர்களுக்கு விரோதமாகக் கூடித் தங்கள் இரண்டு படைச்சாலைகளிற் போக அவர்களைப் பிணைக்கும்போது, நமக்குச் சித்தமாகும் வேளையிலே அவர்களைத் தண்டிப்போம்.

௰௧. எப்பிராயீம் போரடிக்கப் பழகினதும் விரும்புகிறதுமான கன்றுக்குட்டி, ஆனால் நாம் அதின் அந்தமான கழுத்தின்மேல் நுகத்தடியை வைப்போம், எப்பிராயீமை ஏர்ப்பூட்டி ஓட்டுவோம், யூதா உழுவான், யாக்கோப் அதற்குப் பரம்படிப்பான்.

௰௨. உங்களுக்கு * நீதிகொண்டு விதை விதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்பறுங்கள், பயிர்நிலத்தை உங்களுக்குப் புதிதாய்ப் பண்படுத்துங்கள், ஏனென்றால் கர்த்தர் வந்து உங்களுக்கு † நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் ‡ அவரைத் தேடக்காலமாயிருக்கின்றது. * கலாத்தியர். ௬, ௭. ௮. † ஏசா. ௪௫, ௮. ‡ ஏசா. ௫௫, ௬.

௰௩. அகாத்தியத்தை உழுதீர்கள், அநியாயத்தை அறுத்தீர்கள், பொய்யின் கனிகளைப் புசித்தீர்கள், ஏனென்றால் உன் வழியையும் உன் பராக்கிரமசாலிகளின் திரளையும் நம்பினாய்.

௰௪. ஆகையால் உன் சனத்தளங்களில் அமளியெழும்பும், பிள்ளைகளின்மேல் தாய் சிதைத்துப்போடப்பட்ட யுத்தநாளிலே சால்மான் பேத்தார்பேலை அழித்ததுபோலே உன்னுடைய எல்லா அரணங்களும் அழித்துப்போடப்படும்.

௰௫. பெத்தேல் உங்கள் பொல்லாப்புடைய தோஷத்தினாலே இப்படிக்கொத்ததை உங்களுக்குண்டுபண்ணும், அதிகாலமே இஸ்ரவேலின் இராசா சங்கரிக்கப்படவே சங்கரிக்கப்படுவான்.

௰௧. அதிகாரம்.

[நன்றியறியாத இஸ்ரவேலின் பேரிலே பராபரன் முறையிட்டது.]

இஸ்ரவேல் இளைஞனாயிருக்கிறபோது அவனை நாம் நேசித்தோம், * எகிப்திலிருந்து நம்முடைய குமாரனை வரவழைத்தோம். * மத்தேயு. ௨, ௰௫.

௨. அவர்கள் தங்களையழைக்கிறவர்களின் முகத்தை விலகிப்போய்விட்டார்கள், பாகால்களுக்குப் பலியிட்டுச் சுரூபங்களுக்குத் தூபங்காட்டினார்கள்.

௩. நாம் எப்பிராயீமை அவர்களைக் கையைப்பிடித்து மெதுவாக நடத்தினோம், ஆனால் நாம் தங்களைக் குணமாக்குகிறவரென்றறியாதேபோனார்கள்.

௪. மனுஷனைக் கட்டியிழுக்கிற அன்பின் கயிறுகளாலே நாம் அவர்களையிழுத்து அவர்கள் கன்னங்களின்மேலிருந்த நுகத்தடியை யெடுத்துப்போடுகிறவரைப்போலே யவர்களுக்கிருந்து அவர்களண்டைக்குச் சாய்ந்து ஆகாரங்கொடுத்தோம்.

௫. அவன் எகிப்துத் தேசத்திற்குத் திரும்பிப்போவதில்லை, அசூர்தான் அவனுடைய இராசா, ஏனென்றால் மனந்திரும்பமாட்டோமென்கிறார்கள்.

௬. ஆகையால் அவர்களுடைய ஆலோசனைகளினிமித்தமாகப் பட்டயம் அவர்கள் பட்டணங்களுக்குட் பாய்ந்து அவர்கள் தாழ்ப்பாள்களை நிர்மூலம்பண்ணி அவர்களைப் பட்சிக்கும்.

௭. நம்முடைய சனம் நம்மைவிட்டு விலகுகிற மாறுபாட்டைப் பற்றிக்கொண்டேயிருக்கின்றது, அதை உன்னதமானவரண்டைக்கு வரவழைத்தாலும் ஒருத்தனும் எழும்பான்.

இஸ்ரவேலுக்கு இரக்கமுள்ள வாக்குத்தத்தம் பண்ணினது.

௮. எப்பிராயீமே நாம் உன்னை யென்ன செய்யவேண்டும், இஸ்ரவேலே உன்னை நாம் ஒப்புக்கொடுக்கவேண்டுமோ? நாம் உன்னை * அதமாவைப்போலாக்கி, உன்னைச் செபோயீமைப்போல வைப்பதெப்படி! † நம்முடைய இருதயம் நமக்குள் திரும்பிக்கொள்ளுகின்றது, நம்முடைய பரிதாபங்கள் ஏகமாய்ப் பொங்குகின்றது. * ௫. மோசே. ௨௯, ௨௩. † எரேமியா. ௩௧, ௨௰.

௯. நமது கோபத்தினுடைய உக்கிரத்தின்படியே செய்யாதிருப்போம், எப்பிராயீமையழிக்கத் திரும்பிக்கொள்ளாதிருப்போம், ஏனென்றால் நாம் மனுஷனாயிராமல் பராபரனாயிருக்கிறோம், நாம் உன் நடுவில் பரிசுத்தமுள்ளவர், ஆகையால் பட்டணத்திற்கு விரோதமாக வரோம்.

௰. கர்த்தரைப் பின்செல்லுவார்கள், அவர் சிங்கத்தைப்போலே கெர்ச்சிப்பார், அவர் கெர்ச்சிக்கும்போது மேற்றிசையார் நடுங்கி வருவார்கள்.

௰௧. எகிப்திலிருந்து குருவிகளைப்போலவும் அசூரின் தேசத்திலிருந்து புறாக்களைப்போலவும் நடுங்கி வருவார்கள், அப்போது அவர்களை அவர்கள் வீடுகளிற் குடியிருக்கப் பண்ணுவோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௨. அதிகாரம்.

[இஸ்ரவேலையும் யூதாவையும் ஒத்துப்பார்த்தது.]

எப்பிராயீம் பொய்யாகவும் இஸ்ரவேல்வீட்டார் கபடாகவும் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள், யூதாவோவென்னில் இன்னம் பராபரனோடேயாண்டு பரிசுத்தவான்களோடே உண்மையாயிருக்கிறது.

௨. எப்பிராயீம் காற்றைமேய்ந்து கொண்டு காற்றைப் பின்தொடருகிறது, நாள்தோறும் பொய்யையுங் கேட்டையும் வர்த்திக்கப்பண்ணி அசீரியரோடே உடன்படிக்கை பண்ணுகிறார்கள், எகிப்துக்கும் எண்ணெய்கொண்டுபோகப்படுகிறது.

யூதாவீட்டாரைக்கடிந்துகொண்டு குணப்படுத்தச்செழுப்பினது.

௩. யூதாவோடே கர்த்தருக்கு வழக்கிருக்கிறது, அவர் யாக்கோபின் வம்சத்தையதின் வழிகளுக்குத் தக்கதாக விசாரிக்கப்போகிறார், அதின் கிரியைகளுக்குத் தக்கதாக அதற்குச் சரிக்கட்டுவார்.

௪. அவனென்றால் * தாயின் கெர்ப்பத்திலே தன் சகோதரனுடைய குதிகாலைப் பிடித்துமல்லாமல், † தன் மனவுறுக்கத்திலே பராபரனோடே பிரபுவாய்ப் போராடினான்.

* ௧. மோ. ௨௫, ௨௬. † ௧. மோ. ௩௨, ௨௪. ௨௫.

௫. அவன் தூதனோடே பிரபுவாய்ப் போராடி மேற்கொண்டான், அழுது இவனை நோக்கிக் கெஞ்சினான், பெத்தேலிலே இவர் அவனைக் கண்டுசந்தித்து அவ்விடத்தில் நம்மோடே பேசினார்.

௬. கர்த்தராகிய அவர் சேனைகளுடைய பராபரன், * கர்த்தரென்பது அவருடைய நாமசங்கீர்த்தனம். * ௨. மோசே. ௰௫, ௩.

௭. இப்போதும் உன் பராபரனிடத்துக்குத் திரும்பு, தயவையும் நியாயத்தையும் கைக்கொண்டு நித்தியம் உன் பராபரனை நம்பிக்கொண்டிரு.

இஸ்ரவேல்புத்திரரின் அக்கிரமத்தையும் நன்றியறியாமையையுங்காண்பித்தது.

௮. கானானியனாயிருக்கிறான், கள்ளத்தராசு அவன் கையிலிருக்கிறது, இடுக்கண் செய்யவிரும்புகிறான்.

௯. ஆனால், மெய்தான், ஐசுவரியமடைந்தேன், எனக்கு ஆஸ்திகப்பட்டது ஆனால் நான் பிரயாசமாய்த் தேடினதிலெல்லாம் பாவமாகிய அக்கிரமம் என்னிடத்திற் கண்டுபிடிக்கப்படுவதில்லையென்று எப்பிராயீம் சொல்லுகிறது.

௰. நானோவென்றால் உன்னை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவந்ததுமுதற்கொண்டு உன் பராபரனாகிய கர்த்தர், சபைக்கூட்டமான நாட்களுக்கொப்பாக இன்னம் உன்னைக் கூடாரங்களில் தாபரிக்கப்பண்ணுவோம்.

௰௧. அப்படியே தீர்க்கதரிசிகளோடே சொன்னோமே, நாம் அநேகந்தரிசனங்களைக் கட்டளையிட்டுத் தீர்க்கதரிசிகளைக்கொண்டு அதை உவமைகளாகக் காண்பித்தோமே.

௰௨. கிலேயாத் அக்கிரமமல்லவோ? அவர்கள் அபத்தரானார்கள், கில்காலிலே மாடுகளைப் பலியிடுகிறார்கள், அவர்களுடைய பலிபீடங்கள் வயல்களின் தடங்களிலிருக்கிற கற்குவியல்களத்தனையுமாயிருக்கிறது.

௰௩. யாக்கோபென்பவன் * சீரியாநாட்டுக்கோடிப்போய், இஸ்ரவேல் † ஒரு பெண்ணுக்காகப் பணிவிடைசெய்து, ஒரு பெண்ணுக்காக ஆடுமேய்த்தான். * ௧. மோ. ௨௮, ௫. † ௧. மோசே. ௨௯, ௨௦.

௰௪. பின்காலத்திலோவென்றால் கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியைக்கொண்டு இஸ்ரவேலை எகிப்திலிருந்தேறிவரப் பண்ணினார், தீர்க்கதரிசியைக்கொண்டு காக்கப்பட்டார்கள்.

௰௫. எப்பிராயீமோவென்றால் அவரைக் கசவும் மனமடிவாக்கினதினாலே பராபரனுக்குக் கோபமுண்டாக்கிறது, ஆகையால் அதின் ஆண்டவர் அதின் இரத்தப்பழிகளை அதின் மேலிருத்தி, அது செய்த நிந்தையைப் பின் அதின் மேலிருப்புவார்.

௰௩. அதிகாரம்.

[இஸ்ரவேலின் துற்குணத்தையும் நன்றியறியாமையையுங் கண்டித்தது, சனங்களுக்கு மீட்பின் இரட்சிப்பை வாக்குத்தத்தம்பண்ணினதும்.]

எப்பிராயீம் கோத்திரந்தொட்டுப் பத்திக்கவிதமாய்ப் பேசினபோது அதினாலே இஸ்ரவேலிலே தேராளுமதந்தது, அதுபாகாலாலே குற்றஞ்சுமத்திக்கொண்டபோது அதுமடிந்தது.

௨. இப்போதும் அவர்கள் பாவஞ்செய்கிறதிலே தொடர்ந்துபோய்த் தங்கள் வெள்ளியினாலே வார்ப்பித்த சுருபங்களையும் தங்கள் புத்திக்கேற்ற விக்கிரகங்களையும் தங்களுக்கு உண்டுபண்ணினார்கள், இவைகளெல்லாந் தட்டாருடைய செய்கை, மனுஷரைப் பலியிடுகிறவர்கள் கன்றுக்குட்டிகளை முத்தஞ்செய்யலாமென்று அவைகளைக்குறித்துச் சொல்லுகிறார்கள்.

௩. ஆகையால் அவர்கள் விடியற்காலத்து மப்பைப்போலேயுங் காலமேயிருந்து விட்டுப்போகிற பனியைப்போலேயும் பெருங்காற்று * களத்திலிருந்து பறக்கடிக்கிற பதரைப்போலேயும் புகைச்சாலகத்திலே புறப்போகிற புகையைப்போலேயுமிருப்பார்கள். * சங். ௧, ௪.

௪. நானோவென்றால் உன்னை எகிப்துத் தேசத்திலிருந்து அழைத்துவந்ததுமுதற்கொண்டு * உன் பராபரனாகிய கர்த்தர், ஆகையால் நீ நம்மைத்தவிர வேறே தேவனை அறியவொண்ணாதே. நம்மைத்தவிர இரட்சகரில்லையே. * உ. மோசே. உ௰, உ.

௫. நாம் உன்னை மகா வறட்சியான தேசமாகிய வனாந்தரத்திலேயறிந்துகொண்டோம். * ரு. மோசே. ௩உ, ௰.

௬. * தங்களுக்கிருந்த மேய்ச்சலிலே திருப்தியானார்கள், திருப்தியான பிற்பாடு அவர்களிருதயம் மேட்டிமையாயிற்று, ஆனதுகொண்டு நம்மை மறந்தார்கள்.
* ரு. மோசே. ௩உ, ௰ரு ௰௬.

௭. ஆகையால் அவர்களுக்குச் * சிங்கத்தைப்போலிருப்போம், சிவிங்கியைப்போல் வழியருகே பதிவிருப்போம். * ௬, ௰௪.

௮. குட்டிகளைப் பறிகொடுத்த கரடியைப்போல நாம் அவர்களைச் சந்தித்து அவர்களுடைய நெஞ்சாங்குலையைக் கிழித்து அவர்களை ஒரு சிங்கத்தைப்போலப் பட்சித்துப்போடுவோம், வெளியின் மிருகங்கள் அவர்களைப் பீறிப்போடும்.

௯. இஸ்ரவேலே, நீயுன் சகாயமாகிய நமக்கு விரோதமானது உன்னுடைய கேடு.

௰. * எனக்கு இராசாவையும் பிரபுக்களையுங் கட்டளையிடுமென்றாயே, இப்போது உன்னுடைய எல்லாப் பட்டணங்களிலும் உன்னைக் காப்பாற்றும்படிக்கு உன் இராசா எங்கே? உன் நியாயாதிபதிகளெங்கே?
* க. சாமு. ௮, ௬. ௯.

௰௧. நமது கோபத்திலே உனக்கு இராசாவைக் கொடுத்தோம், நமது சினத்திலே அவனையெடுத்தோம்.

௰௨. எப்பிராயீமின் அக்கிரமம் கட்டி அதின் பாவம் வைத்து வைக்கப்பட்டிருக்கின்றது.

௰௩. பிள்ளைபெறுகிறவர்களின் அபாயங்கள் அவனுக்கு வரும், இவன் ஞானமில்லாத பிள்ளை, என்னெனில் பிறப்புகாலமட்டும் அவன் நிற்கவில்லை.

௰௪. அவர்களை நரகத்தின் அதிகாரத்திற்கு நீங்கலாக்கி மீட்போம், அவர்களை * மரணத்திற்கு நீங்கலாக்கிவிடுவிப்போம், † மரணமே, உன் பெருவாரிக்காய்ச்சலெங்கே? நரகமே, உன் சங்கரிப்பெங்கே? மனஸ்தாபம் நம்முடைய கண்களுக்கு மறைவானதாயிருக்கும். * எபி. உ, ௰௪. ௰௫.
† க. கொரி. ௰௫, ௫௫.

௰௫. இவன் சகோதரருக்குள்ளே துடுக்கனானபடியிலே கர்த்தருடைய காற்றாகிய கொண்டற்காற்று வனாந்தரத்திலிருந்தெழும்பிவரும், அதனால் அவனுடைய ஊற்று வற்றி அவனுடைய துரவு சுவறிப்போம், அது இச்சிக்கப்படத்தக்க சகல தட்டுமுட்டுகளுடைய பொக்கிஷத்தையும் வாரிக்கொண்டுபோம்.

௰௪. அதிகாரம்.

[கர்த்தரண்டைக்குத் திரும்பும்படி ஏற்றதுப்புத்திசொன்னது, திரும்புகிறவர்களுக்குக் கிருபையுள்ள வாக்குத்தத்தம் பண்ணப்பட்டது.]

சமாரியா குற்றஞ் சுமந்ததாயிருக்கின்றது, ஏனென்றால் தன் பராபரனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணிற்று, பட்டயத்தால் விழுவார்கள், அவர்களுடைய குழந்தைகள் சிதைத்துப்போடப்படும், அவர்களுடைய கெர்ப்பவதிகள் பிளக்கப்பட்டுப்போவார்கள்.

௨. இஸ்ரவேலே, * உன் பராபரனாகிய கர்த்தரண்டைக்கே திரும்பு, ஏனென்றால் உன் அக்கிரமத்தினாலே விழுந்தாய்.
* ௰௨, அதிகாரம். ௭.

௩. இந்த வார்த்தைகளையுங்கள் மனதிலே வைத்துக்கொண்டு கர்த்தரண்டைக்குத் திரும்புங்கள், தேவரீர் எல்லா அக்கிரமத்தையும் நீக்கியருளி, * நன்மையையெடுத்துத்தாரும். அப்போது † எங்கள் உதடுகளின் காளைகளைச் செலுத்துவோமென்றும், * க, ௬. † எபிரே. ௰௩, ௰௫.

௪. அசூர் எங்களை இரட்சிப்பதில்லை, நாங்கள் குதிரைகளின்மேலேறுவதுமில்லை, எங்கள் கைகளின் கிரியையை நோக்கி எங்கள் தேவனேயென்று இனிச் சொல்லாமலுமிருப்போம், ஏனெனில் திக்கற்றவன் உம்மாலே இரக்கம்பெறுகிறானென்றும் அவருடனே சொல்லுங்கள்.

௫. அவர்கள் மாறுபாட்டைக் குணமாக்குவோம், அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்போம், ஏனென்றால் நம்முடைய கோபம் அவர்களைவிட்டுத் திரும்பிற்று.

௬. இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்போம், அது லீலியாபுஷ்பத்தைப்போலப் பூத்து லீபனோனைப்போலத் தன் வேர்களை ஓடவிடும்.

௭. அதின் கிளைகள் ஓங்கிப்போம், அதின் அலங்காரம் ஒலிவமரத்தினுடையதைப்போலவும் அதற்கிருக்கும் வாசனை லீபனோனுடையதைப்போலவுமிருக்கும்.

௮. அதின் நிழலிலே குடியிருப்பார், திரும்பிவருவார்கள், தானியவிளைச்சலைப்போலப் பிழைத்துத் திராட்சச்செடிகளைப்போலச் செழிப்பார்கள், அதின் கீர்த்தி லீபனோனுடைய திராட்சப்பழரசத்தின் கீர்த்தியைப்போலிருக்கும்.

௯. இனியெனக்கும் விக்கிரகங்களுக்குமென்ன? நான் அவனுக்குக் கேள்விகொடுத்து அவனை நோக்கியிருப்பேன், நான்பச்

சைப்ரஸ் பாய்மரவிருட்சத்தைப்போலிருப்பேன், என்னில் உம்முடைய கனி கண்டுபிடிக்கப்படுமென்று எப்பிராயீம் சொல்லும்.

ய. இவைகளை உணர ஞானமுள்ளவனும் இவைகளை விளங்கிக்கொள்ளப் புத்தியுள்ளவனும் ஆர்? ஏனெனில் * கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடக்கிறார்கள், † பாதகரோவெனில் அவைகளில் விழுகிறார்கள். * சங். உங. † க. பேதுரு. உ, எ. அ.

ஓசெயாவின் தீர்க்கதரிசனம் முடிந்ததுமுற்றும்.

யோவேலின் தீர்க்கதரிசனம்.

க. அதிகாரம்.

[யோவேல் வெட்டுக்கிளிகளாலும் வறப காலத்தாலுமுண்டாகும் இக்கட்டை முன்னறிவித்துக் கர்த்தரண்டைக்கு மனந்திரும்பப் புத்திசொன்னது.]

பெத்துவேலின் குமாரனாகிய யோவேலுக்குண்டான கர்த்தருடைய வசனம்.

உ பச்சைப்புழு பின்வைத்ததை வெட்டுக்கிளி தின்னுகின்றது, வெட்டுக்கிளி பின்வைத்ததைப் பச்சைக்கிளி தின்னுகின்றது, பச்சைக்கிளி பின்வைத்ததை முசுக்கட்டைப் பூச்சி தின்னுகின்றது.

ங முதிர்வயதுள்ளவர்களே, இதைக்கேளுங்கள், தேசத்தின் சகல குடிகளே செவிகொடுங்கள், உங்கள் நாட்களிலும் உங்கள் பிதாக்களின் நாட்களிலும் இப்படிக்கொத்தது சம்பவித்ததுண்டோ?

ச இதன் செய்தியை உங்கள் பிள்ளைகளுக்கு விவரியுங்கள், இதை உங்கள் பிள்ளைகள் தங்கள் பிள்ளைகளுக்கும், அவர்களுடைய பிள்ளைகள் வேறே தலைமுறைக்கும் விவரிக்கக்கடவார்கள்.

ரு வெறியரே விழித்து அழுங்கள், திராட்சப்பழரசங் குடிக்கிற சகல சனங்களே, திராட்சக்கசாயத்தினிமித்தம் அலறுங்கள், ஏனெனில் அது உங்கள் வாயை விலக அறுப்புண்டுபோம்.

சா அந்தனேகமென்று எண்ணிமுடியாத பலத்த சாதி என் தேசத்தில் வந்தேறுகின்றது, அதின் பல்லுகள் சிங்கத்தின் பல்லுகள், பெண்சிங்கத்தின் கடைவாய்ப் பல்லுகள் அதற்கிருக்கின்றது.

எ அது என் திராட்சச்செடியைப் பாழும் என் அத்திமரத்தைச் சொறுணையுமாக்கிப்போட்டு உக்கவே உரித்துவிடுகின்றது, இவைகளின் கொம்புகள் வெண்மையாகின்றது.

அ தன் வாலவயதின் புருஷனுக்காக இரட்டுடுத்தியிருக்கிற பெண்ணைப்போல அலறு.

கூ காணிக்கையும் ஊற்றுதலுங் கர்த்தருடைய வீட்டைவிட்டு அற்றுப்போம், கர்த்தரின் ஊழியக்காரராகிய ஆசாரியர் துக்கிப்பார்கள்.

ய வயல்வெளி பாழாகின்றது பூமி துக்கங்கொண்டாடும், ஏனென்றால் விளைச்சல் அழிக்கப்படுகின்றது, திராட்சக்கசாயம் வெட்கமடைகிறது, எண்ணெய் மாண்டுபோம்.

யக பயிர்க்குடிகளே, கோதுமை வாற்கோதுமையில்லாததினாலே வெட்கிநில்லுங்கள், திராட்சத்தோட்டக்காரரே அலறுங்கள், ஏனென்றால் வயல்வெளியின் அறுப்பு அழிகின்றது.

யஉ திராட்சச்செடி வதங்கி அத்திமரஞ் சாரமற்றுப்போகும், மாதளஞ்செடியும் பேரீச்சங்கொளுஞ்சியுமுதலான வெளியின் விருட்சங்களெல்லாம் வாடிப்போகினாற் சந்தோஷம் மனுபுத்திரரை விட்டு வாடிப்போகும்.

யங ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள், பலிபீடத்தின் பணிவிடைக்காரரே அலறுங்கள், என் பராபரனுடைய பணிவிடைக்காரரே, நீங்கள் உட்பிரவேசித்து இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள், ஏனென்றால் கர்த்தருடைய வீட்டிற் காணிக்கையும் ஊற்றுதலுஞ் செலுத்தத் தவிர்க்கப்பட்டது.

யச * உபவாசம்பண்ணும் பரிசுத்தநாளைக் குறித்து அதின் ஆசரிப்பைக் கூறுங்கள், மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும் உங்கள் பராபரனாகிய கர்த்தரின் வீட்டிலே கூட்டிக் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். * உ, யரு.

யரு அந்த நாளினிமித்தம் ஐயோ, ஏனெனில் * கர்த்தருடைய நாள் சமீபமாயிருந்து சர்வதிறமும் வல்லவராலே பாழ்க்கப்பாடாய் வரும். * உ, க. உ. ஏசா. யங, சா.

யசா ஆகாரம் நம்முடைய கண்களுக்கு

சந்தோஷமுங் களிகூருதலும் நம்முடைய பராபரனின் வீட்டைவிட்டு அறுப்புண்டுபோகவில்லையோ?

௰௭ விதைகள் தங்கள் மண்கட்டிகளின் கீழ்ச் செத்துப்போகும். விளைச்சல் திருசு போகிறதனாலே பண்டசாலைகள் பாழாகிக் களஞ்சியங்கள் இடிந்துபோகும்.

௰௮ மிருகங்கள் எத்தனையாய்த் தவிக்கும்? மாட்டுமந்தைகள் தங்களுக்கு மேய்ச்சலில்லாததினாலே கலங்கும், ஆட்டுமந்தைகளும் பாழாம். * எரே. ௰௪, ௫. ௬.

௰௯ கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன், ஏனெனில் அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்தது, சுவாலை வெளியின் விருட்சங்களையெல்லாம் எரித்துப்போட்டது.

௨௰ * வெளியின் மிருகங்களும் உம்மை நோக்கிக் கதறும், ஏனெனில் தண்ணீர்த் திக்கெல்லாம் வறண்டுபோயிற்று, அக்கினி வனாந்தரத்தின் மேய்ச்சல்களைப் பட்சித்துப்போட்டது. * சங். ௪௨, ௨. ௱௪, ௨௭.

௨. அதிகாரம்.

[அப்பாலும் அந்த ஆக்கினையை யறிவிக்கிறதினாலே சனத்தை யுத்தமத்துணப்படுத்த ஆக்கிவினதும் மெய்யாய மனஸ்தாபப்பட்டுச் செய்யும் விண்ணப்பத்தைக் கர்த்தர் கேட்பாரென்றதும்.]

சீயோனிலே எக்காளம் ஊதி நம்முடைய பரிசுத்த பருவதத்திலே சத்தமாய்க் கூப்பிடுங்கள், தேசத்தின் குடிகளெல்லாந் தத்தளிக்கக்கடவார்கள், ஏனென்றால் * கர்த்தருடைய நாள் வருகின்றது, அது சமீபமாயிருக்கின்றது. * ௧, ௰௫.

௨ அது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள், விடியற்காலவெளுப்பு பருவதங்களின்மேற் பரவுகிற தீவிரமாக ஏராளமான பலத்த சாதிவந்து பரவும், அப்படிக்கொத்தது லோகத்தோற்றமுதற்கொண்டு உண்டானதுமில்லை, அதின்பிறகு இனித் தலைமுறை தலைமுறையாக வரும் வருஷங்கள்மட்டும் உண்டாவதுமில்லை.

௩ அக்கினி யதின்முன்னே பட்சிக்கும், சுவாலையதின்பின்னே யெரிக்கும், அதுவருமுன் தேசம் ஏதேனென்னுந் தோட்டத்தைப் போலிருந்தது, அதுபோனபின் அதுபாழான வனாந்தரத்தைப்போலிருக்கும், ஏதானாலும் அதற்குத் தப்பிப்போவதில்லை.

௪ அவைகளின் ரூபு குதிரைகளின் ரூபுக்கொத்தது, அவைகள் ராவுத்தரைப்போலேயோடுகின்றது.

௫ அவைகள் ஓடுகிற இரதங்களின் இரைச்சலாகவுஞ் செத்தைகளை யெரிக்கிற அக்கினிச்சுவாலையின் இரைச்சலாகவும், யுத்தத்திற்கு ஆயத்தப்பட்ட பலத்த சனத்தின் இரைச்சலாகவும், பருவதங்களுடைய சிகரங்களின்மேற் குதிக்கின்றது.

௬ அவைகளுக்குமுன்பாகச் சனசதனங்கள் நடுங்கும், எல்லாமுகங்களின் ரூபுஞ் சுருங்கும்.

௭ அவைகள் பலசாலிகளைப்போலேயோடும், அவைகள் யுத்தமனுஷரைப்போலே மதிலேறும், அவைகள் வரிசைகள் பிசகாமல் ஒவ்வொன்றுந் தன்தன் வழியிலேபோகும்.

௮ ஒன்றையொன்று நெருக்காது, ஒவ்வொன்றுந் தன்தன் பாதையிலே போகும், அவைகள் ஆயுதங்களுக்குட்புகுந்துங் காயம்படாதேபோகும்.

௯ அவைகள் பட்டணத்திற் சுற்றியேகும், மதிலிலேறும், வீடுகளிலேறும், திருடனைப்போலப் பலகணிகளால் உட்பிரவேசிக்கும்.

௰ அவைகளுக்குமுன்பாகப் பூமிதவிக்கும், வானங்கள் அசையும், சூரியனுஞ் சந்திரனும் இருண்டுபோகும், நட்சத்திரங்கள் தங்கள் ஒளியைமறைத்துக்கொள்ளும்.

௰௧ கர்த்தர் தமது இராணுவத்தின்முன்பாகத் தம்முடைய சத்தத்தைக்காட்டுவார், ஏனெனில் அவருடைய சேனை மகாதிரளும் அவருடைய வார்த்தையின்படி செய்கிறதற்குப் பலமுமானது, அதேதென்றாற் கர்த்தருடைய நாள் பெரியதும் மகாபயங்கரமுமாயிருக்கும், அதைத்தாங்குபவனார்?

௰௨ இப்போதும் உங்கள் முழுமனதோடேயும் உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் * தம்மண்டைக்குத் திரும்புங்களென்று கர்த்தர் சொல்லுகிறார். * எசே. ௩௩, ௰௧.

௰௩ நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல உங்கள் இருதயங்களைக் கிழித்து உங்கள் பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திரும்புங்கள், ஏனெனில் அவர் இரக்கமும் மன உருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவருந் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். * ௨. மோசே. ௩௪, ௬.

௰௪ ஒருவேளையவர் திரும்பிக்கொண்டு மனஸ்தாபப்பட்டு அந்த உங்கள் பராபரனாகிய கர்த்தருக்குக் * காணிக்கையையும் ஊற்றுதலையுஞ் செலுத்துகிறதற்கான ஆசீர்வாதத்தை மீதியாகப் பின்வைத்துப்போவாராக்கும். * ௧, அதி. ௯.

௰௫ சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், உபவாசம்பண்ணும் பரிசுத்த நாளைக்குறித்து அதின் ஆசரிப்பைக் கூறுங்கள்.

௰௬ சனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தம்பண்ணுங்கள், முதிர்ந்த வயதுள்ளவர்களைச் சேருங்கள், பிள்ளைகளையும் முலையுண்கிறவர்களையுங் கூட்டுங்கள், மணவா

ளன் தன் அறையையும் மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக.

௰௭ கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுதுகொண்டு: கர்த்தாவே, தேவரீர் உம்முடைய ஜனத்தைத் தப்பவிட்டு, புறசாதிகள் அவர்களைப் பழமொழியாக்கும் நிந்தைக்கு உம்முடைய சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும், உங்கள் பராபரன் எங்கேயென்று புறசாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக.

௰௮ அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியமாயிருந்து தம்முடைய ஜனத்தைத் தப்பவிடுவார்.

௰௯ கர்த்தர் மறுமொழிகொடுத்துத் தமது ஜனத்துக்குச் சொல்லுவதாவது, இதோ நாம் உங்களை இனிப் புறசாதிகளுக்குள்ளே நிந்தையாக வைக்காமல் உங்களுக்குத் தானியத்தையுந் திராட்சரசத்தையும் எண்ணெயையும் நீங்கள் அதினால் திருத்தியாகும்படிக்குக் கொடுத்து,

௨௰ வடக்கத்திச் சேனையை உங்களுக்குத் தூரமாக விலக்கி அதின் முன்றண்டு கீழ்க்கடலுக்கும் அதின் பின்றண்டு கடைசிக் கடலுக்கும் நேராகும்படிக்கு அதை வறட்சியும் பாழுமான தேசத்துக்குத் துரத்திவிடுவோம், அங்கே அதின் நாற்றம் எழும்பி அதின் துர்க்கந்தம் வீசும், ஏனெனில் பெரிய காரியங்களைச் செய்தது.

௨௧ தேசமே பயப்படாதே, களிகூர்ந்து சந்தோஷப்படு, ஏனெனில் கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்.

௨௨ வெளியின் மிருகங்களே பயப்படாதேயுங்கள், ஏனெனில் வனாந்தரத்தின் மேய்ச்சல்கள் முளைக்கும், விருட்சங்கள் தங்கள் காய்களைக் காய்க்கும், அத்திமரமுந் திராட்சச்செடியுந் தங்கள் சாரத்தைக் கொடுக்கும்.

௨௩ சீயோனின் குமாரரே, * உங்கள் பராபரனாகிய கர்த்தருக்குள் களிகூர்ந்து சந்தோஷப்படுங்கள், ஏனெனில் அவர் உங்களுக்கு நீதிக்கான போதகரைக் கொடுத்து உங்களுக்கு † முன்மாரியையும் பின்மாரியையும் ஏற்கவே வருஷிக்கப்பண்ணுவார்.

* பிலிப். ௪, ௪. † ௫.மோ. ௨௧, ௪.

௨௪ களங்கள் தானியத்தினால் நிரம்பும், ஆலைகளில் திராட்சப்பழ இரசமும் எண்ணெயும் வழிந்தோடும்.

௨௫ நாம் உங்களுக்குள் அனுப்பின நம்முடைய பெரிய இராணுவமாகிய வெட்டுக்கிளிகளும் பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப்பூச்சிகளும் பச்சைப்புழுக்களும் பலனைத்தின்ற வருஷங்களுக்காக உங்களுக்குப் பதிலளிப்போம்.

௨௬ நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டுத் திருத்தியடைந்து உங்களைப் பிரியமாய் நடத்திவந்த * உங்கள் பராபரனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள், நம் ஜனம் என்றென்றைக்கும் வெட்கப்பட்டுப்போவதில்லை. * ௫. மோசே. ௮, ௰.

௨௭ நாம் இஸ்ரவேலின் நடுவிலிருப்பவரென்றும், நாமே உங்கள் பராபரனுங் கர்த்தருமே, வேறொருத்தரில்லையென்றும் அறிந்துகொள்ளுவீர்கள், நம் ஜனம் என்றென்றைக்கும் வெட்கப்பட்டுப்போவதில்லை.

௩. அதிகாரம்.

[புதிய ஏற்பாட்டின் காலத்தில் அருளப்போகிற தேவகிருபையின் மேன்மை.]

இதற்குப்பிற்பாடு சம்பவிப்பதேதெனில், * நாம் சகல மாம்சத்தின்மேலும் நம்முடைய ஆவியைப் பொழிவோம், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள், உங்கள் மூப்பரானவர்கள் சொப்பனங்களையும் உங்கள் இளைஞர் தரிசனங்களையுங் காண்பார்கள். * ஏசாயா. ௪௪, ௩. எசே. ௩௯, ௨௯. அப்போ. ௨, ௧. ௨௧, ௮. ௰—௪௫. ௰, ௪௪. தீத்து. ௩, ௬—௭.

௨ வேலைக்காரரின்மேலும் வேலைக்காரிகளின்மேலும் அந்நாட்களில் நம்முடைய ஆவியைப் பொழிவோம்.

௩ வானத்திலும் பூமியிலும் அதிசயங்களைக் கட்டளையிடுவோம், இரத்தமும் அக்கினியும் புகைப்பெரும்புயல்களுமுண்டாகும்.

௪ கர்த்தருடைய பெரியதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளுஞ் சந்திரன் இரத்தமுமாய் மாறப்படும்.

௫ சம்பவிப்பதேதெனில் * கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவோனெல்லாம் விடுவிக்கப்படுவான், ஏனெனில் கர்த்தர் சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலுங் கர்த்தர் வரவழைக்கப்போகிற மறுபேர்களிடத்திலும் விடுவிக்குதலுண்டாயிருக்கும். * அப்போ ௨, ௰. ரோமர். ௰, ௰௩.

கர்த்தருடைய சபைக்குச் சத்துருக்களான எல்லாச் சாதிகளின்மேலும் வரப்போகிற ஆக்கினைகள்.

௬ ஏனெனில் இதோ யூதாவும் எருசலேமுமிருக்கிற சிறையிருப்பை நாந்திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும்,

௭ நாம் எல்லாப் புறசாதியாரையுங் கூட்டி அவர்களை யோசபாத்தென்கிற பள்ளத்தாக்கிலிறங்கிப் போகப்பண்ணி அவர்கள் நமது ஜனத்தையும் இஸ்ரவேலென்ற நம்முடைய சுதந்தரத்தையும் புறசாதிகளுக்குள்ளே சிதறடித்து நம்முடைய தேச

தைப் பங்கிட்டுக்கொண்டதினிமித்தமும்,
௩ அவர்கள் நம்முடைய ஜனத்தின்பேரில் சீட்டுப்போட்டு ஆண்பிள்ளைகளை வேசிப்பணையமாகக்கொடுத்து பெண்பிள்ளைகளை மதுபானத்திற்கென்று விற்றுக் குடித்ததினிமித்தமும் அங்கே யவர்களோடே நியாயத்திற்குட்பிரவேசிப்போம்.

௪ தீருவே, சீதோனே, பெலிஸ்தேயாவின் சகல எல்லைகளே, உங்களுக்கும் நமக்கும் என்ன? இப்படி நமக்குச்சரிக்கட்டுகிறீர்களோ? இப்படி நமக்குச்சரிக்கட்டினீர்களானால் நாஞ்சீக்கிரமுந் தீவிரமுமாய் நீங்கள் சரிக்கட்டுகிறதையுங்களுந்தலையின்மேல் திருப்பிவிடுவோம்.

௫ நீங்கள் நம்முடைய வெள்ளியையும் நம்முடையபொன்னையும் எடுத்து நம்முடைய நலங்கிளிக்கிரமானவைகளையுங்கள் கோவில்களிலேகொண்டுபோய்,

௬ யூதாவின்குமாரரையும் எருசலேமின்குமாரரையும் அவர்களுடையவெல்லைகளுக்கு அவர்களைத்தூரமாக்கும்படிக்குக் கிரேக்கரின் புத்திரருக்கு விற்றுப்போட்டீர்கள்.

௭ இதோ, நீங்கள் அவர்களை விற்றுப்போட்ட அவ்விடத்திலிருந்து நாம் அவர்களை யெழும்பிவரப்பண்ணி நீங்கள்சரிக்கட்டினதையுங்கள் தலையின்மேல் திருப்பிவிட்டு,

௮ உங்கள்குமாரரையும் உங்கள்குமாரத்திகளையும் யூதாபுத்திரரின்கையிலே விற்றுப்போம், இவர்கள் அவர்களைத் தூரதேசத்தாராகிய சேபாசாதியாருக்கு விற்றுப்போடுவார்கள், ஏனெனிற்கர்த்தர் இதைச்சொன்னார்.

௯ இதைப்புறசாதிகளுக்குள்ளே கூறுங்கள், யுத்தத்தை ஆயத்தம்பண்ணுங்கள், பராக்கிரமசாலிகளையெழுப்புங்கள், யுத்தமனுஷரெல்லாருஞ் சேர்ந்துவந்து ஏறுவார்களாக. * ஏசேக்கியேல். ௩௮, ௭.

௰ உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும் உங்கள் அரிவாள்களை யீட்டிகளாகவும் அடியுங்கள், பலஈனன் தான் பராக்கிரமசாலியென்பானாக.

௰௧ சகலசாதிகளே, நீங்களொருமித்துக்கொண்டு சுற்றிலுமிருந்துவந்து கூடுங்கள், கர்த்தாவே, அங்கே * உம்முடைய பராக்கிரமசாலிகளை இறங்கப்பண்ணும்.
* சங்கீதம். ௱௩, ௨௰.

௰௨ சாதிகள் எழும்பி யோசபாத்தென்னும் பள்ளத்தாக்குக்கேகிவருவார்கள், ஏனெனில் அங்கே நாஞ்சுற்றிலுமிருந்துவந்தசாதிகளை நியாயந்தீர்ப்பதற்காக உட்காருவோம்.

௰௩ * அரிவாளையனுப்புங்கள், ஏனென்றால் அறுப்புவிளைந்துவந்தது, வந்திறங்குங்கள், ஏனென்றால் ஆலைநிரம்பியிருக்கின்றது, ஆலையின்தொட்டிகள்வழிந்தோடும், ஏனெனில் அவர்களுடைய பொல்லாப்புமிகுதியானது. அறிவிப்பு. ௰௪, ௰௫.

௰௪ போரடிக்கும்பள்ளத்தாக்கிலேயே ஏராளமான சனங்களுண்டாயிருக்கும், ஏனெனிற்போரடிக்கும்பள்ளத்தாக்கிலே கர்த்தர் நியாயஞ்செய்யும் நாள்சமீபமாயிருக்கின்றது.

௰௫ * சூரியனுஞ்சந்திரனும் இருண்டுபோகும், நட்சத்திரங்கள் தங்கள் ஒளியை மறைத்துக்கொள்ளும். * லூக். ௨௧, ௨௫.

மெய்யானசபைக்குக்கடைசிக்காலத்திலிருக்கும் பாக்கியமானசீர்.

௰௬ கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து எருசலேமிலிருந்து தம்முசத்தத்தைக் காட்டுவார், அதனால் வானங்களும் பூமியும் அதிரும், ஆனாற்கர்த்தர் தம்முசனத்திற்கு அடைக்கலமும் இஸ்ரவேல்புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்.
* ஓசே. ௰௧, ௰. ஆமோ. ௧, ௨.

௰௭ நம்முபரிசுத்தபர்வதமாகிய சீயோனிலே வாசமாயிருக்கிற நாம் * உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று அப்போது அறிவீர்கள், அப்போது எருசலேம்பரிசுத்தமாயிருக்கும், அந்நியர் இனி அதைக்கடந்துபோவதில்லை. * ஏசேக்கி. ௩௪, ௩௰.

௰௮ அக்காலத்திலே சம்பவிப்பதேதென்றால் * பர்வதங்கள் திராட்சப்பழ இரசமாய்வடியும், மேடுகள்பாலாயோடும், யூதாவின் ஓடைகளெல்லாந் தண்ணீராயோடும், † ஒரு ஊற்று கர்த்தருடைய வீட்டிலிருந்து புறப்பட்டுச் சித்திமென்றபள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சலாக்கும். * ஆமோ ௯, ௰௩. ஏசேக்கி. ௪௭, ௧. † சகரி. ௰௪, ௮. அறிவி. ௨௨, ௧.

௰௯ யூதாபுத்திரரின் தேசத்திலே குற்றமில்லாத இரத்தத்தைச்சிந்தி அவர்களுக்குச்செய்த கொடுமையினிமித்தம் எகிப்து பாழுமாய், ஏதோம்பாழான வனாந்தரமுமாய்ப்போம்.

௨௰ ஆனாலும் யூதாநித்தியகாலமும் எருசலேந் தலைமுறை தலைமுறையாகவுங் குடியேற்றப்பட்டிருக்கும். நாந் தண்டியாமல் விட்டிருந்த * அவர்களுடைய இரத்தப்பழியைத் தண்டியாமல்விடோம் † கர்த்தர் சீயோனிலே வாசமாயிருக்கிறவர்.
* ௫.மோ. ௩௨, ௪௩. அறிவி. ௬, ௰. ௰௯, ௨. † சங்கீ. ௯, ௰௧. ௭௪, ௨.

யோவேலின்தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

ஆமோசின் தீர்க்கதரிசனம்.

க. அதிகாரம்

[இஸ்ரவேல்தேசத்தின்மேலுஞ் சூரியர்மேலும் பெலிஸ்தர்மேலுந் தீருவின்மேலும் ஏதோமியர்மேலும் அம்மோன்புத்திரர்மேலும் வருந் தெய்வாக்கினைகளின் தீர்க்கதரிசனம்.]

தெக்கோவா ஊர்மேய்ப்பருக்குள்ளிருந்த ஆமோஸ் யூதாவின் இராசாவாகிய உசியாவின் நாட்களிலும் இஸ்ரவேலின் இராசாவாகிய யோவாசுடைய குமாரனான எரொபெயாமின் நாட்களிலும், * பூமியதிர்ச்சலுண்டாக இரண்டு வருஷமிருக்கக்கொள்ள இஸ்ரவேலின்மேற்கண்டு சொன்னவர்த்தமானங்கள். * சகரி. ௰ரு, ரு.

உ * கர்த்தர் சீயோனிலிருந்து கெர்ச்சித்து எருசலேமிலிருந்து தமுடைய சத்தத்தைக் காட்டுவார், அதினாலே மேய்ப்பரின் சாப்பிரங்கள் துக்கமடையும், கற்மேலின் கொடுமுடியுங் காய்ந்துபோகும்.
* யோவேல. ௩, ௰௬.

௩ கர்த்தர் சொல்லுகிறதாவது, தமஸ்குவினுடைய மூன்று நாலு பாதகங்களினிமித்தமும் அவர்கள் கீலேயாத்தைத் † இருப்புவண்டில்களாற் போரடித்ததினிமித்தமும் நாம் அதின் ஆக்கினையைத் திருப்பாமல,
* ஏசாயா. ௭, ௧. † உ. இராசா. ௰௩, ௭.

௪ ஆசவேலின்வீட்டிலே அக்கினியைப் போடுவோம், அது பெனாதாதின் அரண்மனைகளைப் பட்சிக்கும்.

௫ நாந் தமஸ்குவின் தாப்பாளையுடைத்து ஆக்குடிகளை ஆவேனென்ற பள்ளத்தாக்கிலும் செங்கோல் அருக்கிறவனைப் பெத்ஏதேனிலும் மைக்காமற் சங்காரம்பண்ணுவோம், அப்போது சூரியாவின் சனங் கீருக்குச் சிறையிருப்பாயப் போமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௬ கர்த்தர் சொல்லுகிறதாவது, காத்சாவினுடைய மூன்று நாலு பாதகங்களினிமித்தமும் அவர்கள் சிறையிருப்பானவர்களை ஏதோமியர்கையிற் பதிரப்படுத்திவிடும்படிக்கு முழுக்கச் சிறையாக்கினதினிமித்தமும் நாம் அதின் ஆக்கினையைத் திருப்பாமல,

௭ காத்சாவின் மதிலுக்குள் அக்கினியைப் போடுவோம், அது அதினுடைய அரண்மனைகளைப் பட்சிக்கும்.

௮ நாங் குடிகளை அஸ்தோத்திலுஞ் செங்கோலாளுகிறவனை அஸ்கலோனிலுஞ் சங்காமற் சங்காரம்பண்ணிப் பெலிஸ்தியானவர்கள் அழியும்படிக்கு நமது கையை எக்கிரோனுக்கு விரோதமாகத் திருப்புவோமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௯ கர்த்தர் சொல்லுகிறதாவது, தீருவினுடைய மூன்று நாலு பாதகங்களினிமித்தமும் அவர்கள் சகோதரரின் உடன்படிக்கையை நினையாமற் சிறையிருப்பானவர்களை முழுதும் ஏதோமியர்கையிற் பதிரப்படுத்திவிட்டதினிமித்தமும் நாம் அதின் ஆக்கினையைத் திருப்பாமல,

௰ தீருவின் மதிலுக்குள் அக்கினியைப் போடுவோம், அது அதின் அரண்மனைகளைப் பட்சிக்குமென்கிறார்.

௰௧ கர்த்தர் சொல்லுகிறதாவது, ஏதோமினுடைய மூன்று நாலு பாதகங்களினிமித்தமும் அவன் தன் சகோதரனைப் பட்டயத்தோடே தொடர்ந்து தன் மனதிரக்கமற்றதாகித் தன் கோபத்தினால் என்றைக்கும் அவனைப் பீறிப்போட்டுத் தன் மூர்க்கத்தை நித்தியகாலமாக வைத்திருந்ததினிமித்தமும், நாம் அவன் ஆக்கினையைத் திருப்பாமல,

௰௨ * தேமானிலே அக்கினியைப் போடுவோம், அது பொத்ஸராவின் அரண்மனைகளைப் பட்சிக்குமென்கிறார். * ஏசே. ௨௫. ௰௨. ௰௩.

௰௩ கர்த்தர் சொல்லுகிறதாவது, அம்மோன்புத்திரரின் மூன்று நாலு பாதகங்களினிமித்தமும் அவர்கள் தங்கள் எல்லைகளை விஸ்தாரமாக்கும்படிக்குக் கிலேயாத்சத்தின் கெர்ப்பஸ்திரிகளைப் பீறிப்போட்டதினிமித்தமும், நாம் அவர்கள் ஆக்கினையைத் திருப்பாமல,

௰௪ ரப்பாவின் மதிலுக்குள் அக்கினியைக் கொளுத்துவோம், அது யுத்தநாளில் முழக்கமாகவும் பெருங்காற்றின் பெசலாயும் அதின் அரண்மனைகளைப் பட்சிக்கும்.

௰௫ அவர்களுடைய இராசா சிறையிருப்பிலே போவான், அவனும் அவனுடைய பிரபுக்களுங்கூடத்தானென்று கர்த்தர் சொல்லுகிறார்.

உ. அதிகாரம்.

[மோவாபியர்மேலும யூதர்மேலும இஸரவேலர்மேலும வரும ஆககினைகளை முனனறிவித்தது.]

கர்த்தர்சொலலுகிறதாவது, * மோவாபினமூனறுநானகு பாதகஙகளினிமித்தமும அவன ஏதோமுடைய இராசாவின எலுமபுகளை நீறுசசுடடுபபோடடதினிமித்தமும நாம அவன ஆககினையைததிருபபாமல, * எரே. சஅ, க. முதல செபப. உ, அ—ய.

உ மோவாப்தேசததில அககினியைபபோடுவோம, அது கெரியோததின அரணமனைகளைபபட்சிககும, மோவாபியர் அமளிகளுளளும ஆர்பபரிபபுகளுளளும எககாளசத்தத்திறகுளளுஞசாவார்கள.

ங நாம நியாயாதிபதியை யவர்களநடுவிலிராதபடிககுச சஙகாரமபணணி அவனோடேகூட அவர்களுடைய பிரபுககளை யெலலாங கொனறுபோடுவோமெனறுகர்த்தர்சொலலுகிறூர்.

ச கர்த்தர்சொலலுகிறதாவது, யூதாவினமூனறுநானகு பாதகஙகளினிமித்தமும அவர்கள கர்த்தருடையவேதத்தைவெறுத்து அவருடைய கடடளைகளைக் கொளளாமல தஙகளபிதாககள பினபறறின தஙகளபொயகளின மோசததிற்குளளானதினிமித்தமும நாம அவர்கள ஆககினையைததிருபபாமல,

ரு யூதாவிலே அககினியைபபோடுவோம, அது எருசலேமின அரணமனைகளைபபட்சிககும.

சு கர்த்தர் சொலலுகிறதாவது, இஸரவேலின மூனறுநானகு பாதகஙகளினிமித்தமும அவர்கள நீதிமானைபபணத்திற்கும *எளியவனையொருசோடு பாதரட்சைககும விற்றுபபோடடதினிமித்தமும அவர்களுடைய ஆககினையைததிருபபாதிருபபோம. * அ. ஙு.

எ அவர்களதரித்திரரின தலைககுமோசமாகபபூமியினமணணைககவவிச சிறுமையானவர்களின வழியைப்புரடடுகிறூர்கள, நமமுடைய பரிசுத்தநாமத்தைத குலைசசலாககுமபடிககு மகனுந்தகபபனும ஒருபெணணிடத்திற் பிரவேசிககிறூர்கள.

அ அவர்கள சகல பீடஙகளருகே அடமானமாயவாஙகின வஸதிரஙகளினமேறபடுத்துககொணடு தெணடம பிடிககபபடடவர்களுடைய மதுபானத்தைத் தஙகள தேவர்களினவீடடிலே குடிககிறூர்கள

க நாமோவெனில கேதுருகளின உயரத்திககொத்த உயர்த்தியும கர்வாலியுமரஙகளைபபோலே உரபபுமாயிருநத அவனுடையகனியையும, * எமோரியனைபபவர்களுககுமுனபாகஅழித்து உயர இருந்த அவனுடைய கனியையுந்தாழவிருந்த அவனுடையவேர்களையும அழித்துபபோடடு,
* ஐ. மோசே. உக, உங. முதல

ய நீஙகளஎமோரியனுடைய தேசத்தைச்சுதநதரிககுமபடிககு உஙகளை நாம எகிப்து தேசத்திலிருந்து ஏறிவரபபணணி உஙகளை நாற்பதுவருஷமாகவனாந்தரத்திலேவழிநடத்தி,

யக உஙகளகுமாரரிறசிலரைத்தீர்க்கதரிசிகளாகவும உஙகளவாலிபரிறசிலரை * நசரேயராகவும எழுமபப்பணணினோம, இஸரவேலபுத்திரரே, இபபடி யிலலையோவெனறுகர்த்தர்கேட்கிறூர். * ச. மோசே. சு, உ. முதல

யஉ நீஙகளோவெனறுல நசரேயருககுத்திராட்சபபழரசஙகுடிக்கக்கொடுத்துத் தீர்க்கதரிசிகளுககு நீஙகள தீர்க்கதரிசனஞ் சொலலவேணடாமெனறுகற்பித்தீர்கள.

யங இதோகோதுமைகடடுகள நிறைபாரமாக ஏற்றபபடடவணடில இருந்து ஙிருபபோலே நாம உஙகளை நீஙகளிருககிற ஸ்தலத்திலிருந்துவோம.

யச அபபோதுவேகமானவனுககு ஓட இடமிலலை, திடனுளளவன தனபலனைப பலககபபணணுவதுமிலலை, பராககிரமமுளளவன தனபிராணனைத தபபுவிபபதுமிலலை.

யரு விலலைபபிடிககிறவன நிறபதுமிலலை வேகமானவன தனகாலகளால தபபிபபோவதுமிலலை, குதிரையினமேலிருககிறவன தனபிராணனைத்தபபுவிபபதுமிலலை.

யசு பலசாலிகளுககுளளேதனநெஞசைத்திடபபடுத்துகிறவன அந்நாளிலே நிர்வாணமாய ஓடிபபோவானெனறு கர்த்தர் சொலலுகிறூர்.

ங. அதிகாரம்.

[இஸரவேலபுத்திரரைக கடிந்துகொளளுகிறபிரசஙகம.]

இஸரவேலபுத்திரரே, உஙகளுககுவிரோதமாகவுநநாமஎகிப்து தேசத்திலிருந்து ஏறபபணணின எலலா வம்சத்திறகுவிரோதமாகவுஙகர்த்தர்சொனன இந்தவசனத்தைக்கேளுஙகள.

உ * பூமியினுடைய எலலாவம்சஙகளுககுளளும உஙகளைமாத்திரமஅறிந்துகொணடோம, ஆகையால உஙகளுடைய எலலா அககிரமஙகளினிமித்தமும உஙகளைவிசாரிபபோம. * ஐ. மோசே. யச, உ.

ங இரணடுபேர் ஒருமனபபடடிருந்தாலொழிய ஒருமிககநடந்துபோவார்களோ

ச தனககிரையகபபடாமற் காட்டிலே,

யொன்றும் அகப்படாதிருக்கையில் சிங்கம் கெர்ச்சிக்குமோ? இரையெடுக்காமல் இளஞ்சிங்கம் தன் கெபியிலிருந்து தன் சத்தத்தைக் காட்டுமோ.

௫ தரையிலே குருவிக்குக் கண்ணி வைக்கப்படாதிருந்தால் கண்ணியிலே சிக்கிக்கொள்ளுமோ? ஒன்றும் படாதிருக்கக் கொள்ளக் கண்ணி தரையிலிருந்தெடுத்துக் கொள்ளப்படுமோ?

௬ சனம் அமளியாகாமல் ஊரிலே எக்காளம் ஊதப்படுமோ? * கர்த்தருடைய செயலில்லாமல் ஊரிலே ஒரு தீங்குண்டாகுமோ?

* ஏசாயா. ௪௫, ௭. ௯, ௭. புலம்பல். ௩, ௩௭—௩௮.

௭ ஏனென்றால் கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.

௮ * சிங்கம் கெர்ச்சிக்கின்றது, ஆர் பயப்படாதிருக்கலாம்? கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார், ஆர் தீர்க்கதரிசனஞ் சொல்லாதிருக்கலாம்? * அப்போ. ௪, ௨௦.

௯ நீங்கள் சமாரியாவின் பருவதங்களில் வந்துகூடி அதின் நடுவில் நடக்கிற பெரிய கலகங்களையும் அதற்குட் செய்யப்படுகிற இடுக்கண்களையும் பாருங்கள் என்று அஸ்தோத்திலே அரண்மனைகளின் மேலும் எகிப்துத் தேசத்திலே அரண்மனைகளின் மேலும் கூறுங்கள்.

௰ அவர்கள் நியாயஞ்செய்ய அறியாமல் தங்கள் அரண்மனைகளிற் கொடுமையையும் பாழ்க்கடிப்பையுங் குவித்துக்கொள்ளுகிறார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௧ ஆகையாற் சத்துருவந்து தேசத்தைச் சூழ்ந்துகொண்டு உன்னுடைய பலத்தை உன்னிலிருந்து விழப்பண்ணுவான், அப்போது உன் அரண்மனைகள் கொள்ளையிடப்படுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௰௨ கர்த்தருரைக்கிறதாவது, ஒரு மேய்ப்பன் இரண்டு கால்களையல்லது ஒரு காதின் துண்டைச் சிங்கத்தின் வாயிலிருந்து பிடுங்கித் தப்புவிக்கும்போலே சமாரியாவின் குடிகளாகிய இஸ்ரவேல் புத்திரர் ஒரு கட்டிலின் மூலையிலும் ஒரு படுக்கையின் பக்கத்திலும் ஒளித்திருக்கையால் தப்புவிக்கப்படுவார்கள்.

௰௩ நீங்கள் கேட்டு யாக்கோப் வீட்டாருக்கு விரோதமாகச் சாட்சியாக அறிவிக்கவேண்டியதாவது, சேனைகளின் பராபரனாயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறதேதெனில்,

௰௪ நாம் இஸ்ரவேலுடைய பாதகங்களினிமித்தம் அவனை விசாரிக்கும் நாளிலே நாம் பெத்தேலின் பலிபீடங்களைப் பலிபீடத்தின் கொம்புகள் வெட்டுண்டு தரையிலே விழவிசாரித்து,

௰௫ மாரிக்காலத்திற்குரிய வீட்டையுங் கோடைக்காலத்திற்குரிய வீட்டையும் அழிப்போம், அப்போது தந்தவீடுகள் அழியும், விஸ்தாரமான வீடுகளுக்கும் முடிவுவருமென்பதாகவும் கர்த்தர் சொல்லுகிறார்.

௪. அதிகாரம்.

[சனத்தின் மூப்பனைக்கடிந்துகொள்ளும் பிரசங்கம்.]

தரித்திரரை யொடுக்கி எளியவர்களை நொறுக்கி அவர்களுடைய எசமானர்களோடே நாங்கள் குடிக்கத்தக்கதாகக் கொண்டுவாருங்களென்று சொல்லுகிற சமாரியாவின் பர்வதத்திலுள்ள பாசானின் பசுக்களே நீங்கள் கேட்கவேண்டிய வசனமாவது,

௨ இதோ கர்த்தராகிய ஆண்டவர் பசிகளைக் குறடுகளாலும் உங்கள் பின் சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துப் போடும் நாட்கள் உங்கள்மேல் வருமென்று அவர் தம்முடைய பரிசுத்தத்தைக்கொண்டு ஆணையிட்டார்.

௩ அப்போது நீங்கள் ஒவ்வொருத்தர் தனக்கெதிரான திக்குக்கு நேராய்த் திறப்புகளால் புறப்பட்டு அரண்மனைக்குக் கொண்டுபோகச் சுமந்ததைப் பெறிந்துபோடுவீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௪ பெத்தேலுக்குப் போய்த் துரோகம் பண்ணுங்கள், கில்காலுக்கும் போய்த் துரோகத்தைப் பெருகப்பண்ணிக் காலைதோறும் உங்கள் பலிகளையும் மூன்றும் வருஷத்திலே உங்கள் தசம்பாகங்களைச் செலுத்தி,

௫ புளித்தமாவுள்ள ஸ்தோத்திரப் பலியோடே தூபங்காட்டி உச்சாகப் பலிகளைக் கூறிக்கேட்கப்பண்ணுங்கள், ஏனென்றால் இஸ்ரவேல் புத்திரரே, இப்படியே விரும்புகிறீர்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௬ ஆகையால் நாம் உங்களுக்கு உங்கள் பட்டணங்களிலெல்லாம் பல்லுகளுக்கு ஓய்வையும் உங்கள் ஸ்தலங்களிலெல்லாம் அப்பக்குறைச்சலையுங் கட்டளையிட்டிருக்கிறோம், ஆகிலும் நம்மண்டைக்குத் திரும்பாதே போனீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௭ இதுவுமல்லாமல் அறுப்புக்காலம் வர இன்னம் மூன்றுமாதமிருக்கும்போதே நாம் மழையையுங்களைவிட்டு விலக்கி ஒரு பட்டணத்தின்மேல் வருஷிக்கப்பண்ணி மற்றப்பட்டணத்தின்மேல் வருஷிக்கப்பண்ணாதிருந்தோம், ஒரு வயலின்மேல் மழை பெய்தது, மழைபெய்யாத மற்ற வயல் காய்ந்துபோயிற்று.

௮ இரண்டுமூன்று பட்டணங்களின் மனு

நீர் ஏறாதபடியினால் இரண்டு மூன்று பட்டணங்கள் தண்ணீர் குடிக்கப் போய் அலைந்து தாகந்தீராதே போனார்கள், ஆகிலும் நம்மண்டைக்குத் திரும்பாமற் போனீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௯ கருக்காயினாலும் விஷப்பனியினாலும் உங்களைத் தண்டித்தோம், உங்கள் சோலைகளிலும் திவிதிராட்சத் தோட்டங்களிலும் அத்திமரங்களிலும் ஒலிவமரங்களிலும் மிச்சமானதைப் பச்சைப்புழு வரித்துப்போட்டது, ஆகிலும் நம்மண்டைக்குத் திரும்பாதே போனீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰ எகிப்திலே உண்டானதற்கொத்த பெருவாரிக்காய்ச்சலை உங்களுக்குள் அனுப்பினோம், உங்கள் குதிரைகள் பிடிபடத்தக்கதாய் உங்கள் வாலிபரைப் பட்டயத்தாலே கொன்றோம், உங்கள் பாளயங்களின் நாற்றத்தை உங்கள் நாசிகளிலும் ஏறப்பண்ணினோம், ஆகிலும் நம்மண்டைக்குத் திரும்பாதே போனீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௧ சோதோமையுங் கொமோராவையும் பராபரன் கீழ்துமேலுதாகக் கவிழ்த்துப்போட்டதுபோல உங்களிற் சிலரைக் கீழ்துமேலுதாகக் கவிழ்த்துப்போட்டோம், நீங்கள் நெருப்புக்குத் தப்புவிக்கப்பட்ட கொள்ளியைப்போலிருந்தீர்கள், ஆகிலும் நம்மண்டைக்குத் திரும்பாதே போனீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௨ ஆகையால் இஸ்ரவேலே இந்தப் பிரகாரமாக உனக்குச் செய்வோம், இஸ்ரவேலே நாமிப்படியுனக்குச் செய்யப்போகிறபடியினாலே உன் பராபரனுக்கெதிர்கொண்டுபோக ஆயத்தப்படு.

௰௩ ஏனெனில் இதோ, அவர் பர்வதங்களை உருவாக்கினவரும் காற்றைச் சிஷ்டிக்கிறவரும் மனுஷருடைய நினைவு இதென்று அவனுக்கு வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார், அவர் விடியற்காலத்தை அந்தகாரமாக்கிப் பூமியினுடைய உயரங்களின்மேல் மிதிக்கிறவர், சேனைகளின் பராபரனாகிய கர்த்தரென்பது அவருடைய நாமம்.

௫. அதிகாரம்.

[இஸ்ரவேலுடைய வீழ்தலின்பேரிலே புலம்பினதும், புத்திசொல்லிக் கடிந்துகொண்டுவரும் ஆக்கினைகளை அறிவித்ததும்.]

இஸ்ரவேல் வீட்டாரே நான் உங்கள் பேரிற் புலம்பலாக எடுக்கும் இந்த வசனத்தைக் கேளுங்கள்.

௨ இஸ்ரவேலென்ற கன்னியாஸ்திரீ திரும்ப எழுந்திருக்கமாட்டாமல் விழுந்தாள், எடுப்பாரில்லாமல் தன்தேசத்திலே கைவிடப்பட்டுக்கிடக்கிறாள்.

௩ ஏனெனில் இஸ்ரவேல் வீட்டாருக்குச் சொல்லுகிறதாவது, நம்மைத் தேடுங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்.

௪ பெத்தேலைத் தேடாதேயுங்கள், கில்காலிலுஞ் சேராதேயுங்கள், பெர்செபாவுக்கும் நடந்துபோகாதேயுங்கள், ஏனென்றால் கில்கால் சிறையிருப்பாகவும் பெத்தேல் பாழுந்தலமாகவும் போகும்.

௫ கர்த்தர் பெத்தேலிலிருக்கிற ஒருத்தரும் அவிக்கமாட்டாத அக்கினியாய் யோசேப்பின் வீட்டைக் கொளுத்திப்போட்டு அதைப் பட்சிக்காதபடிக்கு * நீங்கள் அவரைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்.

* ஏசா. ௫௫, ௬.

௬ * நியாயத்தை எட்டியாக மாற்றி நீதியைத் தரையிலே விழப்பண்ணுகிறவர்களே அவரைத் தேடுங்கள். * ஏசாயா. ௧, ௨௰.

௭ * அவர் சத்த நட்சத்திர இராசியையும் மிரகங்களையும் உண்டாக்கினவர், அவர் மரணநிழலை விடியற்காலமாக மாற்றிப் பகலை இராத்திரியாக அந்தகாரப்படுத்துகிறவர், அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களை வரச்சொல்லி அவைகளைப் பூமியினுடைய விசாலத்தின்மேல் ஊற்றுகிறவர், கர்த்தர் என்பது அவருடைய நாமம். * யோபு. ௯, ௯. ௰. ௩௮, ௩௧.

௮ அரணான தலத்தின்மேற் பாழ்க்கடிப்பு வரத்தக்கதாக அவர் கொள்ளைகொடுத்தவனைப் பலத்தவனுக்கு விரோதமாக இலகுவடையப்பண்ணுகிறவர்.

௯ * ஒலிமுகவாசலிலே கடிந்துகொள்ளுகிறவனை அவர்கள் பகைத்து உத்தமமாய்ப் பேசுகிறவனை அருவருக்கிறார்கள்.

* ஏசாயா. ௨௯, ௨௧.

௰ ஆனதுகொண்டு நீங்கள் தரித்திரனை மிதித்துப்போட்டு அவன் கையிலே தானியச் சுமைகளை வாங்குகிறபடியினாலே, * நீங்கள் வெட்டின கல்லான வீடுகளைக் கட்டினீர்கள், ஆனால் அவைகளில் நீங்கள் குடியிருப்பதில்லை, விருப்பமான திவிதிராட்சத்தோட்டங்களை நாட்டினீர்கள், ஆனால் அவைகளின் பழ இரசத்தை நீங்கள் குடிப்பதில்லை.

* ௫. மோசே. ௨௮, ௩௯. செப்பனி. ௧, ௰௩.

௰௧ ஏனெனில் உங்கள் மீறுதல்கள் மிகுதியும் உங்கள் பாவங்கள் பலமுமாயிருக்கின்றதென்றறிவேன், நீதிமானை இறுகப்பிடித்துப் பரிதானம் வாங்கி ஒலிமுக வாசலில் ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறீர்கள்.

௰௨ ஆகையாற் புத்திமான் இக்காலத்திலே மவுனமாயிருக்கவேண்டும், ஏனெனில் இது துற்காலம்.

௰௩ நீங்கள் பிழைக்கும்படிக்குத் தீமையையல்ல நன்மையைத் தேடுங்கள், அப்பொழுது நீங்கள் சொல்லுகிறதின்படியே சேனைக

ளின பராபரனுமியகர்த்தர் உஙகளுடனே யிருபபார்.

௰௫ * நீஙகள தீமையைபபகைதது நன்மையைச்சநேகிதது ஒலிமுகவாசலிலநியாயததை நிலைபபடுததுஙகள, ஒருவேளை சேனைகளினபராபரனுமியகர்த்தர் யோசேபபிலே மீதியானவர்களுக்கிரஙகுவார். * சஙகீதம. ௩௪, ௰௫.

௰௬ ஆனதுகொணடு ஆணடவருமசேனைகளின பராபரனுமாகிய கர்த்தர்சொலலுகிறதாவது, எலலாததெருககளிலும புலமபலஉணடாகி எலலா வீதிகளிலும ஐயோ ஐயோ எனபார்கள, பயிர்வேலைககாரரைத் துககிபபுகககும அலற அறிநதவர்களைப புலமபலுககும வரவழைபபார்கள.

௰௭ எலலாத் திராட்சததோடடஙகளிலும புலமபலுணடாயிருககும, ஏனெனில உன்நடுவிலே கடநதுபோவேனெனறு கர்த்தர்சொலலுகிறார்.

௰௮ கர்த்தருடைய நாளை விருமபுகிறவர்களுககு ஐயோ, கர்த்தருடைய நாள் உஙகளுககென்னவேணடும? * அது வெளிசசமாயிராமல அநதகாரமாயிருககும. * யோவேல. ௨, ௰௧. செபபனி. ௧, ௰௫.

௰௯ ஒருததன சிஙகததினமுகத் தபபிஓடிபோகக் கரடியவனைசசநதிககிறபபோலேயும அலலது வீடடுககுளளேவநது தன்கையைச சுவரினமேற்போடுகிறபோது பாமபு அவனைககடிககிறபபோலேயுமிருககும.

௨௰ கர்த்தருடைய நாள வெளிசசமாயிராமல இருளும பிரகாசமறற அநதகாரமுமாயிராதோ?

௨௰௧ உஙகள பணடிகைகளைப பகைதது வெறுககிறேன, உஙகள கூடடஙகளைமுகராமாடடேன.

௨௰௨ * நீஙகள எனககுத் தகனபலிகளையும உஙகள காணிககைகளையுமபடைததாலும நான அவைகளில பிரியமாயிராது, கொழுபபான உஙகளமிருகஙகளின ஸ்தோததிரபபலிகளை நோககமாடடேன. * ஏசா. ௧, ௰௧—௰௫.

௨௰௩ உனபாடடுகளின இரைசசலை என்னைவிடடு விலககு, உன்தமபுருகளின ஓசையை நானகேட்கமாடடேன.

௨௰௪ நியாயமே, தணணீர்களைபபோலேயும நீதியே, வறறாத நதியைபபோலேயுமபுரணடுவரககடவது.

௨௰௫ * இஸரவேலவீடடாரே, நீஙகள வனாநதரததிலிருநத நாறபதுவருஷமாயப பலிகளையும காணிககைகளையும எனககுச செலுததிவநதீர்களோ? * அபபோஸ். ௭, ௪௨. ௪௩.

௨௰௬ நீஙகளஉஙகளுக்குணடாககினஉஙகளமோலோகுடைய கூடாரததையும உஙகளதேவர்களின நட்சததிர இராசியாகிய உஙகள விககிரகஙகளினபாடையையுமசுமநது வநதீர்களே.

௨௰௭ ஆகையால உஙகளைத் தமஸ்குவுககபபாலே குடிவிலககுவேனெனறு சேனைகளுடைய பராபரனெனனும நாமமுளள கர்த்தர்சொலலுகிறார்.

௬. அதிகாரம்.

[உன்டானமேன்மையை ஆதாரமாக நமபினபடியால இஸரவேலருககுவருமதுனபஙகள முனனறிவிககபபடடது.]

சீயோனிலே நிர்விசாரமாயிருககிறவர்களுககும சமாரியாவின பர்வததைநமபிக்கொணடிருககிறவர்களுககும சாதிகளுக்குள் தலைமையெனனபபடடு இஸரவேலவீடடார் வநது சநதிககபபடுகிறவர்களுமாகிய பெரியோர்களுககையோ.

௨ நீஙகள, கல்னேமடடுமபோய் அவவிடததிலிருநது ஆமாத்தெனனும பெரியபடடணததிறகுபபோய பெலிஸதருடைய காத்பபடடணததிற்குப போயிருஙகள, அவைகள இநத இராசசியஙகளைபபார்ககிலும நலலவைகளோவெனறும அவைகளின எலலைகள உஙகள எலலைகளைபபார்ககிலும விசாலமானதோவெனறும பாருஙகள. ௧. யோசே. ௰, ௰.

௩ தீஙகுநாளைத் தூரமெனறெணணிக் கொடுமையின ஆசனததைச்சேரபபணணி,

௪ * தநதவேலையான கடடிலகளிற் படுததுக்கொணடு தஙகள மஞசஙகளின்மேல் செலவமாயசசயனிதது மநதையிலிருநது ஆடடுககுடடிகளையும மாடடுககொடடிலிலே கொழுததுபபோன கனறுககுடடிகளையுநதினறு, * ௧, ௰௫.

௫ தமபுரவாசிததுப்பாடித் தாவீதைபபோலத் கீதவாததியஙகளைத் தஙகளுக்கு உணடுபணணி,

௬ கலஙகளில மதுபானஞ்செய்து, உததமமான பரிமளதயிலஙகளைப பூசிக்கொணடு யோசேபபுடைய நொறுககுதலுக்காக வியாகுலபபடாதேபோகிறார்களே.

௭ ஆகையால இவர்கள சிறைபிடிககபபடுகிறவர்களில முதலநணியிலேபோவார்கள, இபபடியே செல்வமாயச சயனிததவர்களின ஆரவாரம் ஒழிநதுபோகும.

௮ நான யாககோபுடைய மகிமையை அருவருதது அவனுடைய அரணமனைகளைப பகைக்கிறேன, நாமபடடணததையும அதின நிறைவையும ஒபபுககொடுபபேனெனறு கர்த்தராகிய ஆணடவர் தமமுடைய சீவனைககொணடு ஆணையிடடார் எனபதைச்சேனைகளின பராபரனுமிய கர்த்தர்சொலலுகிறார்.

௯ சமபவிபபதேதெனறால, ஒருவீட

…மிலப்பத்தும மனுஷர் மீதியாயிருந்தாலும் அவர்கள் சாவார்கள்.

௰ அவர்களுடைய உறவின்முறையானும் அவர்களைச் சுட்டெரிக்கிறவனும் எலும்புகளை வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகும்படிக்கு அவைகளை எடுத்து வீட்டின் பக்கங்களுக்குள் இருக்கிறவனை நோக்கி உன்னிடத்தில் இன்னும் உண்டோ வென்று கேட்பான், அவன் இல்லையென்பான், அப்போது இவன், நீ மவுனமாயிரு, ஏனெனில் கர்த்தருடைய நாமத்தைப் பிரஸ்தாபம் பண்ண இடமில்லையென்று சொல்லுவான்.

௰௧ அதேதெனில், இதோ, கர்த்தர் கட்டளையிடுகிறார், பெரிய வீட்டைத் திறப்புகள் உண்டாகவும் சிறிய வீட்டை வெடிப்புகளுண்டாகவும் அடிப்பார்.

௰௨ கன்மலையிலே குதிரைகள் ஓடுமோ? அங்கே ஒருத்தன் மாடுகளால் உழுவானோ? * நியாயத்தைப் பிச்சாகவும் நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றினீர்கள். * ஓ, ௭.

௰௩ நாங்கள் எங்கள் பலத்தினாலே எங்களுக்குக் கொம்புகளைச் சவதரித்துக்கொள்ளவில்லையோவென்று சொல்லி காரியமில்லாமல் மகிழுகிறீர்கள்.

௰௪ ஏனெனில் இஸ்ரவேல் வீட்டாரே, இதோ ஆமாத்திற்குட் பிரவேசிக்கிற வழி துவக்கி சமனான நாட்டின் ஆறுமட்டாக்கும் உங்களை ஒடுக்கப்பிடிக்கும் ஜாதியை நாம் உங்களுக்கு விரோதமாக எழுப்புவோமென்று சேனைகளின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறார்.

௭. அதிகாரம்.

[வரும் ஆக்கினைகள் மூன்று தரிசனைகளால் முன் அறிவிக்கப்பட்டது.]

கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது, இதோ, இரண்டாங்கத் தாயத்துப் புல்லு ஓங்கத் துவக்குகையில் அவர் கிளிகளை உருவாக்கினார், இது அது இராசாவினுடைய புல்லறுப்புக்குப் பிற்பாடு இரண்டாங்கந் தாயத்துப் புல்லாயிருந்தது.

௨ அப்போது சம்பவித்ததேதெனில், அவைகள் தேசத்தின் புல்லைத் தின்று தீர்ந்தபோது, நான் கர்த்தராகிய ஆண்டவரே மன்னியுமென், யாக்கோபு திரும்ப எழுந்திருப்பதெப்படி? ஏனெனில் அவன் சிறுமைப்பட்டுப்போனவனென்றேன்.

௩ கர்த்தர் அதற்கு மனஸ்தாபப்பட்டு * அப்படியாவதில்லையென்றார். * ௧. மோசே. ௰அ, ௨௬. ஞ

௪ கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் காண்பித்ததாவது, இதோ அக்கினியாலே நியாயம் விசாரிப்போமென்று கர்த்தராகிய ஆண்டவர் கூப்பிட்டார், அது பெரிய ஆழத்தைப் பட்சிக்கவந்து அதில் ஒரு பங்கைப் பட்சித்துத் தீர்ந்தது.

௫ அப்போது நான் கர்த்தராகிய ஆண்டவரே நிறுத்துமென், யாக்கோபு திரும்ப எழுந்திருப்பதெப்படி? ஏனெனில் அவன் சிறுமைப்பட்டுப்போனவனென்றேன். * ௪. மோசே. ௰௪, ௨.

௬ கர்த்தர் அதற்கு மனஸ்தாபப்பட்டு அப்படியும் ஆவதில்லையென்றார்.

௭ அவர் எனக்குக் காண்பித்ததாவது, இதோ தூக்குநூல் பிரமாணமாய்க் கட்டப்பட்ட ஒரு மதிலின் மேல் நின்றார், அவர் கையில் தூக்குநூலிருந்தது.

௮ கர்த்தர் என்னுடனே ஆமோசே! நீ என்ன காண்கிறாயென்றார், தூக்குநூலையென்றேன், அப்போது ஆண்டவர் சொன்னதாவது, இதோ இஸ்ரவேலென்ற நம்முடைய ஜனத்தின் நடுவாகத் தூக்குநூலை விடுவோம், இனி அவர்களை மன்னியோம்.

௯ ஈசாக்கின் மேடைகள் பாழும் இஸ்ரவேலின் கத்தஸ்தலங்கள் அவாந்தரையுமாக்கப்படும், நாம் எரொபெயாம் வீட்டாருக்கு விரோதமாகப் பட்டயத்தோடே எழும்பிவருவோமென்றார்.

விக்கிரக ஆராதனையின் ஆசாரியனாகிய அமத்சியா பண்ணின விரோதமும், அவனுக்கு முன்னறிவிக்கப்பட்ட ஆக்கினைகளும்.

௰ அன்றியும் பெத்தேலிலே ஆசாரியனான அமத்சியா இஸ்ரவேலின் இராசாவாகிய எரொபெயாமுக்குச் சொல்லியனுப்பினதாவது, ஆமோஸ் இஸ்ரவேல் வீட்டாரின் நடுவிலே உமக்கு விரோதமாக ஒப்பந்தம் பண்ணுகிறான், தேசம் அவன் வார்த்தைகளையெல்லாந் தாங்கமாட்டாது.

௰௧ ஏனெனில் எரொபெயாம் பட்டயத்தினாலே சாவானென்றும் இஸ்ரவேல் தன் சீமையிலிருந்து சிறையிருப்பாகக் கொண்டுபோகப்படுமென்றும் ஆமோஸ் சொல்லுகிறானென்று சொல்லியனுப்பி,

௰௨ பிற்பாடு ஆமோசோடே அமத்சியா சொன்னதாவது, தரிசனம் பார்க்கிறவனே! போ, நீ யூதாத்தேசத்திற்கோடி அங்கே அப்பந்தின்று அங்கே தீர்க்கதரிசனஞ் சொல்லு.

௰௩ பெத்தேலிலே இனித் தீர்க்கதரிசனஞ் சொல்லவாயாக, ஏனெனில் இது இராசாவின் பரிசுத்தஸ்தலமும் இராசரியத்தின் அரண்மனையுமானதென்றான்.

௰௪ ஆமோஸ் அமத்சியாவுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது, நான் தீர்க்கதரிசியுமல்ல நான் தீர்க்கதரிசியின் மகனுமல்ல, நான் மந்தை மேய்க்கிறவனுங் காட்…

டத்திப்பழங்களைப் பொறுக்கிறவனுமாயிருந்தேன்.

௰௫ ஆனால் மந்தையின்பிறகே போகிற என்னைக்கர்த்தர் அழைத்துக் கர்த்தர் என்னோடே, நீபோய் நம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனஞ் சொல்லென்றார்.

௰௬ இப்போதும் கர்த்தருடைய வார்த்தையைக் கேள், இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனஞ்சொல்லாமலும் ஈசாக்கின் வீட்டாருக்கு விரோதமாகச் * சொரியாமலுமிருப்பாயாகவென்று சொல்லுகிறாயே. * மீகா. ௨, ௬.

௰௭ ஆகையாற் கர்த்தர்சொல்லுகிறதாவது, உன்பெண்சாதி ஊரிலே வேசியாவாள், உன்குமாரரும் உன்குமாரத்திகளும் பட்டயத்தால் விழுவார்கள், உன்வயல் அளவுநூலாற் பங்கிட்டுக்கொள்ளப்படும், நீயோவென்னில் அசுத்தமான தேசத்திலே செத்துப்போவாய், இஸ்ரவேலும் தன்தேசத்திலிருந்து சிறையிருப்பிலே கொண்டுபோகப்படுமென்று சொல்லுகிறாரென்றார்.

அ. அதிகாரம்.

[இஸ்ரவேல் இராச்சியத்திற்குவரும் அழிவு முன்னறிவிக்கப்பட்டது.]

கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக்காண்பித்ததாவது, இதோ, அறுத்தகனிகளுள்ள ஒருகூடையிருந்தது.

௨ அவர், ஆமோசே, நீயென்னகாண்கிறாயென்றார். அறுத்த கனிகளுள்ள ஒருகூடையென்றேன், அப்போது கர்த்தர் என்னோடே சொன்னதாவது, நம்முடைய சனமாகிய இஸ்ரவேலின்மேல் முடிவுவருகிறது. * இனியவர்களை மன்னியேன். * எ, அ. அ.

௩ அந்நாளிலே தேவாலயப்பாட்டுகள் அலறுதலாகும், எல்லாவிடத்திலுந் திரளான பிரேதங்கள் மௌனமாயெறிந்துவிடப்படுமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்.

௪ * தேசத்தின் சிறுமைப்பட்டவர்களை யொழிப்பண்ண, எளியவர்களை விழுங்கி, * ௨, ௭.

௫ நாங்கள் மரக்காலைக் குறைத்துச் சேக்கல்நிறையை அதிகமாக்கிக் கப்பட்டுத்தராசினால் வஞ்சனைபண்ணித் தரித்திரரைப்பணத்துக்கும் * எளியவர்களை ஒருசாத இரட்சைச்சோடுக்குங் கொள்ளும்படிக்குந் தானியத்தின் பதரை விற்கும்படிக்கும், * ௨, ௬.

௬ மாதப்பிறப்பு நாங்கள் தவசம் விற்கத்தக்கதாகவும் ஓய்வுநாள் நாங்கள் தானியத்தின் பண்டகசாலைகளைத் திறக்கத்தக்கதாகவும் எப்போது கழிந்துபோமென்று சொல்லுகிறவர்களே இதைக்கேளுங்கள்.

௭ அவர்கள் செய்கைகளையெல்லாம் ஒருநாளும் மறப்பதில்லையென்று கர்த்தர் யாக்கோபுடைய மகிமையின்பேரிலே ஆணையிட்டார்.

௮ இதினிமித்தந் தேசம் அதிரவும், அதின் குடிகளெல்லாந் துக்கிக்கவும், * எங்கும் நதிகளாய்ப்புரண்டோடவும், எகிப்தினுடைய ஆற்றுவெள்ளத்தைப்போல அடித்துக்கொண்டுபோகவும் வேண்டாமோ! * ௯, ௫.

௯ அந்நாளிலே சம்பவிப்பதேதென்றால், * நான் மத்தியானத்திலே சூரியனை அஸ்தமிக்கப்பண்ணிப் பட்டப்பகலிலே தேசத்தை அந்தகாரப்படுத்தி, * எரேமி. ௰௫.

௰ உங்கள் பண்டிகைகளைத் துக்கிப்பாகவும் உங்கள் பாட்டுகளையெல்லாம் புலம்பலாகவும் மாறப்பண்ணிச் சகல அரைகளிலும் இரட்டையுஞ் சகல தலைகளிலும் மொட்டையையும் வருவித்து அவர்களுடைய துக்கிப்பை * ஒரே பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுக்குச் சமானமாக்கி அவர்களுடைய முடிவைக் கசப்பான நாளாக்குவேனென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * எரேமி. ௬, ௨௬.

௰௧ இதோ அப்பத்தின்பேரிற் பசியையல்ல தண்ணீரின்பேரிற் றாகத்தையுமல்ல * கர்த்தருடைய வசனங்களைக் கேட்கப் பசியுண்டாயிருக்கிற பஞ்சத்தை நான் தேசத்திலே அனுப்பும் நாட்கள் வருமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். * ௧. சாமுவே. ௩, ௧.

௰௨ அப்போது அவர்கள் கர்த்தருடைய வசனத்தைத்தேட ஒருசமுத்திரந்துவக்கி மறுசமுத்திரமட்டுக்கும் வடக்குத்துவக்கிக் கிழக்குமட்டுக்கும் அலைந்துதிரிந்தும் அதைக்கண்டுபிடியாதே போவார்கள்.

௰௩ தாணிலிருக்கிற உன்தேவனின் சீவனைக்கொண்டென்றும் பெர்சேபா மார்க்கத்துத் தேவனின் சீவனைக்கொண்டென்றுஞ் சொல்லி,

௰௪ சமாரியாவினுடைய தோஷத்தின் பேரிலே ஆணையிடுகிற சவுந்தரியமுள்ள கன்னியாஸ்திரீகளும் வாலிபரும் அக்காலத்திலே தாகத்தால் சோர்ந்துபோய் இனியெழுந்திருக்காதபடியாக விழுவார்களென்றார்.

கூ. அதிகாரம்.

[சிகரத்தையடிக்குந் தரிசனையாலே தேவ ஆக்கினைகள் முன்னறிவிக்கப்பட்டது.]

ஆண்டவரைப் பலிபீடத்தின்மேல் நிற்கக்கண்டேன், அவர் சொன்னதாவது, நீ வாசல்களின் நிலைகள் அசையும்படிக்குச் சிகரத்தையடித்து அவைகளை அவர்களெல்லாரு

டைய தலையின்மேலும் விழ உடைத்துப் போடு, அவர்களுக்குப் பின்னுக மீந்தவர்களையோவென்றால் நாம் பட்டயத்தாலே கொன்றுபோடுவோம் அவர்களில் ஓடுகிறவன் ஓடிப்போவதுமில்லை அவர்களில் தப்புகிறவன் தப்பிப்போவதுமில்லை.

௨ * அவர்கள் பாதாளத்திலே தோண்டிப் புகுந்துகொண்டாலும் நம்முடைய கையவிடத்திலிருந்து அவர்களைப் பிடித்துக்கொண்டுவரும். அவர்கள் ஆகாயபரியந்தம் ஏறினாலும் அவ்விடத்திலிருந்து அவர்களையிறக்கப்பண்ணுவோம். * சங்கீ. ௱௩௯, ௮.

௩ அவர்கள் கர்மேலின் கொடுமுடியிலே ஒளித்துக்கொண்டாலும் அங்கேயவர்களைத் தேடிப்பிடிப்போம், அவர்கள் நம்முடைய கண்களுக்குச் சமுத்திரத்தின் ஆழத்திலே மறைந்துகொண்டாலும் அங்கேயவர்களைக் கடிக்கப் பாம்புகளுக்குக் கற்பிப்போம்.

௪ அவர்கள் தங்கள் சத்துருக்களுக்குமுன்பாகச் சிறையிருப்பிலே போனாலும் அங்கேயவர்களைக் கொன்றுபோட நாம் பட்டயத்துக்குக் கற்பித்து * நம்முடைய கண்களையவர்கள் மேல் நன்மைக்கல்ல தின்மைக்கென்றே வைப்போம். * எரேமியா. ௪௪, ௰௧.

௫ சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர் தேசத்தைத் தொடவேயுருகிப் போகும், அப்போது அதின் குடிகளெல்லாருந் துக்கிப்பார்கள், * எங்கும் நதியாய்ப் புரண்டோடி எகிப்துவினுடைய ஆற்றின் வெள்ளத்தைப்போல வெள்ளங்காட்டும். * ௮, அதி. ௮.

௬ அவர் பரமண்டலத்தில் தம் தாசனப்படிகளைக் கட்டிப் பூமியின்மேலிருக்கிற தம் திகூடத்தை யஸ்திபாரப்படுத்தினவர், * அவர் சமுத்திரத்தின் தண்ணீர்களையழைத்து அவைகளைப் பூமியினுடைய விசாலத்தின் மேல் ஊற்றுகிறவர், கர்த்தரென்பது அவருடைய நாமம். * ௫, அதிகாரம். ௮.

௭ இஸ்ரவேல் புத்திரரே, நீங்கள் நமக்கு எத்தியோப்பியரின் புத்திரருக்குச் சரியானவர்களல்லவோவென்று கர்த்தர் சொல்லுகிறார், நாம் இஸ்ரவேலை எகிப்துதேசத்தினும் பெலிஸ்தரைக் * கப்தோரினும் சீரியரைக் கீரினும் நின்று ஏறிவரப்பண்ணினதில்லையோ? * எரேமி. ௪௭, ௪.

யூதாவீட்டாருக்கருள்பட்டவாக்குத்தத்தம்.

௮ இதோ, கர்த்தராகிய ஆண்டவரின் கண்கள் பாவ இராச்சியத்திற்கு விரோதமாகவைக்கப்பட்டிருக்கின்றது, அதைப் பூமியின்மேலிராதபடிக்கு அழித்துப்போடுவோம், ஆகிலும் யாக்கோபின் வீட்டை நாம் முழுதும் அழித்துப்போடுவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௯ அதேதெனில் இதோ சல்லடையிலே சலித்தரிக்கிறதுபோலே இஸ்ரவேல் வீட்டாரையெல்லாச் சாதிகளுக்குள்ளும் சலித்தரிக்கும்படிக்கு நாங்கட்டளையிடுவோம், ஆனால் ஒரு கோதுமைமணியும் தரையிலே விழுவதில்லை. * லூக்கா. ௨௨, ௩௧.

௰ தீங்கு எங்களைப் பிடிப்பதுமில்லை எங்களுக்கு நேரிடுவதுமில்லையென்று நமது சனத்திற் சொல்லுகிற பாவிகளெல்லாரும் பட்டயத்தினாலே சாவார்கள்.

௰௧ ஏதோமில் * மீதியானவர்களையும் நம்முடைய நாமம் விளங்கிய சகல சாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு, * அப்போஸ்தலர். ௰௫, ௰௬. ௰௭.

௰௨ அந்நாளிலே நாம் விழுந்ததாகிய தாவீதின் கூடாரத்தைத் திரும்ப எடுத்து அவர்களுடைய திறப்புகளையடைத்து அதில் இடிந்துபோனதையெடுப்பித்துப் பூருவநாட்களில் இருந்ததுபோல அதைக் கட்டுவோமென்று இதைச்செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்.

௰௩ இதோ, உழுகிறவன் அறுக்கிறவனையும் திராட்சப்பழங்களை ஆலையாடுகிறவன் விதைக்கிறவனையும் நெருங்கத்தக்க, * திராட்சப்பழ இரசமாய்ப் பர்வதங்கள் வடிகிறதும் மேடுகளெல்லாங் கரைகிறதுமான நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். * யோவே. ௩, ௨௩.

௰௪ அதேதெனில் * நமது சனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவோம், அவர்கள் பாழான பட்டணங்களைக் கட்டியவைகளிற் குடியிருந்து † திராட்சத் தோட்டங்களை நாட்டி அவைகளுடைய பழங்களின் இரசத்தைக் குடித்துத் தோட்டங்களையுண்டாக்கி அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். * ௫. மோ. ௩௰, ௩. எரே. ௨௯, ௰௪. † ஏசாயா. ௬௫, ௨௧. எசே. ௨௮, ௨௬. சகரி. ௮, ௰௨.

௰௫ அவர்களையவர்கள் சீமையிலே நாட்டுவோம், அவர்கள் நாந்தங்களுக்குக் கொடுத்த தங்கள் சீமையிலிருந்து இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறாரென்றார்.

ஆமோசின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

ஒபதியாவின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[ஏதோமியருக்கு முன்னறிவிக்கப்பட்டதேவாக்கினைகளும் இஸ்ரவேலருக்கு அருள்பட்ட இரட்சிப்பைப்பற்றிய வாக்குத்தத்தமும்.]

ஒபதியாவின் தரிசனம், கர்த்தராகிய ஆண்டவர் ஏதோமைக்குறித்துச்சொன்னதென்னவென்றால், எழும்புங்கள், அதற்கு விரோதமாக யுத்தம்பண்ண எழும்புவோம் வாருங்களென்று சொல்லத் *தூதுவன் ஜாதிகளிடத்தில் அனுப்பப்பட்டானென்கிற செய்தியைக் கர்த்தர் சொல்லக்கேட்டோம். * எரேமி. ௪௯, ௰௪.

௨ இதோ, உன்னைச்சாதிகளில் சிறுகப்பண்ணுகிறேன், நீ மெத்தவும் அசட்டைபண்ணப்பட்டிருப்பாய்.

௩ கன்மலைவெடிப்புகளாகிய உன் உயர்ந்த நிலையிலே குடியிருந்து என்னைத்தரையிலே விழத்தள்ளுபவன் யாரென்று உன் இருதயத்திலே சொல்லுகிறவனே, உன் இருதயத்தின் அகந்தையுன்னை மோசம்போக்குகின்றது.

௪ நீ கழுகைப்போல உயர்ந்துபோனாலும் நீ நட்சத்திரங்களுக்குள்ளேயுன் கூட்டைக்கட்டினாலும் அவ்விடத்திலிருந்துன்னை விழத்தள்ளுவேனென்று கர்த்தர்சொல்லுகிறார். * எரேமியா. ௪௯, ௰௬.

௫ எத்தனையாய்ச்சங்காரமானாய்? திருடராகிலும் இராத்திரியிலேபாழ்க்கடிக்கிறவர்களாகிலும் உன்னிடத்திலே வந்தார்களாகில் தங்களுக்குப்போதுமென்றமட்டுமல்லோ திருடுவார்கள்? திராட்சப்பழங்களையறுக்கிறவர்கள் உன்னிடத்திலே வந்தார்களாகில் பின்னறுப்பைக்கொஞ்சம் வையார்களோ?

௬ ஏசாவினுடையது எத்தனையாய்த்தேடப்பாக்கப்படும்? அவனுடைய அந்தரங்கப்பொக்கிஷங்கள் எத்தனையாய் ஆராய்ந்தெடுக்கப்படும்?

௭ உன்னோடு உடம்படிக்கையாயிருந்த எல்லாமனுஷரும் உன்னை எல்லைமட்டும் வழிவிட்டனுப்புவார்கள், உன்னோடே சமாதானமாயிருந்த மனுஷர் உன்னை மோசம்போக்குவார்கள், உன்னைமேற்கொள்ளுவார்கள், உன் அப்பத்தைச்சாப்பிட்டு நீசேதப்படக்கீழேயெத்தனம்வைப்பார்கள், அவனுக்குணர்வில்லை.

௮ அந்நாளிலேயல்லோ *நாம் ஏதோமிலே ஞானிகளையும் ஏசாவின் பருவதத்திலேயுணர்வையும் அழிப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார். * எரே. ௪௯, ௭.

௯ தேமானே, ஏசாவின் பருவதத்திலுள்ள மனுஷர் கொலையினால் சங்கரிக்கப்படும்படிக்கு உன் பராக்கிரமசாலிகள் கலங்குவார்கள்.

௰ *நீயுன் சகோதரனாகிய யாக்கோபுக்குச்செய்த கொடுமையினிமித்தம் வெட்கம் உன்னை மூடும், நீ என்றென்றைக்கும் சங்கரிக்கப்பட்டிருப்பாய். * எசேக்கியேல். ௨௫. ௰௨—௰௪ ஆமோஸ். ௧, ௰௧. ௰௨.

௰௧ * நீ எதிரே நின்ற நாளிலும் அந்நியர் அவன் சேனையைச்சிறைப்பிடித்துப்போன நாளிலும் மறுதேசத்தார் அவன் வாசல்களுக்குட்பிரவேசித்து எருசலேமின்மேலே சீட்டுப்போட்டுக்கொள்ள, நீயும் அவர்களிலொருத்தனைப்போலிருந்தாய்.

௰௨ நீ உன் சகோதரன் அந்நியனான நாளாகிய அவனுடைய நாளைப்பார்த்துக்கொண்டிராமலும், யூதாபுத்திரருடைய அழிவின் நாளிலே அவர்கள் நிமித்தஞ் சந்தோஷப்படாமலும், அவர்கள் நெருக்கப்படுகிற நாளிலே புன்வாயை விஸ்தாரமாக்காமலுமிருக்கவேண்டியதாயிருந்தது.

௰௩ நீ என் ஜனத்தின் ஆபத்து நாளிலே அவர்கள் வாசல்களுக்குட்பிரவேசியாமலும் அதின் ஆபத்து நாளிலே அதின் பொல்லாப்பை நீயுங்கூடப்பார்த்துக்கொண்டிராமலும் அதின் ஆபத்து நாளிலே அதின் ஆஸ்திகளின்மேல் கைபோடாமலும்,

௰௪ அதிலே தப்பினவர்களைச் சங்கரிக்கும்படிக்கு வழிப்பிரிவுகளிலே நிற்காமலும் நெருக்கப்படும் நாளிலே அதிலே மீதியானவர்களைக் காட்டிக்கொடாமலுமிருக்கவேண்டியதாயிருந்தது.

௰௫ ஏனெனில் எல்லாச்சாதிகளுக்கும் சமீபமாயிருக்கிற கர்த்தருடைய நாள் சமீபமாயிருக்கிறது. *நீ செய்தபடியே உனக்குச் செய்யப்படும், உன் செய்கையின் பலன் உன் தலையின்மேல் திரும்பும். * அதிகா. ௰௮, ௬.

௰௬ அதேதெனில் நீங்கள் என் பரிசுத்த பருவதத்தின்மேல் குடித்தபடியே எல்லாச்சாதிகளும் குடிப்பார்கள், அவர்கள் குடித்து விழுங்கி இல்லாதிருந்தவர்களைப்போலிருப்பார்கள்.

௰௭ ஆனாலும் சீயோன்பருவதத்திலே தப்பியிருப்பாருண்டு, அவர்கள் பரிசுத்தமாயிருப்பார்கள், யாக்கோபின்வீட்டார் தங்களு

டபசுந்தரங்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

௰அ யாக்கோபின் வீட்டார் அக்கினியும் யோசேப்பின் வீட்டார் அக்கினிச்சுவாலையும் ஏசாவின் வீட்டாரோ வைக்கோல் துரும்புமாயிருப்பார்கள், அவர்கள் இவர்களைக் கொளுத்தி ஏசாவின் வீட்டில் மீதியாயிராதபடிக்கு இவர்களைப் பட்சிப்பார்கள், ஏனெனிற் கர்த்தரிதைச் சொன்னார்.

௰௯ தெற்குச்சீமையார் ஏசாவின் பருவதத்தையும் பள்ளத்தாக்குச்சீமையார் பெலிஸ்தரின் தேசத்தையுஞ் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள், அவர்கள் எப்பிராயீமின் நாட்டையுஞ் சமாரியாவின் நாட்டையும் பென்யமீன் மனுஷரோவென்றாற் கீலேயாத்தையுஞ் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

௨௰ சர்பாத்மட்டுங் கானானியருக்குள்ளே சிறைப்பட்டுப்போன இஸ்ரவேல் புத்திரராகிய இந்தச் சேனையுஞ் சேப்பாராத்திலே சிறைப்பட்டுப்போன எருசலேம் பட்டணத்தாருந் தெற்கத்திப் பட்டணங்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

௨௧ ஏசாவின் பருவதத்தை நியாயந்தீர்ப்பதற்காக இரட்சகர்கள் சீயோன் பருவதத்தில் வந்தேறுவார்கள், * அப்போது இராச்சியங் கர்த்தருடையதாயிருக்கும்.

* சங். உ, கூ. அ. மீகா. ச, எ

ஒபதியாவின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

யோனாவின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[கர்த்தரின் அழைப்புக்கு யோனா கீழ்ப்படியாதே போய் அடைந்த தண்டனை.]

அமித்தாயின் குமாரனாகிய யோனாவுக்குக் கர்த்தருடைய வார்த்தையுண்டாகி அவர் சொன்னதாவது, * ௨. இராச. ௰௪, ௨௫.

௨ நீ எழுந்திருந்து பெரிய பட்டணமாகிய நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாகப் பிரசங்கி, ஏனென்றால் அவர்களுடைய பொல்லாப்பு நமக்கு முன்பாக ஏறிவந்ததென்றார்.

௩ அப்போது யோனா கர்த்தருடைய முகத்தினின்று விலகித் தர்சீசுக்கு ஓடிப்போகும்படிக்கு எழுந்திருந்து * யோப்பேக்கு இறங்கிப்போய்த் தர்சீசுக்குப் போகிற கப்பலைக் கண்டுபிடித்துத் தன் கூலியைக் கொடுத்துத் தான் கர்த்தருடைய முகத்துக்கு விலக அவர்களோடே கூடத் தர்சீசுக்குப் போகும்படிக்கு அதிலேறினான். * அப்போ. ௯, ௩௬.

௪ * ஆனால் கர்த்தர் சமுத்திரத்தின்மேற் பெருங்காற்றை வரவிட்டார், அதனாற் கடலிலே கப்பலுடையுமென்று நினைக்கத்தக்கதான பெருங்கொந்தளிப்புண்டாயிற்று.

* மத்தே. ௮, ௨௪. அப்போ. ௨௭, ௰௪.

௫ அப்போது கப்பலாட்கள் பயந்து அவரவர் தன்தன் தேவனை நோக்கிக் கூப்பிட்டுக் கப்பலிலிருந்த தட்டுமுட்டுகளின் பாரம் தங்களைவிட்டுப் போகிறதினாலே அதை இலேசாக்கும்படிக்கு அவைகளைச் சமுத்திரத்திலெறிந்துவிட்டார்கள், யோனாவோவென்றாற் கப்பலின் கீழ்த்தட்டிலிறங்கிப் படுத்துக்கொண்டு அசந்து நித்திரைபண்ணியிருந்தான்.

௬ அப்போது பெரிய மாலுமி யவனண்டைக்குச் சேர்ந்துவந்து, அவனுடனே, நீ நித்திரைபண்ணிக்கிடக்கிறதேது? எழுந்திருந்து உன் தேவனை நோக்கிக் கூப்பிடு, நாங்கள் கெட்டுப்போகாதபடிக்குச் சுவாமி ஒருவேளை நம்மைத் தயவாய் நினைப்பாராக்குமென்றான்.

௭ அவர்கள் ஒருத்தரோடொருத்தர், ஆர் நிமித்தம் இந்தப் பொல்லாப்பு நமக்கு வருகின்றதென்று நாம் அறியும்படிக்குச் சீட்டுகளைப் போடுவோம் வாருங்களென்று சொல்லிக்கொண்டு சீட்டுகளைப் போட்டார்கள், அப்போது யோனாவின் பெயருக்குச் சீட்டு விழுந்தது.

௮ அப்போது அவர்கள் இவனோடே, ஆர் நிமித்தம் இந்தப் பொல்லாப்பு நமக்கு வருகின்றதென்று நீ யெங்களுக்கறிவியென், உன் தொழிலென்ன? நீ யெங்கேயிருந்து வருகிறாய்? உன்னுடைய தேசமேது? நீ எந்தச் சனத்தானென்று சொல்லிக் கேட்டார்கள்.

௯ அவர்களோடேயிவன், நான் எபிரேயன், சமுத்திரத்தையும் பூமியையும் உண்டாக்கின பரமண்டலங்களுடைய பராபரனாகிய கர்த்தருக்கு நான் பயபக்தியானவனென்றான்.

௰ அப்போது அந்த மனுஷர் மிகவும் பயந்து அவனுடனே, நீ யேனிதைச் செய்தாயென்றார்கள், ஏனெனில் தான் கர்த்தருடைய முகத்திற்கு விலகி ஓடிப்போகிறவனென

கிறதை அவன் தங்களுக்கு அறிவித்ததினாலே அந்த மனுஷர் அதை அறிந்தார்கள்.

௰௧ பின்னையும் சமுத்திரம் நமக்கு அமர்ந்துபோகும்படிக்கு உனக்கு நாங்கள் செய்யவேண்டியதென்னவென்று அவனைக் கேட்டார்கள், ஏனென்றால் சமுத்திரம் கொந்தளித்துக்கொண்டேயிருந்தது.

௰௨ அப்பொழுது அவன் அவர்களோடே சொன்னதாவது, நீங்கள் என்னையெடுத்து சமுத்திரத்திலே போட்டுவிடுங்கள், அப்பொழுது சமுத்திரம் உங்களுக்கு அமர்ந்துபோகும், ஏனெனில் என்னிமித்தம் இந்தப் பெரிய கொந்தளிப்பு உங்கள்மேல் வந்ததென்கிறதை நான் அறிவேனென்றான்.

௰௩ அந்த மனுஷர் கரைக்குத் திரும்பும்படிக்குத் தண்டுவலித்தார்கள், ஆனால் அவர்களுக்குக் கூடாதேபோயிற்று, ஏனென்றால் சமுத்திரம் அவர்களுக்கு விரோதமாகக் கொந்தளித்துக்கொண்டேயிருந்தது.

௰௪ அப்பொழுது அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டுச் சொன்னதாவது, ஆ கர்த்தாவே, தேவரீர் எங்களை இந்த மனுஷனுடைய சீவனின்னிமித்தம் கெட்டுப்போகவொட்டாமலும் குற்றமில்லாத இரத்தப்பழியை எங்கள்மேற் சுமத்தாமலுமிரும், ஏனெனில் தேவரீர் கர்த்தர், உமக்கு இஷ்டமாயிருக்கிறபடியே தேவரீர் செய்கிறீரென்று சொல்லி,

௰௫ யோனாவையெடுத்துச் சமுத்திரத்திலே போட்டுவிட்டார்கள், அப்பொழுது சமுத்திரந் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது.

௰௬ அப்பொழுது அந்த மனுஷர் கர்த்தருக்கு மிகவும் பயப்பட்டுக் கர்த்தருக்குப் பலியிட்டுப் பொருத்தனைகளைப் பண்ணினார்கள்.

௨. அதிகாரம்.

[ஜெபம்பண்ணின யோனா திரும்ப இரட்சிக்கப்பட்டது.]

ஆனால் யோனாவை விழுங்கப் பெரிய மீனைக் கர்த்தர் கட்டளையிட்டார், ※ அந்த மீனினுடைய வயிற்றிலே யோனா மூன்று பகலும் மூன்று இராத்திரியுமிருந்தான். ※ மத்தே. ௰௨, ௪௰. ௰௬, ௪. ஆக்கா. ௰௧, ௨௯.

௨ ஆனால் மீனுடைய வயிற்றிலிருந்து யோனா தன் பராபரனாகிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணிச் சொன்னதாவது,

௩ ※ நான் நெருக்கப்படுகையிற் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், அப்பொழுது எனக்கு உத்தரவருளிச்செய்தார், பாதாளத்தின் வயிற்றிலிருந்து கூக்குரலிட்டேன், அப்பொழுது என் சத்தத்தைக் கேட்டீர். ※ சங். ௱௨௰, ௧. ௱௩௰, ௧.

௪ ஏனென்றால் சமுத்திரங்களின் நடுமையமாகிய ஆழத்திலே என்னைத் தள்ளிவிட்டீர், நீரோட்டம் என்னைச் சூழ்ந்துகொண்டது, உம்முடைய எல்லா வெள்ளங்களும் அலைகளும் என்மேற் புரண்டது.

௫ நான் உம்முடைய கண்களுக்கெதிரேயிருந்து தள்ளுண்டேன், ஆகிலும் இன்னம் உம்முடைய பரிசுத்த தேவாலயத்தை நோக்குவேனென்றேன்.

௬ தண்ணீர்கள் என்னைப் பிராணபரியந்தம் சுற்றிப்பிடித்தது, ஆழம் என்னைச் சூழ்ந்தது, நாணல் என் தலையைச் சுற்றிக்கொண்டது.

௭ பர்வதங்களின் அடிவாரங்கள்பரியந்தம் இறங்கினேன், பூமியின் தாழ்ப்பாள்கள் என்றென்றைக்கும் என்னை அடைத்ததாயிருந்தது, ஆனால் என் பராபரனே கர்த்தாவே என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்து ஏறிவரப்பண்ணினீர்.

௮ என் ஆத்துமம் என்னில் தொய்ந்துபோகையிற் கர்த்தரை நினைத்தேன், அப்போது என் விண்ணப்பம் உம்முடைய பரிசுத்த தேவாலயத்திலே உம்மண்டைக்கு வந்து சேர்ந்தது.

௯ பொய்யான மாயைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள் தங்களுக்கு வருங் கிருபையைப் போக்கடிக்கிறார்கள்.

௰ ※ நானோவென்றால் துதியின் சத்தத்தோடே உமக்குப் பலியிடுவேன், நான்பண்ணின பொருத்தனையைச் செலுத்துவேன், இரட்சிப்பு கர்த்தருடையதென்றான். ※ சங். ௫௰, ௰௪. ௱௰௬, ௰௭.

௰௧ ஆனாற் கர்த்தர் மீனுக்குச் சொன்னார், அப்பொழுது அது யோனாவைக் கரையிலே கக்கிப்போட்டது.

௩. அதிகாரம்.

[யோனா பண்ணின பிரசங்கத்தினாலே நினிவேயர் பயந்து குணப்பட்டது.]

இரண்டாம் விசை கர்த்தருடைய வார்த்தை யோனாவுக்குண்டாகி அவர் சொன்னதாவது,

௨ ※ நீ எழுந்திருந்து பெரிய பட்டணமாகிய நினிவேக்குப் போய் நாம் உனக்குச் சொல்லும் பிரசங்கத்தை அதற்குவிரோதமாகப் பிரசங்கியென்றார். ※ ௧, அதி. ௨.

௩ அப்பொழுது யோனா எழுந்திருந்து, கர்த்தருடைய வார்த்தையின்படியே நினிவேக்குப் போனான், நினிவேயோவென்றால் மூன்று நாளையிற் பயண விஸ்தாரமான மிகவும் பெரிய பட்டணமாயிருந்தது.

௪ யோனா ஒருநாளையிற் பயணம் பட்டணத்திற் றிரியத் துவக்கி, இன்னம் நாற்பது நாளிருக்கின்றது, அப்பொழுது நினிவே புரட்டப்பட்டுப்போமென்று பிரசங்கித்தான்.

௫ * அப்போது நினிவே மனுஷர் பராபரன்பேரிலே விசுவாசித்து உபவாசத்தைக் கூறினார்கள், பெரியோர் துவக்கிச் சிறியோர்மட்டும் இரட்டுகளை உடுத்திக்கொண்டார்கள். * மத்தே. ௰௨, ௪௧.

௬ இந்த வர்த்தமானம் நினிவேயின் இராசாவுக்குப் போயெட்டினபோது இவன் தன் இராசாசனத்தை விட்டெழுந்திருந்து தான் உடுத்திருந்த உடுப்பை விலக்கிப்போட்டு இரட்டினாலே மூடிக்கொண்டு சாம்பலிலே உளுக்கார்ந்தான்.

௭ இதுவுமல்லாமல் இராசாதானுந் தனுடைய பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக நினிவேயிலே கூறச்சொன்னதாவது, மனுஷரும் மிருகவாகனங்களும் மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும் மேயாமலுந் தண்ணீர் குடியாமலுமிருக்கவும்,

௮ மனுஷரும் மிருகவாகனங்களும் இரட்டினால் மூடிக்கொள்ளப்பட்டுப் பராபரனை நோக்கி வலுவாய்க் கூப்பிடவும் அவரவர் தங்கள் பொல்லாத வழியையுந் தங்கள் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவது.

௯ நாம் அழிந்துபோகாதபடிக்கு * ஒருவேளை பராபரன் மனஸ்தாபப்பட்டுத் தம்முடைய கோபத்தின் உக்கிரத்தைவிட்டுத் திரும்பிக்கொள்ளுவாராக்கும், ஆர்க்குத் தெரியுமென்பதைக் கூறச்சொன்னான். * யோவே. ௨, ௰௪. தானியேல். ௪, ௨௪.

௰ அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று பராபரன் அவர்களுடைய கிரியைகளைப்பார்த்துத் * தாம் அவர்களுக்குச் செய்வோமென்று சொல்லியிருந்த தீங்குக்கு மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார். * எரேமி. ௰௮, ௭. ௮.

௪. அதிகாரம்.

[நினிவேக்கு அழிவு வராதபடியினாலே மனமடிவான யோனாவுக்குக் கர்த்தர் சொன்ன புத்தி.]

ஆனால் யோனாவுக்கு இது மிகுதியும் ஆகாத்தாயக் கண்டது, அவனுக்கு எரிச்சலுண்டாயிற்று.

௨ அவன் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணிச் சொன்னதாவது, ஆ கர்த்தாவே, நான் என் தேசத்திலிருக்கக்கொள்ள நான் சொன்னது, இதுதானல்லவோ? ஆகையாலே தானே தர்சீசுக்கு ஓடிப்போகிறதினால் இதற்கு முந்திக்கொள்ளப்பார்த்தேன், ஏனெனில் தேவரீர் * இரக்கமும், மனவுருக்கமும் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவருந் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்றறிவேன். * ௨. மோசே. ௩௪, ௬.

௩ இப்போதுங் கர்த்தாவே, என் ஆத்துமத்தை என்னைவிட்டெடுத்துக்கொள்ளும், ஏனெனில் நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் நான் சாகிறது தாவிளையென்றான். * யோபு. ௬, ௧. ௰, ௪. எ௱. ௨௰, ௰௪.

௪ அதற்குக் கர்த்தர் நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோவென்றார்.

௫ யோனாவோவென்றால் பட்டணத்திலிருந்து புறப்பட்டுப் பட்டணத்திற்குக் கிழக்கேயுளுக்கார்ந்து அங்கே தனக்கொரு குடிசையைப் போட்டுப் பட்டணத்திற்குச் சம்பவிக்கப்போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலிலே உளுக்கார்ந்திருந்தான்.

௬ ஆனால் யோனாவுடைய தலையின்மேல் நிழலுண்டாயிருக்கவும் அவனை அவனுடைய மனமடிவுக்குத் தீங்கலாக்கவும் பராபரனாகிய கர்த்தர் ஒரு ஆமணக்குச்செடியை முளைக்கக்கட்டளையிட்டு அதை யவன்மேல் ஓங்கிவளரப்பண்ணினார், அந்த ஆமணக்கின்பேரிலே யோனா மிகுதியுஞ் சந்தோஷப்பட்டான்.

௭ ஆனால் மறுநாள் கிழக்கு வெளுக்கும் நேரத்திலே பராபரன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார், அது ஆமணக்குச் செடியைக் கடித்துப்போட்டது, அதினாலே காய்ந்துபோயிற்று.

௮ சூரியனுதித்தபோது சம்பவித்ததேதென்றால் பராபரன் அமைச்சலுள்ள கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார், அப்போது வெயில் யோனாவுடைய தலையிற்படுகிறதினால் அவன் தொய்ந்துபோய்த் * தன் சீவனுக்குச் சாவைக் கேட்டு நான் உயிரோடிருக்கிறதைப்பார்க்கிலும் நான் சாகிறது தாவிளையென்றான். * ௩, வசனம்.

௯ அப்போது பராபரன் யோனாவுடனே, நீ ஆமணக்கினிமித்தம் * எரிச்சலாயிருக்கிறது நல்லதோவென்றார், அதற்கவன் நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லதென்றான். * ௪, வசனம்.

௰ அப்போது கர்த்தர் சொன்னதாவது, நீ பிரயாசப்படாததும் பயிராக்காததும் ஒரு இராத்திரியிலே முளைத்ததும் ஒரு இராத்திரியிலே அழிந்ததுமான ஆமணக்குக்குப் பரிதவிக்கிறாயே.

௰௧ தங்கள் வலதுகைக்குந் தங்கள் இடதுகைக்கும் வித்தியாசமறியாத நூற்றிருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகசீவன்களுமிருக்கிற * பெரிய பட்டணமுமாகிய நினிவேக்கு நாம் பரிதவிக்காதிருப்போமோவென்றார். * ௩, அதி. ௰.

யோனாவின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

மிகாவின் தீர்க்கதரிசனம்

க. அதிகாரம்.

[யூதாவின்மேலும் இஸ்ரவேலின்மேலும் வரும் ஆக்கினைகளின் தீர்க்கதரிசனம்.]

யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்ற யூதாவுடைய இராசாக்களுடைய நாட்களில் * மொரேசா ஊரானாகிய மிகாவுக்கு உண்டானதும், அவன் சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் விரோதமாய்த் தரிசனமாகக் கண்டதுமான கர்த்தருடைய வார்த்தை.
* எரேமியா. உ௬, யஅ.

உ * சகல சனங்களே கேளுங்கள், பூமியே, அதின் நிறைவே, கவனி, கர்த்தராகிய ஆண்டவர் உங்களுக்கு விரோதமாகச் சாட்சியிடுவார், ஆண்டவர் தம்முடைய பரிசுத்த தேவாலயத்திலிருந்து தானே.
* ரு. மோசே. ௩உ, க. ஏசாயா. க, உ.

௩ ஏனெனில் இதோ, கர்த்தர் தமது தானத்திலிருந்து புறப்பட்டு இறங்கிப் பூமியின் உயரங்களை மிதிப்பார். * ஏசாயா. உ௬, உக.

௪ அக்கினிக்கு முன்பாக மெழுகு உருகுகிறதுபோலேயும், மலைகளிலிருந்து பாய்ந்த தண்ணீர் தரையைக் கிழிக்கிறதுபோலேயும், * அவர் கீழே பர்வதங்கள் உருகிப் பள்ளத்தாக்குகள் கிழிந்துபோகும். சங்கீ. ௯எ, ரு.

ரு இதெல்லாம் யாக்கோபுடைய மீறுதல் நிமித்தமும், இஸ்ரவேல் வீட்டாருடைய பாவங்கள் நிமித்தமுமே சம்பவிக்கும், யாக்கோபின் மீறுதலுக்குக் காரணமேது? சமாரியா அல்லவோ? யூதாவின் மேடைகளுக்குக் காரணமேது? எருசலேம் அல்லவோ?

௬ ஆகையால் நான் சமாரியாவை வெளியான மண்மேடும் திராட்ச நடவுக்கான நிலமுமாக்கி அதின் கல்லுகளைப் பள்ளத்தாக்கிலே புரண்டுவிழப்பண்ணி அதின் அஸ்திபாரங்களைத் திறந்துவைப்பேன்.

எ அதின் சுரூபங்களெல்லாம் நொருக்கப்படும், அதின் பணையங்களெல்லாம் அக்கினியால் எரித்துப்போடப்படும், அதின் விக்கிரகங்களையெல்லாம் பாழாக்குவேன், ஏனெனில் வேசிப்பணையத்தினாற் சேர்க்கப்பட்டது திரும்ப வேசிப்பணையமுமாய்ப் போகும்.

அ இதினிமித்தம் நான் புலம்பி அலறுவேன், பறிகொடுத்தவனாகவும் அம்மணமாகவும் நடப்பேன், நான் வலுசர்ப்பங்களைப்போலப் புலம்பலையும் தீவுக்குருவிகளைப்போலத் துக்கிப்பையும் கேட்கப்பண்ணுவேன்.

௯ ஏனெனில் அதின் காயம் ஆறாதிருக்கிறது, அது யூதாமட்டும் வந்தது, என் சனத்தின் வாசல்மட்டும் எருசலேம்மட்டும் எட்டுகிறது.

ய * அதைக் காத்பட்டணத்திலே அறிவியாதேயுங்கள், அழவே அழாதேயுங்கள், உள்ளே புழுதியுள்ள தலத்திலே போய்ப் புழுதியிலே புரளு. * உ. சாமுவேல். க, உய.

யக சாப்பீரிற் குடியிருக்கிறவளே, வெட்கமான அம்மணமாய் அப்பாலே போ, சயனானிற் குடியிருக்கிறவள் வெளியே வருகிறதில்லை, அசஆரின் புலம்பல் அதில் உங்களுக்கிருந்த அடைக்கலநிலைமையைப் பேர்த்துப்போட்டது.

யஉ மாரோத்திற் குடியிருக்கிறவள் [illegible] நன்மையினிமித்தம் நோவுள்ளவளாயிருப்பாள், ஏனெனில் எருசலேமின் வாசலுக்கு நேராகத் தீங்கு * கர்த்தரிடத்திலிருந்து இறங்குகிறது. * ஏசாயா. ௪௫, எ. ஆமோ. ௩, ௬.

ய௩ லாகீசிற் குடியிருக்கிறவளே, வேகமான வாகனங்களை இரதத்திலே பூட்டு, நீதான் சீயோன் குமாரத்தியின் பாவத்திற்குக் காரணி, ஏனெனில் உன்னில் இஸ்ரவேலின் பாதகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

ய௪ ஆகையால் காத்பட்டணத்தினிமித்தம் உன் கையிலிருக்கிறதைக் கொடுத்துவிடுவாய், அக்சீபின் வீடுகள் இஸ்ரவேலின் இராசாக்களுக்கு அபத்தமாய்ப்போகும்.

யரு மரேசாவிற் குடியிருக்கிறவளே, உனக்கின்னமொரு சுதந்தரவாளியை வரப்பண்ணுவோம், அவன் அதுல்லாம்மட்டுஞ்சேர இஸ்ரவேலுடைய மகிமையின் தானமட்டுக்கும் வருவான்.

ய௬ உனக்குக்கனிக்கிரமான உன் பிள்ளைகளினிமித்தம் * நீ மொட்டையாகச் சிரைத்துக்கொள், கழுகைப்போல முழுமொட்டையாகத்தானே, ஏனெனில் உங்களைவிட்டுச் சிறைப்பிருப்பிலே போகிறார்கள்.
* ஏசாயா. உஉ, யஉ.

உ. அதிகாரம்.

[அநியாயக்காரருக்கும், கடிந்துகொள்ளுகிறபுத்தியைக் கேட்க மனதில்லாதவர்களுக்கும் வரும் ஆக்கினைகள் முன்னறிவிக்கப்பட்டது.]

அக்கிரமத்தை யோசித்துத் தங்கள் படுக்கைகளின்மேல் பொல்லாப்புகளைத்

சமபணணிககாலமே வெளிசசமாகிறபோது அதைநததகெளகையில் வலலமையிருககிறபடியிறுலே நடபபிதது,

௨ * வயல்களைபிசசிதது பறிததுககொணடு, வீடுகளைபிசசிதது எடுததுககொணடு, புருஷனையும அவன வீட்டையுமனுஷனையும அவனசுதநதரததையும ஒடுக்குகிறவர்களுக கையோ. * ஏசாயா. ரு, அ.

௩ ஆகையால கர்ததர்சொலலுகிறதாவது, இதோ நீஙகள உஙகளகழுததுகளை நீஙகலாககிவிடக்கூடாத் தீஙகை நாம இநத வம்சததினமேல்வரபபணண நினைககிறும, அபபோது நீஙகளமேட்டிமையாய நடபபதிலலை, ஏனெனறால அது துற்காலம.

* ரு. மோசே. ரு, ௰.

௪ அநநாளிலேஉஙகளபேரிலேஒருசொலலுணடாகித் துககமான புலமபலாயபபாழாகவே பாழானேமெனறும, என சனததினவீதத்தைமாறறிபபோட்டாரெனறும எபபடி அதையெனனைவிட்டெடுததுபபோட்டார்? எஙகள வயல்களைபபிடுஙகிபபஙகிட்டுககொடுததாரெனறும புலமபபபடும.

௫ மெயயாகவே, கர்ததரின சபையிற் சுதநதரவீதஙகளையளநதுகொடுக்கிறவர்கள உனககிலலாதிருபபார்கள.

௬ * தீர்க்கதரிசனஞ்சொரியாதிருபபீர்களாக, சொரிநதால நிநதை நீஙகிபபோகாதிருக்கிற இநதபபிரகாரமாகசசொரியவேணடாமெனகிறுர்கள. * ஆமோ. எ, ௰௬.

௭ யாககோபின்வீட்டாரெனனபபட்டவர்களே, கர்ததரின ஆவியானவர் குறுகியிருககிறுரோ? அவருடையகிரியைகள இவைகள தானே? செமமையாய் நடககிறவனேடே நமமுடையவார்ததைகளதயவாயிராதோ?

௮ நமதுசனமோவெனறால முதலேசததுருவாக எழுமபிறறு, யுத்தத்திலிருநது திருமபிவநது அஞசாமறகடநதுபோகிறவர்களுடையவஸதிரததினமேல உடுபபையுரிநதுகொணடீர்கள.

௯ நமது சனததின ஸதிரிகளையவர்களுடையசவுககியமானவீடுகளிலிருநது துரததிவிட்டீர்கள, அவர்களுடைய குழநதைகளுககிருநத நமமுடைய அலஙகாரததை என்றைககு மிலலாதபடிககுப பறிததுககொணடீர்கள.

௰ எழுநதிருநது போஙகள, ஏனெனில இது நீஙகள இளைபபாறிககொணடிருககததககதேசமலல, அதேனெனறால தீட்டுபபட்டதுகெட்டுபபோயிறறு, கேடு அகோரமுமாயிறறு.

௧௧ மனமபோகிற் போககாயப்போய அபததமானதைபபுழுகுகிற ஒருவன மதுபானததையும வெட்டியையுங குடிதது தான உனககுப பிரசஙகிபபெனெனறால அவனேயிநதசசனததிறகேறற பிரசஙகியாயிருபபான.

கிருபையுளளவாககுத்தத்தம.

௧௨ யாககோபினசனமே, * உஙகளையெலலாங கூட்டிவெகூட்டுவோம, இஸரவேலில்மீதியானவர்களைசசேர்ககவேசேர்பபோம, போத்ஸராவின ஆடுகளைபபோலே அவர்களை † ஏகக்கூட்டமாகசசேர்ப்போம, தனதொழுவததுககுளளேசேர்நத மநதைககுசசமானமாய மனுஷதிரளினாலே இரைசசலுணடாகும. * ஏரேமி. ௩௧, ௨௬. † யோவா. ௰, ௰௬.

௧௩ தடைகளைநீககிபபோடுகிறவர் அவர்களுககுமுனபாக நடநதேறுவார், அவர்கள தடைகளைநீககி வாசலால உளளும புறமபுமாகபபிரவேசிபபார்கள, * அவர்கள இராசா அவர்களுககுமுனபாகவுங கர்ததர் அவர்கள முனனணியிலும நடநதுபோவார். * ௪, ௭.

௩. அதிகாரம்.

[அகாத்துரைததனககாரரையுங் களளத்தீர்ககதரிசிகளையுங கணடிககிற பிரசஙகம.]

நானசொனனதாவது, * யாககோபின தலைவர்களே, இஸரவேலவீட்டாரின அதிபதிகளே, நியாயமெதெனறறிய உஙகளுககலலோ அடுககும? * ஏசா. ௧, ௰. ஓசே. ரு, ௧.

௨ ஆனால நனமையைபபகைததுபபொலலாபபைசசிநேகிதது அவர்களமேலிருககிற அவர்களுடைய தோலையும அவர்கள எலுமபுகளினமேலிருககிற அவர்களுடைய சதையையுமபிடுஙகி,

௩ என சனததினசதையைததினறு அவர்களமேலிருககிற அவர்களுடையதோலையுரிததுககொணடு அவர்கள எலுமபுகளைமுறிததுப பானையிலேபோடுமவணணமாகவும இறைசசியைக கொபபரைககுளளேபோடுமவணணமாகவும அவைகளைத துணடிககிறுர்கள.

௪ அபபோது கர்ததரை நோக்கிக்கூபபிடுவார்கள, ஆனால * அவர்களதஙகளகிரியைகளிற பொலலாதவர்களானபடியினாலே இவர் அவர்களுககு மறுஉததரவுகொடாமல தமது முகததை அககாலததிலே அவர்களுககுமறைபபார். * ஏசா. ருசு, உ.

௫ நமதுசனததை மோசமபோககுகிற தீர்ககதரிசிகளுககுவிரோதமாகக் கர்ததர் சொலலுகிறதாவது, அவர்கள தஙகள பலலுகளினாற்கடிககிறவர்களாயிருநது * சமாதானமெனறுகூபபிட்டுத்தஙகள வாய்க்குக்கொடாதவனுககுவிரோதமாக யுத்தத்தை ஆயததமபணணுகிறுர்கள. * ஏசா.

௰௧, ௰.

௬ ஆகையால் நீங்கள் தரிசனம் பார்க்கக்கூடாத இராத்திரியும் குறிசொல்லக்கூடாத அந்தகாரமும் உங்களுக்கு வரும், தீர்க்கதரிசிகளின்மேல் சூரியன் அஸ்தமித்து அவர்கள்மேலே பகல் காரிருளாய்ப் போகும்.

௭ தரிசனம் பார்க்கிறவர்கள் வெட்கி, குறிசொல்லுகிறவர்கள் நாணிப்போய், உத்தரவு கொடுக்கிற தேவனில்லாததினாலே அவர்களெல்லாரும் தங்கள் தாடியை மூடுவார்கள்.

௮ நானோவென்றால், * யாக்கோபுக்கு அவன் மீறுதலையும் இஸ்ரவேலுக்கு அவன் பாவத்தையும் அறிவிக்கத்தக்கதாகக் கர்த்தருடைய ஆவியோடே கூடிய பலத்தினாலும் நியாயத்தினாலும் பராக்கிரமத்தினாலும் நிரப்பப்பட்டிருக்கிறேன். * ஏசா. ௫௮, ௧.

௯ நியாயத்தை அருவருத்துச் செம்மையானவைகளையெல்லாம் கோணலாக்கி,

௰ சீயோனை இரத்தப்பழிகளாலும் எருசலேமை அநியாயத்தினாலும் கட்டுவிக்கிற யாக்கோப் வீட்டாரின் தலைவர்களே, இஸ்ரவேல் வீட்டாரின் அதிபதிகளே, இதைக் கேளுங்கள்.

௰௧ * அதின் தலைவர்கள் பரிதானத்திற்குத் தியாயந்தீர்க்கிறார்கள், அதின் ஆசாரியர்கள் கூலிக்கு உபதேசிக்கிறார்கள், அதின் தீர்க்கதரிசிகள் பணத்திற்குக் குறிசொல்லுகிறார்கள், ஆகிலும் அவர்கள் கர்த்தரைச் சார்ந்துகொண்டு, கர்த்தர் எங்கள் நடுவிலில்லையோ தீங்கு எங்கள்மேல் வராதென்கிறார்கள். * செப்ப. ௩, ௩.

௰௨ ஆகையால் * உங்கள் நிமித்தம் சீயோன் வயலாக உழப்பட்டு, எருசலேம் மண்மேடுகளும் வீட்டின் பருவதம் காட்டு மேடுகளுமாய்ப் போகும். * எரே. ௨௬, ௰௮.

௪. அதிகாரம்.

[வருங்காலங்களிற் பராபரனுடைய சபைக்குண்டாகும் நற்சீரின் வாக்குத்தத்தமும் உபத்திரவம் அனுபவிக்கப்போகிற யூதசனத்திற்கு அருளிச்செய்யப்பட்டது.]

௧ ஆனால் * கடைசிநாட்களிற் சம்பவிப்பதேதென்றால் கர்த்தருடைய வீட்டின் பருவதம் பருவதங்களின் கொடுமுடியாயத் திடப்பட்டு மேடுகளிலும் அதுவே உயருஞ் சனத்தனங்கள் அதற்கோடி, * ஏசா. ௨, ௨.

௨ * திரளான சாதியார் நடந்துவந்து கர்த்தரின் பருவதத்திற்கும் யாக்கோபுடைய பராபரனின் வீட்டுக்கும், அவர் தமது வழிகளை நமக்குப் போதிக்கவும், நாம் அவர் பாதைகளில் நடக்கவும் நாம் போவோம் வாருங்களென்பார்கள், ஏனெனில் வேதம் சீயோனிலும் கர்த்தரின் வசனம் † எருசலேமிலுமிருந்து பறப்படும்.
* ஏசா. ௬௦, ௪. ௫. † லூக். ௨௪, ௪௭.

௩ * அவர் திரளான சனசமூகங்களுக்குள் நியாயந்தீர்த்துத் தூரமாயிருக்கிற பலத்த சாதிகளைக் கடிந்துகொள்ளுவார், அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள், சாதிக்கு விரோதமாய்ச் சாதி பட்டயத்தை எடுப்பதில்லை, இனி யுத்தம் பழகுவதுமில்லை. * ஏசாயா. ௨, ௪.

௪ * அவனவன் தன் திராட்சச்செடியின் கீழும் தன் அத்திமரத்தின் கீழும் பயமுறுத்துவாரில்லாமல் உட்காருவான், ஏனென்றால் † சேனைகளுடைய கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று. * சகரி. ௩, ௧௦. † ஏசாயா. ௫௮, ௰௪.

௫ அதேதென்றால் சகல சனங்களும் தங்கள் தங்கள் பராபரனுடைய நாமத்திலே நடப்பார்கள், நாங்களும் எங்கள் பராபரனாகிய கர்த்தருடைய நாமத்திலே என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாக நடப்போம்.

௬ கர்த்தர் சொல்லுகிறதேதென்றால் அந்நாளிலே நாம் நொண்டியானவளைச் சேர்த்துத் தள்ளுண்டவளையும் நாம் நெருக்கப்பண்ணினவளையும் கூட்டிக்கொண்டு,

௭ * நொண்டியானவளை மீதியான சனமாகவும் தூரமாய்த் தள்ளுண்டுபோனவளைப் பலத்த சாதியாகவும் வைப்போம், அவர்கள் பேரில் கர்த்தர் சீயோன் பருவதத்திலே † இதுமுதலாய் என்றென்றைக்கும் இராசாவாயிருப்பார். * செப்பனி. ௩, ௰௯. † லூக்கா. ௧, ௩௩.

௮ மந்தையின் துருக்கமே, சீயோன் குமாரத்தியின் மேடே, உன்னண்டைக்கு அது வரும், * முந்தின ஆளுகையும் எருசலேம் குமாரத்தியின் இராசரீகமுமே வரும். * சகரியா. ௯, ௰௯.

௯ இப்பொழுதும் நீ கத்துதலாய்க் கதறுவானேன்? இராசாவானவர் உன்னிடத்தில் இல்லையோ? உன் ஆலோசனைக்காரர் அழிந்தாரோ? ஏனென்றால் பிள்ளைபெறுகிறவளைப் பிடித்ததுபோல அம்பாயம் உன்னைப் பிடித்துக்கொண்டிருக்கிறதே.

௰ சீயோன் குமாரத்தியே, பிள்ளைபெறுகிறவளைப்போல அம்பாயப்பட்டுப் பிரசவி, ஏனெனில் இப்போது பட்டணத்திலிருந்து புறப்பட்டு வெளிகளில் தங்கிப் பாபேல்மட்டும் வந்துசேருவாய், அங்கே விடுவிக்கப்படுவாய், அங்கே கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.

௰௧ இப்போதும், அவள் தீட்டுப்பட்டவளாகக்கடவதென்று, சீயோனிலே எங்கள் கண் தன் ஆசையாயிருக்கிறதைக் காணுமென்றும் அநேகஞ்சாதியார் உனக்கு விரோதமாகக்கூடிக்கொள்ளுவார்கள்.

௰௨ ஆனால் அவர்கள் கர்த்தருடைய நினைவுகளையறியாமலும் அவருடைய யோசனையையுணராமலுமிருக்கிறார்கள், அவர் தேசத்திலே அரிக்கட்டுகளைப்போல அவர்களைக் களத்திலே கூட்டுவார். * எரே. ௨௧. ௰௧.

௰௩ சீயோன்குமாரத்தியே, நீ யெழுந்திருந்து போரடி, ஏனென்றால் நான் உன் கொம்புகளை இரும்பும் உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன், நீ அநேக சனசதளங்களை நொறுக்கிப்போடுவாய், அவர்கள் தேடிச் சேர்த்ததைக் கர்த்தருக்கும் அவர்களுடைய ஆஸ்தியைப் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கும் நியமிப்போம்.

௰௪ தண்டு சேனையுடைய பட்டணமே, இப்போது தண்டு தண்டாகக் கூடிக்கொள், * நமக்கு விரோதமாக முற்றிக்கைப்போடப்படும், இஸ்ரவேலுடைய நியாயாதிபதியை மிலாறினாலே தாடையிலேயடிப்பார்கள்.

௫. அதிகாரம்.

[மேசியாவினுடைய பிறப்பையும் இராச்சியத்தையும் அறிவிக்கிற தீர்க்கதரிசனம்.]

௧ ஆனால் * எப்பிறாத்தா என்னப்பட்ட † பெத்லெகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தாலும், இஸ்ரவேலையாளப்போகிறவர் உன்னிலேயிருந்து புறப்படுவார், அவருடைய புறப்படுதல்கள் ‡ அனாதிநாட்களாகிய பூருவத்தினுடையவைகள். * ௧. ௱௫, ௰௬. † மத்தே. ௨, ௬. யோவா. ௭, ௪௨. ‡ யோவா. ௧, ௰௪.

௨ ஆகையால் பெறப்போகிறவள் பெறுங்காலமட்டும் அவர்களையொப்புக்கொடுப்பார், அப்போது அவருடைய சகோதரரில் மீதியானவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடே கூடத்திரும்புவார்கள்.

௩ அவர் நின்று கர்த்தருடைய பலத்தோடே தம்முடைய பராபரனாகிய கர்த்தருடைய நாமத்தின் முகிமையோடும் மேய்ப்பார், ஆகையால் அவர்கள் தங்கித்தரிப்பார்கள், ஏனென்றால் இனிப் பூமியின் எல்லைகள் பரியந்தம் அவர் மகிமைப்படுவார்.

௪ * இவரே சமாதானம், அசூர் நம்முடைய தேசத்தில் வரும்போதும் நம்முடைய அரமனைகளை மிதிக்கும்போதும் ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவோம். * எபே. ௨, ௰௪.

௫ இவர்கள் அசூரின் தேசத்தையும் நிம்ரோதின் தேசத்தையும் அதினுடைய வாசல்களுக்குட்புறமாகப் பட்டயத்தினாலே மேய்ந்துபோடுவார்கள், அப்படியே அசூர் நம்முடைய தேசத்தில் வரும்போதும் நம்முடைய எல்லைகளை மிதிக்கும்போதும் அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்.

௬ யாக்கோபிலே மீதியானவர்கள் அநேகஞ்சனசதளங்களின் நடுவிலே * கர்த்தராலே வந்த பனியைப்போலேயும் மனுஷனுக்காகத் தாமதியாமலும் மனுப்புத்திரரைத் தம்பியாமலுமிருக்கிற பூண்டுகள் மேல் வந்த மழைகளைப்போலேயுமிருப்பார்கள். * சங்கீதம். ௱௰, ௩.

௭ சாதிகளுக்குள் யாக்கோபிலே மீதியானவர்கள் அநேகஞ்சனசதளங்களின் நடுவிலே சிங்கம் காட்டு மிருகங்களுக்குள்ளேயிருக்கிறதற்குச் சமானமாகவும் கடந்துபோய் மிதித்துத் தப்புவிப்பாரில்லாமற் பீறிப்போடுகிற இளஞ்சிங்கம் ஆட்டுமந்தைகளுக்குள்ளேயிருக்கிறதற்குச் சமானமாகவுமிருப்பார்கள்.

௮ உன்னுடைய கை உன் விரோதக்காரரின் மேலுயரும், உன் சத்துருக்களெல்லாருஞ் சங்கரிக்கப்படுவார்கள்.

௯ கர்த்தர் சொல்லுகிறதாவது, அந்நாளிலே சம்பவிப்பதேதென்றால், நாம் உன் குதிரைகளை உன் நடுவிலிராதபடிக்குச் சங்கரித்து உன் இரதங்களையழித்து,

௰ உன் தேசங்களின் பட்டணங்களைச் சங்கரித்து உன் அரணங்களையெல்லாம் நிர்மூலமாக்கி,

௰௧ சூனியங்களையுன் கையிலிராதபடிக்குச் சங்கரிப்போம், நாள்பார்வைக்காரர் உனக்கில்லாதே போவார்கள்.

௰௨ * உன் சுரூபங்களையும் உன் சிலைகளையும் உன் நடுவிலிராதபடிக்குச் சங்கரிப்போம், உன் கைகளின் கிரியையை யினிப் பணிந்துகொள்ளாய். * சகரி. ௰௩, ௨.

௰௩ நாம் உன் தோப்புகளையுன் நடுவிலிராதபடிக்குப் பிடுங்கி உன் பட்டணங்களையழித்து,

௰௪ கேள்விகொடாத புறச்சாதிகளிடத்திலே கோபத்தோடும் உக்கிரத்தோடும் நீதியைச்சரிக்கட்டுதலைச் செய்வோமென்றார்.

௬. அதிகாரம்.

[யூதரைக்கடிந்துகொள்ளுகிற பிரசங்கம்.]

௧ கர்த்தர் சொல்லுகிறதைக் கேளுங்கள், நீயெழுந்திருந்து பருவதங்களோடே வழக்குச்சொல்லு, மேடுகள் உன் சத்தத்தைக் கேட்கக்கடவது.

௨ பருவதங்களே, பூமியின் உறுதியான அஸ்திபாரங்களே, கர்த்தருடைய வழக்கை

க்கேளுங்கள், ஏனென்றால் * கர்த்தருக்கு அவர் சனத்தோடே வழக்கிருக்கின்றது, இஸ்ரவேலோடே அவர் நியாயம்பேசுவார்.
* எசா. ரு, க. ச.

ங நம்முசனமே, உனக்கென்ன செய்தோம்? அல்லது எதினாலுன்னைவிதனப்படுத்தினோம்? நமக்கெதிரே யுத்தரவுசொல்லு.

ச நாம் உன்னை எகிப்துத்தேசத்திலிருந்தேறிவரப்பண்ணி அடிமைத்தனவீட்டிலிருந்த உன்னைமீட்டுக்கொண்டு மோசே ஆரோன் மீரியாமென்றவர்களை யுனக்குமுன்பாக அனுப்பினோம்.

ரு நம்முசனமே, * மோவாபின் இராசாவாகிய பாலாக்பண்ணின யோசனையேதென்றும் பேயோரின் குமாரனாகிய பிலேயாம் அவனுக்குப் பிரதியுத்தரமாகச்சொன்னதேதென்றும் சித்தீமுதுவக்கில்காலமட்டும் நடந்ததேதென்றும் நீ கர்த்தருடைய நீதிகளையறிந்துகொள்ளும்படிக்கு நினைத்துக்கொள்ளேன். * ச. மோசே. உஉ, ரு. சு.

சு எதினாலே நான் கர்த்தருக்குமுந்திக்கொண்டு உன்னதமான பராபரனுக்குமுன்பாகக்குனிவேன், தகனபலிகளினாலும் ஒருவயதுக்கன்றுக்குட்டிகளாலும் அவருக்குமுந்திக்கொள்வேனோ.

எ ஆயிரங்களான ஆட்டுக்கடாக்களின்பேரிலும் எண்ணெய் ஓடுகிற பதினாயிரங்களான ஆறுகளின்பேரிலும் கர்த்தர்பிரியமாயிருப்பாரோ. என் துரோகத்தைப்போக்க என்முதற்பேறையும் என் ஆத்துமத்தின்பாவத்தைப்போக்க என்கெர்ப்பக்கனியையுங்கொடுப்பேனோ.

அ மனுஷனே, நன்மையேதென்றுனக்கறிவித்தார், நியாயஞ்செய்து இரக்கத்தைச்சிநேகித்து, உன்பராபரனுக்குமனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல் வேறேதென்னத்தைக்கர்த்தர் உன்னில்தேடுகிறார்.

கூ கர்த்தருடையசத்தம்பட்டணத்திற்கெதிராகக்கூப்பிடுகின்றது. ஏனென்றால் உம்முடையநாமம் உத்தமத்தை நோக்குகின்றது, மிலாறினைச்செய்கிறவையையும் அதைநிர்ணயம்பண்ணினவராரென்கிறதையுங்கேளுங்கள்.

ய ஆகாதவன்வீட்டிலே ஆகாமியப்பொக்கிஷங்களும் அருவருக்கப்படத்தக்குறைந்தமரக்காலும் இன்னமிருக்கின்றதல்லவோ.

யக ஆகாத்தராசுகைப்பட்டுப்படிக்கலனுக்குண்டுமுள்ளபையுமிருக்கக்கொள்ளச்சுத்தமுண்டோ.

யஉ அதேதென்றால் அவர்களில் ஐசுவரியமுள்ளவர்கள் கொடுமையாலநிறைந்திருக்கிறார்கள், அவர்களுடைய குடியானவர்கள் பொய்பேசுகிறார்கள், அவர்களுடைய நாக்கு கபடமானது.

யங ஆகையால் நாமும் உன்னையடித்திருளும் உன்பாவங்கனிமித்தமுமுக்குகிறதினாலும் உன்னைப்பாழாக்குவோம்.

யச நீ போசித்தும்திருப்தியடையாய், அது உன்னுள்ளத்திலேயேயிருக்கும், நீ பதனம்பண்ணியுந்தப்புவிக்கமாட்டாய், நீ தப்புவிப்பதைப்பட்டயத்திறகொப்புக்கொடுப்போம்.

யரு * நீ விதைத்தும் அறுக்காதேபோவாய், நீ ஒலிவப்பழங்களையுந்திராட்சப்பழங்களையும் ஆலையாடியும் எண்ணெய் பூசிக்கொள்வதுமில்லை திராட்சரசங்குடிப்பதுமில்லை. * ரு. மோ. உ, அ. ங, ஆகா. க.

யசு ஏனென்றால் நாம் உன்னைப்பாழாவும் உன்குடிகளைப்பரிகாசமாகவும் வைக்கத்தக்கதாக, * அம்ரியினுடைய கட்டளைகளும் † ஆகாப் வீட்டாருடைய எல்லாச்செய்கைகளும் கைக்கொள்ளப்பட்டுவருகின்றது, அவர்களுடைய ஆலோசனைகளிலே நடக்கிறீர்கள், ஆகையால் நம்முசனத்தின் நிந்தையைச்சுமப்பீர்கள்.
* க. இராசா. யசு, உரு—உசு

எ. அதிகாரம்.

[சனத்தினுடையகேட்டினிமித்தம்புலம்பலானது.]

எனக்கு ஐயோ, ஏனென்றால் வசந்தகாலத்துக்கனிகள்சேர்க்கப்பட்டபின்பும் திராட்சப்பழங்கள் அறுக்கப்பட்டபின்பும் மிஞ்சுவதைப்போலிருக்கிறேன், போசிக்கிறதற்கு ஒரு திராட்சக்குலையும் என் ஆத்துமம் இச்சித்தமுதல் கனியுமில்லை.

உ * தேசத்திற சன்மார்க்கர் அற்றுப்போனார்கள், மனுஷரிற்செம்மையானவனில்லை, அவரெல்லாரும் இரத்தஞ்சிந்தப்பதிவிருக்கிறார்கள், அவனவன் தன்சகோதரனை வலையிலேபிடிக்கவேட்டையாடுகிறான்.
* சங்கீதம். யஉ, உ.

ங நன்றாய்ப்பொல்லாப்புசெய்திருக்கைகளுங் கூடும்பிரபு காணிக்கை கேட்கிறான், நியாயாதிபதி கைக்கூலிக்குத்தீர்க்கிறான், பெரியவன் தன் துர்ச்சிந்தனையின் விணையைச்சொல்லுகிறான், இப்படி அவர்கள் பிரிந்துபபோடுகிறார்கள்.

ச அவர்களில் நல்லவன் முட்செடிக்கொத்தவனும் செம்மையானவன் முட்வேலிப்பார்க்கக் கேடுள்ளவனுமாயிருக்கிறான், உன்காவற்காரர் அறிவித்த உன்னுடைய விசாரிப்பின்நாள்வருகின்றது, இப்பொழுது அவர்களுடையகலக்கம்வரும்.

௫ சிநேகிதனை விசுவாசியாதேயுஙகள, வழிகாட்டியைநமபாதேயுஙகள, உன மடியிலே படுத்துககொணடிருககிறவளுககுமுனபாக உன வாயைததிறகக எசசரிககையாயிரு.

௬ ஏனெனில * மகன தகபபனை யீனபபடுத்துகிறுன, மகள தனதாயககு விரோதமாகவும மருமகள தனமாமிககு விரோதமாகவும எழுமபுகிறார்கள, மனுஷனுடைய சத்துருககள அவன வீட்டு மனுஷர்தான. * மத. ௰, உ௧. ௩௫, ௩௬. லூககா. ௰௨, ௫௩.

சாததிரவபபடுகிறசபையின விசுவாசமும பொறுமையுமநமபிககையும.

௭ * நானோவெனறால கர்த்தரைநோககிககொணடு என இரட்சிபபின பராபரனுககுககாததிருபபேன, என பராபரன எனனைககேட்பார். * சங்கீ. ௬௨, ௬.

௮ என பகைஞியே! எனனிமித்தஞ் சநதோஷபபடாயாக, * நான விழுநதிருநதாலஎழுநதிருபபேன, நான இருளிலேயுட்கார்ந்தால † கர்த்தர் எனககுவெளிசசமாயிருபபார். * வாககி. உ௪, ௰௬. † சங்கீ. உ௭, ௧.

௯ கர்த்தர் எனவழககைவழககாடி என நியாயததை விசாரிககடடும, அவருடைய சினததைசசுமபேன, ஏனெனில அவருககு விரோதமாகபபாவஞ் செயதேன, என்னைவெளிசசததிலே புறபபடபபணணுவார், அவருடைய நீதியை மகிழசசியாயப்பார்பபேன.

௰ உன பராபரனாகிய கர்த்தரெஙகே யெனறெனனோடேசொலலுகிற என பகைஞி அதைபபார்ககுமபோது வெட்கம அவளை மூடும, எனகணகள அவளிலநீதியைச சரிககடடுதலைககாணும, இனி வீதிகளின சேறறைபபோல மிதியுணடுபோவாள.

சபைககு அருளபபடடவாககுத்தத்தம்.

௰௧ உன மதிலகளை யெடுபபிககும நாள வருகினறது, அந்நாளிலேபிரமாணந தூரததிறகுபபரவிபபோகும.

௰௨ அந்நாளிலே அசூரியா துவககி எகிப்தின பட்டணஙகள மட்டுககும எகிப்துதுவககி நதிமட்டுககும ஒருசமுததிரந்துவககி மறறசசமுததிரமட்டுககும ஒருபருவதந்துவககி மறறபபருவதமட்டுககுமிருககிற புறஙகளிலிருநது சனஙகள உனனண்டைககுவருவார்கள.

௰௩ ஏனெனில தனகுடிகளினிமித்தமும அவர்கள கிரியைகளுடைய கனிகளினிமித்தமும தேசமபாழாயிருநதது.

௰௪ கர்மேலின நடுவிலே தனித்து வனவாசமாயிருககிற உமதுசுதநதரமானமநதையாகிய உமமுடைய சனததை உமது கோலினாலேமேயும. பூருவநாட்களைபபோலேயவர்கள பாசானிலுங கிலேயாததிலும மேய்வார்களாக.

௰௫ நீ எகிப்துத்தேசததிலிருநது புறபபட்ட நாட்களைபபோலே யுனனை அதிசயஙகளைக்காணபபணணுவோம.

௰௬ புறசசாதிகள கணடு தஙகளுடைய எலலாப பராககிரமததையுந தொட்டுவெட்கபபடுவார்கள, கையை வாயினமேலே போட்டுககொளளுவார்கள, அவர்கள காதுகள செவிடாயபபோகும.

௰௭ பாமபைபபோல * மணணைநககுவார்கள, பூமியின ஊர்வனஙகளைபபோலே தஙகளவளைகளிலிருநது நடுநடுங்கிப் புறபபடுவார்கள, திகிலோடே யெஙகளபராபரனாகிய கர்த்தரணடைககுச சேர்நது உனககுபபயபபடுவார்கள. * சங்கீ. ௭உ, ௯.

பராபரனைமகிமைபபடுத்துகிறதுதி.

௰௮ * அககிரமததைநீககிபபோட்டுத தமதுசுதநதரததில மீதியானவர்களுககுமீறுதலை மனனிததுவிடுகிற தேவரீரைபபோலொதததேவனார், எனறெனறைககுங கோபததைவையார், ஏனெனில அவர் கிருபை செயயவிருபபுகிறுர். * உ. மோசே. ௩௪, ௬. எ. சஙகீதம. ௱௩, ௮—௰௩.

௰௯ திருமபி எஙகளபேரில இரஙகுவார், எஙகள அககிரமஙகளை யடககி யெஙகள பாவஙகளையெலலாஞ் சமுததிரததின ஆழஙகளிறபோட்டுவிடுவார்.

௨௰ தேவரீர் பூருவநாட்கள முதற்கொணடு * எஙகளபிதாககளுககு ஆணையிட்ட சததியததை யாககோபுககுங கிருபையை ஆபிரகாமுககுங கட்டளையிடுவீர். * லூக. ௧, ௫௪. ௫௫.

மிகாவினதீர்ககதரிசனம் முடிநததுமுற்றும.

நாகூமின் தீர்க்கதரிசனம்.

க. அதிகாரம்.

[அசூரியதேசத்தின் இராசதானியாகிய நினிவேக்கு விரோதமான தீர்க்கதரிசனம்.]

நினிவேயின் சுமை எல்கோசானாகிய நாகூமின் தரிசனபுஸ்தகம்.

உ கர்த்தர் * எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன், கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவரும் உக்கிரசாலியுமானவர், கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிறவர், அவர் தம்முடைய பகைஞர்மேல் கோபம் வைக்கிறவர். * உ. மோசே. உ௰, ரு.

ங கர்த்தர் நீடிய சாந்தமுள்ளவரும் பலமிகுந்தவருமாயிருக்கிறார், அவர் குற்றவாளியைக் குற்றமில்லாமல் நீங்கலாக்கிவிடார், கர்த்தருடைய வழி பெருங்காற்றிலும் கொந்தளிப்பிலும் உள்ளது, மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கின்றது.

ச அவர் சமுத்திரத்தை அதட்டி அதை வறண்டுபோகப்பண்ணி சகல ஆறுகளையும் வற்றியாக்குகிறவர், பாசானும் கர்மேலும் வாடி, லீபனோனின் செழிப்பு வாடிப்போகும்.

ரு அவராலே பருவதங்கள் அதிர்ந்து மேடுகள் கரைந்துபோகும், அவர் சந்நிதியால் பூமியெடுபடும், பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரும் தானே.

சா * அவருடைய உக்கிரத்துக்கு முன்பாக நிற்பவனார்? அவர் கோபத்தின் உக்கிரத்திலே தரிப்பவனார்? அவருடைய எரிச்சல் அக்கினியைப்போலே பாய்கின்றது, கன்மலைகள் அவராலே இடியும். * அபி. கூ, ௰எ.

எ கர்த்தர் நல்லவரும் இக்கட்டு நாளிலே அரணான கோட்டையுமாயிருந்து தம்மை நம்புகிறவர்களை * அறிந்திருக்கிறார்.

* சங். க, சா. உ. திமோ. உ, ௰சா.

அ அதின் ஸ்தானத்தைப் புரண்டுபோகிற பிரளயத்தினாலே சர்வசங்காரம்பண்ணுவார், இருள் அவர் சத்துருக்களைப் பின்தொடரும்.

கூ நீங்கள் கர்த்தருக்கு விரோதமாகச் செய்ய நினைக்கிறதென்ன? அவர் சர்வசங்காரம்பண்ணுவார், இடுக்கண் மறுபடியும் நிலைகொள்ளாது.

௰ ஏனெனில் அவர்கள் சன்னபின்னலாயிருக்கிற முட்செடிகளுக்கொத்தானதே ஒப்பாயிருக்கையிலும் தங்கள் மதுபானத்தினால் வெறித்திருக்கையிலும் முழுவதும் காய்ந்துபோன செத்தையைப்போல் எரிந்துபோவார்கள்.

௰க கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாத நினைவாயிருக்கிற பேலியாளின் துராலோசனைக்காரன் உன்னிலிருந்து புறப்பட்டான்.

௰உ கர்த்தர் சொல்லுகிறதாவது, அவர்கள் நிறைவாகவும் அநேகருமாயிருந்தாலும் ஒழிந்துபோகத்தக்கதாய் அறுப்புண்டுபோவார்கள், உன்னை நான் சிறுமைப்படுத்தினேனும், இனி உன்னைச் சிறுமைப்படுத்தாதிருப்பேன்.

௰ங இப்போதும் நான் உன்மேலிருக்கிற அவன் நுகத்தடியை உடைத்துப்போட்டு உன் கட்டுகளை அறுப்பேன்.

௰ச ஆனால் உனக்கு விரோதமாய்க் கர்த்தர் இட்ட கட்டளையாவது, இனி உன் பேருக்கு வித்து விதைக்கப்படுவதில்லை, உன் தேவர்களின் வீட்டிலிருக்கிற கொத்தப்பட்ட விக்கிரகத்தையும் வார்க்கப்பட்ட விக்கிரகத்தையும் நாம் நிர்மூலம்பண்ணுவோம், நீ கனவீனனானபடியினால் அதை உனக்குக் கல்லறையாக்குவோம்.

உ. அதிகாரம்.

[யூதருக்கருளப்பட்ட ஆறுதலானவாக்குத்தத்தமும் நினிவேயாருக்கு அறிவிக்கப்பட்ட ஆக்கினைகளும்.]

இதோ * சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகள்மேல் வருகிறது, யூதாவே, உன் பண்டிகைகளை ஆசரி, † உன் பொருத்தனைகளைச் செலுத்து, ஏனெனில் பேலியாள் இனி உன்மேல் கடந்துவருவதில்லை, அவன் முழுதும் சங்கரிக்கப்பட்டான். * ஏசா. ருஉ, எ. † சங். ரு௰, ௰ச.

உ சிதறடிக்கிறவன் உன் முகத்துக்கு முன்பாக ஏறிவருகிறான், கொத்தளங்களைக் காத்து, வழியை நோக்கிக்கொண்டிரு, அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொள், உன் பெலனை மிகவும் திடப்படுத்து.

ங ஏனெனில் கர்த்தர் யாக்கோபின் மகிமையைத் திரும்ப ஸ்தாபனம்பண்ணுவார், இஸ்ரவேலின் மகிமையையும் அப்படியே, அதேனென்றால் வெறுமையாக்குகிறவர்கள் அவர்களை வெறுமையாக்கி அவர்களுடைய திராட்சக்கொடிகளைக் கெடுத்துப்போட்

டடார்கள்.

௩ அவனுடைய பராக்கிரமசாலிகளின் கேடயங்கள் சிவப்பாயிருக்கும், அவன் இராணுவமனுஷர் இரத்தாம்பரந்தரித்துக்கொண்டிருக்கிறார்கள், அவன் தன்னை ஆயத்தம்பண்ணும் நாளிலே இரதங்கள் மின்னிக்கொண்டிருக்கிற அரிவாள்களின் முஸ்தீதாயிருக்கும், ஈட்டிகள் குலுங்கும்.

௪ இரதங்கள் வீதிகளில் கடகடென்றோடித் தெருக்களில் திரியும், அவைகள் தீவட்டிகளின் ரூபமாயிருந்து மின்னல்களைப்போல ஓடும்.

௫ தன்னுடைய பிரஸ்தாபமனுஷரை நினைவுகூருவான், இவர்கள் தங்கள் நடைகளில் இடறி அலங்கத்திற்குத் தீவிரித்தோடுவார்கள், மறைவிடம் செப்பனிடப்படும்.

௬ ஆறுகளின் வாசல்கள் திறக்கப்படும், அரண்மனை வெந்துகரையும்.

௭ அவள் சிறையிருப்பாய்க் கொண்டுபோகப்படத் தீர்மானமாயிற்று, அவளுடைய வேலைக்காரிகள் புறாக்களைப்போல் சத்தமிட்டுத் தங்கள் மார்பிலேயடித்துக்கொண்டுபோவார்கள்.

௮ நினிவேயுண்டான நாள்துவக்கித் தண்ணீர்க்குளம்போலேயிருந்தது, இப்போதோவென்றால் அவர்கள் ஓடிப்போகிறார்கள், நில்லுங்கள் நில்லுங்களென்றும் திரும்பிப்பார்க்கிறவனில்லை.

௯ வெள்ளியைக்கொள்ளையிடுங்கள், பொன்னைக்கொள்ளையிடுங்கள், ஏனென்றால் சம்பத்துக்கு முடிவில்லை, இச்சிக்கப்படத்தக்க சகல உடைமைகளின் வெகுத்துவமிருக்கின்றது.

௰ வெறுமையும் வெளியும் ஆகாயமயமுமாவாள், இருதயம் உருகும், முழங்கால்கள் தத்தளிக்கும், எல்லாவிடுப்புகளிலும் மகா வேதனையுண்டாயிருக்கும், எல்லாருடைய முகங்களின் ரூபுஞ்சுருங்கும்.

௰௧ கிழச்சிங்கமாகிய சிங்கமும் சிங்கக்குட்டிகளும் பயப்படுத்துவாரில்லாமல் நடமாடித் திரிந்த சிங்கத்தாபரமும் இளஞ்சிங்கங்களுக்கிருந்த மேய்விடமும் எங்கே?

௰௨ சிங்கம் தன் குட்டிகளுக்குத் தேவையானதைப் பீறித் தன் பெண்சிங்கங்களுக்கு வேண்டியதைத் தொண்டையைப்பிடித்துக் கொன்றுபோட்டு இரைகளினாலே தன் கெபிகளையும் பீறிப்போட்டவைகளினாலே தன் தாபரங்களையும் நிரப்பிற்று.

௰௩ இதோ நாம் உனக்கு விரோதமாக வந்து இரதங்களைப் புகையெழும்ப எரித்துப்போடுவோம், பட்டயம் உன்னுடைய இளஞ்சிங்கங்களைப் பட்சிக்கும், நீ இரைக்குப் பாய்கிற வேலையைத் தேசத்தில் அற்றுப்போகப்பண்ணுவோம், உன் தானாபதிகளின் சத்தம் இனிக் கேட்கப்படுவதில்லையென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௩. அதிகாரம்.

[நினிவேயின் பாவங்களுக்குவரும் கொடிய ஆக்கினைகள்.]

௧ இரத்தப்பழிகளின் பட்டணத்திற்கு ஐயோ, அது முழுதும் பொய்யினாலும் பறிக்குதலினாலும் நிறைந்திருக்கின்றது.

௨ சவுக்குகளின் இரைச்சலும் உருளைகள் அதிருகிறதும் குதிரைகள் தரையைத் தட்டுகிறதும் இரதங்கள் கடகடென்றோடுகிறதுமான இரைச்சலும்,

௩ இராவுத்தர் ஏறிவருகிற குதிரைகளும் துலங்கிய பட்டயங்களும் மின்னுகிற ஈட்டிகளும் வெட்டுண்டவர்களின் திரளும் பிரேதங்களின் ஏராளமுமுண்டாகும், பிணங்களுக்குத் தொகையில்லை, அவர்களுடைய பிணங்களில் இடறுவார்கள்.

௪ * தன் வேசித்தனங்களினாலே சாதிகளையுந் தன் சூனியங்களினாலே வம்சங்களையும் விற்கிற மகா சூனியக்காரியாயிருக்கிற ரூபவதியான வேசியினுடைய திரளான வேசித்தனங்களின் நிமித்தமாகத்தானே. * அபி. ௰௭, ௧. ௨.

௫ இதோ நாம் உனக்கு விரோதமாக வந்து உன் வஸ்திரத்தோரங்களை உன் முகமட்டுந் தூக்கியெடுத்துச் சாதிகளுக்கு உன் நிருவாணத்தையும் இராச்சியங்களுக்கு உன் அபிமானத்தையுந் தெரியப்பண்ணி,

௬ உன்மேல் சீயென்னப்படத்தக்கவைகளையெறிந்து உன்னையீனப்படுத்த உன்னை வேடிக்கையாக்கிப்போடுவோமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௭ அப்போது சம்பவிப்பதென்னவென்றால் உன்னைக் காண்கிறவனெல்லாம் உன்னைவிட்டோடிப்போய் நினிவே பாழ்க்கடிக்கப்பட்டதென்றும் அதற்காகத் துக்கங்கொண்டாடுபவனார் ஆறுதல்சொல்லுகிறவர்களையுனக்கெங்கே தேடுவேனென்றுஞ் சொல்லுவான்.

௮ நதிகளுக்குள்ளே குடியேறியிருந்த நோஅம்மோனைப்பார்க்கிலும் நீ நல்லதோ, அதைச்சுற்றிலுந் தண்ணீரிருந்தது, சமுத்திரம் அதின் அரணிப்புஞ் சமுத்திரக்கால் அதின் மதிலுமாயிருந்தது.

௯ எத்தியோப்பியாவும் எகிப்தும் தொகையில்லாத சனங்களால் அதற்குப் பலமாயிருந்தது, பூத்தும் லீபியாவும் அதற்குச் சகாயமாயிருந்தது.

௰ அப்படிக்கொத்தது குடிவிலக்கப்பட்டுச் சிறையிருப்பிலே போயிற்று, அதின் குழந்தைகள் எல்லாவீதிகளின் முகனைகளிலுஞ் சதைத்துப்போடப்பட்டது, அதின் கனமுள்ளவர்கள்பேரிலே சீட்டுப்போட்டார்க

ன், அதின் பெரியவர்கள் சங்கிலிகளாற் கட்டப்பட்டார்கள்.

௰௧ நீயும் மயக்கமாகி யொளித்துக்கொள்ளுவாய், நீயும் உன் சத்துருவுக்குத் தப்ப அரணான கோட்டையைத் தேடுவாய்.

௰௨ உன் அரண்களெல்லாம் முதிர்ந்த தாயத்துப் பழங்களுள்ள அத்திமரங்களைப் போலேயிருக்கும், அவைகள் குலுக்கப்பட்டால் தின்னுகிறவன் வாயிலே விழும்.

௰௩ இதோ உன் நடுவிலிருக்கிற சனம் பெண்சாதிகள், உன் தேசத்தின் வாசல்கள் உன் சத்துருவுக்குத் திறக்கவே திறவுண்டுபோகும், அக்கினி உன் தாழ்ப்பாள்களைப் பட்சிக்கும்.

௰௪ உனக்கு முற்றிக்கைக்குத் தண்ணீர் மொண்டுவை, உன் அரண்களைப் பலப்படுத்து, சேற்றிலே போய்க் களிமண்ணை மிதி, சூளையைக் கெட்டிப்படுத்து.

௰௫ அங்கே அக்கினி உன்னைப் பட்சிக்கும், பட்டயம் உன்னைச் சங்கரிக்கும், அது பச்சைக்கிளிகளைப் போல உன்னைப் பட்சித்துப் போடும், உன்னை நீ பச்சைக்கிளிகளத்தனையாக்கிக்கொள், உன்னை வெட்டுக்கிளிகளத்தனையாக்கிக்கொள்.

௰௬ உன் வர்த்தகர்களை வானத்து நட்சத்திரங்களிலும் அதிகமாக்கினாய், பச்சைக்கிளிகள் பரவிப் பறந்துபோகும்.

௰௭ உன் மகுடவர்த்தனர் வெட்டுக்கிளிகளுக்கும், உன் தளகர்த்தர் குளிர்காலத்தில் வேலிகளிற் பாளயமிறங்குகிற பெருங்கிளிகளுக்கும் சமானமாயிருக்கிறார்கள், சூரியன் உதித்தால் அவைகள் போய்விடுகிறது, பின்பு அவைகளிருந்த அவைகளுடைய இடமின்னதென்று தெரியாது.

௰௮ அசூரியாவின் இராசாவே, உன்னுடைய மேய்ப்பர் உறங்குவார்கள், உன்னுடைய பிரபலியம் இளைப்பாறியிருப்பார்கள், உன் சனம் பருவதங்களின்மேற் சிதறிப்போகும், அதைக் கூட்டிக்கொள்பவனில்லை.

௰௯ உன் நொறுங்குதலுக்கு ஆறுதலில்லை, உன் காயம் கேடாயிருக்கின்றது, உன்னுடைய இவைகளைக் கேட்கப்போகிற யாவரும் உன்னிமித்தம் கைகொட்டுவார்கள், ஏனென்றால் யார்மேல் உன் பொல்லாப்பு எந்நேரமும் பாயாமற் போயிற்று.

நாகூமின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

ஆபகூக்கின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[கல்தேயர் யூதேயாதேசத்திற்குட்புகுந்து வருவார்களென்று தீர்க்கதரிசனமுன்னறிவித்துப் பராபரனை நோக்கி அங்கலாய்த்தது.]

ஆபகூக்கென்ற தீர்க்கதரிசிதரிசனமாய்க் கண்ட சுமை.

௨ கர்த்தாவே, * எந்தமட்டும் நீர் கேளாமலிருக்க நான் கூப்பிடுவேன்? நீர் இரட்சிக்காமலிருக்க நான் கொடுமையினிமித்தம் உம்மை நோக்கிச் சத்தமிடுவேன்? * சங். ௰௩, ௨, ௩.

௩ நீர் என்னை அக்கிரமத்தைக் காணப்பண்ணித் தீவினையைப் பார்த்துக்கொண்டிருப்பானேன்? பாழ்க்கடிப்புங் கொடுமையும் எனக்கெதிரே நிற்கின்றது, வழக்கையும் வாதையையும் எழுப்புகிறவர்களுண்டு.

௪ ஆகையால் நியாயப்பிரமாணம் பலனற்றதாகி நியாயம் என்றென்றைக்கும் நடந்தேறாமற் போகின்றது, ஏனென்றால் ஆகாதவன் நீதிமானை வளைந்துகொள்ளுகிறான், ஆனதுகொண்டு நியாயந் தாறுமாறாய்ப் புறப்படும்.

௫ நீங்கள் புறச்சாதிகளை நோக்கிப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் பிரமித்துக்கொள்ளுங்கள், ஏனென்றால் விவரிக்கப்பட்டால் நீங்கள் விசுவாசியாதிருக்கும் ஒரு கிரியையை உங்கள் நாட்களில் நடப்பிப்போம்.

௬ அதென்னென்றால் இதோ, நான் கல்தேயரென்ற கடுகடுத்ததும் வேகமுமான சாதியை எழுப்புவோம், அது தனக்குடையதல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ளத் தேசத்தின் விசாலங்களில் நடந்துவரும்.

௭ அது கெடியும் பயங்கரமுமானது, அதின் நியாயமும் அதின் மேன்மையும் அதிலேதானே புறப்படும்.

௮ அதின் குதிரைகள் சிவிங்கிகளைப்பார்க்கிலும் வேகமும், அஸ்தமானத்திலே திரிகிற ஓநாய்களைப் பார்க்கிலும் உக்கிரமுமாயிருக்கின்றன, அதின் குதிரைக்காரர் பரவுவார்கள், அதின் குதிரைக்காரர் தூரத்திலிருந்து வருவார்கள், * இரைக்குத் தீவிரிக்கிற கழுகைப்போலப் பறந்துவருவார்கள்.

* மத்தேயு. ௨௪, ௨௮.

௯ அவர்களெல்லாருங் கொடுமைசெய்ய வருவார்கள், கவ்வுகிற அவர்களுடைய முகங்கள் கிழக்கே நோக்குகின்றது, அவர்கள் மணலத்தனை சனங்களைச் சிறைபிடித்த

சேர்ப்பார்கள்.

௰ அவன் இராசாக்களை ஆகடியம்பண்ணுவான், தலைவர்கள் அவனுக்கு நகைப்பாயிருப்பார்கள், அவன் அரண்களையெல்லாம் பார்த்து நகைத்து மண்மேடுகளைப்போட்டு அவைகளைப் பிடிப்பான்.

௰௧ அப்போது அவனுடைய ஆவி மாறுதலடைந்திருப்பான், அவன் மிஞ்சிப்போய் இந்தத் தன் பெலன் தன் தேவனாலே யுண்டானதென்று சொல்லிக் குற்றவாளியாவான்.

௰௨ தேவரீர் பூர்வகாலந்துவக்கி என் தேவனாகிய கர்த்தருமாயிருக்கிறதில்லையோ? * எங்களைச் சாகவொட்டீரே யும், கர்த்தாவே, நியாயத்தீர்ப்புக்காக அவனை வைத்தீர், கன்மலையே தண்டிப்புக்காக அவனை நிறுத்தினீர். * எரே ௰, ௨௪.

௰௩ பொல்லாப்பைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே! தீவினையை நோக்கிக்கொண்டிருக்கமாட்டீரே, * தேவரீர் துரோகிகளை நோக்கிக்கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன் தன்னைப்பார்க்கிலும் நீதியுள்ளவனை விழுங்குகையில் தேவரீர் மவுனமாயிருந்தது. * யோபு. ௨௧, ௭ ௵ எரே. ௰௨, ௧.

௰௪ மனுஷரைச் சமுத்திரத்து மச்சங்களுக்கும் ஆளுகிறவனில்லாத ஊர்வனங்களுக்குஞ் சமானமாக்குகிறதேது?

௰௫ அவர்களையெல்லாந் தூண்டிலால் இழுத்துக்கொள்ளுகிறான், அவர்களைத் தன் வலையினால் பிடித்துத் தன் பறியிலே சேர்த்துக்கொள்ளுகிறான், அதினாலே சந்தோஷப்பட்டுக் களிகூருகிறான்.

௰௬ ஆகையால் அவைகளாலே தன் பங்கு கொழுத்ததும் தன் போசனம் திரண்டதுமாயப்போயிற்றென்று அவன் தன் வலைக்குப் பலியிட்டுத் தன் பறிக்குத் தூபங்காட்டுகிறான்.

௰௭ இதற்காக அவன் தன் வலையை இழுத்துக்கொட்டிக்கொண்டிருந்து சாதிகளை எப்போதும் கொன்றுபோட இரங்காதவனாயிருக்கவேண்டுமோ.

௨. அதிகாரம்.

[மேசியாவின் வருகையைக் குறித்துப் பராபரன் பண்ணின வாக்குத்தத்தம்.

நான் என் காவலிலே தரித்து அரணிப்பிலே நிலைகொண்டிருந்து அவர் எனக்கென்ன சொல்லுவாரென்றும், என் அங்கலாய்ப்புக்கு நான் என்ன உத்தரவைக்கொண்டு போவேனென்றும் பார்க்கிறதற்காகக் * கவனிப்பேனென்றேன். * ஏசா. ௨௧, ௧. ௨.

௨ அப்போது கர்த்தர் எனக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது, நீ தரிசனத்தை யெழுதி அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிக்குப் பலகைகளிலே தீர்க்கமாக வரை.

௩ அதேதெனில் குறித்த காலத்திற்குத் தரிசனம் இன்னமும் தாமதிக்கிறது, முடிவிலே யுத்தரவு விளங்கப்பண்ணுவார், அவர் பொய்சொல்லார். அவர் தாமதித்தால் * அவருக்குக் காத்திரு, ஏனெனில் † வரவே வருவார், அவர் பிந்திப்போவதில்லை. * சங். ௨௭, ௰௪. ௪௨, ௬. † எபி. ௰, ௩௭.

௪ இதோ அகங்காரியாயிருக்கிறவனே, அவனுடைய ஆத்துமம் அவனுக்குட் செம்மையானதல்ல, ஏனெனில் தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். * ரோமர். ௧, ௰௭. கலாத்தியர். ௩, ௰௧. எபிரேயர். ௰, ௩௮.

பாபேலின்மேல் வரும் ஆக்கினைகளின் தீர்க்கதரிசனம்.

௫ அந்த மதுபானமும் அமர்ந்திருக்கமாட்டாத அகந்தையுள்ள புருஷனுமோவென்றால் எத்தனை துரோகியாயிருந்தாலும் அவன் தன் ஆத்துமாவைப் பாதாளத்தைப்போல விரிவாக்கித் திருப்தியாகாமல் மரணத்திற்குச் சமானமாய்ச் சகல சாதிகளையுந் தன்வசமாகச் சேர்த்துச் சகல சனசதனங்களையுந் தன்னிடமாகக் கூட்டிக்கொண்டாலும்,

௬ இவர்களெல்லாரும் அவன்பேரிலே ஒரு பழமொழியையும் அவனுக்கு நோக்கிற புதைபொருளான சொல்லையுமுண்டாக்கித் தன்னுடைய தல்லாத்தைப் பெருக்கிக்கொள்ளுகிறவனுக்கையோவென்றும், அது எந்தமட்டும் நிற்குமென்றும், அவன் தன்மேற் கெட்டியான சேற்றின்பாரத்தையே சுமத்திக்கொள்ளுகிறானென்றுஞ் சொல்லார்களோ?

௭ உன்னைக் கடிப்பவர்கள் அசுப்பிலே யெழும்புவதும் உன்னை அலைக்கழிப்பவர்கள் விழிப்பதுமில்லையோ? நீயவர்களுக்குச் சூறையாகாயோ?

௮ நீ அநேகஞ்சாதிகளைக் கொள்ளையிட்டபடியினாலே சனசதனங்களில் மீதியானயாவரும் நீ சிந்தின மனுஷ இரத்தத்தினிமித்தமும் கொடுமையினிமித்தமும் உன்னைக் கொள்ளையிடுவார்கள்.

௯ தீமையின் வல்லமைக்குத் தப்பித்துக்கொள்ளத் தன் கூட்டை உயரத்திலே வைக்கும்படிக்குத் தன் வீட்டுக்குப் பொல்லாத ஆதாயத்தைத் தேடுகிறவனுக்கையோ.

௰ உன் வீட்டுக்கு வெட்கமுண்டாக ஆலோசனைபண்ணினாய், அநேக சனசதனங்களை வெட்டிப்போட்டதினாலே உன் ஆத்துமத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தாய்.

௰௧ ஏனெனில் கல்லு சுவரிலிருந்து கூப்பிடும், உத்திரம் மச்சிலிருந்து கூவும்.

௰௨ * இரத்தப்பழிகளோடே பட்டணத்தைக் கட்டி அநியாயத்தோடே நகரியைப் பலப்படுத்துகிறவனுக்கையோ.

* எரேமியா. ௨௨, ௰௩.

௰௩ இதோ சனங்கள் அக்கினிக்கிரையாக உழைத்துச் சனங்கள் விருதாவாக இளைக்கிறது கர்த்தருடைய செயல் அல்லவோ?

௰௪ ஏனென்றால் * தண்ணீர்கள் சமுத்திரத்தை மூடுமாப்போலே பூமி கர்த்தருடைய மகிமையின் அறிவினாலே நிரம்பப்படும். * ஏசாயா. ௰௧, ௯.

௰௫ தன் தோழருக்குக் குடிக்கக் கொடுத்துத் தன் துருத்தியை அவர்களண்டையிலே வைத்து அவர்களுடைய நிருவாணங்களைப் பார்க்கும்படிக்கு அவர்களை வெறியுமாக்குகிறவனுக்கையோ.

௰௬ கனத்திற்குப் பதிலாகக் கனவீனத்தால் நிரப்பிப்பாய், * நீயுங் குடித்து விருத்தசேதனமில்லாதவனென்று விளங்கு. கர்த்தருடைய வலதுகையிலிருக்கிற பாத்திரம் உன்னண்டைக்குத் திரும்பும். இலச்சையான வாந்திபண்ணுதல் உன் மகிமையின் மேலே விழும். * சங். எ௫, ௯. எரே. ௨௫. ௰௫. ௰௬.

௰௭ ஏனெனில் லீபனோனுக்குச் செய்த கொடுமையும் மிருகங்களின் அழிவும் மனுஷ இரத்தத்தினிமித்தமும் தேசத்தில் நடப்பித்த கொடுமையினிமித்தமும் அதின் குடிகளெல்லாருக்குஞ் செய்த கொடுமையினிமித்தமும் அந்த மிருகங்களை யிலைகளைச் செய்த பாழ்க்கடிப்பு உன்னை மூடும், அதின் கலங்கப்பண்ணும்.

௰௮ சித்திரக்காரனுக்கு அவன் செய்ப்பண்ணினதும், ஊமையான தேவர்களையுண்டுபண்ணித் தான் உருவாக்கின சுரூபத்தை நம்பினவனுக்கு அந்த வார்க்கப்பட்டதும் பொய்ப்போதகம் பண்ணுகிறதுமான விக்கிரகமும் என்னத்திற்காகவும்.

௰௯ மரத்தைப் பார்த்து விழியென்றும் ஊமையான கல்லைப் பார்த்து எழும்பென்றுஞ் சொல்லுகிறவனுக்கையோ அது போதிக்குமோ? * இதோ அது பொன்னும் வெள்ளியுமான தகடு அடிக்கிறது, அதின் உள்ளத்திலே ஒரு ஆவியுமில்லையே.

* சங். ௱௧௫, ௰௫—௰௮.

௨௰ கர்த்தரோவென்றால் * தமது பரிசுத்த தேவாலயத்திலிருக்கிறார், பூமியெல்லாம் அவருக்கு முன்பாக † மவுனமாயிருக்கக்கடவது. * சங். ௰௧, ௪. † செப். ௧, ௭, ௰௧.

௩. அதிகாரம்.

[ஆபகூக்தீர்க்கதரிசி பண்ணின செபம்.]

ஆபகூக்தீர்க்கதரிசியினுடைய துயரத்திதமான செபம்.

௨ கர்த்தாவே, நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்குப் பயமாயிருக்கிறது, கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை யுயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே யதைத் தெரியப்பண்ணும், கோபத்திலே இரக்கத்தை நினைத்துக் கொள்வீராக.

௩ பரமபரன் தேமானிலும் பரிசுத்தமுள்ளவர், * பாரான் பருவதத்திலுமிருந்து வருவார், சேலா. அவருடைய மகிமை வானங்களை மூடிக்கொண்டது, † அவர் புகழ்ச்சியிலே பூமி நிறைந்தது. * ௫. மோசே. ௩௩, ௨. † ௨. மோசே. ௰௫, ௰௧.

௪ பிரகாசம் வெளிச்சமாயிருந்தது, அவர் கையிலிருந்து இருபுறமும் சுடர் ஜோதிகள் அவருக்குண்டாயிருந்தது, அங்கே அவருடைய பலம் ஒளித்திருந்தது.

௫ அவர் முகத்திற்கு முன்பாகக் கொள்ளைநோய் சஞ்சலநடந்தது, அவர் அடிகளுக்கு முன்பாக எரிபந்தமான நோய்கள் புறப்பட்டது.

௬ அவர் நின்று தேசத்தை அளந்தார், அவர் பார்த்துப் புறசாதிகளைக் கலங்கப்பண்ணினார், பூர்வ பருவதங்கள் சிதறடிக்கப்பட்டது, என்றுமிருந்த மேடுகள் தாழ்ந்தது, அவருடைய நடைகள் நித்தியமானவைகளானது.

௭ கூஷானின் கூடாரங்களைப் பாவத்தினிமித்தம் அகப்படிருக்கக் கண்டேன், மீதியான் தேசத்தின் திரைகள் அசைந்தது.

௮ கர்த்தர் நதிகளின் மேல் எரிச்சலாயிருந்தாரோ? தேவரீர் உம்முடைய குதிரைகளின் மேலும் இரட்சிப்புண்டாகும் உம்முடைய இரதங்களின் மேலும் ஏறிவருகிறபோது உமது கோபம் * நதிகளுக்கு விரோதமாகவும் உமது சினம் † சமுத்திரத்திற்கு விரோதமாயிருந்ததோ. * ௨. மோசே. ௭, ௨௰. † ௨. மோசே. ௰௪, ௨௧. ௨௨.

௯ கோத்திரங்களுக்கிடப்பட்ட ஆணைகளுடைய வார்த்தையின்படியே உம்முடைய வில் நாணேற்றப்பட்டதாக விழித்தது, சேலா. * ஆறுகளுண்டாகப் பூமியைப் பிளந்தீர். * ௨. மோசே. ௰௭, ௬.

௰ பருவதங்கள் உம்மைக்கண்டு நடுங்கி அசைந்தது, * தண்ணீர்களின் வெள்ளம் கடந்துபோயிற்று, ஆழம் தன் இரைச்சலைக் கேட்கப்பண்ணி உயரத் தன் கைகளை எடுத்து. * யோசுவா. ௩, ௰௬.

௰௧ சந்திரசூரியன் தன் மண்டலத்திலே நின்றது, உம்முடைய அம்புகளின் வெளிச்சத்தோடும் உமது ஈட்டியினுடைய மின்னலின் பிரகாசத்தோடும் நடந்துவந்தார்கள். * யோசுவா. ௰, ௰௩.

௰௨ சினத்தோடே தேசத்தில் நடந்தேறினீர், கோபத்தோடே புறசாதிகளைப் போரடித்தீர்.

௰௩ உம்முடைய சனத்தின் இரட்சிப்புக்காகவும் நீர் அபிஷேகம்பண்ணினவைகளுடைய

இரட்சிப்புக்காகவே புறப்பட்டீர், கழுத்து வரைக்கும் அஸ்திபாரத்தைத் திறப்பாக்கி ஆகாதவனுடைய வீட்டிலிருந்த தலைவனை வெட்டினீர், (சேலா.)

௰௪ அவனுடைய செங்கோல்களாலே இவனுடைய கிராமத்தாரின் தலையை உருவக் குத்தினீர், என்னைச் சிதறடிப்பதற்குக் கொந்தளிப்பாய் வந்தார்கள், சிறுமைப்பட்டவனை ஒளிப்பிடத்திற் பட்சிப்பது அவர்களுக்குக் களிகூருதலாயிருக்கும்.

௰௫ திரளான தண்ணீர்களின் குவியலாகிய சமுத்திரத்தில் உமது குதிரைகளோடே [illegible]ப்போனீர்.

௰௬ நான் கேட்கிற செய்தியினாலேயே என் வயிறு அதிர்ந்தது, அந்தச் சத்தத்திற்கு என் உதடுகள் நடுங்குகிறது, மக்கல் என் எலும்புகளிலுண்டாயிற்று, என் நிலையிலே அதிர்ந்தேன், எங்களைப் பாழாக்குஞ் சனத்தினிடைக்குப்போயேறும் இக்கட்டுநாளிலே யெப்படியிளைப்பாறுவேன்.

௰௭ ஏனெனில் அத்திமரந் துளிர்விடுவதில்லை, திராட்சச்செடியிலே பலனுண்டாவதுமில்லை, ஒலிவமரத்திற்செய்தவேலை பிசகிப்போகும், வயல்கள் ஆகாரங்கொடாதிருக்கும், தொழுவத்தில் ஆடுகள் முதலற்றுப்போகும், மாட்டுக்கொட்டிலிலே மாடுமில்லாதேபோகும்.

௰௮ ஆனா நானோவென்றால் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் பரனுக்குட்களிகூருவேன்.

* ஏசாயா. ௬௧, ௰. பிலிப். ௪. ௪.

௰௯ ஆண்டவராகிய கர்த்தர் என்னுடைய பலன், அவர் என் கால்களை மான்கால்களைப்போலாக்கி என் உயரமான தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார், என் கின்னரங்களில் வாசிக்க இராகத்தலைவனுக்கொப்புவிக்கப்பட்டது.

ஆபகூக்கின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

செப்பனியாவின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[யூதசன்ததின்மேல்வருந்த தெய்வ ஆக்கினைகளின் தீர்க்கதரிசனம்.]

ஆமோனின் குமாரனாகிய யோசியா என்ற யூதாவினுடைய ராசாவின் நாட்களிலே எசேக்கியாவினுடைய குமாரனாயிருக்கிற அமரியாவுக்குக் குமாரனான கெதலியாவென்றவனுடைய மகனாகிய கூஷியின் குமாரனான செப்பனியாவுக்குண்டான கர்த்தருடைய வசனம்.

௨ தேசத்திலுண்டானதையெல்லாம் வாரிவாரிக்கொள்ளுவோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௩ மனுஷரையும் மிருகஜீவன்களையும் வாரிக்கொள்ளுவோம், நாம் ஆகாயத்துப் பறவைகளையுஞ் சமுத்திரத்து மச்சங்களையும் ஆகாதவர்களோடேகூட * இடறல்களையும் வாரிக்கொண்டு தேசத்திலுண்டான மனுஷரைச் சங்காரம்பண்ணுவோமென்று கர்த்தர் சொல்லுகிறார். * மத்தே. ௰௩, ௪௧.

௪ நாம் யூதாவின்மேலும் எருசலேமுடைய எல்லாக்குடிகளின்மேலும் நமது கையை நீட்டி, பாகாலில் மீதியாயிருக்கிறதையும் பூசாரிகளின் பெயரையும் அவர்களோடேகூட ஆசாரியர்களையும்,

௫ வீடுகளின்மேல் வானத்துச் சேனையைப் பணிகிறவர்களையும், கர்த்தர்பேரில் ஆணையிட்டுக்கொண்டு மல்கோமின்பேரிலும் ஆணையிட்டுப் பணிகிறவர்களையும்,

௬ கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையுங் கர்த்தரைத் தேடாமலும் அவருக்காகக் கேட்டு விசாரியாமலும் போகிறவர்களையும் இவ்விடத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

௭ கர்த்தராகிய ஆண்டவருக்குமுன்பாக மவுனமாயிருங்கள், ஏனென்றால் கர்த்தருடைய நாள் கிட்டியிருக்கின்றது, அதேதென்றால் கர்த்தர் ஒரு பலியை ஆயத்தப்பண்ணினதாம், அதற்கழைத்தவர்களைப் பரிசுத்தம்பண்ணினார்.

௮ கர்த்தருடைய பலியின் நாளிற் சம்பவிப்பதேதென்றால், நாம் பிரபுக்களையும் இராசகுமாரரையும் மறுதேசத்து உடைதரிக்கிற யாவரையும் விசாரிப்போம்.

௯ வாசற்படியைத் தாண்டிக் கொடுமையினாலுங் கபடினாலுந் தங்கள் எசமான்களின் வீட்டை நிரப்பப்பண்ணுகிற யாவரையும் அந்நாளில் விசாரிப்போம்.

௰ அந்நாளிலே மீன்வாசலிலிருந்து கூக்குரலின் சத்தமும் பட்டணத்தின் இரண்டாம் வகுப்பிலிருந்து அலறுதலும் மேடுகளிலிருந்து மகா நொறுக்குதலின் இரைச்சலுமுண்டாகுமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௰௧ கிடங்குவீதியின் குடிகளே அலறுங்

கள், ஏனெனில் வர்த்தக சனமெல்லாருஞ் சங்காரமாகிறது, காசுக்காரரெல்லாரும் வெட்டுண்டுபோனார்கள்.

௰௨ அக்காலத்திலே சம்பவிப்பதேதெனில், நாம் எருசலேமை விளக்குகளால் சோதித்துத் தங்கள் வண்டிகளின்மேற் சமமாயிருக்கிறவர்களும் கர்த்தர் நன்மை செய்வதுமில்லை தீமைசெய்வதுமில்லையென்று தங்கள் இருதயத்திற் சொல்லுகிறவர்களுமான மனுஷரை விசாரிப்போம்.

௰௩ அவர்களுடைய ஆஸ்திகளையும் அவர்களுடைய வீடுகளையும் பாழாகும், அவர்கள் * வீடுகளைக் கட்டியும் அவைகளிற் குடியிருப்பதில்லை, அவர்கள் திராட்சத்தோட்டங்களை நாட்டியும் அவைகளின் இரசத்தைக் குடிப்பதில்லை. * ஆமோ. ரு, ௰௧.

௰௪ * கர்த்தருடைய பெரிய நாள் கிட்டியிருக்கிறது, அது கிட்டிச்சேர்ந்து மிகவுந் தீவிரிக்கிறது, கர்த்தருடைய நாளென்கிற சத்தத்தினாற் பராக்கிரமசாலிகூடத்தானே அங்கே கசப்பாய்க் கதறுவான். * யோவே. க, ௰௫.

௰௫ * அந்த நாள் சினத்தினுடைய நாள், அது இக்கட்டும் இடுக்கணுமுள்ள நாள், அது கொந்தளிப்பும் பாழ்க்கடிப்புமுள்ள நாள், அது இருளும் அந்தகாரமுமான நாள், அது மப்பும் மந்தாரமுமான நாள்.

* யோவே. ௨, ௰௧. ஆமோ. ரு, ௰௮.

௰௬ அது அரணிப்பான பட்டணங்களுக்கு விரோதமாகவும், உயரமான கொத்தளங்களுக்கு விரோதமாகவும் எக்காளமூதுகிறதும் ஆர்ப்பரிக்கிறதுமான நாள்.

௰௭ நாம் மனுஷரைக் குருடரைப்போல நடக்கத்தக்கதாக இடுக்கப்படுத்துவோம், ஏனென்றால் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தார்கள், அவர்கள் இரத்தம் புழுதியைப்போலவும் அவர்கள் மாம்சம் எருவைப்போலவும் இறைந்துகிடக்கும்.

௰௮ கர்த்தருடைய சினத்தின் நாளிலே * அவர்கள் வெள்ளியும் அவர்கள் பொன்னும் அவர்களைத் தப்புவிக்கமாட்டாது, அவருடைய எரிச்சலின் அக்கினியினாலே தேசமெல்லாம் அழியும், அவர் தேசத்தின் குடிகளையெல்லாம் அகப்பாயத்தானே நிர்மூலம்பண்ணுவார். * எசே. எ, ௰௯.

௨. அதிகாரம்.

[குணப்படுதலுக்காகப் யூதருக்குச்சொன்னபுத்தி.]

வாஞ்சையில்லாத சாதியே, கட்டளையின்படியே முடிந்துதீர்ந்து, நாள் துரும்பைப்போலப் பறந்துபோகிறதற்குமுன்னும் கர்த்தருடைய கோபத்தின் உக்கிரம் உங்கள்மேல் இறங்காததற்குமுன்னும் கர்த்தருடைய கோபத்தின் நாள் உங்கள்மேல் வாராததற்குமுன்னும்,

௨ * நீங்கள் உங்களை உட்பத்தாராயுஞ் சோதியுங்கள். * உ. கொரி. ௰௩, ௫.

௩ கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிற தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, அவரைத் தேடுங்கள், நீதியைத் தேடுங்கள் மனத்தாழ்மையைத் தேடுங்கள், அப்போது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின் நாளில் மறைக்கப்படுவீர்கள்.

௪ ஏனென்றால் காத்சாலை விடப்பட்டுப்போகும், அஸ்கலோன் பாழாம், அஸ்தோத்தை மத்தியானத்திலே துரத்திவிடுவார்கள், எக்ரோனும் வேரோடே பிடுங்கப்படும்.

சில புறச்சாதிகளுக்கு வரும் அழிவு முன்னறிவிக்கப்பட்டது.

௫ சமுத்திரக்கரைக் குடிகளாகிய கிரேத்தியரின் சாதிக்கு ஐயோ, * கானானாகிய பெலிஸ்தரின் தேசமே, கர்த்தருடைய வார்த்தை உங்களுக்கு விரோதமாயிருக்கிறது, உன்னிடத்தில் குடியில்லாதபடிக்கு உன்னையழிப்போம்.

* எரேமியாவின். ௪௭, ௪, ௫.

௬ சமுத்திரக்கரைத் தேசம் மேய்ப்பர் வெட்டின கெபிகளும் ஆட்டுத்தொழுவங்களுமாகிப்போகும்.

௭ அந்தத் தேசம் யூதாவீட்டாரில் மீதியானவர்களின் வசமாகும், அவர்கள் அவ்விடங்களில் மந்தைமேய்ப்பார்கள், அஸ்கலோனின் வீடுகளிலே சாயங்காலத்திலே படுத்துக்கொள்வார்கள், ஏனெனில் அவர்களுடைய பராபரனாகிய கர்த்தர் அவர்களை விசாரித்து, * அவர்கள் சிறையிருப்பைத் திருப்புவார். * எரேமி. ௨௯, ௰௪. ௩௦, ௩. ௩௨

௮ மோவாபின் நிந்தனையையும் அம்மோன்புத்திரர் நம்முடைய ஜனத்தை நிந்தித்து அவர்கள் எல்லைக்கு விரோதமாய்ப் பெருமைபண்ணின தூஷணத்தையுங் கேட்டோம்.

௯ ஆகையால் மோவாப் சோதோமைப் போலும் அம்மோன்புத்திரர் கொமோராவைப்போலுமாகி, காஞ்சொறிகளுக்கு விடப்பட்ட நிலமும் உப்புப்பள்ளமுமாகக் காலமுள்ளமட்டும் பாழுமாயிருக்குமென்று, நம்முடைய ஜனத்தில் மீந்தவர்கள் அவர்களைக் கொள்ளையிடுவார்கள், நம்முடைய சாதியில் மீந்தவர்கள் அவர்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்று இஸ்ரவேலின் பராபரனாகிய சேனைகளுடைய கர்த்தர் உரைக்கிறார்.

௰ இது அவர்கள் மேட்டிமைக்குப் பதிலாக அவர்களுக்கு வரும், ஏனென்றால் அவர்கள் நிந்தித்துச் சேனைகளுடைய கர்த்தரின் சனத்திற்கு விரோதமாகப் பெருமைபண்ணினார்கள்.

௰௧ கர்த்தர் அவர்கள்மேற் கொடியுள்ளவராயிருப்பார், ஏனென்றால் பூமியின் தேவர்களெல்லாம் இளைத்துப்போகப்பண்ணுவார், அப்போ சாதிகளுடைய சகல தீவுகளிலுமிருந்து அவரவர் தங்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து அவரைப் பணிந்துகொள்ளுவார்கள்.

௰௨ எத்தியோப்பியராகிய நீங்களும் நம்முடைய பட்டயத்தாற் கொலையுண்டீர்கள்.

௰௩ தம்முடைய கையை வடக்குக்கு விரோதமாக நீட்டி, அசூரையழித்து, நினிவேயைப் பாழும் வனாந்தரத்திற்கொத்த வறட்சியான தலமுமாக்கிப்போடுவார்.

௰௪ அதின் நடுவிலே மந்தைகளும் * சாதி சாதியான சகல ஜீவன்களும் படுத்துக்கொள்ளும், அதினுடைய சிகரங்களின்மேல் நாரையுங் கோட்டானும் இராத்தங்கும் பலகணிகளிற் கூவுகிற சத்தம் கேட்கும், வாசற்படிகளிற் பாழ்கிடப்பிருக்கும், ஏனென்றால் கேதுருமரங்களின் மச்சைத் திறப்பாக்கிப் போடுவார். * ஏசாயா. ௰௩, ௨௧. ௨௨. ௩௪, ௰௧—௰௫.

௰௫ சுகமாய்க் குடியிருந்து நானே, என்னைத் தவிர வேறொருத்தியுமில்லையென்று தன் இருதயத்திற் சொன்ன களிகூருதலான பட்டணமிதுதானே, எப்படியது பாழும் மிருகஜீவன்களின் தாபரமுமாய்ப்போயிற்று அதைக் கடந்துபோகிறவனெல்லாம் ஈசற்போட்டுத் தன் கையை ஆட்டுவான்.

௩. அதிகாரம்.

[எருசலேமின்மேல் வரும் தேவாக்கினைகளின் தீர்க்கதரிசனம்.]

௧ இடுக்கண்செய்கிற ஊரதையும் அழுக்குமான பட்டணத்துக்கையோ?

௨ அது சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை, அது கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளவில்லை, அது கர்த்தரை நம்பவில்லை, அது தன் பராபரனண்டைக்குச் சேரவில்லை.

௩ அதற்குள்ளேயிருக்கிற * அதின் பிரபுக்கள் கெர்ச்சிக்கிற சிங்கங்கள், அதின் நியாயாதிபதிகள் சாயங்காலத்திற் புறப்படுகிறதும் விடியற்காலமட்டும் ஒரு எலும்பை மீதியாக வைக்காததுமான ஓனாய்கள். * எசேக்கி. ௨௨, ௨௭. மீகா. ௩, ௰௧.

௪ அதின் தீர்க்கதரிசிகள் மேலெழுச்சியுந் துரோகமுமுள்ள மனுஷர் அதின் ஆசாரியர்கள் பரிசுத்தஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி வேதத்துக்கு அநியாயஞ்செய்தார்கள்.

௫ அதற்குள்ளிருக்கிற கர்த்தர் நீதியுள்ளவர், அவர் அநியாயஞ்செய்கிறதில்லை, அவர் குறைவில்லாமற் காலமாறு தம்முடைய நியாயத்தை வெளிச்சத்திலே வைக்கிறார், ஆகிலும் அநியாயக்காரன் வெட்கமறியான்.

௬ சாதிகளைச் சயங்கரித்தோம், அவர்கள் துரோகங்கள் பாழாயிற்று. அவர்களுடைய வீதிகளை ஒருத்தருங் கடந்துபோகாதபடிக்குப் பாழாக்கினோம், அவர்களுடைய பட்டணங்கள் மனுஷனில்லாதபடிக்குங் குடியில்லாதபடிக்கும் அவாந்தரையாயிற்று.

௭ உன் வாசஸ்தலம் நிர்மூலமாகாதபடிக்கு நீ நமக்குப் பயந்து, கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளுவாயேயென்றோம், ஆனால் நாம் அதை எப்படி விசாரித்தாலும் அவர்கள் * தங்கள் கிரியைகளைக் கெட்டாக்கத் தீவிரித்தார்கள். * எரேமியா. ௪, ௨௨.

௮ ஆகையால் நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் நமக்குக் காத்திருங்களென்று கர்த்தர் சொல்லுகிறார், ஏனென்றால் நம்முடைய கோபத்தினுடைய முழு உக்கிரமான நம்முடைய சினத்தை அவர்கள்மேல் ஊற்றும்படிக்குச் சாதிகளைச் சேர்க்கவும் இராச்சியங்களைக் கூட்டவும் நம்மிலே தீர்ந்த நியாயமாயிருக்கிறது, அந்தத் தேசமெல்லாம் நம்முடைய எரிச்சலின் அக்கினியினாலே அழியும்.

ஆக்கினைக்குப் பிற்பாடு பராபரனுடைய சபைக்குண்டாகும் பாக்கியமான நற்சீரின் தீர்க்கதரிசனம்.

௯ அப்போது சனசனங்களெல்லாங் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஏகருத்தாய் அவருக்கு ஆராதனைசெய்யும்படிக்கு நாம் அவர்கள் உதடுகளைச் சுத்தமுள்ளவைகளாக மாறப்பண்ணுவோம்.

௰ * கூஷண்டையிருந்து நம்மை விண்ணப்பம்பண்ணப்போகிற நமது சபையார் எத்தியோப்பியாவின் நதிகளுக்கக்கரையிலிருந்து நம்முடைய காணிக்கையை நமக்குக் கொண்டுவருவார்கள். * மல்கி. ௧, ௰௧.

௰௧ நீ நமக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணிச்செய்திருந்த உன்னுடைய எல்லாக் கிரியைகளினிமித்தமும் அந்நாளிலே வெட்கப்படாதிருப்பாய், ஏனென்றால் நீ நமது பரிசுத்த பருவதத்தினிமித்தம் இனிமேட்டிமையாயிராதபடிக்கு, நாம் உன் பெருமையைத் தொடங்கிக் களிகூர்ந்தவர்களை அப்போது உன் நடுவிலிருந்து விலக்கி,

௰௨ உன் நடுவில் * சிறுமையும் எளிமையுமான சனத்தை மீதியாக வைப்போம், அவர்கள் கர்த்தருடைய நாமத்தின்பேரில் நம்பிக்கையாயிருப்பார்கள். * ஆக்கா. ௰௨, ௩௨.

௰௩ இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை, அவர்கள் பொய்பேசுவதில்லை, * கபடநாக்கு அவர்கள் வாயிற் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை, அவர்கள்

பயப்படுத்துவாரில்லாமல் மேய்ந்து படுத்துக்கொள்ளுவார்கள். * அறிவி. ௰௪, ௫.

௰௪ * சீயோன்குமாரத்தியே கெம்பீரி, இஸ்ரவேலரே, ஆர்ப்பரியுங்கள், எருசலேம்குமாரத்தியே நீ முழு இருதயத்தோடும் மகிழ்ந்து களிகூரு. * சகரி. ௯, ௯.

௰௫ கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ரவேலின் இராசாவாகிய கர்த்தர் * உன் நடுவிலேயிருக்கிறார், இனித் திர்ப்பாக்கியத்தைக் காணாதிருப்பாய். * மத்தேயு. ௨௮, ௨௦.

௰௬ அந்நாளிலே எருசலேமைப்பார்த்து பயப்படாதேயென்றும், சீயோனைப் பார்த்து உன் கைகளைத் தளரவொட்டாதேயென்றும் சொல்லப்படும்.

௰௭ உன் பராபரனாகிய கர்த்தர் உன் நடுவிலிருக்கிறார், * அவர் வல்லமையுள்ளவராய் இரட்சிப்பார், அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய சிநேகத்தினிமித்தம் அமர்ந்திருப்பார், அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்.

* ௧. கொரிந். ௰௫, ௫௪.

௰௮ உன் சபையின் [illegible] பண்டிகையாசரிப்பில்லாமையால் உண்டான நிந்தைக்குரிய தின்மேற்பாரமானதினிமித்தம் சஞ்சலப்பட்டவர்களைக் கூட்டிக்கொள்ளுவோம்.

௰௯ இதோ, அக்காலத்திலே உன்னைச் சிறுமைப்படுத்தின யாவரையும் சங்காரமாகச்செய்து * நொண்டியானவளை இரட்சித்துத் தள்ளுண்டவளைச் சேர்த்துக்கொண்டு அவர்கள் வெட்கம் அநுபவித்த சகல தேசங்களிலும் அவர்களைப் புகழ்ச்சியும் கீர்த்தியுமாக்குவோம்.

௨௦ அக்காலத்திலே உங்களைக் கூட்டிக்கொண்டுவருவோம், அக்காலத்திலே உங்களைச் சேர்த்துக்கொள்ளுவோம், ஏனென்றால் நீங்கள் கண்ணுக்குக் காணும்படி உங்கள் சிறையிருப்பைத் திருப்பும்போது பூலோகத்துச் சனங்களுக்குள் உங்களைக் கீர்த்தியும் புகழ்ச்சியுமாக்குவோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

எரே. ௨௯, ௰௪.

செப்பனியாவின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

ஆகாயின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[பாபேலிலிருந்து திரும்பிவந்த யூதர் தேவாலயத்தைக் கட்டாதிருந்த அசதியினிமித்தமாகக் கடிந்துகொள்ளப்பட்டது.]

இராசாவாகிய தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் ஆறாம் மாதம் முதலாந்தேதியிலே கர்த்தருடைய வார்த்தை * ஆகாய் என்ற தீர்க்கதரிசியைக்கொண்டு செயல்தியேலின் குமாரனாகிய சேருபாபேல் என்ற யூதாவின் தலைவனுக்கும், யோத்சதாக்கின் குமாரனாகிய யோசுவாவென்ற பிரதான ஆசாரியனுக்கும் உண்டாகி அவர் சொன்னதாவது, * எஸ்தர். ௫, ௧. ௨.

௨ இந்தச் சனங்கள் கர்த்தருடைய வீட்டைக் கட்டுகிற சமயமான காலம் இன்னம் வந்ததில்லையென்கிறார்களென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௩ ஆனால் ஆகாய் தீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தருடைய வார்த்தையுண்டாகி அவர் சொன்னதாவது,

௪ இந்த வீடு பாழாய்க் கிடக்கக்கொள்ள, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்களுடைய வீடுகளில் குடியிருக்குங்காலம் உங்களுக்கு வந்திருக்கின்றதோ?

௫ இப்போதும் சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறதேதெனில், உங்கள் வழிகளின்மேல் உங்கள் மனதை வையுங்கள்.

௬ * நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக்கொண்டுவருகிறீர்கள், நீங்கள் போசித்தும் திருப்தியாகாமலும் போகிறீர்கள், குடித்தும் பரிபூரணமடையாமலும் போகிறீர்கள், உடுப்புடுத்தும் உங்களுக்குக் குளிர் தீர்விடுவதில்லை, கூலியைச் சம்பாதிக்கிறவன் பொத்தலான முடிப்பிலே வைக்கிறதற்குச் சம்பாதிக்கிறான். * ரு. மோசே. ௨௮, ௩௮.

௭ உங்கள் வழிகளின்மேல் உங்கள் மனதை வையுங்களென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௮ நீங்கள் பருவதத்தின்மேல் ஏறிப்போய் மரங்களை வெட்டிவந்து வீட்டைக் கட்டுங்கள், அப்போது அதின்பேரில் நாம் பிரியமாயிருந்து அசிறுமை கனம் அடைவோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௯ அநேகமாய் வருமென்று நீங்கள் காத்துக்கொண்டிருந்தும் இதோ கொஞ்சமாய்ப் போகிறது, நீங்கள் அதை வீட்டுக்குக் கொண்டுவந்தும் நாம் அதை ஊதிப்போடுகிறோம், எதினிமித்தமென்றால் நீங்கள் அவரவர் தன் தன் வீட்டுக்கு ஓடிப்போகக்கொள்ள, நம்முடைய வீடு பாழாய்க் கிடக்கிறதினிமித்தமாகத்தானென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௰ ஆனதுகொண்டு * உங்களமேலிருக்கிற வானம பனியைக்கொடாமலும பூமி பலனைக்கொடாமலும போயிற்று.

* ரு. மோசே. உஅ, உ௰.

௰௧ ஏனெனில நாம நாட்டினமேலும பருவதங்களினமேலுந தானியத்தினமேலும திராட்சரசத்தினமேலும எண்ணெயினமேலும பூமி முளைப்பிக்கிற எல்லாவற்றினமேலும மனுஷரினமேலும மிருகங்களினமேலும, கைகளினபாடனைத்தினமேலும வறட்சியைவரவழைத்தோமென்றார். * ஆமோஸ. ௪, ௯.

௰உ அப்போதுசெயலத்தியேலின குமாரனாகிய செறுபாபேலும யோத்சதாக்கின குமாரனாகிய யோசுவாவென்றபிரதான ஆசாரியனுஞ் சனத்தில மீதியான அனைவருந் தங்களபராபரனாகியகர்த்தருடையசத்தத்திற்குந் தங்களபராபரனாகியகர்த்தர் அனுப்பின ஆகாய தீர்க்கதரிசியினுடைய வார்த்தைகளுக்குங் கேள்வி கொடுத்தார்கள், சனங்கர்த்தருக்குமுன்பாகப்பயந்தது.

௰௩ அப்போது கர்த்தருடைய தூதனாகிய ஆகாயகர்த்தர் தூதனுப்பின வார்த்தையாகச்சனத்திற்கு நாம உங்களோடேயிருப்போமென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றான். * மலகி. உ, எ.

௰௪ கர்த்தர்செயலத்தியேலின குமாரனாகிய செறுபாபேலென்ற யூதாவினுடைய தலைவனின ஆவியையும யோத்சதாக்கின குமாரனாகிய யோசுவாவென்ற பிரதான ஆசாரியனின ஆவியையுஞ் சனத்திலமீதியான எல்லாருடைய ஆவியையுமெழுப்பினார், அவர்களவந்து தங்களபராபரனாகிய சேனைகளுடையகர்த்தரின வீட்டிலேவேலைசெய்தார்கள்.

௰௫ தரியூ இராசாவின இரண்டாமவருஷம அறுமமாதம இருபத்துநாலாந்தேதியிலேதானே.

உ. அதிகாரம்.

[இரண்டாந்தேவாலயமமேசியாவின வருகையினாலே மகிமைப்படுமென்று கர்த்தர் அதைக்கட்டுவிக்கிற யூதருக்குத்திடனசொல்லுவித்தது.]

ஏழாமாதம இருபத்தோராந்தேதியிலே ஆகாய் என்றதீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தருடையவார்த்தையுண்டாயிற்று, அவர் சொன்னதாவது,

உ நீ செயலத்தியேலின குமாரனாகிய செறுபாபேலென்றயூதாவின தலைவனோடும, யோத்சதாக்கினகுமாரனாகிய யோசுவாவென்றபிரதான ஆசாரியனோடுஞ் சனத்திலமீதியானவர்களோடுஞ் சொல்லவேண்டியதேதெனில,

௩ தனமுந்தினமகிமையோடிருந்த இந்தவீட்டைக்கண்டவர்களில உங்களுக்குள்ளேமீதியாயிருக்கிறவனார்? இப்போது இதெப்படியிருக்கிறதென்று காணகிறீர்கள. * அதற்கிது ஒன்றுமில்லையென்று உங்கள்கண்களுக்குக்காணுதல்லவோ? * எஸ்று. ௩, ௰௨.

௪ இப்போதுஞ் செறுபாபேலே திடனாயிரு என்றுகர்த்தர்சொல்லுகிறார், யோத்சதாக்கின குமாரனாகிய யோசுவாவென்ற பிரதான ஆசாரியனே, திடனாயிரு. தேசத்தின எல்லாச்சனமே, திடனாயிருந்து வேலையைநடத்துங்கள என்றுகர்த்தர்சொல்லுகிறார், ஏனெனில் நாம உங்களோடேயிருக்கிறோமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௫ நீங்கள் எகிப்திலிருந்து புறப்படுகிறபோது நாம உங்களோடே உடன்படிக்கைபண்ணின * வார்த்தையோடுங்கூடத்தானே, நமமுடைய ஆவியும உங்களநடுவில நிலைகொண்டிருப்பார், பயப்படாதேயுங்கள. * உ. மோசே. ௧௪, ௰. யோவா. ௧, ௧.

௬ ஏனெனிற சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறதாவது, * இன்னமொருதரங்கொஞ்சப்பொழுதிலேதானே, நாமவானத்தையும பூமியையுஞ் சமுத்திரத்தையும வெட்டாந்தரையையும அசையப்பண்ணி, * எபிரே. ௰உ, உ௬. உஎ.

எ சகல சாதிகளாலும இச்சிக்கப்பட்டவரணடைக்கு வரச்சகலசாதிகளையும அசையப்பண்ணி, இந்தவீட்டைமகிமையாலே நிறையப்பண்ணுவோமென்று சேனைகளுடைய கர்த்தர்சொல்லுகிறார்.

* ஏசாயா. உ, உ. ௩. ௪௯, ௯. எரே. ௩, ௰எ. பலகி. ௩, ௧. ஆக்கா. உ, ௰.

அ வெள்ளியும நமமுடையது பொன்னுமநமமுடையது என்றுசேனைகளுடையகர்த்தர்சொல்லுகிறார்.

௯ இந்தப்பிந்தின வீட்டினமகிமைமுந்தினதினுடையதைப்பார்க்கப் * பெரியதாயிருக்குமென்று சேனைகளுடைய கர்த்தர்சொல்லுகிறார். இவ்விடத்திலே † சமாதானங் கட்டளையிடுவோமென்கிறதைச் சேனைகளுடையகர்த்தர் உரைக்கிறாரென்றுசொல்லென்றார் * மலகி. ௩, ௧. சகரி. ௯, ௰. † யோவான. ௰௪, உஎ.

௰ தரியூவின இரண்டாமவருஷம ஒன்பதாமாதம இருபத்துநாலாந்தேதியிலே ஆகாய என்றதீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தருடைய வார்த்தையுண்டாயிற்று, அவர்சொன்னதாவது,

௰௧ ஒருத்தன தனவஸ்திரத்தின தொங்கலிலே பரிசுத்தமாம்சத்தைச்சுமந்துதன தொங்கலோட்டே அப்பத்தையாகிலும ஒருபதார்த்தத்தையாகிலுந் திராட்சப்பழ

இரசத்தையாகிலும் எண்ணெயையாகிலும் எந்தவகைப் போசனத்தையாகிலுந் தொட்டால் இது பரிசுத்தமாகுமோவென்று நீ ஆசாரியர்களை வேதநியாயத்தைக் கேளென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறாரென்றார்.

௰௨ ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக, பரிசுத்தமாகாதென்றார்கள்.

௰௩ பிணத்தால் தீட்டுப்பட்டவன் இவைகளில் ஏதையாகிலுந் தொட்டால் இது தீட்டுப்படுமோவென்று ஆகாய் பின்னையுங் கேட்டான். ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக, * தீட்டுப்படுமென்றார்கள். * ௩. மோசே. ௫, ௨. ௰௧, ௨௪. ௪. மோசே. ௰௯, ௰௯. ௨௨.

௰௪ அப்பொழுது ஆகாய் உத்தரவுகொடுத்துச் சொன்னதாவது, இப்படியே இந்தச் சனமும் இப்படியே இந்தச் சாதியும் நமக்கு முன்பாக இருக்கின்றதென்று கர்த்தர் சொல்லுகிறார். இப்படியே அவர்களுடைய கைகளின் கிரியையெல்லாமிருக்கின்றது, அவர்கள் அங்கே கொண்டுவந்து படைக்கிறது * தீட்டுப்பட்டிருக்கின்றது * தீத்து. ௧, ௰௫.

௰௫ இப்பொழுதுங் கர்த்தருடைய தேவாலயத்திற் கல்லின்மேற்கல்லு ஏறாததாயிருந்த இந்நாளுக்கு முந்தின காலத்திலே நடந்ததை உங்கள் மனதிலே சிந்தித்துக் கொள்ளுங்கள்.

௰௬ இவைகள் ஆகாததற்குமுன்னே * ஒருத்தன் இருபதுமரக்காலாகப் பார்த்த அம்பாரத்தண்டையிலே வந்தபோது பத்து இருந்தது, ஒருத்தன் ஆலையின்தொட்டியிலைம்பதுகுடமென்ன ஆலையண்டையிலே வந்தபோது இருபதிருந்தது. * ௧, அதி. ௬.

௰௭ * கருக்காயினாலும் விஷப்பனியினாலுங் கன்மழையினாலும் உங்களை உங்கள் கைகளின் வேலையிலெல்லாம் அடித்தோம், ஆனாலும் நம்மண்டைக்குத் திரும்பாதேபோனீர்களென்று கர்த்தர் சொல்லுகிறார். * ௧, ௰௧. ஆமோஸ். ௪, ௯.

௰௮ இப்பொழுதும் இந்நாளுக்கு முந்தின காலத்தில் நடந்ததையுங்கள் மனதிலே சிந்தியுங்கள். ஒன்பதாம் மாதம் இருபத்துநாலாந்தேதியாகிய இந்நாளுக்குக் கர்த்தருடைய தேவாலயத்தின் அஸ்திபாரம் போடப்பட்ட அந்நாளுக்குச் சென்றகாலத்தில் நடந்ததையேயுங்கள் மனதிலே சிந்தியுங்கள்.

௰௯ களஞ்சியத்தில் இன்னம் விதைத்தானியமுண்டோ? திராட்சச்செடியும் அத்திமரமும் மாதளஞ்செடியும் ஒலிவமரங்கூடக் கனிகொடுக்கவில்லையே, இந்நாள் முதற்கொண்டோ உங்களை ஆசீர்வதிப்போமென்று சொல்லுகிறானென்றான்.

௨௰ இருபத்துநாலாந்தேதியாகிய அந்நாளிலே கர்த்தருடைய வார்த்தை பின்னுமிரண்டாம்விசை ஆகாய்க்குண்டாகி அவர் சொன்னதாவது,

௨௰௧ நீ யூதாவின் தலைவனாகிய செருபாபேலோடே சொல்லவேண்டியதேதெனில், * நாம் வானத்தையும் பூமியையும் அசைப்பண்ணி, * ௬. வசனம்.

௨௰௨ இராசியங்களின் இராசாசனத்தைக் கவிழ்த்துச் சாதிகளுடைய இராச்சியங்களின் பலத்தையழித்து இரதங்களையும் அதிலேறியிருக்கிறவர்களையுங் கவிழ்த்துப் போடுவோம், குதிரைகளோடேகூட அவைகளிலேறியிருக்கிறவர்களும் அவனவன் தன் சகோதரன் பட்டயத்தாலே விழுவார்கள்.

௨௰௩ சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறதாவது, செயல்தியேலின் குமாரனாகிய செருபாபேலென்ற நம்முடைய ஊழியக்காரனே. உன்னை நாம் அந்நாளிலே சேர்த்துக்கொண்டு உன்னை முத்திரையாக வைப்போமென்று கர்த்தர் சொல்லுகிறார், ஏனெனில் உன்னைத் தெரிந்துகொண்டோமென்று சேனைகளுடைய கர்த்தர் உரைக்கிறாரென்கிறதைச் சொல்லென்றார்.

ஆகாயின்தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

சகரியாவின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[குணப்படுதலுக்கெழுப்புகிறேயுதல்.]

தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் எட்டாம் மாதத்திலே இத்தோவின் மகனான பெரேகியாவினுடைய குமாரனாகிய * சகரியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தையுண்டாகி அவர் சொன்னதாவது,

௨ கர்த்தர் உங்கள் பிதாக்களின்மேற் கடுங்கோபமாயிருந்தார்.

௩ ஆகையால் நீ அவர்களோடே சொல்லவேண்டியதாவது, சேனைகளுடைய கர்த்தர் உரைக்கிறதேதென்றால், * நம்மண்டைக்குத் திரும்புங்களென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது

ங்கள் அண்டைக்குத் திரும்புவோமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.
* யாக்கோபு. ௪, ௮.

௪ உங்கள் பொல்லாத வழிகளையும் உங்கள் பொல்லாத கிரியைகளையும் விட்டுத் திரும்புங்களென்கிறதைச் சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறாரென்று முந்தின தீர்க்கதரிசிகள் உங்கள் பிதாக்களைப் பார்த்துக் கூப்பிட்டாலும் கேளாமலும் நம்மைக் கவனியாமலும் போன அவர்களைப்போல இரீர்களாகவென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௫ உங்கள் பிதாக்களெங்கே? தீர்க்கதரிசிகளோவென்றால் என்றென்றைக்கும் பிரோடிருப்பார்களோ?

௬ இராவிட்டாலுந் தீர்க்கதரிசிகளாகிய நம்முடைய ஊழியக்காரருக்கு நாங் கட்டளையிட்ட நம்முடைய வார்த்தைகளும் நம்முடைய தீர்மானங்களும் உங்கள் பிதாக்களைப் பிடித்ததில்லையோ? எங்கள் வழிகளின்படியேயும் எங்கள் கிரியைகளின்படியேயுஞ் சேனைகளுடைய கர்த்தர் எங்களுக்குச் செய்ய நினைத்திருந்தாரோ அப்படியே எங்களுக்குச் செய்தாரென்று அவர்கள் திரும்பவந்து சொன்னதில்லையோவென்று சொல்லென்றார்.

குதிரையின்மேலிருந்து மிருதுச்செடிகளுக்குள்ளே தரித்துநின்ற புருஷனின் தரிசனை.

௭ தரியு அரசாண்ட இரண்டாம் வருஷம் சேபாத்மாதமாகிய பதினோராம் மாதம் இருபத்துநாலாந் தேதியிலே கர்த்தருடைய வார்த்தை இத்தோவின் மகனான பெரகியாவினுடைய குமாரன் சகரியாவென்ற தீர்க்கதரிசிக்குண்டாயிற்று. அவன் சொன்னதாவது,

௮ இதோ, இன்று இராத்திரி சிவப்புக் குதிரையின்மேல் ஏறியிருக்கிற ஒரு புருஷனைக் கண்டேன், அவர் பள்ளத்தாக்கிலிருக்கிற மிருதுச்செடிகளுக்குள்ளே தரித்துநின்றார், அவர் பிறகாலே சிவப்பும் மங்கின நிறமும் வெண்மையுமான குதிரைகளிருந்தது.

௯ என் ஆண்டவரே, இவர்களாரென்று கேட்டேன் அப்போது என்னோடே பேசுகிற தூதனானவர், இவர்களாரென்று நான் உனக்குக் காண்பிப்பேனென்று சொன்னார்.

௰ அப்போது மிருதுச்செடிகளுக்குள்ளே தரித்துநிற்கிற அந்தப்புருஷன் பிரத்தியுத்தரமாக, இவர்கள் தேசத்தைச் சுற்றித்திரியக் கர்த்தர் அனுப்பினவர்களென்றார்.

௰௧ பிற்பாடு இவர்கள் மிருதுச்செடிகளுக்குள்ளே தரித்துநின்ற கர்த்தருடைய தூதனாயிருக்கிறவருக்கு மறுமொழியாக நாங்கள் தேசத்தைச் சுற்றித்திரிந்தோம், இதோ தேசமெல்லாந் தணிவும் அமரிக்கையுமாயிருக்கின்றதென்றார்கள்.

௰௨ அப்போது கர்த்தருடைய தூதனானவர் மறுமொழியுரைத்துச் சொன்னதாவது, சேனைகளுடைய கர்த்தாவே, நீர் இந்த எழுபது வருஷமாய்ச் சினம் வைத்த எருசலேமின்பேரிலும் யூதாவினுடைய பட்டணங்களின்பேரிலும் எந்தமட்டும் இரங்காதிருப்பீர்?

௰௩ அப்போது கர்த்தர் என்னோடே பேசின தூதருக்கு நல்வார்த்தைகளையும் ஆறுதலான வார்த்தைகளையும் பிரத்தியுத்தரமாகச் சொன்னார்.

௰௪ அப்போது என்னோடே பேசின தூதர் என்னோடே சொன்னது, நீ கூறவேண்டியதாவது, சேனைகளுடைய கர்த்தருரைக்கிறதேதென்றால், * நாம் எருசலேமுக்காகவும் சீயோனுக்காகவும் மகாவயிராக்கியமடைந்தோம். * அ, உ.

௰௫ சுகித்திருக்கிற சாதிகளுக்கு விரோதமாக நாம் மகாகடுமையுள்ள கோபமாயிருக்கிறோம், ஏனெனில் நாங் கொஞ்சக்கடுமையடைந்தபோது இவர்கள் கேட்டுக்கு உதவியாயிருந்தார்கள்.

௰௬ ஆகையால் * மன உருக்கத்தோடே எருசலேமண்டைக்குத் திரும்பினேமென்று கர்த்தர் சொல்லுகிறார், நம்முடைய வீடு அதிலே கட்டப்படும், எருசலேமின் அளவுநூல் பிடிக்கப்படுமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறாரென்று கூறென்றார்.
* அ, ௩.

௰௭ இன்னம் நம்முடைய பட்டணங்கள் நன்மையினாலே பரம்பிப்போகும், இன்னங் கர்த்தர் சீயோனைத் தேற்றரவுபண்ணுவார் இன்னம் எருசலேமைத் தெரிந்துகொள்ளுவாரென்கிறதைச் சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறாரென்று பின்னையுங் கூறென்றார்

நான்கு கொம்புகளையும் நான்கு கருமான்களையுங் கண்ட தரிசனை.

௰௮ நான் என் கண்களை ஏறெடுக்கும்போது இதோ நான்கு கொம்புகளைக் கண்டேன்.

௰௯ இவைகளென்னவென்று என்னோடே பேசின தூதரைக் கேட்டேன் அப்போது அவர் என்னுடனே இவைகள் யூதாவையும் இஸ்ரவேலையும் எருசலேமையுஞ் சிதறடித்த கொம்புகளென்றார்.

௨௰ பிற்பாடு கர்த்தர் எனக்கு நான்கு கருமான்களைக் காண்பித்தார்.

௨௰௧ இவர்கள் என்னசெய்கிறதற்கு வருகிறார்களென்று கேட்டேன், அப்போது அவர் சொன்னதாவது, ஒருத்தனுந் தன் தலையை ஏறெடுக்கக்கூடாதபடியாய் அந்தக் கொம்புகள் யூதாவைச் சிதறடித்ததே, அவைகளுக்குப் பயமுறுத்துகிறதற்கும், யூதாவின்

தேசத்தைப்பாழ்க்கடிக்கக்கொம்பெடுத்த சாதிகளுடைய கொம்புகளை விழத்தள்ளுகிறதற்கும் இவர்கள் வந்தார்களென்றார்.

உ. அதிகாரம்.

[அளவுநூலைப்பிடித்திருந்த புருஷனின் தரிசனையும், இஸ்ரவேலசனத்திற்குச்சொல்லப்பட்ட ஆறுதலானவார்த்தைகளும்.]

க நான் என்கண்களையேறெடுத்தபோது இதோ, ஒருபுருஷனைக்கண்டேன், அவர் கையிலே அளவுநூலிருந்தது.

உ நீர் எவ்விடத்துக்குப்போகிறீரென்று கேட்டேன், அவர் என்னுடனே எருசலேமின் அகலம் எத்தனையென்றும் அதின் நீளம் எத்தனையென்றும் தெரிய அதையளக்கிறதற்குப் போகிறேனென்றார்.

ங அப்போது இதோ என்னோடேபேசின தூதனானவர் புறப்பட்டுப்போனார், வேறொருதூதன் அவருக்கெதிராகப் புறப்பட்டுவந்தான்.

ச இவரோடேயவர்சொன்னதாவது, நீ ஓடி இந்தவாலிபனோடே சொல்லவேண்டியதேதென்னில் எருசலேம் தன்நடுவிற்கூடும் மனுஷரின்திரளினாலும் மிருகஜீவன்களின் திரளினாலும் வெளிப்பாளயங்களாய்க் குடியேறும்.

ரு * நாம் அதற்குச்சுற்றிலும் அக்கினிமதிலாயிருந்து அதின்நடுவில் மகிமையுண்டாகவிருப்போமென்று கர்த்தர்சொல்லுகிறார். * சு, அ

சு ஓய, நீங்கள் எழும்பி வடதேசத்திலிருந்தோடிவாருங்களென்று கர்த்தர் சொல்லுகிறார், ஏனென்றுகொண்டுசங்கறைய ஆகாயத்து நான்குகாற்றுத்திசைகளிலும் உங்களை நான்சிதறப்பண்ணினோமே.

எ * ஓய, பாபேலகுமாரத்தியண்டையிலே குடியிருக்கிற சீயோனே, தப்பித்துக்கொள். * ஏசாயா. சஅ, உ௰.

அ ஏனென்றாற் பிறபாடு மகிமையுண்டாகுமென்று சேனைகளுடைய கர்த்தர்சொல்லுகிறார், உங்களைக்கொள்ளையிட்டசாதிகளண்டைக்கு நம்மையனுப்பினார், ஏனென்றால் * உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்விழியைத்தொடுகிறான். * சங். ௰எ, அ.

கூ அதேதென்னில் இதோநாம் நமதுகையை யவர்களுக்கு விரோதமாக ஆட்டுகிறோம், அதனால் அவர்கள் தங்களைச் சேவித்தவர்களுக்குக் கொள்ளையாவார்கள், அப்போது, சேனைகளின்கர்த்தர் நம்மையனுப்பினாரென்றறிவீர்கள்.

௰ சீயோன்குமாரத்தியே, கெம்பீரித்துச் சந்தோஷமாயிரு, ஏனென்றால் இதோ, நாம்வந்து உன்நடுவில் வாசம்பண்ணுவோமென்று கர்த்தர்சொல்லுகிறார்.

௰க அந்நாளிலே * அநேகஞ்சாதிகள் கர்த்தரைச்சேர்ந்து நமக்குச்சனமாவார்கள், நாம் உன்நடுவிலேவாசமாயிருப்போம், சேனைகளின்கர்த்தர் நம்மையுன்னண்டைக்கனுப்பினாரென்று அப்போது அறிவாய். * க. மோசே. சக, ல.

௰உ கர்த்தர்பரிசுத்ததேசத்திலே யூதாவைத்தமதுபங்காகச்சுதந்தரித்து * இன்னம் எருசலேமைத்தெரிந்துகொள்ளுவார். * க, ௰எ.

௰ங எல்லாமாமிசமே, கர்த்தருக்குமுன்பாக மவுனமாயிரு, ஏனென்றால் தமதுபரிசுத்தவாசஸ்தலத்திலிருந்து விழித்திருக்கிறாரென்று சொல்லென்றார்.

ங. அதிகாரம்.

[பிரதான ஆசாரியனாகிய யோசுவாவுக்குச் சுத்தவஸ்திரங்களைத் தரிப்பிக்கச்சொல்லி யென்னப்பட்டவரும் கோடிக்கவேண்டியென்னப்பட்டவருமாகிய மேசியாவைக்குறித்து அவனுக்கு வாக்குத்தத்தமருளிச்செய்யப்பட்டதுமான தரிசனை.]

க அவர் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை யெனக்குக்காண்பித்தார், அவர் கர்த்தருடைய தூதனுக்குமுன்பாக நின்றான், சாத்தான் அவனுக்குவிரோதஞ்செய்யும்படிக்கு அவனுடைய வலதுபக்கத்திலே நின்றது.

உ அப்போது கர்த்தர் சாத்தானோடே சொன்னதாவது, * கர்த்தர் உன்னை அதட்டுவாராக, சாத்தானே, எருசலேமைத் தெரிந்துகொண்டகர்த்தர் உன்னை அதட்டுவாராக, இவன் அக்கினியிலிருந்து தப்புவிக்கப்பட்டகொள்ளியல்லவோவென்றார். * யூதா. கூ.

ங யோசுவாவோவென்னில் அழுக்கு வஸ்திரங்களைத்தரித்தவனாய்த் தூதனுக்குமுன்பாக நின்றிருந்தான்.

ச அவர் மறுமொழிகொடுத்து இவன்மேலிருக்கிற அழுக்குவஸ்திரங்களைக்களைந்துபோடுங்களென்று தமக்குமுன்பாக நிற்கிறவர்களோடேசொல்லி இவனோடே சொன்னதாவது, பார், நாம் உன்அக்கிரமத்தை உன்னைவிட்டு நீங்கப்பண்ணி, * உனக்குப்புதுவஸ்திரங்களைத் தரிப்பிக்கிறோமென்றார். * ஏசாயா. சுக, ௰.

ரு அவன் சிரசின்மேற் சுத்தமானகுல்லாவை வைப்பார்களாகவென்றான், அப்போது சுத்தமானகுல்லாவை யவன்சிரசின்மேல் வைத்து அவனுக்குவஸ்திரங்களைத் தரிப்பித்தார்கள், கர்த்தருடைய தூதனானவர் அங்கே நின்றார்.

சு கர்த்தருடைய தூதனானவர் யோசுவாவுக்குச்சாட்சியாக அறிவித்துச் சொன்னதாவது,

௭ சேனைகளுடைய கர்த்தர் உரைக்கிறதேதென்றால், நீ நம்முடைய வழிகளில் நடந்து நம்முடைய காவலைக் காத்தால் நீ நம்முடைய வீட்டை நியாயங்களையும் விசாரிப்பாய், நம்முடைய முற்றங்களையுங் காவல் காப்பாய், * இங்கே நிற்கிறவர்களுக்குள்ளே நடமாடுதலை நாம் உனக்குக் கட்டளையிடுவோம். * சங. கூ௯, ௰௧.

௮ இப்போதும் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவே, நீ கேள். உனக்கு முன்பாக உட்கார்ந்திருக்கிற உன் தோழருங் கூடக் கேட்கக்கடவார்கள். ஏனெனில் இவர்கள் அற்புதமனுஷர், என்னவென்றால் இதோ * கிளையென்னப்பட்டவராகிய நம்முடைய ஊழியக்காரனை நாம் வரப்பண்ணுவோம். * ஏசாயா. ௪, ௨. ௰, ௧.

௯ அதேதென்றால் இதோ, நாம் யோசுவாவுக்கு முன்பாக வைத்த * கல்லு அந்த ஒரே கல்லின்மேல் † ஏழு கண்களுமலைக்கப்பட்டிருக்கின்றது, இதோ, நாம் அதின் சித்திரவேலையைத் தீர்த்து இந்தத் தேசத்தின் அக்கிரமத்தை ‡ ஒரே நாளிலே நீக்கிப்போடுவோமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். * ஏசா. ௨௮, ௰௬. மத். ௨௧, ௪௨. † ௪, ௰. ‡ எபிரே. ௯, ௰௨.

௰ அந்நாளிலே நீங்கள் ஒருத்தரையொருத்தர் * திராட்சச்செடியின்கீழும் அத்திமரத்தின்கீழும் வரவழைப்பீர்களென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறாரென்றார். * மீகாவின். ௪, ௪.

௪. அதிகாரம்.

[பொன்னுள்ள குண்டாவிளக்கையும் அதற்கெண்ணெயை வார்க்கப்பண்ணுகிற இரண்டு ஒலிவமரங்களையுங் கண்ட தரிசனை.]

என்னோடே பேசின தூதர் திரும்பவந்து நித்திரைபண்ணுகிறவனை எழுப்புகிறதுபோலென்னை யெழுப்பி,

௨ என்னுடனே நீ காண்கிறதென்னவென்று, நான் சொன்னதாவது, இதோ முழுதும் பொன்னுள்ள குண்டாவிளக்கைக் காண்கிறேன், அதின் சிரசின்மேல் அதின் கிண்ணியும் அதின்மேல் அதின் ஏழுதீபங்களும் அதிலுள்ள சிரசின்மேலிருக்கிற தீபங்களுக்குப்போகிற ஏழேழு குழாய்களுமிருக்கிறது.

௩ அதற்குமேலாக இரண்டு ஒலிவமரங்கள் ஒன்று கிண்ணிக்கு வலதுபுறமாகவும் ஒன்று அதற்கிடதுபுறமாகவுமிருக்கிறதென்றேன்.

௪ நான் என்னோடே பேசின தூதரோடே பேசிக்கொண்டு ஆண்டவரே, இதேதென்றுகேட்டேன்,

௫ அப்போது என்னோடே பேசின தூதர் மறுமொழியாக என்னோடே இதேதென்றுனக்குத் தெரியாதோவென்றார், ஆண்டவரே எனக்குத் தெரியாதென்றேன்.

௬ அப்போது அவர் எனக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது, செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை ஏதென்றால் பலத்தினாலுமல்ல வல்லமையினாலுமல்ல, நம்முடைய ஆவியினாலே ஆகுமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௭ செருபாபேலுக்கு முன்பாக நிற்கிற பெரியபருவதமே! நீ எம்மாத்திரம்? நீ யோர்க்குத் தரையாவாய், பிரதானமான கல்லை அவன் பிறப்பிப்பான், அதற்குக் கிருபையுண்டாக்கக் கிருபையுண்டாகவென்று ஆர்ப்பரிப்பார்களென்றார்.

௮ பின்னையுங் கர்த்தருடைய வார்த்தையெனக்குண்டாகி அவர் சொன்னதாவது,

௯ செருபாபேலின் கைகள் இந்தவீட்டுக்கஸ்திபாரம்போட்டது, அவன் கைகள் அதை முடித்துத் தீர்க்கிறதுமாயிருக்கும். அப்படியே சேனைகளுடைய கர்த்தர் நம்மை உங்களண்டைக்கனுப்பினாரென்றறிவாய்.

௰ ஏனெனில் கொஞ்சமான துவக்கங்களின் நாளை ஆர் அசட்டைபண்ணலாம்? பூமியெங்குஞ் சுற்றிப்பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய இந்த * ஏழுகண்களுஞ் செருபாபேலின் கையிலிருக்கிற வெள்ளியத்தூக்கைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறதென்றார். * ௩, ௯. அபி. ௫, ௬.

௰௧ நான் அப்புறம் பேசிக்கொண்டு குண்டாவிளக்குக்கு வலதுபுறமாகவும் அதற்கிடதுபுறமாகவுமிருக்கிற இந்த இரண்டு ஒலிவமரங்கள் ஏதென்று அவரைக் கேட்டேன்.

௰௨ மறுபடியும் நான் அவரைக் கேட்டுச் சொன்னதாவது, பொன்னுள்ள இரண்டு குழாய்களண்டையிலே தொங்கப் பொன்னிறமான எண்ணெயைத் தங்களிலிருந்து இறங்கப்பண்ணுகிறவைகளாகிய ஒலிவமரங்களின் இரண்டு கிளைகள் ஏதென்றுங் கேட்டேன்.

௰௩ அவரென்னோடே, இவைகளேதென்றுனக்குத் தெரியாதோவென்றார். ஆண்டவரே! எனக்குத் தெரியாதென்றேன்.

௰௪ அப்போது அவர் சொன்னதாவது, இவைகள் பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவரண்டையிலே நிற்கிற * இரண்டு எண்ணெயாட்களென்றார். * அபி. ௰௧, ௪.

௫. அதிகாரம்.

[பறக்கிறபுஸ்தகச்சுருளின் தரிசனை.]

நான் திரும்பியென் கண்களையேறெடுக்கையில் இதோ பறக்கிற ஒருபுஸ்தகச் சுரு

லேக்கணடேன.

௨ என்னுடனே, நீகாணகிறதென்னவென்றார். பறக்கற ஒருபுஸ்தகச்சுருளை நான்காண்கிறேன, அதின்நீளம இருபதுமுழமும அதின அகலம பததுமுழமுமாயிருக்கிறதென்றேன.

௩ அபபோது அவர் என்னோடேசொன்னதாவது, இதுதேசமெங்குமபுறப்படடுப்போகிற சாபம், ஏனெனில எந்தத்திருடனும அதிலொருபுறத்திலிருக்கிறதின்படியே அறுக்கபபடடுப் போகிறான. ஆணையிடுகிற எவனும அதில மறுபுறத்திலிருக்கிறதின்படியே அறுக்கபபடடுப்போகிறான.

௪ அதுதிருடனவீடடிலும நமது நாமத்தைககொண்டுபொய்யாணையிடுகிறவனவீடடிலும வந்து, அவனவீடடின நடுவிலேதங்கி அதைஅதின மரங்களோடும அதின கலலுகளோடுங்கூட நிர்மூலமாக்குகிறதறகாக அதைப புறப்படடுப்போகபபணணுவேனென்று சேனைகளின கர்த்தர் சொலலுகிறாரென்றார்.

மரக்காலிலேயுட்கார்ந்திருந்த பாவிலொளிய வேசியென்ற ஸ்திரியின்தரிசனை.

௫ பிறகு என்னோடேபேசினதூதர்புறப்படடு என்னோடேசொன்னதாவது, நீ உன் கண்களையேறெடுத்துப் புறப்படுகிறதாகிய அது என்னவென்று பாரென்றார்.

௬ அது என்னவென்றுகேட்டேன. அப்போது அவர் அதுபுறப்படுகிறதாகியவொருமரக்காலென்றார். அபபுறம அவர்சொன்னதாவது, பூமியெங்கும அதுதான அவர்களுடையகண்ணோக்கமென்றார்.

௭ இதோ, ஒருதாலந்துநிறையான ஈயமூடிதூக்கிவரப்படடது மரக்காலின நடுவிலேயொன்றால உட்கார்ந்த ஒரு ஸ்திரியிருந்தாள.

௮ அபபோது அவர், இவள * அக்கிரமமானவளென்றுசொலலியவளை மரக்காலுக்குளளேதளளி, ஈயக்கடடியை யதினவாயிலேபோடடார். * ௨. தெச. ௨, ௭. அபி. ௰எ, ௫.

௯ நான என்கண்களையேறெடுக்கிறபோது இதோ புறப்படுகிற இரண்டுஸ்திரிகளைக்கண்டேன, அவர்கள செடடைகளிற்காற்றிருந்தது, அந்தச்செடடைகள் அவர்களுக்குச செங்கால்நாரையின செடடைகளுக்கொத்த செடடைகளிருந்தது, இவர்கள மரக்காலைப்பூமிக்கும வானத்திறகுமநடுவாய்த்தூக்கிப்போனார்கள.

௰ நான என்னோடேபேசினதூதனையிவர்கள மரக்காலையெங்கேகொண்டுபோகிறார்களென்றுகேட்டேன.

௰௧ அப்போது அவர் என்னோடேசொன்னதாவது, * சிநேயார்தேசத்திலேயதற்கொரு வீட்டைககடடும்படிக்கு அதைக்கொண்டுபோகிறார்கள, அங்கேயது நிறுத்தப்படடுத்தன்னிலையிலேவைக்கப்படுமென்றார். * ௧. மோசே. ௰௧, ௨௧.

௬. அதிகாரம்.

[நான்கு இரதங்களின்தரிசனை.]

நான் திரும்பி என்கண்களையேறெடுக்கையில இதோ, இரண்டுபருவதங்களின்நடுவாகப்புறப்படுகிறநான்குஇரதங்களைக்கண்டேன, அந்தப்பருவதங்கள வெண்கலப்பருவதங்களாயிருந்தது.

௨ முதலாம் இரதத்திற சிவப்புக்குதிரைகளும இரண்டாமஇரதத்திற கறுப்புக்குதிரைகளும,

௩ மூன்றும இரதத்தில வெளளைக்குதிரைகளும, நான்காம இரதத்திற புளளிபுளளியானசெங்குதிரைகளுமபூடடியிருந்தது.

௪ நான என்னோடேபேசின தூதனை, என ஆண்டவரே, இவைகளென்னவென்று கேட்டேன.

௫ அபபோது அந்தத்தூதர் எனக்குப் பிரததியுத்தரமாக * இவைகள பூமிக்கெலலாம ஆண்டவராயிருக்கிறவருக்கு முன்பாக நின்றுபுறப்படுகிற வானத்தினுடைய நான்குகாற்றுகளென்றார். * சகரி. ௪, ௰.

௬ ஒன்றிலே பூடடப்படடிருந்த கறுப்புக்குதிரைகள வடதேசத்திற்குப்புறப்படடுப்போயிறறு, வெண்மையானவைகளவைகளினபிறகாலேபுறப்படடுப்போயிறறு, புளளிபுளளியானவைகள தென்தேசத்திற்குப் புறப்படடுப்போயிறறு.

௭ சிவப்புக்குதிரைகளோவென்றால் பூமியிற் சுற்றித்திரியப பார்க்கும்படிக்குப் புறப்படடது. போய்ப பூமியிற்சுற்றித்திரியுங்களென்றார், அப்படியே பூமியிற்சுற்றித்திரிந்தது.

௮ அவர் என்னைக்கூப்பிடடு, பார், வடதேசத்திற்குப புறப்படடுப்போனவைகள் என்னுடையகோபத்தைவடதேசத்திலே சாந்தப்படுத்துகிறதென்று என்னோடே சொன்னார்.

ஞானதேவாலயத்தைக் கடடப்போகிற இராசாவும ஆசாரியருமாகிய மேசியாவைககுறித்துச சொலலப்பட்ட தீர்க்கதரிசனம்.

௯ கர்த்தருடையவார்த்தையெனக்குண்டாகி அவர்சொன்னதாவது,

௰ சிறையிருப்பின மனுஷராகிய எல்தாயும தொபியாவும எதாயாவும பாபேலிலிருந்துவந்திருக்கும அந்நாளிலே நீபோய்ச்செப்பனியாவின்குமாரனாகிய யோசியாவினவீட்டுக்குட்பிரவேசித்து,

௰௧ அங்கே அவர்கள் கையிலே வெள்ளியையும் பொன்னையும் வாங்கிக் கிரீடங்களைச் செய்வித்து, யோசதாக்கின் குமாரனாகிய யோசுவா என்னும் பிரதான ஆசாரியன் சிரசிலே வைத்து,

௰௨ அவனோடே சொல்லவேண்டியதாவது, சேனைகளுடைய கர்த்தர் உரைக்கிறதென்னவென்றால், இதோ, ஒரு புருஷன், அவருடைய * நாமம் கிளை என்னப்படுகிறது, அவர் தம்முடைய தாபரத்திலிருந்து முளைத்தெழும்பி † கர்த்தருடைய தேவாலயத்தைக் கட்டுவார். * ௩, ௮. ஏசா. ௰௧, ௧. † மத். ௰௬, ௰௮ ௨. கொரி. ௬. ௰௬.

௰௩ அவரே கர்த்தருடைய தேவாலயத்தைக் கட்டுவார், அவர் மகத்துவந்தரித்துக்கொண்டு, * தம்முடைய சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து ஆண்டு, தம்முடைய சிங்காசனத்தின்மேல் ஆசாரியராயிருப்பார், இவ்விருவருக்கும் சமாதானத்தின் ஆலோசனையிருக்கும். * சங். ௱௰, ௧, ௪.

௰௪ இந்தக் கிரீடங்களோவென்றால் கர்த்தருடைய தேவாலயத்திலே ஏலேமுக்கும் தொபியாவுக்கும் எதாயாவுக்கும் செப்பனியாவின் குமாரனாகிய ஏனுக்கும் நினைப்பூட்டுதலுக்கென்று இருப்பதாக.

௰௫ தூரத்திலுள்ளவர்கள் வந்து கர்த்தருடைய தேவாலயத்திலே கூடக் கட்டுவார்கள், அப்பொழுது சேனைகளின் கர்த்தர் என்னை உங்களண்டைக்கு அனுப்பினாரென்று அறிவீர்கள். நீங்கள் உங்கள் பராபரனுடைய கர்த்தரின் சத்தத்தைக் கேட்கவே கேட்டீர்களானால் இப்படியாகுமென்று சொல் என்றார்.

௭. அதிகாரம்.

[மாயமான உபவாசத்தைக் கடிந்துகொண்டது.]

தரியு இராசா அரசாண்ட நான்காம் வருஷம் கிஸ்லேயென்னப்பட்ட ஒன்பதாம் மாதம் நான்காந்தேதியிலே சகரியாவுக்குக் கர்த்தருடைய வார்த்தையுண்டாயிற்று.

௨ ஏனென்றால் கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணவும்,

௩ நாங்கள் இத்தனை வருஷமளவாயிலே செய்ததுபோலே ஐந்தாம் மாஸத்திலே அழுது தவம்பண்ணவேண்டுமோவென்று சேனைகளுடைய கர்த்தரின் வீட்டிலிருந்த ஆசாரியர்களையுந் தீர்க்கதரிசிகளையுங் கேட்கவுஞ் சரேத்சேரும், ரேகெம் மேலேகும் அவனுடைய மனுஷரும் பராபரனுடைய வீட்டுக்கனுப்பப்பட்டார்கள்.

௪ அப்பொழுது சேனைகளுடைய கர்த்தரின் வார்த்தையெனக்குண்டாகி அவர் சொன்னதாவது,

௫ நீ தேசத்தின் எல்லாச் சனத்தோடும் ஆசாரியர்களோடுஞ் சொல்லவேண்டியதேதென்றால், நீங்கள் இந்த எழுபது வருஷமாக * ஐந்தாம் மாஸத்திலும் ஏழாம் மாஸத்திலும் † உபவாசம்பண்ணிப் புலம்பினபோது நீங்கள் நமக்குத்தானே உபவாசம்பண்ணினீர்களோ. * ௮, ௰௯. ஏசாயா. ௫௮, ௫.

௬ நீங்கள் புசிக்கிறபோதுங் குடிக்கிறபோதும், நீங்களாய்ப் புசிக்கிறீர்கள் நீங்களாய்க் குடிக்கிறீர்களல்லவோ.

௭ எருசலேமும் அதைச்சுற்றிலும் அதினுடைய பட்டணங்களுங் குடியேறியிருந்து சுகமாய் வாழ்ந்து தெற்குச்சீமையும் பள்ளத்தரைச்சீமையுங் குடியேறியிருக்கிறதுமான முந்தின காலத்திலிருந்த தீர்க்கதரிசிகளைக்கொண்டு கர்த்தர் பிரசங்கிப்பித்த வார்த்தைகள் இவைகள்தானல்லவோவென்று சொல்லென்றார்.

[யூதர் தங்கள் முரட்டாட்டத்தினாலே தங்களுக்குந் தங்கள் தேசத்திற்கும் கேடுவினையைச் சம்பாதித்தார்களென்பது.]

௮ கர்த்தருடைய வார்த்தை சகரியாவுக்குண்டாகி அவர் சொன்னதாவது,

௯ சேனைகளுடைய கர்த்தர் உரைத்ததேதென்றால் * நீங்கள் உண்மையாய் நியாயந்தீர்த்து, அவனவன் தன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமுஞ் செய்து, * ௮, ௰௬.

௰ * விதவையையுந் திக்கற்றவனையும் பரதேசியையுஞ் சிறுமையானவனையும் ஒடுக்காமலும் ஒருத்தனுந் தன் சகோதரனுக்கு விரோதமாய் உங்கள் இருதயத்திற் பொல்லாப்பை நினையாமலுமிருங்களென்றார்.
* ௨. மோ. ௨௨, ௨௧-௨௪. ௩. மோ. ௰௯, ௩௩. ௫. மோ. ௨௪, ௰௭.

௰௧ அவர்களோவென்றால் கவனிக்க மனதில்லாமல், அடங்காத தோளைக்காட்டிக் கேளாதபடிக்குத் தங்கள் செவிகளை யழுத்தப்பண்ணி,

௰௨ வேதத்தையுஞ் சேனைகளுடைய கர்த்தர் முந்தின தீர்க்கதரிசிகளைக்கொண்டு அனுப்பின தம்முடைய ஆவியோடே கூடிய வார்த்தைகளையுங் கேளாதபடிக்கு வயிரமாக்கினார்கள், ஆகையால் மகா கடுங்கோபஞ் சேனைகளுடைய கர்த்தரிடத்திலிருந்துண்டாயிற்று. * ஏசாயா. ௪௮, ௪.

௰௩ ஆனதுகொண்டு நாங்கூப்பிட்டபோது, அவர்களெப்படிக் கேளாமற்போனார்களோ அப்படியவர்கள் கூப்பிட்டபோது நானுங் கேளாதே போய்,

௰௪ அவர்களையவர்கள் அறியாத புறச்சாதிகளுக்குள்ளே பறக்கடித்தேன், அப்போது அவர்கள் பின்வைத்துப்போன தேசம் போக்குவரத்தில்லாதபடி பாழாயிற்று, அப்படியே இச்சிக்கப்பட்ட தேசத்தைப் பாழாய்ப்போகப்பண்ணினார்களென்றார்.

அ. அதிகாரம்.

[பூதருக்குச்செய்யப்பட்டதேவ உபகாரங்களினவாக்குத்தத்தம.]

சேனைகளுடைய கர்த்தரினவார்த்தையுண்டாகி அவர்சொன்னதாவது,

உ நானு சியோனுக்காகமகா எரிச்சலான வைராக்கியம அடைந்தோம, அதற்காக மகா உக்கிரமான வைராக்கியம நமக்குண்டாயிற்றென்று சேனைகளின கர்த்தர் உரைக்கிறுர்.

ந * நானு சியோனண்டைக்குத்திரும்பி எருசலேமின நடுவிலே வாசமபண்ணுவோம, எருசலேம உணமையினபட்டணமென்றும் சேனைகளுடைய கர்த்தரின பருவதம பரிசுத்தபருவதமென்றும அழைக்கப்படுமென்று கர்த்தர்சொலலுகிறுர். * க, யகூ. உ. யஉ,

ச இன்னம எருசலேமின வீதிகளில முதிர்ந்த வயதினுலேதன் தன்தடியைத்தங்களகைகளிற்பிடித்திருக்கிறகிழவருங கிழவிகளுங குடியிருப்பார்கள.

ரு இன்னம பட்டணத்தின தெருக்களிலே விளையாடுகிற ஆணபிளளைகளாலும பெணபிளளைகளாலும அதினவீதிகள நிறைந்திருக்குமென்று சேனைகளுடைய கர்த்தர் சொலலுகிறுர்.

சூ சேனைகளுடையகர்த்தர்சொலலுகிறதேதெனில, அது இந்தச்சனத்தில மீதியானவர்களின பார்வைக்கு இந்நாட்களில ஆச்சரியமாயிருந்தால * நமதுபார்வைக்கும ஆச்சரியமாயிருக்குமோ வென்று சேனைகளுடைய கர்த்தர்சொலலுகிறுர். * எரோமி. கக, உ. ஆகககா. க, கஎ.

எ இதோ, சூரியனுதிக்கிற திசையான தேசத்திலும அது அஸதமிக்கிறதிசையான தேசத்திலுமிருக்கிற நமதுசனத்தை நாம இரட்சித்து,

அ அவர்கள எருசலேமின நடுவிலேகுடியிருக்க அவர்களை அழைத்துவருவோம, உண்மையும நீதியுமாய் அவர்கள நமக்குச்சனமுமாயிருப்பார்கள, நாம் அவர்களுக்குப்பராபரனுமாயிருப்போமென்று சேனைகளுடையகர்த்தர்சொலலுகிறுர். *எரோமியா. உச, எ. கக, கங.

தேவாலயத்தை முடியக்கட்டத்திடனசொலலி, நீதிநியாயஞ்செய்ய எழுப்பினது.

கூ சேனைகளுடைய கர்த்தரினவீடாகிய தேவாலயங்கட்டப்படுமபடிக்கு அதின அஸதிபாரங்கள போடப்பட்டநாள முதற்கொண்டிருக்கிற தீர்க்கதரிசிகளின வாயினுலேபிறந்தவார்த்தைகளை முந்நாட்களிற கேட்டுவருகிறவர்களே, உங்களகைகள திடப்படக்கடவதென்று சேனைகளுடைய கர்த்தர்சொலலுகிறுர்.

ய ஏனெனில * இந்நாட்களுக்கு முனனே மனுஷனுடைய வேலையாற்பலனிலலையிருக்க சீவனுடைய வேலையாற்பலனுமிலலை, போகிறவனுக்கும் வருகிறவனுக்கும் நெருக்கிடையினுலேசமாதானமுமிலலை, எலலாமனுஷரையும ஒனருக்கொனறுவிரோதமாய்ப்போக விட்டோம. * ஆகா. க, கூ. ய. உ, யகூ. யஎ.

யக இப்போதோவெனில இந்தச்சனத்தில மீதியானவர்களுக்கு நாம் முந்தின நாட்களில இருந்ததுபோலஇரோமென்று சேனைகளுடைய கர்த்தர்சொலலுகிறுர்.

யஉ அதேதென்றால விதைப்புச்சமாதானமுளளதாயிருக்கும, திராட்சச்செடிதனகனியைத்தரும பூமிதனபலனைத்தரும, வானந்தனபனியைத்தரும, இந்தச்சனத்தில மீதியானவர்கள இவைஎலலாவற்றையும சுதந்தரிக்கக்கட்டளையிடுவோம.

யங சாபவிப்பதேதெனில யூதாவீட்டாரும இஸரவேலவீட்டாருமாகிய நீங்கள புறச்சாதிகளுக்குளளே சாபமாயிருந்ததுபோலே, நாம் உங்களை நீங்கள ஆசீர்வாதமாயிருக்கும்படிக்கு இரட்சிப்போம, நீங்கள பயப்படாதேயுங்கள, உங்களகைகள திடப்படக்கடவது. * ஏசாயா. கூ, க.

யச ஏனெனிற்சேனைகளுடைய கர்த்தர் சொலலுகிறதாவது, உங்கள பிதாக்கள நமக்குக்கடுங்கோபம உண்டாக்கையிலநாம உங்களுக்குப்பொலலாப்புச்செய்ய நினைத்து, மனஸதாபப்படாமலும்போனதுபோலே.

யரு எருசலேமுக்கும் யூதாவுக்கும நன்மைசெய்ய இந்தநாட்களிலதிரும்ப நினைத்தோம், பயப்படாதேயுங்கள.

யகூ நீங்கள செய்யவேண்டியகாரியங்களேதென்றால, அவனவன தனக்கடுத்தவனோடே * உணமையைப்பேசுங்கள, உங்களவாசலகளில † உணமையுமாய்ச் சமாதான நியாயமுமாய் நியாயந்தீருங்கள.

* எபேசி. ச, உரு. † எ, கூ.

யஎ * ஒருத்தனுந்தனக்கடுத்தவனுக்கு விரோதமாய் உங்களிருதயத்திற பொலலாப்பை நினையாமலும, பொய்யாணையைநேசியாமலுமிருங்கள, ஏனெனில இவைகளெலலாம நாம்பகைக்கிறகாரியங்களென்று கர்த்தர்சொலலுகிறுர். * எ, ய.

புறச்சாதிகளுடையகுணப்படுதேலின வாக்குத்தத்தம.

யஅ சேனைகளுடைய கர்த்தரின வார்த்தையெனக்குணடாகி, அவர் சொன்னதாவது,

யகூ நாலகாமாதத்தின உபவாசமும, ஐந்தாமாதத்தின உபவாசமும, ஏழாமாதத்

தின உபவாசமும, பத்தாமாதத்தின உபவாசமும, யூதாவீட்டாருக்கு மகிழ்ச்சியாகவுஞ் சந்தோஷமாகவும நலல பணடிகைகளாகவும்மாறிபபோகும ஆகையால, உணமையையுஞ் சமாதானத்தையுஞ்சிநேகியுஙகளென்று சேனைகளின கர்த்தர் சொலலுகிறார். * எ, ௯.

௨0 இன்னுஞ்சனசதனஙகளும அநேகம பட்டணஙகளின்குடிகளும வருவதுணடென்று சேனைகளுடைய கர்த்தர் சொலலுகிறார்.

௨௧ நாங கர்த்தருடையசமுகத்தில விணணபபமபணணவுஞ் சேனைகளின்கர்த்தரைத்தேடவுமபோவோமவாருஙகள, நாஙகளும போவோமென்று, ஒருபட்டணத்தின குடிகள மறுபட்டணத்தின குடிகளோடேபோய்ச்சொலலுவார்கள. * ஏசாயா. ௨, ௩.

௨௨ அநேக சனசதனஙகளும பலத்த சாதிகளும எருசலேமிலே சேனைகளுடைய கர்த்தரைத்தேடவும, கர்த்தருடைய சமுகத்தில விணணபபமபணணவுமவருவார்கள.

௨௩ அந்நாட்களிற புறச்சாதிகளான சகலவிதபாஷைக்காரரிற பத்துமனுஷர்ஒரு யூதமனுஷனுடைய வஸதிரத்தொஙகலைப பிடித்து உஙகளோடே கூடபபோவோம தேவனுறற பராபரன் உஙகளோடேயிருக்கிறாரென்றதைக் கேட்டோமென்று சொலலி, அவனைபபிடிபபார்களென்று சேனைகளுடையகர்த்தர்சொலலுகிறாரென்றார்.

௯. அதிகாரம்.

[புறச்சாதியாரின ஆககினையையும அவர்களுணடபணடுதலையும முன அறிவித்ததீர்க்கதரிசனம.]

௧ ஆதிருக்தேசத்திறகுவிரோதமானதுந தமஸகுவினமேலவந்து தஙகுவதுமானகர்த்தருடைய வார்த்தையின சுமையுணடு, ஏனெனறால மனுஷரினமேலும இஸரவேலுடைய சகலகோத்திரஙகளினமேலுங கர்த்தருக்குக்கணணோக்கமுணடாயிருந்தது.

௨ ஆமாத்தும மிகவுமஞானமுளள தீருவுஞ் சீதோனுஙகூட, அதின எலலைக்குளளாயிருக்கும.

௩ தீருவு தனக்குஅரணைக்கட்டிமணணை[illegible]தின வெளளியையும வீதிகளின சேறறை[illegible]பொனனையுஞ் சேர்த்துவைத்தது.

௪ இதோ, ஆணடவர் அதைத்தேயழியாக்கிச்சமுத்திரத்தில அதினபலத்தைமுறித்துபபோடுவார், அதுவோவெனறால அக்கினிக்கிரையாகும.

௫ அஸகலோனுங காத்சாவும எக்கிறோனுஙகூட அதைக்கணடு பயபபட்டுமிகுந்ததிகிலடையும, ஏனெனில அவைகளின நமபிக்கைவெட்கபபட்டுபபோகும, காத்சாவில இராசா அழிந்துபோவான, அஸகலோனகுடியறறிருக்கும.

௬ அஸதோத்திலவேசிபபிளளைகள குடியிருபபார்கள, நாமபெலிஸத்தரினமுக்கியத்தைச்சஙகாரமபணணி,

௭ அவனுடைய இரத்தபபழிகளையவன வாயிலும அவனுடையஅருவருபபுகளையவனபல்லுக்களின நடுவிலுமஇராதபடிக்கு நீக்கிபபோடுவோம, அவனுந்தமமுடைய பராபரனுக்கென்று மீதியாகவைக்கபபட்டு யூதாவிலே பிரபுபபோலிருபபான, எக்கிறோனன எபூசியனைபபோலுமிருபபான.

[யூதாவையாதரிபபதையும அவர்களை மேசியாவைக்கொணடு மீட்பதையுங்குறித்துப பணணினவாக்குத்தத்தம.]

௮ இராணுவத்திறகும, போகிறவர்களுக்கும வருகிறவர்களுக்கும விலக்கமாயக் காக்க * நமதுவீட்டைச்சுறறிலும பாளயமபோடுவோம, இனியிடுக்கபபிடிக்கிறவன அவர்களமேற கடந்துவருவதிலலை, ஏனெனில இபபோது அதை நமமுடையக் கணகளினாலே நோக்கியிருக்கிறோம.
* ௨. அதி, ௯.

௯ சீயோனகுமாரத்தியே, மிகவுஙகளிகூரு, எருசலேமகுமாரத்தியே, கெமபீரி, இதோ, உனஇராசாஉனக்குவருவார், அவர்நீதியுளளவரும இரட்சிக்கிறவருந தாழமையானவருஙகழுதையினமேலுங கழுதைக்குட்டியாகிய மறியினமேலும ஏறிவருகிறவருமாயிருக்கிறார். * ஏசாயா. ௬௨, ௰௧. செபபனியா. ௩, ௰௪. மத்தேயு. ௨௧, ௫. ௯. யோவான. ௰௨, ௰௪. ௰௫.

௰ ஏனெனில எபபிராயீமில இரதஙகளையும எருசலேமிற குதிரைகளையும அறறுபபோகபபணணுவோம, யுத்தவிலலுமிலலாதேபோகும, * அவர்சாதிகளுக்குச்சமாதானமெனபார், அவருடையஇராசசியம ஒருசமுத்திரந்துவக்கி மறுசமுத்திரபரியந்தமும, நதிதுவக்கிப்பூமியின எலலைகளபரியந்தமுமபோகும. * சஙகீ. எ௨, ௩. எ. அ.

௰௧ உனக்குநானசெயவதேதெனில * தணணீரிலலாதகுழியிலே யடைபபட்டிருக்கிற உனனுடையவர்களை நாம உனஉடனபடிக்கையின இரத்தத்தினாலே விடுதலைபணணுவோம. * கலாத்தியர். ௩, ௨. ௬.

௰௨ நமபிக்கையோடேயடைப்பட்டவர்களே, அரணுக்குத்திருமபுஙகள, இரட்டிப்பான நனமையையும அறிவிப்பானையினறைக்கு உனக்குக் கொடுக்கபபோகிறோம்.

[யூதாவைக்கொணடு புறச்சாதிகளைத் திருப்புவதைக்குறித்துப்பணணினவாக்குத்தத்தம்.]

௧௩ அதேதென்னில நாம் யூதாவை நமக்கு நாணேற்றி எப்பிராயீமிலே வில்லை நிரப்பி சீயோனே உன்னுடைய புத்திரரைக் கிரேக்கதேசப் புத்திரருக்கு விரோதமாக எழுப்பி உன்னைப் பராக்கிரமசாலியின் பட்டயத்தைப்போலாக்குவோம்.

௧௪ அவர்கள்மீதிலே கர்த்தர் காணப்படுவார். அவருடைய அம்பு மின்னலைப்போலப் புறப்படும், கர்த்தராகிய ஆண்டவர் எக்காளமூதித் தெற்றுத்திசையின் பெருங்காற்றோடே நடந்துவருவார்.

௧௫ சேனைகளுடைய கர்த்தர் அவர்களைக் காப்பாற்றுவார் அவர்கள் பட்சித்துக் கவண்டிலக்கல்லுகளைக் கீழ்ப்படுத்திக்கொள்ளுவார்கள், அவர்கள் குடித்து மதுபானஞ்சாலானதுபோல இரைந்து, கலசங்களைப்போலேயும் பலிபீடத்தின் கொடிகளைப்போலேயும் நிறைந்திருப்பார்கள்.

௧௬ தம்முடைய சனமான மந்தையாகிய அவர்களையவர்களுடைய பராபரனாகிய கர்த்தர் அந்நாளில் ரட்சிப்பார், அதேதென்னில அவருடைய தேசத்தில் அவர்கள் கொடியாக ஏற்றப்பட்ட கிரீடக்கல்லுகளாயிருப்பார்கள்.

௧௭ என்னென்னில அவருடைய தயவு எத்தனை பெரியது? அவருடைய சவுந்தரியம் எத்தனை பெரியது? தானியம் வாலிபரையுந் திராட்சப்பழ இரசங் கன்னியாஸ்திரிகளையும் வளரப்பண்ணும்.

௰. அதிகாரம்.

[யூதசனத்திற்கு அருளிச்செய்யப்பட்டவாக்குத்தத்தம்.]

பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தராகக் கேளுங்கள், அப்போது கர்த்தர் மின்னல்மேகங்களையுண்டாக்கி வெளியிலே யவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையிறக்கங்களைக் கட்டளையிடுவார்.
* சங்கீதம். ௬௮, ௯.

௨ ஏனென்றால் க[illegible]ங்கள் மாயையைச் சொல்லிற்று, குறிசொல்லுகிறவர்கள் பொய்யைத் தரிசித்தார்கள், சொப்பனக்காரர் வீணானதைச் சொல்லி, மாயையாய்த் தேற்றரவுபண்ணினார்கள், ஆகையால் ஆடுகளைப்போலே தெறிந்து * மேய்ப்பனில்லாததினாலே சிறுமைப்பட்டார்கள். * மத்தேயு. ௯, ௩௬.

௩ மேய்ப்பருக்கு விரோதமாக நம்முடைய கோபம் மூண்டது, கடாக்களுக்கு விரோதமாக விசாரிப்பாயிருப்போம், ஏனென்றால் சேனைகளுடைய கர்த்தர் யூதாவீட்டாராகிய தம்முடைய மந்தையை விசாரித்து அவர்களை யுத்தத்திலே தம்முடைய மகத்துவமுள்ள குதிரையாக நிறுத்துவார்.

௪ அவர்களிலிருந்து கோடிக்கல்லும் அவர்களிலிருந்து கூடாரக்கச்சமும், அவர்களிலிருந்து யுத்தவில்லுமவரும், அவர்களிலிருந்து ஆளுகிறவரும் ஏகமாய்ப் புறப்படுவார்கள்.

௫ யுத்தத்திலே யவர்கள் வீதிகளின் சேற்றை மிதிக்கிற பராக்கிரமசாலிகளைப்போலிருந்து யுத்தம்பண்ணுவார்கள், ஏனென்றால் கர்த்தர் அவர்களோடே கூடயிருப்பார், குதிரைகளின்மேலேறிவருகிறவர்கள் வெட்கப்படுவார்கள்.

௬ நாம் யூதாவீட்டாரைப் பலப்படுத்தி, யோசேப்வீட்டாரை ரட்சித்து, அவர்களைத் திரும்பநிலைக்கப்பண்ணுவோம், ஏனென்றால் அவர்களுக்கிரங்கினோம், அவர்கள் நம்மால் ஒருக்காலும் தள்ளிவிடப்படாதவர்களைப்போலிருப்பார்கள், ஏனென்றால் நாம் அவர்களுடைய பராபரனாகிய கர்த்தர், நாம் அவர்களைக் கேட்போம்.

௭ எப்பிராயீமர் பராக்கிரமரைப்போலிருப்பார்கள், அவர்களிருதயம் மதுபானத்தாலாகும்போல மகிழ்ச்சியாயிருக்கும், அவர்களுடைய பிள்ளைகளும் அதைக்கண்டு மகிழ்ச்சியாயிருப்பார்கள், * அவர்களிருதயங் கர்த்தருக்குட்களிகூரும். * சங்கீ. ௱௪, ௰௫.

௮ நாம் அவர்களைப்பார்த்துப் பயில்போட்டு அவர்களைக் கூட்டிக்கொள்ளுவோம், அவர்களை மீட்டோம், அவர்கள் முன்னே பெருகியிருந்ததுபோலே பெருகுவார்கள்.

௯ நாம் அவர்களைச் சனசந்ததிகளுக்குள்ளே விதைத்தபின் அவர்கள் தூரதேசங்களிலிருந்து நம்மை நினைத்துத் தங்கள் பிள்ளைகளோடுங்கூடப் பிழைத்துத் திரும்புவார்கள்.

௰ நாம் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக்கொண்டு, அவர்களைக் கீலேயாத்தேசத்திலும் லீபனோனுக்கும் வரப்பண்ணுவோம், அவர்களுக்கு இடங்காணாதேபோகும்.

௰௧ * இடுக்கணென்ற சமுத்திரத்தைக் கடக்கையில் அவர் சமுத்திரத்தின் அலைகளை யடிப்பார், அப்போது நதியின் ஆழங்களெல்லாம் வறண்டுபோகும், அசீரியருடைய பெருமை தாழ்த்தப்படும், எகிப்தின் கோல் விலகிப்போகும். * ௨. மோசே. ௰௪, ௰௬.

௰௨ நாம் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவோம், அவர்கள் * அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்களென்று கர்த்தர் சொல்லுகிறார். * மீகா. ௪, ௫.

௰௧. அதிகாரம்.

[எருசலேமுடைய அழிவின் தீர்க்கதரிசனம்.]

லீபனோனே, அக்கினி உன் கேதுருக்களைப் பட்சிக்கும்படிக்கு உன் கதவுகளைத் திற.

௨ பாயமரவிருட்சங்களே, புலம்புங்கள். ஏனென்றால் கேதுருமரங்கள் விழுந்தது, பிரபலியமானவைகள் பாழ்க்கடிக்கப்பட்டது, பாசானின் கர்வாலியுமரங்களே, புலம்புங்கள், ஏனெனில் யோர்தானின் முக்கியம் பாழ்க்கடிக்கப்பட்டது.

இரிவதுள்ள நல்லமேய்ப்பனை நன்றியறியாத யூதர் நடத்தும் விஷயத்தின் தீர்க்கதரிசனம்.

௩ என் பராபரனாகிய கர்த்தர் சொன்னதாவது, கொலையுண்கிற ஆடுகளை மேயும்.

௪ ஏனென்றால் அவைகளுடையவர்கள் * அவைகளைக் கொன்றுபோட்டுத் தங்களைக் குற்றமில்லாதவர்களைப்போலக் காண்பிக்கிறார்கள், அவைகளை விற்கிறவரவர், கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், நான் ஐசுவரியமுள்ளவனானேனென்கிறான், அவைகளை மேய்க்கிறவர்களில் ஒருத்தனும் அவைகள்மேல் இரக்கம்வைக்கிறதில்லை. * யோவா. ௰, ௮.

௫ ஏனென்றால் நாம் இனித் தேசத்தினுடைய குடிகளின்மேல் இரக்கம்வைக்காமல் மனுஷரில் அவனவனை அவனவனுக்கடுத்தவனுடைய கையிலும் அவன் இராசாவினுடைய கையிலும் அகப்படப்பண்ணுவோம், இவர்கள் தேசத்தை நொறுக்கியும் நாம் இவர்களுடைய கைக்கு அவர்களைத் தப்புவிப்பதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௬ மந்தையிற் சிறுமைப்பட்டவைகளே உங்களுக்காக நாங் கொலையுண்கிற ஆடுகளை மேய்த்து, இரண்டு கோல்களை வைத்துக்கொண்டோம், ஒன்றை நயமென்றோம், ஒன்றை அழிக்கிறதென்றோம், அப்படியே நாம் மந்தையை மேய்த்து,

௭ மூன்று மேய்ப்பரையும் ஒரேமாதத்திலே அதம்பண்ணினோம், நம்முடைய ஆத்துமம் அவர்களைச் சகியாதது, அவர்கள் ஆத்துமம் நம்மையும் அரோசித்தது.

௮ இனி நாம் உங்களை மேய்ப்பதில்லை, சாகிறது சாகட்டும், அதமாகிறது அதமாகட்டும், மீதியானவைகளோவென்றால், ஒவ்வொன்றும் மற்றதின் மாம்சத்தைத் தின்னக்கடவதென்று நான் சொல்லி,

௯ நயமென்னப்பட்ட நம்முடைய கோலை வாங்கி, நாம் அந்த எல்லாச் சனசதனங்களோடும் பண்ணியிருந்த நம்முடைய உடன்படிக்கையை யறுப்பபோகப்பண்ணும்படிக்கு, அதையுடைத்துப்போட்டோம்.

௰ அது அந்நாளிலேயறுப்போயிற்று, அப்படியே மந்தையில் நமக்குக் காத்திருக்கிற சிறுமைப்பட்டவைகள், அது கர்த்தருடைய வார்த்தையென்றறிந்துகொண்டு,

௰௧ உங்கள் பார்வைக்கு நன்றாய்க் கண்டால் நம்முடைய கூலியைத் தாருங்கள், இல்லாவிட்டால் இருக்கட்டுமென்று அவர்களோடே சொன்னோம், அப்போது நம்முடைய கூலியாக * முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள். * மத்தே. ௨௬, ௰௫.

௰௨ கர்த்தர் நம்முடனே அதைக் குயவனுக்கெறிந்துவிடுமென்றார், இது நாம் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு, நாம் அந்த முப்பது வெள்ளிக்காசை வாங்கி, * அவைகளைக் குயவனுக்கென்று, கர்த்தருடைய வீட்டிலே யெறிந்துவிட்டோம்.

* மத்தே. ௨௭, ௫. ௯, ௰.

௰௩ நாம் யூதாவுக்கும் இஸ்ரவேலுக்குமிருக்கிற சகோதரக் கட்டை அற்றுப்போகப்பண்ணும்படிக்கு, அழிக்கிறதென்ற நம்முடைய இரண்டாங்கோலையும் உடைத்துப்போட்டோம்.

பொல்லாத மேய்ப்பருக்கு வருங்கேடு.

௰௪ கர்த்தர் நம்மோடே சொன்னதாவது, மதிபற்ற ஒரு மேய்ப்பனுடைய ஆயுதங்களை இன்னம் வைத்துக்கொள்,

௰௫ ஏனென்றால் இதோ, * அதமாகிறவைகளைப் பராமரிக்காமலும், சிதறுண்டதைத் தேடாமலும், நொறுங்குண்டதைக் குணமாக்காமலும், இளைத்திருக்கிறதை யாதரிக்காமலும், கொழுத்ததின் மாம்சத்தைத் தின்று, அவைகளுடைய குளம்புகளையுடைக்கிற மேய்ப்பனை நாந் தேசத்திலெழும்பப்பண்ணுகிறோம். * எரே. ௨௩, ௨. எசே. ௩௪, ௨-௪.

௰௬ * மந்தையைக் கைவிடுகிற அவத்தமான மேய்ப்பனுக்கையோ! பட்டயம் அவன் வலதுபுயத்தின்மேலும் அவன் வலதுகண்ணின்மேலும் வரும், அவன் புயம் முழுதும் வேகும், அவன் வலதுகண் இருளடையவேயடையுமென்றார்.

* யோவான். ௰, ௰௨.

௰௨. அதிகாரம்.

[சத்துருக்களைச் செயிக்கிறசெயம் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்டது.]

இஸ்ரவேலைக்குறித்துக் கர்த்தர் சொன்ன வார்த்தையின் சுமை, * வானங்களை விரித்துப் பூமியை ஸ்திபாரப்படுத்தி, மனுஷனுடைய ஆவியை அவனுக்குள் உருவாக்குகிற கர்த்தர் சொல்லுகிறதாவது, * ஏசா. ௪௨, ௫.

௨ இதோ, சுற்றிலுமிருக்கிற எல்லாச் சனசதனங்களுக்கும் நாம் எருசலேமைத் * தத்தளிப்பின்பாத்திரமாக்குகிறோம், எருசலேமுக்கு விரோதமாகப்போடப்படு முற்றிக்கையிலே யூதாவின்மேலுஞ் சுமையிருக்கும். * ஏசாயா. ௫௧, ௨௨.

௩ அந்நாளிலே சம்பவிப்பதென்னவென்றால், நாம் எருசலேமைச் சகலசனசதனங்களுக்கும் பாரமான கல்லாக்குவோம், அதைக் கிளப்பவேண்டுமென்று யாவரும் தங்கள் வேசதைக்கப்படுவார்கள், ஏனென்றால் பூமியின் சாதிகளெல்லாம் * அதற்கு விரோதமாகக் கூடிக்கொள்ளும். * ௰௪, ௨.

௪ அந்நாளிலே நான் குதிரைகளுக்கெல்லாந் திகைப்பையும் அவைகளிலேறியிருக்கிறவர்களுக்கெல்லாம் புத்திமயக்கத்தையும் வரப்பண்ணி, யூதாவீட்டாரின்மேல் நமது கண்களைத் திறந்துவைத்துச் சனசதனங்களுடைய எல்லாக் குதிரைகளுக்குங் குருட்டாட்டத்தையுண்டுபண்ணுவோமென்று கர்த்தர் சொல்லுகிறார்.

௫ எருசலேமின் குடிகள் சேனைகளின் கர்த்தராகிய தங்கள் பராபரனுடைய துணையினாலே பெலங்களுக்குப் பலமுள்ளவர்களென்று அப்போது யூதாவின் தலைவர் தங்களிருதயத்திலே சொல்லுவார்கள்.

௬ அந்நாளிலே யூதாவின் தலைவரை விறகுகளுக்குள்ளெரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோற்கட்டுகளுக்குள்ளெரிகிற தீவட்டிக்கும் ஒப்பாக்குவோம், அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டுச் சுற்றிலுமிருக்கிற எல்லாச் சனசதனங்களையும் பட்சிப்பார்கள், எருசலேம் இனி எருசலேமாகிய தன் தானத்திலே தானே குடியேறினதாயிருக்கும்.

௭ தாவீதுவீட்டாரின் மகிமையும் எருசலேமுடைய குடிகளின் மகிமையும் யூதாவின் மேலே தன்னை உயர்த்தாதபடிக்குக், கர்த்தர் யூதாவின் கூடாரங்களை முதல்முதல் இரட்சிப்பார்.

௮ அந்நாளிலே எருசலேமின் குடிகளைக் காப்பாற்றுவார், அவர்களில் தள்ளாடினவன் அந்நாளிலே தாவீதைப்போலிருப்பான், தாவீதுவீட்டார் அவர்களுக்குமுன்பாகப் பராபரனைப்போலுங் கர்த்தருடைய தூதனைப்போலுமிருப்பார்கள்.

௯ அந்நாளிலே சம்பவிப்பதென்னவென்றால் எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லாச் சாதிகளையும் அழிக்கப்பார்ப்போம்.

யூதர்தாங்கள் குத்தின மேசியாவை நோக்கிக்கொண்டு தேயவேதத்தின்மானமனஸ்தாபமடைவதின் தீர்க்கதரிசனம்.

௰ ஆனால் தாவீதுவீட்டாரின்மேலும் எருசலேமுடைய குடிகளின்மேலுங் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் * ஊற்றுவோம், அப்போது அவர்கள் † தாங்கள் குத்தின நம்மை நோக்கிக்கொண்டு, ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோலே நமக்காகப் புலம்பித் தலைச்சன்பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோலே நமக்காகக் கசப்பாய்த் துக்கிப்பார்கள்.

* யோவே. ௨, ௧. † யோ. ௰௯, ௩௭.

௰௧ * மெகிதோனைப்பட்டணத்தின் பள்ளத்தாக்கிலுண்டான ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போலே அந்நாளிலே எருசலேமிற் புலம்பல் பெரிதாயிருக்கும். * ௨. நாளா. ௩௫, ௨௨. ௨௧.

௰௨ தேசம் புலம்பிக்கொண்டிருக்கும், ஒவ்வொருவம்சங்கள் தனித்தனியாகத் தானே தாவீதுவீட்டுவம்சத்தார் தனியேயும் அவர்கள் ஸ்திரிகள் தனியேயும், நாத்தான்வீட்டுவம்சத்தார் தனியேயும் அவர்கள் ஸ்திரிகள் தனியேயும்.

௰௩ லேவிவீட்டுவம்சத்தார் தனியேயும் அவர்கள் ஸ்திரிகள் தனியேயும் சிமேயிவீட்டுவம்சத்தார் தனியேயும் அவர்கள் ஸ்திரிகள் தனியேயும்.

௰௪ மற்றுமுண்டான எல்லாவம்சங்களிலும் ஒவ்வொருவம்சங்களின் மனுஷர் தனித்தனியேயும் அவர்கள் ஸ்திரிகள் தனித்தனியேயும் புலம்புவார்கள்.

௰௩. அதிகாரம்.

[பாவத்தை நீக்கத் திறக்கப்பட்ட ஊற்றுண்டாயிருக்குமென்பதும், கள்ள தீர்க்கதரிசனத்தை நிர்மூலமாய் அறுப்போமென்பதும்.]

பாவத்தையும் * அழுக்கையும் நீக்க அந்நாளிலே தாவீதுவீட்டாருக்கும் எருசலேமின் குடிகளுக்குந் திறக்கப்பட்ட ஊற்றுண்டாயிருக்கும். * ௭ாஜோ. ௧, ௰௪.

௨ அந்நாளிலே சம்பவிப்பதென்னவென்றால் விக்கிரகங்களின் பேரைத் தேசத்திலிராதபடிக்கு அழிப்போம், அவைகள் இனி நினைக்கப்படுவதில்லை, தரிசனஞ்சொல்லுகிறவர்களையும் அசுத்தத்தின் ஆவியையுந் தேசத்திலிருந்து போய்விடவும் பண்ணுவோமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

௩ இனி ஒருத்தன் தரிசனஞ்சொன்னால் சம்பவிப்பதென்னவென்றால், அவனைப்பெற்ற அவன் தகப்பனும் அவன் தாயும் அவனுடனே, * நீ உயிரோடிருக்கப்படாது, ஏனென்றால் நீ கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிப் பொய்யைப் பகருகிறாயென்று அவனைப் பெற்ற அவன் தகப்பனும் அவன் தாயும் அவன் தரிசனஞ்சொல்லும்போது அவனைக் குத்திப்போடுவார்கள். * ௫. மோ. ௰௩, ௬-௰.

௪ சம்பவிப்பதென்னவென்றால் தரிசனஞ் சொல்லுகிற அவனவன் தான் சொன்ன தரிசனத்தினாலே அந்நாளிலே வெட்கப்படுவான், பொய்சொல்லும்படிக்கு இனி மயிருள்ள தோற்சால்வையைப் போர்த்துக்கொள்ளாமல்,

௫ நான் தரிசனஞ்சொல்லுகிறவனல்ல, நான் நிலத்தைப் பயிரிடுகிறவன், ஏனென்றால்

ல் என்கிறபோதே ஒரு மனுஷன் என்னை வேலைகொண்டான் என்பான்.

௬ ஆனால் உன் கைகளிலிருக்கிற இந்த வடுக்களேதென்று அவனைக் கேட்டால், என் சிநேகிதரின் வீட்டிலே இப்படி அடிக்கப்பட்டேனென்பான்.

கிறிஸ்து பாடுபட்டபின் யூதருக்குச் சம்பவிக்குங் காரியம் ஏதென்பது.

௭ பட்டயமே, நம்முடைய மேய்ப்பன்மேலும் நமக்கடுத்த புருஷன்மேலும் எழும்பென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். * மேய்ப்பனை வெட்டு, அப்போது ஆடுகள் சிதறிப்போகும், ஆனால் நமது கரத்தைச் சிறியோர்பேரிலே திரும்ப நீட்டுவோம். * மத். ௨௬, ௩௧. மாற். ௰௪, ௨௭.

௮ அத்தேசமெங்கும் சம்பவிக்குங் காரியமேதென்றால் அதிலிருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டுபோவார்கள், மூன்றாம் பங்கோவென்னில் அதில் மீதியாயிருக்கும்.

௯ அந்த மூன்றாம் பங்கை நாம் அக்கினிக்குட்படப்பண்ணி, அவர்களை வெள்ளியை உருக்குகிறதுபோல உருக்கி, அவர்களைப் பொன்னைப் புடமிடுகிறதுபோலப் புடமிடுவோம், அவர்கள் நமது நாமத்தைத் தொழுதுகொள்ளுவார்கள், அப்போது நாம் அவர்களைக் கேட்டருளுவோம், இது நமது சனமென்று நாமுஞ் சொல்லுவோம், கர்த்தர் என் பராபரனாயிருக்கிறாரென்று அதுவுஞ் சொல்லும்.

௰௪. அதிகாரம்

[யூதருக்குத் தேவசகாயத்தினாலே வரும் மேன்மையான நற்சீரின் தீர்க்கதரிசனம்.]

இதோ, உன்னுடைய கொள்ளையுன் நடுவிற் பங்கிடப்படுகிற கர்த்தருடைய நாள் வரும்.

௨ அதேதெனில் எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணச் சகல சாதிகளையுங் கூட்டுவோம் பட்டணம் பிடிக்கப்படும், வீடுகள் கொள்ளையாகும், ஸ்திரிகள் அவமானப்படுவார்கள், பட்டணத்தாரிற் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள் குறைச்சனமோவென்றாற் பட்டணத்தைவிட்டு அறுப்புண்டுபோவதில்லை. * ௰௨, ௩.

௩ ஏனென்றாற் கர்த்தர் புறப்பட்டு தாம் படையின் நாளிலே யுத்தம் பண்ணியிருக்கிறதற்கொத்த பிரகாரமாக அந்தச் சாதிகளோடே யுத்தம் பண்ணுவார்.

௪ அந்நாளிலேயவருடைய பாதங்கள் எருசலேமுக்கெதிரே கிழக்காகவிருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும், அப்போது மகா பெரிய பள்ளத்தாக்குண்டாக ஒலிவமலை தன் நடுமையத்திலே கிழக்கிறக்கும் மேற்கிற்குமெதிராகப் பிளந்துபோனபடியினாலே, ஒரு பாதி வடபக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் விலகும்.

௫ அப்போது நமது மலைகளின் பள்ளத்தாக்கு வழியாய் ஓடிப்போவீர்கள், ஏனெனில் மலைகளின் பள்ளத்தாக்கு ஆத்சால்மட்டும் போகும், நீங்கள் யூதாவின் இராசாவாகிய உசியாவின் நாட்களிற் * பூமியதிர்ச்சிக்குத் தப்பி ஓடிப்போனதுபோல ஓடிப்போவீர்கள், அப்போது என் பராபரனாகிய கர்த்தர் வருவார், † தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களுங்கூடத்தானே.

* ஆமோ. ௧, ௧. † யூதா. ௰௪.

௬ அந்நாளிற் சம்பவிப்பதேதென்றால், வெளிச்சமில்லாமல், ஒருவேளை பிரகாசமும் ஒருவேளை மப்புமாயிருக்கும்.

௭ ஒரு நாளுண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது. அது பகலுமல்ல, இரவுமல்ல, ஆனாற் சம்பவிப்பதேதென்றால் சாயங்காலத்திலே வெளிச்சமாம்.

௮ அந்நாளிலே சம்பவிப்பதேதென்றால் * சீவனுள்ள தண்ணீர்கள் எருசலேமிலிருந்து புறப்பட்டுப் பாதி கிழக்குச் சமுத்திரத்திற்கும் பாதி மேற்குச் சமுத்திரத்திற்கும் போய், மாரிகாலத்திற்குங் கோடைகாலத்திற்குமிருக்கும். * எசேக். ௪௭, ௧. அறிவி. ௨௨, ௧.

௯ * அப்போது கர்த்தர் பூமியின்மீதெல்லாம் இராசாவாயிருப்பார், அந்நாளிற் கர்த்தர் ஒருத்தராயிருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும். * சங். ௬௩, ௧.

௰ தேசமெல்லாங் கேபாவைத் துவக்கி எருசலேமுக்குத் தெற்கேயிருக்கிற ரிம்மோன்மட்டும் ஒத்த தரையாகத் திருத்தப்படும் எருசலேமோவென்றால் உயர்ந்ததாகித் தன் தானத்திலே பென்யமீன் வாசலைத் துவக்கி முதல் வாசலென்ற தலமட்டுக்குங் கோடிவாசல்மட்டுக்கும், அனானெயேல் கோபுரந் துவக்கி இராசாவின் ஆலைகள்மட்டுக்குங் குடியேற்றப்பட்டிருக்கும்.

௰௧ அதிலே குடியிருப்பார்கள், * இனிச் சங்கரிப்பில்லாமல் எருசலேம் சுகமாயத் தங்கியிருக்கும். * அறிவி. ௨௨, ௩.

அவர்களுடைய சத்துருக்களாகிய சாதிகளின் ஆக்கினையும், மீதியாயிருக்கும் புறச்சாதியாரின் குணப்படுதலுங் காண்பிக்கப்பட்ட தீர்க்கதரிசனம்.

௰௨ எருசலேமுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணின எல்லாச் சனசதளங்களையுங் கர்த்தர் வாதிக்கும் வாதையாவது, அவனவன் சதையை வாடப்பண்ணுவார் தங்கள் கால்கள்மேல் அவர்கள் நிற்கக்கொள்ள அவர்கள் கண்கள் தங்கள் கண்மண்டைகளிலே வாடி,

அவர்கள் நாக்கு அவர்கள் வாயிலே அழுகிப் போகும்.

௰௩ அந்நாளிற் சம்பவிப்பதென்னவென்றால், கர்த்தரால் பெரிய கலக்கம் அவர்களுக்குள் ளிருக்கும். அவனவன் தனக்கடுத்தவனின் கையைப் பிடிப்பான், அவனவனுடைய கை அவனுக்கடுத்தவனுடைய கைக்கு விரோதமாக எழும்பும்.

௰௪ யூதாவும் எருசலேமுக்கெதிராகயுத்தம்பண்ணும், அப்பொழுது சுற்றிலுமிருக்கிற சகல சாதிகளுடைய ஆஸ்தியாகிய பொன்னும் வெள்ளியும் வஸ்திரங்களும் மகாதிரளாகக் கூட்டப்படும்.

௰௫ அந்தப் பாளயங்களிலிருக்கும் குதிரைகள் கோவேறுகழுதைகள் ஒட்டகங்கள் கழுதைகள் முதலான எல்லாமிருகஜீவன்களின் வாதையும் அந்த வாதையைப் போலிருக்கும்.

௰௬ சம்பவிப்பதென்னவென்றால், எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லாச் சாதிகளிலும் மீதியானயாவரும், * சேனைகளின் கர்த்தராகிய இராசாவைப் பணிந்துகொள்ளும்படிக்கும், கூடாரங்களின் பண்டிகையை யாசரிக்கும்படிக்கும், வருஷந்தோறும் வருஷம் வந்தேறுவார்கள்.

* ஏசா. ௬௬, ௨௩.

௰௭ அப்பொழுது சம்பவிப்பதென்னவென்றால், பூமியின் வம்சங்களில் எவர்கள் சேனைகளின் கர்த்தராகிய இராசாவைப் பணிந்துகொள்ள எருசலேமுக்கு வந்தேறுகிறதில்லையோ அவர்கள் மேல் மழை வருஷிப்பதில்லை.

௰௮ எகிப்தின் வம்சம் வந்தேறாமலும் போனால், அவர்கள் மேலும் மழை பெய்யாதேபோவது கூடாரங்களின் பண்டிகையை யாசரிக்க வந்தேறாத சாதிகளைக் கர்த்தர் வாதிக்கும் அந்த வாதையாயிருக்கும்.

௰௯ இது எகிப்தியருடைய பாவத்துக்கும் கூடாரங்களின் பண்டிகையை யாசரிக்க வந்தேறாத சகலசாதிகளுடைய பாவத்துக்கும் வரும் தண்டனை.

௨௰ அந்நாளிலே குதிரைகளின் கடிவாளங்களிலே கர்த்தருக்குப் பரிசுத்தமென்று எழுதியிருக்கும், கர்த்தருடைய வீட்டிலுள்ள செப்புச்சட்டிகள் பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற கலசங்களுக்கு அப்பொழுது சரியாயிருக்கும்.

௨௰௧ அப்பொழுது எருசலேமிலும் யூதாவிலுமுள்ள எல்லாப் பானைகளும் சேனைகளின் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும், பலியிடுகிற யாவரும் வந்து அவைகளில் எடுத்து அவைகளிற் சமைப்பார்கள். அந்நாள்முதற்கொண்டு சேனைகளுடைய கர்த்தரின் வீட்டிலொரு கானானியனுமிருப்பதில்லை.

சகரியாவின் தீர்க்கதரிசனம் முடிந்தது முற்றும்.

மலகியாவின் தீர்க்கதரிசனம்.

௧. அதிகாரம்.

[பராபரன் இஸ்ரவேலைச் சிநேகித்து வந்த வரென்பது.]

மல்கியாவைக்கொண்டு கர்த்தர் இஸ்ரவேலுடனே சொன்ன வார்த்தையின் சுமை,

௨ உங்களைச் சிநேகித்தோமென்று கர்த்தர் சொல்லுகிறார், ஆனால் நீங்கள், எங்களை எதிலே சிநேகித்தீர் என்கிறீர்கள் கர்த்தர் சொல்லுகிறதாவது, ஏசாவுயாக்கோபுக்குச் சகோதரனல்லவோ? ஆகிலும் யாக்கோபை நானே சிநேகித்தோம்.

௩ ஏசாவையோ நாம் பகைத்து, * அவனுடைய பருவதங்களைப் பாழும் அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்தின் வலுசர்ப்பங்களின தாவுமாக்கினோம், * ஏசா. ௧௪, ௫. யெரே. ௪௯, ௰௪—௰௪.

௪ எளிமைப்பட்டோம், ஆனால் பாழான அப்பொழுதவைகளைத் திரும்பக் கட்டுவோமென்று ஏசாவு சொன்னால், கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், அவர்கள் கட்டுவார்கள், நாமோ இடிப்போமென்றார், துன்மார்க்க எல்லையென்றும் கர்த்தர் என்றைக்கும் சினங்கொண்டிருக்கிற சனமென்றும் அவர்களுக்குப் பேரிடப்படும்.

௫ * இதை உங்கள் கண்கள் காணும். அப்போது நீங்கள், கர்த்தர் இஸ்ரவேலின் எல்லைக்கப்பாலே மகிமைப்படுவாரென்பீர்கள். * சங். ௫௨, ௮.

ஆசாரியர்களைக் கடிந்துகொண்டது.

௬ குமாரன் பிதாவையும், ஊழியக்காரன் தன் ஆண்டவனையும் கனம்பண்ணவேண்டுமே, இப்போது நாம் பிதாவானால் நம்முடைய கனமெங்கே? நாம் ஆண்டவரானால் நமக்குப் பயப்படும் பயமெங்கேயென்று சேனைகளுடைய கர்த்தர் தமது நாமத்தை யசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களை

கேட்கிறார், அதற்கு நீங்கள், எதினாலே உமது நாமத்தை அசட்டைப்பண்ணினோமென்கிறீர்கள்.

௭ நம்முடைய பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேதான்; ஆனாலும் எதினாலே உம்மைத் தீட்டுப்படுத்தினோமென்கிறீர்கள், கர்த்தருடைய பந்தி யன்னமற்றுப்போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேதானே.

௮ நீங்கள் * கண் ஊனமானதைப் பலியிடக்கொண்டுவந்தாலும் பொல்லாப்பல்ல, நீங்கள் கால் ஊனமானதையும் நசற்பிடித்ததையுங் கொண்டுவந்தாலும் பொல்லாப்பல்ல, அதை நீயுன் அதிபதிக்குச் செலுத்தினால், அவன் உன்மேலே பிரியமாயிருப்பானோ? அல்லவென்று உன் முகமாட்டத்தைப் பார்ப்பானோவென்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார். * ௫. மோசே. ௨௨, ௰௭-௨௫.

௯ இப்போதும் பராபரனுடைய சமுகத்தை நோக்கிக் கெஞ்சுங்களேன், அப்போ நம்முடைய மேல் இரங்குவார். இது உங்கள் கையினாலே வந்தகாரியம் உங்கள் முகமாட்டத்தைப் பார்ப்பாரோவென்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்.

௰ உங்களில் ஆராகிலுங் கதவுகளைப் பூட்டுவதாயில்லை! இப்படி விருதாவாய் நம்முடைய பலிபீடத்தில் அக்கினியைக் கொளுத்தீர்களாக, உங்கள் பேரிலே நமக்குப் பிரியமில்லையென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார், உங்கள் கைகளிலுள்ள காணிக்கை நமக்குப் பொருந்தினதல்ல.

௰௧ ஏனெனில் சூரியனுதிக்கிற திசைதுவக்கி அது அஸ்தமிக்கிற திசைமட்டும், நம் நாமஞ் சாதிகளுக்குள்ளே பெரிதாயிருக்கும், எல்லாஸ்தலத்திலும் நமது நாமத்திற்குத் தூபமுஞ் சுத்தமான காணிக்கையுஞ் செலுத்தப்படும், ஏனெனில் நமது நாமஞ் சாதிகளுக்குள்ளே பெரிதாயிருக்குமென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

௰௨ நீங்களோவென்றால் கர்த்தருடைய பந்தி அசுத்தமானதென்றும், அதின் ஆகாரமாகிய அதின் வரத்து எண்ணம் அற்றுப்போனதென்றுஞ் சொல்லுகிறதினாலேயதைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறீர்கள்.

௰௩ இதோ, எத்தனை வருத்தமென்றும் நீங்கள் சொல்லி, அதைத் திரணமாய்ப் பேய்ப்பறிக்கப்பட்டதையுங் கால் ஊனமாயிருக்கிறதையும் நசற்கொண்டதையுங் கொண்டுவந்து காணிக்கையாகச் செலுத்தினீர்களென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், அதையுங்கள் கைகளில் அங்கிகரித்துக் கொள்ளுவோமோவென்று கர்த்தர் கேட்கிறார்.

௰௪ ஆலத்தன் மந்தையில் தனக்கு ஆணிருக்கக்கொள்ள, கெட்டுப்போனதையாண்டவருக்கு நேர்ந்துகொண்டு பலியிடுகிற கபடஸ்தன் சபிக்கப்பட்டவன், ஏனெனில் நாம் பெரிய இராசாவென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார், நமது நாமஞ் சாதிகளுக்குள்ளே பயங்கரமாயிருக்கும்.

௨. அதிகாரம்.

[ஆசாரியர்களின் பாவங்களையுஞ் சனத்தின் பாவங்களையுங் கடிந்துகொண்டது]

இப்போதும் ஆசாரியர்களே, இந்தக் கற்பனையுங்களுக்குச் செல்லும்.

௨ நீங்கள் கேளாமலும் நமது நாமத்திற்கு மகிமையைச் செலுத்தும்படிக்கு இதை மனதிலே வைக்காமலும் போனால், நாம் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களைச் சபிப்போமென்று, சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார், ஆம், நீங்களிதை மனதிலே வைக்காமற்போனால், அவைகளைச் சபிப்போம்.

௩ இதோ, நாம் உங்களுக்கிருக்கும் பயிரைக் கெடுத்துச் சாணியையுங்கள் முகங்களிலே இறைப்போம் * உங்கள் பண்டிகைகளின் சாணியைத்தானே, அது உங்களைத் தன்னோடுங்கூட்டத் தள்ளும்படியாகும்.

* ஆமோ. ௫, ௨௧.

௪ லேவியோடே பண்ணின நம்முடைய உடன்படிக்கையிருக்கும்படிக்கு இந்தக் கற்பனையையுங்களண்டைக்கு அனுப்பினோமென்றதை அப்போது அறிந்துகொள்ளுவீர்களென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௫ அவனோடிருந்த நம்முடைய உடன்படிக்கை சீவனுஞ் சமாதானமுமாகவிருந்தது, அவன் நமக்குப் பயப்படும் பயத்தோடேயிருக்கவேண்டுமென்று இவைகளையவனுக்குக் கட்டளையிட்டோம், அப்படியேயவன் நமது நாமத்திற்குத் திடுக்கிட்டுமிருந்தான்.

௬ சத்தியவேதம் அவன் வாயிலிருந்தது அவனுடைய உதடுகளில் நியாயக்கேடு காணப்பட்டதில்லை, அவன் நம்மோடே சமாதானமுஞ் செம்மைமார்க்கமுமாயச் சஞ்சரித்து, அநேகரையக் கிரமத்தைவிட்டுத் திரும்பப்பண்ணினான்.

௭ ஏனெனில் ஆசாரியனின் உதடுகள் * அறிவைக்காக்கவேண்டும், வேதத்தையவன் வாயிலே தேடுவார்களே, ஏனென்றால் அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்.

* நீத். ௧, ௯. ஆகா. ௧, ௰௩. கலா. ௪, ௰௪.

௮ நீங்களோவெனில் வழியைவிட்டுவிலகி, அநேகரை வேதத்தில் இடறப்பண்ணினீர்கள், லேவியின் உடன்படிக்கையைக் கெடுத்துப்போட்டீர்களென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

௯ ஆனதுகொண்டு நீங்கள் நம்முடைய வழிகளைக் கைக்கொள்ளாமல் வேதத்திலே முகமாட்டம் பார்க்கிறபடியினாலே நாமும் உங்களையெல்லாச் சனத்துக்கும் எண்ணமற்றவர்களுந் தாழ்ந்தவர்களுமாக்கினோம்.

௰ * நமக்கெல்லாம் ஒரே பிதாவில்லையோ? ஒரே பராபரன் நம்மைச் சிருஷ்டித்ததில்லையோ நாம் நம்முடைய பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்க அவனவன் தன் சகோதரனைத் துரோகம் பண்ணுவானேன்? * யாக. ௨, ௧.

௰௧ யூதசனந் துரோகம்பண்ணிற்று, இஸ்ரவேலிலும் எருசலேமிலும் அருவருப்பான காரியஞ் செய்யப்பட்டது, அதென்னென்றால் கர்த்தர் நேசிக்கிற பரிசுத்தத்தை யூதசனங் குலைத்து, அந்நியதேவனின் குமாரத்திகளை விவாகம்பண்ணினார்கள்.

௰௨ இப்படிச் செய்கிறவனையுங் காவற்காக்கிறவனையும் உத்தரவுகொடுக்கிறவனையுஞ் சேனைகளுடைய கர்த்தருக்குக் காணிக்கை செலுத்துகிறவனையும் யாக்கோபின் கூடாரங்களில் இராதபடிக்குக் கர்த்தர் சங்கரிப்பார்.

௰௩ அதோடே நீங்கள் இரண்டாவது செய்கிறதேதெனில், நீங்கள் கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும் அழுகையினாலும் பெருமூச்சினாலும் மூடப்பண்ணுகிறீர்கள். ஆகையால் அவர் இனிக் காணிக்கையைப் பார்க்கவும் அதை உங்கள் கைக்கு விருப்பமாய் ஏற்றுக்கொள்ளவுங் கூடாது.

௰௪ ஏனென்று கேட்கிறீர்கள், கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் பெண்சாதிக்குஞ் சாட்சியாயிருக்கிறபடியினாலும் உன் தோழியும் உன் உடன்படிக்கையின் பெண்சாதியுமாகிய இவளை நீ துரோகம்பண்ணினபடியினாலுந்தானே,

௰௫ * ஒருத்தனல்லோ இருந்தவன் அப்படிச் செய்ததில்லை, ஆவி அவனுக்குப் பரிபூரணமாயிருந்தது, ஒருத்தனாயிருந்த அவன் என்ன செய்தான்? பராபரன் சொன்ன வித்தைத் தேடினான், ஆகையால் ஒருத்தனுந் தன் இளவயதின் பெண்சாதியைத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவிக்கு எச்சரிக்கையாயிருங்கள். * ஏசாயா ௫௧, ௨.

௰௬ ஏனென்றால் தள்ளிவிடுதலைத் தாம் பகைக்கிறவரென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறார், அப்படிக்கொத்தவன் தன் வஸ்திரத்தின்மேற் கொடுமையை மூடிக்கொள்ளுகிறானென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார், ஆகையால் நீங்கள் துரோகம்பண்ணாமல், உங்கள் ஆவிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

௰௭ உங்கள் பேச்சுகளினாலே கர்த்தருக்கு வருத்தமாயிருக்கிறீர்கள் எதினாலே அவருக்கு வருத்தமாயிருக்கிறோமென்கிறீர்கள், பொல்லாப்புச் செய்கிறவனெவனோ அவன் கர்த்தருடைய பார்வைக்கு நல்லவன் இப்படிப்பட்டவர்களிலே அவர் பிரியமாயிருக்கிறாரென்றும் நியாயத்தீர்க்கிற பராபரன் எங்கேயென்றும் நீங்கள் சொல்லுகிறதினாலேதானே. * ௩, ௰௩—௰௫.

௩. அதிகாரம்.

[யோவான்ஸ்நானகனையும் கிறிஸ்துவையுங் குறித்துச் சொன்ன தீர்க்கதரிசனம்.]

இதோ, நாம் நம்முடைய தூதனை அனுப்புகிறோம் அவன் நமக்கு முன்பாக வழியை ஆயத்தம்பண்ணுவான், அப்போது நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதருமானவர் தீவிரமாய்த் தம்முடைய தேவாலயத்திற்கு வருவார், இதோ, வருகிறாரென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார். * மத்தே. ௰௧, ௰. மாற். ௧, ௨. லூக். ௭, ௨௭.

௨ ஆனால் அவர் வருகையின் நாளைத் தாங்குபவனார்? அவர் காணப்படுகையில் நிற்கிறவனார்? ஏனென்றால் அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலேயும் வண்ணானுடைய சவுக்காரத்தைப்போலேயும் இருப்பார்.

௩ * அவர் உருக்குகிறவராய் வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார், அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும் நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப்போலேயும் வெள்ளியைப்போலேயும் உருக்குவார். * மத்தே. ௨௧, ௰௨.

௪ அப்போது பூர்வநாட்களைப்போலேயும், பூர்வமமுந்தின வருஷங்களைப்போலேயும், யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையுங் கர்த்தருக்கு இன்பமாயிருக்கும்.

௫ நாம் உங்களண்டைக்கு நியாயத்தீர்ப்புக்கென்று சேர்ந்துவந்து, சூனியக்காரருக்கும் விபசாரருக்கும், பொய்யாணையிடுகிறவர்களுக்கும், விதவைகளுந் திக்கற்றவர்களுமான கூலிக்காரரின் கூலியைத் தடுக்கிறவர்களுக்கும், நமக்குப் பயப்படாமல் பரதேசிக்கு அநியாயஞ்செய்கிறவர்களுக்கும் விரோதமாகத் தீவிரமான சாட்சியாயிருப்போமென்று சேனைகளுடைய கர்த்தர் சொல்லுகிறார்.

௬ கர்த்தராகிய நாம் மாறுகிறதில்லை, ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமானதில்லை,

யூதருடைய சிலபாவங்கள் கண்டிக்கப்பட்டது.

௭ நீங்கள் உங்கள் பிதாக்களின் நாட்கள்முதற்கொண்டு நம்முடைய கட்டளைகளைக் கைக்கொ

ளாமல அவைகளைவிடடு விலகிபபோனீர்க ள * நமமணடைககுததிருமபுஙகள அப போது உஙகளணடைககுத திருமபுவோ மெனறுசேனைகளுடைய கர்ததர்சொலலு கிறர் நாஙகளெதிலேதிருமபவேணடுமென கிறீர்கள. * சகரியாவின. க, ௩.

அ மனுஷன பராபரனை வஞசனைபண ணலாமோ? நீஙகளோவெனறால நமமைவ ஞசனைபணணுகிறீர்கள, எதிலேயுமமைவ ஞசனைபணணினேமெனகிறீர்கள், தசமபா கததிலுஞசெலுததுதலகளிலுந்தானே.

௯ நீஙகளசாபமபிடிததவர்களாயிருககி றீர்கள, ஏனெனில நீஙகள சாதியனைததுமாய நம்மைவஞசனைபணணுகிறீர்கள.

௰ நமமுடையவீட்டிலஆகாரமுணடாயி ருககுமபடிககுததசம்பாகஙகளையெலலாம பணடகசாலையிலே கொணடுவாருஙகள, அபபோதுநாமஉஙகளுககுவானததினபல கணிகளைததிறநது, உஙகளமேலஆசீர்வாத ததைஇடங்கொளளாதேபோகுமட்டுமவரு ந்ஷிமோவெனறு அதிலுல நமமைசசோ திததுபபாருஙகளெனறு சேனைகளுடைய கர்ததர்சொலலுகிறர்.

௰க பூமியினகனியைத தினனுகிறவைக ள அதையுஙகளுககுக கெடுததுபபோடா தபடிககுநாம அவைகளையுஙகளுககாக உ தமபுவோம, நிலததினதிவிதிராட்சபபயிர் பழுதாயபபோவதிலலையெனறுசேனைக ளுடையகர்ததர்சொலலுகிறர்.

௰உ அபபோதுஎலலாசசாதிகளும உங களைபபாககியவானகளெனபார்கள, ஏனெ னிலவிருபபமானதேசமாயிருபபீர்களென று சேனைகளுடைய கர்ததர்சொலலுகிறர்.

௰௩ * உஙகளபேசசுகள நமககுவிரோ தமாகபபலததுபபோயிறறெனறுகர்ததர் சொலலுகிறர் ஆனாலுமஙகு விரோதமாக எனனததைசசொனனேமெனகிறீர்கள. * உ, ௰எ.

௰ச நீஙகளசொலலவதேதெனிற கர்ததருககு ஊழியஞ்செயகிறது விருதாவாயிரு ககிறது, நாஙகள அவருடைய கடடளைக ளைக கைககொளளுகிறதிலும, சேனைக ளுடையகர்ததருககுமுனபாகத துககிததது நடககிறதிலும என்னபிரயோசனம.

௰௫ இபபோதும அகநதைககாரரை நாஙகள பாககியவானகளெனகிறேம, ஆ காததியஞ்செயகிறவர்கள திடபபடுகிறர்க ளே, அவர்கள பராபரனைப பரிட்சைபார் ததாலும விடுவிககபபடுகிறர்களேயெனறு சொலலுகிறீர்கள.

௰௬ ஆனாற் கர்ததருககுப் பயநதவர்க ள ஒருததரோடே ஒருததர் சொலவதாவ து, கர்ததர்கவனிததுக கேட்டுமிருககிறர், கர்ததருககுபபயநதவர்களுககாகவும அவ ருடையநாமததை நினைககிறவர்களுககாக வும நினைபபூடடுதலுககான புஸ்தகம அவ ருககுமுனபாக எழுதபபடடிருககினறதெ னபார்கள.

௰எ * சமபததைநாம பிரததியககொள ளுமநாளிலே யிவர்கள நமமுடையவர்களா யிருபபார்களென்று சேனைகளுடைய கர்த் தர்சொலலுகிறர், ஒருமனுஷன்தனககூழி யஞ்செயகிறதனனுடையகுமாரனைத தப் பவிடுமாபபோலே † அவர்களைததபபவிடு வோம. * க, பேதுரு, உ, ௯ † க. மோசே. எ, உ௩. ௰௯, ௰௯.

௰அ அபபோது நீஙகளதிருமபவும, * நீதிமானுககுமஆகாதவனுககும, பராபர னுக்கூழியஞ்செயகிறவனுககும அவருக கூழியஞ்செயயாதவனுககுமிருககிற விததி யாசததைககாணபீர்கள. * ஏசாயா. ௬௫, ௰௩. ௰ச.

ச. அதிகாரம்.

[பொலலாதவர்களினமேற்பயஙகரமானநி யாயததீர்பபும, தேவபததியுளளவர்களு ககுக கிறிஸ்துவினுடைய செடடைகளி னகீழ்சசுகமான ஆரோககியமுமுணடா வது.]

ஏனெனில இதோ, சூளையைபபோல எரிகிறநாளவரும அபபோது எலலா அக நதைககாரரும ஆகாததியஞ் செயகிற அனைவரும * தூருமபாயிருபபார்கள,அவ ர்களைவரபபோகிற அநதநாள் கொளுததி விட்டு, அவர்களிலவேரையுங கொபபையும வைககாதேபோகுமெனறு சேனைகளுடை யகர்ததர்சொலலுகிறர். * மததேயு. ௩, ௰உ.

உ ஆனாலநமது நாமததிற்குப்பயநதிரு ககிற உஙகளுககு நீதியினுடைய சூரியன் உதிககும, அதினுடைய செடடைகளின கீழ் ஆரோககியஙகிடைககும, நீஙகள வெ ளிப்புறபபடடுக் † கொழுககுங கனறுக குடடிகளைபபோலவளருவீர்கள, * லூககா. க, எ. அ. எ௯. † ஏசாயா. ௫௫, க-உ.

௩ ஆகாதவர்களைமிதிபபார்கள ஏனெனி லநாமிதைசசெயயுமநாளிலே யவர்களுஙக கள உளளஙகாலகளினகீழ்ச் சாமபலாயிரு பபார்களெனறு சேனைகளுடைய கர்ததர் சொலலுகிறர்.

யோவானஸ்நாதகனைக குறிததுசசொன் னதீர்ககதரிசனம்.

ச * நாம் ஓரேபிலே இஸரவேலனைத திற்குமாகநமமுடைய ஊழியககாரனாகிய மோசேககுக கற்பிதத அவனுடையநியா யபபிரமாணமாகிய கடடளைகளையுமநியா யஙகளையுமநினையுஙகள. * உ. மோசே.

௨௰, ௧. ஞ

௫ இதோ கர்த்தருடைய பெரியதும் பயங்கரமுமான நாள் வராததற்கு முன்னே நாம் உங்களுக்கு * எலியாதீர்க்கதரிசியை யனுப்புகிறோம். * மத். ௰௧, ௰௪. ௰௭, ௰௨. மாற். ௯, ௰௧.

௬ நாம் வந்து பூமியைச் சங்காரத்தா லடிக்காதபடிக்கு, அவன் * பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளண்டையும் பிள்ளைகளுடைய இருதயத்தைப் பிதாக்களண்டைக்கும் திருப்புவான். * லூக். ௧, ௰௭.

மலகியாவின்தீர்க்கதரிசனம் முடிந்தமுற்றும்.

மத்தேயு என்பவர் எழுதின சுவிசேஷம்.

௧. அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவினுடைய வம்சவரிசையின் அட்டவணை. (௰௮) அவருடைய உற்பத்தியின் விவரம். (௨௧-௨௩) அவருடைய நாமங்கள்.]

ஆபிரகாமின் சந்ததியாகிய தாவீதின் சந்ததியாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவினுடைய வம்சவரிசையின் அட்டவணையாவது.

௨ ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான். ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான். யாக்கோபு யூதா முதலான குமாரர்களைப் பெற்றான்.

௩ யூதா தாமார் என்பவளைச் சேர்ந்து பாரேசையும் சாராவையும் பெற்றான். பாரேசு எஸ்ரோமைப் பெற்றான்.

௪ எஸ்ரோம் ஆராமைப் பெற்றான். ஆராம் அம்மினதாபைப் பெற்றான். அம்மினதாபு நகசோனைப் பெற்றான்.

௫ நகசோன் சல்மோனைப் பெற்றான். சல்மோன் இராகாப் என்பவளைச் சேர்ந்து போவாசைப் பெற்றான். போவாசு உருத்தென்பவளைச் சேர்ந்து ஓபேத்தைப் பெற்றான். ஓபேது ஈசாயைப் பெற்றான்.

௬ ஈசா இராசனாகிய தாவீதைப் பெற்றான். இராசனாகிய தாவீது உரியாவுக்கு மனைவியாயிருந்தவளைச் சேர்ந்து சொலொமோனைப் பெற்றான்.

௭ சொலொமோன் உரோபோவாமைப் பெற்றான். உரோபோவாம் அபியாவைப் பெற்றான். அபியா அசாவைப் பெற்றான்.

௮ அசா யோசபாத்தைப் பெற்றான். யோசபாத்து யோராமைப் பெற்றான். யோராம் ஓசியாவைப் பெற்றான்.

௯ ஓசியா யோத்தாமைப் பெற்றான். யோத்தாம் ஆகாசைப் பெற்றான். ஆகாசு எசேக்கியாவைப் பெற்றான்.

௰ எசேக்கியா மனாசேயைப் பெற்றான். மனாசே அமோனைப் பெற்றான். அமோன் யோசியாவைப் பெற்றான்.

௰௧ (யூதர்கள்) பாபிலோன் தேசத்துக்குச் சிறைப்பட்டுப்போகுங்காலத்திலே யோசியா எகொனியா முதலான குமாரர்களைப் பெற்றான்.

௰௨ அவர்கள் பாபிலோன் தேசத்துக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்ட பின்பு, எகொனியா சலாத்தியேலைப் பெற்றான். சலாத்தியேல் சொரோபாபேலைப் பெற்றான்.

௰௩ சொரோபாபேல் அபியூதைப் பெற்றான். அபியூது எலியாக்கீமைப் பெற்றான். எலியாக்கீம் அசோரைப் பெற்றான்.

௰௪ அசோர் சாதோக்கைப் பெற்றான். சாதோக்கு அகீமைப் பெற்றான். அகீம் எலியூதைப் பெற்றான்.

௰௫ எலியூது எலேயாசாரைப் பெற்றான். எலேயாசார் மாத்தானைப் பெற்றான். மாத்தான் யாக்கோபைப் பெற்றான்.

௰௬ யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அந்த மரியாளிடத்திலே கிறிஸ்து எனப்பட்டிருக்கிற இயேசு பிறந்தார்.

௰௭ இவ்வண்ணமாய் உண்டான தலைமுறைகளெல்லாம் ஆபிரகாம் முதல் தாவீது வரைக்கும் பதினாலு தலைமுறைகளும், தாவீது முதற் பாபிலோன் தேசத்துக்கு யூதர்கள் சிறைப்பட்டுப்போன காலம் வரைக்கும் பதினாலு தலைமுறைகளும், பாபிலோன் தேசத்துக்குக் கொண்டுபோன காலமுதற் கிறிஸ்து வரைக்கும் பதினாலு தலைமுறைகளுமேயாம்.

௰௮ இந்த இயேசுக்கிறிஸ்துவினுடைய உற்பத்தியின் விவரமாவது, அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு (மனைவியாக) நியமிக்கப்பட்ட பின்பு, அவர்கள் கூடிவாழ்ந்திருந்ததற்கு முன்னமே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்.

௰௯ அவளுடைய புருஷனாகிய யோசேப்பு நீதிமானாகையால், அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் இரகசியமாய் அவளை யொழித்துவிட்டுப்போடியாய்ச் சிந்தித்தான்.

௨௰ அவன் அப்படி நினைத்திருக்கையிற் பராபரனுடைய தூதன் சொப்பனத்திலே யவனுக்குக் காணப்பட்டுத் தாவீதின் சந்ததியாகிய யோசேப்பே! நீ உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்பட வேண்டாம். என்னத்தினாலென்றால், அவளிடத்திலுண்டாயிருக்கிறது பரிசுத்த ஆவியினாலுண்டானது.

௨௧ அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவர் தமமுடைய சனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பாராகையால், அவருக்கு இயேசுவென்று பேரிடுவாயாகவென்றான்.

௨௨ தீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தர் சொன்னது நிறைவேறும்படிக்கு இவையெல்லாம் நடந்தன.

௨௩ அவர் சொல்லுவித்ததென்னவென்றால், இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு

குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேலென்று பேரிடுவார்களென்பதே. இம்மானுவேலென்பதற்குப் பராபரன் நம்முடனேயிருக்கிறானென்று அருத்தமாம்.

உச யோசேப்பு நித்திரைதெளிந்தெழுந்தபொழுது, தனக்குக் கர்த்தருடைய தூதன் கட்டளையிட்டபடி தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு,

உரு அவள் முதற்பேறன குமாரனைப் பெறுமளவுக்கும் அவளையறியாதிருந்து (அந்தக் குமாரன் பிறந்தபின்பு) அவருக்கு இயேசுவென்றுபேரிட்டான்.

உ. அதிகாரம்.

[(க) கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் வந்து கிறிஸ்துவைப் பணிந்ததும், (யச) யோசேப்பு எகிப்பத்துக்கு ஓடிப்போனதும், (யசு) குழந்தைகளை ஏரோது கொலைசெய்ததும், (உக) கிறிஸ்து கலிலேயாவுக்குத் திரும்பினதும்.]

ஏரோதென்னும் இராசனுடைய காலத்திலே யூதேயாதேசத்திலுள்ள பெத்தலேகேமூரில் இயேசுவானவர் பிறந்தபின்பு, கிழக்குத்திசையிலிருந்து சாஸ்திரிகள் எருசலேம் நகரத்துக்கு வந்து,

உ (இக்காலத்திற) பிறந்திருக்கிற யூதருடைய இராசாவைக்குறித்துத் தோன்றிய நட்சத்திரத்தைக் கிழக்கிலே நாங்கள் கண்டு அவரைப் பணிந்துகொள்ள வந்தோம். அவரெங்கேயென்றார்கள்.

ஙு ஏரோது இராசா அதைக்கேட்டபொழுது, அவனும் அவனுடனேகூட எருசலேம் நகரத்தாரனைவருங் கலங்கினார்கள்.

ச அல்லாமலும் அவன் சனங்களிற் பிரதானமான ஆசாரியர் வேதபாரகரெல்லாரையுங் கூடிவரச்செய்து, கிறிஸ்து எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.

ரு அவர்கள் அவனை நோக்கி, யூதாவினாகிய பெத்துலேகேமிலே அவர் பிறப்பார். என்னத்தினாலென்றால், யூதேயாதேசத்திலுள்ள பெத்துலேகேமூரே! என்னுடைய சனங்களாகிய இஸ்ரவேலரை ஆளும் பிரபு உன்னிடத்திலே தோன்றுவாராகையால் யூதாவிலுள்ள பிரபுக்களில் நீ சிறியதல்லவென்று,

சு தீர்க்கதரிசியினாலே எழுதப்பட்டிருக்கின்றதென்றார்கள்.

எ அப்பொழுது ஏரோது அந்தச் சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, அந்த நட்சத்திரங் காணப்பட்ட காலத்தைக் குறித்து அவர்களிடத்திலே விசாரித்துக்கொண்டு,

அ நீங்கள் போய், அந்தப் பிள்ளையைக் குறித்து நன்றாய் ஆராய்ந்துபாருங்கள். மேலும் நீங்கள் அதைக் கண்டபின்பு நானும் போய் அதைப் பணிந்துகொள்ளும்படிக்கு எனக்கறிவியுங்களென்று சொல்லி, அவர்களைப் பெத்துலேகேமூருக்கு அனுப்பினான்.

கூ இராசா சொன்னதை அவர்கள் கேட்டுப் போனார்கள். போகையில், தாங்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் அந்தப் பிள்ளையிருக்கிற ஸ்தலத்துக்கு மேலே வந்து நிற்குமளவுக்கும் அவர்களுக்கு முன்பாக நடந்தது.

ய அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டு, மிகுந்த ஆநந்த சந்தோஷமடைந்து,

யக பின்பு அந்த வீட்டில் பிரவேசித்துப் பிள்ளையையும் அதினுடைய தாயாகிய மரியாளையுங் கண்டு வணக்கமாய்விழுந்து அதைப் பணிந்துகொண்டு தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து பொன்னையுந் தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்.

யஉ பின்பு ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகாதிருங்களென்று அவர்கள் சொப்பனத்திலே தேவ உத்தரவுபெற்று, வேறு வழியாய்த் தங்கள் தேசத்துக்குப் புறப்பட்டுப்போனார்கள்.

யங அவர்கள் புறப்பட்டுப்போனபின்பு கர்த்தருடைய தூதன் சொப்பனத்திலே யோசேப்புக்குக் காணப்பட்டு, ஏரோது அந்தப் பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவானாகையால் நீ எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையுங் கூட்டிக்கொண்டு எகிப்பத்து தேசத்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லுமளவுக்கும் அவ்விடத்திலிருவென்றான்.

யச உடனே அவன் எழுந்து, இராத்திரியிலே பிள்ளையையும் அதினுடைய தாயையுங் கூட்டிக்கொண்டு, எகிப்பத்துக்குப் புறப்பட்டுப்போய்,

யரு ஏரோது மரணமடைந்ததளவுக்கும் அவ்விடத்திலிருந்தான். எகிப்பத்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேனென்று தீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தர் திருவுளம்பற்றினது நிறைவேறும்படிக்கு அது நடந்தது.

யசு அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப்பட்டதைக் கண்டு, மிகுந்த கோபமடைந்து, அந்தச் சாஸ்திரிகளிடத்திலே தான் கேட்டாராய்ந்த காலத்தின்படி பெத்துலேகேமூரிலும் அதினுடைய எல்லைகளெயாவிலும் இரண்டு வயதுமுதல் கொண்டு அதற்குத் தாழ்ந்திருந்த வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாரையுங் கொலைசெய்ய ஆட்களையனுப்பினான்.

யஎ அப்பொழுது எரேமியா தீர்க்கதரிசியினாற் சொல்லப்பட்டது நிறைவேறிற்று. அவன் சொன்னதென்னவென்றால்,

௰அ இராமாவூரிலேபுலம்பலும் அழுகை யும் மிகுந்ததுக்கிப்புமுள்ளகூக்குரலகேட்கப்பட்டது. இராசேலு தன பிள்ளைகளைக குறித்து அழுதுக்கொண்டு, அந்தப்பிள்ளைகளில்லாதபடியால ஆறுதல அடையாதிருக்கிறாளென்பதே.

௰௯ ஏரோது இறந்தபின்பு, சொப்பனத்திலேகர்த்தருடையதூதன எகிப்பத்திலே யோசேப்புக்குக்காணப்பட்டு,

௨௰ பிள்ளையினுடைய பிராணனை வாங்கத்தேடினவர்கள இறந்துபோனார்கள். ஆகையால நீ எழுந்துபிள்ளையையும அதினுடையதாயையுங்கூட்டிக்கொண்டு, இஸ்ரவேலதேசத்துக்குப்போவென்றான.

௨௧ அந்தப்படியே அவன எழுந்திருந்து, பிள்ளையையும அதினுடைய தாயையுங கூட்டிக்கொண்டு இஸ்ரவேலதேசத்துக்குப்புறப்பட்டபொழுது,

௨௨ அர்கேலாவு என்பவன தன தகப்பனாகிய ஏரோதினுடையபட்டத்துக்குவந்து யூதேயாவை ஆளுகிறானென்றுகேள்விப்பட்டு அங்கே போகப்பயந்தான. அப்பொழுதுசொப்பனத்திலேயவனதேவ உத்தரவுபெற்றுக்கலிலேயா நாட்டி னுடைய திசைகளைநோக்கிப்புறப்பட்டுப்போய,

௨௩ நாசரேயனென்றழைக்கப்படுவாரென்றுதீர்க்கதரிசியாற சொல்லப்பட்டதுநிறைவேறும்படிக்குநாசரேத்தூரிலே வந்துவாசம்பண்ணினான்.

௩. அதிகாரம்.

[(௧) யோவான் பிரசங்கம்பண்ணிஞானஸ நானங்கொடுத்ததும, (௰௩) கிறிஸ்துவுக்குஞானஸ்நானங்கொடுத்ததும்.]

அக்காலத்திலே யோவானிஸ்நானன் வந்து,

௨ பரலோக இராசரீகஞ்சமீபமாயிருக்கின்றதாகையால் மனந்திரும்புங்களென்று யூதேயாவின் வனாந்தரத்திலே பிரசங்கம பண்ணினான.

௩ அவன்யாவனெனிற், கர்த்தருக்காக மார்க்கத்தை நன்றாகச்செய்யுங்களென்றும, அவருடையபாதைகளைச்செவ்வைபண்ணுங்களென்றுமவனாந்தரத்திலே ஒருவன சத்தமிடுவானென்று ஏசாயாவென்னுந்தீர்க்கதரிசியினாற்சொல்லப்பட்டவனே.

௪ அல்லாமலும அந்தயோவான் ஒட்டகமயிர் உடையைத்தரித்துத்தன துடைய அரையில் வார்க்கச்சையைக்கட்டிக்கொண்டிருந்தான. வெட்டுக்கிளிகளுங்காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தன்.

௫ அக்காலத்திலே எருசலேமநகரத்தாரும யூதேயாத்தேசத்தாரனைவரும யோர்தானந்திக்கடுத்த சுற்றுப்புறத்தார்யாவரும அவனிடத்துக்குப்புறப்பட்டுப்போய்,

௬ தங்கள பாவங்களைப்பறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனாலேஞானஸ்நானம்பெற்றார்கள்.

௭ அப்படியிருக்கையிற், பரிசேயர் சதுசேயர் என்பவர்களிலும அநேகர்தன்னாலே ஞானஸ்நானம்பெறும்படிக்குவருகிறதை அவனகண்டு, அவர்களைநோக்கி, விரியன்பாம்புகளின்குட்டிகளே! இனி வரும கோபத்துக்கு நீங்கள தப்பிக்கொள்ளும படியாய் உங்களுக்கு வகைகாட்டினவன எவன?

௮ மனந்திரும்புதலுக்குத்தக்ககனிகளைக்கொடுங்கள்

௯ ஆபிரகாம் எங்களுடையபிதாவென்றுசொல்ல உங்கள உள்ளத்திலே நினைத்துக்கொள்ளாதிருங்கள. ஆபிரகாமுக்குப பராபரன இந்தக்கற்களிற்பிள்ளைகளையுண்டுபண்ண வல்லவராயிருக்கிறாரென்று உங்களுக்குச்சொல்லுகிறேன.

௰ இப்பொழுதே கோடரிமரங்களுடையவேருக்கேவைத்திருக்கின்றது. ஆகையால் நலக்கனிகளைக்கொடாத மரங்களெல்லாம வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.

௰௧ நீங்கள மனந்திரும்பும்படிக்கு நான ஜலத்தினாலேயுங்களுக்கு ஞானஸ்நானங கொடுக்கிறேன். எனக்குப்பின்வருகிறவர் என்னிலும அதிகவல்லமையுடையவர். அவருடைய பாத இரட்சைகளைச்சுமக்கிறதற்கு நானபாத்திரவான்ல்ல. அவரேபரிசுத்த ஆவியினாலும அக்கினியினாலுமுங்களுக்கு ஞானஸ்நானங்கொடுப்பார்.

௰௨ அவருடையகையில் தூற்றுக்கூடையிருக்கின்றது. அவர்தமதுகளம்முழுவதையும விளக்கித்தம்முடையகோதுமையைக்களஞ்சியத்திற்சேர்ப்பார். பதரை அவியாத அக்கினியினாற்சுட்டுப்போடுவாரென்றான்.

௰௩ அப்பொழுது இயேசுவானவர்யோவானாலேஞானஸ்நானம்பெறுவதற்குக்கலிலேயாநாட்டைவிட்டுயோர்தான்நதிக்கேஅவனிடத்துக்குப்போனார்.

௰௪ யோவான் அவருக்குத்தடைபண்ணி, உம்மாலே நான ஞானஸ்நானம்பெற வேண்டுவதாயிருக்க, நீர் என்னிடத்துக்கு வரலாமாவென்றான்.

௰௫ அதற்கு இயேசுவானவர் அவனை நோக்கி, இவ்விதமாய்ச்சகல நீதியையும நிறைவேற்றுகிறது நமக்கேற்றதாயிருக்கின்றது. ஆகையால் இப்பொழுது சம்மதிப்பாயாகவென்றார். அப்பொழுது அவனசம்மதித்தான.

௰௬ இயேசுவானவர்ஞானஸ்நானம்பெற்றுச்சலத்தைவிட்டேறிவந்தவுடனே, இதோ வானம அவருக்குத்திறக்கப்பட்டது. அல்லாமலும பராபரனுடைய ஆவி புறு

றாவைப்போலிறங்கி, அவர்மேல்வருகிறதைக் கண்டான்.

௧௭ மேலும் இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன் இவரிற்பிரியமாயிருக்கிறேனென்று வானத்திலிருந்து சத்தமுண்டாயிற்று.

௪. அதிகாரம்.

[(௧) கிறிஸ்து உபவாசித்தது, தூண்டிவிடப்பட்டதும். (௰௩) கப்பர்நாகூமிலே வாசம்பண்ணினதும், (௰௭) பிரசங்கம்பண்ணத்தொடங்கினது, சீஷர்களைச் சேர்த்ததும். (௨௩) பிணியாளிகளைக் குணமாக்கினதும்.]

௧ அப்பொழுது இயேசுவானவர் பசாசினாலே சோதிக்கப்படுவதற்கு ஆவியினாலே வனாந்தரத்திற்கொண்டுபோகப்பட்டார்.

௨ (அங்கே) அவர் நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசம்பண்ணினபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று.

௩ அப்பொழுது அந்தச் சோதிக்கிறவன் அவரிடத்தில் வந்து: நீ பராபரனுடைய குமாரனானால் இந்தக் கற்கள் அப்பங்களாகும்படி கட்டளையிடு என்றான்.

௪ அதற்கவர் மாறுத்தரஞ்சொன்னது: மனிதனானவன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடைய வாய்மலர்ந்தருளிச் செய்கிற எந்த வாக்கினாலும் பிழைப்பானென்றெழுதியிருக்கின்றதென்றார்.

௫ அப்பொழுது பசாசானவன் அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய், அவரைத் தேவாலயத்து மேல்உப்பரிகையில் நிறுத்தி,

௬ உன்னைக் குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவாரென்றும், உன்னுடைய பாதங் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைக் கைகளிலே ஏந்திக்கொண்டு போவார்களென்றும் எழுதியிருக்கின்றதாகையால், நீ பராபரனுடைய குமாரனானால் தாழக்குதியென்றான்.

௭ அதற்கு இயேசுவானவர் சொன்னது: அதுவுமல்லாமல் உன் தேவனாகிய பராபரனைப் பரீட்சைபாராதிருப்பாயாகவென்றும் எழுதியிருக்கின்றதென்றார்.

௮ மறுபடியும் பசாசானவன் அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேற்கொண்டுபோய், உலகத்திலுள்ள இராச்சியங்களெல்லாவற்றையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து,

௯ நீ விழுந்து என்னைத் தொழுதுகொண்டால், இவைகளெல்லாவற்றையும் உனக்குத் தருவேனென்று சொன்னான்.

௰ அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி: உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொண்டு அவரொருவருக்கே ஆராதனை செய்வாயாகவென்றெழுதியிருக்கின்றதாகையால் சாத்தானே! அப்புறம்போவென்றார்.

௰௧ அப்பொழுது பசாசானவன் அவரை விட்டுப்போனான். உடனே தேவதூதர் சேர்ந்துவந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

௰௨ பின்பு யோவான் காவலில் வைக்கப்பட்டானென்று இயேசுவானவர் கேள்விப்பட்டு கலிலேயா நாட்டுக்குப் புறப்பட்டுப்போய்,

௰௩ நாசரேத்தூரைவிட்டுச் செபுலோன் நப்தலியென்னும் நாடுகளின் எல்லைகளில் கடற்கரையருகேயிருக்கிற கப்பர்நாகூம்பட்டினத்தில் வந்து வாசம்பண்ணினார்.

௰௪ அதினாலே, கடற்கரையருகேயும் யோர்தான் நதியோரத்திலுமுள்ள அஞ்ஞானிகள் அடங்கியிருக்கிற கலிலேயாதேசமாகிய செபுலோன்தேசத்தாரும் நப்தலிதேசத்தாருமாகிய இருளிலிருக்கிற சனங்கள் மிகுந்த ஒளியைக் கண்டார்கள்.

௰௫ மரணத்திழலுள்ள திசையிலிருக்கிறவர்களுக்கு ஒளி தோன்றிற்றென்று

௰௬ எசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டது நிறைவேறிற்று.

௰௭ அக்காலத்திலே இயேசுவானவர்: பரலோக இராச்சியஞ் சமீபித்ததாகையால், மனந்திரும்புங்களென்று பிரசங்கிக்கத்தொடங்கினார்.

௰௮ ஒருகாலத்திலே இயேசுவானவர் கலிலேயாநாட்டின் கடற்கரையருகே நடந்துபோகையில், மீன்பிடிக்கிறவர்களாகிய பேதுருவென்னப்பட்ட சீமோனும், அவனுடைய சகோதரனான அந்திரேயாவுமாகிய இருவருங் கடலிலே வலைபோட்டுக்கொண்டிருக்கிறபொழுது அவர்களைக் கண்டு,

௰௯ என்பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப்பிடிக்கிறவர்களாக்குவேனென்று அவர்களுடனே சொன்னார்.

௨௰ உடனே அவர்கள் வலைகளைவிட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

௨௧ அவர் அவ்விடம்விட்டு அப்புறம்போகையில் செபெதேயுவினுடைய மகன் யாக்கோபும் அவனுடைய சகோதரன் யோவானுமாகிய இருவருந் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படவிலிருந்து தங்கள் வலைகளைத் தைத்துக்கொண்டிருக்கிறபொழுது அவர்களைக் கண்டு அவர்களையும் அழைத்தார்.

௨௨ உடனே அவர்கள் படவையுந் தங்கள் தகப்பனையும்விட்டு அவரைப் பின்பற்றினார்கள்.

௨௩ பின்பு இயேசுவானவர் கலிலேயா தேசமெங்குஞ் சுற்றி நடந்து அவர்களுடைய ஆலயங்களில் சனங்களுக்கு உபதேசஞ் செய்து, பரலோக இராச்சியத்தைக்குறித்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச்

களுக்குண்டாயிருந்த சகலவிதமான வியாதிகளையுஞ் சகலவிதமான நோய்களையும் நீக்கி அவர்களைச் சுகமாக்கினார்.

௨௪ அவருடைய கீர்த்தி சீரியாத்தேசத்திலெங்கும் பிரபலமாயிற்று. பின்பு பலபல வியாதிகளையும் வேதனைகளையுமடைந்த பிணியாளிகள் யாவரையும் பசாசுபிடித்தவர்களையுஞ் சந்திரரோகிகளையுந் திமிர்வாதக்காரரையும் அவரிடத்துக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களைச் சுகமாக்கினார்.

௨௫ கலிலேயாவிலுந் தெக்கப்போலியிலும் எருசலேமிலும் யூதேயாவிலும் யோர்தானதிக்கப்புறத்திலுமிருந்து மிகுந்த சனங்கள் வந்து அவர் பின்சென்றார்கள்.

௫. அதிகாரம்.

[(௧) கிறிஸ்து மலையிலேறிப் பண்ணின பிரசங்கத்தின் ஆரம்பம். (௩) பாக்கியவான்களின் தன்மை. (௰௩) உலகத்திற்கு உப்பைப்போலவும் ஒளியைப்போலவுமிருக்கிறவர்களின் தன்மை. (௰௭) கிறிஸ்துநாதர் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்தேனென்று சொன்னது. (௨௧) கொலைபாதகத்தின் தன்மை. (௨௭) விபசாரத்தின் தன்மை. (௩௩) ஆணையின் தன்மை. (௩௮) பொறுமையின் தன்மை. (௪௩) அன்பின் தன்மை.]

அவர் அந்தச் சனங்களைக் கண்டு, மலையின்மேலேறியுட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

௨ அப்பொழுது அவர் தமது திருவாயைத் திறந்து, அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னதாவது,

௩ ஆவியில் எளிமையுள்ளவர்கள் பரலோக இராச்சியத்தையடைவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௪ துயரப்படுகிறவர்கள் ஆறுதலடைவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௫ சாந்தகுணமுள்ளவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௬ நீதியின்மேற் பசிதாகமுள்ளவர்கள் திருத்தியடைவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௭ இரக்கமுள்ளவர்கள் இரக்கத்தையடைவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௮ சுத்தமான இருதயமுள்ளவர்கள் பராபரனைத் தரிசிப்பார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௯ சமாதானத்தை நடப்பிக்கிறவர்கள் பராபரனுடைய புத்திரரென்னப்படுவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௰ நீதியினிமித்தந் துன்பப்படுகிறவர்கள் பரலோக இராச்சியத்தையடைவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

௰௧ என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்திப் பலவிதத் தீமையான மொழிகளையுங்கள்மேற் பொய்யாய்ச் சொன்னார்களானால் நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

௰௨ பரலோகத்திலேயுங்களுக்கு மிகுந்த பலன் கிடைப்பதினாலே நீங்கள் சந்தோஷப்பட்டு மிகவுங் களிகூருங்கள். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்கள்.

௰௩ நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பானது சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும். அது வெளியே கொட்டப்படுவதற்கும் மனிதராலே மிதிக்கப்படுவதற்குமேயன்றி, வேறொன்றுக்குமாகாது.

௰௪ நீங்கள் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறீர்கள். மலையின்மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

௰௫ மேலும் விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவையாமல் ஒரு தண்டின்மேலே வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலிருக்கிற யாவருக்கும் பிரகாசங்கொடுக்கும்.

௰௬ அப்படியே மனிதரானவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவின் மகிமையை விளங்கப்பண்ணத்தக்கதாக, உங்கள் ஒளி அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

௰௭ வேதப்பிரமாணத்தையாகிலுந் தீர்க்கதரிசனங்களையாகிலுந் தள்ளிவிடுகிறதற்கு நான் வந்ததாக நினையாதிருங்கள். அவைகளைத் தள்ளிவிடுகிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்கு வந்தேன்.

௰௮ வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், வேதமுழுவதும் நிறைவேறுவதன்றி, அதிலொரு சின்னவெழுத்தாகிலும் ஒரெழுத்தினுடைய உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௯ ஆகையால் இந்தக் கற்பனைகளில் மிகவுஞ் சிறிய கற்பனையையாகிலுந் தள்ளி, அவ்வண்ணமாய் மனிதருக்கு உபதேசிக்கிறவனெவனோ அவன் பரலோக இராச்சியத்திலே மிகவுஞ் சிறியவனென்றெண்ணப்படுவான். அவைகளின்படி செய்து, உபதேசிக்கிறவனே பரலோக இராச்சியத்திலே பெரியவனென்றெண்ணப்படுவான்.

௨௰ ஆதலால் வேதபாரகர்களும் பரிசேயர்களுமானவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகப்பட்டிராவிட்டால், பரலோக இராச்சியத்திலே பிரவேசிக்கமாட்டீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௧ கொலைசெய்யாதிருப்பாயாக வென்பதும் கொலைசெய்தவன் நியாயத்தீர்ப்புக்

கேதுவாயிருப்பானென்பதும் பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௨௨ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, சகோதரனை வீணாய்க் கோபித்துக்கொள்பவனெவனோ அவன் நியாயத்தீர்ப்புக்கேதுவாயிருப்பான். சகோதரனை வீண்னென்கிறவனெவனோ அவன் பெரிய சங்கத்தீர்ப்புக்கேதுவாயிருப்பான். அவனை மதிகேடனென்கிறவனெவனோ அவன் எரிநரகத்துக்கேதுவாயிருப்பான்.

௨௩ ஆகையால் நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்மேற் சகோதரனுக்கு விசனமுண்டென்று அங்கே நினைவுகொள்வாயாகில்,

௨௪ அந்தப்பலிபீடத்தின்முன் உன்காணிக்கையை வைத்துவிட்டுப்போய் முன்புசகோதரனுடனேயொப்புரவாகிப் பின்புவந்து உன்காணிக்கையைச் செலுத்துவாயாக.

௨௫ உன்க்கெதிராளியானவன் உன்னை நியாயாதிபதிக்கொப்புவியாமலும் அந்த நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கொப்புவியாமலும், நீ சிறைச்சாலையிலவைக்கப்படாமலுமிருக்கும்படிக்குச் சீக்கிரமாய் உன்னெதிராளியுடனே வழியிலிருக்கும்பொழுதே அவனுடனே நல்மனம்பொருந்துவாயாக.

௨௬ (பொருந்தாவிட்டால்) நீ ஒருகாசுங்குறைவின்றி, முழுமையுஞ் செலுத்துகிறவரைக்கும் அவ்விடத்தைவிட்டுத்திரும்பிவரமாட்டாயென்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன்.

௨௭ விபசாரம்பண்ணாதிருப்பாயாகவென்பது பூர்வத்தாருக்குரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௨௮ அல்லாமலும் நானுங்களுக்குச் சொல்லுகிறதாவது, ஒரு ஸ்திரியை இச்சிப்போடேபார்க்கிறவனெவனோ அவன் தன்னிருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று.

௨௯ ஆகையால் உன்வலதுகண் உன்னைக்கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைப்பிடுங்கியெறிந்துபோடு. உன்சரீரம் முழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களிலொன்றுகெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

௩௰ அன்றியும் உன் வலதுகை உன்னைக்கெடுக்கிறதற்கேதுவானால், அதைத் தறித்தெறிந்துபோடு. உன்சரீரமுழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களிலொன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

௩௧ அல்லாமலும் யாவனானாலுந் தன் மனைவியைத் தள்ளிவிட்டால் தள்ளுதற்சீட்டையவளுக்குக்கொடுக்கக்கடவனென்று சொல்லப்பட்டது.

௩௨ அப்படியிருந்தும் எவனாகிலுந் தன் மனைவி வேசித்தனமில்லாமலிருக்கையில், அவளைத் தள்ளிவிட்டால் அவளை விபசாரஞ் செய்யப்பண்ணுகிறவனாயிருப்பானென்றும் எவனானாலுந் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணினால், விபசாரஞ்செய்கிறவனாயிருப்பானென்றும் நானுங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௩ அன்றியும் பொய்யாணையிடாதிருப்பாயாகவென்பதும் உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாகவென்பதும் பூர்வத்தாருக்குரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௩௪ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, எவ்விதத்திலுஞ் சத்தியம்பண்ணக்கூடாது. வானந் தேவனுடைய சிங்காசனமாயிருக்கிறபடியால், அதின்மேற் சத்தியம்பண்ணலாகாது. பூமி பராபரனுடைய பாதபடியாயிருக்கிறபடியால் அதின்மேற் சத்தியம்பண்ணலாகாது.

௩௫ எருசலேம் பெரிய இராசனுடைய நகரமாயிருக்கிறபடியால், அதின்மேற் சத்தியம்பண்ணலாகாது.

௩௬ உன்சிரசின் ஒரோமயிரையாகிலும் வெண்மையுங் கறுப்புமாக்கத் திராணியில்லாதபடியால், அதின்மேற் சத்தியம்பண்ணலாகாது.

௩௭ உள்ளதையுள்ளதென்றும் இல்லாததையில்லதென்றுஞ் சொல்லக்கடவீர்கள். இவைகளுக்கு மேற்பட்டது தீமையினாலுண்டாயிருக்கின்றது.

௩௮ கண்ணுக்குப்பதிலாகக் கண்ணும் பல்லுக்குப்பதிலாகப் பல்லையும் (வாங்கவேண்டுமென்று) சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௩௯ நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, பொல்லாதவனோடே எதிர்த்து நிற்கக்கூடாது. ஒருவன் உன்னுடைய வலதுகன்னத்தில் அடித்தால் மறுகன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக்காட்டு.

௪௰ உன்னுடனே வழக்காடி உன்னுடைய மேல்வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் விட்டுவிடு.

௪௧ ஒருவன் உன்னைப்பொருக்காதவழி நடக்கும்படியாகப் பலவந்தம்பண்ணினால், அவனோடே இருகாதவழிமட்டும் நடந்துபோ.

௪௨ உன்னை வேண்டிக்கொள்ளுகிறவனுக்குக்கொடு உன்னிடத்திற் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதிருப்பாயாக.

௪௩ உன் பிறனில் அன்புவைத்து உன் சத்துருவைப்பகைக்கக்கடவாயென்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

௪௪ நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா பொல்லாதவர்கள்மேலும் நல்லவர்கள்மேலும்

டுநசம சூரியனையுதிககவும நீதியுளளவர்க ளமேலும அநீதியுளளவர்களமேலும மழை யைபெயயவுமபணணுகிறுர்.

௪௫ அபபடியே நீங்கள அவருககுபபுததிர ராயிருககுமபடிககு உஙகளசததுருககளி ல் அனபுகூர்நது உஙகளைச்சபிககிறவர்களை ஆசிர்வதித்து, உஙகளைபபகைக்கிறவர்களு ககு நன்மைசெய்து, உஙகளைநிநதிககிறவர் களுககாகவும உஙகளைததுன்பப்படுததுகி றவர்களுககாகவுஞசெபமபண்ணுஙகள.

௪௬ அலலாமலும உஙகளில் அனபுகூருகி றவர்களமேலேமாததிரம அனபாயிருப பீர்களாகில், உஙகளுககு என்னபலனவரு ம? ஆயககாரரும அபபடியேசெய்கிறுர்க ளல்லவோ.

௪௭ உஙகள சகோதரரைமாததிரமவாழ்த் திககொள்வீர்களாகில் அதுபெரியசெய் கையாகுமா? அஞ்ஞானிகளும அபபடிச செய்கிறுர்கள்ல்லவே.

௪௮ ஆகையாற் பரமணடலஙகளிலிருக கிற உஙகளபிதாபூரணசற்குணராயிருககிற துபோல, நீஙகளுமபூரணசற்குணராயிரு க்கக்கடவீர்கள்.

௬. அதிகாரம்.

[(௧) தருமததினதன்மை. (௫) செபததின தன்மை. (௰௬) உபவாசததினதன்மை. (௰௯) நாமதேடவேணடியபொக்கிஷம். (உ௪) பராபரனுககும உலகததிற்கும ஊழியஞசெய்தல. (உ௫) லவுகீககவலை யைவெறுததல். (௩௩) பராபரனுடைய இராசசியததைத்தேடல்.]

நீஙகள மனிதர்களாலே காணபபடும பொருட்டாய் உங்கள தருமததை அவர்க ளுககுமுனபாகசசெயயாதபடிககு எசசரி கையாயிருஙகள. செய்தாற்பரமணடலங களிலிருககிற உஙகளபிதாவினிடததிலேபல னபெருதிருபபீர்கள.

உ ஆகையால நீ தருமஞசெயகிறபொ ழுது, மனிதர்களாற புகழபபடுவதறகுச செப ஆலயஙகளிலுமவீதிகளிலுஞசெயகிற வஞசகரைபபோல நீ உனககுமுனபாகத தாரையூதபபணணககூடாது. அவர்களதங களபலனையடைநதுதீர்நததெனறு மெய யாகவேயுஙகளுககுச்சொலலுகிறேன்.

௩ நீதருமஞசெயகிறபொழுது, உனதரு மம அநதரஙகமாயிருககுமபடிககு உன வலதுகைசெயகிறதை உனனிடதுகையறி யாதிருக்கக்கடவது.

௪ அபபொழுது அநதரஙகமாயிருககி றதைநோககுகிற உனபிதா தாமே வெளி யரஙகமாயுனககுபபலனளிபபார்.

௫ அனறியும நீ செபமபணணுகிறபொ ழுது, வஞசகரைபபோலிருக்கக்கூடாது. அவர்கள மனிதர்களாற காணபபடுமபடிக குச்செப ஆலயஙகளிலேயும வீதிகளினசந திகளிலேயும நினறுகொணடுசெபமபணண விருமபுகிறுர்கள. அவர்கள தஙகளபலனை யடைநதுதீர்நததெனறுமெயயாகவேயுங களுககுச்சொலலுகிறேன.

௬ நீசெபமபணணுகிறபொழுது, உன வீட்டின அறைககுட்பிரவேசிதது, அதின கதவைபபூட்டினபினபு அநதரஙகததிலிரு ககிற உனபிதாவைநோககிச்செபமபண ணு. அப்பொழுது அநதரஙகமாயிருககிற தைநோககுகிற உனபிதா வெளியரஙகமா யஉனககுபபலனளிபபார்.

௭ அலலாமலுஞசெபமபணணுகிறபொ ழுது நீஙகள அஞ்ஞானிகளைபபோலவீணுய வசனிக்கக்கூடாது. அவர்கள தாஙகள அதி கமாயவசனிததாற கேட்கபபடுவோமென றுநினைககிறுர்கள.

௮ அவர்களுககொபபாயசசெயயாதிரு ஙகள. நீஙகள உஙகளபிதாவைநோககிவே ணடிககொளளுமுனனமே அவர் உஙகளு ககுவேணடுவதினனதெனறு அறிநதிருககி ருரே.

௯ ஆகையால நீஙகளசெபமபணணவே ணடுவதெபபடியெனில, பரமணடலஙகளி லிருககிற எஙகளபிதாவே, உமமுடையநா மம்பரிசுததமாயவணஙகபபடுவதாக.

௰ உமமுடைய இராசசியமவருவதாக. உமமுடையசித்தம பரமணடலததிலேசெ யயபபடுகிறதுபோலபூமியிலேயுஞ செய யபபடுவதாக.

௰௧ இனறைககு எஙகளுககுவேணடிய ஆகாரததை எஙகளுககுததாரும.

௰௨ எஙகளகடனாளிகளுககுநாஙகளமன னிபபதுபோலதேவரீரெஙகள கடனகளை மனனிததருளும.

௰௩ நாஙகளசோதனையிறபிரவேசியாத படிசெயது தீமையினினறு எஙகளை இரட்சி ததுககொளளும இராசசியமுமவலலமையு ம மகிமையும உமககேயெனறெனறைககு முணடாயிருககினறன் ஆமன் எனபதே யாம.

௰௪ மனிதர்கள (உஙகளுககு) சசெயத தபபிதஙகளைமனனிபபீர்களாகில, உஙகள பரமபிதா உஙகளுககும்மனனிபபார்.

௰௫ மனிதர்கள (உஙகளுககு) சசெயத தபபிதஙகளை மனனியாதிருபபீர்களாகில், உஙகளபிதா உஙகளதபபிதஙகளையுமமன னியாதிருபபார்.

௰௬ மேலும நீஙகள உபவாசமபணணு மபொழுது வஞசகரைபபோல முகவாட லாயிருக்கக்கூடாது. அவர்கள உபவாசம பணணுகிறது மனிதர்களாற காணபபடும பொருட்டாயததஙகள முகஙகளைவதஙகப பணணுகிறுர்கள. அவர்கள தஙகளபலனைய டைநதுதீர்நததெனறுமெயயாகவே உஙக ளுககுசசொலலுகிறேன.

௧௭ நீ உபவாசிக்கும்பொழுது அந்த உபவாசம் மனிதர்களுக்குக் காணப்படாமல் அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படிக்கு உன் சிரசைத் தயிலத்தாற் பூசி உன் முகத்தைக் கழுவக்கடவாய்.

௧௮ அப்பொழுது அந்தரங்கமாயிருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௧௯ பூமியிலே நீங்கள் உங்களுக்காகப் பொக்கிஷங்களைக் கூட்டிவையாதிருங்கள். அவ்விடத்திலே பூச்சியுந் துருவும் அவைகளைக் கெடுக்கும். திருடருங் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

௨௰ பரலோகத்திலே உங்களுக்காகப் பொக்கிஷங்களைக் கூட்டிவையுங்கள். அவ்விடத்திலே பூச்சியாவது துருவாவது அவைகளைக் கெடுக்கிறதுமில்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை.

௨௧ உங்கள் பொக்கிஷமெங்கேயோ அங்கே உங்கள் இருதயமுமிருக்குமே.

௨௨ கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கின்றது. ஆகையால் உன் கண் சொஸ்தமாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும்.

௨௩ உன் கண் வியாதியாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருள் அடைந்திருக்கும். அப்படியிருக்க, உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால் இருளே மிகவும் மிகுதியாயிருக்குமல்லவோ.

௨௪ ஒருவன் இரண்டு எசமான்களுக்கு ஊழியஞ் செய்யமாட்டான். என்னத்தினாலெனில், ஒருவனையவன் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனையசட்டைபண்ணுவான். நீங்கள் பராபரனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்யமாட்டீர்கள்.

௨௫ ஆகையால் உங்கள் சீவனுக்காக என்னத்தைப் போசனஞ்செய்வோம் என்னத்தைப் பானம்பண்ணுவோமென்றும் உங்கள் சரீரத்துக்காக என்னத்தையுடுப்போமென்றுங் கவலைப்படாதிருங்களென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகாரத்திற் சீவனும் உடைக்குச் சரீரமும் அதிகமாயிருக்கிறதல்லவோ.

௨௬ ஆகாசத்துப் பறவைகளை நோக்கிப்பாருங்கள். அவைகள் விதைக்கிறதும் அறுக்கிறதும் களஞ்சியங்களிற் கூட்டிவைக்கிறதுமில்லை. அவைகளுக்கும் உங்கள் பரமபிதா உணவைக் கொடுக்கிறார். அவைகளிலும் நீங்கள் மேன்மையுள்ளவர்களல்லவா?

௨௭ அல்லாமலும் உங்களிலொருவன் கவலைப்படுகிறதினாலே தன் சரீர அளவுக்கு ஒரு முழத்தையுங் கூட்டுவானோ? (மாட்டானே.)

௨௮ பின்னும் உடைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன? வெளியிலே லீலியென்னும் புஷ்பங்கள் வளருகிற வகையைப் பாருங்கள். அவைகள் வருந்துகிறதுமில்லை நூற்கிறதுமில்லை.

௨௯ அப்படியிருந்தும், மிகுந்த சம்பத்தையுடைய சாலொமோனும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் (அழகாய்) உடுத்தியிருக்கவில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௰ அப்படியிருக்க, அற்ப விசுவாசிகளே ஒருநாளை வளருகிறதுமாய் மறுநாள் அடுப்பிற் போடப்படுகிறதுமாயிருக்கிற புல்லுக்குப் பராபரன் இவ்விதமாய் உடுத்துவிக்கிறதினால், மிகவும் அதிகமாய் உங்களுக்கு உடுத்துவிப்பாரல்லவோ.

௩௧ ஆகையால் என்னத்தைப் போசனஞ் செய்வோமென்றும், என்னத்தைப் பானம் பண்ணுவோமென்றும், என்னத்தை உடுப்போமென்றும், நீங்கள் கவலைப்படாதிருங்கள். அப்படிப்பட்டவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் தேடுவார்கள்.

௩௨ உங்கள் பரமபிதா இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று அறிந்திருக்கிறாரே.

௩௩ முதலாவது பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்.

௩௪ ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளைக்காக நாளைக்குக் கவலைகளுண்டாகும். அந்தந்த நாளுக்கு அதினதினுடைய வருத்தம் போதுமே.

௭. அதிகாரம்,

[(௧) தெளியாத எண்ணம். (௩) பரிசுத்தமானதைக் காத்தல் (௭) சத்தோஷமாய் வேண்டுதல். (௰௩) நெருக்கமான வாசல் வழியாய்ச் சீவனடைதற்குப் பிரவேசித்தல் (௰௫) கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு விலகல். (௨௧) திருவசனத்தின்படி செய்தல்.]

௧ நீங்கள் (மற்றவர்களை) எண்ணுகிறபடியே அப்படி நீங்களும் எண்ணப்படுவீர்கள்.

௨ அல்லாமலும் நீங்கள் அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.

௩ ஆகையால் நீங்கள் (நியாயமின்றிக்) குற்றவாளிகளென்றெண்ணாதிருங்கள். எண்ணினால் உங்களையும் அப்படி எண்ணுவார்கள் (மேலும் நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைப் பாராமற் சகோதரனுடைய கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?

௪ உத்திரமே உன் கண்ணிலிருக்கையில் நீ சகோதரனை நோக்கி, உன் கண்ணிலிருக்கிற சிராயை நான் எடுத்துப்போடுகிறேன். இடங்கொடு என்று நீ சொல்வதென்ன?

௫ மாயக்காரனே, முதலாவது உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு. பின்பு சகோதரனுடைய கண்ணிலிருக்கிற துரும்பையெடுத்துப்போட நன்றாய்ப்பார்ப்பாய்.

௬ பரிசுத்தமானதை நீங்கள் நாய்களுக்குக் கொடுக்கக்கூடாது. அல்லாமலும் உங்கள் முத்துக்களைப் பன்றிகளுக்குப் போடக்கூடாது. அப்படிச்செய்தால், அவைகள் அந்த முத்துக்களைத் தங்கள் கால்களால் மிதித்துப்பின்பு திரும்பிக்கொண்டு உங்களைப் பீறும்.

௭ வேண்டிக்கொள்ளுகிறவனெவனும் வாங்கிக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான்.

௮ தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

௯ உங்களிலே தம் பிள்ளை அப்பந்தனைக் கேட்டால் அப்பங்கேட்கிறதன் மகனுக்குக் கல்லைக்கொடுப்பானோ

௰ மீனை அவன் கேட்டுக்கொண்டால் அவனுக்குப் பாம்பைக்கொடுப்பானோ.

௰௧ ஆகையாற்பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைச் செய்யும்படி அறிந்திருக்க, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா தம்மைவேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு மிகவும் அதிகமாய் நன்மைகளைக்கொடாமலிருப்பாரா.

௰௨ ஆனபடியும் மனிதர்கள் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறவைகளெவைகளோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

௰௩ கேட்டுக்குக்கொண்டுபோகிற வாசல் விரிவாயும் வழி விசாலமாயுமிருக்கின்றன் அந்த வழியாய்ப்பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

௰௪ சீவனுக்குக்கொண்டுபோகிறவாசல் மிகவும் இடுக்கமாயும் வழி நெருக்கமாயுமிருக்கின்றன. சிலர்மாத்திரம் அதைக்கண்டடைகிறார்கள். ஆதலால் நீங்கள் இடுக்கமானவாசல்வழியாய்ப்பிரவேசியுங்கள்.

௰௫ மேலும் ஆட்டைப்போல உருவும் பீறுகிற ஓநாய்களைப்போல மனசுமுடையவர்களாய் உங்களிடத்தில் வருகிற கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு நீங்கள் இடங்கொடாமல் எச்சரிக்கையாயிருங்கள்.

௰௬ அவர்களுடைய கனிகளினாலே அவர்களையறிவீர்கள் முட்செடிகளில் திராட்சப்பழங்களையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா.

௰௭ அப்படியே நல்லமரங்களெல்லாம் நல்ல கனிகளைக்கொடுக்கும். கெட்டமரம் பொல்லாதகனிகளைக்கொடுக்கும்.

௰௮ நல்லமரம் பொல்லாதகனிகளையுங் கெட்டமரம் நல்லகனிகளையுங் கொடுக்கமாட்டாது.

௰௯ நல்ல கனிகளைக்கொடாத மரங்களெல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.

௨௰ ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களையறிவீர்கள்.

௨௰௧ என்னைக்கர்த்தாவே கர்த்தாவேயென்றுசொல்லுகிற எவனும் பரலோக இராச்சியத்திற் பிரவேசிப்பதில்லை. பரமண்டலங்களிலேயிருக்கிற என் பிதாவினுடைய சித்தத்தின்படிசெய்கிறவனே அதிற்பிரவேசிப்பான்.

௨௰௨ அந்நாளிலே அநேகர் என்னை நோக்கி, ஆ, கர்த்தாவே கர்த்தாவே உம் முடைய நாமத்தினாலே நாங்கள் தீர்க்கதரிசனமுரைத்தோமல்லவோ. உமது நாமத்தினாலே பசாசுகளைத் துரத்தினோமல்லவோ. உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோமல்லவோ என்பார்கள்.

௨௰௩ அப்பொழுது நான் அவர்களை நோக்கி, நான் ஒருக்காலும் உங்களையறியவில்லை. அக்கிரமக்காரரே, நீங்களென்னைவிட்டுப் போங்களென்று அவர்களுக்கு அறிவிப்பேன்.

௨௰௪ ஆகையால் நான் சொல்லியவசனங்களைக்கேட்டு அவைகளின்படிசெய்கிறவனெவனோ அவனைத் தன் வீட்டைக் கல்மலையின்மேல் கட்டின புத்தியுள்ள மனிதனுக்கொப்பிடுவேன்.

௨௰௫ அந்தவீடுகல்மலையின்மேல் அஸ்திபாரம்போட்டிருந்தபடியால், பெருமழை சொரிந்தும் பெருவெள்ளம் வந்தும் காற்றுக்கள் அடித்தும் அந்தவீட்டின்மேலே மோதியும் அது விழவில்லை.

௨௰௬ நான்சொல்லியவசனங்களைக்கேட்டும் அவைகளின்படிசெய்யாதிருக்கிறவனெவனோ அவன் தன் வீட்டை மணலின்மேற்கட்டின புத்தியீனனுக்கொப்பாயிருப்பான்.

௨௰௭ பெருமழைசொரிந்து பெருவெள்ளம் வந்து காற்றுக்களும் அடித்து அந்தவீட்டின்மேல் மோதியபொழுது அது விழுந்து முழுவதும் இடிந்துபோயிற்றென்றார்.

௨௰௮ பின்பு. நடந்ததென்னவெனில், இயேசுவானவர் இந்தவசனங்களைச்சொல்லி முடித்தபொழுது அவர் வேதபாரகரைப்போலல்ல,

௨௰௯ அதிகாரமுடையவரைப்போலப் போதித்தபடியினாலே சனங்கள் அவருடைய உபதேசத்தைக்குறித்து பிரமித்தார்கள்.

௮. அதிகாரம்.

[(௨) குஷ்டரோகியைக் குணமாக்கினதும் நூற்றுக்கு அதிபதியினுடைய வேலைக்காரனையும் பேதுருவினுடைய மாமியையும் மற்றவர்களையும் சொஸ்தமாக்கினதும். (௰௮) சீஷராகும்படி வந்தவர்களுக்குச் சொன்னது. (௨௰௩) சமுத்திரத்தையும் காற்றையும் அமைதலாக்கினது. (௨௰௮) இரண்டு பேரைப் பிடித்திருந்த பிசாசுகளைத் துரத்திப் பன்றிக் கூட்டத்திலே போகப்பண்ணினது.]

அவர் மலையிலிருந்திறங்கி வந்தபொழுது திரளான சனங்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

௨ அப்பொழுது ஒரு குஷ்டரோகி வந்து அவருக்கு முன்பாக விழுந்து வணங்கி ஆண்டவரே, உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலாகுமென்றான்.

௩ இயேசுவானவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் நீங்கி அவன் சுத்தமானான்.

௪ அல்லாமலும் இயேசுவானவர் அவனை நோக்கி, நீ இதை ஒருவனுக்குஞ் சொல்லாமலிருக்கவேண்டுமென்று. அவர்களுக்குச் சாட்சியாகும்படிக்கு நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்.

௫ இயேசுவானவர் கப்பர்நாகூம் பட்டணத்திற் பிரவேசித்தபின்பு நூற்றுக்குச் சேர்வைக்காரனொருவன் அவரிடத்தில் வந்து அவரை நோக்கி,

௬ ஆண்டவரே, என் வேலைக்காரன் திமிர்வாதமுள்ளவனாய் வீட்டிலே கிடந்து மிகவும் உபாதிப்படுகிறானென்று வேண்டிக் கொண்டான்.

௭ அவனுடனே இயேசுவானவர் நான் வந்து அவனைக் குணமாக்குவேனென்றார்.

௮ அதற்கு அந்தச் சேர்வைக்காரன் சொன்னது, ஆண்டவரே, நீர் என் வீட்டுக்குட் பிரவேசிப்பதற்கு நான் பாத்திரனல்ல,

௯ அல்லாமலும் நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குட்பட்டிருக்கிற சேவகரிலொருவனைப் போவென்னப் போகிறான். மற்றொருவனை வாவென்ன வருகிறான். எனக்கு அடிமையானவனை இதைச் செய்யென்னச் செய்கிறான். ஆகையால் நீர் ஒரு வார்த்தை மாத்திரஞ் சொன்னால் என் வேலைக்காரன் சொஸ்தம் அடைவானென்றான்.

௰ இயேசுவானவர் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுத் தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௧ பின்னும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, அநேகம்பேர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து பரலோகராச்சியத்திலே ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடனே கூடப் பந்தியிலிருப்பார்கள்.

௰௨ இராச்சியத்தின் பிள்ளைகளோ புறம்பாகத் தள்ளப்படுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று சொன்னபின்பு,

௰௩ அவர் அந்தச் சேர்வைக்காரனை நோக்கி, நீ போகலாம். உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவதென்றார். அந்நாழிகையிலே அவனுடைய வேலைக்காரன் சொஸ்தம் அடைந்தான்.

௰௪ இயேசுவானவர் பேதுருவின் வீட்டிலே வந்து அவனுடைய மாமி சுரமாய்க் கிடக்கிறதைக் கண்டு,

௰௫ அவள் கையைத் தொட்டார். உடனே சுரம் அவளைவிட்டு நீங்கிற்று. அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

௰௬ அஸ்தமனமானபொழுது பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர் தமது வார்த்தையினாலே ஆவிகளைத் துரத்தி [illegible]

௰௭ அவர் அந்த ஆவிகளை ஒருவார்த்தையினாலே துரத்திப் பிணியாளிகளெல்லாரையுங் குணமாக்கினார். அவர் நம்முடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தாரென்று தீர்க்கதரிசியாகிய ஏசாயா சொன்னது நிறைவேறும்படிக்கு,

௰௮ பின்பு இயேசுவானவர் அநேகம் சனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கக்கண்டு, அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார்.

௰௯ அப்பொழுது வேதபாரகனொருவன் வந்து அவரை நோக்கி, போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்பற்றுவேனென்றான்.

௨௰ அவனுடனே இயேசுவானவர் சொன்னது, நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு. மனுஷனுடைய குமாரனோ தலைசாய்க்கிறதற்கு இடமில்லாதவனாயிருக்கிறானென்றார்.

௨௰௧ பின்னும் அவருடைய சீஷரிலொருவன் அவரை நோக்கி, ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம்பண்ணுவதற்கு உத்தரவு தாருமென்றான்.

௨௰௨ அவனுடனே இயேசுவானவர் சொன்னது, மரித்தோர் தங்கள் மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும். நீ என்னைப் பின்பற்றிவா என்றார்.

௨௰௩ பின்பு அவர் படவில் ஏறினபோது அவருடைய சீஷர்கள் அவர்பின் சென்[illegible]

௨௪ அப்பொழுது படவு அலைகளினாலே மூடப்படத்தக்கதாயக் கடலிலே பெருங் காற்றுண்டாயிற்று. அவரோ நித்திரைபண்ணினார்.

௨௫ அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து அவரையெழுப்பி ஆண்டவரே, எங்களை இரட்சிக்கவேண்டும், கெட்டுப்போகிறோமேயென்றார்கள்.

௨௬ அவர்களை அவர் நோக்கி, ஆ, அற்ப விசுவாசிகளே, ஏன் பயப்படுகிறீர்களென்று சொல்லி, எழுந்து காற்றுகளையுங் கடலையும் அதட்டினார் உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

௨௭ அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு காற்றுகளுங் கடலும் இவருக்குக் கீழ்ப்படியத்தக்கதாக இவர் எப்படிப்பட்டவரோவென்று சொன்னார்கள்.

௨௮ பின்பு அவர் அக்கரையிலே கெர்கெசேனர் தேசத்திலே சேர்ந்தார். அவ்வழியாய் மற்றொருவரும் நடவாமலிருக்கத்தக்கதாக மிகுந்த துஷ்டராயப் பசாசுபிடித்த மனிதர்கள் இரண்டுபேர் பிரேதக்கல்லறைகளிலிருந்து புறப்பட்டு அவருக்கு எதிராக வந்து,

௨௯ ஆ, இயேசுவே, பராபரனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்குமென்ன. காலம் வருமுன்னமே எங்களை வேதனைப்படுத்தும்படிக்கு இங்கே வந்தீரோவென்று கூப்பிட்டார்கள்.

௩௰ அல்லாமலும் அவர்களுக்குச் சற்றே தூரமாய் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மேய்ந்துகொண்டிருந்தன.

௩௧ அப்பொழுது பசாசுக்கள் நீர் எங்களைத் துரத்துவீரானால் நாங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்திற் பிரவேசிக்கும்படிக்கு உத்தரவுகொடுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௩௨ போங்களென்று அவர்களுக்குச் சொன்னார். உடனே அவர்கள் புறப்பட்டுப் பன்றிக்கூட்டத்திற் பிரவேசித்தார்கள். அப்பொழுது பன்றிகளெல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிற்பாய்ந்து சலத்திலே மாண்டுபோயின.

௩௩ அவைகளை மேய்த்தவர்களோ ஓடிப் பட்டினத்திற்சென்று எல்லாவற்றையும் பசாசு பிடித்திருந்தவர்களுடைய சங்கதியையும் அறிவித்தார்கள்.

௩௪ அப்பொழுது பட்டினத்தாரெல்லாரும் இயேசுவுக்கு எதிராகப் புறப்பட்டு அவரைக்கண்டு தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௯. அதிகாரம்.

[(௨) திமிர்வாதக்காரனைக் குணமாக்கினது. (௯) மத்தேயுவை அழைத்தது. (௰) ஆயக்காரரோடே சாப்பிட்டது. (௰௪) உபவாசம்பண்ணுத லீஷருக்காகப் பேசினது (௨௰) பெரும்பாடுள்ள ஸ்திரியைக் குணமாக்கினது. (௨௩) யாவீருவினுடைய குமாரத்தியை உயிரோடேயெழுப்பினது. (௨௭) இரண்டு குருடருக்குப் பார்வையிட்டது. (௩௨) ஊமையனைப் பேசப்பண்ணினது. (௩௩) சனங்கள் மேவிரங்கினது]

அப்பொழுது அவர் படவிலேறி இக்கரைப்பட்டுத் தமது பட்டினத்தில் வந்தார்.

௨ அங்கே படுக்கையின்மேற்கிடந்த திமிர்வாதக்காரனை அவரிடத்துக்குக் கொண்டுவந்தார்கள். இயேசுவானவர் அவர்களுடைய விசுவாசத்தைக்கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி, மகனே, திடமாயிரு. உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்றார்.

௩ அங்கேயிருந்த வேதபாரகரிற் சிலர் இவன் தேவதூஷணஞ்சொல்லுகிறானென்று எண்ணிக்கொண்டார்கள்.

௪ இயேசுவானவர் அவர்களுடைய நினைவுகளை அறிந்து, நீங்கள் உங்களிருதயங்களிற் பொல்லாங்கானவைகளை நினைக்கிறதென்ன.

௫ உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று சொல்லுகிறதோ எழுந்திருந்து நடவென்று சொல்லுகிறதோ.

௬ எது எளிது? மனிதனுடைய குமாரன் பூமியிற் பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுடையவனென்பதை நீங்கள் அறியும்படிக்கு அவர் திமிர்வாதக்காரனை நோக்கி, நீயெழுந்திருந்து உன் படுக்கையையெடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போவென்றார்.

௭ உடனே அவனெழுந்து தன் வீட்டுக்குப்போனான்.

௮ அதைக்கண்ட சனங்கள் ஆச்சரியப்பட்டு, மனிதருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக்கொடுத்த பராபரனைப் புகழ்ந்தார்கள்.

௯ இயேசுவானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப்போகையில் ஆயத்துறையினருகே உட்கார்ந்திருந்த ஒரு மனிதனைக்கண்டார். அவனுக்கு மத்தேயுவென்றுபேர். அவனை அவர் நோக்கி, என்னைப் பின்பற்றிவாவென்றார். அவனெழுந்திருந்து அவர்பின்சென்றான்.

௰ பின்பு அவர் வீட்டிலே போசனபந்தியிருக்கையில், அநேகம் ஆயக்காரரும் பாவிகளும் வந்து இயேசுவுடனேயும் அவருடைய சீஷர்களுடனேயுங் கூடப் பந்தியிருந்தார்கள்.

௰௧ பரிசேயர் அதைக்கண்டு, அவருடைய சிஷர்களை நோக்கி, என்னத்தினாலே உங்கள்போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசனம்பண்ணுகிறாரென்றார்கள்.

௰௨ இயேசுவானவர் அதைக் கேட்டு, அவர்களை நோக்கி, சொஸ்தமுள்ளவர்களுக்கு வயித்தியன்வேண்டுவதில்லை வியாதியுள்ளவர்களுக்கே அவன்வேண்டும்.

௰௩ மேலும் பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேனென்கிற (வாக்கியத்தின்கருத்தை) நீங்கள் போயப்படித்துக்கொள்ளுங்கள். அந்தப்படி நான் நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புதற்கு அழைக்கவந்தேனென்றார்.

௰௪ அந்நேரத்திலே யோவானுடைய சிஷர்கள் அவரிடத்தில்வந்து, நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசம் பண்ணியிருக்கிறோம். உம்முடையசிஷர்களோ உபவாசம் பண்ணாமலிருக்கிறார்கள் அதேதென என்றார்கள்.

௰௫ இயேசுவானவர் அவர்களுக்குச்சொன்னது, கலியாணத்துக்குவந்தமனிதர்கள் மணவாளன் தங்களோடிருக்கையில் துயரப்படுவார்களா. மணவாளன் அவர்களைவிட்டு நீக்கப்படுங்காலம்வரும். அப்பொழுது அவர்கள் உபவாசம்பண்ணுவார்கள்.

௰௬ ஒருவனுங் கோடித்துணியைப் பழயவஸ்திரத்தின்மேற் போட்டிணைக்கமாட்டான். இணைத்தால் அதிலிணைத்த துண்டு அவ்வஸ்திரத்திலெடுபட்டுப்போக அதிகப் பொத்தலுண்டாகும்.

௰௭ மேலுந் திராட்சப்பழங்களின் புதிய இரசத்தைப்பழய துருத்திகளில்வார்க்கமாட்டார்கள். வார்த்தால் துருத்திகள்கிழிந்துபோகும். இரசமுஞ் சிந்திப்போகுந் துருத்திகளுங்கெட்டுப்போகும். புதிய இரசத்தைப்புதிய துருத்திகளில் வார்த்துவைத்தால் அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்குமென்றார்.

௰௮ அவரிவைகளை அவர்களோடே பேசுகையில், தலைவனொருவனவந்து வணக்கமாயவிழுந்து அவரைநோக்கி, இந்நேரத்திலே என்மகள் இறந்துபோனாள். அவள் உயிர் அடையும்படிக்கு நீர்வந்து அவள் மேல் உம்முது கையைவையும். அப்பொழுது பிழைப்பாளென்றான்.

௰௯ இயேசுவானவர் எழுந்திருந்து தம்முது சிஷர்களோடுங் கூட அவன் பின்னே போனார்.

௨௰ அவர்போகையிற பன்னிரண்டுவருஷமாயப்பெரும்பாடுள்ள ஒருஸ்திரிவந்து,

௨௧ இவருடையவஸ்திரத்தைத்தொட்டமாத்திரமேசொஸ்தம் அடையலாமென்று தன் உள்ளத்திலே எண்ணி, அவருக்குப்பின்னாலேபோய், அவருடைய வஸ்திரத்தின்ஓரத்தைத்தொட்டாள்.

௨௨ அப்பொழுதிஇயேசுவானவர் திரும்பி அவளைநோக்கி, மகளே, திடன்கொள் உன்விசுவாசத்தினாலே உனக்குச்சொஸ்தமுண்டாயிற்றென்றார். அந்நேரமுதற்ஸ்திரீ சொஸ்தமடைந்தாள்.

௨௩ பின்பு இயேசுவானவர் அத்தலைவனுடைய வீட்டிற்சேர்ந்து நாகசுரக்காரர்களையும் இரைச்சலிடுகிற சனங்களையும் கண்டு,

௨௪ அவர்களைநோக்கி, விலகுங்கள். இந்தப்பெண்பிள்ளை மரித்துப்போகவில்லை நித்திரைபண்ணுகிறாளென்றார். அதற்கு அவரைநோக்கிநகைத்தார்கள்.

௨௫ சனங்கள் வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர்உள்ளேபிரவேசித்து அந்தப்பெண்ணின் கையைப்பிடித்தார். உடனே அவள் எழுந்திருந்தாள்.

௨௬ அந்தச்செய்கையினாலே அவருடையகீர்த்தி அத்தேசத்தெங்கும் பரம்பிற்று.

௨௭ இயேசுவானவர் அவ்விடம் விட்டுப் போகையிற் குருடரிருவர் அவர் பின்னே சென்று, தாவீதின்குமாரனே, எங்களுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள்

௨௮ அவர் வீட்டிலேவந்தபின்பு அக்குருடர் அவரிடத்துக்கு வந்தார்கள். இயேசுவானவர் அவர்களைநோக்கி, இப்படிச்செய்ய எனக்கு வல்லமையுண்டென்று விசுவாசிக்கிறீர்களோவென்றார். ஆமாம் ஆண்டவரே, விசுவாசிக்கிறோமென்றார்கள்.

௨௯ அப்பொழுது அவர் அவர்களுடைய கண்களைத்தொட்டு, உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவதென்றார்.

௩௰ உடனே அவர்களுடையகண்கள் திறக்கப்பட்டன். பின்பு இயேசுவானவர் அவர்களைநோக்கி, இதொன்றை ஒருவனுக்கும் அறிவிக்கவேண்டாமென்று கண்டிப்பாய்க்கட்டளையிட்டார்.

௩௧ அவர்களோபுறப்பட்டு, அத்தேசத்திலெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம்பண்ணினார்கள்.

௩௨ அவர்கள் புறப்பட்டுப்போகையிற் பசாசுபிடித்திருந்த ஊமையனொருவனை அவரிடத்துக்குக்கொண்டுவந்தார்கள்.

௩௩ பசாசுதுரத்தப்பட்டபின்பு ஊமையன் பேசினான். சனங்கள் ஆச்சரியப்பட்டு இப்படியாக இஸ்ரவேலருக்குள்ளே ஒருக்காலுங்காணப்பட்டதில்லையென்றார்கள்.

௩௪ பரிசேயர் இவன்பசாசுகளுடைய தலைவனாலே பசாசுகளைத் துரத்துகிறானென்றார்கள்.

௩௫ பின்பு இயேசுவானவர் சகலபட்டணங்களையுங்கிராமங்களையுஞ்சுற்றிநடந்து அவர்களுடைய ஜெப ஆலயங்களிலே போதகம்பண்ணி, இராச்சியத்தைக் குறித்துச் சுவிசேஷத்

தப் பிரசங்கித்துச் சனங்களுக்குண்டான எந்த வியாதியையும் எந்த நோயையும் நீக்கி அவர்களைக் குணமாக்கினார்.

௩௬ அப்பொழுது அவர் மகுந்த சனங்களைப் பார்த்து மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல அவர்கள் சோர்ந்துபோய்ச் சிதறப் பட்டவர்களாயிருந்தபடியால் அவர்களைக் குறித்து மிகவும் மனதுருகித் தம்முடைய சீஷர்களை நோக்கி, அறுப்பு மிகுதியாகவேயிருக்கிறது. வேலையாட்களோ சிலர்மாத்திரமிருக்கிறார்கள்,

௩௮ ஆதலால் அறுப்புக்கு எசமானானவர் தம் அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப வேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளுங்களென்றார்.

௰. அதிகாரம்.

[(௧) கிறிஸ்து அப்போஸ்தலர்களைப் பனிரண்டு பேருக்கு வரங்களைக் கொடுத்தது. (௰௬) இன்பங்களைச் சகிக்கும்படி ஆறுதலைச் சொல்லி, (௪௰) அவர்களைச் சேர்த்துக் கொள்ளுகிறவர்களுக்கு ஆசீர்வாதத்தை அறிவித்தது.]

அப்பொழுது அவர் தம்முடைய பனிரண்டு சீஷர்களையுந் தம்மிடத்தில் அழைத்து அசுத்தமான ஆவிகளைத் துரத்தவுஞ் சகலவிதமான வியாதிகளையும் நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.

௨ அந்தப் பனிரண்டு அப்போஸ்தலர்களின் நாமங்களென்னவென்றால், முதலானவன் பேதுரு எனப்பட்ட சீமோன், அவனுடைய சகோதரனாகிய அந்திரேயா, செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபு, அவனுடைய சகோதரனாகிய யோவான்,

௩ பிலிப்பு, பற்தொலொமேயு, தோமா, ஆயக்காரனான மத்தேயு, அல்பேயுவின் குமாரனான யாக்கோபு, ததேயு என்னும் மறுநாமமுள்ள லெபேயு,

௪ கானானியனாகிய சீமோன், இயேசுவைக் காட்டிக்கொடுத்தவனான யூதாஸ் இஸ்காரியோத்து எனப்பட்டவர்களே.

௫ இயேசுவானவர் அந்தப் பனிரண்டு பேரையும் அனுப்ப அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னதாவது. நீங்கள் புறத்தேசத்தாரிடத்துக்குப் போகாமலும்,

௬ சமாரியருடைய பட்டினங்களிற் பிரவேசியாமலும் காணாமற்போன ஆடுகளாயிருக்கிற இஸ்ரவேல் குடும்பத்தாரிடத்துக்குப் புறப்பட்டுப் போய்,

௭ பரலோக இராச்சியஞ் சமீபமாய் வந்ததென்று கூறி,

௮ வியாதிப்பட்டவர்களைக் குணமாக்கி குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கி மரித்தோரையெழுப்பிப் பசாசுகளைத் துரத்துங்கள். நீங்கள் இலவசமாய்ப் பெற்றுக்கொண்டீர்கள் இலவசமாய்க் கொடுங்கள்.

௯ நீங்கள் உங்கள் கச்சைகளிற் பொன்னையாவது வெள்ளியையாவது செம்பையாவது வழிக்குச் சம்பையையாவது இரண்டங்கிகளையாவது பாதரட்சைகளையாவது தடியையாவது உங்களுக்காகத் தேடிவைக்கவேண்டாம்.

௰ வேலைசெய்கிறவன் தனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெறும்படிக்குப் பாத்திரவானாயிருக்கிறானே.

௰௧ அல்லாமலும் எந்தப் பட்டினத்திலாவது கிராமத்திலாவது நீங்கள் பிரவேசிக்கும்பொழுது, அதிலே யார் இருக்கிற பாத்திரவான் இன்னானென்று விசாரித்துக்கொண்டு நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்திலிருங்கள்.

௰௨ அந்த வீட்டுக்குட் பிரவேசிக்கிறபொழுது நீங்கள் அதிலிருக்கிறவர்களை வாழ்த்திக்கொள்ளுங்கள்.

௰௩ அந்தக் குடும்பத்தார் பாத்திரவான்களாயிருந்தால் நீங்கள் அவர்களுக்குச் சொன்ன சமாதானம் அவர்களைச் சேரக்கடவது. பாத்திரவான்களல்லாதிருந்தால் அந்த வாழ்த்துதல் உங்களிடமாய்த் திரும்பக்கடவது.

௰௪ எவர்களாகிலும் அவர்கள் உங்களை அங்கீகரித்துக்கொள்ள மலும் உங்கள் வசனங்களுக்குச் செவிகொடாமலுமிருந்தால் நீங்கள் அந்த வீட்டையாவது பட்டினத்தையாவது விட்டுப் புறப்படுகையில் உங்கள் கால்களிலுள்ள தூளை உதறிப்போடுங்கள்.

௰௫ நியாயத்தீர்ப்புநாளிலே சோதோங் கொமோறா தேசத்துக்குடப்பார்க்கிலும் அந்தப் பட்டினத்துக்கு அதிக தண்டனைகிடைக்குமென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௬ பாருங்கள் ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே (அனுப்புகிறதுபோல) உங்களை அனுப்புகிறேன். ஆகையால் நீங்கள் பாம்புகளைப்போல விவேகமுள்ளவர்களாயும் புறாக்களைப்போலக் கபடமில்லாதவர்களாயுமிருக்கவேண்டும்.

௰௭ அப்படியே நீங்கள் மனிதர்களிடத்திற் சாவதானமாயிருங்கள். என்னத்தினாலென்றால், உங்களைப் பெரிய சங்கத்தாருக்கு ஒப்புக்கொடுத்துத் தங்கள் ஆலயங்களிலே உங்களை வாரினால் அடிப்பார்கள்.

௰௮ என்னிமித்தம் நீங்கள் துரைகளிடத்துக்கும் இராசாக்களிடத்துக்குங் கொண்டுபோகப்பட்டு அவர்களுக்கும் புறத்தேசத்தாருக்கும் முன்பாகச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

௰௯ அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்பொழுது நீங்கள் பேசவேண்டியது அந்நேரத்திலே உங்களுக்கு அருளிச்செய்யப்படும். ஆகையால் எப்படி எதைப்பேசுவோமென்று கவலைப்படாதிருங்கள்.

௨௰ பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்கள் பிதாவின் ஆவி உங்களிலிருந்து பேசுகிறவர்.

௨௧ அல்லாமலும் சகோதரன் தன் சகோதரனையும் தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்துக்கொப்புக்கொடுப்பார்கள். தாய்தகப்பன்மாரைப் பிள்ளைகள் விரோதித்து, அவர்கள் மரணம் அடையும்படிக்குச் செய்விப்பார்கள்.

௨௨ என்னுடைய நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். ஆகிலும் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவனே இரட்சிக்கப்படுவான்.

௨௩ அல்லாமலும் மனிதனுடைய குமாரனவருமளவாகவும் நீங்கள் இஸ்ரவேலருடைய பட்டினங்களையெல்லாங் கடந்துபோய் வரமாட்டீர்களென்று மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால் ஒரு பட்டினத்திலே உங்களைத் துன்பப்படுத்தினால் மறுபட்டினத்துக்கோடிப்போங்கள்.

௨௪ சிஷனானவன் போதகனிலும் அடிமைப்பட்டவன் தன் எசமானிலும் மேற்பட்டவர்களல்ல.

௨௫ சிஷன் தன் போதகனைப்போலவும் அடிமைப்பட்டவன் தன் எசமானைப் போலவுமிருக்கிறது அவர்களுக்குப்போதுமே. வீட்டெசமானைப் பெயெல்செபூலென்று அவர்கள் சொல்வார்களானால், அவருடைய வீட்டாரை அதிகமாய் அப்படிச் சொல்லுவார்களல்லவா. ஆதலால் அவர்களுக்குப் பயப்படாதிருப்பீர்களாக.

௨௬ வெளியாக்கப்படாத மறைபொருளில்லை. அறியப்படாத இரகசியமுமில்லை.

௨௭ நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திற் சொல்லுங்கள். நீங்கள் இரகசியமாய்க் கேட்கிறதை மேடைகளிலிருந்து பிரசித்தஞ்செய்யுங்கள்.

௨௮ அல்லாமலும் ஆத்துமாவைக் கொலைசெய்யத் திராணியில்லாமற் சரீரத்தை மாத்திரங் கொலைசெய்கிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம். ஆத்துமாவையுஞ் சரீரத்தையும் நரகத்திலே கெடுக்க வல்லவருக்குப் பயப்படுங்கள்.

௨௯ ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்களல்லவோ. ஆகிலும் உங்கள் பிதாவின் உத்தரவில்லாமல் அவைகளிலொன்றுந் தரையிலே விழாது.

௩௰ அல்லாமலும் உங்கள் தலையின் மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது.

௩௧ ஆதலாற் பயப்படாதிருங்கள். அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் மேன்மையாயிருக்கிறீர்கள்.

௩௨ அப்படியிருக்க மனிதர்களுக்கு முன்பாக என்னை அறிக்கையிடுகிறவனெவனோ அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாமுன்பாக அறிக்கையிடுவேன்.

௩௩ மனிதர்முன்பாக என்னை மறுதலிக்கிறவனெவனோ அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்.

௩௪ பூமியின்மேல் சமாதானத்தை உண்டுபண்ண வந்தேனென்று எண்ணாதிருங்கள். சமாதானத்தையல்ல சண்டையை வரப்பண்ண வந்தேன்.

௩௫ எப்படியென்றால், குமாரன் தன் தகப்பனையும் மகள் தன் தாயையும் மருமகள் தன் மாமியையும் விட்டுப் பிரிந்துபோம்படி பண்ண வந்தேன்.

௩௬ அப்படி ஒரு மனிதனுடைய வீட்டாரே அவனுக்குச் சத்துருக்களாயிருப்பார்கள்.

௩௭ என்னிலும் தகப்பனையாவது தாயையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல, என்னிலும் மகனையாவது மகளையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரனல்ல.

௩௮ அல்லாமலுந் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்பின்னே செல்லாதவன் எனக்குப் பாத்திரனல்ல.

௩௯ தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தந் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்.

௪௰ உங்களைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறான். என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.

௪௧ தீர்க்கதரிசியென்கிற நாமத்தினிமித்தம் ஒரு தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்குரிய பலனையடைவான். நீதிமானென்கிற நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்குரிய பலனையடைவான்.

௪௨ இந்தச் சிறியவர்களிலொருவன் சீஷனாயிருக்கிறதினிமித்தம் அவனுக்கு ஒரு கலசந் தண்ணீர்மாத்திரந் தாகத்துக்குக் கொடுக்கிறவன் தன் பலனை இழந்துபோகானென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௰௧. அதிகாரம்.

[(௨) யோவான் தன் சீஷரை இயேசுவினிடத்தில் அனுப்பினது. (௭) இயேசு அவர் யோவானைக்குறித்துச் சாட்சி சொன்னது. (௰௮) ஜனங்களுடைய பேதைமைத்தனம். (௨௰) அற்புதங்களைக் கண்டும் மனந்திரும்பாத சில பட்டினத்தாரை இயேசுவானவர் கடிந்துகொண்டது. (௨௫) சிறியவர்களுக்குச் சுவிசேஷம்

வெளிப்படுத்தின ரீக்காகப்பிதாவைப்புகழ்ந்தது. (உ௮) தங்கள் பாவங்களையுணருகிறவர்களைத் தம்மிடத்திலே வரவழைத்தது.]

௧ இயேசுவானவர் தமது பன்னிரண்டு சீஷர்களுக்குங் கட்டளைகொடுத்து முடித்தபின்பு அவர்களுடைய பட்டணங்களில் உபதேசம்பண்ணிப் பிரசங்கிக்கும்படிக்கு அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்.

௨ அத்தருணத்திலே காவலிலிருந்த யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் கேள்விப்பட்டுத் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து,

௩ நீங்கள் போய் அவரைநோக்கி, வருகிறவர் நீர்தாமோ அல்லது வேறொருவர் வரங்கள் காத்திருக்கவேண்டுமோவென்று கேளுங்களென்று சொன்னான்.

௪ அவர்கள் அப்படி வந்து கேட்டபொழுது இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச் சொன்னதாவது, நீங்கள் கேட்டுக்கண்டுமிருக்கிறவைகளை யோவானுக்குப்போய் அறிவியுங்கள்.

௫ என்னவெனில், என்னாலே குருடர் பார்வை அடைகிறார்கள். சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தம் அடைகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், எளியவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது.

௬ அல்லாமலும் என்னைக்குறித்து இலச்சை அடையாதிருக்கிறவன் பாக்கியவானென்றுசொல்லி அவர்களை அனுப்பினார்.

௭ அவர்கள் போனபின்பு இயேசுவானவர் ஜனங்களைநோக்கி, யோவானைக்குறித்துச் சொன்னதாவது? நீங்கள் வனாந்தரத்திலே எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள், காற்றினால் அடித்தசைக்கப்படுகிற நாணலையோ அல்லது எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்.

௮ மெல்லிய வஸ்திரங்களைத் தரித்திருக்கிற மனிதனையோ மெல்லிய வஸ்திரங்களையுடுத்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளிலிருக்கிறார்கள்.

௯ அல்லது எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள். தீர்க்கதரிசியையோ ஆம் தீர்க்கதரிசியிலும் அதிக மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰ அதெப்படியென்னில் இதோ நான் என்னுடைய தூதனை உமக்குமுன்பாக அனுப்புகிறேன், அவன் உமக்குமுன்னே உம்முடைய மார்க்கத்தைச் செம்மைப்பண்ணுவானென்று எவனைக்குறித்து எழுதியிருக்கின்றதோ அவனிவன்தான்.

௰௧ அல்லாமலும் ஸ்திரீகளிடத்திற் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனிலும் பெரியவனொருவனும் எழும்பவில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் பரலோக இராச்சியத்திலே சிறியவனானவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்.

௰௨ அல்லாமலும் யோவான்ஸ்நானன் தோன்றின காலமுதற்கொண்டு இதுவரைக்கும் பரலோக இராச்சியம் பலபந்தப்படுகின்றது. பலபந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

௰௩ நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசிகள் யாவரும் அதை யோவான்வரைக்குந் தீர்க்கதரிசனமாய் அறிவித்தார்கள்.

௰௪ நீங்கள் ஏற்றுக்கொள்ளமனதிருந்தால், வருபவனாகிய எலியா இவன்தான்.

௰௫ கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

௰௬ இந்தச்சந்ததியை ஆருக்கு நிகர் சொல்வேன். சந்தைகளில் உட்கார்ந்து தங்கள் தோழரைநோக்கி, உங்களுக்காக ஊதினோம்,

௰௭ நீங்கள் கூத்தாடவில்லை. உங்களுக்காகப் புலம்பினோம், நீங்கள் மார்பில் அடிக்கவில்லையென்று சொல்லிக்கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

௰௮ எப்படியென்றால், யோவான் வந்து போசனபானம்பண்ணாமலிருந்தான். பசாசைக்கொண்டிருக்கிறானென்றார்கள்.

௰௯ மனிதனுடைய குமாரன் வந்து போசனபானம்பண்ணுகிறான். இதோ பெருந்தீனிக்காரனென்றுங் குடிக்கிறவனென்றும் ஆயக்காரருக்கும் பாவிகளுக்குஞ் சிநேகிதனென்றுஞ் சொல்லுகிறார்கள். ஆனாலும் ஞானமானது தன் பிள்ளைகளாலே நீதியாய் எண்ணப்படுமென்றார்.

௨௰ அப்பொழுது அவர் தமது பலத்த செய்கைகளில் அநேகங்களைக் கண்ட பட்டணத்தார் மனந்திரும்பாமலிருந்தபடியினாலே அவர்களைக் கடிந்துகொள்ளத்தொடங்கிச் சொன்னதாவது,

௨௧ ஐயோ, கோராசின் பட்டணத்தாரே உங்களுக்கு வேதனைவரும். ஐயோ, பெத்சாயிதாப்பட்டணத்தாரே உங்களுக்கும் வேதனைவரும். உங்களுக்குள்ளே நடந்த பலத்தசெய்கைகள் தீருசீதோன் பட்டணத்தாருக்குள்ளே நடந்திருந்தால் அவர்கள் சீக்கிரமாய் இரட்டையுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்.

௨௨ ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அவர்களைப்பார்க்கிலும் நீங்களே அதிகத் தண்டனை அடைவீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௩ வானபரியந்தம் உயர்ந்த கப்பர்நாகூம் பட்டணத்தாரே ஐயோ பாதாளபரியந்தந் தாழ்த்தப்படுவீர்கள். உங்களுக்குள்ளே நடந்த பலத்தசெய்கைகள் சோதோம் பட்டணத்தாருக்குள்ளே நடந்திருந்தால் அவர்களுடைய பட்டணம் இந்நாள்வரைக்குமிருக்குமே.

௨௪ ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்களுக்கு வருந்தண்டிப்பு எளிதாயிருக்கும். நீங்களோ அதிக தண்டிப்பை அடைவீர்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௨௫ அக்காலத்திலே இயேசுவானவர் சொன்னதாவது, பிதாவே, வானத்தையும் பூமியையும் ஆளுகிறவரே, நீர் இவைகளை (மேலாக) ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினபடியினாலே உம்மைத் துதிக்கிறேன்.

௨௬ ஆம், பிதாவே, இப்படிச் செய்ய உமக்குப் பிரியமாயிருந்ததென்றார்.

௨௭ அல்லாமலுஞ் சகலமும் என் பிதாவினாலே எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. பிதாவேயல்லாமல் மற்றொருவனுங் குமாரனையறியான். குமாரனேயல்லாமல் மற்றொருவனும் பிதாவையறியான். மேலும் எவனுக்குக் குமாரன் அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் பிதாவையறிவான்.

௨௮ வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்து கொள்ளுகிறவர்களாகிய நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு ஆறுதல் செய்வேன்.

௨௯ நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறபடியினாலும் நான் வைக்கிற நுகத்தடி மெதுவாயும் நான் ஏற்றுகிற சுமை இலேசாயுமிருக்கிறபடியினாலும்,

௩௰ நீங்கள் என்னுடைய நுகத்தடியை ஏற்றுக்கொண்டு என்னிடத்திற் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்குமென்றார்.

௰௨. அதிகாரம்.

[(௧) ஓய்வு நாளைக்குறித்துப் பரிசேயருக்குப் புத்திசொன்னது. (௰௩) அற்புதஞ் செய்தது. (௨௨) பசாசுபிடித்த குருடும் ஊமையுமுள்ளவனைக் குணமாக்கினது. (௩௧) தேவ ஆவிக்கு விரோதமான தூஷணம் மன்னிக்கப்படாதென்பது. (௩௬) வீணான வார்த்தைகளுக்குக் கணக்குக்கொடுக்கவேண்டுவது (௩௮) அடையாளத்தைத் தேடினவர்களைக் கடிந்துகொண்டது. (௪௬) அவருடைய தாய் சகோதரன் முதலானவர்கள் இன்னாரென்றுகாண்பித்தது.]

அக்காலத்திலே ஓய்வு நாளிலே இயேசுவானவர் பயிர்வழியே போனார். அப்பொழுது அவருடைய சீஷர் பசியாயிருந்தபடியினாலே கதிர்களைக் கொய்து சாப்பிடத்தொடங்கினார்கள்.

௨ அதைக்கண்ட பரிசேயர் அவரை நோக்கி, இதோ ஓய்வுநாளிற் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்கள்.

௩ அவர்களுக்கு அவர் சொன்னது, தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபொழுது,

௪ அவன் தேவாலயத்திற் பிரவேசித்து, ஆசாரியரேயன்றி, தானும் தன்னோடிருந்தவர்களும் சாப்பிடத்தகாத தேவ சமுகத்து அப்பங்களைச் சாப்பிட்டானென்பதை நீங்கள் வாசிக்கவில்லையா.

௫ அல்லது ஆசாரியரானவர்கள் தேவாலயத்திலே ஓய்வுநாட்களில் ஓய்வுநாளை வேலைசெய்தும் குற்றமில்லாதவர்களென்று நீங்கள் வேதத்திலே வாசிக்கவில்லையா.

௬ தேவாலயத்திலும் பெரியவர் இங்கேயிருக்கிறாரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௭ மேலும் பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேனென்கிற (வாக்கியத்தின் கருத்தை) நீங்கள் அறிந்திருந்தீர்களானால் குற்றமில்லாதவர்களை நீங்கள் குற்றப்படுத்தியிருக்கமாட்டீர்கள்.

௮ அல்லாமலும் மனுஷகுமாரனானவர் ஓய்வுநாளுக்குங் கர்த்தராயிருக்கிறாரென்றார்.

௯ பின்பு அவர் அவ்விடம் விட்டுப் போய் அவர்களுடைய ஜெபஆலயத்திலே பிரவேசித்தார்.

௰ அங்கே சூம்பின கையையுடைய ஒருவன் இருந்தான். அப்பொழுது அவர்கள் அவர்மேற் குற்றஞ்சாட்டும்படிக்கு அவரை நோக்கி, ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமாவென்று கேட்டார்கள்.

௰௧ அவர் சொன்னது, உங்களில் ஒருவனுக்கு இருந்த ஓர் ஆடு ஓய்வுநாளில் குழியிலே விழுந்தால் அதைப் பிடித்துத் தூக்கிவிடமாட்டானோ.

௰௨ ஆட்டிலும் மனிதனானவன் எவ்வளவு மேன்மையாயிருக்கிறான். ஆதலால் ஓய்வுநாளிலே நன்மைசெய்கிறது நியாயமென்று சொல்லி பின்பு அந்த மனிதனை நோக்கி,

௰௩ உன் கையை நீட்டென்றார். அவன் அதை நீட்டினான். உடனே அது மற்றக் கையைப்போலச் சுகமாயிற்று.

௰௪ அப்பொழுது பரிசேயர் புறப்பட்டுப்போய் அவரைச் சங்கரிக்கும்படிக்கு அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணிக்கொண்டார்கள்.

௰௫ அதை இயேசுவானவர் அறிந்து அவ்விடம் விட்டுப்போனார். அப்பொழுது திரளான ஜனங்கள் அவர் பின்னே சென்றார்கள்.

௰௬ எல்லாரையும் அவர் குணமாக்கி, தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

௰௭ அதினாலே இதோ, நானதெரிந்துகொண்ட ஊழியக்காரன. என்க்கு அன்பானவர். என ஆத்துமாவுக்குப்பிரியமானவர். இவரிடத்திலேயென்னுடைய ஆவியிருக்கச்செய்வேன. இவர் நியாயமானதை உலகத்தாருக்கு அறிவிப்பார்.

௰௮ சண்டைபண்ணாமலுங்கூக்குரலபண்ணாமலுமிருப்பார். இவருடையசத்தம வீதிகளில் ஒருவராலுங்கேட்கப்படுவதில்லை.

௰௯ நியாயமானது செயமாயிருக்குமபடிசெய்கிறவரைக்கும இவர் நெரிந்திருக்கிற நாணலை முறியாமலும மங்கியெரிகிற திரியை அணையாமலுமிருப்பார்.

௨௰ இவருடைய நாமத்தினமேலே புறதேசத்தார் நம்பிக்கையாயிருப்பார்களென்று,

௨௧ ஏசாயாதீர்க்கதரிசி உரைத்தவசனம நிறைவேறிற்று.

௨௨ அப்பொழுது பசாசுபிடித்த குருடும ஊமையுமான ஒருவன அவரிடத்திற் கொண்டுவரப்பட்டான. குருடும ஊமையுமானவன பேசவுங்காணவுந்தக்கதாக அவனைக்குணமாக்கினார்.

௨௩ சனங்களெல்லாரும பிரமித்து, இவர்தாவீதினகுமாரனல்லவாவென்றார்கள்.

௨௪ பரிசேயர் அதைக்கேட்டு, இவன பசாசுகளுடையதலைவனாகியபெயெல்செபூலினாலே பசாசுகளைத்துரத்துகிறானேயன்றி மற்றப்படியல்லவென்றார்கள்.

௨௫ இயேசுவானவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களைநோக்கி, ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளேதானேபிரிவினைபண்ணினால அழிந்துபோவார்கள். அல்லாமலும ஒருபட்டினத்தாராகிலும குடும்பத்தாராகிலும தங்களுக்குள்ளேபிரிவினைபண்ணினால,

௨௬ நிலைநிற்கமாட்டார்கள். அப்படிப்போலச்சாத்தான மற்றொருசாத்தானைத்துரத்தினால அவர்களுக்குள்ளேதானேபிரிவினையுண்டாகுமே. அப்படியானால் அவனுடைய இராச்சியம எப்படிநிலைநிற்கும!

௨௭ அல்லாமலும நான் பெயெல்செபூலினாலே பசாசுகளைத்துரத்துகிறவனானால உங்களபிள்ளைகள அவைகளை ஆராலே துரத்துகிறார்கள். ஆகையால் அவர்களே உங்களுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுப்பார்கள்.

௨௮ நானபராபரனுடைய ஆவியாலே பசாசுக்களைத்துரத்துகிறபடியால் பராபரனுடைய ஆளுகைமெய உங்களிடத்தில் வந்திருக்கின்றது.

௨௯ அல்லது முன்பு பலவானைக்கட்டாவிட்டால அவனுடைய வாசஸ்தலத்திலே ஒருவன எப்படிப்பிரவேசித்து அவனுடைய உடைமைகளைக்கொள்ளையிடுவான. (பலவானைக்கட்டினபின்பல்லவா) அவனுடைய வாசஸ்தலத்தைக்கொள்ளையிடுவான.

௩௰ என்பக்கத்திலிராதவன எனக்குவிரோதமாயிருக்கிறான். என்னுடனேகூடச்சேர்த்துக்கொள்ளாதவன சிதற அடிக்கிறான்.

௩௧ ஆதலால் நான உங்களுக்குச்சொல்லுகிறதாவது, எந்தப்பாவமுந்தூஷணமும் மனிதர்களுக்கு மன்னிக்கப்படும. தேவ ஆவியை (நிந்திக்குந) தூஷணமமாத்திரம் மனிதருக்குமன்னிக்கப்படுவதில்லை.

௩௨ எவனாகிலும மனிதனுடையகுமாரனுக்குவிரோதமபேசினால் அது அவனுக்குமன்னிக்கப்படும. எவனாகிலும பரிசுத்த தேவ ஆவிக்கு விரோதமபேசினால அது அவனுக்கு இம்மையிலும மறுமையிலும மன்னிக்கப்படுவதில்லை.

௩௩ மேலும ஒரு மரத்தினதன்மையை அதின்கனிகளாலே அறியலாம. ஆகையால் நீங்கள ஒருமரத்தை நல்லமரமென்றெண்ணினால் அதின்கனியையும நல்லதென்றெண்ணுங்கள. அல்லது நீங்கள ஒருமரத்தைக்கெட்டமரமென்றெண்ணினால், அதின கனியையுங்கெட்டதென்றெண்ணுங்கள.

௩௪ இருதயத்தின நிறைவினாலே வாய் பேசும. ஆதலால்விரியன்குட்டிகளே, நீங்கள பொல்லாதவர்களாயிருக்க நன்மையானவைகளை எப்படிப்பேசுவீர்கள.

௩௫ நல்லமனிதனானவன தன இருதயத்திலுள்ள நல்லபொக்கிஷத்தில் நல்லவைகளையெடுத்துக்காண்பிக்கிறான். பொல்லாத மனிதன தன பொல்லாத பொக்கிஷத்தில் பொல்லாதவைகளையெடுத்துக் காண்பிக்கிறான.

௩௬ மனிதர்களபேசும வீணான வார்த்தைகள யாவையுங்குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே உத்தரவு கொடுப்பார்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௩௭ எப்படியும உன வார்த்தைகளினாலே நீதிமானென்றும உனவார்த்தைகளினாலே குற்றவாளியென்றுந்தீர்க்கப்படுவாய்.

௩௮ அப்பொழுதுவேதபாரகரிலும பரிசேயரிலுஞ்சிலர் அவரைநோக்கி, போதகரே, உம்மாலே ஒரு அடையாளத்தைக்காணவிரும்புகிறோமென்றார்கள.

௩௯ அதற்கு அவர்சொன்னது, சோரமார்க்கமாய்ப்போகிறபொல்லாத சந்ததி (யாகிய இவர்கள) ஒரு அடையாளத்தைக்கேட்கிறார்கள. யோனா தீர்க்கதரிசியின அடையாளமேயன்றிவேறு அடையாளம இவர்களுக்குக்கொடுக்கப்படுவதில்லை.

௪௰ ஏனனவென்றால, யோனாவென்பவன இரவும்பகலும மூன்றுநாள் ஒரு பெரியமீனுடைய வயிற்றிலிருந்ததுபோல மனிதனுடைய குமாரனும இரவும பகலும மூன்றுநாட்பூமியின இருதயத்திலே யிருப்பாரென்பதே.

௪௧ யோனாவென்பவன் பிரசங்கம்பண்ணின பொழுது நினிவேபட்டினத்தார் மனந்திரும்பினார்கள். யோனாவிலும் அதிகமேன்மையானவர் இதோ இங்கேயிருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவேபட்டினத்தார் எழும்பி இவர்களைக்குற்றவாளிகளென்று தீர்ப்பார்கள்.

௪௨ அல்லாமலுந்தெற்கு இராசஸ்திரி மிகுந்த தூரமானதேசத்திலிருந்து சாலோமோனுடைய ஞானத்தைக்கேட்கவந்தாள். சாலோமோனிலும் அதிகமேன்மையானவர் இதோ இங்கே இருக்கிறார். ஆதலால நியாயத்தீர்ப்புநாளிலே அந்த இராசஸ்திரியெழும்பி இவர்களைக் குற்றவாளிகளென்றுதீர்ப்பாள்.

௪௩ அல்லாமலும் அசுத்தமான ஆவி ஒரு மனிதனைவிட்டுப் புறப்பட்ட பின்பு தண்ணீரில்லாதவிடங்களில் அலைந்து இளைப்பாறுதற்கான இடத்தைத் தேடியும் அடையாமலிருக்கும்பொழுது,

௪௪ அதுஎன்வீட்டுக்குத்திரும்பிப்போவேனென்றுசொல்லி (அங்கே) சென்று அவ்விடத்தை வெறுமையாயும்பெருக்கிச் சோடிக்கப்பட்டதாயுமிருக்கக்கண்டு திரும்பிப்போய்,

௪௫ தன்னிலும் அதிக பொல்லாத வேறேழுஆவிகளைத்தன்னுடனேகூட்டிக்கொண்டுவந்து பிரவேசித்து அங்கே வாசம்பண்ணும். இவ்விதமாய் அந்த மனிதனுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிகக்கேடுள்ளதாயிருக்கின்றது. அப்படியே இந்தப் பொல்லாத சந்ததிக்குஞ் சம்பவிக்குமென்றார்.

௪௬ அவர் இப்படிச்சனங்களுடனேபேசுகையில் அவருடையதாயுஞ் சகோதரரும் வந்து வெளியேநின்று, அவரோடேபேசத்தேடினார்கள்.

௪௭ அப்பொழுது ஒருவன் அவரைநோக்கி, அதோ உம்முடைய தாயாருஞ்சகோதரரும் வெளியேநின்று உம்மோடேபேசத்தேடுகிறார்களென்றான்.

௪௮ அப்படித்தமக்குச்சொன்னவனுக்கு அவர்மாறுத்தரமாக என்னுடையதாய் யாவள். என் சகோதரர் யார் என்றுசொல்லி,

௪௯ தம்முடையகையைத் தமது சீஷர்மேலே நீட்டி இதோ, இவர்கள் என்தாயும் என்சகோதரருமாயிருக்கிறார்கள்.

௫௰ எவனாகிலும்பரமண்டலங்களிலிருக்கிற என்பிதாவினசித்தத்தின்படிசெய்தால் அவனே என் சகோதரனுமாய்ச்சகோதரியுமாய்த்தாயுமாயிருக்கிறானென்றார்.

௰௩. அதிகாரம்.

[(௧) பயிர்செய்கிறவனை உவமைப்படுத்தியது. (௰௮) அதினுடைய (௨௪) களையும், (௩௧) கடுகையும், (௩௩) புளித்தமாவையும் உவமையாகக்காட்டி, (௪௪) ஒளித்திருந்த பொக்கிஷம் உவமையாகக்காட்டியது. (௪௬) முத்தை உவமையாகக் காட்டி, (௪௭) கடலிற்போட்ட வலையை உவமையாகக்காட்டியது. (௫௩) தன்சொந்த ஊராராலே அசட்டை பண்ணப்பட்டது.]

௧ அந்நாளிலே இயேசுவானவர் வீட்டிலிருந்து புறப்பட்டுக்கடலருகே உட்கார்ந்தார்.

௨ அப்பொழுது அநேகசனங்கள் அவரிடத்திற் கூடிவந்தபடியால் அவர் படவிலேறி உட்கார்ந்து சனங்களெல்லாங் கரையிலே நிற்க,

௩ அநேகவிசேஷங்களை உவமைகளாக அவர்களுக்குச்சொன்னதாவது, விதைக்கிறவனொருவன் விதைக்கப் புறப்பட்டான்.

௪ அவன்விதைக்கையிற் சில (விதை) வழியருகே விழுந்தன.

அதைப்பறவைகள்வந்து பட்சித்தன.

௫ வேறுசில (விதை) மிகுந்தமண்ணில்லாத கற்பாறை இடங்களில்விழுந்து ஆழமான மண்ணில்லாததினால் உடனே முளைத்தன.

௬ வெயில் தோன்றினபொழுது சுடப்பட்டுத் தீந்துபோய், வேரில்லாததினாலே உலர்ந்துபோயின.

௭ வேறுசில (விதை) முள்ளுள்ள இடத்திலே விழுந்தன. முள்ளுகள் வளர்ந்து அதை நெருக்கிப்போட்டன.

௮ வேறுசில (விதை) நல்ல நிலத்தில் விழுந்து சில நூறாகவுஞ் சில அறுபதாகவுஞ் சில முப்பதாகவும் பலன்கொடுத்தன.

௯ கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவனென்றார்.

௰ அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில் வந்து என்னத்தினாலே உவமைகளாக இவர்களோடே பேசுகிறீரென்றார்கள்.

௰௧ அதற்கு அவர்சொன்னது, பரலோக இராச்சியத்தின இரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது. அவர்களுக்கு அப்படி அளிக்கப்படவில்லை.

௰௨ எப்படியெனில், எவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக்கொடுக்கப்படும். எவன் உள்ளவனாய் அவன்பரிபூரணமும் அடைவான். எவன் உள்ளவனல்லாதவனாயிருக்கிறானோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

௰௩ அவர்கள் கண்டுங் காணாமலுங் கேட்டுங் கேளாமலுஞ் சிந்தித்துக்கொள்ளாமலுமிருக்கிறபடியினாலே நான் உவமைகளால் அவர்களுடனே பேசுகிறேன்.

௰௪ இந்தச் சனங்கள் கண்களினாலே காணாமலுங் காதுகளினாலே கேளாமலும் இருதயத்தினாலே சிந்தித்துக்கொள்ளாமலுந் திரும்பாமலும் என்னால் ஆரோக்கியம் அடையாமலுமிருக்கும்படிக்கு அவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயமுடையவர்களுமாய் மந்தக்காதுள்ளவர்களுமாய் மூடிக்கொண்டிருக்கிற கண்களையுடையவர்களுமாயிருக்கிறபடியினாலே,

௰௫ நீங்கள் உற்றுக்கேட்டாலுஞ் சிந்தித்துக்கொள்ளாமலிருப்பீர்கள். உற்றுப்பார்த்தாலும் அறியாமலிருப்பீர்களென்று ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறிவருகின்றது.

௰௬ உங்கள் கண்கள் காணுகிறபடியினாலும் உங்கள் காதுகள் கேட்கிறபடியினாலும் பாக்கியமுள்ளவைகள்.

௰௭ அநேக தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காணுகிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியுங் காணாமலுங் கேளாமலும் போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௮ ஆகையால் விதைக்கிறவனுடைய உவமையைக் கேளுங்கள்.

௰௯ ஒருவன் பரலோக இராச்சியத்தைக் குறித்து வசனத்தைக் கேட்டும் அதைச் சிந்தித்துக் கொள்ளாமலிருக்கிறபொழுது பொல்லாங்கன் வந்து, அவனுடைய இருதயத்தின்மேல் விதைக்கப்பட்டதைப் பறிக்கிறான். அவனே விதை விழுந்த வழிக்கொப்பானவன்.

௨௰ விதை விழுந்த கற்பாறைக்கொப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டு உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு,

௨௧ பின்பு அதற்குள்ளே வேர்ப்பற்றிராமற் கொஞ்சக்காலமாத்திரம் அதைப் பற்றிக்கொள்ளுவான். அந்த வசனத்தினிமித்தம் உபத்திரவமுந் துன்பப்படுத்தலுமுண்டாகிறபொழுது உடனே அவன் தவறுவானென்பதே.

௨௨ விதை விழுந்த முள்ளுள்ள இடத்துக்கொப்பானவன் அந்த வசனத்தைக் கேட்கிறபொழுது லௌகீகக் கவலைகளும் ஐசுவரியத்தின் வஞ்சனையும் அவ்வசனத்தை நெருக்கிப்போடுவதால் கனியற்றவனாவானென்பதே.

௨௩ விதை விழுந்த நல்ல நிலத்துக்கொப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டுச் சிந்தித்தும் அதின்படி செய்தும் நூறும் அறுபதும் முப்பதுமாகப் பலனைக்கொடுத்தும் வருவானென்பதேயென்றார்.

௨௪ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார். அதாவது பரலோக இராச்சியம் ஒருவயல் நிலத்துக்கொப்பாயிருக்கின்றது. அந்த நிலத்திலே எசமானானவன் நல்லவிதையை விதைத்தான்.

௨௫ பின்பு மனிதர் நித்திரைபண்ணுகையில் அவனுடைய பகைஞன் வந்து கோதுமைக்குள்ளே களைகளை விதைத்துப்போனான்.

௨௬ பயிரானது வளர்ந்து தானியத்தை உண்டாக்கினபொழுது அந்தக் களைகளுங் காணப்பட்டன.

௨௭ வேலைக்காரர் எசமானிடத்தில் வந்து ஆண்டவனே, நீர் உமது வயல்நிலத்திலே நல்லவிதையைவிதைக்கவில்லையா. களைகள் அதிலே எப்படி யுண்டாயினவென்றார்கள்.

௨௮ அதற்கவன் பகைஞன் அப்படிச் செய்தானென்றான். அப்பொழுது வேலைக்காரர் நாங்கள்போய் அவைகளைப் பிடுங்கிப்போடச் சித்தமாயிருக்கிறீரோ என்று கேட்டார்கள்.

௨௯ அதற்கவன் சொன்னது, வேண்டாம். களைகளைப்பிடுங்குகிறபொழுது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு,

௩௰ அவ்விரண்டையும் அறுப்புக்காலம் வரைக்கும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்திலே அறுக்கிறவர்கள் முதலாவது களைகளைப்பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டவுங் கோதுமையை என் களஞ்சியத்திற் சேர்க்கவுங் கட்டளையிடுவேனென்று சொன்னானென்றார்.

௩௧ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார். அதாவது, பரலோக இராச்சியங் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கின்றது. அதை ஒரு மனிதன் எடுத்துத் தன் நிலத்திலே விதைத்தான்.

௩௨ அது எல்லாவிதைகளிலுஞ் சிறிதாயிருந்தும் வளரும்பொழுது கீரைகளிலும் பெரிதாகி ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்தடையத்தக்கதான செடியாமென்றார்.

௩௩ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார். அதாவது மூன்று மரக்கால் மாமுழுவதும் புளிப்பாகுமளவுக்கும் ஒரு ஸ்திரி புளிப்புமாவையெடுத்து அதிலே அடக்கிவைத்தாள். பரலோக இராச்சியம் அந்தப் புளிப்புமாவுக்கொப்பாயிருக்கின்றதென்றார்.

௩௪ என் வாயைத்திறந்து உவமைகளாலே பேசுவேன் உலகத்தோற்றமுதற்கொண்டு மறைபொருளானவைகளை வெளிப்படுத்

தேனென்று தீர்க்கதரிசியாலுரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாக.

௩௬ இயேசுவானவர் இவைகளையெல்லாம் உவமையாய்ச் சனங்களுடனே பேசினார். உவமைகளினாலேயன்றி வேறுவிதமாய் அவர் அவர்களுடனே பேசவில்லை.

௩௬ அப்பொழுது இயேசுவானவர் சனங்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குப் போனார். அங்கே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து நீர் வயல்நிலத்தின் களைகளைக் குறித்துச் சொன்ன உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டுமென்று கேட்டார்கள்.

௩௭ அவர்களுடனே அவர் மறுமொழியாகச் சொன்னதாவது, நல்ல விதையை விதைக்கிறவன் மனுஷனுடைய குமாரனே.

௩௮ வயல்நிலம் உலகமே. நல்லவிதை இராச்சியத்தின் புத்திரரே. களைகள் பொல்லாங்கனுடைய புத்திரரே.

௩௯ அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசே. அறுப்பு உலகத்தின் முடிவே. அறுக்கிறவர்கள் தேவதூதர்களே.

௪௦ ஆதலால் களைகள் சேர்க்கப்பட்டு அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுகிறதுபோல இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

௪௧ மனுஷனுடைய குமாரன் தனதுடைய தூதரை அனுப்புவான். அவர்கள் அவனுடைய இராச்சியத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையுஞ் சேர்த்து,

௪௨ அவர்களும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற அக்கினிச் சூளையிலே போடுவார்கள்.

௪௩ அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

௪௪ அல்லாமலும் பரலோக இராச்சியம் வயல்நிலத்திலே ஒளிக்கப்பட்டிருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கின்றது. அதை ஒரு மனிதன் கண்டு அதை மறைத்து அதைக் குறித்து அடைந்த சந்தோஷத்தினாலே போய்த் தனக்குள்ளயாவையும் விற்று அந்த வயல்நிலத்தையே கொள்ளுகிறான்.

௪௫ அல்லாமலும் பரலோக இராச்சியம் நல்ல முத்துக்களைத் தேடி,

௪௬ ஒரு விலையுயர்ந்த முத்தைக்கண்டு போய்த் தனக்குள்ள யாவையும் விற்று அதைக் கொள்ளுகிற வியாபாரி ஒருவனுக்கு ஒப்பாயிருக்கிறது.

௪௭ அல்லாமலும் பரலோக இராச்சியம் ஒரு வலைக்கு ஒப்பாயிருக்கின்றது. வலையானது கடலிலே போடப்பட்டு எல்லாச் சாதியான மீன்களையும் வாரி நிறைந்தபொழுது,

௪௮ சனங்கள் அதைக் கரையில் இழுத்து உட்கார்ந்து நல்லவைகளைப் பாத்திரங்களில் சேர்த்துக்கொண்டு ஆகாதவைகளை எறிந்துவிடுவார்கள்.

௪௯ இவ்விதமாக உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர் புறப்பட்டு நீதிமான்களிலிருந்து துன்மார்க்கரைப் பிரித்து,

௫௦ அழுகையும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற அக்கினிச் சூளையிலே போடுவார்களென்று சொல்லி,

௫௧ பின்பு நீங்கள் இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களாவென்று இயேசுவானவர் சீஷர்களிடத்திலே கேட்டதற்கு, ஆண்டவரே, அறிந்துகொண்டோமென்றார்கள்.

௫௨ அவர் பின்னும் அவர்களை நோக்கி, அப்படியிருக்கையால் பரலோக இராச்சியத்தைக் குறித்துப் போதிக்கப்பட்ட [illegible] தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்கொடுக்கிற வீட்டெசமானுக்கு ஒப்பாயிருக்கிறானென்றார்.

௫௩ இப்படி இயேசுவானவர் இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு,

௫௪ அவர் அவ்விடம்விட்டுத் தாம் வளர்ந்த ஊரிலே வந்து, ஜெப ஆலயத்தில் அவர்களுக்கு உபதேசம்பண்ணினார். அவர்கள் அதைக்கேட்டுப் பிரமித்து, இவனுக்கு இந்த ஞானமும் வல்லமைகளும் எங்கேயிருந்து வந்தது.

௫௫ இவன் தச்சனுடைய குமாரனல்லவா. இவனுடைய தாய் மரியாளென்னப்பட்டிருக்கிறாளல்லவா. யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரரல்லவா.

௫௬ இவனுடைய சகோதரிகளெல்லாம் நம்மகத்திலேயிருக்கிறார்களல்லவா. அப்படியிருக்க, இவையெல்லாம் இவனுக்கு எங்கேயிருந்து வந்ததென்றுசொல்லி,

௫௭ அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, தீர்க்கதரிசியொருவன் தன் ஊரிலேயும் தன் குடும்பத்திலேயுமேயன்றி மற்ற இடங்களிலே கனவீனப்படானென்றார்.

௫௮ மேலும் அந்தச் சனங்களுடைய அவிசுவாசத்தினாலே அவர் அவ்விடத்தில் அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.

௰௪. அதிகாரம்.

[(௧) ஏரோது கிறிஸ்துவைக் குறித்துக் கேள்விப்பட்டது. (௩) யோவான் சிரச்சேதம்பண்ணப்பட்டதற்குக் காரணம். (௰௩) வனாந்தரத்திலே இயேசுவானவர் ஐயாயிரம் பேருக்குச் சாப்பாடு கொடுத்தது. (௨௨) அவர் கடலிலே நடந்து சீஷரிடத்திலே வந்தது. (௩௪) கெனேசரேத்திலே [illegible]

தமமுடையவஸதிரத்தின ஓரத்தைத் தொட்டவர்களைக்குணமாக்கினது.]

௧ அக்காலத்திலே காற்பங்குதேசாதிபதியாகிய ஏரோதே இராசா இயேசுவினகீர்த்தியைக்கேள்விப்பட்டு,

௨ தன ஊழியக்காரரைநோக்கி, அவன யோவான்ஸ்நானன். அவன மரித்தோரிலிருந்து எழுந்திருந்தவன. அதினாலே அவன அற்புதங்களைச்செய்துவருகிறானென்றான.

௩ அதெப்படியென்றால, ஏரோதேஇராசா தனதம்பியாகிய பிலிப்புவினுடையமனைவியாகிய ஏரோதியாளைக்குறித்து, நீர் அவளைச்சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று,

௪ யோவான அவனுடனேசொன்னபடியினாலே ஏரோதே இராசா அவனைப்பிடித்துக்கட்டிக்காவலிலவைத்தான.

௫ அவனைக்கொலைசெய்யவுமமனசாயிருந்தான. அப்படியிருந்தும் சனங்கள யோவானைத்தீர்க்கதரிசியென்றெண்ணினபடியினாலே அவன அவர்களுக்குப்பயந்து, (அப்படிச்செய்யவில்லை.)

௬ பின்பு ஏரோதேயினுடைய சென்மநாள் கொண்டாடப்படுகிற காலத்திலே ஏரோதியாளினகுமாரத்தி ஏரோதே இராசாவுக்குமிகுந்தசந்தோஷமுண்டாகத்தக்கதாக நடனம்பண்ணினபொழுது,

௭ அவன அவளைநோக்கி, நீ எதைக்கேட்டாலுந்தருவேனென்று அவளுக்கு ஆணையிட்டுவார்த்தைகொடுத்தான.

௮ உடனே அவள தன்தாயதனக்குப்போதித்திருந்தபடியே நீர் யோவான்ஸ்நானனுடையதலையை ஒருதாலத்தில இங்கே எனக்குக்கொடுக்கவேண்டுமென்று கேட்டாள.

௯ இராசாதுக்கம அடைந்தான. அப்படியிருந்தும்தானகொடுத்த ஆணையினிமித்தமும பந்தியிற் கூடவிருந்தவர்களினிமித்தமும அவன அதைக்கொடுக்கக்கட்டளையிட்டான.

௰ அந்தப்படி இராசாவினாலே அனுப்பப்பட்டவர்கள காவற்கூடத்துக்குப்போய் யோவானைச்சிரச்சேதம்பண்ணி,

௧௧ வந்து அவனுடைய சிரசை ஒருதாலத்திலேவைத்து அந்தப்பெண்ணுக்குக்கொடுத்தார்கள. அவள அதைத்தனதாயிடத்திலேகொண்டுபோய்க்கொடுத்தாள.

௧௨ பின்பு அவனுடைய சீஷர்கள வந்து அவனுடைய உடலையெடுத்து அடக்கம்பண்ணிவந்து இயேசுவுக்கு அந்தச்சங்கதியை அறிவித்தார்கள.

௧௩ இயேசுவானவர் அதைக்கேட்டு அவ்விடம்விட்டு வனாந்தரமான இடத்திலே தனியேயிருக்க ஒருபடவிலேறிப்போனார். சனங்கள அதைக்கேள்விப்பட்டுப்பட்டினங்களிலிருந்து கால்நடையாய் அவர் பின சென்றார்கள.

௧௪ இயேசுவானவர்புறப்பட்டுத்திரளானசனங்களைக்கண்டு அவர்களுக்கு இரக்கமாயமனதுருகி அவர்களில வியாதிப்பட்டவர்களைக்குணமாக்கினார்.

௧௫ சாயங்காலத்திலே அவருடையசீஷர் அவரிடத்தில வந்து இதுவனாந்தரமான இடம. அல்லாமலும பொழுதுபோயிற்று. ஆதலால இந்தச்சனங்கள கிராமங்களுக்குப்போய்த்தங்களுக்காகப்போசனபதார்த்தங்களைக்கொள்ளும்படிக்கு இவர்களை அனுப்பிவிடுமென்றார்கள.

௧௬ அதற்கு இயேசுவானவர், இவர்கள போகவேண்டுவதில்லை நீங்களே இவர்களுக்குச்சாப்பாடுகொடுங்களென்றார்.

௧௭ அவர்கள சொன்னது, ஐந்தப்பமும இரண்டுமீன்களுமேயல்லாமல வேறொன்றும எங்களிடத்திலில்லையென்றார்கள.

௧௮ அவைகளை எனக்கு இங்கேகொண்டுவாருங்களென்றார்.

௧௯ பின்பு சனங்கள புல்லின்மேற் பந்தியிருக்கும்படிக்கு அவர் கட்டளையிட்டு அவ்வைந்தப்பங்களையும இரண்டு மீன்களையும எடுத்து வானத்தை யண்ணாந்துபார்த்து அவைகளையாசீர்வதித்து, அப்பங்களைப்பிட்டுச்சீஷர்களுக்குக்கொடுத்தார். சீஷர்கள அவைகளைச்சனங்களுக்குக்கொடுத்தார்கள.

௨௰ அவர்களெல்லாருஞ்சாப்பிட்டுத்திருத்தியடைந்தார்கள. அதுவுமல்லாமற் சேஷமானவைகளைப்பன்னிரண்டுகூடைநிறைய எடுத்தார்கள.

௨௧ அப்படிச்சாப்பிட்டவர்கள பெண்களும்பிள்ளைகளுந்தவிர ஏறக்குறைய ஐயாயிரம்பேரிருந்தார்கள.

௨௨ உடனே இயேசுவானவர்சனங்களையனுப்பிவிடுகையில தமது சீஷர்கள்படவிலேறித்தமக்குமுன்னே அக்கரைக்குப்போகும்படிக்கு அவர்களைத்துரிதப்படுத்தினார்.

௨௩ சனங்களையனுப்பிவிட்டபின்பு அவர்தனியே செபத்தியானம்பண்ணும்படிக்கு ஒருமலையின்மேலேறினார். சாயந்தரமான பொழுது அவர்மாத்திரம அங்கேயிருந்தார்.

௨௪ அவ்வேளையிலே படவுகடலின்நடுவே சேர்ந்து, எதிர்க்காற்றிருந்ததினாலே அலைகளால அலைவுபட்டது.

௨௫ அப்படியிருக்கிறபொழுது இரவின நாலாஞ்சாமத்திலே இயேசுவானவர்கடலி

னமேலே நடந்து அவர்களிடத்துக்குப் போனார்.

உ௬ அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு கலங்கி, ஆவேசமுண்டாயிருக்கிறதென்று புலம்பிப் பயத்தினாலே கூப்பிட்டார்கள்.

உஎ உடனே இயேசுவானவர் திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்று அவர்களுடனே சொன்னார்.

உஅ பேதுரு அவருக்கு ஆண்டவரே, நீரேயானால் சலத்தின்மேலே உம்மிடத்தில் வரும்படி என்னைக் கட்டளையிடுமென்றான்.

உ௯ அதற்கவர் வாவென்றார். அப்பொழுது பேதுரு படவைவிட்டிறங்கி இயேசுவினிடத்துக்கு வரும்படிக்குச் சலத்தின்மேலே நடந்தான்,

௩௰ காற்றுப் பலத்திருக்கிறதைக் கண்டு, பயமடைந்து அமிழ்ந்தத்தொடங்கி ஆண்டவரே, என்னை இரட்சிக்கவேண்டுமென்று கூப்பிட்டான்.

௩௧ உடனே இயேசுவானவர் கையை நீட்டி அவனைப் பிடித்துக்கொண்டு அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாயென்றார்.

௩௨ அவர்கள் படவிலேறினவுடனே காற்று அமைந்துபோயிற்று.

௩௩ அப்பொழுது படவிலுள்ளவர்கள் வந்து மெய்யாகவே நீர் பராபரனுடைய குமாரனாயிருக்கிறீரென்று சொல்லி அவரை வணங்கினார்கள்.

௩௪ பின்பு அவர்கள் அக்கரைக்குப்போய்க் கெநேசரேத்து நாட்டில் வந்தார்கள்.

௩௫ அவ்விடத்து மனிதர் அவரையறிந்து அந்தச் சுற்றுக்கைகளிலெங்கும் ஆட்களையனுப்பிப் பிணியாளிகளெல்லாரையும் அவரிடத்தில் அழைத்துக்கொண்டுவந்து,

௩௬ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைமாத்திரந் தொடும்படிக்கு உத்தரவு கேட்க அதைத் தொட்ட யாவருஞ் சொஸ்தமடைந்தார்கள்.

௰௫. அதிகாரம்.

[(௧) பரிசேயர் முதலானவர்கள் தேவகற்பனைகளை மீறின சடங்காக அவர்களைக் கடிந்துகொண்டது (௰௧) வாய்க்குள்ளேபோகிறபதார்த்தத்தினாலே அசுசிவாராதென்பது. (உ௧) கானானதேசத்தாளுடைய மகளைச் சொஸ்தமாக்கினது. (௩உ) நாலாயிரம்பேருக்கு அற்புதமாய்ச் சாப்பாடு கொடுத்தது.]

அக்காலத்திலே எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து,

உ உம்முடைய சீஷர் [illegible] கழுவாமற்போசனம்பண்ணுகிறபடி அவர்கள் பெரியோர்களுடைய [illegible] டளை நியாயத்தை ஏன்மீறுகி [illegible] றார்கள்.

௩ அதற்கு அவர் சொன்னது: [illegible] பாரம்பரியத்தினிமித்தம் பராபரனுடைய கற்பனையை ஏன் மீறுகிறீர்கள்.

௪ எப்படியெனில் உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணவேண்டுமென்றும், தகப்பனையாவது தாயையாவது [illegible] பவன் மரண ஆக்கினை [illegible] டுமென்றும் பராபரன் கட்டளையிட்டார்.

௫ அப்படியிருந்தும் நீங்களோ ஒருவன் தன் தகப்பனுடனே அல்லது [illegible] உமக்கென்னாலே உதவுகிற [illegible] அதைக் காணிக்கையாகக் கொடுத்தேனென்று சொன்னால்,

௬ அவன் தன் தகப்பனை அல்லது தாயைக் கனம்பண்ணவேண்டியதில்லையென்று இவ்விதமாய்ப் பராபரனுடைய கற்பனையை உங்கள் பாரம்பரியத்தினாலே அவமாக்கிவருகிறீர்கள்.

எ ஆ வஞ்சகரே, இந்த சனங்கள் வாயினாலே என்னைச் சேர்ந்து உதடுகளினாலே என்னைக் கனம்பண்ணுகிறார்கள், இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கின்றது.

அ அப்படிப் பிறர்கள் மனிதர்களுடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கிறவர்களாயிருந்து என்னை வீணாய்ச் சேவிக்கிறார்களென்று,

௯ ஏசாயா என்பவன் உங்களைக் குறித்து நன்றாய்த் தீர்க்கதரிசனஞ் சொன்னார்.

௰ பின்பு சனங்களைத் தம்மிடத்தில் அழைத்து நீங்கள் கேட்டுச் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

௰௧ வாய்க்குள்ளேபோகிறது மனுஷனை அசுசிப்படுத்தமாட்டாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனை அசுசிப்படுத்துகின்றதென்று அவர்களுக்குச் சொன்னார்.

௰உ அப்பொழுது அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு விசனப்பட்டார்களென்று அறிந்திருக்கிறீராவென்றார்கள்.

௰௩ அதற்கவர், என் பரமபிதா நடாத நாற்றுகளெல்லாம் பிடுங்கப்படும்.

ப் அவர்களைவிட்டுவிடுங்கள். குருடருக்கு
வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்.
குருடன் மற்றொரு குருடனுக்கு வழிகா
ட்டினால் இருவருங் குழியிலே விழுவார்களெ
ன்றார்.

௧௫ அப்பொழுது பேதுரு அவரை நோக்கி
இந்த உவமையை எங்களுக்கு வெளிப்
படுத்தவேண்டுமென்று கேட்டான்.

௧௬ அதற்கு இயேசுவானவர், நீங்களும்
இன்னம் புத்தியில்லாதவர்களா.

௧௭ வாய்க்குள்ளே போகிறவைகளெல்லாவு
ம் வயிற்றிலே சேர்ந்து பின்பு ஆசனவழி
யாய்க் கழிந்துபோகின்றனவென்பதை நீங்
கள் இன்னும் சிந்தித்துக்கொள்ளவில்லையா.

௧௮ வாயிலிருந்து புறப்படுகிறவைகள்
இருதயத்திலிருந்து புறப்பட்டுவருகின்றன.
அவைகளே மனிதனை அசுசிப்படுத்துகின்
றன.

௧௯ எவையெனிற் பொல்லாத சிந்தனைக
ள், கொலைகள், விபசாரங்கள், வேசித்தன
ங்கள், களவுகள், பொய்ச்சாட்சிகள், தூஷ
ணங்களாகிய இவைகள் இருதயத்திலிருந்
து புறப்பட்டுவருகின்றன.

௨௦ இவைகளே மனிதனை அசுசிப்படுத்து
கிறவைகள். கைகழுவாமற் சாப்பிடுகிறது
மனிதனை அசுசிப்படுத்தாதென்றார்.

௨௧ பின்பு இயேசுவானவர் அவ்விடம்
விட்டுப் புறப்பட்டுத் தீருசீதோனபட்டினங்
களின் திசைகளுக்குப் போனார்.

௨௨ அப்பொழுது அவ்விடங்களின் எல்
லைகளிலிருந்து வந்த கானான் தேசத்தாளா
கிய ஒருஸ்திரி அவரை நோக்கி, ஆண்டவரே,
தாவீதின்குமாரனே, என் மகள் பசாசினால்
கொடியதாய் வாதிக்கப்படுகிறாள். எனக்கு
இரங்கவேண்டுமென்றுசொல்லிக் கூப்பிட்
டாள்.

௨௩ அவரோ அவளுக்கு மாறுத்தரமாக
ஒரு வார்த்தையுஞ் சொல்லவில்லை.
அப்பொழுது அவருடைய சீஷர்வந்து, அவ
ரை நோக்கி, இவள் நம்மைப்பின்தொடர்ந்து
கூப்பிடுகிறாளே. ஆதலால் இவளை அனுப்பி
விடுமென்று வேண்டிக்கொண்டார்கள்.

௨௪ அதற்கு அவர், காணாமற்போன
ஆடுகளாகிய இஸ்ரவேல்குடும்பத்தாரிடத்
துக்கேயன்றி, (மற்றவர்களிடத்தில்) நான்
அனுப்பப்படவில்லையேயென்றார்.

௨௫ அவளோவந்து ஆண்டவரே, என
க்குச்சகாயஞ்செய்யவேண்டுமென்று அவ
ரை நமஸ்காரம்பண்ணினாள்.

௨௬ அவர்சொன்னது, பிள்ளைகளுடைய
அப்பத்தையெடுத்து, நாய்களுக்குப்போடு
கிறது நல்லதல்லவேயென்றார்

௨௭ அதற்கவள் ஆண்டவரே, மெய்தா
ன். ஆகிலும் நாய்கள் தங்கள் எசமான்கள்
போசனஞ்செய்கிறபலகைகளிலிருந்து விழு
கிற உச்சிட்டங்களைத்தின்னுமேயென்றாள்.

௨௮ அப்பொழுது இயேசுவானவர் அவ
ளை நோக்கி, ஆ, ஸ்திரியே, உன் விசுவாசம்
பெரிதாயிருக்கின்றது. நீவிரும்பினபடி உன
க்காகக்கடவதென்றார். அந்நேரமே அவ
ளுடைய மகள் சுகம் அடைந்தாள்.

௨௯ பின்பு இயேசுவானவர் அவ்விடம்
விட்டுப்புறப்பட்டுக் கலிலேயாக் கடலருகே
வந்து, ஒரு மலையின்மேலேறி அங்கே உட்கா
ர்ந்தார்.

௩௦ அப்பொழுது சப்பாணிகள், குருடர்,
ஊமையர், முடவர்கள் முதலான அநேகம்
பேரைக்கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த சன
ங்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர்களை
அவருடைய பாதத்தினிடத்தில் வைத்தார்
கள். அவர்களை அவர் குணமாக்கினார்.

௩௧ ஊமையர் பேசுகிறதையும் முடவர்
கள் சொஸ்தம் அடைகிறதையுஞ் சப்பாணி
கள் நடக்கிறதையுங் குருடர்காணுகிறதையு
ஞ் சனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு இஸ்ர
வேலின் தேவனைத் துதித்தார்கள்.

௩௨ பின்பு இயேசுவானவர் தமது சீஷரை
த்தமமிடத்தில் அழைத்துச் சனங்களைக்குறி
த்து மனவுருக்கமாயிருக்கிறேன். என்னத
தினாலென்றால், இவர்களமூன்று நாளாய் என்னி
டத்திலே தங்கிப் போசனமில்லாதிருக்கிறார்
கள். இவர்கள் வழியிலே சோர்ந்துபோகும்
படிக்குப் பட்டினியாய் இவர்களை அனுப்பி
விடமாட்டேனென்றார்.

௩௩ அதற்கு அவருடைய சீஷர்கள் இவ்
வளவு சனங்களுக்குத் திருத்தியுண்டாகும்
படிக்கு வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்
தரத்திலே நமக்கு எப்படியகப்படுமென்
றார்கள்.

௩௪ இயேசுவானவர் உங்களிடத்தில் எவ்
வளவு அப்பங்களுண்டென்றார். ஏழு அப்ப
ங்களுஞ் சில சிறுமீன்களுமுண்டென்று சீஷர்
சொல்ல,

௩௫ அவர் சனங்களைத் தரையிலே பந்தியி
ருக்கச்சொல்லி,

௩௬ பின்பு அந்த ஏழு அப்பங்களையும்
மீன்களையுமெடுத்து தோத்திரஞ்செய்து
அவைகளைப்பிட்டுத் தமதுடைய சீஷர்களுக்
குக்கொடுத்தார். சீஷர் அவைகளைச் சனங்க
ளுக்குக்கொடுக்க,

௩௭ எல்லாருஞ் சாப்பிட்டுத் திருத்தியடை
ந்தார்கள். பின்பு மேஷியானவைகள் ஏழு
கூடைநிறையச் சேகரித்துக்கொள்ளப்பட்
டன.

௩௮ பெண்களும் பிள்ளைகளுந்தவிர போ
சனம்பண்ணின புருஷர் நாலாயிரம்பேர்.

௩௯ அவர் சனங்களை அனுப்பிவிட்டுப் படவிலேறி மகதலவூரின் எல்லைகளிற் சேர்ந்தார்.

௰௬. அதிகாரம்.

[(௧) பரிசேயர் அடையாளத்தைக் கேட்டது. (௬) பரிசேயர் சதுசேயருடைய புளித்தமாவுக்கு விலகவேண்டுமென்பது. (௰௩) சனங்கள் கிறிஸ்துவைக் குறித்து யோசித்தது. (௰௬) பேதுரு அவரைக் குறித்து அறிக்கை பண்ணினது. (௨௧) இயேசுவானவர் தமது மரணத்தை முன்னறிவித்தது. (௨௩) பேதுரு அவரைக் கடிந்தது. (௨௪) தம்மைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் பாடுபடும்படி புத்தி சொன்னது.]

அப்பொழுது பரிசேயருஞ் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து வானத்திலிருந்து ஒரடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

௨ அவர்களுக்கு அவர் சொன்னது, அஸ்தமனமாகிறபொழுது செவ்வானமிருக்கிறபடியால் வெளிவாங்குமென்கிறீர்கள்.

௩ அல்லாமலும் உதயமாகிறபொழுது, வானஞ் செவ்வாய் மந்தாரமாயிருக்கிறபடியால் இன்றைக்குப் பெருங் காற்றும் மழையுமுண்டாகுமென்கிறீர்கள். வஞ்சகரே, வானத்தின் தோற்றத்தை வகையறுக்க அறிந்திருக்கிறீர்கள். காலங்களின் அடையாளங்களைக் குறித்து வகையறுக்கமாட்டீர்களா.

௪ சோரமார்க்கமுள்ள பொல்லாத சந்ததியாரானவர்கள் அடையாளங்கேட்கிறார்கள். யோனாதீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறொரு அடையாளமும் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லையென்று சொல்லி அவர்களைவிட்டுப் போனார்.

௫ அவருடைய சீஷர்கள் அக்கரைக்குப் போனபொழுது, அவர்கள் அப்பங்களைக் கூடக் கொண்டுபோக மறந்திருந்தார்கள்.

௬ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நீங்கள் பரிசேயர் சதுசேயரென்பவர்களுடைய புளிப்புள்ள மாவுக்கு விலகியிருக்கவும் எச்சரிக்கையாயிருங்களென்றார்.

௭ அவர்கள் நாம் அப்பங்களைக் கூடக் கொண்டுவராததைக் குறித்து, (இப்படிச் சொல்லுகிறாரென்று) தங்களுக்குள்ளே யோசனை பண்ணிக்கொண்டார்கள்.

௮ இயேசுவானவர் அதையறிந்து, அவர்களை நோக்கி, அற்பவிசுவாசிகளே, நீங்கள் அப்பங்களைக் கூடக் கொண்டுவராததைக் குறித்து, (நான் இப்படிச் சொன்னதாக) உங்களுக்குள்ளே யோசனைபண்ணுகிறதென்ன.

௯ இன்னம் உங்களுக்குப் புத்தி [illegible] யோ ஐயாயிரம்பேருக்குள்ளே (வைத்) ஐந்து அப்பங்களையும் நீங்கள் [illegible] கூடை நிறையச் சேகரித்ததை [illegible] யும,

௰ நாலாயிரம்பேருக்குள்ளே (வைத்) தேழு அப்பங்களையும் நீங்கள் [illegible] கூடைநிறைய எடுத்ததையும் [illegible] நினைத்துக்கொள்ளுகிறதில்லையா.

௰௧ பரிசேயர் சதுசேயர் [illegible] டைய புளிப்புள்ளமாவுக்கு விலக [illegible] கையாயிருக்கவேண்டுமென்று [illegible] ததைக் குறித்துச் சொல்லவில்லை [illegible] நீங்கள் சிந்திக்கக் கூடாமல் [illegible] தெப்படியென்றார்.

௰௨ அப்பொழுது அவர் [illegible] ளச் சதுசேயரென்பவர்களுடைய [illegible] ன புளிப்புள்ள மாவுக்கல்ல [illegible] உபதேசத்துக்கே விலகவேண்டுமென் [illegible] க்கச் சொன்னாரென்று அறிந்தா [illegible]

௰௩ பின்பு இயேசுவானவர் [illegible] ரியாவின் திசைகளில் வந்தபொழுது [illegible] தம்முடைய சீஷர்களை நோக்கி, [illegible] டைய குமாரனாகிய என்னைச் சனங்கள் [illegible] ன்று சொல்லுகிறார்களென்று கேட்டார்.

௰௪ அதற்கவர்கள் சொன்னது, சில [illegible] மையோவானென்றும் சிலர் எலியாவென்றும் சிலர் எரேமியாவென்றும் [illegible] தீர்க்கதரிசிகளிலொருவனென்றும் சொல்லுகிறார்களென்றார்கள்.

௰௫ அதற்கவர் நீங்களென்னை [illegible] சொல்லுகிறீர்களென்று கேட்டபொழுது

௰௬ அதற்குச் சீமோன்பேதுரு [illegible] து, நீர் சீவனுள்ள பராபரனுடைய [illegible] னாகிய கிறிஸ்து என்றான்.

௰௭ அவனுடனே இயேசுவானவர் [illegible] னது, யோனாவின்குமாரனாகிய சீமோனே [illegible] மாமிச இரத்தமல்லப் பரமண்டலத் [illegible] க்கிற என் பிதா இதை உனக்கு வெளி [illegible] தினார். ஆதலால் நீ பாக்கியமுள்ளவ [illegible]

௰௮ மேலும் நீ பேதுருவாயிருக்கிறாய். இந்தக் கல்மலையின்மேல் நான் என் [illegible] யசபையைக் கட்டுவேன். பாதாளத்தின் [illegible] சலகளும் அதைச் செயிப்பதில்லை [illegible] உனக்குச் சொல்லுகிறேன்.

௰௯ அல்லாமலும் பரலோக இராச் [illegible] த்தின் திறவுகோல்களை உனக்குக் [illegible] ன் பூமியிலே நீ கட்டுவதெதுவோ அது [illegible] கத்தில் கட்டப்பட்டிருக்கும். பூமியி [illegible] கட்டவிழ்ப்பதெதுவோ அது பரலோகத் [illegible] லே கட்டவிழ்க்கப்பட்டிருக்குமென்று [illegible] சொல்லி,

௨௰ பின்பு தாம் கிறிஸ்துவென்று ஒருவ [illegible] க்குஞ் சொல்லாதபடிக்குத் தமது சீஷர்களு [illegible] க்குக் கட்டளையிட்டார்.

௨௧ அதுமுதல் இயேசுவானவர் தாம் [எரு]சலேமுக்குப் போய்ப் பெரியோர்களா[லும்] பிரதான ஆசாரியராலும் வேதபாரக[ரா]லும் மிகுந்த பாடுபடவும் கொலைசெய்யப்படவும் மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவும் [வே]ண்டுமென்று தம்முடைய சீஷருக்குக் [கா]ண்பிக்கத் தொடங்கினார்.

௨௨ அப்பொழுது பேதுரு அவரைத் [தனி]யே அழைத்து, ஆண்டவரே, உமக்கி[ப்படி] ஒருக்காலும் ஆகாதிருப்பதாக, அப்படி உமக்கு [நேரி]டாதிருப்பதாகவென்று அவருடனே [கடிந்]து பேசத் தொடங்கினான்.

௨௩ இயேசுவானவர் திரும்பிப் பேதுருவை [நோக்]கி, அப்பாலே போ சாத்தானே, நீ எனக்கு [இடறலாயி]ருக்கிறாய். நீ பராபரனுக்குப் பிரியமான[வை]களைச் சிந்தியாமல் மனிதருக்குப் பிரிய[மான]வைகளைச் சிந்திக்கிறபடியினாலே என[க்கு வி]க்கினமாயிருக்கிறாயென்று சொல்லி,

௨௪ பின்பு தம்முடைய சீஷர்களை நோக்கி, [ஒரு]வன் என்னைப் பின்பற்றி நடக்க [விரு]ம்பினால் தன்னைத் தான் வெறுத்துத் தன் [சிலு]வையை எடுத்துக்கொண்டு என்னைப் [பின்]பற்றக்கடவன்.

௨௫ என்னத்தினாலென்றால், தன் சீவனை [இர]க்ஷிக்க விரும்புகிறவன் அதை இழந்து [போ]வான். என்னிமித்தந் தன் சீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.

௨௬ அல்லாமலும் மனிதனானவன் உல[க]முழுமையும் சம்பாதித்துக்கொண்டா[லும்] தன் சீவனை நஷ்டப்படுத்தினால் அவனு[க்கு] என்ன லாபமுண்டாயிருக்கும். அன்றி[யும்] ஒரு மனிதன் தன் சீவனை மீட்கிறதற்கு [எ]ன்னத்தைக் கொடுப்பான்.

௨௭ அல்லாமலும் மனிதனுடைய குமா[ரன்] தமது பிதாவின் மகிமையைப் பொருந்[தி]த் தம்முடைய தூதரோடுங்கூட வருவா[ர்]. அப்பொழுது அவனவனுடைய செய[லி]ன்படியே அவனவனுக்குப் பலன் அளி[ப்]பான்.

௨௮ இங்கே நிற்கிறவர்களிற் சிலர் மனித[னு]டைய குமாரனைத் தம்முடைய இராச்சிய[த்]தோடே வருவதைக் காண்கிறதற்கு முன்னே [ம]ரணத்தை அடைவதில்லையென்று மெய்[யா]ய் உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௰எ. அதிகாரம்.

[௧) இயேசுவானவர் மறுரூபங்கொண்டது. (௰௪) சந்திரரோகியைக் குணமாக்கினது. (௨௨) தம்முடைய பாடுகளை முன்னறிவித்தது. (௨௪) தீர்வையைச் செலுத்தினது.]

[௧] ஆறு நாளுக்குப் பின்பு இயேசுவானவர் [த]னித்திருக்கும்படி பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையுங் கூட்டிக்கொண்டு உயர்ந்த மலையின்மேற் போய்,

௨ அங்கே அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார். அவருடைய முகம் சூரியனைப் போலப் பிரகாசித்தது. அவருடைய வஸ்திரங்கள் ஒளியைப்போல வெண்மையாயின.

௩ அப்பொழுது மோசே எலியா என்பவர்கள் அவரோடே பேசிக்கொண்டிருக்கிறவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

௪ அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி, ஆண்டவரே, நாம் இங்கேயிருக்கிறது நல்லது. உமக்குச் சித்தமானால் இங்கே உமக்கும் மோசேயுக்கும் எலியாவுக்கும் ஒவ்வொரு குடிலாக மூன்று குடில்களையுண்டாக்குவோமென்றான்.

௫ அப்படி அவன் பேசுகையில் நடந்ததென்னவெனில் ஒளியுள்ள மேகம் அவர்கள் மேல் நிழலிட்டதுமல்லாமல், இவர் என்க்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன். இவரிற் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவிகொடுங்களென்று அந்த மேகத்திலிருந்து சத்தமுண்டாயிற்று.

௬ சீஷர் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து மிகவும் பயந்தார்கள்.

௭ அப்பொழுது இயேசுவானவர் வந்து அவர்களைத் தொட்டு, எழுந்திருங்கள் பயப்படாதிருங்களென்று சொன்னார்.

௮ அவர்கள் தங்கள் கண்களை உயர்த்துகிறபொழுது, இயேசுவையேயன்றி, மற்றொருவரையுங் காணவில்லை.

௯ பின்பு அவர்கள் மலையிலிருந்திறங்குகிறபொழுது, இயேசுவானவர் அவர்களை நோக்கி, மனிதனுடைய குமாரன் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கிற வரைக்கும் நீங்கள் இந்தத் தரிசனத்தை ஒருவருக்குஞ் சொல்ல வேண்டாமென்று கட்டளையிட்டார்.

௰ அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி, அப்படியானால் முதலாவது எலியா வரவேண்டுமென்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்களென்றார்கள்.

௰௧ அதற்கு இயேசுவானவர் சொன்னது, முன்பு எலியா வந்து எல்லாவற்றையுஞ் சீர்ப்படுத்தவேண்டுமென்பது மெய்தான்.

௰௨ அல்லாமலும் எலியா வந்தாயிற்றென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அவனை அவர்கள் அங்கிகரித்துக்கொள்ளாமல், அவனுக்குத் தங்கள் இஷ்டப்படி செய்தார்கள். அப்படி மனிதனுடைய குமாரனும் அவர்களாற் பாடுபடுவானென்றார்.

௰௩ அப்பொழுது அவர் யோவான்ஸ்நானனைக் குறித்துத் தங்களுடனே பேசினாரென்று சீஷர் அறிந்தார்கள்

௰௪ பின்பு அவர்கள் சனக்கூட்டத்தினிடத்திற் சேர்ந்தபொழுது, ஒரு மனிதன்

அவரிடத்தில் வந்து, அவர்முன்பாக முழங்காற்படியிட்டு,

௧௫ ஆண்டவரே, என்மகனுக்கிரங்கும். அவன் சந்திரரோகியாய்க் கொடியவேதனைப்படுகிறான். எப்படியென்றால், அடிக்கடி தீயிலேயும் அடிக்கடி சலத்திலேயும் விழுகிறான்.

௧௬ அவனை உம்முடைய சீஷரிடத்திற் கொண்டுவந்தேன். அவர்களுக்கு அவனைக் குணமாக்கத் திராணியில்லையென்றான்.

௧௭ அதற்கு இயேசுவானவர் சொன்னது: ஆ, விசுவாசமில்லாத மாறுபாடுள்ள சந்ததியாரே, எதுவரைக்கும் உங்களோடிருப்பேன். எதுவரைக்கும் உங்களிடம் பொறுமையாயிருப்பேன். அவனை என்னிடத்திற் கொண்டுவாருங்களென்றார்.

௧௮ அவனைக் கொண்டுவந்தபொழுது இயேசுவானவர் அவனிலுள்ள பிசாசை அதட்டினார். உடனே அது அவனைவிட்டுப் போயிற்று. அந்தப் பிள்ளை அந்நேரமே சுகம் அடைந்தான்.

௧௯ பின்பு சீஷர்கள் மாத்திரம் இயேசுவினிடத்தில் வந்து நாங்கள் அதைத் துரத்தும்படிக்கு ஏன் எங்களுக்குத் திராணியில்லையென்றார்கள்.

௨௰ அதற்கு இயேசுவானவர், உங்கள் அவிசுவாசத்தினாலே (திராணியில்லை.) மேலும் ஒரு கடுகுவிதை அவ்வளவு விசுவாசம் மாத்திரம் உங்களுக்குண்டானால் நீங்கள் இந்த மலையை நோக்கி இவ்விடம்விட்டு அப்புறம் போவென்று சொல்ல, அது போம். அல்லாமலும் உங்களால் கூடாத காரியமொன்றுமிருப்பதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௧ ஆனாலும் செபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி (வேறுவிதமாய்) இந்தச் சாதியைத் துரத்தப்படாதென்றார்.

௨௨ அல்லாமலும் அவர்கள் கலிலேயா நாட்டிலே சஞ்சரித்திருந்த காலத்திலே இயேசுவானவர் அவர்களை நோக்கி, மனிதனுடைய குமாரன் மனிதர்களுடைய கையில் ஒப்புக்கொடுக்கப்படுவான்.

௨௩ அவர்கள் அவனைக் கொலைசெய்வார்கள். பின்பு மூன்றாம் நாளிலே எழுந்திருப்பானென்றார். அவர்கள் மிகுந்த துக்கம் அடைந்தார்கள்.

௨௪ அவர்கள் கப்பர்நாகூமூரில் வந்தபொழுது வரிப்பணத்தைச் சேர்க்கிறவர்கள் பேதுருவினிடத்தில் வந்து உங்கள் போதகர் வரிப்பணத்தைக் கொடுக்கிறதில்லையாவென்றார்கள். கொடுக்கிறாரென்றான்.

௨௫ பின்பு அவன் வீட்டிலே வந்தபொழுது அவன் (பேசுகிறதற்கு) முன்னே இயேசுவானவர் அவனை நோக்கி, சீமோனே, பூமியின் இராசாக்கள் ஆர்கையிலே தீர்வை அல்லது வரிவாங்குகிறார்கள். தங்கள் பிள்ளைகள் கையிலோ அந்நியர்கையிலோ […] கெப்படித் தோன்றுகிறதென்[…]

௨௬ அந்நியர்கையிலவாங்[…] ன்று பேதுரு சொன்னான் அ[…] வானவர் அப்படியானாற் பிள்ளைகள்[…] தவேண்டுவதில்லையே.

௨௭ ஆனாலும் நாம் அவர்களுக்[…] ண்மம் வராதபடிக்கு நீ கட[…] க்குப் போய்த் தூண்டிலைப்போட்[…] வரும் மீனைப்பிடித்து அதின்[…] திறந்து பார். அதிலே ஒரு வெள்[…] க் காண்பாய். அதை யெடுத்து எனக்[…] காகவும் உனக்காகவும் அவர்[…] கொடு என்றார்.

௰௮. அதிகாரம்.

[(௧) சீஷர்கள் மனத்தாழ்மை […] ளாயும் கெடுதிசெய்யாதவர்[…] கும்படி புத்திசொன்னது. (௰) […] களை அசட்டைபண்ணலாகா[…] மென்பது. (௰௫) தப்பிதஞ்செய்[…] ளுக்குச் செய்யவேண்டியது. […] வருகிற ஒருவர் மன்னிக்கவேண்[…] கருதித்து உவமை சொன்னது.]

அக்காலத்திலே சீஷர்கள் இயேசுவி[…] த்து வந்து பரலோக இரா[…] எவன் பெரியவனாயிருப்பானென்[…]

௨ அப்பொழுது இயேசுவான[…] பிள்ளையைத் தம்மிடத்தில் அழை[…] யவர்களுக்குள்ளே நிறுத்திச்சொ[…] னது,

௩ நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளை[…] போலாகாவிட்டால் பரலோக இரா[…] த்திற் பிரவேசிக்கமாட்டீர்களென்[…] யாய் உங்களுக்குச் சொல்லுகிறே[…]

௪ ஆகையால் இந்தப் பிள்ளை[…] தன்னைத் தாழ்த்துகிறவனே பரலோ[…] ச்சியத்திற் பெரியவனாயிருப்பான்.

௫ அல்லாமலும் இப்படிப்பட்ட […] பிள்ளையை என் நாமத்தினாலே […] கொள்ளுகிறவன் என்னை ஏற்று[…] ளுகிறான்.

௬ என்மேல் விசுவாசமாயிருக்[…] சிறியரிலொருவன் குற்றஞ்செய்[…] காரணமானவனெவனோ அவனு[…] த்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி அவ[…] திரத்துக்குள்ளே அமிழ்த்தினால் அ[…] நலமாயிருக்கும்.

௭ ஐயோ கெடுதல்களினிமித்தம் உல[…] த்துக்கு வேதனை வரும். கெடுதல் […] மாய் வரவேண்டும். ஆனாலும் […] தலைச் செய்கிறவனுக்கு வேதனை[…]

௮ ஆதலால் உன் கையாவது உன்[…] வது உனக்குக் கெடுதலுக்கு ஏது[…] அவைகளைத் தறித்தெறிந்துபோடு. […]

…கையை அல்லது இரண்டு காலையுடை…ளாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படு…ஊனனும் சப்பாணியுமாய் அல்லது ஊனனாய் (நித்திய) ஜீவனுள்ள இடத்திலே பிரவேசிக்கி…து உனக்கு நன்மையாயிருக்கும்.

௯ …டேலும் உன்னுடைய கண் உன்னைக இடறப்பண்ணினால் அதைப்பிடுங்கி…த்துப்போடு. நீ இரண்டு கண்ணையுடை…ளாய் எரிநரகத்திலே தள்ளப்படுவதிலும் …ஒற்றைக்கண்ணனாய் (நித்திய) ஜீவனுள்ள இடத்திலே பிரவேசிக்கிறது உனக்கு நன்மையாயிருக்கும்.

௰ இந்தச்சிறியரில் ஒருவனையும் அசட்டைபண்ணாதபடிக்குப்பாருங்கள். என்னத்தினாலென்றால், அவர்களுக்கேற்ற தேவதூதர் பரமண்டலங்களிலே என் பரமபிதாவுடைய சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௧௧ அல்லாமலும் மனுஷனுடைய குமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்கவந்தான்.

௧௨ உங்களுக்கெப்படித் தோன்றுகிறது. ஒரு மனுஷனுக்குண்டாயிருக்கிற நூறு ஆடுகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் சிதறிப்போனதைத் தேடுவானல்லவோ.

௧௩ இது உங்களுக்கெப்படித்தோன்றுகிறது. அவன் அதைக்கண்டுபிடித்தால் சிதறிப்போகாத் தொண்ணூற்றொன்பதிலும் அதைக்குறித்து அதிகமாய்ச்சந்தோஷப்படுவானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௧௪ அந்தப்படி இந்தச்சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போகும்படிக்குப் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவுக்குச் சித்தமில்லை.

௧௫ உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தால், நீ போய் அவனோடேமாத்திரமிருந்து அவனைக்கடிந்துகொள். அவன் உனக்குச்செவிகொடுத்தால் சகோதரனாக அவனைப்பெற்றுக்கொள்வாய்.

௧௬ அவன் செவிகொடாமலிருந்தால், வாக்கிகளெல்லாம் இரண்டுமூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே நிலவரப்படும்படிக்கு இரண்டொருத்தரைக் கூட்டிப்போ.

௧௭ அவன் அவர்களுக்குங் கீழ்ப்படியாதிருந்தால், நீ அதைச்சபைக்கு அறிவிக்கவேண்டும். அவன் சபையையும் அசட்டைபண்ணினால், நீ அவனை அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவுமெண்ணுவாயாக.

௧௮ பூமியிலே நீங்கள் எவைகளைக்கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கும். பூமியிலேஎவைகளை அவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலே அவிழ்க்கப்பட்டிருக்குமென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௧௯ அல்லாமலும் பூமியிலேஎந்தக்காரியத்தைக்குறித்தும் உங்களில் இரண்டுபேர் வேண்டிக்கொள்ள ஒருமைப்பட்டால் அது பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவினாலே அவர்களுக்குண்டாகுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௰ என்னத்தினாலென்றால் இரண்டுபேராவது மூன்றுபேராவது என்னுடைய நாமத்திலே எங்கே கூடிவந்திருக்கிறார்களோ அங்கே அவர்களுக்குள்ளேயிருக்கிறேனென்றார்.

௨௧ அப்பொழுது பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதகுற்றஞ்செய்தால் அவனுக்கு நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும். ஏழுதரமட்டுமோவென்றான்.

௨௨ இயேசுவானவர் அவனுக்குச்சொன்னது, ஏழுதரமமட்டுமல்ல, ஏழெழுபதுதரமென்று உனக்குச்சொல்லுகிறேன்.

௨௩ எப்படியெனில் பரலோகஇராச்சியத்தின ஊழியக்காரருடனே கணக்குப்பார்க்கச்சித்தமான இராசனுக்கொப்பாயிருக்கின்றது.

௨௪ அவன் கணக்குப்பார்க்கத்தொடங்கினபொழுது பதினாயிரந்தாலந்துகடன்பட்டவனை அவனுக்குமுன்பாகக்கொண்டுவந்தார்கள்.

௨௫ அவன் கடனைத்தீர்க்கத்திராணியில்லாதபடியால் ஆண்டவன் அவனையும் அவனுடையமனைவியையும் பிள்ளைகளையும் அவனுக்குண்டானயாவையும் விற்றுக்கடனைத்தீர்க்கக்கட்டளையிட்டான்.

௨௬ அப்பொழுது அந்த ஊழியக்காரன் விழுந்துவணங்கி, ஆண்டவனே, எல்லாவற்றையும் உமக்குக்கொடுத்துத்தீர்க்கிறேன். நீர் எனக்கு இரங்கிப்பொறுக்கவேண்டுமென்றுவேண்டிக்கொண்டான்.

௨௭ அந்தப்படி ஆண்டவன் அந்த ஊழியக்காரனுக்கு இரங்கி, அவனை விடுதலைபண்ணிக் கடனையும் அவனுக்கு மன்னித்தான்.

௨௮ பின்பு அந்த ஊழியக்காரன்புறப்பட்டுப்போகையில் தன்னோடேகூடவேலைசெய்து தனக்கு நூறுதெநாரியபணங்கடன்பட்டிருந்த ஒருவனைக்கண்டு அவனைப்பிடித்துத்தொண்டையைநெரித்து, நீபட்டகடனை எனக்குக்கொடுத்துத்தீரென்றான்.

௨௯ உடனே அந்த ஊழியக்காரன் அவனுடைய கால்களின்முன்கவிழுந்து எல்லாவற்றையும் உனக்குக்கொடுத்துத்தீர்க்கிறேன். எனக்கிரங்கப்பொறுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

௩௰ ஆனாலும் அவன் மனதில்லாமற்போய் அவன்பட்டகடனைத்தீர்க்குமளவும் அவனைக்காவலிற்போடுவித்தான்.

௩௧ அந்த நடக்கைகளை மற்ற ஊழியக்காரர்கண்டு மிகுந்த துக்கம் அடைந்து, ஆண்டவனிடத்துக்குப் போய் நடந்த எல்லாவற்றையும் அவனுக்கறிவித்தார்கள்.

௩௨ அப்பொழுது ஆண்டவன் அவனை அழைப்பித்து, அவனை நோக்கி, பொல்லாத ஊழியக்காரனே, நீ யென்னை வேண்டிக்கொண்டபடியினாலே நான் அந்தக் கடன் யாவையும் உனக்கு மன்னித்தேனே.

௩௩ நான் உனக்கிரங்கினதுபோல நீயும் உன்னோடே கூட ஊழியஞ்செய்கிறவனுக்கு இரங்கவேண்டுமல்லவோ என்று சொல்லி,

௩௪ கோபம் அடைந்து அவன்பட்ட கடன் யாவையுந் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான்.

௩௫ எவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை நீங்கள் மனப்பூருவமாய் மன்னியாமற்போனால் இப்படிப்போல உங்கள் பரம்பிதா உங்களுக்குஞ் செய்வாரென்றார்.

௰௯. அதிகாரம்.

[(௧) கிறிஸ்துவியாதிஸ்தரைக் குணமாக்கினது. (௩) விவாகத்தைக் குறித்துப் பரிசேயருக்குஞ் சீஷருக்கும் உத்தரவு சொன்னது. (௰௩) சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தது. (௰௬) நித்தியசீவனைக் குறித்து ஒரு வாலிபனுக்கு உத்தரவு சொன்னது. (௨௩) ஐசுவரியவான்கள் பராபரனுடைய இராச்சியத்தையடைகிறது அரிதென்பது. (௨௭) தம்மைப்பின்பற்றுகிறவர்களுக்கு வரும் பலன்.]

மேற்சொல்லிய உபதேசங்களை இயேசுவானவர் சொல்லிமுடித்தபின்பு அவர் கலிலேயா நாட்டைவிட்டு யோர்தானுக்கருகேயிருக்கிற யூதேயா நாட்டின் எல்லைகளுக்குப் போனார்.

௨ அநேகசனங்கள் அவர்பின் சென்றார்கள். அவ்விடத்திலே அவர்களிலுள்ள (பிணியாளிகளை) அவர் குணமாக்கினார்.

௩ அப்பொழுது சில பரிசேயர் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து புருஷனானவன் தன் மனைவியை எந்தநிமித்தமானாலுந் தள்ளிவிடலாமாவென்று கேட்டார்கள்.

௪ அதற்கவர் சொன்னது, ஆதியிலே சிருஷ்டிகர் மனிதரை உண்டாக்கினபொழுது ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் உண்டாக்கினாரென்பதையும்,

௫ இதினிமித்தம் ஒருவன் தகப்பனையுந் தாயையும் விட்டுத் தன் மனைவியுடனே இசைந்திருப்பான். அவ்விருவரும் ஒரே சரீரத்தைப்போலிருப்பார்களென்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையோ.

௬ அப்படியிருக்கிறபடியினாலே [illegible] இருவராயிராமல் ஒரே [illegible] போலிருக்கிறார்கள். ஆதலாற் [illegible] இணைத்ததை மனிதர் பிரிக்க[illegible]ார்.

௭ அவர்கள் சொன்னது, அப்ப[illegible] தள்ளுதல் சீட்டைக்கொடுத்து [illegible] தள்ளிவிடும்படிக்கு மோசே [illegible] கட்டளையிட்டானென்றார்கள்.

௮ அதற்கு அவர் சொன்னது, உங்[illegible] தயங்கடினமானபடியால் நீங்கள் உங்[illegible] மனைவிகளைத் தள்ளிவிடும்படிக்[illegible] ங்களுக்கிடங்கொடுத்தார். ஆதி[illegible] அப்படியிருந்ததில்லை.

௯ ஆகையால் எவனாகிலுந் [illegible] சமாய் நடவாமலிருக்கிற மனைவி[illegible] ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்[illegible] ணால் அவன் விபசாரம்பண்ணு[illegible] ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணு[illegible] னும் விபசாரம்பண்ணுகிறவனென்[illegible] ளுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௰ அவருடைய சீஷர்கள் அவ[illegible] சொன்னது, விவாகம்பண்ணின [illegible] டைய காரியமிப்படியானால் விவாக[illegible] ணுகிறது நன்மையல்லவென்றார்கள்.

௰௧ அதற்கு அவர் சொன்னதா[illegible] திராணிபெற்றவர்களேயன்றி மற்றவர்[illegible] ளாரும் (நீங்கள் சொன்ன) வசனத்தின்[illegible] படி செய்யமாட்டார்கள்.

௰௨ அண்ணகர்களுண்டு, சிலர் அ[illegible] பட்டவர்களாய்ப் பிறந்தார்கள். சில[illegible] ற மனிதர்களாலே அண்ணகர்களாக்கப்[illegible] டார்கள். சிலர் பரலோக இராச்சியத்[illegible] காகத் தங்களை அண்ணகர்களாக்கி[illegible] அப்படிப் பற்றிக்கொள்ளத் திராணி[illegible] வனெவனோ அவன் அப்படிப் பற்றிக்[illegible] ள்ளக்கடவனென்றார்.

௰௩ அப்பொழுது அவர் பிள்ளைகளின்[illegible] ற் கைகளை வைத்து அவர்களுக்காக[illegible] பண்ணும்படிக்கு அவரிடத்திற் [illegible] வந்தார்கள். அவர்களைச் சீஷர் அத[illegible] ர்கள்.

௰௪ இயேசுவானவர் (அவர்[illegible]) சொன்னதாவது, பிள்ளைகள் என்[illegible] லே வருகிறதற்குத் தடைபண்ணா[illegible] கொடுங்கள். பரலோக இராச்சியம் [illegible] டிப்பட்டவர்களுடையதாயிருக்கிற[illegible] யென்றுசொல்லி,

௰௫ அவைகள்மேற் கைகளை வை[illegible] பின்பு அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப்[illegible] னார்.

௰௬ அப்பொழுது ஒருவன் வந்து அ[illegible] ரை நோக்கி, நல்லபோதகரே, நித்தி[illegible] னை அடையும்படிக்கு நான் என்ன நன்[illegible] யைச் செய்யவேண்டுமென்றான்.

௧௭ அவனுடனே அவர் சொன்னது, நீ என்னை நல்லவனென்று ஏன் சொல்லுகிறாய்? பராபரனாகிய ஒருவரே தவிர நல்லவன் ஒருவனுமில்லையே. நீ ஜீவனிற் பிரவேசிக்க மனதாயிருந்தால் கற்பனைகளைக் கைக்கொள்ளென்றார்.

௧௮ அவை எவைகளென்று அவன் கேட்டான். அதற்கு இயேசுவானவர் சொன்னது, கொலைசெய்யாதிருப்பாயாக, விபசாரம்பண்ணாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

௧௯ உன் தகப்பனையுந் தாயையுங் கனம்பண்ணுவாயாக, உன்னைப்போலப் பிறனிடத்தில் அன்புகூர்வாயாக, என்பவைகளேயென்றார்.

௨௰ அந்த வாலிபன் சொன்னது, இவைகளையெல்லாம் நான் சிறுவயதுமுதற் கைக்கொண்டிருக்கிறேன். நான் இன்னுஞ்செய்யவேண்டியதென்னவென்றான்.

௨௧ இயேசுவானவர் சொன்னது, நீ பூரணசற்குணனாயிருக்க விரும்பினால் நீ போய் உனக்குண்டாயிருக்கிறவைகளை விற்றுப் பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷமுண்டாயிருக்கும்படிக்குத் தரித்திரருக்குக் கொடுத்துப் பின்பு வந்து என் பின்னே செல்லு என்றார்.

௨௨ வாலிபன் இந்த வசனத்தைக் கேட்டபோது மிகுந்த ஆஸ்திகளையுடையவனானபடியினாலே துக்கத்தோடே போய்விட்டான்.

௨௩ அப்பொழுது இயேசுவானவர் தம் சீஷரை நோக்கி, ஐசுவரியமுள்ளவன் பரலோக இராச்சியத்திற் பிரவேசிக்கிறது அரிதாயிருக்கின்றதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௪ அல்லாமலும் ஐசுவரியவான் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசிக்கிறதைப் பார்க்கிலும் ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைகிறதே எளிதாயிருக்கின்றதென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௨௫ அவருடைய சீஷர்கள் அதைக் கேட்டு மிகவும் பிரமித்து அப்படியானால் இரட்சிக்கப்படுகிறவர்கள் யாரென்றார்கள்.

௨௬ இயேசுவானவர் அவர்களைப் பார்த்துச் சொன்னதாவது, மனிதரால் இது கூடாதகாரியந்தான். பராபரனாலே எந்தக் காரியத்தையுஞ்செய்யவல்லவரென்றார்.

௨௭ அப்பொழுது பேதுரு அவருடனே சொன்னதாவது, இதோ நாங்களெல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றிவந்தோம். அதற்காக எங்களுக்கென்னபலனுண்டாகுமென்றான்.

௨௮ இயேசுவானவர் சொன்னது, (சகலமும்) புதிதாக்கப்படுங்காலத்திலே மனிதனுடைய குமாரன் தனது மகிமையுள்ள பத்திராசனத்திலே வீற்றிருக்கும்பொழுது என்னைப் பின்பற்றிவந்த நீங்களும் இஸ்ரவேலாகிய பன்னிரண்டுகோத்திரங்களுக்கு நியாயத்தீர்ப்புகொடுக்கிறவர்களாகப் பன்னிரண்டு பத்திராசனங்களில் உட்காருவீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௯ அல்லாமலும் என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது சகோதரரையாவது சகோதரிகளையாவது தகப்பனையாவது தாயையாவது மனைவியையாவது பிள்ளைகளையாவது நிலங்களையாவது விட்டவனெவனோ அவன் நூற்றத்தனையாய்ப் பலனடைந்து நித்தியஜீவனையுஞ் சுதந்தரித்துக்கொள்வான்.

௩௰ ஆகிலும் முந்தினோராகிய அநேகர் பிந்தினோராயிருப்பார்கள். பிந்தினோராகிய (அநேகர்) முந்தினோராயிருப்பார்கள்.

௨௰. அதிகாரம்.

[(௧) திராட்சத்தோட்டத்திலே வேலைசெய்கிறவர்களை உவமையாகக்காட்டியது. (௰௭) தம்முடைய பாடுகளை முன்னறிவித்தது. (௨௰) செபெதேயுவின் குமாரருக்குச் சொன்ன உத்தரவினாலே மனத்தாழ்மையைப் போதித்தது. (௩௰) குருடர் இரண்டுபேருக்குப் பார்வையைக் கொடுத்தது.]

அதெப்படியெனிற் பரலோக இராச்சியத்தின் (ஆளுகை) ஒரு வீட்டெசமானுடைய (நடக்கைக்) கொப்பாயிருக்கின்றது. அவன் தன் திராட்சத்தோட்டத்திலே வேலைசெய்யக் கூலிக்காரரை அழைத்துக்கொண்டுவரும்படிக்கு,

௨ அதிகாலையிலே புறப்பட்டுச் சில கூலிக்காரரைக் கண்டு நாளொன்றுக்கொரு பணங் கூலிதீர்மானம்பண்ணி அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்திற்கு அனுப்பிவந்தான்.

௩ மூன்றாம் மணிவேளையிலேயும் அவன் புறப்பட்டுக் கடைத்தெருவிலே வீணராய் நிற்கிறவேறு சிலரைக் கண்டு,

௪ நீங்களுந் திராட்சத்தோட்டத்திற்போங்கள். நியாயமானபடி உங்களுக்குக் கூலி தருவேனென்று அவர்களுக்குச் சொன்னான். அவர்கள் போனார்கள்.

௫ ஆறும் ஒன்பதாம் மணிவேளைகளிலே அவன் திரும்பப் புறப்பட்டு அப்படியே செய்தான்.

௬ பின்பு பதினோராம் மணிவேளையிலே அவன் புறப்பட்டு வீணராய் நிற்கிற வேறே சிலரைக் கண்டு பகல் முழுவதும் நீங்கள் இங்கே ஏன் வீணராய் நிற்கிறீர்களென்று கேட்டான்.

௭ அவர்கள் ஒருவரும் எங்களை வேலை கொள்ளவில்லையென்றார்கள். அவன் சொன்ன

னது, நீங்களுந் திவிதிராட்சத்தோட்டத் திற்குப்போங்கள். நியாயமானபடி கூலி யைவாங்கிக்கொள்வீர்களென்றான்.

௮ அஸ்தமனமானபொழுது திவிதிராட் சத்தோட்டத்திற்கெசமானானவன் தன்காரி யக்காரனுடனே சொன்னது, நீ கூலிக்கா ரரையழைத்துப் பின்புவந்தவர்களைத்தொ டங்கி முன்புவந்தவர்களவரைக்குங் கூலி யைக்கொடு என்றான்.

௯ அந்தப்படி பதினோராம் மணிவேளை யில் வேலைகொள்ளப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொருபணமாகப் பணத்தை வாங்கிக்கொண்டார்கள்.

௰ காலையில் வேலைக்குவந்தவர்களுஞ்சே ர்ந்து தங்களுக்கு அதிகக்கூலிவருமென்றெ ண்ணினார்கள். அவர்களும் ஆளுக்கு ஒவ் வொருபணமாகப்பணத்தைவாங்கினார்கள்.

௰௧ அதைவாங்குகிறபொழுது அவர்கள் வீட்டெசமானை நோக்கி,

௰௨ பின்னேவந்த இவர்கள் ஒருமணிநே ரமாத்திரம் வேலைசெய்தார்கள். இவர்களை ப்பகலின்பாரத்தையும் வெயிலையுஞ்சுமந் த எங்களுக்குச்சமனாக்கினீரென்றுமொறு மொறுத்தார்கள்.

௰௩ அவர்களில் ஒருவனுக்கு மாறுத்தர மாக அவன் சொன்னதாவது, சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை. நீ ஒருபணங்கூலிக்காக என்னோடே சம்ம திக்கவில்லையோ.

௰௪ உன்னுடையதை நீவாங்கிக்கொண் டுபோ. நான் உனக்குக்கொடுத்ததுபோ லப்பின்னேவந்த இவனுக்குங்கொடுக்கமன தாயிருக்கிறேன்.

௰௫ என்னுடையதை நான் என் இஷ் டப்படியேசெய்யக்கூடாதா. நான்தயவா யிருக்கிறபடியினாலேயோ நீ வன்கண்ணு யிருக்கிறாயென்றான்.

௰௬ இவ்விதமாகப் பிந்தினோர் முந்தி னோராயிருப்பார்கள். முந்தினோர் பிந்தி னோராயிருப்பார்கள். மேலும் அழைக்கப் பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர் மாத்திரமிருக்கிறார்க ளென்றார்.

௰௭ இயேசுவானவர் எருசலேம் பட்டி னத்திற்குப் பிரயாணமாய்ப்போகிறபொ ழுது வழியிலே அவர் பன்னிரண்டுசீஷரை மாத்திரம் அழைத்து அவர்களுடனேசொ ன்னது,

௰௮ இதோ, எருசலேமுக்குப்போகிறோ ம். அங்கே மனிதனுடையகுமாரன் பிர தான ஆசாரியருக்கும் வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படுவான். அவர்கள் அவ னை மரணத்திற்குள்ளாக்கும்படி தீர்ப்புக் கொடுத்து,

௰௯ அவனைப்பரியாசம்பண்ணவும் வாரி னால் அடிக்கவுஞ் சிலுவைமரத்தில் அறைய

வும் புறத்தேசத்தாருக்கு ஒப்புக்கொடு ப்பார்கள். பின்பு மூன்றுநாளிலே அவ ன் உயிரோடெழுந்திருப்பானென்றார்.

௨௰ அக்காலத்திலே செபெதேயு குமாரருடைய தாய்தன்குமாரரோ டே அவரிடத்தில்வந்து சாஷ்டாங்கமாய் விழுந்து ஒருவிண்ணப்பம்பண்ணவிருந்தாள்.

௨௰௧ அவர் உனக்கென்னவேண்டு மென்றார். அவள் அவருடனேசொன்னது, நீர் இராச்சியபரிபாலனஞ்செய்யும்போ து என்குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலதுபாரிசமாகவும் மற் றொருவன் உம்முடைய இடதுபாரிசமாகவும் இருக் கும்படி செய்யவேண்டுமென்றாள்.

௨௰௨ அதற்கு இயேசுவானவர் சொன்ன து, நீங்கள் கேட்டது உங்களுக்குத்தெ ரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத் தில் நீங்கள்குடிப்பீர்களா? நான்கொள் ளும் ஸ்நானத்தை நீங்கள் கொள்வீர்களாவென்றார். அவர்கள் அப்படி யேசெய்வோமென்றார்கள்.

௨௰௩ அப்பொழுது அவர்சொன்னது, என் பாத்திரத்திற்குடிப்பீர்கள். நான் கொள்ளும் ஸ்நானத்தையுங்கொள்ளு வீர்கள். அது மெய்தான். என்னுடைய பிதாவினாலே எவர்கள் குறிக்கப்பட்டிருக் கிறார்களோ அவர்களுக்கேயன்றி (மற்றொ ருவருக்கும்) என் வலதுபாரிசத்திலேயும் என் இடதுபாரிசத்திலேயும் உட்கார்ந்தி ருக்கிற(தனத்தை) நான்கொடுக்கக்கூடா தென்றார்.

௨௰௪ மற்றப்பத்துப்பேரும் (அந்தச்சங் கதியைக்) கேட்டு அந்தச்சகோதரர் இருவ ரைக்குறித்து விசனப்பட்டார்கள்.

௨௰௫ அப்பொழுது இயேசுவானவர் அவ ர்களையழைத்துச்சொன்னதாவது, புறஜா தாருக்குள்ளே பிரபுக்கள் குடிகளின்மேல் (மாப்பாய) ஆளுகிறார்கள். அல்லாமலும் பெரியோர்கள் அவர்கள்மேல் (கடின மான) அதிகாரத்தைச்செலுத்துகிறார்களெ ன்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

௨௰௬ உங்களுக்குள்ளே அப்படியிருக்கக் கூடாது. உங்களில் எவனாகிலும் பெரியவ னாயிருக்கவேண்டுமென்றிருந்தால் அவன் உங்கள் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

௨௰௭ உங்களில் எவனாகிலும் முதல்வனா யிருக்கவேண்டுமென்றிருந்தால் அவன் உங் கள் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.

௨௰௮ மனிதனுடைய குமாரனும் ஊழி யங்கொள்ளும்படிக்கு வாராமல் ஊழியஞ் செய்யும்படிக்கும் அநேகரை மீட்கும் பொ ருளாகத் தனதுசீவனைத்தரும்படிக்கும் வந் தானேயென்றார்.

௨௰௯ அவர்கள் இயெரிகோபட்டினத்தி லிருந்து புறப்பட்டுப்போகையில் திரளான சனங்கள் அவர்பின்சென்றார்கள்.

௩௰ அப்பொழுது குருடரான இரண்டுபேர் வழியருகே உட்கார்ந்திருந்து இயேசுவானவர் வழியே வருகிறாரென்று கேள்விப்பட்டு ஆண்டவரே, தாவீதின்குமாரனே, எங்களுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள்.

௩௧ சனங்கள் (அதைக்கேட்டு) அவர்கள் சத்தம்பண்ணாதிருக்கும்படிக்கு அவர்களையதட்டினார்கள். அவர்களோ ஆண்டவரே, தாவீதின்குமாரனே, எங்களுக்கிரங்குமென்று அதிகமாய்க்கூப்பிட்டார்கள்.

௩௨ அப்பொழுது இயேசுவானவர் நின்று அவர்களையழைத்து நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறீர்களென்றார்.

௩௩ அவர்கள் சொன்னது, ஆண்டவரே, எங்கள் கண்களைத்திறக்கவேண்டுமென்றிருக்கிறோமென்றார்கள்.

௩௪ இயேசுவானவர் உருக்கமாயிரங்கி அவர்களுடைய கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் பார்வையடைந்து அவருக்குப்பின்னே சென்றார்கள்.

உக. அதிகாரம்.

[(௧) இயேசுவானவர் ஒரு கழுதையின்மேலேறி எருசலேமிற்பிரவேசித்தது. (௰௨) தேவாலயத்திலிருந்த வியாபாரிகளைத் துரத்தினது. (௰௭) அத்திமரத்தைச்சபித்தது. (௨௰) தமது அதிகாரத்தைக்குறித்து ஆசாரியர்முதலானவர்களுக்கு உத்தரவுசொன்னது. (௨௮) இரண்டுகுமாரரை உவமையாகக் காட்டியது. (௩௩) எசமானுடைய ஊழியக்காரரைக் கொலைசெய்த தோட்டக்காரரை உவமையாக்காட்டியது.]

அவர்கள் எருசலேமபட்டினத்திற்குச் சமீபமாய் ஒலிவமலையினருகே யிருக்கிற பெத்பாகேயூருக்குவந்தபொழுது இயேசுவானவர் இரண்டு சீஷரைநோக்கி,

௨ உங்களுக்கெதிராயிருக்கிற அந்தக் கிராமத்திலேபோங்கள். அங்கே நீங்கள் (போன) உடனேகட்டப்பட்டிருக்கிற ஒரு கழுதையையும் அதினோடேகூட ஒரு குட்டியையுங்காண்பீர்கள்.

௩ அவைகளின்கட்டவிழ்த்து எனக்காகக் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலுஞ் சொன்னால் ஆண்டவருக்கு இவைகள் வேண்டுமென்று சொல்லுங்கள். உடனே அவன் அவைகளை அனுப்பிவிடுவானென்றுசொல்லி அனுப்பினார்.

௪ (சீயோன்குமாரத்தியென்னும் எருசலேமபட்டினமே) இதோ, உன் இராசா மனத்தாழ்மையுள்ளவருமாய் நுகத்தடிக்குக் கீழ்ப்பட்ட கழுதையின்குட்டியாகிய கழுதையின்மேலேறியிருக்கிறவருமாய் உன்னிடத்திற்கு வருகிறாரென்று சீயோன்குமாரத்தியுடனே சொல்லுங்களென்று,

௫ தீர்க்கதரிசியினாலே சொல்லப்பட்டது நிறைவேறும்படிக்கு அவையெல்லாம் நடந்தன.

௬ இயேசுவானவர் கட்டளையிட்டபடியே செய்யச்சீஷர்கள்போய்,

௭ கழுதையையும் அதின்குட்டியையுங் கொண்டுவந்து தங்கள் வஸ்திரங்களை அவைகளின்மேற்போட்டு அவரை அவைகளின்மேல ஏற்றிப்போனார்கள்.

௮ திரளானசனங்களோ தங்கள்வஸ்திரங்களை வழியிலேவிரித்தார்கள். வேறுசிலர் மரங்களின் கிளைகளைத் தறித்து வழியிலே தெளித்தார்கள்.

௯ மேலும் முன்நடப்பாரும் பின்நடப்பாருமாகிய சனங்கள் தாவீதின்குமாரனுக்கு ஓசன்னா* பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரிக்கப்படத்தக்கவர். உன்னதமான வானங்களில் ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்கள்.

௰ அப்படி அவர் எருசலேமபட்டினத்திற்பிரவேசிக்கையிற் பட்டினத்தாரெல்லாருங் கலக்கம் அடைந்து இவர் ஆரென்று விசாரித்தார்கள்.

௰௧ சனங்கள்சொன்னது, இவர் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசுவென்றார்கள்.

௰௨ இயேசுவானவர் தேவாலயத்திற்பிரவேசித்து அதிலே விற்கிறவர்களுங்கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியேதுரத்திக் காசுக்காரருடைய பலகைகளையும் புறாக்களைவிற்கிறவர்களுடைய ஆசனங்களையுங் கவிழ்த்துப்போட்டு,

௰௩ என்னுடைய ஆலயம் செபத்துக்கான ஆலயமென்னப்படுமென்றெழுதியிருக்கின்றது. நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்களென்று அவர்களுடனே சொன்னார்.

௰௪ அல்லாமலுங் குருடருஞ் சப்பாணிகளுந் தேவாலயத்தில அவரிடத்திற்கு வந்தபொழுது அவர்களைச் சுகமாக்கினார்.

௰௫ அவர்செய்த அதிசயங்களையுந் தாவீதின்குமாரனுக்கு ஓசன்னாவென்று தேவாலயத்திற்கூப்பிடுகிற பிள்ளைகளையும் பிரதான ஆசாரியரும் வேதபாரகருங்கண்டு மிகுந்த விசனம் அடைந்து,

௰௬ அவரைநோக்கி, இவர்கள்சொல்லுகிறதைக்கேட்கிறீரோ என்றார்கள். அதற்கு இயேசுவானவர்சொன்னது, கேட்கிறேன். குழந்தைகள் பாலகருடைய வாயினால் துதியையுண்டுபண்ணினீரென்கிறதை நீங்கள்

* ஓசன்னாவென்பதற்கு இப்பொழுது இரட்சணியத்தைச்செய்வீராக என்பது அர்த்தமாம்.

ள் இருக்காலும் வாசிக்கவில்லையோ என்று சொல்லி,

௰௭ அவர்களைவிட்டுப் பட்டணத்திலிருந்து புறப்பட்டுப் பெத்தானியூருக்குப் போய், அங்கே இராத்திரி தங்கினார்.

௰௮ காலையிலே அவர் மறுபடியும் பட்டணத்திற்குப் போகையில் அவருக்குப் பசியுண்டான பொழுது,

௰௯ வழியருகே ஒரு அத்திமரத்தை அவர் கண்டு அதினிடத்திற்போய் அதிலே இலைகளையல்லாமற் கனிகளைக் காணாமலிருக்கிறபொழுது அவர் அதைநோக்கி, இனிமேலொருக்காலும் உன்னிற் கனியுண்டாகாதிருக்கக்கடவதென்று சொன்னார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று.

௨௰ சீஷர்கள் அதைக்கண்டு ஐயோ, இந்த அத்திமரம் எப்படிச் சீக்கிரமாய்ப் பட்டுப்போயிற்றென்று ஆச்சரியத்தோடே சொன்னார்கள்.

௨௧ இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னது, நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசித்தால் இந்த அத்திமரத்திற் சம்பவித்ததை நீங்கள் செய்வதுமல்லாமல் நீங்கள் இந்த மலையைநோக்கி, எழும்பிச் சமுத்திரத்திலே தள்ளப்படுவாயாக வென்று சொன்னால் உடனே அப்படியாகுமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௨ அல்லாமலும் ஜெபத்திலே நீங்கள் எதைக் கேட்டாலும் விசுவாசித்தீர்களானால் அதைப் பெறுவீர்களென்றார்.

௨௩ அவர் தேவாலயத்தில் வந்து உபதேசம்பண்ணுகிறபொழுது பிரதான ஆசாரியருஞ் சனங்களின் மூப்பரும் அவரிடத்தில் வந்து எந்த அதிகாரத்தினாலே நீர் இவைகளைச் செய்கிறீர். இப்படிப்பட்ட அதிகாரத்தை யுமக்குக் கொடுத்தவர் யாரென்றார்கள்.

௨௪ அதற்கு இயேசுவானவர் சொன்னது, நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்பேன். அதை நீங்கள் எனக்குச் சொன்னீர்களானால் நான் இவைகளைச் செய்கிற அதிகாரமின்னதென்று நானும் உங்களுக்குச் சொல்லுவேன்.

௨௫ யோவான் கொடுத்த ஞானஸ்நானம் ஆராலுண்டாயிருந்தது. பராபரனாலோ மனிதராலோ அதைச் சொல்லுங்களென்றார். அவர்களோ அது பராபரனாலுண்டாயிற்றென்றோமானால் இவர் ஏன் அவனை விசுவாசிக்கவில்லையென்பார்.

௨௬ அது மனிதராலுண்டாயிற்றென்றோமாகிற் சனங்களெல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியென்றெண்ணுகிறபடியினாலே அவர்களுக்குப் பயப்படுகிறோமென்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணி,

௨௭ பின்பு இயேசுவானவரை நோக்கி, எங்களுக்குத் தெரியாதென்றார்கள். அப்பொழுது அவரும் அவர்களுடனே சொன்னது, நான் இவைகளைச் செய்கிற அதிகாரமின்னதென்று நானும் உங்களுக்குச் சொல்லமாட்டேன்.

௨௮ ஆகிலும் உங்களுக்கெப்படித் தோன்றுகின்றது. ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரருண்டு. அவர்களில் மூத்தவனிடத்தில் அவன் வந்து மகனே, நீ இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்திலே போய் வேலைசெய் என்றான்.

௨௯ அதற்கவன் போகமாட்டேனென்றான். பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்.

௩௰ தகப்பன் இளையவனிடத்தில் வந்து அப்படித்தானே சொன்னான். அதற்கவன் ஐயா, உடனே போகிறேனென்று சொல்லியும் போகவில்லை.

௩௧ இவ்விருவரிலெவன் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தானென்று அவர் கேட்டபொழுது மூத்தவனே செய்தானென்றார்கள். அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னதாவது, ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கிறார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௨ எப்படியென்றால், யோவான் நீதிமார்க்கமாய் உங்களிடத்தில் வந்தான். நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை. ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள். அதை நீங்கள் கண்டுமிருந்தும் பின்பு விசுவாசிக்கும்படிக்கு மனஸ்தாபப்படாமலிருந்தீர்கள்.

௩௩ வேறு உவமையைக் கேளுங்கள். வீட்டெசமானொருவனுண்டு. அவன் ஒரு திராட்சத்தோட்டத்தையுண்டாக்கி அதைச் சுற்றி வேலியடைத்து அதில் ஆலையைத் தோண்டிக் கோபுரத்தையுங் கட்டிப் பின்பு அதைத் தோட்டக்காரர்வசமாய் விட்டுப் புறத்தேசத்திற்குப் போனான்.

௩௪ கனிகாலஞ் சமீபமானபொழுது அவன் கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படிக்குத் தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்.

௩௫ தோட்டக்காரரோ அவனுடைய ஊழியக்காரரைப் பிடித்து ஒருவனை அடித்து ஒருவனை வெட்டி மற்றொருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

௩௬ மறுபடியும் எசமான் முந்தினவர்களிலும் அதிகமான வேறு ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களையும் அப்படியே செய்தார்கள்.

௩௭ கடைசியிலே அவன் என்னுடைய குமாரனுக்கு அஞ்சுவார்களென்றெண்ணித் தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

௩௮ தோட்டக்காரரோ குமாரனைக்கண்டபொழுது இவன் சுதந்தரவாளி, இவனைக்கொன்று இவனுடைய சுதந்தரத்தைக் கட்டிக்கொள்ளுவோம் வாருங்களென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு,

௩௯ அவனைப்பிடித்துத் திராட்சத்தோட்டத்திற்குப் புறம்பே தள்ளிக் கொலைசெய்தார்கள்.

௪௰ ஆகையால் திராட்சத்தோட்டத்தின் எசமான் வரும்பொழுது அந்தத் தோட்டக்காரரை என்னசெய்வானென்று கேட்டார்.

௪௧ அதற்கு அவர்கள் சொன்னது, அவன் அந்தப்பொல்லாதவர்களைக் கடினமாய் அழித்துத் தக்கதியான காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கும் வேறே தோட்டக்காரர் வசமாய்த் திராட்சத்தோட்டத்தைக் குத்தகைக்கு விடுவானென்றார்கள்.

௪௨ இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னதாவது, வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலையான கல்லாயிற்று அது பராபரனாலே ஆயிற்று அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதென்று வேதத்திலே நீங்கள் ஒருக்காலும் வாசித்ததில்லையா?

௪௩ அப்படியிருக்க, பராபரனுடைய இராச்சியம் உங்களிலிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைத் தருகிற சனங்களுக்குக் கொடுக்கப்படுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪௪ அன்றியும் இந்தக்கல்லின்மேல் விழுகிறவன் நொறுக்கப்படுவான், இது எவன்மேல் விழுமோ அவனை நொறுக்கிப்போடுமென்றார்.

௪௫ பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டுத் தங்களைக் குறித்துப் பேசுகிறாரென்று அறிந்து,

௪௬ அவரைப்பிடிக்க மனதாயிருந்தார்கள், ஆகிலுஞ் சனங்கள் அவரைத் தீர்க்கதரிசியென்றெண்ணினபடியினாலே அவர்கள் சனங்களுக்குப் பயந்து (அப்படிச்செய்யாமலிருந்தார்கள்.)

௨௨. அதிகாரம்.

[(௧) தன் குமாரனுக்குக் கலியாணம்பண்ணின இராசாவைக்காட்டிய உவமை. (௧௫) இராசாவுக்குத் தீர்வைகொடுக்கவேண்டுமென்பது. (௨௩) உயிரோடெழும்புதலைக்குறித்துச் சதுசேயருக்குப் புத்திசொன்னது. (௩௪) பிரதான கற்பனையைக்குறித்து வேதசாஸ்திரிக்கு உத்தரவுசொன்னது. (௪௧) மேசியாவைக்குறித்துப் பரிசேயரிடத்திலே விசாரித்தது.]

இயேசுவானவர் மறுபடியும் உவமைகளாய் அவர்களுடனே சொன்னதாவது,

௨ பரலோகஇராச்சியத்தின் (ஆளுகை) தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த இராசனுடைய (நடக்கைக்) கொப்பாயிருக்கின்றது.

௩ அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படிக்கு அவன் தன் ஊழியக்காரரையனுப்பினான், அவர்களோ வரமாட்டோமென்றார்கள்.

௪ மறுபடியும் அவன் வேறே ஊழியக்காரரைநோக்கி, அழைக்கப்பட்டவர்களிடத்திற்கு நீங்கள்போய் என்விருந்தை எத்தனம்பண்ணினேன் என் எருதுகளுங் கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டன் எல்லாம் எத்தனமாயிருக்கின்றது கலியாணத்திற்கு வாருங்களென்று சொல்லுங்களென்று அனுப்பினான்.

௫ அவர்களோ அதை எண்ணாமல் ஒருவன் தன்வயலுக்கும் ஒருவன் தன்வியாபாரத்திற்கும்போய்விட்டார்கள்.

௬ மற்றவர்களோ அவனுடைய ஊழியக்காரரைப்பிடித்து நிந்தித்துக் கொலைசெய்தார்கள்.

௭ இராசா அதைக்கேட்டுக் கோபமடைந்து தன் சேனைகளை அனுப்பி, (அவர்களால்) அந்தக் கொலைபாதகரையழித்து அவர்களுடைய பட்டினத்தையுஞ் சுட்டெரித்தான்.

௮ அப்பொழுது அவன் தன் ஊழியக்காரரைநோக்கி, கலியாணவிருந்து எத்தனமாயிருக்கின்றது, அழைக்கப்பட்டவர்களோ அதற்குப் பாத்திரரல்லாதிருந்தார்கள்.

௯ ஆகையால் நீங்கள் வழிச்சந்திகளிற்போய் அகப்படுகிறயாவரையுங் கலியாணவிருந்துக்கு அழைத்துவாருங்களென்றான்.

௰ அந்த ஊழியக்காரர் வழிகளிற் புறப்பட்டுப்போய் அகப்பட்டபொல்லாதவர்களையும் நல்லவர்களையுங் கூட்டிவந்தார்கள், விருந்துசாலை பந்தியிருக்கிறவர்களால் நிறைந்தது.

௰௧ பின்பு பந்தியிருக்கிறவர்களைப்பார்க்கும்படிக்கு இராசா பிரவேசித்தபொழுது, கலியாணவஸ்திரத்தைத் தரித்திராத ஒருவனை அங்கே கண்டு,

௰௨ சிநேகிதனே, நீ கலியாணவஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படிப் பிரவேசித்தாயென்றுசொன்னபொழுது அவன் பேசாமலிருந்தான்.

௰௩ அப்பொழுது இராசா ஊழியக்காரரைநோக்கி, இவனுடைய கால்களையுங் கைகளையுங் கட்டி இவனை எடுத்துப்போய் அழுகையும் பற்கடிப்புமுண்டாயிருக்கிற மிகுந்த இருளிலே போடுங்களென்று கட்டளையிட்டான்.

௰௪ அந்தப்படியே அநேகர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் சிலர்மாத்திரந்தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்களென்றார்.

௰௫ அப்பொழுது பரிசேயர்போய்ச் சனங்களில் அவரையகப்படுத்தும்படிக்கு யோசனைபண்ணி,

௰௬ தங்கள் சீஷர்களையும் எரோதேயின மனிதர்களையும் அவரிடத்திற்கனுப்பினார்கள், (அவர்கள்வந்து) போதகரே, நீர் சத்தியமுள்ளவருமாயப் பராபரனுடையமார்க்கத்தைச் சத்தியமாயப்போதிக்கிறவருமாய மனிதருடைய முகத்தைப் பாராமலிருக்கிறபடியால ஒருவரையுங் குறித்துக் கவலையில்லாதவருமாயிருக்கிறீரென்று அறிந்திருக்கிறோம்.

௰௭ ஆதலால உமக்கெப்படித்தோன்றுகின்றது. இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமாயிருக்குமோ இலலையோ அதையெங்களுக்குச் சொல்லவேண்டுமென்றார்கள்.

௰௮ இயேசுவானவர் அவர்களுடைய துற்குணத்தையறிந்து, வஞ்சகரே, நீங்களென்னை ஏன் சோதிக்கிறீர்கள்?

௰௯ வரிக்காசை எனக்குக் காணபியுங்களென்றார், அவர்கள் ஒருதெநாரியப்பணத்தை அவருக்குக் கொடுத்தார்கள்.

௨௰ அப்பொழுது அவர் சொன்னது, இந்தச் சொரூபமும மேலெழுத்தும ஆருடையதென்றார், இது இராயனுடையதென்றார்கள்.

௨௰௧ அவர்சொன்னது, அப்படியானால இராயனுடையதை இராயனுக்கும பராபரனுடையதையோ பராபரனுக்குஞ் செலுத்துங்களென்றார்.

௨௰௨ அவர்கள் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு அவரைவிட்டுப்போனார்கள்.

௨௰௩ உயிரோடெழுந்திருக்கும் மறுமையில்லையென்றுசொல்லுகிற சதுசேயர் அந்நாளிலே அவரிடத்தில்வந்து,

௨௰௪ போதகரே, புருஷனொருவன் பிள்ளைகளில்லாமல இறந்துபோனால அவனுடைய சகோதரன அவனுக்குச் சந்ததியுண்டாகும்படிக்கு அவனுடையமனைவியை விவாகமபண்ணவேணடுமென்று மோசே சொனனாரே,

௨௰௫ அப்படியானால எங்களிடத்திற சகோதரர் ஏழுபேரிருந்தார்கள், அவர்களில மூத்தவன விவாகமபண்ணிச் சந்ததியிலலாமலமரித்துத் தன மனைவியைத் தன சகோதரனுக்குவிட்டான.

௨௰௬ இப்படி இரணடாஞ் சகோதரன முதல ஏழாஞ்சகோதரனவரைக்கும (அவளையே விவாகம்பண்ணிப பிளளையிலலாமல மரித்தார்கள.)

௨௰௭ எலலாருக்கும்பினபு அந்தபபெணணும இறநதுபோனாள.

௨௰௮ அப்படி அவளேழுபேருக்கும் விவாகமபண்ணியிருந்தபடியால உயிரோடெழுந்திருக்குங்காலத்திலே அவள அவ்வெவனுக்குமனைவியாயிருப்பாளென்[று கேட்]டார்கள.

௨௰௯ இயேசுவானவர் அவர்களுக்[கு உ]த்தரமாகச் சொன்னதாவது, வேதத்துக்களையும பராபரனுடைய [வல்லமையையும்] நீங்கள அறியாதிருக்கிறபடியால [தப்பான எண்ணங்]கொண்டிருக்கிறீர்கள.

௩௰ மறுமையிலே பெண கொள்வதும் கொடுப்பதுமிராது, அவர்கள பரமண்டலத்திலே பராபரனுடைய தூதரைப்போலிருக்கிறார்கள.

௩௰௧ மரித்தோர் உயிரோடெழுந்திருக்கிறதைக்குறித்தோவெனில நான ஆபிரகாமுடைய தேவனும ஈசாக்கினுடைய தேவனுமாய யாக்கோபினுடைய தேவனுமாயிருக்கிறேனென்று,

௩௰௨ பராபரனாலே உங்களுக்குச் சொல்லப்பட்டதை நீங்கள வாசிக்கவிலலையா, [அவ]ர் மரித்தோருடைய தேவனல்ல, [உயிரோடிருக்கி]றவர்களுடைய தேவனாயிருக்கிறார்.

௩௰௩ சனங்கள அவருடைய உபதேசத்தைக்கேட்டு அதைக்குறித்து ஆச்சரியங்கொண்டார்கள.

௩௰௪ அவர் சதுசேயர்பேசாதிருக்கும்படி செய்ததைப பரிசேயர்கேட்டு அவரிடத்திற்கூடிவந்தார்கள.

௩௰௫ அவர்களில நியாயசாஸ்திரியொருவன அவரைச்சோதிக்கும்படிக்கு,

௩௰௬ போதகரே! வேதத்திலே எதுபெரியதான கற்பனையாயிருக்கிறதென்று கேட்டான்.

௩௰௭ இயேசுவானவர் சொன்னது, [உன்] தேவனாகியபராபரனிலே உன முழு இருதயத்தோடும உன முழு ஆத்துமத்தோடும உன முழுமனதோடும அன்புகூர்வாயாக,

௩௰௮ என்பதே, முதலாவதும் பெரியதுமான கற்பனையாயிருக்கின்றது.

௩௰௯ அதற்கொப்பாயிருக்கிற இரண்டாங் கற்பனை யென்னவென்றால, நீ உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல உன் அயலானிடத்திலும் அன்புகூர்வாயாக என்பதே.

௪௰ இவ்விரணடுகற்பனைகளிலே நியாயப்பிரமாணம முழுமையும தீர்க்கதரிசனங்களும அடங்கியிருக்கின்றனவென்றார்.

௪௰௧ மேலும் பரிசேயர் கூடியிருக்கையில், இயேசுவானவர் அவர்களைநோக்கி,

௪௰௨ கிறிஸ்துவைக்குறித்து உங்களுக்கு [எப்ப]டித்தோன்றுகின்றது, அவர் [ஆரு]டைய குமாரனென்றுகேட்டார், அவர்கள [தாவீதின்] குமாரனென்றார்கள.

௪௰௩ இயேசுவானவர்சொன்னது, [அப்ப]டியானால் தான் உமமுடையசத்துருக்[illegible]

...மது பாதப்படியாக்கிப்போடுகிற வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே இருக்கக்கடவீரென்று பராபரன் என்கர்த்தரிடத்தில் சொன்னாரென்று.

௪௪ தாவீது (பரிசுத்த) ஆவியினாலே ...சொல்லி, (இவ்விதமாய்) அவரைக் கர்த்தரென்று சொல்லியிருக்கிறதெப்படி?

௪௫ தாவீது அவரைக் கர்த்தரென்று சொல்லியிருக்க அவர் எப்படி அவனுடைய குமாரனாயிருப்பாரென்றார்.

௪௬ அதற்குமாறுத்தரமாக ஒருவனும் ...வார்த்தையையுஞ்சொல்லத் திராணியி...த்ததில்லை, அந்நாள்முதற்கொண்டு ஒருவரும் அவரிடத்தில் வினாக்களைக் கேட்கத் ...ணிந்ததுமில்லை.

௨௩. அதிகாரம்.

[(௧) பரிசேயரைக்குறித்துச் சனங்களுக்குப் புத்திசொன்னது. (௰௩) பரிசேயருக்கு எட்டுவகை வேதனைகளை அறிவித்தது. (௩௭) எருசலேம் நகரம் அழிக்கப்படுமென்று முன்னறிவித்தது.]

அப்பொழுது இயேசுவானவர் சனங்களுக்கும் தம்முடைய சீஷருக்குஞ்சொன்னதாவது,

௨ வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்திலிருக்கிறவர்கள்.

௩ ஆகையால் நீங்கள் கைக்கொள்ளும்படிக்கு அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறவையெல்லாவற்றையுங் கைக்கொண்டு நடக்கக்கடவீர்கள், அவர்களுடைய கிரியைகளின்படியே செய்யாமலிருங்கள், என்னத்தினாலென்னில் அவர்கள் சொல்லியுஞ் செய்யாமலிருக்கிறார்கள்.

௪ அல்லாமலும் அவர்கள் பாரமாயும் சுமப்பதற்கரிதாயுமிருக்கிற சுமைகளைக் கட்டி மனிதருடைய தோள்களின்மேல் வைக்கிறார்கள், தாங்களோவெனில் அவைகளை ஒருவிரலினாலும் அசைக்க மனமில்லாமலிருக்கிறார்கள்.

௫ தங்கள் கிரியைகளையாவையும் அவர்கள் மனிதர் காணப்படும்படிக்குச் செய்கிறார்கள், கற்பனைகள் எழுதியிருக்கிற நாடாக்களை அகலமாக்கித் தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை விஸ்தாரமாய்ப்பண்ணி,

௬ விருந்துகளில் முதல் இடத்திலிருக்கவும், செப ஆலயங்களில் முதல் ஆசனங்களிலிருக்கவும்,

௭ சந்தைகளில் (மற்றவர்களால்) வாழ்த்துதல் அடையவும் இரபீ இரபீ யென்றழைக்கப்படவும் விரும்புகிறார்கள்.

௮ நீங்களோ இரபீயென்றழைக்கப்படக்கூடாது, என்னத்தினாலென்றால் கிறிஸ்து என்பவரொருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார். நீங்கள் எல்லாருஞ் சகோதரராயிருக்கிறீர்கள்.

௯ மேலும் பரமண்டலத்திலிருக்கிறவரொருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார், ஆகையால் நீங்கள் பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதாவென்றழைக்கக்கூடாது.

௰ அல்லாமலுங் கிறிஸ்து என்பவரொருவரே உங்கள் குருவாயிருக்கிறார், ஆகையால் நீங்கள் உங்களைக் குருக்களென்று அழைக்கப்படக்கூடாது.

௰௧ தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

௰௨ ஆதலால் உங்களிற்பெரியவன் உங்கள் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

௰௩ வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்கு வேதனைவரும், என்னத்தினாலென்னில், மனிதர்முன்பாக நீங்கள் பரலோகராச்சியத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள், நீங்களே அதிற்பிரவேசிக்கிறதில்லை, பிரவேசிக்க மனதாயிருக்கிறவர்களைப் பிரவேசியாதபடிக்குஞ் செய்கிறீர்கள்.

௰௪ வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்கு வேதனைவரும், என்னத்தினாலென்றால், நீங்கள் விஸ்தாரமாய்ச் செபமந்திரங்களைச் சொல்லுகிறோமென்று சொல்லி கைம்பெண்களுடைய பொருள்களைப் பட்சிக்கிறீர்கள், அதினிமித்தம் அதிக ஆக்கினை உங்களுக்குக் கிடைக்கும்.

௰௫ வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்கு வேதனைவரும், என்னத்தினாலென்னில், ஒருவனை (யூத)மார்க்கத்தானாக்கும்படிக்கு நீங்கள் சமுத்திரத்தையும் பூமியையுங்கடந்து திரிகிறீர்கள், அவன் அப்படிப்பட்டவனானபொழுது நீங்கள் உங்களைப்பார்க்கிலும் அவனை இரட்டிப்பாய் நரகத்துக்குரியவனாக்குகிறீர்கள்.

௰௬ குருடராய் வழிகாட்டுகிறவர்களே ஐயோ உங்களுக்கு வேதனைவரும், ஒருவன் தேவாலயத்தின்மேற் சத்தியம்பண்ணினால் அது செல்லாது, ஒருவன் தேவாலயத்திலுள்ள பொன்மேற் சத்தியம்பண்ணினானேயானால் அவன் அந்தப்படியே செய்யவேண்டுமென்கிறீர்கள்.

௰௭ மதிகேடரே குருடரே எது பெரிது? பொன்னோ பொன்னைப் பரிசுத்தமாக்குகிற தேவாலயமோ?

௰௮ அன்றியும் ஒருவன் பீடத்தின்மேற் சத்தியம்பண்ணினால் அது செல்லாது, ஒருவன் அதிலுள்ள காணிக்கையின்மேற் சத்தியம்பண்ணினானேயானால் அவன் அதின்படியே செய்யவேண்டுமென்கிறீர்கள்.

௰௯ மதிகேடரே குருடரே எது பெரிது? காணிக்கையோ காணிக்கையைப் பரிசுத்தமாக்குகிற பீடமோ?

௨௦ ஆகையாற் பீடத்தின்மேற் சத்தியம் பண்ணுகிறவன் அதின்மேலும் அதிலிருக்கிற எல்லாப் பொருள்களின்மேலுஞ் சத்தியம் பண்ணுகிறான்.

௨௧ தேவாலயத்தின்மேற் சத்தியம்பண்ணுகிறவன் அதின்மேலும் அதில்வாசமாயிருக்கிறவர்மேலுஞ் சத்தியம்பண்ணுகிறான்.

௨௨ அல்லாமலும் வானத்தின்மேற் சத்தியம்பண்ணுகிறவன் பராபரனுடைய பத்திராசனத்தின்மேலும் அதில்வீற்றிருக்கிறவர்மேலுஞ் சத்தியம்பண்ணுகிறான்.

௨௩ வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்குவேதனைவரும், என்னத்தினாலெனில், நீங்கள் துளசியிலும் வெந்தயத்திலுஞ் சீரகத்திலும் பத்திலொருபாகத்தைக்கொடுத்து வேதத்திற்(சொல்லியிருக்கிற) அதிககனமான காரியங்களாகிய நீதியையும் இரக்கத்தையும் உண்மையையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையே நீங்கள் நடப்பித்து அவைகளையும் விட்டுவிடாமலிருக்கவேண்டும்.

௨௪ ஆ, குருடராய் வழிகாட்டுகிறவர்களே, கொசுவில்லாதபடிக்கு (தண்ணீரை) வடிகட்டி ஒட்டகத்தையோ விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்.

௨௫ வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்குவேதனைவரும், என்னத்தினாலெனிற் போசனபானபாத்திரங்களின் வெளிப்புறத்தை நீங்கள் சுத்தஞ்செய்கிறீர்கள், அவைகளுள்ளேயோ கொள்ளையும் அநீதியும் நிறைந்திருக்கின்றது.

௨௬ குருடனான பரிசேயனே, முதலாவது போசனபானபாத்திரங்களின் உள்ளத்தைச் சுத்தம்பண்ணுவாயாக அப்பொழுதவைகளின் வெளிப்புறமுஞ் சுத்தமாயிருக்கும்.

௨௭ வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்குவேதனைவரும், என்னத்தினாலெனில், நீங்கள் சாந்துபூசப்பட்ட கல்லறைகளுக்கொப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாயிருக்கின்றன, உள்ளேயோ மரித்தோருடைய எலும்புகளுஞ் சகலவிதமான அசுத்தமும் நிறைந்திருக்கின்றன.

௨௮ அப்படிப்போல நீங்களும் புறம்பே மனிதருக்கு நீதிமான்களென்று காணப்படுகிறீர்கள், உங்கள் உள்ளத்திலோ வஞ்சகமும் அக்கிரமமும் நிறைந்திருக்கின்றது.

௨௯ வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்குவேதனைவரும், என்னத்தினாலெனில், நீங்கள் தீர்க்கதரிசிகளுடைய சமாதிகளைக்கட்டி நீதிமான்களின் கல்லறைகளைச் சிங்காரித்து,

௩௦ எங்கள் பிதாக்களுடைய நாட்களிலிருந்தோமானால் அவர்களோடே கூட நாங்கள் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தைச் சிந்தமாட்டோமென்கிறீர்கள்.

௩௧ ஆகையால் நீங்கள் தீர்க்கதரி
கொலைசெய்தவர்களின் புத்திரரென்று
களைக்குறித்து நீங்களே சாட்சி
கிறீர்கள்.

௩௨ அப்படியிருக்க, நீங்கள் உங்
பிதாக்களின் அக்கிரம அளவை நிர
கள்.

௩௩ சர்ப்பங்களே, விரியன்பாம்புக்
(குட்டிகளே.) நீங்கள் நரகாக்கினைக்கு
படித் தப்பிப்போவீர்கள்?

௩௪ ஆதலாற் சேனுங்கள், நான் தீர்க்
சிகளையும் ஞானிகளையும் வேதபாரகர்
உங்களிடத்திற்கு அனுப்புகிறேன், அவ
ரிற் சிலரை நீங்கள் கொலைசெய்து
ம் அறைந்து சிலரை உங்கள் ஜெபா
ரிலே அடித்து ஊருக்கூர் துன்
படுத்துவீர்கள்.

௩௫ நீதிமானாகிய ஆபேலின் இர
முதல் நீங்கள் தேவாலயத்துக்கும் ப
க்கும் நடுவே கொலைசெய்த பரகி
குமாரனான சகரியாவின் இரத்தம்
ம் பூமியிற் சிந்தப்பட்ட நீதிமான்க
மெல்லாம் உங்கள்மேல் வரும்படிக்கு
படிச் செய்வீர்கள்.)

௩௬ அவையெல்லாம் இந்தச் சந்த
ன் மேலே வருமென்று மெய்யாகவே
குச் சொல்லுகிறேன்.

௩௭ ஆ, எருசலேமே எருசலேமே தீர்க்
சலேமே பட்டணத்தாரே, உன்னிடத்
அனுப்பப்பட்டவர்கள்மேற் கல்லெறி
தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்கிறவர்
கோழி தன் குஞ்சுகளைச் சிறகுகளின்
கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வித
அநேகந்தரம் உங்களைக் கூட்டிச்சேர்
க்கொள்ள விரும்பினேன், நீங்கள்
டோமென்றீர்கள்.

௩௮ (ஆகையால்) உங்கள் வாசஸ்
பாழாக்கப்படும்.

௩௯ அல்லாமலும் பராபரனுடைய
மத்தினாலே வருகிறவர் தோத்திரிக்கப்ப
கடவரென்று நீங்கள் சொல்லுமட்டும்
முதல் என்னைக் காணாதிருப்பீர்களென்று
களுக்குச் சொல்லுகிறேனென்று திரு
பகர்ந்தார்.

௨௪. அதிகாரம்.

[(௧) தேவாலயம் அழிக்கப்படுமென்று
அறிவித்தது. (௩) அதற்கு முன்னே
த்திரவங்கள். (௨௯) அவர் வருகை
அடையாளங்கள். (௩௬) அவர் வரு
லம் நமக்குத் தெரியாதபடியால் எப்
ழுதும் எச்சரிக்கையாயிருக்கவே
மென்பது.]

இயேசுவானவர் தேவாலயத்தைவிட்
புறப்பட்டு வருகிறபொழுது அவருடை

ஷீர்கள் சேர்ந்து தேவாலயக் கட்டிடங்களை அவருக்குக் காண்பித்தார்கள்.

௨ இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது, இவைகளெல்லாவற்றையும் பார்க்கிறீர்களல்லவோ, (இவைகளில்) ஒரு கல் மற்றொரு கல்லின்மேல் இருக்கவைக்கப்படுகிறதில்லை எல்லாம் இடிக்கப்படுமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௩ பின்பு அவர் ஒலிவமலையின்மேலுட்கார்ந்திருக்கையில் சீஷர் மாத்திரம் அவரிடத்தில் வந்து இவை எப்பொழுது சம்பவிக்கும், மேலும் நீர் வருவதற்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளமென்ன? இவைகளை எங்களுக்குச் சொல்லவேண்டுமென்றார்கள்.

௪ அவர்களுக்குமாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னதாவது, அநேகர் வந்து என் நாமத்தை யெடுத்துத் தங்களைக் கிறிஸ்து என்று சொல்லி அநேகம்பேரை வஞ்சிப்பார்கள்.

௫ ஆதலால் ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்குப் பாருங்கள்.

௬ அல்லாமலும் யுத்தங்களையும் யுத்தங்களின் நடக்கைகளையுங் கேள்விப்படுவீர்கள், அப்பொழுது நீங்கள் கலங்காதபடிக்குப் பாருங்கள், அவையெல்லாஞ் சம்பவிக்கவேண்டும், ஆனாலும் முடிவு உடனே வராது.

௭ ஆகையால் ஒருசனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்திற்கும் ஒரு இராச்சியம் மற்றொரு இராச்சியத்திற்கும் விரோதமாய் எழும்பும், பஞ்சங்களும் பெருவாரிக்காய்ச்சல்களும் பூமியதிர்ச்சல்களும் அங்கங்கே உண்டாகும்.

௮ ஆனாலும் அவையெல்லாம் உபாதிகளுக்கு ஆரம்பமாயிருக்கும்.

௯ அப்பொழுது உபத்திரவப்படும்படிக்கு உங்களை யொப்புக்கொடுத்து உங்களைக் கொலைசெய்வார்கள், என்னுடைய நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லா உலகத்தாராலும் பகைக்கப்படுவீர்கள்.

௰ அக்காலத்திலே அநேகர் இலச்சையடைந்து ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்து ஒருவரையொருவர் பகைப்பார்கள்.

௰௧ அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி அநேகம்பேரை வஞ்சிப்பார்கள்.

௰௨ மேலும் அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்புமாறிப்போம்.

௰௩ ஆனாலும் முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

௰௪ அல்லாமலும் உலகத்தாரெல்லாருக்குஞ் சாட்சியாக இராச்சியத்தின் சுவிசேஷம் பூமியெங்கும் பிரசங்கிக்கப்படும், அப்பொழுது முடிவுவரும்.

௰௫ அப்படியிருக்க, இதை வாசிக்கிறவன் சிந்தித்துக்கொள்ளக்கடவன், பாழாக்குகிற அருவருப்பைக்குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொன்னாரே, அதை நீங்கள் பரிசுத்தஸ்தலத்தில் நிற்கக்காணும்பொழுது,

௰௬ யூதேயாவிலுள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

௰௭ வீட்டின்மேலிருப்பவன் தன் வீட்டிலுள்ளவைகளை யெடுத்துக்கொண்டுபோகும்படிக்கு இறங்காமல் (போகக்) கடவன்.

௰௮ அல்லாமலும் வயலிலிருப்பவன் தன் வஸ்திரங்களை யெடுத்துக்கொண்டுபோகும்படிக்குப் பின்னிட்டுத் திரும்பாமல் (போகக்) கடவன்.

௰௯ ஐயோ அந்த நாட்களில் கர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் உபத்திரவமிருக்கும்.

௨௰ மேலும் உலகமுண்டானதுமுதற்கொண்டு இதுவரைக்கும் சம்பவியாததுமாய் இனிமேலுஞ் சம்பவியாததுமாயிருக்கிற மிகுந்த உபத்திரவம் அக்காலத்திலே யுண்டாயிருக்கும்.

௨௧ ஆதலால் நீங்கள் ஓடிப்போவது மாரிக்காலத்திலாகிலும் ஓய்வுநாளிலாகிலும் சம்பவியாதபடிக்கு வேண்டுதல் பண்ணக்கடவீர்கள்.

௨௨ அந்த நாட்கள் குறைக்கப்படாதிருந்தால் ஒருவனுந் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்.

௨௩ அக்காலத்திலே கள்ளக்கிறிஸ்துகளும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி தெரிந்துகொள்ளப்பட்டவர்களை (வஞ்சிக்கக்) கூடுமானால் அவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக மிகுந்த அதிசயங்களையும் அற்புதங்களையுஞ் செய்வார்கள்.

௨௪ ஆதலால் அக்காலத்திலே ஒருவன் உங்களை நோக்கி, இதோ கிறிஸ்து இங்கேயிருக்கிறார், அதோ அங்கேயிருக்கிறாரென்று சொன்னால் நீங்கள் அவனை நம்பாமலிருப்பீர்களாக.

௨௫ அதை நான் உங்களுக்கு இப்பொழுது முன்னறிவித்தேன்.

௨௬ ஆகையால் அதோ வனாந்தரத்திலிருக்கிறாரென்று சொன்னால் வெளியே புறப்படாதிருங்கள்.

௨௭ இதோ வீட்டின் அறைகளுக்குள்ளிருக்கிறாரென்றால் அதை நம்பாதிருங்கள், மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்றிசைவரைக்கும் (சீக்கிரமாய்ப்) பிரகாசிக்கிறவிதமாய் மனிதனுடைய குமாரனுடைய வருகையும்.

௨௮ அல்லாமலும் பிணமெங்கேயோ அங்கே கழுகுகள் கூடிவரும்.

௨௯ அந்த நாட்களிலுள்ள உபத்திரவத்திற்குப்பின்பு உடனே சூரியன் இருளடையும், சந்திரன் பிரகாசங் கொடாமலிருக்

ளும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்திலுள்ள (மற்ற) வல்லமைகளும் அசைக்கப்படும்.

௩௰ அப்பொழுது மனிதகுமாரனுடைய அடையாளம் வானத்திலே காணப்படும். அல்லாமலும் மனிதனுடைய குமாரன் வானத்தின் மேகங்கள்மேலே மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் வருகிறதைப் பூமியிலுள்ள கோத்திரத்தார் எல்லாருங் கண்டு புலம்புவார்கள்.

௩௧ அல்லாமலும் அவர் தூதரை வலுவாய்த் தொனிக்கும் எக்காளத்துடனே அனுப்புவார், அவர்கள் வானத்தின் எல்லைகளுக்குள்ளே நாலு திசைகளிலுமிருந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்வார்கள்.

௩௨ அத்திமரத்திலே ஒரு உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள், அதின் கிளை இளசாகி இலைகளைக் கொடுக்கிறபொழுது வசந்தகாலஞ் சமீபமாயிருக்கிறதென்று அறிந்திருக்கிறீர்கள்.

௩௩ அப்படிப்போல நான் சொன்னவைகளெல்லாஞ் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது சமீபமாகவே யிருக்கிறதென்று அறியக்கடவீர்கள்.

௩௪ இந்தச் சந்ததி யொழிந்துபோகுமுன்னே அவையெல்லாஞ் சம்பவிக்குமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௫ வானமும் பூமியும் ஒழிந்துபோம் என்வசனங்களோ ஒழியாமலிருக்கும்.

௩௬ அவை சம்பவிக்கும் நாளையும் நாழிகையையும் என் பிதா ஒருவரேயல்லாமல் மற்றொருவனும் அறியமாட்டான், பரமண்டலங்களிலுள்ள தேவதூதர்களுமறியார்கள்.

௩௭ நோவாவின் காலத்திலே நடந்ததுபோல மனிதனுடைய குமாரன் வருங்காலத்திலேயும் நடக்கும்.

௩௮ எப்படியென்றால் சலப்பிரளயத்திற்குமுன்னின நாட்களிலே நோவா பேழைக்குட் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் போசனபானம்பண்ணி,

௩௯ பெண்கொண்டு பெண்கொடுத்து (தங்களுக்குச் சேதம் வருமென்று) நினையாமலிருந்தார்கள், அப்பொழுது சலப்பிரளயம் வந்து அனைவரையுங்கொண்டுபோயிற்று, அதுபோல மனிதனுடைய குமாரன் வரும்பொழுதும் நடக்கும்.

௪௰ அக்காலத்திலே இரண்டு புருஷர் வயலிலிருப்பார்கள், அவர்களில் ஒருவன் பிடித்துக்கொள்ளப்படுவான் ஒருவன் தப்பிப்போவான்.

௪௧ இரண்டு பெண்கள் திரிகை திரித்துக்கொண்டிருப்பார்கள், அவர்களில் ஒருத்தி பிடித்துக்கொள்ளப்படுவாள் ஒருத்தி தப்பிப்போவாள்.

௪௨ அப்படியிருக்க, உங்கள் கர்த்தர் வரும் நாழிகையை நீங்கள் அறியாததினாலே விழித்திருக்கக்கடவீர்கள்.

௪௩ திருடன் வருஞ்சாமத்தை வீட்டெஜமான் அறிந்தானானால் அவன் விழித்துக்கொண்டு தன் வீட்டைக் கன்னமிடப்படிக்குச் செய்திருப்பானென அறிந்திருக்கிறீர்கள்.

௪௪ அப்படியிருக்க, நீங்கள் நினையாத நாழிகையிலே மனிதனுடைய குமாரன் வருவதால் நீங்களும் எத்தனமாயிருக்கக்கடவீர்கள்.

௪௫ எஜமான் தன் வேலைக்காரருக்குத் திட்டமாய்ப் போசனங் கொடுக்கும்படிக்கு அவர்கள்மேல் விசாரணைக்காரனாக்கின உண்மையும் புத்தியுமுள்ள ஊழியக்காரன் யாவன்?

௪௬ எஜமான் வந்து எந்த ஊழியக்காரனை அப்படிச் செய்யக்காண்பானோ அவனே பாக்கியவானாயிருப்பான்.

௪௭ தன் ஆஸ்திகளெல்லாவற்றின்மேலும் அவனை வைப்பானென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௪௮ அந்த ஊழியக்காரனோ பொல்லாதவனாய் என் எஜமான் வரத் தாமதமாயிருப்பானென்று எண்ணி,

௪௯ தன்னோடேகூட ஊழியஞ்செய்கிறவர்களை அடிக்கத்தொடங்கி வெறியர்களோடே போசித்துக் குடிக்கிறவனானால்,

௫௰ அந்த ஊழியக்காரன் நினையாதிருக்கிற நாளிலேயும் அவனறியாத நேரத்திலேயும் அவனுடைய எஜமான் வந்து,

௫௧ அவனைக் கடினமாய் அடித்து அழுகையும் பற்கடிப்புமுள்ள இடத்திலே மாயக்காரரோடே அவனுடைய பங்கைச் சேர்த்துவான்.

உ௫. அதிகாரம்.

[(௧) பத்துக் கன்னிகைகளின் உவமையைக் காட்டியது. (௰௪) தாலந்துகளின் உவமையைக் காட்டியது. (௩௧) கடைசி நியாயத்தீர்ப்பைக் குறித்துச் சொல்லியது.]

அப்பொழுது பரலோக இராச்சியத்தார் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக்கன்னிகைகளுக்கு ஒப்பாயிருப்பார்கள்.

௨ அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களாயும் ஐந்துபேர் புத்தியீனர்களாயுமிருந்தார்கள்.

௩ புத்தியீனமுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்தபொழுது எண்ணெயைக் கூடக்கொண்டுபோகவில்லை.

௪ புத்தியுள்ளவர்களோ திவட்டிகளோடேகூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையுங் கொண்டுபோனார்கள்.

௫ மணவாளன் தாமதித்தபொழுது எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கினார்கள்.

௬ அப்படியிருக்குங் காலத்திலே பாதிராத்திரியிலே, இதோ மணவாளன் வருகிறார் அவருக்கெதிர்கொண்டுபோகப் புறப்படுங்களென்று கூக்குரலுண்டாயிற்று.

௭ உடனே அந்தக் கன்னிகைகளெல்லாரும் எழுந்திருந்து தங்கள் திவட்டிகளை விளக்கினார்கள்.

௮ (அப்பொழுது) புத்தியீனமுள்ளவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி, எங்கள் திவட்டிகள் அணைந்துபோகின்றன ஆகையால் உங்கள் எண்ணெயிற் கொஞ்சம் எங்களுக்குத் தாருங்களென்றார்கள்.

௯ அதற்குப் புத்தியுள்ளவர்கள் சொன்னது, நாங்கள் கொடுத்தால் எங்களுக்கும் உங்களுக்குங் குறைச்சலுண்டாகும், அப்படியாகாதபடிக்கு நீங்கள் கடைக்காரரிடத்திற்போய் உங்களுக்காக (எண்ணெயைக்) கொள்ளுங்களென்றார்கள்.

௰ அந்தப்படி அவர்கள் கொள்ளப்போனபொழுது மணவாளன் வந்தார், ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாணத்திற்குப்போய (வீட்டிற்) பிரவேசித்தார்கள்.

௰௧ உடனே கதவு பூட்டப்பட்டது, பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து, ஆண்டவரே ஆண்டவரே! எங்களுக்குத் திறக்கவேண்டுமென்றார்கள்.

௰௨ அதற்கு அவர் சொன்னது, உங்களை அறியமாட்டேனென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

௰௩ அப்படியிருக்க, மனிதனுடைய குமாரன் வரும் நாளையாகிலும் நாழிகையையாகிலும் நீங்கள் அறியாமலிருக்கிறபடியினாலே விழித்துக்கொண்டிருக்கக் கடவீர்கள்.

௰௪ அன்றியும் (பரலோகராச்சியம்) பரதேசத்திற்குப் பிரயாணமாய்ப்போகிற ஒரு மனிதன் தன் ஊழியக்காரரை அழைத்துத் தன் ஆஸ்திகளை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்ததுபோலிருக்கும்.

௰௫ அவனுடைய பிராணிகத்துக்குத் தக்கதா ஒருவனுக்கு ஐந்து தாலந்து * நிறையானும் ஒருவனுக்கு இரண்டு தாலந்து நிறையானும் பின்னொருவனுக்கு ஒரு தாலந்து (நிறையானது) கொடுத்துப் பின்பு உடனே புறத்தேசத்திற்குப் போனான்.

௰௬ ஐந்து தாலந்தைப் பெற்றவன் போய் அவைகளால் வியாபாரம்பண்ணி வேறைந்து தாலந்தைச் சம்பாதித்தான்.

௰௭ அப்படியே இரண்டு தாலந்தைப் பெற்றவனும் வேறிரண்டு தாலந்தைச் சம்பாதித்தான்.

௰௮ ஒரு தாலந்தைப் பெற்றவனோ போய் நிலத்திலே ஒரு குழியைத் தோண்டித் தன் எசமானுடைய திரவியத்தை அதிலே புதைத்துவைத்தான்.

௰௯ அநேககாலமானபின்பு அந்த ஊழியக்காரருடைய எசமான் திரும்பிவந்து அவர்களோடே கணக்குப்பார்த்தான்.

௨௰ அப்பொழுது ஐந்து தாலந்தைப் பெற்றவன் சேர்ந்துவேறு ஐந்து தாலந்தைக் கொண்டுவந்து, ஆண்டவனே! ஐந்து தாலந்தையெனக்கொப்புவித்தீரே, இதோ அவைகளால் வேறைந்து தாலந்தைச் சம்பாதித்தேனென்றான்.

௨௧ அப்பொழுது எசமானானவன் அவனை நோக்கி, நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எசமானுடைய சந்தோஷத்திற்குட் பிரவேசித்துவாவென்றான்.

௨௨ இரண்டு தாலந்தைப் பெற்றவனுஞ் சேர்ந்து ஆண்டவனே, நீர் இரண்டு தாலந்தையெனக்கொப்புவித்தீரே, இதோ அவைகளால் வேறிரண்டு தாலந்தைச் சம்பாதித்தேனென்றான்.

௨௩ அவனுடனே எசமான் சொன்னது, நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னையதிகாரியாக வைப்பேன், உன் எசமானுடைய சந்தோஷத்திற்குட் பிரவேசித்து வாவென்றான்.

௨௪ பின்பு ஒரு தாலந்தைப் பெற்றவனும் வந்து, ஆண்டவரே, நீர் விதையாத இடத்திலே அறுக்கிறவருமாய்த் தெளியாத இடத்திற் சேர்க்கிறவருமாயிருக்கிற கடினமான மனிதனாயிருக்கிறீரென்றறிந்தேன்.

௨௫ ஆகையால் நான் பயந்துபோய் உமது தாலந்தை நிலத்திற் புதைத்துவைத்தேன், இதோ உம்முடையதைத் திரும்ப எடுத்துக்கொள்ளுமென்றான்.

௨௬ அவனுக்கு மாறுத்தரமாக எசமான் சொன்னதாவது, பொல்லாதவனுஞ் சோம்பனுமான ஊழியக்காரனே, நான் விதையாத இடத்தில் அறுக்கிறவனென்றுந் தெளியாத இடத்திற் சேர்க்கிறவனென்றும் நீ அறிந்தாயா?

* யூதர்களுக்குள்ளே வழங்கின தாலந்து (நிறையான) ஒரு நிறைக்குப் பதிமூன்றாயிரத்து நாற்றெண்பது வராகனெடையாயிருக்கும்.

௨௭ அப்படியானால் நீ யென்திரவியத்தை வியாபாரிகளிடத்தில் வைக்கவேண்டிய தாயிருந்தது, அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடேகூட எடுத்துக்கொள்வேனேயென்றுசொல்லி,

௨௮ பின்பு உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், சம்பூரணமும் அவனுக்குண்டாகும், உள்ளவனல்லாதவனிடத்தில் இருக்கிறதையும் எடுத்துக்கொள்ளப்படும்.

௨௯ ஆகையால் இவனுடைய கையிலிருக்கிறதாலந்தை நீங்கள் வாங்கிப் பத்துத் தாலந்துடையவனுக்குக் கொடுங்கள்.

௩௰ அல்லாமலும் அப்பிரயோசனமான இந்த ஊழியக்காரனை அழுகையும் பற்கடிப்புமுள்ளமிகவுந் தூரமான இருளிலே தள்ளிப்போடுங்களென்றான்.

௩௧ அன்றியும் மனிதனுடைய குமாரன் தமது மகிமையோடே தம்முடைய சகல பரிசுத்த தூதருடனேயுங் கூட வரும்பொழுது அவர் தமது மகிமையுள்ள பத்திராசனத்தின்மேல் வீற்றிருப்பார்.

௩௨ அப்பொழுது உலகத்தாரெல்லாரும் அவருக்கு முன்பாகக் கூட்டப்படுவார்கள், மேய்ப்பனானவன் ஆடுகளையுங் கடாய்களையும் பிரிக்கிறதுபோல அவரவர்களை வெவ்வேறாகப் பிரித்து,

௩௩ ஆடுகளாகக் கொப்பானவர்களைத் தம் துவலதுபக்கத்திலேயுங் கடாய்களுக்கொப்பானவர்களைத் தமது இடதுபக்கத்திலேயும் நிறுத்துவார்.

௩௪ அப்பொழுது இராசாவானவர் தம்முடைய வலதுபக்கத்தில் நிற்பவர்களை நோக்கி, நான் பசியாயிருந்தபொழுது நீங்கள் எனக்குச் சாப்பாடுகொடுத்தீர்கள், நான் தாகமாயிருந்தபொழுது என் தாகத்தைத் தீர்த்தீர்கள், நான் அந்நியனாயிருந்தபொழுது என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள்.

௩௫ எனக்கு வஸ்திரமில்லாதபொழுது எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், நான் வியாதியாயிருந்தபொழுது எனக்கு உதவிசெய்ய வந்தீர்கள், நான் காவலிலிருந்தபொழுது என்னைப் பார்க்கவந்தீர்கள்.

௩௬ ஆகையால் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகமுண்டானது முதல் உங்களுக்காக ஏற்தனம்பண்ணப்பட்டிருக்கிற இராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவாருங்களென்பார்.

௩௭ அப்பொழுது நீதிமான்கள் அவருக்கு மாறுத்தரமாகச் சொல்வது, ஆண்டவரே, நாங்கள் உம்மைப் பசியுந் தாகமுமுள்ளவரொன்று எப்பொழுது கண்டு உமக்குப் போசனபானங்கொடுத்தோம்,

௩௮ நாங்கள் உம்மை அந்நியனென்றும் வஸ்திரமில்லாதவரொன்றும் எப்பொழுது கண்டு உம்மைச்சேர்த்துக்கொண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்.

௩௯ நாங்கள் உம்மை வியாதியுள்ளவரொன்றுங் காவலிலிருக்கிறவரொன்றும் எப்பொழுது கண்டு உம்மிடத்தில் வந்தோமென்பார்கள்.

௪௰ அதற்கு இராசா சொல்வது, மிகச் சிறியரான என் சகோதரராகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்தீர்களோ அதையெனக்கே செய்தீர்களென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேனென்பார்.

௪௧ பின்பு அவர் தமது இடதுபக்கத்தில் நிற்பவர்களை நோக்கி, நான் பசியாயிருந்தபொழுது நீங்கள் எனக்குச் சாப்பாடு கொடுக்கவில்லை, நான் தாகமாயிருந்தபொழுது நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை.

௪௨ நான் அந்நியனாயிருந்தபொழுது நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, எனக்கு வஸ்திரமில்லாதபொழுது நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை, நான் வியாதியுள்ளவனுமாயக் காவலிலகப்பட்டவனுமாயிருந்தபொழுது நீங்கள் எனக்கு உதவிசெய்யவரவில்லை.

௪௩ ஆகையால் சபிக்கப்பட்டவர்களே, நீங்கள் என்னைவிட்டுச் சாத்தானுக்கும் அவனுடைய தூதர்களுக்காகவும் ஏற்தனம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினிக்குப் போங்களென்பார்.

௪௪ அப்பொழுது அவர்களும் அவருக்கு மாறுத்தரமாகச் சொல்வது, ஆண்டவரே, நாங்கள் உம்மைப் பசிதாகமுள்ளவரொன்றும் அந்நியனென்றும் வஸ்திரமில்லாதவரொன்றும் வியாதியுள்ளவரொன்றுங் காவலிலிருக்கிறவரொன்றும் நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு ஊழியஞ்செய்யாதிருந்தோமென்பார்கள்.

௪௫ அதற்கு அவர் சொல்வது, மிகச் சிறியரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்யாதிருந்தீர்களோ அதை எனக்குஞ்செய்யாதிருந்தீர்களென்பார்.

௪௬ அப்படியே அவர்கள் நித்திய வேதனையையடையவும் நீதிமான்கள் நித்திய சீவனையடையவும் போவார்களென்றார்.

௨௬. அதிகாரம்.

[(௧) பிரதானஆசாரியர் முதலானவர்கள் இயேசுவைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனைபண்ணினது. (௭) ஒரு ஸ்திரீ அவருடைய சிரசின்மேல் அபிஷேகம்பண்ணினது. (௰௪) யூதா அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பணத்தைவாங்கச் சம்மதித்தது. (௰௭) கிறிஸ்து பஸ்காவைச் சாப்பிட்டது. (௨௬) இராப்போசனத்தை நியமித்தது. (௩௬) அவர் கெத்செமனே தோட்டத்திலே துக்கப்பட்டது... (௪௭) யூதாவினாலே அவர் காட்டிக்கொடுக்கப்பட்டது.

கொடுக்கப்பட்டது. (௫௭) அவர் காய்பாவினிடத்திற்குக்கொண்டுபோகப்பட்டது. (௬௯) பேதுருவினாலே மறுதலிக்கப்பட்டது.]

இந்தவசனங்களையெல்லாம் இயேசுவானவர்சொல்லிமுடித்தபின்பு, அவர் தம்முடையசீஷருடனேசொன்னதாவது,

௨ இரண்டுநாளைக்குப்பின்பு பஸ்காப்பண்டிகைவருமென்றறிந்திருக்கிறீர்கள். அப்பொழுது மனிதனுடையகுமாரன் சிலுவையமரத்திலேயறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுவாரென்றார்.

௩ அக்காலத்திலே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் சனங்களிலுள்ள மூப்பரும் காய்பாவென்னப்பட்டபிரதான ஆசாரியனுடைய அரண்மனையிற்கூடிவந்து,

௪ தந்திரமாய் இயேசுவானவரைப்பிடித்துக் கொலைசெய்யும்படிக்கு யோசனைபண்ணியிருக்கிறபொழுது,

௫ பண்டிகைநாட்களில் அப்படிச்செய்யக்கூடாது. செய்தாற் சனங்களுக்குள்ளே கலகமுண்டாகுமென்று (நிறுத்தினார்கள்.)

௬ அன்றியும் இயேசுவானவர் பெத்தானியூரிற் குஷ்டரோகியாயிருந்த சீமோனுடையவீட்டிலிருக்கையில்,

௭ ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற தயிலமுள்ளபரணியையெடுத்துக்கொண்டுவந்து அவர் பந்தியிருக்கிறபொழுது அதை அவருடையசிரசின்மேலூற்றினாள்.

௮ அவருடைய சீஷர் அதைக்கண்டு விசனமடைந்து இந்தக்கேடு என்னத்திற்கு,

௯ இந்தத்தயிலத்தை உயர்ந்தகிரயத்திற்குவிற்றுத் தரித்திரருக்குக்கொடுத்தால (லாபமிருக்குமே) என்றார்கள்.

௰ இயேசுவானவர் அதையறிந்து அவர்களுக்குச்சொன்னது, நீங்கள் இந்த ஸ்திரீயை ஏன்வருத்தப்படுத்துகிறீர்கள். என்னிடத்தில நற்கிரியையைச்செய்தாளே.

௰௧ தரித்திரர் எக்காலத்திலும் உங்களுடனேயிருக்கிறார்கள். நானோ எக்காலத்திலேயும் உங்களோடேயிருப்பதில்லை,

௰௨ இவள் இந்தத்தயிலத்தை யென்சரீரத்தின்மேலூற்றினது என்னை அடக்கம்பண்ணுவதற்கு ஏத்தனமானசெய்கையாயிருக்கின்றது.

௰௩ உலகத்தில எவ்விடத்திலே யிந்தச்சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுமோ அவ்விடத்திலே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததுஞ்சொல்லப்படுமென்று மெய்யாகவேஉங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௰௪ அப்பொழுது பன்னிரண்டு சீஷரில ஒருவனாகிய யூதா இஸ்காரியோத்தென்னப்பட்டவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப்போய்,

௰௫ நான் அவரை உங்களுக்குக்காட்டிக்கொடுப்பேன். நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்களென்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசை ஏற்படுத்திக் (கொடுத்தார்கள்.)*

௰௬ அதுமுதல் அவன் அவரைக்காட்டிக்கொடுக்கும்படிக்குத்தகுதியான காலத்தைத்தேடிக்கொண்டான்.

௰௭ பின்பு அவர்கள் புளியாத அப்பஞ்சாப்பிடுகிற நாட்களில்முதலநாளிலே சீஷர்களியேசுவினிடத்திற்கு வந்து நீர் பஸ்காப்பண்டிகையின் இராப்போசனம்பண்ணும்படிக்குநாங்கள் எங்கே யெத்தனம்பண்ணச்சித்தமாயிருக்கிறீரென்று கேட்டார்கள்.

௰௮ அதற்கு அவர்சொன்னது, நீங்கள் பட்டினத்திலே யொருவனிடத்திற்போய் என காலஞ் சமீபமாயிருக்கின்றது. உன்னிடத்திலே என் சீஷரோடே கூடப்பஸ்காப்பண்டிகை கொண்டாடுவேனென்று போதகர் சொல்லுகிறாரென்று அவனுடனேசொல்லுங்களென்றார்.

௰௯ இயேசுவானவர் கட்டளையிட்டபடியே சீஷர்களபோய்ப் பஸ்காப்போசனத்தையெத்தனம்பண்ணினார்கள்.

௨௰ அஸ்தமனமானபொழுதுஅவர்பன்னிருவரோடேகூடப்பந்தியிருந்தார்.

௨௧ அவர்களபோசனம்பண்ணுகையில அவர் உங்களிலொருவன என்னைக்காட்டிக்கொடுப்பானென்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.

௨௨ அப்பொழுது அவர்கள மிகவுந்துக்கப்பட்டு அவரைநோக்கி, ஆண்டவரே, நானோ அப்படிச்செய்வேனென்றுஒவ்வொருவர்சொல்லத்தொடங்கினார்கள்.

௨௩ அதற்கு அவர்சொன்னது, என்னோடேகூடத்தாலத்திலே கைதோய்க்கிறவனே என்னைக்காட்டிக்கொடுப்பான.

௨௪ மனிதனுடையகுமாரன் தன்னைக்குறித்து எழுதியிருக்கிறவிதமாய்ப் போகிறான. அப்படியிருந்தும் ஐயோ, மனிதனுடையகுமாரன் எந்தமனிதனாலேகாட்டிக்கொடுக்கப்படுவாரோ அம்மனிதனுக்குவேதனைவரும். அம்மனிதன பிறவாதிருந்தானானால் அவனுக்குநலமாயிருக்குமென்றார்.

* யூதர்களுடைய வெள்ளிக்காசு ஒன்றிற்கு ஏறக்குறைய ஒரு ரூபாய ஒப்பாயிருக்கும்.

௨௫ (பின்னுலே) அவரைக் காட்டிக் கொடுத்தயூதாவும அவரை நோக்கி, இரபீ, நானே அப்படிச் செய்வேனென்றுன. நீ சொன்னபடியே யிருக்குமென்றுர்.

௨௬ அன்றியும அவர்கள போசனமபண்ணுகையில் இயேசுவானவர் அப்பததை யெடுததுககொண்டு ஆசீர்வதித்து அதைப் பிட்டுச் சீஷர்களுக்குக்கொடுதது இது என்னுடைய சரீரமாயிருககின்றது. நீங்கள எடுததுபபொசியுங்களென்றுர்.

௨௭ பின்பு அவர்பாததிரததையும எடுததுககொண்டு தோததிரமபண்ணி அதை அவர்களுக்குக்கொடுதது நீங்களெல்லாரும இதிற் பானமபண்ணுங்கள.

௨௮ இது அநேகருககுபபாவமன்னிப்பு உண்டாகுமபடிககுப்புதிய உடனபடிக்கைக்கேறறதாய்ச்சிநதபபடுகிற என இரததமாயிருககின்றது.

௨௯ இதுமுதற்கொண்டு நான உங்களோடேகூட என்பிதாவின இராசசியததிலே நவமாயப் பானமபண்ணுமநாள்வரைக்குமதிராட்சரசததை நான பானமபண்ணுவதில்லையென்று உங்களுக்குச்சொலலுகிறேனென்றுர்.

௩௰ அவர்கள தோததிரப்பாட்டைப் பாடினபின்பு ஒலிவமலைக்குப்புறப்பட்டுப் போனுர்கள.

௩௧ அப்பொழுது இயேசுவானவர் அவர்களைநோக்கி, நான மேய்ப்பனை உபததிரவப்படுததுமபொழுது ஆடுகளசிதறிப்போமென்று எழுதியிருககின்றது. ஆகையால இநத இராததிரியிலே நீங்களெல்லாரும என்னைக் குறிததுக் கலக்கம் அடைநது போவீர்கள.

௩௨ நானே எழுநதிருநதபின்பு உங்களுக்குமுன்னே கலிலேயாநாட்டுககுபபோவேனென்றுர்.

௩௩ அதற்குபபேதுருசொன்னது, எல்லாருமஉமமைக்குறிததுக்கலக்கம அடைநதுபோனுலும நான ஒருக்காலுங்கலக்கம அடைநதுபோகமாட்டேனென்றுன.

௩௪ அவனுடனேஇயேசுவானவர்சொன்னது, இநத இராததிரியிலே சேவலகூவுகிறதற்குமுன்னமே நீயென்னை மூன்றுதரம மறுதலிப்பாயென்று மெய்யாய் உனக்குச்சொலலுகிறேனென்றுர்.

௩௫ அதற்குபபேதுருசொன்னது, நான உமமோடே மரணம அடையவேண்டியதாயிருநதாலும உமமை மறுதலிக்கமாட்டேனென்றுன. மறறச்சீஷரெல்லாருமஅப்படியேசொன்னுர்கள.

௩௬ அப்பொழுது இயேசுவானவர் அவர்களோடேகூடக்கெதுசேமனேயென்னும இடததற்குவநதுசீஷரைநோக்கி, நான அங்கேபோய்ச்செபமபண்ணுமளவும் நீங்கள இவவிடததிலஉட்கார்ந்திருங்களென்றுசொலலி,

௩௭ பேதுருவையுஞ் செபெதேயுவின் குமாரரிருவரையுங் கூட்டிக்கொண்டுபோய்த் துக்கம அடையவுமமிகவுமவியாகுலப்படவுநதொடங்கி,

௩௮ பின்பு அவர்களைநோக்கி, என் ஆத்துமா மரணபரியநதமமிகுந்த துக்கங்கொண்டிருககின்றது. நீங்களிங்கே தரித்திருந்து என்னோடேகூட விழித்திருங்களென்று சொலலி,

௩௯ சற்றப்புறமபோய்ச்சாஷ்டாங்கமாய் விழுநது என்பிதாவே. இநதப்பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானுல் நீங்கச் செய்யும. இல்லாவிட்டால என்னுடைய சித்தத்தின்படியல்ல, உமமுடைய சித்தத்தின்படியேயாகக் கடவதென்று செபம பண்ணினுர்.

௪௰ பின்பு அவர்சீஷரிடததிலே வந்து அவர்களை நித்திரைபண்ணக்கண்டு பேதுருவை நோக்கி, இப்படி நீங்கள ஒருமணிநேரமாகிலும என்னோடேகூடவிழித்திருக்கத் திராணியில்லையோ.

௪௧ நீங்கள சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து செபமபண்ணுங்கள. ஆவியானது உற்சாகமுள்ளதுதான. சரீரமோ பலவீனமுள்ளதென்றுசொலலி,

௪௨ இரண்டாந்தரமபோய் என்பிதாவே. இநதப் பாத்திரத்திலுள்ளதை நான் பானமபண்ணுவிட்டால இது என்னைவிட்டு நீங்காதானால். நீங்கக்கூடாதிருந்தால் உமமுடையசித்தத்தின்படியேயாகக்கடவதென்றுசெபமபண்ணினுர்.

௪௩ சீஷர்களோ மிகுநத நித்திரைமயக்கமுள்ளவர்களானபடியால அவர் திரும்பி வநதபொழுது அவர்களை மறுபடியும் நித்திரைபண்ணக்கண்டார்.

௪௪ அவர் மறுபடியும அவர்களைவிட்டுப்போய மூன்றுந்தரம அந்த வசனங்களாகிய வார்த்தைகளைத்தானே செபமபண்ணின பின்பு தமதுசீஷரிடததிலவநது,

௪௫ நீங்களஇன்னும நித்திரைபண்ணி இளைப்பாறுவீர்களா. இதோ, மனுஷ குமாரனபாவிகளுடையகைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறநேரஞ்சமீபித்தது.

௪௬ அதோ, என்னைக்காட்டிக்கொடுக்கிறவன சமீபமாயவருகிறுன. எழுந்திருங்கள போவோமென்றுர்.

௪௭ அவர் பேசுகையிற் பன்னிருவரில் ஒருவனாகிய யூதாவந்தான். அவனோடே கூடப்பிரதான ஆசாரியருஞ்சனத்தின் மூப்பருமனுப்பின திரளான சனங்களும் பட்டயங்களையுந் தடிகளையும் பிடித்துவந்தார்கள்.

௪௮ அவர்களுக்கு அந்தத் துரோகியானவன் எவனை நான் முத்தஞ்செய்வேனோ அவன்தானே இயேசு. அவனைப்பிடித்துக் கொள்ளுங்களென்று அடையாளமாகச் சொல்லியிருந்தான்.

௪௯ அந்தப்படி அவன் உடனே இயேசுவினிடத்தில் வந்து இரபீ, நீர்வாழ்க என்று அவரை முத்தஞ்செய்தான்.

௫௰ இயேசுவானவரோ அவனை நோக்கிச் சிநேகிதனே, என்னத்திற்காக வந்திருக்கிறாயென்றார். உடனே (மற்ற)வர்கள் சேர்ந்து இயேசுவானவர்மேற்கைகளை வைத்து அவரைப்பிடித்தார்கள்.

௩௯ அவர் யூதருடைய நாட்டிலும் எருசலேமிலுஞ் செய்தவைகளெல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். அவரை மரத்திலே தூக்கிக் கொலைசெய்தார்கள்.

௪௰ மூன்றாம் நாளிலே பராபரன் அவரை யெழுப்பி, அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு,

௪௧ எல்லாச் சனங்களுக்குமல்ல, அவரோடே போசனபானம்பண்ணின பராபரனாலே முன்னியமிக்கப்பட்டிருந்த சாட்சிகளாகிய எங்களுக்கே அவர் பிரசன்னமாகும்படி செய்தார்.

௪௨ மேலும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் நியாயதீர்ப்புக் கொடுக்கும்படிக்குப் பராபரனாலே ஏற்படுத்தப்பட்டவரென்று சனங்களுக்குச் சாட்சியாய்ப் பிரசங்கம்பண்ணும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார்.

௪௩ அவரை விசுவாசிக்கிறவனெவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறார்களென்றான்.

௪௪ இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசுகையில் வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் பரிசுத்த ஆவி இறங்கினார்.

௪௬ அவர்கள் (அந்நிய) பாஷைகளைப் பேசி, பராபரனைப் புகழுகிறார்கள்.

௪௫ அப்பொழுது பேதுருவுடனே கூடவந்திருந்த விருத்தசேதனமுடைய விசுவாசிகளெல்லாருங் கேட்டு, பரிசுத்த ஆவியின ஞானஸ்நானம் ... கட்டளையிட்டான் ...

௪௮ ... பேதுருவை ... நாள் ... கொண்டார்கள்.

௰௧. அதிகாரம்.

[(௧) பேதுரு ... விசாரித்தபொழுது பேதுரு ... சொன்னதும், (௰௯) ... அந்தியோகியாவில் ... (௨௨) ... (௨௭) பஞ்சகாலம் ... டதும்.]

௧ யூதேயாவிலிருக்கிற அப்போஸ்தலரும் ... புறசாதியாரும் ... வசனத்தை ... கேள்விப்பட்டார்கள்.

௨ பின்பு பேதுரு எருசலேமுக்கு ... விருத்தசேதனமுள்ளவர்கள் ...

௩ நீர் விருத்தசேதனமில்லாத ... போய், அவர்களோடே ... சாப்பிட்டீரென்று ...

௪ அதற்குப் பேதுரு ... களுக்கு விவரமாய்ச் சொன்னது.

௫ நான் யோப்பா பட்டணத்திலே ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில் ... திருஷ்டியிலே, ... பெரிய துப்பட்டியைப் போல ... வானத்திலிருந்து ... கண்டேன்.

௬ நான் அதைப் பார்த்து ... அதிலே பூமியிலுள்ள நாலுகால் ஜீவன்களையுங் காட்டுமிருகங்களையும் ஊரும் பிராணிகளையும் ஆகாயத்துப் பறவைகளையுங் கண்டேன்.

௭ அல்லாமலும் பேதுருவே, எழுந்து அடித்துப் புசியென்று ... சத்தத்தையுங் கேட்டேன்.

௮ அதற்கு நான், ஆண்டவரே, ... யல்ல, ... தீட்டும் அசுத்தமுமானது ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போகவில்லையென்றேன்.

௯ அப்பொழுது, பராபரன் சுத்தமாக்கினவைகளை நீ அசுத்தமென்றெண்ணாதிருப்பாயாகவென்று இரண்டாந்தரமும் வானத்திலிருந்து சத்தம் எனக்கு உண்டாயிற்று.

௰ இப்படி மூன்றுதரமுமுண்டானபின்பு எல்லாம் மறுபடியும் வானத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

௰௧ உடனே செசாரியாபட்டினத்திலிருந்து மூன்று மனிதர் என்னிடத்தில் அனுப்பப்பட்டு, நானிருந்த வீட்டிற்கு முன்னே வந்து நின்றார்கள்.

௰௨ அப்பொழுது நான் ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல், அவர்களுடனே கூடப்போகும்படிக்கு ஆவியானவர் எனக்குக் கட்டளையிட்டார். பின்பு சகோதரர்களாகிய இந்த ஆறுபேரும் என்னுடனேகூட வந்தார்கள்; அந்த மனிதனுடைய வீட்டிற்குப் போனோம்.

௰௩ அப்பொழுது அவன் தன் வீட்டிலே ஒரு தூதன் நின்றுகொண்டிருக்கக் கண்டதையும், அவன் யொப்பாப்பட்டினத்திற்கு மனிதரையனுப்பி, பேதுரு என்னும் பேர்கொண்ட சீமோனை அழைப்பிக்கும்படிக்கு மனிதரை யனுப்பு,

௰௪ நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவதற்கான வார்த்தைகளை அவன் உனக்குச் சொல்லுவானென்று அந்தத் தூதன் தனக்குச் சொன்னதையும் எங்களுக்கு அறிவித்தான்.

௰௫ பின்பு நான் பேசத்தொடங்கினபொழுது பரிசுத்த ஆவி ஆதியிலே நம்மிடத்தில் இறங்கினதுபோல அவர்களிடத்திலும் இறங்கினார்.

௰௬ அப்பொழுது யோவான் சலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான், நீங்களோ பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்களென்று கர்த்தர் சொன்ன வார்த்தையை நான் நினைத்துக்கொண்டேன்.

௰௭ ஆனபடியினாலே கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொண்டிருக்கிற நமக்குப் பராபரன் அனுக்கிரகித்ததுபோல அந்த ஈவை அவர்களுக்கும் அனுக்கிரகித்திருக்கப் பராபரனுக்குத் தடைபண்ணுகிறதற்கு நான் பலவானோ யிருந்தேனோ என்றான்.

௰௮ இவைகளையவர்கள் கேட்டபொழுது விரோதமாய்ப் பேசாமல் புறஜாதிகளுக்குஞ் சீவனையடையும்படி மனந்திரும்புதலைப் பராபரன் அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்தாரென்று பராபரனைப் புகழ்ந்தார்கள்.

௰௯ அன்றியும் இஸ்தேவானிமித்தமாக உண்டான உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்கள் சுவிசேஷவசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்றொருவருக்கும் அறிவியாமல் பெனிக்கேநாடு சீப்புருதீவு அந்தியோகியாப்பட்டினமட்டுந் திரிந்தார்கள்.

௨௰ அவர்களில் சீப்புருதீவாரும் சிரேனேபட்டினத்தாருமாகிய சிலர் அந்தியோகியாப்பட்டினத்துக்கு வந்தபொழுது கிரேக்கருடனே பேசி, கர்த்தராகிய இயேசுவைச் சுவிசேஷமாய் அறிவித்தார்கள்.

௨௧ அவர்களுடனே கூடக் கர்த்தருடைய கை இருந்ததினாலே திரளான சனங்கள் விசுவாசித்துக் கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

௨௨ அவர்களைக் குறித்து எருசலேமிலுள்ள (சபையார்) கேள்விப்பட்டபொழுது, அந்தியோகியாப்பட்டினமட்டுக்கும் போகும்படிக்குப் பர்னபாவை யனுப்பினார்கள்.

௨௩ அவன் (அங்கே) போய்ப் பராபரனுடைய கிருபையைக் கண்டபொழுது சந்தோஷப்பட்டதுமல்லாமல்,

௨௪ அவன் நல்லவனுமாய்ப் பரிசுத்த ஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தபடியினாலே எல்லாரும் மனதின் ஊக்கமாய் உறுதியாய்க் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னான். அப்பொழுது அநேகம் பேர் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

௨௫ பின்பு பர்னபாவென்பவன் சவுலைத் தேடும்படிக்குத் தர்சுவூருக்குப் புறப்பட்டுப்போய், அவனைக் கண்டு, அந்தியோகியாப்பட்டினத்துக்கு அழைத்துக்கொண்டு போனான்.

௨௬ அப்பொழுது அவர்கள் ஒருவருஷகாலமாய்ச் சபையிலே கூடியிருந்து, அநேக சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். சீஷர்களும் முதலாவது அந்தியோகியாப்பட்டினத்திலே கிறிஸ்தவர்களென்றழைக்கப்பட்டார்கள்.

௨௭ அந்நாட்களில் எருசலேமிலேயிருந்து, சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாப்பட்டினத்துக்குப் போனார்கள்.

௨௮ அவர்களிலொருவனாகிய அகபுவென்பவன் எழுந்து, பூமியெங்கும் மிகுந்த பஞ்சம் வருமென்று ஆவியினாலே அறிவித்தான். அந்தப்படியே அது கிலவுதியுராயனுடைய காலத்திலே சம்பவித்தது.

௨௯ அப்பொழுது சீஷரிலே அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத் தக்கபடியே யூதேயாநாட்டிற்குடியிருக்கிற சகோதரருக்குத் தருமசகாயம் பண்ணியனுப்பவேண்டுமென்று தீர்மானம்பண்ணினார்கள்.

௩௰ அந்தப்படியவர்கள் சில பொருள்களைச் சேர்த்துக்கொண்டு, பர்னபா, சவுல், என்பவர்களைக் கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கனுப்பினார்கள்.

௰௨. அதிகாரம்.

[(௧) ஏரோது இராசாயாக்கோபு அப்போஸ்தலனைக் கொலைசெய்வித்ததும், (௩) அவன் பேதுருவைச் சிறைச்சாலையிலே வைத்த

தும், (௭) தேவதூதன் பேதுருவைப் புறப்படப்பண்ணினதும், (௨௰) ஏரோது பராபரனுக்குக் கனத்தைச் செலுத்தாததினாலே செத்துப்போனதும்.]

அக்காலத்திலே ஏரோதே என்னுமிராசா சபையிற் சிலரைத் துன்பப்படுத்தும்படிக்குத் தொடங்கினான்.

௨ யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபையவன் கத்தியினாலே கொலைசெய்தான்.

௩ மேலும் அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று, அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான். அந்நாட்கள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தன.

௪ அவனைப் பிடித்தபின்பு, பண்டிகை கழிந்து அவனைச் சனங்களுக்கு முன்பாகக் கொண்டுபோகவேண்டுமென்று, ஏரோதெண்ணி, அவனைச் சிறைச்சாலையிலே வைத்து, ஒருவருக்குப் பிற்கு நான்கு போர்ச்சேவகராக நான்கு வகுப்புகள் அவனைக் காக்கும்படி யொப்புக்கொடுத்தான்.

௫ அப்படிப் பேதுரு காவலிலே காக்கப்பட்டிருக்கையிற், சபையார் அவனைக்குறித்து இடைவிடாமற் பராபரனை நோக்கிச் செபம்பண்ணினார்கள்.

௬ அப்பொழுது ஏரோதே அவனை வெளியே கொண்டுவரும்படிக் குறித்த நாளுக்கு முன்னான இராத்திரியிலே பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருக்கக் காவற்காரருங் கதவுக்கு முன்னிருந்து, காவலறையைக் காத்துக்கொண்டிருக்க,

௭ சடுதியாய் அறையிலே பிரகாசமுண்டாகத்தக்கதாகக் கர்த்தருடைய தூதனொருவன் தோன்றிப் பேதுருவின் விலாவிலேதட்டிச், சீக்கிரமா யெழுந்திருவென்று அவனை யெழுப்பினான். அப்பொழுது சங்கிலிகள் அவனுடைய கைகளை விட்டுவிழுந்தன.

௮ மேலுந்தூதன் அவனுடனே சொன்னது. உன் அரையிற் கட்டி, உன்பாத இரட்சைகளைத் தொடுத்துக் கொள்ளென்றான். அவன் அப்படிச் செய்தான். தூதன் பின்னுஞ் சொன்னது. உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு, என் கூடப் பின்சென்றுவாவென்றான்.

௯ அந்தப்படி அவன் புறப்பட்டு, அவனுக்குப் பின் சென்று, தூதனாற் செய்யப்பட்டது மெய்யென்றறியாமல், இது ஒரு தரிசனமென்று நினைத்தான்.

௰ அவர்கள் முதலாங் காவலையும் இரண்டாங் காவலையுங் கடந்து, பின்பு பட்டினத்திற்குப் போகிற இருப்புக் கதவினிடத்திற் சேர்ந்தபொழுது அவர்களுக்கு அது தானாயத் திறக்க, அதின்வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதியிலே நடந்துபோனபின்பு, தூதன் அவனைவிட்டு நீங்கினான்.

௰௧ பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது, ஏரோதேயின் கைக்கும் யூதருடைய எண்ணங்களையாவுக்கும் என்னைத் தப்புவிக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பினாரென்று இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேனென்றான்.

௰௨ இப்படி அவன் நிதானித்து, மாற்கு என்று பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான். அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

௰௩ பேதுரு வாசற்கதவைத் தட்டினபொழுது, உரோதாளென்னும் பேர்கொண்ட வேலைக்காரி ஒருத்தி கேட்கவந்து,

௰௪ பேதுருவின் சத்தத்தை யறிந்து, சந்தோஷத்தினாலே வாசலைத் திறவாமல், உள்ளே ஓடிப்போய், வாசலுக்கு முன்னே பேதுரு நிற்கிறானென்று அறிவித்தாள்.

௰௫ அவர்கள் நீ பயித்தியமாயிருக்கிறாயென்றார்கள். அவள், அப்படியல்ல அவரே யிருக்கிறாரென்றாள். அப்பொழுது அவர்கள் சொன்னது. அவன் அவனுடைய தூதனென்றார்கள்.

௰௬ பேதுருவோ பின்னுந் தட்டிக்கொண்டிருந்தபொழுது, அவர்கள் திறந்து, அவனைக் கண்டு, பிரமித்தார்கள்.

௰௭ உடனே அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையினாற் சமிக்கை பண்ணி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுவித்த வகையை அவர்களுக்கு விவரித்துச் சொல்லிட்டு, இவைகளை யாக்கோபுக்கும் மற்றச் சகோதரருக்கும் அறிவியுங்களென்று சொல்லி, புறப்பட்டு, வேறொரு இடத்துக்குப் போனான்.

௰௮ பொழுது விடிந்தபின்பு பேதுருவைக் குறித்துச் சேவகருக்குள்ளே உண்டான கலக்கங் கொஞ்சமல்ல,

௰௯ ஏரோதே அவனைத் தேடிக் காணாமற்போனபொழுது காவற்காரரை விசாரணையாய்ச் சோதித்து, அவர்களைக் கொலைசெய்யும்படி கட்டளையிட்டபின்பு யூதேயாவை விட்டுச் செசரியாபட்டணத்துக்குப் போய், அங்கே சஞ்சரித்தான்.

௨௰ அக்காலத்திலே ஏரோதே தீருக்குஞ் சீதோனுக்கும் மிகவும் பகைவனாயிருந்தான். அப்பொழுது அவர்கள் தங்களுக்குப் பிழைப்புக்குவேண்டியவைகள் இராசனுடைய தேசத்திலிருந்து வருகிறதினாலே அவர்கள் ஒருமனப்பட்டு, அவனிடத்திற்குப்போய் இராசனுடைய விசாரணைக்காரனாகிய பிலாஸ்து என்பவனைத் தங்கள்வசமாக்கிக்கொண்டு சமாதானமாயிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

௨௧ அப்பொழுது குறித்த நாளிலே ஏரோதாயானவன் இராச அங்கியைத் தரித்துக்கொண்டு, சிம்மாசனத்தின்மேல் உட்கார்ந்து அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான்.

௨௨ அதற்குச் சனங்கள், இது மனுஷனுடைய சத்தமல்ல, தேவனுடைய சத்தமென்று கூப்பிட்டார்கள்.

௨௩ அவன் பராபரனுக்கே புகழ்ச்சியுண்டாகவென்று அறிக்கைபண்ணாதபடியினாலே, உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுக்களாலே தின்னப்பட்டு இறந்தான்.

௨௪ பராபரனுடைய வசனம் வளர்ந்து பெருகிற்று,

௨௫ பின்பு பர்னபாவும் சவுலும் தருமசகாயத்தை நிறைவேற்றினபொழுது, மாற்கு என்று மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக்கொண்டு, எருசலேமை விட்டுத் திரும்பினார்கள்.

௰௩. அதிகாரம்.

[அந்தியோகியாவிலே பவுலும் பர்னபாவும் விசேஷத்தைப் பிரசித்தம்பண்ண அனுப்பப்பட்டதும், (௪) அவர்கள் சீப்புருதீவுக்குப் போய்ப் போதித்து, எலிமாவென்ற சூனியக்காரனாகிய எலிமாவைக் கடிந்துகொண்டு பம்பிலியாவுக்குப் போனதும், (௰௪) பிசீதியாவிலே பவுல் பிரசங்கம்பண்ணினதும், (௪௨) புறதேசத்தார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டதும், (௪௫) யூதர்கள் விரோதஞ்செய்தபொழுது பவுல் அவர்களைக் கடிந்துகொண்டதும்.]

௧ அந்தியோகியாப் பட்டணத்திலுள்ள சபையிலே பர்னபாவென்றும் நீகரென்னப்பட்ட சீமோனென்றும் சிரேனே ஊரானாகிய லூசியென்றும் தேசத்தின் காற்பங்கு அதிபதியாகிய ஏரோதேயுடனே வளர்க்கப்பட்ட மனாயீனென்றும் சவுலென்றும் பெயர்களையுடைய இவர்கள் தீர்க்கதரிசிகளுமாயப் போதகருமாயிருந்தார்கள்.

௨ அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறபொழுது பரிசுத்த ஆவியானவர் சொன்னது. பர்னபாவையுஞ் சவுலையும் நான் அழைத்த கிரியைக்காக அவர்களைத் தெரிந்தெடுத்தனுப்புங்களென்றார்.

௩ உடனே அவர்கள் உபவாசித்துச் செபம்பண்ணி அவர்கள்மேற் கைகளை வைத்து அனுப்பினார்கள்.

௪ ஆதலால் அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியா பட்டணத்துக்குப் போய் அங்கேயிருந்து கப்பலேறிச் சீப்புருதீவில் சேர்ந்தார்கள்.

௫ பின்பு அவர்கள் சாலமீஸ் பட்டணத்துக்குப் போனபொழுது யூதருடைய செப ஆலயங்களிலே (அவர்களுக்குப்) பராபரனுடைய வசனத்தை யறிவித்தார்கள். யோவானென்பவனும் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான்.

௬ அவர்கள் அந்தத் தீவைக் கடந்து பாப்போ பட்டணமட்டும் போனபொழுது பரியேசு என்று பேர்கொண்ட இஸ்ரேல் மந்திரவாதியும் கள்ளத் தீர்க்கதரிசியுமாய,

௭ புத்திசாலியாகிய செர்கியுப்பவுலென்னும் பிரதிநிதியோடேகூடத் தங்கினவனுமாயிருந்த ஒரு யூதனைக் கண்டார்கள். அந்தப் பிரதிநிதி பர்னபாவையுஞ் சவுலையும் அழைப்பித்துப் பராபரனுடைய வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தபொழுது,

௮ இஸ்தம்பனக்காரனென்று அருத்தங்கொள்ளுகிற எலிமாவென்னப்பட்ட அவன் பிரதிநிதியை விசுவாசத்திலிருந்து விலக்கும்படி தேடி அவர்களோடெதிர்த்துப் பேசினான்.

௯ அப்பொழுது பவுலென்னுஞ் சொல்லப்பட்ட சவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவன்மேற் கண்ணூன்றிச் சொன்னதாவது.

௰ எல்லாவிதமான கபடமும் எல்லாவிதமான பொல்லாங்கும் நிறைந்தவனே பசாசின் மகனே சகல நீதிகளுக்கும் பகைஞனே நீ கர்த்தருடைய செம்மையான மார்க்கங்களைப் புரட்டுகிறதில் ஓயமாட்டாயா.

௰௧ இப்பொழுது கர்த்தருடைய கை உன்மேல் வருகின்றது. சிலகாலம் சூரியனைக் காணாமற் குருடனாயிருப்பாயென்றான். உடனே மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தன. அவன் தன்னைக் கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்.

௰௨ இப்படிச் சம்பவித்ததைப் பிரதிநிதி கண்டு கர்த்தரைக் குறித்துச் செய்யப்பட்ட உபதேசத்திற்காக அதிசயப்பட்டு விசுவாசமுள்ளவனானான்.

௰௩ பின்பு பவுலும் அவனோடேகூட இருந்தவர்களும் பாப்போ பட்டணத்தை விட்டுப் பம்பிலியா நாட்டிலுள்ள பெர்கே பட்டணத்துக்குப் போனார்கள். யோவான் அவர்களைவிட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினான்.

௰௪ பின்பு அவர்கள் பெர்கே பட்டணத்தை விட்டுப் புறப்பட்டுப் பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்குப் போய் ஓய்வுநாளிலே செப ஆலயத்திற்குப் போய் உட்கார்ந்தார்கள்.

௰௫ (அங்கே) நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன (ஆகமமும்) வாசிக்கப்பட்டுத் தீர்ந்தபின்பு சகோதரர்களே நீங்கள் சனங்களுக்குப் புத்திசொல்லவிருப்பீர்களானால்

யீர்களானால் சொல்லுங்களென்று ஆலயத்தலைவர் அவர்களுக்குச் சொல்லியனுப்பினார்கள்.

௧௬ அப்பொழுது பவுல் எழுந்து கையினாலே சைகைகாண்பித்துச் சொன்னதாவது. இஸ்ரவேலரே பராபரனுக்குப் பயந்து நடக்கிற சகலசனங்களே கேளுங்கள்.

௧௭ இந்த இஸ்ரவேல் சனத்தினுடைய தேவன் நம்முடைய முன்னோர்களைத் தெரிந்துகொண்டு எசிப்துதேசத்திலே சஞ்சரித்துவந்த அவர்களுடைய சந்ததியை மேன்மைப்படுத்தி, பலத்த கையினாலே அதிலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணி,

௧௮ நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அவர்களைப் பொறுத்துக்கொண்டு,

௧௯ கானான்தேசத்திலுள்ள ஏழுவகைச் சனங்களை நிர்மூலமாக்கிப்போட்டு அவர்களுடைய தேசத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்து,

௨௰ பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷத்திற்குப் பின்பு சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும் அவர்களுக்காக நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்.

௨௧ சாமுவேலின் காலமானபின் அவர்கள் ஒரு இராசாவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதின்படி பராபரன் அவர்களுக்குப் பென்யாமீனுடைய கோத்திரத்தானும் கீசென்பவனுடைய குமாரனுமாகிய சவுலைக்கொடுத்தார். அவன் நாற்பது வருஷமிருந்தான்.

௨௨ பின்பு அவர் அவனை விலக்கி இயேசேயென்பவனுடைய குமாரனாகிய தாவீதை என்னிருதயத்திற்கேற்றவனாகக் கண்டேன். அவன் என்னுடைய சித்தத்தின்படி முழுவதுஞ் செய்வானென்று தாவீதைக்குறித்துச் சாட்சியிட்டு அவனையே அவர்களுக்கு இராசாவாக ஏற்படுத்தினார்.

௨௩ அவனுடைய சந்ததியிலே பராபரன் தமது வாக்குத்தத்தத்தின்படி இஸ்ரவேலருக்காக இயேசுவென்னும் இரட்சகரை எழும்பப்பண்ணினார்.

௨௪ அவருடைய பிரவேசத்திற்குமுன்னே யோவான் மனந்திரும்புதற்கேற்ற ஞானஸ்நானத்தை எல்லா இஸ்ரவேலருக்கும் பிரசங்கித்தான்.

௨௫ மேலும் யோவான் (பணிவிடை) ஓட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது (சனங்களுடனே) சொன்னதாவது. நீங்கள் என்னை எவனென்றெண்ணுகிறீர்கள். நான் அவரல்ல எனக்குப்பின் ஒருவர் வருகிறார் அவருடைய பாதரட்சையை அவிழ்க்கிறதற்கு நான் பாத்திரனல்லவென்று சொன்னான்.

௨௬ ஆபிரகாமின் சந்ததியாராகிய சகோதரர்களே பராபரனுக்குப் பயப்படுகிறவர்களே இந்த இரட்சிப்பையறிவிக்கிற உபதேசம் உங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

௨௭ என்னவெனில் எருசலேமிலிருக்கிறவர்களும் அவர்களுடைய அதிகாரிகளும் அவரையாவது ஓய்வுநாள்தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களையாவது அறியாமல் அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினாலே அவைகளை நிறைவேற்றினார்கள்.

௨௮ மரணத்திற்கேதுவான யாதொரு குற்றமும் (அவரிடத்தில்) காணாமலிருந்தும் அவர்கள் அவரைக் கொலைசெய்யும்படிக்குப் பிலாத்துவைவேண்டிக்கொண்டார்கள்.

௨௯ அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் அவர்கள் முடித்தபின்பு (அவரை) மரத்திலிருந்திறக்கிக் கல்லறையிலே வைத்தார்கள்.

௩௰ பராபரனோ அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்.

௩௧ அன்றியும் அவர் கலிலேயாவிலிருந்து எருசலேமுக்குத் தம்முடனே கூடவந்தவர்களுக்கு அநேகநாளாகத் தரிசனமானார். அவர்களே சனங்களுக்கு முன்பாக அவருக்குச் சாட்சிகளாயிருக்கிறார்கள்.

௩௨ நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேனென்று இரண்டாஞ் சங்கீதத்திலெழுதியிருக்கிறபடியே

௩௩ இயேசுவையெழுப்பினதினாலே பராபரன் (நமது) முன்னோர்களுக்குச் செய்த வாக்குத்தத்தத்தை அவர்களுடைய பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினாரென்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாய்ப் பிரசங்கிக்கிறோம்.

௩௪ அவர் மறுபடியும் மரிப்புக்குள்ளாகாதபடிக்கு அவரை மரித்தோரிலிருந்தெழுப்பினபடியினாலே தாவீதுக்கு (செய்த) உறுதியான தயவுகளை உங்களுக்குத் தருவேனென்று திருவுளம்பற்றினார்.

௩௫ அன்றியும் உம்முடைய பரிசுத்தவானை அழிவையடையவொட்டீரென்று வேறொரு சங்கீதத்திலே சொல்லுகிறது.

௩௬ தாவீது தன் காலத்திலே பராபரனுடைய சித்தத்துக்கு ஊழியஞ்செய்தபின்பு நித்திரையடைந்து தன் பிதாக்களிடத்தில் சேர்க்கப்பட்டு அழிவையடைந்தான்.

௩௭ பராபரனால் எழுப்பப்பட்டவரோ அழிவையடையவில்லை.

௩௮ ஆகையால் சகோதரர்களே இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகுமென்று அறிவிக்கப்படுகிறது.

௩௯ அல்லாமலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் விடுதலையடையக்கூடாத காரியமெதுவோ அதினின்று விசுவாசிக்கிறயாவனும் அவராலே விடுதலையாகிறானென்று அறிந்துகொள்வீர்களாக.

௪௰ அன்றியுந் தீர்க்கதரிசிகளுடைய புஸ்தகத்திலே அசட்டைக்காரரே பாருங்கள் உங்கள் நாட்களில் ஒரு கிரியையச் செய்கிறேன் அதை ஒருவன் உங்களுக்கு விவரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசியாமலிருப்பீர்கள் என்று எழுதப்பட்டிருக்கிறபடி அப்படிப்பட்ட கிரியையாகவேயிருக்கும்.

௪௧ ஆதலாற் றீர்க்கதரிசிகள் சொன்னது உங்கள் மேல் வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்றான்.

௪௨ பின்பு அவர்கள் புறப்படுகையில் மறுஓய்வுநாளிலேயும் இந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டுமென்று புறதேசத்தார் வேண்டிக்கொண்டார்கள்.

௪௩ மேலும் ஜெப ஆலயக் கூட்டங் கலைந்துபோனபின்பு யூதர்களிலும் யூதமார்க்கத்திற் பிரவேசித்துத் தேவபத்தியாயிருந்தவர்களிலும் அநேகர் பவுலுடனும் பருனபாவுடனும் பின்சென்றார்கள். அவர்களுடனே பவுலும் பருனபாவும் பேசிக்கொண்டு, தேவனுடைய கிருபையிலே நிலைகொண்டிருக்கும்படிக்கு புத்திசொன்னார்கள்.

௪௪ மறு ஓய்வுநாளிலே கொஞ்சங்குறையப் பட்டினத்தாரெல்லாரும் தேவனுடைய வசனத்தைக் கேட்கும்படிக்குக் கூடிவந்தார்கள்.

௪௫ யூதர்கள் அவ்வளவு சனங்களைக் கண்டபொழுது, பொறாமையினாலே நிறையப்பட்டுப் பவுலு சொன்னவைகளுக்கு விரோதமாய்ப் பேசினார்கள். விரோதித்துத் தூஷித்துமிருந்தார்கள்.

௪௬ அப்பொழுது பவுலும் பருனபாவும் தயிரியங்கொண்டு சொன்னதாவது, முதலாவது உங்களுக்கே தேவனுடைய வசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது. நீங்கள் அதைத் தள்ளி உங்களை நித்தியசீவனுக்கு அபாத்திரரென்று தீர்த்துக்கொள்ளுகிறபடியினாலே, நாங்கள் புறதேசத்தாரிடத்திற்குப் போகிறோம்.

௪௭ நீர் பூமியின் எல்லை பரியந்தமும் இரட்சகராயிருக்கும்படிக்கு, உம்மைப் புறதேசத்தார்களுக்கு ஒளியென்றேற்படுத்தினேனென்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினாலே, அப்படிச் செய்கிறோமென்றார்கள்.

௪௮ புறதேசத்தார்கள் அதைக்கேட்டு சந்தோஷமடைந்து, கர்த்தருடைய வசனத்தைப் புகழ்ந்து, நித்தியசீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்.

௪௯ பின்பு கர்த்தருடைய வசனம் அந்தத் தேசமெங்கும் பிரபலமாயிற்று.

௫௰ யூதர்கள் பத்தியுங் கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டினத்தின் முதலாளி-

களையும் எழுப்பிப் பவுலுக்கும் பருனபாவுக்கும் விரோதமாய்த் துன்பப்படுத்தும்படி செய்து, தங்கள் எல்லைகளிலிருந்து அவர்களைத் துரத்தினார்கள்.

௫௧ அப்பொழுது இவர்கள் தங்கள் கால்களில் பட்ட தூசியை அவர்கள்மேற் சாட்சியாக உதறிப்போட்டு, இக்கோனியா பட்டினத்திற்குப் போனார்கள். சீஷரானவர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிறையப்பட்டார்கள்.

௰௪. அதிகாரம்.

[(௧) இக்கோனியா ஊரிலே பவுலும் பருனபாவும் துன்பப்பட்டதும், (௮) லிஸ்திரா ஊரிலே அவர்கள் ஒரு அற்புதத்தைச் செய்ததினாலே தேவர்களென்றெண்ணப்பட்டதும், (௰௯) யூதர்களாலே கல்லெறியப்பட்டதும், (௨௧) தெர்பே முதலான ஊர்களுக்குப் போய்ப் போதித்ததும்.]

இக்கோனியா பட்டினத்திலே அவர்களிருவரும் யூதருடைய ஜெப ஆலயத்திற்குப் போய்ப், பிரசங்கம் பண்ணின பொழுது, யூதரிலுங் கிரேக்கரிலும் திரளான சனங்கள் விசுவாசித்தார்கள்.

௨ விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறதேசத்தாருடைய மனதை எழுப்பி, பகை யுண்டாக்கினார்கள்.

௩ அப்படியிருந்தும் அவர்கள் அங்கே நெடுங்காலஞ் சஞ்சரித்துக் கர்த்தரைக் குறித்துத் தயிரியமாய்ப் போதகம்பண்ணினார்கள். அவர் தமது கிருபையைக் காட்டிய வசனத்திற்குச் சாட்சியுண்டாக அதிசயங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளாற் செய்யப்படும்படி அநுக்கிரகித்தார்.

௪ அந்தப் பட்டினத்தின் சனங்கள் பிரிந்து, சிலர் யூதரையுஞ் சிலர் அப்போஸ்தலரையுஞ் சேர்ந்தார்கள்.

௫ அப்பொழுது அவர்களை நிந்தித்து, அவர்கள்மேற் கல்லெறியும்பொருட்டாகப் புறதேசத்தாரும் யூதர்களும் அவர்களுடைய தலைவருடனேயுங் கூடக் கலகம் பண்ணுகிறதை அவர்கள் அறிந்து,

௬ இலிக்கவோனியா நாட்டிலுள்ள இலீஸ்திரா ஊருக்கும் தெருபை யூருக்கும் அவைகளைச் சூழ்ந்த புறத்திற்கும் ஓடிப்போய்,

௭ அங்கே சுவிசேஷத்தை அறிவித்துக் கொண்டுவந்தார்கள்.

௮ இலிஸ்திரா ஊரிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்து ஒருக்காலும் நடவாமற் பெலனில்லாத கால்களோடே உட்கார்ந்திருந்து,

௯ பவுலு பேசுகிறதைக் கேட்டான். அவன்மேற் பவுலு கண்ணூன்றி, இரட்சிக்கப்

டுகிறபடிக்கான விசுவாசம் அவனுக்குண்டென்று கண்டு,

௰ நீ உன் கால்களை ஊன்றிச் செம்மையாய் எழுந்து நில்லென்று, மிகுந்த சத்தத்தோடே சொன்னான். உடனே அவன் குதித்தெழுந்து நடந்தான்.

௰௧ பவுல் செய்ததைச் சனங்கள் கண்டு, தேவர்கள் மனுரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்களென்று இலிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

௰௨ மேலும் பருனபாவை இயூப்பித்தர் தேவனென்றும் பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினாலே அவனை மெர்க்கூரி தேவனென்றும் அழைத்தார்கள்.

௰௩ அல்லாமலும் பட்டினத்துக்கு முன்பாக இருந்த இயூப்பித்தருடைய பூசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலண்டைக்குக் கொண்டுபோய்ச் சனங்களோடே கூடப் பலியிடமனதாயிருந்தான்.

௰௪ அப்போஸ்தலராகிய பருனபாவும் பவுலும் அதைக் கேள்விப்பட்டு, (விசனத்தினாலே) தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

௰௫ கூட்டத்திற்குள் ஓடி மனிதர்களே, என்னத்திற்கு இப்படிச் செய்கிறீர்கள். நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனிதராயிருந்து,

௰௬ நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கின சீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குச் சுவிசேஷமாய்ச் சொல்லுகிறோம். சென்ற காலங்களில் அவர் எல்லாப் புறசாதியாரையுந் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும்,

௰௭ அவர் நமக்கு நன்மைசெய்து வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குக் கொடுத்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி கொடாமலிருக்கவில்லையென்று கூப்பிட்டார்கள்.

௰௮ இப்படியவர்கள் சொல்லித் தங்களுக்குச் சனங்கள் பலியிடாதபடிக்குப் பிரயாசத்தோடே நிறுத்தினார்கள்.

௰௯ பின்பு அந்தியோகியா ஊரிலும் இக்கோனியூரிலுமிருந்து யூதர்கள் அங்கே போய்ச் சனங்களுக்குப் போதனைசெய்து பவுலின்மேல் கல்லெறிந்து, அவன் மரித்தானென்றெண்ணி, அவனைப் பட்டினத்துக்கு வெளியே இழுத்தார்கள்.

௨௰ அங்கே சீஷர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டிருக்கையில், அவனெழுந்து ஊருக்குட் பிரவேசித்து, மறுநாளிலே பருனபாவுடனே தெருபையூருக்குப் போனான்.

௨௰௧ அந்த ஊரார்க்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, அவர்கள் இலிஸ்திராவூருக்கும் இக்கோனியூருக்கும் அந்தியோகியா ஊருக்கும் திரும்பி,

௨௰௨ சீஷருடைய ஆத்துமாக்களைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படிக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய இராச்சியத்திலே பிரவேசிக்கவேண்டுமென்றுஞ் சொல்லிக்கொண்டார்கள்.

௨௰௩ அன்றியும் சபைகளில் அவர்களுக்காக மூப்பரைத் தெரிந்தெடுத்து, உபவாசித்துச் செபம்பண்ணி, தாங்கள் விசுவாசித்துக்கொண்டிருந்த கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள். பின்பு அவர்கள் பிசிதியா நாட்டைக் கடந்து பம்பிலியா நாட்டிலே சேர்ந்து,

௨௰௪ பெருகேயூரிலே வசனத்தைப் பிரசங்கித்து,

௨௰௫ அத்தாலியா பட்டினத்துக்குப் போனார்கள், அங்கே கப்பலேறி,

௨௰௬ தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காகப்பட்டு தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டுப் புறப்பட்ட அந்தியோகியா பட்டினத்துக்குப் போனார்கள்.

௨௰௭ அங்கே சேர்ந்தபோது அவர்கள் சபையைக் கூடிவரப்பண்ணி, தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறதேசத்தார்களுக்கு விசுவாசத்தின் வாசலைத் திறந்ததையும் அறிவித்து,

௨௰௮ பின்பு அங்கே சீஷருடனே கூட நீண்டகாலஞ் சஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள்.

௰௫. அதிகாரம்.

[(௧) விருத்தசேதனத்தைக் குறித்து உண்டான தர்க்கத்துச் சபைக்குத் தீர்வு சங்கனுண்டானதும், (௬) அப்போஸ்தலரும் மூப்பருங்கூடியிருந்து அந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசித்துத் தீர்மானம் பண்ணி நிருபத்தை எழுதியனுப்பினதும், (௩௬) பவுலும் பருனபாவும் பிரிந்து போனதும்.]

அக்காலத்திலே சிலர் யூதேயாவிலிருந்து வந்து நீங்கள் மோசேயின் முறைமையின்படியே விருத்தசேதனம் பெறாமற்போனால், இரட்சிக்கப்படமாட்டீர்களென்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்.

௨ அதினாலே கலகமும் அவர்களோடே பவுலு, பருனபா, என்பவர்களுக்கு மிகுந்த தருக்கமுமுண்டானபோது, அந்தக் காரியத்தைக் குறித்துப் பவுலும் பருனபாவுந் தங்களில் வேறே சிலரும் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திற்கும் மூ

...தத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானம்பண்ணினார்கள்.

அந்தப்படி அவர்கள் சபையாராலே விட்டனுப்பப்பட்டபின்பு பெனிக்கேசியா நாட்டின் வழியாயும் சமாரியா நாட்டின் வழியாயும் போய்ப் புறத்தேசத்தார் மனந்திரும்பினதை அறிவித்து சகோதரரெல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தையுண்டாக்கினார்கள்.

எருசலேமிலேயவர்கள் சேர்ந்தபோது சபையாலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்பு தங்களாற் பராபரன் செய்தவைகளையறிவித்தார்கள்.

அப்பொழுது பரிசேயராகிய விசுவாசிகளானசிலர் எழுந்து அவர்களுக்கு விருத்தசேதனம்பண்ணிக்கொண்டு மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படிக்கு உத்தரவு அனுப்பவேண்டுமென்றார்கள்.

பின்பு அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தை ஆராய்ந்து பார்க்கும்படிக்குக் கூடினார்கள்.

மிகுந்த தருக்கமுண்டானபொழுது பேதுரு எழுந்து அவர்களுக்குச் சொன்னதாவது. சகோதரரே நீங்கள் அறிந்திருக்கிறபடி பராபரன் வெகுநாட்களுக்கு முன்னே உங்களில் என்னுடைய வாயினாலே புறத்தேசத்தார் சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி (என்னைத்) தெரிந்தெடுத்தார்.

மேலும் இருதயங்களை அறிந்திருக்கிற பராபரன் நமக்குக் கொடுத்ததுபோல அவர்களுக்கும் பரிசுத்த ஆவியைக் கொடுத்து,

(இவ்விஷயமாய்) அவர்களைக் குறித்து சாட்சியிட்டு அவர்களிருதயங்களை விசுவாசத்தினாலே சுத்தமாக்கி அவர்களுக்கும் நமக்கும் ஒரு வித்தியாசமும் பண்ணவில்லை.

அப்படியிருக்க நம்முடைய பிதாக்களும் நாமுஞ் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷருடைய கழுத்தின்மேல் வைக்கும்படிக்கு நீங்கள் பராபரனைச் சோதிக்கிறதென்ன?

௧௧ அப்படியல்ல கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிற பிரகாரமாக நாமும் அப்படியே இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமேயென்றான்.

௧௨ அதன்பின்பு கூடிவந்த யாவரும் அமர்ந்திருந்து பர்னபாவும் பவுலுந் தங்களைக்கொண்டு பராபரன் புறத்தேசத்தார்களுக்குள்ளே செய்த அதிசயங்களையும் அற்புதங்களையும் விவரித்துச் சொல்லக்கேட்டார்.

௧௩ அவர்கள் பேசிமுடிந்தபின்பு யாகப்பு சொன்னதாவது. சகோதரரே எனக்குச் செவிகொடுப்பீர்களாக.

௧௪ பராபரன் தமது நாமத்திற்காகப் புறத்தேசத்தார்களில் ஒரு சனக்கூட்டத்தைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு முதலாவது அவர்களை நோக்கிப் பார்த்ததைச் சீமோன் சொன்னானே.

௧௫ அதற்குத் தீர்க்கதரிசிகளுடைய வசனங்களும் ஒத்திருக்கின்றன.

௧௬ மற்ற மனிதர்களும் என்னுடைய நாமத்தைப்பெற அழைக்கப்படும் புறத்தேசத்தாரெல்லாரும் பராபரனைத் தேடிக்கொள்ளும்படிக்கு,

௧௭ நான் இதற்குப்பின்பு திரும்பிவந்து விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எழுப்புவேன். அதிலிடிந்துபோனவைகளைத் திரும்பக் கட்டி அதைத் திரும்பச் செம்மையாக நிறுத்துவேனென்று இவைகளையெல்லாஞ்செய்கிற பராபரன் சொல்லுகிறானென்றெழுதியிருக்கின்றதே.

௧௮ அநாதிகாலமுதலாய்ப் பராபரனுடைய கிரியைகளெல்லாம் அவருக்குத் தெரிந்திருக்கின்றன.

௧௯ ஆகையாற் புறத்தேசத்தார்களிற் பராபரனிடத்திற்கு மனந்திரும்புகிறவர்களைக் கலக்கப்படுத்தாதபடிக்கு,

௨௰ அசுசிப்படுத்துகிற விக்கிரகபோசனங்களுக்கும் வேசித்தனத்துக்கும் நெருக்குண்டு செத்தவைகளுக்கும் இரத்தத்துக்கும் விலகும்படியே அவர்களுக்கெழுதவேண்டுமென்றெண்ணுகிறேன்.

௨௧ பூர்வகாலமுதற்கொண்டு செபஆலயங்களில் ஓய்வுநாடோறும் மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படுகிறபடியால் பட்டினந்தோறும் அவைகளைப் பிரசங்கம்பண்ணுகிறவர்களுமுண்டேயென்றான்.

௨௨ அப்பொழுது அப்போஸ்தலரும் மூப்பரும் சபையாரெல்லாருந் தங்களில் சகோதரருக்குள்ளே கனம்பொருந்தியவர்களாயிருந்த பர்சபா என்னப்பட்ட யூதாவையுஞ் சீலாவையுந் தெரிந்துகொண்டு அவர்களைப் பவுலோடும் பர்னபாவோடுங்கூட அந்தியோகியாப்பட்டினத்திற்கு அனுப்பவேண்டுமென்றுயோசித்து எழுதினதாவது,

௨௩ அந்தியோகியாப்பட்டினத்திலுஞ் சீரியாநாட்டின்மற்ற இடங்களிலுஞ் சிலிசியாநாட்டிலுமிருக்கிற புறத்தேசத்தார்களிலிருந்துண்டான சகோதரர்களுக்கு அப்போஸ்தலருமூப்பரும் (மற்ற) சகோதரருமாகிய நாங்கள் வாழ்த்துதல் உண்டாகும்படியாயெழுதுகிறோம்.

௨௪ எங்களாற் கட்டளைபெறாதசிலர் எங்களிடத்திலிருந்துபுறப்பட்டு நீங்களிருந்த சேதனம்பண்ணவேண்டுமென்றும் மோசேயின் பிரமாணத்தைக்கைக்கொள்ளவேண்டுமென்றுஞ்சொல்லி இப்படிப்பட்ட வார்த்தைகளினாலே உங்களைக் கலக்கப்படுத்தி உங்கள் ஆத்துமாக்களைத் தள்ளாடப்பண்ணி

ருக்கிறார்களென்று நாங்கள் கேள்விப்பட்டபடியினாலே,

௨௫ நாங்களெல்லாருங்கூடி [illegible] ஒருமனப்பட்டு [illegible] நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் [illegible] லொப்பியிட்ட [illegible] யிருக்கிறவர்களு மாய,

௨௬ எங்களுக்குப் பிரியமான [illegible] பர்னபா பவுல் [illegible] கூட உங்களிடத்தில் [illegible] மனப்பட்டோமென்று [illegible] கொண்டோம்,

௨௭ அந்தப்படியே யூதாவையுஞ் சீலாவையும் அனுப்புகிறோம். அவர்களும் இவைகளை வாய்மொழியாக உங்களுக்கு அறிவிப்பார்கள்.

௨௮ [illegible] பலியிடப் படைத்தவைகளுக்கும் [illegible] இரத்தத்திற்கும் நெருக்குண்டு [illegible] செத்ததற்கும் [illegible] நீங்கள் விலகியிருக்கவேண்டும். இவைகளல்லாமல் [illegible] பாரமொன்றும் உங்கள்மேல் போடாமலிருக்கும்படிக்கு,

௨௯ பரிசுத்த ஆவிக்கும் நமக்கும் நிச்சயமாயிருக்கிறது. [illegible] இவைகளினின்று நீங்கள் [illegible] விலகியிருந்தால் [illegible] செய்வீர்கள். சுகமாயிருப்பீர்களாக வென்றெழுதி, அவர்கள் கையிற் கொடுத்தனுப்பினார்கள்.

௩௰ அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்தியோகியா பட்டணத்திற்குப் போய்ச் சபையைக்கூடிவரச்செய்து அந்த நிருபத்தைக் கொடுத்தார்கள்.

௩௧ அதை வாசித்தபின்பு அதிலடங்கிய ஆறுதலான வசனங்களைக்குறித்து சந்தோஷப்பட்டார்கள்.

௩௨ பின்பு யூதாவுஞ் சீலாவுந் தாங்களுந் தீர்க்கதரிசிகளானபடியினாலே அநேகவசனங்களினாலே சகோதரருக்குப் புத்தி சொல்லி அவர்களைத் திடப்படுத்தி,

௩௩ சிலகாலம் அங்கேயிருந்த பின்பு சகோதரராலே சமாதானத்துடனே அப்போஸ்தலரிடத்திற்கு அனுப்பிவிடப்பட்டார்கள்.

௩௪ சீலாவினுக்கோ அங்கேதங்கியிருக்கிறது நலமாயிருக்குமென்று தோன்றியிருந்தது.

௩௫ பின்பு பவுலும் பர்னபாவும் அந்தியோகியாவிலே சஞ்சரித்து வேறு அநேகரோடுங்கூடக் கர்த்தருடைய வசனத்தைப் பிரசங்கித்துச் சுவிசேஷமாய்ப் போதித்துக்கொண்டிருந்தார்கள்.

௩௬ சிலநாளைக்குப்பின்பு பவுல் பர்னபாவை நோக்கி நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்திருந்த சகல பட்டணங்களிலுமுள்ள சகோதரர் [illegible] சுகமாயிருக்கிறார்களோவென்று [illegible] பார்க்கும்படிக்கு [illegible] திரும்பிப் பிரயாணமாய்ப் போவோமவா [illegible] னான்.

௩௭ அப்பொழுது பர்னபா [illegible] மாற்கு என்றழைக்கப்பட்ட யோவானை [illegible] அழைத்துக்கொண்டுபோக [illegible] சொன்னான்.

௩௮ பவுலோ பம்பிலியா நாட்டிலே [illegible] அவர்களோடேகூட [illegible] விட்டுப் பிரிந்துபோனவனை [illegible] கொண்டுபோகக்கூடாதென்றான்.

௩௯ அப்பொழுது அவர்களுக்குள்ளே [illegible] அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பலேறிச் சீப்புருதீவுக்குப் போனான்.

௪௰ பவுலோ சீலாவைத் [illegible] தெரிந்துகொண்டு சகோதரராலே [illegible] கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு,

௪௧ புறப்பட்டுச் சீரியா நாட்டிலேயுஞ் சிலிசியா நாட்டிலேயுஞ் சஞ்சரித்துச் சபைகளை ஸ்திரப்படுத்தினான்.

௧௬. அதிகாரம்.

[(௧) பவுல் தீமோத்தேயுவை [illegible] டையவன் மாட்டம்போனதும், (௬) [illegible] மக்கெதோனியாவுக்குப் [illegible] திரேயைப் பட்டணத்துக்கும், (௧௨) [illegible] லீதியாள் விசுவாசமுள்ளவளானதும், (௧௬) [illegible] பவுல் குறிசொல்லுகிற [illegible] (௩௬) அவனும் சீலாவும் [illegible] சிறைச்சாலையிலே [illegible] (௨௫) [illegible] சாலைக்காரன் விசுவாசமுள்ளவனானதும்.]

பின்பு அவன் தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷனிருந்தான். அவன் விசுவாசமுள்ள யூதஸ்திரீயினுடைய மகனும் [illegible] யானவன். அவனுடைய தகப்பன் கிரேக்கனானவன்.

௨ அவன் லீஸ்திராவிலும் இக்கோனியாவிலும் இருக்கிற சகோதரராலே நற்சாட்சி பெற்றவன்.

௩ அவனைப் பவுல் தன்னுடனே கூட்டிக்கொண்டுபோக விரும்பி அவனுடைய தகப்பன் கிரேக்கனென்று அவ்விடங்களிலிருக்கிற யூதர்களெல்லாரும் அறிந்திருந்தபடியால் அவனுக்கு விருத்தசேதனம் பண்ணினான்.

௪ பின்பு அவர்கள் பட்டணங்கள் தோறும் போகையில் எருசலேமிலுள்ள அப்போஸ்தலராலும் மூப்பராலும் [illegible] பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படிக்கு அவைகளை அவர்களுக்கு ஒப்புவித்தார்கள்.

௫ அதினாலே சபைகள் விசுவாசத்திலே ஸ்திரப்பட்டு நாளுக்குநாள் பெருகின.

௬ பின்பு அவர்கள் பிரிகியா நாட்டையும் கலாத்தியா நாட்டையுங் கடந்துபோனபோது

௬ அந்தப்பொழுது ஆசியாதேசத்திலே வசனத்தைச் சொல்லாதபடி பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,

௭ [illegible] நாடமட்டும் வந்து பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள். ஆனாலும் இயேசுவின் ஆவி அவர்களைப் போகவொட்டவில்லை.

௮ அப்பொழுது அவர்கள் மீசியா நாட்டைக் கடந்து துரோவாப்பட்டினத்துக்குப் போனார்கள்.

௯ அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று [illegible] மக்கெதோனியாதேசத்தான் ஒருவன் நின்று நீ மக்கெதோனியாவிலே வந்து எங்களுக்கு உதவிசெய்யவேண்டுமென்று அவனை வேண்டிக்கொண்டதாக இருந்தது.

௰ அந்தத் தரிசனத்தை அவன் கண்டபொழுது அவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்குக் கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயமாய் அறிந்து உடனே மக்கெதோனியா தேசத்துக்குப் புறப்பட்டுப் போகப் பிரயத்தனம்பண்ணி,

௧௧ கப்பலேறி, துரோவாப்பட்டினத்தை விட்டு, நேராய்ச் சமொத்திராக்கே தீவுக்கு ஓடி, மறுநாளிலே நெயாப்போலிப்பட்டினத்துக்குப் போய்,

௧௨ அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்தின் [illegible] முதன்மையான ஊருமாய் உரோமர் குடியேறின ஊருமாயிருக்கிற பிலிப்பிப் பட்டினத்திற்கு வந்து, சில நாள் அந்த ஊரிலே தங்கியிருந்தோம்.

௧௩ பட்டினத்திற்கு வெளியே ஆற்றருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்துக்கு ஓய்வுநாளில் நாங்கள் போய், அங்கே உட்கார்ந்து, கூடிவந்திருந்த ஸ்திரீகளுடனே பேசிக்கொண்டோம்.

௧௪ அப்பொழுது தியத்தீரா ஊராளுமாய் இரத்தாம்பர விக்கிரயஞ்செய்கிறவளுமாய்த் தேவனைத் தொழுகிறவளுமாய் லீதியாளென்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீ இருந்தாள். அவள் பவுலால் சொல்லப்பட்டவைகளைக் கேட்டுக் கவனிக்கும்படிக்கு, கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் திறந்தார்.

௧௫ பின்பு அவளும் அவளுடைய குடும்பத்தாரும் ஞானஸ்நானம்பெற்றபொழுது, அவள் எங்களை நோக்கி, நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமானவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்களென்று எங்களை மிகவும் வேண்டிக்கொண்டு இருந்தாள்.

௧௬ நாங்கள் ஜெபத்திற்குப் போகையில் குறிசொல்லுகிற ஆவியைக்கொண்டிருந்து குறிசொல்லுகிறதினாலே தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு வேலைக்காரி எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.

௧௭ அவள் பவுலுக்கும் எங்களுக்கும் பின்சென்று இந்த மனிதர் உன்னதமான பராபரனுடைய ஊழியக்காரர். உங்களுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தை அறிவிக்கிறவர்களென்று கூப்பிட்டாள்.

௧௮ இப்படி அநேகநாள் செய்தாள். அப்பொழுது பவுல் சினமடைந்து திரும்பிக்கொண்டு, அந்த ஆவியுடனே சொன்னது: இவளை விட்டுப்புறப்படும்படிக்கு இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேனென்றான். அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று.

௧௯ அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை போயிற்றென்று கண்டு, பவுலையும் சீலாவையும் பிடித்து, சந்தைவெளியிலுள்ள அதிகாரிகளிடத்திற்கு இழுத்து,

௨௦ பின்பு அவர்களைத் தலைவர்களுக்கு முன்பாகக் கொண்டுபோய், யூதர்களாகிய இந்த மனிதர் நம்முடைய பட்டினத்திலே கலகம்பண்ணி,

௨௧ உரோமராகிய நமக்கு ஏற்றுக்கொள்ளவும் செய்யவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்களென்றார்கள்.

௨௨ அப்பொழுது ஜனங்கள் அவர்களுக்கு விரோதமாய் ஒருமித்து எழும்பினார்கள்; அல்லாமல், தலைவர்கள் அவர்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துப்போட்டு, அவர்களை அடிக்கும்படி சொல்லி,

௨௩ மிகுதியாய் அவர்களை அடிப்பித்தபின்பு, சிறைச்சாலையிலே வைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கும்படி சிறைச்சாலைக்காரனுக்குக் கட்டளையிட்டார்கள்.

௨௪ அவன் இப்படிப்பட்ட கட்டளையைப் பெற்றபொழுது, அவர்களை உட்காவலறையிலே அடைத்து, அவர்கள் கால்களைத் தொழுமரத்திலே மாட்டிவைத்தான்.

௨௫ அர்த்தராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; காவலிலிருந்தவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

௨௬ சடிதியிலே சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக மிகவும் பலமான பூமியதிர்ச்சி உண்டாயிற்று; உடனே கதவுகளெல்லாம் திறவுண்டன; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயின.

௨௭ சிறைச்சாலைக்காரன் விழித்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்றெண்ணி, கத்தியை உருவித் தன்னைக் கொலைசெய்ய எத்தனமாயிருந்தான்.

௨௮ பவுலென்பவன் நாங்களெல்லாரும் இங்கேயிருக்கிறோம். ஆகையால் நீ உனக்கு

கிசெட்டோனறு செய்யாதிருப்பாயாகவென்று மிகுந்தசத்தத்தோடேகூப்பிட்டான.

௨௯ அப்பொழுது அவன்விளக்குகளையழைப்பித்து, உள்ளே ஓடிநடுக்கமடைந்தவனாய்ப் பவுலுக்குஞ் சீலாவுக்குமுன்பாகவிழுந்து,

௩௰ பின்பு அவர்களைவெளியே அழைத்துக்கொண்டுபோய், ஆண்டவர்களே, இரட்சிக்கப்படுகிறதற்குநான் என்னசெய்யவேண்டுமென்றான.

௩௧ அதற்கவர்கள கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொள்வாயாக. அப்பொழுதுநீயும உன்வீட்டாரும இரட்சிக்கப்படுவீர்களென்றுசொல்லி,

௩௨ அவனுக்கும அவனுடையவீட்டிலிருந்தயாவருக்கும கர்த்தருடைய வசனத்தைப்போதித்தார்கள.

௩௩ மேலும அவ்விராத்திரியில அந்நேரத்திலே அவன அவர்களைச்சேர்த்துக்கொண்டு, அடிகளாலானகாயங்களைக் கழுவினான. அன்றியும அவனும அவனைச்சேர்ந்தயாவரும உடனேஞானஸ்நானம பெற்றார்கள.

௩௪ பின்பு அவன அவர்களைத்தன்வீட்டிற்குள அழைத்துக்கொண்டுபோய், அவர்களுக்குப்போசனங்கொடுத்துத்தானுந்தன்வீட்டாரனைவரும பராபரனில விசுவாசிகளானபடியினாலே மிகவும மகிழ்ச்சியாயிருந்தான.

௩௫ உதயமானபொழுது, துரைகள் தலையாரிகளையழைத்து அந்தமனிதரைவிடுவிக்கும்படிசொல்லுங்களென்றனுப்பினார்கள.

௩௬ சிறைச்சாலைக்காரன பவுலுடனே சொன்னதாவது. உங்களைவிடுதலையாக்கும்படிக்குத்துரைகள கட்டளையனுப்பினார்கள. ஆகையால நீங்களபுறப்பட்டு, சமாதானத்துடனே போவீர்களாகவென்றான்.

௩௭ அதற்குப்பவுலசொன்னது. உரோமராகிய எங்களையவர்கள நியாயமவிசாரியாமல வெளியரங்கமாய அடிப்பித்துச்சிறைச்சாலையிலேபோட்டு, இப்பொழுதுஇரகசியமாய எங்களைவிடுதலையாக்குகிறார்களோ. அப்படியலல அவர்களேவந்து, எங்களைவெளியே அழைத்து அனுப்பிவிடக்கடவர்களென்றான.

௩௮ இந்தவசனங்களைத்தலையாரிகள துரைகளுக்கறிவித்தார்கள. உரோமராயிருக்கிறார்களென்று அவர்களகேட்டபொழுது, பயம அடைந்துவந்து அவர்களுடனேதயவாகப்பேசிக்கொண்டு,

௩௯ பின்பு அவர்களைவெளியே அழைத்துப்போயப்பட்டினத்தைவிட்டுப்போகும்படிகேட்டுக்கொண்டார்கள.

௪௰ அந்தப்படி அவர்களசிறைச்சாலையிலிருந்துபுறப்பட்டு, லீதியாளிடத்திற்குப்போய், சகோதரரைக்கண்டு, அவர்களுக்கு ஆறுதல சொல்லிப்புறப்பட்டுப்போனார்கள.

௧௭. அதிகாரம்.

[(௧) அவர்கள் தெசலோனிக்கேயூர் [illegible] போய்ப்பிரசங்கித்தது, (௫) [illegible] கலகஞ்செய்தது, (௰) அவர்கள் பெரோயாவூருக்குப்போய் [illegible] அவ்வூரார் விசுவாசித்தது [illegible] (௰௬) பவுல் அத்தேனே [illegible] பிரசங்கம்பண்ணினது.]

அவர்கள அம்பிப்போலிப்பட்டணத்தையும அப்பொலோனியாப்பட்டணத்தையுங் கடந்துதெசலோனிக்கேப்பட்டணத்துக்குப் போனார்கள. அங்கேயூதருக்கு [illegible] ஜெப ஆலயமிருந்தது.

௨ பவுல்தன்வழக்கத்தின்படி [illegible] அவர்களிடத்திற்குப்போய், மூன்று ஓய்வுநாட்களில் வேதவாக்கியங்களின் நிமித்தம் [illegible] அவர்களுடனேசம்பாஷித்து [illegible] திருஷ்டாந்தப்படுத்தி,

௩ கிறிஸ்துபாடுபடவும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும வேண்டியதென்று [illegible] நானுங்களுக்கறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்துவென்றுதிருஷ்டாந்தப்படுத்தினான.

௪ அவர்களில் சிலர் அதை [illegible] பவுலையுஞ் சீலாவையுஞ் சேர்ந்துகொண்டார்கள. தேவ பக்தியுள்ள [illegible] கிரேக்கரில் திரளான பேரும் [illegible] ஸ்திரீகளில் அநேகம்பேரும [illegible] செய்தார்கள.

௫ சமமதியாத யூதர்கள் [illegible] கொண்டு சந்தைகளில் திரிகிற [illegible] பொல்லாதமனிதரைச்சேர்த்துக்கொண்டு [illegible] கூட்டங்கூடி, பட்டணத்தில் கலகம் [illegible] யாசோனுடையவீட்டைத் [illegible] அவர்களை ஜனங்களுக்கு [illegible] கொண்டுபோகும்படி வகை தேடினார்கள.

௬ அவர்களைக்காணாமலிருந்த [illegible] அவர்கள யாசோனையுஞ் சில சகோதரரையும் [illegible] பட்டணத்துத்தலைவரிடத்திற்கு [illegible] கொண்டுபோய் உலகத்தைக் கலக்குகிறவர்கள இங்கேயும வந்திருக்கிறார்கள.

௭ யாசோன இவர்களை ஏற்றுக்கொண்டான. இவர்களெல்லாரும [illegible] னுமவேறொருவனை இராஜாவென்று [illegible] லவ், இராயனுடையகட்டளைகளுக்கு [illegible] தமாய்ச்செய்கிறார்களென்று [illegible]

௮ இவைகளைக்கேட்டுக்கொண்டிருந்த [illegible] களையும் பட்டணத்துத்தலைவர்களையும் [illegible] பண்ணினார்கள.

௯ அப்பொழுது அவர்கள யாசோனிடத்திலும மற்றவர்களிடத்திலும் [illegible] ஜாமீன் வாங்கிக்கொண்டு அவர்களை விட்டார்கள.

௰ உடனே சகோதரர்கள் இராத்திரிகாலத்திலே பவுலையுஞ் சீலாவையும் பெரோயா ஊருக்கனுப்பிவிட்டார்கள். அவர்கள் அங்கே சேர்ந்து, யூதர்களுடைய செப ஆலயத்துக்குப் போனார்கள்.

௰௧ தெசலோனிக்கேயிலுள்ளவர்களிலும் அவர்கள் மேன்மையுள்ளவர்களாய் மிகுந்த மனப்பூர்வமாய்த் திருவசனத்தை யேற்றுக்கொண்டு, காரியங்கள் மெய்யாய் அப்படிப்பட்டவைகளோ அல்லவோவென்று நாடோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்தார்கள்.

௰௨ ஆதலால் அவர்களில் அநேகம்பேர் கனம்பொருந்திய கிரேக்கஸ்திரீகளும் புருஷரும் விசுவாசிகளானார்கள்.

௰௩ பெரோயாவூரிலேயும் பராபரனுடைய வசனம் பவுலினால் அறிவிக்கப்படுகின்றதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபொழுது, அங்கேயும் போய்ச் சனங்களைக் கலக்கப்படுத்தினார்கள்.

௰௪ உடனே சகோதரர்கள் பவுலைச் சமுத்திரத்தின் வழியாய்ப் போக அனுப்பினார்கள். சீலாவுந் தீமோத்தேயும் பின்னும் அங்கே தங்கினார்கள்.

௰௫ பவுலை வழிநடத்திப் போனவர்கள் அவனை அத்தேனேபட்டினத்திற்கழைத்துப்போய் அங்கே சீலாவுந் தீமோத்தேயும் தீவிரத்தோடே தன்னிடத்தில் வரவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லும்படி கற்பனை பெற்றுப் புறப்பட்டுப்போனார்கள்.

௰௬ அவர்கள் வரும்படிக்குப் பவுலென்பவன் அத்தேனேபட்டினத்திற் காத்துக்கொண்டிருக்கையில், பட்டினம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைப்பார்த்து மனமெரிந்த வயிராக்கியத்தை யடைந்து கொண்டு,

௰௭ பின்பு செப ஆலயத்திலே யூதர்களோடும் மற்றப் பத்தியுள்ள பேர்களோடும் சந்தைவெளியிலே தனக்கெதிர்ப்பட்டவர்களோடும் நாடோறும் பேசிக் கொண்டான்.

௰௮ அப்பொழுது எப்பிகூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளிற் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணிக்கொண்டுவருங் காலத்திலே சிலர் இந்த வாயாடி என்ன பேசவானென்றார்கள். சிலர் அவன் இயேசுவையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே, இவன் அந்நியதேவர்களையறிவிக்கிறவனென்று தோன்றுகின்றதென்றார்கள்.

௰௯ அப்பொழுது அத்தேனேபட்டினத்தாரெல்லாரும் அங்கே தங்கும்படிவருகிற அந்நியரும் புதியவைகளைக் கேட்கிறதிலும் பேசுகிறதிலுமேயன்றி, மற்றொருவிஷயத்திலும் தங்கள் காலத்தைப்போக்கவிரும்பாதவர்களானபடியால்,

௨௰ அவர்கள் அவனை மாருஸ் மேட்டிலுள்ள நியாய ஸ்தலத்திற்கழைத்துப்போய், நீ சொல்லுகிற புதிய உபதேசத்தை நாங்கள் அறியலாமா.

௨௧ நூதனமான காரியங்களையே எங்கள் காதுகேட்கப்பண்ணுகிறாய் ஆகையால் நாங்கள் அவைகளை அறியவேண்டுமென்றிருக்கிறோமென்றார்கள்.

௨௨ அப்பொழுது பவுல் மாருஸ்மேட்டின் நடுவிலே நின்று சொன்னதாவது. அத்தேனேயரே! எல்லாவற்றிலும் நீங்கள் தேவபத்தியுள்ளவர்களாயிருக்கிறீர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளை நோக்கிப் பார்க்கும்பொழுது, அறியப்படாத தேவனுக்கென்றெழுதியிருக்கிற ஒரு பீடத்தைக் கண்டேன்.

௨௩ நீங்கள் அறியாமற் பணிவிடைசெய்கிறவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

௨௪ உலகத்தையும் அதிலுள்ள யாவையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவரானதால், கைகளாற் கட்டப்பட்ட கோவில்களில் வாசம்பண்ணுகிறதில்லை.

௨௫ யாதொன்றும் தமக்கு வேண்டியதாயிருக்கிறதுபோல மனிதர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் மற்றயாவையும் அவர் கொடுக்கிறாரே.

௨௬ எல்லாமனும் அவரே ஒரே இரத்தத்திலிருந்து மனிதரெல்லாரையுந் தோன்றப்பண்ணி, நம்மிலொருவருக்குந் தூரமல்லாத பராபரனைத் தாமே அவர்கள் தடவியடைந்துகொள்ளத்தக்கதாக,

௨௭ தம்மைத் தேடும்படிக்கு, அவர்களுக்கு முன்திட்டமாக்கப்பட்ட காலங்களையுங் குடியிருப்பெல்லைகளையுங் குறித்து, அவர்கள் பூமியெங்குங் குடியிருக்கும்படி செய்தார்.

௨௮ அவராலே நாம் பிழைக்கிறோம் அசைகிறோம் இருக்கிறோம். அப்படியே உங்களில் சில புலவர்களும், அவருடைய வம்சத்தாராயிருக்கிறோமென்று சொன்னார்கள்.

௨௯ ஆகையால் நாம் பராபரனுடைய வம்சத்தாராயிருக்கத் தெய்வம் மனிதருடைய சித்திரவேலையினாலும் யோசனையினாலும் பொன்வெள்ளி கல் இவைகளாற் செய்யப்பட்டதற்கொப்பாயிருக்குமென்றெண்ணி நாம் நினைக்கலாகாது.

௩௰ அறியாமையுள்ள காலங்களைப் பராபரன் காணாதவர்போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எவ்விடத்திலுமுள்ள மனிதர் யாவருக்குங் கட்டளையிடுகிறார்.

௩௧ மேலும் ஒருநாளைக் குறித்தார். அதிலே அவர் தாம் நியமித்த ஒருவனைக்கொண்

௩ [illegible] யாயிருக்கும் நியாய [illegible], அவ்வமைதியோடே [illegible] அவர் அதினிச [illegible] விளங்கப் பண்ணி [illegible].

[illegible] உயிரோடெழுந்திருக [illegible] கேட்டபொழு [illegible]. சிலர் பின்பொரு [illegible] உன்னிடத்திற்கேட் [illegible].

[illegible] அவர்களிலிரு [illegible].

[illegible] பின் [illegible]. அவர்களிலேயொ [illegible] நியாயாதிபதியாகிய, தாமரி யென்னும் [illegible] இவர்களுட னே கூடவேயுமிருந்தார்கள்.

௰௬. அதிகாரம்.

[(க) பவுலு [illegible] போதி [illegible], (௯) [illegible], (௰௨) [illegible], (௰௮) [illegible], (௨௪) [illegible] அப்பொல்லோ [illegible].]

அதன்பின்பு பவுல் அத்தேனேபட்டின த்தைவிட்டு, கொரிந்து பட்டினத்திற்கு வந்து,

௨ [illegible] பொந்து [illegible] யூதனொருவனைக் கண்டு, [illegible] உரோமைநகரிலிருந்து [illegible] இத்தாலி நாட்டிலிருந்து [illegible] ஆக்கிலா வென்னும் [illegible] அவனுடைய மனைவி யாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு,

௩ அவர்களிடத்திற் போய்த் தானும் அவர்களும் [illegible] தொழிலைச் செய்தவர்களான படியினாலே, அவர்களிடத்திலேதங்கித்தொ ழில்செய்தான். அவர்களுடைய தொழில் கூடாரம்பண்ணுகிறது.

௪ அன்றியும் அவன் ஓய்வுநாடோறும் ஜெப ஆலயத்திலே சம்பாஷணைபண்ணி, யூத ருக்கும் கிரேக்கருக்கும் புத்திசொன்னான்.

௫ மக்கெதோனியா நாட்டிலிருந்து சீலாவு ந்தீமோத்தேயும் வந்தபொழுது, பவுல் தன் ஆவியிலே அதிகவைராக்கியங்கொண்டு இயேசுவானவரே கிறிஸ்து என்று யூதருக் குச்சாட்சிகொடுத்தான்.

௬ அவர்களே எதிர்பேசித் தூஷணித்த பொழுது, அவன் தனவஸ்திரங்களை யுதறி, உங்களுக்குக் கேடுவருமபடிக்கு நீங்களே [illegible] வாயிருக்கிறீர்கள்.

எ நான் சுத்தமாயிருக்கிறேன். இதுமு தல்நான்புறதேசத்தார்களிடத்திற் போ கிறேனென்று அவர்களுடனே சொல்லி,

அவ்விடத்தைவிட்டுத் [illegible] து என்பவனுடைய வீட்டிலே [illegible] அந்தவீடு ஜெப ஆலயத்திற்கு [illegible] யிருந்தது.

அ மேலும் ஜெப ஆலயத்தலைவ[illegible] கிரிஸ்புதனவீட்டாரெல்லாரோடே [illegible] சுவாசித்தான். கொரிந்தரில் [illegible] கருங்கவிசேஷத்தைக் கேட்டு, [illegible] து ஞானஸ்நானம்பெற்றார்கள்.

௯ பின்பு இராத்திரியிலே [illegible] சனத்திலே பவுலுடனே [illegible]

இந்தப்பட்டினத்திலே [illegible] னுடைய சனங்களாயிருக்கிறார்கள் [illegible] யாலே நான் உனக்குள்ளிருப்பேன். [illegible] ம உனக்குத் தீமைசெய்ய [illegible] ரகைப்போவதில்லை.

௰ அன்படியினாலே நீ [illegible] சுவாயாக. மவுனமாயிராதே [illegible] னார்.

௰௧ அந்தப்படி அவன் இருவருடைய [illegible] ஆறுமாதமும் அங்கேதங்கி [illegible] டையவசனத்தைக் [illegible] தேசம் [illegible].

௰௨ பின்பு கல்லியோனென்பவன் [illegible] யா நாட்டிலே பிரதிநிதியான [illegible] யூதர்கள் ஒருமனப்பட்டுப் [illegible] ரோதமாயெழும்பி, அவனை [illegible] நிற்குமுன்பாகக்கொண்டுபோய்,

௰௩ இவன்வேதத்தைக் [illegible] விரோதமாய்ப்பராபரனைச்சேவிக்க [illegible] ருக்குப்போதிக்கிறானென்றார்கள்.

௰௪ அதற்குப்பவுல் [illegible] கையிற், கல்லியோன யூதரை நோக்கி [illegible] ரவது. யூதரே, இது [illegible] மப்பொல்லாங்கான காரியம் [illegible] களுக்குப் பொறுமையாய்ச் செவிகொ [illegible] நியாயமுண்டாயிருக்கும்.

௰௫ இது உபதேசத்துக்கும் நாமங் களுக்கும் உங்கள்வேதத்துக்கும் [illegible] மானபடியினாலே நீங்களே [illegible] கருதிக்கொள்ளுங்கள்; நான் நியாயாதிபதியாயிருக்க [illegible] மனதில்லை. இவையெல்லாம் நீங்களே [illegible] பீர்களாகவென்றுசொல்லி,

௰௬ அவர்களை நியாயாசனத்தைவிட்டுப் பபோகப்பண்ணினான்.

௰௭ அப்பொழுது கிரேக்கரெல்லாரும் ஜெப ஆலயத்தலைவனாகிய சொஸ்தேனே யைப்பிடித்து நியாயாசனத்துக்கு முன்பாக அவனை அடித்தார்கள். அதைக்குறித்துக் கல்லியோன் விசாரிக்கவில்லை.

௰௮ பின்னும் பவுல் அநேகநாளங் [illegible] கேதரித்திருந்தபின்பு அவன் [illegible] டைய உத்தரவு வாங்கிக்கொண்டு [illegible] கொருபிரார்த்தனையுண்டாயிருந்தபடியால் கெங்கிரேயாப்பட்டினத்திலே [illegible]

ரணிச் சீரியாத்தேசத்திற்குப் போகும்படி கப்பலேறிப்போனான். பிரிஸ்கில்லாளும் அக்கிலாவும் அவனுடனே கூடப்போனார்கள்.

யகூ அவன் எபேசுபட்டணத்திற்குச் சேர்ந்தபொழுது அவர்களையங்கே விட்டுச் ஜெபாலயத்திற் பிரவேசித்து யூதருடனே சம்பாஷணைபண்ணினான்.

உய அவர்கள் அவனைச் சிலகாலந் தங்களோடிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபொழுது அவன் சம்மதியாமல்,

உக வருகிற பண்டிகையிலே நான் எப்படியும் எருசலேமிலிருக்கவேண்டும். பராபரனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்தில் வருவேனென்று சொல்லி அவர்களுக்கு உத்தரவு வாங்கிக்கொண்டு கப்பலேறி எபேசுபட்டணத்தைவிட்டு,

உஉ செசரியாப் பட்டணத்திற்கு வந்து பின்பு (எருசலேமுக்குப்) போய்ச் சபையின் சுகத்தை விசாரித்துக்கொண்டு, அந்தியோக்கியாவுக்குச் சென்று,

உங அங்கே சிலகாலஞ் சஞ்சரித்தபின்பு புறப்பட்டுக் கலாத்தியா நாட்டிலும் பிரிகியா நாட்டிலும் ஊர்களெங்கும் நடந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்திக்கொண்டுவந்தான்.

உச அக்காலத்திலே அலெக்சந்திரியா பட்டணத்திற் பிறந்தவனுமாயுள்ள, சாதுரியனுமாய் வேதவெழுத்துகளில் வல்லவனாயிருக்கிற அப்பொல்லோஸ் என்று பேர்கொண்ட ஒரு யூதன் எபேசுபட்டணத்துக்குப் போனான்.

உரு அவன் கர்த்தருடைய மார்க்கத்தைக் குறித்து உபதேசங்கேட்டு, யோவானுடைய ஸ்நானத்தை மாத்திரம் அறிந்திருந்து, கர்த்தாவுக்குரியவைகளைக் குறித்து [illegible]ள்ள மனதோடே பேசித் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான்.

உசா ஜெப ஆலயத்திலே தயிரியமாய்ப் பேசினான். அக்கிலாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டபொழுது, அவனைச் சேர்த்துக்கொண்டு, பராபரனுடைய மார்க்கத்தை அவனுக்கு அதிக திட்டமாய்க் காண்பித்தார்கள்.

உஎ பின்பு அவன் அகாயா நாட்டிலே போகவேண்டுமென்றிருக்கையில், சீஷர் அவனையுபசாரஞ் செய்யும்படிக்குச் சகோதரர் அவர்களுக்கெழுதினார்கள்.

உஅ அவன் அங்கே சேர்ந்தபின்பு, அவன் வெளியரங்கமாய் யூதர்களுடனே பலமாய்த் தர்க்கம்பண்ணிக்கொண்டு, இயேசு கிறிஸ்து என்று வேதவாக்கியங்களால் தெளிவாய்க் காண்பித்தபடியால், கிருபையினாலே விசுவாசிகளாயிருந்தவர்களுக்கு மிகுந்த உதவியாயிருந்தான்.

யகூ. அதிகாரம்.

[(க) பவுல் எபேசிலே சிலருக்கு ஞானஸ்நானத்தைக் கொடுத்தபொழுது அவர்கள் தேவ ஆவியானவரைப் பெற்றதும், (அ) அவன் பின்னும் போதித்து அற்புதங்களைச் செய்ததும், (யங) ஸ்கேவாவின் மக்கள் பசாசுகளாலே ஜெயிக்கப்பட்டதும், (யஎ) தேவவசனம் வளர்ந்ததும் (உங) தெமெத்திரியென்பவனாலே கலகமுண்டானதும்.]

அப்பொல்லோவென்பவன் கொரிந்து பட்டணத்திலிருக்கையில் பவுல் மேலான தேசங்களில் திரிந்துகொண்டு, எபேசுபட்டணத்திற்குப் போனபொழுது,

உ சில சீஷர்களைக் கண்டு, நீங்கள் விசுவாசிகளானபொழுது, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டீர்களாவென்றான். அதற்கவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்று நாங்கள் கேள்விப்படவுமில்லையென்றார்கள்.

ங அப்பொழுது அவன் சொன்னது. அப்படியானால், எப்படிப்பட்ட ஞானஸ்நானம் பெற்றீர்களென்றான். அவர்கள் யோவான் கொடுத்த ஸ்நானத்தைப் பெற்றோமென்றார்கள்.

ச அப்பொழுது பவுல் சொன்னது. யோவான் தனக்குப்பின் வருவாராகிய கிறிஸ்து இயேசுவை விசுவாசிக்கவேண்டுமென்று ஜனங்களுக்குச் சொல்லி, மனந்திரும்புதற்கேற்ற ஞானஸ்நானத்தைக் கொடுத்தானேயென்றான்.

ரு அதையவர்கள் கேட்டபொழுது அவர்கள் கர்த்தராகிய இயேசுவினுடைய நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

சா அல்லாமலும் பவுல் அவர்கள்மேலே கைகளை வைத்தபொழுது, பரிசுத்த ஆவியானவர் அவர்களிடத்தில் வந்தார். அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித் தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்.

எ அந்த மனிதரெல்லாரும் ஏறக்குறைய பன்னிரண்டுபேராம்.

அ பின்பு (பவுல்) ஜெப ஆலயத்திற்குப் போய்த் தயிரியமாய்ப் பிரசங்கம்பண்ணி, மூன்றுமாதமளவும் பராபரனுடைய இராச்சியத்திற்குரியவைகளைப் பேசித் தெளிவாய்க் காண்பித்துக்கொண்டுவந்தான்.

கூ சில கடினமான மனதுள்ளவர்களுமாய் அவிசுவாசிகளுமாயிருந்து, கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபொழுது, அவன் அவர்களை விட்டுவிலகிச் சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு, தீறன்னு என்னவனுடைய பள்ளிக்கூடத்திலே நாடோறுஞ் சம்பாஷித்துக்கொண்டுவந்தான்.

௰ இப்படி இரண்டுவருஷம் நடந்தது. அதினாலே ஆசியாவிலே குடியிருந்த யூதர்களுங் கிரேக்கர் இவர்களெல்லாருங் கர்த்தராகிய இயேசுவைக்குறித்த வசனத்தைக் கேட்டிருந்தார்கள்.

௰௧ அன்றியும் அதிசயமான அற்புதங்களைப் பராபரன் பவுலின் கைகளினாலே செய்துவருகையில்,

௰௨ அவனுடைய சரீரத்திலிருந்து வேர்வைச்சீலைகளையுங் கச்சைகளையும் வியாதிப்பட்டவர்கள்மேலே வைத்தவுடனே, வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களிலிருந்து புறப்பட்டன.

௰௩ அப்பொழுது தேசாந்திரிகளாய்த் திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரிற் சிலர் பொல்லாத ஆவிபிடித்திருந்தவர்கள் மேற் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத்துணிந்து, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரிலே உங்களுக்கு ஆணையிடுகிறோமென்றார்கள்.

௰௪ பிரதான ஆசாரியனாகிய இஸ்கேவா வென்னும் யூதனுடைய குமாரர் ஏழுபேர் இப்படிச்செய்தார்கள்

௰௫ அவர்களுக்குத்தரவாகப் பொல்லாத ஆவிசொன்னதாவது. இயேசுவை யறிந்திருக்கிறேன். பவுலையும் அறிவேன். நீங்கள்யாரென்றுசொன்னவுடனே,

௰௬ பொல்லாத ஆவியையுடைய மனிதன் அவர்கள்மேற் பாய்ந்து, அவர்களைத் தனக்குட்படுத்திச்செயிக்க, அவர்கள் நிருவாணிகளாகக் காயமட்டவர்களாயந்த வீட்டைவிட்டோடிப்போனார்கள்.

௰௭ இது எபேசுவிலேகுடியிருக்கிற யூதர் கிரேக்கரனைவருக்குந் தெரியவந்தபொழுது அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள். கர்த்தராகிய இயேசுவின் நாமமவர்களுக்குள்ளேமேன்மைப்பட்டது.

௰௮ அன்றியும் விசுவாசிகளானவர்களில் அநேகர்சேர்ந்து, தங்கள்செய்கைகளைவெளிப்படுத்தி, அறிக்கையிட்டார்கள்.

௰௯ அன்றியும் வீண்வித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக்கொண்டுவந்து, எல்லார் முன்பாகவுஞ் சுட்டெரித்தார்கள்.

௨௰ அவைகளின்கிரயம் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசென்று மதிக்கப்பட்டது. இவ்வளவு பலமாய்க் கர்த்தருடையவசனம்வளர்ந்து, வல்லமையைக்காண்பித்தது.

௨௧ இவைகள்நிறைவேறினபின்பு பவுலும் மக்கெதோனியா அகாயா என்னுந் தேசங்களின்வழியாய் எருசலேமுக்குப்போகும்படி மனதிலே யோசனைகொண்டு, நான் அங்கேயிருந்து, பின்பு உரோமை நகரியையும் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு,

௨௨ தனக்கு உதவிசெய்கிறவர்களில் இரண்டுபேராகிய தீமோத்தேயுவையும் எராஸ்துவையும் மக்கெதோனியா நாட்டுக்கனுப்பித் தான் பின்னுஞ்சில காலம் ஆசியா நாட்டிலேயிருந்தான்.

௨௩ அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்து மிகுந்த கலகம் பிறந்தது.

௨௪ எப்படியென்றால், தேமேத்திரியு என்னுநாமமுள்ள ஒரு தட்டான் தியானாளுக்காக வெள்ளியினாற் சிறுகோவில்களைச் செய்துகொண்டு, தொழிலாளிகளுக்கு மிகுந்த ஆதாயம்வருவித்துவந்தான்.

௨௫ அவர்களையும் அப்படிப்பட்ட தொழில்செய்கிறமற்றவர்களையும் அவன் வரவழைத்துச்சொன்னதாவது. மனுஷரே, உங்களுக்குத்தெரிந்திருக்கிறபடி, இந்தத்தொழிலினாலே நமக்கு [illegible]

௨௬ மேலும் நீங்கள் காண்கிறபடி, அந்தப் பவுலென்பவன் கையினாற் செய்யப்பட்டவைகள் தேவர்களல்லவென்றுசொல்லி, எபேசுவிலே மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா நாடெங்கும் அநேக சனங்களுக்குப் போதித்து அவர்களைமாறுபாடாக்கினான்.

௨௭ அதினாலே நம்முடைய இந்தத்தொழில் அற்றுப்போகிறதற்கேதுவாயிருக்கிறதுமல்லாமல், மகாதேவியாகிய தியானாளுடைய கோவில் எண்ணமற்றுப்போகிறதற்கும், ஆசியா தேசத்தாரெல்லாராலும் பூச்சக்கரத்தார் அனைவராலும் சேவிக்கப்படுகிற அவளுடைய மகிமை அழிந்துபோகிறதற்கும் ஏதுவுண்டாயிருக்கிறதென்றான்.

௨௮ அதையவர்கள் கேட்டு, மிகுந்த கோபமடைந்து, எபேசியருடைய தியானாளே பெரியவளென்று கூப்பிட்டுச் சத்தமிட்டார்கள்.

[(க) நித்தியசீவனாகிய கிறிஸ்துவைக்குறித்து அப்போஸ்தலன் சாட்சியைக் கொடுத்தது. (௬) ஒளியாகிய பராபரனுக்கு ஐக்கியமுள்ளவர்களின் குணத்தைக் காட்டியது.]

ஆதியிலிருந்ததுமாய், நாங்கள் கேட்டதுமாய், எங்கள் கண்களினாலே கண்டதுமாய், நாங்கள் நோக்கிப்பார்த்ததுமாய், எங்கள் கைகளாலே தொட்டதுமாயிருக்கிற சீவனையுடைய வார்த்தையைக் குறித்து (உங்களுக்கறிவிக்கிறோம்.)

௨ அந்தச் சீவன் வெளிப்பட்டது. பிதாவினிடத்திலிருந்ததுமாய் நமக்கு வெளிப்பட்டதுமாயிருக்கிற அந்த நித்தியசீவனையே நாங்கள் கண்டு அதைக்குறித்துச் சாட்சி கொடுத்து, அதையே உங்களுக்கறிவிக்கிறோம்.

௩ நீங்களும் எங்களோடேகூட ஐக்கியமுள்ளவர்களாகும்படிக்கு நாங்கள் கண்டுங்கேட்டுமிருந்ததை உங்களுக்கறிவிக்கிறோம். நாங்களோபிதாவுடனேயும் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவுடனேயும் ஐக்கியமுள்ளவர்களாயிருக்கிறோம்.

௪ உங்களுக்குச் சந்தோஷம் நிறைந்ததாயிருக்கும்படிக்கு இவைகளையுங்களுக்கெழுதுகிறோம்.

௫ மேலும் அவரிடத்திலநாங்கள் கேட்டதுமாய் உங்களுக்கு அறிவிக்கிறதுமாயிருக்கிற விசேஷமென்னவெனில், பராபரன் எவ்வளவாகிலும் இருளில்லாமல் ஒளியாயிருக்கிறார்.

௬ நாமிருளிலேநடந்து அவரோடேஐக்கியப்பட்டவர்களென்றுசொல்லிக்கொண்டால், நாமசத்தியத்தைநடப்பியாமற்பொய்பேசுகிறவர்களாயிருப்போம்.

௭ அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலேநடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அல்லாமலும் அவருடையகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்களெல்லாவற்றையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

௮ நமக்குப்பாவமில்லையென்றோமானால், நம்மைநாமேவஞ்சிக்கிறவர்களாவோம்; சத்தியம் நமக்குள்ளேயிராது.

௯ நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயமும் நம்மைவிட்டு நீங்க நம்மைச்சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.

௰ நாம்பாவஞ்செய்யவில்லையென்றோமானால் நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாவோம். அவருடைய வார்த்தையும் நமக்குள்ளேயிராது.

௨. அதிகாரம்.

[(௧) பாவஞ்செய்யாதபடிக்குப்புத்திசொல்லி, (௬) அன்புள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும், (௧௫) உலகத்தில அன்புகூராதிருக்கவேண்டுமென்றும், (௧௮) அந்திக்கிறிஸ்துகளுக்கு விலகவேண்டுமென்றும், (௨௪) தேவவசனத்தைக் காத்துக்கொள்ளவேண்டுமென்றும் காட்டியது.]

௧ என்பிள்ளைகளே! நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு, இவைகளையுங்களுக்கெழுதுகிறேன். ஒருவன் பாவஞ்செய்தாலும் நீதியுள்ளவராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் காரியகாரர் நமக்காகப்பிதாவினிடத்திலிருக்கிறார்.

௨ அவர் நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற பலியானவர்; நம்முடைய பாவங்களுக்காக மாத்திரமல்ல, சர்வலோகத்தினுடைய பாவங்களுக்காகவும் (அப்படியேயிருக்கிறார்)

௩ அவருடைய கற்பனைகளை நாங்கள் கைக்கொள்ளுகிறவர்களானால் அவரை அறிந்துகொண்டிருக்கிறோமென்று அதினால் அறிவோம்.

௪ அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் பொய்யனாயிருக்கிறான். சத்தியம் அவனுக்குள்ளேயில்லை.

௫ அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்திலே பராபரனுடைய அன்பு மெய்யாய் நிறைவேறியிருக்கிறது. நாம் அவருக்குள் இருக்கிறோமென்று அதினாலே அறிந்திருக்கிறோம்.

௬ அவரிடத்தில நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும்.

௭ பிரியமானவர்களே! நான் உங்களுக்குப் புதியகற்பனையையல்ல, ஆதிமுதல் நீங்கள் பெற்றிருக்கிற பழையகற்பனையையே எழுதுகிறேன். அந்தப் பழையகற்பனை நீங்கள் ஆதிமுதற் கேட்டிருக்கிற வசனமே.

௮ அன்றியும் நான் உங்களுக்குப் புதியகற்பனையையும் எழுதுகிறேன். இருள் நீங்கிப்போக, மெய்யான ஒளி இப்போது பிரகாசிக்கிறபடியால் இது அவருக்குள்ளும் உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது.

௯ தன் சகோதரனைப் பகைக்கிறவன் ஒளியிலேயிருக்கிறேனென்று சொல்லுகிறவன் இதுவரைக்கும் இருளிலேயிருக்கிறான்.

௰ தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான். இடறலவனிடத்திலில்லை.

௧௧ தன் சகோதரனைப் பகைக்கிறவனோ இருளிலேயிருந்து, இருளிலே நடந்து, இருள் தன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் நடக்கிற இடம் இன்னதென்று அறியாமலிருக்கிறான்.

௧௨ பிள்ளைகளே! அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதால், உங்களுக்கெழுதுகிறேன்.

௧௩ பிதாக்களே! ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கெழுதுகிறேன். வாலிபரே! பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததால் உங்களுக்கெழுதுகிறேன். குழந்தைகளே! நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதால் உங்களுக்கெழுதுகிறேன்.

௰௪ பிதாக்களே! ஆதிமுதலாயிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதால் உங்களுக்கு எழுதினேன். வாலிபரே! தேவவசனம் உங்களிடத்தில் நிலைத்திருக்கிறது. பொல்லாங்கனைச் செயித்ததினால் உங்களுக்கு எழுதினேன்.

௰௫ உலகத்தையும் உலகத்திலுள்ளவைகளையும் அன்புகூராதிருப்பீர்களாக. ஒருவன் உலகத்தில் அன்புகூருகிறவனாயிருந்தால் பிதாவின் அன்பு அவனிலில்லாதிருக்கிறது.

௰௬ எப்படியெனில் மாமிசத்தின் இச்சையும் கண்களுடைய இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவையெல்லாம் பிதாவினாலுண்டாயிராமல் உலகத்தினாலுண்டாயிருக்கிறது.

௰௭ உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகும். பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைநிற்பான்.

௰௮ குழந்தைகளே! (இது) கடைசிநேரமாயிருக்கிறது. அந்திக்கிறிஸ்துவின் எதிராளி வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறபடி இப்பொழுதே கிறிஸ்துவின் எதிராளிகள் அநேகருண்டாயிருக்கிறார்கள். அதினாலே இது கடைசி நேரமாயிருக்கிறதென்று அறிகிறோம்.

௰௯ அவர்கள் நம்மிடத்திலிருந்து புறப்பட்டார்கள். ஆகிலும் அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களல்ல, நம்மைச் சேர்ந்தவர்களாயிருந்தார்களானால் நம்முடனே தரித்திருப்பார்களே. எல்லாரும் நம்மைச் சேர்ந்தவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே புறப்பட்டார்கள்.)

௨௰ நீங்கள் பரிசுத்தராலே அபிஷேகத்தைப்பெற்றுச் சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.

௨௧ சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல நீங்கள் அதையும் சத்தியத்தால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதையும் அறிந்திருக்கிறபடியால் உங்களுக்கெழுதினேன்.

௨௨ இயேசுவென்பவர் கிறிஸ்துவல்லவென்று மறுதலிக்கிறவனேயன்றி வேறார் பொய்யன். பிதாவையுங் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்துவுக்கெதிராளியானவன்.

௨௩ குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவையுடையவனல்ல. குமாரனையறிக்கைபண்ணிக்கொள்ளுகிறவன் பிதாவையுமுடையவனாயிருக்கிறான்

௨௪ ஆகையால் ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது. ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால் நீங்களுங் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

௨௫ அவர் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணினது நித்தியஜீவன். உங்களை வஞ்சிக்கிறவர்களைக்குறித்து, இவைகளை உங்களுக்கெழுதினேன்.

௨௬ அப்படியிருந்தும் நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைகொண்டிருக்கிறதால் ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டியதில்லை.

௨௭ அந்த அபிஷேகம் சகலகாரியங்களையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறதே பொய்யில்லாமல் சத்தியமாயிருக்கிறது. ஆகையால் அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

௨௮ இப்படியிருக்கப் பிள்ளைகளே அவர் வெளிப்படுகிறவராய் வரும்பொழுது நாம் அவரால் வெட்கப்படுத்தப்படாமல் தயிரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.

௨௯ அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்பது உங்களுக்குத் தெரிந்திருக்கில் நீதியைச் செய்கிறவனெவனோ அவன் அவரால் பிறந்தானென்றறிந்திருக்கிறீர்கள்.

௩. அதிகாரம்.

[(௧) பிதாவின் அன்பு பெரிதென்றும், (௩) அதினாலே நாம் பரிசுத்தரும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கவேண்டுமென்றும், (௰௧) ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரவேண்டுமென்றுங்காட்டியது.]

நாம் பராபரனுடைய பிள்ளைகளென்றழைக்கப்படும்படிச் (செய்ததினாலே) பிதாவானவர் நமக்குக்காண்பித்த மிகுந்த அன்பைநோக்கிப்பாருங்கள். உலகத்தார் அவரையறியாதபடியினாலே நம்மையறியாமலிருக்கிறார்கள். பிரியமானவர்களே!

௨ இப்பொழுது பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். (இனிமேல்) இன்னவிதமாயிருப்போமென்று இன்னம் வெளியரங்கமாகவில்லை (ஆகிலும் அவர் வெளிப்படும்பொழுது அவரிருக்கிறதன்மையாய நாம் அவரைத் தரிசிப்பதால்) அவருக்கொப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்.

௩ மேலும் இப்படி அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிறவனெவனோ அவன் அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோலத் தன்னையுஞ் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.

௪ பாவஞ்செய்கிறவனெவனோ அவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதஞ்செய்கிறான். பாவமானது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாயேயிருக்கின்றது.

௫ அன்றியும் நீங்கள் அறிந்துகொண்டபடி அவர் நம்முடைய பாவங்களை நீக்கும்படிக்கு வெளிப்பட்டார். அவரிடத்திலே பாவமில்லை.

௬ அவரிடத்தில் நிலைத்திருக்கிறவனெவனோ அவன் பாவஞ்செய்கிறதில்லை. பாவஞ்செய்கிறவனெவனோ அவன் அவரைக்காணவுமில்லை. அவரையறியவுமில்லை.

௭ பிள்ளைகளே! நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக. நீதியைச்செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோல நீதியுள்ளவனாயிருக்கிறான்.

௮ பசாசானவன் ஆதிமுதற் பாவஞ்செய்கிறான். ஆகையால் பாவஞ்செய்கிறவன் பசாசினுண்டாயிருக்கிறான். அந்த பசாசினுடைய கிரியைகளை யழிக்கும்படிக்கு பராபரனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

௯ பராபரனிற் பிறந்தவனெவனோ அவனுக்குள்ளே அவருடைய வித்திருக்கிறதால் அவன் பாவஞ்செய்யான். அவன் பராபரனிடத்திலே பிறந்தபடியால் பாவஞ்செய்யமாட்டான்.

௰ இதினாலே பராபரனுடைய பிள்ளைகளும் பசாசின் பிள்ளைகளும் வெளியரங்கமாகிறார்கள். நீதியைச்செய்யாமலும் தன் சகோதரனிடத்தில் அன்புகூராமலுமிருக்கிறவனெவனோ அவன் பராபரனாலுண்டானவனல்ல.

௰௧ என்னத்தினாலெனில், நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பது நீங்கள் ஆதிமுதல் அறிவிக்கக்கேட்ட விசேஷமாயிருக்கின்றது.

௰௨ பொல்லாங்கனாலுண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்கக்கூடாது. அவன் எதினிமித்தம் அவனைக்கொலைசெய்தான். தன் கிரியைகள் பொல்லாதவைகளுமாய் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தமே அப்படிச்செய்தான்.

௰௩ என் சகோதரரே! உலகத்தார் உங்களைப் பகைக்கிறதால் ஆச்சரியப்படாதிருப்பீர்களாக.

௰௪ நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கிச் சீவனுக்குட்பட்டிருக்கிறோமென்றறிந்திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்.

௰௫ தன் சகோதரனைப் பகைக்கிறவனெவனும் கொலைபாதகனாயிருக்கிறான். கொலைபாதகனெவனும் தனக்குள்ளே நித்திய சீவன் நிலைத்திராதென்று அறிந்திருக்கிறீர்கள்.

௰௬ அவர் நமக்குடைய சீவனை நமக்காக விட்டுவிட்டதினாலே, அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காகச் சீவனை விடக்கடவோம்.

௰௭ ஒருவன் இவ்வுலக பொருளுடையவனாயிருந்து தன் சகோதரனுக்குக் குறைவுண்டென்று கண்டும் [illegible] அடைத்துக்கொண்டால், அவனுக்குள்ளே பராபரனுடைய அன்பு எப்படி நிலையாயிருக்கும்?

௰௮ என் பிள்ளைகளே! வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.

௰௯ இதினாலே நாம் சத்தியத்தினுள்ளவர்களென்று அறிந்து நம்முடைய இருதயங்களை அவருக்கு முன்பாகத் திடப்படுத்தலாம்.

௨௰ நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்கிறதானால், நம்முடைய இருதயத்திலும் பராபரன் பெரியவராயிருந்து எல்லாவற்றையும் அறிந்திருக்கிறாரென்றும் (நினைப்போமாக.)

௨௰௧ பிரியமானவர்களே! நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், பராபரனிடத்தில் நமக்குத் தைரியமிருக்கும்; [illegible] திடத்தையுங்கொள்ளுவோம்.

௨௰௨ மேலும் அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்குப் பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக்கொள்ளுவோம்.

௨௰௩ நாம் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தை விசுவாசமாயிருந்து அவர் நமக்குக் கட்டளையிட்டபடி ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டுமென்பதே அவருடைய கற்பனையாயிருக்கின்றது.

௨௰௪ அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரிடத்தில் நிலைத்திருக்கிறான். அவரும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறார். அவர் நமக்குத் தந்த ஆவியினாலே அவர் நமக்குள்ளே நிலைத்திருக்கிறாரென்று அறிந்திருக்கிறோம்.

௪. அதிகாரம்.

[(௧) போதகர்களுடைய [illegible] பரிசோதிக்க வேண்டும். (௭) பராபரன் அன்பு[illegible] நாமும் அன்புகூர [illegible] கடவது.]

பிரியமானவர்களே! [illegible] [illegible] [illegible] அவைகள் [illegible] கோவென்று சோதித்[illegible].

௨ பராபரனாலுண்டான ஆவியை நீங்கள் எதினாலே யறியலாமென்றால், இயேசுக்கிறிஸ்து மாமிசத்திலே வந்தாரென்று அறிக்கைபண்ணுகிற ஆவியெதுவோ அது பராபரனாலுண்டாயிருக்கின்றது.

௩ இயேசுக்கிறிஸ்து மாமிசத்திலே வந்தாரென்று அறிக்கைபண்ணாத ஆவியெதுவோ அது பராபரனாலுண்டாயிருக்கிறதில்லை. அதுவே கிறிஸ்துவுக்கெதிராளியானவனுடைய ஆவி. அது வருகிறதென்று நீங்கள் கேள்விப்பட்டீர்கள். அது இப்பொழுதே உலகத்திலிருக்கின்றது.

௪ பிள்ளைகளே! நீங்கள் பராபரனாலுண்டாயிருந்து, உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவரானதால், அவர்களை ஜெயித்தீர்கள்.

௫ அவர்கள் உலகத்தாரின் தன்மையையுடையவர்கள். ஆனபடியால் உலகத்தாரின் தன்மையாய்ப் பேசுகிறார்கள் உலகத்தாரும் அவர்களுக்குச் செவிகொடுக்கிறார்கள்.

௬ நாங்கள் பராபரனுடைய தன்மையையுடையவர்கள். பராபரனையறிந்துகொண்டவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான். பராபரனுடைய தன்மையில்லாதவனாயிருக்கிறவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை. இதினாலே சத்திய ஆவியையும் வஞ்சக ஆவியையும் அறிந்திருக்கிறோம்.

௭ பிரியமானவர்களே! அன்பு பராபரனாலுண்டாயிருக்கிறபடியால், ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். அன்புள்ள எவரும் பராபரனிற்பிறந்து அவரையறிந்திருக்கிறார்கள்.

௮ பராபரன் அன்பாகவேயிருக்கிறபடியால், அன்பில்லாதவன் பராபரனையறியான்.

௯ பராபரனுடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே பராபரன் நமதுமேல்வைத்த அன்பு வெளிப்பட்டது.

௰ நாம் பராபரனிடத்தில் அன்புகூர்ந்ததினாலல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நீக்குங்கிருபையுண்டாகும்படி தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்புண்டாயிருக்கின்றது.

௰௧ பிரியமானவர்களே! பராபரன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால், நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூரக்கடனாளிகளாயிருக்கிறோம். பராபரனை ஒருவரும் ஒருக்காலுங்காணவில்லை.

௰௨ நாம் ஒருவரிடத்திலொருவர் அன்புகூர்ந்தால், பராபரன் நமக்குள்ளே நிலைத்திருப்பார். அவருடைய அன்பு நம்மிடத்தில் நிறைவுள்ளதாயிருக்கும்.

௰௩ அவர் தம்முடைய ஆவியில் நமக்குக் கொடுத்ததினாலே, நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை யறிந்திருக்கிறோம்.

௰௪ பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினதை நாங்கள் பார்த்திருந்து சாட்சியிடுகிறோம்.

௰௫ இயேசுவானவர் பராபரனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவனெவனோ, அவனிடத்திற் பராபரன் நிலைத்திருக்கிறார். பராபரனிடத்திலே அவனும் நிலைத்திருக்கிறான்.

௰௬ பராபரன் நமதுமேல்வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். பராபரன் அன்பாகவேயிருக்கிறார். அன்பிலே நிலைத்திருக்கிறவன் பராபரனிடத்திலே நிலைத்திருக்கிறான். பராபரனும் அவனிடத்திலே நிலைத்திருக்கிறார்.

௰௭ நியாயத்தீர்ப்பினநாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக, அன்பு நம்மிடத்திலே நிறைவுள்ளதாயிற்று. ஆனதால் அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இந்த உலகத்திலிருக்கிறோம்.

௰௮ அன்பிலே பயமில்லை. நிறைந்த அன்பு பயத்தைப் புறம்பே தள்ளுகின்றது. பயமானது வேதனையுள்ளதே.

௰௯ பயப்படுகிறவன் நிறைந்த அன்புள்ளவனல்ல. அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்,

௨௰ ஒருவன் தன் சகோதரனைப் பகைத்து நான் பராபரனிடத்தில் அன்புகூருகிறேனென்று சொன்னால் அவன் பொய்யனாயிருப்பான். எப்படியெனில் அவன் தான் கண்டிருக்கிற சகோதரனிடத்தில் அன்புகூராமலிருந்தால் தான் காணாதிருக்கிற பராபரனிடத்திலே யெப்படி யன்பாயிருப்பான்?

௨௰௧ அன்றியும் பராபரனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்னும் இந்தக்கட்டளையை அவராலே பெற்றிருக்கிறோம்.

௫. அதிகாரம்.

[(௧) பராபரன்மேல் அன்புகூருகிறவன் அவருடைய பிள்ளைகள்மேலும் அன்புகூருவானென்றும், (௩) உலகத்தைச் ஜெயிப்பானென்றும், (௬) இயேசுக்கிறிஸ்து மெய்யாய்ப் பராபரனுடைய குமாரனென்பதற்கும் நமக்கு நித்தியஜீவனைக்கொடுக்கிறவரென்பதற்குஞ்சாட்சியுண்டென்றும், (௰௪) ஜெபம்பண்ணுகிறதற்குத் தைரியமுண்டென்றுங்காட்டியது.]

௧ இயேசுவென்பவரே கிறிஸ்துவென்று விசுவாசிக்கிறவனெவனோ அவன் பராபரனிற்பிறந்திருக்கிறான். அன்றியும் பெற்ற பிதாவினிடத்தில் அன்புகூருகிறயாவரும் அவரிற்பிறந்தவனிடத்திலும் அன்புகூருகிறார்கள்.

உ நாம் பிதாவினிடத்தில் [illegible] அவருடைய [illegible] [illegible] பிதாவினுடைய [illegible] [illegible] சொல்லுகிறோம்.

௩ [illegible] பிதாவினுடைய [illegible] [illegible] ஒப்புக்கொள்ளாதவர்கள் [illegible] [illegible] அவருடைய [illegible] [illegible].

[illegible] [illegible] பிதாவினிடத்தில் [illegible] உலகத்தைச் [illegible] அவருடைய விசுவாசம் உலகத்தை [illegible].

ரு இயேசுவானவர் பிதாவினுடைய [illegible] என்று விசுவாசிக்கிறவனேயன்றி, வேறுயாவன் உலகத்தை [illegible] ஜெயிக்கிறவன்?

௬ இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் தோன்றினவர். [illegible] ஜலத்தினாலும் [illegible] இரத்தத்தினாலும் [illegible] ஆவியானவர் சத்தியமாகையால் ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்.

௭ [illegible] மண்டலத்தில் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்னும் மூவரும் [illegible] மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.

௮ பூமியிலே ஆவி, ஜலம், இரத்தம் [illegible] [illegible] [illegible].

௯ நாம் [illegible] [illegible] பிதாவினுடைய சாட்சி [illegible] பிதா [illegible] [illegible] கொடுத்த சாட்சி [illegible].

௰ [illegible] குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் [illegible] சாட்சியைத் [illegible] [illegible] பிதாவை விசுவாசியாதவன் [illegible] [illegible] பிதா [illegible] குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசிக்கவில்லை.

௰௧ [illegible] சாட்சி [illegible] பிதா [illegible] நித்தியஜீவனைக் [illegible] [illegible] அவருடைய குமாரனில் [illegible].

௰௨ குமாரனையுடையவன் அந்தச்ஜீவனையுடையவனாயிருக்கிறான். பிதாவினுடை[illegible] குமாரனில்லாதவன் [illegible] [illegible].

௰௩ [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible].

௰௪ [illegible] நாம் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] கருணையாயிருக்கிறார்.

௰௫ [illegible] [illegible] [illegible] நாம் [illegible] [illegible] [illegible] [illegible].

௰௬ ஒருவன் [illegible] [illegible] பாவத்தைச் செய்கிறதை [illegible] [illegible] [illegible] [illegible] செய்தவர்களுக்கு [illegible] [illegible] மரணத்திற்கு [illegible] [illegible] [illegible].

௰௭ [illegible] [illegible] [illegible].

௰௮ [illegible] நாம் [illegible] பிதாவினால் [illegible] [illegible] [illegible].

௰௯ மேலும் [illegible] நாம் பிதாவினால் உண்டானவர்கள் [illegible] [illegible].

௨௰ மேலும் [illegible] படி, நாம் [illegible] பிதாவினுடைய [illegible] [illegible] அவருடைய [illegible] [illegible] [illegible] மாய் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்.

௨௧ பிள்ளைகளே! [illegible] [illegible] [illegible] [illegible] வாக.—ஆமென்.

அப்போஸ்தலனாகிய

இயோவான் எ

இரண்டாம் நிருப

...னையும் பொருந்திய ஒரு அம்மாளையும் அவளுடைய பிள்ளைகளையும் அப்போஸ்தலன் வாழ்த்தி அன்பு, விசுவாசம், சத்தியம், [illegible] நிலைநிற்கும்படி கட்டுப்படுத்துகிறது]

௧ மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற அம்மாளுக்கும் அவள் பிள்ளைகளுக்கும் [illegible] சத்தியத்தினிமித்தம் நான் மாத்திரமல்ல, சத்தியத்தை அறிந்திருக்கிற மற்ற யாவரும் உண்மையாய் நேசித்திருக்கிறார்,

௨ தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது.

௩ பிதாவாகிய பராபரனாலும் பிதாவின் குமாரனாகிய கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் சத்தியத்தோடும் அன்போடுங்கூட உங்களுக்குண்டாயிருக்கக்கடவது.

௪ உம்முடைய பிள்ளைகளிற் சிலர் பிதாவினாலே நாம் கற்பனையடைந்தபடி சத்தியத்திலே நடக்கிறவர்களென்று நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்.

௫ இப்பொழுது அம்மாளே! நான் உமக்குப் புதிய கற்பனையை எழுதாமல், ஆதிமுதல் நமக்கிருந்த கற்பனையாக எழுதவேண்டியது [illegible] நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரவேண்டும்.

௬ நாம் அவருடைய கற்பனைகளின்படி நடக்கிறதே அன்புகூருகிறதாம். நீங்கள் ஆதிமுதற் கேட்டிருக்கிறபடி அதிலே நடக்க

துகொள்ள ...

பிள்ளைகளுக்கு ...

அப்போஸ்தலனாகிய

இயோவான் எழுதின

மூன்றாம் நிருபம்.

[அப்போஸ்தலன் காயுசென்பவனை வாழ்த்தி அவனுடைய தருமகுணத்துக்காகச் சந்தோஷித்தலைக் காட்டிச் சத்தியத்திலே நிலைத்திருக்கும்படிக்குப் புத்திசொல்லியது.]

க மூப்பனாகிய நான் உண்மையாய் அன்புகூருகிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது. பிரியமானவனே!

உ உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ சகலவிதத்திலும் வாழ்ந்து சுகமாயிருக்கவேண்டுகிறேன்.

௩ சகோதரர் வந்து, நீ சத்தியத்திலே நடந்துகொள்ளுகிறபடி உன்னுடைய உண்மையைக்குறித்துச் சாட்சிகொடுத்தபொழுது மிகவுஞ்சந்தோஷப்பட்டேன்.

ச என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கேள்விப்படுகிறதிலும் (வருகிறதைத் தரிசித்தற்கு) மேலான சந்தோஷம் எனக்கில்லை.

ரு பிரியமானவனே! நீ சகோதரருக்கும் பரதேசிகளுக்குஞ்செய்கிற கிரியைகளையெல்லாம் உண்மையாய்ச் செய்கிறாய்.

சா அவர்கள் உன்னுடைய அன்பைக்குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சிசொன்னார்கள். அவர்களை நீ பராபரனுக்குமுன்பாகப் பாத்திரமானபடி வழிவிட்டனுப்பினால் நன்மைசெய்வாய்.

எ அவருடைய நாமத்தினிமித்தம் அவர்கள் அஞ்ஞானிகளிடத்தில் ஒன்றும் வாங்காமற்புறப்பட்டார்களே;

அ ஆகையால் நாம் சத்தியத்திற்கு உதவிசெய்கிறவர்களாயிருக்கும்படிக்கு, இப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம். நான் சபைக்கு எழுதினேன்.

கூ அப்படியிருந்தும் அவர்களுக்குள்ளே முதலாளியாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

ய ஆனபடியால் நான் வந்தேனேயானால் அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளைப் பேசிச் செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்வேன்; அவைகளும் அவனுக்குப் போதாமல், அவன் தானே சகோதரரை ஏற்றுக்கொள்ளாமலிருக்கிறதுமல்லாமல், ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையுந் தடைசெய்து சபைக்குப் புறம்பே தள்ளுகிறான்.

யக பிரியமானவனே! நீ பொல்லாங்கானதையல்ல, நலமானதைப் பின்பற்றுவாயாக. நன்மைசெய்கிறவன் பராபரனாலுண்டாயிருக்கிறான். பொல்லாங்குசெய்கிறவன் பராபரனைக் கண்டதில்லை.

யஉ தேமேத்திரியனுக்கு எல்லாராலுஞ் சத்தியத்தாலும் நற்சாட்சியுண்டாயிருக்கிறது; நாங்களுஞ் சாட்சிகொடுக்கிறோம், எங்கள்சாட்சி மெய்யென்றறிந்திருக்கிறீர்கள்.

யங நான் அநேககாரியங்களை உனக்கெழுதவேண்டியதிருந்தும், அவைகளை மையினாலும் இறகினாலும் எழுதமனதில்லை.

யச நான் சீக்கிரமாய் உன்னைக் காணவேண்டுமென்று நம்பியிருக்கிறேன். அப்பொழுது முகமுகமாய்ப் பேசுவோம். உனக்குச் சமாதானமுண்டாயிருப்பதாக.

யரு (எங்களிடத்துள்ள) சிநேகிதர் உன்னை வாழ்த்துதல்செய்கிறார்கள். உன்னிடத்திலுள்ள சிநேகிதர்களைப் பேர்பேராய் (என்னால்) வாழ்த்துதல்செய்வாயாக.

முற்றும்.

அப்போஸ்தலனு

இயோவானு யூதா எழுதின

[க) அப்போஸ்தலன் விசுவாசிகளுக்கு வாழ்த்துதல் சொல்லி, (ரு) விசுவாசத்துக்காகப் போராட்டம் பண்ணும்படி அவர்களையெழுப்பி, (ச) கள்ளப் போதகர்களைக் குறித்து அவர்களை யெச்சரித்து, (௰எ) முதல் அப்போஸ்தலர்களைக் கொண்டு கொள்ளும்படிக்குப் புத்தி சொல்லுகிறது.]

இயேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனுமாய் யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதாவென்பவன் பிதாவாகிய பராபரனாலே பரிசுத்தமாக்கப்பட்டும், இயேசுக்கிறிஸ்துவினாலே காக்கப்பட்டும், அழைக்கப்பட்டுமிருக்கிறவர்களுக்கு எழுதுகிறதாவது.

உ இரக்கமும் சமாதானமும் அன்பும் உங்களுக்குச் சம்பூரணமாயுண்டாகக்கடவது.

ரு பிரியமானவர்களே! பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கெழுதவேண்டுமென்று நான் மிகுந்த கருத்துள்ளவனாயிருக்கையில், முன்னே பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசத்திற்காக நீங்கள் கெட்டியாய்ப் போராட்டம்பண்ணும்படிக்கு உங்களுக்குப் புத்தியெழுதுகிறது எனக்கு அவசியமாய்த் தோன்றிற்று.

ச என்னத்தினாலெனில், நமது பராபரனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கு ஏதுவாகப் புரட்டி, ஒன்றான சுயாதிபதியான பராபரனுமாய் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை மறுதலிக்கிற துன்மார்க்கமான சில மனிதர்கள் பக்க வழியாய் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் அடையும் ஆக்கினையைக்குறித்துப் பூர்வகாலத்திலே முன்னெழுதியிருக்கிறது.

ரு அந்தப்படி நீங்கள் முன்னமே அறிந்திருந்தும், நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறதென்னவெனில், கர்த்தர் எகிப்து தேசத்திலிருந்து ஜனத்தை இரட்சித்த பின்பு, விசுவாசியாதவர்களை யழித்தார்.

சா அன்றியும் தங்களுடைய ஆதி நிலைமையைக் காவாமல், தங்களுக்கேற்ற இருப்பிடத்தைவிட்டு விலகின தூதர்களைப் பெரிய நியாயத்தீர்ப்புநாள்வரைக்கும் நித்திய சங்

௧௪ ஆதாம் முதற்கொண்டு ஏழாந் தலைமுறையிலுண்டாயிருந்த ஏனோக்கென்பவன் இவர்களைக்குறித்து முன்னுரைத்ததாவது: இதோ, கர்த்தர் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படிக்கும் அவர்களில் தேவபக்தியில்லாதவர்கள் யாவருந் துன்மார்க்கமாய்ச்செய்த சகல துன்மார்க்கக் கிரியைகளினிமித்தமும் —

௧௫ தேவபக்தியில்லாத பாவிகள் பேசின கடினவார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கும்படிக்குந் திரளான சேனைகளாகிய பரிசுத்தவான்களோடுங் கூடவருகிறாரென்று அறிவித்தான்.

௧௬ இவர்கள் முறுமுறுக்கிறவர்களும் முறையிடுகிறவர்களும் தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும், ஆதாயத்துக்காக மனிதர்களைப் புகழுகிறார்கள்.

௧௭ பிரியமானவர்களே! நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள்.

௧௮ கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்களென்று உங்களுக்குச் சொன்னார்களே;

௧௯ இவர்கள் பிரிந்துபோகிறவர்களும் ஜென்மசுபாவத்தாரும் (ஜீவ) ஆவியில்லாதவர்களுமானவர்கள்.

௨௦ பிரியமானவர்களே! நீங்களோ உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களைக் கட்டிக்கொண்டு,

௨௧ பரிசுத்த ஆவியினாலே ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கத்துக்குக் காத்திருங்கள்.

௨௨ அல்லாமலும் நீங்கள் சிலருக்கு இரங்கி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, மாம்சத்தால் கறைபட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துப்போடுங்கள்.

௨௪ நீங்கள் வழுவாதபடி உங்களைக் காத்துக்கொள்ளவும், தம்முடைய மகிமையின் சந்நிதானத்தில் உங்களை மாசற்றவர்களாய் மகிழ்ச்சியோடே நிறுத்தவும் வல்லமையுள்ளவருமாய்,

௨௫ நம்முடைய இரட்சகராகிய ஞானமுள்ள ஒருவராகிய தேவனுக்கு இப்பொழுதும் எல்லாக்காலங்களிலும் மகிமையும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் உண்டாயிருக்கக்கடவது.—ஆமென்.

தேவவசன

போதகராகிய இயோவானுக்கு

வெளிப்படுத்தின விசேஷம்.

௧. அதிகாரம்.

[(௧) முகவுரையாகப் போதுவாழ்த்துதல், (௪) யோவான் சபைகளுக்கு எழுதும் வாழ்த்துதல், (௯) தனக்குக் கிடைத்த தரிசனையைச் சொன்னது.]

சீக்கிரமாய் நடக்கவேண்டியவைகளைப் பராபரன் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்படிக்கு இயேசுக்கிறிஸ்துவுக்குக் கொடுத்ததும் இவர் வெளிப்படுத்தினதுமான விசேஷம். அவர் தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானிடத்திற்குத் தம்முடைய தூதனையனுப்பி, அவனுக்கு அவைகளைக் குறிப்பாய்க் காட்டினார்.

௨ அவன் பராபரனுடைய வசனத்தையும் இயேசுக்கிறிஸ்துவின் சாட்சியையும் தான் கண்டயாவற்றையும் சாட்சியாய்த் தெரிவித்திருக்கிறான்.

௩ காலம் சமீபமாயிருக்கிறதால் இந்தத் தீர்க்கதரிசனமான வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

௪ யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்துக்கு முன்பாகவிருக்கிற ஏழு ஆவிகளாலும்,

[illegible]

[illegible]

உ. அதிகாரம்.

[(க) எபேசுசபைக்கும், (உ) சிமிர்னாசபைக்கும், (ங) பெர்கமு சபைக்கும், (ச) தியத்தைராசபைக்கும் எழுதப்பின நிருபங்கள்.]

[illegible]

௧௪ ஆதாம் முதற்கொண்டு ஏழாந் தலைமுறையிலுண்டாயிருந்த ஏனோக்கென்பவன் இவர்களைக்குறித்து முன்னறிவித்ததாவது: இதோ, கர்த்தர் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும்படிக்கும் அவர்களில் தேவபக்தியில்லாதயாவருந் துன்மார்க்கமாய்ச்செய்த சகலதுன்மார்க்கக் கிரியைகளினிமித்தமும் தமக்கு விரோதமாய்

௧௫ தேவபக்தியில்லாத பாவிகள் பேசின கடினவார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும் அவர்களைக் கண்டிக்கும்படிக்குந் திரளானசேனைகளாகிய தம் பரிசுத்தவான்களோடுங் கூடவருகிறாரென்று அறிவித்தான்.

௧௬ இவர்கள் முறுமுறுக்கிறவர்களும் முறையிட்டுத் திரிகிறவர்களுமாய்த் தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் வாய் மிகவும் இறுமாப்பானவைகளைப் பேசும், பொழிவுக்காகப் பெரியோர்களைப் புகழுகிறார்கள்.

௧௭ பிரியமானவர்களே! நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன்சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைத்துக் கொள்ளுங்கள்.

௧௮ கடைசிக்காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்களென்று உங்களுக்குச் சொன்னார்களே;

௧௯ இவர்கள் பிரிந்துபோகிறவர்களும் ஜென்மசுபாவத்தாரும் ஆவியில்லாதவர்களுமானவர்கள்.

௨௦ பிரியமானவர்களே! நீங்களோ உங்களுக்கு மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களைக் கட்டியெழுப்பி,

௨௧ பரிசுத்த ஆவிக்குள்ளே ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ளக் காத்திருங்கள்.

௨௨ அல்லாமலும் வகைபிரித்துச் சிலருக்கு இரங்குங்கள். சிலரை அக்கினியிலிருந்து இழுத்து, பயத்தோடே இரட்சியுங்கள்; மாம்சத்தினால் கறைப்பட்ட வஸ்திரத்தையும் வெறுத்துப்போடுங்கள்.

௨௩ நீங்கள் வழுவாதபடி உங்களைக் காத்துக்கொள்ளுகிறதற்கும், மகிழ்ச்சியோடே உங்களைத் தம்முடைய மகிமையின் சந்நிதானத்திலே நிறுத்தவும் வல்லமையுள்ளவருமாய்,

௨௪ நம்முடைய இரட்சகராயும் ஞானமுள்ள ஒருவராகிய தேவனுமாயிருக்கிறவருக்கு இப்பொழுதும் சதாகாலங்களிலும் மகிமையும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் உண்டாயிருக்கக்கடவது.—ஆமென்.

தெய்வவசன

போதகராகிய இயோவானுக்கு

வெளிப்படுத்தின விசேஷம்.

௧. அதிகாரம்.

[(௧) முகவுரையாகப் பொது வாழ்த்துதல், (௪) யோவான் சபைகளுக்கெழுதும் வாழ்த்துதல் சொல்லல், (௯) தனக்குக் கிறிஸ்துநாதர் தரிசனையானதைச் சொன்னது.]

சீக்கிரமாய் நடக்கவேண்டியவைகளைப் பராபரன் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்படிக்கு இயேசுக்கிறிஸ்துவுக்குக் கொடுத்ததும், இவர் வெளிப்படுத்தினதுமான விசேஷம். அவர் தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானிடத்திற்குத் தம்முடைய தூதனையனுப்பி, அவனுக்கு இவைகளைக் குறிப்பாய்க் காட்டினார்.

௨ அவன் பராபரனுடைய வசனத்தையும் இயேசுக்கிறிஸ்து சாட்சியிட்டவிஷயமாகிய தான் கண்டயாவற்றையுஞ் சாட்சியாய்த் தருகிறான்.

௩ காலஞ்சமீபமாயிருக்கிறபடியால், இந்தத் தீர்க்கதரிசனமான வசனத்தை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் இதிலே எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

௪ யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதுகிறதாவது: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும், அவருடைய சிங்காசனத்துக்கு முன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும்,

௫ உண்மையுள்ள சாட்சியும் மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும் பூமியின் ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது. நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி,

௬ நம்முடைய பிதாவாகிய பராபரனுக்கு (முன்பாக) நம்மைத் தமக்கு ராஜாக்களாகவும் ஆசாரியர்களாகவுஞ் செய்திருக்கிறவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்குமுண்டாயிருக்கக்கடவது. ஆமென்.

௭ இதோ, மேகங்களுடனே வருகிறார். (கண்களெல்லாம் அவரைக் காணும்; அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்.) பூமியின் கோத்திரத்தார்களெல்லாரும் அவரைக் குறித்துத் துக்கத்தோடே புலம்புவார்கள். மெய்யாய் அப்படியிருக்கும் — ஆமென்.

௮ இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேனென்று திருவுளம் பற்றுகிறார்.

௯ உங்கள் சகோதரனுமாய் இயேசுக்கிறிஸ்துவினிமித்தம் உபத்திரவத்திலும் அவருடைய ராஜ்யத்திலும் பொறுமையிலும் உங்களுடனே பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான் பராபரனுடைய வசனத்தினிமித்தமும் இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த சாட்சியினிமித்தமும் பத்மு என்னப்பட்ட தீவிலே இருந்தேன்.

௰ (ஞாயிறு) கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்.

௰௧ அப்பொழுது நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்திலே எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, இலவோதிக்கேயா, இவைகளிலுள்ள சபைகளேழுக்கும் அனுப்பென்று, என் பின்னாலே எக்காளத்தின் சத்தம்போன்ற மகாசத்தத்தைக் கேட்டேன்.

௰௨ அப்பொழுது என்னுடனே சத்தமிட்டவனைப் பார்க்கத் திரும்பினேன்.

௰௩ திரும்பினபொழுது, ஏழு பொன் விளக்குத்தண்டுகளையும், ஏழு விளக்குத்தண்டுகளின் நடுவிலே நிலையங்கி தரித்து, மார்பிற் பொற்கச்சைக் கட்டியிருந்த மனிதகுமாரனுக்கொப்பானவரையுங் கண்டேன்.

௰௪ அவருடைய சிரமும் மயிரும் வெண்மையான பஞ்சியையும் உறைந்த பனியையும் போல வெண்மையாயிருந்தன. அவருடைய கண்கள் அக்கினிச்சுவாலையைப்போலிருந்தன.

௰௫ அவருடைய கால்கள் உலைக்களத்திலே காய்கிற பிரகாசமுள்ள செம்பைப்போலிருந்தன. அவருடைய சத்தம் பெருவெள்ள இரைச்சலைப்போலிருந்தது.

௰௬ அவர் தமது வலதுகையிலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார். அவர் வாயிலிருந்து இருபுறமுங் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது. அவருடைய முகம் உச்சக்காலத்திலே வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது.

௰௭ இப்படி அவரைக் கண்டபொழுது செத்தவனைப்போல அவருடைய பாதங்களிலே விழுந்தேன். அப்பொழுது அவர் தமது வலதுகரத்தை என்மேல் வைத்து, (என்னுடனே) சொன்னதாவது, நீ பயப்படவேண்டுவதில்லை. நான் முந்தினவனும் பிந்தினவனும் உயிருள்ளவனுமானவன்.

௰௮ நான் மரித்தும், இதோ, என்றென்றைக்கும் உயிரோடிருந்து, மரணத்துக்கும் மரித்தோர் ஸ்தலத்துக்குமுரிய திறவுகோல்களையுடையவனாயிருக்கிறேன்.

௰௯ ஆகையால் நீ கண்டவைகளையும் இருக்கிறவைகளையும் இவைகளுக்குப் பின் நடப்பவைகளையும் எழுது.

௨௰ என் வலதுகையிலே நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும் பொன் விளக்குத்தண்டுகள் ஏழின் குறிப்பையும் பற்றி எழுது. ஏழு நட்சத்திரங்கள் ஏழு சபைகளுடைய தூதர்களாயிருக்கிறார்கள். நீ கண்ட விளக்குத்தண்டுகள் ஏழும் ஏழு சபைகளாயிருக்கின்றன.

உ. அதிகாரம்.

[(௧) எபேசுசபைக்கும், (௮) சிமிர்னாசபைக்கும், (௰௨) பெர்கமுசபைக்கும், (௰௮) தியத்தீராசபைக்கும் எழுதப்பட்டன நிருபங்கள்.]

௧ எபேசுப்பட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு எழுதவேண்டியதென்னவென்றால், ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலதுகரத்திலே ஏந்திக்கொண்டு ஏழு பொன் விளக்குத்தண்டுகளின் மத்தியிலே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது,

௨ உன் கிரியைகளையும் உன் பிரயாசத்தையும் உன் பொறுமையையும் நீ பொல்லாதவர்களுக்கு இடங்கொடாமலிருக்கிறதையும், அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்,

௩ நீ பொறுமையைக் காத்துக்கொண்டு வருகிறதையும் என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதையும் அறிந்திருக்கிறேன்.

௪ ஆனாலும் நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டபடியால் உன்மேல் விசனமாயிருக்கிறேன்.

ரு ஆகையால் நீ எப்படிப்பட்ட நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. நீ மனந்திரும்பாவிட்டால், நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்குவேன்.

சு நிக்கொலாவின் மார்க்கத்தாரின் கிரியைகளைப் பகைக்கிறாய். இது உன்னிடத்தில் உண்டு. அவைகளை நானும் பகைக்கிறேன்.

எ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு நான் பரம பரனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேனென்கிறார் என்றெழுது.

அ சிமிர்னாப்பட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியதென்னவெனில், மரித்து உயிரோடிருக்கிற முந்தினவரும் பிந்தினவருமானவர் சொல்லுகிறதாவது.

கூ உன் கிரியைகளையும் உபத்திரவத்தையும் ஐசுவரியமுள்ள உன் தரித்திரத்தையும் தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய ஆலயமாயிருக்கிறவர்கள் செய்கிற தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன்.

ய உனக்கு வருந் துன்பங்களைக்குறித்து எவ்வளவேனும் பயப்படாதிருப்பாயாக. கேள், நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டுப் பிசாசு உங்களிற் சிலரைக் காவலிற் போடுவான். பத்துநாளளவும் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.

யக ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தால் சேதப்படுவதில்லையென்கிறார் என்றெழுது.

யஉ பெர்கமுப்பட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியதென்னவெனில், இருபுறமுங் கருக்குள்ள கட்கத்தையுடையவர் சொல்லுகிறதாவது.

யங உன் கிரியைகளையும் சாத்தானுடைய ஆசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், சாத்தான் குடியிருக்கிற உங்களிடத்திலே எனக்கு உண்மையுள்ள சாட்சியாகிய அந்திப்பாவென்பவன் கொல்லப்பட்ட நாட்களிலேயும் என்னைப்பற்றும் விசுவாசத்தை மறுதலியாமல் என்னுடைய நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

யச ஆகிலும் சில காரியங்களைக்குறித்து உன்மேல் விசனமாயிருக்கிறேன். விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் பொசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் மது[illegible]வான கேடுகளை இஸ்ரவேல் [illegible] போடும்படிக்குப் பாலாக்குக்குப் போதனைசெய்த பாலாமுடைய போதகத்தைப் பிடித்திருக்கிறவர்கள் உன்னிடத்திலிருக்கிறார்கள்.

யரு அல்லாமலும் நிக்கொலாவின் மார்க்கத்தாருடைய போதகத்தைப் பற்றிக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு.

யசு ஆகையால் நீ மனந்திரும்பு. நீ அப்படிச் செய்யாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து என் வாயின் பட்டயத்தினால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.

யஎ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன். ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயல்லாமல் வேறொருவனும் அறியாததுமான புதிய நாமத்தையுங் கொடுப்பேனென்கிறார் என்றெழுது.

யஅ தியத்தைராப்பட்டணத்திலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியதென்னவெனில், அக்கினிஜுவாலை போன்ற கண்களும் உருக்கிய வெண்கலம் போன்ற காலுகளுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது,

யகூ உன் கிரியைகளையும் உன் அன்பையும் உன் ஊழியத்தையும் உன் விசுவாசத்தையும் உன் பொறுமையையும், உன் ஆதிக்கிரியைகளைப் பார்க்கிலும் உன் பிந்தின கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

உய ஆகிலும் (உனக்கு விரோதமாக) சில காரியங்களைக்குறித்து உன்மேல் விசனமாயிருக்கிறேன். [illegible] வேசித்தனம்பண்ணும்படிக்கும் விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கும்படிக்கும், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லிக்கொள்ளுகிற யேசபேலென்னும் ஸ்திரீ என்னுடைய ஊழியக்காரருக்குப் போதித்து அவர்களை வஞ்சிக்க இடங்கொடுக்கிறாய்.

உக அவள் மனந்திரும்பும்படியாக அவளுக்குத் தவணை கொடுத்தேன். தன் வேசிமார்க்கத்தைவிட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை.

உஉ (ஆகையால்) கேள், அவளைப் [illegible] அவளோடேகூட விபசாரஞ்செய்தவர்கள் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனந்திரும்பாவிட்டால், நான் அவர்களை மிகுந்த உபத்திரவத்திலே [illegible], அவளுடைய பிள்ளைகளைக் கொலைசெய்வேன்.

உங அப்பொழுது நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவரென்று எல்லாச்சபைகளும் அறிந்துகொள்வார்கள். அல்லாமலும் உங்களில் [illegible]

...னுடைய கிரியைகளின்படியேயாவருக்கும் பதில்கொடுப்பேன்.

௨௪ இந்தப் போதகத்தைப் பற்றிக் கொள்ளாமலும் அவர்கள் சொல்லுகிறபடி சாத்தானுடைய ஆழங்களை யறிந்துகொள்ளாமலுமிருக்கிற தியத்தைராவிலுள்ள மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது. உங்கள்மேல் வேறொரு பாரத்தையும் போடமாட்டேன்.

௨௫ உங்களுக்குண்டானதை நான் வருமளவும் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்.

௨௬ ஜெயங்கொண்டு முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் காத்துக்கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கு என்னுடைய பிதாவினிடத்தில் நான் பெற்றதுபோலச் சனங்களின்மேல் அதிகாரத்தைக் கொடுப்பேன்.

௨௭ அவன் இருப்புக்கோலால் அவர்களை நடத்திக்கொள்வான். அவர்கள் மண்கலங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.

௨௮ அல்லாமலும் விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்குக்கொடுப்பேன்.

௨௯ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவனென்றெழுது.

௩. அதிகாரம்.

[(௧) சருதைசபைக்கும், (௭) பிலதெல்பியா சபைக்கும், (௧௪) லவோதிக்கேயா சபைக்கும் எழுதியனுப்பின நிருபங்கள்.]

௧ சருதையூரிலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியதென்னவெனில், பராபரனுடைய ஏழாவிகளையும் ஏழுநட்சத்திரங்களையுமுடையவர் சொல்லுகிறதாவது. உன் கிரியைகளை யறிந்திருக்கிறேன். நீ உயிருள்ளவனென்று பேர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்.

௨ உன் கிரியைகள் பராபரனுக்குமுன்பாக நிறைந்தவைகளல்லவென்று கண்டிருக்கிறேன். ஆகையால் நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவான மற்றவைகளை ஸ்திரப்படுத்துவாயாக.

௩ மேலும் நீ கேட்டுப்பெற்றுக்கொண்டவைகளை நினைத்துக் கைக்கொண்டு மனந்திரும்புவாயாக. நீ விழித்துக்கொள்ளாவிட்டால் திருடனைப்போல உன்மேல்வருவேன், நான் உன்மேல்வருமநேரத்தை யறியாதிருப்பாய்.

௪ ஆகிலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சருதையூரிலே யுனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால், என்னோடேகூட வெண்மையான உடைகள் தரித்து நடப்பார்கள்.

௫ ஜெயங்கொள்ளுகிறவன் வெண்மையானவஸ்திரங்களை உடுத்தப்படுவான். நான் ஜீவபுத்தகத்தில் அவனுடைய நாமத்தைக் கிறுக்கிப்போடாமல், அதை என் பிதாமுன்பாகவும் அவருடைய தூதர்முன்பாகவும் அறிக்கையிடுவேன்.

௬ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவனென்றெழுது.

௭ பிலதெல்பியாவூரிலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியதென்னவெனில், தாவீதின் திறவுகோலையுடையவருமாய் ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவருமாய் ஒருவருந்திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிற பரிசுத்தமுள்ளசத்தியமுமுள்ளவர் சொல்லுகிறதாவது.

௮ உன் கிரியைகளை யறிந்திருக்கிறேன். கொஞ்சப்பெலன் (மாத்திரம்) உனக்கிருந்தும், நீ யென்னுடைய நாமத்தை மறுதலியாமல் என்னுடைய வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே இதோ, உனக்கு முன்பாகத் திறந்திருக்கிற வாசலைக் கொடுத்தேன். அதை யொருவனும் பூட்டமாட்டான்.

௯ கேள். யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய்சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய ஆலயத்தாரில் (சிலரை) உனக்குத் தருகிறேன். கேள். அவர்கள் உன் பாதங்களுக்குமுன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை யறிந்துகொள்ளும்படி செய்வேன்.

௧௦ என்னுடைய பொறுமையைக்குறித்த வசனத்தை நீ கைக்கொண்டபடியினாலே நானும் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படிக்குப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரும் சோதனைகாலத்திற்குத் தப்பும்படி யுன்னைக் காப்பாற்றுவேன்.

௧௧ சீக்கிரமாய் வருகிறேன். ஒருவனும் உன் கிரீடத்தையெடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொள்வாயாக.

௧௨ ஜெயங்கொள்ளுகிறவனை நான் என் தேவனுடைய ஆலயத்தில் தூணாக்குவேன். அவன் ஒருக்காலும் நீங்கான். மேலும், என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனிடத்திலிருந்து இறங்குகிற நவமாகிய எருசலேமாகிய என் தேவனுடைய பட்டணத்தின் நாமத்தையும் என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன்.

௧௩ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவனென்றெழுது.

௧௪ லவோதிக்கேயாவூரிலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியதென்னவெனில், உண்மையுள்ளதும் சத்தியமுள்ளதுமான சா...

ட்சியுமாயப் பராபரனுடைய சிருட்டிகளுக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென்னென்பவர் சொல்லுகிறதாவது.

௰௫ உன் கிரியைகளை யறிந்திருக்கிறேன். நீ குளிர்ச்சியுள்ளவனுமல்ல, அனலுள்ளவனுமல்ல, நீ குளிர்ச்சையாவது அனலையாவது உள்ளவனானால் நலமாயிருக்கும்.

௰௬ இப்படி நீ குளிர்ச்சுமல்ல அனலுமில்லாமல் வெதுவெதுப்பானவனானபடியினாலே உன்னை என் வாயினின்று வாந்திபண்ணுவேன்.

௰௭ நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும் பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும் குருடனும், நிருவாணியுமாயிருக்கிறதையறியாமல், நான் ஐசுவரியமுள்ளவனென்றும் அதிகத்திரவியத்தைச் சம்பாதித்தவனென்றும் எனக்கொன்றும் வேண்டுவதில்லையென்றுஞ் சொல்லுகிறபடியால்.

௰௮ ஆதலால் நான் உனக்கு ஆலோசனையாயச் சொல்லுகிறதாவது. நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும் உன் நிருவாணமாகிய அவலட்சணந் தோன்றாமலிருக்கத்தக்கதாக உடுத்திக்கொள்ளும்படிக்கு வெண்மையான வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்கு மாத்திரையைப் போடவும் வேண்டுமென்று சொல்லுகிறேன்.

௰௯ என்னுடைய சிநேகிதர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறேன். ஆகையால் நீ சாக்கிரதையாயிருந்து மனந்திரும்பக்கடவாய்.

௨௰ இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்தால், அவனிடத்திலே நான் பிரவேசித்து அவனோடே போசனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போசனம் பண்ணுவான்.

௨௰௧ நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய ஆசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோலச் ஜெயங்கொள்ளுகிறவன் என்னுடைய ஆசனத்திலே என்னோடேகூட உட்காரும்படி அருள்செய்வேன்.

௨௰௨ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவனென்றெழுது என்றார்.

௪. அதிகாரம்.

[(௧) இயோவான் தேவ ஆசனத்தையும், (௪) அதைச்சூழ இருபத்துநான்கு மூப்பரையும், (௬) நான்கு சீவன்களையும், (௮) எல்லாருஞ் சிருட்டிகரைத் தொழுதுகொள்ளுகிறதையுங் கண்டது.]

இதற்குப்பின்பு நான் பார்த்தபோது வானத்திலே ஒருவாசல் திறக்கப்பட்டிருந்தது. அல்லாமலுமுன்னே [illegible] எக்காளம்போல என்னுடனே [illegible] தம் என்னுடனே [illegible] [illegible] நடக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேனென்றது.

௨ உடனே ஆவிக்குள்ளானேன். அப்பொழுது வானத்திலே ஒரு ஆசனம் போடப்பட்டிருந்தது, அந்த ஆசனத்தின்மேல் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

௩ (அந்த) உட்கார்ந்திருந்தவர் பார்வைக்கு [illegible] பே [illegible]. அந்த ஆசனத்தைச் சுற்றியொரு வானவில் [illegible] ர்வைக்கு மரகதம்போலிருந்தது.

௪ மேலும் அந்த ஆசனத்தைச் சுற்றி இருபத்துநான்கு ஆசனங்களுமிருந்தன, அந்த ஆசனங்களின்மேலே வெண்வஸ்திரந் தரிக்கப்பட்ட இருபத்துநான்கு மூப்பர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் தலைகளின்மேல் பொன் கிரீடங்களையுடையவர்களாயிருந்தார்கள்.

௫ அன்றியும் அந்த ஆசனத்திலிருந்து மின்னலும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன. தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு தீபங்கள் ஆசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன.

௬ மேலும் அந்த ஆசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது. அதுவுமல்லாமல் அந்த ஆசனத்தின் மத்தியிலும் ஆசனத்தைச் சுற்றிலும் நாலுசீவன்களிருந்தன. அவைகள் முன்னும் பின்னும் கண்களால் நிறைந்தவைகளாயிருந்தன.

௭ முதலாஞ்சீவன் சிங்கத்தைப்போலவும் இரண்டாஞ்சீவன் காளையைப்போலவும் மூன்றாஞ்சீவன் மனுஷமுகமுள்ளதாகவும், நாலாஞ்சீவன் பறக்கிற கழுகுக்கொப்பாகவுமிருந்தன.

௮ அந்தநான்குசீவன்களுக்கும் ஒவ்வொன்றுக்கு ஆறுஆறு சிறகுகளுமிருந்தன, சுற்றிலும் உள்ளேயுங் கண்களால் நிறைந்தவைகளுமாய் இருந்தன. இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராயிருக்கிற பராபரன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். என்று இரவும் பகலும் ஓய்வில்லாமற் சொல்லிக்கொண்டிருந்தன.

௯ மேலும் ஆசனத்தின்மேலுட்கார்ந்திருந்து என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவருக்கு அந்தச் சீவன்கள் மகிமையையுங் கனத்தையுந் தோத்திரத்தையுஞ் செலுத்தும்பொழுது,

௰ இருபத்துநான்கு மூப்பர்களும் ஆசனத்தின்மேல் உட்கார்ந்தவருக்கு முன்பாக (வணக்கமாய்) விழுந்து, என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டு, தங்கள் கிரீடங்களை ஆசனத்தின் முன்பாக வைத்து,

௰௧ ஆண்டவரே! தேவரீர் சகலத்தையுஞ் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே யவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கின்றன. ஆகையால் மகிமையையுங் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீரென்று புகழுகிறார்கள்.

௫. அதிகாரம்.

[முத்திரிக்கப்பட்ட புஸ்தகத்தை விரித்துக்காட்டுகிறதற்குத் தேவ ஆட்டுக்குட்டியானவர் பாத்திரரென்றும், (௩) அவர் அந்தப் புஸ்தகத்தை வாங்கினாரென்றும், (௮) ஜீவன்களும் மூப்பர்களும் உலகமீட்பராகிய அவரைத் தொழுதுகொண்டதையுஞ் சொல்லியது.]

௧ பின்பு அந்த ஆசனத்திலே உட்கார்ந்தவருடைய வலதுகையிலே உள்ளும் புறம்பும் எழுதப்பட்டும் ஏழு முத்திரைகளாலே பத்திரப்படுத்தப்பட்டுமிருந்த ஒரு புஸ்தகத்தைக் கண்டேன்.

௨ பலமுள்ள ஒரு தூதனைக் கண்டேன். அவன் இந்தப் புஸ்தகத்தைத் திறக்கிறதற்கும் இதின் முத்திரைகளை உடைக்கிறதற்கும் பாத்திரன் யாரென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௩ வானத்திலாவது பூமியின் மேலாவது பூமியின் கீழாவது ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும் அதிலே நோக்கிப்பார்க்கவுங் கூடாதிருந்தது.

௪ ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து அதிலே நோக்கிப் பார்க்கிறதற்குப் பாத்திரனாய்க் காணப்படாததினாலே நான் மிகவும் அழுதேன்.

௫ அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: அழவேண்டுவதில்லை. இந்தப் புஸ்தகத்தைத் திறந்து இதின் ஏழு முத்திரைகளையுமுடைக்கும்படிக்குத் தாவீதின் வேராகிய யூதாகோத்திரத்தில் தோன்றிய சிங்கம் ஜெயங்கொண்டிருக்கிறதென்றான்.

௬ அப்பொழுது நான் பார்த்து ஆசனத்துக்கும் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பர்களுக்கும் மத்தியிலே ஒரு ஆட்டுக்குட்டி நிற்கக்கண்டேன். அது அடிக்கப்பட்ட வண்ணமாகவும் ஏழு கொம்புகளையும் பூமியெங்கும் அனுப்பப்பட்ட பராபரனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு கண்களையுமுடையதாகவுமிருந்தது.

௭ மேலும் அது வந்து ஆசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகையிலிருந்து புஸ்தகத்தை வாங்கிற்று.

௮ அந்தப் புஸ்தகத்தை அது வாங்கினபொழுது அந்த நான்கு ஜீவன்களும் இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் சுரமண்டலங்களையும் பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூப வர்க்கங்களால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு ஆட்டுக்குட்டிக்கு முன்பாக (வணக்கமாய்) விழுந்து,

௯ தேவரீர் அடிக்கப்பட்டு உம்முடைய இரத்தத்தினாலே சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் தேசத்தாரிலும் (மற்ற) ஜனக்கூட்டங்களிலும் எங்களைப் பராபரனுக்காக வாங்கிக்கொண்டு,

௰ எங்கள் பராபரனுக்கு (முன்பாக) எங்களை இராஜாக்களும் ஆசாரியருமாக்கினீர். நாங்கள் பூமியிலே ஆளுகை செய்வோம். ஆகையால் நீர் இந்தப் புஸ்தகத்தை வாங்கி இதின் முத்திரைகளை உடைக்கிறதற்குப் பாத்திரராயிருக்கிறீரென்று புதிய பாட்டைப் பாடினார்கள்.

௰௧ பின்னும் நான் பார்த்தபொழுது அந்த ஆசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன். அவர்களுடைய இலக்கம் பதினாயிரந்தரம் பதினாயிரமும் ஆயிரந்தரம் ஆயிரமுமாயிருந்தது.

௰௨ அவர்கள்: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறாரென்று மகா சத்தத்தோடே சொன்னார்கள்.

௰௩ அல்லாமலும் வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும் சமுத்திரத்தின்மேலுள்ளவைகளும் இவற்றிலுள்ளடங்கிய வஸ்துக்கள் யாவும் ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமுங் கனமும் மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாவதாகவென்று சொல்லக் கேட்டேன்.

௰௪ அதற்கு நான்கு ஜீவன்களும் ஆமென் என்று சொன்னார்கள். மறுபடியும் அந்த இருபத்துநான்கு மூப்பர்களும் (வணக்கமாய்) விழுந்து என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்டார்கள்.

௬. அதிகாரம்.

[(௧) ஆட்டுக்குட்டியானவர் முதலாம் முத்திரையை, (௩) இரண்டாம் முத்திரையை, (௫) மூன்றாம் முத்திரையையும், (௭) நான்காம் முத்திரையையும் உடைத்தபோது வெவ்வேறு நிறமுள்ள நான்கு குதிரைகள் புறப்பட்டது. (௯) ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது கொலை செய்யப்பட்டவர்களுடைய ஆத்துமாக்கள் பழிவாங்கும்படி வேண்டிக்கொண்டது. (௧௨) ஆறாம் முத்திரையை உடைத்தபோது மிகுந்த கலக்கமுண்டானது.]

பின்பு ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக் கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று (இடி முழக்கம் போன்ற சத்தத்தோடே) நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன்.

௨ அப்பொழுது நான் பார்க்கையில், வெண்மையான குதிரையைக் கண்டேன். அதின்மேலிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான். அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது. அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிக்கும்படிக்கும் புறப்பட்டான்.

௩ பின்பு அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது இரண்டாம் ஜீவன் நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன்.

௪ உடனே சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது. அதின்மேலிருந்தவனுக்கு மனுஷர் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்துப்போடும்படி அதிகாரமும் ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

௫ பின்பு அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது மூன்றாம் ஜீவன் நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன். உடனே நான் பார்க்கையில் ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன். அதின்மேலிருந்தவன் ஒரு தராசைத் தன் கையில் பிடித்திருந்தான்.

௬ அப்பொழுது நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும் உண்டான சத்தத்தைக் கேட்டேன்.

௭ பின்பு அவர் நான்காம் முத்திரையை உடைத்தபோது, நான்காம் ஜீவன் நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன்.

௮ உடனே நான் பார்க்கையில், மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன். அதின்மேலிருந்தவனுக்கு மரணம் என்று பேர், பாதாளம் அவன் பின்னே சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் நாலிலொரு பங்கிலுள்ளவர்களைக் கொல்லும்படி அவைகளுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

௯ பின்பு அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது தேவனுடைய வசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன்.

௧௦ அவர்கள் பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே! எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும், பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்துப் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

௧௧ அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெண்மையான அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும், அவர்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய அவர்களுடைய உடன்பணிவிடைக்காரரும் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங் கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டுமென்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது.

௧௨ பின்பு அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன். உடனே பூமி மிகவும் அதிர்ந்தது. சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது, சந்திரன் இரத்தம்போலாயிற்று.

௧௩ அத்திமரம் பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.

௧௪ வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம்போலாகி விலகிப்போயிற்று. சகல மலைகளும் தீவுகளும் தங்கள் இடங்களை விட்டுப் பெயர்ந்துபோயின.

௧௫ மேலும் பூமியின் இராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், சகல அடிமைகளும், சகல சுயாதீனரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி,

௧௬ சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும் ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்;

௰௧ மூன்றரை நாளுக்குப் பின்பு பராபரனிடத்திலிருந்து ஜீவ ஆவி அவர்களுக்குட் பிரவேசித்தது. அவர்கள் தங்கள் காலூன்றி நின்றார்கள். அப்பொழுது அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று.

௰௨ பின்பு இங்கே ஏறிவாருங்களென்று வானத்திலிருந்து தங்களுக்குண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு ஒரு மேகத்திலே வானத்திற்குப் போனார்கள். அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை நோக்கிப் பார்த்தார்கள்.

௰௩ அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே அந்தப் பட்டினத்திற் பத்திலொரு பங்கு விழுந்துபோயிற்று. மனிதர் ஏழாயிரம்பேரும் பூமியதிர்தலால் அழிந்தார்கள். மீதியானவர்கள் பயமடைந்து பரமண்டலத்தின் பராபரனுக்குத் துதியைச் செலுத்தினார்கள்.

௰௪ இரண்டாம் வேதனை போயிற்று. இதோ, மூன்றாம் வேதனை சீக்கிரமாய் வருகிறது.

௰௫ அப்பொழுது ஏழாந் தூதன் எக்காளமூதினான். உடனே உலகத்தின் இராச்சியங்கள் நம்முடைய கர்த்தனையும் அவருடைய கிறிஸ்துவையுஞ் சேர்ந்தனவென்றும் அவர் என்றென்றைக்கும் இராசரிக்கம்பண்ணுவாரென்றும் மிகுந்த சத்தங்கள் பரமண்டலத்திலுண்டாயின.

௰௬ அப்பொழுது பராபரனுக்கு முன்பாகத் தங்கள் ஆசனங்களின்மேல் உட்கார்ந்த அவ்விருபத்து நான்கு மூப்பர்களுஞ் சாஷ்டாங்கமாய் விழுந்து,

௰௭ இருக்கிறவரும் இருந்தவருமாகிய சர்வவல்லமையுடைய தேவனாகிய பராபரனே! தேவரீர் உமது பலத்த வல்லமையை எடுத்துக்கொண்டு இராசரிக்கம்பண்ணுகிறீர்.

௰௮ புறத்தேசத்தார் கோபமாயிருந்தார்கள். அப்பொழுது உமது கோபந் தோன்றிற்று. மரித்தோர் நியாயந்தீர்ப்படைகிறதற்குந் தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேற் பயபத்தியாயிருந்த சிறியோருக்கும் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும் பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்குங் காலமும் வந்தது. ஆகையால் உம்மைத் தோத்திரஞ் செய்கிறோமென்று பராபரனைத் தொழுதுகொண்டார்கள்.

௰௯ பின்பு பரமண்டலத்திலே பராபரனுடைய ஆலயந் திறக்கப்பட்டது. அவருடைய ஆலயத்திலே அவருடைய உடம்படிக்கையின் பெட்டி காணப்பட்டது. மேலும் மின்னல்களுஞ் சத்தங்களும் இடிமுழக்கங்களும் பூமியதிர்தலும் பெருங்கல்மழையுமுண்டாயின.

௰௨. அதிகாரம்.

[(௧) சூரியனைச் சந்திரனை நட்சத்திரங்களைத் தரித்த ஸ்திரீ வானத்திலே தோன்றி ஒரு பிள்ளைப்பெற்றதும், (௩) வல்லசர்ப்பந் தோன்றி அந்தப் பிள்ளையை விழுங்கத் தேடினதும், (௫) அந்தப் பிள்ளை வானத்திற்கு எடுக்கப்பட்டதும், (௬) அந்த ஸ்திரீ வனாந்தரத்திலே காக்கப்பட்டதும், (௭) மிகாவேலும் வல்லசர்ப்பமும் யுத்தம்பண்ணினதும், (௯) வல்லசர்ப்பம் பூமியின்மேல் தள்ளப்பட்டதும், (௰) விண்ணோர் துதிசெய்ததும், (௰௩) வல்லசர்ப்பம் பூமியிலே ஸ்திரீயைத் துன்பப்படுத்தினதும்.]

௧ அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. (என்னவெனில்) ஒரு ஸ்திரீ சூரியனை அணியப்பட்டுத் தன்னுடைய பாதங்களின் கீழே சந்திரனையுந் தன்னுடைய சிரசின்மேற் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடத்தையுமுடையவளாய்,

௨ கர்ப்பத்திலே வருத்தமடைந்து, பிள்ளைப்பெறும்படி வேதனைப்பட்டு அலறிக்கொண்டிருந்தாள்.

௩ அன்றியும் வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது. (என்னவென்றால்,) ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையுந் தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வல்லசர்ப்பமிருந்தது.

௪ அதின் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றத்தொரு பங்கை இழுத்து அவைகளைப் பூமியின்மேல் தள்ளிற்று. அல்லாமலும்

ம் பிள்ளைபெறுகிறவளாகிய அந்த ஸ்திரீ பிள்ளைபெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.

௫ அவள் சனக்கூட்டங்களெல்லாவற்றையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும்படிக்கான ஆண்பிள்ளையைப் பெற்றாள். உடனே அவளுடைய பிள்ளை பராபரனிடத்துக்கும் அவருடைய ஆசனத்துக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

௬ ஸ்திரீயானவளும் வனாந்தரத்திற்கோடிப்போனாள். அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகப் பராபரனால் எத்தனமாக்கப்பட்ட இடம் அவளுக்குண்டாயிருக்கிறது.

௭ அன்றியும் பரமண்டலத்திலே யுத்தமுண்டாயிற்று. மிகாவேலும் அவனைச்சேர்ந்த தூதரும் அந்த வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள். வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயம் அடையவில்லை.

௮ அப்பின்னே பரமண்டலத்திலே அவர்களுக்கு இடம் காணப்படவுமில்லை.

௯ உலகம்யாவையும் வஞ்சித்துவருகிற பசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழம்பாம்பாகிய பெரிய வலுசர்ப்பந் தள்ளப்பட்டது. அது பூமியிலே தள்ளப்பட்டது. அதினோடேகூட அதைச்சேர்ந்த தூதருந் தள்ளப்பட்டார்கள்.

௰ அப்பொழுது நம்முடைய சகோதரர் மேற் குற்றஞ்சாற்றுகிறவன் தாழ்த்தள்ளப்பட்டிருக்கிறதால், இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் இராஜ்யமும் நம்முடைய பராபரனுக்கும் அதிகாரம் அவருடைய கிறிஸ்துவுக்குமுண்டாயிருக்கின்றன. இரவும்பகலும் அவன் பராபரனுக்குமுன்பாக அவர்கள்மேலே குற்றஞ்சாற்றினான்.

௰௧ அவர்கள் மரணபரியந்தம் தங்கள் ஜீவனைச் சிநேகியாமல் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலுந் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

௰௨ ஆகையால் பரமண்டலங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலுஞ் சமுத்திரத்திலுங் குடியிருக்கிறவர்களே! உங்களிடத்திலே பசாசு தனக்குக் கொஞ்சக்காலமுண்டென்றறிந்து மிகுந்த கோபங்கொண்டிருக்கிறபடியால் ஐயோ, உங்களுக்கு வேதனையுண்டாயிருக்குமென்று பரமண்டலத்திலே பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்.

௰௩ அந்தப்படி வலுசர்ப்பமானவன் தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, அந்த ஆண்பிள்ளையைப்பெற்ற ஸ்திரீக்குப் பின்தொடர்ந்தான்.

௰௪ அந்தஸ்திரீ [illegible] திற்கு விலக, ஒருகாலமுங் [illegible] ரைக்காலமுமாகப் [illegible] வளுக்குத் [illegible] [illegible] [illegible] டன்.

௰௫ அப்பொழுது சர்ப்பமானவன் ஸ்திரீயை வெள்ளத்தினால் [illegible] தன்வாயிலிருந்து [illegible] யவளுக்குப்பின்னாக [illegible]

௰௬ பூமி ஸ்திரீக்கு உதவியாக [illegible] யைத் திறந்து, வலுசர்ப்பம் [illegible] ருந்து கொப்பளித்த [illegible]

௰௭ அப்பொழுது வலுசர்ப்பம் [illegible] ஸ்திரீயின்மேல் [illegible] பரனுடைய கற்பனைகளைக் [illegible] கிறவர்களும் [illegible] த்துச் சாட்சியையுடைய [illegible] ளுடைய சந்ததியாரோடே யுத்தம்பண்ணப்போனான்.

௰௩. அதிகாரம்.

[(௧) சமுத்திரத்திலிருந்து [illegible] மி, (௪) பரிசுத்தவான்களை [illegible] [illegible] கின்றதும், (௰௧) [illegible] மியிலிருந்தெழும்பி [illegible] அதிகாரத்தைப்பெற்று, (௰௩) [illegible] ஒருசெகுறிசெய்யும் [illegible] டண்ணினதும்.]

பின்பு நான் கடலோரத்து மணலின் மேல் நிறுத்தப்பட்டேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒருமிருகம் ஏறிவரக்கண்டேன். அதற்குப் பத்துக்கொம்புகளும் ஏழுதலைகளுமிருந்தன. அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேலே தூஷணமான நாமங்களுமிருந்தன.

௨ மேலும் நான் கண்ட மிருகம் சிவிங்கியைப் போலிருந்தது. அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும் அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவுமிருந்தன. வலுசர்ப்பமானவன் தன் வல்லமையையும் தன் ஆசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தான்.

௩ பின்பு அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருந்ததைக் கண்டேன். பின்பு சாவுக்கேதுவான காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே துஷ்டமிருகத்தைப் பின்பற்றி,

௪ அம்மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தபடியினாலே

சருபத்தைத் தொழுதுகொண்டார்கள். அல்லாமலும், மிருகத்திற்கொப்பானவன் யார்? அதினுடனே யுத்தம்பண்ணத்தக்கவனார் என்று, மிருகத்தையுந்தொழுதுகொண்டார்கள்.

௫ மேலும் பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசுகிற வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது. அல்லாமலும் நாற்பத்திரண்டு மாதம் நடந்துகொள்ளும்படிக்கு அதிகாரம் அதற்கு அளிக்கப்பட்டது.

௬ அந்தப்படி அது பராபரனுடைய நாமத்தையும் அவருடைய கூடாரத்தையும் பரமண்டலத்தில் வாசமாயிருக்கிறவர்களை நிந்தைபண்ணுகிறதற்குத் தன் வாயைத் தூஷணமாகத் திறந்தது.

௭ மேலும் பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு (இடமும்) கொடுக்கப்பட்டது. எந்தக் கோத்திரத்தின்மேலும் ஜனக்கூட்டத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் தேசத்தார்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.

௮ ஆதலால், உலகமுண்டானது முதற் பலியாக) அடிக்கப்பட்டபடி (நியமிக்கப்பட்ட) ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்திலே பேரெழுதப்படாத பூமியின் குடிகள் யாவரும் அதை நமஸ்காரம்பண்ணுவார்கள்.

௯ யாதொருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன்.

௰ சிறையாகப்பிடித்துக்கொண்டு போகிறவன் சிறையாகக் கொண்டுபோகப்படுவான். கட்கத்தினாலே கொலைசெய்கிறவன் கட்கத்தினாலே கொலைசெய்யப்படவேண்டும். இங்கே பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் விளங்கும்.

௰௧ அன்றியும் வேறொரு மிருகம் தரையிலிருந்தெழும்பக்கண்டேன். அது ஆட்டுக்குட்டிக்கொப்பாய் இரண்டு கொம்புகளையுடையதாய், வலுசருப்பத்தைப் போலப் பேசினது.

௰௨ அல்லாமலும் அது முந்தின மிருகத்தின் அதிகாரம் யாவையும் அதின் முன்பாக நடப்பித்துச் சாவுக்கேதுவான காயம் ஆறிப்போயிருந்த முந்தின மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் நமஸ்காரம்பண்ணும்படி செய்ததுமன்றி,

௰௩ மனிதருக்கு முன்பாக வானத்திலிருந்து அக்கினியையும் பூமியின்மேல் இறங்கப்பண்ணத்தக்கதாகப் பெரிய அடையாளங்களைச் செய்து,

௰௪ மிருகத்தின் முன்பாகச் செய்யும்படி அதற்களிக்கப்பட்ட அடையாளங்களினாலே பூமியின் குடிகளை வஞ்சித்துக் கட்கத்தினாலே காயப்பட்டுப் பின்பு பிழைத்த மிருகத்திற்கொரு சொரூபம் பண்ணவேண்டுமென்று பூமியின் குடிகளுக்குச் சொல்லுகிறது.

௰௫ மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும் அம்மிருகத்தின் சொரூபத்தை நமஸ்காரம்பண்ணாத யாவரையும் கொலைசெய்யப்பண்ணத்தக்கதாகவும் அம்மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குத் திராணியளிக்கப்பட்டது.

௰௬ அந்தப்படி அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்களியாவருந் தங்கள் வலதுகைகளிலே அல்லது தங்கள் நெற்றிகளின்மேல் ஒரு அடையாளத்தைப் பெறும்படிக்கும்,

௰௭ அம்மிருகத்தின் அடையாளமாகிய அந்த நாமத்தையாவது அதினுடைய நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவனே தவிர, வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங்கூடாதபடிக்கும் செய்கினது.

௰௮ இங்கே ஞானம் விளங்கும். மிருகத்தின் இலக்கம் ஒரு மனிதனுடைய இலக்கமாயிருக்கிறபடியால் புத்தியுடையவன் அந்த இலக்கத்தைக் கணக்குப்பார்க்கக்கடவன். அதினுடைய இலக்கம் ௬௱௬௰௬.

௰௪. அதிகாரம்.

[(௧) சீயோன்மலையிலே ஆட்டுக்குட்டியினதும், (௨) மீட்கப்பட்டவர்கள் புதிய பாட்டைப்பாடினதும், (௩) ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்து சுவிசேஷத்தை அறிவித்ததும், (௪) வேறொருதூதன் பாபிலோன் விழுந்ததை அறிவித்ததும் (௫) மூன்றாந்தூதன் மிருகத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களுக்கு வேதனைவருமென்று அறிவித்ததும், (௬) கர்த்தரைப்பற்றி மரிக்கிறவர்கள் பாக்கியவான்களென்று அறிவிக்கப்பட்டதும், (௭) அரிவாளைப்பிடித்த ஒருவன் தோன்றிப் பூமியின் திராட்சங்களையறுத்ததும்.]

பின்பு நான் பார்க்கையிற் சீயோன் பருவதத்தின்மேலே ஆட்டுக்குட்டியையும் அதினோடேகூட அவருடைய பிதாவின் நாமந் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த நூற்றிநாற்பத்துநாலாயிரம் பேரையும் கண்டேன்.

௨ அல்லாமலும் பெருவெள்ள இரைச்சலைப்போலவும் பெரும் இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தம் பரமண்டலத்திலிருந்துண்டாகக் கேட்டேன். மேலும் நான் கேட்ட ச

த்தந்தங்களைச் சுரமண்டலங்களை வாசிக்கிற சுரமண்டலக்காரருடைய ஓசையைப்போலவிருந்தது.

௩ அவர்கள் அந்த ஆசனத்திற்குமுன்பாகவும் நான்கு ஜீவன்களுக்கும் மூப்பருக்குமுன்பாகவும் புதியபாட்டைப் பாடினார்கள். அந்தப்பாட்டைப் பூமியிலிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட அந்த நூற்றிநாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறொருவரும் கற்றுக்கொள்ளக் கூடாததாயிருந்தது.

௪ அவர்களே கற்புடையவர்களாய் ஸ்திரீகளாலே தங்களை அசுசிப்படுத்தாதவர்கள். அவர்களே ஆட்டுக்குட்டி எங்கே போனாலும் அதைப் பின்பற்றுகிறவர்கள். அவர்களே மனிதரிலிருந்து பராபரனுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள்.

௫ அவர்கள் மாசில்லாதவர்களானபடியால் அவர்களுடைய வாயிலே கபடம் அகப்படவில்லை.

௬ அன்றியும் வேறொரு தூதன் பூமியின் குடிகளுக்கும் சகல தேசத்தாருக்கும் கோத்திரத்தாருக்கும் பாஷைக்காரருக்கும் சனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்க நித்திய சுவிசேஷத்தையுடையவனாய் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்.

௭ அவன் மிகுந்த சத்தத்துடனே கூப்பிட்டதாவது: பராபரன் நியாயத்தீர்ப்பைக் கொடுக்கும் நேரம் வந்தபடியால் அவருக்குப் பயந்து அவருடைய மகிமையைப் பாராட்டுங்கள். வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுக்களையும் உண்டாக்கினவரையே தொழுதுகொள்ளுங்களென்று கூப்பிட்டான்.

௮ வேறொரு தூதன் பின்சென்று பெரிய பட்டினமாகிய பாபிலோன் விழுந்துபோயிற்று, விழுந்துபோயிற்று. அவள் தன் வேசித்தனமாகிய உக்கிர இரசத்தைச் சகல தேசத்தாரும் குடிக்கப்பண்ணினாளே யென்றான்.

௯ அவர்களுக்குப் பின்னே மூன்றாந்தூதன் வந்து மிகுந்த சத்தத்தோடே சொன்னதாவது: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் நமஸ்காரம்பண்ணித் தன் நெற்றியிலாவது தன் கையிலேயாவது அடையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ,

௰ அவன் பராபரனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிர இரசத்தைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் அக்கினியாலும் கந்தகத்தாலும் வாதிக்கப்படுவான்.

௰௧ அவர்களை வாதிக்கிற [illegible] றெண்றைக்கும் எழும்பும் (இ[illegible]) [illegible] கத்தைத் தம் அதின் [illegible] காரம்பண்ணுகிறவர்களுக்கும் [illegible] யநாமத்தின் அடையா[illegible] கொள்ளுகிறவனுக்கும் [illegible] இளைப்பாறுதலிராது.

௰௨ இதுவே பராபரனுடைய [illegible] ளையும் இயேசுவின் மேலுள்ள [illegible] யும் காத்துக்கொள்ளுகிறவர்கள் [illegible] த்தவான்களுடைய பொறுமை [illegible].

௰௩ பின்னும் இதுமுதற்[illegible] பட்டு மரிக்கிறவர்கள் பாக்கியவான்க[illegible] றெழுது என்று பரமண்டலத்[illegible] தம் உண்டாகக்கேட்டேன். [illegible] அவர்கள் தங்கள் பிரயாசங்களை [illegible] ந்து இளைப்பாறுவார்கள். அவ[illegible] கிரியைகள் அவர்களுடனே கூட [illegible] றன் வென்று ஆவியானவர் [illegible] கிறார்.

௰௪ பின்பு நான் பார்த்த [illegible] மேகத்தையும் அந்த மேகத்தின் [illegible] த குமாரனுக்கொப்பானவர் [illegible] டைய சிரசின்மேற் பொற்கிரீட[illegible] ன் கையிலே கருக்குள்ள [illegible] ய ஒருவன் உட்கார்ந்திருக்க[illegible] ண்டேன்.

௰௫ அப்பொழுது வேறொருதூதன் [illegible] லயத்திலிருந்து புறப்பட்டு [illegible] உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி [illegible] பயிர் பருவமானபடியால் அறுக்[illegible] குக்காலம் வந்தது. ஆகையால் உ[illegible] ய அரிவாளை நீட்டி அறுத்துப்போ[illegible] று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௰௬ உடனே மேகத்தின் மேலுட்கார்[illegible] தவன் தன்னுடைய அரிவாளைப் பூமியின் [illegible] ட்போட்டான். பூமி அறுக்கப்பட்டது.

௰௭ பின்பு வேறொருதூதன் [illegible] குள்ள அரிவாளைப் பிடித்தபடி [illegible] தில் உள்ள தேவாலயத்திலிருந்து பு[illegible] ந்தான்.

௰௮ பின்பு அக்கினியின்மேல் அ[illegible] மூள்ள வேறொருதூதனும் பலி[illegible] து புறப்பட்டுவந்து கருக்குள்ள [illegible] பிடித்திருக்கிறவனை நோக்கி பூமி[illegible] ட்சங்கள் பழுத்திருக்கிறபடியால் [illegible] ள உமது அரிவாளை நீட்டி அதின் [illegible] யறுத்துப்போடுமென்று மிகுந்த [illegible] தோடே கூப்பிட்டான்.

௰௯ அந்தப்படி அந்தத்தூதன் [illegible] வாளைப் பூமியிலே போட்டு பூமி[illegible] ங்களை அறுத்துப் பராபரனுடைய [illegible] ன பெரிய திராட்சத்தொட்டியிலே [illegible] டான்.

௨௰ பட்டினத்திற்குப் புறம்பேயுள்ள அந்தத்திராட்சத்தொட்டியிலே மிதிக்கப்பட்டது. அந்தத்திராட்சத்தொட்டியிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் வந்தது.

௧௫. அதிகாரம்.

[(௧) கடைசியான ஏழுவேதனைகளைச் செலுத்துகிற ஏழுதூதர்களுந் தோன்றினதும், (௨) மிருகத்தைச் செயித்தவர்கள் பாட்டைப்பாடினதும், (௫) வானத்திலே தேவாலயந்திறக்கப்பட்டதும், (௭) அந்தத்தூதர்களுக்கு ஏழுபாத்திரங்கள் கொடுக்கப்பட்டதும்.]

௧ பின்பு வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறொரு அடையாளமாகிய ஏழு கடைசிவாதைகளையுடைய ஏழு தூதரைக் கண்டேன். அவைகளாற் பராபரனுடைய கோபமுடிகிறபடியால் (அவைகளே கடைசிவாதைகள்.)

௨ அன்றியும் அக்கினிகலந்த பளிங்கான கடலுக்கொப்பானதையும் மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் அடையாளத்திற்கும் அதின் நாமத்து இலக்கத்திற்கு முள்ளாகாமற் செயங்கொண்டவர்கள் தேவசுரமண்டலங்களைப் பிடித்துக்கொண்டு பளிங்கான் கடற்கரையிலே நிற்கிறதையுங் கண்டேன்.

௩ அவர்கள் பராபரனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியின் பாட்டையும் பாடுகிறார்கள். எப்படியெனிற் சருவ வல்லமையுள்ள தேவனாகிய பராபரனே! தேவரீருடைய கிரியைகள் பெருமையும் ஆச்சரியமுமானவைகள். உலகத்தாரின் இராசாவே! தேவரீருடைய வழிகள் நீதியுஞ் சத்தியமுமானவைகள்.

௪ கர்த்தாவே ஆர் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தைத் துதியாமலுமிருக்கலாம்? என்னத்தினாலெனில் நீரொருவரே பரிசுத்தமுள்ளவர். உலகத்தாரெல்லாரும் வந்து உமக்கு முன்பாக நமஸ்காரஞ்செய்வார்கள். உம்முடைய நியாயத்தீர்ப்புகள் வெளியரங்கமாயினவென்றார்கள்.

௫ இவைகளுக்குப்பின்பு நான் கண்டதாவது. பரமண்டலத்திலே சாட்சியையுடைய கூடாரமாகிய ஆலயந்திறக்கப்பட்டது.

௬ அந்த ஆலயத்திலிருந்து ஏழுவாதைகளையுடைய அவ்வேழுதூதர்கள் சுத்தமும் பிரகாசமுமான புடவையைத் தரித்து, மார்புகளிற் பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள்.

௭ அல்லாமலும் அந்த நான்கு சீவன்களிலொன்று என்றென்றைக்கும் பிழைக்கிற பராபரனுடைய கோபாக்கினையால் நிறைந்த பொற்கலயங்களேழையும் அவ்வேழு தூதர்களுக்குங் கொடுத்தது.

௮ அப்பொழுது தேவாலயமானது பராபரனுடைய மகிமையாலும் அவருடைய வல்லமையாலும் பிறந்தபுகையினாலே நிரப்பப்பட்டது. (ஆதலால்) ஏழுதூதர்களுஞ் செய்யும் ஏழுவாதைகளும் முடியுமவரைக்கும் ஒருவருந்தேவாலயத்திற்குட்பிரவேசிக்கக்கூடாததாயிருந்தது.

௧௬. அதிகாரம்.

[(௧) முதலாந்தூதன் தன்பாத்திரத்திலுள்ள வேதனையைப் பூமியின்மேலும், (௩) இரண்டாந்தூதன் தன்னுடையதைச் சமுத்திரத்தின்மேலும், (௪) மூன்றாந்தூதன் தன்னுடையதை ஆறுகளின்மேலும் நீரூற்றுக்களின்மேலும், (௮) நான்காந்தூதன் தன்னுடையதைச் சூரியன்மேலும், (௰) ஐந்தாந்தூதன் தன்னுடையதை மிருகத்தின் ஆசனத்தின்மேலும், (௰௨) ஆறாந்தூதன் தன்னுடையதை ஐப்பிராத்து நதியின்மேலும் ஊற்றினதும், (௰௩) மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டதும், (௰௭) ஏழாந்தூதன் தன்னுடையதை ஆகாசத்தின்மேல் ஊற்றினபொழுது பெரியபட்டினம் இடிந்துபோனதும்.]

௧ அப்பொழுது தேவாலயத்திலிருந்துண்டான பெரியசத்தம் அந்த ஏழுதூதருடனே, நீங்கள்போய்ப் பராபரனுடைய கோபாக்கினையுள்ள கலயங்களைப் பூமியின்மேல் ஊற்றுங்களென்று சொல்லக்கேட்டேன்.

௨ அந்தப்படி முதலாந் (தூதன்) போய்த் தன் கலயத்திலுள்ளதைத் தரையின்மேல் ஊற்றினான். உடனே மிருகத்தின் அடையாளத்தையுடையவர்களும் அதின் சொரூபத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களுமாகிய மனிதர்களிற் பொல்லாதகொடிய பருவுண்டாயிற்று.

௩ பின்பு இரண்டாந்தூதன் தன் கலயத்திலுள்ளதைச் சமுத்திரத்திலேயூற்றினான். உடனே அது செத்தவனுடைய இரத்தம்போலாயிற்று. சமுத்திரத்திலுள்ள பிராணிகளியாவுஞ் செத்துப்போயின.

௪ பின்பு மூன்றாந்தூதன் தன் கலயத்திலுள்ளதை யாறுகளிலும் நீரூற்றுக்களிலும் ஊற்றினான். உடனே அவைகள் இரத்தமாயின.

௫ அப்பொழுது சலங்களின் தூதனானவன் இருக்கிறவரும் இருந்தவருமாகிய பரிசுத்தரே! தேவரீர் இப்படி நியாயந்தீர்த்ததினால், நீதியுள்ளவராயிருக்கிறீர்.

௬ அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையுந் தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையுஞ் சிந்தினபடியினாலே இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்தீர். (அதற்கு) பாத்திரராயிருக்கிறார்களென்று சொல்லக் கேட்டேன்.

௭ வேறொருவன் சருவவல்லமையுள்ள தேவனாகிய பராபரனே! மெய்யாய் உம்முடைய தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகளென்று பலிபீடத்திலிருந்து சொல்லக் கேட்டேன்.

௮ பின்பு நான்காந் தூதன் தன் கலயத்திலுள்ளதைச் சூரியன்மேலே யூற்றினான். தீயினாலே மனிதரைச் சுடும்படியாய் அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

௯ அந்தப்படியே மனிதர்கள் மிகுந்த உட்டிணத்தினாலே சுடப்பட்டார்கள். (அப்படியிருந்தும்) பராபரனுடைய மகிமையைப் பாராட்ட அவர்கள் மனந்திரும்பாமல், அந்த வாதைகளைச் செய்ய அதிகாரமுள்ள அவருடைய நாமத்தைத் தூஷணித்தார்கள்.

௰ பின்பு ஐந்தாந் தூதன் தன் கலயத்திலுள்ளதை மிருகத்தினுடைய ஆசனத்தின்மேலூற்றினான். உடனே அதின் இராச்சியம் இருளடைந்தது. அப்படியிருந்தும் அவர்கள் தங்கள் கிரியைகளைவிட்டு மனந்திரும்பாமல் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக்கொண்டு,

௰௧ தங்கள் வருத்தங்களாலுந் தங்கள் புண்களாலும் பரமண்டலத்தின் பராபரனைத் தூஷணித்தார்கள்.

௰௨ பின்பு ஆறாந் தூதன் தன் கலயத்திலுள்ளதை ஐபிராத்தென்னும் பெரிய ஆற்றின்மேலூற்றினான். உடனே சூரிய உதயத் திக்கிலிருந்துவரும் இராசாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படிக்கு அந்த ஆற்றின் தண்ணீர் வற்றிப்போயிற்று.

௰௩ அல்லாமலும் வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலுங் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கொப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்படக் கண்டேன்.

௰௪ அவைகள் அடையாளங்களைச் செய்கிற பசாசுக்களின் ஆவிகளாயிருக்கின்றன. பூமியிலெங்குமுள்ள இராசாக்களைச் சருவவல்லமையுள்ள பராபரனுடைய பெரிதான நாளிலுண்டாகும் யுத்தத்துக்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கு அவைகள் [illegible] புறப்பட்டுப்போகின்றன.

௰௫ இதோ, நான் திருடனைப்போல வருகிறேன். விழித்துக்கொண்டு [illegible] ணத்தை அவர்கள் காணத்தக்கதாக நிருவாணமாய் நடவா[illegible] [illegible]ங்களைக் காத்[illegible]

௰௬ எபிரேயு பாஷையில் [illegible] தோனென்னப்பட்ட [illegible] களைக் கூட்டிக்கொண்[illegible]

௰௭ ஏழாந்தூதன் தன் கலயத்திலுள்ளதை ஆகாசத்தின்மேலூற்றினான். [illegible] பரமண்டலத்து [illegible] ஆசனத்திலிருந்து [illegible] பெரிய சத்தம் புறப்பட்டது.

௰௮ அல்லாமலுஞ் [illegible] முக்கங்களும் மின்னல்களும் [illegible] மிகவும் [illegible] ர்களுண்டான [illegible] குறித்த பெரிய அதிர்ச்சியுண்டாயிற்று.

௰௯ அப்பொழுது [illegible] னறு பங்காகப் பிரிக்கப்பட்ட[illegible] ருடைய பட்டணங்கள் விழுந்[illegible] பாபிலோனுக்குப் பராபரனுடைய [illegible] ரமான கோபாக்கினையாகிய [illegible] பாத்திரத்தைக் கொடுக்கும்படிக்[illegible] அவருக்கு முன்பாக நினைக்[illegible]

௨௰ தீவுகளும் [illegible] ருவங்கள் காணப்படா[illegible]

௨௧ தாலந்து நிறையான [illegible] மையுமான [illegible] மனிதர்[illegible] கிறது. அப்படியிருந்தும் [illegible] [illegible] னுண்டானவா[illegible] படியால் மனிதர்கள் [illegible] ந்தம் பராபரனைத் தூஷணித்தார்கள்.

௰௭. அதிகாரம்.

[(௧) அந்த ஏழு [illegible] டவேசிகளுடைய அக்கினை[illegible] னுக்குக் காட்டினது.]

பின்பு ஏழு [illegible] ஏழு தூதரில் ஒருவன் வந்து [illegible] [illegible] ர்களான [illegible] ரந்தவளோடே [illegible] [illegible] தனம் [illegible] வேசித்தனமாகிய [illegible] டிகளும் வெறிபடைந்தார்கள்.

௨ அந்த மகாவேசிக்கு [illegible] பை உனக்குக் காண்பிக்[illegible] ல்வி,

௩ ஆவியில் என்னை [illegible] கொண்டுபோனான். [illegible] மான நாமங்களால் [illegible] புமுள்ள [illegible] ரமுள்ள மிருகத்தின்மேல் [illegible] யிருக்கக்கண்டேன்.

௪ அந்த ஸ்திரி இரத்தாம்பரமுஞ் சிவப்பான அங்கியுந்தரித்துப் பொன்னினாலும் இரத்தினங்களாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டுத் தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்.

௫ மேலும் இரகசியமென்றும், பூமியின் அருவருப்புகளுக்கும் வேசிகளுக்குந் தாயாகிய மகாபாபிலோனென்றும் அவளுடைய நெற்றியிலே நாமம் எழுதியிருந்தது.

௬ மேலும் அந்த ஸ்திரி பரிசுத்தவான்களின் இரத்தத்தாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன். அவளைநான் கண்டு, மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

௭ அப்பொழுது தூதனானவன் என்னை நோக்கி: என்னத்தினாலே ஆச்சரியப்படுகிறாய்? இந்த ஸ்திரியின் இரகசியத்தையும் இவளைச் சுமந்திருக்கிற ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையுமுடைய மிருகத்தின் இரகசியத்தையும் உமக்குச் சொல்லுகிறேன்.

௮ நீ கண்ட மிருகம் (முன்னே) இருந்தது (இப்பொழுது) அது இல்லை (இனிமேல்) பாதாளத்திலிருந்து ஏறிவந்து அழிவுக்குப்போம். அன்றியும் லோகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்திலே பெயரெழுதப்படாத பூமியின் குடிகள் முன்னிருந்ததுமாய் (இப்பொழுது) இராததுமாய (இனி) இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப் பார்த்து ஆச்சரியப்படுவார்கள். ஞானமுள்ள புத்தியிங்கே விளங்கும்.

௯ அந்த ஏழுதலைகளும் ஏழு மலைகளே. அவைகளின்மேல் ஸ்திரி உட்கார்ந்திருக்கிறாள்.

௰ அவைகள் ஏழு இராசாக்களாயுமிருக்கின்றன. (இவர்களில்) ஐந்துபேர் விழுந்தார்கள். ஒருவனிருக்கிறான். மற்றவன் இதுவரைக்கும் வரவில்லை. வரும்பொழுது அவன் கொஞ்சகாலந் தரித்திருக்கவேண்டும்.

௰௧ இருந்ததும் (இப்பொழுது) இராததுமாகியமிருகமே எட்டாவதுமாய் அவ ஏழில் ஒன்றுமாயிருந்து அழிவுக்குப்போகிறது.

௰௨ அன்றியும் நீ கண்ட பத்துக்கொம்புகளும் பத்து இராசாக்களே. அவர்கள் இதுவரையிலும் இராச்சியம்பெறவில்லை. அவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணிநேரமளவும் இராசாக்களைப்போல அதிகாரம்பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

௰௩ அவர்கள் ஏகயோசனையையுடையவர்கள். மேலும் அவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுக்கிறார்கள்.

௰௪ அவர்கள் ஆட்டுக்குட்டியுடனே யுத்தம்பண்ணுவார்கள். ஆட்டுக்குட்டி கர்த்தாதிகர்த்தாவுமாய் இராசாதிராசாவுமாயிருக்கிறபடியால் அவர்களைச்செயிக்கும். அதினோடேகூட இருக்கிறவர்களாகிய அழைக்கப்பட்டவர்களுமாய்த் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுமாய் உண்மையுள்ளவர்களுமாயிருக்கிறவர்களும் (அவர்களைச்செயிப்பார்கள்) என்றான்.

௰௫ பின்னும் அவன் என்னுடனே சொன்னதாவது: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே. அவைகள் சனங்களும் கூட்டங்களும் தேசத்தாரும் பாஷைக்காரருமாயிருக்கின்றன.

௰௬ அன்றியும் நீ கண்ட பத்துக்கொம்புகளும் அந்த மிருகமுமானவர்கள் அந்த வேசியைப் பகைத்து, அவளைப் பாழுந் திருவாணமுமாக்கி அவளுடைய மாம்சத்தைத் தின்று, அவளை நெருப்பினால் சுட்டெரித்துப் போடுவார்கள்.

௰௭ என்னத்தினாலெனில் பராபரன் தம் யோசனையை அவர்கள் செய்கிறதற்கும் ஏகயோசனையாய்ச் செய்கிறதற்கும் பராபரனுடைய வார்த்தைகள் நிறைவேறுமளவுந் தங்கள் இராச்சியத்தை மிருகத்திற்குக் கொடுக்கிறதற்கும் அவர்களுடைய இருதயங்களில் (யோசனையைக்) கொடுத்தார்.

௰௮ அன்றியும் நீ கண்ட ஸ்திரீயானவள் பூமியின் இராசாக்களின்மேல் இராச்சியத்தைச் செலுத்துகிற மகா பட்டணமேயாமென்றான்.

௰௮. அதிகாரம்.

[(௧) வேறொரு தூதன் தோன்றிப் பெரிய பாபிலோன் விழுந்ததையறிவித்ததும், (௪) அதைவிட்டுப் புறப்படும்படி புத்தி சொன்னதும், (௯) இராசாக்களும், (௰௧) வியாபாரிகளும், (௰௭) கப்பற்காரரும் அதைக்குறித்துப் புலம்பினதும், (௨௧) வல்லதூதன் ஒருவன் பெரியகல்லைச் சமுத்திரத்திலே தள்ளினதும்.]

இவைகளுக்குப்பின்பு மிகுந்த அதிகாரமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கக்கண்டேன். அவனுடைய மகிமையினாலே பூமி பிரகாசமாக்கப்பட்டது.

௨ அவன் பலத்தசத்தத்தோடே கூப்பிட்டதாவது: மகா பாபிலோன் விழுந்தது விழுந்தது. அது பசாசுகளின் குடியிருப்பும் சகலவித அசுத்த ஆவிகளுடைய காவலும் அசுத்தமும் அருவருப்புமான சகலவித பறவைகளுடைய காவலுமாயிற்று.

௩ அவளுடைய வேசித்தனத்தின் உக்கிரமான இரசத்தைஎல்லாத்தேசத்தாருங்குடித்தும், பூமியின் இராசாக்கள் அவளோடேவேசித்தனம்பண்ணியும் பூமியின் வியாபாரிகள் அவளுடைய மோகவிகாரத்தின் வல்லமையினாலே ஐசுவரியவான்களாகியுமிருக்கிறபடியினாலே அப்படியாயிற்றென்றான்.

௪ பின்பு வேறொருசத்தம் வானத்திலிருந்துண்டாகக்கேட்டேன். அதென்னவென்றால் என்னுடையசனங்களே! அவளுடைய பாவங்கள் வானபரியந்தந்தொடர்ந்தபடியினாலும் அவளுடைய அநியாயங்களைப்பராபரன் நினைத்துக்கொண்டிருக்கிறபடியினாலும்,

௫ நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு ஐக்கியமாகாமலும் அவளுடையவாதைகளிற்பங்குபெறாமலுமிருக்கும்படிக்கு அவளிடத்திலிருந்துபுறப்படுங்கள்.

௬ அவள் உங்களுக்குப்பதில்செய்ததுபோலநீங்களும் அவளுக்குப்பதில்செய்து அவளுடைய கிரியைகளின்படி அவளுக்கு இரட்டிப்பாகக்கொடுத்துத்தீருங்கள். அவள்கலந்துகொடுத்த பாத்திரத்திலே இரட்டிப்பாக அவளுக்குக்கலந்துகொடுங்கள்.

௭ அவள்தன்னைமகிமைப்படுத்திமோகவிகாரங்கொண்டதெவ்வளவோஅவ்வளவாய் வாதையையுந்துக்கத்தையும் அவளுக்கு இடுங்கள். தான் இராசஸ்திரியாயுக்கார்ந்திருக்கிறவளென்றுந் தான் கைம்பெண்ணல்லவென்றுந் தான் துக்கத்தைக்காண்பதில்லையென்றும் அவள்தன் இருதயத்திலே யெண்ணிக்கொள்ளுகிறபடியால்,

௮ ஒரேநாளிலே அவளுக்குவாதைகளாகிய சாவுந் துக்கமும்பஞ்சமும்வரும். அவள் அக்கினியினாலேசுட்டெரிக்கப்படுவாள். அவளுக்கு நியாயத்தீர்ப்புக்கொடுக்குந்தேவனாகியபராபரன் பலமுள்ளவராயிருக்கிறார்.

௯ அவளுடனே வேசித்தனம்பண்ணி மோகவிகாரத்தோடே வாழ்ந்தபூமியின் இராசாக்களும் அவள்வேகிறதினாலுண்டான புகையைக்காணும்பொழுது,

௰ அவளுக்குண்டானவாதையினாலேபயந்து தூரத்திலேநின்று ஐயையோ. மகாபட்டினமாகிய பாபிலோனே! வல்லபட்டினமே! ஒரேமணிநேரத்திலுனக்கு ஆக்கினைவந்ததேயென்று அவளைக்குறித்து அழுது புலம்புவார்கள்.

௰௧ பூமியின்வியாபாரிகளுந்தங்களவியாபாரபதார்த்தங்களாகிய பொன்னையும் வெள்ளியையும் இரத்தினங்களையுமுத்துக்களையுமெல்லிதானபுடவையையும் இரத்தாம்பரத்தையும்பட்டையுஞ்சிவப்பாடையையும்,

௰௨ சகலவிதவாசனைக்கட்டைகளையும் தந்தத்தினாற்செய்திருக்கிற சகலவிதப்பாத்திரங்களையும் விலையுயர்ந்த மரத்தினாலும் வெண்கலத்தினாலும் இரும்பினாலும் சலவைக்கல்லினாலுஞ்செய்திருக்கிற சகலவிதப்பாத்திரங்களையும்,

௰௩ இலவங்கப்பட்டையையுந் தூபவர்க்கங்களையுந் தைலத்தையும் தூபவர்க்கத்தையுந் திராட்சரசத்தையும் எண்ணெயையும் மெல்லியமாவையுங் கோதுமையையும் ஆடுமாடுகளையுங் குதிரைகளையும் இரதங்களையும் அடிமைகளையும் மனுஷருடைய ஆத்துமாக்களையும் ஒருவருங் கொள்வாரில்லாதபடியால், அவளைக்குறித்து அழுதுகொண்டிருப்பார்கள்.

௰௪ உன் ஆத்துமா இச்சித்த கனிகள் உன்னைவிட்டுநீங்கிப்போயின். கொழுமையானவைகளும் மகிமையானவைகளும் இவையெல்லாமுன்னைவிட்டுப்போயின். நீ அவைகளை இனிக்காணமாட்டாய்.

௰௫ இப்படிப்பட்டவைகளைவியாபாரம்பண்ணி இவளால் ஐசுவரியவான்களானவர்கள் அவளுக்குண்டான வாதையினாலேபயந்து,

௰௬ ஐயையோ, மெல்லியபுடவையும் இரத்தாம்பரமுஞ்சிவப்பாடையுந்தரித்து பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த மகாபட்டினமே! ஒரேமணிநேரத்திலே இவ்வளவு ஐசுவரியமும் அழிந்துபோயிற்றேயென்று அழுது துக்கிப்பார்கள்.

௰௭ மாலுமிகள் யாவருங் கப்பல்களிலேயேறிப்போகிற யாவருங் கப்பற்காரருஞ் சமுத்திரத்திலே தொழில்செய்கிற யாவருந் தூரத்திலேநின்று,

௰௮ அவள்வேகிறதினாலுண்டான புகையைப்பார்த்து, இந்தமகாபட்டினத்துக்கொப்பாயிருந்தபட்டினமெதுவென்று சத்தமிட்டு,

௰௯ தங்கள் தலைகளின்மேற் புழுதியைப்போட்டுக்கொண்டு, ஐயையோ, மகாபட்டினமே! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இதின் உச்சிதமான பூரணத்தினாலேஐசுவரியவான்களானார்களே. ஒரேமணிநேரத்தில் இது பாழாய்ப்போயிற்றேயென்றழுது துக்கித்துக் கூப்பிட்டார்கள்.

௨௰ வானமே பரிசுத்தவான்களே அப்போஸ்தலரே! தீர்க்கதரிசிகளே! உங்களுக்காகப் பராபரன் அவளிடத்தில் நியாயக்கினையைச்செலுத்தினபடியினாலே அவளைக்குறித்துக் களிகூருங்களென்றான்.

௨௧ அப்பொழுது பலமுள்ள ஒரு தூதன் பெரிய எந்திரக்கல்லைப் போலொத்த ஒரு கல்லையெடுத்துச் சமுத்திரத்திலே யெறிந்து சொன்னதாவது. இப்படியே மகா பட்டணமாகிய பாபிலோனானது வேகமாய்த் தள்ளுண்டு இனிக் காணப்படாமற் போம்.

௨௨ சுரமண்டலக்காரரும் கீதவாத்தியக்காரரும் நாகசுரக்காரரும் எக்காளக்காரருமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்திலே கேட்கப்படுவதில்லை. எந்தத் தொழிலாளியும் இனி உன்னிடத்திலே காணப்படுவதில்லை. எந்திரத்தினுடைய சத்தம் இனி உன்னிடத்திலே கேட்கப்படுவதுமில்லை.

௨௩ விளக்குவெளிச்சம் இனி உன்னிடத்திலே பிரகாசிப்பதுமில்லை. மணவாளனும் மணவாட்டியுமானவர்களுடைய சத்தம் இனி உன்னிடத்திலே கேட்கப்படுவதுமில்லை. உன் வியாபாரிகள் பூமியிற் பெரியோர்களாயிருந்தபடியினாலும் உன் சூனியத்தால் எல்லாச் சாதிகளும் வஞ்சிக்கப்பட்டபடியினாலும் (அப்படியாம்.)

௨௪ தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியின்மேற் கொலைப்பட்ட அனைவருடைய இரத்தமும் அதினிடத்திலே காணப்பட்டதென்றான்.

௰௯. அதிகாரம்.

[(௧) விண்ணோரெல்லாரும் சந்தோஷமாய்ப் பாடித்தொழுதுகொண்டதும், (௭) ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணத்தைக் குறித்துச் சொன்னதும், (௰) தேவனான அந்தத் தூதனைத் தொழுதுகொள்ளக் கூடாதென்று கடிந்துகொள்ளப்பட்டதும், (௰௧) வானத்திலே ... சத்தியமுமான ... தோன்றினதும், (௰௭) சூரியனில் நின்ற தூதன் கூப்பிட்டதும், (௰௯) மிருகமும் அதைச் சேர்ந்தவர்களும் அக்கினிநரகத்திலே தள்ளப்பட்டதும்.]

இவைகளுக்குப் பின்பு பரமண்டலத்திலே திரளான கூட்டம் இடுகிற சத்தம்போல ஒரு சத்தத்தைக் கேட்டேன். என்னவென்றால்,

௨ தன் வேசித்தனத்தினாலே பூமியைக் கெடுத்த மகா வேசியினிடத்தில் நம்முடைய பிரான் நியாயத்தீர்ப்புச் செய்து, தம்முடைய ஊழியக்காரருடைய இரத்தத்துக்காக அவளிடத்திலே பழிவாங்கினபடியினாலே அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகளானதினால் அல்லேலூயா இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் அவருக்குண்டாயிருக்கின்றனவென்றதே.

௩ மறுபடியும் அல்லேலூயா அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புமென்றார்கள்.

௪ அல்லாமலும் இருபத்துநான்கு மூப்பரும் நான்கு சீவன்களும் (வணக்கமாய்) விழுந்து ஆமென், அல்லேலூயா வென்று சொல்லி ஆசனத்தின்மேல் உட்கார்ந்த பராபரனைத் தொழுதுகொண்டார்கள்.

௫ மேலும் நம்முடைய பராபரனுடைய ஊழியக்காரரே! அவருக்குப் பயப்படுகிற சிறியோரும் பெரியோருமானவர்களே! நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்களென்றொரு சத்தம் ஆசனத்திலிருந்து புறப்பட்டது.

௬ அப்பொழுது திரளான சனங்களுடைய சத்தம்போலவும் பெருவெள்ள இரைச்சல்போலவும் பலத்த இடிமுழக்கம்போலவும் ஒரு சத்தமுண்டாகக் கேட்டேன். என்னவென்றால் சர்வவல்லமையுள்ள தேவனாகிய பராபரன் இராச்சியம்பண்ணுகிறார். ஆகையால் அல்லேலூயா,

௭ ஆட்டுக்குட்டியினுடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னையெத்தனம்பண்ணினாள். சுத்தமும் பிரகாசமுமான மெல்லியபுடவையைத் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. ஆகையால் நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதியைச் செலுத்தக்கடவோமென்பதே.

௮ மெல்லியபுடவை பரிசுத்தவான்களுடைய நீதிகளே!

௯ பின்னும் அவன் என்னுடனே சொன்னது. ஆட்டுக்குட்டியின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்களென்றெழுதென்றான். பின்னும் இவைகள் பராபரனுடைய சத்தியமான வார்த்தைகளாயிருக்கின்றனவென்று என்னுடனே சொன்னான்.

௰ அப்பொழுது அவனைத் தொழுதுகொள்ளும்படி அவனுடைய பாதங்களுமுன்பாக விழுந்தேன். அவன் என்னுடனே சொன்னது. இப்படிச் செய்யாதபடிக்குப் பார். நான் உன்னோடும் இயேசுவின் சாட்சியையுடைய உன் சகோதரரோடுங்கூட ஊழியக்காரனாயிருக்கிறேன். பராபரனைத் தொழுதுகொள். இயேசுவின் சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறதென்றான்.

௰௧ பின்பு நான் பரலோகம் திறந்திருக்கக்கண்டேன். உடனே இதோ, ஒரு வெள்ளைக்குதிரை தோன்றினது. அதின்மேலிருந்தவர் உண்மையுள்ளவரும் சத்தியமுள்ளவருமென்னப்பட்டு

கிறார். அவர் நியாயத்தீர்ப்புச்செய்து யுத்தம்பண்ணுகிறார்.

௧௨ அவருடைய கண்கள் அக்கினிச்சுவாலையைப்போலிருந்தன. அவருடைய சிரசின்மேல் அநேக முடிகளுமிருந்தன. அவருக்கேயல்லாமல் வேறொருவனுக்குந் தெரியாத ஒரு நாமம் எழுதியிருந்தது.

௧௩ இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தையுந் தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தையென்னப்பட்டது.

௧௪ பரமண்டலத்திலுள்ள சேனைகள் வெண்மையுஞ் சுத்தமுமான மெல்லிய புடவையைத் தரித்துக்கொண்டவர்களாய் வெண்குதிரைகளின்மேலிருந்து அவருக்குப் பின்சென்றார்கள்.

௧௫ உலகத்தாரை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான கட்கம் புறப்படுகின்றது. இருப்புக்கோலால் அவர்களை ஆளுகைசெய்வார். அவர் சர்வவல்லமையுள்ள பராபரனுடைய உக்கிரகோபமாகிய இரசமுள்ள திராட்சத்தொட்டியில் மிதிக்கிறார்.

௧௬ இராசாதி இராசாவுங் கர்த்தாதிகர்த்தாவுமானவரென்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலுந் தொடையின்மேலும் எழுதப்பட்டிருந்தது.

௧௭ பின்பு சூரியனிடத்தில் ஒரு தூதனிற்கக்கண்டேன். அவன் வானத்தின் மத்தியில் பறக்கிற சகல பறவைகளையும் நோக்கி,

௧௮ நீங்கள் இராசாக்களுடைய மாமிசத்தையுஞ் சேனைத்தலைவருடைய மாமிசத்தையும் பலவான்களுடைய மாமிசத்தையுங் குதிரைகளுடைய மாமிசத்தையும் அவைகளின்மேலிருக்கிறவர்களுடைய மாமிசத்தையுஞ் சுயாதீனர் அடிமைகள் சிறியோர் பெரியோர் இவர்களெல்லாருடைய மாமிசத்தையுந் தின்னும்படிக்கு மகாபராபரனுடைய விருந்துக்குக் கூடி வாருங்களென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

௧௯ பின்பு அம்மிருகமும் பூமியின் இராசாக்களும் அவர்களுடைய சேனைகளும் அந்தக் குதிரையின்மேலிருக்கிறவரோடும் அவருடைய சேனையோடும் யுத்தம்பண்ணும்படிக்குக் கூடிக்கொண்டிருக்கக்கண்டேன்.

௨௰ அப்பொழுது அம்மிருகமும் அதின் முன்பாகச் செய்த அடையாளங்களால் மிருகத்தின் அடையாளத்தைத் தரித்தவர்களையும் அதின் சொரூபத்தைத் தொழுதுகொண்டவர்களையும் மலைக்கப்பண்ணின கள்ளத்தீர்க்கதரிசியுங் கூடப்பிடிக்கப்பட்டு இருவரும் உயிரோடே கந்தகம் எரிகிற அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டார்கள்.

௨௧ மற்றவர்களுங் குதிரையின்மேலிருக்கிறவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கட்கத்தாலே கொல்லப்பட்டார்கள். பறவைகளெல்லாம் அவர்களுடைய மாமிசத்தினாலே திருப்தியடைந்தன.

உ0. அதிகாரம்.

[(௧) பசாசானவன் கட்டப்பட்டு [illegible] வருஷமளவும் அடைக்கப்படுகிறது. [illegible] விசுவாசிகள் [illegible] டவர்கள் உயிரடைந்து [illegible] அரசாளுகைசெய்கிறது, (௭) [illegible] [illegible] விட்ட பசாசு [illegible] கோகு மாகோகு என்பவர்களைக் கூட்டிக்கொண்டு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணப் புறப்படுகிறது, [illegible] பசாசு நரகத்திலே தள்ளப்படுகிறது, (௧௧) நியாயத்தீர்ப்புசெய்யப்படுகிறது.]

அன்றியும் ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையுந் தன் கையிலே பிடித்துக்கொண்டு வானத்திலிருந்திறங்கக்கண்டேன்.

௨ அவன் பசாசென்றுஞ் சாத்தானென்றுஞ் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தைப் பிடித்து அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிப் பாதாளத்திலே அடைத்து, அதின்மேல் முத்திரைபோட்டான்.

௩ அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்வரைக்கும் அது உலகத்தாரை மோசம்போக்காதபடிக்கே (அப்படிச் செய்தான்.) அவைகளுக்குப்பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்.

௪ அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன். அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள். நியாயத்தீர்ப்புச்செய்யும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இயேசுவினுடைய சாட்சியினிமித்தமும் பராபரனுடைய வசனத்தினிமித்தமுஞ் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொரூபத்தையாவது தொழுதுகொள்ளாமலும் தங்கள் நெற்றியிலாவது தங்கள் கைகளிலாவது அதின் அடையாளத்தைத் தரித்துக்கொள்ளாமலுமிருந்தவர்களையுங் (கண்டேன்.) அவர்கள் உயிரடைந்து கிறிஸ்துவுடனே கூட ஆயிர வருஷம் இராசரிக்கம்பண்ணினார்கள்.

௫ மரித்த மற்றவர்கள் ஆயிர வருஷம் நிறைவேறுமளவும் உயிரடையவில்லை. இது முதலாவது உயிரோடெழுந்திருத்தல்.

௬ முதலாவது உயிரோடெழுந்திருக்கிறதிலே பங்குள்ளவன் பாக்கியவானுமாய் பரிசுத்தனுமாயிருக்கிறான். அவர்கள்மேல் இரண்டாம் மரணம் அதிகாரத்தை அடையாதிலை. அவர்கள் பராபரனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் இராசரீகம்பண்ணுவார்கள்.

௭ அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும்பொழுது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி,

௮ பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள சனத்தாராகிய கோகையும் மாகோகையும் வஞ்சிக்கும்படியாகவும் அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படியாகவும் புறப்படுவான். அவர்களுடைய இலக்கம் கடற்கரை மணலவ்வளவாயிருக்கும்.

௯ அவர்கள் பூமியினுடைய விசாலத்தின்மேல் ஏறிவந்து, பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும் பிரியமான பட்டினத்தையும் வளைந்துகொண்டார்கள். அப்பொழுது பராபரனிடத்திலுள்ள வானத்திலிருந்து அக்கினியிறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது.

௰ மேலும் அவர்களை வஞ்சித்த பசாசானவன் மிருகமுங் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற அக்கினியுங் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். (அங்கே) அவர்கள் என்றென்றைக்கும் இரவும்பகலும் வாதிக்கப்படுவார்கள்.

௰௧ பின்பு நான் பெரிய வெள்ளை ஆசனத்தையும் அதின்மேலுட்கார்ந்தவரையுங் கண்டேன். அவருடைய சமுகப்பார்வையால் பூமியும் வானமும் விலகியோடிப்போயின. அவைகளுக்கிடங் காணப்படவில்லை.

௰௨ அன்றியும் மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் ஆசனத்திற்கு முன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் விரிக்கப்பட்டன, சீவனுக்கேதுவான வேறொரு புஸ்தகமும் விரிக்கப்பட்டது. அப்பொழுது மரித்தோர்கள் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாகப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள்.

௰௩ சமுத்திரந் தன்னிலுள்ள மரித்தோரைத் தந்தது. மரணமும் மரித்தோர் ஸ்தலங்களிலுள்ள மரித்தோரைத் தந்தன. யாவருந் தங்கள் தங்கள் கிரியைகளின்படி நியாயத்தீர்ப்பு அடைந்தார்கள்.

௰௪ பின்பு மரணமும் மரித்தோர் ஸ்தலமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. அது இரண்டாம் மரணமாம்.

௰௫ சீவனுக்கேதுவான புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

௨௧. அதிகாரம்.

[(௧) புதிய வானமும் புதிய பூமியும் தோன்றினதும், (௯) ஒருதூதன் ஆட்டுக்குட்டியானவருடைய மனையாட்டியாகிய எருசலேமை யோவானுக்குக் காட்டினதும்.]

அன்றியும் முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயிற்றே. சமுத்திரமுமில்லாமற்போயிற்றே. பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையுங் கண்டேன்.

௨ அல்லாமலும் புதிய எருசலேமாகிய பரிசுத்த பட்டினத்தைப் பராபரனிடம் பரமண்டலத்திலிருந்து இறங்கக்கண்டேன். அந்த நகரம் புருஷனுக்காக அலங்காரமாக்கப்பட்ட மனையாட்டியைப்போல எத்தனமாக்கப்பட்டிருந்தது.

௩ மேலும் பரமண்டலத்திலிருந்துண்டான ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன். அதென்னவென்றால், பாருங்கள். மனிதர்களிடத்திலே பராபரனுடைய கூடாரமிருக்கிறது அவர்களிடத்திலே யவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய சனங்களாயிருப்பார்கள். பராபரன் தாமே யவர்களோடேகூடவிருந்து அவர்களுக்குத் தேவனாயிருப்பார்.

௪ அவர்களுடைய கண்ணீர் யாவையும் பராபரன் துடைப்பார். முந்தினவைகள் போனபடியினாலே இனிமேல் மரணமுமில்லை துக்கமுமில்லை அலறுதலுமில்லை வருத்தமுமில்லையென்பதே.

௫ அன்றியும் ஆசனத்தின்மேலுட்கார்ந்தவர் சொன்னது பாருங்கள். நான் எல்லாத்தையும் புதிதாக்குகிறேனென்றார். பின்னும் அவர் என்னுடனே சொன்னது. இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகளானதையால் (அவைகளை) யெழுது என்றார்.

௬ பின்னும் அவர் என்னுடனே சொன்னதாவது. ஆயிற்று. நான் அல்பாவும் ஒமேகாவுமாகிய ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் சீவ நீரூற்றில் (தண்ணீரை) க்கிரயமில்லாமற் கொடுப்பேன்.

௭ செயங்கொள்ளுகிறவன் இவைகளைச் சுதந்தரித்துக்கொள்வான். நான் அவனுக்குத் தேவனாயிருப்பேன்.

௮ அவன் எனக்குக் குமாரனாயிருப்பான். பயப்படுகிறவர்களும் அவிசுவாசிகளும் அருவருக்கப்பட்டவர்களும் கொலைபாதகரும் வேசிமார்க்கத்தாரும் சூனியக்காரரும் விக்கிரக ஆராதனைக்காரருஞ் சகல பொய்யருமானவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியுங் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கையடைவார்களென்றார்.

௯ பின்பு ஏழு கடைசி வாதைகளால் நிறைந்த ஏழு கலசங்களையுடைய ஏழு

ஏழு தூதரிலொருவன் என்னிடத்தில் வந்து ஆட்டுக்குட்டியினுடைய மனையாட்டியாகிய மணவாட்டியை உனக்குக் காண்பிக்கிறேன் வா என்று என்னுடனே சொல்லி,

௰ பெரிதும் உயர்மமான ஒரு பர்வதத்தின்மேல் என்னை ஆவிக்குட்கொண்டு போய், பரிசுத்த எருசலேமாகிய பெரிய நகரத்தை [illegible] எனக்குக் காண்பித்தான்.

௰௧ அதின் ஒளி அருமையான இரத்தினக்கல்லைப் போலவும் [illegible] இருந்தது.

௰௨ அது பெரிதும் உயர்மமான மதிலையுடையதாயிருந்தது; அதற்குப் பன்னிரண்டு வாசல்களும், [illegible] பன்னிரண்டு தூதர்களுமிருந்தார்கள்; [illegible] இஸ்ரவேல் [illegible] பன்னிரண்டு கோத்திரங்களுடைய நாமங்கள் எழுதப்பட்டிருந்தன.

௰௩ கிழக்கே மூன்று வாசல்களும், வடக்கே மூன்று வாசல்களும், தெற்கே மூன்று வாசல்களும், மேற்கே மூன்று வாசல்களும் உண்டாயிருந்தன.

௰௪ அந்நகரத்தின் மதிலுக்குப் பன்னிரண்டு அஸ்திபாரங்களுண்டாயிருந்தது; அவைகளில் ஆட்டுக்குட்டியானவருடைய பன்னிரண்டு அப்போஸ்தலருடைய பன்னிரண்டு நாமங்களுமிருந்தன.

௰௫ என்னுடனே பேசினவன் அந்நகரத்தையும், அதின் வாசல்களையும், அதின் மதிலையும் அளக்கும்படிக்குப் பொன் கோலைப் பிடித்திருந்தான்.

௰௬ [illegible] சதுரமாயிருக்கிறது; அதின் நீளம் எவ்வளவோ அவ்வளவாய் அதின் அகலமுமிருக்கிறது. அவன் அந்தக் கோலினாலே அந்நகரத்தை அளந்தான், பன்னீராயிரம் [illegible]; அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருக்கின்றன.

௰௭ [illegible] மனித அளவின்படியே அதின் மதிலை அளந்தபோது [illegible] நூற்றுநாற்பத்துநான்கு முழமாயிருந்தது.

௰௮ [illegible] பட்டணம் [illegible] பொன்னு [illegible].

௰௯ அந்நகரத்தின் மதிலின் அஸ்திபாரங்கள் சகலவித இரத்தினங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. (அவையாவன:) முதலாம் அஸ்திபாரக்கல் யாஸ்பி, [illegible] நீலக்கல், மூன்றாவது சந்திரகாந்தம், [illegible] மரகதம்.

உ௰ ஐந்தாவது [illegible] கோமேதகம், ஆறாவது [illegible], [illegible] ஏழாவது [illegible]

[illegible] புஷ்பராகம், [illegible] பத்தாவது [illegible] [illegible] பதினோராவது [illegible] பன்னிரண்டாவது [illegible] [illegible].

உ௧ பன்னிரண்டு வாசல்களும் பன்னிரண்டு முத்துக்களாயிருந்தன; ஒவ்வொரு வாசலும் ஒவ்வொரு முத்தாயிருந்தது. நகரத்தின் வீதி [illegible] பொன்னாயிருந்தது.

உ௨ [illegible] ஆலயத்தை நான் [illegible] காணவில்லை. சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதின் ஆலயம்.

உ௩ பட்டணத்தில் [illegible] சூரியனும் சந்திரனும் [illegible] வேண்டியதில்லை; [illegible] அதற்கு வெளிச்சம் [illegible] ஆட்டுக்குட்டியானவரே அதின் விளக்கு.

உ௪ இரட்சிக்கப்பட்ட ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள்; பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள்.

உ௫ அதின் வாசல்கள் பகலிலே அடைக்கப்படுவதில்லை; அங்கே இராக்காலமில்லை.

உ௬ உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள்.

உ௭ தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறவர்கள் மாத்திரம் (அதில் பிரவேசிப்பார்கள்).

உஉ. அதிகாரம்.

[(௧) [illegible] (௨) [illegible] (௩) [illegible] (௪) [illegible] (௫) [illegible]]

அன்றியும் பளிங்கைப்போலத் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதியை [illegible] தேவனுடைய சிங்காசனத்திலிருந்தும் ஆட்டுக்குட்டியானவருடைய சிங்காசனத்திலிருந்தும் புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான்.

உ பட்டணத்தின் வீதியின் மத்தியிலும் நதியின் இருகரையிலும் [illegible]

களைச் சுமந்து மாதந்தோறுந் தன் கனியைக் கொடுக்கிற சீவவிருட்சமிருந்தது. அந்த விருட்சத்தின் இலைகள் உலகத்தார்கள் ஆரோக்கியமடைகிறதற்கேதுவானவைகள்.

[illegible] இனிமேற் சாபமில்லை. பராபரனும் ஆட்டுக்குட்டியுமிருக்கிற ஆசனமே அதிலிருக்கும்.

௪ அவருடைய ஊழியக்காரர் அவருக்கு ஆராதனைசெய்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளிலிருக்கும்.

௫ அங்கே இராவில்லை. ஒருவிளக்குஞ் சூரியனுடைய ஒளியும் அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய பராபரனே அவர்களுக்கு ஒளியைக் கொடுப்பார். அவர்கள் என்றென்றைக்கும் இராசரிக்கம்பண்ணுவார்கள்.

௬ பின்பு அவர் என்னுடனே சொன்னதாவது. இந்த வசனங்கள் உண்மையுஞ் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிப்பதற்குத் தீர்க்கதரிசிகளின் ஆவிகளுடைய தேவனாகிய பராபரன் தமது தூதனையனுப்பினார்.

௭ கேளுங்கள். சீக்கிரமாய் வருகிறேன். இந்தப்புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவார்த்தைகளைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவானென்றார்.

௮ இயோவானாகிய நானே இவைகளைக் கண்டுகேட்டேன். நான் கேட்டுக்கண்டபொழுது இவைகளை எனக்குக் காண்பித்த தூதனுடைய பாதங்களின் முன்பாகத் தொழுதுகொள்ள விழுந்தேன்.

௯ அவன் என்னை நோக்கி நீ இப்படிச் செய்யாதபடிக்குப் பார். உன்னோடும் உன் சகோதரராகிய தீர்க்கதரிசிகளோடும் இந்தப்புஸ்தகத்தின் வசனங்களைக் கைக்கொள்ளுகிறவர்களோடுங்கூட நானும் ஊழியக்காரனாயிருக்கிறேன். பராபரனைத் தொழுதுகொள்ளென்றான்.

௰ மேலும் அவர் என்னுடனே சொன்னதாவது. காலஞ்சமீபமானபடியினாலே இந்தப்புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவார்த்தைகளை முத்திரைபோடாதிருப்பாயாக.

௰௧ அக்கிரமக்காரன் பின்னும் அக்கிரமஞ்செய்யட்டும். அழுக்காயிருக்கிறவன் பின்னும் அழுக்காயிருக்கட்டும். நீதியுள்ளவனும் பின்னும் நீதிசெய்யட்டும். பரிசுத்தமுள்ளவனும் பின்னும் பரிசுத்தமாகட்டும்.

௰௨ கேளுங்கள். சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பதிலளிக்கும்படிக்கு என்பலன் என்னோடேகூட வருகிறது.

௰௩ நான் அல்பாவும் ஓமேகாவுமாகிய ஆதியும் அந்தமுமாய் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்.

௰௪ சீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாகும்படிக்கும் வாசல்களாற் பட்டணத்திற்குட்பிரவேசிக்கும்படிக்கும் அவருடைய கற்பனைகளின்படிச்செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

௰௫ நாய்களுஞ் சூனியக்காரரும் வேசிமார்க்கருங் கொலைபாதகரும் விக்கிரக ஆராதனைக்காரரும் பொய்யைவிரும்பி நடப்பிக்கிறயாவரும் புறம்பேயிருப்பார்கள்.

௰௬ சபைகளுக்காக இவைகளையுங்களுக்கு அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என்னுடைய தூதனையனுப்பினேன். நான் தாவீதின் வேருமாய்ச் சந்ததியுமாய்ப் பிரகாசமுள்ள விடிவெள்ளிநட்சத்திரமுமாயிருக்கிறேனென்றார்.

௰௭ ஆவியும் மணவாட்டியும் வாவென்கிறார்கள். (இவைகளைக்) கேட்கிறவனும் வாவென்பானாக. தாகமாயிருக்கிறவன் வரக்கடவன். விருப்பமுள்ளவன் சீவத்தண்ணீரைக் கைமாறில்லாமல் வாங்கக்கடவன்.

௰௮ மேலும் இந்தப்புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசனவார்த்தைகளைக்கேட்கிற யாவருக்கும் நான் அறிவிக்கிறதாவது. ஒருவன் இவைகளோடே (எதையாகிலுங்) கூட்டினால் இந்தப்புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளைப் பராபரன் அவன்மேலே கூட்டுவார்.

௰௯ ஒருவன் இந்தத் தீர்க்கதரிசனப்புஸ்தகத்தின் வார்த்தைகளில் (எதையாகிலும்) எடுத்துப்போட்டால் இந்தப்புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளாகிய சீவவிருட்சத்திலும் பரிசுத்தப்பட்டணத்திலுமுள்ள பங்கைப் பராபரன் அவனிடத்திலிருந்து எடுத்துப்போடுவார்.

௨௰ இவைகளையறிவிக்கிறவர் மெய்யாய் நான் சீக்கிரமாய் வருகிறேனென்கிறார். ஆமென். கர்த்தராகிய இயேசுவே! வாரும்.

௨௰௧ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையுங்கள் அனைவரோடுங்கூடவிருப்பதாக.—ஆமென்.

முடிந்தது முற்றும்.